உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசற்குருவே நம.

வசிட்டமுனிவர்ஸ்ரீராமருக்கு

உபதேசித்தருளிய

ஞானவாசிட்டவமலராமாயனம்.

தமிழ்மூலமுமுரையும்.

இஃது

வீரை-ஆளவந்தாரென்னுமுனிவர் த்ராவிடபாஷையிற்பாவினமாகவருளிய

ஆத்மஞானசாஸ்த்திரத்துக்கு

திருத்துருத்தியென்னுந்திருப்பதியின்கண்ணெழுந்தருளிவிளங்கிய

ஸ்ரீஅகிலாண்டகோடிப்ர்ம்மாண்டநாயகராகிய

இந்திரபீடம்

கரபாத்திரசுவாமிகளென்னுஞ்

சதாசிவப்பிர்ம்மேந்திரயோகீஸ்வராருடையவாதீனத்துக்குரியராகிய

திருநாகை

அருணாசலசுவாமிகளின் ப்ரதமசிஷியராகிய

பிறைசை, அருணாசலசுவாமிகளால்

வடநூலாருயிரத்தின்சமுத்திரதாணீயென்னும் வியாக்கியானம்

பிறைசை-அஷ்டகோத்திரம்

சிங்காராசாரியராலும்

காஞ்சிபுரமிந்திரபீடமுபநிடதப்பிர்ம்மயோகீஸ்வரராதீனபரராகிய

இராமப்ர்ம்மேந்திரயோகீஸ்வரர் அனுக்கிரகித்தமுப்பத்திராயிரம்

திருக்கோட்டியூர்

சுந்தராசாரியராலும்

தத்துவபோதினியென்னும்வியாக்கியானம்

மோகூர்

சுப்பாசாஸ்திரியராலும்

ஒத்துக்கொண்டதின்கருத்தையனுசரித்தவதாரிகைமுதலிய

வைந்திலக்கணமாகப்பகுத்துச்செய்தவுரை

எழுத்துஞ்சொல்லுங்கருத்தும்பிறழ்ந்துபோகாமல்

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்க

சிந்தாத்திரிப்பேட்டை

கேசவமுதலியாரவர்கள்சகோதரராகிய

நாராயணசாமிமுதலியாரவர்களால்

தமது-பிரபாகரஅச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண ௵ பங்குனி ௴

இதன்விலை - ரூபா — ௫.

திருச்சிற்றம்பலம்.

சாற்றுகவி.

இஃது. கல்விவிளக்கத்தலைமைப்புலவராகிய
திருத்தணிகை - விசாகப்பெருமாளையரவர்கள் பாடியது.

புலங்குலவவியாதமுனி மேனாட்டந்தபொருவில்வேதாந்த நூலெழுவாயாகத்...... *
தலங்குலவவருஞான நூல்கட்கெல்லாந் தக்கபொரு ளுணரும்வழி யிதனாற்காட்டி *
நலங்குலவவசிட்டமுனியிராமற்கீந்தஞானவாசிட்டமெனு நவையினாற்றம்[முனே
பொலங்குலவப் பொருள்விரித்தான்பிறைசைமேவும் புனிதனருணாசலனாங்குரவன்

இஃது. அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகராகிய
மல்லீஸ்வரன்கோயில் தர்மகர்த்தாவாகிய சோமசுந்தரசெட்டியார் கருத்து.

அனித்தமுடனித்தமு முணர்ந்திகபரத்தினுறு மாசையறவிட்டுளத்தி .... *
னலைசெய்வாதனையின்றி யொன்றாகிநின்றபர மார்த்தவனுபூதிநிலையிற்........ *
றனித்தெவருநிரதிசய வானந்தவடிவமே தமதுருவமென்னவிந்தத்.... .... *
தனுவொடுமடைந்துய்த்தறருவதிஃதாமெனத் தண்ணளியினன்புகூர்ந்து.... *
பனித்துளமிரங்கிய விராமனுக்கருள்செய்த பரமவாசிட்ட நூலின் .... *
பருப்பொருள்வெளிப்படத் தனதுசுகவனுபவப் பண்பினாலுரையிட்டனன். *
மனித்தரொடுவிண்ணவர்கள் புகழுமிந்திரபீட மரபின்வந்தவதரித்த .... *
மஞ்சுதவழ்பூம்பொழிற் பிறைசையருணாசல வரோதயமகானுபவனே....... *

இஃது. திருவையாறுவேங்கடரங்கபிள்ளை யவர்கள் பாடியது.

திருவியற்பொன்னாட் டிறைமுதலியசொற் றேவர்கடகுவரால்வருந்துந்............ *
திகைப்பறவொருவாத் தண்ணளிவிரவிச்செய்யவான் மனையலர்ந்தன்ன..... *
கருவியன்முகில்பாற் கடல்கடைந்தமிர்தைக் கருணையினாலெடுத்தளித்த .... *
கவின்கொணீர்மையினீ ளவிச்சையாற்போத கனசுகவாழ்வினைவிடுத்திட் . *
டுருவியற்சகமாயெழுந்தவாரோபத் துண்ணிய சீவர்கள்படுமா..... .... *
றொழியவாசிட்ட நூற்கவிமதித்தாங் குதயமாகியவரும்பொருளை............. *
மருவியகரத்தின் மணியெனத்தந்தான் மருமலர்ச்சோலைசூழ்பிறைசை .... *
மன்னியவருணா சலநிதியெனும்பேர் வயங்கியஞானதேசிகனே..... .... *

வித்வசபையார் வியப்போடுரைத்தது.

இஃது. யூனிவர்சிட்டியென்னுஞ் சகலசாஸ்த்ரசாலைத்தமிழ்த்தலைமைப்புலமை மழவை, மகாலிங்கையரவர்கள் பாடியது.

கானலினீர்கயிற்றிலராசுத்திதனில்வெள்ளியுருக்காணுமாபோன் ...... *
மோனசச்சிதானந்தமாகியதன்னுழியசத்தாமுதலிற்றோன்று ...... *
மூனமுறுமுலகவுணர்வொழித்திடவாசிட்டமெனவோதுநூலிற் ...... *
ஞானவுரைசெய்ததருணாசலப்பேர்கொண்டுசிவமவனிமீதே ...... *

இஃது. கைலாயபரம்பரையாகிய-திருவாவடுதுறை-ஆதீனவித்வான் தாண்டவராயசுவாமிகள் பாடியது.

மாசிட்டராம்வசிட்டர்தாசரதிக்குண்மைநிலைமருவமுன்சொல் ...... *
வாசிட்டமெனுநூலையாளவந்தார்மொழிபெயர்த்தவண்மைக்கேற்பத் ...... *
தேசிட்டவோருரையிவ்வுலகுகளிகூர்ந்துணரத்தேர்ந்துசெய்தான் ...... *
பேசிட்டமொடுபிறைசைவாழுமருணாசலமாம்பெற்றியோனே ...... *

இஃது. காஞ்சிபுரம் - அருணாசலதேசிகரவர்கள்பாடியது.

அனாதியாய்த்துவிதபாவமாமிருளிலலமருமுயிரையத்துவித ...... *
மனாதிகட்கெட்டாப்பகலினுய்த்திடநல்வாசிட்டப்பாவெனுங்கதிரைத் ...... *
தனாதகங்கொண்டிங்குரையெனுமென்றாழ்த்தழைத்தருணாசலப்பெயர்கொள் ...... *
டனாதியானென்னுமிமமறப்பிறையாற்றெழுந்தஞானசூரியனே ...... *

இஃது - மது.

மறையாற்றின்வருகலைபற்பலவினுக்கும்வாதராயணன்முன்றேரின் ...... *
முறையாற்றும்பொருள்விரித்துச்சுவாநுபூதியின்கண்ணுமுற்றத்தேற்றும் ...... *
பிறையாற்றிலிந்திரபீடத்தருணாசலஜனகப்பெரியோனிந்த ...... *
விறையாற்றும்வாசிட்டமெனுமொருநூற்குரைவிரித்ததிறம்பூதாமே ...... *

இஃது. சதுர்வேதசித்தாந்த சபையைச்சார்ந்தவித்தியாவிலாசத் தருமப்பள்ளிக்கூடத்துத் - தலைவர்களாகிய - காஞ்சிபுரம் வித்வான் - சபாபதிமுதலியாரவர்கள்பாடியது.

எங்குமெரியினுறுநீர்போலிருக்குமரியபரம்பொருளை ...... *
உங்குக்காணும்விருப்புடையோர்க்குணர்த்தும்வாசிட்டந்தனக்குத் ...... *
தங்கும்பிறைசைவாழருணாசலமாம்யோகிதான்செயுரைப் ...... *
பொங்குகயிற்றிலரவென்னப்புவியையெளிதிற்காட்டிடுமே ...... *

சாரம் - குமரப்பமுதலியாரவர்கள் பாடியது.

ஆளவந்தானல்லறிஞர்கள்சில்லோரறிந்திடவாசிட்டநூலைக் ...... *
கோளவந்திரமொழிபெயர்த்திட்டான்குவலயத்தெவருந்தேர்ந்துய்யச் ...... *
சோளநாட்டிற்கொண்டிலதமாம்பிறைசைத்தோன்றருணாசலக்குரிசி ...... *
னீளுரைவகுத்தானிவர்தமிலியாவர்நிகழ்த்துமினருளுடையவரே ...... *

இஃது. சிதம்பரம்-சுப்பிரமணியபண்டிதரவர்கள்பாடியது.

உலகில்வாழுயிர்கள்பவப்பிணியொழிந்தேயொழிவில்பேரின்பமார்ந்துய்ய ...... *
நலமிகுஞானவாசிட்டவெற்பினண்ணுமெய்ப்பொருளதாமருந்தை ...... *
யலகில்பேரருளால்வழங்கினன்விண்டோயணிமதிற்பிறைசையம்பதியி ...... *
லிலகுறுமருணாசலசிவயோகியென்னுமோர்ஞானபண்டிதனே. ...... *

இஃது. ஷைபள்ளிக்கூடத்துத்தலைமை- உ- நாராயணமுதலியார்பாடியது.

உலகமகிழ்தருதரங்கம்பாடியில்வாழ்சபாபதிமானுரைத்தானகத் ...... *
திலகமெனப்பலகலைக்குட்சிறந்துளவாசிட்டவுரைதெருட்டித்தந்தான் ...... *
இலகமனமுனிவார்க்குமித்திரபீடத்தவர்க்குமிறும்பூதெய்தப் ...... *
பலகலையுமுணர்ந்தருணாசலப்பிரமம்பிறைசைவளம்பதியினானே ...... *

அடிகளடியா ரவைமகிழ்ந் துரைத்தல்.

இஃது. திருத்துருத்தி - யாதீனந் தருமசிவஞானியார்கருத்து.

அன்புள்ளசோதரரேயாமாத்மபோதமுறத் .... *
தென்பிறைசைநங்குரவன்செய்யுரையை - முன்புநமக் .... *
கன்னேனளித்தவறிவக்குவிருற்கண்டுசொலாப் .... *
பன்னுமன்மெய்ப்பரமாவோம் .... *

இஃது. பாடி - நாராயணமுதலியார்கருத்து.

வானலோகத்தின்செல்வமன்னியபிறைசைநாதன் .... *
ஞானவாசிட்டநூற்குநவிற்றியவுரையைநாடின் .... *
மோனமாமுணர்வைப்பற்றிமுன்னியவனுபவிக்குத் .... *
தேனதாரசிக்குமின்றேற்சேடனுந்திகைப்பன்மாதோ .... *

இஃது. சிந்தாத்திரைப்பேட்டை-கந்தப்பமுதலியார் கருத்து.

மறுவிலாஞானநூற்கு மன்னுரைவகுத்தவற்றுற் .... *
சிறுமைதீர்ந்துயிர்கடாமே சிவமெனவிளங்கச்செய்த .... *
பிறைசையையுரையைநோக்கி யாஞ்செய்பேறிலக்கணத்தாற் .... *
குறுகியபயனேதென்னக் குறுமுனிகுறுகினுஞல் .... *

இஃது. சண்முகஞானபுரம் - முருகப்பிள்ளை கருத்து.

மனுகுலத்தவர்க்குரைத்த வசிட்டமெய்ஞ்ஞான நூற்குத் .... *
தனமலிபிறைசையையன் றரணியோருய்யச்செய்த .... *
வினிமையாமுரையைநாடி யாஞ்செயுமிசைஞானத்தா .... *
லனகமாம்பயனேதென்ன வனுமனுமலமந்தானே .... *

இஃது. மாஞ்ம்பதி - இராமசாமி கவிராயர் பாடியது.

கருதரியசதுர்வேத முடிவில்வளர்சிற்சுகக் கடலாகிநாமரூபக் .... *
கற்பனையிறந்தெதி ரறத்திகழ்சுவானுபவ காட்சியிலையாவருக்கும் .... *
கைத்தலத்தாமலக மென்னத்தெரித்திடக் கனிவுகூர்ந்தலகின்ஞான .... *
காவியங்களினரிய ஞானவாசிட்டமாங் கனமுற்றவிந்தநூற்கு .... *
வெருவறச்சொன்முடிபு பொருண்முடிபுமனுபவ விலாசமுந்தோன்றவைத்து .... *
விரிவுபெறுமூலகமென வோதுசிரிபுடியினடு வீறுபரமார்த்ததிலையின் .... *
வேறற்றவத்துவித சொரூபமேதானென்ன வியக்குமனுபவசித்தியான் .... *
மேதகையவுலகிறும் பூதுறத்தபன்னின் விளங்குமாறுரையிட்டனன் .... *
பொருதிரைப்புணரியினுண்மொக்குளிற்றோன்றியழிபொய்யுடலையானெனுமுயிர்ப்
போதமறத்தனது பூங்கழலென்முடிமிசைப் பொலிவுறவிருத்தியாண்ட .... *
புனிதன்மலர்வாவிதொறு மஞ்சிறையவோதிமப் புட்குலம்வசிக்கவாசப் .... *
பூம்பொழின்மிசைக்கரும் புயல்வந்துலாவுமம்பொன்னின்வளநாட்டினிசியின் *
மருவும்வெண்மதியி னொளிபொழிதவளமாடங்கள் வானிலுமுயர்ந்துகாட்ட .... *
வண்டுகிற்கொடிகணின் றசையுமுயர்தென்பிறைசை மாநகர்க்கிறைவனடியார். *
மருமலர்க்கரமுகிழ்த் தேத்துமிந்திரபீட மரபினுக்குரிமைபூண்ட .... *
மாசிலாநலமருவு மெந்தையருணசல மகாகுருசிகாமணியரோ .... *

இஃது. ஈசூர் கிராமம் - கணக்கு - சண்முகராயபிள்ளைபாடியது.

அற்புதமானவின்சொல்லானுளவசிட்டநூற்குச் .... *
சொற்பதவுரையமைத்தான் றொல்லைமாவினைகள்போக்கி .... *
தற்பதானந்தாதீதசாக்ரத்திடைகளைத்த .... *
வற்புதன்பிறைசைவாழுமருணசலேசன்றானே .... *

இஃது. சச்சிதானந்தபிள்ளைபாடியது.

துங்கநல்வசிட்டனிராமனுக்குரைத்த துலங்குமத்துவிதமாம்பொருள்சேர் .... *
தொந்தமாமொழிவாசிட்டநூற்கவிதைசொலுமீராயிரத்தைம்பத்தைம்பான்

புங்கவவடநூன்மொழிபொருட்டீஇப்போதருஞ்சுருதியோடுத்தி
புகலனுபவத்தாற்பதவுரைகருத்தைப்புனைந்தனன்மானதுகாட்டிச்
சிங்கவெவ்வனத்தின்மான்பிடிப்பதுபோற்செவ்வியமானிடவடிவாற்
றேர்ந்தெனைவவ்வியசுத்தவாசனையைப்பூரணதிஷ்டியாற்சேதித்
திங்குறுஞ்சுத்தவாசனைமொழியாலேகிடச்செய்துதன்னருள்சேர்த்
திலங்குறும்பிறையாற்றுறையருணாசலேசன்மெய்ஞ்ஞானதேசிகனே

இஃது. இருங்குன்றம் - வேதகிரிநாயகர்பாடியது,

அம்புவியோரொளிதுணர்ந்துமும்மலமற்றருள்வடிவமாகவெண்ணி
வெம்பலறஞானவாசிட்டநூற்கினிதினுரைவிரித்துரைத்தான்
எம்மனவந்தத்துவிதவுண்மைதெரித்தெனையாண்டவிறைவனெங்குஞ்
செம்பதுமத்தடந்திகழும்பிறைசையருணாசலதேசிகனெங்கோனே

இஃது. செங்கல்பட்டு-வயித்திய-வெங்கடாசலமுதலியார் பாடியது.

நானிலத்தெவருந்தேர்ந்துநன்னுமெய்ப்பொருளைச்சேர
ஞானவாசிட்டநூற்குநற்பதவுரையமைத்தான்
தானமர்நிலையைக்காட்டித்தற்பதாநந்தத்தாழ்த்தும்
மானவன்பிறைசைவாழுமருணாசலேசன்மாதோ

இஃது. பாரிப்பாக்கம் - முனியப்பமுதலியார் - பாடியது.

திருவளருமீமாஞ்சை நூலினுத்தரபரிச் - சேதவேதாந்தமுழுதுந்
தேர்ந்தவற்றுளவனு பவந்தழிஇயறிஞருந் தெளிவிலெம்போலியருமே
செறிகரதலாமலக மெனவெளிதறிந்துகதி சேரவாசிட்டமென்னுந்
திகழ்ஞானநூனவர சக்கவிக்குரைசெயூஉச் சென்னையச்சிற்பதித்தான்

மருவுமடியவர்கள்பவ மொருவசிற்சோதியே மானிடச்சட்டைசாத்தி
வளமிக்கவிந்திர னகர்க்கிணைபெறும்பிறைசை வந்தவதரித்துநாகை
வாழுமருணாசல மகாகுருவினருள்பெற்று மகிமைபெறுமிந்த்ரபீட
மரபினைவிளக்கமெய்ப் போதபாஸ்கரனுதி வனசமெல்லடிவருந்த

வருகுமன்பிலியையாட் கொளவேண்டிவலிவிலீன்றுற்றுவாவெனவழைத்துள்
ளுவந்தருகிருத்தியா மைக்கயல்சிறைப்பறவை யொத்திதயவாசகமலத்
துன்னிநோக்கித்தடவி யாதரித்தைம்பூத வுடல்பொறிபுலாதியோயா
துழலுமந்தக்கரண மல்லைநீயுணர்வென வுணர்த்தவொருமொழியமுதினைச்

சரசமுடனூட்டியெந்நா ளுங்குணாதீதசாந்தபத சகசநிட்டைச்
சார்ந்துநவநவமா யனுபவித்தானந்தசாகரத்தாடியுலகைத்
தாணுவிற்புருடனாய்க் கண்டுமகிழ்மீறநற் றாயினுங்கருணைகூர்ந்த
சமரசசுபாவமெய்ஞ் ஞானவருணாசல சதானந்தகுருநாதனே

இஃது. சீகாழி-நாராயணசாமிமுதலியார் பாடியது.

அள்ளருங்கொடியவிருண்மலபாண்டத்தழுந்திடாதாருயிர்க்கென்றுந்
தெள்ளரும்வசிட்டஞானநல்லுரையாற்றேவர்கண்மூவர்மற்றியார்க்கு
முள்ளருமங்கைக்கனியெனவொளிருமொருதனிப்பொருடனைத்தெரித்தான்
துள்ளரும்பிறையாற்றினிதமர்ந்தருணாசலனருட்டேசிகன்றானே

இஃது. புதுப்பேட்டை - அப்பாசாமிநாயகர்பாடியது.

கற்றவருங்கல்லாதவென்போல்வாருங்கைக்கனிபோற்றெரிந்துசுகதுக்கபோத
மற்றினையில்வீடுபெறக்கருணைகூர்ந்தேயமலவாசிட்டநூற்குரைவகுத்தா
னுற்றதிரிவிதபாசப்புணரிதன்னிலுழல்வேனைத்தடுத்தடிமைகொண்டபெம்மா
னெற்றவழுமேடைதிகழ்பிறைசைவாழுமெம்பிரானருணாசலேசன்றானே

சாற்றுகவி - முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

உரைச்சிறப்புப்பாயிரம்.

மணிநெடுங்கடனிகர் மாமறைமுடிபுந் - துணிவுறுமனமுறு சொல்லுந்தொடரொணு ...... *
வகோசரசுயம்பிர காசமாம்பிரமஞ் - சுகோததிமதியாய்த் துலங்குறுதனையே ...... *
நவநவமாயனு பவித்திடநாடித் - தவபரஞ்சிவன் சகமெனவிளங்க ...... *
சகமுகமாகித் தனையுணராவுயிர்க் - ககமுகமாம்பர னருளயனுருவுகொண் ...... *
டருமறைமுடிவி னமையுமுப்பதத்துப் - பொருளாரோபிதத் திருமையும்போக்கி ...... *
யிலங்கதிட்டானத் திருமையுமொருமையாய்த் - துலங்குமத்துவித சுவானுபவமே ...... *
நமதுருவென்ன நவின்றதுதானு - வமைதருலீலையை யறிவோருருவாய் ...... *
மனதினிலுதித்த வசிட்டனுக்கருளி - தனையுணர்பவர்க்கெலாஞ் சாற்றெனவவனுந் ...... *
தவநிலையெவருந் தாங்குதற்குதித்துப் - புவிமுதலெவையும் பொய்யெனத்தெளிவா ...... *
வுணர்ந்தவிராமற் குயர்பேரறிஞர் - புணர்ந்துளதயரதப் புரவலனவையின் ...... *
மூவறுநிவச மொழிந்தமெய்ஞ்ஞானப் - பாவனுதீதப் பரமவாக்கியத்தை ...... *
நான்மறைப்பொருளு நவரசக்கவியுமாந் - தேன்மழைபிலிற்றுஞ் சிறந்தநாவுடைய ...... *
தவத்திறையவனுத் தழைத்தவான்மீகி - பவத்துயரொருவப் பரத்துவன்றனக்கு ...... *
மோனமார்வசிட்ட முனிமொழியதனென் - ஞானவாசிட்ட மென்னுநாமந்தழீஇ ...... *
யிலக்கஞ்சுலோகத் திசைத்தனனதனிற் - பலப்படவழங்குமுப் பஃதிராயிரத்தி ...... *
னருளினுற்காஸ்மிர பண்டிதனுரு - யிரமெனத்தெளிவா யெடுத்தவிந்நூற்கு ...... *
முதுரைசெய்தனர் - மும்மடிதேவனும் - பேதியாதிராமப் பிரமேந்திரயோகியுஞ் ...... *
சமுத்திரதாணிதத் துவபோதினியென - வமைத்தனருரையவ ரன்றியும்பலரே ...... *
பண்டிதருணரும் பான்மையாலெளிய - தொண்டருமுணர்ந்துதஞ் சுகம்பெறவந்த ...... *
வடநூலதனின் வருமொழிபெயர்த்துத் - திடஞானமூவர்க்குத் தெளித்தருள்செவ்வேள் ...... *
மகத்தின்மகத்தாய் - வயங்குமப்பொருளே - யிகத்தணுவுக்கணு வாயிலங்குதல்போற் ...... *
குறுகியகுறுமுனி கோவுக்கருளிய - மறுவறுசெந்தமிழ் வாரியிற்குளித்துப் ...... *
பஞ்சவிலக்கணப் பதப்பொருண்மணிகளைச் - செஞ்சொலினூலின் சிறப்பொடுபுனையும் ...... *
போதமார்முனிவன் புகழ்திருவீரைவாழ் - மாதவப்பட்டன் வமிசத்துதித்த ...... *
வாளவந்தானெனு மற்புதமூர்த்தி - கோளறவனுபவங் கொண்டினிதியற்றிய ...... *
வருங்கவியீராயிரத் தைம்பானைந்தி - னொருங்குளபொருளை யுலகோருணர்ந்து ...... *
பவக்கடல்கடந்து பரமானந்தச் - சிவக்கடலதனிற் றிளைத்திடும்பொருட்டுப் ...... *
பதவுரைமுதலிய பண்பாற்பகரென - சுதமகனுலகொரீஇத் தரணியினிடைவரு ...... *
பாகிரதியின் பவங்கெடப்பொதியை - யோகிகமண்டலத் துற்றதைச்சையையிற் ...... *
கங்கைபெற்றவன் கவிழ்த்ததாற்பெருகுந் - துங்கமாம்பொன்னித் துறைதொறுங்கொழித்த *
மணிகளினெளிவான் மல்கியகுவளை - யணிமலர்விரிந்த வரியவயறொறுஞ் ...... *

சேதகந்தெறித்த திகழ்முலையளிமனைப் - போதரும்பென்னப் பொலிதருகடைசிய........ *
ருண்டமதுவி ஞெங்கியவெறியான் - மண்டியவிழியைக் கெண்டையென்றயர்ப்பர்........ *
பறித்திடுங்களையெனப் பருமாநநத்தை - வெறித்திடப்புனலில் வெறுப்பொடுநோக்குவர்... *
கட்டகளையின் குவைதொறுங்கதிர்மணி - விட்டினிதார்ந்து விளைதரும்வளைகள் ... . *
சூலிருலறிவிலர் தோற்றம்போற்றலைநெறீஇக்-காலொடுநிறைதரக் காய்த்துச்செஞ்சாலிகள் *
மேலவர்முறையென விபுலையிற்பணிதரப் - பாலுளவுயிரெலாம் பலபலபயன்பெறத்........ *
தேவருமக்களுந் தென்புலத்தவர்களுந் - தாவருந்தாபதர் தாந்தாம்பயன்பெறூஉம்.......... *
வளமலிசோழ வளநாடுடையது - இளமலிதேவ கணமெலாங்கெழுமுற.... .... *
வாசிலாக்கயிலையீ தென்னவம்பிகையொடு - மாசிலாமணியுறை மணிமதிட்கோயிலு ... . *
மணத்தின்முழக்கமு மலிகுடைமுழக்கமுங் - குணத்தினைப்பொருத்துங் கோடாதசெல்வமு *
மோங்கியமாடத் தும்பரின்மகளிர் - தேங்கியமதியைத் திகைப்புறநகைக்குந்.................. *
சுந்தரமேனிலைத் துயல்வருமணத்தா - லந்தரமெல்லா மருமணங்கமழுந்............... .... *
தாங்கமாநகரந் தன்னில்வாழியோக - வரங்கண்மிகுத்த வர்த்தகசிரோமணி .... *
யிவன்றன்வேள்வியே தியர்வேள்வியைத்தரு - மிவனிறைகோன்மன் னவனிறைகோற்றரும்.. *
இவன்சூழ்சூத்திர மவர்சூழினைத்தரு - மிவன்மணிமதிப்புமற் றவர்மண மதிப்புறுந் .... *
தானப்பெருந்தன வாணிகர்தம்மிற் - சேனைக்குடையருட்ச் சிறந்தகுலத்தினன் .... *
அழகினைப்பருகுவா னரிவையர்மனமும் - விழிகளுமளியாய் விழைவொடுமொய்த்த......... *
தண்ணறுமாத்தித் தாரொடுமணித்தொடை - திண்ணிரும்புயமேற் சேர்த்தரியணையின்... ... *
வேத்தவையிஃதென விவகாரங்களி - னுத்தவராம னடாத்தரிச்சந்திரன் .... *
அடுத்தவர்தம்மை யட்டதிக்கும்புகழ் - மடுத்துறக்காத்தலின் வண்டுழாய்மார்பன்.............. *
றந்தையுளமறிந் தந்தநெறியினைச் - சிந்தைமகிழ்வுறச் சந்ததஞ்செய்பவ........ . ... *
னறிவினும்பொறையினு மருளினுமடியார் - குறியறிந்தொழுகு குணத்தினுமாத்ம.......... *
விசாரணைக்குரிய விவேகினுமறிஞ - ருசாவினுமன்பினு மொப்பிலாதோங்கிய.............. *
அப்புவள்ள லருந்தவத்துதித்த - செப்பருஞ்சபாபதி செம்மல்கேட்ப............................ *
வடநூலுணர்வைய மகிழ்வொடுதழீஇத் - தடமுளஞானநூற் கருத்தினையுந்தழீஇ............... *
யாசானருளுப தேசார்த்தத்திற் - பேசாதமரும் பெற்றியையுத்தழீஇச்,........................ *
சகசநிட்டையினிற் சர்வம்பிரமமாய் - நிகழநுபவத்தையு நிலைபெறத்தழீஇ..................... *
யவதாரிகைமுத லைவகையாகச் - சுவைதருமொழியாற் சுவாநுபவசித்தி.... ... . *
யெனப்பெயர்தரித்திங் கிசைத்தனனிந்திரன் - மனமகிழ்நந்தன வனமெனச்சிறந்த .... *
பொன்னிநாடகத்துப் பொலிதிருத்துருத்தியின் - மன்னுமுத்தரவே தீசர்சந்நிதிமருஉ.... .. *
மறையவர்மறையொலி வயங்குவதொருசா - ரிறையவர்வேள்வி யிலங்குவதொருசார்..... .... *
தவவைசியர்புரி தருமமதொருசார் - சிவபணிசெயுஞ்சூத் திரர்திரளொருசார் .... *
பிரமஞானத்தைப் பேசுவோரொருசார் - பரமயோகத்தைப் பயில்பவரொருசா................. *
ரரியவெண்சித்தி படைப்பவரொருசா - ருரியசற்கரும முஞற்றுவரொருசார்... .... *
குயில்கிளிஞானங் கூறுவதொருசார் - பயில்பரமாமிகப் பண்ணவர்நனிசூழ்ந் .... *
திருமருங்குந்துதித் தேத்தவீற்றிருக்கு - மருமலர்ப்பொதும்பர்கா வணமெனக்கவியுங்....... *
கயிலைமரபிற் களங்கின்றிவந்த - வயர்வறுசுத்தவே தாந்தபரம்பரை........................... *
சுகக்கடல்வடிவாய்ச் சுகத்தினையளிக்குஞ் - சகக்குருசங்கரா சாரியசுவாமிகள்.................. *
மைந்தருளத்தின் மயக்கறநாட்டிய - விந்திரபீட்த் - தெழிற்கரபாத்திர....... .... *
தேவனருள்பெறு தெத்தாத்ரேயதேசிகன் - சேவடிமுடியணி செங்கமலபொற்பத............. *
வாசான்கழன்முடி யாகவணிந்தவன் - றேசார்சச்சிதா னந்தசுயம்புவே.......................... *
யோருருவாதிர திசயவானந்தப் - பேருருவாகப் பிறங்குபேரருளாற்.......... .... *

திருவளர் நாகையிற் றினகரனெனவுதித் - தரும்பொருளுங் கினந்தமாம்வீட்டைச் .... *
சார்தற்குரியசா தனங்களுங் கடைந்தோ - ரோரிருமருங்கு முவப்புறச்சூழ .... *
வேகாகார விருந்தவிசமர்ந்து - ஸ்வாகாகார மந்திரந்தொடரா .... *
வேதமுடிவின் விளங்குமாவாக்கிய - சோதனைசெய்ததிற் சுத்தமாகியபொரு .... *
ளிரண்டுமொன்றாக விலங்கத்தித்தலைச் - சிரவணமுதலை வகைபினுற்றெளிய .... *
வருளருணுசல வற்புதன்சரணந் - தெருள்பெறமுடியிற் சேர்த்தவன்சென்னையி .... *
லிந்திரபீட வெழிற்கரபாத்திர - சுந்தரன்பெயராற் றுலங்குமடாதிபன் .... *
சுத்தவளவர்கோன் ருென்றுடைதனிற் - சித்தோருருவாய்ச் சிறந்தவடிவுகொண் .... *
டடியார்பவமொரீஇ யானந்தபோத - வடிவாவிளக்க வந்தவதரித்தோன் .... *
துரியாதீதத் தொல்லுருவிளங்க - வரிதாஞானபூமிகளினுலபர .... *
வுணர்வையகற்றி யுயர்பரவுணர்வின் - மணமுறமருவி வாழ்ந்திடவைப்போன் .... *
ஞானநூலனைத்து நவில்வழியா - மோனமீதென்ன முன்புறக்காட்டிச் .... *
சமாதியனுபவஞ் சகத்திற்பெற்றுச் - சுமாவிருந்ததுவதாய்த் துலங்கிடச்செய்வோ .... *
னிளமகப்பசியினுக் கேந்தியகொங்கைபா - லளவறிந்தூட்டு மன்னையேபோலச் .... *
சாருமாணுக்கர் சாதனவொழுங்கினு - டோருமெய்ஞ்ஞான முணர்த்துமெம்மடிக .... *
ளில்லறமுற்றோ ரென்னினும்பாச - மில்லறத்தவருஞ் சநகனினேத்துவோன் .... *
தத்துவாதீதத் தனிப்பெருங்காசி - முத்தித்தலமென் மொழிவிசாலாட்சி .... *
யோடுமகிழ்வி னுறைவிசுவேசன் - சூடுமதிநதி தோன்றவப்பெயரோ .... *
வளமெனுமனைத்து மருவியெஞ்ஞான்று - முளமகிழ்வுடனல மோங்கியபிறையாற்று .... *
அருணாசலசுவாமிகளெனுந் - திருநாமம்புனைந் திலங்குதேசிகனே .... *

இவ்வுரைச் சிறப்புப் பாயிர மிந்நூ லுரையாசிரியர்க்
கடியனாகிய சென்னைமாநகரஞ் சாலைவிநாயகர்கோவி
லாதீனத்துக்குரிய அருணாசலவையராற்செய்யப்பட்டது.

இப்புத்தகம்வேண்டியவர்கள் சிந்தாத்திரிப்பேட்டையில் கெவனர்பொட்ளர் - ம-ா-ா-ஸ்ரீ, ஐயாமுதலியார்வீதியில்-௫-வது-நம்பராயுடைய வீட்டில் - ா - ா - சி - நாராயண சாமிமுதலியாரவர்களிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

இந்நூல்:

திரு-வேங்கடாசலமுதலியாரால்

அச்சுக்கிப்பிரசுரஞ்செய்யலாயிற்று.

ஆத்மஸ்வரூப- வணக்கம்.

எவனருளினிலுலகுயிர்பரமிலகுறும் .... *
எவனொளிவினிலினன் மதியரியொளிபெறும் .... *
எவனிலைதனினள விலமதநிலைபெறும் .... *
அவனகிலமுதிறையடிகளெம்மகமே .... *

உபாசனாமூர்த்தி - வணக்கம்

சத்தாதியைந்தாந் தனிப்புண்டரீகபுர .... *
வித்தானகற்பகஞ்சிங் காரவேள் - சித்தாஞ் .... *
சபையிலானந்தனருட் சதிதண்டியைவர் .... *
உபயபதம்போற்றி யுரைப்பாம் .... *

வேதாந்தசந்தானசமயாசாரியர் - வணக்கம்.

ஆனந்தமோருரு வாகியயன்சுதர்க்காலடியின் .... *
மோனந்தனினின் றுணர்த்துபுத்தேண்மறைமுப்பொருளின் .... *
ஞானந்தனியென நாட்டியசங்கர நாதனருள் .... *
தானந்தமில்வித்தை யாரண்யன்றாள்களைச்சாற்றுதுமே .... *

எனதுசிற்சுகமேயெனதுருவாக விளைந்திடவெனதுதேட்டரவே .... *
தனிவருமருணாசலகுருபதமுந் தனித்தசெங்கமலபொற்பாதன் .... *
புனிதநற்பதமும் புகழ்தெத்தாத்திரையன் பொற்பதமுங்கரபாத்திர .... *
னெனுஞ்சதாசிவப்பிர்ம்மேந்திரயோகி சரிருபதாம்புயமுமென்சிரமே .... *

அவையடக்கம்.

பொறிபதிசேடனும் புகலொணாச்சுக .... *
வறிவினைவிரித்தநூற் கருத்தஞ்செப்புதல் .... *
எறிசுடர்விளங்கும்வான் முதன்மற்றியாவையு .... *
மறுவறுகண்மணி மதித்தன்மானுமே .... *

துரியாதீதப்பொருட்சுவையைச் .... *
சொல்லாய்த்தமியேனுரைசெயினும் .... *
பெரியோரொள்ளாதிவ்வுரையைப் .... *
பிரமரசமாய்க்கைக்கொள்வர் .... *

அரிதாங்கரும்பின்ரசந்தனைக்கல் - லாக்கித்தரினுமஃதறிந்தோர் .... *
உரியவஃதேரசமாக வுட்கொண்டுவப்போடிருத்தலினே .... *

ஓம்.

சிவமயம்.

ஞானவாசிட்டம்.

வயிராக்கியப்பிரகரணம்.

அவதாரிகை.

வடமொழியிலுள்ள ஞானவாசிட்டநூலைத் தமிழ்ச்செய்யுளில் மொழிபெயர்க்கப் புகுந்த விந்நூலாசிரியர் - இஃது - நிர்விக்கினமாய் நிறைவேறும்பொருட்டு- விநாயகமூர்த்தியைச் சகுணமாகவும் - நிர்க்குணமாகவும் - உபாசனைசெய்கின்றார்.

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை, யண்மை தூர மறவகத் துன்னுவாந் *
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்ட, முண்மையாக வொருங்குரை செய்யவே.

(இதன்பதப்பொருள்.) திண்மைஞானச்சிறப்பு - திடம்பொருந்திய வாக்கியார்த்தபோதச்சிறப்பினால் — உயர்வாசிட்டம் - மேன்மையாக விளங்கிய ஞானவாசிட்டத்தை — உண்மையாக - கீர்வாணத்திலுள்ள பிரகாரமாக — ஒருங்குரைசெய்ய- தமிழ்ச்செய்யுளால் முழுதுஞ் சாற்றும்பொருட்டு — பெண்மைபாதியன் - உமைபாகனாகிய பரமசிவன் — பெற்றகளிற்றினை - ஈன்றருளிய யானைமுகத்தினையுடைய விநாயகமூர்த்தியை — அண்மைதூரமற - அணிமைசேய்மையின்றி — அகத்துன்னுவாம் - இடைவிடாமலுள்ளத்தின்கட் சிந்திப்பாம். எ - று .... *

(பதசாரம்.) அர்த்தநாரீசுரனை - பெண்மைபாதியனென்றார். மறந்துநினையாமல் மூர்த்திமயமாய்ச்சிந்திப்பதை - அண்மைதூரமறவகத் துன்னுவா மென்றார்- நிச்சயித்தறியும் பரோட்சஞானத்தை - திண்மைஞானமென்றார். இரட்டுறமொழிதலென்னு முத்தியால் - திண்மைஞானச்சிறப்பு - நிச்சலமான விலக்கியார்த்தபோத விசேடத்தினால். உயர்வாசிட்டம் - மேலானவசிட்டோபதேசமான சுவானுபூதி நூலை- உண்மையாக - உள்ளவனுபவப்பிரகாரமாக. ஒருங்குரை செய்ய - முழுதையுஞ்சொல்லாமற் சொல்லும்பொருட்டு - பெண்மைபாதியன் - சிற்சத்தியபின்னனான சத்தன்- பெற்றகளிற்றினை - சுதந்தரமாகவடைந்திருக்கின்ற நிரதிசயாநந்த மென்னும் யானையை - அண்மைதூரமற - ஞாதாஞ்ஞான நீங்கும்படியாக - அகத்துன்னுவாம். தன்மயமானவுள்ளத்திற் றன்மயமாகச்சிந்திப்பா மெனக்கொள்க. (ப - ம்) சிதான்மசத்தியைப் பெண்மையென்றார் - அதற்கபின்னமாகவிளங்கியசத்தனைப் பாதியனென்றார். சத்திசத்தன் ஐக்கியத்தினுதயமாகாநின்றசுவானுபூதியை-பெற்றகளிறென்றார்-ஞாதாஞ்ஞானமின்றிச் சுயஞ்சித்தாயுணர்தலை- அண்மைதூரமறவகத்துன்னுவாமென்றார்- வசிட்டராலனுக்கிரகிக்கப்பட்ட மேலானவபரோட்ச ஞானமாகியசுவானுபூதி நூலை- திண்மைஞானச்சிறப்புயர்வாசிட்டமென்றார் அவ்வுண்மைஞானவொழுங்கின்படியே முழுதுமறைதலை - உண்மையாக வொருங்குரை செய்யவென்றார் * ஏகாரம் - ஈற்றசை - அனுபூதிமேலிட்டி லெதிரில்லாமற் சகலமுந்தன் மயமாகவிளங்குஞ் சுவானுபூதியை-மதங்கொண்டு சஞ்சரிக்கு மாண்யானையாகக்கூறினார்-இதனதுதாற்பரியம்- இந்நூலிற்கூடஸ்த பிரமஐக்கியத்தி னுதயமாகாநின்ற சுவானுபூதி சாட்சாத்காரத்தை-விநாயகமூர்த்தியாகக் கூறினதாம் .... (க)

(அ-கை.) (கவியினளவுகூறுகின்றது.)

போற்றிராமன் புகல்வயி ராக்கியந்-தோற்று நூற்றிருபத்திரண் டாஞ்சுகன் *
சாற்றுசீரிரு பத்தைந்து தற்பதத்-தேற்றம்வேண்டினர் சீரிருபத்தெட்டே... *

(இ-ள்.) போற்றிராமன்- அறிஞராற் புகழப்பட்டவிராகவன் — புகல்வயிராக்கியம் - சொல்லுகின்ற வயிராக்கியப் பிரகரணத்தில் — தோற்றும்-தோன்றுகின்ற (செய்யுள்) நூற்றிருபத்திரண்டாம்- நூற்றிருபத்திரண்டாகும் — சுகன் - சுகமுனிவரது

(சரிதையை)— சாற்றுசீர் - சொல்லுகின்றசெய்யுள்— இருபத்தைந்து- இருபத்தைந்தாம்— தற்பதத்தேற்றம் வேண்டினர்சீர் - பிரமநிச்சயத்தை யடைய விரும்பின முமூட்சுக்களின் (சரிதையைச்சொல்லுகின்ற) செய்யுள் — இருபத்தெட்டு - இருபத்தெட்டாகும். எ-று.— ஏகாரம்- ஈற்றசை. * சீரென்கின்ற சினைப்பெயர் கவியென்கின்ற முதற்பெயரை யுணர்த்துத லாற்சினையாகுபெயராம்.. (உ)

ஞான விண்மக னாற்பத்து நாலதா, மானலீலை மகிமைதொண் ணூறதா.....*
மானவூசியு மையெட்டு மேழுமா, மீனமற்றசீ ராய்ந்தவ ரீரைந்தே ....*

(இ-ள்.) ஞானவிண்மகன் - சிதாகாசபுருடன் (கதையின்செய்யுள்) —நாற்பத்துநாலதாம் - நாற்பத்துநான்காகும்— மானலீலைமகிமை - பெருமை பொருந்தியலீலை (கதையின் செய்யுள்) —தொண்ணூறதாம் - தொண்ணூறாகும்— ஆனவூசியும் - ஞானவடிவமானகற்கடி (கதையின்செய்யுள்) — ஐயெட்டுமேழுமாம் - நாற்பத்தேழாம் — ஈனமற்ற சீராய்ந்தவர்- குறைவின்றிய செல்வத்தை யாராய்ந்தவர்கள் (கதையின்செய்யுள்) —ஈரைந்து-பத்தாம்.எ-று. ஏகாரம் - ஈற்றசை.. (ங)

வஞ்ச விந்திரன் வன்கதை யொன்பதா, நெஞ்சி னுக்கிரு பத்திரு நீள்கவி...*
தஞ்ச பாலகன் றன்கதை யெட்டதா; மெஞ்சு சித்த னிருபது மாறுமே......*

(இ-ள்.) வஞ்சவிந்திரன்வன்கதை - கிர்த்தரமேந்திரனது வன்மைபொருந்திய கதையின் (செய்யுள்) —ஒன்பதாம் - ஒன்பதாகும்— நெஞ்சினுக்கு - மனத்தின்கதைக்கு — இருபத்திருநீள்கவி - இருபத்திரண்டு நீண்டசெய்யுளாம்—தஞ்சபாலகன் றன்கதை- நம்புதலுள்ளபாலகன்கதையின் (செய்யுள்) — எட்டதாம் - எட்டாகும்—எஞ்சுசித்தன் -குறைவைச்செய்கின்ற சித்தன் (கதையின்செய்யுள்) —இருபதுமாறும் - இருபத்தாறும். எ-று.............................. (ச)

துன்னுமுற்பத்தி சொல்லெழு பத்தொன்று, நன்னர்வெள்ளியுநாற்பத்தோடேழதா*
மன்ன தாம னுமையெட்டு மூன்றுமா, மின்ன வீம னிருபது மைந்துமே ....*

(இ-ள்) துன்னுமுற்பத்திசொல் - பொருந்திய வுற்பத்திப் பிரகரணத்தைச் சொல்லுகின்ற (செய்யுள்) —எழுபத்தொன்றும் - எழுபத்தொன்றுகும்— நன்னர்வெள்ளியும்- நன்மைபொருந்தியபிருகுவின் (கதையின்செய்யுள்)—நாற்பத்தோடேழதாம்-நாற்பத்தேழாகும்— அன்னதாமனும் - அத்தன்மையையுடைய தாமவியாளகடர் (கதையின்செய்யுள்)ஐயெட்டுமூன்றுமாம் - நாற்பத்துமூன்றும் —இன்னவீமன்-இத்தன்மைய வாகியவீமபாசதிடர் (கதையின் செய்யுள்)—இருபதுமைந்தும் - இருபத்தைந்தாம். எ-று. ஏகாரம் - ஈற்றசை..... .... (ரு)

துதிகொ டாசுரன்றொல்கதை நூற்றெட்டா, மதி நெடுங்கசன் வண்கதைநாலைந்தாந்*
திதி யெனுங்கதை யேழுஞ்சன கன்றன், முதிய நற்கதை முப்பது மாறுமே....... *

(இ-ள்.) துதிகொள் - பெரியோர்கள் தோத்திரத்தை யேற்கத்தக்க — தாசுரன் - தாசுரமுனிவரது— தொல்கதை - பழமையான கதையின் (செய்யுள்) —நூற்றெட்டாம்-நூற்றெட்டாகும்—மதிநெடுங்கசன்-அறிவிற்பெரியகசமுனிவரது—வண்கதை-வளம்பொருந்திய கதையின் (செய்யுள்)—நாலைந்தாம் - இருபதாகும்—திதியெனுங்கதை - திதியென்னும்பிரகரணத்தின்செய்யுள்—எழும் - எழும் —சனகன்றன் - சனகராசாவின் — முதியநற்கதை - முதிர்ந்த நன்மையான கதையின் (செய்யுள்) முப்பதுமாறும் - முப்பத்தாறுகும். எ-று.............. (சு)

உரிய புண்ணிய னொன்பது நாற்பது; நரகின் மாவலி நாலுடனைம்பதாம்.....*
பிரகலாதன் பிழைப்பெழு பத்திரண், டரியகாதியு மைந்துடன் முப்பதே... *

(இ-ள்.) உரியபுண்ணியன் - தனக்குரித்தான புண்ணியபாவனன்(கதையின்செய்யுள்)— ஒன்பதுநாற்பது - நாற்பத்தொன்பதாகும் — நரகில்மாவலி - பாதாளலோகத்திலுள்ளமாவலிசக்கரவர்த்தி (கதையின்செய்யுள்) —நாலுடனைம்பதாம் - ஐம்பத்துநான்காம்— பிரகலாதன்பிழைப்பு - பிரகலாதனுய்ந்த (கதையின்செய்யுள்) —எழுபத்திரண்டு-எழுபத்திரண்டாம்— அரியகாதியும் - அருமையான காதிமுனிவரது (கதையின்செய்யுள்) ஐந்துடன்முப்பது- முப்பத்தைந்தாம். எ-று.. (எ)

சித்த மாறித் தெளிந்த வுத்தாலக, னொத்தவெண்பதுக் கொன்றுகுறையவாஞ்*
சுத்த நாற்பது மாறுஞ் சுரகுவாம், பத்துமேழுமாம் பாசவி லாசரோ............*

(இ-ள்.) ஆறி- விஸ்ராந்தியடைந்த — தெளிந்த - தெளிவுற்ற — சித்தம் - மனத்தையுடைய—உத்தாலகன் - உத்தாலகமுனிவரது(கதையின்செய்யுள்)—ஒத்தவெண்பதுக்கொன்றுகுறையவாம் - பொருந்திய வெழுபத்தொன்பதாகும்— சுத்தம் - பரிசுத்தமான—சுரகுவாம்- சுரகுராசாவின் (கதையின்செய்யுள்) — நாற்பதுமாறுமாம் - நாற்பத்தாறுகும்— பாசவிலாசர்- பாசவிலாசமுனிவரது(கதையின்செய்யுள்)—பத்துமேழுமாம்-பதினேழாகும். எ-று.(அ)

ஏதமற்‌ றெழுபது மாறுமே, வீத கவ்வியன் மேலெழு பத்தொன்றும்..... *
போத முந்துப சாந்திபு சுண்டனு, மோத நூறு கவியிலொன் றில்லையே *

(இ-ள்.) ஏதமற்ற - மாசற்ற—வீதகவ்வியன் - வீதகவ்வியமுனிவரது (கதையின்செய்யுள்)—எழுபதுமாறும் - எழுபத்தாறுகும்—போதமுந்து - ஞானமுதன்மையான — உபசாந்தி - உபசாந்திப்பிரகரணத்தின்—மேல் - மேன்மையான (செய்புள்) — எழுபத்தொன்றும்-எழுபத்தொன்றுகும்—புசுண்டனும்-புசுண்டமுனிவரது(கதையின்செய்யுள்)—ஓத-சொல்ல—நூறுகவியிலொன்றில்லை - தொண்ணூற்றென்பதாகும். எ - று ....(௯)

தேவபூசை சிறந்த வெழுபதா, மேவும் வில்வ மிகுபதி னறதா.... .... *
மேவ மற்ற சிலைக்கதை யெட்ட தாந், தாவி லர்ச்சுனன் சாற்றிருபத் தொன்றே.

(இ-ள்.) சிறந்த - மேலான—தேவபூசை - ஞானதேவாராதனை (கதையின்செய்யுள்)—எழுபதாம்-எழுபதாகும்—மேவும்வில்வம்-பொருந்தாநின்றவில்வபலக்(கதையின்செய்யுள்)—மிகுபதினறதாம் -மிகுந்தபதினுறுகும்—ஏவமற்ற- நீக்கமற்ற—சிலைக்கதை - சிலைக்கதையின் (செய்யுள்)—எட்டதாம் - எட்டாகும்—தாவிலர்ச்சுனன் - அவாவிற்றுவாதவருச்சுனன் (கதையின்செய்யுள்)—சாற்றிருபத்தொன்று - சொல்லுகின்ற விருபத்தொன்றுகும். எ - று. ஏவ்வமென்பது- ஏவமென விகாரமாயிற்று...(௰)

சதவுருத்திரன்றன்கவிமுப்பதா, முதவுமையைந்தோடொன்றென்பர்பேய்க்கதை
முதுப கீரதன் முப்பத்து மூன்றதா, மெதிர் சிகித் துவசனெண்பது மும்மையே.

(இ-ள்.) சதவுருத்திரன்கவி - சதவுருத்திரர் கதையின்செய்யுள்—முப்பதாம் - முப்பதாகும்—பேய்க்கதை - வேதாள கதையின் (செய்யுள்) — உதவும் - உதவாநின்ற — ஐயைந்தோடொன்றென்பர் - இருபத்தாறுகுமென்று சொல்லுவார்கள் — முதுபகீரதன் - அறிவில்முதிர்ந்தபகிரதராசன் (கதையின்செய்யுள்)—முப்பத்துமூன்றதாம்-முப்பத்துமூன்றுகும்—எதிர்சிகித்துவசன் - விஷயத்தையெதிர்க்கின்றசிகித்துவசவாசன் (கதையின்செய்யுள்)—எண்பதுமும்மை - இருநூற்றுநாற்பதாகும்...(௰௧)

புகல்க சன்பதின் மூன்றுபொய் யாமவ, னிகழு நாலைந்து நீண்ட விரதங்க..*
ளிகலில் பத்தொன்ப தாமிக்கு வாகுவி, னகில ஞான மறுபது மாறுமே ... *

(இ - ள்.) புகல்கசன் - சொல்லாநின்ற கசமுனிவரது (கதையின் செய்யுள்) — பதின்மூன்று - பதின்மூன்றுகும் — பொய்யாமவன் - மித்தியாபுருடனது — நிகழும் - விளங்காநின்ற(கதையின்செய்யுள்)—நாலைந்து - இருபதாகும்—நீண்டவிரதங்கள்-நெடியவிரதகுயை (கதையின்செய்யுள்) — இகலில்பத்தொன்பதாம் - மாறுபாடில்லாதபத்தொன்பதாகும்—அகிலஞானம் - பூரணஞானத்தைச்சொல்லுகின்ற—இக்குவாகுவின் - இக்ஷுவாகுவாசனது (கதையின்செய்யுள்)—அறுபதுமாறும் - அறுபத்தாறும் .... (௰௨)

மானும் வேடனு மற்றிரு பத்தைந்தா, மான யோக மறுபது மெட்டுமா... *
மோன வுண்மை மொழிந்துள வாசிட்ட, ஞான நூற்கதைநாற்பதுமூன்றுமே.

(இ-ள்.) மானும்வேடனும் - மிருகவியாதன் (கதையின்செய்யுள்)—இருபத்தைந்தாம்-இருபத்தைந்தாகும்—ஆன-அனுபவமான-யோகம் - ஞானபூமியாகிய நிருவாணப்பிரகரணத்தின்—(செய்புள்)---அறுபதுமெட்டுமாம் - அறுபத்தெட்டாகும்—மோனவுண்மை- மௌனநிச்சயத்தை—மொழிந்துள - சொல்லியிருக்கின்ற— வாசிட்டஞானநூற்கதை - வாசிட்டமென்னுஞானசாஸ்திரத்தின்கதையானது—நாற்பத்துமூன்றுமே- நாற்பத்துமூன்றுகும்··(௰௫)

பாக மார்பதி கம்பதி னன்கதா, மாக வேயிரண் டாயிரத் தைம்பது......... *
மாக விக்கைந் ததிகமிவ் வாசிட்டம், யோகஞானத்தி னுண்மையுரைக்குமால்.

(இ-ள்.) பாகமார் - பக்குவநிறைந்த—பதிகம் - பதிகங்காப்பட்ட (ச்செய்யுள்)— பதினன்கதாம் - பதினன்காம்—ஆக - ஆகக்கூடுந்தொகை—மாகவி-பெருமைபொருந்தியசெய்யுள்—இரண்டாயிரத்தைப்பதுக்கைந்ததிகம்- இரண்டாயிரத்தைம்பத்தைந்தாம்—இவ்வாசிட்டம் - இந்தஞானவாசிட்டமானது—யோகஞானத்தின் - அயிக்கியஞானத்தினது — உண்மையுரைக்கும் - தத்துவத்தைச்சொல்லும். எ - று. * அயிக்கியஞானமென்பது - கூடஸ்தபிரமஐக்கியமான வத்துவிதஞானமெனக்கொள்க. யோகத்தினுண்மையையும் ஞானத்தினுண்மையையும் கூறினதென்றுன். முரணென்னையுளவெனின் - இஃது - சுசாதிமுதலிய பேதமிறந்த சாத்தியமான சுயம்ஞானமாதலினுனும் - பிராணபந்தன மனேநிக்கிரக முதலியசாதனமே யோகமாதலினுனும் - இவ்விரண்டையு மொப்பாகக் கூறுதல் கூடாமையான் முரணேயாம்-இந்நூலினுத்தாலகர்முதலியநால்வர் யோகானுஷ்டானஞ்செய்ததாகக்கூறினமையால்-

யோகத்தினுண்மையையு முரைத்ததாக நிகழ்த்தலாமேயெனின் - இவர்கள் ஞானானுஷ்டானத்தைச்செய்து பிரமஞானத்தையடைந்தபின் புத்தாலகர்க்கும் வீதகவ்வியருக்கும் - அநிச்சாப்பிராரத்துவத்தாலும் - புசுண்டயோகிக்கு - இச்சாப்பிராரத்துவத்தாலும் - சூடாலைக்கு பரேச்சாப்பிராரத்துவத்தாலும் - அனுபவித்துத்தீரும்படி வந்தயோகத்தைக் கௌணமாகக் கூறி - ஆத்மஞானத்தையே முக்கியமாகக் கூறினதேயன்றி அவ்வியோகத்தை ஞானத்துடனொருபொருளாகக் கூறினதன்றெனக்கொள்க-இவை இந்நூலாசிரியர் உரைத்தல் (இ-ம்) இப்பதின்மூன்றுகவிதையினுனு மேனையகவிகள் வந்துசேராமற் கதையையு மதன்கவிகளையும் பகுத்தளவு கூறினதென்பதாம் .... (௰௪)

நூல். (அ-கை) வசிட்டோபதேசமான சுவானுபவத்தைக் கீர்வாணசுலோகமாய்ச்சொல்லப்புகுந்த வடநூலாசிரியர் - இந்நூல்-நிர்விக்கினமாய் நிறைவேறி யாவருஞ் சிரவணஞ்செய்யும்பொருட்டு - ஆத்மஞானசாட்சாத்காரஸ்வரூபத்தை நிருபாதிகநிட்டையினுஞ்சோபாதிகநிட்டையினும் விலட்சணசலட்சணமாகவுபாசனைசெய்கின்றார் .... *

(வேறு) பொன்னுல கத்தினிற் புவியி லந்தரத், தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது *
மன்னுசிற்சோதியேவடிவமியாவுமாய்த்,துன்னுவதப்பொருடொழுதிறைஞ்சுவாம்

(இ-ள்.) மன்னுசிற்சோதியே - நிலைபெற்ற ஞானப்பிரகாசமே—பொன்னுலகத்தினில்-சுவர்க்கலோகத்திலும்—புவியில் - பூலோகத்திலும்—அந்தரத்து- அந்தரிட்சலோகத்திலும்—என்னுடையுட்புறத்து - என்னுடையவகத்திலும் புறத்திலும்—இலங்குகின்றது- விளங்காநின்றது—வடிவமியாவுமாய் - படிவங்களனைத்துமாய் — துன்னுவது - நிறைந்திருக்கின்றது—அப்பொருள் - அவ்வஸ்துவை—தொழுதிறைஞ்சுவாம் - திரிகரணங்களாலும் (இரண்டறத்) தொழுதுவணங்குவாம். எ - று. * சிற்சோதியேயென்னுந் தேற்றேகாரம்-ஆத்மப்பிரகாசத்தையன்றி வேறின்றென்பதை யுணர்த்தியதாம் - என்னுடையுட்புறத் தென்றதனானும் - சுவர்க்கமுதலியபுறத்தைச்சொல்லுதலினானும் - அவனுடையவுள்ளென்பதூஉங்கொள்க - அவனுடையவுட்புறமாவன - சாமவேதமகாவாக்கியத்தின் முற்பதமாகிய தற்பதத்தி னருத்தமான வீசுரனும் - அவனுக்குள்ளாகின்ற வீசுரசாட்சியாகிய பிரமமும் - புறம்பாகின்ற மாயைமுதலானசகலதத்துவங்களுமாம் - இம்மூன்றிலு நிறைந்திருப்பதுந்தோன்ற - புறம்பான தத்துவங்களைப்பொன்னுலகத்தினிற் புவியிலந்தரத்தென்றார் - என்னுடை யுட்புறமாவன - அவ்வாக்கியத்தினிரண்டாம்பதமாகிய தொம்பதத்தினருத்தமான சீவனும் - அவனுக்குள்ளாகின்ற சீவசாட்சியாகியகூடஸ்தனும்- அவனுக்குப்புறம்பாகின்றவவித்தைமுதலான தத்துவங்களுமாம்-இம்மூன்றிலு நிறைந்திருப்பதுதோன்ற என்னுடை யுட்புறத்தென்றார். அவ்வாக்கியத்தின்மூன்றாம்பதமாகிய - அசிபதத்தினருத்தமான கூடஸ்தபிரமஐக்கியமேவிளங்குவதென்பதுந்தோன்ற - இலங்குகின்றதென்றார். இவ்வாக்கியத்தி னகண்டார்த்தத்திற்சமஷ்டி - வியஷ்டி - சுத்தாசுத்தங்களாயிருக்கின்ற - சீவேசுரகூடஸ்தபிரமமாகிய சைதன்னியங்களிலும் - அபிமானி-அந்தக்கரணங்களான சடசித்துக்களிலும் - பிரிதிவுமுதலான பஞ்சபூத பௌதிகங்களாகிய சடங்களிலும் - ஏகப்பிரகாரமாய் விளங்குகின்ற சச்சிதாநந்த சுவானுபவமாகிய ஞானாத்மாவை-மன்னுசிற்சோதியென்றார் - அந்தஞானாத்மாவாகிய தானேசொருப முதல்ஸ்தம்ப பரியந்தமாயுள்ள - சகலவடிவங்களுமாய் நிறைந்துவிளங்கிய சுவானுபூதி சாட்சாத்காரமான வஸ்துவென்பதுதோன்ற - வடிவம்யாவுமாய்த் துன்னுவதென்றார் - தானேதானாய் விளங்குவதை-தொழுதிறைஞ்சுவாயென்றார் - இந்நூலில் ஆறுபிரகரணங்களினாலு நிரூபிக்கப்பட்ட திருவாணபதவாத்ம சாட்சாத்காரஸ்வரூபமே - இதற்குச்சுதந்தர வந்தரங்கவிஷ்டமுள்ள கடவுளாதலால் - அதற்கே இச்செய்யுளால் வணக்கஞ் சொல்லப்பட்டது .... *

(இதனதுதாற்பரியம்.) அத்தொய்த சித்தாந்தமான வேதாந்தங்களினது மகாவாக்கியார்த்தத்தின்படியே - விலட்சணமாகிய கூடஸ்தபிரமஐக்கிய ஞானாத்மவியாபகத்தைநிருபாதிகநிட்டையினும் பின்பு சலட்சணமானசர்வமுஞ் சச்சிதாநந்த பிரமமென்கிற வாத்மஞானசாட்சாத்காரத்தை - சோபாதிகநிட்டையினும்- துவிதமின்றிவணக்கங்கூறியதாம் - ஞானாத்மாவே இஷ்டமானகடவுளென்பதற்கு-ஆத்மாவேயெல்லாமென்கிற சுருதிவாக்கியத்தினும்-இந்தவாத்மாவானது-ஆதியந்தமில்லாதது சுயம்பிரகாசமுள்ளதென்று இந்நூலிற் சொல்லப்போகின்றபடியினும் - அவ்வாத்மாவினிடத்திற் சூரியனுஞ் சந்திரனு நட்சத்திரங்களு மின்னல்களு மக்கினியும் பிரகாசிக்கவில்லை - அதன் காந்தியாலிதெல்லாம் விளங்குகின்றதென்று சுருதிசொல்லுகையாலும் - விஞ்ஞாதாவையாதினாலறியலாமென்று-யாக்கியவர்க்கர் சொல்லியிருக்கிறபடியினும்-தனதுசுவானுபூதியே பிரமாணமாகவுடைய சாந்தமான தேயிசுக்கு நமஸ்காரமென்று - அரியினாற் சொல்லப்பட்ட படியாலும் - இவைகளே பிரமாணமென்று சொல்லப்பட்டது. தொழுதிறைஞ்சுவாமென்று சாமானியமாகக் கூறினமையால் - விசேட

மாகத்திரிகரணங்களும் வருவிக்கப்பட்டன - மனத்தினாலிரண்டறச் சிந்திப்பதற் குதாரணம்-
சசிவன்னபோதம்-பூசனையுமது சகலபொருளுமறிதமையு-மீசனையும்வேறதறவறிவதறிவென
வே-வாக்கினாலிரண்டறத் துதிப்பதற்குதாரணம் - ஒழிவிலொடுக்கம் - கன்னிக்கதலிதனைநார்
கழிப்பான் கண்போலத்-தன்னையறியாவறிவேதான்மீளச்-சொன்னானு - நாவென்றநாவேபோ
னானென்றசொல்லளவே-யாமன்றித் தானெதிராகா - தேகத்தினாலிரண்டற வணங்குதற்குதா
ரணம்-திருமந்திரம்-தன்னையறியத்தனக்கொருகேடில்லைத் - தன்னையறியாமற் றானேகெடுகின்
றார்-தன்னையறியுமறிவையறிந்தபின்-றன்னையர்ச்சிக்கத்தானிருந்தானே - மற்றும்வருவனவற்
றாற்காண்க.. (க)

(அ-கை.) கடவுள்வணக்கங்கூறி நூற்பெருமைநுவலுகின்றது. (கவி) திகழு
நான்முகன் முதற் றேவர் மூவருஞ், சகல வேதங்களுஞ் சாத்திரங்களும்,
புகலுஞானத்தினாற் புரணமானது, நிகரில்வாசிட்டமா நிபுணஞானநூல். *

(இ-ள்.) திகழும் - பிரகாசியாநின்ற—நான்முகன்முதற்றேவர்மூவரும்- பிரமன்முதலிய
கடவுளராகிய மும்மூர்த்திகளாலும்—சகலவேதங்களும் - சமஸ்தசுருதிகளாலும்— சாத்திரங்
களும்- சகலசாத்திரங்களாலும்—புகலும் - சொல்லப்பட்ட— ஞானத்தினால் - ஆத்மஞானத்தி
னால்—புரணமானது - நிறைந்திருக்கின்றது — நிகரில் - சமானமில்லாத— வசிட்டமாநிபுண
ஞானநூல் - வாசிட்டமென்னுஞ்சிறப்பாகிய ஞானசாஸ்திரம். எ-று. (ப-ம்.) சுயம்புவடிவ
மான மும்மூர்த்திகளினது சுவானுபூதியென்னும் பாரம்பரியவுபதேசமொழியினால் விளங்கு
கின்ற வாத்மஞானத்தையே - இந்நூலிற்கூறுதலால் - மூவரும்புகலுஞானமென்றார் - அநாதி
நித்தியமாயிருக்கின்ற - வேதங்கடமக் கந்தரங்கமான மகாவாக்கியத்திற் கூறிய கூடஸ்தபிரம
ஐக்கியமென்னு மாத்மஞானத்தையே-இந்நூலிற்கூறுதலால் - சகலவேதங்களும் புகலுஞான
மென்றார் - சுவானுபூதிமான்களாகிய சத்துக்களாலனுபவித்துச்சொல்லப்பட்ட வனுபூதிவச
னங்களாகிய சாஸ்திரங்களாற் கூறப்பட்ட வாத்மஞானத்தையே - இந்நூலிற் கூறுதலால்-சாத்
திரங்களும் புகலுஞானமென்றார் - இம்மூன்றினாலு மொருதன்மையவாகச் சொல்லப்பட்ட
வாத்மஞானமானது-இந்நூலினிறைந்திருத்தலான் - ஞானத்தினாற் புரணமானதென்றார்-சமா
னமில்லாத பிரமஞானமிதில் விசேடமாய் விளங்குதலால் - நிகரில்வாசிட்டமாநிபுணஞான
நூலென்றார். (இ-ம்.) இந்நூற்சுருதிகுருசுபானுபவத்தைவிளக்குகின்றபிரபலச்சுருதியாம்(உ)

(அ-கை) இதுவுமது. (கவி) தலைமைநான்முகன்மனத்தாமரைக்கினன், சிலை
யில்ராகவன்றிருச் செவிக்குத் தெள்ளமுது, துலைவில்வான்மீகிவாக் குதித்த தத்
துவ, நிலைமைவாசிட்டமா நிபுணஞானநூல்.......................................*

(இ-ள்.) நிலைமை - நிலைபெற்ற—வாசிட்டமாநிபுணஞானநூல்-வாசிட்டமாகியமேலான
ஞானசாத்திரமானது—தலைமைநான்முகன் - முதன்மையாகியபிரமதேவனது— மனத்தாம
ரைக்கு - இதயகமலத்துக்கு—இனன் - ஞானசூரியனாகவும்—சிலையில்ராகவன் - தனுசையெடு
ப்பதற்குமனமில்லாத (முமுட்சுப்பருவத்தையுடைய) விராமனது—திருச்செவிக்கு - சிறப்
பாகியசிரவணத்துக்கு —தெள்ளமுது - தெளிவாகியவானந்தாமிர்தமாகவும் — உலைவில்வான்
மீகி - சலனமில்லாதவான்மீகிரிஷியினுடைய—வாக்குதித்ததத்துவம் -(அனுபூதி) வசனத்தி
னுதயமாகிய சத்தாகவும் (விளங்குகின்றது) எ-று. மனத்தாமரையென்றதனான்-ஞானமென்
பது வருவிக்கப்பட்டது. (ப-ம்.) பிரமசங்கற்பமான சீவேஸ்வரசகத்தை பிரமப்பிரகாசமாகப்
பிரகாசிப்பிக்குஞ் சுயம்பிரகாசமாக விந்நூல்விளக்குதலின் - தலைமைநான்முகன் மனத்தாம
ரைக்கினனென்றும் - விஸ்வரூபமானவஸ்துவினதரூபமாய்வந்த சீவேஸ்வரசகத்து முதலிய
வற்றிலுள்ள விடயாநந்தங்களைப் - பூரணாநந்தமாகவாநந்திப்பிக்கு நிரதிசயாநந்தமாக விந்
நூலறிவித்தலின் - இராகவன்றிருச்செவிக்குத் தெள்ளமுதென்றும் -அறிதலிறந்து சத்தாமாத்
திரமாகவிளங்கு நிருவிகற்பசமாதி யனுபவமுள்ள சத்துக்கள்வாக்கினாற் சீவேஸ்வரசகங்கள்
சத்தாமாத்திரமாக விளங்குகின்றதென்னுமனுபவத்தை யிந்நூல்விளக்குதலின்-உலைவில்வான்
மீகிவாக்குதித்த தத்துவமென்றுங்கூறினார். (இ - ம்) இந்நூல் சீவேஸ்வரசகங்கள் சச்சிதா
நந்தப் பிரமமயமென்பதையறிவிக்கின்றதாம்.. (ங)

(அ-கை.) இ-து. (கவி) பெரியவரறிவுறுபெருமைசான்றது, விரிவுறுசிறி
யவர்மேவொணாதது, வரிசையிலுயர்ந்ததுவசிட்டசங்கிதை, யரியமெய்ஞ்
ஞானநூலனைத்தின்மிக்கதே...*

(இ-ள்.) பெரியவர்- (அறிவிற்பெரிய) மகத்துக்களால்—அறிவுறு- (தன்மயமாய) றியத்
தக்க—பெருமைசான்றது - மேன்மைநிறைந்தது — விரிவுறுசிறியவர் - (மனோசங்கற்பம்)
விரியப்பெற்ற வற்பவறிவையுடையவர்களால்— மேவொணாதது - (அனுபவமாய) றியத்தகா

தது—வரிசையிலுயர்ந்தது - (அறிவிக்கத்தக்க) முறைமையிற்சிறந்தது— வசிட்டசங்கிதை-வாசிட்டநூலானது — அரியமெய்ஞ்ஞானநூல் - அறிதற்கரிய மெய்ஞ்ஞானத்தை (யறிவியாநின்ற) ஞானசாத்திரங்கள்—அனைத்தின்மிக்கது - எல்லாவற்றிலுமேலானதாம். எ-று. (ப-ம்) சகலமுந்தமதாத்மஞானமாக வியாபித்துவிளங்குஞ் சத்துக்களாலுணரத்தக்கநூலென்பார்-பெரியவரறிவுறு பெருமைசான்றதென்றும் - சகலமுந்தனக்கு வேறானவனாத்மாவாய் வியாபித்தறியும் அசத்துக்களாலறியக்கூடாததிந்நூலென்பார்-விரிவுறுசிறியவர்மேவொணாததென்றும் - ஆத்மஞானத்தையறிவிக்குமரபினில் மேலான ஞானபூமியின் முடிவான துரியாதீதத்தை - யிந்நூல்விளக்குமென்பார் - வரிசையிலுயர்ந்தது வசிட்டசங்கிதையென்றும் - அபரோட்சஞானத்தையுணர்த்துநூல்போலாது - அபரோட்சஞானுபவத்தையுணர்த்துவதிந்நூலென்பார் - அரியமெய்ஞ்ஞானநூலனைத்தின்மிக்கதென்றுங்கூறினார். (இ-ம்.) சகலமும் பிரமாநந்தசாட்சாத்காரமாகவிளங்கு மதீதானுபூதியையுணர்த்தும்பிரபலச்சுருதியாயிருக்கின்றதிந்நூலென்பதாம்... (௪)

(அ-கை.) அருள்வடிவமாயிருத்தல். (கவி) தெருளுறுமகர்க்கிதஞ்செய்யுமன்
பினு, லருமைவாசிட்டநூற்கன்னையொப்பளோ, வுரியதாய்பிறவியையுள்ள
தாக்குவள், பெருமைவாசிட்டமிப்பிறப்பைமாற்றுமே...........................*

(இ-ள்.) தெருளுறுமகர்க்கு- (தன்னைத்தெரிந்துகொள்ளும்) அறிவில்லாதபுத்திரருக்கு— இதஞ்செய்யுமன்பினால் - (ஞானாகாரத்தையூட்டியாத்மசம்ரட்சணையென்னும்) இதத்தைச்செய்யாநின்றதயையினால் — அருமைவாசிட்டநூற்கு - அரியவாசிட்டநூலாகிய (வன்னைக்கு)— அன்னையொப்பளோ - (விடயாகாரத்தையூட்டித் தேகசம்ரட்சணைசெய்யாநின்ற) தாயானவள்சமானமாவாளோ—உரியதாய்பிறவியையுள்ளதாக்குவள் - தேகத்துக்குரித்தான தாயானவள் (விடயவாசனையையுண்டாக்கிச்) சநநத்தைமாறுமனிலைபெறச்செய்வள்— பெருமைவாசிட்டம் -பெருமைபொருந்தியவாசிட்ட (நூலென்னுந்தாயானவள்) — இப்பிறப்பைமாற்றும்- (பிரமானந்தவாசனையையுண்டாக்கி) யிச்சநநத்தைநீக்குவாள். எ-று. (இ-ம்.) இந்நூலனித்தியமான விடயாநந்தத்தைமாற்றி நித்தியமான பிரமாநந்தத்தைக் கொடுக்கின்ற கருணையின் மிஞ்சினதாம்... (௫)

(அ-கை.) நூற்பெருமைநுவன்றுஅவையடக்கங்கூறுகின்றது. (கவி) எண்ணுறு
பெருங்குணத்திராமன்றன்மட, நண்ணுறவசிட்டனேநவின்றஞானநூல்,பண்
ணுறுதமிழினாற்பாடுகேன்சுதை,மண்ணுறுகலத்தினும்வைக்குமேழையேன்.

(இ-ள்.) எண்ணுறு- எண்ணத்தகுந்த—பெருங்குணத்து-மகாசாந்தகுணத்தையுடைய— இராமன் - இராகவன் — தன்மடநண்ணுற - தனதாத்மஸ்வரூபத்தையடைய — வசிட்டனவின்ற - வசிட்டமுனியானவரனுக்கிரகஞ்செய்த — ஞானநூல் - (ஞானார்த்தத்தையே வான்மீகமுனிவரால்வடமொழியி லருளிச்செயப்பட்ட விவ்வாசிட்டமென்னும்) ஆத்மஞானசாத்திரத்தை—பண்ணுறுதமிழினால் - இசையமைந்த தென்மொழியினால்—சுதை - (சொர்ன்னபாத்திரத்தில்வைக்கத்தகுந்த) அமிர்தத்தை- மண்ணுறுகலத்தினும் - மிர்த்திகாபாத்திரத்திலும்— வைக்குமேழையேன் - வைக்கத்துணியுமேழையேனாகியயான் — பாடுகேன் - விருத்தமாகப் பாடுவேன். எ-று. (ப-ம்.) ஆதியிலிராகவருக்கு வசிட்டருபதேசித்த வாத்மஞான சாரங்களை-பின்புவான்மீகமுனிவரால்வாசிட்டமென்னும் பெயரைத்தரித்து வடமொழியிற் பரத்துவாசருக்குச்சொன்ன காந்தாசம்மிதமான காவியப்பிரபந்தத்தைத் - தமிழ்ப்பாவிற் சொல்லத்துணிந்ததேதென்னில்- சொர்ன்னபாத்திரத்திலும் - மிர்த்திகாபாத்திரத்திலும்-அமைந்திருக்கின்றவமிர்தத்துக்குப்பாத்திரபேதமேயன்றி - ரஸபேதமில்லாததுபோல- வடமொழிக்குந்தென்மொழிக்குஞ்சத்தபேதமேயன்றி யருத்தபேத மில்லாமையாலும் - சொர்ன்னபாத்திரமுள்ளவர்சிலரும் - மிர்த்திகாபாத்திரமுள்ளவர்பலருமாவதுபோல - தேயவியற்கையால் வடமொழியுணர்ந்தோர் சிலருந் தென்மொழியுணர்ந்தோர் பலருமாதலாலும் - வடநூலுணர்ந்தோர்க்கு மேனையோர்க்கு மெளிதிற்பயன்படுதலாலுமெனக்கொள்க. (இ-ம்.) இத்தமிழ்நூல் சர்வத்திரசாதாரணமாயிருந்து பக்குவருக்குச்சுவானுபூதியை விளைவிக்கின்றபடியால் சீவகாருணியமுள்ளசத்துக்கள்மிகுந்தவகமகிழ்ச்சியோடுமுண்மையாகக்கொள்வரென்பதாம்.(௬)

(அ-கை.) அவையடக்கங்கூறி யதிகாரி யிலக்கணங்கூறுகின்றது. (கவி) பந்தமுற்ற
னன்பரபதத்தைச்சேர்கவென், றந்தநிச்சயமுளா னறிவிலானலான், சிந்தனைத்
துயர்கெடச்சித்தைச்சேர்ந்துளா, னிந்தநூற்குரியவனென்றுகொள்கவே..........*

(இ-ள்.) இந்தநூற்குரியவன்-இவ்வாசிட்டநூலுக்கதிகாரியானவன்—அறிவிலானலான்- அஞ்ஞானியுமல்லன் — சிந்தனைத்துயர்கெட - மனோதுன்பநீங்கும்படி. — சித்தைச்சேர்ந்து

னானலன்-ஞானாத்மாவையடைந்தசீவன்முத்தனுமல்லன—பந்தமுற்றனன்- (யான்)பந்தத்தை யடைந்திருக்கின்றேன் — பரபதத்தைச் சேர்கவென்று - இதைநீக்கி யினி மோக்ஷத்தைச் சேரக்கடவேனென்று சிந்திக்கும்— அந்தநிச்சயமுளானென்று-அந்நிச்சயத்தையுள்ளவனே யென்று—கொள்க்-கொள்ளக்கடவது.எ-று. அலானென்பதைச்சித்தைச்சேர்ந்துளானென்னு மிடத்துங் கூட்டுக. (இ-ம்.) சேறானது தேற்றாங்கொட்டையினாற் றெளியமாட்டாததுபோல- அஞ்ஞானமயமாயிருக்கின்றவன் றெளியமாட்டாமையா லிந்நூலினது சாரத்தையறிதற் கவனதிகாரியல்லனென்றும் - தெளிந்தசலத்தைத்தெளிவிக்கத் தேற்றாங்கொட்டைவேண்டுவ தில்லாததுபோல - சின்மாத்திரமாய் விளங்குகின்றவனுக் கிந்நூலவசியம்வேண்டுவதின்றாகை யால் - இந்நூலுக்கவனு மதிகாரியல்லனென்றும்- கலங்கனீருக்குத்தேற்றாங்கொட்டைவேண்டு வதுபோல - அஞ்ஞானந்தமு ஞானந்தையமு முண்டாயிருக்கின்ற சாதனசதுட்டயமுள்ள முமுட்சுப் பருவத்தையுடையவனே யிந்நூலுக்கதிகாரியாவனென்றுமாம் - பிஷ்டபேஷிண ஞாயம்போல- ஞானியிந்நூற் கதிகாரியன்றென்றலுமாம் - இச்செய்யுளி லிந்நூற்குரிய வதி காரியைக்கூறுதலா லதற்கினமான - விடயம் - பிரயோசனம்- சம்பந்தம் - குறிப்பாயிருக் கின்றன - அவைகளிற்-பிரமமேவிடயம்- நிரதிசயாநந்தமே பிரயோசனம்-நூலிற்கும்நூலிற் சொல்லப்பட்ட விடயத்துக்குங் கூறுவதுங்கூறப்படுவதுமாகியதே- சம்பந்தமெனக்கொள்க.

(அ - கை.) அதிகாரி குருமுகமாய் விசாரித்தல். (கவி.) ஒருங்குணர் குரவனு
முயர்வான்மீகனை,மருங்குறப்பரத்துவன்வணங்கிவன்பவ,நெருங்குவெந்துயரிலே
நின்றதெங்ஙன, மருங்குணத்திராமனீ யருளிற்கூறென்றான் .... *

(இ-ள்.) ஒருங்குணர் குரவனும் - முழுதையுமுணர்ந்த வாசாரியராகிய —உயர்வான் மீகனை - மேலானவான்மீகிமுனிவரை— மருங்குற - மருங்காக— பரத்துவன்வணங்கி- பரத் துவாசமுனிவர் நமஸ்க்காரஞ்செய்து — வன்பவநெருங்கு வெந்துயரில்-கொடியபிறவியிற் செறிந்த வெவ்விய சம்சார துன்பத்தில்— அருங்குணத்திராமன் - அரியசத்துவ குணத்தை யுடையவிராமன்— நின்றதெங்ஙனம் - இருந்ததெப்படி — நீ - தேவரீர் — அருளிற்கூறென் றான் - கிருபையினா லனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்று மிருதுவாகக்கேட்டார். எ-று.— (ப - ம்.) சீடனாலறியவேண்டுவன வனைத்தையு மறிவிக்கத்தக்க சாமர்த்தியமுள்ள வாசிரிய னென்பது தோன்ற- ஒருங்குணர் குரவனுமென்றார் - சீடனுக்குரிய பயபத்தி முதலானவை தோன்ற - மருங்குறப்பரத்துவன் வணங்கியென்றார் - பரத்துவாசர் - நிட்காமியபுண்ணிய பரிபாகத்தினாற் சாதனசதுஷ்டயம்வந்ததனாற் றனதாத்மஸ்வரூப முதயமாகாநின்ற வவசரத் திற்சகலமுந் துக்கவடிவமாகக்கண்டுந் தன்னுடையசுவானுபூதி பிரத்தியட்சமாய்த் துன்பநீங் காததனாற் சம்சாராக்கினியெரிக்குந் துன்பத்துக்குச் சகிக்கமாட்டாதவரா யிராமனொத்த நிச் சயத்தினா லிச்சமுசாரத்தோடு கூடியிருந்தாரோவந்த நிச்சயத்தைத் தெரிந்துகொண்டா லதுவேநமக்கு மனுபவமாமென்னு மபிப்பிராயங்கொண்டு- வன்பவநெருங்குவெந்துயரிலே நின்றதெங்ஙன மருங்குணத்திராமனென்றார். (இ-ம்.) பரிபக்குவமான சீடன் சீவன் முத்தித் தன்மையை விசாரித்ததாம்..(அ)

(அ-கை.) விசாரித்தசீடனது மோக நிவிர்த்தியின்பொருட் டதனுற்பத்தி கூறல். (கவி)
நல்லதுசிறுவநீ யுரியைநானது, சொல்லுவன்கேட்குதி துயர்செய் மோகநீ, வெல்லலா
மோகந்தான் சகத்தின்வேறன்றி, மல்லல்வானிறம்படைத்தென்னவந்துறும். ....*

(இ-ள்.) சிறுவ - புதல்வனாகியபரத்துவாசரே —நீ - நீகேட்டவினா—நல்லது - பரமசுகத் தைவிளைக்கு நன்மையுள்ளதாம்— நீயுரியை - நீநிருவாணசுகத்தைக் கேட்பதற்குரித்தான சா தனசதுஷ்டயசம்பத்துள்ளவன் — நானது சொல்லுவன்கேட்குதி - யானதைச்சொல்லுவேன் கேட்பாயாக — துயர்செய்மோகம் - துன்பஞ்செய்கின்ற வஞ்ஞானத்தை —நீ வெல்லலாம்- நீசெயஞ்செய்யலாம் — மோகந்தான் - மோகமானது — சகத்தின்வேறன்றி - சகத்சம்பந்த மாய்—மல்லல்வான் - வளமைதங்கிய வாகாயத்தில்—நிறம்படைத்தென்ன - இல்லாதநீலநிறமு ண்டானதுபோல — வந்துறும் - பிரமத்தினிடத்தி லில்லாததாக வந்துபொருந்தும். எ-று. (ப-ம்.) நாமனுக்கிரகஞ்செய்யும் பிரமானந்த அபரோட்ச சாட்சாத்காரத்தினாற் செநநமரண துன்பத்தைக் கொடுக்குமயக்க நீங்குமென்பார் - நான்சொல்லுவன்கேட்குதிதுயர்செய்மோ கநீ வெல்லலாமென்றார் - நிருமலமானவாகாயத்தை - நீலநிறமாய்ப்பார்க்கும் பிராந்தியுண்டா வதுபோலச் - சொச்சமானநிரதிசயாநந்த சுவானுபூதிப் பிரத்தியட்சத்தைச்சகத்தாகக்காண் கின்றமோக முண்டானதென்பார் - மோகந்தான் சகத்தின்வேறன்றி மல்லல்வா னிறம்படைத் தென்னவந்துறுமென்றார். (இ-ம்.) ஆகாயத்தினீலநிறமில்லா திருந்துந்தெரிவின்மையினலிரு ப்பதாய்த் தோற்றுவதுபோலப் - பிரமஞானத்திற் சகத்மோகமித்தையாயிருந்துஞ் சுவானு

பவமின்மையாற் பரமார்த்தம்போலத் தோற்றப்படுகின்றதென்று அத்தியாரோபவுத்தியாலறிவித்ததாம்- அத்தியாரோபமாவது - இதார்த்தமான சச்சிதாநந்தப் பிரத்தியட்சத்தையில்லாதநாமரூபவடிவமான சகமாகவிபரீத பாவனை யாற்காண்குதல் .... (௯)

(அ-கை.)மாயாவிலக்கணங்கூறியதைநிவிர்த்திக்குமனுபூதியிலக்கணங்கூறல்.(வேறு)
இறப்பிலாவிந்தமோக மிறையுமீட்டெணணமின்றி, மறப்பதேநல்லதென்று மதித்
துயர்மனத்தினுக்குத், திறப்படக்காணப்பட்ட தில்லெனச்சித்தினாலே, யுறப்பெறு
மெப்போதப்போ துயர்பரசுகமதாமே.............. .... *

(இ-ள்.) இறப்பிலாவிந்தமோகம் - நித்தியமாகக் காணப்பட்ட விம்மோகமாகிய சகத்தை— இறையுமீட்டெண்ணமின்றி - எவ்வளவேனுந் திரும்பநினையாமல் —மறப்பதே-மறந்துவிடுவதே — நல்லதென்றுமதித்து - நன்மையென்றுநிச்சயித்து — உயர்மனத்தினுக்கு-ஸ்வரூபசமஸ்க்காரமான மகாமனதுக்கு— திறப்படக்காணப்பட்டது-உள்ளதுபோலத்தோற்றப்பட்டசகமானது— இல்லெனா - இதார்த்தமாயில்லவே யில்லையென்று—சித்தினால் - ஞானத்தினால்— உறப்பெறுமெப்போது - உண்டாவதெப்போதோ—அப்போதுயர்பரசுகமதாம்-அப்போதேமேலான நிருவாணசுகமாம். எ-று. (ப-ம்.) மாயையென்ப திருந்தன்றே விறக்கவேண்டும்அஃதுண்டாவதுமழிவதுமிதார்த்தமாயின்றாகலின்-இறப்பிலாவிந்தமோகமென்று சகசானுபவப்பிரக்ஞையினால் - மோகஸ்மரணம் விடவேண்டுவதாகையால் - இறையுமீட்டெண்ணமின்றிமறப்பதே நல்லதென்றும்- துரியாதீதத்திற்கரைந்து வெளிப்படுமறிவுக்கப்போதே சகலசகங்களும் பிரமாநந்த சாட்சாத்காரமாக விளங்குதலால் - உயர்மனத்தினுக்குத்திறப்படக் காணப்பட்ட தில்லெனச் சித்தினாலே யுறப்பெறு மெப்போ தப்போ துயர்பர சுகமதாமென்றுங்கூறினார் - ஆத்மாவினின்று மாகாயந்தோன்றிற் றென்னும் பிரமாணத்தின்படியே யுபாதானகாரணத்தைத் தவிரவுபாதேயம்வேறாக நிரூபிக்கப்படாதென்னுஞ் சுருதியினாலுஞ்- சுவர்ன்னத்தைத்தவிர கடகமகுடாதிக ளிடையுயர்ந்து வேறுபடாதென்னும் முத்தியினாலும் - திருக்குரூபமான வாத்மாவினிடத்திலுண்டான திரிசயப்பிரபஞ்சந் திருக்குவைத்தவிர வேறில்லையெனக்கொள்க. (இ-ம்) உபதேசித்தமகாவாக்கியார்த்தந்தோன்ற-தான்சின்மாத்திரமாகவிளங்குந் திருஷ்டியினாற்சகலமுஞ் சின்மாத்திரமாய்விளங்கு மென்னுமனுபவம் வந்தாலதுவேநிரதிசயாநந்த அபரோட்ச சாட்சாத்காரமா மென்றுகூசகமாயபவாதவுத்தியாலறிவித்ததாம் - இவைகுருமுகத்தாற் றெரிந்துகொள்க - அபவாதமாவது-விபரீதபாவனையாற்பார்க்கின்றவில்லாத நாமரூபவடிவமாகிய சகத்தையிதார்த்தமான சச்சிதாநந்த வடிவமாகத்தெளிவினாற் காண்குதல் .... (௰)

(அ-கை.) திருக்குவைச்சொல்லி திரிசியதிருஷ்ட்டிநீங்காவிடிற் பரமசுகமுண்டாகா
தெனல். (கவி) வழிபடுமிதனைவிட்டு மற்றுளநூல்களென்னுங்,குழிகளிற்புரண்டஞ்
ஞானக் குணத்தினாற்பிறப்போர்க்கெல்லா, மொழிவறவொருவர்செய்தற் குரித்தன்
றாய்த்தானேயுண்டாங், கழிதலிற்பரமவின்பங் கற்பங்களாலுங் கூடா................*

(இ-ள்) ஒழிவற - சதோதயமாய் — ஒருவர்செய்தற்கு - ஒருவராலுண்டாக்குவதற்கு —உரித்தன்றாய் - உரியதல்லாததாய்— தானேயுண்டாம் - சுயமாகவுண்டான— கழிதலில்-நாசமில்லாத—பரமவின்ப- நிருவாணசுகமானது— வழிபடும் - வழிபடாநின்ற—இதனைவிட்டு-(பரஞானமான) விந்தத்திரிசிய விஸ்மரணத்தைவிட்டு—உள-அபரஞானத்தையுடைய— நூல்களென்னும் - சாத்திரங்களென்கிற— குழிகளிற்புரண்டு- படுகுழிகளிலுழன்று— அஞ்ஞானக்குணத்தினால் - அறிவின்மையாகியகுணத்தினால் — பிறப்போர்க்கெல்லாம்- சனிப்பவரனைவர்க்கும்—கற்பங்களாலுங்கூடா - எக்காலத்திலும் பொருந்தாதாம்.—எ-று. வழிபடுமிந்நூல்விட்டு மற்றுளநூல்களென்கின்ற பாடமுமுண்டு. (இ-ம்.) சாத்திரஞானஞ் சிரமத்தின்பொருட்டேயன்றித் - திரிசியவிஸ்மரணம்போல நித்யசித்தபரப்பிரமவிடயா பரோக்ஷாநுபவமானவிஸ்ராந்தியைக் கொடாதென்பதாம்...(௰௧)

(அ-கை.) திரிசியவிஸ்மரணமானவாசனாத் தியாகம் பெரியோர்க்குஞ் சம்மதமா
மெனல்.(கவி) அலைசெய்வாதனையைச்சேட மறவிடனல்லதென்று,நிலைபெறுமுத்தி
யென்று நிமலமா நெறியீதென்றுந், தலைமையோர் பகர்வரன்ன திருவகைச்சநந
நல்கி, யுலைதருமலினமொன்ற தொழித்திடுஞ் சுத்தமொன்றே..... . ... *

(இ-ள்.) அலைசெய்வாதனை - சஞ்சலத்தைவிளைக்கின்ற வாசனையை—சேடமற-பற்றற—விடல்- விடுதலையே—நல்லதென்றும் - நன்றென்றும்— நிலைபெறுமுத்தியென்றும் - நிலைபெற்றமோக்ஷமென்றும் — நிமலமாநெறியீதென்றும் - மாசற்றமார்க்க மிதுவென்றும்—தலைமையோர்பகர்வர்-மேலானசத்துக்கள் சொல்லுவார்கள்—அன்னதிருவகை-அவ்வாசனையி

ரண்டுவிதமாய்—(அவற்றில்) சநநநல்கி - பவத்தைக்கொடுத்து—உலைதரு - நடுக்கத்தைச்செய்யாநின்ற— மலினமொன்று - அசுத்தவாசனையொன்று— அதொழித்திடும் - அச்சநநத்தை நிவிர்த்திசெய்கின்ற—சுத்தமொன்று-சுத்தவாசனையொன்ரும். எ-று. (இ-ம்.) வாசனாத்தியாக மேவிதேகமுத்தியெனச்சொல்லி அதன்சாமானியவிலக்கணத்தைச்சொன்னதாம்........ (௰௨)

(அ-கை.) வாசனையை நிவிர்த்திக்கும்பொருட் டதன்விசேடணநிரூபித்தல். (கவி.)
மடமையின்செறிவேமெய்யாய் மலியகங்காரந் துன்றிட்; படர்தருபிறப்பைமேன்
மேற் பயில்விக்குமலினமென்ப, ரடர்மறுசநநநீங்கி யங்குரமின்றிசெந்தீச், சுடமு
ளையாவித்தொக்குஞ் சுத்தவாதனையதென்பர்.. *

(இ-ள்.) மடமையின்செறிவே மெய்யாய் - அஞ்ஞானத்தினது மயமேதேகமாய்—மலியகங்காரந்துன்றி - மிகுந்தவகம்பாவநிறைந்து— படர்தருபிறப்பை - வளராநின்றபலசநநத்தை— மேன்மேல் - மேலுமேலும்— பயில்விக்கும் - உண்டாக்குவதை — மலினமென்பர்-அசுத்தவாசனையென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்— அடர்மறுசநநநீங்கி - நெருங்கியமறுபவம் விட்டிருக்கின்ற— அங்குரமின்றி - முளையில்லாமல்— செந்தீச்சுட- சிவந்தவக்கினியினால்வறுக்க—முளையாவித்தொக்கும் - முளையாதவிதைக்குச்சமானமான— அது-அவ்வாசனையை—சுத்தவாதனையென்பர்- சுத்தவாசனையென்று சத்துக்கள்சொல்லுவார்கள். எ-று. (ப-ம்.) ஆத்மஸ்வரூபத்தை மறந்துவிடயாகாரத்தில் ரமிப்பதை - மடமையென்ருர். (இ-ம்.) அஞ்ஞான சமஸ்க்காரமான வசுத்தவாசனையுள்ளவன் - பெத்தனென்றும் - ஞானசமஸ்க்காரமான சுத்தவாசனையுள்ளவன் - முத்தனென்றுஞ் சொல்லப்பட்டதாம்.......................(௰௩)

(அ-கை.) சுத்தவாசனை யடைந்தசீவன் முத்தரிலக்கணங் கூறல். (கவி.)
மெய்தரிநிமித்தமாகத் தரிப்பதாம்விளம்புஞ்சுத்த, மெய்தினர்பிறவியானவநர்த்
தத்தினென்றுமெய்தார், நொய்தினி னோக்கவேண்டுநோக்கெலாநோக்கியின்பஞ்,
செய்திடுஞ் சீவன்முத்தி சேர்ந்தவரொன்னலாமே.... ... . *

(இ-ள்.) (அ-கை.) மெய்தரிநிமித்தமாக - பிராரத்த தேகத்தைத் தாங்கும்பொருட்டு—தரிப்பதாம் - தரிப்பதாகிய — விளம்புஞ்சுத்தம் - சொல்லாநின்ற சுத்தவாதனை — எய்தினர்-அடைந்து—பிறவியானவநர்த்தத்தின்- சநநமாகியவநர்த்தத்தில்—என்றுமெய்தார்-எப்போதுஞ்செல்லாதவர்களை — நொய்தினில்-சூட்சுமமான(ஞானானுபவத்தில்)—நோக்கவேண்டும்-பார்க்கவேண்டிய— நோக்கெலாம் - ஞானவிஷயங்களனைத்தையும் — நோக்கி - பார்த்து—இன்பஞ்செய்திடும்- சிதாநந்தசுகத்தைவிளைக்கும்—சீவன்முத்திசேர்ந்தவரொன்னலாம்-சீவன்முத்தித்தன்மையையடைந்தவர்களென்று.சொல்லலாம்.எ-று.(இ-ம்.)பிராரத்தம்புசிக்கும்படி முடிவாகவந்த தேகத்தைத் தரித்திருக்கு நிமித்தஞ் சுத்தவாசனையைத்தரித்தவன் இச்சநநத்தி லுழுந்தானென்பதாம்...(௰௪)

(அ-கை.) சீவன்முத்தரிலக்கணங்கூறி யிராமன் சீவன்முத்தனான நெறியைச்சொ
ல்லத்தொடங்குதல். (கவி.) ஆன்றதோர்சீவன்முத்திப் பதத்தினையடைந்திராமன்,
பூன்றமா மனத்தனான நெறியினைப் புகலக்கேட்பிற், சான்றவிக் கேள்வியாலே
சுராமரணங்கடீர்நி, தோன்றலேயெனவான்மீகித் தொன்முனிசொல்லலுற்ருன்.*

(இ-ள்.) ஆன்றது-மாட்சிமைப்பட்டதான—ஓர் - ஒப்பற்ற— சீவன்முத்திப்பதத்தினை யடைந்து - சீவன்முத்தித்தன்மையைப்பெற்று—இராமன் - இராகவன் — பூன்றமாமனத்தனான-பூரணமகாமனதுடனேயிருந்த—நெறியினை-மார்க்கத்தை—புகலக்கேட்பின் - சொல்லக்கேட்குமிடத்தில்—சான்றவிக்கேள்வியால் - அறிவுவிளங்கியவிச்சிரவணதினால்— சுராமரணங்கடீர்தி-சராமரணங்களை நீக்குவாய்—தோன்றலேயென - புதல்வனேயென்று — வான்மீகித்தொன்முனி-பழையவான்மீகிமுனியானவர்—சொல்லலுற்ருன்-சொல்லத்தொடங்கினர். எ-று. [இ-ம்.] வான்மீகிமுனிவர் பரத்துவாசருக்குத், தம்மாலனுக்கிரகிக்கப்பட்ட சுவானுபவமானது அபரோக்ஷமாம்பொருட்,டிராமனறிந்தசுவானுபவமபரோக்ஷமாகுநிமித்தம்,வசிட்டமுனிவருபதேசித்த கதைகளைச்சொல்லத்தொடங்கினதாம்.......................................(௰௫)

(அ-கை.) இராமன் தீர்த்தயாத்திரைவிரும்பல். (கவி) சதுமறைநூல்களியாவுந்தரி
த்தனன்விநோதத்தாலே, யெதுபயமென்னவஞ்சாதிருந்தனன் சின்னாட்பின்னாண்,
முதுபயனதிகளியாவு முனிவரதிடமுங்காண்பான், கதும்மெனக்காதலானான் கார்
நிறக்கமலக்கண்ணன்... *

(இ-ள்.) சதுமறை - நான்குவேதங்களையும்—நூல்களியாவும் - கலைகளனைத்தையும்—தரித்தனன்-அப்பியாசித்து—விநோதத்தால் - விளையாட்டினால்—எதுபயமென்ன-யாதுபய

மென்று—அஞ்சாது - (ஒன்றிற்கும்) பயப்படாமல்— சின்னாளிருந்தனன் - சிறிதுநாளிருந்தார்—பின்னாள் - (விளையாட்டுப்பருவநீங்கின) பிற்காலம்— கார்நிறக்கமலக்கண்ணன் - மேகவண்ணனானதாமரைக்கண்ணையுடையவிராமன்—முதுபயனதிகளியாவும் - மேலானவிலாபத்தைக்கொடுக்கத்தக்க புண்ணியதீர்த்தங்களனைத்தையும்—முனிவரதிடமும்- சத்துக்களுடைய புண்ணியாச்சிரமங்களையும்—கதுமென - சீக்கிரமாக—காண்பான் - தரிசிக்கும்பொருட்டு—காதலானான்-ஆசித்தான். எ-று. (ப-ம்.) இனிமோகமயமான சகசம்பந்தங்களுக்குப்பயந்து அதைநிவிர்த்திசெய்வானென்பார், விநோதத்தாலேயெதுபயமென்னவஞ்சாதிருந்தனனென்றார்—[இ-ம்,] சித்தசுத்திவந்து அதனாற்சாதனசதுஷ்டயமுண்டா யதனாற்சற்குரு வெளிப்படுநிமித்தந், தீர்த்தயாத்திரைசெய்யப் புண்ணியபரிபாகத்தினாற் றனக்குத்தானே விருப்பமுண்டானதென்பதாம் ...... (௰௬)

(அ-கை.) பிதாவைவினாவல். (கவி) தந்தைதன்சரணமானநகமெனுந்தாதுபூத்த,
வந்தமில்கமலப்போதையன்னம்போலணைந்துதாழ்ந்து, முந்தைநன் னதிகடேவ
ராலயமுனிவர்கான்க, ளெந்தைநின்னருளிற்காண்பானெண்ணியதென்றனுள்ளம்.

(இ-ள்.) நகமெனுந்தாதுபூத்த - நகமென்னுங்கேசரங்களையுடைய — தந்தைதன்-பிதாவினது—சரணமான-பாதமென்னும்—அந்தமில்-குவியாத—கமலப்போதை-அப்போருகத்தை—அன்னம்போல்-அமிசம்போல—அணைந்து - (இராம)னடைந்து —தாழ்ந்து-நமஸ்க்கரித்து—முந்தைநன்னதிகள் - பழைமையானபுண்ணியதீர்த்தங்களையும்—தேவராலயம்-தேவாலயங்களையும்—முனிவர்கான்கள்-முனிவர்தபோவனங்களையும்—எந்தை-என்பிதாவே—நின்னருளில்-உமதுதயையினால்—காண்பான்-தரிசிக்கும்பொருட்டு—என்றனுள்ளம்-என்மனது—எண்ணியது-நினைத்தது. எ-று. இஃது வியஸ்தரூபககற்பிதவுபமானவலங்காரம்.. (௰௭)

(அ-கை.) தீர்த்தயாத்திரைக்குப்பிரவேசித்தல். (கவி) முடிவிலா திரந்ததெல்லா
முடிவுறாதில்லைநின்னா, லடியனேன்முன்னம்வேட்டவரமுநீ யருடியென்னப், படி
புகழ்வசிட்டனோடும்பார்த்திபனினிதினெண்ணிக், கடிதுபோய்மீடியென்னக் கார்
கழல்வணங்கிப்போனான் ...... *

(இ-ள்.) முடிவிலாதிரந்ததெல்லாம் - முடிவில்லாமல்யாசிக்கப்பட்டசகலமும்—நின்னால்-உம்மால்—முடிவுறாதில்லை - முடிவுபெறாததில்லை—அடியனேன் - அடியேன்—முன்னம்வேட்ட - முந்தினதாகவிரும்பிக் (கேட்ட)—வரமுநீயருடியென்ன - வரத்தையுந் தேவரீரருளவேண்டுமென்றுகேட்க— படிபுகழ் - உலகம்புகழாநின்ற — வசிட்டனோடும் - வசிட்டமுனிவரோடும்—பார்த்திபன் - தசரதரானவர் — இனிதினெண்ணி - இனிமையாக வாலோசித்து—கடிதுபோய்மீடியென்ன - சீக்கிரமாகப்போய்வாவென்றுசொல்ல—கார் - மேகவண்ணனை (இராமன்)—கழல்வணங்கி - (பிதாவினது) பதத்தினமஸ்க்கரித்து— போனான் - (தீர்த்தயாத்திரைக்குப்) பிரயாணமாயினார். எ-று. [இ - உ - க - ம்] புத்திரன் முந்தினதாகப், பிதாவினனுக்கிரகம் பெற்றுக்கொள்ளவேண்டிய, விதிப்படிக்குச் சித்தசுத்திக் கேதுவான, தீர்த்தயாத்திரைக் கனுக்கிரகம்பெற்றுக்கொண்டதாம் ...... (௰௮)

(அ-கை.) பின்னோர்களோடுந்தீர்த்தயாத்திரையின்மகிழ்ச்சியடைதல். (கவி) தம்
பியரோடுநன்னாளேகித்தந்நாடுநீங்கிப், பம்பியநதியுங்கானும் பற்றற்றோரிடனும்
பாலை, வெம்பியநிலனும்வேலைக்கரைகளும்விலங்கற்சார்வும், வம்பியலலங்கல்வீர
னோக்கினன்மகிழ்ச்சிகூர ...... *

(இ-ள்.) தம்பியரோடும்-தம்பிமார்களுடன்—நன்னாள் - சுபதினத்தில்—ஏகி - பிரயாணப்பட்டு—தந்நாடுநீங்கி - தமதுகோசலமண்டலத்தைக்கடந்து— பம்பியநதியும் - பரவியநதிகளையும்—கானும் - தபோவனங்களையும் — பற்றற்றோரிடனும் - துறவிகளாச்சிரமங்களையும்—வெம்பிய- வெவ்விதாகிய—நிலனும் - பாலைவனங்களையும்—வேலைக்கரைகளும் - சமுத்திரதீரங்களையும்—விலங்கற்சார்வும்- மலைச்சார்புகளையும்—வம்பியல் - வாசனைபொருந்திய—அலங்கல் - புஷ்பமாலையை (யணிந்த)—வீரன் - சுத்தவீரனை (விராமன்) — மகிழ்ச்சிகூர-இன்பமிக—நோக்கினன் - தரிசித்தார். எ-று ...... (௰௯)

(அ-கை.) மீண்டுநகரமெய்தல். (கவி) துன்னுறுமமரர்போற்றமானிடர்துதிப்பமீண்டு,
தன்னுயர்சிவலோகத்தைச் சார்தருமீசனென்னப், பொன்னுலகத்தைமேவும் புரந்தரன்
புதல்வனென்ன, மன்னுறையயோத்திபுக்கான் மலர்சொரிந்தியாருமேத்த ...... *

(இ-ள்.) துன்னுறும்- நெருங்கிய—அமரர்போற்ற- தேவர்கள்புகழவும்—மானிடர்துதிப்ப-மனிதர்தோத்திரஞ்செய்யவும்—மீண்டு - (தீர்த்தயாத்திரையினின்றுந்) திரும்பி — தன்

னுயர்-தனதுமேலான—சிவலோகத்தை - சிவபுரத்தை—சார்தருமீசனென்ன - அடைகின்ற விசனைப்போலவும்— பொன்னுலகத்தை - தேவலோகத்தை—மேவும் - பொருந்தாநின்ற—புரந்தரன் - தேவேந்திரனுடைய — புதல்வனென்ன - குமாரனாகிய சயந்தனைப்போலவும்—மன்னுறை - தசரதமகாராசன்வாசஞ்செய்கின்ற — அயோத்தி - அயோத்தியாபுரியை—யாரும்-அனைவரும்—மலர்சொரிந்து-புட்பங்களைத்தூவி—ஏத்த - துதிசெய்ய—புக்கான் - இராமர்புகுந்தார். எ-று. (ப-ம்.) ஆடவர்புட்பத்தினாலும், மாதர்கள் பொரியினாலும், அஞ்சலி கொடுத்தேத்தினாரென்பார், மலர்சொரிந்தியாருமேத்தவென்றார் [இ-உ-க-ம்] ஸ்நான முதலியவைகளைக்கிரமமாகச்செய்துவந்தாரென்பதாம்................................. ... (உ௰)

(அ-கை.) தினசரிதைகாரணமாக வுண்டானகுணங்களையுரைத்தல். [கவி.] நோக்
கியதேசநீதி நுவல்வுற்றும்புலருமுன்னே, சேக்கைநின்றெழுந்துநித்த நியமங்கள்
செய்துந்தாதை, நீக்கமில் சரணந்தாழ்ந்து நெடுந்தவ வசிட்டன் முன்னோர், வாக்
கினான்ஞானநீதி வாய்ந்தபல் கதைகள்கேட்டும்...... .... *

(இ-ள்.) நோக்கிய - [இராமனனவர்.] தான்பார்த்த—தேசநீதி நுவல்வுற்றும்-தேசாசாரங்களைச்சொல்லியும்—புலருமுன்னே-உதயமாதற்கு முன்னமே—சேக்கைநின்றெழுந்து-சயனம்விட்டெழுந்திருந்து — நித்தநியமங்கள்செய்தும் - நித்தியகருமங்களைச் செய்தும்—தாதை-பிதாவானதசரதருடைய—நீக்கமில்சரணந்தாழ்ந்தும்-பிரிவில்லாதபாதங்களை நமஸ்காரஞ்செய்தும்—நெடுந்தவம் - நெடியதவமுள்ள— வசிட்டன்முன்னோர்-வசிட்டர்முதலான முனிவர்களுடைய—வாக்கினால் - வசனங்களினால்—ஞானநீதிவாய்ந்த - ஞானநீதிபொருந்திய—பல்கதைகள் கேட்டும் - நானாவிதமான கதைகளைக் கேள்விப்பட்டும். எ-று. [ப-ம்] ஆலயங்களிற்செய்யும்பணிகள் முதலிய வாசாரமுள்ள சரிதைத்தொழிலினால் ஆத்மப்பிரயோசனமில்லையென் றறிவித்தாரென்பார், நோக்கியதேச நீதி நுவல்வுற்றென்றும், நித்திய கருமங்களுக்குவேண்டிய மந்திரசெபங்களான கிரியாமார்க்கங்களிலும்; அதிற் பிராணாயாம முதலிய சாதனங்களான யோகமார்க்கங்களிலும்; ஆத்மப்பிரயோசனமில்லையென் றறிந்தாரென்பார் நித்தியநியமங்கள் செய்துமென்றும், ஞானசாஸ்திரசிரவணஞ் செய்தாரென்பார், ஞானநீதி வாய்ந்தபல் கதைகள்கேட்டுமென்றுங் கூறினார். [இ-ம்.] சரிதை-கிரியை-யோகமென்னு மிம்மூன்றுபாதமுங்கடந்து - ஞானபாதத்தில்; விருப்பமுற்றாரென்பதாம் .... (உக)

(அ-கை.) *இதுவுமது* (கவி) தந்தைசொற்படியேதானை தன்னுடன் வேட்டைகண்
டும், பந்துமித்திரர்கள்பின்னோர்தம்மொடும்பருகிராநீத், திந்துவுமமுதம்போல நிருப
ருக்கினியசெய்து, மைந்துடனீரைந்தாண்டுபுக்கினனனையநாளில் ....*

(இ-ள்.) தந்தை - பிதாவினுடைய—சொற்படியே - வசனத்தின்படியே—தானைதன்னுடன்-படைகளுடன்—வேட்டைகண்டும்-வேட்டையாடியும்—பந்து - பந்துசனங்கள்—மித்திரர்கள் - இஷ்டசனங்கள்—பின்னோர்தம்மோடும் - தம்பிமார்களோடும்—பருகி- போசனஞ்செய்து—ராநீத்து - இரவைச்சுகமாகத்தள்ளி—இந்துவும் - குளிர்ச்சியானசந்திரனைப்போலவும்—அமுதம்போல-மதுரமான அமிர்தத்தைப்போலவும்—நிருபருக்கு - அரசர்களுக்கு—இனியசெய்தும்-இனிமையைச்செய்தும்—ஐந்துடனீரைந்தாண்டு-பதினைந்து வருடங்களை—புக்கினன்-போக்கினான் — அனையநாளில்-அந்தநாளில். எ-று. [ப-ம்] சீவஹிம்சையைக்கண்டவதனாற் சீவகாருணியமுண்டானதென்பார், வேட்டைகண்டென்றும், புசிப்புகளிலுமிராஜபோகங்களிலுமென்னசுகமிருக்கின்றதென் றதில்விராகமுற்றாரென்பார்,பருகியென்றும், நிருபருக்கினிய செய்தென் றுங் கூறினார் [இ-ம்] சீவகாருணியமும், பாசவயிராக்கியமும், உண்டானதென்பதாம்-இதிலீசுரபத்தியும், பிரமஞானமும், அமைந்துகிடக்கிறதெனவறிக.(உஉ)

(அ-கை.) இக்குணங்களுள்ள விராமனது வயிராக்கியவிலக்கணங் கூறல். (கவி.)
நிறையெழின்மேனியெல்லா நெடுஞ்சரற்காலநீர்போற், குறைவுறநெடுங்கட்
செய்ய குளிர்முகம் விளர்ப்பத் தும்பி, யுறையும்வெண் கமலம்போல வொரு
கையாற் கபோலமேந்தி, யறைகழலிராமனம்பு யாசனத்திருப்பதானான் .....*

(இ-ள்.) நிறையெழில்- நிறைந்தவழகையுடைய—மேனியெல்லாம் - சரீரமுழுதும்—நெடுஞ்சரற்காலநீர்போல்-நெடியசரற்காலத்திற்[குறைந்துவரு]மாற்றுச்சலத்தைப்போல—குறைவுற - [தினந்தோறுங்] குறைந்துவர—நெடுங்கண் - நெடியகண்களையுடைய—செய்ய-செவ்விய—குளிர்முகம்-குளிர்ந்தமுகமானது— தும்பியுறையும்-வண்டுகள்மொய்க்காநின்ற—வெண்கமலம்போல-வெண்டாமரைப்பூப்போல—விளர்ப்ப - வெளுத்துவர — ஒருகையால்-ஓர்கரத்தினால்—கபோலமேந்தி- கன்னத்தைத்தாங்கிக்கொண்டு—அறைகழலிராமன்-சத்தியா

நின்றவீரகண்டையைத் (தரித்தபாதத்தையுடைய) விராகவன் — அம்புயாதனத்து - பதுமாசனத்தில்—இருப்பதானுன்-இருக்கத்தொடங்கினர். எ-று ... . (உரு)

(அ-கை.) நிராசையாற்சாதனசதுஷ்டயமுதித்தல். (கவி) சிந்தனைவயத்தனுகிச் செய்தொழிலனைத்தும்விட்டு, புந்திநிறைந்தியார்க்குங்கூறுன் புனையுமோவியமே போலச், சந்ததமிருப்பைநோக்கித்தமரடிதாழ்ந்துவேண்ட, நொந்தயர்முகத்தனுகிநோக்கருநியமஞ்செய்தான் .... *

(இ-ள்.) சிந்தனைவயத்தனுகி-சிந்தனுவசனுய்—செய்தொழிலனைத்தும்விட்டு-செய்யத்தக்கசெயல்களியாவையும்விடுத்து—புந்திநிறைந்து - புத்திதளர்ந்து — இயார்க்குங்கூறுன்-எவர்க்குஞ்சொல்லாதவராய்—புனையுமோவியம்போல - எழுதினசித்திரத்தைப்போல—சந்ததம்-சதாகாலமும்—இருப்பைநோக்கி - இருத்தலைப்பார்த்து —தமர்- பரிசனங்கள்—அடிதாழ்ந்து-தனதுபாதத்தில்வணங்கி—வேண்ட-வேண்டிக்கொள்ள—நொந்து- மனதுநொந்து—நோக்கரும்-பார்த்தற்கரிய—அயர்முகத்தனுகி-தளர்ந்தமுகத்தையுடையவராய்— நியமஞ்செய்தான்-நித்தியகன்மங்களைச்செய்தார். எ-று. [ப-ம்] நித்தியாநித்தியவஸ்துவை விவேகித்தாரொன்பார், சிந்தனைவயத்தனுகியென்றும், இகபரவிச்சையைநீக்கினுரொன்பார், செய்தொழிலனைத்தும்விட்டென்றும், சமாதிசட்கசம்பத்திவந்ததென்பார், புந்திநிறைந் தியார்க்குங் கூறுனென்றும், மோக்ஷவிருப்பத்திற்றதேகமாயிருந்தாரொன்பார், ஓவியமேபோலச்சந்த தமிருப்பென்றுங்கூறினுர் [இ-உ-க-ம்] இராமரது, விரத்தியினுற் றிரிகரணங்களு மெலிந்து, நான்குசாதனமுநிறைந்து, குருதரிசனத்திற்கு அபேட்சையுமுண்டாயிற்றென்பதாம். (உச)

(அ-கை) ஆசாரியனையறிவிக்க விசுவாமித்திரனெழுந்தருளுதல். (கவி.) மடிமிசைகொண்டுதாதை வருந்துவ தென்கொ லென்ன, வடிபணிந் தயர்வொன்றில் லென்றனையவனிருந்தநாளிற், படிபுகழ்காதிமைந்தன்வருதலும்பணிந்துபோற்றி, முடியுடைவேந்தர்வேந்தன் பூசனைமுறையிற்செய்தான் ... . *

(இ-ள்.) தாதை - பிதாவானதசரதன்— மடிமிசைகொண்டு-(ஒருநாள்) தன்மடியின் மேல்வைத்துக் கொண்டு — வருந்துவ தென்கொ லென்ன - வருத்தப்படுவ தென்னவென்று கேட்க—அடிபணிந்து - பாதத்தைவணங்கி — அயர்வொன் றில்லென்று - வருத்தமொன்றுமில்லையென்று — அனையவனிருந்தநாளில் - அவ்விராமன் சும்மா யிருந்தகாலத்தில் — படிபுகழ் - உலகம்புகழாநின்ற — காதிமைந்தன் - விசுவாமித்திர முனியானவர் — வருதலும்-(இராசசபைக்கு) வரவும்— பணிந்துபோற்றி - வணங்கித்தோத்திரஞ்செய்து — முடியுடை-மகுடத்தையுடைய— வேந்தர்வேந்தன் - அரசர்க்கரசனுனதசரதன்—பூசனை- ஆராதனையை —முறையிற்செய்தான் - விதிப்படிசெய்தார் — எ-று. [இ-ம்] தீவரதரபக்குவத்தை யுடைய விராமருக்குவிஸ்ராந்தியுண்டாகும்பொருட்டு யாகசம்ரக்ஷணையை முன்னிட்டுமுனிவந்ததாம்.

(அ-கை.) அரசனுநந்தித்தல். (கவி.) நினைவற வெளிதின் வந்தநின்னுயர்காட்சியாலே, வினையெலாந்தவிர்ந்துவெய்யோன் மேவியகமலமொத்தே, னினையதோரின்பமென்றுமியைந்திலேன் மழையிலாநா, ணனைதரு மழையுமந்த ணண்ணிய கண்ணுமொத்த *

(இ-ள்.) நினைவற- (அடியேன்) சிந்தியாதகாலத்திலும் — எளிதின்வந்த - (கிருபையினு) லெளிதாக வெழுந்தருளிய — நின்னுயர் காட்சியால் - தேவரீரதுமேலான தரிசனத்தினுல்— வினையெலாந்தவிர்ந்து - வினைகளனைத்துநீங்கி— வெய்யோன்- சூரியனுல்—மேவிய- (விகசித்தலை) யடைந்த— கமலமொத்தேன் - தாமரைப்பூவுக்கொப்பானேன்— இனையது- இப்படிப்பட்டதான— ஓரின்பம்-ஒப்பற்றசுகத்தை—என்றுமியைந்திலேன்-எப்போது மடைந்திலேன் —மழையிலாநாள் - மழையின்றியகாலத்தில் (வருந்தும்பயிரை) — நனைதருமழையும்-குளிர்விக்கின்றமழையையும்— அந்தணண்ணிய - குருடனடைந்த — கண்ணும் - கண்ணையும்—ஒத்தது- (நின்காட்சி) யொத்திருக்கின்றது —(எ-று) (ப-ம்) நசிக்கின்ற விடயாநந்தமும், சுலபமாகின்ற சுழுத்தியாநந்தமும், விக்கினமுள்ள சமாதியாநந்தமு, மல்லாத பேராநந்தமென்பார், இனையதோரின்பமென்று மியைந்திலேனென்றுர், நின்னுயர்காட்சியாலே வினையெலாந் தவிர்ந்தென்பதற் குதாரணம், பாகவதம்; புருடனுடைய கண்களுக்குச் சூரியதரிசனமெப்படியோ வப்படியே, சாதுக்களாயுஞ் சமசித்தமுள்ளவராயு மிகவுமென்னிடத்தில் வைக்கப்பட்டமனமுள்ளவராயுமிருக்கின்றவர்களுடையதரிசனத்தைமுடிவாகவுடையதே பந்தம்.(உரு

(அ-கை.) [இ-து.] (கவி.) உடலொடுவிண்சென்மார்க்கமூற்றெனவொழிந்தவாவி, கடமுறவந்ததென்னக் கனைகடலமுதகும்ப, மிடமுறவெய்திற்றென்ன வெந்தை நீ வந்தவின்பஞ், சடமெலாங் குளிர்ப்பநின்றென் றளர்வெலா மகற்றிற்றன்றே..... *

(இ-ள்.) உடலொடு - இத்தேகத்தோடு—ஒழிந்தவாவி-நீங்கியசீவன்—கடமுற- அச்சரீ

ரத்திற்புக—வந்ததென்ன- (மீள) வந்ததுபோலவும்—கனைகடல்- ஆரவாரிக்கின்றபாற்கடலின்
கண்(ணுண்டாகிய) —அமுதகும்பம் - (தேவலோகத்தி லக்கினிக்கோட்டைக் குள்ளிருக்கும்)
அமுதகலசமானது— இடமுறவெய்திற்றென்ன- (என்)னிடத்தில்வந்ததுபோலவும்— எந்தை
நீ-எமதுபிதாவாகிய தேவரீர்—வந்தவின்பம்-எழுந்தருளியசுகமானது— சடமெலாம்-தேக
முழுமையும்—குளிர்ப்ப - (கங்கையைப்போல) குளிர்விக்கும்படி—நின்று - இருந்து—என்
றளர்வெலாம் - என(துள்ளத்தின்) றளர்ச்சியையெல்லாம் — அகற்றிற்று - நீக்கினது. எ - று.
(ப-ம்)முனிதரிசனந் துக்கத்தைநிவிர்த்தி செய்ததென்பார் என்றளர்வெலாமகற்றிற்றென்றார்
[இ-உ-கம்] முனிவரவிலுண்டான சுகத்தின்பெருமையைச் சொல்லியதாம் .... (௨௭)

(அ-கை.) முனிவந்தகருமத்தையரசன்வினவுதல்.(கவி) காதலும்பயமும்வம்புங்கதமும்
வன்பிணியுமில்லா, மாதவவிவணீவந்த வரவிது புதுமைத்தாகும், யாதுநீ கருதிற்றன்ன
தியன்றனனுணர்த்துகென்றான், மேதகுமுனிவன்கேட்டுமெய்ப்புளகெறிந்துசொல்வான்.

(இ-ள்.) காதலும்-இராகத் (துவேடங்களும்) —பயமும்-(விடயத்துக்)கஞ்சுதலும்—
வம்பும் - நிலையின்மையும்— கதமும்- [வீணன] கோபமும்—வன்பிணியும்-கொடிய [சநந]
வியாதியும்—இல்லா - இல்லாத—மாதவ - மகாதவத்தையுடையமுனியே— இவண்-இவ்விடத்
தில்—நீவந்தவரவிது - தேவரீரெழுந்தருளிய வரவானது—புதுமைத்தாகும்-அதிசயமாம்—
யாது நீகருதிற்று-எதுநீர் நினைத்ததோ—அன்னதியன்றனன்-அதைத்தரவிசைந்தேன்—உணர்
த்துகென்றான்-அறிவியுமென்றரசன்கேட்டான்—மேதகு - மேலான—முனிவன்கேட்டு - விசு
வாமித்திரமுனிவ (ரிவ்வசனத்தைக்கேட்டு)—மெய்ப்புளகெறிந்துசொல்வான்-தேகத்தில்மயிர்க்
குச்செறிந்துசொல்லுவார். எ-று. [இ-ம்.] புத்திரனதுமனோதுக்கத்தைத் தீர்க்குமந்தரங்க
முடையதசரதமகாராசன் விசுவாமித்திரமுனிவர்கருத்தின்படிநடக்கச்சம்மதித்ததாம்.(௨௮)

(அ-கை.) அவசியஞ்செய்ய வேண்டிய வேள்விக்குதவிவேண்டல். (கவி) மன்னவர்
வணங்கவாழ்வோய்வசிட்டன்சொன்மறுதோய்பானு, தன்னுயர்குலத்தில்வந்தோ
யாதலாற்றக்கசொன்னாய், முன்னுறுசெந்தீவேள்விமுயல்வதற்கிடையூறாகி, யின்
னல்செய்யரக்கர்க்காற்றாதெய்தினனிரங்கல்வேண்டும் .... *

(இ-ள்.) மன்னவர்வணங்க-அரசர்கள்பணிய—வாழ்வோய் -வாழ்கின்றதசரதமகாரா
சாவே—வசிட்டன்சொல்- ஆசிரியராகியவசிட்டரதுவாக்கியத்தை—மறுதோய் - தடுக்காதவ
ரே—பானுதன்னுயர்குலத்தில் - மேலானசூரியவமிசத்தில்—வந்தோயாதலால்- வந்துதித்தவ
ராதலால்—தக்கசொன்னாய்-உமக்குத்தகுந்தவசனத்தைச்சொன்னீர்—முன்னுறு- முதன்மை
யாகிய—செந்தீவேள்வி - சிவந்தவக்கினியையுடையயாகத்தை— முயல்வதற்கு - முயற்சிப்ப
தற்கு—இடையூறாகி-விக்கினமாய்—இன்னல்செய் - தீமைசெய்யாநின்ற—அரக்கர்க்கு-இரா
க்ஷதர்களுக்கு—ஆற்றாது - சகிக்கமாட்டாமல்—எய்தினன் - வந்தேன் — இரங்கல்வேண்டும்-
தயவுசெய்யவேண்டும். எ - று .... (௨௯)

(அ-கை.) நிருதர்க்கியமனான விராகவனைக் கேட்டல். (கவி) அருள்செயவல்லை
நீயென்றரும்புகல்புகுந்தேனின்னை, வெருவுறும்புலிபோன்மொய்ம்பன் விண்ண
வர்க்கிறைபோல்வீரன், மருளுறுவரக்கர்காலன்வாய்மைநின்முதன்மைமைந்தன்,
றெருளுறுமிராமனென்னுஞ்சிகைமுடிச்சேயையீவாய் .... *

(இ-ள்.) நீ - நீர்—அருள்செயவல்லையென்று - கொடுக்கத்தக்கவரென்று — நின்னை-
உம்மை—அரும்புகல்புகுந்தேன் - அரியதஞ்சமென்றடைந்தேன்—வெருவுறும் - பயப்படு
த்துகின்ற—புலிபோன்மொய்ம்பன் - வியாக்கிரமத்தைப்போலபலமுள்ளவன்—விண்ணவர்க்
கிறைபோல்-தேவேந்திரனைப்போல —வீரன் - வீரமுள்ளவன்—மருளுறும் - மயக்குகின்ற—
அரக்கர்காலன்-இராக்ஷதர்க்கியமனானவன்—வாய்மை-சத்தியசந்தனான—நின்-உம்முடைய—
முதன்மைமைந்தன்-முந்தினகுமாரனான—தெருளுறும்- தெளிவுபொருந்திய—இராமனென்
னும் - இராகவனென்கின்ற—சிகைமுடி - மயிர்முடியையுடைய — சேயை - குழந்தையை—
ஈவாய்-தருவாய். எ-று.[ப-ம்.] இராமனிராக்ஷதசங்காரியென்பார், அரக்கர்காலனென்றார்(௩௰)

(அ-கை.) இராமனது சத்தியையுரைத்தல். (கவி) தேவரிற்றேசுமிக்க வென்பெருஞ்
சேமந்தன்னா, லேவருநிருதர்சேனை யிராமனேயெளிதுகொல்லுங், காவலசிறுவனென்
னுங்கவலையையொழியென்போல்வா, ரோவலிற்சங்கையான கருமத்தினுள்ளம்வையார்.

(இ-ள்.) தேவரிற்றேசுமிக்க - தேவர்களிலுங்கீர்த்திமிகுந்த — என்பெருஞ்சேமந்தன்
னால் - எனதுமிகுந்தகாவலினால் — ஏவருநிருதர்சேனை - ஏவுதற்கரியவிராக்ஷதசேனையை—
இராமனேயெளிதுகொல்லும - இராகவனேயெளிதாகக்கொல்வான் — காவல - அரசனே—

சிறுவனென்னுங்கவலையையொழி - பாலனென்கின்றவச்சத்தைவிட்டுவிடு — என்போல்வார் - என்னையொத்தமுனிவர்கள்—ஔவலிற்சங்கையானகருமத்தில் - வருத்துஞ்சந்தேகமானகாரியத்தில்—உள்ளம்வையார்-மனம்வையார்கள். எ - று. [ப-ம்.] யாகவிக்கினர்களைத் தம்மாலுஞ் செயிக்கக்கூடாதென்பார், இராமனேயெளிதுகொல்லுமென்றார் .... (௬௧)

(அ-கை.) இராமன்பெருமையையறிவித்தல். (கவி) இயாரினுமிராமன்மேன்மைவசிட்
டனுமியானுமாதி, யாரியரறிவர்மாட்சியறம்புகழ்வேண்டிஉந்தப், பேரியலானையீதிபெ
ருமையோர்கொடாததுண்டோ, வீரியவரக்கர்மாய்தன்மெய்யெனவிளம்பிவிட்டான்.*

(இ-ள்.) இயாரினும் - யாவரினுஞ் (சிறந்த) — இராமன்மேன்மை - இராமனதுபெருமையை—வசிட்டனுமியானுமாதியாரியரறிவர் - வசிட்டருநானுமுதலியவாசிரியர்களறிவார்கள்—மாட்சி - பெருமையையும்—அறம் - தருமத்தையும்—புகழ் - கீர்த்தியையும் — வேண்டின் - வேண்டுவையாயின் — அந்தப்பேரியலானையீதி - அம்மகாகுணசாலியானவிராமனைக்கொடும்—பெருமையோர்கொடாததுண்டோ - பெருந்தகைமையையுடையவர்க(ளிரப்பவர்க்குக்) கொடாதபொருளுண்டோ — (கொடுப்பின்) வீரியவரக்கர்மாய்தல் - சௌரியமுள்ளவிராக்ஷதர்களிவனா லிறசமடைவது — மெய்யெனவிளம்பிவிட்டான் - சத்தியமென்று சொன்னார். எ-று. [ப-ம்.] திருமாலேவந்தவதரித்தானென்பார், இயாரினுமிராமன்மேன்மையென்றும், உமக்கு முமதுவமிசத்துக்குஞ், சத்துக்களனுக்கிரகத்தினால் மாட்சிமையும், யாகசம்ரக்ஷணைசெய்வதினாற், தருமமும், இராக்ஷதசங்காரத்தினாற் கீர்த்தியும், வேண்டுமானா லிராமனைக்கொடுமென்பார், மாட்சியறம்புகழ்வேண்டினந்தப் பேரியலானையீதியென்றுங்கூறினார். [இ - ச - க - ம்] இராமனிராக்ஷதசங்காரார்த்தமுதித்தவனெனச்சூசகமாயறிவித்ததாம்.(௬௨)

(அ-கை.) புத்திரனதுஸ்வரூபந்தெரியாமற்றசரதன் பரதவித்துக்கூறுதல். (கவி)
முனிமொழிகேட்டுமன்னன்முகூர்த்தமொன்றயர்ந்துசோர்ந்து, தனியொருசிறுவ
ன்மூவைம்பருவத்தன்சமர்கண்டில்லான், பணிசெய்வல்லரக்கர்க்காற்றான்பகைஞர்
கோளறிதறேற்று, னனிகமோடேகியானேயவரொடுமரும்போர்செய்வேன்.......*

(இ-ள்.) முனிமொழிகேட்டு - விசுவாமித்திரனது வசனத்தைக்கேட்டு—மன்னன் - தசரதன்—முகூர்த்தமொன்று - இரண்டுநாழிகைநேரம்—அயர்ந்துசோர்ந்து - வருந்தி — தனியொருசிறுவன் - தனியனானவொருபாலன்—மூவைம்பருவத்தன்-பதினைந்துவயதுள்ளவன்—சமர்கண்டில்லான் - யுத்தஞ்செய்தறியான் — பணிசெய்வல்லரக்கர்க்காற்றான் - நடுக்கஞ்செய்யும்வல்லமையையுடையவிராக்ஷதர்களுடன் (போர்செய்ய) வலியில்லாதவன்— பகைஞர்கோளறிதறேற்றான் - சத்துருக்கள்கோட்பாடறிதலிற்றெளிவில்லாதவ (னாதலால்) — அனிகமோடேகி - சதுரங்கசேனையோடுபோய்—யானேயவரொடுமரும்போர்செய்வேன் - அடியேனேயவ்விராக்ஷதர்களோடரியயுத்தஞ்செய்வேன். எ-று. [இ-ம்] புத்திரவாஞ்சையினாலவனையனுப்பமனமில்லாமல்விசனமடைந்தவராய், இராக்ஷதர்யுத்தத்துக்குச்சத்தியில்லாதிருந்துமிருப்பதுபோலச்சொன்னதாம்..(௬௩)

(அ-கை.) புத்திரவாஞ்சையையறிவித்தல். (கவி) முன்னவனீங்கின்மற்ற மூவரும்வாழா
ரியானு,மின்னுயிர்வாழேனின்றுவிராவணனெழிந்தோரியாவ,ரன்னவர்க்கஞ்சேன்முன்
னமிராவணனமர்க்குமஞ்சேன், வென்னிடப்பொருதும்வீரர்வீரங்கணிலைமைத்தாமோ.

(இ-ள்.) முன்னவனீங்கின் - மைந்தரில்முதல்வனாகிய விராமன்பிரிந்தால் — மற்றமூவரும்வாழார் - மற்றமூன்றுபேருமுயிருடன்வாழார் — யானுமின்னுயிர்வாழேன் - நானுமினியவுயிரோடும்வாழமாட்டேன்—இன்று - இப்போது—இராவணனொழிந்தோரியாவர் - இராவணனீங்கினோரியாவராயினும்—அன்னவர்க்கஞ்சேன் - அவர்களுக்குப்பயப்படேன்— முன்னமிராவணனமர்க்குமஞ்சேன் - முன்பிராவணனதுயுத்தத்துக்கும்பயப்படேன் — வென்னிடப்பொருதும்வீரர் - (பகைவர்) முதுகுகாட்டப்போர்செய்யும்வீரர்களுடைய — வீரங்கணிலைமைத்தாமோ - வீரங்கணிலையாயிருக்குமா. எ - று. [ப-ம்.] ஈசுரநியமப்படி ஜெயாபஜெயமுண்டாகுமென்பார், வீரங்கணிலைமைத்தாமோவென்றார், (இ-ம்.) அறுபதினாயிரம் வருடஞ் சென்றபின்பு யாகத்தினுற்பவமான புதல்வனைப்பிரிந்தால் நமதுயிரும் பிரியுமென்னும்வருத்தத்தை முனிவருக் கிரக்கம்வரும்படியறிவித்ததாம்..................................(௬௪)

(அ-கை.) இக்காலத்திலிராக்கதர்களைக்கொல்லுஞ்சத்தியெங்களுக்கின்றெனல்.(கவி) கால
வேற்றுமையாலெல்லாப் பொருள்களுங் கலங்கிவேறு, மேலவரினைத்தோராவர் வெய்ய
வன்குலத்துப்பூமி, பாலனுமியான் மேற்செய்வ தியாதெனப்பரிகேன்றுப்பாற், சாலவு
மென்றான் மன்னன் றுபதன் முனிந்து சொல்வான் ....*

(இ-ள்.) மன்னன்-தசரதவரசன்—காலவேற்றுமையால்-காலவேறுபாட்டினால்—எல்லாப்

பொருள்களும் - சகலவஸ்த்துக்களும்— கலங்கிவேறும் - மயங்கிவேறுபடும் — மேலவரிவைத் தோராவர் - வலியோரெளியராவர்—வெய்யவன்குலத்துப் பூமிபாலனுமியான் - சூரியவமிசத் திற்றோன்றிய பூமிக்கரசனாகியயான் — மூப்பினுல் - வயோதிகத்தினுல் — மேற்செய்வதியா தென - இனிச்செய்வதியாதென்று—சாலவும் - மிகவும்—பரிகேன்-துயருறுகின்றேன்— என்றான்-என்றுசொன்னான்— தாபதன் - அதற்குமுனிவர்— முனிந்துசொல்வான் - கோபித்துச் சொல்வார். எ-று. [இ-ம்] இக்காலம் பலமுள்ளவரக்கரமருக்கிராமனையனுப்பமனமில்லையென் பதைக்குறிப்பாற்காட்டினதாம்... (௯௫)

(அ - கை.) பயபத்தியுண்டாகும் பொருட்டு முனி கோபித்தல். (கவி.) கருதியதளித்தேனென்று கழறியவாய்மைபொய்த்தாய்,செருவுயர்சிங்கமா நீசிறுவிலங் கியற்கைசெய்தாய், மருவிய கிளைஞரோடும் வாழ்தியாம் போதுமென்று, பெரு முனிமுனியமண்ணவிண் பெரும்பயம்பிடித்ததன்றே.. *

(இ-ள்.) கருதியதளித்தேனென்று - விரும்பியதைக் கொடுத்தேனென்று — கழறிய வாய்மைபொய்த்தாய் - சொன்னசத்தியந்தவறினாய்— செருவுயர்சிங்கமா நீ - போரினுயர்ந்த கேசரிபோன்ற வரசனான நீ—சிறுவிலங்கியற்கைசெய்தாய் - அற்பமிருகத்தினியல்பைச்செய் தாய் — மருவியகிளைஞரோடும் வாழ்தி - பொருந்திய (மனைவிபுத்திரர்முதலிய) சுற்றத்தாரோடு நீ வாழ்வாய்— யாம்போதுமென்று - நாமேகுதுமென்று— பெருமுனிமுனிய- மகாமுனியான விசுவாமித்திரர்கோபிக்க—மண்- பூவுலகர்க்கும்—விண்-வானுலகர்க்கும்—பெரும் பயம்பிடித்தது-மகாபயமுண்டாயிற்று. எ-று. [ப-ம்.] மண்ணுள்ளோர்இக்கோபத்தாலிவ்வரசவமிசத்துக் கிடர்வரில் நமக்கெத்துயருண்டாமோ வெனவும், விண்ணுளோ ரிராமருக்கிடர் வந்திராவணசங்காரமாகாவிடில்நமக்கவனா லின்னமென்ன துன்பம்வருமோவெனவுநடுங்கினாரென்பார், மண்ணவிண் பெரும்பயம் பிடித்ததென்றார், [இ-ம்] துட்டநிக்கிரகஞ் செய்விப்பிக் கும்படியான கோபமுண்டாயிற் றென்பதாம்... (௯௬)

(அ-கை.) பிரதிக்ஞையைக்காக்குப்படிஞாயங்கூறல். (கவி)மாதவன்முனிவுநோக்கிவசிட் டனுமனுகுலத்தே, சாதனாய்த்தசரதப்பேர் தரித்தனை சபதங்காவாய், தீதுறிற்பிறிதார் காப்பார் திருத்தி நீ நிறுத்துநீதி, மேதினிகடவா தென்றால்வேந்த நீ கடக்கற்பாற்றோ.

(இ-ள்.) மாதவன்முனிவுநோக்கி-தவத்தின்மிகுந்த விசுவா மித்திரருடைய கோபத்தைப் பார்த்து—வசிட்டனும் - வசிட்டமுனிவரும்—மனுகுலத்தேசாதனாய் - மனுவமிசத்திற் பிறந்தவனாய்— தசரதப்பேர் - தசரதச்சக்கிரவர்த்தி யென்னு நாமத்தை—தரித்தனை- பெற்றிருக்கின்றநீ—சபதங்காவாய்-சொன்னசத்தியத்தைக்காப்பாற்றிக்கொள்—தீதுறில் - உன்வாக்குப் பிறழுமானல்— பிறிதார்காப்பார் - வேறேயார்காக்கவல்லவர்—திருத்திநீநிறுத்துநீதி - திருத்தஞ்செய்துஉம்மால்நிறுத்தப்பட்டவிராசநீதியை—மேதினிகடவாதென்றால்-பூமியிலுள்ளவர்கள்கடவாமற் காப்பராயின்—வேந்தநீ- இராசாவேநீ- கடக்கற்பாற்றோ—கடக்குந்தன்மைத் தோ. எ-று. [இ-ம்] வாக்கிய பரிபாலனஞ் செய்யும் மரபிற்குரியநீரதை யெப்படியுங் காக்க வேண்டுமென்பதாம் .... (௯௭)

(அ-கை.) குருவாக்கியபரிபாலனம். (கவி) (வேறு.) எரிகாக்குமமுதென்னவிம்மு னிவனனிகாக்குமிராமன்றன்னைச், செருவாழ்க்கையரக்கர் செயுந்தீங்கணுகா தெனக்கேட்டதிண்டோள்வேந்த,னருள்வாய்த்தகுமரனெதுசெய்கின்றானெனவுழைய ரங்கைகூப்பி, விரிதீர்த்தமாடிவருநாடெங்கியுறு துயரம்விளம்பலுற்றார்............ *

(இ-ள்.) எரிகாக்குமமுதென்ன-அக்கினியினலிரக்ஷிக்கப்பட்டவமுதத்தைப்போல— இம்முனிவன் - இவ்விசுவாமித்திரரிஷி—நனிகாக்கும் - மிகவுங்காப்பார் — இராமன்றன்னை- இராகவனை—செருவாழ்க்கை - போரையேவாழ்வாகவுடைய — அரக்கர்செயும் - இராக்ஷதர்கள்செய்கின்ற—தீங்கணுகாது -தீமைநெருங்காது —எனக்கேட்ட - என்று(வசிட்டமுனிசொல்லக்) கேட்ட—திண்டோள்வேந்தன் -வலியபுயத்தையுடையதசரதமகாராசனானவன்—அருள்வாய்த்தகுமரன் - (பெரியோர்கள்) கிருபையினாற்கிடைத்தவிராமன்—எதுசெய்கின்றானென - என்னசெய்கின்றானென் (பிராமனதுபரிசனங்களைக்) கேட்க—உழையரங்கைகூப்பி- ஏவலாளரழகியகையைக்குவித்துக்கொண்டு—விரிதீர்த்தம் - பரந்தநதிகளில்—ஆடிவரும் - ஸ்நானஞ்செய்துவந்த—நாடெங்கி - நாள்முதலாக — உறுதுயரம் - அடைந்திருக்கின்ற துக்கத்தை—விளம்பலுற்றார் - சொல்லத்தொடங்கினார்கள். எ - று. (ப-ம்) புத்திரன்படுந்துக்கத் தைவெளிப்படுத்துநிமித்தம், குமரனெதுசெய்கின்றானென்றார், (இ-ம்)இரகுவம்சத்துக்குநல்லகதியுங்கீர்த்தியுமுண்டாகும்பொருட் டிராமனை முனிகாப்பது மவனரக்கனைக் கொல்வதும்

நிச்சயமென்றனுப்பும்படிதசரதருக்கு வசிட்டமுனிகுறிப்பினாற்சொல்ல வப்படியே குறிப்பினாற் சம்மதித்ததாம்...(௫௮)

(அ-கை.) இராமரதுவிரத்தியைக்கூறல். (கவி) பதம்பணிந்துவேண்டியபின்பண்டைநியமஞ்சிறிதுபண்ணுநிற்கு, மிதந்தருமாதருநிதியு மில்லமும்பொய்யாதலினாலென்னேயென்னுஞ், சிதம்படுநற்றுகிலடிசிற் சீதநீராதிகளிற்சிந்தைதீரு, மதந்தவிர்சந்நியாசியர்போன் மானமிராசதமகிழ்ச்சி மறுக்கமாற்றும்....................*

(இ-ள்.) பதம்பணிந்து - (நாங்கள்) பாதத்தைவணங்கி—வேண்டியபின்- வேண்டிக்கொண்டபின்பு—பண்டைநியமம்-பழைமையானநித்தியகருமங்களை—சிறிதுபண்ணுநிற்கும்-சிலவற்றைச்செய்கின்றார் — இதந்தருமாதரும் - இதத்தைக் கொடுக்கின்ற மகளிரும் — நிதியும்- செல்வமும்— இல்லமும் - வீடும்— பொய்யாதலினால் - மித்தையாதலினால் — என்னேயென்னும் - என்னபிரயோசனமென்கின்றார்— சிதம்படுநற்றுகில்-வெள்ளியநல்லவஸ்திரமும்—அடிசில் - அறுசுவையுண்டியும்— சீதநீர் - குளிர்ந்தசலமும்—ஆதிகளில் - முதலியவற்றில்—சிந்தைதீரும் - கருத்தில்லாதிருக்கின்றார்— மதந்தவிர் - செருக்குநீங்கிய — சந்நியாசியர்போல்-துறவினர்களைப்போல—மானம் - அபிமானத்தையும்—இராசதம்- இராசதப்பிரவிர்த்தியையும்— மகிழ்ச்சி (சுகங்களிற்) சந்தோஷித்தலையும்— மறுக்கம் -(துக்கத்தில்) வருந்துதலையும்—மாற்றும் - நீக்கியிருக்கின்றார். எ-று..(௫௯)

(அ-கை.) இ - து. (கவி) இடரில்பதமொழிந்தபலதொழிலாற்போம்வாணாளென்றிரங்கிப்பாடு, மடர்செல்வமாபத்துக்கிடமென்றேயாசைதவிர்ந் தியார்க்குமீயும், படர்கின்றகருத்தறியேமிவர்க்காரோநற்குணங்கள்பயிற்றவல்லார், தொடர்செய்கையிதுவென்றுதொழுதுரைத்தார்முனிகேட்டுச்சொல்வதானான் .... *

(இ-ள்.) இடரில்-துன்பமில்லாத—பதமொழிந்த (சீவன்முத்தி) ப்பதத்தைநீங்கிய—பலதொழிலால் - நானாவிதமானசெய்கைகளினால்—வாணாள் - ஆயுளானது — போமென்று-கழியுமென்று—இரங்கிப்பாடும் - துக்கத்தோடுஞ்சொல்லுகிறார்—அடர்செல்வம் - நிறைந்தசம்பத்தானது—ஆபத்துக்கிடமென்று - ஆபத்துக்கிடமாயிருக்கின்றதென்று— ஆசைதவிர்ந்து - அவாவைவிட்டு—இயார்க்குமீயும் - சகலருக்குங்கொடுக்கின்றார்— படர்கின்ற - வியாபித்திருக்கின்ற—கருத்தறியேம் - நினைவையாங்களறிந்திலேம் — இவர்க்கு - இவ்விளவரசருக்கு—யார் - எவர்கள்—நற்குணங்கள் - (அரசிற்குரிய) நற்குணங்களை—பயிற்றவல்லார் - கற்பிக்கவல்லவர்கள்—தொடர்செய்கையிதுவென்று - (இப்போது) தொடர்ந்திருக்கின்ற செயலிதுவென்று—தொழுதுரைத்தார் - வணங்கிச்சொன்னார்—முனிகேட்டு - முனிவரதைக்கேட்டு—சொல்வதானான் - சொல்லத்தொடங்கினார். எ - று. (ப-ம்.) பொருளினாலிம்மைக்கோரிதமும் மறுமைக்கோர்பதமும், விரும்பாமலிட்டீடையெப்போது நீங்குமென்கின்ற வபிப்பிராயங்கொண்டு, பாத்திராபாத்திரம்பாராமற்கொடுத்தாரென்பார், ஆசைதவிர்ந்தியார்க்குமீயுமென்றார், (இ-உ-க-ம்) இராமனதுவிசாரணையாலுண்டான நிராசையைவிசனமாகக்கருதிச்சொன்னதாம்...(௬௰)

(அ-கை.) முனிவரிராமனதபிப்பிராயமறிவித்தல். (கவி) இப்பெரிய செல்வனைநீரினக்கலையிற் றனிக்கலைபோலீங்குற்றம்மின், கைப்படுமிம்மாமோகங் காதலினாலாபத்தாற்கலந்ததன்றாற், செப்பரியநிராசையினால் விவேகத்தால் வருமுணர்வின்செல்வமாகுந், தப்பில்பலயூகத்தான் மோகம்போய்த்தளர்வறுந்தற் பதத்திலெம்போல்........................ *

(இ-ள்.) இப்பெரியசெல்வனை - இம்மகத்தான செல்வமுள்ள விராமனை—இனக்கலையில்-கூட்டமாயிருக்கின்ற மான்களில்—தனிக்கலைபோல்- தனிந்தமானைக் (கொண்டுவருவது)போல—நீர் - நீங்கள்—ஈங்குற்றம்மின் -இவ்விடத்திற்கொண்டுவாருங்கள்—கைப்படும்-(இப்போது)ண்டாயிருக்கின்ற— இம்மாமோகம் - இந்தமகாமோகமானது—காதலினால் - ஆசையினாலும்—ஆபத்தால்-ஆபத்துகளினாலும்—கலந்ததன்று - வந்ததன்று—செப்பரிய- சொல்லுதற்கரிதாகிய—நிராசையினால் - விராகத்தினாலும்--- விவேகத்தால்-விவேகத்தினாலும் ---- வரும்-வாராநின்ற—உணர்வின்செல்வமாகும்-ஞானசம்பத்தாம்—தப்பில்-குற்றமற்ற—பலயூகத்தால் (ஆத்மவிசாரணைக்குரிய) பலயுத்திகளால் — மோகம்போய்-மயக்கம்நீங்கி— எம்போல் - எங்களைப்போல—தற்பதத்தில் - பிரமத்தில்—தளர்வறும்-விஸ்ராந்தியடைவர். எ-று. ஆல்-அசை. விஸ்ராந்தியென்பது சித்தத்துக்காத்மாகாரமாயிருக்கை. (இ-ம்.) இராமன்வருந்துவது நிருவாணசுகமடைவதற்குக் காரணமேயன்றி வேறின்றென்பதாம்.......................................(௬௧)

(அ-கை) இராமர்சபைக்குவருதல். (கவி) மனநிறைந்துமானமுடன் மானவருக்கேற்றவெலா மகிழ்ந்துசெய்ய, மெனமுனிவன்புகல்போதிலிராமனுந்தாதையைத்தொழுவானேகித்தாதை, கனைகழல்கள்முனிவர்பதங்கலைமறையோரடிகுரவர்கால்கடாழ்ந்து, தனதிருதாள்வணங்கினரைத்தலையாற்சொல்லால்விழியாற்சற்கரித்தான்.

(இ-ள்.) மனநிறைந்து - (இராமர்) மனதுபூரணத்தையடைந்து—மானமுடன் - பெருமையோடும்—மானவருக்கு - மனிதர்களுக்கு—ஏற்றவெலாம் - தகுந்தவனைத்தையும்—மகிழ்ந்துசெய்யுமென - இன்புற்றுச்செய்வாரென்று—முனிவன்புகல்போதில்- முனிவர்சொல்லுகின்றசமயத்தில்—இராமனும் - ஸ்ரீராகவனும்—தாதையை - பிதாவை — தொழுவானேகி- நமஸ்க்கரிக்கும்பொருட்டுச் (சபைக்கு) வந்து—தாதை - பிதாவினுடைய — கனைகழல்கள்- ஆரவாரிக்கின்றவீரக்கழலணிந்த (பாதங்களையும்)—முனிவர்பதம் - வசிட்டர்விசுவாமித்திரர்களுடையபாதங்களையும்—கலைமறையோரடி - கலைஞானமுள்ளபிராமணர்களுடையபாதங்களையும்—குரவர்கால்கள் - வித்தியாகுருக்களுடையபாதங்களையும்—தாழ்ந்து - வணங்கி — தனதிருதாள் - தனதுபயபாதத்தில்—வணங்கினரை - நமஸ்க்கரித்தவர்களை— சொல்லால் - (முகமன்) வசனத்தினாலும்—தலையால்- சிர(க்கம்பத்)தினாலும்—விழியால்- கண்சைகையினாலும்—சற்கரித்தார் - அங்கிகரித்தார். எ-று. மகாரிஷிகளிருக்க முன்பு பிதாவுக்கு நமஸ்க்காரஞ்செய்யலாமோவெனின், அவர்பரமகுருவானதினாலதுவிதியேயெனக்கொள்க, முன்பு ரிஷிகளுக்கு நமஸ்க்காரஞ்செய்ததாகக் கிரந்தத்தில்வியாக்கியானஞ்செய்வாருமுளர். (இ-ம்.) இராமன்சீவன்முத்தியைப்பெற்றுப்பூரணமனதுடன் பூமிபாலனஞ்செய்யும்பொருட்டு போதிக்கவழைப்பித்ததாம்..(௪௨)

(அ-கை.) முன்பிதாபோதித்தல் (கவி) மடிமிசைவந்திருத்தியென மன்னுரைப்பவாராதுமடித்ததுாசைப், படிமிசையிட்டிருத்தலுமே பார்த்திபன்பார்த்துயருணர்வுபடைத்தமைந்தா, முடிவறுநன்னலங்களுக்குமுன்னியல்பாத்திரமானாய்மூர்க்கர்போல,நொடியுமினிமனந்தளர்ந்துநோக்கினியமெய்வாடிநோதல்வேண்டாம்.

(இ-ள்.) மடிமிசை - மடியின்மேல்—வந்திருத்தியென - வந்திருப்பாயென்று—மன்னுரைப்ப - அரசன்சொல்ல—வாராது - வராமல் — மடித்ததுாசை - மடித்தவஸ்திரத்தை—படிமிசை - பூமியின்கண்—இட்டிருத்தலும் - விரித்ததிலிருந்தமாத்திரத்தில்—பார்த்திபன்பார்த்து - அரசனேக்கி—உயருணர்வு - மேலானவறிவை—படைத்தமைந்தா - அடைந்தபுத்திரனே—முடிவறு-முடிவில்லாத—நன்னலங்களுக்கு - நற்சுகங்க (ளிருத்தற்கு) — முன்னியல்பாத்திரமானாய் - நினைக்கத்தகுந்தஸ்தானமானநீ—மூர்க்கர்போல- மூடர்கள்போல—நொடியும் - நொடிநேரமாகிலும்—இனி - மேல்—மனந்தளர்ந்து-மனஞ்சோர்ந்து— நோக்கினிய- பார்த்தற்கழகான—மெய்வாடி - தேகமெலிந்து—நோதல்வேண்டாம் - துக்கிக்கவேண்டாம். எ-று.(இ-ம்)சுகமிருத்தற்குஸ்தானமானவறிவுள்ளவன்றுக்கிக்கவேண்டுவதின்றென்பதாம்(௪௩)

(அ-கை.) இ-து. (கவி) விருத்தர்மறையவர்குரவர்விளம்புபதந்தனைமோக மேவாதான, கருத்துடையவுன்போல்வார்கலந்தனரானீவாளாகவலாநின்றாய், வருத்துறுமாபத்தெல்லாம் வன்மோகமறிலருகுப் வாராதென்று, பெருத்தமுடி மன்னவர்கோன்பேசியபின் வசிட்டனிவைபேசலுற்றான்............................ *

(இ-ள்.) விருத்தர் - முதியோராயும்—மறையவர் - பிரமரிஷியாயுமிருக்கின்ற—குரவர் - நம்மாசாரியராகியவசிட்டர்— விளம்புபதந்தனை - சொல்லிய (திருவாண) பதத்தை— மோகமேவாதான- ஆசையைப்பொருந்தாத—கருத்துடையவுன்போல்வார்-மனதையுடையவுன்னையொத்தவர்கள்—கலந்தனர் - அடைந்தார்கள்—நீவாளாகவலாநின்றாய்-நீயேன்வீணுகவருந்துகின்றாய்—வருத்துறுமாபத்தெல்லாம் - துன்பத்தைச்செய்யாநின்றவாபத்துகளனைத்தும்—வன்மோகமறில்- வலியமோகநீங்கினால்—அருகும்வாராதென்று- உனதுபக்கத்திலும்வரமாட்டாதென்று—பெருத்தமுடி - மகாமகுடத்தையுடைய — மன்னவர்கோன் - அரசர்க்கரசனாகியதசரதன் — பேசியபின் - சொன்னபின்பு—வசிட்டன் - வசிட்டமுனியானவர்—இவைபேசலுற்றான் - இவைகளைச்சொல்லத்தொடங்கினார். எ-று. [ப-ம்.] குருவாக்கியத்தையடைந்து மோகத்தைநிவிர்த்திசெய்யுங்குறிப்பைச்சூசிப்பித்தாரென்பார், குரவர்விளம்புபதத்தனையுன்போல்வார்கலந்தனரென்றார். (இ-ம்.) ஆசிரியருபதேசத்தினால்விளங்குமாத்மானுபவத்தினால் மோகத்தைவெல்லவேண்டுமென்பதாம்.. (௪௪)

(அ-கை.) விசுவாமித்திரர் இராமர்மனதுன்பத்துக்கேதுவானசிந்தையை நான்குவிதமாகவினவுதல். (கவி.) வெலற்கரியதீமுயற்சி விடயமெனும் பகையெளிதின்வென்றசூரா, கலக்குறுபேதையர்க்குரித்தா மடஞ்செறிபோ கக்கடலிற் கவிழ்ந்து

லென்று, னலக்குறுகோசிகன்புகல்வா னன்மனையையெலிநலியுநலிவுபோல, வல
க்கணுறுக்காரணமென் காதலித்ததேதனையடைதியன்றே........ .... ❋

(இ-ள்.) வெலற்கரியதீமுயற்சி-செயித்தற்கரியகொடியமுயற்சிக்(கிடமாகிய)—விடய மெனும்பகை - விடயங்களென்கின்றசத்துருக்களை—எளிதின்வென்றசூரா - எளிதிற்செயித்த வதிசூரனே—கலக்குறுபேதையர்க்கு - கலங்குகின்றவறிவில்லாதவர்களுக்கு—உரித்தாம்- உரியதாயிருக்கின்ற—மடஞ்செறி- அஞ்ஞானநிறைந்த—மோகக்கடலில்-மோகசமுத்திரத்தில்—கவிழேலென்றான் - வீழாதேயென்றுசொன்னார்—நலக்குறு - நன்மைபொருந்திய —கோசிகன்புகல்வான் - விசுவாமித்திரர்சொல்லுவார்—நன்மனையை - நல்லவீட்டை—எலிநலியுநலிவுபோல - கீழெலியறுத்தழிக்குமழிவைப்போல —அலக்கணுறுகாரணமென் - (நீமோகத்தினாற்) றுன்பப்படுங்காரணமென்ன—(சொல்வாயாகினதுநீங்கி) காதலித்ததேது - நீயிச்சித்திருப்பதெதுவோ—அதனையடைதி - அதனையடைவாய். எ-று. [ப-ம்.] விடயங்களைத்துன்பமென்றறிந்தநீசுகமாயிருக்க, என்வீணாகத்துக்கிக்கின்றாயென்பார், விடயமெனும்பகை யெளிதின்வென்றசூரா மோகக்கடலிற்கவிழேலென்றும், நித்தியாநந்தமாகியமோக்ஷத்தை விரும்பினாரென்றறிவிப்பார், காதலித்ததேதென்றுங்கூறினார். (இ-ம்.) துன்பத்தை நிவிர்த்திப்பதின்பொருட்டதற்கேதுவைவினாவினதாம்..(௬௫)

(அ-கை.) முனிவர்வினாவுக்குத்தரஞ்சொல்லத்தொடங்கல். (கவி) மீட்டணுகாதகத்
துயர்போம்விளம்பென்னமுகிற்குரலால்வெம்மைதீர்ந்து, வாட்டமறு மயிலென்
னமகிழ்ந்திடர்போயருண்மூர்த்திமடவனேனைச், சேட்டமுறுமாதவநீ செப்பென
முன்செப்புதலாற் செப்புகின்றேன், கேட்டருடி மேலவர்சொன் மறுக்குனரியா
ரெனவினிதுகிளத்தலுற்றான்.. ❋

(இ-ள்.) மீட்டணுகாது - திரும்பிவராமல் —அகத்துயர்போம்-மனோதுக்கநீங்கும்—விளம்பென்ன - சொல்லென்று (விசுவாமித்திரரிஷி கேட்க—முகிற்குரலால்-மேகத்தினதுசத்தத்தினால்—வெம்மைதீர்ந்து - உஷ்ணநீங்கி — வாட்டமறுமயிலென்ன - களிப்புற்றமயிலைப்போல—இடர்போய் - துக்கநீங்கி—மகிழ்ந்து - (இராமர்) சந்தோஷித்து — மடவனேனை- அறியாமையையுடையவென்னை—அருண்மூர்த்தி - கிருபாவடிவமுள்ளவராகிய— சேட்டமுறு - சிரேட்டமுள்ள—மாதவ - மகாதவத்தையுடையவிசுவாமித்திரரே—நீ - தேவரீர்—செப்பென - சொல்லென்று—முன்செப்புதலால் - முன்சொல்லியபடியால் — செப்புகின்றேன்- சொல்லுகின்றேன்—கேட்டருடி - கேட்டருள்வாய்—மேலவர்சொல் - பெரியோர்கள்வாக்கியத்தை—மறுக்குனரியாரென - தடுக்கின்றவர்யாவரென்று—இனிது - இனிமையை — கிளத்தலுற்றான் - சொல்லத்தொடங்கினார். எ-று. [ப-ம்.] சீடன்றனக்குதயமானவனுபவத்தைக்கூறவாசிரியரதைத்திருத்திவருதலாற்றடையற்றவாநந்தமுதயமாய்த்துக்கநிவிர்த்தி யுண்டாமென்பார், மீட்டணுகாதகத்துயர்போம் விளம்பென்றார். (இ-ம்.) துக்கத்தை நிவிர்த்திசெய்து பரமசுகத்தையடையும்பொருட்டுத்தரஞ்சொல்வதாம்..(௬௬)

(அ-கை.) சித்தாஸ்வரூபமுமதனளவுமதனிருப்புமதன்காரணமுமான நான்குசங்
கைக்குத்தரஞ்சொல்லியிதனாற்பயனின்றெனல். (கவி) தந்தையிவனிற்பிறந்து
வளர்ந்துபலகலைதரித்துசதாசாரத்தால், வந்துயர்நன்னதியாடிவாரிதிசூழ்புவியுழ
ன்றுவருதலோடு, மிந்தநெடுஞ்சகமோகத்திச்சையெலாந்தீர்ந்ததிதிலின்பமில்லை,
யந்தமுறற்பிறப்பதற்கேபிறப்பதுமீட்டிறப்பதற்கேயநித்தமியாவும்.............. ❋

(இ-ள்.) தந்தையிவன் - பிதாவாகியவித்தசாதனது— இற்பிறந்து-மனையிலுதித்து—வளர்ந்து - விர்த்தியடைந்து — பலகலைதரித்து - சகலவித்தைகளையு மப்பியாசஞ் செய்து—சதாசாரத்து - நல்லவாசாரப்படி—வந்து - நடந்து—உயர்நன்னதியாடி-மேலானபுண்ணிய தீர்த்தங்களில்ஸ்நானஞ்செய்து—வாரிதிசூழ் - சமுத்திரஞ்சூழ்ந்த—புவியுழன்று- பூமியைப் பிரதக்ஷணஞ்செய்து —வருதலோடும் - வரவும் — இந்தநெடுஞ்சகமோகத்து - இந்நெடிய சகப்பிராத்தியில்—இச்சையெலாந்தீர்ந்தது - ஆசைகளனைத்துநீங்கிற்று — இதிலின்பமில்லை- இச்சகத்தி (லெவ்வளவேனுஞ்) சுகமில்லை—அந்தமுறல் - நாசமடைதல்—பிறப்பதற்கே - சநிப்பதற்கேயாம்—பிறப்பது - சநிப்பது—மீட்டிறப்பதற்கே- திரும்பமரணத்துக்கேயாம்—(ஆதலால்) —யாவும் - சகலமும்—அநித்தம் - மித்தையாம். எ-று. [ப-ம்.] சிவேஸ்வரசக மித்தையென்பார், அநித்தமியாவுமென்றார்...(௬௭)

(அ-கை.) இ-து. (கவி) பாவமதாயாபத்து பயிலிடமாய்த் தம்மிற்றும்பற்றின்று
யுந், தாவுமனக்கற்பனையாற் சம்பந்தமாயிருப்புச்சலாகைபோலாய், மேவுபெருஞ்

செல்வத்துக்கிடமாகுமெப்பொருளும்விடயத்தாலும், பூவலயத்தாலுமெதுபயன்
யாமார்வருவதெதுபொய்பொய்பொய்யாம்...................... *

(இ-ள்.) எப்பொருளும் - எவ்வஸ்துக்களும்—பாவமதாய் - தீமையாயும்— ஆபத்துபயிலிடமாய் - ஆபத்துச்சேர்வதற்குஸ்தானமாகியும் — தம்மிற்றும்பற்றின்றியும் - ஒன்றற்கொன்றுசம்பந்தமில்லாததாகியும்—தாவுமனக்கற்பனையால் - தாவாநின்றமனோசங்கற்பத்தினால்—சம்பந்தமாம்-சம்பந்தமாயும்—இருப்புச்சலாகைபோலாய் - இருப்புச் சலாகையைப்போல (வன்மை) யாகியும்—மேவுபெருஞ்செல்வத்துக்கு - பொருந்தாநின்ற மகா சம்பத்துக்கு—இடமாகும் - ஸ்தானமாகின்றன — (ஆதலால்) விடயத்தாலும் - விடய (போக)த்தினாலும்—பூவலயத்தாலும் - இராச்சியத்தினாலும்—எதுபயன் - என்னபிரயோசனம்— யாமார்-அகம்பாவமெப்படிப்பட்டது—வருவதெது - வந்திருப்பதாகியதேகமெப்படிப்பட்ட (தென்றுவிசாரிக்கின்)—பொய்பொய்பொய்யாம் - (ஆத்மவிதிரித்தமான விச்சகலமு) மித்தையேயாம். எ-று. [ப-ம்.] யானெனதென்பதுமுதலியசகலமுமித்தையென்பார், யாமார்வருவதெதுபொய்யாமென்றார் (இ-உ-க-ம்) பாவமேரூபமாகியும், விடயவஸ்துக்களே யளவாகியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததே, இருத்தலாகியும், சங்கற்பமே காரணமாகியும், இருக்கின்றவிச்சமுசாரத்தைவிசாரிக்கிற் பயனின்மையுமித்தையுமா யிருத்தலி னெப்படி நீக்கிக்கொள்வோமென்னுஞ் சிந்தையைச்சொன்னதாம்..............................(௪௮)

(அ-கை.) பயனின்றியவிதனாற்றுன்பப்படுங்காரணமுரைத்தல். (கவி) யாதியார்பெ
ற்றதெனவிவ்வண்ணநினைவேற்குவழிச்செல்வோர்க்கு, மோதுகானலிலம்பு முறை
மைபோற்பொருண் முழுதின்மூளாவாசை, பேதியாவித்துயர்போ நெறிநாடிப்
பெருந்தருத்தான்பெற்றதீயால், வேதல்போல்வேகின்றேன் மிடறடைகல் லாந்திற
வாவெய்யமோகம்......................................*

(இ-ள்.) யாதியார்பெற்றதென - (அனைத்துமித்தையாதலாலிவற்றி) லியாதொன்றைப்பெற்றார்களென்று—இவ்வண்ணநினைவேற்கு - இப்படிவிசாரிக்கின்றவெனக்கு — வழிச்செல்வோர்க்கு - மார்க்கத்தினடப்பவருக்கு—மோதுகானலின் - அலைமோதாநின்றகானற் (சலத்தைக்கானலெனக்கண்டுழி) அம்பு - சலப் (பிராந்திவாராத)—முறைமைபோல்-தன்மையைப்போல—பொருண்முழுதின் - வஸ்துக்களனைத்திலும்—ஆசை - இச்சை—மூளா - உண்டாகாது—பேதியாவித்துயர்போம்- பேதிக்கப்படாதவிவ் (விடய) துன்பநீங்குகின்ற — நெறிநாடின் - மார்க்கத்தைநாடுமிடத்தில்—பெருந்தருத்தான்- முதிர்ந்தமரமானது—பெற்றதீயால்-தானடைந்தவக்கினியினால்—வேதல்போல்- வேகின்றதுபோல—வேகின்றேன்-வேகிறேன்—திறவாவெய்யமோகம் - தீர்க்கக்கூடாதவெவ்வியமோகமானது—மிடறடைகல்லாம்- கண்டத்தையடைக்கின்றகல்லாகும். எ-று.(இ-ம்) ஒருவருக்குஞ்சுகத்தைக்கொடாதவிம்மோகத்தினால் வீணாகவருந்துகின்றேனென்பதாம்..............................(௪௯)

(அ - கை.) சம்சாரத்துன்பமென்றுரைத்து இத்துன்பத்தை நிவிர்த்திப்பிக்கும்
பொருட்டுஅதைத்தனமுதலியபதினொருவிததோஷமாகக்காண்குதலைஇப்பிரகரண
த்திற்கூறுவான்றொடங்கிஇச்சம்சாரத்துக்குக்காரணமானதனதோஷத்தைமுதலிற்
கூறுகின்றது. அவையாவன, தனம்-ஆயுள்- அகங்காரம்-மனது- ஆசை- தேகம்-
பாலியம்-எவ்வனம்-வனிதையர்-வார்த்திகம்-காலம்-என்பனவாம். இவைகளின்வை
ப்புமுறையைமேல்வருமிடங்கடோறுங்காண்க. (கவி) இனமிகழுமென்றஞ்சியித்
துயருக்கழுதாற்றேனீன்றமாதர், தனமுதலா மாபத்தோர்க் கெனச்சிந்தாவினஞ்
சுழலுந்தானமாகும், கனமிலதாயுதாரமதாமென்னினுமின் பம்பயவாக் கயவொ
ன்ன, வனகொனத்தரமறியாதரசனைப்போலடைந்தார்பா லணுகுஞ்செல்வம்.....*

(இ-ள்.) இனமிகழுமென்றஞ்சி- உறவினரால்நிந்திக்கப்படுமென்றுபயந்து—இத்துயருக்கு - இத்துன்பத்தை—அழுதாற்றேன் - வாய்விட்டழுதாற்றிலன்—ஈன்றமாதர் - மக்களையுடையசம்சாரமானது—முதலாமாபத்தோர்க்கென- தலைமையானவாபத்துள்ளவர்களுக்குச் (சுகமாகாதது) போல—சிந்தாவினஞ்சுழலும் - சிந்தாசமுகஞ்சுழலுதற்கு — தானமாகும்- இடமாயிருக்கின்ற—தனம் - திரவியமானது—இன்பம்பயவா— ஆநந்தத்தைக்கொடாது—கயவொன்ன- கீழ்மக்களெனவும்—அனகொன-மேன்மக்களெனவும்—தரமறியாது-தாரதம்மியம்பாராமல்—அரசனைப்போல் - (வணங்கினவர்கள்வசத்திற்சாருகின்ற) வேந்தனைப்போல—அடைந்தார்பால் - கதியாயடைந்தவர்களிடத்தில்—அணுகுஞ்செல்வம் - சேருகின்றசெல்வமானது—உதாரமதாமென்னினும்- உக்கிரிஷ்டமானாலும்—கனமிலதாம் - (மகான்களை

நிந்திப்பதற்கேதுவாதலின்) சிறப்பில்லாததாம். எ-று. (இ-ம்.) சிந்தனைக்கேதுவாயுஞ் சஞ்சலமுள்ளதாயுமுடமாயுமிருக்கின்றவித்தனத்திலென்னசுகமென்பதாம்.... ....(௫௰)

(அ-கை.) தனம்யாகாதிகிரியைகளைமுன்னிட்டுச்சுகத்தைக்கொடுக்குமெனில் அப்
படியுங்கொடாதெனல். (கவி) கருமவகையால்விரிந்த காமாதி பாப்புளைப்பாற்
காதனீங்குந், திருவெனுஞ்சூறைக்காற்றாற்பனிபோலச் சிதறாதோர்சேரார்சேர்ந்
தோ, ரிருவகைக்குங்குளிர்ந்தினிய னன்றிபறிவோரறிஞ ரெளியோர்சூரர், பொரு
விலெவருந்திருவாற்புழுதிசெறிசுடர்மணிபோற்புன்மைசேர்வர்! .... *

(இ-ள்.) கருமவகையால் - (தனத்தைக்கொண்டுசெய்யும்) கிரியாபேதங்களால்— விரிந்த-மிகுந்ததாயும் — காமாதிபாப்பு - இராகத்துவேடங்களென்னும்விடத்தினால் — உளைப்பால் - (சத்துருக்கள்) வாக்கியாமுதங்களின்—காதல்-இரசமாகியபிரியமும்—நீங்கும் - (கைப்பாக) நீக்குவதாயுமிருக்கின்ற—திருவெனுஞ்சூறைக்காற்றால் - செல்வமென்னுஞ்சுழல்காற்றினால்— பனிபோல - பனியைப்போல—சிதறாதோர் - (அறிவு) மயங்காதா (ரார்)—சேரார்-பரசனங்களும்—சேர்ந்தோர் - சுசனங்களுமாகிய—இருவகைக்கும்-இருதிறத்தவர்களுக்கும்—குளிர்ந்தினியன்-குளிர்ந்தினிமையுள்ளவரும்—நன்றியறிவோர் - செய்ந்நன்றியறிபவரும்—அறிஞர்-அறிவுடையவரும்—எளியோர்-எளியவர்களும்—சூரர் - வீரர்களும்—பொருவிலெவரும் - (இன்னஞ்) சமானமில்லாதவேனையோரும்—திருவால் - செல்வத்தால்— புழுதிசெறி-புழுதியினால்மறைபட்ட—சுடர்மணிபோல் - ஒளிருகின்றவிரத்தினம்போல—புன்மைசேர்வர்-ஈனமடைவார்கள். எ-று.[இ-ம்.]செல்வம்சுவர்க்கபோகமடமதையிளுலாத்மார்த்தத்தைக்கிரிகிக்கவொட்டாமல்வருத்துமென்றும் அஃதுள்ளவனில்லவனிலக்கணமின்னதென்றுங்கூறினதாம்.

(அ-கை.) இத்தனம்அநர்த்தநிமித்தமேயன்றியர்த்த நிமித்தமாகாதெனமுடித்து
நிறுத்தமுறையான் இத்தனத்தையனுபவிக்கும்பொருட்டுவேண்டியவாயுளைப்பின்
வைத்தஃதொருகணமுநிலையன்றெனத்தூஷித்தல். (கவி) தீதடையாச்செல்வர்மொ
ழிதிறம்பாதசூரர்நடுத்தெரிந்துநோக்கு, நாதரிவர்மிகவரியர்நாகஞ்சூழ்குழிவல்லி
நனைபோற்செல்வஞ், சாதனத்துக் கரிதுளத்தை யிழுத்திமைப்பி லிறுந்தலைகீழ்த்
தளிரினூன்ற, வோது துளியொத்தவுயிர்மத்தரெனவகாலத்திலுடல்விட்டோடும்.. *

(இ-ள்.) தீதடையாச்செல்வர் - குற்றமற்றசெல்வர்களும்— மொழிதிறம்பாதசூரர்-சொற்றவறாதவீரர்களும்—நடுத்தெரிந்து-சமதிருஷ்டியாய்—நோக்குநாதர் - பார்க்குமரசர்களாகிய—இவர்மிகவரியர்-இவர்கள்மிகவுமரியர்கள்—உளத்தையிழுத்து - மனதைக் கிரிகிப்பதாயும்—இமைப்பிலிறும்- கணத்தினசிப்பதாயுமிருக்கின்ற—செல்வம்-தனமானது—நாகஞ்சூழ் - சர்ப்பஞ்சூழ்ந்த—குழி - அந்தகூபத்திலுள்ள—வல்லிநனைபோல் - கொடியினரும்பைப்போல—சாதனத்துக்கரிது - நிட்பலமாம்—(இனியாயுடேணம்) தலைகீழ் - தலைகீழாயிருக்கின்ற—தளிரில் - இலை (யினுனி)யில்—நான்ற- தொங்கிய— ஓது துளியொத்த - சொல்லப்பட்ட (மழை) த்துளிக்கொப்பாகிய—உயிர்-பிராணனானது— மத்தரென-உன்மத்தரைப்போல—அகாலத்தில் - காலமல்லாதகாலத்தில்—உடல்விட்டோடும்-தேகத்தைவிட்டோடிப்போகும் எ-று. [ப-ம்] குற்றமற்றஞானச்செல்வமிருத்தலின், தீதடையாச்செல்வரென்றார்(இ-ம்) உயர்ந்தோரைநிந்திக்கச்செய்யுஞ்செல்வமும்,அதையனுபவிக்குமாயுளுந்துன்பமேயென்பதாம்.

(அ-கை·) கன்மிகளுக்காயினுஞ் சுகங்கொடுக்குமென்னிலவர்க்குங்கொடாதெனல்
(கவி) வளர்புலமாமராத்தீண்ட மனமயர்வோர் மெய்யுணர்வு வாய்த்தி லாதோர்,
தளர்வுறுகாரணம்வாளுட் டனிமோகமெனுமுகிலிற் சார்மின்போலு, மளவுபடு
முடன்மெய்யென்றழுந்திநாமிதின்மகிழேமாகாயத்தைப், பிளவிடவாயுவைப்பிடி
க்கத்திரைகோக்கவெளிதிதனைப்பேணவொண்ணு.... .... *

(இ-ள்.) வளர்புலமாம் - வளர்கின்றவைம்புலமென்னும் — அராத்தீண்ட - சர்ப்பந்தீண்ட—மனமயர்வோர் - மனந்தளர்பவர்களும்—மெய்யுணர்வு - உண்மைஞானம் — வாய்த்திலாதோர் - அடையாதவர்களுமான (விவர்களுடைய)—வாளுள் - ஆயுளானது —தளர்வுறுகாரணம் - தளர்வடைவதற்குக்காரணமாம்—அளவுபடுமுடல்-மட்டிடப்படுஞ்சரீரத்தை— மெய்யென்றழுந்தி - ஆத்மபுத்திபண்ணி — தனிமோகமெனும் - ஒப்பற்ற மோகமென்கின்ற—முகிலில் - மேகத்தில் — சார்மின்போலும் - பொருந்தியமின்னலைப்போலு (மிருக்கின்ற)—இதில் - இவ்வாயுளில்—மகிழேம் - சந்தோஷியேம்—ஆகாயத்தை - (நிரந்தரமாவு) வந்தரத்தை—பிளவிட - பிளக்கவும்—வாயுவை - (சஞ்சலமுள்ள) காற்றை—பிடிக்க - பிடிக்கவும்—திரைகோக்க - (தோன்றித்தோன்றியழியாநின்ற) அலைகளைக்கோக்கவும் — எளிது - இலேசாம்—இதனை - இவ்வாயுளை — பேணவொண்ணு - (நிலையென) விரும்பக்கூடாது. எ - று.

மோகமென்பதைத் தேகமெனவும், உடலென்பதையுயிரெனவுங்கொள்க. (இ-ம்.) கன்மிகளுக்காத்மவிவேகத்தைக்கொடாமற் சநநத்தைக்கொடுப்பதுமன்றிக்கணமுநிலையில்லாததிவ்வாயுளிற் சுகமின்றென்பதாம்...... .... (௫௫)

(அ-கை.) ஆயுளினிச்சைவியர்த்தமாமெனல். (கவி) சரற்பருவமேகமெனத்தை
லந்தீர் விளக்கென்னத் தரங்கமென்னத், திரப்படநீங்குவதாகிச் சிறிதுமிளைப்
பாறுதசிந்தைத்தாகிப், பரப்புடையசேட்டையதாய்ச்சூனியமாம்வாணாளின் பய
னைநாடிற், றுரப்பரிய துயராக்குமொட்டகத்துக்குயிர்தொலைக்குஞ் சூலேபோல.

(இ-ள்.) சரற்பருவமேகமென - சரத்காலமுகிலைப்போலவும்— தைலந்தீர்விளக்கென்ன - நெய்யில்லாததீபத்தைப்போலவும்—தரங்கமென்ன - (கடலி) னலையைப்போலவும்—திரப்படநீங்குவதாகி - நிலைபாகக்கெடுகின்றதாயும் — சிறிதுமிளைப்பாறுத - எவ்வளவேனும் விஸ்ராந்தியில்லாத—சிந்தைத்தாகி - சிந்தையாயும்—பரப்புடைய - விஸ்தாரமுள்ள— சேட்டையதாய்- மூடமாயும்—சூனியமாம்- (புருடார்த்த) சூனியமாயு (மிருக்கின்ற)— வாணாளின் பயனை - ஆயுளின்பிரயோசனத்தை—நாடில் - ஆராயில்—ஒட்டகத்துக்கு - ஒட்டியிருக்கின்ற வுடலையுடையஇப்பிக்கு—உயிர்தொலைக்கும் - உயிரைப்பிரிக்கின்ற—சூலேபோல - கருப்பத்தைப்போல— துரப்பரிய - நீக்கக்கூடாத—துயராக்கும் - துன்பத்தையுண்டாக்கும். எ-று. வடநூலாசிரியர், அசுவதரியென்னுந்திருட்டாந்தமித்தேயத்திற்கதிரிசயமாதலால், அதுதிரிசயமாம்பொருட்டிந்நூலாசிரியர்முத்திப்பியை, ஒட்டகமெனக்கூறினர். (இ-ம்.) கணமுநிலையின்றி, விரும்பினவர்களுக்குத்துக்கத்தைக்கொடுக்கின்றவாயுளிலென்னபிரயோசனமென்பதாம் (௫௬)

(அ-கை.) விஸ்ராந்தியடையுமாயுளே சபலமாமெனல். (கவி) அடையவேண்டிய
தடைந்துமேற்றுயரமற்றின்பமளவிலாதாய்க், கடையதாந்தருவிலங்கு பறவைகள்
போல்வீணாள்கள்கழியாதாகித், தடையிலாமனனத்தால்வாழ்வதேயுயர்வாணாள்சந
நந்தீர்ந்தோ, ருடையபிறப்புயர்ந்ததாங்கிழவேசரிப்பிறப்பாமொழிந்தவெல்லாம்.

(இ-ள்.) அடையவேண்டியதடைந்து - அடையத்தக்க (வாத்மஞானத்தை) யடைந்து—மேற்றுயரமற்று - இனித்துன்பநீங்கி—இன்பம்-ஆநந்தமானது—அளவிலாதாய்-அளவற்றதாய்—கடையதாம் - கீழான—தரு - விருக்ஷங்களும்—விலங்கு-மிருகங்களும்—பறவைகள்போல் - பக்ஷி (களுமாகியவிவை) களைப்போல—வீண் - வீணாக—நாள்கள் - காலத்தை—கழியாதாகி - போக்காமல்—தடையிலா - தடையற்ற— மனனத்தால் - ஆத்மவிசாரத்தால்—வாழ்வதே - சீவிப்பதே — உயர்வாணாள் - மேலானவாயுளாம்— சநநம் - (மறு)பவத்தை—தீர்ந்தோருடைய - ஒழிந்தவருடைய—பிறப்பு - சநநம் — உயர்ந்ததாம் - மேலானதாம்—ஒழிந்தவெல்லாம் - ஏனையவனைத்தும்—கிழவேசரிப்பிறப்பாம் - கிழக்கழுதையின்பிறவியாம். எ-று. சநநமென்பது ஆயுளெனக்கொள்க. [ப-ம்.] ஆத்மாவில்ரமிக்கின்றவாயுளிருத்தலின், மனனத்தால் வாழ்வதே யுயர்வாணாளென்றார், (இ-ம்.) ஆத்மப்பிரயோசனத்தை யடைந்து அதிற்சீவிக்குமாயுளைத்தவிர மற்றதிலென்னசுகமென்பதாம்...... ....(௫௭)

(அ-கை.) பயனின்றியவாயுளேசுமையாமெனல். (கவி) அவிவேகிக்குப்பாரஞ்
சாத்திரமெய்யறிவிலோர்க்கங்கம்பார, நவில்சாந்தியில்லாதோர்க் குளம்பாரமவா
வினர்க்குஞானம்பாரஞ், செவிதானவுருவாணுண்மனம்புந்தியகங்காரஞ் செயல்க
ளெல்லாங், குவிபாரமாஞ்சுமடர்சுமைபோலப்புந்திநலங்கூடாதார்க்கே .... *

(இ-ள்.) அவிவேகிக்கு - விவேகமில்லாதவருக்கு —சாத்திரம் - நூலானது— பாரம்-சுமையாகும்—மெய்யறிவிலோர்க்கு - உண்மைஞானமில்லாதவருக்கு — அங்கம்பாரம் - சரீரஞ்சுமையாகும்—நவில்சாந்தியில்லாதோர்க்கு - சொல்லாநின்றசாந்தமில்லாதவருக்கு—உளம்பாரம் - மனஞ்சுமையாகும்—அவாவினர்க்கு - காமா (தி தோஷ) முடையவருக்கு—ஞானம்பாரம் - (ஆத்ம) ஞானஞ்சுமையாகும்—செவிதானவுரு - அழகியதேகமும்—வாணாள்-ஆயுளும்—மனம் - மனதும்—புந்தி - புத்தியும்—அகங்காரம் - அகங்காரமும்—செயல்கள்-தொழில்களுமாகிய—எல்லாம் - அனைத்தும்—புந்திநலம் - அறிவிற்சுகம்—கூடாதார்க்கு- அடையாதவர்களுக்கு—சுமடர்சுமைபோல - கீழ்மக்களெடுக்குஞ்சுமையைப்போல— குவிபாரமாம் - திரண்டசுமையாகும். எ-று. [ப-ம்.] பயன்பெறுதவாயுளின்விபகாரங்களனைத்துந்துன்பமேயென்பார், குவிபாரமென்றார், (இ-ம்.) அறிவிலின்பமனுபவியாமல் அநாத்மாவான சகலமுமியானெனதெனத்தாங்கிவருந்துகின்றவனாயுளிலென்னசுகமென்பதாம்..... ...... (௫௮)

(அ - கை.) இவ்வாயுள்துன்பநிமித்தமேயன்றிச்சுகநிமித்தமன்றெனமுடித்து நிறுத்த
முறையான் அவ்விரண்டிலுங் கருத்தாபோக்த்தாவென்னு மபிமானமுண்டாதலால்தன்

பின்னகங்காரம்வைத்தலைதையுந்தூஷித்தல். (கவி) சின்னாண்மெய்ப்பயின்றிளமைதீநட்பைவிடுமறிஞர்திறம்போனீங்கு, மன்னாதுசுகநிலைமைமரணத்தின்பாத்திரமாம்வாணாள்போல, வின்னாததில்லையிடர் மோகத்தால் வாளாவந் தெங்கும்வாளா, துன்னாநின் றது பொல்லாப்பொய்யகங்காரப்பகையாற்றுணுக்கென்கின்றேன்............ .... *

(இ-ள்.) இளமை - எவ்வன (வாயுளானது)—சின்னாள் - சிலநாள்—மெய் - தேகத்தில்—பயின்று - பழகி—தீநட்பைவிடும் - துர்ச்சனருறவைவிடுகின்ற—அறிஞர் - ஞானிகள்—திறம்போல் - தன்மையைப்போல—நீங்கும் - பிரியும்—சுகம் - இன்பமும்—நிலைமை - நிலையும்—மன்னாது - நிலைபெறாமல்—மரணத்தின்பாத்திரமாம் - நசிப்பதற்கிடமாயிருக்கின்ற—வாணாள்போல - ஆயுளைப்போல—இன்னாதது - தீதானது—இல்லையாம் - (வேறொன்)றில்லையாம்—(இனியகங்காரத்தூடணம்) இடர்மோகத்தால் - துன்பமானமோகத்தினால்—வாளாவந்து - விருதாவாகவுண்டாய்—எங்கும் - எவ்விடங்களிலும்—வாளா துன்னாநின்றது - விருதாவாகநிறைந்திருக்கின்றதான—பொல்லா - தீமையாகிய—பொய் - மித்தையான— அகங்காரம் - அகங்காரமென்னும்—பகையால் - சத்துருவினால்—துணுக்கென்கின்றேன் - அச்சப்படுகிறேன். எ-று. (இ-ம்.) பயனின்றித்தேகத்தைச் சுமந்துகெடுகின்ற வாயுளிலைப்போதுஞ் சுகமில்லையென்றும், அதையபிமானித்தவகங்காரத்திலென்னசுகமென்றுஞ்சொன்னதாம்................. (௫௭)

(அ-கை.) மித்தையாவஸ்துக்களை நானென்றபிமானிக்கு மகம்பாவத்தாற்கலங்குகிறேனெனல். (கவி) மனத்துயருமாபத்தும் வளர்தொழிலு மகங்கரத்தால்வருமித்தைப்போற், கனத்தபகையிலதுநெடுங்காலம்வினையிதுசேர்ந்துகலங்காநின்றேன், அனத்தொடுதண்ணீர்நுகரோனரும்போகம்விளம்புவதென்னகங்காரஞ்சேர், தினத்தொழில்களோமமுணவனைத்தும்பொய்யகங்காரந்தீர்தன்மெய்யே......... .... *

(இ-ள்.) மனத்துயரும் - மனோதுக்கமும்—ஆபத்தும் - ஆபத்துகளும்—வளர்தொழிலும் - விருத்தியாகின்றவியாபாரங்களும் — அகங்கரத்தால்வரும் - அகங்காரத்தினாலுண்டாகும்—இத்தைப்போல் - இதைப்போல — கனத்தபகையிலது - பெரியசத்துருவேறில்லை—நெடுங்காலம் - வெகுகாலம் — வினையிது - சத்துருவானவிவ் (வகங்காரத்தை) — சேர்ந்து - அடைந்து—கலங்காநின்றேன் - கலங்குகின்றேன் — அனத்தொடுதண்ணீர் - அன்னத்தோடு சலத்தையும்—நுகரோன் - புசியேன்—அரும்போகம் - அரியபோகத்தை—விளம்புவதென் - சொல்லுவதென்ன—அகங்காரஞ்சேர் - அகம்பாவஞ்சேர்ந்த — தினத்தொழில்கள் - நித்தியகன்மங்களும்—ஓமம் - யாகங்களும் — உணவு - புசிப்புகளு (மாகிய)—அனைத்தும் பொய் - எல்லாமித்தையேயாம்—அகங்காரம் - (இவ்) வகங்காரமானது—தீர்தன்மெய் - விடுதலேதத்துவமாம். எ-று. [ப-ம்.] உலோகவாசனையாற்செய்யுங் கிரிஷியாதிகளை, தினத்தொழிலென்றும், சாஸ்திரவாசனையாற்செய்யுமியாகாதிகளை, ஓமமென்றும், தேகவாசனையாற்புசிக்குமறுசுவையுண்டிகளை, உணவென்றுங்கூறினார். (இ-ம்.) மனோதுக்கமுண்டாவதற்குக்காரணமாகியநித்தியகன்மமுதலியவற்றிலகம்பாவஞ்செய்யுமித்தையானவகங்காரத்திலென்ன சுகமென்பதாம்.

(அ-கை.) அகம்பாவநீங்கும்வகைவினாவுதல். (கவி) அகங்காரமுகில்படரவாசைமலைமல்லிகையவ்வளவிற்றாகு, மிகுந்துயரிவ்வகங்காரத்தொழில்பிரிந்தும்பேதைமையின்மிகவுநொந்தேன், செகந்தனிலாபத்திடமாய்த்திரந்துறப்பதாயுள்ளாய்த்தியக்கமாயு, முகந்தவிசாரமுமுணர்வுமிலாவகங்காரம்போமா றுபதேசிப்பாய். *

(இ-ள்.) அகங்காரம் - அகங்காரமாகிய—முகில்படர - மேக (மெம்மட்) டிருக்கின்றதோ—ஆசை - இச்சையென்னும்—மலைமல்லிகை - குடசமஞ்சரி—அவ்வளவிற்றாகும் - அம்மட்டும்விருத்தியடையும் — மிகுந்துயர் - மிகுந்த துன்பமாகிய — இவ்வகங்காரத்தொழில் - இந்தவகங்காரத்தினது செயலை—பிரிந்தும் - விட்டும்—பேதைமையின் - (என்னை)யறியாமையினால்—மிகவுநொந்தேன் - மிகவும்வருந்தினேன்—சகந்தனில் - உலகத்தில்—ஆபத்திடமாய் - ஆபத்துக்குஸ்தானமாகியும்—திரந்துறப்பதாய் - நிலையில்லாததாயும்—உள்ளாய் - மனத்தின்கண்ணிருப்பதாயும்—தியக்கமாயும் - உன்மத்தமாயும்—உகந்த - முடிந்த—விசாரமும் - விசாரணையும்—உணர்வுமிலா - அறிவுமில்லாத — அகங்காரம் - அகங்காரமானது — போமாறு - தீரும்படி—உபதேசிப்பாய் - அனுக்கிரகிப்பாய். எ-று. [ப-ம்.] அறிவுள்ளபரமாங்காரமிருத்தலின், உணர்வுமிலாவகங்காரம்போமாறென்றார். (இ-ம்.) ஆசைக்குப்பீசமாயும், ஆபத்துக்குஸ்தானமாயும், மூடசிரோஷ்டமாயுமிருக்கின்றவகங்காரத்திலென்னசுகமெனமுடித்ததாம் (௫௮)

(அ-கை.) அகங்காரத்தைச்சொல்லி நிறுத்தமுறையான் அவ்வாங்காரவசத்தாற்சங்கற்பவிகற்பாத்மகமானமனதுண்டாதலாலதன்பின்மனதைவைத்ததைதையுந்தூஷித்தல். (கவி.) காமமுதல்வினைக்குடைந்துகற்றவர்நற்றொழிலகலுங் கடுங்காற்றூற்ற,

மாமயிலின்பீலிபோன் றதிதூர நகர்நாய்போல் வாளாசுற்று, மாமதுகிஞ்சிலுங் கிடையாதருநிதிபெற்றுமகிழ்ந் தமைந்துட்கொள்ளாச், சேமமுறு கரண்டகநீர் தரியாபோற் றிரியுமனத்தீயதன்றே..*

(இ-ள்.) காமமுதல்வினைக்குடைந்து - இராகாதி தோடங்களுக்குச் சிதைந்து—கடுங்காற்றுற்ற - பெருங்காற்றிலகப்பட்ட — மாமயிலின் - பெரியமஞ்ஞையின்— பீலிபோன்று - இறகைப்போல — கற்றவர்நற்றொழிலகனும் - சாதுசங்கத்தினின்றுநீங்கிச் (சஞ்சலிக்கும்)— நகர்நாய்போல் - ஊர்ஞாளியைப்போல— அதிதூரம் - நெடுந்தூரம்—வாளா - (மனது)விருதாவாக—சுற்றும்- (விடயங்களிற்) சுழலும் — ஆமதுகிஞ்சிலுங் கிடையாது - பயனுனதற்பமுஞ்சித்தியாது—சேமமுறுகரண்டகம்- காப்புற்றபூங்குடலையானது—நீர்-சலத்தை—தரியாபோல் - (தன்னிற்) றரியாததுபோல—அருநிதிபெற்றும்- அரியதிரவியங் கிடைத்தாலும்—மகிழ்ந்தமைந்துட்கொள்ளா - களிப்புற்றுப்பொருந்தவுட்கொள்ளாமல்— மனத்தீயது - தீயமனமானது—திரியும்- சுழலும். எ-று. (இ-ம்) பிரயோசனமொன்றுமில்லாமல்வீணுகச்சுழல்கின்றமனதினு லென்னசுகமுண்டா மென்பதாம்..(சூய)

(அ-கை.) மனமிச்சாவசத்திற் சென்றென்னை வருத்துகின்றதெனல்.(கவி) காதலெனுமனைவியின்பின் செல்கின்றமனமென்னுங் கடியஞாளி, பேதைமைமே வியவென்னைப்பிணந்தின்னுமாறுபோற் பிடுங்கித்தின்னு, மோதும்பெருங் காற்றினன் மூறிந்தெழுந்த துரும்புபோன் மோகமெய்த, வாதைமனம் பெரும்பாழின் மிகவீழவதிதூரமலங்கத்தள்ளும்.*

(இ - ள்.) காதலெனுமனைவியின் - ஆசையென்னு மில்லாளின்—பின்செல்கின்ற - பின்றொடர்கின்ற— மனமென்னும் - மனமென்கின்ற— கடியஞாளி - கோரமுள்ளநாயானது—பிணந்தின்னுமாறுபோல் - பிணத்தைப்பிடுங்கித் தின்னுந்தன்மையைப்போல — பேதைமைமேவியவென்னை - அறிவின்மைபொருந்தியவென்னை—பிடுங்கித்தின்னும் - பிடுங்கிப்புசிக்கும்—மோதுபெருங்காற்றினல் - அடிக்கின்ற சண்டமாருதத்தினல் — மூறிந்தெழுந்த துரும்புபோல் - சின்னபின்னமாய் முறிபட்டெழுந்த திரணத்தைப்போல—மோகம் - மயக்கமும்—வாதை-துன்பமும்—எய்த - அடையும்படி—மனம்-மனமானது—பெரும்பாழின்மிகவீழ-மகாசூனியத்தில்விழும்படி— அதிதூரமலங்கத் தள்ளும் - அதிதூரத்தின் மலங்கும்படி (யென்னைத்) தள்ளிவிடும். எ-று. (இ-ம்) மோகத்தையுண்டாக்கி வீணுகவென்னைவருத்துகின்ற இச்சாவசமான மனதினுலென்ன சுகமிருக்குமென்பதாம், இஃது உபமான கற்பித வியஸ்த ரூபகவலங்காரம்..(சூக)

(அ-கை.) மித்தையானமனமென்னைப் பலகன்மத்திற்றள்ளிவருத்துகின்றதெனல். (கவி.) வேராறுபொய்யாய்ச்செறிந்தவடிவாகி விசாரத்தால் விரோதமாகுங், கோரமனம்பேய்பிடித்தசிறுவரைப்போற் பலதொழிலிற் கூட்டாநிற்கும், பாரகன்றுபாதலம்போம்பாதலத்தி னின்றகன்று பாரின்மீளுஞ், சோரமனங் கிணற்றுமரம் பழங்கயிற்றுலெடுப்பது போற் றொழிலிற் றள்ளும்..*

(இ-ள்.) வேராறு- காரணமில்லாத—பொய்யாய்ச்செறிந்த - மித்தையாகநிறைந்த — வடிவாகி - உருவமாய்—விசாரத்தால் - விசாரணையால்—விரோதமாகுங்கோரமனம் - வேறுபடாநின்றகொடியமனமானது— பேய்பிடித்த - பிசாசம்பற்றிய—சிறுவரைப்போல் - பாலரைப்போல—பலதொழிலிற் கூட்டாநிற்கும் - (என்னை) நானுவிதமானவிருத்திகளிற்கூட்டுவிக்கும்—பாரகன்று-பூமியினின்றுநீங்கி—பாதலம்போம்-பாதாளத்துக்குச் செல்லும் — பாதலத்தினின்றகன்று - பாதாளத்தினின்றுநீங்கி—பாரின்மீளும் - பூமிக்குவரும்—சோரமனம் - கள்ளமனமானது—கிணற்றுமரம் - கூபத்தின்கட் (கிடக்கின்ற) மரத்தை—பழங்கயிற்றுல்- நைந்தகயிற்றுல்—எடுப்பதுபோல் - (கட்டி) யெடுப்பதுபோல —தொழிலிற்றள்ளும்-(என்னையுயர்வுதாழ்வான) விருத்திகளிற்றள்ளும். எ-று. (இ-ம்) விசாரமின்றிய விடத்துண்டாய்த்தான் சுழல்வதுமன்றி யென்னைப் பவத்திற்சுழற்றுகின்ற மனத்தினுற் சுகமென்ன வென்பதாம்... .(சூஉ)

(அ-கை.) வன்மையுள்ள மனதை நசிப்பிக்க வேண்டுமெனல். (கவி.) கடுமனவன்பேய்கனலிற்கொடிதாகுமலைகளினுங்கடத்தற்கொண்ணு,நெடுவயிரத்தினும்வலிதுகடல்பருகிமேருவினைநேரோபேர்த்துச், சுடுகனலைவிழுங்குகினுநிறுத்தரிதுபுலன்முழுதுந்தோன்றுமூலங், கெடுமூலகீ துண்டெனிலுண் டிலதாகிலிலதிதனைக் கெடுத்தல்வேண்டும்..........*

(இ-ள்.) கடுமனவன்பேய் - விடம்போன்ற மனமென்னும் வலியபேயானது — கனலிற்கொடிதாகும் - அக்கினியிலுங்கொடுமையாம்—மலைகளினுங்கடத்தற்கொண்ணு - வரைகளைக்காட்டிலுங்கடத்தற்கரியதாம்—நெடுவயிரத்தினும்வலிது - நீண்டவச்சிரத்திலும்வன்மையாம்—கடல்பருகி -வாரியைக்குடித்தாலுங்(குடிக்கலாம்)—மேருவினைநேரோபேர்த்து-மகாமேரு

வையடியோடே பிடுங்கினாலும் - (பிடுங்கலாம்) —சுடுகனலை-சுடாநின்றவக்கினியை—விழுங்கினும்- விழுங்கினாலும் - (விழுங்கலாம்) நிறுத்தரிது - (இம்மனதை) நிறுத்தக்கூடாது —புலன் முழுதுந்தோன்றுமூலம் - விடயங்களனைத்துமுண்டாவதற்குக்காரணம்— கெடுமுலகு - நசிக்காநின்றசகமானது— ஈதுண்டெனிலுண்டு - இம்மனதுண்டானாலுண்டு— இலதாகிலிலது- இல்லையானாலில்லையாம்—இதனைக் கெடுத்தல்வேண்டும் - இம்மனத்தை நசிப்பிக்க வேண்டும். எ-று. [ப-ம்] அமுதமயமான மனதிருத்தலின், கடுமனவன்பேயென்றார். (இ-ம்) மனது, அநர்த்தரூபமான சகத்துக்குக் காரணமாதலா லதையெவ்விதத்திலுங் கெடுக்காவிடிற் சுகமில்லையென்பதாம்.... .... (௩௩)

(அ-கை.) மனோதூடணத்தைமுடித்து நிறுத்தமுறையான் அஃதுநிரந்தரம்போகத்தையிச்சிப்பதனாலதன் பின்னாசையைவைத்ததனையுந்தூஷித்தல். (கவி) வரையிலெழுவனம்போலமகிழ்ச்சியிடரிவையனைத்துமனத்திற்றோன்றும், புரையில்விவேகத்தின்மனம்பொன்றிலவைபொன்றுமெனப் புந்திசெய்தேன், கரைதலறுமோகமெனுங்காரிருளிற் றொழிற்கடங்காக் காதலல்லா, னுரைதருகாமாதிகளா முலூக நிரையுணர்வெனும்விண்ணுலாவுமன்றே.... .... *

(இ-ள்.) வரையிலெழுவனம்போல-மலையிலுண்டானகாடுபோல —மகிழ்ச்சியிடர்-சுகதுக்கங்களாகிய—இவையனைத்தும்-இதுகளெல்லாம்--மனத்திற்றோன்றும்-மனத்திலுண்டாகும்--புரையில்விவேகத்தின்- குற்றமற்றவிவேகத்தினால்—மனம்பொன்றில்- மனநசித்தால்—அவைபொன்றுமென - அச்சுகதுக்கங்கெடுமென்று—புந்திசெய்தேன் - அறிந்தேன்—(இனியாசாதூடணம்) கரைதலறுமோகமெனும் - கடினமானமோகமென்கிற — காரிருளின் - கறுத்தவிருட்டினையுடைய — தொழிற்கடங்கா - செயலிலமைதிபிறவாத — காதலல்லால் - ஆசையென்னுமிராத்திரியில்—உணர்வெனும்விண் - ஆத்மாகாயத்தில்—உரைதருகாமாதிகளாம்- சொல்லப்பட்டகாமக்குரோதமென்கின்ற— உலூகநிரை - கோட்டான்கூட்டமானது—உலாவும்-விளையாடும். எ-று. [இ-ம்] சுகதுக்கத்துக்குப் பீசமானமனதை விவேக ஞானத்தாற் கெடுக்காவிடிற் சுகமேதென்பதாம்.... .... (௩௪)

(அ-கை.) ஆசையேயக்கினியாகவருத்துகின்றதெனல். (கவி) ஆதரித்தநற்குணங்களாகுவினாற்றந்திரிபோலாசையாலே, சேதமுறுஞ்சொருபநிலை செறிதரவல்லமையில்லாச் சிந்தையேங்கண், மீதுவலையுறுபுள்போன்மெலியவருமாசைத்தீவெதுப்பநொந்தேன், கோதிலமுதிற்குளித்துங் குளிராதென்றென்மனத்திற்குறிக்கின்றேனால்.... .... *

(இ-ள்.) ஆதரித்தநற்குணங்கள் - (என்னால்) விரும்பப்பட்டசற்குணங்கள் — ஆகுவினாற்றந்திரிபோல் - எலியினால்யாழ்நரம்புகெடுவதுபோல—ஆசையால் - இராகத்தினால்—சேதமுறும் - கெடும்—சொருபநிலைசெறிதர - ஆத்மஞானத்தையடைய—வல்லமையில்லா - பலமில்லாத—சிந்தையேங்கள் - சித்தத்தையுடையநாங்கள் —மீதுவலையுறுபுள்போல் - மேலுள்ள வலையிலகப்பட்டபறவையைப்போல—மெலியவரும்- மெலியும்படியுண்டாகும்—ஆசைத்தீ- அவாவக்கினியானது—வெதுப்ப - எரிக்க—நொந்தேன்-வருந்தினேன்— கோதிலமுதிற்குளித்தும் - குற்றமற்றவமிர்தத்தின்முழுகினாலும் —குளிராதென்று - (என்னறிவு) சீதளமாகாதென்று—என்மனத்திற்குறிக்கின்றேன் - என்மனதிலெண்ணுகிறேன். எ-று. (இ-ம்.) இவ்விச்சை விஸ்ராந்தியைக்கொடாதென்பதாம்.... .... (௩௫)

(அ-கை) ஆசையைக்கிழக்கணிகையாகத்தூஷித்தல். (கவி.) பின்னுறுபக்கத்திருள்போற் பேராண்மைத்தீரரையும் பீதிசெய்யு, நன்னயனங்குருடாக்குமுபசாந்தத் தோர்தமையு நடுக்கஞ்செய்யுங், கின்னமுறுகாதலெனுங்கிழமடந்தையொருபொருளுங்கிட்டாதேனு, மின்னிதிய நயந்தெவர்க்கும் பின்றொடருமனோரதமுமெய்தாதாகும்.... .... *

(இ-ள்.) பின்னுறுபக்கத்திருள்போல் - அபரபக்ஷத்தமாவாசையிருளைப்போல — பேராண்மைத்தீரரையும் - மகாவலிமையுள்ளதீரர்களையும்—பீதிசெய்யும்- அச்சஞ்செய்விக்கும்—நன்னயனம் - நல்லறிவாகியகண்ணை—குருடாக்கும் - கெடுக்கும் — உபசாந்தத்தோர்தமையும் - உபசாந்தமுடையசத்துக்களையும்—நடுக்கஞ்செய்யும்-நடுங்குவிக்கும்—கின்னமுறும்- ஆந்தைவடிவமான—காதலெனும் - ஆசையென்கின்ற—கிழமடந்தை-கிழத்தாசியானவள்— ஒருபொருளும் - ஓர்வஸ்துவும்—கிட்டாதேனும் - (தனக்குக்) கிடையாததாயினும்—இன்னிதியநயந்து - இனியதிரவியத்தைவிரும்பி—எவர்க்கும்பின்றொடரும் - யாவர்க்கும் பின்செல்லுவள்—மனோரதமுமெய்தாதாகும்-தனதிஷ்டமுமடையாததாம். எ-று. (இ-ம்.) யாதிடத்திலுந் தன்மனோரத நிறைவேறாமல்அவரவர் நற்குணங்களை மாறுபடுத்தி வீணாகவருத்துகின்றவாசையினாலென்னசுகமென்பதாம்.... .... (௩௬)

(அ-கை.) ஆசையொன்றிலுமமைதிபிறவாமல் வருத்துகின்றதெனல். (கவி) முதிர்பரு வத்தளர்ச்சியான் முடியாதநடனகதிமுயல்வாளாகி, மதிமகிழ்ச்சியறநடிக்குமாடுங்கூத்தி யைப்போலவருத்துமாசை, யெதிர்கிடைத்தற் கரும்பொருளிற் சென்றெய்து மமைந் தாலுமின்பந்தேடும், கதியறவோரிடத்துறையா துலைகின்றவானரம்போற்காதறுமே. *

(இ-ள்.) முதிர்பருவத்தளர்ச்சியால் - வார்த்திகப்பருவத்திலுண்டாகுந்தளர்வினுல்—முடி யாதநடனகதி - (தன்னுற்) சத்தியில்லாதநடனத்தை—முயல்வாளாகி - முயற்சிப்பவளாய்— மதிமகிழ்ச்சியற - மனக்களிப்பில்லாமல்—நடிக்கும் - நடனஞ்செய்கின்ற—ஆடுங்கூத்தியைப் போல - நாடகக்கணிகையைப்போல—ஆசைவருத்தும்- (என்னை) யிச்சைவருத்துகின்றது— எதிர்கிடைத்தற்கு - நேரேபெறுதற்கு—அரும்பொருளில் - கூடாதவஸ்துக்களை — சென்றெ ய்தும் - அடையப்போம்—அமைந்தாலும் - கிடைத்தாலும் — இன்பந்தேடும் - (பின்னுஞ்) சுகத்தையேநாடும்—கதியற - திரமில்லாமல்—காதறுன்-ஆசையானது—வானரம்போல்-குர ங்கைப்போல — ஓரிடத்துறையாதுலைகின்றது - ஓரிடத்திலுந் தங்காமலலைகின்றது. எ - று. (இ-ம்.) முடியாதகாரியத்தின் முயன்றொன்றிலுமமைதிபிறவாமற் சுழன்றுவருந்துகின்ற வா சையாலென்னசுகமென்பதாம் .... (கூஎ)

(அ-கை.) ஆசாவியாதிக்கவுஷிதங்கூறல். (கவி) காவின்மதர்வண்டென்னப்பாதலம்விண் டிசையனைத்துங் கணத்துலாவும், வாவிவளர்மயலொன்றே வருத்தமனைத்தினும்பெரிய வருத்தநல்கு, மேவுமரணுறைபவர்க்குந் துயர்செய்யுமாசையெனும் விடூசிகைக்குத், தேவர்புகழ்மந்திரமாஞ்சிந்தையறலுலகிடர்போஞ்சிந்தையற்றால் .... *

(இ-ள்.) காவில் - பூங்காவில்—மதர் - (மதுவுண்டு) களித்த—வண்டென்ன - அளியைப் போல—பாதலம் - பாதாளமும்—விண் - ஆகாயமும்— திசையனைத்தும் - எட்டுத்திக்கு (மா கியவிவை)யனைத்திலும்—கணத்துலாவும்-க்ஷணத்திற்சுற்றிக்கொண்டுவரும்—வாவிவளர்-தாவி வளராநின்ற—மயலொன்றே - ஓராசையே — வருத்தமனைத்தினும் - துன்பங்களெல்லாவற்றி னும்—பெரிய - மகத்தான—வருத்தநல்கும் - (பிறவித்) துன்பத்தைக்கொடுக்கும் — மேவு மரண் - விரும்பப்பட்டகோட்டைக்குள்—உறைபவர்க்கும் - வசிப்பவர்களுக்கும்—துயர்செ ய்யும் - துக்கத்தைச்செய்யும்—ஆசையெனும் - அவாவென்கின்ற—விடூசிகைக்கு - விடூசிகா வியாதிக்கு —சிந்தையறல் - சிந்தாத்தியாகமே—தேவர்புகழ் - அமரர்கள் துதிக்கும்—மந்திர மாம்- மந்திராவுஷிதமாம்—சிந்தையற்றால்-(அச்) சிந்தாத்தியாகம்வந்தால்—உலகிடர்போம்- சகத்துன்பநீங்கும். எ-று. [ப-ம்.] சுகத்தைக்கொடுக்குமோக்ஷாபேக்ஷையிருத்தலின், துயர் செய்யுமாசையெனும்விடூசியென்றார். (இ-ம்.) தசதிசையிலுஞ்சுழன்று வருத்தத்தைக் கொ டுக்கின்ற, வாசையைச்சித்தாத்தியாகத்தாற்கெடுக்காவிடிலென்னசுகமென்பதாம் .... (கூஅ)

(அ-கை.) ஆசையாவரையுங்கெடுக்குமெனல். (கவி.) பைந்தொடியாராசைநோய் கெம்பீரமனிதரையும் பதுமந்தன்னை, முந்திரவிக் கதிர்போலு மிளிர்விக்குங்கன விடியின்முனைகூர்வாளும், வெந்தவிருப்புப்பொறியு மெனக்கொடியமனவேட்கை மேருவொத்தோர், சுந்தரஞானியர்தீரர்சூரரையெல்லாமிமைப்பிற்றுரும்புசெய்யும்

(இ-ள்.) ஆசை - இச்சையானது—பைந்தொடியார் - பசுமையான சொர்ணவளையலை யணிந்தமாதரும்—நோய்-வியாதியும்(போலும்)—பதுமந்தன்னை- தாமரைமுகையை—முந் திரவி-முதன்மையானசூரியனது— கதிர்போலும் - கிரண(மலர்த்துவது) போலும் — கெம் பீரம் - ஆழ்ந்தகருத்தையுடைய—மனிதரையும் - புருடர்களையும்—மிளிர்விக்கும்- (பகிர்முக மாய்) வெளிப்படுத்தும்—கனவிடியின்முனை - வச்சிரத்தின்முனையையும்— கூர் - (முனையிற்) கூருள்ள—வாளும் - வாளாயுதத்தையும்—வெந்த- (அக்கினியினுல்) வெந்த—இருப்புப்பொறி யுமென - அயப்பொறியையும்போல— கொடிய - கொடுமையான—மனவேட்கை-மனோரா கமானது —மேருவொத்தோர் - மகாமேருவுக்கொப்பான (வுயர்வுள்ள) வர்களையும்— சுந்தர ஞானியர் - அழகுள்ள ஞானவான்களையும்—தீரர் - திடமுள்ளவர்களையும்—சூரரை-வீரர்களை யும்—எல்லாம் - மற்றியாவரையும்—இமைப்பில் - நொடியில்— துரும்புசெய்யும்-திரணமாக் கும். எ-று. [ப-ம்] இச்சையானது, அந்தர்முகியையும் பகிர்முகியாக்குமென்பார், கெம்பீர மனிதரையு மிளிர்விக்குமென்றும், அதற்குமிஞ்சினவலிமையில்லையென்பார், எல்லாமிமைப் பிற்றுரும்புசெய்யு மென்றுங்கூறினர். (இ-ம்) யாதிலும்வல்லமையுள்ள விச்சாத்தியாகம்வாரா விடிலென்னசுகமுண்டாமென்பதாம் .... (கூகூ)

(அ-கை) ஆசாதுடணமுடித்துநிறுத்தமுறையான் இப்போகமனுபவித்தற்குஸ்தான ந்தேகமாதலாலதனையதன்பின்வைத்தலதையுந்தூஷித்தல். (கவி) ஈரித்தகுடனரம் பாற்செறித்துபலவிகாரியாயிரங்கவாடிப், பூரித்தவுடல்பிறப்பிற்பொலிந்தா துற்று

ன்பத்தின்பொருட்டேயாகும், பாரித்தசிற்றின்பஞ் சிறுதுன்பமனுபவிக்கும்பகர்
ந்தமெய்போ, னேரிட்டகுணமிலதுந் துயருளதுநீசமுமா நிலைவேறுண்டோ.... *

(இ-ள்.) ஈரித்தகுட்ல் - குளிர்ந்தகுடலினாலும்—நரம்பால் - நரம்பினாலும்— செறிந்து-நெருக்குற்று— பலவிகாரியாய் - சட்பாவவிகாரமுடையதாய்—இரங்க - இரங்கும்படி—வாடி- (ஒருபோது)வாடியும்—பூரித்த-(ஒருபோது) பருத்துமிருக்கின்ற—உடல்- தேகமானது—பிறப்பில்- (சம்சார) வுற்பத்தியில்—பொலிந்தாலும் - பிரகாசித்தாலும் — துன்பத்தின் பொருட்டேயாகும்-துக்கநிமித்தமேயாம்—பாரித்த-அதிகரித்த—சிறு-அற்ப (விஷயத்தால்) —இன்பம்-சுகத்தையும்—சிறு-அற்ப(விஷயத்தால்)—துன்பம்- துக்கத்தையும்— அனுபவிக்கும்-அனுபவியாநின்ற—பகர்ந்தமெய்போல்-சொல்லியவித் தேகத்தைப்போல— நேரிட்ட-நேரான—குணமிலதும் - குணமில்லாததும்—துயருளதும் - துக்கமுள்ளதும்—நீசமுமாம்-ஈனமுமாயிருக்கின்ற—நிலைவேறுண்டோ - தன்மையதுவே(றென்)றுண்டோ. எ-று. (இ-ம்) மாமிசபிண்டமாகிய, சரீரமானதின்பம்போல விளங்கினாலுந் துன்பமேயாதலா லதிலென்ன சுகமுண்டாமென்பதாம் ....(எ௰)

(அ-கை.) இ-து. (கவி) அற்பமதாஞ்சுகாசுகத்திலழுந்துமுடனிலையெனினு மழி
வென்றாலு, நற்பலமென்னகங்கரனுக்ககமாகிப் பொறிபசுக்களைலாடாறுங், கற்
பனைசெய்மனத்தொழும்பு மாசைமனைவியும்வாயாங் கடையுமாங்கே, பற்பலபல்
லென்புகளாந்தோரணமுநாக்குரங்கும்பயின்றுதோன்றும்............................*

(இ-ள்.) அகங்கரனுக்கு - அகங்கரனென்னும்(கிரகஸ்த)னுக்கு—அகமாகி-வீடாய்—பொறி - இந்திரியங்களாகிய—பசுக்கள் - துஷ்டபசுக்கள்—நாலோடாறும் - பத்தும்—கற்பனைசெய்-சங்கற்பஞ்செய்யாநின்ற—மனத்தொழும்பும்-மனமாகியவடிமையும்—ஆசை - இச்சையென்கின்ற—மனைவியும் - இல்லாளும் — வாயாங்கடையும் - வாயென்னும்வாயிலும்— ஆங்கு - அவ்விடத்திற் (கட்டும்)—பற்பல - பலபலவான—பல்லென்புகளாம் - தந்தங்களென்கின்ற—தோரணமும் - தோரணமும் — நாக்குரங்கும் - நாவாகியவாணரமும் — பயின்று-பொருந்தி—தோன்றும் - தோன்றுகின்ற—அற்பம் - அற்ப (விஷய) த்தால்— சுகாசுகத்தில்-இன்பதுன்பங்களில்—அழுந்துமுடல் - அமிழாநின்றதேகமானது—நிலையெனினும்-நித்தியமானாலும்—அழிவென்றாலும் - அநித்தியமானாலும்—நற்பலமென்-நல்லபயன்யாது. எ-று. [ப-ம்.] ஞானமுண்டானதேகமிருத்தலின், அகங்கரனுக்ககமாகிய, உடலினற்பலமென்னென்றார். (இ-ம்.) அகங்காரத்துக்கிடமாகிய வித்தேக மிருந்ததினாலும், போனதினாலுமென்னசுகமென்பதாம் ....(எக)

(அ-கை.) இ-து. (கவி) திதியுமரசுஞ்செயலுமிவ்வுடம்பும்வேண்டுவன நிற்கினன்
றே, விதியில்வருகாலனாற்சிலநாளிலிவையெலாம்வீந்துபோகு,முதிரமொடுதசை
யுடைத்தாயுடைவதியல்பாய்த்தாழ்ந்தோருயர்ந்தோரொத்தே, யதிகசராமரணமு
றுந்தரமறியாதிவ்வுடலிலழகென்கொல்லோ.......................................*

(இ-ள்.) திதியும் - செல்வமும்—அரசும் - நாடும்—செயலும்- தொழிலும்—இவ்வுடம்பும் - (இவைகளையனுபவித்தற்குரிய) வித்தேகமும் — நிற்கினன்றே - இருக்குமாயின்—வேண்டுவன - விரும்பத்தக்கவையாம்—விதியில்வருகாலனால் - நியதிப்படிவாராநின்ற கூற்றுவனால்—சிலநாளில்-சிறிதுதினத்தில்—இவையெலாம் -(சொல்லப்பட்ட)விவைகளனைத்தும்—வீந்துபோகும் - நசிக்கும் —உதிரமொடுதசையுடைத்தாய் - இரத்தமாமிசமுடையதாய்—உடைவதியல்பாய் (கெடுவதேசுபாவமாய் --- தாழ்ந்தோருயர்ந்தோரொத்து - தரித்திரனுக்குஞ்செல்வனுக்குமொருதன்மையவாய்—அதிக - மிகவும்—தரமறியாது- பகுத்தறியாமல்—சராமரணமுறும் - சரையுமரணமும்பொருந்தும்—இவ்வுடலினழகென்கொல் - இத்தேகத்திலழகென்னையுள. எ-று. (இ-ம்.) தனக்குபகரிக்கின்றசெல்வனுக்கும் அதற்கியலாத தரித்திரனுக்குந் தாரதன்மியம்பாராதவித்தேகத்திலென்னசுகமிருக்குமென்பதாம்.............(எஉ)

(அ-கை.) தேகமநித்தியமெனமுடித்து நிறுத்தமுறையான் அதற்கு முந்தினவவஸ்தை
வாலியமாதலாலதனையதன்பின்வைத் தலைதையுந்தூஷித்தல். (கவி) மின்னிடத்திற் சரற்
காலமேகத்திறகந்தர்வவியன்மூதூரி, னன்னிலைமையெண்ணுவோ னெவனவனேயுடனி
லைமைநாடுகிற்போன்,மன்னுகிலாதசைத்துபலதொழிற்றரங்கஞ்செறிபிறவிவாரிதன்னி,
லென்னபிறப்பெய்துகினுமிளமைமிகுதுயரத்துக்கேதுவாகும் ....*

(இ-ள்.) மின்னிடத்தில் - மின்னலிடத்திலும்—சரற்காலமேகத்தில் - சரற்பருவமுகிலினிடத்திலும்—வியன் - விசாலமுள்ள—கந்தர்வமூதூரில் - கந்தர்வநகரத்திலும் — நன்னிலைமையெண்ணுவோன் - நல்லநிச்சயபுத்திவைப்பவன்— எவன் - யாவனோ — அவன் - அவனே—

உடனிலைமைநாடுகிற்போன் - சரீரத்தைமெய்யாகநாடுபவன்—(இனிப்பாலதூடணம்)மன்னு கிலாதலைசந்து - நிலையில்லாடீற்சலனத்தையடைந்து—பலதொழிற்றரங்கஞ்செறி - நானாவித மானசெய்கைகளென்னுமலைகணிறைந்த—பிறவிவாரிதன்னில் - பவசமுத்திரத்தில் — என்ன பிறப்பெய்துகினும்-எச்சநநமெடுத்தாலும் —இளமை- (அதற்குரிய) பாலப்பருவமானது— மிகுதுயரத்துக்கேதுவாம்-மிகுந்ததுன்பத்திற்குக் காரணமாம். எ-று. கந்தருவநகரமென்பது, சிலர்மரணக்குறியிற்காணும் ஆகாயத்தில் விசித்திரவன்னங்களாய் மாடகூடமாதிகளாகப் பரிணமித்துக்கணத்தில் வேறுபாடடைகின்ற சூரியகிரணங்களாம். (இ-ம்.) அசத்தியமான தேகத்தைச் சத்தியமாகநம்புதலினு லென்னசுகமுண்டாமென்பதாம்...... .... (எங)

(அ-கை.) சலனமுள்ளதுசைசவமெனல். (கவி) தொலைவறுமாபத்தெளிமைசொல்
லின்மை மடமாசைத் துவட்சியெய்தி, யுலைவுறுசைசவத்துடனே யுலையியல்பாம
னங்கூடிபோதநீரி, னலைமடவார்விழியனலின்கொழுந்தொடுமின்னிவைக்கெல்லா
மலைவுகற்பித், தலைதலுறுநாய்போலமலமருந்துமற்பத்தான்மகிழும்வாடும்.... ...*

(இ-ள்.) தொலைவறுமாபத்து - நீங்காதவாபத்தையும் — எளிமை - தளர்வையும்— சொல்லின்மை - பேச்சின்மையையும்—மடம் - அறியாமையையும் — ஆசை - இச்சையையும்—துவட்சி - துவளலையும்—எய்தி - அடைந்து—உலைவுறு - சஞ்சலப்படுகின்ற—சைசவத்துடன் - குழந்தைப்பருவத்தோடும் — உலையியல்பாமனங்கூடி - சஞ்சலசுபாவமானமனது சேர்ந்து—ஓதநீரினலை - கடலினலைகளும்—மடவார்விழி- மாதர்களுடையகண்களும்—அனலின்கொழுந்து - அக்கினிக்கொழுந்துகளும்—மின்- மின்னல்களும் —இவைக்கெல்லாமலைவு கற்பித்து - இவையனைத்திற்குஞ்சஞ்சலமற்பியாசிப்பித்து—அலைதலுறும் - அலையப்பட்ட— நாய்போல - ஞாளியைப்போல—மலமருந்தும் - மலத்தைப்புசிக்கும்—அற்பத்தால்- அற்ப (விடய) த்தால்—மகிழும் - சந்தோஷிக்கும்—வாடும் - துக்கிக்கும். எ-று. (இ-ம்.) அலைமுதலானவைகளினுமதிகசஞ்சலத்தையுடைய பாலப்பருவத்திலென்னசுகமென்பதாம்.... ... (எச)

(அ-கை.) சைசவமறியாமைக்கிடமாமெனல். (கவி) மண்ணுகரும்விண்மதியை வரவ
ழைக்குமிம்மடமைமகிழ்ச்சியாமோ, நண்ணுகுருதாய்தந்தையுற்றோர்மூத்தோரெவர்க்
குநடுக்கங்கூரும்,புண்ணுறுசைசவம்பயத்துக்கிடமாகுங்குற்றமெலாம்பொதிந்தகூடா,
மெண்ணுமவிவேகவிடன்வாழ்மனையாம்யார்க்குமிதிலின்பமெய்தா........ ....*

(இ-ள்.) மண்ணுகரும்-மண்ணைப்புசிக்கும்---விண்மதியை-ஆகாசத்திலுள்ளசந்திரனை--- வரவழைக்கும் - (தன்னிடத்தில்) வாவென்றுகூப்பிடும்---இம்மடமை - இவ்வறியாமை--- மகிழ்ச்சியாமோ - சுகத்தின் (பொருட்) டாமா---நண்ணுகுரு - அடையாநின்றவுபாத்தியாயருக்கும்---தாய் - மாதாவிற்கும்---தந்தை - பிதாவிற்கும் --- உற்றோர் - உறவினர்க்கும் --- மூத்தோர் - முன்பிறந்தவருக்கும்---எவர்க்கும் - மற்றெவருக்கும்---நடுக்கங்கூரும் - நடுக்கமிகுகின்ற---புண்ணுறு - நோதலுள்ள---சைசவம் - வாலப்பருவமானது---பயத்துக்கிடமாகும்- அச்சத்துக்குஸ்தானமாகும்---குற்றமெலாம்பொதிந்தகூடாம்-பிழைகளனைத்துநிறைந்தபஞ்சரமாம்---எண்ணும் - குறிக்கப்பட்ட---அவிவேகவிடன் - அவிவேகமென்னுந்தூர்த்தன்--- வாழ்மனையாம் - வாழ்தற்குவீடாகும்---யார்க்கும் - யாவருக்கும்---இதிலின்பமெய்தா - இப்பருவத்திற்சுகமுண்டாகாது.எ-று. [ப-ம்.]பிறக்கையிற்றானே றுறக்கின்றவிவேகமிருத்தலின்- அவிவேகவிடன்வாழ்மனையாமென்றார். (இ-ம்.) அறியாமைமுதலிய சகலகுற்றமு நிறைந்திருக்கின்றபாலப்பருவத்தாலென்னபயனென்பதாம்........ .... (எரு)

(அ-கை.) பாலதூடணமுடித்து நிறுத்தமுறையான் அதின்முதிர்ச்சியே யெவ்வனமாத
லாலதனையதன்பின்வைத்ததனைதையுந்தூஷித்தல். (கவி) இப்பருவத்தநர்த்தமகன்றிட
ரில்வீழெவ்வனத்திலேறிநெஞ்சா, மொப்பரியபொந்திலுறைகாமனெனும்பேயறைய
வுள்ளம்வாடுஞ், செப்பரிய விரிவுடைத்தாய்த் தெளிந்துபரி சுத்தமாய்ச் சிறந்ததேனு,
மைப்புயனுணதிநீர்போன்மதிகலங்குமெவ்வனத்தின் மயங்குநாளில்.......................... *

(இ-ள்.) இப்பருவத்தில்-இவ்வாலப்பருவத்திலுள்ள—அநர்த்தமகன்று- அநர்த்தங்களைக் கடந்து—இடரில்வீழ்- துன்பத்தில்விழுகின்ற—எவ்வனத்திலேறி - எவ்வனப்பருவத்தையடைந்து—நெஞ்சாம் - மனமென்னும் — ஒப்பரியபொந்திலுறை - (இழிவிற்) சமானமில்லாத பொந்தில்வசிக்கும்—காமனெனும் - மன்மதனென்கின்ற—பேயறைய - பேயடிக்க—உள்ளம்வாடும் - மனமெலியும்—மதி - அறிவானது—செப்பரிய - சொல்லுதற்கரிய—விரிவுடைத்தாய் - (வித்தியாப்பியாசத்தினால்) விஸ்தாரமுடையதாய்—தெளிந்து - (குருபணியாற்)றெளிவுற்று—பரிசுத்தமாய்- (சற்கிருத்தியத்தினாற்)பரிசுத்தமாகி—சிறந்ததேனும்-சிறப்புள்ளதானாலும்—மைப்புயல்நாள்-கார்காலத்தினது—நதிநீர்போல்-ஆற்றுச்சலம்போல— எவ்வனத்தில்-

எவ்வனப்பருவத்தில்—மடங்குநாளில்- சேருங்காலத்தில்—கலங்கும்-கலக்கமாம்.எ-று. (இ-ம்.) தெளிந்தவறிவையுங் கலக்குகின்றகாமத்தையுடைய வெவ்வனத்தினு லென்ன சுகமென்பதாம்.

(அ-கை,) எவ்வனங்காமத்துக்கிடமாமெனல். (கவி) கருத்தெனு மான்மருண்டோடிவி டயமெனுங்குழியில்விழக்காயமென்னு, மருத்தலத்தி லெவ்வனமாங் கடுங்கானலெழுந் துமிக வளராநிற்கும், பெருத்ததுயரிளமைநல மெவ்வளவுண்டவ்வளவும்பெருகாநிற்கு, மருத்திகளுமெவ்வனமவ் வளவும்விரைந்தெழுந்துமிக வநர்த்தஞ்செய்யும் … …… …… *

(இ-ள்.)கருத்தெனுமான் - மனதென்னுமறியானது—மருண்டோடி- மயங்கிப்போய்—விடயமெனும் - விடயங்களென்கின்ற—குழியில்விழ-படுகுழியில்வீழும்பொருட்டு—காயமென்னும்-தேகமென்கிற—மருத்தலத்தில்- பாலைநிலத்தில்— எவ்வனமாம் - எவ்வனமென்கிற— கடுங்கானல் - கொடியபேய்த்தேரானது—எழுந்து - உண்டாகி—மிகவளராநிற்கும்- மிகவும்வளரும்—பெருத்ததுயர் - மிகுந்த துன்பமானது— இளமைநலம் - எவ்வனத்தினின்பம் — எவ்வளவுண்டு - எம்மட்டிருக்கின்றதோ—அவ்வளவும் - அம்மட்டும் — பெருகாநிற்கும் - வளரும்—அருத்திகளும் - ஆசைகளும்— எவ்வனமவ்வளவும் - இளமையெம்மட் டிருக்கின்றதோவம்மட்டும்—விரைந்தெழுந்து - வேகமுற்றெழுந்து— மிகவநர்த்தஞ்செய்யும் - மிகவுமனர்த்தங்களைச்செய்யும். எ-று. (இ-ம்) மனதுமயங்கி விடயத்திற்சென்று துன்பவின்பங்களில்வருந்து மநர்த்தத்துக்கேதுவான வெவ்வனத்திலென்னசுகமென்பதாம் …… ….. ……………………… (எஎ)

(அ-கை.) சற்குணமுள்ளவெவ்வனமரிதெனல். (கவி,) எத்திறத்தோ ரெவ்வனமாமி டையூற்றைக்கடந்தெளிதினேறவல்லோ, ரத்திறத்தோ ரேபுருடரவர்களேதொழற் குரியோரவரோசான்றோர்,மெய்த்திறத்தோர்சேரிடமாய் விநயநிதிபடைத்தருளால் விளங்காநிற்குஞ், சுத்தகுணவெவ்வனமிவ்வுலகிலுளதோவிசும்பிற்சூழ்காடுண்டோ.

(இ-ள்.) எவ்வனமாம் - எவ்வனமென்கின்ற—இடையூற்றைக்கடந்து - விக்கினத்தைத் தாண்டி—எளிதின் - இலேசாக—ஏறவல்லோர்- (முத்தியிற்) சேரவலியுள்ளவர்கள் — எத்திறத்தோர் - எத்தன்மையுள்ளவர்களோ—அத்திறத்தோரே - அத்தன்மையுள்ளவர்களே— புருடர்-புமான்கள்—அவர்களே - அப்புருடர்களே --- தொழற்குரியோர் (எல்லாராலும்) வணங்குதற் குரியர்—அவரேசான்றோர்- அவர்களேயறிஞர்கள்—மெய்த்திறத்தோர்-உண்மைநிலையுள்ளசத்துக்கள்---சேரிடமாய் - சார்தற்குஸ்தானமாயும் --- விநயநிதிபடைத்து - விநயசம்பத்தைப் பெற்று---அருளால் - கருணையினால்--- விளங்காநிற்கும் - பிரகாசியாநின்ற --- சுத்தகுணவெவ்வனம்- பரிசுத்தமானகுணத்தையுடைய வெவ்வனமானது--- இவ்வுலகிலுளதோ- இச்சகத்தின்கணுண்டோ---விசும்பில் - ஆகாயத்தில் --- சூழ்காடுண்டோ - நிறைந்த வனமுண்டோ. எ-று. [ப-ம்.] சுவானுபூதியைச் சமாதியிலிருந்து சாதித்து சகசமாக்குதற்கெவ்வனஞ்சகாயமாதலின், சுத்தகுணவெவ்வன மிவ்வுலகிலுளதோவென்றார். (இ-ம்) விடயசுகத்தை நீக்கிப்பரமசுகத்தையடைவிப்பதற் கேதுவான வெவ்வனமில்லாவிடி லென்னசுகமென்பதாம்….. ……… (எஅ)

(அ-கை.) எவ்வனதாடணமுடித்து நிறுத்தமுறையான்அதற்குமுக்கியமானபோகத் துக்குத்தகுந்ததாயுஞ் சருவவிடயசமஷ்டிரூபமாயுமிருக்கின்ற துஸ்திரீகளாகையாலவர்களையதன்பின் வைத்தவரதுதேகசட்சுக்களைத் தூஷித்தல். (கவி.)சந்துறுநரம் போடென்பு தசைசெறிபாவை யொப்பா, ரெந்திரத்தியங்குமங்க பஞ்சரத்தினி மையென்னே, கந்தமென் குழலார்கண்ணிற் றோறசை கண்ணீர்புண்ணீர், சிந்தை யிற்பிரித்துநோக்கிற் சீரிதேன்மோகஞ் செய்வாம் ……………………………………*

(இ-ள்.) சந்து - கணுக்களும்--- உறுநரம்பு - பொருந்தியநரம்புகளும்---என்பு- எலும்புகளும்---தசை - மாமிசங்களும---செறி - நெருங்கிய—பாவையொப்பார் - பிரதமையையொத்த(மகளி)ருடைய--- எந்திரத்தியங்கும் - சூத்திரத்திலாடும்---அங்கபஞ்சரத்தினிமையென்னே - சரீரமாகியகூட்டிலென்னசுகம்--- கந்தமென்குழலார் - வாசனையுள்ளமிருதுவானகூந்தலையுடையமாதர்கள் --- கண்ணில் - நேத்திரத்தில் — தோல் - தோலையும்---தசை - மாமிசத்தையும்---கண்ணீர் - கண்ணீரையும் --- புண்ணீர் - இரத்தத்தையும் --- சிந்தையில் - மனதினால்--- பிரித்துநோக்கில் - பகுத்துப்பார்க்கில்---சீரிதேல் - சிறப்பாயின்--- மோகஞ்செய்வாம்- இச்சிப்பாம். எ-று. (இ-ம்) மாதர்களுடலையும் நேத்திரத்தையும், பகுத்துப்பார்க்கி லிவைகளி லென்னசுகமென்பதாம் ……… ……………………………………………………… (எகூ)

(அ-கை.) மகளிர்தனதூஷணம். (கவி) மேருவின்குவட்டின்வீழும் விரிதிரைக்கங்கைநீர் போ, லாரமுற்றிலங்குகின்ற வணியிழைமடவார்கொங்கை, யூரயன்மயானந்தன்னிலுற்ற போதுருணைடச்சோற்றி, னேருறுகவளம்போலநிரைநிரை நாய்கவ்வக்கும்……… … *

(இ-ள்.) மேருவின்குவட்டின் - மகாமேருவினுச்சியினின்றும்—வீழும் - விழாநின்ற—விரிதிரை-விரிந்தவலையையுடைய—கங்கைநீர்போல் - கங்காசலத்தைப்போல—ஆரமுந்திலங்குகின்ற - முத்துமாலைபொருந்திவிளங்குகின்ற—அணியிழை- அழகியவாபரணத்தையணிந்த—மடவார்கொங்கை - மாதர்களுடைய தனங்களானவை — ஊரயல் - ஊர்ப்புறத்திலுள்ள—மயானந்தன்னில்- சுடுகாட்டில்—உற்றபோது-அடைந்தகாலத்தி(விதனை)—நேருறு-நேராகக்கிடைத்த—உருண்டைச்சோற்றின் - பிடித்தவன்னத்தின்—கவளம்போல- கவளத்தைப்போல—நிரைநிரை - வரிசைவரிசையாக (வந்து) —நாய்கடுய்க்கும் - ஞாளிக ளானவை புசிக்கும். எ-று. (இ-ம்) ஆபரணங்களா லலங்கரிக்கப்பெற்றும், அந்தத்திறுய்கள் முதலானவைபட்சிப்பதற்குயோக்கியமா யிருக்கின்றஸ்திரீகளினது தனத்திலென்னவழகிருக்கின்றதாம் .... (அ௭)

(அ-கை.) மகளிரைச்சுவாலையாகவு மிந்தனமாகவுந்தூஷித்தல். (கவி) மேவுதற்கரி
தாய்க்கேசம் புகையதாய் விழியாற்றீக்குந், தீவினைச்சிகைசேர்மாத ரொனுங்கனற்
றிரணம்போல, யாவரைச் சுடாதுதூரத் தெரிகின்ற நரகத்தீக்குப், பாவையர்
குளிர்ந்தமேனிபசையிலாவிறகதாமே .... *

(இ-ள்.) மேவுதற்கரிதாய் - அடைதற்கரியசூடுள்ளதாயும்—கேசம்புகையதாய்- கூந்தலென்னுந்தூமமுள்ளதாயும்—விழிதீக்கும் - கண்ணென்னுந் தீக்கின்றதொழிலை யுடையதாயுமிருக்கின்ற—தீவினை- பாவமென்னும் —கனல்-அக்கினியின் —மாதரொனுஞ்சிகை-மகளிரொன்னுஞ்சுவாலையானது—சேர் - சேருகின்ற—திரணம்போல - துரும்பைப்போல — யாவரைச்சுடாது - எவரைத்தாமெரிக்காது—தூரத்தெரிகின்ற - சேய்மையிலெரிகின்ற—நரகத்தீக்கு- நரகாக்கினிக்கு—பாவையர்குளிர்ந்தமேனி - மடவாருடைய குளிர்ந்ததேகமானது— பசையிலாவிறகதாம் - உலர்ந்தகாட்டமாம். எ-று. (இ-ம்) இம்மையிற் காமாக்கினியா லெரிப்பது மறுமைக்குநரகாக்கினியை யுண்டாக்குவதுமானமின்னாரிடத்திலென்னசுகமென்பதாம்(அ௧)

(அ-கை.) மகளிரைவலையாகவுந் தூண்டிலினிரையாகவுந் தூஷித்தல். (கவி) மாம
டஞ்செறிந்தநெஞ்சின் மனிதராம்புட்பிடிக்கக், காமனும்வேடன்வீசும் வலையொப்
பார்கருங்கண்மாதர், தீமனச்சேறுர்சன்மச்சிறுகுழிமீனுமாந்தர்க், கேமவாதனைக்
கயிற்றுத் தூண்டிலுக் கிரையுமொப்பார் .... *

(இ-ள்.) கருங்கண்மாதர் - கரிய விழிகளையுடையமகளிர்கள் — மாமடஞ் செறிந்தநெஞ்சின்-மிகுந்தவறியாமை நிறைந்தமனதையுடைய—மனிதராம்புட்பிடிக்க-மானிடராகியபக்ஷியைப்பிடிக்கும்பொருட்டு—காமனும்வேடன் - மன்மதனாகிற கிராதனானவன் — வீசும் வலையொப்பார்-எறியாநின்றவலைக்குச் சமானமாவார்கள்—தீமனச்சேறுர்-கொடியமனமென்கின்றவளறுநிறைந்த —சன்மச்சிறுகுழி - பிறவியென்னுஞ் சிறுகுளத்தில்— மீனுமாந்தர்க்கு- மனிதராகிய மீனைக்கவர்தற்கு — ஏமவாதனைக்கயிற்று - காலவாதனை யென்னும் பாசத்திற்(பூட்டிய)—தூண்டிலுக்கு-தூண்டின்(முள்ளினுள்ள)—இரையுமொப்பார்- இரையாகியமாமிசத்துக்கிணைபாவார்.எ-று. தூண்டிலிலென்னுமேழாம்வேற்றுமைதூண்டிலுக்கெனநான்காம் வேற்றுமை மயக்கமாயிற்று, (இ-ம்) அறிவிலரான மனிதரைப்பிடித்து காமத்திலழுத்தி துக்கம்விளைவிப்பதற்குக் காரணமான மாதரிடத்தென்னசுகமென்பதாம் .... (அ௨)

(அ-கை.) மகளிரின்பத்தைத் தூஷித்தல். (கவி) முதுதுயர்பூட்டாற்பூட்டி முடிவி
ல்காமாதியென்னும், புதுமணிவைத்தசெப்பாம் பூவையரின்பம் வேண்டேன், னிது
தசையிதுநெய்த்தோரென் பிதுநரம்பிதுவென் றெண்ணில், விதுமுகமாதர்வேட்
கைவிரோதமாஞ் சிறிதுநாளில் .... *

(இ-ள்.) முதுதுயர் - மிகுந்ததுக்கத்தை—பூட்டி - பூட்டி(யிருக்கின்ற)—பூட்டு-பூட்டாகவும்— முடிவில்காமாதியென்னும் - முடிவில்லாதவிராகத்து வேஷங்களென்கின்ற—புதுமணிவைத்தசெப்பாம் - மிகுந்தவிரத்தினங்கள் வைத்திருக்குஞ் சம்புடமாகவுமிருக்கின்ற—பூவையரின்பம்வேண்டேன் - மாதர்களதுசுகத்தைவிரும்பேன்—இதுதசை-இதுமாமிசம்—இதுநெய்த்தோர்- இதுவிரத்தம்—இதுவென்பு-அஸ்தி—இதுநரம்பென்று-இதுநரம்பென்று—எண்ணில் - விசாரிக்கில் - விதுமுகமாதர் - சந்திரவதனத்தை யுடையமகளிரது — வேட்கை-ஆசையானது—சிறிதுநாளில் - சிலதினத்தில்—விரோதமாம் - பகையாம். எ-று. [ப-ம்] மோக்ஷலட்சுமி யினித்தியசுகமிருத்தலின், பூவையரின்பம்வேண்டேனென்றார். (இ-ம்) துக்கத்தைக்காப்பதாயும், இராகாதிதோஷங்களுக் கிடமாயுமிருக்கின்றமாதர்களினுருவத்தைவிசாரிக்கிலதிலென்ன சுகமிருக்கின்றதாம் .... (அ௩)

(அ-கை.) மகளிரின்பநீங்கலேபேரானந்தமெனல். (கவி) பாரியையுடையோன்யாவ னவனுக்கேபற்றும்போக, நாரியையில்லாதாற்குப் போகத்தினலமெங்குண்டாங், காரிகைதன்னைநீங்கிற் கருத்துறு சகத்துநீங்கும், பேரியலசகத்துநீங்கிற் பிரிவில பேரின்பமுண்டாம் .... *

(இ-ள்.) பாரியையுடையோன்யாவன் - மனைவியையுடையவனெவனே—அவனுக்கே போகம்பற்றும் - அவனுக்கேபோகத்தி லாசையுண்டாம் — நாரியையில்லாதாற்கு - மனைவி யில்லாதவனுக்கு—போகத்தினலமெங்குண்டாம் - புணர்ச்சியின்ப மெவ்விடத்துண்டாகும் —காரிகைதன்னைநீங்கில் - போகத்துக்கிடமான பெண்ணைவிடில்—கருத்துறுசகத்து நீங்கும்- மனதின்கண்ணுள்ள வுலகபந்தம்போம் — பேரியல்சகத்துநீங்கில - நாமமாத்திர மானவுலக நீங்கினால் — பிரிவில்பேரின்ப முண்டாம் - நீங்காதபேரானந்த முதயமாம். எ-று. (இ-ம்) மக ளிரிச்சையை நீங்குங்காரணத்தினாற் றிரிசயநீங்கிச் சுகமுதயமாமென்பதாம் ....(௮௪)

(அ-கை.) மகளிரின்பத்தை விரும்பேனெனல். (கவி) வந்துறுபோதி னன்றாய் வரி யளிச்சிறகுபோலச், சந்ததஞ் சலித்துத்தள்ளற் கரியதாம் போகந்தன்னை, மூந்து நோய்மரணமூப்பு முதலவாந் துயர்கட்கஞ்சிச், சிந்தையில் விரும்பே னெங்ஙன் சேர்வரும் பதத்தைச் சேர்வேன் .... *

(இ-ள்.) வந்துறுபோதினன்றாய் - (விசாரமின்றி) வருஞ்சமயத்தி னின்பமாகியும்— (வந்தபின்) வரியளிச்சிறகுபோல - இசை (பாடாநின்ற) வண்டினசிறகைப்போல— சந்ததஞ் சலித்து-எக்காலமுஞ் சஞ்சலிப்பதாயும்— தள்ளற்கரியதாம்-நீக்குதற்கரிதாய (யிருக்கின்ற)— போகந்தன்னை - மகளிரனுபோகத்தை—மூந்துநோய் - மூதன்மையானவியாதியும்— மரண ம்-இறப்பும்—மூப்பு - வயோதிகமும்—முதலவாம் - ஆதியான— துயர்கட்கஞ்சி - துன்பங்க ளுக்குப்பயந்து—சிந்தையில் - மனதில்—விரும்பேன் - இச்சிக்கேன்— எங்ஙன் - எப்படி— சேர்வரும்பதத்தைச்சேர்வேன்-இனியடைதற்கரிய பிரமபதத்தை யடைவேன். எ-று. (இ-ம்.) வரும்போதின்பமும் வந்தபின்றுன்பமுமாய் வருத்துகின்றமாதர்கள் சுகத்தைநீக்கிப்பரமசுக த்தையடைவே னென்பதாம் .... (௮௫)

(அ-கை.) ஸ்திரீதூடணமுடித்து நிறுத்தமுறைபான் ஸ்திரீ முதலிய போகங்களையனுப விப்பதற்குச் சத்தியில்லா திருந்துமவைகளி லிச்சையுள்ள தமூப்பாகையாலதனையதன் பின்வைத்ததனைதையுந் தூஷித்தல். (கவி.) ஈறறுசைசவத்தை யெவ்வனம்விழுங்குமித்தை, மாறுறுசரைவிழுங்கு மயக்கநோய்வருத்தமிக்க, பேறுறுசரைகைக்கொண்டாற்பேரறி வகன்றிட்டோடும், வேறுறுமணங்கான் முன்னைமெலலியலகனுமாபோல் .... *

(இ-ள்.) ஈறறு - முடிவுபெறாத—சைசவத்தை-பாலப்பருவத்தை—எவ்வனம்விழுங்கும்- எவ்வனமானதுவிழுங்கிவிடும்—இத்தை- இவ்வெவ்வனத்தை—மாறுறு-வேறுபடுத்துகின்ற — சரைவிழுங்கும் - மூப்பானதுவிழுங்கும்— மயக்கம்-மயக்கமும்—நோய்- வியாதியும்—வரு த்தம்- துன்பமு(மாகியவிவைகளை மிக்கபேறுறு- மிகவும்பயனுகவுடைய—சரைகைக்கொண் டால்-வார்த்திகம்வந்தால்—வேறுறுமணங்கால் - இரண்டாம் (விவாகத்தில்வந்த) மனைவியால் —முன்னைமெலலியல்-முன்னுள்ளமனைவியானவள் —அகனுமாபோல்-(புருடன்மனதினின்று) நீங்குவதுபோல—பேரறிவகன்றிட்டோடும்-முதிர்ந்தவறிவுபிரிந்தோடும். எ-று. (இ-ம்) தெளி ந்தவறிவையுநீங்குந் துன்பமயமான வயோதிகப் பருவத்திலென்ன சுகமிருக்கின்றதாம்(௮௬)

(அ-கை.) சரையின் றுற்குணங்களையுரைத்தல். (கவி) புரையுடனெகிழ்வுசோர்வு பொருந்தியலோபந்துன்பங், கரையுறுகருமத்தன்னில்வலியின்மை கடுநோய்தோ ற்றம், வரைபொருள்செயமாட்டாமைமைந்தரோமுதலோர்நிந்தை, சரைநரைவரு காலத்துத் தருந்துயர்விவிதமாகும் .... *

(இ-ள்) சரைநரைவருகாலத்து - வார்த்திகம்வருபோதில்—புரையுடல்- நவத்துவார முள்ளசரீரத்தில்—நெகிழ்வு - தளர்வும்—சோர்வு- மறதியும்—பொருந்தியலோபம் - அமைந் திராநின்றவாசையும்— துன்பம் - துயரமும்—கரையுறு- (செய்தற்) களவுள்ளனவாகிய—கரு மத்தன்னில்- காரியங்களில்—வலியின்மை - (செல்லுதற்குச்) சத்தியில்லாமையும்—கடுநோய் தோற்றம் - கொடியவியாதியுண்டாதலும்—வரைபொருள் - குறிக்கப்பட்டவஸ்துக்களை— செயமாட்டாமை - சம்பாதிக்கத்தடுமாற்றமும்—மைந்தர்முதலோர் - புத்திரன்முதலியவர்க ளாற் (செய்யப்பட்ட)—நிந்தை - பழிப்பு(மாகியவிவை) — தருந்துயர் - கொடாநின்றதுக்க மானது—விவிதமாகும் - நானாவிதமாகும். எ-று. (இ-ம்.) சரீரத்தளர்ச்சிமுதலான நானாவித ங்களானுந்துன்பமனுபவித்தற்குரியவயோதிகப்பருவத்திலென்னசுகமிருக்கின்றதாம். (௮௭)

(அ-கை.) சரையிலுள்ளநிந்தையையுமாசையையுமுரைத்தல். (கவி) விருத்தராய்
நடுக்குவோரை மித்திரர்மைந்தருற்றார், கருத்துறுமாதர்தாசர் நகைசெய்வர் கா
ணொணுதாய், வருத்தமுஞ்சரையுமுற்றுவலிகுணமிழந்தமூப்பை, யருத்திவந்தடை
யுங்கட்டைமரங்கழுகடையுமாபோல் .... *

(இ-ள்.) விருத்தராய்நடுக்குவோரை - வயோதிகப்பருவம்வந்து (சரீர) நடுங்கப்பட்டவர்களை —மித்திரர் - இஷ்டர்களும்—மைந்தர் - புத்திரர்களும்—உற்றார் - உறவினர்களும்—கருத்துறுமாதர் - விரும்பப்பட்டமகளிரும்—தாசர் - அடிமைகளும்—நகைசெய்வர்- சிரிப்பார்கள்—காணொணுதாய் - பார்ப்பதற்குச்சகிக்கப்படாதவடிவமாய்—வருத்தமும்- துன்பத்தையும்—சரையும் - நரையையும்—உற்று - பொருந்தி — வலி - வலிமையையும் — குணம்-(நற்) குணங்களையும்—இழந்த - நீங்கின—மூப்பை - வார்த்திகத்தை— கட்டைமரம் - வெட்டுப்பட்டமரத்தில்—கழுகடையுமாபோல்- கழுகடைவதுபோல—அருத்திவந்தடையும்-ஆசைவந்துபொருந்தும். எ-று. (இ-ம்.) எல்லாராலுநகைசெய்வதாயுந்துன்பமயமானவாசைகுடிகொண்டிருப்பதாயுமிருக்கின்றவயோதிகப்பருவத்திற்சுகமின்றென்பதாம் .... (௮௮)

(அ-கை.) சரையினல்வரும்அச்சத்தையுரைத்தல்.(கவி) குற்றமுமிளைப்புமேவிக்குறிதன்
றியுளத்தைச்சுட்டுத், துற்றவாபத்துக்கெல்லாந்தோழியாமாசைதுன்னு, முற்றவோர்பர
லோகத்துக்குறுதியேதென்றுமூப்பிற், பற்றுறுபரிகாரந்தீர்பயமிகப்படருமன்றே. *

(இ-ள்.) குற்றமும் - பிழையையும்—இளைப்பும் - மெலிவையும் — மேவி-பொருந்தி—குறிதன்றி - நெடியதாய்—உளத்தைச்சுட்டு - மனதையெரித்து—துற்றவாபத்துக்கெல்லாம்-நிறைந்தவாபத்துக்களனைத்திற்குந்—தோழியாமாசை - பாங்கியானவிச்சையை— துன்னும்-பொருந்துகின்ற—மூப்பில-வயோதிகத்தில்—ஓர்பரலோகத்துக்கு- ஒப்பற்றபரலோகத்தில் —உற்றது - பொருந்தினதான—உறுதியேதென்று - நன்மையென்னவென்று—பற்றுறு-(நம) திச்சையினலுண்டான (வினைகளை)—பரிகாரந்தீர் - நீக்கக்கூடாத—பயமிகப்படரும் - அச்சமிகவுமதிகரிக்கும். எ-று. [ப-ம்.] பரகதிக்குறுதிதேடும்வார்த்திகமிருத்தலின், மூப்பிற் பற்றுறுபரிகாரந்தீர்பபமிகப்படருமென்றார். (இ-ம்.) மனதைவேகச்செய்கின்ற வாபத்துகளுக்குச் சகாயமானவிச்சையும், இளமையிற் செய்திருக்கின்ற தீவினைகளை யிப்போது பரிகரிக்கக்கூடாமையான் மறுமைக்கென்செய்வோமென்னும்பயமு மிகுந்திருக்கின்ற வார்த்திகத்திலென்னசுகமிருக்கின்றதாம் .... (௮௯)

(அ-கை.) சரையிற்சத்தியின்மையுமஃதுணவாதலுங்கூறல். (கவி) ஆதரச்செரு
க்குமல்கு மருந்துதற்கரிதுமூப்பிற், காதல்செய்வலியிலாமை கருத்தெலாம்வெ
ந்துசோரும், போதுறுநீரூர்முற்றற் பூசினைப் பெருங்காய்போல, மேதகுகாலன்
மாந்தர் வெண்ணரைத் தலையைத்தின்னும் .... *

(இ-ள்.) மூப்பில் - வார்த்திகத்தில்—ஆதரச்செருக்குமல்கும் -(விடய) விச்சையிற்களிப்புமிகும்—அருந்துதற்கரிது - (அதைப்) புசித்தற்குச்சத்தியின்றாம்—காதல்செய் - இச்சிப்பதை (யனுபவிப்பதற்கு)—வலியிலாமை - வல்லமையில்லாததினல்—கருத்தெலாம்வெந்துசோரும் - நினைப்பனைத்துமெரிந்துவாடும்—போதுறுநீரூர் - பருவகாலத்திலின்றுபூத்த — முற்றல் - முதிர்ந்த—பூசினைப்பெருங்காய்போல - பூசினையின்பெரியபழம்போல— மேதகுகாலன் - மேன்மையானகாலனுனவன்—மாந்தர் - மனிதர்களுடைய — வெண்ணரைத்தலையைத்தின்னும் - வெண்மையானநரையையுடையசிரசைப்புசிப்பான். எ-று. (இ-ம்.) விரும்பப்படுபதார்த்தங்களிருந்துமனுபவிக்கக்கூடாததுக்கத்தையுடையதாயும், காலனழிப்பதற்குப் பக்குவமாயுமிருக்கின்றவார்த்திகப்பருவத்திலென்னசுகமிருக்கின்றதாம் .... (௯௰)

(அ-கை.) சரையைமரணவரசனுக்கங்கமாகவருணித்தல்.(கவி) மரணமாமன்னன்
முன்னர் வருநரைக்கவரிவீசித், திரளுறுவியாதியாதி யாகியசேனைசெல்லுந், தர
மறுநரைவெண்சாந்தார் சரீரமாமனைக்குளாபத், துரவலியின்மைசோர்வா மொ
ண்டொடிமகளிர்வாழ்வார் .... *

(இ-ள்.) மரணமாம்-இறப்பாகிய—மன்னன்முன்னர்- அரசன்முன்னே—வருநரைக்கவரி- வருகின்றநரையென்னும்வெண்சாமரையை—வீசி - வீசிக்கொண்டு—திரளுறு-கூட்டமுள்ள - வியாதியாதியாகிய - (தேக)வியாதிகளும் (மந்தக்கரண) வியாதிகளுமான—சேனைசெல்லும் - படைகடக்கும்—தரமறுநரை - தகுதியில்லாதநரையென்னும்— வெண்சாந்தார்-வெண்சுண்ணந்தீற்றிய—சரீரமாமனைக்குள்- தேகமாகியவீட்டுக்குள்—ஆபத்து-ஆபத்தும்—உரவலியின்மை - அறிவினசத்தியும் —சோர்வாம் - சோர்வுள்ள (ரோகமுமான)— ஒண்டொடிமகளிர் - ஒளிபொருந்திய வளையலையணிந்தமாதர்கள் — வாழ்வார் - வாழ்வார்கள். எ - று.

(இ-ம்.) மரணத்துக்கங்கமாகிய மாபத்துமுதலியவற்றிற், கிடமாகியுமிருக்கின்ற இவ்வயோதிகப்பருவத்திற்சுகமின்றென்பதாம்...... .... (௬௧)

(அ-கை.) சனைதூடணத்தைமுடித்துநிறுத்தமுறையான் இப்பருவத்தைச் சங்கரிக்குங் காலமுண்டாதலாலதன்பின்னதனைவைத்தஃதையுந்தூஷித்தல். (கவி) நரையுறுதீவாணாளம்பேயுடனண்ணிவாழ்வென், சனைவெலற்கரிதியார்க்கு மீடணை மூன்றுந்தள்ளு, நிரைபவத்தவிஞையாகிநிகழின்பப்பொருள்களெல்லாம், புரையுறுமெலியானூல்போற் காலனாற்பொன்றுமன்றே...... .... *

(இ-ள்.) நரையுறு - நரைபொருந்திய—தீவாணாளாம் - கொடியமுதிர்வயதாகிய — பேயுடனண்ணி - பிசாசோடுங்கூடி (வாழ்வதினால்)—வாழ்வென்-சுகமென்ன— ஈடணைமூன்றும்-ஈடணாத்ரயங்களையும் — தள்ளும் - (அற்பமாக) நீக்கும்—சனை - (இச்சையையுடைய) மூப்பை—வெலற்கு - கெடுத்தற்கு —இயார்க்கும்- எவர்க்கும்—அரிது - அரிதாகும்— இனிக்காலதூடணம்) நிரைபவத்து- வரிசையாகவந்தசநநத்தில்—அவிஞையாகி- அஞ்ஞானமயமாய்—நிகழ் - விளங்காநின்ற—இன்பப்பொருள்களெல்லாம் - சுகவஸ்துக்களனைத்தும்— புரையுறு-குற்றம்பொருந்திய—எலியானூல்போல் - ஆகுவினாற்றந்துவைப்போல — காலனாற்பொன்றும் - கூற்றனாற்கெடும். எ-று. (இ-ம்.) ஈடணாத்ரயங்களாலுள்ள துன்பங்களுக்குமிகுந்த துன்பங்களைக்கொடாநின்றசனையினாலும், சநநத்திற்சுகம்போலத்தோற்றுமதனையுங்கெடுக்கின்ற காலத்தினாலுமென்னசுகமிருக்கின்றதாம்...... .... (௬௨)

(அ-கை.) காலம்மகான்களையுமழிக்குமெனல். (கவி) மகரநீர்கடல்குடிக்கும்வடமுகக் கனலேபோலச், சகலமும் விழுங்குங்காலன் சகத்திடை விழுங்காதில்லைப், புகலரும் பெரியோரேனும் பொழுதொரு கணமுந்தாழா, னகிலமும் விழுங்கித் தானேயகிலமாய்நிற்குமன்றே.. ....*

(இ-ள்.) மகரம் - மகரமச்சங்களுறைகின்ற—கடல் - உததியின்—நீர்குடிக்கும்- சலத்தைப்பானஞ்செய்யாநின்ற—வடமுகக்கனலேபோல - வடவாமுகாக்கினியைப்போல — சகலமும் - எல்லாவற்றையும்—விழுங்குங்காலன் - புசிக்கின்றகாலனால்—சகத்திடை- உலகத்தின்கண்—விழுங்காதில்லை - புசிக்கப்படாததில்லை—புகலரும் - சொல்லுதற்கரிய— பெரியோரேனும் - மகத்துக்களாயினும்—பொழுதொருகணமுந்தாழான் - (நியதிக்குப்பின்)ஒருக்ஷணநேரமும்பொறான்—அகிலமும்விழுங்கி - சகலத்தையும்புசித்து—தானேயகிலமாய் நிற்கும்-அவனேசமஸ்தமுமாயிருப்பன். எ-று. (இ-ம்.) பஞ்சபூதத்தைக்கெடுப்பதுமன்றிச் சத்துக்கள்வடிவங்களையுங்கெடுத்துச்சூனியமாகமிஞ்சுங்காலத்தினாலென்னசுகமென்பதாம் .... (௬௩)

(அ-கை.) காலம்பலமானசராசரங்களையுங்கெடுக்குமெனல். (கவி) விழுமியர்சுபத்தின்பாலர்மேருவையொப்போரெல்லாம், பழுதறுகருடன்கொல்லும் பாம்பெனக்காலன்கொல்லும், புழுதியோடிலைதுரும்புபொன்மலைபுணரிவெள்ளஞ்,செழுமயேந்திரமுங்காலன்சிதைத்துத்தன்வடிவமாக்கும் ....*

(இ-ள்.) விழுமியர் - சிறந்தவரசர்களும்—சுபத்தின்பாலர் - நன்மையினையுடையபிரமாதிகளும்—மேருவையொப்போரெல்லாம் - மகாமேருவுக்கிணையான (விருத்திராசுரன்முதலிய) யாவரையும்—பாம்பு- சர்ப்பத்தை—கொல்லும்-கொல்லாநின்ற—பழுதறுகருடனென-குற்றமற்றகலுழனைப்போல—காலன்கொல்லும் - காலனழிப்பான்—புழுதியோடு - துகளுடன்—இலை - இலையும்—துரும்பு - திரணமும்—பொன்மலை- மகாமேருவும்—புணரிவெள்ளம்-சமுத்திரத்துவெள்ளமும்—செழுமயேந்திரமும்-செழித்தமயேந்திரகிரியு (மாகியவிவைகளை) —காலன் - காலனானவன்—சிதைத்து - கெடுத்து—தன்வடிவமாக்கும் - தன்வசமாக்குவன். எ-று. [ப-ம்.] சர்வத்தையுந்தன்மயமாக்குங்காலமிருத்தலின், மயேந்திரமுங் காலன்சிதைத்துத்தன்வடிவமாக்குமென்றார். (இ-ம்.) உலகத்தின்கண்மகத்தாகியு மற்பமாகியு மிருக்கின்றவைகளைக் கெடுத்துச்சூனியமாக்குங்காலத்தினாலென்னசுகமென்பதாம் .... (௬௪)

(அ-கை.) காலத்தின்சிருட்டியாதியைச்சொல்லுதல். (கவி) வேறு.—அகல்பூதக்கொதுகினையுமண்டமெனுங்காயுகுத்தவத்தியாயும், பகலவனேகண்ணாகப் பகற்பொழுதுபார்வையாற்பதங்கள்பார்த்துச், சகமெனுந்தொல்வனத்துலகபாலரெனும்பழம்பறித்துதானேதின்னுந், திகழுலகாமணிமாலைக்குணமூன்றாற்கோத்தணிந்துசிந்துங்காலன் .... *

(இ-ள்.) அகல்பூதக்கொதுகினையும் - விரிந்தசீவமசகங்கள்சப்திக்கின்ற—அண்டமெனுங்காய் - அண்டமென்னும்பழங்களை—உகுத்தவத்தியாயும் - உதிர்த்தவத்திவிருக்ஷமாகியும்—பகலவனேகண்ணாக - சூரியனேநேத்திரமாக— பகற்பொழுதுபார்வையால் - மத்தியானமென்னுங்கண்களால்—பதங்கள்பார்த்து - பக்குவம்பார்த்து—சகமெனுந்தொல்வனத்து - உலக

மென்கின்றபழையகாட்டில்—உலகபாலனொனும்பழம்பறித்து - உலகபாலனென்னுங்கனிகளைக் கொய்து—தானேதின்னும் - தானேபுசிப்ப வனாகியுமிருக்கின்ற)—காலன்- காலனானவன்—திகழுலகாமணி-பிரகாசிக்கின்றவுயர்ந்தோர்களென்னுமிரத்தினங்களை—மாலை-வரிசையாக—குணமூன்றால் - முக்குணங்களென்னுங் (கயிற்) றில்—கோத்து- கோவையிட்டு—அணிந்து-தரித்து—சிந்தும் - கெடுப்பான். எ-று. [ப-ம்.] உலகமாலையை நிர்மாலியமாகத் தள்ளுவ னென்பார், சிந்துங்காலனென்றார். (இ-ம்.) முத்தொழிற்கேதுவாகியுஞ்சூனியமாகியு, மிருக்கின்றகாலத்தின்னிலென்னசுகமென்பதாம் .... (௬௫)

(அ-கை.) காலமூலசத்தியுள்ளயாவையுங்கெடுக்குமெனல். (கவி) சிறியசகப்பழங்குடியிற் சிதறுலகமணியமனுஞ் செப்பிற்சேர்க்கு, மறிவில்பலபூதமாம் விலங்குகளும்பறவைகளு மளவற்றெங்கு, முறியவுலர் சகப்பாலை தனில்வேட்டையாடிநெடு முதுகற்பத்திற், பொறிவடவைத்தாமரைசேர்கடல்விளையாட்டோடைகளாய்ப்பொருந்துங்காலன்.

(இ-ள்.) சிறியசகப்பழங்குடியில் - சிறியவுலகமென்னுஞ்சீர்ணித்தவீட்டில் — சிதறுலகமணி - சிந்தாநின்றவுலகத்தாரென்னுமிரத்தினங்களை—யமனுஞ்செப்பிற்சேர்க்கும் - மிருத்துவென்னுஞ்சம்புடத்திற்சேர்க்கின்ற—காலன் - காலனானவன்—அறிவில்பலபூதமாம் - உணர்வற்றபலசீவர்களாகிய—விலங்குகளும் - மிருகங்களும்— பறவைகளும் - பட்சிகளும்—அளவற்று - அளவின்றி—எங்குமுறிய - எவ்விடத்திலுங்கெட—உலர்சகப்பாலைதனில் - பசையற்றவுலகமாகியபாலைவனத்தில்—வேட்டையாடி - வேட்டைசெய்து—நெடுமுதுகற்பத்தில்- மகாகற்பத்தில்—பொறிவடவைத்தாமரை - பிரகாசமுள்ளவடவானலமென்னுந்தாமரையானது—சேர் - சேர்ந்திருக்கின்ற—கடல் - சமுத்திரத்தை — விளையாட்டோடைகளாய் - விளையாடாநின்றகுளமாக—பொருந்தும் - சேர்வன். எ-று. (இ-ம்.) சகலவுயிர்களையுநாசஞ்செய்துமகத்தையுமற்பமாகவிளையாடுங்காலத்தினிலென்னசுகமிருக்கின்றதாம் .... (௬௬)

(அ-கை.) காலம்சகலத்தையுமற்பமாகக்கெடுக்குமெனல். (கவி) கைப்பினொடுபுளிப்புக்கார்ப்பிவைமுதலாஞ்சுவைபடைத்தகனபூதத்தா, லொப்பரியபாறயினையாதியாய்வருகின்றவுததிதன்னாற், றுப்புடையன்விவிதமாந் தோற்றமுள சகங்களினாற் சுற்றிச்சுற்றி, வைப்புடையவவற்றவற்றும்பெருங்கற்பம்பலகாலும் வட்டஞ்செய்யும் .... *

(இ-ள்.) கைப்பினொடுபுளிப்புக்கார்ப்பு - கசப்பும்புளிப்புமுறைப்புமாகிய— இவைமுதலாம் - இவைமுதலான—சுவைபடைத்த - (அறு) சுவையையுடைய—கனபூதத்தால் - மிகுந்த (வசர)வுயிர்களாலும்—ஒப்பரியபாறயினை- சமானமில்லாதக்ஷீரததிகளை—ஆதியாய்வருகின்றவுததிதன்னால் - முதலாகவாராநின்ற (சத்த) சமுத்திரங்களினாலும்—விவிதமாம் - நானுவிதமாகிய—தோற்றமுள- சிருஷ்டிகளுள்ள—சகங்களினால் - உலகங்களினாலும்— துப்புடையன்- உணவையுடைய (காலனானவன்)—சுற்றிச்சுற்றி - சுழன்றுசுழன்று — வைப்புடையவவற்றவற்றும் - நிலைபெற்றவவ்வவைகளில்—பெருங்கற்பம் - மகாகற்பத்தில் — பலகாலும் - எப்போதும் —வட்டஞ்செய்யும் - சுற்றிக்கொண்டுவருவான். எ - று. காலம்காலனெனத்திணைமயங்கிநின்றது. (இ-ம்.) சகங்களே, புராதனமாகவும், சீவகோடிகளே, பதார்த்தங்களாகவும், சத்தசமுத்திரங்களே, நெய்பாறயிராகவும், புசித்தெப்போதுஞ் சுழன்றுகொண்டிராநின்ற விக்காலத்தினாற்சுகமின்றென்பதாம் .... (௬௭)

(அ-கை.) காலதூடணமுடித்து அதனையுஞ்சங்கரிக்கின்ற சங்காரசத்தியின் குணங்களையுரைத்தல். (கவி.) தொல்லுலகிற்றோன்றுகின்ற சராசரமாம்பொருளனைத்துந்தொலைத்துமாற்றி, வெல்லரியசங்காரகாளராத்திரிமிகவும்வெருட்சிமிக்க, வல்லபமா நடையுடைத்தாய் மாதர்கணமனைத்துமுடன் மருவப்பட்டு, புல்லரிய சகமோகப்பொறிவனத்திற்புலிப்பேடுபோலவாழும் .... *

(இ-ள்.) தொல்லுலகிற்றோன்றுகின்ற-பழைமையாகியசகத்திலுண்டாகின்ற—சராசரமாம்பொருளனைத்தும் - தாபரசங்கமமானவஸ்துக்களனைத்தையும்—தொலைத்துமாற்றி-கொன்று—வெல்லரிய - வெல்லுதற்கரிய—சங்காரகாளராத்திரி - சங்காரசத்தியானவள்—மிகவும்வெருட்சி - மிகவும்பயங்கரமும்—மிக்கவல்லபமாம்-மிகுந்தவல்லபமுமாகிய— நடையுடைத்தாய்-நடையையுடையவளாய்—மாதர்கணமனைத்தும்- துர்க்கையாதிசத்திகளனைத்தும்—உடன்மருவப்பட்டு - (தன்) னுடன்பொருந்தப்பெற்று—புல்லரிய- சாரக்கூடாத—சகமோகம்-உலகமோகமென்னும்—பொறிவனத்தில் - பொலிவானகாட்டில்— புலிப்பேடுபோல -பெண்புலியைப்போல—வாழும்-வாழ்வாள். எ-று. (இ-ம்.) உலகத்திலுள்ள சகலவஸ்துக்களையுஞ் சங்காரஞ்செய்து பிராந்திவடிவமானசகத்திற்சகலசத்திகளுக்குஞ் சத்தியாயெதிரற்றிருக்கின்றது, சங்காரசத்தியென்பதாம் .... (௬௮)

(அ-கை.) சங்காரசத்தியினடனச்சிறப்புரைத்தல். (கவி) படர்பூதந்தொலைத்திரதம்பயில் புவியாம்பானபாத்திரங்கைப்பற்றி, மடல்சூழுற்பலங்கழுநீர்வனசமெனவுலகநிரைமாலை சூடி, விடுகோடையிடிநகைக்கு நரவரியைவிளையாட்டு விகங்கமாக, நெடுநீள்வன்புய மாம்பஞ்சரத்தினிடையேந்துகின்றநெறியதாகி......... .... *

(இ-ள்.) படர்பூதந்தொலைத்து - மிகுந்தசீவர்களைக்கொன்று — இரதம்பயில் - இரசம் பொருந்திய—புவியாம்பானபாத்திரம் - பூமியாகியமதுபாத்திரத்தை—கைப்பற்றி - கரத்தி லேந்தி—உலகநிரையெனும் - (மூன்) றுலகமென்கின்ற — மடல்சூழ் - இதழ்களையுடைய— உற்பலங்கழுநீர்வனசம் - நீலோற்பலஞ்செங்கழுநீர்தாமரைமலை (ரென்னுமிவைகளாற்றொடு த்த)—மாலைசூடி - அலங்கலைப்புனைந்து—விடுகோடையிடிநகைக்கும் - எறியாநின்றகோடை யிடியைப்போலமந்தகாசஞ்செய்கின்ற—நரவரியை - நரசிங்கத்தை — விளையாட்டுவிகங்க மாக - லீலைக்குரியகிளிப்பிள்ளையாக—நெடும் - நீண்ட—நீள்வன்புயமாம் - மிகுந்தபராக்கிர மத்தையுடையபுசமாகிய—பஞ்சரத்தினிடை - கூட்டில்—ஏந்துகின்ற - ஏந்திக்கொண்டிருக் கின்ற—நெறியதாகி - தன்மையையுடையவளாய். எ-று. வடநூலில்ரசாயினபாத்திரமென் பாருமுளர். [ப-ம்.] ஆகாயம்போன்றவடிவந்தனக்கவயவமென்பதுதோன்ற, புவியாம்பான பாத்திரங்கைப்பற்றியுலக நிரைமாலைசூடியென்றும்; சகலத்தையுஞ் சங்கரிக்குங் கோரமுள்ள சத்தியென்பதுதோன்ற, நரவரியைவிளையாட்டுவிகங்கமாக வேந்துகின்றதென்றுங்கூறினார். (இ-ம்.) காளராத்திரிவிசுவத்தைத்தன்வயமாக்குமென்பதாம்............ .... (௯௯)

(அ-கை.) இ-து. (கவி) மன்னுசரற்ககனம்போன்மாசின்றிச்சுரவீணைமதுரமேவி, மூன்னுயர்காலனைக்கேளீஇக் கோகிலக்குஞ்சாக்கொண்டு முழுதுமின்மை, யென் னுமடற்சிலைதாங்கியெழுதுயராகியகணைகளேந்தியெங்குந், துன்னுநடனம்புரிந்து தன்வசமாய்மிகவிளங்கிச்சுற்றுநிற்கும்.. *

(இ-ள்.) மன்னுசரற்ககனம்போல் - நிலையானசரற்காலத்தாகாயத்தைப்போல— மா சின்றி - (சரீரத்திற்) களங்கமின்றி—சுரவீணைமதுரமேவி - சுரவீணை (யினிசையையொத்த) மதுரவசனத்தைப்பொருந்தி (யிருக்கின்ற) — மூன்னுயர்காலனை - பழையமகாகாலனை— கேளீஇ - விளையாட்டின்பொருட்டு — கோகிலக்குஞ்சாக்கொண்டு- குயிற்பார்ப்பாகக்கைக் கொண்டு—முழுதுமின்மையென்னும் - சர்வாபாவமென்கின்ற—அடற்சிலைதாங்கி - வெற்றி (பொருந்திய) வில்லைத்தரித்து—எழுதுயராகியகணைகளேந்தி - உண்டாகின்றதுன்பங்களாகிய வம்புகளைத்தரித்துக்கொண்டு—எங்கும் - எவ்விடத்திலும்—தன்வசமாய்- தனதிச்சைப்படி— துன்னுநடனம்புரிந்து - பொருந்தியநிருத்தஞ்செய்து—மிகவிளங்கிச்சுற்றுநிற்கும் -மிகவும் பிரகாசித்துச்சுழன்றுகொண்டிருக்கின்றாள். எ-று. (இ-ம்.) காளராத்திரிசர்வத்தையுஞ்சங்கரி க்கின்ற மகாகாலனையுந்தனதுவினோதக்கருவியாய்வைத்திருக்குமென்பதாம்........................ (௱)

(அ-கை.) இ-து. (கவி) பொன்னுலகுதரியணியாம்புணர்பாவமெனுநூலாற்பூட் டிக்கட்டும், பன்னரகச்சிலம்புகளைப்பாதலமாம்பதத்தணியும்பானுத்திங்க, ளென் னுமணிசேரிமவானெனுமெலுப்புமணிமேருவென்னும்பொற்பூண், டன்னிருகா தினுந்தரிக்குஞ்சக்கரவெற்பணிகலையாய்த்தழுவுமன்றே........... .... *

(இ-ள்.) பொன்னுலகு-சுவர்க்கம்—தரியணியாம் - (சிரத்திற்)றரிக்குமாபரணமாம்— புணர்பாவமெனும் - பொருந்தினதீவினையென்கின்ற—நூலால் - தந்துவினால் — பூட்டிக்கட் டும் - கோத்துக்கட்டப்பட்ட—பன்னரகச்சிலம்புகளை - பலநரகமென்னுநூபுரங்களை—பாத லமாம்பதத்தணியும் - பாதாளமென்கின்றபாதத்திற்றரிப்பள்—பானுத்திங்களென்னும்-சூரிய சந்திரரென்கின்ற—அணி - குண்டலாபரணங்களையும் — சேர் - சேர்த்த — இமவானெனும்- இமயமலையென்கின்ற—எலுப்புமணி- அஸ்தியாபரணத்தையும்—மேருவென்னும் - மகாமே ருவென்கின்ற — பொற்பூண் - சொர்ணபரணத்தையும்—தன்னிருகாதினும் - தனதிரண்டுசெ வியிலும்—தரிக்கும் - (கீழணிமேலணியாகத்) தரிப்பள்—சக்கரவெற்பு-சக்கரவாளகிரியை— அணிகலையாய் - (அரையிற்) றரிக்கப்பட்டமேகலையாக — தழுவும் - (சங்காரசத்தியானவள்) தரிப்பள். எ-று. (இ-ம்.) சங்காரசத்தி, சுவர்க்கமுதல்நரகபரியந்தங்களை விசித்திரமானவாபர ணங்களாகத்தரிக்குமென்பதாம்.. (௱௧)

(அ-கை.) இ-து. (கவி) பின்னுறத்தாழ்ந்தலைந்திலங்குமுருகன்வாகனமேடம்பீலி சூடு, முன்னயனப்பெருங்குழிகள் பயஞ்செய்யுமதிச்சடைதாழ் முடிகள் பூணுங், கன்னியுமைகுழற்கவரிமலைநிகர்பைரவராடுங்கவந்தமேவும், பன்னயனக்குழிவிள ங்குமிந்திரன்றன்மேனியெனும்பலியோடேந்தும்...................................... *

(இ-ள்.) பின்னுறத்தாழ்ந்து - பின்பக்கத்திற்றாழ்ந்து — அலைந்திலங்கும் - அசைந்து

விளங்காநின்ற—முருகன்வாகனம் - சுப்பிரமணியரது வாகனமென்கின்ற—மேடம் - வருடை யும்—மீலி - மயிலையும் — சூடும் - தரிப்பள் — முன்னயனப்பெருங்குழிகள் - மூன்றுகண்க ளென்னும்பெரியபள்ளங்களால் — பயஞ்செய்யும் - அச்சஞ்செய்யப்பட்ட—மதி - சந்திரனை (யணிந்த)—சடைதாழ் - சடிலநான்ற(வுருத்திரர்களின்)— முடிகள்பூணும்- சிரசைத்தரிப்பள் —கன்னி - கன்னியாகிய—உமை - பரமேஸ்வரியினுடைய — குழற்கவரி - கூந்தலென்னுஞ் சாமரத்தையும்—மலைநிகர்பைரவர் - பருப்பதத்துக் கொப்பானபைரவர்களின்— ஆடுங்கவந் தம் - துள்ளுகின்றகவந்தங்களையும்—மேவும் - தரிப்பள்—பன்னயனம் - ஆயிரங்கண்களென் கின்ற—குழி - பள்ளம்--- விளங்கும் - பிரகாசியாநின்ற---இந்திரன்றன் - தேவேந்திரனது--- மேனியெனும் - சரீரமென்கின்ற --- பலியோடு - பிக்ஷாபாத்திரத்தை --- ஏந்தும்- தரிப்பள். எ-று. [ப-ம்] சங்காரகிருத்தியமுள்ளவுருத்திரரையுஞ் சங்கரிப்பவளென்பார், மதிச்சடைதாழ் முடிகள்பூணுமென்றார். (இ-ம்) கோரசத்தி உருத்திரன்முதலிய சகலரையுந் தன்வயமாக்கு மென்பதாம் ....(௱௨)

(அ-கை.) இ-து. (கவி.) மிகவுணங்குசாரீர கட்வாங்கப்பங்குகளால் விளக்கந்துன் று, மகமுடைத்தாய்தனைத்தானே பயஞ்செய்துபுவனமெலாந்தொலைத்துமாற்று, மகிலமுமாமொருவடிவின் முடிவட்ட மெனுங்கமலத் தலங்களோடு, நிகரினடனம் புரிந்து பெருங்கற்பத் தனில்விளங்காநிற்குமன்றே. ....*

(இ-ள்.) மிகவுணங்குசாரீரம்- மிகவுமிளைத்தசரீர(சம்பந்தமான)--- கட்வாங்கப்பங்கு களால் - நரம்புகளாற்கோக்கப்பட்ட சிரக்கபாலமாலைகளால் --- விளக்கந்துன்றும் - பிரகாச மிகுந்த---மகமுடைத்தாய் - ஆகாயத்தையுடையவளாய்—தனைத்தானேபயஞ்செய்து - தனக் குத்தானேபயங்கரமாய்— புவனமெல்லாம் - உலகங்களனைத்தையும் — தொலைத்துமாற்றும்- நாசஞ்செய்வள்— அகிலமுமாமொருவடிவின் - விஸ்வரூபங்கொண்ட விஷ்ணுவினது—வட்ட மெனும் - விருத்தமாகிய—முடி-சிரங்களென்கின்ற— கமலத்து—தாமரைமலர்களாற்(றொடு த்த) —அலங்கலோடும் - மாலைகளுடன்—நிகரில் - ஒப்பற்ற—நடனம்புரிந்து- நிருத்தஞ்செய் து—பெருங்கற்பத்தனில் - சர்வசங்காரகாலத்தில் --- விளங்காநிற்கும் - பிரகாசித்துக்கொண் டிருப்பள். எ-று. மாகமென்பது,மகமெனக்குறுகிநின்றது—முன்கவியில் ருத்திரகபாலமும், பின்னர்விஷ்ணுகபாலமும், சொல்லப்பட்டமையால், கட்வாங்மென்பது, பிரமகபாலமெனவு மையும். [ப-ம்] பிரமாவிஷ்ணுக்களைச் சங்கரித்தாளென்பார், கட்வாங்கமென்றும் முடிவட்ட மென்றுங்கூறினர். (இ-ம்) சங்காரசத்திசிருஷ்டி திதிகிருத்தியமுள்ள பிரமவிஷ்ணுக்களையுந் தன்வயமாக்கிச் சர்வசூனியமயானத்தினிருத்தஞ் செய்யும்பரமேஸ்வரசத்தியாம்.......(௱௩)

(அ-கை.) சகத்தைத்தனமாகவும் சீவனைவாயுமுதலியவொன்பதாகவும் பரத்தை கால மாகவும்பகுத்துத்தூஷித்து மேலிவைக்கெல்லாங்காரணமானவீசுரசத்தியைச்சொல்லி அதனையுஞ்சத்தாமாத்திரத்திலடக்கி அச்சத்தொன்றுமே சேடமென்பதை வெளிப்படு த்துநிமித்தம் நியதிசத்திமுதலியவற்றையுமித்தையென நீக்குகின்றது. (கவி) பொருள்க ளெலாம்பொருளன்றுங்கடியமனமகங்கரத்தின்பொருட்டேயாகுந், தெருளுறுபாவங்க ளெலாமபாவமாம்பவமுடிவு தெரியாதாகு, மருளுமதியாகுலத்தா லுளம்வெதும்புமா சைநோய்வளராநிற்கு,மிருண்மயநீர்பவராரியமொவ்வனந்தான்வருத்தத்தாலேகாநிற்கும்.

(இ-ள்.) பொருள்களெலாம் - (இப்பொழுதுசொல்லப்பட்ட) வஸ்துக்களியாவும்—பொ ருளன்றும் - (நித்திய) வஸ்துக்களல்லவாம்—கடியமனம் - கொடியமனமானது—அகங்கரத் தின்பொருட்டேயாகும் - அகங்காரநிமித்தமேயாம்—தெருளுறுபாவங்களெலாம் - தெரியப் பட்டபொருள்களியாவும்—அபாவமாம் - இல்லாததாகப்போகின்றன — பவமுடிவுதெரியா தாகும் - சநநங்களின்முடிவுதெரியவில்லை — (ஆதலின்) மதிமருளும் - அறிவுமயங்கும்— ஆகுலத்தால் - வியாகுலத்தினால்—உளம்வெதும்பும் - மனம்வருந்தும்—ஆசைநோய்-இச்சா வியாதிகள்—வளராநிற்கும் - (யாவர்க்கு)மிகுந்திருக்கின்றன—இருண்மயநீர்பவர் - இருண்ட மயக்கமானவிச்சைதீருஞ்சத்துக்கள் —அரியர் - அரியராம் — எவ்வனந்தான் - (புருடார்த்த சாதனத்திற்குரிய) வெவ்வனமானது—வருத்தத்தாலேகாநிற்கும் - (பயனின்றிய) முயற்சியி னாற்றுனேகழிகின்றது. எ-று. (இ-ம்.) நித்தியமானவாத்மார்த்தத்தையடையமுயற்சியாமல் வீணுகக்கழிக்குங்காலத்துக்கு விசனப்பட்டதாம்.................................(௱௪)

(அ-கை) சாதுசங்கமரிதெனல். (கவி.) பெரியவர்நண்பதி தூரஞ்செல்கதிகிட்டா துண்மைபெறற்கொணுதாங், சரியமனமோகிக்குமுண்மகிழ்ச்சி தூரமதாங்கருணை தோன்ற, விரியுமிழிவதி தூரத்தினுமணுகுநிலைமைபோய்வேரும்வீழ்வோர், திரிய வுடனெழுவர்சிறியவர்கூட்டமெளிதரிது தெளிந்தோர்கூட்டம்....................*

(இ-ள்.) பெரியவர் நண்பதி தூரம் - மகான்களிடத் தன்பானது நெடுந்தூரமாம்—(ஆதலின்) செல்கதிகிட்டாது- அடையத்தக்க மோக்ஷமார்க்கங்கிடையாது—(ஆதலின்) உண்மைபெறற்கொணாதாம் - ஆத்மதத்துவம்பெறுதற்கரியதாம்— கரியமனம் - களங்கமனது—மோகிக்கும்-(பிறர்சுகந்தனது சுகமாயனுபவிக்குமைத்திரியில்லாமையான்)மயங்கும்—(ஆதலின்) உண்மகிழ்ச்சி தூரமதாம் - (பிறர்செய்யுஞ் சற்கிருத்தியத்தி லாநந்திக்குமுதிதையின்மையா) னகமகிழ்ச்சிதூரமாம்—கருணைதோன்றா - (பிறர் துக்கந் தன்றுக்கமாகப் பார்க்குந் தயையின்மையாற்) கிருபையுண்டாகாது—விரியுமிழிவு-பரவுகின்றவீனமானது—அதிதூரத்தினுமணுகும் - (பிறர்செய்யுந் தீவினையினு பேட்சையில் லாததினு) லதிதூரத்தி லிருந்தாலும் வரும்—நிலைமைபோய் - தைரியம்போய்—வேரும் - அதைரியமாம்—திரிய - கெடும்படி—வீழ்வோர் - (நரகத்தில்)வீழ்பவர் —உடனெழுவார்- திரும்பவுஞ்(சுவர்க்கத்தி;லேறுவார்கள்—சிறியவர்கூட்டமெளிது - மூடர்கள்சங்கமெளிதாம்—தெளிந்தோர்கூட்டம்-தெளிந்த சாதுக்கள்சங்கமானது—அரிது-அரிதாம். எ-று. (இ-ம்) சற்சங்கமில்லாததினுற் றத்துவஞானமுமற்சரமுதலியவற்றுன் மைத்திரிமுதலியனவு மில்லாமற்சுழல்வார்க ளென்பதாம் ....(௬௫)

(அ-கை.) ஜீவேஸ்வரசகங்கள்தத்துவத்திலக்கியமாமெனல். (கவி) (வேறு.) கொண்டபா
வனைபிறவியாம் பூதங்கள்குலைந்து போந்திசைதோன்றா, கண்டதேசங்கள்பிறசொலாத்
திரிந்திடுங் கனகிரிதுகளாகு, முண்டெனுந்தன்மை விழுங்கிடவுலகுபோ மும்பர்போம்
புவனம்போ, மண்டுவாரிபோமுடுக்கள்போந் தானவர்வானவர்கணம் போகும்..... ... *

(இ-ள்.) கொண்ட - (தோன்றிநசிக்கின்றவஸ்துக்களிற்) பெற்ற— பாவனை - பாவனையானது—பிறவியாம்-பவபந்தமாம்—பூதங்கள்- (வாசனுசமஸ்க்காரமுள்ள) ஜீவபரம்பரைகள்—குலைந்துபோம் - கலைந்து(சுவர்க்கநரகங்களிற்) செல்லும் —திசை - திக்குகள் — தோன்றா-(அதைப்பகுக்குஞ்சூரியனின்மையாற்) றோற்றுவாம்—கண்டதேசங்கள் - தரிசித்ததேயங்கள்—பிறசொலாத்திரிந்திடும் - மறுபேருள்ளதாகமாறுபடும் — கனகிரிதுகளாகும் - கனமான மலைகள்சிதறிப்போம்—உண்டெனுந்தன்மை - சத்தாசாமானியமானது—விழுங்கிட - வியாபிக்க—உலகுபோம் - (அந்தரக்ஷ) லோகநசிக்கும்— உம்பர்போம் - தேவலோகநசிக்கும்—புவனம்போம் - பூலோகநசிக்கும்—மண்டுவாரிபோம்- நெருங்கியசமுத்திரம்வற்றும்—உடுக்கள்போம் - நக்ஷத்திரங்கள்சிதறும்—தானவர் - அசுரர்களும்—வானவர் - தேவர்களு(மாகியவிருவருடைய) — கணம்போகும் - கூட்டங்களுநசிக்கும். எ-று. (இ-ம்) சத்தாமாத்திரத்திற் பாவனையாலுண்டான வனைத்துமித்தையாயிருக்க நாமெப்படிநித்தியமாவோமென்பதாம்.*

(அ-கை.) இ-து. (கவி.) சித்தர்பொன்றுவர் துருவனுஞ்சிதைகுவன் சிவனயன்றிரு
மார்பன், றத்துவத்தனிலொன்றுவர்காலமுந்தருமமுமுடிவாகு, மத்தவானும்போ
மயக்கமேதருவதாய் வாக்கொடு செவிக்கெட்டாச், சுத்தமாய்பொரு ளொன்றினு
லிகழ்வுறத் தொல்லுலகிழிவாகும்.......................................*

(இ-ள்.) சித்தர்பொன்றுவர் - சித்தர்களுநசிப்பார்கள்—துருவனுஞ்சிதைகுவன்- துருவனுங்கெடுவன்—சிவனயன்றிருமார்பன் - மும்மூர்த்திகளும் — தத்துவத்தனிலொன்றுவர்-பரதத்துவத்திற் கலப்பார்கள்—காலமும் - (சிருஷ்டியாதியைச் சங்கற்பத்தாலுண்டாக்கு மீஸ்வரசத்தியான)காலமும்—தருமமும் - (ஞாயமா) விதிக்கிறநியமன சத்தியும் — முடிவாகும்- அந்தமாம்—மத்தவானும்போம் - பருத்தவாகாயமுநாசமாம்—மயக்கம்- (மாயா) மயக்கத்தை—தருவதாய் ;- (நிவிர்த்திசெய்யும்பொருட்டு) கொடுப்பவராயும்—வாக்கொடுசெவிக்கெட்டா-வசனத்துக்குங் கேள்விக்குமெட்டாத (தத்துவஸ்வரூபராயும்) —சுத்தமாம்பொருள்- களங்கரகிதமானஞானமூர்த்தி (யராயுமிருக்கின்ற)—ஒன்றினுல் - ஒன்றான (பரமேஸ்வர) னுல்—இகழ்வுற - நிந்தைபொருந்த— தொல் - பழைமையாக (த்தோன்றுகின்ற)—உலகிழிவாகும்-சகத்தினமாம். எ-று. (இ-ம்) பரிசுத்தமான ஞானத்தில் மும்மூர்த்திமுதலிய பேதங்களில்லாதிருக்கநாமெப்படி யிருப்போ மென்பதாம்.......................................(௬௭)

(அ-கை.) சகத்துண்மையென்பதைநிந்தித்தல். (கவி) இன்னபோதுமங் கலங்களா
மிருதுவீதியாத்திரைக்கிதுகால,மன்னதேயுறவிச்சுகமிருந்தவாவற்புதமுளபோக,
மென்னவென்னவாளாநினைத்துலகங்களிறக்கின்றவுயர்ந்தோரா, யுன்னிமுற்றுறப்
பசுவெல்லாந்தேடிடாதொழியுமேற்றுயிலுண்டோ .... *

(இ-ள்.) இன்னபோது - இக்காலம்—மங்கலங்களாம் - மதஞேற்சவமாம்—ஈது-இது—இருது - வசந்தகாலமாம்— இயாத்திரைக்கிதுகாலம்- (தேச) யாத்திரைக்கிது (நல்ல)காலமாம்—அன்னதே - அவ்வளவுசிறப்புள்ளதே— உறவு - பந்துக்களாம்—இச்சுகமிருந்தவா-இந்தச்சுகமிருந்தபிரகாரமும்—அற்புதமுளபோகம் - அதிசயமுள்ளபோகமும்—என்ன - என்ன

வியப்புள்ளதாம்—என்ன - (இப்படி) யென்று—வாளாநினைத்து - விருதாவாகச்சிந்தித்து—உலகங்களிறக்கின்ற - சகத்துளார்நசிக்கின்றார்கள்—உயர்ந்தோரை-மகான்கள்(சரித்திரத்)தை—உன்னி - (தான்செய்யச்) சிந்தித்து—முந்துறுப்பகலெல்லாந்தேடிடாது - முன்னதாயிருக்கின்றபகற்காலங்களி லெல்லாந்தேடாமல்—ஒழியுமேல்-(அக்காலம்வீணாகப்)போகுமானால்—துயிலுண்டோ-(இரவி) னித்திரையுண்டாமோ. எ-று. (இ-ம்) போகங்களையற்புதமென்றுவீணுக்கசருதிபிரமவிசாரத்தை விரும்பாமலிருப்பதற்கு விசனப்பட்டதாம்...........................(ருஅ)

(அ-கை.) சம்சாரசுகமுடிவிற்றுன்பமாமெனல்.(கவி) மனைவியுமகரும்பொன்னுமமதைசெய்தமுதம்போல, நினைவினுனேயஞ்செய் துநீணிலத்துள்ளவெல்லா, மனையவர்க் காகச்செய்வ ரருத்திக ளானவெல்லாம், வினையுற முடியுங்காலைவிடங்களின் மயக்கஞ்செய்யும் .... *

(இ-ள்.) மனைவியும் - இல்லாளையும்—மகரும்- புத்திரர்களையும்—பொன்னும்- தனத்தையும்— அமுதம்போல - அமுதத்தைப்போல—மமதைசெய்து - (என்னுடையதென்) றபிமானித்து—நினைவினுனேயஞ்செய்து - மனதினாலிச்சித்து — நீணிலத்துள்ளவெல்லாம் - நீண்டபூமியின்கண்ணுள்ள (தனதுசெல்வங்க) ளனைத்தையும்—அனையவர்க்காகச்செய்வர்-அந்தமனைவிபுத்திரர்களுக்காகவே செய்வார்கள்—அருத்திகளானவெல்லாம் - (அவ்)விருப்பமுள்ளவைகளாகியவனைத்தும்—வினையுறமுடியுங்காலை- வினையினானசிக்குங்காலத்தில்—விடங்களின்-விடங்களினும்—மயக்கஞ்செய்யும் - (அதிக) துக்கத்தைச்செய்யும். எ-று. (இ-ம்) தனது செல்வங்களைத்தானபிமானித் திருக்கின்ற மனைவிபுத்திரர்களுக்குக் கொடுக்கும்போதிற் சுகமாயுமவை நசிக்கும்போது துக்கமாயும் வருத்துமென்பதாம்.................................... (ருகூ)

(அ-கை.) எதிரற்றசெல்வமு நசிக்குமெனல். (கவி.) பகையெலாந் துரந்துதள்ளிப் பாக்கியம்பலவந்தெய்த, விகலறத் துய்க்குநாளி லெவ்விடத்திருந்தோவந்து, மிகையறுகாலன்கொல்லும் விவிதமாமிடத்தினின்று, வகுந்தின்வந்தொன்றுவார்போன் மனைவிசேய்முதலாமாயை...*

(இ-ள்.) பகையெலாம் - சத்துருக்களனைத்தையும்— துரந்துதள்ளி - துரத்திவிட்டு—பாக்கியம் - செல்வம்—பலவந்தெய்த - அனேகம்வர—இகலறத்துய்க்குநாளில்- (அவைகளை) எதிரில்லாமலனுபவிக்குங்காலத்தில்—எவ்விடத்திருந்தோவந்து - எங்கிருந்தோவந்து—மிகையறுகாலன்கொல்லும் - கேடற்றகாலனாசஞ்செய்வான்—மனைவிசேய்முதலாமாயை - மனைவிபுத்திரர்முதலானமாயைகள்—விவிதமாமிடத்தினின்று - நாநாவிதமானவிடங்களிலிருந்து—வகுந்தின்வந்தொன்றுவார்போல் - மார்க்கத்தில்வந்துகூடுவார்போலவாம். எ-று. (இ-ம்) சார்வபூமனனுபவிக்குஞ் சுகமும்சம்சாரமு மாயாசம்பந்தமாதலாற் கெடுமென்பதாம்..... (ருய)

(அ-கை.) பிரமராயுளுமித்தையெனல். (கவி.) கற்பமாங்கணகாலத் திற்கமலயோனிகளுமாய்வர், சிற்பமாங் கலைகளாலே செறிந்தகா லத்தின்சால, வற்பமுமகத்துநாடியளப்புறுபுந்திபொய்யாம்,பற்பலதீதின்மா லும்பயிலுமன்னுயிர்களெல்லாம்

(இ-ள்) கற்பமாங்கணகாலத்தில்-கற்பமாகியக்ஷணநேரத்தில்—கமலயோனிகளுமாய்வர்-பிரமாக்களுநசிப்பார்கள்—சிற்பமாங்கலைகளால் - சிறிதாகியகாலநுட்பத்தினால்—செறிந்த-நெருங்கிய —காலசாலத்தின் - காலசமூகத்தின்—அற்பமும்-அணுத்துவத்தையும்—மகத்தும்- மகத்துவத்தையும்—நாடி - சிந்தித்து—அளப்புறுபுத்திபொய்யாம்-அளவுசெய்யும்புத்தியானது மித்தையாம்—பயிலுமன்னுயிர்களெல்லாம் - சொல்லியசீவர்களனைத்தும்— பற்பலதீதின்மாலும்- நாநாவிதமான தீமையில்மயங்குவர். எ-று. (இம்) பிரமன்முதலிய யாவராயுளுமித்தையாதலால், அற்பாயுசுந்தீர்க்காயுசு மின்றென்பதாம்..(ருயக)

(அ-கை.) கருமபலமுதலியயாவுமித்தையெனல். (கவி) கற்றவரரியர்சாலக் கருமமுந் துயரினாலே,யுற்றசூனியமாமெல்லாமுயிர்தரித் துழல்வதெங்ஙனற்றவத்தினமுமேலாஞ் செல்வமுமந்தச்செய்கை, முற்றுமாய்ந் துளத்தேதோன்று மியாமுமம் முறையிற்செல்வோம் .... *

(இ-ள்.) சால - மிகவும்—கற்றவரரியர் - கற்றுணர்ந்தபெரியோர்களரிதாயிருப்பர்—கருமமும் - (வர்ணாச்சிரமத்துக்குரித்தாய்நிறைந்த) கிரியைகளும்— துயரினால்- துன்பத்தினால்—எல்லாம் - சகலமுமே—உற்றசூனியமாம் - பொருந்தியவிரசமில்லாததாம்—எங்ஙன்-எப்படி—உயிர்தரித்துழல்வது - சீவிப்பது — அற்றவத்தினமும் - அப்படிசிறப்புள்ள நாள்களும்—மேலாஞ்செல்வமும் - மேலானசம்பத்தும் — அந்தச்செய்கை - அத்தொழில்களுமாகிய—முற்றுமாய்ந்து - யாவுநசித்து — உளத்துதோன்றும் - நினைப்புமாத்திர மாய்த்தோற்றும்—

யாமுமம்முறையிற்செல்வோம் - நாமுமந்தமார்க்கத்திற்செல்வோம். எ-று. (இ-ம்) நல்ல நியமங்கள்முதலியயாவு மில்லாதிருக்க நமக்கென்ன கதியென் றுவிசனப்பட்டதாம் ..... (௱௰௨)

(அ-கை.) உயர்வுதாழ்வு நிலையன்றெனல். (கவி) பிணிசெயா பத்துச்செல்வம் பிறப்பிறப் பென்பவெல்லாங், கணிதமாங்கணத்திற்போகா தனவில்லைக்கடியசூரன், றுணிவுமோரோ மையாலே நூறுடறுணியுமொன்றாற், பணிதருகீழோர்மேலாம்பலவட்டம்வருமிவ்வாறே.

(இ-ள்.) பிணிசெயாபத்து - துன்பஞ்செய்கின்றவாபத்து — செல்வம் - சம்பத்து— பிறப்பு-சநநமும்—இறப்பு - மரணமும்—என்பவெல்லாம்-என்பனவனைத்தும்—கணிதமாம்-கணிதநூலிற் (சொல்லுவ)தான—கணத்தில் - க்ஷணத்தில் — போகாதனவில்லை - நசியாதவை யில்லை—கடியசூரன் - கொடியவீரன்—ஓரேழையால்-வீரமில்லாதவொருவனால்—துணிவன்-நகிப்பன்—ஒன்றால் - ஒருவனால்—நூறுடறுணியும் - நூறுபேர்கொல்லப் படுவார்கள்—பணி தருகீழோர் - வணங்கத்தகுமீனர்கள்—மேலாம் - மேலானபிரபுவாவார்கள்—இவ்வாறு - இவ் வண்ணம்—பலவட்டம்வரும் - (சகத்தி)னிடையின்றிச் சக்கரமாகச்சுழலும். எ-று. (இ-ம்) சுக துக்கமுதலிய யாவுங்கணத்தில் நசிப்பதுமன்றி வரம்பில்லாமற்சுழலுமென்பதாம். ... (௱௰௩)

(அ-கை.) இராசபோகங்களிலிச்சையுண்டாகாதெனல். (கவி) அனையகுற்றங்களாங் காட்டெரியினாலறவும்வெந்த,நினைவினீரிற்கானற்போ னெடியபோகங்கடோன்று, வினையுறு மரணம்வாணு ளிரண்டையும் விரும்புகில்லே, னினையதோ ரிடருமின்றி யிருந்தவாறிருக்கின்றேனால்.. *

(இ-ள்.) அனைய குற்றங்களாம் - அப்படிப்பட்ட தோஷங்களென்னும்—காட்டெரியினால்—காட்டுத்தீயினால்—அறவும்வெந்த-மிகவும்வெந்த—நினைவில்-(என்)மனதில்—நீரில்-சலத்தில்—கானல்போல்-கானற்சலந்(தோன்றுதது)போல—நெடியபோகங்கடோன்று-பரவியசெல்வா பேக்ஷையுண்டாகாது—வினையுறு- இராசப்பிரவிர்த்தியிற் செல்கின்ற—வாணாள் - ஆயுளும்—மரணம் - இறப்புமாகிய—இரண்டையும் - (இவ்) விரண்டையும்—விரும்புகில்லேன்- இச்சிக்கேன்—இனையது - இப்படிப்பட்டதாகிய—ஓரிடருமின்றி - ஓர் துன்பமுமில்லாமல்—இருந்த வாறு - (இப்பொழுது) இருக்கின்றபடியே — இருக்கின்றேன் - இருக்கிறேன். எ-று. (இ-ம்) முன்சொன்னதனமுதலான தோஷாக்கினியினா லெரிக்கப்பட் டிருக்கின்ற நான்போகமுதலியவற்றில், விரும்பாமற் சும்மாயிருக்கின்றேனென்பதாம் ....(௱௰௪)

(அ-கை.) சித்தத்தியாகம்விரும்பல். (கவி) தெரிவுறுவயத்தில்வந்த புந்தியாற்சித்தந்தன் னைப், பரிகரியாதுவிட்டாற்பரிகரிப்பதுமற்றெந்நாள், விரிவிடம்விடமதன்றுவிடயமே விடமாந்துன்பம், புரிவிடங்கொல்வதோர்மெய்புலன்மறுபிறப்புங்கொல்லும் .... *

(இ-ள்.) தெரிவுறுவயத்தில்வந்த- அறிவின்வசமாய்வந்த—புந்தியால் - (உமது) புத்தியினால்—சித்தந்தன்னை-(என்) மனதை—பரிகரியாதுவிட்டால்-திவிர்த்திசெய்யாமல்போனால்—பரிகரிப்பது- திவிர்த்திசெய்வது—மற்றெந்நாள்-இனியெக்காலம்— விரிவிடம்விடமதன்று-ஆலகாலவிடம்விடமன்று —விடயமேவிடமாம் - விடயமேவிஷமாகும்—துன்பம்புரிவிடம்-துன்பஞ்செய்கின்றவிஷமானது—ஓர்மெய் - ஒருசரீரத்தை—கொல்லும்- கெடுக்கும்—புலன் மறுபிறப்புங்கொல்லும் - விடயமானதினிவருந்தேகங்களையுங்கெடுக்கும். எ-று. (இ-ம்.) முன் சாதனசதுஷ்டயமுண்டாய் அதனால் விடயதோஷதிருஷ்டியுண்டான விவ்விவேக மிருக்கும் போதேமனோநாசஞ்செய்யாவிடில்விடயமெப்போதும்வருத்துமென்பதாம் ....(௱௰௫)

(அ-கை.) சீவன்முத்தரிலக்கணம். (கவி) மகிழ்வுசோர்வுறவுசார்வுவாழ்வுசாவென்ப வெல்லாந், திகழ்வதாமறிவுசான்றோர் சிந்தையிற்பந்தமாகாப், புகலுறுமாயுள்வாயுச் சிதறியபுயனீரொக்கு, நிகரறுபோகமேகமிசையெழு நெடுமின்போலும்.................. *

(இ-ள்.) மகிழ்வு - சுகமும்—சோர்வு - துக்கமும்—உறவு - பந்துக்களும்—சார்வு- மித்திரர்களும்—வாழ்வு - ஆயுளும்—சாவு - மரணமும்—என்பவெல்லாம் - என்பனவனைத்தும்—திகழ்வதாம் - விளங்காநின்ற—அறிவுசான்றோர் - ஞானவான்கள் — சிந்தையிற்பந்தமாகா-மனதைப்பந்தப்படுத்தாவாம்—புகலுறுமாயுள்-சொல்லாநின்றவாயுளானது—வாயுச்சிதறிய-காற்றினாற்சிந்திய—புயனீரொக்கும்-மேகசலத் (திவலையை) யொப்பாகும் —நிகரறுபோகம்-சமானமில்லாத (விடய) போகமானது—மேகமிசையெழு - முகிலிலுண்டாகாநின்ற—நெடுமின்போலும் - பெரியமின்னலுக்கொப்பாம். எ-று. (இ-ம்.) மித்தையான சுகதுக்கமுதலிய யாவுஞ் சத்துக்களைவருத்தாதென்பதாம் .... (௱௰௬)

(அ-கை.) ஆத்மஞானத்தையபேக்ஷித்துவிசனப்படுதல். (கவி) மாத்தர்தமிளமை யில்லாதிவையெலாமனத்தினெண்ணிச், சாந்திகொள்பெரியோர்நீவிர் சமாதியோ

கத்தைச் சார்வீ, ராய்ந்தவென்சிந்தைசீவநாயகன்வசமாகைக்கே, யேய்ந்தது நிலை
யுமெய்தாதிறைவனைப்பிரிந்தாள்போல ....*

(இ-ள்.) மாந்தர்தம் - மனிதர்களுடைய—இளமைநில்லாது - (முத்திக்குச் சாதனமான) வெவ்வனம்நிலையில்லாதது—இவையெலாமனத்தினெண்ணி - இவையனைத்துமனத்திற் சிந்தித்து—சாந்திகொள்பெரியோர்நீவிர் - உபசாந்தத்தையுடைய வறிஞர்களாகியநீங்க(ளனைவரும்) — சமாதியோகத்தைச்சார்வீர் - சமாதிநிஷ்டையையடைவீர்கள் — ஆய்ந்தவென் சிந்தை -ஆராய்ந்தறிந்தவென்மனமானது—சீவநாயகன்வசமாகைக்கேயேய்ந்தது - கூடஸ்த பிரமவைக்கியத்தையடைவதற்கேயிசைந்தது—இறைவனைப்பிரிந்தாள்போல - நாயகனைப்பிரிந்தநாயகியைப்போல—நிலையும் - (ஆத்ம) நிச்சயத்திலும் (விடயவிச்சையிலும்) — எய்தாது - சேராது. எ-று. சாந்தியையடையும்பொருட்டென்றுத்சித்தத்தில் முத்திரைவைக்கப்பட்டதென்றுரியத்திற் பாடபேதமுமுள. (இ - ம்.) விஸ்ராந்தியடையுநிமித்த மனதையடக்க வேண்டுமென்பதாம் ....(௱௰௭)

(அ-கை.) நிச்சயம்விசாரித்தல். (கவி) ஆதலால்வருத்தங்குற்றமுபாதியோடையமின்றி,
மீதுறுமோகமின்றிவிளங்கியநிலைமையேது, காதல்செயின்பமிக்க விடயமாங்கனலில்
வீழ்ந்தும், தீதுறுநிலைமையேதுதீயினுளிரதம்போல ....*

(இ-ள்.) ஆதலால் - ஆகையினால்—வருத்தம் - துன்பமும்—குற்றம் - பிழையும்—உபாதியோடு - உபாதிகளும்—ஐயம் - சந்தேகமும்—இன்றி - இல்லாமல் — மீதுறு - மேலிடப்பட்ட—மோகமின்றி - மோகமில்லாமல்—விளங்கிய - பிரகாசித்த—நிலைமையேது- நிலையானபதமியாது - காதல்செய் - இச்சிக்கும்—இன்பமிக்க - சுகமிகுந்த—விடயமாங்கனலில்-விடயமாகியவக்கினியில்—வீழ்ந்தும்-விழுந்தாலும்—தீயினுளிரதப்போல - அக்கினியில்(வைத்த) இரசகுளிகையைப்போல—தீதுறுநிலைமையேது - தீதடையாதநிலையானபதமியாது. எ-று. (இ - ம்.) எவற்றிற்கும் விலக்ஷணமாயவைகளிற்கூடியுங்கூடாமலுமிருக்கின்றவஸ்து யாதென்றுவினவினதாம் ....(௱௰௮)

(அ-கை.) மெய்யுணர்வுவினவுதல். (கவி) வசனமாந்தொழிலேயன்றிவருபவந்தான்வே
றின்று, வசைதருபுனலையன்றியளக்கர்வேறிலாததேபோ, னசையுறு பெரியோரெங்ங
னவையுறுதுயரந்தீர்ந்தா, ரிசையநீருணர்ந்ததந்தநிலையினையெனக்குச்சொல்வீர் .... *

(இ-ள்.) அசைதருபுனலையன்றி- அலைவுள்ளசலத்தையல்லாமல்—அளக்கர்வேறிலாததேபோல் - சமுத்திரம்வேறில்லாததுபோல—வசனமாந்தொழிலேயன்றி - வாக்குவியாபாரமேயன்றி—வருபவந்தான் - வராநின்றசம்சாரமானது—வேறின்று- வேறின்றாம்—நசையுறுபெரியோர்- ஒழுக்கமுள்ளசத்துக்கள்—எங்ஙனவையுறுதுயரந்தீர்ந்தார்-எப்படிகுற்றமுள்ளதுன்பத்தைநீங்கினார்கள்—இசைய-பொருந்த—நீருணர்ந்தது- தேவரீருணர்ந்திராநின்ற(நியாது)—அந்தநிலையினை - அந்நிச்சயத்தை—எனக்குச்சொல்வீர் - அடியேனுக்கனுக்கிரகஞ்செய்யுங்கள். எ-று. (இ-ம்.) மகான்களினது துக்கநிவிர்த்தியான தடையற்றவாநந்தத்தைப் பெற விரும்பினதாம் ....(௱௰௯)

(அ-கை.) விஸ்ராந்திவருமளவுமொன்றையும்விரும்பேனெனல். (கவி) இன்னிலை
யிலதாவேனுமுளதியம்பாராவேனு, மன்னிலையைமின்றி யகங்கரமின்றியானே,
துன்னுறமாட்டேன்செய்வதேதினிச்சோறும்வேண்டேன், னன்னயநீரும்வேண்டே
னலம்பெறுதுகிலும்வேண்டேன் ....*

(இ-ள்.) இந்நிலையிலதா - இவ்விஸ்ராந்திபதமில்லையா—எனும்-இருக்கின்றதென்றால்-உளதியம்பாரா - எதார்த்தமாகவே (யெனக்கொருவருஞ்) சொல்லமாட்டார்களா — எனும்-சொல்லுவார்களாயின்—அந்நிலை - அவ்விஸ்ராந்திபதத்தை—யானே - சுபம்நானே — துன்னுறமாட்டேன் - அடையமாட்டேன்—(அப்போது) ஐயமின்றி- சந்தேகமின்றியும்—அகங்கரமின்றி - அகம்பாவமின்றியுமிருக்கின்ற (யான்)—இனி - மேல்—செய்வதேது - செய்வதியாதென்னில்—சோறும்வேண்டேன் - அன்னமும்விரும்பேன் — நன்னயநீரும்வேண்டேன்- மதுரமானசலத்தையும்விரும்பேன் — நலம்பெறுதுகிலும்வேண்டேன் - அழகியவஸ்திரத்தையும்விரும்பேன். எ-று. ....(௱௨௰)

(அ-கை.) நித்தியகன்மங்கள்செய்யேனெனல். (கவி) முழுகுதருணமாதி நியமங்
கண்முழுதுஞ்செய்யேன், விழுமியகருமஞ்சம்பத் தாபத்தின் மேவேனியாக்கை,
நழுவுவதன்றியொன்று நயக்கிலன்மவுனியாகி, யெழுதுமோவியம்போற் காமங்
கோபம்பற்றின்றிநிற்பேன் ....*

(இ-ள்.) முழுகுதருணமாதி - ஸ்நானந்தானமுதலான—நியமங்கண்முழுதும்-நித்திய கருமங்களனைத்தையும்—செய்யேன் - செய்யமாட்டேன்— விழுமியகருமம் - நன்மையான விராசவிபகாரத்திலும் — சம்பத்தாபத்தின் - சுகாசுகத்திலும் — மேவேன் - செல்லேன்— இயாக்கைநழுவுவதன்றி - சரீர நழுவுவதையல்லாமல்—ஒன்றுநயக்கிலேன்-மற்றொன்றையும் விரும்பேன்—மௌனியாகி - மௌனத்தையுடையவனாய்—எழுதுமோவியம்போல்- எழுதப் பட்டசித்திரத்தைப்போல—காமங்கோபம் - இராகத்துவேஷங்களில் — பற்றின்றிநிற்பேன்- இச்சையற்றிருப்பேன். எ-று. (இ-ம்.) கன்மங்களின்முயலாமல் நிஷ்க்கன்மனாயிருந்துதேகத் தைவிடுவேனென்பதாம் .... (௱௨௧)

(அ-கை.) வசனியாதிருத்தல். (கவி) எனவுரைத்தமலசீதமதியெனவினியோனின்சொல், வினவுநல்விவேகந்தன்னால் விரிந்தலர்மனத்திராமன், மனமகிழ்முனிவர்முன்னர் வாய் மொழியமைந்துநின்றான், கனமுகின்முன்னர்கேகாரவந்தவிர்கலாபிபோன்றே .... *

(இ-ள்.) அமலசீதமதியென - களங்கமற்றகுளிர்ந்தபூரணசந்திரனைப்போல—இனியோன் - இனிமையுள்ளவனும்—இன்சொல் - இனியவசனத்தினாலும்—வினவும்-விசாரிக்கின்ற—நல்விவேகந்தன்னால் - ஆத்மவிவேகத்தினாலும்—விரிந்தலர்மனத்திராமன் - விகசிதமானமனதையுடையவனாயுமிருக்கின்றவிராமரானவர்—மனமகிழ்முனிவர்முன்னர் - அகங்களிக்கின்ற முனிவர்கள்முன்னே—எனவுரைத்து - (இப்படி) யென்றுசொல்லி— கனமுகின்முன்னர்-கனமாகியமேகத்தின்முன்னே—கேகாரவந்தவிர்கலாபிபோன்று - கேகாவென்னுஞ்சத்தத்தைத் தவிர்ந்தமயிலைப்போல—வாய்மொழியமைந்துநின்றான் - வசனியாமற்சும்மாயிருந்தார். எ-று (இ-ம்.) சபையிலிராமர் தனதபிப்பிராயத்தை முனிவர்களுக்கறிவித்து அவர்களபிப்பிராயந் தெரிந்துகொள்ளுநிமித்தமௌனமாகவிருந்தாரென்பதாம் .... (௱௨௨)

முதலாவது - வயிராக்கியப்பிரகரணமுற்றிற்று.

ஆக பதிகங்காப்புட்படச்செய்யுள் (௱௫௬.)

வ—ல். சுகர் கதை.

(அ-கை.) முன்கதையிற் சுயமாயுண்டான சாதனசதுஷ்டயத்திலிரண்டாஞ்சாதனமான நிராசையினுற்சிவேஸ்வரசகங்களாகக்காணப்பட்டயாவையுமனுர்தசட துக்கமெனத்தேவத் தன்மைநிறைந்த சபையிற்சொல்லியவிராம னனுபவத்திலிவன் ச லசம்பந்தங்களு நீங்கிசை; தன்னியமாத்திரமா யிருப்பதையுணர்ந்தோரில் விசுவாமித்திரமுனிமேற் சர்வ வியாபகமான சாக்ஷாத்காரமே நீ யென்றறிவிப்பிக்கும் பொருட்டிவ் வனுபவமுள்ள சுகமுனியின் கதையை நிரூபிக்கின்றார் .... *

(அ-கை.) மகிழ்ச்சியடைதல். (கவி.) மைம்மலமாமோகத்தை மாய்த்திடும்புதுமைத் தான,செம்மல்வாசகங்கள்கேட்டுத்திருந்தவையிருந்தோரெல்லா,மிம்மொழிகேட்டபோ லவெழப்புளகுவகைமிக்கார், விம்மல்சேர்சித்தர்சேனைவிண்மிசைக் களித்தவன்றே .... *

(இ-ள்.) மைம்மல - களங்கமுள்ள—மாமோகத்தை - மகாசம்சாரத்தை — மாய்த்திடும்- கெடுக்கப்பட்ட—புதுமைத்தான - அதிசயமான—செம்மல்வாசகங்கள்கேட்டு - இளவரசான விராமன்வசனங்களைக்கேட்டு—திருந்தவையிருந்தோரெல்லாம்- திருத்தமான(தசரதன்)சபையிலிருந்தசகலரும்—இம்மொழிகேட்டபோல - இவ்வசனத்தைக் கேட்கவந்ததுபோல—புளகெழ-மயிர்க்குச்செழ—உவகைமிக்கார் -களிப்பின்மிகுந்தார்கள்—விம்மல்சேர்சித்தர்சேனை-ஒலித்தலையுடைய சித்தர்கணங்கள்—விண்மிசைகளித்த- ஆகாயத்தின்கண்மகிழ்ந்தன. எ-று. (இ-ம்) ஆகாயத்திற்சித்தர்சபையும் பூமியிலிராசசபையும் இராமனது வைராகவசனத்தைக் கேட்டாநந்தத்தையடைந்தனவென்பதாம் .... (௧)

(அ-கை.) சித்தர்கணமகிழ்தல். (கவி) நன்றுநன்றென்னுஞ்சொல்லுநன்மலர்மழையுங் கூடி, யொன்றியோர்கடிகைபாதியிழிந்தபின்னூழிகாலம், வன்றுயருழன்றுசிந்தைமயங்கியயாங்களெல்லா, மின்றிராகவன்சொலென்னுமின்னமுதமையப்பெற்றோம்... ....*

(இ-ள்.) நன்றுநன்றென்னுஞ்சொல்லும் - நல்லதுநல்லதென்றும்வசனமும்—நன்மலர் மழையும் - நல்லபுஷ்பமாரியும்—கூடியொன்றி - சேர்ந்து—ஓர்கடிகையாதி - அரைநாழிகை நேரம்—இழிந்தபின் - (சபையில்) வந்துநிறைந்தபின்பு—ஊழிகாலம் - கற்பகாலம் — வன்றுயர்- வலியதுன்பத்தோடும்—உழன்று- விண்ணிற்சஞ்சரித்து — சிந்தைமயங்கிய - மனோமயக்கமுள்ள — யாங்களெல்லாம்- நாங்களனைவரும்—இன்று - இன்றையத்தினம்—இராகவன் சொலென்னும் - இராமன்வசனமென்கின்ற—இன்னமுதமையப்பெற்றேம் - இனியவமுதங் கிடைக்கப்பெற்றேமென்று (சித்தர்கள்சொன்னார்கள்)—எ-று. (இ-ம்.) இராமன்வயிராக்கிய வசனத்தினாற் சித்தர்கள்மயக்கந்தெளிந்ததென்பதாம்.. (௨)

(அ-கை.) சித்தர்கள்சபைக்குவருதல். (கவி) திருந்தியவிவன்சொலாலே தெளிவுறு
சிந்தைபெற்றேம், பெருந்தகைமுனிவர்சொல்லும் பொருளினிப்பெறுதுமென்
றுப், பொருந்தியவிண்ணினின்றுபூதலத்திழிதலோடு, மிருந்தபேரவையோ ரெல்
லாமெழுந்தெதிர்கொள்வதானார்.. *

(இ-ள்.) திருந்தியவிவன்சொலால்- திருத்தமானவிவ்விராமன்வசனத்தினால்—தெளிவுறு சிந்தைபெற்றேம்-தெளியப்பட்டசித்தத்தையடைந்தோம்—பெருந்தகைமுனிவர்-(இதற்கு) மேன்மையானமுனிவர்கள் — சொல்லும் - போதிக்கும் — பொருளினிப்பெறுதுமென்று- வஸ்துவைமேலடைவோமென்று—பொருந்தியவிண்ணினின்று - தாங்களிருந்தவாகாயத்தினின்று—பூதலத்திழிதலோடும் - (சித்தர்கணங்கள்) பூமியிலிறங்கவும்—இருந்தபேரவையோரெல்லாம் - மகாசபையிலிருந்தோரனைவரும் — எழுந்தெதிர்கொள்வதானார் - எழுந்திருந்தெதிர் கொள்வதானார்கள். எ-று. (இ-ம்.) விஷயதோஷதிருஷ்டிநிருபணத்தினான்மனந்தெளிந்தசித்தர்கள்மேல் ஆத்மானுபவத்தையுந்தெரிந்துகொள்ளவாத்மராமன்சபைக்குவந்ததாம் ... .. (௩)

(அ-கை.) சித்தருநரருஞ்சந்தித்தல். (கவி) வந்துறுசித்தர்க்கெல்லாம் வசிட்டனுங்காதி
சேய, முந்துபூசனைகள்செய்தார்முனிவருக்கவருஞ்செய்தா, ரந்தநல்லவையின்வேந்து
மருச்சனையவர்க்குச்செய்தா, னந்துமன்னவற்குமன்னார்நன்சொலாற்பூசைசெய்தார்.*

(இ-ள்.) வந்துறுசித்தர்க்கெல்லாம் - வந்தடைந்தசித்தர்களனைவர்க்கும் — வசிட்டனுங்காதிசேயும் - வசிட்டரும்விசுவாமித்திரரும் — முந்துபூசனைகள்செய்தார் - முந்தியாராதித்தார்கள்—முனிவருக்கவருஞ்செய்தார்-(பின்பிந்த) முனிவர்களுக்கு அச்சித்தர்களும்பூசித்தார்கள்—அந்தநல்லவையில் - அந்தநற்சபையிலுள்ள—வேந்தும் - அரசனானதசரதனும்— அவர்க்கு - அச்சித்தர்களுக்கு—அருச்சனைசெய்தான் - பூசைசெய்தான் — நந்துமன்னவற்கும்- ஆக்கமுள்ளவவ்வரசனுக்குட்—அன்னார் - அச்சித்தர்கணங்கள்—நன்சொலால் - முகமன்வசனத்தினால்—பூசைசெய்தார் - ஆராதித்தார்கள். எ-று. (இ-ம்.) சித்தர்களுஞ்சபையிலுள்ளோருமொருவருக்கொருவர்வணங்குங்கிரமமறிவித்ததாம் ....(௪)

(அ-கை.) இராமனதுநிராசையைப்புகழ்தல். (கவி) தொழுதுமுன்னிருந்தசெங்
கட்டோன்றற்குமுபசாரங்கள், பழுதில்பூமழையானல்ல மொழிகளாற்பரிந்துசெ
ய்து, விழுமியகுணத்தான்மிக்கோன் விரத்தியாய் விளம்புஞ்சொற்கள், முழுது
நல்லுதாரமாகிமுடிவிலற்புதமாமென்றார்.. *

(இ-ள்.) தொழுதுமுன்னிருந்த - வணங்கிமுன்னேயிருந்த—செங்கட்டோன்றற்கும்- செவ்வியகண்களையுடையவிராமருக்கும் — உபசாரங்கள் - முகமன்வசனங்களை — பழுதில்பூமழையால் - பழுதற்றபுஷ்பவருஷித்தினாலும்—நல்லமொழிகளால் - அன்பானவசனங்களாலும் —பரிந்துசெய்து - அன்புசெய்து—விழுமியகுணத்தான்மிக்கோன் - (முனிகளே) நன்மையான (மைத்திரியாதி) குணங்களின்மிகுந்தவிராமர்—விரத்தியாய்விளம்புஞ்சொற்கள்- துறவாகச்சொல்லியவசனங்கள்—முழுதுநல்லுதாரமாகி - முற்றுங்கெம்பீரமுடையதாய்— முடிவிலற்புதமாமென்றார் - அளவற்றவதிசயமுள்ளதாமென்று (சித்தர்கள்) சொன்னார்கள். எ-று. (இ-ம்.) இராமனதுவயிராக்கியவசனம்ஆச்சரியகரமுள்ள வாழ்ந்தகருத்தாகவிருக்கின்றதென்றதிசயித்ததாம் .... (௫)

(அ-கை.) சித்தர்கள்தங்களையிகழ்தல். (கவி) ஈசனேபடைத்ததாகியெண்ணிறீமுயற்சி
மிக்க, மாசுறுமாயைதன்னில்வருசகமரிதுசாலத், தேசுறுசதுரச்சிந்தைச் செலவனுக்
குணரற்பாற்றேற், பேசுறுநாங்களெல்லாம்பேதையரென்னச்சொன்னார்................*

(இ-ள்.) ஈசனேபடைத்ததாகி - தேவநிர்மாணமாய்—எண்ணிறீ - அளவற்றதிமையைச் (செய்ய)—முயற்சிமிக்க - உற்சாகமிகுந்த—மாசுறுமாயைதன்னில்- குற்றம்பொருந்தியசம்சாரத்தில்—வருசகமரிது - வராநின்றசகமரியதாம் — சால- மிகவும் — தேசுறு - பிரகாசம்

பொருந்திய—சதுரச்சிந்தை- சிறந்தவயிராக்கியசித்தமுள்ள—செல்வனுக்கு-இராமனுக்கு—உணரற்பாற்றேல் - (அச்சம்சாமிஷ்டமென்) றுணரும்பகுதியதாயின்—பேசுறும்- (நயக்குமிஷ்டத்தைக்கொடுக்குமென்று) சொல்லப்படும்—நாங்களெல்லாம் - (அவரால்வெறுக்கப்பட்டவைகளைவிரும்புதலின்றேவரிஷிகள்முதலிய) யாங்களனைவரும்—பேதையரென்ன - அறிவில்லாதவர்களென்று—சொன்னார் - (அச்சித்தர்கள்) சொன்னார்கள். எ-று. [ப-ம்.] மாயை, பிரமசந்நிதியிலாரோபித்ததென்பார், ஈசனேபடைத்ததாகியென்றும், சகரக்ஷகரானவிராமனிச்சயமிப்படியிருக்க, போதாயனர்முதலியமுனிகளுலகாசாரத்தை வற்புறுத்திச்சொல்லியதறியாமையென்பார், நாங்களெல்லாம்பேதையரென்னச்சொன்னாரென்றுங்கூறினார். (இ-ம்) மாயாரகிதரானவிராமருக்கும்மாயாசகிதரானயாங்களறிவிற்சமானமாகேமென்பதாம் (௬)

(அ-கை.) இராமனுணர்த்தவனுபவமேநிச்சயமெனல். (கவி) ஈதவருரைத்தபின்னரிராமனையினிதுநோக்கிக்,காதிசேயுரைப்பானீயேகளங்கமில்புந்தியாலே,தீதறவனைத்துங்கண்டாய்தெளிவுறப்பிறிதொன்றில்லைப், போதமார்சுகனுநீயும்புந்தியாலொப்பீரன்றே ....*

(இ-ள்.) ஈதவருரைத்தபின்னர் - இப்படிஅச்சித்தர் (கணங்கள்) சொல்லியபின்பு—இராமனையினிதுநோக்கி - இராகவனையன்பாகப்பார்த்து—காதிசேயுரைப்பான் - விசுவாமித்திரர் சொல்லுவார்—நீயே - நீசுயமாகவே —களங்கமில்புந்தியால் - குற்றமற்றவறிவினால் — தீதறவனைத்துங்கண்டாய் - குற்றமறயாவையுமறிந்தாய்—தெளிவுற - (இனி)தெளிவாயறிய(வேண்டியபொருள்)—பிறிதொன்றில்லை- வேறொன்றில்லை—போதமார் - ஞானநிறைந்த—சுகனும்- சுகமுனியும்—நீயும் - நீரும்—புந்தியாலொப்பீர்-அறிவினாற்சமானமாவீர்கள். எ-று. (இ-ம்) சுயமாயுண்டானநிராசையேவாத்மானுபவத்தைக்கொடுக்குமென்பதாம் ....(௭)

(அ-கை.) சுகமுனியினனுபவத்தைவிசாரித்தல். (கவி) இகலறவுணர்வுற்றோருமிளைப்பறநயப்பரென்று, மகமுனியுரைப்பக்கேட்டவள்ளலுமுரைப்பானையா, வகமறுமுணர்வுண்டாயுமாறுதன்முன்னமின்றிச், சுகமுறப்பின்னுண்டானதெங்ஙனஞ்சுகனுக்கென்றான்.*

(இ-ள்.) இகலறவுணர்வுற்றோரும் - எதிரறஞானத்தைப்பெற்றவர்களும்— இளைப்பறநயப்பரென்று - விஸ்ராந்தியையடையவிரும்புவார்களென்று — மகமுனியுரைப்ப - யாகத்துக்குரிய (விசுவாமித்திர) முனிசொல்ல—கேட்ட - (இதைக்) கேட்ட — வள்ளலுமுரைப்பான்- இராமருஞ்சொல்வார்— ஐயா - (என்) ஐயனே—சுகனுக்கு - சுகமுனிக்கு— அகமறுமுணர்வுண்டாயும் - அகம்பாவமற்றவறிவுண்டாயிருந்தும்—ஆறுதல் - விஸ்ராந்தியானது— முன்னமின்றி - முன்னில்லாமல்—சுகமுற - இன்பமுற—பின்னுண்டானதெங்ஙனம் - பின்புண்டானதெப்படி—என்றான் - என்றுகேட்டார். எ-று. [ப-ம்.] அபரஞானம்வந்தும், அதிலமைதிபெறுமனுபவமானபரஞானம்வேண்டுமென்பார், இகலறவுணர்வுற்றோருமிளைப்பறநயப்பரென்றார். (இ-ம்.) பரமசுகத்தைப்பெறவிரும்பினதாம்.................... (௮)

(அ-கை.) சுகமுனியினனுபவத்தையுரைத்தல். (கவி) என்னலுமுனிவன்சொல்வானெழுபிறப்பறுக்குஞானந், துன்னியசுகனுநின்போற்றொல்லுலகியல்பைநாடி, மன்னியவிவேகமுண்டாய்மாசறுமுணர்வுபெற்று, மந்நிலையையமாகியாறுதலற்றானன்றே .. ..*

(இ-ள்.) என்னலும் - (இப்படி) யென் (றிராமன்) கேட்கவும் — முனிவன்சொல்வான்- (விசுவாமித்திர) முனிசொல்லுவார்—எழுபிறப்பறுக்குஞானம் - எழ்பவங்களைக்கெடுக்கின்றஞானமானது— துன்னிய - நிறைந்த—சுகனும் - சுகப்பிரமரிஷியும்—நின்போல் - உன்னைப்போல்—தொல்லுலகியல்பைநாடி - முன்னுள்ளசகசுபாவத்தைவிசாரித்து—மன்னியவிவேகமுண்டாய் - நிலைபெற்றவிவேகமுள்ளவராய்—மாசறுமுணர்வுபெற்றும் - களங்கமற்றஞானத்தையடைந்தும்—அந்நிலையையமாகி-அந்நிச்சயத்திற்சந்தேகமுள்ளவராய் — ஆறுதலற்றான்- விஸ்ராந்தியடைந்திலன். எ-று. (இ-ம்.) களங்கமற்றஞானத்தையடைந்தும் அநித்தியமாகத்தள்ளப்பட்டவஸ்துசேடங்கணீங்காதவதனால்விஸ்ராந்தியுண்டாகவில்லையென்பதாம் .. .... (௯)

(அ-கை.) மாயாஸ்வரூபம்வினவுதல். (கவி) விடலருமசைவுவிட்டு விடயத்தின்மீண்டநெஞ்சன், வடவரையுறைபுந்தாதைமருங்குறவெய்தியிந்த, விடருறுமாயைவந்ததெங்ஙனமிறப்பதெங்ஙன், றொடர்பிலாருடையதெம்மட்டென்றிது தோன்றிற்றென்றான்.. *

(இ-ள்.) விடலருமசைவுவிட்டு - விடுதற்கரியசஞ்சலத்தைநீக்கி — விடயத்தின் - விடயபோகத்தி (னின்றும்)—மீண்டநெஞ்சன் - திரும்பியமனதையுடையசுகரும்—வடவரையுறைபுந்தாதை - மகாமேருவில்வசிக்கின்றபிதாவின் — மருங்குறவெய்தி - பக்கத்திலடைந்து— இந்தவிடருறுமாயை- இத்துக்கமயமானமாயையானது—வந்ததெங்ஙனம்-வந்ததெப்படி— இறப்பதெங்ஙன் - நசிப்பதெப்படி—தொடர்பில் - தொடர்ச்சியில் —ஆருடையது - ஆரையு

டையது—எம்மட்டு - எவ்வளவுள்ளது — என்றிதுதோன்றிற்றென்றான் - எட்போதீதுண்டா யிற்றென்றுகேட்டார். எ - று. இவன்சித்தஞ்சாபல்யமற்றசாய் மிக்கபங்கமுள்ளபோகங்களி னின்றும், மழைக்காலினின்றுஞ்சாதகங்கள்போலநிவிர்த்தித்ததென்னும், சுலோகார்த்தத்தை விடயத்தின்மீண்டநெஞ்சனென்னும்பதத்திலடக்கினார். [ப-ம்.] மாயை சீவனையுடையதா, அல்லதுவீசனையுடையதாவென்பாராருடையதென்றார் (இ-ம்) மாயையினதுஉற்பத்திஸ்திதி லயத்தைவிசாரித்ததாம் ....(௰)

(அ-கை.) அநுபவம் விளங்காமை. (கவி.) அன்னவன் கேட்டவெல்லா மறிவுறவு ரைத்தபோது, முன்னநானுணர்ந்தவாறேமொழிந்தனையெனவச்சொல்லா, னன்னி லைபெறுமை கண்டு நல்லுணர் வெனக்குத்தோன்றா, மன்னவன் சனகனென்பான் வழுவறுமுணர்வின்மிக்கோன் .... *

(இ-ள்.) அன்னவன் - அந்தச்சுகரானவர்—கேட்டவெல்லாம் - வினவினவனைத்தும்— அறிவுற- (அவ)னறிவிற்பொருந்த —உரைத்தபோது - சொல்லியசமயத்தில் — முன்னநானு ணர்ந்தவாறே - முன்பியானறிந்த பிரகாரமே — மொழிந்தனையென - சொன்னீரென்றுசொ ல்ல—அச்சொல்லால் - அவ்வசனத்தினால் — நன்னிலைபெறுமைகண்டு - நன்னிச்சயமடையா மையைப்பார்த்து—நல்லுணர்வு - சுகபோதமானது—எனக்குத்தோன்றா- எனக்குத்தெரியா து—மன்னவன் - அரசனாகிய—சனகனென்பான் - சனகனென்பவர்—வழுவறும்- குற்றமற்ற —உணர்வின்மிக்கோன்-ஞானத்திலதிகமாயிருந்தவன். எ-று. [ப-ம்] ஆசாரியரறிவில்வைத்துஉபதே சிக்குமதிதானுபவத்தி லமையவில்லையென்பார், நானுணர்ந்தவாறே மொழிந்தனையென்றும், சீடனறிதலைவிட் டனுபவத்திலழுந்தவில்லை யென்றறிந்தாரென்பார், அச்சொல்லானன்னிலை பெறுமைகண்டென்றுங் கூறினார். (இ-ம்) ஆசாரியரறிவிப்ப தெல்லாமஃதின்றியவனுபூதியெ னக்கொள்கவேண்டுமென்பதாம் ....(௰௧)

(அ-கை.) பக்குவசோதனை. (கவி.) ஆயவன்றனையேகேட்கென்றருளொடுதாதையேவப், போயினன்சனகன்வாழும்பொன்மனைவாயிற்சேர்ந்தான், றூயவன்வரவுகேட்டுச்சோதி ப்பான்கருதிமன்ன, னேயினனில்லைநாளே ழிருந்தனன்விகற்பமில்லோன் .... *

(இ-ள்)ஆயவன்றனையேகேட்கென்று-அச்சனகனையேகேட்கக்கடவாயென்று—அருளொடு தாதையேவ-கிருபையுடன்பிதாவானவரனுப்ப—போயினன் - (மகாமேருவினின்றுபூமியிற்) சென்று—சனகன்வாழும்பொன்மனை- சனகராசன்வாழாநின்றசுவர்ணமயமானவீட்டினது— வாயிற்சேர்ந்தான் - வாயலிலடைந்தான்—தூயவன்வரவுகேட்டு - மேலானசுகப்பிரமரிஷியி னுடையவரவைத்(தூதர்களாற்) கேட்டு—சோதிப்பான்கருதி-சோதிக்கும்பொருட்டுநினைத்து —மன்னன் - அரசன்—எயினனில்லை-(காணச்)சென்றாரில்லை— விகற்பமில்லோன் - விகற்பமி ன்றியசுகமுனியானவர்—நாளேழிருந்தனன் - ஏழுநாளிருந்தார். எ-று. (இ-ம்) சுகமுனிவரது சாந்தியாதி குணங்களைச் சோதிக்கும்பொருட்டு முன்வாயலிற்றடைசெய்ததாம் ....(௰௨)

(அ-கை.) இ-து. (கவி) மற்றுநா ளேழும்வேறோரிடத்துற வைத்தபின்னர், பொற்றிர ளழகாரந்தப் புரத்திடைநாளேழ்வைத்து, சிற்றிடைமகளிர்போகஞ்சிறந்தவூணளிப்பத் துய்த்தான், குற்றமுங்குணமுநாடான் குளிர்நிறைமதியமொத்தான் ....*

(இ-ள்.) மற்றுநாளேழும் - பின்னுமேழுநாள்— வேறோரிடத்துறவைத்தபின்னர் - மற் றோரிடத்திலிருக்கும்படி வைத்தபின்பு—பொற்றிரளழகார் - மிகுந்தபொன்னினாற் செய்யப் பட்டழகுநிறைந்த—அந்தப்புரத்திடை - அந்தப்புரத்தில்—நாளேழ்வைத்து-ஏழுநாளிருத்தி —சிற்றிடைமகளிர்-சிறியவிடையையுடையமடவார்களால்—போகம்(சந்தனபுஷ்பமுதலான) போகங்களையும்—சிறந்தவூண் - அறுசுவையுண்டிகளையும்— அளிப்ப - கொடுப்பிக்க—துய்த் தான் - புசித்தான்—குளிர்நிறைமதியம் - குளிர்ந்தபூர்ணச்சந்திரனுக்கு—ஒத்தான் - சமான முள்ளசுகமுனியானவர்—குற்றமும் - (இவ்விடயங்களின்) குற்றத்தையும்—குணமும் - குணத் தையும்—நாடான் - ஆராய்ந்திலன். எ-று. (இ-ம்) இடையேழுநாளோர் வாயலிற்றடுத்தலாற், குரோதசோதனையையும், கடையேழுநாளந்தப் புரத்திற் போகங்களைக் கொடுத்தலாற் காம சோதனையையுஞ், செய்ததாம் ....(௰௫)

(அ-கை.) சுகதுக்கங்களிலழுந்தாமை.(கவி.) மன்னவன்சனகன்றந்தபோகத்தின்மகிழ்ச் சியாவு, மன்னவன்முன்னஞ்செய்த வவமதித்துன்பமியாவு, மின்னவன் மனதைச்சற்று மிழுத்திலவிளமென்றென்றல், பொன்னசலத்தின்மிக்கப் பொருப்பினையிழுக்கவற்றோ *

(இ-ள்.) மன்னவன்-அரசனாகிய—சனகன்றந்த-சனகராற்கொடுக்கப்பட்ட—போகத்தின்- போகங்களின்—மகிழ்ச்சியாவும் - சுகமனைத்தும்—அன்னவன் - அவன்— முன்னஞ்செய்த-

முன்செய்யப்பட்ட—அவமதித்துன்பமியாவும்- அவமானமான துக்கமனைத்தும்—இன்னவய் மனதை - இச்சுகமுனியின துமனதை—சற்றுமிழுத்தில - எவ்வளவேனுமசைக்கவில்லை—இள மென்றென்றல்-இளமையுமென்மையுமுள்ள தென்றலான து—பொய்வசலத்தில்-அழகியமலை களில்—மிக்க - பெரிதாகிய—பொருப்பினை - மேருவை—இழுக்கவற்றே-அசைக்குந்திறத்த தோ. எ-று. (இ-ம்) மனமானது போகாபோகங்களிற்சலியாமற்சமதிருஷ்டியிலிருந்ததாம். ௰௪

(அ-கை.) சந்நித்துவினவுதல். (கவி) ஆங்கவனிலைமைநோக்கியடிபணித்தரசன்போற்றித், தாங்குலகத்தின்செய்கை தவிர்ந்துபேறனைத்தும்பெற்றோ, யீங்குறும்பொருளேதென்ன வெங்ஙனமாயைதோன்றிற், றோங்கியதெங்ஙன்போவதுள்ளவாறுரைசெய்யென்றான் *

(இ-ள்.) ஆங்கவனிலைமைநோக்கி-அவ்விடத்து அவரகமகிழ்ச்சிநிலையைப்பார்த்து—அரசன்-சனகராசன்—அடிபணிந்து-நமஸ்கரித்து—போற்றி-துதித்து—தாங்குலகத்தின்செய்கை-தாங்காநின்றசகவியாபாரத்தை—தவிர்ந்து-நீங்கி—பேறனைத்தும்பெற்றோய்-இலாபமனைத்தையு மடைந்தசுகப்பிரமரிஷியே—ஈங்குறும்பொருள்- இவ்விடத்தெழுந்தருளியகாரியம்—ஏதென்ன-என்னவென்றுகேட்க— எங்ஙனமாயைதோன்றிற்று - எப்படிமாயையுண்டாயிற்று— எங்ஙனோங்கியது - எப்படிவளர்ந்தது—எங்ஙனம்போவது - எப்படிநசிக்கும்—உள்ளவாறு- உள்ள பிரகாரம்—உரைசெய்யென்றான் - (குருவே) யருளுமென்றுசுகமுனிகேட்டார். எ-று. (இ-ம்) ஸ்வரூபப் பிரத்தியக்ஷம் விளங்கும் பொருட்டு மாயா வுற்பத்தி ஸ்திதிலயந் தெரிய வேண்டு மென்பதாம்...(௰௫)

(அ-கை.) சனகர்வாக்கியத்தை யொப்புக்கொள்ளுதல். (கவி) மெய்ம்முறைமுனிவன்கேட்ப வேந்தனும்வியாசன்சொன்ன, வம்முறையுரைத்தலோடு மறிஞனும் விவேகத்தான்முன், னிம்முறையறிந்தேனீயுமெந்தையினதுவேசொன்னீர், மொய்ம்முறைநூல்களெல்லா மொழிபொருளொன்றேயென்றார் .... *

(இ-ள்.) மெய்ம்முறை - உண்மை (யாகக்கேட்கவேண்டிய) கிரமத்தை—முனிவன்கேட்ப- சுகப்பிரமரிஷிகேட்க — வேந்தனும் - சனகராசனும் — வியாசன்சொன்ன - வியாசர் (முன்)சொல்லிய—அம்முறையுரைத்தலோடும் - அவ்வண்ணஞ் சொன்னமாத்திரத்தில்—அறிஞனும் - ஞானவானாகியசுகரும்—விவேகத்தால் - (சுய) விவேகத்தினால்—முன்- முன்னமே—இம்முறை - இவ்வண்ணம்—அறிந்தேன் - தெரிந்தேன்—நீயும்-நீரும்—எந்தையின்-என்பிதாவைப்போல—அதுவேசொன்னீர்-அவ்வருத்தத்தையேசொன்னீர்—மொய்ம்முறைநூல்களெல்லாம் - நிறைந்த(வேதாந்த) சாஸ்திரங்களனைத்தும் — மொழிபொருளொன்றேயென்றார்-சொல்லப்பட்டவாக்கியார்த் தங்களேகமேயென்றுசொன்னார். எ-று. (இ-ம்) மகாவாக்கியார்த் தங்கள்அபேதமென்றறிந்ததாம்...(௰௬)

(அ-கை) சங்கற்பமயமானமாயாரூபத்தைச்சுருதிப்பிரமாணமாயறிந்தும்-வியாசர் சனகர்அப்படியேபோதித்தும்-தனக்குவிஸ்ராந்திவாராததினாற்றனதனுபவத்தைச்சொல்லி-மேலதைப்பெற்றுக்கொள்ளும்பொருட்டுவினவினசுகருக்குஅப்பிரகாரமே விஸ்ராந்தியடையும்பொருட்டு அபரோக்ஷானுபவத்தை யரச னுபதேசித்தல் கவி. (வேறு.) தன்னுள்விகற்பித்தெழுந்தவிகற்பம்போகிற்றவிர்ந்திடுமாயையிற்பய னேர்சற்றுமில்லை, யின்னவகைத்தோருண்மை யியம்பவேண்டு மியாவர்மயக்கமுமாற்றுமிறைவவென்ன, மன்னனதற்குரைசெய்வான்முனிவநீயேமதித்துணர்ந்தும் பிதாவுரைக்கமறுத்துங்கேட்டா, யன்னிலையே நிச்சயமிங்ககண்டஞான வாகாயபுருடனுள னயலொன்றில்லை... *

(இ-ள்,) தன்னுள் - ஆத்மாவில்— விகற்பித்தெழுந்த - (ஸ்புரணரூபமாய்) வேறுபட்டுதித்த—விகற்பம் - (மாயா) வேற்றுமையானது—போகில் - (உதித்தவிடத்) தொடுங்குமாயின்—தவிர்ந்திடும் - கெடாநின்ற—மாயையில் - மாயையினிடத்தில்—பயனேர்சற்றுமில்லை-பிரயோசனமோரணுவளவாகினுங்கிடையாது—இன்னவகைத்து- அந்நிலைத்தன்மைத்து—ஒருண்மை - ஒப்பற்றநிச்சயமான (வாத்மஸ்வரூபத்தை)—இயம்பவேண்டும் - சொல்லவேண்டும் —இயாவர்மயக்கமுமாற்றும் - சகலருடையமயக்கங்களையுங்கெடுக்கின்ற— இறைவவென்ன-குருவேயென்றுகேட்க—மன்னனதற்குரைசெய்வான் - அதற்கரசன்சொல்லுவான்—முனிவ-சுகரே—நீயேமதித்துணர்ந்தும் - நீரேவாராயுத்தறிந்தும்—பிதாவுரைக்க-பிதாவாகியவியாசமுனிவர்சொல்ல—மறுத்துங்கேட்டாய் - தடுத்துங்கேட்டாய்—அந்நிலையேநிச்சயம் - அந்தநிலையேசத்தியம்—(ஆனாலும்) இங்கு - இவ்விடத்தில்—அகண்ட - பரிபூரணமான— ஞானவாகாய - சிதாகாயமேசாக்ஷாத்கர்த்த—புருடனுளன் - ஆத்மாவேயுள்ளது—அயலொன்றில்லை-வேறொருவஸ்துவுமில்லை. எ-று. [ப-ம்] ஆத்மவிதிரித்தமாகத்தோற்றப்பட்ட சகல வடிவங்

சனும், அத்துவிதாத்மசாக்ஷாத்காரமாய்ப் பிரகாசிக்கின்றதென்பார், ஆகாயபுருடனுள னைய லொன்றில்லையென்றார். (இ-ம்) ஆத்மஸ்புரணத்தினுதித்ததிரிசயத்தை, ஆத்மசாக்ஷாத்காரமா கவறியின், விஸ்ராந்தியுண்டாமென் றுபதேசித்ததாம் ....(யஎ)

(அ-கை.) இ-து. (கவி.) அவ்வறிவுசங்கற்பத்தாற் கட்டுண்ணுமதுவிடில் வீடுறுமந் தவறிவுதன்னைச், செவ்விதினீயறிந்தனையாற் போகத்திச்சைச்செகக்காட்சி யனைத்தி னையுந்தீர்தியானு, யெவ்வமறநிறைமனத்தாலடையற்பாலயாவுமடைந்தாய்காட்சிக் கெட்டாதொன்றிற், கவ்வையற வடைகின்றாய் முத்தனானாய்க் கருத்திலுறு மயக்க மெனுங்கவலைதீர்வாய்.. *

(இ-ள்.) அவ்வறிவு - அந்தஞானமானது—சங்கற்பத்தாற்கட்டுண்ணும்- (தனது)சங்கற் பத்தினாற்பந்தப்படும்—அதுவிடில்வீடுறும் - அச்சங்கற்பநீங்கினாற் பந்தநிவிர்த்தியாம்—அந் தவறிவுதன்னை - அப்படிப்பட்ட(வாத்ம)ஞானத்தை— செவ்விதினீயறிந்தனையால் - செவ்வை யாகநீ(யிப்போ) தறிந்தாயாதலால்—போகத்திச்சை- போகங்களிடத்தாசையையும்—செகக் காட்சியனைத்தினையும் - திரிசயதிருஷ்டியாவையும்—தீர்தியானாய்- விட்டுநீங்கினாய்—எவ்வமற- துன்பநீங்க—நிறைமனத்தால் - பூரணமனதினால்—அடையற்பால-பெறத்தக்க— யாவுமடை ந்தாய் - சர்வத்தையும்(பிரமமயமாகப்)பெற்றாய்—காட்சிக்கெட்டாதொன்றில் - காண்பதற்க கோசரமாகிய வஸ்துவினிடத்தில்—கவ்வையறவடைகின்றாய்- இரண்டறக்கலக்கின்றாய் —முத் தனானாய் - (சீவன்)முத்தனானாய்—கருத்திலுறு - மனதிலுண்டான—மயக்கமெனும் - (மாயா) மயக்கமென்கின்ற—கவலைதீர்வாய்- கவலை(யொன்றினையும்)விடுவாய். எ-று. (இ-ம்) யாதொன் று தனது விஸ்மரணத்தான் மறைபட்டதுபோலவு மதன்விடுதியில் வெளிபட்டதுபோலவும் விளங்குகின்றதோ அச்சைதன்னியமேசர்வமாய் விளங்குகின்றதென் றறிந்தாற்சந்தேகநீங்கு மென்பதாம் ....(யஅ)

(அ-கை.) விஸ்ராந்தியடைதல். (கவி.) சனகனெனுமன்னவர்கோ னிவ்வாறோதத்த ன்னிலையாம்பரம்பொருளிற்றளர்ச்சியாறி, யனகசுகன்பயநீங்கிசோகமாறியயர்வக ன்றுசெயலடங்கியையந்தீர்ந்து, கனகவரையேறிநிருவிகற்பமான கலங்காதசமாதி யிற்சிற்ககனத்தூற்றான், றினகரனைச்செறிவருடமீராஞ்நூற்றிற்றிரியொடுநெய்ம் மாண்டவிந்ததீபம்போன்றே.. *

(இ-ள்.) சனகனெனும் - சனகனென்கின்ற நாமத்தையுடைய—மன்னவர்கோன்-அர சர்க்கரசன்— இவ்வாறோத - இந்தப்பிரகாரமுபதேசிக்க — தன்னிலையாம் பரம்பொருளில்- தனக்குத்தானே யிடமாயிருக்கின்ற பரவஸ்துவில் — தளர்ச்சியாறி - விஸ்ராந்தியடைந்து— அனகசுகன் - களங்கமற்றசுகப்பிரமரிஷியானவர்—பயநீங்கி -(சநந)வச்சந்தவிர்ந்து—சோக மாறி- (மரண)த்துன்பநீங்கி—அயர்வகன்று- (மன)வருத்தநீங்கி—செயலடங்கி-(விசாரிக்குந்) தொழிலொழிந்து— ஐயந்தீர்ந்து -(அனுபவத்திற்) சந்தேகநீங்கி — கனகவரையேறி-மகம் மேருவினுச்சியிற்சென்று — நிருவிகற்பமான - நிருவிகற்பமாகிய — கலங்காத சமாதியில்- நிச்சலமானசமாதியில்—தினகரனைச்செறி - சூரியனைக்கொண்டகணக்கினால்— வருடமீராஞ் நூற்றில் - ஆயிரம்வருடத்தில்— திரியொடுநெய்ம்மாண்டு - திரியுநெய்யுஞ்சுவறி — அவிந்த- (வியோமாக்கினியி) னசித்த— தீபம்போன்று - விளக்குக்கொப்பாக — சிற்ககனத்தூற்றான்- ஞானாகாசத்திற்கலந்தான்' எ-று. (இ-ம்)சீவன்முத்தித்தன்மையில்விதேகமுத்தியடைந்ததாம்.

(அ-கை.) விசுவாமித்திரமுனியனுபவவிலக்கணமுரைத்தல். (கவி) சிந்தனையாங்கள ங்கமறச்சுத்தனாகித்திரைக்கடலிற் செறிந்தொன்றுந் திவலைபோல, வந்துறுவாதனை போய்தற் பதத்தொன்றுஞ்ன்மாயா மோகந்தீர்ந்துவருத்தந்தீர்ந்தா, னந்தநெறி யுனக்குமாமறிவதெல்லா மறிந்தமனத்திற்குரிய வடைவேதென்னிற், சந்ததமுமகி ழ்ச்சிசெறி போகமெல்லாந்தனதென்னுஞ் சுதந்தரத்தைத் தவிர்ந்து நிற்றல்...... *

(இ-ள்.) சிந்தனையாங்களங்கமற - சிந்தனையாகிய குற்றநீங்க — சுத்தனாகி - பரிசுத்த னாகி—திரைகடலில் - அலைகளையுடையசமுத்திரத்தில் — செறிந்தொன்றும் - சேர்ந்தொன்று கின்ற—திவலைபோல- துளிகளைப்போல—வந்துறுவாதனை- (தன்னிடத்) துண்டானஸ்புரணம் —போய்- (தன்னிற்) கரைந்து — தற்பதத்தொன்றானான் - பிரமத்திலிரண்டறக் கலந்தான்— மாயாமோகந்தீர்ந்து - மாயா(சம்பந்தமான)மோகம்விட்டு—வருத்தந்தீர்ந்தான்- விஸ்ராந்தி யடைந்தான்—அந்தநெறி - அம்மார்க்கம்—உனக்குமாம் - நினக்குமாம்—அறிவதெல்லாம்- அறியத்தக்கசகலமும்— அறிந்தமனத்திற்கு - அறிந்திருக்கின்றமனதுக்கு — உரியவடைவே தென்னில் - உரிமையானக்கிரமம்யாதென்றால்—சந்ததமும் - சதாகாலமும்— மகிழ்ச்சிசெறி போகமெல்லாம் - களிப்புமிகுந்தபோகங்களனைத்தும் — தனதென்னும் - எனதென்கின்ற—

சுதந்தரத்தை - சுதந்தர (பாவ) த்தை—தவிர்ந்துநிற்றல் - விட்டிருக்கையாம். எ-று. (இ-ம்.) அநுபவிக்குயானெனதென்னு மகம்பாவமற்றிருக்கவேண்டுமென்பதாம் .... (உ௰)

(அ-கை.) பந்தமுத்தியினிலக்கணங்கூறல். (கவி.) போகமுறுபாவனையாற் பொரு
ளல்லாதபொருளிலெழுபந்தநிலை பொருந்தவன்பாகுஞ், சோகமுறுபாவனைதான்சா
ந்தமாகிற்றுயர்பந்தமிகத்தோய்ந்து துலைந்துபோகு, மிராகவனேவாதனையினேர்
மைவீடாமிகப்பொருளின்வாதனையினிறுகல்பந்தஞ்,சேகறவென்றவர்க்கேதுவின்
றிப்போகத்திரள் வெறுப்பாமேலவரோசீவன்முத்தர் .... *

(இ-ள்.) போகமுறு- (விடய)போகத்திற்பொருந்திய—பாவனையால் - பாவனையினால்—பொருளல்லாதபொருளில்- அநாத்மவஸ்துவில்—எழுபந்தம்-உண்டாகாநின்றபந்தமானது—நிலைபொருந்த - நிலைபெற—வன்பாம்-வலிமையாகும்—சோகமுறு-துன்பமிருந்த—பாவனைதான் - பாவனையானது—சாந்தமாகில்- நீங்கினால்—துயர்பந்தமிகத்தோய்ந்து-துன்பமயமானபந்தமானது மிகவுங்குறைந்து—துலைந்துபோகும்- நாசமடையும்—இராகவனே-இராமா—வாதனையினேர்மைவீடாம் - வாசனாக்ஷயமேமோட்சமாம் — இகம் - இகத்திலுள்ள—பொருளின்- (விடய)வஸ்துக்களின்—வாதனையின்- வாசனையினால்—இறுகல்பந்தம்-கெட்டிப்படுவதேபந்தமாம்—சேகற- (வாசனையின்)வலிமையற—வென்றவர்க்கு-செயித்தவர்களுக்கு—ஏதுவின்றி - (தபசுவிரதமுதலிய) காரணமின்றி — போகத்திரள் - போகசமூகங்களில்—வெறுப்பாம் - வெறுப்பாகின்ற—மேலவரோ-மகான்களே—சீவன்முத்தர்-சீவன்முத்த (ரென்றுகௌசிகர்சொன்னார்.) எ-று.(இ-ம்) வாசனையுதயலயமே பந்தம்வீடென்பதாம்...... (உக)

(அ-கை.) அருளிறையறிவித்தல். (கவி) இராமன்மனத்துணர்பொருளேபொருள்
வேறில்லையெனவுயர்ந்தோர்வாக்கினாலியம்பக்கேட்டு, மாமனத்தினிளைப்பாறியை
யநீங்குமகத்தானவிவனுக்குமதித்துச்சொல்வா, னேமமுறுகாலமூன்றறிந்தோ
னாகியிவ்வுலககுருவாகி யெல்லாநோக்கி, நாமமுறுவனைத்துக்குஞ் சான்றாய்நின்ற
நல்வசிட்டனெனச்சபையினவின்றபின்னர் .... *

(இ-ள்,) உயர்ந்தோர்வாக்கினால்- மகான்கள்வசனத்தினால்—இராமன்- ஸ்ரீராகவன்—மனத்துணர் - மனதினாற் (றீர்ப்பா) யறிந்த— பொருளேபொருள் - வஸ்துவேவஸ்துவாம்—வேறில்லையென - வேறொரு (பொருளில்லை) யென்று—இயம்பக்கேட்டு - வசனிக்கக்கேட்டு—மாமனத்தினிளைப்பாறி - மகாமனதில்விஸ்ராந்தியடைந்து — ஐயநீங்கும் - சந்தேகந்தீராநின்ற—மகத்தானவிவனுக்கு - மகாத்மாவாயிருக்கின்றவிந்தவிராமனுக்கு — மதித்துச்சொல்வான் - வரையறுத்துச்சொல்லுபவன்—ஏமமுறு - மயக்கமுள்ள — காலமூன்றறிந்தோனாகி-மூன்றுகாலங்களையுந்தெளிந்தறிந்தவராயும்— இவ்வுலககுருவாகி - இப்பூலோகத்தின் (கண்ணுள்ளமானிடர்களுக்) காசாரியராகியும்—எல்லாநோக்கி-சர்வஞ்ஞராகியும்—நாமமுறுவனைத்துக்கும் - நாமரூபமுள்ளசகலத்திற்கும்—சான்றாய்நின்ற - சாக்ஷியாகியுமிருக்கின்ற — நல்வசிட்டனென - நல்லவசிட்டனேயென று—சபையில் - (அரச)னவையில்—நவின்றபின்னர் -(விசுவாமித்திரர்) சொன்னபின். எ - று. (இ-ம்.) சீடனறிந்தவறிவினாலவனமைதிபிறந் தனுபூதியடையும்பொருட்டறிவிக்கத்தக்கவாசாரியனாயறிவித்ததாம் .... (உஉ)

(அகை.) பக்குவர்க்குபதேசிக்கவேண்டுமெனல். (கவி) நல்வசிட்டன்முகநோக்கி
யுணர்தியோமுன்னாமிருவர்பகைநீங்கநல்லோரெல்லாந், தொல்வினைபோய் முத்தி
பெறக்கமலவேதா சொன்னதனிஞானத்தின் றொகுதியெல்லாங், கல்விமிகுமிராம
னுக்குச்செப்பல்வேண்டுங்காதறீர்மாணக்கன்கருத்திற்சொல்லுஞ்,செல்வவுபதேச
மேதனுவேஞானச்செழுநூலின்பொருளாமி துசிறப்புமீதே .... *

(இ - ள்.) நல்வசிட்டன்முகநோக்கி - (விசுவாமித்திரமுனி) நன்மையான வசிட்டருடையவதனத்தைப்பார்த்து — உணர்தியோ - ஞாபகமிருக்கின்றதா — முன்னாமிருவர்பகைநீங்க - முன்னநம்மிருவருடையவிரோதந்தீரவும்—நல்லோரெல்லாம் - நன்மார்க்கமுள்ளசகலரும்—தொல்வினைபோய்-பழைய(சஞ்சிதம்) விடுபட்டு—முத்திபெற-மோட்சமடையவும்—கமலவேதா - தாமரையில்வசிக்கும்பிரமாவினால்—சொன்ன- (ஆத்மசாக்ஷாத்காரம்விளங்கும்படி.) யனுக்கிரகித்த—தனிஞானத்தின் - ஒப்பற்றஞானத்தின்—தொகுதியெல்லாம் - கதைகளனைத்தையும்—கல்விமிகுமிராமனுக்கு - அறிவுமிகுத்தவிராகவனுக்கு — செப்பல்வேண்டும்-போதிக்கவேண்டும்—காதறீர்மாணக்கன் - ஆசைநீங்கியசீடனுடைய—கருத்தில் - மனதில்—சொல்லுஞ்செல்வவுபதேசம் - அனுக்கிரகிக்கின்றபிரமவுபதேசம் — ஏது - யாதொன்றோ—அதுவே- அவ்வுபதேசமே—செழும் - செழுமையாகிய—ஞானம்- ஞானத்தையுணர்த்தும்—

நூலின் - சாத்திரத்தின் — பொருளுமிது - அருத்தமுமிது— சிறப்புமீதே - சிறப்புமிதுவே (யென்றுசொன்னார்) எ-று. (இ-ம்.) ஆசாரியருபதேசம்பெற் றனுபவமான மார்க்கத்தைச் சீடனுக்குபதேசிக்கவேண்டுமென்பதாம.. (உ௩)

(அ-கை.) அபக்குவனுக்குபதேசிக்கலாகாதெனல். (கவி) காதல்செறிபொல்லா
மாணக்கனுக்குக்கற்பித்தவுபதேசங் கருநாய்த்தோலுண், மேதகுபாலெனவசுத்த
மேவுமென் றுயிருகாதிசேட்பலவும்விளம்பக்கேட்டு, தீதறுநாரதன்வேத வியாத
னுதித்திரண்முனிவர்நன் றிதெனச்சிறப்புச்செய்தார், காதிபுதல்வனைநோக்கிக் கம
லத்தோனேர்கமலமுனிபுதல்வனிவைகழறலுற்றான்...........................*

(இ-ள்.) காதல்செறி - ஆசைமிகுந்த—பொல்லாமாணக்கனுக்கு-துஷ்டசீடனுக்கு—கற்பித்தவுபதேசம் - போதித்தவுபதேசமானது—கருநாய்த்தோலுள் -கரியசுணங்கன் சருமத்துள்—மேதகுபாலென - (வைக்கின்ற) மேலானபாலைப்போல—அசுத்தமேவுமென் று-சுத்தமாகாதென்று—யிருகாதிசேய் - மேலானவிசுவாமித்திரர் — பலவும்விளம்ப - நாநாவிதங்களாலுஞ்சொல்ல—தீதறுநாரதன் - தீமைநீங்கியநாரதரும்—வேதவியாதனுதி- வேதவியாசர்முதலான—திரண்முனிவர் - திரண்டமுனிவர்களும்—கேட்டு - (இதைக்) கேட்டு—இது- இதுவே—நன்றென - நல்லதென்று—சிறப்புச்செய்தார்- (அவ்வசனத்தையே)சிறப்பித்தார்கள்—காதிபுதல்வனைநோக்கி - கௌசிகரைப்பார்த்து—கமலத்தோனேர் - பிரமாவுக்குச்சமானமான—கமலமுனிபுதல்வன் - பிரமபுத்திரரானவசிட்டமுனி—இவைகழறலுற்றான் - இவைகளைச் சொல்லத்தொடங்கினர். எ-று. (இ-ம்.) பக்குவனுக் குபதேசிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திச்சொன்னதாம்.. (உ௪)

(அ-கை.) உபதேசிக்கத்தொடங்கல். (கவி) கலைமுனியேநீர்மொழிந்தபடியேசெ
ய்வேன்கற்றுணர்ந்தபெரியோர்சொற்கடப்பார்யாரே, நிலையில்பவமயக்கமறப்ப
துமவேதா நிடதமலைமேலுறைத்தநிமலஞான, மலைவின்மனத்திருக்கின்ற துரைப்
பேனென்ன வஞ்ஞானத்தொகுதிகெட வகண்டஞானத், தொலைவில்பரபதமெவர்
க்குந்தோன் றுமாறுசுத்தவிநயத் துடனேசொல்வதானான்...........................*

(இ-ள்.) கலைமுனியே - கலை (ஞானங்களையுணர்ந்த) விசுவாமித்திரரே—நீர்மொழிந்தபடியேசெய்வேன் - நீர்சொன்னபடியேயுபதேசிப்பேன்—கற்றுணர்ந்தபெரியோர்- அறிவையாராய்ந்தறிந்தமகான்கள் — சொற்கடப்பார்யாரே - வசனத்தைக்கடக்கப்பட்டவரொவர்—நிலையில்பவமயக்கமற - நிலையில்லாதசநநமயக்கந்தீரும்பொருட்டு—பதுமவேதா - தாமரையில்வசிக்கும்பிரமாவாலே—நிடதமலைமேலுரைத்த - நிடதமலைமேலிருந்தனுக்கிரகஞ்செய்த—நிமலஞானம் - நிருமலஞானக் (கதைகளானவை)—அலைவின்மனத்திருக்கின்றது - சஞ்சலமில்லாதபரிசுத்தமனதின்கண்ணிருக்கின்றதை — உரைப்பேனென்ன - சொல்லுவேனென்று (சொல்லி)—அஞ்ஞானத்தொகுதிகெட - அஞ்ஞானக்குழாங்கணசிக்க—அகண்டஞானம்-பூரணஞானமான—தொலைவில் - நீங்காத—பரபதம் - பரமபதமானது — எவர்க்குந்தோன்றுமாறு-யாவருக்குமுதயமாம்பொருட்டு—சுத்தவிநயத் துடனேசொல்வதானான்-பரிசுத்தமான தருமத்தோடுஞ்சொல்லத்தொடங்கினர். எ - று. நிடதமலை, மேருவின்சிகரத்திலொன்றிருமமெனக்கொள்க. [இ-ம்.] பிரமவுபதேசமானவகண்டசாக்ஷாத்காரானுபவத்தையிராமனிமித்தஞ்சகலருக்குந்தோன்றும்படிபோதிப்பதாம்.. (உ௫)

சுகர்கதை முற்றிற்று. ஆ திருவிருத்தம், (௱௬௧.)

முமூட்சுப்பிரகரணம்.

(அ-கை.) முற்கதையிற்சுகமுனியறிந்தவறிவைக்கொண்டே யவர் சுவானுபூதி சாக்ஷாத்காரமாகும்பொருட்டுஅரசனருளியபடியேஇராமனறிந்தவறிவைக்கொண்டு அவர்சுவானுபூதி சாக்ஷாத்காரமாகும்பொருட்டு அவர்க்குதயமானமுத்திவிருப்பத்தைவற்புறுத்த வசிட்டமுனி முமூட்சுப்பிரகரணங் கூறுகின்றார்.. *

(அ-கை.) சாஸ்திரியமுயற்சியேமுத்திசாதனமெனல். (கலி) இராகவகேளிப்பவ
த்திலென்றுமெல்லாமியல்புறுநன்முயற்சியினலியார்க்குமெய்து, மாகலைநன்னூ
ன்முயற்சி யொன்றுமொன்று வருநூலிலாமுயற்சி மற்றிவற்றின், சோகமிற்நூல்
வழிவீடா நூலிலாமை துன்பமாஞ்சைசவத்திற் றொடருமிந்நூன், மோகமினல்
லோர்கூட்டங்குணங்களாலேமுயற்சியுறுபெரியோர்க்குமுத்திப்பேறாம் ……… ௧

(இ-ள்.) இராகவகேள் - இராமா(நீயிதைக்) கேட்பாய்—இப்பவத்தில் - இச்சநநத்தில்—என்றும்-எப்போதும்—இயல்புறு - ஒழுக்கமுள்ள — நன்முயற்சியினல் - (சாஸ்திரயுக்தமான) நல்லவெத்தனத்தினல் — இயார்க்கும் - எவர்க்கும் — எல்லாமெய்தும் - (புருடார்த்தமுள்ள) சகலமும்வரும்—மாகலைநன்னூல்- ஆத்மஞானசாஸ்திரியமான—முயற்சியொன்றும்-எத்தனமொன்றுகும்—வருநூலிலாமுயற்சி - வாராநின்றசாஸ்திரியவெத்தனமானது—ஒன்று-ஒன்றுகும்—மற்றிவற்றின் - மற்றிவ்விரண்டில் — சோகமிற்நூல்வழி - துன்பமின்றியஞான சாஸ்திரியமார்க்கமானது—வீடாம் - மோக்ஷ(நிமித்த)மாம்—நூலிலாமை-அசாஸ்திரிய(மார்க்கமானது)—துன்பமாம்- (பந்தநிமித்த)மாம்—சைசவத்திற்றொடரும்- பாலப்பருவத்திற்(றுனே) தொடர்ந்துவருகின்ற—இந்நூல் - இந்தஞானசாஸ்திரங்களினலும்—மோகமில்-மயக்கமில்லாத—நல்லோர்கூட்டம் - சத்துக்கள்சங்கத்தினலும்—குணங்களால் - (மைத்திரியாதிசற்) குணங்களினலும்—முயற்சியுறு - முயற்சிபெற்ற—பெரியோருக்கு- சத்துக்களுக்கு—முத்திப்பேறாம்-மோக்ஷவிலாபமுண்டாகும். எ-று. [ப-ம்] இச்சநநமேவீடடைதற்குக்கருவியாமென்பார், இப்பவத்தினன் முயற்சியினு லியார்க்குமெய்து மென்றார். (இ-ம்) புருடார்த்தத்தை விரும்பினவன் சாஸ்திரியமுயற்சியையே செய்யவேண்டுமென்பதாம் ……………(௧)

(அ-கை.) பூர்வவாசனையே முக்கியமாயிருக்கின்றதெனல். (கலி) முற்பிறப்பின்
வாதனையின்வயத்தினின்றேன் முயற்சியிலேனென்செய்கேன்முனிவவென்ன, வற்
புதனேதன்வருத்தமுயற்சியாலேயடையலாம்பரமபதமயல்வேறின்று, சொற்பயி
ல்வாதனைத்திரளின் பேதஞ்சொல்லிற் சுபமசுபமெனவிரண்டாஞ் சொன்னவற்றி,
லற்பமுறுபவந்தோறுந்தொடர்ந்துவந்தவாதனையேதுவொன்றேமருவிநிற்கும்.

(இ-ள்.) முற்பிறப்பின்வாதனையின் - முற்சநநவாசனையின்—வயத்தினின்றேன் - வசத்திலிருந்தேன்—முயற்சியிலேன் - (சன்மார்க்க) வெத்தனமிலாதவனனேன் — என்செய்கேன் - (யா) னென்னசெய்வேன்—முனிவவென்ன - (என) தாசிரியரேயென்(றிராகவன்)கூற—அற்புதனே - (குண) திசயமுள்ளவிராமா—தன்வருத்தம் - தனதுசுயப்பிரயாசமான—முயற்சியால் - எத்தனத்தினல்—பரமபதம் - பிரமபதத்தை—அடையலாம்- பெறலாம்—அயல்வேறின்று - (இதைத்தவிர) வேறொன்றுமின்று—சொற்பயில் - சொல்லப்பட்ட — வாதனைத்திரளின் - வாசனசமுகத்தின்—பேதஞ்சொல்லில் - வேற்றுமையைக்கூறில்—சுபமசுபமெனவிரண்டாம் - சுபவாசனையசுபவாசனையென்றிரண்டுவிதமாம—சொன்னவற்றில் - சொல்லியவவ்விரண்டில்—அற்பமுறு - சொற்பமாகிய—பவந்தோறும் - சநநங்களிலெல்லாம்— தொடர்ந்துவந்த - நட்புற்றுவந்த — வாதனையேது - வாசனையெதுவோ — அதுவொன்றே - அஃதொன்றுமே—மருவிநிற்கும் - பொருந்தியிருக்கும். எ-று. (இ-ம்.) மதிவிதியென்றிரண்டாம், அவற்றில், ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தமெனமூன்றுமிவைகளிற், சுயஞ்சைதன்னியத்தினுண்டான சங்கற்பமேபந்தவாகாமியமென்றும், அது பகிர்முகமாய்த் தனதுசைதன்னியப்பிரதிபலனமானவிடயத்தை, யெதிரிட்டனுபவிக்க வுன்முகமா யபேட்சித்தவிடத்தில், அப்போதனுபவிக்கக்கூடாதபோகமெல்லாங்கட்டுப்பட்டதே, பந்தசஞ்சிதமென்றும், இதிற்கட்டுப்பட்டவிடயபோகங்களைச் சிற்பிரேரகத்தினற் பின்னனுபவிக்கக்கொடுக்க வனுபவிப்பதே, பந்தபிராரத்தமென்றும், அச்சங்கற்பஞ் சைதன்னியவுன்முகமானதே விடுதியாகாமியமென்றும், அது அந்தர்முகத்திற்றன துசைதன்னியத்தையடைய வுன்முகமாயபேட்சித்தவிடத்திலப்போதனுபவிக்கக்கூடாதநிரதிசயாநந்த சைதன்னியானுபவங் கட்டுப்பட்டதேவிடுதிசஞ்சிதமென்றும் இதிற்கட்டுப்பட்ட பிரமாநந்தபோசத்தைச் சைதன்னியப்பிரேரகத்தின லனுபவிக்கக்கொடுக்க வனுபவிப்பதே முடிவானவிடுதிபிராரத்தமென்றும், சொல்லப்படும், அப்பந்தவாகாமியத்தினலுண்டானசஞ்சிதமும், அதனல்வரும்பிராரத்தமும் சநநமரண துக்கத்துக்கேதுவாய்த் துன்பப்படுத்துவதென்றும், விடுதியாகாமியத்தினலுண்டான சஞ்சிதமும், அதனல்வரும்பிராரத்தமும், சநநமரணரகிதமான நிரதிசயாநந்த சைதன்னியாகாரமாக்குதற்கேதுவாய்ச்சுகப்படுத்துவதென்றுஞ்சொல்லப்படும் தன்னன்மதிக்கப்பட்ட விந்தவாகாமியத்தைமதியென்றும், சஞ்சிதத்தினல் விதிக்கப்பட்ட பிராரத்தத்தை விதியென்றும் அச்சஞ்சிதத்தையே பூர்வவாசனையென்றும், சொல்லப்படும், இதிற்பந்தவாகாமியத்தை, அசாஸ்திரியமுயற்சியென்றும், விடுதியாகாமியத்தை, சாஸ்திரியமுயற்சியென்றும்; பந்தசஞ்சிதத்தை;

அசுபவாசனையென்றும், விடுதிசஞ்சிதத்தை, சுபவாசனையென்றும், பந்தபிராரத்தத்தை, விடயானுபவசாக்ஷாத்காரமென்றும், விடுதிபிராரத்தத்தைஸ்வரூபானுபவசாக்ஷாத்காரமென்றுஞ் சொல்லப்படும், ஆகையால், முற்பிறப்பின்வாதனையென்பது, விதியெனவும், தன்முயற்சியென்பது, மதியெனவுங்கொண்டு இவ்விதிவருவதுங்கெடுவதுமிம்மதியினாதலினிதனாலாத்மவிசாரமானசுத்தவாசனையைக்கொண்டு அவ்விதியினால்வரும், அசுத்தவாசனையைக்கெடுத்து அபரோக்ஷசாக்ஷாத்காரமாகவேண்டுமென்பதாம்.... .... (௨)

(அ-கை.) சுபவாசனையையடையவேண்டுமெனல். (கவி) சுத்தவாதனைதொடரிலத
னான்மெல்லத்தூயபரபதம்பெறுவைச்சுத்தமல்லாப், பெத்தவாதனைதொடரிற்றுன்
பமாக்கும் பெரிதுவருந்தியுமிதனைப் போக்கவேண்டும், வைத்தசுபமசுபமெனும்
வழியிரண்டால்வாதனையாநதிபெருகும்வருத்தத்தாலே,மெத்தமுயன்றசுபவாதனை
யைத்தள்ளிமிக்கசுபவாதனையின்மேவிநிற்பாய்..... .... *

(இ-ள்.) சுத்தவாதனைதொடரில் - சுத்தவாசனைதொடர்ந்தால்—அதனால்-அதினாலே—மெல்ல - மிருதுவாக—தூய-பரிசுத்தமாகிய—பரபதம்பெறுவை-பரமபதத்தையடைவாய்—சுத்தமல்லா - பரிசுத்தமாகாத — பெத்தவாதனைதொடரில் - பந்தவாசனைதொடர்ந்தால்—துன்பமாக்கும் - துக்கத்தைவிளைவிக்கும்—பெரிதுவருந்தியும் - மிகவும் வருத்தமுற்றாயினும்—இதனைப்போக்கவேண்டும் - இவ்வாசனையைநீக்கவேண்டும்—வைத்த-விதித்த—சுபமசுபமெனும் - நன்மைதீமையென்கின்ற—வழியிரண்டால் - இரண்டுமார்க்கத்தினால்—வாதனையாம் - வாசனையாகிய— நதிபெருகும் - வெள்ளமதிகரிக்கும்—வருத்தத்தால் - (பிரமவித்தையிற் பயிலும்) பிரயாசத்தினால்—மெத்தமுயன்று - மிகவுமுயற்சித்து— அசுபவாதனையைத்தள்ளி-தீயவிடயவாசனையைநீக்கி—மிக்கசுபவாதனையில் - மிகுந்தநன்மையுள்ளஸ்வரூபவாசனையில்—மேவிநிற்பாய் - பொருந்தியிருப்பாய். எ-று. (இ-ம்.) ஜநநாந்தரங்களிற்றொடர்ந்துவருகின்றவாசனைகளின்பலாபலங்களையும், அதிற்றள்ளுவதையுங் கூட்டுவதையுமறிவித்ததாம் (௩)

(அ-கை.) சுபவாசனையிற்செல்லுதலினுண்டானபலனுரைத்தல்.(கவி) மிகமுயன்று
வருந்தாமற்சமமாகின்றவேண்டுகொளாற்றன்முயல்வால்விநோதத்தன்னாற், பகர்
மனமாஞ்சிறுமகவைநிறுத்தல்வேண்டும்பலபிறப்பிற்பரிசயங்களகலப்பண்ணி,யக
ல்சுபவாதனையுதித்தான்முயற்சிபேறுமையுறினுஞ்சுபமடைவாயதுதீதல்ல,திகழ்ம
னம்போய்த்தற்பதத்தைத்தெளியுமட்டுந்தேசிகனூற்சொல்வழியிற்செல்லுவாயே

(இ-ள்.) மிகமுயன்று - மிகவுமுயற்சித்து—வருந்தாமல்- வருத்தப்படாமல்—சமமாகின்ற - சமத்துவமாகின்ற—வேண்டுகொளால் - வேண்டுகையினால்—தன்முயல்வால் - தனது முயற்சியினால்—விநோதத்தன்னால் - (நயமான) விளையாட்டினால்—பகர்மனமாம் - சொல்லப்பட்டமனமென்னும்—சிறுமகவை - சிறுகுழந்தையை—நிறுத்தல்வேண்டும் - (அசுபவாசனையிற்செல்லாமற்றடுத்துசுபவாசனையி) னிறுத்தவேண்டும் — பலபிறப்பில்- (முன்னெடுத்த) நாநாவிதமானஜநநங்களில்—பரிசயங்கள் - (பழகிய) வசுத்தவாசனைகளை— அகலப்பண்ணி-நீங்கச்செய்து—அகல்சுபவாதனையுதித்தால் - மகத்தானசுத்தவாசனையுதயமாயின்— முயற்சிபேறும் - முயற்சிக்குப்பிரயோசனமாம்—ஐயுறினும் - (சுபவாசனையென்செய்யுமோவென்னுஞ்) சந்தேகம்வரினும்—சுபமடைவாய் - சுபவாசனையேயடைவாய்—அதுதீதல்ல-அச்சுபவாசனையின்மிகுதிகொடிதல்ல—திகழ்மனம்போய் - விளங்குகின்றமனஞ்சென்று— தற்பதத்தை - பிரமஸ்வரூபத்தை—தெளியுமட்டும்- தெரிகின்றபரியந்தம்—தேசிகன்-ஆசாரியரும்—நூல் - வேதங்களும்— சொல் - (பிரமோபதேசத்தையுமகாவாக்கியார்த்தத்தையும்) போதிக்கின்ற—வழியில் - மார்க்கத்தில்—செல்லுவாய் - (அனுபவமா)யனுஷ்டிப்பாய். எ-று. (இ-ம்.) மனது, செலுத்துமிடத்திற்செல்லுவதாகையாலதனையபரோக்ஷஞானமடைகின்றபரியந்தஞ் சுருதிகுருசுவானுபவமானமார்க்கத்திற்செலுத்தவேண்டுமென்பதாம்.............. ....(௪)

(அ-கை.) ஆத்மானுசந்தானக்கிரமமுரைத்தல். (கவி) தூயதாயிகத்தினிதாய்ப்
பெரியோர்மேவுஞ்சுபத்தினான்மனமழுக்குந்துயருமற்ற,நேயமாம்பதமேவியது
வுந்தள்ளிநிலைநிற்பாய்மீட்டணுகாநெறியதாக, மாயைநினைவொழித்துநிறைசாந்
தியின்பம் வழுவாமலுதாரமா மதியாலெய்தி, யாயமொழிப் பொருண்முன்பின்
கருதுநெஞ்சையமர்சமஞ்செய்தான்மாவிலனுசந்திப்பாய் .... *

(இ-ள்.) தூயதாய் - பரிசுத்தமாயும்—இகத்தினிதாய் - இப்பிறப்பிலினிமையாயும்—பெரியோர்மேவும் - சத்துக்கள்விரும்பப்பட்ட(தாயுமிருக்கின்ற)—சுபத்தினால் - சுபவாதனையினால்—மனம் - மனதை—அழுக்குந்துயருமற்ற - களங்கமுந்துக்கமுமில்லாத— நேயமாம்பதமேவி - ஆத்மபதத்தையடைவித்து—அதுவுந்தள்ளி - அச்சுத்தவாசனையையும்விடுத்து—

நிலைநிற்பாய் - (சாக்ஷாத்கார) நிலைபெறிருப்பாய்—மீண்டனுகாநெறியதாக - (அவை)திரும்பி வாராதமுறைமையாக — மாயைநினைவொழித்து - மாயாபாவனையைநீக்கி — நிறைசாந்தி- பூரணசாந்தத்தையும்—இன்பம் - ஆநந்தத்தையும்— வழுவாமல் - தவறாமல் — உதாரமாம்- (விடயவாசனைத்) தியாகமுள்ள—மதியாலெய்தி - அறிவினாலடைந்து— ஆப்மொழி - சிறந்த (தத்தொமசியென்னும்) வாக்கியத்தின்—பொருள் - (அதுநீயானாயென்னு) மருத்தத்தை— முன்பின்கருதும் - கூடஸ்தபிரமமென்னுமிரண்டையும்விசாரிக்கும்—நெஞ்சை- மனதை— ஆன்மாவில் - (ஆனாயென்னும்) பிரமத்தில்—அமர்சமஞ்செய்து-அமரும்ஐக்கியஞ்செய்து— அனுசந்திப்பாய் - இராமாநீ) யனுசந்தானஞ்செய்வாய். எ-று. (இ-ம்.) சுத்தவாசனையாற் சித்தசுத்திவந்து, அச்சித்தசுத்தியாலறிவுதயமாய், அவ்வறிவுதயத்தாற்கூடஸ்தபிரமவைக்கிய நிரதிசயாநந்தானுபவ சாக்ஷாத்காரந்தானென்று அனுஷ்டானஞ்செய்யவேண்டுமென்பதாம். சமமென்பதற்குதாரணம் (பகவற்கீதை.) ஞானிக்குநான்பிரியனவனெனக்குப்பிரியன் ஞானி யேநானென்பதெனதுமதம், அதுவுந்தள்ளியென்பதற்குதாரணம். (சூதசம்கிதை) வேதா ந்தமகாவாக்கியத்தாலுண்டான வபரோக்ஷானுபவஞானமுள்ளவனுக்கு விதிநிஷேதம் வேண் டுவதின்றென்று வேதார்த்தத்தினிச்சயம் .... (௫)

(அ-கை.) குருபரம்பரையையறிவித்தல். (கவி) தேங்கமலத்தயனுரைத்த மொழி
கேளென்னச்செப்பியகாரணமேதென் றிராமன்கேட்ப, வோங்குமுனியுரைசெய்
வான்முடிவற்றெங்குமுளதாகியனைத்தினுக்குமுறையுளாகி, வீங்குபொருள்களில்
விளக்கமாகிமேவுமெய்ஞ்ஞானவிண்ணின்றுவிண்டுவந்தா, னாங்கவன்றன்மனக்கம
லத்தயனுண்டாகியகிலமனவிகற்பம்போலளித்தானன்றே .... *

(இ-ள்.) தேன் - மதுவையுடைய—கமலத்து - தாமரைப்பூவில் (வீற்றிராநின்ற)— அயன் - பிரமதேவன்—உரைத்த - சொல்லிய —மொழிகேளென்ன - வாக்கியத்தைக்கேட்பா யென்று (வசிட்டர்) சொல்ல—செப்பியகாரணம் - (அவர்) சொல்லியகாரணம் — ஏதென்று- என்னவென்று—இராமன்கேட்ப - இராகவன்கேட்க — ஓங்குமுனி - மேலாகியவசிட்டமுனி யானவர்—உரைசெய்வான் - அனுக்கிரகஞ்செய்வார்—முடிவற்று - அந்தமற்றதாய் — எங்கு முளதாகி - எவ்விடத்திலுநிறைந்திருப்பதாய்—அனைத்தினுக்கும் - சகலத்திற்கும் — உறையு ளாகி - இருப்பிடமாகி—வீங்குபொருள்களில் - சகலவஸ்துக்களிலும்—விளக்கமாகி -பிரகாச மாய்—மேவும் - பொருந்தி(விளங்கிய)—மெய்ஞ்ஞானவிண்ணின்று - உள்ளசிதாகாயத்திலிரு ந்து—விண்டுவந்தான் -விஷ்ணுவுதயமாயினார்—ஆங்கவன்றன்-அவருடைய—மனக்கமலத்து- இதயதாமரையில்—அயனுண்டாகி - பிரமனுதயமாய்—அகிலம் - பூமிமுதலிய (வேறுபாடு களை)—மனவிகற்பம்போல்-மனக்கற்பனையைப்போல்—அளித்தான்-சிருட்டித்தார்.எ-று.(௬)

(அ-கை.) இ-து. (கவி) உலகளித்தவயன்றனேநாநாவாகவோங்கியபாரதவருடத்துயிர்க
ளெல்லா, மலகிறுயருறக்கண்டுபுதல்வர்நோவுக்கழுங்குபிதாவெனவழுங்கியவர்களுய்வா
ன், பலகருமத்தவந்தானநதிமற்றெல்லாம்பவந்தீராஞானத்தாற்பவம்போமென்றே,கல
கமிலாமனத்தளித்தானென்னைத்தன்போற்கமண்டலமுஞ்செபவடமுங்கையிற்காண · *

(இ-ள்.) உலகளித்தவயன்றனே - சகத்தையுண்டாக்கினபிரமதேவனே — நாநாவாக- நாநாவிதமாக—ஓங்கிய - உயர்வாகிய — பாரதவருடத்து - பாரதவருடத்தி (லுண்டான)— உயிர்களெல்லாம் - சீவர்களியாவும்—அலகில் - அளவில்லாத—துயருறக்கண்டு - துன்பமுறு வதைப்பார்த்து—புதல்வர்நோவுக்கு - புத்திராதுதுன்பத்துக்கு—அழுங்குபிதாவென- இரக் கப்படுகின்றபிதாவைப்போல—அழுங்கி - இரக்கப்பட்டு — அவர்களுய்வான் - அவ்வுயிர்கள் மோக்ஷமடையும்பொருட்டுச்(சிந்தித்து)—பலகருமம் - (செபமாதியான) நாநாவிதகிரியை களும்—தவம் - (தேகத்தைவருத்துந்) தபசுகளும்—தானம் - (சமஸ்த) தானங்களும்— நதி- (கங்கைமுதலான) தீர்த்தங்களும்—மற்றெல்லாம் - பிறவுமாகியவனைத்தினாலும் — பவந்தீரா- சநந (துக்கந்) தீராது—ஞானத்தால் - (ஆத்ம) ஞானத்தினால் — பவம்போமென்று - சநந (துக்கம்) விடுமென்று—கலகமிலாமனத்து - கலக்கமற்றமனதினால் — தன்போல் - தன்னைப் போல—கமண்டலமும் - கமண்டலத்தையும்—செபவடமும் - செபமாலிகையையும் — கை யிற்காண - கரத்திற்காணும்படியாக—என்னை-நம்மை—அளித்தான்-உண்டாக்கினார்.எ-று(௭)

(அ-கை.) இ-து. (கவி) வந்திறைஞ்சுமென்னைத்தான் மகிழ்ந்துமேவும்வனசத்தின்
வடபாலோர் மடன்மேல்வைத்தென், சிந்தைதனைநாழிகையோ ரிரண்டுமாயைச்
சேர்கவெனச்சபித்தலுமேதியக்கமுற்றுப், புத்தியுடன்மெய்யுணர்வை மறந்தேன்
கல்லாப்புல்லரைப்போற்புலம்புமென்னைப்பாதன்பார்த்து, வெந்துயரொன்னென
மாயைவிளைந்தவாறும்வீடுறுமாறுங்கேட்டேன்விளங்கச்சொன்னான் ....*

(இ-ள்.) வந்திறைஞ்சுமென்னை - பிறந்துநமஸ்கரித்தவடியேனை — தான்மகிழ்ந்து
மேவும் - தான்மகிழ்ச்சியுடன்வசிக்கும்—வனசத்தின்-தாமரையினது—வடபால்-உத்தரதிசை
யில்—ஓர்மடன்மேல்வைத்து - ஒருதளத்தின்மேலிருத்தி—என்சிந்தைதனை- என்னுடையமன
தை—நாழிகையோரிரண்டு-ஒருமுகூர்த்தம் —மாயைச்சேர்கவென-மாயையடையக்கடவதெ
ன்று—சபித்தலும்-சாபமிடவும்—தியக்கமுற்று-கலக்கமடைந்து—புத்தியுடன்- புத்தியோடு
ம்—மெய்யுணர்வைமறந்தேன்-உண்மைஞானத்தைமறந்தேன்—கல்லாப்புல்லரைப்போல்-கல்
வியில்லாதமூடர்களைப்போல—புலம்புமெனை - புலம்பாநின்றவென்னை— போதன்பார்த்து-
பிரமன்பார்த்து—வெந்துயரொன்னென-வெவ்வியதுக்கமென்னவென்றுகேட்க—மாயை-சம்
சாரமானது—விளைந்தவாறும் - உண்டானமார்க்கமும்—வீடுறுமாறும்-(அதுநீங்கி) மோக்ஷ
மடையுமார்க்கமும்—கேட்டேன் - வினவினேன்—விளங்கச்சொன்னான்-(நன்றாய்)விளங்கும்
படியனுக்கிரகஞ்செய்தார். எ-று...(அ)

(அ-கை.) இ-து. (கவி) ஆன்மாவையறிந்தலைவற்றிருந்தவென்னையயன் பார்த்துநா
மேநின்னறிவைமாற்றி, யூன்மாயைப்பின்பொழித்தே முயிரெலா நின்னுபதேசம்
பெற்றுய்யவுபாயஞ்செய்தோ, மேன்மாயும் வினைநிறைந்த சம்புத்தீவின்மேவிய
பாரதவருடம்விரைவின்மேவித், தான்மாளாக்கிரியினர்க்குக் கிரியைசாற்றிசாதன
முள்ளோர்க்குணர்வைச்சாற்றுகென்றான்.. ※

(இ-ள்.) ஆன்மாவை - (ஞா) னாத்மஸ்வரூபத்தை—அறிந்து - (தானு)யறிந்து—அலை
வற்றிருந்தவென்னை - சலனமற்றிருந்தவென்னை — அயன்பார்த்து - பிரமதேவன்பார்த்து—
நாமேநின்னறிவைமாற்றி - யாமேயுன்னுணர்வைநீக்கி—ஊன்மாயை-ஈனமானமாயையைக்
(கொடுத்து)—பின்பொழித்தேம் - பின்பஃதையறிவினுனீக்கினோம்—உயிரெலாம் - ஆத்மாக்
களியாவும்—நின்னுபதேசம்பெற்று - உமதனுக்கிரகம்பெற்று—உய்ய - மோக்ஷமடைய—
உபாயஞ்செய்தோம்-தந்திரஞ்செய்தோம்—மேன்மாயும் - (ஞானமுதித்த)பின்கெடுகின்ற—
வினைநிறைந்த - கிரியைகணிறைந்த—சம்புத்தீவில் - நாவலந்தீவில்—மேவியபாரதவருடம்-
மேவாநின்றபாரதவருடத்தில்—விரைவின்மேவி - சீக்கிரத்திற்சென்று—தான்மாளா -நாமெ
ன்னுமகநீங்காத—கிரியினர்க்கு - கிரியாகாண்டிகளுக்கு—கிரியைசாற்றி - (கிரமமாக) கரும
காண்டத்தைப்போதித்து — சாதனமுள்ளோர்க்கு - (மேற்) சாதனசதுஷ்டயமுள்ளவர்களு
க்கு—உணர்வைச்சாற்றுகென்றான்-(ஆத்ம) ஞானத்தையுபதேசஞ் செய்யென்றருள்செய்தார்.
எ-று. [இ-சு-க-ம்] உலகத்திலுள்ளசீவர்கள்தமதாத்மஸ்வரூபத்தில் ரமிக்கச்செய்யும்பொருட்
டுஆசிரியர்திருவடிசூட்டியனுப்பினகுறிப்பையறிவித்ததாம்...(கூ)

(அ-கை.) சற்குருசற்சீடரிலக்கணமறிவித்தல். (கவி.) அவனுரைப்பவந் துயிர்களு
ளநாளெல்லா மாகுவனிங்கொருசெயலு மாசையில்லை, யிவணிருந்து சுழுத்தியுறு
செய்கையாலே யிடர்மனத்தைக் கடந்துசெயலியாவுஞ்செய்கேன், கவருறுமென்
செயலொன்றுமில்லைவீர கலைநிறைவும் பேதைமையுங் கருமத்தாலே, விவரமதா
யாராய்ந்துமேன்மையானமெய்க்குருவைக்கொண்டுணர்வோர்மேதைமிக்கோர்.※

(இ-ள்.) அவனுரைப்ப - அப்பிரமாவனுக்கிரகஞ்செய்ய—வந்து- (அப்படியேபாரத
வருடத்தில்)வந்து—உயிர்களுள-ஆத்மாக்களிருக்கின்ற—நாளெல்லாம்-காலங்களிலெல்லாம்—
ஆகுவன்-இருப்பேன்—இங்கொருசெயலும்-இவ்விடத்தொருகிரியைகளிலும்—ஆசையில்லை-
விருப்பமில்லை — இவணிருந்து - இவ்விடத்திலிருந்து — சுழுத்தியுறு - (நனவிற்) சுழுத்தியைய
டைந்த—செய்கையால் - ஒழுக்கத்தினால்—இடர் - துன்பமுள்ள— மனத்தைக்கடந்து - மன
தைத்தாண்டி—செயலியாவுஞ்செய்கேன் - தொழில்களனைத்தையுஞ் செய்வேன்—கவருறும்-
(அபிமானத்தைக்)கிரகிக்கின்ற—என்செயல் - எனதுசெய்கை— ஒன்றுமில்லை - யாதொன்று
மில்லை—வீர- (பாசநாசஞ்செய்வதிலதி) சூரனானவிராமா—கலைநிறைவும்- (ஆசாரியர்) ஞான
பூர்த்தியையும்— பேதைமையும் - அஞ்ஞானத்தையும் — கருமத்தால் - (ஆசார)விவகாரங்க
ளால்—விவரமதாய் - பகுத்தறிவோடும்—ஆராய்ந்து - விசாரித்து— மேன்மையான - உயர்
வான—மெய்க்குருவைக்கொண்டு-சற்குருவைப்பெற்று—உணர்வோர்- (ஆத்மாவை)யறிபவர்
கள்—மேதைமிக்கோர்-அறிவின்மிகுந்த(சீட)ர்கள்.எ-று. (இ-ம்) பாரம்பரியமானமரபிலுள்ள
வாசாரியரிடத்திற்பிரமோபதேசம்பெற்று ஆத்மானுசந்தானஞ்செய்யவேண்டு மென்பதாம்.

(அ-கை.) ஆசாரியர் அபக்குவனுக் குண்மையை யுபதேசியா ரெனல். (கவி) ஓதுகின்ற
பொருண்முழுதுமுன்பின்கூட்டியுணர்பவர்க்கல்லதுபசுவையொப்போர்க்கெல்லாந்,தீத
கன்றகுருவுண்மை செப்பாரன்றேதிகழ்சாந்திவிசாரமொடு செறிசந்தோடஞ், சாதுசங்

கமெனவீட்டின் வாயல்காக்குஞ் சதுஷ்டயருமுறவாகிற் றடைவேறுண்டோ, மேதினி
காவலர்மனையிற்கடைகாப்பாளர் விடுவதுபோல்வீட்டிலவர்விடுவரன்றே .... *

(இ-ள்.) ஓதுகின்ற- (ஆசாரிய)ரனுக்கிரகஞ்செய்கின்ற—பொருண்முழுதும்-அருத்தங்களியாவையும்—முன்பின்கூட்டி -துவக்குங்(கருத்தையு)முடிக்குங் (கருத்தையுஞ்) சேர்த்து—உணர்பவர்க்கல்லது - அறிபவர்க்கேயன்றி—பசுவை-(பார்த்தவிடயமயமாகும்) பசுத்தன்மையை—ஒப்போர்க்கெல்லாம்-ஒப்பான(சீவத்தன்மையையுடைய)சகலருக்கும்—தீதகன்றகுரு-குற்றமற்றவாசாரியர் — உண்மைசெப்பார் - தத்துவஞானத்தைச்சொல்லார் — திகழ்சாந்தி-பிரகாசியாநின்றசாந்தியும்—விசாரமொடு - விசாரணையும் — செறி - மிகுந்த—சந்தோடம்-சந்தோஷமும்— சாதுசங்கம் - சாதுசங்கமும் — என - என்றுசொல்லப்பட்ட — வீட்டின்-மோக்ஷத்தின்—வாயல்- வாயலை—காக்கும்- காக்கின்ற—சதுஷ்டயரும்- நான்குபேர்களும்—உறவாகில்- இஷ்டமானால்—தடைவேறுண்டோ-(மோக்ஷமடைதற்கு)விக்கினம்வேறுண்டோ—மேதினிகாவலர் - பூமியைக்காக்கின்ற வரசர்களின் — மனையிற்கடை - வீட்டின்வாயலை—காப்பாளர்-காப்பவர்கள்—விடுவதுபோல்- (இராசதரிசனத்துக்கு)விடுவதுபோல—வீட்டில்-மோக்ஷத்தில்—அவர்விடுவர்-அவர்கள்விடுவார்கள். எ-று. (இ-ம்) முமுட்சுக்களுக்குச்சாந்திமுதலியநான்குகுணங்களும் வேண்டுமென்பதாம் .... (௯௧)

(அ-கை.) சாந்தியாதிகுணங்களி லொன்றையாவதடையவேண்டுமெனல். (கவி) அன்னா
ல்வர்தமிலொருவரன்பானாலுமனைவருமொத் தன்பாவராதலாலே, பன்னாளுமிகமுயன்று
யாதுநீத்தும்பற்றியொருவரையேனும் பழகவேண்டு, மன்னாதபிறப்பறுக்க நல்லோர்
நன்னூன் மாதவத்தாலறிவைமுதல் வளர்க்கவேண்டு, மின்னாதமாயையெனு நஞ்சம்
போத மென்கின்றகாருடமந் திரத்தான்மீளும் .... *

(இ-ள்.) அன்னால்வர்தமில் - அந்தநால்வர்களில் — ஒருவரன்பானாலும்-ஒருவனன்பனானாலும்—அனைவருமொத்தன்பாவர் - நால்வரு மொத்தன்பராவார்கள்—ஆதலால் -ஆகையினால்—பன்னாளும் - சதாகாலமும்—மிகமுயன்று - மிகவுமுயற்சித்து—யாதுநீத்தும்-(அதற்கிடரானவைகளி) லேதானாலுந்தள்ளி—ஒருவரையேனும் - ஒருவரையாவது — பற்றி - பிடித்துக்கொண்டு—பழகவேண்டும்-பழக்கஞ்செய்யவேண்டும்—மன்னாத-நிலையில்லாத—பிறப்பறுக்க-சநநத்தைக்கெடுக்க—நல்லோர் - சத்துக்கள் (சங்கத்தினாலும்)—நன்னூல் - ஆத்மஞானசாஸ்திர(விசாரணையினாலும்)—மாதவத்தால் - மகாநிஷ்டையினாலும்—அறிவை- பிரஞ்ஞையை—முதல்-முதன்மையாக—வளர்க்கவேண்டும்-விருத்திசெய்யவேண்டும்—இன்னாத-துன்பமாகிய—மாயையெனும் - சம்சாரமென்கின்ற—நஞ்சம் - விடமானது—போதமென்கின்ற- ஞானமென்கின்ற—காருடமந்திரத்தால் - கலுழமந்திரத்தினால்—மீளும் - திரும்பும். எ-று. (இ-ம்) சாந்தியாதிகுணங்களைப்பெற்று சுருதி குருசுவானுபவங்களினால் வளருஞானத்தினால் மாயையைக்கெடுக்க வேண்டுமென்பதாம் .... (௯௨)

(அ-கை) விடயத்தைக்கெடுத்தவிடத்துஉண்டானநன்மையையும்அதைக்கெடுக்கா
விடத்துள்ள விபரீதத்தையுங் கூறல். (கவி.) சரமழைகணெய்தன்மலர் மழையை
யொக்குந் தழற்பள்ளிபனிநீரிற் சயனமொக்குஞ், சிரமரிதற்சுகமுறுநித் திரையை
யொக்குந் தேகமரிவதுகலவைச் செறிபூசொக்கும், நிரலதிகநாராசமருமம்பாய்த
நெடுங்கோடைச் சிவிறியினன்னீரையொக்கும், விரவரியவிடயமெனும்விடவிடுசி
விவேகமிகுத்தவர்க்கல்லால் விலக்கொணாதே .... *

(இ-ள்.) சரமழைகள் - அம்புவருடங்கள்—நெய்தன்மலர்மழையை-ஆம்பல்புட்பவருடத்தை—ஒக்கும் - ஒப்பாகும் — தழற்பள்ளி - அக்கினிப் படுக்கை — பனிநீரிற்சயனமொக்கும்- பன்னீர்தெளித்த மெத்தையையொப்பாகும்—சிரமரிதல்-சிரசையறுப்பது—சுகமுறு-சுகம்பொருந்திய — நித்திரையை-(சுழுத்தி) நித்திரையை—ஒக்கும் - ஒப்பாகும்— தேகமரிவது- உடலையறுப்பது—கலவைச்செறிபூசு - சந்தனம்பூசுதலை —ஒக்கும் - ஒப்பாகும்—நிரல்-ஒழுங்காகிய—அதிகநாராசம்-கணக்கற்றசலாகைகள்—மருமம்பாய்தல்- மார்பிற்றைப்பது—நெடுங்கோடை- நீண்டவேனிற் காலத்தில்—சிவிறியின் - துருத்தியினால் (வீசும்)—நன்னீரையொக்கும் - குளிர்ந்தசலத்தையொப்பாகும்—விரவரிய - சேரக்கூடாத — விடயமென்னும்-விடயமென்கின்ற—விடவிடுசி-விஷ்விடுசியானது—விவேகமிகுத்தவர்க்கல்லால்-விவேகஞானமதிகரித்தவர்களுக்கேயன்றி— விலக்கொணாது - (மற்றவர்களுக்கு) விலக்கக்கூடாது. எ-று. (இ-ம்) மனதைப்புலன்வழியிற் செலுத்தாமலாத்மவிசாரத்திற் செலுத்துவதனாற் சுகமுண்டாயம்புவருடமுதலிய வுபத்திரங்கள் புட்பவருடங்கண் முதலியவைபோலச் சுகமாய்ச் சகிக்கத்தக்கவைகளாமென்பதாம் .... (௯௩)

(அ-கை.) ஆத்மவிசார லிலக்கணங்கூறல். (கலி.) ஊனமிலாஞான நூல் விசாரத்தா
லேயுயர்வீடுநண்ணுமென லுண்மையன்றே, தானறியுமனுபூதிஞானநன்னூற்சற்
குருவிம்மூவகையுந்தம்மிலொத்தே, யானவகைபியற்றில்விடாதான்மாத்தோன்று
மற்பவறிவினர்கற்றவரியமெய்ந்நூ, லீனமுறுமடமைதருமதுபோன்மற்றவெந்த
நூல்களுமடமை யியற்றுதன்றே ... . ✻

(இ-ள்.) ஊனமிலா - குறைவில்லாத— ஞான நூல் - (ஆத்ம) ஞானசாஸ்திரங்களின்— விசாரத்தால் - (செய்யப்படுகின்ற) விசாரணையினால்—உயர்வீடுநண்ணுமெனல்- மேலான நிருவாண சுகமுண்டாகுமென்பது—உண்மையன்றே-உள்ளதல்லவா—தானறியுமனுபூதி-தானறிகின்ற அனுபவமும் —ஞானநன்னூல்- (ஆத்ம) ஞானசாஸ்திரங்களின் (முடிவானவாக்கியார்த்தங்களும்) —சற்குரு-சற்குரு (வினுபதேசவாக்கியார்த்தங்களுமாகிய) இம்மூவகையும்-இந்தமூன்று பிரிவும்—தம்மிலொத்து - தம்மிடத்திற்பொருந்திய —ஆன - ஒன்றான —வகையியற்றில - பிரகாரமனுஷ்டிக்கில் — விடாதான்மாத்தோன்றும் - (ஒன்றையும்) விட்டுநீங்காதவாத்மஞானம் பிரகாசிக்கும்—அற்பவறிவினர்-ஏகதேசவறிவையுடையவர்கள்—கற்ற-அப்பியாசித்த—அரிய மெய்ந்நூல்- அரியஞானசாஸ்திரமானது—ஈனமுறு மடமைதரும்- இழிவுள்ளவஞ்ஞானத்தைக் கொடுக்கும—அதுபோல் - அந்த(ஞானநூலைப்) போல—மற்றவெந்த நூல்களும்- (பத்திகாண்டங் கருமகாண்டமுதலிய) வெச்சாத்திரங்களும் — மடமையியற்றுது - அஞ்ஞானத்தைக் கொடாது. எ-று. (இ-ம்) ஆத்மஞானம் பிரத்தியட்சமாவதற்குச் சுருதிகுரு சுவானுபவமொத்துவிசாரிக்கவேண்டும் அஃதின்றேற்றுன்ப முண்டாமென்பதாம் .... (௰௪)

(அ-கை.) அஞ்ஞானவிழிவும் முத்திக்குச்சகாயஅசகாயமு முரைத்தல். (கலி) மடமை
யொடுவாழ்கின்றவாழ்வினீசர் மனைதொறுமோட்டிரந் துழல்கை வரிசையாகு, மடர்தன
நட்புறவுபாதேசந்தீர்த் தமாச்சிரமமெய்வருத்தமனைத்தினாலுந், தொடருதவியில்லைமன
வருத்தத்தாலே தூயபதமுறுமுத்தித் துவாரபாலர்க், கடவகுணங் கேட்டியுயர் சாந்தி
வந்தாற் காதலுந் துன்பமுங் கதிர்முன் கங்குல்போற்போம்............ . ... ✻

(இ-ள்) மடமையொடுவாழ்கின்றவாழ்வின்-(இப்படிப்பட்ட)வஞ்ஞானத்தோடுவாழ்கின்ற வாழ்விலும்—நீசர்மனைதொறும் - சண்டாளர்கள்வீடுகடோறும்—ஓட்டிரந்துழல்கை-ஓட்டிற் பிச்சைவாங்கிச்சுழல்வது — வரிசையாகும் - சீரானவாழ்வாகும் — அடர்தனம் - மிகுந்ததிரவியங்களும்—நட்பு - மித்திரர்களும்—உறவு - பந்துக்களும்—பாதேசம்-காசிமுதலான(புண்ணிய)தேசங்களும்— தீர்த்தம்- (கங்கைமுதலான)தீர்த்தங்களும்—ஆச்சிரமம் - (முனிவர்களின்) வாசஸ்தலங்களும்—மெய்வருத்தம்-சரீரத்தைவருத்துந் (தபசுகளுமாகிய)— அனைத்தினாலும்- எல்லாவற்றாலும் —நாளும் - எப்பொழுதும்— தொடருதவியில்லை - (பாகதியைத்) தொடரத் தகுந்தசகாயங்களில்லை— மனவருத்தத்தால்-மனோநிக்கிரகத்தினால்— தூயபதமுறும்-பரிசுத்தமானபரமபதமுண்டாகும் — முத்தித்துவாரபாலர் - மோக்ஷவாயற்காக்கின்ற நான்குபேர்களுக்கு — கடவகுணங்கெட்டி - எப்போதுநீங்காமலிருக்கின்ற குணங்களை (யிராமா) நீகெட்டாய்—உயர்சாந்தி - மேலானசாந்தம்— வந்தால் - கிடைத்தால்—காதலும்-ஆசையும் —துன்பமும் - துக்கமும்—கதிர்முன் - சூரியன்முன்னே — கங்குலபோற்போம் - இருளைப்போல நீங்கும். எ-று. (இ-ம்) அறியாமையையுந்தபமுதலானகிரியைகளையுநீக்கி சாந்தியைப்பெற்று மனதை யாத்மாவிற்கரையும்படி சிந்திக்கவேண்டுமென்பதாம்...... .... (௰௫)

(அ-கை.) சாந்தியுமதையடைந்தவனிலக்கணமுங்கூறல்.(கலி) நல்லவருந்தீயவருமன்
னைபோலநம்புதற்காயமுதுண்ணநண்ணினாலு, மல்லன்மலர்மகட்புணர்ந்தபோ
துமொவ்வாமகிழ்ச்சிதருஞ்சாந்தியுள்ளோர் மரணஞ்செல்வங், கொல்லமொய்த்தினு
மசையார்புலனைத்தாலுங்குற்றமுநன்மையநுகர்ந்து குளிரார்வாடார், தொல்லதிரு
ர்மகம்புரிந்தோர்முனிவர்மொய்ம்பர்தூயவரியாரினும்விளங்குந்தூய்மையோரே.

(இ-ள்.) நல்லவரும்-சிஷ்டர்களும்—தீயவரும்-துஷ்டர்களும்—அன்னைபோல-தாயைப்போல—நம்புதற்காய் - நம்புதற்கு(த்தகுந்த)தாகி—அமுதுண்ண - அமுதமானது (தான்) புசிக்கும்படி— நண்ணினாலும் - கிடைத்தாலும் — மல்லன்மலர்மகள் - வளப்பமுள்ளபங்கயமலரிலுறைபு மிலட்சுமியானவள்—புணர்ந்தபோதும்- (வந்து)பொருந்தினபோதிலும்—ஒவ்வா - சமானமாகாத—மகிழ்ச்சிதரும் - ஆநந்தத்தைக் கொடுக்கின்ற— சாந்தியுள்ளோர் - சாந்தியையுடையவர்கள்—மரணம் -நசித்தலும—செல்வம்-வாழ்தலும்— கொல்லமர்-கொலைசெய்தியுத்தங்களும்—எய்தினும்-வந்தாலும்—அசையார்- சஞ்சலியார்கள்—புலனைத்தாலும்-பஞ்சவிடயங்களினாலும்—குற்றமும் - அசுபத்தையும்—நன்மையும் - சுபத்தையும்— நுகர்ந்து- புசித்து—வாடார்- துக்கியார்கள்—குளிரார்-சந்தோஷியார்கள் — [illegible]

வுள்ளவர்கள்—மகம்புரிந்தோர்-யாகதீக்ஷதர்கள்—முனிவர்- (கலை)மறையோர்—மொய்ம்பர்-பலத்தையுடைய(வரச)ர்கள்—தூயவர்- பரிசுத்தமுள்ளவர்கள்—யாரினும்- மற்றெவர்களினும்—தூய்மையோர்-(இச்சாந்தகுணமுள்ள)பரிசுத்தவான்கள்—விளங்கும்-(மேன்மையாகப்)பிரகாசிப்பார்கள். எ-று. (இ-ம்) சகலசெல்வங்களும்வலியவருமகிழ்ச்சிக்குமேலானமகிழ்ச்சியைக்கொடுக்கின்ற சாந்தியுள்ளவனொன்றினாலுஞ் சுகதுக்கமடையாமலறிஞர்முதலானசகலருக்கு மேலாவனென்பதாம்...(௰௬)

(அ-கை.) சாந்தியையடைதலுமாத்மவிசாரமுமுரைத்தல். (கவி) ஆரியர்பேணுவ
தாகியயலோர்க்கெல்லாமரிதான சாந்தியமுதருந்திமேலோர், சீரியவீட்டினையுற்
றார்நீயுமந்தச்செயல்புரிவாய்நன்னூலாற்றெளிந்தசுத்த,நேரியபுந்தியினாலேவிசா
ரந்தன்னைநிறைத்திடுகவதுநிறைந்தானிகரில்புந்தி, கூரியதாய்வீடுணரும்விசாரந்
தானேகொடும்பவநோய்க்கருமருந்தாங்குறிப்புளோர்க்கே................................ *

(இ-ள்.) ஆரியர்பேணுவதாகி - அறிவுடையவர்கள்விரும்புவதாகி— அயலோர்க்கெல்லாம் - ஏனையோரனைவர்க்கும்—அரிதான - அரியதாயிருக்கின்ற—சாந்தியமுது - சாந்தாமுதத்தை—அருந்தி - புசித்து—மேலோர் - மகான்கள்— சீரியவீட்டினையுற்றார் - சிறப்பாகிய மோக்ஷத்தையடைந்தார்கள்—நீயும் - (இராமா) நீயும்—அந்தச்செயல்புரிவாய்- அவ்வொழுக்கத்தின்படிசெய்யக்கடவாய்—(இனிவிசாரணை) நன்னூலால்- நல்ல(ஞான)சாத்திரத்தினால்—தெளிந்த - தெளிவான—சுத்தம் - பரிசுத்தமுள்ள— நேரியபுந்தியினால் - நுட்பவறிவினால்—விசாரந்தன்னை -(ஆத்ம) விசாரணையை—நிறைத்திடுக - பூரணமாகச்செய்க — அதுநிறைந்தால் - அவ் (வாத்மவிசாரணை) பூரணமானால் — நிகரில்புந்தி - சமானமில்லாதவறிவானது—கூரியதாய் - அதிகநுட்பமாக—வீடுணரும் - பரமபதத்தையறியும்—விசாரந்தானே - (இவ்) விசாரணையே — குறிப்புளோர்க்கு - (காரியகாரணங்களைக்)குறித்தறியுமறிவுள்ளவர்களுக்—(குண்டான)கொடும்பவநோய்க்கு-கொடியசநநவியாதிக்கு—அருமருந்தாம் - அரிதான ஔஷதமாம்.எ-று.(இ-ம்.)சாந்தியையடைந்தாத்மவிசாரஞ்செய்தாற்சநநங்கெடுமென்பதாம்(௰௭)

(அ-கை.) விசாரணையின்பலமுஞ்சந்தோடவிலக்கணமுங்கூறல். (கவி) கருகியகங்
குலின்மறையாக்கதிர்க்குமட்காக்காண்பரியபொருளெல்லாங்காணுங்கண்ணாற்,றெ
ருளுறநானுலகம்வந்தவாறென் செறிபிறவியாரதெனுந் திகழ்விசார, மிருளுறு
மாபத்தினுக்குமருந்தாமப்பா லேற்றமுளசந்தோடமேதென்றேதில், வருபொரு
ளிலின்பமறத்துய்த்துவாராவனபொருளிற்றுன்பமிலாமகிழ்ச்சிதானே........ *

(இ-ள்.) கருகியகங்குலில் - கறுத்தவந்தகாரத்தில்— மறையா - மறையாததாயும்—கதிர்க்குமட்கா - (மிகுந்த) பிரகாசத்துக்(கொளி)மழுங்காததாயும்—காண்பரிய-பார்ப்பதற்கரிய—பொருளெல்லாம் - வஸ்துக்களியாவையும் — காணும் - பார்ப்பதாயுமிருக்கின்ற —கண்ணால்-(விசார)திருஷ்டியினால்—தெருளுற-தெளிவுற—நானார்-யானெப்படிப்பட்டவன்—உலகம்வந்தவாறென் - சகத்தானசம்சாரமுண்டானகிரமமென்ன—செறிபிறவியாரது - மிகுந்தசம்சாரம்யாரையுடையது—என்னும் - என்கின்ற—திகழ் - (பரிகாரயுத்தியோடும்) விளங்கிய—விசாரம் - (ஆபத்திலும்விசாரிக்கத்தக்க) விசாரணையானது— இருளுறும் - (அஞ்ஞா)னாந்தகாரமான—ஆபத்தினுக்கு - ஆபத்(தென்னும்வியாதி)க்கு—மருந்தாம்-ஔஷதமாம்—(இனிச்சந்தோடம்) - அப்பால் - அதன்பின்பு—ஏற்றமுளசந்தோடம் - மேலாகியசந்தோஷமானது—ஏதென்றேதில் - யாதென்றுசொல்லில் — வருபொருளில் - வரப்பட்ட (நன்மை தீமையான) வஸ்துக்களில்—இன்பமறத்துய்த்து - விருப்பு(வெறுப்) பில்லாமற்புசித்து—வாராவனபொருளில் - வாராதவஸ்துக்களில் — துன்பமிலா - துயரமில்லாத — மகிழ்ச்சிதான்-ஆநந்தந்தான். எ-று. இன்பமலவென்றமையாற்றுன்பம்வருவிக்கப்பட்டது (இ-ம்.) விசாரஞானத்தினாற்சித்தையுஞ்சடத்தையுஞ்சிற்சடமானமாயையையும்விசாரித்துஅஞ்ஞானத்தைக்கெடுத்து ஆநந்தத்தையடையவேண்டுமென்பதாம்.. (௰௮)

(அ-கை.) சந்தோடத்தின்பலமுஞ்சாதுசங்கமுங்கூறல். (கவி) நிகராறுசந்தோடவ
முதமையப்பெற்றானெடும்போக நஞ்சாமந்நிறைசந்தோட, மகலுறவாசையில்
விழுநெஞ்சறிவைநோக்கிலழக்குறுகண்ணாடியிலாநநம்போற்றோன்று, மகிழ்கு
ணமெய்தியபுருடமகிமையோனைமாதவருநராதிபரும்வணங்காநிற்பர், சகமெனு
மாயையைவெல்லத்தக்கோர்க்கெல்லாந்தப்பாதசகாயமாஞ்சாதுசங்கம்.......... *

(இ-ள்.) நிகராறு - சமானமில்லாத—சந்தோடவமுது-சந்தோஷாமுதத்தை—அமையப்பெற்றால் - பொருந்தப்பெற்றால் — நெடும்போகநஞ்சாம் - மிகுந்தவிடயபோகம்விஷமாகும்—அந்நிறைசந்தோடம் - அப்பூரணமகிழ்ச்சி—அகலுற - நீங்க — ஆசையில்விழும்-

விடயசுகத்திலழுந்துகின்ற—நெஞ்சு - மனது—அறிவைநோக்கில் - (ஆத்ம) ஞானத்தைப் பார்க்கில்—அழுக்குறுகண்ணாடியில் - களங்கமுள்ள தருப்பணத்தில்— ஆநநப்போல் - முகத்தைப்போல—தோன்று - தோற்றுது—மகிழ்குணமெய்திய - சந்தோஷகுணத்தையடைந்த —புருடமகிமையோனை - புருடசிரேஷ்டனை—மாதவரும் - மகாதவசிகளும் — நராதிபரும்-நரேந்திரரும்—வணங்காநிற்பர் - வணங்குவார்கள் — (இனிச்சாதுசங்கம்) சகமெனுமாயையை- உலகமென்னுமாயையை—வெல்லத்தக்கோர்க்கெல்லாம்-செயிக்கத்தக்கசகலருக்கும்—சாதுசங்கம் - சாதுக்கள்சங்கமானது— தப்பாதசகாயமாம் - தவிராதசகாயமாகும். எ-று. (இ-ம்.) முமுட்சுக்கள்சகலபோகங்களுங்கைக்கும்படியானசந்தோஷத்தையும் சம்சாரத்தை வெல்லத்தக்கசாதுசங்கத்தையுமடையவேண்டுமென்பதாம்.....................................(௰௯)

(அ-கை.) சாதுசங்கத்தின்பலன்கூறல். (கவி) அறக்குறைவைநிறைவாக்குஞ்சம்பத்தாக்குமாபத்தைச்சுபமாக்கு மசுபந்தன்னைச், சிறக்குமுயர்ந்தவர்கூட்டமென்னுங்கங்கைச்சீதநீராடினர்க்குச்செந்தீவேள்வி, யிறக்கரியதவந்தானந்தீர்த்தம்வேண்டாமிடர்பந்தமறுத்தெவர்க்குமினியோராகிப், பிறப்பெனும்வேலைப்புணையாமுணர்வுசான்றபெரியோரையெவ்வகையும்பேணல்வேண்டும்.............................*

(இ-ள்.) அறக்குறைவை - மிகவுமற்பமான(வறிவை)—நிறைவாக்கும் - பூரணமாக்குவதாயும்—ஆபத்தை - (விடயங்களால்வரு) மாபத்துக்களை—சம்பத்தாக்கும்- (அஃதின்றிய) சம்பத்தாக்குவதாயும்—அசுபந்தன்னை- (ஒன்றிலுஞ்சுகியாத) அமங்கலத்தை—சுபமாக்கும்-(சர்வத்திலுஞ்சுகிக்கின்ற) மங்கலமாக்குவதாயுமிருக்கின்ற— சிறக்குமுயர்ந்தவர்கூட்டமென்னும் - சிறந்தமகான்கள்சங்கமென்கிற—கங்கை - சானுவியினது—சீதநீர் - குளிர்ந்தசலத்தில்—ஆடினர்க்கு - ஸ்நானஞ்செய்தவர்களுக்கு—செந்தீவேள்வி- சிவந்தவக்கினிகாரியமான யாகங்களும்—இறக்கரியதவம் - கெடாததவசுகளும்—தானம்-மகாதானங்களும்—தீர்த்தம்-புண்ணியதீர்த்தங்களும்—வேண்டாம்-வேண்டுவதில்லை—இடர்பந்தமறுத்து - துக்கமாகியபந்தநாசஞ்செய்து—எவர்க்குமினியோராகி- யாவர்க்குமினிமையுள்ளவராயும்—பிறப்பெனும் வேலை - சநநமென்னுஞ்சமுத்திரத்தைக்(கடப்பதற்கு)—புணையாம் - கப்பலாயு(மிருக்கின்ற) —உணர்வுசான்ற - அறிவுநிறைந்த—பெரியோரை - மகான்களை—எவ்வகையும் - எவ்விதத்திலும்—பேணல்வேண்டும் - விரும்பவேண்டும். எ-று. (இ-ம்.) ஞாநாநந்தச்செல்வத்தைக் குறைவறநிறைவுசெய்கின்றசாதுசங்கமெவ்விதத்திலுஞ்சேரவேண்டுமென்பதாம்.........(௨௰)

(அ-கை.) சாந்தியாதியுள்ளோர்க்குரியவிந்நூலின்பயனுரைத்தல். (கவி) நிறைபவந்தீருபாயநான்கிவர்களோடு நிறைநட்பார்பவக்கடலைநீத்தாரன்றாய், குறையுமனமோகந்தீரிச்சொற்கேட்பாய்குணம்விரும்பாதிச்சொல்லைக்குறிக்கொண்டோர்க்கு, மறையுணர்வுவலிதின்வருங்காமமாதி மயக்கமறுஞ்சரற்கால வாவிநீர்போற், கறைதவிர்ந்துமனந்தெளியுங்கவசத்தோரைக்கணைகள்போன்மிடிமுதலாங்கவலைதாக்கா............................*

(இ-ள்.) நிறைபவந்தீர் - நெருங்கியசம்சாரத்தைத்தீர்க்கின்ற—உபாயம்-சாதனங்கள்—நான்கு - நால்வகையாம் — இவர்களோடு - இந்நால்வர்களுடன் — நிறைநட்பார் - மிகுந்தவன்புள்ளவர்கள்—பவக்கடலை-சநநசாகரத்தை—நீத்தார்-கடந்தார்கள்—அன்றாய் - அச்(சாந்தியாதிகுணமுள்ள) விராமா—குறையும் - இளைக்கின்ற—மனமோகந்தீர் - மனோமயக்கந்தீர்க்கின்ற—இச்சொற்கேட்பாய் - இக்கதையைக்கேட்பாய்—குணம்விரும்பாது - (இதன்) குணத்தைவிரும்பாமல்—இச்சொல்லை - இக்கதையை (மாத்திரம்)— குறிக்கொண்டோர்க்கு-குறிப்பாகக்கொண்டவர்களுக்கு—மறை - வேதத்தின்(முடிவாகிய)—உணர்வு - (ஆத்ம) ஞானமானது—வலிதின்வரும் - தானேவரும் —காமமாதி - இராகத்துவேஷமுதலான—மயக்கமறும்-மயக்கங்கள்தீரும்—சரற்காலம்-சரற்காலத்தில்—வாவிநீர்போல்-தடாகசலத்தைப்போல—கறைதவிர்ந்து - களங்கமற்று—மனந்தெளியும் - சித்தந்தெளியும்—கவசத்தோரை-வச்சிரகவசந்தரித்தவர்களை—கணைகள்போல் - பாணங்கள்போல—மிடிமுதலாம் - தரித்திரமுதலாகிய—கவலை - துன்பம்—தாக்கா - தாக்காது. எ-று. (இ-ம்.) சாந்தியாதிகுணங்களை யனுசரித்தவர்களுக்குக்காமாதிதோஷங்களைத்தீர்த்து ஆத்மஞானத்தை வலிதிற்கொடுக்கின்ற விக்கதைகளை அவசியஞ் சிரவணஞ்செய்யவேண்டுமென்பதாம் ....(௨௧)

(அ-கை.) நிராசையுள்ளவிசாரணையின்பலன்கூறல். (கவி) தருபயஞ்செய் மாயைமனமிராதாகுஞ்சமபாவந்தரங்கந்தீர்சாகரம்போன், மருவலுறும்விசாரத்தான் மிக்கோர்க்கெல்லாம்வாரிதிபோலாழமும்பொன் வரைபோன்மொய்ம்புந், திருமதியின் குளிர்ச்சியும்வந்தெய்துநன்னூற்செய்கையினல்லோர்புந்திசெவ்வையான, கருமவழிமகிழ்வெய்துமறுவிலாதகற்புடையாடன்மனையிற்களிக்குமாபோல்..............................*

(இ-ள்.) தருயாஞ்செய் - நடுக்கம்வரச்செய்கின்ற—மாயை - மாயையினால்—மனமீராதாகும் - (விசாரமுள்ள) மனம்வருந்தாதாம்—தரங்கந்திர்சாகரம்போல் - அலையில்லாதசமுத்திரம்போல்—சமபாவம் - சமத்துவத்தை—மருவலும் - அடையும்—விசாரத்தால்- விசாரணையினால் — மக்கோர்க்கெல்லாம் - மிகுந்தவிரவினவர்க்கும் — வாரிதிபோல் - சமுத்திரத்தி(னுடைய)போல—ஆழமும் - கெம்பீரமும் — பொன்வரைபோல் - மகாமேருவின் (வலிமையைப்)போல—மாய்ம்பும் - வலிமையும் — திருமதியின் - சிறப்புடைய பூர்ணசந்திரனைப்போல— குளிர்ச்சியும் - சீதளமும்—உற்றெய்தும் - வரும்— நன்னூல் - (ஆத்ம) ஞானசாத்திரத்தின்—செய்கையில் - ஒழுங்கில்—நல்லோர் - நற்குணமுள்ளவர்கள் —புத்தி-அறிவான து—செவ்வையான - (தனக்) கனுகூலமான(சமாதிமுதலிய) —கருமவழி - கன்மத்தில் — மறுவிலாதகற்புடையாள் - களங்கமற்றகற்புள்ளவள்—தன்மனையில் - தனதந்தப்புறத்தில்—களிக்குமாபோல்- (தனது நாயகனையேதெய்வமாகக்) களிக்குமாறுபோல—மகிழ்வெய்தும்-இன்பமடைவன். எ-று. (இ-ம்.) ஆத்மவிசாரமுள்ளமனது மாயையினாற்கெடாமற்சமபாவம்பொருந்திகெம்பீரமுதலான குணங்களோடுசற்கிருத்தியத்தில் மகிழ்ச்சியை யடையுமென்பதாம்.

(அ-கை.) சீவன்முத்தனுசாரச்சிறப்பு. (கலி) அற்புதங்களனைத்துமிலா விவனுக்கந்தவருஞ்சீவன் முத்திபதமடைவின்முற்றுந், சொற்புலனுக்கதீதனா யுலகர்போலத் தோன்றிடுவோன் புத்தியிலோர்தொழில்பற்றாதோ, னற்பயன்பொல்லாப்பயனாற் சுகஞ்சோர்விலோ னண்ணியதுபுசித்தினிதினன்றாய்நிற்போன், பொற்புறுநல்லாசாரவிரோதமான போகங்கடமிற்சிறிதும் பொருந்திடாதோன் ... ... *

(இ-ள்.) அற்புதங்களனைத்துமிலா - ஆச்சரியங்களியாவுமில்லாத—இவனுக்கு- (விராகமுடைய) விவனுக்கு—அந்தவருஞ்சீவன்முத்திபதம் - முன்சொன்னவரிதான சீவன்முத்திஸ்தானம்—அடைவின்முற்றும்-கிரமமாகமுதிரும்—சொற்புலனுக்கதீதனாய் - வசனத்துக்கெட்டாதவனாய் — உலகர்போலத் தோன்றிடுவோன் - உலகத்தாரைப்போலக் காணப்படுவான்—புத்தியில்-அறிவில்—ஓர்தொழில்பற்றாதோன்-ஓர்கருமங்களிலும் பிடிப்பற்றவன்—நற்பயன்-நல்லபிரயோசனத்தினாலும்—பொல்லாப்பயனால் - பொல்லாதபிரயோசனத்தினாலும்—சுகஞ்சோர்விலோன் - சுகமுந் துக்கமுமில்லாதவன்—நண்ணியது - கிடைத்ததை—இனிதில்-அன்பாக—புசித்து - அனுபவித்து—நன்றாய்நிற்போன்- சுகாசனத்திலிருப்பவன்—பொற்புறுநல்லாசாரம் - அழகியசத்துக்களொழுக்கத்துக்கு—விரோதமான-வேறுகிய— போகங்கடமில்- போகங்களிடத்தில்— சிறிதும்பொருந்திடாதோன் - எவ்வளவுஞ் சம்பந்தப்படாதவன். எ-று. (இ-ம்) விசாரத்தினாற் கிரமமாகசீவன்முத்தி பதத்தைப் பெற்றவனு மகான்களாசாரங்களுக்குப்பிரிதானபோகங்களை விரும்பக்கூடாதென்பதாம் ... ... (௨௫)

(அ-கை.) சீவன்முத்திவிசாரணையி னுயர்வுமவைநின்றியவிடத்துஇழிவுங்கூறல். (கலி) ஒருகணமுமொழியாமற் சுகமதாகி யுடல்கடவாதாய்ச் சான்றோருசாவினாலே, பெருகியவிவ் வீட்டுநெறிவிசாரஞ்செய்வோன்பிறவிதீர்மெய் ஞ்ஞானம்பெற்றோனாகி,வெருளுமறுபிறப்பினுறுதாயர்யோனிவிதனமுறான்சிறிதாகிமிளிர்போகத்தின், மருளுமனப்பாவியராய் வெருள்வோர்தாயர் வயிற்றின்மலப்புழுவென்றே வழங்கற்பாலோர் ... ... *

(இ-ள்.) ஒருகணமும் - ஒருக்ஷணமும்—ஒழியாமல் - நீங்காமல்—சுகமதாகி - இன்பத்தையுடையவனாயும்—உடல்கடவாதாய் - தேக (ஸ்மரணம்வரும்படி) யதிக்ரமியாமல்— சான்றோருசாவினால் - சத்துக்களிடத்தில்விசாரித்ததினால்—பெருகிய - வளர்ந்த—இவ்வீட்டுநெறி- இம்மோக்ஷமார்க்கத்தை—விசாரஞ்செய்வோன் - விசாரிப்பவன்— பிறவிதீர் - சநநந்தீர்க்கின்ற—மெய்ஞ்ஞானம்பெற்றோனாகி - ஆத்மஞானத்தையடைந்தவனாய்—வெருளும் - மடங்குகின்ற—மறுபிறப்பின் - மறுசநநத்தை—உறு- அடைந்து—தாயர்யோனி - மாதாவினல்குலினால்—விதனமுறான் - வேதனையைப்பொருந்தான்—சிறிதாகி- அற்பமாய்—மிளிர்-விளங்குகின்ற—போகத்தில்-விடயானுபவத்தில்—மருளுமனம்- மயங்குகின்றமனதையுடைய—பாவியராய் - பாவிகளாய்—வெருள்வோர் - (முன்சொன்ன வுபாயங்களில்) மருட்சியுடையவர்கள்—தாயர் - மாதாவினுடைய—வயிறதில் - கருப்பத்தி(லிருக்கின்ற)—மலப்புழுவென்றே - மலத்திற்புழுத்தகிருமியென்றே — வழங்கற்பாலோர் - சொல்லுந் தன்மையை யுடையவர். எ-று. (இ-ம்) சத்துக்கள்சகாயமா யாத்மவிசாரஞ்செய்வதே ஞானசுகம் இதன்றிப் போகத்திற்செல்வதே சநநதுக்கமாதலா லிதைநீக்கி யதைப்பெறவேண்டுமென்பதாம் ... ... (௨௬)

(அ-கை.) விசாரணையினளவுகூறல். (கலி) தருமவர்கடம்மிற்றுமெய்தப்பட்டதருமமொடுபொருட்டுஞ்சரிதையோராய்ந், துகடீர்தம்மிடத்திலேப்பாறிடாமுத்துரிட்டமெனுஞ்சாந்திநில தோன்றியட்டு, மிகுநூல்களுபசாந்தியொழுக்கம்போதமி

க்கவர்கூட்டரவிவற்றால்விசாரம்வேண்டு, நிகரிலாவிசாரத்தாற்றோன்றிநிற்குநிமல
துரியத்தினிலைநிகழ்த்தற்பாற்றே .... *

(இ-ள்.) தருமவர்கடம் - (அறிவிற்) றருந்தவச்சத்துக்கள்சங்கம்—இல் - இல்லாதசமயத்தில்—தருமமொடு - தருமத்துடன் — தாமெய்தப்பட்ட - தாஞ் (சம்பாதித்) தடையப்பட்ட—பொருள் - திரவியங்களால் —தேடும் - சேகரிக்கும்—சரிதையோராய்- (ஆசாரக்கிரியைச்செய்யுந்) தொழிலையுடையோராய்— துகடீர்தம்மிடத்தில்- குற்றமற்றவாத்மாவில்—இளைப்பாறி - விஸ்ராந்தியடைந்து—மாறா - நீங்காத— துரியமெனும் - துரியமென்கின்ற—சாந்திநிலை - உபசாந்திநிச்சயம்—தோன்றுமட்டும் - உதயமாகிறபரியந்தம்— மிகுநூல்கள் - மிகுந்த (வாத்மஞான) சாத்திரங்களும்—உபசாந்தி - உபசமனமும்—ஒழுக்கம்- நன்னடையும்—போதம் - (உயர்ந்த) வறிவும் — மிக்கவர்கூட்டரவு - சாதுக்கள்சங்கமுமாகிய — இவற்றால்- இவைகளினால்—விசாரம்வேண்டும் - ஆத்மவிசாரஞ்செய்யவேண்டும்— நிகரிலா - சமானமில்லாத—விசாரத்தால் - விசாரணையினால்—தோன்றிநிற்கும் - உண்டாயிருக்கின்ற— நிமலதுரியத்தினிலை-நிருமலமான துரியநிச்சயத்தை—நிகழ்த்தற்பாற்றே-சொல்லுந்தன்மையையுடையதோ. எ-று. (இ-ம்.) துரியஸ்தானமான விஸ்ராந்தியுண்டாகிறபரியந்தம்விசாரணைவேண்டுமென்பதாம் .... (௨௫)

(அ-கை.) துரியநிலைபெற்றவனநுபவமுரைத்தல். (கலி) பாவனைதீர் துரியமதினிளைப்புநீங்கிப்பவமென்னுங்கடல்கடந்து பாரஞ்சேர்ந்தோன், சீவனெனநின்றாலுஞ்சீவத்தன்மைதீர்ந்தாலுமில்லறத்திற்செறிவுற்றாலுங், கேவலஞ்சந்நியாசியாயிருந்தபோதுங்கிளர்சுருதிமபக்கத்தாற் கிடைப்பட்டாலு, மியாவதுஞ்செய் துந்தவிர்ந்தும்பயனொன்றில்லையிமகிரியுறாக்கடல்போலியல்பினிற்பன். .... *

(இ-ள்.) பாவனைதீர் - பாவனைநீங்கிய—துரியமதின் - துரியத்தில்— இளைப்புநீங்கி- விஸ்ராந்தியடைந்து—பவமென்னும் - சநநமென்கின்ற—கடல்கடந்து - சமுத்திரத்தைத்தாண்டி—பாரஞ்சேர்ந்தோன் - மோக்ஷதீரத்தையடைந்தவன்—சீவனெனநின்றாலும் - சீவத்தன்மையோடிருந்தாலும்—சீவத்தன்மைதீர்ந்தாலும் - சீவத்தன்மைதீர்ந்து (சிவமாயிருந்)தாலும்—இல்லறத்தில் - குடும்பத்தில்—செறிவுற்றாலும் - பொருந்தினாலும்—கேவலம் - தனிமையான—சந்நியாசியாயிருந்தபோதும்- துறவியாயிருந்தபோதிலும்—கிளர்- விளங்குகின்ற—சுருதிமயக்கத்தால் - சுருதி (ஸ்மிருதி) களின்பிரமையினால்—கிடைப்பட்டாலும் - கட்டுப்பட்டாலும்—யாவையும் - அனைத்தையும்— செய்தும் - செய்தாலும் — தவிர்ந்தும் - தவிர்ந்தாலும்—பயனொன்றில்லை - (அவற்றாலாகிய) பிரயோசனமொன்றில்லை — இமயகிரியுறாக்கடல்போல் - இமோர்ப்பர்வதமில்லாதசமுத்திரம்போல—இயல்பினிற்பன்- ஆத்மசுபாவத்திலிருப்பான். எ-று. (இ-ம்.) சநநசாகரத்தைக்கடந்து பாவனாதீதமான துரியத்தையடைந்தவனுக்கு வர்ணாச்சிரமவுசிதவாசாரங்களால்வருந்தருமாதருமங்களொன்றுமில்லையென்பதாம் (௨௬)

(அ-கை.) தன்னையறியுமுத்தியுந் திருஷ்டாந்தமும்வேண்டுமெனல். (கலி) ஊகமுளதேற்சிறுவருரையுங்கொள்கவொழிந்தயனுரைசெயினுந்திரணமொப்ப, வேகவிடுவாய்ஞானமெளிதுதோன்றவியம்புமுவமானமெலாமேகதேச, மாகநினைவாயுருவமற்றஞானமாகாரமாமுவமைக்கண்டாதென்னு, மூடரநுபவமில்லாவிகற்பத்தாலேமொழிகுதர்க்கமறிவழிக்குமுயலவேண்டாம் .... *

(இ-ள்.) ஊகமுளதேல் - (சுருதிகுருசுவாநுபவமென்னு) முத்தியிருக்குமாயின்—சிறுவருரையுங்கொள்க - குழந்தைகள்வசனத்தையுங்கொள்ளக்கடவாய்—ஒழிந்தது - (அந்த) யூகமில்லாததை—அயனுரைசெயினும் - பிரமதேவன்சொன்னாலும்—திரணமொப்ப - துரும்புக்கொப்பாக —ஏகவிடுவாய் - தள்ளுவாய்—ஞானம் - (அகாரணமானபிரம)ஞானம்—எளிதுதோன்ற - எளிதிலுதயமாம்பொருட்டு—இயம்பும் - சொல்லப்பட்ட— உவமானமெலாம்- (காரணமுள்ள) வுவமைகளியாவும்—ஏகதேசமாக - ஏகதேசமென்று—நினைவாய்-கருதுவாய் —உருவமற்ற - நிராகாரமான—ஞானம் - உண்மைஞானமானது — ஆகாரமாமுவமைக்கு- நாமரூபாகாரமாகியதிருஷ்டாந்தத்துக்கு —அண்டாதென்னும் - பொருந்தாதென்று சொல்லும்—மூடர் - மூடர்கள் —அநுபவமில்லா - பிரத்தியக்ஷ (ஞான) மில்லாத — விகற்பத்தால்- (தனது) பேத (ஞான) த்தினால்—மொழிகுதர்க்கம் - சொல்லுகின்ற குதர்க்கயுத்தியானது— அறிவழிக்கும் - (ஞானவிசாரஞ்செய்யு)மறிவைக்கெடுக்கும் — முயலவேண்டாம் - (இராமாவதில்) முயற்சிக்காதே. எ-று. (இ-ம்.) அநுபவயுத்தியினுலுவமிக்கப்படாதவஸ்துவையுவமானங்களைக்கொண்டறியக்கூடாதென்னுங்குதர்க்கயுத்திகளைத்தள்ளவேண்டுமென்பதாம். (௨௭)

(அ-கை.) ஞானமுண்டாவதற்கேதுவறிவித்தல். (கவி) தந்திரியிலெழுமிசைபோற்
சாந்திமுன்னுஞ்சற்குணத்தின்ஞானமெழுந்தம்மிற்றாமா, மிந்தவிரண்டுங்குளமு
மலரும்போல வினிதுவளர்ந்திடுமொக்கவிரண்டுங்கற்கில், வந்தணுகுந்தனித்தனி
யேயிரண்டுங்கற்கில்வருபயனொன்றிலதாமிவ்வாய்மைகேள்வி, முந்துமறம்பொரு
ளின்பங்கீர்த்திவாணாண்முழுதளிக்குமனத்தெளிவான்முத்திநல்கும் ……… …. …. *

(இ-ள்.) தந்திரியிலெழும் - நரம்பிலுண்டாகும்—இசைபோல்-நாதம்போல—சாந்திமுன்னும் - சாந்திமுதலாகிய—சற்குணத்தில் - சற்குணங்களில் — ஞானமெழும் - (ஆத்ம) ஞானமுதயமாம்—தம்மிற்றாமாம் - ஞானத்தினாற் (சற்குணங்களும்) அச் (சற்குணங்களான்) (ஞானமும்விளங்குவன) வாம்—இந்தவிரண்டும் - இவ்விரண்டும்—குளமுமலரும்போல-தடாகமுந்தாமரைப்பூவும்போல—இனிதுவளர்ந்திடும் - நன்றாய்வளரும்—இரண்டும்-(சற்குணமு ஞானமுமாகிய) விவ்விரண்டையும்—ஒக்க - சமமாக—கற்கில் - அற்பியாசஞ்செய்யில்—வந்தணுகும் - (பிரமப்ரயோசனம்) வரும்—தனித்தனியே - வேறுவேறாக — இரண்டுங்கற்கில்-(இவ்) விரண்டையுமற்பியாசிக்கில்—வருபயனொன்றிலதாம் - வருகின்றப்ரயோசனமொன்றுமில்லாததாம்—இவ்வாய்மைகேள்வி - இவ்வுண்மையான(கதையின்)கேள்வியானது—முந்துமறம் - முதலான(சகலத்தியாகமென்னுந்) தருமமும்—பொருள் - (அழிவற்ற) பொருளும்—இன்பம் - (நித்தி) யாநந்தமும்—கீர்த்தி - (சத்துக்களாற்) புகழ்ச்சியும்—வாணாள் - (சுக)சீவனமுமாகிய—முழுதளிக்கும் - யாவையுங்கொடுக்கும்—(அதுவன்றி)மனத்தெளிவால்- மனத்தினதுதெளிவினால்—முத்தி - (நிரதிசயாநந்தமென்னு) மோக்ஷத்தையும்—நல்கும்- கொடுக்கும். எ-று. (இ-ம்.) சற்குணத்தையு ஞானத்தையு மொன்றுக்கொன்று சம்பந்தமாகக் கற்கின்றதனாலுண்டாகு மிந்த வபரோக்ஷாநுபவமுள்ள கதைகள் சீவன்முத்தியையும் விதேகமுத்தியையுங் கொடுக்குமென்பதாம்…………………(உஅ)

முமுட்சுப்பிரகரணமுற்றிற்று. ஆக கதை-௫-கவிதை (௱அக௯.)

உற்பத்திப்பிரகரணத்தில்.

ஞானவிண்மகன்கதை.

(அ - கை .) முற்பிரகரணத்திற் சாதன சதுஷ்டயத்தில் மூன்று சாதனமு நிறைந்து நான்காஞ் சாதனமான முமுட்சுவி லதிதீவிரனான விராமனுக்கு அத்துவித ஸ்வரூபத்தையும், அஃதடையுமுயற்சியையும், அதற்குக்கருவியான சுத்தவாசனையையும், அதற்குச்சகாயமான சாந்தியாதிகுணங்களையுஞ்சொல்லி அத்துரியஞானம் பிரசன்னமாம்பொருட்டு சிருஷ்டிக்கு முன்சத்தாமாத்திரமாகியும் சதோதயமாகியும், சதாநந்தமாகியும், பிரகாசிக்கின்ற பிரமத்தின் லீலாசங்கற்பத்திற் ப்ரதிபலனமானசைதன்னியமே, சகத்துற்பத்தியென்றும், அதன்விளக்கமே சகஸ்திதியென்றும், அதனடக்கமே சகசாந்தமென்றும், இம்மூன்றினுமொருதன்மையவாக விளங்கு மதிஷ்டானசைதன்னியமே நிருவாணசுகமென்றுஞ்சொல்லியவிந்நான்குபிரகரணத்தாற் சர்வமும் பிரமமயமென்பதை யுபதேசிக்கவேண்டி, ஒன்பதுகதைகளா னிறைந்தவுற்பத்திப்பிரகரணத்திற் சைதன்னியத்திலுண்டான சங்கற்பஞ் சைதன்னியமேயென்பது தோன்ற முந்தினஞானவிண்மகன்கதையைச் சைதன்னிய வுருவகமாக நிரூபிக்கிறார் … .. ………………………………………………… *

(அ-கை.) ஆத்மஸ்வரூபப்ரத்யக்ஷநிருபணம். (கவி) (வேறு) முத்தியை நயந்தோர்
செய்கைமொழிந்தனஞ் சகங்கடோன்று, மத்திறமினிது கேட்பாயனுபவப்பேற்றி
னாலே, யொத்துமுன்னிலைப்பேர்பெற்ற யுணர்வுநஞ் சீவனித்தைச், சித்தொடும்பு
மானகந்தைமுன்னிலைச்சீவனென்ப … …………………………………… *

(இ-ள்.) முத்தியைநயந்தோர் - மோக்ஷ (மடைய) விரும்பினமுமுட்சுக்களின்—செய்கை - ஆசாரத்தை—மொழிந்தனம் - (நீயனுசரிக்கும்படிக்ரமமாகச்) சொன்னோம்— சகங்கடோன்றும் - (இனி) யுலகங்களுண்டாகின்ற—அத்திறம் - அக்காரணத்தை—இனிதுகேட்பாய் - நன்றாகச்சிரவணஞ்செய்யக்கடவாய்—அனுபவப்பேற்றின் - சுவானுபூதியாகியபெரு

மையினை—ஒத்து - பொருந்தினதாயும்—முன்னிலை - ப்ரத்யக்ஷமென்று—பேர் - (மதஸ்தர்களிடப்பட்ட) நாமங்களை—பெற்ற - பெற்ற(தாயமிருக்கின்ற)—உணர்வு - (அபரோக்ஷ) ஞானமே—நஞ்சீவன் - நமதாத்மா—இத்தை - இச்சீவனை—சித்தொடு - பிரமஞானத்துடன்—புமான் - கூடஸ்தனென்றும்—அகந்தை - கர்த்தத்துவவீஸ்வரனென்றும்— முன்னிலைச்சீவனென்ப - ப்ரத்யக்ஷசிதாபாசனென்றுஞ்சொல்வர். எ-று. [ப-ம்.] மதஸ்தர்களில், தார்க்கிகர், விடயசம்பந்தஞானுனுபவத்தை, அனுபூதிபிரத்யக்ஷமெனவும், சாங்கியர், புத்திசம்பந்தஞானுனுபவத்தை, ப்ரதிபத்திப்ரத்யக்ஷமெனவும், மீமாம்சர்கள், ஆத்மானுபவ சம்பந்தஞானத்தை வேதனைப்ரத்யக்ஷமெனவுங்கொண்டனர். அவைகளில், விடயத்தோடுஞானங்கூடியனுபவிக்குஞ்சமயத்திலவ்விரண்டையுமழித்தெழா நின்றசத்தும், சமாதியில், அறிவில்அறிபவன்கூடியனுபவிக்குஞ்சமயத்தவ்விரண்டையுமழித்தெழா நின்றசிதாநந்தமும், சகசத்தில், ஆநந்தத்தை, ஆநந்திகூடியனுபவிக்குஞ், சமயத்தி லவ்விரண்டையுங்கரைத்தெழாநின்ற நிரதிசயாநந்தமும்ஏகமாயிருக்கின்ற துரியாதீதஞானமே அபரோக்ஷஞானமென்பார், அனுபவப்பேற்றினுலேயொத்துமுன்னிலைப்பேர்பெற்றவுணர்வுநஞ்சீவனென்றார்வடநூற்பிரகாரம்அனுபவம்பிரதிபத்திவித்தைமுன்னிலைப்பேர்பெறறமேதைநஞ் சீவனித்தைச் சித்தொடுபுமானகந்தைமுன்னிலைத்திரிசயமென்ப, வெனப்பாடமோதி முன்னிலை-ப்ரத்தியக்ஷமென்னும் — பேர்பெற்ற-(பேதவாதிகளா) னமிடப்பெற்ற—அனுபவம் - விடயப்ரத்யக்ஷமும்—வித்தை-வேதனப்ரத்யக்ஷமும்—பிரதிபத்தி - ஞாதாப்ரத்யக்ஷமு (மாகியவித்திரிபுடிப்ரத்யக்ஷமாகவிளங்குகின்ற—மேதை - ஞானமே— நஞ்சீவன்- நமதாத்மா—இத்தை - இஞ்ஞானத்தையே—சித்தொடு-ஞானத்துடன்—அகந்தை - அகம்பாவ(முள்ள)—புமான்- ஞாதாவென்றும்—முன்னிலைத்திரிசயமென்ப - ப்ரத்யக்ஷஞேயமென்றுஞ்சொல்வார்கள். எ-று. தார்க்கிகர்களும் பூர்வமீமாம்சர்களும் திரிபுடியைவிடயமாகவுடையஞானமே, ப்ரத்யக்ஷஞானமென்றுரைத்தனர், அவைபேதமாகலின்கூடாவாம், நமதுசித்தாந்தம், ப்ரத்யக்ஷஞானமே, சிவசத்தார்த்தமாகலின், அவையபேதமெனக்கொள்க. (இ-ம்.) சுடஞ்சைதன்னியப்ரத்யக்ஷப்பிரகாசமே நான்கு சைதன்னியமாகவுந்திரிபுடியாகவுந்தோறறுகின்றதென்பதாம்........................ (க)

(அ-கை.) ஆத்மாவேசகமாக விளங்குகின்றதெனல். (கவி) சீவனெவ்வறிவினுலேதெரிவுறுமதுபதார்த்தந், தாவுறும்விவிதமானசங்கற்பவிகற்பமுற்று, மேவியமயக்கந்தன்னுல்விரிந்தநீரலையாமாபோற், பூவலயங்களாகிப் பொலிந்தது புகன்றசீவன்.................. *

(இ-ள்.) சீவன் - சீவனுனவன்—எவ்வறிவினுல்- எந்தவறிவோடும்—தெரிவுறும்-ப்ரகாசிக்கின்றுளே—அது - அந்தஞானமே—பதார்த்தம்- (வியோமாதியான) வஸ்துக்களாம்—தாவுறும்- (தோன்றியழிதலிற்) றுவாநின்ற—விவிதமான - நாநாவிதமான — சங்கற்பவிகற்பம்-சங்கற்பவிகற்பங்களை—உற்றுமேவிய - பொருந்தியிருக்கின்ற—மயக்கந்தன்னுல் - மயக்கத்தினுல்—விரிந்தநீர் - பரவியசலமே—அலையாமாபோல் - திரையானதுபோல — புகன்றசீவன்-சொல்லியசீவனுனவன்—பூவலயங்களாகி - பூமி (முதலானசகலவஸ்துக்க) ளாய்—பொலிந்தது-ப்ரகாசித்தது. எ-று. (இ-ம்) ஆத்மசங்கற்பமே சகம்போலத்தோற்றப்படுகின்றதாம்...(உ)

(அ-கை.) ஆத்மாவேசகத்தாயினதற்குக் காரணமியாதெனின். (கவி) பன்னுகாரணமொன்றில்லைப்படைக்குமுன்படைக்கவேண்டு, மென்னும்லீலையினுற்றுனேயியைந்தகாரணமதாகி, மூன்னுறு பொதுவாங்காட்சி மொய்ப்பொருட் டிரள்களாகித், தன்னுளேசகமாய்க்காற்றுட் சலனம்போலறிவுட்டங்கும்.......................... *

(இ-ள்.) படைக்குமுன் - சிருஷ்டிக்குமுன்னமே—பன்னும் - சொல்லப்பட்ட—காரணமொன்றிலலை - அகாரணமான—தானே- சத்தாமாத்திரமே—படைக்கவேண்டுமென்னும்லீலையினுல-சிருஷ்டிக்கவேண்டுமென்கின்றலீலாசத்தியினுல்—இயைந்தகாரணமதாகி-பொருந்தனகாரணமாய்—முன்னுறு - ப்ரத்யக்ஷமான—பொதுவாங்காட்சி- சாமானியதிருஷ்டியே—மொய்ப்பொருட்டிரள்களாகி - நெருங்கியபொருட்கூட்டங்களாகி(யிருக்கின்ற)—சகமாய்-உலகமாய்—தன்னுள் - தனதுவியாபகத்தி(லுண்டாய்)—அறிவுள்- ஞானத்தில்—காற்றுட்சலனைபோல்- வாயுவினிடத்திற்சலன(சத்தியைப்போல —தங்கும்- தங்கியிருக்கும். எ-று·(இ-ம்) பிரமப்ரகாசமே சகத்தாதலின் அதற்கதுவே காரணமானதாம்........................ (௩)

(அ-கை·) பிரமங்காரணமாயிற் சகங்காரியமா மதனுற்றுவிதமும் அதன்வியாபகத்துட்சகம்விளங்குகின்றதெனின், விசிட்டாத்துவிதமுமாமேயெனின். (கவி.) எல்லைபிறிலைசகள் சாலம்புறம்பெனுமிவற்றிற்கேற்ற, பல்லுருவாயெங்கெவ்வாறெழுந்ததட்படியங்காருஞ், செல்லுமிந்நெறியாலிந்தசமசகமெனும்பிரமகர்பம், புல்லுகாரணமிலாத பொருளெனப் புத்திசெய்க.......................... *

(இ-ள்.) எல்லையில் - அளவில்லாத — திசைகள் - திக்குகளும் — காலம்-காலங்களும் — புறம்பெனும் - ப்ரத்யேகமென்கின்ற — இவற்றிற்கு - இச்சர்வாத்மஞானத்துக்கு — ஏற்ற - இசைந்த — பல்லுருவாய் - நாநாவிதவடிவங்களாய் — எங்கெவ்வாறெழுந்தது - எவ்விடத்தெப்படியுண்டாயிற்றோ — அப்படி - அவ்வண்ணம் — அங்காகும் - அவ்விடத்தாகும் — செல்லுமிந்நெறியால்- நடக்கின்றவிவ்விதத்தினால் — இந்தச்சகமெனும்-இவ்வுலகமென்கிற — பிரமகற்பம்-பிரமகற்பிதமானது — புல்லுகாரணமில்லாத - பொருந்திய(வேறு) காரணமில்லாத — பொருளென-வஸ்துவென்று — புந்திசெய்க - அறியக்கடவாய். எ-று. (இ-ம்) எவ்வெவ்விடங்களிலெப்படியெப்படிஸ்புரிக்கின்றதோ, அப்படியப்படிதானேவிளங்குகின்றபடியாற்சகங்காரியமாகாது, அதனாற்பிரமங்காரணமாகா, இக்காரணமின்மையினாற்றுவிதமும், காரணத்துட்காரியம் வேறுபடாமலபேதமாயிருத்தலின், விசிட்டாத்துவிதமுமின்றித்தானே சகலமுமாய் விளங்குதலின், அத்துவிதமே யாமென்பதாம்...(௪)

(அ-கை.) அப்படியாயிற் சகந்தோற்றப் படுகின்றதேயெனின். (கவி) இதனைமுன்னிலையாஞ்சீவனிமைப்பினிற்படைத்ததாகு, மதன்வடிவாகிநிற் குமனுமானமுதலவெல்லாம், விதமுறுகாட்சிமெய்ம்மை பந்தமதின்மைவீடாந், திதமறுமிதுபோமாறுசெப்புதுந் தெரியக்கேட்பாய்...*

(இ-ள்.) இதனை- இச்சகத்தை — முன்னிலையாஞ்சீவன்- ப்ரத்யக்ஷமாகியவாத்ம(சைதன்யமே) — இமைப்பினில் - நொடியளவில் — படைத்ததாகும் - சிருஷ்டித்ததாகும் — அனுமானமுதலவெல்லாம்-அனுமானமுதலிய (பிரமாணங்க) ளியாவும் — அதன்வடிவாகிநிற்கும் — அப்பிரத்யக்ஷத்தினம்சமாகவேவிளங்கும் — விதமுறு-நாநாவிதமாகிய — காட்சிமெய்ம்மை-திரிஸ்யத்தினுண்மையே — பந்தம் - பந்தமாம் — அதின்மைவீடாம் - அஃதில்லாமையே மோக்ஷமாம் — திதமறுமிது - திரமில்லாதவித்திரி (ஸ்யமானது) — போமாறு - நீங்கும்படி — செப்புதும்- சொல்லுவோம் — தெரியக்கேட்பாய்- (நன்றாய்த்) தெரியக்கேள். எ-று. (இ-ம்) ப்ரத்யக்ஷசைதன்யத்தைத் தவிர வேறுவஸ்து தோற்றவில்லை யென்பதாம்...(௫)

(அ-கை.) அப்படிப்பட்டபிரமமெப்பொழுதுவெளிப்படுமெனின். (கவி) மண்டியசுழுத்திதன்னில்வருகனப்போவதென்னக், கண்டனவுலகமெல்லாங் கற்பனைமுடிவிற்போக, வெண்டருமலைவுதோற்றம் பெயரெலாமின்றியாழ்ந்து, தண்டலிலிருடேசின்றித்தனித்ததோருண்மைநிற்கும்...*

(இ-ள்.) மண்டியசுழுத்திதன்னில் - மிகுந்தசுழுத்தியவத்தையில் — வருகனப்போவதென்ன-வாராநின்றசொற்பனங் கெடுவதுபோல — கண்டனவுலகமெல்லாம் - காணப்பட்டனவாகிய சகங்களியாவும் — கற்பனைமுடிவிற்போக- கற்பாந்தத்திற்கெட — எண்டருமலைவு-எண்ணத்தினுண்டானசஞ்சலமும் — தோற்றம் - உருவமும் — பெயர் - நாமமு(மாகிய) — எல்லாமின்றி- இயாவுமில்லாமல் — ஆழ்ந்து - கெம்பீரமாய் — தண்டலிலிருள் - தடையற்ற (வஞ்ஞா) னாந்தகாரமும் — தேசு- (விருத்திஞான) ப்ரகாசமும் — இன்றி- இல்லாமல் — தனித்தது-தானேதானாயிருக்கின்றதாகிய — ஓருண்மை - ஒப்பற்றதத்துவஞானமானது — நிற்கும் - மிஞ்சியிருக்கும். எ-று. (இ-ம்) அத்யந்த ப்ரளயத்திற் சங்கற்பரூபமான, சகலசகங்களுநீங்கி ஞாதுஞ்ஞானரகிதமான சுயஞ்சைதன்யமே விளங்குமென்பதாம்...(௬)

(அ-கை.) இப்படிப்பட்ட சுயஞ்சைதன்யத்திற்குச் சத்தியாதிநாமம்வந்ததென்னெனில். (கவி) சத்தியம்பிரமமான்மாபரமுதற் சாற்றவேண்டி, யித்திறப் பெயர்மேலோராலிடப்பெற்றவிந்தவான்மா, சித்திரமாகத்தானே வேறுபோற் றிகழ்ந்துதீது, மெத்திமேல்வருசீவப்பேர்மேவியபோலவாகும்...*

(இ-ள்.) சாற்றவேண்டி(வாக்கினால்)விபகரிக்கும்பொருட்டு — சத்தியம்-சத்தியமும் — பிரமம்-பிரமமும் — ஆன்மா-ஆத்மாவும் — பரம்- பரமும் — முதல்-முதலாகிய — இத்திறப்பெயர்-இத்தன்மையவாகியநாமங்களை — மேலோரா லிடப்பெற்ற - சத்துக்களாற்றரிக்கப்பட்ட — இந்தவான்மா-இவ்வாத்மாவானது — சித்திரமாக-அதிசயமாக — தானேவேறுபோற்றிகழ்ந்து-தானொன்றேமற்றொன்றுபோற்ப்ரகாசித்து — தீதுமெத்தி - குற்றம்பொருந்திய — மேல்வரு- இனிவருவதான — சீவப்பேர்- சீவநாமத்தை — மேவியபோலவாகும்-பொருந்தினதுபோலவாகும். எ-று. (இ-ம்.) ஆத்மாவானது மகான்களால் விபகரிக்கும்பொருட்டு பரியாயநாமங்களைப் பெற்றுத்தானேசீவனைப்போலவிளங்குமென்பதாம்...(௭)

(அ-கை.) அச்சைதன்யமேமனமாயதனாற்சகமெப்படியாயிற்றெனின். (கவி) சீவனென்கின்றசொல்லும் பொருளுமாய்ச்செறிந்தவான்மா, பாவனைமனனத்தாலே

பருத்தெழுமனமதாகு, மேவரும்பிரமந்தன்னில்வேலையிலலைபோல்வந்து, தாவுறு
முள்ளந்தானே நினைந்தவாசகங்கற்பிக்கும் .... *

(இ-ள்.) சிவனென்கின்றசொல்லும் - சிவனென்கிறசத்தமும்—பொருளும்-(அத)னருத்தமுமாய்—செறிந்தவான்மா - நிறைந்தவாத்மாவானது—பாவனைமனனத்தாலே- பாவித்துள்ளசங்கற்பத்தினால்—பருத்தெழுமனமதாகும்- தடித்தெழாநின்றமனமாம்—மேவரும்பிரமந்தன்னில் - அகோசரமான பிரமத்தில் — வேலையினலைபோல் - சமுத்திரத்தின் திரையைப்போல—வந்து-உண்டாகி — தாவுறுமுள்ளம் - சஞ்சலிக்கின்றமனதுதானே — நினைந்தவா-(தனது)சங்கற்பப்படியே—சகங்கற்பிக்கும் - உலகத்தையுண்டாக்கும். எ-று. (இ-ம்.) சிவசப்தார்த்தமான வாத்மஸ்மரணமே மனமாயதின்சங்கற்பமே சகமாயிற்றென்பதாம்..........(௮)

(அ-கை.) அப்படியாயின் வேறுபாடாமேயெனின். (கவி) உன்னுறுமனத்தினாலே
யுலகமாமிந்திரசாலந், துன்னுறுபணிகளென்னுஞ்சொற்பொருட்பொன்னையன்றி,
யன்னியமில்லைபொன்றைத் பணியெனவறையவேண்டா, பன்னியவுலகாஞ்சொற்கு
ப்பரமன்றிப்பொருள்வேறில்லை .... *

(இ-ள்.) உன்னுறுமனத்தினாலே - நினைக்கப்பட்டமனோ (சங்கற்பத்) தினாலே—உலகமாமிந்திரசாலம் - சகமென்னுமிந்திரசாலமானது— துன்னுறும் - உண்டாயிருக்கும்—பணிகளென்னுஞ்சொற்கு - ஆபரணமென்னுஞ்சத்தத்துக்கு—பொருள் - அருத்தமானது—பொன்னையன்றி - கனகத்தையல்லாமல்—அன்னியமில்லை-வேறின்று—பொன்றால்-கனகத்தினால்—பணியென - ஆபரணமென்று — அறையவேண்டா - சொல்லவேண்டாம்— பன்னிய - சொல்லிய—உலகாஞ்சொற்கு - சகமென்னுஞ் சத்தத்துக்கு — பரமன்றி - பிரமமேயல்லாமல்—பொருள் - அருத்தம்—வேறில்லை-வேறின்று. எ-று. (இ-ம்) சகம்பிரமப்ரகாசமேயன்றிவேறின்றென்பதாம்.. (௯)

(அ-கை.) அசத்தாகியமனத்தினாற்சகத்தெப்படியுண்டாயிற்றெனின். (கவி) செல்
லுறுநதியாற்றோன்றுந் திரைகள்போன்மனத்திலுண்டா, யில்லையுமாகியுண்டுபோ
லெழுமிந்தஞால, மல்லல்செய்மோகபந்தந் தமமலமவித்தைமாயை, புல்லுசம்சா
ரமென்றே ஞானிகள்புகலப்பட்ட .... *

(இ-ள்.) செல்லுறுநதியாற்றோன்றும்- ஓடாநின்ற(கான)லாற்றிற்றோற்றும்—திரைகள்போல்- அலைகளைப்போல—மனத்தில் - (அசத்தான)மனதில்—உண்டாயில்லையுமாகி-உண்டாகாததா(யிருந்தும்)—உண்டுபோலெழும் - உள்ளதுபோலத்தோற்றுநின்ற—இந்தஞாலம்-இச்சகமானது—அல்லல்செய் - துன்பத்தைச்செய்யாநின்ற—மோகம் - மோகமென்றும்—பந்தம்-பந்தமென்றும்—தமம் - தமமென்றும்—மலம் - மலமென்றும்— அவித்தை- அவித்தையென்றும்—மாயை - மாயையென்றும்—புல்லுசம்சாரமென்று - சார்ந்திருக்கின்ற சம்சாரமென்றும்—ஞானிகள்-அறிஞர்களால்—புகலப்பட்ட-சொல்லப்பட்டன. எ-று. (இ-ம்) இல்லாதகானற்சலத்தி லலைதோன்றுவதுபோல வில்லாதமனதினாற் சகந்தோற்றுகின்றதாம் ...... (௰)

(அ-கை.) பந்தரூபமுமதனிவிர்த்தியும்ஞாதேயமும்யாதெனின்.(கவி) பந்தத்து
ருவங்கேட்டுணரிற்பரவீட்டுருவுமேல்வெளியா, மிந்தச்சகநீநான்முதலாமிவைமெ
ய்யென்றல்பந்தமதா, மந்தக்கருத்துநிற்பளவுமரிதாமுத்திவித்தினிடைத், தொந்
தத்தருப்போற்காண்பவன்பாற் றோன்றுதுறையுங்காண்பவெலாம்..... .... *

(இ-ள்.) பந்தத்துருவம் - (நாஞ்சொல்லாநின்ற) பந்தஸ்வரூபத்தை — கேட்டுணரில்-(நீ) கேட்டறிவாயானால்—பரவீட்டுருவு- மேலாகியமோக்ஷஸ்வரூபம்—மேல்வெளியாம்-இனி(நன்றாய்)வெளிப்படும்—இந்தச்சகம்- இவ்வுலகத்தையும்—நீநான்முதலாமிவை - நீநான்முதலாகிய(விப்பேதங்களையும்) —மெய்யென்றல் - உள்ளதென்பது— பந்தமதாம் - பந்த (ரூப)மாகும்—அந்தக்கருத்துநிற்பளவும் - அச்சங்கற்பமான(திரிஸ்யமிருக்கின்ற)பரியந்தம்—முத்தி-மோக்ஷமானது—அரிதாம் - அரியதாய்—வித்தினிடை - விதையினிடத்தில் — தொந்தத்தருபோல் - அடங்கியிருக்கின்ற விருக்ஷத்தைப்போல—காண்பவன்பால்-திருஷ்டாவினிடத்தில்—காண்பவெல்லாம்-திரிஸ்யங்களியாவும்—தோன்றுதுறையும்-உண்டாகாமலடங்கியிருக்கும். எ-று. (இ-ம்) விசாரிக்குமட்டுஞ் சகமாயிருந்துடனேகெடுகின்றபந்தநாசத்திற்சுயஞ்சைதன்யம்ப்ரகாசிக்குமென்பதாம், சகம்பந்தமென்பதற்குதாரணம்,சூதசம்மிதையில்,சிவபூசாயோககண்டத்தில், அறிவின்ஸ்வரூபத்துக் குவிதிரேகமாக யாதொன்று தோன்றுகின்றதோ வதுவே சம்சாரமென்று சொல்லப்படுகின்றது .... (௰௧)

(அ-கை.) திருஷ்டாவிற்றிரிஸ்யமெப்படியிருக்கின்றதெனின் (கவி) பிறிவாம்பொருளின் மனத்திருந்தபேதப்படியேயுதரத்திற், செறிவாஞ்சிருட்டிசமத்காரஞ்சிதைவற்றுண்டாய்ச்செறிவதுபோ, லறிவாஞ்சரீரியெனும்பொருளினகன்றவுதரத்தங்குரமாய், நெறியார்சகத்தின்வடிவமெலாநீங்காவியல்பாய்நிறைந்திருக்கும் .... *

(இ-ள்.) பிறிவாம்பொருளின் - பிரிவுள்ள (வடவீசமுதலியகாரண) வஸ்துவின்—உதரத்தில் - கருப்பத்தில்—மனத்திருந்த - அதற்குள்ளிருந்த—பேதப்படியே - (பத்திரபுட்பாதிகளான) பேதப்ரகாரமே — செறிவாஞ்சிருட்டி - நெருங்காநின்றசிருட்டியின் — சமத்காரம்-ஆச்சரியசத்தியானது—சிதைவற்று - கெடாமல்—உண்டாய்ச்செறிவதுபோல் - உண்டாயிருப்பதுபோல—அறிவாஞ்சரீரியெனும் - ஞானாத்மாவென்னும் — பொருளின் - வஸ்துவினுடைய—அகன்றவுதரத்து - வியாபகமானகருப்பத்தில் —அங்குரமாய் -முளையாகி — நெறியார்- முறையாகப்பொருந்திய — சகத்தின்வடிவமெலாம்-உலகத்தி(னுடை)ரூபமானசகலமும்—நீங்கா -நீங்காமல்—இயல்பாய்நிறைந்திருக்கும்-சுபாவமாகநிறைந்திருக்கும்.எ-று.(இ-ம்.)வித்தில்விருக்ஷமிருப்பதுபோலதிருஷ்டாவிற்றிரிஸ்யசத்தியடங்கியிருக்குமென்பதாம் ....(௰௨)

(அ-கை.) திருக்குவிலுண்டான சகலமுந் திருக்குவேயென்பதற்குத் திருஷ்டாந்தமியாதெனின். (கவி) பருவங்களிலேவிதைமுளைக்கும்படிபோற்காணப்படுமவற்றிற், கருதுங்கருத்துமுடலெடுக்குங்ககனத்துதித்தோன்கதையாலே, யிருளுஞ்சகத்தினுற்பத்தியெளிதாய்விளங்குமிதுகேட்பாய், பெருகுங்ககனம்பிறப்பிடமாய்ப்பிறந்தான்மறையோர்பெருங்குலத்தோன் .... *

(இ-ள்.) பருவங்களில் - பக்குவமான (காலதேச) ங்களில்—விதை - வித்தானது—முளைக்கும்படிபோல் - முளைக்கின்றதன்மையைப்போல — காணப்படுமவற்றை - திரிஸ்யத்தை—கருதுங்கருத்தும் - சங்கற்பிக்கின்றமனதும்—உடலெடுக்கும்-(தேவதிரியக்குமுதலிய) வடிவமாம்—ககனத்துதித்தோன்கதையாலே- (ஞா) னகாயத்துதயமானவன்சரிதையினால்—இருளுஞ்சகத்தினுற்பத்தி - அந்தகாரமயமானசகசிருஷ்டி — எளிதாய்விளங்கும் - லெகுவா(யுணக்கு) ப்ரகாசிக்கும்—இதுகேட்பாய் - இக்கதையை (நீ) கேட்கக்கடவாய்— மறையோர்பெருங்குலத்தோன் - சிறந்தபிரமவமிசத்தையுடையவன்—பெருகுங்ககனம் - வியாபகமான(ஞானா) காசமே—பிறப்பிடமாய் - (தா) னுண்டாவதற்குக்காரணமாக— பிறந்தான் - ஞானவிண்மகனுண்டானான். எ-று. (இ-ம்.) ஆத்மவுல்லாசத்தில் அதன்சுபாவமாயுண்டானசகலமும் ஆத்மசாக்ஷாத்காரமாகவெளிப்படுதற்கின்ஞானவிண்மகன்கதையேதிருஷ்டாந்தமென்பதாம்

(அ-கை.) ஞானபுருடன்சரிதையைவினவுதல். (கவி) ஒழிவிற்றியானமுயிர்க்கிதம்வீறுடையோனெடுநாளுய்ந்திருப்ப, விழியுமுலகைவிழுங்குறுநாமிவனைவிழுங்காதிருந்தமையென், னழிவுசெய்யுமெனதுவலியழுந்துங்கல்லின்வாண்முனைபோற், கழியமழுங்கிற்றெனவெண்ணிக்காலனவனூர்கடிதணைந்தான் .... *

(இ-ள்.) ஒழிவிற்றியானம் - பிரிவற்றசமாதியும்—உயிர்க்கிதம் - சீவகாருணியமும்—வீறு - தருமமு (மாகியவிவைகளை)—உடையோன் - உள்ளவனாகிய(ஞானவிண்மகன்)—நெடுநாளுய்ந்திருப்ப - அனேககாலஞ்சீவித்திருக்கு(மளவில்)—இழியுமுலகை - ஈனமாகு(மிச்)சகத்தை—விழுங்குறுநாம் - புசிக்கின்றயாம்— இவனைவிழுங்காதிருந்தமையென் - இவனைப்புசிக்காமலிருந்ததென்ன — அழிவுசெய்யுமெனதுவலி - (அனைத்தையு) நசிப்பிக்குமெனதுவல்லபம்—கல்லில் - பாடாணத்தில்—அழுந்தும் - அழுந்துகின்ற—வாண்முனைபோல் -கத்திமுனையைப்போல—கழியமழுங்கிற்றென - மிகவுமழுங்கிப்போயிற்றென்று—எண்ணி - நினைத்து—காலன் - காலனானவன்—அவனூர்கடிதணைந்தான்-அவனூரிற்சீக்கிரத்திற்சேர்ந்தான். எ-று. (இ-ம்.) காலன், வேறுபடாதவனை வேறுபடுத்தச்சென்றதாம் .... (௰௪)

(அ-கை.) அப்புருடனகப்பட்டானோவெனின். (கவி) வினையின்முயல்வார்தன்கருமம்விடுவதுண்டோவெனமறையோன், மனையின்வாயிற்புகுமளவின்மண்டுமூழிக்கடுங்கனல்போற், கனையுங்கடுந்தீயெரித்திடவுங்கடிந்துபுகுந்துகண்டவனைப், பனைசெய்கரமாயிரத்தாலும்பற்றியிழுத்துப்பயனற்றான் .... *

(இ-ள்.) வினையின்முயல்வார் - (ஒரு) தொழிலில்முயற்சிப்பவர்கள் — தன்கருமந்தனதுதொழிலை — விடுவதுண்டோவென - விட்டுவிடுவார்களோவென்று — மறையோன்-பிராமணனுடைய—மனையின்வாயில் - வீட்டுவாயலில்— புகுமளவில் - (காலனானவன்) புகுந்தமாத்திரத்தில்—மண்டும் - மிகுகின்ற — ஊழிக்கடுங்கனல்போல் - கொடிய ஊழித்தீயைப்போல—கனையும்- சத்தியாநின்ற—கடுந்தீ- (அவரதுமகிமையென்னுங்கொடியதீயானது—எரித்திடவும் - எரிக்கவும்—கடிந்து - (அதைப்) பிளந்துகொண்டு—புகுந்து-பிரவேசித்து—

கண்டவனை - பார்த்தவப்புருடனை—பனைசெய் - பனைக்கொப்பாகிய — கரமாயிரத்தாலும்-ஆயிரங்கைகளினாலும்—பற்றியிழுத்து - பிடித்திழுத்து—பயனற்றான் - ப்ரயோசனம்பெறாதவனாயினன். எ-று. (இ-ம்.) காலாதீதனானகையாற்காலனாற்பிடிக்கப்படவில்லையென்பதாம் (௰௫)

(அ-கை.) இயமனுத்தியுரைத்தல். (கவி) அவன்சங்கற்பபுருடனைப்போ லசைவற்
றிருப்பவடர்ப் பரிதா,யிவனங்ககன்று நமன்பாற்போயிவ்வாறுரைப்பயமனுரைப்
பான், புவனங்கருமத்தாலன்றிப்பொன்றாதுதவிப்பொருளவையே, தவறும்படி
செய்கருமங்கள்சகாயமாகச்செல்கென்றான் .... *

(இ-ள்.) அவன் - அந்தஞானவிண்மகன்—சங்கற்பபுருடனைப்போல் - சங்கற்பத்தையே(வடிவமாயுள்ள) புமானைப்போல—அசைவற்றிருப்ப-அசையாமலிருக்க—அடர்ப்பரிதாய் - வெல்லக்கூடாமல்—இவனங்ககன்று - இக்காலனவ்விடத்தி(னின்று) நீங்கி — நமன்பாற்போய் - யமனிடத்திற்சென்று—இவ்வாறுரைப்ப - இங்கேநடந்தப்ரகாரஞ்சொல்ல—யமனுரைப்பான் - (அதற்கு) யமன்சொல்லுவான்—புவனம் - (கன்மத்தினாலுண்டாகிய) சகத்து—கருமத்தாலன்றி - கன்மத்தினாலல்லாமல்—பொன்றாது - நசியாது—உதவிப்பொருள் -(நமக்குச்) சகாயமானவஸ்துக்கள்—தவறும்படிசெய் - மரிக்கும்படி (முன்) செய்த—கருமங்கள்-கன்மங்களேயாம்—அவையே - அக்கன்மங்களையே—சகாயமாக - கொல்வதற்குச்சகாயமாகக்கொண்டு—செல்கென்றான் - போவென்றுசொன்னான். எ-று. [ப-ம்.] கன்மத்தினாலுண்டானதேகங் கன்மத்தினாற் கெடுமென்பார் - புவனங்கருமத்தாலன்றிப் பொன்றாதென்றார். (இ-ம்.) தேகத்தைக்கெடுத்தற்கு முன்னுள்ளசஞ்சிதகன்மத்தானியமித்த மரணகன்மத்தைப் பரிசோதித்து அதைக்கொண்டுசெல்லவேண்டுமென்பதாம் .... (௰௬)

(அ-கை.) கருமமகப்பட்டதாவெனின். (கவி) காலனிதுகேட்டவன்செய்த கருமந்
தேடிநதியோடை, ஞாலந்திசைகளெலாமுழன்று நண்ணாதாக மீண்டெய்திச், சில
நமனுக்குரைசெய்யச் சிந்தித்தவனுமுரைசெய்வான், மூலவிசும்பிற்பிறத்தலினான்
முடிவிலவனும்விசும்பன்றோ .... *

(இ-ள்.) காலனிதுகேட்டு - காலனிவ்வசனத்தைக்கேட்டு—அவன்செய்த - அப்பிராமணன்(முன்)செய்த—கருமந்தேடி - கருமங்களைத்தேடி—நதி- தீர்த்தங்களிலும்—ஓடை- தடாகங்களிலும்—ஞாலம் - பூமண்டலத்திலும்— திசைகளெலாம் - திக்குகளனைத்திலும்—உழன்றும்-அலைந்தும்—நண்ணாதாக - அகப்படாததாக—மீண்டெய்தி-திரும்பிவந்து—சிலநமனுக்குரைசெய்ய - அறிவுள்ளயமனுக்குச்சொல்ல—சிந்தித்து - (வெகுநேர) மாலோசித்து—அவனும்-அந்தயமனும்—உரைசெய்வான் - சொல்லுவான்—மூலவிசும்பில்-கேவலாகாயத்தில்—பிறத்தலினால்-உதித்தலினால்—முடிவிலவனும் - நசிப்பில்லாதவப்பிராமணனும் — விசும்பன்றோ-(ஞா)னாகாயமல்லவோ. எ-று. [ப-ம்.] திரிஸ்யபலனைக்குறித்து, உதகத்திற் பேதபாவத்தாற்செய்யுங்கன்மங்களைப் பரிசோதித்தாரென்பார், இவன்செய்யுங்கருமந்தேடிநதியோடையுழன்றென்றும், முற்பவத்திற்செய்தகன்மங்கள், இப்பவத்திலனுபவித்தற்குப் புவனத்திற்பரிணமித்திருக்கின்றதோவெனப் பரிசோதித்தாரென்பார், ஞாலந்திசைகளெலாமுழன்றென்றுங் கூறினார். (இ-ம்) சஞ்சிதவினைகாரணமாகவுதியாமல் ஞானங்காரணமாகவுதித்தலாற் பூர்வகன்மமகப்படவின்றென்பதாம் .... (௰௭)

(அ-கை.) ஆனாலவன்காரியப் படுதலின்றோவெனின். (கவி) விண்ணிற் பிறந்தோன்
காரணத்தைமேவாமையினாற்கருமங்கள், பண்ணிற்றிலன்காரணமிலதேற்பண்ணுங்
கருமமுளதாமோ; வெண்ணற் குரியசகாய முனக் கிலதாமென்றுயமன்கூற, நண்
ணற்கரிதென்றுயர்காலனடந்தான்மனையினனிவியந்து .... *

(இ-ள்.) விண்ணிற்பிறந்தோன் - (ஞான) காயத்துதித்தபிராமணன் — காரணத்தை-(சககாரிநிமித்த) காரணத்தை—மேவாமையினால் - பொருந்தாததனால்—கருமங்கள்- கருமங்களை—பண்ணிற்றிலன்- (செய்துஞ்) செய்தானில்லை—காரணமிலதேல்- காரணமேயில்லையாயின்—பண்ணும் - அவன்செய்கின்ற—கருமமுளதாமோ - கருமங்களுள்ளதாமோ — எண்ணற்கு- (நீ) நினைப்பதற்கு—உரிய-உரித்தான—சகாயம்- (அவனதுசஞ்சிதத்தால்விதிக்கப்பெற்றமரணகருமமென்னு) முதவியானது—உனக்கிலதாமென்று - உனக்கில்லையென்று— யமன்கூற-தருமராசன்சொல்ல—நண்ணற்கரிதென்று - (அவனைக்)கிட்டக்கூடாதென்று— உயர்காலன்-மேன்மையாகியகாலனானவன்—மனையில் - தனதிடத்தில்—நனிவியந்து-மிகவுமதிசயித்து—நடந்தான் - போயினான். எ-று. (இ-ம்) சிதாகாயத்தினிமித்தகாரணமுஞ் சககாரிகாரணமுமின்றி யுபாதானகாரணமாத்திரமா யுதித்தவனாதலாற்காரியமும்காரணமும்காரணகாரியமும் மரணகன்மமுமின்றி நித்தியனாயிருப்ப னென்பதாம் .... (௰௮)

(அ-கை.) பிரம்மாவையிப்புருடனாகக் கூறிற்றேவெனின். (கவி) என்றுவுரைத்த
முனிமுகம்பார்த்திராமனுரைப்பானீயிசைத்த, வன்றான்சயம்புவிஞ்ஞான மங்க
மானோனொன்றாகத், துன்றாநின்றோன்பிரமனெனத் துணிந்தேனெனலுந் தூய
முனி, முன்னுரைத்தயன்றனையேமொழிந்தகதையின்முறைகேளாய் ……… *

(இ-ள்.) என்றுவுரைத்த - (இப்படி) யென்றுசொல்லிய—முனிமுகம்பார்த்து - (வசிட்ட) முனியின்வதனத்தைப்பார்த்து—இராமனுரைப்பான் - இராகவர்சொல்லுவார் — நீயிசைத்த - தேவரீரனுக்கிரகித்த—அன்றான் - அந்தஞானவிண்மகனை—சயம்பு - தானேயுண்டானவனாயும்—விஞ்ஞானம் - விஞ்ஞானமே—அங்கமானோன் - வடிவமானவனாயும் — ஒன்றாகத்துன்றாநின்றோன்- ஒன்றாகநிறைந்திருக்கின்றவனாயு (மிருக்கின்ற)—பிரமனென-பிரமாவாக—துணிந்தேனெனலும் - நிச்சயித்தேனென்றுசொல்லவும்—தூயமுனி- பரிசுத்தமாகிய (வசிட்ட) முனி—முன்னுரைத்தது-முன்னுஞ்சொல்லியது—அயன்றனையே-பிரமாவையே—மொழிந்தகதையின்-சொல்லியகதையின்—முறைகேளாய்-முறைமையை(இராமாநீ)கேட்பாய். எ-று. (இ-ம்.) பிரமத்தினுண்டானபிரமனையே யோர்புருடனாகவுருவகப்படுத்தினதாம்.

(அ-கை.) காலன்பிரமனையழிக்கத்துணிந்தானோவெனின். (கவி.) செயல்செய்கா
லன்யமனுடனே செப்பும்வழக்குத்தாமுணர்ந்தே, முயருமனுவினந்தத்தி னுலக
மெல்லாமுண்டெழுந்த, வயர்வில்காலனயன்றனையு மடர்ப்பமுயன்றவப்போதிற்,
றுயரில்காலன்முகநோக்கித்துங்கயமனுங்கிவைசொன்னான் ……… … … ……… *

(இ-ள்.) செயல் - (நாசத்) தொழிலை—செய்காலன் - செய்யாநின்றகாலனானவன்—யமனுடனேசெப்பும்வழக்குத்தாம் - யமனுடனேசொல்லும்ஞாயங்களை—உணர்ந்தேம்- யாமறிந்தேம்—உயருமனுவின் - மேலானமனுவினுடைய—அந்தத்தில்- முடிவில்—உலகமெல்லாம் - சகங்களனைத்தையும்—உண்டெழுந்த- புசித்தெழுந்த—அயர்விலகாலன்- சோம்பலில்லாதகாலனானவன்—அயன்றனையும் - பிரமாவையும்—அடர்ப்ப- செகுத்தற்கு—முயன்றவப்போதில்- எத்தனஞ்செய்தவச்சமயத்தில்— துயரில்- துக்கமில்லாத—காலன்முகநோக்கி-காலனதுமுகத்தைப்பார்த்து—துங்கம் - உயர்வாகிய—யமனிவைசொன்னான்-இயமனிவைகளைச்சொன்னான். எ-று. (இ-ம்.) பிரமனதுஸ்வரூபத்தையுணராமற்கெடுக்கநினைத்ததென்பதாம்.

(அ-கை.) ஆனாலவர்ஸ்வரூபமியாதெனின். (கவி) நிகரில்பரமவாகாயநிமலவடிவா
ய்நிற்கின்ற, விகலிலயனையடர்த்தற்கென் றெண்ணுமெண்ண மெளிதாமோ, திக
ழும்வெளியேவடிவாகிச்செறிந்தபூதவடிவிலனும், புகல்சங்கற்பபுருடனைப்போற்
பொன்றாதயனும்பொலிந்திடுமால்……… ……… ……… ……… *

(இ-ள்.) நிகரில் - சமானமில்லாத—பரமவாகாயம் - பிரமாகாசமே— நிமலவடிவாய் - நிருமலாகாரமாய்— நிற்கின்ற - இருக்கின்ற — இகலிலயனை - எதிரில்லாதபிரமாவை—அடர்த்தற்கென்று - அழித்தற்கென்று—எண்ணுமெண்ணமெளிதாமோ - நினைக்கின்றநினைவெளிதின்முடியுமோ—திகழும் - ப்ரகாசிக்கின்ற—வெளியேவடிவாகி - ஆகாயமேபடிவமாய்—செறிந்த - நெருங்கிய— பூதவடிவிலனும் - பூதவடிவமில்லாதவனாய்—புகல்-(முன்)சொல்லிய—சங்கற்பபுருடனைப்போல் - சங்கற்பபுமானைப்போல— பொன்றாது - நசியாமல்—அயனும் - பிரமதேவனும் —பொலிந்திடும் - பிரகாசிப்பான். எ-று. (இ-ம்.) பஞ்சபூதவடிவமின்றிச்சிதாகாயமே வடிவமாக ப்ரகாசிக்கின்றதாம் ……… (௨௧)

(அ-கை.) ஆயின்வேறுவடிவமின்றோவெனின். (கவி) ஞானவிண்ணாய்க்கேவலமாய்
நடுவுமுடிவுமுதலில்லா, தானசயம்புவாம்பிரமமடுத்ததனதுமனவசத்தான்,மான
முருவமுடையதுபோன் மன்னுபுமான்போல் வயங்கிடுமா, லீனுமலடிமகன்போ
லவிதுமெய்ம்மையினால் வடிவிலதாம் ……… ……… *

(இ-ள்.) ஞானவிண்ணாய்-சிதாகாயமாகியும்—கேவலமாய்-தனிமையாகியும்—முதல்-முதலும்—நடுவும் - மத்தியும்—முடிவும் - அந்தமும்—இல்லாதான- இல்லாததான—சயம்புவாம் - சுயம்பாயிருக்கின்ற —பிரமம் - பிரமமானது—அடுத்த - அடுத்திருக்கின்ற — தனது மனவசத்தால் - தனதுசங்கற்பவசத்தினால்— மானமுருவ முடையதுபோல்- பிரமாணமான சரீரமுடையதுபோலவும்—மன்னுபுமான்போல் - நிலையாகிய புருடனைப்போலவும் — இது மெய்ம்மையினால் - இஃதுண்மையினால்—வயங்கிடும் - ப்ரகாசிக்கும் — ஈனு - ப்ரசவியாத — மலடிமகன்போல-வந்தியாபுத்திரனைப்போல—வடிவிலதாம்-ஆகாரமில்லையாம். எ-று. (இ-ம்) ஆதிமத்தியாந்த ரகிதமானசுயஞ் சைதன்னியமே தனதுல்லாச சத்தியினால் வடிவமுள்ளது போலத்தோற்றினாலு மதுபிரமமேயன்றி நாமரூபமன்றென்பதாம் ……… ……… (௨௨)

(அ-கை.) பிரமனுக்குச்சிருட்டியாதிதொழிலிருக்க, பௌதிகசரீரமில்லாதகாரண மியாதெனின். (கவி) என்றுகாலன்றனக்கியமனிசைத்தானென்றேன்முகநோக்கி, நின்றவாதிவாகியமாய்நிகழ்ந்தவாதிபௌதிகமா, யொன்றுமுடல முயிர்க்கெல்லா முபயவிதமாம்பிரமனுக்குத், துன்றுமாதிவாகியமாஞ்சூக்கவுடலொன்றுயதென.

(இ-ள்.) என்று - இப்படியென்று—காலன்றனக்கு - மிருத்துவுக்கு — இயமனிசைத்தான் - நமன்சொன்னான்— என்றேன் - என்றுகூறியவசிட்டரது — முகநோக்கி - வதனத்தைப்பார்த்து—நின்ற - நின்றதான — ஆதிவாகியமாய் - ஆதிவாகியசரீரமாயும் — நிகழ்ந்த- ப்ரகாசித்த—ஆதிபௌதிகமாய்-ஆதிபௌதிகசரீரமாயும்—ஒன்றுமுடலம்-பொருந்தியசரீரங்கள்—உயிர்க்கெல்லாம்- ஆத்மாக்களனைத்திற்கும்— உபயவிதமாம் - இரண்டுவிதமாயிருக்க—பிரமனுக்கு-பிரமாவுக்கு—துன்றும்-நெருங்கிய—ஆதிவாகியமாம்- ஆதிவாகியசரீரமாகிய—சூக்கவுடலொன்றுயதென-சூட்சுமசரீரமொன்றானதென்னவென்(றிராமன்)கேட்க.எ-று(௨௩)

(அ-கை.) இ-து. (கவி) பிரமவொளியாற்பிறந்தசகம் பிறக்குமுயிர்க்குக் காரணமாய், விரவுமதனாலுயிர்க்கெல்லா மேவுமுடலமிரண்டாகும், பரமபிரமத்தினையொழிய பயில் காரணம்வேறிலாமையினால், வரவிலயனுக்கோருடலாய்மருவுமாதிவாகியமே............*

(இ-ள்.) பிரமவொளியால் - பிரமப்ரகாசத்தினால்—பிறந்தசகம்-உண்டாகியவுலகம்—பிறக்குமுயிர்க்கு - உண்டாகுஞ்சீவர்களுக்கு — காரணமாய் - காரணமாக — விரவுமதனால்-பொருந்துகின்றதனால்—உயிர்க்கெல்லாம் - சீவர்களனைத்திற்கும் — மேவுமுடலம் - பொருந்தியசரீரம் — இரண்டாகும் - இரண்டேயாம் — பரமபிரமத்தினையொழிய - மேலானபிரம(ஸ்வரூப)த்தைத்தவிர—பயில்காரணம் - சொல்லப்பட்டகாரணம்—வேறிலாமையினால்-வேறில்லாததினால்—வரவிலயனுக்கு - (வேறாக) வுதியாதபிரமனுக்கு—ஆதிவாகியம் - ஆதிவாகியமானது—ஒருடலாய் - ஒருசரீரமாக—மருவும் - பொருந்தும். எ-று. (இ-உ-க-ம்) உயிர்களுக்குப்பிரமமுபாதானகாரணமாகையா லாதிவாகியசரீரமும் சகத்துசககாரிகாரணமாகையாலாதிபௌதிக சரீரமுமாக விரண்டாம் பிரமாவுக்குப் பிரமமே காரணமாகையா லாதிவாகிய சரீரமொன்றேயாமென்பதாம்...(௨௪)

(அ-கை.) சகத்தைச்சிருஷ்டிக்கும்மனேருபமியாதெனின். (கவி) சகக்காரணமாமயனுக்குத் தானேதோன்றுமனவடிவாய், மிகத்தாஞ்சகத்து விரிந்திடலால் விரிந்தவெல்லாமனவடிவென், றுகப்பாலுரைத்தவசிட்டனைப்பார்த்துலகமாயைதனைவிரித்த, மகத்தாமனத்தின்வடிவுதனைவகுத்தோதென்னமுனிசொல்வான்..........*

(இ-ள்.) சகக்காரணமாம் - உலகத்துக்குக்காரணமாகிய—அயனுக்கு - பிரமனிடத்தில்—தானேதோன்றும் - சுயமாகவுண்டாகின்ற — மனவடிவாய் - மனதின்ஸ்வரூபமாய்—மிக - மிகவும்—சகத்துவிரிந்திடலால் - உலக(முண்டாகிப்) பரந்தபடியால்—விரிந்தவெல்லாம் - (அப்படி) பரவிய (சகங்க) ளியாவும்—மனவடிவென்று - மனோரூபமேயென்று—உகப்பாலுரைத்த - (மிகுந்த) வன்போடுசொன்ன—வசிட்டனைப்பார்த்து - வசிட்டமுனியைப்பார்த்து—உலகமாயைதனை- சகமென்னுமாயையை—விரித்த-மலர்த்திய— மகத்தாமனத்தின்-மகாமனதினது—வடிவுதனை - உருவத்தை — வகுத்தோதென்ன - பகுத்துச்சொல்லுமென்(றிராமன்கேட்க)—முனிசொல்வான் - (வசிட்ட)முனிசொல்லுவார். எ-று. (இ-ம்.) சகமாகத்தோற்றுகின்ற பிரமசங்கற்பத்தைவிசாரித்ததாம்.............................(௨௫)

(அ-கை.) இ-து. (கவி) சடசூனியமாயெங்கணுஞ்சேர்தனிநெஞ்சுக்குப்பேரொழிய, வுடனுங்ககனந்தனைப்போல வுள்ளும்புறம்பு முருவிலதாம், படர்தீர்மெய் பொய்யெனும்பொருளிற்பயிறேற்றரவேமனமாகுந், தொடர்சங்கற்பமெங்குளதாந்தோன்றுமனமுமங்குளதே..........................*

(இ-ள்.) சடம் - அவித்தைமயமாயும்—சூனியமாய் - உருவமில்லாததாயும் — எங்கணுஞ்சேர் - எவ்விடங்களிலுஞ்சேர்ந்திருக்கின்ற — தனிநெஞ்சுக்கு - தனித்தமனதுக்கு — பேரொழிய - நாமமாத்திரமேயன்றி—உடனும் - (அனைத்)துடனுகின்ற— ககனந்தனைப்போல- ஆகாயத்தைப்போல—உள்ளும்புறம்பும் - அகத்திலும்புறத்திலும்—உருவிலதாம்- வடிவமில்லாததாம்—படர்தீர்மெய் - குற்றமற்றமெய்யும்—பொய் - பொய்யும்—எனும் - என்கின்ற—பொருளின் - வஸ்துவின்—பயிறேற்றரவே - பொருந்தியதோற்றமே—மனமாகும்- மனதாகும் — தொடர்சங்கற்பம் - தொடர்ந்தசங்கற்பமானது — எங்குளது - எங்கேயுள்ளதோ—தோன்றுமனமும்-உண்டாகின்றமனதும்—அங்குளது - அங்கேயுண்டானதாம். எ-று. (௨௬)

அ-கை. இ-து. (கவி) மனத்தின்வடிவுசங்கற்ப மற்றிவ்விரண்டுமொன்றாகு, மநர்த்த
மோகமலம்பந்தமவித்தைமாயைதமமுதலா, மினத்தபெயர்சங்கற்பத்துக்கேற்றபெய
ராமிதுநழுவிற், கனத்தசகக்காட்சியும்போகுங் கதிர்விட்டெறிக்கும்பரவடிவம்....... *

(இ-ள்.) மனத்தின்வடிவு - மனதினதுபடிவம்—சங்கற்பம் - சங்கற்பமேயாம் —இவ்விரண்டுமொன்றாகும் - இவ்விரண்டுமொன்றேயாம்—அநர்த்தம் - அநர்த்தமும்—மோகம்-மோகமும்—மலம் - மலமும்—பந்தம் - பந்தமும்—அவித்தை-அவித்தையும்—மாயை - மாயையும்—தமம் - தமசும்—முதலாம் - முதலான—இனத்தபெயர்- கூட்டமாகியநாமங்கள்—சங்கற்பத்துக்கேற்றபெயராம் - சங்கற்பத்துக்குத்தகுந்தநாமங்களாம் — இதுநழுவில் - இச்சங்கற்பநசிக்கில்—கனத்த - பருத்த — சகக்காட்சியும்போம் - திரிஸ்யதிருஷ்டியுநீங்கும்—பரவடிவம் - பிரமஸ்வரூபமானது—கதிர்விட்டெறிக்கும் - ஒளிவிட்டுப்ரகாசிக்கும். எ - று. (இ-ரு-க-ம்) சங்கற்பரூபமாய்ச் சடசித்துக்களிற் சஞ்சரிக்கின்ற மனதுக்கு மோகமுதலிய நாமமாத்திரமேயன்றி யுருவமின்றென்பதாம் .... (உஎ)

(அ-கை.) ஆத்மாஎந்தவிடத்தெப்படிவிளங்குகின்றதெனின் (கவி) நிற்பநடப்ப
வெனுமனைத்தி னிழலாடாதுவெறிதிருக்குந், தற்பணத்தானெப்படியோ தானே
விளங்குமப்படியே, கற்பமுறுநீநான்முதலாங்காட்சிவிகற்பமெலாமடங்கி, யற்ப
மெனினுங்காட்சியறிலதுவேதனிக்கேவலநிலைமை.......................................*

(இ-ள்.) நிற்பநடப்பவெனும் - சராசரமென்கின்ற— அனைத்தின் - சமஸ்தத்தின்—நிழல் - சாயையானது—ஆடாது - (புணர்ந்தும்) புணராமல் — வெறிதிருக்கும் - கேவலமாயிருக்கும்—தற்பணந்தானெப்படியோ - கண்ணாடியானதெப்படியோ —அப்படியே- அந்தப்ரகாரமே—தானேவிளங்கும் - (சைதன்னிய) மாத்திரம்ப்ரகாசிக்கும்—கற்பமுறு- கற்பனைபொருந்திய—நீநான்முதலாம் - நீநானென்பதுமுதலாக—காட்சி - காணப்பட்டனவாகிய—விகற்பமெலாமடங்கி - வேற்றுமைகளனைத்துமடங்கி—அற்பமெனினும் - அற்பமாகிலும்—காட்சி - திரிஸ்யமானது —அறில் - (சேடமின்றி) நசிக்கில்—அதுவே - அந்நசிப்பே—தனிக்கேவலநிலைமை - ஒப்பற்றகைவல்யநிச்சயமாம். எ - று. (இ-ம்.) சகமுதலான பேதபாவனை நீங்கியவிடத்திற் றானாய்விளங்குகின்றவனுபவமேசுயம்ப்ரகாசமென்பதாம். ....(உஅ)

(அ-கை.) மனோநாசமுண்டாகுங்காலம்யாதெனின். வேறு. (கவி) காண்பரியம
னங்காட்சிப்பொருளையெல்லாங்கனவுதருகனவுபோற்காட்டா நிற்கும்,பூண்பதிலா
மனஞ்சலனசத்தியாலேபொலியுமசையுந்தியங்கும்போகுமீளும், வீண்பயிலுஞ்
செருக்குமிகுமகங்கரிக்கும்வேற்றுருவாய்பெருங்கற்பமேவும்போதிற், சேண்பட
வெல்லாப்பொருளுந்திரமாய்ந்துசெறியுமுபசாந்தமேசேடமாகும் .... *

(இ-ள்.) கனவுதரு - சொற்பனங்கொடுக்கின்ற—கனவுபோல்-சொற்பனத்தைப்போல்—காண்பரியமனம் - பார்ப்பதற் (குருவ) மில்லாதமனது— காட்சிப்பொருளையெல்லாம்- (இல்லாத) திரிஸ்யவஸ்துக்களனைத்தையும்—காட்டாநிற்கும் - காட்டும் — பூண்பதிலாமனம்- (ஒன்றிலுந்) தரியாதமனமானது—சலனசத்தியால் - சஞ்சலசத்தியினால்—பொலியும்-ப்ரகாசிக்கும்—அசையும் - சஞ்சலிக்கும் —தியங்கும் - கலங்கும்—போகும் - செல்லும்—மீளும்- திரும்பும்—வீண்பயிலுஞ்செருக்குமிகும்- வீணுகப்பொருந்தியகளிப்பின்மிகும்—அகங்கரிக்கும் - அகங்காரத்தையடையும்—வேற்றுருவாம் - வேறுவடிவமாகிய—பெருங்கற்பம்-மகாப்ரளயம்—மேவும்போதில் - பொருந்துங்காலத்தில்—சேண்படவெல்லாப்பொருளும்- ஆகாயமுதலியசகலவஸ்துக்களும்—திரமாய்ந்து - ஒருங்கேயழிந்து—செறியுமுபசாந்தமே- பூரணமானசாந்தமே—சேடமாகும்-மிச்சமாம். எ-று. (இ-ம்) மித்தையானமனதுமித்தையான சகத்தைக்காட்டிக்கொண்டிருந்து அத்தியந்த ப்ரளயத்தினசிக்குமென்பதாம் .... (உக)

(அ-கை.) ஆத்மஸ்வரூபவிலக்கணம்யாதெனின். (கவி)வேறு. அத்தமியாதசோதியருக்
கனையளவிலாதாய்,மெத்தியபிணியிலாதாய்மேவரும்பிறப்பிலாதா,யெத்தலங்களினுமெ
ன்றுமியாவுமாயாவுஞ்செய்து, முத்தியுமாகியோங்குமுதற்பரம் பொருளொன்றுண்டு.

(இ-ள்.) அத்தமியாத அஸ்த்தமனமாகாத—சோதி - (சுயஞ்) சோதியென்னும்—அருக்கனைப் - சூரியனையும்—அளவிலாதாய் - எல்லையற்றதாயும்—மெத்தியபிணியிலாதாய் - அற்பதுன்பமுமில்லாததாயும்—மேவரும் - பொருந்துதற்கரிய — பிறப்பிலாதாய் - உற்பத்தியில்லாததாயும்—எத்தலங்களினும் - எவ்விடங்களினும்—என்றும் - எக்காலத்திலும்—யாவுமாய்- சகலமுமாய்—யாவுஞ்செய்தும் - சகலத்தையுமுண்டாக்கியும்—முத்தியுமாகி - சகலமும்விடுபட்டதாயும்—ஓங்கும் - வியாபித்திருக்கின்ற—முதல்-முதன்மையான — பரம்பொருளொன்

றுண்டு-பிரமஸ்வரூபமானதொன்றுள்ளது. எ-று. (இ-ம்) உதயாஸ்த்தமனமின்றிசுயமாய்ப்பிர காசிக்கின்ற பிரமம் சர்வவியாபகமானசத்தாமாத்திரமாயிருக்குமென்பதாம்................(௬௰)

(அ-கை.) ஆத்மவிலாசம் யாதெனின். (கவி.) வேறு. பகர்வரிதாய் முத்தராற்பயில்
வதாகிப்பரமுதலாம் புநிதானபலபேர்பெற்று, மிகவுணர்சாங்கியர்புருடனென்று
ஞ்சுத்தவேதாந்தம் விளங்கினோர்பிரமமென்றுந், துகளறுவிஞ்ஞானிகள்விஞ்ஞான
மென்றுஞ் சூனியர்சூனியமென்றுஞ்சொல்லப்பட்டுந், திகழிரவிதேசுக்குந்தேசாய்
நின்று தேசளித்துத் திகழ்வித்துத் திகழாநிற்கும்.................................. *

(இ-ள்.) பகர்வரிதாய் - வசனாதீதமாயும்—முத்தராற்பயில்வதாகி - சத்துக்களால்வச ிப்பதாயும்—பரமுதலாம் - பிரமமுதலிய— புநிதான - கற்பிதமாகிய — பலபேர்பெற்று- பலநாமங்க(ளிடப்)பெற்று—மிகவுணர்சாங்கியர் - மிகவுமறிவுள்ள சாங்கியர்கள்— புருடனென்றும் - ஆத்மாவென்றும்—சுத்தவேதாந்தம் - பரிசுத்தவேதாந்த (ஞானம்)— விளங்கினோர்- விளங்கினவர்கள்—பிரமமென்றும் - பிரமஸ்வரூபமென்றும்— துகளறுவிஞ்ஞானிகள் - குற்றமற்றவிஞ்ஞானிகள்—விஞ்ஞானமென்றும் - விஞ்ஞானஸ்வரூபமென்றும்—சூனியர் - சூனிய(வாதி)கள்—சூனியமென்றும் - சூனியஸ்வரூபமெனறும்—சொல்லப்பட்டும் - உரைக்கப்படுவது(மன்றி)—திகழ் - விளங்காநின்ற—இரவிதேசுக்கும் - சூரியப்ரகாசத்துக்கும் — தேசாய் நின்று - ப்ரகாசமாயிருந்து—தேசளித்து - (யாவற்றிற்கும்) ப்ரகாசத்தைக்கொடுத்து— திகழ்வித்து - ப்ரகாசிப்பித்து—திகழாநிற்கும்- (யாதொருவஸ்துவானதுதானும்)ப்ரகாசரூபமாய்விளங்கும். எ-று. (இ-ம்) அகோசரமானபிரமம், அவரவர்நிச்சயித்தபடி விளங்குவதன்றியும்யாவையும் ப்ரகாசிப்பிக்கின்ற ஸ்வயம்ப்ரகாசமாய் விளங்குமென்பதாம் சூனியவாதியும் விஞ்ஞானவாதியும்பவுத்தமதபேத மெனக்கொள்க..(௬௧)

(அ-கை.) ஆத்மவிவகாரம்யாதெனின்.(கவி) உரைபகர்வோனுசாவிடுவோன்கேட்போன்
காண்போனுணர்பவன்சிந்திப்பவனு யுலகின்மெய்யிற், றிரமுறமேவியுமேவாப்பொருளி
னின்றுந்தினகரன்றேசெனச்சித்தின்றிகழ்ச்சியுண்டாம்,விரைமணம்வேர்கரணமலரண்டங்
காயாய் விண்ணெழுமாயைக் கொடியை விதிர்க்குங்காற்றும், புரைசெயுடற் செப்பனைத்
துண் மணியாய்நிற்கும் புணர்புரியட் டகவுடலைப் போய்மீள்விக்கும்........................ *

(இ-ள்.) உரைபகர்வோன்-வசனிப்பவனும்—உசாவிடுவோன் - ஆராய்பவனும்—கேட்போன் - கேட்பவனும்—காண்போன் - பார்ப்பவனும்—உண்பவன்- புசிப்பவனும்—சிந்திப்பவனும் - நினைப்பவனும்—உலகில் - சகத்தில்—மெய்யில்-தேகத்தில்—திரமுறமேவியும்- திடமாகப்பொருந்தியும்—மேவா - பொருந்தாததாயுமிருக்கின்ற—பொருளினின்றும்-வஸ்துவினின்றும்—தினகரன்றேசென - சூரியப்ரகாசத்தைப்போல — சித்தின்றிகழ்ச்சியுண்டாம்- ஞானப்ரகாசமுண்டாகும்—விண் - (அவ்)வாகாயத்தினின்றும் — விரைமணம்வேர் - வாசனைபொருந்தியமனதேவேராகவும்—கரணமலர் - இந்திரியங்களேபுட்பங்களாகவும்—அண்டங்காயாய் - அண்டங்களேகாயாகவும்—எழும் - உதயமாகும்—மாயைக்கொடியை- மாயையென்னும்வல்லியை—விதிர்க்குங்காற்றும் - அசைக்குமநிலமாயும்— புரைசெய் - குற்றஞ்செய்யாநின்ற—உடற்செப்பனைத்துள் - சரீரசம்புடங்களுக்குள்—மணியாய்நிற்கும்- இரத்நமாயுமிருக்கும்—புணர்புரியட்டகவுடலை-பொருந்தாநின்றபுரியட்டகசரீரத்தை—போய்மீள்விக்கும்- (சித்தானது) போக்குவரவைச் செய்விக்கும். எ-று. (இ-ம்) யாவுமாய் விளங்குகின்ற பிரமத்தனது சிற்சத்தியினுண்டான மாயைமுதலிய வனைத்தையும் ஆட்டுவிக்குமென்பதாம்.......(௬௨)

(அ-கை.) ஆத்மசுபாவம் யாதெனின். (கவி.) வேறு. சுத்தவறிவாதலா லாகாயபா
வனையாற்சூழ்விண்ணாகு, மத்திறனேயெப்பொருளும் பாவித்தபோதுள்ளதுவா
மந்தச், சித்திடையேமூவுலகுந் திடர்கானலெனத்தோன்றிச் சிதையும்பல்கா, லித்
தனையுஞ்செய்யவுந்தா னித்தனையுஞ்செய்யாம லிருக்கு மன்றே........................ *

(இ-ள்.) சுத்தவறிவாதலால் - பரிசுத்தஞானமாதலால்—ஆகாயபாவனையால் - (அது)வியோமசிந்தனையால்—சூழ்விண்ணாகும் - நிறைந்தவாகாயமாம்—அத்திறனே- அப்பிரகாரமே—எப்பொருளும் - எவ்வஸ்துவையும்—பாவித்தபோது - பாவனைசெய்தபோது—அது-அவ்வஸ்துக்களே— உள்ளதாம் - உள்ளதாயிருக்கும்—அந்தச் சித்திடையே - அந்தஞானத்தில்—மூவுலகும் - திரிபுவனமும்—திடர்கானலென - கானற்சலம்போல—பல்கால்- எப்போதும்—தோன்றி- உண்டாகி—சிதையும் - கெடும்—இத்தனையும் - இவ்வளவையும்—செய்யவும்- செய்தும்—தானித்தனையுஞ்செய்யாமல்-தானிவ்வளவையுஞ்செய்யாமல்—இருக்கும்- (இருந்தபடி)யிருக்கும். எ-று. (இ-ம) சித்தானதுபாவித்த மயமாய்விளங்குவதன்றியுஞ் சிருஷ்டியாதிகளைச்செய்துஞ் செய்யவில்லையென்பதாம்..(௬௩)

(அ-கை.) ஆத்மதரிசனத்தில் யாதடங்குமெனின். (கவி) நிருவிகற்ப வான்மாவிற் சகத் தோற்றமொடுக்கமிவை நேராயில்லை, மருவிகற்ப போதமுறாப்பராபரமாமப்பொருளை வயங்கக்கண்டாற், பெருமனக்கட்டறுமையமறுங்கருமமறுமென்றான் பெரியோன்வள்ள, லொருகடுகிற்பொன்மேரு புகிலன்றேபிரமாண்ட மொடுங்குமென்றான் ... . *

(இ-ள்.) நிருவிகற்பம் - நிருவிகற்பமான—ஆன்மாவில் - ஆத்மஸ்வரூபத்தில்—சகத்தோற்றமொடுக்கம் - உலகத்தினுற்பத்திலயமான—இவை - இவைகள்—நேராயில்லை-நேரே(யுண்டாக)வில்லை—மருவிகற்பபோதமுறா - மருவுகின்ற விகற்பபோதம் பொருந்தாத — பராபரமாம்-பராபரமாகிய—அப்பொருளை - அவ்வஸ்துவை — வயங்கக்கண்டால் - ப்ரகாசிக்கத்தரிசித்தால் —பெருமனக்கட்டறும் - பெரியமனோபந்தமறும்— ஐயமறும் - சந்தேகங்கெடும்—கருமமறும் - (சகல) கருமங்களுங்கெடும்— பெரியோன் - மகாமுனி — என்றான் - இப்படியென்றுசொன்னார்—வள்ளல்- இராமரானவர்—ஒருகடுகில்-ஓர்கடுகுக்குள்ளே—பொன்மேரு-மகாமேருவானது—புகிலன்றே - நுழைந்தாலல்லவோ—பிரமாண்டம் - பிரமாண்டமானது—ஒடுங்குமென்றான் - (அணுவுக்கணுவானபிரமத்தி)லடங்குமென்றார். எ-று. (இ-ம்) பிரமதரிசனத்திற்சங்கற்ப முதலியவண்டங்களடங்கு மென்பதாம்... .... (௫௪)

(அ-கை.) அதிசூட்சுமமான பிரமத்திற் சகத்தெப்படி யடங்குமெனின். (கவி) அருந்தவன்சொல்வானூலானல்லோராற்றிங்களாலன்றிநாளாற், றெரிந்துவிடும்பன்னூலின்சித்தாந்தமிதுவிதனைச் சிந்தைசெய்யிற், புரிந்தபுவியார்திற்கப் போயொளிக்குநிட்டையுடன் போதஞானம், விரிந்துணர்வோர்க்குயர்சீவன் முத்திபெறலாமிதுவே விதேகமுத்தி ··*

(இ-ள்.) அருந்தவன் - அரியதவத்தையுடையவசிஷ்டர் — சொல்வான் - சொல்லுவார்—நூலால் - (ஆத்மஞான)சாஸ்திரங்களினாலும்— நல்லோரால் - சாதுக்கள் (சங்கத்தி) னாலும் —திங்களாலன்றி-மாதத்தினாலல்லாமல்—நாளால்-தினங்களினால்—தெரிந்துவிடும்- (இச்சங்கைக்குத்தரந்) தெரியும்—பன்னூலில் - பலசாஸ்திரங்களினது—சித்தாந்தம் - நிச்சயமும்— இது-இதுவேயாம்—இதனை- (இவ்வருத்தமுள்ள)விக்கதையை — சிந்தைசெய்யில் - விசாரிக்கில்—நிட்டையுடன் - நிட்டையோடும்—போதஞானம்- பூரணஞானத்தை—விரிந்துணர்வோர்க்கு-வியாபகமாயறிபவர்களுக்கு—புரிந்தபுவி-கற்பித்தசகமானது—ஆர்திற்க-இருக்க—போயொளிக்கும் - ஒடுங்கும்—உயர் - மேலான—சீவன்முத்திபெறலாம்- சீவன்முத்திபதத்தையடையலாம்—இதுவே - இச்சீவன்முத்தியே—விதேகமுத்தி - விதேகமுத்தியாம். எ-று. (இ-ம்) அணுவுக்கணுவான பிரமமகத்துக்கு மகத்தென்கின்ற சுருதியுத்தி யனுபவத்தாற் பரோக்ஷஞானமுண்டாயதனாற்சமாதியைக்கொண்டு அபரோக்ஷஞானமுதிக்கிற்சகமிருந்துமில்லாமற்சீவன்முத்தியுண்டாமென்பதாம்..... .... (௫௫)

(அ-கை.) சீவன்முத்தரிலக்கணம் யாதெனின். (கவி) என்பதுசொல்லிய முனியையுடலிறந்தவீடுமுடலிருந்தவீடு, நன்பழநூல்வழியியற்ற நவில்கென்றவிராமனுக்குநல்லோன் சொல்வான், வன்பலசெய்கையிற்பயின்று மூன்றேன்றும் விண்டோன்று வகைமையுற்றோர், றின்பமுறவருஞ்சீவன் முத்திபதம் பெற்றுயர்ந்த வியல்பினோரே......... . ... *

(இ-ள்.) என்பதுசொல்லியமுனியை - (சீவன்முத்தி) யென்பதைப்போதித்த வசிஷ்டமுனியை—உடலிறந்தவீடும் - விதேகமுத்தியையும்—உடலிருந்தவீடும்- சீவன்முத்தியையும்—நன்பழநூல்வழி - நல்லபழைமையான சாஸ்திரமார்க்கத்தில்—இயற்ற - (யான்)முயற்சிக்க—நவில்கென்ற - சொல்லுமென்றுகேட்ட—இராமனுக்கு - இராகவனுக்கு — நல்லோன்சொல்வான்- நன்மையுள்ளவசிஷ்டர்சொல்லுவார்—வன்பலசெய்கையில்-வலிமையானபலவிபகாரங்களினால்—பயின்றும்- கூடியும்—விண்-(சிதா)காயமானது—மூன்றேன்றும்- ப்ரத்தியக்ஷமாய்—த்தோன்று- (திரிஸ்யந்) தோற்றுததான — வகைமையுற்றோர் - வகையை யுடையவர்கள்—இன்பமுறவரும் - சதாநந்தம்பொருந்தவருகின்ற—சீவன்முத்திபதம்-சீவன்முத்திபதத்தை—பெற்றுயர்ந்த - அடைந்துயர்ந்த—இயல்பினோர்- சுபாவமுடையவர்கள். எ-று. [ப-ம்]காட்சியானசகமானது ஞானாகாரமாய்த் தோற்றுகின்றதென்பார்- மூன்றேன்றும் விணணென்றார். (இ-ம்) அபரோக்ஷானுபவமுள்ளதே சீவன்முத்தித்தன்மையென்பதாம் ....(௫௬)

(அ-கை.) இ-து. (கவி) மிகவருகாமாதிகளாம் விகாரமடைந்தும் விண்போன்மிகநொய் தானோ, ரகமெனலின்றிச்செயல்கள் செய்தாலுந்தவிர்ந்தாலுமழுத்தமற்றோர், சகநெறிகள்செய்திடினுமன்னியர்போற் கண்டுகுளிர்தன்மைசான்றோர், திகழ்மனமுநினைவுமிருந்துஞ்சிறிதுமில்லாதோர்சீவன்முத்தர் ... . *

(இ-ள்.) மிகவரும் - மிகவும்வராநின்ற—காமாதிகள் - ராகத்துவேஷாதிகளினால்—ஆம்-உண்டாகின்ற—விகாரமடைந்து - விகாரஞ்சேர்ந்து—விண்போல் - ஆகாயத்தைப்போல—மிகநொய்தானோர் - மிகவுஞ்சொச்சமானவர்கள்—அகமெனலின்றி - அகம்பாவமென்பதில்லாமல்—செயல்கள்செய்தாலும் - தொழில்களைச்செய்தாலும்—தவிர்ந்தாலும் - விட்டாலும்—அழுத்தமற்றோர்-(அதி)லழுந்தாதவர்கள்—சகநெறிகள்-உலகாசாரங்களை—செய்திடினும்-செய்தாலும்—அன்னியர்போல்- பிறரைப்போல—கண்டு- (அதை)ப்பார்த்து—குளிர்தன்மைசான்றோர் - குளிர்ந்ததன்மையைச் சார்ந்தவர்கள்—திகழ்மனமும் - பிரகாசிக்கின்றமனமும்—நினைவுமிருந்தும் - கருத்துமிருந்தும்—சிறிதுமில்லாதோர் - அற்பமும் (பற்) றில்லாதவர்கள்—சீவன்முத்தர்- சீவன்முத்தர்கள். எ-று. [ப-ம்] விடயத்தில்விருப்பம் வந்தவிடத்தில், அதின்பிரியத் தன்பிரியமாகவும், வெறுப்புவந்தவிடத்தில், தன்சுகத்தைவிட்டு நீங்காமலும் சொச்சமாயிருப்பனென்பார், மிகவருகாமாதிகளால் விகாரமடைந்தும் விண்போல் மிகநொய்தானோரென்றும் இதுநானென்னுஞ் சுட்டிறந்து, யானேசகலமென்னு மனுபவத்தினால்விபகாரங்களைச்செய்துஞ் செய்யாமற்றன துல்லாசமாய்விளங்குவனென்பார், அகமெனலின்றிச்செயல்கள்செய்தாலுந்தவிர்ந்தாலு மழுத்தமற்றோரென்றும், தன துசன்னிதிமாத்திரத்தில்நடக்கின்றசெயல்களனைத்திற்குஞ் சாக்ஷியாய் ரமிப்பனென்பார், சகநெறிகள்செய்திடினுமன்னியர்போற்கண்டு குளிர்தன்மைசான்றோரென்றும், தன துல்லாசமான சங்கற்பமுண்டாயடங்கியவிடத்திற்றானாய்விளங்கும் பிரஞ்ஞைரூபாயிருப்பனென்பார், திகழ்மனமு நினைவுமிருந்துஞ்சிறிதுமில்லாதோர் சீவன்முத்தரென்றுங் கூறினார். (இ-ம்) சமஸ்தத்திலுங்கூடியுங் கூடாமற் சித்தாயிருப்பவனே சீவன்முத்த னென்பதாம்……………………(௫௭)

(அ-கை.) இ-து (கலி) துக்கசுகங்களிலமிழ்ந்தி மிதவாதபுந்திநிலைசுபாவமானோர்,
புக்கசுழுத்தியினனவாய்நனவின்றிவாதனைதீர்போதமுற்றோர், மிக்கசமமாயுலகால்
வெருளாமலுலகினையும் வெருட்டாமேமேலோர், சிக்கறதன்னினைவிருந்துநினைவிலாத
வரிவரேசீவன்முத்தர்……………………*

(இ-ள்.) துக்கம் - துன்பங்களில்—அமிழ்ந்தி - மூழ்கி—சுகங்களில்- இன்பங்களில்—மிதவாத-மேற்கொள்ளாத—புந்திநிலை-அறிவினிச்சயமே—சுபாவமானோர்-இயல்பானவர்களும்—புக்கசுழுத்தியில்-அடைந்தசுழுத்தியவத்தையில்—நனவாய்-சாக்கிரமாகி—நனவு-சாக்கிரத்தில்—இன்றி - அஃதில்லாதிருக்கின்ற— வாதனைதீர்-வாசனையிறந்த — போதம் - (சுழுத்தி)ஞானத்தை—உற்றோர் - பொருந்தினவர்களும்—மிக்கசமமாய்- மேலானசமமாகி—உலகால்-சகத்தினால்—வெருளாமல் - பயப்படாமல்—உலகினையும் - சகத்தையும்—வெருட்டா-பயமுறச்செய்யாத—மேலோர் - மகான்களும்—சிக்கற - (சம்சார) பந்தமற—தன்னினைவிருந்தும்-தற்சிந்தனையிருந்தும்—நினைவிலாதவர்-சிந்தனையில்லாதவர்களுமாகிய—இவரே சீவன்முத்தர்-இவர்களேசீவன்முத்தர்களாம். எ-று. [ப-ம்] துன்பம் வரும்போது தனதாநந்தத்திலழுந்துவானென்பார், துக்கத்திலழுந்த வில்லையென்றும், சுகம்வரும்போதுதன துசுகமாய் மேலிடுவானென்பார், சுகத்தின்மிதக்கவில்லையென்றும், நனவிலனுபவமானசுபாவ பிரஞ்ஞைப்படியே சுழுத்தியிலிருக்கின்றானென்பார், சுழுத்தியினனவாயென்றும், சுழுத்தியிற் சகலதொழிலும்விட்டுசுகபோதமா யிருப்பதுபோல சாக்கிரத்திலிருப்பானென்பார், நனவின்றிவாதனைதீர்போதமுற்றோரென்றும், விடயம்வரும்போது அதுதன்னைக் கெடுக்குமென்றஞ்சாமல், அதனைவியாபிப்பானென்பார், உலகால்வெருளாம லென்றும், பிரமதேஜசாய் பிரகாசிக்கின்றமகிழ்ச்சியுள்ளமுகத்தை யாவரும்விரும்பப்படுவானென்பார், உலகினையும்வெருட்டானென்றும், சைதன்னியஸ்புரணத்தானவநவமாய் விளங்குவானென்பார், நினைவிருந்து நினைவிலா னென்றுங் கூறினார். (இ-ம்) சீவன்முத்தர் சகசானுபவமாய் விபகரித்ததாம்…………………… (௫௮)

(அ-கை.) விதேகமுத்தியிலக்கணம் யாதெனின். (கலி) நிலையானவிச்சிவன் முத்தி
யைவிட்டுடலிறந்தானிறைந்தவாயு, வலையாமனிற்பதுபோலுடலில்லாமுத்திபெறு
மதனின்றன்மை, தொலையாதுமறையாதுதோன்றிடாதணித்தல்லதூரத்தல்ல,வுலை
யாதுமுடியாது நானல்லப்பிறனல்லவொன்றுமல்ல……………………*

(இ-ள்.) நிலையான - நிச்சயமாகிய— இச்சீவன்முத்தியை - இந்தச்சீவன்முத்தி(பதத்தை)—விட்டு - நீங்கி—உடலிறந்தால்- சரீரநசித்தால்—நிறைந்தவாயு-பூரணமானகாற்றானது—அலையாமனிற்பதுபோல் - அசைவற் (றுகாட்டமா) யிருப்பதுபோல— உடலில்லாமுத்தியையும் - விதேகமுத்தியையடைவன்—அதனின்றன்மை - அதனியல்பானது — தொலையாது-நசியாது—மறையாது-மறைவுபடாது—தோன்றிடாது- தோற்றாது —அணித்தல்ல - சமீ

ன்று—தூரத்தல்ல - சேய்மையன்று—உலையாது - நடுங்காதது—முடியாது-முடிவில்லாதது—நானல்ல - யானன்று—பிறனல்ல - பிறனன்று— ஒன்றுமல்ல-ஒன்றுமன்று. எ-று. அன்றென்னுமொருமை, அல்லவெனப் பன்மையாயிற்று. [ப-ம்] சகலத்திலும் வியாபகமாய்நிறைந்திருக்கின்றதென்பார், தொலையாதென்றும், சர்வமுமாய்ப்ரகாசிக்கின்றதென்பார் மறையாதென்றும், பார்ப்பவனிற்பார்வையா யிருக்கின்றதென்பார், தோன்றுமென்றும் - அறிதற்கெட்டாதென்பார்- அணித்தல்லவென்றும்- அறிவிலறிவாய் நிறைந்திருக்கின்றதென்பார்- தூரத்தல்லவென்றும்-நிச்சலமாயிருக்கின்றதென்பார் - உலையாதென்றும் - சதோதயமாய்விளங்குகின்றதென்பார் - முடியாதென்றும் - நானெனன்பதிற் றானாய்விளங்குகின்றதென்பார் - நானல்லவென்றும்- தானென்பதற்குநான்வேறல்லாததென்பார்- பிறனல்லவென்றும்- அதுவதுவாய்விளங்குகின்றதென்பார்- ஒன்றுமல்லவென்றுங் கூறினர்........ .... (௩௯)

(அ-கை.) இ-து.(கவி) இருளின்றியொளியின்றியலைவின்றியளவின்றி யியல்பொன்றின்றிப், பொருகின்றபூதங்கள்பலபொருள்களன்றிநிறைபூரணமாகி, யுருவன்றியருவன்றியுளதன்றியுண்டில்லையன்றியொன்றாய், வருகின்றதிரிபுடியினடுத்தோன்றுமறவாதுமதித்துக்கொள்வாய் ....*

(இ-ள்.) இருளின்றி - இருளுமில்லாமல்—ஒளியின்றி - ப்ரகாசமுமில்லாமல்—அலைவின்றி- அலைவுமில்லாமல்—அளவின்றி - பிரமாணமுமில்லாமல்—இயல்பொன்றின்றி- ஓர்குணமுமில்லாமல் — பொருகின்றபூதங்கள் - ஒன்றுக்கொன்றுபொருதுகின்றபஞ்சபூதங்களும்—பலபொருள்கள் - நாநாவிதமானவஸ்துக்களும்—அன்றி - அல்லாமல் —நிறைபூரணமாகி- நிறைந்திருக்கின்றபூரணஸ்வரூபமாயும்—உருவன்றி - உருவமுமல்லாமல்—அருவன்றி- அருவமுமல்லாமல்—உளதன்றி - சத்துமல்லாமல் — உண்டில்லையன்றி - சத்தசத்துமல்லாமல்—ஒன்றாய் - ஏகமாயும்—வருகின்ற - வராநின்ற—திரிபுடியின் - ஞாதுருஞானஞேயங்களின்—நடுத்தோன்றும் - மத்தியிற்றோன்று(வதை)—மறவாது - மறவாமல்— மதித்துக்கொள்வாய்- வரையறுத்தறிவாய். எ-று. [ப-ம்.] ஸ்வயம்ப்ரகாச-மென்பார்-இருளின்றியென்றும்-தன்னையறிதற்குவேறறிவிலையென்பார் - ஒளியின்றியென்றும் - போதல் வருதலில்லாததென்பார்-அலைவின்றியென்றும் - வியாபகத்துக்கு-மட்டில்லையென்பார்- அளவின்றியென்றும்-திரிகுணரகிதமென்பார் - இயல்பொன்றின்றியென்றும் - சாக்ஷாத்காரமானதன்னிடத்தில் வேறுபொருளில்லையென்பார்-பூதங்கள்பலபொருள்களன்றியென்றும்-நிறைவென்பார்-பூரணமென்றும் விடயிகரிக்காததென்பார் - உருவன்றியென்றும் - திரிஸ்யமல்லாத வாநந்தவடிவமென்பார்-அருவன்றியென்றும் - சித்தைத்தவிரச்சத்தில்லையென்பார் - உளதன்றியென்றும்-சத்தசத்தென்று நிர்வகிக்கக்கூடாத வகோசரமென்பார் - உண்டில்லையன்றியென்றும் - திரிபுடிமூன்றினுள்ளும் - ஏகமாய்விளங்குகின்றதென்பார் - ஒன்றாய்வருகின்றதிரிபுடியினடுத்தோன்றுமென்றும் - நினைப்புமறப்பின்றி சுயமாய்விளங்குகின்றதென்பார் - மறவாதுமதித்துக்கொள்வாயென்றுங்கூறினர். (இ-உ-க-ம்.) சர்வமும்பிரமமயமானவபரோக்ஷ ஞானஆத்மசாக்ஷாத்காரமாய்விளங்குமனுபவமே விதேகமுத்தியென்பதாம்......... .... (௪௰)

(அ-கை.) வஸ்துவினிலக்கணம்யாதெனின். (கவி) அவ்வகையாம்பரவடிவையறிவுநிறைவுறவிரிவாயருள்வாயென்ற, செவ்வியவள்ளலுக்குமுனிசெப்புவான்பெருங்கற்பஞ் சேர்ந்தபோதி, லெவ்வகைமூலங்களுக்குமூலமாம்பிரமமேயிலங்காநிற்கும், வவ்வுமனத்தொழிலமாற்றிதனைமாய்த்தாற்பெயரிறந்தவஸ்துவாகும்......... ....*

(இ-ள்.) அவ்வகையாம் - அத்தன்மையாகிய—பரவடிவை - (சிதாநந்தமான) பிரமஸ்வரூபத்தை —அறிவுநிறைவுற - ஞானம்பூரணமாம் (பொருட்டு)—விரிவாயருள்வாய்- விபரமாயனுக்கிரகஞ்செய்வாய்—என்ற - என்றுகேட்ட—செவ்வியவள்ளலுக்கு - அழகுள்ளவிராமருக்கு—முனிசெப்புவான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—பெருங்கற்பஞ்சேர்ந்தபோதில் - மகாகற்பம்வந்தபோது—எவ்வகைமூலங்களுக்கும் - எவ்வகைப்பட்டகாரணங்களுக்கும் — மூலமாம் - காரணமான—பிரமமே - பிரமஸ்வரூபமே—இலங்காநிற்கும் - ப்ரகாசிக்கும்— வவ்வும் - (விடயங்களைக்) கிரகிக்கின்ற — மனத்தொழிலமாற்றி - மனோவிருத்தியைநீக்கி—தனைமாய்த்தால் - அகங்காராத்மாவைக்கெடுத்தால்— பெயரிறந்தவஸ்துவாகும் - நாமமற்றபிரமவஸ்துவாகும். எ-று. (இ-ம்.) அத்தியந்திகப்ரளயத்திற் சத்தாமாத்திரமாய் ப்ரகாசிக்கின்றபிரமம் அகம்பாவமற்றவிடத்தில் அகோசரமாய்விளங்குமென்பதாம் .... (சச)

(அ-கை.) இ-து. (கவி) தெரித்தறியும்பொருளுக்காச்சிவவறிவதுவாகச்செப்பலாகும், விரித்தபுலனனுபவித்துமனுபவியாமனமதுவாய்விளம்பலாகும்,புரித்த

யுணர்வொளிநெஞ்சமுலகிவற்றினறிவதுவாய்ப்புகலலாகும், பரித்ததொழிற்செ
ய்யினுங்கற்போலிருக்குநிலையதுவாய்ப்பகரலாகும் .... *

(இ-ள்.) தெரித்தறியும்- எதிரிட்டறிகின்ற—பொருளேக்கா - சகத்தைப்பாராத—சிவவறிவு - சிவசைதன்யத்தை—அதுவாகச்செப்பலாகும்-அப்பிரமமாகச்சொல்லலாம்—விரித்த - பரவிய—புலனனுபவித்தும் - விஷயங்களையனுபவித்தும் — அனுபவியாமனம்-அனுபவியாதமனத்தை—அதுவாய்விளம்பலாகும் - அப்பிரமமாகச்சொல்லலாம்— புரித்தவுணர்வு - உண்டானவிஷயஞானமும்—ஒளி - (சூரியாதி) ப்ரகாசமும்—நெஞ்சம்- மனமும்—உலகு - திரிஸ்யமுமாகிய—இவற்றின் - இவைகளின்—அறிவு - (சர்வசாக்ஷியாகிய)அறிவை—அதுவாய்ப்புகலலாகும் - அப்பிரமமாகச்சொல்லலாம்—பருத்ததொழிற்செய்யினும் - மிகுந்தகருமங்களைச்செய்தாலும்—கற்போலிருக்குநிலை-மலைபோலிருக்கின்றநிச்சயத்தை—அதுவாய்ப்பகரலாகும் - அப்பிரம்மாகச்சொல்லலாம். எ-று. (இ-ம்.) திரிஸ்யதிருஷ்டியின்றித் திருக்குந்திருஷ்டியிற் சேவிக்கின்றசிவனும், விஷயானுபவமின்றி யாத்மானுபவமாயனுபவிக்குமனமும், திரிபுடிக்குச் சாக்ஷியானவறிவும், ஸ்வானுபவத்தினாற் கன்மங்களைச்செய்துஞ்செய்யாமலிருக்கின்ற நிச்சயமும்பரமார்த்தஸ்வரூபமேயென்பதாம் .... (சஉ)

(அ-கை.) இ-து. (கவி) முடிவுகனவஞ்ஞானமில்லாநீடியிலதுவா மும்மையாகி,
யடர்தருஞாதருஞானஞேயமெழுந்தொடுங்குமிடமதுவேயாகுந், திடவிசும்பன்
றாயிருந்தும்விசும்பானநிலையதுவாஞ்சித்தம்புந்தி, படர்மனம்போய்த் தாவரம்
போற்பெறுமுளறிவொப்பாமப்பரமரூபம் .... *

(இ-ள்.) முடிவு - அந்தமும்—கனவு - சொற்பனமும் — அஞ்ஞானம் - சடமும்—இல்லா - இல்லாத—நீடியில் - நீண்ட (யோக) நித்திரையானது—அதுவாம் - அவ்வஸ்துவாரும்—மும்மையாகி - மூன்றாகி—அடர்தரும் - நெருங்கிய—ஞாதரு-ஞாதாவும்—ஞானம்-அறிவும்—ஞேயம்- விஷயமென்னும்—மும்மையாகி-(திரிபுடியானது)—எழுந்தொடுங்கும்-உண்டாகியடங்கும்—இடம் - ஸ்தானமானது—அதுவேயாகும் - அவ்வஸ்துவேயாம்— திடவிசும்பு - பூதாகாயம்— அன்றாயிருந்தும் - அல்லாததாயிருந்தும்—விசும்பானநிலை-(ஞானு)காயமானநிலைமையானது—அதுவாம் - அவ்வஸ்துவாகும்—சித்தம் - சித்தமும்—புந்தி-புத்தியும்—படர்மனம் - விரிந்தமனமு(மாகியவிவைகள்)—போய் - நீங்கி—தாவரம்போல்- மரங்களைப்போல—பெறும் - பெற்ற— உள்ளறிவு - உள்ளுணர்வானது —அப்பரமரூபம்-அப்பிரமஸ்வரூபத்தை—ஒப்பாம் . ஒக்கும். எ-று. (இ-ம்.) அறிதுயிலும் திரிபுடியினுதாரமும்-ஞானகாசமும் - அந்தக்கரணஞானமின்றி சுழுத்திஞானமுள்ளதாவரவறிவும் - பிரமஞானத்துக்குஉவமானமாக்சொன்னதாம் .... (சங)

(அ-கை.) இ-து. (கவி) அயனெடுமால்சங்கரனுஞ் சதாசிவனுமிந்திரனுமருக்கன்
றானும்,வியனிலுபசாந்தராம்வேலையினிலுபாதியெலாம்விட்டுநீங்கிப், பயனில்சக
மென்கின்றபற்றகன்று சின்மயமாம்பரமரூபம், முயர்விகற்பமிலாவடிவா யெங்கு
நிறைசிவமாகியொன்றாய்நிற்கும் .... *

(இ-ள்.) அயனொடும் - பிரமாவோடும்—மால் - விஷ்ணுவும்—சங்கரனும் - உருத்திரனும்—சதாசிவனும் - சதாசிவனும்—இந்திரனும் - தேவேந்திரனும் — அருக்கன்றானும்-சூரியனுமா(கியவிவர்கள்)—உபசாந்தராம் - உபசாந்தர்களாகின்ற— வேலையினில் - காலத்தில்—வியனில் - மேன்மையில்லாத—உபாதியெலாம் - உபாதிகளியாவையும் — விட்டுநீங்கி-விடுபட்டு—பயனில் - ப்ரயோசனமில்லாத—சகமென்கின்ற-உலகமென்கின்ற—பற்றகன்று-இச்சைவிட்டு—சின்மயமாம் - ஞானமயமாகிய—பரமரூபம்- பிரமஸ்வரூபமானது—உயர்-மேலான—விகற்பமிலாவடிவாய் - நிர்விகற்பஸ்வரூபமாய்—எங்குநிறை - எங்கும்(பரிபூரணமாய்)நிறைந்திருக்கின்ற)—சிவமாகி - சிவஸ்வரூபமாய் — ஒன்றாய்நிற்கும் - அத்துவிதமாயிருக்கும். எ-று. (இ-ம்.) சிவேஸ்வரசகமென்னும் வாசனுக்ஷயமே நிருவிகற்பஞானமான சிவஸ்வரூபமென்பதாம் .... (சச)

ஞானவிண்மகன்கதை முற்றிற்று. ஆகதை-சஇ-கவிதை (உருரு)

லீலைகதை.

(அ-கை.) முற்கதையிற் சுயஞ்சைதன்னியனுனபரமாத்மாவே சீவேஸ்வரசகமாகத் தோற்றப்பட்டாலும், அவையப்பிரமத்துக்குப்பின்னப்படாமையைக்காட்டி யச்சைதன்னியவல்லாசமாயுண்டானமனேமாயையின் பலவான துற்கடனு கடனுசாமர்த்தியங்களை ப்ரகாசமாயறிவித்துஅம்மாயையை நிவிர்த்திப்பிக்கும்பொருட்டுலீலைகதையைச்சொல்லுகிறார்..*

(அ-கை) லீலைபதுமன்குணநிருபணம். (கவி) வேறு.
இந்தப்பொருளையமறுத்திளைப் பாறுமாறோர், முந்தைக்கதைகேள்குணமுற்றிவிவேகமுற்றோன், விந்தைப்புயத்தோ
ன்பதுமப்பெயர்வேந்தன்மண்மேற்,சிந்தைக்கினிதாங்குணலீலைபச்செம்மஹேறவி...... *

(இ-ள்.) இந்தப்பொருள் - இவ்வருத்தத்தில்—ஐயமறுத்திளைப்பாறுமாறு- சந்தேகந்தீர்ந்துவிஸ்ராந்தியடையும்பொருட்டு—ஓர்முந்தைக்கதைகேள் - ஒருபழைமையான கதையை (யிராமாநீ)கேட்பாய்—மண்மேல் - பூமியின்கண்—குணமுற்றி - (சத்துவ)குணமுதிர்ந்து—விவேகமுற்றோன் - விவேகம்பெற்றவன்—விந்தைப்புயத்தோன் -விஜயலட்சுமி(வசிக்கின்ற) புயத்தையுடையவன்—பதுமப்பெயர்வேந்தன்-பதுமநாமத்தையுடையவோரரச(னுளன்)—அச்செம்மஹேவி - அவ்வரசன்மனைவியானவள்— சிந்தைக்கினிதாம் - (அவர்) மனதுக்கினிமையான—குணம் - குணத்தையுடைய — லீலை - லீலாநாமத்தையுடையவளாம். எ - று. (இ-ம்.) வெளிப்படை...(க)

(அ-கை.) லீலைசுகிக்குமுபாயம் விசாரித்தல். (கவி)
அன்னு னிழல்போன் மனம்போ லயலற்றவன்னு, ணன்னுயகன்மூப்பிறப்பின்றி நற்காளையாகி, யெந்நாளுமொத்தின்புற
வென்கொலுபாயமென்னத், தொன்னுன்மறையோர்க்குரைத்தா ளவர்சொல்லலுற்றார்,

(இ-ள்.) அன்னுனிழல்-அவ்வரசனது சாயையைப்(போலவும்)—மனம்போல்- மனதைப்போலவும்—அயலற்றவன்னுள் - பிரிவற்றவந்தலீலையானவள்—நன்னுயகன் - நல்லகணவன்—மூப்பிறப்பின்றி - சராமரணமில்லாமல் — நற்காளையாகி - நல்லவெவ்வனமுள்ளவராய்—எந்நாளுமொத்தின்புற - எப்போதுங்கூடிச்சுகிக்க—என்கொலுபாயமென்ன - என்னவுபாயமென்று—தொன்னுன்மறையோர்க்கு-பழைமையானசதுர்வேதப்பிராமணர்களுக்கு—உரைத்தாள்-சொன்னுள்— அவர்சொல்லலுற்றார் - அவர்கள்சொல்லத் தொடங்கினூர்கள். எ-று. [ப-ம்] எப்போதும், அழிவற்றவறிவோடும் பிரிவற்றவாநந்தத்தை யனுபவிக்குமுத்தியை விசாரித்ததென்பார், மூப்பிறப்பின்றி நற்காளையாகியெந்நாளுமொத் தின்புற வென்கொலுபாயமென்னவென்றூர். (இ-ம்) சத்தைவிட்டுநீங்காத சுகத்தைவிரும்பினதாம்... (உ)

(அ-கை.) லீலைசிந்தித்தல். (கவி)
செபமுந்தவமும்முதல்யாவையுஞ்சித்திநல்கும், புவனங்களிற்பொன்றுதல்போக்கரிதியார்க்குமென்ன, விவள்சிந்தைசெய்வாளிறைவற்குமுன்
யாமிறத்தாற், கவலொன்றறத் தற்பதவாழ்வுகைகூடலாகும் .... *

(இ-ள்.) செபமுந்தவமும் - செபங்களுந்தபசுகளும்— முதல்யாவையும்- முதலியவனைத்தும்—சித்திநல்கும்- சித்தியைக்கொடுக்கும்—புவனங்களில்-உலகங்களில்—பொன்றுதல்-மரித்தலை—இயார்க்கும் - யாவருக்கும்—போக்கரிது - நீக்கக்கூடாது— என்ன - என(றந்தணர்கள்) சொல்ல—இவள்சிந்தைசெய்வாள் - இந்தலீலைசிந்திப்பாள்— இறைவற்குமுன் - (நமது) நாயக(னிறத்தற்கு)முன்பு—யாமிறந்தால் - நாமரித்தால்—கவலொன்றற - (நமக்)கோர்வருத்தமுமின்றி—தற்பதவாழ்வு- நிர்வாணசுகமானது—கைகூடலாகும்-கிடைக்கும். எ-று. [ப-ம] மூவர்முதலிய சித்தர்களுமுடிவில்நசிப்பாரென்பார்-, பொன்றுதல் போக்கரிதியார்க்குமென்றும்- சத்திநசிக்கிற்சத்தனுமென்பார்- இறைவற்குமுன்யா மிறந்தாற் றற்பதவாழ்வு கைகூடலாகுமென்றுங்- கூறினூர்.. (௩)

(அ-கை.) இ-து. (கவி)
இறைவன்முதற்சாகி லச்சீவனையிந்தவீட்டி, லுறையும்படி
செய்தென்னையுவந்துகாண்க, நிறையின்பமெய்தியிருப்பேனிதுநேருமாறு,
மறைதந்தவாணிபதமேத்து வன்வாழ்த்தியன்ம்ற .... *

(இ-ள்.) இறைவன்முதற்சாகில் - (எனது) நாயகன்முன்னேயிறந்தால் — அச்சீவனை- அச்சீவாத்மாவை —இந்தவீட்டிலுறையும்படிசெய்து - இம்மனையில் வசிக்கும்படிசெய்து— அது-அச்சீவன் —என்னையுவந்துகாண்க - என்னைச்சந்தோஷித்துப்பார்க்க— நிறையின்பம்- பூரணுநந்தத்தை—எய்தியிருப்பேன் - அடைந்திருப்பேன்—இதுநேருமாறு - இந்நிலைவரும்பொருட்டு—மறைதந்தவாணிபதம் - வேதார்த்தங்களைப்போதித்தசரஸ்வதியின பாதங்களை

வாழ்த்தி - துதித்து—ஏத்துவன் - தோத்திரஞ்செய்வேன். எ-று. [இ-உ-க-ம்.] சத்தைவிட்டு நீங்காதசித்தேயாநந்தமாதலா லஷ்மைதைப் பிரிவற்றிருக்கும் யுத்தியைக் கருதினதாம்..........(சு)

(அ-கை.) சரஸ்வதியை மூர்த்தியாகக்கொண்டுபாசித்தல். (கவி) மன்னற்குரையாதுநன்
மந்திரங்கற்பம்வல்லோர், சொன்னத்தினின் றுசுரர்பூசுரர்பூசைபண்ணி, யன்னத்தைநா
லுன்கினுக்கோர்பகலற்பமாயுண்,டின்னிட்டையாலேமதிபத்துநடந்தவெல்லை........ *

(இ-ள்.) மன்னற்குரையாது - தன்னரசனுக்குச்சொல்லாமல்—நன்மந்திரம் - நல்லமந்திரங்களிலும்—கற்பம் - நல்லசாஸ்திரங்களிலும்—வல்லோர் - வல்லமை(புடையபெரி) யோர்கள்—சொன்னத்தினின்று - அனுக்கிரகஞ்செய்தமார்க்கத்தினின்று — சுரர் - தேவரையும்—பூசுரர் - பிராமணரையும்—பூசைபண்ணி - ஆராதித்து—அன்னத்தை - அசனத்தை—நாலுன்கினுக்கு - (திரிராத்திரிநீங்கிய) நான்காந்தினத்தில்—ஓர்பகல்-ஓர்போது—அற்பமாயுண்டு-கொஞ்சமாகப்புசித்து—இன்னிட்டையால் - இனிதானநிஷ்டையினுல் — மதிபத்துநடந்த-பத்துமாதஞ்சென்ற—எல்லை - காலத்தில். எ-று. (இ-ம்.) வெளிப்படை...... .... (ரு)

(அ-கை.) ப்ரசன்னமானவுபாசனமூர்த்தியைத்துதிசெய்தல். (கவி) வானூர்மதிபோ
னிறவாணிமகிழ்ந்துதோன்றி, நீநாடியதென்னெனநீள்பவமாநெருப்புக், காறுவமுதக்
கதிரோயகத்துன்பமென்னும், பாநாளகற்றுங்கதிரோயெனப்பாதமேத்தி................ *

(இ-ள்.) வானூர்மதிபோல் - ஆகாயத்திற்றோன்றியபூர்ணசந்திரனைப்போல—நிறவாணி-நிறத்தையுடையசரஸ்வதியானவள் — மகிழ்ந்துதோன்றி - சந்தோஷித்துப்ரத்யக்ஷமாய்—நீநாடியதென்னென - (லீலையே) நீவிரும்பியகாரியமென்னவென்றுகேட்க — நீள்பவமாம்-நீண்டசநநமாகிய—நெருப்புக்கு - அக்கினிக்கு—ஆறு - நீங்காத—அமுதக்கதிரோ - சந்திரகிரணமே—அகத்துன்பமென்னும் - மனோதுக்கமென்கின்ற — பாநாளகற்றும் - இருட்டை நீக்குகின்ற --கதிரோயென-சூரியப்ரகாசமேயென்று —பாதமேத்தி-பதத்தைத்துதித்து.எ-று. (இ-ம்.) வெளிப்படை...(சா)

(அ-கை.) தேவியனுக்கிரகித்தல். (கவி) என்னாயகன்றுஞ்சிலச்சீவனிவ்வில்லினிற்
க, முன்னாகவுன்னைநினைபோதிலென்முன்புதோன்ற,வன்னையவ்வரங்களிரண்டுமளி
த்தியென்ன, நன்னாமகளன்பொடுநல்கிநயந்துபோனாள் . ... *

(இ-ள்.) என்னாயகன்றுஞ்சில் - என்கணவனிறக்கில்—அச்சீவன்- அந்தச்சீவன்—இவ்வில்லினிற்க - இவ்வீட்டிலிருக்கவும—முன்னாக-ப்ரத்யக்ஷமாகும்படி—உன்னைநினைபோதில்-உன்னைநினைக்குஞ்சமயத்தில்—என்முன்புதோன்ற - என்முன்னேப்ரத்யக்ஷமாகவும்—அன்னாய்-தாயே—அவ்வரங்களிரண்டும்—அந்தவிரண்டுவரங்களையும்—அளித்தியென்ன-அனுக்கிரகிக்கவேண்டுமென்று (லீலைகேட்க)—நன்னாமகள்-நல்லசரஸ்வதியானவள்— அன்பொடுநல்கி-கிருபையுடனனுக்கிரகித்து—நயந்துபோனாள்-சுகமாயெழுந்தருளினாள்.எ-று.[ப-ம்.]சத்தன் பேதபாவத்தைப்பிரியினும் அபேதபாவத்தைப்பிரியக்கூடாததென்பார், என்னாயகன்றுஞ்சிலச்சீவனிவ்வில்லினிற்கவென்றார்.(இ-ம்.) விரும்பினவண்ணமடையும்வரத்தைப்பெற்றதாம்.

(அ-கை.) காலசக்கரத்தினாலாயுணீங்குதல். (கவி) பக்கத்தொடுதிங்களுறும்பருவங்
கடேர்க்காற், றொக்கிச்செறிநாளதிற்கூம்புதொடர்ந்தவாண்டு, புக்குற்றதோரச்சி
மைப்போததனுபியாதி, மிக்குத்திரிகாலவன்றேர்விரைந்தோடலோடும் .... *

(இ-ள்.) பக்கத்தொடு - பக்ஷத்துடன்—திங்கள் - மாதமும்—உறும்பருவங்கள்- பொருந்தினவிருதுக்களு (மாகிய)—தேர்க்கால் - வண்டில்களும்—தொக்கிச்செறி - கூடிநெருங்கிய—நாளதிற்கூம்பு - தினங்களாகியமேற்பரப்புகளும்—தொடர்ந்தவாண்டு - சேர்ந்தவருடமாகிய—புக்குற்றதோரச்சு-புகுந்தவொப்பற்றவச்சும் —இமைப்போது-கணப்போதாகிய—அதனுபி - அதனடிவும்—ஆதி - முதலான (விவைகளையுடைய)—மிக்குத்திரி - மிகவுஞ்சுழலுகின்ற—காலவன்றேர் - காலசக்கரமானது—விரைந்தோடலோடும் - வேகமாகச்செல்லவும். எ-று. (இ-ம்.) வெளிப்படை...(அ)

(அ-கை.) சத்தன்பிரிந்தவிசனத்தைத்தேவிமாற்றுதல். (கவி) இன்பங்களையற்றிடலீலை
யிருந்தவெல்லை, யன்பன்சிலநாளிலிறந்தனனன்னமன்னு, டுன்பஞ்சுடும்வெம்மைபோ
ருதுயிர்துஞ்சுமுன்னே, முப்பின்றிவிண்ணின்றுசொன்மாதிவண்மோகமாற்றி.. ...... *

(இ-ள்.) இன்பம் - ஆநந்தமானது— களையற்றிட - எல்லையறும்படி— லீலையிருந்தவெல்லை - லீலையானவளிருந்தகாலத்தில்—அன்பன் - (தனது) நாயகன்—சிலநாளில் - சிறிதுதினத்தில்—இறந்தனன்-மரணமடைந்தான்—அன்னமன்னாள்-ஒதிமத்துக்கொப்பான(லீலையான)வள்—துன்பஞ்சுடும் - சோ (காக்கினி) யெரிக்கின்ற—வெம்மைபொருது - வெப்பம்பொரு

க்கமாட்டாமல்—உயிர் துஞ்சுமுன்னே - சீவன்பிரிவதற்குமுன்னமே—முன்பின்றி-ப்ரத்யக்ஷப்படாமல்—விண்ணின்று- ஆகாயத்தினின்றுக்கொண்டு—சொன்மாது-சரஸ்வதியானவள்—இவண்மோகமாற்றி - இந்தலீலையின்மோகத்தைக்கெடுத்து. எ-று. (இ-ம்.) வெளிப்படை(கூ)

(அ-கை.) சத்தன்பிரிந்தவிடத்தும் பிரியாதிருக்கு முத்தியுரைத்தல். (கவி) மாய்வுற்றவேந்தை மலரான்மறைவித்துவைப்பா, யெய்வுற்றபூவுலரு மெய்யழியாது சீவன், பாய்வுற்றகலாதுபொன்மண்டபம்பற்றிநிற்குந், தோய்வுற்றிவன் றோள் விரைவிற்றுயர்தீர்தியென்றாள்... *

(இ-ள்.) மாய்வுற்றவேந்தை -மரணமடைந்தவரசனை—மலரால்- புட்பங்களினால்—மறைவித்துவைப்பாய் - மூடிவைப்பாய்—எய்வுற்ற - பொருந்திய—பூவுலரும்-புட்பங்கள்வாடும்—மெய்யழியாது - சரீரங்கெடாது—சீவன்பாய்வுற்றகலாது - சீவனீங்காமல் —பொன்மண்டபம்- சொர்னமயமானவந்தப்புரத்தை—பற்றிநிற்கும்- அடைந்திருக்கும்—இவன்றோள்-இவ்வரசனதுபுயத்தை—தோய்வுற்று - பொருந்தி—விரைவில்- சீக்கிரத்தில்—துயர்தீர்தியென்றாள் - துக்கந்தீரக்கடவாயென் (றருளிச்சரஸ்வதிமறைந்த)னள். எ- று. [ப-ம்.] விசேடஞானநீங்கினுஞ் சாமான்யஞானநீங்காதென்பார்-சீவன்பாய்வுற்றகலாதென்றும்-அவ்விசேடஞானத்தோடுங்கூடிய சத்தைவிரைவிற்கூடிச்சுகிப்பாயென்பார்- தோய்வுற்றிவன்றோள்விரைவிற்றுயர்தீர்தியென்றுங்கூறினார்.(இ-ம்)பிரிந்தவிடத்தும்பிரியாதிருக்குநிலையைப்பெற்றதாம்.

(அ-கை.) விசேடத்தோடுஞ்சேர்ந்திருக்கவிரும்புதல். (கவி) வாடாவசரீரிதன்சொற்படிமன்னனைவைத்தா, ளோடாதவாவியுடையாளுளத்துன்னவாணி, நீடாதுவந்தாளெனதன்பனைநீங்கிவாழ்தல், கூடாதவன்சேர்வுழிகூட்டுதிவல்லையென்றாள்.. .... *

(இ-ள்.) வாடா - கெடாத—அசரீரிதன்- அமூர்த்தமானசரஸ்வதியின் —சொற்படி-வசனப்படிக்கு—மன்னனைவைத்தாள் - அரசனைப்(பூவினுன்மறைத்து)வைத்தாள்—ஓடாதவாவியுடையாள் - பிரியாதவுயிரையுடையலீலையானவள்—உளத்துன்ன - உள்ளத்தின்கட்சிந்திக்க—நீடாதுவந்தாள் - சீக்கிரத்திவந்தவளாகிய—வாணி- சரஸ்வதியை(நோக்கி)—எனதன்பனை-எனதுநாயகனை—நீங்கிவாழ்தல்கூடாது- பிரிந்துவாழ்வதுகூடாது—அவன்சேர்வுழி-அவன்சேர்ந்தவிடத்தில்—வல்லைகூட்டுதி - சீக்கிரத்திற்சேர்ப்பாய் — என்றாள் - என்று லீலைசொன்னாள். எ-று. (இ-ம்.) வெளிப்படை...(யக)

(அ-கை.) விரும்பினதடையத் தேவி மத்தியகதஞானத்தை யுபதேசித்தல். (கவி) மனவானமும்வானமுமாசறுஞானவானு, மெனவானமூன்றின்முதல்வானமிரண்டுமின்றி, கனஞானவானெய்துதல்கண்டதைவிட்டுபோத, நனவாயயலொன்றையுற்றானடுஞானவானும்.. *

(இ-ள்.) மனவானமும் - மனுகாயமும்—வானமும்—பூதாகாயமும்—மாசறுஞானவானும் - களங்கமற்றஞானுகாயமும் —எனவானமூன்றில்- என்கின்றமூன்றுகாயத்தில்—முதல்வானமிரண்டுமின்றி - முந்தினவிரண்டாகாயமுமில்லாமலிருக்கின்ற—கனஞானவான்- மகத்தானசிதாகாயமானது--கண்டதை-காணப்பட்ட(வொரு)வஸ்துவில்—எய்துதல்விட்டு-அடைதலைவிட்டு—போதநனவாய் - மிகவுந்தெளிவாக— அயலொன்றையுற்றால்-பக்கத்தி (லிருக்கின்ற) வொருவஸ்துவையடைந்தால்—(அப்போது)நடுஞானவானும்-மத்தியகதமானசிதாகாயமாம்.எ-று. (இ-ம்.)சத்தனதுபேதஞானமறிவித்தற்கு அபேதஞானத்தைப்போதித்ததாம்.

(அ-கை.) மத்தியகதஞானம்விளங்குமுத்தியுரைத்தல். (கவி) சங்கற்பசாலந்தவிர்ந்தாலுபசாந்தமாகித், துங்கப்புவியாவையுமாகியசோதிதோன்று, மிங்கற்பமுங்காண்பனவில்லைவெறும்பொய்யென்று; லங்கப்பொழுதவ்வறிவாலதுசேர்தலாகும் ....*

(இ-ள்.) சங்கற்பசாலம் - சங்கற்பசமூகங்கள்—தவிர்ந்தால்- ஒழிந்தால்—உபசாந்தமாகி - சாந்தமாகவும்— துங்கம் - பரிசுத்தமாகவும்—புவியாவையுமாகிய - சகங்களனைத்துமாகவும்(விளங்குவ)தாகிய—சோதிதோன்றும்- சிற்ப்ரகாசமூதயமாம்—இங்கு-இவ்விடத்தில்—அற்பமும் - எவ்வளவும்—காண்பனவில்லை - திரிஸ்யங்களில்லை — வெறும்பொய்யென்றால்-அத்தியந்தாபாவமென்றறிந்தால்— அப்பொழுது - அச்சமயத்தில்—அவ்வறிவால்- அந்தஞானத்தினால்—அதுசேர்தலாகும் - அச்சிதாகாயத்தையடையலாம். எ-று. (இ-ம்.) பேதபாவநீங்கிச்சர்வம்பிரமமயமாய்விளங்கும்ஸ்வயம்ப்ரகாசமாயின்சங்கற்பநிறைவேறுமென்பதாம்.

(அ-கை.) நிஷ்டைகூடல். (கவி) நம்மாலதுசேர்கெனநாமகணங்கியேக, விம்மாதுவிகற்பமிறந்தசமாதியெய்தித், தம்மாலுறைகூடகல்புள்ளெனத்தாவுநெஞ்ச,மைம்மாலுறுகூட்டினைமாற்றினளக்கணத்தில்.. *

(இ-ள்.) நம்மால் - நமது (கிருபையி) னால்—அதுசேர்கென- அச்சிதாகாயத்தையடை யக்கடவாயென்று—நாமகணல்கியேக - சரஸ்வதியனுக்கிரகித்துச்செல்ல—இம்மாது- (பின்) பிந்தலீலையானவள் — விகற்பமிறந்தசமாதியெய்தி - நிர்விகற்பசமாதியையடைந்து — தம் மாலுறை - தங்களால்வசிக்கும்—கூடகல்புள்ளென - கூட்டைவிட்டுநீங்கியபறவைகளைப்போ ல—தாவுநெஞ்சம் - அவாவுகின்றமனமானது—மைம்மாலுறு - களங்கமும்விருப்பமுமுள்ள —கூட்டினை - சரீரத்தை—அக்கணத்தில் - அந்தக்ஷணத்தில்—மாற்றினள் -நீக்கினாள். எ-று. (இ-ம்.) தேவியனுக்கிரகத்தினா னிட்டைகூடி சாமான்ய ஞானத்தினின்றும் விசேடஞானம் வெளிப்பட்டதாம்........ .... (௰௪)

(அ-கை.) சத்தன்பேதபாவனாரூபத்தைத் தரிசித்தல். (கவி.) மங்காதஞானவிசும்பூடொ ருமாநகர்க்கே, வெங்காதலனெட்டிரண்டாண்டுள வீரனாகிச், சிங்காதனமேற்செறிவேந் தருஞ்சேனைநாலும், பொங்காதரமாதரும் போற்றவிருத்த லோடும் .... *

(இ-ள்.) மங்காத-கெடாத—ஞானவிசும்பூடு- ஞானாகாயமத்தியில்—ஒருமாநகர்க்கு- ஒரு பெரிதானபட்டணத்துக்கு—வெங்காதலன்- விருப்பமுள்ளபுருடனானவன் — எட்டிரண்டாண் டுள- பதினாறுவயதுள்ள—வீரனாகி - வீர (முள்ளவரச) னாய்—சிங்காதனமேல்- அரியணையின் மேல்—செறிவேந்தரும் - நெருங்கியவரசர்களும்—சேனைநாலும்-நான்குபடைகளும்—பொ ங்காதரமாதரும் - மிகுந்தவாசையையுடையஸ்திரீகளும் — போற்ற - புகழும்படி—இருத்த லோடும் - வீற்றிருக்கவும். எ-று. (இ-ம்) வெளிப்படை... (௰௫)

(அ-கை.) தரிசித்துமீண்டுதேவியைச்சிந்தித்தல். (கவி.) (வேறு.)தன்னுயிர்க்கேள்வ னையந்தலீலைநோக்கிச் சபைபுகுந்தாண் மிகவியந்தாள் சபையைச்சூழ்ந்த, மன்ன வருமுனிவருமறைவல்லோரு மங்கையருநாற்படையு மற்றுளோரு, நன்னிலமுங் குன்றுகளுமூருநாடு நதித்திரளும்பலபொருளு நண்ணிநோக்கி, மின்னனையாண் மீண்டுதனதிடத்தின்மேவி வெண்ணிறவாணியைநினைத்தாள் விருப்பினோடும்.......*

(இ-ள்.) தன்னுயிர்க்கேள்வனை-தனதுபிராணநாயகனை—அந்தலீலைநோக்கி-அந்தலீலை யானவள்பார்த்து—சபைபுகுந்தாள்-(அவனிருக்குஞ்)சபையையடைந்தாள்—மிகவியந்தாள்- மிகவுமதிசயித்தாள்—சபையைச்சூழ்ந்த - சபையைச்சூழ்ந்திருக்கின்ற—மன்னவரும்- (மேற் குவாயலி)லரசர்களும்—முனிவரும் - (கீழ்வாயலில்)முனீஸ்வரர்களும்— மறைவல்லோரும்- வேதங்களில்வல்லமையையுடைய பிராமணர்களும் — மங்கையரும் - (தென்வாயலில்) ஸ்தி ரீகளும்—நாற்படையும் - (உத்தரவாயலில்)- சதுரங்கசேனைகளும் — மற்றுளோரும் - ஏனை யோரும்—நன்னிலமும் - நல்லபூமியும்—குன்றுகளும் - மலைகளும்—ஊரும்-நகரங்களும்— நாடும் - நாடுகளும்—நதித்திரளும் - நதிச்சமுகமும்—பலபொருளும்-பலவஸ்துக்களு(மாகி யவிவைகளை)—நண்ணிநோக்கி - போய்ப்பார்த்து—மின்னனையாள்- மின்னற்கொடிக்கொப் பாகியலீலையானவள்—மீண்டு - திரும்பி—தனதிடத்தின்மேவி-தனதந்தப்புரத்திலுள்ள(சரீரத் தில்) புகுந்து—வெண்ணிறவாணியை - வெண்ணிறத்தையுடைய சரஸ்வதியை — விருப்பினோ டும்- பிரியத்தோடும்—நினைத்தாள் - சிந்தித்தாள். எ-று. (இ-ம்) வெளிப்படை..... ....(௰௬)

(அ-கை.) சீவன்மரித்தவிடத்திருக்கமறுபிறப்புற்றதியாதெனின். (கவி) வந்துயரா தனத்திருந்தவாணிதன்னை வணங்கியெனதன்பனுக்குமரித்தபின்பு, பந்தமுறுமயக் கமேவடிவாய்நிற்கப் பழையபடிபிறப்புற்ற படியீதென்ன, விந்தவுலகுறுமயக்கம் போகச்சொல்வா யெனலீலைகேட்டலுமே யிறைவிசொல்வா, ளுந்துசிருட்டியின் முன்புமயக்கமட்டே யுருவாமிச்சிருட்டிவே றுதித்ததாகும்...... .... *

(இ-ள்.) வந்து - ப்ரத்யக்ஷமாய்—உயராதனத்திருந்த - மேலான(சிங்)காசனத்தெழுந் தருளிய—வாணிதன்னை - சரஸ்வதியை—வணங்கி - நமஸ்கரித்து— எனதன்பனுக்கு - எனது நாயகனுக்கு—மரித்தபின்பு - இறந்தபின் (இத்திரிஸ்யமானசர்க்கத்தைக்காட்டிலும்)—பழை யபடி-முன்போலவே—பந்தமுறுமயக்கமேவடிவாய் - பந்தமுள்ளபிரமாத்மகமாகியும்—நிற் கும்- (அமூர்த்தமாகியு) மிருக்கின்ற—பிறப்பு-(வேறான)சர்க்கமானது—உற்றபடியீதென்ன- உண்டானபிரகாரமிப்படிப்பட்டதென்று—இந்தவுலகுறுமயக்கம்-இச்சக்கரத்தினுடையசத்தி யத்துவபிரமை—போக - நீங்கும்பொருட்டு—சொல்வாயென - அருள்வாயென்று—லீலைகே ட்டலும் - லீலைகேட்கவும்—இறைவிசொல்வாள் - சரஸ்வதியுரைப்பாள் — உந்துசிருட்டியின் முன்பு- முன்னுயர்வான(பிராமண)சிருஷ்டியின்—மயக்கமட்டே- (அரசப்)பிராந்தியினளவே —உருவாம் - (பதுமனென்னும்)வடிவமானது— இச்சிருட்டி - இந்தச்சிருஷ்டியானது— வே றுதித்ததாகும்- வேறாகத்தோற்றினதாகும். எ-று. (இ-ம்) அபேதஞான மிருந்தவிடத்திருக்க

பேதஞானமானமுன்சிருஷ்டியின் மனோமயக்கமே யிச்சிருஷ்டியாகி,இச்சிருஷ்டியின்மனோமயக்கமே மேற்சிருஷ்டியானதை யறிவித்ததாம்...(யஎ)

(அ-கை.) முன்சிருஷ்டியை யறிவிக்கத்தொடங்கல். (கவி) அப்படியே யுன்கணவற்
கிரண்டாஞ்சென்மமாயினதாலீ துரைப்பவறிந்துகேட்பாய், மைப்படிவில்லாவிமல
ஞானவிண்ணின் மற்றொருபான்மாயாமண் டபமொன்றுண்டாஞ், செப்பரியவிசு
ம்பென்னுமயூரப்பீலித்திரையாலே மறைந்திருக்குஞ்செம்பொற்குன்றுங், கப்பு
றுபொற்றாணிலுறையுலகபாலர் காரிகையாரொனும்பொறிகள் கலந்துநிற்கும்...*

(இ-ள்.) அப்படியே - அவ்வண்ணமே—உன்கணவற்கு- உனது நாயகனுக்கு—இரண்டாஞ்சென்மம் - இரண்டாவதானவிடூரதசெனநம்—ஆயினது - உண்டாயிற்று — ஈதுரைப்பவறிந்து - இதனது(வரன்முறையைச்) சொல்லத்தெரிந்துகொண்டு — கேட்பாய் - (சங்கையுண்டானால்) கேள்—மைப்படிவிலா - களங்கமற்ற—விமலஞானவிண்ணில் - நின்மலமான சிதாகாயத்தில்—ஒருபால் - ஓர்பக்கத்தில்—மாயாமண்டபம்-மாயாமண்டபமானது—ஒன்றுண்டாம்-ஒன்றுண்டாயிருக்கின்றது—செப்பரிய - சொல்லுதற்கரிய—விசும்பென்னும் - ஆகாயமென்கின்ற—மயூரப்பீலித்திரையால் - மயிலிறகின்றிரையினால்—மறைத்திருக்கும்- மூடியிருக்கும்—செம்பொற்குன்றும் - மகமேருவாகிய—கப்புறு - கிளைகளையுடைய—பொற்றாணிலுறை-சொர்ணஸ்தம்பத்தில்வசிக்கின்ற — உலகபாலர் - (இந்திரன்முதலிய) வுலகபாலர்களுடைய—காரிகையாரென்னும் - (இந்திராணிமுதலிய) ஸ்திரீகளென்னும் — பொறிகள் - சித்திரப்பதுமைகள்—கலந்துநிற்கும் - பதித்திருக்கும். எ-று...(யஅ)

(அ-கை) இ-து.(கவி) ஒருகோணந்தனிற்பூதப்புற்றுமாங்கேயுறைகின்றமலைகளெனு
மோடுமுண்டாம்,வருகாதற்புத்திரர்சூழ்விருத்தவாலமறையவனுங்கொருவனுறைம
னையதாகுங், குருவானவாயுவின்மார்க்கத்துலாவு கோலவிமானபபுழுவின்குழுவை
மேவு, மருகானவிண்ணிலுறைசித்தர்கூட்டமானகொதுகிரைகின்றவரவநண்ணும்.

(இ-ள்.) ஒருகோணந்தனில் - ஒருபக்கத்தில்—பூதப்புற்றும்- பிருதிவியென்னும்புற்றுகளும்—ஆங்கேயுறைகின்ற- அவ்விடத்தில்வசிக்கின்ற—மலைகளெனும்- (சத்தகு)லாசலங்களென்கின்ற—ஓடுமுண்டாம் - ஓடுகளுமுண்டாயிருக்கின்ற — வருகாதல் - ஆசையுள்ள—புத்திரர்சூழ்- (மரீசிமுதலான) புதல்வர்சூழ்ந்திருக்கின்ற—விருத்தவாலமறையவனும் - வார்த்திகமும்பரிசுத்தமுமுள்ளபிரமாவாகிய—ஒருவனுறை - ஒருபுருடன்வசிக்கின்ற—மனையதாகும் - இடமாகும்—குருவான - பெருமைபொருந்திய— வாயுவின்மார்க்கத்து - மகாகாசமென்னும்—(வேணுவில்)— உலாவு - சஞ்சரிக்கின்ற—கோலம் - அழகிய— விமானப்புழுவில் - விமானத்தையுடையதேவகீடங்களினது—குழுவைமேவும் - கூட்டங்களைப்பொருந்தும் — அருகான-சமீபமாகிய—விண்ணிலுறை - ஆகாயத்தில்வசிக்கின்ற— சித்தர்கூட்டமான - சித்தர்குழாமாகிய—கொதுகு - மசகங்கள்—இரைகின்ற - சப்திக்கின்ற—அரவநண்ணும்- (கும்மென்கின்ற) சப்தம்பொருந்தும். எ-று...(யகூ)

(அ-கை.) இ-து. (கவி) வானவர்தானவரொன்னுந் தீயமக்கண்மதர்த்தவிளையாட்
டோசைமாறுதாகு; மானதொருமாமாயா மண்டபத்திலாங்கொருபா லொருகோ
ணத்தகத்தினுள்ளே, மானமிகுமலையென்னுமொட்டிலொன்றின்மலைகளினுலாறுக
ளால்வனங்கடன்றன்,மேனலமார்நகரொன்றுண்டதனில்வாழ்வோன் வெங்கனலோ
ன்வேதியரின் மிகவுமிக்கோன்.. .... *

(இ-ள்.) வானவர் - தேவர்களும்—தானவர் - அசுரர்களும் — என்னும் - என்கின்ற—தீயமக்கள் - துஷ்டப்பிள்ளைகளினது—மதர்த்தவிளையாட்டு - செருக்குற்றவிளையாட்டி(லுண்டாகிய)—ஓசைமாறுதாகும்-சப்தமாறுமலிருக்கும்—ஆனது-(இப்படி)யான—ஒருமாமாயா மண்டபத்தில் - ஒப்பற்றமகாமாயாமண்டபத்தில்—ஆங்கொருபால் - அவ்விடத்தொருபக்கத்தில்—ஒருகோணத்து - ஒருதிக்காகிய —அகத்தினுள்- (ஒரு)கிரகமத்தியில்—மானமிகு-பெருமைமிகுந்த—மலையென்னும் - வரையென்கின்ற —ஒட்டிலொன்றில் - ஒருபூமியில்— மலைகளினுல்- பருப்பதங்களினாலும்—ஆறுகளால் - நதிகளினாலும்—வனங்கடன்றால் - கானகங்களினாலும்—மேனலமார் - மேலாகியவளப்பநிறைந்த—நகரொன்றுண்டு - (கிரிக்கிராம) மென்னுமொருபட்டணமுண்டு—அதனில்வாழ்வோன் - அதனிடமாகவாழ்கின்றவன்— வெங்கனலோன்-அக்கினிஹோத்ரத்தை யுடையவன்—வேதியரின்-பிராமணர்களில்—மிகவுமிக்கோன்-மிகவுமேன்மையானவன். எ-று. [இரு-க-ம்.] முன்சிருஷ்டியையறிவிக்கு நிமித்தம், செல்லுமார்க்கத்தி லுண்டானவதிசயங்களைச் சொல்லியதாம்.... ....(உய)

(அ-கை.) மூன்சிருட்டியிறைமங்களுமவர்குணங்களுமுரைத்தல். (கவி) வடிவுபொருள்வய
தொடுக்கஞ்சேட்டைவிஞ்ஞை வசிட்டனுக்கொப்போனந்த வசிட்டனென்றே, படியுமு
ணர்வினனல்லன் பெயராலிந்தப்பனவனையும் வசிட்டனெனப்பகரலாகு, மடிபரவுமருந்
ததியையொப்பாளந்த வருந்ததியினுணர்வினளன்றமைந்தபேரா, னெடியவருந்ததியா
குமிவற்குத்தேவிநிலத்திவிவள் விண்ணிலவணிகர்வேறில்லை........................ *

(இ-ள்.) வடிவு - அழகிலும்—பொருள்- செல்வத்திலும்—வயது - வயதிலும்—ஒடுக்கம்-அடக்கத்திலும்—சேட்டை - செய்கையிலும்—விஞ்ஞை - கல்வியிலும் — வசிட்டனுக்கொப்போன்-வசிட்டனுக்குச்சமானமானவன்—அந்தவசிட்டனென்று-அவ்வசிட்டனென்று(சொல்லும்படியான) — படியுமுணர்வினனல்லன் - குணம்பொருந்திய வறிவையுடையவனல்லன்—பெயரால் - நாமத்தினால்—இந்தப்பனவனையும் - இப்பிராமணனையும்—வசிட்டனென-வசிட்டனென்று—பகரலாகும் - சொல்லலாம்—அடிபரவும்- (அவனது)பதத்தைப்பணிகின்ற—அருந்ததியை - அருந்ததிக்கு—ஒப்பாள் - சமானமாவாள்—அந்தவருந்ததியின் - அவ்வருந்ததியினது—உணர்வினளன்று - அறிவையுடையவளல்ல—அமைந்தபேரால் - பொருந்திய நாமத்தினால்—நெடியவருந்ததியாகும் - உயர்ந்தவருந்ததியானவள்—இவற்குத்தேவி-இவ்வசிட்டனுக்குநாயகி—நிலத்திலிவள் - பூலோகத்திலிவளும்—விண்ணிலவள் - தெய்வலோகத்திலவளுமாம்—நிகர்வேறில்லை -(இவர்களுக்குச்) சமானம்வேறில்லை. எ-று. (இ-ம்) வெளிப்படை...... (உக)

(அ-கை.) அவர்பிராந்தி நிருபணம். (கவி) இந்தவருந்ததிகணவ னென்றுசொன்ன
விவ்வசிட்டனம்மலையினிலங்குசாரன், முந்தியொருநாளிருப்பவேட்டைக்காங்கோர்
முடிநிருபன்சேனையொடுமுன்வந்தெய்த, வந்தநிருபனைநோக்கி வசிட்டன்றேர்வா
னகோவகோமன்னவர் வாழ்வறவுநன்றாந், சுந்தரமாம்புவிக்கரசாய்ச்சேனைசூழத்
துணைக்கவரிப்பரிமாறச் சுகிப்பமெந்நாள்.......................... *

(இ-ள்.) இந்தவருந்ததிகணவன்-இவ்வருந்ததிபுருடன்—என்றுசொன்ன-என்றுசொல்லிய—இவ்வசிட்டன் - இவ்வசிட்டனானவர்— அம்மலையினிலங்குசாரல் - அவ்வனாயில்விளங்குகின்றதாழ்வரையில்—முந்தியொருநாளிருப்ப - முன்னொருநாளிருக்க—வேட்டைக்கு- வேட்டைநிமித்தம்—ஆங்கோர் - அவ்விடத்திலொரு— முடிநிருபன் - கிரீடத்தையுடையவரசன்—சேனையொடு - படைகளுடன்—முன்வந்தெய்த-முன்னேவர—அந்தநிருபனைநோக்கி-அவ்வரசனைப்பார்த்து—வசிட்டன்றேர்வான் - வசிஷ்டன்யோசிப்பான்—அகோவகோ-ஆச்சரியமாச்சரியம்—மன்னவர்வாழ்வு - அரசர்கள்செல்வம்—அறவுநன்றாம்- மிகவுநன்மையாம்—சுந்தரமாம்புவிக்கு- அழகானவுலகத்துக்கு—அரசாய்-இராசாவாய்—சேனைசூழ- படைகள்சூழ்ந்து(வர)— துணைக்கவரி - இரண்டுசாமரங்கள்—பரிமாற - வீச—எந்நாள் - எக்காலத்தில்— சுகிப்பம் - சுகத்தையடைவோம். எ-று. (இ-ம்) வெளிப்படை.............................. (உஉ)

(அ-கை.) இ-து. (கவி) கொடிகுடையினிழனெருங்கவாழ்ந்துமாதர்குங்குமக்கொங்கை
யின்மூழ்கிக்குளிர்ப்போமெந்நாண், முடிவறுமிப்பயனென்று பெறுவமென்றேமொய்
காதலன்றுமுதன்மூளைத்தநெஞ்சன், மடியறுதன்கருமத்தினின்றான்மூப்புவனசஞ்சேர்
பனியின்வரமனைவிநிற்போ, லடிபரவியெனைவேட்ட வரமுமீந்தே னந்தணனுமிறப்புற்
றானசையோடும்.. *

(இ-ள்.) கொடி - (வெற்றிக்)கொடிகள் —நெருங்க- நெருங்கும்படி—குடையினிழல்-(வெண்கொற்றக்) குடைநிழலில்—வாழ்ந்து - சுகித்து—மாதர் - மகளிருடைய — குங்குமக்கொங்கையில் - செஞ்சாந்தணிந்ததனங்களில்—மூழ்கிக்குளிர்ப்போமெந்நாள்-படிந்திருப்பதெந்தநாள்—முடிவறுமிப்பயன் - முடிவில்லாதவிப்பிரயோசனத்தை—என்றுபெறுவமென்று-எப்பொழுதடைவோமென்று—மொய்காதல் - நிறைந்தவாசை—அன்றுமுதல்- (அரசனைக்கண்ட) வன்றுமுதலாக — மூளைத்தநெஞ்சன் - உண்டாயிருக்கின்ற மனதையுடையவன்—மடியறுதன்கருமத்தினின்றான் - கெடாததனதுகன்மத்திலிருந்தான் — மூப்பு - வார்த்திகமானது—வனசஞ்சேர்பனியின் - தாமரையைச்சேர்ந்தபனியைப்போல—வர- (அவனுக்) குண்டாக—மனைவி - (அவர்) தேவியானவள்—நிற்போல்- உன்னைப்போல—அடிபரவி- பாதத்தைவணங்கி—எனைவேட்டவரமும் - எனைவிரும்பிக்கேட்ட (சீவனவ்வீட்டினின்றுநீங்காத) வரத்தையும்—ஈந்தேன் - கொடுத்தேன் —அந்தணனும் - பிராமணனாகிய (வசிட்டனும்) —ஆசையோடும் - (இராசபோக)விச்சையோடும்—இறப்புற்றான் - மரணமடைந்தான். எ-று. (இ-ம்) சீவனது அபேதஞான மவ்விடத்திருக்கவும்- பேதஞானமானமனது செலவுழித்தான்செல்லவும்வரம்பெற்றனளென்பதாம்...(உரு)

(அ-கை.) இச்சித்தவடிவமாதல். (கவி) அவன்மனையாகாசத்திற்சீவாகாசமாய்நின்றனாகாசவடிவானோனே, கவருறுமூன்னாளழுந்துசங்கற்பத்தாற்காவலன்றனேயாகிக்கலந்துநின்றான், றவமறையோன்சவமாகமனைவிசோர்ந்துதன்னிதயத்திரண்டாகிச்சரீரந்தன்னையுவமையுறுகணவனுடன்சவமாய்ப்போக்கி யுயர்சூக்கவுடலொடவனுடன்போயுற்றாள்.

(இ-ள்.) அவன் - அவ் (வசிஷ்ட) னானவன்—மனையாகாசத்தில் - கிரகாகாயத்தில்—சீவாகாசமாய் - சீவாகாய (வடிவ) மாய்—நின்றான் - இருந்தான்— ஆகாசவடிவானோனே - (ஞா) னாகாயவடிவமானவசிஷ்டனே—கவருறு - வளருகின்ற—மூன்னாள்-மூன்னாளில்—அழுந்தும்- (இராஜசெல்வத்தி) லழுந்திய—சங்கற்பத்தால் - (மனோ) சங்கற்பத்தினால் — காவலன்றனேயாகி - அரசனாய்—கலந்துநின்றான் - பொருந்தியிருந்தான் — தவமறையோன் - தவத்தையுடையபிராமணன்—சவமாக - பிரேதமானதை (க்கண்ட)—மனைவிசோர்ந்து - நாயகியானவடுன்பமடைந்து—தன்னிதயத்து - தன்மனதில்—இரண்டாகி- இரண்டுவிதமாகநினைத்து—சரீரந்தன்னை - (தனது) தூலசரீரத்தை—உவமையுறு- சமானமாகிய—கணவனுடன்-நாயகனுடன்—சவமாய்ப்போக்கி - பிரேதமாகத்தள்ளி—உயர்சூக்கவுடலொடு - மேலானசூட்சுமசரீரத்தோடு — அவனுடன்போயுற்றாள் - அந்தநாயகனுடன்போய்ச்சேர்ந்தாள். எ - று. (இ-ம்.) வெளிப்படை.. (௨௪)

(அ-கை.) இ-து. (கவி) ஆயமறையோன்மக்கண் மனையும்பூமி யடவிகடாவரங்களெலாமங்கேயுண்டாய், மேயவுயிர்போயவர்குநாளெட்டாகும் விண்வடிவாஞ்சீவனுமவ்வீட்டினிற்கும், போயபவத்துனக்கன்பனானவந்தப்பூசுரன்பூபதியாகிப்புணர்ந்தானென்று, தூயவருந்ததிபெயர்கொள்பனைவியாகித்துணைவியாமந்தமடத்தோகைநீயே............ ❋

(இ-ள்.) ஆயமறையோன் - (இத்தன்மைய) வானபிராமணனுடைய—மக்கள்- புத்திரரும்—மனையும் - வீடும்—பூமி - பூமியும்—அடவிகள் - வனங்களும்—தாவரங்கள்-மலைகளும்—எல்லாம் - சகலமும்—அங்கேயுண்டாய் - அவ்விடத்திலிருக்க —அவற்கு - அவருக்கு — மேயவுயிர்போய் - பொருந்தியசீவன்பிரிந்து—நாளெட்டாகும் - எட்டுநாளாகும்—விண்வடிவாஞ்சீவனும் - சிதாகாயரூபமானசீவனும்—அவ்வீட்டினிற்கும் - அந்தவீட்டிலிருக்கும்—போயபவத்து - முன்சநநத்தில்—உனக்கன்பனான - உனக்குநாயகனாகிய—அந்தப்பூசுரன் - அப்பிராமணன்—பூபதியாகி - அரசனாகி—புணர்ந்தான்- பொருந்தினான்—அன்று- அப்போது—தூய - பரிசுத்தமாகிய—அருந்ததிபெயர்கொள் - அருந்ததியென்னுநாமமுள்ள— பனைவியாகி-பிராமணஸ்திரீயாகி— துணைவியாம் - (அவன்) மனைவியாகிய — அந்தமடத்தோகைநீயே-அந்தமடமயில் (போன்றபெண்ணானவள்) நீதான். எ-று. (இ-ம்) பிராமணனது சாமான்யஞானமவ்விடத்திருக்க, விசேஷஞானமேயரசசிருஷ்டியையடைந்ததென்பதாம்.... ..... (௨௫)

(அ-கை.) மூன்றுசிருஷ்டியிலுள்ளவடிவமும் பிராந்தியெனல். (கவி) புதியனசக்கரவாகந்துணையதென்னப்பூதலஞ்சேருமையொடுபுராரியென்ன, வதிகநலத்துணைவராமிருவராயிங்கரசுசெயுநீரவரோயாதலாலே, மதிநுதலாய்முதற்பிறப்பின் மயக்கஞ்சொன்னோமற்றிதுதான்மயக்கமாத்திரமதாகு, முதகமுறுமாகாய வுடலாஞ்சென்மமொளிபெறத்தோன்றியதென்றனுலகிலன்னை............................... ❋

(இ-ள்.) புதியன - புதுமையான—சக்கரவாகந்துணையதென்ன- சக்கரவாகப்புள்சேர்க்கைபோலவும்— பூதலம் - பூமியின்கண்—சேர் -(இடதுபாகத்திற்) சேரும்—உமையொடுபுராரியென்ன - பார்வதிபரமேஸ்வரனைப்போலவும்—அதிக - மிகவும் — நலத்துணைவராம்- நன்குள்ளஸ்திரீபுமானாக—இருவராய்- இருவருமாய்—இங்கரசுசெயும்—இவ்விடத்திலரசாக்ஷிசெய்கின்ற—நீரவரோ - நீங்களந்தவருந்ததிவசிஷ்டரோ—ஆதலால் - ஆகையால்— மதிநுதலாய் - மூன்றாம்பிறைபோன்றநெற்றியையுடையலீலாய்—முதற்பிறப்பின் - முன்பிராமணசிருஷ்டியின்—மயக்கம் - (இராசாவாகநினைத்த) பிராந்தியை—சொன்னோம்- கூறினோம்—இதுதான் - இப்பத்மசிருஷ்டியும்—மயக்கமாத்திரமதாகும் - பிராந்திமாத்திரமேயாம் — உதகமுறுமாகாயம் - சலப்ரதிவிம்பாகாயம்போல—உடலாஞ்சென்மம் - வடிவமானவிபரீதசநநம்—ஒளிபெறத்தோன்றியது - (உனக்கு) ப்ரகாசமாகத்தோற்றியது — என்றனுலகிலன்னை- என்றுலோகமாதாவாகியசரஸ்வதிசொன்னாள். எ-று. (இ-ம்.) முன்வசிஷ்டபிராந்தியே பதுமனாகவும், அப்பதுமப்பிராந்தியே விடூரதனாகவுமானதென்றியதார்த்தமாயிவர்களுக்கோர்வடிவமுமின்றென்பதாம்.. (௨௬)

(அ-கை.) வசிஷ்டரதுசீவனங்஢னநிற்க விங்஢னம் பத்மனானொன்ப தெங்஢னமெனின். (கவி) இந்தவுரைகேட்டலுமேலீலைசொல்வா ளிறைவிபொய்யே யியம்பினையிதெங்஢ன் கூடு, மந்தணன்வீட்டுறைசீவ னதுவெங்கேயோ வன்னியமாயிருந்தயா மடைந்ததெங்

கே, முற்றுறுமவ் வேற்றுலகத்திருப்பாரந்த மொய்கிரிகடசதிசைகண் முற்றுஞ்சேர,
வந்தினிதிங்கியாங்களுறைமனையினூடேமருவுமடைவெப்படியோமாசிலாளே……… *

(இ-ள்.) இந்தவுரைகேட்டலும்-இவ்வசனத்தைக்கேட்டவளவில்—லீலைசொல்வாள்-லீலையுரைப்பாள்—இறைவி - தேவீ— பொய்யேயியம்பினை - அசத்தியமேசொன்னாய் — ஈதெங்ஙன்கூடும் - இஃதெப்படிபொருந்தும் — அந்தணன்வீட்டுறை - பிராமணன்மனையில்வசிக்கின்ற—சீவனதுவெங்கேயோ - சீவனெங்கேயிருக்கின்றது—அன்னியமாயிருந்தயாம்- (இவ்விடத்து) வேறாகவிருந்தநாங்கள்—அடைந்ததெங்கே - சேர்ந்ததெங்கே—முற்றுறும்- முன்பொருந்திய—அவ்வேற்றுலகத்திருப்பார் - அந்தவேறுலகத்திருக்கின்றவர்கள்—அந்தமொய்கிரிகள்-அந்தநெருங்கியமலைகளும்—தசதிசைகள்-பத்துத்திக்குகளும்—முற்றுஞ்சேரவந்து-முழுதுங்கூடிவந்து—இனிது - இனிமையாக—இங்கு - இவ்விடத்தில் —யாங்களுறை- நாங்களிருக்கின்ற—மனையினூடு - வீட்டுக்குள்—மருவுமடைவு - பொருந்தும்வழி — மாசிலாளே-குற்றமற்றசரஸ்வதியே—எப்படி-எவ்வித(மென்றுகேட்டாள்)எ-று.(இ-ம்)வெளிப்படை(௨௭)

(அ-கை.) இ-து. (கவி) மத்தவயிராவதமோர்கடுகினோர்பான்மறிபடுமோ வடமேருவந்தோர்கஞ்ச, வித்தினிடைப் புகுந்திருந்தோர் வண்டின்குஞ்சான் மிகநெரியுமோகொசுகுவெகுண்டுமோதி, யுத்தமியற்றிடச்சிங்கமனேகமத்தோடோரணுவினிடைப்புகுமோவுரைத்தநின்சொல்,லித்திறமேயொன்றுக்குமிசையாதாகுமென லீலைசொல்லுதலுமிறைவிசொல்வாள் …… *

(இ-ள்.) மத்த - மதர்த்த—அயிராவதம் - இந்திரன்யானையானது—ஓர்கடுகினோர்பால் - ஒருகடுகினுடையவொருபக்கத்தில்—மறிபடுமோ - கட்டுப்படுமோ — வடமேருவந்து-மகாமேருவானதுவந்து—ஓர்கஞ்சவித்தினிடை - ஒருதாமரைவிதைக்குள்— புகுந்திருந்து-நுழைந்திருந்து—ஓர்வண்டின்குஞ்சால் - ஓரளியின்பார்ப்பினால் — மிகநெரியுமோ - மிகவுநெரியுமோ—கொசுகு - மசகமானது—வெகுண்டு - கோபித்து—மோதி - அடித்து —யுத்தமியற்றிட - போர்செய்ய—சிங்கமனேகமத்தோடு- சிங்கங்கள்பலவற்றுடன்—ஓரணுவினிடைப்புகுமோ -(பயந்) தோரணுவுக்குணுழையுமோ—உரைத்த - சொல்லிய—நின்சொல்-உனதுவசனம்—இத்திறமே - இவ்வண்ணமே—ஒன்றுக்குமிசையாதாகுமென- ஒன்றுக்கும்பொருந்தாதென்று—லீலைசொல்லுதலும் - லீலைகூறவும்—இறைவிசொல்வாள் - தேவிகூறுவாள். எ-று. (இ-ம்.) வெளிப்படை…… (௨௮)

(அ-கை.) சிருஷ்டிகளின்பிராந்திநீங்க தத்துவமுபதேசித்தல். (கவி) பொய்யாகவுரைத்திலம்யாமிதனினுண்மைப்புகலக்கேளெனைப்போல்வார்புத்தேணீதி, மெய்யாகக்கொள்வதலாற்பேதியார்கள்வேதியன்றன்சீவனவனூரில்வீட்டி,லெய்யாமையுறைகின்றதிந்தநாடுமிவ்வரசும்விண்வடிவேயிவற்றையெல்லா, மையாரும்விழிமடவாயந்தவிண்ணேவடிவானவவன்றானேமகிழ்ந்துபார்க்கும் …… *

(இ-ள்.) யாம் - நாம்—பொய்யாகவுரைத்திலம்-பொய்சொல்லவில்லை—இதனினுண்மை - இதனுண்மையை—புகலக்கேள் - சொல்லக்கேட்பாய்—எனைப்போல்வார்- என்னையொத்தவர்கள்—புத்தேணீதி - ஈஸ்வரநீதியை—மெய்யாக - சத்தியமாக—கொள்வதலால் - கொள்ளுவதேயன்றி—பேதியார்கள் - பேதிக்கார்கள்—வேதியன்றன்-பிராமணனுடைய —சீவன்-சீவனானது—அவனூரில்வீட்டில்-அவனகரத்திலுள்ளமனையில்—எய்யாமை-அதிரிஸ்யமாய்—உறைகின்றது - வசிக்கின்றது—இந்தநாடும் - இந்நாடுகளும்—இவ்வரசும் - இப்பத்மவரசாங்கமும்—விண்வடிவே - (ஞா) னாகாசரூபமேயாம்— இவற்றையெல்லாம் - இவையனைத்தையும்—மையாரும் - மைதீட்டிய—விழிமடவாய் - கண்களையுடையலீலாய்— அந்தவிண்ணேவடிவான - அச்சிதாகாசமேபடிவமாகிய—அவன்றானே- அவ்வசிஷ்டனே—மகிழ்ந்துபார்க்கும் - சந்தோஷித்து (மனாகாயத்திற்) பார்ப்பான். எ-று. (இ-ம்.) சர்வமுந்தானாய்விளங்குகின்றசைதன்யமேதனது அபேதஞானத்தினாற்பேதஞானத்தைத்தானாகப்பார்க்குமென்பதாம்.

(அ-கை.) இ-து. (கவி) தொன்மையாமந்தநினைவுங்களுக்குத்தோன்றாதுவேறாகித்தோன்றுங்கண்டாய், பன்மையாநனாநினைவு கனவிற்றோன்றாப்பரிசெனவிம்மரணத்தின்பான்மைதோன்றாத்; தன்மையமாஞ்சத்ததனால்விளங்குமத்தத்தடஞானவிசும்பிடையோர்தனிமூலைக்கே, வன்மையாமிப்பூமிதோன்றிநிற்குமனநினைவிற்கண்ணடியில்வயங்குமாபோல் …… *

(இ-ள்.) தொன்மையாம் - பழைமையாகிய—அந்தநினைவு- அந்த(ஞான)ஸ்புரணம்—உங்களுக்குத்தோன்றாது - (இப்பொழு) துங்களுக்குத்தோற்றாமல் — வேறாகித்தோன்றும்-

திரிஸ்யமாகத்தோற்றும்---பன்மையாநனைநினைவு - நாநாவிதமானசாக்கிரஸ்புரணம் --- கன விற்றோன்றுப்பரிசென - சொற்பனத்திற் றோற்றுததன்மையைப்போல --- அம்மரணத்தின் பான்மைதோன்று - அந்தவசிஷ்டஸ்மரணத்தின்றன்மைதோற்றும(விப்பருமஸ்மரணத்தின் றன்மைதோற்றும்)---தன்மயமாஞ்சத்ததனால் - தானாகியசத்தினால்---விளங்குதல்-ப்ரகாசிக்கின்ற---அந்தத்தடஞானவிசும்பிடை - முற்கூறியவியாபகமானஞானாகாயத்தில்--- ஓர்தனிமூலைக்கு - ஒருதனித்தபக்கத்தில்---மனநினைவில் - மனோசங்கற்பத்திலும--- கண்ணடியில் - ஆடியிலும்---வயங்குமாபோல் - (அடுத்தசாயை) ப்ரகாசிக்கின்றதுபோல --- வன்மையாமிப்பூமி-கடினமாயிருக்கின்றவிவ்வுலகமானது--தோன்றிநிற்கும்-தோற்றும்.எ-று. (இ-ம்) சத்தாமாத்திரமாகவிளங்குஞ்சைதன்னியத்தின் ஏகதேசஸ்புரணமேயுலகமுதலியயாவுமென்பதாம்.(௫௰)

(அ-கை.) இ-து. (கவி) தெளிபரமவணுவாஞ் சிற்சொரூபத்தொன்றுஞ் செகமெலாமொளியுருவாய்ச்செறிந்திருக்கு; மொளிபெறவுள்ளேயுள்ளே யாதலான்முன்னுரைசெய்தபூமியுஞ்சித் துள்ளேதோன்றும், வெளிபெறவீ தறியென்றேவாணிகூற வேதியனெட்டாம்பகலில் வீந்தானென்று, யெளிதிலெமக்கநேகவரு டங்கள்போனதென்னெனலீலைக்குமீண் டிறைவிசொல்வாள்.. *

(இ-ள்.) ஒளியுருவாய் - ப்ரதிபாசாத்மகமாய்—ஒன்றும் - பொருந்தி — சகமெலாம்-உலகங்களனைத்தும்— தெளிபரமவணுவாம் - தெளிந்தபரமாணுவாகிய —- சிற்சொரூபத்து-ஞானஸ்வரூபத்தில்—ஒளிபெற - ப்ரகாசமாக—உள்ளேயுள்ளே- உள்ளுக்குள்ளே—செறிந்திருக்கும் - நெருங்கியிருக்கும்—ஆதலால் - ஆதலினால்—முன்னுரைசெய்த-முற்கூறிய—பூமியும்-(பிராமணனிருந்த) பூமி (முதலானவை) களும்—சித்துள்ளேதோன்றும் - ஞானத்துட்டோற்றும்—வெளிபெற - ப்ரத்தியக்ஷமாக—ஈதறியென்று - இதைத்தெரிவாயென்று— வாணிகூற-சரஸ்வதிசொல்ல—வேதியன் (அப்)பிராமணன்—எட்டாம்பகலில் - எட்டாந்தினத்தில்— வீந்தானென்றாய் - மரித்தானென்றுசொன்னாய்—எளிதிலெமக்கு- எளிதாகவெங்களுக்கு—அநேகவருடங்கள்போனது - அநேகவருடங்கள்சென்றது — என்னெனலீலைக்கு - என்னவென்று கேட்டலீலைக்கு—மீண்டு - திரும்பவும்—இறைவிசொல்வாள்-தேவியுரைப்பாள். எ-று.(இ-ம்) சைதன்னியவியாபகத்திற் பிரதிபாசமாத்திரமாய்த்தோற்றுகின்றசகலசகத்தும், அதன்ஸ்வப்ரகாசமேயென்பதாம் .... (௫௧)

(அ-கை.) எண்டினமநேகதினமானதெங்ஙனமெனின். (கவி.) (வேறு.) தேயநீடியில்லாமைபோற் காலமுஞ்சிறிதுநீளியதல்ல, மாயபேதமிற் சிற்சுடர்தோன்றிடுமாத்திரமொழிந்தில்லை; மேயபொய்மரணத்தினா லொருகண மெய்ம்மறந் திடச்சீவன், போயதன்னபாவனைமறந்திப்பவம் பொருந்துபாவனையெய் தும்........................ *

(இ-ள்.) தேயநீடியில்லாமைபோல் - (முன்சொல்லியசித்து விலாசமாய்விளங்கிய) தேசத்துக்குவிபுத்துவமில்லாததுபோல —- காலமுஞ்சிறிதுநீளியதல்ல - காலத்துக்குமற்பமும்விபுத்வமில்லை—மாயபேதமில் - மாயாவிகற்பமில்லாத — சிற்சுடர் - ஞானப்ரகாசமானது—தோன்றிடுமாத்திரமொழிந்து - தோற்றுதன்மாத்திரமன்றி—இல்லை - (காலதேசத்தினளவுவே)தில்லை—மேயபொய்மரணத்தினால்- பொருந்தியமித்தியாமரணத்தினால்—ஒருகணமெய்ம்மறந்திட-ஒருக்ஷணம்ப்ரஞ்ஞாபங்கம்வர—சீவன்போயது-சீவன்பிரிந்துபோனது—அன்னபாவனைமறந்து -முன்சரீரபாவனையைமறந்து—இப்பவம்பொருந்த - இச்சநநத்திற்பொருந்திய—பாவனையெய்தும் - பாவனையையடையும். எ-று. [ப-ம்] ஞானத்துக்கு விபுத்துவம்மயன்றிக்காலத்துக்கில்லையென்பார்-சிற்சுடர்தோன்றிடு மாத்திரமொழிந் தில்லையென்றார். (௫௨)

(அ-கை.) இ-து. (கவி) தாங்குகின்றதீங்கிதுவிதனான்மிகத்தாங்கிடப்படுவோனும், வீங்குகின்றநம்மெய்யிதுபிதாவிவன்வீவதித்தனையாண்டிங், கோங்குகின்றநஞ்சுற்றமீதின்பமா யுறைவிடமிதுவென்றே, தேங்குகின்றபொய் மரணமூர்ச்சைத்திறந் தெளிந்தபின்சிந்திக்கும்.. *

(இ-ள்.) ஈங்கிது - இவ்விடத்திலிது—தாங்குகின்றது - (நம்மைத்) தாங்குகின்றது—இதனான்மிகத்தாங்கிடப்படுவோனும் - இதனான்மிகவுஞ்சுமக்கப்படுகின்றவனும்—இது - ஈது—வீங்குகின்றநம்மெய் - பருக்கின்றநமதுசரீரம்—இவன்பிதா - இவ(னமது)தந்தை—வீவதித்தனையாண்டு - இறப்பதித்தனைவருடத்தில்—ஈது - இது — இங்கோங்குகின்ற நஞ்சுற்றம்-இங்குவிருத்தியாகின்ற நமதுபந்துக்கள்--- இது-இது --- இன்பமாயுறைவிடமென்று - பிரியமாய்வசிக்கின்றஸ்தானமென்று---தேங்குகின்றபொய்-மிகுகின்றமித்தையாகிய---மரணமூர்ச்சைத்திறம்-மரணமூர்ச்சையின்றன்மை---தெளிந்தபின் - தெளிந்தபின்பு---சிந்திக்கும்- (சீவன்)சிந்திப்பன். எ-று. [ப-ம்] முற்பவத்துள்ள வறிவுமயங்கிப்பிற்பவமெடுக்கினுமிஃதுநன்குதெளிந்தவிடத்துத் தெரியுமென்பார்-மரணமூர்ச்சைத் திறந்தெளிந்தபின் சிந்திக்குமென்றார். (௫௩)

(அ-கை.) இ-து. (கவி) ஆதலான்முதற் பவமறைந்திப்பவமறியலாயினதென்னப்,போத
மாம்விழிநீதரவகோவகோபுரணமாய்த் தெளிவுற்றேன், காதறீர்வுறவனையவருறைவிடங்
காட்டெனவிவளோத, வேதநாயகியுரைசெய்வாளதற் கிந்தவினையுடல்விலங்காகும்……*

(இ-ள்.) ஆதலால் - ஆகையினால் --- முதற்பவமறைந்து - முற்செநநமறைபட்டு --- இப்பவம் - இப்பிறப்பு---அறியலானதென்ன - அறியப்பட்டதென்று(சரஸ்வதி)சொல்ல--- போதமாம்விழி - ஞானமாகியகண்ணை --- நீதர - நீயநுக்கிரகஞ்செய்ய --- அகோவகோ - ஆச்சரியமாச்சரியம்---புரணமாய்த்தெளிவுற்றேன் - பூர்ணமாகத்தெளிந்தேன் --- காதறீர்வுற - (இதயக்கிரந்தியாகிய) விச்சைதீரும்படி--- அனையவர் - இவ்வசிஷ்டாதிகள்---உறைவிடங்காட்டென - வசிக்குமிடத்தைக்காண்பியென்று—இவளோத - இந்தலீலைசொல்ல— வேதநாயகியுரைசெய்வாள் - வேதஸ்வரூபியாகிய சரஸ்வதிசொல்லுவாள்—அதற்கு - அதைக்காண்பதற்கு—இந்தவினையுடல்விலங்காகும்-இவ்வினைவடிவமான தூலசரீரந்தடையாகும். எ-று. (இ-௱-௧-ம்.)சீவனானவன்விஸ்வனாய்நனவினின்றுநித்திரைமயக்கத்தாற்கனவிற்சென்றுஅஃதைமறந்துஇஃதிலோர்கடிகையிலநேசகடிகையின்சங்கதிகளைச் சத்தியமாகக்காண்பதுபோலச்சித்தானதுபிராணனாய்முற்பவத்தினின்று மரணமயக்கத்தாற் பிற்பவத்திற்சென்று அஃதைமறந்திஃதில் விழித்துச்சிந்தித்தசங்கற்பஞ் சத்தியமாகஎட்டுத்தினம் வெகுதினமாகத்தோற்றினதேயன்றிவேறின்றெனபதாம்…… ……………………………………(௱௪)

(அ-கை.) முற்பவத்தையறியவேண்டுமென்றதற்குபதேசித்தல். (கவி.) இந்தயாக்கையை
மறந்துவேறறிவதற் றிலங்குசிற்சுடர்மெய்யா, மந்தநல்லறிவேவடிவாய்மல மறுத்தியேல
துகூடுந், தந்தமக்கொருவடிவிலாவுலகங்க டமனியம்பணியாகி, வந்தவாறெனவுங்கண்
மோகத்தினுன்மதித்திடப் படுமன்றே…………………………………………*

(இ-ள்.) இந்தயாக்கையைமறந்து - இச்சரீரத்தைமறந்து—வேறறிவதற்று - விஸ்மரணமின்றி—இலங்கு - விளங்காநின்ற—சிற்சுடர் - ஞானப்ரகாசமாகியும்—மெய் - சத்தாகியுமிருக்கின்ற—அந்தநல்லறிவே - அவ்வாநந்தபோதமே—வடிவாய் - ஸ்வரூபமாய் — மலமறுத்தியேல்- (மாயா)மலத்தைநீக்குவையாயின்—அதுகூடும் - அவ்விடத்தைப்பார்க்கலாம் — தந்தமக்கொருவடிவு - தங்களுக்கென்றோருருவம்—இலா-(பிரமத்தையன்றிவே)றில்லாத—உலகங்கள் - சகங்களாக—தமனியமபணியாகி - சுவணமாபரணமாய் — வந்தவாறென - வந்தவகையைப்போல—உங்கண்மோகத்தினால்-உங்கண்மயக்கத்தினால்—மதித்திடப்படும்- அறியப்படும். எ-று. (இ-ம்.) திரிஸ்யநீங்கித் திருக்குவடிவமாயிற் றெரிசிக்கலாமென்பதாம் ……………(௱௫)

(அ-கை.) இ-து. (கவி) தத்துவம்பயில்வாதனையன்றியே சகங்கடன்மயமாகா, மெத்து
செய்தொழில்விட்டிலையாதலான்மேவுதற்கரிதுன்னுற், சுத்ததற்பதமெம்மனோர்நிற்பது
தொடர்மனவடிவாக, வைத்தசூக்கமெய்தீர்க்கபாவனையினால் வளர்ந்துபேருடலாகும்.*

(இ-ள்.) தத்துவம்பயில் - உண்மை (ஞானத்தைப்) பயிற்சிசெய்கின்ற— வாதனையன்றி- (சுத்த) வாசனையைத்தவிர—சகங்கடன்மயமாகா - உலகங்களாத்மஸ்வரூபமாகாது—மெத்து செய்தொழில்விட்டிலை - மிருதுவாகச்செய்கின்ற (சக) விருத்தியைநீக்கினையில்லை—ஆதலால்- ஆகையால்—உன்னுன்மேவுதற்கரிது - உன்னாலடையப்படாது—சுத்ததற்பதம் - பரிசுத்தமானபிரமத்தில் —எம்மனோர்நிற்பது - எப்போன்றவர்களிருப்பது—தொடர்மனவடிவாக-(உன்போன்றவர்களுக்கு)த்தொடராநின்றமனோரூபமாக—வைத்தசூக்கமெய்-வைத்திருக்கின்றசூட்சுமசரீரம்—தீர்க்கபாவனையினால் - மிகுந்தபாவனையினால் — வளர்ந்துபேருடலாகும் - வளர்ந்துதூலசரீரமாகும். எ-று. (இ-ம்) சாதனமன்றிச் சாத்தியங்கூடாதென்பதாம் …… …… (௱௬)

(அ-கை.) இ-து. (கவி.) கட்டியாம்பனி வெம்மையாற்கரைந்துபோங் கணக்கென
மெய்ஞ்ஞானஞ்,சுட்டிநோக்கலும்வாதனைவிடுதலுந்தூலமாமுடல்விட்டுத்,திட்டமா
கியசூக்கமெய்நிலைபெறுஞ்சீவன்முத்தியுமாகு,முட்டஞானமேநிறையுமுன்னிவ்வுட
னிறுத்திமுற்பவங்காண்பாய்………………………………*

(இ-ள்.) பனியாம் - பனியினாலாகிய—கட்டி - கட்டியானது— வெம்மையால் - சூரியகிரணத்தினால்—கரைந்துபோங்கணக்கென - கரைந்து(சலமாகின்ற) முறைமைபோல—மெய்ஞ்ஞானஞ்சுட்டிநோக்கலும்- (உனது)மெய்ஞ்ஞானத்தைக்குறித்துப்பார்ப்பதினாலும்—வாதனைவிடுதலும் - வாசனையைவிடுதலினாலும் — தூலமாமுடலவிட்டு - ஆதிபௌதிகசரீரத்தைவிட்டு—திட்டமாகிய்சூக்கமெய் - நிலவரமானவாதிவாகிகசரீரம்—நிலைபெறும் - நிலையாகநிற்கும்—சீவன்முத்தியுமாகும் - சீவன்முத்தியுமாய்—முட்டஞானமேநிறையும்- பூர்ணஞானமேநிறையும்—உன்னிவ்வுடனிறுத்தி- உனதிச்சரீரத்தை யந்தயட்டநிறுத்தி—முற்பவங்காண்பாய்- (ஆதிவாகிகசரீரத்தால்) முந்தினசிருஷ்டியைப்பார்ப்பாய். எ-று. (இ-ம்) ஞானதிருஷ்டியினு லே

திபௌதிகசரீரங்களைந்து ஆதிவாகிகசரீரமாகிச் சங்கற்பித்ததைப்பார்க்கவேண்டுமென்பதாம் மெய்ஞ்ஞானஞ்சுட்டிநோக்கலும் வாதனைவிடுதலுமென்பதற்குதாரணம் சூதசம்மிதைசொச்சமான சித்தவிருத்தியையடைந்து விருத்திசாக்ஷியாயிருக்கின்றவன் அவ்விருத்தியோடுங்கூடநிவிர்த்திக்கத்தக்கதா யிருக்கின்றவஞ்ஞானத்தைத் தனதுதேஜசினாலே பக்ஷிக்கிறான்.........(௫௭)

(அ-கை.) அஃதடையுமற்பியாச விலக்கணம்யாதெனின். (கவி.) என்றவாணியைய
த்திறனியற்றுமாறென்னெனவிவள்கேட்கத், துன்றுசிந்தையும்வசனமுமுசாவுமத்
தொல்பொருட்பொருட்டாகி, நின்றவின்பமுமுதாரமும்விராகமு நிறைந்துநீள்சக
மென்று,மொன்றுமில்லெனக் கலைவழியூகமாயுணர்வர்சாதகராஞேர்............... *

(இ-ள்.) என்றவாணியை- இப்படியென்றனுக்கிரகித்தசரஸ்வதியை—அத்திறன்-அந்தப்பிரகாரம்(வர)—இயற்றுமாறென்னென - முயற்சிக்குந்தன்மையென்னவென்று—இவள்கேட்க- இந்தலீலையானவள்கேட்க—வசனமும்- சிரவணமும்—உசாவும்-மனனமும்—துன்றுசிந்தையும்-நிறைந்தநிதித்தியாசனமும்—அத்தொல்-அப்பழமையான—பொருட்பொருட்டாகி-வஸ்துவினிடமானநிஷ்டையாய்—நின்றவின்பமும்- நிலையானவாநந்தமும்— உதாரமும்-சகலத்தியாகமும்—விராகமும் - நிராசையும்—நிறைந்து - பூரணமாய் — நீள்சகம் - நீண்டவுலகமென்பது—என்றும்-எப்பொழுதும்—ஒன்றுமில்லென - ஒன்றுமில்லையென்றும்— கலைவழி-வேதநூல்மார்க்கத்தினால்—யூகமாய் - யுத்தியாய்—சாதகராஞேர் - அற்பியாசியானவர்கள்—உணர்வர் - (அனுபவமா)யறிவார்கள். எ-று. (இ-ம்) இந்திரியமுதலிய கரணங்களியாவையுமகமுகப்படுத்தி யதனாற்சுகசென்னியமானவிடத்திற் றிரிஸ்யமில்லையென் றனுஷ்டிப்பதே சாதகமென்பதாம்...(௫௮)

(அ-கை.) இ-து. (கவி.) அகமிதங்களிச்சிருட்டியின்முன்வருமபாவமாதலினென்று,மிக
வுமில்லெனத்தெளிதருபோதமும்வேறுகாண்பனவற்று, நிகழுஞானத்தாற்காமமேமுத
ற்பகைநீங்கிடவந்தெய் துஞ், சுகமுமென்றிவைசாதகமாகவேதொடர்வர்சாதகராஞேர்.

(இ-ள்.) அகமிதங்கள் - நானிது(வென்னுஞ்சகங்)கள்—இச்சிருட்டியின்முன் - இந்தச்சிருஷ்டியாதியில்—வருமபாவமாதலின் - உண்டாகாதபடியினால்—என்றுமிகவுமில்லென - எப்பொழுதுமில்லவேயில்லையென்று—தெளிதருபோதமும் - தெளிந்தஞானமும்—வேறுகாண்பனவற்று - திரிஸ்யதிருஷ்டிநீங்கி—நிகழுஞானத்தால் - ப்ரகாசிக்கின்றஞானத்தினால் — காமமுதற்பகை - ராகத்துவேஷாதிகளென்னுஞ்சத்துருக்கள்—நீங்கிட- பிரிந்திட—சுகமும் - இன்பமும்—வந்தெய்துமென்று - வந்தடையுமென்று—இவைசாதகமாகவே-இவையற்பியாசமாகவே—தொடர்வர்- தொடர்வார்கள்—சாதகராஞேர் - (பிர)மாற்பியாசிகள். எ-று. (இ-ம்)சகலமுமத்தியந்தா பாவமென் றெதிரற்றறிந்தஞானத்தின லாநந்தத்தை யடைய வனுஷ்டிப்பதேசாதகமென்பதாம்..(௫௯)

(அ-கை.) சாதனமுதிர்ந்துசாத்தியமாதல். (கவி) ஞேயமின்றியஞானமேஞானமு
நினைத்துமேற்பெறும்பேறு, மாயவந்நிலைப்பரிசயமுத்தியென் றதிற்பரிசயம்பண்
ணத், றூயதோற்றரவென்றந்தவிரவிலே சொன்னவரிருவோருங், காயவாதனையறி
வறச்சமாதியைக் கலந்தசைவறநின்றூர்..*

(இ-ள்.) ஞேயமின்றிய- திரிஸ்ய(ஸ்மரண)மில்லாத—ஞானமே-அறிவே—ஞானமும்-சைதன்னியமும்—மேற்பெறும் - மேலடைகின்ற—பேறுமாய் - (ஆத்ம)லாபமுமாய்—நினைத்து- சிந்தித்து—அந்நிலை - அப்பிரமநிச்சயத்தை—பரிசயம்-அற்பியாசஞ்செய்வதே— முத்தியென்று - நிர்வாணசுகமென்று—அதிற்பரிசயம்பண்ணல் - அதிலற்பியா சிப்பதே — தூய-பரிசுத்தமான—தோற்றரவென்று - (ஞா)ஞேயமென்று—அந்தவிரவில்- அவ்விராத்திரியில்—சொன்னவரிருவோரும் - பேசினசரஸ்வதியும்லீலையும்—காயவாதனையறிவற - சரீரவாதனையின்றி—சமாதியைக்கலந்து - (ஸ்வரூப)சமாதியிற்பொருந்தி—அசைவறநின்றூர்- நிச்சலமாயிருந்தார்கள்; எ-று. (இ-ம்) முன்போதித்திருந்த பரோக்ஷஞானம் அபரோக்ஷமாம்பொருட்டுச் சாதகரிலக்கணம் போதிக்கும்போதே சாதனமுதிர்ந்து சாத்தியமாகி ஆதிபௌதிகங்களைந்துஆதிவாகிகஸ்வரூபமாயபேதமானதென்பதாம்.......................................(௬௰)

(அ-கை.)தனதுவியாபகத்திலுண்டாயிருக்கின்றகிரமசிருஷ்டியையாதிவாகிகசரீரத்தாற்
காணச்சொல்லுதல். (கவி) அங்குலங்கள்பத்தளவெனவறிவினுலாகியவடிவுற்ற,மங்கைத
ன்னெடுமுன்னுளஞானத்தால்வயங்கியகலைமாதுந், துங்கவிண்வழிடையெழுந்தனரளவறு
தூரநீங்கிடவேகிப், பொங்குமூழியினெடுங்கடலனையவான் புகுந்திவையிவைகண்டார்.*

(இ-ள்.) அங்குலங்கள்பத்தளவென - பத்தங்குலப்பிரமாணமென்னும்படி—அறிவினுலாகியவடிவுற்ற - ஞானகாரமான—மங்கைதன்னெடும்- லீலையோடும்—முன்னுளஞானத்தால்-

முன்புள்ளதானசரீரத்தால்—வயங்கியகலைமாதும் - ப்ரகாசித்தசரஸ்வதியும்—துங்கம் - உயர்வாகிய—விண்ணிடை - ஆகாயத்தில்—எழுந்தனர் - எழும்பினார்கள்—அளவறுதூரம் - வெகுதூரம்—நீங்கிடவேகி - நீங்கும்படிசென்று—பொங்கும் - பொங்காநின்ற — ஊழியினெடுங்கடல் - பிரளயமகாசமுத்திரத்துக்கு — அனைய - ஒப்பாகிய — வான்புகுந்து - ஆகாயத்திற்சென்று—இவையிவைகண்டார் - இவையிவைகளைப்பார்த்தார்கள். எ-று.................(சக)

(அ-கை.) இ-து. (கவி) மட்டிலாததாய்த்தெளிந்துகோமளமதாய் மந்தமாருதத்தின்ப, முட்டிலாததாம்விசும்பிடைமனத்தினுமுடுகுசித்தர்கடின்றி, யட்டமெங்கணுமரக்கரும்பிசாசருமளவின்றிநாய்காக, மொட்டகங்கரம் போன்முகயோகினியொழுங்குவிண்ணுழல்வுற்று .... *

(இ-ள்.) மட்டிலாததாய் - அளவில்லாததாயும்—தெளிந்துகோமளமதாய் - தெளிந்திருக்கின்றமிருதுவாயும்—மந்தமாருதத்து - தென்றற்காற்றினது—இன்பமுட்டிலாததாம்-சுகந்தடையில்லாததாயுமிருக்கின்ற—விசும்பிடை-(சிதா) காயத்தில்—மனத்தினுமுடுகும்-மனோவேகத்திலும்வேகமாய் (ச்சஞ்சரிக்கின்ற) — சித்தர்கடின்றி - சித்தர் (கணங்க) ணிறைந்து—அட்டமெங்கணும் - எட்டுத்திசைகளிலும்—அரக்கரும் - இராட்சதர்களும் —பிசாசரும்-பிசாசர்களும்—அளவின்றி - கணக்கற்(றிருக்கின்ற)—நாய் - ஞாளியைப்போலவும்—காகம்- காக்கையைப்போலவும்—ஒட்டகம் - ஒட்டையைப்போலவும்—கரம்போல் - கழுதையைப்போலவுமிருக்கின்ற—முகம் - வதனங்களையுடைய—யோகினி - யோகினிகள்—ஒழுங்கு- வரிசையாக—விண்-ஆகாயத்தில்—உழல்வுற்று - சுழன்று. எ-று.................(சஉ)

(அ-கை.) இ-து. (கவி) களிகொணடகத்திடாகினித்திரள்களுங்காற்றினுற்றிரிகின்ற, வெளிறுகங்கையுஞ்சுவரிலாமனையிடைமேவிவீணையின்பாட, றெளியுநாரதத்தும்புருகானமுஞ்சித்திரத்தினிற்கோட்டுந், துளிகொள்கற்பத்தின் முகில்களுமாதர்தந்தொகுதியுமுளதாகி.. *

(இ-ள்.) களிகொணடகத்து - களிப்புள்ளநிருத்தத்தையுடைய — இடாகினித்திரள்களும் - இடாகினிக்கூட்டங்களும்—கடுங்காற்றினுற்றிரிகின்ற - வேகமுள்ளவாயுவினுற்சஞ்சரிக்கின்ற—வெளிறுகங்கையும் - வெண்மையானகங்காநதியும்—சுவரிலாமனையிடைமேவி - சுவரில்லாதவீட்டிற்பொருந்தி—வீணையின்பாடல் - வீணகானத்தில் — தெளியும் - தெளிகின்ற —நாரதத்தும்புருகானமும் - நாரதர்தும்புருகானங்களும்—கோட்டும் - எழுதப்பட்ட— சித்திரத்தின் - சித்திரத்தைப்போல—இல் - (சத்த)மில்லாமல்—துளிகொள் - வருஷிக்கின்ற— கற்பத்தின்முகில்களும் - கற்பாந்தமேகங்களும்—மாதர்தந்தொகுதியும்-மகளிர்கூட்டங்களும்—உளதாகி - உண்டாகி. எ-று.................(சரு)

(அ-கை.) இ-து. (கவி) எல்லையின்றியயோசனைதூரங்களியார்க்குமெய்தரிதாகிக், கல்லையொத்தறவிறுகுறத்திரண்டநீள்காரிருளுடைத்தாகி, யொல்லையோடுதேரிரவியுங்கனலுமேயொப்பதாமொளியுண்டாய்ச், சொல்லுமித்திரளியாவையும் பற்பலவிடந்தொறுந்தொடர்வுற்று.. *

(இ-ள்.) எல்லையின்றிய - அளவில்லாத—யோசனைதூரங்கள் —பதின்கடிகைதூரங்களில்— இயார்க்குமெய்தரிதாகி - எவர்க்குமடையக்கூடாததாகியும்—கல்லையொத்து- பாடாணத்துக்கொப்பாய்—அற - மிகவும்—இறுகுறத்திரண்ட - கெட்டியாகத்திரண்டிருக்கின்ற— நீள்காரிருளுடைத்தாகி - மிகுந்தகருமையானவிருளையுடையதாயும்—ஒல்லையோடு- சீக்கிரமாகச்செல்கின்ற—தேரிரவியும் - இரதத்தையுடையசூரியனும்—கனலும்-அக்கினியும்—ஒப்பதாம்-சமானமாகிய—ஒளியுண்டாய் - ப்ரகாசத்தையுடையதாயும்—சொல்லும்- சொல்லப்பட்ட—இத்திரள்யாவையும் - இக்கூட்டங்களியாவையு (முடைய) — பற்பலவிடந்தொறும் - பலபலவிடங்களிலும்—தொடர்வுற்று - தொடர்ந்து. எ-று.................(சச)

(அ-கை.) இ-து. (கவி) கொதுகினீடிரளத்தியின்காயிடைக்குமுறுவதெனவெங்குஞ், சதுமுகன்றருமுயிரெலாமணைவுறுந்தன்மைமூன்றுலகுண்டா, மதுலவானகங்கடந்தனர்மீட்டும்மாரவனியின்வரவெண்ணிப், பதுமவண்டத்தைநீக்கிவேறண்டத்திற்பருப்பதநகர்புக்கார்.. *

(இ-ள்.) கொதுகினீடிரள் - கொசுகின்பெருங்கூட்டங்கள்—அத்தியின்காயிடை - அத்திக்கனியினிடத்தில்—குமுறுவதென - சப்திப்பதுபோல—எங்கும் - எவ்விடங்களிலும்—சதுமுகன்றரும் - பிரமனுண்டாக்கிய—உயிரெலாம் - சீவர்களியாவும்—அணைவுறுந்தன்மை- சேர்ந்திருக்குங்குணமுள்ள—மூன்றுலகுண்டாம் - திரிபுவனங்களையுடைய—அதுலவானகங்கடத்

னர் - சமானமில்லாதவாகாயத்தைத்தாண்டினர் — மீட்டும் - திரும்பவும் — ஓரவனியின்வர வெண்ணி - ஒருபூமியைச்சேரச்சிந்தித்து—பதுமவண்டத்தைநீக்கி - பிரமாண்டத்தைக்கடந்து—வேறண்டத்தில் - வசிஷ்டனிருந்தலோகத்தில்—பருப்பதநகர்புக்கார் - கிரிக்கிராமமென்னும்பட்டணத்தையடைந்தார்கள். எ - று. (இ-ரு-க-ம்) ஆத்மவியாபகத்தினுண்டான ஸ்புரண விசித்திரங்களையதுதானேபார்த்ததிசயித்ததாம் .... (சரு)

(அ-கை.) புத்திரனைக்காண்டல். (கவி) வேறு. வினையர்சுற்றமுந்தனயருந்துக்கமாய்வெம்பு, மனையவேதியன்மனைபுகுந்தார்கண்ணிலனுகா, ரினையபோதின்மெய்சங்கற்பமெய்தியலீலை, மனையுளோரெமைக்காண்கெனச்சங்கற்பம்வகுத்தாள் .... *

(இ-ள்.) வினையர் - ஏவற்காரரும்—சுற்றமும்- உறவினரும்—தனயரும்-புத்திரரும்—துக்கமாய்வெம்பும் - துன்பமாகவாடுகின்ற—அனையவேதியன் - அப்பிராமணனது—மனைபுகுந்தார் - வீட்டினுழைந்தவர்கள்—கண்ணிலனுகார் - (அவர்களுக்) கநிரில்யமாயிருக்கும்—இனையபோதில் - இப்படிப்பட்டசமயத்தில்—மெய்சங்கற்பம் - சத்தியசங்கற்பத்தை— எய்தியலீலை - அடைந்தலீலையானவள்—மனையுளோர் - வீட்டின்கணுள்ளவர்—எமைக்காண்கென-எங்களைப்பார்க்கக்கடவார்களென்று—சங்கற்பம்வகுத்தாள் - சங்கற்பஞ்செய்தாள்.எ-று (சசா)

(அ-கை.) துக்கநிவிர்த்திசெய்தல். (கவி) வேறு. பூமகளுமலைமகளும் போல்வாரையன தெய்வம்போலுமென்றே, தாமவர்கண்டருச்சித்தார்தலைமகன்பார்த்தெமதன்னைதாதைமாய, யாமனுகுந்துயரொழிப்பீருயர்ந்தோரையெதிர்ந்தோருக்கெய்தாதுண்டோ, மாமதியினீரென்னத்தலைதடவித்துயரொழித்தாள்வயங்குலீலை .... *

(இ-ள்.) பூமகளும்-இலட்சுமியையும்—மலைமகளும்-பார்வதியையும் —போல்வாரை-ஒத்தலீலையுஞ்சரஸ்வதியையும் — வனதெய்வம்போலுமென்று - வனதேவதையைப்போல(விருக்கின்ற)தென்று—தாமவர்-(பந்துபுத்திராகிய)தாங்கள்—கண்டருச்சித்தார்-தரிசித்துப்பூசித்தார்கள்—தலைமகன்பார்த்து - (அதில்) முந்தினகுமாரன்பார்த்து— எமதன்னைதாதைமாய - எங்கண்மாதாபிதாக்கண்மரிக்க—யாமனுகுந்துயர் - நாங்களடைந் (திருக்கின்ற) துக்கத்தை—ஒழிப்பீர்-நீக்குவீர்—உயர்ந்தோரை-மேலானவர்களை—எதிர்ந்தோருக்கு-தரிசித்தவர்களுக்கு—எய்தாதுண்டோ- கிடையாத (பயனொன்) றுண்டா—மாமதியினீரென்ன-பேரறிவையுடையவர்களேயென்றுசொல்ல—வயங்குலீலை-ப்ரகாசிக்கின்றலீலையானவள்—தலைதடவி- சிரசைத்தொட்டு—துயரொழித்தாள்-அவர்கடுக்கத்தைநீக்கினாள்.எ-று. (இ-உ-க-ம்)வெளிப்படை(சஎ)

(அ-கை.) லீலையையமுற்றுவினவுதல். (கவி) இருவருமவ்வயின்மறைந்தாருலகத்தின்சற்பாவமிவ்வாறுகுங், கருதியதுமுடித்தனமேற்கருத்தென்கொலென்றுகலைக்கன்னிகேட்ப, மருவுசமாதியிற்கண்டமன்னவையோரெனைக்காணுவகையுமிந்தத், திருமனையோர்கண்டமையுமென்கொலெனச்செப்பென்றுடெய்வமன்னாள் .... *

(இ-ள்.) இருவரும் - சரஸ்வதிலீலையென்னுமிருவரும் — அவ்வயின்மறைந்தார் - அவ்விடத்திலந்தரத்யானமானார்கள்—உலகத்தின்சற்பாவம் - சகத்சத்தை—இவ்வாறுகும் - இவ்வண்ணமாம்—கருதியது - நினைத்ததை—முடித்தனம் - (பார்த்து) முடித்தோம்— மேற்கருத்தென்கொலென்று - மே(லுன்னுடைய)கருத்தென்னவென்று—கலைக்கன்னிகேட்ப- சரஸ்வதிகேட்க—மருவுசமாதியில் - அடைந்திருக்கின்றசமாதியினிடமாய்—கண்டமன்னவையோர்- பார்த்தவரசசபையிலுள்ளவர்கள்—எலைக்காணுவகையும் - என்னைக்காணுதவகையும — இந்தத்திருமனையோர் - இவ்வழகியவீட்டிலுள்ளவர்கள்—கண்டமையும்- பார்த்தவிதமும்—என்கொலென - என்னவென்று—தெய்வமன்னாள் - தெய்வத்துக்கொப்பானலீலையானவள் — செப்பென்றாள் - சொல்லென்றுகேட்டாள். எ-று .... (சஅ)

(அ-கை.) தேவிலீலையின் ஐயநீங்கப்போதித்தல்.(கவி) சாதகத்தாலன்றியிரண்டொன்றுகாதகம்பாவந்தனைநீங்காமற், போதமடைந்தனையதனாற் சத்தியமாஞ் சங்கற்பம்பொருந்திற்றில்லை, யாதலினாலவர்காணாரகம்பாவமற்றவறிவறிதலாலே, பேதமறநீவிதிக்கவிவர்கண்டாரெனவாணிபேசலோடும் .... *

(இ-ள்.) சாதகத்தாலன்றி - ஞானாப்பியாசத்தினாலல்லாமல் — இரண்டொன்றுகாது-துவிதமத்துவிதமாகாது — அகம்பாவந்தனைநீங்காமல் - நானென்னும்பாவனையைப்பிரியாமல்—போதமடைந்தனையதனால் - ஞானத்தையடைந்தபடியால் — சத்தியமாஞ்சங்கற்பம்-மெய்ச்சங்கற்பமானது—பொருந்திற்றில்லை- (உனக்) குண்டாகவில்லை—ஆதலினாலவர்காணார்-ஆதலாலச்சபையிலுள்ளவர்களுன்னைப்பாரார் — அகம்பாவமற்றவறிவு - (இப்பொழுது நானென்னும்பாவனையிறந்தஸ்வரூபஞானத்தை— அறிதலால் - உணர்தலினால் — பேதமறநீவிதி

க்க - அபேதமாகநீசங்கற்பிக்க—இவர்கண்டாரென - இப்புத்திரர்(முதலாயினோர்) பார்த்தார்களென்று—வாணிபேசலோடும் - சரஸ்வதிசொல்லியவுடன். எ-று. (இ-உ-க-ம்) அகம்பாவத்தோடும்-அஃதின்மையோடும் பெற்றஞானத்தின்பலாபலனையுரைத்ததாம் ....(௫௰)

(அ-கை.) முற்பவங்களைக் காண்டல். (கவி) பெருவெளியாயுன் னருளான்முழு துணர்ந்
தேன் முக்குணத்தின்பிறப்புமற்றே, னிருவடிவாய்பிரமத்திலகன் றெண்ணூற்றுடல்பல
வா யெடுத்தேன்முன்ன, மொருதனிமா யாவிகற்பத் தோருலகாந் தாமரைமேலுறை
வண்டாக, மருவியவிஞ்சையர்மகளாய் வாதனைதீதான்மனிதவடிவமானேன்.............. *

(இ-ள்.) உன்னருளால் - (சரஸ்வதியே) யுனதுகிருபையினால்—பெருவெளியாய்- வெட்டவெளியாக—முழுதுணர்ந்தேன்-(எனதுபூர்வசென்மம்)யாவையுமறிந்தேன்—முக்குணத்தின்-திரிதுணங்களி(னாலுண்டான)—பிறப்புமற்றேன் - பவமுநீங்கினேன் — பிரமத்தில் - பிரமத்தினின்றும்—இருவடிவாய் - வேறுருவமாய்— அகன்றெண்ணூற்றுடல் - நீங்கியெண்ணூறுசரீரம்—பலவாயெடுத்தேன் - நாநாவிதங்களாகவெடுத்தேன்—முன்னம்- முன்னமே—ஒருதனி-ஒப்பற்ற—மாயாவிகற்பத்து - மாயாவிகற்பத்தின(லுண்டாகி)—ஒருலகாம் - ஒப்பற்றவுலகங்களாகிய—தாமரைமேல் - தாமரைப்புட்பத்தில்—உறைவண்டாக-வசிக்கின்றவளியையப்போல—மருவிய- (சகலவுலகங்களிலுஞ்)சஞ்சரித்து—விஞ்சையர்மகளாய்-வித்தியாதரஸ்திரீயாகவும்—வாதனைதீதால்- வாசனையின்தீமையால்—மனிதவடிவமானேன்-நரவடிவமானேன். எ-று.

(அ-கை.) இ-து. (கவி.) வேறொருமாயாவிகற்பத் தரமகளாய்தழையுடுக்கும்வேடப்பெ
ண்ணாய்ச், சூறைவலைப்புள்ளரசாய்க் கொதுகுமுதற்பலபிறப்பிற் சுழன்றுசோர்ந்து,சிறு
கடற்றிரையிலசைதிரணம்போன்மாயையிலேதியங்கினேனை, யேறுவித்தாய்க்கரையென்
னவிவள்சொன்ன ளிருவரும்விண் ணெழுந்துபோனார்....................................... *

(இ-ள்.) வேறொரு - மற்றொரு—மாயாவிகற்பத்து - மாயாவிகற்பமான(லோகத்தில்)—அரமகளாய் - இந்திராணியாகவும்—தழையுடுக்கும்-பத்திரவஸ்திரத்தைத்தரிக்கின்ற—வேடப்பெண்ணாய் - வேடஸ்திரீயாகவும்— வலை- வலையை—சூறை- அறுத்த—புள்-பறவையாகவும்—அரசாய்-(சவுராஷ்ட்ரதேசத்)தரசனாகவும்—கொதுகு- கொசுகாகவும் (பிறந்து)—முதற்பலபிறப்பில்-(இவை)முதலாகிய பலசநநங்களில்—சுழன்றுசோர்ந்து- உழன்றுவாடி—சிறுகடற்றிரையில் - சப்தியாநின்றசமுத்திரத்தினலையில்—அசைதிரணம்போல்-அலைகின்றதுரும்பைப்போல—மாயையிலேதியங்கினேனை - மாயாவசத்தி(னார்த்தகதியுமதோகதியுமாகக்)கலங்கினவென்னை—கரையேறுவித்தாயென்ன - (முத்தி)தீரத்திலேற்றுவித்தாயென்று— இவள்சொன்னாள்-இந்தலீலைதோத்திரஞ்செய்தாள்—இருவரும் - (பின்)பிரண்டுபேர்களும்—விண்ணெழுந்துபோனார் - ஆகாயத்திலெழும்பினார்கள். எ-று. [இ-உ-க-ம்.] பிரமத்தினின்று நீங்கினமுதலிதுபரியந்தம் வியாபித்திருந்த பூரணஞான முதயமானபடியால் அதிற்குமிளித்த வடிவங்களியாவுந்தனதுவடிவமாகத்தெரிந்ததாம்...(௫௧)

(அ-கை.) பின்சிருஷ்டியைக்கண்டதிசயித்தல். (கவி) யோகநெறியால்விண்போய்ப்பது
மனிடஞ்சேர்ந்துசவ வுடல்கண்டப்பா, லேகியிவன்மறுபிறப்பாம் வேந்தனையெய்தலுமு
வன்மேலெதிர்ந்துவந்து, வேகவினையாகியொரு வேல்வேந்தனமர்துடங்கி மிகவுமோத,
மாகமயிலனையார்கணோக்கினாரிருபடையு மலைந்தவன்றே........................... *

(இ-ள்.) யோகநெறியால் - யோகமார்க்கத்தினால்—விண்போய் - ஆகாயத்திற்சென்று—பதுமனிடஞ்சேர்ந்து - பதுமவரசனிடத்திலடைந்து—சவவுடல்கண்டு- (அவனது)சவசரீரத்தைப்பார்த்து—அப்பாலேகி - (பின்)பப்புறஞ்சென்று—இவன்மறுபிறப்பாம்வேந்தனை-இப்பதுமனிரண்டாஞ் சநநமாகியவிடூரதவாசனை—எய்தலும்- அடையவும்—அவன்மேலெதிர்ந்துவந்து - அவ்வரசன்மேலெதிர்த்துவந்து — வேகவினையாகி - கடுமையானபோரையுடையவனாய்—ஒருவேல்வேந்தன் - ஒப்பற்றவேலையுடைய (சிந்து) வரசன்— அமர்துடங்கி - யுத்தத்தைத்துடங்கி—மிகவுமோத-மிகவுமடிக்க—மாகம்-ஆகாயத்தி(லிருந்து)—மயிலனையார்கள்-மயிலையொத்தசரஸ்வதிலீலையிருவரும்—நோக்கினார் - பார்த்தார்கள்—இருபடையும்-இரண்டுசேனையும்—மலைந்த - யுத்தம்பண்ணின. எ-று...(௫௨)

(அ-கை.) இ-து. (கவி) மட்டிலாவிருபடையு மறலிநடுக்குறவெம்போர்மலைக்குங்
காலை, யெட்டிலோர்கூறுகவெதிர்ந்தவருளிவன்சேனையிறத்தலோடும், பட்டுளோர்
பிணக்குன்றுன் மறைந்தனரேசமர்கண்டுபடப்பட்டாரே, தட்டிலாவெய்யவன்
போயிருண்மறைந்ததிருபடையுந்தணந்துபோன.. *

(இ-ள்.) மட்டிலாவிருபடையும் - அளவற்றவிருவர்சேனைகளும்—மறலிநடுக்குற-நமனடுங்கும்படியாக—வெம்போர் - கொடியசண்டை—மலைக்குங்காலை- பொருதுங்காலத்தில்—

எட்டிலோர்கூறுக - எட்டிலொருபங்காகும்படி—எதிர்ந்தவனால் - எதிரியினால்— இவள்சேனை யிறந்தவேலோடும் - இவன்படைமரித்தமாத்திரத்தில்—பட்டுளோர் - மரித்தவர்களது—பிணக்குன்றால் - பிரேதமலையினால்—மறைந்தனனோ - மறைந்தானோ—சமர்கண்டு-போரைக்கண்டு—பயப்பட்டானோ- பயந்தானோ—தட்டிலா-குற்றமற்ற—வெய்யவன்போய்— சூரியன்போய்—இருணிறைந்தது - அந்தகாரநிறைந்தது—இருபடையும்- இரண்டுசேனையும்—தணந்துபோன - பிரிந்துபோயின. எ-று. வெளிப்படை..... .... (ருங)

அ-கை. இ-து. (கவி) பகைவேந்தன்படைவாங்கப்படாதசிறுபடையோடும் பரிந்துமீண்டு,தகைவேந்தனரமியத்திற்றுயிலுதலுமிவர்களுமத்தலத்திலெய்த,நகையார்ந்தநிலவனையவிவரொளியாலிளைப்பாறிநயனக்கஞ்ச, முகைதோன்றவிழித்தெழுந்துபுகழ்ந்திறைஞ்சியருச்சித்தான்முன்னின்றோனே..... .... *

(இ-ள்.) பகைவேந்தன் - சத்துருவாகியவரசனது—படைவாங்க-சேனைநீங்க—படாதசிறுபடையோடும்-மரியாதசிலசேனையுடன்—பரிந்துமீண்டு- (மன)முறிந்துதிரும்பி—தகைவேந்தன்-தளர்வையுடையவிடூரதவரசன்—அரமியத்தில்- மேன்மாளிகையில்— துயிலுதலும்-நித்திரைசெய்யவும்—இவர்களும் - இந்தச்சரஸ்வதியும்லீலையும்— அத்தலத்திலெய்த - அவ்விடத்தில்வர—நகையார்ந்த- ப்ரகாசம்பொருந்திய—நிலவனைய-சந்திரனதமுதகிரணத்தையொத்த—இவரொளியால் - இவர்கள்தேஜசினால்—இளைப்பாறி - சிரமந்தீர்ந்து—நயனம் - கண்களென்னும்—கஞ்சமுகைதோன்ற - தாமரைமொக்குமலர—விழித்தெழுந்து - விழித்தெழுந்து—புகழ்ந்திறைஞ்சி - தோத்திரஞ்சொல்லிவணங்கி — முன்னின்றோனே - முன்னேயிருந்த சரஸ்வதிலீலையை—அருச்சித்தான் - பூசித்தான். எ-று. ....(ருச)

(அ-கை.) மாயாவிசித்திரத்தைக்காண்பிக்கப் பின்சிருஷ்டியின் வமிசாவலியையறிவித்தல். (கவி) இவனது நற்குலப்பழைமை லீலைக்குவிளம்புவிப்பவெண்ணிவாணி, யவனருகிற்றுயிலமைச்சன்விழிக்கவெனவெண்ணுதலுமவனப்போதே, கவர்துயில்விட்டெழுந்திறைஞ்ச கண்டகலைமகளவனைக்கருணைகூர்ந்து, புவனபதிகுலத்தொன்மைப்புகலென்றாளமைச்சனிவைபுகலலுற்றான்............ .... *

(இ-ள்.) இவனது-இவ்வரசனுடைய—நற்குலப்பழைமை-நல்லவமிசபரம்பரையை—லீலைக்குவிளம்புவிப்பவெண்ணி - லீலைக்குச்சொல்லும்படி நினைத்து—வாணி - சரஸ்வதியானவள்—அவனருகிற்றுயிலமைச்சன்-அவனதுசமீபத்தினித்திரைசெய்யுமந்திரியானவன் — விழிக்கவெனவெண்ணுதலும் - விழிக்கக்கடவதென்றுசங்கற்பிக்கவும்—அவனப்போதே - அம்மந்திரியானவனப்பொழுதே — கவர்துயில்விட்டு - தன்னைக்கவர்ந்திருக்கு நித்திரையைவிட்டு—எழுந்திறைஞ்ச- எழுந்திருந்துவணங்க—கண்டகலைமகள்-பார்த்தசரஸ்வதியானவள்—அவனைக்கருணைகூர்ந்து-அவனிடத்திற்கிருபைமிகுந்து—புவனபதிகுலத்தொன்மை-(இப்) பூமிக்கரசாகிய (விவன்) குலத்தின்பூர்வசரித்திரத்தை—புகலென்றாள்-சொல்லென்றுகேட்டாள்—அமைச்சன்-(அதற்கு) மந்திரி—இவைபுகலலுற்றான் -இவைகளைச்சொல்லத்தொடங்கினான்.எ-று(ருரு)

(அ-கை.) இ-து. (கவி) மன்னவரெண்மனுகுலத்தின்மன்னவனாங்கும்பரதன்மன்னர்மன்ன, னன்னவன்பத்திரரதனையளித்தான்மற்றவனகிலரதனைத்தந்தா, னின்னவன்பேரிரதனைத்தானீன்றானிங் கிவன்சிந்துரதனைப்பெற்றான், சொன்னவன்சேய்சைலரதனவனுக்குக்காமரதன்றோன்றலானான்........................... .... *

(இ-ள்.) மன்னவர் - அரசரில் — எண் - மதிக்கப்பட்ட— மனுகுலத்தில் - (வைவசுத) மனுவின்வமிசத்தில்—மன்னவனாங்கும்பரதன் - அரசனாகியகும்பரதனானவன்— மன்னர்மன்னன் - இராசாதிராசனாகிய—அன்னவன்பத்திரரதனையளித்தான் - அவன்பத்திரரதனைப்பெற்றான்—அவன் - அவ்வரசன்—அகிலரதனைத்தந்தான் - அகிலரதனைப்பெற்றான் — இன்னவன்-இவ்வரசன்—பேரிரதனைத்தானீன்றான் - பிறகத்ரதனைப்பெற்றான்— இவன்சிந்துரதனைப்பெற்றான்-இவ்வரசன்சிந்துரதனையீன்றான்—சொன்னவன்சேய் - சொல்லியவவ்வரசனதுபுத்திரன்—சைலரதன் - சைலரதனும்—அவனுக்கு- அவ்வரசனுக்கு—காமரதன்றோன்றலானான்-காமரதன்றோன்றினான். எ-று.. (ருசு)

(அ-கை.) இ-து. (கவி) இனையவன்சேய்மகாரதன்மற்றிவன்சிறுவன்விண்டூரதனிவன்குமாரன், வினையமிகுமகோரதனிங்கிவனளித்தவிடூரதனிவ்வேந்தர்வேந்த, னனையிவர்க்குச்சுமுத்திரையாமையிரண்டுவயதிலிவர்க்கரசுநல்கி, நினைவொடுங்கும்பிதாவனமேநீங்கினானிவன்செங்கோனெறியினின்றான்..... .... *

(இ-ள்.) இனையவன்சேய் - இப்படிப்பட்டவனுடையபுத்திரன்—மகாரதன் - மகாரதனும்—இவன்சிறுவன் - இவனுடையபுத்திரன்—விண்டூரதன் - விண்டூரதனும் — இவன்குமா

ரன் - இவனுடையபுத்திரன்—வினையமிகுமனோரதன் - போர்மிகுந்தமனோரதனும்—இங்கிவ னையளித்த-இவ்விடத்திலிவன்பெற்ற—விடூரதனிவ்வேந்தர்வேந்தன்-விடூரதனென இந்தராசாதிராச னாய் —இவர்க்கு - இவருக்கு—அனை - தாயானவள்—சுமூத்திரையாம் - சுமூத்திரையென்னும் பெயரையுடையவளாம்—ஐயிரண்டுவயதில் - பத்துவயதில்—இவர்க்கரசுநல்கி - இவருக்கரசா ட்சியைக்கொடுத்து—நினைவொடுங்குப்பிதா-மனதடங்கியபிதாவானவர் — வனமேநீங்கினன்- (துறந்துதவ) வனத்திற்சென்றார்— இவன்செங்கோனெறியினின்றான் - இவனீதிமார்க்கத்தாற் (பூமி) பாலனம்பண்ணினான். எ-று. (இ-கூ-க-ம்) வெளிப்படை..(ருஎ)

(அ-கை.) விடூரதமயக்கநீங்கிஞானமுதயமாம்பொருட்டுமுற்பவமறிவித்தல். (கவி) என் பளவில்வேந்தனை நின்முதற்பிறவிஞானத்தாலெளிதுகாண்கென்,றன்பினொடுகையினாலவ ன்முடியைநாமகடொட்டருளலோடுந்தன்பகையாமனவிருள்போய்லீலையுடன்வாழ்பது மன்றானைக்கண்டா,னின்பமுறவியப்புற்றான்மாமாயையிருந்தபடியென்னேயென்றான்

(இ-ள்.) என்பளவில் - என்று (மந்திரிசொன்ன) மாத்திரத்தில் — வேந்தனை - இராசா வை—நின்முதற்பிறவி - உனதுமுற்சநநத்தை—ஞானத்தால் - ஞான (க்கண்ணி) னால்—எளி துகாண்கென்று - இலேசாய்த்தெரிந்துக்கொள்ளக்கடவாயென்று—அன்பினொடு - அன்பினு டன் —கையினாலவன்முடியை - (தனதுஸ்) தத்தினாலவ்வரசனதுசிரசை—நாமகடொட்டு-சரஸ் வதியானவள்ஸ்பரிசித்து—அருளலோடும்- அனுக்கிரகித்தவுடன்—தன்பகையாமனம்-தனது பகையாகியமனதிலிருக்கின்ற—இருள்போய் - மாயாந்தகாரநீங்கி — லீலையுடன் - லீலையோ டும்—வாழ்பதுமன் - (கூடி)ச்சுகிக்கின்றபதுமவரசன்—தானைக்கண்டான் - தனதுவடிவமா கப்பார்த்தான்—இன்பமுற - ஆநந்தம்பொருந்த—வியப்புற்றான் - அதிசயித்தான் — மாமா யை -மகாமாயையானது — இருந்தபடியென்னேயென்றான் - இருந்தவிதமென்னவென்று சொன்னான். எ-று. (இ-ம்) தேவியனுக்கிரகத்தினான் ஞானமுதயமாய் மாயாவிசித்திரத்தைப் பார்த்ததிசயித்ததாம்..(ருஅ)

(அ-கை.) ஒருநாளெழுபதுவருடமானமயக்கந்தீரவிசாரித்தல். (கவி) தாயரிவராற்றெளி ந்தேனெனநாடியவர்சரணந்தலைமேற்சூடிப், போயபவத்துடனீங்கிநாளொன்றாமிவ்வுட லிற்புக்கபின்னைச்,சேயவெழுபதுவருடஞ்சென்றதாற்செய்ததெலாந்தெரியாநின்றேன், மாயமிதுவென்கொலெனமன்னவன்கேட்டலுங்கருணைவாணிசொல்வாள்.................... *

(இ-ள்.) தாயரிவரால்-மாதாவாகியவிவர்களால்—தெளிந்தேனென - (மாயையைத்) தெ ரிந்தேனென்று—நாடி - சிந்தித்து—அவர்சரணம் - அவர்கள்பாதத்தை—தலைமேற்சூடி - சிர சின்மேற்றரித்து—போயபவத்துடனீங்கி - போனசநநத்தின்சரீரநீங்கி—நாளொன்றாம்- நா ளொன்றாகவும்—இவ்வுடலிற்புக்கபின்னை- இச்சரீரத்தில்வந்தபின்பு—சேயவெழுபதுவருடம்- அதிகமானவெழுபதுவயது—சென்றதால் - நடந்தபடியால்—செய்ததெலாம் - நடந்தசகல மும்—தெரியாநின்றேன்- தெரிந்தேன்—மாயமிதுவென்கொலென-இதென்னமாயாவிசித்திர மென்று —மன்னவன்கேட்டலும்-அரசன்கேட்கவும்—கருணை-கிருபையே (வடிவமாயுள்ள)— வாணிசொல்வாள் - சரஸ்வதியனுக்கிரகஞ்செய்வாள். எ-று. (இ-ம்.) வெளிப்படை.........(ருகூ)

(அ-கை.) மயக்கந்தீரப்போதித்தல். (கவி) இறப்பென்னுமாமூர்ச்சையெய்திய பின்னப் பொழுதவ்விடத்திற்றானே, பிறப்பென்னுமாமோகம் பெரிதுண்டாம் விண்போலப்பிற ங்கித்தூய்தாஞ்; சிறப்புள்ளவுன்மனதிற் செய்தொழிலாமயக்கமே தெரியாநின்ற, துறத் துன்னுமெழுபஃதாண் டுனக்ககன்றதென்பதனை யுணர்ந்துநோக்காய்.................... *

(இ-ள்.) இறப்பென்னும் - மரணமென்கின்ற—மாமூர்ச்சையெய்தியபின் - பெரியமயக் கம்வந்தபின்பு —அப்பொழுது - அக்காலத்தில்—அவ்விடத்திற்றானே - அவ்விடத்திலேயே— பிறப்பென்னுமாமோகம் - சநநமென்கின்றமகாமோகமானது—பெரிதுண்டாம் - மிகவுமு ண்டாயிருக்கும்—விண்போல் - ஆகாயத்தைப்போல—பிறங்கித்தூய்தாம் - நிறைந்தபரிசுத்த மான—சிறப்புள்ள - சிறப்பையுடைய— உன்மனதில் - நின்மனதில்—செய்தொழிலாம்-செய் கன்மமாகிய—மயக்கமே- பிராந்தியே—தெரியாநின்றது-காண்கின்றதான—உறத்துன்னும்- பொருந்தநெருங்கிய—எழுபஃதாண்டு - எழுபதுவருடமானது— உனக்ககன்றதென்பதனை- உனக்குநீங்கினதென்பதை—உணர்ந்துநோக்காய் - (நீ)யறிந்துபார்ப்பாய் . எ-று. (இ-ம்)இற ந்துபிறக்குமயக்கத்தி லுண்டானமனோவிகற்பத்தாற் காலவளவுதோற்றினதேயன்றியதார்த் தமாயின்றென்பதாம்.ஆறாயிரத்திற்பதினாறுவயதேயெனவியாக்கியானமிருக்கினும்முப்பத்தி ராயிரத்தெழுபது வயதேயெனமூலமிருத்தலி னஃதேயிந்நூலாசிரியர்கருத்தெனக்கொள்க.

(அ-கை.) இ-கூ. (கவி) கடிகையிரண்டினுள்ளெழுப காலமுறுங்கணவொக்குங்கழிந் தவாறுட், படியுறுமாயாவிகற்பநல்லெழுமோவிதமாய்ப்பரந்துதோன்று, நெடி

யபிறப்பிறப்பென் று நினக்கில்லைமெய்ஞ்ஞான நினக்குருப, முடிவில்பதத்திருக்கி
ன்றுய்சகமெல்லாங் கண்டிருந்து முழுதுங்காணுய்…… …………………………… …… *

(இ-ள்.) கடிகையிரண்டினில் - ஒருமுகூர்த்தகாலத்தில்— நெடியகாலமுறும் - அநேககாலம்வருகின்ற—கனவொக்கும் - சொப்பனத்தையொத்திருக்கும் — கழிந்த - நீங்கிய—வாளுள் - ஆயுளானது—படியுறு - குணம்பொருந்திய—மாயாவிகற்பம்- மாயையின்விகற்பத்திலுல்—நனவில் - சாக்கிரதையில்—வெகுவிதமாய்-நாநாவிதமாக—பரந்துதோன்றும்- விரிந்துதோற்றும்—நெடிய - மிகுந்த—பிறப்பிறப்பும்- சநநமரணங்கள்—என்றுநினக்கில்லை-எப்போதுமுனக்கில்லை—மெய்ஞ்ஞானம்- உண்மைஞானமே—நினக்குருபம்- உனக்குஸ்வரூபம்—முடிவில்பதத்திருக்கின்றுய் - அந்தமில்லாத (பரம) பதத்திலிருக்கின்றுய் — சகமெல்லாங் கண்டிருந்தும்-உலகங்களியாவையும்பார்த்தும்—முழுதுங்காணுப்- ஒன்றையும்பாராய். எ-று. (இ-ம்) ஆயுளானது மாயாவிசித்திரத்திற் றேற்றினதேயன்றி ஆத்மஸ்வரூபமான சித்திலின்றென்பதாம் ……………………………………………………………… (௯௧)

(அ-கை.) இ-து. (கவி.) எல்லாமாமியல்பினுலுன்னுலுன்னிடத்திலிருந்திலங்காநின்
றுய்ச், சொல்லாமைந்தனைப்பிடித்த தொட்டிலிற்பேய்ச் சுடலையிற்போந் தொன்
மைபோலப்,பொல்லாதமூகர்க்குப் புவியுறுதியாய்த்தோன்றும்பொன்காணுதோ,
ரல்லாதுபணியென்பர் தற்பரத்தைக்காணுதோ ரகிலமென்பார்…………………… *

(இ-ள்.) எல்லாமாம்- சமஸ்தமுமாயிருக்கின்ற— இயல்பினுல் - சுபாவத்தினுல் — உன்னுல்- உனதறிவினுல்—உன்னிடத்திலிருந்து - உன(தாத்மஸ்வரூபத்தி)லிருந்து— இலங்காநின்றுய்-ப்ரகாசிக்கின்றுய்—சொல்லாமைந்தனை- பேசத்தெரியாதகுழந்தைகளை—தொட்டிலில்-தொட்டிலி (லிருக்கும்பருவத்தில்) —பிடித்தபேய் - பிடித்தபிசாசானது— சுடலையிற்போம்-மயானத்தினீங்குகின்ற— தொன்மைபோல - பழைமையைப்போல—பொல்லாதமூகர்க்கு-தீமையையுடைய மூடர்களுக்கு—புவியுறுதியாய்த்தோன்றும்- சகமானது சத்தியமாகத்தோற்றும்—பொன்காணுதோர் - சுவணமென்றறியாதவர்கள்—அல்ல- (பொன்)னல்ல—அது- அப்பொன்னை—பணியென்பர் - ஆபரணமென்று சொல்லுவார்கள் — தற்பரத்தைக்காணுதோர்- (அவைபோல) ஸ்வரூபதிருஷ்டியில்லாதவர்கள் — அகிலமென்பார் - சகமென்பார்கள். எ-று. (இ-ம்) திருக்கைத்தரிசித்தவர்கள் திரிஸ்யபேத மறியார்களென்பதாம்…………………… (௯௨)

(அ-கை.) இ-து. (கவி) தனைமுதலாய்க்காண்கின்றசகமெல்லா நீள்கனவாஞ்சகத்திற்
றேன்று, மினையபொருள்களுங்கனவிற்காண்கின்றபொருள்களா மென்றுதேர்வா,
யனையபொருள்களுங்காண வறிவுமாத்திரம்வடிவாயனைத்துமேவி, வினையில்செறி
வாய்க்கனமாய்ச்சுத்தமாகிப்பிரமவிண்ணேயுண்டாம் ………………………………… *

(இ-ள்.) தனைமுதலாய் - (யானெனதென்னு) மகங்காரமுதலாக—காண்கின்ற - பாராநின்ற—சகமெல்லாம் - உலகங்களியாவும்—நீள்கனவாம் - நீண்டசொப்பனமாம்— சகத்திற்றேன்றும் - உலகத்தினிடத்திற்றேன்றுநின்ற—இனையபொருள்களும் - இப்படிப்பட்டவஸ்துக்களும்—கனவிற்காண்கின்ற - சொப்பனத்திற்காணுநின்ற—பொருள்களாமென்று - வஸ்துக்களாமென்று—தேர்வாய் - உணர்வாய்—அனையபொருள்களுங்காண - அப்படிப்பட்டவஸ்துக்களுங்காணுத—அறிவுமாத்திரம்வடிவாய் - ஞானமேஸ்வரூபமாய் — அனைத்துமேவி-எவற்றிலுங்கூடி—வினையில்செறிவாய் - தொழிலில்லாதநிறைவாய்— கனமாய் - மகத்தாய்—சுத்தமாகி - பரிசுத்தமாய்—பரமவிண்ணேயுண்டாம் - பரமாகாயமேயிருக்கும். எ-று(இ-ம்) சசத்தென்னுந்தீர்க்கசொப்பனத்தில் வஸ்துக்களென்னும் பேதந்தோற்றுவதேயன்றிச் சுயஞ்சைதன்யத்திலின்றென்பதாம் ………………………………………………………… (௯௩)

(அ-கை.) இ-து. (கவி,) முழுதுமாய்முழுதுடைத்தாய்ச்சத்தி முழுதும்முள்ளமூர்
த்திதானே, பழுதிலாதெவ்விடத்தெப்படிதோன்றுமவ்விடத்தப்படியேதோன்றும்,
வழுவிலாமெய்ஞ்ஞான நிலை லீலைபொருட்டாலும் வழங்கப்பெற்றுய், நழுவிலாவு
ண்மையொடுந்தெளிந்தனையாம் போதுமென நவிலலோடும்…… …… ……… *

(இ-ள்.) முழுதுமாய் - எல்லாமாகியும்—முழுதுடைத்தாய்- எல்லாமுடையதாகியும்—சத்திமுழுதுமுள்ள-சத்திகளெல்லாமிருக்கின்ற—மூர்த்திதானே-ஸ்வரூபமே— பழுதிலாது-பழுதுபடாமல்—எவ்விடத்தெப்படிதோன்றும் - (காலகன்மபரியாகத்தினு) லெந்தவிடத்திலெப்படிதோன்றுமோ—அவ்விடத்தப்படியேதோன்றும் - அங்கவ்வண்ணமேதோற்றும்— வழுவிலாமெய்ஞ்ஞானநிலை - குற்றமற்றவுண்மைஞானநிலையை—லீலைபொருட்டு- லீலைநிமித்தம்—நாம்வழங்கப்பெற்றுய் - நாமுபதேசிக்கநீயடைந்தாய்—நழுவிலாவுண்மையொடும் - கெடாததத்துவத்துடன்—தெளிந்தனை-தெளிந்தாய்—யாம்போதுமென-நாங்ளேகுதுமென்று—நவி

லைலோடும்- (சரஸ்வதி) சொல்லவும்.(எ-று) (இ-ம்) சைதன்யஸ்புரணமெக்காலத்தெப்படிதோற்றுவதோ வப்படிசகலமுந் தோற்றுவதேயன்றி நெடிதுகுறிதென்னு மாயுளின்பேதமின்றென்பதாம் ... . (கூச)

(அ-கை.) முற்பவமடைதற்கு வினவுதலையுமதற் குத்தரத்தையுங்கூறல். (கவி.) இதுபுகலக்கேட்டரசனெனையடைந்தோர்களும்வேண்டிற்றெய்தாநிற்பர், புதுமணிநேருமைப்பணிந்துபுகழ்ந்தேன்வேண்டியதெய்தல் புதுமைத்தாமோ, பதுமவுடனுனடைவதென்றென்னவிப்போரிற்படுவைபட்டா, லதுபுகுவையெனக்கலைமாதளித்தலுமேற்றலத்தொருவனறைவதானுன் .... *

(இ-ள்.) இதுபுகல - இவ்(வனுபவத்தைப்) போதிக்க— கேட்டரசன்-சிரவணஞ்செய்தவிரேகன்—எனையடைந்தோர்களும் - என்னை(யாசகமா)யடைந்தவர்களும்—வேண்டிற்றெய்தாநிற்பர் - வேண்டியதைப்பெறுவார்கள் — புதுமணிநேருமை-புதுமையான(சிந்தா)மணியையொத்தவுங்களை — பணிந்து - வணங்கி — புகழ்ந்தேன் - தோத்திரஞ்செய்தவனுகியநான்—வேண்டியதெய்தல்-(அடைய)வேண்டியதடைதல்—புதுமைத்தாமோ-ஆச்சரியமாமா—பதுமவுடனுனடைவதென்றென்ன - (முற்) பதுமசரீரத்தை யானடைவ தென்றென்று கேட்க—இப்போரிற்படுவை - இந்தயுத்தத்தின்மரிப்பாய்—பட்டால்- மரித்தால்—அதுபுகுவையென-அச்சரீரத்தையடைவாயென்று— கலைமாதளித்தலும் - சரஸ்வதியனுக்கிரகிக்கவும்—மேற்றலத்தொருவன்-மேல்வீட்டிலொருவன்(வந்து)— அறைவதானுன்-சொல்லத்தொடங்கினுன். எ-று.

(அ-கை.) முற்பவமடைதற்கேதுவானசரித்திரமுரைத்தல். (கவி) அப்புமழைசொரிந்துவருமடர்சேனைக்கடலெங்கு மடர்ந்துநிற்க, வெப்புடைய கனற்கொழுந்தா லந்நகரஞ்சாம்பராய்வேகாநின்ற, திப்புதுமைகண்டிலைகொ லிகல்வேந்தேயென்பளவிலிறைஞ்சார்சேனை, முப்புவனங்களுநடுங்க மோகரிக்குமோசைசெவிமுடுகக்கேட்டான் .... *

(இ-ள்.) அப்புமழைசொரிந்துவரும்- அம்புவருடஞ்சொரிந்துவருகின்ற—அடர்சேனைக்கடல் - நிறைந்தசேனுசமுத்திரமானது—எங்குமடர்ந்துநிற்க - எவ்விடத்து நிறைந்திருக்க—வெப்புடைய - வெம்மையாகிய—கனற்கொழுந்தால் - அக்கினிசுவாலையினுலே— அந்நகரம்-அப்பட்டணம்—சாம்பராய்வேகாநின்றது - சாம்பலாகவேகின்றது—இப்புதுமை - இவ்வதிசயத்தை—கண்டிலைகொல் - காணவில்லையோ—இகல்வேந்தே - பலம்பொருந்தியவரசனே—என்பளவில்- என்றுசொல்லுஞ்சமயத்தில்—இறைஞ்சார்சேனை-பகைவர்படையானது—முப்புவனங்களுநடுங்க - மூன்றுலகங்களுநடுங்கும்படி—மோகரிக்குமோசை - கெற்சிக்கின்றசப்தத்தை—செவிமுடுகக்கேட்டான் - காதுசெவிடுபட(வரசன்)கேட்டான். எ-று. .... (கூரு)

(அ-கை.) இ-து. (கவி) ஒட்டலர்சேனையின்முழக்கு முலைந்தலறுநகரொலியுமுருமேறென்ன, முட்டியெழவடவனல்போன் முழங்கனலின்புகையெங்கு மூடிக்கொள்ள, கெட்டனகண்களுஞ்செவியுங் கிளர்நகரமழிந்ததுவிக்கேடியாவுந், திட்டமுறலீலையும்வாணியும் வேந்துமந்திரியுந் தெரியக்கண்டார் .... *

(இ-ள்.) ஒட்டலர் - சத்துருக்களின் — சேனையின்முழக்கும் - படையினதுசப்தமும்—உலைந்தலறும் - அலைவுற்றலறுநின்ற—நகரொலியும் - பட்டணத்திலுள்ளவர்களின்சப்தமும்—உருமேறென்ன-இடியைப்போல—முட்டியெழ-எதிர்த்தெழ—வடவனல்போல்-வடவாமுகாக்கினியைப்போல—முழங்கனலின் - சப்திக்கப்பட்டவக்கினியினது— புகையெங்குமூடிக்கொள்ள-தூமமானதெவ்விடத்துஞ் சூழ்ந்துக்கொள்ள—கண்களுஞ்செவியும்- நேத்திரமுஞ்சுரோத்திரமும்—கெட்டன - அழிந்தன—கிளர்நகரமழிந்தது - ப்ரகாசிக்கின்ற பட்டணமழிந்தது—இக்கேடியாவும் - இக்கேடனைத்தையும்—திட்டமுற-ப்ரத்தியட்சமாக—லீலையும்- லீலையும்—வாணியும் - சரஸ்வதியும்—வேந்தும் - அரசனும்—மந்திரியும் - அமைச்சனும்—தெரியக்கண்டார் - ப்ரத்யக்ஷமாகப்பார்த்தார்கள். எ-று .... (கூஎ)

(அ-கை.) இ-து. (கவி) வேறு. செருவிறல்வேந்தன்றேவி தெருமந்துநடுங்கிவந்தாள், வருமிவள்பாங்கிமன்னுமாளிகைமகளிர்யாரும், பெருகியநிதியுங்கொண்டார் பேணலாரென்னக்கேட்டா, னருகுறுதேவியுங்க ளடைக்கலமென்று போனுன் .. *

(இ-ள்.) செருவிறல் - யுத்தத்தில்வீரமுள்ள — வேந்தன்றேவி - அரசனுடையமனைவியானவள்—தெருமந்து - பிரமித்து—நடுங்கிவந்தாள் - நடுக்கமுற்றுவந்தாள்— வருமிவள்பாங்கி-இவளுடன்வராநின்றதோழியானவள்—மன்னு - அரசனே—மாளிகைமகளிர்யாரும்- அரண்மனையி(லுள்ள) மாதர்களனைவரையும்— பெருகியநிதியும் - மிகுந்ததனங்களையும்—பேணலார்-சத்துருக்கள்—கொண்டாரென்ன - கொள்ளையிட்டார்களென்றுசொல்ல — கேட்டான்-

(அதைக்)கேட்டவிடூரதவரசன்—அருகுறுதேவி- என்பக்கத்திலுள்ள தேவியானவள்—உங்களடைக்கலமென்றுபோனான்-உங்களடைக்கலமென்றுசொல்லியுத்தத்துக்குப்போயினான். எ-று.

(அ-கை)லீலைவடிவமாகவேவந்த புதியலீலையின்காரணம்வினாவுதல். (கவி) எதிர்நி
ழல்போலவந்த லீலையையிந்தலீலை, யதிசயமெய்திநோக்கி யருங்கலைமாதைநோ
க்கி, புதிதுநானிங்குவந்தபொருளென்கொலென்றலோடு, மதிநிறவாணியந்தமயக்
கந்தீர்த்துரைப்பதானாள் .... *

(இ-ள்.) எதிர்நிழல்போல- (கண்ணாடியி) லெதிரிட்டதனதுசாயையைப்போல—வந்தலீலையை - வந்த(விடூரதன்மனைவியாகிய) லீலையை—இந்தலீலை-(பதுமன்மனைவியான) விந்தலீலையானவள்—அதிசயமெய்திநோக்கி- ஆச்சரியமடைந்துபார்த்து— அருங்கலைமாதைநோக்கி-அருமையானசரஸ்வதியைப்பார்த்து—புதிது - நூதனமாக — நானிங்குவந்தபொருளென்கொல் - நானேயிவ்விடத்தில்வந்திருக்கின்ற வுண்மையென்ன—என்றலோடும் - என்றுகேட்டவுடன்—மதிநிறவாணி - சந்திரநிறத்தையுடைய சரஸ்வதியானவள்— அந்தமயக்கந்தீர்த்து-அம்மயக்கத்தைநீக்கி—உரைப்பதானாள் - சொல்லத்தொடங்கினாள். எ-று ....(௬௯)

(அ-கை•) தேகாந்தஸ்புரணமேயிப்புதியலீலையாயிற்றெனல். (கவி.) நின்னைநீங்கா
துவாழநினைத்தனன்மரணகாலத், தன்னதவ்விடத்தேபெற்றா னன்பினாலுனதுகா
ந்த, னின்னல்கூர்மரணந்தன்னி லெண்ணியதெய்துமியார்க்குந், தன்னெதிருற்றத
ன்றித்தோன்றுமோதற்பணத்தில் .... *

(இ-ள்.) உனதுகாந்தன் - நினதுபுருடனாகியபதுமன் — அன்பினால் - (உன்னிடத்திலிருக்கின்ற)வாஞ்சையினால்—நின்னைநீங்காதுவாழ - உன்னைப்பிரியாமற் சுகிப்பதற்கு— மரணகாலத்து- மரணசமயத்தில்—நினைத்தன்ன-நினைத்தான்—அன்னது-அந்நினைவின்படியே—அவ்விடத்தேபெற்றான்-அவ்விடத்தி(லுன்னைப்) பெற்றான்—இன்னல்கூர்-துன்பமிகுந்த—மரணந்தன்னில்-மரணத்தில்—இயார்க்கும்- யாவருக்கும்—எண்ணியதெய்தும்-சிந்தித்ததடையும்—தன்னெதிருற்றதன்றி-தன்முன்னிருந்ததன்றி—தற்பணத்தில் - கண்ணாடியில்—தோன்றுமோ-தோற்றுமோ;எ-று• (இ-சு-க-ம்) வெளிப்படை ....(௭௰)

(அ-கை.) இ-து. (கவி) நாசமுற்பத்திமூர்ச்சைநனாக்கனாச்சுழுத்தியெல்லா; மேசுற
வொன்றினுள்ளொன்றில்லையாலிலதுண்டென்ன, மாசுறுமயக்கமட்டேமட்டறவள
ராநின்ற; தாசறுமனுபவங்க ளிருவகையவற்றைக்கேட்பாய் ... . *

(இ-ள்.) நாசம் - மரணமும்—உற்பத்தி - சநநமும்—மூர்ச்சை-மனோமயக்கமும்—நனா-சாக்கிரமும்—கனா - சொப்பனமும்—சுழுத்தி-சுழுத்தியுமாகிய—எல்லாம்- இவைகளனைத்தும்—ஏசுற - குற்றம்பொருந்த—ஒன்றினுள் - ஒன்றினிடத்தில்—ஒன்றில்லையால் - ஒன்றில்லாதபடியினால்—இலது - இல்லையென்பது—உண்டென - உள்ளதென்பது— மாசுறுமயக்கமட்டே- களங்கமுற்றபிரமையினளவே—மட்டறவளராநின்றது - அளவின்றிவிருத்தியாகின்றது—ஆசறுமனுபவங்கள் - குற்றமற்றவனுபவங்களானவை—இருவகை - இரண்டுவிதமாம்—அவற்றைக்கேட்பாய் - அவைகளைக்கேள்• எ-று. (இ-ம்) மயக்கத்திலுண்டான சத்தாவத்தை புதிலையற்றனவென்பதாம் .... (௭௧)

(அ-கை.) இ-து. (கவி) முன்னனுபவத்துக்கேற்ற முறைமையாய்ச்சிலவைதோன்
றும்,பின்னுறுபுதுமைத்தாகிப்பேதமாய்ச்சிலவைதோன்று, நின்னுடனின்னாசார
நின்குலநின்னொழுக்க, மென்னவேறன்றிநின்றா ளெதிர்நிழல்போலலீலை ...... *

(இ-ள்.) முன்னனுபவத்துக்கேற்ற- முன்னனுபவத்துக்குத்தகுந்த—முறைமையாம்-முறையாக—சிலவைதோன்றும் - சிலவுண்டாயிருக்கும்—பின்னுறுபுதுமைத்தாகி - பின்புள்ளநூதனமாகி—பேதமாய்ச்சிலவைதோன்றும் - பேதமாகச்சில வுண்டாயிருக்கும்—)ஆகையால்) நின்னுடல் - உனதுவடிவம்—நின்னாசாரம் - உனதாசாரம்— நின்குலம் - உனதுகுலம்—நின்னொழுக்கம் - உனதுநடை—என்ன - என்னும்படி— லீலை - (இந்த) லீலையானவள்—எதிர்நிழல்போல - முன்றோற்றியவுனதுநிழலைப்போல—வேறன்றிநின்றாள் - பேதமில்லாமலிருந்தாள். எ-று. (இ-ம்) பாவனாப்ரகரா முன்னனுபவத்திற் கொத்தவண்ணம் புதியலீலைதோற்றினாளென்பதாம் ....(௭௨)

(அ-கை) புதியலீலைவினாவுதல். (கவி) புரவலனினைவாலுன்னைப் போல்வடோன்றிநின்
றாள், விரவுமிட்போரிற்பட்டுவிடூரதன்பதுமனென்னு, நரபதியாகுமென்றநாமகள்வச
னங்கேட்டு, பரவினபுதியலீலைபணிந்திதுபகர்வதானாள் .... *

(இ-ள்.) புரவலனினைவால் - இராசாவினினைவினால்—உன்னைப்போல் - நின்னைப்போல

வே—இவடோன்றிநின்றாள் - இவளூருண்டானாள்—விரவுடவிப்போரிற்பட்டு- கலந்தவிந்துடுத்தத்திறந்து—விடுரதன் - விடுரதனானவன்—பதுமமென்னுநரபதியாகுமென்ற-பதுமமெனவிடிற்றவரசனானவனென்றுசொல்லிய—நாமகள்வசனங்கேட்டு - சரஸ்வதியினது வாக்கியத்தைக்கேட்டு—பாவினபுதியலீலை - புகழ்ந்தநூதனலீலையானவள்— பணிந்திதுபகர்வதானாள்-வணங்கியிதைச்சொல்லத்தொடங்கினாள். எ - று. .... (௭௩)

(அ-கை.) புதியலீலைவிரும்பினவரத்தைத்தேவியனுக்கிரகித்தல். (கவி) பண்டுநான் பூசைசெய்தபாமகள்போலுநீயே, விண்டவராலென்காந்தன்வீடினானுறைவதெங்கே, கண்டுநானங்கேயிந்தக்காயத்தோடெய்திவாழத், தண்டலில்வரநல்கென்னத் தந்தனமென்றலோடும் .... *

(இ-ள்.) பண்டுநான்பூசைசெய்த - முற்காலத்திலுன்பூசித்த—பாமகள்போலுநீயே-சரஸ்வதியைப்போலிருக்கின்றநீயே—விண்டவரால்- சத்துருவினால்—என்காந்தன்வீடினால்-எனதுபுருடனிறந்தால்—எங்கே - எவ்விடத்தில் —உறைவது- வசிப்பதோ—கண்டு-(அதைப்) பார்த்து—நானங்கே-யானந்தவிடத்தில்—இந்தக்காயத்தோடு-இச்சரீரத்துடன்—எய்திவாழ-போய்வாழும்படி—தண்டலில்வரம் - தடையில்லாதவரத்தை—நல்கென்ன- அருளெனக்கேட்க—தந்தனமென்றலோடும் - ஈந்தனமெனவும். எ-று. (இ-உ-க-ம்) வெளிப்படை... (௭௪)

(அ-கை.) பழையலீலைவினாவுதல். (கவி) புகன்றநாமகளைநோக்கிப்புராதனலீலைசொல்வா, ணிகழ்ந்தவென்னுடலோடன்றிநின்றவேற்றுடலைமேவி, யுகந்தலோகாந்தரத்துமுயர்கிரிநகரினூடு, மகன்றவாறென்கொலென்னவாரணத்தன்னைசொல்வாள் .... *

(இ-ள்.) புகன்றநாமகளைநோக்கி-(இப்படி) சொன்னசரஸ்வதியைப்பார்த்து—புராதனலீலைசொல்வாள் - பழையலீலைசொல்லுவாள்—நிகழ்ந்த - விளங்கிய — என்னுடலோடன்றி-என (தாதிபௌதிக) சரீரத்துடன்செல்லாமல்—நின்ற - இருந்த— வேற்றுடலைமேவி-வேறான (வாதிவாகிக) சரீரத்தைப்பொருந்தி—உகந்தலோகாந்தரத்தும்-உயர்ந்தமறுலோகத்திலும் —உயர்கிரிநகரினூடும்-மேலானகிரிக்கிராமத்திலும்—அகன்றவாறென்கொலென்ன-(நா)னீங்கினவிதமென்னவென்றுகேட்க—ஆரணத்தன்னைசொல்வாள்-வேதமாதாசொல்லுவாள். எ-று. (இ-ம்) எனக்குச்செல்லக்கூடாதென்னுந்தூலசரீரமிவளுக்கெப்படிசெல்லுமென்பதாம் (௭௫)

(அ-கை.) தேவியுத்தரம். (கவி) வேறு. ஒருவருக்குநாமொன்றுநல்கலமுணர்வின்வண்ணமேயுயிர்களெய்துமாற், கருதிமுந்திநீகதிவிரும்பினாய்காதலித்தசிற்கண்ணளித்தனம், பெருகுகாதலாலிந்தவண்ணமிப்பேதைவேண்டவிப்பேறுநல்கின, மிருதயத்திலேநினைந்ததெய்திடுமெமதுபார்வையாலியார்க்குமென்றனள் .... *

(இ-ள்.) ஒருவருக்கும் - ஒருவருக்கானாலும்—நாமொன்றுநல்கலம்-யாமொன்றுங்கொடுப்பதில்லை—உணர்வின்வண்ணமே- நினைவின்படியே—உயிர்களெய்தும்-சீவர்களடையும்—முந்திகருதி - முன்னமேநினைத்து—நீகதிவிரும்பினாய் - நீஞானத்தையாசித்தாய்—காதலித்தசிற்கண்ணளித்தனம் - விரும்பினஞானதிருஷ்டியைக்கொடுத்தோம்—பெருகுகாதலால்- மிகுந்தவாசையினால்—இந்தவண்ணம் - இந்தப்படி— இப்பேதைவேண்ட - இப்பெண்விரும்ப—இப்பேறுநல்கினம் - இவ்வரத்தைக்கொடுத்தோம்—இருதயத்தில் - மனதில்—நினைந்தது-கருதினது—எமதுபார்வையால் - எம்முடையகிருபாநோக்கினால்—இயார்க்குமெய்திடும் - யாவருக்குங்கிடைக்கும்—என்றனள் - என்றுசரஸ்வதிசொன்னாள். எ-று. (இ-ம்.) ஆத்மாக்கள்பாவனைப்படி யீஸ்வரன்கூட்டுவிக்கின்றதென்பதாம் .... (௭௬)

(அ-கை.) ஈஸ்வரானுக்கிரகம்பெற்ற மகான்மரிக்குங் காரணமியாதெனின். (கவி) திறல்விடுரதன்சினமிகுத்தனன் றேரிலேறினன் சேனையோடுபோய், மறலியூர்புகும் வழிநெருக்கமாய்மருவலாரொலாமடியமோதினு, னிறலுறுங்கொலென் றெண்ணியன்பறுலீலைவாணிதாளேத்தியன்னையே, விறன்மிகுந்துநின் கருணைமேவியும்வினையின்மாறுமோவேந்தனென்னவே .... *

(இ-ள்.) திறல்விடுரதன் - பலமுள்ளவிடூரதவரசன் — சினமிகுத்தனன் - கோபமிகுந்தவனாய்—தேரிலேறினன் - இரதத்திலேறி—சேனையோடுபோய் - சேனை (சமுத்திரத்துடன்) யுத்தகளத்திற்சென்று—மறலியூர்புகும்வழி- இயமபுரிக்குச்செல்கின்றமார்க்கமானது—நெருக்கமாம் - நெருங்கும்படி—மருவலாரொலாமடிய- சத்துருக்களனைவருங்கெட— மோதினான்-அடித்தான்—இறலுறுங்கொலென்றெண்ணி - மரிப்பானென்றுசிந்தித்து — அன்பறுலீலை-(நாயகனிடத்திற்) பிரியமாறுதலீலைகள்—வாணிதாளேத்தி - சரஸ்வதியினதுபாதத்தைத்துதித்து—அன்னையே - (எமது) தாயே—விறன்மிகுந்தும்- வீரத்தன்மைமிகுந்திருந்தும்—நின்

கருணைமேவியும்-உனதுகிருபையிருந்தும்—வேந்தன் - (எம) தரசன்—வினையின்மாளுமோ-(இப்) போரின்மரிப்பாரோ—என்ன - என்றுகேட்க. எ-று. .... (எ௭)

(அ-கை.) தேவியுத்தரம். (கவி) கதிவிரும்பலாற்கலைவிபுரேதன்கப்பிலாப்பதங்கலப்பதாயினு, னெதிரியானவிச்சிந்துவென்பவனிகலில்வெல்லவென்றெனையிறைஞ்சலால், விதியில்வென்றவன்வேந்தனுமென விளம்புபோதிலேவிடியமுன்றலு, மதிரமோதிமேலடர்ந்தவெங்களத்தனிகமொன்றுமற்றழிந்துபோனதே..................... *

(இ-ள்.) கலைவிபுரேதன்- கல்வியையுடையவிபுரேதனானவன்—கதிவிரும்பலால்- பாகதியையிச்சித்தலால்—கப்பிலாப்பதம் - இரண்டற்றபரமபதத்தை — கலப்பதாயினான் - கலக்கும்படியாயினான் — எதிரியானவிச்சிந்துவென்பவன் - எதிர்த்துவந்தவிச்சிந்துவரசனென்பவன் —இகலில்வெல்லவென்று - (தனது) வல்லமையினு(லிவனை)ச்செயிக்கவேண்டுமென்று—என்னையிறைஞ்சலால் - என்னைப்பூசித்ததினால்—விதியில்வென்று- நியமித்தபடியேசெயித்து— அவன்வேந்தனுமென - அவனரசனுவனென்று—விளம்ப,போதில் - சொல்லுஞ்சமயத்தில்—விடியமுன்றலும் - உதயகாலமாகவும்—அதிரமோதி - அதிரும்படியுத்தஞ்செய்து — மேலடர்ந்தவெங்களத்து - மேனெருங்கியவெம்மையாகியயுத்தகளத்தில் — அனிகமொன்றுமற்றழிந்துபோனது- (இரண்டிடத்திலுஞ்) சேனையொன்றுமில்லாமலிறந்தது. எ-று. (இ-உ-கம்)அவரவர்பாவனையே யிதற்குக்காரணமென்பதாம் .... (எ௮)

(அ-கை.) முற்பவமடைதற்கேதுவானயுத்தமுறைத்தல். (கவி) சிந்துநாமனுந்திறல்விபுரதச்செல்வவேந்தனுஞ்சிலைகளேந்தினு, ரிந்துபானுவுந்திசைகள்வானமுமெய்புமவாளியாலெங்குமூடினூர், முந்துவெங்கணைத் திரளெரிந்துதீ மூடுகியூழியின்முடிவையொத்தது, முந்துபாகனுந்தேரும்வில்லுமற்றுயர்விபுரதனொருவனுயினன்..................... *

(இ-ள்.) சிந்துநாமனும்- சிந்துவென்னும்பெயரையுடையவரசனும்—திறல்விபுரதன்-வீரமுள்ளவிபுரேதனுகிய— செல்வவேந்தனும்-சம்பத்துள்ளவரசனும்—சிலைகளேந்தினார்- வில்லுகளையெடுத்தார்—இந்துபானுவும் - சந்திரனுஞ்சூரியனும்—திசைகள் - திக்குகளும்— வானமும் - ஆகாயமும்—எய்புமவாளியால் - விடப்பட்டவம்புகளினால்—எங்குமூடினார் - எவ்விடத்துநிறைத்தார்கள் — முந்துவெங்கணை - முன்னெதிர்க்கின்றவெப்பமான பாணங்களின்—திரளெரிந்து - கூட்டங்களெரிந்து—தீமூடுகி - அக்கினிசுவாலைவியாபித்து — ஊழியின்முடிவையொத்ததும் - யுகமுடிவைப்போலிருக்குமளவில்—உந்துபாகனும் - தேரைநடத்தாநின்றசாரதியும்—தேரும் - இரதமும்—வில்லும் - தனுசும்—அற்று-அறுபட்டு—உயர்விபுரதன்-மேன்மையானவிபுரேதவரசன்—ஒருவனுயினன் - தனியனானான். எ-று. .... (எ௯)

(அ-கை) புதியலீலைபுருடன்செல்லுமிடத்திற்செல்லுதல். (கவி) பிறைநெடுஞ்சரங்கவசம்வீழ்வுறப்பிரித்துமெய்யெலாம்பிளந்துசிந்தலும்,பொறையழிந்துவீழ்ந்தவனைநோக்கிவெண்புண்டரீகையப்புதியலீலைபார்த், திறைவனுவிபோமெல்லையாயினனிவனைநண்ணநானேகநல்கெனு,வறைதலோடுமவ்வன்னைநல்கினளவளும்விண்ணினெய்தாகியேகினள்

(இ-ள்.) பிறைநெடுஞ்சரம் - அர்த்தசந்திரபாணத்தினால்—கவசம்வீழ்வுற-(வச்சிர)கவசஞ்சிதறிவிழும்படி—பிரித்து - பிளந்து— மெய்யெலாம் - தேகத்தி (னவயவங்கள்) யாவும்—பிளந்துசிந்தலும் - பிளக்கப்பட்டு(ச்சின்னபின்னமாய்ச்)சிதறுமளவில்— பொறையழிந்து-வலிமைநீங்கி—வீழ்ந்தவனை - (பூமியிற்) சாய்ந்தவிபுரேதனை—நோக்கி - பார்த்து— வெண்புண்டரீகையை - வெண்டாமரையாளை—புதியலீலைபார்த்து - நூதனலீலைபார்த்து — இறைவனுவிபோமெல்லையாயினன்-என்னுயகனுயிர்பிரியுஞ்சமயத்தையடைந்தான்—இவனைநண்ண-இவனைப்பொருந்த—நானேகநல்கெனு - யான்செல்லவருளென்று—அறைதலோடும்- சொன்னமாத்திரத்தில்—அவ்வன்னைநல்கினள் - அத்தாயாகிய (சரஸ்வதி) யனுக்கிரகித்தாள்—அவளும்-அந்தலீலையும்—விண்ணில்-ஆகாயத்தில்—நொய்தாகி-லேசாகி—ஏகினள்-போனாள்.எ-று [ப-ம்.] ஈஸ்வரானுக்கிரகத்தினாற்றூலசரீரமணுத்துவமானதென்பார், நொய்தாகியென்றார்.

(அ-கை.) இ-து. (கவி) கருமுகிற்றலங்கடந்துவாயுவின்கதிகடந்துவெங்கதிரினெல்லைவிட், டருகுதாரகர்பதமகன்றுமேலயனையாதியாமமரர்நாடொரீஇ, மருவுமிந்தவண்டம்பிளந்துபோய்வாரியாதியாய்வளைந்தயாவையு,முருவியெல்லையுமுடிவுமற்றதாமுண்மைஞானவிண்ணெல்லையெய்தினள் .... *

(இ-ள்.) கருமுகிற்றலங்கடந்து-மேகமண்டலத்தைக்கடந்து—வாயுவின்கதிகடந்து-வாதமண்டலத்தைக்கடந்து—வெங்கதிரினெல்லைவிட்டு - வெம்மையான சூரியமண்டலத்தைக்கடந்து—அருகுதாரகர்பதமகன்று-சமீபமானநக்ஷத்திரமண்டலத்தைக்கடந்து—மேலயனையாதியாம் - மேற்சத்தியலோகமுதலிய—அமரர்நாடொரீஇ - தேவலோகங்களைக்கடந்து—

மருவும் - பொருந்தாநின்ற—இந்தவண்டம்பிளந்துபோய் - இவ்வண்டத்தைக்கிழித்துக்கொண்டுபோய்—வாரியாதியாய்வளைந்தயாவையும்- சலமுதலானவேழாபரணத்தையும் —உருவி- ஊடுருவி—எல்லையும் - அளவும்—முடிவும் - அந்தமும்—அற்றதாம் - இல்லாததான—உண்மைஞானவிண் - தத்துவ சிதாகாயத்தை—ஒல்லையெய்தினாள் - சீக்கிரத்திலடைந்தாள். எ-று. ஆயரணமேழாவன; புனல்-அக்கினி-வாயவு-ஆகாயம்-அகங்காரதத்துவம்- மகதத்துவம்- பிரகிருதியெனக்கொள்க. (இ-௩-௧-ம்) வெளிப்படை.. (௪௧)

(அ-கை.) இ-து. (கவி) கற்பகோடிவெங்கருடனோடினுங்கடக்கொணுவத்திக்காடுகாய்த்தபோ, லுற்பவங்களாமண்டகோடியொன் றொன்றைநோக்குறு தளவவற்றினுளற்பமின்றியாவரணபேதமேயயல்வளைப்புறுமண்டமொன்றனுட், டற்பதங்கடந்தெய்தியம்புயச்சவங்கிடந்தமண்டபமடைந்தனள்.....................................*

(இ-ள்.) கற்பகோடி - அளவில்லாதகாலம்—வெங்கருடனோடினும் - வேகமாகக்கருடன்பறந்தாலும்—கடக்கொணு - கடக்கக்கூடாததாயும்— அத்திக்காடுகாய்த்தபோல் - அதிவனங்காய்த்திருக்கின்றனபோல — உற்பவங்களாமண்டகோடி - உதித்தனவாகியவளவற்றபிரமாண்டங்கள்—ஒன்றொன்றைநோக்குறுதள - ஒன்றையொன்றுபார்க்கக்கூடாததாயுமிருக்கின்ற—அவற்றினுள் - அவ்வண்டங்களுக்குள்—அற்பமின்றி- பெரிதாக—ஆவரணபேதம்-ஆவரணபேசமானது—அயல்வளைப்புறும் - அருகில்வளைந்துகொண்டிருக்கின்ற — அண்டமொன்றனுள் - ஓரண்டத்தினுள் —தற்பதங்கடந்தெய்தி - ஞானுகாயத்தைக்கடந்துபோய் — அம்புயன் - பதுமவாசனது—சவங்கிடந்த-ப்ரேதமிருந்த—மண்டபமடைந்தனள் - அந்தப்புரத்தைச்சேர்ந்தாள். எ-று. (இ-ம்.) தேவியனுக்கிரகத்தினுற்புதியலீலை பதுமனிடஞ்சேர்ந்ததாம்.

(அ-கை.) விடூரதன்முற்பவமடையச்செல்லுதல். (கவி) தமரவண்டுசூழ்மலரின்மூடுமிச்சவசரீரமாந்தரணிபாலனே, யெமதுநாயகன்கருணைவாணியாலென்கொன் முன்னமிங்கெய்தினேமெனு, வமரவெண்ணிவெண்கவரிவீசியங்கன்பனோர்புறத்தவளிருந்தபின், விமலஞானியாம்விறல்விடூரதன்மேவுசீவன்விண்மீதுபோயதே.*

(இ-ள்.) தமரவண்டுசூழ்- பெருங்கானஞ்செய்யுமளிகணிறைந்த—மலரின்மூடும்-புட்பங்களினுன்மறைக்கப்பட்ட—இச்சவசரீரமாம்- இப்ரேததேகமாகிய—தரணிபாலனே-பூபாலனே—எமதுநாயகன் - எம்முடையகணவன்—கருணைவாணியால் - கிருபையுள்ளசரஸ்வதியினுல்—என்கொல்- எப்படியோ—முன்னமிங்கெய்தினேமெனு- முன்னமேயிவ்விடம்வந்தோமென்று—அமரவெண்ணி - நன்றாய்ச்சிந்தித்து—வெண்கவரிவீசி - வெண்சாமரம்வீசிக்கொண்டு —அங்கு- அவ்விடத்தில்—அன்பனோர்புறத்து - (தனது) நாயகனுடைய வொருபக்கத்தில் —அவளிருந்தபின்-அப்புதியலீலையிருந்தபின்பு—விமலஞானியாம்- நின்மலஞானியான— விறல்விடூரதன் - மகாஞனவிடூரதவரசன்—மேவுசீவன் -பொருந்தியசீவனுனது—விண்மீது போயது - ஆகாயத்திற்சென்றது. எ-று. .... (௪௩)

(அ-கை.) மூற்பவத்திற் புகுவிக்குநிமித்தமபேதஞானத்தாற்பேதஞானத்தைத்தடுத்தல். (கவி) ஞானநோக்கினுரவனைநோக்கிவிண்ணடைந்துபின்வருநங்கைமார்தமைத், தானறிந்திடாதகன்றசீவன்போய்ச்சவமிருந்தமண்டபமடைந்திடப், போனமாதரும்புதியலீலையைப் புரிந்துநோக்கினுர்பொன்செய்மண்டபத், தானசீவனைத்தகைந்துமீளவுமம்புயாசனத்தவணிறுத்தினுள்.....................................*

(இ-ள்.) ஞானநோக்கினுர்-ஞானதிருஷ்டியையுடையலீலைசரஸ்வதியென்னுமிருவர்— அவனைநோக்கி- அவ்விடூரதசீவனைப்பார்த்து—விண்ணடைந்து- ஆகாயத்திற்சென்று—பின்வரும் - பின்வருகின்ற—நங்கைமார்தமை - சிறந்தமாதர்களை — தானறிந்திடாது - தானறியாமல்—அகன்றசீவன்போய் - நீங்கினசீவனுனது (நரகத்திற்) சென்று— சவமிருந்தமண்டபம் - (பதும) ப்ரேதமிருந்தவந்தப்புரத்தை—அடைந்திட - அடைய — போனமாதரும்- (உடன்) சென்றவிவ்விரண்டுஸ்திரீகளும்—புதியலீலையை - புதிதானலீலையை—புரிந்துநோக்கினுர் - விரும்பிப்பார்த்தார்கள்—பொன்செய்மண்டபத்து - சுவணத்தினுற்செய்தமண்டபத்தில்—ஆனசீவனை - பொருந்தியசீவனை—தகைந்து - தடுத்து—மீளவும் - திரும்பவும்— அம்புயாசனத்தவள் - பதுமாசனத்தையுடையசரஸ்வதியானவள்—நிறுத்தினுள்-மேற்செல்லாமற்றடுத்தாள். எ-று. (இ-௨-௧-ம்) விடூரதஸ்புரணமுன்னுள்ளபாவனுஸ்தானமடைந்ததாம். (௪௪)

(அ-கை.) ஆதிபௌதிகசரீரமறைந்ததியாதெனின். (கவி) பண்டைலீலைதன்மேனிகண்டிலாள்பாமடந்தையைப் பணித்துகேட்டலு, மண்டுசிந்தைபோய் நிறைசமாதியான்மறிந்துவீழ்ந்தமெய்ப் மாண்டதாமெனக், கொணடமைச்சர்வெங் கனல்

கொளுத்தினர் குரம்பையோடுநீ குவலயத்துறி, லண்டர்வானினின் றுடலொடேகி
னுளந்தலீலையென் றதிசயிப்பரால் .... *

(இ-ள்.) பண்டைலீலை - பழையலீலையானவள்—தம்மேனிகண்டிலாள் -தன(தாதிபௌதிக)சரீரத்தைக்காணமல்—பாமடந்தையை - சரஸ்வதியை—பணிந்துகேட்டலும்- வணங்கிக்கேட்கவும் — மண்டுசித்தைபோய் - (கற்பனை) மிகுந்தமனோநாசமாய் — நிறைசமாதியால்-பூரணநிஷ்டையினுல்—மறிந்துவீழ்ந்தமெய் - மறிந்து (கீழே) விழுந்தசரீரத்தை— மாண்டதாமெனக்கொண்டு - இறந்ததாமென்(றெண்ணிக்) கொண்டு—அமைச்சர்-மந்திரிகள்—வெங்கனல்கொளுத்தினர் - கொடியவக்கினியினுற் றகனம்பண்ணினுர்கள்—குரம்பையோடு - (இவ்வாதிவாகிக) சரீரத்துடன்— நீகுவலயத்துறில் - நீயிப்பூமியின்கண்ணிருந்தால் — அண்டர்வானினின்று-தேவலோகத்திலிருந்து—அந்தலீலை-முன் (மரித்த) லீலையானவள்—உடலொடேகினளென்று-சரீரத்துடன்வந்தாளென்று—அதிசயிப்பார்-(யாவரும்) வியப்பார்கள். எ-று. *

(அ-கை.) இ-து.(கவி)சூக்கமெய்யினேடிருந்துவாதனைத்தோற்றமாற்றலாற்றூலகாயநீ,
போக்கலாயதென்றிவளுக்கோதியப் புதியலீலையிப்போதுகாண்கெனு, வாக்கின்செல்வி
யுண்ணினைந்தவெல்லையின்மறைந்துநின்றவர்நிறைந்துதோன்றலும், பாக்கியங்கள்போற்
கண்டலீலையப்பாவைமார்பதம் பணிந்திறைஞ்சினுள் .... *

(இ-ள்.) சூக்கமெய்யினேடிருந்து - ஆதிவாகிகசரீரத்துடனிருந்து — வாதனைத்தோற்றமாற்றலால் - வாசனையைநீக்கினபடியால்—தூலகாயம் - ஆதிபௌதிகசரீரத்தை — நீபோக்கலாயதென்று - நீதள்ளத்தக்கதென்று—இவளுக்கோதி - இந்தலீலைக்குச்சொல்லி—அப்புதியலீலை-அந்த நூதனலீலையானவள் —இப்போதுகாண்கெனு-இப்போது(நம்மைக்)காணக்கடவளென்று—வாக்கின்செல்வி-சரஸ்வதியானவள்—உண்ணினைந்தவெல்லையில்-மனதிற்சங்கற்பித்தமாத்திரத்தில்—மறைந்துநின்றவர்- தெரியாதிருந்தவர்கள்—நிறைந்துதோன்றலும்-ப்ரத்யக்ஷமானவளவில்—பாக்கியங்கள்போல்-(தான்பெற்ற) செல்வங்களைப்போல—கண்டலீலை-தெரிசித்தலீலையானவள்—அப்பாவைமார்பதம் - அத்தேவிகளின்பாதங்களை — பணிந்திறைஞ்சினுள்-வணங்கித்தோத்திரஞ்செய்தாள். எ-று. (இ-உ-க-ம்.) பிரமாட்பியாசமுதிர்ச்சியா லாதிவாகிகசரீரம் பெற்றவர்களுக் காதிபௌதிகசரீரமறையுமென்பதாம் .... (அசு)

(அ-கை.) முற்பவமடைந்தமுத்தனுதல். (கவி) போதவாணியும்பழையலீலையும்
புதியலீலையும்புணர்ந்திருந்துழி,சாதிமென்மலர்வாசம்விட்டெனச்சலசமாதுயிர்த்
தடைவிடுத்தலும், வாதரூபமாய்நாசியூடுபோய்வறந்தமெய்யெலாநிறைந்துலாவி
டச்,சீதமாகிநெய்த்துளிபரந்துகண்டிறந்தெழுந்தனன்செத்தமன்னவன் .... *

(இ-ள்.) போதவாணியும்- ஞானஸ்வரூபியாகியசாஸ்வதியும்—பழையலீலையும்-புராதனலீலையும்—புதியலீலையும் - நூதனலீலையும்—புணர்ந்திருந்துழி- கூடியிருந்தவிடத்தில்—சாதிமென்மலர் - (மிருதுவாகிய) சாதிபுட்பமானது —வாசம்விட்டென- வாசனையைவிட்டதுபோல—சலசமாது - சரஸ்வதியானவள்—உயிர்த்தடைவிடுத்தலும்- சீவன்றடையைவிட்டுவிடவும்—வாதரூபமாய் - பிராணரூபமாய்—நாசியூடுபோய் - மூக்கினுட்சென்று— வறந்தமெய்யெலாம் - உலர்ந்தசரீரம்யாவும்—நிறைந்துலாவிட- பரந்துவியாபிக்க—சீதமாகி-குளிர்ச்சியாகி—நெய்த்துளிபரந்து - இரத்தமுண்டாய்—கண்டிறந்து-கண்விழித்து—செத்தமன்னவன் - மரித்தவரசன்—எழுந்தனன் - எழுந்தான். எ-று. (இ-ம்) சத்தாமாத்திரமாய்விளங்குஞ்சைதன்யத்தினைபேதஞானத்திலுண்டான பேதஞானமானது நூதனம்புராதனமென்னுமிரண்டிற்புராதனவடிவமானதாம் .... (அஎ)

(அ-கை.) வினுவிடை. (கவி) இங்குநின்றுளாரெவர்கொ லென்றுவாணிடிமுழக்க
மொத்திவனுரைத்தது,மங்குநின்றுளாள்வணங்கியிப்பவத்தடுத்ததேவிநானருகுதா
ழ்ந்தவிம்;மங்கையாரெனவென்னையொப்பநீமனத்திலெண்ணலான்மகிழவந்துளா,
மங்கவாணியிங்கிருந்துளாளெனத்தொலலைலீலையேதோன்றவோதினுள் .... *

(இ-ள்.) இங்குநின்றுளார் - இவ்விடத்திலிருக்கின்றவர்கள்— எவர்கொலென்று-யாரென்று—வாணிடிமுழக்கமொத்து - பேரிடியின்சப்தத்துக்கொப்பாக—இவனுரைத்தலும்-இப்படிமவரசன்கேட்கவும்—அங்குநின்றுளாள்- அங்கிருந்தலீலையானவள்—வணங்கி-(அரசனை) நமஸ்கரித்து—நான் - யான் — இப்பவத்தடுத்ததேவி - இந்தேகத்துக்குகந்தருந்தமனைவி—அருகுதாழ்ந்த - (உன்) பக்கத்தில்வணங்கின—இமமங்கையாரென- இப்பெண்ணாரென்றுகேட்க—என்னையொப்ப - என்வடிவத்தைப்போல — நீமனத்திலெண்ணலால் - நீமனதினினைத்ததினுல்—மகிழவந்துளாள் - நீசுகிக்கவந்தவள் — இங்கிருந்துளாள் - இவ்விடத்திருப்பவள்—

துங்கம் - பரிசுத்தமாகிய—வாணியென - சரஸ்வதியென்று—தொல்லையில்லை - பழமையில்லையானவள்—தோன்றவோதினள் - தெரியச்சொன்னாள். எ-று. .... (அஅ)

(அ-கை.) தேவிமானுக்கிரகித்தெழுந்தருளுதல். (கவி) பகருமெல்லையிற்பதமிறைஞ்சுமிப்பதுமவேந்தனைப்பாமடந்தைதன், நிகழுமங்கையாற் சென்னிதீண்டிநீ தேவிமாரொடுஞ்சிறந்துவாழ்வுறப், புகழுஞ்செல்வமும் பெருகவையகம்பொலிக நீதெலாம் போகவெங்கணு, நிகழுமேன்மையோர் நிறைகநீடெனு நிமலவாணிதன்னிலயமேவினள் .... *

(இ-ள்.) பகருமெல்லையில் - (இப்படியென்றுலீலை)சொன்னமாத்திரத்தில்—பதமிறைஞ்சும் - பாதத்தில்வணங்கிய—இப்பதுமவேந்தனை - இப்பதுமவாசனை—பாமடந்தை- சரஸ்வதியானவள்—தன்நிகழுமங்கையால் - தனதுப்ரகாசிக்கின்றவழகிய அஸ்தத்தினல்—சென்னிதீண்டி - சிரசைத்தொட்டு—நீதேவிமாரொடும் - நீபாரியர்களோடும்—சிறந்துவாழ்வுற - சிறந்துவாழவும்—புகழும் - (நல்ல)கீர்த்தியும்— செல்வமும் - (மேலான) சம்பத்தும் — பெருகவளரவும்—வையகம்பொலிக- சகத்தி(லுள்ளசனங்கள்)விளங்கவும்—தீதெலாம்போக-தீமைகளனைத்துநீங்கவும்—எங்கணும் - எவ்விடத்தும்—நிகழுமேன்மையோர்-ப்ரகாசிக்கின்றமகான்கள்—நிறைய - நிறைந்திருக்கவும்—நீடெனு - நீசுகித்திருப்பா (யென்றருள்செய்து) —நிமலவாணி - நின்மலமானசரஸ்வதி—தன்னிலயமேவினள்-தனதிடத்திற்கெழுந்தருளினள். எ-று. (இ-உ-கம்.) வெளிப்படை...(அகூ)

(அ-கை) விதேகமுத்தனுதல். (கவி) வாழிவாணிநாமங்கைவாழிசொன்மாதுவாழியென்றினிதுவாழ்த்தியே, யாழிமன்னனுந்தேவிமார்களுமயுதமெட்டியாண்டரசுசெய்தபின், னேழிரும்பவந்துடைத்துவாணிமுன்னியம்புசீவன்முத்தியிலிருந்துபின், னூழிபெயரினுஞ்சிறிதுபெயர்விலாவுடலிறந்தவீடொன்றிமேவினர்.. .... *

(இ-ள்.) வாணிவாழி - சரஸ்வதிவாழ்க—நாமங்கைவாழி - நாமகள்வாழ்க— சொன்மாதுவாழியென்று - கலைமகள்வாழக்கடவதென்று — இனிதுவாழ்த்தி - இனிமையாகத்தோத்திரஞ்செய்து—ஆழிமன்னனும்- சக்கரவர்த்தியானபதுமவாசனும்—தேவிமார்களும்-பாரியர்களும்—அயுதமெட்டியாண்டு- எண்பதினாயிரம்வருடம் — அரசுசெய்தபின் - பூபாலனஞ்செய்தபின்பு — ஏழிரும்பவந்துடைத்து - ஏழுவகையாகியபெரியசநநங்களை (யிப்போதே) கெடுத்து—வாணி - சரஸ்வதியானவள்—முன்னியம்பு - முன்னனுக்கிரகஞ்செய்த—சீவன்முத்தியிலிருந்து - சீவன்முத்திபதத்துடன் (பூமியி) லிருந்து—பின்னூழிபெயரினும் - பின்பு மகாகற்பமிறந்தாலும்—சிறிதுபெயர்விலா - அற்பமாகினுங்கெடாத—உடலிறந்த - விதேகமுத்தியான—வீடொன்றிமேவினர்-மோக்ஷத்தையடைந்தார்கள். எ-று.(இ-ம்.)சுத்தவாசனையோடுஞ்சீவன்முத்தர்களாயிருந்துபின்வாசனுக்ஷயமானவிதேகமுத்தியைப்பெற்றதாம்(கூ0)

லீலைகதைமுற்றிற்று. ஆகூகதை - ௫௩ - கவிதை (௬௨௬)

கற்கடி கதை.

(அ-கை.) முன்புசைதன்யவுல்லாசமாய்த் தோற்றினப்ரபஞ்சஞ் சைதன்னியதிருஷ்டியானசிக்கும்பொருட்டுஅச்சகத்தைமாயாவிசித்திரமென்பதைப்பூரணமாயறிவித்து-அதற்குசிஷ்டானமான சைதன்யதிருஷ்டிப்ரசன்னமாம்பொருட்டுஅதன்விலாசத்தைக்கற்கடிகதையிலிருபிக்கிறார்..... .... *

(அ-கை) பிரமமேநித்தியமெனல். (கவி) வேறு. காட்சியென்னுங்குற்றமறக்கழித்தலீலைகதையாலே, யாட்சியானசகமென்னுமதிபாரத்தையறவிடுவாட்,சூட்சியானவுலகமெனுந்தோற்றமுடைத்தாப்பேதமற, மாட்சிஞானசுகவடிவாய் வயங்கும்பிரமமேயுளதே.. *

(இ-ள்.) காட்சியென்னும் - திரிஸ்யமென்கின்ற—குற்றமற - களங்கநீங்க—கழித்த- சொல்லிய—லீலைகதையால் - லீலையின்கதையினுல்—சூட்சியான- அற்பமாகிய—உலகமென்னும்-சகமென்கின்ற—தோற்றமுடைத்தாய்- பிறிதிடையையுடையதாய்—பேதமற-அபேதமாக—

மாட்சி - மகத்தானசத்தும் — ஞானம் - சித்தும்—சுகம்- ஆநந்தமுமே—வடிவாய்-ஸ்வரூபமாய்—வயங்கும் - ப்ரகாசிக்கின்ற—பிரமமேயுளது-பிரமஸ்வரூபமேயுள்ளதென்றறிந்து— ஆட்சியான-கெடுதற்குரித்தாகிய—சகமென்னும் - உலகமென்கின்ற — அதிபாரத்தை-பெருப்பாரத்தை —அறவிடுவாய் - ஒருங்கேநீக்குவாய். எ-று. (இ-ம்) சகத்துப்ரமாணிகமல்ல அதுவாகவிளங்கு ஞாநாநந்தமே ப்ரமாணிக மென்பதாம்.. ………………………… (௧)

(அ-கை.) பிரமமொன்றே நித்தியமெனிற் சீவன்யாதெனின். (கவி) அதனுக்கிணை
யாய்ப்புகலரிதா யகன்றுநிறைந்தாழ்ந் தமலமதாய்ச், சதமதறிந்தோர்களுமியல்பு
சாற்றற்கரிதாய்ச் சாந்தமதாய்த்; திதமுற்றசையாக்கடலென்னத்தீபமென்னத்திக
ழ்கின்ற; முதன்மைபிரமத் தொளிதானேமுடிவில் பரமாகியசீவன் ……………… *

(அ-கை.) அதனுக்கிணையாய் - அப்பிரமத்துக்கொப்பாகியும்—புகலரிதாய் - வசனிப்பதற்கரிதாகியும்—அகன்று - வியாபித்து—நிறைந்து-பரிபூரணமாய் — ஆழ்ந்து - செப்பிரமாயிருக்கின்ற—அமலமதாய் - நின்மலமாகியும்—சதமதறிந்தோர்களும் - சத்தைபுணர்ந்தவர்களும்—இயல்புசாற்றற்கரிதாய் - (அதின்) குணத்தைச்சொல்லக்கூடாததாகியும்—சாந்தமதாய் - உபசாந்தமாகியும்—திதமுற்று - ஸ்திரம்பொருந்திய—அசையாக்கடலென்ன- அலைவற்றசமுத்திரத்தைப்போலவும்—தீபமென்ன - (காற்றில்லாத) தீபத்தைப்போலவும்— திகழ்கின்ற - ப்ரகாசிக்கின்ற—முதன்மை - முதன்மையான —பிரமத்தொளிதானே - பிரமப்பிரகாசமே—முடிவில் - முடிவில்லாத— பரமாகியசீவன் - மேலானசீவனும். எ-று.(இ-ம்) பிரமப்ரகாசமான வபேதஞானமே சீவனென்பதாம். ……………………………(௨)

(அ-கை.) பிரமப்ரகாசமே சீவனாயின் மனமென்பதுயாதெனின். (கவி) தனையுண்
டாக்குநீள்விரகாற் சற்றுநெருப்புதடிப்பதுபோ;லிணையசீவன்கனவறிவாலியானெ
ன்றுணர்ந்துசங்கற்ப, நினைவினுலேயகங்கரிக்கு நிறைந்தசீவன்காரணமாய், வினை
யுஞ்சித்தமனம்பகுதி மாயையெனும்பேர் வகுத்துரைப்ப……………………… *

(இ-ள்.) தனையுண்டாக்கும் - அக்கினியையுண்டாக்குகின்ற—நீள்விரகால் - மிகுந்தவிந்தனத்தினுல்—சற்றுநெருப்பு - அற்பமானவக்கினி — தடிப்பதுபோல் - மிகுவதுபோல— இணையசீவன் - இப்படிப்பட்டசீவன் — கனவறிவால் - (பகிர்முகத்தில்) விரிந்தவுணர்வினுல் —இயானென்றுணர்ந்து - நானென்று(பேதமாக) வறிந்து—சங்கற்பநினைவினுல்- சங்கற்பவுள்முகத்தினுல்—அகங்கரிக்கும் - அகங்காரத்தையடையும்—நிறைந்தசீவன் - பூரணமானசீவனுக்கு—காரணமாய் - (இவ்வகம்பாவம்) காரணமாக— வினையுஞ்சித்தம் - சிந்தனைசெய்கின்ற சித்தமும்—மனம் - மனமும்—பகுதி - பிரகிருதியும்—மாயை - மாயையும் — எனும்பேர்- என்கின்றநாமங்களை — வகுத்துரைப்ப- (சத்துக்கள்)பகுத்துச்சொல்லுவார்கள். எ-று(இ-ம்) பிரமப்ரகாசத்தைப் பேதமாயறியுஞ் சங்கற்பமே மனமென்பதாம்…………………………(௩)

(அ-கை) பிரமப்ரகாசபேதமேமனமாயிற்சகத்தென்பதுயாதெனின்.(கவி)இனத்
தாற்படருமனம்பரமனேதுவாயிப்படிதோன்று, மனத்தால்விரிந்த சகமெல்லா
மனனவடிவேமற்றில்லை, கனத்தாற்கரைதீர்பலவறிவாங்கல்லோலச்சிற்கடல்பொங்
குந், தினத்தாணீண்டகனவொப்பசித்தவசத்தாற்சகந்திரமாம்…………………… *

(இ-ள்.) இனத்தாற்படருமனம் - சங்கற்பவிகற்பங்களினுல்விரிகின்றமனமானது— பரமனேதுவாய் - பிரமங்காரணமாய் — இப்படிதோன்றும் - இந்தப்ரகாரமுண்டாகும்—மனத்தால்-மனதினுல்—விரிந்தசகமெல்லாம்-(தோன்றிப்) பரவியவுலகங்களியாவும்—மனனவடிவே -மனோரூபமே—மற்றில்லை-வேறில்லை—கனத்தாற்கரைதீர்-மிகுதியினுலளவில்லாத—பலவறிவாம் - விருத்திஞானமாகிய—கல்லோலம் - பேரலையையுடைய—சிற்கடல்பொங்கும்- ஞானசாகரம்ப்ரகாசிக்கும்—தினத்தால் - காயங்களினுல்—நீண்டகனவொப்ப - நெடியசொப்பனத்துக்கொப்பாக—சித்தவசத்தால் - மனதின்வயத்தினுல்—சகந்திரமாம் - உலகமானதுநிச்சயமாம். எ-று. (இ-ம்)பிரமசங்கற்பாகாரமேசகம்போலத்தோற்றுமென்பதாம்…..(௪)

(அ-கை.) இப்படியாயிற்பேதமாகாதோவெனின். (கவி) தெரியாவறிவிற் கள்வ
னெனத்தெளியாமையினுலுலகுண்டா,மரியாப்பிரமத்தொடுசீவன்மறந்தும்பேத
மிலாததுபோற், பிரியாசசீவசித்தங்கள்பேதமிலலையிதுபோலத், தரியாச்சித்தஞ்
சகங்களுக்குச்சற்றும்பேதமுளதாகா………………………………………… *

(இ-ள்.) தெரியாவறிவில் - (கட்டையென்) றறியாதவறிவினுல்—கள்வனென- கள்ளன் (தோற்றுவது)போல—தெளியாமையினுல்-(சர்வம்பிரமமெனத்) தெளிவுண்டாகாமையின்— உலகுண்டாம் - சகமுண்டாகும்—மரியாப்பிரமத்தொடு - நாசமற்றபிரமத்துக்கும்—சீவன்,

சீவனுக்கும் — மறந்தும்பேதமிலாததுபோல் - மறந்தவிடத்தும்பேதமில்லாததுபோல— பிரியாச்சிவசித்தங்கள் - நீங்காதசீவனுக்குஞ்சித்தத்துக்கும்—பேதமில்லை - பேதங்களில்லை— இதுபோல - இதைப்போல—தரியா - நிலையாத— சித்தஞ்சகங்களுக்கும் - மனதுக்குமுலகங்களுக்கும் - சற்றும்பேதமுளதாகா - அற்பமும்பேதமுண்டாகாது. எ-று. (இ-ம்) பிரமப்ரகாசமே சீவன்முதலியயாவுமாய் விளங்குதலின் அபேதமேயாமென்பதாம் ………………… (ரு)

(அ-கை.) இதற்குத்திருஷ்டாந்தம்யாதெனின். (கவி) இதுகாரணமாமொருகதை பண்டிகலாரரக்கியியம்பியது, முதுவாம்விஞுவாலறிபொருள்கண் முழுதுந்தெளியத்தெளிவிப்ப, தநுநீகேட்பாயிமவானுக்கயலுத்தரபாலமர்கிற்பாள், விதுவாமெயிற்றுக்கற்கடிப்பேர்பேழ்வாயரக்கிமின்கண்ணுள் ………………… *

(இ-ள்.) இதுகாரணமாம் - இதுவேதுவாகிய—ஒருகதை- ஓரிதிகாசம்—பண்டு-முன்னமே—இகலாரரக்கி - பலம்பொருந்தியவிராட்சதியானவள் — இயம்பியது - சொல்லிய— முதுவாம்விஞுவால் - முதிர்ந்தவிஞுவினுல்—அறிபொருள்கண்முழுதும்- அறியவேண்டியவருத்தங்கள்யாவையும்—தெளிய- தெளியும்படி—தெளிவிப்பது—தெளியச்செய்வதாம்—அது நீகேட்பாய் - அதைநீகேட்கக்கடவாய்—இமவானுக்கு - இமயகிரிக்கு—அயலுத்தரபால்-வடபக்கத்தில்— அமர்கிற்பாள்- இருப்பவள்—கற்கடிப்பேர்-கற்கடியென்னுநாமத்தையுடைய—அரக்கி - இராக்ஷதி—விதுவாமெயிற்று - பிறைபோன்றதந்தங்களும்—பேழ்வாய் - பெரியவாயும்—மின்கண்ணுள் - மின்போன்றவிழியுமுடையவள். எ-று. ………………… (சு)

(அ-கை.) இ-து. (கவி) கருமேருவைப்பெண்வடிவாகக் கைகால்வகுத்ததெனத் திரிவா, ளுருமேறனையசிறுநகையாளோடாமீன்போலுழல்கண்ணுள், பெருமேனியைத்தாங்கிருகுறங்கும்பேரீச்சென்னப்பெரிதுடையாள், வருமேகத்தைப்பிளக்குநகம்வயிடூரியத்தின்சுளகொப்பாள் ………………… *

(இ-ள்.) கருமேருவை-கறுத்தபருப்பதத்தையே—பெண்வடிவாக-மகளிருருவமாக— கைகால்வகுத்ததென - கரசரணங்களாகச்செய்ததென்னும்படி—திரிவாள்- சஞ்சரிப்பவள்— உருமேறனைய-இடியையொத்த—சிறுநகையாள்-புன்சிரிப்பையுடையவள்—ஓடாமீன்போல்- ஓடாமற் (சுழலு) மச்சத்தைப்போல—உழல்கண்ணுள் - சுழலப்பட்டகண்களையுடையவள்— பெருமேனியைத்தாங்கு - பெரிதானசரீரத்தைச்சுமக்கின்ற—இருகுறங்கும் - இரண்டுதுடையும்—பேரீச்சென்னப்பெரிதுடையாள் - பேரீச்சமரமென்னும்படிபருமனுடையவள்—வருமேகத்தைப்பிளக்கும் - வராநின்றமுகிலைக்கிள்ளுகின்ற—வயிடூரியத்தின்சுளகொப்பாள்-வயிடூரியமுறத்துக்கொப்பாகவுடையவள். எ-று. (இ-உ-க-ம்) கற்கடியின்விஞுவையறிவிக்கும்பொருட்டவளுடையவவயவங்களைவருணித்ததாம் ………………… (எ)

(அ-கை.) கற்கடிசிந்தித்தல். (கவி) பாழிப்புவிமேலுயிரையெலாம்பகலுமிரவுஞ் சொரிந்திடவு, மூழிக்கனல்போலவியாதவுதரக்கனலாலுள்ளழிந்து, காழிக்கிளர்நாவலன்றீவிற்காணப்படுமன்னுயிரெல்லா, மாழிக்கிடைவீழ்நதித்திரள்போலருந்திற்சிறிதாருயிர்நிற்கும் ………………… *

(இ-ள்.) பாழிப்புவிமேல் - விசாலமானபூமியின்கண்ணுள்ள—உயிரையெலாம்- பிராணிகளனைத்தையும்—பகலுமிரவுஞ்சொரிந்திடவும் - அகோராத்திரமாகப்பெய்யவும்—ஊழிக்கனல்போல் - வடவானலம்போல—அவியாத - தணியாத—உதரக்கனலால் - உதராக்கினியினுல்—உள்ளழிந்து - மனநொந்து—காழிக்கிளர்-கடினமாகப்ரகாசிக்கின்ற—நாவலன்றீவில்-சம்புத்தீவில் — காணப்படுமன்னுயிரெல்லாம் - பார்க்கப்படுகின்றபிராணிகளனைத்தையும்— ஆழிக்கிடை - சமுத்திரத்தினிடத்தில்—வீழ்நதித்திரள்போல்- விழுகின்றவாறுகளைப்போல— அருந்தில்-புசிக்கில்—சிறிதாருயிர்நிற்கும் - (அற்பாகாரமாக)சீவன்மெலிவுற்றிருக்கும். எ-று. (இ-ம்.) போகங்கைக்குநிமித்தமதைமிகவுமனுபவிக்கத்தோற்றினதாம் ………………… (அ)

(அ - கை.) மூர்த்தி தியானஞ்செய்தல். (கவி) மழையாலவியுங் கானலெனவயிற்றிலெரியுஞ்சிறிதவியும், பிழையாதிதனைத்தவம்புரிந்து பிரமனருளாற் பெறுதுமெனு, முழையாரிமயகிரிமேவி மூழ்கியொருகாலுறநின்று, புழையார் விழியாலுவானிற்பொலியுங்கதிரையெதிர்நோக்கி ………………… *

(இ-ள்.) மழையால் - வருஷித்தினுல்—அவியுங்கானலென- தணியுங்கானலைப்போல— வயிற்றிலெரியுஞ்சிறிதவியும் - உதராக்கினியுங்கொஞ்சந்தணியும்—பிழையாது - குற்றம்வராமல்—இதனை - இவ்வுதராக்கினியை—தவம்புரிந்து - (தணிப்பதற்குத்) தவஞ்செய்து—பிரமனருளால்-பிரமதேவரனுக்கிரகத்தினுல்—பெறுதுமெனு-பெற்றுக்கொள்ளுவோமென்று—முழையாரிமயகிரிமேவி-குகைகணிறைந்தவிமயமலைக்குப்போய்—மூழ்கி- ஸ்நானஞ்செய்து—

ஒருகால் - ஒருபாதம்—உறநின்று - (பூமியிற்) பொருந்தநின்று—புழைடார்விழியால்- துவாரம்பொருந்தியகண்ணினால்—நடுவானில் - ஆகாயமத்தியில்—யொலியுங்கதிரை - ப்ரகாசிக்கின்றசூரியனை—எதிர்நோக்கி - (பகலி) னேரோபார்த்து. எ-று. ஒருகாலுறநின்றெென்றதனான்மற்றொருகாலுபரவெடுத்ததெனவும்-கதிரையெதிர்நோக்கியென்றதனாற்பகலிற்சூரியனையுமிரவிற்சந்திரனையும்பார்த்ததெனவுங்கொள்க. (இ-ம்) தவச்சின்னமுரைத்ததாம்.................. (கூ)

(அ-கை.) உபாசனாமூர்த்திப்ரசன்னமாதல். (கவி) வருந்திநின்றுவுயர்தவத்தில்வரு
டமோராயிரஞ்செலுத்த, திருந்துகமலத்தயன்வந்தான் றீயோரெனினுமருந்தவத்
தாற், பொருந்துறாதபொருளுண்டோபுண்டரீகன்போதவுமுன், னிருந்தபடியே
யிருந்தரக்கியிதயத்திறைஞ்சியிதுநினைந்தாள்........................ .... *

(இ-ள்.) வருந்திநின்று - வருத்தமுற்றுநின்று—உயர்தவத்தில்-மேலானதவத்தினால்—வருடமோராயிரஞ்செலுத்த - ஆயிரவருடம்நடத்த—திருந்து-திருத்தமாகிய—கமலத்தயன்-தாமரையில்வசிக்கின்றபிரமன்—வந்தான் - ப்ரத்யக்ஷமானார்—தீயோரெனினும் - தீமையையுடையவராயினும்—அருந்தவத்தால் - அரியதவத்தினால்—பொருந்தாறாதபொருளுண்டோ-அடையக்கூடாதவஸ்துக்களுண்டோ — புண்டரீகன்போதவும் - தாமரையையுடையவன்வரவும்—முன்னிருந்தபடியேயிருந்து - முன்னிருந்தவரசின்படியேயிருந்து—அரக்கி-இராக்ஷதியானவள்—இதயத்திறைஞ்சி - மனதில்வணங்கி—இதுநினைந்தாள் - இதைச்சிந்தித்தாள்.எ-று. (இ-ம்.) வெளிப்படை...... .... (ய)

(அ-கை.) கேட்கவேண்டுமபிப்ராயத்தைச்சிந்தித்தல். (கவி) தாவுமுதரக்கனறணி
யச்சற்றுமிரும்பாற்சமைந்தவொரு, சீவசூசிவடிவாலாற்செகத்தோருடலங்களிற்பு
குந்து, மேவுமிரைகள்வேண்டியதுவிழுங்கலாமென்றுணர்வாளை, யாவதெண்ண
முனக்கென்னவிசைத்தவயனுக்கிவளிசைப்பாள்.............. .... *

(இ-ள்.) தாவும் - தாவுகின்ற—உதரக்கனறணிய - பசிதணியும்பொருட்டு—சற்றுமிரும்பால் - அற்பமானகருந்தாதால்—சமைந்த - உண்டான—ஒருசீவசூசிவடிவானால் - ஒருயிருள்ளசூசிவடிவமானால்—சகத்தோர் - உலகத்திலுள்ளவர்களுடைய — உடலங்களிற்புகுந்து-சரீரங்களினுழைந்து—மேவும் - பொருந்திய—இரைகள்வேண்டியது- உணவுகள்வேண்டுமானவைகளை—விழுங்கலாமென்று - புசிக்கலாமென்று—உணர்வாளை- எண்ணுபவளை—ஆவதெண்ணம் - ஆகவேண்டியநினைவுகள்—நினக்கென்ன - உனக்கென்னவென்று—இசைத்தவயனுக்கு - கேட்டபிரமனுக்கு—இவளிசைப்பாள் - இக்கற்கடிகூறுவாள். எ-று. .... (யக)

(அ-கை) விரும்பினவரங்கொடுத்து அதையடையுங்கிரமமருளுதல்.(கவி) துதிப்பார்துணை
யேநான்சீவசூசியாகவேண்டுமென, விதிப்பான்விகாரபூருவமாம்விடுசியாகமெய்க்கொ
ண்டு, குதிப்பாய்துற்சேட்டையர்மூர்க்கர்கொடியோர்கொடியதலத்துறைவோர், கதிப்
பால்விரும்பாவுணவுண்போர்கருத்திற்சுவாதத்துடன்கலந்து ....*

(இ-ள்.) துதிப்பார்துணையே- தோத்திரஞ்செய்கின்றவடியார்களுக்குச்சகாயமானவாண்டவரோ—நான் - அடியேன்—சீவசூசியாகவேண்டுமென - உயிரூசியாகவேண்டுமென்று (கேட்க)—விதிப்பான் - நியமிப்பான்—விகாரபூருவமாம் - வீயென்னுமட்சரத்தைமுதற்கண்ணுள்ளதான—விடுசியாகமெய்க்கொண்டு - விடுசியாகச்சரீரமெடுத்துகொண்டு—குதிப்பாய்-பாய்வாய்—துற்சேட்டையர் - துற்கிருத்தியமுள்ளவர்களும்—மூர்க்கர் - மூடர்களும் — கொடியோர் - துஷ்டர்களும்—கொடியதலத்துறைவோர் - கொடிதானவிடத்திலிருப்பவர்களும்—கதிப்பால் - மமதையினால்—விரும்பா - விரும்பக்கூடாத — உணவுண்போர் - (துற்) புசிப்பைப்புசிப்பவர்களு (மாகியவிவர்களுடைய)—கருத்தில் - மனதில்— சுவாதத்துடன்கலந்து-பிராணவாயுவோடுங்கலந்து. எ-று. .... (யஉ)

(அ-கை.) இச்சையினாலற்பவடிவமாதல். (கவி) நல்லாரிடத்தினியெய்தினுமேவிதி
த்தமந்திரத்தாற், கொல்லாதொழிவாய்த் தீயோரைக் கொன்றுதின்பா யெனமல
ரோன், சொல்லாமுன்னமலைபோல்வாள்சூசியுருவாஞ்சீவனுமாய்ப்; பொல்லாதவ
ரஞ்சினத்தடித்தோர்பொன்றும்படியுள்ளுறப்புகுந்தாள்........... .... *

(இ-ள்.) நல்லாரிடத்தினியெய்தில்- அறிஞர்களிடத்தினிசென்றால்—நாமேவிதித்தமந்திரத்தால் - நாம்நியமித்த(வுனதுசிகிச்சைபென்னு) மந்திர (செப) த்தினால்— கொல்லாதொழிவாய - கொலைசெய்யாதிருப்பாய்—தீயோரைக்கொன்றுதின்பாயென-அறிவில்லாதவர்களைக்கொன்றுண்பாயென்று—மலரோன்சொல்லா - பிரமன்சொல்லி(மறையுமளவில்) — முன்னமலைபோல்வாள் - முன்புவரைக்கொப்பானவள்—சூசியுருவாஞ்சீவனுமாய் -சீவசூசியுருவமெடு

த்து— பொல்லாதவர் - மூர்க்கரும் — அஞ்சினத்தடித்தோர் - (மனதி) லச்சமிருந்தவரும்— பொன்றும்படி - நசிக்கும்வண்ணம்—உள்ளுறப்புகுந்தாள் - அகத்திற்ப்ரவேசித்தாள். எ-று [ய-ம்] விடுசிகாவியாதியைப்போக்கடிக்கிறவிந்தமந்திரத்தை யுன்னுடையசிகிச்சார்த்தமென்னுலசொல்லப்படுகின்றதென்பார்- நாமேவிதித்தமந்திரமென்றார் - அவையாவன - ஓம்-ஹராம் - இர்ம் - ஹ்ரூம் - ராம் - விஷ்ட்ணுசத்தியேநமோ - பகவதிவிஷ்ட்ணுசத்தி-எ-ஹே-ஈ - எனும் - ஹர - ஹர - ஹந - ஹந - பச - பச - மத - மத - உச்சாதியோ உச்சாதையா-தூரே - குடுகுடு - சுவாஹா - குறுகுறு - சுவாஹா - விடுசிகே - இமோந்தம் - கெச்சா- சீய-சிவ - சந்திரமண்டலம் - கதோசி - சுவாஹா - என்பனவாம் - இஃதை - ஸ்நானமும் - ஆசமனமுஞ்செய்து மாந்திரிகனானவன் வாமகரத்தில் விபூதியைவைத்து அதிலிந்தமந்திரத்தையெழுதிக்கொண்டு-செபித்துரோகியினுடைய சரீரமுழுதுந்தடவி- இம்மந்திரமென்னுந்தண்டாயுதத்தினாற் - கற்கடியடிபட்டு - இமோர்ப்பருப்பதத்துக்கோடிப்போனதாயும் - ரோகியைச்சந்திராமிர்தமத்தியிலிருப்பவனாயும் - வியாதிவிடுபட்டவனாயும் - சராமரணமில்லாதவனாயும் - பாவித்துத்ததேகமாய்ச்செபஞ்செய்து சிந்தித்துகிரமமாகவிவ்விடுசிகாவியாதியைப் போக்கடிப்பனெனக்கொள்க... (௰௩)

(அ-கை.) உணவினிச்சைவெறுத்தல். (கவி) வாயுவடிவாயுட்புகுந்துமண்ணில்விண்ணில்பல்லுயிர்க, ளாயுவெல்லாமிருவடிவாயநேககாலமருந்தியபின், ஞேயுமனத்தாளாயவம்ம யழன்றுவருந்தியூசியுமாய்த், தேயும்படியே கெடுத்ததெம்மைச்சீசீயாசையெனத்திகைத்தாள்... ❋

(இ-ள்.) வாயுவடிவாய் - வாதரூபமாகி—மண்ணில் - பூமியிலும—விண்ணில்- ஆகாயத்திலு(முள்ள)—பல்லுயிர்கள் - பலசீவர்களின்—உட்புகுந்து- உள்ளேபிரவேசித்து—ஆயுவெல்லாம்- (அவர்கள்)வாழுநாளனைத்தையும் — இருவடிவாய் - சீவசூசிவாத சூசியென்னு மிரண்டுவடிவமாய்—அநேககாலம் - வெகுகாலம்—அருந்தியபின்-புசித்தபின்பு—ஓயுமனத்தாளாய்- தளர்ந்தமனதையுடையவளாய்—அவமே - வீணுகவே—உழன்று - சுழன்று—வருந்தி - நைந்து—ஊசியுமாய்த்தேயும்படி - சூசியுமாய்த்தேய்ந்துபோகும்படி—ஆசை-அவாவானது—எமை-நம்மை—கெடுத்தது - அழித்தது—சீசீயென - சைசையென்று—திகைத்தாள்- மயங்கினாள். எ-று. (இ-ம்) மிகுந்ததுங்கெடுமென்னும் வாக்கியப்படி, மிகவுமனுபவித்த புசிப்பிற்கைப் புண்டானதாம்... (௰௪)

(அ-கை.) நிஷ்காம தவஞ்செய்தல். (கவி) (வேறு.) தீயமனத்தொடு யாமவமேபல சீவனருந்தினமா, லேயதுவிட்டனமென்றிமவானிடை யெய்தரிதானதவ, மேயினளொன்று நினைப்பிலள்சஞ்சலம் விட்டுணவற்றொருமித், தாயிரமாவருடங்கள்செலுத்தலு மற்றதுவல்வினையே... ❋

(இ-ள்.) தீயமனத்தொடு - கொடியமனதுடன்—யாம் - நாம் - அவமேபலசீவனருந்தினம் - வீணுகவநேகவுயிர்களைப்புசித்தோம் — ஏயதுவிட்டனமென்று - பொருந்தியவவ்வாசையைநீக்கினுமென்று—இமவானிடை - இமயபருப்பதத்தில்—எய்தரிதானதவம்-பொருந்துதற்கரிதானதவத்தை—ஏயினள் - அடைந்து — ஒன்றுநினைப்பிலள் - ஒருசங்கற்பமுமில்லாமல்—சஞ்சலம்விட்டு - சலனத்தைநீக்கி—உணவற்று-புசிப்பின்றி—ஒருமித்து-ஒன்றுபட்டு—ஆயிரமாவருடங்கள் - சகஸ்திரவருஷிங்கள்—செலுத்தலும் - நடத்தவும்—வல்வினை- கொடிய(இரு)வினையும்—அற்றது - நீங்கிற்று. எ - று. (இ-ம்) நிர்விகற்ப சமாதியினுற் சகலவினைகளு நீங்கினவென்பதாம்... (௰௫)

(அ-கை.) நிஷ்காமதபசினுன் ஞானமுண்டாகுதல். (கவி.) பாவமகன்றுமனந்தெளியப்பர பாவனைதன்வயமே, மேவலுமிவ்வுலகத்தையிகழ்ந்து விருப்புவெறுப்பிலளாய், மாவருடங்களொராயிரநின்றபின் மன்னுணர்வுற்றதெனுக், கேவலம்வந்திவளுக்கொருவாய்மை கிளர்த்தினன் மாமலரோன்... ❋

(இ-ள்.) பாவமகன்று - தீமைநீங்கி—மனந்தெளிய - மனதுதெளிவடைய—பரபாவனை-பிரமத்தியானம்—தன்வயமேவலும்-தனதிடமாகப்பொருந்தவும்—இவ்வுலகத்தை-இச்சகத்தை—இகழ்ந்து- நிந்தித்து—விருப்புவெறுப்பிலளாய்-ராகத்துவேஷமில்லாதவளாய்—மாவருடங்களோராயிரம் - சகஸ்திரவருடம்—நின்றபின் - (தவசி)லிருந்தபின்பு—மன்னுணர்வுற்றதெனு - பூரணஞானமுதித்ததென்று —கேவலம்வந்து - தானேவந்து — இவளுக்கு - இக்கற்கடிக்கு—ஒருவாய்மை - ஒருண்மை—மாமலரோன் - பிரமதேவன் —கிளத்தினன்- சொன்னான். எ-று. (இ-ம்) வெளிப்படை... (௰௬)

(அ-கை.) பிரமாவனுக்கிரகித்தல். (கவி) சீவனின்முத்தி யடைந்தனைசிந்தை தெளி
ந்தனைதொல்வடிவாய்ப், பூவலயத்தறிவில்லவர்தீயவர் பூரியர்மெய்யினையா, யாவி
வளர்த்துறைகென்றயனேகலு மத்துவிதப்பரமே, பாவனையுற்றொரு செய்தொழி
லற்றபதத்திலிருந்தனளால்.. *

(இ-ள்) சீவனின்முத்தியடைந்தனை- சீவன்முத்தியையடைந்தாய்—சிந்தைதெளிந்தனை-மன
ந்தெளிந்தாய்—தொல்வடிவாய் - பழையவிராக்ஷதவடிவாய்—பூவலயத்து - பூமியில்—அறிவி
ல்லவர்- ஞானமில்லாதவர்களும்—தீயவர் - கொடியவர்களும்—பூரியர் - கீழ்மக்களு(மாகியவி
வர்களுடைய)—மெய் - சரீரங்களை—இனையாய் - (உனக்)குணவாக—ஆவிவளர்த்து- சீவனஞ்
செய்து —உறைகென்று - சுகமாயிருப்பாயென்(றனுக்கிரகஞ்செய்து)—அயனேகலும்- பிரம
ன்மறையவும் —அத்துவிதப்பரமே - அத்துவிதப்பிரமமே—பாவனையுற்று- (சர்வமென்னும்)
பாவனையைப்பொருந்தி—ஒருசெய்தொழிலற்ற - நிஷ்கிரியையான— பதத்திலிருந்தனள் - தற்
பதத்திலிருந்தாள். எ-று. (இ-ம்) பிராரத்தசேட நீங்கும்பொருட்டு விதியானபுசிப்பையனு
பவிக்கவறிவித்ததாம்.. (௰௭)

(அ-கை) சீவன்முத்தித்தன்மையினின்றுவிதியானவுணவைச்சிந்தித்தல். (கவி) விகற்பமிற
ந்தசமாதிநெடும்பகன் மேவினண்மீளவிடா; வுகப்பொடுநெஞ்சொடு கூடினடொல்பசி
புன்னினளெனுமா, நிகத்துளமட்டு மூடற்குளதான வியற்கைவிடாததனாற், சகத்திலு
ரக்கர்குலத்தொழிலான தசைப்பலிகொள்வனெனு .... *

(இ-ள்·) விகற்பமிறந்தசமாதி- நிர்விகற்பசமாதியில்—நெடும்பகன்மேவினள்- அநேககா
லமிருந்தனள்—மீள- (சமாதியினின்றுந்)திரும்ப— விடாவுகப்பொடு - நீங்காதவாநந்தத்தோ
டும்—நெஞ்சொடுகூடினள் - மனதுடன்சேர்ந்தாள் — தொல்பசியுன்னினள் - பழையபசியை
நினைத்தாள்—நானெனுமாறு - நானென்னுந்தன்மை — இகத்துளமட்டும் - சகத்தின்கண்ணு
ள்ளபரியந்தம்—உடற்குளதானவியற்கை- சரீரத்துக்குண்டாகியசுபாவம்—விடாததனால்- நீங்
காதபடியினால்—சகத்தில் - உலகத்தில்— அரக்கர்குலத்தொழிலான-இராக்ஷதவமிசத்துக்குத்
தொழிலாயிருக்கின்ற—தசைப்பலி - மாமிசாகாரம்—கொள்வனெனு-புசிப்பனென்று. எ-று.

(அ-கை.) உத்தேசித்தபுசிப்பெதிரிடல். (கவி) அயனுரைசெய்தது மப்படியாதலி
லந்தவுரைப்படியே, கயவருடற்பலிகொள்ளுவனென்று களித்திமவானயல்போய்,
வயமிகுவேடுவர்மண்டலமேவி வனத்திலுறைந்திடுநா, ணயமுறுமந்திரி தன்னொடு
மங்கொரு நரபதிநண்ணினனால்.. *

(இ-ள்.) அயனுரைசெய்ததும் - பிரமனனுக்கிரகித்ததும்—அப்படியாதலில்-அப்பிர
காரமாதலால்—அந்தவுரைப்படியே - அவ்வசனப்படியே—கயவருடல் - மூடர்கள்சரீரத்தை
—பலிகொள்ளுவனென்று-அமுதாகப்புசிப்பேனென்று—களித்து- மகிழ்ந்து—இமவானயல்
போய்-இமயமலையின்சாரலிற்சென்று—வயமிகுவேடுவர்- வெற்றிமிகுந்தவேடர்களின்—மண்
டலமேவி - நாடடைந்து—வனத்திலுறைந்திடுநாள் - (அதிலுள்ள) கானகத்தில்வசிக்குங்காலத்
தில்—நயமுறுமந்திரிதன்னொடும்- நீதியுள்ளவமைச்சனோடும்—அங்கொருநரபதிநண்ணினன்-
அவ்விடத்தோ ரரசன்வந்தனன். எ-று, (இ-உ-க-ம்) வெளிப்படை.............................. (௰௯)

(அ-கை.) கிடைத்தவுணவின் றன்மையைவிசாரித்தல். (கவி) மூச்சுடர்வந்துறினுங்
கருகத்தகுமூற்றிருண்மூடிராவூ, டச்சமுறாவர்சோதனைசெய்தலுமங்கவள்கண்டள
வே, பச்சினையாமிவர் மெய்யறிவில்லவர் பாமரராகியுளா, ரிச்சகமேலுயிர்வாழிலி
கம்பர மெங்குமிடும்பையெனு .... *

(இ-ள்·) முச்சுடர்வந்துறினும் - சோமசூரியாக்கினிக(ளொன்றாக) வந்தடைந்தாலும்
—கருகத்தகு - (அவைகளொளி)மழுங்கத்தகுந்த—முற்றிருள் - மிகுந்தவிருட்டினால்—மூடிரா
வூடு- மூடிக்கொண்டிருக்கிறவிராத்திரியில்— அச்சமுறாவர் - பயப்படாதவரசமந்திரிகள்—
சோதனைசெய்தலும்- (பிசாசங்கண்முதற்றுஷ்டர்களைப்)பரிசோதித்துவரவும்—அங்கவள்கண்
டளவே - அவ்விடத்தந்தக்கற்கடிபார்த்தமாத்திரத்தில்—பச்சினையாம் - பசுமையானபுசிப்பா
வர்—இவர்-இவர்கள்—மெய்யறிவில்லவர் - உண்மைஞானமில்லாதவர்கள்— பாமரராகியுளார்-
மூடராயிருக்கின்றவர்கள்—இச்சகமேல் - இவ்வுலகத்தின்கண்—உயிர்வாழில் - சீவித்திருக்கின்
—இகம்பரம் - இகத்திலும்பரத்திலும்—எங்கும்-(மற்)றெவ்விடத்தும்—இடும்பையெனு- துன்
பமாமென்று. எ-று..(உ௰)

(அ-கை.) துற்சனரோவென்றாலோசித்தல். (கவி) மீளவுநின்றுணர்வாளயன்முன்ன
ம்விதித்ததுமிப்படியே, கோளறவந்தபயன்கவராதவர்கொச்சைமனத்தினரோ, நீள

நினைந்துணர்புந்தியுநற்குணநீர்மையுமெய்தியுள்ளார், மாளவதஞ்செய நெஞ்செழு
மோவிவர் வன்றுயர்மேவுவரோ.. *

(இ-ள்.) மீளவுநின்றுணர்வாள் - திரும்பவுநினைப்பாள்—அயன் - பிரமன்—முன்னம் விதித்ததுமிப்படியே - முன்னியமித்ததுமிவ்வண்ணமே—கோளறவந்த - நீங்கறக்கிடைத்த—பயன்கவராதவர் - பலனைக்கொள்ளாதவர்கள்—கொச்சைமனத்தினர் - அற்பமனதுள்ளவர்க(ளென்று)—நீளநினைந்து - மிகவுமாலோசித்து—உணர்புந்தியும் - தெளிந்தவறிவையும்—நற்குணநீர்மையும் - நற்குண(முள்ள)சுபாவத்தையும்—எய்தியுள்ளார் - அடைந்திருக்கின்றவர்கள்—மாளவதஞ்செய - கெடும்படிகொலைசெய்ய—நெஞ்செழுமோ - மனமெழுமோ—(அன்றியும்) இவர்வன்றுயர்மேவுவரோ - இவர்கள்வலியதுன்பமடைவரோ. எ-று .... (உக)

(அ-கை) சற்சனரிலக்கணமுணர்தல். (கவி) வேறு. வஞ்சமினீள்புகழ்வாளுள்வகுப்பரியசுகமமர்ந்தோர்வணங்கலாவா, ரெஞ்சலிலாவாவியினு மினியவராதலினவருக்கிடரேவந்தா, லஞ்சலெனவுயிர்கொடுத்துவளித்திடவேண்டினராவரன்பாளோர்க்குத், தஞ்சமுறக்காலனையுமுறவாக்குந்தன்மையினர்தக்கசான்றோர்........ .....*

(இ-ள்.) தக்கசான்றோர் - தெளிந்தவறிஞர்கள்—வஞ்சமில் - மெய்யான—நீள்புகழ் - மிகுந்தகீர்த்தியையுடைய—வாளுள் - (நீண்ட) வாயுளெல்லாம்—வகுப்பரிய - பிரிக்கக்கூடாத—சுகமமர்ந்தோர் - சுகத்தைப்பொருந்தினவர்கள்—வணங்கலாவார் - யாவரும்வணங்கத்தக்கவர்களாவர்—எஞ்சலிலா - குறைவில்லாத—ஆவியினும் - (தனது) யிராக்காட்டிலும்—இனியவராதலில் - இனிமையுள்ளவர்களாதலால்—அவருக்கிடர்வந்தால் - அக்குணவான்களுக்குத்துன்பம்வருமாயின்—அஞ்சலென - பயப்படாதேயென்று—உயிர்கொடுத்து - பிராணனையாவது கொடுத்து—அளித்திடவேண்டினராவர் - இரட்சிக்கத்தக்கவராவர்—அன்பாளோர்க்கு - (தங்களிடத்தி)லன்பையுடையவர்களுக்கு—தஞ்சமுற - வணக்கமாக—காலனையுமுறவாக்கும் - யமனையுமுறவுபடுத்தும்—தன்மையினர் - சுபாவமுள்ளவர்கள். எ-று. .... (உஉ)

(அ-கை.) சற்சனர்க்கன்புசெய்பவரிலக்கணமறிதல். (கவி) அரக்கியெனுமியாமுதலாயுயர்ந்தோரையாதரிக்குமன்புகண்டா, லிரக்கமுறப்பொன்போல யாவரோவிரும்பாதாரிகலோகத்திற், புரக்கவருநிறைமதிபோற்புணர்ந்தோரைக்குளிர்விப்பர்புணராதோரே, பரக்கழியாவிறந்தோராம்புணர்ந்தோரேமுத்திமுதற்பயன்பெற்றோரே .... *

(இ-ள்.) அரக்கியெனும் - இராக்ஷசியென்கின்ற—இயாமுதலாய் - நாமுதலாக—உயர்ந்தோரை - சத்துக்களை—ஆதரிக்குமன்புகண்டால் - பூசிக்கின்றபக்தியைப்பார்க்கின்—இரக்கமுற - அன்பாக—பொன்போல - சுவணத்தைப்போல—யாவரோவிரும்பாதார் - யார்தானன்பு வையாதவர்கள்—இகலோகத்தில் - இப்பூமியில்—புரக்கவருநிறைமதிபோல் - இரட்சிக்கவருகின்றபூர்ணசந்திரனைப்போல—புணர்ந்தோரை - அடுத்தவர்கள் (மனதை) — குளிர்விப்பர் - சத்துக்கள்சுகிக்கச்செய்வார்கள்—புணராதோரே - சாராதவர்களே—பரக்கழியா - மிகவுமிழிவுபட்டு—இறந்தோராம் - மரித்தவராம்—புணர்ந்தோரே - சார்ந்தவர்களே—முத்திமுதற்பயன்பெற்றோர் - மோக்ஷமுதலியப்ரயோசனத்தைப்பெற்றவர்கள். எ-று. (இ-ச-க-ம்) நேரிட்டவர்கள் சற்சனரோ துற்சனரோவெனப்பரிசோதிக்குநிமித்தமாலோசித்ததாம் .... (உ௩)

(அ-கை.) பரிசோதிக்குநிமித்தமதட்டிப்பேசுதல். (கவி) ஆதலினுலிவர்தம்மையறிஞரோவறிவிலரோயார்கொலென்னச், சோதனையாம்வினவுரைகள் சொல்வோமென்றுருமேறுந்துணுக்கென்றஞ்ச, மீதுறநின்றுற்பரித்துவெவ்விடிக்குப்பின்னுலிவீழ்க்குங்கார்போ, லோதரியகொடியவனவிசும்புக்குமதியிரவியொப்பீரென்று..................*

(இ-ள்.) ஆதலினுல் - ஆகையால்—இவர்தம்மை - இவர்களை—அறிஞரோ - ஞானிகளோ—அறிவிலரோ - அஞ்ஞானிகளோ—ஆர்கொலென்ன - யாரோவென்று—சோதனையாம் - ஆராய்ந்தறிகின்ற—வினவுரைகள் - கேள்விகளை—சொல்வோமென்று - கேட்போமென்று (நினைத்து)—உருமேறும் - இடிகளும் — துணுக்கென்றஞ்ச - திடுக்கென்றுபயப்படும்படியாக—மீதுறநின்றுற்பரித்து - ஆகாயத்தினின்றாரவாரித்து—வெவ்விடிக்குப்பின் - கொடியவிடியிடித்தபின்பு—ஆலிவீழ்க்குங்கார்போல் - மழைபொழியுமேகத்தைப்போல—ஓதரிய - சொல்லுதற்கரிய—கொடியவனவிசும்புக்கு - கொடிதாகியகாடென்னுமாகாயத்துக்கு—மதியிரவியொப்பீரென்று - சந்திரசூரியர்களுக்கொப்பாவீர்களென்று. எ-று. .... (உச)

(அ-கை.) நீங்களாரென்றுவினவுதல். (கவி) மீட்டுமிளாப்பாண்மாயையெனும்வெவ்விருட்பாறையின்கீழ்மிளிர்ந்துமாயு, மீட்டமுறுபுழுப்போல்வீரெனக்கிளாயாயிக்கணத்தேத்

மிறக்கவந்தீர், சேட்டமுளார்போலிருந்தீர் தீயவர்போன் றீரெவர்நீர் செப்புமென்னக்,
கேட்டளவேகொலையரக்கிகேளென்னத்திறல்வேந்தன் கிளத்தலுற்ருன்...... .... *

(இ-ள்.) மீட்டுரைப்பாள் - திரும்பவுஞ்சொல்லுவாள்— மாயையெனும் - மாயையென்கின்ற—வெவ்விருட்பாறையின்கீழ் - வெவ்வியவிருண்டகல்லின் கீழ்—மிளிர்ந்துமாயும்-விளங்கியழிகின்ற—ஈட்டமுறுபுழுப்போல்வீர் - கூட்டமாகியகிருமிக்கொப்பானவர்களே — எனக்கிரையாய் - எனக்குணவாக — இக்கணத்து - இந்தக்ஷணத்தில்—இறக்கவந்தீர் - மரிக்கவந்தீர்கள்—சேட்டமுளார்போலிருந்தீர் - மேலானவர்களைப்போலுமிருக்கின்றீர் — தீயவர்போன்றீர் - தீமையையுடையவர்களைப்போலுமிருக்கின்றீர்—நீரெவர்- நீங்களார்—செப்புமென்ன-சொல்லுமென்று—கேட்டளவே - (கற்கடி) கேட்டமாத்திரத்தில்—கொலையரக்கி - (சீவ)விம்சையையுடையவிராக்ஷசியே—கேளென்ன- கேட்பாயென்று—திறல்வேந்தன்- வலிமையுள்ளவரசன்—கிளத்தலுற்ருன் - சொல்லத்தொடங்கினுன். எ-று. ....(௨௫)

(அ-கை.) அரசனச்சமற்றுரைத்தல். (கவி) எவ்வுழிநின்றனை நீயிங் கிசைத்தவெலா
மிளவண்டினிசைச்சல்போலச், செவ்விதுகேட்டனமென்ன வரக்கியுநன்றென்றெதி
ரேசிரித்தலோடும், வெவ்வியபல்லொளியாலே வெளியாகக்கண்டிறையும்வெருவலி
ன்றி, மைவரைபோல்வாய்திறந்து வாளாநீவருந்தலென்று மன்னன்சொல்வான்.......*

(இ-ள்) எவ்வுழிநின்றனை-எவ்விடத்திலிருக்கின்ருய்—நீயிங்கிசைத்தவெலாம்-நீயிவ்விடத்திற்சொல்லியசகலமும் — இளவண்டினிசைச்சல்போல - குஞ்சலியின்சத்தத்தைப்போல—செவ்விதுகேட்டனமென்ன—அழகாகக்கேட்டோமென் (றரசன்சொல்ல)— அரக்கியுநன்றென்று-இராக்ஷசியுநன்ருயிருக்கின்றதென்று—எதிரேசிரித்தலோடும்- எதிரேநகைத்தமாத்திரத்தில்—வெவ்வியபல்லொளியால் - கொடியதந்தப்ரகாசத்தினுல்—வெளியாகக்கண்டு-(அவளதுவடிவத்தை) ப்ரத்யக்ஷமாகப்பார்த்து—இறையும் - எவ்வளவும் — வெருவலின்றி - பயப்படாமல்—மைவரைபோல் - மைநாகம்போல—வாய்திறந்து - வாயைத்திறந்து— வாளாநீவருந்தலென்று - வீணுகநீவருத்தப்படாதேயென்று—மன்னன்சொல்வான்-அரசன்சொல்வான். எ-று.

(அ-கை.) அரசன்றமது வீரமுரைத்தல். (கவி.) எய்தாநின்றுளபயனுக் கியற்ருதா
ரில்லையாமென்றபோது, நொய்தானகருமத்தினொய்தாரேர்வினைந்திடுவர்நொய்ம்
மைதோன்ற, வைதானபுந்தியினுலாறுதலாலறிவுடையோரனைத்துஞ்செய்வர், வெய்
தாவுன்போல்வாரைக்கொதுகென வீசிடுமெங்கள்வீரக்காற்று .... *

(இ-ள்.) எய்தாநின்றுளபயனுக்கு - அடைகின்றப்ரயோசனத்துக்கு — இயற்ருதார்-முயற்சியாதவர்கள்—இல்லையாமென்றபோதும் - இல்லையென்றுசொல்லியபோதும்—நொய்தானகருமத்தில் - அற்பகாரியத்தில் — நொய்தாரேர் - அற்பமானவர்கள்— வினைந்திடுவர்-துரிதப்படுவர்கள்—நொய்ம்மைதோன்ற-சொச்சமானதுவிளங்க— ஐதானபுந்தியினுல்-நுட்பவறிவினுல்—ஆறுதல் - விஸ்ராந்தி(யடைந்த)—அறிவுடையோர்-ஞானவான்கள்—அனைத்துஞ்செய்வர் - கனமானகாரியத்தைச்செய்வார்கள்— வெய்தாவுன்போல்வாரை - கொடிதா(யிருக்கின்ற) வுன்னையொத்த (வரேகர்) களை—கொதுகென - மசகம்போல — எங்கள்வீரக்காற்று-எமதுவீரக்காற்ருனது—வீசிடும் - தள்ளிவிடும். எ-று ... .(௨௭)

(அ-கை.) அரசன்கற்கடிகருத்தைவினுவுதல். (கவி.) ஆதலால்விரைவையொழியுன்
கருத்தையுரையெங்களருகுவந்தோர்; காதலாலிரந்தபொருள் கனவிலுநல்குவமெ
ன்றுகழறலோடும், போதமுங் கல்வியும்வலியும் பொறையுமள விலவொன்றேபுந்தி
செய்தாண், மேதகமாமவருரையைமிகவியந்தாளிழிவிலா மெய்ம்மைகண்டாள்.*

(இ-ள்.) ஆதலால் - ஆகையால்—விரைவையொழி - (உனது துராரம்ப) வேகத்தைவிடு—உன்கருத்தையுரை - உனதெண்ணத்தைச்சொல்—எங்களருகுவந்தோர்- எங்கள்சமீபத்தில் வந்தவர்கள்—காதலாலிரந்தபொருள் - ஆசையினுலியாசித்தவருத்தங்களை— கனவிலுநல்குவமென்று - சொப்பனத்திலுங்கொடுப்போமென்று—கழறலோடும- அரசன்சொன்னவுடன்—போதமும் - ஞானமும்—கல்வியும் - வித்தையும்—வலியும்-வல்லமையும்—பொறையும்-சாந்தமு(மாகியவிவைகளில்)—அளவிலவொன்று-மட்டில்லாதவர்களென்று—புந்திசெய்தாள்-அறிந்தாள்—மேதகமாம் - மேன்மையாகிய—அவருரையை - அவ்வரசமந்திரிகள்வசனத்தை—மிகவியந்தாள்- மிகவுமதிசயித்தாள்—இழிவிலாமெய்ம்மைகண்டாள் - குறைவற்றவுண்மையைப்பார்த்தாள். எ-று .... (௨அ)

(அ-கை.) கற்கடியையநீங்கநீங்களாரெனவினுவுதல். (கவி) வாக்குமுகங்கண்களான்
மாறுபடாதுயர்ந்தோர்தம் மறுவில்சித்த, ம்மக்குயருமிவற்ருலேயுணமினைவுமறி

யலாமேலோர்தாமே, பாக்கியம்போல்வந்தெய்திற்சந்தேகந்தெளியாதார்பதகரா குந், தாக்குமுனையாலிவரை யறிதுமெனுயாவர்நீர்சாற்று மென்றாள்.... .... *

(இ-ள்.) வாக்கு - வசனத்தினாலும்—முகம் - வதனத்தினாலும் —கண்களால் - விழிகளினாலும்—மாறுபடாது-வேறுபடாமல்—உயர்ந்தோர்தம்-மேலானவர்களுடைய—மறுவில்சிந்தை- களங்கமற்றமனமானது—மேக்குயரும் - மிகவுமுயர்ந்திருக்கும்—இவற்றால் - இக்குணங்களினால்—உண்ணினைவுமறியாமல்- அபிப்ராயத்தையுந்தெரியாமல்—மேலோர்தாமே- பகைவர்களே—பாக்கியம்போல் - செல்வம்போல—வந்தெய்தில் - வரில்—சந்தேகந்தெளியாதார்- ஐயந்தீராதவர்கள்—பதகராகும் - கீழ்மக்களாவர்—தாக்குமுனையால்- கடாவுமுனையினால்—இவரையறிதுமெனு - இவர்களையறிவோமென்(றுன்னி)—நீர்யாவர்- நீங்களார்—சாற்றுமென்றாள்- கூறுமெனக் கற்கடிகேட்டாள். எ-று ....(௨௯)

(அ-கை) மந்திரிசொல்லுதல். (கவி) வினையமுறவரக்கியிதுவிளம்பிடமந்திரிவிளம்பும்வேடர்க்கெல்லா, மினையவன்மன்னவனமைச்சனுநுகுமிருட்போதிலெங்குநாடி, யுனைநிகர்வாரைச்சோதித்தொறுக்கவுயிரொடுக்கவுயிர்நிறுத்தவந்தோம், நினைவிதுவந்ததற்கென்றுவிவன்கூறமீண்டந்தநிருதிகூறும் .... *

(இ-ள்.) வினையமுற - வினயம்பொருந்த—அரக்கி - கற்கடியானவள் — இதுவிளம்பிட - இதைச்சொல்ல—மந்திரிவிளம்பும் - மந்திரிசொல்லுவான்—வேடர்க்கெல்லாம் - வேடர்களுக்கெல்லாம்—இனையவன் - இத்தகைமையுள்ளவன்—மன்னவன்- அரசன்—அமைச்சனுநுகும் - மந்திரிநானுதம்—இருட்போதில் - இராக்காலத்தில்—எங்குநாடி- எவ்விடத்துந்தம்பார்த்து—உனைநிகர்வாரை - உனக்கொப்பானதுஷ்டர்களை—சோதித்து - ஆராய்ந்து—ஒறுக்க- அலைக்கவும்—உயிரொடுக்க - பிராணனையடக்கவும்—உயிர்நிறுத்த - (சிஷ்டர்களுடைய) பிராணனைபிரட்சிக்கவும்—வந்தோம் - வந்திருக்கின்றோம்—வந்ததற்கு - இவ்விடம்வந்ததற்கு—நினைவிதென்று - சங்கற்பமிதுவென்று—இவன்கூற- இந்தமந்திரிசொல்ல—மீண்டந்தநிருதிகூறும் - திரும்பவந்தவிராக்ஷசிசொல்லுவாள். எ-று. ....(௩௰)

(அ-கை.) கற்கடிமனுநீதிசொல்லுதல். (கவி) தீயவனுமந்திரியா னல்வேந்துந்தீவேந்தாந்தீமையிலலாத், தூயவனுமந்திரியாற்றீவேந்தும் நல்வேந்தாந்தொடர்ச்சிபோல, வாயநெறிமன்னவராலமைச்சருமப்படியாகுமாதலாலே, நேயவிவேகத்தமைச்சனுண்டாகிலெப்பயனுநிருபற்குண்டாம்.......................... *

(இ-ள்.) தீயவனுமந்திரியால் - துஷ்டமந்திரியினால்—நல்வேந்துந்தீவேந்தாம் - நல்லவரசனுந்தீயவரசனும்—தீமையில்லா - பொல்லாங்கில்லாத—தூயவனுமந்திரியால் - பரிசுத்தமானமந்திரியினால்—தீவேந்தும்நல்வேந்தாம் - தீயவரசனும்நல்லவரசனுவன்— தொடர்ச்சிபோல - (இத்) தொடர்பைப்போல—மன்னவரால் - நீதியுள்ளவரசரால் — அமைச்சருமப்படியாகும் - மந்திரிகளுமப்படியேயாவர்—ஆதலால் - ஆதலினால்— நேயவிவேகத்தமைச்சன்- நல்விவேகமுள்ளமந்திரி—உண்டாகில் - உண்டாயிருக்கின்—எப்பயனும் - எந்தப்ரயோசனமும்—நிருபற்குண்டாம் - அரசர்களுக்குண்டாகும். எ-று .... (௩௧)

(அ-கை) இராசமந்திரிகளென்றால் ஞானமிருக்கவேண்டுமேயெனல். (கவி) மன்னவனெப்படியுலகின்மன்னுயிருமப்படியாமகிமைதானு, நன்னடுவுநிலைமையுமெய்ஞ்ஞானநூறெளிர்ந்தவர்க்கேநண்ணுநிற்கு, மன்னதுகற்றிலரென்னிலரசரமைச்சர்களெனவ்போரபத்தராகு, மின்னகலையிலதாகிலெனக்கிரையாயிளைமைநலமிழந்தீரின்றே .. .. *

(இ-ள்.) மன்னவனெப்படி - அரசனெப்படியோ—உலகின்மன்னுயிருமப்படியாம்-சகத்திலுள்ளபிராணிகளுமப்படியேயாகும் — மகிமைதானும் - (ப்ரபுத்துவ) பெருமையும்—நன்னடுவுநிலைமையும் - நல்லசமதிருஷ்டியும் — மெய்ஞ்ஞானநூல் - ஞானசாஸ்திரங்களை—தெளிந்தவர்க்கே - ஆராய்ந்தவர்களுக்கே—நண்ணுநிற்கும்- பொருந்தும்—அன்னது-அந்தஞானநூலை—கற்றிலரென்னில் - கல்லாதவர்களென்றால்—அரசரமைச்சர்களெனவ்போர்-இராசமந்திரிகளென்பவர்கள்—அபத்தராகும் - பொய்யராவார்கள்—இன்னகலை - இத்தன்மையான ஞானநூலி(னப்பியாசம்) — இலதாகில்-இன்றுபின்—எனக்கிரையாய்-எனக்குணவாக—இளைமைநலம் - எவ்வனத்தினன்மைகளை—இன்றேயிழந்தீர்- இப்போதேயிழந்தீர்கள்.எ-று. (௩௨)

(அ-கை.) விருப்பஞ்சரத்திலடைக்கத்தொடங்கல். (கவி) சிங்கமெனுமுங்களையான்செப்புக்கிறவிறுககூட்டிற் சிறைசெய்கின்றே, னுங்கண்மதியாற்றிறந்தாலுயிர்வாழ்வீரென வருந்தமற்றுநானசப்பிக்கன்றுத், துங்கநரபதியுமைப்ப தொலலரக்கி நல்லமுதத்துவிகள்போல, வங்கவருக்குரைத்தவலா மிராகவகேளெனவசிட்டனருளலுற்றான் .... *

(இ-ள்.) சிங்கமெனுமுடங்கலை - கேசரியென்கின்றவுங்கலை—யான்செப்புகின்றவினைக்கூட்டில் - நான்சொல்லுகின்றகேள்வியாகியகூண்டில்—சிறைசெய்கின்றேன் - காவல்செய்கின்றேன்—உங்கண்மதியால் - உங்களறிவென்னுந்திறவுகோலினால்—திறந்தால் - (அக்கூண்டின்வாயலைநீங்க)திறந்தால்—உயிர்வாழ்வீரானை-பிராணனோடுஞ்சீவிப்பீர்களென(ராக்ஷஸி)சொல்ல—என்-அதென்ன—வகுத்துரைசெய்கென்று-பிரித்துச்சொல்வாயென்று—துங்கநரபதியுரைப்ப-பரிசுத்தமுள்ளவரசன்சொல்ல—தொல்லரக்கி - பழைமையானவிராக்ஷஸி—நல்லமுதத்துளிகள்போல - நல்லவமுதவருஷங்களைப்போல—அவருக்குரைத்தவெலாம் -அவ்விராசமந்திரிகளுக்குக்கூறியவாக்கியங்களனைத்தையும்—இராகவகேளென-இராமா நீகேட்பாயென்று—வசிட்டனருளலுற்றான்-வசிட்டமுனியனுக்கிரகிக்கத்தொடங்கினார்.எ-று.(இ-ம-க-ம்)வெளிப்படை.

(அ-கை.) ஆத்மஸ்வரூபத்தைவினவுதல்.(கவி) அண்டநிரைபலகோடிபலவாயுமொ
ன்றாமெவ்வணுவினுள்ளே,விண்டகடற்குமிழிகள்போல்விரிந்தொடுங்கும்விண்ணாயு
ம்விண்ணன்றேது, தண்டறவுண்டாயிருந்துமிலாததெதுசரித்தேயுஞ்சரியாதேது,
கண்டிடநில்லாதாயுநிற்பதெதுசித்தாயுங்கல்லாமேது .... *

(இ-ள்) விண்டகடல் - பரவியசமுத்திரத்தில்—குமிழிகள்போல் - புற்புதத்தைப்போல—ஒன்றாமெவ்வணுவினுள்ளே - ஒன்றானவெந்தவணுவுக்குள்— பலகோடி - அளவிறந்த—அண்டநிரை - அண்டபந்திகள்—பலவாயும் - நாநாவாகியும்—விரிந்தொடுங்கும் - உற்பத்திஸ்திதிலயமாம்—விண்ணாயும் - ஆகாயமாகியும்—விண்ணன்றேது - ஆகாயமல்லாததெது—தண்டறவுண்டாயிருந்தும் - வரையறவுள்ளதாயிருந்தும் — இலாததெது - இல்லாததெது—சரித்தேயும்- சஞ்சரித்தும்—சரியாததெது - சஞ்சரியாததெது—கண்டிடநில்லாதாயும்- காணநிற்காததாகியும் — நிற்பதெது - நிற்கின்றதெது — சித்தாயும் - சித்தாகியும் — கல்லாமேது-கல்லானதெது. எ-று .... (௫௪)

(அ-கை) இ-து. (கவி) வானிடையோவியமெழுதுகின்றதெது வித்திடையின்மரங்
கள்போல, வீனமிலாவெவ்வணுவிலுலகமெலாமிருக்கின்ற தியாதினின்று, மானக
டற்றிரைநுரைபோ லொருபொருளும் பிரிவாகாதமைந்தநீரு; மீனமறுநெகிழ்ச்
சியும்போலேதோன்றி யிருமையுமெங்கொருமையாகும் .... *

(இ-ள்) வானிடை - ஆகாயத்தில்—ஓவியமெழுதுகின்றதெது - சித்திரமெழுதுகின்றதெது—வித்திடையின் - விதையினிடத்தில்—மரங்கள்போல - விருக்ஷங்களைப்போல — ஈனமிலா- குறைவில்லாத—எவ்வணுவில் - எந்தவணுவில்— உலகமெலாமிருக்கின்றது - சகங்களியாவுமிருக்கின்றது—இயாதினின்றும் - எதினிடத்திருந்தும்—ஆன - விரிவான—கடல்- சமுத்திரத்தி(லுண்டான)—திரைநுரைபோல் - அலைநுரைகளைப்போல—ஒருபொருளும்-ஒருவஸ்துவும்—பிரிவாகாது - வேறுபடாமல்—அமைந்தநீரும்-நிறைந்தசலத்தையும்—ஈனமறுநெகிழ்ச்சியுப்போல் - குறைவற்றநெகிழ்ச்சியைப்போல—தோன்றி - உண்டாய்—இருமையும் - இரண்டும்—எங்கொருமையாகும் - எங்கொன்றாயிருக்கும். எ-று. (இ-உ-க-ம்) பிரமஸ்வரூபத்தைச்சகசத்தினவநவமா யனுபவிக்கும்பொருட்டதைப்பதினைந்து சங்கையாகப் பகுத்துவினவினதாம் .... (௫௫)

(அ-கை.) அனுபவனுறப்த்தியுண்டாகும்படிக்கச்சமுரைத்தல். (கவி) இந்தவினாவின்பய
னை நும்முணர்வாலேதோன்றவியம்புவீரேற், கந்தமுறவென்குழன்மேலெப்போதுமிரு
க்கின்றகமழ்போதாவீர்,மந்தமுறுபுந்தியினால்வகுத்துரைக்கமாட்டாதுமயங்குவீரேல்;
வெந்தவயிற்றெரிகனற்குவிறகாவீரென்றரக்கிவிளம்பலோடும் .... *

(இ-ள்.) இந்தவினாவின்பயனை - இக்கேள்வியின்ப்ரயோசனத்தை — நும்முணர்வால்-உங்களறிவினால் --தோன்றவியம்புவீரேல் - தெரியச்சொல்வீர்களாயின்—கந்தமுற - வாசனைபொருந்த—என்குழன்மேல்- எனதுகூந்தலின்மேல் —எப்போதுமிருக்கின்ற—எக்காலத்திலுமிருக்கின்ற—கமழ்போதாவீர் - மணக்கின்றபுஷ்பமாவீர்கள்— மந்தமுறு - அற்பமாகிய—புந்தியினால் - அறிவினால்—வகுத்துரைக்கமாட்டாது - பிரித்துச்சொல்லக்கூடாமல்— மயங்குவீரேல் - கலங்குவீர்களாயின்—வெந்தவயிற்றெரிகனற்கு- எரிந்தவுதராக்கினிக்கு—விறகாவீரென்று-இந்தனமாவீர்களென்று—அரக்கி-இராக்ஷஸி—விளம்பலோடும்- சொல்லவும். எ-று. (இ-ம்.) இத்தப்பதினைந்துபிரிவையுமொருமைப்படுத்தவேண்டுமென்பதாம் .... (௫௬)

(அ-கை.) மந்திரி, முதற்சங்கைக்கும் பதின்மூன்றாஞ்சங்கைக்கு முத்தரங்கூறல்.
(கவி) மந்திரிமுன்னுரைசெய்வான்மாசிலாப்பரம்பொருளைவகுத்துச்சொன்னாய்,
சிந்தைமுதலாம்பொறிகளாறாலுமெட்டரிதாந்திறத்திலேலே, யந்தமில்சின்மாததிச

மாய்விண்ணினுநொய்தாம்பரமவணுவேயாகு, முந்துபிரமாண்டமெலாமவ்வணு
விலேதோன்றி முதிர்ந்துமாயும் .... *

(இ-ள்.) மந்திரிமுன்னுரைசெய்வான் - அமைச்சன்முன்புசொல்வான்—மாசிலாப்பரம்பொருளை - களங்கமற்றபிரமவஸ்துவை—வகுத்துச்சொன்னாய் - பகுத்துக்கூறினாய்—(அஃதியாதெனின்) சிந்தைமுதலாம்- மனமுதலாகிய—பொறிகளாறனும் - ஆறிந்திரியங்களினாலும்—எட்டரிதாந்திறத்தினால் - எட்டுதற்கரியதன்மையினால்—அந்தமில் - முடிவில்லாத—சின்மாத்திரமாய் - ஞானமாத்திரமாகியும் — விண்ணினுநொய்தாம் - ஆகாயத்தினுநுட்பமாகியும்—பரமவணுவேயாகும் - பரமாணுவுக்கொப்பாகியுமிருக்கும்—அவ்வணுவில் - அந்தவணுவுக்குள்—முந்துபிரமாண்டமெலாம் - முந்தினபிரமாண்டங்களனைத்தும்—தோன்றி - உண்டாகி—முதிர்ந்து - வளர்ந்து—மாயும் - நசிக்கும். எ-று (இ-ம்) அணுவுக்கணுவாயேகமாயிருக்கின்ற பிரமமேயண்ட கோடிகளாகத் தோற்றுமென்பதாம் .... (ருஎ)

(அ-கை.) ஆறுசங்கைக் குத்தரங்கூறல். (கவி) தடமானவதன்புற மில்லாமையினால்
விண்ணாகுந்தனிபோதத்தா, லிடமானவிண்ணன்று மின்னதெனத் தெரிவரியவியல்
பினாலே, திடமாகவிலதாகுஞ்சற் பாவத்தா லுளதாய்ச்செப்பலாகும், புடமாகவிள
ங்குதலாற்சித்தாகுமறிவதிலாப்பொருட்டாற்கல்லாம் .... *

(இ-ள்.) (உ) தடமானவதன் - விசாலமுள்ளவப்பிரமத்துக்கு— புறமில்லாமையினால் - புறம்பில்லாதபடியால்—விண்ணாகும் - ஆகாயமாகும்—(ரு)தனிபோதத்தால்- கேவலஞானமாகவிருத்தலின்—இடமானவிண்ணன்றும் - விரிந்தபூதாகாயமன்றும்—(௬) இன்னதெனத்தெரிவரிய- இப்படியென்று(சுட்டி)யறிதற்கரிய—இயல்பினால் - தன்மையினால்—திடமாகவிலதாகும்-ஸ்திரமாகவில்லாததாம்—(௭)சற்பாவத்தால்-சத்தாயிருத்தலால்— உளதாய்ச்செப்பலாகும்- உள்ளதாகச் சொல்லப்படும்—(௰)புடமாகவிளங்குதலால் - சொச்சமாகப்பிரகாசித்தலினால்— சித்தாகும்- ஞானமாகும்—(௰க)அறிவதிலாப்பொருட்டால் - அறியுந்தன்மையில்லாதநிமித்தத்தினால்—கல்லாம் - (சடமாகியகல்லைப் போலு) மாம். எ-று. (இ-ம்) இவ்வாறுத்தரத்தினனும்பிரமஸ்வரூபமெல்லாமாயு மல்லவுமாயுமிருக்கின்றதன்மையை விளக்கினதாம் .... (ருஅ)

(அ-கை.) பின்னைந்துசங்கைக் குத்தரங்கூறல். (கவி) (வேறு.) தானாகுமிகநொய்தா
மாகாயத்திற்சகத்திரளாஞ் சித்திரத்தைத் தானேகோட்டு, மானாதவுலகமெலாந் தன
துசோதியாதலினாலதற்குவேறயலொன்றில்லை, நீநானுஞ்சகபேதவடிவந்தானுநிற்கி
ன்றவதன்வடிவாய்நீங்காதென்றும், நாநாவாம்பொருட்புணர்வா னடந்ததாகு நட
க்கவிடமிலாமையினடவாதாகும் .... *

(இ-ள்.) (௰உ) மிகநொய்தாம் - மிகவுஞ்சொச்சமாகியும்—தானாகும் - தானாகியு(மிருக்கின்ற)—ஆகாயத்தில் - (சிதா)காயத்தில்—சகத்திரளாம் - உலகபந்திகளாகிய—சித்திரத்தைத் தானேகோட்டும் - சித்திரத்தைத்தானேயெழுதும்—(௰௩) ஆனாத - நீங்காத—உலகமெலாம் - சகங்களனைத்தும்—தனதுசோதியாதலினால் - தனதுப்பிரகாசமானபடியினால்—அதற்கு- அவ்வஸ்துவுக்கு—வேறயலொன்றில்லை - அன்னியமொன்றில்லை—(௰௫) நீநானும் - நீநானென்கின்ற—சகபேதவடிவந்தானும் - உலகவேற்றுமையுருவங்களும்—நிற்கின்ற- இருக்கின்ற—அதன்வடிவாய் - அச்சத்தினுருவமாய்—என்றும் - எப்போதும்— நீங்காது - பிரியாதாம்—(௬)நாநாவாம்பொருட்புணர்வால்- நாநாவாகியவஸ்துக்களின்சம்பந்தத்தினால்—நடந்ததாகும்- சஞ்சரித்ததாம்—(௭) நடக்கவிடமிலாமையினால் - சஞ்சரிக்கவேறுஸ்தான மின்மையின்—நடவாதாகும் - சஞ்சரியாததாம். எ-று. (இ-ம்) இவ்வைந்துத்தரவினனும் பிரமஞ்சகத்தைத்தானாகவுண்டாக்கித்தானாகவிளக்கித்தானதுவென்னுமிருமையின்றித் தன்மயமாய்விளங்குகின்ற வத்துவிதத்தை விளக்கினதாம் .... (ருகூ)

(அ-கை.) பின்பிரண்டுசங்கைக் குத்தரங்கூற மேலரசனுத்தரம். (கவி) அடைவதற்
கொன்றிலாமையினாலில்லையாகுமநவரதஞ்சத்தையிலுண்டாகுமென்று, புடைபெ
யர்நன்மதியமைச்சன்புகலக்கேட்டு போதவியந்ததற்பின்பு பூபனேயுன், னுடைய
வுணர்வுரையொன்ன வவனுஞ்சொல்வா னுலகத்தினுறுதியிலா வுறுதிதானே, தடை
யறுசிற்பரம்பொருளினுறுதியாகுந் தற்பரத்தினியல்பின்னஞ்சாற்றக்கேளாய் ....*

(இ-ள்.) (௮) அடைவதற்கு - (தான்)பொருந்துவதற்கு—ஒன்றிலாமையினால்-வேறோரிடமில்லாதபடியால—இலலையாகும் - நிற்கவில்லையாம்— (௯) அநவரதம் - சதாகாலமும்—சத்தையில் - (சகலபொருட்களிடத்துஞ்,சத்தாமாத்திரமாயிருக்கின்றதினால் — உண்டாகுமென்று - நிற்கின்றதென்று—புடைபெயர் - அரசனதருகிலுறையும்—நன்மதியமைச்சன்- நல்ல

நியுள்ளமந்திரி—புகல - சொல்ல—கேட்டு - (கற்கடியானவள்)கேட்டு—போதவியந்து - மிகவுமதிசயித்து—அதன்பின்பு - அதற்குப்பின்—பூபனே - இராசாவே — உன்னுடையவுணர்வு- உனதறிவை—உரையென்ன - சொல்லென்றுகேட்க—அவனுஞ்சொல்வான் - அவ்வரசனுங்கூறுவான்—உலகு - சகமானது—இல்-இன் (றென்கின்ற) —உறுதிதானே - உறுதியே—தனையறுசிற்பரம்பொருள் - அகண்டாகாரவஸ்து (வுண்டென்னும்) —உறுதியாகும் - உறுதியாம்—தற்பரத்தினியல்பு - பிரமத்தின்றன்மையை—இன்னஞ்சாற்றக்கேளாய் - மேலுஞ்சொல்லக்கேட்பாய். எ-று. (இ-ம்) இவ்விரண்டுசங்கையி னுத்தரத்தாற்பிரமஞ் சத்தாயுமசத்தாயு மிருக்கின்றபூரணஸ்வரூபத்தை விளக்கிப்பதினைந்து சங்கைக்குமொருமையாகப் பதினான்குத்தரத்திற் சொல்ல, அஃதன்றியரசனே ருத்தரத்திற் பிரமநிச்சயத்தை விளக்கினனென்பதாம்.......(சய)

(அ-னை.) பின்பாறுத்தரங்கூறல். (கவி) கருத்ததனாற்சங்கற்ப விகற்பமெல்லாங்கைவிடுதல்கைக்கொள்ளப்படுவதாகுந், திருத்தமுறுந்தன்விரிவுங் குவிவுதானுஞ்சிருட்டியுங்கற்பமுமாகுந்திரள்வேதாந்தத், தருத்தமுறுவாக்கியத்தினிட்டையாகுமவ்வேதவாக்கியத்துக்கயனுமாகு; முருத்திகழுமுள்ளதில திரண்டினுக்குமுள்ளாகுமவையிரண்டினுருவமாகும்.. *

(இ-ள்.) கருத்ததனால்-மனதினால் —சங்கற்பவிகற்பமெல்லாம்- சங்கற்பவிகற்பங்களனைத்தையும்—கைவிடுதல் - கைவிடுவதே—கைக்கொள்ளப்படுவதாகும் - (பிரமத்தைக்) கைவசப்படுத்துவதாம்—திருத்தமுறும் - திருத்தமாகிய— தன்விரிவுங்குவிவுதானும் - தனதுசங்கற்பமுதித்தொடுங்குதலே—சிருட்டியுங்கற்பமுமாகும் - சகமுற்பத்திலயமாம்—திரள்வேதாந்தத்து- ஒன்றாகியவேதாந்தங்களினது—அருத்தமுறு - சர்வார்த்தங்கள்பொருந்திய— வாக்கியத்தினிட்டையாகும் - மகாவாக்கியத்தினிடமாய் — அவ்வேதவாக்கியத்துக்கு-அச்சுருதிவாக்கியத்துக்(கந்தரங்கமானவனுபூதியாகையால்)—அயனுமாகும் - புறம்புமாம்—உருத்திகழும் - வடிவமாகவிளங்குகின்ற—உள்ளதிலதிரண்டினுக்கும் - சத்தசத்திரண்டுக்கும் — உள்ளாகும்-மத்தியுமாம்—அவையிரண்டினுருவுமாகும் - அந்தவிரண்டினதுஸ்வரூபமுமாம். எ-று...... (சுக)

(அ-கை.) பின்பிரண்டுத்தரங்கூறல். (கவி) சராசரமாமுலகனைத்து மனரூபத்தாற்றன்செய்யும்விளையாட்டாஞ் சகமாய்நின்றும், புராதனமாமொருமையினிற் பிரியாதாகும்பூரணசின்மாத்திரமாம் பொருளேசொன்னாய், நிராசையுளத்தவரறியும்பரமீதென்று நிருபனுரைத்திடநிருதி நெஞ்சுட்கொண்டு, விராவமுத மழைசொரியக்குளிர்ந்தவாபோன் மிகக்குளிர்ந்தாள்சாந்தமுற விளம்பலுற்றாள்.......................... *

(இ-ள்.) சராசரமாம் - தாவரசங்கமான—உலகனைத்தும் - சகங்களெல்லாம்—மனரூபத்தால்- மனோசங்கற்பத்தினால்—தான்செய்யும் - தானியற்றும்—விளையாட்டாம்-லீலையாம்—சகமாய்நின்றும் - உலகமாயிருந்தும்—புராதனமாம் - பழைமையான—ஒருமையினில்-ஏகத்துவத்தில்—பிரியாதாகும் - பிரிவற்றதாயிருக்கின்ற—பூரணசின்மாத்திரமாம் பொருளேசொன்னாய் - பரிபூரணஞானமாத்திரமாய் விளங்குகின்றபிரமவஸ்துவையேயுரைத்தாய்— நிராசையுளத்தவர் - விராகமனதையுடையவர்கள் —அறியும்பரமீதென்று - உணர்கின்றபிரமஸ்வரூபமேயிதுவென்று—நிருபனுரைத்திட - அரசன்சொல்ல—நிருதி- அரக்கியானவள்—நெஞ்சுட்கொண்டு - மனதிற்கிரகித்து—விராவமுதமழைசொரிய - கலந்தவமுதமழையை வருஷிக்க—குளிர்ந்தவாபோல் - (சகலமும்) குளிர்ச்சியடைந்ததன்மையைப்போல— மிகக்குளிர்ந்தாள்- மிகவுமகிழ்ந்தாள்—சாந்தமுற - உபசாந்தமடைய — விளம்பலுற்றாள் - சொல்லத்தொடங்கினாள். எ-று. (இ-உ-க-ம்) இவ்வெட்டுத்தரத்தா லாத்மலீலாவுல்லாச விலாசங்களைவிளக்கி- அக்கற்கடிபதினைந்துசங்கைக்கு விவ்வொன்பதுத்தரத்தாலொருமைப்படுத்திச்சொல்லியதாம்(சஉ)

(அ-கை.) சத்துக்கடரிசனத்தைப்புகழ்ந்துகைம்மாறுவினாவுதல். (கவி.) அற்புதமாயமுதமாயறிவேயாகியத்தமனமுதயமிலாவருக்கன்போலாய்ப், பொற்புமிகும்புந்தியுளவும்மைப்போல்வார் பொன்னடியைமுடியாகப்புனைந்தாரன்றே, தற்பரமாமூலகாளும்வேந்தராவோர்தமையுணர்ந்தோரைச்சேர்ந்தாற்றளர்வுண்டாமோ, நற்பயன்போல்வருமுமக்கிங்கரிதின்றேனு நான்செய்யுங்கைம்மாறுநவிலுமென்றாள்.

(இ-ள்.) அற்புதமாய் - அதிசயமாகியும்—அமுதமாய்-கெடாததாகியும்—அறிவேயாகி- சின்மாத்திரமேயாகியும்—உதயம் - உதயமும்— அத்தமனம் - அஸ்தமனமும்—இலா - இல்லாத—அருக்கன்போலாய் - ஞானசூரியனுக்கொப்பாகியு(மிருக்கின்ற)—பொற்புமிகும்-அழகுமிகுந்த—புந்தியுளவும்மைப்போல்வார் - அறிவையுடைய வுங்களுக்கொப்பானசத்துக்களுடைய—பொன்னடியை - அழகியபாதங்களை —முடியாக- கிரீடமாக—புனைந்தாரன்றே-(சகலருந்) தரித்தார்களல்லவா—தற்பரமாமுலகாளும் - முத்திபுலகத்தையாளாநின்ற — வேந்தரா

வோர்-அரசர்களாகிய—தமைபுணர்ந்தோரை - ஆத்மஞானிகளை — சேர்ந்தால் - கூடினல்—தளர்வுண்டாமோ - சோர்வுண்டாகுமோ—நற்பயன்போல் - ஆத்மலாபத்தைப்போல— வருமுமக்கு - வராதின்றவுங்களுக்கு — இங்கிரிதின்றேனும் - இவ்விடத்திலெல்லாங்கிடைத்திருந்தாலும்—நான்செய்யுங்கைம்மாறு - யானியற்றுமுபகாரத்தை — நவிலுமென்றுள் - (இன்னதென்று) சொல்லுமென்றுகேட்டாள். எ-று .... (௪௩)

(அ-கை.) சீவகாருண்யமேமைகம்மாறெனக்கூறல். (கவி) சிலையரக்கர்குலமென்னு
மெட்டிக்காட்டிற்செறிகனித்தேமாவனையாய்சகத்திலொன்றுங், கொலைபுரியாதொ
ழியென்றுவேந்தன்கூறக்கொலையொழிந்தேனென்றரக்கிகூறலோடுந், தொலைவரு
மூனுணவாநீசெய்யுமாறென்சொல்லெனமன்னவன்கேட்பத்தொல்லைநாளி, லலைவி
ல்சமாதியிலிருந்துபசியைவென்றேனவ்வகையேயின்றுமிருந்தாற்றலுற்றேன் ....*

(இ-ள்.) சிலையரக்கர்குலமென்னும் - தனுசையுடையவிராக்ஷதவமிசமென்கின்ற—எட்டிக்காட்டில் - எட்டிவனத்தில்—செறி - நெருங்கிய—தேமாங்கனி- தீமாங்கனிக்கு—அனையாய் - ஒப்பானவளே—சகத்திலொன்றும் - உலகத்தின்கண்ணேனு (ருயிரையும்)—கொலைபுரியாது - கொல்லாமல்—ஒழியென்று- இருப்பாயென்று—வேந்தன்கூற- அரசன்சொல்ல—கொலை-(அப்படியே) கொலைசெய்வதை—ஒழிந்தேனென்று - விட்டேனென்று—அரக்கி-இராக்ஷதி—கூறலோடும் - சொல்லவும்—தொலைவரும் - அளவற்ற—ஊனுணவாநீ - மாமிசாகாரமுள்ளவளாகியநீ—செய்யுமாறென்- (பசிக்குச்) செய்யுந்தன்மையென்ன—சொல்லென-கூறென்று—மன்னவன்கேட்ப- அரசன்கேட்க—தொல்லைநாளில்-முன்னுளில்—அலைவில்சமாதியிலிருந்து-நிர்விகற்பசமாதியிலிருந்து—பசியைவென்றேன் - எனதுதராக்கினியைக்கெடுத்தேன்— அவ்வகையே - அவ்வண்ணமே—இன்றும் - இப்பொழுதும்—இருந்தாற்றலுற்றேன் - (சமாதியி)லிருந்துதணிப்பேன். எ-று .... (௪௪)

(அ-கை.) அமுததாரணையேபசிப்பாமெனல். (கவி) தெள்ளமுததாரணையால்வேண்
டுங்காலந்தேகமுடனிருந்தப்பாற்றேகந்தீர்வே, னுள்ளநிறையுணர்வுடையேனொன்
றுங்கொல்லேனுண்மையெனவுரைத்தேகவுன்னுவாளைக், கொள்ளரியநட்பெளிதிற்
கொண்டேம்நீயெங்குலமகளாயெம்பதிக்குக்கூடவேகி, கள்ளருடலினைதருதுமுட
ல்போமட்டுங்கருதுமுதல்வாதனைகள்கழலாக்கண்டாய் ....*

(இ-ள்.) தெள் - தெளிவாகிய—அமுததாரணையால் - அமுததாரணையினுல்— வேண்டுங்காலம் - வேண்டியகாலமட்டும்—தேகமுடனிருந்து - சீவன்முத்தியிலிருந்து— அப்பால்-அதற்குப்பின்—தேகந்தீர்வேன் - விதேகமுத்தியடைவேன்—உள்ளம்- அகத்தில்—நிறையுணர்வுடையேன் - பூரணஞானத்தையுடையநான்—ஒன்றுங்கொல்லேன்- ஒருயிரையும்வதையேன்—உண்மையெனவுரைத்து - இதுசத்தியமென்றுசொல்லி—ஏகவுன்னுவாளை - போகநினைப்பவளை—கொள்ளரியநட்பு - பெறுதற்கரியவிஷ்டத்தை—எளிதிற்கொண்டேம் - எளிதாகப்பெற்றேம்—நீயெங்குலமகளாய் - நீயெங்கள்குலப்பெண்ணுக—எம்பதிக்கு- எமதரண்மனைக்கு—கூடவேகில் - கூடவந்தால்—கள்ளருடலினைதருதும் - கொலைசெய்யுங்கள்வருடையசரீரத்தை (யுணவாக) க்கொடுப்போம்—உடல்போமட்டும் - (இத்) தேகநீங்குமளவும் — கருதுமுதல்வாதனைகள் - நினைப்புமுதலாகியவாதனைகள்—கழலாக்கண்டாய் - நீங்காது. எ-று .... (௪௫)

(அ-கை.) மகான்களுக்கன்புசெய்தல். (கவி) ஆதலினுற்பதகருடலினையைக்கைக்
கொண்டரும்பசிபோய்ச்சமாதிதனையடையிவ்வாறு, காதலுடன்பலகாலுஞ்செய்தி
யென்றுகாவலன்கூறவுமரக்கிகளிகூர்ந்தேகப், போதகமன்னூர்தமதுநகரமேவிப்
பொன்மனைபுக்காரிரவிபொலியவந்தான், பாதகர்மூவாயிரனையாறுநாளிற்பார்த்
திபனீந்தானரக்கிபற்றிக்கொண்டாள் .... *

(இ-ள்.) ஆதலினுல - ஆகையினுல்—பதகருடலினையைக்கைக்கொண்டு - பாவிகளின்சரீரமென்னும்புசிப்பைக்கைக்கொண்டு—அரும்பசிபோய்- அரியயுதராக்கினிநீங்கி—சமாதிதனையடை - நிஷ்டையிலிருப்பாய்—இவ்வாறு - இவ்வண்ணம் — காதலுடன் - அன்போடு—பல்காலுஞ்செய்தியென்று - எப்போதுமியற்றுவாயென்று— காவலன்கூறவும்- அரசன்சொல்லவும்—அரக்கி - இராக்ஷதி—களிகூர்ந்தேக- மகிழ்ந்துசெல்ல—போதகமன்னூர்- சிங்கக்குட்டியையொத்தவிராசமந்திரிகள்—தமதுநகரமேவி - தமதுபட்டணம்போய் — பொன்மனைபுக்கார் - சுவணமயமாகியவரண்மனையையடைந்தார்கள்—இரவிபொலியவந்தான்-சூரியனுதயமானன்—பாதகர்மூவாயிரனை - மூவாயிரம்பாவிகளை—ஆறுநாளில் - ஆறுதினத்தில்—பார்த்திபனீந்தான் - அரசன்கொடுத்தான்— அரக்கி - இராக்ஷதி — பற்றிக்கொண்டாள் - பெற்றுக்கொண்டாள். எ-று .... (௪௬)

(அ-கை) அன்பிற்பிரிவற்றிருத்தல். (கவி) பூமகள்போலங்கிருந்தவடிவைக்கங்குற்போதி லொழித்தரக்கர்குலப்பூவையாகிப்,பாமரராம்பாதகரைத்தோண்மேற்கொண்டுபார்த்திப னோடமைச்சனுக்கும்பண்புகூறி, யேமமுறுமிமகிரியிற்சமாதிமேவ வேகினளின்றளவு மிந்தவாறே, கோமகனுமரக்கியுநட்பானொன்றுகுறிசிலுக்குவசிட்டமுனிகூறினனால் *

(இ-ள்.) பூமகள்போல் - இலட்சுமியைப்போல — அங்கிருந்தவடிவை - அவ்வரண்மனையி லிருந்தபடிவத்தை — கங்குற்போதில் - இராத்திரியில் — ஒழித்து - நீக்கி — அரக்கர்குலப்பூவை யாகி - இராக்ஷசியாகி — பாமரராம்பாதகரை - மூடரானகொலைக்காரரை — தோண்மேற்கொண்டு - புயத்தின்மேல்வைத்துக்கொண்டு — பார்த்திபனோடு - அரசனுடன் — அமைச்சனுக்கும் - மந்திரிக்கும் — பண்புகூறி - உபசாரங்களைச்சொல்லி — ஏமமுறு - கனகமயமான — இமகிரியில் - இமோர்ப்பருப்பதத்தில் — சமாதிமேவ - நிஷ்டையிலிருக்க — ஏகினள் - போயினள் — இன்றளவும் - இன்றைவரைக்கும் — இந்தவாறே - இவ்வண்ணமே — கோமகனும் - அரசனும் — அரக்கியும் — கற்கடியும் — நட்பானொன்று - சினேகமானார்களென்று — குரிசிலுக்கு - இராமனுக்கு — வசிட்டமுனி - வசிஷ்டமுனியானவர் — கூறினன் - சொன்னார். எ-று. (இ-நு-க-ம்) ஆப்த்தர்கள் பிராரத்தகன்மசேடத்துக்குள்ளவுபாதியைநீக்கியன்பிற்கலந்திருந்தனராம்.......... ....(௬௭)

கற்கடிகதைமுற்றிற்று. ஆக கதை-௬-இ-கவிதை (௱௭௰)

அயிந்தவர்கதை.

(அ-கை.) முன்பிரமப்ரகாசமே சீவன்முதலானசகலமுமென்பதைச்சொல்லி, அது திடமாகும்பொருட்டதனுல்லாசமான மனதேஜகமென்பதை யறிவிக்கவேண்டி அயிந்தவர்கதையைச்சொல்லுகிறார்.. *

(அ-கை.) மனமேசகத்தென்பதற்குத்திருஷ்டாந்தமுரைத்தல். (கவி) வேறு. உரை செயூசிகதையாலேயுண்மையாகிப்பரமான,கரையில்பிரமமேயுளதாங்காணப்படுவ தொன்றில்லை,வரையில்சிருட்டிகளின்முதலாய்மனமேவிளங்குமிதுபொருட்டோர், புரையில்கதைகேளெனவசிட்டன்புயன்மேனியற்குப்புகல்கின்றான்.......... *

(இ-ள்.) உரைசெயூசிகதையால் - சொல்லியகற்கடிகதையினால் — உண்மையாகிப்பரமான - தத்துவமாயுயர்ந்த — கரையில்பிரமமே - வசனாதீதமானபிரமஸ்வரூபமே — உளதாம் - உள்ளதாம் — காணப்படுவதொன்றில்லை - திரிஸ்யவஸ்துவென்பதொன்றில்லை — வரையில்சிருஷ்டிகளில் - அளவற்றசிருஷ்டிகளிலும் — முதலாய் - காரணமாக — மனமேவிளங்கும் - மனதேப்ரகாசிக்கும் — இதுபொருட்டு - இது (தெரியு) நிமித்தம் — புரையில் - குற்றமற்ற — ஓர்கதை கேளென - ஒருகதையைக்கேளென்று — வசிட்டன் - வசிஷ்டமுனி — புயன்மேனியற்கு - இராமனுக்கு — புகல்கின்றான் - சொல்லுகின்றான். எ-று..(க)

(அ-கை) மனஞ்சகத்தென்றவதனாலதற்குக்காரணமான சிற்சத்தி வெளிப்படல். (கவி) மேவுகதையாற்சிற்சத்திவிரிவேயுலகென்றறுதிவரும், வாவுமனமாஞ்சிறுமக வுமடமையாலேவெறும்பொய்யே, தாவுசகப்பேய்வரக்காணுந் தனைப்போதிக்கி லறிந்திடர்போம், பாவும்விகாரம்பலசேரிற்பவமாமவற்றைவிடல்வீடாம்....... *

(இ-ள்.) மேவுகதையால் - பொருந்தியவிக்கதையினால் — சிற்சத்திவிரிவே - ஞானசத்தியினுடையவிசாலமே — உலகென்றறுதிவரும் - சகமென்று (சொல்லப்பட்ட) நிச்சயமுண்டாம் — வாவுமனமாஞ்சிறுமகவும் - அவாவியெழாநின்றமனமென்னுஞ்சிறுகுழந்தையும் — மடமையால் - அறியாமையினால் — வெறும்பொய் - முழுதுமித்தையாக — தாவுசகப்பேய்வரக்காணும் - உலகப்பிசாசம்வரப்பார்க்கும் — தனைப்போதிக்கில் - அதனுருவத்தைத்தெரிவிக்கில் — அறிந்து - (பிரமஸ்வரூபமா) யறிந்து — இடர்போம் - துன்பநீங்கும் — பாவும்விகாரம்பல - தாவாநின்றராகத்துவேஷாதிகளென்னுநாநாவிகாரங்களை — சேரில் - (மன) மடைபின் — பவமாம் - சநநமாம — அவற்றைவிடல்வீடாம் - அவ்விகாரங்களைநீக்கிவிடுதலேமோக்ஷமாம். எ-று. (இ-உ-க-ம்) சிற்சத்தியின்விருத்தியானமனோப்ராந்தியேதிரிஸ்யமும், அதனிவிர்த்தியே திருக்குவுமாமென்பதாம்..(௨)

(அ-கை.) நூதனசிருஷ்டியைப்பார்த்ததிசயித்தல். (கவி) ஒருகால்விரிஞ்சன்சிருட்டியெலாமொடுக்கியிரவிலுறங்கியபின், வருகாலையின்மீண்டுலகளிப்பான்வானோக்குதலுமனத்தாலே, பெருகாநின்றவிண்ணிடையேபேதமானபலசிருட்டி, யருகாநின்றபடிகண்டானார்செய்ததனென்றதிசயித்தான் .... *

(இ-ள்.) ஒருகால் - ஒருகாலத்தில்—விரிஞ்சன் - பிரமதேவன்— சிருட்டியெலாமொடுக்கி- சிருஷ்டிகளனைத்தையுமடக்கி—இரவிலுறங்கியபின்-இராத்திரியினித்திரைசெய்தபின்பு—வருகாலையில் - வருகின்ற (உதய) காலத்தில் — மீண்டுலகளிப்பான் - திரும்பசகத்தைச்சிருஷ்டிப்பதற்கு—வானோக்குதலும்- ஆகாயத்தைப்பார்க்கவும்—மனத்தால்- மனதினால்—பெருகாநின்றவிண்ணிடை - விரியுமாகாயத்தில் — பேதமானபலசிருட்டி - நாநாவிதசிருஷ்டிகள்—அருகாநின்றபடிகண்டான் - சமீபமானதைப்பார்த்தான்—ஆர்செய்ததனென்று - யார்சிருஷ்டித்தாரென்று—அதிசயித்தான் - வியப்புற்றான். எ-று ....(௩)

(அ-கை.) சிருஷ்டியுண்டானகாரணமுரைத்தல். (கவி) அதிமேலாரிரவிவருகென்றுயாரோயளித்தாரெனக்கேட்பக்; கதிரோன்வணங்கி யுரைசெய்வான் கரைதீருலகின்காரணமாம், விதியாநீயீதறிந்திலையேல்விளம்பக்கேட்பாய்வெண்கயிலைப், பதியாயநாவலந்தீவிற்பரப்பாமிடத்தோர்பக்கத்தில் .... *

(இ-ள்.) அதிமேலாரிரவி - அதிமேலாருசூரியனே—வருகென்று - வாவென்(றழைத்து)—யாரளித்தார் - எவ (ருன்னையுமிந்தச்சகத்தையுஞ்) சிருஷ்டித்தவர்—எனக்கேட்ப - என்றுகேட்க—கதிரோன்வணங்கி- சூரியனமஸ்க்கரித்து—உரைசெய்வான் - சொல்லுவான்—கரைதீர்-முடிவில்லாத—உலகின்காரணமாம்-சகத்துக்குக்காரணமாகிய—விதியாநீ-பிரமாவாகியநீர்—ஈதறிந்திலையேல் - இதையறியவில்லையாயின்—விளம்பக்கேட்பாய்- சொல்லக்கேட்பாய்—வெண்கயிலைப்பதியாகிய - வெள்ளியங்கிரியிடமாகிய—நாவலந்தீவில் - சம்புத்தீவில் — பரப்பாமிடத்து - விரிந்தவிடத்தில்—ஓர்பக்கத்தில் - ஓர்பாலில். எ-று.......................... .... (௪)

(அ-கை.) தவத்துக்சேகல். (கவி) சிறக்குஞ்சுவணசடமென்னுந்தேசமொன்றுன்மைந்தர்களா, னிறக்குஞ்சிருட்டிபடைத்ததநெடுங்காசியன்றன்குலத்திடையே, பிறக்குமறையோனிந்துவெனும் பெரியோன் மக்கட்பேறின்றிப், பறக்குங்கருத்தாற்றேவியொடும்பரமன்கயிலைப்பதிமேவி ... . *

(இ-ள்.) சிறக்கும் - சிறப்புள்ள—சுவணசடமென்னும் - கனகசடமென்கின்ற—தேசமொன்று - ஒருநாடு—உன்மைந்தர்களால் - உனதுபுத்திரர்களால்—நிறக்குஞ்சிருட்டிபடைத்தது-சிறந்தசிருஷ்டியைப்பெற்றது—அதில்-அத்தேயத்தில்—நெடுங்காசியன்றன்குலத்திடை-பாரம்பரியமானகாசிபனுடையவமிசத்தில்— பிறக்குமறையோன் - உண்டானபிராமணன்—இந்துவெனும்பெரியோன்-இந்துவென்னும் (பெயரினற்)சிறந்தவன்—மக்கட்பேறின்றி - புத்திரசம்பத்தில்லாமல்—பறக்குங்கருத்தால் - பரபரப்பானமனதினால்—தேவியோடும் - நாயகியுடன்—பரமன்-பரமேஸ்வரனுடைய—கயிலைப்பதிமேவி-கயிலாயமலைக்குப்போய். எ-று. (௫)

(அ-கை.) தவத்தான்மகப்பேறுண்டாதல். (கவி) தவமேற்கொண்டுபாதவம்போற்சலமேயருந்திவருந்திடுநாட், சிவனுண்மகிழ்ந்துவேண்டியதென்செப்புமென்னச்சிரம்பணிந்து, கவலைதீரவீரைவர்கலைதேர்புதல்வர்வேண்டுமென, வவனங்களிப்பவிவர்களிப்போடகன்றார்புதல்வரவதரித்தார் ... . *

(இ-ள்.) தவமேற்கொண்டு - தவசைக்கொண்டு—பாதவம்போல்-விருட்சத்தைப்போல—சலமேயருந்தி - நீரையேபானஞ்செய்து—வருந்திடுநாள் - வருந்துகின்றகாலத்தில்—சிவனுண்மகிழ்ந்து - பரமசிவன்மனமகிழ்ந்து (வந்து —வேண்டியதென் - (உமக்கு)வேண்டியதென்ன—செப்புமென்ன - சொல்லுமென்றுகேட்க — சிரம்பணிந்து - சிரசினால்வணங்கி—கவலைதீர - எங்கடுன்பந்திரும்படி — ஈரைவர் - பதின்மர் — கலைதேர் - கல்வியிற்றெளிந்த—புதல்வர்வேண்டுமென- புத்திரர்கள்வேண்டுமென்றுகேட்க—அவனங்களிப்ப - அவரவ்விடத்தி(லப்படியே) யருளிச்செய்ய—இவர் - இந்தஸ்திரீபுருடாள்—களிப்போடகன்றார் - மகிழ்ந்துவந்தார்கள்—புதல்வரவதரித்தார் - புத்திரருதித்தார். எ-று. .... (௬)

(அ-கை.) உயர்வாராய்தல். (கவி.) மைந்தரொருபதுளராகி மறைநூனிறைந்துவளர்ந்ததற்பின், றந்தைதாயிறந்தேசகத்தனையர்கைலைத்தலமெய்திச்; சிந்தைசெய்வார் நல்குரவுதிரவுயர்வன்னியராவோ, மந்ததிலைசற்றுநலினாலதிகதிலைமன்னவராவோம்

(இ-ள்.) மைந்தரொருபதுளராகி - பத்துபுத்திரர்களுதயமாய்— மறைநூனிறைந்து-வேதசாஸ்திரப்பியாசநிரம்பி—வளர்ந்ததற்பின்-வளர்ந்ததன்பின்பு—தந்தைதாயிறந்தேக-மாதாபிதாக்கண்மரிக்க—தனையர் - புத்திரர்கள்—சுகலைத்தலமெய்தி - கைலாசமலையினிற்சே-

ன்று—சிந்தைசெய்வார் - விசாரிப்பார்கள்—நல்குரவுதீர - (நமது)தரித்திரநீங்கும்படி—உயர்வன்னியராவோம் - மேலானசாமந்தர்களாவோம்— அந்தநிலைசற்றுதலினால் - அச்செல்வங்கொஞ்சமானபடியால் —அதிகநிலைமன்னவராவோம்- பெருமையையுடையவரசராவோம்.எ-று.

(அ-கை.) உயர்வைப்பரோக்ஷமாகத் தெளிதல். (கவி.) அதுவுஞ்சிறிதாம்புவியனைத்திக்கரசராவோமதுசற்று, நிறிதுன்னியவிந்திரராவோ நிகழ்த்துமதுவுநெடிதல்ல, பதுமஞ்செறிபுமயனுதல் பழுதில்பதவியெனத்துணிந்தார், றுதிதமனத்துப்பதின் மருமொத் துயரும்பதுமாதனத்திருந்து .... *

(இ-ள்.) அதுவுஞ்சிறிதாம் - அதுவுமற்பமாம்—புவியனைத்துக்கு - பூமிக்கெல்லாம்—அரசராவோம் - சக்கிரவர்த்தியாவோம் — அதுசற்றும் - அதுவுமற்பமாம் — நிறிதுன்னிய- (நவ)நிதிகணிறைந்த—இந்திரராவோம்- தேவேந்திரராவோம்—நிகழ்த்துமிதுவும்-சொல்லியவிச்செல்வமும்—நெடிதல்ல - பெரிதல்ல—பதுமஞ்செறியும் - தாமரைமலரிலெழுந்தருளிய—அயனால் - பிரமாவாகுதல்—பழுதில்பதவியென - குற்றமற்றசெல்வமென்று—துணிந்தார்- நிச்சயித்தார்கள்—உதிதமனத்து - தோன்றினமனதில்— பதின்மருமொத்து - பத்துபேர்களுமொருமித்து—உயரும்-மேலாகிய—பதுமாதனத்திருந்து- பத்மாசனத்திலிருந்தும்.எ-று(அ)

(அ-கை.) உயர்வு அபரோக்ஷமாதல். (கவி) பிரமனுமேசிருட்டியெலாம் பிறப்பதெம்பாலென்றுள்ளே, திரமதானமனத்தாலேசிந்தித்துடலிற்சிந்தையற, மரமதென்னவிருத்தலுமேவருநாட்பலபோய்மனோபாவ, முரமதாகியயனானொருபதுலகமுளதான..... .... *

(இ-ள்.) நாமேபிரமன் - யாமேபிரமதேவன்— சிருட்டியெலாம் - சிருஷ்டிகளியாவும்—பிறப்பதெம்பாலென்று - உண்டாகுதனமதிடத்தென்று — உள்ளேதிரமதானமனத்தால்- அகத்திற்சலனமற்றமனதினால்—சிந்தித்து - தியானித்து—உடலிற்சிந்தையற- தேகஸ்மரணமின்றி—மரமதென்ன - விருக்ஷத்தைப்போல— இறத்தலும் - இறக்கவும்—வருநாட்பலபோய்-வருகின்றகாலங்களநேகமாகச்சென்று —மனோபாவமுரமதாகி- மனோபாவனைமுதிர்ந்து—அயனானார் - (அப்பதின்மரும்) பிரமாவானார்கள் — ஒருபதுலகமுளதான - பத்துலகங்களுண்டாயின. எ-று .... (௯)

(அ-கை.) மனதேசகத்தென்பது திருஷ்டாந்தமாதல். (கவி) மனவானகத்திலிவர்பத்துவகையிற்சிருட்டிதந்தனரா, லினமாமவற்றிலோரிரவி யானுமென்றுவேகினனாற், கனமாமனத்தின்விரிவாலேகாணுஞ்சகங்களுளவாமென், றனவாகனத்தோன் மனத்தாலேயளித்தானிராமற் கருள்செய்தான் .... *

(இ-ள்.) மனவானகத்தில் - மனகாயத்தில்—இவர்பத்துவகையில் - இவர்கள்பத்துவிதமாக—சிருட்டிதந்தனர் - சிருஷ்டியைச்செய்தார்கள்—இனமாமவற்றில்- கூட்டமாகியவப்பத்துசிருஷ்டிகளில்—யானும்- நானும்—ஓரிரவியென்று-ஒருசூரியனென்றுசொல்லி —ஏகினன்-போயினன்—கனமாமனத்தின் - கனமாகியமனதினது—விரிவால்- விசாலத்தினால்—காணுஞ்சகங்கள்- பார்க்கப்பட்டவுலகங்கள்—உளவாமென்று- உள்ளனவாமென்று—அனவாகனத்தோன்- அன்னவாகனத்தையுடையபிரமதேவன் — மனத்தாலளித்தான் - மனதினாற்சிருஷ்டித்தானென்று—இராமற்கருள்செய்தான்-இராகவருக்குவசிஷ்டரனுக்கிரகித்தார். எ-று.(இ-அ-க-ம்) மனோபாவமே சகத்தென்பதை யறிவித்ததாம் .... (௰)

அயிந்தவர்கதைமுற்றிற்று. ஆக கதை - எ - இ - கவிதை. (௫௮௰)

வஞ்சவிந்திரன் கதை.

(அ-கை) முன்சிற்சத்தியுல்லாசமாயுண்டான மனோபாவமே சகமென்பதைத்திருஷ்டாந்தமாகவறிவித்து அக்காரணமானமனதைத்தவிர.காரியமானதேகம்வேறின்றென்பதை பாகியேந்திரியவிபகாரத்திலறிவிக்குநிமித்தம் விஷயாநந்தானுபவமுள்ள வஞ்சவிந்திரன்கதையை நிரூபிக்கிறார் .... *

(அ - கை.) மனோவிலாச நிரூபணம். (கவி) பொருவில்சகத்தை யளிப்போனும்புருடன்றானும்புகன்மனமே, கருதுமனத்தின்செயல்செயலாங் காயச்செயல்கள்செயலன்றாம், பருதியுரைசெய்புதுமறையோர் பதுமாதனராய்ப் பார்படைத்தார், பெருமாமனத்தினுயர்சத்திபிறராலறிதற்கெளிதாமோ........................ *

(இ-ள்.) பொருவில் - ஒப்பிலலாத—சகத்தையளிப்போனும்- உலகங்களைச்சிருஷ்டிப்பவனும்—புருடன்றானும் - ஆத்மாவும்—புகன்மனமே-சொல்லப்பட்டமனதேயாம்—கருதுமனத்தின் - நினைக்கின்றமனமன்றனது—செயல்செயலாம் - தொழிலேதொழிலாகும் — காயச்செயல்கள் - தேகத்தின்றொழில்கள்—செயலன்றாம் - தொழில்களல்லவாம்—பருதிபுரைசெப்சூரியன்சொன்ன—புதுமறையோர்- நூதனமாகியபிராமணர்கள்—பதுமாதனராய்-பதுமாசனத்தையுடையபிரமதேவர்களாய்—பார்படைத்தார் - பூமியைச்சிருஷ்டித்தார்கள் — பெருமாமனத்தின் - மகாமனதினுடைய—உயர்சத்தி- மேலானசத்தியை—பிறராலறிதற்கு-வேறொருவராலறிவதற்கு—எளிதாமோ - இலேசாகுமோ. எ-று. .... (௧)

(அ-கை.) பிரமானந்தானுபவிக்கு விஷயானந்தானுபவமின்றெனல். (கவி) உள்ளமுடலைப்பாவிக்கவுடலாயதனாலுள்ளயரும், வெள்ளஞானத்தவருள்ளேமேவாநின்ற பாவனையாற், பொள்ளவுடலினலந்தீது புந்திசெய்யார்புராதனநாட், கள்ளவினை செய்யகலிகையுங்கரவிந்திரனுமிதற்கொப்பாம்.. *

(இ-ள்.) உள்ளம் - மனது—உடலைப்பாவிக்க- சரீரத்தைப்பாவனைசெய்ய—உடலாய்-சரீரமாய்—அதனால் - அச்சரீரத்தினால்—உள்ளயரும் - மனம்வருந்தும் — வெள்ளஞானத்தவர் - பூரணஞானிகள்---மேவாநின்ற - (அகத்திற்) பொருந்துகின்ற—பாவனையால் - பிரமபாவனையினால்—பொள்ளவுடலில் - நவத்துவாரமுள்ளசரீரத்தில்—நலந்தீதுபுந்திசெய்யார்- நன்மைதீமைகளையறியார்கள்—புராதனநாள் - முன்னாளில்—கள்ளவினைசெய் - சோரத்தொழில்செய்த—அகலிகையும்- அகலிகையென்பவளும்—கரவிந்திரனும்- சோரவிந்திரனும்—இதற்கொப்பாம் - இவ்வருத்தத்துக்கொப்பாவர்கள், (இ-உ-க-ம்) மனதைத்தவிரசரீரத்துக்கோர்சுகதுக்கமில்லையென்பதாம் .... (௨)

(அ-கை.) திருஷ்டாந்தமறிவித்தல். (கவி) என்னவிவர்களாவொன்றாவிராமன்கேட்ப முனிசொல்வான், முன்னர்மகதநாடுடையோன்மொழிவிந்திரத்துயம்மனென்றோர், மன்னனவனுக்குயிர்போல மகிழுந்தேவியகலிகையாந்; சொன்னநகரி லொருவனுளன் றூர்த்தனவன்பேரிந்திரனும்.. *

(இ-ள்.) என்ன - (இப்படி)யென்றுவசிஷ்டர்சொல்ல—இவர்களாவொன்ன- இவகளாவொன்று—இராமன்கேட்ப - இராகவன்கேட்க—முனிசொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—முன்னர் - முன்னாளில்—மகதநாடுடையோன் - மகததேசத்தையுடையவன்—மொழி- சொல்லப்பட்ட— இந்திரத்துயம்மனென்று - இந்திரத்துயம்மனென்னும்பெயரையுடைய— ஓர்மன்னன் - ஓரரசனும்—அவனுக்குயிர்போல - அவனுக்குப்பிராணனைப்போல - மகிழுந்தேவி—(கூடிக்) களிக்குமனைவி - அகலிகையாம்—அகலிகையென்னும்பெயரையுடையவளாம்—சொன்னநகரில் - முன்சொல்லியபட்டணத்தில்—ஒருவனுளன் - ஒருவனுண்டு—தூர்த்தன் - விடன்—அவன்பேரிந்திரனும் - அவனுமிந்திரனாகும். .... (௩)

(அ-கை.) இருதலைக்காமமுமொத்துஏகமாதல். (கவி.) அன்னாளந்தவகலிகையுமவ்விந்திரனுஞ்சறிகதைகேட், டின்னாளிந்தவகலிகையுமிவ்விந்திரனையினிதணைந்தா, டொன்னாட்பிரிந்தோர்கூட்டமெனத் தூர்த்தசூடாமணியுடனே, சின்னாண்மகிழ்ந்தொன்றுமளவிற் செங்கோலரசன் செவிப்படுத்தார்.. *

(இ-ள்.) அன்னாள் - அக்காலத்தில்— அந்தவகலிகையும் - அவ்வகலிகையும்—அவ்விந்திரனும் - அப்புரந்தரனும்—செறிகதைகேட்டு- புணர்ந்தகதையைக்கேட்டு—இன்னாள்- இந்தநாளில்— இந்தவகலிகையும் - இவ்(வரசியென்னு)மகலிகையும்—இவ்விந்திரனை - இத்(தூர்த்த)விந்திரனை—இனிதணைந்தாள் - இனிமையாகக்கூடினாள்— தொன்னாள் - நெடுங்காலம்—பிரிந்தோர்கூட்டமென - நீங்கினவர்கூடுங்கூட்டத்தைப்போல — தூர்த்தசூடாமணியுடன் - விடசிரேஷ்டனுடன்—சின்னாண்மகிழ்ந்து - சிலநாட்களித்து—ஒன்றுமளவில்- ஏகமாயிருக்குங்காலத்தில்—செங்கோலரசன்- நீதியையுடையவரசனது—செவிப்படுத்தார்- அறிவித்தார்கள். எ-று.

(அ-கை.) சிற்றின்பத்திற்பிரிவற்றிருத்தலின் றுன்பந்தோன்றாமை. (கவி) கேட்டவேந்தன்மிகமுனிந்துகுளிருநீரிலமிழ்வித்துங், கோட்டுமதமாவெதிரிட்டுங்கொடுந்தீக்கொழுந்திற்குளிர்ப்பித்தும், வாட்டுங்கசையான் மோதிவித்தும் வருத்தஞ்செய்யவருந்தாம, னாட்டமெதிர்பார்த்துளமொன்றிநகைசெய்திருந்தார்நலிவுணரார்.............................. *

(இ-ள்.) கேட்டவேந்தன் - கேள்விப்பட்டவரசன்—மிகமுனிந்து- மிகவுங்கோபித்து—குளிருநீரிலமிழ்வித்தும் - மிகுந்தசலத்திலமிழ்த்தியும்—கோடு - தந்தங்களையுடைய— மதமாவெதிரிட்டும்-மதயானையைநேரேவிட்டிடறவித்தும்—கொடுந்தீக்கொழுந்திற்குளிர்ப்பித்தும்-கொடியவக்கினிச்சுவாலையின்முழுகச்செய்வித்தும்—வாட்டும் - வருத்தாநின்ற — கசையான்

மோதிவித்தும் - குதிரைச்சம்மட்டிகளாலடிக்கச்செய்தும்—வருத்தஞ்செய்ய - (இப்படிபல) வருத்தங்களைச்செய்ய—வருந்தாமல் - வருத்தப்படாமல்— நாட்டமெதிர்பார்த்து - (இருவர்) கண்ணுமொன்றுக்கொன்றெதிர்பார்த்து — உளமொன்றி - மனமொன்றாய் — நலிவுணரார்- வருத்தமறியாதவர்களாய் —நகைசெய்திருந்தார்-நகைத்துக்கொண்டிருந்தார்கள். எ-று. (ரு)

(அ-கை.) விஷயானுபவமுரைத்தல். (கவி) அரசனேக்கிமிகவியப்புற்றறவும்வருத்தவருந்தாவா, றுரைசெய்திடுமினென்றலுமே யுள்ளங்களிப்பா ருரைசெய்வார், வரைசெய்புயத்தாயெங்கண்முகமதியினமுதம்விழியருந்தக், கரைசெய்வரியகளிப்பான்மெய்காணேம்வருத்தங்காண்பேமோ............ *

(இ-ள்.) அரசனேக்கி - இராசன்பார்த்து—மிகவியப்புற்று - மிகவுமதிசயித்து—அறவும்வருத்த - மிகவுந்துன்பப்படுத்த —வருந்தாவாறு - துன்பப்படாதவிதத்தை — உரைசெய்திடுமினென்றலும் - சொல்லுங்களென்றுகேட்கவும்—உள்ளங்களிப்பார் - மனமகிழ்ச்சியையுடையவிருவரும்—உரைசெய்வார் - சொல்லுவார்கள் — வரைசெய்புயத்தாய் - மலைபோன்றதோள்களையுடையோனே—எங்கண்முகமதியினமுதம்- எங்கள்வதனமாகியசந்திராமுதத்தை —விழியருந்த - கண்கள்புசிக்க—கரைசெய்வரிய - தடைசெய்யக்கூடாத— களிப்பால் - மகிழ்ச்சியினால்—மெய்காணேம் - உடலையேகாணுதயாம் —வருத்தங்காண்பேமோ - வருத்தங்களைப்பார்ப்போமோ. எ-று............ (சு)

(அ-கை.) மனவுறுதியின்பெருமையையறிவித்தல். (கவி) அரிந்தபொழுதுமுடற்றுன்பமறியேமொன்றிலன்பாகிப், புரிந்துபற்றுமனத்தினுடல்பொன்றவரினுந்துயர்தோன்றாத், தெரிந்தபொருளின்மனமழுந்துந் தேகத்தொழில்வேறெவர்காண்பார், விரிந்தமுனிவர்சாபமும்பல்வினையுமதனைமீட்பரிதாம்............ *

(இ-ள்.) அரிந்தபொழுதும் - அறுத்தகாலத்திலும்—உடற்றுன்பமறியேம் -சரீரவருத்தமறிந்திலம்—ஒன்றிலன்பாகிப்புரிந்து - ஒன்றிற்பிரியமாய்—பற்றுமனத்தின்- பிடிக்கின்றமனத்தினுக்கு—உடல்பொன்றவரினும் - சரீரநசிக்கவந்தாலும்—துயர்தோன்றாது - துன்பந்தோன்றாது —தெரிந்தபொருளில் - தெரிந்தவஸ்துவில்—மனமழுந்தின் - மனமுழுகினால்—தேகத்தொழில் - சரீரத்தினதுசெயலை — வேறெவர்காண்பார்- வேறேயாவர்பார்ப்பார்கள்— விரிந்தமுனிவர்சாபமும்- வியாபித்தமுனிவர்கள்சாபமும்— பல்வினையும்-பலகன்மங்களும் — அதனைமீட்பரிதாம்- அதைத்திருப்பக்கூடாது. எ-று............ (எ)

(அ-கை.) மனதின்விசாலமறிவித்தல். (கவி) மாண்டுவாளாபோனவுடன் மட்டொன்றில்லையவையெல்லாந், தாண்டுமனத்தாலுண்டாகுஞ் சலத்தாலன்றிக்காடுண்டோ, தாண்டுமனமேமுதல்வடிவாய்த் தூலவுடலம்போனாலும், வேண்டுமுடல்கள் விரைந்தெடுக்கும் விரியுங்கனவிற் செயல்போல............ *

(இ-ள்.) மாண்டு - இறந்து—வாளாபோனவுடல்- வீணுகக்கழிந்தசரீரம்—மட்டொன்றில்லை-ஓரளவில்லை—அவையெல்லாம் - அச்சரீரங்களியாவும்— தாண்டுமனத்தாலுண்டாகும் - தாவாநின்றமனதினுற்றேற்றும்— சலத்தாலன்றிக்காடுண்டோ - நீரையன்றிவனமுண்டோ—தாண்டுமனமே - (சகலத்தையு)நடத்தாநின்றமனதே— முதல்வடிவாம்- முதன்மையானசரீரமாம்—தூலவுடல்போனாலும் - (இத்)தூல்சரீரநீங்கினாலும்—வேண்டுமுடல்கள்- இச்சிக்கின்றசரீரங்களை—விரியுங்கனவிற்செயல்போல - விரிகின்றசொற்பனத்திற் றேன்றுந்தொழிலைப்போல —விரைந்தெடுக்கும் - வேகமாயெடுக்கும். எ-று............ (அ)

(அ-கை.) இ-து. (கவி) இந்தமனமேயொடுங்கினுட லேதுமறியாதெனக்கேட்ட, வந்தநிருபன்பரதனெனு மருகின்முனியைமுகநோக்கிச், சிந்தைமயலுற்றிருந்துமிவர்சிற்பாவனைசெப் பினரென்று, புந்திமகிழ்ந்துபுறநாட்டிற்போமென்றவரைப்போக்கினுல். *

(இ-ள்.) இந்தமனமேயொடுங்கில் - இம்மனமாத்திரமடங்கில்— உடலேதுமறியாதென- சரீரமொன்றையுமறியமாட்டாதென்று (தூர்த்தாள்சொல்ல)—கேட்டவந்தநிருபன் - கேட்டவ்வரசன்—பரதனெனும் - பரதனென்கின்ற— அருகின்முனியை- பக்கத்திலிருக்கின்றமுனிவரனை—முகநோக்கி - வதனத்தைப்பார்த்து— சிந்தைமயலுற்றிருந்தும் - சித்தத்திற்காமமயக்கமடைந்திருந்தும்—இவர்சிற்பாவனை - இவர்கள்ஞானபாவனையை—செப்பினரென்று-சொன்னர்களென்று—புந்திமகிழ்ந்து - மனமகிழ்ந்து—புறநாட்டிற்போமென்று - பரதேயத்திற்போங்களென்று — அவரைப்போக்கினன் - அவர்களைத்துரத்திவிட்டான். எ- று. (இ-உ-க-ம்) பிரமாநந்தானுபவமுள்ளமனது விபகாரங்களிலுமவ்வனுபவமா யிருப்பதேயன்றிப்பேதிக்கமாட்டாதென்பதாம்............ (கூ)

வஞ்சவித்திரன்கதைமுற்றிற்று. ஆகதை - அ - இ- கவிதை. (ருஅகூ)

மனத்தின் கதை.

(அ-கை.) முன்னகத்திற் சுகதுக்கவிருத்தி ரூபமானமனமே புறம்பிலிருப்ப தென்னக்காட்டி, அம்மனமகமுகப்படிற் சித்தாகவும் பகிர்முகப்படிற் சகத்தாகவு மிருப்பதை யறிவிக்கும்பொருட்டு அதனுருவத்தைநிரூபிக்கிறார் ... . *

(அ-கை.) உயிர்களின் றூலசூக்குமதேகத்தின் குணங்களை யறிவித்தல். (கவி) (வேறு)
இந்தக்கதையைவிளையாட் டென்னவிசைத்தேமெவர்க்கு, மந்தத்தமதா முடலொ
ன்றயலாமுடலொன்றவற்றிற், சிந்தைச்சரீம்விரைவிற் செயல்களெல்லாஞ்செய்து,
தொந்தித்தலையுமற்ற தூலவுடலொன்றறியா .... *

(இ-ள்.) இந்தக்கதையை - (பிரமாநந்தத்தைக்குறிப்பா லுணர்த்து) மிவ்வஞ்சவிசந்திரன்கதையை — விளையாட்டென்ன - (விஷயாநந்தமனுபவிக்கும்) லீலையாக — இசைத்தேம் சொன்னோம்—எவர்க்கும் - இயாவருக்கும்—அந்தத்தமதாமுடலொன்று - அம்மனத்திற்குரியசூட்சுமசரீரமொன்றும்—அயலாமுடலொன்று - வேறான தூலசரீரமொன்றும்—அவற்றில்-அவ்விரண்டில்—சிந்தைச்சரீரம் - மனோசரீரமானது—விரைவில்- சீக்கிரத்தில்—செயல்களெல்லாஞ்செய்து - தொழில்களனைத்தையுஞ்செய்து— தொந்தித்தலையும் - (அதிற்)றொந்தமாய்ச் சஞ்சலிக்கும்—மற்றதூலவுடல் - மற்றதூலசரீரமானது — ஒன்றறியா - ஒன்றையுமறியமாட்டாது. எ - று........ .... (க)

(அ-கை.) அவற்றின்மனோசரீரத்தின் குணங்களைவிசாரித்தல். (கவி) என்றான்வசிட்
டனவனையிந்தச் சடமாமனத்துக், கொன்றாவடிவ மிலாதமுள்ள படிவைவிரித்து,
நன்றாயுரைப்பாயென்று ஞானக்குருசில்கேட்ப, பொன்றாவிதிசொற்படியேபோத
முனிவன்புகல்வான் .... *

(இ-ள்.) என்றான்வசிட்டனவனை - இப்படியென்றுசொன்னவசிஷ்டமுனியை—சடமாம்- சடமாகவும்—ஒன்றா-பொருந்தி (யிருக்கின்ற)—வடிவமிலதாம் - ஸ்வரூபமில்லாததாகவுமிருக்கின்ற—இந்தமனத்துக்குள்ளபடிவைவிரித்து-இந்தமனத்துக்குரிய வுருவத்தைவிரித்து—நன்றாயுரைப்பாயென்று - நன்றாகச்சொல்லுமென்று — ஞானக்குருசில்கேட்ப- அறிவுள்ளவிராமன்கேட்க—பொன்றாவிதிசொற்படியே- அழியாதபிரமன்வாக்கியப்படியே—போதமுனிவன்புகல்வான் - ஞானஸ்வரூபியான வசிஷ்டமுனிசொல்லுவார். எ-று..... .... (உ)

(அ-கை.) அம்மனத்திறுருவத்தைப் பகுத்துக்கூறுதல். (கவி.) அகிலசத்தியுடைத்தாய
நந்தமானபரமம், புகல்சங்கற்பத்தோடேபொருந்தும்வடிவேமனமா, மிகலுஞ்சத்தோ
டசத்தாயிரண்டினுள்ளுந்தோன்றிப், பகருந்தொழில்களோடே பயில்பாவனையுமஃதே..

(இ-ள்.) அகிலசத்தியுடைத்தாய் - சகலசத்திகளுமுடையதாய் — அநந்தமானபரமம்-முடிவற்றிருக்கின்றவாத்மாவானது— புகல்சங்கற்பத்தோடு - சொல்லப்பட்டசங்கற்பத்துடன்—பொருந்தும் - கூடுகின்ற—வடிவேமனமாம் - உருவமேமனமாகும்— இகலும் - வலியுள்ள—சத்தோடசத்தாம் - சத்துமசத்துமாகிய—இரண்டினுள்ளுந்தோன்றி - இரண்டின்மத்தியிலுமுண்டாகி—பகருந்தொழில்களோடும் - சொல்லப்பட்டசெயல்களோடும்—பயில்பாவனையுமஃது- பழகும்பாவனையுமந்தமனதினுருவமே. எ-று. (இ-ரூ-க-ம்) பிரமஸ்புரணமேமனமாம், அஃதுசடாசடங்களிற் றோற்றியதையே பாவித்ததன்மயமா யிருக்கின்றதாம் ....(ங)

(அ-கை) அம்மனதைச்சித்திற்சேர்க்க திருஷ்டாந்தமுரைத்தல். (கவி) எங்கேயெனி
னுந்தோன்றுமிந்த மனதைமுத்திச், சங்கேதத்தானுகந் தன்னிற்கூட்டினன்றாம்,
பங்கேருகனோதியதோர் பழையகதைநீகேட்பாய்; வெங்கேதமுமச்சமுமாய் வெறு
ம்பொய்யாமோர்வனமே..... .... *

(இ-ள்.) எங்கேயெனினும் - எவ்விடத்(துண்டா)யினு(முண்டாகட்டும்)—தோன்றுமெனினும் - (எந்தவுருவமாகத்)தோன்றினுந்(தோற்றட்டும்)— இந்தமனதை - இப்படிப்பட்டமனதை —முத்திச்சங்கேதம் - மோக்ஷமடையுங்குறிப்பில்— உபாயங்களிலும்—தன்னில் - ஆத்மாவிலும்—கூட்டினன்றாம் - சேர்க்கினன்மையாம்—பங்கேருகனோதியது -பிரமதேவன்சொன்னதாகிய—ஓர்பழையகதைநீகேட்பாய் - ஒருபுராதனமானகதையைநீகேள்—வெங்கேதமும் - கொடிய துன்பமும்—அச்சமுமாய் - பயங்கரமுமாயிருக்கின்ற — வெறும்பொய்யாம் - முழுதுமிந்தையாகிய—ஓர்வனம் - ஓர்காடுள்ளதாம். எ-று .... (ச)

(அ-கை.) இ-து. (கவி) அதினோர்கோடிநீள மநந்தகோடிகாத, மிதிலோர்புருடன்கண்
கையெண்ணிலாததுடையோன், சிதறுநின்றநினைவோன் சேணுயகன்றவடிவோன், பத
றுநின்றகணையம்பலவுங் கரத்தாற்பற்றி .... *

(இ-ள்.) அதின் - அவ்வனத்தினது—ஓர்கோடிநீளம் - ஒருகடைப்புறத்தினளவு— அநந்த கோடிகாதம் - அளவற்றகாவதமாம்—இதில் - இவ்வனத்தில்—ஓர்புருடன் - ஒருபுமான்—கண் கை- நேத்திர அஸ்தங்கள்—எண்ணிலாததுடையோன் - அளவில்லாததையுடையோன் — சிதறுநின்றநினைவோன் - (பலவாகச்)சிதறுகின்றகருத்தையுடையவன்—சேணுயகன்றவடிவோன்- ஆகாயம்போலுயர்ந்தவிரிந்தவுருவமுள்ளவன்—பதறுநின்றகணையம்பலவும் - விரைவிற்செல்கின்ற வளைதடிகளநேகங்களையும்—கரத்தாற்பற்றி - கைகளிற்றரித்துக்கொண்டு. எ-று ....(ரு)

(அ-கை) இ-து. (கவி) தனைத்தான்சிதறமோதித் தகர்ந்தேயுலறியலறி, யனைத்தாந்திசை
யுமோடியவச மாகியடிப்பட், டெனைத்தாமுறுப்புந்தூளாயிருளாய்நடுக்கமிகுந்த, வினை
த்தாழ்வுறுபாழ்ங்கிணற்றில் வீழ்ந்துநெடுநாண்மெலியும் .... *

(இ-ள்.) தனைத்தான்சிதறமோதி - தன்னைத்தானேசிதறும்படியடித்து—தகர்ந்து - ஒடித்து—உலறியலறி - வெருண்டுகதறிக்கொண்டு— அனைத்தாந்திசையுமோடி - எல்லாத்திக்குகளிலுமோடி—அவசமாகி - வசந்தப்பி— அடிபட்டு - (சகலத்திலுந்) தாக்கி — எனைத்தாமுறுப்புந்தூளாய் - சகலவவயவங்களுந்துகளாய் — இருளாய்நடுக்கமிகுந்த - அந்தகாரமாகியபயமதிகரித்திருக்கின்ற—வினைத்தாழ்வுறுபாழ்ங்கிணற்றில் - தீவினையாகியவாழமுள்ள பாழுங்கிணற்றில்—வீழ்ந்துநெடுநாண்மெலியும் - விழுந்துவெகுகாலம்மெலிவான். எ-று ....(சு)

(அ-கை.) இ-து. (கவி) மீட்டுமெழுந்துவந்து மெய்யின்மோதிக்கதறி, யோட்டந்த
னிலேசுழலுமுயர் முண்ணிறைந்தகருவேற், காட்டின்முறியவிழுந்து கனலிற்புழுப்
போற்பதைக்கும், வாட்டந்தவிர்த்துகதலி வனத்தின்மகிழ்வுற்றிருக்கும் .... *

(இ-ள்.) மீட்டுமெழுந்துவந்து - திரும்பவுமெழுந்திருந்துவந்து— மெய்யின்மோதி- சரீரத்திலடித்து—கதறி- கதறிக்கொண்டு—ஓட்டந்தனிலேசுழலும்- ஓட்டத்திற்சுழல்வான்—உயர்முண்ணிறைந்த - நீண்டமுட்களிறைந்த — கருவேற்காட்டில் - கருவேலங்காட்டில்—முறியவிழுந்து - முறியும்படிவிழுந்து—கனலிற்புழுப்போல்- அக்கினியில் விழுந்த) விட்டிலைப்போல—பதைக்கும் - புதைபதைப்பான்—வாட்டந்தவிர்த்து - (இப்படி)வாடுதலைநீங்கி—கதலிவனத்தில் - அரம்பாடவியில்—மகிழ்வுற்றிருக்கும் - களிப்புற்றிருப்பான். எ-று ....(எ)

(அ-கை.) இ-து (கவி) கதலிவனத்தைவிட்டுகருவேல்வனத்திற்சுழலும், பதறிக்கிணற்றில்
வீழும்பலகாலுழலக்கண்டு, விதறுவகையாம்பற்றி வீணேவருந்துநீயா, ரெதுசெய்கின்
றாய்நினைவென்னென்ன வவனிதிசைத்தான் .... *

(இ-ள்) கதலிவனத்தைவிட்டு - வாழைவனத்தைநீங்கி— கருவேல்வனத்திற்சுழலும் - கருவேலங்காட்டிற்சுழலுவன்— பதறிக்கிணற்றில்வீழும் - விரைந்துகூபத்தில்விழுவன்—பலகாலுழலக்கண்டு - (இப்படி)யநேகந்தரஞ் சுழலுதலைப்பார்த்து—விதறுவகை - நடுங்காவண்ணம்—யாம்பற்றி - நாம்பிடித்துக்கொண்டு—வீணேவருந்தும்- விருதாவாகவருந்துகின்ற— நீயார்-நீயெவர்—எதுசெய்கின்றாய் - என்னசெய்கின்றாய்— நினைவென்னென்ன - உனதுகருத்தியாதென்றுகேட்க—அவனிதிசைத்தான் - அவனிதைக்கூறினான். எ-று ....(அ)

(அ-கை) இ-து (கவி) யானென்றொருவனில்லையிங்கோர்செயலுங்காணே, னீநின்று
ரைக்க நினைந்துநின்றூற்றளராநின்றேற, னூனென்றியவெம் பகைநீயுன்றாலின்பது
ன்ப, நானென்றறிந்தேனென்றுநல்குந்தன்னைநோக்கி .... *

(இ-ள்) யானென்றொருவனில்லை - நானென்றொருவனுமில்லை — இங்கோர்செயலுங்காணேன் - இவ்விடத்தொருதொழிலையுங்கண்டிலன்—நீநின்றுரைக்க- நீயிருந்(திப்பேதங்களைச்)சொல்ல—நினைந்து - கருதி—நின்றூற்றளராநின்றேன் - உன்றால்வாடுகின்றேன்—ஊனென்றியவெம்பகைநீ - ஊனம்பொருந்தியவெமதுசத்துருநீ —உன்றாலின்பதுன்பம்- நின்றாற்சுகதுக்கங்களை —நானென்றறிந்தேனென்று -யானெனத்தெரிந்தேனென்று—நல்குந்தன்னைநோக்கி- அடிபட்டதனது தேகத்தைப்பார்த்து எ-று ....(கூ)

(அ-கை) இ-து (கவி) இடிக்குமுகிலின் மழைபோலிரங்கிக்கதறியழுதா, னொடிக்கு
ளழுகைவிட்டுநுணுக் கந்தன்னைநோக்கி, வெடிக்கநகைத்தானெடிதாமீளவெய்துமு
ன்னே, தடிக்குமங்கமனைத்துந் தானேயடவேதவிர்ந்தான் .... *

(இ-ள்.) இடிக்குமுகிலின்மழையைப்போல் - சப்திக்கின்றமேகத்தினதுவருடம்போல —இரங்கி - இரக்கமுற்று—கதறியழுதான் - (ஓவென்று) கூப்பிட்டழுதான்— நொடிக்குளழு

கைவிட்டு - ஒருக்ஷணத்திலவ்வழுகையைவிட்டு—நுணுக்கந்தன்னைநோக்கி - நுண்மையானதன துஸ்வரூபத்தைப்பார்த்து—நெடிதா - வெகுநேரமாக—வெடிக்கநகைத்தான் - (வயிறு) பிள க்கும்படிசிரித்தான்—மீள- திரும்பவும்—எமதுமுன்னே-எமக்குமுன்பு—தடிக்குமங்கமனைத் தும்- பருத்திருக்கின்ற(தனது) வடிவங்களையெல்லாம்— தானேயடவேதவிர்ந்தான் - தானே கிரமமாகநீங்கினன் எ-று...(௰)

(அ-கை.) இ-து. (கவி) விதியின்வசத்தாலிவனோரிடமேமேவலுற்று, னெதிர்வந்தொரு வனயலே யிவன்போலடியுண்டேக, முதல்வந்தவனைப்போனு மொய்ம்பாயுணர்த்தவந் தப், பதிகன்றனும்போனன்பழையவடிவமொழிய.. *

(இ-ள்.) விதியின்வசத்தால்- நியதியின்வயத்தினால்—இவனோரிடமேவலுற்றான்-இவனோ ரிடத்திலடைந்தான்—எதிர்வந்து - (எனக்) கெதிராகவந்து—ஒருவன் - ஒருபுருடன்— அயல்- சமீபத்தில்—இவன்போலடியுண்டேக - முன்சொன்னவனைப்போலடித்துக்கொண்டுபோக— முதல்வந்தவனைப்போல் - முன்வந்தவனைப்போல—நாமொய்ம்பாயுணர்த்த-நாமுறுதியாகப் போதிக்க—அத்தப்பதிகன்றனும் - அவ்வழிச்செல்வோனும்—பழையவடிவமொழிய-முன்வ டிவநீங்க—போனன் - சென்றான். எ-று...(௰௧)

(அ-கை.) இ-து. (கவி) பிறிதுமொருவன்வந்தப்பெரியகிணற்றில்வீழ்ந்தான், சிறிதல் லாதகாலந்திரும்பியேறக்காணேம், வெறிதுன்றியவவ்வனத்தில் வேறுமொருவன்வரலும், மறிதுமென்னத்தகைந்தேயானதெல்லாமுரைத்தேன்.. *

(இ-ள்.) பிறிதுமொருவன்வந்து - வேறுமொருவன்வந்து— அப்பெரியகிணற்றில்வீழ்ந் தான் - அப்பெரிதான (பாழ்ங்) கிணற்றில்விழுந்தான்—சிறிதல்லாதகாலம்- வெகுநாள்—திரு ம்பியேறக்காணேம் - திரும்பயேறிவரப்பார்த்திலம்— வெறிதுன்றியவவ்வனத்தில்-கலக்கமிகு ந்தவக்காட்டில்—வேறுமொருவன்வரலும்-மற்றொருவன்வரவும்—அறிதுமென்னத்தகைந்து- அறிவோமென்றுதடுத்து — ஆனதெல்லாமுரைத்தேன்- கூடியமட்டுங்கூறினேன். எ-று(௰௨)

(அ-கை.) இ-து. (கவி) ஓதிற்றொன்றுங்கேளாதுரப்பியிகழ்ந்துமேன்மேன், மோதிக் கொண்டுபோனன்மூர்க்கரவனைப்போல்வார், வாதிப்புறுவார்நிறைந்து வயிரமுள்ளாற் செறிந்து, பீதிக்கிடமாயிருள்சூழ்பெருங்காடின்றுமுளதால்.. *

(இ-ள்.) ஓதிற்றொன்றுங்கேளாது- சொன்னதிலொன்றுங்கேளாமல்—உரப்பியிகழ்ந்து- அதட்டிநிந்தித்து—மேன்மேன்மோதிக்கொண்டுபோனன் - மேலுமேலுமடித்துக்கொண்டு போயினன்—மூர்க்கர் - மூர்க்கரும்— அவனைப்போல்வார் - அவனையொத்தவர்களுமாகிய— வாதிப்புறுவார் - துன்பப்படுகின்றவர்கள்—நிறைந்து - மிகுந்து—வயிரமுள்ளாற்செறிந்து- கூர்ந்தமுட்களானெருங்கி—பீதிக்கிடமாய் - பயத்துக்கிடமாயிருக்கின்ற— இருள்சூழ்பெருங் காடு-அந்தகாரஞ்சூழ்ந்தமகாரணியமானது—இன்றுமுளது-இப்பொழுதுமிருக்கின்றது.எ-று

(அ-கை.) இ-து. (கவி) அறவேகொடிதாய்வெந்தவடவியெனினுமறிஞர்,[1] நறவேகமழ் ந்துகுளிர்ந்தநந்தவனம்போன்மகிழ்வர், மறவேலரசேயென்ற வசிட்டமுனியைநோக் கித், துறவேபுரிவாயிவற்றைத்தோன்றச்சொல்வாயென்றான்.. *

(இ-ள்.) அறவேகொடிதாய் - மிகவுங்கொடியதாகி—வெந்தவடவியெனினும்-தத்தமான காடானாலும்—அறிஞர் - ஞானிகள்—நறவேகமழ்ந்துகுளிர்ந்த - வாசனைவீசிக்குளிர்ந்திருக் கின்ற—நந்தவனம்போன்மகிழ்வர் -புஷ்பவனத்தைப்போலசந்தோஷிப்பார்கள்—மறவேலர சே - வலிமையுள்ளவேலையுடையவிராமா—என்ற - என்றுசொல்லிய— வசிட்டமுனியைநோ க்கி - வசிஷ்டரிஷியைப்பார்த்து—துறவேபுரிவாய் - சகலத்தியாகத்தையேயனுக்கிரகஞ்செய் பவரே—இவற்றை - இக்கதையை—தோன்றச்சொல்வாயென்றான்-விளங்கவருள்வாயென்றிரா மன்கேட்டார். எ-று. (இ-௰௧-௧-ம்) பாவித்தவடிவமாகியமனது ப்ரவிர்த்திநிவிர்த்திகளிற் சட மாயுஞ் சித்தாயுமிருப்பதையறிவித்தற்கு, அதுசெல்லும் விஷயப்ப்ரபஞ்சத்தைவனமாகவும் அதிற்சஞ்சரிக்குமனதைப் புருடனாகவுமுருவகப்படுத்தி, யதன்கிரியையைப் பதினெண்வித மாகப்பகுத்துக்கூறினதாம்...(௰௪)

(அ-கை.) உருவகத்தைவெளிப்படுத்தல். (கவி) கேட்டகுருசிலறியக்கிளர்மாமுனிவனுரை ப்பா, னாட்டவடியுமுடியுநடுவுமின்றிப்பொய்யாங், கூட்டமாகியாழ்ந்து கொடிதாய்விக ற்பநெடிதா, மீட்டவுலகத்தியல்பேயாமுன்சொன்னவனமே.. *

(இ-ள்.) கேட்டகுரிசிலறிய - (இப்படி) கேட்டவரசனறியும்படி—கிளர்மாமுனிவனுரை ப்பான்- மகாமுனியானவசிஷ்டர்சொல்லுவார்— (௧) நாட்ட- ஸ்தாபிப்பதற்கு—அடியுமுடியு நடுவுமின்றி - ஆதிமத்தியாந்தமில்லாமல்— பொய்யாங்கூட்டமாகி - மித்தியாசங்கமாகயும்—

ஆழ்ந்து - கெம்பீரமாகியும்—கொடிதாய் - கொடிதாகியும்—விகற்பநெடிதாம் - விகற்பமிகு தியாகியுமிருக்கின்ற—ஈட்டவுலகத்தியல்பே - கூட்டமுள்ளசம்சாரசுபாவமே — யாமுன்சொன்னவனம் - நாமுன்சொல்லியகாடாம். எ-று .... (௰௫)

(அ-கை.) இ-து. (கவி) புகையார்வனத்திற்புருடன் புலம்பிச்சுழலுமனமே, தகையா நின்றநாமுந் தனிவிவேகந்தானே, பகையாமிதனாலுள்ளம் பரத்தையறிந்தாறினதான், மிகையார்மனங்களிகழ்ந்துவேட்கைவசத்தோடினவால்.................................... *

(இ-ள்.) (௨) புகையார் - (கோபாக்கினியின்) றூமநிறைந்த — வனத்தில் - (உலகமென்னுங்)காட்டில்—புருடன்-புருடனென்றவன்—புலம்பிச்சுழலுமனமே-துன்புற்றுச்சுழலாநின்ற மனமேயாம்—(அ) தலைகயாநின்றநாமும்- தடுக்கின்றயாமும்—தனிவிவேகந்தானே-ஒப்பற்ற விவேகமேயாம் —(௰௫) பகையாமிதனால் - பகையாகியவிவ்விவேகத்தினால்—உள்ளம்- மனமானது—பரத்தையறிந்து - பிரமத்தையுணர்ந்து—ஆறினது - விஸ்ராந்தியையடைந்ததாம்— (௰அ) மிகையார்மனங்கள் - குற்றம்பொருந்தியமனங்கள் — இகழ்ந்து - (விவேகத்தை) நிந்தித்து—வேட்கைவசத்து - விடயவாசனைவயத்தில்—ஓடின - சென்றன. எ-று.................. (௰௬)

(அ-கை,) இ-து. (கவி)விதறியோடுமனங்கண்மேவுநரகங்கிணறு, கதலிவனம்விண்ணுலகாங்கரிவேல்வனமண்ணுலகாஞ், சிதறிவிழுந்தகிணற்றிற் றிரும்பியேறு தொழிந்தோன், பதறிநரகப்புகுந்துபாவந்தொலையாததுவாம் .... *

(இ-ள்.) (௩) விதறியோடுமனங்கள்-அடித்துக்கொண்டுசெல்லாநின்றமனங்களானவை—மேவுங்கிணறு - வீழுங்கிணறென்றது—நரகம் - நரகமாம்—(எ) கதலிவனம் - அரம்பாடவியென்றது — விண்ணுலகாம் - (போகநிறைந்த) சுவர்க்கலோகமாம் — (௬) கரிவேல்வனம்-(முட்கணிறைந்த) கரிவேற்காடென்றது — மண்ணுலகாம் - (மோகமுள்ளஸ்திரீபுருடர்கணிறைந்த) பூலோகமாம்—(௰எ) சிதறிவிழுந்தகிணற்றில் - சிதறிவீழ்ந்தகிணற்றினின்றும்—திரும்பியேறுதொழிந்தோன்-திரும்பவேறுமற்கிடந்தவனென்றது—பதறிநரகப்புகுந்து-விரைவினரகத்திற்பிரவேசித்து—பாவந்தொலையாததுவாம்-பாவகன்மநீங்காதமனமாம். எ-று...... (௰எ)

(அ-கை.) இ-து. (கவி) முனையார்முள்ளென்றதுதான்மோகமனிதர்மடவார், நினையாவின்பதுன்பநின்றாலடைந்தேனீயே, வினையாமென்றதுணர்வால் வீயுமனநொந்துரைத்த, தனையாரழுந்தென்றதாசையறுக்குமலக்கண் .... *

(இ-ள்.) (௬) முனையார்முள்ளென்றதுதான்- கூர்மைபொருந்தியமுள்ளென்றது—மோகமனிதர்மடவார் - காமாந்தகாரத்தையுடையஸ்திரீபுருடர்கள்— (௰) நினையாவின்பதுன்பம்-நினைக்கின்றசுகதுக்கங்களை—நின்றாலடைந்தேன் - உன்றாற்பெற்றேன் —(௰க) நீயேவினையாமென்றது - நீயேயெனக்குச்சத்துருவாமென்றது—உணர்வால் - அறிவினால்— வீயுமனநொந்துரைத்தது - நசிக்கின்றமனதுதுன்புற்றுச்சொன்னது — (௰௨) அனையாரழுதவென்றது-அவர்களழுதார்களென்றுசொல்லியது — ஆசையறுக்குமலக்கண் - இச்சையைக்கெடுக்கின்ற வருத்தமாம், எ-று .... (௰அ)

அ-கை. (இ-து, (கவி) போதம்பாதியாகிப்புரணமாகாமனந்தான், காதல்விடுநொந்தயர்தல்கதறியழுததுவாஞ், சீதமாகமகிழ்ந்துசிரித்துநின்றதென்ற, தேதமில்லாஞானத்தேகமானமகிழ்ச்சி.. *

(இ-ள்) (௰௯) கதறியழுதது - கூப்பிட்டழுததென்றது—போதம்பாதியாகி-ஞானமரைவரிசையுண்டாகி—புரணமாகாமனந்தான் - (ஞான) நிறையாதமனமானது — காதல்விடில்-ஆசையைவிடும்போது—நொந்தயர்தல் - துன்பப்பட்டுவருந்துதல்—அதுவாம்- அவ்வருத்தமேயாம்—(௰௪) சீதமாகமகிழ்ந்து-குளிர்ச்சியாகச்சந்தோஷித்து— சிரித்துநின்றதென்றது-நகைத்திருந்ததென்றது—ஏதமில்லாஞானத்து - குற்றமற்றஞானத்தில்— ஏகமானமகிழ்ச்சி-ஒன்றானவாநந்தமாம், எ-று.. (௰௯)

(அ-கை) இ-து, (கவி) முடிவின்ஞானத்தாலேமோகம்விட்டமனந்தான், வடிவைமாய்க்கும்பொழுதுமகிழுமதுவேமகிழ்வாம், நெடியமொய்ம்பினாலே நிறுத்திக்கேட்டேமென்ற, தொடிவின்ஞானவலியானுள்ளமொருப்பட்டதுவே. ....*

(இ-ள்) (௰௬) முடிவின்ஞானத்தால் - அந்தமில்லாதஞானத்தினால்—மோகம்விட்டமனந்தான் - ஆசையைவிடுத்தமனமானது—வடிவைமாய்க்கும்பொழுது- தனதுருவத்தைநாசஞ்செய்யும்பொழுது—மகிழுமதுவேமகிழ்வாம் - சந்தோஷிப்பதேசந்தோஷமாம்—(௯) நெடியமொய்ம்பினால் - மிகுந்தவலியினால்—நிறுத்திக்கேட்டேமென்றது - தடுத்துக்கெட்டோமென்றுசொல்லியது—ஒடிவின்ஞானவலியால் - அழிவற்றஞானோபதேசபலத்தினால்— உள்ளமொருப்பட்டது - மனமொருமைப்பட்டது, எ-று.. (௨௰)

(அ-௯௧.) இ-து. (கவி) அங்கத்தறைந்துகொண்ட தடர்கற்பனைகளாலே, பங்கப்படு வன்றுயராம் பரந்தோடினதென்றதுதான், மங்கத்தகுவாதனையான் மருண்டுசுழல்வதா குஞ், சங்கற்பமும்வாதனையுந்தனைத்தான்வலைபோற்றளைக்கும்............................... *

(இ-ள்.) (௫) அங்கத்தறைந்துகொண்டது - சரீரத்திலடித்துக்கொண்டதென்றது—அடர்கற்பனைகளால் - மிகுந்தகற்பனைகளின்—பங்கப்படுவன்றுயராம் - கெடுதிப்படுகின்றவலியதுன்பங்களாம்—(௬) பரந்தோடினதென்றதுதான் - நெடுந்தூரமோடினதென்றது—மங்கத்தகுவாதனையால் - கெடத்தகுந்தவாசனையா(லடிபட்டு)—மருண்டுசுழல்வதாகும் - மயங்கித்திரிவதாம்—சங்கற்பமும் - சங்கற்பங்களும்—வாதனையும் - வாசனைகளும்—தனைத்தான் - தன்னைத்தானே—வலைபோல்-வலையைப்போல—தளைக்கும்-சிறைப்படுத்தும். எ-று. (இ-எ-க-ம்) முன்றொகுத்துச்சொன்னபதினெண்பகுப்பையுமுறைப்படி யிலக்கம்வைத்து வகுத்துரைத்ததாம்.

(அ-௯௨.) ஆதலால்மனதைக்கெடுக்கவெனல். (கவி) கோசகாரப்புழுப்போற்கொடுங்கற் பனைவாதனையாற், பாசமடைவரியாரும்பகர்ந்தமனத்தின்கதையை, மாசிலாதமனத்தான் மதித்துமனத்தைமாய்ப்பாய், தேசமுடையாயென்றுதெளிந்தவசிட்டனுரைத்தான்.. *

(இ-ள்.) கோசகாரப்புழுப்போல் - கோசகாரக்கிருமியைப்போல — கொடுங்கற்பனைவாதனையால் - (தனது) கொடியசங்கற்பவாசனைகளால்—இயாரும்பாசமடைவர் - யாவரும்பாசத்தையடைவார்கள்—பகர்ந்த - சொல்லிய—மனத்தின்கதையை- இம்மனத்தின்சரித்திரத்தை—மாசிலாதமனத்தால் - களங்கமற்றமனதினால் —மதித்து - வரையறுத்தறிந்து— மனத்தை-(களங்க)மனதை—மாய்ப்பாய் - கெடுப்பாய்—தேசமுடையாயென்று - தெளிவையுடையவிராமாவென்று—தெளிந்தவசிட்டன்-தெளிவுள்ளவசிஷ்டமுனி—உரைத்தான்-சொன்னார். எ-று. (இ-ம்) மனதையகமுகத்திற்செலுத்தி பகிர்முகத்திற்செல்லாமற்றடுக்கின் ஞானமயமாமென்பதாம் .... (௨௨)

மனத்தின்கதைமுற்றிற்று. ஆ-கதை - ௬௨ - கவிதை (௨௭௪)

பாலன்கதை.

(அ-௯௩.) முன்மனமானது சிற்பாவனையாற்சித்துஞ் சடபாவனையாற் சடமுமானதை யறிவித்து அதன்சங்கற்பரூபமானசகத்தை யாத்மவிசாரமில்லாதவர்கள், எதார்த்தமாகப்பார்ப்பதைப் பாலன்கதையினிதரிசனமாகச்சொல்லுகிறார் .... *

(அ-௯௪.) அறிஞர்கள்மனது பிரமமேயெனல். (கவி) வேறு. முழுதுசத்தியுமாய்ப் புரணமாயென்றுமுடிவறுபிரமமாவதுதான், பழுதின்ஞானிகடம்மனமலாதில்லைப் பரமமாமிதிலிலாதில்லை, யெழுதருஞ்சத்தியாவுமாயிலங்குமிவைசளோர்காலமொன்றுளதாம், வழுவிலாப்பிரமமுடையசிற்சத்திமறிதருமுடல்களிற்றோன்றும்.......*

(இ-ள்.) பழுதின்ஞானிகடம் - குற்றமற்றஞானிகளுடைய—மனம் - மனமானது—முழுதுசத்தியுமாய் - சகலசத்திகளையுடையதாயும்—புரணமாய்-பரிபூரணமாயுமிருக்கின்ற—என்றுமுடிவறு - எப்பொழுதும்நாசமில்லாத—பிரமமாவதுதான்-பிரமஸ்வரூபமாவதுதான்—அலாதில்லை - அதையன்றிவேறின்று—பரமமாமிதில்-பிரமஸ்வரூபமாகியவிதனிடத்தில்—இலாதில்லை - இல்லாதவைகளொன்றுமில்லை—எழுதருஞ்சத்தி - எழுதுதற்கரிய சிற்சத்தியானது—யாவுமாயிலங்கும் - சகலமுமாய்ப்பிரகாசிக்கும்—இவைகள் - இச்சத்திகளில்—ஓர்காலம்-ஒருகாலத்தில்—ஒன்றுளதாம் - ஒருசத்தியுண்டாம்—வழுவிலாப்பிரமமுடைய - குறைவில்லாதபிரமத்தினுடைய—சிற்சத்தி - ஞானசத்தியானது—மறிதரும் - அழிகின்ற—உடல்களிற்றோன்றும் - சரீரங்களிற்றோற்றும். எ-று .... (௧)

(அ-௯௫.) இ-து. (கவி) காற்றிலேயசைவுங்கல்லிலேதிடமுங் கனலிலேசுடும்வான்றனிலே, தோற்றலாமையுநன்னீரிலேநெகிழ்வுந் தொலைவுறுமாய்விலேமாய்வு, மூற்றமாம்விதையின் மரங்களும்போல வுள்ளுறைபிரமசத்திகடா, மாற்றல்சால்காலதேசசித்திரத்தா லவனியிற்சாலிபோற்றோன்றும் .... *

(இ-ள்.) காற்றிலேயசைவும் - வாயுவிற்சலனசத்தியும்—கல்லிலேதிடமும் - பாடாணத்

திற்கடினசத்தியும்—கனலிலேகூடும் - அக்கினியிலுஷ்ணசத்தியும் — வான்றனிலேதோற்றலாமையும் - ஆகாயத்திற்சூனியசத்தியும்—நன்னீரிலேநெகிழ்வும்- நல்லசலத்திற்றிரவசத்தியும்—தொலைவுறு - தொலையாநின்ற—மாய்விலேமாய்வும்- நாசத்திலேநாசசத்தியும்—ஊற்றமாம்-வலியுள்ள—விதையின்மரங்களும்போல - வித்தி(லடங்கிய)விருக்ஷங்களைப்போல— உள்ளுறை பிரமசத்திகடாம் - (பிரமத்தி)னுளடங்கியிருக்கின்றபிரமசத்திகளானவை—ஆற்றல்சால்-பலமிகுந்த—காலதேசசித்திரத்தால் - காலதேசவிசித்திரத்தினல்—அவனியில் - பூமியில்—சாலிபோற்றோன்றும் - பயிர்களைப்போலத்தோற்றும். எ-று. (இ-உ-க-ம்) பிரமத்துக்குஅபின்னமான சிற்சத்தியுல்லாசமேவிசித்திரமான சகமாகத்தோற்றுகின்றதாம் ....(௨)

(அ-கை) அசத்தைச்சத்தாகக்காணுதல். (கவி)பரமமேயெங்குமென்றுமுண்டாகு
ம்பயின்மனனத்தினன்மனமாந், தரமறுபந்தமுத்தி பேருலகாஞ் சத்திகளனைத்து
மாய்நிற்குந், திரமறுதனையர்க்கன்னை சொற்கதைபோற்செப்பியவிவையெலாந்திர
மாங், கரமலர்முகிலேயென்றனுமந்தக் கதையினையிராகவன்வினவ...... .... *

(இ-ள்.) பரமே - பிரமஸ்வரூபமே—எங்கும் - எவ்விடத்திலும்—என்றும்-எப்போதும்—உண்டாகும் - உண்டாயிருக்கும்—(அப்பிரமமே)பயில்-சொல்லப்பட்ட—மனனத்தினன் மனமாம்- மனனத்தினன்மனமாகவும்—தரமறு-(இழிவிற்)சமானமில்லாத—பந்தம்-பந்தமுள்ள(சீவாத்மாவாகவும்)—முத்தி-வீடுள்ள(பரமாத்மாவாகவும்)—பேருலகாம்- பெரியவுலகமாகவும்—சத்திகளனைத்துமாய்நிற்கும்-சத்திகளெல்லாமாகவுமிருக்கும்—திரமறுதனையர்க்கு-ஸ்திரமில்லாதகுழந்தைகளுக்கு—அன்னைசொற்கதைபோல்-தாய்சொல்லப்பட்டகாதையைப்போல—செப்பியவிவையெலாம் - சொல்லியவிக்கற்பனைகளனைத்தும்—திரமாம்-நிலையாகும் — கரமலர்முகிலே - கைகளெனுந்தாமரைமலர்களையுடையமேகமே— என்றனும் - என்றுவசிஷ்டர் சொல்லவும்—அந்தக்கதையினை - அச்சரித்திரதை—இராகவன்வினவ - இராமர்கேட்க. எ-று. (இ-ம்) சத்தின்ஆபாசமாகத் தோற்றுகின்றமித்தையாரூபமான சகம், அறிவின்மையாற்சத்தாகப்பார்க்கப்படுகின்றதாம்..(௩)

(அ-கை.) அசத்தைச்சத்தாகவுரைத்தல். (கவி)சித்தவஞ்சனையின்மூலமாங்கதையைச்செ
ல்வனுக் கருந்தவனுரைப்பான், மெய்த்தகைவிலாதோர் சிறுவனீயன்னைவிரும்பியோர்
கதைவிளம்பென்னச், சத்தியம்போலவெறும்பொய்யேயுரைப்பாடரணிபன்குமரரோர்
மூவர், சுத்தவீரமுநற்குணங்களுஞ்சிறந்தோர் சூனியநகரிலேயுறைவோர்............... *

(இ-ள்.) சித்தவஞ்சனையின் - மனவஞ்சனைக்கு—மூலமாங்கதையை- காரணமானகாதையை—செல்வனுக்கு - இராமனுக்கு—அருந்தவனுரைப்பான் - அரியதவமுள்ள வசிஷ்டர்சொல்லுவார் — மெய்த்தகைவிலாதோர்சிறுவன் - மெய்யறிவில்லாத வொருபாலனானவன்—விரும்பி- விருப்பமுற்று—அன்னைநீ - தாயேநீ—ஓர்கதைவிளம்பென்ன- ஒருகாதையையெனக்குச்சொல்வாயென்றுகேட்க—சத்தியம்போல- உள்ளதுபோல—வெறும்பொய்யேயுரைப்பாள்-முழுதுமித்தையான(வோர்கதையைச்)சொல்லுவாள்—தரணிபன்குமரரோர்மூவர் - இராசகுமாரர்மூன்றுபேர்கள்—சுத்தவீரமும் - பரிசுத்தமாகியவீரத்திலும்—நற்குணங்களும்-நல்லகுணங்களிலும்—சிறந்தோர் - மிகுந்தவர்கள்— சூனியநகரிலேயுறைவோர் - இல்லாதபட்டணத்திலிருப்பவர்கள். எ-று...(௪)

(அ-கை.) இ-து. (கவி) மூவரிலிருவர்பிறந்திலரொருவன்மூலமாங்கருவினுமில்லை,
யாவதுங்கருதித்திரிபவர்விண்ணிலளவறுபழமரச்சோலை, மேவனுமதனிற்செழுங்
கனிதுய்த்துவெம்பசிதணிந்துமேற்சென்றார், காவருகாகமூன்றுநன்னதிகள் கரை
பொருதிரையொடுங்கண்டார்.. *

(இ-ள்.) மூவரில் - (இம்) மூன்றுபேர்களில்—இருவர்பிறந்திலர்- இரண்டுபேர்கள்பிறந்ததேயில்லை—ஒருவன் - ஒருத்தன்—மூலமாங்கருவினுமில்லை - காரணமாகியகருப்பத்திலுமில்லை—யாவதுங்கருதித்திரிபவர் - சகலபதார்த்தங்களுமெண்ணிச்சஞ்சரிப்பவர்களாய்— விண்ணில்-ஆகாயத்தில்—அளவறுபழமரச்சோலை - மட்டற்றகனிகளையுடையவனத்தில்—மேவனும்-பொருந்தவும்—அதனிற்செழுங்கனிதுய்த்து - அதிற்செழுமையானபழவகைகளைப்புசித்து—வெம்பசிதணிந்து - வெப்பமானபசிநீங்கி—மேற்சென்றார் - மேற்போயினூர்கள் — காவருகாக-அக்கானகத்தின்பக்கத்தில— மூன்றுநன்னதிகள் - மூன்றாறுகளை — கரைபொரு - கரையின்மோதாநின்ற—திரையொடுங்கண்டார் - அலைகளுடன்பார்த்தார்கள். எ-று........................(௫)

(அ-கை.) இ - து. (கவி) ஓடுநன்னதியிவிரண்டுநீரில்லை யொன்றுவெண்மணலதா
மிதலி, லாடிநீர்அளைந்துபருகினாரந்தி யாங்மேல்வருநகரடைந்தார், வீடுமூன்

றெதிர்ந்தாரதிலிரண்டில்லை மேன்மரஞ்சுவரிலாதொன்று, கூடியவவற்றிற்சுவரிலா
வீட்டிற்குடிபுகுந்திருந்தனர்குமரர் .... *

(இ-ள்.) ஓடுநன்னதியில் - வேகமாகச்செல்கின்ற நல்லமூன்றாற்றினுள் — இரண்டுநீரி ல்லை-இரண்டிற்சலமில்லை—ஒன்றுவெண்மணலதாம்-ஒன்றுலர்ந்தவெண்மணலையுடையதாம்— இதனில் - இந்தநதியில்—ஆடிநீர்துளைந்து - ஸ்நானஞ்செய்து—பருகினர் - (சலத்தை) பானம்பண்ணினார்கள்—அந்தியாகி - சாயங்காலமாய் — மேல்வருநகரடைந்தார் - இனியுண்டாகும்பட்டணத்தைச்சேர்ந்து—வீடுமூன்றெதிர்ந்தார்- (அதில்) மூன்றுவீடுகண்டார்கள்—அதிலிரண்டில்லை - அம்மூன்றிலிரண்டில்லவேயில்லை—மேன்மரஞ்சுவரிலாதொன்று - மேலேமரங்களுஞ்சுத்திச்சுவருமில்லாதவீடொன்று —கூடியவவற்றில் - சேர்ந்தவம்மனைகளில் — சுவரிலா வீட்டில் - சுவரில்லாதமனையில்—குமரர் -(இராச) குமாரர்கள் — குடிபுகுந்திருந்தனர் - குடியாகப்புகுந்திருந்தார்கள். எ-று .... (௬)

(அ-கை.) இ- து. (கவி) ஒருவருங்காணுநகரிலேவெளிவீட்டுறைபவர்கனகபாத்திர
மூன், றருகுறக்கண்டாரதிலிரண்டோடாமறவிலுந்தூளியாமொன்று, சொருபமி
ல்கடத்திற்றுரோணமூன்றதனிற்றுரோணமூன்றகன்றுமிக்கிருந்த, பருவரிசியைத்
தாஞ்சமைத்துவாயில்லாப்பனவரெண்ணிலர்க்குமுன்படைத்தார் .... *

(இ-ள்.) ஒருவருங்காணுநகரில் - ஒருவரும்பாராதபட்டணத்தில் — வெளிவீட்டுறைபவர் - ஆகாயமனையிலிருப்பவர்கள்—கனகபாத்திரமூன்று- மூன்றுதமனியபாத்திரங்கள்—அருகுறக்கண்டார் - (தனது) பக்கத்திலிருக்கப்பார்த்தார்கள்— அதிலிரண்டோடாம் - அதிலிரண்டோடாகும்—அறவிலுந்தூளியாமொன்று - மிகவுந்தூளாயிருப்பதொன்று — சொருபமில்கடத்தில் - உருவமில்லாத (விப்) பாத்திரத்தில் — துரோணமூன்றதனில் - ஆறுமரக்காலில்—துரோணமூன்றகன்று - தூணிபதக்கைத்தள்ளி—மிக்கிருந்த - மிகுந்திருந்த— பருவரிசியை-பருத்ததண்டுலத்தை—தாஞ்சமைத்து - தாங்கள்பாகஞ்செய்து—வாயில்லாப்பனவர்-வாயில்லாதபிராமணர்—எண்ணிலர்க்கு - அளவற்றவர்களுக்கு—முன்படைத்தார் - முன்புபரிமாறினார்கள். எ-று .... (௭)

(அ-கை.)இ-து.(கவி)அவரெலாநிரம்பவுண்டபின்மிகுந்ததருந்தினர்வேட்டைகளா
டி, யிவர்கண்மூவருமங்கிருந்தனரென்ன விளமையானம்பினன்சிறுவன், புவனமு
மிவ்வாறறிவிலோர்காண்பர் புகன்மனவிரிவுசங்கற்பம், விவரமாமிதனுலகமாமி
தனைவிடுநிருவிகற்பமாயிடுநீ .... *

(இ-ள்.) அவரெலாம் - அப்பிராமணர்களனைவரும்—நிரம்பவுண்டபின் - பூரணமாகப்புசித்தபின்பு—மிகுந்ததருந்தினர் - சேடத்தை (ப்ரசாதமாக) ப்புசித்து— வேட்டைகளாடி-வேட்டைகள்செய்துக்கொண்டு—இவர்கண்மூவரும்- இம்மூவர்களும்—அங்கிருந்தனரென்ன-அத்தலத்தில்வசித்தார்க(ளென்)றன்னைசொல்ல—இளமையால்-பாலப்பருவத்தினால்— சிறுவன்-குழந்தை— நம்பினன் (எதார்த்தமாக)நம்பினான்—புவனமும் - சகத்தையும்—இவ்வாறு- இவ்வண்ணம்—அறிவிலோர்காண்பர் - அஞ்ஞானிகள்பார்ப்பார்கள்—புகன்மனவிரிவு - சொல்லப்பட்டமனதின்விசாலமே—சங்கற்பம் - சங்கற்பமாம்—விவரமாமிதனுலகமாம் - பகுத்துச்சொல்லுகின்றவிச்சங்கற்பத்தாற்சகமாம்—இதனைவிடு-இச்சங்கற்பத்தைநீக்கு—நீநிருவிகற்பமாயிடு - நீநிருவிகற்பனாகக்கடவாய். எ - று. [ப-ம்] அத்துவிதான்ம ஸ்வரூபத்தை, தரணிபனென்றும், அதன்ப்ரதிபலனமான ஜீவேஸ்வரசகங்களை,குமரோர்மூவரென்றும், மித்தையாப்ரகிருதியில்வசிப்பவர்களை, சூனியநகரிலேயுறைவோரென்றும், ஜீவேஸ்வரரிரண்டு முநித்திலரென்பதை, மூவரிலிருவர்பிறந்திலரென்றும், உலகங்கருவிலு மில்லையென்பதை, ஒருவன்மூலமாங்கருவினுமில்லையென்றும்; சிதாகாசத்திலென்பதை, விண்ணிலென்றும், மனோராச்சியத்திலுண்டானவளவற்ற விஷயசுகானுபவத்தை, அளவறுபழமரச்சோலைமேவலுமதனிற்செழுங்கனிபுசித்தென்றும், மூன்றவத்தைகளை, மூன்றுநன்னதிகளென்றும், நனவுகனவுகளிற்சாரமில்லையென்பதை, ஓடுநன்னதியிலிரண்டு நீரில்லையென்றும், சூனியமானசுழுத்தியை,ஒன்று வெண்மணலதாமென்றும், இவ்வவத்தையிலழுந்திச் சுகிப்பதை, இதனிலாடிநீர்துளைந்தென்றும், இவிவருஞ்சங்கற்பவசமாவதை, மேல்வரு நகரடைந்தாரென்றும் ஜீவேஸ்வரபிரமசாக்ஷியையறிந்தார்களென்பதை, வீடுமூன்றெதிர்ந்தாரென்றும், அதிற்ஜீவேஸ்வரரில்லையென்பதை அதிலிரண்டில்லையென்றும், நிராதாரமானபிரமத்தை, சுவரிலாவொன்றென்றும்;அப்பிரமாதாரத்திலிருப்பவர்களை, வீட்டிற்குடிபுகுந்திருந்தனரென்றும்;அகோசரமானசிதாகாசத்திலுறைபவரை, ஒருவருங்காணுவெளிவீட்டுறைபவரென்றும், சச்சிதானந்ததெரிசனத்தை, கனகபாத்திரமூன்றருகுறக்கண்டாரென்றும், அதிற்சத்துச்சித்தின்றடிப்பை,அதிலிரண்டோடாமென்று

ம், ஆநந்தத்தினுட்பத்தை, அறவினுந்தூளியாமொன்றென்றும், உருவமற்றவாநந்தமயத்தை, ஸ்வரூபமில்கடத்திலென்றும், காமாதிகளை, துரோணமூன்றென்றும், இவையாறும்நசித்தவிடத்திருந்தசத்துவமனதை, அகன்றுமிக்கிருந்த பருவரிசியையென்றும், அம்மனதையனுபவத்திறிகளாத்தலை, சமைத்தென்றும், அதை மகாமவுனத்தி னுல்லாசத்திற்சேர்த்தலை, வாயிலாப்பனவொண்ணிலர்க்குமுன்படைத் தாரொன்றும், அவ்வருட்ப்ரசாதம்பெற்றதை, மிகுந்ததருந்தினரொன்றும், சகசநிஷ்டையிலெதிரறச் சஞ்சரித்திருக்கின்றார்களென்பதை, வேட்டைகளாடியிவர்கண்மூவருமங்கிருந்தனரொன்றுங் கூறினர். (இ-ரு-க-ம்) பிரமத்திலாரோபிதமாகத் தோற்றினகற்பனைகளை நீக்கி அப்பிரமவடிவான எதார்த்தமாய்ச் சஞ்சரிக்கவேண்டுமென்பதாம் (அ)

பாலன்கதைமுற்றிற்று. ஆகதை - ௰ - இ - கவிதை. (௲௰௯)

சித்தன் கதை.

(அ-கை.) முன்புதிருக்கு திருஷ்டியில்லாதவர்களுக்குத் திரிஸ்யமுன்போலத்தோற்றுமென்பதையறிவித்து, அத்திரிஸ்யஞ் சுகதுக்கானுபவமா யிருத்தலாற் கேவலமித்தையன்றிச் சிற்சத்திவிலாசமா யிருக்குமென்பதையு மம்மனமேகால வளவாயிருத்தலையு மறிவிக்குநிமித்தம் சித்தன்கதையை நிரூபிக்கிறார் .... *

(அ-௯க.) பிரமத்துக்குப் பந்தமின்றெனல். (கவி) தங்கள்சங்கற்பத்தாலறிவிலோர் சாலமோகிப்பர்நல்லறிஞர், பொங்குநல்விசார மதியினான்மயங்கார் புந்தியாற் பொய்ம்மையையொழித்து, துங்கமெய்யுணர்வாய்ப்பந்தமற்றிருந்துந்தொடர்புறுபந்தமுண்டென்று, பங்கமுற்றயரேலமலமாயழியாப்பரம்பொருள்பந்தமுற்றிடுமோ .... *

(இ-ள்.) அறிவில்லோர் - அஞ்ஞானிகள்—தங்கள்சங்கற்பத்தால் - தமதுசங்கற்பத்தினால்—சாலமோகிப்பர் - மிகவுமயங்குவார்கள்—நல்லறிஞர் - சுகஞானிகள் — பொங்குநல்விசார மதியினான்மயங்கார் - ப்ரகாசிக்கின்றவாத்மவிசாரஞானத்தினான்மயங்கார்கள் — புந்தியால்- அறிவினால்—பொய்ம்மையையொழித்து- மித்தையைநீக்கி—துங்கமெய்- பரிசுத்தமானவுண்மையை—உணர்வாய் - அறிந்துகொள்ளக்கடவாய்—பந்தமற்றிருந்தும் - பந்தமில்லாதிருந்தும்—தொடர்புறுபந்தமுண்டென்று - தொடர்கின்றபந்தமுண்டாயிருக்கின்றதென்று—பங்கமுற்றயரேல் - வேறுபட்டுத்தளராதே—அமலமாய் - நின்மலமாயும் — அழியாப்பரம்பொருள் - நாசமில்லாததாயுமிருக்கின்றபிரமவஸ்து—பந்தமுற்றிடுமோ - கட்டுப்படுமோ. எ-று. (இ-ம்) சைதன்யமொருதன்மையதாகப்ரகாசிக்கவதற்குப்பந்தமெப்படியுண்டாமென்பதாம்.

(அ-கை.) மனதுக்கேபந்தமுத்தியுண்டெனல். (கவி) அந்தமற்றொன்றாய்விகற்பமற்றறிவாயழிவிலாப்பரம்பொருளிருக்க, பந்தமுற்றவரார்முத்திபெற்றவரார் பாவனைவிகற்பமேயனைத்துஞ், சிந்தனைவிரிவுபந்தமாமதனைத்தீர்ந்திடன்முத்தியாமனத்தின், றொந்தலீலையினாற்றூரமாமணித்துந்தூரமுமண்ணிதாய்த்தோன்றும் .. .. *

(இ-ள்.) அந்தமற்று - தேசகாலவஸ்துக்களான்) முடிவிறந்து—ஒன்றாய் - ஏகமாயும் —விகற்பமற்று - (சுசாதீகவிசாதீகசுகத) பேதமிறந்து — அறிவாய் - சின்மாத்திரமாயு (மிருக்கின்ற)—அழிவிலாப்பரம்பொருளிருக்க - கெடாதபிரமவஸ்துவிருக்க—பந்தமுற்றவரார்- பந்தத்தையடைந்தவரியார்—முத்திபெற்றவரார்- வீடடைந்தவரியார்—அனைத்தும்-சகலமும்—பாவனைவிகற்பமே - பாவனாவிகற்பவிலாசமேயாம்—சிந்தனைவிரிவுபந்தமாம் - நினைப்பின்விசாலமேபந்தமாகும்—அதனைத்தீர்ந்திடன்முத்தியாம்- அதைவிடுவதேமோக்ஷமாகும்—மனத்தின்றொந்தலீலையினால் - மனதினதுதொந்தமானவிளையாட்டினால் — அணித்துந்தூரமாம்- சமீபமுஞ்சேய்மையாம்—தூரமும் - வெகுதூரமும்—அண்ணிதாய்த்தோன்றும் - சமீபமாய்த்தோற்றும். எ-று. (இ-ம்) மறிக்கின்றமனதுக்கேசுகதுக்கமுண்டாமென்பதாம் .... (உ)

(அ-௯க.) மனமேதேசகாலமாயிருத்தலைத்திருஷ்டாந்தமாகவறிவித்தல். (கவி) கருத்தின்வல்லமையாற்கற்பமோர்கணமாங் கணமொருகற்பமாமிவற்றைத், திருத்தமாயுணர்த்துமொருகதையதனாற் செகமெனுமிந்திரசாலங், குருத்துவமானமனத்தினுளிருக்குங் கொள்கைதோற்றிடுமெனவுரைப்பா, ஞெருத்தனிங்கரிச்சந்திரகுலத்துள்ளானுத்தரபாண்டவநாட்டோன் .... *

(இ-ள்.) கருத்தின்வல்லமையால்- மனத்தின்வலியினால்—கற்பமோர்கணமாம்-கற்பகாலமொருக்ஷணப்போதாம்—கணமொருகற்பமாம்- க்ஷணங்கற்பகாலமாம்—இவற்றை-இவைகளை—திருத்தமாயுணர்த்தும் - தெளிவாயறிவிக்கின்ற—ஒருகதை-ஓர்கதையாம்—அதனால்-அக்கதையால்—செகமெனும் - உலகமென்கின்ற—இந்திரசாலம் - இந்திரசாலமானது—கருத்தின்மான - பெருமைபொருந்திய—மனத்தினுளிருக்குங்கொள்கை - மனத்திலிருக்கின்றதன்மையானது — தோற்றிடுமென - வெளியாகத்தோற்றுமென்று — உரைப்பான் - வசிஷ்டர்சொல்லுவர்—இங்கொருத்தன் - இப்பூமியிலொருபுருடன்—அரிச்சந்திரகுலத்துள்ளான் - அரிச்சந்திரவமிசத்திற்பிறந்தவன் — உத்தரபாண்டவநாட்டோன் - உத்தரபாண்டவமென்னுந்தேயத்தையுடையவன். எ-று. (இ-ம்) ஒன்றிற்பிரியம்வைத்ததிற் சுகிக்கும்போது கற்பங்கணமாகவுமதையடையமுயற்சிக்கும்போதுகணங்கற்பமாகவுமிருப்பதுமனத்தயன்றிவேறின்றென்பதாம்

(அ-கை) சித்தன்மயக்குதல்.(கவி) செந்திருவாணிபுகழ்மகன் விந்தைசெறிபுயன் லவ
ணனும்பெயரோன், மந்திரநிறைந்தவமைச்சர்தற்சூழ மணிகொள்சிங்காதனத்திரு
ப்ப, விந்திரசாலவல்லவனொருவ னெய்தினனிறைஞ்சிநின்றேத்திச், சந்திரனனைய
பீலியின்சுழற்றாற் றராபதிகாண்கெனச்சுழற்ற ... ... *

(இ-ள்) செந்திரு - இலக்குமியும்—வாணி - சரஸ்வதியும்—புகழ்மகன் - துதிக்கின்றவிராசகுமாரன்—விந்தை - விசயலட்சுமி—செறிபுயன் - வசிக்கின்றபுயங்களையுடையவன்—லவணனும்பெயரோன் - லவணனென்னும் நாமத்தையுடையவன் — மந்திரநிறைந்தவமைச்சர்- ஆலோசனைகண்மிகுந்தமந்திரிகள்—தற்சூழ - தன்னைச்சூழும்படி—மணிகொள் - நவரத்தினங்களினாற்செய்த—சிங்காதனத்திருப்ப - சிங்காதனத்தில்வீற்றிருக்க—இந்திரசாலம் - இந்திரசாலவித்தையில்—வல்லவனொருவன் - வல்லமையுள்ளவொருபுருடன்—எய்தினன் - வந்து—இறைஞ்சிநின்றேத்தி - வணங்கிப்புகழ்ந்து—சந்திரனனைய - மதிக்கொப்பான—பீலியின்சுழற்றால்- (கண்கணிறைந்த) மயிற்றோகைபின்சுழலினால்—தராபதிகாண்கெனச்சுழற்ற - அரசனே(யிவ்வித்தையைப்) பாருமென்றுசுழற்ற. எ-று ... ... (௪)

(அ-கை.) குதிரைதோற்றல். (கவி) சுத்தமாம்பரத்தாற்பலவிதசிருட்டி தோற்றிடு
மாயைதோற்றுதல்போற், சித்தனாற்காட்டிச்சுழற்றுறுபீலித் திகிரியைமன்னவன்
பார்த்தா, னத்தலந்தனிலேசயிந்தவதேசத் ததிபதிவிடுத்தவோர்தூதன், றத்துறுபு
ரவியொன்றுகொண்டெய்தி சதமகன்பரிக்குநேரொன்று ... ... *

(இ-ள்.) சுத்தமாம்பரத்தால்-பரிசுத்தமாகியபிரமத்தினால்—பலவிதசிருட்டி-நானாவிதமானசிருஷ்டிகளை—தோற்றிடுமாயை - தோற்றுவிக்குமாயையானது — தோற்றுதல்போல்-தோற்றுகின்றதுபோல— சித்தனாற்காட்டி - சித்தனென்பவன் (வித்தைமுதலானவற்றைக்காண்பித்து)—சுழற்றுறு - சுழற்றுகின்ற—பீலித்திகிரியை- மயிலிறகின்வட்டத்தை—மன்னவன் பார்த்தான்-அரசன்பார்த்தான்—அத்தலந்தனில்- அவ்விடத்தில்—சயிந்தவதேசத்ததிபதிவிடுத்த-சயிந்தவதேசத்தரசனனுப்பிய—ஓர்தூதன் - ஒருதூதனானவன்—தத்துறு- தாவாநின்ற—புரவியொன்று - ஒருகுதிரையை—கொண்டெய்தி-கொண்டுவந்து—சதமகன்பரிக்கு-தேவேந்திரன்குதிரைக்கு—நேரொன்று - சமானமென்று. எ-று ... ... (௫)

(அ-கை.) அறிவுமயங்கல். (கவி) மன்னவவுனக்கென் றெங்கள்கோன் விடுத்தவயப்
பரியென்றலுஞ்சித்த, னின்னதுபோல்வ தில்லைநீயிதனி லேறுவாயென்றன னினை
யோன், சொன்னவைகேட்டுச்சித்திரம்போலத் துரகமேநாட்டமாய்வேந்தன், கன்
னலீரிரண்டங்கிருந்தனனறிஞர்கவலைதீர்சமாதியுற்றென்ன ... ... *

(இ-ள்) மன்னவ - அரசனே—உனக்கென்று - உமக்கென்று — எங்கள்கோன் விடுத்த- எங்களரசனனுப்பிய—வயப்பரியென்றலும் - வெற்றிக்குதிரையென்றுசொல்லவும்—சித்தன்- சாம்பிரியனானவன் —இன்னதுபோல்வதில்லை - இக்குதிரையையொத்ததுகிடையாது—நீயிதனிலேறுவாயென்றனன் - நீயிதனிலேறுமென்றுசொல்லினன்—இனையோன் - இத்தன்மையுள்ள சித்தன்—சொன்னவைகேட்டு - கூறியவைகளைக்கேட்டு—சித்திரம்போல - ஓவியம்போல—துரகமே - குதிரையே—நாட்டமாய் - நோக்காக — வேந்தன் - அரசன் — கன்னலீரிரண்டு- முகூர்த்தநேரம்—அறிஞர்கவலைதீர்சமாதியுற்றென்ன - ஞானிகடுன்பமற்றசமாதியிலிருந்ததுபோல—அங்கிருந்தனன் - அங்கிருந்தான். எ-று ... ... (௬)

(அ-கை.) அறிவுதெளிதல், (கவி) வேத்தவையிருந்தோ ரையமும்வியப்புமிகுந்தன
ரரும்பிடகமலப், பூத்திரள்போடைபோற்குவிந்திருந்தார் போதமோடியாதுமாட
லைந்து, மூர்த்தமோரிரண்டுசென்றபின்றவிசின் முன்னுறவிழ்வுறுநின்ற, பார்த்திப
னறன்னையவுளோர்தாங்கப் பரந்துழன்மனந்தெளிந்துணர்ந்தான் ... ... *

(இ-ள்.) வேத்தவையிருந்தோர் -இராசசபையிலிருந்தவர்கள்—ஐயமும்-சந்தேகமும்—வியப்பும் - அதிசயமும்—மிகுந்தனர் - மிகுந்தார்கள்—ஓடை - தடாகத்தில்—அரும்பிய-குவிந்த—கமலப்பூத்திரள்போல - தாமரைமலர்கூட்டத்தைப்போல—குவிந்திருந்தார்- (முகஞ்) சுருங்கியிருந்தார்கள்—போதமோடு - அறிவுடனும்—உபாதியோடும் - உபாதியுடனும்—அலைந்து- உழன்று—மூர்த்தமோரிரண்டுசென்றபின்- நான்குநாழிகைநீங்கினபின்பு—தவிசின்-சிங்காதனத்தினது—முன்னுறவீழ்வுறுநின்ற - முன்பாகவிழுகின்ற—பார்த்திபன்றன்னை-இராசாவை—அயலுளோர்தாங்க - அருகிலிருப்பவர்கடாங்கிக்கொள்ள—பரந்துழன்மனம் - விரிந்துழல்கின்றமனது— தெளிந்துணர்ந்தான் - தெளிந்தறிந்தான். எ-று. (இ-ச-க-ம்) லவணனறிவுதெளியும்பொருட் டவனுக்குமனோமாயையின் வல்லமையைத் தெரிவித்ததாம்......... ... (எ)

(அ-கை.) மனோராச்சியஞ்செய்த சரிதையையுரைத்தல். (கவி) அனையவன்றன்னை யமல
நெஞ்சினை நீயயர்வுறவந்ததென்னென்ன, வினையமந்திரியர்வினவலும்வேந்தன்விழித்திது
கேளுமென்றுரைப்பான், றுனையுறப்பீலிசுழற்றியசித்தன் சொல்லிடமயங்கியிப்பரிமே,
னினைவுறவேறிவேட்டையின்பொருட்டா னீணெறிகடிதுறச்சென்றேன் ....*

(இ-ள்.) அனையவன்றன்னை - அப்படிப்பட்டவரசனை—அமலநெஞ்சினை நீ - நின்மலமானமனதையுடையநீர் — அயர்வுறவந்த தென்னென்ன - தளரும்படிவந்ததென்னவென்று—வினையமந்திரியர்வினவலும் - வணக்கமுள்ளவமைச்சர்கள்கேட்கவும்—வேந்தன்விழித்து- அரசன்விழித்துக்கொண்டு—இது கேளுமென்றுரைப்பான் - இதைக்கேளுங்களென்றுசொல்லுவான்—துனையுறப்பீலிசுழற்றி - சமீபமாகமயிற்றோகையைச்சுழற்றி — இச்சித்தன்சொல்லிட- இச்சாம்பரிகன்சொல்ல—மயங்கி - (அறிவு)மயங்கி — இப்பரிமேல் - இக்குதிரையின்மேல்—நினைவுறவேறி - நினைப்புடனேறி—வேட்டையின்பொருட்டு- வேட்டையாடுநிமித்தம்—நீணெறி-வெகுதூரம்—கடிதுறச்சென்றேன் - சீக்கிரத்திற்போயினன். எ-று ....(அ)

(அ-கை.) இ-து. (கவி)அறிவறுமனத்தாலயர்வுறுபோகத்தறிவிலார்மருண்டுபோவ
துபோற், செறிநெடுந்தூரம்பரியினுற்சென்றுதீயினுலியாவையும்வெந்து, பொறி
யெழும்பாலைவனத்திலேபுகுந்து புரவியுமியானுமெய்வருந்தி, யெறிசுடர்மேற்பா
லெய்துறுமளவு மிடருறமயங்கிநெஞ் சினைத்தேன்...................................*

(இ-ள்) அறிவறுமனத்தால் - விவேகமில்லாதமனதினுல்— அயர்வுறுபோகத்து - வருத்தத்தையுடையசெல்வத்தில்—அறிவிலார் - அஞ்ஞானிகள்—மருண்டுபோவதுபோல் - மயங்கிச்செல்வதுபோல—செறிநெடுந்தூரம் - மிகவும்வெகுதூரம்—பரியினுற்சென்று- குதிரையினுற்போய்—தீயினுல் - அக்கினியினுல்—இயாவையும்வெந்து - சகலமும்வெந்து—பொறியெழும்-பொறிகள்சிதறுநின்ற—பாலைவனத்திலேபுகுந்து - பாலைவனத்தினுழைந்து— புரவியுமியானும் - குதிரையும்நானும்—மெய்வருந்தி - சரீரநொந்து—எறிசுடர் - வீசாநின்றப்ரகாசத்தையுடையசூரியன்—மேற்பால் - மேற்றிக்கில்—எய்துறுமளவும்-அடையும்பரியந்தம்—இடருறமயங்கி-துன்பத்துடன்மயக்கமுற்று—நெஞ்சினைத்தேன்-மனந்தளர்ந்தேன்.எ-று ... ..(கூ)

(அ-கை.) இ-து. (கவி) குடும்பபாரத்தை விவேகிகள்கடக்குங்கொள்கைபோற்பாலை
யைக்கடந்து, நெடும்பணைநாவற்கடம்பெலுமிச்சநிறைந்தபுட்குரலினுனிரம்பி,யிடு
ம்பைதீர்சோலை யெய்தலுமாங்கோ ரிளங்கொடிபிணித்ததென் கழுத்திற், கடும்பரி
யெனைவிட் டகன்றதுகங்கை கலந்தவர்பாவமேயென்ன ....,.....*

(இ-ள்) குடும்பபாரத்தை - சம்சாரசுமையை—விவேகிகள்- ஞானிகள்—கடக்குங்கொள்கைபோல் - துறந்துசெல்கின்றதன்மையைப்போல—பாலையைக்கடந்து - பாலைவனத்தைத்தாண்டி—நெடும்பணைநாவல் - நீண்டகிளைகளையுடையசம்புவிருக்ஷமும்—கடம்பு- கடம்பவிருக்ஷமும்—எலுமிச்சம் - எலுமிச்சவிருக்ஷமும்—நிறைந்து - (எங்கு) நெருங்கியும்—புட்குரலினுனிரம்பி - பக்ஷியின்சத்தங்களினுன் மிகுந்துமிருக்கின்ற— இடும்பைதீர்சோலை - துன்பமில்லாதவனத்தில்—எய்தவும் - போகவும்—ஆங்கு - அவ்விடத்தில்—ஓரிளங்கொடி - ஓரழகியவல்லியானது—என்கழுத்தில் - எனதுகண்டத்தில்—பிணித்தது - சுற்றிக்கொண்டது— கங்கைகலந்தவர் - கங்காநதியின்முழ்கினவர்களுடைய—பாவமென்ன - பாவத்தைப்போல — கடும்பரி-வேகமுள்ளகுதிரையானது—என்னைவிட்டகன்றது - என்னைவிட்டுநீங்கிற்று .... (௰)

(அ-கை) இ-து. (கவி.) கழுத்துறுகொடியாலூசல் போற்றூங்கிகாவுறைதென்ற
லாற்குளிர்ந்து; முழுத்திறமோகத் தழுந்திநெஞ்சயர்ந்தோன் முழுக்குநற்பூசனை
நியமப், விழுத்தகுநல்லூணின்றி யேநிசியாம்வீண்பொழு தணையவப்பொழுதிற்,
பழுத்தவல்லிருளுந் துன்பமுங்குளிரும் பல்லறையோசையுந்துணையாய் . .,....... *

(இ-ள்.) கழுத்தூறு - கண்டத்திற்சுற்றிய—கொடியால் - வல்லியினால்— ஊசல்போல்- ஊசலைப்போல—தூங்கி - தொங்கிக்கொண்டு—காவுறை - கானகத்திற்பொருந்திய — தென்றலால்- தென்றற்காற்றினால்—குளிர்ந்து - குளிர்வுற்று—முழுத்திறம் - மிகுந்ததிடத்தையுடைய—மோகத்தமுந்தி - மயக்கத்தின்முழுகி—நெஞ்சயர்ந்தேன் - மனந்தளர்ந்தேன்— முழுக்குஸ்நானமும்—பூசனை - பூசையும்—நியமம் - தியானமும்—விழுத்தகுநல்லூண் - சிறந்தநல்ல பசிப்புகளும்—இன்றி - இல்லாமல் — நிசியாம்வேளைபொழுதணைய - இரவென்கின்றவேளைகாலம்வர—அப்பொழுதில் - அவ்விரவில்—பழுத்தவல்லிருளும் - முதிர்ந்தவல்லியவிருட்டும்—துன்பமும் - துக்கமும் — குளிரும் - குளிர்ச்சியும்— பல்லறையோசையும் - பன்னமுக்கத்தினோசையும்—துணையாய் - சகாயமாயிருக்க. எ-று .... (௰௧)

(அ-கை.) இ-து. (கவி) மனத்திருளகற்றுமறிவுபோலந்த வல்லிருளிரவிவந்தகற்ற,
புனைத்துறுகொடியையறுத்தவணிறங்கிபொழில்புகுந்தொருவரைக்காணேன்,கனத்
ததோர்பகலி லெட்டிலொன்றனகடிகையங் ககன்றதற்பின்ன,ரினத்தலாளொருத்தி
தன்னைமுன்னெதிர்ந்தேனிரவினைமதியெதிர்ந்தன்ன .... *

(இ-ள்.) மனத்திருளகற்றும் - மனோவிருளைநீக்குகின்ற—அறிவுபோல் - ஞானத்தைப்போல—அந்தவல்லிருள் - அவ்வலியவிருட்டை — இரவிவந்தகற்ற - சூரியனுதயமாகிநீக்க—புனைத்துறுகொடியை - கண்டத்திற்சுற்றியவல்லியை — அறுத்தவணிறங்கி - தறித்தவ்விடத்தி லிறங்கி—பொழில்புகுந்து - சோலையுணுழைந்து—ஒருவரைக்காணேன் - (அவ்விடத்) தொருவரையும்பார்த்திலன் —கனத்ததோர்பகலில் - கனமானவொருமத்தியானத்தில்— எட்டிலொன்றனகடிகை - மூன்றேமுக்காலுழிகை—அகன்றதற்பின்னர் - கழிந்தபின்பு — இனத்தலாள்- (நமது) குலமல்லாத—ஒருத்திதன்னை - ஒருநீசப்பெண்ணை—இரவினைமதியெதிர்ந்தன்ன-இருளைச்சந்திரனெதிர்ந்ததுபோல—முன்னெதிர்ந்தேன் - (அவள்) முன்னெதிர்ப்பட்டேன். எ-று. புனைந்துறுவென்பது, புனைத்துறுவெனவிகாரமாயிற்று .... (௰௨)

(அ-கை.) இ-து. (கவி) கருகியநிறமுங்கருநிறத்துகிலுங் கைத்தலத்தன்னமுமாகி,
யருகுவந்துறலும் பசிப்பிணியாற்றுதவளை நானன்னமேயன்னந், தருதியென்றிர
ந்தேன்பசியினாலெவர்க்குந் தாழ்வுவந்துறுமெனல் கண்டேன், வருதவஞ்செயா
தோர்விரும்பியபொருட்போன்மற்றவலளித்திலளன்னம் .... *

(இ-ள்.) கருகியநிறமும் - கறுத்தநிறமும்—கருநிறத்துகிலும் - கருநிறமுள்ளவஸ்திரமும்—கைத்தலத்து - அஸ்தத்தில்—அன்னமுமாகி - அமுதுள்ளவளாய்— அருகுவந்துறலும்- (என்) பக்கத்தில்வரவும்—பசிப்பிணியாற்றாது- பசிநோய்தாங்காமல்—அவளை- அப்பெண்ணை—நான் - யான்—அன்னமே - அன்னநடையாளே — அன்னந்தருதியென்று - அமுதைத்தருவாயென்று—இரந்தேன் - யாசித்தேன்—பசியினால்- உதராக்கினியினால்—எவர்க்கும்- யாவருக்கும்—தாழ்வுவந்துறுமெனல் - இழிவுவருமென்பதை—கண்டேன் - தெரிந்தேன்— வருதவஞ்செயாதோர் - (சிந்தித்தது) வரத்தக்கதவமியற்றாதவர்கள்—விரும்பியபொருட்போல்-இச்சித்தவஸ்துபோல — மற்றவள் - அப்பெண்ணானவள் — அன்னம் - அமுதை—அளித்திலள்- கொடுத்திலள். எ-று .... (௰௩)

(அ-கை.) இ-து. (கவி) சோலைதோறுழலுமவள்பிறகேகி சோருமென்பசித்துயர்
சொல்ல, நிலைநின்றுரைப்பாணீசர்கன்னிகையா னினக்கென தன்னமாமென்னின்,
மாலையிட்டெங்கட்சேரியிற்பிதாமுன் வந்தெனைப்புணர்தியேலிந்த, வேலையிலளிப்
பேனென்றலுமியைந்தேன்விருப்பொடுமளித்தனளன்னம் .... *

(இ-ள்.) சோலைதோறுழலும் - தோப்புகடோறுஞ்சுற்றுநின்ற—அவள்பிறகேகி- அவள்பின்னேதொடர்ந்து—சோரும் - வாடுகின்ற—என்பசித்துயர்சொல்ல - என்பசியின்வருத்தத்தைச்சொல்ல—நிலைநின்றுரைப்பாள் - கரியவள்சொல்லுவாள் — யான் - நான்—நீசர்கன்னிகை - நீசப்பெண்—நினக்கு - உமக்கு—எனதன்னமாமென்னில்- எனதமுதமாகுமென்றால்—எங்கள்சேரியில் - எங்களூரில்—பிதாமுன்வந்து - (என்) றந்தையின்முன்வந்து—மாலையிட்டு- கலியாணஞ்செய்து—எனைப்புணர்தியேல் - என்னுடன்சேர்வையாயின்— இந்தவேலையிலளிப்பேன் - இச்சமயத்திற்கொடுப்பேன்—என்றலும் - என்றுசொல்லவும்—இயைந்தேன்- (அதற்குச் சம்மதித்தேன்—விருப்பொடு - ஆசையோடும் — அன்னம் - அமுதை — அளித்தனள்- கொடுத்தாள். எ-று .... (௰௪)

(அ-கை.) இ - து. (கவி) நல்கியபாதியன்னமுமருந்திநாவலின்கனிச்சுவைபருகி,
யொல்கியதுயர்ப்பாயிருத்தலும்புறத்திலுலாவுநல்லுயிரொனவென்னைப், புல்கியகர

த்தாற்பற்றினள்பிதாமுன்போயினள்யாதனுசரீர, மல்கியபயஞ்செய் நரகிலேகொ
டுபோய்மறுக்கமேசெய்யுமாறென்ன .... *

(இ-ள்.) நல்கியபாநியன்னமும் - கொடுத்தபாநியமுதையும் — அருந்தி - புசித்து— நாவலின்கனிச்சுவைபருகி - நாவற்பழவிரசமுங்குடித்து—ஒல்கியதுயர்போய் - தளர்ந்தபசித்துன்பநீங்கி—இருத்தலும் - இருக்கவும்—புறத்திலுலாவும்- புறத்திற்சஞ்சரிக்கின்ற—நல்லுயிரென - நற்பிராணியென்ன—என்னைப்புல்கிய - என்னைப்பொருந்திய — கரத்தாற்பற்றினள்- கைகளினாற்பிடித்து—யாதனுசரீரம் - சூட்சுமசரீரத்தை—மல்கியபயஞ்செய் - மிகவும்பயத்தைச்செய்கின்ற—நரகிலேகொடுபோய் - நரகத்திற்கொண்டுபோய் — மறுக்கமேசெய்யுமாறென்ன - வருத்துவதுபோல—பிதாமுன்போயினள் - (மனம்வருந்தத்தன்) றந்தைமுன்கொண்டுபோயினாள். எ-று .... (௰௫)

(அ-கை.) இ-து. (கவி) நண்புறுமிவனென்றுயகனாக நல்கெனத்தாதையும்பொரு
ந்திப், பண்புறவிருவர்தமையும்வேதாளபந்தனவனத்தினின்றகன்று,கண்புகத்தோ
ன்றுங்காலதூதனைப்போற்கருநிறத்தவன்கொடுபோகி, யுண்புலால்வீசுஞ்சேரியில
டைந்தானொருப்படுமணஞ்செய்வானுன்னி .... *

(இ-ள்.) நண்புறுமிவன் - (எனக்) கிஷ்டமுள்ளவிப்புருஷனை — என்னையகனாக - என்கொழுனனாக—நல்கென - கொடுப்பாயென் (றப்பெண்) கேட்க—தாதையும்பொருந்தி- பிதாவுஞ்சம்மதித்து—பண்புறவிருவர்தமையும் - குணப்படவிரண்டுபேர்களையும்—வேதாளபந்தனம் - பசாசபந்தனமுள்ள—வனத்தினின்றகன்று - கானகத்தினின்றுநீங்கி—கண்டகத்தோன்றும் - விழிக்குத்தோற்றுகின்ற—காலதூதனைப்போல் - எமபடாளைப்போல— கருநிறத்தவன் கொடுபோகி - கரியநீசனானவனழைத்துக்கொண்டுபோய்—உண்புலால்வீசும் - புசிக்கின்றமாமிசவாசனைகள்பரிமளிக்கின்ற—சேரியிலடைந்தான் - தனதூரிலடைந்து — ஒருப்படுமணம்- ஒருமையானகலியாணம்—செய்வானுன்னி - செய்யநினைத்து. எ-று .... (௰௬)

(அ-கை.) இ-து. (கவி) வானரம்புரவிகுக்குடங்காகம் வராகமென்பனவரிந்தெடு
ப்ப, வூனரம்புணங்கப்பறவைவீழ்ந்தலைப்பவுலவியசிறுவர்கைத்தசையி, லீனவீயி
மைப்பவுதிரமுமென்பு மெல்லையிற்சேரியிலெய்தி, கானரம்பைகளே நாட்டியகுடி
லிற்கடிமணந்தொடங்கினர்களிப்பால் .... *

(இ-ள்.) வானரம் - குரங்கும்—புரவி - குதிரையும்—குக்குடம் - கோழியும்—காகம்- காக்கையும்—வராகம் - பன்றியும்—என்பன - என்றுசொல்லப்பட்டமாமிசவகைகளை—அரிந்தெடுப்ப - அரிந்தெடுக்கவும்—ஊனரம்புணங்க - மாமிசங்கணரம்பில்(தோரணங்களாக) காயவும்—பறவைவீழ்ந்தலைப்ப - பக்ஷிகளுராய்ந்தலைக்கவும்— உலவியசிறுவர் - நடக்கின்றகுழந்தைகளுடைய —கைத்தசையில் - கரத்திலிருக்கும்மாமிசங்களில்—ஈனவீயிமைப்ப- இழிவுள்ளவீக்கள்சத்திக்கவும்—உதிரமும் - இரத்தமும்—என்பும் - அஸ்தியும்—எல்லையில் - அளவற்றிருக்கின்ற—சேரியிலெய்தி - பறச்சேரியில்வந்து — கானரம்பைகளே - காட்டுவாழைகளையே— நாட்டியகுடிலில்- நாட்டியிருக்கின்றகுடிசையில்—களிப்பால்-சந்தோஷத்தினால்—கடிமணந்தொடங்கினர் - புதுமையானகல்யாணஞ்செய்யத்தொடங்கினார்கள். எ-று .... (௰௭)

(அ-கை.) இ-து. (கவி) மலினவூன்றனனுஞ்சிறுகணுறேக்கி மருகனல்லவனென
மகிழ்ந்தாள், கலியினுங்கறுத்தகூன்கிழமாமிகடையர்மற்றியாவருங்கூடி, யொலி
படுபறைகண்முழக்கினர்மதுவுமூன்களுஞ்சமைத்தனரவளை, நலிதருபாவம்யாதனு
சரீரநல்குமாறெனவவனளித்தான் .... *

(இ-ள்.) மலினவூன்றன்னும் - இழிவுள்ளமாமிசநெருங்கிய—சிறுகணுறேக்கி- சிறியவிழிகளாற்பார்த்து—மருகனல்லவனென - மருமகனல்லவனென்று — கலியினுங்கறுத்தகூன்கிழமாமி - யமனிலுங்கறுத்தகூனையுடைய கிழமாமியானவள் — மகிழ்ந்தாள் - களித்தாள்— கடையர்மற்றியாவருங்கூடி - சண்டாளரனைவருஞ்சேர்ந்து—ஒலிபடுபறைகண்முழக்கினர்-சத்திக்கின்றவாத்தியங்களடித்தார்கள் — மதுவுமூன்களுஞ்சமைத்தனர் - கள்ளையும்மாமிசங்களையும்பாகஞ்செய்தார்கள்—அவளை - அப்பெண்ணை — நலிதருபாவம் - அழிவுசெய்கின்றபாவமானது—யாதனுசரீரநல்குமாறென - (நரகத்தில்வருந்துகின்ற) யாதனுசரீரத்தைக்கொடுப்பதுபோல—அவனளித்தான் - அந்தநீசன்கன்னிகாதானஞ்செய்தான். எ-று .... (௰௮)

(அ-கை.) இ-து. (கவி) கடியபாதகங்களுருவுகொண்டனையகடையர்கல்யாணநாளேழின்,
முடிதலுமவளோடெண்மதிகழித்தேன்முகிண்முலைபூத்தவள்வாலுள், கொடியதோர்வி
பத்துதருந்துயர்போலோர் குழந்தையையளிக்கவக்குழந்தை, வடிவறவெந்த கட்டை
போனிறத்துவளர்ந்ததுமூர்க்கர்தம்மனம்போல் .... *

(இ-ள்.) கடியபாதகங்கள் - கொடியபாவங்களானவை—உருவுகொண்டனைய - வடிவுகொண்டதுபோல—கடையர்கல்யாணம் - சண்டாளர்களுடையவிவாகமானது—நாளேழில் - ஏழுதினத்தில்—முடிதலும் - நிறைவேறவும்—அவளோடுடண்மதிகழித்தேன் - அந்தநீசப்பெணுடனிருந்தெட்டுமாதங்கழித்தேன் — முகிண்முலைபூத்தவள் - முகைபோன்றதனங்களுடன் புஷ்பவதியானவள்—வாளுய் - (என்னுடன்புணர்ந்து) சுகிக்குங்காலத்தில் — கொடியதோர் விபத்து - கொடுமையானவோராபத்து — தருந்துயர்போல் - கொடுக்கின்றதுன்பத்தைப் போல—ஓர்குழந்தையையளிக்க - ஒருகுழந்தையைப்பெற—அக்குழந்தை - அக்குழவியும்—வடிவறவெந்தகட்டைபோல் - (தன்) னுருவுகெடவெந்தவிறகைப்போலிருக்கின்ற—நிறத்து-கரிநிறத்தோடும்—மூர்க்கர்தம்மனம்போல் - மூடர்களுடையமனதைப்போல — வளர்ந்தது-வளர்ந்தது. எ-று .... (௰௯)

(அ-கை.) இ-து. (கவி) பின்னர்மூவாண்டிற் பேதைமையளிக்கும் பிறப்பெனவொ
ருமகப்பெற்று, ளன்னவண்மீட்டுமாசையிற்றோன் றுமனர்த்தமேயென்னவோர்கு
ழவி, தன்னையுமளித்தாளிவளொடுநெடுநா டங்கினன்குடும்பபாரத்தி, மின்னலாலவ
ர்தாபத்தினால்வருந்துமிடும்பையாற் சளைத்ததென்யாக்கை .... *

(இ-ள்.) பின்னர்மூவாண்டில் - பின்புமூன்றுவருஷத்தில் — பேதைமையளிக்கும்பிறப்பென - அறியாமையைக்கொடுக்கின்றசநநத்தைப்போல—ஒருமகப்பெற்றாள்- ஒருபுத்திரனையீன்றாள்—அன்னவண்மீட்டும் - அவடிரும்பவும்—ஆசையிற்றோன்று மனர்த்தமேயென்ன-ஆசையிலுண்டாகியவனர்த்தத்தைப்போல—ஓர்குழவிதன்னையும் - ஒருகுழந்தையையும்—அளித்தாள் - பெற்றாள்—இவளொடும் - இம்மனைவிபுத்திரர்களோடும் — நெடுநாடங்கினன்-அநேககாலங்கூடியிருந்தேன்—குடும்பபாரத்தின்-சம்சாரத்தினது—இன்னலால்-துன்பங்களாலும்—அவர்தாபத்தினால்-அவர்கள்படும்வருத்தத்தினாலும்—வருந்துமிடும்பையால்-நான்வருந்தப்படுகின்றதுன்பத்தினாலும்—என்யாக்கை-எனதுசரீரம்—சளைத்தது-மூப்படைந்தது.எ-று.

(அ-கை.) இ-து. (கவி) வெம்புறுமூப்பான்மெலியுநாளந்த விந்தவெற்பருகு
றுசாரற், பைம்புயன்மறுத்துமண்ணினீர்சுண்டி பசியினாலுயிரொலாம்பதை
ப்ப, கொம்பொடுகொடியும்புல்லும் வெந்தெங்குங்கோடையாற் பொடிபட
வரலு, மெம்புதுக்கிளைஞரிறந்தவரநேக ரெங்கணுமேகினரநேகர் .... *

(இ-ள்.) வெம்புறு - வருந்துகின்ற—மூப்பான்மெலியுநாள் - வயோதிகத்தினலிளைக்கின்றகாலத்தில் —அந்தவிந்தவெற்பருகுறுசாரல் - அவ்விந்தமலையின்பக்கத்திலிருக்கின்றவடிவாரத்தில் — பைம்புயன்மறுத்து - பசியமேகம்வருஷியாமல் — மண்ணினீர்சுண்டி - பூமியிற்சலமில்லாமற்காய்த்து—பசியினாலுயிரொலாம்பதைப்ப- உதராக்கினியினாலுயிர்களனைத்துந்துடிக்க—கொம்பொடும் - கிளைகளையுடைய (விருக்ஷங்க)ளுடன்—கொடியும் - (படர்கின்ற)கொடிகளும்—புல்லும் - புல்லுகளும்—வெந்து - எரிந்து—எங்கும்- எவ்விடத்தும்—கோடையால்-வெப்பினால்—பொடிபடவரலும்- புழுதியாகும்படிவரவும்—எம்புதுக்கிளைஞர்-எமதுபுதியவுறவினர்கள்—அநேகரிறந்தனர் - வெகுபேர்மரித்தார்கள்—அநேகர் - பலர்—எங்கணுமேகினர்- பலதேயங்களிலுஞ் (சிதறிப்) போனார்கள். எ-று .... (௨௧)

(அ-கை.) இ - து. (கவி) தனையரிலிருவர்தோள்களிலிருப்ப தலையின்மீதொருவ
னைத்தாங்கி, மனைவியோடேகிமெய்யெரிகொளுத்த மாய்வுறாதந்தநா டகன்றோர்,
பனையடிநிழலின்மைந்தரையிறக்கிபதைப்பொருசிறிதொழிந்திருந்தேன், வினைநர
கேறிபழவினையோடேமேவியவின்பமதென்ன .... *

(இ-ள்.) தனையரிலிருவர் - புத்திரர்களிலிரண்டுபேர்—தோள்களில் - புசங்களிலும்—ஒருவனை- மற்றொருவனை—தலையின்மீது - சிரசின்மேலும்—இருப்ப-இருக்கும்படி—தாங்கி-சுமந்துக்கொண்டு—மனைவியோடேகி - (எனது) பாரியாளுடன்போய் — மெய்யெரிகொளுத்த - சரீரத்தையுஷ்ணகிரணமெரிக்க—மாய்வுறாது - இறவாமல்—அந்தநாடகன்று - அத்தேயத்தைக்கடந்து—ஓர்பனையடிநிழலில் - ஒருபனைமரத்தடியினிழலில்—மைந்தரையிறக்கி- புத்திரர்களையிழித்து—வினைநரகேறி - தீவினை (வடிவமான) நரகத்தினின்றுங்(கரை) யேறி—பழவினையோடு - பழைய(நல்)வினையுடன்—மேவியவின்பமதென்ன- பொருந்தியசுகத்தைப்போல—ஒருசிறிது - சற்றுநேரம்—பதைப்பொழிந்திருந்தேன்-சிரமந்தீர்ந்திருந்தேன்.எ-று(௨௨)

(அ-கை.) இ - து. (கவி) வளைதருமூப்பால்வழிவருந்துயரான் மைந்தர்களிருவரை
டலைக்க, களைகொலோதுயிலோசாய்ந்தனன்மனைவி கண்டுளங்கரைந்துதானிருந்
தே, னிளையவன்றுயிலாதென்மடியேறியிருந்துநீர்சொரிதரவழுது, விளைபசியா
ற்றலுதிரமுமுலனும்வேண்டுமிப்போதுதாவென்ன .... *

(இ-ள்.) வளைதருமூட்பால் - சூழ்கின்றசனையினாலும்—வழிவருந்துயரால் - வழிநடந்துவந்ததுன்பத்தினாலும்—மைந்தர்களிருவரையணைக்க - இரண்டுபிள்ளைகளையுங்கட்டிக்கொள்ள—களைகொலோ - களைதானோ—துயிலோ - நித்திரைதானோ (வென்னும்படி)—மனைவி சாய்ந்தனள் - (எனது) தலைவிபிறந்தாள்—கண்டுளங்கரைந்து-(அதைப்)பார்த்தூமனமுருகி—நானிருந்தேன் - யானிருந்தேன்—இளையவன்றுயிலாது - இளையபிள்ளையுறங்காமல்—என்மடியேறியிருந்து - என்மடியிலேறியிருந்துக்கொண்டு — நீர்சொரிதரவழுது - (இரண்டுகண்களினுஞ்) சலம்பெருகவழுது—விளையசியாற்றேன் - (மிகவு)முண்டாகின்றபசிக்குச்சகிக்கேன் — உதிரமும் - இரத்தமும்—ஊனும் - மாமிசமும்—வேண்டும்:- (யான்)புசிக்கவேண்டும்—இப்போதுதாவென்ன - இப்போதுகொடென்றுகேட்க. எ-று .... (௨௩)

(அ-கை.) இ - து. (கவி) இட்டமாமிளவலென்னெதிர்பதைப்பவென்செயலேது
மற்றுயிர்போய், கட்டைபோலிருந்தேன்விடாதவனழுதகண்ணினீர்கண்டறக்கரை
ந்து, மட்டிவன்வாராளென்றுயிர்விடுவான்வனக்கனல்வளர்த்ததில்வீழக், கிட்டிநின்
றுகைத்தேனிந்தவாசனத்தின்கீழ்வுறவீழ்வுறுமளவில்.. *

(இ-ள்.) இட்டமாமிளவல் - பிரியமுள்ளவிளையகுழந்தையானவன்—என்னெதிர்பதைப்ப - என் (கண்)முன்னேதுடிக்க—என்செயலேதுமற்று- நான்செய்வதொன்றுமின்றி—உயிர்போய் - பிராணன்பிரிந்(திருக்கின்ற)—கட்டைபோலிருந்தேன்- சவத்தைப்போலிருந்தேன்—விடாதவனழுதகண்ணீர்கண்டு - அவனோயாமலழுதகண்ணீரைப்பார்த்து — அறக்கரைந்து-மிசவுங்கரைந்து—மட்டிவன்வாராளென்று- மிதத்திலிவன்பிழையானென் (றெண்ணி,—உயிர்விடுவான் - (யானும்) பிராணனைவிடும்பொருட்டு—வனக்கனல்வளர்த்து - காடாக்கினியைவளர்த்து—அதில்வீழக்கிட்டிநின்று - அவ்வக்கினியில்விழும்படிசமீபித்திருந்து— உகைத்தேன்-எழும்பினேன்—இந்தவாசனத்தின் - இச்சிங்காதனத்தி (லிருந்து)— கீழ்வுறவீழ்வுறுமளவில்-கீழேவிழுகின்றசமயத்தில். எ-று. (இ - ௰ - க-ம்) மனோராச்சியத்திலுண்டானகற்பனைகளை வியப்புற்று ஆசாரியர்முதலியோர்க்கறிவித்ததாம் .... (௨௪)

(அ-கை.) சீவவவத்தைகளையறிந்தேனெனல். (கவி) தாங்கினீர்பலருஞ்சயசயவென்னத்
தாக்குறுபல்லியமுழக்க, வீங்குணர்வுற்றேனீசனன்றுகிலவணனு மன்னவனுமேனன், றீங்
குறுசித்தன்செயலின்மோகித்தேன்சீவனுக்கவத்தைகளநேகம், பாங்குறவுளவென்றறிந்
தனனென்றுபகர்வுழியொளித்தனன்சித்தன்.. *

(இ-ள்.) தாங்கினீர்பலரும் - (என்னைத்) தாங்கினவர்களாகியநீங்களனைவரும் — சயசயவென்ன- சயசயவென்றுசொல்ல—தாக்குறுபல்லியமுழக்க - அடிக்கப்பட்டசகலவாத்தியங்களுஞ்சத்திப்பிக்க—ஈங்குணர்வுற்றேன் - இவ்விடமறிந்தேன்—நீசனன்றுகி - சண்டாளனல்லாதவனாய்—லவணனுமன்னவனுமேனன் - லவணனென்னுமரசனுமேனன் — தீங்குறுசித்தன்செயலின்மோகித்தேன் - குற்றம்பொருந்தியசித்தனதுவித்தையினான்மயங்கினேன்— சீவனுக்கு-சீவாத்மாவுக்கு—அவத்தைகள்- அவத்தைகளானவை—அநேகம்பாங்குறவுளவென்று-பலவுரிமையாகவுண்டாயிருக்கின்றனவென்று— அறிந்தனனென்று - தெரிந்தேனென்று — பகருழி-சொல்லுஞ்சமயத்தில்—சித்தன்-சாம்பரிகன்—ஒளித்தனன் - மறைந்தனன். எ-று..... ... (௨௫)

(அ-கை.) சித்தனீங்குதல். (கவி) இருந்தமந்திரிகள்சித்தனென் றிவனொன்றலுமி
மைப்பினுண்மறைந்தான், பொருந்தியவுலகமனமெனவேறே புலப்படக்காட்டுவா
ன்விடுத்த, திருந்தியதெய்வமாயையீதாகுஞ்செப்புமிச்செயலினூற்றீரப், பெருந்த
கைபரத்தின்விகாரமேமனமாம் பேருலகென்றனரொன்றுன்.. *

(இ-ள்.) இருந்தமந்திரிகள் - (சபையி)லிருந்தவமைச்சர்கள்—சித்தனென்றிவனொன்றலும் - சித்தனென்றவிவனொன்றுவிசாரிக்கவும் — இமைப்பினுண் மறைந்தான் - (கண்)ணிமைக்குமுன்னொளித்தான்—பொருந்தியவுலகம் - அடைந்தசகமானது—மனமென- மனமேயென்று—வேறேபுலப்படக்காட்டுவான்-பிரிவாகத்தெரியக்காட்டும்பொருட்டு—விடுத்த-அனுப்பிய—திருந்திய - திருத்தமான— தெய்வமாயையீதாகும் - தேவமாயையானதிதுவாகும்—செப்புமிச்செயலினால் - சொல்லப்பட்டவிச்செய்கைகளினால்—தீரப்பெருந்தகை - தீரமுள்ளவரசனே—பரத்தின் - பிரமத்தின் — விகாரமே - தற்பிரகாசமே —மனமாம் - மனமாகிய—பேருலகு - பெரியசகமாம்—என்றனர் - என்று(சத்துக்கள்) சொன்னார்கள்—என்றுன்-என்று வசிஷ்டமுனிசொன்னார். எ-று. .... (௨௬)

சித்தன்கதைமுற்றிற்று. ஆ. கதை-௰௧ - இ - கவிதை. (௪௱௪௫)

உற்பத்திப்பிரகரணம்.

(அ-கை.) முன்புகிற்ப்ரதிபலனமான மனதுக்கேபற்பநேரமநேககாலமான சம்சாரம்வந்ததன்றிச் சித்துக்கின்றென் றறிவித்து, இம்மனத்தைச் சித்திற்கனாத்துச் சின்மயமாய்ப்பிரகாசிப்பிக்குநிமித்தம், ஞானவிண்மகன்முதலிய எண்கதையின்சாரமுள்ள உற்பத்திப் பிரகரணத்தைச் சொல்லுகிறார்..*

(அ-கை.) மனோவல்லமையாதெனின். (கவி) வேறு. ஆயமனத்தின்செயல்செயலாமதனாலொழிந்ததொழிந்துளதா, மேயமனத்தின்லைவொழித்தோர்மிகவுநல்லநியானத்தோர், தூயமனமாயிடில்வெற்பாற் சுழலாக்கடல்போற்பிறப்பிறப்பா, மாயைமயக்கங்கெடுமென்று வசிட்டன்மீண்டு முறைசெய்வான்.................................*

(இ-ள்.) ஆயமனத்தின்செயல்செயலாம்-(இப்படி) யானமனத்தினதுதொழிலேதொழிலாம்—அதனால் - அம்மனதினால்—ஒழிந்ததொழிந்துளதாம் - விடுபட்டதேவிடுபட்டதாம்—மேயமனத்தினலைவு - உண்டானமனோசாஞ்சல்யத்தை—ஒழித்தோர் - விடுத்தவர்கள்—மிகவு நல்லநியானத்தோர் - மிகவுமுத்தமமானநிஷ்டையுள்ளவர்கள்—தூயமனமாயிடில் - பரிசுத்தமுள்ளமனதானால் — வெற்பால் - (மந்திர) கிரியினால் — சுழலாக்கடல்போல் - அலைவுபடாத (க்ஷீர) சமுத்திரம்போல (வறிவுநிச்சலமாய்) —பிறப்பிறப்பாம்-சநநமரணமென்கின்ற—மாயைமயக்கங்கெடுமென்று - சம்சாரமயக்கநாசமாமென்றுசொல்லி—வசிட்டன்-வசிஷ்டமுனி—மீண்டுமுறைசெய்வான் - திரும்பவுஞ்சொல்வார். எ-று..(க)

(அ-கை) இ-து. (கவி) தளையாநிற்கும்பலபோகச்சங்கற்பஞ்சேர்மனவிருத்தி, முளையால்வளருமாமாயைமோகமென்னுநச்சுமரம், விளையாநின்றமனநோய்க்கு மேலோர்விதித்தபரிகார, மிளையாதெளிதாயதனாலேயியற்றலாகுமிதுகேட்பாய் .... *

(இ-ள்) தளையாநிற்கும் - பந்தித்திருக்கும்—பலபோகச்சங்கற்பஞ்சேர்-நாநாவிதபோகங்களினதுசங்கற்பமடைந்திருக்கின்ற—மனவிருத்தி - மனவிருத்தியென்னும் — முளையால்-அங்குரத்தினால்—மாமாயைமோகமென்னும் - மகாமாயாமயக்கமென்கின்ற — நச்சுமரம்-விஷவிருக்ஷமானது—வளரும் - விருத்தியடையும்—விளையாநின்றமனநோய்க்கு-வளராநின்றமனருவியாதிக்கு— மேலோர்விதித்த - சத்துக்கணியமித்த— பரிகாரம் - அவுஷதமானது—இளையாதெளிதாய் - வருத்தமில்லாமற்சுளுவாக—அதனால்-அம்மனத்தினால்— இயற்றலாகும்-செய்யப்படும்—இதுகேட்பாய் - இதைக்கேட்பாயாக. எ-று. (இ-உ-க-ம்) மனோசங்கற்பமே, மாயைமுதலியவைகளாகத் தோற்றுமென்பதாம்..(உ)

(அ-கை.) அம்மனோநாசவுபாயமியாதெனின். (கவி) மிகமாலுறுபல்பொருள்களையுமேவாதொழித்தோர்மனம்வென்றோர், சுகமாயெளிதாய்த்தனக்குரித்தாந்துயர்தீர்நிராசையறிவரியோர், சகமாமனிதபுழுவொப்பார்சான்றோருரைத்தநூற்பழகி, யகமாநினைவுதீர்மனத்தாலயருமனதைத்திருப்பிடலாம்..*

(இ-ள்.) மிகமாலுறு - மிகவுமிச்சிக்கப்பட்ட—பல்பொருள்களையும் - சகலவஸ்துக்களையும்—மேவாதொழித்தோர் - விரும்பாமனிக்கினவர்கள்—மனம்வென்றோர் - மனதைச்செயித்தவர்கள்—சுகமாய் - சுகமாகவும்—எளிதாய் - லேகுவாகவும்—தனக்குரித்தாம்- தனக்குரியதாகவுமிருக்கின்ற—துயர்தீர் - துக்கமற்ற— நிராசையறிவரியோர் - வயிராக்கியஞானம்பெறுதவர்கள்—சகமாமனிதபுழுவொப்பார் - உலகத்தின்கணுள்ளமானிடகிருமிக்கிணையாவார்கள்—சான்றோர் - அறிஞர்க (ளுபதேசத்தாலும்)—உரைத்த - (ஈஸ்வரன்) கூறிய—நூல் - சுருதி (முடிவாகியமகாவாக்கியார்த்தத்தாலும்) — பழகி - (ஆத்மா)னுசந்தானஞ்செய்து— அகமாநினைவுதீர்மனத்தால் - நாமென்னுஞ்சங்கற்பமற்றமனதினால் — அயருமனதை - (பகிர்முகமாய்)வருந்துமனதை—திருப்பிடலாம் - (அந்தர்முகத்திற்சுகிக்கத்)திருப்பலாம். எ-று.(இ-ம்.) சுருதியுத்தியனுபவமுள்ளமனதினாலவையின்றியமனதைக் கெடுக்கவேணுமென்பதாம்.....(ங)

(அ-கை.) அம்மனதிறக்கிற்பலனியாதெனின். (கவி) இரும்பாலிரும்பு திருந்துவபோனியற்றுமனத்தான்மனந்திருந்துந், திரும்பாநிராசைவடிவாகிச் செறியுந்தன்னொலியற்றுவதாய், விரும்பாநின்றோர்க்கெளிதானவெய்யமனத்தினுபசாந்தி, பெரும்பாரந்தீர்நற்கதியாம்பிறிதோர்கதியுநன்றாகா..*

(இ-ள்.) இரும்பால் - அரத்தினால் — இரும்புதிருந்துவபோல் - அயந்திருத்தப்படுவது போல—இயற்றும் - (சன்மார்க்கத்தின்) முயற்சிக்கின்ற — மனத்தால் - (சுத்த) மனதினால் — மனந்திருந்தும் - (அசுத்த) மனந்திருத்தப்படும்—திரும்பா - மீளாத—நிராசைவடிவாகி- இச்சாத்தியகம்மயுருவாகியும்—செறியுந்தன்னால் - பொருந்தியதனது (முயற்சியி) னால்—இயற்றுவதாய் - சாதிக்கத்தக்கதாகியும்—விரும்பாநின்றோர்க்கு- (மோட்ச)விச்சையுடையவர்களுக்கு—எளிதாண - லேசாகியுமிருக்கின்ற—வெய்யமனத்தினுபசாந்தி - வெவ்வியமனத்தினொழிவே—பெரும்பாரந்தீர் - பெரும்பாரநீங்கிய—நற்கதியாம் - பரகதியாம்—பிறிது - வேறே — ஓர்கதிநன்றுகா - ஒருகதிபுநன்மையாகாது. எ - று. (இ - ம்) மனோநாசமானவிடமேபரமசுகமென்பதாம்... .... (௫)

(அ-கை.) அப்பரமசுகமெப்படியுண்டாமெனின். (கவி) வாவுமனத்தையசங்கற்ப
வாளாலறுக்கினிறைந்தெங்கு, மியாவுமதுவாம்பொருடோன்று மிந்தவழிநின்றறி
வாலே, மேவுமனதைவிழுங்கியதின்மேலாய்மாயாவிகற்பமிலா, வோவுமதியாலறி
வையடைந்துளத்தைவிழுங்கும்பொருளுணர்வாய்...................................... ✻

(இ-ள்.) வாவுமனத்தை-(ஒன்றைவிட்டொன்றில)வாவிக்கொண்டிருக்கின்றமனதை—அசங்கற்பவாளால் - சங்கற்பரகிதமென்னுங்கத்தியினால்—அறுக்கில் - கெடுத்தால்— எங்கும்- எவ்விடத்தும்—நிறைந்து - பரிபூரணமாய்—யாவுமதுவாம்பொருடோன்றும் - சகலமுந்தன்மயமாய்விளங்குகின்றவஸ்துப்ரசன்னமாம்—இந்தவழிநின்று- இம்மார்க்கத்திலிருந்து—அறிவால் - ஞானத்தினால்—மேவும் - விரும்பத்தக்க—மனதைவிழுங்கி - மனதைப்புசித்து— அதின்மேலாய் - அதற்குமேலானதாய்—மாயாவிகற்பமிலா - சம்சாரவிகற்பமில்லாத — ஓவுமதியால் - சகலத்தியாகமானவறிவினால்—அறிவையடைந்து-(ஆத்ம) ஞானத்தையடைந்து—உளத்தை-மனதை—விழுங்கும்பொருளுணர்வாய் - ஐக்யஞ்செய்கின்றஸ்வரூபஞானத்தையறிந்துகொள்வாய். எ-று. (இ-ம்) மனோசங்கற்பமிறந்தவிடத்து அப்பரமசுகமுண்டாமென்பதாம்.✻

(அ-கை.) எம்முயற்சியினாலம்மனதைக் கெடுக்கலாமெனின். (கவி) வருந்திமுயன்
றுமனந்தன்னை மாற்றியில்லையுண்டென்று, திருந்தபதத்திலிருந்திடுவா யிடர்தீர்செ
ல்வமிடரின்றிப், பொருந்தவேண்டு மனம்வென்றாற் புவனமூன் றுந்துரும்பாகுந்,
திருந்தவினிதென்றனவெல்லாந் தீதாய்த்தோன்றின்மனமாளும்.... .... ✻.

(இ-ள்.) வருந்திமுயன்று - (சிரவணாதியில்)வருத்தப்பட்டுப்பியாசித்து—மனந்தன்னை மாற்றி - மனதைக்கெடுத்து—இல்லையுண்டென்றது- சத்தசத்தென்றுணாக்கக்கூடாமல்—இருந்த-சுயமாயிருந்த—பதத்திலிருந்திடுவாய்-பிரமபதத்திலிருப்பாய்—இடர்தீர்செல்வம்-துன்பமற்றமோக்ஷசம்பத்தை—இடரின்றி- துன்பமின்றி—பொருந்தவேண்டும் - (தைரியத்தினா)லடையவேண்டும்—மனம்வென்றால்-இப்படிமனோநாசமானால்—புவனமூன்றுந்துரும்பாகும்- மூன்றுலகமுந்திரணமாம்—திருந்த-திருத்தமாக —இனிதென்றனவெல்லாம்-இனிமையென்று சொல்லப்பட்டவிஷயங்களியாவும்—தீதாய்த்தோன்றில் - தீமையாகத்தோற்றினால்— மனமாளும் - மனதுநாசமாம். எ-று, (இ-ம்) விஷயதோஷதிருஷ்டியினாலம்மனதைக்கெடுக்கவேண்டுமென்பதாம்..(௬)

(அ - கை) அவ்விஷயதிருஷ்டி யாதினாற்கெடுமெனின். (கவி.) சித்தவிண்ணிற்றி
கழறிவாந்தியானத்தாலேயறிவென்னு, மொத்தபடையாலையமறவுளத்தையறுப்பா
யறுத்ததற்பின்,மெத்துதுயர்போமவனிவனென்மேவுமனைத்துமதுவிதுவாய்,வைத்
தவிவையேமனமிதனை மறப்பாம்வாளாலறுத்திடுவாய் ....✻

(இ-ள்.) சித்தவிண்ணில் - இருதயாகாயத்தில்—திகழ் - ப்ரகாசிக்கப்பட்ட—அறிவாந்தியானத்தால்- ஞானநிஷ்டையா(லுண்டாகும்)—அறிவென்னும்-பரஞானமென்கின்ற—ஒத்தபடையால் - உரித்தாகியசக்கராயுதத்தினால்—ஐயமற - சந்தேகங்கெட—உளத்தையறுப்பாய்- மனதைக்கெடுப்பாய்—அறுத்ததற்பின் - கெடுத்தபின்பு—மெத்துதுயர்போம் - மிகுந்ததுன்பநீங்கும்—அவனென் - அவனென்றும்—இவனென் - இவனென்றும் — மேவுமனைத்தும்- பொருந்தப்பட்டசகலமும்—அது - அது(வெனதாகவும்)—இதுவாய்-இது(வென)தாகவும்— வைத்த - வைத்திருக்கின்ற—இவையே - இவைகளே—மனம்-மனமாகும்—இதனை - இம்மனதை—மறப்பாம் - அபாவனமென்னும்—வாளால் - கத்தியினால்—அறுத்திடுவாய்-கெடுப்பாய். எ-று. (இ-ம்) ஞானதிருஷ்டியினாலவ்விஷயங்கெடுமென்பதாம்.................................. (௭)

(அ-கை.) மனமிறந்ததற்கடையாள மியாதெனின். (கவி) பெருகத்திரண்டமுகிலெ
ல்லாம்பெருங்காற்றாலே யொருவுதல்போல், வருங்கற்பனைநாசத்தாலேமனம்போ

யிறக்குமனமிறந்தாற், பொருகற்பாந்தமாருதமும் பொங்குகடலும் புவியனைத்து,
முருகச்சுடுபன்னிருகதிருமொருகால் வரினுமிடருண்டோ...... .... *

(இ-ள்.) பெருகத்திரண்ட-மிகவுங்கூட்டமான — முகிலெல்லாம்-மேகங்களனைத்தும்— பெருங்காற்றால் - சண்டமாருதத்தால் — ஒருவுதல்போல - நீங்குவதைப்போல — வருகற்பனை நாசத்தால் - வராநின்றகற்பக்ஷயத்தினால்— மனம்போயிறக்கும் - மனமானது(சித்திற்) சென்றுநசிக்கும்—மனமிறந்தால் - மனதுநசித்தால்—பொருகற்பாந்தமாருதமும் - மோதாநின்றவூழிகாற்றும்—பொங்குகடலும் - பிரளயசமுத்திரமும்—புவியனைத்தும்- பூமிமுழுதும் —உருகச்சுடும் - உருகும்படியெரிக்கின்ற — பன்னிருகதிரும் - பன்னிரண்டுசூரியர்களும்— ஒருகால்வரினும் - ஏககாலத்தில்வந்தாலும்—இடருண்டோ - துன்பமுண்டோ. எ-று. (இ-ம்) அநந்தவிடர்களுண்டாயினு மவ்விடரில்லாதிருப்பதே, மனமிறந்தகுறியென்பதாம் . ...(அ)

(அ-கை.) பரமசுகத்திற்குவிக்கினமியாதெனின். (கவி) தன்னைக்கொண்டேதனையறு
க்கிற்றானாய்ச்சகலபூமிக்கு, முன்னைத்தலைமைபோலின்ப முதிரநிறைந்துவகற்பனைக்
கே, துன்னித்திகழ்ந்தற்பதம்பற்றிசுகத்தையடைவாய்பலவாக, வுன்னிப்படர்கற்பனை
செல்வமுடையமனமே யுயிர்ப்பகையாம் .... *

(இ-ள்.) தன்னைக்கொண்டே - மனதைக்கொண்டே—தனையறுக்கில் - மனதைக்கெடுக்கில்—தானாய் - தானாகி—சகலபூமிக்கும் - உலகங்களனைத்திற்கும் — முன்னைத்தலைமைபோல்- முதன்மையானசார்வபூமனைப்போல—இன்பம் - ஆநந்தமானது— முதிரநிறைந்து - பூரணமாகப்பெருகி—அகற்பனைக்கே - கற்பனைபற்றமோக்ஷசாம்ப்ராச்சியத்துக்கே—துன்னி-நெருங்கி—திகழ் - ப்ரகாசிக்கின்ற—தற்பதம்பற்றி-பிரமபதத்தைச்சேர்ந்து—சுகத்தையடைவாய்- நிரதிசயாநந்தத்தைப்பெறுவாய்—பலவாக - நாநாவிதமாக—உன்னி - நினைத்து—படர்கற்பனை-மிகுந்தமித்தையென்னும்—செல்வமுடைய - சம்பத்துள்ள—மனமே - மனதே—உயிர்ப்பகையாம் - ஆத்மாவுக்குவிரோதமாம். எ-று (இ-ம்) சங்கற்பவிகற்பாத் மகமானமனதேயாத்மசுகத்திற்கு, விக்கினமென்பதாம் ... . (௯)

(அ-கை.) அச்சங்கற்பமியாதினாற்கெடுமெனின். (கவி) உள்ளப்பகைவன்பலவிதமா
யுறுகாட்சிகளால்வெல்லாமற், றெள்ளத்தகுசந்தோடமெனுஞ் செல்வமுடையநிரா
சையினாற்; கள்ளத்தனிநெஞ்சினைவெல்வாய்கற்றோர்க்கன்பாய்நின்மலமாய்,குள்ளக்
குளிர்ந்தாங்காரத்தாற் கூறுகாதுசமபாவம்...... .... *

(இ-ள்.) உள்ளப்பகைவன் - மனமென்னுஞ்சத்துருவானவன்—பலவிதமாய்- நாநாவிதமாக—உறுகாட்சிகளால்- பொருந்தியவிஷயானுபவங்களால்—வெல்லாமல்-(உன்னைக்)கெடுக்காமல்—தெள்ளத்தகு - தெளிவாதற்குரிய— சந்தோடமென்னும் - சந்தோஷமென்கின்ற—செல்வமுடைய - வாழ்வையுடைய—நிராசையினால் - விராகத்தினால்—கள்ளத்தனிநெஞ்சினை-குற்றமுள்ளதனிமையானமனதை—வெல்வாய் - கெடுப்பாய்— கற்றோர்க்கன்பாய் - அறிஞர்களுக்குப்பிரியமாகியும்— நின்மலமாய் - நின்மலமாகியும்— குள்ளக்குளிர்ந்து - மிகவுங்குளிர்ச்சியாகியு(மிருக்கின்ற)—சமபாவம் - பூரணபாவமானது— ஆங்காரத்தால் - அகம்பாவத்தினால் —கூறுகாது - பின்னப்படாது. எ-று. (இ - ம்) நிராசையாலவ்விகற்பங்களைக் கெடுக்கவேண்டுமென்பதாம் .... (௰)

(அ-கை) நிராசையானசமதிருஷ்டி யெதைக்கெடுக்குமெனின். (கவி) தாழ்வுமுயர்
வுமில்லாத சமபாவனையாற்பிறப்பில்லா, வாழ்வுநல்கும்பரமபதமாறுப்பதமாமலை
வாலே, வீழ்வுறுதமனமரிதாம் வெம்மைகனலைவிடாததுபோ, லாழ்வுசெய்யுமலை
வுமனமகலாவறிவினலைவுமனம் .... *

(இ-ள்.) தாழ்வுமுயர்வுமில்லாத - குறைவுநிறைவுமில்லாத—சமபாவனையால் - பூரணபாவத்தினால்—பிறப்பில்லாத - சநநமில்லாத—வாழ்வுநல்கும்- பரமாநந்தத்தைக்கொடுக்கின்ற—பரமபதம் - பிரமபதமானது—மாறுப்பதமாம் - அழிவற்றபதமாகும்—அலைவால்- சஞ்சலத்தினால்—வீழ்வுறுதமனமரிதாம்- கெடாதமனமரியதாம்—வெம்மை- ஊஷ்ணமானது—கனலைவிடாததுபோல் - அக்கினியைநீங்காததுபோல— ஆழ்வுசெய்யுமலைவு - தாழ்வைச்செய்கின்றசஞ்சலமானது—மனமகலா - மனதைவிட்டுநீங்காது—அறிவினலைவு - ஞானத்தினுடையசலலனசத்தியே—மனம் - மஶ.மானது. எ - று. (இ-ம்) பரமபதத்தைக் கொடுப்பதற்குநிராசையேகாரணமாம்.. (௰௧)

(அ-கை.) சஞ்சலமானமனதைக்கெடுக்குமுபாயமியாதெனின். (கவி) அலையு
மந்தமனமூலகா மலைவுப்பாகின்மனங்கெடுமிந், நிலையேதவமுநூற்கருத்து

நிமலவீடுந்துணிபொருளுந், துலைவிலலைவேமனமாயைதொடர்வாதனையுமத
ன்பெயரா, மலையுமனமுமதுவதனை மாறாவிசாரத்தான்மாய்ப்பாய்.......... *

(இ-ள்.) அலையும் - சலிக்கின்ற—அந்தமனம் - அம்மனமே—உலகாம்-சகமாகும்—அலைவுபோக்கில் - சலனமற்றால்—மனங்கெடும் - மனது நசிக்கும்—இந்நிலையே - இந்நிச்சயமே—தவமும் - (நிட்காம)தபசும்—நூற்கருத்தும்- (ஆத்மஞான) சாத்திரத்தினந்தரங்கமும்—நிமலவீடும் - நிருமலமானமோக்ஷமும்—துணிபொருளும் - தெளிந்தவஸ்துவுமாம்—மனம்-மனத்தினது—துலைவிலலைவே - நீங்காதசலனமே—மாயை - மாயையென்றும்—தொடர்வாதனையும்- தொடராநின்ற (வசுத்த)வாசனையென்றும்— அதன்பெயராம் - அச்சலனசத்தியினுமங்களாம்—அலையும் - சலிக்கின்ற—மனமுமது - மனதுமச்சஞ்சலசத்தியேயாம்—அதனை-அம்மனோசலனசத்தியை—மாறாவிசாரத்தால்- நீங்காத(வாத்மஞான)விசாரணையால்—மாய்ப்பாய்-கெடுப்பாய். எ-று. (இ-ம்)ஆத்மவிசாரத்தான்மனோசஞ்சலத்தைக்கெடுக்கவேண்டுமென்பதாம்.

(அ-கை.) மனோவுருவமியாதெனின், (கவி) மெத்துகின்றவாதனையை விட்டா
ன்மேலாநலமுளதாஞ், சத்தினசத்தினிடைநின்று சைதன்னியத்திற்சாட்டி
யத்தி, லொத்துநடுநின்றலைவதுவே யுள்ளமாகுமிவ்வுள்ளஞ், சித்தின்முயல்வா
ற்சித்தாகுஞ் செடத்தின்முயல்வாற் செடமாகும்...... ....,.... *

(இ-ள்.) மெத்துகின்ற - அற்பமாகின்ற—வாதனையைவிட்டால் - இஷ்டவஸ்துநியாகத்தினால்—மேலாநலமுளதாம் - பரமவின்பமுண்டாகும்—சத்தின்-உள்ளதாகியபிரமத்துக்கும்—அசத்தின் - இல்லாததாகியசகத்துக்கும்—இடைநின்று - நடுவிலிருந்து — சைதன்னியத்தில்-சித்திலும்—சாட்டியத்தில் - செடத்திலும்—ஒத்து - பொருந்திய—நடுநின்றலைவதுவே-மத்தியிற்சலித்துக்கொண்டிருப்பதே—உள்ளமாகும் - மனமாகும்—இவ்வுள்ளம்- இம்மனமானது—சித்தின்முயல்வால் - அறிவின்முயற்சியால்—சித்தாகும் - ஞானஸ்வரூபமாம்—செடத்தின்முயல்வால் - அறியாமையின்முயற்சியினால்—செடமாகும் - செகத்தாம். எ-று. (இ-ம்) மனது செடசித்துவடிவமா மென்பதாம்... .... (௰௩)

(அ-கை.) அம்மனத்தையாதினா லடக்கலாமெனின். (கவி.) ஊக்கமுளதாய்மன
மொன்றி லுறைக்கிலதுவாமாதலினாற், றாக்குமனத்தைமனத்தாலேதள்ளியேறி
த்தளர்வின்றி, யாக்கமழிவில்பதம்விரைவிலடைவாய்மனத்தைமனத்தாலே, நீக்
கவலதாந்தகைமைத்தா நிருபனிறுத்துநெறிபோல......... ....*

(இ-ள்.) ஊக்கமுளதாய் - முயற்சியுள்ளதாய்—மனம் - மனமானது— ஒன்றிலுறைக்கில்- ஒன்றிலழுந்தில்—அதுவாம் - அப்பொருளேயாம்—ஆதலினால் - ஆதலால் — தாக்குமனத்தை- (விபஷித்தின்)பாய்கின்றமனத்தை —மனத்தால்-(ஆத்மஞான)மனத்தினால்—தள்ளி - நீக்கி—ஏறி- மேற்சென்று—தளர்வின்றி - சோர்வில்லாமல்—ஆக்கமழிவில்பதம்- செல்வமென்னுமழிவற்ற பரமபதத்தை—விரைவிலடைவாய் - சீக்கிரத்திற்பெறுவாய் — மனத்தை - (சலனமுள்ள)மனத்தை—மனத்தால் - (நிச்சலமான)மனத்தினால்—நிருபன் - சார்வபூமனானவன் —நிறுத்தும்-(அசர்களைத்தமதாக்கினையி) னிறுத்துகின்ற—நெறிபோல - நீதியைப்போல—நீக்கவலதாம்- நீக்கித்தன்னிலையி னிறுத்துதற்குவல்லமையான—தகைமைத்தாம்-தன்மையையுடையதாம்.எ-று (இ-ம்) சித்துருவமான மனத்தினாற்செடவுருவமானமனத்தைக்கெடுக்கவேண்டுமென்பதாம்.(௰௪)

(அ-கை) மனத்தினாலாத்மாவுக்குச்சகாயமுண்டோவெனின். (கவி) பிறவிக்கடலிற்கா
தலெனும் பெருவாய்முதலைபிடித்தீர்க்க, 'விறவுச்சுழியிற் சுழலுமவர்க்கிதயநாவா
யெட்டாவா, மறமுற்றுளத்தையுளத்தாலே மாய்த்துபிறப்பில்வருந்தாம, லுறவுற்று
னை நீயுய்விப்பா யுயிர்க்குப்பிறரானுய்வுண்டோ.......... ....*

(இ-ள்) பிறவிக்கடலில் - சநநமென்னுஞ்சமுத்திரத்தில்—காதலெனும் - ஆசையென்கின்ற—பெருவாய்முதலை - பேழ்வாயையுடையகராவானது — பிடித்தீர்க்க - பிடித்திழுக்க—இறவுச்சுழியில் - மரணமென்னுஞ்சுழலில்—சுழலுமவர்க்கு - (அகப்பட்டுச்)சுழலுகின்றோமென்(றறி)பவர்களுக்கு—இதயநாவாய் - மனமென்னுங்கப்பலானது—எட்டா -எட்டும்--- மறமுற்று - வீரமுற்று --- உளத்தை -(மலின)மனத்தை --- உளத்தால் - (நிருமல)மனத்தினால்---மாய்த்து- கெடுத்து--- பிறப்பில் - சநநத்தில்--- வருந்தாமல்- வருந்தாமல்---உறவுற்று - (பரிசுத்தமனத்தை)யுறவுசெய்து--- உனை - ஆத்மாவை--- நீ - இராமா நீ---உய்விப்பாய் - ஆநந்தவாழ்விலடைவிப்பாய்--- உயிர்க்கு - ஆத்மாவுக்கு--- பிறரால் - வேறொருவரால்---உய்வுண்டோ - வாழ்வுண்டாமோ. எ-று (இ-ம்) சித்துருவமான மனத்தைத்தவிர, ஆத்மாவுக்கு வேறுசகாயமின்றென்பதாம், ஆம் - அசைநிலை .... (௰௫)

(அ-கை.) மாயாமயமானமனதைக்கெடுக்குமார்க்கமியாதெனின். (கவி) எந்தவெ
ந்தவாதனைகளிதயத்தெழுந்தவவையெல்லா, மந்தவந்தவிடத்தழிக்கிலதுவேமாயை
க்கழிவாகு, முந்துபோகப்பேதமென மொழிந்தவிருவாதனைவிட்டு,வந்தபாவாபா
வங்கண்மாற்றிவிகற்பமறமகிழ்வாய் .... *

(இ-ள்.) எந்தவெந்தவாதனைகள் - எவ்வெவ்வாசனைகள்—இதயத்தெழுந்த - மனதின்கணுதித்தனவோ—அவையெல்லாம்- அவ்வாதனைகளியாவையும்—அந்தவந்தவிடத்து-அந்தந்தவிடத்தில்—அழிக்கில் - கெடுக்கில்—அதுவே - அந்நாசமே—மாயைக்கழிவாகும்- மாயாநாசமாம்—முந்து - முதன்மையான—போகமென - போகமென்றும்—பேதமென - பேதமென்றும்—மொழிந்த - சொல்லிய—இருவாதனைவிட்டு-(இவ்) விரண்டுவாதனைகளையுநீக்கி—வந்தவத்திருக்கின்ற—பாவாபாவங்கள் - பாவாபாவமென்னுமிரண்டையும்—மாற்றி - நீக்கி— விகற்பமற - நிருவிகற்பமாய்—மகிழ்வாய் - நீசுகிப்பாய். எ-று. (இ-ம்.) சங்கற்பமுதித்தவிடத்தொடுக்குவதேயதைக்கெடுக்குமார்க்கமென்பதாம் .... (௰௬)

(அ-கை.) விஷயமயமானமாயாசங்கற்பமியாதிஞனீங்குமெனின். வேறு. (கவி) அறிபவ
த்தாசையறிலதுதானேயவித்தையுமனமுமாண்டதுவாம், பொறியயிலாசை துன்பமா
நிராசைபுகலருமுத்தியாமின்பம், பிறிவறுதனதுமுயற்சியாலுண்டாம்பேதையருண்டெ
னுமவித்தை,செறிதருபொய்யாய்நாமமாத்திரமாய்ச்சித்தெனத்தேர்ந்திடிலிலதாம்.... *

(இ-ள்.) அறிபவத்து - திரிஸ்யத்திலுள்ள—ஆசையறில்- இச்சைநீங்கினால்—அதுதானே-அவ்விச்சாத்தியாகமே—அவித்தையும்-அஞ்ஞானமும்—மனமும்-மனதும்—மாண்டதுவாம்-நசித்ததாம்—பொறியயில்- விஷயத்திற்பழகுகின்ற—ஆசை- இச்சையே—துன்பமாம்- துன்பமாகும்—நிராசை- விராகமே—புகலரும் - சொல்லுதற்கரிய—முத்தியாமின்பம்-நிருவாணசுகமாம்—பிறிவறு - பிரிவற்ற—தனதுமுயற்சியால் - தனதெத்தனத்தால்—உண்டாம்-(அது) ண்டாகும்—பேதையர் - அறிவில்லாதவர்கள்—உண்டெனும்- உண்டென்பதாயும்—செறிதருபொய்யாய் -நிறைந்தமித்தையாயும்—நாமமாத்திரமாய்-பெயர்மாத்திரமாயு(மிருக்கின்ற)—அவித்தை - அறியாமையானது—சித்தெனத்தேர்ந்திடில் - (சகலமுஞ்) சைதன்யமென்றுணரில்—இலதாம் - மித்தையாம். எ-று. (இ-ம்) நிராசைவடிவமானஞானதிருஷ்டியாலச்சங்கற்பநீங்குமென்பதாம் .... (௰௭)

(அ-கை.) அஞ்ஞானதிருஷ்டிநீங்குமுபாயமியாதெனின். (கவி) என்றலுமிராமனவித்தை
யின்செல்வத்தெழுந்தறநெருங்குமிவ்விருடா, னொன்றுமிங்கின்றியெவ்வகைநீங்குமுரை
த்தருளின்னநீயென்ன, வன்றவனுரைப்பான்வன்றுயர்முட்சேர் வன்பவக்குழியின்மன்
னுயிரை, யொன்றவீழ்த்ததனேடொக்கவீழ்மாயையுண்டெனிலுண்மைநோக்கில்லை. *

(இ-ள்.) என்றலும் - (இப்படி.) யென்றுவசிஷ்டர்சொல்லவும் — இராமன் - இராமரானவர்—அவித்தையின்- அறியாமையினது—செல்வத்தெழுந்து-செல்வத்திலுண்டாகி— அறநெருங்கும் - மிகவுநெருங்கியிருக்கின்ற—இவ்விருடான் - இவ்வறியாமையானது—இங்கு- இவ்விடத்தில்—ஒன்றுமின்றி - அற்பமுமில்லாமல்—எவ்வகைநீங்கும் - எப்படிபோய்விடும்—இன்னம்-மேலும்—நீயுரைத்தருளென்ன - நீரனுக்கிரகிக்கவேண்டுமென்றுகேட்க—வன்றவுன் - வலிமையானதவத்தையுடையவசிஷ்டர்—உரைப்பான்- சொல்லுவார்—வன்றுயர்-வலியதுன்பமென்னும்—முட்சேர் - முட்கணிறைந்த—வன்பவம் - கொடிதாகியசநநமென்கின்ற—குழியில்-மலைச்சார்பில்—மன்னுயிரை- நிலைபெற்றவாத்மாவை—ஒன்ற-பொருந்த—வீழ்த்து-தள்ளி—அதனோடு- அவ்வாத்மாவுடன்— ஒக்கவீழ்மாயை - கூடத்தானும்விழுகின்றமாயையானது—உண்டெனில்-உள்ளதென்றுபார்க்கின்—உண்மைநோக்கில்லை-தத்துவதிருஷ்டியில்லையாம்.எ-று

(அ-கை.) இ-து.(கவி) பிறப்பெனுமாயைக்களையதாயெங்கும்பிறிவறுபெரும்பொ
ருடோன்றி, லிறப்புறுமாயைக்கிச்சையேவடிவாமிதனுடைநாசமேவீடு,சிறப்பில்
சங்கற்பஞ்சிதைந்திடிலிதுதான்றேய்ந்திடுஞ்சித்தெனுங்கதிரோன், புறப்படிலிதய
விசும்பில்வாதனையாம்பொங்கிருள்போமெனப்புகல்வாம் .... *

(இ-ள்.) பிறப்பெனும் - சநநமென்கின்ற—மாயைக்களையதாய்-அவித்தையின்முடிவாய்—எங்கும் - எவ்விடத்தும்—பிறிவறு - நிறைந்திருக்கின்ற—பெரும்பொருள் - பரவஸ்துவானது—தோன்றில் - உதயமாயின்—இறப்புறுமாயைக்கு - நசிக்கின்றமாயைக்கு—இச்சையே - ஆசையே—வடிவாம் - ஸ்வரூபமாம்—இதனுடைநாசமே - இம்மாயாநாசமே—வீடு-மோக்ஷமாம்—சிறப்பில் - சிறப்பிலலாத—சங்கற்பம் - சங்கற்பமானது—சிதைந்திடில்- நசிக்கில்—இதுதான் - இவ்வவித்தையானது—தேய்ந்திடும் - நாசமாம்—சித்தெனும் - ஞானமென்கின்ற—கதிரோன் - சூரியன்—புறப்படில் - உதயமானால்—இதயவிசும்பில் - இதயாகாயத்

தில்—வாதனையாம் - வாசனையாகிய—பொங்கிருள் - மிகுந்தவஞ்ஞானாந்தகாரமானது—போமென - நீங்குமென்று—புகல்வாம் - சொல்லுவாம். எ - று. (இ-உ-க-ம்) ஞானப்ரகாசவுதயத்தில் அஞ்ஞானாந்தகாரநீங்குமென்பதாம்.. (௧௯)

(அ-கை.) திரிஸ்யத்தைக்கெடுக்குந்திருஷ்டியாதெனின். (கவி) கண்டனவனைத்துமாயை
யேயென்றாய்கண்ணெனுந்தத்துவத்தாலே, தண்டறவதுதான் கரைந்துபோமென்றாய்
தத்துவமாவதேதென்ன, வெண்டவனுரைப்பான்காண்பவற்றிடைசென் றெய்திடாதெங்
கணுஞ்சமமா,யுண்டெனலாகிநாமமற் றுயர்ந்தவுணர்வுதற்பரமமாமுணர்வே.............. *

(இ-ள்.) கண்டனவனைத்தும் - காணப்பட்டவஸ்துக்களியாவும் — மாயையேயென்றாய்-மாயையென்றேசொல்லினை—கண்ணெனும் - ஞானமென்கின்ற—தத்துவத்தால் - ஆத்ம(பாவனை)யினால்—தண்டற - விக்கினமின்றி—அதுதான் - அந்தமாயையானது — கரைந்துபோமென்றாய் - கெடுமென்றுசொன்னாய்—தத்துவமாவது - ஆத்மாவென்பது—ஏதென்ன - எதுவென் (றிராமன்) கேட்க—எண்டவன் - எண்ணத்தக்கதவசையுடையவசிஷ்டர்—உரைப்பான்-சொல்லுவார்—காண்பவற்றிடை - திரிஸ்யத்தினிடத்தில்—சென்றெய்திடாது-போயடையாததாகியும்—எங்கணும் - எவ்விடத்திலும்—சமமாய்-பரிபூரணமாகியும்—உண்டெனலாகி-உள்ளதென்றுசொல்லப்பட்டதாகியும்—நாமமற்று - பெயரில்லாததாகியுமிருக்கின்ற — உயர்ந்தவுணர்வு - மேலானஞானமே—தற்பரமமாமுணர்வே - பிரமஞானமேயாம். எ-று. (இ-ம்) சமதிருஷ்டியானஞானமே திரிஸ்யத்தைக்கெடுப்பதாம்...................................... (௨௰)

(அ-கை.) ஞானமெப்படிப்பட்டதெனின். (கவி) இவையெனுமனைத்துஞ்சிற்கன
மாகியிறப்பிலாப்பிரமமேயென்று, நவையுறுமனமாங்கற்பனையில்லை நாசமும்பிற
வியுமென்னு, மவையெலாம்புவன மூன்றினுமில்லை யறுவகைவிகாரமுமில்லைக்,
கவையறுசமமாங்குறிபெறுமறிவுமாத்திரங்காணநின்றுளதால்...................... *

(இ-ள்.) இவையெனுமனைத்தும்-இவையென்றுசுட்டப்பட்டசகலமும்—சிற்கனமாகி-ஞானாகாரமாகியும்—இறப்பிலா - நித்தியமாகியுமிருக்கின்றது — பிரமமே - பிரமமேயாம்—என்றும் - எப்பொழுதும்—நவையுறுமனமாம் - குற்றமுள்ளமனமாகிய—கற்பனையில்லை-கற்பனையின்றும்—நாசமும்- மரணமும்—பிறவியுமென்னும்-சநநமுமென்றுசொல்லப்பட்ட—அவையெலாம் - அவைகளனைத்தும்—புவனமூன்றினுமில்லை - மூன்றுலோகங்களினுமில்லை—அறுவகைவிகாரமுமில்லை - சட்பாவவிகாரங்களுமில்லை—கவையறுசமமாம் - இரண்டில்லாதபூரணமாகிய—குறிபெறு - அடையாளம்பெற்றிருக்கின்ற — அறிவுமாத்திரம் - சின்மாத்திரமே—காணநின்றுளது - ப்ரத்யக்ஷமாயிருக்கும். எ-று. (இ-ம்) சுசாதிகவிசாதிகசுகதபேதரகிதமான பரிபூரணமேஞானமென்பதாம்...................................... (௨௧)

(அ-கை.) ஆயின்ஞானத்திற்குவேறாகவொன்றுமின்றோவெனின். (கவி) கேவலமாகிக்கே
வலவொளியாய்க்கேடறுசுத்தமாய்விரிவா, யோவலிலறிவுமாத்திரமாகியுறுதுயரொன்று
மற்றாறி, மேவருமிரதமனைத்தினுக்கொத்து விகாரமற்றுளபொருளிடத்தே, தாவருந்
தனதுநினைவையேவிரும்பித்தன்வயத்தெழுந்ததோரறிவு.............................. *

(இ-ள்.) கேவலமாகி - தனிமையாகியும் — கேவலவொளியாய் - தனிப்ரகாசமாகியும்—கேடறு - அழிவற்றதாகியும்—சுத்தமாய் - பரிசுத்தமாகியும்—விரிவாய்- வியாபகமாகியும்—ஓவலில் - பிரிவில்லாத—அறிவுமாத்திரமாகி-ஞானமாத்திரமாகியும்—உறுதுயரொன்றுமற்று-பொருந்துகின்றதுன்பஞ்சற்றுமில்லாததாகியும்—ஆறி - உபசாந்தமாகியும் — மேவருமிரதமனைத்தினுக்கு - பொருந்துதற்கரியவினிமையானவஸ்துக்களனைத்துக்கும்—ஒத்து-கலந்து—விகாரமற்றுள - விகாரமற்றதாகியுமிருக்கின்ற—பொருளிடத்து - ஞானாத்மாவில்—தாவரும்-தாவுதற்கரிய—தனதுநினைவையேவிரும்பி - தனதுசங்கற்பத்தையேயிச்சித்து—தன்வயத்து-தனதுவசத்தில்—ஓரறிவெழுந்தது - ஓரறிவுண்டாயிற்று. எ-று, (இ-ம்) சின்மாத்திரமான பிரமத்தினின்றுந்தனதுஸ்மரணமானவோர்போதமுதித்ததுண்டென்பதாம்...................... (௨௨)

(அ-கை) ஆயினப்போதம்வெளிப்படவில்லையோவெனின் (கவி) செப்பியவறிவுமுடிவில்
சங்கற்பஞ்செய்ததிற்சென்றிடுமிதுதா, னிப்பிரமத்தின்மனமதாமிதனுக்கெண்ணில்சத்தி
களுளவாகுங், கப்பிலாதெங்குநிரந்தரஞ்செய்யங்கடுமையாமிம்மனந்தனிலே, யப்பிலே
தோன்றுந்திரைகள்போற்பேதமாகியவல்லபந்தோன்றும்.............................. *

(இ-ள்) செப்பியவறிவு - சொல்லியஞானமானது—முடிவில்சங்கற்பஞ்செய்து-அளவற்றசங்கற்பத்தைச்செய்து—அதிற்சென்றிடும்-அதிற்செல்லும்—அதுதான் -அவ்வறிவானது—இப்பிரமத்தின்மனமதாம் - இந்தப்பிரமத்தின்மனமேயாம்---இதனுக்கு- இப்பிரமத்துக்கு---எண்ணில்சத்திகளுளவாகும் - அளவற்றசத்திகளுண்டாயிருக்கும்---கப்பிலாது - இரண்டில்லா

மல்---எந்நிரந்தரஞ்செய்யும் - எவ்விடத்திலுஞ்சமமாகச்செய்கின்ற --- கடுமையாமிம்மனந்தனில் - வேகமானவிம்மனத்தில்---அப்பிலேதான்றுந்திரைகள்போல்-சலத்திலுண்டானவலைகளைப்போல --- பேதமாகியவல்லபந்தோன்றும் - நாநாவிதமாகியவல்லபசத்திபுண்டாகும். எ - று. (இ-ம்) போதமானதுமனோரூபமாய்ச்சகலசத்திகளோடுங்கூடிச் சகலத்தையும்பேதப்போலத்தோற்றுவித்ததென்பதாம். .... (௨௩)

(அ-கை.) ஆயின்அப்போதம்பந்தமாகாதோவெனின். (கவி) உள்ளூறுசங்கற்பத்தினாற்றோன்றுமுள்ளமற்றதனினாலொடுங்குந், தள்ளூறுகாற்றாலெழுந்ததீக்கொழுந்துசமிப்பதுங்காற்றினாற்போல, நள்ளூறுபிரமமன்றுநானென்றுநாடுதன்மனத்துறுபந்த, மெள்ளூறுமிடமும் பிரிவிலாப்பொருளே யாமெனுமழுத்தமேவீடாம்.*

(இ-ள்.) உள்ளூறுசங்கற்பத்தினாற்றோன்றும் - உள்ளேபொருந்தப்பட்டசங்கற்பத்தினாலுண்டாகிய—உள்ளம் - (பேதசத்தியான)மனோரூபமானது — அதனினால் - அச்சங்கற்பத்தினால்—தள்ளூறுகாற்றால் - மோதாநின்றவாயுவினால்— எழுந்ததீக்கொழுந்து- உண்டாகியவக்கினிச்சுவாலையானது—காற்றினாற்சமிப்பதுபோல- வாயுவினாலணைவதுபோல-- ஒடுங்கும்-நசிக்கும்—நான் - யான்—நள்ளூறுபிரமம்- மத்தியமாயிருக்கின்றபிரமஸ்வரூபம்—அன்று- அல்லவென்று—நாடுதல் - பார்ப்பதே—மனத்துறுபந்தம்- மனத்திலுள்ளபந்தமாம்—எள்ளூறுமிடமும்- எள்ளளவாகிலும்—பிரிவிலாப்பொருளே -பிரிவில்லாதபிரமஸ்வரூபமே—யாமெனுமழுத்தமேவீடாம் - நாமென்கின்றதிடபாவனையேமுத்தியாம். எ-று. (இ-ம்) போதமானதுநித்தவிடத்தொடுங்கிச் சகலமுந்தன்மயமாய்ச் சிந்திக்கிற்பந்தமாகாதென்பதாம் .... (௨௪)

(அ-கை.) ஆயின்மாயாகாரியமின்றோவெனின். (கவி) மடமையுந்துயருமவயவநிறைந்தவடிவமுமுடையநானென்றே, படர்தருமவற்றிற்கேற்றபன்னடையாற்பாசமும்பந்தமுமுளதாஞ், சடமுறுமிவற்றிலேதுமொன்றல்லேன்றசைநரம்பென்புநீரல்லே, னுடலின்மேலானபரமநானென்னுமுறுதியோர்மாயைசெற்றுணர்ந்தோர்

(இ-ள்.) நான் - யான்—மடமையும் - அஞ்ஞானமும்—துயரும் - துன்பமும்— அவயவநிறைந்த - உறுப்புகணிறைந்த—வடிவமும்- உருவங்களுமாகிய(விவைகளை)—உடையனென்று - உள்ளவனென்று—படர்தரும் - பரவியிருக்கின்ற—அவற்றிற்கேற்ற- அவைகளுக்கிசைந்த—பன்னடையால் - நாநாவிதமாகியநடைகளினால்— பாசமும் - ஆசையும் — பந்தமும்- கட்டுப்படுதலும்—உளதாம் - உண்டாகும்—சடமுறுமிவற்றில் - சடமாகியவிவைகளில் — ஏதுமொன்றல்லேன் - யாதொன்றுநானல்லேன்—தசை - ஊன்களும்— நரம்பு - நரம்புகளும்— என்பு - அஸ்திகளும்—நீர் - புண்ணீரும்—அல்லேன் - நானல்லேன்—உடலின்மேலான- தேகத்தினத்தமாகிய—பரமநானென்னும் - பிரமஸ்வரூபமேயானென்கின்ற—உறுதியோர் - நிச்சயமுடையவர்கள் —மாயைசெற்று - மாயையறுத்து—உணர்ந்தோர் - (தன்னை)யறிந்தவர்கள். எ - று. (இ - ம்) தானேபிரமமென்னு மனுபவத்தினாற் பாஞ்சபூதபௌதிகமனைத்தும் வேறின்றென்பதாம்.. (௨௫)

(அ-கை.) அவ்வனுபவமியாதினாலுண்டாமெனின். (கவி) தானலாதானவுடன்முதற்பொருளிற்றானெனும்பாவனையாய,வூனமாமாயைபுணர்விலோர்விதிக்கவுள்ளதாமுணர்வுளோர்க்கிலதா,மானதநினைத்ததைம்பொறியியற்றுமன்னவர்க்கமைச்சர்போல்விரைவி, லானநன்மதியான்முயற்சியாற்போகத்தாசைவாதனையைவேரறுப்பாய்........................ *

(இ-ள்.) தானலாதான - தானல்லாததாகிய—உடன்முதற்பொருளில் - சரீரமுதலியவஸ்துக்களில்—தானெனும் - நானென்கின்ற—பாவனையாய - பாவனையாகிய—ஊனமாமாயை- ஈனமாகியமாயையை—உணர்விலோர் - அறிவில்லாதவர்கள்—விதிக்க- உண்டென்றுநியமிக்க —உள்ளதாம் - உண்மையாம்— உணர்வுளோர்க்கு - அறிவையுடையவர்களுக்கு — இலதாம்- (அம்மாயை)யில்லாததாம்—மானதநினைத்தது - மனதெண்ணினதை—மன்னவர்க்கமைச்சர்போல் - அரசர்களுக்குமந்திரியைப்போல—விரைவில் - சீக்கிரத்தில்— ஐம்பொறி - பஞ்சேந்திரியங்கள்—இயற்றும் - செய்யும்—ஆன - ஆகின்ற— நன்மதியால் - நல்லறிவினாலும்—முயற்சியால் - நன்முயற்சியினாலும்—போகத்தாசை-போகத்தினவாவென்னும்—வாதனையை - வாசனையை—வேரறுப்பாய் - வேருடன்கெடுப்பாய். எ-று. (இ-ம்) விஷயபோகவிச்சாத்தியாகத்தாற் பிரமானுபவமுண்டாமென்பதாம்.. (௨௬)

(அ-கை.) போகவிச்சையாதினானீங்குமெனின்.(கவி) என்னுடைமைந்தனென்னுடைநிதிநானிவனவனிதுவதுமென்னு, மின்னுடைநிலைமையிந்த்ரசாலத்தால் விளைந்தவாதனைபோங்கு, நன்னுடைநிலையஞ்ஞானமாநிலைபோய்நாசமாமையிற்கருத்தொழிவாய், நின்னுடைவடிவிலவற்றைநின்மயன்றேறநினைவிலார்போல்வருந்துவதென்........................ *

(இ-ள்.) என்னுடைமைந்தர் - என்னுடையபுத்திரனென்றும் — என்னுடைநிதி - என்னுடையதிரவியமென்றும் — நான் - யானென்றும் — இவன் - இவனென்றும் — அவன் - அவனென்றும் — இது - இதுவென்றும் — அதுவென்னும் - அதுவென்றுஞ்சொல்லப்பட்ட — வீங்கியவாதனை - மிகுந்தவாசனையானது — மின் - மின்னலைப்போல — உடை - அழிகின்ற — நிலைமை - நிலைமையுள்ள — இந்த்ரசாலத்து - இந்த்ரசாலத்தைப்போல — ஓங்கும் - வளரும் — நன்னுடைநிலை - நன்மையுள்ளஞாதாவாகி — அஞ்ஞானமாநிலைபோய் - அஞ்ஞானமானகுணத்தைப்போக்கி — நாசமாயையில் - அழிவுள்ளதிரிஸ்யத்தி(லிருக்கும்) — கருத்தொழிவாய் - நினைப்பைவிடுவாய் — நின்னுடை - உன்னுடைய — வடிவில் - ஸ்வரூபமில்லாத — அவற்றை - (புத்திராதியான) வப்மாயாசம்பந்தங்களை — நீயென்று - நீயென் (றெண்ணி) — நினைவிலார்போல் - அஞ்ஞானிகளைப்போல — வருந்துவதென் - வருத்தப்படுவதென்ன. எ-று. (இ-ம்) ஈஷிணாத்ரயங்களை யானெனதென்பது நீங்கில்நிராசையுண்டாமென்பதாம் ...... (௨௭)

(அ-கை.) ஆயின் இத்தேகநாமல்லவோவெனின். (கவி) மூகமாய்ச்சடமாய்ச்சுகாசுகங்களிலேமூழ்கியோர்பயனறவருந்துந், தேகமார்நீயாரகோவகோவீதோர்சித்திரமிருந்தவாகாணு, யேகமாய்மெய்யாயிலங்கியபிரமமெங்குமாயிருக்கவுந்தோன்றாச், சோகமாய்ப்பொய்யாய்விளங்குறாமாயைதோன்றாதிருக்கவுந்தோன்றும் ...... *

(இ-ள்.) மூகமாய் - மூடமாகியும் — சடமாய் - சடமாகியுமிருக்கின்ற — தேகமார் - தேகமென்பதார் — சுகாசுகங்களில் - (அதனிமித்தஞ்) சுகதுக்கங்களில் — மூழ்கி - அமிழ்ந்தி — ஓர்பயனற - ஓர்பிரயோசனமுமில்லாமல் — வருந்தும் - துன்பப்படுகின்ற — நீயார் - நீயென்பதார் — அகோவகோ - ஆச்சரியமாச்சரியம் — ஈதோர்சித்திரம் - இந்தவொருவிசித்திரமானது — இருந்தவாகாணாய் - இருந்தப்ரகாரம்பாராய் — ஏகமாய் - ஒன்றாகியும் — மெய்யாய் - சத்தியமாகியும் — இலங்கிய - ப்ரகாசித்த — பிரமம் - பிரமஸ்வரூபமானது — எங்குமாயிருக்கவும் - எவ்விடத்திலுநிறைந்திருக்கவும் — தோன்றா - தோற்றாமல் — சோகமாய் - துன்பமாகியும் — பொய்யாய் - மித்தையாகியும் — விளங்குறா - விளங்குகின்ற — மாயை - மாயையானது — தோன்றாதிருக்கவும் - உண்டாகாமலிருக்கவும் — தோன்றும் - தோற்றும். எ-று. (இ-ம்) ஆத்மஸ்வரூபமேயாமன்றிபித்தேகமன்றென்பதாம் ...... (௨௮)

(அ-கை) ஆயினிருக்கவேண்டியகிரமமியாதெனின். (கவி) படிகநன்மணிகள்பற்றிபாய்நிறங்கள் பற்றறப்பற்றாறும்படிபோன், முடிவறுதொழிலிற் பின்விருப்பின்றிமுடித்தியென்றருந்தவவசிட்ட, னெடிதுரைத்தலு மேபரத்துவகேளாய் நிறைகுணத்திராகவன்கேட்டு, மடியறுவிதயபங்கயமலர்ந்துவசிட்டனைநோக்கியீதுரைத்தான்.

(இ-ள்.) படிகநன்மணிகள் - நல்லபடிகங்கள் — பற்றிபாய்நிறங்கள் - பற்றிபாய்ந்திருக்கின்ற(பஞ்ச)வன்னங்களை — பற்றற - பற்றாமல் — பற்றாறும்படிபோல் - பற்றியிருக்குந்தன்மையைப்போல — முடிவறு - அளவில்லாத — தொழில் - செய்கைகளிலிருந்தும் — பின்விருப்பின்றி - பின் (பதில்) விழைவின்றி — முடித்தியென்று - (அத்தொழிலை) நடத்தென்று — அருந்தவவசிட்டன் - அரியதவமுள்ளவசிஷ்டர் — நெடிதுரைத்தலும் - மிகவுஞ்சொல்லவும் — பரத்துவ - பரத்துவாசரே — கேளாய் - கேட்பாய் — நிறைகுணத்து - நிறைந்த(சாந்த)குணத்தையுடைய — இராகவன்கேட்டு - இராமன்கேட்டு — மடியறு - குற்றமற்ற — இதயபங்கமலர்ந்து - இதயதாமரைவிகசிதமாய் — வசிட்டனைநோக்கி - வசிஷ்டரிஷியைப்பார்த்து — ஈதுரைத்தான் - இதைச்சொன்னார். எ-று. (இ-ம்) ப்ரத்தியகாத்மஸ்வரூபமா யொன்றிலும்பற்றற்றுசொச்சமாயிருக்கவேண்டுமென்பதாம் ...... (௨௯)

(அ-கை.) இல்லாதமாயைவருத்துவதும்அதனாலவணன்றன்புற்றதுமியாதென்கின்ற,சங்கைகளிரண்டினுக்குமுத்தரங்கூறல். (கவி) அற்புதமீதொன்றிருந்தவாறென்னேயம்புயஞாளநூலாலே, வெற்பினம்பிணிப்புண்டறநெரிவதுபோல் வெறும்பொய்யாமாயையாலுலகம், பற்பலதுயரம்பயில்வதாந்திரணம்பருவயிரத்தின்வன்புறல்போ, லுற்பவமிலங்குமதனினாலேற்குமுறுதியையென்றுமீட்டுரைப்பான் ...... *

(இ-ள்.) அற்புதமீதொன்று - ஈதோரதிசயம் — இருந்தவாறென்னே - இருந்தப்ரகாரமென்ன — அம்புயஞாளநூலால் - தாமரைத்தண்டினூலினால் — வெற்பினம் - மலைக்கூட்டங்கள் — பிணிப்புண்டு - கட்டுப்பட்டு — அறநெரிவதுபோல் - மிகவுநெரிபடுவதுபோல — வெறும்பொய்யாம் - முழுதுமித்தையாகிய — மாயையால் - மாயையினால் — உலகம் - பிரபஞ்சமானது — பற்பலதுயரம் - நாநாவிதமாகியதுன்பத்தை — பயில்வதாம் - அனுபவிப்பதாம் — திரணம் - துரும்பானது — பரு - பருத்த — வயிரத்தின் - வயிரத்தினும் — வன்புறல்போல் - வலிமையையடைவதுபோல — உற்பவம் - (சக) சிருஷ்டியானது — இலங்கும் - (மித்தையாய்) விளங்கும் —

அதனினால் - அம்மாயையினால்—உறுதியை - திடத்தை—எற்றும் - பொருந்தும் — என்று-என்றுசொல்லி—மீட்டுரைப்பான் - திரும்பவுமிராமர்சொல்லுவார். எ-று .... (௬௰)

(அ-கை.) இ-து. (கவி) ஈதுமோரையமென்மனத்துளதாமியம்பியலவணனுமன்
னன், மாதுயரடைந்த தென்னெனக்கேட்ப வசிட்டமாமுனியதற் குரைப்பான்,
தீதகன்மனத்தாலியற்றலாலந்தச்செயல்பயனுடல்புசித்திலதா, லோதுறுமந்தமன்
னனோர்நாளினுபவனத்தொருவனாயிருந்து.. *

(இ-ள்.) ஈதும் - இதுவும்—ஓரையம் - (இன்ன) தொருசந்தேகம் — என்மனத்துளது - என்மனத்திலுண்டாயிருக்கின்றது—இயம்பியலவணனுமன்னன் - முன்சொன்னலவணவரசன்—மாதுயரடைந்தது - பெரிய துன்பமடைந்தது—என்னெனக்கேட்ப - என்னகாரணமென்றிராமன்கேட்க—அதற்கு - அக்கேள்விக்கு—வசிட்டமாமுனி - வசிஷ்டமாமுனியானவர்—உரைப்பான் - சொல்லுவார்—தீதகன்மனத்தால் - குற்றமற்றமனதினால்— இயற்றலால்-செய்ததினால்—அந்தச்செயல்பயன் - அத்தொழிலின்பிரயோசனத்தை — உடல்புசித்திலது-தேகமனுபவிக்கவில்லை—ஓதுறும் - சொல்லப்பட்ட—அந்தமன்னன் - அவ்வரசன் —ஓர்நாளில் - ஒருதினத்தில்—உபவனத்து - சிங்காரவனத்தில் — ஒருவனாயிருந்து - தனியனாயிருந்துக்கொண்டு எ-று .... (௬௧)

(அ-கை.) இ-து. (கவி) இருதயத்துணர்வான் பிதாமகன்குருவா மிராசசூயஞ்செய்
வோமென்று, கருதியமனத்தான்மகத்தினுக்குரியகலப்பைகளனைத்துமுண்டாக்கிச்,
சுருதிநூல்வழியே சாலையிற்புகுந்து துறவரைவரித்தருச்சித்து, வருநிரொன்றிமை
யோர்களைமறைமொழியால் வரவழைத்தாரழல் கிளப்பி .... *

(இ-ள்.) இருதயத்துணர்வான் - மனதிற்சிந்திப்பான்—பிதாமகன் - நமதுபாட்டனாகியவரிச்சந்திரன்(தேகத்தோடுஞ்செய்த) —குருவாமிராசசூயம் - பெருமையானவிராசசூயயாகத்தை—செய்வோமென்று - (நாமனதினாற்)செய்வோமென்று—கருதியமனத்தால் - நினைத்தமனதினால்—மகத்தினுக்குரிய - யாகத்துக்குரித்தாகிய — கலப்பைகள் - உழுகின்றகலப்பைகளையும்—அனைத்தும் - சகலதிரவியங்களையும்— உண்டாக்கி - சங்கற்பித்து — சுருதிநூல்வழி-வேதசாஸ்திரமார்க்கமாக—சாலையிற்புகுந்து - யாகசாலையிற்போய்—துறவரைவரித்து - முனிகளைநியமித்து—அருச்சித்து - பூசித்து—வருநிரொன்று-வாருங்களென்று—இமையோர்களை-தேவர்க்களை—மறைமொழியால் - வேதமந்திரங்களினால்—வரவழைத்து - வரச்செய்து—ஆரழல்கிளப்பி - மிகவுமக்கினியைவளர்த்தி. எ-று .... (௬௨)

(அ-கை.) இ-து. (கவி) கடவுளர்முனிவர் மறையவர்பூசை கடைப்பிடித்தாரொரு
வருடந், தொடர்புறநடத்தித்தன்பொருண்முழுதுந் தொலைவுறத்தானமாய்வழங்கி,
திடமுறுமனத்தான் முடித்தபின்பகலுஞ் சென்றதுவிழித்தனனிதனு, லிடவியமன
மேதுன்பவின்பங்க ளெய்துறப்புசிப்பதென் றுணர்வாய்.... .... *

(இ-ள்.) கடவுளர் - தேவர்களுக்கும்—முனிவர் - தபசிகளுக்கும்—மறையவர் - அந்தணர்களுக்கும்—பூசை - ஆராதனைகளை—கடைப்பிடித்து - உறுதியாக—ஆர்- நிறைந்த—ஒருவருடம் - ஓர்வருஷம்—தொடர்புறநடத்தி - தொடர்ச்சியாகநடப்பித்து—தன்பொருண்முழுதும் - தனதுதிரவியங்களையெல்லாம்—தொலைவுற - தொலைய —தானமாய்வழங்கி - நீதியாகக்கொடுத்து—திடமுறுமனத்தால் - திரமுள்ளமனதினால்— முடித்தபின் - யாகத்தைநிறைவேற்றினபின்பு—பகலுஞ்சென்றது - பகற்பொழுதுநீங்கிற்று— விழித்தனன் - (அரச)னகமும்விட்டுவிழித்தான்—இதனால் - இக்காரணத்தினால்— இடவியமனமே - (ஒன்றி) லொதுங்கியமனதே—துன்பவின்பங்கள் - சுகதுக்கங்கள்—எய்துறப்புசிப்ப தென்றுணர்வாய் - அடையும்படியனுபவிப்பதென்றறிவாய். எ-று. (இ-சு-க-ம்) சுகதுக்கமனதுக்கேயன்றித் தேகத்துக்கின்றென்பதையறிவித்ததாம் .... (௬௩)

(அ-கை) சித்தன் றுன்பங் கொடுத்ததென்னெனின். (கவி) சித்தனதியல்பு செப்பிடக்கே
ண்மோ திருந்தியலவணன்முன்னெய்தி, வித்தையான்மயக்கஞ் செய்துளசித்தன் மீண்டு
போயொளித்தனனங்கே, யித்தனைசெயலுங் கண்டுடனிருந்த வெம்மையிற்றன்னெனவி
னவ, வத்திறல்வேந்தியாவருங்கேட்ப வகத்துணர்ந்துரைத்தனமனைத்தும்.............. *

(இ-ள்.) சித்தனதியல்பு - சாம்பரிகனுடையகுணத்தை—செப்பிடக்கேண்மோ - (யான்) சொல்லக்கேட்பாய்—திருந்திய - தெளிந்த—லவணன்முன்னெய்தி-லவணவரசனரசசபையின்முன்னடைந்து —வித்தையால் - (இந்திரசால)வித்தையினால் — மயக்கஞ்செய்துள - மயக்கத்தைச்செய்திருக்கின்ற — சித்தன் - சாம்பரிகனானவன் — மீண்டுபோய் - திரும்பிச்சென்று—

ஒளித்தனன் - மறைந்தான்—ஆங்கு - அவ்விடத்தில் — இத்தனைசெயலுங்கண்டு - இவ்வளவுநடையையும்பார்த்து—உடனிருந்தவெம்மை-கூடவிருந்தநம்மை—ஈதென்னெனவினவ-இதென்னகாரணமென்றுகேட்க — அத்திறல்வேந்தும் - அவ்வல்லமையுடையவரசனும் — இயாவருங்கேட்ப - மந்திரிமுதலியசகலருங்கேட்க---அகத்துணர்ந்து - உள்ளத்திற்(றிரிகாலத்தையுந்)தெரிந்துக்கொண்டு--- அனைத்துமுரைத்தனம் - யாவையுஞ்சொன்னோம். எ-று .... (௫௪)

(அ - கை.) இ - து. (கவி.) ஈங்கிதுபுகலவிராகவகேட்டி யிராசசூயத்திலேலவணன்,
பாங்குறுமனத்தாற்றொகுத்தவாயாரும்பன்னிருவருடம்வன்றுயரிற், றீங்குறுவருத்
தமுறுதலான்மகவான்சேணினின்றொருவனையேவ, வாங்கவன்சித்தனாகியேலவணற்
கருந்துயரளித்துமீண்டகன்றான்.... .... *

(இ-ள்.) ஈங்கிதுபுகல - இவ்விடத்திற்றுன்பம் (வந்தகாரணத்தைச்) சொல்ல— இராகவகேட்டி - இராமாகேள் —இராசசூயத்தில் -இராசசூயயாகத்(தைச்செய்து) —யாரும்-யாவரும் —பன்னிருவருடம் - பன்னிரண்டுவருஷம்—வன்றுயரில் - வலியதுன்பத்தில்—தீங்குறுவருத்தமுறுதலால் - தீயவருத்தமடைதலால்—லவணன் - லவணனும்—பாங்குறுமனத்தால் - (தனக்)குரித்தானமனதினால்—தொகுத்தவா - (இராசசூயங்)கூட்டிச்செய்தபடிக்கு—மகவான் - இந்திரன்—சேணினின்று - (துன்பங்கொடுக்குநிமித்தம்) விண்ணுலகத்திலின்று — ஒருவனையேவ - ஒருத்தனையனுப்ப—அவன் - அத்தேவதூதன்—சித்தனாகி - சித்தனாய் (வந்து) —லவணற்கு - (யாகஞ்செய்த)லவணவரசனுக்கு—அருந்துயரளித்து - அரியதுன்பத்தைக்கொடுத்து—மீண்டகன்றான் - திரும்பிப்போயினான். எ-று. (இ-உ-க-ம்) லவணன்றுன்பமடையு நிமித்தம்வந்தகாரணமுரைத்ததாம், இராசசூயஞ்செய்தவர்க்குத் துன்பம்வருமென்பதற்கு ப்ரமாணமரிச்சந்திரன் றருமபுத்திரர் முதலியோரெனக்கொள்க .... (௫௫)

(அ - கை.) முதற்சங்கைக்குத்தரந்தோன்ற ஞானஞ்ஞானபூமிகளைத்தொகுத்துக்
கூறல். (கவி) மற்றுமொன்றுரைக்கவள்ளலேகேட்பாய்மடமையாம்பூமியேழ்பத
மா, முற்றுளஞானபூமியேழ்பதமா மொழிந்தவிப் பதங்கடம்மிற்றும், பற்றுள
வாகுமொன்றொடொன்றளாவிப்பயில்வனபதங்கண்மட்டிலவா, மற்றமில்சொருப
நிலைபெறல்வீடாமதினழுவுறுதனானெனலே .... *

(இ-ள்.) மற்றுமொன்றுரைக்க- இன்னமொன்றுசொல்ல—வள்ளலேகேட்பாய்-ஸ்ரீராமாநீகேட்பாய்—மடமையாம்பூமி - அஞ்ஞானபூமி—ஏழ்பதமாம் - ஏழுமார்க்கமாம்—முற்றுளஞானபூமி - முடிவாகியஞானபூமியானது —ஏழ்பதமாம்-ஏழுமார்க்கமாம்— மொழிந்த - சொல்லிய—இப்பதங்கள் - (இவ்விரண்டு) மார்க்கங்களும்—தம்மிற்றும்பற்றுளவாகும்- (அவற்றி)லொன்றுக்கொன்றுசம்பந்தமாம் — ஒன்றொடொன்றளாவி - ஒன்றோடொன்றுவியாபித்து—பயில்வனபதங்கள் - பொருந்துவனவாகியமார்க்கங்களானவை—மட்டிலவாம் - அளவில்லனவாம்—அற்றமில் - ப்ரத்யக்ஷமாகிய—சொருபநிலைபெறல்- ஸ்வரூபநிச்சயத்தைப்பெறுவதே—வீடாம் - மோக்ஷமாம்—அதினழுவுறுதல் - அச்சொரூபத்தைவிட்டுநழுவுதல் — நானெனல் - (தேகாதியை) நானென்கின்ற (பந்தமாம்) எ-று. (இ-ம்) ஆத்மவிபகாரம்ஞானபூமியென்றும் அநாத்மவிபகாரமஞ்ஞானபூமியென்றுமறிவிக்கப்பட்டதாம்........ .. .. (௫௬)

(அ-கை.) ஆத்மாவாயிருத்தலையுமநாத்மாவாதலையுமறிவித்தல். (கவி) அடக்கமாயுரைத்
தேமஃதறிந்தவர்க்குமறியலாதவர்க்குநற்குறிக, டொடக்கமில்சன்மாத்திரமதாமறிவின்
சொரூபநின்றசைவிலாதவரோ, விடற்கருங்காமமுப்பகைகடந்தோர்மெய்யறிவிலார்கட
ப்பரியோர், நுடக்குறுகாட்சிவிதத்தில்வீழறிவேநோக்கருஞ்சொருபத்தினழுவல்.. ... *

(இ-ள்.) அடக்கமாயுரைத்தேம் - (இப்பூமிகளைச்) சுருக்கமாகச்சொல்லினம்—அஃதறிந்தவர்க்கும் - அவ்வஸ்துவையுணர்ந்தவர்களுக்கும் — அறிவிலாதவர்க்கும் - உணராதவர்களுக்கும்—நற்குறிகள் - நல்லவடையாளங்களாவன—தொடக்கமில்- அநாதியான—சன்மாத்திரமதாம் - சத்தாமாத்திரமாயுள்ள—அறிவின்சொரூபநின்று - ஞானஸ்வரூபத்திலிருந்து—அசைவிலாதவரோ - சலனமற்றவர்களே—விடற்கரும் - விடுதற்கரிய—காமமுப்பகை- காமவெகுளிமயக்கமென்னுமுக்குற்றங்களையும்—கடந்தோர் - செயித்தவர்களாம்—மெய்யறிவிலார்- உண்மைஞானமில்லாதவர்கள்—கடப்பரியோர் -(காமமுதலியவைகளைச்) செயிக்காதவர்களாம்—நுடக்குறு-சலனமுள்ள—காட்சிவிதத்தில்-தேகேந்திரியங்களில்—வீழறிவே-செல்கின்றஞானமே—நோக்கரும்-பார்த்தற்கரிய—சொருபத்தினழுவல்-ஸ்வரூபத்தினின்றுநீங்குதலாம்.எ-று.

(அ-கை.) இ-து. (கவி) சொருபம்விட்டகலன்மோகமாம்வேறுசொல்விடமுன்பு
பின்பில்லை, யொருபொருளினை வையொழித்துமேலப்பாலொருபொருணினைவுறி

லந்த, விருபொருணடுவுணினைவறவிருக்குமிது சொருபத்தியல்பிதுதான், மருவு
கற்பனைமாண்டசைவில்கற்போலாய்வருநனுச்சுழுத்திதீர்வடிவாம்.................. *

(இ-ள்.) சொருபம்விட்டகல் - ஆத்மஸ்வரூபத்தைவிட்டுநீங்கு (மதிவே) — மோகமாம்-மோகமென்றுசொல்லப்படும்—வேறுசொல்லிட-வேறே (மோகமுண்டென்று)சொல்ல—முன்பபின்பில்லை - முன்னும்பின்னுமில்லையாம்—ஒருபொருள் - ஒருவிஷயவஸ்துவின்— நினைவையொழித்து - நினைவைவிட்டு—மேலப்பாலொருபொருணினைவுறில் - மேலொருபுறத்தி(லிருக்கின்ற)விஷயவஸ்துவைநினைக்குமிடத்தில்—அந்தவிருபொருணடுவும் - அவ்விரண்டுவஸ்துவின் மத்தியிலும்—நினைவறவிருக்குமிது - சங்கற்பரகிதமாயிருக்கின்றவிந்தஞானமே—சொருபத்தியல்பு - ஸ்வரூபத்தின்றன்மையாம்—இதுதான் - இந்தஞானம்—மருவுகற்பனைமாண்டு-பொருந்தியகற்பனாரகிதமாய்—அசைவில்கற்போலாய்- சலனமில்லாதபாடாணத்துக்கொப்பாகி—வருநனு - வருகின்றநனவிலுள்ள (விருத்திஞானமும்) — சுழுத்தி - சுழுத்தியவத்தையிலுள்ள (வஞ்ஞானமும்)—தீர்வடிவாம் - தீர்ந்தஸ்வரூபமாம். எ-று. (இ-உ-க-ம்) ஆத்மாநாத்மாவிலக்கணமறிவித்ததாம்.. (௯அ)

(அ-கை.) பிரமநிச்சயங்கூறி யஞ்ஞானபூமியி னுமங்களைப் பகுத்துரைத்தல். (கவி)
நானெனும்பிரிவும்போதமுமற்று நல்லறிவாயசையாத,மானதநிலையேசொருபமா
முன்சொன் மடமையாம்புவிபதங்கேட்பா, யீனமாம்விந்துநனவுமேனனவுமியன்
றமாநனவுமந்நனவி,லானதோர்கனவுங்கனவுமிக்கனவிலடர்நனுவுஞ்சுழுத்தியுமே.

(இ-ள்.) நானெனும்பிரிவும் - (தேக) நானென்கின்றபிரிவும்—போதமுமற்று-(சீவேஸ்வர) பேதஞானமுநசித்து—நல்லறிவாய்- சுகபோதமாய்—அசையாத-சலியாத—மானதநிலையே - மனோநிச்சயமே—சொருபமாம் - (ஆத்மஞான)ஸ்வரூபமாகும்—முன்சொல் - முன்னுரைத்த—மடமையாம் - அஞ்ஞானமாகிய—புவிபதங்கேட்பாய் - பூமிகளைக்கேட்பாய் — ஈனமாம் - இழிவாகிய—விந்துநனவும் - விந்துசாக்கிரமும்— மேனனவும் - மேற்சாக்கிரமும்—இயன்றமாநனவும் - பொருந்தியமகாசாக்கிரமும்—அந்நனவிலானதோர்கனவும் - அதிற்சாக்கிரசொற்பனமும்—கனவும் - சொற்பனமும்—இக்கனவிலடர்நனுவும் - இச்சொற்பனசாக்கிரமும்—சுழுத்தியும் - சுழுத்தியுமென்றுசொல்லப்படும். எ-று. (இ-ம்) வெளிப்படை...... (௯௯)

(அ-கை.) அதன்முதற்பூமியினிலக்கணமறிவித்தல். (கவி) இத்திறமேழுமேகமாய்
நெருக்குற் றிவைபலபெயர்களையெய்துஞ், சித்திலேநின்றோரறிவுபேறின்றிச்செறி
மலமின்றிமேல்வந்து, வத்தியாநிற்குஞ் சித்தசீவாதி வருபெயர்செயல்களுக் கிட
மாய், வித்துரூபமதாய்நின்றிடுமதனால் விதைநனவாமுதற்பதமே.................. *

(இ-ள்.) இத்திறமேழும் - இத்தன்மையையுடையவஞ்ஞானபூமிகளேழும்— ஏகமாய்நெருக்குற்று - ஒன்றோடொன்றுகலந்து—இவைபலபெயர்களையெய்தும் - இப்பூமிகளநேகநாமங்களையடையும்—சித்திலேநின்று - ஆத்மஞானத்திலிருந்து—ஓரறிவு - ஒருஞானமானது—பெயரின்றி - நாமமில்லாததாகியும்—செறிமலமின்றி- நெருங்கியகளங்கமில்லாததாகியும்—மேல்வந்து - இனியுண்டாகிவந்து—வத்தியாநிற்கும் - விருத்தியடையாநின்ற — சித்தசீவாதி-மனதுசீவன்முதலாக—வருபெயர்செயல்களுக்கு- வருகின்றநாமக்கிரியைகளுக்கு—இடமாய்-ஆதாரமாகியும்—வித்துரூபமதாய் - பீசரூபமாகியும்—நின்றிடுமதனால் - நிற்கின்றவதனால்—முதற்பதம் - முதற்பூமியானது—விதைநனவாம் - விந்துசாக்கிரமாம். எ-று. (இ-ம்) பிரமத்தினுமரூபரகிதமா யுண்டானவறிவேசகல சிருஷ்டிக்குமாதாரமாகையா லது விந்துநனவென நாமமிடப் பட்டதாம்.. (௱)

(அ-கை.) இரண்டாம்பூமி மூன்றாம்பூமியி னிலக்கணங்கூறல். (கவி) இதுவறிவுக்கு
முதலவத்தையதா மிதத்துறப்பிறந்தபின்னிவனு, னிதுமெனதெனப்பண் டிலாமை
யானெய்தா யெழுந்துளவறுதியேநனுவா, மிதுதனையொழிய விவனவனேயிது
வதுமென்னதென்றெண்ணு, மிதுமுதற்பிறப்பிற் றொடர்ச்சியாய்ப்பருக்கு மிந்நி
ச்சயம்பெருநனுவாம்.. *

(இ-ள்.) இது - இவ்விந்துசாக்கிரமானது — அறிவுக்கு - பிரமஞானத்துக்கு—முதலவத்தையதாம் - முதன்மையானவவத்தையாம்—இதத்துறப்பிறந்தபின் - உரிமையாகச் (சீவ)னுண்டானபின்பு—இவனுன் - இவனுமென்றும்—இதுமெனதென- இதென்னுடையதென்றும்—பண்டிலாமை - முன்னில்லாததான—நேயத்தாய் - (இப்பொழு)தற்பமாக— எழுந்துள-உண்டாயிருக்கின்ற—அறுதியே - நிச்சயமே—நனுவாம் - சாக்கிரமாம்— இதுதனையொழிய-இதையன்றி—இவனவனுன் - இவனுமென்று மவனுமென்றும் — இதுவது மென்னதென் று-

இதுவெனதென்று மதுவென்னதென்றும்—என்றும் - சிந்திக்கப்பட்ட—இதுமுதல்-இது முதலாகிய—பிறப்பில் - சநநாந்தரங்களில் — தொடர்ச்சியாய் - தொந்தமாக — பருக்கும்- பெருக்கின்ற —இந்தநிச்சயம் - இந்நிச்சயமானது—பெருநனவாம்- மகாசாக்கிரமாம். எ-று. (இ-ம்) பொதுவாயுண்டானவறிவுக்கு முன்னில்லாதபேதஞ் சூட்சுமமாயுண்டான விடமேசாக்கிரமென்றும், அவ்வாசனைவளர்ந்தவிடமே மகாசாக்கிரமென்றுங் கூறப்பட்டதாம்........(சக)

(அ-கை.) நான்காம்பூமியி னிலக்கணங்கூறல். (கலி) அறிந்துளதெனினு மறியலா
தெனினு மழுந்துறத்தானதுவாகிச், செறிந்துளநனவிற்சித்தராச்சியமேசெய்வது
நனாக்கனவாகு,மெறிந்தகானலினீர்சுத்திகைவெள்ளியிருமதியிவைமுதற்பலவாய்ப்;
பிறிந்தபேதங்கணனவிலேபழகும் பெற்றியாற்கனவுபல்விதமாம்........*

(இ-ள்.) அறிந்துளதெனினும் - (முன்வாதனையினா) லறிந்ததானாலும்—அறியலாதெனினும்-அறியாததானாலும்—அழுந்துற - (தோற்றினதி)லழுந்த—தானதுவாகி- தானந்தமயமாகி—செறிந்துளநனவில் - நெருங்கியசாக்கிரத்தில்—சித்தராச்சியமேசெய்வது-மனோராச்சியஞ்செய்வது—நனாக்கனவாகும் - சாக்கிரசொற்பனமாகும்—எறிந்த - (அலைகள்) வீசாநின்ற—கானலினீர் - கானலிற்சலமும்—சுத்திகைவெள்ளி - இளிஞ்சிலில்ரசிதமும்—இருமதி- இரண்டுசந்திரனுமாகிய—இவைமுதல் - இவைகள்முதலாக—பலவாய் - நாநாவிதங்களாக—பிரிந்தபேதங்கள் - நீங்கினவேற்றுமைகளை—நனவிலேபழகும் - சாக்கிரத்திலனுபவிக்கின்ற—பெற்றியால் - தன்மையால்—கனவுபல்விதமாம் - சொற்பனம்நாநாவகைப்படும், எ-று. (இ-ம்) சாக்கிரத்தின்முன்பார்த்ததையும்பாராததையுங் கற்பித்துபயனின்றிவீணாகமனோராச்சியஞ்செய்வதே, சாக்கிரசொற்பனமென்பதாம்........(சஉ)

(அ-கை.) ஐந்தாம்பூமியாறாம் பூமிகளினிலக்கணங்கூறல். (கலி) அற்பகாலத்திலநே
கமாஞ்செயல்கண்டறிந்தனமெனுங்கனவழிந்து,முற்படுசெயலைநினைவதுகனவாமு
ந்துகண்டதனைநாளகன்று, பிற்படக்காணும்பொருள்களைமறந்துபெரும்பொழுது
ணர்வுறநோக்குஞ்,சொற்பனநனவுபோனனவுக்கேதோன்றுமிச்செயல்கனாநனவே

(இ-ள்.) அற்பகாலத்தில்- க்ஷணகாலத்தில்—அநேகமாஞ்செயல்-அளவில்லாததொழில்களை—கண்டறிந்தனமெனும் - பார்த்துணர்ந்தோமென்னும்— கனவழிந்து - சொற்பனநீங்கி—முற்படுசெயலை- முன்னடந்தசங்கதிகளை—நினைவதுகனவாம்-சிந்திப்பதுசொற்பனமாம்—முந்துகண்டதனை - முன்பார்த்தபொருளை—நாளகன்று - (அநேக) நாள்கழிந்து—பிற்படக்காணும் - பின்புபார்க்கின்ற—பொருள்களைமறந்து - (அவ்) வஸ்துக்களைமறந்தவனாய்— பெரும்பொழுது - வெகுநேரம்—உணர்வுறநோக்கும்- அறிவுவரப்பார்க்கின்ற—சொற்பனம்-சொற்பனமானது—நனவுபோல - சாக்கிரத்தைப்போல—நனவுக்கே- சாக்கிரத்திற்கே—தோன்றும்-தோற்றுகின்ற—இச்செயல்- இத்தொழிலே—கனாநனவு-சொற்பனசாக்கிரம். எ-று. (இ-ம்) நனவிற்கற்பித்தவடிவைக் காண்பதுசொற்பனமென்றும், மறந்ததைநினைப்பதேசொற்பனசாக்கிரமென்றுஞ் சொன்னதாம்........(சங)

(அ-கை.) எழாம்பூமியினிலக்கணங்கூறல். (கலி) அறுவகையவத்தையகற்றியசீவ
னடைந்துளவவத்தையினியற்கை, யுறுசடமாகிமேல்வருந்துயர்கூர் வுணர்வுளதா
மிதுசுழுத்தி, இறுபுவனங்களிதனிடையிருளிற் றொலைவுறுமிப்பதமேழும், பெறு
வனபேதமொன்றுநூறாகும் பேதைமையவத்தையிவ்வேழும்........*

(இ-ள்.) அறுவகையவத்தை - (இவ்) வாறுவிதமாகியவவத்தைகளை— அகற்றியசீவன்- நீக்கியசீவனானவன்—அடைந்துள - பெற்றிருக்கின்ற—அவத்தையினியற்கை-அவத்தைகளின்றன்மையானது—உறுசடமாகி- பொருந்துகின்றசடத்துவமாகி—மேல்வருந்துயர்கூர் - மேலுண்டாகின்றதுக்கமிகுந்த—உணர்வுளதாமிது-அறிவுள்ளதானவிதுவே—சுழுத்தி- சுழுத்தியாம்—இறுபுவனங்கள் - நெருங்கியவுலகங்கள்—இதனிடையிருளில் - இவ்வவத்தைகளி லுண்டான மாயாந்தகாரத்தில்— தொலைவுறும் - (உண்டாகி)நசிக்கும் — இப்பதமேழும் - இவ்வஞ்ஞான பூமிகளேழும்—பெறுவனபேதம் - அடையப்படுவன வாக்கியபேதங்கள் --- ஒன்றுநூறாகும்- ஒன்றுஅளவில்லனவாகும்—இவ்வேழும் - இந்தவேழும்—பேதைமையவத்தை - அஞ்ஞானபூமிகள். எ-று. (இ-ம்.) ஆத்மப்ரதிபிம்பமா யெதிரிட்டவிடயத்தைச் சுகமென்றறி லழுந்திப்போவதேசுழுத்தி யென்பதாம்........(சச)

(அ-கை)மாயாவிசித்திரத்தையறிவிக்குநிமித்தமஞ்ஞானபூமியைச்சொல்லியதைநீ
க்கிச்சித்தையடையும்பொருட்டுஞானபூமியைப்பகுத்துக்கூறல்.வேறு.(கலி)ஞான
பூமியைமுடிவிற்பேதமாகநவிலுவர்வாதியரவற்றினமக்குநல்ல, தானதிவையிவை
யறிதன்ஞானமாகுமறிந்தவிவற்றந்தமேயழிவில்வீடா, மானமுறுசுபம்விரும்பல்

விசாரமெய் தன்மனஞ்சிறுகறுண்மையிலேமன்னிநிற்ற, லீனமறுசங்கற்பமறல்ப
தார்த்தமெண்ணமறுத்திடறுரியமிவையேழாகும் .... ✻

(இ-ள்.) ஞானபூமியை - ஞானபூமிகளை—முடிவில் - அளவில்லாத—பேதமாக - பேதங்களாக—வாதிபர் - வாதஞ்செய்பவர்கள்—நவிலுவர் - சொல்லுவார்கள்—அவற்றில்-அவைகளில்—இவை - இப்படிசொல்லப்படுபவை — நமக்குநல்லநாம் - நமக்கிஷ்டமுள்ளவைநாம்—இவையறிதல் - இந்தஞானபூமியின்ஸ்வரூபத்தையுணர்தல் — ஞானமாகும் - (ஆத்ம) ஞானமாம்—அறிந்தவிவற்று - அறிந்தவிவைகளின்—அந்தமே - முடிவே—அறிவில்வீடாம்-அறிவற்றநிருவாணமாம்—மானமுறு - பிரமாணமுள்ள—சுபம்விரும்பல்- சுபேச்சையென்றும்—எய்தல் - அடைதலாகிய—விசாரம் - விசாரணையென்றும்—மனஞ்சிறுகல்- தனுமானசியென்றும்—உண்மையிலேமன்னிநிற்றல் - சத்துவாபத்தியென்றும்—ஈனமறுஞ்சங்கற்பமறல்-இழிவற்றஅசம்சத்தியென்றும் — பதார்த்தமெண்ணமறுத்திடல் - பதார்த்தபாவனையென்றும்—துரியம் - துரியமென்றும்—இவையேழாகும் - இந்தஞானபூமிகளேழுவகைப்படும். எ - று. (இ-ம்) வெளிப்படை ....(௬௫)

(அ-கை.) முதற்பூமியிரண்டாம்பூமிகளினிலக்கணங்கூறல். (கவி) இவையறிந்தோர்
மோகமெனுமளற்றில்வீழாரிவற்றியலாமுத்திவரிலிடர்மீண்டில்லை, நவையுறுமோ
கத்தொடுநாமடைவதென்னேநல்லோரானன்னூலானன்றுஞானச், சுவைபெறுது
நிராசையினாலென்றுநாடல்சுபம்விரும்பலாகுமிந்தச்சுபேச்சைமுற்றி, நவையறு
நல்லோரியற்கையாசாரங்கள்கைவருதல்விசாரமாக்கருதல்வேண்டும்...... .... ✻

(இ-ள்.) இவையறிந்தோர்- இந்தஞானபூமிகளையுணர்ந்தவர்கள்—மோகமெனும்-மயக்கமென்கின்ற—அளற்றில்வீழார் - சேற்றிலழுந்தார்கள்—இவற்றியலாமுத்திவரில்-இவைகளின்குணமாகியமோக்ஷம்வருமானால்—இடர்மீண்டில்லை - துன்பமானதினியில்லை — நவையுறு மோகத்தொடு - குற்றம்பொருந்தியமோகத்துடன்—நாமடைவதென்னே - யாம்பெறவேண்டியதென்ன—நல்லோரால் - பிரமவித்துக்களாலும்—நன்னூலால்- ஆத்மஞானசாஸ்திரங்களினாலும்—நன்றுஞானச்சுவை - அனுபவஞானவிரசத்தை—பெறுதும்- அடைவோமென்று—நிராசையினால்- வயிராக்கியத்தினால்—என்றுநாடல்- எப்போதுநாடுகின்றவிருப்பமே —சுபம்விரும்பலாகும்- சுபேச்சையாம்—இந்தச்சுபேச்சைமுற்றி- இச்சுபவிருப்பமுதிர்ந்து—நவையறு - இரண்டில்லாத—நல்லோரியற்கை - சத்துக்களினதுகுணங்களும்—ஆசாரங்கள்- (ஆத்)மானுசந்தானங்களும்—கைவருதல் - கைவசமாகுதலே—விசாரமாய் - விசாரணையாக— கருதல்வேண்டும் - நினைக்கவேண்டும். எ-று. (இ-ம்) எப்போதும்பந்தத்தைக்கெடுத்து முத்தியையடையவிரும்புவதே சுபேச்சையென்றும் அஃதடையுநிமித்த மாத்மாநாத்மவிசாரமேவிசாரணையென்றுஞ்சொல்லப்பட்டதாம் ... .(௬௬)

(அ-கை.) மூன்றாம்பூமி நான்காம்பூமி ஐந்தாம்பூமிகளினிலக்கணங்கூறல். (கவி)
இனையசுபம்விரும்பலொடுவிசாரமென்றவிரண்டுநிறைதலும்விடயத்திச்சைமாற்றி
நினைவுகுவிவதுசித்தஞ்சிறுகலாகுநிகழ்த்தியவிம்மூன்றுநெஞ்சந்தன்னில், வனை
தருமவ்விரத்தியினாலுண்மைப்போதமன்னுதலேயுண்மைநிலைமருவலாகு, மனைய
னவிந்நான்காலுமுண்மைப்போதத்தழுந்தியயற்சங்கமறலசங்கமாகும்......... ..... ✻

(இ-ள்.) இனையசுபம்விரும்பலொடு - இப்படிப்பட்டசுபேச்சையோடு — விசாரமென்ற - விசாரணையென்றுசொல்லிய—இரண்டுநிறைதலும் - இரண்டுபூமிகளின்சாதனநிறையவும்—விடயத்திச்சைமாற்றி - விஷயவாசைகளைத்தள்ளி—நினைவுகுவிவது - மனமொருமிப்பது—சித்தஞ்சிறுகலாகும்-தனுமானசியாம்—நிகழ்த்திய-சொல்லிய—இம்மூன்றும் - இந்தமூன்றுபூமியின்சாதனத்தினாலும்—நெஞ்சந்தன்னில் - மனதினிடத்தில்—வனைதரும்-உண்டாகப்பட்ட — அவ்விரத்தியினால் - அந்நிராசையினால் — உண்மைப்போதம் - தத்துவஞானம்—மன்னுதல் - பொருந்துதலே—உண்மைநிலைமருவலாகும் - சத்துவாபத்தியாம் — அனையன- அத்தன்மையவான—இந்நான்காலும் - இந்நான்குபூமியினப்பியாசத்தினாலும் — உண்மைப்போதத்தழுந்தி - மெய்ஞ்ஞானநிறைந்தானுபவத்திலழுந்தி— அயற்சங்கமறல் - வேறாகியவிஷயசங்கமில்லாததே—அசங்கமாகும் - அசம்சத்தியாகும். எ-று. (இ-ம்) மனமாத்மவிசாரத்தினாலொடுவதேதனுமானசியென்றும்-தத்துவஞானமாதலேசத்துவாபத்தியென்றும்-அஃதொன்றிலும்பற்றற்றிருப்பதேயசம்சத்தியென்றுஞ்சொல்லப்பட்டதாம் .... (௬௭)

(அ-கை.) ஆறாம்பூமிஏழாம்பூமிகளி னிலக்கணமறிவித்தல். (கவி) அறைந்தபத
மைந்தாலுந்தானுய்ப்போதத் தழுந்தியவின்பத்தமைவாற்புறனுமுள்ளு, முறைந்த

பதார்த்தங்கண்மறைந்தயலோர்வன்பாலுணர்வதுவேபதார்த்தநினைவொழிதலாகு,
நிறைந்தவிவையாறுளும்பேதம்போக்கி நிலைபெறுதற்சுபாவத்தே நிற்றலேனே, ம
றைந்தபொருள்வெளியாக்குந்துரியமாகுமாசறுசீவன்முத்தர்வழியீதாகும்...... *

(இ-ள்.) அறைந்தபதமைந்தாலும் - சொல்லப்பட்டவிவ்வைந்துபூமியின்முதிர்ச்சியி
னாலும்—தானாம்போதத்தழுந்திய - தானாகியவாத்மஞானத்திலழுந்திய—இன்பத்தமைவால்-
ஆநந்தத்தமைதியால்—புறனுமுள்ளுமறைந்த- புறம்பிலுமுள்ளிலுமிருக்கின்ற— பதார்த்தங்
கண்மறைந்து- விஷயங்கள்விட்டபட்டு—அயலோர்வன்பால் - பக்கத்திலிருப்பவர்கள்வலிமையி
னால்—உணர்வதுவே - அறியவருவதே — பதார்த்தநினைவொழிதலாகும் - பதார்த்தாபாவனை
யாம்—நிறைந்த - நிறைவாகிய—இவையாறுளும் - இவ்வாறுபூமியினனுபவத்தினாலும்—பே
தம்போக்கி - திரிஸ்யவேறுபாட்டைநீக்கி—நிலைபெறுதற்சுபாவத்து - நிரமுள்ளதனதுவசுபா
ஸ்வரூபத்தில்—நிற்றலேனே - நிற்பதே—மறைந்தபொருள் - மறைபட்டிருக்கின்ற(தனதாத்ம
ஞான) ஸ்வரூபத்தை—வெளியாக்குந்துரியமாகும் - ப்ரத்யக்ஷப்படுத்துந்துரியமாகும்—மா
சறுசீவன்முத்தர் - களங்கமற்றசீவன்முத்தர்களது—வழியீதாகும்- மார்க்கமித்துரியமேயாம்.
எ-று. (இ-ம்) திரிஸ்யதிருஷ்டிநீங்கியிருக்குவாயிருப்பதே பதார்த்தாபாவனையென்றும் சுசா
திகவிசாதிகசுகதபேதரகிதமானசைதன்யமேதுரியமென்றுஞ் சொல்லப்பட்டதாம் ... (௪௮)

(அ-கை.) இவ்வேழாம்பூமியினிலக்கணங்கூறல். (கவி) சொன்னதன்மேலுடலிறந்த
முத்தர்மேவுந் துரியாதீதப்பதமாந்துரியச்செல்வந், தன்னுணர்வாற்றனையறிந்த
பெருமைசான்ற தலைவனலெய்தலுறுந் தன்மையாகு, மன்னியவிப்பதமடைந்த
சீவன்முத்தர்மகிழ்ச்சிமறுக்கத்தழுந்தார்மரபினலே, யன்னியர்சொல்வழிதுயில்வி
ட்டெழுந்தார்போலவடுத்தனசெய்குவர்செய்யாராகிவாழ்வார்..................... *

(இ-ள்.) துரியச்செல்வம்- துரியவாழ்வானது—சொன்னதன்மேல்- சொல்லியசீவன்
முத்திதன்மைக்குமேலான— உடலிறந்தமுத்தர்- விதேகமுத்தர்கள்—மேவும்-பொருந்தா நின்
ற—துரியாதீதப்பதமாம்- துரியாதீதமாகியபதமாம்—தன்னுணர்வால்-ஆத்மஞானத்தினால்—
தனையறிந்த - தனதுஸ்வரூபத்தையுணர்ந்த — பெருமைசான்ற - மகான்மியத்தையுடைய—
தலைவனால் - புருடனால்—எய்தலுறும் - அடைகின்ற—தன்மையாகும் - தன்மையையுடைய
தாம்—மன்னிய - நிலைபெற்ற—இப்பதமடைந்த - இத்துரியபதத்தைப்பெற்ற — சீவன்முத்
தர் - சீவன்முத்தர்கள்—மகிழ்ச்சிமறுக்கத்து - சுகதுக்கங்களில்—அழுந்தார் - முழுகார்கள்—
மரபினால் - (இம்) முறைமையினால்—அன்னியர் - பக்கத்திலுள்ளசீடன்முதலானவர்களால்—
சொல்வழி - (தேகசம்ரக்ஷணையையுநித்தியகன்மங்களையுஞ்செய்யும்படி) சொல்லுகின்றமார்க்
கத்தின்படியே—துயில்விட்டு - நித்திரையைவிட்டு—எழுந்தார்போல - எழுந்தவர்களைப்போ
ல—அடுத்தன - (நிகழ்காலத்துக்) கடுத்தகுணங்களை—செய்குவர்செய்யாராகி-செய்துஞ்செய்
யாதவர்களாய்—வாழ்வார் - (நிருவாணசுகமாய்) வாழ்வார்கள். எ-று. (இ-ம்) இப்பூமியானது
ரியமேதுரியாதீதமாயும் விளங்குமென்பதாம் .... (௪௯)

(அ-கை.) ஞானபூமியின்பெருமையையறிவித்தல். (கவி) இஞ்ஞானபதமேழுமிக
வும்புந்தியெய்தினர்க்கல்லதுதோன்றாவிவற்றையெய்தி, லஞ்ஞானமிலேச்சனேயெ
னினுந்தேகியதேகியெனினும்முத்தனையமில்லை,மெய்ஞ்ஞானமென்பதுதன்மனத்
தின்கட்டுவிடுதலிதுபெறிலிதுவேவீடுபேறும், பொய்ஞ்ஞானங்கானலினீர்முதலா
மோகம்பொய்யெனப்போமடமையும்பொய்யென்னிற்போகும் .... *

(இ-ள்.) இஞ்ஞானபதமேழும்- இந்தஞானபூமிகளேழும்—மிகவும்புந்தியெய்தினர்க்
கல்லது - பரிபூரணஞானமடைந்தவர்களுக்கேயன்றி—தோன்றா - (மற்றவர்களுக்குத்) தோற்
றாது—இவற்றையெய்தில் - இஞ்ஞானபூமிகளையடைந்தால்—அஞ்ஞானம் - அஞ்ஞானத்தை
யுடைய(மிருகங்களானாலும்)—மிலேச்சனேயெனினும் - ஆசாரமில்லாதவனானாலும்— தேகி-
சரீரத்தோடுகூடினவனானாலும்—அதேகியெனினும் - மரணமடைந்தவனானாலும்— முத்தன்-
முத்த(னென்பதற்கு)—ஐயமில்லை - சந்தேகமின்று—மெய்ஞ்ஞானமென்பது- தத்துவஞான
மென்பது—தன்மனத்தின்கட்டுவிடுதல் - தன்மனோபந்தம்விடுதலாம்—இதும்பெறில் - இப்பந்
தநிவிர்த்தியைப்பெற்றால்---இதுவே - இதுதானே---வீடுபேறும் - மோக்ஷலாபமாம்---பொ
ய்ஞ்ஞானம் - அஞ்ஞானமானது---கானல்னீர்முதலாமோகம் - கானற்சலமுதலாகியமடக்கங்
களை---பொய்யெனிற்போம் - பொய்யென்றுபார்க்கவதின்ப்ராந்திபோம்---மடமையும்-அறி
வின்மையும்---பொய்யென்னில் - மித்தையென்றுபார்க்கில்---போம்-அவைநாசமாம். எ-று.

(அ-கை.) ஞானபூமியையடைந்தவர்கள்பெருமையும் அடையாதவர்கள்சிறுமையு
மறிவித்தல். (கவி) தனையறியுநிட்டையுளோர்க்கெய்தலாகுந் தத்துவபூமிகளறிந்த

தலைமைமேலோர், தினையவுந்தாழவுமுரியார்பொறிகளென்னு நெடும்பகைவென்
றோரழியாநிலையினின்றோர், துனைதருபல்லுயிரிறைஞ்சமேலாய்வாழுஞ் சுரேந்திர
ருநரேந்திரருந் துரும்பாய்த்தோன்ற, மனையபெரும் பதம்பெற்றோ ரவரோயாகு
மல்லாதோர்பவக்கடலி லமிழ்ந்தாநிற்போர்..... .... *

(இ-ள்.) தனையறியும் - தன்தாத்மஞானஸ்வரூபத்தையுணராநின்ற—நிட்டையுள்ளோர்க்கு- சமாதியையுடையவர்களுக்கு—எய்தலாகும் - அடையத்தகுந்த— தத்துவபூமிகள் - உண்மையானஞானபூமிகளை — அறிந்ததலைமைமேலோர் - உணர்ந்தமுதன்மையானசத்துக்கள் —தினையவும் - (சகலருந்) தியானிக்கவும்—தாழவும் - வணங்கவும்—உரியார்-உரியராகும்—பொறிகளென்னும் - இந்திரியங்களென்கின்ற—நெடும்பகை-வெகுகாலமுள்ளசத்துருக்களை—வென்றோர் - செயித்தவர்கள்— அழியாநிலையினின்றோர்- அழிவற்றநிலையிலிருந்தவர்கள் — துனைதருபலவுயிரிறைஞ்ச - மிகுந்தபலசீவர்களும்வணங்க—மேலாய்வாழும் - மேன்மையாகவாழுகின்ற—சுரேந்திரரும் - தேவேந்திரர்களும்— நரேந்திரரும் - சக்கிரவர்த்திகளும்— துரும்பாய்த்தோன்றும் - திரணமாகத்தோற்றுகின்ற— அனையபெரும்பதம் - அத்தன்மையானபரமபதத்தை—பெற்றோர் - அடைந்தவர்கள்—அவரேயாகும் - அப்பூமிகளையடைந்தவரேயாம்—அல்லாதோர்-ஞானபூமியையடையாதவர்கள்—பவக்கடலில்-சநநசமுத்திரத்தில்— அமிழ்ந்தாநிற்போர்- மூழ்கிக்கிடப்பவர்களாவர். எ-று. (இ-ம்) வெளிப்படை .... (௫௧)

(அ-கை) அத்துவிதத்தையடையுமார்க்கமிந்தஞானபூமியைத்தவிரவேறின்றெனல்.
(கவி.) உளமொடுங்குமுபாயமேயோகமாகு முணர்வுறுபூமிகளிந்தவுபாயமாகும்,
வளமிகுமிப்பூமிகளாலன்றியிந்த மாதேவபெரியபதமருவலாகா, வளவறநீநான்று
ன்வேறென்றுமின்றி யபேதமாயநாமயமாயமூலமாகிக், கிளர்சுகமாய்சாந்தமா
யறிவாயொன்றாய்க் கேடின்றிப்பெயரின்றிக் கீழ்மேலின்றி .... *

(இ-ள்) உளமொடுங்கும்-மனதடங்குகின்ற—உபாயமே-தந்திரமே—யோகமாகும்-ஞானமாம்—உணர்வுறுபூமிகள்-ஞானபூமிகள்—அந்தவுபாயமாகும்-அம்மனமடங்குமுபாயமாம்— வளமிகும்-மாட்சிமைமிகுந்த—இப்பூமிகளாலன்றி-இந்தஞானபூமிகளையல்லாமல்—இந்தமாதேவ பெரியபதம் - இப்பொழுதுசொல்லிய மகத்தாகியபிரமபதத்தை — மருவலாகா - அடையக்கூடாது—அளவற - மட்டின்றி—நீ - நீயென்றும்—நான் - நானென்றும்—தான் - தானென்றும்—வேறு - அன்னியமென்றுஞ் (சொல்லப்பட்ட)—ஒன்றுமின்றி-ஒன்றுமாகாமல்—அபேதமாய் - அபேதமாகியும்—அநாமயமாய் -தோஷமில்லாததாகியும்—அமூலமாகி-காரணமில்லாததாகியும்—கிளர்சுகமாய் - ப்ரகாசிக்குநிரதிசயா நந்தமாகியும் — சாந்தமாய் - உபசாந்தமாகியும்—அறிவாயொன்றாய் - ஞானமாகியுமேகமாகியும்—கேடின்றி- நாசமில்லாததாகியும்—பெயரின்றி-நாமமில்லாததாகியும்—கீழ்மேலின்றி-உயர்வுதாழ்வில்லாததாகியும்.எ-று(௫௨)

(அ-கை.) ஞானபூமியினாலுண்டானவஸ்துவினிலக்கணங்கூறல். (கவி) பாவனையு
மபாவனையுமுதலுமீறும்பற்றுமுளதும்மிலதும்பலவுந்தேசு, மேவறிவுமடமையு
மென்றிவைகளின்றிவிண்ணிலேயிருப்பதாய்விசாலமாகி, யாவதுமாயன்றாகிமனத்
தால்வாக்காலெட்டரிதாயின்பத்திலின்பமாகி, யோவரியநிறைவினிறைவாகியாசை
யொழிவிடமாய்த்தன்னாற்றானுணருமொன்று ....*

(இ-ள்.) பாவனையும் - பாவமும்—அபாவனையும் - அபாவமும்—முதலும்- ஆதியும்—ஈறும் - அந்தமும்—பற்றும் - பற்றுதலும்—உளதும்- உள்ளதும்—இலதும்-இல்லாததும்—பலவும் - அநேகமும்—தேசும் - ப்ரகாசமும்—மேவறிவும்- பொருந்தியஞானமும்—மடமையும் - அறிவின்மையும் —என்றிவைகளின்றி- என்றுசொல்லப்பட்டவிவைகளில்லாததாகியும்—விண்ணிலேயிருப்பதாய்-சிதாகாயத்திலிருக்கின்றதாகியும்—விசாலமாகி- வியாபகமாகியும்—யாவதுமாய் - சகலமுமாகியும்—அன்றாகி - அல்லாததாகியும்— மனத்தால்- மனதினாலும்—வாக்கால் - வாக்கினாலும்—எட்டரிதாய் - தாவக்கூடாததாகியும்—இன்பத்திலின்பமாகி-ஆநந்தங்களுக்காநந்தமாகியும்—ஓவரிய-நீங்குதற்கரிய—நிறைவினிறைவாகி-பூரணத்துக்குப்பூரணமாகியும்—ஆசையொழிவிடமாய்-அவாவிறந்தவிடமாகியும்---தன்னாற்றானுணரும் - தானேதானாயறிவதாகியும்விளங்குகின்ற (வஸ்து)—ஒன்று-ஒன்றேயாம். எ-று. (இ-உ-க-ம்) மனதடங்கினவிடத்துண்டானஸ்வானுபூதியிலாசத்தையறிவித்ததாம் ... . (௫௩)

(அ-கை.) ஞானபூமியினாலுண்டானபிரமநிச்சயத்தைச்சொல்லி, அஞ்ஞானபூமியினாலுண்டானமாயாவிசித்திரம்ப்ரத்யக்ஷமானதறிவித்தல். வேறு. (கவி.) எழுவகையாம்பூமியினாற்பெறும்பிரமமிதுமாயையேற்றங்கேண்மோ, விழுமமுறுமலமனன்றூன்மெய்ம்மறந்துமுன்கண்டவிந்தச்சாரற், பழுவமணக்கண்ணாடிபயில்கின்றவுட

லொடும்போய்ப்பார்க்கிற்கண்ணிற், றழுவுறுங்கொலெனுமமைச்சருடனெண்ணித்
தானையுடன்சமைந்துபோனான் .... *

(இ-ள்.) எழுவகையாம்பூமியினால் - சத்தவிதமாகிய(ஞான) பூமியினால்—பெறும்பிரமமிது - அடையப்பட்டபிரமஸ்வரூபமித்தன்மையது—மாயையேற்றங்கேண்மோ- இனிமாயையின்பெருமையையிராமா நீகேட்பாய்—விழுமமுறு- சிறப்புபொருந்திய—லவணன்றான்-லவணவரசனானவன்—மெய்ம்மறந்து - சீரத்தைமறந்து—மனக்கண்ணாடி - மனமென்னுங்கண்ணாடியில்—முன்கண்ட - முன்னமேபார்த்த—விந்தச்சாரற்பழுவம் - விந்தமலையினதுபக்கத்திலுள்ளகாடுகளை—பயில்கின்ற - சொல்லுகின்ற—உடலோடும்போய் - (இச்) சரீரத்துடன்போய்—பார்க்கில் - பார்க்குமிடத்தில்—கண்ணிற்றழுவுறுங்கொலெனும்- கண்ணிற்காணப்படுமாவென்பதை—அமைச்சருடனெண்ணி - மந்திரிகளுடனாலோசித்து—தானையுடன் - படைகளோடும்—சமைந்துபோனான் - அமைந்துசென்றான். எ-று .... (௫௪)

(அ-கை.) இ-து. (கவி) தென்றிசைசென்றனன்மீட்டுந் திக்குவிசயஞ்செய்யச்செ
ல்வான்போல, முன்றிகழும்விந்தகிரி முற்பட்டான்வடக்கொழிந்த மூன்றுதிக்கிற்,
றுன்றிவளர்வனமெல்லாஞ்சுற்றினனனிநொந்தான்சூழலொன்றி, லன்றுகருதியகரு
த்துவடிவெடுத்ததெனப்பழையவடவிகண்டான் .... *

(இ-ள்.) தென்றிசைசென்றனன்-தெற்குதிசையினடந்தான் —மீட்டும்-திரும்பவும்—திக்குவிசயஞ்செய்ய - திக்குகளைவெல்ல—செல்வான்போல- நடப்பவனைப்போல—முன்றிகழும் - எதிரிற்ப்ரகாசிக்கின்ற—விந்தகிரிமுற்பட்டான் - விந்தமலைக்குமுன்வந்தான் — வடக்கொழிந்த - வடதிசையல்லாத—மூன்றுதிக்கில் - மூன்றுதிசைகளில்— துன்றிவளர்வனமெல்லாம் - நெருங்கிவளராநின்றகாடனைத்தும்—சுற்றினான்-சுற்றிப்பார்த்தான்— நனிநொந்தான்-மிகவும்வருந்தினான்—சூழலொன்றில் - குறிப்பானவோரிடத்தில்—அன்றுகருதியகருத்து-அப்பொழுதுநினைத்தநினைப்பு—வடிவெடுத்ததென - உருவெடுத்ததுபோலிருக்கின்ற — பழையவடவிகண்டான் - முன்னனுபவித்தவனத்தைப்பார்த்தான். எ-று .... (௫௫)

(அ-கை.) இ-து. (கவி) காலனகர்நிகராமக்கடியவனத்துலாவுதலுங்கடையர்செய்
கை, போலவன்முன்சஞ்சரித்ததலங்களுமச்சேரிகளும்பொருந்தக்கண்டான், சால
வியந்தானந்தக் கடையர்கடைச்சியர்குடில்கடப்பாவண்ண, ஞாலநரபதிநோக்கி
வியப்பினான்மனமயக்கநண்ணிநின்றான் .... *

(இ-ள்.) காலனகர்நிகராம் - இயமபுரத்தையொத்த — அக்கடியவனத்துலாவுதலும்- அந்தக்கொடிதானகாட்டிற்சஞ்சரிக்குமளவில்—கடையர்செய்கைபோல் - நீசர்கதொழிலைப்போல—அவன்முன்சஞ்சரித்த - அந்தலவணன்முன்சஞ்சாரஞ்செய்த—தலங்களும்-பூமிகளையும்—அச்சேரிகளும் - அவ்வூர்களையும்—பொருந்தக்கண்டான்- நன்றாய்ப்பார்த்தான்—சாலவியந்தான் - மிகவுமதிசயித்தான்—அந்தக்கடையர்- முன்கண்டநீசர்களையும்—கடைச்சியர்-நீசஸ்திரீகளையும்—குடில்கள் - குடிசைகளையும்—தப்பாவண்ணம் - தவிராதபடிக்கு— ஞாலநரபதிநோக்கி - பூமிக்கரசனானலவணன்பார்த்து—வியப்பினால் - அதிசயத்தினால் — மனமயக்கநண்ணிநின்றான் - மனமயக்கமடைந்திருந்தான். எ-று .... (௫௬)

(அ-கை.) இ-து. (கவி) கருத்தயருந்துயர்கரைப்பக் கண்கரைந்துமெய்கரைந்து
கதறுநின்ற, விருத்தயர்தங்கூட்டத்தின் மிகமெலிவால் வாய்விட்டு விம்மிவிம்மி,
யொருத்திமுதனளிறந்ததன்கிளைஞர்பெயரெல்லாமுறையாநின்று, பெருத்தநெடுங்
குரலாலே யிவ்வாறுபுலம்பினாள் பேதமாக .... *

(இ-ள்.) கருத்தயரும் - மனந்தளர்கின்ற—துயர்கரைப்ப-துன்பங்கரைக்க—கண்கரைந்து - கண்கரையும்படி(நீர்பெருகி)—மெய்கரைந்து - சரீரமிளகி—கதறுநின்ற - கதறி(யழு)கின்ற—விருத்தயர்தங்கூட்டத்தில் - மூப்புள்ளநீசமாதர்கள்குழாத்தில் —மிகமெலிவால்- மிகுந்தவிசனத்தினால்—வாய்விட்டு - வாயைத்திறந்து—விம்மிவிம்மி - தேம்பிதேம்பி— ஒருத்தி-ஒருஸ்திரீ—முதனளிறந்ததன்கிளைஞர்பெயரெல்லாமுறையாநின்று - முதனாண்மரித்த தன்மக்களுமங்களியாவையுஞ்சொல்லி—பருத்தநெடுங்குரலால் - மிகுந்தசத்தத்தினால் — இவ்வாறு-இப்படி —பேதமாக - நாநாவிதமாக—புலம்பினாள் - அழுதாள். எ-று .... (௫௭)

(அ-கை.) இ-து(கவி) மாறுனவிதியாலென்மடிவிட்டுமடிந்துபோமைந்தர்காளோ,
வேறுகிபெத்தூரமேகினீர் யார்முகத்தேவிழிக்கின்றீரோ, கூறுனசெங்குன்றின்ம
ணிமாலைத்தோளாலே குளிரப்புல்லி, யாறுதவென்னெருப்பை யாற்றுவாயோமக
ளேயந்தோவந்தோ .... *

(இ-ள்.) என்மடிவிட்டு - எனதுமடியிலிருந்துநீங்கி—மடிந்துபோம் - இறந்துபோகா நின்ற—மைந்தர்காள் - குழந்தைகளே—மாமுனிவிதியால் - தீவினையினால்—வேறாகி (எங்களை)ப்பிரிந்து—எத்தூரமேகினீர்- எவ்வளவுதூரம்போனீர்களோ—யார்முகத்தைவிழித்திப்படிரோ-யார்முகத்தைப்பார்த்துபரதவிக்கின்றீர்களோ — கூறுமனசெங்குன்றின்மணிமாலை - சரமாகச்சிவந்தகுன்றுமணிமாலையைத் (தரித்திருக்கின்ற)—தோளால் - புயங்களினால்—குளிரப்புல்லி-குளிர்ச்சியாகத்தழுவி—ஆறுத - தணியாத—என்னெருப்பை - எனது(விசன)க்கினியை—மகளே - பெண்ணே—ஆற்றுவாயோ - தணிப்பாயோ—அந்தோவந்தோ-ஐயோவையோ. எ-று.

(அ-கை.) இ-து. (கவி•) முன்னஞ்செய்தவத்தினாற்றேடாத மாநிதிபோன்முன்வந்தெய்தி,பொன்னனார்நின்குலத்தோரவர்மயல்விட்டென்மகளைப்புணர்ந்துவாழ்ந்த, மன்னனுமருமகனேமறந்தனையோமதிமுகத்தைவந்துகாட்டாய், பின்னைநாயகவுனக்கென்பேதைசெயுஞ்சிறுபிழையாற் பேதித்தாயோ......... ... . *

(இ-ள்.) முன்னஞ்செய்தவத்தினால் - (யாங்கள்) பூர்வத்திற்செய்ததவசினால்—தேடாதமாநிதிபோல் - தேடாமற்கிடைத்ததிரவியத்தைப்போல—முன்வந்தெய்தி - (எங்கள்)முன்வந்தடைந்து—பொன்னனார் - இலக்குமிபோன்றவராகிய— நின்குலத்தோரவர் - உனதந்தப்புரத்துஸ்திரீகளினது—மயல்விட்டு- மோகத்தைதவிர்த்து—என்மகளைப்புணர்ந்துவாழ்ந்த-எனதுபெண்ணைக்கூடிச்சுகித்த —மன்னனுமருமகனே - அரசனாகியமருமகனே — மறந்தனையோ-(எங்களை) மறந்துவிட்டாயோ—மதிமுகத்தை- சந்திரனையொத்த(வுனது)வதனத்தை—வந்துகாட்டாய் - (இவ்விடத்தில்) வந்துகாட்டுவையா—பின்னைநாயக- இலக்குமிபோன்ற(வெனது) பெண்ணுக்குநாயகனே—உனக்கென்பேதைசெயும்-உமக்கெனதுபெண்செய்கின்ற — சிறுபிழையால்-அற்பகுற்றங்களினால்—பேதித்தாயோ - (மனம்) வேறுபட்டாயோ. எ-று ....(௫௯)

(அ-கை.) இ - து. (கவி) வன்பிறவிப்பேராற்றில் வல்வினையாகுந்திரைகள்வந்துகூடித், தன்பிறவியரசிபற்கைத்தவிர்ந்தெமதுதையனுக்குத்தலைவனாகிப், புன்பிறவிப்புலையனைப்போற்பூதலத்துப்புரந்தரனும்புன்மைபூண்டான், மின்பிறவிநிற்கரிதுமிகக்கொடிதுமிகக்கொடிதுவிதியேயென்றாள் .... *

(இ-ள்.) வன்பிறவிப்பேராற்றில் - வலியசநநமென்னுமகாநதியில்—வல்வினையாகுந்திரைகள் -கொடியவினைகளாகியவலைகளானவை—வந்துகூடி - வந்துபொருந்தி — தன்பிறவியரசிபற்கைத்தவிர்ந்து-தனக்குண்டானபூபாலனத்தைவிட்டு— எமதுதையனுக்குத்தலைவனாகி-எனதுமகளுக்குநாயகனாகி - புன்பிறவி - அற்பமானசநநத்தையுடைய —புலையனைப்போல்-சண்டாளனைப்போல—பூதலத்துப்புரந்தரனும்- நரேந்திரனும்—புன்மைபூண்டான்-சண்டாளத்தன்மையையடைந்தான்—மின்பிறவிநிற்கரிது- மின்போன்றசநநநிலையில்லாதது—விதி-ஊழானது — மிகக்கொடிதுமிகக்கொடிது - மிகவுங்கொடியதுமிகவுங்கொடியது — என்றாள் - என் (றழு) தாள். எ-று..(௬௰)

(அ - கை.) இ - து. (கவி) என்றழுதுவவள்புலம்பியிசைத்தவெலாநனிகேட்டலவணனுங்கே, நின்றுளதன்சேடியாலவமயரந் தனையாற்றிநேயத்தோடுங், கன்றியநின்னிடரோதுநீயார்நின்மகளார்நின்காதலோரா, ரொன்றுமொழிவறமொழியென்றிவன்வினவபுலைக்கிழத்தியுரைப்பதானாள் .... *

(இ-ள்.) என்றழுது - (இப்படி)யென்றழுது—அவள்புலம்பி - அவள்ப்ரலாபித்து—இசைத்தவெலாம் - சொல்லியசகலத்தையும்—நனிகேட்டலவணன் - மிகவுஞ்சேட்டலவணராசன்—ஆங்குநின்றுள - அவ்விடத்திற்கூடவிருக்கின்ற—தன்சேடியரால்- தனதுபாங்கிகளால்—அவமயரந்தனையாற்றி - அவளதுதுன்பத்தைத்தணித்து—நேயத்தோடும் - அன்புடன்—கன்றியநின்னிடரோது - வருந்தினவுனதுதுன்பமென்ன—நீயார்- நீயெவள்—நின்மகளார்-உனதுபுத்திரியெவள்—நின்காதலோரார்- உனதுபுத்திரர்களார்—ஒன்றுமொழிவற- ஒன்றையும்விடாமல்—மொழியென்று - சொல்லுவாயென்று— இவன்வினவ - இவ்வரசன்கேட்க — புலைக்கிழத்தி . புலைக்கிழவியானவள்—உரைப்பதானாள் - கூறுவாள். எ-று ....(௬௧)

(அ - கை.) இ - து. (கவி) ஈதுபுலைச்சேரியிதி லொருபுலையனென்கணவனிவனுக்கிங்கோர், மாதுபிறந்தனளவளை யிந்திரன்போலொருமன்னன் வந்துசேர்ந்தான், போதுமெநடுப்புணர்வித்தவிதியாலேயவண்மூன்றுபுதல்வர்ப்பெற்று, ளேதுறுநல்வினைபோலதீவினைவந்தென்கிளைஞரிறந்துபோனார் .... *

(இ-ள்.) ஈதுபுலைச்சேரி - இதுபறச்சேரி—இதிலொருபுலையன் - இதிலொருசண்டாளன்—என்கணவன் - எனதுபுருடன்—இவனுக்கு- இச்சண்டாளனுக்கு—இங்கோர்மாதுபிறந்

தனள்—இவ்விடத்தோருபெண்பிறந்தாள் — அவளை - அப்பெண்ணை—இந்திரன்போல் - தேவேந்திரன்போனு(மிருக்கின்ற)—ஒருமன்னன் - ஓரரசன்—வந்துசேர்ந்தான் - வந்துபுணர்ந்தான்—நெடும்போது - வெகுகாலம்—புணர்வித்தவிதியால்-கூடியவூழினால்—அவண்மூன்றுபுதல்வப்பெற்றாள் - அப்பெண்மூன்றுபிள்ளைகளையீன்றாள்—ஏதுறு நல்வினைபோல - காரணமாகியநல்லவூழைப்போல—தீவினைவந்து-கொடியவூழ்வந்து—என்கிளைஞர்- எனதுமக்கள்—இறந்துபோனார் - மரணமடைந்தார்கள். எ-று.......................(௬௨)

(அ-கை.) இ-து. (கவி) நெடுங்காலம்வாழ்ந்ததற்பினீலமுகிற்றுளிவறண்டுநன்னீர்
சுண்டிக், கடுங்காலனிகர்கலியாற் றிசைதிசைபோய்க் கடையரொலாங்கழிந்துபோ
னார், நடுங்காநின்றனதுயருந்தனிமையுமேதுணையானேநாங்களென்ன, வடுங்கால
வேல்வேந்தனமைச்சரைப்பார்த்ததிசயித்தானவசனாகி.......................... *

(இ-ள்.) நெடுங்காலம் - அநேககாலம்—வாழ்ந்ததற்பின்- (என்மகள்முதலானவர்கள்) வாழ்ந்திருந்தபின்பு—நீலமுகில் - கரியமேகத்தினால்—துளிவறண்டு - மழையில்லாமல்—நன்னீர்சுண்டி - நல்லசலம்வற்றி—கடுங்காலனிகர்கலியால் - கொடியயமனையொத்தகருப்பினால்—திசைதிசைபோய் - திக்குதிக்காகச்சென்று—கடையரொலாம் - சண்டாளர்களனைவரும் — கழிந்துபோனார் - இறந்தார்கள்—நடுங்காநின்றனதுயரும் - நடுங்குகின்றதுன்பத்தையும்— தனிமையும் - தனித்திருப்பதையும்— நாங்கள் - யாங்கள்—துணையானேமென்ன- சகாயமாகப்பெற்றேமென்றுசொல்ல—அடுங்காலவேல் - கொல்லாநின்றயமனையொத்தவேலாயுதத்தையுடைய—வேந்தன் - அரசன்—அமைச்சரைப்பார்த்து - (தனது) மந்திரிகளைப்பார்த்து — அவசனாகி- பரவசனாய்—அதிசயித்தான் - வியப்புற்றான். எ-று. (இ-ம-க-ம்) சாக்கிரசொற்பனத்தினுள்ளமயக்கங்களைச் சாக்கிரத்திற்றெளிவாகப்பார்த்ததிசயித்ததாம்........................(௬௩)

(அ-கை)மாயைவருத்துமென்பதையுமதனாற்பிரமத்தையடைந்ததையுமறிவித்தல்.
(கவி.) வேண்டுவனகொடுத்திவளை வெந்துயர்தீர்த்தந்நகரின்மீண்டுமேவி, நீண்ட
வுலகத்தியல்புமாயையின்வல்லபமுமவனெடிதுகண்டான்,காண்டகையபரம்பொரு
ளு நாமுரைப்பவறிந்தமைந்தான்கருணைவள்ளா, லீண்டியவிம்மாமாயைகடப்பரி
யவன்மோக மியற்றுங்கண்டாய்.......................... *

(இ-ள்.) வேண்டுவனகொடுத்து - வேண்டியவைகளைக்கொடுத்து — இவளைவெந்துயர்தீர்த்து - இந்தஸ்திரீயினுடையகொடியதுன்பத்தைநீக்கி—அந்நகரின்மீண்டு - அவ்வூரினின்றுந்திரும்பி—மேவி-(தன்னகரில்)வந்து—நீண்டவுலகத்தியல்பும்-நெடியசகத்தின்றன்மைகளையும்—மாயையின்வல்லபமும் - மாயையினுடையவல்லமையையும்—அவன் - அந்தல்வணவரசன்—நெடிதுகண்டான் - நன்றாகப்பார்த்து—காண்டகைபரம்பொருளும் - (சத்துக்க)டரிசிப்பதற்குரியபிரமவஸ்துவையும்—நாமுரைப்ப - யாம்போதிக்க — அறிந்தமைந்தான்-தெரிந்தமைதிபெற்றான்—கருணைவள்ளால்-அருட்கொடையையுடையஸ்ரீராமா—ஈண்டிய-நெருங்கிய—இம்மாமாயை - இம்மகாமாயையானது—கடப்பரிய - தாண்டுதற்கரிய—வன்மோகம்- வலியமோகத்தை—இயற்றுங்கண்டாய் - கொடுக்கும். எ-று. (இ-ம்) வெளிப்படை...... (௬௪)

(அ-கை.)சாக்கிரசொற்பனஞ்சத்தியமானதென்னவெனின்.(கவி)இலதுளதாமுளதி
லதாமிம்மாயைவல்லபத்தாலென்னலோடுங், கலனமுறு சொற்பனத்திற்கண்டதெ
லாஞ்சாக்கிரத்திற்கண்டதென்னே,குலமுனிவவெனக்கேட்ட வள்ளலுக்குமுனியுரை
ப்பான்கொடியமாயை, யலகறுமோகம்புரியுங்காதிகதையாலிதுமேலறியலாகும்.

(இ-ள்.) இம்மாயைவல்லபத்தால் - இம்மாயாவல்லமையினால்— இலதுளதாம் - அசத்துசத்தாகும்—உளதிலதாம் -சத்தசத்தாகும்—என்னலோடும்- என்றுவசிஷ்டமுனிசொல்லவும்—கலனமுறுசொற்பனத்தில் - கலக்கமுள்ளமனோராச்சியத்தில்—கண்டதெல்லாம்- பார்த்தவனைத்தும்—சாக்கிரத்திற்கண்டதென்னே - ப்ரத்யக்ஷத்திற்பார்த்ததென்ன—குலமுனிவவெனக்கேட்ட- (நமது) குலத்துக்காசிரியரேயென்றுகேட்ட—வள்ளலுக்கு-ஸ்ரீராமருக்கு—முனியுரைப்பான்- வசிஷ்டமுனிசொல்லுவார்—கொடியமாயை- கொடிதானமாயையானது— அலகறுமோகம்புரியும்- அளவற்றமயக்கத்தைச்செய்கின்ற— காதிகதையால்-காதிகதையினாலே—இதுமேலறியலாகும் - இம்மாயாவிசித்திரத்தை யினியறியலாம். எ-று. (இ-ம்) இவைமேற்கதையினன்றாய்த்தெரியுமென்பதாம்.......................(௬௫)

(அ-கை.) சாக்கிரசொற்பன மெய்யாகத்தோற்றினதற் கனுபவஞ் சூக்குமமாயுரைத்தல்.
(கவி) காகதாலீயம்போல்வாதனையின் வசத்தினுளங்கலந்துநிற்கு, மேசமுறத்தம்மிற்ற
டையின் றுணர்வினிலைநின் றோரியம்பாநிற்ப,ராகலினான்முன்னுளிற்சித்தனாற் புலைச்சேரியா
கக்கண்ட,மோகமதேபின்னனுங்கண்டதுவென்றுநாமொழிந்தவேந்தன் .... *

(இ-ள்.) காகம் - காக்கையேற—தாலியம்போல் - பனம்பழம்(வீழ்ந்தது)போல—வாதனையின்வசத்தில்-வாசனுவயத்தில்—உளம்-மனமானது—தம்மிற்றாம் - தமக்குள்ளேதாம்—ஏகமுறக்கலந்துநிற்குமென்று-ஒன்ருகக்கலந்திருக்குமென்று—உணர்வினிலைநின்ருேர்- அறிவினிச்சயத்தினின்றவர்களாகியசத்துக்கள் — இயம்பாநிற்பர் - சொல்லிக்கொண்டிருப்பார்கள்—ஆகவிஞல் - ஆகையிஞல்—முன்ஞளிந்சித்தனல்- முன்றினத்தி(லிந்த்ரசாலவித்தையுள்ள) சாம்பரிகனல்—புலைச்சேரியாகக்கண்ட - கடையனுராசக்காணப்பெற்ற --- மோகமதே - மயக்கத்தையே--- நாமொழிந்தவேந்தன் - யாஞ்சொல்லியிருக்கின்ற லவணவரசன் --- பின்ஞளுங்கண்டது - பின்றினத்திலுங்கண்டதேயன்றி--- வேறன்று - வேறல்ல. எ-று..... ... .(சுஞ)

(அ-கை.) இ-து (கவி.) மன்னவன்கண்டுளகனவின் மதிமயக்கந்தன்னேயேமலையின்சார, லன்னவருநன்னினைவாலறிவுற்ருர்லவணனுமறிவின்ருேற்றந்,துன்னிவருகடையர்மனங் களிற்ருேற்றகடையனெனத்தோன்றும்போத, மின்னநரபதிமனத்திற்ருேன்றியதான்மாமாயை யேதுசெய்யா ....✻

(இ-ள்.) மன்னவன்கண்டுள - அரசன்பார்த்திருக்கின்ற—கனவில்-சாக்கிரசொற்பனத்தி(லுண்டான)—மதிமயக்கந்தன்னையே- அறிவின்மயக்கத்தையே—மலையின்சாரல்- வரையின்பக்கத்தி(லிருக்கின்ற)—அன்னவரும் - அச்சண்டாளரும்— நன்னினைவால் - நல்லவறிவிஞல்—அறிவுற்ருர் - அறிந்தார்கள்—லவணனும் - லவணவரசனெனும்— அறிவின்ருேற்றம் - அறிவிலுதயமானது—துன்னிவரும் - நெருங்கிவருகின்ற—கடையர்மனங்களிற்ருேற்ற- சண்டாளர்களின்மனங்களிற்ருேன்ற—கடையனென - சண்டாளனென்று—தோன்றும்போதம் - தோற்றுகின்றவறிவானது—இன்னநரபதிமனத்தில் - இவ்வரசனுடையமனதில்—தோன்றியதால்- உண்டானபடியால்—மாமாயையேதுசெய்யா - மகாமாயையானதென்னசெய்யமாட்டாது. எ-று. (இ-உ-க-ம்) ஒருவன்சொற்பன மற்ருெருவனுக்குச் சாக்கிரமாகவும், ஒருவன்சாக்கிரமற்ருெருவனுக்குச்சொற்பனமாகவு மாவதுபோல, அரசன்மனோராச்சியமுன்னுள்ளசண்டாளருக்கிதார்த்தமாகவுஞ் சண்டாளர்சாக்கிர மாசனுக்குச் சாக்கிரசொற்பனமாகவுந் தோற்றுவித்தது மாயாவிசித்திரமேயன்றி வேறின்றென்பதாம்....... ....(சுஎ)

(அ-கை.) ஆத்மஸ்வரூபநிரூபணம். (கவி.) தோன்றியவைவிளக்கத்தாலுண்மையாமைம்பொறிக்குந் தொடர்பாய்நிற்கு, மான்றபதார்த்தங்களெலா மறிவிஞலொழிந்துண்மையாகமாட்டா, வேன்றறிவானறிபொருளா மிரண்டினிடை யறிவானுக்கியைந்தரூப, மூன்றியறிபொருளறிவா னறிவிலிவையுற்றிடுவ துயர்ந்தவீடு ...... ✻

(இ-ள்.) தோன்றியவை - தோற்றப்பட்டமாயாவஸ்துக்களானவை — விளக்கத்தால்- (ஞான)ப்ரகாசத்திஞல்—உண்மையாம் - உள்ளனவாகும்— ஐம்பொறிக்கும் - பஞ்சேந்திரியங்களுக்கும்—தொடர்பாய்நிற்கும் - சம்பந்தமாயிருக்கின்ற—ஆன்றபதார்த்தங்களெலாம்-மிகுந்தவஸ்துக்களியாவும்—அறிவிஞலொழிந்து - ஞானத்திஞலல்லாமல்—உண்மையாகமாட்டா- உள்ளவைகளாகமாட்டாவாம் — ஏன்றறிவான் - உண்டாகிவருஞாதாவும் — அறிபொருளாம்- ஞேயமுமாகிய—இரண்டினிடை - இரண்டினுடையமத்தியில்— அறிவானுக்கு- ஞானுத்மாவுக்கு—இயைந்தரூபம்-இசைந்தவடிவமாம் —ஊன்றியறிபொருள்- சார்ந்தறியப்பட்டவிஷயவஸ்துக்களும்—அறிவான் -(இவைகளை)யறியப்பட்டஞாதாவும்—அறிவு - ஞானமும்—இல் - இல்லாததாகியும்—இவையுற்றிடுவது - இவைகளைப்பொருந்துவதாகியு மிருக்கின்றதே—உயர்ந்தவீடு- மேலானமோக்ஷமாம். எ-று. (இ-ம்) திரிபுடிக்குவிலக்ஷணமாகியுஞ் சலக்ஷணமாகியுமிருக்கின்றவஸ்துமத்தியகதஸ்வரூபமாய் விளங்குமென்பதாம் ·········· .... ··················· ··········· (சுஅ)

(அ-கை.) ஆத்மானுசந்தானநிரூபணம். (கவி) ஓரிடம்விட்டோரிடத்தே யுள்ளமுறிலவற்றினடுவுண்மையாகிப், பேரிலதாயுணர்விலதாய்ச்சடமிலதா யதுநீயாய்ப்பிரியேலென்றுங், கூரியபுத்தியிஞலேயூகித்துக் குடும்பியெனுங் குறிப்பைமாற்றித், தூரியதாம்படிமனத்தின் றுவக்கறுத்துவிருந்தபடி துணிந்துநிற்பாய்..... ...... ✻

(இ-ள்.) ஓரிடம்விட்டு- ஒருவிஷயத்தினின்று—ஓரிடத்து-மற்ருென்றில்—உள்ளமுறில்- மனம்பொருந்திஞல்—அவற்றினடு - அவ்விரண்டின்மத்தியில்—உண்மையாகி- சத்தாமாத்திரமாகியும்—பேரிலதாய் - நாமமில்லாததாகியும்—உணர்விலதாய் - அறிவில்லாததாகியும்—சடமிலதாய் - விஷயமில்லாததாயுமிருக்கின்ற—அது - அதுவென்னுப்பிரமமும்—நீ-நீயென்னுங்கூடஸ்தனும்—ஆய் - ஐக்கியமானசிதாநந்தஸ்வரூபமுமாய் — என்றும் - எக்காலமும்—பிரியேல் - பிரிவற்றிருப்பாய்—கூரியபுத்தியிஞல் - மிகுந்தநுட்பமாகியவறிவிஞலே—யூகித்து- யுத்தியாய்விசாரித்து—குடும்பியெனும் - (நான்) சம்சாரியென்கின்ற— குறிப்பைமாற்றி - கருத்தைக்கெடுத்து—தூரியதாம்படி - வேரோடேகெடும்படி—மனத்தின்றுவக்கறுத்து - மனதுசு

ளுரந்தங்களைக்கெடுத்து — இருந்தபடி - (சுபாவமா) யிருந்தபடியே — துணிந்துநிற்பாய்- தெளிந்திருப்பாய் எ-று. (இ-ம்) மனதையாத்மாவிற் கரைக்கவேண்டுமென்பதாம்..... (௬௯)

(அ-கை.) ஆத்மானுபவ நிரூபணம். (கவி) பிறப்பிறப்பாம்பூட்டதனைப்பிணித்து
ழற்றும்வாதனையாம்பெரியபாச, மறப்பெரியமுயற்சிறாலறுத்திடுவாய் பரமமாம
றிவின்முன்னே, புறப்படும்பொய்யாமுள்ளம்புவனவிகற்பங்களெனும்பொய்யைக்
காட்டுஞ், சிறப்புளவிண்ணிலதாயுமிலதான நீலநிறஞ்செறிவதேபோல் .... *

(இ-ள்.) பிறப்பிறப்பாம் - சநநமரணமாகிய— பூட்டதனை - ஏற்றத்திற்(கடங்க)ளை— பிணித்துழற்றும் - கட்டிச்சுழற்றுகின்ற—வாதனையாம் - வாசனையென்னும்— பெரியபாசம்- பெருங்கயிற்றை —அறப்பெரியமுயற்சியினால் - மிகவும்பெரிதானவெத்தனத்தினால் — அறுத்திடுவாய் - அறுக்கக்கடவாய்—பரமமாமறிவில் - மேலானவாத்மஞானத்தில்—முன்னேபுறப்படும்- முன்னுண்டாகியிருக்கும்—பொய்யாமுள்ளம் - மித்தையாயமனது— புவனவிகற்பங்களெனும் - உலகவேற்றுமைகளென்கின்ற—பொய்யை - அசத்தியத்தை—சிறப்புள - சிறப்பையுடைய—விண்ணிலதாயும் - ஆகாயமானது(வடிவ)மில்லாததாயிருந்தும்—இலதான - இல்லாததாகிய—நீலநிறம் - நீலநிறத்தை — செறிவதேபோல் - பொருந்துவதுபோல — காட்டும்- காண்பிக்கும். எ-று. (இ-ம்) ஆத்மப்ரகாசத்தை யதின்சங்கற்பமானமனது, சகம்போலத்தோற்றுவிக்குமென்பதாம்.... ....(௭௰)

(அ-கை.) ஆத்மப்ரகாசநிரூபணம்.(கவி) சோகமுறுசங்கற்பநாசத்தான்மனமாளிற்
றொன்றுதொட்ட, மோகமெனுமூடுபனிவிட்டகலுஞ்சரற்காலமுறிரவந்தான், மாக
ம்விளங்குவதென்ன நல்லறிவுமாத்திரமாய்மாயாதாகி, யேகமாய்வடிவின்றிப்பிறப்
பிறப்பிலாப்பிரம மிலங்குநொய்தாய் .... *

(இ-ள்.) சோகமுறு - துன்பம்பொருந்திய—சங்கற்பநாசத்தால்-சங்கற்பநாசத்தினால் —மனமாளில்- மனதிறந்தால்—தொன்றுதொட்ட-பழைமையாகத்தொடர்ந்துவந்த—மோகமெனும் - மோகமென்கின்ற—மூடுபனி - மூடுபனியானது— விட்டகலும் - விட்டுநீங்கும்— சரற்காலமுறிரவந்தால் - சரற்காலமுதிரும்படிவந்தால்— மாகம்விளங்குவதென்ன - ஆகாயம் ப்ரகாசிப்பதுபோல—நல்லறிவுமாத்திரமாய் - ஆநந்தபோதமாத்திரமாகியும் — மாயாதாகி- அழிவற்றதாகியும்—ஏகமாய் - ஒன்றானதாகியும்—வடிவின்றி- உருவமில்லாததாகியும்—பிறப்பிறப்பிலா - சநநமரணமில்லாததாகியு (மிருக்கின்ற)—பிரமம் - பிரமமானது—நொய்தாய்- சொச்சமாய்—இலங்கும் - ப்ரகாசிக்கும். எ-று. (இ-ம்) பிரமசங்கற்பமா யுதித்தமனதைப்பிரமத்திற்கரைத்துத் தானுமப்பிரம ப்ரகாசமாய்விளங்க வேண்டுமென்பதாம்..... .... (௭௧)

உற்பத்திப்பிரகரணமுற்றிற்று. ஆக கதை - ௰௨ - இ - கவிதை. (௫௱௰௬)

திதிப்பிரகரணத்தில்

சுக்கிரன்கதை.

(அ-கை.) முற்பிரகரணத்திற் சைதன்னியத்திலுண்டான மனோவல்லாசமே சகமென்பதற்கஞ்ஞானபூமியையு மதைநிவிர்த்திப்பதற்கு ஞானபூமியாதியையுமறிவித்து - அச்சகஞ் சைதன்யமயமாக விளங்குமென்பதை யைந்துகதைகணிறைந்த திதிப்பிரகரணத்தி லறிவிக்குநிமித்தம் அவைகளின்முதலிலுள்ள சுக்கிரன்கதையிற் சைதன்யத்தி லுண்டான மனதிற்சகம் விளங்குவதை நிரூபிக்கிறார்.. *

(அ-கை.)சகஸ்திதியினிலக்கணமறிவித்தல். (கவி)வேறு. எழுதுவோனுமெழுதிடமு
மெதிர்காண்பொருளுமிலதாகி, வழுவிலாதவிண்ணிடையே வந்துதோன்றுமோவி
யந்தான், பழுதின்மேவுந்தனைத்தானேபாராநிற்கும்பலபொறியு, நழுவுதுயிலினு
லன்றிநனவான்மேவுங்கனவொக்கும்.. *

(இ-ள்.) எழுதுவோனும்- எழுதுகின்றவனும்—எழுதிடமும்-எழுதுகின்றவிடமும்— எதிர்காண்பொருளும் - எதிராகக்காண்கின்றதிரவியங்களும்—இலதாகி-இல்லாமல்—வழுவிலாதவிண்ணிடை - குற்றமற்றிருக்கின்றசிதாகாயத்தில்—ஓவியந்தான் - (சகமென்னுஞ்) சித்திர

மானது—வற்றாதோன்றும் - உண்டாகித்தோற்றும்—பருநிலைமேவும் - உலைமையாகத்தோற்றிய—கலைத்தாமேயாநிற்கும்- தன்னைத்தானேபார்த்துக்கொண்டிருக்கும்—(ஆகலின்)பலபொறியும் - நாநாவிதவிந்திரியங்களும்—நழுவுதாபிலின்றி- நீங்குகின்றநிந்தனையில்லாமல்—நனவான்மேவும் -.(சகம்) சாக்கிரத்திற்றோற்றும் — கனவொக்கும் - சொற்பனத்தை யொத்திருக்கும். எ-று. (இ-ம்) ஓர்காரணமின்றி ஆத்மாவிற்றோற்றுகின்றசகத்தானது ஆத்மப்ரகாசமாய் நிகழ்தலின் அச்சகந்தீர்க்கசொற்பனமென்பதாம் .... (௧)

(அ-கை.) ஆயிற்சகமின்றேவெனின். (கவி) கரியாய்ச்சமமாய்நொய்தாகிக்கலந்த
விகற்பந்தீரறிவிற், பரியாநின்றவுலகமெலாம் பற்றியாய்தல்கண்ணடியிற், றெரியா
நின்றபொருள்போலாஞ் செறிகாரணகாரியமின்றிப், புரியாநின்ற வுலகெல்லாம்
பொலிந்துபிரமத்திடையிருக்கும் .... *

(இ-ள்.) கரியாய் - சாட்சியாகியும்—சமமாய்- பரிபூரணமாகியும்—நொய்தாகி-சொச்சமாகியும்—கலந்த - வியாபித்திருக்கின்ற — விகற்பந்தீரறிவில் - பேதமற்றவாத்மஞானத்தினால்—பரியாநின்ற - தாங்காநின்ற—உலகமெலாம் - சகங்களனைத்தும்—பற்றியாய்தல்-ப்ரதிபலித்தல்—கண்ணடியில் - கண்ணாடியில்—தெரியாநின்ற - தெரிகின்ற— பொருள்போலாம்-நிழலைப்போலாகும்—செறிகாரணகாரியமின்றி - நெருங்கியகாரணகாரிய (சம்பந்த) மில்லாமல்—புரியாநின்ற - சொல்லாநின்ற—உலகெல்லாம்-சகங்களனைத்தும்—பிரமத்திடை - பிரமத்தினிடத்தில்—பொலிந்திருக்கும் - ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். எ-று. (இ-ம்) பிரமத்தினிடத்தில் ப்ரதிவிம்பமானசகத்தானது ஓர்காரணமுமின்றிவிளங்குமென்பதாம் .... (௨)

(அ-கை.) ஆயிற்சகம்வேறுமேயெனின். (கவி) சொன்னவுலகங்களுக்குருவந்தோ
ன்றுநின்றமாத்திரமாம், பின்னமின்றியாவையுமாய்ப் பேராவறிவாய்ப்பெருவிண்
ணாய், மன்னுபிரமமொன்றென்றேவருந்திமுயன்றுபாவிப்பா, யன்னநிலையேகை
வந்தாலலைவற்றுள்ளமறிவுருவாம் .... *

(இ-ள்.) சொன்னவுலகங்களுக்குருவம் - முன்சொல்லியசகங்களுக்குவடிவமானது—தோன்றுநின்றமாத்திரமாம் - தோன்றுநின்றப்ரதிபலினமாத்திரமேயாம் — பின்னமின்றி-பின்னமில்லாததாகியும்—யாவையுமாய்- சர்வாத்மகமாகியும்—பேராவறிவாய்- நீங்காதபூரணஞானமாகியும்—பெருவிண்ணாய் - வியாபகமானசிதாகாசமாகியும்—மன்னுபிரமம் - நிலைபெற்றிருக்கின்றபிரமஸ்வரூபம்—ஒன்றென்று - ஏகமேயென்று — வருந்திமுயன்று - வருத்தத்துடன்முயற்சிசெய்து—பாவிப்பாய் - ஸ்ரீராமா நீசிந்திப்பாய்—அன்னநிலை - அத்தன்மையுள்ள நிச்சயமானது—கைவந்தால் - கைவசமாயின்—உள்ளம் - மனமானது—அலைவற்று - சலனமற்று—அறிவுருவாம் - (நிச்சலமான) வாத்மஞானஸ்வரூபமாம். எ-று. (இ-ம்) சகமானது வேறாயிருப்பதுபோலத்தோற்றுவதேயன்றிவேறன்றென்பதாம் .... (௩)

(அ-கை.) ஆயிற்சகந்தனியேதோற்றுகின்றதேயெனின். (கவி) கீற்றுப்பலசேரொ
ருகற்போற்கிளருஞ்சகங்கள்செறிபிரமந், தோற்றப்படுமாவிரண்டென்னத்தொடர்
காரணம்வேறிலாமையினா, லாற்றச்சகமென்றொன்றிலதாமறிவேயுளதாமனைத்துல
குந், தேற்றப்பிரமத்திருக்குமிவைதெளியவெள்ளிகதைகேட்பாய் .... *

(இ-ள்.) கீற்றுப்பலசேர் - சித்திரங்களநேகஞ்சேர்ந்திருக்கின்ற—ஒருகற்போல் - ஒருகல்லைப்போல—கிளருஞ்சகங்கள் - ப்ரகாசிக்கின்றவுலகங்களானவை—செறிபிரமம் - நெருங்கியிருக்கின்ற (ஒரு) பிரமமானது—தோற்றப்படும்-தோற்றிக்கொண்டிருக்கும்— இரண்டென்ன - இரண்டென்பதற்கு—தொடர்காரணம்வேறிலாமையினால் - தொடராநின்ற (சககாரி) காரணம்வேறில்லாதபடியினால்—ஆற்றச்சகமென்று - மிகுந்தசகங்களென்று — ஒன்றிலதாம்-(சொல்லுதற்) கொன்றில்லையாம்—அறிவேயுளதாம் - ஆத்மஞானமேயுள்ளதாம்—அனைத்துலகும் - சகலசகங்களும்—தேற்றப்பிரமத்திருக்கும் - நிச்சயமானபிரமத்தினிடத்திற்ப்ரதிபாமாத்திரமாயிருக்கும்—இவைதெளிய - இவைதெளியும்பொருட்டு—வெள்ளிகதை - சுக்கிராசாரியாருடையகதையை—கேட்பாய் - ஸ்ரீராமா நீகேட்கக்கடவாய். எ-று. (இ-ம்) கல்லைவிளக்கும்ப்ரதிமை யக்கல்லாயிருந்துமுருபதிருஷ்டியால் வேறாகத்தோற்றுவதுபோலச் சித்தைவிளக்குஞ்சகஞ்சித்தாயிருந்தும் திரிஸயதிருஷ்டியால் வேறாகத்தோற்றுமென்பதாம் .... (௪)

(அ-கை.) இதற்குத்திருஷ்டாந்தம்பார்க்கவரனுபவத்தைநிரூபித்தல். (கவி)முன்ன
மொருநாட்பிருகுமுனிமுதுமந்தரமால்வரைச்சாரன்,மன்னுதவஞ்செய்யுழியவன்
றன்மைந்தன்மதிமான் மதியனையோன், றன்னதாதைகழற்பிரியான் றனிமெய்ஞ்
ஞானமஞ்ஞான,மென்னுமிருபார்வையினடுவேயியங்காநின்றபெரும்பதத்தோன்.

(இ-ள்.) முன்னமொருநாள் - முன்பொருகாலத்தில்—பிருகுமுனி - பிருகுமுனியான

வர்—முதுமால் - பழைமையுமுயர்வுமுள்ள—மந்தரவரைச்சாரல்-மந்தரகிரியினருயக்கத்தில் —மன்னுதவஞ்செய்யுழி - நிலைபெற்றதவத்தைச்செய்யுமிடத்தில்—அவன்றன்மைந்தன்- அவருடையபுத்திரன்—மதிமான் - அறிவையுடையவன்—மதியனையோன் - சந்திரனையொத்தவன் —தன்னதாதை - தன்பிதாவினுடைய—கழற்பிரியான் - பாதத்தினின்றுநீங்காதவன் — தனிமெய்ஞ்ஞானமஞ்ஞானமென்னும் - ஒப்பற்றஞானஞ்ஞானமென்கின்ற— இருபார்வையினடுவே - இரண்டுபார்வையின்மத்தியில் — இயங்காநின்றபெரும்பதத்தோன் - விளங்காநின்றமகாபதத்தையுடையவனாயிருக்கின்றான். எ-று .... (௫)

(அ-கை.) சிதாகாயத்திலுதித்தசங்கற்பமேஸ்திரவடிவமாதல். (கவி) செறியந்தரத்தேநிற்கின்றதிரிசங்குவைப்போற்சுக்கிரனு, மறிவோடறியாமையினடுவேயமருநாளிலவன்றாதை, பிறிவில்சமாதியுறநிற்பபிரியாவெள்ளிதனியிருந்து, வெறியவிசும்பைநோக்குதலும்விண்மாதொருத்திவரக்கண்டான் .... ✻

(இ-ள்.) செறி - நெருங்கிய—அந்தரத்தேநிற்கின்ற- ஆகாயமத்தியிலிருக்கின்ற—திரிசங்குவைப்போல் - திரிசங்குராசனைப்போல—சுக்கிரனும் - சுக்கிராசாரியாரும் — அறிவோடறியாமையினடுவே - அறிவறியாமையின்மத்தியில்—அமருநாளில் - அமர்ந்திருக்கின்றகாலத்தில்—அவன்றாதை-அவருடையபிதாவாகியபிருகுமுனியானவர் — பிறிவில்சமாதியுறநிற்ப-நிருவிகற்பசமாதியிற்பொருந்தும்படியிருக்க—பிரியாவெள்ளிதனியிருந்து-(பிதாவை)விட்டுநீங்காதசுக்கிரனானவர்தனித்திருந்து—வெறியவிசும்பை - சுத்தமாகியவாகாயத்தை—நோக்குதலும் - பார்க்கவும் — விண்மாதொருத்தி - ஒருதேவஸ்திரீயானவள் — வரக்கண்டான்-வரப்பார்த்தனன். எ-று .... (௬)

(அ-கை.) அச்சங்கற்பவடிவமாய்மனோராச்சியஞ்செய்தல். (கவி) மந்தாநிலத்தாலசைகின்றமந்தாரஞ்சூழ்மலர்குழலா, டந்தாவளத்தின்பிடிபோலத்தனியேவரலுமெதிர்நோக்கிச், சிந்தாவசனாயவள்வடிவைத் தியானித்திருகண் முகிழ்த்திருந்து, முந்தாநின்றவேட்கையினான்முடிவின்மனோராச்சியமுயன்றான் .... ✻

(இ-ள்.) மந்தாநிலத்தாலசைகின்ற - தென்றற்காற்றாலலைகின்ற— மந்தாரமலர்சூழ்-மந்தாரபுட்பங்கணிறைந்த—குழலாள் - அளகத்தையுடையவள்—தந்தாவளத்தின்பிடிபோல-பெண்யானையைப்போல—தனியேவரலும் - தனித்துவரவும்—எதிர்நோக்கி - எதிரேபார்த்து —சிந்தாவசனாய் - சிந்தாக்கிராந்தனாய்—அவள்வடிவைத்தியானித்து- அந்தப்பெண்ணினுருவத்தைச்சிந்தித்து—இருகண்முகிழ்த்திருந்து- இருவிழிகளையுமூடிக்கொண்டிருந்து—முந்தாநின்றவேட்கையினால் - மூந்துமாசையினால் — முடிவின்மனோராச்சியம் - அளவிறந்தமனோராச்சியத்தில்—முயன்றான் - முயற்சித்தான். எ-று .... (௭)

(அ-கை.) விண்ணுலகமாகக்காண்டல். (கவி) பொன்னாட்டணங்கேயிவளந்தப் பொன்னாட்டியானும்போய்ப்புகுந்தே, யின்னாட்டமரரிவர்போற்றவெழில்கூர்சிங்காதனத்திலிவன், மின்னாற்செறியுமுகிலென்னவேந்தாமிவனைச்சூழ்ந்துமதன்,றன்னாற்களிக்குமரம்பையர்தஞ்சமுகமிவையென்றுளத்துணர்ந்து .... ✻

(இ-ள்.) இவள் - இந்தப்பெண்—பொன்னாட்டணங்கே - தெய்வலோகத்துஸ்திரீயே (யென்றுநிச்சயித்து)—அந்தப்பொன்னாடு - அந்தத்தெய்வலோகத்தில் —இயானும்போய்ப்புகுந்து - நானும்போயடைந்து — இன்னாட்டமரர் - இந்தவுலகத்துக்குத்தேவர்களாகிய— இவர்போற்ற - இவர்கடுதிக்க—எழில்கூர் - அழகுமிகுந்த—சிங்காதனத்தில் - சிங்காதனத்தின்மேல்—மின்னாற்செறியும் - மின்னல்கணிறைந்த —முகிலென்ன - மேகத்தைப்போல—இவன்வேந்தாம் - இவன்றேவேந்திரனும்—இவனைச்சூழ்ந்து - இவ்வரசனைச்சூழ்ந்து — மதன்றன்னாற்களிக்கும் - காமத்தினாற்களிக்கின்ற—அரம்பையர்தஞ்சமுகமிவையென்று - தெய்வமாதர்களின்கூட்டமிவையென்று—உளத்துணர்ந்து-மனதிலறிந்து. எ-று .... (௮)

(அ-கை.) விண்ணுலகத்திற்சங்கற்பமாதைக்காண்டல். (கவி) இமையோரிறையையிவன்வணங்கவிவனையவனுமிறைஞ்சியபின், னமையாவின்பவிண்ணாட்டிலகலாதுலவுமவ்வளவிற், சுமைவார்கொங்கையரம்பையருள் சொன்னவவண்முன் றோன்றுதலுங், கமையாவன்பாற்கண்களிப்பக்கண்டானவளுங்கண்ணுற்றாள் .... ✻

(இ-ள்.) இமையோரிறையை - தேவேந்திரனை—இவன்வணங்க - இந்தச்சுக்கிரன்வணங்க—இவனையவனும் - இந்தச்சுக்கிரனையத்தேவேந்திரனும்—இறைஞ்சியபின் - வணங்கியபின்பு—அமையாவின்பம் - கிடைத்தற்கரியசுகத்தையுடைய—விண்ணாட்டில் - தெய்வலோகத்தில்—அகலாதுலவும் - நீங்காமற்சஞ்சரிக்கின்ற—அவ்வளவில் - அத்தருணத்தில்—சுமைவார்கொங்கை - பருத்துங்கச்சணிந்துமிருக்கின்றதனங்களையுடைய — அரம்பையருள் - தெய்வப்

பெண்களுள்—சொன்னவவள் - முன்சொல்லியவந்தப்பெண்—முன்றோன்றுதலும்-முன்னே
தோற்றினமாத்திரத்தில்—கமையாவன்பால் - சகித்தற்கரியவிச்சையினால் — கண்களிப்ப-
(இரண்டு) கண்களுங்களிக்கும்படி—கண்டான்- சுக்கிரன்பார்த்தான்—அவளுங்கண்ணுற்றாள்-
அத்தெய்வப்பெண்ணுமப்படியேபார்த்தாள். எ-று .... (கூ)

(அ-கை.) சுத்தசங்கற்பஞ்செய்தல். (கவி.) இருவர்விழியுநினைவுகளு மேகமாகவுறப்பற்றி,
யுருகுமளவிற்சங்கற்பத் தொன்றும்பிழையாவுயர்வெள்ளி, கருகுமிருண்மூடுகவென்று
கற்பித்திடலுங்கற்பாந்த, பருவம்போலுமிருள்சூழப் பலருமகன்றார்பலதிசையும்....... *

(இ-ள்.) இருவர்விழியும் - (அவ்) விருவருடையகண்களும்—நினைவுகளும்- மனங்களும்—
ஏகமாகவுறப்பற்றி - ஒன்றாகக்கலந்து—உருகுமளவில்- உருகுகின்றசமயத்தில்—சங்கற்பத்து-
சங்கற்பித்தகாரியங்களில் — ஒன்றும்பிழையா - ஒன்றுந்தப்பாத— உயர்வெள்ளி - பெருமை
யையுடையசுக்கிரன்—கருகுமிருண்மூடுகவென்று - கரியவந்தகாரமூடிக்கொள்ளக்கடவதென்
று—கற்பித்திடலும் - சங்கற்பிக்கவும்—கற்பாந்தப்பருவம்போலு - கற்பாந்தகாலத்தைப்போ
லும்—இருள்சூழ-அந்தகாரமூடிக்கொள்ள—பலரும் - (அவ்விடத்திலுள்ள) சகலரும்— பலதி
சையும் - பலதிசைகளிலும்—அகன்றார் - நீங்கினார்கள். எ-று .... (ய)

(அ-கை.) விஷயாநந்தமனுபவித்தெய்த்தல். (கவி) அன்னாளிவனைவந்தணையவழ
கார்தருநீழலிலொருபாற், றுன்னுமுயங்கியோருயிராய்த் துன்பமில்லாவின்பத்தி,
னன்னாளாகச்சதுரியுகநாலுநாலுநடந்ததற்பின், முன்னும்புரிந்ததருமமெலாமுடி
யுமுடியு மெனுங்கருத்தால்......... ....*

(இ-ள்.) அன்னாளிவனை - அத்தெய்வப்பெண்ணிந்தச்சுக்கிராசாரியனை — வந்தணைய-
வந்துபொருந்த—அழகார்தருநீழலில்- அழகுபொருந்தியகற்பகவிருக்ஷத்தினிழலில்—ஒருபா
ல்- ஒருபக்கத்தில்— துன்னுமுயங்கி - நெருங்கிச்சேர்ந்து—ஓருயிராய்-(இருவரு)மோருயிராக
—துன்பமில்லாவின்பத்தில் - இடையூறில்லாத (விஷய) சுகத்தில்—நன்னாளாக- நல்லகாலமாக
—சதுரியுகநாலுநாலும் - எட்டுசதுர்யுகமும்—நடந்ததற்பின்-கழிந்தபின்பு—முன்னும்புரிந்
த-முன்னமேயாஞ்செய்த—தருமமெலாம் - தருமங்களனைத்தும்—முடியுமுடியும் - முடிந்து
போமுடிந்துபோம்—எனுங்கருத்தால் - என்கின்றசிந்தனையினால். எ-று .... (யக)

(அ-கை) தன்னைமறந்து பிராமணனாதல். (கவி) விழுந்தான்புவனமண்டலத்தின்
மெய்யைமறந்தானிவன்சீவன்,கொழுந்தார்மதியின்கலைசேர்ந்துகுளிர்ந்தபனியாய்
நெல்லாகிச்,செழுந்தாணெல்லைத்தேசார்ணதேசமறையோன்சமைத்தருந்த,வெழு
ந்தாதுவுமாய்ச்சுக்கிரன்வந் திவன்பாரியைபான்மகவானான்........................ ... *

(இ-ள்.) புவனமண்டலத்தின் - (தேவலோகத்தினின்று) பூலோகத்தில் — விழுந்தான்-
வந்துசேர்ந்தான்—மெய்யைமறந்தான் - தனதுவடிவத்தைமறந்தான்—இவன்சீவன்- இந்தச்
சுக்கிரனுடையசீவனானது—கொழுந்தார் - கிருதுவாகிய—மதியின்கலைசேர்ந்து - பூர்ணச்சந்
திரகலையைச்சேர்ந்து — குளிர்ந்தபனியாய் - குளிர்ச்சியையுடையபனியாகி — நெல்லாகி-
(அந்தப்பனியினால்) நெல்லாகி— செழுந்தாணெல்லை - (அந்தச்) செழித்ததாளையுடையநெல்
லை—தேசார்ணதேசம் - தேசார்ணதேசத்திலுள்ள—மறையோன் - பிராமணன்—சமைத்தரு
ந்த - சமையற்செய்துபுசிக்க—எழுந்தாதுவுமாய்-உண்டாகின்றவிந்திரியரூபமாய்—சுக்கிரன்
வந்து - சுக்கிராசாரியர்வந்து—இவன்பாரியைபால் - இப்பிராமணன்மனைவியினிடத்தில்—மக
வானான் - புத்திரனாகப்பிறந்தான். எ-று .... (யஉ)

(அ-கை.) புத்திரன்வடிவமாதல். (கவி) அன்னான்முனிவர்தொடர்ச்சியினாலரியதவ
மோர்மனுக்காலம், பொன்னார்வரைசூழ் வனத்திடையே புரிந்தானவனங் கொரு
பெடைமான், றன்னாலொருசேய்நரர்வடிவாய்ச் சாதனானவனன்பாற், பின்னு
நின்றபேதைமையாற்பேராவுண்மைநிலைபெயர்ந்தான் .... *

(இ-ள்.) அன்னாள் - அக்காலத்தில்—முனிவர்தொடர்ச்சியினால்- தபசிகளின்றொடர்பி
னால்—அரியதவம் - அரிதாகியதவத்தை—ஓர்மனுக்காலம் - ஒருமனுவுள்ளபரியந்தம்—பொ
ன்னார்வரை-கனகமயமானமகாமேருவை—சூழ்வனத்திடை-சூழ்ந்திராநின்றவாரணியத்தில்—
புரிந்தான் - செய்தான்—அவனங்கு- அச்சுக்கிரனவ்விடத்தில்—ஒருபெடைமான்றன்னால்-ஒரு
பெண்மானினால்—ஒருசேய் - ஒருபுத்திரனை—நரர்வடிவாய் - மனிதவடிவாக — சாதனானான்-
பெற்றான்—அவனன்பால் - அப்புத்திரவாஞ்சையினால் — பின்னுநின்றபேதைமையால் - பந்
தப்படுத்துகின்றவறியாமையினால் — பேராவுண்மைநிலை - கெடாதவுண்மைநிலையினின்று—
பெயர்ந்தான் - நீங்கினான். எ-று .... (யங)

கும்-இல்லனவாம்—விமலமல்லாவிழிக்கு - அஞ்ஞானதிருஷ்டிக்கு—இவர்கண்மிசவுமுளவாம்-இக்கருத்தாவும்போக்த்தாவு மிகவுமுண்டாயிருப்பர்—விதிவயத்தால் - கன்மவசத்தினால்— பல்லுயிரும் - சகலபிராணிகளும்—தமது நினைவால்- தங்கள்சங்கற்பத்தினால்—சனிக்கும்-பிறக்கும்—கற்பமுடிவிற்போம் - கற்பாந்தத்தினசிக்கும். எ-று .... (௨௨)

(அ-கை.) முனியின்விசாரமின்மையை வெளிப்படுத்துநிமித்தங்காலன்கிருபையுடன்கோபித்தல். (கவி) கற்பதானமறைதருசிற்கண்ணதெங்கே சிரத்தையதாய், நிற்பதெங்கேயுயர்வெங்கே நெடியோர்விளங்குமிந்நெறிக்கே, யற்பரானகுருடரானவயர்வதென்னத்தம்வினையா, லுற்பவிக்குஞ்செயல்பாராதுருத்துச்சபிக்கவுரியாயோ

(இ-ள்.) கற்பதான - அத்தியயனஞ்செய்வதாகிய—மறைதரு - வேதங்களாற்கொடுக்கப்பெற்ற—சிற்கண்ணதெங்கே - ஞானதிருஷ்டியெங்கே— சிரத்தையதாய் - உறுதியாக—நிற்பதெங்கே - இருப்பதெங்கே—உயர்வெங்கே - (உமது)மகிமையெங்கே — நெடியோர்விளங்கும் - பெரியோர்கள்ப்ரகாசிக்கின்ற—இந்நெறிக்கு - இந்தமார்க்கத்துக்கு—அற்பரான-அற்பவறிவையுடையவராகிய— குருடரான - அந்தகரைப்போல — அயர்வதென்ன - நீதளர்ச்சியடைவதென்ன—தம்வினையால் - (உனதுபுத்திரன்) றனதுசங்கற்பத்தினால் — உற்பவிக்கும்-உண்டான—செயல்பாராது - செய்கையுணராமல்—உருத்து-கோபித்து—சபிக்கவுரியாயோ-நீசபித்தற்குரியவனோ. எ-று .... (௨௩)

(அ-கை.) காலனுபதேசித்தல். (கவி) மனமேபுருடன்மற்றில்லை மனத்தின்செயலேசெயலாகுங், கனசீவனத்தாற்சீவனுமாங்கவர்நிச்சயத்தாற்புத்தியுமாஞ், சினவுமபிமானத்தாலேதீயவகங்காரமுமாகுந், தனதுவிகற்பசாலத்தாற்றனேசகமாந்தனிமனமே .... *

(இ-ள்.) மனமேபுருடன் - மனமேவாத்மாவாம்—மற்றில்லை-வேறின்று—மனத்தின்செயலே - மனத்தினதுதொழிலே—செயலாகும் - தொழிலாகும் — கனசீவனத்தால் - மிகவுஞ்சீவிக்கின்றதினால்—சீவனுமாம் - சீவனுமாகும்—கவர்நிச்சயத்தால் - கிரகிக்கின்றநிச்சயத்தினால்—புத்தியுமாம் - புத்தியுமாகும்—சினவுமபிமானத்தால் - சினக்குறிப்புடன்(யானெனதென்னு) மபிமானத்தினால்—தீயவகங்காரமுமாகும்- கொடியவகங்காரமுமாம்—தனதுவிகற்பசாலத்தால் - தனதுவேற்றுமைமிகுதியினால்—தனிமனமே - தனித்தமனதே—சகமாம்-உலகமாகும். எ-று. (இ-ம்) பிரமசங்கற்பமானமனதே சகலமுமாய்விளங்குமென்பதாம்.... (௨௪)

(அ-கை.) சுக்கிரன்மனோசங்கற்பத்தாலெடுத்தவடிவங்களையறிவித்தல். (கவி) ஆதலாலுன்புதல்வனுநீயலைவில்சமாதியமர்போதிற், காதலாலேசுக்கிரனுங்காயந்தன்னையிவணிருத்தி, மீதில்விச்சுவாசியெனும்விண்ணாட்டணங்கைமேவியபின், னோதுபுவியிற்றேசார்ணவொருவேதியன்பாலுற்பவித்து .... *

(இ-ள்.) ஆதலால் - அதினால்—உன்புதல்வனும் - உமதுபுத்திரனும்—நீயலைவில்- நீநிருவிகற்பமாகிய—சமாதியமர்போதில்-சமாதியைப்பொருந்தினகாலத்தில்—காதலால்-ஆசையினால்—சுக்கிரனும் - சுக்கிரனென்னும்—காயந்தன்னை - தனதுசரீரத்தை — இவணிருத்தி-இவ்விடத்தில்வைத்து—மீதில் - ஆகாயத்தில் —விச்சுவாசியெனும் - விச்சுவாசியென்னும்பெயரையுடைய — விண்ணாட்டணங்கைமேவியபின் - தேவலோகஸ்திரீயை (மனதினு) லடைந்தபின்பு—ஓதும்புவியில் - சொல்லும்பூமியில்—தேசார்ணம்- தேசார்ணதேசத்திலுள்ள— ஒருவேதியன்பாலுற்பவித்து - ஓரந்தணனிடத்திற்புத்திரனாகப்பிறந்து. எ-று..... ....(௨௫)

(அ-கை.) இ-து. வேறு. (கவி) கோசலதேசந்தன்னிற்கொற்றவனாகத்தோன்றி, வீசலர்வனத்தினூடேவேடனாயுதித்துகங்கை, மாசலமருவுபாரின் மராளமாய்ப் பௌண்டரத்திற், பேசருநிருபனானன் பெருங்கதிர்குலத்துவந்து .... *

(இ-ள்.) கோசலதேசந்தன்னில் - கோசலநாட்டில்—கொற்றவனாகத்தோன்றி - அரசனாகப்பிறந்து—வீசலர்வனத்தினூடு - விசாலமானகாட்டினுள்ளே—வேடனாயுதித்து- வேடனாகப்பிறந்து—கங்கைமாசலமருவு - கங்காசலம்பொருந்திய—பாரில் - கரையில்— மராளமாய்-அன்னமாய்ப்பிறந்து—பௌண்டரத்தில்-பௌண்டரதேசத்தில்—பெருங்கதிர்குலத்தில்வந்து-உயர்ந்தசூரியவம்சத்திற்பிறந்து—பேசருநிருபனானன் - சொல்லற்கரியவரசனாயினன். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) சாலுவநாட்டிற்பானுமந்திரத்தலைவனானன், மேலுயர்கற்பகாலம்விஞ்சையர்வேந்தனானன், வாலுணர்வுளதாயங்கோர்மாதவன்மதலையானன், சேலுகள்சவ்வீரத்திற்சேர்ந்தசாமந்தனானன் .... *

(இ-ள்) சாலுவநாட்டில் - சாலுவதேசத்தில்— பானுமந்திரத்தலைவனானன் - சூரியவம்சத்துக்குவாசாரியனானன்—மேலுயர்கற்பகாலம் - பின்புமிகுந்தகற்பகாலவளவும்— விஞ்சை

யர்- வித்தியாதரருக்கு—வேந்தனுனன் - அரசனுனன்—வாலுணர்வுளதாய் - பரிசுத்தவறிவுள்ளவனுய்—அங்கு - அவ்விடத்தில்—ஓர்மாதவன் - ஒருதபோமுனிவனுடைய— மதலையானன்- புத்திரனுனன்—சேல் - சேற்கெண்டைகள்—உகள் - (கமுகிற்ருவிதடாகத்திற்) குதிக்கின்ற—சவ்வீரத்தல் - சவ்வீரநாட்டில் — சேர்ந்த - பொருந்திய — சாமந்தனுனன் - சாமந்தனுகப் பிறந்தான். எ - று ....(௨௭)

(அ-கை.) இ-து. (கவி) திரிகத்ததேசந்தன்னிற் றேசிகச்சைவனுனன், முருகர்சூழ்வேடரூரின்மூங்கிலாரணியமானு, னரிணத்தோர்பிறப்பாய்சீர்ண சாங்கலத்தமரலுற்றன்,விரிவில்சூழ்பனையின்காட்டில் வெஞ்சினப்பாந்தளானன்.......................... *

(இ-ள்.) திரிகத்ததேசந்தன்னில் - திரிகத்தமென்னுந்தேசத்தினிடத்தில்— தேசிகச்சைவனுனன் - சைவசமையத்துக்காசாரியனுனன்— முருகர்சூழ் - வாசனைசூழ்ந்த — வேடரூரில்- வேடுவர்பட்டணத்தில் — மூங்கிலாரணியமானுன் - மூங்கிற்காடானன் — சீர்ணசாங்கலத்து- சீரணமானசிறுகாட்டில்—அரிணத்தோர்பிறப்பாய் - ஒருமான்பிறப்பாய் — அமரலுற்றன்- அமர்ந்திருந்தான்—விரிவிற்சூழ் - விரிவாகச்சூழ்ந்திருக்கின்ற— பனையின்காட்டில்- தாலவனத்தில் — வெஞ்சினம் - வெவ்வியகோபத்தையுடைய — பாந்தளானன் - (மலைப்) பாப்பாகப் பிறந்தான். எ - று ....(௨௮)

(அ-கை.) இ-து (கவி) இவ்வண்ணமநந்தயோனியிழிவுயர்வாகவெய்தி,மைவண்ணமனத்தினுலேவாதனைவயத்தினின்று,மெய்வண்ணக்கங்கைமாட்டோர்மெய்ம்முனிக்குமரனுகி, பொய்வண்ணப்பொறிகளென்னும் புன்பகையறுத்துவென்று ...... *

(இ-ள்.) இவ்வண்ணம் - இந்தப்பிரகாரம்—அநந்தயோனி - (கான்கோழிமுதலாகிய) வளவில்லாதயோனிகளில்—இழிவு - தாழ்வாகவும்—உயர்வாக - மேலாகவு (மிருக்கின்றசநநங்களை)—எய்தி - அடைந்து—மைவண்ணமனத்தினுல் - களங்கமுள்ளமனதினுல்—வாசனைவயத்தினின்று - வாசனுவயத்தினின்று — மெய்வண்ணக்கங்கைமாட்டு - மெய்ம்மையாலகங்காநதியின்பக்கத்தில் — ஓர்மெய்ம்முனிக்குமரனுகி - ஒப்பற்றவுண்மையானரிஷிபுத்திரனுய்—பொய்வண்ணம் - அசத்தியவடிவமான—பொறிகளென்னும்- இந்திரியங்களென்கின்ற—புன்பகைஞனமாகியசத்துருக்களை—அறுத்துவென்று - கெடுத்துவெற்றியடைந்து. எ-று ....(௨௯)

(அ - கை.) இ-து. (கவி) வரிசடைபலவுங்கட்டி வாசுதேவப்பேர்மேவி, புரிதவமெண்ணூறுண்டுபொருந்தினனினதுமைந்தன், திரிதருகனவையொத்தசித்தத்தின் மயக்கந்தன்னைப், பரிவுறக்காண்டியென்னிற் சிற்கணுற்பார்த்தியென்றன் .... *

(இ-ள்.) வரிசடைபலவுங்கட்டி- நீண்டசடைகள்முதலியவனைத்தையுந்தரித்து—வாசுதேவப்பேர்மேவி - வாசுதேவனென்னுநாமத்தைப்பொருந்தி—புரிதவம் - செய்யாநின்றதபசை—எண்ணூறுண்டு - எண்ணூறுவருடம்—பொருந்தினன்-அமைந்திருந்தான்—நினதுமைந்தன் - உனதுபுத்திரனுகியசுக்கிரன்—திரிதரு - சுழலாநின்ற—கனவையொத்த - சொற்பனத்துக்கொப்பான—சித்தத்தின் - மனதிலுண்டான— மயக்கந்தன்னை - மயக்கத்தை — பரிவுற- அன்பாக — காண்டியென்னில் - பார்க்கவேண்டுவையாயின் — சிற்கணுற்பார்த்தியென்றன்- ஞானதிருஷ்டியினுற் பார்ப்பாயென்றுகாலன்சொன்னுர். எ-று. (இ-௬-௧-ம்) சுக்கிரனிறந்தெடுத்தவடிவங்களின் காரணத்தைஞானதிருஷ்டியாற் பார்க்கும்படி காலன்போதித்ததாம். (௩௰)

(அ-கை.) வியாபகதிருஷ்டியாற்பார்த்து மயக்கந்தெளிந்துரைத்தல். (கவி) காலனீதுரைப்பக்கேட்ட கலைமுனிஞானக்கண்ணுற், பாலகன்செய்கையெல்லாம் பார்த்தனன்கணத்தினெல்லை, மேலதாமொளியாற்றேற்றமாத்திரம்விளங்கிநல்ல, சீலமார்புந்தியென்னுந் தெளிந்தகண்ணடியிற்பாய்ந்த.................................. *

(இ-ள்.) காலனீதுரைப்ப - யமனுனவனிதைச்சொல்ல—கேட்டகலைமுனி - கேள்வியுற்றகல்வியுள்ளபிருகுமுனியானவர்—ஞானக்கண்ணுல் - (தனது) ஞானதிருஷ்டியினுல்—மேலதாமொளியால் - மேன்மையானஞானப்ரகாசத்தினுல்—தோற்றமாத்திரம்- ப்ரதிபாமாத்திரமாக—விளங்கி - ப்ரகாசித்து—நலஞ்சீலமார் - நல்லொழுக்கமுள்ள—புந்தியென்னும் - அறிவென்கின்ற—தெளிந்தகண்ணடியிற்பாய்ந்த-தெளிவுற்றகண்ணுடியிற்ப்ரதிபலித்ததாகிய—பாலகன்செய்கையெல்லாம் - (தனது) புத்திரனுடையவிருத்தாந்தங்களியாவையும் — கணத்தினெல்லை- நொடியளவில்—பார்த்தனன் - பார்த்தான். எ - று ....(௩௧)

(அ-கை.) இ-து. (கவி.) வானதிக்கரையினின்று மந்தரச்சாரலிற்றன், மேனியில்வந்துசார்ந்த மெய்ப்முனிவியந்துசால, வூனமில்காலன்றன்னை யொன்றலாவேண்டுகோளா, லானதோர்காதமில்லா வருமுனிபகர்வதானுன் .... *

(அ-கை.) அமனஸ்கபாவத்தைச்சடத்தின்மேல்வைத்துத்துதித்தல். (கவி) பின்னருமுரைப்பானையபெறலருஞ்சுகங்களாலே,முன்னநீவளர்ந்தகாயமொய்துயரனைத்துமாறி, யின்னல்கூர்காதலையமிதாகிதமெல்லாமின்றி, மன்னியசுகமதாகிமனமிறந்திருந்ததன்றே. *

(இ-ள்.) பின்னருமுரைப்பான் - பின்பும்வாசுதேவன்சொல்லுவான் — ஐய - (எனது) பிதாவே—பெறலருஞ்சுகங்களால் - பெறுதற்கரியசுகங்களினால் — முன்னநீவளர்த்தகாயம்-முன்புநீர்வளர்த்தசரீரமானது—மொய்துயரனைத்துமாறி - நெருங்கினதுன்பமியாவுநீங்கி—இன்னல்கூர் - துன்பமிகுந்த —காதல் - ஆசையும்—ஐயம் - சந்தேகமும்—இதம்- இதமும்—அகிதம் - அகிதமுமாகிய—எல்லாமின்றி - அனைத்துமில்லாமல்—மன்னியசுகமதாகி-நிலைபெற்றவாநந்தமாய்—மனமிறந்திருந்தது - மனநசித்திருந்தது. எ-று .... (சஉ)

(அ-கை.) சுகாதீதத்தைச்சடத்தின்மேல்வைத்துரைத்தது. (கவி) மனமிலாநிலையினன்றி மன்னுயிர்க்கின்பமுண்டோ, கனமுறுசுகசம்போகக்கடலிலேதிளைக்கலாகு, மனகபேரறிவுசாந்தமறிவுளோர்தாபநீங்கி, தனதுயர்நிலையாமிந்தத்தனியுடல்வாழ்ந்ததன்றே *.

(இ-ள்.) மனமிலாநிலையினன்றி-மனமிறந்தநிலையையல்லாமல்—மன்னுயிர்க்கின்பமுண்டோ - மிகுந்தசீவர்களுக்குச்சுகமுண்டாமோ—கனமுறுசுகசம்போகக்கடலில்- பேராநந்தானுபவமாகியசமுத்திரத்தில்—திளைக்கலாகும் - முழுகப்பட்ட—அனகபேரறிவு - களங்கமற்றவியாபகஞானத்துக்கும்—சாந்தம்-உபசாந்தத்துக்கும்—அறிவுளோர்-ஞானவான்கள்—தாபநீங்கி - துன்பநீங்கியிருக்கின்ற — தனதுயர்நிலை - தனதுமேலானவாத்மநிச்சயத்துக்கும்—ஆம்-ஒப்பாக—இந்தத்தனியுடல்-இத்தனிமையானசரீரமானது—வாழ்ந்தது-சுகத்தையடைந்திருந்தது. எ-று. (இ-ரு-க-ம்) சங்கற்பநாசத்திலுண்டானபிரமசுகத்தையறிவித்ததாம்.. (சரு)

(அ-கை.) காலன்அசுராசாரியராகக்கடவதென்றனுக்கிரகித்தல். (கவி) அருந்தவப்பயனாலிந்த வற்புதங்கண்டேனென்ன, விருந்தவக்காலனோக்கி யிவ்வுரையிகந்துமாற்றி, பொருந்தியவுடலின்மன்னர்புரிபுகுமதுபோற்புக்கு, திருந்தியவசுரர்க்கெல்லாந்தேசிகச்செய்கைசெய்வாய் .... *

(இ-ள்.) அருந்தவப்பயனால் - அரியதபோபலத்தினால்—இந்தவற்புதம்-இந்தவாச்சரியத்தை—கண்டேனென்ன - பார்த்தேனென்றுவாசுதேவன்சொல்ல—இருந்த - (சமீபத்தி) லிருந்த—அக்காலனோக்கி - அந்தக்காலனானவர்பார்த்து— இவ்வுரை - இந்தவார்த்தையை—இகந்துமாற்றி - தடுத்து—பொருந்தியவுடலில்- அடுத்திருக்கின்றவிச்சரீரத்தில்— மன்னர்புரிபுகுமதுபோல் - அரசர்க(டனது)பட்டணத்திற்ப்ரவேசிப்பதுபோல— புக்கு - புகுந்து—அசுரர்க்கெல்லாம் - அவுணர்களனைவர்க்கும்—திருந்திய - திருத்தத்தையுடைய—தேசிகசெய்கைசெய்வாய் - ஆசிரியக்கிரிகையைச்செய்வாய். எ-று..... .... (சச)

(அ-கை.) சுக்கிரனதுவடிவத்திற்புகுதல். (கவி) என்றுசுக்கிரனையேவி யிவரிருவரையும் வாழ்த்தி, நின்றுழிமறைந்தான்காலனீத்தவர்மறுகிநின்றார், பின்றையவாசுதேவப்பேருறுகருத்தைநீக்கி, வன்றகைவெள்ளிமுன்னமருவியவுடலிற்புக்கான் ... . *

(இ-ள்.) என்று - (இப்படி) யென்று—சுக்கிரனையேவி - சுக்கிராசாரியருக்காக்கியாபனஞ்செய்து—இவரிருவரையும் - இந்தப்பிருகுமுனியையுஞ்சுக்கிராசாரியரையும் — வாழ்த்தி-ஆசீர்வாதஞ்செய்து—காலன் - காலனானவர்—நின்றுழி-நின்றவிடத்தில்—மறைந்தான்-மறைந்துபோனார்—நீத்தவர் - (காலனைவிட்டுப்) பிரிந்தவர்கள்—மறுகிநின்றார்- விசனமடைந்திருந்தார்கள்—பின்றை - பின்பு—அவ்வாசுதேவப்பேரூறு - அந்தவாசுதேவனென்னுநாமத்தையுடைய—கருத்தைநீக்கி - நினைவைத்தள்ளி—வன்றகைவெள்ளி - வலியபெருமையையுடைய சுக்கிராசாரியரானவர்—முன்னமருவிய - முன்பொருந்தியிருந்த— உடலிற்புக்கான் - சரீரத்திற்பொருந்தினார். எ-று.. (சரு)

(அ-கை.) சுக்கிராசாரியராகவெழுதல். (கவி) வினையதுவயத்தினாலே வெள்ளிசேருடலந்தன்னைத், தனைநிகர்பிருகுவேதமந்திரசலத்தாலாட்ட, நனைதலுநாடியெல்லாநயம்பெறப்பிராணன்றங்கி, யனையவனெழுந்துதாதையடிபணிந்தருகுநின்றான் .... *

(இ-ள்.) வினையதுவயத்தினால் - விதியின்வசத்தினால்—வெள்ளிசேருடலந்தன்னை-சுக்கிரனடைந்தசரீரத்தை—தனைநிகர் - தனக்குத்தானேசமானமாகிய—பிருகு - பிருகுமுனிவர்—வேதமந்திரசலத்தாலாட்ட - கமண்டலத்திலுள்ளவேதமந்திரதீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்விக்க—நனைதலும்-நனையவும்—நாடியெல்லாம்-நரம்புகளனைத்தும்—நயம்பெற-நயத்தையடைய—பிராணன்றங்கி-பிராணனைத்தரித்து—அனையவனெழுந்து - அச்சுக்கிராசாரியரெழுந்து—தாதையடிபணிந்து-பிதாவின்பாதத்தைவணங்கி— அருகுநின்றான்-பக்கத்திலின்றான். எ-று.

(அ-கை.) சீவன்முத்தனுக்குச்சஞ்சரித்தல். (கவி) பிருகுவுமைந்தன்றானும்பிறங்குமந்தரத்திற்கானிற், றிருகிப்பசித்தமனந்தீப்பகைதீரமாற்றி, வருதிரையிலாதநீர்போன் மாசறுநிலையில்வாழ்ந்தார், கருணைமாமுகிலேயென்றுகற்றுணர்வசிட்டன்சொன்னான் .. *

(இ-ள்.) பிருகுவும் - பிதாவாகியபிருகுமுனியும்—மைந்தன்றானும் - புத்திரனாகியசுக்கிரமுனியும்—பிறங்குமந்தரத்திற்கானில் - உயர்ந்தமந்தரமலையிலுள்ளவனத்தில்—திருகியசித்தமென்னும் - குற்றமாகியமனமென்கின்ற—தீப்பகை - தீமையானசத்துருவை—தீரமாற்றி - தீர்ப்பாகக்கொன்று — வருதிரையிலாதநீர்போல் - வருகின்றவலையற்றசமுத்திரத்தைப்போல—மாசறுநிலையில்வாழ்ந்தார் - குற்றமற்றசீவன்முத்தநிலையில்வாழ்ந்தார்கள்—கருணைமாமுகிலேயென்று-கிருபைவடிவமானமகாமேகம்போன்றவரேயென்று—கற்றுணர் - கல்விஞானத்தையுடைய — வசிட்டன்சொன்னான் - வசிஷ்டமுனியானவர் சொன்னார். எ - று. (இ - ச - க - ம்.) சுக்கிரன் அசுத்தசங்கற்பத்தைநீக்கிச் சுத்தசங்கற்பத்தினாற்கிரியைத்தன்மையைச் செய்தனனென்பதாம் ....(சஎ)

சுக்கிரன்கதைமுற்றிற்று. ஆகதை-௰௩-இ-கவிதை (௫௱௩௬)

தாமவியாளகடர்கதை.

(அ-கை.) முன்புசுகமாத்மசங்கற்பமாய் விளங்குமென்பதையறிவித்து-அச்சுகம்-ஆத்மானுசந்தான விவேகமின்றி யநாத்மானுசந்தானமாக விளங்கின் விருத்தியடையுமென்பதை யறிவிக்குநிமித்தந் தாமர்திகதையைச் சொல்லுகிறார்.. *

(அ-கை.) சத்துருக்களனுபவ விலக்கணமறிவித்தல். (கவி.) மீண்டுரைசெய்வான்முற்றும் விசாரத்தோர்தொழிநீர்நெஞ்சோர், நீண்டதோர்மனனம்விட்டோர் நிகழ்சுகவறிவையுள்ளோர், பூண்டுளகாட்சிதன்னிற் போவபோய்க்கொள்வ கொண்டோர், காண்டகுதன்னைக்கண்டோர் காணுதோர்தனைக்காணுதோர்.................... *

(இ-ள்.) மீண்டுரைசெய்வான் - வசிஷ்டமுனிபின்னுஞ்சொல்வார் — முற்றும்விசாரத்தோர் - முழுதும்விசாரணையையுடையவர்களும்—தொழிநீர் - மலினவிருத்திநீங்கின—நெஞ்சோர் - மனமுடையவர்களும் — நீண்டதோர்மனனம்விட்டோர் - மிகுந்தவொப்பற்றசங்கற்பத்தைவிடுத்தவர்களும்—நிகழ் - ப்ரகாசிக்கின்ற—சுகவறிவையுள்ளோர் - ஆநந்தபோதத்தையுடையவர்களும்—பூண்டுள - (சங்கற்பத்தி) னுற்றரித்திருக்கின்ற — காட்சிதன்னில் - திரிஸ்யவஸ்துவில்—போவ போய் - போகவேண்டிய (வனுர்தசடதுக்கத்தகைப்) போக்கி—கொள்வ கொண்டோர் - கொள்ளவேண்டிய (சச்சிதாநந்தஸ்வரூபத்தைக்) கொண்டவர்களும்—காண்டகுதன்னைக்கண்டோர்-திருஷ்டாவானவாத்மஸ்வரூபத்தைக்கண்டவர்களும்—காணுதோர்தனைக்காணுதோர்- அதிருஷ்டாவானவநாத்மஸ்வரூபத்தைக் காணுதவர்களும். எ-று................ (க)

(அ-கை.) இ-து. (கவி) சீவனுயிருந்துகாணுஞ்சிற்பரதத்துவத்தே, மேவியநனவையுற்றோர்வெம்பவமோகமார்க்கத், தோவலில்சுழுத்தியுற்றோரோர்முதிர்நிராசையாலே, பாவனைநலனிற்றீங்கிற்பயிலும்வாதனையைமாய்த்தோர்.............................. *

(இ-ள்.) சீவனுயிருந்துகாணும் - சீவிக்கின்றவனுகவிருந்துபாராநின்ற — சிற்பரதத்துவத்து - ஞானமாகியபரதத்துவத்தில்—மேவிய - பொருந்திய—நனவையுற்றோர் - சாக்கிரத்தையடைந்தவர்களும்—வெம்பவமோகமார்க்கத்து - கொடியசநநமயக்கமென்னும்வழியில்—ஓவலில்சுழுத்தியுற்றோர் - நீங்காதநித்திரையையடைந்தவர்களும்—ஓர்முதிர்நிராசையால்-ஒப்பற்றமுதிர்ந்தபக்குவமானநிராசையினுல் — பாவனைநலனில் - பாவிக்கப்பட்டநன்மையினும்—தீங்கில் - தீமையிலும்—பயிலும்வாதனையைமாய்த்தோர் - பழகினவாசனையைக்கெடுத்தவர்களும். எ-று.. (உ)

(அ-கை.) இ-து. (கவி) வாதனைவலையைச்செற்றுமனப்பந்தமாற்றிவிட்டார், காதல்செய்தேற்றின்வித்தின்கலங்குதீர்தெளிவதென்ன, மேதகுவின்ஞானத்தான் மெய்ம்மையாஞ்சுபாவந்தானே, யேதமற்றொளிருமுன்னமியப்பியவியலபினோர்க்கே .... *

(இ-ள்.) வாதனைவலையைச்செற்று - வாசனையென்னும்வலையைக்கெடுத்து— மனப்பந்தம்-மனத்தினதுகட்டை—மாற்றிவிட்டால் - அறுத்துவிட்டால் — காதல்செய் - ஆசைசெய்கின்ற—தேற்றின்வித்தின் - தேற்றாங்கொட்டையினால்—கலங்குநீர் - கலங்கியசலமானது —தெளிவதென்ன - தெளிவதுபோல—மேதகுவிஞ்ஞானத்தால்- மேன்மையாகத்தெளிந்தமெய்ஞ்ஞானத்தினால்—மெய்ம்மையாஞ்சுபாவந்தானே - உண்மையாகியதற்சுபாவமே—முன்னமியம்பிய - முன்சொல்லிய—இயல்பினோர்க்கு - குணங்களையுடையவர்களுக்கு — ஏதமற்றொளிரும் - துன்பமற்று (நிரதிசயாநந்தமாகப்) ப்ரகாசிக்கும். எ-று. (இ-௬-௧-ம்) மனோநாசமும் வாசனாக்ஷயமும்வந்தவிவ்வனுபவத்தினாற்றத்துவஞானம்விளங்குமென்பதாம் .... (௫)

(அ - கை.) வாசனாக்ஷயவுபாயமியாதெனின். (கவி) சங்கஞ்செய்மயல்போ
ய்த்தொந்தந்தவிர்ந்தொன்றைச்சார்வதின்றிச், சிங்கிசெய்கூட்டினின்றுஞ்சேணு
றச்செல்லும்புட்போற், றுங்கமோகத்தினின்றுந் தூய்மனம்வெளியிற்போந்து,
பங்கமாமையந்தீரப்பற்றெனுமனைத்துந்தீரும்........... .... *

(இ-ள்.) சங்கஞ்செய்மயல்போய் - விஷயத்திற்சேருகின்றவிச்சைநீங்கி — தொந்தந்தவிர்ந்து - சுகதுக்கமானவிரண்டுநீங்கி—ஒன்றைச்சார்வதின்றி - ஒன்றையும்பற்றாமல்—சிங்கிசெய் - சிக்கஞ்செய்யும்—கூட்டினின்றும் - கூண்டிலிருந்தும்— சேணுறச்செல்லும்புட்போல் - ஆகாயத்திற்செல்லுகின்றபறவையைப்போல—துங்கமோகத்தினின்றும் - மகாமோகத்திலிருந்தும்—தூய்மனம் - பரிசுத்தமாகியமனமானது—வெளியிற்போந்து - வெளிப்பட்டு—பங்கமாம் - வேறுபாடாகிய—ஐயந்தீர - சந்தேகநீங்க—பற்றெனுமனைத்துந்தீரும் - ஆசையென்கின்றயாவுநீங்கும். எ - று. (இ - ம்) மனம்விஷயசம்பந்தநீங்கித் தன்மயமாய்த்தனித்திருத்தலேவாசனாக்ஷயமென்பதாம் .... (௬)

(அ-கை.) அச்சகலத்தியாகமனதுக்கெப்படியுண்டாகுமெனின். (கவி) ஆன்றவம்
மனம்பூர்ணத்தையடைந்துபூரணவெண்டிங்கள், போன்றுறவிளங்குமிந்த நிலையி
லேபொலிவுற்றோர்கண், மூன்றுமூர்த்திகளாந்தேவ முதல்வர்க்குங்கருணைசெய்வ,
ரூன்றியவிசாரத்தாலேயுயர்பொருளெய்தவேண்டும்.................................. *

(இ-ள்.) ஆன்றவம்மனம் - மாட்சிமையானவம்மனமானது—பூர்ணத்தையடைந்து- பரிபூரணத்தைப்பெற்று—பூரணவெண்டிங்கள் - களங்கமற்றபூர்ணசந்திரனை — போன்றுற- ஒப்பாக—விளங்கும் - ப்ரகாசிக்கும்—இந்தநிலையிலேபொலிவுற்றோர்கள் - இந்நிலையிற்ப்ரகாசித்தவர்கள்—மூன்றுமூர்த்திகளாம் - மும்மூர்த்திகளாகிய—தேவமுதல்வர்க்கும் - தெய்வத்தன்மையின்முதன்மையானவர்களுக்கும்—கருணைசெய்வர் - கிருபைசெய்வார்கள் — ஊன்றிய - உறுதியாகிய—விசாரத்தால் - விசாரணையினால்—உயர்பொருள்-மேன்மையாகிய பரமவஸ்துவை—எய்தவேண்டும் - அடையவேண்டும். எ - று. (இ-ம்) விசாரணையால் விஷயப்பற்று நீக்கம்வருமென்பதாம் ....(௫)

(அ - கை.) அவ்விசாரமியாதெனின். (கவி) உலகெதுநாமாரென்ன வுற்றுநின்றுணருமட்டுங், கலகமார்பிறவிமோகங்கங்குல்போன்மூடிநிற்கு,மலகறுமுலகுந்தாமுமழிவில்சிற்
சோதியென்றே, சலனமில்கண்ணாற்கண்டோர் தத்துவநிலைமைகண்டோர்................ *

(இ-ள்.) உலகெது - இந்தச்சகமெப்படிப்பட்டது—நாமாரென்ன- நாமெப்படிப்பட்டவனென்று—உற்றுநின்றுணருமட்டும் - உறுதியாய்விசாரித்தறிகின்றபரியந்தம் — கலகமார்பிறவிமோகம் - கலகநிறைந்தசநநமயக்கமானது—கங்குல்போல்- அந்தகாரத்தைப்போல—மூடிநிற்கும் - மூடிக்கொண்டிருக்கும்— அலகறுமுலகும்-கணக்கிலாதவுலகங்களும்—தாமும்- ஆத்மாவும்—அழிவில் - அழிவில்லாத—சிற்சோதியென்று -ஞானப்ரகாசமென்று—சலனமில்கண்ணாற்கண்டோர் - சலனமற்ற (ஞானக்) கண்ணினாற்பார்த்தவர்கள் — தத்துவநிலைமைகண்டோர் - தத்துவநிச்சயத்தைத் தரிசித்தவர்கள். எ -று ....(௮)

(அ-கை,) இ-து. (கவி) அகிலசத்தியுமாயொன்றாயநந்தமாயறிவுதானே, சகலபாவனைக்
குமுள்ளா மெனக்கண்டோர்தம்மைக்கண்டோர், பகர்வுறுநானுமில்லை பிறிதிலைபரமேயு
ண்மைடன், நிகழுறவுள்ளதில்லை திடையுறக்கண்டோர்கண்டோர்..... .... *

(இ-ள்.) அகிலசத்தியுமாய் - சகலசத்திகளாகியும்—ஒன்றாய்-ஏகமாகியும்—அநந்தமாய்-அளவில்லாததாகியுமிருக்கின்ற—அறிவுதானே - ஆத்மஞானமே—சகலபாவனைக்கும்-சமஸ்தபாவனைகளுக்கும்—உள்ளாமென - ஆந்தரியமாமென்று — கண்டோர் - பார்த்தவர்கள்—தம்மைக்கண்டோர் - ஆத்மஸ்வரூபத்தைத்தெரிசித்தவர்கள்—பகர்வுறு - சொல்லப்பட்ட—நானுமில்லை - நானென்கின்றஞாதாவுமில்லை—பிறிதிலை - அதற்குவேறாகியசகமென்னுஞேயமுமில்

லை—பரமேயுண்டென்று-பிரமமேயுண்டாயிருக்கின்றதென்று—இகமுற-இவ்விடத்திற்பொருந்த—உள்ளது - சத்துக்கும்—இல்லது - அசத்துக்கும்—இடையுற-மத்தியிற்பொருந்த—கண்டோர் - பார்த்தவர்களை—கண்டோர் - ஆத்மாவைத்தரிசித்தவர்கள். எ-று. (இ-ம்) சித்தையுஞ் செடத்தையும்விசாரித்துச் செடத்தைநீக்கிச் சித்தாயிருப்பதே, ஆத்மவிசாரமென்பதாம்.(எ)

(அ-கை.) விஷயசுகமனுபவிக்கலாமோவெனின். (கவி) முயல்வறத்தாமேதோன்று மொய்திசைப்பொருள்கடம்மின், மயலறச்செல்லுங்கண்போன் மாசறுநீரார்புத்தி, செயல்களிற்செல்லுமன்றே தெளிந்துபல்போகநதுய்த்தாற், றுயர்செயாதறிந்து சேர்ந்தாற் சோரருந்தோழராவார் .... *

(இ-ள்.) முயல்வற - முயற்சியில்லாமல்—தாமேதோன்றும் - தானேதோற்றுகின்ற — மொய்திசைப்பொருள்கடம்மில் - நெருங்கியதிக்குகளிலுள்ளவிஷயவஸ்துக்களில் — மயலற- இச்சையில்லாமல் - செல்லுங்கண்போல் — செல்கின்றதிருஷ்டியைப்போல — மாசறுநீரார்- களங்கமற்றபிரமவித்துக்களுடைய—புத்தி - புத்தியானது —செயல்களிற்செல்லும் - (நிகழ்காலத்திலுள்ள)தொழில்களிற்செல்லுமென்று—தெளிந்து-தெளிவுற்று—பல்போகந்துய்த்தால்- பலபோகங்களைப்புசித்தால்—துயர்செயாது - அஃது துன்பஞ்செய்யாது — அறிந்துசேர்ந்தால் - தெரிந்துசேரின்—சோரருந்தோழராவார் - திருடருநட்பாவர். எ-று. (இ-ம்) பிரமாநந்தவிலாசமே விஷயாநந்தமென் றுணர்ந்தனுபவிக்கி லதுவேசகாயமென்பதாம் .... .. (அ)

(அ-கை.) அங்ஙனம்பாராவிடி லென்னவருமெனின். (கவி) நெறியிடைவந்தோர் கூட்ட நெறிசெல்வோர்காணுநேர்போற், செறிதருபோகமெல்லாஞ்சேதனர்காண் பரன்றே, யறிவினன்மனதைவென்றோ ரற்பமேபெரிதாய்க்காண்பர், பிறகதுதுய ராமென்றே பெரியனபோகம்வேண்டார். .... *

(இ-ள்.) நெறியிடைவந்தோர்கூட்டம் - மார்க்கமத்தியில்வந்த (கலியாணக்) கூட்டங்களை—நெறிசெல்வோர் - வழியினடப்பவர்கள்—காணுநேர்போல் - காண்கின்றதன்மையைப் போல—செறிதருபோகமெல்லாம்- மிகுந்தபோகவஸ்துக்களனைத்தையும்—சேதனர்காண்பர்- அறிவுள்ளோர்பார்ப்பார்கள்—அறிவினால் - (ஆத்ம)ஞானத்தினால்—மனதைவென்றோர் - மனதைச்செயித்தவர்கள்—அற்பம்பெரிதாய்க்காண்பர் - அற்ப (போகத்தை)ப்பெரிதாகப்பார்ப்பார்கள் —பிறகதுதுயராமென்று - பின்பதுதுன்பமாமென்று (நினைத்து) — பெரியன போகம்வேண்டார் - மிகுந்த(விஷய)போகத்தைவிரும்பார்கள். எ-று. (இ-ம்) ஆத்மதிருஷ்டியினின்றநாத்மாவைப் பற்றறப்பாராவிடிற் றுன்பம்வருமென்பதாம் .... (கூ)

(அ-கை.) துன்பநீங்குநெறியாதெனின். (கவி) நலங்கியசிறைதீர்மன்ன னகர்மட்டுமகிழ்வுகூரு, மலங்கல்வேல்வெற்றிவேந்த னவனியுஞ்சிறிதென்றெண்ணுங், கலங்குறுமனதை வெல்வோர்கைகையாற்கால்கள்காலா,லிலங்குபற்பல்லாலங்கமியாவுமிப்படிமுன்சேர்க்க.

(இ-ள்.) நலங்கிய - வருத்தமுற்ற—சிறைதீர்மன்னன் - சிறைச்சாலையினின்று நீங்கினவரசன்—நகரமட்டும் - (தனது)பட்டணவளவிலும்—மகிழ்வுகூரும் - மகிழ்ச்சியடைவன்— அலங்கல் - (வெற்றி)மாலையையும்—வேல் - வேலாயுதத்தையுந்(தரித்த)—வெற்றிவேந்தன்-செயம் பொருந்தியவரசனானவன்—அவனியும் - பூமி(முழுமை)யும்— சிறிதென்றெண்ணும் - அற்பமென்றுநினைப்பன்—கலங்குறு - கலக்கம்பொருந்திய— மனதைவெல்வோர் - மனதைச்செயிப்பவர்கள்—கைகையால் - கரத்தைக்கரத்தினாலும்—கால்கள்காலால்- கால்களைக்கால்களினாலும் —இலங்குபற்பல்லால் - விளங்கியபல்லைப்பல்லினாலும் —அங்கமியாவும் - சரீரமுழுமையும்— இப்படிமுன்சேர்க்க - இப்படியேமுன்சேர்க்கக்கடவது. எ-று ....(ய)

(அ-கை.) இ-து. (கவி) பகைமனம்வெற்றியல்லாற்பவக்கடல்வங்கமில்லை, வகைபடுமுலகிற்செல்வர்வரிசைபோர்மறுவிலாதோர், மிகையுயர்புருடர்கீர்த்தி மிக்கவரொன்போரு ள்ளக், குகையிடைத்தொழில்கணஞ்சார்கொடுமனப்பாம்பைக்கொன்றோர்.................. *

(இ-ள்.) பகை - சத்துருவாகிய—மனவெற்றியல்லால்-மனோசயமேயன்றி—பவக்கடல்- சநநசமுத்திரத்தைக்(கடந்துபோதற்கு)—வங்கமில்லை - கப்பலின்று —உள்ளக்குகையிடை- இருதயப்புற்றினிடத்தில்—தொழில்கணஞ்சார் - தொழில்களானவிஷநிறைந்த—கொடுமனப் பாம்பை - பொல்லாங்காகியமனச்சர்ப்பத்தை—கொன்றோரொன்போர் - செயித்தோரென்பவர்கள்—வகைபடுமுலகிற்செல்வர் - வகையுள்ள (மோக்ஷ) வுலகத்திற்போவார்கள் — வரிசையோர் - நல்லொழுங்குள்ளவர்கள்—மறுவிலாதோர் - குற்றமற்றவர்கள்— மிகையுயர்புருடர்- மிகவுமேன்மையானபுமான்கள்— கீர்த்திமிக்கவர் - புகழ்மிகுந்தவர்கள். எ- று. (இ-உ-க-ம்) மனோநிக்கிரகமேதுன்பத்தைநீக்குதற்குபாயமென்பதாம் ....(யக)

(அ-கை.) அம்மனோநாசமியாதினல்வருமெனின். (கவி) மனமெனும்வினையை வென்றோர்மலரடிமுடிமேற்கொள்வா, மினநகரங்களென்னு மிராச்சியத்திருந்து வாழ்ந்த, மூனமுறுபாவமென்னு மும்மதக்களிற்றினாலுங், கனமயற்படைகளா லுங்கரணமாம்பகையைவெல்வாய்.. *

(இ-ள்.) மனமெனும்வினையைவென்றோர் - மனமென்கின்றபகையைச்செயித்தவர்களது — மலரடிமுடிமேற்கொள்வாம் - தாமரைமலர்போன்றபாதங்களைச் சிரசின்மேற்சூட்டுவாம்—இனநகரங்களென்னும் - கூட்டமாகிய்நகரங்களென்கின்ற—இராச்சியத்திருந்து - உலகத்திலிருந்து—வாழ்ந்த- சுகித்த —மூனமுறுபாவமென்னும்-மூன்றுள்ள பாவமென்கின்ற—மும்மதக்களிற்றினாலும் - (காமவெகுளிமயக்கமென்னு) மூன்றுமதங்களையுடையயானையினாலும்—கனமயற்படைகளாலும்- பேராசையென்னுமாயுதங்களினாலும்(கெம்பீரமுடைய)—கரணமாம்பகையை-இந்திரியமென்னுஞ்சத்துருக்களை—வெல்வாய்-செயஞ்செய்வாய். எ-று. (இ-ம்) இந்திரியநிக்கிரகத்தான்மனோநாசம்வருமென்பதாம்............................ (௰௨)

(அ-கை.) அவ்விந்திரியநிக்கிரகமியாதினல்வருமெனின். (கவி) துனிமனச்செருக்குமாய்த்துத் தொடர்பொறிப்பகையைவெல்லிற், பனிபடுபதுமக்கான்போற்படர்ந்தவாதனைகண்மாறுந், தனியறிவொன்றேயென்று சாதித்திம் மனம்வென்மட்டுங், கனியிருள்செறியும்பேய்போற்கருத்தில்வாதனைவந்தெய்தா.................. *

(இ-ள்.) துனிமனச்செருக்குமாய்த்து- துன்பமுள்ளமனவகங்காரத்தைக்கெடுத்து—தொடர்பொறிப்பகையைவெல்லில்- தொடராநின்றவிந்திரியங்களென்னுஞ் சத்துருக்களைவென்றால்—பனிபடுபதுமக்கான்போல்- பனிதோய்ந்ததாமரைக்காட்டைப்போல—படர்ந்தவாதனைகண்மாறும் - விஸ்தாரமானவாசனைகளுசமடையும்—தனியறிவொன்றேயென்று- ஒப்பற்றஞானமேகமேயென்று—சாதித்து - சாதனைசெய்து—இம்மனம்வென்மட்டும்- இந்தமனதைச்செயிக்கின்றளவும—கனியிருள்செறியும்பேய்போல் - பழுத்தவிருட்டினிடத்தினெருங்கியிருக்கின்றபசாசைப்போல—கருத்தில் - மனதின்கண் —வாதனைவந்தெய்தா-வாதனையானதுவரமாட்டாது. எ-று. இத்திருஷ்டாந்தம்விதிரேகமெனக்கொள்க. (இ-ம்) விவேகத்தாற்பெறும்வாசனாத்தியாகத்தாலவ்விந்திரியத்தியாகம்வருமென்பதாம்........................ (௰௩)

(அ-கை.) விவேகிகளுக்குவாசனாத்தியாகம்வந்தமனதின்சகாயமியாதெனின்.(கவி) மந்திரியெனலாமுண்மைமருவுறும்விசாரத்தாலே, யிந்திரியங்களென்னு மிடர்பகைபறுத்தலாலே, தந்திரியெனலாமிட்டஞ் சமைத்தலாலேவலாளா, நொந்திரிலாதவுள்ளநோக்கியவிவேகத்தோர்க்கே...................................... *

(இ-ள்.) நொந்திரிகிலாத - துன்பத்துடன்சுழலாத—உள்ளம் - மனமானது —நோக்கிய - (சகலத்தையுந்தனதுஸ்வரூபமாக) ப்பார்த்த — விவேகத்தோர்க்கு - ஞானிகளுக்கு—உண்மைமருவுறம் - தத்துவத்தையடைகின்ற—விசாரத்தால் - விசாரணையினால்—மந்திரியெனலாம் - அமைச்சனென்றுசொல்லப்படும் —இந்திரியங்களென்னும் - இந்திரியங்களென்கின்ற—இடர்பகைபறுத்தலால் - துன்பமென்னுஞ்சத்துருவைக்கெடுத்ததினால் — தந்திரியெனலாம் - உபாயமுள்ளசாமந்தனென்றுசொல்லப்படும்—இட்டஞ்சமைத்தலால் - (தனக்) கிஷ்டமுள்ளவைகளைச்செய்கின்றதினால்—ஏவலாளாம் - பரிசாரகனுகச்சொல்லப்படும். எ-று. (இ-ம்) மனமானது, ஆத்மவாசனுக்கெதிரற்றபிரமாநந்தமுண்டாக்குநிமித்தம் விசாரஞ்செய்தலின் மந்திரியும் அகமுகப்பட்டிந்திரியங்களைக்கெடுத்தலிற்றந்திரியும், சின்னபின்னமான விஷயரசங்களைக்கிரகித்து அபின்னமான பிரமரசமாக்கியூட்டுவித்தலின் ஏவலாளுமாகுமென்பதாம்.

(அ-கை.) இ-து. (கவி.) ஆலிக்குமின்பத்தாலே யன்புறுமனைவியாகும், பாலிக்குமியல்பினாலே பாவனதந்தையாகுஞ், சீலிக்குமுறுதியாலே தேடருநட்புமாகுந், தூலிக்கும்வினைகளில்லாத் தூய்மனம்விவேகத்தோர்க்கே.................................. *

(இ-ள்.) விவேகத்தோர்க்கு - விவேகிகளுக்கு—தூலிக்கும்வினைகளில்லா - பருத்ததொழில்களில்லாத—தூய்மனம் - பரிசுத்தமனமானது— ஆலிக்குமின்பத்தால் - களிக்கின்றசுகத்தைக்கொடுப்பதினால்—அன்புறுமனைவியாகும்-ஆசையுள்ளபாரியாளாகும்—பாலிக்குமியல்பினால் - இரக்ஷிக்குந்தன்மையினால்—பாவனதந்தையாகும்- பரிசுத்தமுள்ளபிதாவாகும்—சீலிக்குமுறுதியால் -குணமுள்ளவிருப்பினால் — தேடருநட்புமாகும் - நாடற்கரியநேயனுமாகும். எ-று. (இ-ம்) மனமானது ஆத்மாவைநீங்காதிருந்து நிருவாணசுகத்தைத்தருதலின் மனைவியும், விஷயத்திற்செல்லுவதைத்தடுத்து, பிரமத்திற்செலுத்துதலின், பிதாவும், உண்மையிற்பிரப்பற்று பிற்பின்னமிதனுடாகுமென்பதாம்.. (௰௪)

(அ-கை.) இ-து. (கவி) நல்லனநூல்களாலேநல்லனநெறியைநோக்கி, நல்லனநியானஞ்செய்து நல்லனுபவத்தைநண்ணி, நல்லனசித்திநல்கு நல்லதாய்த்தன்னைமாய்க்கு, நல்லதோர்தாதையாகி நல்லவர்க்குள்ளந்தானே........................ *

(இ-ள்.) நல்லவர்க்கு - சத்துக்களுக்கு— உள்ளந்தான் - மனமானது — நல்லனநூல்களால் - நல்ல(வாத்யஞான)சாஸ்திரங்களினால்—நல்லனநெறியைநோக்கி - நன்மையானமார்க்கத்தைப்பார்த்து—நல்லனநியானஞ்செய்து - நன்மையானவாத்மநியானஞ்செய்து—நல்லனுபவத்தைநண்ணி - நன்மையானவனுபவத்தையடைந்து—நல்லதாய் - நன்மையாக—தன்னைமாய்க்கும் - தனதுருவத்தைக்கெடுக்கும்—நல்லதோர்தாதையாகி - நல்லவொப்பற்றபிதாவாகி—நல்லனசித்திநல்கும் - நல்ல(ஞான)சித்தியைத்தரும். எ-று. (இ-ம்.) மனமானது, புத்திரனுக்கிராசபோகத்தைக் கொடுத்திறக்கின்றபிதாவைப்போல, ஆத்மாவுக்காநந்தநாட்டரசாங்கத்தைக் கொடுத்திறத்தலிற் பிதாவுமாமென்பதாம்........................ (௰௬)

(அ-கை.) இ-து. (கவி) துணிவுறுதிடமாய்ச்சாலத் துகளறநோக்கியாதும், பிணியறக்கண்டுஞானப்பேருணர்வுணர்த்தப்பட்டாற், பணிவுறுமிதயந்தன்னிற்பழுதிறன்குணத்தினாலே, மணியெனவிளங்காநிற்கு மாசறுமுள்ளந்தானே........................ *

(இ-ள்.) துணிவுறுதிடமாய் - தெளிவுள்ளஸ்திரமாக— சாலத்துகளறநோக்கி - மிகவுங்குற்றமின்றிப்பார்த்து—யாதும் - எவ்வளவேனும்— பிணியறக்கண்டு - தடையில்லாமற்பார்த்து—ஞானப்பேருணர்வு - பூரணஞானத்தை — உணர்த்தப்பட்டால் - போதிக்கப்பட்டால்—பணிவுறுமிதயந்தன்னில் - சொல்லப்பட்டவிதயாம்பரத்தில்— பழுதிறன்குணத்தினால் - குற்றமற்றதனதுசுபாவத்தினால்— மாசறுமுள்ளந்தான் - களங்கமற்றமனது — மணியெனவிளங்காநிற்கும் - இரத்தினம்போலப்ரகாசிக்கும். எ-று. (இ-ம்) மனமானதுஆத்மாவுக்கதன் ஞானமாகவிளங்குமென்பதாம்........................ (௰௭)

(அ-கை.) ஆயின்மனோகளங்கநீங்குமுபாய மியாதெனின். (கவி) மனமணிப்பேதச்சேற்றின் மறைந்தொருவருக்குந்தோன்றாக், கனமுறுவிவேகநீராற் கழுவினாற்சித்திகாட்டும், வினவுறுவிவேகவன்பான்மெய்ம்மையைமதியாற்கண்டு, சினமுறுபொறியைவென்று தீர்வரும்பிறவிதீர்வாய்........................ *

(இ-ள்.) மனமணி - மனமென்னுமிரத்தினமானது—பேதச்சேற்றில் - வேறுபாடென்னு(மலின) வாசனையாகியகும்பியில்—மறைந்து - மறைப்பட்டு—ஒருவருக்குந்தோன்றா-ஒருவருக்குந்தோற்றாது—கனமுறுவிவேகநீரால் - கனமானஞானசலத்தினால்—கழுவினால் - சுத்திபண்ணினால் — சித்திகாட்டும் - (தனதுப்ரகாசமாகிய) மோக்ஷத்தைக்காட்டும் — வினவுறுவிவேகவன்பால் - சொல்கின்றவிவேகவலிமையால் — மெய்ம்மையை - எதார்த்தஞானத்தை—மதியாற்கண்டு - அறிவினாற்றரிசித்து—சினமுறுபொறியைவென்று - அகங்காரமுள்ளவிந்திரியத்தைச்செயித்து—தீர்வரும்பிறவிதீர்வாய்- நீங்குதற்கரியசநநத்தைநீங்குவாய். எ-று. (இ-ம்) மனதுவிவேகஞானத்தான் மறைப்புநீங்கிற் சுயமாய்விளங்குமென்பதாம்........................(௰௮)

(அ-கை.) அம்மனதோடுங்கூடிற் பந்தமாகாவோவெனின். (கவி) இத்திறத்திவனானென்றே யிறுகியவறுதிவீணா, மத்திறம்புந்தியாலே யழுத்தமாயகற்றிமற்ற,மெய்த்திறம்பற்றிநீயா மதினின்றுவிழைந்தசெய்வாய், பொய்த்திறமனத்தினோடேபுசித்தவைபந்தமாகா........................ *

(இ-ள்.) இத்திறத்திவனானென்று - இக்காரணத்தினாலிவனென்றும்நானென்றும்—இறுகியவறுதி - திடமுள்ளநிச்சயம்—வீணாம்- விருதாவாம்—அத்திறம்-அத்தன்மையை—புந்தியாலழுத்தமாயகற்றி - அறிவினாற்றிடமாகத்தள்ளி—மற்ற - (அதற்கு)வேறாகிய—மெய்த்திறம்பற்றி - உள்ளகாரணத்தைப்பிடித்து—நீயாமதினின்று - உனதாத்மாவாகியதற்பதத்திலிருந்து—விழைந்தசெய்வாய் - இச்சித்தபடிநடப்பாய்—பொய்த்திறமனத்தினோடும் - அமனஸ்க்கபாவத்தோடும்—புசித்தவைபந்தமாகா - புசித்தவந்தவஸ்துக்கள்பந்தமாகா. எ-று. (இ-ம்) மனமானது, ஆத்மப்ரகாசமாதலா லஃதாத்மாநந்தமேயன்றி வேறாகாதென்பதாம்........................(௰௯)

(அ-கை.) இவ்வனுபவம்வரும்பொருட்டுதிருஷ்டாந்தங்கூறல். (வேறு.) (கவி) தாமனோடுவியாளகடாசுரர்சாருநீதியைநீயனுகாதொழி, வீமபாசதிடாசுரர்நீதியைமேவிவேதனைதீர்கெனவோதலு, நாமமேபகர்தானவராமொனாஞானவீரன்வினாவிடமாமுனி, யாமதோதிடவாதரமாகிய தேதுநியதின்மேவெனம்வாதுவான்........................ *

(இ-ள்.) தாமனோடு - தாமனுடன்—வியாளகடாசுரர் - வியாளன்கடனென்றுசொல்லப்பட்டவசுரர்கள்—சாருநீதியை - சார்ந்திருக்கின்றஞாயத்தை—நீயனுகாதொழி - (இராமா

நீயடையாமல்விட்டுவிடு—வீமபாசதிடரசுரர் - வீமன்பாசன்றிடனென்னுமசுரர்களுடைய—நீதியைமேவி - ஞானத்தைப்பொருந்தி— வேதனைதீர்கெனவோதலும் - துன்பந்தீரக்கடவாயென்றுசொல்லவும்—நாமமேபகர் - (இப்) பெயர்களாற்சொல்லப்பட்ட — தானவராமொன- அசுரர்கள்யாமொன்று—ஞானவீரன்வினவிட- ஞானவீரனுகியவிராமன்கேட்க—மாமுனி-மகாரிஷியானவர்—யாமதோதிட - நாமதைச்சொல்ல— ஆதரமாகியதேது- ஆசையாயிருக்கின்றதெதுவோ—நீயதின்மேவென-நீயதிற்பொருந்துவாயென்று—ஓதுவான்-சொல்லுவான்எ-று

(அ-கை) சுராசுரரின்யுத்தச்சிறப்புரைத்தல். (கவி) சஞ்சரித்துயர்பாதலமேவியசம்
பரப்பெயராஞெருதானவன், வஞ்சமுற்றியமாயையில்வாழ்பவன் வன்படைக்கட
லாலமரேசனை, யெஞ்சலித்திடவானவர்தாமுமேவிவன்சுழுத்தியிலாகியபோதினும்,
விஞ்சவம்பரமேவியபோதினும் வெம்பியெற்றினர்தானவர்மாளவே.................. *

(இ-ள்.) சஞ்சரித்து - சஞ்சாரஞ்செய்து—உயர்பாதலமேவிய - உயர்வாகியபாதாளத்திற்பொருந்தியிருக்கின்ற—சம்பரப்பெயரான் - சம்பரனென்னுநாமத்தையுடையவனுகிய—ஒருதானவன் - ஓரசுரன்—வஞ்சமுற்றி - வஞ்சனைமுதிர்ந்த—மாயையில்வாழ்பவன்- மாயையிலேவாழப்பட்டவன்—வன்படைக்கடலால்-வலியசேனுசமுத்திரத்தினுல்—அமரேசனை-தேவேந்திரனை—எஞ்சலித்திட- குறைவுசெய்ய—வானவர்தாமும்- தேவர்களும்—இவன்சுழுத்தியிலாகியபோதினும் - நிவனித்திரையடைந்தபோதினும்—விஞ்சவம்பரமேவியபோதினும்-மிகவுந்திசைகளிலடைந்தபோதினும்—வெம்பி - (மிகவுங்)கோபித்து—தானவர்மாளவெற்றினர்-அசுரர்கள்கெடும்படி யடித்தார்கள். எ - று..(உக)

(அ-கை·) இ-து. (கவி) ஆயவன்மையறிந்துயர்சம் பரனுகுவன்றுருமன்றிறன்முண்
டிக, ணேயவிங்கிவர்தம்படைமுன்செல வேவினன்பெரிதங்கெவரும்பட,மேயவண்
டரடர்ந்தனமொன்றலும் வேகமிஞ்சியசம்பரன்வந்திட, மாயைவிஞ்சைநிறைந்தவ
னென்றெதிர் மாகர்நின்றிடவஞ்சியொதுங்கினர்...................................... *

(இ-ள்.) ஆயவன்மை - இப்படியானதேவர்க்கள்வல்லமையை—உயர்சம்பரன்-சிறந்தசம்பராசுரன்—அறிந்து- தெரிந்து—ஆகுவன்றுருமன்றிறன்முண்டிகன்-ஆகுவனுந்துருமனும்பலத்தையுடையமுண்டிகனும்—ஏயவிங்கிவர்தம்- பொருந்தியவிவர்களுடைய—படைமுன்செல - சேனைகள்முன்னேபோக—ஏவினன் - அனுப்பினன்—பெரிது - மிகவும்—அங்கெவரும்பட - அவ்விடத்திலுள்ளயாவருமடிய— மேயவண்டரடர்ந்தனமொன்றலும் - பொருந்தியதேவர்கள்(சமயம்பார்த்து)ப்போர்செய்தார்களென்றுசொல்லவும்—வேகமிஞ்சிய- கோபமிகுந்த—சம்பரன்வந்திட - சம்பராசுரன்(தெய்வலோகம்)வர—மாயைவிஞ்சை - மாயாவித்தையில்—நிறைந்தவனென்று - மிகுந்தவனென்று—எதிர்- அவன்முன்பு—மாகர்நின்றிடவஞ்சி-தேவர்கள்நிற்கப்பயந்து—ஒதுங்கினர் - ஒளித்தார்கள். எ - று ....(உஉ)

(அ-கை.) இ-து. (கவி) மேருகந்தரமும்பரடைந்தனர் வீதியெங்குமரம்பையர்நின்
றழ, யாருமின்றியவிந்திரன்றன்பதி யீசன்வென்றபுரங்களெனும்படி, நேருமங்கி
சொரிந்துதிரும்பின னீடகன்றுளவந்தணர்பின்றையு, மூருள்வந்தனரென்றும்பெரு
ம்படை யோய்விலன்பெரி துந்தினன்விஞ்சையால்.. *

(இ-ள்.) மேருகந்தரம் - மகாமேருவினுடையகுகையில்—உம்பரடைந்தனர்-தேவர்களடைந்தார்கள்—வீதியெங்கும் - வீதிகடோறும்—அரம்பையர்நின்றழ - தெய்வப்பெண்கள்நின்றழும்படியாக—யாருமின்றிய - சூனியமாயிருக்கின்ற—இந்திரன்றன்பதி- தெய்வலோகத்தை—ஈசன்வென்ற - பரமேஸ்வரன்செயித்த— புரங்களெனும்படி - திரிபுரங்களென்றுசொல்லும்படி—நேரும் - எரிக்கின்ற—அங்கிசொரிந்துதிரும்பினன்-அக்கினியைவருஷித்துசம்பராசுரன்றிரும்பினன்—நீடகன்றுள - வெகுதூரநீங்கியிருந்த — அந்தணர் - தேவர்கள்—பின்றையும்- மறுபடியும் — ஊருள்வந்தனரென்று - வானகரில்வந்தனர்களென்று — பெரும்படை- மிகுந்தசேனைகளை—ஓய்விலன் - ஒழிவின்றி —விஞ்சையாற்பெரிதுந்தினன் - (மாயா) வித்தையால்மிகவுஞ் சம்பராசுரனனுப்பிக்கொண்டிருந்தான். எ-று..(உங)

(அ-கை.) தாமாதியசுரனை யுண்டாக்கினதறிவித்தல். (கவி) ஆவதாகியதானவர்பற்
றறவாதி தேவர்கண்மோதினர்மற்றது, தாபமாய்சுமோசன்விதித்துள தாமனேடுவி
யாளகடப்பெயர், மூவர்மாயையினுல்வரலுற்றவர் மூரிமேருவுலாவுவதொப்பவர்,
பாவனுவசவாதனையற்றவர் பாசமாமபிமானநினைப்பிலர்............................. *

(இ-ள்.) ஆவதாகிய - இப்படியாவதாகிய—தானவர்பற்றற - அசுரர்கள்பற்றறும்படியாக—ஆதிதேவர்கண்மோதினர் - ஆதியானதேவர்களடித்தார்கள்—மற்றதுதாபமாய்- திரும்பவதுவேமிகுந்தகோபமாய்—அசுமோசன்விதித்துள - சம்பராசுரன்சிருஷ்டித்துள்ள — தாம

னேறிவிப்பாள்கடப்பெயர் - தாமன்வியாளன்கடனென்றுசொல்லப்பட்ட நாமங்களையுடைய—மூவர் - இம்மூவர்கள்—மாயையினல்வரலுற்றவர் - மாயையினல்வந்தவர்கள் — மூரிமேருபலம்பொருந்தியமேருமலையானது—உலாவுவதொப்பவர் - சஞ்சரிப்பதற்குச்சமானமானவர்கள் —பாவனுவசவாதலையற்றவர் - பாவிக்கப்பட்டவாசனுவசமாகாதவர்கள் — பாசமாமயிமானநினைப்பிலர் - இச்சாவபிமானநினைவில்லாதவர்கள். எ-று ....(உச)

(அ-கை.)-இ-து. (கவி) சாதல்வாழ்தல்களிப்புறல்சோர்வுறற்றாமவாகைகொள்வெற்றிகடோல்விகள், போதன்மீளலனைத்தையுநாடலர் போர்செய்வோரைமுருக்குவர்கேவல, மாதலாலிவர்பற்றலர்சேனையை யாசுகங்கொடழிப்பரழிப்புறார், பாதலாசுரன்வெற்பினர்வேலையர் பாருளாரிவர்பிற்செலவேவினன் .... *

(இ-ள்.) சாதல் - இறத்தலும்—வாழ்தல் - சீவித்தலும்—களிப்புறல்-இன்பமடைதலும்—சோர்வுறல் - வாட்டமடைதலும்—தாமவாகைகொள் - வெற்றிமாலையைத்தரித்த—வெற்றிகொள் - சயங்களும்—தோல்விகள் - அவசயங்களும்—போதல் - (சண்டைக்குப்) போகுதலும்—மீளல் - (அவர்களுக்கஞ்சித்) திரும்புதலுமாகிய—அனைத்தையும் - யாவையும்—நாடலர் - அறியாதவர்கள்—போர்செய்வோரை- யுத்தஞ்செய்பவர்களை—கேவலம்-முழுமையும்—முருக்குவராதலால் - அழிப்பவர்களாதலினல்—இவர் - இம்மூவர்களும்—பற்றலர்சேனையை-சத்துருக்களுடையசேனைகளை — ஆசுகங்கொடழிப்பர் - பாணப்ரயோகங்களாற்கெடுப்பார்கள்—அழிப்புறார் - (இவர்க) ளசமடையார்க (ளென்றுலோசித்து)—பாதலாசுரன்-பாதாளத்தில் (வசிக்கின்ற) சம்பராசுரனுனவன்—வெற்பினர் - மலையிலுள்ளவசுரர்களையும்— வேலையர்-சமுத்திரத்திலுள்ளவசுரர்களையும்—பாருளார் - பூமியிலுள்ளவசுரர்களையும் — இவர்பிற்செலவேவினன் - இவர்களுக்குப்பலமாகவனுப்பினன். எ-று .... (உரு)

(அ-கை.) தொந்தயுத்தமுரைத்தல். (கவி) தானவாதிபன்விட்டநெடும்படைதாள்களோடுகிரித்திரள்வந்தென, மீனவேலைபரப்பில்விரிந்தென மேவினர்கள்சிருட்டிமுடிந்தென, வானநாடருமப்படிவந்தனர்வாயுவோடுநெருப்புமலைந்தென, வானசேனைகண்முட்டியுடன்றனவாதலான்மறுகற்பம்விளைந்ததே .... *

(இ-ள்.) தானவாதிபன் - சம்பராசுரன் — விட்டநெடும்படை - அனுப்பியமிகுந்தசேனைகளானவை — தாள்களோடுகிரித்திரள்வந்தென - கால்களுடன்மலைக்கூட்டங்கள் வந்தது போலவும்—மீனவேலை - மச்சங்களையுடையசமுத்திரமானது—பரப்பில்விரிந்தென- பூமியில் விரித்ததுபோலவும்—சிருட்டிமுடிந்தென - கற்பமுடிந்ததுபோலவும்—மேவினர்கள்-வந்து பொருந்தினர்கள்—வானநாடரும் - விண்ணுலகத்தாரும்—அப்படிவந்தனர்-அவ்வசுரர்களைப் போலவேவந்தார்கள் —வாயுவோடு - வாயுவுடன் — நெருப்புமலைந்தென் - அக்கினிபொருதல்போல— ஆனசேனைகள் - (இவ்வித) மானவிரண்டுசேனைகளும்—முட்டியுடன்றன- (ஒன்றுக்கொன்) றெதிர்த்துயுத்தஞ்செய்தன—ஆதலால் - ஆகையால்—மறுகற்பம்விளைந்தது - மறுகற்பமுண்டாயிற்று. எ - று. மறுகற்பம்விளைந்ததென்றதனுல் இக்கற்பமுடிவுக்கும்மறுகற்பமுதலுக்கு, மிடையிலுண்டானவழிவையொத்ததெனக்கொள்க .... (உசு)

(அ-கை.) இ - து. (கவி) ஆயுதங்களெரிந்துநெருங்கிடவாகமெங்கும்விழுந்தன வெற்பென, மாயுமங்கமுமிழ்குருதிக்கடன்மாதிரங்கடதும்பியலைந்தன, காயும்வஞ்சரடர்ந்துமுடுக்கினர்காதுமும்பர் தளர்ந்தோடவுற்றனர், சாயுமண்டர்கள்பின்றொடர்வுற்றனர்தாமனும்பிறருந்திசைமுற்றுமே .... *

(இ-ள்.) ஆயுதங்கள் - ஆயுதங்களானவை — எரிந்துநெருங்கிட - அக்கினியைக்கக்கிக்கொண்டுசமீபத்திலவர—ஆகம் - சரீரங்களானவை—எங்கும் - எவ்விடத்தும்— வெற்பெனவிழுந்தது - மலைகளைப்போல (மடிந்து) விழுந்தன—மாயுமங்கம் - மாய்கின்றசரீரங்கள்—உமிழ்குருதிக்கடல் - சொரியாநின்றவிரத்தசமுத்திரத்தில்—மாதிரங்கள் - மலைகள்—ததும்பியலைந்தன - தத்தளித்தலைந்தன—காயும்வஞ்சர் - கோபிக்கின்றவஞ்சகராகியவசுரர்கள்— அடர்ந்துமுடுக்கினர் - நெருங்கித்துரத்தினுர்கள்—காதுமும்பர் - கொல்லப்படுகின்றதேவர்கள்—தளர்ந்தோடவுற்றனர் - தளர்ந்தோடினுர்கள்—சாயுமண்டர்கள்பின் - ஓடாநின்றதேவர்கள்பின்—தாமனும்பிறரும் - தாமனுமற்றுமுள்ளவசுரர்களும் —திசைமுற்றும் - திக்குகண்முழுதும்—தொடர்வுற்றனர் - தேடினுர்கள். எ-று .... (உஎ)

(அ-கை.) தேவர்கள்பிரமனிடத்திற்சென்றுமுறையிடுதல். (கவி) உம்பரோடிமறைந்தமைகணடிலருந்தமூவருநின்றுதிரும்பினர், சம்பராசுரன்முன்புறவந்தனர் சங்கவானவரொன்செயலென்றுமகொடம்புயாசனன்முன்புநடந்தனரன்பின்றும்பணிந்துபுகன்றனர், வெம்புதிநிகர்சம்பரன்வஞ்சமும்வெங்கண்மூவர்தொடர்ந்துதொடர்ந்ததும் .... *

(இ-ள்.) உம்பரோடிமறைந்தமை - தேவர்களோடிமறைந்ததை—கண்டிலர் - காணாதவர்களாய்—உந்துமூவரும் - உயர்வானமூவர்களும் — நின்றுதிரும்பினர் - (தெய்வலோகத்தி)னின்றுதிரும்பி—சம்பராசுரன் - சம்பராசுரனுக்கு—முன்புறவந்தனர் - முன்பாகவந்தார்கள்—சங்கவானவர் - கூட்டமாகியதேவர்கள்—என்செயலென்றுகொடு - என்னசெய்வதென்றெண்ணிக்கொண்டு—அம்புயாசனன்முன்பு - பதுமாசனனானபிரமன்முன்—நடந்தனர் - போய்—அன்பினோடுபணிந்து - அன்புடன்வணங்கி—வெம்புதீநிகர் - சுடுகின்றவக்கினிக்கொப்பான—சம்பரன்வஞ்சமும் - சம்பராசுரனதுகொடுமையையும்—வெங்கண்மூவர் - கொடியகண்களையுடையதாமவியாளகடர்—தொடர்ந்துதொடர்ந்ததும் - தொடர்ந்துதுரத்தினதையும்—புகன்றனர் - சொன்னார்கள். எ - று ...... (௨௮)

(அ-கை.) பிரமதேவன்றானவரைச்செயிக்குமுபாயமுரைத்தல். வேறு. (கலி) கேட்டநா
ன்முகனஞ்சலென்றிவ்வுரைகிளர்த்தா, னீட்டமாகியவருடமோராயிரமிறந்தால், வாட்டு
சம்பரன்போரிலேயசுரரைமகவான், வீட்டுமவ்வளவுஞ்செயத்தக்கதுவிதிப்பாம் ...... *

(இ-ள்.) கேட்டநான்முகன் - (இவைகளைக்) கேட்டபிரமா (சிந்தித்து)—அஞ்சலென்று - பயப்படவேண்டாமென்று—இவ்வுரைகிளர்த்தான் - இந்தவாக்கியத்தைச்சொன்னார்—ஈட்டமாகிய - கூட்டமாயிருக்கின்ற—வருடமோராயிரமிறந்தால் - ஆயிரம்வருடஞ்சென்றால்—வாட்டுசம்பரன்போரில் - மெலியச்செய்கின்றசம்பராசுரன்யுத்தத்தில்—அசுரரை - அசுரர்களை—மகவான்வீட்டும் - தேவேந்திரன்கொல்லுவான்—அவ்வளவும் - அந்தமட்டும்—செயத்தக்கதுவிதிப்பாம் - (நீங்கள்) செயத்தக்கதைச்சொல்லுவோம். எ - று ...... (௨௯)

(அ-கை.) வாசனையேறுமுபாயத்தையறிவித்தல். (கலி) என்றதாமனும்வியாளனுங்கட
னுமென்பவரைச், சென்றழைத்தமர் செய்வதுதிரும்புவதாகத், தொன்றுதொட்டுநீர்
தொந்திக்கின்வாதனைதொடர்ந்து, நின்றகண்ணடிநிழலெனமனத்திலேநிற்கும் ...... *

(இ-ள்.) என்ற - (இப்படி) யென்றுசொல்லிய — தாமனும்வியாளனுங்கடனுமென்பவரை - தாமன்வியாளன்கடனென்றுசொல்லப்பட்டவர்களை— சென்றழைத்து - போய்க்கூப்பிட்டு—அமர்செய்வது - யுத்தஞ்செய்வதாகவும்—திரும்புவதாக - மீள்வதாகவும்— தொன்றுதொட்டு - துவக்கினமுதல்—நீர்தொந்திக்கில் - நீங்கள்தொந்தமாகநடந்தால்— வாதனைதொடர்ந்து - அகங்காரவாசனைதொடர்ந்து—நின்றகண்ணடிநிழலென - இருந்தகண்ணாடியின்சாயைபோல — மனத்திலேநிற்கும் - (அவர்கள்) மனதிலுண்டாயிருக்கும். எ-று ...... (௩௰)

(அ-கை.) உயிருக்கிச்சையேகூற்றெனல். (கலி) நிலைபெறும்படிநானெனும் வாதனை
நின்றால், வலைபுகுந்தபுள்ளாமெனமூவருமடிவர், கொலைசெயற்கெளிதாசையேயுயிர்க்
கெலாங்கூற்றாய், தொலைவிறுன்பமாநிராசையேதுன்பமிலின்பம் ...... *

(இ-ள்.) நிலைபெறும்படி - நிலையையடையும்படியாக—நானெனும்வாதனைநின்றால் - நானென்கின்றவாதனையிருந்தால்—வலைபுகுந்தபுள்ளாமென - வலைக்குளகப்பட்டபக்ஷியைப்போல—மூவருமடிவர் - மூன்றுபேர்களுமாள்வார்கள்—கொலைசெயற்கெளிது - கொல்லுதற்கெளிதாகும்—ஆசையே - இச்சையே — உயிர்க்கெலாங்கூற்றாய் - ஆத்மாக்களனைவர்க்குங்காலனாய்—தொலைவிறுன்பமாம் - நீங்காததுக்கமாகும்—நிராசையே - விராகமே—துன்பமிலின்பம் - துக்கமில்லாதவாநந்தமாம். எ-று ...... (௩௧)

(அ-கை.) இச்சையானதுயாவருக்கும்பந்தமாமெனல். (கலி) வாதனைப்பாசத்தாலேமன்
னுயிரெல்லாங்கட்டுண், டேதமாமந்தப்பாசமிறுகுமேலிடரைச்செய்யும், வேதனையில
தாந்தீரநழுவுமேல்வேட்கையாலே, தீதிலோரநேகங்கற்றோர்தீரரொன்னினுங்கட்டுண்பார்

(இ-ள்.) வாதனைப்பாசத்தால் - வாதனையென்னுங்கயிற்றினால்—மன்னுயிரெல்லாங்கட்டுண்டு - மிகுந்தபிராணிகளியாவுங்கட்டுப்பட்டு—ஏதமாம் - துன்பமடையும்—அந்தப்பாசமிறுகுமேல் - அக்கயிறானதழுந்துமானால்—இடரைச்செய்யும் - துயரைக்கொடுக்கும்—தீரநழுவுமேல் - பற்றறவிடுமானால்—வேதனையிலதாம் - துன்பமில்லையாம்—வேட்கையால் - ஆசையினால்—தீதிலோர் - குற்றமற்றவர்களாயினும் — அநேகங்கற்றோர் - சர்வஞ்ஞர்களாயினும்—தீரரொன்னினும் - தீரர்களாயினும்—கட்டுண்பார் - பந்தப்படுவார்கள். எ-று ...... (௩௨)

(அ-கை) வானவர்யுத்தத்துக்காரம்பித்தல் (கலி) விலங்குறுசிங்கம்போலவேட்கையாலுயர்ந்
தோர்தாழ்வர், கலங்கன்மினென்றுவேதாகண்டுழிமறைந்தபின்னர், புலங்கொளவனைத்துங்
கேட்டபுங்கவர்பொன்னாட்டெய்திநிலங்கிழிந்தண்டம்பிறநெடியதுந்துமியோடார்த்தார்

(இ-ள்.) விலங்குறுசிங்கம்போல - தளைபூண்டகேசரியைப்போல—வேட்கையால் - ஆசையினால்—உயர்ந்தோர்தாழ்வர் - மேன்மையுள்ளவர்கள்தாழ்வையடைவார்கள்—கலங்கன்மினெ

ன்று - நீங்கள்கலங்காதிருங்களென்று—வேதா - பிரமாவானவர் — கண்டுழிமறைந்தபின்னர்- பார்த்தவிடத்தின்மறைந்துபோனபின்பு—பலன்கொள்- ஐம்புலனுநிறையும்படியாக—அனைத்துங்கேட்டபுங்கவர் - சகலத்தையுங்கேட்டதேவர்கள்—பொங்ருட்டெய்தி - தெய்வலோகமடைந்து—நிலங்கிழிந்து- பூமிபிளர்ந்து—அண்டப்பீற - அண்டங்கிழியுப்படி—நெடியதுந்துமியோடார்த்தார் - பெரியபேரிகையுடன்சத்தித்தார்கள். எ-று .... (௫௩)

(அ-கை. அசுரருக்குவாசனையேற்றல் (கவி) ஆர்த்தனகேட்டவந்தவசுரர்பாதலத்தினின்றும் வேர்த்தனர்பொங்கிவந்துவெம்படையமரர்மீது, தூர்த்தனர்காலம்போக்குஞ்சுரர்பொருதுடைந்துபோகிப், பேர்த்தும்வந்தமர்செய் தோடிப்பின்னும்வந்ததனைச்செய்தார்.

(இ-ள்.) ஆர்த்தனகேட்ட - சத்தித்ததைக்கேட்ட—அந்தவசுரர் - அவ்வவுணர்கள்—பாதலத்தினின்றும் - பாதாளத்திலிருந்தும் — வேர்த்தனர்பொங்கிவந்து - மிகுந்தவேகத்துடன் கோபித்துவந்து—வெம்படை - கொடிதாகியவாயுதங்களை—அமரர்மீது தூர்த்தனர்- தேவர்களின்மேற்பொழிந்தார்கள்—காலம்போக்குஞ்சுரர்- காலத்தைக்கழிக்கின்றதேவர்கள்—பொருதுடைந்துபோகி - யுத்தமுடைந்தோடிப்போய்—பேர்த்தும்வந்து- மீளவும்வந்து—அமர்செய்து - யுத்தஞ்செய்து—ஓடி - ஓடிப்போய்—பின்னும்வந்து - திரும்பவும்வந்து—அதனைச்செய்தார் - அந்தயுத்தத்தைச்செய்தார்கள். எ-று .... (௫௪)

(அ-கை.) மனதுவாசனையிற்கட்டுப்படல். (கவி) இவ்வகைபலவுபாயமிறந்தநீள்காலஞ்செய்ய, நைவருநிடமதானநானெனும்பழக்கத்தாலே, மெய்வரநானென்றுன்னும்வேட்கையைவிருப்பமுற்றார், அவ்வகையாலேயுள்ளமகப்பட்டுநின்றதன்றே .... *

(இ-ள்.) இவ்வகை- இந்தப்ரகாரம்—பலவுபாயம் - நாநாவிதவுபாயங்களால்—இறந்தநீள்காலஞ்செய்ய - கழிந்தவெகுகாலமாகபுத்தஞ்செய்ய—நைவருநிடமதான- கெடாநின்றதிரமாகிய—நானெனும்பழக்கத்தால் - நானென்கின்றபழக்கத்தினால்—மெய்வரநானென்றுன்னும்- உண்மையாகநானென்றுநினைக்கின்ற—வேட்கையை- ஆசையை— விருப்பமுற்றார் - இச்சித்தார்கள்—அவ்வகையாலேயுள்ளம்- அவ்விதத்தினான்மனமானது—அகப்பட்டுநின்றது-பந்தப்பட்டிருந்தது. எ - று .... (௫௫)

(அ-கை.) தேகாபிமானமுண்டாதல். (கவி) பயம்வந்துபிடித்துக்கொள்ள படர்தருமோகங்கட்ட, வயர்வுறுமாயாபாசத் தழுந்தியென்செய்துமென்று, துயருறவிளைத்துக்காயந் துஞ்சுறுதிருக்குமாறு, மயலுறுதனத்தாலின்பம் வருவதுமெவ்வாறென்றார் .... *

(இ-ள்.) பயம்வந்துபிடித்துக்கொள்ள- அச்சம்வந்துபற்றிக்கொள்ளவும் —படர்தருமோகங்கட்ட - மிகுந்தமயக்கந்களைந்துகொள்ளவும்—அயர்வுறுமாயாபாசத்தழுந்தி-வருந்துகின்றமாயாபாசத்தின்மூழ்கி—என்செய்துமென்று - என்னசெய்வோமென்று— துயருறவிளைத்து- துன்பம்வரமெலிந்து—காயந்துஞ்சுறுதிருக்குமாறு - தேகநாசமாகாமலிருக்கும்வண்ணமும்—மயலுறுதனத்தால் - மயக்கம்பொருந்தியதிரவியங்களினால் —இன்பம்வருவதும்- சுகம்வருவதும்—எவ்வாறென்றார் - எவ்வண்ணமென்றாலோசித்தார்கள். எ - று .... (௫௬)

(அ-கை.) மனோமயக்கமாதல். (கவி.) சந்ததமிவ்வாறெண்ணத்தளைப்புண்டமனத்தராகி, யந்தமிற்ரமின்றியமரொன்றாலறவுமஞ்சிப், புந்திநொந்திறப்போமென்று புகலிடமெமக்கேதென்றுஞ், சிந்தனையாலேகெட்ட சித்தத்தாற்றியங்கிச்சோர்ந்தார் .... *

(இ-ள்.) சந்ததமிவ்வாறெண்ண - எப்போதுமிந்தப்ரகாரநினைக்க—தளைப்புண்டமனத்தராகி- பந்தப்பட்டமனத்தையுடையவராய்—அந்தமிற்ரமின்றி - முடிவற்றநிடமில்லாமல்—அமரொன்றாலறவுமஞ்சி - போரொன்றான்மிகவும்பயந்து—புந்திநொந்து- மனதும்நொந்து—இறப்போமென்று - நசிப்போமென்று—புகலிடம் - ஆதரவானவிடம்— எமக்கேதென்றும்-நமக்கெதுவென்றும்—சிந்தனையால் - நினைவினாலாகிய—கெட்டசித்தத்தால் - தீயமனதினால்—தியங்கிச்சோர்ந்தார் - கலக்குற்றுவாடினார்கள். எ - று .... (௫௭)

(அ - கை.) தானவரிறத்தல். (கவி) வலியெலாமிழந்துமுன்னேவந்தொருபெயர்நின்றுநலிவுறமாட்டாராகிநடுங்கினர்விறதுமாண்டாற், பலிதருமவியையங்கிபருகிடவல்லதுணடோ, வொலிதரவுளைத்தெஞ்சியோடினார்பொன்றிப்போனார் .... *

(இ-ள்.) வலியெலாமிழந்து-(தங்கள்)வல்லமைகளையெல்லாம்போக்கி—முன்னேவந்தொருபெயர்நின்றும் - (தங்கள்) முன்னொருவன்வந்துநின்றாலும்—நலிவுறமாட்டாராகி- அழிவுசெய்யமாட்டாதவர்களாய்—நடுங்கினர்- நடுக்கமடைந்தார்கள்--விறதுமாண்டால்-சமித்நிலலாமற்போனால்—பலிதருமவியை-ஆகுதிகொடுக்கின்றநெய்வருணவை—அங்கி-அக்கினியானது—

பருகிடவல்லதுண்டோ-புசிக்கும்படிவல்லமையுண்டாமோ—ஒலிதரவுரைத்தென்-சத்தமாகச் சொல்லியென்ன—அஞ்சியோடினூர்-பயந்தோடி—பொன்றிப்போனூர்-இறந்தனர்.எ-று(௫௮

(அ-கை.) அவிவேகத்தன்மையுரைத்தல். (கவி) தாமனும்வியாளன்றனுங் கடனுமுன் சரித்தமார்க்கந், தோமறுமுணர்வுண்டாகச் சொல்லினம்விநோதத்தாலே, மாமனமவி வேகத்தைவரம்பறப்பழகிவிட்டாற், யாமரப்பிறவித்துன்பம்பற்றறுதிந்தவண்ணம். *

(இ-ள்.) தாமனும் - தாமனென்பவனும்—வியாளன்றனும் - வியாளனென்பவனும்—கடனும் - கடனென்பவனும்—முன்சரித்தமார்க்கம் - முன்னடந்தவழியை—தோமறுமுணர்வுண்டாக - குற்றமற்றஞானமுண்டாகும்படி—சொல்லினம்- உமக்குச்சொன்னேம்—விநோதத்தால் - விளையாட்டினுல்—மாமனம்-மகாமனமானது—அவிவேகத்தை-அஞ்ஞானத்தில்—வரம்பறப்பழகிவிட்டால்- தடையில்லாமற்பழகினுல்—பாமரப்பிறவித்துன்பம்- அறிவின்மையாகியபவத்துன்பமானது—இந்தவண்ணம்-இப்படி—பற்றறுது- நீங்காது.எ-று(இ-௨௰-௧-ம்) பிரமநிஷ்டையுள்ள சம்பராசுரனுலுண்டாக்கின தாமாதிமூவருந்திரமுள்ளவராயிருந்தும் யானெனதென்னும்வாசனையாற்றேகாபிமானமடைதலி லறிவிழந்தார்களென்பதாம் .... (௫௯)

(அ-கை.) தாமாதிகள்பிரமத்திலுதித்ததெங்ஙனமெனின். (கவி) இனையவர்நியாய நீயிங் கெப்தலையென்றலோடு, மனையவர்பரத்தினின்று முதித்தவா றறியவேண்டு, முனைவகூறென்றிராமன் மொழிதலுமுனிவன்சொல்வான், றுனையுறுதாமன்முன் னேர்தோற்றமாத்திரமெய்யானேர் .... *

(இ-ள்.) இனையவர்நியாயம்-இந்தத்தாமாதியசுரர்களுடையநீதிகளை—நீயிங்கெப்தலை-ஸ்ரீராமா நீயிவ்விடத்திற்பொருந்தாதே — என்றலோடும் - என்றுவசிஷ்டமுனிசொல்லவும்—அனையவர்பரத்தினின்றும் - அவர்கள்பிரமத்திலிருந்தும் — உதித்தவாறு - உண்டானதன்மையை—அறியவேண்டும் - தெரியவேண்டும்—முனைவகூறென்று- முதன்மையானமுனியேசொல்லுமென்று—இராமன்மொழிதலும் - இராமன்கேட்கவும்—முனிவன்சொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—துனையுறு - அச்சமுள்ள—தாமன்முன்னேர் - தாமன்முதலானவர்கள்—தோற்றமாத்திரம்-பரத்தினது (ப்ரதி) பாமாத்திரமே—மெய்யானேர்-சரீரமானவர்கள்.எ-று. (இ-ம்) பிரமப்ரதிபாமாத்திரமாய்த்தாமாதிகடோற்றினரென்பதாம் .... (௬௰)

(அ-கை.) ஆயின்யாமெப்படிவிளங்குவமெனின். (கவி) எதிருறுதோற்றமெய்யா யிவர்கள்போலிங்கியாமும், விதியதாய்ப்புறத்திலொன்று மேவலம் வீரனேநின், மதியினானெனலும்பொய்யேமதியினீயெனலும்பொய்யே, யதிர்குரற்றமன்முன் னுமவர்களுண்டெனலும்பொய்யே .... *

(இ-ள்.) எதிருறு - எதிரேகாணப்பட்ட—தோற்றமெய்யாம் - ப்ரதிபையேசரீரமாயிருக்கின்ற—இவர்கள்போல் - இத்தாமாதிகளைப்போல— இங்கியாமும் - இவ்விடத்திலுள்ளநாமும்—விதியதாய் - உண்மையாக—புறத்திலொன்றும்- (சிதாகாசத்திற்குப்) புறம்பாகவொன்றிலும்—மேவலம் - பொருந்திலம்—வீரனே-சுத்தவீரனே—நின்மதியில்- உனதறிவில்—நானெனலும்பொய்யே-நானென்பதுமசத்தியமே—நீயெனலும்பொய்யே- நீயென்பதுமசத்தியமே—அதிர்குரற்றமன்முன்னும்-தொனிக்கின்றகண்டத்தையுடையதாமன்முதலிய— அவர்களுண்டெனலும்பொய்யே - அவர்களுண்டென்பதுமசத்தியமே. எ-று. (இ-ம்.) யாமுமப் பிரமப்ரகாசமாய்விளங்குவமேயன்றிவேறன்றென்பதாம் ....(௬௧)

(அ-கை.) சம்பரனுற்றமாதிகளுண்டாயினகிரமமியாதெனின். (கவி) பரத்தின தொளியேமெய்யாய் பாரித்தோர்சீவசத்தி, திரத்துறுசம்பரன்றன் றியானத்தா லசைத்துமூன்று, யுரத்தவுல்லாசமேவிற் றுரைத்தவித் திறத்தினுலே, வரத்துறு மவருநாமும்வாய்மையேயெங்குமில்லை .... *

(இ-ள்.) பரத்தினதொளியே - பிரமத்தினதுவிளக்கமே—மெய்யாய்பாரித்து - உருவமாய்வியாபித்திருக்கின்ற—ஓர்சீவசத்தி - ஓராத்மசத்தியானது—திரத்துறுசம்பரன்றன் - திரமுள்ளசம்பராசுரனுடைய— தியானத்தாலசைந்து - நினைவினுற்சலனமடைந்து— மூன்றாய்-தாமாதிமூன்றுவடிவங்களாய்—உரத்தவுல்லாசமேவிற்று-திரமானவுல்லாசத்தையடைந்தது—உரைத்தவித்திறத்தினுல் - சொல்லியவிக்குணத்தினுல் — வரத்துறுமவரும் - வராநின்றவர்களும்—நாமும் - யாமும்—வாய்மையேயெங்குமில்லை - உண்மையாகவேயெவ்விடத்துமில்லை. எ-று. (இ-ம்) சம்பரனதாத்மவுல்லாசமேயப்படிதோற்றினதென்பதாம் ....(௬௨)

(அ-நக.) ஆயிற்சகமநித்தியந்தானேயெனின். (கவி) அறிவதாயறிவேமெய்யாயம லமாயனைத்தாயாறிப், பிறிவுறுவரவுபோக்கில்பிரமமேயுளதாமந்தச், செறிபொ

ருட்சத்திதோற்றமாத்திரஞ்சகமாய்நிற்கும், பொறிகள்பல்காட்சிபொய்யே பொ
ருண்மெய்யேயென்றுவாழ்வாய் .... *

(இ-ள்.) அறிவதாய்-(யாவையுஞ்சாட்சியா) யறிவதாகியும்—அறிவேமெய்யாய்-போதாகாரயாகியும்—அமலமாய் - நின்மலமாகியும்—அனேகமாம் - சமஸ்தமாகியும்—ஆதி - உபசாந்தமாகியும்—பிறிவுறு - வேற்றுமையான—வரவுபோக்கு - உதயாஸ்தமனமும்—இல்-இல்லாததாகியுமிருக்கின்ற—பிரமமேயுளதாம் - பிரமஸ்வரூபமேயுள்ளதாகும் — அந்தச்செறி பொருள் - அப்பூரணவஸ்துவினுடைய—சத்தி - (சிற்) சத்தியினது — தோற்றமாத்திரஞ்சகமாய்நிற்கும் - உண்டாதமேலுலகமாயிருக்கும்—பொறிகள் - இந்திரியங்களாலறியப்பட்ட—பலகாட்சிபொய்யே-நாநாவிதமாகியதிரிஸ்யங்களசத்தியமே— பொருண்மெய்யேயென்று-பிரமவஸ்துவேசத்தியமென்று—வாழ்வாய் - சுகித்திருப்பாய். எ-று. (இ-ம்) சகலமும்பிரமப்ரகாசமாய்விளங்குதலிற்சகமித்தையேயென்பதாம் .... (சுகூ)

தாமவியாளகடர்கதை முற்றிற்று. ஆ கதை - யசஇ-கவிதை (சுாசு)

வீமபாசதிடர்கதை.

(அ-கை.) முன்சம்பராசுரன்பிரமத்தியானத்தாலித்தும்விவேகமிருந்துமிந்தபுத்தர்களைத் தங்களனுபவவுல்லாசமாய்ப்பாராமல்வேறுபட்டியானெனதென்னுப்படிக்கமேறத்தன்னையிழந்ததைக்கூறி, எப்படிப்பட்டவிடறு வந்தவிடத்தும்வேறுபட்டு தேகத்திலகம்பாவம்வாராமற்றனதில்லாசமாய்ப்பார்க்குநிமித்தம்பீமாதியர்கதையைநிரூபிக்கிறார் .... *

(அ-கை.) விஷயவிருப்பத்திற் பயனின்றெனல். (கவி) இதுநமக்கிதுநமக்கென்றிர
ங்குறுபொல்லாவாழ்வா, லுதவியோர்சாம்பரோனு முறப்பெறுதுதாரமிக்குச், சுத
முறுமுலகமெல்லாந்துரும்புபோற்காண்போர்தம்பால், விதனங்களனைத்தும்வாரா
மிருகங்களுலர்புற்றீண்டா .... *

(இ-ள்.) இதுநமக்கு- இப்(புத்திராதிக)ணமக்கென்றும்—இதுநமக்கென்று- இப்பூமி(முதலானவைக)ணமக்கென்றும்— இரங்குறுபொல்லாவாழ்வால் - வாடுகின்றநிர்ப்பாக்கியத்திலுல்—உதவி - சகாயமானது—ஓர்சாம்பரோனுமுறப்பெறுது - ஒருசாம்பலளவாவதுகிடைக்காது—உதாரமிக்கு - உதாரமிகுந்திருக்கின்ற (புருடர்கள்)—சுதமுறுமுலகமெல்லாம் - நாசமடைகின்றசகங்களனைத்தும்—துரும்புபோல் - திரணம்போல—காண்போர்தம்பால்-காண்பவர்களிடத்தில்—மிருகங்கள் - மான்கள் — உலர்புற்றீண்டா - வைக்கோலைத்தொடாததுபோல—விதனங்களனைத்தும்வாரா - துன்பங்களியாவுந்தொடராவாம். எ-று. (இ-ம்) பயனின்றியசகத்தையற்பமாகப் பார்க்கிற்சுகமுண்டாமென்பதாம் .... (௧)

(அ-கை.) உலகத்தையணுவாகப்பார்க்குந் திருஷ்டியாதெனின். (கவி) உளத்துறச
மத்காரஞ்சே ருண்மையையுணர்வோர்தம்மை, யளக்கரும்பிரமாண்டம்போலட்ட
திக்காளர்காப்பர், கிளப்பருங்குணத்திலன்பாய் கேள்வியில்விருப்பாயுண்மை, விள
க்குறுவருத்தமிக்கோர் நரர்நின்றோர்மிருகந்தானே .... *

(இ-ள்.) உளத்துற - உள்ளத்திற்பொருந்த — சமத்காரஞ்சேர் - சமத்காரசத்திசேர்ந்த—உண்மையை - பிரமத்தை—உணர்வோர்தம்மை - அறிபவர்களை—அளக்கரும்-அளவிடுதற்கரிய—பிரமாண்டம்போல் - பிரமாண்டத்தைப்போல—அட்டதிக்காளர்காப்பர் - எண்டிசைப்பாலர்காப்பார்கள்—கிளப்பருங்குணத்தில் - சொல்லற்கரியகுணங்களில்— அன்பாய் - அன்பாகியும்—கேள்வியில்விருப்பாய் - விசாரணையில்விருப்பமாகியும்—உண்மைவிளக்குறு-தத்துவத்தைவிளக்காநின்றவஸ்துவில்—வருத்தமிக்கோர் - பிரயாசமிகுந்தவர்களாகியுமிருக்கின்றவர்களை—நரர் - புருடர்களாவர்—நின்றோர்- மற்றவர்கள்—மிருகந்தான்-விலங்குகளாவர். எ-று. (இ-ம்) தத்துவத்தையறிகின்றமுயற்சியாற்சகமற்பமாகத்தோற்றுமென்பதாம் .... (௨)

(அ-கை.) உண்மையையுணருமுயற்சியாதினுலுண்டாகுமெனின். (கவி) செயலரு
ந்துட்டருற்றுலுஞ் செயத்தகாச்செயல்களாகா, வியல்பலாவழியாலுண்ணவிராகுலவை
யமுதங்கொள்ற, தயலெலாம்வசமாயாபத்தனைத்தும்போமென்றுநன்று, முயலு
நற்குணங்களாலேமெய்ப்புகழெய்திநோர்க்கே .... *

(இ-ள்.) செயலருந்துயருற்றாலும்-செய்தற்கரியதுன்பமடைந்தாலும்—செயத்தகா-செய்யக்கூடாத—செயல்களாகா - தொழில்களைச்செய்யக்கூடாது—இயல்பலாவழியால்-ஒழுங்கல்லாதமார்க்கத்தினால்—உண்ண - புசிக்க—இராகுவை- இராகுவென்பவனை—அமுதங்கொன்றது - அமுதமானது கொலைசெய்தது—முயலுநற்குணங்களால் - முயற்சிக்கின்றசற்குணங்களினால்—மொய்புகழ் - மிகுந்தகீர்த்தியை—எய்தினோர்க்கு- அடைந்தசத்துக்களுக்கு—அயலெலாம் - வசமல்லாதவனைத்தும்—வசமாய் - வசமாகி—ஆபத்தனைத்தும்போய்-ஆபத்துக்களென்றுசொல்லப்பட்டசகலமுநீங்கி—என்றுநன்றாம் - எப்பொழுது (மளவற்ற) சம்பத்துண்டாம். எ-று. (இ-ம்) மயித்திரியாதிகுணங்களுண்டாவதாற் றுன்பம்வரினும் விசாரமுயற்சியுண்டாகுமென்பதாம்.. (௫)

(அ-கை.) அவ்விசாரமெதைக்கொடுக்குமெனின். (கவி) ஒழிவறுமுயற்சிதன்னாலூகத்தாலுயர்ந்தநூலா, லிழிவறவியற்றுவோர்கட்கெப்பயனெளிதினெய்தா, வழிபடுநன்னூலாளர்வருபயன்கருதாச்செய்யி, லழிவறமுற்றுமுற்றியளவறுபயனைநல்கும்............... *

(இ-ள்.) ஒழிவறுமுயற்சிதன்னால் - நீங்காதமுயற்சியினாலும்—ஊகத்தால்- யுத்தியினாலும்—உயர்ந்தநூலால் - மேலானஞானசாஸ்திரங்களினாலும்—இழிவறவியற்றுவோர்கட்கு-குற்றமறநடப்பவர்களுக்கு—எப்பயனெளிதினெய்தா - எந்தப்ரயோசனமெளிதிற்கிடையாது—வழிபடு - வழிபாடாகிய—நன்னூலாளர் - ஆத்மஞானசாஸ்திரத்தையனுபவிப்பவர்கள்—வருபயன் - வரப்பட்டப்ரயோசனத்தை—கருதா - (வினைவிலடையச்) சிந்தியாமல்—செய்யில்-(கிரமமாக) வனுசந்தித்தால்—அழிவறமுற்றுமுற்றி - கெடாமன்முழுதுமுதிர்ந்து—அளவறுபயனைநல்கும் - முடிவற்றஆத்மலாபத்தைக்கொடுக்கும். எ-று. (இ-ம்) சுருதியுத்தியனுபவத்துடன் விசாரிக்குமவிசாரணை யாத்மலாபத்தைக்கொடுக்குமென்பதாம்.......................... (௬)

(அ-கை) ஆத்மாவின்ஸ்வரூபமியாதெனின். (கவி) வருத்தமற்றச்சஞ்சோகமதமின்றிநன்னூற்பின்போ, யொருத்தராலேவலின்றியுலாவுகநசிக்கவேண்டா, வருத்தங்களநர்த்தமாகுமளவில்போகங்கணையாம், பெருத்தவாபத்தாஞ்செல்வம்பேரின்பநிராசைதானே. *

(இ-ள்.) வருத்தமற்று- துன்பமில்லாமல்—அச்சம் - பயமும்—சோகம்- சோம்பலும்—மதமின்றி - செருக்குமில்லாமல்—நன்னூற்பின்போய் -ஆத்மஞானசாஸ்திரார்த்தங்களின்பின்சென்று—ஒருத்தராலேவலின்றி - ஒருவராலேவுதலில்லாமல்—உலாவுக - சஞ்சரிக்கக்கடவாய்—நசிக்கவேண்டா - கெடும்படிவிரும்பாதே— அருத்தங்களநர்த்தமாகும் - திரவியங்கள்பயனில்லனவாம்—அளவில்போகங்கணையாம் - மிகுந்தபோகங்களின்பமாம்—செல்வம் - செல்வமானது—பெருத்தவாபத்தாம் - பெரியவாபத்தையுடையதாம்— நிராசைதானேபேரின்பம்-நிராசையேபேரானந்தமாம். எ-று. (இ-ம்) நிரதிசயமாகிய பேரானந்தமேயாத்மஸ்வரூபமாம்

(அ-கை.) அப்பேரானந்தத்தாலியாதுவருமெனின். (கவி.) இடும்பைகூர்சங்கமின்றியியற்கையாசாரமெய்தி, குடும்பமார்துயர்சிற்றின்பங் குறித்திடாப்பெருமையோர்க்கு, நெடும்புகழ்வாணாள்செல்வ நிறைகுணமனைத்துமுண்டாய், படும்பலன்வசந்தகாலக் கொடிகள்போற்பலிக்குமன்றே... *

(இ-ள்.) இடும்பைகூர் - துன்பமிகுந்த—சங்கமின்றி- கூட்டமில்லாமல்—இயற்கையாசாரமெய்தி - இயல்பானவொழுக்கமடைந்து — குடும்பமார்துயர் - சம்சாரமானதுன்பத்தையுடைய—சிற்றின்பம் - விஷயசுகங்களை—குறித்திடாப்பெருமையோர்க்கு- கருதாதபெருமையையுடையசத்துக்களுக்கு—நெடும்புகழ் - மிகுந்தகீர்த்தியும்—வாணாள்- (நீண்ட)வாயுளும்—செல்வம் - (மிகுந்த)செல்வமும்—நிறைகுணம்- மிகுந்தசற்குணங்களுமாகிய—அனைத்துமுண்டாய் - சகலமுமுண்டாகி — படும்பலன் - கிடைக்கானின்றபிரமப்ரயோசனமானது—வசந்தகாலக்கொடிகள்போல- வசந்தகாலப்பூங்கொடிகளைப்போல—பலிக்கும்-கிடைக்கும். எ-று. (இ-ம்) பவத்துன்பநீங்கி பரகதியுண்டாமென்பதாம்................................ (௬)

(அ-கை.) பவத்துன்பநீங்குமுபாயமியாதெனின். (கவி) தவங்களாற்றெய்வநீராற் சாத்திரங்களினாற்போகாப், பவங்களையுயர்ந்தோர்பாதம்பணிந்துபற்றறுக்கவேண்டு; மவங்களாங்காரங்கோப மறவுந்தேய்ந்தியற்கையான, சுவங்களினடந்துநன்னூற் றுறைநின்றோருயர்ந்தமேலோர்.. *

(இ-ள்.) தவங்களால் - தபசுகளினாலும்—தெய்வநீரால் - புண்ணியதீர்த்தங்களினாலும்—சாத்திரங்களினால் - நூல்களினாலும்—போகாப்பவங்களை-நீங்காதசநநங்களை—உயர்ந்தோர்பாதம் - மகான்களதுதிருவடியை—பணிந்துபற்றறுக்கவேண்டும்-வணங்கிப்பாசங்களைக்களைக்கவேண்டும்—அவங்கள்-பயனின்மையான—ஆங்காரம்- நானென்னுமோகமும்—கோபம்-

சினமும் — அறவுந்தேய்ந்து - மிகவுங்குறைந்து — இயற்கையான - இயல்பாகிய—சுவங்களி னடந்து - சன்மார்க்கங்களிற்சென்று — நன்னூற்றுறைநின்றோர் - ஆத்மஞானசாஸ்திரமார்க்கத்திநின்றவர்கள்—உயர்ந்தமேலோர் - மேன்மையானசத்துக்கள். எ - று. (இ-ம்) மகான்களைப்பணிவதே பவத்துன்பநீக்கு முபாயமென்பதாம்... (எ)

(அ-கை.) மகான்களாரெனின். (கவி) நானெனும்பொருள்காணுதோர்ஞானவாகாயங்
காணூர், நானெனும்பொருளைக்கண்டோர் ஞானவாகாயமாவார், நானெனுமகங்கா
ரக்கார் ஞானவிண்மதியைமூடி, நானெனுப்பரமவாம்ப னன்மலர்விரியாதன்றே*

(இ-ள்.) நானெனும்பொருள்காணுதோர் - நானென்பதற்கருத்தமாகிய(பிரமத்தைக்) காணுதவர்கள்—ஞானவாகாயங்காணூர் - சிதாகாயத்தைப்பாரார்கள்—நானெனும்பொருளைக் கண்டோர் - நானென்பதினருத்தமாகிய(பிரமத்தைக்) கண்டவர்கள் — ஞானவாகாயமாவார் - சிதாகாயமாவார்கள்—நானெனும் - நானென்கின்ற—அகங்காரக்கார் - அகங்காரமோகமான து—ஞானவிண்மதியைமூடில் - ஞானகாயத்திங்களைமறைக்கில் — நானெனுப்பரமவாம்பல் - யானென்றுசொல்லப்படாத (பிரமமென்னு) மல்லியான — நன்மலர்விரியாது - நல்லபுஷ்பமானதுமலராது. எ - று. (இ - ம்) நானென்பதை நீக்கித்தானுகி விளங்குபவர்களேமகான்களென்பதாம்... (அ)

(அ-கை.) நானென்பதியாதினுற் கெடுமெனின். (கவி) மடிவறுபிறவியென்னு மரத்திர
ளெனக்கிதென்னு, நெடியபல்பணைகணீட்டி நிரையமாங்காய்கள்காய்க்கு, முடிவறுதுய
ராங்கார முளையாகவிளையாநிற்கு, மிடியிலாஞானத்தியால் வேரொடும்வெந்துபோமே.

(இ-ள்.) முடிவறுதுயராங்காரம் - அளவற்றதுன்பமுள்ளவகங்காரமானது — முளையாக விளையாநிற்கும் - அங்குரமாகமுளைத்துவளராநின்ற—மடிவறுபிறவியென்னும் - நீங்காதசநநமென்னும்—மரத்திரள் - தருக்கூட்டங்களானவை—எனக்கிதென்னும் - யாமெனதென்கின்ற—நெடியபல்பணைகணீட்டி - நீண்டகிளைகளாகவிரித்து—நிரையமாங்காய்கள்காய்க்கும் - நரகமென்னுங்காய்களைக்காய்க்கும்—(அருத்தங்களானவை) மிடியிலாஞானத்தியால் - குறைவற்ற ஞானக்கினியினுல்—வேரொடும்வெந்துபோம் - மூலத்துடனெரிந்துபோகும். எ-று. (இ-ம்.) ஞானத்தினுலகம்பாவங் கெடுமென்பதாம்... (கூ)

(அ-கை.) அகங்காரத்தின்ஸ்வரூபமும்அதைஞானத்தாற்கெடுக்குமுபாயமும்அஃதுநீங்கி
னவிடத்துண்டாகும் பயனுமியாதெனின். (கவி.) என்றலுமிவ்வாங்காரமெவ்வுருவுடை
த்தெவ்வாறு, வென்றிடலாகுந்தேக மேவியுமேவாதாயு, நின்றொருகாலம்வென்றுனேரு
றுபயனேதென்று, நன்றுணர்வள்ளல்கேட்ப ஞானமார்வசிட்டன்சொல்வான்............ *

(இ-ள்.) என்றலும் - (இப்படி)யென்றுவசிஷ்டன்சொல்லவும்—இவ்வாங்காரம் - இந்தவகங்காரமானது—எவ்வுருவுடைத்து - என்னவடிவமுடையது—எவ்வாறுவென்றிடலாகும் - எப்படி செயஞ்செய்யலாம்—தேகமேவியும் - தேக (வாசனை) பொருந்தினவனுலும்— மேவாதாயு நின்று - பொருந்தாதவனுலுமிருந்து—ஒருகாலம்வென்றால் - ஒருபொழுதுசெயஞ்செய்தால் —நேருறுபயனேதென்று - வருகின்றப்ரயோசனமென்னவென்று—நன்றுணர்வள்ளல்கேட்ப - நன்மையையுணராநின்றவிராமன்கேட்க— ஞானமார்வசிட்டன்சொல்வான் - பூர்ணஞானியானவசிஷ்டமுனிசொல்வார். எ - று... (ய)

(அ-கை.) அவ்வகங்காரமூன்றின் மூன்றினவகங்காரவிலக்கணங்கூறல். (கவி) மூவகையுலகி
லிந்தவகங்காரமும்மையென்று, மேவருமிரண்டுநன்றுமிகவுமொன்றீனமாகும், யாவது
பரமுநாமேயீதிலமெமையலாதோர், பாவனையிலதென்றேரும்போதமேபரமாங்காரம்..

(இ-ள்.) மூவகையுலகில் - மூன்றுவிதமாகியவுலகங்களில்—இந்தவங்காரமும்மை - இவ்வாங்காரமானதுமூன்று(விதமாம்)—(அவற்றுள்) என்றும் - எப்பொழுதும்—மேவருமிரண்டுநன்றும் - பொருந்துதற்கரியவிரண்டகங்காரநன்மையையுடையதாம்— மிகவுமொன்றீனமாகும் - மிகவுமோரகங்காரமிழிவையுடையதாம் — யாவதும் - சகலசகங்களும்—பரமும் - பரமாத்மாவும்—நாமே - நாமேயாம்—ஈதிலம் - (நா)முடிவிலம்— எமையலாது - நம்மையன்றி—ஓர் பாவனையிலதென்று - ஒருபாவனையுமில்லையென்று—ஒரும்போதமே - ஆராய்ந்தறிகின்றஞானமே—பரமாங்காரம் - மேன்மையாகியவகங்காரமாம். எ-று... (யக)

(அ-கை.) இரண்டாமகங்கார விலக்கணங்கூறல். (கவி) செந்நெல்வாலினுஞ்சற்றுகிச்செ
கங்களுக்கயலாயென்று, மன்னுதுமெனக்கொள்ளப்பாத மறுமறையாங்காரமாகு, மிந்தில
யிரண்டுஞ்சீவன்முத்தர்பாலிருந்திடேற்றித், தன்னொருமுத்திநலகுஞ்சுழல்வுறுபந்தநல்கா.

(இ-ள்.) செந்நெல்வாலினுஞ்சற்றுகி - நெல்வாலுனியினுஞ்சூட்சுமமாகியுய—

க்கயலாய் - (சகல)வுலகங்களுக்குப்புறம்பாகியும்—என்றுமன்னுதுமென - (நா)மெய்பொருளாநிலையாயிருக்கின்றோமென்று— கொள்போதம் - கொள்ளப்பட்டஞானமே— மற்றையாங்காரமாகும் - இரண்டாவதாகியவகங்காரமாகும் —இந்நிலையிரண்டும்-இந்தநிச்சயத்தையுடைய விரண்டகங்காரமும்—சீவன்முத்தர்பாலிருந்து - சீவன்முத்தர்களிடத்திலிருந்தா — ஈடேற்றி- கரையேற்றி—துன்னருமுத்திநல்கும் - அடைதற்கரியமோக்ஷத்தைக்கொடுக்கும்— சுழல்வுறு பந்தநல்கா - சுழலுகின்றபந்தத்தைக்கொடுக்கமாட்டாது. எ-று. (இ-ரு-க-ம்) இவ்விரண்டகங்காரமுமோக்ஷமடைவதற்குச் சகாயமாமென்பதாம்.............(௰௨)

(அ-கை.) மூன்றுமகங்கார விலக்கணமறிவித்தல். (கலி) கரசரணாதிமட்டா நானிவனென்
றுகாணுந், திரமதுதானேமூன்று மகங்காரஞ்செகத்தோர்க்கெல்லா, முரியதாமிகவும்
பொல்லாதுற்பவமென்னுநச்சு, மரமெழுமூலமாகும் வருந்தியுமொருக்கவேண்டும்... *

(இ-ள்.) இவனான் - இப்படிப்பட்டயான்— கரசரணாதிமட்டாம் - பாணிபாதாதிகளாகிய சரீரமாத்திரமாம்—என்றுகாணும் - என்றறிகின்ற—திரமதுதானே- உறுதியே—மூன்றுமகங்காரம்- மூன்றாவதகங்காரமாம்—செகத்தோர்க்கெல்லாம் - உலகத்திலுள்ளவனைவர்க்கும்—உரியதாம்- உரித்தாகும்—மிகவும்பொல்லாது- மிகவுங்கொடியது—உற்பவமென்னும்- சநநமென்கின்ற—நச்சுமரமெழுமூலமாகும் - விஷவிருக்ஷம்வளர்தலுக்குக்காரணமாம் — வருந்தியும்- வருத்தமுற்றாவது—ஒருக்கவேண்டும் - (இதனைக்)கெடுக்கவேண்டும். எ - று ....(௰௩)

(அ-கை.) இவ்வகங்காரத்தைக்கெடுக்குமுபாயமறிவித்தல். (கலி) கொடிதிதுகொடி
துசாலக் கொடிதிதன்கொடுமையாலே, முடிவறுமுயிர்களெல்லா மோகமுற்றறிவு
கெட்டார்; கடிதிலவ்விரண்டினாலுங் கடிந்திதெவ்வளவுவிட்டாய், படிவுறவ்வளவே
யெய்தும் பரமமாந்தற்பதார்த்தம் .... *

(இ-ள்.)இதுகொடிதுகொடிது-இதுகொடியதுகொடியது—சாலக்கொடிது-மிகவுங்கொடியது—இதன்கொடுமையால்-இவ்வகங்காரத்தின்கொடுமையினால்—முடிவறுமுயிர்களெல்லாம்- அளவற்றவாத்மாக்களனைத்தும் — மோகமுற்று - மயக்கத்தையடைந்து — அறிவுகெட்டார்- அறிவிழந்தார்கள்—கடிதில் - சீக்கிரத்தில் — அவ்விரண்டினாலும் - (முன்சொன்ன) வவ்விரண்டகங்காரங்களாலும்—கடிந்து- (இந்தமூன்றாவதானவகங்காரத்தைக்) கெடுத்து—இதெவ்வளவு விட்டாய் - இதையெவ்வளவுநீக்கினையோ— படிவுறவ்வளவே - பொருந்தவவ்வளவே — பரமமாந்தற்பதார்த்தம் - மேலானபிரமவஸ்துவானது—எய்தும் - வரும். எ-று. (இ-உ-க-ம்) இவ்வகங்காரஞ்சநநமரணத்தைக் கொடுக்குமென்றறிந்திதை யவ்விரண்டகங்கார ஞானத்தாற் கெடுப்பதேயுத்தியென்பதாம்..............................(௰௪)

(அ-கை.) அகங்காரங்கணீங்கினவிடத்துதிக்கும்பயனுணர்த்தல் (கலி) ஏற்றமாமகங்காரங்
களிரண்டினாற்பரமமெய்தி, யூற்றமாமவற்றைநீங்கியோரகங்காரமுமின்றி,யாற்றலானிற்றி
யென்னி லறவுயர்பதமதாகுந், தோற்றுடனானெனாமை சுருதிகள்சொல்லுமுத்தி..........*

(இ-ள்.) ஏற்றமாம் - மேலாகிய—அகங்காரங்களிரண்டினால்- இரண்டகங்காரங்களினால்— பரமமெய்தி - பிரமத்தையடைந்து—ஊற்றமாம் - மேலாகிய—அவற்றைநீங்கி— அவ்விரண்டகங்காரங்களையுந்தள்ளி — ஓரகங்காரமுமின்றி - மூன்றாவதான வோரகங்காரமுமில்லாமல்— ஆற்றலானிற்றியென்னில் - உறுதியாகநிற்பாயாகில்—அது - அந்நிலையே— அறவுயர்பதமதாகும்- முதிர்ந்தபிரமபதமாம் — தோற்றுடல் - தோற்றுகின்றசரீரத்தை — நானெனாமை-நானென்றுசொல்லாமையே—சுருதிகள்சொல்லுமுத்தி-வேதங்கள்முறையிடுகின்றநிருவாணமாம் எ-று. (இ-ம்) தேகத்தைநானென்பதொன்றும், பிரமத்தைநானென்பதிரண்டும், ஆகியமூன்றுங்களைந்தாற் றன்மாத்திரமான மோக்ஷலாபமுண்டாமென்பதாம் ....(௰௫)

(அ-கை.)இவ்வனுபவமறிவிக்கத்திருஷ்டாந்தமறிவிக்கத்தொடங்கல். (கலி)இதனியல்
புரைக்கக்கேண்முன்னிசைத்துளதாமன்முன்னோ, ரதமுறமடிந்தபின்ன ரனையசம்
பரன்வேகித்து, மதமுறுமிமையோர்சேனை வதஞ்செய்வானுபாயந்தன்னை,விதமு
றவினையவாறு நினைந்தனன்விஞ்சைவல்லான் .... *

(இ-ள்.) இதனியல்பு - இவ்வகங்காரங்களின்குணத்தை — உரைக்கக்கேள் - சொல்லக்கேட்பாய்—முன்னிசைத்துள - முன்சொல்லியிருக்கின்ற—தாமன்முன்னோர்- தாமன்முதலிய வசுரர்கள்— அதமுறமடிந்தபின்னர்- அதமாகநசித்தபின்பு—விஞ்சைவல்லான்-மாயாவித்தையில்வல்லமையுள்ளவனான— அனையசம்பரன்வேகித்து - அச்சம்பராசுரனானவன்கோபித்து— மதமுறுமிமையோர்சேனை - கெறுவித்திருக்கின்ற தேவர்கள்சேனையை — அதஞ்செய்வான்- கொல்லும்பொருட்டு—உபாயந்தன்னை - தந்திரத்தை—விதமுற - நானாவிதமாக — இனையவாறு - இந்தப்பிரகாரம்—நினைந்தனன் - சிந்தித்தான். எ-று .... (௰௬)

(அ-கை.) விவேகிகளைச்சிருஷ்டிக்கநினைத்தல். (கவி) தானவரெனமுன்றோற்செய்தாமரைமுதலாமூவர், ஞானமில்லாமையாலேநானெனதென்றுபொய்யாய், வானவர்போரின்மாண்டார்மற்றினிஞானநன்னூற்போனவர்விவேகத்தோராய்ப்புணர்ந்தமாயத்தாற்செய்வேன்.

(இ-ள்.) தானவரென - அசுரர்களென்றுசொல்லும்படி— முன்றோற்செய் - முன்பியாஞ்சிருஷ்டித்த—தாமரைமுதலாமூவர் - தாமம்முதலியமூவர்களும்—ஞானமில்லாமையால்-ஆத்மஞானமின்மையால்—நானெனதென்று - யானெனதென்று—பொய்யாய் - அசத்தியத்தையுடையவர்களாய்—வானவர்போரின்மாண்டார் - தேவர்கள்யுத்தத்திலிறந்தார்கள்— மற்றினி- ஆகையாலினிமேல்—ஞானநன்னூற்போனவர் - ஆத்மஞானசாஸ்திரத்திற்றெளிந்தவர்களாகவும்—விவேகத்தோராய் - ஞானத்தையுடையவர்களாகவும் — புணர்ந்தமாயத்தால் - பொருந்திய(வெனது)மாயையினால்—செய்வேன் - சிருஷ்டிப்பேன். எ-று ... (௰௭)

(அ-கை.) விவேகிகளுதித்தல். (கவி) மெய்யுணர்வுறுதலாலேவெறும்பொய்யாமகங்காரத்தி, னையுறார்விண்ணோர்சேனைநலிவுறவெல்வரென்று, மையுறாமனத்தினெண்ணிமாயையாலவரைச்செய்தான், மொய்புறுவேலைதந்தமொக்குள்போன்மூவர்வந்தார் ...... *

(இ-ள்.) மெய்யுணர்வு - சத்தியஞானம்—உறுதலால் - பொருந்துகின்றதினால்—வெறும்பொய்யாமகங்காரத்தில் - முழுதுமித்தையாகியவகம்பாவத்தினால்—நையுறார்- கெடமாட்டார்கள்—விண்ணோர்சேனை - தேவர்களுடையசேனையை—நலிவுறவெல்வரென்று- கெடும்படிசெயிப்பார்களென்று—மையுறாமனத்தினெண்ணி- களங்கமற்றமனதிற்சிந்தித்து—மாயையாலவரைச்செய்தான் - மாயையினாலவர்களையுண்டாக்கினான்—மொய்புறுவேலைதந்த - (பூமியைச்) சூழ்ந்திருக்கின்றசமுத்திரத்தாலுண்டாகப்பெற்ற— மொக்குள்போல் - குமிழியைப்போல — மூவர்வந்தார் - மூன்றுபேருண்டானார்கள். எ-று ... (௰௮)

(அ-கை.) அந்தவிவேகிகளியல்பைக்கூறல். (கவி) அனைத்தையுமறிந்தோர்தம்மையறிவெனவறிவாற்கண்டோர், வினைத்தொடரிலாதோரொன்றின் விருப்பமும் வெறுப்புமில்லோர், நினைத்துளநிகழ்காலத்திலெய்தியநிலையினிற்போர், தினைத்துணையெனினுமையமிலாதவர்தெளிவுசான்றோர் ... *

(இ-ள்.) அனைத்தையுமறிந்தோர் - சகலத்தையுமறிந்தவர்களும் — தம்மையறிவென- தங்களைஞானவடிவமென்று—அறிவாற்கண்டோர் - ஞானத்தினாற்கண்டவர்களும் — வினைத்தொடரிலாதோர் - (சஞ்சித) வினைத்தொடர்பில்லாதவர்களும்—ஒன்றின்விருப்பமும்வெறுப்புமில்லோர் - ஒருவஸ்துவில்ராகத்துவேஷமில்லாதவர்களும்—நினைத்துளநிகழ்காலத்தில்- நினைக்கப்பட்டவர்த்தமானகாலத்தில்—எய்தியநிலையினிற்போர் - அடைந்தஸ்திதியிலிருப்பவர்களும்—தினைத்துணையெனினும்- தினையளவாயினும்—ஐயமிலாதவர்- சந்தேகமில்லாதவர்களும்— தெளிவுசான்றோர் - தெளிவுள்ளவர்களும். எ-று ... (௰௯)

(அ-கை) தேவர்களிடத்தசுரர்சென்றுயுத்தஞ்செய்தல். (கவி) பேரினால்வீமன்பாசன்றிடனெனப்பிரிக்கப்பட்டோர், சீரினாலுலகையெல்லாந்திரணமாய்த்தேருஞ்சுத்தர், போரிலேபோமினென்றுசம்பரன்புகலப்போகி, நேரிலாவமரரோடுநெடுஞ்சமர்புரியலுற்றார். *

(இ-ள்.) பேரினால் - நாமத்தினால்—வீமன்- வீமனென்றும்—பாசன்-பாசனென்றும்—றிடனென - திடனென்றும்—பிரிக்கப்பட்டோர் - பிரிவாகச்சொல்லப்பட்டவர்களும்—சீரினாலுலகையெல்லாம்- (தங்கள்) செல்வத்தினாற்சகங்களனைத்தையும்—திரணமாய்த்தேருஞ்சுத்தர்- துரும்பாயறிகின்றபரிசுத்தர்களுமாகிய(விவர்களை)—போரிலேபோமினென்று - (தேவ) யுத்தத்திற்போங்களென்று—சம்பரன்புகலப்போகி - சம்பராசுரன்சொல்லப்போய் — நேரிலாவமரரோடும் - ஒப்பற்றதேவர்களுடன்—நெடுஞ்சமர்புரியலுற்றார் - பெரிதாகியயுத்தத்தைச்செய்யத்தொடங்கினார்கள். எ-று ... (உ௰)

(அ-கை.) அநாத்மசிருஷ்டிவரினும், அதைநீக்கிநிற்றல். (கவி) எண்ணிலாவருடம்வெம்போரியற்றினரிவர்கணெஞ்சிற், றுண்ணெனவெனதியானுந்தோற்றரவுதித்தபோது, நுண்ணறிவாலேயாமாரொன்றுறநோக்கலோடும், புண்ணியமிலாதோர்வாழ்வும்போலதுபொய்யாய்ப்போகும் ... *

(இ-ள்.) எண்ணிலாவருடம் - அளவில்லாதவருஷம்—வெம்போரியற்றினர்- கொடிதாகியயுத்தத்தைச்செய்தார்கள்—இவர்கணெஞ்சில்-இவர்களுடையமனதில்—துண்ணென-துணுக்கென்று—எனதியானும் - யானெனதென்னும்—தோற்றரவுதித்தபோது - தோற்றமுண்டானபொழுது—நுண்ணறிவால் - சூட்சும (விசார) ஞானத்தினால—யாமாரொன்று - நாமெப்படிப்பட்டவனென்று—உறநோக்கலோடும் - நன்றாகப்பார்க்கவும்—புண்ணியமிலாதோர்-தரு

மமில்லாதவர்களது—வாழ்வுபோல் - செல்வம்போல— அதுபொய்யாய்ப்போகும் - அந்த யானெனதென்னுந்தோற்றமானது அசத்தியமாய்ப்போம். எ-று..... ... .(உக)

(அ-கை.) அவர்களனுபவதிருஷ்டியைக்கூறல். (கவி) பன்மையாம்விசாரத் தாலேபடரகங்காரமற்றோர், சன்மமேமரணமேயென் றஞ்சுறுசலிப்பிலாதோர், நின்மலரெளிதின்வந்தபொருள்கொள்வோர்நிகழ்ந்தவெல்லாந், தொன்மையாநவ மாங்கண்ணுற்றுகளறச்சமமாய்க்காண்போர் ... . *

(இ-ள்.) பன்மையாம் - பலவிதமாகிய—விசாரத்தால் - (ஆத்ம) விசாரணையினால்—படரகங்காரமற்றோர் - விரிந்தவகங்காரமிறந்தவர்கள் — சென்மமேமரணமேயென்று - பிறப்பிறப்புகள்வருமேயென்று — அஞ்சுறுசலிப்பிலாதோர் - பயப்படுஞ்சலனமில்லாதவர்கள்—நிர்மலர் - களங்கமற்றவர்கள்—எளிதின்வந்தபொருள்கொள்வோர் - எளிதாய்க்கிடைத்தபொருளைக்கிரகிப்பவர்கள்—நிகழ்ந்தவெல்லாம் - (இப்பொழுது) நடந்தவனைத்தும்—தொன்மையாம்- பழமையாகிய—நவமாங்கண்ணால்-புதுமையாகிய(ஞான)திருஷ்டியினால்—துகளறச்சமமாய்க்காண்போர்- குற்றமறச்சமமாகப்பார்ப்பவர்கள். எ-று ... .,..... (உஉ)

(அ-கை.) தேவர்களபயமடைதல். (கவி) ஆதலால்வீரரானவவர்களாலமரர்சேனை, காதலாற்புசித்துமாய்க்குங் காமுகர்செல்வம்போல, போதலேபுரிந்துதிக்கிற் போயொளித் துலகமுண்ட, மாதவாசரணமென்றேமாயனைச்சேர்ந்ததன்றே .... *

(இ-ள்.) ஆதலால் - ஆகையினால்—வீரரான- சூரர்களாயிருக்கின்ற—அவர்களால்-அந்த ஸ்ரீமாநிகளால்—அமரர்சேனை - தேவர்சேனையானது—காதலால் - ஆசையினால்—புசித்துமாய்க்கும் - புசித்தழிக்கின்ற—காமுகர்செல்வம்போல - காமிகளது செல்வத்தைப்போல—போதலேபுரிந்து - ஓடிப்போதலைவிரும்பியே — திக்கிற்போயொளித்து - திசைகளிற்போய் மறைந்து—உலகமுண்டமாதவா - பூமியைப்புசித்ததிருமாலே— சரணமென்று - அபயமென்று—மாயனைச்சேர்ந்தது - விஷ்ணுவிடத்திற்போயடைந்தது. எ-று....... ....(உந)

(அ-கை) அவர்களாத்மசித்தியடைதல்(கவி)அடைக்கலம்புகுந்தவானோர்க்கஞ்சலென்றப யநல்கி,விடைத்துவந்தமரின்மோதும்விண்டுவோடரும்போர்செய்து, படைக்கலநேமி யேவபாய்கனறீய்க்கத்தீய்ந்து,தொடைத்துழாய்மார்பன்வாழுந்தூயவைகுந்தம்புக்கார்.

(இ-ள்.) அடைக்கலம்புகுந்த - சரணாகதியென்றடைந்த—வானோர்க்கு - தேவர்களுக்கு—அஞ்சலென்று - பயப்படா (திருங்க) ளென்று—அபயநல்கி - அபயங்கொடுத்து — விடைத்துவந்து - கோபித்துவந்து—அமரின்மோதும் - யுத்தகளத்திலடிக்கின்ற — விண்டுவோடு- விஷ்ணுவோடும் — அரும்போர்செய்து - அரிதாகியயுத்தத்தைச்செய்து— படைக்கலநேமியேவ - சக்கராயுதத்தையனுப்ப—பாய்கனறீய்க்கத்தீய்ந்து - (அதினின்றும்) பாயப்பட்டவக்கினிச்சுவாலையெரிக்கவெரிந்து—தொடைத்துழாய்மார்பன்- துளபமாலையையணிந்தமார்பையுடையவிஷ்ணு—வாழும் - வாழுகின்ற — தூயவைகுந்தம்புக்கார் - மேலானவைகுந்தத்தையடைந்தார்கள். எ-று. (இ-கூ-க-ம்) சம்பராசுரனதுபிரமத்தியானத்திலுதித்த ஸ்ரீமாநிகளென்னும்விவேகிகள்யுத்தத்திலுந் திரிஸ்யத்திலசம்பாவமின்றித் திருக்குவாகவேயிருந்து முடிவில் வியாபகசாக்ஷாத்காரமென்னுஞானப்ரகாசத்திற்கலந்தனரென்றறிவித்ததாம் . ...(உச)

(அ-கை.) மனோசஞ்சலநீக்கத்தையறிவித்தல். (கவி) மற்றினியிந்தவாற்றால்வாதனையா லேபந்தம், பற்றுறுமதனைநீங்கிற்பந்தம்போம்விவேகத்தாலே, யுற்றறியுண்மையாலே யுபாதிவாதனைபோம்போனா, லற்றமில்சித்தநெய்தீர்தீபம்போலாகுமன்றே........... *

(இ-ள்.) மற்றினியிந்தவாற்றால் - மேலிந்தப்ரகாரத்தினால்—வாதனையால் - வாசனையினால்—பந்தம்பற்றுறும் - பாசமானதுபிடித்துக்கொள்ளும்—அதனைநீங்கில் - அவ்வாசனையை நீங்கினால்—பந்தம்போம் - பாசமானதுநீங்கும்—விவேகத்தால் - விவேகஞானத்தால் — உற்றறி-இராமா நீநன்றாயறிவாய்—உண்மையால்-(அப்படியறிகின்ற)தத்துவத்தினால்—உபாதிவாதனைபோம்- உபாதியாகியவாசனாக்ஷயம்வரும்—போனால்-வாசனாக்ஷயம்வந்தால்— அற்றமில்சித்தம்-அச்சமற்றமனமானது—நெய்தீர்தீபம்போல்-நெய்யில்லாததீபத்தைப்போல—ஆகும்- (உபசாந்த)மாகும். எ-று. (இ-ம்) வாசனையுதித்தலேபந்தமும்அதனிவிர்த்தியேமுத்தியுமாதலினவ்வகங்காரவாசனையைநீக்கில் ஞானசுகமாம்மனோசஞ்சலநீங்குமென்பதாம் .... (உரு)

ஸ்ரீமபாசதிடர்கதை முற்றிற்று. ஆஉ கதை-யருஇ - கவிதை (சுாாந௧)

தாரூரன்கதை.

(அ-கை.) முன்பகர்ந்த ரதத் தியாகமாத்மார்த்தத்தின் பொருட்டாமென்பதை யறிவித்து, அவ்வாத்மசங்கற்பத்தால் விளங்கியசகஸ்திதியைவிபரமாயறிவிக்குநிமித்தந்தாரூரன்கதை யையருளிச்செய்கின்றார் .... ❋

(அ-கை.) மாயையைக்கெடுக்கு முபாயமியாதெனின். (வேறு.) (கவி) ஒழியாததுயர்மாயையெனுமாபத்தையொழிக்கமனநாசமோருபாயமாகு, மிழியாதமெய்ஞ்ஞானப்பொருளையெல்லா மியம்பக்கேட்டயராமலிதயங்கொள்வாய்,பழியானபோகத்தினிச்சைதானே பந்தமாமதுவிடலேபரமமாகும்; வழியானபன்னூலாற்பயன்கொலென்ன வருந்தாமலிவ்வழியே வருதல்வேண்டும்.. ❋

(இ-ள்.) ஒழியாததுயர் - நீங்காததுன்பத்தைக் (கொடுக்கின்ற) — மாயையெனும் - மாயையென்கின்ற — ஆபத்தையொழிக்க - ஆபத்தைக்கெடுக்க — மனநாசம் - மனோநாசமே — ஒருபாயமாகும் - ஒப்பற்றதந்திரமாம் — இழியாத - குறைவில்லாத — மெய்ஞ்ஞானப்பொருளையெல்லாம் - தத்துவஞானார்த்தங்களனைத்தையும் — இயம்பக்கேட்டு - (நான்) சொல்ல (விராமாநீ) கேட்டு — அயராமல் - மறதியில்லாமல் — இதயங்கொள்வாய் - உளத்திற்றரித்துக்கொள்வாய் — பழியானபோகத்தின் - குற்றமாகியபோகத்தினது — இச்சைதானேபந்தமாம் - ஆசையே பந்தமாகும் — அதுவிடலேபரமமாகும் - அவ்விச்சையைவிடுவதேபிரமஸ்வரூபமான (மோக்ஷ) மாம் — வழியானபன்னூலால் - (இதர) மார்க்கமானபலசாத்திரங்களாலும் — பயன்கொலென்ன - ப்ரயோசனமென்ன — வருந்தாமல் - வருத்தப்படாமல் — இவ்வழியேவருதல்வேண்டும் - (இச்சாத்தியாகமுள்ள) இந்தமார்க்கத்திலேவரவேண்டும். எ - று. (இ - ம்.) விஷயவாசனையுள்ள மனதைக்கெடுத்தலே மாயாநாசவுபாயமென்பதாம்.. (க)

(அ-கை.) அம்மனமிறக்குமுபாயமியாதெனின். (கவி) இன்பமிதாமின்பமிதாமென்றவெல்லாமெரியென நஞ்செனநினைக வேற்றந்தாழ்வாந், துன்புறுபோகம்பலகாற்றேர்ந்துநெஞ்சிற்றோயாமலெளிதருந்திற்சுகமேயாகும், வன்புபயின்மனத்தோற்றநாசமாகுமனத்தினதுநாசமேமகத்தாந்தோற்ற, நன்பரமஞானிகளிணைஞ்சிறந்துபோகு நவைவிலங்காமறிவிலர்க்கு நவைகூர்நெஞ்சம்.. ❋

(இ-ள்.) இன்பமிதாமின்பமிதாமென்றவெல்லாம் - ஈதின்பமாமீதின்பமாமென்றுசொல்லப்பட்டவனைத்தையும் — எரியென - அக்கினியைப்போலவும் — நஞ்சென - விஷத்தைப்போலவும் — நினைக - (ஸ்ரீராமாநீ) நினைக்கக்கடவாய் — ஏற்றந்தாழ்வாம் - உயர்வுதாழ்வா(யிருக்கின்ற) — துன்புறுபோகம் - துன்பமுள்ளபோகங்களை — பலகாற்றேர்ந்து - பலகாலும்விசாரித்து — நெஞ்சிற்றோயாமல் - மனதிற்கலவாமல் — எளிதருந்தில் - இலேசாகப்புசித்தால் — சுகமேயாகும் - இன்பமாகவேயிருக்கும் — வன்புபயில் - வன்மையாகச்சொல்லப்பட்ட — மனத்தோற்றம் - மனதுண்டாகுதலே — நாசமாகும் - (ஆத்ம) நாசமாம் — மனத்தினதுநாசமே - மனோநாசமே — மகத்தாந்தோற்றம் - மகத்தான(வாத்ம)வுதயமாம் — நன்பரமஞானிகளிணைஞ்சிறந்துபோகும் - நல்லபிரமஞானிகளதுமனதுநாசத்தையடையும் — அறிவிலர்க்கு - அஞ்ஞானிகளுக்கு — நவைகூர்நெஞ்சம் - குற்றமிகுந்தமனமானது — நவைவிலங்காம் - கால்விலங்காகும். எ-று. (இ-ம்) விஷயசுகந்துன்பமென்றறிவதேமனமிறக்குமுபாயமென்பதாம்...... (உ)

(அகை.) ஞானிகள்மனதுமாத்மாவிற்சகத்து மிருக்குந்தன்மையெப்படியெனின். (கவி) ஆனந்தநிராநந்தமிரண்டுமில்லையசைவுமசைவின்மையுமாமவையுமில்லை, யீனந்தீர்சத்தசத்தன்றிவற்றுக்கெல்லாமிடையல்லஞானிமனமென்றலோடுந், தானந்தமிலாவறிவாயுலகின்மேலாந் தத்துவத்திலுலகிருக்குந்தன்மைதன்னை, ஞானந்தான்வளர்பொருட்டாயுரைப்பாமென்றுநாதவசிட்டனுவில்வதானான் ❋

(இ-ள்.) ஆனந்தம் - ஆநந்தமும் — நிராநந்தம் - ஆநந்தமில்லாததும் — இரண்டுமில்லை - (இவ்) விரண்டுமில்லாதது — அசைவும் - அசைதலும் — அசைவின்மையுமாம் - அசைவில்லாததுமான — அவையுமில்லை - அவ்விரண்டுமில்லாதது — ஈனந்தீர் - குறைவில்லாத — சத்து - சத்தும் — அசத்தன்று - அசத்துமல்லாதது — இவற்றுக்கெல்லாமிடையல்ல - இவைகளனைத்திற்கு நடுவுமல்ல — ஞானிமனமென்றலோடும் - ஞானிகள்மனமென்றுசொன்னமாத்திரத்தில — தானந்தமிலாவறிவாய் - முடிவில்லாதவாத்மஞானமாகியும் — உலகின்மேலாம் - சகத்துக்குமே

லாகியுமிருக்கின்ற—தத்துவத்தில் - தத்துவஸ்வரூபத்தில் — உலகிருக்குந்தன்மைதன்னை - சகமிருக்கின்றதன்மையை — ஞானந்தான்வளர்பொருட்டாய் - அறிவானதுவளரும்படியாக—உரைப்பாயென்று - சொல்லுவாயென்று—நாதனியம்பிட - ஸ்ரீராமன்கேட்க — வசிட்டனவில்வதாஞன் - வசிஷ்டமுனிசொல்லத்தொடங்கினர். எ-று. [ப-ம்.] வேறுபட்டுஆநந்தியாததென்பார், ஆநந்தமல்லவென்றும், நிரதிசயாநந்தமானதென்பார், நிராநந்தமல்லவென்றும், ஸ்திரமாயிருக்கின்றதென்பார், அசைவல்லவென்றும், சித்தல்லாசமாய் விளங்குகின்றதென்பார், அசையாமையல்லவென்றும், உள்ளிலும் புறம்பிலும் பூரணமாய் விளங்குமென்பார், சத்தசத்துக்கிடையல்லஞானிமனமென்றுங்கூறினர். (இ-ம்) ஞானிகள்மனது, ஒன்றிலும் பற்றற்றுத்தன்மயமாய்விளங்குமென்பதாம் .... (௫)

(அ-கை.) தத்துவவிலக்கணமறிவித்தல். (கவி) வேறிலாதெவ்விடத்துமேவி நின்றுமே
வாமலுண்மையினுல்வெறும்விண்போற், கூறிலாச்சிற்பாவமெங்குநின்றுங்கூறுபடுமவற்
ருென்றுங்கூடிப்பற்ருப், பேறிலாச்சங்கற்பமனைத்துமின்றிப்பேரின்றியழிவின்றிப்பேத
மின்றி, யூறிலாவாகாயங்கோடிகூருவுரித்தவற்றிலொருகூற்றையொப்பதொய்தாம் .... *

(இ-ள்.) வேறிலாது - வேருகாமல்—எவ்விடத்துமேவிநின்றும்-எந்தவிடங்களிலும்பொருந்தியிருந்தும்—மேவாமல் - பொருந்தாமல்—நுண்மையினுல் - சூட்சுமத்திஞல்—வெறும்விண்போல் - வேறுபடுகின்றவாகாயத்தைப்போல—கூறிலாச்சிற்பாவம் - வேறுபடாதஞானஸ்வரூபமானது—எங்குநின்றும் - எவ்விடத்திலும்(பூரணமாக)விருந்தும்—கூறுபடும்- வேறுபடுகின்ற—அவற்றென்றும் - அவ்வஸ்துக்களிலொன்றிலும்—கூடிப்பற்ரு - பொருந்தமாட்டாது—பேறிலாச்சங்கற்பமனைத்துமின்றி-பயனின்றியசங்கற்பங்களியாவுமில்லாததாகியும்—பேரின்றி - நாமமில்லாததாகியும்—அழிவின்றி - நாசமில்லாததாகியும்—பேதமின்றி- வேற்றுமையில்லாததாகியுமிருக்கின்ற(வாத்மஞானமானது)—ஊறிலாவாகாயம்- இடையூறில்லாதவம்பரத்தை—கோடிகூருவுரித்து - நூறிலக்கம்பங்குமெசய்து—அவற்றிலொருகூற்றை- அவைகளிலொருபங்குக்கு—ஒப்பதொய்தாம் - சமானமாகச்சூட்சுமமாம். எ-று ....(௬)

(அ-கை.) சந்தேகசகத்தாகத்தோற்றுதல். (கவி) நன்றிதருமுண்மைமுதற் பெ
யர்கள்பெற்றுஞானிகள்பாணிமலமாஞானமாகி, யொன்றுமலவுருவாணகுடும்பரூப
மொன்ருகித்தனைத்தெரிவித்துணர்வெமெய்யாய்த், தன்றனைச்சின்மாத்திரத்துக்
கபலற்றிந்தச்சத்தாமாத்திரமயமாஞ்சகங்களெல்லாந், துன்றுதிரைமுதலாகப்பிற
ந்தவெல்லாஞ்சூழ்கடலில்வேருகாத்தொடர்ச்சிபோலாம் ....*

(இ-ள்.) நன்றிதரும் - தன்மையைக்கொடுக்கின்ற— உண்மைமுதல் - ஆத்மாமுதலாகிய—பெயர்கள்பெற்றும் - நாமங்களிடப்பெற்றும்—ஞானிகள்பால் - ஞானவான்களிடத்தில்—நிமலமாஞானமாகி - நிருமலமாகியஞானமாகி—ஒன்றுமலவுருவான- பொருந்துமஞ்ஞானஸ்வரூபமாகிய—குடும்பரூபம் - சம்சாரரூபத்தோடும்—ஒன்ருகி - ஏகமாயிருந்து—தனைத்தெரிவித்து -தனதாத்மஸ்வரூபத்தைத்தெரிவித்துக்கொண்டிருக்கின்ற—உணர்வெமெய்யாய்- ஞானமேசத்தியமாய்—தன்றனை- தனக்குத்தானேயொப்பாயிருக்கின்ற—சின்மாத்திரத்துக்கயலற்று - ஞானமாத்திரத்துக்குவேறில்லாமல் — இந்தச்சத்தாமாத்திரமயமாம் - இச்சத்தாமாத்திரமேயாகாரமாயிருக்கின்ற—சகங்களெல்லாம் - உலகங்களனைத்தும்— துன்றுதிரைமுதலாக - நெருங்கியவலைகண்முதலாக—பிறந்தவெல்லாம் - உண்டாகியசகலமும்— சூழ்கடலில்- சூழ்ந்திருக்கின்றசமுத்திரத்தில்—வேருகாத்தொடர்ச்சிபோலாம் - வேறுபடாமற்முடர்ந்துநின்றதுபோலவாம். எ-று .... (௫)

(அ-கை.) சித்துளவொவர்க்கெப்படியோ வப்படியேயிருக்குமெனல். (கவி) துனைதரு
பல்பிறப்பாகிக்கொடிதாய்ப்பொல்லாச்சுபாவமாந்தனையறியாச்சுமடர்க்கென்றுந், தனை
யறிந்தோர்க் கொளியுருவாயெல்லாமொன்ருய்த் தானுகியனுபவிக்குந் தன்மையாலே,
நினைவொடுசெய்வோன்செய்கைசெயலிம்மூன்றுநிகழ்விக்கும்பாவித்தநினைவுக்கெல்லா,
மனையசுவையாய்நிற்கும்பிறவிப்போகமருந்துவோர்க்கப்போகமாகிநிறகும். .. .. *

(இ-ள்.) தனையறியாச்சுமடர்க்கு - ஆத்மாவையறியாதமூடர்களுக்கு— துனைதருபல்பிறப்பாகி - துன்பத்தைக்கொடுக்கின்றநாநாவிதமாகியசநநமாகியும்—கொடிதாய்- கொடிதாகியும்—பொல்லாச்சுபாவமாம் - ஈனத்தன்மையாகியுமிருக்கும்— என்றுந்தனையறிந்தோர்க்கு- எப்பொழுதுந்தனதுஸ்வரூபத்தைத்தெரிந்தவர்களுக்கு— ஒளியுருவாய் - ஞானப்ரகாசமாகியும்—எல்லாமொன்ருய் - சகலமுமேகமாகியும்—தானுகவனுபவிக்குந்தன்மையால் - தானுகவேயனுபவியாநின்றசுபாவத்திஞல்—நினைவொடு - கருத்துடன் —செய்வோன்-கருத்தாவும்—செய்கை - கருவியும்—செயலிம்மூன்றும்- தொழிலுமாகியவிம்மூன்றையும்—நிகழ்விக்கும்-

ப்ரகாசிப்பிக்கும்—பாவித்தநினைவுக்கெல்லாம்-பாவனைசெய்தநினைவுகளைநிறைந்த—அவையவையாய்நிற்கும்-அந்தரசமாகவேயிருக்கும்—பிறவிப்போகருந்தவோர்க்கு-பலச்செல்வத்தையனுபவிப்பவர்களுக்கு—அப்போகமாகிநிற்கும்-அந்தப்போகமாகவேயிருக்கும். எ-று.

(அ-கை.) சகலமுஞ்சிற்ப்ரகாசமாகவேவிளங்குதல். (கலி.) அத்தமனமுதயமில்லையெழுதனிற்றலயல்போதல் வருதலெனுமனைத்துமில்லை, யித்தலத்திலில்லையிலாதிருக்கவில்லை யித்திறமாஞ்சித்துமலமில்லாமெய்யாய், சுத்தமுறுதானேதன்னிடத்தினிற்குஞ்சொன்னநெறியேசகமாய்ச்சொல்பேராலே, மெத்தவெகுரூபமாந்தற்சுபாவம்விரிந்தெங்குஞ்சிற்பெயரால் விளங்கிநிற்கும் ……… ……………… ….. ……… …. *

(இ-ள்.) அத்தமனமுதயமில்லை - உதயாஸ்த்தமானமில்லாததாகியும்—எழுதனிற்றல்-எழுகின்றதும்நிற்கின்றதும்—அயல்போதல்வருதலெனும் - பக்கத்திற்போதலும் வருதலுமென்கின்ற—அனைத்துமில்லை - சகலமுமில்லாததாகியும்—இத்தலத்தில் - இவ்விடத்தில்— இல்லையிலாதிருக்கவில்லை - இல்லாததாகியுமிருப்பதாகியுமிருக்கின்ற—இத்திறமாஞ்சித்து-இக்குணங்களையுடைய ஞானமானது—மலமில்லாமெய்யாய் - களங்கமில்லாதவடிவமாய்— சுத்தமுறுதானே-பரிசுத்தமாகியவாத்மாவே—தன்னிடத்தினிற்கும் ஞானாத்மாவினிடத்திலிருக்கும்—சொன்னநெறியே-இப்பொழுதுசொல்லியமார்க்கமே— சகமாய்ச்சொல்பேரால - உலகமென்றுசொல்லப்பட்டநாமத்தினால்— மெத்தவெகுரூபமாம்-மிகவுநாநாவிதவடிவமாகும்—தற்சுபாவம்விரிந்து- தனதுசத்திவியாபித்து —எங்குஞ்சிற்பெயரால்விளங்கிநிற்கும்- எவ்விடத்தும்ஞானமென்னுநாமத்தாலொளிரும்.எ-று.(இ-ச-கம்)தத்துவவிலாசத்தைக்கிரமமாயறிவித்ததாம்

(அ-கை.) சித்திற்சகத்திருப்பதையறிவிக்கத்தொடங்கல். (கலி) இன்னசுபாவந்தானேயொளியாய்நிற்குமிருளாகுமொன்றாகுமீறில்கூறுந், தன்னுடையதொழிலாலேதானேபூர்ணதத்துவம்விட்டிவனவனுநானென்னுந்தன்மை, யுன்னியபாவனையாலேமெள்ளச்சீவனுருவாகிக்குடும்பியெனுமுகத்தாலே, பன்னியநாநாத்துவத்திலழுந்திப்பாவாபாவம்பற்றுதல்விடலாம்பதத்தினிற்கும் ……………… ………….…. …. *

(இ-ள்.) இன்னசுபாவந்தான் - இத்தன்மையானது —ஒளியாய் - ப்ரகாசமாகியும்—நிற்குமிருளாகும் - நிற்கின்றவந்தகாரமாகியும்—ஒன்றாகும்- ஏகமாகியும்—ஈறில்கூறும்-அநேகமாகியுமிருக்கின்ற—தன்னுடையதொழிலால் - தனது செய்கையினால்— தானேபூர்ணதத்துவம்விட்டு - தானேபூரணஞானதத்துவஸ்வரூபத்தைவிட்டு—இவன் - இவனென்றும்—அவன்-அவனென்றும்—நான் - நானென்றுஞ்சொல்லுகின்ற—தன்மை - குணத்தை — உன்னியபாவனையால் - சிந்தித்தபாவனையினால்—மெள்ளச்சீவவுருவாகி - மெல்லச்சீவரூபியாய்—குடும்பியெனுமுகத்தால் - சம்சாரியென்கின்றநினைவினால்—பன்னியநாநாத்துவத்திலழுந்தி - சொல்லியநாநாவிதமாகியசங்கற்பவிகற்பங்களிலழுந்தி—பாவம் - பாவமும்—அபாவம் - அபாவமும்—பற்றுதல் - பற்றுதலும்—விடலாம் - விடுவதுமாயிருக்கின்ற—பதத்தினிற்கும்- (பேதரூபமாகிய) பதத்திலிருக்கும். எ-று. [ப-ம்] சுடம்ப்ரகாசமென்பார், ஒளியாமென்றும், விருத்திஞானமிறந்துதன்மயமாகவிளங்குமென்பார், இருளாமென்றும், தானேதானாயிருக்குமென்பார், ஒன்றென்றும், நவநவமாய்ப்ரகாசிக்குமென்பார், ஈறில்கூறென்றுங்கூறினார். (இ-ம்) சுயஞ்சித்திருந்தபடியிருக்கவுதன்சங்கற்பமேசீவனாகிப்பேதபாவத்திலழுந்தினதென்பதாம். அ

(அ-கை.) சீவனேமனமாயதுசகத்தாகவிரிதல். (கலி) அப்பதத்தினின்றுபுரியட்டகத்தையளவிலசைவாலமைக்குமமைத்திடாதா, மிப்பரிசினின்றலைவேவடிவமானவெழுபிறவிவகைமாலையிபற்றுமெங்கு, மொப்பரியதற்பிரமசுபாவத்தாலேயுரைத்தலாமெழுமீண்டுமொடுங்கிப்போகு, மெய்ப்படிவமில்லாதவிண்ணிற்கானல்விரிவதுபோன்மனநினைவில்விரிந்துந்தான்றும் ……… ……………… …. … …………… *

(இ-ள்.) அப்பதத்தினின்று - அந்தப்பேதமானவிடத்திலிருந்து — புரியட்டகத்தை-புரியட்டக(வுட)லை—அளவிலசைவால் - அளவற்றவிகற்பங்களினால்—அமைக்கும்-செய்யும்—அமைத்திடாதாம் - செய்யாதாம்—இப்பரிசினின்று - இக்குணத்திலிருந்து — அலைவேவடிவமான - சலிப்பமேஸ்வரூபமாகிய — எழுபிறவிவகைமாலை - (சராசரமான) எழுபவவரிசை—எங்கும் - எவ்விடத்தும்—இபற்றும் - செய்யும்—ஒப்பரிய - சமானமற்ற — தற்பிரமசுபாவத்தால் - தானென்பிரமசத்தியினால்—உரைத்தலாமெழும் - சொல்லியயாவுமுற்பத்தியாம்—மீண்டுமொடுங்கிப்போகும் - மீளவுநாசத்தையடையும் — மெய்ப்படிவமில்லாதவிண்ணில் - நிசவடிவமில்லாத(பூ)வாகாயத்தில் —கானல்விரிவதுபோல் - கானற்சலம்பரவுவதைப்போல—மனநினைவால் - மனதுசங்கற்பத்தினால்—விரிந்துந்தான்றும் - (உலகம்) பாவிதந்தா

ற்றும். எ - று. (இ-ம்) ஆத்மா, தனதசங்கற்பமாகிய மனதினுலாதிவாகிக மாதிபௌதிக சரீரங்களையுண்டாக்கிக்கெடுக்குமென்பதாம் .... (௯)

(அ-கை) ஆத்மாவேயநாத்மாவாகத்தொற்றிவிளங்குதல்.(கவி) படர்மதத்தாற்றனை
ப்பிறர்போற்றேன்றுமாபோற்பகுத்தலிலாவந்தச்சிற்பாவந்தானே, யடர்போய்
யோற்றேன்றியதாற் சத்தமாதியைம்புலனுமேதொன்றலறியாநின்றாய், தொடர்
கின்றவதுவிந்தவான்மாவாகுந் தோற்றமெலாந்தானுகித்துன்னிநின்ற, விடமுடை
யபரப்பிரமமிதுவேயீதுக் கிப்பிரமப்பெயரியல்பா மிதில்வேறில்லை..... ....*

(இ-ள்.) படர்மதத்தால் - மிகுந்தமதத்தினுல்—தனைப்பிறர்போல்- தன்னையயலாணைப் போல—தோன்றுமாபோல் - தோற்றுகின்றதுபேல—பகுத்தலிலா - பிரிவில்லாத—அந்தச்சிற்பாவந்தான்-அந்தஞானஸ்வரூபமே —அடர்பொய்போல்- நெருங்குகின்றஅசத்தைப்போல —தோன்றியது - தோற்றிற்று—சத்தமாதியைம்புலனும்-சத்தமுதலியபஞ்சவிஷயங்களையும் —ஏதொன்றுலறியாநின்றாய் - யாதொன்றினுலறிகின்றாயோ—தொடர்கின்றவது- தொடராநின்றவதுவே —இந்தவான்மாவாகும்- (ஸ்ரீராமா)முன்சொல்லியவிந்தஞானுத்மஸ்வரூபமாம்— தோற்றமெலாம் - தோற்றப்பட்டசகலமும்—தானுகித்துன்னிநின்ற - தானுகவேநிறைந்திருக்கின்ற—இடமுடையபரப்பிரமமிது - வியாபகமானபரப்பிரமஸ்வரூப மானதிப்படிசொல்லப்பட்டதேயாம்—ஈதுக்கு - இதற்கு—இப்பிரமப்பெயர் - இந்தப்பிரமமென்னுநாமமானது —இயல்பாம் - சுபாவமாம்—இதில்வேறில்லை - இதற்குவேறனதொன்றுமில்லை. எ - று. (இ-ம்) ஆத்மா, தனதுசங்கற்பத்தினுல் அதிஷ்டானமாயுண்டாகியதன்னைமறந்து,ஆரோபிதமானசகந் தோற்றப்பட்டாலும், தானுகவேவிளங்கிக்கொண் டிருக்குமென்பதாம்.......... .... (௰)

(அ-கை.) திரிஸ்யவிலக்கணமறிவித்தல். (கவி) பொருகடலிற்றிரைமுதலாய்ப்பிறந்த
வெல்லாம் புனலாகிவிளங்காமற்புழுதியாமோ,வொருபொருளாம்பிரமமாத்திரமே
யல்லா துபயமெனுங்கற்பனைப்பேரொன்றுமில்லை, யெரியிடத்திற்சூடுமாத்திரமே
யல்லாலிரண்டுண்டோவவ்வகைபோலென்றுமொன்றுஞ், சரிதைகிரியாயோகப்பத
த்தின்முற்றிச்சாதனங்கணிறைந்தவர்க்கே சாற்றல்வேண்டும்.. .... *

(இ-ள்.) பொருகடலில் - மோதாநின்றசமுத்திரத்தில்— திரைமுதலாப்பிறந்தவெல்லாம்- அலைமுதலாகவுண்டானசகலமும்—புனலாகிவிளங்காமல்- சலமாகிவிளங்காமல்—புழுதியாமோ- புழுதியாமா— (அதுபோல) ஒருபொருளாம் - ஒப்பற்றவஸ்துவாகிய— பிரமமாத்திரமேயல்லாமல் - பிரமஸ்வரூபமாத்திரமேயல்லாமல் — உபயமெனும் - இரண்டென்கின்ற— கற்பனைப்பேர் - ஆகாசாதிகற்பனுநாமங்கள்—ஒன்றுமில்லை - ஒன்றாகிலுமில்லை—எரியிடத்தில்- அக்கினியினிடத்தில்—சூடுமாத்திரமேயல்லால் - உஷ்ணமாத்திரமேயன்றி— இரண்டுண்டோ- இரண்டாயிருக்குமோ—அவ்வகைபோல்- அத்தன்மையைப்போல — என்றுமொன்றும்-எப்போதும்பிரமசுபாவமானசகம்(பிரமத்தி)லபின்னமேயாம்— சரிதைகிரியாயோகம் - சரிதைகிரிகையோகமென்கின்ற—பதத்தின்முற்றி - மார்க்கங்களின்முதிர்ந்து—சாதனங்கணிறைந்தவர்க்கு- நான்குசாதனங்களுநிறைந்தவர்களுக்கு—சாற்றல்வேண்டும்-சொல்லவேண்டும்.எ-று. (இ-ம்) பிரமத்திலுண்டானசகம், அப்பிரமப்ரகாசமாய் விளங்குமென்பதாம்............... (௰௧)

(அ-கை.) பிரமவுபதேச விலக்கணங்கூறல். (கவி) இயற்கைகுணஞ் சோதித்துமுன்
னேபின்னே யாவையுமாம்பிரமநீயென்னல்வேண்டும், வியப்புறவாசையிலுழல்வா
ர்க்கிவ்வாறேறுதின் மீளாததீநரகில்வீழ்த்ததாகுந், தியக்குறுபோகத்தாசை தீர்ந்து
புந்தி தெளிந்தவுனைப்போல்வார்க்கேதிகழத்தோன்று,மயக்கமறவுணர்த்தவல்லகுரு
வைக்கிட்டா வருந்தியுந்தன்பிறப்பறுக்கு மகனுமாங்கே ....*

(இ-ள்.) முன்னே - முன்னமே—இயற்கைகுணஞ்சோதித்து - (சீடன) தியல்பானபக்குவங்களைப்பரிசோதித்து—பின்னே - பின்பு—யாவையுமாம்-சர்வமுமாய்விளங்கிய—பிரமநீயென்னல்வேண்டும் - பிரமஸ்வரூபமேநீயென்றுபதேசிக்கவேண்டும்—வியப்புற - அதிசயிக்கும்படி—ஆசையிலுழல்வார்க்கு - விருப்பத்திற்சுழலுபவர்களுக்கு—இவ்வாறேறுதில்-இந்தப்ரகாரஞ்சொன்னுல்—மீளாததீநரகில் - திரும்பாதநரகாக்கினியில் — வீழ்த்ததாகும் - தள்ளிவிட்டதாம்—தியக்குறு - கலக்கம்பொருந்திய—போகத்தாசைதீர்ந்து - செல்வத்தினதுபிரியத்தைவிட்டு—புந்திதெளிந்த - அறிவுதெளிந்திருக்கின்ற—உனைப்போல்வார்க்கே - உனக்குச்சமானமானவர்களுக்கே—திகழத்தோன்றும் - ப்ரகாசமாய்த்தோற்றும் — மயக்கமற-மயக்கமில்லாமல் — உணர்த்தவல்லகுருவை - அறிவிக்கவல்லமையுடையவாசாரியனை — கிட்டா- கிட்டி—வருந்தியுந்தன்பிறப்பறுக்கும் - வருத்தமுற்றுவதுதன்பவத்தைநீக்கிக்கொள்ளும்—

மசனுடைய்ங்கே - சீடனும் முன் சொன்னப்ரகாரமேயிருக்கவேண்டும். எ - று. (இ - ம்) சர்வம் பிரமமய மென்கின்ற வுண்மையைச் சாதனசதுஷ்டய முள்ள ஞானாதிகாரிக் குபதேசிக்க வேண்டுமென்பதாம்... .... (௰௨)

(அ-கை.) சிற்சுபாவமேசகத்தெனல் (கவி) விளக்குமிரவியுமல ருமுண்டாயுண்டாம் வீசொளியும்பகற்பொழுதும்வினையும்போலத், துளக்கமில்சித்துண்டாகிலுண்டா ஞாலந்தோற்றரவுமாத்திரமேசொரூபமாகுங், கிளர்த்தபரமார்த்தத்தாலில்லையென் னக்கேட்டலுமேபாற்கடல்போற்கெம்பீரத்தா, லளக்கரிதாய்ச்சீதளமா யமலமாகி யற்புதமாநின்மொழியென் றண்ணல்சொல்வான்............ .... *

(இ-ள்.) விளக்கும் - தீபமும்—இரவியும் - சூரியனும் — மலரும் - புஷ்பமும்—உண் டாய்- உண்டாயிருக்கும்போதே—வீசொளியும்- வீசப்பட்டப்ரகாசமும்—பகற்பொழுதும்- பகற்காலமும்—வினையும் - வாசனையும்—உண்டாம்போல்- உண்டானதுபோல—துளக்கமில்- அச்சமில்லாத—சித்துண்டாகில் - சித்துண்டானால்—ஞாலமுண்டாம் - சகமுண்டாயிருக்கும் —தோற்றரவுமாத்திரமே - ப்ரதிபாமாத்திரமே—சொரூபமாகும் - (அதற்கு) வடிவமாயிருக் கும்—கிளர்த்தபரமார்த்தத்தால் - சொல்லியயதார்த்தத்தால்—இல்லையென்ன - இல்லையென்று (வசிஷ்டமுனிசொல்ல)—கேட்டலும்- ஸ்ரீராமன் கேட்கவும்—பாற்கடல்போல்- க்ஷீரசமுத்திரத் தைப்போல—கெம்பீரத்தால் - ஆழ்ந்தகருத்தினால்—அளக்கரிதாய்- அளக்கக்கூடாததாகியும் —சீதளமாய்-குளிர்ச்சியாகியும்—அமலமாகி - நிருமலமாகியுமிருக்கின்ற— நின்மொழி-தேவ ரீர்வாக்கியம்— அற்புதமாமென்றண்ணல்சொல்வான் - அதிசயமாகுமென்று ஸ்ரீராமர்சொல் லுவார். எ - று. (இ - ம்) சகமானது, சிற்சங்கற்பத்தாற் றோற்றி அச்சிற்ப்ரகாசமாகவே விளங்கு மென்பதாம்..... .... (௰௩)

(அ-கை.) சர்வமுமாய்விளங்குகின்ற வாத்மாவுக்குச்சங்கற்பம் வந்தகாரணமியாதெனின்.
(கவி) இம்மொழிகளாலிமைப்போதிருளா மீளவிமைப்போது வெளியாகுமிவ்வாறாகி, மைம்முகிலாலற்பமாய்வெய்யிற்சீதம்வந்துவந்துபோகின்றமழைநாளொத்தேன், மெய் ம்முனியேயநந்தமாய்ப்பலவாயொன்றாய் வீயாதாயளக்கரிதாய்விளக்கமெய்தி, செம்மு றையாமாத்துமதத்துவத்துக்கிந்தச் செய்தொழில்கள்வந்தவா செப்புகென்றான்.... ..... *

(இ-ள்.) இம்மொழிகளால் - இந்தவசனங்களினால்—இமைப்போதிருளாம்- இமைநேரத் தின்மறைப்பாகியும்—மீள - திருப்ப — இமைப்போது - இமைநேரத்தில் — வெளியாகும்- வெளியாகியுமிருக்கின்ற—இவ்வாறாகி - இந்தப்ரகாரமாய்—மைம்முகிலால் - கறுத்தமேகத்தி னால்—அற்பமாய் - அற்பமாக—வெய்யில் - வெய்யிலும்—சீதம்- குளிர்ச்சியும்—வந்துவந்து போகின்ற - (அடிக்கடி)வருவதும்போவதுமாயிருக்கின்ற—மழைநாளொத்தேன்- கார்காலத் துக்கொப்பானேன்—மெய்ம்முனியே - உண்மையானவசிஷ்டமுனியே—அநந்தமாய்- முடி வில்லாததாகியும்—பலவாய் - அநேகமாகியும்—ஒன்றாய் - ஏகமாகியும்—வீயாதாய்-கெடாத (சத்தியை)யுடையதாகியும்—அளக்கரிதாய - அளக்கக்கூடாததாகியும்— விளக்கமெய்தி- ப்ரகா சத்தையடைந்து — செம்முறையாம் - பெருமையுள்ளகுணத்தையுடையதாகியுமிருக்கின்ற— ஆத்துமதத்துவத்துக்கு - ஆத்மஞானத்துக்கு — இந்தச்செய்தொழில்கள் - இக்கிரியைகளான வை—வந்தவா-உண்டானப்ரகாரம்—செப்புகென்றான்-சொல்லுமென்றிராமன்கேட்டாரெ-று.

(அ-கை.) அக்காரணமனுபவத்திற்றோற்றுமெனல்(கவி) மெய்யானபொருளுடைய வாக்கியத்தின்மெய்ப்பொருளாய்முன்னொடுபின்விரோதமின்றிக், கைபாருநெல்லி யெனக்காட்டவல்ல கட்டுரையேயாமிங்குகழறிற்றெல்லா, மெய்யானஞானவிழிவெ ளியாய்ப்போதம் விரியவுதித்தாலென்சொலென்னும்வித்து, கையாரவலிதெளிதெ ன்றுள்ளவாறுகலக்கமற்றநிலைநின்றுகாண்டியன்றே .... *

(இ-ள்.) மெய்யானபொருளுடைய - யதார்த்தமாகியவருத்தத்தையுடைய—வாக்கியத் தின்- மஹாவாக்கியத்தினது— மெய்ப்பொருளாய் - தத்துவார்த்தமாய் — முன்னொடுபின்வி ரோதமின்றி- முன்னுக்குப்பின்விரோதமில்லாமல்—கைபாருநெல்லியென-கரதலாமலகத்தை ப்போல—காட்டவல்ல - (ப்ரத்தியக்ஷமாகக்) காட்டவல்லமையுடைய — யாமிங்குகழறிற்றெல் லாம்- நாமிவ்விடத்திற்சொல்லியவனைத்தும்—கட்டுரையே- உறுதிவசனமேயாம்—மெய்யான ஞானவிழி - உண்மையானஞானதிருஷ்டியானது—வெளியாய்-ப்ரசன்னமாய்- போதம்விரிய வுதித்தால்— அறிவுவியாபகமாகவுதயமானால் - என்சொல்லென்னும்வித்து — எனதுவாக்கிய மென்கின்றஞானத்தை— கையார - கையிற்பொருந்தப்படியாக— வலிது - வலியதென்றும்— எளிது - எளிதென்றும்—உள்ளவாறு- உள்ளப்ரகாரமாய்—கலக்கமற- கலக்கமின்றி—நிலைநின் [illegible]

னுகாண்டி - நிலையாகவிருந்துபார்ப்பாய். எ-று. (இ-௨-௧-ம்) சங்கற்பமுநித்தகாரணம், அச்சங்கற்பமொடுங்கினவிடத்து விளங்குமென்பதாம் .... (௰௫)

(அ-கை.) மாயாநாசநிரூபணம். (கவி) தன்னுருவமாய்வதற்கே முயல்வதாகித்தம
மொழித்தவவிச்சைசயிறுற்சகலமான, வின்னலுறுகுற்றமிலாவிச்சையெய்த மெய்
கணைகள்கணையாலே நஞ்சைநஞ்சாற், றுன்னுபகைபகையாலேதீதுதீதாற் றுடைப்
பதுபோலவித்தைதனைத்துடைத்தல்வேண்டு,முன்னியுறப்பார்த்தலுமேயிதன்சுபா
வமொழிந்துபோய்த்தன்மாய்வா லுதவுமின்பம் ... . *

(இ-ள்.) தன்னுருவம் - தனதுருவமானது—மாய்வதற்கே - கெடுவதற்கே — முயல்வதாகி - எத்தனஞ்செய்வதாய் —தமமொழிந்த- அந்தகாரத்தைநீங்கிய—அவிச்சையினால்-(உத்தமமாகிய)வவித்தையினால்—சகலமானவின்னலுறு - சகலதுன்பமும்பொருந்திய— குற்றமிலாவிச்சையெய்தும்- குற்றமற்றஞானம்வரும்—எய்கணைகள்கணையால்- எய்யாநின்றவம்புகளையம்புகளாலும்—நஞ்சைநஞ்சால்-விஷத்தைவிஷாவிஷதங்களினாலும்— துன்னுபகைபகையால்- நெருங்கியசத்துருவைச்சத்துருவினாலும்—தீதுதீதால் - தீய(வழுக்கைத்,தீய (வழுக்கி)னாலும்— துடைப்பதுபோல் - கெடுப்பதுபோல—அவித்தைதனை - அஞ்ஞானத்தை— துடைத்தல்வேண்டும் - கெடுக்கவேண்டும்— உன்னியுறப்பார்த்தலும் - கருதிவிசாரித்துப்பார்த்தவளவில்—இதன்சுபாவமொழிந்துபோய் - இவ்வவித்தையினதுசுபாவநீங்கி—தன்மாய்வால்- தனதவித்தாநாசத்தினால்—இன்பமுதவும் - பிரமாந்தத்தைக்கொடுக்கும். எ-று. (இ-ம்) அசுத்தமாயையைச்சுத்தமாயையாற் கெடுக்கவேண்டுமென்பதாம் .... (௰௬)

(அ-கை.) மாயையானதெதார்த்த மாகவேயின்றெனல். (கவி) நனிமெய்யாய்மா
யையிலதென்றிவ்வாறுநாடுவாய் ஞானியாய்ஞானம்பெற்றாற், றுனிசெயுமீதுளமா
யையறுதியன்றே துகளிலாநற்போதந்தோன்றுமட்டும், பனிமாயையில்லையெனு
லென்சொல்லாலே பழுதில்லாவறுதியுறப்பற்றிநிற்பாய், புனிதமுறுபிரமமேயெல்
லாமென்று புத்தியிற்கண்டோர்முத்தி பொருந்தினோரே .... *

(இ-ள்.) நனிமெய்யாய் - மிகவுமுண்மையாய் — மாயையிலதென்று - மாயையில்லையென்று—இவ்வாறுநாடுவாய் - இந்தப்ரகாரஞ்சிந்திப்பாய்—ஞானியாய்-ஞானத்தையுடையவனாய்—ஞானம்பெற்றால் - (சிவேஸ்வரவைக்கியமானஸ்வரூப) ஞானத்தைப்பெற்றால்— துனிசெயும்- துன்பத்தைச்செய்கின்ற — ஈதுளமாயையறுதி - இந்தவவித்தையின்சுபாவத்தையறிவாய்—துகளிலாநற்போதம் - குற்றமற்றசுகஞானமாது— தோன்றுமட்டும் - உதயமாகுமளவும்—பனிமாயையில்லையெனல்- நடுக்கஞ்செய்யுமாயையானதில்லையென்பதை—என்சொல்லால்- எனதுவாக்கியத்தினால்—பழுதிலாவறுதியுற - தவறில்லாதநிச்சயமாக—பற்றிநிற்பாய்-பிடித்திருப்பாய்—எல்லாம் - சகலமும்—புனிதமுறு - பரிசுத்தமுள்ள— பிரமமேயென்று-பிரமஸ்வரூபமேயென்று—புத்தியிற்கண்டோர் - அறிவினாற்றரிசித்தவர்கள்—முத்திபொருந்தினோர்-மோக்ஷமடைந்தவர்கள். எ - று .... (௰௭)

(அ-கை.) மாயையைக்கெடுக்கு முபாயத்தையறிவித்தல். (கவி) பேதமுறுபுந்தியே
மாயையாகும் பெரிதுவருந்தியுமிதனைப்போக்கல்வேண்டும், போதமுறுபேற்றினா
லன்றிமாயைப் பொருநதியின்கரைதோன்றுப்பொருந்தத்தோன்றி, லேதமறுமப்
பதமேயிறவாவீடாமிம்மாயைபிறப்பிடமேதென்னவேண்டாஞ், சேதமுறக்கொல்
வழியேதென்றுதேர்வாய் சிதைவுற்றாலிதனியல்புதெரியுமன்றே......................... *

(இ-ள்.) பேதமுறுபுத்தியே - பேதமுள்ளஞானமே— மாயையாகும் - மாயையாம்—பெரிதுவருந்தியும் - மிகவும்வருத்தமுற்றாவது—இதனைப்போக்கல்வேண்டும்- இம்மாயையைக்கெடுக்கவேண்டும் — போதமுறுபேற்றினாலன்றி - ஞானமுள்ளவாத்மலாபத்தாலல்லாமல்—மாயை - மாயையென்னும்— பொருநதியின்கரைதோன்று - அலைகளடிக்கின்றவாற்றின்கரை தோற்றாவாம்—பொருந்தத்தோன்றில்- நன்றாகத்தோற்றினால்—ஏதமறுமப்பதமே-குற்றமற்றவப்பதமே—இறவாவீடாம் - நசியாதநிருவாணமாம்—இம்மாயை - இந்தமாயையானது—பிறப்பிடமேதென்னவேண்டாம்- உண்டாகியதெந்தவிடமென்றுவிசாரிக்கவேண்டாம்—சேதமுறக்கொல்வழியேதென்று - கெடும்படிகெடுக்கின்ற மார்க்கமெதுவென்று — தேர்வாய்-(ஸ்ரீராமா) விசாரித்தறிவாய்—சிதைவுற்றால் - கெடுமானால்—இதனியல்புதெரியும்-இம்மாயையுண்டானகுணந்தெரியும். எ-று. (இ-௨-௧-ம்) மாயையிலிருப்பவன் அம்மாயையைக்கெடுக்காவிடின் அம்மாயாதீதம் வெளிப்படாதென்பதாம்.. (௰௮)

(அ-கை)பிரமத்திலபின்னமானவாத்மசத்தியுண்டானதறிவித்தல்(கவி)யாதினின்றே
ன்றியதென்றும்யாதிதென்றுமிறந்தநெறியாதென்றுமிறந்தாற்றோன்றுமாதலினு

ல்வன்றுயரின்சாலையானவவித்தை நோயனும் நாய்க்கு மருந்தருந்தச்செய்தாற், றீருப யில்பிறப்பென்னுங் கடலின் மூழ்காய் செறிகாற்று நன்னுருவாஞ் சேணிறன்றற், சாதமுறத்திரிவது போற்றன்பாற் றோன்றுஞ்சத்தியிலாத்து மநத்துவதின் றொலகும்.

(இ-ள்.) யாதினிற்றோன்றியதென்றும்-(இந்தமாயையான) தெதிலுண்டானதென்றும்—ஏதுயாதென்றும்- இஃதெப்படிப்பட்டதென்றும்—இறந்ததெதியாதென்றும்- பிறந்தமார்க்கமேதுவென்றும்—இறந்தாற்றோன்றும்- நசித்தாற்றோற்றும்—ஆதலினுல்-ஆகையால்—வன்றுயரின்சாலையான - வலிய துன்பத்தினிருப்பிடமான —அவித்தையெனுநோய்க்கு - அஞ்ஞானமென்னும்வியாதிக்கு—மருந்தருந்தச்செய்தால்-(ஞானு) வுஷதத்தைப்புசிக்கக்கொடுத்தால் —தீருபயிலபிறப்பென்னும் - தீமையுள்ளசநநமென்கின்ற—கடலின்மூழ்காய் - சமுத்திரத்தில்(ஸ்ரீராமா)நீயாழ்ந்தமாட்டாய்—செறிகாற்று-நெருங்கியவாயுவானது—தன்னுருவாஞ்சேணிறன்னுல்-தனக்(காதார)ரூபமானவிண்ணில்—சாதமுறத்திரிவதுபோல்-உண்டாகிச்சரிப்பது போல—தன்பாற்றோன்றுஞ்சத்தியினுல் - பிரமத்திலுதித்தசிற்சத்தியால் — ஆத்துமதத்துவதின்றொல்கும் - ஆத்மசத்திவிளங்கும். எ-று .... (௰௯)

(அ-கை.) ஆத்மசத்தியிற்பின்னமான காலதேசகிரியாசத்தியுண்டாதல். (கவி) நொய்ய நெடுஞ்சிற்கடறன்னிடத்தேயற்பநுடக்கத்தாற்கணம்விளங்குநுண்மைநோக்கா, லையமறத்தற்பதமொன்றகண்டமெனவேறயமூழ்ந்துவாயக்கடலிலசைந்துசற்றே, மெய்யறிவாஞ் சிற்சத்திக்கணக்காலத்தின் முழுதுறுசத்தியினுலு முழங்கத்தோன்றித், துய்யவிடங்காலமொடுதொழில்கண்மூன்றுந்தூயனசத்திகடம்மைத்துணையாய்ச்சேர்க்கும்.............*

(இ-ள்.) நொய்யநெடும்- சொச்சமாய்வியாபித்திருக்கின்ற—சிற்கடறன்னிடத்து- ஞானசாகரத்தில்—அற்பநுடக்கத்தால் - அற்பவசைவினுல்— கணம்விளங்கும் - (சிவேஸ்வரசகமென்னுங்) குழாங்கள்ப்ரகாசிக்கும்—நுண்மைநோக்கால் - சூட்சும(ஞான) திருஷ்டியினுல்— ஐயமறத்தற்பதமொன்று - சந்தேகமின்றிபிரமஸ்வரூபமொன்றையுமே—அகண்டமென்று- அகண்டாகாரமென் (றெண்ணி)—அக்கடலிலமூழ்ந்துவாய் - அந்தஞானசமுத்திரத்தின்முழுதுவாய்—சற்றசைந்து - சற்றேயசைவுற்று—மெய்யறிவாஞ்சிற்சத்தி - வியாபகஞானமாகியஞானசத்தியானது—கணக்காலத்தில் - க்ஷணநேரத்தில்—முழுதுறுசத்தியினுலும் - சர்வசத்தியினுலும்—முழங்கத்தோன்றி - ஒலிக்கவுண்டாகி— துய்ய-அறிவின்றிரியாகிய—இடம்-இடமும்—காலம்-காலமும்—தொழில்கள்-தொழில்களுமாகிய— மூன்றுதூயனசத்திகடம்மை - மூன்று பரிசுத்தமுள்ளசத்திகளை —துணையாய்ச்சேர்க்கும்-சகாயமாகச்சேர்த்துக்கொள்ளும்.எ-று (௨௰)

(அ-கை.) இ-து.(கவி) தனதுசுபாவத்தையறிந்தநந்தமானதற்பதத்திலிருந்துஞ்சிற்சத்தி தானே, யெனதுருவிவ்வளவென்றேயளவுற்றுப்போ லெண்ணுறும்ப்படியுருவை யிது பாவிக்கி,லனுகதமாயப்பொழுதேபெயர்களெல்லையாதியாம்பார்வைகள்வந்தடையாநிற்குங்,கனவிகற்பந்தருவடிவாய்ச்சித்துருபங்கவரிடங்காலந்தொழிற்குக்கலந்தபற்றும் · *

(இ-ள்.) தனதுசுபாவத்தையறிந்து - தனதுஸ்வரூபத்தையறிந்து—அநந்தமான- முடிவில்லாத—தற்பதத்திலிருந்தும்-பிரமபதத்திலிருந்தும்—சிற்சத்திதான் -ஞானசத்தியானது— எனதுருவிவ்வளவென்று - எனதுவடிவமிவ்வளவு(ப்ரமாண)முள்ளதென்று—அறிவுற்றுப்போல் - அறிந்ததுபோல—எண்ணுறும் - பாவிக்கும்—இப்படி- இந்தப்ரகாரம்—உருவையிதுபாவிக்கில்-இந்தச்சிற்சத்திதனதுஸ்வரூபத்தைப்பாவனைசெய்யில்—அனுகதமாய்-தொடர்பாக—அப்பொழுது - அக்காலத்தில்—பெயர்கள் - நாமங்களின்—எல்லையாதியாம்-அளவுமுதலிய—பார்வைகள் - நோக்கானவை— வந்தடையாநிற்கும் - வந்தடையும்—கனவிகற்பம் - மிகுந்த விகற்பங்களை—தருவடிவாய் - கொடுக்குமாகாரமாய்—சித்துருபம் - சித்ஸ்வரூபமானது—கவரிடம் - கிரகிக்குமிடத்துக்கும்—காலந்தொழிற்கும் - காலத்துக்குஞ்செயலுக்கும் — கலந்தபற்றும் - சேர்ந்தபந்தமாம். எ-று .... (௨௧)

(அ-கை.) ஆத்மாவிலகங்காரமுதலியபேதமுண்டானதறிவித்தல். (கவி) ஈங்குரைசெய்சித்தினுடை யுருவந்தன்னையாவருஞ்சேத் திரக்ஞியனென்றியம்பாநிற்ப, ராங் கதுவும்வாதனையைச்செய்யாநின்றேயகங்கார பாவனையையடையாநிற்கும், வாங் கருமாங்காரமுநிச்சயிப்பதாகி மனமுறுபுத்தியாமலஞ்சேர்புத்தி, வீங்கியகற்பனைவடிவால்மனனநெஞ்சால்விகற்பமிகுமனம்பொறியாமெல்லவந்தே............ *

(இ-ள்.) ஈங்குரைசெய் - இவ்விடத்திற்சொல்லாநின்ற — சித்தினுடையுருவந்தன்னை- ஞானத்தினதுஸ்வரூபத்தை—யாவரும் - சகலரும்—சேத்திரக்ஞியனென்றியம்பாநிற்பர்- சிவனென்றுசொல்லுவார்கள் — அதுவும் - அச்சிவனும் — வாதனையைச்செய்யாநின்று - வாதனையைசம்பாதித்துக்கொண்டு —அகங்காரபாவனையை-அகப்பாவனையை—அடையாநிற்கும்-அடைந்

திருக்கும்—வாங்கருமாங்காரமும் - வணக்கக்கூடாதவகங்காரமும்—நிச்சயிப்பதாகி-நிச்சயிக்குந்(தொழிலை)யுடையதாய்—மலினமுறுபுத்தியாம் - களங்கமுள்ளபுத்தியாம் — மலஞ்சேர்புத்தி - களங்கநிறைந்தபுத்தியானது— வீங்கியகற்பனைவடிவாய் - மிகுந்தகற்பனுகாரமாய்—மனனநெஞ்சாம்-மனனமுள்ளமனதாம்— விகற்பமிகுமனம் - விகற்பமிகுந்தமனது — மெல்லவந்து - மெதுவாகவந்து—பொறியாம் - இந்திரியங்களாம். எ-று .... (உ௨)

(அ-கை.) ஆத்மசத்திபந்தமடைவதறிவித்தல். (கவி) கரசரணமயவுடலைம்பொறிக
ளென்பர்கவல்வுற்விப்படியன்றேகலந்துசீவன், விரவியசங்கற்பமெனும்பாசத்
தாலேவீக்குண்டுதுன்பவலைவீசப்பட்டுத், தரமறவீனதையடைவே யடையாநிற்
குஞ்சத்திமய மாமனமித்தன்மையாகிப், பொரவகங்காரதைமேவிக் கோசகாரப்
புழுப்போற்றன்னிச்சையினாற்பூணும்பந்தம் .... *

(இ-ள்.) ஐம்பொறிகள் - பஞ்சவிந்திரியங்களே—கரசரணமயவுடலென்பர்- பாணிபாதாகாரமானசரீரமென்றுசொல்லுவார்கள் —கவல்வுறவிப்படியன்றே - வருந்தவிப்படியல்லவா—கலந்துசீவன் - கலந்திருக்கின்றசீவனானவன்—விரவியசங்கற்பமெனும் - கலந்தசங்கற்பமென்கின்ற—பாசத்தால்வீக்குண்டு - கயிற்றினாற்கட்டுப்பட்டு— துன்பவலைவீசப்பட்டு-துக்கமென்னும்வலையினாலெறியப்பட்டு—தரமறவீனதை -தரமின்றியிழிவை—அடைவேயடையாநிற்கும் - கிரமமாகவடையும்—சத்திமயமாமனம்- சத்திமயமாகியமனமானது—இத்தன்மையாகி - இவ்வண்ணமாய்—பொரவகங்காரதைமேவி - பொருதுதற்ககம்பாவத்தைப்பொருந்தி—கோசகாரப்புழுப்போல்-கோசகாரக்கிருமியைப்போல—தன்னிச்சையினால்- தனதாசையினால்—பந்தம்பூணும் - பந்தத்தைத்தரிக்கும். எ-று .... (உ௩)

(அ-கை.) இ-து. (கவி) தானேசங்கற்பித்துத்தன்மாத்திரத்தாற் றனிவலையாமுட்டொழில்
கடன்னைக்கட்டக், கானேறுசிங்கம்விலங்குற்றதென்னக்கவலையினான்மிகவுமனங்கரைந்து
சோரு, மாறாதமனம்புந்திஞானஞ்செய்கைபகங்கரவாதனையுடலம்பகுதிமாயை, யூறுன
மலங்கருமம்பந்தஞ்சித்தமோதவித்தையிச்சையெனவுரைப்பரன்றே .... *

(இ-ள்.) தானேசங்கற்பித்து-தானேயுண்டாக்கியிருக்கின்ற—தன்மாத்திரத்தால்-(பஞ்சதன்மாத்திரையினால்—தனிவலையாம் - தனித்தவலையாகிய—உட்டொழில்கள்-உள்விருத்திகளானவை—தன்னைக்கட்ட - தன்னைப்பந்தனஞ்செய்ய—கானேறுசிங்கம் - காட்டிலிருக்குமாண்சிங்கமானது—விலங்குற்றதென்ன- காலிற்றளைபூண்டதுபோல—கவலையினால்-துன்பத்தினால்—மிகவுமனங்கரைந்துசோரும்- மிகவுமனங்கரைந்துவாடும்—ஆறாத - நீங்காத—மனம் - மனமென்றும்—புந்தி - புத்தியென்றும்—ஞானம் - ஞானமென்றும்— செய்கை - தொழிலென்றும்—அகங்காரம்- அகங்காரமென்றும்—வாதனையுடலம் - யாதனுசரீரமென்றும் — பகுதி-பிரகிருதியென்றும்—மாயை - மாயையென்றும்—ஊறுனமலம்-இழிவாகியமலமென்றும்—கருமம் - கன்மமென்றும்—பந்தம்- பந்தமென்றும்—சித்தம்- சித்தமென்றும்—ஓதவித்தை-சொல்லப்பட்டவவித்தையென்றும்—இச்சையென - ஆசையென்றும் — உரைப்பர் - (பெரியோர்கள்) சொல்லுவார்கள். எ-று. (இ-சு-க-ம்) ஆத்மாவினதுசங்கற்பசத்தியினாற்பாஞ்சபூதபௌதிகமாயதனுற்றன்மறைபட்டதுபோலத்தோற்றுமென்பதாம் .... (உ௪)

(அ-கை.) மனத்தினதுதுன்பமறிவித்தல். (கவி) அப்பரிசோரோரிடத்திலோரொ
ன்றாகவாசாபாசத்தினாலமைத்துச்சொன்ன, வொப்பரியசகவிரிவாமிவற்றையெல்
லாமுட்கொள்ளும்பலமிதனிலொன்றுமில்லை, கப்புடையநெடுவடத்தைவடத்தின்
வித்து கரந்திருப்பதொக்குமிடர்கவலைத்தீயின், வெப்பமிகக் கோபப்பாம்பெடு
த்துநுங்கவேட்கையெனுங்கடற்றிரையான்மெலியுமுள்ளம் .... *

(இ-ள்.) அப்பரிசு - அந்தப்ரகாரம்—ஓரோரிடத்தில் - ஒவ்வோரிடத்தில் — ஓரொன்றாக - ஒவ்வொன்றாக—ஆசாபாசத்தினால் - ஆசாபாசங்களினால்—அமைத்துச்சொன்ன - உண்டாக்கிச்சொல்லிய—ஒப்பரிய - சமானமில்லாத — சகவிரிவாம் - உலகத்தினதுமிகுதியான—இவற்றையெல்லாம் - இவைகளியாவையும்—உட்கொள்ளும் - அகத்திற்றரித்திருக்கின்ற (மனதுக்கு)—பலம்-ப்ரயோசனமானது— இதனிலொன்றுமில்லை - இதனிடத்திலொன்றுமின்று—கப்புடைய - கிளைகளையுடைய—நெடுவடத்தை - நீண்டவாலவிருக்ஷத்தை— வடத்தின்வித்து-ஆலம்விதையானது—கரந்திருப்பதொக்கும்- ஒளித்துவைத்திருக்கின்றதுக்குச்சமானமாம்—இடர்க்கவலைத்தீயின்வெப்ப-துன்பாக்கினியினால்வெதுப்ப—மிகக்கோபப்பாம்பு-மிகுந்தசினமென்னுமலைப்பாம்பினால்—எடுத்துநுங்க-எடுத்துவிழுங்க—வேட்கையெனுங்கடற்றிரையால்-ஆசையென்கின்றசமுத்திரத்தலைகளால்—உள்ளமெலியும் - மனந்தளர்வடையும். எ-று. (இ-ம்) தனதுசங்கற்பரூபமானவிஷயங்களிலகம்பாவஞ்செய்வதனான்மனம்வருந்துமென்பதாம்(உ

(அ-கை.) மனதையிரக்ஷிக்கவேண்டுமெனல். (கவி) பெருகியவித்தியர்களாலவசமாய்த்தன் பிதாமகனைமறந்துமிகப்பீடையுற்று, கருகியவிப் மனந்தன்னையளற்றிலானைக்களைமேற்றவிடுவதும்போற்களைமேலேற்றும், வெருவுசராமரணமெனும்விடத்தால்வெந்துமிகுநலந்தீங்கெனும் பகையால் மெலிபுநெஞ்சுக், கருள்புரியாநரர்மனிதவடிவமானவரக்கர்அருள்வடிவமானவள்ளால் .... *

(இ-ள்.) பெருகியவித்தியார்களால்-மிகுந்தவித்தியாவிபங்களினால்—அவசமாய்-(தனது) வசந்தப்பி — தன்பிதாமகனைமறந்து - தன்பிரமஸ்வரூபத்தைமறந்து — மிகப்பீடையுற்று-மிகுந்ததுன்பத்தையடைந்து—கருகியவிம்மனந்தன்னை - தீய்ந்துற்றவிந்தமனதை — அளற்றிலானை - சேற்றில்முழுந்தியயானையை— களைமேற்றிவிடுவதுபோல்- களையிலெடுத்துவிடுவதைப்போல—களைமேலேற்றும்- (மாயையினின்றும்)களையேற்றுவாய்—வெருவுசராமரணமெனும்-பயங்கரமுள்ளமூப்புமரணமென்கின்ற— விடத்தால்வெந்து- விஷாக்கினியினாற்றகிக்கப்பட்டு—மிகுநலந்தீங்கெனும் - மிகுந்தநன்மைதின்மைகளென்னும் — பகையால் - சத்துருவினால்—மெலிபுநெஞ்சுக்கு - தளருகின்றமனதுக்கு—அருள்புரியாநரர் - கிருபைசெய்யாதமனிதர்கள் அருள்வடிவமான - கிருபையேவடிவமாயிருக்கின்ற—வள்ளால்-ஸ்ரீராமா—மனிதவடிவமானநரவடிவமாயிருக்கின்ற—அரக்கர்- இராக்ஷதர்கள். எ-று. (இ-ம்) மனதைவிடவித்தியின்றுதிருப்பிப்பிரமத்திற் சேர்க்கவேண்டுமெனபதாம்..... .... (உ௬)

(அ-கை.) மனம்வெளிமுகப்படுதலினுண்டானசிருஷ்டிக்கிரமமறிவித்தல். (கவி) இவ்வகையேசிற்பாவசிவபேத மியல்வடிவாம்பிரமத்தினிடையேநின்று, வவ்வியபாவனையாலேவந்தகோடிவாராநின்றனகோடிவருவகோடி, தெய்வவரையருவிநீர்த்துளிபோல்வந்தோர் சிலர்பிறவியொன்றிரண்டுமூன்றுசேர்ந்தோர், நைவருசென்மங்கள்சிலர் நூற்றின்மிக்கோர் நாடரியபவஞ்சிலர்கணணிநின்றோர்..... .. ; ....*

(இ-ள்.) இவ்வகையே - இந்தப்பிரகாரமே—சிற்பாவசிவம்-சித்ரூபிலாசமாயிருக்கின்ற சிவனானவன்—பேதமியல்வடிவாம்-வேற்றுமையானவாகாரமாய்—பிரமத்தினிடையேநின்று-பிரமத்தினிடத்திலிருந்து—தெய்வவரை - மேருமலையினின்று—அருவிநீர்த்துளிபோல் - (வருகின்ற)வருவிநீர்த்துளிகள்போல—வவ்வியபாவனையால் - (தாங்)கொண்டபாவனையால்—வந்தகோடி - வந்திருக்கின்றவைகளளவில்லனவாம்—வாராநின்றனகோடி - வருகின்றவைகளளவில்லனவாம்—வருவகோடி - (இனி)வரப்பட்டவைகளளவில்லனவாம்—வந்தோர்சிலர் - வந்தவர்களிற்சிலர்—பிறவி - சநநத்தை — ஒன்று - ஒன்றை—இரண்டு - இரண்டை—மூன்று- மூன்றை—சேர்ந்தோர் - அடைந்தவர்கள்— நைவருசென்மங்கள் - துன்பத்தைக்கொடுக்கின்றசநநங்கள்—சிலர் நூற்றின்மிக்கோர் - சிலர் நூற்றிலுமதிகப்பட்டோர்கள்—நாடரியபவம்- அளவிடுதற்கரியபிறவிகளை—சிலர்கணணிநின்றோர் - சிலரடைந்திருந்தார்கள். எ - று..... ... . (உ௭)

(அ-கை.) இ-து. (கவி) சிலர்சிலர்கள்கின்னரர்கந்தருவரானோர்சிலர்விச்சாதரருரகர்திரளாய்நின்றோர், சிலரருக்கரிமகிரணர்வருணனானோர்சிலர்பிரமன் திருநெடுமால்சிவனாய்நின்றோர்; சிலர்மறையோர்சிலரரசராகிநின்றோர்சிலர்வணிகர்வேளாண்மைச்செயலினின்றோர், சிலர்விலங்குபறவைகளூர்வனவாய்வந்தோர்சிலரிலைகாய்பழமூலந்திரணமானோர்.

(இ-ள்.) சிலர்கள்கின்னரர் - சிலர்கள்கின்னரராகவும்—சிலர்கந்தருவரானோர் - சிலர்கந்தருவராகவுமானார்கள்—சிலர்விச்சாதரர் - சிலர்வித்தியாதரர்களாகவும்—உரகர்திரளாய்நின்றோர் - சிலருரகர்கள்கூட்டமாகவுநின்றார்கள் — சிலரருக்கர் - சிலர்சூரியராகவும் — இமகிரணர்-(சிலர்) பனிக்கிரணத்தையுடையசந்திரராகவும்—வருணனானோர் - (சிலர்) வருணனாகவுமானார்கள்—சிலர்பிரமன் - சிலர்பிரமாவாகவும்—திருநெடுமால்- (சிலர்) விஷ்ணுவாகவும்—சிவனாய்-(சிலர்) சிவனாகவும்—நின்றோர் - நின்றார்கள்—சிலர்மறையோர்- சிலர்பிராமணர்களாகவும்—சிலரரசராகிநின்றோர் - சிலர்களரசராகவுநின்றார்கள்—சிலர்வணிகர் - சிலர்வைசியராகவும்—வேளாண்மைச்செயலினின்றோர்-(சில) ருபகாரத்தொழிலையுடையசூத்திரராகவுநின்றார்கள்—சிலர்விலங்கு - சிலர்மிருகங்களாகவும்—பறவை - (சிலர்) பட்சிகளாகவும் — ஊர்வனவாய்வந்தோர் - (சில) ரூர்வனவாகவும்வந்தார்கள்—சிலரிலை - சிலர்பத்திரமாகவும்—காய் - (சிலர்) காயாகவும்—பழம் - (சிலர்) கனியாகவும்—மூலம்- (சிலர்) வேராகவும்—திரணமானோர்- (சிலர்) துரும்பாகவுமானார்கள். எ-று ....(உ௮)

(அ-கை.) இ-து. (கவி) சிலர்மயேந்திரசைலஞ்சையமேருதென்மலயமந்தரமாய்ச்சிறந்துநின்றோர், சிலர்கடம்பஞ்செய்பீரந்தாலஞ்சாலஞ்சிறந்ததமாலங்களாய்ச் செறிந்துநின்றோர், சிலருவரிதயிர்நெய்பாற்கருப்பஞ்சாறுதேமதுநீர் பெருங்கடலாய்ச்சேர்ந்துநின்றோர், சிலர்திசைகள்சிலர்நதிகளாய்நின்றோர்சிலர்மேல்லார்சிலர்கீழாரீயரானோர்.*

(இ-ள்.) சிவரானோர் - சிவரானவர்கள்—சிலர்- சிலர்கள்—மயேந்திரசைலம் - மயேந்திர பருப்பதமாகவும்—சையம் - சையபருப்பதமாகவும்—மேரு - மகாமேருவாகவும் — தென்மலயம் - பொதியமலையாகவும்—மந்தரமாய் - மந்தரமலையாகவும்—சிறந்துநின்றோர் - சிறப்பாகநின்றோர்கள்—சிலர்- சிலர்கள்—கடம்பம்-கடம்பவிருக்ஷமாகவும்—செப்பீரம்-எலிமிச்சமரமாகவும்---தாலம்-பனைவிருக்ஷமாகவும்---சாலம்-ஆச்சாமரமாகவும்---சிறந்ததமாலங்களாய்-சிறப்புள்ளபச்சிலைமரமாகவும்---செறிந்துநின்றோர் - நெருங்கிநின்றோர்கள்---சிலர்-சிலர்கள்---உவரி -உவராகவும்—தயிர்-ததியாகவும்—நெய்-நெய்யாகவும்—பால்-பாலாகவும்—கருப்பஞ்சாறு-கருப்பஞ்சாறாகவும்—தேனொடு-தேனாகவும்—நீர்-சுத்தசலமாகவுமிருக்கின்ற—பெருங்கடலாய் - மகோததியாக — சேர்ந்துநின்றோர்-அடைந்திருந்தார்கள்—சிலர்திசைகள் - சிலர்திக்குகளாகவும்—சிலர் நதிகளாகிநின்றோர்- சிலராறுகளாவுமிருந்தார்கள்—சிலர்மேலோர்-சிலருயர்ந்தவர்களாகவும் — சிலர்கீழோர் - சிலர்தாழ்ந்தவர்களாகவுமிருந்தார்கள். எ-று. (உ௯)

(அ-கை.) இ-து. (கவி) கையினாலறையுண்ணும்பந்துபோலக் காலினாலறையுண்டுகணக்கிலாத, மெய்யிலேபுகுந்தலுத்துவிவேகம்பெற்றும்விரகிலார்சிலர்பிறப்பின் மீண்டும்வீழ்ந்தார், மையினான்மூன்றுலகாம் பணிசெய்துவருநிற்கும்போமாகிவளர்ந்து வாளாப், பொய்யினான்மிகவிரியும்வேலையூடேபொருதிரைபோற்பரபதத்தேபுரிந்தமாயை....... *

(இ-ள்.) கையினாலறையுண்ணும் - கையினாலடிக்கப்பட்ட—பந்துபோல- பந்தைப்போல—காலினாலறையுண்டு- காலினாலடிக்கப்பட்டு —கணக்கில்லாதமெய்யில்- அளவற்றசரீரத்தில்—புகுந்து - ப்ரவேசித்து—அலுத்து - சலித்து —விவேகம்பெற்றும்- விவேகமடைந்தும்—விரகிலார்சிலர் - அறிவில்லாதசிலபேர்கள்—பிறப்பின்மீண்டும்வீழ்ந்தார் - சநநத்திற்றிரும்பவும் விழுந்தார்கள்—மையினால்- அஞ்ஞானத்தினால்—மூன்றுலகாம்பணிசெய்து- திரிலோகமான சிருஷ்டியைச்செய்து— வருநிற்கும்போமாகி- உற்பத்திஸ்திதிலயமாகும்படி—வளர்ந்து-விரிந்து—வேலையூடு - சமுத்திரத்தில்—பொருதிரைபோல் - மோதுகின்றவலைகளைப்போல—பரபதத்து - பிரமபதத்தில்—புரிந்தமாயை - சொல்லியமாயையானது—வாளாப்பொய்யினால்-வீணாகமித்தையினால்—மிகவிரியும் - மிகவும்விஸ்தாரமாம். எ - று. (இ-௬-க-ம்) சைதன்யத்தில்அபின்னமாகவுண்டாகியசிற்சத்தியேபின்னமானப்ரகிருதிமுதற்சீவேஸ்வரசகங்களாகத்தோற்றினதையறிவித்ததாம் .... (௩௰)

(அ-கை.) ஆத்மசங்கற்பமானமனதுபிரமாவானதெங்ஙனமெனின். (கவி) தெரிந்துணர்ந்தோனிவ்வாறுசெப்பலோடுஞ் சீவன்றான் மனப்பதத்தைச் சேர்ந்துநின்றும், விரிஞ்சனெனும்பெயர்பெற்றதெவ்வாறென்றுவித்தரத்தாலுள்ளபடி விளம்புகென்று, வரிந்தமன்கேட்டலும்வசிட்டனுரைப்பான்வள்ளாலந்தநெறிகேட்டலுமேயகிலஞாலம், புரிந்தநெறியறிதியிதன்றன்மையெல்லாம்புந்தியுறக்கேட்டுணர்வுபொருந்துவாயே.... .... *

(இ-ள்.) தெரிந்துணர்ந்தோன் - (சகலமுந்) தெளிந்தறிந்தவசிஷ்டமுனியானவர் — இவ்வாறுசெப்பலோடும் - இவ்வண்ணஞ்சொன்னமாத்திரத்தில்—சீவன்றான்-சீவனானவன்—மனப்பதத்தைச்சேர்ந்துநின்றும்-மனதினிடத்திற்சேர்ந்திருந்தும்—விரிஞ்சனெனும்பெயர்பெற்றது - பிரமாவென்னுநாமமடைந்தது—எவ்வாறென்று - எவ்வண்ணமென்று—வித்தரத்தால்-விரிவாக—உள்ளபடிவிளம்புகென்று - உண்மையாகச்சொல்லுமென்று — அரிந்தமன்கேட்டலும் - ஸ்ரீராமன்கேட்கவும்—வசிட்டனுரைப்பான் - வசிஷ்டமுனிசொல்லுவார் — வள்ளால்-ஸ்ரீராமா—அந்தநெறிகேட்டலும் - அந்தமார்க்கத்தைநீகேட்டவளவில்—அகிலஞாலம்- சகலசகங்களும்—புரிந்தநெறியறிதி - உண்டானமார்க்கத்தையறிவாய் —இதன்றன்மையெல்லாம்-இதன்குணங்களனைத்தையும்—புந்தியுறக்கேட்டு - அறிவிற்பொருந்தக்கேட்டு — உணர்வுபொருந்துவாய் - அறிவையடைவாய். எ-று.. (௩க)

(அ-கை.) ஆத்மாவில்மனமுண்டானதறிவித்தல். வேறு. (கவி) திசைகாலமாதிகளாற்றன்னுடையசத்தியினாற்றிரியாச்சீவன், பசையானலீலையினாற்றிசைகாலமாதிகளாற்பயின்றமேனி, யிசையாநின்றுளபோதேசீவனுக்குபரியாயமென்னப்பட்ட, வசையானவாதனையின்வசத்தாலேயுலையுமனம்வந்துதோன்றும்......... .... *

(இ-ள்.) திசை - திக்குகள்—காலம் - காலங்கள்—ஆதிகளால் - முதலானவைகளால்—திரியாச்சீவன் - கெடாதவாத்மாவானது —தன்னுடையசத்தியினால் - தனது சிற்) சத்தியினால்—பசையானலீலையின் - இச்சாவிளையாட்டாகவும்—திசைகாலமாதிகளால் - திக்குகாலங்கண் முதலியவிவைகளோடு—பயின்றமேனி - கூடியசரீரத்தை—இசையாநின்றுளபோதே- இசைந்திருக்கின்றபொழுதே—சீவனுக்கு - சீவாத்மாவுக்கு —பரியாயமென்னப்பட்ட- பரியாயநா

மெனன்றுசொல்லப்பட்ட—வசையானவாதனையின்-குற்றமுள்ளவாசனையின்—வசத்தால்-வசத்தினால்—உலைபுமனம்வந்துதோன்றும்-சஞ்சலமுள்ளமனமுண்டாகித்தோற்றும். எ-று. (௯௨)

(அ-கை.) மனஞ்சத்ததன்மாத்திரையாகத்தடித்தல். (கலி) செயல்செயலின்மைகளிரண்டுஞ்சேர்ந்தெழுந்தமனச்சத்திசெயலைமேவி, யியல்பின்முதனுப்தாகிச்சத்தவிதையிரதத்திலெழுவதான, வுயர்தருவிண்பாவனையைப் பாவிக்குங்கணத்திலேயுடனேயந்த, வியனலவின்றன்னெறியாலந்தமனங்கனதையினைமேவுமன்றே .... *

(இ-ள்.) செயல் - தொழில்களும் — செயலின்மைகள் - தொழிலில்லாமைகளுமாகிய—இரண்டுஞ்சேர்ந்தெழுந்த - இவ்விரண்டுமொருமித்தெழுந்திருந்த—மனச்சத்திசெயலைமேவி-மனோசத்தியானதுதொழிலையடைந்து—இயல்பின் - சுபாவமாக— முதல்நுப்தாகி - ஆதியிற்சூட்சுமமாய்— சத்தவிதையிரதத்தில் - சத்ததன்மாத்திரைக்கு(விஷயமானபாவனையினால்)—எழுவதான - உண்டாகிய—உயர்தருவிண்பாவனையை - மேலானவாகாயபாவனையை —பாவிக்குங்கணத்தில் - பாவிக்கின்றக்ஷணத்தில்—உடனே - அப்பொழுதே— அந்தவியனலவின்றன்னெறியால் - அச்சலனமார்க்கத்தினால்—அந்தமனம் - அந்தமனமானது — கனதையினைமேவும்- (ஆகாச)மென்னுங்கனத்தைப்பொருந்தும். எ-று .... (௯௩)

(அ-கை.) மனமானதுபரிசதன்மாத்திரையாகவுமுருபதன்மாத்திரையாகவுந்தடித்தல். (கலி) பரிசவிதையிரதத்திலெழுவதாங்காற்றசைவைப்பாவித்துன்னும், விரிதருவிண்காற்றிரண்டின் மெய்ந்நெருக்கிலேநின்றும்வெந்தீத்தோன்றி, யிருதிறச்சத்தப்பரிசந்திடமாகப்பழக்கமுறுமியல்பினாலே,யுருவதன்மாத்திரைமேவுமிம்மூன்றினுடன்மேவுமுள்ளந்தானே .... *

(இ-ள்,) உள்ளந்தான் - மனமானது—பரிசவிதையிரதத்தில்-பரிசதன்மாத்திரையென்னும்பாவனையினால்—எழுவதாங்காற்றசைவை-உண்டாகாநின்றவாயுவினதுசலனத்தை—பாவித்து - பாவனைசெய்து—துன்னும் - (காற்றாக)நிறையும்— விரிதருவிண் - விரிந்திருக்கின்றவாகாசமும்—காற்று - வாயுவுமாகிய— இரண்டின் மெய்ந்நெருக்கினின்றும் - இந்தவிரண்டின்வடிவுநெருக்கத்திலிருந்தும்— வெந்தீத்தோன்றி- வெப்பம்பொருந்திய வக்கினியாகவுண்டாகி—இருதிறச்சத்தப்பரிசம்-இரண்டாகியசத்தமும்பரிசமும்—திடமாகப்பழக்கமுறும்-திடமாகப்பழக்கஞ்செய்கின்ற—இயல்பினால்-குணத்தினால்—உருவதன்மாத்திரைமேவும் -உருவதன்மாத்திரையாகி—இம்மூன்றினுடன்மேவும்-இம்மூன்றுதன்மாத்திரைகளோடும்பொருந்தும். எ-று.

(அ-கை.) மனமானது, ரசதன்மாத்திரையாகவுங்கந்ததன்மாத்திரையாகவுந்தடித்தல். (கலி) கணத்திலிரதத்தியல்பைப்பாவிக்கநீரறிவக்கருத்தினுண்டாந், குணத்தினையத்திறங்களொடுங்கூடுமனங்கணத்திலேகுறித்துநாடி, மணத்தினைப்பாவித்தலுந்தன்மாத்திரத்தாற்பாரறிவுவருமிவ்வாறே, தணத்தபூதத்தன்மாத்திரம்வளைத்துவளைத்துருவாய்ச்சகமாய்த்தோன்றும் .... *

(இ-ள்.) கணத்தில் - ஒருக்ஷணத்தில்— இரதத்தியல்பைப்பாவிக்க- இரசதன்மாத்திரையைப்பாவனைசெய்ய—நீரறிவு - அப்புவென்னும்ஞானம்—அக்கருத்தினுண்டாம் - அம்மனதினுண்டாகும்—குணத்தினை - (இந்நான்கு) குணங்களையும்—அத்திறங்களொடும் - அக்குணங்களோடும்—கூடுமனம் - கூடுகின்றமனமானது—கணத்தில் - ஒருக்ஷணத்தில் — குறித்துநாடி- கருதித்தேடி—மணத்தினைப்பாவித்தலும் - கந்தத்தைப்பாவிக்கவும்—தன்மாத்திரத்தால்-(பாவிக்கின்றகந்த) தன்மாத்திரையினால்—பாரறிவுவரும் - பிருதிவென்னுஞானமுண்டாம்— இவ்வாறே - இவ்வண்ணமே—தணத்தபூதம் - பிரிவாகிய (பஞ்ச) பூதங்களும் —தன்மாத்திரம்-(பஞ்ச)தன்மாத்திரைகளும்—வளைத்துவளைத்து-(தன்னை)ச்சுற்றிச்சுற்றி—உருவாய்-(பருத்த)வாகாரமாய்—சகமாய்த்தோன்றும் - பிரபஞ்சமாகத்தோற்றும். எ-று .... (௯௫)

(அ-கை.) மனமானதுபுரியட்டகமாகவிளங்கல். (கலி) திகழ்ந்தவனற்பொறியென்னத்திகழ்வடிவைவிண்ணிலேதெரியக்காணு, மகங்கரமாந்தொழின்மேவிப்புத்தியுடன்விதையோடுமணுகியந்தப், புகன்றதெலாஞ்சேர்ந்துபுரியட்டகமாயுயிர்களுளப்பூவில்வண்டா, மிகுந்தகரங்கூட்டரவாற்பாவிக்குமிகவிளங்குமேனிதன்னை .... *

(இ-ள்.) திகழ்ந்தவனற்பொறியென்ன - ப்ரகாசித்திருக்கின்றவக்கினிப்பொறியைப்போல—திகழ்வடிவை - விளங்காநின்றசரீரத்தை—விண்ணிலேதெரியக்காணும் - ஆகாயத்திற்றெரியப்பாவிக்கும்—அகங்கரமாந்தொழின்மேவி - அகப்பாவனையானகிரியையைப்பொருந்தி—புத்தியுடன் - புத்தியுடனும்—விதையோடும - (பஞ்ச) தன்மாத்திரைகளோடும் — அணுகி-பொருந்தி—அந்தப்புகன்றதெலாஞ்சேர்ந்து-அப்படிசொல்லப்பட்டசகலமுங்கூடி—புரியட்டகமாய் - புரியட்டகசரீரமாய்—உயிர்களுளப்பூவில் - ஆத்மாக்களிதயகமலங்களில்—வண்டா

ம் - மதுகரமாகும்—மிருந்தகடிங்கூட்டரவால் - மிருந்துவாசனைகளினால்— மிகவிளங்குமேனி தன்னை - மிகவுந்திகழா நின்றசரீரத்தை—பாவிக்கும் - பாவனைசெய்யும். எ - று. (இ-கா-க-ம்) மலமானது பஞ்சதன்மாத்திரை யகங்காரம் புத்தியென்பவைகளோடுங்கூடிப் புரியட்டகசரீரமாகவேவிளங்குமென்பதாம்.. (கசு)

(அ-கை.) மனமானதுசமஷ்டிபௌதிகசரீரமாயினதறிவித்தல். (கவி) பாவனைமூற்றிடத்தூலமேனியால்வில்வத்தின்பழம்போற்சித்த,மேவுகருவிற்பாய்ந்தபொன்னிறம்போன் மிக்விளங்கிவிமலவிண்ணிற், றாவரமுண்டாய்நிற்குமந்தவெளி தன்னுடையசுபாவந்தன்னாற், கேவலமேற்றலைகீழ்காற்பக்கங்கைநடுவயிறாக்கிளர்ந்தோனுங்கும் .... *

(இ-ள்.) சித்தம் - சித்தமானது — பாவனைமூற்றிட - பாவனைமுதிர — வில்வத்தின்பழம்போல் - வில்வக்கனியைப்போல— தூலமேனியால் - தூலசரீரத்தை — மேவுகருவிற்பாய்ந்த பொன்னிறம்போல் - மேவுகின்றகருவிற்பாய்ந்ததங்கநிறத்தைப்போல—மிகவிளங்கி- மிகவும் ப்ரகாசித்து—விமலவிண்ணில் - நிமலாகாயத்தில்—தாவரமுண்டாய்நிற்கும் -வடிவுண்டாயிருக்கின்ற—அந்தவெளி - அந்தப்ரகாசமானது--- தன்னுடையசுபாவந்தன்னால்- தனதுசத்தியினால்--- கேவலம் - தனிமையாக---- மேற்றலை - மேலேசிரசும்--- கீழ்கால் - கீழேபாதமும்---பக்கங்கை- பக்கங்களிற்கரங்களும் --- நடுவயிறாய் - மத்தியில்வயிறுமாகவும்--- கிளர்ந்தோனுதும்- ப்ரகாசித்தோனுருங். எ - று ....(கஎ)

(அ-கை.) மனமானதுபிரமனாயினதறிவித்தல். (கவி) மூந்தியகாலத்தினால்வெளியாகிநின்மலமாமூர்த்தியாகிப்,புத்தியொடுசத்துவமொய்ம்புச்சாகம்விஞ்ஞானம்பொறியுமேவு, மந்தவவ்வேயகிலபிதாமகனாய்முழுதுணர்ந்தவயனுமன்னான், சுந்தரமாயுத்தமமாய்த்திகழ்கின்றதன்வடிவைத் தோன்றநோக்கி..................................... *

(இ-ள்.) மூந்தியகாலத்தினால்-முதன்மையானகால(சத்தி)யினால்—வெளியாகி-வெளிப்படையாய்—நின்மலமாமூர்த்தியாகி - நின்மலமானவடிவையுடையதாய்—புத்தியோடு - புத்தியுடன்—சத்துவம் - சாமர்த்தியமும்—மொய்ம்பு - வலிமையும்— உச்சாகம் - உயர்ச்சியும்— விஞ்ஞானம் - மெய்ஞ்ஞானமும்—பொறியும் - செல்வமும் — மேவும் - பொருந்திய—அந்தவவன்- அவ்வவயங்களையுடையவனே—அகிலபிதாமகனாய் - விஸ்வத்தையுடையவனாய்— முழுதுணர்ந்தவயனும்- யாவையுந்தெளிந்தபிரமாவாம்—அன்னான் - அப்பிரமாவே—சுந்தரமாய்- அழகாகியும்—உத்தமமாய் - உத்தமமாகியும்—திகழ்கின்றதன்வடிவை - விளங்காநின்றதனது ஸ்வரூபத்தை—தோன்றநோக்கி - நன்றாகப்பார்த்து. எ-று. (இ-உ-க-ம்) மனமானதுவிராட்புருடரூபமாகத் தடித்துத்தனக் காதாரமாயிருக்கின்ற சிதாகாயத்தைப்பார்த்ததென்பதாம்.*

(அ-கை.) பிரமசந்நிதியிலுண்டாகிய விசேடத்தையறிவித்தல். (கவி) குன்றாதவறுகுணத்தோன்மூன்றுகாலமும்வெளியாய்க்குறிக்கும்வேதா, வொன்றாகிச்சின்மயமேயுருவமாய்க்கரைகாணுவுயர்வானத்தின், மூன்றாலுண்டாகியதென் னென நினைந்தானழுக்கிலாமுழுஞானக்கண, னன்றாவப்போதுதித்தோன்பலகோடிசிருட்டிமுதனடத்தக்கண்டான் ... *

(இ-ள்.) குன்றாதவறுகுணத்தோன்-கெடாதசட்குணங்களையுடையபகவானாகியும்—மூன்றுகாலமும் - திரிகாலங்களையும்— வெளியாய்க்குறிக்கும்வேதா - வெளியாகப்பார்க்கின்றவனாகியுமிருக்கின்றபிரமாவானவர்—ஒன்றாகி - ஏகமாகியும் — சின்மயமேயுருவமாய் - ஞானாகாரமேவடிவமாகியும்—கரைகாணு - எல்லையற்றதுமாகியுமிருக்கின்ற—உயர்வானத்தின்- பரமாகாயத்தில்—முன்றாலுண்டாகியது - முன்னுண்டானது—என்னென நினைந்தான் - என்னவென்று சிந்தித்தான்—அழுக்கிலாமுழுஞானக்கண- களங்கமற்றபூரணஞானதிருஷ்டியையுடையவனாய் —நன்றாவப்போதுதித்தோன்- நன்மையாகவப்போதுதயமானபிரமன்—பலகோடிசிருட்டி- அநேககோடிசிருஷ்டிகளை —முதனடத்தக்கண்டான் - முன்புசெய்யப்பார்த்தான். எ-று.(இ-ம்) சித்தனதுவிலாசத்தைக் கொண்டவற்றசிருஷ்டிகளைச் செய்யச்சிந்தித்ததென்பதாம் ... (கஅ)

(அ-கை.) புருடார்த்தசாதனங்கூறல் (கவி) சாதிகுலந்தருமமெலாமுணர்ந்தவற்றைலீலையினாற்றான்கற்பித்தா, னோதரியலீலையினாற்சங்கற்பத்தாற்பிறக்குமுயிரையெல்லா, மேதமுறுகந்தற்பநகரம்போலறம்பொருள்வீடின்பமெய்த, மேதகையபல்கோடிசாத்திரங்களவர்க்காக விதித்தான்வேதா.. *

(இ-ள்.) சாதி - வருணங்களும்—குலம் - குலங்களும்—தருமம்- தருமங்களுமாகிய—வெலாமுணர்ந்து - யாவையுமறிந்து—அவற்றை - அவைகளை — லீலையினாற்றான்கற்பித்தான்- விளையாட்டினாலுண்டாக்கினான்—ஓதரியலீலையினாற் - சொல்லுதற்கரியவிளையாட்டினால—எதமுறுகந்தற்பநகரம்போல - அழிகின்றகந்தர்வநகரத்தைப்போல—சங்கற்பத்தால் - சங்கற்பத்தினால்—பிறக்குமுயிரையெல்லாம் - உண்டாகப்பட்டவாத்மாக்களனைத்தையும் — அறமபொ

ருள்விடின்பமெய்த - தருமார்த்தகாமமோக்ஷத்திலடைவிக்க — மேதகைப - மேலான —பல கோடிசாத்திரங்கள் - அளவில்லாத(வேத)சாத்திரங்களை—அவர்க்காக- அவ்வாத்மாக்களுக்காக —வேதாவிதித்தான் - பிரமாவானவருண்டாக்கினார். எ- று. (இ-ம்) சங்கற்பவடிவமாயுள்ள சீவகோடிகள், தங்கள்சங்கற்பங்களைநீக்கி யாத்மஸ்வரூபமடையும்பொருட்டுவேதாகமங்களைவிதித்ததென்பதாம்.. (சயு)

(அ-கை.) சங்கற்பமேசநநமாமெனல். (கவி) விரிஞ்சனுருவாமனத்தாலிச்சிருட்டியிற்சிருட்டிமேவிநின்றும், புரிந்தலருமலரெல்லாம் வசந்தகாலத்திலுற்பூப்பதாக்கும், பிரிந்தசுரர்நரர்முதலோர்தத்தஞ் சங்கற்பத்தாற் பிறவியுற்றார், தெரிந்தவ்வயசங்கற்பமறிற்பிறவார்நெய்மாண்டதீபம்போல.................................. *

(இ-ள்.) விரிஞ்சனுருவாமனத்தால்- அயனுருவமானமனத்தினால்—இச்சிருட்டியினின்றும் - இப்பஞ்சபூதசிருஷ்டியிலிருந்தும்— சிருட்டிமேவி-பௌதிகசிருஷ்டியுண்டாநிற்றல்—புரிந்தலருமலரெல்லாம் - கட்டவிழ்ந்துமலராநின்றபுட்பங்களனைத்தும்— வசந்தகாலத்தினால்-வசந்தகாலத்தில்—பூப்பதொக்கும் - மலர்கின்றதையொத்திருக்கும்—பிரிந்தசுரர்-வேறுபாடாகியதேவர்கள்—நரர்முதலோர் - மானிடர்முதலாகியயாவரும்—தத்தஞ்சங்கற்பத்தால் - தங்கடங்கள்சங்கற்பத்தினால்—பிறவியுற்றார் - சநநத்தையடைந்தார்கள்—தெரிந்து- (இப்படி)யுணர்ந்து—அவ்வயசங்கற்பமறில் - அச்சங்கற்பநசிக்கில்—நெய்மாண்டதீபம்போல- நெய்யில்லாதவிளக்கைப்போல—பிறவார் - சநநமடையார்கள். எ-று. (இ-ம்) சங்கற்பநாசமேசநநமரணநாசமென்பதாம்.. (சக)

(அ-கை.) சகமுமித்தையென்றுரைத்தல். (கவி) வானநிகராமனைத்துங்கற்பனைமாத்திரம்வாளாவளராநிற்கு, மானசகநனவுதனிற்கனவுபோ லிராகவனேயறிதியன்றே, யீனமுறப்பிறப்பில்லை பிறப்பில்லையெவ்விடத்துமொன்றுமென்றும், ஞானபரமார்த்தத்தாலிவையெல்லாம்பொய்யாகநண்ணுமன்றே............................ *

(இ-ள்) வானநிகராமனைத்தும் - ஆகாயத்தையொத்தசகலமும் — கற்பனைமாத்திரம்- சங்கற்பமாத்திரத்தில்—வாளாவளராநிற்கும் - விருதாவாகவளரும்—ஆனசகம்- (இப்படி)புண்டாகியவுலகமானது - நனவுதனிற்கனவுபோல் - சாக்கிரத்தி(லுண்டாகுஞ்) சொற்பனத்தைப்போல—இராவகனேயறிதி - ஸ்ரீராமாநீயறிந்துகொள்வாய்—எவ்விடத்தும்- எந்தவிடங்களிலேயும்—என்றும் - எப்பொழுதும்—ஈனமுறப்பிறப்பில்லை- ஈனமாகச்செனித்ததுமில்லை—இறப்பில்லை- மரித்ததுமில்லை—ஒன்றுஞ்ஞானபரமார்த்தத்தால்- ஏகமானபரமார்த்தஞானத்தினால்—இவையெலாம்பொய்யாகநண்ணும் - இவையாவுமித்தையாகச்சாரும். எ-று. (இ-ம்) பிரமசங்கற்பத்திலுண்டாயிருக்கின்றசகலமும், அப்பிரமதிருஷ்டியி லில்லையென்பதாம் .... (சஉ)

(அ-கை) சம்சாரமித்தையெனல். (கவி) வெங்காதற்பெரும்பாம்புநெளியுற்றகுடும்பபரம்வெறும்பொய்யென்றே, யிங்காசையறநீக்கியெல்லையிலாப்பரமபதத்திருந்துவாழ்வாய், சிங்காரக்கந்தற்பநகரிருந்தென்சிதைவுற்றென்றீதோநன்றோ, பங்கானமனைமக்கள்வாழ்ந்தாலென்கெட்டாலென்பாசமாயை................................ *

(இ-ள்.) வெங்காதற்பெரும்பாம்பு-ஆசையென்னுமகாசர்ப்பமானது—நெளியுற்றும்-நெளிக்கின்றயுற்றுகிய— குடும்பபரம் - சம்சாரபாரமானது—வெறும்பொய்யென்று - முழுதுமசத்தியமென்று—ஆசையறநீக்கி - (சம்சார) பாசத்தைமுழுதுங்கெடுத்து— எல்லையிலாப்பரமபதத்து - அளவற்றபிரமபதத்தில்— இருந்துவாழ்வாய் - ஸ்ரீராமாநீநிலைபெற்றுவாழக்கடவாய்—சிங்காரக்கந்தர்பநகர் - அழகாகத்தோற்றுகின்றகந்தருவநகரமானது — இருந்தென்- இருந்தென்ன—சிதைவுற்றென்- நாசமடைந்தென்ன—தீதோநன்றோ-(அதனு)னன்மையோ தீமையோ—பங்கான - வேறுபாடாகிய—பாசமாயை-பாசமாயையான—மனைமக்கள்-மனைவி புத்திரர்கள்—வாழ்ந்தாலென்-வாழ்ந்ததினாலென்ன—கெட்டாலென்-கெட்டதினாலென்ன. எ-று.

(அ-கை.) தனதுசங்கற்பமே துன்பமாமெனல். (கவி) தாரதனமிகுமென்னிற்றளையாகுமப்பாசந்தளைத்துக்கொண்டா, லாரதனையறுத்தகலும்விரகுடையாரறிவில்லாராசைவிஞ்சிக், கூரிதையாமப்போகத் துழன்றுழக்குங்கொடுந்துயரைக் குறித்தபோதே, தீரதையாமறிஞர்க்கு விரத்தியுளதாய்ச்சித்தந்தெளியுமன்றே............ *

(இ-ள்.) தாரதனம் - மனைவியிடத்தும்பொருளினிடத்தும்—மிகுமென்னில் - (பாசமி)குமாகில்—தளையாகும்-விலங்காகும்—அப்பாசந்தளைத்துக்கொண்டால்- அவ்வாசையைக்கட்டிக்கொண்டால்—ஆரதனையறுத்தகலும்- ஆரதைக்கெடுத்துநீக்குகின்ற—விரகுடையார்- உபாயமுடையவர்கள்—அறிவில்லார் - அஞ்ஞானிகள்—ஆசைவிஞ்சி - இச்சைமிகுந்து— கூரிதையாமப்போகத்து - மிகுதியானயத்தப்போகத்தில்—உழன்றுழக்கும் - சுழன்றுகலக்குகின்ற—

கொடுந்துயரை - கொடியதுன்பத்தை—குறித்தபோது - நினைத்தபோது—நிரசையாமறிஞர்க்கு- நிராசையுள்ளஞானிகளுக்கு—விரத்தியுளதாய் - நிராசையுள்ளதாய்— சித்தந்தெளியும் - மனமானது தெளிவையடையும். எ-று. (இ-உ-க-ம்) மித்தையாகியசம்சாரத்தைச் சத்தாகப்பார்த்து வருந்துமூடர்களைப் பார்த்தாவதுதான் றெளியவேண்டுமென்பதாம் ....(௬௪).

(அ-கை.) தத்துவத்திற்சகத்திருக்கின்ற தன்மையைக்கூறி அத்தத்துவ முணர்ந்தமகான்களிலக்கணங்கூறல். (கவி.) ஆனதிறத்தாற்குடும்பபாரவியாபாரத்தி லணுகும் போது, போனபொருட்கிரங்காமற் பொருந்துபொருண்மாத்திரமே புசித்துவாழ் வாய், தீனமுறவருபொருளைச் சிந்தியார்வந்தபொருட்டுதென்றெண்ணுர், ஞானபராமோர்க்குச் சுபாவமாங்குணமிதுவே நளினக்கண்ணுய் .... *

(இ-ள்.) ஆனதிறத்தால் - (இப்படி)யானதன்மையினுல்—குடும்பபாரம் - சம்சாரபாரமாகிய—வியாபாரத்திலணுகும்போதில்- தொழிலினெருங்குங்காலத்தில்—போனபொருட்கு- நீங்கினபொருளுக்கு—இரங்காமல் - துன்பப்படாமல்—பொருந்துபொருண்மாத்திரம்- வந்தடைந்தபொருளைமாத்திரம்—புசித்துவாழ்வாய் - அனுபவித்து(சீவன்முத்தனுக)வாழக்கடவாய்—தீனமுற(இப்போ)தில்லாமையாக—வருபொருளைச்சிந்தியார் - (இனி) வருகின்றபொருள்களை நினையார்கள் — வந்தபொருட்டுதென்றெண்ணுர் - வந்தபொருளைக்குற்றமாகநினையார்—ஞானபராமோர்க்கு - பூரணஞானத்தையுடையவர்களுக்கு—நளினக்கண்ணுய்-தாமரைக்கண்ணனே—இதும்வேசுபாவமாங்குணம் - இதுவேயியல்பானகுணம். எ-று ....(௬௫)

(அ-கை.) சத்துக்களிலக்கணங்கூறி யனுபவமுண்டாகுஞ்சாதனங்கூறல். (கவி) கண்டனவெல்லாம்பொய்யென் றுள்ளத்திலனைத்தினும்வெங்காதனீத்த, பண்டிதராமுழுதுணர்ந்த பெரியோரையீராறுபாசமாயை, யுண்டிலையென்பவற்றிடையின்சுத்தமாம்பதம்புந்தியூன்றப்பற்றி, விண்டவுடற்குட்புறம்பா முலகைநீபற்றுதலும்விடலும்வேண்டா .... *

(இ-ள்.) கண்டனவெல்லாம் - காணப்பட்டவனைத்தும் — பொய்யென்று - மித்தையேயென்று—உள்ளத்தில் - மனதில் — அனைத்திலும் - சகலவிஷயங்களிலும் — வெங்காதனீத்த- வெம்மையானவாசையைநீக்கிய—பண்டிதராய்- பண்டிதரான—முழுதுணர்ந்த-சர்வமுந்தெரிந்த—பெரியோரை - சத்துக்களை—பாசமாயை - பாசமாயையானது—ஈராது- வாதிக்கமாட்டாது—உண்டிலையென்பவற்றிடையின் - சத்தசத்தென்றுசொல்லப்பட்டவவ்விரண்டின்மத்தியில்—சுத்தமாம்பதம் - பரிசுத்தமானபரமபதத்தில்—புந்தியூன்றப்பற்றி - அறிவைத்திடமாகவூற்றி—விண்டவுடற்கு - வேறானசரீரத்துக்கு— உட்புறம்பாமுலகை - உள்ளும்புறம்புமான சகத்தை—நீ- ஸ்ரீராமா நீ—பற்றுதலும் - பிடித்தலும்—விடலும்வேண்டா-விடுத்தலும்வேண்டாம். எ-று ....(௬௬)

(அ-கை.) இராகத்துவேஷநீக்கத்தின்பலன்கூறல். (கவி) எக்கருமத்திலுமிச்சையநிச்சையறநின் றுணர்வையெய்தினோர்கேக, யக்கருமங்களிலறிவுபற்றுதாமரையிலைசேரப்புப்போலத், தொக்கபொறிவிடயநலஞ் சுவையறநின்மனமாரத்தோன்றில்வீரா, தக்கவுணர்வுணர்ந்தோனுய்ப் பவக்கடல்கள்கடந்தன்றேசநநந்தீர்ந்தாய் .... *

(இ-ள்.) எக்கருமத்திலும் - எந்தத்தொழில்களிலும்—இச்சையநிச்சையறநின்று- இராகத்துவேஷமில்லாமலிருந்து—உணர்வையெய்தினோர்க்கு- ஆத்மஞானத்தையடைந்தவர்களுக்கு—அக்கருமங்களில் - அத்தொழில்களில்—தாமரையிலைசேரப்புப்போல்- தாமரையிலையிற்சேர்ந்திருக்கின்றசலத்தைப்போல—அறிவுபற்று-அறிவானதுபற்றமாட்டாது—தொக்கபொறிவிடய - தேகவித்திரியவிஷயங்களின் — நலஞ்சுவையற - நன்மையானவிரசத்தைவிடும்படி—வீரா - இராமா—நின்மனம் - உனதுமனம்—ஆரத்தோன்றில் - பொருந்தவுண்டானல்—தக்கவுணர்வுணர்ந்தோனுய் - அறியத்தக்கவாத்மஞானத்தையறிந்தவனுய்— பவக்கடல்கள்கடந்து- சம்சாரசாகரங்களைக்கடந்து—அன்றேசநநந்தீர்ந்தாய் - அப்போதேபவத்தைநீங்கினுய். எ-று

(அ-கை.) வாசனையுள்ளமனத்தைக்கெடுக்கவேண்டுமெனல். (கவி) உச்சமுறுபதம்வேண்டிலனைத்துவாதனையிலுநின் றுள்ளந்தன்னை, நிச்சயமாமுணர்வாலே நீக்குவாய் மலரின்மணநீங்குமாபோற், றுச்சமுறுவாதனையாந்தரங்கநீர்பவக்கடலிற்றுளைவார்க்கெல்லா; மச்சமறநல்லறிவுமரக்கலமாய்க்கரையேற்றுமயலொன்றுண்டோ .... *

(இ-ள்.) உச்சமுறுபதம்வேண்டில் - மேலானபரமபதத்தைவிரும்பினுல்— அனைத்துவாதனையினின்று - சகலவாசனைகளிலுமிருந்த—உள்ளந்தன்னை - மனதை—நிச்சயமாமுணர்வால்- மெய்யாகியவாத்மஞானத்தினுல்—மலரின்மணம்-புட்பத்தினின்றும்வாசனை—நீங்குமாபோல்- நீங்குவதுபோல—நீக்குவாய் - போக்குவாய் — துச்சமுறுவாதனையாம் - ஈனமுள்ளவாசனை

யாதொ—ராகிநீர் - அல்லலைப்புடையசல(நிறைந்த) —பலகீட். சிதி - சமுத்ரநாதத்தில்—துயிலை வார்க்கெல்லாம் - அமிழுபவர்க்கெல்லாம்—அச்சமற - பயமின்றி— நல்லறிவுமரக்கலமாய்க் கரையேற்றும் - சுகபோதங்கப்பலாகிக்கரையேற்றுமே (யன்றி)—அயலொன் றுண்டோ- வே றொன்றுண்டாமோ. எ-று .... (சுஅ)

(அ-கை.) சகசநிஷ்டையறிவித்தல். (கவி) பராபரங்கண்டோரனைத்தும்பின்செல்வருலகி யல்புபற்றார்நீங்கார், சுராலயநந்தனவனத்தும் பற்றார்கள்சூனியத்துந் துயரமெய்தார், விராவுநிபதியுந்தள்ளார்வெய்யவன்போலநுசரிப்பர்மேன்மைசான்றோர், இராகவனேயி வ்வாறுநடத்தியெனவசிட்டமுனியியம்பலோடும் .... ✻

(இ-ள்.) பராபரங்கண்டோர் - ஆத்மஞானப்ரத்யக்ஷமானவர்கள் — அனைத்தும் - சகலத் தையும்—பின்செல்வர் - அனுசரிப்பார்கள்—உலகியல்புபற்றார்நீங்கார் - சகத்தின்குணங்களை ப்பொருந்தார்களனீங்கார்கள்—சுராலயம் - சுவர்க்கத்திலுள்ள —நந்தனவனத்தும்- புட்பவனத் தையும்—பற்றார்கள் - இச்சிக்கார்கள்—சூனியத்தும் - சூனியமானவிடத்திலும்—துயரமெய் தார் - துன்பமடையார்கள்—வெய்யவன்போல் - சூரியனைப்போல—விராவுநியதியுந்தள்ளார்- சொல்லாநின்றநியதியையுந்தள்ளமாட்டார்கள்—மேன்மைசான்றோர் - மேன்மையானசத்து க்கள்—அநுசரிப்பர் - (சகலத்தையு) மனுசரிப்பார்கள்—இராகவனே - ஸ்ரீராமா—இவ்வாறு- இந்தப்ரகாரம்—நடத்தியென - நடப்பாயென்று — வசிட்டமுனியியம்பலோடும் - வசிஷ்ட முனிசொன்னவளவில். எ-று. (இ-ஞ-க-ம்) திருக்குதிருஷ்டியினுந் திரிஸ்யதிருஷ்டியைக்கெடு க்கிற் சிற்சுபாவமாய் விளங்குவனென்பதாம் .... (சுகூ)

(அ-கை.) அனுபவத்தில்மகிழ்தல். (கவி) பரத்துவகேளிவ்வாறுபரமமுனிபரமபத ம்பகரக்கேட்டுத், திரத்துவமாநிறைந்தான்போற்சிராமனமலமாய்த்தீர்ந்துசித்தந், தரத்துவமையில்லாதமெய்ஞ்ஞானநல்லமுதாற்றதும்பித்தண்ணென், றுரத்துவள ர்சந்திரன்போனிறைவுற்றான்வசிட்டனுமீண்டுரைப்பதானான் .... ✻

(இ-ள்.) பரத்துவகேள் - பரத்துவாசரேகேளென்று—(வான்மீகர்சொல்லுவார்) இவ் வாறு - இந்தப்ரகாரம்—பரமமுனி - மேலானவசிஷ்டமுனியானவர் — பரமபதம்பகரக்கே ட்டு - பிரமபதத்தைச்சொல்லக்கேட்டு—திரத்துவமாநிறைந்தான்போல் - திரமாகப்பூரணமா னவனைப்போல—சிராமனமலமாய்-ஸ்ரீராமர்களங்கமற்றவராய்—சித்தந்தீர்ந்து-மனதுநீங்கி— தரத்துவமையில்லாத - வலிமையிற்சமானமில்லாத—மெய்ஞ்ஞானநல்லமுதாற்றதும்பி- தத் துவஞானமென்னுநல்லவமிர்தத்தினானிறைந்து—தண்ணென்று - குளிர்ச்சியாய் — உரத்து வளர்சந்திரன்போல் - திரமுற்றுவளராநின்றபூர்ணசந்திரனைப்போல—நிறைவுற்றான்-பூரணத் தையடைந்தான் — வசிட்டனுமீண்டுரைப்பதானான் - வசிஷ்டமுனிதிரும்பவுஞ்சொல்லத் தொடங்கினர். எ-று...... .... (௭0)

(அ-கை.) சகஞ்சங்கற்பவடிவமாமென்பதைவற்புறுத்துநிமித்தஞ் சிருஷ்டிகளிலோவ் வொன்றுக்குநியமமின்றெனல். (கவி) ஒருகாலமரன்படைப்ப னொருகாலமயன்படை ப்பனுலகமெல்லா, மொருகாலமரிபடைப்ப னொருகாலமுனிவர்படைப்புள்ளதாகு, மொ ருகாலம்புயத்துதிப்ப னொருகால்வாரியினுதிப்பனுயர்ந்தவேதா, வொருகாலண்டத்துதி ப்பனொருகால்விண்ணகத்திலேயுதிப்பனன்றே .... ✻

(இ-ள்.) உலகமெல்லாம் - சகங்களனைத்தையும் — ஒருகாலமரன்படைப்பன் - ஒருகாலத் தில்சிவன்சிருஷ்டிப்பார்—ஒருகாலமயன்படைப்பன் - ஒருகாலத்திற்பிரமன்சிருஷ்டிப்பார்— ஒருகாலமரிபடைப்பன் - ஒருகாலத்தில்விஷ்ணுசிருஷ்டிப்பார்—ஒருகாலமுனிவர்படைப்புள்ள தாகும்- ஒருகாலத்தின்முனிவர்சிருஷ்டிப்பார்கள்—உயர்ந்தவேதா- மேலானபிரமாவானவர்— ஒருகாலம்புயத்துதிப்பன் - ஒருகாலத்திற்றாமரையிற்பிறப்பார் — ஒருகால்வாரியினுதிப்பன்- ஒருகாலத்தின்சலத்திற்பிறப்பார்—ஒருகாலண்டத்துதிப்பன் - ஒருகாலத்திலண்டத்திற்பிறப்பார் —ஒருகால்விண்ணகத்திலேயுதிப்பன் - ஒருகாலத்திலாகாயத்திற்பிறப்பார். எ-று .... (௭க)

(அ-கை.) இ-து. (கவி) வன்மரங்களேநெருங்குமொருபடைப்பிலொருபடைப்பின்மனி தர்தான்னும்,பன்மலைகளேநெருங்குமொருபடைப்பிலொருபடைப்பிற்படர்மண்ணாகுங், கன்மயமாமொருபடைப்பிலொருபடைப்பிற்றசைமயமாய்க்காணலாகும், பொன்மய மாமொருபடைப்பிலிப்படியேபலவிதமாம்பூமிதானே..... .... ✻

(இ-ள்.) ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில் — வன்மரங்களேநெருங்கும் - வலிமையான தருக்களேநிறைந்திருக்கும் —ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில்—மனிதர்தானும் - மானிட ரேநிறைந்திருப்பர்—ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில—பன்மலைகளேநெருங்கும்-பலவரை களேநிறைந்திருக்கும்—ஒருபடைப்பில்- ஒருசிருஷ்டியில்— படர்மண்ணாகும் - மிகுந்தமண்

ளுகவே (நிறைந்) திருக்கும்— ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில் — கல்மயமாம் - கல்லுமய மாய் (நிறைந்) திருக்கும்—ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில்— தசைமயமாய்க்காணலாகும்- மாமிசமாய்ப்பார்க்கப்படும்—ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில்—பொன்மயமாம்- தங்கமய மாயிருக்கும்—பூமிதான் - பூமியானது—இப்படியேபலவிதமாம் - இவ்வண்ணநாநாவிதமா யிருக்கும். எ-று .... (ருஉ)

அ-கை. இ-து. (கவி) வான்முதலாமண்முதலா நீர்முதலா நீமுதலாமற்றைவாயு, தான்முதலாமிப்படியேசிருட்டிதொறு மோரொன்றுதலைமையாகும், யான்முத லோரயன்சிருட்டி சிலேடையாயுனக்குரைத்தேனிந்தவாற்றான், மேன்முதலா நிய மமிதற்கொன்றாகவிலது பலவிதமாய்த்தோன்றும் .... *

(இ-ள்.) வான்முதலாம் - ஆகாயமுதலாகும்—மண்முதலாம் - பிரிதிவிமுதலாகும்— நீர்முதலாம் - அப்புமுதலாகும்—தீமுதலாம் - அக்கினிமுதலாகும் — வாயுதான்முதலாம்- காற்றுமுதலாகும்— இப்படியே - இவ்வண்ணமே—சிருட்டிதொறும் - சிருஷ்டிகடோறும் — ஓரொன்றுதலைமையாகும் - ஒவ்வொன்றுமுதன்மையாகும்—யான்முதல் - நான்முதற்கண்— ஓரயன்சிருட்டி - ஒருபிரமசிருஷ்டியை—சிலேடையாய் - சுருக்கமாக — உனக்குரைத்தேன்- உனக்குச்சொன்னேன்—இந்தவாற்றால் - இத்தன்மையால்—மேன்முதலா நியமம் - முன்புநிக் குநியமமானது—இதற்கொன்றாகவிலது - இச்சிருஷ்டிக்கொருவிதமாகவில்லை—பலவிதமாய்த் தோன்றும் - நாநாவிதமாகத்தோற்றும். எ-று .... (ருங)

(அ-கை.) இ-து. (கவி) கிருதமுதலுகநாலுமீண்டுமீண்டுற்பவிக்குங் கிளர்த்துஞா லத், தொருபொருளும்வளைத்துவளைத்தநந்தமடங்குற்பவமாயுழலாதில்லை, யிருள் பெருகுமாமாயைவன்னனைக்கு முன்னிலையாமியாமிங்கோத, வருமறைதேர்தாரு கன்கதைகேட்டியிராமவெனவறைவதானான் .... *

(இ-ள்.) கிருதமுதலுகநாலும் - கிருதமுதலியநான்குயுகங்களும்— மீண்டுமீண்டுற்ப விக்கும் - திரும்பித்திரும்பிப்பிறந்துவரும்—கிளர்த்துஞாலத்து - சொல்லப்பட்டசகத்தின்கண் —ஒருபொருளும் - ஒருவஸ்துவாவது—வளைத்துவளைத்து - வளைந்துவளைந்து— அநந்தமட ங்கு - அநேகந்தரம்—உற்பவமாயுழலாதில்லை - பிறந்துசுழலாததில்லை— இருள்பெருகுமாமா யை - அந்தகாரமிகுந்தமஹாமாயையினது—வன்னனைக்கு - வர்ணிப்புக்கு—முன்னிலையாம்- முன்னிலையான—அருமறைதேர் - அரியவேதங்களையாராய்ந்தறிந்த—தாருகன்கதை- தாருக முனிவன்கதையை—யாமிங்கோத - நாமிவ்விடத்திற்சொல்ல—இராமகேட்டியென - ஸ்ரீராமா நீகேட்கக்கடவாயென்று — அறைவதானான் - வசிஷ்டமுனிசொல்லத்தொடங்கினார். எ-று. (இ-ச-க-ம்) சிருஷ்டிக்குஞ் சிருஷ்டிப்பவருக்குஞ் சிருஷ்டிக்கப்பட்டவைகளுக்கும் பிரமசத் தியி னியமப்படியேயன்றியோர்வரன்முறையானநியமமின்றென்பதாம் ... . (ருச)

(அ-கை.) இவ்வனுபவத்துக்குத்திருஷ்டாந்தங்கூறவேண்டிமலையின் சிறப்புகூறல். வேறு. (கவி) இந்தப்புவனத்தூடேயெழிலார்மலரின்பொழில்வாய், மந்தக்குளிர் கால்கமழுமகததேசந்தன்னிற், கந்தக்கதலிகடம்புகன்னிகாரஞ்செறிந்து, சிந்தைக் கினிதாகியவோர்சிறப்பாமலையினிடத்தே .... *

(இ-ள்.) இந்தப்புவனத்தூடு - இந்தப்பூமிக்குள்—எழிலார்மலரின்பொழில்வாய்- அழகு நிறைந்தபுட்பவனத்தில் — மந்தக்குளிர்கால்கமழும் - குளிர்ந்ததென்றற்காற்றுபரிமளிக்கி ன்ற—மகததேசந்தன்னில் - மகததேசத்தில்—கந்தக்கதலி - (கருப்பூர) வாசனைபொருந்திய வாழைகளும்—கடம்பு - கடம்புவிருக்ஷங்களும் — கன்னிகாரம் - கோங்குவிருக்ஷங்களும்— செறிந்து - நெருங்கி (யிருக்கின்ற)—சிந்தைக்கினிதாகியவோர் - கருத்துக்கினிமையானவொ ரு—சிறப்பாமலையினிடத்து - சிறந்தவரையிலிடத்தில். எ-று .... (ருரு)

(அ-கை.) தாருகமுனிவன்பெருமையைக்கூறல். (கவி) பரலோகஞ்சேர்தவமேபண்ணிய யன்போலுயர்ந்த, சரலோமாவின்மைந்தன்றாருகப்பெயர்முனிவன், சுரலோகத்தின்குரு வின்றேன்றற்கசனையொப்பா, னரலோகத்தின்மேலானவைதீர்தவத்தாற்பெரியோன். *

(இ-ள்.) பரலோகஞ்சேர் - மோக்ஷவுலகத்தையடைவதற்கான—தவம்பண்ணி - தவத்தை ச்செய்து—அயன்போலுயர்ந்த - பிரமாவைப்போலுயர்வாகிய — சரலோமாவின்மைந்தன்- சரலோமாவென்னும்பெயரையுடையமுனிவனதுபுதல்வனாகிய—தாருகப்பெயர்முனிவன்-தா ருகனென்னுநாமத்தையுடையமுனிவன்—சுரலோகத்தின் - தேவலோகத்திலுள்ள— குருவின் றோன்றல் - பிரகஸ்பதிபகவானுடையகுழந்தையாகிய— கசனையொப்பான் -கசனுக்குச்சமான மானவன்—நரலோகத்தின்மேலான் - மானிடலோகத்தின்மேலானவன் — நவைதீர்தவத்தாற் பெரியன் - குற்றமற்றதவத்தினாற்பெரியவன். எ-று .... (ருசு)

(அ-கை.) பிதாபூரணமாதல். (கவி) தனையனொருவனோடுஞ்சரலோமாவாமுனிவ; னனைசகிரியின்வனத்திலநேகயுகஞ்சென்றதற்பின், புனையுங்கூடுகழிந்தபுட்போவதுபோற்போகி, வினைசெய்யுடலைவிட்டுவிண்ணோர்வடிவையெடுத்தான்.......................... *

(இ-ள்.) தனையனொருவனோடும் - ஒருபுத்திரனுடன் — சரலோமாவாமுனிவன்-சரலோமாவென்னுமுனியானவன் — அனைசகிரியின்வனத்தில் - அந்தமலையின்கண்ணுள்ளகானகத்தில் — அநேகயுகஞ்சென்றதற்பின் - பலயுகங்கழிந்தபின்பு — புனையுங்கூடுகழிந்து - செய்தகூண்டைவிட்டு — புட்போவதுபோல் - பறவைசெல்வதுபோல — வினைசெய்புடலைவிட்டுப்போகி- வினையியற்றுஞ்சரீரநீங்கிப்போய் — விண்ணோர்வடிவையெடுத்தான் - தேவரூபங்கொண்டான். எ-று.

(அ-கை) தாசூரன்விசனமடைதல்(கவி) தனியேயநந்தவனத்தேதாசூரப்பேர்முனிவ, னினியதாதையிறவுக்கிரங்கியுதகத்தியற்றும், புனிதமானபிரமபூசைமுழுதும்புரியான், கனியுநெஞ்சனன்றில்கதறுமாபோற்கதறி......................................*

(இ-ள்.) தனியேயநந்தவனத்து - தனியனாகவக்கானகத்தில் — தாசூரப்பேர்முனிவன்-தாசூரனென்னுநாமத்தையுடையமுனிவனானவன் — இனியதாதையிறவுக்கிரங்கி - இனிமையானபிதாவின்மரணத்துக்கழுது — உதகத்தியற்றும் - நீராற்செய்கின்ற — புனிதமானபிரம-பரிசுத்தமாகியபிராமணர் — பூசைமுழுதும்புரியான் - பூசைமுழுதுஞ்செய்யாமல் — கனியுநெஞ்சன் - இரங்கியமனதுடையவனாய் — அன்றில் - (புருடனைப்பிரிந்த) வன்றிற்பக்ஷியானது — கதறுமாபோற்கதறி - கதறுகின்றதுபோலக்கதறிக்கொண்டு. எ - று........................ (௫அ)

(அ-கை.) வனதேவதைதெளிவித்தல். (கவி) தந்தையன்னைபிரிவாற்சாலவெம்பித்தளர்ந்த, மைந்தன்றன்னையருளால்வனதேவதைகண்டருளி, முந்துருமனின்றுமுனிமாமகவாமுனிவா, சிந்தைதெளிந்தோய்தெளியாச் சிறியோனெனநொந்தயரேல்*

(இ-ள.) தந்தையன்னைபிரிவால்-மாதாபிதாக்களின்பிரிவினால் — சாலவெம்பித்தளர்ந்த-மிகவும்வெப்பத்தோடுந்தளர்வுற்ற — மைந்தன்றன்னை - புத்திரனாகியதாசூரனை — அருளால்-கிருபையினால் — வனதேவதைகண்டருளி- வனதேவதைபார்த்துகிருபைசெய்து — முந்துருமனின்று-ப்ரத்தியக்ஷமாகாமனின்று — முனிமாமகவாம்- மகாமுனியின்குமாரராகிய — முனிவா-முனியானவரே — சிந்தைதெளிந்தோய்-மனந்தெளிந்தவரே — தெளியாச்சிறியோனென-தெளிவில்லாதமூடர்களைப்போல — நொந்தயரேல்- துன்பமுற்றுத்தளர்ச்சியடையாதே. எ-று. (௫௯)

(அ-கை.) இ-து. (கவி) அனித்தமானகுடும்பத்தபத்தமுணர்கின்றிலையென், சனித்தபொழுதேமரித்தல்சற்றுந்தப்பாகண்டாய், பனித்தவிழியோடயர்வாய்பகலோனுதயஞ்செய்தா, லினித்தன்னிலையத்தமனத்தெய்தானென்பாருளரோ................*

(இ-ள்.) அனித்தமானகுடும்பத்து - அநித்தியமாகியசம்சாரத்தினுடைய — அபத்தமுணர்கின்றிலையென் - பொய்மைபநீயறியாததென்னகாரணம் — சனித்தபொழுதே - பிறந்தபொழுதே — மரித்தல்சற்றுந்தப்பாகண்டாய் - மரணமெவ்வளவுந்தப்பமாட்டாது — பனித்தவிழியோடயர்வாய் - கண்ணீர்சொரியவழுகின்றவனே — பகலோனுதயஞ்செய்தால் - சூரியனுதயமானால் — இனித்தன்னிலையத்தமனத்து- மேற்றனதுநிலையானவஸ்தமனத்தை — எய்தானென்பாருளரோ - அடையமாட்டானென்றுசொல்வாருமுண்டோ. எ-று. (இ-கு-கு-ம்) மாதாபிதாக்கள்பிரிவுக்காற்றாமல் விசனப்பட்டுதெளிவுற்றதென்பதாம்.................. (௬௰)

(அ-கை.) சாதனசதுஷ்டயமுதித்தல். (கவி) வாளாவயரேலென்றுமறைந்துதெய்வமுரைப்பக், கேளாவுணர்ந்துதளருங்கேதமொழித்துநிலையாய், நீளாரணத்தின்படியேநீரின்கடன்கண்முடித்து, மீளாநெறிசேர்தவத்தின் மிகவும்விருப்பமானான்...................*

(இ-ள்.) வாளாவயரேலென்று - வீணாகத்துன்பமடையாதேயென்று — மறைந்துதெய்வமுரைப்ப - மறைந்திருந்துவனதேவதைசொல்ல — கேளாவுணர்ந்து - கேட்டறிந்து — தளருங்கேதமொழித்து - சோருகின்றதுன்பத்தைக்கெடுத்து — நிலையாய் - ஸ்திரமாய் — நீளாரணத்தின்படியே — நீண்டவேதவசனத்தின்படியே — நீரின்கடன்கண்முடித்து - உதகபூருவமாய்ச்செய்யவேண்டியகிரியைகளைச்செய்து — மீளாநெறிசேர் - திரும்பாதமோக்ஷத்திற்சேர்கின்ற — தவத்தின்மிகவும்விருப்பமானான் - (தாசூரமுனி) தவசின்மிகவும்விருப்பமடைந்தார். எ - று.

(அ-கை.) ஏகாந்தஸ்தானம்விசாரித்தல். (கவி) தக்கபிரமகருமந்தன்னாற்றவமேசெய்வான், றுக்கசங்கற்பத்தாற்சுத்தாசாரமிகுந்தான், மக்கஞானமில்லான்விசுத்தமானபுவியிற், புக்கவிடங்களெல்லாம்புனிதமன்றென்றென்று.................*

(இ-ள்.) தக்கபிரமகருமந்தன்னால்- (தனக்) குரியவேதசம்பந்தமானகருமத்தினால் — தவமேசெய்வான்-(தாசூரனானவன்) தவத்தைச்செய்யும்பொருட்டு — துக்கசங்கற்பத்தால்-மிகு

னே, நீதரல்வேண்டும்புதல்வனையன்றி நின்னருளென்பொருட்டிலதேற், றீதறுமத
லையிலனெனுந்துன்பஞ்செந்தழன் மூழ்கியேதீர்ப்பேன் .... *

(இ-ள்.) காதலித்தவர்க்கு - இச்சித்தவர்களுக்கு—கருதியதளிக்கும் - எண்ணியதைக் கொடுக்கின்ற—கற்பகமனைய நீயிருப்ப - கற்பகவிருட்சத்தையொத்த நீயிருக்க—நாதனே- இரட்சகனே—நாதரில்லவர்போல - இரட்சகரில்லாதவர்களைப்போல — நான்மகற்கிரங்குதனலனே - யான்புத்திரனுக்குவிசனப்படுவது நன்மையோ—புதல்வனை - புத்திரனை—நீதரல்வேண்டும்- நீர்கொடுக்கவேண்டும்—அன்றி - (அப்படி) யல்லாமல்—நின்னருள்- உமதுகிருபை—என்பொருட்டிலதேல் - என்னிடத்தில்லாமற்போனால்—தீதறுமதலையிலனெனுந்துன்பம்-குற்றமற்றபுத்திரனில்லையென்னுந்துக்கத்தை—செந்தழல் - சிவந்தவக்கினியில்— மூழ்கியேதீர்ப்பேன் - ப்ரவேசித்துநீக்குவேன். எ-று. .... (௭௨)

(அ-கை.) வனதேவதைக்குப் புத்திரனையளித்தல். (கவி) என்னனுமுனிவனகைத்தொருமலரையீந்தொருமதியிலேயெளிதா, யன்னமேமகவைப்பெறுதியானீமுன்னருங்கனன்மூழ்குவேனென்று, வின்னலால்வலித்துமகவுவேண்டுதலாலினிதுநீயீன்றிடுமகவும், பின்னுறுவருத்தநெறியினன்ஞானம் பெறுமெனப்பேசினன்பெரியோன் .... *

(இ-ள்) என்னனும் - என்றுவனதேவதைசொல்லவும் — முனிவனகைத்து - தாசூரமுனி சிரித்து—ஒருமலரையீந்து - ஒருபூவைக்கொடுத்து—ஒருமதியில் - ஒருமாதத்தில்—எளிதாய்- இலேசாக—அன்னமே- அன்னம்போன்றவளே—மகவைப்பெறுதி- புத்திரனைப்பெறுவாய்—நீமுன்- நீமுன்பு — அருங்கனன்மூழ்குவேனென்று - அரியவக்கினியிற்ப்ரவேசிப்பேனென்று சொல்லிய—இன்னலால்வலித்து - துன்பத்தினால்வலிமையாக—மகவுவேண்டுதலால்-புத்திரனை வேண்டினபடியால்— இனிதுநீயீன்றிடுமகவும் - இனிமையாகநீபெற்றிடும்புத்திரனும்—பின்னுறு- பின்வரப்பட்ட—வருத்தநெறியினால் - வருத்தமானமார்க்கத்தினால்— ஞானம்பெறுமென- ஞானத்தையடைவானென்று — பெரியோன் - மகானுகியதாசூரமுனி — பேசினன்- சொன்னார், எ - று. .... (௭௩)

(அ-கை.) புத்திரனைவளர்த்தல். (கவி) கேட்டவண்மகவுகிடைத்ததேயென்றுகிளர்முகமதிநிலாக்குலாவ, மீட்டுமம்முனியைநோக்கிநின்னேவல் விரும்பியீண்டுறைகுவனென்ன, வாட்டமின்முனிவனியைந்திலன்விடுப்ப வந்தனளணங்குதன்னிடத்திற், சேட்டமாமகவையளித்தனள்கலையாற் செறிதருமதியெனவளர்த்தாள் .... *

(இ-ள்.) கேட்டவள் -கேட்டஅவ்வனதேவதையானவள் — மகவுகிடைத்ததேயென்று- புத்திரன்லபித்ததென்று—கிளர்முகமதி - ப்ரகாசிக்கின்றமுகமென்னுஞ்சந்திரன்— நிலாக்குலாவ - ஒளிவிளங்க—மீட்டுமம்முனியை- திரும்பவுமந்தமுனியை—நோக்கி- பார்த்து—நின்னேவல்விரும்பி - உமதுபணியையிச்சித்து— ஈண்டுறைகுவனென்ன - இவ்விடத்தில்வசிப்பேனென்றுசொல்ல —வாட்டமின்முனிவன் - வாட்டமில்லாததாசூரமுனியானவர்—இயைந்திலன் விடுப்ப - சம்மதிக்காமலனுப்ப—அணங்குதன்னிடத்தில் - தெய்வப்பெண்தனதிடத்தில்— வந்தனள் - வந்தாள்—சேட்டமாமகவை - உயர்வுள்ளபுத்திரனை— அளித்தனள் - பெற்றாள்—கலையாற்செறிதருமதியென - கிரணங்களினு னிறையப்பெற்ற சந்திரனைப்போல — வளர்த்தாள- வளர்த்தனள். எ - று. .... (௭௪)

(அ-கை.) புத்திரனோடுமுனியைத்தரிசித்தல்.(கவி) இருதுவேயாண்டேயெனுங்குறிகளினலிறந்தனவாறிரண்டாண்டு, திருமுனிபாதமகவொடுமடைந்து சென்னிதாழ்ந்தெதிருறநின்று, பெருமைகண்டருள்வாய்நீதரயானேபெற்றவிப்பெருங்குணக்குமர, னருமறைநூல்களனைத்தையுநானேயளித்திடவறிவினலறிந்தான் .... *

(இ-ள்.) இருது - இருதுவும்—ஆண்டெனும் - வருடமுமென்கின்ற—குறிகளினல்-குறிப்புகளினலும் — ஆறிரண்டாண்டு - பன்னிரண்டுவருடம் — இறந்தன - கழிந்தன—(பின்பு) திருமுனிபாதம் - அழகியமுனிவருடையபாதத்தை—மகவொடுமடைந்து-புத்திரனுடன்சேர்ந்து—சென்னிதாழ்ந்து - சிரசினல்வணங்கி—எதிருறநின்று - முன்னமேநின்று— பெருமைகண்டருள்வாய் - உயர்வையுணர்ந்தனுக்கிரகஞ்செய்கின்றசுவாமியே — நீதர - நீரனுக்கிரகஞ்செய்ய—யான்பெற்ற - நானீன்ற—இப்பெருங்குணக்குமரன்- இப்பெரிதானகுணத்தையுடையபுத்திரன்—அருமறைநூல்களனைத்தையும் - அரியவேதசாஸ்திரங்களியாவையும்— நானேயளித்திட - யானேயதிவிக்க— அறிவினலறிந்தான் - தனதறிவினற்றெரிந்துகொண்டான். எ-று.

(அ-கை.) புத்திரன்குருபணிபின்றறல். (கவி) கலையெலாநிறைந்தும் பிறப்பிலாஞானங்கண்டிலன்கடற்பவத்துயரா, லலைவுறுநின்றன்றனைபுணர்ஞான மளித்தியென்று

ணங்குணைசெய்ய, நிலைகொண்மாணுக்கனமக்கிவனுக்கி நீயகல்கெனவவளகன்று, டலைமைசேர்முனிவன்றாளிணைவிடாது சற்குணமதலையுநின்றான் ....*

(இ-ள்.) கலையெலாநிறைந்தும் - கலைக்கியானங்களியாவும்பூரணமாயறிந்தும்—பிறப்பிலாஞானங்கண்டிலன் - சனியாதவாத்மஞானத்தைத்தரிசித்திலன்— கடற்பவத்துயரால்-சமுத்திரத்தையொத்தசநநதுன்பத்தினால்—அலைவுறநின்றான் - சலனமடைகின்றான் —தன்னுடைஞானம்- தன்னையறிகின்றஞானத்தை— அளித்தியென்று - அனுக்கிரகஞ்செய்வாயென்று—அணங்குணைசெய்ய - வனதேவதைசொல்ல—இவன் - இவனை— நமக்கு - எமக்கு — நிலைகொள்மாணுக்கனுக்கி- நிலைத்தசீஷனாக்கி—நீயகல்கென - நீநீங்குவாயென்றுமுனிசொல்ல — அவள்கன்றாள்- அந்தவனதேவதையானவள்(புத்திரனைவிட்டு)நீங்கினாள்—தலைமைசேர்முனிவன் - பெருமைபொருந்தியமுனிவன்—தாளிணைவிடாது - உபயபாதங்களைவிடாமல் — சற்குணமதலையுநின்றான் - சற்குணச்சீஷனுமிருந்தான். எ-று. (இ-அ-க-ம்) தமதுகிருபையினால் வனதேவதைக்குப்புத்திரனைத்தந்து சீஷனாக்கிக்கொண்டதென்பதாம் .... (௭௬)

(அ-கை.) ஞானத்தையுபதேசித்ததெனல். (கவி) வருந்திமெய்ஞ்ஞானம்பெறத்தருமகவைமாதவனருளினன்மெல்லத், திருந்தியகதைகளளவைகளிதிகாசத்திலேசெப்பியதிறங்கள், பெருந்துணைமறையின்முடிவிலேதுணிந்துபேசியபழம்பொருண்மற்றும், பொருந்தியநெறிகளநேகமாய்விரித்துபூரணபோதமேபுகன்றான் ...... • *

(இ-ள்•) வருந்தி - வருந்தப்பட்டு—மெய்ஞ்ஞானம் - தத்துவஞானத்தை—பெறத்தருமகவை - பெறுதற்குரியசீஷனை—மாதவனருளினல்- தாசூரமுனிவனதுகிருபையினால்—மெல்ல- மெதுவாக—திருந்தியகதைகள் - திருத்தமானகதைகளும்—அளவைகள் - ப்ரமாணங்களும்—இதிகாசத்தில் - இதிகாசங்களில்—செப்பியதிறங்கள் - சொல்லியகாரணங்களும்—பெருந்துணை-மிகவுஞ்சகாயமான—மறையின்முடிவில் - வேதாந்தத்தில்—துணிந்துபேசிய- தெளிந்துசொல்லிய—பழம்பொருள் - மகாவக்கியார்த்தங்களும்— மற்றும்பொருந்தியநெறிகள் - இன்னுஞ்சேர்ந்திருக்கின்றமார்க்கங்களு(மாகியவிவைகளை)—அநேகமாய்விரித்து - பலவாகவிரித்து—பூரணபோதமேபுகன்றான் - பூரணஞானத்தையேசொன்னார். எ-று ....(௭௭)

(அ-கை.) அந்தஞானோபதேசத்தைப்போதித்தல். (கவி) வானநீராழ்கவதுநெறியாகவானிலேமறைந்துபோயொருநா, ளானவேழ்முனிவர்பதவிநின்றணுகியனையதாசூரன்வாழ்கடம்பின், றானமேமேவியிருட்பொழுதிருந்து தாபதன்றனையனுக்குரைத்த, ஞானநற்பொருள்கள்கேட்டனமதனை நாமுனக்குள்ளவாறுரைப்பாம் ..... *

(இ-ள்.) வானநீராழ்க - கங்காஸ்நானஞ்செய்ய—அதுநெறியாக-அந்தமார்க்கமாக—வானிலேமறைந்துபோய் - ஆகாயத்திலதிரிஸ்யமாகச்சென்று—ஒருநாள் - ஒருதினம் — ஆனவேழ்முனிவர்- ஆகியசத்தரிஷிகளுடைய—பதவிநின்றணுகி- இடத்தினின்றுநெருங்கி—அனையதாசூரன்வாழ்கடம்பின் - அக்குணங்களையுடையதாசூரன் வாழ்கின்றகடம்பவிருக்ஷத்தின்—தானமேவி - இடத்திற்சேர்ந்து—இருட்பொழுதிருந்து - இராக்காலத்திலிருந்து—தாபதன்றனையனுக்குரைத்த- முனிவர்சீஷனுக்கனுக்கிரகித்த—ஞானநற்பொருள்கள்கேட்டனம்-ஞானார்த்தங்களைக்கேட்டோம்—அதனை - அந்தவருத்தத்தை—நாமுனக்குள்ளவாறுரைப்பாம்- யாமுனக்குள்ளப்ரகாரஞ்சொல்லுவோம். எ-று. (இ-உ-க-ம்) தாசூரமுனிசீடனுக்குப் போதித்தநெறியையிராமருக்குப் போதிக்கத்தொடங்கினரென்பதாம் .... (௭௮)

(அ-கை.) பிரமசங்கற்பத்தை யரசனாகவுருவகப்படுத்தல். (கவி) பிறப்பிலாப்பிரமமிதுவெனவறுதி பிறப்பதோர்கதையிதுகேளாய், சிறப்பதோரரசன்வீரமும்புகழுஞ் சிறந்தவன்றெளிஞனும்பெயரோ, னிறப்புறுமூலகபாலராயுள்ளா ரவனுடையேவலைமுடிமே, னிறப்புறுமணிபோற்றாங்குவரெவர்க்கு நிலைபெறநிறுத்தொணாநெடியோன் .... *

(இ-ள்.) பிறப்பிலாப்பிரமம்-சநநமில்லாதபிரமஸ்வரூபமானது— இதுவெனவறுதிபிறப்பது- ஈதென்றுநிச்சயமுண்டாவதாகிய—இதுவோர்கதை - இந்தவொருகதையை—கேளாய்- நீகேட்பாய்—சிறப்பதோரரசன் - சிறந்தவனாகியவொருமஹாராசன்—வீரமும்புகழும்- வீரத்திலுங்கீர்த்தியிலும்—சிறந்தவன் - சிரேஷ்டமானவன் — தெளிஞனும்பெயரோன் - தெளிஞனென்னுநாமத்தையுடையவன் — இறப்புறுமூலகபாலராயுள்ளார் - நாசமடைகின்றசகராக்ஷகராயுள்ளவர்கள்—அவனுடையேவலை - அந்தத்தெளிஞருடையபணியை—முடிமேல் - சிரசின்மேல்—நிறப்புறுமணிபோல் - ப்ரகாசிக்கின்றவிரத்தினத்தைப்போல—தாங்குவர்- தரிப்பார்கள்—எவர்க்கும் - யாவர்க்கும் — நிலைபெறநிறுத்தொணாநெடியோன் - திரமாகநிறுத்தற்கரியவிடாபகன். எ - று .... (௭௯)

(அ-கை.) அரசனது வலியைக்கூறல். (கவி) சாகசமொன்றும்விரும்புவோன்பலவாய்
ச்சாலவும்வியப்புறுதொழிலோன், சோகமுமகிழ்வுந்தருவதாய்முயலுந்தொழில்க
ளின்றொகுதியையெண்ணின், மாகடலலைகளெண்ணினுந்துலையா வாட்படைவாயுவ
ன்னிகளி, லேகமுமிவனையடர்வுறுதாகு மிருகையால்விண்ணையென்செயலாம் ... *

(இ-ள்.) சாகசமொன்றும்விரும்புவோன் - மெய்மாத்திரம்விரும்புகின்றவன் — பலவாய் - நாநாவிதமாகிய — சாலவும்வியப்புறுதொழிலோன் - மிகவுமதிசயத்தைவிளைக்குஞ்செயலையுடையவன் — சோகமுமகிழ்வுந்தருவதாய் - துன்பவின்பமுங்கொடுக்கப்பட்டதாய் — முயலும் - முயற்சிசெய்கின்ற — தொழில்களின்றொகுதியை - தொழில்களின்கூட்டத்தை — எண்ணின் - அளவுசெய்யில் — மாகடலலைகள் - பெரியசமுத்திரத்தினலைகளை — எண்ணினுந்துலையா - எண்ணினுமெண்ணக்கூடாது — வாட்படை - விளக்கமுள்ளவாயுதங்களும் — வாயு - காற்றுகளும் — வன்னிகளில் - அக்கினிகளு(மாகியவிவைகளில்) — ஏகமுமிவனையடர்வுறுதாகும் - ஒன்றுமித்தெவிருனைநெருங்கக்கூடாததாம் — இருகையால்விண்ணையென்செயலாம் - இருகரங்களாலாகாயத்தையென்செய்யலாம். எ - று ... (௮௰)

(அ-கை.) அரசன்முயற்சியின்பெருமையறிவித்தல். (கவி) வரம்பறவிரிந்துலீலையா
ற்புரியுமட்டறுமுயற்சிகளனைத்துந், திரம்பெறுதேவர்மூவராலெனினுஞ்சிறிதுபிற்
செல்லவுமரிதாம், பரம்பியவிவனுக்குடன்முதலெல்லாம்பரிப்பவர்மூவருண்டனைய,
ருரம்பயிலுலகையடர்ந்துநிற்பவர்களுத்தமன்மத்திமனதமன் ... *

(இ-ள்.) வரம்பறவிரிந்து - அளவின்றிப்பரவி — லீலையாற்புரியும் — விளையாட்டினாற்செய்கின்ற — மட்டறுமுயற்சிகளனைத்தும் - அளவற்றயெத்தனங்களியாவும் — திரம்பெறுதேவர் - நிலைபெற்றிருக்கின்றதேவர்களாகிய — மூவராலெனினும் - மும்மூர்த்திகளாலேயும் — சிறிதுபிற்செல்லவுமரிதாம் - எவ்வளவுப்பின்றொடர்வதற்குக்கூடாதாம் — பரம்பியவிவனுக்குடலமாய் - மகத்தாயிருக்கின்றவிவனுக்குத்தேகங்களாய் — எல்லாம்பரிப்பவர் - யாவையுஞ்சுமக்கத்தக்கவர்கள் — மூவருண்டு - மூன்றுபேர்களுண்டு — அனையர் - அவர்கள் — உரம்பயிலுலகை - வலிமையுள்ளசகத்தை — அடர்ந்துநிற்பவர்கள் - அதிக்கிரமித்திருக்கின்றவர்கள் — உத்தமன்மத்திமனதமன் - உத்தமன்மத்திமனதமனென்றுஞ்சொல்லப்பட்டபெயரையுடையவர்களாம். எ-று (௮௧)

(அ-கை.) அரசன்சநநபூமியையும்அவனாலமைக்கப்பட்டநகரச்சிறப்பையுங்கூறல். (கவி)
முடிவிலாவிசும்பிற்றோன்றியாங்குறைவோன்மூவகையுடலுடைமுதல்வ, னெடியவவ்வி
சும்பிலவன்றருநகரநீண்டவீதிகள்பதினான்கு, மொடிவறுபகுதிமூன்றினெழிலாருபவன
ம்வனங்கள்செய்குன்றங், கொடிநிகர்முத்தமாலையேழ்வாவிகுளிர்கொதிப்புளவிருதீபம் *

(இ-ள்.) முடிவிலாவிசும்பில் - ஞானாகாயத்தில் — தோன்றியாங்குறைவோன் - உதித்தவவ்விடத்திலேயிருப்பவன் — மூவகையுடலுடைமுதல்வன் - மூன்றுவிதமாகியசரீரத்தையுடையதலைவன் — நெடியவவ்விசும்பில் - நீண்டவத்தஞானாகாயத்தில் — அவன்றருநகரம் - அவனுண்டாக்கியபட்டணத்துக்கு — நீண்டவீதிகள்பதினான்காம் - நீளமானதெருவுகள்பதினான்காம் — ஒடிவறுபகுதிமூன்றினால் - கெடாதமூன்றுவகைகளோடும் — எழிலாருபவனம் - அழகுள்ளசிங்காரவனங்கள் — வனங்கள் - (ஊர்சூழ்ந்த)சோலைகள் — செய்குன்றம் - லீலாபருப்பதங்கள் — கொடிநிகர்முத்தமாலை - கொடியையொத்தமுத்துமாலைகள் — ஏழ்வாவி - ஏழுதடாகங்கள் — குளிர்கொதிப்புள - குளிர்ச்சியுஞ்சூடுமுள்ள — இருதீபம் - இரண்டுவிளக்காம். எ-று ... (௮௨)

(அ-கை.) அரசனதுலீலாக்கிரகங்களின்சிறப்புகூறல். (கவி) என்பனநிறைந்தவிந்நகரத்
திலிவன்றருபாவறையினங்கண், முன்புறுகீழ்மேனடுவெனும்பதங்கண் முழுதினுமுழல்
வுறவிதித்த, வன்புறுதூண்கண்மூன்றுளவெலும்புமரங்களாற்செறிந்தனபுண்ணீர், மென்
படர்தோலானெய்த்தினிதானவிரிமயிர்க்கற்றையான்மேய்ந்த ... *

(இ-ள்.) என்பனநிறைந்த - என்றுசொன்னவைகணிறைந்திருக்கின்ற — இந்நகரத்தில் - இந்தப்பட்டணத்தில் — இவன்றருபாவறையினங்கள் - இவனுண்டாக்கப்பட்டகூடாரங்கள் — முன்புறுகீழ்மேனடுவெனும் - முன்புள்ளகீழ்மேனடுவென்கின்ற — பதங்கண்முழுதினும் - சொர்க்கமத்தியபாதாளமென்னுமிடங்களெல்லாம் — உழல்வுறவிதித்த - சுழலும்படியுண்டாக்கின — (அவற்றிற்கு) வன்புறுதூண்கண்மூன்றுள - வலிமைபொருந்திய தூணகண்மூன்றிருக்கின்ற — எலும்புமரங்களால் - அஸ்திமரங்களினால் — செறிந்தன - நெருங்கியிருக்கின்றன — புண்ணீர் - உதிரத்தினாலும் — மென்படர்தோலால் - மிருதுவாகப்படர்ந்திருக்கின்றசருமத்தினாலும் — நெய்த்து - முடைந்து — இனிதான - இனிமையாகிய — விரிமயிர்க்கற்றையான்மேய்ந்த - விரிந்தமயிர்க்கற்றையினாற்பரப்பப்பட்டன. எ-று ... (௮௩)

(அ-கூ.) அம்மையின்காவலாகியபேய்களைக்கூறல். (கலி) மந்திரமொருநூற்றுப்பசாலக மொன்பான்மருவினவைம்பொறியென்னுஞ், சுந்தரவிளக்கால்விளங்குவவிரண்டு தோளெனுந்தோற்றமுமுடைய, வந்தமில்பரமபாவனைக்கஞ்சுமகங்கரப்பேய்கள்காத்தளிப்ப, சந்ததமிலாதமாயையாலந்தத்தரணியின்சமைத்தபாவறைகள் ...... *

(இ-ள்.) சந்ததமிலாதமாயையால்-எப்பொழுதுமில்லாதமாயையினால்—அந்தத்தரணியின்-அந்தத்தலத்திலிருந்தவரசன்—சமைத்தபாவறைகள்-உண்டாக்கினபாவறைகளானவை—மந்திரமொருநூற்று-பதம்நூற்றுப்பத்துடனின்ற—சாலகமொன்பான் - பலகணிவாயிலொன்பதாம்—மருவினவைம்பொறியென்னும் - பொருந்தியபஞ்சேந்திரியங்களென்னும்—சுந்தரவிளக்கால்-அழகியதீபங்களினால்—விளங்குவ-பிரகாசிக்கின்றன—இரண்டுதோளெனும்-இரண்டுபுயங்களென்னும்—தோற்றமுமுடைய-தோற்றங்களையுமுடையன—அந்தமில்பரமபாவனைக் கஞ்சும்-முடிவில்லாதபிரமபாவனைக்குப்பயப்படுகின்ற—அகங்கரப்பேய்கள்-அகங்காரமென்னும்பேய்களானவை—காத்தளிப்ப - காத்திரட்சிக்கப்பட்டன. எ-று ...... (அ௪)

(அ-கை.) அக்காவலரோடுமம்மையில்விளையாடல். (கலி) அசைதருமினியபாவறைத் திரளிலகங்கரப்பேய்களோடுலாவிக், குசைதருவிநோத விவிதமாவியற்றிக் கூடுறைபுள்ளெனவுறைந்து, விசையினலவற்றைவிட்டகன்றயலேமேல்வருபாவறைவிதித்து, நசையுறமேவிப்பூதவாவேசநண்ணினர்போலவனடிக்கும் ...... *

(இ-ள்.) அசைதரும்- சஞ்சரியாநின்ற—இனியபாவறைத்திரளில் - இனிதாகியபாவறைக்கூட்டத்தில் — அகங்கரப்பேய்களோடுலாவி - அகம்பாவமென்னும்பசாசுடன்விளையாடி—குசைதருவிநோதம் - சந்தோஷத்தைத்தருகின்றவிளையாட்டுகளை —விவிதமாவியற்றி- நாநாவிதமாகநடத்தி—கூடுறைபுள்ளென - கூண்டில்வாசஞ்செய்யும்பறவையைப்போல— உறைந்து-இருந்து—விசையினலவற்றை-வேகத்தினலந்தப்பாவறையை—விட்டகன்று - விட்டுநீங்கி—அயல்-பக்கத்தில் — மேல்வருபாவறைவிதித்து - மேல்வருகின்றபாவறையையுண்டாக்கி—நசையுறமேவி-ஆசையுடன்போய்—பூதவாவேசநண்ணினர்போல்-பேயாவேசத்தையடைந்தவர்களைப்போல—அவனடிக்கும்-அவ்வரசனுமவனடனஞ்செய்வான். எ-று ...... (அரு)

(அ-கை.) புதுவீட்டிற்குடிபுகுந்துலாவுதல். (கலி) இவற்றைவிட்டவற்றையெய்துவமெ ன்றேயெண்ணுறவப்படியெய்தி, மவற்றினின்றிறப்போமென்றெணுநினைவாலப்படியிற ந்துபோஞ்சித்தங், கவற்றியாலலையப்பிறந்திறந்துழலுங் ககனமே யிவற்றினுக்கிடமா, மவற்றினையெய்திமீளவுந்தோன்றுமடர்திரை நீரிலேவரல்போல் ...... *

(இ-ள்.) இவற்றைவிட்டு- இப்பாவறையைவிட்டு—அவற்றையெய்துவமென்று - அதையடைவோமென்று—எண்ணுற-நினைக்க—அப்படியெய்தும்-அவ்வண்ணமடையும்—அவற்றினின்று-அதிலிருந்து— இறப்போமென்றெணும்- மரணமடைவோமென்றெண்ணுகின்ற—நினைவால்-எண்ணத்தினால்—அப்படியிறந்துபோம் - அப்படியேமரணத்தையடையும் — சித்தம்-மனமானது—கவற்றியாலலைய-வருத்தத்தினாற்சுழல—பிறந்திறந்துழலும்-சனித்துமரித்துச்சுழலும்—ககனமேயிவற்றினுக்கிடமாம்-ஆகாசமேயிவைகளுக்குஸ்தானமாம்— அவற்றினையெய்தி-மரணத்தையடைந்து—அடர்திரைநீரிலேவரல்போல்- நெருங்கியவலைசலத்திலுண்டாவதுபோல—மீளவுந்தோன்றும்-திரும்பவுமுண்டாகும். எ-று ...... (அசா)

(அ-கை.) இவ்விளையாட்டினாற்சுகதுக்கமடைதல். (கலி) மேனிமூன்றுடையோன்சிற ந்தகந்தற்பவித்தவூரையதற்புரத்தில், றனினிருந்துதொலைவறமேன்மேற்றழைப்பு றுகாரியவசனு, மீனமாமொருகானன்மையாமொருகாலென்செய்வோமென்றிமொரு காலு, மானமாமொருகால்மயக்குறுந்தெளியும்வருந்துறுமகிழ்வுறும்பல்கால் ...... *

(இ-ள்.) மேனிமூன்றுடையோன் - மூன்றுசரீரங்களையுடையவன்—சிறந்தகந்தற்பவூரையை-சிறப்புபொருந்தியகந்தர்வநகரத்தையொத்த —விதித்ததற்புரத்தில்-உண்டாக்கினதனது நகரத்தில்—தானினிருந்து-நாளினிமையாகவிருந்து—தொலைவற - நீங்காமல்—மேன்மேற் றழைப்புறு-மேலும்மேலுந்தழைக்கின்ற—காரியவசனாய் - தொழில்வயப்பட்டவனாய்—ஒருகா லீனமாம் - ஒருதரங்குறைவானவன்—ஒருகானன்மையாம் - ஒருதரநன்மையானவன்— ஒருகால்-ஒருதரம்—என்செய்வோமென்றிடும் - என்னசெய்வோமென்பான்— ஒருகால் - ஒருதரம்— மானமாம் - அபிமானியாவன்—பல்கால் - அநேகந்தரம்—மயக்குறும் - மயங்குவான்—தெளியும் - தெளிவான்—வருந்துறும் - துன்பப்படுவான்—மகிழ்வுறும் - சந்தோஷிப்பன். எ-று. (இ-அ-க-ம்.) வேடகடம்வந்து யதைக்கெடுப்பது மறிவொன்றைவிட்டொன்றிற் பாய்வதுமாகிய விவற்றாற்சுகதுக்கபுதவியவருத்தமடைந்தனனென்பதாம் ...... (அஎ)

(அ-கை.) தெளிஞனென்பவனுருவத்தையறிவிக்கவேண்டுமெனல். (கவி) தளர்ந்தனனென்னுந்தடித்தனனென்னுந்தாழ்ந்தனனுயர்ந்தனனென்னும், வளர்ந்தனனென்னுங்குறைந்தனனென்னுமாருதமோதுறுகடல்போ, லுளந்தனாலந்தமன்னவன்சுழல்வதுரைப்பதெனென்றலுமைந்தன், கிளர்ந்ததாதையைநீதெளிஞனென்றுரைத்தகீர்த்தியோனுரெனக்கேட்டான்.... .... *

(இ-ள்.) தளர்ந்தனனென்னும் - யான்றளர்ச்சியானேனென்பன்—தடித்தனனென்னும் - பருத்தேனென்பன்—தாழ்ந்தனன்-தாழ்ந்தேனென்பன்—உயர்ந்தனனென்னும் - உயர்ந்தனனென்பன்—வளர்ந்தனனென்னும்-வளர்ந்தனனென்பன்—குறைந்தனனென்னும்-குறைந்தேனென்பன்—மாருதமோதுறுகடல்போல்- பெருங்காற்றடிக்கின்றசமுத்திரத்தைப்போல—உளந்தனால் - மனதினால்—அந்தமன்னவன் - அவ்வரசன் — சுழல்வது - சுழல்கின்றதை—உரைப்பதெனென்றலும் - சொல்லுவதெவ்வாறென்றுமுனிசொன்னமாத்திரத்தில் — மைந்தன் - புத்திரனானவன் — கிளர்ந்ததாதையை - சொல்லியபிதாவை — நீதெளிஞனென்றுரைத்த - நீர்தெளிஞனென்றுசொல்லிய — கீர்த்தியோனுரெனக்கேட்டான் - கீர்த்தியையுடையவனொன்றுகேட்டான். எ-று. கிளர்த்தவென்பது - கிளர்ந்தவென மெலிந்துநின்றது .... (௮௮)

(அ-கை.) மாயாவிலாசத்தையோர்கதையாகச்சொல்லியதெனல். (கவி) வண்மையாலந்தமன்னனையுரைத்தால்வரும்பிறப்பிறப்பெனும்பொய்யி, னுண்மைநன்குணர்தியென்று தாசூரனுத்தமமைந்தனுக்குரைப்பா, னெண்மயமாகிப்பொய்யெனத்தோன்றியிடமுற விரிமுயற்சியதாய்க், கண்மயலானபிறவியினிலையைக்கட்டுரையாகமுன்னுரைத்தோம்.*

(இ-ள்.) வண்மையால் - உண்மையினால்—அந்தமன்னனையுரைத்தால்- அவ்வரசனைச்சொன்னால்—வரும்பிறப்பிறப்பெனும் - வருகின்றசநநமரணமென்னும் — பொய்யின் - அசத்தியத்தின்—உண்மைநன்குணர்தியென்று - உண்மையைநன்றாய்த்தெரிந்துகொள்வாயென்று—தாசூரன் - தாசூரமுனிவன்—உத்தமமைந்தனுக்குரைப்பான்-தன்மையாகியசீஷனுக்குச்சொல்லுவார் —எண்மயமாகி- சங்கற்பமயமாய்—பொய்யெனத்தோன்றி-அசத்தியமாயுண்டாய்—இடமுறவிரிமுயற்சியதாய் - விஸ்தாரமாகவிரிந்தமுயற்சியையுடையதாய் — கண்மயலான- அறிவின்மயக்கமான—பிறவியினிலையை - சநநத்தின்றன்மையை — கட்டுரையாக - உறுதிமொழியாக—முன்னுரைத்தோம் - முன்சொன்னோம். எ-று .... (௮௯)

(அ-கை.) பிரமசங்கற்பமேயரசனெனல். (கவி) தற்பரவிசும்பினுதித்தசங்கற்பஞ் சாற்றியதெளிஞனுமன்னன், பற்பலகாலுந்தோன்றியுமறையும் பரம்பியவுலகதன் வடிவா, மற்பசங்கற்பமுளதெனினுலகுண்டதுவிலதெனினுலகிலதா, முற்படுமூவர் முதலியதேவர்மொய்த்தமெய்யவயவமதற்கே .... *

(இ-ள்.) தற்பரவிசும்பில் - பரமாகாயத்தில்— உதித்தசங்கற்பம் - உதயமாகியசங்கற்பமே— சாற்றியதெளிஞனுமன்னன்-முன்சொன்னதெளிஞனென்னுமரசன்— பற்பலகாலும்-பலபலகாலமும்—தோன்றியும் - தானேயுண்டாகியும்—மறையும் - தானேமறையும்— பரம்பியவுலகு - விரிவாகியசகமானது —அதன்வடிவாம் - அதன்ஸ்வரூபமாம்— அற்பசங்கற்பம்-அற்பமாகியசங்கற்பமானது—உளதெனினுலகுண்டு- உண்டானாற்சகமுண்டு—அதுவிலதெனில்-அஃதில்லையானால்—உலகிலதாம் - சகமில்லையாம்—முற்படுமூவர்முதலியதேவர்-முதன்மையாகியமும்மூர்த்திகண்முதலானதேவர்க்களும்—அதற்கு - அச்சங்கற்பத்துக்கு — மொய்த்த மெய்யவயவம் - நெருங்கியசரீரவுறுப்புக(ளாவர்.) எ-று ....(௯௰)

(அ-கை.) சங்கற்பத்தினாலுண்டானமூவுலகச்சிறப்புரைத்தல். (கவி) மேயதன்புத்திப்பாச்சன்மாத்திரத்தால்விரிஞ்சனும்பாவனைமேவி, யாயசங்கற்பவடிவிலாவிண்ணிலமைத்ததுமுப்புவிநகர, நாயகரீரேழாகிடுமீரேழ் ஞாலமேனகருறுதெருக்க, ளேஞாலங்கள்செறிபொழிற்றிரள்கள்சொல்லியவனமுபவனமே .... *

(இ-ள்.) மேயதன் - பொருந்தியவாத்மாவினது—புத்திப்பாச்சன்மாத்திரத்தால் - பிரதிபாமாத்திரத்தினால்—விரிஞ்சனும்பாவனைமேவியாய - பிரமாவென்னும்பாவனையைப்பொருந்தினதாகிய—சங்கற்பம் - சங்கற்பமானது—வடிவிலாவிண்ணில் - ஞானாகாயத்தில்—அமைத்தது முப்புவிநகரம் - உண்டாக்கினதுமூன்றுலகமென்னும்பட்டணமாம்— நாயகர் - உலகபாலரென்பது—ஈரேழாகிடும் - பதினான்குமனுக்கள்பெயராம்—மேனகருறுதெருக்கள்-மேலாகியபட்டணத்திலுள்ளபதினான்குவீதிகளென்றது—ஈரேழ்ஞாலம் - பதினான்குலகம்—தூயஞாலங்கள்- பரிசுத்தமானபூமிகள்—செறிபொழிற்றிரள்கள்-நெருங்கியபூந்தோட்டங்களும்—சொல்லியவனம்- சொல்லப்பட்டவூர்சூழ்ந்தசோலைகளும்—உபவனம்- நந்தனவனங்களுமாம். எ-று.

(அ-கை.) இ-ரு. (கவி) மேருமந்தரமேமுதலவந்நகரின் மேவியவிநோதவெற்பினமாஞ், சூரியன்திங்கள்காந்திமுலைசையாச் சுடர்களாநித்திலமாலை, நீருயர்நதியின்நிரல்களாவிநிகழ்த்திய மேவமுழுதுடலவைதாம், பேரியல்வடவை கமலமாய்ப்பூத்த பெருங்கடலேழுமேபெரியோய் ... ... *

(இ-ள்.) மேருமந்தரமேமுதல - மகமேருமந்தரமுதலியகிரிகள் — பெரியோய்-பெருமையையுடையவனே — அந்நகரின்மேவிய-அந்தநகரத்திற்பொருந்திய — விநோதவெற்பினமாம்-லீலாபருப்பதக்கூட்டங்களாய் — சூரியன்திங்கள்-சூரியசந்திரர்கள் — காந்திமுலைசையா-ஒடலிழுதிற்சலியாத — சுடர்களாம் - தீபங்களென்பதாய — நீருயர்நதியின்நிரல்கள் - சலதிறைந்தநதிக்கூட்டங்களே — நித்திலமாலையாம்- முத்துமாலையென்பதாம் — பேரியல்வடவை-பெரிதாகியகுணத்தையுடையவடவாமுகாக்கினியை — கமலமாய்ப்பூத்த - தாமரையாககமலர்ந்திருக்கின்ற — பெருங்கடலேழும் - பெரியவேழுகடலையுமே — நிகழ்த்தியவாவி-சொல்லியதடாகங்கள் — எழெனுமவைதாம் - ஏழெனப்பட்டவைகளென்பதாம். எ-று ... ... (௬௨)

(அ-கை) உடலைப்பாவறையெனல். (கவி) இனையமாநகராஞ்சகத்திடைமுன்னமியம்புசங்கற்பமன்னவனால், வினையினால்வந்தவுடல்கள்பாவறையா மேற்பதத்திமையவரென்றும், வலையகீழ்ப்பதத்தினுரகரோவென்றுமனிதரோநடுப்பதத்தென்றுந், துனைதருவாதவெந்திரவிசையாற் சுழல்வனதசைச்சுவரகங்கள் ... ... *

(இ-ள்) இனையமாநகராம்- இப்படிப்பட்டமகாநகரமாகிய — சகத்திடை-சகத்தினிடத்தில் — முன்னமியம்புசங்கற்பமன்னவனால் - முன்சொல்லியசங்கற்பவரசனால் — வினையினால்வந்த-வினைகளினால்வந்த — உடல்கள் - சரீரங்கள் — பாவறையாம் - பாவறைகளென்பதாம் — இமையவர்- தேவர்களையே — மேற்பதமென்றும் — மேலோகபதமென்றும் — உரகரோ - உரகர்களையே — வலையகீழ்ப்பதத்தினென்றும் - அலங்காரமாகியபாதாளலோகத்திலென்றும் — மனிதரோ-மனிதர்களையே — நடுப்பதத்தென்றும் - மத்தியலோகத்திலென்றும் — துனைதருவாதவெந்திரவிசையால் - அச்சந்தரும்உயிரென்னுஞ்சூத்திரவேகத்தினால் — தசைச்சுவரகங்கள்-மாமிசச்சுவராலகிரகங்கள் — சுழல்வன - சுழன்றிருப்பன. எ-று ... ... (௬௩)

(அ-கை.) தேகோகமென்பவனையகங்காரப்பேயெனல். (கவி) பல்வகைதானேயியங்குறுமுடலாம்பாவறைதோறுமவ்வேந்த, னல்வழியுணர்வைநோக்குறநடுங்குநலமிலாவகங்காமென்னும், வல்லவிப்பேய்கள்பொய்களாயிருந்தும் வந்துமெய்போலெழு மவற்றோ, டொல்வதாம்விநோதம்புரிதருங்கணத்திலுண்டுமாமில்லையுமாகும் ... ... *

(இ-ள்.) பல்வகைதானே -பலவிதமாகவே — இயங்குறுமுடலாம்- உலாவியசரீரமாகிய — பாவறைதோறும் - கிரகங்கடோறும் — அவ்வேந்தன் - அவ்வரசன் — நலவழியுணர்வை - நன்மார்க்கமுள்ளவாத்மஞானத்தை — நோக்குறநடுங்கும் - பார்க்கநடுங்குகின்ற — நலமிலாவகங்காமென்னும் - நன்மையில்லாதவகங்காரமென்கின்ற — வல்லவிப்பேய்கள்- வன்மையானவிந்தப்பசாசங்கள் — பொய்களாயிருந்தும் - மித்தைகளாயிருந்தும் — வந்துமெய்போலெழும்-வந்துண்மையைப்போலத்தோன்றும் — அவற்றோடு- அதனோடு — ஒல்வதாம்-குவளாநின்ற — விநோதம்புரிதரும் - விளையாட்டைச்செய்யும் — கணத்தில் - க்ஷணத்தில் — உண்டுமாம்- உள்ளதாகியும் — இல்லையுமாகும் - இல்லாததாகியுமிருக்கும். எ-று ... ... (௬௪)

(அ-கை.) சநநமரணத்திற்சுழன்றுவருந்துவதைச்சுகதுக்கமடைதலெனல். (கவி) காயமென்றுரைத்தபாவறைதோறுங்கடலிடையலைகள்போற்றோன்றி, மாயுமேவியற்றுமனைகளின்விடாமல்வருமிவனியற்றியவெல்லா, மேயதோர்கணத்தில் வீண்களாய்நசிக்கும் வீணிலேதிரிதருமிவன்று, ளாயதன்சங்கற்பத்தினாலிருக்குமவ்வளவருந்துயருழக்கும் ... *

(இ-ள்.) காயமென்றுரைத்த - சரீரமென்றுசொல்லிய — பாவறைதோறும்-கிரகங்கடோறும் — கடலிடையலைகள்போல் - சமுத்திரத்தின் றிரைகளைப்போல — தோன்றிமாயும்- உண்டாயழியும் — மேவியற்றுமனைகளின் - மேற்செப்பப்பட்டகிரகங்களிலும் — விடாமல்வரும்-இடைவிடாமல்வருகின்ற — இவன் - இந்தச்சங்கற்பராசனானவன் — இயற்றியவெல்லாம் - சங்கற்பித்த சகலமும் — மேயதோர்கணத்தில் - பொருந்தியவொருக்ஷணத்தில் — வீண்களாய்நசிக்கும்-வீணாகநாசத்தையடையும் — வீணிலேதிரிதரும் - வீணாகச்சஞ்சரிக்கப்பட்ட — இவன்றான்-இந்தசங்கற்பவரசன் — ஆயதன்சங்கற்பத்தினால் - உண்டாகியதன்சங்கற்பத்தினால — இருக்கும் - உண்டாயிருக்கும் — அவ்வளவு - அந்தமட்டும் — அருந்துயருழக்கும் - அரியதுன்பத்தினுழைக்கும். எ-று ... ... (௬௫)

(அ-கை.) மூன்றுசரீரத்தைமுக்குணமாகக்கூறல். (கவி) இறைபுமோர்சுகமற் றிங்கு மொன்றுளுண்டென்பந்தாபாவறையாமே, நிறைசகமடந்ருந்தாவிலதென்மேற்பதத்தில்

டிலக்கணத்திறந்து, குறைவறுகதிர்முன்னிருளெனப்போகுங் குறித்தசிற்றின்பமுற்றமி
ழு, முறைவுறுமிவனுக்குடல்கண்மூன்றுளவாமுத்தமமத்திமமதமம் … ………………… ✻

(இ-ள்.) இறையுமோர்சுகமற்று - சற்றுமொருசுகமில்லாமல்— இரங்குவோன் - விசனப்படுபவன்—தானுண்டென்பது - தானுண்டென்பதாகிய—ஓர்பாவனையால் - ஒருபாவனையினுல்—நிறைசகமியற்றும் - மிகுந்தவுலகத்தையுண்டாக்கும்—தானிலதென்றேநினைத்திடில்- தானில்லையென்றுகருதினுல்—அக்கணத்திறந்து - அந்தக்ஷணத்திற் (சக) மிறந்து — குறைவறுகதிர்முன் - குறைவில்லாதசூரியன்முன்பு—இருளென - அந்தகாரத்தைப்போல — போகும்-நீங்கும்—குறித்தசிற்றின்பமுற்றமிழும் - கருதியவிஷயவின்பத்தையடைந்தழுந்திய — உறைவுறுமிவனுக்கு - வாசஞ்செய்கின்றவிச்சங்கற்பபுருடனுக்கு—உடல்கள் - சரீரங்கள் — உத்தமமத்திமமதமம் - உத்தமமத்திமமதமமென்று—மூன்றுளவாம் - மூன்றுள்ளனவாகும். எ-று. (இ-அ-க-ம்) பிரமமயமாய்விளங்கியவறிவானது பிரமமென்றறியவந்தவவசரத்திற் சங்கற்பமாய்த்தனக்காதாரமான பிரமத்தைமறந்துஅதின் ப்ரதிவிம்பமாயிருக்கின்ற சீவேஸ்வரசகங்களாயதனையானெனதென்றபிமானித்துஅவ்வகம்பாவத்தோடு விஷயவுன்மூகனுய்ச் சநநமரணமென்னுந்துக்கசாகரத்திலழுந்தினதென்பதாம்……………………………………… ……… (௯௬)

(அ-கை.) சங்கற்பவிலக்கணங்களைக்கூறியவற்றை நிவிர்த்திக்கும்பொருட்டதற்குபபலமாயிருக்கின்ற முக்குணங்களை நிவிர்த்திக்கவேண்டி யவற்றின் குணங்களைக் கூறல். (கவி)
முக்குணந்தானேமூன்றுடலாகிமூலமாமூன்றுலகிற்கு, மக்குணந்தன்னிற் றமங்கொள்
சங்கற்பமாவதுபகுதியின்செயலாற், றுக்கமாய்வருந்திப்பாதலப்புழுவாந்தூயசத்துவங்
கொள்சங்கற்ப, மிக்கநற்றருமஞானவீடுளதாய்வேந்தர்வேந்தெனமிகவிளங்கும்……… ✻

(இ-ள்.) முக்குணந்தானே-மூன்றுகுணங்களே—மூன்றுடலாகி- மூன்றுசரீரமாய்—மூன்றுலகிற்குமூலமாம் - மூவுலகங்களுக்குங்காரணமாம் — அக்குணந்தன்னில் - அந்தக்குணங்களில்—தமங்கொள்சங்கற்பமாவது- தாமதகுணத்தையுடையசங்கற்பமென்பது—பகுதியின்செயலால் - ப்ரகிருதியின்செயலினுல் — துக்கமாய்வருந்தி - துன்பத்தோடன்வருத்தமுற்று—பாதலப்புழுவாம்-பாதாளக்கிருமிகளாம்—தூயசத்துவங்கொள்-பரிசுத்தமாகியசாத்துவிதகுணத்தையுடைய—சங்கற்பம்-சங்கற்பமென்பது — மிக்கநற்றருமம்-மிகுந்தநல்லதருமங்களையும்—ஞானம் -(மிகுந்த) ஞானங்களையுமுடைய—வீடுளதாய் - மோக்ஷத்தையுடையதாய்—வேந்தர்வேந்தென-சக்ரவர்த்தியைப்போல—மிகவிளங்கும்-மிகவும்ப்ரகாசிக்கும். எ-று (௯௭)

(அ-கை) முக்குணங்கண்முதலியயாவையுநீக்கி முத்தியையடையுமுயற்சியையறிவித்தல்.
(கவி) இராசதகுணசங்கற்பமிவ்வுலகி லியல்புறுகுடும்பியாயியங்கும், விராவியவிந்தமூ
ன்றையும்விட்டுமெய்ம்மையாய்த்தானிலதென்னி, னிராகுலமாகவனையசங்கற்பநிமலமா
ம்பரபதமடையுந்துராசையாம்பார்வையனைத்தையுநீக்கித்துகண்மனமனத்திறுணிறுத்தி

(இ-ள்.) இராசதகுணசங்கற்பப்- இராசதகுணத்தையுடையசங்கற்பமென்பது—இவ்வுலகில்- இச்சகத்தில்— இயல்புறுகுடும்பியாய் - இயல்பாகியசம்சாரத்தையுடையதாய்—இயங்கும்- விளங்கும் — விராவியவிந்தமூன்றையும்விட்டு - சேர்ந்திருக்கின்றவிம்மூன்றையுநீங்கி—மெய்ம்மையாய் - உண்மையாக—தானிலதென்னில் - சங்கற்பமில்லையாயின்— நிராகுலமாக-வருத்தமில்லாதவனுக— அனையசங்கற்பம் - அச்சங்கற்பமானது — நிமலமாம்பரபதமடையும்-நின்மலமாகியபரமபதத்தையடையும் — துராசையாம்பார்வை - துராசையாகியதிருஷ்டிகள்—அனைத்தையுநீக்கி - யாவையும்விடுத்து—துகண்மனம் - குற்றமுள்ளமனதை— மனத்திறுணிறுத்தி - (சுத்தமான)மனதிறுணிலைப்படுத்தி. எ-று.. ….. ……….. ……… ………….. (௯௮)

(அ-கை.) சங்கற்பநாசமேமுத்தியாமெனல். (கவி) உள்ளினும்புறத்துமெழுந்த
சங்கற்பமொருப்படவொருக்கிடநினைவா, யெள்ளருந்தவங்கள்கற்பகோடிகணியிய
ற்றினும்பாதலம்பூமி, தள்ளருந்துறக்கமேவினுமுனக்குச் சாற்றுசங்கற்பமாய்வல்
லாற், றெள்ளியபரமபதத்தினைமேவத்தியக்கமினுபாயம்வேறில்லை……………. . … ✻

(இ-ள்.) உள்ளினும்புறத்தும்-அகத்திலும்புறத்திலும்—எழுந்தசங்கற்பம்-உதயமானசங்கற்பத்தை—ஒருப்படவொருக்கிடநினைவாய்-ஒருமிக்கக்கெடுக்கச்சிந்திப்பாய்—எள்ளருந்தவங்கள்-நிந்திக்கப்படாததபசுகள்—கற்பகோடிகணியியற்றினும்- கற்பகோடிகாலநீசெய்தாலும்—பாதலம்-பாதாளத்தையும்—பூமி-பூமியையும்—தள்ளருந்துறக்கமேவினும் - நீக்கற்கரியசுவர்க்கத்தைப்பொருந்தினுலும்—உனக்குச்சாற்று - உனக்குச்சொல்லிய— சங்கற்பமாய்வல்லால்-சங்கற்பநாசத்தையன்றி — தெள்ளியபரமபதத்தினைமேவ - தெளிவானபரமபதத்தையடைய—தியக்கமில்-கலக்கமின்றிய—உபாயம்வேறில்லை-யுத்தியானதுவேறில்லையாம்.எ-று.௯௯

(அ-கை.) பிரமானுபவத்திற்சங்கற்பநீங்கினவதிசயமுரைத்தல். (கவி) துயர்களும்விகாரங்களுமிலாப்பிரமசுகஞ்செய்சங்கற்பநாசத்தை, முயலுநிநனிசங்கற்பமாங்கயிற்றின்முடிவறுபாவனையெல்லா, மியல்புறுங்கோவையாலெழுந்தக்கயிற்றினையெளிதினிலறுத்தான், மயல்கொள்பாவனைகளெங்ஙனேதுளாய்மடியுமோவறிதிலமைந்தா……………… *

(இ-ள்.) துயர்களும்-துன்பங்களும்—விகாரங்களுமிலா- வேற்றுமைகளுமில்லாத—பிரமசுகஞ்செய்-பிரமாநந்தத்தைச்செய்கின்ற— சங்கற்பநாசத்தைமுயலுதி-சங்கற்பத்தைக்கெடுக்கமுயற்சிப்பாய் —நனிசங்கற்பமாங்கயிற்றில்- மிகவுஞ்சங்கற்பமானபாசத்தில்—முடிவறுபாவனையெல்லாம்-அளவற்றபாவனைகளனைத்தும்—இயல்புறுங்கோவையாலெழும் - இயல்புள்ளசரமாயுண்டாகும்—அந்தக்கயிற்றினை-அப்பாசத்தை—எளிதினிலறுத்தால்-இலகுவாயறுத்துவிட்டால் — மயல்கொள்பாவனைகள் - மயக்கத்தையுடையபாவனைகள் — எங்ஙனேதுளாய்மடியுமோ-எப்படிதுகளாய்நசிக்குமோ—மைந்தாவறிதிலம் - புத்திரனேதெரிகிலேம். எ-று……(௱)

(அ-கை.) திருக்குதிருஷ்டியாற்றிரிஸ்யஸ்வரூபங்களாயிருக்கின்றசங்கற்பத்தைக்கெடுத்துச்சுகத்திலிருப்பாயெனல். (கவி) துனிசெய்சங்கற்பமின்றிமுன்வந்து தோன்றியதொல்வழிநிற்பாய், பனிசெய்சங்கற்பமாண்டிடிலறிவு பார்வைகளனைத்தினும்பற்றுத், தனியுயர்பிரமபதமடைந்தகிலவிகற்பமாந்தனையெலாந்தள்ளி, யினியனுயேகத்துவத்திலேசுழுத்தியிதயமுற்றின்பமேபெறுவாய்.. ………………………… *

(இ-ள்.) துனிசெய்சங்கற்பமின்றி - துன்பஞ்செய்கின்றசங்கற்பமில்லாமல்—முன்வந்துதோன்றிய - எதிரேவந்துதோற்றிய—தொழில்வழிநிற்பாய் - தொழிலின்மார்க்கத்திலிருப்பாய்—பனிசெய்சங்கற்பம் - நடுக்கஞ்செய்கின்றசங்கற்பமானது—மாண்டிடில் - இறக்குமாகில்—அறிவு - ஞானமானது—பார்வைகளனைத்தினும்பற்று - திரிஸ்யங்களனைத்திலும்பற்றமாட்டாது —தனியுயர்பிரமபதமடைந்து - ஒப்பற்றுயர்ந்திருக்கின்றபிரமபதத்தைச்சேர்ந்து—அகிலவிகற்பமாந்தனையெலாம் - சகவேறுபாடானவிகற்பங்களியாவையும்—தள்ளி - நீக்கி—இனியனாய் - இனிமையுடையவனாய் — சுழுத்தியிதயமுற்று - சுழுத்திமனத்தையடைந்து—ஏகத்துவத்தில் - அத்துவிதத்தில்—இன்பமேபெறுவாய் - பரமசுகத்தையேயடைவாய். எ-று. (இ-ம்) சங்கற்பமுதித்தவிடத்தொடுக்கித்தன்மயமாகநிற்கவேண்டுமென்பதாம் ……… … (௱௧)

(அ-கை.) சங்கற்பத்தைக்கெடுக்குநிமித்தம், அதினுற்பத்திநாசமியாதெனின். (கவி) என்னலுமுயர்சங்கற்பமேதென்னவெழுந்ததும்வளர்ந்ததுமாய்ந்து, சன்னமாகியதுமெங்ஙனமென்றுதவஞ்செய்தாசூரனைமைந்தன், பன்னியேகேட்பவதற்கவனுரைப்பான்பரமமாயுண்டெனல்வடிவாய்,மின்னியசமமாமறிவுகாண்பவற்றின்மேவுறவெழுதல்சங்கற்பம்

(இ-ள்.) என்னலும் - என்றுசொல்லவும்— உயர்சங்கற்பமேதென்ன - உயர்ந்தசங்கற்பமாவதேதென்றும்—எழுந்ததும் - உண்டானதும்—வளர்ந்ததும் - விருத்தியானதும்— மாய்ந்துசன்னமாகியதும் - வீய்ந்துதேய்ந்ததும்—எங்ஙனமென்று - எப்படியென்றும் — தவஞ்செய்தாசூரனை-தவத்தைச்செய்கின்றதாசூரமுனியை—மைந்தன் - சிஷ்யனவன்—பன்னியேகேட்ப - விபரமாய்க்கேட்க—அதற்கவனுரைப்பான் - அதற்கவர்சொல்லுவார் — பரமமாய்-மேலானதாகியும்— உண்டெனல்வடிவாய்-சத்தாசாமானியஸ்வரூபமாகியும்—மின்னியசமமாமறிவு-விளங்கியசமமானவாத்மஞானமானது—காண்பவற்றில் - திரிஸ்யத்தில்— மேவுறவெழுதல்சங்கற்பம் - பொருந்தவுண்டாதலேசங்கற்பமாம். எ-று …… ………………………… (௱௨)

(அ-கை.) சங்கற்பவுதயங்கூறல். (கவி) அற்பமாயெழுந்துதானுளதாகியடைவிலேபையப்பையப்பருத்துத், தற்பரமனமாந்தெளிவறமூடிச்சடத்துவந்திடத்திலுண்டாக, வுற்பவமுகில்போல்வளர்வுறுமைந்தா வுணர்வுகாண்பவற்றினையுன்னி, நிற்பதாந்தனக்குவேறுபோற்கண்டுநிகழ்ந்துசங்கற்பமாய்நிகழும்……………………… *

(இ-ள்.) அற்பமாயொழிந்து - சிறிதாகவுண்டாய் — தானுளதாகி - தானொருமுதலாயிருக்கும்—அடைவிலேபையப்பையப்பருத்து - கிரமமாகமெல்லமெல்லவளர்ந்து — தற்பரமனமாந்தெளிவு - பரமாத்மாவாகியதெளிவை— அறமூடி - மிகவுமறைத்து — சடத்துவம்-சடபாவமானது—திடத்திலுண்டாகி - திரமாயுண்டாகும்படி — உற்பவமுகில்போல-உதித்தமேகத்தைப்போல —வளர்வுறுமைந்தா - வளருங்குழந்தாய்—உணர்வு- அறிவானது—காண்பவற்றினை- திரிஸ்யத்தை—உன்னிநிற்பதாந்தனக்கு - பாவித்திருக்கின்றதனக்கு— வேறுபோற்கண்டு- வேற்றுமைபோலப்பார்த்து—நிகழ்ந்து-நடந்து—சங்கற்பமாய்நிகழும் -சங்கற்பமாய்விளங்கும். எ-று … ………… ….. … ……………… …………………….. …. … ……… ……… ……… (௱௩)

(அ-கை.) பாவனாநீதமாகவேண்டுமெனல். (கவி) அறிவெனும்விதைசங்கற்பமாமுளையாமனையசங்கற்பமாந்தன்னைப்,பிறிவுறத்தாமேசெய்துதாம்பிறக்கும்பெரிதுற

வளர்ந்திடுந்தானே,செறிதுயமொழிபவின்பமொன்றில்லையாதலாற்செப்புசங்கற்ப,
நெறியுறநினையேனிற்புறநிலையி னிமிடமும்பாவனைநினையேல்.................... *

(இ-ள்.) அறிவெனும்விதை - ஞானமென்னும்வித்தானது— சங்கற்பமாமுளையாம்- சங்கற்பமென்னுமங்குரமாம்—அனையசங்கற்பம் - அந்தச்சங்கற்பமானது—தன்னைப்பிறிவுற- தன்னைவேற்றுமைபாக—தானேசெய்து - தானேயுண்டாக்கி — தான்பிறக்கும் - தானுண்டாகும்—தானேபெரிதுறவளர்ந்திடும் - தானேபெரிதாகவளரும்— செறிதுயமொழிய - மிகுந்த துன்பமேயன்றி—இன்பமொன்றில்லை - இன்பமாவதொன்றுமில்லை—ஆதலால் - ஆகையால்— செப்புசங்கற்பம் - சொல்லியசங்கற்பத்தின் — நெறியுறநினையேல் - மார்க்கத்திறசெல்லக்கருதாதே—நிற்புறநிலையில் - நிற்கின்றசகத்திநிலையில்— நிமிடமும்பாவனைநினையேல் - கணமும் பாவனைசெய்யாதே. எ-று.. (௱௪)

(அ-கை.) சங்கற்பம்வருத்தமின்றிக்கெடுமெனல் (கவி) இவ்வளவானபாவனையாலே
யின்பமாமினையசங்கற்பந், தவ்வுறப்பெரியமுயற்சிகள்வேண்டா தாக்குபாவனையெ
லாமொழித்த; லவ்வகையாலேயிறந்துபோந்தன்னெஞ் சலர்வுறுபூவினைக்கசக்கிற்,
கைவருவருத்தமொன்றுளதாகுங் கழறியவிதற்கதுவேண்டா........................ *

(இ-ள்.) இவ்வளவானபாவனையால் - இவ்வளவாகியபாவனையினுல்—இன்பமாம்-(பரம) சுகமாம்— இனையசங்கற்பம் - இப்படிப்பட்டசங்கற்பமானது — தவ்வுறப்பெரியமுயற்சிகள் வேண்டா - தவறுடையமிகுந்தவெத்தனங்கள்வேண்டுவதில்லை— தாக்குபாவனையெலாமொழித்தல்- தாக்காநின்றபாவனைகளியாவையுங்கெடுத்தலாகிய—அவ்வகையால்- அந்தப்ரகாரத்தினுல் —தன்னெஞ்சிறந்துபோம் - தன்மனதுநசிக்கும்—அலர்வுறுபூவினைக்கசக்கில் - விகசிதமான புட்பத்தைக்கசக்கவேண்டுமானுல்— கைவருவருத்தமொன்றுளதாலும் - கரத்திற்கோர்வருத்த முண்டாபிருக்கும்—கழறியவிதற்கு - சொல்லியவிந்தச்சங்கற்பநாசத்துக்கு—அதுவேண்டா- அவ்வளவுவருத்தம்வேண்டுவதில்லை. எ-று.. (௱௫)

(அ-கை)சங்கற்பவடிவமானமனதைக்கெடுத்து ஆத்மஞானமாகவிளங்குவாயெனல்.
(கவி.) எழுந்தசங்கற்பபாவனைவிட்டா லிறந்துபோமிதனையிங்கிதனு, லழுந்துறமா
ய்த்துமனதினுன்மனத்தை யறுத்துநின்னறிவினீநிற்பா, யுழுந்துருள்போதின்முடி
யுமீதரிதோவுலகமும்வானமுமொக்கு,முழுந்தியபொய்யாய்ப்போம்விகற்பத்தான்
முளைத்தவையன்றிமுன்னிலதாம்.. *

(இ-ள்.) எழுந்தசங்கற்பம் - உண்டாகியசங்கற்பமானது—பாவனைவிட்டால்- பாவனையைவிட்டுவிட்டால்—இறந்துபோம் - நாசமடையும் — இதனை - இந்த (பகிர்முக) சங்கற்பத்தை—இங்கு - இவ்விடத்தில்—இதனுல்- இந்த(வந்தர்முக)சங்கற்பத்தினுல்—அழுந்துறமாய்த்து- திடமாகக்கெடுத்து—மனதினுல் - (பரிசுத்த)மனதினுல்—மனத்தையறுத்து-(அசுத்த)மனதைக்கெடுத்து—நின்னறிவில்- உனதாத்மஞானத்தில்—நீநிற்பாய்- நீநிலையாயிருப்பாய்—உழுந்துருள்பொழுதின்முடியும் - (கடத்தின்பின்வைத்த) வுளுந்துபிறழுநேரத்திற்கூடும் — ஈதரிதோ - இதரியதோ—முழுந்தியபொய்யாய்ப்போம் - முழுதுமசத்தியமாம் — விகற்பத்தால்- (அஞ்ஞான)விகற்பத்தினுல்— முளைத்தவையன்றிமுன்னிலதால் - உதித்தவையன்றிமுன்பில்லாததினுல் — உலகமும் - சகமும்—வானமும் - ஆகாயமும் — ஒக்கும்- ஒத்திருக்கும். எ-று. (இ ரு-க-ம்) சங்கற்பத்தினுற்பத்தி நாசத்தையும், அஃதுபிரமப்பிரகாசமாய் விளங்கினவனுபவத்தையுமறிவித்ததாம்.. (௱௬)

(அ-கை.) அத்துவிதானுபவங்கூறல் (கவி) தண்டுலத்தோனுஞ்செம்பினிற்களிம்புஞ்
சகசமாய்த்தொழில்விசேடத்தால், விண்டுபோமதுபோற் புருடனுமலத்தைமேவி
யேபோக்குதவிபல்பாங், கொண்டசந்தேகமொழித்துநீமுயல்வாய்குருவின் வல்லப
விளக்கத்தாற்,கண்டனமெனல்வீணுணுநீதானுங்கண்டனம்பரம்பொருட்பொலிவே

(இ-ள்.) தண்டுலத்தோனும் - அரிசிக்குமியும்—செம்பினிற்களிம்பும் - தாம்பிரத்துக்குக்களிம்பும்—சகசமாய் - சுபாவமா (யிருந்தும்) —தொழில்விசேடத்தால் - கருமவிசேடங்களினுல்— விண்டுபோம் - நீங்கிப்போம்—அதுபோல் - அதைப்போல—புருடனும் - ஆத்மாவும்—மலத்தைமேவி - அஞ்ஞானத்தையடைந்து—போக்குதவியல்பாம் - (விசாரத்தா)னீக்கிக்கொள்ளுதவியல்பாம்— கொண்டசந்தேகமொழித்து - கொண்டசந்தேகத்தைவிட்டு—குருவின்வல்லபவிளக்கத்தால் - ஆசாரியன்வல்லபமானவிளக்கத்தால்—நீமுயல்வாய்- நீமுயற்சிசெய்வாய்—கண்டனமெனல்வீண் - கண்டோமென்றுசொல்லப்பட்டசகலமும்வீணுப்— நானுநீநானும்- குருவுஞ்சீஷனும் — பரம்பொருட்பொலிவே - பரமப்ரகாசமாகவே—கண்டனம்- தரிசித்தோம். எ-று.. (௱எ)

(அ-கை.) உவமானத்தைமுடித்தல். (கலி.) எனவவருரைத்த யாவையுங்கேட்டவ்விர
விலங்கவரைநாமெய்த,மனமகிழ்ந்தருச்சித்தென்னொடத்தளிர்மேல்வதிந்தனனிரு
வருமெய்ம்மைக், கனகதைகளிறாற்காதலுற்றவர்போற் கங்குலைக்கணமெனக்கழித்
தவ், வனகனைநீங்கிக்கங்கையுற்றனனவன்கதைபோலுமிச்சகமே......... ....*

(இ-ள்.) எனவவருரைத்த - இப்படியென்றந்தத்தாசூரமுனிசொல்லிய — யாவையுங்கேட்டு - சகலவருத்தங்களையுங்கேட்டு — அவ்விரவில் - அந்தவிராத்திரியில் — அங்கு - அவ்விடத்தில — அவரைநாமெய்த - அம்முனியையானடைய — மனமகிழ்ந்தருச்சித்து - மனமகிழ்ச்சியாய்ப்பூசித்து — என்னொடு - என்னுடன் — அத்தளிர்மேல்வதிந்தனன் - அத்துளிரின்மேலிருந்தான் — இருவரும் - நாங்களிருவரும் — மெய்ம்மைக்கனகதைகளிறால் - உண்மையானவநேகக்கதைகளினால் — காதலுற்றவர்போல் - விடப்புருடர்களைப்போல — கங்குலைக்கணமெனக்கழித்து - இராவைக்ஷணநேரமாகத்தள்ளி — அவ்வனகனை நீங்கி - அத்தாசூரனைப்பிரிந்து — நான்கங்கையுற்றனன் - யான்கங்காநதியையடைந்தேன் — இச்சகம் - இவ்வுலகமானது — அவன்கதைபோலும் - அவன்சொன்னகதையையொக்கும். எ-று. (இ-உ-க-ம்) இக்கதைதிருஷ்டாந்தமாக, ஆத்மதிருஷ்டியிற் சங்கற்பமுதலியசகமித்தையென் றறியவேண்டுமென்பதாம்.......... (௱அ)

தாசூரன்கதைமுற்றிற்று - ஆகக்கதை - ௯௬ - இ - கவிதை. (௭௱௧௧)

கசன்கதை.

(அ-கை.) முன்கதையிற்சித்துவிலாசமானசங்கற்பமேசிவேஸ்வரசகங்களாகவிளங்குவதைநிரூபித்து,இவைகள்சித்தேயாமென்பதையநுபவமாயறிவிக்குநிமித்தங்கசன்கதையைநிரூபிக்கிறார்.

(அ-கை.) கணமுநிலையின்றிய வாயுளின்விஷயவிச்சையைக் கெடுக்கவேண்டுமெனல்.

(வேறு.) (கலி) முடிவறுகாலந்தன்னின் மொழிதருமாண்டுநூறு, நொடியளவெனி
னும்பற்றுறிதனையேநெடிதாய்நோக்கி, யொடிவறுபாரவேட்கையுறுவதென்பொ
ருள்களுன்னிப், படர்வதாமுள்ளத்தாசை பற்றறவொருக்கிநிற்பாய்.....................*

(இ-ள்.) முடிவறுகாலந்தன்னில் - அளவில்லாதகாலத்தில் — மொழிதருமாண்டுநூறும் - சொல்லப்பட்டநூறுவருடமும் — நொடியளவெனினும்பற்றாது - நொடிநேரமென்றாலும் போதாது — இதனைநெடிதாய்நோக்கி - இதைநெடுங்காலமாகப்பார்த்து — ஒடிவறுபாரவேட்கை - கெடாதமிகுந்தவாசையை — உறுவதென் - பொருந்துவதென்ன — பொருள்களுன்னி - விஷயங்களைச்சிந்தித்து — படர்வதாம் - விரிவதாகிய — உள்ளத்தாசை - மனதினிச்சை — பற்றறவொருக்கிநிற்பாய் - பற்றில்லாமற்கெடுத்திருப்பாய். எ-று.................................. (க)

(அ-கை.) விஷயவிச்சைகூடாததேனெனின். (கலி) மாலறவெங்ஙனின்றுயங்ஙனேவாழ்
வாய்பாரிற், கோலநன்மணிகள்வேண்டா திருக்கவுங்குறிகிப்பாயுந், தூலநன்னிழல்போ
லுண்டா மாத்திரந்தோற்றமான, ஞாலமும்பரமந்தன்னினலம்பெறத்தோன்றுமன்றே.

(இ-ள்.) மாலறவெங்ஙனின்றாய் - ஆசையிறந்தெத்தன்மையனாய்நின்றாயோ — அங்ஙனே வாழ்வாய் - அத்தன்மையனாகவேநீவாழக்கடவை — பாரில் - பூமியின்கண் — கோலநன்மணிகள் - அழகியநல்லமணிகள் — வேண்டாதிருக்கவும் - விரும்பாதிருந்தும் — குறிகிப்பாயும் - நெருங்கிப்பாய்கின்ற — தூலநன்னிழல்போல் - மிகுந்தநல்லொளியைப்போல — உண்டாமாத்திரம் - சத்தாமாத்திரமாக — தோற்றமானஞாலமும் - உண்டானவுலகமும் — பரமந்தன்னில் - பிரமத்தினிடத்தில் — நலம்பெறத்தோன்றும் - நன்றாகத்தோற்றும். எ-று. (இ-உ-க-ம்) பிரமப்பிரதிபலனமானசகத்தைவேறாகக்கண்டு இச்சிக்கக்கூடாததென்பதாம்..................................... (உ)

(அ-கை.) சகத்திற்றுன்பமின்றிச் சஞ்சரிக்குநெறியாதெனின். (கலி) ஆதலாற்பரமந்தன்
பாலகத்தனேகத்தனேயன், றோதுபாவனைகளுண்டா முற்றபற்றிலாமையாலே, சாதமி
லகத்தனுகுஞ் சந்திரமாத்திரத்தால, மேதகுகத்தனுமிவ்விரண்டலால்வேறுமேவா ..... *

(இ-ள்.) ஆதலால் - ஆதலினால — பரமந்தன்பால் - பிரமத்தினிடத்தில் — அகத்தன் - அகர்த்தாவென்றும் — கத்தனேயன்றும் - கர்த்தாவென்றும் — ஓதுபாவனைகளுண்டாய - சொல்லப்

பட்டபாவனைகளுண்டாம்—உற்றபற்றிலாமையால் - பொருந்தியவாசையில்லாததினால்—சாதமிலகத்தனாகும் - உண்டாகாதவகர்த்தாவாம்—சந்நிதிமாத்திரத்தால் - சந்நிதானமாத்திரத்தினால்—மேதகுகத்தனும் - மேன்மையானகர்த்தாவாம்—இவ்விரண்டலால்- இந்தவிரண்டையல்லாமல்—வேறுமேவா - (ஆத்மாவில்) வேறொன்றுமடையாவாம். எ-று.......................(௩)

(அ-கை.) இ-து. (கவி) அகத்தனிற்கத்தன்றன்னிலமைந்ததேதனிலிற்பாய்,முகத்
தமாமிரண்டுமன்றிமுளைத்தெழுமனதைநுங்கி, மிகத்தனிதிரமாய்நிற்றியகத்தனும்
விளம்புநேரிற்,சுகத்தனாய்நிற்றியேனுநன்றிதுதுயரொன்றில்லை.................*

(இ-ள்.) அகத்தனில்- அகர்த்தாவிலும்—கத்தன்றன்னில் - கர்த்தாவிலும் —அமைந்ததேது - (உனக்)கிசைந்ததெதுவோ—அதனினிற்பாய் - அதனிடமாயிருப்பாய் — முகத்தமாமிரண்டுமன்றி- ப்ரசன்னமானவந்தவிரண்டுமல்லாமல்—முளைத்தெழுமனதைநுங்கி-தோன்றிவளராநின்றமனதைவிழுங்கி— மிகத்தனிதிரமாய்நிற்றி-மிகவுமொப்பின்றித்திடமாயிருப்பாய்—அகத்தனும் - அகர்த்தாவாகவும்—விளம்பும் - சொல்லப்பட்ட—நேரிற்சுகத்தனாய்-ஒப்பில்லாதநல்லகர்த்தாவாகவும்—நிற்றியேனும் - நின்றாலும்—இதுநன்று- இதுவேநன்மையாம்—துயரொன்றில்லை - துன்பமானதுசற்றுமில்லை. எ-று. (இ-உ-க-ம்) கர்த்தத்துவஅகர்த்தத்துவமென்னுமிரண்டிலொன்றேடிருக்கிற் றுன்பமின்றென்பதாம் ....(௪)

(அ-கை.) தேகோகநீக்கிற்பயனியாதெனின். (கவி) முன்னியவகத்தனாகியான்சகமுறை
செய்கின்றே, னன்னியநினைவிலாமையாலதில்விகாரமில்லை, யென்னதுநீநான்செய்தேன்
செய்திலேனென்னும்பார்வை,புன்னியபொழுதேதுன்பமுடலைநானென்பாருண்டோ.*

(இ-ள்.) முன்னியவகத்தனாகி - நினைக்கப்பட்டவகர்த்தாவாய் — யான்சகமுறைசெய்கின்றேன்- நான்சகத்தினொழுங்கின்படிநடக்கின்றேன் — அன்னியநினைவிலாமையால் - வேறானகருத்தில்லாமையால்—அதில்விகாரமில்லை - அவ்வகத்தினில்வேறுபாடில்லை—என்னதுநீநான்- என்னதென்றும்நீயென்றும்நானென்றும்—செய்தேன்செய்திலேனென்னும் - செய்தேனென்றுஞ்செய்யவில்லையென்றும்— பார்வையுன்னியபொழுதே துன்பம் - மதித்தபோதேதுக்கமாம்—உடலைநானென்பாருண்டோ - சரீரத்தைநானென்பவருமுண்டோ. எ-று ....(௫)

(அ-கை.) தேகோகத்துன்பமாமெனல். (கவி) மொய்யுடனானேயென்னின்மூவேழுநரகு
மஃதே, வெய்யவன்றுயராமேனு மெய்யையானென்னவேண்டா, வையமில்கேள்விநல்
லோர்நினைவரோவனைத்தாழுனுங், கைபுறத்தின்பரோனுநாய்ப்பிணங்கவரார்நீசர்.........*

(இ-ள்.) மொய்யுடனானேயென்னில் - உறுப்புகணெருங்கியசரீரத்தைநானேயென்றுசொல்லில்—மூவேழுநரகுமஃது-இருபத்தொருநரகமுமதுவேயாம்—வெய்யவன்றுயராமேனும்- வெவ்வியவலியதுன்பமானாலும்— மெய்யையானென்னவேண்டாம் - உடலைநானென்றுசொல்லவேண்டாம்—ஐயமில் - சந்தேகமில்லாத — கேள்விநல்லோர் - கேள்வியையுடையசத்துக்கள்—நீசர் - சண்டாளர்கள்—அனைத்தாழுனும் - சகலமாமிசங்களையும்— கையுறத்தின்பரேனும் - கைவசமாகப்புசிப்பவராயினும்— நாய்ப்பிணம் - நாயினதுமாமிசத்தை—கவரார்-புசியார்கள்—(அதுபோல்)நினைவரோ - (தேகநானென்று)கருதுவார்களோ. எ-று..... (௬)

(அ-கை.) தேகோகத்தைநீக்கவேண்டுமெனல். (கவி) நாமுடலென்னுமாசான்ஞானக்க
ண்குருடாய்ப்போகுந், தோமுறுமதனைத்தூரத்தூர்ப்பரேற்சோதிஞான, மாமுகிலிலா
நிலாப்போல்வயங்கிடுமினையகண்ணா,லேமுறுபிறவிவேலையிருங்கரையெளிதுதோன்றும்

(இ-ள்.) உடல் - சரீரமானது—நாமென்னுமாசால் - யாமென்னுங்களங்கத்தினால்—ஞானக்கண்குருடாய்ப்போகும் - ஞானதிருஷ்டிதெரியாததாகும்—தோமுறுமதனை - குற்றமிகுந்தவக்களங்கத்தை—தூரத்தூர்ப்பரேல் - தூரத்தள்ளுவார்களாயின்—சோதிஞானம்- ப்ரகாசஞானமானது—மாமுகிலிலா நிலாப்போல்- கறுத்தமேகமில்லாவிடத்துவிளங்குநிலவைப்போல— வயங்கிடும் - ப்ரகாசிக்கும்—இனையகண்ணால் - இப்படிப்பட்டதிருஷ்டியினால்— ஏமுறுபிறவிவேலை - மிகுந்தசநநசமுத்திரத்தின் —இருங்கரையெளிதுதோன்றும் - அழகுள்ளமுத்திரமெளிதாயுண்டாம். எ-று. (இ-ரு-க-ம்) பஞ்சபூதவிகாரமானபௌதிகத்தையானென்பதேபவத்துன்பமாமென்றறிந்து அதைநீக்கிற்சுயஞ்சித்துதயமாமென்பதாம்.......................(௭)

(அ-கை.) தேகோகத்தைநீக்குதற்குபாயமியாதெனின். (கவி) அனைத்தினுங்கத்தனல்லே
னவனிவனல்லேனென்ன, நினைத்துளத்துறுதியாகிநிற்றியாலஃதின்றென்னி, லனைத்தினு
ங்கத்தனேயளவறுமதுநானென்ன, நினைத்தசைவொன்றுமின்றிநிச்சயமாகிநிற்பாய்.

(இ-ள்.) அனைத்தினும் - சகலத்திலும் — கத்தனல்லேன் - நான்கர்த்தாவல்ல— அவன்-அவனென்பதும்—இவன் - இவனென்பதும்—அல்லேனென்ன - யானல்லனென்று — நினைத்

ரு-சிந்தித்து—உளத்துறுதியாகி - மனதிற்றிடமுண்டாய்—நிற்றி - (அகர்த்தாவா)யிரு—அஃதின்றெனில் - அப்படியில்லையாயின்— அனைத்தினுங்கத்தனுமே - சகலத்துக்குங் கர்த்தாநானே—அளவறும் -அளவில்லாத—அது நானென்ன-அப்பொருள்களுநானென்று—நினைத்து-சிந்தித்து —அசைவொன்றுமின்றி - சலனமொன்றுமில்லாமல்—நிச்சயமாகிநிற்பாய் - உறுதியாய்அகர்த்தாவாயிருப்பாய். எ-று .... (அ)

(அ-கை.) இதற்குமூன்றுநிச்சயங்கூறல். (கவி) அன்றெனிலொன்றுமல்லவொன்றுநாமாகுமென்றே, நின்றவிட்பதத்தினன்றுநின்பதந்தனினீநிற்பா, யொன்றெனும்பதத்தைக் கண்டவுத்தமர்தன்பானிற்பர், துன்றுவாதனையேபந்தந்தொல்லைவீடதனைத்தீர்தல்.... *

(இ-ள்.) அன்றெனில் - (அப்படி) யல்லாவிடின் —ஒன்றுமல்ல - (இவ்விரண்டி)லொன்று (நா) னல்ல—நாமொன்றாகும் - யாம் (வாக்குமனாதீதமாகிய) வொன்றேயாம்— நின்றவிட்பதத்தின் - இருந்தவிட்பதங்களுள் — நன்றுநின்பதந்தனில் - உத்தமமாகியவுனதுபதத்தில்—நீநிற்பாய் - நீயிருப்பாய்—ஒன்றெனும்பதத்தை - ஏகமென்கின்ற (பரம) பதத்தை — கண்டவுத்தமர்தன்பானிற்பர்-தரிசித்தசத்துக்கள்தன்னிடத்திலிருப்பார்கள்— துன்றுவாதனையேபந்தம்-நெருங்கியவாசனையேபந்தமாம்—அதனைத்தீர்தல் - அவ்வாசனாக்ஷயமே—தொல்லைவீடு-பழைமையானமோக்ஷமாம். எ-று (இ-உ-க-ம்) ப்ரகிருதிமுதல்இச்சரீரபரியந்தமுள்ளசகலவிஷயமும் யானல்லவென்பதற்குவிலக்ஷணமேதானென்றும்; அவையாவுந்தன்மயமாய்விளங்குஞ்சலக்ஷணமேதானென்றும், இவ்விரண்டுமின்றித்தன்மயமாய் விளங்குதலென்றுஞ் சொல்லப்பட்டவிம்மூன்றனுபவமுந்தேகவாசனையைநீக்குதற்குயுத்தியாமென்பதாம் .... (கூ)

(அ-கை.) வாசனாத்தியாகமியாதெனின். (கவி) புலன்களிற்பழகிச்சித்தம் பூண்டவாதனை கண்முன்னே, யலம்பெறமாற்றிவீட்டிற் கடுத்தவாதனையுந்தீர்வாய், நலந்திகழருள்சந்தோடநட்புதாசினமிந்நாலு, மலந்தவிர்குணங்களாகமனத்தமூந்தாதுசெய்வாய். ...... *

(இ-ள்.) புலன்களிற்பழகி-சத்தமுதலியவிஷயங்களிற்பழகி—சித்தம்-மனமானது—பூண்டவாதனைகள்-தரித்தவாதனைகளை—முன்னலம்பெறமாற்றி - முன்பலம்வரும்படிகெடுத்து—வீட்டிற்கடுத்தவாதனையும் - மோக்ஷத்துக்கடுத்த (சுத்த) வாதனையையும் — தீர்வாய் - (பின்) விட்டுவிடுவாய்—நலந்திகழருள் - நன்மைப்ரகாசிக்கின்றவருளும்— சந்தோடம் - சந்தோஷமும்—நட்பு - நட்பும் —உதாசினம் - உதாசினமுமாகிய—இந்நாலும் - இந்நான்கும் — மலந்தவிர்குணங்களாக - மாசற்றிருக்கின்றகுணங்களாக — மனத்தமூந்தாதுசெய்வாய் - அதன் (ளுழிலே) மனதிற்பற்றுமற்செய்வாய். எ - று. (இ - ம்) பிரமசுபாவமாய் ப்ரகாசிப்பதே பெத்தமுத்தியின்வாசனாத்தியாகமென்பதாம்..... .... (ய)

(அ-கை.) பிரமசுபாவமாய்விளங்குவதெங்ஙனமெனின். (கவி) உள்ளுறுதொழில் கன்முற்று மொருக்கியோருணர்வைப்பற்றி, மெள்ளவாங்கதுவுமந்தக் கரணங்களுடனேவிட்டு,தள்ளுவவெல்லாமெத்தாற்றள்ளினுயதுவுந்தள்ளித்,தெள்ளுணர்வுள்ளஞ்செய்கைதேசிருளனைத்துந்தீர்ந்து .... *

(இ-ள்.) உள்ளுறுதொழில்கள்-உள்ளத்தின்கண்ணுள்ளசெயல்களை—முற்றுமொருக்கி-முழுதுங்கெடுத்து — ஒருணர்வைப்பற்றி - ஒப்பற்றசின்மாத்திரவாசனையைப்பிடித்துக்கொண்டு— மெள்ளவாங்கதுவும் -மெல்லவவ்விடத்திலந்தச்சித்துவாசனையையும் — அந்தக்கரணங்களுடன்விட்டு - அந்தக்கரணங்களோடுங்கெடுத்து — தள்ளுவவெல்லாம் - தள்ளப்பட்டயாவும்—எத்தாற்றள்ளினுய் - எந்தமுயற்சியினுனீக்கினையோ—அதுவுந்தள்ளி - அம்முயற்சியையுந்தள்ளி—தெள்ளுணர்வு - தெளிவானவறிவும் — உள்ளம் - மனதும் — செய்கை - தொழிலும் — தேசு - (ஞான) ப்ரகாசமும்—இருள் - (அஞ்ஞா) னாந்தகாரமுமாகிய — அனைத்துந்தீர்ந்து - சகலமுநீங்கி. எ-று .... (யக)

(அ-கை.) இ-து. (கவி) வாதனைவடிவமானவிவைகளுமற்றிவற்றைப், பேதமாய்ப் பழகுவோனும்பிராணனிலியக்கந்தானு, மியாதுமூலத்தோடீர்ந்து விண்ணகமென்னநின்று, லியாதுதீர்சாந்தனுயென்னுயினையதுநீமெய்யால்.. .... *

(இ-ள்.) வாதனைவடிவமான - வாசனாரூபமாகிய—இவைகளும் - (இப்பொழுதுசொல்லப்பட்ட) விவைகளும்—மற்றிவற்றை - இவைகளை—பேதமாய் - வேற்றுமையாக— பழகுவோனும்-பழகுகின்றசிதாபாசனும் —பிராணனிலியக்கந்தானும் - பிராணவாயுவின்சலனமும்—இயாதும் - எதுவும்—மூலத்தோடீர்ந்து - காரணத்துடன்கெடுத்து—விண்ணகமென்ன நின்றால் - ஆகாயத்தைப்போலநிற்பாயாயின்—இயாதுதீர்சாந்தனுய்- சகலமுந்தீர்ந்தவுபசாந்தனுய்—என்னுயினை - எதுவாயினை—மெய்- உண்மையாக—அதுநீ - அதுவேநீயாம். எ-று.

(இ-உ-க-ம்) விருத்திஞானத்திலுள்ளவசுத்தவாசனையுஞ் சமாதிஞானத்திலுள்ள சுத்தவாசனையும் பிறக்கிற்கூடஸ்தபிரமவயிக்கியமான அத்துவிதம்விளங்குமென்பதாம்…… ……… ….(௰௨)

(அ-கை.) அங்ஙனம்விளங்கியசீவன்முத்தரிலக்கணமியாதெனின். (கவி) உளத்தினிலனைத்துமாற்றியுலகிலோர்பற்றறின்றி, துளக்கிலா நிலையினின்றோர்துகளறுமுத்தராவா, ரளக்கருமீசராவாரவர்களேசமாதிதானுங், கொளத்தகுகருமந்தானுங்கூடினும்விடினுமுத்தர்.

(இ-ள்.) உளத்தினிலனைத்துமாற்றி - மனதிலுள்ளசகலவாசனைகளையுங்கெடுத்து — உலகிலோர்பற்றறின்றி - சகத்திலொருபற்றில்லாமல் — துளக்கிலா - அசைவற்ற — நிலையினின்றோர் - நிலையினின்றவர்கள் — துகளறுமுத்தராவார் - குற்றமற்றசீவன்முத்தராவார்கள் — அவர்களே - அச்சீவன்முத்தர்களே — அளக்கருமீசராவார் - எண்ணுதற்கரிய (வுயர்வுள்ள) வீசராவார்கள் — சமாதிதானும் - சமாதியையும் — கொளத்தகு - கொள்ளுதற்குரிய — கருமந்தானும் - கன்மத்தையும் — கூடினும்விடினுமுத்தர் - சேர்ந்தாலும்விட்டாலும்சீவன்முத்தர்களாம். எ-று. (இ-ம்) ஸ்வரூபதிருஷ்டியாற் சகலத்திலும்பற்றற்று அதிற்கூடியுங்கூடாததாயுமிருக்கின்றதே சீவன்முத்தர்களுடையவிலக்கணமென்பதாம் ………… …. ……………………… ….(௰௩)

(அ-கை.) ஆயின்வேதத்திற்சிரத்தை வேண்டாவெனின். (கவி) இருதயத்தாசையொன்றுமிலாமையாலெண்ணப்பட்ட, கருமங்கள்செய்துந்தீர்ந்துங் கையுறுபயனொன்றில்லை, யொருவழிப்படநீள்காலமுளமொருப்படுதலாலே, பெருகுவாதனைதீர்நெஞ்சிற்பேசுநூலனைத்தும்வேண்டா……………………… … *

(இ-ள்.) இருதயத்து - மனதின்கண் — ஆசையொன்றும் - அவாவொன்றும் — இலாமையால் - இல்லாமையால் — எண்ணப்பட்டகருமங்கள் - குறிக்கப்பட்டதொழில்களை — செய்தும் - செய்தாலும் — தீர்ந்தும் - விட்டாலும் — கைபுறுபயனொன்றில்லை - கைவசமானப்ரயோசனமொன்றுமில்லை — ஒருவழிப்பட - ஒருமார்க்கமாய் — நீள்காலம் - அநேககாலமாய் — உளமொருப்படுதலால் - மனமொருமைப்படுகையால் — பெருகுவாதனைதீர்நெஞ்சில் - வளருகின்றவாசனைநீங்கியமனதில் — நூலனைத்தும்வேண்டா - சொல்லப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் வேண்டாவாம். எ-று. (இ-ம்) மனமானது அநுபூதிவடிவாதலினதனாற்செய்யும் விதிவிலக்கின் ப்ரயோசனப்ரயோசனம்விதிக்குஞ்சாஸ்திரவாசனைவேண்டாமென்பதாம் ……. ………. (௰௪)

(அ-கை.) மூத்தியடைபவருறுதியாதெனின். (கவி) மறுகுவாதனைகடீர்ந்தமவுனத்தையொழியவேறோருறுகதிநல்லதில்லையுணர்வனவுணர்ந்ததாகு, முறுதிசைபத்துஞ்சுற்றிமீண்டதாந்தொல்லைஞாலத், தறுதியாயுண்மைகண்டோர்சிலர்பின்றோரவற்றின்மாய்வோர்.

(இ-ள்.) மறுகுவாதனைகடீர்ந்த - சுழலும்வாசனைகணீங்கிய — மௌனத்தையொழிய - மோனநிலையையல்லாமல் — வேறோருறுகதி - பொருந்துதற்குரியவேறொருகதியாவது — நல்லதில்லை - நன்மையானதில்லையாம் — உணர்வனவுணர்ந்ததாகும - அறியத்தக்கதையறிந்ததாகியும் — உறுதிசைபத்தும் - பொருந்தியபத்துதிக்கும் — சுற்றிமீண்டதாம் - சுழன்றுதிரும்பினதாகியும் — தொல்லைஞாலத்து - பழைமையாகியசகத்தின் — அறுதியாய் - நிச்சயமாயிருக்கின்ற — உண்மைகண்டோர்சிலர் - தத்துவத்தைத்தெரிசித்தவர்கள்சிலர் — பின்றோர் - மற்றவர்கள் — அவற்றின்மாய்வோர் - அவ்வுலகமயக்கத்திற்கெடுகின்றவர்கள். எ-று …. ………………. ……….(௰௫)

(அ-கை-) மோகத்தினீக்கமுணர்த்தல். (கவி) தேகத்தைநோக்கியன்றோ செகமெலாந்திரிவதல்லா, லேகத்தைநோக்கியன்றோ வெங்கணும்பஞ்சபூத, நாகத்தைமண்ணைகீழைநாடினுமாறுகாணே, மோகத்தைவிடுதுமென்றே திடமுற்றோர்முழுதும்பற்றார் ……. ….. *

(இ-ள்.) தேகத்தைநோக்கியன்றோ - சரீரத்தைப்பார்த்தல்லவா — செகமெலாம் - சகத்திலுள்ளயாவரும் — திரிவதல்லால் - சஞ்சரிப்பதேயன்றி — ஏகத்தைநோக்கியன்று - ஒன்றானவாத்மாவைப்பார்த்தல்ல — எங்கணும்பஞ்சபூதம் - எவ்விடத்தும்பஞ்சபூதமே(யல்லாமல்) — நாகத்தை - தேவலோகத்திலும் — மண்ணை - பூலோகத்திலும் — கீழை - பாதாளலோகத்திலும் — நாடினும் - தேடியும் — ஆறுகாணோம் - ஆறாவது(பூதங்)கண்டதில்லை — மோகத்தைவிடுதுமென்று - மோகத்தைவிடுவோமென்று — திடமுற்றோர் - திரமடைந்தவர்கள் — முழுதும்பற்றார் - யாவையும்பற்றமாட்டார்கள். எ-று ……… …………………………… ………… ………… …(௰௬)

(அ-கை.) பவங்கடக்குஞ்சுலுவையும் பலுவைவயுங்கூறல், (கவி) ஊகமின்மூகர்க்கெல்லா மூழிவெங்கடலாஞ்சென்ம, மோகமிலகத்தோர்க்கு முன்னுறுங்காவின்றோளாஞ், சோகமின்ஞானிநெஞ்சிற்றொடர்ந்தசிற்றின்பம்பற்றாப், போகமில்சிற்றார்புன்பெண்பொலிநகர் விடலைக்கொன்று ………………………… *

(இ-ள்.) ஊகமில் - அநுபவபுத்தியில்லாத— மூகர்க்கெல்லாம் - மூடர்களனைவர்க்கும் —செம்மம் - செநநமானது — ஊழிவெங்கடலாம் - பிரளயகாலத்தில்வெப்பமானசமுத்திரமாம்—மோகமிலூகத்தோர்க்கு- மயக்கமில்லாத(வநுபவ)புத்தியையுடையவர்களுக்கு—மூன்னுறுகோவின்குளம் - முன்னிருக்கின்றபசுவின்குளம்படியாம் — சோகமில் - துக்கமில்லாத —ஞானிநெஞ்சில் - ஞானவானுடையமனதில்— தொடர்ந்தசிற்றின்பப்பற்று - தொடர்புற்றவிஷயசுகப்பற்றுது —போகமில் - போகமில்லாத—சிற்றார்புன்பெண் - குறிஞ்சிநிலத்திலிருக்குமிழிவானபெண்கள்—பொலிநகர் - ப்ரகாசிக்கின்றபட்டணத்திலுள்ள— விடலைக்கென்றும்புருடர்களுக்கென்னப்ரயோசனமாம். எ-று .... (௰எ)

(அ-கை.) சர்வம்பிரமமயமாய்விளங்குதலாற்சகலமுமின்றெனல். (கவி) பிரமமாஞ்சுத்தவேலை நுரைகளாம்பிறங்கலெல்லாம்; பரமவாதித்தன்முன்னர் கானலாம்பரவைஞாலந், திரமதாமிதனைமுன்னே செப்பினன்வியாழன்றந்த, வரமகன்சுகனும்பேரோன்மற்றதுவள்ளல்கேட்பாய் .... *

(இ-ள்.) பிரமமாஞ்சுத்தவேலை-பிரமமாகியபரிசுத்தசமுத்திரத்தில்—பிறங்கலெல்லாம்-மலைகளியாவும்—நுரைகளாம் - பேனங்களாகும்—பரமவாதித்தன்முன்னர் - பிரமசூரியன்முன்பு—பரவைஞாலம் - சமுத்திரஞ்சூழ்ந்தபூமியானது — கானலாம் - பேய்த்தேராம்—திரமதாமிதனை - திரமுள்ளவிவ்வருத்தத்தை—வியாழன்றந்த - பிரகஸ்பதிபெற்ற—வரமகன்சுகனும்பேரோன்- வரபுத்திரனுனசுகனென்னுநாமத்தையுடையவன் —முன்னேசெப்பினன்- முன்னேசொல்லினன்—வள்ளல்கேட்பாய் - (அதை) ஸ்ரீராமா நீகேட்பாய். எ - று. (இ-ச-க-ம்) சீவன்முத்தர்களப்பியாசத்தையு மாரூடத்தையு மறிவித்ததாம் .... (௰அ)

(அ-கை.) சமாதியநுபவமுரைத்தல். (கவி) சுகனுயர்சமாதிநீங்கியொருபகற்களிக்குநெஞ்சன், வசமறத்தழுதழுத்தவசனத்தன்யாதுசெய்கேன், திசையுறவெங்குசெல்கேன்றீர்ப்பதென்கொள்வதென்ன, மிசையுயர்கற்பநீர்போன்மேதினியெங்குநானே .... *

(இ-ள்.) சுகன் - சுகமுனியானவர்—உயர்சமாதிநீங்கி - மேலாகியசமாதியினின்றும்பிரிந்து—ஒருபகல் - ஒருபோது—களிக்குநெஞ்சன் - களிக்கின்றமனதையுடையவன்—வசமற-பரவசனுக—தழுதழுத்தவசனத்தன் - தழுதழுத்தவசனத்தையுடையவன்—யாதுசெய்கேன்-எதைச்செய்வேன்—திசையுற - திக்குகளிற்பொருந்த—எங்குசெல்கேன்- எங்கேபோவேன்—தீர்ப்பதென் - விடப்படுவதெது — கொள்வதென்ன - கிரகிப்பதெது - மிசையுயர் - மேலாகவளர்கின்ற—கற்பநீர்போல் - பிரளயசமுத்திரத்தைப்போல — மேதினியெங்குநானே - உலகமெவ்விடத்து (நிறைந்திருக்கின்ற) தெனதுஸ்வரூபமே. எ-று .... (௰௯)

(அ-கை.) இ-து. (கவி) மேனியிற்புறத்தினுள்ளின்மேலொடுகீழிற்றிக்கில், வானில்வையகத்திலெங்கு நானன்றிமற்றொன்றில்லை, யானிலாவிடமுமில்லை யெனதிடத்திலாதுமில்லை, தானிகழ்பொருள்வேறில்லைசச்சிதாநந்தமென்றான் .... *

(இ-ள்.) மேனியின் - சரீரத்தினது—புறத்தில்- புறம்பிலும்—உள்ளில்- உள்ளிலும்—மேலொடுகீழிற்றிக்கில்-பத்துத்திக்குகளிலும்—வானில்- ஆகாயத்திலும்—வையகத்தில்- பூமியிலும்—எங்கும் - எவ்விடத்திலும்—நானன்றி - எனதுஸ்வரூபமல்லாமல் — மற்றொன்றில்லை-வேறொன்றுமில்லை—யானிலாவிடமுமில்லை-எனதுஸ்வரூபமில்லாதவிடங்களுமில்லை—எனதிடத்திலாதுமில்லை - எனதுஸ்வரூபத்திலில்லாதவைகளுமில்லை—தானிகழ்பொருள்வேறில்லை - தானேவிளங்குகின்றவஸ்துக்கள்வேறேயில்லை— சச்சிதாநந்தமென்றான் - சச்சிதாநந்த(ஸ்வரூபமேப்ரகாசிக்கின்ற)தென்று (சுகமுனி)சொன்னர். எ-று. (இ-உ-க-ம்)சமாதியிலிருந்துசாக்ஷாத்காரமானசுமனதினுற் பார்க்குமிடத்திற்சர்வம்பிரமமயமாய்விளங்குகின்றதென்பதாம். (உ௰)

சுகன்கதை முற்றிற்று. ஆக கதை-௰௭-கவிதை (எ௱௫௯)

திதிப்பிரகரணம்.

(அ-கை.) முன்கதையிற்சர்வம்பிரமமயமாய் விளங்குமென்பதையறிவித்து, அவ்வநுபவம்வரும்பொருட்டு அவ்வைந்துகதைகளின் சாரங்களைச்சுருக்கி யுபதேசப்ரகாரந் திதிப்பிரகரணஞ்சொல்கின்றார்.... ...... *

(அ-கை.) அநுபவிகளிலக்கணமியாதெனின். வேறு. (கவி) பெறற்கொணாதசத்துவ
குணப்பிறப்பினர்புவிமே, னிறத்துவாழ்வதுவான்றிகழ்நிறைமதிநிகராம், வறக்குந்துன்
பத்தில்வாடலரிரவுதான்வரினுஞ், சிறக்கும்பொற்கமலத்தலர்குவியுமோசிறிதும்...... *

(இ-ள்.) பெறற்கொணாத - பெறுதற்கரிய—சத்துவகுணப்பிறப்பினர்- சாத்துவிதகுணமானபிறப்பையுடையவர்கள்—புவிமேல் - பூமியினிடத்து — நிறத்துவாழ்வது - (பிரம) ப்ரகாசமாகவாழ்கின்றது—வான்றிகழ் - ஆகாசத்திற்ப்ரகாசிக்கின்ற—நிறைமதிநிகராம் - பூர்ணச்சந்திரனையொப்பாகும்—வறக்குந்துன்பத்தில் - வருத்துகின்றதுயரத்தில்—வாடலர் - அவர்கள்வாடார்கள்—இரவுதான்வரினும் - இராத்திரிவந்தாலும்—சிறக்கும்பொற்கமலத்தலர்- சிறப்பானசுவர்ன்னதாமரைமலர்—சிறிதுங்குவியுமோ - சற்றுங்குவியுமோ. எ-று ...... (க)

(அ-கை.) இ-து. (கவி) பகுதமன்றியேமற்றுளதொழில்களிற்பற்றார், தகுதியாகிய
மேலவர் நெறியிற்சரிப்பர், மிகுதியானிறைந் தசைவறுமுளத்தினன் மிகுவர்,
தொகுதியானநட்பருண்முதற்குணங்களாற்சுடர்வார்...... *

(இ-ள்.) பகுதமின்றி - ப்ரகிருதமாகிய (தொழில்களை) யல்லாமல்— மற்றுளதொழில்களிற்பற்றார் - வேறானசெய்கைகளிற்பற்றார்கள்— தகுதியாகிய - அறிவாகிய—மேலவர்நெறியில் - சத்துக்களுடையமார்க்கத்தில்—சரிப்பர் - நடப்பார்கள்—மிகுதியால்நிறைந்து-பூரணமாகநிறைந்து—அசைவறுமுளத்தினன்மிகுவர் - சலனமற்றமனதினன் மேன்மையாவார்கள் —தொகுதியான - கூட்டமாகிய—நட்பருண்முதல் - மயித்திரிகருணைமுதலாகிய — குணங்களாற்சுடர்வார் - (சற்) குணங்களினாற்ப்ரகாசிப்பார்கள். எ-று ...... (உ)

(அ-கை.) இ - து. (கவி) இயற்கையாகிய குணத்தினரிழிவுயர்விரண்டு, நயக்கலா
தவர்சமமுளோர்நன்னெறிநடப்போர், வியக்குமாறுதன்கரைகடாவேலையையொ
ப்போர், மயக்கிலாதவரிரவிபோனியதியைவழாதோர்...... *

(இ-ள்.) இயற்கையாகிய - இயல்பாகிய—குணத்தினர் - குணத்தையுடையவர்கள்—இழிவுயர்விரண்டும் - தாழ்வுயர்வென்னுமிரண்டையும்—நயக்கலாதவர் -இச்சியாதவர்கள்—சமமுளோர் - சமத்துவமுடையவர்கள் —நன்னெறிநடப்போர் - சன்மார்க்கத்திற்செல்பவர்கள்—வியக்குமாறு - அதிசயிக்கும்படி—தன்கரைகடா - தனதெல்லையைத்தாண்டாத—வேலையையொப்போர் - சமுத்திரத்தையொத்தவர்கள்—மயக்கிலாதவர் - மோகமில்லாதவர்கள்—இரவிபோல் - சூரியனைப்போல — நியதியைவழாதோர் - நியதியைவழுவாதவர்கள். எ-று. (இ-ங-க-ம்) ஸ்வாநுபவமாய்ச்சஞ்சரிக்கும்விளக்கத்தைக்கூறினதென்பதாம்.... ...... (ங)

(அ-கை.) அநுபவமுதிப்பதற்கப்பியாசங்கூறல். (கவி) கொள்ளற்பாலதுதுய
ரிலாதவர்நிலைகுறுகத், தள்ளற்பாலதுதீயவர்நெறியெனுஞ்சழக்கே, யெள்ளற்பால
துவுலகமேதியாமெவனென்றே, தெள்ளற்பாலதுகுரவராலறிவினாற்றீர..... *

(இ-ள்.) கொள்ளற்பாலது - கொள்ளத்தக்கது—துயரிலாதவர்நிலை - துன்பமற்றவர்குணத்தை—குறுக - சுருங்கும்படியாக—தள்ளற்பாலது - தள்ளத்தக்கது—தீயவர் - கொடியவர்களுடைய—நெறியெனுஞ்சழக்கு - மார்க்கமென்னுங்குற்றத்தை — உலகமேது - உலகமெப்படிப்பட்டதென்று (விசாரித்து)—எள்ளற்பாலது - நிந்திக்கத்தக்கது— யாமெவனென்று - யாமெப்படிப்பட்டவனென்று—குரவரால் - ஆசாரியராலும்—அறிவினால் - (தன)தறிவினாலும்—தீரத்தெள்ளற்பாலது - தீரவிசாரித்துதெளியத்தக்கது. எ-று ...... (ச)

(அ-கை.) இ - து. (கவி) வருந்துகிற்பதுதனையறிநெறியிலேமனத்தாற், றிருந்து
கிற்பதுகருமத்திலழுந்திலாச்செய்கை, பொருந்துகிற்பதுதீயவரல்லவர்புணர்ச்சி,
யருந்துகிற்பதுநாமெனன்பதாக்குகிற்பதுவே...... *

(இ-ள்.) வருந்துகிற்பது - வருத்தப்படுவது—தனையறிநெறியில் - ஆத்மாவையறிகின்றமார்க்கத்தில்—மனத்தாற்றிருந்துகிற்பது - மனதினாற்றிருத்தஞ்செய்வது—கருமத்தில்- விவகாரத்தில்—அழுந்திலாச்செய்கை - அழுத்தமற்றதொழிலை—பொருந்துகிற்பது - அடையத்

நக்கது—தீயவரல்லவர்புணர்ச்சி-தீமையற்ற(நல்லோர்களிடத்தில்)கலத்தல்—அருந்தமிழ்ப்பது-டிசிக்கத்தக்கது—நாமெனப்படாக்குறிற்பது-நாமெனப்படுவதாக்குகின்றவகைத்தை. எ-று. (௫)

(அ-கை.) இ-ரு. (கவி) தீர்க்கத்தக்கது நரம்பெறும்பெணுமுடற்றியக்கம், பார்க்கத்தக்கதுமுழுதுயிர்க்குள்ளுறைபரம, மீர்க்கத்தககம்தார்ரவியிலிடத்துனும்பாரி, னீக்கத்தக்கிலாப்புழுவினுஞ்சித்தொன்றேநிற்கும். .... *

(இ-ள்.) தீர்க்கத்தக்கது - நீக்கத்தக்கது — நரம்பெறும்பெணும் - நரம்பென்பென்கின்ற—உடற்றியக்கம் - சரீரமபக்கம்—பார்க்கத்தக்கது - காணத்தக்கது— முழுதுயிர்க்குள்ளுறைபரமம் - சகலவாத்மகோடிகளுண்ணிறைந்திருக்கும்பிரமம்—ஈர்க்கத்தக்கதேர் - (பச்சைப்புரவியிறு) இழுக்கத்தக்கவிரதத்தையுடைய—இரவியினிடத்தினும்-சூரியனிடத்திலும்—பாரினீக்கத்தக்கிலா - பூமியிற்றள்ளத்தகாத—புழுவினும் - கிருமியினிடத்திலும்—சித்தொன்றேநிற்கும் - ஞானமொன்றே (நிலையா) யிருக்கும். எ - று. (இ-௬-க-ம்) பிரமாணுசந்தானங்களின் சாரங்களைச் சுருக்கமாகக்கூறினதாம்..... .... (௬)

(அ-கை.) அனுசந்தானத்திற்குரியகுணத்தையறிவித்தல். (கவி) தாமதத்துடனிராசதஞ்சாத்திகமென்னு, நாமமுக்குணப்பிறவியுமுயற்சியானன்னுஞ், சேமமுத்தியைச்செய்திடுஞ்சாத்திகச்செய்கை, யிராமவுத்தமராகவவென்றுமீட்டுரைப்பான்.

(இ-ள்.) தாமதத்துடன் - தாமதகுணத்தோடும்—இராசதம் - இராசதகுணமென்றும்—சாத்திகமென்னும் - சாத்துவிதகுணமென்றுஞ்சொல்லப்பட்ட—நாமம்- பெயரையுடைய—முக்குணம்-மூன்றுகுணங்களாகிய—பிறவியும்-சநநமும்—முயற்சியானன்னும்- எத்தனத்தாலடையும்—சேமமுத்தியை - பரமசுகமானமோக்ஷத்தை—சாத்திகச்செய்கை - சாத்திகத்தொழிலானது—செய்திடும்- செய்விக்கும்—இராமவுத்தமராகவவென்று—உத்தமமானஸ்ரீராமாவென்று(சொல்லி)—மீட்டுரைப்பான் - திரும்பவும்வசிஷ்டர்சொல்லுவார். எ - று. (இ-ம்) பவமாய்விளங்குங்குணங்களை நீக்கிச்சிவமாயிருக்குங்குணத்தையறிவித்ததாம்...... .... (௭)

ஸ்திதிப்பிரகரணம் முற்றிற்று. ௮ கதை-௰அஇ-கவிதை (௭௱௬௬)

உபசாந்தப்பிரகரணத்தில்

சனகராசன் கதை.

(அ-கை.) முற்பிரகரணத்திற் சித்துவிலாசமே சகமெனவிளங்குமென்பதை நன்றாயுணர்த்தி, அச்சித்தேசகமாகவிளங்குதலால்அச்சகமெப்போதுமின்றெனத்தெரிவிக்குநிமித்தமொன்பதுகதைகளானிறைந்த வுபசாந்தப்பிரகரணங்கூறத்தொடங்கி மனவுபசமுணர்த்தஞ் சனகராசன்கதையை நிரூபிக்கிறார் .... *

(அ-கை.) சர்வம்பிரமமயமென்பதைப்போதித்து, அச்சர்வந்திரிகுணாத்மகமென்றுரைத்தல். வேறு. (கவி) சுரர்குருவின்மகனுரைத்தபடியேயிவ்வுலகெலாஞ்சொரூபமாகும், விரவியநீள்பிறப்பிறப்பாமிகுமாயையிராசததாமதத்தைமேவும்,புருடர்தரித்திடவற்றாய்த்தூண்சுமக்குமண்டபமேபோலநிற்குந், திரமுளசத்துவகுணத்துன்போல்வார்கள்சநநபயந்தீர்ந்துநிற்பார் .... *

(இ-ள்.) சுரர்குருவின் - தேவகுருவின்—மகனுரைத்தபடியே - புத்திரனாகியகசமுனிசொல்லியப்ரகாரமே —இவ்வுலகெலாம்- இச்சகங்களனைத்தும்—சொரூபமாகும்-ஆத்மஞானஸ்வரூபமாம்—விரவிய - கலந்த—நீள்பிறப்பிறப்பாம் - மிகுந்தசநநமரணமென்னும்— மிகுமாயை - மிகுந்தமாயையானது—இராசததாமதத்தை - இராசததாமதமென்னுங்குணங்களை—மேவும்புருடர் -பொருந்தியபுருஷர்கள்—தரித்திடவற்றாய் - தரிக்கத்தக்கதாய்— தூண்சுமக்குமண்டபமேபோல - தூணகள்தாங்குகின்றமண்டபத்தைப்போல—நிற்கும்- நிலையாயிருக்கும—திரமுளசத்துவகுணத்து -,திரமானசாத்துவிதகுணத்தையுடைய— உன்போல்வார்கள்-உன்னையொத்தவர்கள்—சநநபயத்தீர்ந்துநிற்பார் -பிறவியச்சநீங்கியிருப்பார்கள். எ-று.....(௧)

(அ-கை) பிரமத்திலெதார்த்தமாய்ச்சர்வமுமின்றெனல் (கவி) வழுவறுசத்துவகுண
த்தோர்தோலுரிக்குமரவென்னமாயாபாச, நழுவுவரெல்லாம்பிரம நாமதுவேயெ
ன்றெண்ணிநாமும்வேறே, முழுதுலகம்வேறென்னுமோக மொழிப்பாய்பிரமமூ
லச்சித்தி, லெழுவனகற்பனையெல்லாங்கடலிலலைபோலமெய்யாயில்லையன்றே...... *

(இ-ள்.) வழுவறுசத்துவகுணத்தோர் - குறைவற்றசாத்துவிதகுணத்தையுடையவர்கள்—தோலுரிக்குமரவென்ன-சருமத்தையுரிக்கின்றசர்ப்பத்தைப்போல— மாயாபாசநழுவுவர்-மாயாபாசத்தினின்றுநீங்குவர்கள்—எல்லாம்பிரமம்- சமஸ்தமும்பிரமம் — நாமதுவேயென்றெண்ணி - நாமுமந்தப்பிரமமேயென்றுசிந்தித்து—நாமும்வேறு - யாமும்வேறு—முழுதுலகம்வேறென்னும் - சகலசகங்களையும்வேறென்கின்ற—மோகமொழிப்பாய்-மயக்கத்தைக்கெடுப்பாய்—பிரமமூலச்சித்தில் - காரணமானஞானத்தில் — எழுவன - உண்டாகின்றனவாகிய—சற்பனையெல்லாம் - கர்பனைகளியாவும்—கடலிலலைபோல - சமுத்திரத்திலுண்டாகியதிரையைப்போல—மெய்யாயில்லை - உண்மையாகவில்லை. எ-று... (உ)

(அ-கை.) பிரமமேயுண்டென்றறிந்து வேறுண்டென்பதைச் சத்துவகுணத்தாற்கெடுப்பாயெனல் (கவி) சோகமிலைமோகமிலைபிறப்பில்லைபிறப்பிறப்பிற்சுழல்வாரில்லை,
யேகமெனவிங்கென்றுமுள்ளபொருளேயுள்ளதிரங்கவேண்டா, மூகமுறவருவன
போவனநினையேற்றொந்தனைகளொன்றுமில்லா, மாகனசத்துவகுணத்தோடொரு
வனுயிடரெல்லாமாற்றிநிற்பாய்.. *

(இ-ள்.) சோகமிலை- துன்பமில்லை—மோகமிலை - இன்பமுமில்லை—பிறப்பில்லை - சநநமுமில்லை—பிறப்பிறப்பிற்சுழல்வாரில்லை - சநநமரணமென்னுஞ் சுழலில்சுழல்பவர்களுமில்லை—ஏகமென - ஒன்றென்று—இங்கென்றும் - இவ்விடத்திலெப்போதும்—உள்ளபொருளேயுள்ளது- இருக்கின்றவஸ்துவேயிருக்கின்றது—இரங்கவேண்டாம் - விசனப்படவேண்டுவதில்லை—ஊகமுற - (அனுபவ)யுத்திபொருந்தும்படி—வருவன - வருபவைகளையும்—போவன-போவனவைகளையும்—நினையேல் - சிந்திக்காதே — தொந்தனைகளொன்றுமில்லா - (இராகத்துவேஷமென்னுந்) துவிதங்களொன்றுமில்லாத— மாகனசத்துவகுணத்தோடு - மிகவுமேன்மையாகியசாத்துவிதகுணத்துடன்—ஒருவனாய் - ஏகனாய் — இடரெல்லாம் - துக்கங்களனைத்தையும்—மாற்றிநிற்பாய் - நீக்கிநிற்பாய். எ-று ....(௩)

(அ - கை.) பிரமமாய்நின்று யானெனதென்கின்ற துன்பத்தைக்கெடுக்கவேண்டுமெனல்.(கவி)சமமாகிச்சொருபத்தேநிலையாகித்திரமதியாய்ச்சாந்தனாகி,யமர்மன
னமௌனியாய்நன்மணிபோற்றெளிந்துதுயரனைத்துந்தீர்வாய், நிமலமுறநிகழ்கா
லத்தொழிற்செய்தியாவையினுநேயமின்றி,நமதெனக்கொள்ளுதல்விடுதலிரண்டுமற
றத்துன்பமெலாநாசஞ்செய்வாய்.. *

(இ-ள்.) சமமாகி - (சர்வத்திர)சமமாய் — சொருபத்தேநிலையாகி - (ஆத்மஞான)ஸ்வரூபத்தில்நிச்சயமுடையவனாய்—திரமதியாய்-திடஞானமுள்ளவனாய்—சாந்தனாகி - உபசாந்தனாய்—அமர்மனமௌனியாய் - பொருந்தினமனதையுடையமௌனியாகி—நன்மணிபோற்றெளிந்து - நல்லவிரத்தினத்தைப்போலத்தெளிவையடைந்து—துயரனைத்துந்தீர்வாய்- துன்பங்களியாவையும்விடுவாய்—நிமலமுற - நிருமலமானதுபொருந்த— நிகழ்காலத்தொழிலியாவையினும்- வர்த்தமானகாலத்தொழில்களனைத்திலும்—நேயமின்றி- இச்சையில்லாமல்—செய்தி- செய்வாய்—நமதெனக்கொள்ளுதல் - எனதென்றுகொள்ளுதலும் —விடுதல்- விடுதலும்—இரண்டுமற - (இவ்) விரண்டுமில்லாமல் — துன்பமெலாநாசஞ்செய்வாய் - துயரனைத்தையும் (ஸ்ரீராமா நீ) கெடுப்பாய். எ-று. (இ - ச - க - ம்) சர்வம்பிரமமயமாய் விளங்குவதேயன்றிவேறன்றென்பதாம்..(௪)

(அ-கை.) பிரமானுபவமூதிக்கும் பக்குவமறிவித்தல். (கவி) இனிப்பிறவாமுடிவானபிறப்
பிலெமெய்ஞ்ஞானமெளிதிலுண்டாம், பனிச்சுடர்வெண்ணித்திலங்களுத்தமமாமூங்கிலல்
லாற்படுவதுண்டோ, செனித்தவரின்மேலோராய் நல்லோராய்மித்திரராய்த்தெளிந்தோ
ராகி, யனித்தமறுமுத்தராய் ஞானிகளாங்குணமெல்லாமவரைச்சேரும் .... *

(இ-ள்.) இனிப்பிறவா - மேற்சநநமில்லாத—முடிவானபிறப்பில் - அந்தமானசநநத்தில்—மெய்ஞ்ஞானம் - ஆத்மஞானமானது —எளிதிலுண்டாம் - எளிதிலுதயமாம்— பனிச்சுடர் வெண்ணித்திலங்கள் - குளிர்ந்தப்ரகாசத்தையுடையவெண்முத்துகள்—உத்தமமாமூங்கிலல்லால்- உத்தமமானவேணுவையன்றி — படுவதுண்டோ - உண்டாவதுண்டோ — செனித்தவரில்-பிறந்தவர்களில்—மேலோராய் - மேன்மையுள்ளவர்களாகியும்—நல்லோராய் - நன்மையுள்ளவர்களாகியும்—மித்திரராய் - அன்புள்ளவர்களாகியும் — தெளிந்தோராகி - தெளிந்தவர்களாகி

யும்—அனித்தமறுமூத்தராய் - நித்தியமானசீவன்முத்தர்களாகியும் — ஞானிகளாம் - (ஆத்ம) ஞானிகளாகியுமிருக்கின்ற — குணமெல்லாமவரைச்சேரும் - குணங்களம்முடிவானபிறப்புள்ளவர்களைச்சேரும். எ-று .... (ரு)

(அ-கை.) பவந்தீர்ப்பசற்கிரண்டுமார்க்கமுண்டெனல். (கவி) மெத்தென்றசரித்திரத்தினவர்தமமையுலகெலாம்விரும்புந்தன்மை, கொத்தொன்றுவனமூங்கிற்குழலிசையான்மகிழ்விலங்கின்கூட்டம்போலு, மித்தன்மையாவருக்கும்பொதுமையினலியம்பியதாமிதனில்வேறுஞ், சத்தென்றவழியிரண்டேழ் பவந்தீர்ப்பவர்க்கவற்றைச் சாற்றக்கேண்மோ ...*

(இ-ள்) மெத்தென்றசரித்திரத்தின் - மிருதுவானநடையுள்ள—அவர்தம்மை - அச்சத்துக்களை—உலகெலாம் - சகமனைத்தும்—விரும்புந்தன்மை - விரும்புகின்றகுணமானது—வனம் - காணகத்தில்—கொத்தொன்று - ஒருகொத்தில்—மூங்கிற்குழலிசையால் - வேணுவினாற்செய்தபில்லாங்குழலினதிராகத்தினல் — மகிழ்விலங்கின்கூட்டம்போலும் - களிக்கின்றபசுவினிரையைப்போலும்—இத்தன்மை - இக்குணமானது— யாவருக்கும் - சகலருக்கும்— பொதுமையினல் - பொதுவாக—இயம்பியதாம் - சொல்லியதாம்—இதனில்வேறும் —இக்குணங்களிற்றனிமையாக—ஏழ்பவந்தீர்ப்பவர்க்கு - எழுவகைப்பிறப்பையுங்கெடுப்பவர்களுக்கு—சத்தென்றவழியிரண்டு - மோக்ஷமார்க்கமிரண்டு — அவற்றைச்சாற்றக்கேண்மோ - அம்மார்க்கஞ்சொல்லக்கேளும். எ - று .... (௬)

(அ-கை.) சத்மார்க்கமிரண்டிற் சுளுவென்பதையும் பளுவென்பதையும் பகுத்துக்கூறல். (கவி) தேசிகன்சொற்பிழையாமலனுட்டிக்கிற்பையப்பையத்தியக்கநீங்கிப், பேசியசென்மத்தாதலடுத்தசிலபிறப்பினலாதல்பேறும், மாசறுவிற்பத்திசிறிதுண்டாகுமனத்தாற்றன் மனனத்தாலே, பேசறுமாகாசபலம் வீழ்வதுபோன்மெய்ஞ்ஞானமெளிதிலுண்டாம் .... *

(இ-ள்.) தேசிகன்சொல் - ஆசாரியருபதேசவாக்கியங்கள்— பிழையாமலனுட்டிக்கில் - தவறுமலப்பியாசஞ்செய்யில் — பையப்பையத்தியக்கநீங்கி - மெல்லமெல்லமயக்கம்விட்டு—பேசியசென்மத்தாதல் - (ஆசாரிய)ரனுக்கிரகஞ்செய்தசென்மத்திலாவது — அடுத்தசிலபிறப்பினல் - (அதற்)கடுத்தசிலசநநங்களிலாவது —ஆதல்பேறும் - (வீ) டானதுண்டாம்—மாசறுவிற்பத்தி - களங்கமற்றவிற்பன்னமானது—சிறிதுண்டாகும் - கொஞ்சமுண்டாகிய — மனத்தால் - மனதினல்—தன்மனனத்தால் - தான்மனனஞ்செய்வதினல்—ஏசறுமாகாசபலம் - குற்றமற்றவியோமக்கனியானது — வீழ்வதுபோல் - விழுவதைப்போல— மெய்ஞ்ஞானமெளிதிலுண்டாம் - உண்மைஞானமெளிதிற்கிடைக்கும். எ-று. (இ-௬-க-ம்) ஆசிரியர்வாக்கியப்படியனுசந்திரித்தலும், அவ்வாக்கியத்திற் சுயவிற்பத்தியுண்டா யனுசந்திரித்தலுமாகிய விரண்டையுமறிவித்ததாம் .... (எ)

(அ-கை.) ஞானஞ்சுளுவினுதித்தற்குத்திருஷ்டாந்தமறிவிக்கத்தொடங்குதல். (கவி) இவ்விரண்டிலாகாசபலம்போலமெய்ஞ்ஞான மியைந்ததன்மை, செவ்வியவள்ளான்முன்னோர்கதையாலேயான்செப்பத் திருந்தக்கேட்பாய், தெவ்வுலகிலாபத்தென்றென்றுமிலோன்விதரணத்தோன்செல்வமிக்கோன், வவ்வியமில்விதேசனடரசாள்வோன்சனகனெனுமரசர்கோமான் .... *

(இ-ள்•) இவ்விரண்டில் - இந்தவிரண்டு(மார்க்கத்தில்) —ஆகாசபலம்போல - ஆகாயக்கனியைப்போல—மெய்ஞ்ஞானம் - தத்துவஞானமானது — இயைந்ததன்மை - பொருந்தியகுணத்தை—செவ்வியவள்ளால் - நல்லவுதாரத்தையுடையவிராமா—முன்னோர்கதையால் - முன்னடந்தவொருகதையினல்—யான்செப்ப - நான்சொல்ல—திருந்தக்கேட்பாய் - (மனந்)திருந்தும்படிகேள்—தெவ் - சத்துருவினல் — உலகிலாபத்தென்றென்றுமிலோன் - சகத்திலாபத்தென்பதொன்றுமில்லாதவன்—விதரணத்தோன் - உதாரத்தையுடையவன்—செல்வமிக்கோன் - செல்வத்தின்மிகுந்தவன்—அவ்வியமில் - பொறாமையில்லாத—விதேகநாடு - விதேகமென்னும்பூமியை—அரசாள்வோன் - அரசாட்சிசெய்பவன்—சனகனெனுமரசர்கோமான் - சனகனென்னும்பெயரையுடையவிராசராசன். எ-று .... (அ)

(அ-கை.) சனகராசன்பக்குவமறிவித்தல். (கவி) சற்குணத்தாற்கடலனையான்சக்கரத்தானெனவுலகந்தாங்குநீரா, னற்றுணஞ்செய்வசந்தநாணறுமலர்சூழ்நந்தனத்தினயத்துமேவி, தற்குரியதந்திரர்கள்புறநிற்பத்தனியனுய்ச்சரிக்கும்வேலைச், சிற்குரியமனமுடையசித்தர்கணம்பாடுவபன செவியிற்கேட்டான் .... *

(இ-ள்.) சற்குணத்தால் - சற்குணத்தில்—கடலனையான் - சமுத்திரத்துக்கொப்பானவன்—சக்கரத்தானென - விஷ்ணுவைப்போல—உலகந்தாங்குநீரான் - பூமியையிரக்ஷிக்கின்றகுணத்

தையுடையவன்—நற்குணஞ்செய்வசந்தநாள்-நல்லகுணங்களைச்செய்கின்றவசந்தகாலத்தில்—நறுமலர்சூழ்நந்தனத்தில்-வாசனையுள்ளபுட்பங்கணிறைந்தசிங்காரவனத்தில்—நயர்தும்மேவி-சந்தோஷித்துடன்போய்— தற்குரியதந்திரர்கள்புறநிற்ப - தனக்குரியமந்திரிமுதலியசேனைகள் வெளியினிற்க—தனியனாய்ச்சரிக்கும்வேலை - தனித்துச்சஞ்சரிக்கின்றசமயத்தில் — சிற்குரிய மனமுடைய - சித்துக்குரித்தானமனதையுடைய— சித்தர்கணம்பாடுவபண்-சித்தர்குழாங்கள் பாடுங்கீதங்களை— செவியிற்கேட்டான்- காதிற்கேட்டான். எ-று.. (இ-உ-க-ம்) மகான்களனுபவஞ் சனகனுக்குச் சிரவணமாயிற்றென்பதாம் .... (௯)

(அ-கை.) இருக்குவேதமகாவாக்கியார்த்தநிரூபணம். (கவி.) வெறியாரும்பொருப்புறையோர் விழிப்புலத்தின்மேவாதோர்விளம்புகீத, நெறியார்மன்னவன்கேட்டபடியுரைப்பநெடியவனேநினைவிற்கொள்வா, யறிவானுமறிபொருளுங் கூடியகூட்டரவிலெழுமறிவாநந்தம், பிரியாதவான்மதத்துவத்தெழுந்த தாமதனைப்பேணல்செய்வாம்............ *

(இ-ள்.) வெறியாரும் - வாசனைநிறைந்த—பொருப்புறைவோர் - மலையிலிருப்பவர்கள்—விழிப்புலத்தின்மேவாதோர்-நேத்திரவிஷயத்திற்பொருந்தாத(சித்தர்கணங்கள்)—விளம்புகீதம் - (தங்களனுபவத்தைப்)பேசாநின்றகீதையை—நெறியார்மன்னவன்- நீதிகணிறைந்தசனகராசன்—கேட்டபடியுரைப்ப - கேட்டவண்ணமே(யாஞ்)சொல்ல—நெடியவனே-ஸ்ரீராமா—நினைவிற்கொள்வாய்- மனதிற்றரிப்பாய்—அறிவானும் - ஞாதாவும் —அறிபொருளும்- திரிஸ்யமும்—கூடியகூட்டரவிலெழும் - கூடுங்கூட்டத்திலுண்டாகின்ற—அறிவாநந்தம்- ஞானசுகமானது—பிரியாத - பிரிவுபடாத — ஆன்மதத்துவத்தெழுந்ததாம் - ஆத்மஞானத்திலுண்டானதாம்—அதனை - அவ்வாத்மஞானசுகத்தை —பேணல்வேண்டும்- விரும்பவேண்டுமென்(றொரு சித்தர்சொன்னார். எ-று. [ப-ம்] ப்ரஞ்ஞானமென்பார், அறிவானென்றும், பிரமமென்பார்; அறிபொருளென்றும், இவ்விரண்டுங்கூடிநசித்தவிடத் ததித்ததுகூடஸ்தபிரமமென்பார், கூட்டரவிலெழுமறிவாநந்தமென்றும், அறிவு ஆநந்தமின்றிவிளங்காமையால்,அவ்வறிவேயாநந்தமும், ஆநந்தம் அறிவையன்றியாநந்தியாதபடியால், அவ்வாநந்தமே யறிவுமாய்ப் பிரிவற்று விளங்கியதானென்பார், பிரியாதவாத்மதத்துவத் தெழுந்ததாமென்றுங்கூறினார், அறிபொருளென்பதை, ஈசனாருவெனக்கொள்க, ... (௰)

(அ-கை.) எசுர்வேதசாமவேதமகா வாக்கியார்த்தநிரூபணம். (கவி) காண்பானுங்காண்பனவுங் காட்சியும்வாதனையுடனேசழலவிட்டுச், சேண்பாவுகாட்சிக்குமுதலொளியாமச்சொருபஞ்சிந்தைசெய்வா, மேண்பாலாமுள்ளதிலதெனுமிரண்டினிடையெய்தியிறவிலாதாய், மாண்பானவொளிக்கெல்லா மொளியாயசொரூபத்தை மதித்தல்செய்வாம்........ *

(இ-ள்.) காண்பானும் - ஞாதாவும்—காண்பனவும் - திரிஸ்யமும் —காட்சியும்-ஞானமும்—வாதனையுடன்- வாசனையோடும்—சழலவிட்டு - நீங்கச்செய்து— சேண்பாவுகாட்சிக்கு-உயர்வானபார்வைக்கு—முதலொளியாம் - முதற்ப்ரகாசமாகிய—அச்சொருபம்- அவ்(வாத்ம)ஸ்வரூபத்தை—சிந்தைசெய்வாம் - தியானஞ்செய்வோமென் (றொருசித்தரும்) — ஏண்பாலாம்- நிலையானகுணமுடைய—உள்ளதிலதெனும் - சத்தசத்தென்னும்—இரண்டினிடையெய்தி- இரண்டினமிவான (வியாபகத்தை) யடைந்து — இறவிலாதாய் - முடிவில்லாததாய்—மாண்பானவொளிக்கெல்லாம் - மாட்சிமையானப்ரகாசங்களுக்கெல்லாம்— ஒளியாயசொரூபத்தை - ப்ரகாசஞ்செய்விப்பதாகிய(வாத்மஞான)ஸ்வரூபத்தை—மதித்தல்செய்வாம் - சிந்திப்போமென் றொருசித்தர்சொன்னார்.) எ-று. [ப-ம்] அகமென்பார், காண்பானென்றும், பிரமமென்பார், காண்பன, வென்றும், அஸ்மியென்பார், காக்ஷியென்றும், இம்மூன்றினசுத்தமான சீவேஸ்வரபிரமத்தோடும், இவற்றின்சுத்தமான கூடஸ்தபிரமவயிக்கியத்தை நீக்கென்பார், வாதனையுடனேசழலவிட்டென்றும், இவையாவுமாய்விளங்குவது ஸ்வயம்ப்ரகாசமென்பார், முதலொளியாமென்றுங்கூறிப்பின்பு, தற்பதமென்பார், உள்ளதென்றும்,தொம்பதமென்பார், இலதென்றும், அசிபதமென்பார், இரண்டினிடையெய்தியென்றும், இச்சீவேஸ்வர கூடஸ்தபிரமமென்கின்றநான்குசைதன்யமுநீங்கின சுயஞ்சைதன்யமென்பார், ஒளிக்கெல்லாமொளியாய சொரூபமென்றுங்கூறினார், இலதென்பதை, சீவசிதாபாசனென்க.. .... (௰௧)

(அ-கை.)அதர்வணவேதமகாவாக்கியார்த்தநிரூபணஞ்செய்துஇவைகளைத்தவிரவேறனுபவங்கூடாதெனல். (கவி) அகமகமென்றனைத்துயிரினிடத்துமிருந் தனவரதமுரைப்பதாகி, நிகழொளியாயான்மதத் துவமானசொரூபத்தை நினைத்தல்செய்வாந், திகழிதயகுகையுறையுந்தேவதையைவிட்டயலேதெய்வந்தேடன், மிகவரியகவுத்துவத்தைவெறிந்துசிறுமணிதேடும்வேட்கைபோலாம்..................... *

(இ-ள்.) அகமகமென்று - நானென்றும் — அனைத்துயிரினிடத்துமிருந்து - சகலவாத்மாக்களிடத்துமிருந்து — அனவரதமுரைப்பதாகி - சதாகாலமுஞ்சொல்லுவதாய் — நிகழொளியாய் - ப்ரகாசமாகவிளங்காநின்ற — ஆன்மதத்துவமானசொரூபத்தை - ஆத்மதோமாகிய வஸ்துவை — நினைத்தல்செய்வாம் - சிந்திப்போமென் (ஒருசித்தர்சொன்னார்) — நிகழ்நிதய ருமைகபுறைபும் - விளங்காநின்ற (தன) துளத்திலெழுந்தருளியிருக்கும் — தேவதையையவிட்டு தெய்வதவைதவிட்டு — அயலில்தெய்வத்தேடல் - வேறுணதெய்வத்தேடுதல் — மிகவரியவுத்து வத்தைபெற்றிருந்து - மிகவுமருமையான (கையிலிருக்கும்) வஸ்துவரத்தினத்தைபெற்றிருந்து — சிறுமணிதேடும் - சங்குமணிதேடுகின்ற — வேட்கைபோலாம் - ஆசையையொத்திருக்கும். எ-று. [ப-ம்] அயமென்பார், அகமகமென்றனைத்துயிரினிடத்திருந்துமென்றும், ஆத்மாவென்பார், அனைத்துமியொன்றும், இவ்விரண்டாகியும் விளங்குகின்ற பிரமமென்பார், நிகழொளியாமாத் துமதத்துவமான சொரூபமென்றுங் கூறினார், அனைத்துயிரினிடத்து மிருந்தென்றதை ஊஸ்வயபதமெனக்கொள்க .... (௰௨)

(அ-கை.) நிராசையுள்ளவர்க்குஇவ்வனுபவங் கிடைக்குமேயன்றிமற்றில்லாதவர்க்கின்றெனல். (கவி) மாளாதகாதலெனும் வர்ச்சருபிக்கொடியின்வனத்தைச்சுட்டு, நீளாசையனைத்துமறுத்தவர்க்கன்றேவிப்பயன்றானேராநிற்கும், கோளானபொருளனைத்தின் முன்பொடுபின் பிணிமையிலாக் குற்றங்கண்டு, மீளாதபாவனையாற் கட்டுண்பார்வேசரியேவேறென்றன்றால் .... *

(இ-ள்.) மாளாதகாதலெனும்-முடிவில்லாதவாசையென்கின்ற — வர்ச்சருபிக்கொடியின் - விடவல்லியின் — வனத்தைச்சுட்டு - காட்டையெரித்து — நீளாசையனைத்தும்- மிகுந்தவிச்சைகளியாவையும் — அறுத்தவர்க்கன்றே - கெடுத்தவர்களுக்கல்லவா — இப்பயன்றான் - இவ்வாத்மவிலாபமானது — நேராநிற்கும் - கிடைக்கும் — கோளானபொருளனைத்தின் - தீமையான வஸ்துக்களனைத்திலும் — முன்பொடுபின்பிணிமையிலா - முன்னும்பின்னுமின்பமில்லாமலிருக்கின்ற — குற்றங்கண்டும் - குற்றத்தைப்பார்த்திருந்தும் — மீளாதபாவனையால் - திரும்பாத பாவனையினால் — கட்டுண்பார் - பந்தப்படுபவர்கள் — வேசரியே - கர்த்தப (மேயல்லாமல்) — வேறென்றன்று - வேறொன்றுமல்ல. எ-று .... (௰௩)

(அ-கை.) மன்றுவிஷயசுகத்தை நீக்கிப் பிரமசுகத்தை யடையவேண்டுமெனல். (கவி) எழுந்தெழுந்துசீறுகின்ற விந்திரியப்பாம்புகளை யிதயந்தன்னி, லழுந்து விவேகத்தடியால்வச்சிரங்கொண்டிந்திரன்வெற்படர்வதென்ன,விழுந்திடமோதுறவேண்டுஞ் சாந்தியினாற்சமமேவி யிடர்தீர்நெஞ்ச, முழுந்துசுக வடிவாந்தற் பதநிலையைப்பெறுமிதுவேமுத்தியென்ன .... *

(இ-ள்.) எழுந்தெழுந்துசீறுகின்ற - எழும்பியெழும்பிச்சீறுநின்ற — இந்திரியப்பாம்புகளை - இந்திரியமென்னுஞ்சர்ப்பங்களை — இதயந்தன்னில்- மனதினிடத்தில் — அழுந்துவிவேகத்தடியால் - உறுதியானவிவேகமென்னுந்தண்டினால் — இந்திரன் - தேவேந்திரன் — வச்சிரங்கொண்டு - வச்சிராயுதத்தைக்கொண்டு — வெற்படர்வதென்ன - மலைகளைப்புடைப்பதுபோல — விழுந்திடமோதுறவேண்டும் - கெடும்படியாகவடிக்கவேண்டும் — சாந்தியினாற்சமமேவி- உபசாந்தத்தினாற்சமபாவத்தையடைந்து — இடர்தீர்நெஞ்சம்- துன்பமில்லாதமனமானது — முழுந்துசுகவடிவாம் - முழுதுஞ்சுகாகாரமான — தற்பதநிலையைப்பெறும் - தனதாத்மஸ்வரூபஸ்திதியைப்பெறும் — இதுவேமுத்தியென்ன - இதுவேமோக்ஷமென்று (பலசித்தர்) சொன்னார்கள். எ-று. முழுதுமென்பது, முழுந்தெனவிகாரமாயிற்று. (இ-ரு-க-ம்) நிஷ்காமபுண்ணியபரிபாகத்தினாற் சித்தசுத்தியும், அச்சித்தசுத்தியாற்சாதனசதுஷ்டயமும், அச்சாதனசதுஷ்டயத்தான் முத்தியையடைவதற் கதிதீவரமுண்டா யேகாந்தனாயிருக்குஞ்சமயத்தி லாதிவாகசரீரியானசித்தர்களுசாவிக்கொண்டிருந்த மகாவாக்கியார்த்தங்களவனுக்குச் சிரவணமாய் அதனால் மனனநிதித்தியாசனஞ்சமாதி சாக்ஷாத்காரமுண்டாகும்பொருட்டு ஆத்மவிசாரத்தையறிவேகுருவாய்நின்றுணர்த்தியதாம் .... (௰௪)

(அ-கை.) அவ்வனுபவம்விளங்குநிமித்தம்விசாரத்திற்குஆரம்பித்தல். (கவி) தெளிவுடையசித்தர்கணந்திகழ்வுறப்பாடியகீதந் தெளியக்கேட்டுக், களிதருவெஞ்சினக்கருடனொலிகேட்ட பாம்பெனக் கலங்கிமன்னன், குளிர்பொழிலின் றகமடைந்தானவரையும் விடைகொடுத்துக் கோயில்புக்கா, னளிர்சுதைசெய் மேனிலத்திலொருவனேயிருந்துதனிநாடலுற்றான் .... *

(இ-ள்.) தெளிவுடையசித்தர்கணம் - தெளிவையுடையசித்தர்குழாங்கள் — திகழ்வுற - விளக்கமாக — பாடியகீதம் - பேசியவனுபவார்த்தங்களை — தெளியக்கேட்டு - தெளிவாககே

ட்டு—களிதரு - செருக்குகின்ற—வெஞ்சினக்கருடன் - கொடியகோபமுள்ளகருடனது—ஒலி கேட்டபாம்பென்ன - சத்தத்தைக்கேட்டசர்ப்பத்தைப்போல—மன்னன்கலங்கி - சனகராசன் கலக்கமுற்று—குளிர்பொழினின்று - குளிர்ச்சிபொருந்தியசிங்காரவனத்திலிருந்து — அகமடைந்தான் - தனதரண்மனைக்குவந்து—அனைவரையும்விடைகொடுத்து - மந்திரிமுதலியயாவர்க்குமுத்தரவுகொடுத்து—கோயில்புக்கான் - தனதுவீட்டிற்புகுந்து — நளிர்சுதைசெய்-குளிர்ந்தசுண்ணச்சாந்தினாற்செய்த—மேனிலத்தில் - மேலுப்பரிகையில்—ஒருவனேயிருந்து-தனியனாயிருந்து — நனிநாடலுற்றான் - (முன்சிரவணமானவருத்தத்தை) மிகவும்விசாரிக்கத்தொடங்கினான். எ-று. (இ-ம்) ஆத்மாநாத்மவிசாரணைசெய்யத்தொடங்கினதாம் … ….. (௰௫)

(அ-கை.) லோகாசாரதூஷணம். (கவி) பறக்கின்றபறவைகளின் சிறகென்னவன
வரதம்பதைத்துலாவி, யிறக்கின்றவுலகநடை நோக்கிவாய்விட்டிரங்கி யியம்ப
லுற்று, னறக்கன்றியவத்திலுழன்றலமருமிவ்வுலகிடையா னந்தோவந்தோ, திறக்
கின்றமயக்கத்தாற்கல்லிடைகற்போலுருண்டுநெரிந்தேனந்தோ….. ……………… *

(இ-ள்.) பறக்கின்றபறவைகளின்சிறகென்ன - பறக்கின்றபக்ஷிகளினிறகைப்போல—அனவரதம்பதைத்துலாவி - சதாகாலமும்பதைத்தலைந்து — இறக்கின்றவுலகநடைநோக்கி-நசிக்கின்றசகத்தினடையைப்பார்த்து—வாய்விட்டிரங்கி-வாய்விட்டழுது—இயம்பலுற்றான்-சொல்லத்தொடங்கினான்—அறக்கன்றி- மிகவுநைந்து—அவத்திலுழன்று - அவத்தைகளிற்சுழன்று—அலமருமிவ்வுலகிடை - சஞ்சலப்படுமிச்சகத்தினிடத்தில்— யான் - நான் — அந்தோவந்தோ - ஆச்சரியமாச்சரியம்—திறக்கின்றமயக்கத்தால் - அதிகரிக்குமயக்கத்தினால்— கல்லிடைக்கற்போல்- (பெருங்) கல்லின்மத்தியிலுற்ற (பொடிக்) கற்களைப்போல—அந்தோவுருண்டுநெரிந்தேன் - அதிசயஞ்சுழன்றுவருந்தினேன். எ-று … ……… (௰௬)

(அ-கை) ஆயுள்தூஷிடணம்(கவி) காலமொருகான்முடியாதிதனிடையெண்ணூறாண்
டோர்கணமுமில்லைச், சாலவிதுதனைமதித்து வன்காத லிடைவீழ்ந்து தளர்வதே
னான், றூலமதியாற்கெட்டவெனைப்போலவீனரார்சொல்லற்பாற்றே, சீலமறுவா
னாளைப்பெரிதாகநினைவதேசீசீயந்தோ…… …………… *

(இ-ள்.) ஒருகான்முடியாது - ஒருகாலமுமுடியாமலிருக்கின்ற—காலம் - காலதத்துவமான—இதனிடை -இதனிடத்தில்—எண்ணூறாண்டு - எண்ணிக்கையுள்ள(வெனதாயுளென்னு) நூறுவருஷமானது—ஓர்கணமுமில்லை - ஒருக்ஷணநேரமுமில்லை—இதுதனை - இந்தவாயுளை—சாலமதித்து - மிகவும்பெரிதாகநிச்சயித்து—வன்காதலிடைவீழ்ந்து - வலிமையுள்ளவாசையினிடத்தில்விழுந்து—நான்றளர்வதேன் - யான்றளர்ச்சியடைவதென்ன — தூலமதியாற்கெட்ட - தூலபுத்தியினாற்கெட்ட—எனைப்போலவீனரார் - என்னைப்போலவிழிவுள்ளவர்களார்—சொல்லற்பாற்றே - கூறத்தக்கதோ—சீலமறுவாநாளை - ஒழுங்கில்லாதவாயுளை — பெரிதாகநினைவது - கனமாகநினைவது—அந்தோசீசீ - அய்யோசைசை. எ-று …………… (௰௭)

(அ-கை.) இராஜபோகதூஷணம். (கவி) எல்லையிலாவண்டத்தி லியானாளும்புவி
நோக்கிலிறையுமில்லை, யல்லலுறுமிதுபெரிதாவாதரித்துநிற்பதேயந்தோவந்தோ,
புல்லிமையத்தினிதாகியுதாரமாச் செயப்படாப்பொருளீதென்னத், தொல்லுலகி
லொருபொருளுங்காணேனித்தொடர்ச்சிநிலையென்னேயென்னே………… *

(இ-ள்.) எல்லையிலாவண்டத்தில் - அளவில்லாதவண்டங்களில் — யானாளும்புவிநோக்கில் - நானாளுகின்றபூமியைப்பார்க்குமளவில்—இறையுமில்லை- அணுவளவுமில்லை —அல்லலுறுமிது - துன்பம்பொருந்தாநின்றவிச்சகத்தை— பெரிதாவாதரித்து - பெரியதாகவிரும்பி— நிற்பதேயந்தோவந்தோ - நிற்கின்றதேயாச்சரியமாச்சரியம்—புல்லிமையத்து-பொருந்துகின்றவிமைப்பில்—இனிதாகி-இனிமையாகியும்—உதாரமாய் -உதாரமாகியும்—செயப்படாத-செய்யப்படாததாகியுமிருக்கின்ற — பொருளீதென்ன - பொருளிதுவென்றுசொல்லும்படியான—தொல்லுலகில்-பழைமையாகியசகத்தில்—ஒருபொருளுங்காணேன் - ஒருவஸ்துவையாவதுகண்டிலன் — இத்தொடர்ச்சிநிலை - இத்தொடர்பாகியதன்மை — என்னேயென்னே-என்னவதிசயம். எ-று ………………… (௰௮)

(அ-கை.) போகதூஷணம், (கவி) தலைவர்தலைமேலுறைவோர் நாட்களினாற்றாழ்ந்
தோர்க்குத்தாழவீழ்வர், நிலையில்பெருமையையுமிதி நினைக்கின்றநெஞ்சேயின்னி
னைவிதென்ன, தொலைவில்பெரும்போகங்கள்பெரியோர்கள்கிளையோடுந்தோன்றித்
தோன்றி,புலைவுறமாண்டார்முன்னாளிந்நாளிங் கிவையனைத்திலுறுதியென்னே….. *

(இ-ள்.) தலைவர்- மேலானவர்களுக்கு—தலைமேலுறைவோர் - மேலாயிருப்பவர்களும்—நாட்களினால் - தினங்களினால்— தாழ்ந்தோர்க்குத்தாழ்வர் - கீழ்ப்பட்டவர்களுக்குங்கீழா

வார்கள்—நிலையில்பெருமையை - (இப்படி) நிலையில்லாதசெல்வத்தை—உறுதிநினைக்கின்றநெஞ்சே- உறுதியாகநினைக்கின்றமனமே—இன்னினைவிதென்ன- இன்னினைப்பென்னகாரணம் — தொலைவில்பெரும்போகங்கள் - நீங்காதமகாபோகங்களும்—பெரியோர்கள் - மகான்களும்—கிளையோடும் - சுற்றத்தோடும்—தோன்றித்தோன்றி - உண்டாகியுண்டாகி—முன்னாள்-முற்காலம்—உலைவுறமாண்டார் - சஞ்சலமுற்றிறந்தார்கள்—இந்நாள் - இப்பொழுது— இங்கிவையனைத்தின்- இவ்விடத்திலுள்ளவஸ்துக்களியாவிலும்—உறுதியென்- நிச்சயமென்ன. எ-று. (௰௯)

(அ-கை.) பிரமன்முதலியோர்பெருஞ்செல்வதூஷணம். (கவி) மண்ணுடுமன்னவருமவர்தனமுமாண்டன நுண்மணலையொக்கும், விண்ணுடுமிந்திரருமவர்வாழ்வும்போயினவிண்மீனையொக்கு, மெண்ணுடுபிரமருமண்டமும்பூதங்களுமிறந்தவெல்லையில்லைக், கண்ணுடுமவையெங்கே நின்வாழ்க்கைநிலையென்னே கவலுநெஞ்சே...... *

(இ-ள்.) மண்ணுடும் - பூலோகமும்—மன்னவரும் - (அதையாளு)மரசர்களும்—அவர்தனமும் - அவரதுசெல்வங்களும்—மாண்டன - நசித்தவைகள்—நுண்மணலையொக்கும்- நுட்பமானமணலுக்கொப்பாகும்—விண்ணுடும் - தெய்வலோகமும்—இந்திரரும் - (அதற்கரசராகிய) தேவேந்திரர்களும்—அவர்வாழ்வும் - அவரதுசெல்வங்களும் — போயின - மரித்தவைகள்—விண்மீனையொக்கும் - ஆகாயத்திலுடுக்களையொத்திருக்கும்—எண்ணுடும்- எண்ணிக்கையுள்ளசகங்களும்—பிரமரும் - பிரமர்களும்—அண்டமும் - அண்டங்களும்—பூதங்களும்- சீவகோடிகளும்—இறந்தவெல்லையில்லை - நசித்தளவில்லை—கவலுநெஞ்சே - வருந்துமனமே—கண்ணுடுமவையெங்கே - பார்க்கப்பட்டவைகளெங்கே — நின்வாழ்க்கைநிலையென்னே-உனது வாழ்க்கையினது நிலைமையென்ன. எ-று...................................(௨௰)

(அ-கை.) காலதூஷணம். (கவி) செல்லாதமாயையிருளிரவிலேதேகமயத்தியக்கமான, பொல்லாதநீள்கனவாஞ்சூனியத்திலிச்சையிறைபூண்டேனென்னிற், கல்லாதபுல்லியனேன்சிசீநானனவரதங் காணுநாட்க, ளெல்லாம்போயின போமாலிறவாதொன்றெனு நன்றுமெழினாட்காணேன்.......................... *

(இ-ள்.) செல்லாதமாயை - ஓர்பொருளாகச்சொல்லாதமாயையென்னும்— இருளிரவில்- இருண்டவிராத்திரியில்—தேகமயத்தியக்கமான - தேகாகாரமயக்கமென்னும்— பொல்லாதநீள்கனவாம் - கொடியநீண்டசொற்பனமாகிய—சூனியத்தில் - மித்தையில் — இச்சையிறைபூண்டேனென்னில - ஆசையற்பமவைத்தேனாயின்— கல்லாதபுல்லியனேன் - கற்காதகீழ்மகனேன்—சிசீ - சைசை—நானனவரதம் - யானெப்போதும் — காணுநாட்களெல்லாம்- காண்கின்றகாலங்களனைத்துப்—போயினபோம் - நசித்தேபோகும்— இறவாதொன்றெனும்- நசியாமலொன்றுவது—நன்றுமெழினாட்காணேன்-நன்மைபொருந்தியவழகுள்ளகாலத்தைப் பார்த்திலேன். எ - று...(௨௧)

(அ-கை.) தனதூஷணம். (கவி) நடுவின்முடிவினிலடியினன்றனபொருளொன்றுஞாலத்தில்லைப், படுபொருளெல்லாமிறப்பாமலத்தினாலேபூசப்பட்டதன்றே, கடுவினைகணாடோறுங்காய்துயரநாடோறுங் கனையொன்றில்லாக், கொடுமைகளைநாடோறுஞ்செய்கின்றாறிவிலார்குரம்பைக்கூத்தால்.............................. *

(இ-ள்.) நடுவில் - மத்தியிலாவது—முடிவினில் - அந்தத்திலாவது—அடியில் - ஆதியிலாவது—நன்றனபொருளொன்றும்- நன்மையாகியவஸ்துக்களொன்றுவது—ஞாலத்திலை- பூமியிலில்லை —படுபொருளெல்லாம் - உண்டானவஸ்துக்களியாவும்—இறப்பாமலத்தினால்-நாசமென்னுமலத்தினால்—பூசப்பட்டதன்றே - தடவப்பட்டதல்லவா — நாடோறும் - தினங்கடோறும்—கடுவினைகள் - கடுமையானபாவவிருத்திகளையும்—நாடோறும்- நாள்கடோறும்—காய்துயரம்- வருத்துகின்றதுன்பங்களையும்—நாடோறும்-நாள்கடோறும்—கனையொன்றில்லாக்கொடுமைகள் - ஓர்வரம்பின்றியதீமைகளையும்— அறிவிலார்குரம்பைக்கூத்தாற்செய்கின்றார் - மூடர்கள்சரீரநடனத்தாற்செய்கின்றார்கள். எ-று ....(௨௨)

(அ-கை.) புறப்பொருளைநியதிகளைந்திதற்காதாரமானபுறம்பிலுள்ளதேகத்தைநியதிசெய்வான்றொடங்கி, அதன்பருவங்களைத்தூஷித்தல். (கவி) பாலகனாயஞ்ஞானத்தழுந்துவனற்காளையாய்ப்பாவைமாராற், சாலவருந்துவன்விருத்தன்றானுங்குடும்பத்தாலுற்றளர்ந்துசாவ, னேலவிவனெக்காலத்தென்செய்வான்மாயக்கூத்திருந்தவாறே, ஞாலமெலாமாடரங்காய்ப்பொறிமேளமாய்மனப்பேய்நடிக்குமன்றே ... .. *

(இ-ள்.) பாலகனாய் - பாலப்பருவனாய்—அஞ்ஞானத்தழுந்துவன் - அஞ்ஞானத்திலழுந்துவான்—நற்காளையாய் - நல்லெவ்வனப்பருவனாய்—பாவைமாரால் - ஸ்திரீகளால்— சால

வருந்துவன் - மிகவும்வருத்தப்படுவான்— விருத்தன்றனாகி - மூப்புப்பருவமுடையவனாய்— குடும்பத்தால் - சம்சாரத்தினால் —தளர்ந்துசாவன் - தளர்ந்துமரணமடைவான்— எல்லிவன்-மேலுமிவன்—எக்காலத்து - எந்தக்காலத்தில்—என்செய்வான் - என்ன (சற்கிருத்தியத்தைச்) செய்வான்—மாயக்கூத்திருந்தவாறு-மாயையினடனமிருந்தவித (மென்ன)—ஞாலமெலாமாடரங்காய்-சகங்களைனத்துநடனசபையாகவும்—பொறிமேளமாய்- இந்திரியம்(பல)வாத்தியங்களாகவும்—மனப்பேய் நடிக்கும்-மனப்பசாசநடனஞ்செய்யும். எ-று .... (௨௩)

(அ-கை.) அறம்பொருளின்பத்தைநோக்கிபாவையுங்குற்றமுள்ளவஸ்துக்களெனத்தள்ளுதல். (கவி) உள்ளத்தின்முடிமேலேயில்லாமைவீற்றிருக்குமுலகிலென்றுந்,
தெள்ளுற்றநல்லறத்தின்சிரத்திலேயெப்பொழுதுந்தீமைவாழு,
மெள்ளுற்றவின்பத்தின்றலைமேல்துன்பங்களிருக்குமென்றாற்,
கொள்ளத்தக்கனவானகுற்றமிலாப்பொருளேதுகுறிப்புளேற்கே

(இ-ள்.) உள்ளத்தின்முடிமேல் - சத்தினதுசிரசின்மேல்—இல்லாமைவீற்றிருக்கும்-அசத்துவீற்றிருக்கும்—உலகிலென்றும் - சகத்திலெப்பொழுதும்—தெள்ளுற்றநல்லறத்தின்சிரத்தில் - தெளிந்தநல்லதருமத்தின்முடியில்—எப்பொழுதுந்தீமைவாழும்- சதாகாலமும்பொல்லாங்குவாழ்ந்துகொண்டிருக்கும்— எள்ளற்றவின்பத்தின்றலைமேல் - இகழ்ச்சியற்றவின்பத்தினதுசிரசின்மேல்—துன்பங்களிருக்குமென்றால் - துக்கங்களிருக்குமேயானால் — குறிப்புளேற்கு - (இக்) குறிப்புள்ளவெனக்கு — கொள்ளத்தக்கனவான - கொள்ளத்தகுதியவான—குற்றமிலாப்பொருளேது - குற்றமற்றவஸ்துவெது. எ-று ....(௨௪)

(அ-கை.) மனமேசுகதுக்கமாமென்பதைவிசாரித்தல். (கவி) விழிப்பதுவுமிமைப்பதுவுஞ்சகத்தோற்றமொடுக்கமாமேலோருண்டாற்,
பழிப்பரியவன்னார்முன் னென்போல்வாமொன்னென்றுபகரலாவ,
ரிழிப்பரியவிசித்திரமாஞ் சம்பத்துமாபத்தாமிதயங்காயி,
லொழிப்பரியவிசித்திரமாமாபத்துஞ்சம்பத்தாமுள்ளம்வேண்டில்............................*

(இ-ள்.) விழிப்பதுவுமிமைப்பதுவும் (கண்)விழிக்கிறதுமூடுகின்றதும்—சகத்தோற்றமொடுக்கமாம்-சகத்தினுற்பத்திலயமாகப்பெற்ற—மேலோருண்டால் - மேலானபிரமாதிகளுண்டாயிருக்கின்றதால் — பழிப்பரியவன்னார்முன் - நிந்திக்கப்படாதவத்தன்மையுள்ளவர்கண்முன்பு—என்போல்வார்-என்னையொத்தவர்கள்—என்னென்றுபகரலாவர்- என்னவென்றுசொல்லப்படுவார்கள்—இழிப்பரிய - இழிவுசொல்லுதற்கரிதாயிருக்கின்ற— விசித்திரமாஞ்சம்பத்தும்-அதிசயமானசம்பத்துகளும்—இதயங்காயில்- மனதுவருந்தினால்—ஆபத்தாம் - ஆபத்துக்களாம்—ஒழிப்பரிய - நீக்குதற்கரிய—விசித்திரமாமாபத்தும்-அதிசயமானவாபத்துகளும்—உள்ளம்வேண்டில் - மனதுவிரும்பினால்—சம்பத்தாம்-சம்பத்தாகும். எ-று .... (௨௫)

(அ-கை.) மாயாகாரணமனதேயாமென்பதைமனனித்தல். (கவி) வெம்மாயவாழ்வன்றே துயர்க்கெல்லாம்பிறப்பிடமாய்விளம்புகின்ற,
தம்மாவிங்கிதனிடையேயழுந்துமவர்க்கின்பமுளதாவதெங்ஙன்,
மைம்மாயையென்னுமரம்பணையிலைபூக் காய்பழத்தால்வரம்பற்றோங்க,
விம்மால்செய்மனம்வேராமிம்மனந்தான்சங்கற்பமென்பதாகும்.... .... *

(இ-ள்.) வெம்மாயவாழ்வன்றே-வெப்பமுள்ளசம்சாரவாழ்க்கையல்லவா—துயர்க்கெல்லாம்-துன்பங்களனைத்திற்கும்—பிறப்பிடமாய்-உற்பத்திஸ்தானமாய்—விளம்புகின்றது - சொல்லப்படுகின்றது—அம்மா-ஆச்சரியம்—இதனிடை- இந்தச்சகத்தினிடத்தில்—அழுந்துமவர்க்கு-முழுகுகின்றவுயிர்களுக்கு—இன்பமுளதாவதெங்ஙன்-இன்பமுண்டாவதெப்படி—மைம்மாயையென்னுமரம்-அஞ்ஞானமாகியசம்சாரமென்கின்றவிருக்ஷமானது— பணையிலைபூக்காய்பழத்தால்-கிளைபத்திரபுஷ்பகாய்கனிகளாலும்—வரம்பற்றோங்க- அளவில்லாமல்வளரும்படியாக—இம்மால்செய்-இந்தமயக்கஞ்செய்கின்ற—மனம்வேராம்-மனமேவேராகும்—இம்மனந்தான்-இம்மனதுதான்—சங்கற்பமென்பதாகும்-சங்கற்பமென்றுசொல்லப்படும். எ-று (௨௬)

(அ-கை.) மனதைநிறுத்தியாசனத்திற்காக்ஷிப்படுத்தல். (கவி) சங்கற்பநாசத்தாலெளிதாகமனநாசந்தானேயெய்து,
மங்குற்றமனமிறக்கிற்சநநமரணங்களெனுமரமுமாயு,
மிங்கிப்பாலெனைத்திருடுங்கள்ளனைக்கண்டேன்கண்டேனிவன்பேர்நெஞ்சம்,
பொங்குற்றநெஞ்சத்தாளெனுநாளெனுநேந்தேனின்றுபொன்றுவிப்பேன்.... .... *

(இ-ள்.) சங்கற்பநாசத்தால் - சங்கற்பநாசத்தினால்— எளிதாகமனநாசந்தானேயெய்தும் - சுலபமாகமனோநாசம்வலியவரும்—மங்குற்றமனமிறக்கில் - கெட்டற்ற (வேரான)மனமானதிறந்தால்—சநநமரணங்களெனும் - பிறப்பிறப்பென்கின்ற—மரமுமாயும்- விருக்ஷமுநாசமாகும்—இங்கிப்பால் - இவ்விடத்தில்—எனைத்திருடும் - (ஆத்மரத்தினமான) வென்னைத்திருடுகின்ற—கள்ளனைக்கண்டேன் கண்டேன்- சோரனைப்பார்த்தேன்பார்த்தேன்—இவன்பேர்நெஞ்சம் - இவனுமமானதுமனமாம் — பொங்குற்றநெஞ்சத்தால் - வளராநின்றவித்தமனதினால்—

நெறிநானொழுந்தேன் - வெகுகாலந்துன்பப்பட்டேன்—இன்றுபொன்றுவிப்பேன்-இப்போது கெடுப்பிப்பேன். எ - று .... (உஎ)

(அ-கை) மனதையடக்குங்காரணந்தெரிதல். (கவி) இத்தனைநாண்மனமுத்தைத் துளைத் திலேனின் றுதுளைத்தியைந்த நூலாற், சித்திரமாக்கோத்தணிவன் முழுதுணர்ந்ததேசிகராற் றெளிந்தேனெல்லாஞ், சுத்தபரமாநந்தந் தோற்றுவிக்குநல்லறிவாஞ் சோதிபெற்றேன், மெத்தவிவனுநானு மிங்கிவையெனும்பொய் யுள்ளொழித்தேன் மீண்டுநாடேன் *

(இ-ள்.) இத்தனைநாள் - இவ்வளவுகாலம்—மனமுத்தைத் துளைத்திலேன்-மனமென்கின்றமுத்தைச்சிக்சைசெய்யென்றுந்தமர்செய்திலேன்—இன்றுதுளைத்து-இப்போதுசிக்ஷைசெய்து—இயைந்தநூலால் - பொருந்திய(வனுபவமென்னுஞ்) சூத்திரத்தினால்—சித்திரமாக்கோத்தணிவன் - அழகாகக்கோர்வைசெய்துதரிப்பன்—முழுதுணர்ந்ததேசிகரால்- சகலமுமுணர்ந்த(சித்தர்களான)வாசாரியரால்—எல்லாந்தெளிந்தேன் - (யாவையுந்)தெளிந்தேன் — சுத்தபரமாநந்தம்- சுத்தமானபிரமாநந்தத்தை — தோற்றுவிக்கும் - தெரிவிக்கின்ற — நல்லறிவாஞ் சோதிபெற்றேன் - சுகபோதமாகியப்ரகாசத்தையடைந்தேன்—மெத்த-மேதுவாக—இவன்-இவனென்னும்—நான் - நானென்னும்—இங்கிவையெனதென்னும்பொய் - இவ்விடத்திவைகளென்னதென்னுமசத்தியத்தை—உள்ளொழித்தேன் - மனதிற்கெடுத்தேன்—மீண்டுநாடேன்-திரும்பவுந்தேடேன். எ-று .... (உஅ)

(அ-கை.) சுகபோதந்தானாயிருக்கின்றசமாதியடைதல். (கவி) பேதிக்குமனமென்னும்பெரும்பகையைமுழுவலியாற்பிளந்துவென்றேன், வாதித்ததுயரெல்லாமாற்றினேனுபசாந்தவாழ்வுபெற்றேன், சாதித்தவிவேகமேயுனைவணங்கினேனென்றுசனகர்கோமான், சேதித்தமனவலைவெல்லாமொழித்துத்தானேசித்திரம்போனின்றான்.

(இ-ள்.) பேதிக்குமனமென்னும் - (எனதாத்மஞானத்தைப்) பேதஞ்செய்யுமனமென்கின்ற—பெரும்பகையை - பெரிதானசத்துருவை—முழுவலியால் - மிகுந்தபலத்தினால்—பிளந்துவென்றேன் - பிளந்துவெற்றியடைந்தேன்— வாதித்ததுயரெல்லாமாற்றினேன் - (என்னை) வாதனைசெய்ததுன்பங்களனைத்தையும்போக்கினேன் —உபசாந்தவாழ்வுபெற்றேன்-உபசாந்தவாழ்வையடைந்தேன் — சாதித்தவிவேகமே - (இப்படி) சாதிக்கப்பட்டவிவேகஞானமே—உனைவணங்கினேனென்று - உன்னைத்தொழுதேனென்று—சனகர்கோமான் - சனகராசனானவன்—சேதித்த - (தன்னைக்)கெடுத்த—மனவலைவெல்லாமொழித்து - மனோசஞ்சலங்களனைத்தையுங்கெடுத்து—தானேசித்திரம்போனின்றான் - தானேசித்திரப்பதுமையைப்போல(சமாதியி)லிருந்தான். எ-று .... (உகூ)

(அ-கை.) சமாதியிற்சுகம்பெற்றுச்சகசத்தில்வெளிப்படல். (கவி) வாளாசித்திரம்போல நெடிதிருந்துசனகர்பிரான்மாய்ந்தநெஞ்சை, மீளாநல்லுபசாந்தநிறைநெஞ்சாலுலகியல்பைமேவிப்பார்த்தான், ஆளாண்மையாலியற்றும்பொருளேதுகைக்கொள்ளத்தக்கதேது, கோளானகற்பனையென் சுபாவவறிவாமெனக்குக்குறிக்குங்காலே .... *

(இ-ள்.) வாளாசித்திரம்போல - மௌனமாய்ச்சித்திரத்தைப்போல—நெடிதிருந்து-வெகுநேரஞ்(சமாதியி)லிருந்து—சனகர்பிரான் - சனகராசன்—மாய்ந்தநெஞ்சை-நாசமானமனதை—மீளாநல்லுபசாந்தம் - திரும்பாதநல்லவுபசாந்தமுள்ள—நிறைநெஞ்சால்- பூரணமனதினால்—உலகியல்பை - சகத்தின்குணத்தை—மேவிப்பார்த்தான் - பொருந்திப்பார்த்தான்—தாளாண்மையாலியற்றும் - முயற்சியாற்செய்யப்பட்ட—பொருளேது - பொருளியாது—கைக்கொள்ளத்தக்கதேது - கைவசமாக்கத்தக்கபொருளியாது— கோளானகற்பனையென்-குற்றமுள்ளகற்பனையாது—குறிக்குங்காலெனக்குச்சுபாவவறிவாம் - குறிக்கும்போதெனக்கு(யாவுஞ்) சுபாவஞானமாம். எ-று .... (௩௰)

(அ-கை.) சாக்ஷாத்காரவனுபவ விலாசங்கூறல். (கவி) சுத்தமாய்ச்சொரூபமாமென்னுருவலால்வேறுதோன்றக்காணேன், வத்தியான்வாராத பொருணயவேன்வந்த பொருளனைத்துந்தள்ளேன், நித்தியமாய்த்தன்னிலையினிற்குமெனதறிவுருவினிலையானிற்பேன், உத்தவாறேதுவருமதுவருகவென்றழுந்தி யொருமையானான் .... *

(இ-ள்.) சுத்தமாய்-பரிசுத்தமாய்—சொரூபமாம்- (ஆத்மஞான)ஸ்வரூபமாகிய—என்னுருவலால்- எனதுஸ்வரூபத்தையல்லாமல்—வேறுதோன்றக்காணேன்- வேறுபொருள்தோற்றங்காணேன்—வத்தியான்- வளராநின்றநான்—வாராதபொருணயவேன்-வாராதவஸ்துக்களைவிரும்பேன்—வந்தபொருளனைத்துந்தள்ளேன்-வாராநின்றவஸ்துக்களனைத்தையும்வெறுக்கேன்—நித்தியமாய்-சதாகாலமும்—தன்னிலையினிற்கும்-தன்னிலையிலிருக்கின்ற—எனதறிவுருவின் -எனதாத்மஞானஸ்வரூபத்தில்—நிலையானிற்பேன்-திரமாயிருப்பேன்—உத்தவாறேதுவரும்

சொன்னபடியெதுவருகின்றதோ—அதுவருகவென்று - அதுவரக்கடவதென்று (சொல்லி)—அழுந்தி- (பிரமாநந்தத்தின்)முழுகி—ஒருமையாளுன் - சனகராசனொருமைப்பட்டான். எ-று.

(அ-கை.) சகசநிஷ்டையிற்சீவன்முத்தனுய்ச் சஞ்சரித்தல். (கவி) வானேகுகதிரிரவி நாளியற்றுமாறென்னவந்துவந்து, தானேதோன்றியதொழிலைப் பற்றின்றிச்செய் துமெனச்சனகனெண்ணித், தினேயவருகாலஞ்செல்காலமிமையளவுஞ்சிந்தைசெய் யா, னூனேறுநிகழ்காலத்தோரிமைப்பினகைதலோடுலாவலுற்றான் .... ✻

(இ-ள்.) வானேகு - ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற—கதிரிரவி - ப்ரகாசத்தையுடையசூரியன்—நாளியற்றுமாறென்ன - தினங்களை (யிச்சாவெத்தனமில்லாம) னடப்பிக்கின்றதுபோல—வந்துவந்து - அடிக்கடிவந்து—தானேதோன்றியதொழிலை - தானேயுண்டாகியகிருத்தியங்களை—பற்றின்றிச்செய்துமென - பற்றில்லாமற்செய்வோமென்று—சனகனெண்ணி- சனகராசன்சிந்தித்து—தினேயவருகாலம் - தீமையேநேயமாகவருகின்றவெதிர்காலத்தையும்—செல்காலம்- இறந்தகாலத்தையும்—இமையளவுஞ்சிந்தைசெய்யான் - அற்பமாகினுஞ்சிந்திக்காமல்—ஊனேறுநிகழ்காலத்து-ஈன்முள்ளவர்த்தமானகாலத்தின்(ஒருழியில்)—ஓரிமைப்பில்- ஒருநிமிஷநேரத்தில்—நகைதலோடு - மந்தகாசத்தோடும்—உலாவலுற்றான்- சஞ்சரிக்கத்தொடங்கினான். எ-று. (இ-ம ௭-௧-ம்) ஜனகராஸ்மீகமாயாசிரியர்வாக்கியங்களைக்கேட்டுச்சுலுவாகப்பெற்றஸ்வானுபவத்தாற்சர்வம்பிரமமயமாமென்பதையுணர்ந்து அதுவாகவிளங்கினமான்பதாம். ௬௨

(அ-கை) சனகரது அனுபவத்தைக்கூறியிவ்வனுபவம்வருவது ஆத்மவிசாரத்தாலன்றியேனையவற்றாற்கூடாதெனல்.(கவி)பேசியதன்விசாரத்தாற்சனகர்பிரான்பெறும் பேறுபெற்றதல்லால், வாசியுளமற்றொன்றால்வந்ததல்ல வாரீசமலர்க்கண்மாலே, யாசிலதாய்ச்செவ்வியதாய்த் தனதானவிசாரத்தாலடைவதல்லாற், றேசிகரில்லாவினைர்செய்தொழிலாற்பெறலாமோ சிற்சொரூபம்............ .... ✻

(இ-ள்.) பேசிய - (சித்தர்களாற்)சொல்லப்பட்ட—தன்விசாரத்தால்-ஆத்மவிசாரணையினால்—சனகர்பிரான் - சனகராசனுனவர்—பெறும்பேறு - அடையத்தக்கவாத்மலாபத்தை—பெற்றதல்லால் - அடைந்ததேயல்லாமல்—வாசியுளம் - உபசாந்தமுள்ளமனது — மற்றொன்றால்வந்ததல்ல- வேறொன்றினால்வந்ததன்று—வாரீசமலர்க்கண்மாலே-தாமரைக்கண்ணையுடையஸ்ரீராமா—ஆசிலதாய் - குற்றமற்றதாகியும் —செவ்வியதாய் - அழகாகியு(மிருக்கின்ற)—தனதானவிசாரத்தால் - தனதாத்மவிசாரணையினால்— அடைவதல்லால் - (பரமபதத்தை) யடைவதேயன்றி—தேசிகரில்லாவினைர்செய்தொழிலால் - ஆசாரியரில்லாதவினைர்செய்யுங்கிரியையால்—சிற்சொரூபம்பெறலாமோ - ஆத்மஞானஸ்வரூபத்தையடையலாகுமோ. எ-று ....(௬௩)

(அ-கை.) நிஷ்காமகன்மம்வேண்டுமெனல். (கவி) புறப்பேறுகளைவேண்டியியற்றுகின்றபுண்ணியத்தைப்புவியிலுள்ளோர்,சிறப்பானநல்லறிவுமிகவேண்டுமென்றுமுதற்செய்யிற்பேறு, மிறப்பானவாபத்து வினைநிலமாயிருந்துதுயர் வேலையாகிப், பிறப்பானநச்சுமரவித்தாகும்பேதைமையைப் பிளக்கல்வேண்டும்..... .... ✻

(இ-ள்.) புறப்பேறுகளைவேண்டி- (ஆத்மாவுக்குப்)புறம்பானபதப்பிராப்திகளைவிரும்பி—இயற்றுகின்றபுண்ணியத்தை - முயற்சிக்கின்றதருமத்தை —புவியிலுள்ளோர் - பூமியின்கண்ணுள்ளவர்கள்—சிறப்பானநல்லறிவு- விசேடமானசுகபோதமானது—மிகவேண்டுமென்று-மிக வுமுண்டாக)வேண்டுமென்று—முதற்செய்யிற்பேறும்- முன்புசெய்தா(லாத்ம)லாடமாம்—இறப்பானவாபத்து - அச்சமாகியவாபத்துக்கள் — வினைநிலமாயிருந்து - வினைகின்றபூமியாயிருந்து—துயர்வேலையாகி - துன்பசமுத்திரமாய் — பிறப்பானநச்சுமரவித்தாகும் - பவமானவிஷவிருக்ஷங்களுக்குவிதையாயிருக்கின்ற —பேதைமையைப்பிளக்கல்வேண்டும் - அஞ்ஞானத்தைக்கெடுக்கவேண்டும். எ-று ....(௬௪)

(அ-கை.) அந்தநிஷ்காமத்தாலுண்டாயினவிசாரணையின்பலனைக்கூறல்.(கவி)இலங்கியசிந் தாமணியா மிதயமெனுஞ்சரக்கறையிலிருக்கும்போதங், கலங்கலிலாவிவேகியர்க்குக்கரு துபொருள்கற்பகம்போற்கணத்தினல்குந்,துலங்குவிசாரம்படைத்துப்பேதைமைபோய் நல்லறிவுதோன்றினோரா,யிலங்குகவசதோரையம்புகள்போற்காமாதிவிகற்பந்தாக்கா

(இ-ள்.) இலங்கியசிந்தாமணியாம் - ப்ரகாசிக்கின்றசிந்தாமணியாகிய— இதயமெனுஞ்சரக்கறையில் - இருதயமென்னும்பெட்டியில்— இருக்கும்போதம் - இருக்கின்றஞானமானது—கலங்கலிலாவிவேகியர்க்கு - கலக்கமில்லாதஞானிகளுக்கு—கருதுபொருள் - சிந்திக்கப்பட்டபொருள்களை—கற்பகம்போல் - கற்பகவிருக்ஷத்தைப்போல—கணத்தினல்கும் - க்ஷணத்திற்கொடுக்கும்—துலங்குவிசாரப்படைத்து - ப்ரகாசிக்கின்றவாத்மவிசாரணையைப்பெற்று—பேதைமைபோய் - அறியாமைகெட்டு —நல்லறிவுதோன்றினோரா - சுகபோதமுதயமானவர்

களை—இலங்குகவசத்தோரை - ப்ரகாசிக்கின்றவச்சிரகவசந்தரித்தவர்களை— அம்புகள்போல்- பாணங்கள்தாக்காததுபோல — காமாதிவிகற்பந்தாக்கா - இராகத்துவேஷமுதலியவிகற்பந் தாக்கா. எ-று .... (௫௫)

(அ-கை.) அவ்விசாரணையாலகங்காரநீங்கி ஞானமுதிக்குமெனல். (கவி) பரமாதித் தனைமறைத்துக்கறுத்தறிவற்றுக்களித்துப்படர்ந்துமீண்டு, திரமானவகங்காரமுகில் விவேகக்காற்றாற்சிதறிப்போகும்,வரமானபதம்வேண்டிற்றன் மனத்திறைசைமுதன் மாற்றல்வேண்டு,முரமானபுவியைமுதலுழுதன்றோவிளைபயன்களுறுகின்றோ.. *

(இ-ள்.) பரமாதித்தனைமறைத்து- பிரமசூரியனைமறைத்து—கறுத்தறிவற்றுக்களித்து- களங்கமாயறிவின்றிமதர்த்து—படர்ந்து-விரிந்து — மீண்டுதிரமான-திரும்பவுந்திரமாகியிருக் கின்ற—அகங்காரமுகில் - அகம்பாவமென்னுமேகமானது — விவேகக்காற்றால் - ஞானமென் னுஞ்சண்டமாருதத்தினால்—சிதறிப்போகும்-சின்னபின்னமாகும்—வரமானபதம்வேண்டில்- மேன்மையான(பரம)பதத்தைவிரும்பினால்—தன்மனத்திறைசை - தனதுமனதின்கண்ணுள்ள விச்சையை—முன்மாற்றல்வேண்டும் - முன்னங்கெடுக்கவேண்டும்—உரமானபுவியை- பலமா னபூமியை—முதலுழுதன்றோ - முந்தினதாகவுழுதல்லவா — விளைபயன்களுறுகின்றார் - விளை யாநின்றதானியபலாபத்தையடைகின்றார்கள். எ-று. (இ-ச-க-ம்) ஞானமுதிக்குங்கிரமங்களை முறையேயுணர்த்தியதாம் .... (௫௬)

சனகராசன்கதைமுற்றிற்று - ஆ கதை - ௰௬௰௨ - கவிதை.(௭௱௨)

புண்ணியபாவனன்கதை.

(அ-கை.)முன்கதையிற்சிதாநந்தாகாரமேயாவுமாமென்பதனையெளிதிற்சித்தோபசாந்தி யைக்கூறி, இவ்வனுபவங் கொஞ்சம்வருத்தத்திலும் வருமென்பதையறிவிக்கு நிமித்தஞ்சந் நாந்தரங்களைப் போதித்தவதனாலனுபவமுதித்த புண்ணியபாவனன்கதையைநிரூபிக்கிறார்...*

(அ-கை.) இப்பிரமானுபவமாயாநாசத்துதிக்குமெனல். (வேறு.) (கவி) மோகவற் சனுபிக்கொடிமுளைத்தெழுமூலஞ், சோகமாசுணமிருந்தரசாள்வதோர்சூழ, லாக மேமுதலியானெனக்காணுமஞ்ஞான, மேகமாகியபராபரந்தோன்றினாலிறக்கும்*

(இ-ள்.) மோகவற்சனுபிக்கொடி - மோகமென்னும்வற்சனுபிக்கொடியானது—முளைத் தெழுமூலம் - உண்டாகிவளர்தற்குக்காரணமாகியும் — சோகமாசுணம் - துக்கமென்னுஞ் சர்ப்பமானது— இருந்தரசாள்வதோர்சூழல் - தனித்திருந்தரசாக்ஷிசெய்வதற்கொப்பற்றவிட மான—ஆகமுதல் - தேகாதிகளை— இயானெனக்காணுமஞ்ஞானம் - நானென்றுபார்க்குமஞ் ஞானமானது — ஏகமாகியபராபரந்தோன்றினாலிறக்கும் - ஒன்றானவாத்மஞானமுதயமானா னசிக்கும். எ - று .... (க)

(அ-கை.) மாயாநாசவுபாயங்கூறல். (கவி) அனித்தமிச்சகமென்பதைநாடொறும கற்றி,நுனித்துநோக்கினர்சனகனைப்போலநுண்ணறிவாற்,றனித்தமெய்ப்பொருள் பக்குவத்தறிகுவர்தனத்தால், மனித்தராற்கருமத்தினாற் றேவரால்வாரா..... .... *

(இ-ள்.) இச்சகம்- இந்தவுலகம்—அனித்தமென்பதை - அசத்தென்பதை—நாடொறு மகற்றி - எப்பொழுதுங்(கணமும்) நீக்கி—நுனித்துநோக்கினர் - நுண்மையாகப்பார்க்கின்றவர் கள்—சனகனைப்போல - சனகராசனைப்போல—நுண்ணறிவால் - சூட்சுமவறிவினால்—தனித்த மெய்ப்பொருள் - தனிமையானபரமார்த்தத்தை— பக்குவத்தறிகுவர் - பருவகாலத்திலறிவார் கள்—(அஃதன்றி)தனத்தால் - திரவியங்களினாலும்—மனித்தரால் - மானிடர்களினாலும்—கரு மத்தினால் - கிரியைகளினாலும்—தேவரால்- வானவர்களினாலும்—வாரா- வரமாட்டாது.எ-று.

(அ-கை.) முயற்சியாற்பேததிருஷ்டிநீங்கி லாத்மதரிசனமுண்டாமெனல். (கவி) சனன மஞ்சினர்க்கவருடைமுயற்சியேசரணாந்,தினமுமிங்கிவனெனுஞ்சிறுமைதான்சிதையி, லனகமாபுலகெங்குமாம்விசாலமுண்டாகு,மனனுறத்தனதுயர்சசிதான்காண்புறவருமால்.

(இ-ள்.) சனனமஞ்சினர்க்கு-பிறப்பிற்பயந்தவர்களுக்கு—அவருடைமுயற்சியேசரணும்-தங்கண்முயற்சியேகதியாம்—இங்கிதனமும்-இவ்விடத்திருப்போறும்—இவனுமெனன்னும்- இவனுமெனன்கின்ற—சிறுமைதான்சிதையில் - அற்ப(வுணர்வு)கெடுமானால்— அனகமாய் - களங்கமில்லாததாய்—உலகெங்கும் - சகத்தனைத்துமான—விசாலமுண்டாகும்- வியாபக(ஞான)முண்டாயிருக்கும்—மனனுற - மனது (விசாரணையைப்) பொருந்த — தனதுயர்ச்சிதான்காண்புறவரும் - தனதுமேலான (வாத்மஞானந்) தெரிசிக்கவரும். எ - று.. (ரு)

(அ-கை.) விருப்புவெறுப்பறிற் பேதநீங்கியசைவற்றிருக்குமெனல். (வேறு) (கவி)
பற்றுவிடென்றிரண்டிற் பற்றலும்விடுதலுமு, முற்றவைமனத்துருபமுயர்பந்தம
துவேறில்லை, முற்றுறுபற்றுவீட்டின்மோகமுந்துயருமவிட்டு, துற்றுளபற்றுவீடு
துடைத்தசையாதுநிற்பாய் .... *

(இ-ள்.) பற்றுவிடென்றிரண்டில்-பற்றுதலும்விடுதலுமென்றுசொல்லப்பட்டவிரண்டில்—பற்றலும்விடுதலுமுற்றவை- பற்றுவதும்விடுவதும்பொருந்தினவவ்விரண்டும்—மனத்துருபம் - மனதின்வடிவமாம்—அதுவுயர்பந்தம் - அதுவேமகாபந்த(மன்றி)—வேறில்லை-வேறேயில்லை—முற்றுறுபற்றுவீட்டின்மோகமுந்துயரைவிட்டு - முதிர்ந்தவிராகத்துவேஷங்களால்வருமாசையையுந்துன்பத்தையுநீக்கி — துற்றுளபற்றுவீடு - நிறைந்தவிருப்புவெறுப்பை—துடைத்தசையாதுநிற்பாய் - கெடுத்துச்சலியாதிருப்பாய். எ-று .... (சு)

(அ-கை) அச்சமதிருஷ்டியின்குணமுணர்த்தல் (கவி) மயலின்மையநித்தமின்மை
மடமின்மைவருத்தமின்மை,செயலின்மைகருமமின்மைதியக்கின்மைவிகற்பமின்
மை, பயமின்மைதுவட்சியின்மை பகையின்மைகுறைவொன்றின்மை, கயமின்
மைகடினமின்மை குடிலமாய்க்கழறலின்மை .... *

(இ-ள்.) மயலின்மை - மயக்கமில்லாமையும்—அநித்தமின்மை - அநித்தியமில்லாமையும்—மடமின்மை-அஞ்ஞானமில்லாமையும்—வருத்தமின்மை- துன்பமில்லாமையும்—செயலின்மை-(வேண்டுந்)தொழிலில்லாமையும்—கருமமின்மை - (நீக்குந்)தொழிலில்லாமையும்—தியக்கின்மை - தியக்கமில்லாமையும்—விகற்பமின்மை - (ஒரு)விகற்பமுமில்லாமையும்—பயமின்மை - அச்சமில்லாமையும்— துவட்சியின்மை - வாட்டமில்லாமையும் — பகையின்மை-வெகுளவில்லாமையும்—குறைவொன்றின்மை - குறைவொன்றுமில்லாமையும்—கயமின்மை-கீழ்மையில்லாமையும்— கடினமின்மை - கொடுமையில்லாமையும் — குடிலமாய்க்கழறலின்மை - வஞ்சகமாய்ப்பேசலில்லாமையும். எ-று .... (௬)

(அ-கை.) விருப்புவெறுப்பறும்படி வாசனாத்தியாகம்வரவேண்டுமெனல். (கவி.)
வீடுபற்றிரண்டுநீத்த மேலவரிடத்துமேவி, நீடுவாதனைகளின்றி நிகழ்த்தியகுணங்க
ணிற்கும், மீடுறுநினைவாநூலாற் பிணிப்புற்றுப்பிறவிவேலை, யூடுறமயன்மீன்வாரு
முயர்ந்தவாதனையாஞ்சாலம் .... *

(இ-ள்.) வீடுபற்றிரண்டுநீத்த-ஹேயோபாதேயங்களானவிரண்டையுநீக்கின—மேலவரிடத்து-சத்துக்களிடத்தில்—நீடுவாதனைகளின்றி-நீண்டவாசனைகளில்லாமல்—நிகழ்த்தியகுணங்கள்-முன்சொல்லியகுணங்களானவை—மேவிநிற்கும் - பொருந்தியிருக்கும்—மீடுறுநினைவாநூலால்-வலிமையுள்ளசிந்தனையென்னுஞ்சூத்திரத்தால்—பிணிப்புற்று- கட்டுப்பட்டு—பிறவிவேலையூடுற - பவசாகரத்தினிடையிற்பொருந்த — மயன்மீன்வாரும் - மயக்கமென்னுமச்சங்களைப்பிடிக்கின்ற—உயர்ந்தவாதனையாஞ்சாலம்-பெரிதாகியவாசனையென்றுசொல்லப்பட்டவலை.எ-று.

(அ-கை.) வாசனாநாசவுபாயங்கூறல். (கவி) வாதனையென்னுமிந்த வலைபுத்திவாளாலீர்
த்து, மோதுசூறைக்காற்சிந்துமுகிலெனச்சிந்திநிற்பாய், பாதவங்குடாரத்தாலேபடுப்ப
போனெஞ்சைநெஞ்சாற், றீதறமாய்த்துமேலாம்பதத்திலேதிரமாய்நிற்பாய் .... *

(இ-ள்.) வாதனையென்னும் - வாதனையென்கின்ற—இந்தவலை - இந்தவலையை—புத்திவாளாலீர்த்து- ஞானமென்னுங்கத்தியினாலறுத்து—மோதுசூறைக்கால்-அடிக்காநின்றசுழற்காற்றினால்—சிந்துமுகிலென-சிதறுநின்றமேகத்தைப்போல—சிந்திநிற்பாய்-(மன)மிறந்திருப்பாய்—பாதவம் - விருக்ஷத்தை —குடாரத்தால் - கோடாலியினால்—படுப்பபோல் - கெடுப்பதுபோல—நெஞ்சை - (களங்கமான)மனதை—நெஞ்சால் - (பரிசுத்த)மனதினால் — தீதறமாய்த்து-குற்றமில்லாமற்கெடுத்து—மேலாம்பதத்தில்-மேலானபரமபதத்தில்—திரமாய்நிற்பாய்-திடமாகவிருப்பாய். எ-று. (இ-எ-க-ம்) ஸ்வானுபவமுதித்தற் கஞ்ஞானமுதலிய வாசனையை நீக்குமுபாயத்தையறிவித்ததாம் .... (எ)

(அ-கை.) பின்னுமவ்வாசனையை நீக்கவேண்டியதைப்புறுத்திக்கூறல். (கவி) எருதல்
வருதறுஞ்சல் விழித்திடவிருத்தனிற்ற, லாகியவெல்லாம்பொய்யென் றழுந்தியுள்

ளாசைதீர்வாய், சேகுறவலையஞ்சித்தப்பகுதியாற்சித்தின்பின்னே,போகலூன்மண த்தாற்சிங்கத்தனைத்தொடர்பூசைபோலாம் ...... *

(இ-ள்.) ஏகுதல்வருதல் - போதல்வருதலும்—ஒழிந்திடல் - உறங்குதலொழி தலும்—இருத்தனிற்றல் - இருப்பதும்நிற்பதும் — ஆயவெல்லாம்பொய்யென்று - ஆகிய (சகலதொழி)லனைத்துமித்தையென்று—அழுந்தி - அழுத்தமாய்—உள்ளாசைதீர்வாய்-அகத் திச்சையைவிட்டுவிடுவாய் - சேகுறவலையுஞ்சித்தம் - திடமாகவலைகின்றமனமானது—பகுதி யால் - இயல்பானவாசனையினால் — சித்தின்பின்னேபோகல் - ஞானத்தின்பின்செல்லுதல்— ஊன்மணத்தால் - மாமிசவாசனையினால்—சிங்கத்தனை - கேசரியை—தொடர்பூசைபோலாம்- தொடர்கின்றபூனையையொப்பாகும். எ-று ...... (அ)

(அ-கை.) மனோநாசத்தில்வாசனாக்ஷயமுமுத்தியுமுண்டாமெனல். (கவி) மடங்கல்வீரிய த்தாற்பெற்றதகைதின்னுமாற்சாலம்போற், றொடர்ந்துசென்மனனுஞ்சித்தாற் றோன் றியபொருளைப்பற்றும், படர்ந்துகாண்பவற்றைப்பற்றின்மனங்கெடாப்பந்தம்போகா, திடங்கொள்காண்பவற்றைநீக்கிச்சித்தம்போய்முத்தியாகும் ...... *

(இ-ள்.) மடங்கல்வீரியத்தால் - சிம்மத்தின்வீரத்தினால்—பெற்றதகைதின்னும் - கிடை த்தவூனைத்தின்னுகின்ற—மாற்சாலம்போல் - பூனையைப்போல—தொடர்ந்துசென்மனனும்- தொடர்பாகச்செல்லுகின்றமனமும்—சித்தால் -அறிவினால்—தோன்றியபொருளைப்பற்றும்- உண்டாகியவிஷயவஸ்துக்களைப்பிடித்துக்கொள்ளும்—படர்ந்துகாண்பவற்றை - விஸ்தாரமா கக்காணப்பட்டதிரிஸ்யத்தை—பற்றின்மனங்கெடா - பிடிக்கின்மனநாசமாகாது — பந்தம் போகா - பந்தநீங்காது—திடங்கொள் - திடங்கொண்ட—காண்பவற்றைநீக்கல்- திரிஸ்யத்தை நீக்கினால்—சித்தம்போய்முத்தியாகும் - மனோநாசம்வந்துதிருவாணமாகும். எ-று ...... (௯)

(அ-கை.) ஆத்மதரிசனமறிவித்தல். (கவி) யானிவையிரண்டுமில்லென்றெண்ணிமேருவை ப்போனிற்பா, யூனிறமில்லாவிண்போலுளத்தனாய்நல்லுளத்தே, தானும்வையமுமாய்க் காண்பான்காண்பனதம்மினூடே, மேனிகழ்காட்சியென்னுநின்னைநீவிடாதுதேர்வாய்.*

(இ-ள்.) யானிவை - நானிவைகளென்பதாகிய—இரண்டுமில்லென்று-இரண்டுமில்லையெ ன்று—எண்ணி - சிந்தித்து—மேருவைப்போனிற்பாய் - மகாமேருவைப்போலஸ்திரமாயிரு ப்பாய்—ஊனிறமில்லாவிண்போல்-களங்கமற்றவாகாயத்தைப்போல—உளத்தனாய்-(நின்மல) மனதுடையவனாய்—நல்லுளத்து - நன்மையானமனதில்—தானும் - ஆத்மாவும் — வையமு மாய் - சகமுமா(யிருக்கின்ற)—காண்பான் - ஞாதாவும்—காண்பனதம்மினூடு-ஞேயங்களின் மத்தியில்—மேனிகழ் - மேலாகவிளங்கிய—காட்சியென்னுநின்னை - ஞானமென்கின்றவுனதா த்மஸ்வரூபத்தை—நீவிடாதுதேர்வாய் - நீவிடாமற்றெரிந்துகொள்வாய். எ-று ...... (௰)

(அ-கை.) இ-து. (கவி) இனியனவினிமைகொள்வானிரண்டும்விட்டிவற்றினூடே, தனிநிக ழினிமைநாடிதற்பரமயமாய்நிற்பாய், நனிபலதுய்ப்பான்றுய்ப்பதிரண்டுக்குநடுவேதா னே, யனிசம்பற்றின்றிநிற்குமதுபற்றியதனுணிற்பாய் ...... *

(இ-ள்.) இனியன - இனிமையானவஸ்துவும்—இனிமைகொள்வான்- இனிமையைக்கொ ள்கின்றவனுமாகிய—இரண்டும்விட்டு - இவ்விரண்டையுநீக்கி—இவற்றினூடே - இவைகளின் மத்தியில் - தனிநிகழினிமைநாடி - தனிமையாகப்ரகாசிக்கின்றவின்பத்தையாராய்ந்து— தற் பரமயமாய்நிற்பாய் - ஆத்மஸ்வரூபமாயிருப்பாய்—நனிபலதுய்ப்பான்-மிகவும்பலவற்றைப் புசிப்பவனும்—துய்ப்ப - புசிக்கப்பட்டவஸ்துவும்—இரண்டுக்குநடுவேதானே - இரண்டின் மத்தியில் — அனிசம்பற்றின்றிநிற்கும் - எப்போதும்பற்றில்லாமலிருக்கின்ற — அதுபற்றி- அதைப்பிடித்து—அதனுணிற்பாய் - அதற்குள்ளிருப்பாய். எ-று ...... (௰௧)

(அ-கை.) இச்சையையுமகம்பாவத்தையுநீக்கவேண்டுமெனல். (கவி) காதலாற் கட்டிலுய்யார்கயிற்றினாற்கட்டிலுய்வா, ராதலாலாசைக்கட்டை யசங்கற்பத்தறுப் பாய்நானென், றோதுபாவனையைநானென் றோதோர்வாளால்வீட்டி, யேதமில் சுபாவம்பாவித்தெழுபவமிலாவீடெய்தி ...... *

(இ-ள்.) காதலாற்கட்டிலுய்யார்-ஆசையினாற்கட்டுப்பட்டாலுயிர்வாழமாட்டார்கள்— கயிற்றினாற்கட்டிலுய்வார் - கயிற்றினாற்கட்டிலுயிர்வாழ்வார்கள் — ஆதலால்- ஆகையினால்— ஆசைக்கட்டை - இச்சாபந்தத்தை— அசங்கற்பத்தறுப்பாய் - சங்கற்பநாசத்தாற்கெடுப்பாய் —நானென்றோதுபாவனையை-நானென்றுசொல்லப்பட்டபாவனையை— நானென்றோதோர் வாளால்வீட்டி- நானென்றுசொல்லப்படாதவொருகத்தியினாற்கெடுத்து—ஏதமில்சுபாவம்பா வித்து - குற்றமற்றவாத்மபாவனைசெய்து — எழுபவமிலாவீடெய்தி - எழுபிறப்பில்லாதமோ

க்ஷத்தையடைந்து. எ - று. (இ-ரு-க-ம்) மனோவாசனையகம்பாவமென்னுமிரண்டினையு நீக்கி வீடடையவேண்டுமென்பதாம்.. (௰௨)

(அ-கை.) அகங்காரத்தியாகத்தினுமாகத்தியாகநன்றெனல். (கவி) அனைத்துயிர்க் கச்சமில்லாநிலைநிற்பாயதுலவென்ன, வினைத்தொடரகம்பாவத்தின் வேட்கைதீரொ ன்றநின்சொல், னினைத்திடின்மிகவுமாழ நீடகங்காரநாசந், தனைச்செயினுடலமெ ன்னுமேதுவைத்தவிர்க்கின்றேனுல்.. *

(இ-ள்.) அனைத்துயிர்க்கு - சகலவுயிர்களுக்கும்—அச்சமில்லாநிலை- பயமில்லாதநிலை யில்—அதுல - சமானமில்லாத(ஸ்ரீராமா)—நிற்பாயென்ன- இருப்பா(யென்றுவசிஷ்டர்)சொ ல்ல—வினைத்தொடர் - தொழில்கடொடர்ந்திருக்கின்ற—அகம்பாவத்தின் - நானென்னும்பா வனையின்—வேட்கைதீரொன்றநின்சொல் - ஆசையைத்தீர்ப்பாயென்றுசொல்லியவுமதுவாக் கியத்தை—நினைத்திடில் - கருதுமிடத்தில்—மிகவுமாழம்- மிகவுமாழமாம்—நீடகங்காரநாசந் தனைச்செயின் - நெடிபவகங்காரநாசத்தைசெய்வதைவிட— உடலமென்னுமேதுவைத்தவிர் க்கின்றேன் - சீரமென்னுங்காரணமொழிக்கின்றேன். எ-று.. (௰௩)

(அ-கை.) அகங்காரத்தியாகத்துக்கிரண்டுபாயமுண்டெனல். (கவி) அகமெனவொ ழிக்கிற்றுனே யங்கமுமடியிலீர்ந்த, நகமெனவிறக்குமன்றே யென்றுயர்நாதன் கூற, மகமுனியுரைப்பான்வள்ளால்வாதனைமாற்றுமாறு, நிகழ்வுறுதேயஞேய மிர ண்டென நினைப்பர்கற்றோர். .... *

(இ-ள்.) அகமெனவொழிக்கில் - நானென்பதைக்கெடுத்தால்—அங்கமும்-சரீரமும்— அடியிலீர்ந்தநகமென - வேரோடறுந்தவிருக்ஷத்தைப்போல—இறக்குமென்று - நசிக்குமெ ன்று—உயர்நாதன்கூற - உயர்வானஸ்ரீராமன்சொல்ல—மகமுனியுரைப்பான் - வசிஷ்டமாமு னிசொல்லுவார்—வள்ளால்- ஸ்ரீராமா—வாதனைமாற்றுமாறு - (அகங்கார) வாசனையைநீக்கும் விதம்—நிகழ்வுறுதேயம் - ப்ரகாசிக்கின்றதேயமென்றும்—ஞேயம் - ஞேயமென்றுஞ்சொ ல்லப்பட்ட—இரண்டென - இரண்டுவிதமாக — கற்றோர் - ஓதியுணர்ந்தவர்கள் — நினைப்பர்- சிந்திப்பார்கள். எ-று... (௰௪)

(அ-கை.) அவ்விரண்டிற்றேயத்தியாகமறிவித்தல். (கவி) இந்தநம்பொருட்குவாழு ளியாமிவையெமக்குவாழு, ணந்துறுமிவற்றாலன்றிநாமில்லைநம்மாலன்றி, வந்தவி ப்பொருள்களில்லையெனுமனத்தறுதிமாற்றிப், புந்தியானுசாவியாமும் பொருள்க ளும்வெவ்வேறென்றே.. *

(இ-ள்.) இந்தநம்பொருட்கு-இந்தநமதுபொருளுக்கு—வாழுளியாம்-சீவிதநாம்— இவை - இந்தவஸ்துக்கள்—எமக்குவாழுள் - நமக்குசீவிதம்— நந்துறுமிவற்றாலன்றி-செல்வ மானவிப்பொருளையல்லாமல்—நாமில்லை - நாமென்பதில்லை—நம்மாலன்றி - நம்மையல்லா மல்—வந்தவிப்பொருள்களில்லை - கிடைத்தவிப்பொருள்களில்லை — எனுமனத்தறுதிமாற்றி- என்னுமனத்தினிச்சயத்தைநீக்கி—புந்தியானுசாவி - புத்தியால்விசாரித்து—யாமும்பொருள் களும்-நாமும்விஷயங்களும்—வெவ்வேறென்று - வேறுவேறென்று. எ-று.................. (௰௫)

(அ-கை.) இ-து. (கவி) பொருளினேமல்லநாமுநமதல்லப்பொருளுமென்றே, தெருளு ற்றுட்குளிர்ந்தியாவும் விநோதமாய்ச்செய்யுநெஞ்சான், மருளறுநிச்சயத்தால்வாதனை விடுதருனே, யருள்பொழிமேகமொப்பாய்தேயமென்றறிவாயென்றே...................... *

(இ-ள்.) நாமும்பொருளினேமல்ல - யாமும்பொருள்களுக்குடையோமல்ல—பொருளு நமதல்லவென்று - பொருளுநம்முடையதல்லவென்று — தெருளுற்றுட்குளிர்ந்து - தெளிவ டைந்துள்ளங்குளிர்ந்து—யாவும் - யாவையும்—விநோதமாய்-லீலையாக—செய்யுநெஞ்சால்- செய்கின்றமனதினுலும்—மருளறுநிச்சயத்தால் - மயக்கமில்லாதநிச்சயத்தினுலும்—வாதனை விடுதருனே - வாசனையைவிடுகின்றதே—அருள்பொழிமேகமொப்பாய் - அருளைவருஷிக்கி ன்றமேகத்துக்குச்சமானமான(ஸ்ரீராமா)— தேயமென்றறிவாய்-தேயமென்றுணர்வாய்.எ-று (இ-சு-க-ம்)ஜடசித்தின்சம்பந்தங்களைப்பிரித்துஅச்சேடவாசனுநாசமேதேயத்தியாகமாம்௰௬

(அ-கை.) ஞேயத்தியாகங்கூறல். (கவி) தனதுவாதனைமாண்டெல்லாஞ் சமமதாநெஞ்சா ர்பண்ணி, யெனதெனுதுடலைநீக்கி னிந்தவாசனைநாசத்தா, னனகமாநேயமாகுமகங்கர மயமாந்தன்னை, வினவுவாதனையேமூற்றும் விநோதமாய்விட்டோர்மேலோர்.......... *

(இ-ள்.) தனதுவாதனைமாண்டு - தன்னுடையவாசனைகெட்டு— எல்லாம் - அனைத்தையும் —சமமதாநெஞ்சார்பண்ணி-சமமானபுத்தியினுற்பார்த்து—எனதெனுதுடலைநீக்கின்-நானெ ன்றுசொல்லப்படாதசரீரத்தைத்தள்ளினுல்— இந்தவாசனைநாசந்தான்- இவ்வாசனுக்ஷயமே—

அனகமாஞேயமாகும் - களங்கமில்லாதஞேயமாம் — அகங்காரமயமாந்தன்னை - அகங்கார வடிவமானதை—வினவுவாதனை - சொல்லப்பட்டவாசனையை— முற்றும்விட்டுதமாய்- முதிர்ந்தலீலையாக—விட்டோர்மேலோர் - விட்டவர்கண்மேலானசத்துக்கள். எ-று. (இ-ம்) தேகோகவாசனையைக்கெடுப்பதே ஞேயத்தியாகமென்பதாம்..(௰எ)

(அ-கை.) இவ்விரண்டுதியாகத்தின்பெருமைகூறல். (கவி) தீரராமவரோதேயத்தியாகஞ்செய்சீவன்முத்தர்,வேரறத்தொழில்களோடேவாதனைவிட்டுள்ளாறி,தூரமாஞேயம்விட்டோர்துகளறுமுத்தராகும், வீரனேயிவையிரண்டின் விடுதியுந்தம்மிலொக்கும் .... *

(இ-ள்.) தீரராமவரோ - தீரானவவர்களே — தேயத்தியாகஞ்செய் - தேயத்தியாகத்தைச் செய்கின்ற—சீவன்முத்தர் - சீவன்முத்தர்களாம் — தொழில்களோடும் - கிரியைகளோடும்— வேரற - மூலங்கெடும்படி—வாதனைவிட்டு - வாசனையைக்கெடுத்து—உள்ளாறி - மனஞ்சாந்தமடைந்து—தூரமாஞேயம்விட்டோர் - சேய்மையானஞேயத்தியாகஞ்செய்தவர்கள்—துகளறுமுத்தராகும் - குற்றமற்றவிதேகமுத்தராம்—வீரனே- வெற்றியையுடையஸ்ரீராமா—இவையிரண்டின் - இந்தவிரண்டினுடைய—விடுதியும் - தியாகமும்—தம்மிலொக்கும்- ஒன்றுக்கொன்றுசமானமாகும். எ - று...(௰அ)

(அ-கை.) இ-து. (வேறு.) (கவி) தேயஞேயத்தின்றியாகங்கண்முத்தர்பாற்செறிவ,தேயஞேயத்தின் றியாகங்கள்பிரமத்தைச்சேர்ந்த, தேயஞேயத்தின் றியாகங்களிடரொலாந்தீர்ந்த, தேயஞேயத்தின்றியாகங்க டேடருஞ்செல்வம்.. *

(இ-ள்.) தேயஞேயத்தின்றியாகங்கள்-தேயத்தியாகமும்ஞேயத்தியாகமும்—முத்தர்பாற்செறிவ- சீவன்முத்தர்விதேகமுத்தரிடத்துநெருங்கியிருப்பன—தேயஞேயத்தின்றியாகங்கள்- தேயத்தியாகஞேயத்தியாகங்கள்—பிரமத்தைச்சேர்ந்த - பிரமத்தையடைந்தன—தேயஞேயத்தின்றியாகங்கள் - தேயத்தியாகஞேயத்தியாகங்கள்—இடரொலாந்தீர்ந்த - துன்பமனைத்தையு நீங்கின --தேயஞேயத்தின்றியாகங்கள்- தேயத்தியாகஞேயத்தியாகங்கள்—தேடருஞ்செல்வம்- தேடுதற்கரியமோக்ஷமாம். எ-று. (இ-உ-க-ம்) தேயஞேயத்தியாகமென்னு மிரண்டுமேசீவன்முத்திவிதேகமுத்திகளாகுமென்பதாம்... (௰கூ)

(அ-கை.) சீவன்முத்தரிலக்கணங்கூறல். (கவி)வேறு. சூழுறுமின்பதுன்பந்தொடர்வுறிலொருகாலத்து, மாழுதன்மிதத்தலில்லாவவர்களேசீவன்முத்தர், கேழுயர்மகிழ்ச்சியச்சஞ்சினமின்மைபொறுமைகேத, மூழுறுமிவற்றைநோக்காவுளத்தினர்சீவன்முத்தர்....*

(இ-ள்.) சூழுறுமின்பதுன்பம்-சூழ்ந்திருக்கின்றசுகதுக்கங்கள்—தொடர்வுறில்-(தன்னைத்) தொடர்ந்தால்—ஒருகாலத்தும்-ஒருபோதிலும்—ஆழுதல் - அழுந்துதலும்—மிதத்தலில்லா- மிகத்தலுமில்லாத—அவர்களேசீவன்முத்தர் - அவர்களேசீவன்முத்தர்களாம்—கேழுயர்மகிழ்ச்சி-விளங்கியமேலானகளிப்பும்—அச்சம்-பயமும்—சினம்-கோபமும்—இன்மை - தரித்திரமும்—பொறுமை-அழுக்காறும்—கேதம்-துன்பமுமாகிய— ஊழுறுமிவற்றைநோக்காவுளத்தினர்சீவன்முத்தர்-ஊழினாலடையுமிவைகளைப்பாராதமனத்தோரேசீவன்முத்தராம்.எ-று.உ௰

(அ-கை.) இ-து. (கவி) சுழுத்திபோலாறிநின்றபாவனைத்தொழிலினாலே, பழுத்தநெஞ்சதனனீங்காச்சாக்கிரம்பயில்வோர்நாளும், விழுத்தருகலைகள்சூழ்ந்தமதியெனமேலோர்மேவ, முழுத்தமும்பிரிவிலோரேமுத்தரொன்றுரைக்கத்தக்கோர்......................... *

(இ-ள்.) சுழுத்திப்போல்-சுழுத்தியவத்தையைப்போல—ஆறிநின்றபாவனைத்தொழிலினால்- சாந்தமானபாவனாவிருத்தியினால—பழுத்தநெஞ்சதனால்-பக்குவமானமனதினால்— நீங்காச்சாக்கிரம்பயில்வோர்-தீர்க்கசொற்பனத்திற்பழகுபவர்கள்—நாளும் - எப்போதும்—விழுத்தருகலைகள்சூழ்ந்தமதியென-சிறந்தகலைகணிறைந்தபூர்ணசந்திரனைப்போல—மேலோர்மேவ- சத்துக்கள்விரும்ப — முழுத்தமும்பிரிவிலோரே - முழுதும்பிரிவில்லாதவர்களே — முத்தரொன்றுரைக்கத்தக்கோர்-சீவன்முத்தர்களென்றுசொல்லத்தகுந்தவர்கள். எ-று ....(உக)

(அ-கை.) இச்சையைமுழுதுங்கெடுக்கவேண்டுமெனல். (கவி) புறப்பொருள்விட்டாலுள்ளேபூண்டமாமென்றுசொல்வர், மறப்பறவனைத்தும்விட்டான் மாண்டமாலென்றுசொல்வர், திறப்படவெனக்கேதாகமெவ்வெறழுஞ்சிந்தையாசை, அறப்பில்பொன்விலங்காமித்தைத்துவக்கறத்துடைத்தல்வேண்டும்.................................. *

(இ-ள்.) புறப்பொருள்விட்டால் - புறம்பிலுள்ளவஸ்துக்களின் (பற்றை) விடுத்தால்— உள்ளேபூண்டமாமென்றுசொல்வர்-அகப்பெத்ததிருஷ்டிமியென்றுசொல்லுவார்கள்—மறப்பறவனைத்துவிட்டால் - மறப்பின்றி (வஸ்துக்களிலிருக்கின்ற) சகலவிச்சையையுநீக்கினால் — மாண்டமாலென்றுசொல்வர்-முத்ததிருஷ்டிமியென்றுசொல்லுவார்கள்—திறப்படவெனக்கேதா

கவென்று- ஸ்ரீராமாவெனக்கிவ்வாருமென்று—எழுஞ்சிந்தையாதை-உண்டாகின்ற (பாவனையே) திருஷ்டியாகும்—துறப்பில்-விடக்கக்கூடாத—மெய்பான்விலங்காயித்தை- சொர்னவிலங்காகிய வித்திருஷ்டியை—துவக்கறத்துடைத்தல்வேண்டும் - தொந்தமறக்கெடுக்கவேண்டும். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) சத்தசத்தென்னப்பட்டசகலபாவனையிலென்றுங், கொத்தற
வாசைமாற்றிக்குறைவில்பேருளத்தனாகிச், சுத்தநல்லுதாரமான சொரூபத்தினிற்
பாய்பெத்த, முத்தமாமாசையின்பதுன்பங்கண்முழுதுநீக்கி ………………… ……… *

(இ-ள்.) சத்தசத்தென்னப்பட்ட- உள்ளதில்லதென்றுசொல்லப்பட்ட— சகலபாவனையில் - சமஸ்தபாவனைகளிலும்—என்றுங்கொத்தற - எப்பொழுதுமிகாமல் — ஆசைமாற்றி- இச்சையைக்கெடுத்து—குறைவில்பேருளத்தனாகி - பூரணமனதுடையவனாய்— பெத்தமுத்த மாமாசை - பந்தவிச்சையுமோக்ஷவிச்சையுமாகிய (விவைகளையும்)—இன்பதுன்பங்கள் - சுக துக்கங்களையும்—முழுதுநீக்கி - முழுமையுந்தள்ளி — சுத்தநல்லுதாரமான - பரிசுத்தமுள்ள நல்லகெம்பீரமாகிய — சொரூபத்தினிற்பாய் - (ஆத்மஞான) ஸ்வரூபத்திலிருப்பாய். எ-று. (இ-சு-க-ம்) முத்தர்களின்சிறப்பையும்பெத்தவிமுத்தியையுங் கூறினதென்பதாம் ……… (உ௩)

(அ-கை.) ஆத்மவிசாரமுள்ளவர்களுக்குரிய நான்குநிச்சயமறிவிக்கத்தொடங்கி முதலா
வதுநிச்சயத்தினிலக்கணமறிவித்தல். (கவி) பேனமுந்திரையுமில்லாப்பெருங்கடல்போல
நிற்பாய், மானவகேண்மற்றொன்றுமாசிலாவிசாரமுள்ளோர்க், கானநிச்சயநானுண்டா
மடிதலைமட்டுநானே, யீனவுற்றவர்தாய்தந்தையென்பதோரறுதிதானே………………… *

(இ-ள்.) பேனமுந்திரையுமில்லா - நுரையுமலையுமின்றிய— பெருங்கடல்போலநிற்பாய்- மகோததியைப்போல (வசைவற்) றிருப்பாய்—மானவ - மனிதவடிவமுடையஸ்ரீராமா— மற்றொன்றுகேள்- வேறொன்றையாஞ்சொல்லக்கேட்பாய்—மாசிலாவிசாரமுள்ளோர்க்கு-குற்றமற்றவிசாரணையுள்ளவர்களுக்கு—ஆனநிச்சயநாலுண்டாம்-ஆகியநிச்சயங்களுனான்குண்டாகும்— அடிதலைமட்டுநானே-பாதமுதற்சிரசந்தமானசரீரநான்—தாய்தந்தை-மாதாபிதாக்கள்—ஈனவுற்றவர் -(என்னைப்)பெற்றவர்கள்—என்பதோரறுதிதான்-என்பதொருநிச்சயம். எ-று. (உ௪)

(அ-கை.) இரண்டாவதுநிச்சயத்தினிலக்கணமறிவித்தல். (கவி) கன்றியபந்தமா
குமிதுமெய்ம்மை கருதாவாற்று, னின்றனவனைத்தின்மேலோ னெல்லின்வாலினு
ஞ்சற்றேநா, னென்றிரண்டாவதானநிச்சயமெய்துமென்னி, லொன்றியமுத்தியு
ண்டாமுத்தமர்க்குடைமையாகும்…. ……………………………………………… *

(இ-ள்.) மெய்ம்மைகருதாவாற்றால் - உண்மையைநினையாதபடியினால்—இது- இந்த நிச்சயம்—கன்றியபந்தமாகும் - கொடியபந்தத்தையுடையதாம் — நின்றனவனைத்தின்மேலோன் - இருக்கின்றசகலவஸ்துக்களினுமதீதனாகியும் — நெல்லின்வாலினுஞ்சற்றேநானென்று - நெல்லினதுவாலினுஞ்சூட்சுமமாகியுமிருக்கின்றவனேயானென்று (சொல்லப்பட்ட)— இரண்டாவதானநிச்சயம் - இரண்டாவதாகியநிச்சயமானது—எய்துமென்னில் - அடையுமாறால்—ஒன்றியமுத்தியுண்டாம் - பொருந்தியமோக்ஷமுண்டாகும் — உத்தமர்க்குடைமையாகும் - சத்துக்களுக்குள்ளதாகும். எ-று……………………………………………… (உ௫)

(அ-கை.) மூன்றாவதுநிச்சய நான்காவதுநிச்சயமென்னு மிரண்டினிலக்கண மறி
வித்தல். (கவி) புவியெலாமெனதுரூபம்பொன்றுதலிலனென்று, குவிவறக்கா
ண்டன்மூன்றுநிச்சயங்குறைவில்வீடா,மவியுறுமுலகுநானுமனைத்தும்பொய்விண்
போலென்றுந், தவிர்கிலமென்றனலாநிச்சயந்தனிவீடாகும் …………………… *

(இ-ள்,) புவியெலாமெனதுரூபம் - சகங்களனைத்துமெனதுஸ்வரூபம்— நான்பொன்றுதலிலனென்று - யானழிவில்லாதவனென்று — குவிவறக்காண்டல் - சங்கோசமில்லாமற்காண்பது—மூன்றுநிச்சயம் - மூன்றாவதுநிச்சயமாம் — குறைவில்வீடாம் - (அது) குறைவற்றமோக்ஷமாம்—அவியுறுமுலகும் - கெடுதலடைகின்றசகமும் — நானும் - (அறிகின்ற) யானும் (மாகிய)—அனைத்தும்பொய் - சகலமுமசத்தியமே— விண்போலென்றுந்தவிர்கிலமென்றல் - ஆகாயம்போல (யா) மெப்போதுநீங்கிலமென்பது—நாலாநிச்சயம் - நான்காநிச்சயமாம்—தனிவீடாகும் - ஈதொப்பற்றமோக்ஷமாம். எ-று……………………………………(உ௬)

(அ- கை.) இந்நான்குநிச்சயத்தின் பலாபலனைக்கூறல். (கவி) பெத்தவாசையதா
முன்னேபேசுநிச்சயமதொன்றுஞ், சுத்தவாசைகளாமூன்றுநொய்யவாய்த்துகளில்
சீவன், முத்தர்பால்விளங்குமிந்த மூன்றினுளெல்லா நாமெனன், றொத்தமோர்நிச்ச
யத்தையுநிற்பின்னையுள்ளஞ்சோரா ………………………………………………… *

(இ-ள்.) முன்னேபேசுநிச்சயமதொன்றும் - முன்புசொல்லப்பட்டநிச்சயமொன்றும்

பெத்தவானையுதாம்-பெத்தநிருஷ்டிவிவையுடையதாம்—சுத்தவானைகளாமூன்றும்-பரிசுத்த முத்தநிருஷ்டிவிவையுடையமூன்றும்—நோய்யவாய் - சொச்சமாய்—ஜீவன்முத்தர் பால்விளங்கும்- குற்றமற்றசீவன்முத்தர்களிடத்திற்பிரகாசிக்கும்—இந்தமூன்றினுள்-இம்மூன்றுக்குள்—எல்லாநானென்று—சகலமுநானென்று—ஒத்ததோர்நிச்சயத்தையுமில்- பொருந்தியவொட்பற்றநிச்சயத்தைப்பொருந்துவதுயின்—பின்னையுள்ளதுசேரா - பின்புமனமானது சுகதுக்கங்களையடையாது. எ-று. (இ-ச-கம்-) முதல்நிச்சயத்துக்குப்பத்தமும் மற்றமூன்றுநிச்சயத்துக்கு முத்தியுப்பிரயோசனமாமென்பதாம்........ .... (உஎ)

(அ-கை.) ஆத்மாநாத்மவிலக்கணமறிவித்தல். (கவி) சூனியம்பகுதிமாயைபிரமஞ்சிற்சோ
தி ஞான, மீனமில்புருடனான்மா வீசானன்சிவமேநித்த, மானவை யென்னலாமொன்
றிரண்டெனுமகல்பேதத்தால், வானுயர்சகம்படைக்கும் விநோதத்தால்வளருமன்றே.*

(இ-ள்.) சூனியம் - சூனியமும்—பகுதி - ப்ரகிருதியும்—மாயை - மாயையும்— பிரமம்- பிரமமும்—சிற்சோதி - சிற்ப்ரகாசமும்—ஞானம் - அறிவும்—ஈனமில்புருடன் - குறைவில்லாதபுருடனும்—ஆன்மா - ஆத்மாவும்—ஈசானன் - ஈசானனும்— சிவம் - சிவமும்—நித்தமானவை - நித்தியமானவிவைகளை—என்னலாம் - (பிரமமென்று) சொல்லலாகும்— ஒன்றிரண்டெனுமகல்பேதத்தால் - ஒன்றென்னுமிரண்டென்னும்விரிந்தவேற்றுமையினால்— வானுயர்சகம் படைக்கும்-உயர்வானசகத்தையுண்டாக்குகின்ற—விநோதத்தால் - விளையாட்டினால் — வளரும் - பிரமசத்திவளரும். எ-று .... (உஅ)

(அ-கை.) ஒன்றிலும்பற்றற்றிருக்கவேண்டுமெனல். (கவி) ஒன்றெனும்பரமரூபத்
தொருசத்தி யொருமையாலே, நின்றெழுகின்றதன்றேநின்னது பிறரதென்றும்,
பொன்றியதிருந்ததென்றும் பொருள்களிற்கருமந்தன்னி, லென்றுமின்பதுன்ப
ங்களிதயத்திலூன்றவேண்டாம்...... .... *

(இ-ள்.) ஒன்றெனும்பரமரூபத்து - ஏகமென்கின்றபிரமஸ்வரூபத்தி (லுள்ள) —ஒருசத்தி - ஒப்பற்றசத்தியானது —ஒருமையால் - (அத) னொருமையினால் — நின்றெழுகின்றது- இருந்துவளருகின்றது—நின்னது - (ஸ்ரீராமா) வுனதென்றும்—பிறரதென்றும் - அன்னியரதென்றும்—பொன்றியது - இறந்ததென்றும்—இருந்ததென்றும் - இருப்பதென்றுஞ் (சொல்லப்பட்ட)—பொருள்களில் - விஷயங்களிலும்—கருமந்தன்னில் - தொழில்களிலும் — என்றும் - எப்போதும்—இன்பதுன்பங்கள் - சுகதுக்கங்கள்—இதயத்திலூன்றவேண்டாம் - மனதிற்றரிக்கவேண்டாம். எ-று .... (உகூ)

(அ-கை.) செனியாதவரிலக்கணங்கூறல். (கவி) யாதினுமுயர்ந்துமாளாப்பதம்பற்றியிதய
மென்னுஞ், சீதமாயின்பதுன்பஞ்சேர்கிலார்பிறப்பிற்சேரார், சாதுகொள்பகைகொ
ளொத்தல்தஞ்சம்வல்லபங்களுள்ளோ,ரோதியநெறியிற்செல்லுமுத்தமர்பிறப்பிற்சேரார்

(இ-ள்.) யாதினுமுயர்ந்து-எல்லாவற்றிலுமதிதமாய்—மாளாப்பதம்பற்றி-கெடாதபரம பதத்தைப்பிடித்து—இதயம்-மனமானது—என்றுஞ்சீதமாய் - எப்போதுங்குளிர்ச்சியாய்— இன்பதுன்பஞ்சேர்கிலார் - சுகதுக்கங்களடையாதவர்கள்—பிறப்பிற்சேரார் - பிறவியையடையார்கள்—சாதுகொள்-சற்குணமுள்ள (மித்திரனிடத்திலும்)— பகைகொள் - துற்குணமுள்ள (சத்துருவினிடத்திலும்)—ஒத்தல்-சமத்துவமாகி—தஞ்சம்வல்லபங்களுள்ளோர் - தயாதாக்ஷிணியங்களுள்ளவர்களே—ஓதியநெறியிற்செல்லும் - சொல்லியமுறையிற்செல்கின்ற—உத்தமர் பிறப்பிற்சேரார் - உத்தமர்கள்பவத்தையடையார்கள். எ-று .... (௩௰)

(அ-கை.) இ-து. (கவி) இழிவுயர்விரண்டுமெண்ணாரிச்சைகோபங்களெய்தார்,தொழிலொழிவிலாமைவிட்டோர்துன்னியபிறப்பிற்சேரா, ரெழில்பெறவிளங்கியார்க்கு மினியனவி
னிதிற்சொல்வோ,ரழிபொருளனைத்தின்சால்பையறிந்துளோர்பிறப்பிற்சேரார்.......... *

(இ-ள்.) இழிவுயர் - தாழ்வுமேன்மையுமாகிய — இரண்டுமெண்ணார் - இரண்டையுநினையார்கள்—இச்சைகோபங்களெய்தார்-விருப்புவெறுப்படையார்கள் —தொழிலொழிவிலாமைவிட்டோர் - கிரியாக்கிரியைகளை நீக்கினவர்கள்—துன்னியபிறப்பிற்சேரார்- செறிந்தபிறவியிற்சேரார்கள்—எழில்பெறவிளங்கி - அழகாகப்ரகாசித்து— யார்க்குமினியன - யாவர்க்குமின்பமானவைகளை—இனிதிற்சொல்வோர் - இனிமையாகப்பேசுகின்றவர்கள்— அழிபொருளனைத்தின் - கெடாநின்ற (பூதவஸ்துக்களி) லெல்லாவற்றின்—சால்பையறிந்துளோர்-குணத்தையறிந்தவர்கள்—பிறப்பிற்சேரார் - பவத்தையடையார்கள். எ-று ....(௩௧)

(அ-கை.) அனுபவிப்பினதுலீலையைநிரூபித்தல். (கவி) வேறு. தேயவாதனைநீங்கிப்பூர்ண
மாகித்தெளிந்தவிழியிமையாமற்சீவன்முத்தி, யாயபாவனையாலேசொருபமேவியனவர

தமுலகில்விளையாடுவீரா, மாயவாசையைநீங்கிப்பற்றறுத்துவாதனைபோயுள்வெளியாய் வாக்கியத்தே, மேயவாசாரமெலாமியற்றியென்றும்வேண்டியவாறுலகில்விளையாடுவீரா

(இ-ள்) தேயவாதனைநீங்கி - தேயவாதனையைவிட்டு—பூர்ணமாகித்தெளிந்தவிழி - பூரணமாகித்தெளிந்ததிருஷ்டி—இமையாமல் - மறையாமல்—சீவன்முத்தியாயபாவனையால்-சீவன்முத்தியாகியபாவனையினால்—சொரூபமேவி - (தனதாத்மஞான)ஸ்வரூபமடைந்து— அனவரதம்- சதாகாலமும் —வீரா - ஸ்ரீராமா — உலகில்விளையாடு - உலகத்தின்கண்விளையாடுவாய்—மாயவாசையைநீங்கி - பொய்யானவிச்சையைவிட்டு—பற்றறுத்து-பற்றுதலைக்கெடுத்து—வாதனைபோய் - வாசனையைவிட்டு— உள்வெளியாய் - உள்ளேசிதாகாசமாய்—வாக்கியத்துமேயவாசாரமெலாமியற்றி - புறத்திலுள்ளவாசாரங்களைத்துஞ்செய்து— என்றும் - எக்காலத்தும்—வேண்டியவாறு-வேண்டினப்ரகாரம்— வீரா - ஸ்ரீராமா—உலகில்விளையாடு - சகத்தில்விளையாடுவாய் எ - று .... (௫௨)

(அ-கை.) இ-து. (கவி) சகத்திலேபுறத்தொழிலிலாரம்பித்துத்தனியிதயத்தாரம்பஞ்சற்றுமின்றி, யகத்திலேசெயாதோனாய்ப்புறத்தேசெய்வோனாகியேயுலகில்விளையாடுவீரா, வகுத்தவகங்காரம்போய்ச்சித்தந்தேறிவானம்போ னொய்தாகிமாசொன்றற்று,வெகுத்துவமாமடையாளமனைத்துமின்றிவேண்டியவாறுலகில்விளையாடுவீரா.

(இ-ள்.) சகத்தில் - உலகத்தில்—புறத்தொழிலிலாரம்பித்து - புறம்பிலுள்ளகிரியைகளிலாரம்பஞ்செய்து—தனியிதயத்து - தனித்தமனதில் — ஆரம்பஞ்சற்றுமின்றி - ஆரம்பமெவ்வளவுமில்லாமல் —அகத்திலேசெயாதோனாய் - உள்ளேசெய்யாதவனாய் — புறத்துசெய்வோனாகி-புறம்பிற்செய்பவனாய்—வீரா - ஸ்ரீராமா—உலகில்விளையாடு - உலகத்தின்கண்விளையாடுவாய்—வகுத்தவகங்காரம்போய் - (தேகநானென்று) பகுத்தவகம்பாவங்கெட்டு — சித்தந்தேறி-மனந்தெளிந்து—வானம்போல் - ஆகாயத்தைப்போல—நொய்தாகி-சொச்சமாய்—மாசொன்றற்று - களங்கமொன்றுமின்றி—வெகுத்துவமாமடையாளமனைத்துமின்றி- பலசின்னங்களின்றி—வீரா - ஸ்ரீராமா—வேண்டியவாறு- வேண்டியபடி—உலகில்விளையாடு - உலகத்தின்கண்விளையாடுவாய். எ-று .... (௫௫)

(அ-கை.)இ-து. (கவி) இதமானவுதாரியாய்க்கடினாசாரமின்றியாசாரங்கட்கெளிதுபின்போய், விதமானவனைத்துக்குஞ்சார்பைநோக்கிவேண்டியவாறுலகில்விளையாடுவீரா,புதனாகிநிராசைதனையுள்ளேதேக்கிப்புறத்தேயாசையிற்றொழில்கள்பூண்டான்போலா,யதனாலுட்சீதளமாய்ப்புறம்வெய்தாகியனவரதமுலகில்விளையாடுவீரா *

(இ-ள்.) இதமானவுதாரியாய்-உரிமையுள்ளவுதாரத்தையுடையவனாய்—கடினாசாரமின்றி- கடினமானவாசாரமில்லாமல்—ஆசாரங்கட்கு - ஆசாரங்களுக்கு—எளிதுபின்போய்- எளிதாகப்பின்சென்று—விதமானவனைத்துக்கும் - பலவிதமாகியசகல(வஸ்துக்களு) க்கும்—சார்பைநோக்கி - ஆதாரத்தைப்பார்த்து—வேண்டியவாறு - வேண்டியப்ரகாரம்—வீரா-ஸ்ரீராமா—உலகில்விளையாடு - சகத்தின்கண்விளையாடுவாய் — புதனாகி - அறிவையுடையவனாய்—நிராசைதனையுள்ளேதேக்கி - நிராசையையுள்ளேநிறைத்து—புறத்து - வெளியில்— ஆசையிற்றொழில்கள்பூண்டான்போலாய் - காமக்கிரியைகளைத்தரித்தவன்போல — அதனாலுட்சீதளமாய்-அதனாலுள்ளேகுளிர்ந்தவனாய்—புறம்வெய்தாகி - வெளியில்வெப்பமுள்ளவனாய் — அனவரதம்- சதாகாலமும்—வீரா - ஸ்ரீராமா—உலகில்விளையாடு - சகத்தின்கண்விளையாடுவாய். எ - று.
(இ-எ-க-ம்) வாசனாக்ஷயஞ்செய்து பூரணாநந்தவேத்தியமாய் விளங்கியஸ்வரூபானுபவத்தினாலுலகத்திலிச்சையானபடி சஞ்சரிக்கலாம் .... (௫௪)

(அ-கை.) திருக்குதிருஷ்டியிற்சகலமும்பிரியவடிவமாமெனல். (கவி) இவன்சுற்றனிவன்பகைவனிவனானென்னு மிவ்வெறும்பொய்யிராமநீயிறையுமெண்ணே, லவம்பற்றுநொய்யமனத்தவர்க்கிவ்வாறுமறிந்தோர்க்குச்சகமுழுதுமகலாச்சுற்ற,நிவந்தற்றபலகோடிபவமோகத்தாலீபகைநீ யுறவென்பர்நிமிடந்தோறு, முவந்துற்றமயக்கிதுவாம்பரமார்த்தத்தா லுலகெல்லாம்பகையாகு முறவுமாகும் .... *

(இ-ள்) இவன்சுற்றன் - இவனுறவன்—இவன்பகைவன் - இவன்பகைஞன்— இவனானென்னும் - இவனானென்கின்ற—இவ்வெறும்பொய் - இந்தமிருத்தபொய்யை — இராமநீயிறையுமெண்ணேல் - இராமாநீசற்றுநினையாதே—அவம்பற்றுநொய்யமனத்தவர்க்கு-பயனின்மையைப்பிடித்தவற்பமனதுடையவர்களுக்கு— இவ்வாறும் - இந்தப்ரகாரமாம்—அறிந்தோர்க்கு - அறிஞருக்கு—சகமுழுதுமகலாச்சுற்றம் - உலகமுழுதுநீங்காதவுறவாகும்—நிவந்தற்றபலகோடி - ஓங்கியளவில்லாத—பவமோகத்தால் - சநநமயக்கத்தினால்—நீபகை - நீபகைவனென்றும்—நீயுறவென்பர்- நீயுறவென்றுஞ்சொல்லுவார்கள்—நிமிடந்தோறும்- க்ஷணந்தோ

றும்—உவந்தற்றமயக்கமிதுவாம் - களிப்புற்றமயக்கமானதிதுவேயாம்— பரமார்த்தத்தால்-யதார்த்ததிருஷ்டியினால்—உலகெலாம் - சகத்களனைத்தும்—பகைபாகும் - பகையுமாம்—உறவுமாகும்-உறவுமாகும். எ-று. (இ-ம்) சகலசீவர்களுந்தனதம்சமாயிருக்கின்றபடியாலவைதனக்குறவாகுமென்பதாம்.. (௬௫)

(அ-கை.) இவ்வனுபவநிச்சயங்கூறி யிஃதுறுதிப்படுத்துநிமித்தம்புண்ணியபாவனன்ஞானமடைந்ததைத் திருஷ்டாந்தமாகக்கூறல். (கவி.) இதுபொருட்டாமிதிகாசமொன்று
கேள்பண்டியைந்தது கங்கையின்கரையினிருடிமைந்த, ரதுலமயேந்திரகிரியினடலே
வாழ்வோரருந்தவத்தோர்தீர்க்கதவ னளிக்கவந்தோர், சதுமறைதேர்புண்ணியபாவன
னென்றுள்ளார் தந்தையொடுகங்கையின்பாற் றவஞ்செய்நாளிற், பொதுவுறச்செய்தவ
ப்பயனாற் காலமுற்றிப்புண்ணியனும் புண்ணியவான்போதம்பெற்றான்..................... *

(இ-ள்.) இதுபொருட்டு - இவ்வனுபவம்விளங்கும்பொருட்டு—பண்டியைந்தது-முன்னுள்ளதாகிய—இதிகாசமொன்றுகேள்-ஒருகதையைக்கேட்பாய்—கங்கையின்கரையின்-கங்காதீரத்தில்—இருடிமைந்தர் - இருடிபுத்திரரும்—அதுலமயேந்திரகிரியின்- சமானமற்றமயேந்திரமலையினது — அடலேவாழ்வோர் - பக்கத்தில்வாழுகின்றவர்களும் — அருந்தவத்தோர்-அரியதவத்தையுடையவர்களும்— தீர்க்கதவன் - தீர்க்கதவனென்னுநாமத்தையுடையரிஷியானவர்—அளிக்கவந்தோர் - பெறவந்தவர்களுமாகிய —சதுமறைதேர்-நான்குவேதங்களையுமாராய்ந்தறிந்த—புண்ணியபாவனனென்றுள்ளார்- புண்ணியனென்றும்பாவனென்றுநாமத்தையுடையவர்கள்—தந்தையொடு - பிதாவுடன்—கங்கையின்பால் - காங்காதீரத்தில்— தவஞ்செய்நாளில் - தவமியற்றுங்காலத்தில்— பொதுவுறச்செய்தவப்பயனால் - நிஷ்காமியமாகச்செய்ததபோபலத்தால்—காலமுற்றி - காலமுதிர்ந்து—புண்ணியனும்புண்ணியவான்-புண்ணியனெனநாமமுள்ளபுண்ணியவான்—போதம்பெற்றான் - ஞானமடைந்தான். எ-று .... (௬௬)

(அ-கை.) பாவனனதுபக்குவங்கூறல். (கவி) அங்கவன்பின்னவனாபாவனென்போ
னறிவுடைமைபாதியளவாதலாலே, செங்கதிரோனுதிப்பதன்முனருணன்றோன்றச்
செங்கமலங் கிண்கிணிவாய் செய்வதொத்து, துங்கவறியாமையுமெய் வீடுமின்றித்
தோளாவெந்திரம்போலத்துவண்டுநின்றான், பொங்குதவத்தீர்க்கதவனென்னுந்தந்
தைபோகத்திலிச்சையெலாம் புந்திதீர்ந்தான்.. *

(இ-ள்.) அங்கவன்பின்னவனா - அவன்றம்பியாகிய—பாவனென்போன்-பாவனென்னும்பெயரையுடையவன்—அறிவுடைமை - ஞானமடைந்தது—பாதியளவாதலால்-அரைவாசியானபடியினால்—செங்கதிரோனுதிப்பதன்முன் - சிவந்தகிரணங்களையுடையசூரியனுதிப்பதற்குமுன்னம் —அருணன்றோன்ற - அருணோதயமாக—செங்கமலம் - செந்தாமரைப்பூ—கிண்கிணிவாய்செய்வதொத்து - சதங்கையின்வாய்க்கொப்பாய்—துங்கவறியாமையும் - அதிகவறியாமையும்—மெய்வீடுமின்றி - உண்மைஞானமுமில்லாமல் — தோளாவெந்திரம்போல-ஊசலைப்போல — துவண்டுநின்றான் - துவளுற்றுநின்றான் — பொங்குதவம் - மிகுந்ததவமுடைய—தீர்க்கதவனென்னுந்தந்தை - தீர்க்கதவனென்கின்றபிதாவானவர் — போகத்திலிச்சையெலாம் - விஷயபோகத்திலாசைகளனைத்திலும்—புந்திதீர்ந்தான்-புத்திவிடுத்தான். எ-று.

(அ-கை.) விதேகமுத்தியடைதல். (கவி) காலமேகாரணமாய்க்குடும்பவாழ்விற்காத
லொழித்தறச்செறிந்தகாயந்தன்னைச், சாலமிகுதொழிற்பறவைக்கிடமாங்கூட்டைச்
சாநவியின்கரைவரையிற்றானேதீர்ந்தான், கோலியொருசுமைசுமப்பான் குறித்த
வெல்லைக்கொண்டுபோய்ப்போடுவபோற்குரம்பைபோட்டு, மாலுறுபற்றொன்றி
ன்றிப்பூவினாற்றம்வானுறல்போற் பரமபத வாழ்வுபெற்றான்............................ *

(இ-ள்.) காலமேகாரணமாய் - காலங்காரணமாக— குடும்பவாழ்வில் - சமுசாரவாழ்க்கையில்—காதலொழித்து - ஆசையைவிட்டு— சாலமிகுதொழிற்பறவைக்கு - மிகுந்ததொழிலென்னுமகங்காரப்பக்ஷிகளுக்கு—இடமாங்கூட்டை - இடமாகுங்கூடுபோன்ற—அறச்செறிந்தகாயந்தன்னை - மிகவுநெருங்கினசரீரத்தை—சாநவியின்கரைவரையில்- கங்காதீரத்திருக்கின்றமலையினிடத்தில்—தானேதீர்ந்தான் - தானேவிட்டுவிட்டான் — கோலியொருசுமைசுமப்பான்- சங்கற்பித்தொருசுமையைச்சுமப்பவன்— குறித்தவெல்லை - குறித்தவிடத்தில் —கொண்டுபோய்ப்போடுவபோல் - கொண்டுபோய்ப்போடுவதுபோல— குரம்பைபோட்டு - சரீரத்தைவிட்டு—மாலுறுபற்றொன்றின்றி - ஆசைபொருந்தினபற்றுக்களொன்றுமில்லாமல்— பூவினாற்றம்வானுறல்போல் - புட்பவாசனையாகாயத்திற்பொருந்துவதுபோல —பரமபதவாழ்வுபெற்றான்- பிரமாநந்தத்தையடைந்தான். எ-று.. (௬௭)

(அ-கை.) புண்ணியபாவனனனுபவங்கூறல். (கவி) தொழிலின்றிக்காட்சியெனுந்துன்பமின்றித்தொல்லறிவுதோன்றிடமாஞ்சொருபம்பெற்ற, வழிவின்முனியிறத்தலுமே யவன்றன்பன்னியம்புயநின்றகலளிபோலங்கம்விட்டாள், விழிகணிகர்தாய்தந்தையிறப்பக்கண்டுமேற்செயவேண்டியகிரியைவிதியிற்செய்வான், வழிபடுபுண்ணியன்முயன்றான்பாவன்றானும் வருத்தமெனுங்கடற்புகுந்து மயங்கலுற்றான் ……… *

(இ-ள்.) தொழிலின்றி - தொழிலில்லாததாகியும் — காட்சியெனுந்துன்பமின்றி - சகமென்னுந்துன்பமில்லாததாகியும் —தொல்லறிவுதோன்றிடமாம் - பழைமையானஞானோதயமாதற்கிடமாகியுமிருக்கின்ற—சொரூபம்பெற்ற - (தனதாத்ம)ஸ்வரூபத்தைப்பெற்ற— அழிவின்முனியிறத்தலும் - கெடாத (சத்துவவடிவமான) முனிவர்மரிக்கவும் — அவன்றன்பன்னி - அவனுடையபாரியானவள் — அம்புயநின்றகலளிபோல் - தாமரைப்பூவிலிருந்துநீங்குகின்றவண்டைப்போல—அங்கம்விட்டாள் - சரீரத்தைநீங்கினாள்—விழிகணிகர் - கண்களையொத்த—தாய்தந்தையிறப்பக்கண்டு - மாதாபிதாக்கண்மரிக்கப்பார்த்து —மேற்செயவேண்டியகிரியை-இனிச்செய்யவேண்டியகருமங்களை—விதியிற்செய்வான் - விதிப்படிசெய்யும்பொருட்டு— வழிபடுபுண்ணியன்முயன்றான் - வழிபடுகின்றபுண்ணியனெத்தனஞ்செய்தான்—பாவன்றானும்-பாவனனும்—வருத்தமெனுங்கடற்புகுந்து - துக்கமென்னுஞ்சமுத்திரத்திலழுந்தி— மயங்கலுற்றான்-மயக்கமடைந்தான். எ-று ……… (௩௯)

(அ-கை.) இ-து. (கவி) அன்னேயன்னேயென்னுமென்னையீன்றவையாவையாவென்னுமந்தோவந்தோ, வென்னேயென்னேயென்னுமாற்றானாகியெரிமிதித்தாற்போற் கானமெங்குமோடுந், தன்னேரின்முன்னவனைநோக்கித்தேறான்றம்பிமிகத்தளர்வுற்றான்றளராமுன்னோன், பின்னேருமுடற்கிறத்தலியல்பேயென்றுவேறொன்றுநினையாமல்விதியேசெய்தான் ……… *

(இ-ள்) தம்பி - பாவனனானவன் —என்னையீன்ற - என்னைப்பெற்ற— அன்னேயன்னேயென்னும் - தாயேதாயேயென்பன்— ஐயாவையாவென்னும் - பிதாவேபிதாவேயென்பான் —அந்தோவந்தோ - அய்யோவையோவென்பான்—என்னேயென்னேயென்னும்- இதென்னவிதென்னவென்பான்—ஆற்றானாகி - (துன்பத்துக்குச்) சகிக்கமாட்டாதவனாய்—எரிமிதித்தாற்போல் - நெருப்பைமிதித்தவனைப்போல—கானமெங்குமோடும்- வனங்களெல்லாமோடுவான் —தன்னேரில் - தனக்கெதிரிருக்கின்ற— முன்னவனைநோக்கித்தேறான் - தமையனைப்பார்த்துத்தெளியான்—மிகத்தளர்வுற்றான் - மிகவுந்தளர்வையடைந்தான்—தளராமுன்னோன் - தளர்ச்சியில்லாததமையனானவன்—பின்னேருமுடற்கு - பின்னலையொத்தசரீரத்துக்கு— இறத்தலியல்பேயென்று - மரிப்பதுசுபாவமேயென்று— வேறொன்றுநினையாமல் - மற்றொன்றையுஞ்சிந்தியாமல்—விதியேசெய்தான் - (கருமத்தை)விதிப்படிசெய்தான். எ-று ……… (௪௰)

(அ-கை.) ஞானோபதேசங்கூறல். (கவி) மறைநெறிகண்முடித்ததற்பின் சோகத்தாலேவாய்மூடாவிளவலைவந்துசார்ந்து; நிறையறிவாம்புண்ணியன்பாவனனைநோக்கிநெஞ்சழிக்குந்துயரமைந்தாநீத்தலென்னைப், பொறைமிகுநின்பிதாநின்னதன்னையோடும் பொருந்தியிருந்துளபதத்தின்பொலிவைக்கேளாய், குறைவுநிறைவிலதென்றுந்தனதாய்த்தானாய்க் கோதிலதாம்வீடெனும்பேர்கூறவற்றாம் ……… *

(இ-ள்.) மறைநெறிகண்முடித்ததற்பின் - வேதமார்க்கத்தின்படி(கரும) நிறைவேற்றினபின்பு—சோகத்தால்-துன்பத்தினால் — வாய்மூடாவிளவலை - வாய்மூடாமலழுகின்றதம்பியை—வந்துசார்ந்து-வந்தடைந்து—நிறையறிவாம்புண்ணியன் - பூரணஞானத்தையுடையபுண்ணியனானவன்—பாவனனைநோக்கி-பாவனனைப்பார்த்து—நெஞ்சழிக்குந்துயரம் - மனதைவருத்துகின்றதுன்பத்தை—மைந்தா - குழந்தாய்—நீத்திடாதென் - நீயேனீக்கவில்லை—பொறைமிகுநின்பிதா - பொறுமைமிகுந்தவுனதுதந்தையானவர்—நின்னதன்னையோடும் - உனதுமாதாவோடும்—பொருந்தியிருந்துள - அமைந்திருக்கின்ற — பதத்தின்பொலிவைக்கேளாய்-இடத்தின்சிறப்பைக்கேட்பாய்—குறைவுநிறைவிலது - அற்பமுமகத்துமென்பதின்று— என்றும்-எப்போதும்—தனதாய்-தனதிடமாய்—தானாய்-தன்மயமாய்—கோதிலதாம் - குற்றமில்லாததான —வீடெனும்பேர்கூறவற்றாம் - மோக்ஷமென்னுநாமத்தினாற்சொல்லத்தக்கதாம். எ-று. [ப-ம்] அணுத்துவமகத்துவமில்லையென்பார், குறைவுநிறைவிலதென்றும், தானேதானாய் விளங்குகின்றது வீடென்பார், தனதாய்த்தானாயென்றுங்கூறினார் ……… (௪௧)

(அ-கை.) வீட்டினதிலக்கணங்கூறி யஃதுறுதிப்படுநிமித்தஞ் சநநபரம்பரையை யறிவிக்கத்தொடங்குதல். (கவி) அனைவருக்குமேவுமிடமதுவேயாகுமறிருக்கு மெய்புருவமதுவேயாகுந், தன்னையகலாவப்பதத்தில்வாழுந்தாரைத்தனைநோக்கித்தள

றுமதாதகவோதம்பி, துணைபுனலிரோட்டத்துக் கெய்தும்பள்ளத் தொகுதிபோற்
பிறவிதொறுந்தொடர்பாய்ப்போன, வனையுறுநின்றாய்தந்தைக் கிலக்கமுண்டோ
மனைமக்கள்சுற்றமொருமட்டுண்டாமோ.... . ... *

(இ-ள்.) அனைவருக்கும் - யாவருக்கும்—மேவுமிடமதுவேயாகும்-அடையத்தக்கவிடமப்பதமேயாகும் — அதுவேஅறிஞருக்குமெய்யுருவமாகும் - அதுவேஞானவான்களுக்குத் தத்துவஸ்வரூபமாயிருக்கும்—தனையகலா - தன்னைவிட்டுநீங்காத—அப்பதத்தில்-அப் (பரம) பதத்தில்—வாழுந்தாதைதனைநோக்கி - வாழாநின்றபிதாவைப்பார்த்து— தம்பிதளருமதாதகவோ - தம்பிநீதளர்வடைவதுஞாயமோ—துணைபுனலிரோட்டத்துக்கு - ஆற்றினீரோட்டத்துக்கு—எய்தும்பள்ளத்தொகுதிபோல் - அடையும்பள்ளத்தின் திரளைப்போல—பிறவிதொறும்-சநநங்கடோறும்—தொடர்பாய்ப்போன - தொடர்பாய்நீங்கின — வனையுறுநின்றாய்தந்தைக்கு - பெற்றவுனதுமாதாபிதாக்களுக்கு—இலக்கமுண்டோ - கணக்குண்டோ— மனைமக்கள்சுற்றம்-மனைவிபுத்திரர்(முதலிய)வுறவினருக்கு—ஒருமட்டுண்டாமோ-ஓரளவுண்டாமோ. எ-று [ப-ம்] பரமாநந்தமே யாத்மாதாரமாமென்பார், அனைவருக்குமேவுமிடமதுவென்றும்,அவ்வாநந்தமே ஞானத்திற்குருவமாமென்பார், அறிஞருக்கு மெய்யுருவமதுவேயென்றும், தானாய்விளங்குஞ் சத்தென்பார், தனையகலாவப்பதமென்றுங்கூறினார்........ . ... (௪௨)

(அ-கை.) சநநத்தின்பந்துக்களுக்களவின்றெனல். (கவி) பருவங்கடொறும்பெரியவனத்திற்காய்க்கும்பலங்கள்போற் பவங்கடொறும்பரந்தசுற்றங், கருதுங்காலிறந்தவவர்க்கிரங்கவேண்டிற்கற்பமளவலறினுமோர்கரையுண்டாமோ, சொருபமிலாவஞ்ஞானக்கானன்மேட்டிற்றொடர்ந்தவாதனைக்கோடைச்சுழல்வெங்கானற், பெருகுநீர்சுகாசுகமாந்திரைகண்மோதிப்பேதமொருகரையின்றிப்பிறழுமன்றே ... . *

(இ-ள்.) பருவங்கடொறும் - காலங்கடோறும்—பெரியவனத்தில்- மகாடவியில்—காய்க்கும்பலங்கள்போல் - காய்க்கின்றகனிகளைப்போல—பவங்கடொறும்- சநநங்கடோறும்—பரந்தசுற்றம் - மிகுந்தவுறவினர்களை—கருதுங்கால் - நினைக்கின்றகாலத்தில் — இறந்தவவர்க்கு-மரணமடைந்தவவர்களுக்கு—இரங்கவேண்டில் - விசனப்படவேண்டினால் — கற்பமளவலறினும் - கற்பகாலமட்டுங்கதறினாலும்—ஓர்கரையுண்டாமோ - ஒருவரம்புண்டாயிருக்குமோ—சொருபமிலா - உருவமில்லாத—அஞ்ஞானக்கானன்மேட்டில் - அறியாமையென்னுங்கானற்றிடரில்—தொடர்ந்தவாதனைக்கோடை - துடர்ந்துவாராநின்றவாசனையென்னும்வேனிற்காலத்தில்—சுழல்வெங்கானற்பெருகுநீர் - சுழலுகின்றவெவ்வியகானற்ப்ரவாகசலமானது — சுகாசுகமாந்திரைகண்மோதி - சுகதுக்கமென்னுமலைகளையடித்துக்கொண்டு — பேதமொருகரையின்றிப்பிறழும் - வேற்றுமையோர்வரம்பில்லாமற்புரளும். எ-று.................. ....(௪௩)

(அ-கை.) பாவனையேசுகதுக்கமாமெனல். (கவி) இல்லுறவுபகைநேயங்கோபமாசையிழிவுயர்வாதிகள்வடிவாயெழுந்தஞாலம், புல்லுறுதன்னாமமாத்திரத்தினாலே பொலிந்துவிரிகின்றதலாற்புறனிலுண்டோ, நல்லுறவாநினைத்திடினல் லுறவேயாவர்நஞ் ஞாராய்ப்பாவிக்கினண்ணாராவார், கொல்லுறுநஞ்சமுதிரண்டின் குணங்கள்போலுங்குறித்திடுபாவனைக்கட்டுகுலைந்தாலுண்டோ... ....*

(இ-ள்.) இல்லுறவு - மனைவிமுதலியபந்துவும்—பகைநேயம் - துவேஷமுஞ்சிநேகமும்—கோபமாசை - வெறுப்புவிருப்பும்—இழிவுயர்வாதிகள் - தாழ்வுமேன்மைமுதலியவைகளை—வடிவாயெழுந்தஞாலம்- உருவமாயுண்டானசகமானது—புல்லுறுதன்னாமமாத்திரத்தினால் - பொருந்தியதனதுபெயர்மாத்திரத்தினால்—பொலிந்துவிரிகின்றதலால் - மிகுந்துபரவுகின்றதேயல்லாமல்—புறனிலுண்டோ-வேறொன்றினுலுண்டாமோ— நல்லுறவாநினைத்திடில்-நல்லபந்துவாகநினைத்தால்—நல்லுறவேயாவர்-நல்லுறவேயாவார்கள் — நண்ணாராய்ப்பாவிக்கில் - பகைவராகநினைத்தால்—நண்ணாராவர்-பகைவராவார்கள் — கொல்லுறுநஞ்சு - கொல்லுகின்றவிஷமும்—அமுது-(பிழைப்பிக்கின்ற) வமுதமுமாகிய—இரண்டின்குணங்கள்போலும்-இரண்டின்குணங்களைப்போலவும்—குறித்திடுபாவனைக்கட்டு - குறித்திடுகின்றபாவனாபந்தமானது—குலைந்தாலுண்டோ - கெட்டாலுண்டாகுமோ. எ-று ....(௪௪)

(அ-கை.) பேதபாவத்தையும்அபேதஞானத்தையுங்கூறல்.(கவி)ஒன்றிலேதோன்றியனைத்துருவமானவுணர்வுக்குப்பகையுறவென்றுரைப்பதெங்ஙன், னின்றியொழிதசைபுண்ணீர்தோல்கண்மேய்ந்த வெலும்புப்பஞ்சரந்தன்னிலியாமாமொன்று, நின்றவனீநின்மனத்தானினைந்துநோக்காய் நிமலமாம்பரமவிழி நெறியாநோக்கிற், பொன்றுதுயர்நீயில்லைநானுமில்லைப்புண்ணியபாவனனெனல்போய்ப் போதந்தோன்றும்.... .... *

(இ-ள்.) ஒன்றிலேதோன்றி - ஒன்றான (வாத்மாவி) லுண்டாய் — அனைத்துருவமான-சகல

லவடிவங்களுமாகிய—உணர்வுக்கு - அறிவுக்கு — பகைபுறவென்று - பகையென்றும்புறவென்றும்—உரைப்பதெங்ஙன் - சொல்லுவதெப்படி. — இன்றியொழி - இல்லாமற்கெடுக்கின்ற—தசை - ஊன்களினாலும்—புண்ணீர் - உதிரங்களினாலும் — தோல்கள் - சருமங்களினாலும்—மேய்ந்த - கட்டியிருக்கின்ற—எலும்புப்பஞ்சரந்தன்னில் - அஸ்திக்கூடான (சரீர) த்திலிருக்கின்ற—இயாமாரொன்று - நாமாரென்று (விசாரிக்கின்)—நின்றவனீ - இருந்தவனீயே— நின்மனத்தால் - உன்மனதினால்—நினைத்துநோக்காய் - சிந்தித்துப்பார்ப்பாய்— நிமலமாம்பரமவிழி - மாசற்றபிரமதிருஷ்டியினது—நெறியாநோக்கில் - கிரமமாகப்பார்த்தால்—பொன்றுதுயர்நீயுமில்லை-நசிக்கின்றதுன்பமுள்ளநீயென்பதுமில்லை—நானுமில்லை-நானென்பதுமில்லை—புண்ணியபாவனனெனல்போய் - புண்ணியனென்றும்பாவனென்றுஞ்சொல்லப்பட்ட நாமமும்போய்—போதந்தோன்றும் - ஞானந்தோற்றும். எ-று .... (௪௫)

(அ-கை.) சநநமித்தையாமென்றறிவிக்குநிமித்தம்அச்சநநாந்தரங்களைக்கூறல்.(கவி)ஏகிய தீவுகடோறும்பிறந்தசென்மமெண்ணவொண்ணாவிந்நாவற் பெருந்தீவத்திற், கோகிலமாய்முன்பிறந்தாய்விலங்குமேகக்குன்றுமரமூர்வனபுட்குலங்கடம்மிற், போகியசென்மத்தொகுதிபுகலவொண்ணாப்பொருந்துமவற்றுன்கிளையாய்ப்போனோர்க்கெல்லாமாகுலமுற்றிலையென்னீயவற்றின்மட்டோவனந்ததேசப்பிறவியறையக்கேளாய் .... *

(இ-ள்.) ஏகியதீவுகடோறும் - போனதீவுகடோறும்— பிறந்தசென்மம் - (நீ) செனித்தசென்மமானது—எண்ணவொண்ணா - எண்ணமுடியாது — இந்நாவற்பெருந்தீவத்தில் - இந்தநாவலென்னுமகாதீவில்—முன்கோகிலமாய்ப்பிறந்தாய் -முன்னங்குயிலாகப்பிறந்தாய்—விலங்கு - (பின்பு) மிருகங்களும்—மேகம் - மேகங்களும்—குன்று - மலைகளும்—மரம்- விருக்ஷங்களும் —ஊர்வன - ஊர்வனங்களும்—புட்குலங்கள்-பறவையினங்களுமாகிய—தம்மில்- இவைகளிடத்தில்—போகியசென்மத்தொகுதி-கழிந்தபிறப்பின்றிரளானது—புகலவொண்ணா - சொல்லமுடியாது—பொருந்துமவற்று -பொருந்தாநின்றவவைகளில்—உன்கிளையாய்ப்போனோர்க்கெல்லாம்-உனதுறவினர்களாயிறந்துபோனவர்களுக்கெல்லாம்— நீயாகுலமுற்றிலையென்-நீவிசனப்படாததென்ன—அவற்றின்மட்டோ-அதுமட்டுந்தானோ—அனந்ததேசப்பிறவி- இன்னமளவற்றதேசங்களிற்செனித்தபவங்களை—அறையக்கேளாய்-சொல்லக்கேட்பாய். எ-று.. (௪௬)

(அ-கை.) இ-து, (கவி) கோசலத்துந்தெசார்ணவத்தும்பௌண்டரத்துங்குச்சரத்துந்துழாரத்துங்கோகனத்தும்,போசலத்துமேகையத்துஞ்சாளுவத்தும்பூபதியாய்வானரமாய்ப்புழுவாய்ப்புல்வாய்,மாசலத்திற்கரண்டமாய்ப்பதங்கமாகிமாசுணமாய்வேசரியாய்மட்டில்சென்ம, நீசகலவாதனையாற்பிறந்தபோதினின்கிளைஞர்க்கிரங்காதநீதியென்னே .. *

(இ-ள்.) கோசலத்தும்-கோசலதேசத்திலும்—தெசார்ணவத்தும் -தெசார்ணவதேசத்திலும்—பௌண்டரத்தும்-பௌண்டரதேசத்திலும்—குச்சரத்தும் - குச்சரதேசத்திலும்—துழாரத்தும்-துழாரதேசத்திலும்—கோகனத்தும் - கோகன்னதேயத்திலும் — போசலத்தும்-போசலதேசத்திலும்—ஏகையத்தும் - ஏகையதேயத்திலும்—சாளுவத்தும் - சாளுவதேயத்திலும் — பூபதியாய் - அரசனாகவும்—வானரமாய் - குரங்காகவும்— புழுவாய்-கிருமியாகவும்—புல்வாய் - கலைமானாகவும்—மாசலத்திற்கரண்டமாய்- பெருநீரினீர்க்காக்கையாகவும்—பதங்கமாகி - பக்ஷியாகவும்—மாசுணமாய் - சர்ப்பமாகவும்—வேசரியாய் - கழுதையாகவும்—மட்டில்சென்மம் - அளவற்றபிறவிகளை— நீசகலவாதனையால் - நீசமஸ்தவாசனைகளினால்—பிறந்தபோதில் - செனித்தபோதி(லுண்டாகிய)—நின்கிளைஞர்க்கு - உனதுறவினர்க்கு — இரங்காதநீதியென்னே - விசனப்படாதஞாயமென்ன. எ-று .... (௪௭)

(அ-கை.) இச்சநநமரணமற்றவாத்மாவைத்தெரிசிக்கவேண்டுமெனல்.(கவி) அளவிறந்தபிறவிதொறும்பிறந்தோர்க்கெல்லாமன்னைதாதையையெண்ணிலகன்றகானிற், கிளர்மரங்கடருஞ்சருகையெண்ணவற்றுங்கேதமுறக்கணக்கில்லைக்கேளாய்மைந்தா, தளர்வின்றிப் பாவாபாவனைகளின்றிச் சராமரணமற்றவுனைச் சங்கியாதே, யுளமுறநோக்காய்துயர்விட்டஞ்ஞானத்தையொழித்துணரிலுள்ளபடியுன்னைக்காண்டி..... *

(இ-ள்.) அளவிறந்தபிறவிதொறும் - அளவற்றசநநங்கடோறும் — பிறந்தோர்க்கெல்லாம்-செனித்தவர்க்கெல்லாம்—அன்னைதாதையையெண்ணில்- மாதாபிதாக்களையெண்ணுமிடத்தில்—அகன்றகானில் - விசாலமானவனத்தில் —கிளர்மரங்கடருஞ்சருகை- விளங்கியவிருக்ஷங்கள்கொடுக்கின்றசருகை—எண்ணவற்றும் - எண்ணினதுக்கொப்பாம் — கேதமுறக்கணக்கில்லை- துன்பமடையஞாயமில்லை—கேளாய்மைந்தா- கேள்குழந்தாய்—தளர்வின்றி- தளர்ச்சியில்லாமல்—பாவாபாவனைகளின்றி - பாவமும்அபாவமுமில்லாமல்—சராமரணமற்ற- சரையுமரணமுமில்லாத—உனைச்சங்கியாது - உன(தாத்மஸ்வரூபத்)திற்றடையின்றி — உளமுறநோக்காய்-

மனம்பொருந்தப்பார்ப்பாய்—துயர்விட்டு - துன்பத்தைவிட்டு— அஞ்ஞானத்தையொழித்து ணரில் - அறியாமையைநீக்கியறியில்— உள்ளபடியுன்னைக்காண்டி - உள்ளபடியாகவுன(தாத்ம ஸ்வரூபத்) தைக்காண்பாய். எ-று .... (௪௮)

(அ-கை.) தன்னைத்தெரிசிக்கிலாநந்தவடிவமாவாயெனல். (கவி) உன்னுருவை நீகாணுஞா னக்கண்ணிலொன்றலாவாசையெனுங்காசமுறு, மன்னதுதீர்த்துளக்கமலத்துள்ளே நேரா ய்யவறிவுடையவுன்மனத்தாலுன்றுனுன்னை, யின்னபடியெனநோக்கி மயக்கமெல்லாமி றையுமறவொழித்தின்பமெய்திநிற்பாய், பின்னவனேயெனமுன்னேனுரைத்தானென்று பெறுந்தகைக்குவசிட்டமுனிபேசினனே................................ *

(இ-ள்.) உன்னுருவை - உன(தாத்ம)ஸ்வரூபத்தை—நீகாணுஞானக்கண்ணில்-நீகாண்கின் றஞானதிருஷ்டியில் — ஒன்றலாவாசையெனும் - பலவானவிச்சையென்னும் — காசமுறும்- படலமுண்டாகும்—அன்னதுதீர்த்து - அதைநீக்கி—உளக்கமலத்துள்- இருதயதாமரையில்— நேரா ய்யவறிவுடைய - சொச்சமானவுணர்வுடைய— உன்மனத்தால் - உனதுமனதினால்—உன் றுனுன்னை - உன்றனுனதுஸ்வரூபத்தை — இன்னபடியெனநோக்கி-இப்படிப்பட்டதென்று பார்த்து —மயக்கமெல்லாம் - மயக்கங்களனைத்தையும்—இறையுமறவொழித்து- இறையளவே னுமில்லாமற்கெடுத்து—இன்பமெய்திநிற்பாய்- நிருவாணசுகத்தையடைந்திருப்பாய்—பின்ன வனேயென - தம்பியேயென்று— முன்னோனுரைத்தானென்று - தமையன்சொன்னனென்று —பெருந்தகைக்கு - (ஸ்ரீராமனென)வரசனுக்கு— வசிட்டமுனிபேசினன் -வசிஷ்டமுனிசொன் னர். எ-று. (இ - ரு - க - ம்) மாதாபிதாக்கள் பிரிவிற்படுந்துன்பத்தை முன்னிட்டவர்களும், நாமும், மித்தையேயாமென்றறிவித்துஅதையறிந்தஞானமே சர்வமுமாய்விளங்குகின்ற நம தாத்மஸ்வரூபமாமென் றுநந்நிக்கும்படியனுக்கிரகித்ததாம்.................... (௪௯)

புண்ணியபாவனன்கதைமுற்றிற்று - ஆ௲ கதை - உ௰இ - கவிதை. (௮௱௫௧)

மாவலிகதை.

(அ-கை.) முன்கதையிற் றிரிஸ்யத்தி லகம்பாவநிவிர்த்தியையுந் திருக்குவிலகம்பாவ த்தையுஞ்செய்வதனுல் சர்வமுந்தன்மயமாய் விளங்கு மனுபவத்தைக்கூறி, மேல்நிஷ்காமபுண் ணியத்தினுல் விஷயாநந்த மிகுதி பிரமாநந்தத்தின்பொருட்டாகுமென்பதையறிவிக்குநிமித்த மாவலிகதையை நிரூபிக்கிறர்.. *

(அ-கை.) பாவனன்ஞானமடைதல். வேறு. (கவி) புண்ணியனுணர்த்தஞானம்பொலிந்த பாவனன்றனுள்ள,நண்ணியவிடியற்கண்டஞாலம்போல்விளங்கித்தோன்ற,திண்ணியவிரு வர்தாமுஞ்சித்தராய்விவேகஞானத்,தெண்ணியகரையையெய்தியியம்பியவனத்திருந்தார்

(இ-ள்.) புண்ணியனுணர்த்த - புண்ணியமுனிவன்போதிக்க—ஞானம்பொலிந்த-ஞானம் ப்ரகாசித்த—பாவனன்றனுள்ளம்- பாவனனுடையவிருதயமானது—நண்ணியவிடியற்கண்ட- பொருந்தியவைகறைக்காலங்கண்ட—ஞாலம்போல் - சகத்தைப்போல — விளங்கித்தோன்ற- ப்ரகாசித்துத்தோற்ற — திண்ணியவிருவர்தாமும் - திடஞானமுடையவிரண்டுபேர்களும்— சித்தராய் - சித்தபுருஷர்களாய்—விவேகஞானத்து - விவேகஞானத்தினது — எண்ணியகரை யையெய்தி - சிந்தித்தவாத்மஞானத்தையடைந்து — இயம்பியவனத்திருந்தார் - முன்சொல் லியவனத்தில்வசித்தார்கள். எ-று... (௧)

(அ-கை.) விதேகமுத்தியடைதல். (கவி)வேண்டியகாலமெல்லாம்விநோதமாம்விளையாட் டெய்தி, யீண்டியகாலஞ்செல்லயாக்கைதீர்வீட்டிலெய்தி, தூண்டிடுதிரிநெய்யில்லாச்சுட ர்கள்போற்சாந்தமுற்ருர், மாண்டிடுமுயிர்கட்கெல்லாமரபிந்தமரபுபோலாம்... .... *

(இ-ள்.) வேண்டியகாலமெல்லாம் - (தங்களுக்கு) வேண்டியகாலங்களனைத்தும்—விநோ தமாம்விளையாட்டெய்தி - விநோதமாகவிளையாடி—ஈண்டியகாலஞ்செல்ல - வெகுகாலஞ்செ ல்ல—யாக்கைதீர்வீட்டிலெய்தி- விதேகமுத்தியையடைந்து—தூண்டிடுதிரிநெய்யில்லா-தூண்

டப்பட்டதிரியுநெய்யுமில்லாத—சுடர்கள்போல் - தீபங்களைப்போல—சாந்தமுற்றார் - உபசாந்தமடைந்தார்கள்—மாண்டிடுமுயிர்கட்கெல்லாம் - மரணமடைகின்றசீவர்களனைவர்க்கும்—மரபிந்தமரபுபோலாம் - குணங்களிம்முறைமையைப்போலவாகும். எ-று. (இ-உ-க-ம்) இவ்விருவருஞ் சீவன்முத்தராயிருந்து விதேகமுத்தியையடைந்தனரொன்பதாம் … ……… ……. (உ)

(அ-கை.) சர்வமுந்தனதுபிரியவடிவமாமென்றறிவித்து அவ்வனுபவமுதிப்பதற்கு இச்சாத்தியாகமவேண்டுமெனல். (கவி) அனந்தமாம்பிறப்புற்றாருக்கில்லுமயலன்றாகிற், சினந்திடனயத்தல்வேண்டாவாதலாற்செறிந்தவாசைக், கனந்தனைவிடுவதல்லாற்கதித்துறவளர்க்கலாகா, மனந்தனில்வளர்க்கிற்சிந்தைவன்னிக்குவிறகாமன்றே.

(இ-ள்.) அனந்தமாம்பிறப்புற்றாருக்கு - அளவற்றசநநமடைந்தவர்களுக்கு— அகிலமுமயலன்றாகில் - சமஸ்தமும்பந்துவாயிருக்குமானால்— சினந்திடனயத்தல்வேண்டா - பகைத்தலும்விரும்புதலும்வேண்டுவதென்ன—ஆதலால் - ஆகையினால்—செறிந்தவாசை - மிகுந்தவாசையின்—கனந்தனைவிடுவதல்லால் - பாரத்தைவிடுவதேயன்றி — கதித்துறவளர்க்கலாகா - பெருகவளர்க்கக்கூடாது—மனந்தனில்வளர்க்கில் - மனதிலாசையைவளர்த்தால்— சிந்தைவன்னிக்கு - சிந்தனையென்னுமக்கினிக்கு—விறகாம் - (ஆசையானது) விறகாகும். எ-று. …. (ங)

(அ-கை.) அவ்விச்சாத்தியாகத்திற்சுகமுதிக்குமெனல். (கவி) இச்சையாம்விறகுமாண்டாலெண்ணமாம்வன்னிமாளு, நிச்சயமாகுந்தேயத் தியாகமா நெடுந்தேமேறி, மெச்சியவுதாரக்கண்ணால் வேட்கையான்மிகவும்வாடுங், கொச்சைஞாலத்தைநோக்கிக்குறைவறவிருப்பாய்தீரா……. ….. ……. ……… ……… … ……… ……… ……. ✻

(இ-ள்.) இச்சையாம்விறகுமாண்டால்-ஆசையென்னும்விறகுநசித்தால் — எண்ணமாம்வன்னிமாளும்-சிந்தையென்னுமக்கினிநசிக்கும்— நிச்சயமாகும்-(இது)வுண்மையாகும்—தேயத்தியாகமாம்-தேயத்தியாகமாகிய—நெடுந்தேமேறி-மகாரதத்திலேறி—மெச்சியவுதாரக்கண்ணால்-சகலருந்துதித்தவுதாரமான(கருணை)திருஷ்டியினால்— வேட்கையான்மிகவும்வாடும் - ஆசையினான்மிகவும்வாடாநின்ற—கொச்சைஞாலத்தைநோக்கி- அற்பமானசகத்தைப்பார்த்து —தீரா-தீரத்தையுடையஸ்ரீராமா—குறைவறவிருப்பாய்- குறைவில்லாமலிருப்பாய். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) வேறு. நொய்யதாயொருமயலின்றிநோயெலாநீங்கி, மெய்யதாகியபிரமமாநிலையிதுவீரா, வையமின்றியிந்நிலையுறிலறிவிலரேனு, மையன்மேவலரிராமநீயிவ்வகைவாழ்வாய்……………………………………………… ✻

(இ-ள்.) வீரா - ஸ்ரீராமா—நொய்யதாய் - சொச்சமாகியும்—ஒருமயலின்றி - ஒருமயக்கமுமில்லாததாகியும்— நோயெலாநீங்கி - வியாதிகளனைத்துமில்லாததாகியுமிருக்கின்ற—மெய்யதாகிய - சத்தியமான—பிரமமாநிலையிது- பிரமமானநிச்சயமிதுவாகும்—ஐயமின்றி-சந்தேகமில்லாமல்—இந்தநிலையுறில் - இந்தநிலையையடைந்தால்—அறிவிலரேனும் - அறிவில்லாதவர்களாயினும்—மையன்மேவலர் - மயக்கத்தையடையார்கள் — இராம - ஸ்ரீராமா—நீயிவ்வகைவாழ்வாய் - நீயிந்தப்ரகாரம்வாழக்கடவாய். எ - று. (இ-ங-க-ம்) விஷயவிச்சையினது நீக்கத்திற்பிரமநிச்சயமுதிக்குமென்பதாம் ……………… ….. …. ……………… • (ரு)

(அ-கை.) இச்சைநீங்குதற்குரியசகாயங்கூறல். (கவி) நல்லபுந்தியும்விவேகமுமெனவிருநண்பா, லல்லறீர்ந்திடுமொருவனையென்னினுமணுகிற், சொல்லுபல்பொருட்சுற்றங்கடுடக்கறத்தீர்த்து, புல்லுதின்மையினலன்றித்துயரொலாம்போகா…………. …………..✻

(இ-ள்.) நல்லபுந்தியும் - நல்லவறிவும்—விவேகமும் - நல்லவிவேகமும்—எனவிருநண்பால் - என்கின்றவிரண்டுநட்பினால்—அல்லறீர்ந்திடும் - துன்பநீங்கும் — ஒருவனையென்னினுமணுகில் - ஒருவனையாவதடைந்தாலும் —சொல்லுபல்பொருள் - சொல்லப்பட்டபலவஸ்துக்களையும்—சுற்றங்கள் - உறவுகளையும்—துடக்கறத்தீர்த்து - தொடர்பில்லாமற்கெடுத்து— புல்லுதின்மையினலன்றி - பொருந்துகின்றதனதுதயிரியத்தினாலல்லாமல்—துயரொலாம்போகா- துன்பங்களனைத்துநீங்காவாம். எ-று…………………………………….. …… …. (சா)

(அ-கை.) நிராசையுள்ளமனதின்பெருமையைக்கூறல். (கவி) மயலிலாமையானூல்களாண்மகத்துவமுதலா, முயர்குணங்களால்வருந்தியுமனத்தினையுய்க்கிற், றுயர்கணீங்குமூவுலகுறுசெல்வமுந்தொக்கு, பயனளிக்கினுமுயர்வுறுமனமெனப்பயிலா……………. ✻

(இ-ள்.) மயலிலாமையால் - வைராக்கியத்தினாலும்— நூல்களால் - ஞானசாத்திரங்களினாலும்—மகத்துவமுதலாம் - மகத்துவமுதலான—உயர்குணங்களால்- மேன்மையானகுணங்களினாலும்—வருந்தியும் - வருத்தப்பட்டு—மனத்தினையுய்க்கில் - மனதையாத்மவாழ்வடையச்செய்தால்—துயர்கணீங்கும் - துக்கங்கள்போகும்— மூவுலகுறுசெல்வமுந்தொக்குபயனளிக்

கினும்-மூன்றுலகினுள்ளசெல்வத்தைக்கொடுத்தாலும்—உயர்வுறுமனமெனப்பயிலா - கைவல்லியத்தையடைகின்றமனதுக் கொப்பென்றுசொலலமாட்டார்கள். எ-று .... (எ)

(அ-கை.) மனதிற்குரியவிச்சாவநிச்சையின்பலாபலனைக்கூறல். (கவி) மனநிறைந்தி
டிலமுதமாய் நிறைந்திடும்வையந், தனதுதாட்செருப்புலகெலாந்தோல்மூச்சுந்தர
ம்போற், கனநிராசையாணிறையுநெஞ்சாசையிற்கவிழா, தினமுமாசையானிறை
மனங்குறைவென்றுந்திரா.... .... *

(இ-ள்.) தனதுதாட்செருப்பு - தன்பாதத்திலிருக்கின்றசெருப்பானது—உலகெலாம்-சகங்களனைத்தும்— தோல்மூச்சுந்தரம்போல் - தோலால்மூடிந்தன்மையைப்போல — மனநிறைந்திடில்-மனதுபூரணமானால்—வையம்-சகமானது—அமுதமாய்நிறைந்திடும்-அமுதமாகநிறையும்—கனநிராசையால்-கனமுள்ளநிராசையினால்—நிறையுநெஞ்சம்- நிறைந்தமனமானது—ஆசையிற்கவிழா - ஆசையின்மூழ்காது— தினமுமாசையானிறைமனம்-எப்போதுமிச்சையினானிறைந்தமனமானது—குறைவென்றுந்திரா-குறையெப்போதுந்திராது. எ-று. (அ)

(அ-கை.) இச்சையாற்கெடாதமனதினுயர்வைக்கூறல். (கவி) அகத்தியன்கவர்கடலென
நன்னெஞ்சையழிக்கு, மிகுத்தமாவிலாமனமென நிறைமதிவிளங்காப், பகுத்தபாற்கட
னிறைவுறுப்பரிமளக்கோக, னகத்தினுயகிதிருமுகநலம்பெறத்தோன்று......... .... *

(இ-ள்.) அகத்தியன்கவர்கடலென-குறுமுனிநுகர்ந்தவுததியைப்போல—நன்னெஞ்சையழிக்கும் - நல்லமனதைக்கெடுக்கின்ற—மிகுத்தமாவிலாமனமென - மிகுந்தவாசையில்லாதமனதைப்போல—நிறைமதிவிளங்கா-பூரணசந்திரனும்ப்ரகாசியாது—பகுத்தபாற்கடனிறைவுறு-(சுகத்தைக்) கொடுத்தபாற்சமுத்திரமுநிறையமாட்டாது—பரிமளக்கோகனகத்தினுயகி-வாசனைபொருந்தியதாமரையிலிருக்கின்றயிலக்குமி—திருமுகம் - சிறப்புள்ளமுகமும்—நலம்பெறத்தோன்று - நன்மையாகவுண்டாகாது. எ-று..... ....(கூ)

(அ-கை) மனதிற்குஇச்சாபந்தநீங்கலேமுத்தியாமெனல். (கவி)மதியைமேகம்போல்வெ
ண்டலச்சுதையினைமைபோ,லதிகநன்னெஞ்சையாசையாம்பேயழகழிக்கும்,பொதியுமா
லெலாநீக்கிவன்பவப்பயன்போக்கி,முதிர்மனத்தின்மால்பிணிப்பறின்முத்திவேறுளதோ

(இ-ள்.) மதியைமேகம்போல் - சந்திரனைமேகமறைக்கின்றதுபோலும் — வெண்டலச்சுதையினை - வெண்மையானவிடத்திற்றீற்றியசுன்னச்சாந்தைக் (கெடுக்கும்) — மைபோல்-மையைப்போலவும்—அதிகநன்னெஞ்சை - மிகவுநல்லமனதை— ஆசையாம்பேய் - இச்சாபசாசமானது—அழகழிக்கும் - தேஜஸைக்கெடுக்கும்—பொதியுமாலெலாநீக்கி- அடைந்தவாசைகளனைத்தையுங்கெடுத்து—வன்பவப்பயன்போக்கி-வலியசநநத்தினச்சத்தைக்கெடுத்து—முதிர்மனத்தின் - பக்குவமானமனத்தின்—மால்பிணிப்பறில் - ஆசைக்கட்டானதுநாசமானால்—முத்திவேறுளதோ - மோக்ஷம்வேறுண்டோ. எ - று. (இ-ரு-க-ம்) மனமானது சிற்சுகமாய்ச் சகவிச்சையைநீக்குதலே மோக்ஷமாமென்பதாம். முன்கதையிற்கூறவேண்டியவிப்பத்துகவிதையை யிந்நூலாசிரிய ரிக்கதையிற்கூறினதென்னவெனிற், சமாதிக்கருளிய விவ்விச்சாத்தியாகஞ் சகசத்துக்குவரும்பொருட்டெனக்கொள்க .... (ய)

(அ-கை.) இச்சையைச்சுருக்கிக்கெடுப்பதையறிவித்திஃதுபெருக்கிற்கெடுப்பதையு
மறிவிக்கத்தொடங்கல். (கவி) இன்னதன்றெனிலிராகவமாவலியென்ன, நன்னதாகி
யபுந்தியான்ஞானமேநேர்வா, யன்னதேநலனென்றலுமனையதேதென்று, சொன்
னமாமுனிதன்னையேயிராமனுஞ்சொன்னான்.. *

(இ-ள்.) இன்னதன்றெனில் - இத்தன்மைகூடாவிடின்—இராகவ-ஸ்ரீராமா—மாவலியன்ன-மாவலியைப்போல—நன்னதாகியபுந்தியால்-நன்மையானபுத்தியினால்— ஞானமேநேர்வாய்-ஞானத்தையேயடைவாய் — அன்னதேநலனென்றலும் - அத்தன்மையேநன்மையென்றுசொல்லவும்—அனையதேதென்று - அப்படிப்பட்டதெதுவென்று—சொன்னமாமுனிதன்னை-சொல்லியமகாமுனியைப்பார்த்து—இராமனுஞ்சொன்னான்-ஸ்ரீராமனுங்கேட்டார். எ-று(யக)

(அ-கை.) மாவலியின்பெருமையுரைத்தல். (கவி) வினையவள்ளலுக்கருந்தவனுத்தரம்விள
ம்புந், தனதுதோள்களாலுலகெலாமஞ்சுறச்சயித்தோன், பிறைகிசார்ங்கியைமுதலினர்தா
ழ்வுறப்பெரியோ, னனுதியாமெனப்பாதலத்தரசுசெய்யதுல்லன்.............. .... *

(இ-ள்.) வினையவள்ளலுக்கு-இப்படிகேட்டவுதாரமுள்ளஸ்ரீராமனுக்கு—அருந்தவன்-அரியதவத்தையுடையவசிஷ்டமுனி—உத்தரம்விளம்பும்- உத்தரஞ்சொல்லுவார்—தனதுதோள்களால்-தனதுபுயங்களினால்—உலகெல்லாமஞ்சுறச்சயித்தோன்-சகங்களனைத்துநடுங்கும்படிஜெயஞ்செய்தவன் — பிறைகி - ஈஸ்வரனும்—சார்ங்கியைமுதலினர் - விஷ்ணுவுமுதலியசகலரும்—

ஆத்துமதத்துவமேயாகும்—அன்னவேந்தனால்-அப்படிப்பட்டவரசனால்—அமைத்தமந்திரி-படைத்தமத்திரியானவன்—மனமாகும் - மனமாகும். எ - று .... (௫௩)

(அ-கை.) யூகமென்பதைக்கூறல். (கவி) விடையமியாவையு மொருப்பட வொருக்கிநல் விராக, முடைமையாவதுபரமமாம்யூகமென்றுரைத்தேந், தடையிலாமனம்விராகத்தால்வெலப்பட்டதன்மை, படைசெய்மத்தமாதொழுவத்துளகப்பட்டபண்பே .... *

(இ-ள்.) விடையமியாவையும்- விஷயங்களனைத்தையும்—ஒருப்படவொருக்கி-ஒருமிக்கக்கெடுத்து—நல்விராகம் - நல்லவயிராக்கியத்தை—உடைமையாவது - உடையதாவதே—பரமமாம்யூகமென்றுரைத்தேம்-மேலானயுத்தியென்றுசொன்னோம்—தடையிலாமனம்- தடையற்றமனமானது—விராகத்தால்-நிராசையினால்—வெலப்பட்டதன்மை - வெல்லப்பட்டகுணமானது—படைசெய்மத்தமா - சண்டைசெய்கின்றமதத்தையுடையயானையானது— தொழுவத்துள்-தொழுவத்தினுள்— அகப்பட்டபண்பு - அகப்பட்டதன்மையாம். எ - று. (இ-௬-௧-ம்) தேயமுதலியநான்கையு முத்திமுதலிய நான்காகப் பிரித்துச்சொன்னதாம்..................... (௫௪)

(அ-கை.) பிரமத்தையசாங்கமாகவுருவகப்படுத்தியதைச்செயிக்கு முத்தியைமூன்றுவிதமாகக்கூறத்தொடங்கிமுதலுத்தியைக்கூறல். (கவி) கற்றறிந்திலார்மனத்தைநாற்கூறெனக்கற்பித், துற்றபோகத்திலுபயமுநூல்வழியொன்றும், பெற்றதேசிகன் பூசையிலொன்றுமாய்ப்பேணிற், றுற்றகங்குல்போய்விவேகமாஞ்சுடர்வந்துதோன்றும் ... . *

(இ-ள்.) கற்றறிந்திலார்மனத்தை - (ஞானநூலை) புணர்ந்தறியாதவர்கண்மனதை — நாற்கூறெனக்கற்பித்து - நான்குபங்காகப்பிரித்து—உற்றபோகத்திலுபயமும் - அடைந்தவிஷயபோகங்களிலிரண்டுபங்கும் — நூல்வழியொன்றும் - (ஞான) சாஸ்திரமார்க்கத்திலொருபங்கும்—பெற்றதேசிகன்பூசையிலொன்றுமாய் - (அனுக்கிரகம்) பெற்ற வாசாரியராராதனையிலொருபங்காகவும்—பேணில்- செலுத்தினால்—துற்றகங்குல்போய்-நிறைந்த(வஞ்ஞா)னாந்தகாரம்போய்—விவேகமாஞ்சுடர்-ஞானப்ரகாசமானது—வந்துதோன்றும்-வந்துநிற்கும் எ-று.

(அ-கை.) இரண்டாவதுயுத்தியைக்கூறல். (கவி) சிறிதறிந்தவர் மனத்தைநாற் கூறெனச்செய்து, பொறிவசத்தொன்றுந்தேசிகர் பூசையிலிரண்டு, மறியுநூற்பொருண்மனனத்தோர்கூறுமேயாக்கி, னெறிவிவேகத்தாலொன்றுணர்ஞானமேநிரம்பும் ....*

(இ-ள்.) சிறிதறிந்தவர்மனத்தை-கொஞ்சமறிந்தவர்கள்மனதை—நாற்கூறெனச்செய்து-நான்குபங்காகச்செய்து —பொறிவசத்தொன்றும்- இந்திரியவசத்தில் (செல்லுகின்றபோகங்களி)லொருபங்கும்—தேசிகர்பூசையிலிரண்டும்-ஆசாரியவாராதனையிலிரண்டுபங்கும்—அறியுநூற்பொருண்மனனத்து - விசாரித்தறிகின்றஞானசாஸ்திரார்த்தங்களை மனனஞ்செய்வதில்— ஓர்கூறுமேயாக்கில் - ஒருபங்காகவுஞ்செய்தால்—நெறிவிவேகத்தால்-செவ்வையானவிவேகத்தினால்—ஒன்றுணர்ஞானமேநிரம்பும் - பரதத்துவமறியுஞானமேநிறையும். எ-று .... (௫௫)

(அ-கை.) மூன்றாவதுயுத்தியைக்கூறல் (கவி) ஞானமுற்றவர்மனத்தைநாற்கூறெனநாட்டி, யானநூலினும்விராகத்துமனுபவந்தனிலு, மானநற்குருபூசையின்வழியினுஞ்செலுத்தி, லீனமற்றநன்முத்திவந்தெய்திடுமெளிதின் ...... *

(இ-ள்.) ஞானமுற்றவர்மனத்தை - ஞானத்தையடைந்தவர்கண்மனதை — நாற்கூறெனநாட்டி - நான்குபங்காகநிறுத்தி—ஆனநூலினும் -அயிக்கிய (ஸ்வரூபத்தையறிவிக்கும்)ஞானசாஸ்திரங்களிலும்—விராகத்தும் - நிராசையிலும்—அனுபவந்தனிலும் - ஸ்வானுபவத்திலும்—மானநற்குருபூசையின் - மகானுகியசற்குருவாராதனையின்— வழியினுஞ்செலுத்தில்-மார்க்கத்திலுஞ்செலுத்தினால்—ஈனமற்றநன்முத்தி-குற்றமற்றதாயிருக்கின்றநல்லமோக்ஷமானது—எளிதின்வந்தெய்திடும் - எளிதாகவேவந்துகிடைக்கும். எ - று. மனதைநாற்கூறுசெய்யென்றது அதன்விருத்தியை .... (௫௭)

(அ-கை.) இவ்வுத்திக்குச்சகாயங்கூறல். (கவி) வேறு. மிக்கவறிவால்விசாரத்தான் மெய்ம்மையுணர்வுநிராசையுநீ, யொக்கவென்றுங்கைக்கொள்வா யூற்றமானநிராசையினாற், றக்கவிசாரம்விசாரத்தாற்றவிராநிராசைதம்மாற்றுந், தொக்குநிரம்பும்வாரிதியுந்தொடர்மேகமுந்தன்னுதல்போலாம் .... *

(இ-ள்.) மிக்கவறிவால் - மிகுந்தவறிவினாலும்—விசாரத்தால் - விசாரணையினாலும்—மெய்ம்மையுணர்வும்-ஆத்மதரிசனமும்—நிராசையும் - விராகமும்—நீயொக்க-நீயொருமிக்க—என்றுங்கைக்கொள்வாய்-எப்போதுங்கைவசமாக்குவாய்—ஊற்றமானநிராசையினால் - நிலையாகியவிராகத்தினால்—தக்கவிசாரம் - தகுந்த(வாத்ம)விசாரணையும்—விசாரத்தால் - (அவ்வாத்ம) விசாரணையினால்—தவிராநிராசை - ஒழிவில்லாதவிராகமும்—தம்மாற்றும்- ஒன்றுக்கொ

ன்று—தொக்குநிரம்பும்வாரிதியும்-தொகுப்பாய்நிறைந்தசமுத்திரமும் — தொடர்மேகமும்-தொடர்பானமேகமும் —துன்னுதல்போலாம் - அமைவதுபோலவாம். எ-று ………… (கூஅ)

(அ-கை.) இச்சகாயத்தோடுமுத்தியையடையுமரபுகூறல் (கவி) நாட்டினியல்புவழுவாமனட்டோர்க்கிதமாநற்பொருள்க, ளீட்டிமுன்னமதனுமிலயினியகுணத்துனுயர்ந்தோரைக், கூட்டியவராணிராசையினைக்கூடியதனுல்விசாரத்தைத், திட்டியதனுன்மெய்ஞ்ஞானந் தெளிந்தான்முத்திசித்திக்கும் …. …. ……………………………… *

(இ-ள்.) நாட்டினியல்புவழுவாமல் - தேசாசாரந்தவறுமல்—நட்டோர்க்கிதமாம்-உறவினர்க்குரித்தான—நற்பொருள்களீட்டி - நல்லதிரவியங்களைச்சம்பாதித்து—முன்னமதனுல்-முன்பப்பொருளினுல—இனியகுணத்தில் - இனிமையான (சாத்மீக) குணத்தில் — உயர்ந்தோரைக்கூட்டி - மேன்மையானசத்துக்களைச்சேர்ந்து—அவரால் - அவர்களால்—நிராசையினைக்கூடி - வயிராக்கியத்தையடைந்து — அதனுல் - அந்தவயிராக்கியத்தினுல்—விசாரத்தைத்திட்டி-(ஆத்ம)விசாரணையைச்செய்து—அதனுல் - அந்தவிசாரணையினுல்—மெய்ஞ்ஞானந்தெளிந்தால்- உண்மைஞானத்தைத்தெளிவுற்றுல்—முத்திசித்திக்கும்-மோக்ஷமுண்டாகும்.எ-று.(கூகூ)

(அ-கை) முன்விசாரித்தவனுபவத்தைமனனஞ்செய்து அதினுற்சுகித்தல்(கவி) என்றுமுன்னமென்றந்தை யிசைத்தான்றெய்வசகாயத்தா, லொன்றுமொழியாதின்றுணர்ந்தேனுணர்வுபெற்றேன்போகத்தி, னின்றவாசையின்றொழித்து நிராசையென்னுநிதியாலே, துன்றிநொய்தாயுபசாந்தச் சுதையிற்குளிர்ந்தசுகம்பெற்றேன் ……. *

(இ-ள்.) என்றுமுன்னமென்றந்தை- இப்படியென்றுமுன்னமேயெனதுபிதாவானவர்—இசைத்தான் - சொன்னுர்—தெய்வசகாயத்தால் - தெய்வசகாயத்தினுல்— ஒன்றுமொழியாது- ஒன்றையும்விடாமல்—இன்றுணர்ந்தேன் - இப்பொழுதறிந்தேன் — உணர்வுபெற்றேன்-ஞானத்தையடைந்தேன்—போகத்தினின்றவாசை - போகத்திலிருந்தவிச்சையை— இன்றொழித்து - இப்போதுநீக்கி — நிராசையென்னுநிதியாலேதுன்றி - விராகமென்கிறசெல்வத்தினுனிறைந்து—நொய்தாய் - சொச்சமாய்—உபசாந்தச்சுதையில்- உபசாந்தமென்னுமமிர்தத்தினுல்—குளிர்ந்தசுகம்பெற்றேன் - சீதளமானபரமசுகத்தையடைந்தேன். எ- று ………..(சய)

(அ-கை.) நிறித்தியிற்காக்ஷிப்படல். (கவி) அந்தோவந்தோவிதுநெடுநாளறிந்திலேனின்றறிவுற்ற, சந்தோடத்தையென்சொல்வேன்சகலநினைவுஞ்சமித்தாறி, நொந்தோரின்பதுன்பத்தா ஞேவாதிருக்குமிடமிதுவே, யுய்ந்தோருறையும் பதமிதுவேயுபசாந்தத்தினுயர்விதுவே … ……… …………………………… ……… ……………… *

(இ-ள்.) அந்தோவந்தோ - அகோவகோ—இது-இவ்வனுபவத்தை — நெடுநாளறிந்திலேன்-வெகுநாளறியாதவனுனேன்— இன்றறிவுற்றசந்தோடத்தை - இப்போதறிந்தமகிழ்ச்சியை—என்சொல்வேன் - என்னவென்றுசொல்லுவேன் — சகலநினைவுஞ்சமித்தாறி-எல்லாநினைவுகளுமுபசாந்தமாய்—இன்பதுன்பத்தால் - சுகதுக்கங்களினுல்—நொந்தோர் - துன்பமுற்றவர்கள்—நோவாதிருக்குமிடமிதுவே - வருந்தாமலிருக்கின்றவிடமிதுதான்—உய்ந்தோருறையும்பதமிதுவே-ஆத்மவாழ்வையடைந்தவர்கள்பொருந்தாநின்றபதமிதுதான் — உபசாந்தத்தின் - உபசமனத்தினுடைய—உயர்விதுவே - மாக்ஷிமையிதுதான். எ-று…. ……………… (சக)

(அ-கை.) பரோக்ஷார்த்தத்திற்சந்தேகநீங்கியபரோக்ஷமாயதனினிற்றற்பொருட்டாசிரியரைச்சிந்தித்தல். (கவி) என்னவுரைத்துநானுரென்னுருவமேதென்றியான்விளங்கத், தன்னையறியுஞ்சுக்கிரனைத்தாழ்ந்துவினவிதத்துவத்தை, யுன்னும்பொழுதேயஞ்ஞானமோடுமென்னவுசனுவை, முன்னமேவண்டுமெனக்கண்கண்முகிழ்த்துநினைந்தான்முழுதன்பால்

(இ-ள்.) என்னவுரைத்து - இப்படியென்றுசொல்லி—நானுர் - யானுர் — என்னுருவமேதென்று - எனதுஸ்வரூபமியாதென்றுவிசாரித்து—இயான்விளங்க- நான்ப்ரகாசிக்கும்படி—தன்னையறியுஞ்சுக்கிரனை - தனதுஸ்வரூபத்தையுணர்ந்திருக்கின்ற (நமதுகுருவாகிய) சுக்கிராசாரியனை — தாழ்ந்து - வணங்கி — வினவி - விசாரித்து — தத்துவத்தை - உண்மையை—உன்னும்பொழுது - நினைக்குமளவில் — அஞ்ஞானமோடுமென்ன- அஞ்ஞானங்கெடுமென்று (நினைத்து) — உசனுவை - சுக்கிராசாரியனை — முன்னமேவண்டுமென - நினைக்கவேண்டுமென்று — கண்கண்முகிழ்த்து - கண்களைக்குவித்து — முழுதன்பால் - பூரணமானவன்பினுல்—நினைந்தான்- தியானித்தான். எ-று. (இ நி-க-ம்) முத்தியையடைதற்கு யுத்தியுமவ்வுத்திக்குச் சகாயமுமச்சகாயத்துக்குச் சாதனமுமாகிய விவேகத்தை பறிவித்ததாம் ……………………(சஉ)

(அ-கை.) ஆசிரியரைத் தரிசித்துத் துதித்தல். (கவி) மெய்யாகியசச்சிதாநந்தவெளியேவடிவாய்யவள்ளாி, யுய்யாநின்றமாவலிமுன் னுதிப்பவனுமுவந்துறநஞ்சிக்,

கையார்மணியானுயர்மலராற் காலிலருச்சித்துரைசெய்வா, னையாநின்னன்பெனை
யெழுப்பவடியேனுரைப்பதறிந்தருள்வாய் ... ... *

(இ-ள்.) மெய்யாகிய - உண்மையான — சச்சிதாநந்தவெளியே - சச்சிதாநந்தாகாயமே—வடிவாகியவெள்ளி - ஸ்வரூபமாயிருக்கின்றசுக்கிராசாரியார்—உய்யாநின்ற - ஆத்மவாழ்வையடையாநின்ற—மாவலிமுன்னுதிப்ப - மாவலியின்முன்னேதோன்ற—அவனுமுவந்திறைஞ்சி - அவ்வரசனுமகிழ்ச்சியோடும்வணங்கி—கையார்மணியால் - கையினிறைந்தவிரத்தினங்களினாலும்—உயர்மலரால் - நல்லபுட்பங்களினாலும் — காலிலருச்சித்து - பாதத்திலருச்சனைசெய்து—உரைசெய்வான் - (மாவலி) சொல்லுவான்—ஐயா - எனதாசாரியரே—நின்னன்பெனையெழுப்ப - தேவரீரருளானதென்னைத்தூண்ட — அடியேனுரைப்பது-அடியேன்சொல்லுவதை—அறிந்தருள்வாய் - கேட்டனுக்கிரகஞ்செய்வாய். எ-று ... ... (௪௩)

(அ-கை.) உலகமுதலியவேழினுமிருக்கின்றதியாதெனவிசாரித்தல். (கவி) என்னிங்
குள்ளதப்பாலென் னெல்லைசொல்லப் பட்டுளதென், றுன்னுமெல்லை யில்லாதென்
சொல்லுநானார்நீயாரிம், மன்னுமுலகமேதென்றுமயக்கந்தீரவருளென்ன, வன்ன
தெல்லாந்தெரியவிரித்தவனுக்கிவனன்றறிவித்தான் ... ... *

(இ-ள்.) இங்குள்ளதென் - இவ்விடத்திலுள்ளதென்ன— அப்பாலென் - அப்பாலிருக்கின்றதென்ன—எல்லைசொல்லப்பட்டுளதென்-அளவுசொல்லப்பட்டதென்ன—துன்னுமெல்லையில்லாதென்- நெருங்கியவளவில்லாததென்ன—சொல்லுநானார் - பேசுகின்றயானார்—நீயார்-(கேட்கின்ற)நீரார்—இம்மன்னுமுலகமேதென்று - இந்தநிலைபெற்றசகமியாதென்று—மயக்கந்தீரவருளென்ன - மயக்கந்தீரும்படியனுக்கிரகஞ்செய்வாயென்றுகேட்க—அன்னதெல்லாம்-அவன்கேட்டசகலமும்—தெரியவிரித்து-தெரியும்படிபகுத்து—அவனுக்கு - அந்தமாவலிக்கு—இவன்-இச்சுக்கிராசாரியரானவர்—நன்றறிவித்தான்-நன்றாகத்தெரிவித்தார். எ-று ... (௪௪)

(அ-கை.) இவ்வேழுமுதலியயாவுஞ் சின்மாத்திரமேயென வுபதேசித்தல். (கவி)
வருங்கற்பகவிண்விரைந்தேக வந்தேன்பலசொல்லியும்பயனென், சுருங்கச்சொல்
லும்பயன்கேளாய்தோன்றவிங்குள்ளதுவுஞ்சித், தொருங்கப்புறத்துஞ்சித்தெல்லை
யுள்ளதுஞ்சித்தெல்லையற,நெருங்குற்றதுஞ்சித்தியான்சித்துநீசித்துலகநிறைசித்தே

(இ-ள்.) வருங்கற்பகவிண்-வளருகின்றகற்பகவிருக்ஷத்தையுடையதேவலோகத்துக்கு—விரைந்தேகவந்தேன்-விரைவோடுஞ்செல்லவந்தேன்—பலசொல்லியும்பயனென் - பலவாகப்பேசியும்ப்ரயோசனமென்ன—சுருங்கச்சொல்லும் - சுருக்கமாகச்சொல்லுகின்ற— பயன்கேளாய்-ப்ரயோசனத்தைக்கேட்டாய்—தோன்றவிங்குள்ளதுவும் - தோற்றமாகவிவ்விடத்துள்ளதுவும்—சித்து ஞானமே—ஒருங்கப்புறத்தும்-சமஸ்தமானபுறம்பிலுள்ளவிடங்களும்-- சித்து-ஞானமே—எல்லையுள்ளதும்-அளவுள்ளதுவும்— சித்து-ஞானமே—எல்லையற்றெநருங்குற்றதும்-அளவில்லாமற்செறிவுள்ளதும்—சித்து-ஞானமே—யான்சித்து-(சொல்லுகின்ற) யானுஞானமே—நீசித்து-(கேட்கின்ற)நீயுஞானமே—உலகநிறைசித்தே - சகமும்பூரணஞானமே. எ-று.

(அ - கை.) இவ்வனுபவத்திலழுத்தெனறருளியேகுதல். (கவி) இதுவேசுருக்கமிவ்
வறுதி யிதயங்கொண்டிவ்வகைக்கேற்ற, மதியானின்னை நினைநீயே மாறாதுணர்ந்து
நோக்குதியே, லதனாலந்தமாம்பதத்தையடைதியோரேழருந்தவரும், புதிதோர்
தெய்வகாரியத்திற்புகுந்தாரியாமும்போகுதுமால் ... ... *

(இ-ள்.) இதுவேசுருக்கம் - இந்நிலையேசுருக்கமாம்—இவ்வறுதி- இச்சித்தாந்தத்தை—இதயங்கொண்டு-மனதிற்றரித்துக்கொண்டு—இவ்வகைக்கேற்றமதியால் - இவ்வகைகளுக்குரியவறிவினால்—நின்னை-உனதுஸ்வரூபத்தை—நீயேநினை - நீயேசிந்திப்பாய்—மாறாதுணர்ந்து-திரிவின்றியறிந்து—நோக்குதியேல் - பார்ப்பாயானால்—அதனால் - அதினால்— அந்தமாம்பதத்தையடைதி - முடிவானபரமபதத்தையடையக்கடவாய்—ஓரேழருந்தவரும் - ஒப்பற்றவரியதவத்தையுடையசத்தரிஷிகளும்—புதிதோர்தெய்வகாரியத்தில் - நூதனமாயொருதெய்வகாரியத்தில்— புகுந்தார் - ப்ரவேசித்தார்கள் — இயாமும்போகுதும் - நாமும்போவோம். எ-று.

(அ-கை.) இவ்வனுபவத்தை மனனித்தல். (கவி) என்றுவெள்ளியேகியபின்னெல்லா
மறிவாமுலகினைப்பார்த், துன்றும்வாக்குமொக்குமெனக் குசனுலுரைத்ததுண்மை
யதே, முன்றுமவனிசித்துலகு மூன்றுஞ்சித்துநான்சித்து, நன்றுலானதிசைசித்து
நாட்டுகின்றமதலாஞ்சிதம்த ... ... *

(இ-ள்.) என்று - (இப்படி)யென்றுசொல்லி — வெள்ளியேகியபின் - சுக்கிராசாரியர்போனபின்பு—எல்லாமறிவாம் - சகலமுஞானமாகிய— உலகினைப்பார்த்து - சகத்தைப்பார்த்

து—உன்னை - நினைத்து—ஒக்குமொக்கும் - ஒவ்வுமொவ்வும் — எனக்கு - என்றனக்கு—உசனு லுரைத்தது - சுக்கிராசாரியராற்சொல்லியது—உண்மைபதே - எதார்த்தமே—மூன்றுமவனி சித்து-மூகன்மையாகியபூமியுஞானமே—உலகமூன்றுஞ்சித்து-திரிலோகமுஞானமே—நான் சித்து - எனதுஸ்வரூபமுஞானமே — நன்றலாவனைச்சித்து - நல்லநான் துதிக்குஞானா மே—நாட்டுகின்றவதலாஞ்சித்தே-ஸ்தாபிக்குங்கிரியைகளனைத்துஞானமே. எ-று .... (௪௭)

(அ-கை.) திரித்திப்பிற்காக்ஷிப்படல். (கவி) தெரிக்கும்பொருளுந்தரிசனமுந் தீர் ந்துவெறுநின்மலவடிவாய்ப், புரிக்குமுதயம் விடாதென்றும் பொலியும் பரமப் பொருளானேன், வரிக்குங்காட்சியிலாவறிவே வடிவாயொருகாலேயெங்கும், விரி க்குநிறைவாயுபசாந்தவெளியாயறிவாமிகுபொருணன் .... *

(இ-ள்.) தெரிக்கும்பொருளும் - காணப்படுந்திரிஸ்யமும்—தரிசனமும்- காக்ஷியும்— தீர்ந்து - ஒழிந்து—வெறுநின்மலவடிவாய் - கேவலகளங்கமற்றஸ்வரூபமாய்—புரிக்குமுதயம் விடாது - விளங்குகின்றசதோதயமாய்—என்றும் - எப்பொழுதும்— பொலியும்பரமப்பொ ருளானேன் - ப்ரகாசிக்கின்றபிரமவஸ்துவானேன்—வரிக்குங்காட்சியிலா - பந்தப்படுத்துகின் றவிஷயமில்லாத —அறிவேவடிவாய் - ஞானமேயுருவமாய்—ஒருகால்-ஏககாலத்தில்—எங்கும்- எவ்விடத்தும்—விரிக்குநிறைவாய் - வியாபகமாகியும்—உபசாந்தவெளியாய்- உபசமனமான ஞானாகாசமாகியும்—அறிவாம் - அறிவாகியுமிருக்கின்ற—மிகுபொருணன் - மகத்தாகியபூர ணவஸ்துவேயான். எ-று .... (௪௮)

(அ-கை.) சமாதியடைதல். (கவி) ஓங்குஞ்சின்மாத்திரப்பொருளா மோங்காரத் தையுண்ணினைந்து, தூங்குந்தியானபரனாகித்தொடர்சங்கற்பமெல்லாம்போய், வா ங்குந்தொழிலே டணையைய மனனஞானஞேயமிவை, தாங்குஞாதாவனைத்துமறத் தனிச்சித்திரம்போனெடிதிருந்தான் .... *

(இ-ள்.) ஓங்கும் - ஓங்காநின்ற — சின்மாத்திரப்பொருளாம் - ஞானமாத்திரார்த்தமா கிய—ஓங்காரத்தை - ப்ரணவஸ்வரூபத்தை—உண்ணினைந்து - மனதிற்சிந்தித்து—தூங்குந்தியா னபரனாகி - அறிதுயிலானநியானருடனாப்—தொடர்சங்கற்பமெல்லாம்போய்- தொடராநின் றசங்கற்பங்களனைத்தும்விடுபட்டு—வாங்குந்தொழில் - கொள்ளாநின்றசெயல்களும்—எடணை- ஈஷிணாத்ரயமும்—ஐயம்-சந்தேகமும்—மனனம்-மனனமும்—ஞானம்-அறிவும்— ஞேயம்- விஷயமும்—இவைதாங்குஞாதா - இவைகளைத்தாங்குகின்றஞாதாவுமாகிய — அனைத்துமற- சகலமுநீங்க—தனிச்சித்திரம்போல் - தனித்தசித்திரத்தைப்போல— நெடிதிருந்தான் - வெகு நேரஞ் (சமாதியி) லிருந்தான். எ-று .... (௪௯)

(அ-கை) சச்சிதாநந்தமாய்விளங்குதல். (கவி) காற்றிலாதவிளக்கொளிபோற் கலங் காதிருந்தமாவலிதான், சீற்றமயறீர்ந்தறநிறைந்துசிந்தையென்னுமாசின்றித், தோ ற்றுஞ்சத்தாமாத்திரத்தாற் சுடர்விட்டெறித்தபடிசொல்லி, லாற்றன்முகிறீர்சரற்கா லத்தறவேதெளிந்த விண்போலும் .... *

(இ-ள்.) காற்றிலாதவிளக்கொளிபோல் - வாயுவில்லா(விடத்துள்ள) தீபப்ரகாசத்தைப் போல—கலங்காதிருந்த - சலனமற்றிருந்த— மாவலிதான் - மாவலிச்சக்ரவர்த்தியானவன்— சீற்றமயறீர்ந்து - இராகத்துவேஷநீங்கி—அறநிறைந்து - மிகவும்பூரணமாய்— சிந்தையென் னுமாசின்றி - சிந்தையென்கின்றகளங்கமில்லாமல்— தோற்றுஞ்சத்தாமாத்திரத்தாற்சுடர்விட் டெறித்தபடிசொல்லில் - தோன்றுஞ்சத்தாமாத்திரத்தினு லொளிவிட்டுப்ரகாசித்தவிதத்தைக் கூறில்— ஆற்றன்முகிறீர்சரற்காலத்து - வலிமையுள்ளமேகங்களில்லாதசரற்காலத்தில்—அறவே தெளிந்தவிண்போலும் - மிகவுந்தெளிந்தவாகாயத்தைப்போலுமாம். எ-று .... (௫௰)

(அ-கை.) சகசத்துக்குவெளிப்படல். (கவி) ஆங்கப்படியேயவனிருப்ப வவனதேவ ற்புரியசுர, ரோங்கற்கோயின் மேனிலத்தையுற்றாருயர்மாவலிதானு, நீங்கற்கரிய நிருவிகற்பநிலைகூர்சமாதிநெடும்போது, தேங்குற்றதற்பின் விழித்துணர்ந்துமம தைதீர்ந்தசிந்தையனாப் .... *

(இ-ள்.) ஆங்கப்படியே - அவ்விடத்தந்தப்ரகாரமே— அவனிருப்ப - அந்தமாவலியா னவர்(சமாதியி)லிருக்க—அவனதேவற்புரியசுரர் - அவனதுபணியைச்செய்கின்றவவுணர்கள் —ஓங்கற்கோயின் - அரண்மனையினது—மேனிலத்தையுற்றார் - மேல்வீட்டையடைந்தார்கள் —உயர்மாவலிதானும் - மேன்மையானமகாபலியும்—நீங்கற்கரிய- நீங்குதற்கரிய—நிருவிகற் பம் - நிருவிகற்பமான—நிலைகூர்சமாதி - நிலைமிகுந்தசமாதியில்—நெடும்போது-வெகுநேர ம்—தேங்குற்று - தங்கிநின்று—அதற்பின் - அதன்பின்பு—விழித்து - விழித்துக்கொண்டு— உணர்ந்து - அறிந்து—மமதைதீர்ந்தசிந்தையனாப் - மமதையற்ற மனதுடையவராய். எ-று.

(அ-கை.) சாக்ஷாத்காரமடைதல். (கவி) பற்றிலாதமனத்தாலேபயின் றிராசகாரியங்கள், முற்றுமியற்றியாபத்து முதிர்சம்பத்துஞ்சமமாகக், குற்றமில்லாக்குறிப்பாலே குறிப்புற்றின்பதுன்பத்திற், சற்றுமிதவாதமிழாது சமபாவனையிற்றுறுன் ..... ✻

(இ-ள்.) பற்றிலாதமனத்தால் - நிராசைபொருந்தியமனதினுல்—பயின்ற - சொல்லிய—இராசகாரியங்கள் - இராசகாரியங்கள்—முற்றுமியற்றி - முழுதுஞ்செய்து—ஆபத்து-ஆபத்துக்களிடத்திலும்—முதிர்சம்பத்து - மிகுந்தசம்பத்துக்களிடத்திலும்—சமமாக - சமதிருஷ்டியாக—குற்றமில்லாக்குறிப்பால் - குற்றமற்றகருத்தினுல்— குறிப்புற்று - ஒருமைப்பாடாய்—இன்பதுன்பத்தில் - சுகதுக்கங்களில்—சற்றும் - எவ்வளவேனும்—மிதவாதமிழாது-மிதவாமலுமமிழாமலும் — சமபாவனையிற்றுறுன் - சமபாவனையிற்றுறுகவிளங்கினுன். எ - று. (இ-ய-க-ம்) சிரவணமுதற் சாக்ஷாத்காரபரியந்தமுள்ள வனுபவத்தைக் கூறியதாம் .... (ருஉ)

(அ-கை.) மாவலிஞானவரசனுய் மனதைமத்திரியாக்கிச்சகலமுந்தன்வசமாயரசாக்ஷிசெய்ததுபோலச்செய்வாயெனல். (கவி) ஒவாதவன்றனுள்ளெழுந்த வூகாபோகம்பலகோடி, பாவாபாவம்பலகோடி பரந்ததெலலாமிளைப்பாறி, மேவாநின்றுனெவ்விடத்தென்விண்ணின்மண்ணில்வேட்கைகளிற், றுவாநின்றமனந்தன்னைத் தன்னதிதயத்துள்வைப்பாய் ✻

(இ-ள்.) ஒவாது - ஒழியாமல்—அவன்றன் - அவனுடைய — உள்ளெழுந்த - மனதிலுண்டாகிய—ஊகம் - இஷ்டசிந்தனையும்— அபோகம் - அனிஷ்டசிந்தனையும்—பலகோடி - அளவில்லாததாகவும்—பாவம் - உண்டானதுவும்—அபாவம் - இல்லாததுமான(பதார்த்தங்கள்)—பலகோடி - அளவில்லாததாகவும்—பரந்ததெல்லாம் - விரிந்திருக்கின்றவனைத்திலும்— இளைப்பாறி-விஸ்ராந்தியடைந்து—(பின்பு)எவ்விடத்தென் - எந்தவிடத்திலெதை—மேவாநின்றுன்-பொருந்தினுன்—விண்ணில்-பரத்திலும்—மண்ணில்- இகத்திலுமுள்ள—வேட்கைகளில்-ஆசைகளில்—தாவாநின்றமனந்தன்னை- பாயாநின்றமனதை—தன்னதிதயத்துள்வைப்பாய்-தனதிதயாம்பரத்தில்வைப்பாய். எ - று .... (ருங)

(அ-கை.) மனதைச்செயித்து முத்தியடைவாயெனல். (கவி) எங்கேயெங்கேமனமோடியிளையோரொன்னவீழ்ந்தழுந்து, மங்கேயங்கேநின்றெழுப்பி யகண்டவறிவிலடைவிப்பாய், சங்கேதமதாயிவ்வாறு சாதித்துளமாமதகரியை, வெங்கேதமறத்தளைத்தெல்லா விசாரத்தாலும்வீடணைவாம் .... ✻

(இ-ள்) எங்கேயெங்கே - எவ்விடத்திலெவ்விடத்தில்—மனமோடி - மனதுசென்று—இளையோரொன்ன - குழந்தைகளைப்போல — வீழ்ந்தழுந்தும் - (விஷயங்களில்) விழுந்தழுந்தாநின்றது—அங்கேயங்கேநின்று-அவ்விடத்திலவ்விடத்திலிருந்து—எழுப்பி-கிளப்பி—அகண்டவறிவில்-அகண்டாகாரஞானத்தில்—அடைவிப்பாய் - அடையச்செவ்வாய்—சங்கேதமதாய்-குறிப்பாய்—இவ்வாறுசாதித்து- இந்தப்பிரகாரஞ்சாதனைசெய்து—உளமாமதகரியை - மனமென்னுமதர்த்தயானையை —வெங்கேதமற-கொடியதுனபமறுமபடி—தளைத்து - கட்டி—எல்லா விசாரத்தாலும்- சகலவிசாரணையினுலும்—வீடணைவாம் -மோக்ஷமடையப்படுவதாம். எ-று. (இ-உ-க-ம்.) இவ்விதமாகமனோவிச்சையைநீக்கிஞானம்பெறுவாயென்பதாம் .... (ருச)

மாவலிகதைமுற்றிற்று - ஆ கதை - உகரு - கவிதை. (கூாரு)

பிரகலாதன்கதை.

(அ-கை) மூன்கதையினிச்சாத்தியாகபலத்திலுண்டான விசாரத்தாற்சடவரசாங்கஞ்சித்தரசாங்கமானவனுபவத்தைப் பிரித்து, விவ்வனுபவமீஸ்வரானுக்கிரகத்தினுலும் வருமென்பதையறிவிக்குநிமித்தம் பிரகலாதன்கதையைநிரூபிக்கிருர் .... ✻

(அ-கை) பங்கயைவசப்படுத்தவாலோசித்தல. (கவி) பின்னுமீதோர்கதைகேட்பாய்பிரகலாதப்பெயரோனுந், தன்னதுணர்வான்மெய்ஞ்ஞானதத்துவத்தைச்சாதித்தா, னன்னதுனைப்பாமிரணியனுமசுரர்வேந்தனிறந்தளவே, யின்னல்கூருமவன்மைந்தனிதயநடுங்கி யிவையுணர்ந்தான் .... ✻

பா

(இ-ள்.) பின்னும் - பின்பும்— ஈதோர்கதைகேட்பாய் - இந்தவொருகதையைச்சொல்லக்கேட்பாய்—பிரகலாதப்பெயரோனும் - பிரகலாதனென்னுநாமத்தையுடையவனும்— தன்னுணர்வால் - தனதறிவினால்— மெய்ஞ்ஞானதத்துவத்தை - மெய்ஞ்ஞானமானதத்துவஸ்வரூபத்தை—சாதித்தான் - அடைந்தான்—அன்னதுரைப்பாம் - அதைச்சொல்லுவோம்—இரணியனும் - இரணியனென்னுநாமத்தையுடைய — அசுரர்வேந்தன் - தானவர்களுக்கரசன்— இறந்தளவே - மரணமடைந்தமாத்திரத்தில் — இன்னல்கூரும் - துன்பமிகுந்த — அவன் மைந்தன்- அவனதுபுத்திரன் —இதயநடுங்கி - மனநடுக்கமுற்று—இவையுணர்ந்தான் - இவையெண்ணினான். எ-று .... (௧)

(அ-கை.) பகைவன்வலிமையையுணர்தல்(கவி) எனதுதாதைமுதலசுரரெனதுகுலத்
தோரெண்ணிறந்தோர், கனகமேருவணுவென்னக்காயநிலைமைப்பெரிதுடையோர்,
வனசயோனியதிகாரமாற்றவல்லோர் தரவல்லோர், புனைவண்டுளவோ னெனுங்கன
லிற்பூளைவீபோற் போயொழிந்தார் .... *

(இ-ள்.) எனதுதாதைமுதலசுரர்-என்னுடையபிதாமுதலியதானவர்கள்—எனதுகுலத்தோர்- என்குலத்திலுள்ளவர்கள்—எண்ணிறந்தோர் - அளவற்றவர்கள் —கனகமேருவணுவென்ன-மகாமேருவற்பமென்னும்படி—காயநிலைமை - சரீரநிலையை—பெரிதுடையோர்-பெரிதாகவுடையவர்கள்—வனசயோனியதிகாரம் - தாமரையிடமாகப்பிறந்தபிரமாவினதிகாரத்தை—மாற்றவல்லோர்- கெடுக்கவல்லவர்கள்—தரவல்லோர்-கொடுக்கவல்லவர்கள்—புனைவண்டுளவோனெனுங்கனலில் - தரிக்கும்வளப்பம்பொருந்தியதுளசிமாலையையுடையவிஷ்ணுவென்னுமக்கினியில்—பூளைவீபோல்-இலவம்பஞ்சிகெடுதல்போல—போயொழிந்தார்- நசித்தார்கள். எ-று.

(அ-கை.) பகைவனைச்செயிக்கு முபாயமுணர்தல். (கவி.) அன்றொக்கும்பேரசுர
ரழியுமூழிப்பெருங்காற்றாற், சின்றுகங்கள்போன்மடிந்தார்செறிநுண்மணலிற்பல
கோடி, யின்றுளவனுக்கஞ்சாதாரியாருமில்லையெம்பகையா, மின்றூர்நேமிப்படை
யோனை வெல்வானுபாயமீதொன்றே .... *

(இ-ள்.) அன்றொக்கும் - அவர்களுக்கொப்பான—பேரசுரர்- பெரிதானவவுணர்கள்—ஊழிப்பெருங்காற்றால் - கற்பாந்தசண்டமாருதத்தால்—அழியுஞ்சின்றுகங்கள்போல-கெடுகின்றசிறுமலைகளைப்போல—மடிந்தார் - இறந்தார்கள்—செறிநுண்மணலில்- நெருங்கியபொடிமணலைப்போல—பலகோடி - அளவில்லனவாம்—இன்றுள்- இக்காலம்—அவனுக்கஞ்சாதார்-அம்மாலுக்குப்பயப்படாதவர்கள்—யாருமில்லை - ஒருவருமில்லை—எம்பகையாம்- எமக்குப்பகையாகிய — மின்றூர்நேமிப்படையோனை - ஒளிநிறைந்தசக்கராயுதத்தையுடையவிஷ்ணுவை—வெல்வானுபாயமீதொன்றே - செயித்தற்குபாயமீதொன்றே. எ-று. (இ-௩-க-ம்) முன்னுள்ளயாவுமநித்தியமாய்ப்போனது காரணமாகச் சித்த சுத்தியுண்டாயதனால் நித்தியத்தையடையவிவேகமுதித்ததென்பதாம் .... (௩)

(அ-கை.) மூர்த்தியுபாசனைசெய்யச் சிந்தித்தல். (கவி.) எத்தன்மையினாலெண்ணு
கினுமிதில்வேறுயர்ந்தநெறியில்லை, தத்துந்திரைப்பாற்கடலுறைவோன் சரணமன் -
றிச்சரணில்லை, சித்தமிந்தக்கணந் தொடங்கிச்சேர்கநாராயணன்சரணம், பத்தனாகி
நானவனைப்பகிராதொழிகபாவனையே .... *

(இ-ள்.) எத்தன்மையினால் - எந்தப்ரகாரமாக—எண்ணுகினும்-நினைத்தாலும்—இதில்வேறு- இதற்குவேறாக—உயர்ந்தநெறியில்லை-மேலானகதியில்லை—தத்துந்திரை - தாவாநின்றவலைகளையுடைய—பாற்கடலுறைவோன் - திருப்பாற்கடலில்வசிக்கும்விஷ்ணுவினது — சரணமன்றிச்சரணில்லை - அடைக்கலமன்றிவேறடைக்கலமில்லை— சித்தம் - மனமானது—இந்தக்கணந்தொடங்கி - இந்தக்ஷணந்தொடங்கி — நாராயணன்சரணஞ்சேர்க - நாராயணனதுபதத்தைச்சேரக்கடவது—பத்தனாகி - பத்தியையுடையவனாய்—பாவனை - பாவனையினால்— நானவனைப்- நானேயவனாகி—பகிராதொழிக - பிரியாதிருக்கக்கடவன். எ-று .... (௪)

(அ-கை.) அஷ்டாக்ஷரத்தின்பெருமையையுணர்தல். (கவி) நயந்ததெல்லாமெளி
தருளுநாராயணாயநமவென்னு, முயர்ந்ததிருமந்திரமென்ற னுளத்தில் விண்ணின்
மாருதம்போற், பெயர்ந்துநீங்காதுள்ளுறைகம்பணியரியைப்பூசிப்போ, ரியைந்த
வரிதாமப்பூசையியற்றிற்பலனுமலதில்லை .... *

(இ-ள்.) நயந்ததெல்லாம் - இச்சித்தசகலமும்—எளிதருளும்- எளிதிற்கொடுக்கின்ற—நாராயணாயநமவென்னும் - நாராயணாயநமவென்கின்ற— உயர்ந்ததிருமந்திரம் - மேலானதிருமந்திரமானது—என்றனுளத்தில் - என்மனதில் —விண்ணின்மாருதம்போல் - ஆகாய

(நிறையுங்) காற்றைப்போல — பெயர்ந்துநீங்காது - விட்டுநீங்காமல் — உள்ளுறைக - உள்ளே சேர்ந்திருக்கக்கடவது — அரியைப்பேணி - விஷ்ணுவைவணங்கி — பூசிப்போர் - ஆராதனை செய்பவர்கள் — இயைந்த - இசைந்த — அரி - விஷ்ணுவே — தாமப்பூசை - தாமாகவந்தவாராதனையை — இயற்றிற்பலனும் - செய்யின் (முத்தி) லாபமாம் — அலதிலலை - அல்லாவிடிலில்லை. எ-று.

(அ-க்கை.) மூர்த்தியின் சகுண வுருவத்தைச்சிந்தித்தல். (கவி.) அந்தநெறியாலரியுரு
நாளுகியரியைப்பூசிப்ப, னிந்தவுடன்மாதவன்வடிவாமிதனில்வாயுவடிவாகிப், பந்த
முறுமேவான்பராபரனு மிவனேபிராணபவனத்தின், முந்துமொட்டத்தாலிரண்டா
முகுந்தனுகிப் புறத்துறைவான் .... *

(இ-ள்.) அந்தநெறியால் - அந்தமார்க்கத்தினுல் — அரியுருநானுகி - விஷ்ணுஸ்வரூபமேநானுய் — அரியைப்பூசிப்பான் - விஷ்ணுவையாராதனைசெய்வன் — இந்தவுடல் - இச்சரீரமானது — மாதவன்வடிவாம் - விஷ்ணுவினதுஸ்வரூபமாம் — இதனில் - இந்தவடிவத்தில் — வாயுவடிவாகி - பிராணவாயுவின்வடிவமாம் — பந்தமுறுமேவான் - கட்டுப்படுவோன் — பராபரனுமிவனே - பராபரனுகியவிந்தவிஷ்ணுவே — பிராணபவனத்தின் - பிராணவாயுவின் — முந்துமோட்டத்தால் - முன்செல்லுதலால் — இரண்டாமுகுந்தனுகி - இரண்டாவதுவிஷ்ணுவாய் — புறத்துறைவான் - புறம்பில்வசிப்பான். எ-று. (இ-ங-க-ம்) மூர்த்தியைத்தியானிக்குமுறைமையை யுணர்த்ததாம் .... (சு)

(அ-கை.) அகத்திலாராதித்தல். (கவி) அவ்வாறுனவிவ்வரியையகிலவுபசாரங்
களையுந், தவ்வாமனத்தாலுளதாக்கிச் சதாபூசனையேசமைப்பனெனு, விவ்வா
றெண்ணிப்பாரமெலா மெடுத்துச்சுமக்குமனத்தாலே, செவ்வான்மணிப்பாத்
திரதூபதீபங்கந்தமெலாஞ்செறித்து .... *

(இ-ள்.) அவ்வாறுன - அந்தப்ரகாரமாகிய — இவ்வரியை - இந்தவிஷ்ணுவை — அகிலவுபசாரங்களையும் - சமஸ்தவுபசார (வஸ்துக்க) ளையும் — தவ்வாமனத்தால் - தவறுதமனதினுல் — உளதாக்கி - கற்பித்து — சதாபூசனையேசமைப்பனெனு - எப்போதுமாராதனையைச்செய்வேனென்று — இவ்வாறெண்ணி - இந்தப்ரகாரநினைத்து — பாரமெலாமெடுத்து - (பூசாதிரவியமான) பாரங்களனைத்தையுமெடுத்து — சுமக்குமனத்தால் - தாங்குகின்றமனதினுல் — செவ்வான் - சிவந்ததான — மணிப்பாத்திரம் - இரத்தினப்பாத்திரங்களும் — தூபம் - தூபங்களும் — தீபம் - தீபங்களும் — கந்தமெலாஞ்செறித்து - வாசனுத்திரவியங்களனைத்தையுநிறைத்து. எ-று .... (எ)

(அ-கை.) புறத்திலாராதித்தல். (கவி) மணிப்பூண்களும்பீதாம்பரமும் வாடா
மலருநல்லமுதுங், கணிப்பிலாதபொருளெல்லாங் கருத்தாற்பாவித்தருச்சித்து
த், தணிப்பிலாதவன்பான்முன்றந்தப்புறத்தின்பொருட்டிரளாற், பணிப்பாய
வனையுட்போலப் பரிந்துபுறத்தும்பூசித்தான் .... *

(இ-ள்.) மணிப்பூண்களும் - இரத்தினுபரணங்களும் — பீதாம்பரமும் - சொர்னவஸ்திரங்களும் — வாடாமலரும் - வாடாத (சொர்ன) புஷ்பங்களும் — நல்லமுதும் - நல்லவடிசில்களுமாகிய — கணிப்பிலாதபொருளெல்லாம் - எண்ணிக்கையற்ற பூசாதிரவியங்களனைத்தையும் — கருத்தாற்பாவித்து - மனதினுற்பாவனைசெய்து — அருச்சித்து - ஆராதனைசெய்து — தணிப்பிலாதவன்பால் - தணிவில்லாதவன்பினுல் — முன்றந்த - முன்னேகொடுத்த — புறத்தின்பொருட்டிரளால் - புறம்பிலுள்ளதிரண்டதிரவியங்களினுல் — பணிப்பாயவனை - சர்ப்பசயனத்தையுடையவிஷ்ணுவை — உட்போல - அகத்திற் (பூசித்தது) போல — பரிந்துபுறத்தும்பூசித்தான் - அன்புற்றுபுறத்திற் (றேவக்கிரகத்திலு) மாராதனைசெய்தான். எ-று ... . (அ)

(அ-கை.) அசுரரியாவருமாராதித்தல். (கவி) ஆயவாறக்கணந்தொடங்கி யகண்ட
வடிவப்பரம்பொருளா, மாயனடிகளருச்சித்தானவனைப்போலவாளசுரர், தீயகுண
ம்விட்டெல்லோருந் திருமாற்கடிமைத்திறம்பூண்டார், மேயமன்னன்குணமன்றே
விரிந்தவுயிரின்குணந்தானே .... *

(இ-ள்.) ஆயவாறு - அருச்சித்தபடியே — அக்கணந்தொடங்கி - அந்தக்ஷணந்தொடங்கி — அகண்டவடிவம் - அகண்டாகாரஸ்வரூபமாகிய — பரம்பொருளாம் - பிரமவஸ்துவான — மாயனடிகள் - விஷ்ணுவினுடையபதங்களை — அருச்சித்தான் - ஆராதனைசெய்தான் — அவனைப்போல - அப்பிரகலாதனைப்போல — வாளசுரர் - வாளாயுதத்தையுடையவவுணர்களும் — தீயகுணம்விட்டு - தீமையானகுணங்களை நீக்கி — எல்லோரும் - சகலரும் — திருமாற்கடிமைத்திறம்பூண்டார் - அரிக்கடிமைப்பட்டார்கள் — மேயமன்னன்குணமன்றே - பொருந்தியவரசனது குணமல்லவா — விரிந்தவுயிரின்குணந்தான் - பரந்தசீவர்களின்குணங்கள். எ-று. (இ-ங-க-ம்) பிரகலாதன்முதலியயாவரு மூர்த்தியையுபாசித்து அம்மூர்த்திவடிவமானுர்களென்பதாம் (கூ)

(அ-கை.) தேவர்களையமுறல். (கவி) திதிகாதலருமவர்க்கரசுந்செங்கண்மான்மேற்
சினந்தீர்ந்து, புதிதாகியபத்தியிலடிமைபுக்காரென்றுபுரந்தரனுந், துதிவாணவருங்
கேட்டலுமே துணுக்கமொடுவியப்பெய்தி, யதிபாதகர்களெம்பெருமாற் கன்பா
கியதென்னெனவயிர்த்தார் .... *

(இ-ள்.) திதிகாதலரும் - திதிபுத்திரர்களாகியவசுரர்களும்—அவர்க்கரசும்- அவர்களுக்கரசாகியபிரகலாதனும் — செங்கண்மான்மேல் - சிவந்தகண்களையுடையவிஷ்ணுவினிடத்தி(லிருக்கின்ற)—சினந்தீர்ந்து- கோபம்விட்டு—புதிதாகியபத்தியில்-நூதனமானபக்தியினால்—அடிமைபுக்காரென்று - அடிமைபுகுந்தார்களென்று—புரந்தரனும் - தேவேந்திரனும்—துதிவாணவரும் - துதிக்கின்றதேவர்களும்—கேட்டலும் - கேட்கவும் — துணுக்கமொடுவியப்பெய்தி - அச்சத்துடனாச்சரியமடைந்து — அதிபாதகர்கள் - மிகுந்தபாவத்தையுடையவர்கள்—எம்பெருமாற்கன்பாகியது - எமது பெருமானுக்கன்பானது—என்னெனவயிர்த்தார் - என்னவென்றுசந்தேகமடைந்தார்கள். எ-று .... (ய)

(அ-கை.) தேவர்கள்வினவுதல். (கவி) திருப்பாற்கடலிற்கண்வளருந்திருமான்முன்
புசென்றணுகி, விருப்பாற்றுதித்திந்திரன்முதலோர்மேகமேனியனைநோக்கி, நெரு
ப்பாந்தன்மையசுரரெலாநினைப்பாவித்துநின்வடிவா, யிருப்பாராணுன்மாயையெ
னவெண்ணினேமீதென்னென்று .... *

(இ-ள்.) திருப்பாற்கடலில் - அழகியக்ஷீரசமுத்திரத்தில்—கண்வளரும் - நித்திரைசெய்கின்ற—திருமான்முன்புசென்றணுகி - விஷ்ணுவின்முன்னேபோய்ச்சேர்ந்து — விருப்பாற்றுதித்து - விருப்பத்தினாற்றோத்திரஞ்செய்து—இந்திரன்முதலோர் - தேவேந்திரன்முதலியதேவர்கள்—மேகமேனியனைநோக்கி - மேகநிறத்தையுடையவிஷ்ணுவைப்பார்த்து—நெருப்பாந்தன்மை - அக்கினியானசுபாவத்தையுடைய—அசுரரெலாம் - தயித்தியரனைவரும்—நினைப்பாவித்து - உன்னைப்பாவனைசெய்து—நின்வடிவாயிருப்பாராணுல் - உனதுருவமாயிருப்பார்களாணுல்—மாயையெனவெண்ணினேம் - (இதை) வஞ்சகமாகநினைத்தோம் — ஈதென்னென்று - இதென்னவென்று. எ-று .... (யக)

(அ-கை.) இ-து. (கவி) கொடியகொலைசெய்வல்லசுரர் குணங்களெங்கேபெறவரிய,
முடிவதானபிறப்பெங்கேமுகுந்தன்பத்திப்பேறெங்கே, கடியதீயோர்நற்குணங்கள்
கலவாரென்றுகதையல்லா, நெடியமாலேநின்பத்திநீசர்க்கெல்லாநேருமதோ.. *

(இ-ள்.) கொடியகொலைசெய்-கொடிதானகொலையைச்செய்யும்—வல்லசுரர்-வல்லமையுள்ளவவுணர்கள்—குணங்களெங்கே-குணங்களெவ்விடம்—பெறவரிய - பெறுதற்கரிய—முடிவதானபிறப்பெங்கே-முடிவாகியசநநமெவ்விடம்—முகுந்தன்பத்திப்பேறெங்கே- விஷ்ணுவின்பத்தியைப்பெறுவதெவ்விடம்—கடியதீயோர் - கொடிதானதீமையையுடையவர்கள்— நற்குணங்கள் - சற்குணங்களை—கலவாரென்று - கலந்தார்களென்று(சொல்லுவது)கதையல்லால்-சொல்லேயல்லாமல்—நெடியமாலே - வியாபகமுள்ளவிஷ்ணுவே—நின்பத்தி- உனதுபத்தியானது—நீசர்க்கெல்லாநேருமோ - சண்டாளர்க்கெல்லாங்கிடைக்குமோ. எ-று .... (யஉ)

(அ-கை.) சுவாமியானவருண்மையைக்கூறல். (கவி) என்றவிண்ணோர்க்கெம்பெரு
மானிமையோரஞ்சாதொழிமின்கள், வென்றியபிலும்ப்ரகலாதன்மீண்டும்பிறவாப்
பிறப்புற்றான், கன்றுதுயர்போய்மெய்ஞ்ஞானக்கண்ணால்வீடுகாண்குவனு, லொன்
றுமிதனிற்கைதவமென்றுணரற்பாலதிலதாகும் .... *

(இ-ள்.) என்றவிண்ணோர்க்கு-(இப்படி)யென்றுசொல்லியதேவர்களுக்கு— எம்பெருமான் - எமதுபெருமானாகியவிஷ்ணு— இமையோர் - தேவர்களே — அஞ்சாதொழிமின்கள்- அச்சப்படாதிருங்கள்—வென்றியபிலும்-சயஞ்செய்கின்ற—ப்ரகலாதன்-பிரகலாதனானவன்—மீண்டும்பிறவா - திரும்பவுஞ்செனியாத— பிறப்புற்றான் - சநநத்தையடைந்தான்—கன்றுதுயர்போய்-கொலைசெய்கின்றதுன்பநீங்கி—மெய்ஞ்ஞானக்கண்ணால்-தத்துவஞானதிருஷ்டியினால்—வீடுகாண்குவன் - மோக்ஷத்தையடைவ(னாகையால்)— ஒன்றுமிதனிற்கைதவமென்று- ஒன்றுமிதனில்வஞ்சகமென்று—உணரற்பாலதிலதாகும் - அறியத்தக்கதில்லையாம். எ-று. (யரு)

(அ-கை.) தேவருமசுரருமுறவாதல். (கவி) நல்லோர்தீமையுறிற்கேடாந் தீயோர்
நன்மையுறினன்று, மெல்லாரும்போமெனவருளியெம்மானுங்கேமறைதலுமே,
கலலோலஞ்சூழ்கடனின்றுங் ககனலயஞ்சேர்ந் தமரரெலாம், புல்லாரென்ற வசுர
ருடன்புணாயிலாததமரானுர் .... *

(இ-ள்.) நல்லோர் - நன்மையுள்ளவர்கள்—தீமையுறிற்கேடாம்-பொல்லாங்கைப்பொருந்தினாற்கெடுதலாகும்—தீயோர் - தீமையுள்ளவர்கள் — நன்மையுறினன்றாம் - நன்மையைப்பொருந்தினானன்மையேயாகும்—எல்லோரும்போமெனவருளி - சகலரும்போயினென்றனுக்கிரகித்து—எம்மான் - எமதுமகானுகியவிஷ்ணுவும்—ஆங்கேமறைதலும்-அவ்விடத்துமறையவும்—கல்லோலஞ்சூழ் - பேரலைசூழ்ந்திருக்கின்ற—கடனின்றும் - (திருப்பாற்) கடலிலிருந்தும்—ககனாலயஞ்சேர்ந்து - விண்ணுலகத்தையடைந்து—அமரரெலாம் - தேவர்களனைவரும்—புல்லாரென்றவசுரருடன் - பகைவரென்றுசொல்லப்பட்டதானவருடன் — புரையிலாததமரானர் - குற்றமற்றவுறவானார்கள். எ-று. (இ-ரு-க-ம்) அரியினாற்றேவர்களுமசுரர்களுந் தமதிடத்துள்ளவையநீங்கியன்பிற்கலந்தனரென்பதாம்...... (௰௪)

(அ-கை.) நிராசையுண்டாதல். (கவி) என்புகுளிரும்பத்தியினா லிமைப்போதொழியா
தெப்போது, மன்புகூரநெடுமாலையசுரர்வேந்தனருச்சித்தான், வன்புபயிலுமுக்கரணம்
வழுவாப்பூசாபலத்தாலே, முன்புவிவேகமாநந்தமுதிர்வும்விராகமுளைத்தெழுந்த...... *

(இ-ள்.) என்புகுளிரும்பத்தியினால் - அஸ்திகுளிர்கின்றபரபத்தியினால் — இமைப்போதொழியாது - இமைநேரநீங்காமல்—எப்போதும் - சதாகாலமும் — அன்புகூரநெடுமாலை-அன்புபெருகவியாபகமுள்ளவிஷ்ணுவை—அசுரர்வேந்தன்- அவுணர்க்கரசனாகியபிரகலாதன்—அருச்சித்தான்- ஆராதனைசெய்தான்—வன்புபயிலுமுக்கரணம்வழுவா - வலிமையிற்சுழலுகின்றதிரிகரணங்களுந்தவறாத—பூசாபலத்தால் - பூசாபலத்தினால்— முன்புவிவேகம் - முதன்மையானவிவேகமும்—ஆநந்தமுதிர்வும் - ஆநந்தமுதிர்ச்சியும்—விராகம்-வயிராக்கியமும்—முளைத்தெழுந்த - உண்டாய்வளர்ந்தன. எ-று...... (௰௫)

(அ-கை.) போகப்பற்றுநீங்கல். (கவி) சாதனங்கண்முதற்குணங்கள்சாலவுண்டாயிவனெ
ஞ்சங், காதலானபோகத்திற்கவலும்பற்றுகழன்றனவாற், சீதமுத்துமுத்துடனே சேர்ந்
தாற்பற்றுசேர்வுறுமோ, வாதலாலேபோகத்திலழுந்தாதுள்ளமாறினதே...... *

(இ-ள்.) சாதனங்கண்முதற்குணங்கள் - நான்குசாதனமுதலியகுணங்கள்—சாலவுண்டாய் - மிகவுமுண்டாய்—இவனெஞ்சம் - இவன்மனது — காதலானபோகத்தில் - ஆசையாகியபோகங்களில்—கவலும்பற்றுகழன்றன - வருந்துகின்றபற்றுக்கணீங்கின—சீதமுத்து-குளிர்ச்சியையுடையமுத்தானது—முத்துடன்சேர்ந்தால் - தரளத்தோடுஞ்சேரில் — பற்றுசேர்வுறுமோ - பற்றுதலுண்டாகுமோ—ஆதலால் - ஆதலினால்— போகத்திலழுந்தாது - போகங்களிலழுந்தாமல்—உள்ளமாறினது - மனதுவிஸ்ராந்தியடைந்தது. எ-று...... (௰௬)

(அ-கை.) மூர்த்திப்ரசன்னமாதல். (கவி) பூன்றவடிவுங்காணமற்போகத்துள்ளுமழுந்தா
ம, னான்றவூசலாடுவபோனல்லோனுள்ளந்திரிவதனை, மூன்றுசகத்தின்சான்றானமுகுந்த
ன்றிருவுள்ளத்துணர்ந்து, சான்றகுணத்தோன்பூசிக்குந்தனிமாமனையிற்றானடைந்தான்.

(இ-ள்.) பூன்றவடிவுங்காணமல் - பூரணவடிவையுந்தரிசியாமல் — போகத்துள்ளுமழுந்தாமல்—போகத்தினிடத்திலுமழுந்தாமல்—நான்றவூசலாடுவபோல் - தொங்கினவூசலலைவதுபோல—நல்லோனுள்ளம் - நன்மையுள்ளபிரகலாதனுடையமனமானது—திரிவதனை - சுழலுவதை—மூன்றுசகத்தின்சான்றான் - மூன்றுலகத்துக்குஞ்சாக்ஷியாகிய—முகுந்தன் - திருமாலானவர்—திருவுள்ளத்துணர்ந்து - திருவுளத்திலறிந்து—சான்றகுணத்தோன்பூசிக்கும் - அறிவானகுணத்தையுடையவனாராதிக்கின்ற—தனிமாமனையில் - ஏகாந்தமானபூசாக்கிரகத்தில்—தானடைந்தான் - தான்வந்துசேர்ந்தார். எ-று. (இ-ரு-க-ம்) பக்குவிக்கனுக்கிரகஞ்செய்யவுபாசனாமூர்த்தியெழுந்தருளினதாம்...... (௰௭)

(அ-கை.) ப்ரத்யக்ஷமானமூர்த்தியை யாராதித்துத்துதித்தல். (கவி) மூவராகிநின்ற
முதன்மூலமடைந்தபடியறிந்து, தேவதேவன்றனைமுன்னே செயலினிரட்டிப்பூச
னைசெய், தியாவராலுங்காண்பரிய வெம்மானம்மாவெதிர்ந்தனனென், றாவதான
படியன்பாலவனைத்துதித்தானசுரேசன்...... *

(இ-ள்.) மூவராகிநின்ற - மும்மூர்த்தியாய்நின்ற—முதன்மூலம் - முதன்மையானகாரணமானது—அடைந்தபடியறிந்து - வந்தடைந்தவிதத்தைப் (பிரகலாத) னறிந்து — தேவதேவன்றனை - தேவதேவனாகியவிஷ்ணுவை — முன்னேசெயலின் - முன்னேசெய்ததிலும்—இரட்டிப்பூசனைசெய்து - இரட்டித்தாராதனைசெய்து — இயாவராலுங்காண்பரிய - எவர்களாலுந்தரிசிப்பதற்கரிய—எம்மான் - எமதுசுவாமி—அம்மா-ஆச்சரியம்—எதிர்ந்தனனென்று-ப்ரசன்னமானானென்று—ஆவதானபடியன்பால் - ஆகின்றப்ரகாரமன்பினால் — அசுரேசனவனைத்துதித்தான் - அசுரேசனந்தவிஷ்ணுவைத்தோத்திரஞ்செய்தான். எ-று...... (௰௮)

(அ-கை.) இ-நு. (கவி) அண்டமென்னுமொருவீட்டி லரியபொருள்சேர்சரக்கறையே,
சண்டபானுவெனவுதயாத் தமமற்றொளிருந்தற்பரமே, கண்டவுயிர்களனைத்திற்குங் கலை
கருணைவான் றுணையே, புண்டரீகைநாயகமே போற்றிபோற்றிமிகப்போற்றி............ *

(இ-ள்.) அண்டமென்னுமொருவீட்டில்-அண்டமென்கின்றவொப்பற்றவீட்டில்—அரிய பொருள்சேர்-அரிதானபொருள்சேர்ந்திருக்கின்ற—சரக்கறையே-பண்டாரமே—சண்டபானுவென-சூரியனைப்போல—உதயாத்தமமற்று-உதயாத்தமனமில்லாமல்—ஒளிருந்தற்பரமே-ப்ரகாசிக்கின்றபிரமமே—கண்டவுயிர்களனைத்திற்கும் - தரிசித்தவாத்மாக்களனைவர்க்கும்—கலைகருணைவான்பொருளே - கருணைக்கண்ணுகியபரவஸ்துவே—புண்டரீகைநாயகமே-இலக்குமிக்குநாயகனுனவனே—போற்றிபோற்றி-வந்தனம்வந்தனம்—மிகப்போற்றி-மிகவும்வந்தனம். எ-று

(அ-கை.) இ-நு. (கவி) மேலோனுகிச்சகம்படைக்கும் விளையாட்டுடையவித்தகனே,
நாலோடொருபதெனுமுலகி னண்ணுவுயர்ந்தநற்பொருளே, யாலோனுகிக்கண்வளர்ந்த
வையாமெய்யாவருண்மூர்த்தி, பூலோகத்திறுயகமேபோற்றிபோற்றி மிகப்போற்றி *

(இ-ள்.) மேலோனுகி - மேலானவனுய் — சகம்படைக்கும் - உலகத்தைபுண்டாக்குகின்ற—விளையாட்டுடைய - லீலையையுடைய—வித்தகனே - ஞானமுடையவனே— நாலோடொருபதெனுமுலகின் - பதினுன்குலகத்திலும் — நண்ணுவுயர்ந்தநற்பொருளே - சாராதமேலான நல்லவஸ்துவே— ஆலோனுகி -ஆலிலையின்கண்ணுள்ளவனுய் — கண்வளர்ந்தவையா-நித்திரைசெய்தகடவுளே—மெய்யா - தத்துவமே—அருண்மூர்த்தி - தயாஸ்வரூபமே—பூலோகத்திறுயகமே - பூலோகங்களுக்குநாயகனுனவனே — போற்றிபோற்றி - வந்தனம்வந்தனம்—மிகப்போற்றி - மிகவும்வந்தனம். எ-று..(உ0)

(அ-கை.) இ - நு. (கவி) கேதமிகுந்தவசுரரெனுங்கிளைத்தாமரைக்கு நெடும்பனியே,
வேதநெறிச்செல்லமரரெனும்விரிதாமரைக்குவெய்யோனே, பேதமறுத்தோருள்ளமெ
னும்பெருந்தாமரையிற்பிரமரமே, பூதமனைத்திறுயகமேபோற்றிபோற்றிமிகப்போற்றி

(இ-ள்.) கேதமிகுந்தவசுரரெனும்-துன்பமிகுந்தவவுணர்களென்கின்ற—கிளைத்தாமரைக்கு - கிளைகளையுடையதாமரைப்பூவிற்கு—நெடும்பனியே-நீண்டபனியானவனே—வேதநெறிச்செல்லமரரெனும் - வேதமார்க்கத்திற்செல்லுந்தேவர்களென்கின்ற— விரிதாமரைக்கு - விகசிதமானதாமரைப்பூவுக்கு—வெய்யோனே-சூரியனுனவனே—பேதமறுத்தோர் - வேற்றுமையைக்கெடுத்தவர்கள்—உள்ளமெனும் - இருதயமென்கின்ற — பெருந்தாமரையிற்பிரமரமே-பெரியதாமரைப்பூவிற்குவண்டானவனே—பூதமனைத்திறுயகமே- ஆத்மாக்களுக்கெல்லாநாயகனுனவனே—போற்றிபோற்றி-வந்தனம்வந்தனம்—மிகப்போற்றி-மிகவும்வந்தனம். எ-று.(உக)

(அ-கை.) பிரமாநந்தம்வேண்டல். (கவி) என்பதானதுதிபலவு மிசைப்பவிதயங்
குளிர்ந்தருளி, யன்பமறுத்துப்பிறவாவாறுயவரங்கேளெனக்கருணை, முன்பனுரை
ப்பவனைத்திதயமுளரியினுஞ்சேர்முதற்பொருளே, துன்பமில்லாவுயர்பதமேதது
வேயருள்வாயெனச்சொன்னுன்.. *

(இ-ள்.) என்பதான -(இப்படி) யென்றுசொல்லிய—துதிபலவுமிசைப்ப- பலதோத்திரங்களைப்பிரகலாதன்சொல்ல—இதயங்குளிர்ந்தருளி - மனங்களித்தருள்செய்து — அன்ப- அன்பையுடையபிரகலாதனே—மறுத்து - திரும்பவும்— பிறவாவாறுயவரங்கேளென - ஜெனியாததானவரத்தைக்கேளென்று — கருணைமுன்பனுரைப்ப - கருணையின் முதல்வனுனவிஷ்ணுவானவர்சொல்ல — அனைத்திதயமுளரியினுஞ்சேர் - சகலரிருதயகமலங்களிலும்வசிக்கின்ற—முதற்பொருளே - முதன்மையானவஸ்துவே—துன்பமில்லா- துக்கமற்ற — உயர்பதமே-து-மேலானவாநந்தமியாது—அதுவேயருள்வாயெனச்சொன்னுன் - அதையேயனுக்கிரகஞ்செய்வாயென்று (பிரகலாதன்) சொன்னுர். எ-று..(உஉ)

(அ-கை.) அனுக்கிரகஞ்செய்தல். (கவி) சித்தப்பிரமமெல்லாம்போய்த்தெளி
ந்தபரமசுகம்பெற்றுச், சுத்தப்பிரமத்திளைப்பாறமுடிவாம்விசாரந்தோன்றுகவெ
ன், றத்தப்பதுமமமைத்தருளியமலனேகவவற்றுதியான், மெத்தப்பரவிமலர்தூ
வித்தொழுதான்விவேகிகளின்மிக்கோன்.. *

(இ-ள்.) சித்தப்பிரமமெல்லாம்போய்-மனதிலுள்ளமயக்கங்களனைத்துநீங்கி — தெளிந்தபரமசுகம்பெற்று - தெளிவானபிரமாநந்தத்தையடைந்து — சுத்தப்பிரமத்திளைப்பாற- சுத்தப்பிரமத்தில்விஸ்ராந்தியடையும்பொருட்டு—முடிவாம்விசாரம்- முடிவான (ஆத்ம) விசாரம்—தோன்றுகவென்று - உண்டாகக்கடவதென்று — அத்தப்பதுமமமைத்தருளி - கரகமலத்தைச் (சிரசின்மேல்) வைத்தனுக்கிரகஞ்செய்து—அமலனேக - நின்மலனுனவிஷ்ணு சென்றுந்

பற்றுகின்ற—என்னைநெங்கே- நினைப்பெங்கே—எல்லையற- அளவில்லாமலிருக்கின்ற—புவன மெல்லாம் - சகங்களனைத்தும்—நிறைந்தொளிரும் - பூரணமாய்ப்ரகாசிக்கின்ற — போதவடிவாம் - ஞானஸ்வரூபமாகிய—என்றனக்கு - எனக்கு— கவருமனப்பாவனைதானே கருதிலுண்டோ - கிரிகிக்கின்றமனோபாவனை நினைக்குமிடத்துண்டோ — முடிவில்சுகத்துவமையில்லா- முடிவில்லாதவாநந்தமுடையசமானமில்லாத— உபசாந்தவுணர்வாம் - உபசாந்தஞானமாகிய—கண்ணே - (எனது) திருஷ்டியே—உலகெங்கும் - சகங்களனைத்திலுமாம். எ - று ..... (௩௨)

(அ-கை.) ஒன்றானதன்னைமனனஞ்செய்தல். (கவி) நோக்கப்பட்டநோக்கெல்லா நுண்மையறிவாநோக்கொன்றே, யாக்கப்பட்டவுயிரனைத்துமகத்தாயறிவதிலாவறிவாய்த், தாக்கப்பட்டதொன்றில்லாத் தனித்தத்துவமாய்த்தனையன்றிப், போக்கப்பட்டதில்லாவெம் பொருட்டுவணங்கிப்புகழுதுமால்........ .... *

(இ-ள்) நோக்கப்பட்டநோக்கெல்லாம் - பார்க்கப்பட்டபார்வைகளனைத்தும்—நுண்மையறிவாம் - சூட்சுமவறிவாகிய—நோக்கொன்றே- பார்வையொன்றேயாம்—ஆக்கப்பட்ட- உண்டாக்கப்பட்ட—உயிரனைத்தும் - சீவர்களியாவையும்—அகத்தாய் - அகமாகியும்—அறிவதிலாவறிவாய் - திரிஸ்யசம்பந்தமில்லாதஞானமாகியும்—தாக்கப்பட்டதொன்றில்லா - தாக்குதற்குவேறொருவஸ்துவில்லாத — தனித்தத்துவமாய் - ப்ரத்தியேகாத்மாவாகியுமிருக்கின்ற—தனையன்றிப்போக்கப்பட்டதில்லா- என்னையன்றிநீக்கப்பட்டதில்லாத—எம்பொருட்டுவணங்கிப்புகழுதும் - எமதுநிமித்தம்வந்தித்துத்துதிப்போம். எ-று .... (௩௩)

(அ-கை) ஆத்மாவிற்சத்திகளனைத்துமுண்டாதல். (கவி) அறவுநொய்தாய்ச்சமமாகியவிகாரமதாயதீதமதா, யிறவுநிகழ்வோடெதிர்வென்ன வெண்ணுங்காலமூன்றில தாய்ப், பிறவுநினைக்குநினைவின்றிப் பேதமற்றவறிவாலே, நிறைவிதானசத்தியெலா நேரோசெய்யப்பட்டனவே .... *

(இ-ள்.) அறவுநொய்தாய் - மிகவுஞ்சொச்சமாய் — சமமாகி - சமத்துவமாய்—அவிகாரமதாய் - விகாரமில்லாததாய்—அதீதமாய்- அதீதமாய்—இறவுநிகழ்வோடெதிர்வென்ன- செல்காலநிகழ்காலவருகாலமென்று—எண்ணுங்காலமூன்றிலதாய்- நினைக்கின்றமூன்றுகாலமுமில்லாததாய்—பிறவுநினைக்குநினைவின்றி- வேறாகநினைக்கின்றநினைவில்லாமல்—பேதமற்றவறிவால் - அபேதஞானத்தினால் — நிறைவிதானசத்தியெலாநேரோசெய்யப்பட்டன - மாக்ஷிமையானநாநாவிதசத்திகளனைத்து நேரேயுண்டாகப்பட்டன. எ-று .... (௩௪)

(அ-கை.) அதீததரிசனம் - (கவி) தாக்கற்றொன்றிலறிவுக்குச் சமமேயொழிந்து கண்டதில்லை, வாக்குக்கெட்டாமையினாலேவசனங்களினாற்சமந்தோன்றா, நோக்கற்கரிதாம்பொய்ப்பொருள்போனொய்தாயழியாநிராசைதனைத், தேக்கிற்சமபாவனை தானே திரைதீர்கடல்போற்சேடிக்கும் .... *

(இ-ள்.) ஒன்றில் - ஒன்றிலும்—தாக்கற்று - பற்றில்லாதிருக்கின்ற—அறிவுக்கு-ஞானத்திற்கு —சமமேயொழிந்து - சமமேயல்லாமல்—கண்டதில்லை -(வேறு) காணப்பட்டதில்லை—வாக்குக்கெட்டாமையினால்- வசனத்திற்கெட்டாதபடியினால்—வசனங்களினாற்சமந்தோன்றா- வார்த்தைகளினாற்சமமானவாத்மாதோன்றமாட்டாது—நோக்கற்கரிதாய்-பார்ப்பதற்கரிதாகியும்—பொய்ப்பொருள்போல்- மித்தையாகியவஸ்துவைப்போல — நொய்தாகி - சொச்சமாகியுமிருக்கின்ற—அழியாநிராசைதனை - கெடாதநிராசையை—தேக்கில்-நிறைத்தால்—சமபாவனைதானே - சமபாவனையானது— திரைதீர்கடல்போல் - அலையில்லாதசமுத்திரத்தைப்போல்—சேடிக்கும்-மிஞ்சும். எ-று .... (௩௫)

(அ-கை.) பந்தமடையுமுயிர்களுக்கிரங்கல். (கவி) செய்லுஞ்செயலிலாமையுமாயத்தியங்குஞ்செயலிற்சேரறிவு, பயிலும்வலையிற்புட்போலப்பந்தமடையுமாதலினான், மயல்வெங்கோபமிரண்டாலும் வருந்தொந்தனையாமயக்காலே, யுயிர்களெல்லா நிலப்புழுப்போலொன்றுமகலாதாகுவதாம் .... *

(இ-ள்.) செயலுஞ்செயலிலாமையுமாய்- தொழிலுந்தொழிலில்லாமையுமாகி—தியங்குஞ்செயலில் - மயங்குகின்றதொழில்களில்—சேரறிவு - சேர்ந்தவறிவானது—பயிலும்வலையிற்புட்போல - கூறும்வலையிலகப்பட்டபக்ஷியைப்போல—பந்தமடையும் - கட்டுப்படும்—ஆதலினால் - ஆகையினால்—மயல்வெங்கோபமிரண்டாலும் - இராகத்துவேஷமாகியவிரண்டினாலும்—வருந்தொந்தனையாம் - வருகின்றதொந்தமான—மயக்கால - மயக்கத்தினால்—உயிர்களெல்லாம் - சீவர்களனைத்தும் — நிலப்புழுப்போல் - பூமிக்குள்ளிருக்கின்றகிருமியைப்போல—ஒன்றுமகலாதாகுவதாம் - ஒன்றுநீங்காமலாகும். எ-று .... (௩௬)

(அ-கை.) தன்னைத்தானுய்த்துதித்தல். (கவி) நீடத்தகுமன்னுயிர்க்கெல்லாநெஞ்சத்துறைவாய்நெடுநாட்பின், கூடப்பெற்றேனுனையிந்தக் குறைவில்பேற்றையார் பெற்றார், தேடப்பட்டாய்பெறப்பெற்றாய் தெரியநின்றாய்விகற்பமெலாம், வீடப்பட்டாயெதுவானா யதுவாய்நின்றாய்மிகத்துதிப்பாம் .... *

(இ-ள்.) நீடத்தகும்- மிகவுந்தெளிவாக —மன்னுயிர்க்கெல்லாம்- நிறைந்தவாத்மாக்களனைத்திற்கும்—நெஞ்சத்துறைவாய்- மனதிலுறைபவனே—நெடுநாட்பின் - வெருகாலத்தின்பின்பு—உனைக்கூடப்பெற்றேன்-உன்னையடையப்பெற்றேன்—இந்தக்குறைவில்பேற்றை-இப்பூரணப்ரயோசனத்தை—பார்பெற்றார் - யார்பெற்றார்கள்—தேடப்பெற்றாய் - (சுருதிகுருவாக்கியங்களினால்) விசாரிக்கப்பட்டாய் — பெறப்பெற்றாய் - (கூடஸ்தபிரமவயிக்கியத்தை) யடையப்பெற்றாய்—விகற்பமெலாம் - வேற்றுமைகளனைத்தையும்—வீடப்பட்டாய்-நீக்கினாய்—தெரியநின்றாய் - சச்சிதாநந்தஸ்வரூபமாகப்ரகாசிக்கின்றாய்—எதுவானாய்-யாதானாயோ—அதுவாய்நின்றாய்- அதுவாகநின்றவுன்னை—மிகத்துதிப்பாம்-மிகவுந்தோத்திரஞ்செய்வோம்.எ-று (௩௭)

(அ-கை.) ஐக்கியஸ்துவானதன்னைத்தரிசித்தல்.(கவி) நானேநீயாய்நீநானாய்ஞானவடிவாய்முடிவின்றித், தானேயாகியண்டத்தின் றலையாய்ப்பரமதத்துவமாங், கோனேயுன்னைத்தொழுகின்றேன் கொண்டன்மறையாநிறைமதிபோ, லூனேர்நினைவுகளின்மறையாவொளியாமுருவே யுனைப்பணிகேன் .... *

(இ-ள்.) நானேநீயாய் - நானேநீயாகியும்—நீநானாய் - நீயேநானாகியும்— ஞானவடிவாய்- ஞானஸ்வரூபமாகியும்—முடிவின்றித்தானேயாகி- முடிவில்லாதுதான்மாத்திரமாகியும்—அண்டத்தின் - அண்டத்தி(லுள்ளதேவர்களுக்கு)—தலையாய் - தேவனாகியுமிருக்கின்ற—பரமதத்துவமாம் - பரமாத்மாவான—கோனே- இறைவனே—உன்னைத்தொழுகின்றேன்-உன்னை வணங்குகின்றேன்—கொண்டன்மறையா - மேகங்களின்மறையாத—நிறைமதிபோல்- பூர்ணசந்திரனைப்போல—ஊனேர்நினைவுகளின்மறையா - ஈனமானநினைவுகளின்மறைபடாத—ஒளியாமுருவே- ப்ரகாசஸ்வரூபமே—உனைப்பணிகேன்-உன்னைவந்தனஞ்செய்வேன். எ-று.(௩௮)

(அ-கை.) பிரமாநந்தத்திலியாவுமிருந்துமில்லையெனல். (கவி) உன்னலென்னுமாவரணமொன்றுமில்லாவெளியாகித், தன்னதானசுகவடிவிற் றானேவிளங்கித்தன்வசமா, மென்னதுருவையான்பணிகே னிருந்துநடந்துஞ்சாந்தமுற்று, மன்னதன்னதிலதாகுமனைத்துஞ்செய்தும்பற்றிலதாம் .... *

(இ-ள்.) உன்னலென்னும்-நினைவென்கின்ற—ஆவரணமொன்றும்-மறைப்பொன்றும்—இல்லாவெளியாகி - இல்லாதசிதாகாயமாய் — தன்னதான - தற்சொருபமாயிருக்கின்ற—சுகவடிவில்- ஆநந்தஸ்வரூபத்தில்—தானேவிளங்கி-தானாகப்ரகாசித்து—தன்வசமாமென்னதுருவை - தனதுவசமாகியவெனதுஸ்வரூபத்தை—யான்பணிகேன்- நான்வணங்குவேன்—இருந்தும்- (அசையா)திருந்தும்—நடந்துஞ்சாந்தமுற்றும் - நடந்துஞ்சாந்தமடைந்தும்—அன்னதன்னதிலதாகும் - அந்தந்தத்தொழிலில்லாததாம்—அனைத்துஞ்செய்தும்பற்றிலதாம்-சகல(தொழில்களைச்)செய்து(மந்தப்)பற்றில்லாததாம். எ-று ....(௩௯)

(அ-கை.) சகலமுமாத்மாவினால்விளங்குமெனல். (கவி) பல்லவங்கடனையசைக்கும் பவனன்போலமனமுதலாய்ச், செல்லுங்கரணங்களையிந்தச் சித்தாம்புருடனசைத்திடுமால், வல்லபாகர்நடத்துகின்றவாசித்திரள்போற்றனதான, வல்லன்மேவப்பொறியெல்லா மவனேபரிக்குமநவரதம் ....*

(இ-ள்.) பல்லவங்கடனையசைக்கும் - தளிர்களையசைக்கின்ற — பவனன்போல - காற்றைப்போல—மனமுதலாய் - மனமுதலாக — செல்லுங்கரணங்களை - நடக்கின்றவந்தக்கரணங்களை —இந்தச்சித்தாம்புருடன் - இந்தஞானாத்மாவானவன்—அசைத்திடும்- அசைப்பான்—வல்லபாகர்நடத்துகின்ற - வல்லமையையுடையசாரதிநடத்தாநின்ற—வாசித்திரள்போல் - குதிரைக்கூட்டங்களைப்போல—தனதானவல்லன்மேவ - தன்னுடையதாகியதுன்பம்பொருந்த—பொறியெல்லாம் - இந்திரியங்களனைத்தையும்—அநவரதம் - சதாகாலமும்—அவனேபரிக்கும்—அவனேதாங்கும். எ-று .... (௪௰)

(அ-கை.) எவற்றினுள்ளும்விளங்குகின்றதெனல். (கவி) இவனேதேடப்படுகிற்போனிவனேதுதிக்கப்படுகிற்போ, னிவனேதியானிக்கப்படுவோ னிவனுஞ்மரணமயக்கொழித்த, திவனேயெளிதினெய்திடுவோ னிவனேநன்றாயறிகிற்போ, னிவனேயெல்லார்மனக்கமலத் திடையிலிருக்குமிசைவண்டே .... *

(இ-ள்.) இவனேதேடப்படுகிற்போன்- இவனே(தேகேந்திரியங்களாற்) றேடப்படுகின்

றவன்—இவனே துதிக்கப்படுகிற்போன் - இவனே (வாக்கினாற்) றுதிக்கப்படுகின்றவன் — இவனே தியானிக்கப்படுவோன் - இவனே (மனதினாற்) றியானிக்கப்படுவான் — இவனுன் மரணமயக்கொழிந்த - இவனுன் மரணமயக்கங்களீங்கின — இவனே வெளிதினெய்திடுவோன் - இவனே வெளிதிலடையத்தக்கவன் — இவனே நன்றுயறிகிற்போன் - இவனன்றுயறியத்தக்கவன் — இவனே யெல்லார்மனக்கமலத்திடையில் - இவனெல்லாருடைய இருதயகமலமத்தியில் — இருக்குமிசைவண்டு - இராநின்றகானத்தையுடையவண்டாம். எ-று. .... (௪௧)

(அ-கை.) முன்மறைந்தபொருளிப்பொழுது வெளிப்பட்டதெனல். (கவி) மேவ
லுற்றபோகத்தில்விருப்புவெறுப்புமெனக்கில்லை, யாவதெய்துமதுவருகயாதுபோ
குமதுபோகப், பாவமிகுமிவ்வஞ்ஞானப் பகைவனலேவிவேகமெனு, மேவமில்
லாட்பொருளெல்லா மிழந்தேனுணர்வாலவைபெற்றேன் .... *

(இ-ள்.) மேவலுற்றபோகத்தில்-விருப்பமுற்றபோகங்களில் — விருப்புவெறுப்புமெனக்கில்லை - இராகத்துவேஷமெனக்கில்லை — யாவதெய்தும் - எதுவரத்தக்கதுவோ — அதுவருக - அதுவரக்கடவது — யாதுபோகும் - எதுபோகத்தக்கதோ — அதுபோக - அதுபோகக்கடவது — பாவமிகும் - பாவமிகுந்த — இவ்வஞ்ஞானப்பகைவனால் - இந்தவஞ்ஞானமென்னுஞ்சத்துருவினால் — விவேகமெனும் - விவேகமென்கின்ற — ஏவமில்லா - வருத்தமற்ற — பொருளெல்லாமிழந்தேன் - வஸ்துக்களனைத்தையு நீங்கினேன் — உணர்வாலவைபெற்றேன் - ஞானத்தினாலந்தவஸ்துக்களைப்பெற்றேன். எ-று. பொருளெல்லாமென்பது, சமாதியின்கண் ணவநவமாய்விளங்காநின்றவாநந்தமெனக் கொள்க .... (௪௨)

(அ - கை.) பிரமஸ்வரூபமேதனது ஸ்வரூபமாமெனல். (கவி) துணையுமனத்தான்
மனமறுத்து துயர்செய்யகங்காரந்தீர்ந்து, நினைவானினைவுபோயசையா நிலக்கே
தனிக்கேவலநின்றேன், வினையாநினைவற்றகங்கரம்போய் மேவுமனம்போய்த்தொ
ழிலின்றித், தனையேநிகர்கேவலத்தொடர்ச்சி தத்துவத்தென்வடிவிருக்கும் ... ...*

(இ-ள்.) துணையுமனத்தால் - (சாத்திரங்களின்) வருந்தியவிவேகமுள்ளமனதினால் — மனமறுத்து - (சம்சாரத்திலழுந்திய) மனதைக்கெடுத்து — துயர்செய்யகங்காரந்தீர்ந்து - துன்பஞ்செய்கின்றவகம்பாவநீங்கி — நினைவானினைவுபோய் - அத்துவிததியானத்தினாற்றுவிதபாவனைவிட்டு — அசையாநிலைக்கு - அசைவற்றநிலையில் — தனிக்கேவலநின்றேன் - ஒப்பற்றகேவலமாயிருந்தேன் — வினையாநினைவற்று - வினையான்பாவனைபற்று — அகங்கரம்போம் - அகம்பாவநீங்கி — மேவுமனம்போய் - பொருந்தாநின்றமனம்போய் — தொழிலின்றி - ஒருசெயலுமில்லாமல் — தனையேநிகர் - தனக்குத்தானேசமானமான — கேவலத்தொடர்ச்சி - கேவலமாகிய — தத்துவத்து - பரிபூரணமானஞானத்மாவில் — என்வடிவிருக்கும் - எனதுஸ்வரூபமிருக்கும். எ-று.

(அ-கை.) அகம்பாவநீங்கி அயிக்கியமானோமெனல் (கவி) காதலென்னுங்கட்டறுத்
துக்காயமென்னுங்கூடகன்று, சாதன்மேவுமகங்காரமாந் தனிப்புள்ளெங்கேபறந்து
ளதோ, வேதமறுநீதானுனீயென்னுமொருமையிருமையதா, யோதும்விதியான்
மீண்டொன்றியுயர்நீநானுனீயானேம் .... *

(இ-ள்.) காதலென்னுங்கட்டறுத்து - ஆசையென்கின்றபந்தத்தைக்கெடுத்து — காயமென்னுங்கூடகன்று - சரீரமென்னுங்கூண்டைநீங்கி — சாதன்மேவுமகங்காரமாம் - இறப்பையடைகின்றவகம்பாவமென்னும் — தனிப்புள் - தனித்தபக்ஷியானது — எங்கேபறந்துளதோ - எங்கேபறந்துபோயிற்றோ — ஏதமறுநீநான் - குற்றமற்றநீயேதானாகும் — நானீயென்னும் - தானேநீயாகுமென்கின்ற — ஒருமையிருமையதாய் - ஒன்றிரண்டாக — ஓதும்விதியான்மீண்டொன்றி - கூறும்நியதியினாற்றிரும்பவுமொன்றாய் — உயர்நீநான் - மேலானநீயேநானாகவும் நானீ - நானேநீயாகவும் — ஆனேம் - அயிக்கியமானோம். எ-று .... (௪௪)

(அ-கை.) ஆத்மாவைவாழ்த்துதல். (கவி) ஒழிவிலுலகின்சீரெல்லாமுண்டாயிருந்துநீயிலை
யேல், விழியிலவர்க்குப்பேரொழில்கூர்மின்னாரைப்போல்விளங்காதால், வழுவிற்றேவசய
சாந்திமன்னுமிடமேசயபேத, முழுதுக்கயலேசயவேதமூலத்தவிடமேசயவென்னு. *

(இ-ள்.) ஒழிவிலுலகின்சீரெல்லாம் - நீங்காதசகத்தின்செல்வங்களனைத்தும் — உண்டாயிருந்தும் - உடையதாயிருந்தும் — நீயிலையேல் - நீயில்லாமற்போனால் — விழியிலவர்க்கு - கண்ணில்லாதவர்களுக்கு — பேரொழில்கூர் - பெரிதானவழகுமிகுந்த — மின்னாரைப்போல் - ஸ்திரீகளைப்போல — விளங்காது - பிரகாசிக்கமாட்டாது — வழுவில்தேவசய - நாசமில்லாததெய்வமேசய — சாந்திமன்னுமிடமேசய - உபசாந்தம்பொருந்துமிடமேசய — பேதமுழுதுக்கயலேசய - பேதங்களனைத்திற்குமதீதமானதேசய — வேதமூலத்த - வேதங்களுண்டான — இடமே

சயவென்று - ஸ்தானமேசயவென்று. எ-று. (இ-ம்சு-௪-ம்) விசாரத்திலுதித்தஸ்வானுபூதியை மனனஞ்செய்து அதை நிதித்தியிற் காட்சிப்பட்டுத்துருத்தமென்பதாம் ... .(௬௫)

(அ-கை.) சமாதியடைதல். (கவி) பிறக்குமுதலேசய வென்றும்பிறவாமுதலேசயநாளு, பிறக்குமுதலேசயவென்றுமிறவாமுதலேசயவென்று, சிறக்குமனத்தாற்சிந்தித்துச்செம்பொற்பெயரோன்திருமதலைப், பறக்கும்விகற்பமில்லாதபரமசமாதிச்சுகமுற்றான். *

(இ-ள்.) பிறக்குமுதலேசய - உண்டாகுங்காரணமேசய—என்றும்பிறவாமுதலேசய-எப்பொழுதுமுண்டாகாதகாரணமேசய—நாளும்பிறக்குமுதலேசய - எந்நாளும்பிறக்கின்றகாரணமேசய — என்றுமிறவாமுதலேசய - எப்போதுமிறவாதகாரணமேசய— என்று - (இப்படி) யென்று—சிறக்குமனத்தாற்சிந்தித்து - சிறக்கின்றமனநிறைந்தியானித்து — செம்பொற்பெயரோன்திருமதலை - இரணியனதழகியபுத்திரன்—பறக்கும்விகற்பமில்லாதபரமசமாதிச்சுகமுற்றான்-பரவியபேதமற்றமேலானநிருவிகற்பசமாதியினானந்தத்தையடைந்தான். எ-று.....(௬௬)

(அ-கை.) சமாதியனுபவத்தைக்காண்டல். (கவி) நிருவிகற்பசமாதியிலேநிகழ்சித்திரம்போனிலைபெற்று, வருடமையாயிரஞ்செல்ல மாறுவொருபார் வையினிற்ப, வருணமணிசூழ்பாதலத்தி லரசிலாமலசுரரெலாஞ், கருடன்முதற்புள் ளினங்கவரக் கலங்குகுளமீனினமொத்தார் .... *

(இ-ள்.) நிருவிகற்பசமாதியில் - நிருவிகற்பமானசமாதியில்—நிகழ்சித்திரம்போல் - பிரகாசிக்கின்றசித்திரத்தைப்போல—நிலைபெற்று - திரமடைந்து — வருடமையாயிரஞ்செல்ல- ஐயாயிரவருடங்கழிய — மாறுவொருபார்வையினிற்ப - மாறாதவொரேதிருஷ்டியிலிருக்க—அருணமணிசூழ் - மாணிக்கங்கள்சூழ்ந்திருக்கின்ற—பாதலத்தில் - பாதாளலோகத்தில் — அரசில்லாமல் - வேந்தனில்லாமல்—அசுரரெல்லாம் - அவுணர்களனைவரும்—கருடன்முதல் - கலுழன்முதலான—புள்ளினங்கவர - பறவைக்கூட்டங்கள்கிரகிக்க— கலங்குகுளமீனினமொத்தார்- கலங்காநின்றதடாகத்திலுள்ளமச்சங்களின்கூட்டத்துக்குச்சமானமானார். எ-று. (இ-உ-௧-ம்) ஸ்வானுபூதிமாத்திரமாய் விளங்கினானென்பதாம்...... .... (௬௭)

(அ - கை.) திருமால் சகநீதியையாலோசித்தல். (கவி) ஆவதாயகாலத்திலனைத்தாமுலகினெறியனைத்தும்,காவல்புரியுந்திருநெடுமால்கடல்வாய்விழித்துக்கண்வளர்வான், றாவல்வருடக்கார்நாளின் றுயிலைத்தவிர்ந்துவொருகாலைச், சேவல்கூருந்திருவுளத்திற்செகத்தினெறியைச்சிந்தித்தார் .... *

(இ-ள்.) ஆவதாயகாலத்தில்- இப்படியானகாலத்தில்—அனைத்தாமுலகின் - சகலமாகியசகங்களினது—நெறியனைத்தும் - நீதிகளியாவையும்—காவல்புரியும் - இரட்சிக்கின்ற — திருநெடுமால் - ஸ்ரீவிஷ்ணுவானவர்—கடல்வாய் - திருப்பாற்கடலில் — விழித்துக்கண்வளர்வான்- அறிதுயிற்செய்து — தூவல்வருடக்கார்நாளின் - துளிக்கின்றமழையையுடையகார்காலத்திற் செய்யும்—துயிலைத்தவிர்ந்து - நித்திரையைநீங்கி—ஒருகாலை - ஒருக்கால் —சேவல்கூருந்திருவுளத்தில்- இரட்சிப்புள்ளதிருவுள்ளத்தில்—செகத்தினெறியை - உலகத்தினடக்கையை — சிந்தித்தார் - ஆலோசனைசெய்தார். எ-று .... (௬௮)

(அ-கை.) இ - து. (கவி) பேதமில்லாச்சாந்திபதம்பிரகலாதன்பெற்றிருப்ப, வேதன் சிருஷ்டியழிந்துளவால்வெவ்வாளசுரரிலாமையினு, லேதவசுரரில்லையெனிலிகலற்றிமைபோரெல்லோரும், போதவுபசாந்தியராகிப்பொருவில்வீடுபொருந்துவரால்......... *

(இ-ள்.) பேதமில்லா - வேற்றுமையில்லாத—சாந்திபதம் - உபசாந்தபதத்தை—பிரகலாதன்பெற்றிருப்ப - பிரகலாதனடைந்திருக்க — வேதன்சிருஷ்டி - பிரமதேவன்சிருஷ்டியானது—அழிந்துள - அழிவுற்றன—வெவ்வாளசுரர்- கொடியவாளையுடையநிசாசரர்கள்—இலாமையினால் - இல்லாத்தினால் — ஏதவசுரரில்லையெனு - குற்றமுள்ளதானவர்களில்லையென்று—இகலற்றிமையோரெல்லோரும்- போரற்றதேவர்களனைவரும்—போதவுபசாந்தியராகி-மிகவுமுபசமமடைந்து—பொருவில்வீடுபொருந்துவர்-ஒப்பற்றமோக்ஷமடைவார்கள். எ-று(௬௯)

(அ-கை)இ-து(கவி)தேவருபசாந்தியையடையிற்செந்தீவேள்விதவமெல்லாம்,போவதாகிப்பயனெல்லாம்பொருந்தாதெவையும்பொன்றிடுமா, லோவலுற்றகிரியையெலாமொழிந்தாற்பூமியொழிங்கிடுமாற், கேவலத்திற்புவியொடுங்கிற் கிளருஞ்சிருட்டியற்றிடுமால்.

(இ-ள்.) தேவருபசாந்தியையடையில் - அமரர்களுபசாந்தத்தையடைந்தால் — செந்தீவேள்வி - (பூமியிற்) சிவந்ததீயை (முன்னிட்டுச்செய்கின்ற) யாகங்களும்—தவமெல்லாம்- தவங்களனைத்தும்—போவதாகி - கெடுவதாய் — பயனெல்லாம் - பிரயோசனங்களனைத்தும்—பொருந்தாது - பொருந்தாமல்—எவையும்பொன்றிடும் - எல்லாநசிக்கும்—ஓவலுற்றகிரியை

யெலாம் - ப்ரயாசமாகச்செய்யப்பட்டயாகாதிகிரியைகளனைத்தும்—ஒழிந்தால்- நீங்கினால்—பூமியொடுங்கிடும் - சகமானதடங்கிடும்—கேவலத்திற்புவியொடுங்கில்- தனிமையிற்சகமடங்கினால்—ஙிளருஞ்சிருட்டியற்றிடும் - விளங்குகின்றசிருஷ்டியழிந்திடும். எ-று .... (௫௰)

(அ-கை) இ-து.(கவி) இன்னசிருட்டிசூனியமாயிரவிமதியோடெலாமிறக்கிற், பின்னரியாமும்வடிவொழித்துப்பேதமில்லாப்பதமடைவோஞ், சொன்னகாலத்தலாதிடையேதொல்லைஞாலமெலாமிறக்கி, லுன்னநலங்காண்கிலமிதனுக்குறுதியுபாயமுணர்ந்தனமால். *

(இ-ள்.) இன்னசிருட்டிசூனியமாய் - இப்படிப்பட்டசிருஷ்டியில்லாமல்—இரவிமதியோடு - சூரியசந்திரர்களோடும்—எலாமிறக்கின் - யாவுமிறந்தால்—பின்னர் - பின்பு— இயாமும்வடிவொழித்து - நாமு (மிந்த) வுருவத்தைவிட்டு—பேதமில்லாப்பதமடைவோம்-பேதமற்ற (தற்) பதத்தையடைவோம்—சொன்னகாலத்தலாது - நியமித்தகாலத்தைவிட்டு—இடை-மத்தியில்—தொல்லைஞாலமெலாமிறக்கில்-(பழைமையான) சகங்களனைத்துநாசமானால்—உன்ன-நினைக்க—நலங்காண்கிலம் - நன்மையைக்கண்டிலம் — இதனுக்குறுதியுபாயம்- இதற்குத்திசமானவுபாயத்தை—உணர்ந்தனம் - அறிந்தனம். எ-று .... (௫க)

(அ-கை.) இ - து. (கவி) வேறு. தானவருய்கவுய்ந்தாற்சமருண்டாஞ்சமருமுண்டேல், வானவருண்டாமுண்டேன் மகந்தவமுண்டாமுண்டே, லானதோர்சிருட்டியுண்டா மன்றெனிற்சிருட்டிமாளு, மூனமிலசுரர்கோனிவ்வுடலொடுமூழிவாழ்க .... *

(இ-ள்.) தானவருய்க - அசுரர்கள்வாழக்கடவது—உய்ந்தால் - வாழ்ந்தால் — சமருண்டாம் - யுத்தமுண்டாகும்—சமருமுண்டேல் - யுத்தமுமுண்டானால்— வானவருண்டாம் - தேவர்களுண்டாவார்கள்—உண்டேல் - (தேவர்க) ளுண்டானால்— மகந்தவமுண்டாம் - யாகமுந்தவசுமுண்டாகும்—உண்டேல்- (அவைக) ளுண்டானால்—ஆனதோர்சிருட்டியுண்டாம்-ஆகியவொப்பற்றசிருஷ்டியுண்டாகும்—அன்றெனில்-(இவைக)ளில்லாவிடின்—சிருட்டிமாளும்-சிருஷ்டியுங்கெடு (மாதலால்)—ஊனமிலசுரர்கோன்-குறைவற்றவசுரேந்திரனாகிய(பிரகலாதன்)—இவ்வுடலொடும் - இச்சரீரத்தோடும்—ஊழிவாழ்க - ஊழிகாலம்வாழக்கடவன்.எ-று ... (௫உ)

(அ-கை.) இ - து. (கவி) பரமமாமீசனலேபாலிக்குங்கடவுணீதி, திரமுறவிவ்வாறென்றுசிந்தித்தசெங்கண்மாய, னரவணைப்பாயனீங்கியசுரர்கோனருகுசேர்ந்தான், பிரமலோகத்தையொக்கும்பெரியபாதல்நகர்க்கே .... *

(இ-ள்.) பரமமாமீசனல் - பரமேஸ்வரனல்—பாலிக்குங்கடவுணீதி - இரட்சிக்கின்றதெய்வநீதியானது—திரமுற - ஸ்திரம்பொருந்தும்படி—இவ்வாறென்று - இந்தப்ரகாரஞ்செய்யவேண்டுமென்று—சிந்தித்தசெங்கண்மாயன் - சிந்தனைசெய்தசிவந்தகண்களையுடையவிஷ்ணுவானவர்—அரவணைப்பாயனீங்கி - சர்ப்பசயனத்தைவிட்டு — பிரமலோகத்தையொக்கும் பெரியபாதலநகர்க்கு- சத்தியலோகத்தையொத்தபெரிதானபாதாளலோகத்தில்—அசுரர்கோனருகுசேர்ந்தான் - அசுரர்க்கரசனுன(பிரகலாதனது)சமீபத்திலடைந்தார். எ-று.(இ-சு-க-ம்) சீவன்முத்தனுன பிரகலாதன் விதேகமுத்தியையடைந்தாற் பரமேஸ்வரநியதி தவறிப்போமென்றாலோசித்தவனெப்போதுஞ் சீவன்முத்தனுயரசிலிருக்கும்படி மனதிற்சிந்தித் தவனிருக்குமிடத்துக்கெழுந்தருளினுரென்பதாம் .... (௫௩)

(அ-கை.) சமாதியினின் றுஞ்சாக்ஷாத்காரத்துக்குவெளிப்படுதல்.(கவி) (வேறு.)கருடவாகனத்துறைபவன் கவரிசேர்செங்கைத், திருமடந்தைவாழ் வலத்தினனைம்படைசெறியு, மிருபுறத்தினன்றேவருமுனிவருமஞ்ச, வருளுநாயகனசுரனைபுணர்தியென்றருளி ...... *

(இ ள்.) கருடவாகனத்துறைபவன் - கருடவாகனத்தில்வசிப்பவனும்—கவரிசேர்-வெண்சாமரஞ்சேர்ந்திருக்கின்ற—செங்கைத்திருமடந்தை - சிவந்தகரங்களையுடையவிலக்குமி—வாழ்வலத்தினன் - வாழ்கின்றவலதுபக்கத்தையுடையவனும்—ஐம்படைசெறியும் - பஞ்சாயுதங்கணிறைந்த—இருபுறத்தினன் - இருபுறத்தையுடையவனுமாகிய—தேவருமுனிவருமிறைஞ்ச-தேவர்களுமுனிவர்களும்வணங்க—அருளுநாயகன் - அருள்செய்யுந்தலைவனுனவிஷ்ணு— அசுரனையுணர்தியென்றருளி- பிரகலாதனையறிவாயென்றனுக்கிரகித்து. எ-று .... (௫௪)

(அ-கை.) சமாதியினின் றும்வெளிப்படல். (கவி) வலம்புரித்தொனிகிளப்பினன்மாதிரம்பிளப்ப, நிலம்பிளப்புறநெடுந்திசைபிளப்புறநிமிர்ந்த, வலம்புமோதையான்மெல்லெனமெல்லெனவறிந்தா,னலம்பயப்புறுதற்பதத்தொன்றியநல்லோன் .... *

(இ - ள்.) வலம்புரித்தொனிகிளப்பினன் - பாஞ்சசன்னியத்தொனியையெழுப்பினன்—மாதிரம்பிளப்ப-ஆகாயம்பிளக்கும்படியாகவும்—நிலம்பிளப்புற-பூமிபிளக்கும்படியாகவும்—நிமிர்ந்த ஓங்கிய—அலம்புமோதையால் -அதிராநின்றபேரொலியினல்—நலம்பயப்புறு-நன்

மையையுண்டாக்குகின்ற—தற்பதத்தோன்றிய-தற்பதத்திற்கலந்த—நல்லோன்-நன்மையையுடையபிரகலாதன்---மெல்லெனமெல்லென - மெல்லமெல்ல—அறிந்தான்-அறிவுற்றான். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) பிராணசத்திதான்பிரமரந்திரநின்றுபெயர்ந்து, புராதனப்படிநாடிகளாலெங்கும்பொருந்தி, விராவலுற்றனவொன்பது துவாரத்துமேவப், பராபரத்தினையறிந்துளோனறிவுசம்பவித்த .... *

(இ-ள்.) பிராணசத்திதான் - சைதன்யசத்தியானது—பிரமரந்திரநின்று- பிரமரந்திரத்தினின்றும்—பெயர்ந்து - பிரிந்து—புராதனப்படி - முன்னுள்ளப்பிரகாரம்—நாடிகளால்-நாடிகளினால்—எங்கும்பொருந்தி - எவ்விடத்துமமைந்து — விராவலுற்றன - கலத்தலையுற்றனவாய்—ஒன்பதுதுவாரத்துமேவ- நவத்துவாரங்களினும்பொருந்த—பராபரத்தினையறிந்துளோன்- பராபரத்தையறிந்தபிரகலாதனது—அறிவுசம்பவித்த - அறிவுண்டாயிற்று. எ-று ...... (௫௬)

(அ-கை.) இ-து. (கவி) அறிவுதோன்றிபுட் பிராணதற்பணநிழலாகி, யறிவதாம்பொருளைநோக்குற்ற தன்னதாமறிவு, பிறிவதாமறிபொருளிலேமனத்தன்மைபெற்ற, பிறிவிலாமுகந்தற்பணத் திருமைபெற்றதுபோல் .... *

(இ-ள்.) அறிவுதோன்றி - அறிவுண்டாய்—உட்பிராணன் - உள்ளிற்பிராணனென்னும்—தற்பணநிழலாகி - கண்ணாடியின்சாயையாகப்பிரதிபலித்து—அறிவதாம்பொருள் - விஷயவஸ்துக்களை—நோக்குற்றது - பார்த்தது—அன்னதாமறிவு - அவ்வறிவானது— பிறிவதாமறிபொருளில் - வேறானவிஷயத்தில்—பிறிவிலாமுகம் - பிரிவற்றமுகமானது—தற்பணத்து- கண்ணாடியினால்—இருமைபெற்றதுபோல்- இரண்டாதலையடைந்ததுபோல—மனத்தன்மைபெற்ற-மனக்குணத்தையடைந்தது. எ-று .... (௫௭)

(அ-கை.) இ - து. (கவி) அற்பமுள்ளமங் குரித்தலுமரும்பவிழ்வுற்ற, வுற்பலங்கள்போன்மெல்லெனமலர்வுற்றவொண்கண், ணிற்பதாய்நரம்புறுபொறியறிவுகணிறைய,நற்பிராணனுமபானனு மெங்கணுநடந்த .... *

(இ-ள்.) அற்பமுள்ளமங்குரித்தலும் - அற்பமாகமனதுமுளைத்தமாத்திரத்தில்—அரும்பவிழ்வுற்ற- முகைவிரிந்த—உற்பலங்கள்போல்- நீலோற்பலத்தைப்போல—ஒண்கண்- அழகியகண்கள்—மெல்லெனமலர்வுற்ற - மெள்ளவிழித்தன—நிற்பதாய் - நிற்பதாகியிருக்கின்ற—நரம்பு - நரம்புகளினும்—உறுபொறி - பொருந்தியவிந்திரியங்களினும்—அறிவுகணிறைய - உணர்வுகணிறைய — நற்பிராணனுமபானனுமெங்கணுநடந்த - நல்லபிராணவாயுவுமபானவாயுவுமெங்குநடந்தன. எ-று .... (௫௮)

(அ-கை.) இ - து. (கவி) அமைவில்காற்றுற்றபதுமம்போலசைவினையடைந்தா, னிமைகளுக்கிடையளவிலேமனந்தடித்தெழுந்த, சமைவுறத்தெரி கண்மனம்பிராணன்மெய்தயங்கக், கமையின்மிக்கவன்விளங்கினன்கருணைமால்காண .... *

(இ-ள்.)அமைவில்காற்றுற்ற-அமைதியானதென்றற்காற்றிலகப்பட்ட—பதுமம்போல்-தாமரைப்பூவைப்போல—அசைவினையடைந்தான்-(பிரகலாத)னசைந்தான்— இமைகளுக்கிடையளவில்-இமைநேரத்தினுள்—மனந்தடித்தெழுந்த-மனதுதடித்துண்டாயிற்று—சமைவுறத்தெரி-உண்டாய்த்தெரிகின்ற—கண்-கண்ணும்—மனம் - மனமும்—பிராணன்-பிராணனும் — மெய்-சரீரமும்—தயங்க-பிரகாசிக்க—கமையின்மிக்கவன் - பொறுமையின்மிகுந்தபிரகலாதன்—கருணைமால்காண-அருள்வடிவமுள்ளவிஷ்ணுகாணும்படி—விளங்கினன்-ப்ரகாசித்தான். எ-றும்.

(அ-கை.) இ-து. (கவி) பரந்துநாட்டங்கணோக்கினமனனமும்பருமை, நிரந்தரித்தன வவ்வயினவன்றனை நெடுமால், சுரந்தவன்புடனோக்கியே யருள்செய்வான் றூயோய், புரந்தரன்புகழுனதுசீர்நோக்குவாய்புரிந்து .... *

(இ-ள்.) பரந்துநாட்டங்கணோக்கின - விகசிதமாய்கண்கள்பார்த்தன — மனனமும்-மனதும்—பருமைநிரந்தரித்தன - பூரணமாகநிறைந்தது—அவ்வயின் - அப்பொழுது—அவன்றனைநெடுமால் - அப்பிரகலாதனைவிஷ்ணுவானவர்—சுரந்தவன்புடனோக்கி- மிகுந்தகிருபையுடன்பார்த்து—அருள்செய்வான் - அனுக்கிரகஞ்செய்வார்— தூயோய் - பரிசுத்தமானபிரகலாதனே—புரந்தரன்புகழ் - தேவேந்திரன்றுதிக்கின்ற—உனதுசீர் - உனதுசெல்வத்தை— புரிந்துநோக்குவாய் - விரும்பிப்பார்ப்பாய். எ - று. (இ-௬௧-ம்) சமாதியினின்றுந் திரும்பினவனைச் சகசத்திற்சர்வம்பிரமமயமாய் விளங்காநின்றநிரதிசயாநந்தமானவுனதுசெல்வத்தைப் பாரென்றனுக்கிரகஞ்செய்தானென்பதாம் .... (௬௦)

(அ-கை.) சகசநிஷ்டையையனுக்கிரகித்தல். (கவி) உடலைநோக்குதி யகாலத்திலுன்னு
டையுடலை, விடநினைப்பதென்பற்றுதல்விடுதல்சங்கற்பம், படர்கிலாவுனக்கபாவமும்பா
வமுமுடலிற், றுடரிற்சேதமென்னெழுதியாவிருத்தியாற்றூயோய் .... ✻

(இ-ள்.) உடலைநோக்குதி - சரீரத்தைப்பார்ப்பாய்—அகாலத்தில் - காலமல்லாதகாலத்தில்—உன்னுடையுடலை - உனதுசரீரத்தை—விடநினைப்பதென் - விட்டுவிடநினைப்பதென்ன—பற்றுதல்-பற்றுதலும்—விடுதல்-விடுதலுமாகிய—சங்கற்பம்-சங்கற்பமானது—படர்கிலாவுனக்கு-வளராதவுனக்கு—அபாவமும்-அபாவமும்—பாவமும்-பாவமும்—உடலிற்றுடரில்- சரீரத்திற்றொடர்ந்தால்—சேதமென்-குறைவென்ன—எழுதி- (சமாதியைவிட்) டெழுந்திருப்பாய்—தூயோயிருத்தி-பரிசுத்தமானபிரகலாதனே (சீவன்முத்திப்பதத்தி) லிருப்பாய். எ-று. (௬௧)

(அ-கை.) சீவன்முத்தனுக்குமரணஞ்சிறப்பன்றெனல். (கவி) சீவன்முத்தனேநீயிந்தவுட
லொடுஞ்செங்கோற், காவலாளனாய்ச்சுமையறக்கற்பமட்டிருப்பாய், பாவகன்சுடப்பன்
னிருகதிர்சுடவுலகம், யாவதுங்கெடாதிருப்பநீயிறப்பதென்வாளா ... . ✻

(இ-ள்.) சீவன்முத்தனும் - சீவன்முத்தனாகிய—நீயிந்தவுடலொடும்- நீயிந்தச்சரீரத்தோடும்—செங்கோற்காவலாளனாய் - நீதியைக்காக்கின்றவனாய்—சுமையற - (சம்சார) பாரமில்லாமல்—கற்பமட்டிருப்பாய்-கற்பமளவுமிருக்கக்கடவாய்—பாவகன்சுட - அக்கினியானதெரிக்க—பன்னிருகதிர்சுட-பன்னிரண்டுசூரியரெரிக்க—உலகமியாவதும-சகமனைத்தும்— கெடாதிருப்ப-கெடாமலிருக்க—வாளா-வீணாக—நீயிறப்பதென்-நீமரணமடைவானேன். எ-று ..... (௬௨)

(அ-கை.) பெத்தனுக்குமரணஞ்சிறப்பாமெனல். (கவி) ஓங்குமாசையாம்பாசத்தாலுற
ப்பிணிப்புண்டு, வீங்குமுள்ளுணர்வதன்வழியோடியேமெலிந்து, தாங்குசெய்கையான்
மனமிகச்சலிப்பவர்க்கன்றே, தீங்குமேவியமரணந்தான்சிறப்பதுசகத்தில் .... ✻

(இ-ள்.) ஓங்குமாசையாம் - வளராநின்றவாசையாகிய—பாசத்தால்-கயிற்றினால்— உறப்பிணிப்புண்டு - பொருந்தக்கட்டுப்பட்டு—வீங்குமுள்ளுணர்வு - பருக்கின்றவந்தக்கரணமானது—அதன்வழியோடி - அப்பாசமார்க்கத்திற்சென்று—மெலிந்து - இளைத்து—தாங்குசெய்கையால் - (சம்சாரத்தைச்) சுமக்கின்றதொழிலினால்—மணம்-மனமானது—மிகச்சலிப்பவர்க்கன்றே - மிகவுஞ்சஞ்சலமானவர்களுக்கல்லவா — தீங்குமேவியமரணந்தான் - தீமைபொருந்தியமரணமானது—சகத்தில்-உலகத்தின்கண் —சிறப்பது - சிறந்திருப்பது. எ-று ....(௬௩)

(அ-கை.) சீவன்முத்தனதாயுளேசிறப்பாமெனல். (கவி) அகங்கரத்தினை யகற்றியோர்
பற்றின்றியனைத்துஞ், சுகந்தருஞ்சமமானவராயுவேசுகமா, முகந்தவாசையுஞ்சினமுமற்
றுட்குளிர்மதியாற், செகங்களின்கரியானவராயுவேசிறக்கும் .... ✻.

(இ-ள்.) அகங்கரத்தினையகற்றி-அகம்பாவத்தைநீக்கி—ஓர்பற்றின்றி - ஓர்பற்றில்லாமல்—அனைத்தும்-சகலமும்—சுகந்தருஞ்சமமானவர் - சுகத்தைக்கொடுக்கின்றசமத்துவமானவர்கள்—ஆயுவேசுகமாம்-ஆயுளேசுகமாம்—உகந்தவாசையும்-மிகுந்தராகமும்—சினமுமற்று- துவேஷமுமில்லாமல்—உட்குளிர்மதியால்-உள்ளேகுளிர்கின்றவறிவினால்—செகங்களின்கரியானவர்- உலகங்களுக்குச்சாட்சியானவர்களுடைய—ஆயுவேசிறக்கும்-ஆயுளேசிறப்பாம். எ-று. (௬௪)

(அ - கை.) பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளெனல். (கவி) பற்றுவான்பற்றுபொரு
ளிரண்டும்பயில்பந்த, மற்றபோதுபசாந்திதோன்றிடுமதுநிலைமை,பெற்றபோதுவீடெ
னும்பெயரந்நிலைபெறுமால், வெற்றிவீரசிங்காதனத்திருத்தியால்விளங்க . ... ✻

(இ-ள்.) பற்றுவான்-பற்றுகின்றவனும்—பற்றுபொருள்-பற்றுகின்றவிஷயங்களுமாகிய—இரண்டும்-(இவ்)விரண்டும்—பயில்பந்தம்-சொல்லுகின்றபந்தமாம்— அற்றபோது - அஃதறுபட்டபோது—உபசாந்திதோன்றிடும் - உபசாந்தமுண்டாகும்— அதுநிலைமைபெற்றபோது-அவ்வுபசாந்தநிலையாகவடைந்தபோது —வீடெனும்பெயர்- மோக்ஷமென்னும்பெயராம்— அந்நிலைபெறும்-அந்தநிலையைநீயடைந்தபடியால்—வெற்றிவீரசிங்காதனத்து - வெற்றியுள்ளவீரசிங்காசனத்தினிடத்தில்—விளங்க - ப்ரகாசிக்கும்படியாய்—இருத்தி-இரு. எ-று. (௬௫)

(அ-கை.) பட்டாபிஷேகஞ்செய்யத்தொடங்கல். (கவி) குளைசெய்சங்கினதோசை
யாற்குழுறுறவந்த, புளையில்வானவர்மங்கலப்பணிசெய்துபுகழ,விளைவிலின்றுனை
மாமுடிமிலைச்சுவனானே, யரசுசெய்கநீயூழியினளவெனவருளி .... ✻

(இ-ள்.) குளைசெய் - ஒலியைச்செய்கின்ற—சங்கினதோசையால்-சங்கத்தொனியினால்—குழுறுறவந்தபுளையில்வானவர் - சத்திக்கவந்தகுற்றமற்றதேவர்கள்—மங்கலப்பணிசெய்துபுகழ - மங்கலத்தொழில்களைச்செய்துதுதிக்க — விளைவிலின்று - சீக்கிரத்திலிப்போது—நானே- யானே—உனை - உனக்கு—மாமுடிமிலைச்சுவன் - மகாமுடியைத்தரிப்பன் — ஊழியினள

வென - கற்பகாலபரியந்தம் — நீயரசுசெய்க - நீயரசாக்ஷிசெய்யக்கடவாயென்று — அருளி - அனுக்கிரகித்து. எ-று .... (௬௬)

(அ-கை.) பட்டாபிஷேகந்தரித்தல். (கவி) மங்கலப்புனல்கொணர்கெனமஞ்சனமாட்டி, சங்குசக்கரந்தரித்தனகைகளாற்றானே, புங்கவத்திரள்போற்றிடப்பொன்முடிசூட்டி, யங்கணச்சுதனசுரர்கோனுக்கிவையறைந்தான் .... *

(இ-ள்.) மங்கலப்புனல் - மங்கலதீர்த்தங்களை — கொணர்கென - கொண்டுவருகவென்று (சொல்லி) — மஞ்சனமாட்டி - அபிஷேகஞ்செய்வித்து — சங்குசக்கரம் - சங்குசக்கரத்தை — தரித்தனகைகளால் - தரித்திருக்கின்றகரங்களினால் — தானே - சுயமாக — புங்கவத்திரள்போற்றிட - தேவர்குழாங்கடோத்திரஞ்செய்ய — பொன்முடிசூட்டி - அழகிய (விரத்தின) கிரீடத்தைத் தரித்து — அங்கணச்சுதன் - அழகியகண்களையுடையவிஷ்ணுவானவர் — அசுரர்கோனுக்கு - அசுரேசனானபிரகலாதனுக்கு — இவையறைந்தான் - இவைகளைச்சொன்னார். எ-று .... (௬௭)

(அ-கை.) எப்பொழுதுஞ்சீவன்முத்தனாயிருக்கும்படியனுக்கிரகித்தல். (கவி) தள்ளின்மேருவும்புவனமுமருக்கனுஞ்சசியு, முள்ளநாளெலாமரசுசெய்துயர்கெனவருளி, கள்ளமாயையின் சிருட்டியொன்றொளித்தல்போற்கணத்தில், வெள்ளவானவர்குழாத்தொடுமறைந்தனன்விண்டு .... *

(இ-ள்.) தள்ளின்மேருவும் - அசைத்தற்கரியமகாமேருவும் — புவனம் - பூமியும் — அருக்கனும் - சூரியனும் — சசியும் - சந்திரனு(மாகியவிவர்கள்) — உள்ளநாளெலாம் - உள்ளகாலங்களெல்லாம் — அரசுசெய்து - அரசாக்ஷிசெய்து — உயர்கெனவருளி - உயர்வாகக்கடவாயென்றனுக்கிரகஞ்செய்து — கள்ளமாயையின் - பொய்யாகியமாயையினது — சிருட்டியொன்று - ஒருசிருஷ்டியானது — ஒளித்தல்போல் - மறைதலைப்போல — கணத்தில் - க்ஷணநேரத்தில் — வெள்ளவானவர் - மிகுந்ததேவர்கள் — குழாத்தொடும் - கூட்டத்தோடும் — விண்டுமறைந்தனன் - விஷ்ணு மறைந்தார். எ - று. (இ-அ-க-ம்) நியதிப்படி யித்தேகத்தோடுஞ் சீவன்முத்தனாய்ச் சகசாநந்தாம் புதியாகச்சுகித்திருக்கும்படி யனுக்கிரகித்தெழுந்தருளினானென்பதாம் .... (௬௮)

(அ-கை.) ஆத்மாவிற்கரைந்தமனமெங்ஙனம்வெளிப்பட்டதெனின். (கவி) என்னவோதியவசிட்டனைபிராகவனோக்கி, யன்னதானவர்க்கரசனாய்வீடுற்றவறிஞன், றன்னதுள்ளமெய்ப்பரத்திலேதன்மயமான, பின்னர்மால்சங்கினோசையாற்பிறந்ததெப்பரிசோ.... *

(இ-ள்.) என்னவோதியவசிட்டனை - (இப்படி) யென்றுசொல்லியவசிஷ்டமுனியை — இராகவனோக்கி - இராமன்பார்த்து — அன்னதானவர்க்கு - அப்படிப்பட்டவசுரர்களுக்கு — அரசனாய் - இராசாவாய் — வீடுற்றவறிஞன் - மோக்ஷமடைந்தஞானவான் — தன்னதுள்ளம் - அவனதுமனம் — மெய்ப்பரத்தில் - உண்மையானபிரமத்தில் — தன்மயமானபின்னர் - தன்மயமானபின்பு — மால்சங்கினோசையால் - விஷ்ணுவினுடையசங்கத்தொனியினால் — பிறந்ததெப்பரிசு - உண்டானதெத்தப்பிரகாரம். எ-று .... (௬௯)

(அ-கை.) மனதுருவநாசமாயருவத்தோடுமிலாபாலாபங்களின்றிச் சீவன்முத்தரிடத்திற்சுத்தவாசனையாகத்தங்கியிருக்குமெனல். (கவி) என்வினாவுமிராமனுக்கருந்தவனுரைப்பா; னனல்பயின்றவித்தாமெனவமலவாதனைதான், கனமில்சீவன்முத்தருக்கெலாமிதயத்தின்கண்ணே, சனனவங்குரமீண்டிலதாகியேசாரும்.............. *

(இ-ள்.) எனவினாவலும் - என்றுகேட்டமாத்திரத்தில் — இராமனுக்கு - இராகவருக்கு — அருந்தவனுரைப்பான் - அரியதவமுடையவசிஷ்டர்சொல்லுவார் — அனல்பயின்றவித்தாமென - அக்கினியில்வறுக்கப்பட்டவிதையாமென்றுசொல்லும்படி — அமலவாதனைதான் - சுத்தவாதனையானது — கனமில் - (சம்சார)பாரமில்லாத — சீவன்முத்தருக்கெல்லாம் - சீவன்முத்தர்களனைவர்க்கும் — இதயத்தின்கண் - இருதயத்தினிடத்தில் — சனனவங்குரம் - சநநமென்னுமுளையானது — மீண்டிலதாகியேசாரும் - திரும்பவில்லாததாகவேயிருக்கும். எ-று ....(௭௰)

(அ-கை.) சுத்தவாசனையிருக்கின்றகிரமத்தைப்போதித்தல். (கவி) வேறு. சுத்தமாய்ப்பரமமாகித் தோற்றஞ்சாலுதாரமாகிச், சுத்தமாஞ்சாத்திகத்தைத் துன்றியேவிடாமலொன்றிச், சுத்தவாத்துமத்தியான மயமதாய்த் துவக்கொன்றில்லாச், சுத்தவாதனைகணித்தஞ்சுழுத்திவாதனைபோனிற்கும் .... *

(இ-ள்.) சுத்தமாய் - பரிசுத்தமாகியும் — பரமமாகி - பிரமமாகியும் — தோற்றம் - உண்டாதல் — சாலுதாரமாகி - மிகுந்தவுதாரமாகியும் — சுத்தமாஞ்சாத்திகத்தை - சுத்தமானசாத்துவிதகுணத்தை — துன்றியேவிடாமலொன்றி - பொருந்திவிட்டுவிடாமற்கலந்ததாகியும் — சுத்தம் - பரிசுத்தமான — ஆத்துமத்தியானமயமதாய் - ஆத்துமத்தியானமயமாகியும் — துவக்

கொன்றில்லா - ஒராரம்பமுமில்லாததாகியுமிருக்கின்ற—சுத்தவாதனை - சுத்தவாதனையானது—நித்தம் - எப்போதும் — சுழுத்திவாதனைபோனிற்கும் - சுழுத்திவாதனையைப்போலச் (சீவன்முத்தர்களிடத்தி) லிருக்கும். எ-று .... (எக)

(அ-கை.) அடங்கியிருந்தசுத்தவாசனைவெளிப்படுமெனல். (கவி) ஆயிரவருடஞ்சென்றுமங்கமேயிருக்கிலுள்ளே, மேயதாமவ்வவத்தை மெல்லெனவொருபானின்று, தேயலதாகித்தோன்றுஞ் செறியுமவ்வவத்தையாலே, தூயநற்சீவன்முத்தருணர்ச்சியைத்தொடர்வனொன்றான் .... *

(இ-ள்.) ஆயிரவருடஞ்சென்றும்,- ஆயிரவருடமானாலும்— அங்கமேயிருக்கில் - சரீரமானதிருந்தாலும்— உள்ளேமேயதாம் - உள்ளேமேவியிருக்கின்றதாகிய — அவ்வவத்தை- அச்சுத்தவாதனையானது—மெல்லென - மிருதுவாக—ஒருபானின்று - ஒருபக்கத்திலிருந்து— தேயலதாகி - சீரணத்தையடையாததாய்—தோன்றும்- உண்டாகும்—செறியுமவ்வவத்தையால்-மிகுந்தவவ்வசுத்தவாதனையினால்—தூயநற்சீவன்முத்தர் - பரிசுத்தமானநன்மையையுடைய சீவன்முத்தர்கள்(மனது) உணர்ச்சியைத்தொடர்வனொன்றான் - அறிதலைத்தொடருமென்றுவசிஷ்டமுனிசொன்னார். எ-று. (இ-சு-க-ம்) சீவன்முத்தனது பிராரத்தமனுபவிக்கு நிமித்தம்பரத்திற்கலந்தமனது பரமாகவேவெளிப்படுமென்பதாம் .... (எஉ)

பிரகலாதன்கதைமுற்றிற்று - ஆகதை - உஉறு - கவிதை. (கூாஎஎ)

காதிகதை.

(அ-கை.) முன்கதையினுபாசனாமூர்த்தி யனுக்கிரகத்தினுண்டான விசாரத்தாற்சுவானுபூதிப்ரத்யக்ஷமாய்த்தன்னைத்தவிரசகமில்லையென்றறிந்ததையறிவித்து,இவ்வாத்மானுபவமுண்டாவதற்கிடரான மித்தையாமாயையைத் தரிசித்து அதைநீக்கவேண்டுமென்பதையறிவிக்குநிமித்தங்காதிகதையை, நிரூபிக்கிறார் .... *

(அ-கை.) மாயாவிசித்திரமறிவிக்கத்தொடங்கல். (கவி) (வேறு.)பிறப்பிறப்பாம்பெயருடையவித்தமாயைப் பெருமையினைமுடிவுபெறப்பேசவொண்ணு, வறப்பெரியதன்மனத்தைவென்றான்மாறு மல்லதொருவகையாலுமகற்றலாகாச்,சிறப்புடையவன்மாயைவிரிவினுள்ளசித்திரந்தோன்றிடவுனக்குச்செப்புங்காதை,மறப்பறுசிந்தையனாகிக்கேட்டியென்றுமனுகுலநாயகனுக்குவசிட்டன்சொல்வான் .... *

(இ-ள்.) பிறப்பிறப்பாம் - சநநமரணமென்னும்—பெயரையுடைய - நாமத்தையுடைய—இத்தமாயைப்பெருமையினை - இம்மாயையினதுபெருமையை — முடிவுபெறப்பேசவொண்ணு- முடிவுண்டாகச்சொல்லக்கூடாததாம்—அறப்பெரியதன்மனத்தை - மிகவும்பெரிதாகியதனதுமனதை—வென்றான்மாறும் - செயித்தானுசமாம்— அல்லது - அப்படியல்லாமல்—ஒருவகையாலும் - மற்றொருவகையினாலும்— அகற்றலாகா - தள்ளக்கூடாது — சிறப்புடையவன்மாயை - சிறப்புள்ளவலியசகத்மாயையின்—விரிவினுள்ள - மிகுதியிலிருக்கின்ற—சித்திரந்தோன்றிட- அதிசயந்தோற்றும்படி—உனக்குச்செப்புங்காதை - நினக்குச்சொல்லுங்காதையை—மறப்பறுசிந்தையனாகி - மறதியற்றசித்தத்தையுடையவனாய்—கேட்டியென்று-கேட்பாயென்று—மனுகுலநாயகனுக்கு - மனுகுலத்திறைவனானஸ்ரீராமனுக்கு— வசிட்டன்சொல்வான்-வசிஷ்டமுனிசொல்லத்தொடங்கினார். எ-று .... (க)

(அ-கை.) காதிதவத்துக்காகமகாவிஷ்ணுப்ரசன்னமாதல். (கவி) மண்ணுலகிற்கோசலமாமண்டலத்தின்மறையவர்கோன் காதியெனவழங்கும்பேரோ, னுண்ணினைந்தோர்கருமத்தைக்கிளையைநீங்கியொருவனம்புக்கொருவாவியுதகத்தூடே, நண்ணியணிகழுத்தளவாயமிழநின்றுநற்றவஞ்செய்தெண்டிங்கணடந்தவெல்லை, கண்ணருளான்மாயவன்வந்தவன்முன்றோன்றிக்கருத்தென்கொலளித்துமெனக்கழறலோடும் .... *

(இ-ள்) மண்ணுலகில் - பூலோகத்தில் — கோசலமாமண்டலத்தின் - கோசலமென்னுந்தேசத்தில் —மறையவர்கோன் - பிராமணசிரேஷ்டன் — காதியெனவழங்கும்பேரோன் - காதி

வென்றுவழங்குகின்றநாமத்தையுடையவன் — ஓர்கருமத்தை- ஒருகாரியத்தை—உன்னிந்து - மனதிலெண்ணித்து—இல்லையைநீங்கி - உறவினரைவிட்டு—ஒருவனம்புக்கு - ஒருவனத்திற்புகுந்து—ஒளவாவியுகைக்கரும் - ஒருதடாகசலமத்தியில்—நண்ணி-பொருந்தி—அவ்விகழுத்தளவாய் - அந்தசுண்டமட்டும்—அமிழ்நின்று - முழுகிநின்று—நற்றவஞ்செய்து - நல்லதவத்தைச்செய்து—எண்டிங்கணடந்தவெல்லை - எட்டுமாதஞ்சென்றகாலத்தில் — கண்ணருளால் - பெருமைபொருந்தியகிருபையினால்—மாயவன்வந்து - விஷ்ணுவந்து—அவன்முன்தோன்றி - அக்காதியின்முன்பிரத்தியக்ஷமாய்—கருத்தென்கொல் - (உனது) கருத்தென்ன — அளித்துமெனத்தருகின்றேமென்று—கழறலோடும்- சொல்லவும். எ-று .... (உ)

(அ-கை.) மாயையைத்தரிசிக்கவேண்டல். (கவி) சலநின்றுங்கரையேறிக்காதியென்னுந்தவமறையோன்கைதொழுதுசகமண்டத்து, லலகிலுயிர்மனக்கமலத்தகலாவண்டேயச்சுதனேயநந்தாவென் றன்பாற்போற்றிச், சலனமறுதற்பரத்திற்சம்பந்தித்துச்சநநமரணத்துருவாற்சகங்களாகி, யலமருநீடாச்சரியஞ்செய்வதாய்நீயளித்த மாயையைக்காணவருடியென்றான் .... *

(இ-ள்) சலநின்றுங்கரையேறி - (தடாக) சலத்தினின்றுங்கரையில்வந்து— காதியென்னும் - காதியென்கிற—தவமறையோன் - தவத்தையுடையபிராமணனானவன்—கைதொழுது- நமஸ்கரித்து—சகமண்டத்தில் - உலகமென்னுமண்டத்தில் — அலகிலுயிர் - அளவற்றவாத்மாக்களுடைய—மனக்கமலத்து - இருதயதாமரையில்—அகலாவண்டே - நீங்காதிருக்கின்றபிரமரமே—அச்சுதனே - அச்சுதா—அநந்தாவென்று - அநந்தனேயென்று —அன்பாற்போற்றி- அன்பினாற்றுதித்து— சலனமறுதற்பதத்திற்சம்பந்தித்து- நிச்சலமானபிரமத்திற்கலந்திருந்து —சநநமரணத்துருவால் - பிறப்பிறப்பின்வடிவத்தினால் —சகங்களாகி-உலகங்களாய்—அலமருநீடாச்சரியம் - சஞ்சலப்படாநின்றமிகுந்தவதிசயத்தை— செய்வதாய் - செய்வதாயிருக்கின்ற—நீயளித்தமாயையை - நீபடைத்தமாயாஸ்வரூபத்தை—காணவருடியென்றான்-தரிசிக்கும்படியருள்வாயென்றுகேட்டார். எ-று .... (௩)

(அ-கை.) மாயையைத்தரிசித்ததை நீக்குவாயென் றருளியேகுதல். (கவி) அந்தணன் வேண்டலுமாயை காண்டிகண்டாலகற்றுதியேலகற்றுகெனவருளிமாயன், கந்தருவர்நகரம்போன்மறைதலோடுங்கருணைமூர்த்தியைக்கண்டகளிப்பினாலே, சந்தசமுட்குளிர்காதியந்தக்கானிற்றவத்தொடுசின்னாளிருந்துதானேயோர்நாட், சிந்தனையிலரியுரைத்தவுரையைநாடித்தேமலரோடையின்மூழ்கச்சென்றனன்றே .... *

(இ - ள்.) அந்தணன்வேண்டலும் - பிராமணன்பிரார்த்தித்தவளவில்— மாயைகாண்டி- (அப்படியே) மாயையைக்காணக்கடவாய்—கண்டால் - பார்த்தையேயானால் — அகற்றுதியேலகற்றுகெனவருளி - தள்ளுவாயானாற்றள்ளக்கடவாயென்றனுக்கிரகித்து—மாயன் - திருமாலானவர் — கந்தருவநகரம்போல் - கந்தருவநகரத்தைப்போல—மறைதலோடும் - மறையவும்—கருணைமூர்த்தியை - கருணாஸ்வரூபியை—கண்டகளிப்பினால்- தரிசித்தசந்தோஷத்தினால்—சந்ததமுட்குளிர்காதி - எப்போதுமகமகிழ்ச்சியடைந்தகாதியானவர்—அந்தக்கானில்- அவ்வனத்தில்—தவத்தொடுசின்னாளிருந்து - தவசுடன்சிறிதுநாளிருந்து — தானேயோர்நாள் - தானேயொருதினம்—சிந்தனையில் - மனதில்— அரியுரைத்தவுரையைநாடி - விஷ்ணுவானவரருளிச்செய்தவாக்கியத்தைச்சிந்தித்து — தேமலரோடையின் - தேனுள்ளதாமரைப்பூக்கணிறைந்ததடாகத்தில்—மூழ்கச்சென்றான் - மூழ்கும்படிபோயினான். எ-று .... (௪)

(அ-கை.) மாயையைத்தரிசித்தல். (கவி) வனம்படிந்தங்கதனுட்செய்விதிக்கேவேதமந்திரமுந்தியானமுந்தான்மறந்துகாதி, யினம்பயிறன்மனைக்கேதான்றன்னைநோயாலிறந்தவனாகக்கண்டானினைதோறெல்லாங், கனம்படமொய்த்திருபுறத்துமலறத்தேவிகாற்கடைக்கேவிழுந்தலறக்காதன்மாதா, தனம்பருகத்தருவனபோலணைத்துக்கொண்டு தழன்மிதித்தாள்போற்பதைத்துத்தளரக்கண்டான் .... *

(இ-ள்.) வனம்படிந்து - நீர்த்தத்தின்மூழ்கி — அங்கதனுள்- அச்சலத்தில்—செய்விதிக்கு-செய்யப்பட்டவிதிப்படிக்கு—வேதமந்திரமும்- வேதமந்திரங்களையும்—தியானமும்-தியானங்களையும்—காதி - காதியானவன்—மறந்து - மறந்துவிட்டு—இனம்பயில் - பந்துக்களிருக்கின்ற—தன்மனைக்கு - தனதுவீட்டில்—தன்னைநோயால் - தன்னைவியாதியினால் — இறந்தவனாகக்கண்டான் - மரித்தவனாகப்பார்த்தான் — இனத்தோரெல்லாம் - பந்துக்களெல்லாரும்—இருபுறத்தும்- இரண்டுபக்கத்திலும்—கனம்படமொய்த்தலற-மிகவுமொய்த்துக்கொண்டுகதறவும்—தேவி - பாரியாள்—காற்கடைக்கேவிழுந்தலற - காற்கடையில்விழுந்தலறவும்—காதன்மாதா - புத்திரவாத்ஸல்யமுடையமாதாவானவள்—தனம்பருகத்தருவனபோல் - தன்னிடமா

னம்பண்ணக்கொடுப்பனபோல — அணைத்துக்கொண்டு - கட்டிக்கொண்டு — தழன்மிதித்தாள் போல் - அக்கினியைமிதித்தவள்போல — பதைத்துத்தளரக்கண்டான் - பதைபதைத்துத்தளர்ச்சியடையப்பார்த்தான். எ-று .... (௫)

(அ-கை.) இ-து. (கவி.) ஆமளவிலடுத்தனசெய்தழுஞ்சுற்றத்தாரனல்கொளுத்தசாம்பராயங்கமெல்லா, மீமமுறக்கண்டானச்சலத்தினூடே யிருக்கின்றகாதிதனிதயத்துள்ளே, தோமுறுமாகுலமிருந்தபுந்தியாலே தூகளறத்தன்பாற்றன்றாற்றேன்றக்கண்டே, யேமுறுசெய்கைகண்மேலுமுள்ளதெல்லா மிராகவகேளெனமுனிவனிசைப்பதானான்......... *

(இ-ள்.) ஆமளவில் - (இப்படி) யாகின்றசமயத்தில்—அடுத்தனசெய்து - (அதற்) கடுத்தகாரியங்களைச்செய்து— அழுஞ்சுற்றத்தார் - அழாநின்றவுறவினர்கள்—அனல்கொளுத்த - அக்கினியைமூட்ட—அங்கமெல்லாம் - சரீரமியாவும்—சாம்பராய் - சாம்பலாகி — ஈமமுறக்கண்டான் - மயானத்திற்பொருந்தப்பார்த்தான்—அச்சலத்தினூடு - அந்தத்தீர்த்தமத்தியில்—இருக்கின்றகாதி - இராநின்றகாதியானவன்—தனிதயத்துள் - தன்மனதினுள்—தோமுறுமாகுலமிருந்த - குற்றம்பொருந்தியவருத்தமிருந்த—புந்தியால் - புத்தியினால் — தூகளறுதன்பால்-குற்றமற்றதன்னிடத்தில்—தன்றாற்றேன்றக்கண்ட - தன்றானுண்டாகப்பார்த்த—ஏமுறுசெய்கைகள் - மயக்கம்பொருந்தியகிரியைகள்—மேலுமுள்ளதெல்லாம் - மேனடக்கின்றயாவையும் —இராகவகேளென - ஸ்ரீராமாகேட்பாயென்று — முனிவனிசைப்பதானான் - வசிஷ்டமுனி சொல்லத்தொடங்கினார். எ-று .... (௬)

(அ-கை.) இ-து. (கவி) இப்பாரிலூணநாட்டோரூரொல்லை யிருக்கின்றநீசனாய்க்கெரிப்போர்தங்கண், மைப்பாவையொருத்திவயிற்றெருருசூலாகிவருந்திவளர்ந்துறுகாலம்வந்தவெல்லை, கைப்பாலனைப்பிறந்துவளர்ந்துவெந்தகரிக்கட்டைபோனிறத்துக்காளையாகி, யொப்பாகிநாய்க்கெரிப்போர்குலத்தில்வந்த வொருகடைச்சிதனை மணஞ்செய்தொருமையானான் .... *

(இ-ள்.) இப்பாரில் - இந்தப்பூமியில்—ஊணநாட்டு - ஊணதேசத்தின்—ஓரூரொல்லை-ஒருநகரத்தின்முடிவில்—இருக்கின்றநீசன் - இராநின்றநீசனென்னும்—நாய்க்கெரிப்போர்தங்கள்- நாய்க்கெரிப்போர்கள்குலத்தில்—மைப்பாவையொருத்தி - கரியப்ரதமைபோன்றவொருபெண்ணினது—வயிற்றெருருசூலாகி- வயிற்றிலொருகருப்பமாய்—வருந்தி-வருத்தமுற்று—வளர்ந்துறுகாலம் - வளர்ந்துசனிக்கும்பருவம்—வந்தவெல்லை - வந்தபொழுது — கைப்பாலனைப்பிறந்து - கைக்குழந்தையாகப்பிறந்து— வளர்ந்து - வளர்வுற்று — வெந்தகரிக்கட்டைபோல்- வெந்துபோனகரிக்கட்டையைப்போல—நிறத்துக்காளையாகி-நிறத்தையுடையவாண்மகனாய்—ஒப்பாகி - (இழிவிற்றனக்குத்தானே) சமானமாகி — நாய்க்கெரிப்போர்குலத்தில்-நாய்க்கெரிப்போருடையவமிசத்தில் — வந்தவொருகடைச்சிதன்னை - பிறந்தவொருநீசப்பெண்ணை—மணஞ்செய்தொருமையானான் - கலியாணஞ்செய்தொற்றுமையானான். எ-று......(௭)

(அ-கை.) இ-து. (கவி) வரைகளினும்வனங்களினுமுதலாயெங்கு மனமுமுயிரும்போலவாழுநாளிற், றரைமிசைதன்குலம்விளங்கமைந்தர்தம்மைச் சனிப்பித்தான் சிலநாளிற்சரைவந்தெய்தி, நரைபெருகவருதலுமேதழையாற்செய்பு நன்மனைதூரத்தியற்றிநண்ணலுற்றான், புரையறுமாதவர்போலங்குறைபுநாளிற்புத்திரர்க்குஞ் சரைவந்துபுகுந்ததன்றே .... *

(இ-ள்.) வரைகளினும் - மலைகளிலும்—வனங்களினும்- கானகங்களிலும்—முதலாயெங்கும் - முதலியவெவ்விடத்திலும் — மனமுமுயிரும்போல - மனதும்பிராணனும்போல—வாழுநாளில் - ஒத்துவாழ்கின்றகாலத்தில்—தரைமிசை - பூமியின்மேல் — தன்குலம்விளங்க-தனதுவம்சம்விளங்கும்படி—மைந்தர்தம்மைச்சனிப்பித்தான் -பிள்ளைகளைப்பெற்றான்—சிலநாளிற்சரைவந்தெய்தி - சிறிதுநாளின்மூப்புவந்தடைந்து—நரைபெருகவருதலும்- நரைமிகவுண்டாகவும்—தழையாற்செய்பும் - தழைகளாற்செய்கின்ற— நன்மனைதூரத்தியற்றி - நல்லவீடுதூரத்திற்கட்டி—நண்ணலுற்றான் - வாசஞ்செய்தான்—புரையறுமாதவர்போல்- குற்றமற்றமகாதபசிகளைப்போல—அங்குறைபுநாளில் - அவ்விடத்தில்வசிக்கின்றகாலத்தில்—புத்திரர்க்கும்- (தனது)பிள்ளைகளுக்கும்—சரைவந்துபுகுந்தது - மூப்புவந்துபொருந்திற்று. எ - று.

(அ-கை.) இ - து. (கவி) மனையவட்கும்புத்திரர்க்குந் தனக்குஞ்சேரவார்த்திகம் வந்ததுநோக்கிவருந்துநாளிற், றனையொழியவனைவரையுங்காலன்மாய்ப்பச் சந்ததம்வாய்விட்டலறித்தனியாற்றாது, நினைவழிந்தோராசையுமற்றதேசதேசநெடிதுழல்வான்கிரமெனுநீறிநாட்டிற், புனைமுடிமன்னவனகரிற்புகுந்துவானிற்பொற்றெருப்போலொருதெருவிற்போகும்போதில் .... *

(இ-ள்.) மனையவட்கும் - பாரியாளுக்கும்—புத்திரர்க்கும் - பிள்ளைகளுக்கும்— தனக்கு நும் - தனக்கும்—சேரவார்த்திகம்வந்தது நோக்கி-ஒருமித்துழப்புவந்தடைந்தபார்த்து— வருந்துநாளில் - வருந்தப்படுகின்றகாலத்தில்—தனையெய்திய - தன்னைநீங்கலாக — அனைவரையுங் காலன்மாய்ப்ப - எல்லாரையுங்காலன்கொல்ல—சந்ததம்வாய்விட்டலறி - எப்பொழுதும்வாய்விட்டழுது—தனியாற்றாது- தனிமையைச்சகிக்க மாட்டாமல்—நினைவழிந்து-நினைவுங்கெட்டு—ஓராசையுமற்று - ஓராசையுமில்லாதவனாய்—அம்நகம்தேசம் - அளவற்றதேசங்களில்—நெடிதுழல்வான் - மிகுகாலஞ்சுழல்கின்றவன்—கீரமெனுநீதிநாட்டில்-கீரமென்கின்றநீதியையுடைய தேசத்தில்—புனைமுடிமன்னவன்-தரிக்கப்பட்டகிரீடத்தையுடையவரசனது—நகரம்புகுந்து- பட்டணத்திற்புகுந்து — வானிற்பொற்றெருப்போல் - விண்ணுலகத்திற்சொர்ணமயமானவீதியைப்போலிருக்கின்ற—ஒருதெருவிற்போகும்போதில்-ஒருவீதியிற்செல்லும்போதில். எ-று.

(அ-கை.) இ - து. (கவி) இறையவன்மாண்டனனுலகங்காக்கவேறோரிறைவனைக்
கொண்டேகுதியென் றேவிச்செம்பொ, னிறைமணியாலலங்கரித்து விடுத்ததந்தி
திருபனியாரெனத்தேடிநேரோபோதக், கறைவடிவோடிவன்கண்டா னிவனையந்தக்
கறையடிகாணலுங்கரத்தாற் கழுத்திமேலேற்றி, யுறைதருபானுவினுடன் செல்லுதய
நாகமொத்ததுபல்லியஞ்சூழ்ந்ததுவரியொத்த .... *

(இ-ள்.) இறையவன்மாண்டனன் - (இந்நகரத்) தரசன்மரணமடைந்தனன்— உலகங் காக்க - பூமியையிரக்ஷிக்க—வேறோரிறைவனை - வேறோரரசனை—கொண்டேகுதியென்றேவி- எடுத்துக்கொண்டுவாவென்றுசொல்லி—செம்பொன் - சிவந்தசொர்ணங்களினாலும் — நிறைமணியால் - நிறைந்தவரதனங்களினாலும்—அலங்கரித்து - அலங்காரஞ்செய்து—விடுத்ததந்தி- அனுப்பிய (பட்டத்து) யானையானது — திருபனியாரென - அரசனாரென்று — தேடிநேரோபோத - தேடிக்கொண்டுநேரேவர— கறைவடிவோடிவன்கண்டான் - கறுத்தவுருவத்தோடிருக்கின்றவிந்தநீசன்யானையைக்கண்டான் —இவனை - இந்தநீசனை — அந்தக்கறையடிகாணலும்- அந்தயானைபார்க்கவும் — கரத்தாற்கழுத்திமேலேற்றி - துதிக்கையினால் மத்தகத்திமேலேற்றிக்கொண்டு—உறைதரு - வாசஞ்செய்தல் — பானுவினுடன்செல் - சூரியனோடுஞ்செல்லுகின்ற— உதயநாகமொத்தது - உதயமலைக்கொப்பாயிற்று—பல்லியஞ்சூழ்ந்தது - பலவாத்தியங்கள் சூழ்ந்தது—உவரியொத்த - சமுத்திரத்துக்கொப்பாயிற்று. எ-று .... (௰)

(அ-கை.) இ - து. (கவி) எண்டிசையுஞ்சயசயவென் றிறைஞ்சவந்தானிவனிறை
யென்றலங்கரித்தாரெழில்கொண்மாதர், பண்டையமைச்சருஞ்சேனைத்தலைவர்தா
மும்பணிதலைக்கொண்டார்தரணிபாலனாகி, மண்டலமெங்கணுஞ்செங்கோன்முறை
யினேச்சிமரபினாற்கவலனெனும்வண்பேர்பெற்றுத், தொண்டையிதழார்விரும்பக்
கீரநாட்டிற்சுடர்மணிச்சிங்காதனமேற்றோற்றமிக்கான் .... *

(இ-ள்.) எண்டிசையும்- எட்டுத்திக்குகளும்—சயசயவென்று-சயசயவென்று— இறைஞ்சவந்தான் - வணங்கும்படிவந்தவனை—இவனிறையென்று - இவனேயரசனென்று — எழில்கொண்மாதர் - அழகையுடையஸ்திரீகள்—அலங்கரித்தார் - அலங்காரஞ்செய்தார்கள்— பண்டையமைச்சரும் - பழையமந்திரிகளும்—சேனைத்தலைவர்தாமும் - சேனாதிபதிகளும்— பணிதலைக்கொண்டார் - பணியைத்தலைமேற்கொண்டார்கள் — தரணிபாலனாகி - பூமிபாலனாய்— மண்டலமெங்கணும்-பூமியெங்கும்—செங்கோன்முறையினேச்சி-நீதியைமுறைமையிற்செலுத்தி—மரபினால்-முறைமையினால்—கவலனெனும்வண்பேர்பெற்று-கவலனென்கின்றவளப்பமுள்ளநாமந்தரித்து— தொண்டையிதழார்விரும்ப-கோவைப்பழத்தையொத்தவதரத்தையுடையமாதர்களிச்சிக்கும்படி—கீரநாட்டில்-கீரதேசத்தில்—சுடர்மணிச்சிங்காதனமேல்-விளங்குகின்றவிரத்தினசிம்மாசனத்தின்மேல்—தோற்றமிக்கான்-விளக்கத்தின்மிகுந்தான். எ-று..... (௰௧)

(அ-கை.) இ-து. (கவி) நாலிரண்டுவருடமுயர்கவலனென்னுநாய்க்கெரிக்குங்கடையனர
பதியாய்வாழ்ந்து, மேலிதற்பின்னொருநாளிற்றனியனாகிமெய்யலங்காரங்களெல்லாம்விட்
டுத்தானே, காலினடந்துயர்மனையின் புறமுற்றத்திற் கடைவேடத்துடனுலவு காலையாங்
கே, நீலிமையாநிறத்தோர்நாய்க்கெரிக்குநீசர் நேர்வந்தார் வீணையிசைநிரப்புங்கையார்.

(இ-ள்.) நாலிரண்டுவருடம்-எட்டுவருடம்—உயர்கவலனென்னும்-மேலானகவலனென்னு நாமத்தையுடைய—நாய்க்கெரிக்குங்கடையன் - நாய்க்கெரிக்குநீசனானவன்—நரபதியாய்வாழ்ந்து - நரேந்திரனாகவாழ்ந்து—மேலதற்பின் - மேலதற்குப்பின்பு— ஒருநாளிற்றனியனாகி- ஒருதினத்திற்றனித்தவனாய் — மெய்யலங்காரங்களெல்லாம்விட்டு-சரீரத்திலுள்ளவாபரணங்களனைத்தையுநீக்கி—தானேகாலினடந்து-தானேகானடையாகநடந்து—உயர்மனையின்-மேலானவீட்டினது—புறமுற்றத்தில்-தெருப்புறத்தில்—கடைவேடத்துடன்-நீசவேஷத்தோடும்—உல

வுகாலை-உலாவுஞ்சமயத்தில்—ஆங்கு - அவ்விடத்தில் — நீலிமையாநிறத்தோர்-கரியநிறத்தையுடையவர்கள்--வீணைபிசைநிரப்புங்கையார்-வீணாகானத்தைநிறைக்கின்றகைகளையுடையவர்கள்—நாய்க்கெரிக்குநீசர்-நாய்க்கெரிக்குஞ்சண்டாளர்கள்—நேர்வந்தார்-எதிரேவந்தார்கள். எ-று.

(அ-கை) இ-து. (கவி) யாழுடையகாளைக்குண்மேலாமற்றோரிருண்டநிறச்சிவந்தவிழிவிருத்தனெய்திக், காழுடையநற்கிரமகியன்றன்னைக் காண்டலுமேகாதலுடன்கடைஞனென்னு, ஏழுறுதொல்பெயர்விளவிநெடுங்காலத்தினுறவாநீயெங்ககன்றாயுறைவதெங்ஙன், சூழுறுநல்விதியாலேகண்டேனென்றுத்தொடர்பெல்லாமுள்ளபடிதோன்றச்சொன்னான்

(இ-ள்.) யாழுடையகாளைக்குள்-வீணாகானஞ்செய்கின்றகடைசர்க்குளின்றும்— ஓரிருண்டநிறம் - ஒப்பற்றகரியநிறத்தையும்—சிவந்தவிழி - சிவந்தநேத்திரங்களையுமுடைய— மேலாய்விருத்தனெய்தி-மிகவுமூப்புள்ளவன்வந்து—காழுடைய-விளக்கமுடைய—நற்கிரமகியன்றன்னை - நல்லகிரநாட்டுக்கதிபதியானவனை—காண்டலும்-பார்த்தமாத்திரத்தில்—காதலுடன்-ஆசையோடும் — கடைஞனென்னும் - கடைஞனென்கின்ற — ஊழுறுந்தொல்பெயர்விளவி-விதியினாலுற்றபழைய நாமத்தைச்சொல்லி—நெடுங்காலத்தினுறவா நீ - பழையவுறவாயிருக்கின்றநீ—எங்ககன்றாய் - எங்கேபோனாய்—உறைவதெங்ஙன்-வாசஞ்செய்வதெவ்விடம்— சூழுறுநல்விதியால்-சூழ்ந்திருக்கின்றநல்லவூழினால்—கண்டேனென்று-(இப்பொழுது)பார்த்தேனென்று—தொடர்பெல்லாம்-(இவன்வம்மிசத்தின்)கிரமங்களனைத்தையும்—உள்ளபடி-உள்ளப்ரகாரம்—தோன்றச்சொன்னான் - தெளியச்சொன்னான். எ-று .... (௯௫)

(அ-கை) இ-து. (கவி) அதுபுகன்றவவன்றன்னைக் கவலனை வரசனிகழ்ந்ததிர்ந்துரப்பியவணின்றுங்கே, கதுமெனவுள்ளேகுதலுமிவற்றையெல்லாங்கனங்குழையார் சாளரத்திற்கண்ணிற்கண்டார், புதுமையினானின்றார்நின் றுழியேகண்டுபூபதியாமிவன்கடைஞப்புலையனுமே, லெதுசெயப்பாற் றினியென்றே துணுக்குற்றேங்கியிடருற்றாரிவன்கலங்காதிதயத்தெண்ணி .... *

(இ-ள்.) அதுபுகன்ற - தனதுநீசத்தன்மையைச்சொல்லிய— அவன்றனை - அந்தநீசனை— கவலனைவரசன் - கவலனென்னு மன்னனைவன் — இகழ்ந்ததிர்ந்துரப்பி - நிந்தித்துப்பெருஞ்சத்தத்துடனதட்டி—அவணின்று- அவ்விடத்தினின்றும்— கதுமெனவுள்ளேகுதலும்-சீக்கிரமாகவந்தப்புரத்துக்குச்செல்லுதலும்—இவற்றையெல்லாம் - இவைகளனைத்தையும்—கனங்குழையார் - கனம்பொருந்தியகுண்டலத்தையுடையஸ்திரீகள்—சாளரத்தில் - பலகணிவாசலினின்றும் — கண்ணிற்கண்டார் - ப்ரத்யக்ஷமாகப்பார்த்தார்கள் — புதுமையினால்-அதிசயத்தினால்—நின்றார்- (அவ்விடத்) திருந்த (மந்திரிமுதலிய) வர்கள்—நின்றுழியேகண்டு-நின்றவிடத்திலேகண்டு—பூபதியாமிவன் - பூமிக்கரசனானவிவன்—கடைஞப்புலைஞனும்-கடையனாகியசண்டாளனுக்கும்—மேலெது செயப்பாற்று-மேலென்ன செய்யத்தக்கது — இனிஎன்றுதுணுக்குற்று-என்றுதிடுக்குற்று—ஏங்கி-ஏக்கமுற்று—இடருற்றார்- துன்பத்தையடைந்தார்கள்—இவன்கலங்காது-இவ்வரசன்கலங்காமல்—இதயத்தெண்ணி-மனதிற்சிந்தித்து. எ-று ... (௯௬)

(அ-கை.) இ - து. (கவி) அறியான்போலவற்றையெல்லாமறைத்துமுன்போலாதனத்திலிருக்கவுமங்கவனைமுன்னஞ், செறிவானவஞ்சியர்மந்திரியர்யாருந்தீண்டாதசவத்தைப்போற்றெரிசியாராய்ப், பிறியாதுநின்றனரச்சனத்துட்சேர்ந்தும்பேதமாயிவன்றனித்தபெற்றிகூறில், பொறியாருங்கல்விதனமியாதுமின்றிப்புறநாட்டிலுறும்பதிகன்போலுமன்றே . ... *

(இ-ள்.) அவற்றையெல்லாம் - அவைகளனைத்தையும்—அறியான்போல் - அறியாதவனைப்போல —மறைத்து - மறைத்துக்கொண்டு—முன்போல் - முன்னையைப்போல—ஆதனத்திலிருக்கவும் - சிம்மாதனத்திலிருக்கவும்—அங்கவனை - அவ்விடத்திலுள்ளவவ்வரசனை—முன்னஞ்செறிவான - முன்னநெருக்கமாகிய—வஞ்சியர்மந்திரியர்யாரும் - மாதருமமைச்சருமற்றுள்ளவர்களும்— தீண்டாதசவத்தைப்போல் - பரிசிக்கக்கூடாதபிரேதத்தைப்போல— தரிசியாராய்-பார்க்காதவர்களாய்—பிறியாதுநின்றனர்-அவ்விடம்விட்டுநீங்காமலிருந்தார்கள்—அச்சனத்துட்சேர்ந்தும்-அந்தச்சனங்களோடுகூடியிருந்தும்—பேதமாய்-வேற்றுமையாகி— இவன்றனித்த-இவன்றனியேயிருந்த—பெற்றிகூறில்-குணத்தைச்சொல்லில்—பொறியாருங்கல்வி-அறிவுநிறைந்தவித்தையும்—தனம்-திரவியமும்—யாதுமின்றி-எதுவுமில்லாமல்—புறநாட்டில்-மறுதேயத்தில்—உறும்பதிகன்போலும்-பொருந்தியவழிநடப்பவனைப்போலுமாம். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) ஆயிடையாவரும்புலைநாய்க்கெரிப்போனாலேயநேகருமுபாதகமேயடைதலானும், போயினியோர்சாந்திபினுமுய்யமாட்டோம் புனித

மாம்படிதீயிற்புகுதுமென்றுத், தீயில்விழநிச்சயித்தந்நகரோரொல்லாஞ் சிசுக்கண்
முதல்விருத்தர்கடைசேரக்கூடி, வீயினுறைவண்டுகள்போலெரியில்வீழ்ந்தார்வேந்
தனும்புலைக்கடைஞன் மிகவுநொந்தான் .... *

(இ-ள்.) ஆயிடையாவரும்-அந்தருணத்திற்சகலரும்—புலைநாய்க்கெரிப்போனால்- புலையனாகியநாய்க்கெரிப்போனென்பவனால் — அநேகநாள் - வெகுநாள்— பாதகமேயடைதலானும் - பாவத்தையேயடைந்தோம்—போய் - பாவம்போய்—இனியோர்சாந்தியினும் - இனிமேலொருபிராச்சித்தத்தினாலும்—உய்யமாட்டோம் - கதியையடையமாட்டோம்— புனிதமாம்படி - பரிசுத்தமாகும்பொருட்டு—தீயிற்புகுதுமென்று-அக்கினியிற்ப்ரவேசிப்போமென்று—தீயில்விழநிச்சயித்து - அக்கினியிற்ப்ரவேசிக்கநிச்சயஞ்செய்து — அந்நகரோரொல்லாம்-அப்பட்டணத்திலுள்ளசகலரும் — சிசுக்கண்முதல் - குழந்தைகள்முதலாக — விருத்தர்கடை-வார்த்திகர்கள்பரியந்தம் — சேரக்கூடி - ஒருமிக்கக்கூடி — வீயினுறைவண்டுகள்போல்-சண்பகப்பூவின்மொய்க்கின்றஞ்சிறுகளைப்போல — எரியில்வீழ்ந்தார்- அக்கினியிற்ப்ரவேசித்தார்கள் — வேந்தனும்புலைக்கடைஞன்மிகவுநொந்தான் - அரசனாகியசண்டாளன்மிகவுந்துன்பமுற்றான். எ-று .... (௰௬)

(அ-கை.) இ-து. (கவி) நல்வினஞ்சேர்தலிற்சித்தந்தெளிந்துநன்று நாய்க்கெரிக்
கும்புலைநிருபனுடிகிற்பான், புல்லியநற்தொடர்பாலித் தேசத்துள்ளோர் பூரியரா
யனல்புகுந்து பொன்றிப்போனு, நல்லனுடனினியமையுமென்னநாடி யாவிவிடத்
துணிந்தனலில் வீழும்போதிற், பல்லவம்போலெரிகடைஞ னுடலிற்றக்கப் படி
புனலுட்காதியுடல்பதைத்ததன்றே .... *

(இ-ள்.) நல்வினஞ்சேர்தலில் - நன்மையானகூட்டத்தைச்சேர்ந்ததினால் — சித்தந்தெளிந்து- மனந்தெளிந்து— நன்றும் - நன்மைபுண்டான — நாய்க்கெரிக்கும்புலைநிருபன்-நாய்க்கெரிக்கின்றநீசராசன்—நாடுகிற்பான் - சிந்திப்பான்—புல்லியநற்தொடர்பால்-கீழ்மையானநமது தொடர்ச்சியினால்—இத்தேசத்துள்ளோர்- இந்தத்தேயத்திலுள்ளவர்கள்—பூரியராய்-கீழ்மக்களாகிய— அனல்புகுந்து - அக்கினியிற்ப்ரவேசமாய்—பொன்றிப்போனார் - நாசமடைந்தார்கள்—அல்லனுடன்-துன்பத்தோடும் —இனியமையுமென்னநாடி-இனியிருந்தென்னவென்றுசிந்தித்து—ஆவிவிடத்துணிந்து- உயிரைவிடும்படிநிச்சயித்து—அனலில்வீழும்போதில்-அக்கினியிற்ப்ரவேசிக்கும்போது—பல்லவம்போல்-(அனலிற்)றளிரைப்போல—எரி- சிவந்தவக்கினியானது—கடைஞனுடலிற்றக்க- கடைஞன்சரீரத்திலெரிக்க—புனலுட்படி- சலத்தின்முழுகியிருக்கின்ற—காதியுடல்பதைத்தது-காதியின்சரீரமானதுபதைபதைத்தது.எ-று. ௰௭

(அ-கை.) இ - து. (கவி) மாமாயைநின்றகன்றுதெளிந்தகாதிவருமுகூர்த்தமோ
ரிரண்டின்மயக்கநீங்கி, யாமாரென்காண்கின்றோமென்செய்தோமென் றெல்லாமு
ண்ணினைந்துசலத்திடைநின்றேறி, யாமாவிப்படியன்றோவுயிர்களெல்லா மரணியத்
துட்சினப்புலிப்போலவாவியோடித், தோமாருநெடுமயக்கின் மனமோகித்துத்து
வள்கின்றொனக்கருதித்துயரந்தீர்ந்தான் .... *

(இ-ள்.) மாமாயைநின்றகன்று - மகாமாயையினின்றுநீங்கி—தெளிந்தகாதி - தெளிந்தகாதியானவர்—வருமூர்த்தமோரிரண்டில்-வருகின்றநான்குகடிகையில்—மயக்கநீங்கி-பிராந்திவிட்டு—யாமார் - நாமார்—என்காண்கின்றோம் - என்னபார்த்தோம் — என்செய்தோமென்று - என்னசெய்தோமென்று—எல்லாமுண்ணினைந்து - சகலத்தையுமனதினினைத்து—சலத்திடைநின்றேறி - நீரினின்றுங்கரைபேறி—ஆமா- ஆச்சரியமாச்சரியம்—இப்படியன்றோ-இப்படியல்லவா—உயிர்களெல்லாம் - சீவர்களனைத்தும்—அரணியத்துள்-காட்டினுளிருக்கின்ற—சினப்புலிபோல - கோபமுள்ளவியாக்கிரமத்தைப்போல—அவாவியோடி- தாவிச்சென்று—தோமாருநெடுமயக்கில் - குற்றநிறைந்தமிகுந்தபிராந்தியில் --மனமோகித்து - மனமயங்கி—துவள்கின்றொனக்கருதி - சஞ்சலப்படுகின்றொன்றுநினைத்து—துயரந்தீர்ந்தான்- துன்பநீங்கினன். எ - று. (இ - ௰அ-க-ம்) காதிமுனியீஸ்வரானுக்கிரகத்தினன் மாயைநீங்கும்பொருட்டதன்றற்கடனைகடனைசாமார்த்தியத்தைத்தரிசித்தாரொன்பதாம் .... (௰௮)

(அ-கை.) காதிமுனிகண்டசாக்கிரசொற்பனந்தீர்க்கசொற்பனமா ய்றிவிக்குநிமித்தம்வந்
தவதிதியைவினவுதல். (கவி) அக்கருத்தினுடன்சிலநாளகற்றிநின்றுருச்சிரமத்தவ்வயினோ
ரதிதியெய்த, மிக்கமகிழ்வுடன்றேன்காய்விரும்பியூட்டிவெய்யவன்போஞ்சந்தியிற்றம்வி
திகள்செய்து, தக்கசயனங்கள்பயின்றிருவர்தாமுந் தத்துவநூற்கதைகண்மொழிசமயந்த
வ்வளி, லொக்கவுறைபதிதினைக்காதிநோக்கியுத்தமநின்னுடலுணங்கியோய்ந்ததென்னோ

னறியேன் - அந்தரங்கத்தையானறியவில்லை—மயக்கம் - பிராந்தியானது—மெய்யானதென்னென்றான் - சத்தியமானதென்னவென்றுகேட்டான். எ-று .... (௨௬)

(அ-கை) மாயையினந்தரங்கத்தைப்போதிக்கத்தொடங்கல். (கவி) மாலதற்குரைப்பானந்தணாவிந்தமண்முதலியாவையுமனத்தின், பாலுறவிருப்பதன்றியேபுறத்திற்பயில்வதோர்காலமுமிலதா,மூலமில்கனவுமயக்கமுமதமுமுதலியநெறிகளிலியாரும், சீலமாய்நோக்கியனுபவிக்கின்றார்சிந்தையுட்சகமிருப்பதுவே .... *

(இ-ள்.) மால் - விஷ்ணுவானவர் — அதற்குரைப்பான்-அதற்குச்சொல்லுவார்— அந்தணா - பிராமணா—இந்தமண்முதலியாவையும் - இப்பூமிமுதலியசகலமும்—மனத்தின்பாலுற- மனதினிடத்திற்பொருந்த—இருப்பதன்றி - இருப்பதேயல்லாமல்—புறத்திற்பயில்வது - புறம்பிலிருப்பது—ஓர்காலமுமிலதாம் - ஒருகாலத்திலுமில்லாததாம்—மூலமில்கனவும் - காரணமில்லாதசொற்பனமும்—மயக்கமும் - பிரமையும்—மதமுமுதலிய - மதமுதலாகிய—நெறிகளிலியாரும் - மார்க்கங்களிலியாவரும்—சீலமாய்நோக்கி - ஒழுங்காகப்பார்த்து—அனுபவிக்கின்றார்- அனுபவிக்கின்றார்கள்—சிந்தையுட்சகமிருப்பது- சித்தத்தினுள்ளேசகமிருப்பதாம். எ-று. (இ-ச-கம்) மயக்கத்திற்றோற்றியப்ரபஞ்சஞ்சத்தியமாகத்தோற்றலினதையறிவிக்குநிமித்தமித்தையானமனமேப்ரபஞ்சமாமென்றறிவித்ததாம்........................(௨௭)

(அ-கை.) இ-து. (கவி) அனந்தமாய்விரிந்தசகத்திரளெல்லாமயர்வறவமர்வதற்கிடமா, மனந்தனாலிந்தநாய்ப்புலைத்தன்மைவெளிசெயின்மற்றிதில்வியப்பென், கனந்தருபத்திப்பாச்சலின்வயத்தாற்கடைப்புலைத்திறந்தெரிந்துளதா, முனந்தொடரதிதிதானுமப்படியேமோகங்கண்முழுவதுங்கண்டான் .... *

(இ-ள்.) அனந்தமாய்விரிந்த-அளவின்றிப்பரந்திருக்கின்ற—சகத்திரளெல்லாம்- சகக்கூட்டங்களனைத்தும்—அயர்வற-தளர்வில்லாமல்—அமர்வதற்கிடமாம்-அமர்ந்திருப்பதற்கிடமான—மனந்தனால்-மனதினால்—இந்தநாய்ப்புலைத்தன்மை- இக்கடையானநீசத்தன்மையை—வெளிசெயின் - வெளிப்படுத்தினால்—இதில்வியப்பென் - இதிலதிசயமென்ன— கனந்தரு-மிகுதியான—பத்திப்பாச்சலின்-ப்ரதிபாமாத்திரத்தின்—வயத்தால்-வசத்தினால்—கடைப்புலைத்திறம்-கடையானநீசத்தன்மையை— தெரிந்துளதாம் - அறிந்துளதாம்—முனந்தொடரதிதிதானும்-முன்புதொடர்ந்துவந்தவதிதியும் — அப்படியே - அந்தப்ரகாரமே — மோகங்கண்முழுவதுங்கண்டான் - மயக்கங்களனைத்தையும்பார்த்தான். எ-று .... (௨௮)

(அ-கை.) இ-து. (கவி) கண்டவப்படியேநாய்ப்புலைத்தன்மைகாகதாலீயயோகத்தால், வண்டுறையூணகிரமண்டலத்தோர்மனத்தினும்பத்திபாய்ந்துளதா, லெண்டருபத்திபாச்சலென்றொருகாலெண்ணறுபெயர்க்குமுன்றோன்றும், விண்டநெஞ்சியற்கைகாகதாலீயநிலைமைபோல்விசித்திரகதியாம் .... *

(இ-ள்.) கண்டவப்படியே-பார்த்தவந்தப்ரகாரமே—தாய்ப்புலைத்தன்மை-நாய்க்கெரிக்குநீசத்தன்மையை—காகதாலீயயோகத்தால் - காகதாலியசம்பந்தத்தினால்— வண்டுறை- வண்டுகள்வாசஞ்செய்கின்ற—ஊணகிரமண்டலத்தோர் - ஊணமண்டலத்துங்கிரமண்டலத்துமுள்ளவர்களுடைய—மனத்தினும்- மனதிலும் — பத்திபாய்ந்துளது-பத்திபாய்ந்துள்ளது—எண்டருபத்திபாச்சல் - எண்ணுகின்றவிரண்டுபத்திபாச்சலும்—ஒருகால் - ஏககாலத்தில்—எண்ணறுபெயர்க்கும் - அளவற்றபெயர்களுக்கும்—முன்றோன்றும் - முன்னேதோற்றும் —விண்டநெஞ்சியற்கை-சொல்லப்பட்டமனத்தன்மையானது—காகதாலீயநிலைமைபோல் - காகதாலீயஞாயத்தைப்போல—விசித்திரகதியாம் - அதிசயமானநடையாம். எ-று .... (௨௯)

(அ-கை.) இ - து. (கவி) அப்படியன்றோசொற்பனமொன்றையநேகமானிடர் தனிக்காண்பர், கைப்படுவிநோதமொன்றிலேமகிழ்வர் காதலரநேகமானவர்கள், செப்பியகடைஞனவப்புலையன்றிருமனையூணமண்டலத்தே, தப்பறவந்தக்குறியினான்முன்னேசனித்துளனப்படிதானே .... *

(இ-ள்.) அப்படியன்றோ - அப்படியல்லவா—சொற்பனமொன்றை-ஒருசொற்பனத்தையே—அநேகமானிடர் - அளவற்றமனிதர்கள்—தனிக்காண்பர்-தனித்தனிபார்ப்பார்கள்—கைப்படுவிநோதமொன்றில்-கைவசமானவொருவிளையாட்டினால்—காதலரநேகமானவர்கள்- குழந்தைகள்பலர்—மகிழ்வர் - களிப்பார்கள் — செப்பியகடைஞனவப்புலையன் — சொல்லியகடைஞனாகியவந்தநீசனானவன் — ஊணமண்டலத்து - ஊணமண்டலத்திலுள்ள — திருமனை - அழகியவீட்டில்—தப்பறவந்தக்குறியினால்- தவறாமலக்குறிப்பினால்—அப்படிதானே முன்னேசனித்துளான் - அந்தப்ப்ரகாரமேமுன்னேபிறந்திருந்தான். எ-று ....(௩௰)

(அ-கை.) இ - து. (கவி) அத்திறத்தாலே தமரெலாமிறப்ப வன்னியதேசத்தை யடைந்தான், சத்திரநிழற்ற கீரதேசத்திற்றலைவனாப்பின் கனவுபுக்கான், உத்தமமா நின்னுளத்திலே வெறித்தபுன்னுசம்பந்தமாயதனாற், பத்தியாய்ந்துளதா லப்படி யாகப்பகர்புலைக்கடைஞனதியற்கை ... *

(இ-ள்.) அத்திறம் - அக்காரணத்தினால் — தமரெலாமிறப்ப - உறவினரெல்லாருமரணம டைய — அன்னியத்தேசத்தையடைந்தான் - அயலானநாட்டையடைந்தான் — சத்திரநிழற்ற- வெண்கொற்றக்குடைநிழலைச்செய்ப — கீரதேசத்தில் - கீரமண்டலத்தில் — தலைவனாய்-இராசா வாகி — பின்கனவுபுக்கான் - பின்பக்கினியிற்பிரவேசித்து — உத்தமமாம் - உத்தமமான — நின் னுளத்தில் - உன்மனதில் — வெறித்தபுன்னும் - வீணாகநினைக்கின்ற — சம்பந்தமாயதனால் - சம் பந்தமாயிருக்கின்றவதனால் — பகர்புலைக்கடைஞனதியற்கை - சொல்லப்பட்ட நீசனியல்பான து — அப்படியாக - அத்தப்ரகாரமாக — பத்தியாய்ந்துளது - ப்ரதிபலித்தது. எ-று. (இ-ச-க-ம்) சகலகற்பனையும் வைத்திருக்கின்ற மனமேயார்காலத்துமெல்லாவற்றை வெளிப்படுத்திலதிலென்னவிய ப்பென்றும், காகதாலீயநாயத்தைப்போல வுன்மனதினிசத்தன்மைபற்றிபாய்ந்தபடியேயதி திமனத்தினுங்கீரமண்டலத்தார் மனத்தினுமேககாலத்திற் பத்திபாய்ந்தபடி பால்விசித்திரமாக க்காணப்பட்டமெதன்றும், அநேகமாருசொற்பனங்கண்டதுபோலச் சொல்லப்பட்ட யாவரு மேககாலத்திற் றீர்க்கசொற்பனமென்னுமுனது நீசப்பிறப்பையுமரசாக்ஷியையு மக்கினிப்ர வேசத்தையுங்கண்டார்களென்றுஞ் சொற்பனங்கண்டதொருவனேகதேசத்திற், சாக்கிரமாய்க் காணப்படுவதுபோல வுனக்குத்தோற்றினசாக்கிரசொற்பனஞ் சாக்கிரமாகத்தோற்றினதென் றுமறிவாயென்பதாம் .... (ருக)

(அ-கை.) இம்மாயையின்மயங்கினவர்களஞ்ஞானியென்றும், மயங்காதவர்கண் ஞானியென்றுமறிவித்தல். (கவி) இவனவனானிதுவெனவெனவென்றேயிடரின்மூழ்குவ ரறிவில்லா, ரவனியாமுழுதுநாமெனுமுண்மை யறிந்தவரழுங்கிநின்றயரார், புவன மார்பொருளிற்பகிர்வுறுமனத்தாற் பாவனைபுந்தியிற்பொருந்திக், கவருறாரதனிவி வர்கண்மோகத்திற்கவல்வுறார்தத்துவங்கண்டோர் .... *

(இ-ள்.) இவன் - இவனென்றும் — அவன் - அவனென்றும் — நான் - நானென்றும் — இது - இதுவென்றும் — அது - அதுவென்றும் — எனவென்று - எனவென்றுஞ்சிந்திக்கின்ற — அறிவில்லார் - அறிவில்லாதவர்கள் — இடரின்மூழ்குவர் - துன்பத்திலழுந்துவார்கள் — அவனி யாமுழுதும் - பூமிமுதலாகியவனைத்தும் — நாமெனுமுண்மையறிந்தவர் - யாமென்கின்றவுண் மையையறிந்தவர்கள் — அழுங்கிநின்றயரார் - துன்பப்பட்டுத்தளர்ச்சியையடையார்கள் — புவ னமார்பொருளில் - பூமியினிறைந்தவஸ்துக்களில் — பகிர்வுறுமனத்தால் - வேற்றுமையுள்ளம னதினால் — பாவனை - பாவனையோடு — புந்தியிற்பொருந்தி - புத்தியிற்பொருந்தமாகி — அதனி ல் - அதில் — கவருறார் - ஆசையையடையமாட்டார்கள் — இவர்கண்மோகத்தில் - இவ்வஞ்ஞானி களின்மயக்கத்தில் — தத்துவங்கண்டோர் - தத்துவஞானத்தையறிந்தவர்கள் — கவல்வுறார் - வருத்தமடையார்கள். எ-று .... (ருஉ)

(அ-கை) இ - து. (கவி) ஞானபூரணமெய்தாமையான்மனத்தினண்ணியமோகத்தைநா டி, யீனமென்றகற்றவறிகிலையிதனை விந்தமோகத்திலேகணத்தி, னீநனியமிழவுற்றனையிந் தநெடியமோகத்திகிரிக்கு, மானதந்தானேயச்சதாமதனை வலித்தடர்வுறிலதுநலியா .... *

(இ - ள்.) ஞானபூரணமெய்தாமையால் - ஞானமானதுபூரணத்தையடையாததினால் — மனத்தில் - மனதில் — நண்ணியமோகத்தைநாடி - பொருந்தியமயக்கத்தைப்பார்த்து — ஈன மென்றகற்றவறிகிலை - இழிவென்றுதள்ளவறிந்தாயில்லை — இதனைவிந்தமோகத்தில் - இதனைவிந் மயக்கத்தில் — கணத்தினீநனியமிழவுற்றனை - க்ஷணத்தினீமிகவுமமிழ்ந்தினாய் — இந்தநெடிய மோகத்திகிரிக்கு - இம்மிகுந்தமோகமென்னுஞ்சக்கரத்துக்கு — மானதந்தானேயச்சதாம் - மனமேயச்சாகும் — அதனை - அம்மனதை — வலித்தடர்வுறில் - (விவேக)வல்லமையினாற்கெடுக் கில் — அதுநலியா - அம் மாயைவருத்தமாட்டாது. எ-று. (இ-உ-க-ம்) மாயாரூபமான மனதைக்கெடுக்கிலதுகெடுமென்பதாம் .... (ருங)

(அ-கை.) தவஞ்செய்யினிம்மாயைநீங்கி ஞானமுதிக்குமென்றனுக்கிரகித்தேகுதல். (கவி) எழுநீதி செறியின்முறைபிடைவருடமிராந்துதவநனியபற்றின், முழுதுமாய் முடிவொன்றிலாதமெய்ஞ்ஞான முற்றுமென்றுபின்முகுந்தன், றொழுதகுதோற் றமெழுந்துழிமறைபத்தருமருமேகங்களிங்ஙிப், பழுதறுகாதிகற்பலையெல்லாம் பற்றறுத்தருந்தவம்புரிந்தான் .... *

(இ-ள்.) நீயெழுதி - நீயெழுந்திருந்து—கிரியின்மூழையிடை - மலையின்குகையினிடத்தில்—வருடமீரைந்து - பத்துவருடம்—தவநனியியற்றின் - தவத்தைமிகவுஞ்செய்தால்—முழுதுமாய் - பூரணமாய்—மூடிவொன்றிலாத - முடிவொன்றுமில்லாத — மெய்ஞ்ஞானமுற்றுதியென்று - மெய்ஞ்ஞானமுதிரக்கடவாயென் (றனுக்கிரகஞ்செய்து) —பின்முகுந்தன் - பின்பு விஷ்ணுவானவர்—தொழுதகு - வணங்குதற்குரிய—தோற்றம் - தோற்றமானவடிவம்—எழுந்துழிமறைய - எழுந்தவிடத்தின்மறைந்துபோக— துயருறும் - துன்பம்பொருந்திய—மோகங்கணீங்கி - மயக்கங்கள்விடுபட்டு—பழுதறுகாதி - குற்றமற்றகாதிமுனியானவர்—கற்பனையெல்லாம் - கற்பனைகளனைத்தையும்—பற்றறுத்து - பற்றில்லாமற்கெடுத்து—அருந்தவம்புரிந்தான் - அரியதவத்தைச்செய்தான். எ-று .... (ருசு)

(அ-கை.) ஞானமடைதல். (கவி) வருடமோர்பத்தின்ஞானபூரணனாய் வாழ்ந்தனன்
பின்னரோதனதாம், பொருவில்சற்பாவமடைந்துயர்ந்தோனாய் பொருந்தியபயந்
துயர்நழுவிப், பருகுறும்போகத்திச்சையற்றுள்ள படியிலேசந்ததஞ்சுகமே, யுருவ
மாஞ்சீவன்முத்தனாயாதி யுவாமதியெனவுளநிறைந்தான் .... *

(இ-ள்.) வருடமோர்பத்தின் - பத்துவருடத்தில்—ஞானபூரணனாய் - ஞானத்தாற்பூரணமானவனாய்—வாழ்ந்தனன் - (காதிமுனியானவன்)வாழ்ந்தான்—பின்னர் - பின்பு—தனதாம் - தன்னதான—பொருவில் - ஒப்பில்லாத—சற்பாவமடைந்து - சற்பாவத்தையடைந்து—உயர்ந்தோனாய் - மேலானவனாய்—பொருந்தியபயம் - பொருந்தியவச்சமும்—துயர்நழுவி - துன்பமுநீங்கி—பருகுறுபோகத்து - அனுபவிக்கின்றபோகத்தில்—இச்சையற்று - இச்சையில்லாமல்—உள்ளபடியில் - உள்ளப்ரகாரமாய்—சந்ததம் - எப்போதும்—சுகமேயுருவமாம் - ஆநந்தமேஸ்வரூபமாகிய—சீவன்முத்தனாயாதி - சீவன்முத்தியையடைந்தவனாய்விஸ்ராந்தியடைந்து—உவாமதியென - பூர்ணசந்திரனைப்போல—உளநிறைந்தான் - மனதுபூரணமானான். எ-று. (இ-உ-க-ம்) சமாதியின்கண்ணுதிக்கு மனோவிசித்திரத்தைப்பார்த்தவைதை யதின்காரணமான சைதன்யத்திற்களைக்க அச்சைதன்யமொன்றே ப்ரகாசிக்குமென்றறிந்தா நந்தத்தினாற் பூரணமானானென்பதாம் .... (ருரு)

காதிகதைமுற்றிற்று - ஆ கதை - உருஇ - கவிதை (துயஉ)

உத்தாலகன்கதை.

(அ-கை.) முற்கதையின்மனோரூபமான மாயையைத்தரிசித்து அதற்குக்காரணமான பிரமத்தைத்தரிசிக்கிற் சகமில்லவேயில்லையென்றுசொல்லி யிவ்வனுபவமாத்மவிசாரஞ்செய்தபடிசமாதிகூடியதனால் நவநவமாயனுபவிக்குநிரதிசயாநந்தத்தை யறிவிக்குநிமித்தமுத்தாலகன்கதையைநிரூபிக்கிறார் .... *

(அ-ஙக.) மாயையானதுஸ்வானுபவமில்லாதவர்களை வருத்துமென் றறிவித்தல். (கவி)
இவ்வகையேயிம்மாயையறநெடிதாய்வெலற்கரிதாயேறித்தாழ்ந்து, வெவ்வியமாமோகங்
கள்விளைவித்துப்பரமத்தின்மேவிநிற்கு, மவ்வகையானுரைக்கின்றேனநவரதஞ்சொரூப
த்தையடையாதாரைப்,பவ்வமெனவருந்துயரின்மூழ்குவிக்குமிம்மாயைப்பண்புதானே

(இ-ள்.) இவ்வகையே - இந்தப்ரகாரமே—இம்மாயை - இந்தமாயையானது— அறநெடிதாய் - மிகவும்விஸ்தாரமாய்—வெலற்கரிதாய் - சயித்தற்கரியதாய்—ஏறித்தாழ்ந்து - உயர்ந்துதாழ்ந்து—வெவ்வியமாமோகங்கள் - கொடியமகாமயக்கங்களை—விளைவித்து - உண்டாக்கி—பரமத்தின்மேவிநிற்கும் - பிரமத்திற்பொருந்தியிருக்கும்—அவ்வகையால் - அந்தப்ரகாரத்தினால்—உரைக்கின்றேன் - சொல்லுகின்றேன்—அநவரதம் - சதாகாலமும்—சொரூபத்தையடையாதாரை - (பிரம)ஸ்வரூபத்தையடையாதவர்களை—பவ்வமென - சமுத்திரத்தைப்போல—வருந்துயரில் - வருகின்றதுன்பத்தில் — இம்மாயைப்பண்புதான் - இந்தமாயையின்குணமானது—மூழ்குவிக்கும் - அழுத்திவிடும். எ-று .... (க)

(அ-கை.) மாயாநாசவுபாயமான் றாமனோநாசத்தைத்தவிரவேறின்றெனல். (கலி) சித்த
சயமாத்திரமாந்தெய்வமருந்தாலன்றிச்சென்மவெந்நோய், சத்தியமேபிறமுயற்சியாவை
யினுந்திராதுதகைமைமிக்கோய், வைத்தநிகழ்காலத்துக்கணத்தில்வருமியல்புறவாகியத்
தாற்பற்றி, யொத்துவருமெதிர்காலமிறந்தகாலங்கருதாருளமிலாதார் .... *

(இ-ள்.) சித்தசயமாத்திரமாம் - மனோசயமாத்திரமான—தெய்வமருந்தாலன்றி-தேவா
ம்ருதத்தினாலல்லாமல்—சென்மவெந்நோய் - சநநமென்னுங்கொடியவியாதியானது— சத்தி
யமே - ப்ரமாணமே—பிறமுயற்சியாவையினும் - மற்றெந்தமுயற்சியினாலும்—திராது- நீங்
காது—தகைமைமிக்கோய் - சற்குணத்தின்மிகுந்த ஸ்ரீராமா—வைத்த - (க்ரமமாக)வைத்த—
நிகழ்காலத்து-வர்த்தமானகாலத்தில்—கணத்தில் - க்ஷணத்தில்—இயல்புற - (வன்றெச்சிரம)கிர
மமாக—வரும்-வருகின்ற—(தொழிலை)—வாகியத்தாற்பற்றி- புறம்பிற்பிடித்து—ஒத்துவரும்-
பொருந்திவராநின்ற—எதிர்காலம்-வருங்காலத்தையும்—இறந்தகாலம்-சென்றகாலத்தையும்—
உளமிலாதார் - மனதில்லாதவர்கள்—கருதார் - (உள்ளே)நினைக்கமாட்டார்கள். எ-று......... (௨)

(அ-கை.) மனோநாசவுபாயம்ப்ரத்யேகாத்மஸ்வரூபதெரிசனத்தைத்தவிரவேறின்றெனல்.
கலி-சங்கற்பம்வேட்கையநுசந்தானங்கணந்தோறுந்தவிர்த்திடுமென்னின்,மங்குற்றமனோ
லயந்தானதுவாகுமனோலயத்தைமருவுபோதம், பங்கற்றபிரத்தியச்சேதனமாகுமதற்கு
மனோபாவமென்ப, தங்குத்தானிலாவியல்பாமாதலினான்மனோவிகற்பமின்றிப்போம்.

(இ-ள்.) சங்கற்பம்- சங்கற்பத்தையும்—வேட்கை-ஆசையையும்—அநுசந்தானம்-போ
னதைநினைப்பதையும்—கணந்தோறும் - க்ஷணந்தோறும்—தவிர்த்திடுமென்னில் - ஒழிப்பாயா
னால்—மங்குற்ற - கேடுற்ற—மனோலயந்தான் - மனோலயமானது— அதுவாகும்- அதுவேயா
கும்—மனோலயத்தை - மனோநாசத்தை—மருவுபோதம் - பொருந்துகின்றஞானமானது—
பங்கற்ற-பிரிவில்லாத—பிரத்தியச்சேதனமாகும் - ப்ரத்யேகாத்மஞானமாம்— அதற்கு-அந்த
ஞானத்துக்கு—மனோபாவமென்பது - மனோபாவமென்றுசொல்லுவது— அங்குத்தானிலா-
அவ்விடத்திலில்லாமல்—இயல்பாமாதலினால் - இயல்பையுடையதாமாதலினால்— மனோவிகற்
பம்-மனோவிகற்பமானது—இன்றிப்போம்-இல்லாமற்கெடும். எ-று. [ப-ம்]சங்கற்பமென்பது
இந்தப்ப்ரகாரஞ்செய்யப்போகிறேனென்கின்ற மனதின்கிரியை, வேட்கையென்பது, ஈதெனக்
குண்டாகவேண்டுமென்று பிரார்த்தித்தல் அநுசந்தானமென்பது, போனதைநினைத்தல். (௩)

(அ-கை.) ஆத்மதரிசனத்துக்குபாயஞ் சுருதிகுருவாக்கியத்தின் மனதைச்செலுத்துதல்.
(கலி) அற்றமறுசத்தியமுமுயர்சிவமுந்தற்பரமவவத்தைதானு, முற்றறிவுநிறைசுகமும
லமறலுமனப்பந்தமுழுதுந்தீர்த, லுற்றவவிவேகத்தையொழித்துறுதியூகத்தாலுறுதியா
கக், குற்றமறுசற்புருடர்கோதறுநூல்களின்மனத்தைக்கூட்டியென்றும் .... *

(இ-ள்.) மனப்பந்தம்-மனோபந்தமானது—முழுதுந்தீர்தல்-முழுதுநீங்குதலே—அற்ற
மறு-மறைவில்லாத—சத்தியமும் - உண்மையும்—உயர்சிவமும்- மேலானசிவமும்—தற்பரம
வவத்தைதானும்-பிரமாவத்தையும்—முற்றறிவும்-சர்வக்ஞத்துவமும்—நிறைசுகமும்- பூரணா
நந்தமும்—மலமறலும்-களங்கமில்லாததுமாம்—உற்றவவிவேகத்தையொழித்து-பொருந்திய
அஞ்ஞானத்தைக்கெடுத்து — உறுதியூகத்தாலுறுதியாக-திடவுச்சாகத்தினால்நிச்சயமாக—குற்ற
மறுசற்புருடர்கோதறுநூல்களின் -குற்றமற்றசற்புருடர்களிடத்திலும்குற்றமற்றவாத்மஞான
சாஸ்திரங்களிலும்—என்றும்-எப்பொழுதும்—மனத்தைக்கூட்டி-மனதைச்சேர்த்து.எ-று(௪)

(அ-கை.) அதனான்விஷயவிச்சையைக்கெடுத்தாநந்தபோதமாவாயெனல். (கலி) அனவ
ரதமுரைத்தல்விடல்பற்றலிமைப்புறல்விழித்தலனைத்துஞ்செய்து, மனனமறுசுகவானாய்ச்
சச்சின்மாத்திரபரனாய்வாழ்திமைந்தா, கனமலமாங்காண்பவை தீர்ந்துள்ளத்தின்மலம
றுதநுக்காதற்பாச, மெனவுயர்கோளையையறுத்துநின்னறிவிற்றற்பரனாய்பிருத்தியன்றே.

(இ-ள்.) அனவரதம்-சதாகாலமும்—உரைத்தல் -சொல்லுதலும்—விடல் - விடுதலும்—
பற்றல்-பற்றுதலும்—இமைப்புறல்-கண்மூடுதலும்—விழித்தல் - கண்டிறத்தலுமாகிய—அனை
த்துஞ்செய்தும்-சகலதொழில்களையுஞ்செய்தும்—மனனமறு-சிந்தனையில்லாத—சுகவானாய்-
ஆநந்தத்தையுடையவனாய்—சச்சின்மாத்திரபரனாய்-சச்சின்மாத்திரபரனாக—மைந்தா- குழந்
தாய்—வாழ்தி-வாழக்கடவாய்—கனமலமாம்-மிகுந்தகளங்கமாகிய—காண்பவை தீர்ந்து- திரி
ஸ்யத்தைநீங்கி—உள்ளத்தின்மலமறுத்து-மனதின்களங்கத்தைக்கெடுத்து— காதற்பாசமென-
ஆசாபாசமென்னும்—உயர்கோளையையறுத்து- வளராநின்றகோளையையறுத்து—நின்னறி
வில்-உனதாத்மஞானத்தில—தற்பரனாயிருத்தி-பிரமஸ்வரூபனாயிருப்பாய். எ-று ... . (௫)

(அ-கை.) அபேதநிருத்திடிபினற்சமாதிகூடிச்சின்மாத்திரமாவாயெனல். (கவி) நலவிழி வாஞ்சங்கேதத்தாசையெனும்விடுக்கைகளைநன்றாகிச், சலனமுறாவிருப்புவெறுப்பற வுணர்வின்சார்பரமந்தானாய்வாழ்வா, யலகறநானிவனவனீததுவெனதாம்வாதனைகளறு த்தொன்றென்றே, நிலவியநிட்டையிலாநிச்சசற்சின்மாத்திரபரனாய்நின்றுவாழ்வாய்..... *

(இ-ள்.) நலவிழிவாம் - சுபாசுபமாகிய—சங்கேதத்து-சங்கேதமான(பொருள்களில்)—ஆசையெனும்-இச்சையென்கின்ற—விடுக்கைகளை-விடுசிகாவியாதியை—நன்றாகி - பொருந்தாதவனாய்—சலனமுறா-சலனம்பொருந்திய—விருப்புவெறுப்பற— இராகதுவேஷமில் லாமல்—உணர்வின்சார்-ஞானரசமான—பரமந்தானாய்வாழ்வாய்-பிரமமேதானாகவாழ்வாய்—அலகற-கணக்கின்றி—நானிவனவன்-நான் இவன் அவன்—ஈதுவெனதாம்- இதுவதுவெனதென்றுசொல்லுவதாகிய—வாதனைகளறுத்து-வாதனைகளைக்கெடுத்து—ஒன்றென்று- (பிரமமொன்றேயென்று—நிலவியநிட்டையிலாநி-பிரகாசிக்கின்றநிஷ்டையில்விலாநிலையடைந்து— சற்சின் மாத்திரபரனாய்-சற்சின்மாத்திரபரனாக—நின்றுவாழ்வாய் - ஸ்ரீராமா நீநிலையாகவாழ்வாய்.

(அ-கை சின்மாத்திரதரிசனமானபோதேபவத்தைக்கொடுக்கும்பேதநீங்குமெனல்(கவி) எனதுபிறரதுவென்னுமெண்ணமறச்சகநிலையி லிரண்டற்றொன்றாய்க், கனவயிரத்தம்ப மெனுமுணர்வுருவைப்பற்றிநிலைகண்டுநிற்பா, யனகமுடனமலமாயகண்டமாந்தன்னறி விலமைமையென்றுண்டாஞ், சனனமயக்கத்துக்குக்காரணமாம்பிரிவன்றுதவிர்ந்துபோமே

(இ-ள்.) எனது - என்னதும்—பிறரதுவென்னும் - அன்னியரதென்றுசொல்லப்பட்ட—எண்ணமற-நினைப்பறும்படி—சகநிலையில-உலகத்தின்கண்—இரண்டற்றொன்றாய்-துவிதமிறந்தத்துவிதமாய்—கனவயிரத்தம்பமென-கனமுள்ளவயிரஸ்தம்பத்தைப்போல— உணர்வுருவைப்பற்றி-ஆத்மஞானஸ்வரூபத்தைப்பிடித்து—நிலைகண்டுநிற்பாய் - அந்நிலையைத்தரிசித்திருப்பாய்—அனகமுடன்-பாவமின்மையுடன்—அமலமதாய் - மாசின்மையாய் — அகண்டமாம்-பூரணமாகிய—தன்னறிவில்-தனதுஞானத்தில்— அமைமென்றுண்டாம் - பொருந்துதலைப்போதுண்டாகுமோ—அன்று-அப்பொழுதே —சனனமயக்கத்துக்குக்காரணமாம்பிரிவு- பிறவிமயக்கத்துக்குமூலமாகின்றபேதமானது—தவிர்ந்துபோம்-நீங்கிப்போம். எ-று .... (எ)

(அ-கை.) பேதரூபமானமனந்தடிக்காவிடிற்பேராநந்தமுதிக்குமெனல். (கவி) பேரா நந்தத்தின்பநிலையினியல்பினைநோக்காய்பின்னைநிற்கும், வாராதநல்லமுதம்வந்தாலுமு யிர்தொலைக்கவருநஞ்சொக்குஞ், சோராமெய்யுணர்வுடைமைதூரிதாமனந்தடித்துத்து ன்றுமாகிற், காரானமுகில்சூழமறைத்தாலுண்டோமதியங்கண்ணின்காக்ஷி..... .... *

(இ-ள்.) பேராநந்தத்தின்பம் - பேராநந்தவிரசத்தின் — நிலையினியல்பினை - நிலையினுடையசுபாவத்தை—நோக்காய் - பார்ப்பாய் — பின்னைநிற்கும் - பின்புநிற்கின்ற—வாராத-வருதற்கரிய—நல்லமுதம்-நல்ல(தே)வாமிர்தமானது—வந்தாலும்- வந்துபொருந்தினாலும்—உயிர்தொலைக்கவருநஞ்சொக்கும்-உயிரைப்பிரிக்கவராநின்றவிஷத்துக்குச்சமானமாம்—சோரா-சோர்வில்லாத—மெய்யுணர்வுடைமை -உண்மைஞானமுடைமையானது—மனந்தடித்து-மனமானதுபருத்து— துன்றுமாகில்-நெருங்குமானால்—தூரிதாம் - தூரமாகும்— காரானமுகில்-கறுத்தமேகமானது—சூழமறைத்தால்-சூழும்படிமறைக்கில்—மதியம்- பூரணச்சந்திரனது—கண்ணின்காட்சி- கண்ணுக்குக்காட்சியானது—உண்டோ-உண்டாகுமோஎ-று(இ-அ-க-ம்) மாயைக்குமூலமானமனத்தைக்கெடுக்கிலப்போதே சச்சிதாநந்தமாய்விளங்குவாயென்பதாம்.

(அ-கை.) மனந்தடிப்புற்றதறிவித்தல். (கவி) சரீரமாத்திரத்தாசைபுத்தியாற்றானல் லாதனதாமென்றே, பரிவுறலான்மக்கண்மனைகுடும்பமென்னும்பாவனையாற்பருக் குமுள்ளம், விரியுமகங்காரவிகாரத்தினன்மமதைமலவிநோதந்தன்னு, னுரியவென திதுவென்னும்பாவனையான்மிகப்பருக்குமுள்ளந்தானே . ... *

(இ-ள்.) சரீரமாத்திரத்தாசை- தேகமட்டுமிச்சையையுடைய—புத்தியால்-புத்தியினால்—தானல்லாதன- தானல்லாத(வநாத்மாவை)—தாமென்றும் - ஆத்மாவென்றும்—பரிவுறலால்- அன்புபொருந்துவதால்—மக்கள் - புத்திரர்களும்—மனை - இல்லாளுமாகிய— குடும்பமெனும்- சம்சாரமென்கின்ற—பாவனையால் - நினைப்பினால்—உள்ளம் - மனமானது—பருக்கும்-வளரும்— விரியும் - விஸ்தாரமாகின்ற—அகங்காரவிகாரத்தினால் - அகங்காரவேற்றுமையினால்—மமதை - மமதையான—மலவிநோதந்தன்னால்-களங்கவிளையாட்டினாலும்—உரிய-உரித்தான—எனதிதுவென்னும்பாவனையால் - ஈதெனதென்கின்றபாவனையினாலும்— உள்ளந்தான்மிகப்பருக்கும் - மனமானதுமிகவும்வளரும். எ-று . ...(கூ)

(அ-கை.) இ-து. (கவி) ஆதிவியாதியின்விரிவாலவைமாறித்தேறுதல'லகற்றல்பற்ற லாதியமாமுயற்சியினாற்பிறவிதொறுமிகப்பருக்குமுள்ளமந்தா, மாதர்மணிதன

முதலாநேயத்தாலாபத்தால்வருலோபத்தாற், போதுபொழுதிவைநன்றுநலத்தினு
ற்பருத்துள்ளம்பூரிப்பாமே... *

(இ-ள்.) ஆதிவியாதியின்விரிவால் - ஆதிவியாதியினது விஸ்தாரத்தினாலும்—அவைமா
றித்தேறுதலால் - அவைகண்மாறி (சம்சார) த்தில்விசுவாசித்துத்தங்குதலினாலும்—அகற்றல்-
நீக்குதலுக்கும்—பற்றல் - பிடித்தலுக்கும்—ஊறியமாமுயற்சியினால் - இலாபமானசேத்தன
த்தினாலும் —பிறவிதோறும் - சநநங்கடோறும்—மைந்தா - குழந்தையானஸ்ரீராகவா—உள்ள
ம்-மனமானது—மிகப்பருக்கும் - மிகவும்வளரும்—மாதர் - ஸ்திரீகள்—மணி- இரத்தினங்கள்
—தனம் - திரவியங்கள்—முதலாம் - முதலானவைகளி (லுண்டான)—நேயத்தால் - ஆசையி
னாலும்—இலாபத்தால் - இலாபத்தினாலும்—வருலோபத்தால்- வாராநின்றவுலோபத்தினாலும்—
போதுபொழுது - வருகின்றகாலத்தில்—இவைநன்றும் - இவைகணல்லனவாம்— நலத்தினால்-
இந்நன்மையினால்—உள்ளம் - மனமானது—பருத்து - பெருத்து—பூரிப்பாம் - பூரிக்கும்—
எ-று. (இ-உ-க-ம்) தேகோகமுதலியவகம்பாவத்தினாலுண்டானவாதிவியாதிமுதலிய சங்கற்
பத்தான் மனம்விருத்தியடையு மென்பதாம் .... (௰)

(அ-கை.) பஞ்சவிஷயங்களாற்பருக்கின்றமனமஃதுகெடி னிஃதுங்கெடுமென்ப
தற்குத்திருஷ்டாந்தமறிவிக்கத்தொடங்கல். (கவி.) துராசையெனும்பால்பருகித்
தொல்போகமெனுங்காற்றாற்றொடர்மொய்ம்புண்டா, யிராகமுறுவழியுலவிமனப்
பாம்புமிகப்பருக்குமிராமர்கேளாய், புராதனவுத்தாலகன்போ லைம்பூதத்தையும்
பொடியாய்ப்போகப்பண்ணி, நிராகுலமாம்புத்தியினா லிதயத்தேநினைத்தியெனநி
கழ்த்தலோடும்... *

(இ-ள்.) துராசையெனும்பால்பருகி - துராசையென்கின்றபாலைப்புசித்து—தொல்போ
கமென்னும்- பழைமையானபோகமென்கின்ற —காற்றால்-வாயுவினால்—தொடர்மொய்ம்புண்
டாய் - தொடர்பானபலமுண்டாய்—இராகமுறுவழியுலவி - இச்சிக்கப்பட்டமார்க்கத்திற்சஞ்ச
ரித்து—மனப்பாம்பு - மனதென்னுஞ்சர்ப்பமானது—மிகப்பருக்கும்- மிகவும்பெருக்கும்—
இராமாகேளாய் - ஸ்ரீராமாநீகேட்பாய்— புராதனவுத்தாலகன்போல் - பழையவுத்தாலகமுனி
யைப்போல—ஐம்பூதத்தையும் - பஞ்சபூதங்களையும்— பொடியாய்ப்போகப்பண்ணி - தூளி
யாய்ப்போகச்செய்து—நிராகுலமாம்புத்தியினால் - வருத்தமற்றபுத்தியினால்—இதயத்து-மன
தில்—நினைத்தியென - விசாரிப்பாயென்று—நிகழ்த்தலோடும் - வசிஷ்டமுனிசொன்னமாத்தி
ரத்தில். எ-று. [ப-ம்] பஞ்சவிஷயங்களைக் கெடுக்கவேண்டுமென்பார், ஐம்பூதத்தையும்பொடி
யாய்ப்போகப்பண்ணியென்றார். (இ-ம்) உத்தாலகமுனியைப்போ லிம்மனதைக் கெடுக்க
வேண்டுமென்பதாம் .... (௰க)

(அ-கை.) இராமன்வினவுதல். (கவி) அருளியவுத்தாலகனெந்நெறியாலைம்பூத
மறுத்துத்தன்னுட், கருதியதென்னென்றிராகவன்கேட்ப வசிட்டமுனி கருணைவள்
ளால், பெருகியவைம்பூதத்தை விசாரத்தாற்பேதித்துப் பிரமமெய்தி, யொருமைப்
பெறுநிலையுடையவுத்தாலகன்கதையாமுறைப்பக்கேட்பாய்..................................... *

(இ-ள்.) அருளியவுத்தாலகனார் - நீரருளிச்செய்தவுத்தாலகமுனியானவர் — எந்நெறி
யால் - எந்தமார்க்கத்தினால்—ஐம்பூதமறுத்து- பஞ்சபூதத்தையுங்கெடுத்து—தன்னுட்கருதிய
தென்னென்று - தனக்குட்சிந்தித்ததென்னவென்று — இராகவன்கேட்ப - ஸ்ரீராமன்கேட்க—
வசிட்டமுனி - வசிஷ்டமுனியானவர்—கருணைவள்ளால் - கிருபையுள்ளஸ்ரீராமா — பெருகிய
வைம்பூதத்தை- விரிந்தபஞ்சபூதத்தை—விசாரத்தால் - (ஆத்ம) விசாரணையினால்—பேதித்து-
கெடுத்து—பிரமமெய்தி - பிரமத்தையடைந்து—ஒருமைபெறுநிலையுடைய - அத்துவிதநிலை
யையுடைய—உத்தாலகன்கதை - உத்தாலகமுனியினதுகதையை— யாமுறைப்பக்கேட்பாய்-
நாஞ்சொல்லக்கேட்பாய். எ - று. (இ-ம்) உத்தாலகமுனி ஞானமடைந்தமார்க்க மிதுவென்
றறிவிக்கத்தொடங்கினதாம் .... (௰உ)

(அ-கை.) முனியின்முமுட்சுப்பருவமுணர்த்துதல். (கவி) கந்தமாதனமென்னுங்
கனவரையிற்கர்ப்பூரங்கமழாநின்ற, கொந்தலர்சோலைச்சாரலுறைபவனுத்தாலகப்
பேர்கோதிலாதோ, னந்தமுனிவரன்முன்னே சிற்றறிவன்விசாரத்தோ னகண்ட
வாழ்விற், சிந்தையிடர்தீரவிளைப்பாறுதோன்புந்திநலந்திருந்தப்பெற்றோன் ... *

(இ-ள்.) கந்தமாதனமென்னும் - கந்தமாதனமென்கின்ற—கனவரையில்- மேன்மை
பொருந்தியமலையில்—கர்ப்பூரங்கமழாநின்ற - கருப்பூரம்பரிமளிக்கின்ற— கொந்தலர்சோலை
ச்சாரல் - பூங்கொத்துகளையுடையவனங்கள்சூழ்ந்த (மலைச்) சாரலில— உறைபவன் - வசிப்ப

வன்—உத்தாலகப்பேர் - உத்தாலகனென்னுநாமத்தையுடையவன்—கோதிலாதோன் - குற்றமற்றவன்—அந்தமுனிவரன் - அழகியமுனிசிரேஷ்டன்—முன் சிற்றறிவன் - முன்புகொஞ்சவறிவையுடையவன்—விசாரத்தோன் - விசாரணையையுடையவன்—அகண்டவாழ்வில் - பரிபூரணவாழ்வில்—சிந்தையிடர்தீர - மன்திற்றுன்பங்கெட—இளைப்பாறுதோன் - விஸ்ராந்தியடையாதவன் — புந்திநலந்திருந்தப்பெற்றேன் - புத்தியினது நன்மையைத்திருத்தமாகப்பெற்றவன். எ - று. (இ-ம்) சித்தசுத்திவந்து விஸ்ராந்திவரவில்லையென்பதாம்..................... (௰௩)

(அ-கை.) விஸ்ராந்தியுள்ள பரமபதமியாதெனவிசாரித்தல். (கவி) பூதநெறியாற்றவத்தானூற்பொருளால்யமநியமம்பொருந்துநீராற், றீதறுநல்விவேகந்தான்சேர்தலுமேயவனினையசிந்தைசெய்தான், கேதமறவிளைப்பாறும்பதமேதுமறுபிறவிக்கேடிலாத, மேதகையபதமேதிங்கிதுவன்றேமுதல்வினைவின்மேவற்பாற்றே.. *

(இ-ள்.) பூதநெறியால் - பரிசுத்தமார்க்கத்தினாலும்—தவத்தால் - (நிஷ்காம) தவத்தினாலும்—நூற்பொருளால் - (ஞான) சாஸ்திரார்த்தங்களினாலும்—யமம்-இயமமும்—நியமம்-நியமமும்—பொருந்துநீரால்-பொருந்துந்தன்மையினாலும்—தீதறுநல்விவேகந்தான் - குற்றமற்றநல்லவிவேகமானது—சேர்தலும்-வரவும்—அவன் - அந்தவுத்தாலகன்—இனையசிந்தைசெய்தான்-இத்தன்மையாகச்சிந்தித்தான்—கேதமற - துன்பமற— இளைப்பாறும்பதமேது-விஸ்ராந்தியடைகின்றவிடமியாது—மறுபிறவி-மறுசநநமென்னும்—கேடிலாத - கெடுதலில்லாத—மேதகையபதமேது-மேன்மையானபதமியாது—இங்கிதுவன்றே- இவ்விடத்திலிதுவல்லவா—முதல்வினைவில்-முன்புசீக்கிரத்தில்—மேவற்பாற்று-பொருந்தத்தக்கது. எ-று. (௰௪)

(அ-கை.) போகவிச்சை யெப்போதெனதுள்ளத்தினின்றுநீங்குமெனல். (கவி) உளநினைவிலாவிமலபரபதத்தேநெடுங்காலமொன்றியொன்றாய்க், கிளர்கனகவரைச்சிகரத்துறைமுகில்போலிளைப்பாறக்கிடைப்பதென்றோட், டளர்வறவீதியற்றினமேலெவையியற்றத்தக்கதெனச்சலித்துச்செல்லு, மளவறுபோகச்செல்வமெனதுளநின்றெக்காலமவிழ்ந்துபோமே.................................. *

(இ-ள்.) உளநினைவிலா - மனோசங்கற்பமில்லாத—விமலபரபதத்து - நிருமலமானபிரமபதத்தில்—நெடுங்காலம்-அளவில்காலம்—ஒன்றியொன்றாய்-கலந்தேகமாய்— கிளர்கனகவரைச்சிகரத்து-விளங்காநின்றமகாமேருவின்முடியில்—உறைமுகில்போல்- பொருந்தியமேகத்தைப்போல—இளைப்பாற-(யான்) விஸ்ராந்தியடைய—எந்நாள்-எப்போது—கிடைப்பது-கிடைக்கும்—தளர்வற-தளர்வில்லாமல்—ஈதியற்றி-இதைச்செய்து—மேலெவையியற்றத்தக்கதென-இனியெதைமுயற்சிக்கத்தக்கதென்று—சலித்துச்செல்லும்-சலனமாகிச்செல்கின்ற—அளவறுபோகச்செல்வம் - அளவற்றபோகசம்பத்துகள்—எனதுளநின்று - எனதுமனதின்கண்ணினின்றும்—எக்காலமவிழ்ந்துபோம்-எந்தக்காலத்தில்விடுபட்டுப்போகும். எ-று.......... (௰௫)

(அ-கை.) ஆத்மசுகமெப்போதுவருமெனல். (கவி) மனனமெனுந்திரைமோதிமதத்தெழுந்தபேராசைவாரிதன்னிற், புனிதமுறும்புந்தியினாலமுந்தாமற்கரையேறிப்போவதெந்நா, ளனவரதந்தொழிற்றொழிலாமைகள்போய்ப்பற்றுவீடின்றியுள்ளே, தனதொளியாம்பதமேவியெக்காலமகிழ்வுறுவேன்றளராநின்றே................................. *

(இ-ள்.) மனனமெனுந்திரைமோதி - மனனமென்கின்றவலையையடித்து — மதத்தெழுந்த-மதத்தோடும்வளர்ந்த—பேராசைவாரிதன்னில் - மிகுந்தவிச்சையென்னுஞ்சமுத்திரத்தில்—புனிதமுறும்புந்தியினால் - பரிசுத்தம்பொருந்தியவறிவென்கின்ற(வங்கத்) தினால்—அழுந்தாமல் - முழுகாமல்—எந்நாள்-எக்காலத்தில்—கரையேறிப்போவது-கரையேறுவது—அனவரதம் - சதாகாலமும்—தொழிற்றொழிலாமை- கிரியாக்கிரியைகளில்லாமைகளும்— போய்-நீங்கி—பற்றுவீடின்றி - பற்றுதல்விடுதலில்லாமல்—உள்ளேதனதொளியாம்பதமேவி- அகத்திற்சுவப்ரகாசமானபதத்தைப்பொருந்தி—எக்காலம் - எப்போது— தளராநின்று - (மனந்)தளராமனின்று—மகிழ்வுறுவேன் - மகிழ்ச்சியையடைவேன். எ-று .... (௰௬)

(அ-கை) சமாதியெப்போதுகூடுமெனல் (கவி) கருதுநினைவொழித்தொடுங்கிக்கார்வரையின்முழையிடத்திற்கருங்கற்போல, நிருவிகற்பசமாதியினாலெக்காலமசைவற்றநிலையினிற்ப, னொருமைபெறுதியானத்தாலிளைப்பாறுமென்னுடையவுச்சிமீதே, குருவியினங்கூடமைத்துக்குடியிருப்பதெக்காலங்குஞ்சியாலே............................ *

(இ-ள்.) கருதுநினைவொழித்து- நினைக்கின்றசங்கற்பத்தைக்கெடுத்து—ஒடுங்கி - (ஆத்மாவி)லடங்கி—கார்வரையின்முழையிடத்தில்- மேகஞ்சூழ்ந்தமலைக்குகையில்—கருங்கற்போல-கருங்கல்லைப்போல — நிருவிகற்பசமாதியினால் - நிர்விகற்பசமாதியால்—எக்காலம் - எப்போது—அசைவற்றநிலையினிற்பன்-சலனமற்றநிலையிலிருப்பன்—ஒருமைபெறுதியானத்தால்-ஏகநிஷ்ட

மானதியானத்தினால்—இளைப்பாறும் - விஸ்ராந்தியடைகின்ற—என்னுடையவுச்சிமீது-எனது சிரசின்மேலுள்ள—குஞ்சியால்- மயிரினால்—குருவியினம்-பறவைக்கூட்டங்களானவை—கூடமைத்து-கூண்டுகட்டி—எக்காலம்-எக்காலத்தில்—குடியிருப்பது - குடியிருக்கும். எ-று.(யஎ)

(அ-கை.) சமாதிகூடவில்லையேயெனல். வேறு. (கவி) ஊகத்திவ்வாறுன்னிமிகவுத்
தாலகனுட்பரவசனா, யேகத்தியானஞ்சாதிப்பா னிருந்தவிருந்த விடந்தோறும்,
வேகத்துகளுமனக்குரங்குவிடயக்கொம்புகளிற்பாயச், சோகத்திறந்தீர் மகிழ்ச்சி
பெறுஞ்சொரூபசமாதிபெற்றிலனால்.. *

(இ-ள்.) ஊகத்திவ்வாறுன்னி - மனதிலிந்தப்ரகாரஞ்சிந்தித்து—மிகவுத்தாலகன் - மிகவுமுத்தாலகமுனியானவர்—உட்பரவசனாய் - உள்ளேபரவசத்தையுடையவனாய்—ஏகத்தியானஞ்சாதிப்பான் - ஒன்றானபிரமத்தியானத்தைச்சாதிக்கும்பொருட்டு — இருந்தவிருந்தவிடந்தோறும் - இருந்தவிருந்தவிடங்கடோறும் — வேகத்துகளும் - வேகத்துடன்பாய்கின்ற—மனக்குரங்கு - மனமென்னுமர்க்கடமானது— விடயக்கொம்புகளிற்பாய - விஷயமென்னும் பணைகளிற்றாவுதலால்—சோகத்திறந்தீர் - துன்பத்தின்றன்மைகளில்லாத—மகிழ்ச்சிபெறும்-மகிழ்ச்சியையடைகின்ற—சொரூபசமாதிபெற்றிலன்-ஸ்வரூபசமாதியையடைந்திலன். எ-று. (இ-கு-க-ம்) விஷயசுகந் துன்பமென்றுவருந்திப் பரமசுகங்கூடாமற்பரதவித்துக்கொண்டிருக்கின்ற தீவரதரமுண்டாயினதென்பதாம்.. (யஅ)

(அ-கை.) ஒன்றிலுந்தரிகொள்ளாமற்சுழலுதல். (கவி) நிறனூர்கானிலிவ்வகையே
நிலையற்றலைவோன்பின்னொருகாற், புறனூர்காட்சியொழித்திடலாற் பொல்லாமன
மாம்வன்குரங்கு, திறனூரிருண்மூடியதென்னத்தியானங்களிலேயுள்ளழியா,வறனூர்
கிரியிலுலைந்துழல்வுற்றறவேவாடியலமந்தான்.. *

(இ-ள்.) நிறனூர்கானிலிவ்வகை - விளங்காநின்றகானகத்திலித்தப்ரகாரம்—நிலையற்றலைவோன் - நிலையில்லாமலலைகின்றவுத்தாலகன்—பின்னொருகால்-பின்பொருநாளில்—புறனூர்காட்சி - புறம்பிலுள்ளவிஷ்யதிருஷ்டி—ஒழித்திடலால் - தவிர்ந்தபடியால்—பொல்லாமனமாம்-பொல்லாதமனமாகிய—வன்குரங்கு - பலம்பொருந்தியமர்க்கடமானது—திறனூரிருண்மூடியதென்ன - திடமானவந்தகாரமூடினதுபோல—தியானங்களில் - சமாதிகளில் — உள்ளழியா-அகம்வருத்தமுற்று—அறனூர்கிரியில் - தருமமிகுந்தமலையில்—உலைந்துழல்வுற்று - வருத்தத்தோடுஞ்சுழன்று—அறவேவாடி - மிகவுஞ்சோர்ந்து—அலமந்தான்-சுழன்றான். எ-று. (இ-ம்) மனமானது-ஒருகால்பாகிட வடிவத்தைவிடுதலுமனோரதபரிகற்பிதமான வாநந்தவிஷயத்தையடைதலு மொருகாலதனைவிட் டதனைக் கிரகித்தலு மொருகாற் பயமடைந்த பக்ஷியைப்போலத் துள்ளியோடுதலு மொருகாலிராசத குணப்ரகாசத்தையுஞ் சத்துவகுணாம்பரத்தையுந் தமோகுணவந்தகாரத்தையும் பார்த்ததென்பதாம்......?... (யகூ)

(அ-கை.) நிருவிகற்பசமாதியினிமித்தமாசனங்கட்டியிருத்தல். (கவி) யாருமின்றி
யாராலுமெய்தற்கரிதா கியமுழைதான், சாருமுத்திப்பதமெனலா மதனிலொரு
காற்றனிமேவி, யாருமலைக்குன்றியின் றழைமேலருணச் சருமம் விரித்ததன்மே,
லோருமனத்தின்செயல்குறுக்கியுணர்வான்புத்தன்போலாகி.................................... *

(இ-ள்.) யாருமின்றி-ஒருவருமில்லாததாகியும்—ஆராலுமெய்தற்கரிதாகிய-யாவராலுமடையக்கூடாததாகியுமிருக்கின்ற—முழைதான் - குகையானது—சாருமுத்திப்பதமெனலாம்-சேராநின்றமோக்ஷவிடமென்றுசொல்லப்படும்—அதனில் - அக்குகையில்—ஒருகாற்றனிமேவி-ஒருபொழுதுதனித்துச்சென்று—ஆருமலைக்குன்றியின்றழைமேல் - பொருந்தியமலைக்குன்றுமணித்தழையின்மேல்—அருணச்சருமம்விரித்து - மான்றோலைவிரித்து— அதன்மேல்-அதின்மேல்—ஒருமனத்தின்-ஆராயாநின்றமனதினது—செயல்குறுக்கி- தொழிலைச்சுருக்கி—புத்தன்போலாகி-புத்தனைப்போல—உணர்வான் - தியானிப்பான். எ-று................ (உய)

(அ-கை.) இ-து. (கவி) புண்டரீகவாதனத்திற்புத்தன்போலுத்தரமுகனா, யண்டமிரண்டு
மிருகுதிமேலாக்கிப்பிரமாஞ்சலிபண்ணி, மண்டுகின்றவாதனையின்மருளுமனத்தைமீள்
வித்துத், தண்டலில்லாநிருவிகற்பசமாதிப்பொருட்டிவ்வகைநினைந்தான்...................... *

(இ-ள்.) புண்டரீகவாதனத்தில் - பத்மாதனத்தில்— புத்தன்போல் - பௌத்தனைப்போல—உத்தரமுகனாய் - வடக்குமுகமானவனாய்—அண்டமிரண்டும் - இரண்டுபீசத்தையும்—இருகுதிமேலாக்கி - இரண்டுகுதிகான்மேல்வைத்து—பிரமாஞ்சலிபண்ணி-பிரமாஞ்சலிசெய்து—மண்டுகின்றவாதனையில் - நெருங்காநின்றவாசனையினால் — மருளுமனத்தை - மயங்குகின்ற மனதை— மீள்வித்து - திருப்பி—தண்டலில்லா - தடையில்லாத —நிருவிகற்பசமாதிப்பொ

ருட்டு - நிருவிகற்பசமாதியினிமித்தம் — இவ்வகைநினைந்தான் - இந்தப்ரகாரம்விசாரித்தான் எ-று, பத்மாதனமாவன, இடதுகாற்குதிவலதுபீசத்தை நெருக்கிக்கொண்டு வலதுதுடையின் மேலும், அவ்வலதுகாற்குதியிடது பீசத்தைநெருக்கிக்கொண் டிடது துடையின்மேலும்வைத்தல், பிரமாஞ்சலியாவன, இரண்டுகரங்களையுஞ்சேர்த்தபிமுகமாகவு முத்தானமாகவுமேந்தல், பிரமத்தைவணங்குதலுமாம், புத்தன்போலென்றது, சரீரமசைவறவிருத்தலெனக்கொள்க (இ-உ-க-ம்-) சமாதியினிலக்கணங்களை யறிவித்ததாம், இவற்றிற்குதாரணம், அகத்தியசங்கிதை, இரண்டுபாதங்களையுமடித் தொடையின்மேற் சமமாகச்செய்வதே சகலகன்மங்களிலும் ப்ரசித்தியுள்ள பத்மாசனமென்று சத்துக்களாற்சொல்லப்படும், விவேகமார்த்தாண்டம், இடதுகாற்குதியை வலதுதுடையிலும், வலதுகாற்குதியையிடது துடையிலுஞ் சேர்த்துப்பிரமாஞ்சலியுடனிருந்தசைவற்ற திருஷ்டிகளினால் நாசிநுனியைப்பார்ப்பதே, பத்மாசனமென்று சத்துக்கள் சொல்லுகிறார்கள்..(உக)

(அ-கை.) சமாதியிலசைவறவிருக்குமிடத்துதித்து அவாவிக்கொண்டுவிஷயத்திற்சூழலாநின்றமனத்தைக்கண்டதைவெளியிற்செலுத்தாமற்றடுத்துத்தன்வயப்படுத்தும் பொருட்டுவிசாரமுகத்தா லதன்குற்றங்களைக்களையத்தொடங்கிப்போகங்களைக்களைதல். (கவி) வாராய்மூடமனமேநின் மாயவாழ்க்கைகளிற்பயனென், றீராவிடரோமுடிவில்வருஞ் செயலிற்பெரியோர்சேருவரோ, வாராவமுதாஞ்சாந்தியைவிட்டழியும் போகமாதரிப்போ, ரேரார்மலர்க்கற்பகக்கான்விட்டெரிகூர்விடவெங்கானுறுவார்.

(இ-ள்.) மூடமனமே - மூடத்தன்மையுடையமனதே—வாராய் - வருவாய்—நின்மாயைவாழ்க்கைகளில் - உனது பொய்வாழ்வுகளில்—பயனென்- ப்ரயோசனமென்ன—தீராவிடரோமுடிவில்வரும் - நீங்காத துன்பமேமுடிவிலுண்டாகின்ற — செயலில் - தொழிலில்—பெரியோர்சேருவரோ - சத்துக்களடைவார்களோ— ஆராவமுதாம் - தெவிட்டாதவமுதமாகிய— சாந்தியைவிட்டு - உபசாந்தியைநீக்கி — அழியும்போகமாதரிப்போர் - கெடாநின்றபோகத்தையிச்சிப்பவர்கள்—ஏரார்மலர்-அழகுபொருந்தியபுஷ்பங்களையுடைய—கற்பகக்கான்விட்டு-கற்பகவனத்தைவிட்டு—எரிகூர் - கொம்மைமிகுந்த—விடவெங்கானுறுவார் - விடம்போன்றவெப்பம்பொருந்திய (பாலைவனத்திற்)பொருந்துவார்கள். எ-று........................(உஉ)

(அ-கை.) சாந்தியேசுகமாமென்று சரிதைகிரியைகளைக்களைதல். (கவி) அயனுடுற்றாய்பாதலத்திலனுகினுயாகினுஞ்சாந்தி, வியனாரமுதையொழிந்தந்த மிக்கநிருவாணம்பயிலாய், பயனுயதுபோல்விசித்திரமாய்ப் பாவாபாவமயவடிவே, யியல்பாமிந்தச்செயல்கள்பெரி திடராமென்றுமினிதாகா........................*

(இ-ள்.) அயனுடுற்றாய் - பிரமலோகத்திலடைந்தா (யானும்) —பாதலத்திலனுகினுயாகினும் - பாதாளலோகத்திலடைந்தாயானும்— சாந்திவியனாரமுதையொழிந்து - சாந்தமென்னும்பெருமைநிறைந்தவமுதத்தைநீங்கி—அந்தமிக்கநிருவாணம்பயிலாய் - அம்மேலானநிருவாணசுகத்தைக்கூடமாட்டாய்—பயனுயதுபோல் - ப்ரயோசனமானதுபோல—விசித்திரமாய் - நாநாவிதமாய்—பாவாபாவமயவடிவே - உள்ளதில்லதின்மயரூபமே—இயல்பாம்-சுபாவமாயிருக்கின்ற—இந்தச்செயல்கள் - இத்தொழில்கள்—பெரிதிடராம்- மகாதுன்பமாம்—என்றுமினிதாகா - எப்போதுமின்பமாகமாட்டாது. எ-று........................(உங)

(அ-கை.) பஞ்சவிஷயத்தின்றொழிலைக்களைதல். (கவி) சத்தாதிகளாமித்தொழில்கடன்னுன்மண்டுகேம்போலப், பித்தாய்மூர்க்கமனமேயேன் பிரமிக்கின்றாய்விடாதவமே,யெத்தாற்சிறிதுதனையடைந்தா யெதிலேயின்பமுறுகின்றாய், நித்தாரமுதாய்ச், சமமாகுமதினீநிலைசேராநெறியென்........................*

(இ-ள்.) சத்தாதிகளாம் - சத்தமுதலிய (விஷயங்களிற்செல்லும்)—இத்தொழில்கடன்னால் - இச்செயல்களினால்—மண்டுகேம்போல-தவளையைப்போல—பித்தாய்- பயித்தியமுடையதாயிருக்கின்ற—மூர்க்கமனமே - மூடமனதே—விடாதவமே - விடாமல்வீணாக —ஏன்பிரமிக்கின்றாய் - ஏனுழலுகின்றாய் — எத்தாற்சிறிதுதனையடைந்தாய் - யாதினாற்கிஞ்சித்தின்பமடைந்தாய்—எதிலேயின்பமுறுகின்றாய் - யாதிற்பரமசுகமடைகின்றாய்—நித்தாரமுதாய்- சுதாகாலமுநிறைந்தவமுதமாயும் — சமமாகுமதின் - சமமாயுமிருக்கின்றவந்தச்சாந்தத்தில்—நீநிலைசேராநெறியென்-நீநிலைபெறாதவிதமென்ன. எ-று. [ப-ம்] சிறுமையென்பது சற்பனுவடிவங்குறைந்து-யதார்த்தவடிவம்வியாபித்தலெனக்கொள்க........................(உச)

(அ-கை.) சத்தபரிசவிஷயங்களைக்களைதல். (கவி) (வேறு.) படர்மூர்க்கமாமனமே வீணுய்த்தோன்றிப் பருக்கின்றசெவித்தொழில்கள்பயின்றுசத்தந், தொடர்கின்ற

புந்தியிலசுணமாபோற்றுஞ்சுறவேண்டாதோலின்றொழிலைமேவி, யடர்பரிசமூக
மாமதனாற்றுன்ப மடியாகப்பிடிக்கன்பாமியானைபோல, மடமைமிகுமூர்க்கமா
மனமேயென்று மாறாதவாபத்தைமருவவேண்டா........................ ....*

(இ-ள்) படர்மூர்க்கமாமனமே-விரிகின்றமூடத்தைபுடையமனதே—வினைப்பத்தோன்றி- விருதாவாகவுண்டாய்—பருக்கின்ற - பருக்காநின்ற—செவித்தொழில்கள்பயின்று-காதின்றொழில்களைக்கூடி—சத்தந்தொடர்கின்றபுந்தியினால் - சத்தவிஷயத்தைத்தொடராநின்றபுத்தியினால்—அசுணமாபோல் - அசுணப்பக்ஷியைப்போல — துஞ்சுறவேண்டாம் - மரணமடைய வேண்டாம்— தோலின்றொழிலைமேவி - தொக்குகின்றவியாபாரத்தைப்பொருந்தி — அடர்-நெருங்கிய— பரிசமூகமாமதனால் - பரிசவிஷயமானமூடத்தன்மையினால்—துன்பமடியாக-துயரமேதுவாக—பிடிக்கன்பாமியானைபோல - பெண்யானைக்காசையானவாணயானையைப்போல—மடமைமிகு - அறியாமைமிகுந்த—மூர்க்கமாமனமே- மூடமானமனமே—என்றுமாறாத - எப்போதுந்தவிராத—ஆபத்தைமருவவேண்டா-ஆபத்தையடையவேண்டாம். எ-று (௨௫)

(அ-கை.) ரூபரசகந்தவிஷயங்களைக்களைதல். (கவி) ஒளியுருவத்திரணோக்குவிழியின்
செய்கையுற்றுநீவெவ்விளக்கையுணராதாகி, விளிதலுறுவிட்டில்போல்வேகவேண்
டாவெய்யமனமேநாவின்விருத்திமேவி, யெளிதருந்தியுணவுகளின்மணத்தினாலே
யிரைத்தூண்டிற்கவர்மீன்போலிறக்கவேண்டா, நளினவிதயத்துளுயிர்நெறிபோய்
க்கந்தநாட்டத்தாற்கட்டுண்ணே னனைவண்டேபோல்..... ....*

(இ-ள்.) ஒளியுருவத்திரள் - ஒளிபொருந்தியரூபவிஷயசமூகத்தை—நோக்கும்-பார்க்கின்ற—விழியின்செய்கையுற்று - கண்ணினுடையதொழிலைப்பொருந்தி—நீ - (மனமே) நீ—வெவ்விளக்கையுணராதாகி - வெப்பம்பொருந்தியதீபமென்றறியாமல்—விளிதலுறும்-மரணமடைகின்ற—விட்டில்போல்-விட்டிற்பூச்சியைப்போல—வேகவேண்டா-வெந்துபோகவேண்டாம்—வெய்யமனமே - கொடியமனதே—நாவின்விருத்திமேவி - நாக்கினுடையதொழிலைப்பொருந்தி—எளிதருந்தி - அற்பம்புசித்து— உணவுகளின் - புசிப்புகளினது — மணத்தினால்-இரசவிஷயவாசனையினால்— இரை - இரையையுடைய — தூண்டிற்கவர்மீன்போல் - தூண்டிலைக்கிரகிக்கின்றமச்சத்தைப்போல—இறக்கவேண்டா - நாசமடையாதே— நனைவண்டேபோல்-தேனுக்காசித்தஞீமிறைப்போல —நளினவிதயத்துள்- தாமரைமலர்போன்றவிருதயத்துள்—உயிர்நெறிபோய் - சுவாசமார்க்கத்திற்சென்று— கந்தநாட்டத்தால் - வாசனைவிஷயத்தைத்தேடுதலினால்—கட்டுண்ணேல் - (மனமேநீ) கட்டுப்படாதே. எ-று .... (௨௬)

(அ-கை.) ஐந்துவிஷயங்களையுங்கூட்டிக்களைதல். (கவி) உரைத்தவசுணங்களிறுவிட்
டின்மீன்றேனோசையூறொளியிரதநாற்றமென்ன, நிரைத்தவிவற்றொன்றொன்றன்
மாய்ந்துபோகுநிலையழிக்குமவையைந்துநேரோகூடிக், கரைத்தலுறுபவர்க்கின்ப
மெங்கேயுன்றன் கட்டுக்குவாதனையேகயிற்றுச்சாலம், புரைத்தெழுநெஞ்சேயது
வேபோகுமாகிற்பொருவில்சயமஃதுனக்குப் புகலுங்காலே .... *

(இ-ள்.) உரைத்தவசுணம் - சொல்லியவசுணப்பக்ஷியும்—களிறு- யானையும்—விட்டில்-பதங்கப்பட்சியும்—மீன் - மச்சமும்—தேன் - வண்டும்—ஓசை - சத்தமும்—ஊறு-பரிசமும்—ஒளி - உருவமும்—இரதம் - சுவையும்—நாற்றம் - கந்தமும் — என்ன - என்று—நிரைத்தவிவற்று - நேர்நிரையாகவைக்கப்பட்டவிவற்றுள்—ஒன்றொன்றன்மாய்ந்துபோகும்-ஒன்றினாலொன்றுமரணத்தையடையும் — நிலையழிக்கும - நிலையைக்கெடுக்கின்ற — அவையைந்தும்-அப்பஞ்சவிஷ்யமும்—நேரோகூடி - ஒன்றாகச்சேர்ந்து—கரைத்தலுறுபவர்க்கு- மெலிவுசெய்யப்பட்டவர்களுக்கு—இன்பமெங்கே-அகமகிழ்ச்சியெங்கே(யுண்டாகும்)—உன்றன்கட்டுக்கு-உன்னைக்கட்டுதலுக்கு—வாதனையே - (இந்த)வாசனையென்பதே—கயிற்றுச்சாலம் - கயிற்றாற்பின்னினவலையாம்—புரைத்தெழுநெஞ்சே - குற்றத்தோடுமெழாநின்றமனமே—அதுவேபோகுமாகில் - அவ்விஷ்யவாசனையேநீங்குமானால்—புகலுங்கால் - சொல்லுமிடத்தில்—அஃதுனக்கு-அதுவேயுனக்கு—பொருவில்சயம் - சமானமில்லாதவெற்றியாம். எ - று. (இ - சா - க - ம்) மனதைப்பிரமாநந்தத்திற் செலுத்தும்பொருட்டு பஞ்சவிஷயமுதலிய போகங்களிற்செலுத்தாமற்றடுத்ததென்பதாம்........ .... (௨௭)

(அ-கை.) அற்பமானமனதிலகண்டமான சித்தெப்படியிருக்குமெனல். (வேறு.)
(கவி) எதுபடினுகதிர்கிங் கித்தண்டமியான் செய்கின்றேனென், முதுவிசாரத்தின்மிக்க
முதன்மையோர்க்குளமொன்றிலை, யதிகமாமுடிவில்சித்துக் கற்பமாநிலையென்
னொன்றில, விதிபதாடிவதோயானை வில்வக்காய்புகுதலுண்டோ....... ....*

(இ-ள்.) எதுப்பொருக - யாதுப்ரயோசனமாக—நிற்கு- உனக்கு—இங்கு- இவ்விடத்தில் —இத்தண்டம்- இந்தவாக்கினை—யான்செய்கின்றேன் - நான்செய்கிறேன்—முதுவிசாரத்தில்- முதிர்ந்த(வாத்யஞான)விசாரணையில்—மிக்கமுதன்மையோர்க்கு- மிகுந்தமுதன்மையானசதி துக்களுக்கு—உளமொன்றில்லை - ஒருமனமுமில்லை—அதிகமாம் - வியாபகமாகிய — முடிவில் சித்துக்கு - முடிவில்லாதஞானத்துக்கு — அற்பமாதில்லை - சூட்சுமமானஸ்திதி — என்னெஞ்சில் விதியதாயுளதோ - என்மனதில்நியமமாயுண்டோ—யானையில்வக்காப்புகுதலுண்டோ- களிறு வில்வப்பழத்தினுணுழையுமோ. எ-று .... (உஅ)

(அ-கை) தேகமுதலியவைகளைக்களைந்ததற்குவிலக்ஷணமானவாத்மஸ்வரூபத்தைத் தரிசித்தல். (கவி) தசையயில்பாதந்தொட்டுத் தலைமட்டும்வெவ்வேறாய்ந்து, விசை யுறயானங்கில்லையானெனுநிலையெங்குண்டோ, திசையெலாம்விழுங்கிமேலாஞ்சித்த தாய்க்காண்பதின்றி, யசைவறவெங்குந்தானு மென்றுலகனைத்துங்காண்கேன் ......*

(இ-ள்.) தசையயில் - மாமிசம்பொருந்தியசரீரத்தில்—பாதந்தொட்டு - பாதமுதலாக —தலைமட்டும் - சிரசுபரியந்தம்—வெவ்வேறாய்ந்தும்- வேறுவேறாகவாராய்ந்தும்—இசைவுற யான் - பொருந்தநானென்பது—அங்கில்லை - அச்சரீரத்திலில்லை—யானெனுநிலை - நானென் னுந்தன்மையானது—எங்குண்டு - எவ்விடத்திலிருக்கின்றது—திசையெலாம்விழுங்கி- திக்குக ளனைத்திலும்வியாபித்து—மேலாஞ்சித்ததாய் - மேலானஞானஸ்வரூபமாகி — காண்பதின்றி- காணப்படாததாகி—அசைவற- சலனமில்லாமல்—எங்குந்தானுமென்று- எவ்விடத்துந்தானாக (விளங்கின)தென்று—உலகனைத்துங்காண்கேன்- சகங்களனைத்தையும்பார்ப்பேன். எ-று.(உகூ)

(அ-கை.) ஆத்மதரிசனமாயநிலைநிக்கின்ற மனதைக்கண்டிக்கத்தொடங்கல். (கவி) உயர்வுறுமதற்குநாமங் கற்பனையொருமைபன்மை, வியன்மகத்தணுவென்றேதும் விதமுறுகுறிகள்காணே, னியலறிவாதலாலேயான்காணுமென்பானீயே, துயர்தரு மேதுவாகத் தோன்றினைபேதநெஞ்சே... *

(இ-ள்.) உயர்வுறுமதற்கு-மேன்மைபொருந்தியவத்தஞானத்துக்கு—நாமங்கற்பனை- பெயரின்கற்பனையும்—ஒருமை - ஏகத்துவமும்—பன்மை-அநேகத்துவமும்—வியன்மகத்து- பெருமைமிகுந்தமகத்துவமும்—அணுவு - அணுத்துவமும்— என்றேதும் - என்றுசொல்லு கின்ற—விதமுறு - நாநாவிதமாகிய — குறிகள்காணேன் - அடையாளங்களைக்கண்டிலன்— இயலறிவாதலால் - சுபாவமானஞானமானதினால் — யான்காணும் - சுசம்வேத்தியமான—என் பால்-என்னிடத்தில்—பேதநெஞ்சே - வேற்றுமையுள்ளமனமே—நீயே துயர்தருமேதுவாகத் தோன்றினை- நீயேதுன்பங்கொடுக்குங்காரணமாகவுண்டானாய். எ-று ....(௩௰)

(அ-கை.) மனதிற்குருவமின்றெனக்கண்டித்தல். (கவி) முதுவிவேகத்தாற்போத மொய்ம்பினாலிந்தவுன்னைக், கதுமெனக்கொல்லாநின்றேன்காணுதிகவலைநெஞ்சே, யிதுதசையிதுபுண்ணீரீ தென்பிவையுளவுயிர்ப்பாய், பொதுளியவாதமிங்கேயக மெனல்பொருந்திற்றெங்கே ....*

(இ-ள்.) முதுவிவேகத்தால்- முதிர்ந்தவிவேகத்தினாலுண்டான—போதமொய்ம்பினால்- ஞானார்த்தவலியினால்— இந்தவுன்னை - இப்படிப்பட்டவுன்னை — கதுமெனக்கொல்லாநின்றே ன்- சீக்கிரமாகக்கெடுக்கின்றேன் — கவலைநெஞ்சே - துன்பத்தையுடையமனதே—காணுதி- நீகாணக்கடவாய்— இதுதசை - இதுமாமிசம்— இதுபுண்ணீர் - இதுவிரத்தம்— இதென்பு- இதுவஸ்தி—இவை - இவைகள் — உளவுயிர்ப்பாய் - உள்ளபிராணனாய் — பொதுளியவாதம்- நிறைந்தகாற்று—இங்கு - இவ்விடத்தி (லிவைகளில்) —அகமெனல் - நானென்பது—பொருந் திற்றெங்கே - பொருந்தினதெங்கே. எ-று .... (௩க)

(அ-கை.) இ-து. (கவி) தசைகள்வேறுதிரம்வேறுதடியென்புவேறுமெய்யி, லசைவுவே றறிவுவேறுவகமெனல்பொருந்திற்றெங்கே, விசைவிழியிதுதோலீது வியன்செவியிது மூக்கீது, பசைவுறுநாவிதிங்கேயகமெனல்பயின்றதெங்கே .... *

(இ-ள்.) தசைகள்வேறு - மாமிசங்கள்வேறு—உதிரம்வேறு- இரத்தம்வேறு—தடியென் புவேறு - தடித்தவஸ்திவேறு—மெய்யில் - சரீரத்தில்—அசைவுவேறு - கன் (மேந்திரியங்கள்) வேறு—அறிவுவேறு - ஞா (னேந்திரியங்கள்)வேறு—அகமெனல்- நானென்பது—எங்கேபொ ருந்திற்று - எவ்விடத்திற்பொருந்தியிருக்கும் — விசைவிழியிது - விசையாகியகண்ணிது— தோலிது - தொக்கிது —வியன்செவியிது - பருத்தகாதிது—மூக்கீது-நாசியிது — பசைவுறு நாவிது - பசைபொருந்தியநாக்கிது—இங்கேயகமெனல் - இவ்விடத்தினென்று — பயின்ற தெங்கே - சொன்னதெங்கே. எ-று .... (௩உ)

(அ-கை.) சித்தைச்சடமயக்குமோவெனல். (கலி) அகமெனலெங்குமாகுமற்பமிங்கதமன்றாகு, நிகழுமிந்நல்லநோக்கேநோக்கபமெறிவேறில்லை,புகரில்சின்மயனுமென்னைப்பேதமிற்றூர்த்தநெஞ்சே, மிகவருத்தினையான்கன்றைவனச்செந்நாய்வெருட்டுமாபோல். ✻

(இ-ள்.) அகமெனலெங்குமாகும் - நானென்பதெங்குமாயிருக்கும்— அற்பமிங்கதமன்றாகும் - அற்பமுமிவைகளிலுமென்பதல்லாததாம்— நிகழும் - இப்படிவிளங்காநின்ற—இந்தல்லநோக்கே - இவ்வனுபவதிருஷ்டியே—நோக்கு - திருஷ்டியாம் — அயனெறிவேறில்லை - வேறுயார்க்குமில்லை—புகரில்-குற்றமற்ற—சின்மயனுமென்னை - ஞானவடிவமாகியவென்னை—பேதமில் - அறிவில்லாத—தூர்த்தநெஞ்சே - வஞ்சகமுள்ளமனதே—ஆன்கன்றை - பசுவின்கன்றை—வனச்செந்நாய் - வனத்திலுள்ளசெந்நாயானது — வெருட்டுமாபோல் - மருட்டுவதுபோல—மிகவருத்தினை - மிகவும்வருத்தப்படுத்தினாய். எ-று .... (௯௩)

(அ-கை.) இனிமனதின் வசத்திற்செல்லேனெனல். (கலி) தெய்வயோகத்தாலின்றுதேறினன்சொரூபச்செம்பொன், கைவழிகவரஞ்ஞானக்கள்வன்மீண்டிவனைச்சேரேனைவகைப்பொறிகளொன்றுவாதனையற்றிருந்துந், தைவருபுறனிற்றத்தம்புலன்களிற்றாவாநின்ற. ✻

(இ-ள்.) தெய்வயோகத்தால் - தேவாதீனமாய்—சொரூபச்செம்பொன் - ஆத்மவஸ்துவை—கைவழிகவர் - கைவசமாயபகரிக்கின்ற—அஞ்ஞானக்கள்வன் - அஞ்ஞானமென்னுந்திருடனை—இன்றுதேறினன்-இப்போதுதெளிந்துகொண்டேன்—மீண்டிவனைச்சேரேன்-திரும்பவிவனைச்சாரேன்—ஐவகைப்பொறிகள் - பஞ்சேந்திரியங்கள்—ஒன்றுவாதனையற்றிருந்தும்-ஒன்றியவாசனையைவிட்டிருந்தும்—தைவரு - ஸ்பரிசிக்கின்ற — புறனில்- புறம்பில்—தத்தம்புலன்களில் - தங்கடங்கள்விஷயங்களில்—தாவாநின்ற - தாவுகின்றன. எ-று. (இ - எ - க - ம்) ஆத்மஸ்வரூபத்தைத்தவிர மனதிற்கோருருவமின்றெனத்தரிசித்ததாம் .... (௯௪)

(அ-கை.) பொறிகளைமனோவாசனையிற்செல்லாமனீக்குதல். (கலி) வாதனைபொறிகட்கெல்லாமன்னுகாரணமன்றாகு, மாதலான்மூர்க்கமான வைம்பொறிநீவிர்நெஞ்சின், ஏதவாதனைகண்மாற்றிக் கருமங்களெல்லாஞ்செய்வீர், வேதனைதுன்பமொன்றுங் கிஞ்சிலுமேவாதென்றும் .... ✻

(இ-ள்.) வாதனை - வாசனையானது—பொறிகட்கெல்லாம் - இந்திரியங்களனைத்துக்கும்—மன்னுகாரணமன்றாகும் - நெருங்கியகாரணமல்லாததாம்—ஆதலால் - ஆதலினால்— மூர்க்கமானவைம்பொறி . மூடமாகியபஞ்சேந்திரியங்களே—நீவிர் - நீங்கள்—நெஞ்சின் - உள்ளத்தினது —ஏதவாதனைகண்மாற்றி - குற்றமுள்ளவாதனைகளைக்கெடுத்து—கருமங்களெல்லாஞ்செய்வீர் - தொழில்களனைத்தையுஞ்செய்வீர்களானால் — வேதனைதுன்பம் - வருத்தஞ்செய்கின்றதுன்பங்கள்—ஒன்றும் - ஒன்றானும்—கிஞ்சிலும் - அற்பமும் — என்றும் - எப்போதும்—மேவாது - பொருந்தாது. எ-று .... (௯௫)

(அ - கை.) மனதைப்பொறிவசத்திற் செல்லாமற் றடுத்து அறிவுவசத்திற் செலுத்தல். வேறு. (கலி) கூடுசெயுந்தன்வாயினூலாற்பொன்றுங் கோசகாரக்கிருமிக்கூட்டம்போல, வோடுபொறியெனுஞ்சிசுக்காள்மயலால் வீணேயுலர்ந்திடுவீர் பொறிக்கெல்லா முறையுளான, நீடுமனனேயொடுங்கிப்பொறிகளோடுநீவேறற்றாத்துமதத் துவத்தைநேரோ, நாடுதிபற்றற்றொன்றாய்முத்தியானஞானவடிவினை நிலையாய்நண்ணுவாயே .... ✻

(இ-ள்.) கூடுசெயுந்தன்வாயினூலால் - கூண்டுசெய்கின்றதனதுவாயினூலினால்—பொன்றும்-மரணமடைகின்ற—கோசகாரக்கிருமிக்கூட்டம்போல—கோசகாரப்புழுவினது கூட்டத்தைப்போல—ஓடுபொறியெனுஞ்சிசுக்காள்-திரிஸ்யத்திற்றாவுகின்றவிந்திரியங்களென்னுங் குழந்தைகளே—மயலால்-மயக்கத்தினால்—வீணேயுலர்ந்திடுவீர் - வீணுகக்கெடுவீர்கள்—பொறிக்கெல்லாம்-இந்திரியங்களனைத்திற்கும்—உறையுளான நீடுமனனே-வசிக்குமிடமாகியநீண்டமனதே—ஒடுங்கி-அடங்கி—பொறிகளோடு-இந்திரியங்களுடன்—நீவேறற்று - நீவேறுபடாமல்—ஆத்துமதத்துவத்தை-ஆத்மஞானத்தை—நேரோநாடுதி - நேரோபார்ப்பாய்—பற்றற்று - பற்றில்லாமல்—ஒன்றாய் - ஏகமாய்—முத்தியான-நிருவாணசுகமாயிருக்கின்ற— ஞானவடிவினை-ஞானஸ்வரூபத்தை—நிலையாய்நண்ணுவாய் - நிலையாகப்பொருந்துவாய். எ-று .... (௯௬)

(அ-கை.) மனோசங்கற்பத்தைக்கெடுத் தாத்மசுகத்திற்சுகிப்பேனெனல். (கலி) ஆசகலாவிடயவிட விடுசியாகி யநந்தமா நானெனும்வா தனையத்திர, மாசறவிட்டிச்சைபெலா மொழிப்பதென்னுமந்திரயுத்தியினுலேமறுசெவ்வம்பேயத், தேசமுறுபகவானுபச்சமமல்லாத் திர்விடமாவாய்மனமேதிரள்சங்கற்பம், வீசருமபல்கொடியாய்நியாங்காட்டை வெட்டிநெடும்பூமியிலே விழ்நாதஞ்செய்வன்........ ✻

(இ-ள்.) ஆசகலாவிடயம்-குற்றநீங்காதவிஷயமென்னும்—விடவிடுசியாகி-விஷமுள்ள விடுசியாகியும் — அநந்தமாம் - அளவில்லாததாகியுமிருக்கின்ற — நானெனும்வாதனையை-யானென்கின்றவாசனையானது—தீர - நீங்கும்படி—மாசறவிட்டு - களங்கமில்லாமல்விட்டு—இச்சையெலாம் - ஆசைகளனைத்தையும் — ஒழிப்பதென்னும் - கெடுப்பதென்கின்ற—மந்திரயுத்தியினால் - மந்திரவுபாயத்தினால் — மறுசென்மம்போய் - மறுபிறப்புநீங்கி—தேசமுறுபகவானாய் - ப்ரகாசம்பொருந்தியபகவஸ்வரூபமாய்—மனமே - மனதே — அச்சமெல்லாந்தீர்விடமாவாய் - பயங்களனைத்துந்தீர்ந்தவிடமாவாய்—திரள்சங்கற்பம் - மிகுந்தசங்கற்பமே—வீசுதரு - வீசப்பட்ட(விருக்ஷமாகவும்)—மயல்கொடியாய் - ஆசையேகொடிகளாகவுமிருக்கின்ற—நியாங்காட்டை - நீயென்னும்வனத்தை—வெட்டி - தறித்து—நெடும்பூமியில் - நீண்ட(ஞான)பூமியில்—விநோதஞ்செய்வேன் - விளையாடுவேன். எ-று ....(௫௭)

(அ-கை)மங்கலகரமானபிரமஸ்வரூபமாயதின் அபினசத்தியினியல்பைத்தரிசித்தல்.(கவி)
வேண்டியவாவிளையாடித்தற்பதத்தைமேவினன்கேவலமானேன்வெற்றியுற்றேன, னீண்டு
வுயர்திருவாணமானேன்செய்வதிலதானேன்பிறிவற்றேனிடம்வேறற்றேன, னீண்டதெளி
வுடைமையொளிவுடைமையுண்மைநிகழுடைமையறிவுடைமைநீங்காமெய்ம்மை,மாண்
டசுகமுடைமையுபசாந்தநீர்மை மகிழுடைமைநிறையுடைமைமகிமைபான்மை.......*

(இ-ள்.) வேண்டியவா - வேண்டினப்ரகாரம்—விளையாடி - விளையாடல்செய்து—தற்பதத்தைமேவினன் - பிரமபதத்தைப்பொருந்தினேன்—கேவலமானேன்- தனிமையானேன்—வெற்றியுற்றேன் - சயமடைந்தேன்—ஈண்டு - இவ்விடத்தில்—உயர்திருவாணமானேன் - உயர்ந்தமோக்ஷஸ்வரூபியானேன் — செய்வதிலதானேன் - தொழிலில்லாதவனானேன் — பிறிவற்றேன் - பகுப்பற்றேன்—இடம்வேறற்றேன்- வேறிடமில்லாதவனானேன்—நீண்டதெளிவுடைமை - மிகுந்ததெளிவுடைமையும்—ஒளிவுடைமை - விளக்கமுடைமையும் — உண்மைநிகழுடைமை - தத்துவப்ரகாசமுடைமையும் —அறிவுடைமை - ஞானமுடைமையும்—நீங்காமெய்ம்மை - நீங்காதவுண்மையும்—மாண்டசுகமுடைமை - சிறந்தசுகமுடைமையும்— உபசாந்தநீர்மை - உபசாந்தமுள்ளகுணமுடைமையும் — மகிழ்வுடைமை - (சற்கருமத்தின்) மகிழ்ச்சியுடைமையும்—நிறைவுடைமை - பூரணமுடைமையும்—மகிமை - பெருமையுடைமையும்—பான்மை - நற்குணமுடைமையும். எ-று ....(௫௮)

(அ-கை.) இ-து. (கவி) ஆவரணமில்லாமையுதாரத்தன்மை யழியாததேசுடைமையகண்
டநீர்மை, யாவதுந்தானாமுறைமையச்சமின்மை யேகமாந்தன்மைமனமெழுந்தோடா
மை, யோவலிலாதுடனுறையிக்குணங்களென்னுமுத்தமிகள்சுமங்கலிகளொப்பிலாதார்,
பாவனையொன்றாஞ்சொருபமடைந்தேற்கென்றும்பன்னியராயுளங்கவரும்பாவைமாரே.

(இ-ள்.) ஆவரணமில்லாமை - மறைப்பில்லாமையும்—உதாரத்தன்மை-உதாரமானகுணமும்—அழியாததேசுடைமை - கெடாதப்ரகாசத்தையுடைமையும்—அகண்டநீர்மை- பூரணத்தன்மையும்—யாவதுந்தானாமுறைமை - சகலமுந்தன்மயமானகுணமும்— அச்சமின்மை-பயமில்லாமையும்—ஏகமாந்தன்மை- ஒன்றாகியதன்மையும்—மனமெழுந்தோடாமை-சித்தசாஞ்சல்லியமில்லாமையுமாகிய—ஓவலிலாது-ஒழிவில்லாமல்—உடனுறை (என) துடன்பொருந்தியிருக்கின்ற—இக்குணங்களென்னும்-இந்தக்குணங்களென்கிற—உத்தமிகள்-உத்தமிகளாகிய—சுமங்கலிகள் - சுமங்கலஸ்திரீகள்—ஒப்பிலாதார்-சமானமில்லாதவர்கள்—பாவனையொன்றும்-ஏகபாவனையான—சொருபமடைந்தேற்கு - (ஆத்ம) ஸ்வரூபத்தையடைந்தவெனக்கு—என்றும்பன்னியராய் - எப்போதுமனைவியர்களாக—உளங்கவரும் - மனதைக்கிரகிக்கின்ற—பாவைமார்-ஸ்திரீகளாம். எ-று. (இ-ரு-க-ம்) ஷிடிந்தியங்களையுங்கண்டித்தாத்மஸ்வரூபத்தைத் தரிசித்ததன் சுபாவசத்திகளோடும் விளையாடிப் பரமசுகியாயிருந்தானென்பதாம் ....(௫௯)

(அ-கை)ஞானம்பெற்றும்அநிச்சாபிராரத்தகன்மசேடநீங்கும்பொருட்டுயோகம்வ
ந்தடுத்ததைபறிவிக்கத்தொடங்கிப்பிரணவவுச்சாரணமறிவித்தல். (கவி) தேங்காது
தன்வசமாய்விரிந்தபுந்திச் செயலாலேயிவ்வாறுதிறத்திலெண்ணி, பூங்காவிசிறிதலர்
ந்தாற்போலபாதிப் புளாவிழியோன்புண்டரிகாதனத்திற்புல்கி, யோங்காரமேனே
க்குந்தோனியதானவுத்தமனீண்முழக்காலேயுச்சரித்தான்,பாங்காகநாவறையுமணி
யினூடுபயின்றுதடையற்றோசை படர்வதேபோல் ....*

(இ-ள்.) தேங்காது - அலையாமல்—தன்வசமாய்விரிந்த - தன்வசப்பட்டுவியாபித்த—புந்தி - புத்தியினது—செயலால் - தொழிலினால்—இவ்வாறு - இந்தப்ரகாரம்— திறத்திலெண்ணி-வலிமையாகச்சிந்தித்து—பூங்காவி - கருங்குவளைப்புட்பமானது—சிறிதலர்ந்தாற்போல-கொஞ்சம்விகசிதமானதுபோல — பாதிப்புளாவிழியோன் - பாதிதிறந்தவிழியையுடையவ

றுப்—புண்டரிகாதனத்திற்புல்கி-பத்மாதனத்திலிருந்து—ஓங்காரம்-பிரணவத்தை—மேனோக்கும் - மேனோக்கிய—தொனியதான - ஒலியதான—உத்தமன்-உத்தமனுனவுக்காலகன்—நீண்முழக்கால் - உயர்ந்தசத்தத்தினுல்—பாங்காக - உரிமையாக—நாவறையுமணிபிணுடு - நாவானதடிக்கப்பட்டமணிக்குள்—பயின்று - கூடி—தடையற்று - தடையில்லாமல்—ஓசைபடர்வதேபோல்—சத்தமெழும்பினதுபோல—உச்சரித்தான் - உச்சரித்தான். எ-று .... (சய)

(அ-கை.) பிரணவத்தின் முதற்கூறுன அகாரத்தைபுச்சரித்தல். (கவி) சான்றபிரணவமோதுமவன்றன்சித்துதற்பதத்தைநோக்குதலுந்தனியோங்கார, மூன்றறவெவ்வளவுமேனுற்றுநின்றதுயர்ந்தகன்றுவிமலமாமுணர்வின்கண்ணே, மூன்றமாத்திரையுடையபிரணவத்தின் முற்கூறுவெளியாகமுழங்கியெங்கு, மான்றபிராணன்கடொனிகிளப்புமெய்யிலழகிதாய்க்கிளர்ந்தோங்கியதிருமெல்லை .... *

(இ-ள்.) சான்றபிரணவம் - ஞான (ஸ்வரூபமாகிய) பிரணவத்தை—ஓதுமவன்றன்சித்து - உச்சரியாநின்றவுத்தாலகமுனியின்ஞானமானது—தற்பதத்தைநோக்குதலும் - பிரணவஸ்வரூபமானபிரமத்தைப்பார்க்கவும் — தனியோங்காரம் - தனிமையானபிரணவமானது—ஊன்றற - சார்பில்லாமல்—எவ்வளவும் - எந்தமட்டும் — மேனுற்றுநின்றது - உயர்ந்துநின்றதோ (வந்தமட்டும்)—உயர்ந்து - உயர்வாகவும்—அகன்று-வியாபகமாகவும்—விமலமாமுணர்வின்கண் - நிருமலமாகவுமிருக்கின்றஞானத்தினிடத்தில்—மூன்றமாத்திரையுடைய-மூன்றமாத்திரையையுடையதாகிய—பிரணவத்தின்முற்கூறு - பிரணவஸ்வரூபத்தின் (அகாரத்மகமான) முதற்பங்கு—வெளியாகமுழங்கி-வெளிப்படவொலித்து—எங்கும்-எவ்விடத்தும்—ஆன்றபிராணன்கள் - மாட்சிமைப்பட்டபிராணவாயுக்கள் — தொனிகிளப்பும் - சத்தத்தையெழுப்புகின்ற—மெய்யில் - சரீரத்தில்—அழகிதாய் - அழகாக—கிளர்ந்தோங்கி - மிகவும்பிரகாசித்து—அதிருமெல்லை - வொலிக்கின்றகாலத்தில். எ-று .... (சக)

(அ-கை.) இ-து. (கவி) இன்னுயிரைப்புறத்தகற்றவல்லதான விரேசகப்பேர்கிரமந்தானியாக்கைமுற்றுங்,கொன்னுறுபாழாக்கினதானிறைந்துயர்ந்தகும்பமுனிகுணகடலைக்குறைத்ததேபோற், பின்னமில்சிற்சுவைநிறைந்தவாகாசத்திற்பிராணனிறைந்துளவிதயப்பெருந்தீமண்டி, யன்னவுடன்முழுதுமெரித் தவேதோங்காரத்தாதியாங்கிரமத்தினவத்தையிதே .... *

(இ-ள்.) இன்னுயிரை - இந்தப்பிராணவாயுவை—புறத்தகற்றவல்லதான-புறப்பினீக்கவல்லமையாகிய—இரேசகப்பேர் - இரேசகமென்னுநாமமுடைய—கிரமந்தான் - கிரமமானது—இயாக்கைமுற்றும் - சரீரமெல்லாவற்றிலும்—நிறைந்துயர்ந்த - நிறைந்துயர்ந்திருக்கின்றது—கும்பமுனி - அகத்தியமுனியானவர் — குணகடலை - சத்திக்காநின்றசமுத்திரத்தை—குறைத்ததுபோல் - (ஆசமனஞ்செய்து) பாழாக்கினதுபோல — கொன்னுறுபாழாக்கினது-கொன்றுபாழாக்கினது—பின்னமில் - பிரிவில்லாத — சிற்சுவைநிறைந்த - ஞானவிரசநிறைந்திருக்கின்ற—ஆகாசத்தில் - (பிர)மாகாயத்தில் — பிராணனிறைந்துள - பிராணவாயுநிறைந்திருந்தன—இதயம் - இருதயமென்னும்—பெருந்தீமண்டி - பெரியவக்கினிநிறைந்து— அன்னவுடன்முழுதுமெரித்துளது - அந்தச்சரீரமியாவையு மெரித்திருக்கின்றது — ஓங்காரத்து-பிரணவத்துக்கு—ஈதே - இதுவே — ஆதியாங்கிரமத்தினவத்தை - முந்தினகிரமத்தினவத்தையாம். எ-று. (இ-கு-க-ம்) ஞானதிருஷ்டியிலிருந் துச்சரித்தவகாரநாதமானது வெளிப்பட்டுப் பிராணநாதன் சரீரமுழுதுநிறைந்து சத்திக்குஞ்சமயத்தி லிரேசகக்கிரமத்திற் சிதாகாயத்திற் பிராணநிறைந்திதயத்துண்டான ஞானக்கினியாற் சரீரமுழுது மெரித்ததென்பதாம். (சஉ)

(அ-கை.) இ-து. பிரணவத்தினிரண்டாங்கூறுனஉகாரமுச்சரித்தல். (கவி) அவ்வவத்தைவேண்டளவுநிகழ்ந்ததன்றேயடையோகத்தாலல்லவடையோகந்தான், வெவ்விடர்நல்குவதன்றேவதற்குப்பின்புவியனோங்காரத்தினதுவேற்றுக்கூறு, தவ்வலறச்சமநிலையாமவதரத்திற்சலனமிலாக்கும்பகப்பேர்தரிக்கப்பட்ட, வெவ்வமுறுகிரமமுளதானதன்றேயியம்பியவிப்பிராணன்களெல்லாற்றிற்கும் .... *

(இ-ள்.) அவ்வவத்தை - அந்தரேசகாவத்தையானது—வேண்டளவும்- வேண்டியமட்டும்—நிகழ்ந்தது - பிரகாசித்ததேயன்றி — அடையோகத்தாலல்ல - அடையோகத்தினலல்லவாம்—அடையோகந்தான்- அடையோகமானது—வெவ்விடர்நல்குவதன்றே - கொடியதுன்பத்தைக்கொடுக்கின்றதல்லவா—அதற்குப்பின்பு - அதன்பின்பு—வியனோங்காரத்தினது - பெருமைபொருந்தியபிரணவத்தினுடைய — வேற்றுக்கூறு - இரண்டாவதாகியவுகாரத்மகமானபங்கு—தவ்வலற - தடையில்லாமலிருக்கின்ற—சமநிலையாமவதரத்தில் - சமநிலையானவவசரத்தில்—சலனமிலா - அசைவில்லாத—கும்பகப்பேர் - கும்பகமென்னும்பெயரை — தரிக்கப்

பட்ட - இடப்பட்ட—எவ்வமுறுகிரமம் - தனித்தகிரமமானது—இயம்பியவிப்பிராணன்களெல்லாற்றிற்குமுளதானது-கூறுமிந்தபிராணவாயுவானசகலத்திற்குமுண்டானது. எ-று. .. (௬௩)

(அ-கை) இ-து. (கவி) புறத்தகத்துங்கீழ்மேல்திக்காகாசத்திற்புரிந்தசையாப்பிராணன்கள் புரணமாகித், துறத்துருத்தியிடைதடைப்பட்டனபோனின்று தோன்றிமுதலேயுடலைச் சுட்டவங்கி, திறத்தவிடிபோற்கணத்திலவிந்ததன்றே நீகாரவெளிறெனவெண்ணீருயங்க, முறத்தெரிந்ததாலதற்கேயுடலென்பெல்லாமொழுங்காகத்தோன்றிநரம்புடனேநின்ற.*

(இ-ள்.) புறத்து-புறம்பிலும்—அகத்தும் - உள்ளிலும்—கீழ்-கீழிலும்—மேல்- மேலிலும்—திக்கு-திசைகளிலும்—ஆகாசத்தில்-ஆகாயத்திலும்—புரிந்தசையா-முயற்சித்தசையாத—பிராணன்கள்-பிராணவாய்வுக்குள்ளானவை—புரணமாகி - பூரணமாகி—துறத்துருத்தியிடை-குவித்திருக்கின்றதுருத்தியினிடத்தில்—தடைப்பட்டனபோல்-தடைபட்டவைபோல—நின்று-நிலையாயிருந்து—தோன்றி- உண்டாகி—முதல்-முதன்மையாக—உடலைச்சுட்டவங்கி - சரீரத்தையெரித்தவக்கினியானது—திறத்தவிடிபோல்-ப்ரகாசத்தினையுடையவிடியைப்போல—கணத்திலவிந்தது-க்ஷணநேரத்திலணைந்தது—நீகாரவெளிறென - பனியினதுவெண்மையைப்போல—அங்கம்வெண்ணீருய்-சரீரமானதுவெண்ணீருகி—உறத்தெரிந்ததால்- நன்றாகத்தெரிந்தபடியினுல்—அதற்கு-அச்சரீரத்துக்கு—உடலென்பெல்லாம்- சரீரமுமஸ்திகளனைத்தும்—ஒழுங்காகத்தோன்றிநரம்புடனேநின்ற-வரிசையாகத்தோற்றிநரம்புகளுடனிருந்தது. எ-று. (௬௪)

(அ-கை.) இ-து. (கவி) சுகமாயகருப்பூரப்பாயறன்னிற் றுயில்வதுபோலெலும்பு நிரைதோன்றிற்றன்றே, மிகமோதுபவனத்தாலந்தநீறு விசைந்தெழுந்துகணப் போதில் விசும்பு சூழ்ந்த, திகழ்வானசரற்காலந் தன்னின்மேகஞ் செறிபனிபோ லோரிடத்திற்சென்றுசேர்ந்து, விகலாதவிவ்வவத்தைவேண்டுமட்டுமியலோங்காரத் திரண்டாங்கிரமத்தெய்த .... *

(இ-ள்.) சுகமாய - சுகமாயிருக்கின்ற—கருப்பூரப்பாயறன்னில் - கருப்பூரசயனத்தில்—துயில்வதுபோல் - நித்திரைசெய்வதுபோல—எலும்புநிரைதோன்றிற்று-அஸ்தியின்வரிசைதோற்றினது—மிகமோதுபவனத்தால் - மிகவுமடிக்கின்றகாற்றினுல்— அந்தநீறு - அந்தநீருனது—விசைந்தெழுந்து - வேகமாகக்கிளம்பி — கணப்போதில் - க்ஷணநேரத்தில்—விசும்புசூழ்ந்த - ஆகாயத்தைசசுற்றிக்கெண்டது — திகழ்வானசரற்காலந்தன்னில் - ப்ரகாசமாகியசரற்காலத்தில் — செறிமேகப்பனிபோல் - செறிந்தபனிமேகத்தைப்போல — ஓரிடத்திற்சென்றுசேர்ந்த- ஓரிடத்திற்போய்ச்சேர்ந்தன—இகலாதவிவ்வவத்தை- எதிரில்லாதவிந்தவவத்தையை—வேண்டுமட்டும் - வேண்டுகிறபரியந்தம்— இயலோங்காரத்து - இயல்பையுடையபிரணவத்தின்—இரண்டாங்கிரமத்தெய்த - இரண்டாவதானகிரமத்திலடைய. எ-று. (இ - ௫ - ௧ - ம்) இரண்டாவதான வுகாரநாதமானது சமமாய்நிறைந்து பிராணன்கும்பகமாய்ச் சரீரமுழுதுநிறைந்தக்கினியையவித்து வெண்ணீறுவடிவமா யஸ்திநரம்புசாடை தோன்றச்செய்து அந்நீற்றையெழுப்பிச் சிதாகாயத்திற் சேர்த்ததென்பதாம் .... (௬௫)

(அ-கை.) பிரணவத்தின்மூன்றுங்கூறுனமகாரமுச்சரித்தல். (கவி) அவத்தையிது நிகழ்ந்ததடையோகத்தன்றுலடையோகம்பேரிடரையளிப்பதன்றே, வவற்றினிற் பின்பிரணவத்தின்மூன்றுங்கூறு யமையுமுப சாந்திதருமவதரத்தி, லுவப்புறுபூர ணத்தாலேபூரகப்பேருளகிரமம்பிராணனுக்குண்டாயிற்றன்றே, யுவத்திரமிலாவத் தவவதரத்திலுயிரெல்லாமுணர்வினமுதத்துட்புக்க .... *

(இ-ள்.) இதுவவத்தைநிகழ்ந்தது - இந்தவவத்தைப்ரகாசித்தது—அடையோகத்தன்று - அடையோகத்தினுலல்ல—அடையோகம் - அடையோகமானது—பேரிடரையளிப்பதன்றே-மகாதுன்பத்தைக்கொடுக்கின்றதல்லவா—அவற்றினிற்பின் - அதற்குப்பின்பு—பிரணவத்தின்-பிரணவத்தினது—மூன்றுங்கூறுய்-(மகாராத்மகமான)மூன்றுங்கூறுகி—அமையுமுபசாந்திதரும்-அமைவானவுபசாந்தத்தைக்கொடாநின்ற—அவதரத்தில் - அவசரத்தில்—உவப்புறுபூரணத்தால்-பொலிவுள்ளபூரணத்தினுல் — பூரகப்பேருளகிரமம் - பூரகமென்னுநாமமுள்ளகிரமமானது—பிராணனுக்குண்டாயிற்று - பிராணவாய்வுகளுக்குண்டானது—உவத்திரமிலா-வருத்தமில்லாத—அந்தவவதரத்தில் - அந்தச்சமயத்தில் — உயிரெல்லாம் - பிராணன்களனைத்தும்—உணர்வினமுதத்துட்புக்க - அறிவினமுதத்துட்போயின. எ-று .... (௬௬)

(அ-கை.) இ - து. (கவி) உருபனிதோய்ந்தாவொப்பவதிசீதத்தை யுற்றபிராணன்களெலாமொழுங்கினுலே, ககனமுறுபுகைதன்கா ராகுமாபோற் ககனநடுவுறமதியாய்க் கலையின்கூட்ட, மிகவுநிறைந்தந்தமதிமண்டலத்தில்வியன்சுதைத்தாரையையுயிர்கண்மேவப் பெற்ற, திகழ்விசும்பினின்றிழிந்தவமுததாரைசேடமாமுடனீற்றிற்சென்றுவீழ்ந்த. .. *

(இ-ள்.) உகுபனிதோய்ந்தாலொப்ப - சொரிகின்றபனியிற்குளித்ததற்குச்சமானமாக—அதிசீதத்தை - அதிகசீதளத்தை—உற்றபிராணன்களெலாம் - பொருந்தியபிராணவாய்வுகளனைத்தும்—ஒழுங்கினால் - முறைமையினால்—ககனமுறுபுகை - ஆகாயத்திற்பொருந்தியதூமமானது—தண்காராகுமாபோல் - குளிர்ந்தமேகமானதுபோல—ககனநடுவுற - ஆகாயமத்தியிற்பொருந்த—மதியாய் - சந்திரமண்டலமாய்—கலையின்கூட்டமிகவுநிறைந்து - கலையின்கூட்டமானதுமிகவுநிறைந்திருக்கின்ற—அந்தமதிமண்டலத்தில் - அச்சந்திரமண்டலத்தில்—வியன்சுதைத்தாரையை - பெருமைபொருந்தியவமுததாரையை—உயிர்கண்மேவப்பெற்ற - பிராணன்கள்பொருந்தப்பெற்ற—திகழ்விசும்பினின்று - ப்ரகாசிக்கின்றவாகாயத்திலிருந்து — இழிந்தவமுததாரை - இறங்கியவமுததாரையானது — சேடமாமுடனீற்றின் - மிஞ்சினசரீரச்சாம்பலில்—சென்றுவீழ்ந்த - போய்விழுந்தது. எ-று .... (௪௭)

(அ-கை.) இ-து. (கவி) அரன்சிரதின்றிழியமுதகங்கைபோன்றவமுததாரையினாலேயம
லமாகிக், கரங்களொருநான்குடன்வெண் மதித்தேசாகிக் கருணைமால்வடிவென்னக்காண
லாகி, யுரங்கிளருத்தாலகன்மெய் தோன்றிற்றன்றே யுயரமுதமயமான வுயிர்களெல்லாங்,
குரம்பையதுதனைநிறைத்துச்சூழ்ந்துள்ளானகுண்டலிசத்தியைப்பூசைகுயிற்றிநின்ற. *

(இ-ள்.) அரன்சிரதின்றிழி - சிவனதுசிரசிலிருந்திறங்காநின்ற—அமுதகங்கைபோன்ற - தேவகங்கையையொத்த—அமுததாரையினால் - அமுதவருடத்தினால்—அமலமாகி - களங்கமில்லாததாய்—கரங்களொருநான்குடன் - ஒப்பற்றசதுர்ப்புயங்களோடும்—வெண்மதித்தேசாகி - வாலிதானசந்திரப்ரகாசமாய்—கருணைமால்வடிவென்ன - கிருபையையுடையதிருமால்வடிவத்தைப்போல—காணலாகி - காணத்தக்கதாய்—உரங்கிளருத்தாலகன் - பலமாகப்ரகாசிக்கின்றவுத்தாலகமுனியின்—மெய்தோன்றிற்று - சரீரந்தோன்றினது — உயரமுதமயமான - மேலானவமுதமயமாகிய—உயிர்களெல்லாம் - பிராணன்களனைத்தும்—குரம்பையதுதனை - அந்தச்சரீரத்தை—நிறைத்து - நிறைவித்து—சூழ்ந்து - வியாபித்து—உள்ளானகுண்டலிசத்தியை - உள்ளேயிருக்கின்றகுண்டலிசத்தியை—பூசைகுயிற்றி - ஆராதனைசெய்து—நின்ற - (சுற்றிநின்றன) எ-று

(இ-கு-க-ம்) உபசாந்திமயமான மகாரநாதமானது நிறைந்துபிராணன்பூரகத்தினால் வாய்வுகளறிவின் முகத்திற்செல்லக் குளிர்ச்சியடைந்த பிராணவாய்வுகள் சிதாகாயத்திற் கலைகணிறைந்தஞானசந்திரனுபதினுண்டானவமுதமிறங்கித் தேகத்தைநனைக்கச்சுவேதவடிவமா யதிலமுதமயமானபிராணனிறைந்து குண்டலிசத்தியைப் பூசைசெய்ததென்பதாம் .... (௪௮)

(அ-கை.) பஞ்சபூதகாரியமானவுடலைப்பிரணவத்தாற்கெடுத்து ஞானவடிவமாக்கிப்
பாகியவிடயங்களையு மதிற்செல்லு மனத்தையு மப்படியே கெடுக்கத்தொடங்கல்.
(கவி) இத்திறத்திற்பங்கயவாதனத்திருந்தோனியாக்கைநிலையழியாம லியற்றிப்பின்
னர், மத்தமுறுபிரமரம்போற்சுழலுநெஞ்சைவன்பினாற்றகைவுற்றான்மௌனியாகி,
மெத்துபிராணாபான வேகநோக்கி மெல்லெனவுண் டாக்கினன்வல் விடயநின்று,
தத்துபொறிகளைவருந்திவேறுசெய்தான்சற்றுமறப்புறப்பரிசந்தள்ளினானே..... *

(இ-ள்.) இத்திறத்தில் - இப்ரகாரத்தில்—பங்கயவாதனத்திருந்தோன் - பத்மாசனத்திலிருந்தவுத்தாலகமுனியானவர்—ஆக்கைநிலையழியாமல் - தேகஸ்திதிகெடாமல்—இயற்றி - செய்து—பின்னர் - பின்பு—மத்தமுறுபிரமரம்போல் - மதமுள்ளவண்டைப்போல — சுழலுநெஞ்சை - சுழலாநின்றமனதை—வன்பினாற்றகையுற்றான் - பலத்தினாற்றடுத்தான்—மௌனியாகி - மௌனத்தையுடையவனாய்—மெத்துபிராணாபானவேகநோக்கி - மிருதுவானபிராணாபானன்களுடையவேகத்தை (முகத்திற்) பார்த்து — மெல்லெனவுண்டாக்கினன் - சவுமியமாகச்செய்தான்—வல்விடயநின்றுதத்துபொறிகளை - வலியவிஷயத்தினின்றுதாவுமிந்திரியங்களை — வருந்திவேறுசெய்தான் - வருத்தப்பட்டுவேறுபடுத்தினான்—சற்றுமற - எவ்வளவேனுமில்லாமல்—புறப்பரிசந்தள்ளினான் - புறம்பிலுள்ளவிஷயத்தைநீக்கினான். எ-று .... (௪௯)

(அ-கை) மூலவாசன்முதல்நவத்துவாரபந்தனஞ்செய்து அந்தர்விஷயங்களைத்தள்ளி
மனதையிதயாம்பரத்திலடக்கல். (கவி) பற்றறுதிண்ணியமதியோ னுள்ளேதோன்
றும்பரிசமெலாந்தள்ளுகின்றபார்வையாலே, யற்றனவாக்கினன்மூல வாயில்செம்
மியங்கத்தொன்பதுவாயிலனிலமெல்லாங், குற்றமறமுகமடைத்தாற்புறத்துவாரங்
கும்பத்துக்கடைபடல்போற்குறித்தடைத்தா, னுற்றலயமெனுங்குணத்தைச்சேர்ந்
தநெஞ்சையுயரிதயவாகாயத்தொடுக்கினானே .... *

(இ-ள்.) பற்றறு - பற்றற்ற—திண்ணியமதியோன் - திடமுள்ளவறிவையுடையவுத்தாலகன்—உள்ளேதோன்றும் - உள்ளத்திற்றோற்றுகின்ற—பரிசமெலாம் - விஷயங்களனைத்தையும்—தள்ளுகின்றபார்வையால் - நீக்குகின்றதிருஷ்டியினால் — அற்றனவாக்கினன் - இல்லாததாகச்

செய்தான்—மூலவாயில்செம்மி - மூலவாசலையடைத்து—அங்கத்தோன்பதுவாயல் - சரீரத்தி னவத்துவாரங்களிலுள்ள—அனிலமெல்லாம் - வாய்வுகளனைத்தையும் — குற்றமறுசுமடைத் தால்- குற்றமின்றிமூகவாசலையடைத்தால்—புறத்துவாரங்கும்பத்துக்கடையடல்போல்- புறத் துள்ளதுவாரங்கடத்துக்கடைபடுகின்றதுபோல — குமித்தடைத்தான் - மதித்தடைத்தான்— உற்றலயமெனுங்குணத்தை - பொருந்தியவிறந்ததென்னுந்தன்மையை —சேர்ந்தநெஞ்சை- சார்ந்தமனதை—உயரிதயவாகாயத்தொடுக்கினன் - மேலானவிதயாகாயத்திலடக்கினன். எ-று

(அ-கை) இதயாம்பரத்தினின்று மனோசங்கற்பமியாவையுங்கெடுத்தல் (கவி.) உரத்தமத கரியையுபாயத்தால்விந்தத்துட்குழியிற்சேர்ப்பதுபோலொடுக்கிநெஞ்சைச், சரற் ககனம்போனிமலதெளிவைச்சேர்ந்துதள்ளினன்பற்றியாய்தன்மையாலே, வரத்து டையவிகற்பமெல்லாமீளமீள வருவனவேண்டினபடியே வந்துதோன்றப், பரப்புறு தோற்றங்களைவன்னெஞ்சான்மாய்த்தான்பகைவாவாளாற்சூரன்படுப்பதேபோல்

(இ-ள்.) உரத்தமதகரியை - பலத்தையுடையமதயானையை—உபாயத்தால்- தந்திரத்தி னால்—விந்தத்துட்குழியில் - மலையிலுள்ளபடுகுழியில்—சேர்ப்பதுபோல்-சேர்ப்பதுபோல— நெஞ்சையொடுக்கி - மனதையடக்கி—சரற்ககனம்போல்- சரற்காலத்தாகாயம்போல—நிமல தெளிவைச்சேர்ந்து - நிருமலமானதெளிவையடைந்து—பற்றியாய்தன்மையால்- ப்ரதிபலிக் கின்றகுணத்தினால் — வரத்துடையவிகற்பமெல்லாம் - உதித்துக்கொண்டிருக்கின்றவிகற்பங்க ளியாவையும்—தள்ளினன் - நீக்கினன்—மீளமீள - திரும்பத்திரும்ப—வருவன - வரத்தக்கன —வேண்டினபடியே - வேண்டியப்ரகாரமே—வந்துதோன்ற-வந்துண்டாக—பகைவா- சத் துருக்களை— வாளால் - கத்தியினால் — சூரன்படுப்பதேபோல் - வீரன்கொல்லுவதுபோல — வன்னெஞ்சால் - கொடியமனதினால்— பரப்புறுதோற்றங்களை - விரிந்தவிஷயங்களை—மாய்த் தான் - கெடுத்தான். எ-று .... (ருக)

(அ-கை.) சமாதியின்கண்தோற்றினவைத்தவத்தையையுங்கெடுத்தல். (கவி) விகற்பமெலா மிறத்தலுமேயிதயவிண்ணில்விவேகபானுவைமறைத்துவிரிந்தகங்குல், சகத்தினினுளஞ் சனத்திற்பார்த்தபோதே தன்னுள்விவேகத்தாலே தவிர்த்தானத்தை, யகத்திருணன்றாய்க் கெடலுஞ் சுடர்வந்தெய்தவம்முனிவனதனையுங்கண்டகற்றிமாய்த்தா, னிகழ்ச்சியொளி யகலுதலுஞ்சுழன்றுநெஞ்ச நிசியினடுப்போலுறக்கநேர்ந்ததன்றே .... *

(இ-ள்.) விகற்பமெலாமிறத்தலும் - விகற்பங்களனைத்துமிறந்தவுடன்— இதயவிண்ணில்- இதயாம்பரத்தில்—விவேகபானுவை - விவேகசூரியனை—சகத்தினினுளஞ்சனத்தின்- உலகத்தி லுள்ளமையைப்போல — மறைத்துவிரிந்தகங்குல் - மூடிப்பரந்தவந்தகாரத்தைப்போல— பார்த்தபோது - பார்த்தவப்பொழுதே — தன்னுள்விவேகத்தால் - தனக்குள்விளங்கியவிவே கத்தினால்—அத்தைத்தவிர்த்தான் - அவ்விருளைக்கெடுத்தான்— அகத்திருள் - உள்ளத்தின்கண் ணுள்ளவிருளானது—நன்றாய்க்கெடுதலும் - நன்றாய்நசித்தமாத்திரத்தில் — சுடர்வந்தெய்த- ப்ரகாசம்வந்தடைய—அம்முனிவன் - அந்தமுனிவன்—அதனையுங்கண்டு- அவ்வொளியையும் பார்த்து—அகற்றிமாய்த்தான் - நீக்கிக்கெடுத்தான்—நிகழ்ச்சியொளியகலுதலும்- ப்ரகாசமுள் ளவொளிநீங்குதலும்—நெஞ்சஞ்சுழன்று- மனஞ்சுழல்வுற்று— நிசியினடுப்போலுறக்கநேர்ந் தது - அர்த்தசாமம்போனித்திரையடைந்தது. எ-று .... (ருஉ)

(அ-கை.) இ-து. (கவி) போகாததுயிலினையுமறுத்தான்றூக்கம் போக்குதலுமா காசபோதம்வந்த, தாகாசபோதமழிந்திடலும்வல்லே யவன்மனமோகஞ்சேர்ந்த தந்தமோக, நோகாமன்மனத்தினைவிட்டேகுமாறுநூக்கினன்பேரிதயநோக்குமிக் கோ, னேகாதவிரவுதருமந்தகார மிவ்வுலகினின்றகற்றுமிரவிபோல .... *

(இ-ள்.) போகாததுயிலினையும்- நீங்காதநித்திரையையும்—அறுத்தான்- கெடுத்தான்— தூக்கம்போகுதலும் - நித்திரை நீங்கவும்—ஆகாசபோதம்வந்தது - சூனியவாகாசஞானம்வந் தது—ஆகாசபோதமழிந்திடலும் - (அவ்) வாகாயஞானமழிந்தமாத்திரத்தில்—அவன்மனம்- அவன்மனது—வல்லே - சீக்கிரமாக—மோகஞ்சேர்ந்தது - மோகத்தையடைந்தது — அந்த மோகம் - அம்மோகமானது—நோகாமல்-வருந்தாமல்—மனத்தினைவிட்டேகுமாறு-மனதை விட்டுநீங்கும்படி—பேரிதயநோக்குமிக்கோன் - மேலானவாநந்ததிருஷ்டிமிகுந்தவுத்தாலக முனியானவர்—ஏகாத- நீங்காத—இரவுதருமந்தகாரம் - இராவைக்கொடுக்கின்றவிருளை—இவ் வுலகினின்று - இந்தவுலகத்தின்கணின்று— அகற்றுமிரவிபோல- நீக்குகின்றசூரியனைப்போல —நூக்கினன் - தள்ளினன். எ-று. (இ-உ-க-ம்) சமாதியின்மனோவிகற்ப நீங்கினபின்னந்தகார ந்தோன்றஅதனைஞானதிருஷ்டியாற்கெடுத்தபின்ப்ரகாசந்தோன்றஅதனைச்சுயம்ப்ரகாசத்தாற் கெடுத்தபின்சுழுத்திதோன்றஅதனை நனவிற்சுழுத்தியாற்கெடுத்தபின் சூனியாகாயபோதந்தோ

ன்ற அதைச்சிதாகாயத்தாற்கெடுத்தபின் மூலாங்காரமான மோகந்தோன்ற அதைப்பரிபூரண திருஷ்டியாற்கெடுத்ததென்பதாம் .... (௩௩)

(அ-கை.) மனஞ்சைதன்யத்தையடைதல். (கவி) அன்னகாலையிலிருள்சுடர் துயில் மயக்கனைத்தையுமறுத்தோட்டி,மன்னுமோரவத்தையையடைந்தொருகணமுள்ளுருத் தமாறியதுள்ள, மின்னதீர்ந்துடனேயனைத்துருவமாமறிவையெய்தியதன்றே, நன் னெடுங்கரைதடுக்கநின்றெதிர்த்துமுற்றலநிறைந்திடுநீர்போல்..... .... *

(இ-ள்.) அன்னகாலையில் - அத்தன்மையானகாலத்தில் — இருள் - இருட்டும்—சுடர்-ப்ரகாசமும்—துயில் - நித்திரையும்—மயக்கு - மோகமுமுதலிய — அனைத்தையுமறுத்தோட்டி-சகலத்தையுமறுத்துத்துரத்தி—மன்னும் - நிலைபெற்ற—ஓரவத்தையையடைந்து-ஒப்பற்ற (நிருவிகற்ப) சமாதியையடைந்து— ஒருகணம் - ஒருக்ஷணநேரம்—உள்ளம் - மனமானது—உருத்தமாறியது - விஸ்ராந்தியடைந்தது — இன்னதீர்ந்துடன் - துன்பம்விடுபட்டவுடன்—அனைத்துருவமாமறிவை - சகலவடிவங்களாய்ப்ரகாசிக்கின்றஸ்வரூபஞானத்தை— நன்னெடுங்கரைதடுக்க- நன்மைபொருந்திய நீண்டவணையைத்தடுக்க—நின்றெதிர்த்து-நின்றெதிர்வுற்று—முற்றலநிறைந்திடுநீர்போல் - முன்னுள்ளவிடத்திலிறைகின்றசலத்தைப்போல — எய்தியது-அடைந்தது. எ-று. முதலியவென்றதனால் முன்னடுக்கிலுள்ள ஆகாயபோதமுங்கூட்டுக.(௩௪)

(அ-கை.) மனஞ்சின்மாத்திரமாதல். (கவி) விஞ்சுநீள்பகற் பரிசயத்தாலுந்தன்மெய்யறிவுணர்வாலு, நெஞ்சுசின்மயமடைந்ததாலிரணிய நிகழ்சிலம்பாமாபோல், வஞ்சவன்மனத்தன்மைபோய்ச் சின்மயமருவியமனந்திர, செஞ்செவேவல்லைவேற்றுமையானதாற்சேற்றினுட்குடமென்ன.... .... *

(இ-ள்.) விஞ்சுநீள்பகற்பரிசயத்தாலும் - மிகுந்தவெகுகாலப்பழக்கத்தினாலும்— தன்மெய்யறிவுணர்வாலும் - தனதுண்மைஞானத்தினனுபவத்தினாலும்—இரணியம்-தங்கமானது—நிகழ்சிலம்பாமாபோல்-ப்ரகாசிக்கின்றநூபுரமானதுபோல—நெஞ்சுசின்மயமடைந்தது-மனதுஞானாகாரமடைந்தாது—வஞ்சவன்மனம் - வஞ்சகமும்வலிமையுமுள்ளமனதின்—தன்மைபோய் - குணநீங்கி—சின்மயமருவியமனம் - சின்மயத்தையடைந்தமனமானது— திரச்செஞ்செவே - மிகவுஞ்செவ்விதாக—சேற்றினுட்குடமென்ன-பங்கத்தினுள்ளிருந்தகடத்தைப்போல—வல்லைவேற்றுமையானது - சீக்கிரமாகச்சித்தானது. எ-று ....(௩௫)

(அ-கை.) முனிபூரணஞானத்தையடைதல்(கவி) தங்குகாட்சிவிட்டமலமாய்ஞானத்தின்சமமடைந்ததுபோதம், பொங்குவாரிதிதிரைமுதற் பகிர்ச்சிபோய்ப்புனல்சமமடைந்தன்ன, வெங்குமோர்மதியாயறிவுற்றவனீறில்போகத்தெண்ண, மங்கியாண்டண்டம் பரித்துயர்ந்தமலசின்மயவிசும்புருவானான் .... *

(இ-ள்.) தங்குகாட்சிவிட்டு - தங்காநின்ற (விஷயக்) காக்ஷியைவிட்டு—அமலமாய்-நிருமலமாய்— ஞானத்தின்சமம் - சிற்சாமானியத்தை — பொங்குவாரிதி - பொங்காநின்றசமுத்திரசலமானது —திரைமுதற்பகிர்ச்சிபோய் - அலைமுதலானபகுப்புகணீங்கி—புனல்சமமடைந்தன்ன - சலமானதுசாமானியமடைந்ததுபோல —போதம் - ஞானமானது—அடைந்தது-சேர்ந்தது—எங்குமோர்மதியாய்-எவ்விடத்திலுமொப்பற்றஞானமாய் —அறிவுற்றவன்-ஞானத்தையடைந்தவுத்தாலகமுனியானவன்—ஈறில்போகத்தெண்ணமங்கி- அளவற்றபோகசிந்தனைவிட்டு—ஆண்டு - அவ்விடத்தில்—அண்டம்பரித்து - அண்டங்களைத்தாங்கி—உயர்ந்து- மேலானவியாபகமாய்—அமலம்-நிருமலமான—சின்மயவிசும்புருவானான்-ஞானாகாயவடிவமானான்.

(அ-கை.) முனியாநந்தசாகரமாய்ச்சத்தாசாமானியமாதல். (கவி) அவ்விடத்தினிற் காண்பதுகாட்சியற்றநந்தமாநல்லின்பஞ்,செவ்வியாநந்தமுற்றனனமுதமார்தெண்கடற்குளித்தன்ன, மெய்விடக்கழன்றதிதனுமொருதலமேவினன்சதாநந்தப்,பௌவமாயினனெங்கணுமொத்தசற்பாவமேவடிவானான்..... .... *

(இ-ள்.) அவ்விடத்தினில் - அந்தச்(சிதாகாரமான)விடத்தில்—காண்பது- திருஸ்யமும்—காட்சி- தரிசனமும்—அற்று- இல்லாமல்—அநந்தமாம்-அளவில்லாததாகிய—நல்லின்பம்-பரமசுகத்தையுடைய —செவ்வியாநந்தம் - செவ்வையான(வனுப)வாநந்தத்தை—அமுதமார்தெண்கடல் - அமுதநிறைந்ததெள்ளியசமுத்திரத்தில் — குளித்தன்ன - முழுகினதுபோல—உற்றனன் - பொருந்தினன்—மெய்விடக்கழன்றதிதனுய்—உண்மைதவிர(மற்றவை)நீங்கியநிதத்தன்மையையுடையவனாய்—ஒருதலமேவினன் - ஒப்பற்றஞானபதஞ்சேர்ந்தான் — சதாநந்தப்பௌவமாயினன் - சதாநந்தசாகரமானான்—எங்கணுமொத்த— எங்குநிறைந்த - சற்பாவமேவடிவானான்—சத்தாசாமானியமேவடிவமானான். எ-று .... (௩எ)

(அ-கை.) முனிசிதானந்தவயிக்கியமாய்விளங்குதல். (கவி) அந்தணன்றனதறிவெனு மன்னமாநந்தமாநிலையோடை, வந்தமர்ந்தது சரற்ககனத்திலேவயங்குமாமதியென்ன, வுந்துகாற்றிலாவிளக்கெனவோவியத்துருவெனத்திரையில்லாச், சிந்துவென்ன நீர்கருக்கொண்டுபொழியலாச்சேண்முகிலெனநின்றான்...................................... ❋

(இ-ள்.) அந்தணன்றனது - உத்தாலகனென்னும்பிராமணனுடைய — அறிவெனும் - அறிவென்கின்ற—அன்னம் - அமிசமானது—ஆநந்தமாநிலையோடை - ஆநந்தமாகியநிலையானதடாகத்தில்—வந்தமர்ந்தது - வந்துபொருந்தினது—சரற்ககனத்தில் - சரற்காலத்தாகாயத்தில்—வயங்கும் - ப்ரகாசிக்கின்ற—மாமதியென்ன - பூரணசந்திரனைப்போலவும்—உந்து - அடிக்கின்ற—காற்றிலாவிளக்கென - காற்றில்லாததீபத்தைப்போலவும்—ஓவியத்து - சித்திரத்தினது—உருவென - வடிவத்தைப்போலவும்—திரையில்லா - அலையில்லாத—சிந்துவென்ன - சமுத்திரத்தைப்போலவும்—நீர்கருக்கொண்டு - சலத்தைச்சூலாகக்கொண்டு—பொழியலா - வருஷியாத—சேண்முகிலென - ஆகாயத்திலுள்ளமேகத்தைப்போலவும்—நின்றான் - (ஆத்மாவிற்றிரமாயிருந்தான். எ-று. (இ-கு-க-ம்) ஸ்வாநுபவமடைந்த கிரமங்களைவிபரமாயறிவித்ததாம். (௫௮)

(அ-கை.) சித்தர்களும்தேவர்களும்முனியைப்பரிசோதித்தல். (கவி) இந்தமிக்கபேருலகினிற்றற்பதத்திருக்குமம்முனியைக்கண், டந்தரஞ்செறிசித்தர்விண்ணவர்குழு வற்புதப்பலபேரும், வந்துசுற்றினரரம்பையர்நிரம்பினர்வாசவன்றனிமூதூர், தந்தளிப்பவங்கவனவையனைத்தையுந்தள்ளினன்விருப்பின்றி............................. ❋

(இ-ள்.) இந்தமிக்கபேருலகினில் - இந்தமிகுந்தபெரிதானவுலகத்தில்—தற்பதத்திருக்கும் - பிரமபதத்திலிருக்கின்ற — அம்முனியைக்கண்டு - அந்தவுத்தாலகமுனியைப்பார்த்து—அந்தரஞ்செறி - ஆகாயத்தினெருங்கிய—சித்தர் - சித்தர்(குழுவும்)—விண்ணவர்குழு - தேவர்குழுவும்—அற்புதப்பலபேரும் - (இன்ன)மதிசயமுள்ளவநேகர்களும்—வந்துசுற்றினர் - வந்துசூழ்ந்தார்கள்—அரம்பையர்நிரம்பினர் - தேவஸ்திரீகணிறைந்தார்கள்—வாசவன் - தேவேந்திரன்—தனிமூதூர் - ஒப்பற்றதெய்வலோகத்தை — தந்தளிப்ப - தயவோடுங்கொடுக்க — அவன் - அவ்வுத்தாலகமுனியானவர்—அங்கவையனைத்தையும் - அவ்விடத்திலுள்ளவச்சகலத்தையும்—விருப்பின்றித்தள்ளினன் - விருப்பமில்லாமனீக்கினான். எ-று .... (௫௯)

(அ-கை.) முனியானவராநந்தபோதமாய்விளங்குதல். (கவி) அலங்கன்மாதரிங்கிதங்களைச்சைசவத்தறிகிலானெனச்சற்றுங், கலங்கலாதகெம்பீரமாமதியினன்கடவுள் வான்பேற்றெண்ணம், விலங்கியன்னதன் ஞாநந்தவீட்டிலே மேவினன் மதியாறு, துலங்கியோங்கியவுத்தராயனத்திலேசுடர்விடுகதிரென்ன .... ❋

(இ-ள்.) அலங்கன்மாதர் - மாலையையணிந்தஸ்திரீகள்—இங்கிதங்களை - இங்கிதசங்கனை—சைசவத்து - குழந்தைப்பருவத்தில்—அறிகிலானென - அறியாதவனைப்போல—சற்றும் - எவ்வளவேனும்—கலங்கலாத - கலக்கமில்லாத—கெம்பீரமாமதியினன் - ஆழ்ந்தகருத்தையுடையவுத்தாலகன்—கடவுள்வான்பேற்றெண்ணம் - தேவர்களதுமேலானபோகக்கருத்தை—விலங்கி - நீக்கி—அன்னதன்ஞாநந்தவீட்டில் - அத்தன்மையானதனதாநந்தவீட்டில்—ஆறுமதி - ஆறுமாதம்—உத்தராயனத்தில் - உத்தராயனகாலத்தில்—துலங்கியோங்கிய - ஓங்கிவிளங்கிய—சுடர்விடுகதிரென்ன - ப்ரகாசிக்கின்றசூரியனைப்போல—மேவினன் - பொருந்தினான். எ-று..................... (௬௰)

(அ-கை.) முனியானவராநந்தபோதமாய் விளங்கல். (கவி) மூவராகியமுதல் வருமமரருமொய்த்தசித்தரும்வாழுஞ், சீவன்முத்தியாம் பதமடைந் தருந்தவன் செறியுமாநந்தத்தி, னொவலின்றிய நிறைவினாலாநந்த முதிர்ச்சியாம் பதமுற்று, ளவதானபோராநந்தமதுவிலவ்வறிவினாற்றிகழ்வுற்றான்................................... ❋

(இ-ள்.) மூவராகியமுதல்வரும் - முதன்மையானமும்மூர்த்திகளும்—அமரரும் - தேவர்களும்—மொய்த்தசித்தரும் - நெருங்கியிருக்கின்றசித்தர்களும்—வாழும் - வாழாநின்ற—சீவன்முத்தியாம்பதம் - சீவன்முத்தியானபதத்தை—அடைந்து - பெற்று—அருந்தவன் - அரியதவத்தையுடையவுத்தாலகமுனி—செறியுமாநந்தத்தின் - நிறைந்திருக்கின்றவாநந்தத்தில்—ஒவலின்றியநிறைவினால் - ஒழிதலில்லாதபூரணத்தில்—ஆநந்தமுதிர்ச்சியாம்பதமுற்றான் - ஆநந்தமுதிர்ந்தவதீதபதத்தையடைந்தான்—ஆவதான - ஆவதாகிய—போராநந்தமதுவில் - போராநந்தமுமதுவில்லாததுமாகிய—அவ்வறிவினால் - அந்தஞானத்தினால்—திகழ்வுற்றான் - ப்ரகாசித்தான்.

(அ-கை.) முனியானவராறுமாதம்ஸ்வரூபசமாதியிலிருத்தல். (கவி) ஒருகணஞ்செறிவருடநூறென்னினு முயர்ந்தவப்பதமுற்றோர், வருபவந்தரு மேதுவாய்க்காண்பனமருவுமிவ்விழிமேவார், பெருமையானவிப்பதத்திலுத்தாலகன் பிறைகளோராறுமேலே, யருகுருவகைசித்திபூமியைக்கடந்தமைந்திருந்துணர்வுற்றான்.......................... ❋

(இ-ள்.) ஒருகணம்-ஒருக்ஷணநேரமானாலும்—செறிவருடநூறென்னினும்-நெருங்கிய நூறு வருடமானாலும்—உயர்ந்தவப்பதமுற்றோர் -மேலானவப்பிரமபதத்தைப்பொருந்தினசத்துருக்கள்—வருபவந்தரும்-வாராநின்றசநநத்தைக்கொடுப்பதற்கு— ஏதுவாய் - காரணமாயிருக்கின்ற—காண்பலமருவும்-விஷயங்களையடையப்பட்ட—இவ்விழிமேவார்= இத்திருஷ்டியையவிரும்பார்கள்—பெருமையானவிப்பதத்தில் - மாட்சிமையானவிச்சீவன்முத்தியில்—உத்தாலகன்- உத்தாலகமுனியானவர்—பிறைகளோராறால்-ஆறுமாதங்களினால்—அருகுறுவகை- சமீபத்திற்பொருந்தாதபடி—சித்திபூமியைக்கடிந்து-சுவர்க்காதிபதப்பிராப்தியைநீக்கி—அமைந்திருந்து-(சமாதியிற்)பொருந்தியிருந்து—உணர்வுற்றான்-விழித்துக்கொண்டான். எ-று..... (௬௨)

(அ-கை.) முனியானவர் சித்தர்கள்சோதனைக்குட்படாமை. (கவி) விழித்துநோக்கினன்சித்தரையவர்களுமிக்குயரிவன்றன்னைப், பழிச்சியன்பொடுபகவநீகாண்டியெம்பணிதல்பொன்னுலகத்தி, விழிச்சுமிவ்விமானத்துவந்தேறுதியிந்திரபதத்தின்பங் கழித்தபூமிகளனைத்தினுமில்லதோர்கற்பமப்பயன்றுய்ப்பாய்......... .... *

(இ-ள்.) விழித்து - கண்விழித்து—சித்தரை - சித்தர்கணங்களை—நோக்கினன் - பார்த்தனன்—அவர்களும் - அச்சித்தர்களும்—மிக்குயரிவன்றன்னை - மேலானவிவ்வுத்தாலகமுனியை—அன்பொடும்பழிச்சி - அன்புடன்றோத்திரஞ்செய்து—பகவ - பகவானே — எம்பணிதல் - எமதுவணக்கத்தை—நீகாண்டி - நீர்பாரும்—பொன்னுலகத்தில் - தெய்வலோகத்தில்—இழிச்சும் - கொண்டுபோய்விடும்—இவ்விமானத்து - இத்தெய்வவிமானத்தில்—உவந்தேறுதி- சந்தோஷித்தேறுவாய் —இந்திரபதத்தின்பம் - தேவேந்திரபதத்தின்சுகமானது—கழித்தபூமிகளனைத்தினும்-(அது) நீங்கியவுலகங்களிலெல்லாம்—இல்லது-இல்லாதது—ஓர்கற்பம்-ஒருசற்பபரியந்தம்—அப்பயன்றுய்ப்பாய்-அந்தப்ரயோசனத்தையனுபவிப்பாய். எ-று.......... (௬௩)

(அ-கை) இ-து.(கவி) பகவசெய்தனதவமெலாமிந்திரபதமுறற்பொருட்டேயென்,றகமலர்ந்துரைபன்னியசித்தரையதிதியரொனநோக்கி, முகமலர்ந்துபூசித்தனன்மயங்கலன்முந்துறுபெருஞ்செல்வ, மிகவிரும்பலன்வெறுக்கலன்றிண்ணியோன்விபுதரோகுதிரொன்றான்.

(இ-ள்.) பகவ - பகவானே—செய்தனதவமெலாம் -செய்ததவங்களியாவும்—இந்திரபதமுறற்பொருட்டேயென்று - சுவர்க்கத்தையடையுநிமித்தமேயென்று—அகமலர்ந்து-மனமலர்ச்சியாய்—உரைபன்னியசித்தரை - சொல்லியசித்தர்களை—அதிதியரொனநோக்கி - மகான்களென்றுபார்த்து—முகமலர்ந்துபூசித்தனன்-முகம்விகசித்தாராதனைசெய்தான்—மயங்கலன்-மயங்காதவன்—முந்துறுபெருஞ்செல்வம் - முதன்மையானதேவபோகத்தை — மிகவிரும்பலன் - மிகவும்விரும்பாதவன்—வெறுக்கலன் - வெறுக்காதவன்—திண்ணியோன் - திடமுள்ளவன்—விபுதரோகுதிரொன்றான் - தேவர்களேபோங்களென்றுசொன்னான். எ - று. (இ-சு-க-ம்) அமரர்போகம்விஷமாமெனக்கண்டுஆத்மசுகத்திலமர்ந்திருந்ததாம்...... .... (௬௪)

(அ-கை.) சாதுக்களோடுஞ்சஞ்சரித்தல். (கவி) மொய்த்தகூட்டத்தைவிடுத்தனன்றன்செயன்முயன்றிருந்தனன்போக, பெத்தநீங்கியவிவனையச்சித்தரும்பின்புசின்னாட்பேணி, சித்தம்விட்டனர்தாங்களேயகன்றனர்சீவன்முத்தனுங்கானின், மெய்த்தமாதவரிடங்களிற்சுகத்திலேவேண்டளவுலாவுற்றான்.............. ....*

(இ-ள்.) மொய்த்தகூட்டத்தை - மிகுந்த (தேவர்) குழாத்தை—விடுத்தனன் - விட்டவனாய்—தன்செயல் - தனதுகிரிகையில்—முயன்றிருந்தனன் - முயற்சித்திருந்தவனாய்—போகபெத்தநீங்கிய - போகபந்தநீங்கியிருக்கின்ற—இவனை - இவ்வுத்தாலகனை—அச்சித்தரும்- அந்தச்சித்தர்களும்— பின்புசின்னாட்பேணி - பின்சிறிதுகாலமனுசரித்து — சித்தம்விட்டனர்- (வருவாரென்கின்ற) மனதைவிடுத்தார்கள் — தாங்களேயகன்றனர் - தாங்களேநீங்கினார்கள்—சீவன்முத்தனும் - சீவன்முத்தனாகியவுத்தாலகமுனியும்—கானில்-காட்டிலும்—மெய்த்த-உண்மையான—மாதவரிடங்களில்-மாதவர்களிடத்திலுமிருந்து— சுகத்தில்வேண்டளவுலாவுற்றான்-(நிருவாண) சுகத்தில்வேண்டியமட்டுஞ்சஞ்சரித்தான். எ-று...................... .... (௬௫)

(அ-கை.) சமாதியிலுஞ்சகசத்திலுமாயிருத்தல். (கவி) ஒருதினத்தெல்லையொருமதியெல்லைமற்றோர்வருடத்தெல்லை, பெருகுமாண்டெல்லையெல்லையோரோர்காற் பேதமிற்றியானத்தின், மருவியான்றிடும்விழிக்குமந்நாண்முதல்வருந்தொழில்களிற் சேர்ந்து,நிருவிகற்பமாயினமொருமையாய்நின்றனன்சித்தோடும்........ ...... *

(இ-ள்.) ஒருதினத்தெல்லை - ஒருநாளளவும்—ஒருமதியெல்லை-ஒருமாதமளவும—ஓர்வருடத்தெல்லை—ஒருவருடமளவும்—பெருகுமாண்டெல்லை - அநேகவருடமளவும்— எல்லையோரோர்கால்-அளவாகியவொவ்வொருகாலத்தில்— பேதமிற்றியானத்தில் - அபேதசமாதியில்—மருவி

யொன்றிடும்-கூடிக்கலக்கும்—விழிக்கும்-விழித்துக்கொள்ளும்—அந்நான்முதல்- அந்தநாள் முதற்கொண்டு—வருந்தொழில்கள்-வாரநின்றகிரியைகளில்—சேர்ந்தும்-பொருந்தியும்—நிரு விகற்பமேயாயினன்-நிருவிகற்பசமாதியாகவேயிருந்தான்—ஒருமையாய்-ஒன்றாகி—அவமன ஞ்சம்-அவன்மனது—நின்றது - (ஏகத்துவத்தையடைந்து) நின்றது. எ-று .... (௬௬)

(அ-கை.) சத்தாசாமானியமாயிருத்தல். (கவி) பரந்தவுள்ளத்தினொருமையின்செ றிவினைப்பழகலாற்பெருஞ்சித்து, நிரந்தரித்தெங்குஞ் சமமதாயினன்புவி நிறைவு றும்வெயிலென்னத், நிரந்தருஞ்சித்தினொருமையைநெடும்பகற்செறிபரிசயஞ்செ ய்ய, வரந்தைதீர்ந்தசற்பாவசாமானியமடைந்தனனதனாலே............ *

(இ-ள்.) பரந்தவுள்ளத்தின் - விரிந்தமனதினது — ஒருமையின்செறிவினை - (வஸ்து) வயிக்கியமானகலத்தலை — பழகலால் - பழகுதலினால் — பெருஞ்சித்துநிரந்தரித்து - பூரண ஞானநிரந்தரமாகப்பெற்று—புவிநிறைவுறும் - உலகத்தினிறைந்திருக்கின்ற—வெயிலென்ன- சூரியகிரணத்தைப்போல—எங்குஞ்சமமதாயினன் - எவ்விடத்திலுஞ்சமமாயிருந்தான்—நிர ந்தருஞ்சித்தின் - நிறத்தைக்கொடுக்கின்றசிற்சாமானியத்தின்— ஒருமையை - அயிக்கியத்தை —நெடும்பகல் - அநேககாலம்—செறிபரிசயஞ்செய்ய - மிகுந்தபழக்கஞ்செய்ய— அரந்தை தீர்ந்த - துன்பநீங்கிய — அதனால் - அதினால் — சற்பாவசாமானியமடைந்தனன் - சத்தாசா மானியத்தையடைந்தான். எ - று .... (௬௭)

(அ-கை.) சுயஞ்சித்தாய்விளங்குதல். (கவி) தெரிவதாமிவற்றுதயமத்தமமுனோன் சித்திரரவிபோலப், பெரியதாய்ச்சம வின்பமாம்பதவியின் பேற்றினு லுபசாந்தி, புரியுநெஞ்சினன் பிறவியுமையமும்போய்ச் சரற்ககனம்போல், விரியுநின்மல சா ந்தமெய்யொளிநிறைவேதனவடிவானான்............ *

(இ-ள்.) சித்திரரவிபோல - சித்திராதித்தனைப்போல—தெரிவதாமிவற்று- காண்கின்ற (விந்தச்சகங்)களில்—உதயமத்தமமுனோன் - தோன்றிமறையாதவுத்தாலகன் — பெரியதாய்ச் சமவின்பமாம் - மகத்தாயிருக்கின்றபூரணாநந்தமான — பதவியின்பேற்றினால் - சீவன்முத்தி பதத்தினதுப்ரயோசனத்தினால்—உபசாந்திபுரியுநெஞ்சினன் - உபசாந்தத்தையடைந்தமன தையுடையவனாய்—பிறவியும் - சநநமும் — ஐயமும்போய் - சந்தேகமுநீங்கி— சரற்ககனம் போல் - சரற்காலத்தாகாயம்போல—விரியுநின்மலசாந்தம் - வியாபகமாயிருக்கின்றமாசற்ற வுபசாந்தமான—மெய்யொளிநிறை - உண்மையானஸ்வயம்ப்ரகாசநிறைந்த — வேதனவடி வானான் - ஞானஸ்வரூபமானான். எ - று. (இ-௬-௧-ம்) சமாதியின்கணணின்றாரு சகசத்திற் சத்தாசாமானியமடைந்த கிரமத்தை யறிவித்ததாம்............ (௬௮)

(அ-கை.) உத்தாலகமுனிபெற்றவனுபவஞ்சத்தாசாமானியமென்றுரைத்து அஃதினிலக்க ணஞ்சொல்லத்தொடங்கல். (கவி) வேறு. என்றவசிட்டன்றனை வள்ளலெது சத்தாசாமானிய மென், றன்றுவினவவவனுரைப்பானகன்சிற்சாமானியவடிவா, யொன்றுவொன்றுயில் லாமையுறுபாவனையினுரப்பாலே,தன்றனுள்ளங்கரைந்தேகிற்சத்தாசாமானியமதுவே.*

(இ-ள்.)என்றவசிட்டன்றனை-(இப்படி)யென்றுசொன்னவசிஷ்டமுனியை—வள்ளல்-உதா ரமுள்ளஸ்ரீராமரானவர்—சத்தாசாமானியம்-சத்தாசாமானியமானது—எதுவென்று- யாதெ ன்று—அன்றுவினவ-அப்போதுகேட்க—அவனுரைப்பான் - அந்தவசிஷ்டமுனிசொல்லுவார் —தன்றனுள்ளம்-தன்மனது—ஒன்றுவொன்றுயில்லாமை- விபரீதபாவனையின்றி —அகன்சிற் சாமானியவடிவாய்-வியாபகமானசிற்சாமானியஸ்வரூபமாய்—உறுபாவனையின்- பொருந்திய பாவனையினது—உரப்பாற்கரைந்தேகில் - திடத்தாற்கரைந்துபோகுமானால்—அதுவே - அச் சிற்சாமானியமே—சத்தாசாமானியம்-சத்தாசாமானியமாம். எ-று............ (௬௯)

(அ - கை.) இ-து. (கவி) தேற்றமாங்காண்பனநீங்கிச்சித்தினிடையேசித்திறக்கிற், சாற்றுமுயற்கொம்பெனநொய்தாஞ்சத்தாசாமானியமதுவே, தோற்றும்புறனுள் ளாய்ப்பலவாய்த்துவக்குமாகுமிவையனைத்து, மாற்றியகன்றுமனநிற்கிலதுசத்தா சாமானியமே............ *

(இ-ள்.) சாற்றுமுயற்கொம்பென - சொல்லுகின்றசசவிஷாணத்தைப்போல—தேற்ற மாம் - நிச்சயமாக—காண்பனநீங்கி - திரிஸ்யம்விடுபட்டு—சித்தினிடை - ஆத்மசைதன்யத்தில் —சித்திறக்கில் - விருத்திஞானம்லயமானால்—நொய்தாம் - சொச்சமாகிய — அதுவே - அச் சிற்சாமானியமே—சத்தாசாமானியம் - சத்தாசாமானியமாகும்—தோற்றும்புறன்- தோற்று கின்றபுறப்பொருளும்—உள்ளாய் - உட்பொருளுமாகி— பலவாய் - நாநாவிதப்பொருளுமா கியும்—துவக்குமாகும் - உடல்களுமாகியுமிருக்கின்ற—இவையனைத்துமாற்றி - இச்சகலமுங்

கெடுத்து—அகன்று - நீங்கி—மனநிற்கில் - மனது (சித்நாய்) நிற்குமானால்—அது - அந்தச் சிற்சாமானியமே—சத்தாசாமானியம்-சத்தாசாமானியமாகும். எ-று ... . (எ௰)

(அ-கை.) இ-து (கவி) உன்னுவெதிர்காண்பனவொன்றுமொழியாதியானமையுறப்பென்னத், தன்னாற்றன்பாலிறக்குமெனிற்சத்தாசாமானியமதுவே, மூன்னுமுடல்சேர்முத்தருடலில தாமுத்தரிருவர்க்கு, மெந்நாளினுஞ்சேர்பெருங்கண்ணீதன்பேர்துரியாதிதபதம் .. *

(இ-ள்.) எதிர்காண்பன-நேரேகாணப்பட்டவிஷயங்கள்—உன்னு- நினைக்கப்படாமலும்—ஒன்றுமொழியாது-ஒன்றுந்தவிராமலும்—ஆனமையுறப்பென்ன-கூர்மத்தினவயவத்தைப்போல—தன்னால் - தாமே—தன்பாலிறக்குமெனில் - ஆத்மாவிலிறக்குமேயானால்—அதுவே- அவ்வாத்மாவே—சத்தாசாமானியம் - சத்தாசாமானியமாகும் — மூன்னும் - முதன்மையான — உடல்சேர்முத்தர் - சீவன்முத்தர்களும்—உடலிலதாமுத்தர் - விதேகமுத்தர்களுமான — இருவர்க்கும் - இவ்விரண்டுபேர்களுக்கும்—எந்நாளினும் - எப்போதும்—சேர்பெருங்கண் - சேர்ந்திருக்கின்றபரமதிருஷ்டி—ஈது - இச்சத்தாசாமானியமாம்—இதன்பேர்-இதனுடைய— துரியாதிதபதம் - துரியாதிதபதமாகும். எ-று. (இ-ரு-க-ம்) சுயஞ்சித்தின்மனங்கரைதலும் சித்துக்கரைதலும் வேறுதிருஷ்டிநீங்குதலும் யாவுஞ்சின்மயமாய் விளங்குதலுமாகிய சிற்சாமானியஞ் சதாநந்தமாய்க்கரைந்த சத்தாசாமானியமே துரியாதிதமென்பதாம்...... .. .. (எக)

(அ-கை.) ஞானதிருஷ்டியினருமையையுரைத்தல். (கவி) அறிந்துசமாதியடைந்தோர்க்குமனுபூதியினின்றெழுந்தோர்க்குஞ், செறிந்துதோன்றுமூடர்க்குத்தெரியாதாகுமிப்பெருங்கண், மூறிந்துபிறவியறுஞ்சீவன்முத்தரானசித்தரொலாம், பிறிந்திடார்விண்பயில்காற்றுபெரிதாமண்ணிலிரதமும்போல்......... .... *

(இ-ள்.) அறிந்துசமாதியடைந்தோர்க்கும் - (ஆராய்ந்) தறிந்துசமாதியைப்பெற்றவர்களுக்கும்—அனுபூதியினின்றெழுந்தோர்க்கும் - அனுபூதியிலிருந்ததுவாய்வெளிப்பட்டவர்களுக்கும்—செறிந்துதோன்றும் - நிறைந்துதோற்றுவதாயும்—மூடர்க்கு - மூடர்களுக்கு—தெரியாதாகுமிப்பெருங்கண் - தெரியாததாகியுமிருக்கின்றவிப்பரமதிருஷ்டியானது—மூறிந்து - மூறிவுபட்டு—பிறவியறும் - சநநங்கெடாநின்ற—சீவன்முத்தரான- சீவன்முத்தர்களாகிய—சித்தரொலாம் - ஞானவான்களனைவரும்— விண்பயில்காற்று - அந்தரத்தில்வீசுகின்றவாயுவும் —பெரிதாமண்ணில் - பெரிதாகியபூமியில்—இரதமும்போல் - (அறு) சுவையும்போல—பிறிந்திடார் - பிரியமாட்டார்கள். எ-று. (இ-ம்) விசாரமுகத்தாலறிந்தவறிவு சமாதியினுலாநந்தமானவருக்கும்அவ்வாநந்தஞ் சகசத்திலாநந்தாதிதமாய்விளங்கினவர்களுக்குமிவ்வனுபவம் விளங்குமேயன்றி மற்றவர்களுக்கு விளங்காதென்பதாம்......... .... (எஉ)

(அ-கை.) மும்மூர்த்திமுதலியோருக்குள்ளஇச்சுவானுபவத்திலுத்தாலகமுனியிருந்தானெனல். (கவி) மூவர்முதல்வானவரென்னைமுதனாரதனைமுதன்முனிவர், மேவலுற்றதிப்பெருங்கண்வேற்றுப்பதமெல்லாநசிப்பித், தோவலில்லாவிப்பதத்திலுத்தாலகனுற்றிருந்தனனு, லாவறிர்வதெவ்வளவவ்வளவுஞ்சகமாமகத்திடையே......... *

(இ-ள்.) மூவர்முதல்வானவர் - மும்மூர்த்திமுதலானதேவர்களும்—என்னைமுதல்-என்னைமுதலாகவும் — நாரதனைமுதல் - நாரதனைமுதலாகவுமுள்ள —முனிவர்-இருஷிகளும்—மேவலுற்றது - அடைந்தது— இப்பெருங்கண் - இப்பரமதிருஷ்டியேயாம் — வேற்றுப்பதமெல்லாநசிப்பித்து - பேதமுள்ளபதங்களனைத்தையுங்கெடுத்து—ஓவலில்லாவிப்பதத்தில்- ஒழிவில்லாதஇச்சத்தாசாமானியத்தில்—ஆவல்தீர்வதெவ்வளவும் - ஆசைதீர்வதெந்தமட்டுமோ—அவ்வளவும் - அந்தமட்டும்—சகமாமகத்திடையுத்தாலகனுற்றிருந்தனன்- சகமானவீட்டிலுத்தாலகன்வசித்திருந்தான். எ-று.. ... . (எ௩)

(அ-கை.) உத்தாலகமுனி ஞானமடைந்தபின்பு யோகத்தினாற்காயசித்திபெற்றும் அஃதற்பமென்றகற்றி விதேகமுத்தியையடைதற்கான சமாதிசெய்யத்தொடங்கல். (கவி) காலமநேகஞ்சென்றதற்பின் கந்தமாதனக்கிரியிற், கோலமுழையிலம்முனிவன் குரம்பைவிட்டுக்குரம்பையிலாச், சீலமுத்தனாயிருப்பேன்றீர்வென்றெண்ணேசிந்தித்துச், சாலநல்லதளிர்த்தவிசிற்றனைத்தபதுமாசனத்திருந்தான்..... .... *

(இ-ள்.) காலமநேகஞ்சென்றதற்பின் - அநேககாலங்கழிந்தபின்பு— கந்தமாதனக்கிரியில்- கந்தமாதனபருவதத்திலுள்ள—கோலமுழையில்-அழகியகுகையில்—அம்முனிவன்- அந்தவுத்தாலகமுனியானவர்—குரம்பைவிட்டு-சரீரத்தைவிட்டு—குரம்பையிலாச்சீலமுத்தனாய்- விதேகமுத்தநிலைமையடைந்தவனாய்—இருப்பேன்-இருக்கக்கடவேன்—தீர்வென்றெண்ணேசிந்தித்து-(இது)

தீர்ப்பென்றுசிந்தனைசெய்து— சாலநல்லதளிர்த்தவிசில் - மிகவுநன்மையுள்ளபல்லவாசனத்தில்—தளைத்த-கட்டிய—பதுமாசனத்திருந்தான்-பத்மாசனத்திலிருந்தான். எ-று .... (எச)

(அ-கை.) சமாதியினிலக்கணங்கூறல். (கவி) அரைநோக்காகநோக்கியிருந்தபான
வாயிலடைத்ததனாற், புரையொன்பதுவாயடைத்துளத்தாற் பொறியும்புலனுமொ
ன்றாக்கித், திரையில்கடல்போற்றன்சித்தின் செறிவைப்பாவித்தாருயிரின்,விரைவை
நிறுத்திவணங்காமன்மேனோக்கியகந்தரத்தினனாய்................................ *

(இ-ள்.) அரைநோக்காக - பாதிதிருஷ்டியாக — நோக்கியிருந்து - பார்த்திருந்து—அபானவாயிலடைத்ததனால் - மூலவாசலையடைத்ததினால் — புரையொன்பதுவாயடைத்து- உட்டுளையாகியநவத்துவாரமுமடைத்து — உளத்தால் - மனதினால்— பொறியும் - இந்திரியங்களையும்—புலனும் - விஷயங்களையும்—ஒன்றாக்கி - பிரத்தியாகாரப்படுத்தி — திரையில்கடல்போல் - அலையில்லாதசமுத்திரத்தைப்போல—தன்சித்தின்செறிவைப்பாவித்து- தனதுபூரணஞானத்தைத்தியானித்து—ஆருயிரின் - நிறைந்திருக்கின்றபிராணவாயுவின் — விரைவைநிறுத்தி - வேகத்தைத்தடுத்து—வணங்காமல் - (சரீரம்) வளையாமல் — மேனோக்கிய - நெறிப்பாகிய—கந்தரத்தினனாய் - கழுத்தையுடையவனாய். எ-று .... (எரு)

(அ-கை.) இ-து. (கவி) நாவினடிச்சென்றுறச்செறியுண்ணாவினடியையுடையோனாய், யோ
வின்முகக்காந்தியனாகியுள்ளிற்புறனின்மேற்கீழில், வாவும்விடயத்தினிற்பாழின்மனமுங்க
ண்ணுமுறானாகி, வீவதானவெயிற்றினிரையெயிற்றினிரையைமேவானாய் ... . *

(இ-ள்.) நாவினடிச்சென்று - நாக்கினடியிற்சென்று— உறச்செறி - மிகவுநெருங்கிய—உண்ணாவினடியையுடையோனாய் - உண்ணாக்கினடியையுடையவனாய்—ஓவில்-நீங்காத—முகக்காந்தியனாகி - முகவிளக்கத்தையுடையவனாய்—உள்ளில் - உள்ளிலும் —புறனில்-புறம்பிலும்—மேல் - மேலிலும்—கீழில் - கீழிலும்—வாவும்விடயத்தினில் - பாயாநின்றவிஷயங்களிலும் —பாழில் - சூனியாகாயத்திலும்—மனமுங்கண்ணும் - மனதுங்கண்ணும்—உறானாகி-பொருந்தாதவனாய்—வீவதானவெயிற்றினிரை - கெடுவதாகியதந்தபந்திகள்—எயிற்றினிரையை-தந்தபந்திகளை—மேவானாய் - பொருந்தப்பெறாதவனாய். எ-று . ... (எசா)

(அ-கை.) கைவல்யசுகமாதல். (கவி) அங்கத்துயிரின்மிகுதிதகைந்ததனானொப்கா
யவிர்முகத்தோ, னங்கத்துருவுள்ளுணர்வுருவே யாகியெழலார்புளகிற்போ, னங்க
த்துருவுள்ளுணர்வுருவே யாகிப்பழகியறிவொன்றா, யங்கப்பொழுதப்பழக்கத்தா
லகத்துத்தமமாஞ்சுகமடைந்தான்.. *

(இ-ள்.) அங்கத்துயிரின் - சரீரத்திலுள்ளபிராணவாயுவின்—மிகுதிதகைந்து - மிகுதி (யாகச்செல்லுகின்றவேகத்தைத்) தடுத்து—அதனானொய்தாய்-அதனாற்சொச்சமாயும்—அவிர்முகத்தோன் - ப்ரகாசிக்கின்றமுகத்தையுடையவனாய் — அங்கத்துருவு - சரீரத்தினுருவமானது—உள்ளுணர்வுருவேயாகி - உள்ளஞானஸ்வரூபமாயும்—எழலால் - உண்டாகுதலால்—புளகிற்போன் - புளகாங்கிதமானவன்—அங்கத்துருவு- சரீரஸ்வரூபம்— உள்ளுணர்வுருவேயாகி- உள்ளஞானஸ்வரூபமாகி—பழகி-பழக்கமுற்று—அறிவொன்றாய்-சிற்சாமானியமாகி—அங்கு- அவ்விடத்தில்—அப்பொழுது-அப்போது—அப்பழக்கத்தால்- அச்சிற்சாமானியவற்பியாசத்தினால்—அகத்துத்தமமாஞ்சுகமடைந்தான்-மனதிற்பரமாநந்தத்தையடைந்தான்.எ-று. (எஎ)

(அ-கை.) அநுபவமரபையறிவித்தல். (கவி) ஆனந்தத்தின்பெருக்கைநுகர்ந்
ததனாற்சிற்சாமானியம்போய்த், தானந்தமற வெலாம்பரிக்குஞ் சத்தாசாமானிய
மடைந்தான், றீனந்தவிர்சமனாயிருந்தான்சிந்தாகுலமெல்லாந்தீர்ந்தான், மானந்
தருமாநந்தமிலாமகாநந்தத்தான்முகமலர்ந்தான்...... .... *

(இ-ள்.) ஆனந்தத்தின்பெருக்கை - பரமாநந்தவெள்ளத்தை—நுகர்ந்ததனால் - புசித்ததனால்—சிற்சாமானியம்போய்- சிற்சாமானியநீங்கி—தானந்தமற-தானமுடிவில்லாமல்—எல்லாம்பரிக்கும் - சகலத்தையுந்தரிக்கின்ற— சத்தாசாமானியமடைந்தான்-சத்தாசாமானிய (பதத்தை) யடைந்தான்—தீனந்தவிர் - குறைவின்றிய— சமனாயிருந்தான் - சாந்தியுள்ளவனாயிருந்தான் — சிந்தாகுலமெல்லாந்தீர்ந்தான் - சித்தத்திலுள்ளவருத்தங்களனைத்தையும்விட்டான்—மானந்தரும் - அளவைக்கொடுக்கின்ற—ஆநந்தமிலா - ஆநந்தமில்லாத—மகாநந்தத்தால் - பேராநந்தத்தினால்—முகமலர்ந்தான் - முகவிகசிதமானான். எ-று .... (எஅ)

(அ-கை.) விதேகமுத்தனாதல். (கவி) அனகபதமுற்றுடல்புளகமாறிநெடுநாளி
ற்கரைந்து, மனமும்பிறப்பின்மயக்கமும்போய்மகாசத்துவமாயோவியம்போற்,

கனமில்ககனத்துவாமதிபோற்கதியிற்சின்னாளினிற்சுவறி, யினனதொளியான்மரப்
பசைகளிறப்புபோலாயிறப்புற்றான் .... *

(இ-ள்.) அனகபதமுற்று - மாசில்லாதபதத்தையடைந்து—உடல்புளகமாறி- சரீரபுளகாங்கிதத்தைவிட்டு—நெடுநாளில் - வெகுதினத்தில்—மனமுங்கனாந்து - மனதுங்கனாந்து—பிறப்பின்மயக்கமும்போய் - சநநப்பிரமையுநீங்கி—மகாசத்துவமாய் - மகாசத்துவமுள்ளவனாய்—ஓவியம்போல் - சித்திரத்தைப்போலவும் — கனமில்ககனத்து - மேகமில்லாதவாகாசத்தில்—உவாமதிபோல் - பூர்ணச்சந்திரனைப்போலவும்—கதியில் - ஸ்வரூபபதத்தில் — சின்னாளினிற்சுவறி - சிலதுநாளிற்சேர்ந்து — இனனதொளியால் - சூரியப்ரகாசத்தினால்—மரப்பசைகள் - மரத்தின்பசுமைகளானவை—இறப்புபோலாய்- சோஷிக்கப்பட்டதுபோல—இறப்புற்றான்- உத்தாலகமுனி(பிரமப்ரகாசத்தி)லயிக்கியமானான். எ-று. (இ-எ-க-ம்) சீவன்முத்தித்தன்மையினின்றுநீங்கித் தானேவிதேகமுத்தியையடைந்தானென்பதாம் .... (எகூ)

உத்தாலகன்கதை முற்றிற்று. ஆ கதை-௪சஇ-கவிதை (௬௬௧)

சுரகுகதை.

(அ-கை.) முன்கதையிற் சமாதியினிடமாயுண்டான வாநந்தத்தினன் மனோரூபமான சகம்விஸ்ராந்தியடைந்ததைச்சொல்லி இவ்வனுபவமாத்மவிசாரணையிலுமுதிக்குமதவ்விஸ்ராந்தியேசீவன்முத்தி சாமியமென்பதை யறிவிக்குநிமித்தஞ் சுரகுகதையைச் சொல்லுகிறார் .... *

(அ-கை.) சுருதிகுருவனுபவத்தினால்விசாரிக்கவேண்டுமெனல்·(கவி)வேறு.இந்தவொழுங்
காலுணர்வையுணர்வினாலுணர்ந்துலகிலியங்காநின்றே, பந்தமறும்பெரும்பதத்தேயாறு
தியாற்காண்கின்றவனைத்துமாளச், சந்ததஞ்சாதித்ததனைப் பெறுமளவுநூல்குரவன்றனி
நெஞ்சாலே, பந்தமறுதத்துவத்தைவிசாரித்தே பெறவேண்டும்பதுமக்கண்ணாய் .... *

(இ-ள்.) இந்தவொழுங்கால் - இம்மார்க்கத்தினால்—உணர்வை-அறிவை—உணர்வினாலுணர்ந்து- அறிவினாலறிந்து—உலகிலியங்காநின்று - சகத்திற்சஞ்சரித்து—அந்தமறும்பெரும்பதத்து-முடிவில்லாதபரிபூரணத்தில்—ஆறுதி - விஸ்ராந்தியடையக்கடவாய் — காண்கின்றவனைத்துமாள- பார்க்கப்பட்டவிஷயங்களியாவுநசிக்கும்படி — சந்ததஞ்சாதித்து - சதாகாலமுஞ்சாதனைசெய்து—அதனைப்பெறுமளவும் - அப்பதத்தையடைகின்றபரியந்தம்— நூல் - (ஞான)சாஸ்திரத்தினாலும்—குரவன் - சற்குருவினாலும்—தனிநெஞ்சால்- தனிமையானமனதினாலும்—பந்தமறுதத்துவத்தை - பந்தமில்லாததத்துவஞானத்தை—பதுமக்கண்ணாய்-தாமரைக்கண்ணையுடையஸ்ரீராமா—விசாரித்தேபெறவேண்டும் - விசாரணைசெய்தேயடையவேண்டும்,எ-று

(அ-கை.) இது. (கவி) மயலின்மைசாதனைநூற்பொருட்போதங்குருயமமாம்வழிக
ளாலே, யுயர்பதவிபெறலாகுமன்றியுணர்வொன்றினாலுறுதற்காமா, லியலுபதேச
ம்பெற்றுக்கூரியதாய்க்களங்கமிலா திருக்குமாகில், வியனுறுசாதனமுழுதுமிலதே
னும்புத்தியினால் வீடுகூடும் .... *

(இ-ள்.) மயலின்மை - வயிராக்கியத்தினாலும் — சாதனை - (திரிஸ்பநீங்கும்படியான)சாதனத்தினாலும்—நூற்பொருள்-(ஞான)சாத்திரார்த்தங்களினாலும்—போதம்- அறிவினாலும்—குரு - ஆசாரியருபதேசத்தினாலும்—யமம் - இயமநியமங்களாலும்—ஆம்வழிகளால்- ஆகாநின்ற(விம்)மார்க்கங்களினாலும்—உயர்பதவிபெறலாகும்- மேலானஸ்வரூபபதமடையப்படும்—அன்றி - அல்லாமலும்—உணர்வொன்றினால் - அறிவொன்றினால்—உறுதற்காம்- பொருந்துதற்காகும்—இயலுபதேசம்பெற்று - சுபாவமான(சற்குரு)வுபதேசத்தைப்பெற்று — கூரியதாய்- அதிகநுட்பமாய்—களங்கமிலாதிருக்குமாகில் - நிருமலமாயிருக்குமானால் — வியனுறுசாதனம்-பெருமைபொருந்தியசாதனம் — முழுதுமிலதேனும் - முற்றுமில்லாததாயிருந்தாலும்—புத்தியினால் - அவ்வறிவினால்—வீடுகூடும் - மோக்ஷமடையலாம். எ - று. (இ-உ-க-ம்.) பக்குவன்சமாதிமுதலியவற்றைவேண்டானாயினுமாசாரியருபதேசவிசாரஞ்செய்யுமறிவொன்றையாவதுவிரும்பவேண்டுமென்பதாம் .... (உ)

(அ-கை.) ஞானவான்களதுதாரதன்மியத்தைவினவுதல். (கவி) என்றனைமுகநோக்கியிகத்
தொழிலோடிருந்தேயுஞ்சமாதியெய்தி, யொன்றனவுணர்வுற்றான்போலிடர்தீர்ந்தானொ
ருவனொருவன்செய்கை, யின்றாய்த்தனியிடத்திற்சமாதியடைந்தானிவரின்மிக்கோனே
வ, னன்றாகவருளுகெனவிராகவன்கேட்டலும்வசிட்டனவில்வதானான் .... *

(இ-ள்.) என்றனை - (இப்படி)யென்றுசொன்னவசிஷ்டமுனியை— முகநோக்கி- வதனத்
தைப்பார்த்து—இகத்தொழிலோடிருந்தேயும் - இகத்திலுள்ளவிபகாரத்திலிருந்தும்— சமாதி
யெய்தி - சமாதியடைந்து— ஒன்றனவுணர்வுற்றான்போல் - ஏகமாகியஞானமடைந்தவனைப்
போல—ஒருவனிடர்தீர்ந்தான் - ஒருவன்துன்பத்தைநீங்கினான் — ஒருவன் - மற்றொருவன் —
செய்கையின்றாய் - தொழிலில்லாதவனாய்— தனியிடத்தில் - ஏகாந்தஸ்தானத்தில் — சமாதி
யடைந்தான் - சமாதியையடைந்தான்—இவரில் - இவ்விருவர்களில்—மிக்கோனேவன்- மேலா
னவன்யாவன்— நன்றாகவருளுகென- செவ்வையாகச்செல்லுவாயென—இராகவன்கேட்டலும்-
ஸ்ரீராமர்கேட்டமாத்திரத்தில்—வசிட்டனவில்வதானான்-வசிஷ்டர்சொல்லத்தொடங்கினார்.எ-று.
(இ-ம்) விபகாரத்திலு மேகாந்தத்திலுஞ்சமாதியிலுள்ள ஞானமடைந்தவர்களில்யாவர்மேலாவ
ரென்பதாம்........ .... (௫)

(அ-கை.) சமாதியினிலக்கணமறிவித்தல். (கவி) ஆத்துமதத்துவமன்றான்முக்குணத்தால்
வருஞ்சகமென்றறிந்தோர்க்குள்ளே, தோற்றுகின்றசீதளமேததுதனையேசமாதியெனச்
சொல்லுமன்றே, யூற்றமறக்காண்பவற்றோடுறவுநமக்கிலதென்றே யுரத்துத்தண்ணென்,
றேற்றசமாதியிலிருப்ப னொருவனொருவன்றொழிலோடிருப்பனன்றே .... *

(இ-ள்.) முக்குணத்தால் - மூன்றுகுணத்தினால்—வருஞ்சகம்-உண்டானவுலகம்—ஆத்தும
தத்துவமன்று - அநாத்மாவென்று—அறிந்தோர்க்கு - உணர்ந்த (சத்து)க்களுக்கு— உள்ளே
தோற்றுகின்ற- உள்ளத்தின்கட்டோற்றுநின்ற—சீதளமேது-குளிர்ச்சியெதுவோ—அதுதனை-
அதையே—சமாதியெனச்சொல்லும் - சமாதியென்றுசொல்லப்படும்—ஊற்றமற- பற்றில்லா
மல்—காண்பவற்றோடு - சகத்தோடு—உறவுநமக்கிலதென்று - சம்பந்தநமக்கில்லையென்று—
உரத்து-திடமாக—தண்ணென்று - குளிர்ச்சியாக—ஏற்றசமாதியில்- மேலாயிருக்கின்றஸ்வரூப
சமாதியில்—ஒருவனிருப்பவன் - ஒருவனிருப்பான்— ஒருவன்றொழிலோடிருப்பான் - ஒருவன்
விபகாரத்தோடுமிருப்பான். எ-று .... (௬)

(அ-கை.) இ-து. (கவி) இவ்விருவரிதயமுந்தண்ணென் றிருக்கில்வேற்றுமையோ
ரிறையுமில்லை, யவ்விதயசீதளமேயநந்ததவப் பயனுமவ்வனுபூதிக்கே, கவ்வியிருப்
போனுள்ளங்காரியத்தாலலையுமெனிற்கவலைவாரா, செவ்வியவச்சமாதானமுன்மத்
தநடனம்போற்சிறப்புண்டாகும் .... *

(இ-ள்.) இவ்விருவரிதயமும்-இந்தவிரண்டுபேர்களுடையமனதும்—தண்ணென்றிருக்
கில்-குளிர்ச்சியாகவிருந்தால்—வேற்றுமை - வேறுபாடு—ஓரிறைபுமில்லை - எவ்வளவுமில்லை—
அவ்விதயசீதளமே - அம்மனதின்குளிர்ச்சியே— அநந்ததவப்பயனும் - அளவில்லாததவப்ர
யோசனமாம்—இவ்வனுபூதிக்கு - இந்தவனுபூதியில்— கவ்வியிருப்போன் - பற்றியிருக்கின்ற
வனது—உள்ளம் - மனமானது—காரியத்தாலலையுமெனில்- தொழிலிற்சஞ்சரிக்குமாறாலும் —
கவலைவாரா - துன்பம்வரமாட்டாது—செவ்விய - செம்மையாகிய—அச்சமாதானம் - அதற்
குச்சமாதானம்—உன்மத்தநடனம்போல் - உன்மத்தநடையைப்போல — சிறப்புண்டாகும்-
மேன்மையுண்டாயிருக்கும். எ-று. (இ-உ-க-ம்.) மனமானதாநந்தத்தினாற் குளிர்தலேசமாதி
யாதலினிவர்கட்குவேற்றுமையின்றென்பதாம் .... (௭)

(அ-கை.) வாசனாக்ஷயத்திலிருவருஞ்சரியெனல் (கவி) வருத்தமிலாவுன்மத்தநடத்
தினன்வாதனைமாய்ந்தமனத்தோனாகிற், றிருத்தமுறவவன்கூத்துதெளிவுற்றோன்
சமாதிக்குத்தீரநேராம், பெருத்ததொழிற்சேரறிஞர்பெரியவனஞ்சேரறிஞர்பேத
நாடி, லொருத்தரொருத்தரைவிஞ்சாரிருவருமொத்தையமில்லீடேற்றாரன்றே...... *

(இ-ள்.) வருத்தமிலா - துன்பமில்லாத — உன்மத்தநடத்தினன் - உன்மத்தனடை
யையுடையவன்—வாதனைமாய்ந்த - வாதனையிறந்த—மனத்தோனாகில் - மனதுடையவனானா
ல்— திருத்தமுற - திருத்தமாக—அவன்கூத்து- அவனடையானது—தெளிவுற்றோன்சமாதிக்
கு-தெளிந்தவன்சமாதிக்கு—தீரநேராம் - தீர்ப்பாகச்சமானமாம்— பெருத்ததொழில்சேரறி
ஞர்- மிகுந்தவிபகாரமுடையஞானிகள்—பெரியவனஞ்சேரறிஞர் - மகாரண்யத்தையடைந்த
ஞானிகள்—பேதநாடில்- வேற்றுமையைத்தேடுமிடத்தில் —ஒருத்தரொருத்தரை-ஒருவரொரு
வருக்கு—விஞ்சார் - அதிகமாகார்கள்—இருவருமொத்து - இரண்டுபேருஞ்சமானமாய்— ஐய

மிவீழ்நின்றார்-சந்தேகமில்லாதமோக்ஷத்தையடைந்தனர். எ-று. (இ-ம்) வாசனாக்ஷயமடைந்தவன்விபகாரியானாலுமேகாந்தியானாலுமேற்றதற்குறைச்சலின்றியொருதன்மையனென்பதாம்

(அ-கை.) வாசனாக்ஷயம்வரவேண்டுமெனல்·(கவி) சாலவும்வாதனைபோகிலிம்மனஞ் செய்தொழில்புரிந்துந்தான்செய்யாதாஞ், சீலமனநெடிதகலிலருகிருந்தார்செப்பு மொழிதெரியாதாப்போற், றாலமனந்தொழில்விடினுஞ்செய்ததாம்வாதனையேதுன்னுமாகிற், கோலவுடலசைவறினுங்கனவில்வரைநின்றுகுழிவீழ்வார்போல் .. *

(இ-ள்.) சாலவும்வாதனைபோகில் - மிகவும்வாசனைகெடுமானால் — இம்மனம் - இந்தமனமானது — செய்தொழில்புரிந்தும் - செய்கின்றதொழிலைச்செய்தும்—சீலமனம் - நல்லொழுக்கமுடையமனது—நெடிதகலில் - வெகுதூரநீங்கில்—அருகிருந்தார் - பக்கத்திலிருந்தவர்கள்—செப்புமொழி - சொல்லுகின்றவசனம் — தெரியாதாப்போல் - உணராததுபோல —தான்செய்யாதாம் - தான்செய்யாததாம் — ஆலமனந்தொழில்விடினும் - பருத்தமனது செயலைவிட்டாலும்—வாதனையேதுன்னுமாகில் - வாதனைநிறைந்திருக்குமானால்—கோலவுடலசைவறினும் - அழகையுடையசரீரமசைவற்றாலும்—கனவில் - சொற்பனத்தில்— வரைநின்று - மலையிலேநின்று—குழிவீழ்வார்போல்- பள்ளத்தில்விழுபவர்களைப்போல—செய்ததாம்- தொழிலைச்செய்ததாகும். எ-று. (இ-ம்) வாசனாக்ஷயம் வரின்றொழில்செய்துஞ் செய்யாதவன், அஃதிருந்தாற்றொழிலைவிட்டும் விடாதவனென்பதாம்...... ....(எ)

(அ-கை.) மனோசஞ்சலநீக்குதலே சமாதியாமெனல். (கவி) தொலைவிறொழிற்செய் யுமனத்தொழினீங்கி லதுதானேசுகசமாதி, யலைவறுகைவல்லியமும் பரமாநந்தமு மென்றேயறிவாய்நெஞ்சி, னுலைவுதிரமெனுமிரண்டு மத்தியானத்தியானமெனுமுப யத்துக்கு, நிலையுறுகாரணங்களாமாதலிலிம்மனமுளைக்குநீர்மைதீர்ப்பாய் ....*

(இ-ள்.) தொலைவிறொழில் - நீங்காதவிபகாரங்களை—செய்யுமனம் - செய்கின்றமனமானது—தொழினீங்கில் - விபகாரத்தைவிட்டுநீங்குமானால்—அதுதானே-அதுவே—சுகசமாதி- சுகசமாதியும்— அலைவறுகைவல்லியமும் - சலனமற்றநிருவாணமும்—பரமாநந்தமும்- மேலானவாநந்தமும்—என்றேயறிவாய் - என்றேயறிந்துகொள்வாய்—நெஞ்சின்- மனதினது — உலைவு-சலனமும் —திரம் - நிலைபும்—எனுமிரண்டும் - என்கின்றவிரண்டும்— அத்தியானம்-தியானாபாவமும்—தியானம் - தியானமும்—எனுமுபயத்துக்கும் - என்கின்றவிரண்டு(திருஷ்டிக்)கும் —நிலையுறுகாரணங்களாம்- நிலையுள்ளகாரணங்களாகும்—ஆதலில்-ஆகையால்—இம்மனமுளைக்கும்-இந்தமனதுண்டாகின்ற—நீர்மைதீர்ப்பாய் - குணத்தைக்கெடுப்பாய். எ-று ....(அ)

(அ-கை.) இ-அ. (கவி) சிந்தனைவாதனையின்றித்திரமானமனத்தினையேதியானமென் ப, ரந்தவுபசாந்தமுமக் கேவலத்தன்மையுமென்றுமதுவேயாகு, மிந்தவுயர்பதப் பொருட்டு வாதனைசாலவுநேர்மைமெய்தவேண்டுஞ், சந்ததம்வாதனையில்லாமனந் தொழிலில்லாப்பதத்தைச்சாருமத்தால்... *

(இ - ள்.) சிந்தனைவாதனையின்றி - சிந்தனரூபமாகியவாசனையில்லாமலிருக்கின்ற—திரமானமனத்தினையே-திடமாகியமனதையே—தியானமென்பர்- தியானமென்றுசொல்லுவார்கள்—அந்தவுபசாந்தமும் - அவ்வுபசாந்தியும்—அக்கேவலத்தன்மையும்-அக்கைவல்லியமும் —என்றுமதுவேயாகும் - எப்போதுமந்தமனமேயாகும்— இந்தவுயர்பதப்பொருட்டு - இம்மேலானநிருவாணபதநிமித்தம்—வாதனை - வாதனையானது — சாலவும் - மிகவும்—நேர்மையெய்தவேண்டும் - அற்பமாகக்கரையவேண்டும்—சந்ததம் - சதாகாலமும் — வாதனையில்லாமனம் - வாதனையில்லாதமனமானது—தொழிலில்லாப்பதத்தை - செயலிறந்தநிருவாணபதத்தை—அத்தாற்சாரும் - அவ்வாசனாக்ஷயத்தினாலடையும். எ-று .... (கூ)

(அ-கை.) தத்துவஞானத்தினால் வாசனாக்ஷயஞ்செய்யின் வீட்டிலாவதுகாட்டிலாவ திருக்கலாமெனல். (கவி) நெருக்கமுறுவாசனையே நெஞ்சினதுதொழிற்றிரமாநீங் காத்துன்பம், பெருக்கவிடுமாதலினால்வாதனையை மிகநேர்மைபிறக்கச்செய்வாய், வருக்கமுறுபலபொருளினொனுமபாவனைமனத்தான் மாற்றியெங்ஙனிருக்குதிய ங்ஙனமிருப்பாய்வனையிலேமனையிலே யெங்கேயேனும்...................... *

(இ ள்.) நெருக்கமுறுவாசனையே - நெருங்கியவாசனையானது—நெஞ்சினது - மனதினுடைய—தொழில் - விபகாரமான—திரமாநீங்காத்துன்பம்- திடமாகநீங்காத துன்பத்தை—பெருக்கவிடும் - பருக்கச்செய்யும்—ஆதலினால் - ஆகையினால்—வாதனையை - வாசனையை—மிகநேர்மைபிறக்கச்செய்வாய் - மிகவுந்தேயும்படிசெய்வாய் — வருக்கமுறுபலபொருளில்-கூட்டமாகியவஸ்துக்களில்— நானெனும்பாவனை - யானெனல்நடாவுவது—மன

த்தான்மாற்றி - மனதினாற்கெடுத்து—எங்ஙனிருக்குதி - எவ்விடத்திருக்கவேண்டுமோ— அங்ஙனம்- அவ்விடத்தில்—வரையில் - மலைகளிலாவது—மனையில்- வீட்டிலாவது—எங்கேயேனும்-மற்றெவ்விடத்திலேயாகிலும்—இருப்பாய் - நீவசிப்பாய். எ-று ....(௰)

(அ-கை) அகம்பாவநீங்கினவர்களிருக்கும்வீடும்,ஞானநிறைந்தவர்களிருக்குநாடுங் காடேயெனல். (கவி) இல்லுறைவோர்சமாதான விதயத்தோரகங்கரமாமேதந்தீர் ந்தோர், புல்லுமனையேகாந்தவனமாகுங்கடைவீதிபுக்கிக்காண்போர்,செல்லல்வரவு லாவியும்பற்றுமையினாற்கடைவழிச்செல்லாதார்போல்வார், நல்லறிவுநிறைந்தோர் க்குமப்படியேகாடொக்குநாடுதானே .... *

(இ-ள்.) இல்லுறைவோர் - இல்லறத்திலிருப்பவர்களும்— சமாதானவிதயத்தோர்-சமாதானமனதையுடையவர்களும்—அகங்கரமாம் - அகங்காரமாகிய— ஏதந்தீர்ந்தோர்-குற்றமற்றவர்களுமாகியவிவர்கள்—புல்லுமனை - பொருந்தாநின்றவீடானது—ஏகாந்தவனமாகும்-ஏகாந்தவனமாகிய(கானகமே)யாம்—கடைவீதிபுக்கிக்காண்போர்- கடைவீதியிற்போயறிகின்றவர்கள்—செல்லல்வரவு- போக்குவரத்தாக—உலாவியும்- சஞ்சரித்தும்—பற்றுமையினால்-பற்றுதலினால்— (வழிநடப்பவர்க்கு) கடைவழி - கடைவீதியில்—செல்லாதார்போல்வார் - போகாதவர்களுக்கொப்பாவார்கள்—நல்லறிவுநிறைந்தோர்க்கும் - சுகபோதப்பூரணமானவர்களுக்கும்— அப்படியே - அந்தப்ரகாரமே—நாடுதானே - நகரமும்—காடொக்கும் - வனத்தையொத்திருக்கும். எ-று. (இ-ச-க-ம்) வாசனாரூபமானமனோசங்கற்பமிறத்தலேசுகாகாரமானவேகாந்தஸ்தானமென்பதாம் ....(௰௧)

(அ-கை.) அகத்திலுள்ளதுபுறத்திலுமுள்ளதெனல். (கவி) துயில்விழிப்புசொலல் செலவுதொடர்ந்தாலுமகமுகமாந்தொடர்பாலென்றும், பயின்மனையூர்நாடெல்லா ம்பழுவம்போற்காண்பவரோபரமசீலர், செயிரிலாவகமுகத்தாலெல்லாமாகாசமாய்த் தீருஞ்சித்த, முயிரனையசீதளம்வந்துண்ணிறையிற்சீதளமாமுலகமெல்லாம் ... *

(இ-ள்.) துயில் - நித்திரையும்—விழிப்பு - விழித்தலும்—சொலல் - படித்தலும்—செலவு - போகுதலுமாகியவிவைகள் — தொடர்ந்தாலும் - தொடர்ந்துவந்தாலும்—அகமுகமாந்தொடர்பால் - அந்தர்முகமாகியதொடர்ச்சியினால்—என்றும்- எப்போதும்—பயில்-வசிக்கின்ற—மனை-வீடும்—ஊர் - நகரமும்—நாடு- தேசமுமாகிய—எல்லாம் - அனைத்தும்—பழுவம்போல் - காட்டைப்போல—காண்பவரோ - பார்ப்பவர்களே—பரமசீலர்- மேலானவறிவையுடையவர்கள்—செயிரிலா - குற்றமற்ற—அகமுகத்தால்- அந்தர்முகத்தினால்—எல்லாமாகாசமாய்த்தீரும் - சகலமுஞ்ஞானாகாசமாய்விடும்—உயிரனையாய் - பிராணனுக்குச்சமானமானவனே—சித்தம் - மனதில—சீதளம் - குளிர்ச்சியானது — வந்துண்ணிறையில் - வந்தகநிறையுமானால்—உலகமெல்லாம் - சகங்களனைத்தும்—சீதளமாம் - குளிர்ச்சியாம். எ-று ... ... (௰௨)

(அ-கை.) இ-து. (கவி) இதயமயலாலெரியிலுலகெலாங்காட்டெரிபோலெரிந்து தோன்று, முதையமுறுமுயிர்க்கெலலாமுள்ளிருப்பதேபுறத்துமுண்டாய்நிற்குஞ், சுதையயிலுர்புவிகால்விண்டொகுவரைநீணதிதிக்குச்சூழ்ந்தவெல்லாம், புதைதலு றுமுட்கரணதத்துவத்தின்பங்குகளாய்ப்புறத்தினிற்ப .... *

(இ-ள்.) இதயம் - மனமானது — மயலாலெரியில் - மயக்கத்தினால்வேகுமானால்—உலகெலாம் - சகங்களனைத்தும்—காட்டெரிபோல் - காட்டாக்கினியைப்போல — எரிந்துதோன்றும் - வெந்துதோற்றும்—உதையமுறுமுயிர்க்கெலலாம் - உண்டாகின்றவாத்மாக்களனைத்திற்கும்—உள்ளிருப்பதே - இகத்திலிருப்பதே—புறத்துமுண்டாய்நிற்கும் - புறம்பிலுமுண்டாயிருக்கும்—சுதையயிலுர் - அமிர்தமிருக்கின்றசுவர்க்கலோகமும் — புவி - பூமியும்—கால்-வாயுவும்—விண் - ஆகாயமும்—தொகுவரை - தொகுப்பாகியமலைகளும்—நீணதி - நீண்டவாறுகளும்— திக்கு - திசைகளும்—சூழ்ந்தவெல்லாம் - சூழ்ந்திருக்கின்றசகலமும் — புதைதலுறும் - அழுத்தமாகிய—உட்கரணதத்துவத்தின் - அந்தக்கரணதத்துவத்தினுடைய — பங்குகளாய் -பிரிவுகளாக—புறத்தினிற்ப - புறம்பினிற்பனவாம். எ-று. (இ-உ-க-ம்) மனமெப்படியோ வப்படியே யாவும் விளங்குமென்பதாம் .... (௰௩)

(அ-கை.) சமாதியடைந்தவனிலக்கணமறிவித்தல். (கவி) உள்ளுணர்விலின்புறுவோன் பொறிகளாற்கருமங்களுப்போளுயுந், தள்ளுசுகதுக்கவசஞ்சாராதோனவரதஞ்சயாதி யுற்றோ, னுள்ளுகின்றதனைப்போமலவ்வுயிருமெனப் புறப்பொருள்களோடேமயன்ன, வெள்ளுபயத்தாலன்றியியல்பாலேகண்டானையெல்லாங்கண்டோன் ....*

(இ-ள்•) உள்ளுணர்வில்-ஆத்மஞானத்தில்—இன்புறுவோன்- சுகத்தையடைகின்றவனும்—பொறிகளால்-இந்திரியங்களால்—கருமங்கள்-கிரியைகளை—உய்ப்போனும்- செலுத்துபவ

னையும்—கள்ளு-நீக்காநின்ற—சுகதுக்கவசம்-சுகதுக்கவசத்தில்—சாராதோன்- அடையாதவனு மயிருக்கின்றவன்—அநவரதம் - சதாகாலமும்—சமாதியுற்றோன்-சமாதியைப்பொருந்தினவன் —எவ்வுயிரும்-சகலவுயிர்களும் — உள்ளுகின்றதனைப்போலென - நினைக்கின்றதனை துயிலைப்போலவென்று— புறப்பொருள்கள்-பிறர்திரவியங்களை—ஓடேயென்ன - ஓடுபோல—கள்ளுபயத்தாலன்றி-உலகமுழுவதும்விலகச்சத்தினாலல்லாமல்—இயல்பால் - சுபாவத்தினால்— கண்டானை- பார்த்தவனை—எல்லாங்கண்டான் - சகலத்தையும்பார்த்தவன். எ-று .... (௰௪)

(அ-கை.) ஞானவானிலக்கணமறிவித்தல். (கவி) இன்றிறவுவந்தாலுங்கற்பாந்தத்தெய்தினுமிலங்குஞானி, கன்றியசேற்றுறும்பொன்போற் களங்கமுறு மெல்லாமாய்க் கண்ணு யாறி, பொன்றலடிமுடியின்றி யொன்றாயின் பத்தளவாய்ப் பொலிதேசகித், துன்றிய காட்சிகளில்லாக்குறிபுடைத்தாமெனச்சுருதிசொல்லுமன்றே .... ❋

(இ-ள்.) இறவு - மரணமானது—இன்றுவந்தாலும்- இப்போதுவந்தாலும்—கற்பாந்தத் தெய்தினும் - கற்பமுடிவிலவந்தாலும் — இலங்குஞானி - ப்ரகாசிக்கின்றஞானவான்கள்— கன்றியசேற்றுறும்பொன்போல் - பதனழிவானவளற்றிலழுந்தியதங்கத்தைப்போல—களங்கமுறான்-களங்கத்தையடையான்—எல்லாமாய்-சகலமுமாயும்—கண்ணாய்-(ஞான) திருஷ்டியாயும் —ஆறி-விஸ்ராந்தியடைந்து—பொன்றல்-கெடுதலும்—அடிமுடியின்றி - ஆதியந்தமில்லாமல் —ஒன்றாய் ஏகமாகியும்—இன்பத்தளவாய்-ஆநந்தமாத்திரமாகியும்—பொலிதேசாகி - விளங்காநின்றப்ரகாசமாகியும்—துன்றியகாட்சிகள்-நெருங்கியசகங்கள்—இல்லா- இல்லாததாகியுமிருக்கின்ற— குறியுடைத்தாமென-அடையாளத்தையுடையதாமென்று—சுருதிசொல்லும்- வேதங்கள்சொல்லும். எ-று. (இ-உ-க-ம்) உள்ளும்புறம்புஞ் சிதாநந்தானுபவமாய் விளங்குகின்றவர்கடொழிலைச்செய்துஞ் செய்யாவிடினு மபேதமேயென்றறியென்பதாம் .... (௰௫)

(அ-கை.)ஞானம்பெற்றவரில் இல்லறஞானிக்கிழிவுந் துறவறஞானிக்குயர்வுமின்றென்றறிவித்திதற்குத்திருஷ்டாந்தமறிவிக்கத்தொடங்கல். (கவி) எல்லாமென்றுரைத்ததெலா மறிவித்தற்பொருட்டேயாமிசையச்சொன்ன, சொல்லாலென் வீணன்றே யாதலினாலோமென்றுதுணிகவித்தை, நல்லாயிங்கிதற் குமுதனுளனாதோரிதிகாசநவிலக்கேட்பாய், புல்லானொன்வேடர்குலச்சுரகுவப்பேரோன்சரிதைபுதுமைத்தன்றே .... ❋

(இ-ள்.) எல்லாமென்றுரைத்ததெலாம்-எல்லாமென்றதுமுதலாகச்சொல்லியசகலமும்— அறிவித்தற்பொருட்டேயாம் - (ஞான) மறிவிக்குநிமித்தமேயாம்—இசையச்சொன்ன- பொருந்தவுரைத்த — சொல்லாலென் - சொற்களினாலென்ன (ப்ரயோசனம்) — வீணன்றே- வீணல்லவா—ஆதலினால் - ஆகையால்—இத்தை - இந்(நாமங்களை)த்தையும்— ஓமென்றுதுணிக - (பிரமவாசகமான) பிரணவமென்றேதெளிவாய் — நல்லாய் - நன்மையையுடையஸ்ரீராமா—இங்கிதற்கு - இவ்விடத்திந்தவனுபவத்திற்கு—முதனாள் - முற்காலத்தில் — உளதோரிதிகாசம் - உண்டாகியவோர்கதையை—நவிலக்கேட்பாய் - யான்சொல்லக்கேட்பாய் — புல்லானொன் - (மலைச்சார்பில்வசிக்கும்) புன்மையர்களென்கின்ற—வேடர்குலம்- கிராதர்குலத்தில்— சுரகுவப்பேரோன் - சுரகுவென்னுநாமமுடையவன்—சரிதை - சரித்திரமானது— புதுமைத்து - அதிசயமுள்ளது. எ - று .... (௰௬)

(அ-கை.) சுரகுவேந்தர்க்குவிசாரமுதித்தல். (கவி) இமகிரியின்கோடான கைலைவரையினிலேமசடர்களென்னு, மமர்வரிவில்வேடருள ரவர்க்கரசன்சுரகுவெனு மசையாவீரன், சமநிலையாற்கோமுறையாலருண் முனிவாலுலகநெறிசமைக்குநாளில், னமதுவலியாலுலகைநலிகுதுமேலவர்சோகநமக்கேயன்றே ... . ❋

(இ-ள்.) இமகிரியின்கோடான - இமயமலையின்முடியாகிய—கைலைவரையினில் - கைலாசபர்வதத்தில்—ஏமசடர்களென்னும் - ஏமசடர்களென்கின்ற—அமர்-யுத்தஞ்செய்கின்ற— வரிவில்வேடருளர் - நீண்டவில்லுகளைத்தரித்தவேடர்களுண்டு — அவர்க்கரசன் - அவர்கள்ராசாவானவன்—சுரகுவெனு மசையாவீரன் - சுரகுவென்கின்றநாமமுடையசலனமற்றசுத்தவீரன் —சமநிலையால் - நடுநிலைமையினாலும்—கோமுறையால் - அரசநீதியினாலும்—அருள் - (சிஷ்ட) பரிபாலத்தினாலும்—முனிவால் - துஷ்டநிக்கிரகத்தினாலும்—உலகநெறி- சகமார்க்கத்தை— சமைக்குநாளில் - செய்கின்றகாலத்தில்—நமதுவலியால - நமதுவல்லமையினால்— உலகைநலிகுதுமேல் - சகத்தைவருத்துவோமானால் — அவர்சோகநமக்கேயன்றே - அவர்கள்துன்பநமக்கல்லவா. எ - று .... (௰௭)

(அ-கை.)சற்குருதரிசினமாய்த்துதித்தல்.(கவி) அல்லாதுதண்டமுறையியற்றேமே லுயிர்காப்பமறவத்தின்மாயும், பொல்லாதவ்வரசென்றேயூசலாமனத்தினனாய்ப்புந்

திறைநந்தான், மல்லாரும்புயத்தவன்பாண்மாண்டவிய முனிவரனும்வணங்கிப்போற்
றி, நல்லாயுன்வரவினான்மிகவாழ்ந்தேனல்லோரினுட்டப்பட்டேன்... .... *

(இ-ள்.) அல்லாது-(அப்படி) யல்லாமல்—தண்டமுறை-(தருமசாஸ்திரப்ரகாரமான) தண்டத்தின்முறைமையை—இயற்றேமேல்-செய்யாமற்போவமேயானால்—உயிர்-பிராணிகள்—காப்பற்று-காப்பவனில்லாமல்—அவத்தின்மாயும்-வீணாகக்கெடும்—இவ்வரசு-இந்தவரசாங்கம்—பொல்லாதென்று-கொடியதென்று—ஊசலாடுள்ளத்தனாய்-ஊஞ்சலாடுகின்றமனத்தையுடையவனாய்—புந்திநைந்தான்-மனதுவருத்தமடைந்தான்—மல்லாரும்புயத்தவன்பால்-பலமிகுந்தபுசத்தையுடையசுரகுவினிடத்தில்—மாண்டவியமுனிவரனும்-மாண்டவியமுனியானவர் வரவும்—வணங்கிப்போற்றி-(சுரகுவானவர்)வணங்கித்தோத்திரஞ்செய்து—நல்லாய்-நன்மையையுடையமுனியே—உன்வரவினால்-உமதுவரவினால்—நான்மிகவாழ்ந்தேன்-யான்மிகவுஞ்சுகத்தையடைந்தேன்—நல்லோரினுட்டப்பட்டேன்-சத்துக்களினத்தினிலெக்கப்பெற்றேன் எ-று.

(அ-கை.) தனதுஐயநீங்கும்படிவினவுதல். (கவி) தருமமுழுதையுமுணர்ந்தபகவநீ
நெடுங்காலந்தளர்வுதீர்ந்தா, யருவினையேனையப்பா டறுத்தியாலையம்போலரந்தை
யுண்டோ, விருநிலத்தென்கோற்கீழோரென்கருணைமுனிவுகளாலின்பதுன்ப, மரு
வுகின்றகவலையைக்கண்டரியேற்றின்முன்கரிபோன்மறுகுகின்றேன்.... .... *

(இ-ள்.) தருமமுழுதையுமுணர்ந்த - தருமங்களனைத்தையுமறிந்திருக்கின்ற — பகவ-பகவானே—நீநெடுங்காலம் - நீர்வெகுகாலமாய்—தளர்வுதீர்ந்தாய்-தளர்ச்சிதீர்ந்திருக்கின்றீர்—அருவினையேன்-அரியகருமமுடையேனது—ஐயப்பாடறுத்தி-சந்தேகத்தைத்தீர்ப்பாய்—ஐயம்போல்-சந்தேகத்தைப்போல—அரந்தையுண்டோ-துன்பமுண்டோ—இருநிலத்து-பெரிதானபூமியில்—என்கோற்கீழோர்-எனதுசெங்கோலின்கீழுள்ளவர்கள்—என்கருணைமுனிவுகளால்-எனதனுக்கிரகத்தினாலுநிக்கிரகத்தினாலும்—இன்பதுன்பம்-சுகதுக்கங்களை—மருவுகின்றகவலையைக்கண்டு-பொருந்தாநின்றதுன்பங்களைப்பார்த்து—அரியேற்றின்முன்-ஆண்சிங்கத்தின்முன்பு—கரிபோல்-யானையைப்போல—மறுகுகின்றேன் - சுழலுகின்றனன். எ-று ... (௰௯)

(அ-கை.) இ-து. (கவி) அருணன்வெயில்போலெங்குநிறைசமமென்மதியிலேயணு
குமாறு, கருணையினாலுணர்த்தியெனுங் காவலற்குமாண்டவியன் கழறுகிற்பான்,
பொருவறுதன்விசாரத்தாலிமைப்போதின்மனவழுக்குப்போகாநிற்கும், வருசாரற்
காலந்தோன்றுமாத்திரத்துமூடுபனிமாய்வதேபோல்........ .... *

(இ-ள்.) அருணன்வெயில்போல்- சூரியனதுப்ரகாசத்தைப்போல—எங்குநிறைசமம்-எவ்விடத்துநிறைந்திருக்கின்றசமமானது—என்மதியில்-எனதறிவில்—அணுகுமாறு-பொருந்தும்படி—கருணையினால் - கிருபையினால்— உணர்த்தியெனுங்காவலற்கு - அறிவிப்பாயென்றவரசனுக்கு— மாண்டவியன் - மாண்டவியமுனியானவர் — கழறுகிற்பான் - சொல்லுவார்—பொருவறு - ஒப்பற்ற—தன்விசாரத்தால் - ஆத்மவிசாரணையினால் — இமைப்போதில் - க்ஷணநேரத்தில்—வருசாரற்காலம் - வராநின்றசாரற்காலமானது —தோன்றுமாத்திரத்து - உண்டானமாத்திரத்தில்— மூடுபனிமாய்வதேபோல் - மூடுபனிகெடுவதுபோல— மனவழுக்குப்போகாநிற்கும்-மனதின்களங்கமானதுபோகும். எ-று. (இ-ரு-க-ம்) சுரகுவேந்தனுக்கிராசநீதிப்படி செய்யுமனுக்கிரக நிக்கிரகத்தினாலுயிர்கள் வருந்துவதைமுன்னிட்டு ஆத்மவிசாரமுண்டானதென்பதாம் .... (உ௰)

(அ-கை.) ஞான முபதேசித்தல். (கவி) யானாரிச்சகமெங்ஙன் பிறப்பிறப்பெங்
ஙனமென்றேயிதயத்துள்ளே, யானுமலிப்படியேயாராயின்மகத்துவமே யடைதி
சாலத், தானானசுபாவனாயிருந்துளநின் விசாரத்தாற் றானேநெஞ்ச, நீநாடும்படி
தோன்றித்தன்னுருவிட்டிளைப்பாறித்துன்பநீங்கும்.............. .... *

(இ-ள்.) யானார் - நானார்—இச்சகமெங்ஙன் - இவ்வுலகமெப்படிவந்தது — பிறப்பு-சுநநமும்—இறப்பு - மரணமும்—எங்ஙனமென்று - எப்படிவந்ததென்று—இதயத்துள்- உள்ளத்தின்கண்—ஆனுமலிப்படி - நீங்காமலிந்தப்ரகாரம்— ஆராயின் - விசாரித்துப்பார்க்கில்—மகத்துவமேயடைதி - மகத்தானபதத்தையடையக்கடவாய்— சாலத்தானானசுபாவனாய் - மிகவுந்தானாகியசுபாவத்தையுடையவனாய்—இருந்துள- இராநின்ற —நின்விசாரத்தால் - உனதாத்மவிசாரணையினால்—தானேநெஞ்சம் - தனக்குத்தானேமனமானது — நீநாடும்படிதோன்றி-நீதேடுகின்றப்ரகாரமுண்டாகி—தன்னுருவிட்டிளைப்பாறி - தனதுவடிவத்தைவிட்டுவிஸ்ராந்தியடைந்து—துன்பநீங்கும் - துன்பத்தைநீங்கும். எ-று .... (உக)

(அ-கை.) பவத்தைநீக்குதற்குச்சாந்திவேண்டுமெனல்(கவி)வெம்பதல்போய்த்தன்
னென்றவுன்மனதுக்கிவ்வுலகின்வியாபாரங்கள், செய்புகர்வேழத்தினுக்கான்குளப்

படியேபோற்றோன்றுமாறினைத்தெரிக்கிற், கம்புவியிற்றொழில்சிறிதேயாயினுநீத்திடவரிதாமா
வின்பாதம், பைம்புனலுங்கிழக்கொதுக்குக்கெல்லைகாணாதபரவையன்றோ .... *

(இ-ள்.) வெம்புசுலமேபோய் - வாடிநலிங்கி — தன்னினைக்கறவுள்மனதுக்கு - குளிர்ந்தவுள்ளமுடையமனதுக்கு — இம்புலப்பிரியாபாரங்கள் - இந்தவுலகத்திலுள்ளகாரியங்கள் — வட்டப்பெருகிநீருக்கு - சிறந்தபளிங்கினாலடையப்பாலைக்கு — அன்முளப்படிபோல-பகலிலே முளைப்படியைப்போல — தோன்றும் - தோற்றும் — நினைநெஞ்சுக்கு-இழிவுள்ளமனதுக்கு — அப்புவியில்- அழகியபூமியிலுள்ள — தொழில்- கிரிகைகள் — சிறிதேயாயினும்- அற்பமேயாகினும் — நீத்திடவரிதாம் - கடத்தற்கரியதாகும் — ஆவின்பாதம் - கோவின்குளப்படியிலுள்ள — பைம்புனலும் - அழகியசலமும் — கிழக்கொதுக்கு - வார்த்திகமுள்ளமசகத்துக்கு — எல்லைகாணாத - அளவுங்கரையுங்காணக்கூடாத — பரவையன்றோ-சமுத்திரமல்லவா. எ-று ......(உஉ)

(அ-கை.) ஆத்மதரிசனமுண்டாகுமார்க்கமறிவித்தல். (கலி) எத்தனையெத்தனை நீத்தாயகிலத்தைப்பரஞ்சுடராயெறிக்குஞ்சோதி, யத்தனையத்தனைதோன்றுமெந்நாண்மட்டனைத்தும்விடாயன்றுண்மட்டுந், தத்துவமாம்பொருளெய்தாச்சகலமும்போனாற்சேடந்தானுஞ்சித்தந், தொத்தறவேற்றுமையெல்லாம்போகத்தேற்சமமானசோதிதோன்று .... *

(இ-ள்.) அகிலத்தை-சகத்தை — எத்தனையெத்தனை-எவ்வளவெவ்வளவு — நீத்தாய்- நீக்கினையோ — பரஞ்சுடராயெறிக்குஞ்சோதி-பரமப்பிரகாசமாயொளிவீசாநின்ற (பரமாத்மா) வானது — அத்தனையத்தனைதோன்றும் - அவ்வளவவ்வளவுண்டாகும் — எந்நாண்மட்டனைத்தும்விடாய்- எந்தநாள்மட்டுஞ்சகலமும்விடவில்லையோ — அந்நாண்மட்டும்-அக்காலமளவும் — தத்துவமாம் பொருளெய்தா - உண்மையாகியவஸ்துவந்தடையாது — சகலமும்போனால்-சகலவிஷயங்களுமொழிபட்டால் — சேடந்தானும்-மிஞ்சின (திருக்குமேவ) நானுகும் — சித்தந்தொத்தற-மனதிற்றொந்தமிலாமல் — வேற்றுமையெல்லாம்-பேதங்களனைத்தும் — போகத்தேல்-நீங்கவிடின் — சமமானசோதிதோன்று-பூரணமாகிய (பரமாத்மஸ்வரூப) ப்ரகாசந்தோற்றமாட்டாது. எ-று (உ௩)

(அ-கை.) சகலகற்பனையுநீங்கினவிடத்து ஞானமுதிக்குமெனல். (கலி) பேதமறுபொருளொருமைதோன்றுதேற்றனைத்தான்பெறுவதெங்கே, யாதலினற்றனைப்பெறுதற்பொருட்டாகவனைத்தினையுமகற்றல்வேண்டு, மேதமறவனைத்தையும் விட்டாயென்னிற்சேடித்ததிறயாவீடா, மேதகையபதமதுவாஞ்சுரகுவெனும் பெயர்கீர்த்திவேடர்வேந்தே..... *

(இ-ள்.) பேதமறுபொருள்- சாமானியமாயிருக்கின்றகனகமுதலியவஸ்துக்கள் — ஒருமைதோன்றிதேல் - ஒற்றுமைதோற்றுதானல் — தன்னை - ஆத்மஸ்வரூபத்தை — பெறுவதெங்கே- அடைவதெப்படி — ஆதலினல் - ஆகையினல் — தன்னைப்பெறுதற்பொருட்டாக - ஆத்மாவையடையநிமித்தமாக — அனைத்தினையுமகற்றல்வேண்டும் - சகலவிஷயங்களையுநீக்கவேண்டும் — ஏதமற-துன்பநீங்க — அனைத்தையும்விட்டாயென்னில் - யாவையும்விட்டாயானல் — சேடித்ததிறவாவீடாம்- மிஞ்சினதேநாசமில்லாதமோக்ஷமாம் — மேதகையபதமதுவாம்- மேன்மையானபரமபதமதுவாகும் — சுரகுவெனும்பெயர் - சுரகுவென்னுநாமத்தையும் — கீர்த்தி-கீர்த்தியையுமுடைய — வேடர்வேந்தே - வேடராசாவே. எ-று...(உச)

(அ-கை.) வாசனநிவிர்த்தியே ஞானமாமெனல். (கலி) வேறு. சகலகாரணகாரியபரம்பரைத்தன்மையாஞ்சகமேவு, மிகவளர்ந்தவத்துவின்மலவாதனைமனத்தினைமிக நீக்கித், திகழுமங்கமாமதையுமேல் விடுதியேற்றிதருநலனுண்டாம், புகழ்நராதிபவென்றுதன்னிடமுறப்போயினன்றவப்பாலன் .... *

(இ-ள்.) சகலகாரணகாரியம் - சகலமானகாரணகாரியங்களுடைய — பரம்பரைத்தன்மையாம் - பாரம்பரியமானகுணத்தையுடையதாகிய — சகமேவும் - உலகத்திற்பொருந்திய — வத்துவின்-விஷயங்களின் — மலவாதனை — அஞ்ஞானவாசனையின் - மிகவளர்ந்த — மிகவும்மோங்கிய — மனத்தினை - மனதை — மிகநீக்கி - மிகவுங்கெடுத்து — திகழுமங்கமாமதையும்- பிரகாசிக்கின்றசரீர (வாசனை) யையும் — மேல்விடுதியேல் - மேல்விடுவையாயின் — தீதறுநலனுண்டாம்- குற்றமற்றநன்மையுண்டான (வஸ்து) வுண்டாகும் — புகழ்நராதிபவென்று - கீர்த்தியையுடையவரசனேயென்று (சொல்லி) — தன்னிடமுற-தனதிடத்திற்பொருந்த — தவப்பாலன்- தவசிரேஷ்டனையாண்டவியமுனியானவர் — போயினன் - போனர். எ-று. (இ-ரு-க-ம்) இராஜகாரியங்களைச்செய்துமதனல் வருஞ்சுகதுக்கங்கள் தாக்காததற்கு நித்தியாநந்தசித்ஸ்வரூபமான வாத்மானுபவத்தையடையும்விசாரத்தை யனுக்கிரகித்தாரென்பதாம் .... (உ௫)

(அ-கை.) அரசனுத்மதரிசனஞ்செய்யும்பொருட்டநாத்மாவானதேகத்தை நியதிசெய்தல். (கலி) முனியகன்றபின்னெயினர்கோன்றனியிடமுற்றனன்மதியாலே, யனிசநாடின

ன்பதாரெனநாடினனடிமுதன்முடியீறுந், தனியுடம்பைநானெனப்பதுபுதுமையாஞ்சட
வுடல்காண்கேனுன், றுனிசெயிவ்வுடலசேதனந்தசைமுதற்றுன்னுமாதலினன்றே ... *

(இ-ள்.) முனியகன்றபின் - மாண்டவியமுனியானவர்நீங்கினபின்பு—எயினர்கோன்-வேடர்க்கரசனுனவன்—தனியிடமுந்தி-ஏகாந்தஸ்தானமடைந்து—நன்மதியால்- நல்லறிவினுல்—அனிசம் - எப்பொழுதும்—நானென்பதாரென-யானென்பதாரென்று—நாடினன்- விசாரித்தான்—அடிமுதன்முடியீறும்-பாதாதிசிரசுபரியந்தமாகிய—தனியுடம்பை-தனிமையானசரீரத்தை—நானென்பது-யானென்றுசொல்லுவது—புதுமையாம்- அதிசயமாகும்—நான்சடவுடல்காண்கேன்-யான்சடமாகியசரீரத்தைவிசாரிப்பேன்—துனிசெயிவ்வுடல்- துன்பத்தைச்செய்கின்றவிச்சரீரமானது—தசைமுதற்றுன்னும் - மாமிசமென்புமுதலானவைகணிறைந்திருக்கும்—அசேதனம் - சடமாம்—ஆதலினன்று - ஆதலி (ஞன) ல்ல. எ-று .... (உ௬)

(அ-கை.) அநாத்மாவானவிந்திரியங்களையுஞ்சீவனையுநியதிசெய்தல். (கவி) கரண
மீரைந்துமன்னியஞ்சடமெனுங் கணக்கிஞனன்றித், திரளெணக்கில வுடன்முத
ஞலன்சேடமேதெனநோக்கில், விரவுசீவ்னேசேடமாமின்னதும்வேறென்றுற்
றெரிகின்ற, துரவிதானவேறென்றிஞற்றெரியுமீ துயர்ந்ததத்துவமாகா......... *

(இ-ள்.) கரணமீரைந்தும் - பத்திந்திரியங்களும்—அன்னியம் - (எனக்) கன்னியமாதலாலும்—சடமெனுங்கணக்கிஞல் - சடமென்கின்றபடியினுலும்—நானன்று- யானல்ல—உடன்முதல் - சரீரமுதலிய —இத்திரளெணக்கில - இக்கூட்டமெனக்கில்லனவாதலால்—நானலன்-யானல்ல—சேடமேதெனநோக்கில் - மிஞ்சினதெதுவென்றுபார்க்கில் — விரவுசீவனேசேடமாம் - கலந்திருக்கின்றசீவனேமிஞ்சினதாம்—இன்னதும்- இச்சீவனும்—வேறென்றுற்றெரிகின்றது-ப்ரத்யேகாத்மாவாலறியப்பட்டது—உரவிதானவேறென்றிஞல் - திரமாகியப்ரத்யேகாத்ம (சைதன்யத்) திஞல்—தெரியுமீது - தெரிகின்றவிச்(சீவனும்)—உயர்ந்ததத்துவமாகா- மேலானவாத்மதத்துவமாகமாட்டாது. எ-று .... (உ௭)

(அ-கை.) ஆத்மதரிசனஞ்செயல்- (கவி) தெரிவதாகியவிதனையுமகற்றுவன்றெரி
பொருளுமோ, பெரிதுசேடமாய்விகற்பமற்றமலமாம்பேரறிவியாகுக், மரிய
யன்சிவனிந்திரனந்தகனுதியாமிடந்தோறுஞ், சொரிகொண்முத்திஞண் ஞாலென
நிற்குமாற்றேன்றுமிவ்வுயர்போதம்................................ *

(இ-ள்.) தெரிவதாகியவிதனையும் - காணப்படுவதாகியவிச்சீவனையும் — அகற்றுவன்- நீக்குவன்—தெரிபொருளுமோ - தெரிகின்றபொருளுனவனே—பெரிதுசேடமாய்- மிகவுமிஞ்சினதாய்—விகற்பமற்று - விகற்பமில்லாமல்—அமலமாம் - நின்மலமாகிய—பேரறிவியாகும்-பூரணஞானமேயெனதுஸ்வரூபமாம்—அரி-திருமாலும்—அயன் - பிரமாவும்—சிவன்- உருத்திரனும்—இந்திரன் - தேவேந்திரனும்—அந்தகன் - நமனும்—ஆதியாமிடந்தோறும்—இவர்கண்முதலியவிடங்கடோறும்—சொரிகொண்முத்திஞள் - உருட்சியையுடையமுத்துகளுக்குள்—நூலென - சூத்திரத்தைப்போல — தோன்றுமிவ்வுயர்போதநிற்கும் - தோற்றநின்றவிந்தமேலானஞானமானதிருக்கும், எ-று. (இ-ங-க-ம்) தேகமுதலியசடவஸ்துக்களை நியதிகளைந்துமிஞ்சினசித்து ரூபத்தைத்தரிசித்தா னென்பதாம்........................(உ௮)

(அ-கை) ஆத்மவியாபகத்தைத்தரிசித்தல். (கவி) பகவனுகுமிவ்வாத்துமதத்துவம்
பரமமாஞ்சிற்சத்தி, சகநிகழ்ச்சியாநோயின்றி வெருவுறுந் தனிவடிவுடைத்தாகிக்,
ககுபமுற்றையும்விழுங்கியெப்பொருளினுங் கலந்துநுண்ணியதாகி, மிகுமபாவபா
வங்களற்றயனுறைவீடளவுளதாகி.............................. *

(இ-ள்.) பகவனுகும் - பகவானுகிய— இவ்வாத்துமதத்துவம் - இந்தவாத்மதத்துவமென்னும்—பரமமாம் - மேலான—சிற்சத்தி - ஞானசத்தியானது— சகநிகழ்ச்சியாநோயின்றி-உலகநடையென்னும்வியாதியில்லாமல்— வெருவுறும் - பயப்படுகின்ற— தனிவடிவுடைத்தாகி-ஒப்பற்றவுருவத்தையுடையதாகியும்—ககுபமுற்றையும்விழுங்கி - திசைகளெல்லாம்வியாபித்தும்—எப்பொருளினுங்கலந்தும்-எந்தவஸ்துக்களிலும்பூரணமாயும்—நுண்ணியதாகி-சூட்சுமமாகியும்—மிகுமபாவபாவங்களற்று - மிகுந்தபாவாபாவங்களுமில்லாமல்—அயனுறை-பிரமதேவன்வாசஞ்செய்கின்ற—வீடளவுளதாகி- சத்தியலோகபரியந்தமுண்டானதாகியும். எ-று.

(அ-கை.) ஆத்மசத்தியேசகலமாகவும்விளங்குகின்றதென்றறிதல். (கவி) சத்தியாவு
க்குமுறைவிடமாமிதுதனித்தனிச்சத்தாகி, பத்தியாகியிச்சகத்தினிற் காண்பனயா
வையும்பலவாகச், சித்தசைந்துளவிசாலமாமல்லதுசிறிதும்வேறிலதாகுந், தொத்
துபற்றின்றிக்காண்பதற்றெழுபவந்தொடர்மயக்கமுமற்றே ....*

(இ-ள்.) சத்தியாவுக்கும் - சத்திகளனைத்திறுக்கும் — இது - இச்சிற்சத்தியானது— உறைவிடமாம் - வசிக்கப்பட்டஸ்தானமாம் — தனித்தனிச்சத்தாகி - வேறுவேறுள்ளதாய்— பத்தியாய் - பந்திபந்தியாகி—இச்சகத்தினில் - இவ்வுலகத்தில்—காண்பனயாவையும்- காணப்பட்டசகலமும்—பலவாக - நாநாவிதமாக—சித்தசைந்துள - ஞானமசைகின்ற — விசாலமாமலலது- விஸ்தாரமேயல்லாமல்— சிறிதும்வேறிலதாகும் - அற்பமும்வேறில்லையாம்—தொத்துபற்றின்றி - தொந்தமானவாசனையில்லாமல்—காண்பதற்று- விஷயங்களைவிட்டு—எழுபவந்தொடர்- எழுபிறப்பிலுந்தொடராநின்ற—மயக்கமுமற்று - மயக்கமுநீங்கி. எ-று. ..... (ருய)

(அ-கை.) ஆத்மஸ்வரூபமாதல். (கவி) சுழுத்தியிற்றிரமுற்றவன்றொழிலெனத்துகளறுசமனுகி, யழுத்தமாகியவாத்துமதத்துவத்தமர்ந்தனனெனத்தீர்ந்து, விழுத்தகும்பதமெய்தினன்விவேகத்தின்மெய்மைநிச்சயத்தாலே, வழுத்தருந்தவக்கவுசிகன்விப்பிரமரபினையடைந்தென்ன .... *

(இ-ள்.) சுழுத்தியிற்றிரமுற்றவன் - சுழுத்தியவத்தையினிலைபெற்றவனது —தொழிலெனசெயலைப்போல— துகளறுசமனுகி - குற்றமற்றசமத்தையுடையவனாய் — அழுத்தமாகிய- திடமாகிய— ஆத்துமதத்துவத்து - ஆத்மதத்துவத்தில்—அமர்ந்தனனென- வசித்தேனென்று —தீர்ந்து -(சகலமும்)விட்டுவிட்டு—விவேகத்தின் - விவேகத்தினது — மெய்மைநிச்சயத்தால்- உண்மைநிச்சயத்தினால்—வழுத்தருந்தவக்கவுசிகன் - துதிக்கத்தக்கவரியதபசையுடையவிசுவாமித்திரமுனியானவர் — விப்பிரமரபினையடைந்தென்ன - பிராமணமுறைமையைப்பெற்றதுபோல—விழுத்தகும்பதம் - மேன்மையுள்ளபிரமபதத்தை — எய்தினன் - (சுரகுவானவ)னடைந்தான். எ-று .... (ருக)

(அ-கை.) சகலமுமாத்மஸ்வரூபமென்றறிந்தரசாக்ஷிசெய்தல். (கவி)வரகுணங்களாமனைத்துமிற்றுயில்பவன்மனத்தொழினிகராகிச், சுரகுவென்பவனசைவறுசிகையினற்றலங்குறுசுடரொத்தான், விரவுநல்லருளருளின்மைவிருப்பொடுவெறுப்புமச்சரந்தொந்தம், பரவுநன்மதிமூடமென்றினையவும்பயில்வறநிகழ்வுற்றான் .... *

(இ-ள்.) வரகுணங்களாமனைத்துமில் - மேன்மையானகுணங்களொன்றுமில்லாது—துயில்பவன் - சுழுத்தியடைந்தவனது—மனத்தொழினிகராகி - மனோவிருத்திக்குச்சமானமாய்—சுரகுவென்பவன் - சுரகுவென்னுநாமத்தையுடையவரசன்—அசைவறுசிகையினல்-அலைவற்றகொழுந்தினல்—தலங்குறுசுடரொத்தான் - ப்ரகாசிக்கின்ற (சித்திர) தீபத்துக்கொப்பானன்—விரவுநல்லருள் - மிகுந்தநல்லவனுக்கிரகமும்—அருளின்மை - நிக்கிரகமும்—விருப்பொடு - விருப்புடன்—வெறுப்பு - வெறுப்பும்—மச்சரம் - மச்சரமும்—தொந்தம்-தொந்தமும்---பரவுநன்மதிமூடம் - துதிக்கின்றநல்லறிவுமறியாமையும்--- என்றினையவும் - என்கின்றயாவையும்--- பயில்வற - பழகாமல்--- நிகழ்வுற்றான் - ப்ரகாசித்தான். எ-று. (இ-ச-க-ம்) விசாரமுகத்தாலாத்மநிஷ்டனுயச் சர்வம்பிரமமென்னுமனுபவத்தினற் சுகதுக்கந்தாக்காமற் சுகவடிவாயிருந்தரசாட்சிசெய்தானென்பதாம் .... (ருஉ)

(அ-கை.) இல்லறத்திலிருந்துஞானம்பெற்ற சுரகுவேந்தற்குந் துறவறத்திலிருந்து ஞானம்பெற்ற பார்த்திபமுனிக்கு மெவ்வளவு முயர்வுதாழ்வின்றி விளங்கியவனுபவ சம்பாஷணையைச் சொல்லத்தொடங்கல். (கவி) வேறு. ஒன்றுயுணர்ந்தசுரகுப்பெயருத்தமற்கும்- பன்றுதனெனும்பெயர்பார்த்திபமாமுனிக்கு-நன்றானவன்பால்வருநன்மைநயந்துகேட்பாய்- குன்றார்புயத்தாயெனமாதவன் கூறலுற்றான் .... *

(இ-ள்.) ஒன்றுயுணர்ந்த- அத்துவிதபோதமுற்ற— சுரகுப்பெயருத்தமற்கும் - சுரகுவென்னுநாமத்தையுடையவுத்தமனுக்கும்— பன்றுதனெனும்பெயர்- பன்றுதனென்னுநாமத்தையுடைய—பார்த்திபமாமுனிக்கும்- இராசரிஷிக்கும்— நன்றானவன்பால்-நல்லவன்பினல் ---வருநன்மை-வராநின்றநன்மையை—நயந்துகேட்பாய்-இன்பமாகக்கேட்பாய்— குன்றார்புயத்தாயென-மலைபோலுண்டாகியபுயத்தையுடையஸ்ரீராமாவென்று—மாதவன்கூறலுற்றான்-வசிஷ்டமுனிசொல்லத்தொடங்கினுர். எ-று .... (ருங)

(அ-கை.) பார்த்திபற்குவிர்த்தியுண்டானவேதுவையுரைத்தல் (கவி.) பாரக்கர்குலப்பரிகப்பெயர்பாரின்வேந்தாம்- வீரக்கழலோன் சுரகுப்பெயர் வேந்தனன்ப - வீரக்கனமாரிமறுத்தவிலிபாருந்துஞ்சக்- கோரக்கனன்மணமுதல்கண்டு குலைந்துநொந்தான் ....*

(இ-ள்.) பாரக்கர்குலம்-பாரகேர்குலத்தில்—பரிகப்பெயர் - பரிகனென்னுநாமத்தையுடைய—பாரின்வேந்தாம்- பூமிக்கரசனுகிய—வீரக்கழலோன்- வீரகண்டாமணியையுடையவன்—சுரகுப்பெயர்- சுரகுவென்னுநாமத்தையுடைய—வேந்தனன்பன்- அரசனுக்கிஷ்டமா

னவன் — ஈனாக்கனமாரிமறுத்தலில்-பத்துவருட மேகவருடமில்லாமையால் — இப்ராருந்துருசு இயாவருமரணமடைய — ஜோராக்கனன்மண்டிநல்கண்டு - கொடியவுறாக்கினி மிகுந்தலைப்பார்த்து — குலைந்துநொந்தான்-நடுக்கமுற்றுவாடினான் — (எ-று.) .... (௯௪)

(அ-கை.) பார்த்திபற்கு ஞானமுண்டாதல். (கவி) இன்னுதனநாடுவிட்டேகிவனத்தி லெய்தி-யன்னுதரப்போய்த்தவஞ்செய்தவீழ்டன்னமூன்றுட்-பன்னுசமையப்படைத் துத்தவப்பான்மையாலே-நன்னுதலும்பெற்றனனற்றவமொப்பதுண்டோ..... ...*

(இ-ள்.) இன்னுதனநாடுவிட்டேகி-துன்பமாகின்றதனைநாடுவிட்டுப்போய் — வனத் திலெய்தி-ஆரணியத்திற்சென்று — அன்னுதரப்போய் - அன்னம் (புசிப்பதி) லாசைவிட்டு — தவஞ்செய்து - தவத்தைச்செய்து — அவிழ்பன்னமூன்றும்- உதிர்ந்தசருகுபுசிப்பாக — பன்னு நாமப்படைத்து-பன்னுதனென்கின்றநாமத்தைப்பெற்று — தவப்பான்மையால்- தவத்தினது குணத்தினால் — நன்னுதலும்பெற்றனன் - நலமான (வாதமஞானத்தைப்) பெற்றான் — நற்றவ மொப்பதுண்டோ - (அவனது) நல்லதவத்துக்குச்சமானமானதுண்டோ. எ-று .... (௯௫)

(அ-கை) அரசனுமுனியுமனுபவத்தையுசாவத்தொடங்கல். (கவி) ஒருமூவுலகென்னுமட த்தொருமித்திருந்தான், பொருண்மேவுகின்றசுரகுப்பெயர்பூபன்றன்பால், வருவானெ திர்தோன்றலுமற்றவனன்போடெய்தி, யிருவோருமன்புற்றிருந்தின்னனபேசலுற்றார்.*

(இ-ள்.) ஒருமூவுலகென்னுமடத்து - ஒப்பற்றமூன்றுலகமென்கின்றமடத்தில் — ஒருமித் திருந்தான் - ஒன்றுபட்டிருந்த (பன்னுகமுனியான) வர் — பொருண்மேவுகின்ற-வாய்மையைப் பொருந்தியிருக்கின்ற — சுரகுப்பெயர் - சுரகுவென்னுநாமத்தையுடைய — பூபன்றன்பால்- அரசனிடத்தில் — வருவான் - வருபவனுப் — எதிர்தோன்றலும்-எதிரேதோற்றவும் — மற்றவன்- அச்சுரகுவானவன் — அன்போடெய்தி - அன்போட்டைந்து — இருவோரும் - இரண்டுபேர்க ளுடம் — அன்புற்றிருந்து - அன்பைப்பொருந்தியிருந்து — இன்னனபேசலுற்றார் - இத்தன்மை யவாகியவனுபவங்களைப்பேசத்தொடங்கினார்கள். எ-று .... (௯௬)

(அ-கை.) முனிவரனுபவம்பெற்றதறிவித்தல். (கவி) நினையிப்பொழுதெய்தலினிக்கரு மின்பமுற்ற, வினையற்றதென்றசுரகுப்பெயர்வேந்தைநோக்கி, யுனையுற்றுமாண்டவ் வியமோதியஞானமொப்ப, தனையுய்க்குமெய்ம்மைப்பதஞ்சார்ந்தனன்யானுமென்று.*

(இ-ள்.) நினை - உம்மை — இப்பொழுது - இத்தினத்தில் — எய்தலின் - (யா) னடைதலி னால் — நீங்கருமின்பமுற்று - நீங்கற்கரியசுகம்பெற்று — வினையற்றதென்ற - வினைநீங்கினதெ ன்றுசொல்லிய — சுரகுப்பெயர்வேந்தை - சுரகுவென்னுநாமத்தையுடையவிராசாவை — நோ க்கி - (பன்னுதமுனியானவர்) பார்த்து — உனையுற்று- உன்னிடத்தில்வந்து — மாண்டவ்வியன்- மாண்டவியமுனியானவர் — ஓதியஞானமொப்ப- போதித்தஞானத்துக்குச்சமானமாக — தனை யுய்க்கும் - தன்னைவாழ்விக்கும் — மெய்ம்மைப்பதம் - உண்மையான (ஞான) பதத்தை — யா னும்- நானும் — சார்ந்தனனென்று - அடைந்தேனென்றுசொல்ல. எ-று .... (௯௭)

(அ-கை.) அரசனைமுனிவினவுதல். (கவி) வேறு. மிகத்தெளிந்துகெம்பீரமாய்ச் சமம தாம்விழியா, லிகத்துறுந்தொழின்மன்னவவியற்றுதிகொல்லோ, பகுத்தகாலத்தையறி வுறுநினதுதேகந்தான், றெகுத்தவாதியும்வியாதியுந்தொடர்கிலகொல்லோ.......... *

(இ-ள்.) மிகத்தெளிந்து - மிகவுந்தெளிவுற்று — கெம்பீரமாய் - கெம்பீரமாக — சமம தாம்விழியால் - சமதிருஷ்டியினால் — இகத்துறுந்தொழில் - இவ்வுலகத்திலுள்ளவரசகாரியங் களை — மன்னவ - அரசனே — இயற்றுதிகொல்லோ - செய்கின்றாயோ — பகுத்தகாலத்தை-பிரி வுற்றகாலத்தை — அறிவுறும் - அறியாநின்ற — நினதுதேகந்தான் - உனதுசரீரமானது — தொ குத்தவாதியும் - கூட்டமாகியமனோவியாதியும் — வியாதியும் - வியாதியும் — தொடர்கில கொ ல்லோ - தொடரவில்லையோ. எ - று .... (௯௮)

(அ-கை.) இ-து. (கவி) அடையும்போதினிதாகியபோகத்திலழுந்தா, திடைநிலா ய்கொலோசங்கற்பமற்றிளைப்பாறித், தடையில்சாந்தமாய்முத்தியாய்ச்சலனமொ ன்றில்லா, நடைபயின்றுயர்சமாதியைநண்ணினைகொல்லோ .... *

(இ-ள்.) அடையும்போது - அடைகின்றகாலத்தில் — இனிதாகிய - இன்பமாகிய — போகத்திலழுந்தாது - செல்வத்திலழுந்தாமல் — இடைநிலாய்கொலோ - நடுவாகநிற்கின்றா யோ — சங்கற்பமற்று - சங்கற்பம்விட்டு — இளைப்பாறி - விஸ்ராந்தியடைந்து — தடையில்சா ந்தமாய் - தடையில்லாதவுபசாந்தமாகியும் — முத்தியாய் - கைவல்யமாகியும் — சலனமொன் றில்லா - சஞ்சலமொன்றுமில்லாத — நடைபயின்று - நடையைப்பழகி — உயர் - மேலானதாகி யுமிருக்கின்ற — சமாதிநண்ணினைகொல்லோ-சமாதியைப்பொருந்தினையோ. எ-று. (இ-எ-க-ம்)

பார்த்திபமுனி தனதிஷ்டரானசுரகு சகஜசமாதியினின்றும், அரசாக்ஷிசெய்கின்ற வனுபவத்தை, நான்குவிதமாகப் பிரித்துக்கேட்டனனென்பதாம் .... (௫௯)

(அ-கை.) சமதிருஷ்டியா லரசுசெய்கின்றபாவென்றமுதல்வினாவுக்குத்தரம். (கவி) வெறிதிருக்கினுந்தொழிலினை மேவினும்விடாம, லறிஞனென்றுதான் சமாதிவிட்டகன்றவனுகுஞ், செறிஞானஞ்சேர்மனத்தினர்சகத்தொழில்செயினும், பிறிவிற த்துவநிட்டராய்ச்சமாதியிற்பெயரார் .... *

(இ-ள்.) வெறிதிருக்கினும் - சும்மாயிருந்தாலும்—விடாமல் - இடைவிடாமல்—தொழிலினைமேவினும் - தொழிலைப்பொருந்தினாலும்—அறிஞன் - ஆத்மஞானி—என்றுதான்-எப்போதுதான்—சமாதிவிட்டகன்றவனுகும்- சமாதியைவிட்டுநீங்கினவனுவன்---செறியும்-நிறைந்த--- ஞானஞ்சேர்மனத்தினர் - ஞானமுண்டானமனதையுடையவர்கள் — சகத்தொழில்செயினும் - உலகவிபகாரங்களைச்செய்தாலும்---பிறிவில்- பிரிவில்லாத---தத்துவநிட்டராய்- உண்மைநிஷ்டையையுடையவராய்---சமாதியிற்பெயரார்-சமாதியைவிட்டுநீங்கமாட்டார்கள். எ-று. (இ-ம்.) சகலமுந்தனதில்லாசமாய் விளங்குஞ்சமாதிநீங்காதவறிஞர் சந்நிதியிற்சகலமுஞ்சேட்டிக்குமென்பதாம் .... (௬௰)

(அ-கை.) பாவிக்கும்போதப் பாவனைசுகதுக்கத்தைத் தொடரவில்லையோ வென்ற விரண்டாம்வினாவுக்குத்தரம். (கவி) பிரமவஞ்சலியுடன்பதுமாதனம்பெறினும்,விரவசாந்தர்கள்சமாதியின்மேவலராசைத், திரணபாவகனுகிய சித்துணர்வொன்றே, வரசமாதியாம்வெறிதிருக்கு மஃதன்றுவள்ளால் .... *

(இ-ள்.) வள்ளால் - உதாரமுள்ளவனே—விரவசாந்தர்கள் - பூர்ணமானசாந்தியில்லாதவர்கள்—பிரமவஞ்சலியுடன் - பிரமாஞ்சலியுடனே — பதுமாதனம்பெறினும் - பத்மாசனத்தைப்பெற்றால்—சமாதியின்மேவலர் - சமாதியிற்பொருந்தார்கள்—ஆசைத்திரணம் - இச்சையென்னுந்துரும்புக்கு—பாவகனுகிய - அக்கினியாயிருக்கின்ற—சித்துணர்வொன்றே - ஆத்மஞானமொன்றே—வரசமாதியாம் - மேன்மையானசமாதியாகும்— வெறிதிருக்கும் - (சாந்தியில்லாமற்)சும்மாயிருக்கும்— அஃதன்று - அதுசமாதியல்ல. எ-று. (இ-ம்) பாவனையென்னுமிச்சாத்துரும்பை, பாவனுதீதமென்னும்; ஞானுக்கினியெரித்தலினது துன்பவின்பங்களைமயங்கனந்தொடருமென்பதாம் .... (௬௧)

(அ-கை.) போகங்களிற்சென்றுமதிலழுந்தாதிருக்கின்றுயோவென்றமூன்றும்வினுவுக்குத்தரம். (கவி) ஒருமையாயென்றுமனமிறந் துண்மையையுணரில், வரசமாதியாஞ்சொல்லினர் மனத்தினினிறைந்தோர், மருளின்மெய்ம்மையோர் மதித்தமை மறக்கிலாச்சிறிதுந், தருந்தொழிற்றிறமறக்கிலாக்காலமேசமமாம் .... *

(இ-ள்.) என்றும் - எப்போதும்—ஒருமையாய் - ஒருவழிப்பட்டதாய்—மனமிறந்துமனோநாசமான(திருத்தியாய்)—உண்மையையுணரில் - தத்துவஞானத்தையறியில்—வரசமாதியாம்- (அந்தஞானமே)மேலானசமாதியாக—மனத்தினினிறைந்தோர் - மனதிற்பூரணமானவர்கள்—சொல்லினர் - சொன்னார்கள்—மருளின்மெய்ம்மையோர்மதி- மயக்கமில்லாதசத்துக்களறிவு—சிறிதும் - அற்பமும்—தருந்தொழிற்றிறம் - தாரநின்றதொழிலின்திறத்தை—மறக்கிலா- மறவாத—காலமேசமமாம் - காலத்துக்கொப்பாக — தம்மை - தனதாத்மஸ்வரூபத்தை—சிறிதுமறக்கிலா - நிமிஷமுமறக்கமாட்டாது. எ-று. (இ-ம்) உண்மைஞானமானதன்னைப்பிரியாமல் ஆத்மாநந்தத்தையனுபவிக்குமாபோகிக ளெங்ஙனம்விஷயபோகத்திலழுந்துவாரென்பதாம் .... (௬௨)

(அ-கை.) நிருவிகற்பசமாதியையடைந்தாயோவென்றநான்காம்வினுவுக்குத்தரம். (கவி) நெறிகொள்காற்றுதன் கதியினைமறப்பிலாநெறிபோ, லறிஞர்புந்திவேறறிவதில்லறிவையேயயரார், பிறிவில்புந்தியிலொருமையோர் சமத்துவப்பெரியோர், செறிதொழிற்பிறிவகற்றினோர்தற்பதம் பெற்றோர் .... *

(இ-ள்.) நெறிகொள்காற்று- செவ்வையாகச்செல்லுகின்றவாயுவானது—தன் கதியினைதனதுநடையினை—மறப்பிலாநெறிபோல் - மறவாதநீதியைப்போல—அறிஞர்புந்தி- ஞானிகளறிவானது—வேறறிவதில்லறிவையே - பேதமற்றவாத்மஞானத்தையே—அயரார் - மறவார்கள்—பிறிவில்புந்தியில் - பிரிவில்லாதவறிவில்—ஒருமையோர்- ஒற்றுமையையுடையவர்கள்—சமத்துவப்பெரியோர் - சமத்துவத்தையுடையசத்துக்கள் — செறிதொழிற்பிறிவகற்றினோர்- நெருங்கியவிபகாரவேற்றுமையைநீக்கினவர்கள்— தற்பதம்பெற்றோர் - பிரமபதத்தையடை

ந்தவர்கள். எ-று. (இ-ம்) பிரித்தறியும்போதும்பிரிவற்றஞானவடிவமாய்விளங்குதலின்ஸ்வரூப சமாதியைப்பெற்றவனென்பதாம்... (௪௩)

(அ-கை.) பார்த்திபமுனிசந்தோஷித்துரைத்தல். (கவி) ஆதலாற்பன்மையொருமையா முடற்றொழிலனைத்திற், போதுசெய்கிலாவுத்தமவாக்கினாற்பொலிந்த, சேதனத்தவரெங் குளர்சித்திரமாகப், பேதமற்றறிவறிந்தனைதற்பதம் பெற்றாய்.......................... *

(இ-ள்.) ஆதலால் - ஆதலினால்—பன்மை - பலவாகவும்— ஒருமையாம் - ஒன்றாகவுமிருக் கின்ற—உடற்றொழிலனைத்தில் - சரீரவியாபாரங்களனைத்திலும்—போதுசெய்கிலா-காலம்போக் காத — உத்தமவாக்கினாற்பொலிந்த - மேலானவாக்கியத்தினாற்பிரகாசித்த — சேதனத்தவர்- அறிவையுடையவர்கள்—எங்குளர் - எவ்விடத்திலிருக்கின்றார்கள்— சித்திரமாக - அதிசயமாக —பேதமற்று - பேதமில்லாமல்—அறிவறிந்தனை - அறிவையறிந்தாய் — தற்பதம்பெற்றாய்- பிரமபதத்தையடைந்தாய். எ-று... (௪௪)

(அ-கை.) இ-து. (கவி) உள்ளுறக்குளிர்ந் தனையுவாமதியெனவுள்ளத், துள்ளகங்கரத் துயரறத்துரிசறநிறைந்தாய், தள்ளலாநிலைபெற்றெங்கும் விளங்குதிதானே, தெள் ளியோயென்றபரிகற்குச் சுரகுமேற்செப்பும்.. *

(இ-ள்.) உவாமதியென - பூர்ணசந்திரனைப்போல—உள்ளுறக்குளிர்ந்தனை - உள்ளேகு ளிர்ச்சியடைந்தாய்—உள்ளத்துள் - மனதின்கண் — அகங்கரத்துயரற - அகம்பாவமென்னுந் துக்கங்கெடவும்—துரிசற - களங்கமறவும்—நிறைந்தாய் - பூரணமானாய்— தள்ளலாநிலை- நீக் கப்படாதவாத்மநிச்சயத்தை—பெற்று - அடைந்து—தானே - தானேசுயமாக—எங்கும்விள ங்குதி-எவ்விடத்தும்ப்ரகாசிக்கின்றாய்—தெள்ளியோயென்ற-தெளிவையுடையசுரகுவேயென் றுகேட்ட — பரிகற்கு - பரிகனென்பவர்க்கு — சுரகுமேற்செப்பும் - சுரகுராசனானவர்மேற் சொல்லுவார். எ-று. (இ-உ-க-ம்) சுரகுவேந்தன்சொல்லியவனுபவத்தைக்கேட்டுஅகம்பாவநீங்கி யாநந்தசீதளமானஸ்வரூப சமாதியைப்பெற்றாயென முனிசொன்னானென்பதாம் .... (௪௫)

(அ-கை.) பின்னுமரசன் றனதனுபவத்தைச் சுருக்கிச் சொல்லுதல். (கவி) பரந்த சொற்களாற்பயனென்கொல்பயனெலாம்பாறி, நிரந்தரஞ்சமமாய்மனந்தன்னுளே நிகழ்ந்து, சுரந்தவின்பமாய்நிகரிலாவொருவிழிதோன்றி, திரந்தனிற்றெரி கின்ற தாலென்றனன்றெளிந்தோன்... *

(இ-ள்.) பரந்தசொற்களால் - விரிந்தவசனங்களினால் — பயனென்கொல் - இலாபமெ ன்ன—பயனெலாம்பாறி - ப்ரயோசனங்களனைத்தும்விட்டு—நிரந்தரம் - எப்போதும்— சம மாய் - சமமாக—மனம் - மனமானது—தன்னுளேநிகழ்ந்து - தனக்குட்ப்ரகாசித்து— சுரந் தவின்பமாய் - உண்டானபிரமாநந்தமாய் — நிகரிலாவொருவிழிதோன்றி - ஒப்பற்றவோர் ஞானதிருஷ்டியுண்டாய் — திரந்தனிற்றெரிகின்றது - திரமாக (வாத்மஞானம்) ப்ரகாசிக்கின் றது—தெளிந்தோன் - தெளிந்தசுரகுவானவன் — என்றனன் - என்றுசொன்னான். எ - று. (இ-ம்) சிற்றின்பநீங்கிப்பேராநந்ததிருஷ்டியாற்சஞ்சரிக்கின்றேனென்ன அப்போது அவ்விரு வருமாத்மசுகத்திற் கலந்திருந்தனரென்பதாம்.. (௪௬)

சுரகுகதைமுற்றிற்று. ௮ கதை-௨௫௯ - கவிதை (௩௯௩௭)

பாசவிபாசன்கதை.

(அ-கை.) முற்கதையினிரதிசயானந்தமான குளிர்ச்சியே சமாதியாதலா லஃதுள்ளவ ர்களாராயினு மவர்களே சகத்விஸ்ராந்தியடைந்த சீவன்முத்தர்களென்றுசொல்லி யவ்வனுபவ மில்லாவிடில் வெகுவிதமான வருத்தமுண்டாமென்பதை யறிவிக்குநிமித்தம் பாசவிபாசன் சம்வாதஞ்சொல்லுகிறார்.. *

(அ-கை.) சுகபோதமுள்ளவர்க்குத் துன்பமொருபோது மின்றெனல். (கவி) வேறு. இத்திறஞ்சுரகுபரிகனென்றிசைத்தவிருவருஞ்சகத்தொழுங்கெண்ணி, பத்திசெய்தொரு வர்க்கொருவர்பூசித்துப்பரிந்துதம்பணிதலினின்று, ரத்தியாத்துமமேநித்தமும்வடிவா யகமுகமாய்மகிழ்வெய்தி, சித்தினைவிடாமலனுபவிப்பவர்க்குச்சிறிதுமோராகுலஞ்சேரா

(இ-ள்.) இத்திறம் - இந்தப்பிரகாரம்—சுரகுபரிகனென்றிசைத்த- சுரகுபரிகனென்றுசொல்லப்பட்ட—இருவருஞ்சகத்தொழுங்கெண்ணி - இவ்விருவர்களுமுலகத்தினதுமுறைமையை விசாரித்து—பத்திசெய்து - அன்புசெய்து — ஒருவர்க்கொருவர்பூசித்து - ஒருவருக்கொருவராராதனைசெய்து—பரிந்து - விரும்பி—தம்பணிதலினின்றார் - தங்கள்செய்கையிலிருந்தார்கள்—நித்தமும் - எப்பொழுதும்—அத்தியாத்துமமே - அத்தியாத்மஞானமே — வடிவாய்-ஸ்வரூபமாகியும்—அகமுகமாய் - அந்தர்முகமாகியும்—மகிழ்வெய்தி- மகிழ்ச்சியடைந்து—சித்தினைவிடாமல்-ஆத்மஞானத்தைவிடாமல்—அநுபவிப்பவர்க்கு-அநுபவிப்பவர்களுக்கு—சிறிதுமோராகுலஞ்சேரா - எவ்வளவுமொருவருத்தம்வாராது. எ-று .... (௧)

(அ-கை.) சீவனையெருதாகவுருவகப்படுத்தி யவன்படுந்துன்பத்தை யறிவித்தல். (கவி)
ஆசைவன்பாசத்திரளினாற்கட்டுண்டரும்பிணியீக்கடிக்கணுங்கி, யேசுறுபோகக் கதைக
ளான்மொத்துண்டிச்சைமுட்கோலினுலைந்து, காசுறுகருமச்சேற்றிலேயழுந்திக்கடுஞ்
சகக்காட்டின்மேல்சுழன்று, வீசுமாமோகத்தளிர்நிழற்றுயிலும் வீரனேசீவனுமெருது. *

(இ-ள்.) ஆசை-இச்சையென்னும்—வன்பாசத்திரளினால்-வலியகயிற்றினங்களினால்—கட்டுண்டு-பந்தமுற்று—அரும்பிணி - அரியவியாதியென்னும் —ஈக்கடிக்கணுங்கி-ஈக்கடிக்குத்திடுக்குற்று—ஏசுறுபோகம் - குற்றம்பொருந்தியபோகமென்னும்—கதைகளான்மொத்துண்டு-தடிகளாலடிபட்டு—இச்சை-அஞ்ஞானமென்னும்—முட்கோலினுலைந்து- தார்க்கோலினாலலைந்து—காசுறுகருமம்-துற்கருமமென்னும்—சேற்றிலேயழுந்தி- கும்பியிலமிழ்ந்திருந்து—கடுஞ்சகம்-கொடியசம்சாரமென்னும்—காட்டின்மேல்சுழன்று - கானகத்திற்சுற்றி—வீசுமாமோகம் - வீசாநின்றமகாமோகமென்னும்—தளிர்நிழல் - தழைநிழலில் — வீரனே - வெற்றியையுடையஸ்ரீராமா—சீவனுமெருதுதுயிலும்-சீவனானவிடபநித்திரைசெய்யும். எ-று...... (௨)

(அ-கை.) சீவனைக்கரையேற்றவேண்டுமெனல். (கவி) மேவுறுதுன்பப்பெருஞ்சு
மைசுமந்துமீட்சிப்போக்கிவையுடற்புண்ணு, யீவறுபிறவிக் குழியில்வீழ்சீவ வெரு
தினையிக்குழிநின்று, மோவலின்முயல்வாலெடுப்பதேவலியாமுயர்ந்தஞானிகளுற
வுளதே, னாவிகர்நாவால்தருவபோலூகநல்குவர்பவக்கடல்கடக்க .... *

(இ-ள்.) மேவுறுதுன்பம்- அடையப்பட்டதுக்கமென்னும்—பெருஞ்சுமைசுமந்து-கனத்தசுமையைச்சுமந்து—மீட்சிபோக்கு - வருதல்போகுதலென்னும்— இவை - இவ்விரண்டும்—உடற்புண்ணாய் - சரீரத்துக்கிரணமாய்—ஈவறுபிறவி - அளவற்றசநநமென்னும்—குழியில்வீழ் - பள்ளத்தில்விழுகின்ற—சீவவெருதினை - சீவனாகியவிடபத்தை— இக்குழிநின்றும்-இந்தக்குட்டையிலிருந்தும்—ஓவலின்முயல்வால் - ஒழிவற்றமுயற்சியினால்—எடுப்பதேவலியாம் - எடுத்தலேவல்லமையாம்—உயர்ந்தஞானிகள் - மேலானஞானவான்களது— உறவுளதேல்-நட்புண்டானால்—நாவிகர் - கப்பலையுடையவர்கள்—நாவாய்தருவபோல் - வங்கத்தைக்கொடுப்பதுபோல—பவக்கடல்கடக்க - சநநசாகரத்தைத்தாண்ட — யூகநல்குவர் - யுத்தியைக்கொடுப்பார்கள். எ-று. (இ-ங-க-ம்) சீவனதுசிதாபாசத்தன்மையைநீக்கிச் சிவமாக்கும்பொருட்டு ஞானவான்களது சகாயம்வேண்டுமென்பதாம்.................. (௩)

(அ-கை.) சீவன்சிவமாதற்கு மகான்கள்சகாயமன்றியு மனதின்சகாய முக்கியமாய்வே
ண்டுமெனல். (கவி) எவ்விடத்திலைநல்லஞானிகளாமீர்ங்கனிமலர்குளிர்சோலை, யவ்விடங்
கானன்மேடதாமாங்கேயமர்பவரறிவிலாரன்றே, கவ்வியசெல்வநட்புநூல்சுற்றங்கரும
மாதிகளெலாமுதவாச், செவ்வியமனமேயுதவுறல்வேண்டுஞ்சீவனைச்செல்கதியேற்ற.....*

(இ-ள்.) நல்லஞானிகளாம்-ஆத்மஞானிகளாகிய—ஈர்ங்கனிமலர் - இரசமுள்ளகனிகளும் புஷ்பங்களுநிறைந்த—குளிர்சோலை-குளிர்ந்ததோப்பானது—எவ்விடத்திலை-எந்தவிடத்திலலையோ—அவ்விடம்-அந்தவிடம்—கானன்மேடதாம்- பேய்த்தேரையுடையபாலைவனமாம்—ஆங்கு-அவ்விடத்தில் —அமர்பவர்-வாசஞ்செய்பவர்கள்—அறிவிலாரன்றே - அஞ்ஞானிகளல்லவா— கவ்வியசெல்வம்-பொருந்தியசெல்வமும்—நட்பு-சிநேகமும்—நூல் - சாஸ்திரமும்—சுற்றம்-உறவும்—கருமம்-கிரியைகளும்—ஆதிகளெலாமுதவா- முதலியயாவுஞ்சகாயமாகாது—செவ்வியமனமே - ஒழுங்குள்ளமனமே—சீவனை - ஆத்மாவை—செல்கதியேற்ற-அடையத்தக்கபரகதியிலேற்றுதற்கு—உதவுறல்வேண்டும் - சகாயஞ்செய்யவேண்டும். எ-று .... (௪)

(அ-கை.) மனமானது தேகத்தைச் சடமென்றறியிற் சித்தைத் தரிசிக்குமெனல். (கவி)
நெறிபுறவிடாமலுடனுறைநட்பாநெஞ்சமாத்திரத்தினைக்கூடிச், சிறிதுநாடுதலுஞ்சீவ
னுய்வுறுமாற்சிங்கியாமிந்தவூனுடலை, முறிதருகாட்டமோட்டினேராக முற்றுணுகருத்தி
னானோக்கி, யறியிலிவ்வளவாலடைந்துசேர்ந்திடலாமண்டருமிறைஞ்சுபேரறிவை.......—*

(இ-ள்.) நெறியுற-செவ்வையாய்—விடாமல்-நீங்காமல்—உடனுறைநட்பாம்-உடன்பொருந்துகின்றசினேகமாகிய—நெஞ்சமாத்திரத்தினைக்கூடி- மனதுமாத்திரத்தைச்சேர்ந்து—சிறிதுநாடுதலும்-கொஞ்சம்விசாரிக்குமளவில்—சீவனுய்வுறும்-சீவன்வாழ்வையடையும் — சிங்கியாமிந்தவூனுடலை-நஞ்சாகியவிம்மாமிசசரீரத்தை—மூறிதருகாட்டம் - மூறியாநின்றவிறகுக்கும்—ஒட்டினேராக-ஒட்டுக்குஞ்சமானமாக—மூற்றுறுகருத்தினால்-முதிர்ந்தமனதினால்--நோக்கியறியில்-பார்த்தறிந்தால்—இவ்வளவால்-இந்தவளவினால் — அண்டருமிறைஞ்சுபேரறிவை-தேவர்களும்வணங்காநின்றபூரணஞானத்தை—அறிந்துசேர்ந்திடலாம் - உணர்ந்தடையலாம்.

(அ-கை.) சித்துதரிசனத்தாற்றுரிய திருஷ்டிவெளிப்படுமெனல். (கவி) நிறைபெருங்கடலொத்துரையெலாங்கடந்து நிகரறப்பற்றறவெறிதாய்க், குறைவில்சிற்சுடரின்கொழுந்துடன்கூடிக்கோதறவசைவறக்குலாவு,மறைவறுதுரியவிழிவெளிப்படுமேன்மற்றதனுடனதுநிகரா,முறைமையிற்றுயில்வோர்க்கண்ணிதாவுவமைமொழியலாய்த்தோன்றிடுமன்றே

(இ-ள்.) நிறைபெருங்கடலொத்து - நிறைந்தமகாசமுத்திரத்துக்கொப்பாகியும்— உரையெலாங்கடந்து - வாக்கியங்களைனத்திற்குமதீதமாகியும்—நிகரற - சமானமில்லாததாகியும்—பற்றற - பற்றற்றதாகியும் — வெறிதாய் - கேவலமாகியுமிருக்கின்ற — குறைவில்சிற்சுடரின்-நிறைந்தஞானப்பிரகாசத்தினது— கொழுந்துடன்கூடி - சுவாலையோடுஞ்சேர்ந்து — கோதற-குற்றமறும்படியாகவும்—அசைவற - அசைவறும்படியாகவும்—குலாவும் - விளங்காநின்ற—மறைவறு- மறைப்பில்லாத—துரியவிழிவெளிப்படுமேல் - துரியதிருஷ்டியானதுவெளிப்படுமாயின்—அதனுடன் - அதனோடும்— அது - அதுதானே—நிகராமுறைமையில்- சமானமானமுறைமையினால்— துயில்வோர்க்கு - சுழுத்தியடைந்தவனுக்கு—அண்ணிதா - சமீபமாக—உவமைமொழியலாய் - உவமிக்கத்தக்கதாய்—தோன்றிடும் - தோற்றும்- எ-று. ....(சு)

(அ-கை) அகம்பாவநீங்கின்அத்துரியமேபிரமானந்தமாகவிளங்குமெனல்.(கவி)ஆனவவ்வவத்தைவடிவெலாம்பரிக்குமம்பரம்போலகன்றுளதா,மீனநெஞ்சுடன்சேரகங்கரமிறந்தாலெப்பொருளிடத்தினுமிருக்குந்தீனமில்பரமாநந்தமாய்த்தோன்றுந்திகழ்பரமாத்துமவடிவாந், தானனிமுயலிற்கிடைத்திடுந்துயில்வோர்தன்மைபோற்றம்மினுடுவதாம் ✻

(இ-ள்.) ஆனவவ்வவத்தை- ஆகியவந்தத்துரியவவத்தையானது—வடிவெலாம்பரிக்கும்-உருவங்களைனத்தையுந்தரித்திருக்கும்—அம்பரம்போல் - ஆகாயத்தைப்போல — அகன்றுளதாம்-வியாபகமுள்ளதாம்—ஈனநெஞ்சுடன்சேர்-இழிவுள்ளமனதுடன்சேர்ந்த—அகங்கரமிறந்தால்-அகம்பாவமரித்தால்—எப்பொருளிடத்தினுமிருக்கும்-எவ்வஸ்துக்களிடத்திலுநிறைந்திருக்கின்ற—தீனமில்-குறைவில்லாத—பரமாநந்தமாய்த்தோன்றும்-பிரமாநந்தமாகப்பிரகாசிக்கும்—திகழ்பரமாத்துமவடிவாம்-பிரகாசிக்கின்றபரமாத்மஸ்வரூபமாகும்— தானனிமுயலிற்கிடைத்திடும்-தான்மிகவுமுயற்சிசெய்யில்லபிக்கும்— துயில்வோர்தன்மைபோல்-சுழுத்தியையுடையவர்கள்குணத்தைப்போல—தம்மினுடுவதாம்-தம்மிடத்திற்றேடத்தக்கதாம். எ-று. (எ)

(அ-கை.) பிரமாநந்தவடிவமான துரியமேயாவுமாய்விளங்குமெனல். (கவி) உரைகளுக்கெட்டாதுளத்தனுபவிக்கிலுறுவதாமுரைத்தவத்துரியங்,கரையறுமிவைகண்முழுதுமப்பொருளாங்கனபரிணாமியாமுள்ளம், வரைவறவொடுங்கிலுட்புறமெங்கு மன்னியசராசரவடிவாம், புரையறுந்தவதேவனும்பரமப் பொருளனுபவப்படுந்தானே... .... ✻

(இ-ள்.) உரைத்தவத்துரியம் - சொல்லியவத்துரியமானது — உரைகளுக்கெட்டாது-வசனங்களுக்ககப்படாது—உளத்தனுபவிக்கில் - அகத்திலனுபவித்தால்—உறுவதாம்- பொருந்துவதாகும்—கரையறும் - வரம்பற்ற—இவைகண்முழுதும் - இவையெல்லாம்—அப்பொருளாம்- அவ்வாத்மஸ்வரூபமாகும்—கனபரிணாமியாமுள்ளம்-மிகுந்தவேறுபாடுடையமனமானது—வரைவறவொடுங்கில்- பிரிவில்லாமலடங்கினால்— உட்புறமெங்கும்-உள்ளும்புறம்புமாகியவெவ்விடத்தும்—மன்னியசராசரவடிவாம்- நெருங்கியசராசரவடிவமாகிய—புரையறு- குற்றமற்ற—தேவதேவனும் - தேவதேவனான—பரமப்பொருள் - பிரமவஸ்து— தானேயனுபவப்படும்- சுயமாகவேயனுபவப்படும். எ-று..... .... (அ)

(அ-கை.) சாக்ஷாத்காரவனுபவமுண்டாகுங்கிரமமறிவித்தல். (கவி) அதற்பின்விடயவாதனைகளறுவதாகுமதற்பின்னர், விதப்பிலாதபொருளினுடைவிளககமாகுமதற்பின்னர், சுதப்பண்பில்லாச்சமத்துவத்தாற்சொரூபந்தன்னிற்பரிணாம, மிதத்திலுளதாமுயர்ந்தோர்க்குமெண்ணவொண்ணாவடிவிதுவே .... ✻

(இ-ள்,) அதற்பின் -(இவ்வனுபவம்வந்)ததன்பின்பு—விடயவாதனைகள்-விஷயவாசனைகள்—அறுவதாகும்-கெடுவதாம்—அதற்பின்னர்-அதன்பின்பு—விதப்பிலாத - மிகவும்(பேத)

யில்லாத—பொருளினுடைவிளக்கமாகும்-வஸ்துவினுடையப்ரகாசமுண்டாகும்—அதற்பின்னர்-அதன்பின்பு—சுதப்பண்பில்லா-கெடுந்தன்மையில்லாத—சமத்துவத்தால்-சமபாவனையினால்—சொரூபந்தன்னில்-(ஆத்ம)ஸ்வரூபத்தில்—பரிணாமம்-வேறுபா(டழிதல்)—இதுசித்தினுளதாம்-உரித்தாகவுண்டாகும்—உயர்ந்தோர்க்கும் - மகான்களுக்கும்— இதுவே - இவ்வனுபவமே—எண்ணவொண்ணாவடிவு - மதிக்கப்படாதஸ்வரூபமாம். எ-று. (இ-சு-க-ம்) சீவனானவன் சிதாபாசத்தன்மையை நீக்கிச்சிவாகாரமாய்விளங்குமாறை யறிவித்ததாம்..... ....(கூ)

(அ-கை.) மனமானதுவெளிமுகத்தைக்கெடுத்துஅகமுகப்படிலாநந்தமுண்டாமஃதின்றேலில்லையென்பதற்குத் திருஷ்டாந்தமறிவித்தல். (கவி) மனத்தைமனத்தான் மாய்வித்து மாசில்பொருளைக்காணேலோர், தினத்துமுலகின்றுயர்மாயாச்சித்தமிறக்கிற்செறிசுகத்தாற், கனத்தவுணர்வின்மதிநிகழுங் கழறுமிதற்கோரிதிகாச,மினத்திலினியாய்கேட்டியென விசைத்தான்வசிட்டனிராமனுக்கே.............. .... *

(இ-ள்.) மனத்தை - (விஷயசம்பந்தமான)மனதை—மனத்தான்மாய்வித்து-(விவேகமுள்ள)மனதினாற்கெடுப்பித்து —மாசில் - குற்றமற்ற — பொருளைக்காணேல் - ஆத்மவஸ்துவைத்தரிசிக்கார்களாயின் —ஓர்தினத்தும் - ஒருநாளும்— உலகின்றுயர்மாயா - சம்சாரதுக்கநசிக்காது—சித்தமிறக்கில் - மனதிறந்தால்—செறிசுகத்தால் - நிறைந்தவாநந்தத்தினால்—கனத்தவுணர்வின்மதிநிகழும் - வியாபகமுள்ளவாத்மாவினதுஞானம்ப்ரகாசிக்கும் — கழறுமிதற்கு - சொல்லாநின்றவிவ்வனுபவத்துக்கு—ஓரிதிகாசம்- ஒருகதையை—இனத்திலினியாய்-குலத்திலினிமையுள்ளவனே—கேட்டியென - கேட்பாயென்று—இராமனுக்கு - ஸ்ரீராமனுக்கு—வசிட்டன் - வசிஷ்டமுனியானவர்—இசைத்தான் - சொன்னார். எ-று.......... ....(ய)

(அ-கை.) முனிவரிருவருண்டெனல். (கவி) சையமென்னுநெடுங்கிரிமேற்றவவத்திரிமாமுனியுறையு, ளுய்யவதன்பா லிருமுனிவர் சூழலொன்றி னுறைகிற்போர், மெய்யராகுமவ்விருவர்க்கிருவர்பிறந்தார்வியன்புதல்வர், செய்யவிபாசன்பாசனெனச்செப்பும்பெயரோர்செறிநண்போர்............ *

(இ - ள்.) சையமென்னுநெடுங்கிரிமேல் - சையமென்கின்றபெரியமலையின்மேல்—தவவத்திரிமாமுனி - தவத்தையுடையவத்திரிமுனியானவர்—உறையுளதன்பால் - வசிக்குமாச்சிரமத்தில்—உய்ய - வாழும்படியாக—இருமுனிவர் - இரண்டுமுனிவர்கள் — சூழலொன்றினுறைகிற்போர் - ஓரிடத்தில்வாசஞ்செய்பவர்கள்—மெய்யராகுமவ்விருவர்க்கு - உண்மையாகியவந்தவிரண்டுபேர்களுக்கும்—வியன்புதல்வர் - பெருமைபொருந்தியபுத்திரர்கள்—இருவர்பிறந்தார் - இரண்டுபேரவதரித்தார்கள்—செய்ய - செம்மையான—விபாசன்பாசனென-விபாசனென்றும்பாசனென்றும்—செப்பும்பெயரோர் - சொல்லுநாமத்தையுடையவர்கள் — செறிநண்போர் - நெருங்கியசிநேகத்தையுடையவர்கள். எ-று...................... (யக)

(அ-கை.) முனிவரிருவரும்பிரிதல். (கவி) ஒழுங்கால்விருத்திபெற்றிருந்தோரொன்றேயிரண்டாயினவென்ன, வழுங்காவுளத்தோரவர்தந்தை யன்னையென்போருயிரிறப்ப, விழுங்காநின்றபொருமலொடு மேற்செய்பிதாக்கள்விதிகண்முடித், தெழுங்காதலினொந்திரங்கி யிருபாலகன்றாரிருவருமே.................. *

(இ-ள்.) ஒழுங்கால் - கிரமமாக—விருத்திபெற்றிருந்தோர்- வளர்ச்சியடைந்திருந்தார்கள்—ஒன்றேயிரண்டாயினவென்ன - ஒன்றேயிரண்டாயினதுபோல— அழுங்காவுளத்தோர்- சலனமற்றமனமுடையவர்கள்—அவர்தந்தை - அவர்கள்பிதா—அன்னையென்போர்-தாயென்றுசொல்லப்பட்டவர்கள் — உயிரிறப்ப - மரணமடைய — விழுங்காநின்றபொருமலொடும்- கொள்கின்றவழுகலோடும்—மேற்செய் - இனிசெய்யவேண்டிய— பிதாக்கள் - மாதாபிதாக்களுக்குள்ள—விதிகண்முடித்து - கிரியைகளைமுடித்து— எழுங்காதலினால் - உண்டாகும்பாசத்தினால்—நொந்திரங்கி - வருத்தத்துடனழுதுக்கொண்டு— இருவருமிருபாலகன்றார் - இரண்டுபேர்களுமிரண்டிடத்திற்பிரிந்துபோனார்கள். எ-று.................... (யஉ)

(அ-கை.) முனிவரிருவருங்கூடிமுகமனுரைத்தல். (கவி) அளவில்காலம்வனத்துறைந்தாரரியதவத்தாலுடல்வாட்டிக்,கிளருமாசைவிட்டகன்றார்கிட்டப்பெற்றார்கேண்மையினா, லுளமுங்கண்ணுங்களிப்பெய்தி யுயர்த்தவிபாசனுரைசெய்வான், வளருமுலகினல்லுறவே மன்னுமுயிர்போல்வந்தனையால்.................. *

(இ-ள்.) அளவில்காலம்- அளவற்றகாலம்—வனத்துறைந்தார்-கானகத்தில்வாசஞ்செய்து—அரியதவத்தால் - அருமையானதவத்தினால்—உடல்வாட்டி- சரீரத்தைவாட்டி—கிளரும்-நிறைந்த—ஆசைவிட்டகன்றார்-இச்சையைவிட்டுநீங்கினார்கள்—கிட்டப்பெற்றார்-(இருவருஞ்)சேரப்பெற்றார்கள்—கேண்மையினால் - நட்பினால்—உளமும் - மனதும்—கண்ணும்- நேத்திர

றும்—களிப்பெய்தி - மகிழ்ச்சியடைந்து—உயர்ந்தவிபாசனுரைசெய்வான்- மேலானவிபாசமுனிசொல்வான்—வளருமுலகில் - வளராநின்றசகத்தில்—நல்லுறவே- (எனக்கு)நல்லுறவானவனே—மன்னுமுயிர்போல்-நெருங்கிய(வெனது)பிராணனைப்போல—வந்தனை-வந்தாய். எ-று

(அ-கை.) பாசனைப்பார்த்தாத்மானுபவத்தைவிபாசன்வினவுதல். (கவி) இதுநீள் காலமெங்குறைந்தா யிதயவிடர்தீர்ந்தனைகொல்லோ, பொதுவாயுனைநீ யறிந்தனையோபோதவிஞ்சைபலித்தனவோ, சதுராநலனுண் டாயினையோ சாற்றுமென்ற மொழிகேட்டு, முதுவாய்மையினாற்பாசனிவைமொழிந்தான் விபாசன்முகநோக்கி

(இ-ள்.) இதுநீள்காலம் - இதுபரியந்தம்வெகுகாலமாய்—எங்குறைந்தாய்- எவ்விடத்தில்வசித்தாய் —இதயவிடர்தீர்ந்தனைகொல்லோ - மனோதுக்கந்தீர்ந்தாயோ — பொதுவாய்-சமத்துவமாக—உனைநீயறிந்தனையோ-உனதாத்மஸ்வரூபத்தைநீயுணர்ந்தாயோ—போதவிஞ்சைபலித்தனவோ-பூரணஞானம்பலித்ததோ—சதுரா-சதுரையுடையபாசனே—நலனுண்டாயினையோ-சுகத்தைப்பெற்றாயோ—சாற்றுமென்ற-சொல்லுமென்றுகேட்ட— மொழிகேட்டு-வசனத்தைக்கேட்டு—முதுவாய்மையினால்- முதிர்ந்தவுண்மையினால்—விபாசன்முகநோக்கி-விபாசன்முகத்தைப்பார்த்து—பாசனிவைமொழிந்தான்-பாசனிவைகளைச்சொன்னான். எ-று.

(அ-கை.) நீங்கவேண்டியதைநீங்கி யடையவேண்டியதையடையாவிடினெங்ஙனம் பரமசுகமுண்டாகுமெனப்பாசனுரைத்தல். (கவி) உயிர்போலுறவேவிதிவயத்தா லுன்னைக்கண்டேனுளங்குளிர்ந்தேன், செயிர்சேர்பிறப்பி லுழல்வேற்குச் சிறந்தநலனுந்திறனெங்கே, பயில்வதறிவதறிவளவும்பாயுமுள்ளங்கெடாதளவும், வெயில்வெம்பவநீங்காதளவுமிக்கநன்மைத்திறமெங்கே .... *

(இ-ள்,) உயிர்போலுறவே- பிராணனைப்போலிருக்கின்ற(வென)துறவானவரே—விதிவயத்தால்- (எனது)விதிவசத்தினால் —உன்னைக்கண்டேன்- உம்மைத்தரிசித்தேன்—உளங்குளிர்ந்தேன்- மனதித்துளிர்ச்சியடைந்தேன்—செயிர்சேர் - குற்றமுள்ள — பிறப்பிலுழல்வேற்கு-சநநத்திற்சுழலுகின்றவெனக்கு—சிறந்தநலனுந்திறனெங்கே - சிறப்புள்ளசுகமுண்டாகும்விதமெப்படி—பயில்வதறிவதறிவளவும்- சொல்லப்பட்டவறியத்தக்கவையறிகின்றமட்டும்—பாயுமுள்ளங்கெடாதளவும் - தாவாநின்றமனதுகெடாதமட்டும்—வெயில்வெம்பவம்- கொடியசநநமானது —நீங்காதளவும் - நீங்காதமட்டும்—மிக்கநன்மைத்திறமெங்கே-மிகுந்தநன்மையுண்டாகும்விதமேது. எ-று .... (௰௫)

(அ - கை.) இச்சைநீங்கிஞானமுண்டாகும் பரியந்தமெப்படிசநநமரணநீங்குமெனல். (கவி) மனத்தின்முளைக்குமாசையெலாம்வடித்தகுடாரத்தான்மரம்போற், கனத்தவேரோடறுமளவுங்கண்ணுஞானம்பெறுமளவு, மனத்தபேதம்போய்ச்சமமாமளவும்போதமுறுமளவுஞ், செனித்துமரிக்குந்துயரல்லாற் சிறந்தநன்மைத்திறமெங்கே .... *

(இ-ள்.) மனத்தின்முளைக்கும் - மனதிலங்குரியாநின்ற—ஆசையெலாம் - இச்சைகளனைத்தும்—வடித்தகுடாரத்தால் - தீட்டியகோடாலியினால் — (வெட்டுப்படும்) —மரம்போல்-தருவைப்போல—கனத்தவேரோடறுமளவும் - பருத்தமூலத்தோடுகெடுக்கின்றமட்டும்— கண்ணுஞானம்பெறுமளவும்- ப்ரத்யக்ஷஞானத்தையடையுமட்டும்—அனத்தபேதம்போய்- அனர்த்தமானவேறுபாடுநீங்கி—சமமாமளவும் - சமமுண்டாகுமட்டும்—போதமுறுமளவும்-பிரமஞானம்வருமட்டும்—செனித்துமரிக்கும் - பிறந்திறக்கின்ற— துயரல்லால் - துன்பமேயன்றி—சிறந்தநன்மைத்திறமெங்கே - சிறந்தசுகமுண்டாகும்விதமேது. எ-று .... (௰௬)

(அ-கை.) ஆத்மஞானத்தையடையாதவர்கள்பிறப்பிறப்பிற்சுழல்வார்களெனல். (கவி) மடமைநோய்க்குமாமருந்தாய் வருமாத்துமதத்துவப்பேற்றை, விடநின்றவர்க்கு வன்பிறப்பாம்விடுசிமேன்மேல்வந்திடுமா, விடரின்பத்தினிடைப்பட்டுமிறப்புப்பிறப்பில்வீழ்ந்தலைந்துந், தடமாருலகிலுழலுயிர்கள்சருகினுலர்வொன்றிசைத்தான். *

(இ-ள்.) மடமைநோய்க்கு - அஞ்ஞானமென்னும்வியாதிக்கு— மாமருந்தாய்வரும்-மகாவவுடதமாய்வாராநின்ற—ஆத்துமதத்துவப்பேற்றை - ஆத்மதத்துவமென்னும்பயனை—விடநின்றவர்க்கு - விடும்படியிருந்தவர்களுக்கு—வன்பிறப்பாம் - கொடியசநநமென்னும்—விடுசி-விடுசிகாவியாதியானது—மேன்மேல்வந்திடும்-மேலுமேலும்வரும்— இடரின்பத்தின்-சுகதுக்கத்தினது—இடை-நடுவில்—அலைந்தும்-சலனப்பட்டும்—தடமாருலகில்-விசாலம்பொருந்தியசகத்தில்—உழலுயிர்கள்-சுழலாநின்றசீவகோடிகள்—சருகின்-சருகைப்போல— உலர்வொன்றிசைத்தான் - பயனடையார்களென்றுசொன்னான். எ-று. (இ-அ-க-ம்) அடையவேண்டியகிரமப்படி யாத்மசுகத்தையடையாவிடிற் சநநமரணமெங்ஙனநீங்குமென்பதாம். (௰௭)

பாசவிபாசன்கதை முற்றிற்று. ஆ-கதை - ௨௱௫௰௪ - கவிதை (௩௱௩௪)

வீதகவ்வியன் கதை.

(அ-கை.) முற்கதையிற்சிற்சுகங்கூடாவிடிற் சித்தவிஸ்ராந்திகூடாதென்பதையறிவித்து, இஃதுண்டாதற்கேதுவான சித்தநிரோதனத்-துச்சங்கத்தியாகமும்பிராணநிரோதனமுங் கோரஞ்சகாயமாமென்பதை யறிவிக்குநிமித்தம் வீதகவ்வியன்கதையை நிரூபிக்கிறார் ...... *

(அ-கை.) ஞானத்தாற்பவத்தைக்கெடுக்கவேண்டுமெனப்போதித்தல். (கவி) (வேறு.) இன்னணமேநன்மைவினாத்தம்மிற்றா மியம்பியுறையிருவருக்கு,முன்னியநற்காலத்தான்முத்திதருமெய்ஞ்ஞானமுந்நிற்றன்றே,யன்னதினாலுரைக்கின்றேன்வெம்பவத்தைஞானத்தாலன்றிமாய்க்கப்,பின்னையொருநெறியில்லைப்பாசத்தாற்பிணிப்புண்டபிணிநெஞ்சுக்கே *

(இ-ள்,) இன்னணமே - இந்தப்ரகாரமே—நன்மைவினா - நல்ல (வனுபவமாகிய) வினாவுகளை—தம்மிற்றாமியம்பி- தங்களுக்குட்டாங்களேபேசிக்கொண்டு—உறையிருவருக்கும்-வசிக்குமிரண்டுபேர்களுக்கும்—முன்னியநற்காலத்தால்-சிந்திக்கப்பட்ட நல்லகாலத்தினால்— முத்திதரும் - கைவல்யசுகத்தைக்கொடாநின்ற—மெய்ஞ்ஞானம் - உண்மைஞானமானது—முந்நிற்று-ப்ரசன்னமாயிற்று—அன்னதினால் - அத்தன்மையினால்— உரைக்கின்றேன்-சொல்லுகிறேன் — வெம்பவத்தை - கொடியசநநத்தை—ஞானத்தாலன்றி-ஞானத்தினாலல்லாமல்—மாய்க்க-கெடுக்க—பாசத்தால் - ஆசையென்னுங்கயிற்றினால்—பிணிப்புண்ட - கட்டுப்பட்ட—பிணிநெஞ்சுக்கு - துயரானமனதுக்கு—பின்னையொருநெறியில்லை - வேறொருமார்க்கமில்லை, எ-று. (க)

(அ-கை,) அந்தஞானம்யாரினாலுண்டாகுமெனில். (கவி) பற்றிலதாய்நின்மலமாமனம்விவகாரம்பயின்றும்பந்தமேவாப், பற்றுளநெஞ்சளவிறவம்படைத்தாலும்பந்தமேபயிலுமுள்ளிற், பற்றிலதாயினியதொழில்பயில்சீவன்புறத்தொழில்கள்பண்ணினாலும், பற்றறப்பண்ணாவிடினும்பண்ணுவோன்புசிப்போனும்பான்மைமேவா. *

(இ-ள்.) பற்றிலதாய் - பிடிப்பில்லாததாய்—நின்மலமாமனம்- மாசின்றியமனது—விவகாரம்பயின்றும் - தொழில்களைச்செய்தும்—பந்தமேவா - பந்தத்தையடையாது— பற்றுளநெஞ்சு - பிடிப்புள்ளமனது—அளவிறவம்படைத்தாலும்-அளவற்றதவத்தைப்பெற்றாலும்—பந்தமேபயிலும் - பந்தத்தையேயடையும்—உள்ளிற்பற்றிலதாய்-அகத்திலாசையில்லாமல்—இனியதொழில்பயில்சீவன் - நல்லசெயலைச்செய்கின்றசீவனானது— புறத்தொழில்கள்பண்ணினாலும் - புறச்செயல்களைச்செய்தாலும் — பற்றறப்பண்ணாவிடினும் - பற்றில்லாமற்செய்யாவிட்டாலும்—பண்ணுவோன் - செய்பவனும்—புசிப்போனும் - புசிப்பவனுமாகியவிருவர்களுடைய—பான்மைமேவா - குணத்தைப்பொருந்தாது. எ - று. (இ-உ-க-ம்) மனோசீவன்களுக்கு விடயப்பற்றறுதியுண்டானால் ஞானமுதிக்குமென்பதாம்..... .... (உ)

(அ-கை.) பற்றறுதியுண்டாவதற்குஅப்பற்றைநான்காகப்பகுத்துவினாவியவதிலிரண்டிற்குத்தரங்கூறல். (கவி) என்னலுமேபற்றுவதெத்தன்மையெப்பற்றாலெய்தும்பந்தந், துன்னருவீடெப்பற்றாலெய்தலாந்தொடர்பற்றைத்துடைக்குமாறென், பன்னுகெனுமிராமனுக்கு முனிபகர்வானுடலுயிரைப் பகுப்பதொன்று, முன்னுகிலாதுடலினைநம்புதல்பற்றாமதனாலேயுளதாம்பந்தம் .... *

(இ-ள்.) என்னலும் - என்றுசொல்லவும்—பற்றுவதெத்தன்மை- பற்றென்பதெவ்விதமானகுணத்தையுடையது — எப்பற்றாற்பந்தமெய்தும் - எந்தப்பற்றினாற்பந்தமடையும்—துன்னரும்வீடு - அடைதற்கரியமோக்ஷத்தை—எப்பற்றாலெய்தலாம் - எந்தப்பற்றினாலடையலாம்—தொடர்பற்றை - தொடராநின்றபந்தத்தை — துடைக்குமாறென் - கெடுக்கின்றப்ரகாரமென்ன—பன்னுகெனும் - சொல்லவேண்டுமென்றுகேட்ட—இராமனுக்கு - ஸ்ரீராமனுக்கு—முனிபகர்வான்- வசிஷ்டமுனிசொல்லுவார்—உடல் - சரீரத்தையும்—உயிரை - சரீரியையும்—பகுப்பதொன்றும் - பிரித்தறிவதொன்றையும்—உன்னுகிலாது - சிந்தியாமல்— உடலினை - சரீரத்தை— நம்புதல்பற்றாம் - நம்புதலேபற்றாகும்—அதனாற்பந்தமுளதாம் - அப்பற்றாற்பந்தமுண்டாகும். எ - று. (இ-ம்) ஆத்மதரிசனமின்றித் தேகமயமாயிருத்தலே பற்றாகும் அஃதேபவத்தைக்கொடுக்கும் பற்றென்பதாம் .... (ந)

(அ-கை) மூன்றாவதற்குத்தரங்கூறல்.(கவி)வேறு. ஈதனைத்துஞ்சொரூபமேயானிங்கெத்தையிச்சிப்பேனெதையிகழ்வேனெனல்பற்றின்மை, மாதுயர்தீரிதுசீவன்முத்தர்மெய்யின்மன்னுமாலியானில்லைப்பிறருமில்லை, மேதகுமின்பங்களெலாமேவின்

மேவமேவாதேன்மேவாதாயிடுகவென்றே, யோதியவாறுள்ளேபற் றின்மையுண்
டேலுயர்வீட்டுக்கிதுநெறியென்றுணர்தியன்றே........................ ✻

(இ-ள்.) ஈதனைத்துஞ்சொரூபமே - இதுவென்கின்றசகலமுமாத்மஸ்வரூபமே— யா னிங்கு - நானிவ்விடத்தில்—எத்தையிச்சிப்பேன் - எதைவிரும்புவேன் — எதையிகழ்வேன்-எதைவெறுப்பேன்—எனல்பற்றின்மை - என்பதுபற்றில்லாததாம்—மாதுயர்தீரிது-மிகுந்த துக்கந்தீர்ந்தவிப்பற்றின்மையானது — சீவன்முத்திமெய்யில் - சீவன்முத்தர்களுடையசரீரத் தில்—மன்னும் - பொருந்தும்—யானில்லை - நானில்லை—பிறருமில்லை - பிறருமில்லை—மேதரு மின்பங்களெல்லாம் - மேன்மைபொருந்தியசுகங்களனைத்தும் — மேவில்மேவ - பொருந்திற் பொருந்தக்கடவது—மேவாதேல் - பொருந்தாவிடின் — மேவாதாயிடுகவென்று - பொருந் தாததாய்ப்போகக்கடவதென்று—ஓதியவாறு-சொல்லியப்ரகாரம்— உள்ளேபற்றின்மையுண் டேல் - மனதிற்பற்றின்மையுண்டானால்—உயர்வீட்டுக்கிதுநெறியென்றுணர்தி-மேலானமோ க்ஷத்துக்கிதுமார்க்கமென்றறிவாய். எ-று. (இ-ம்) சர்வம்பிரமமயமாய்விளங்குதலின்விருப்பு வெறுப்பின்றிச்சுயமானவணங்கற்பற்றுன பற்றேவீட்டைக்கொடுக்கும்பற்றென்பதாம் .(௪)

(அ-கை.) நான்காவதற்குத்தரங்கூறல். (கவி) கருமமிலாமையைவிரும்பார்கருமம்
பற்றார்கருதுபலன்விட்டிரண்டுங்கண்டாலொப்போர், மருவியபற்றிலாதவொன்று
ரைப்பர்மேலோர்வருகருமபலாதிகளைக்கருமத்தாலே,யொருவலறமனத்தாலேநிபு
ணமாகவொருவுதல்பற்றின்மையெனவுணர்தியித்தாற், பெருகவளர் தொழிலனைத்
துங்குற்றந்தீர்ந்துபெறலரியமுத்தியையும்பேறுநல்கும்........................ ✻

(இ-ள்.) கருமமிலாமையைவிரும்பார் - தொழிலின்மையைவிரும்பமாட்டார்கள்— கருமம்பற்றார் - தொழிலையும்விரும்பார்கள்—கருதுபலன்விட்டு- நினைக்கின்றபயனைவிட்டு— இரண்டுங்கண்டால்-முன்சொன்னவிரண்டையுஞ்செய்தால்—ஒப்போர்- சமானமானவர்கள்— மருவியபற்றிலாதவொன்று- பொருந்தியபற்றில்லாதவர்களென்று—மேலோர்- சத்துக்கள்— உரைப்பர் - சொல்லுவார்கள்—வருகருமபலாதிகளை-வராநின்றகருமத்தின்பயன்முதலானவை களை—கருமத்தாலேயொருவலற - கருமத்தினனீக்காமல்—மனத்தால் - மனதினால்— நிபுண மாகவொருவுதல் - சாமர்த்தியமாகத்தள்ளுதல் — பற்றின்மையென - பற்றில்லாததென்று— உணர்தி-அறிவாய்—இத்தால்-இதனால் —பெருகவளர்-மிகவும்வளருகின்ற—தொழிலனைத்தும்- செயல்களியாவிலும்—குற்றந்தீர்ந்து-குற்றநீங்கி— பெறலரியமுத்தியையும் - அடைதற்கரிய மோக்ஷத்தையும்—பேறுநல்கும் - இன்பமாகக்கொடுக்கும். எ - று. (இ-ம்) கிரியாக்கிரியை களிற் பயனைக்குறியாமற் றற்பயனுய்ச்செய்வதேபற்றறுத்தலென்பதாம் • .... (௫)

(அ-கை.) முன்சொல்லிய விரண்டுபற்றிருக்குமிடத்தைச் சொல்லுதல். (கவி) புழுமுத
லாம்பல்பிறப்பிற் றோன்றிப்பல்காற் பூதமெலாங் கடற்றிரைபோற் பொன்றுந் தன்மை,
பழுதுதரும்பற்றினதுபடர்ச்சியாகும் பற்றுதானிருவகையாமவற்றினொன்று,நழுவுபய
னிலியொன்றுவணங்கற்பாற்றுநவின்றபயனிலிமூடர்நண்ணற்பாற்றும்,வழுவறுதத்துவ
முணர்ந்தோர்க்குடைமையாகவணங்கற்பாற்றும்பற்று மருவுந்தானே .... ✻

(இ-ள்.) புழுமுதலாம்-கிருமிகீடமுதலாகிய—பல்பிறப்பில் - அநேகசநநங்களில்—பூத மெலாம்-உயிர்களியாவும்—பல்கால்-அநேககாலமும்—தோன்றி-உண்டாகி—கடற்றிரைபோ ல்-சமுத்திரத்தினலையைப்போல—பொன்றுந்தன்மை-கெடுகின்றகுணமானது—பழுதுதரும் பற்றினது-குற்றத்தைக்கொடுக்கின்றபற்றினுடைய—படர்ச்சியாகும்-பரப்பாகும்—பற்றுதா னிருவகைபாம்-பற்றுனதிரண்டுப்ரகாரமாகும்—அவற்றினொன்று - அவைகளிலொன்று— நழு வுபயனிலி- நழுவாநின்றவந்திப்பற்றென்றும்—ஒன்று-மற்றொன்று—வணங்கற்பாற்றும்- அவ ந்திப்பற்றென்றுஞ்சொல்லப்படும்—நவின்றபயனிலி- சொல்லியவந்திப்பற்றுனது—மூடர்ந ண்ணற்பாற்றும்-மூடர்கள்பொருந்தத்தக்கதாம்—வழுவறுதத்துவம்-குறைவற்றவாத்மதத்து வத்தை—உணர்ந்தோர்க்கு-அறிந்தவர்களுக்கு—உடைமையாக - ஆபரணங்களாக—வணங்கற் பாற்றும்பற்று-அவந்திப்பற்றுனது—மருவும்-பொருந்தும். எ - று. (இ-ம்) இவ்விரண்டுபற் றிற் பெத்தனுக்குரியதொன்று முத்தனுக்குரியதொன்றுமாமென்பதாம்................. (௬)

(அ-கை.) பற்றுகளினிலக்கணமுரைத்தல் (கவி) ஆத்துமதத்துவவுணர்வால்விவே
கந்தன்னாலடைவாகவுண்டாம்பின்பணுகாச்சென்ம, மேற்றமுளதொழுதகையபற்
றீதாகுமீதன்றிப்பயனிலியாம்பற்றேதென்னி, லூற்றமுறுமுணர்வின்றிபுடலமுன்
னுழுறுபொருளினு லுண்டாமுலகந்தன்னிற், றோற்றமுறுபிறவிமீண்டுள்ளதாகுந்
தோன்றலேயிவையிரண்டுந் துணிந்துகொள்ளே........................ ✻

(இ-ள்.) ஆத்துமதத்துவவுணர்வால்-ஆத்மதத்துவஞானத்தினாலும்— விவேகந்தன்னால்-

விவேகத்தினாலும்—அடைவாகவுண்டாம்-கிரமமாகவுண்டானதாகியும்—பின்பு-திரும்பவும்—சென்மம் - பவமானது—அணுகா - நெருங்காததாகியுமிருக்கின்ற—ஏற்றமுள- மேலாகிய—தொழுதகையபற்றிதாகும் - அவந்திப்பற்றிதுவேயாகும் — ஈதன்றி - இதுவல்லாமல்— பயனிலியாப்பற்றேன்றென்னில் - வந்திப்பற்றெதுவென்னில்—ஊற்றமுறுமுணர்வின்றி-மேலாகிய ஞானமில்லாமல்—உடலமென்றும் - சரீரமுதலாக— உறுபொருளினால் - பொருந்துகின்றவஸ்துக்களினால்—உண்டாம் - உண்டாகிய —உலகந்தன்னில் - சகத்தினிடத்தில்—தோற்றமுறுபிறவி-உண்டாகப்பட்டபவங்களை — மீண்டுள்ளதாகும் - திரும்பவுடையதாகும் — தோன்றலே-முதற்றாய்—இவையிரண்டும்-இவ்விரண்டுபற்றுகளையும்— துணிந்துகொள்-(இப்படியென்று) தெளிந்துகொள்வாய். எ-று. (இ-ம்) ஞானத்தைப்பற்றிய தனமாக்குதலொன்றுந்தேகத்தைப் பற்றிய தனமாக்குதலொன்றுமா மென்பதாம்..(எ)

(அ-கை.) வணங்கப்பாற்றனபற்றின் பெருமையையுரைத்தல். (கவி) வளையாழிகை தரித்தசெங்கண்மேனி வணங்கப்பாற்றம்பற்றின்வசத்தினாலே, யிளையாமல்விவித மாந்தொழிலினாலேயெவ்வுலகுநன்றாகவிரங்கிக்காக்கு, முளையாதவிஞ்ஞானகதிசேர்சித்தருலகபாலகராகியுரைத்தவாறே, விளையாடிவணங்கப்பாற்றென்னும்பற்றால் விரித்தசகமூர்த்தத்தின்மேவிநின்றார்.. *

(இ-ள்,) வளையாழிகைதரித்த - சங்குசக்கரத்தைதக்கரத்திற்றரித்த — செங்கண்மேனி-சிவந்தகண்ணையுடையவிஷ்ணுமூர்த்தியானவர்— வணங்கப்பாற்றம்பற்றின் - அவந்திப்பற்றினது—வசத்தினால் - வயத்தினால்—இளையாமல் - மெலியாமல்—விவிதமாந்தொழிலினால்- பலவிதமானசெயல்களினால்—எவ்வுலகுநன்றாக - சகலசகங்களையுநன்மையாக — இரங்கிக்காக்கும் - கிருபையுடனிரட்சிக்கும்—உளையாத - வருத்தமில்லாத—விஞ்ஞானகதிசேர்-மெய்ஞ்ஞானபதத்தைச்சேர்ந்திருக்கின்ற—சித்தர் - சித்தர்களும்—உலகபாலகராகி - சகரட்சகராய்—உரைத்தவாறே - முன்சொல்லியப்ரகாரமே — விளையாடி - விளையாடிக்கொண்டு— வணங்கப்பாற்றென்னும்பற்றால் - அவந்திப்பற்றினால்—விரிந்த- பரந்திருக்கின்ற—சகமூர்த்தத்தின்-உலகரூபத்தில்—மேவிநின்றார்- பொருந்தியிருந்தார்கள். எ-று. (இ-ம்) ஈஸ்வராதிகளும்வணங்கப்பாற்றனபற்றினாலுலகங்களிற்சீவன்முத்தித்தன்மையோடும்விளங்குகின்றனரொன்பதாம்.அ

(அ-கை.) பயனிலிப்பற்றினிழிவையுரைத்தல். (கவி) கேடானநல்லதெனுநினைவினாலேகிளர்போகவசத்தாலேகிட்டிநெஞ்சம், விடாதபயனிலியாம்பற்றினாலேவெறும் பிணத்துக்கழுகுபோல்வீழுமன்றே,பாடானபயனிலியாம்பற்றுளோர்க்குப்பன்னரசங்களும்வீடாய்ப்பண்ணப்பட்ட, வீடானபயனிலிப்பற்றுள்ளோரொன்னுமிளவிறகாநரகவெரியெரியுமன்றே.. *

(இ-ள்.) கேடான - கேடாகிய—நல்லதெனுநினைவினால் - நன்றென்கின்றபாவனையினாலும்—கிளர்போகவசத்தால் - ஒளிசெய்கின்றபோகவசத்தினாலும்—நெஞ்சங்கிட்டி- மனமானதுநெருங்கி —விடாத - விடுதலில்லாத—பயனிலியாம்பற்றினால் - வந்திப்பற்றினால்—வெறும்பிணத்துக்கழுகுபோல்-வெறும்பிரேதத்தை(மொய்க்குங்)கழுகைப்போல—வீழும்- (போகத்தில்)விழும்—பாடானபயனிலியாம் - கேடாகியவந்தியென்னும்— பற்றுள்ளோர்க்கு - பற்றையுடையவர்களுக்கு—பன்னரகங்களும் - பலநரகங்களும்—வீடாய்ப்பண்ணப்பட்ட - வீடாகச்செய்யப்பட்டன—ஈடான - சமானமாகிய— பயனிலிப்பற்றுள்ளோரொன்னும்- வந்திப்பற்றுள்ளவர்களென்கின்ற—இளவிறகால்- சுட்கவிந்தனத்தில்—நரகவெரியெரியும்-நரகாக்கினியெரிந்துகொண்டிருக்கும். எ-று. (இ-ம்) சிலர்பயனிலிப்பற்றினாலுலகங்களிற்பெத்தத்தன்மையோடுபவநரகத்திலழுந்துகின்றனரொன்பதாம்.. (கூ)

(அ-கை.) பற்றினதிலக்கணத்தைச்சொல்லி சீவன்முத்தன்மனதி னிலக்கணத்தைச் சொல்லத்தொடங்கல். (கவி) விச்சையெனும்விழிநன்றாய்விளங்கப்பட்டுவெம்மாய விடயத்தின்மீட்சியெய்தி, யிச்சையுறுபற்றென்பதெங்குமில்லா வியன்மனத்தோடிருப்பவரோயிறவாமுத்தர், நிச்சயமாமெப்போதுமெவற்றின்பாலுநிற்பவனுயனைத்துடனுநிற்போனாகி, யெச்செயலுஞ்செய்வோனுஞ்சீவன்முத்த னியற்றியவிம்மனத்தின்றனியல்புகேளாய்.. *

(இ-ள்.) விச்சையென்னும்விழி-ஞானமென்கின்றநேத்திரமானது—நன்றாய்விளங்கப்பட்டு- தெளிவாகவிளக்கமாய் — வெம்மாயம் - கொடியமாயா (காரியமான) —விடயத்தின்-விஷயத்தினின்றும்—மீட்சியெய்தி - திரும்பி—இச்சையுறுபற்றென்பது- விருப்பம்பொருந்தியபற்றென்பது—எங்குமில்லா - எவ்விடத்திலுமில்லாத— வியன் - பெருமைபொருந்திய—மனத்தோடிருப்பவரோ - மனதுடனிருப்பவர்களோ—இறவாமுத்தர் - சீவன்முத்தராம்—நிச்ச

யமாய்- நிச்சயமாக—எப்போதும் - எக்காலமும்—எவற்றின்பாலும் - எந்தவஸ்துக்களினும்—நிற்பவனாய்- இருப்பவனாகியும்—அனைத்துடனும் - சகலவுயிர்களோடும்—நிற்போனாகி-நிற்பவனாகியும்— எச்செயலுஞ்செய்வோனும் - எத்தொழிலையுஞ்செய்பவனாகியுமிருக்கின்ற—சீவன்முத்தனியற்றிய - சீவன்முத்தனடத்திய—இம்மனத்தின்றனியல்புகேளாய் - இந்தமனத்தினுடையசுபாவத்தைக்கேட்பாய். எ-று .... (௰)

(அ-கை.) இ - நு. (கவி) தொழிலினினைவிற்பொருளில்விண்ணின்மேல்கீழ்சூழ்திசையிற்புறப்போகத்தொகுதிதம்மி, லிழிதருமைம்பொறிநடையிலுள்ளினிற்குமின்னுயிரிற்சென்னியிலாநநத்திறுவி, லழியும்விழிகளின்மூக்கிற்புருவந்தன்னிலகங்காரத்திற்சீவனினுள்ளாகாசத்தில், விழிநனவிற்சொற்பனத்திற்சுழுத்திதன்னில்வெள்ளைமுதனிறமைந்தின்வியன்வண்ணத்தில் .... *

(இ-ள்.) தொழிலின் - சொற்களினும்—நினைவில்-நினைவுகளினும்—பொருளில்-பொருள்களிலும்—விண்ணில் - ஆகாயத்தினும்—மேல் - மேலினும்—கீழ் - கீழினும் — சூழ்திசையில்- சூழ்ந்திருக்கின்றதிக்குகளிலும்—புறப்போகத்தொகுதிதம்மில்-புறம்பாகியபோகக்கூட்டங்களிலும்—இழிதரும் - ஈனத்தைக்கொடுக்கின்ற—ஐம்பொறிநடையில்- பஞ்சேந்திரியவழிகளிலும்—உள்ளினிற்கும் - உள்ளிலுமிருக்கின்ற—இன்னுயிரில் - இனிதானபிராணனிடத்திலும்—சென்னியில் - சிரசிலும்—ஆநநத்தில் - முகத்திலும்—நாவில்- நாக்கிலும்—அழியும்விழிகளின் - கெடுகின்றகண்களிலும்—மூக்கில் - நாசியிலும்—புருவந்தன்னில் - புருவத்திலும்—அகங்காரத்தில் - அகங்காரத்திலும்—சீவனின் - சீவனிலும்—உள்ளாகாசத்தில் - இருதயாம்பரத்திலும்—விழிநனவில் - விழித்திருக்கின்றசாக்கிரத்திலும்—சொற்பனத்தில்- கனவிலும்—சுழுத்திதன்னில - சுழுத்தியிலும்—வெள்ளைமுதல் - வெண்மைமுதலாகிய—நிறமைந்தின் - பஞ்சவன்னங்களிலும்—வியன்வண்ணத்தில் - நாநாவிதநிறங்களிலும். எ-று .... (௰௧)

(அ-கை.) இ-து. (கவி) சலனத்திற்றிரத்திலடிநடுவிலீற்றிற்சமீபத்திற்றூரத்திற்சரீராங்கத்திற், பலபண்டந்தன்னிற்சேதனத்திற்சத்த பரிசாதிகளின்மகிமைபயிலின்பத்தி, லுலவுவாரத்திற்போக்கிற்காலப்பண்பிலொருசிறிதும்பற்றுமலுணர்விலாறி,நிலவியகாண்பனசிறிதுபயின்றுமெங்குநிராசையாய்ப்பரசுகத்தினிற்குநெஞ்சே .....*

(இ-ள்.) சலனத்தில் - சஞ்சலத்திலும்—திரத்தில் - திடத்திலும்—அடி - ஆதியிலும்—நடுவில் - மத்தியிலும்—ஈறில் - அந்தத்திலும்—சமீபத்தில் - சமீபத்திலும்—தூரத்தில் - தூரத்திலும்—சரீராங்கத்தில் - சரீரத்தினவயவங்களிலும்—பலபண்டந்தன்னில் - பலதிரவியங்களிலும்—சேதனத்தில் - ஆத்மாவிலும்—சத்தபரிசாதிகளின்- சத்தபரிசமுதலிய(தன்மாத்திரை)களிலும்—மகிமைபயிலின்பத்தில்- பெருமையாகச்சொல்லுகின்றவாநந்தத்திலும்—உலவுவாரத்திற்போக்கில்-உலவுகின்றவருதலிலும்போதலிலும்—காலப்பண்பில்- காலத்தினதுகுணங்களிலும்—ஒருசிறிதும்பற்றுமல்-ஓரற்பமும்பற்றுமல்—உணர்விலாறி-ஞானத்தில்விஸ்ராந்தியடைந்து—நிலவியகாண்பன-ப்ரகாசிக்கின்றதிரிஸ்யங்களில்—சிறிதுபயின்றும்- கொஞ்சம்பழகினாலும்—எங்கும் - எவ்விடத்தும்—நிராசையாய் - விராகமடைந்து—நெஞ்சு - (சீவன்முத்தன்) மனது—பரசுகத்தினிற்கும் - பிரமாநந்தத்திலிருக்கும். எ-று. (இ-ரு-க-ம்) சீவன்முத்தனது மனமானதுகிரியைமுதலியவெவற்றிலும்பற்றின்றிஞானசுகமாகவேவிளங்குமென்பதாம். ௰௨

(அ-கை.) சீவன்முத்தரிலக்கணங்கூறல். (கவி) செப்பியவத்திறநின்றுபற்றொன்றின்றிச்சீவத்தன்மையைச்சேராசீவன்முத்தரிப்புவியிற்றொழிலெல்லாஞ்செய்கதீர்கவின்பவுணர்வன்செய்கையியற்றினலுந், தப்பறவேவிட்டாலுந்தொழில்கடன்றுற்றருபயன்களொருசிறிதுந் தாக்கமாட்டா, மைப்புயல்கள் பலவிதமாயெழுந்தபோதும்வானகத்திற்பற்றுதவகையேபோல .... *

(இ-ள்.) செப்பியவத்திறநின்று - சொல்லியவச்சீவன்முத்தத்தன்மையிலிருந்து—பற்றொன்றின்றி - பற்றொன்றுமில்லாமல்—சீவத்தன்மையைச்சேரா - சிதாபாசத்தன்மையைச்சேராத—சீவன்முத்தர் - சீவன்முத்தரானவர்கள்—இப்புவியில் - இச்சகத்தில்— தொழிலெல்லாஞ்செய்க - தொழில்களனைத்தையுஞ்செய்யக்கடவன்—தீர்க - தீரக்கடவன் — இன்பவுணர்வன்-ஆநந்தபோதனன (சீவன்முத்தன்)—செய்கையியற்றினலும்-தொழிலைச்செய்தாலும்—தப்பறவிட்டாலும்-குற்றமில்லாமல்விட்டுவிட்டாலும்—தொழில்கடன்றல்-கிரியைகளினல்—தருபயன்கள் - தரப்பட்டப்ரயோசனங்கள்—ஒருசிறிதும் - எவ்வளவும்—மைப்புயல்கள்-கறுத்தமேகங்கள்—பலவிதமாயெழுந்தபோதும் - நாநாவிதமாகவுண்டானபொழுதும்— வானகத்தில் - ஆகாயத்தில்—பற்றுதவகையேபோல—சம்பந்தியாததன்மையைப்போல — தாக்கமாட்டா - சேரமாட்டாது. எ-று .... (௰௩)

(அ-கை.) சிதானந்தமடைந்ததினிலக்கணங்கூறல். (கவி) அன்றியேயநுதனையுந் தீரநீக்கியறிபொருளின்முடிவானவறிவாற்றுன்னி, யொன்றுமுபசாந்தனுப்பளி ங்குபோலுள் ளொளிமேவிசீவனொருமித்துநிற்க, நன்றுணர்சிற் சுகராகிப்பெரி யோராகிஞானபரராய்ப்பரம நன்றுப்பெற்றோர், நின்றசைவார் புறத்தின்மயிற் பீலிபோலநிலைகலங்கார்மேருவைப்போனெஞ்சினுள்ளே...................... *

(இ-ள்.) அன்றி-அல்லாமலும்—அநுதனையும்-அந்தவிஷயாமிசத்தையும்—தீரநீக்கி-தீர்ப்பாகத்தள்ளி—அறிபொருளின்முடிவான - விஷயத்தினந்தமாகிய—அறிவாற்றுன்னி-ஞானத்தினுனிறைந்து—ஒன்றுமுபசாந்தனுய் - பொருந்தாநின்றவுபசாந்தமுடையவனுய்—பளிங்குபோல் - ஸ்படிகமணியைப்போல—உள்ளொளிமேவி- உள்ளேப்ரகாசத்தைப்பொருந்தி—சீவன் - சீவனானவன்—ஒருமித்துநிற்க - (ஆத்மாவி) லொன்றுபட்டுநிற்கக்கடவன் — நன்றுணர் - நன்றயறிந்திருக்கின்ற—சிற்சுகராகி-ஞானசுகத்தையுடையவராகியும்—பெரியோராகி-மகான்களாகியும்—ஞானபரராய் - அறிவுள்ளவராகியும் — பரமநன்றுப்பெற்றோர் - மேன்மையைநன்றுகப்பெற்றவர்களாகியும்—புறத்தின் - இந்திரியவியாபாரங்களில் — மயிற்பீலிபோல - மயிலிறகைப்போல—நின்றசைவார் - நின்றுசஞ்சரிப்பார்கள்— மேருவைப்போல்-மகாமேருவைப்போல—நெஞ்சினுணிலைகலங்கார் - மனதினிலைதளரார். எ-று .... (௰௪)

(அ-கை.) ஆநந்தாதீதமுண்டாகுங்கிரமமுரைத்தல். (கவி) அறிபொருளைவிட்டகன்றலழியுஞ்சித்த மந்தநிலைவியாபார மனைத்துமில்லாச், செறிநனவிற்சுழுத்தியாமிதனைநாளுந்தீராதபரிசயமேசெய்யச்செய்யப், பிறிவின்முதுதுரியமாமென்பர் மேலோர்பிழையிலாவிதனிலைநிலைமைபெற்றுக், குறியறுமாநந்த மேகாந்தசீலக் கொள்கையா லனுநந்தங்கூடுமென்றே. .... *

(இ - ள்.) அறிபொருளைவிட்டகன்றல் - விஷயங்களைவிட்டுநீங்கினுல்—சித்தமழியும்-மனமானதுகெடும்—அந்தநிலை - அந்நிலையானது— வியாபாரமனைத்துமில்லா - தொழில்களனைத்துமில்லாத—செறிநனவிற்சுழுத்தியாம் - நிறைந்தநனுச்சுழுத்தியாகும்— இதனைநாளும்-இதையெப்போதும்—தீராதபரிசயமே - ஒழிபாதபரிச்சயமே—செய்பச்செய்ப - செய்யச்செய்ய—மேலோர் - சத்துக்கள்— பிறிவின்முதுதுரியமாமென்பர் - பிரிவற்றமுதிர்ந்த துரியமாமென்றுரைப்பார்கள்—பிழையில்லாவிதனில்- குற்றமற்றவித்துரியானுபவத்தில் —நிலைமைபெற்று - நிலையையடைந்து — குறியறுமாநந்தம் - குறிப்பில்லாதவாநந்தத்தையுடைய—ஏகாந்தசீலக்கொள்கையால் - தனித்தசுபாவக்கோட்பாட்டினுல்—அனுநந்தங்கூடும் - ஆநந்தாதீதங்கூடும். எ-று .... (௰௫)

(அ-கை.) ஆநந்தாதீதமேதுரியாதீதமெனல்.(கவி) அந்தவனுநந்தமாநந்தமென்னு மறிவினதீதந்தன்னையடைந்துளோனைத்,தொந்தமிலாயோகியெனச்சொல்லலாகுந் துரியாதீதந்தனையுந்துன்னினேனும், பந்தமுறுபவம்போய்த்தா மதத்தால்வந்தப லவபிமானங்கள்போய்ப்பரமவின்ப, நந்தலிற்றன்மயமாஞ்சற்பாவந்தன்னினல்னீ ரிலுப்புப்போனன்றுயொன்றும் .... *

(இ-ள்,) அந்தவனுநந்தம் - அந்தவாநந்தாதீதமாகிய—மாநந்தமென்னும்-மகாநந்தமென்கின்ற—அறிவினதீதந்தன்னை - ஞானுதீதத்தை—அடைந்துளோனை - பெற்றிருப்பவனை —தொந்தமிலா- இரண்டில்லாத—யோகியெனச்சொல்லலாம் - யோகியென்றுசொல்லலாகும் துரியாதீதந்தனையும்- துரியாதீதத்தையும்—துன்னினேனும்- அடைந்தவனுக்கு—பந்தமுறுபவம்போய்-கட்டுப்படுகின்றசநநமானதுநீங்கி—தாமதத்தால்வந்த-தாமசகுணத்தினுல்வந்த—பலவபிமானங்கள்போய்-நாநாவிதமானவபிமானங்களனீங்கி—பரமவின்பம் - பரமசுகமானது —நந்தலிற்றன்மயமாம்-கேடிதலில்லாததனதுஸ்வரூபமாகிய—சற்பாவந்தன்னில்-சத்தினிடத்தில்—நன்னீரிலுப்புப்போல்-நல்லசலத்திலுப்பைக்கலந்ததுபோல—நன்றுயொன்றும்-நன்றுகவொன்றுபடும். எ-று .... (௰௬)

(அ-கை.) வேதங்கள்மத்தியகநிலையே பிரமமெனச்சொல்லுமெனல். (கவி) சடமசடமெனுநோக்கமிரண்டினூடேதனியாகிநின்றபரதத்துவத்தை,யிடவியபோதாரண்யமுதலாம்வேத மிராமமனைபலகவுமியம்புமன்றே, படருறுகாண்பனகாட்சி மேவும்போதிற்பரம் பொருளின்பற்றுகிப்பயின்றவின்பந்,திடவனுபூதியின்வடிவா மாதலாலே திகழ்பிரமசாரமெனச்செப்புந்தானே .... *

(இ-ள்.) சடமசடமெனும் - சடாசடமென்கின்ற — நோக்கமிரண்டினூடு - இரண்டுபார்வையின்மத்தியில—தனியாகநின்ற - தனிமையாயிருந்த— பரதத்துவத்தை - பரதத்துவமானஸ்வரூபத்தை—இடவிடபோதாரண்யமுதலாம்- மார்க்கமாகியபிரகதாரண்யவுபநிடதமு

தலாகிய—வேதம் - சுருதியானது—இராமனே - ஸ்ரீராமா—பலகாலுமியம்பும்- எப்போதுஞ்சொல்லும்—படருறுகாண்பன-படர்ந்திருக்கின்றவிஷயங்களும்—காட்சி-ஞானமும்—மேவும்போதில் - பொருந்துங்காலத்தில் — பரம்பொருளின்பற்றுங்- பரமார்த்தத்திற்பற்றுதலாய்—பயின்றவின்பம் - சொல்லியபரமசுகமானது—திடவனுபூதியின்வடிவாம்-திடமாகியவனுபூதியினதுஸ்வரூபமாகும்—ஆதலால் - ஆதலினுல் — திகழ்பிரமசாரமென - (அதுவே) ப்ரகாசிக்கின்றபிரமரசமென்று—செப்பும் - சொல்லும். எ-று.................................. (௰௭)

(அ-கை.) நடுநிலையே நனவிற்சுழுத்தியாமெனல். (கவி) தெரிபொருளுந்தரிசனமுஞ்
சேரும்போதிற் சேர்ந்தசுகவறிவுமிகச்சிறந்ததாகுந், தெரிபொருளால்வளைப்புண்
டாற்பந்தமாகுந்தெரிபொருளை விட்டகன்றுற்றிடங்கொள்வீடாந்,தெரிபொருளுந்
தரிசனமுஞ்சேரும்போதிற் சேர்ந்தவனுபூதியிடர்தீர்ந்ததாகுந், தெரிவுறவாங்கது
பற்றிநிற்பாய்நீதின்றிரநிலையாஞ்சுழுத்திதனைச்சேருவாயே .... *

(இ-ள்.) தெரிபொருளும்- விஷயங்களும்—தரிசனமும்-காட்சியும்—சேரும்போதில்-சேருகின்றகாலத்தில்—சேர்ந்தசுகவறிவு - சேர்ந்தவாநந்தபோதமானது— மிகச்சிறந்ததாகும்- மிகவுஞ்சிறப்பானதாம்—தெரிபொருளால் - விஷயங்களால்—வளைப்புண்டால்- கட்டுப்பட்டால் —பந்தமாகும் - பந்தனமாம்—தெரிபொருளை விட்டகன்றால்- விஷயத்தைவிட்டுநீங்கினுல்—இடங்கொள்வீடாம் - இடம்பொருந்தியமோக்ஷமாம்— தெரிபொருளும் - விஷயமும்—தரிசனமும் - காட்சியும்—சேரும்போதில் - சேருகின்றகாலத்தில்—சேர்ந்தவனுபூதி - சேர்ந்தவனுபூதியானது—இடர்தீர்ந்ததாகும்- துன்பநீங்கினதாம்—தெரிவுறவாங்குநீயதுபற்றிநிற்பாய் - தெளிவாகவவ்விஷயத்தினீயதைப்பிடித்திருப்பாய் — நின்றிரநிலையாஞ்சுழுத்திதன்னை- உனதுதிரநிலையாகிய(நனவிற்)சுழுத்தியை—சேருவாய் - அடைவாய். எ-று...................... (௰௮)

(அ-கை.) நனவிற்சுழுத்தியே துரியவியாபகமாய்விளங்குமெனல். (கவி) அதுதுரி
யநிலையடையுமடைந்தபோதிலான்மாத்தான் றூலமலவணுவுமல்ல; திதமுறுமுன்
னிலையல்லப்படர்க்கையல்லச்சித்தசித்துண் டில்லையெனுந்திறங்களல்ல,வுதிதமுறுநா
னல்லப்பிறனுமல்ல வொருவனலவநேகனலவுலகமென்றே, யிதுவெனக்காண் பன
வாகிச்சித்தமாதியிருமூன்றிந்திரியத்துக்கிடமாய்நிற்கும் .... *

(இ-ள்.) அதுதுரியநிலையடையும்- அச்சுழுத்தியே துரியஸ்தானத்தையடையும்—அடைந்தபோதில் - அடைந்தகாலத்தில்—ஆன்மாத்தான் - ஆத்மாவானது—தூலமல- மகத்துமன்று—அணுவுமல்ல - சூட்சுமமுமன்று — திதமுறுமுன்னிலையல்ல - திரமாகியப்ரத்யக்ஷமுமன்று—படர்க்கையல்ல - அப்ரத்யக்ஷமுமன்று—சித்து-சேதனமும் — அசித்து - அசேதனமும்—உண்டு - சத்தும்—இல்லை - அசத்தும்—எனுந்திறங்களல்ல - என்கின்றகுணங்களுமல்ல— உதிதமுறுநானல்ல - தோற்றுகின்றநானுமன்று—பிறனுமல்ல - இதரனுமன்று—ஒருவனல- ஏகனுமன்று—அநேகனல - அநேகனுமன்று—உலகமென்று - சகமென்று— இதுவெனக்காண்பனவாகி - இதுவென்றெதிரேகாணப்பட்டவைகளாய்—சித்தமாதியிருமூன்றிந்திரியத்துக்கு-மனமுதலியவாறிந்திரியங்களுக்கும்—இடமாய்நிற்கும்-ஸ்தானமாயிருக்கும். எ-று. (இ-எ-க-ம்) அனுபவத்தினிலக்கணத்தையுமதையடையுங்கிரமத்தையுமறிவித்ததாம். .... (௰௯)

(அ - கை.) மனதின்சங்கோசவிகாசபலனையுரைத்தல். (கவி) ஆங்கதுவேயதீத
பதமாதலாலேயதுகிஞ்சிலன்றெங்குமதுவேயாகும், பாங்குறுவீடென்றும்பருலகி
லில்லைப்பாதலத்திற்பூதலத்திற்பார்க்கிலில்லை; வீங்கியவாசைகளெல்லாமிறந்தகாலை
விரிந்தமனமிறப்பதுவேவீடென்றோது, மோங்கியவீடெனக்குளதென் றுள்ளே
யெண்ணமுண்டாகின்மீண்டுமனமுற்பவிக்கும் .... *

(இ-ள்.) அதுவேயதீதபதமாதலால் - அதுவேயதீதபதமாதலினுல்— அதுகிஞ்சிலன்று - அதுவற்பமன்று— எங்குமதுவேயாகும் - எவ்விடத்துமதுவேயாகும்— பாங்குறுவீடென்று - உரிமையாகியமோக்ஷமென்றுசொல்லப்பட்டது — உம்பருலகிலில்லை - தேவலோகத்திலுமில்லை—பாதலத்தில் - பாதாளத்தில்—பூதலத்தில்-பூமியிலும்—பார்க்கிலில்லை- பார்க்குமிடத்தில்லை—வீங்கியவாசைகளெல்லாம் - பருத்தவிச்சைகளனைத்தும் — இறந்தகாலை - மரித்தகாலத்தில்—விரிந்தமனமிறப்பதுவே - பரந்தமனநசிப்பதே—வீடென்றோதும்- மோக்ஷமென்றுசொல்லப்படும்—ஓங்கியவீடு - உயர்வாகியமோக்ஷமானது—எனக்குளதென்று- எனக்குள்ளதென்று—உள்ளேயெண்ணமுண்டாயின் - உள்ளேநினைப்புதயமாயின்—மீண்டுமனமுற்பவிக்கும் - திரும்பவுமனதுண்டாகும். எ-று .... (௨௰)

(அ-கை.) மனதைக்கெடுப்பதற்குச்சாந்திவேண்டுமெனல். (கவி) நினைப்புமிகிலிவ
னுக்குப்பிறப்பிறப்புநீங்காதுவல்பந்தநிலையதாகு, மனைத்தினுக்குமதீதமாயுருவு

மெல்லாமாகியகன்றாத்துமதத்துவமேநிற்கில், வினைத்தொடராப்பந்தமேதுமுத்தி
யேதுவேராசசிந்தையைக்கெடுப்பாய்மேலதாகத், தலைத்தெளிந்து நிறைந்தமல
நெஞ்சாய்நல்லசாந்தியையுற்றோர்விரும்பார்சற்றுமொன்றும் .... *

(இ - ள்.) நினைப்புமிகில்- (மனதின்) மனமிகுந்தால் -- இவனுக்கு- இ (ச்சிந்தனையுள்ள)வனுக்கு—பிறப்பிறப்புநீங்காது—சநநமரணம்போகாது — வம்பந்தநிலையதாகும்-வலிமை பந்தநிலையாயிருக்கும்— அனைத்திலுக்குமதீதமாய்- சகலத்துக்குமதீதமாய்— உருவமில்லாமாகி- வடிவங்கள்யாவுமாகி— அகன்று- வியாபகமாகி—ஆத்துமதத்துவமேநிற்கில் - ஆத்துமதத்துவமாகநிற்குமானால்—வினைத்தொடராம் - இருவினைத்தொடர்பாகிய — பந்தமேது- பந்தமென்பதேது— முத்தியேது- (நல்வினைத்தொடர்பாகிய) மோக்ஷமென்பதேது — வேராசசிந்தையைக்கெடுப்பாய் - மூலத்தோடுமனத்தைக்கெடுப்பாய்— மேலதாகத்தனைத்தெளிந்து- மேன்மையாகத்தன்னைத்தெரிந்து— நிறைந்து-பூரணமாய்— அமலநெஞ்சாய் - நின்மலமனதாய்— நல்லசாந்தியையுற்றோர்-நன்மையானவுபசாந்தத்தைப்பொருந்தினவர்கள்—ஒன்றும்- ஒன்றையும்— சற்றும்விரும்பார் - அற்பமும்இச்சியார்கள். எ-று. ....(உக)

(அ-கை.)சாந்தியுண்டாவதற்கு நிராசைவேண்டுமெனல். (கவி) வெந்தோடுமாபத்
தாங்கருவேற்காட்டை வெட்டிமழுப்பரமசுகமேவுந்தானஞ், சந்தோடஞ்சாந்தி
யெனு மரப்பூங்கொத்துச் சாற்றுறுமிந் நிராசையுறிற்றளர்வுதீரு, மந்தோபார்கு
ளப்படியாமுளையாமேருவாசைகுருவிக்கூடாமவனிமூன்றும், வந்தோர்புன்றரும்
பாகுநிராசைபூண்டமாறுதவலங்கார வடிவுளோர்க்கே............................ *

(இ-ள்.) வெந்தோடும்-எரிந்துபோகாநின்ற—ஆபத்தாங்கருவேற்காட்டை- ஆபத்தென்னுங்கருவேல்வனத்தை— வெட்டுமழு- வெட்டுகின்றகோடாலியாகவும்— பரமசுகம்- பிரமசுகத்தை—மேவுந்தானம் - பொருந்தாநின்றவிடமாகவும்— சந்தோடம்சாந்தியெனுமரம்- சந்தோடம்சாந்தியென்கிறதருவுக்கு— பூங்கொத்து- புட்பக்கொத்தாகவுமிருக்கின்ற— சாற்றுறுமிந்நிராசையுறில்- சொல்லப்படுகின்றவிந்நிராசைவரின்— தளர்வுதீரும்- தளர்ச்சிநீங்கும்— நிராசைபூண்ட- நிராசையை (யாபரணமாகத்) தரித்த— மாறுதவலங்காரவடிவுளோர்க்கு- நீங்காதவலங்காரஸ்வரூபத்தையுடையவர்களுக்கு— அந்தோ- அதிசயம்—பார்குளப்படியாம்- பூமியானது(பசுவின்) குளப்படியாகும்— மேருமுளையாம்- மகாமேருவங்குரமாகும்—ஆசைகுருவிக்கூடாம்- திக்குகள்பறவைக்கூண்டாகும் — அவனிமூன்றும் - மூன்றுலகமும்—வந்தோர்புன்றரும்பாகும்- வந்தோரற்பமானதிரணமாம். எ-று. (இ-ங-க-ம்,) நிராசையாற்சாந்தியுண்டாயதனுலாத்மதரிசனமாயதின்மனங்களாயின்யாவுமற்பமாமென்பதாம்.உஉ

(அ-கை.) ஞானவான்கள் பரஞானத்திலிருக்குமுறைமைக்கூறல். (கவி) காயத்தில்
வேறாகத்தன்னைக்கண்டோன் காயமீரினுமறியான் கன்னற்கட்டி, தீயிற்காயினுமெ
ரிந்தபோதுமின்பந்தீராதவாறுபோற்றெளிந்தஞானி, மாயத்தின்மோகத்தாற்பே
தமாகான்மணந்தபரபுருடன்மேன்மனஞ்சேர்மங்கை, நேயத்தான்மனைத்தொழி
ல்கள்செய்யுமாபோனிகழ்தொழிற்செய்யினும்பரத்தினிலைமைநீங்கான் .... *

(இ-ள்.) காயத்தில்வேறாக - சரீரத்துக்குவிலட்சணமாக — தன்னைக்கண்டோன்-ஆத்மஸ்வரூபத்தைத்தரிசித்தவன் — காயமீரினுமறியான்- சரீரத்தையரிந்தபோதுமறியமாட்டான்— கன்னற்கட்டி- கரும்பின்கட்டியானது — தீயிற்காயினும் - அக்கினியிற்காய்ந்தகாலத்திலும்—இன்பந்தீராதவாறுபோல்- இரசங்கெடாதவிதத்தைப்போல—தெளிந்தஞானி-தெளிவுற்றஞானவான்— மாயத்தின்மோகத்தால்- பொய்யாகியமயக்கத்தினல்—பேதமாகான்- வேற்றுமையாகான்—மணந்தபரபுருடன்மேல்- கூடியபரபுருஷனிடத்தில்— மனஞ்சேர்மங்கை-மனதையுடையபெண்ணானவள்—நேயத்தால்-அன்பினல்—மனைத்தொழில்கள்- கிரகக்கிருத்தியங்களை—செய்யுமாபோல் - பண்ணுவதுபோல—நிகழ்தொழில்செய்யினும் - விளங்காநின்றசெயலைச்செய்தாலும்—பரத்தினிலைமைநீங்கான்- பிரமத்தினதுநிலைமையைப்பிரியான். எ-று.

(அ-கை.) பற்றறுதியேவிதேகமுத்தித்தன்மையாமெனல்-(கவி) பண்டத்திற்பற்றி
ன்மையாலேசித்தம் பயில்சாந்தமுத்திதரும்பகர்ந்தமுத்தி, பிண்டத்தோடிருந்தா
லுமிராவிட்டாலும்பெருகும்பற்றறுத்தபெரியோர்க்கென்பர், மணமுற்றநயமற
வார்த்தொரிம்பம் வருஞ்சீவன்முத்தராம்வளர்நேயத்தாற், றெண்டுற்றுவாழுமவர்
பந்தமுற்றோர்சொன்னமூன்றுமவனேதூயமுத்தன்.. *

(இ-ள்.) பண்டத்தில்-விஷயங்களில் —பற்றின்மையால்-இச்சையில்லாததினுல் —சித்தம்-மனதில்—பயில்சாந்தம்-பொருந்தியசாந்தியே —முத்திதரும்- மோக்ஷத்தைக்கொடுக்கும்—

பகர்ந்தமுத்தி- சொல்லியமோக்ஷமானது—பிண்டத்தோடிருந்தாலும்- சரீரத்துடன் (கூடி) யிருந்தாலும்— இராவிட்டாலும்-(சரீரத்தோ)டில்லாமற்போனாலும்—பற்றறுத்த- ஆசையைக்கெடுத்த— பெரியோர்க்கு-மகான்களுக்கு— பேறாகுமென்பர் - ப்ரயோசனப்படுமென்று சொல்லுவார்கள்— மண்டுற்றநேயமற- விஸ்தாரமானவிஷயவிச்சை நீங்க—வாழ்வோர்- சுகிப்பவர்கள்— இன்பம்வரும்- ஆநந்தமுண்டான—சீவன்முத்தராம்- சீவன்முத்தர்களாம்— வளர்நேயத்தால்- வளராநின்ற (விஷய) விச்சைகளினால்—தொண்டுற்றுவாழுபவர்-அடிமைப்பட்டு சுகிப்பவர்கள்— பந்தமுற்றோர்- பந்தமடைந்தவர்களாம்— சொன்னமூன்றுமவனே - சொல்லிய (விருவர்க்கு மேலான) மூன்றுவதானவனே— தூயமுத்தன் - விதேகமுத்தனும். எ - று. (இ-உ-க-ம்.) ஞானிகளடையும்விதேகமுத்திபரியந்தங் கிரமமாகச்சொன்னதென்பதாம்...(உச)

(அ-கை.) சீவன்முத்தரனுசகசநடையைத்தெரிவித்தல். (கவி.) வருதொழிலின்விருப்புறான்வர்த்தமானவழிநிற்பன்சென்றவற்றைமனத்தினெண்ணான், கருமமுழுவதுமியற்றுந்தொடர்பந்தத்திற் கலந்தவர்பான்மனம்பற்றான் கவலைகூரான், மருவியவோர்பத்தர்பாற்பத்தனாகும்வஞ்சகர்பால்வஞ்சகனும்வாலர்தம்பாற், பருவமுறுவாலனும்விருத்தரானோர்பால்விருத்தனுந்தீரர்பாலுமாங்கே..................... *

(இ-ள்.) வருதொழிலின்- வருங்(காலத்திலுள்ள) செய்கைகளில்— விருப்புறான்-இச்சியான்—வர்த்தமானவழிநிற்பன்- நிகழ்காலத்தில் (வருகின்றதொழிலின்)மார்க்கத்திலிருப்பான்—சென்றவற்றை- செல்(காலத்திலுள்ள)தொழில்களை—மனத்தினெண்ணான்-மனதினினையான்—கருமமுழுவதுமியற்றும்- தொழில்களனைத்தையுஞ்செய்வான்—தொடர்பந்தத்தில்-தொடராநின்றபந்தத்தில்— கலந்தவர்பால்- கலந்தவர்களிடத்தில்— மனம்பற்றான்- மனதுவையான்— கவலைகூரான்-துன்பத்தின்மிகான்—மருவியவோர்பத்தர்பால்-அடைந்தவொப்பற்றபத்திமான்களிடத்தில்— பத்தனாகும்- பத்திமானவன்—வஞ்சகர்பால்- வஞ்சகரிடத்தில்—வஞ்சகனும்- வஞ்சகனாவன்— வாலர்தம்பால்- குழந்தைகளிடத்தில்— பருவமுறுவாலனும்-பருவமில்லாதகுழந்தையாவன்—விருத்தரானோர்பால்- விருத்தரானவர்களிடத்தில்—விருத்தனும்- விருத்தனாவன்— தீரர்பாலும்- தீரர்களிடத்திலும்—ஆங்கே- அப்படியேதீரனாகவிருப்பான், எ-று.

(அ-கை.) இது (கவி) விடலைபால்விடலையாந்துயருற்றோர்பால்வெந்துயரமுறுநிலைமைவிடாதபுந்தி, திடமுளதாமாநந்தநிறைந்துதோன்றுஞ் செவ்வியனும்புண்ணியதஞ்சிறப்பேசெய்யு, மடைமையிலாவறிஞனுந்தெளிந்தோனாகு மதுரமுளனுந்தீனமனமில்லோனுஞ், சுடர்குளிரின்மதிகருகிலெரிகீழ்நோக்கிற்றுளங்கிவியவான்சீவன்முத்தன்றூயோன் .... *

(இ-ள்.) விடலைபால்விடலையாம் - எவ்வனமுள்ளவரிடத்திலெவ்வனமுள்ளவனாகவும்—துயருற்றோர்பால்- துன்பம்பொருந்தினவர்களிடத்தில்—வெந்துயரமும்- வெப்பம்பொருந்தியதுன்பமடைந்தவனாகவும் — நிலைமைவிடாதபுந்தி - மெய்யைவிடாதவறிவையுடைய—திடமுளதாமாநந்தம்-உண்மையுள்ளவானந்தமானது—நிறைந்துதோன்றும்-பூரணமாகத்தோன்றுகின்ற—செவ்வியனும்- செம்மையுள்ளவனாகவும் —புண்ணியதஞ்சிறப்பேசெய்யும்- புண்ணியமானதனதுசிறப்பைச்செய்பவனாகவும்—மடைமையிலா - அஞ்ஞானமில்லாத— அறிஞனும்- ஞானமுடையவனாகவும்— தெளிந்தோனாகவும் - தெளிந்தவனாகவும்—மதுரமுளனும்- இரசமுடையவனாகவும்—தீனமனமில்லோனும்- இளைத்தமனமில்லாதவனாகவும் —தூயோன்- பரிசுத்தனாகவுமிருக்கின்ற- சீவன்முத்தன்- சீவன்முத்தனானவன்— சுடர்குளிரில்-சூரியன்குளிர்ந்தாலும்— மதிகருகில்- சந்திரன்கறுத்தாலும்— எரிகீழ்நோக்கில் - அக்கினியதோமுகமாக நோக்கினாலும்— துளங்கிவியவான்- அச்சமுற்றதிசயப்படான். எ-று. (இ-உ-க-ம்.) யாதியாதெப்படியெப்படியோவதுவதப்படியப்படியாய்த்தானிருந்து நிரதிசயாநந்தமாய்விளங்குவனென்பதாம்..................... (உரு)

(அ-கை) பிரமநிச்சயத்தைச்சொல்லி யதன்சங்கற்பமான மனோசாஞ்சல்யத்தை நீக்கும்பொருட்டுஅச்சலனமேசகத்தாமெனத்தெரிவித்தல். (கவி)இதுவெனத்தோன்றியவெல்லாஞ்சிற்சொரூப மிவ்வண்ணம்பலசத்தியிலங்குமன்றே, புதுமைகளின்வியப்புறார்சீவன்முத்தர் புனலசைவால்வேற்றுமையேபோலத்தோன்று, முதுசுழிபோலவும்விண்ணின்மயிலின்றேகை முன்புகடிதசைதலுமே முத்தின்கூட்டங், கதுமெனமெய்போற்றோன்றல்போலவுந்தான் கனத்தசகமனத்தசைவால் கடிதுதோன்றும்..................... *

(இ-ள்.) இதுவெனத்தோன்றியவெல்லாம்-ஈதென்றுகாணப்பட்டசகலமும்—சிற்சொரூபம் - ஞானஸ்வரூபமாம்—இவ்வண்ணம் - இந்தப்ரகாரம்—பலசத்தியிலங்குமன்று- சகல

சத்திகளும்ப்ரகாசிக்குமென்று—பதுமைகளின் - அற்புதங்களில்—சீவன்முத்தர் - சீவன்முத்தர்கள்—வியப்புறா- அதிசயமடையார்கள்—பனலசைவால் - சலத்தினசைவிறுல்— வேற்றுமையேபோல - வேறானதுபோல—தோன்று-தோற்றுநின்ற—முதுசுழிபோலவும்-பழைமையானசுழியைப்போலவும்— விண்ணில் - ஆகாயத்தில் — மயிலின்றேகை - மயிலினிறகை—முன்புகடிதசைத்தலும்- முன்புசீக்கிரமாகவசைத்தமாத்திரத்தில்—முத்தின்கூட்டம்-முத்தின்றிரளானது—கதுமென - சீக்கிரமாக—மெய்போற்றேன்றல்போலவுந்தான்— சத்தியம்போலத்தோன்றுதல்போலவும்—கனத்தசகம்- சாரமாயிருக்கின்றவுலகமானது—மனத்தசைவால் -மனோசஞ்சலத்தால்—கடிதுதோன்றும்- சீக்கிரமாகத்தோற்றும்.எ-று. (இ-ம்) மனோசாஞ்சல்யத்தைநீக்குதற்கு உபாயஞ் சொல்லத்தொடங்கினதாம் ....(௨௭)

(அ-கை.) சஞ்சலநீங்கி நிச்சலமானபிரமத்தை யடைய மனதினசைவு மசையாமையுஞ்
செவ்வையுமியாதெனி லசற்றுமந்தினவினுவுக்குத்தரங்கூறல். (கவி) வேறு. என்னவோ
தலுமியாதினுலசைந்திடுமியாதினுலசையாது, சொன்னநெஞ்சகந் திருத்தலாநெறியெ
து சொல்லெனுமிராமற் றப்,பன்னுமாதவனுரைசெய்வானெள்ளிலேயெண்ணெயும்பனி
தன்னின், மன்னுவெண்மையுப்போன்மனத்தசைவுதான்மருவியேமிகத்தோன்றும் . *

(இ-ள்.) என்னவோதலும்-(இப்படி) யென்றுசொல்லவும்—யாதினுலசைந்திடும்- எதினுலசையும்—யாதினுலசையாது- எதினுலசையமாட்டாது—சொன்னநெஞ்சகம்-சொல்லப்பட்டமனதை—திருத்தலாநெறியெது- திருந்தச்செய்கின்றமார்க்கமெது—சொல்லெனுமிராமற்கு-சொல்லென்றுகேட்டஸ்ரீராமனுக்கு—பன்னுமாதவனுரைசெய்வான்- சொல்லப்பட்டமாதவனுனவசிஷ்டமுனிசொல்லுவார்—எள்ளிலேயெண்ணெயும்- எள்ளுக்குளெண்ணெய்போலவும்—பனிதன்னில்-பனியினிடத்தில்—மன்னுவெண்மையும்போல்- நிறைந்தவெண்மையைப்போலவும்—மனத்தசைவுதான்-மனத்தினசைவானது—மருவியேமிகத்தோன்றும்-கலந்துமிகவுந்தோற்றும். எ-று. (இ-ம்) சங்கற்பமேமனத்தினசைவாமென்பதாம் .. ..(௨௮)

(அ-கை.) இரண்டாம்வினுவுக்குத்தரங்கூறல். (கவி) சித்தநாசத்தினெறியிரண்டி
யோகமுந்தெளிந்தஞானமுமாகு, மொத்தயோகந்தான் மனத்துறு தொழிலினை
யொருவழிப்படமாற்றல், சுத்தஞானந்தானலம்பெறக்காண்பதாந்தொடர்மனமே
தென்னின், மெத்துமாகமபூடணருரைத்த துவிசையுயிரசைவாகும்............... *

(இ-ள்.) சித்தநாசத்தின் - மனோநாசத்தினது — நெறியிரண்டு - மார்க்கமிரண்டு—யோகமும் - யோகமும்—தெளிந்தஞானமுமாகும் - தெளிந்திருக்கின்றஞானமுமாம்— ஒத்தயோகந்தான் - பொருந்தினயோகமானது—மனத்துறுதொழிலினை - மனதிற்பொருந்தியசெயல்களை—ஒருவழிப்படமாற்றல் - ஒருவழியிற்செல்லத்திருப்புதல்—சுத்தஞானந்தான் - பரிசுத்தஞானமானது—நலம்பெறக்காண்பதாம்- யாவுஞ்சுகமாகப்பார்ப்பதாம்— தொடர்மனமேதென்னில் - தொடர்கின்றமனமெதுவென்றால்—மெத்துமாகமபூடணர் - மேன்மையானவாகமத்தையாபரணமாகத்தரித்தவர்கள்—விசையுயிரசைவாகும் - வேகத்தையுடையபிராணவாயுவினசைவாகுமென்று—உரைத்தது - (முன்) சொல்லியது. எ - று. (இ-ம்) மனத்தசைவைக்கெடுப்பதற்கதன்விருத்தியை யொருவழிப்படுத்துகின்றயோகமும், அறிவிலாநந்தானுபவமுள்ள ஞானமுமாம் அம்மனம்பிராணசலனமென்பதாம்..... ... . (௨௯)

(அ-கை.) பிராணபந்தனவுபாயமியாதெனல். (கவி) உரைசெய்யாருயிர்தடைப்படிலுள்
ளமுமொழிபுநெஞ்சசைவற்றுற், புரைசெய்சென்மம்போமாதித்தன்போய்விழிற் புவித்
தொழில்போமாப்போல், வரைசெய்மார்பனேயென்றலுமுடலெனுமனையின்விண்ணிடை
நாளும், விரைவிலோய்வறவுழல்பிராணுதியைவிலக்குமாறெதுவென்றுன்........ .... *

(இ-ள்.) உரைசெய்யாருயிர்-சொல்லப்பட்டபொருந்தியபிராணனானது—தடைப்படில்-தடைபட்டால்—உள்ளமுமொழியும் - மனதுங்கெடும்—நெஞ்சசைவற்றால் - மனோசஞ்சலங்கெட்டால்—ஆதித்தன்போய்விழில - சூரியனத்தமனமானல்— புவித்தொழில்போமாபோல்-சகத்தின்றொழினீங்குதல்போல—புரைசெய்சென்மம்போம்- குற்றஞ்செய்கின்றசநநநீங்கும்—வரைசெய்மார்பனே - மலைபோன்றமார்பையுடையஸ்ரீராமா—என்றலும் - என்று(வசிஷ்டமுனி)—சொல்லவும்—உடலெனுமனையின் - சரீரமென்கின்றவீட்டில்— விண்ணிடைநாளும்-இதயாம்பரத்திலெப்போதும்—விரைவிலோய்வற - வேகமாகவோய்வில்லாமல் — உழல்பிராணாதியை - சுழலுகின்றபிராணன்முதலியவாய்வுக்க (ளசைவை)— விலக்குமாறெதுவென்றுன்-மாற்றுகின்றவிதமெதுவென்றுஸ்ரீராமன்கேட்டான். எ-று...(௩௰)

(அ-கை.) பிராணுபாமவுபாயஞ் பத்துவிதமாகவறிவிக்கத்தொடங்கல். (கவி) முனிவனே
துவானுமெலாமறிஞரைமுன்னியேவிராகத்தை, நனிமுயன்றுகற் றிதனினற்குடும்பமா

நடைவிலங்கதுவிட்டுத், தனிநிராசைதானிறைந்திடில்விரும்பியதற்பொருட்டியானத்தா,
லனிசநீள்பகலொருமையேவிளங்கிடவடுத்தசாதனைதன்னால்...................................... *

(இ-ள்.) முனிவனேதுவான் - வசிஷ்டமுனிசொல்லுவார்— நூலொடுமறிஞரைமுன்னி-(ஆத்மஞான) சாஸ்திரங்களுடன்ஞானிகளைச்சிந்தித் (தடைந்) து—விராகத்தை - வைராக்கியத்தை—நனிமுயன்று - மிகவுமுயற்சிசெய்து—கற்றிதனினால் - அற்பியாசித்தவிவைகளினால்—குடும்பமாம் - சம்சாரமாகிய—நடைவிலங்கதுவிட்டு- நடைவிலங்கைநீங்கி—தனிநிராசைதான்- ஒப்பற்றநிராசையானது—நிறைந்திடில்-நிறையுமானால்—விரும்பியதற்பொருட்டியானத்தால்-அன்புற்றபிரமநிஷ்டையினால்—அனிசநீள்பகல் - சதாகாலமும்—ஒருமையேவிளங்கிட-ஒன்றாகவேவிளங்கும்படி—அடுத்தசாதனைதன்னால்-(அதற்)கடுத்தசாதனத்தினால். எ-று. (௫௧)

(அ-கை.) முதலாவதுமிரண்டாவதுமுரைத்தல். (கவி) ஏகதத்துவக்கனபரிசயத்தி
னாலிவ்வுயிர்தடையெய்துந், தேகபூரகாதியி லுயிரினைப்புரந்திடமுறு பழக்கத்தா,
லூகமாகவேகாந்தமுற்றுள்ளுணர்யோகபாவனைதன்னான், மேகமேனியாய்பிராண
னிலசைவுதான்விலக்கிடப்படுமன்றே...................................... *

(இ-ள்.) ஏகதத்துவம் - ஒன்றாகியதத்துவத்தின்—கனபரிசயத்தினால்- திடாற்பியாசத்தினால்—இவ்வுயிர்தடையெய்தும் - இப்பிராணனானதுதடைபடும்—தேகபூரகாதியில் - உடலிலுண்டாகும்பூரகமுதலான—உயிரினைப்புரந்து - பிராணாயாமஞ்செய்து — திடமுறுபழக்கத்தால் - திரமுள்ளவற்பியாசத்தினால்—ஊகமாக - உச்சாகமாக—ஏகாந்தமுற்று -தனித்தவிடத்திருந்து—உள்ளுணர் - அகத்திலறியாநின்ற—யோகபாவனைதன்னால் - ஞானபாவனையினால்—மேகமேனியாய் - மேகநிறத்தையுடையஸ்ரீராமா—பிராணனிலசைவுதான் - பிராணசலனமானது—விலக்கிடப்படும் - மாற்றப்படும். எ-று. (இ-௫-௧-ம்) ஒன்றானவாத்மஞானவற்பியாசத்தினாலும் யோகாற்பியாசத்தினாலும் பிராணனடங்குமென்பதாம்.............................. (௫௨)

(அ-கை.) மூன்றாவதுநான்காவதுமுரைத்தல். (கவி) பிரணவத்தினுச்சாரணமுடி
வினிற்பிறந்தசொல்லுறுமுண்மை, விரவுநாட்டத்தாற்றுயில்பவனுணர்வுதான்வெ
ளிப்படினுயிர்நிற்கும், பரவுதாலுமூலஞ்செறியிதழினைப்படருநாவாற்றள்ளி, யுர
வினாலுயர்புழையிலேபிராணனையோட்டினாலுயிர்நிற்கும்...................................... *

(இ-ள்.) பிரணவத்தின் - ஓங்காரத்தினது—உச்சாரணமுடிவினில் - உச்சரிப்பினந்தத்தில்—பிறந்த- உண்டான—சொல்லுறுமுண்மை-நாததத்துவத்தினுண்மையை—விரவுநாட்டத்தால் - மிகுந்தவனுசந்தானத்தினால்—துயில்பவன்-சுழுத்தியடைபவனது—உணர்வுதான்-விருத்திஞானமானது—வெளிப்படில் - விடுபட்டால்—உயிர்நிற்கும்- பிராணனானதுதடைப்படும்—பரவு- பரவாநின்ற—தாலுமூலஞ்செறி-நாக்கினடியினெருங்கிய—இதழினை-இதழை—படருநாவாற்றள்ளி-படர்ந்தநாவினானீக்கி—உரவினால்-திடமுள்ள(முயற்சி)யினால்--உயர்புழையில்-ஊர்த்தரந்தரத்தில்—பிராணனையோட்டினால்-உயிரைச்செலுத்தினால்—உயிர்நிற்கும்-பிராணனடைப்படும். எ-று. (இ-ம்) பிராணவாந்தத்திற்சுகித்தஞானத்தைத் தரிசிக்கும் யோகத்தினாலும் லம்பிகாயோகத்திற் கேசரிமுத்திரையினாலும் பிராணனடங்குமென்பதாம்...........(௫௩)

(அ-கை.) ஐந்துமாறுமேழுமெட்டுமுரைத்தல். (கவி) நாடுமங்குலிபன்னிரண்
டெல்லையினாசியினுனிதன்னி, னீடுவானத்தி லறிவுகளிறந்திடி னிலைபெற வுயிர்நிற்
குந், தேடுசாதனையா லுயர்புழைவழிசிங்வைமேல்விரலீரா, றூடுபோயுயி ரெல்லை
யினின்றுணர்வொளிக்குமேலுயிர்நிற்கும்...................................... *

(இ-ள்.) நாடும்-பார்க்கின்ற—நாசியினுனிதன்னில் - நாசிகாந்தத்தில்— அங்குலிபன்னிரண்டெல்லையில்-பன்னிரண்டங்குலமளவில்—நீடுவானத்தில்-நீண்டவாகாயத்தில் — அறிவுகளிறந்திடில்-விருத்திஞானங்களிறக்குமானால்—நிலைபெறவுயிர்நிற்கும் - நிலையாகப்பிராணனடைப்படும்—தேடுசாதனையால்-தேடாநின்றசாதனத்தினால்—உயர்புழைவழி- ஊர்த்தரந்தரமார்க்கத்தில்—சிங்வைமேல் - நாக்கின்மேல்—விரலீராறூடுபோய் - பன்னிரண்டங்குலப்ரமாணஞ்சென்று—உயிர்-பிராணனானது—எல்லையினின்று - அந்தவளவிலின்று — உணர்வொளிக்குமேலுயிர்நிற்கும்-விருத்திஞானம்விடுமானாற்பிராணனடைப்படும். எ-று. (இ-ம்) நாசியின்றுவாதசாந்தத்தினிற் பதினாலுமதனந்தத்தினிற்குஞ் சாம்பவிமுத்திரையினாலும் விசுத்திசக்கரத்தினிற்பதினாலும் அநாகதசக்கரத்தினிற்பதினாலும் பிராணனடங்குமென்பதாம்..... (௫௪)

(அ-கை.) ஒன்பதும்பத்துமுரைத்தல். (கவி) புருவநாப்பணேகண்மணிப்பார்வை
தான்பொருவில்சாந்தியின்மாய்ந்து, தெருளுநெஞ்சதனவறிவங்குதெரிவறிற்றிரிவுற
துயிர்நிற்குங், கருதுகின்றவிந்நெறிகளாலம்நகசங்கற்பகற்பிதபேதத், தருள்செயும்
பலதேசிகர்சொற்களாலசைவறவுயிர்நிற்கும்...................................... *

(இ-ள்.) புருவநாப்பண் - புருவமத்தியில்—கண்மணிப்பார்வைதான் - கண்மணிப்பார்வையானது—பொருவில்சாந்தியின் - ஒப்பற்றசாந்தத்தினால்— மாய்ந்து - கெட்டு — தெருளுங்கேதனவறிவு - அறிகின்றசவ்விகற்பஞானமானது—அங்குதெரியுமில் - அவ்விடத்திலிறக்குமானால்—திரிவுறுதுயிர்நிற்கும் - ஓடாமற்பிராணன்றடைப்படும்—கருதுகின்ற - நினைக்கா நின்ற—இந்நெறிகளால் - இந்தமார்க்கங்களினாலும்—அநேகசங்கற்பம் - நாநாவிதசங்கற்பத்தினாலும்—கற்பிதபேதத்து - கற்பிதமானவேற்றுமையினாலும்—அருள்செயுந்தேசிகர்- அனுக்கிரகஞ்செய்கின்றவாசிரியர்—பலசொற்களால் - அநந்தவசனங்களினாலும்— அசைவறவுயிர் நிற்கும் - சலனமில்லாமற்பிராணன்றடைப்படும். எ - று. (இ-ம்) புருவமத்தியான வியோம சக்கரத்தினிற்கின்ற வயிரவிமுத்திரையினாலு மின்னு மாசாரியர் வைக்கின்ற குறிகளிலடங்கி நிற்குதலினாலும் பிராணனடங்குமென்பதாம் .... (௬௫)

(அ-கை.) இரண்டாம்வினாவுக்குத்தரஞ்சொல்லி மூன்றாம்வினாவுக்குத்தரங்கூறுதல்(கவி) இந்தயோகங்களறிவெலாமிளைப்பறவியற்றுசாதனையாலே, வந்துமேற்பிறவாதவர்க் குபாயமாய்வந்துறும்பழக்கத்தா, லுந்துமாருயிரசைவுதான்கெடுமெனிலுள்ளமுஞ்சமித்தாறுஞ், சிந்தைதான்சமித்தாறுமேற்செல்கதிசேடமாய்விடுந்தானே .... *

(இ-ள்.) இந்தயோகங்களறிவெலாம்- இந்தயோகயுத்திகளனைத்தும்—இளைப்பற- வருத்தமில்லாமல்—இயற்றுசாதனையால்- செய்கின்றசாதனத்தினால்—வந்து- (இப்பவத்தில்) வந்து— மேற்பிறவாதவர்க்கு - இனிச்சனியாதவர்களுக்கு—உபாயமாய்- தந்திரமாக—வந்துறும்-வரும்—பழக்கத்தால் - அற்பியாசத்தினால்— உந்துமாருயிர்- மேலானபிராணனது — அசைவுதான்கெடுமெனில்- சலனங்கெடுமானால்— உள்ளமுஞ்சமித்தாறும் - மனதும்விஸ்ராந்தியடையும் —சிந்தைதான்சமித்தாறுமேல் - மனதுவிஸ்ராந்தியடையுமானால்—செல்கதிசேடமாய்விடும்- அடையத்தக்கபரகதிமிச்சமாகும். எ-று. (இ-ம்.) இவ்வனுசந்தானத்தினாற் பிராணபந்தனமாமதனான் மனோசஞ்சலநீங்கு மதனான் மனத்திருத்தமுற்றாத்மானுபவமே மிஞ்சுமென்பதாம்- (உதாரணம்) (விம்வகமார்த்தாண்டத்தில்)கபாலரந்திரத்தில்நாக்குவிபரீதமாகப்ரவேசிக்க, புருவமத்தியைத்திருஷ்டியடைந்தால்,அதுவேகேசரிமுத்திரையென்றுசொல்லப்படும். ஊர்த்துவகமனத்துக்கு ப்ரதிபந்தகமாய், அதோபாகத்திலிருக்கின்றசருமத்தை,அறுக்கிறது சேதனம். திரும்ப ஈரவஸ்திரத்தால்சுத்தப்பட்டநாவை, கைகளினாற்றிடமாகப்பிடித்துக்கொண்டு சவ்வியாபசவ்வியமாய்சுழற்றுவது சாலனம்-கைகளிற் கிரமமாகமெள்ளமெள்ளவிழுப்பது- தோகனம்- இம்மூன்றுமுயற்சியினால்-லம்பிகாயோகம்-அப்பியாசமென்பதினால், சிதேந்திரியனாய்-விவிதத்தேசத்திலிருக்கின்றவனாய்-மிதமாயும் சுத்தமாயும் புசிக்கின்றவனாய்-குருவினாலுபதேசிக்கப்பட்டமார்க்கத்தினால், தௌத-வஸ்தி-பிரவஸ்தி-முதல்களாயும், மேலும்- நேமம்- சோதியாநின்ற-சாலகங்களினாலும்-கோரணங்களினாலும்- விசுத்தமானதேகமுடையவனாய்-ஆசனபிராணாயாமங்களினாற் சோதிக்கப்பட்டதாடிகளையுடையவனா யிருக்கின்றவனுக்கு - பிராணசஞ்சாரம்வாதுவான் மகாமுத்திரையி னப்பியாசஞ்சொல்லப்பட்டது. முத்திரைகளை மகாமுத்திரைமுதலிய பத்துவிதமாக அடதிபிகையிற்சொல்லப்பட்டன. அவையாவன, மகாமுத்திரை-மகாபந்தம்- மகாவேதம்- கேசரி- உட்டியாணம்- மூலபந்தம்-சாலந்தாபந்தம்-விபரீதகாணி-வச்சிரோசி-சத்திசாலனமென்பதாம் .... (௬௬)

(அ-கை.) யோகத்தினுண்மையைச்சொல்லி ஞானத்தினுண்மையைப்பிரிவாகச்சொல்லத்தொடங்கல். (கவி) விகற்பவாக்கெலாமெய்ப்பதநோக்கியேமீளுமப்பதந்தானே, விகற்பமற்றிடிற்சேடிக்குமெனமுனிவிளம்பலும்விறல்வீர, னிகழ்த்தியோகத்தையுறுமனம்பொறிகளினெறிசெலாச்சமந்தன்னை, நிகழ்த்தினையினியுண்மைஞானத்தையு நிகழ்த்தெனமுனிசொல்வான் .... *

(இ-ள்.) விகற்பவாக்கெலாம்- விகற்பமானவாக்கியங்களனைத்தும்— மெய்ப்பதம்- தற்பதத்தை—நோக்கியேமீளும்- பார்த்தடையாமற்றிரும்புகின்றதோ—அப்பதந்தானே- அந்தத்தற்பதமே—விகற்பமற்றிடில்- வேறுபாடிறக்கில்—சேடிக்குமென- மிஞ்சுமென்று— முனிவிளம்பலும்- வசிஷ்டர்சொல்லவும்—விறல்வீரன்-வெற்றியையுடையஸ்ரீராமன்—யோகத்தை-யோகமார்க்கத்தை—நிகழ்த்தி-சொல்லி—உறுமனம் - பொருந்தாநின்றமனமானது—பொறிகளினெறிசெலா- இந்திரியவழிகளிற்செல்லாத— சமந்தன்னைநிகழ்த்தினாய்- சமத்துவத்தைச்சொன்னாய்— இனியுண்மைஞானத்தையும்-இனிமேற்றத்துவஞானத்தையும்— நிகழ்த்தெனசொல்லுமென்றுகேட்க—முனிசொல்வான்- அதற்குமுனிசொல்லுவார். எ-று.......... .... (௬௭)

(அ-கை.) முதலுமிரண்டுமுரைத்தல். (கவி) ஆதியந்தமிறேற்றமே தன்வடிவாகிப்பரமிஞ்சிச், சோதியாய்நின்ற தென்னுமிவ்வுறுதிபே தகளறு மெய்ஞ்ஞானம்,

பேதியாநின்றகடபடவடிவமாய்பெரும்பொருட்பலசத்தி, தீதிறற்பரம்வேறிலதெ
ன்றுணர்திண்மையேநற்காட்சி .... *

(இ-ள்.) ஆதியந்தமில்- ஆதிமத்தியாந்தரகிதமான—தோற்றமே - தெரிவே—தன்வடி
வாகியபரம் - தனதுஸ்வரூபமாயிருக்கின்றபிரமமானது—இங்கு - இவ்விடத்தில்—சோதியாய்
நின்றதென்னும் - சுயம்ப்ரகாசமாயிருக்குதென்கின்ற — இவ்வுறுதியே - இந்தநிச்சயமே—
துகளறுமெய்ஞ்ஞானம்-குற்றமற்றவுண்மைஞானமாம்—பேதியாநின்ற- பேதித்திருக்கின்ற—
கடபடவடிவமாம் - கடபடரூபமாகிய—பெரும்பொருட்பலசத்தி - மிகுந்தபதார்த்தங்களின்
சகலசத்தியும்—தீதிறற்பரம் - குற்றமற்றவாத்மா(வேயல்லாமல்)—வேறிலதென்று - வேறில்லை
யென்று—உணர்திண்மையேநற்காட்சி - அறிகின்றநிடமேயாத்மதரிசனம். எ-று. (இ-உ-க-ம்)
சதோதயமான நமதாத்மஸ்வரூபமே யிங்ஙனம்ப்ரகாசிக்குமென்னு நிச்சயமுந் திரிஸ்யங்கள்
யாவுந் திருக்குவடிவமேயென்னு நிச்சயமும் ஞானமென்பதாம்........ .... (௬அ)

(அ-கை.) மூன்று நான்கு முரைத்தல். (கவி) செகங்கண்மூன்றினு முண்மையாம்
பொருளறிதிறமெதுவெனச்செப்பில், செகங்களியாவையுந் தற்பொருள் வடிவெனத்திர
மூறுநிறைவாகுஞ், செகங்களியாவையுஞ் சொரூபமேயிதிற் றிகழபாவபாவனையெங்கே,
செகங்களிற்செறிபெத்தமுத்திகளெனத்தியங்குவேற்றுமையெங்கே.................... *

(இ-ள்.) செகங்கண்மூன்றினும் - மூன்றுலகங்களிலும்—உண்மையாம்பொருள் - மெய்
யானவஸ்துவை—அறிதிறமெதுவென - அறிகின்றகாரணமெதுவென்று—செப்பில்- சொல்லு
மிடத்தில்—செகங்களியாவையும் - உலகங்களனைத்தையும்—தற்பொருள்வடிவென - பிரமஸ்வ
ரூபமென்று—திரமுறும் - ஸ்திரம்பொருந்துவதே— நிறைவாகும் - பூரணமாகும்—செகங்க
ளியாவையும் - உலகங்களனைத்தும் — சொரூபமே - ஆத்மஸ்வரூபமே — இதில் - இவ்வாத்ம
ஸ்வரூபமாகியசகத்தில் — திகழ் - விளங்குகின்ற — அபாவபாவனையெங்கே - பாவாபாவங்க
ளெவ்விடம் — செகங்களிற்செறி - உலகங்களினெருங்கிய — பெத்தமுத்திகளென - பந்தம்
வீடென்று — தியங்குவேற்றுமையெங்கே - மயங்குகின்றபேதமெவ்விடம். எ-று. (இ-ம்)
மூவுலகுமாத்மாவென்கிற பரமார்த்த திருஷ்டியும் ஆத்மாவையன்றிப்பாவாபாவங்களின்றென்
கிற நிச்சயமும் ஞானமாமென்பதாம் .... (௬௯)

(அ-கை.) ஐந்துமாறுமுரைத்தல். (கவி) பிறிதுகாண்பனவில்லைநெஞ்சில்லைமெ
ய்ப்பிரமமேயவையாகிச், செறியுமாவிவை யாவுமொன்றாகிய சிற்பர விசும்பாகு,
நெறிகொள்பந்தம்வீடெங்குளவிதுவென நிகழ்பெருவடிவாகிக், குறியறும்பெரும்
பிரமமேநின்றதுகுறைந்திறந்ததுநெஞ்சே.................................... *

(இ-ள்.) பிறிதுகாண்பனவில்லை-வேறாகத்திரிஸ்யமென்பனவுமில்லை—நெஞ்சில்லை- மனமெ
ன்பதுமில்லை—மெய்ப்பிரமமே-உண்மையாகியபிரமமே—அவையாகிச்செறியும் - முன்சொ
ன்னவைகளாகநிறையும்—இவையாவும்-இச்சகலமும்—ஒன்றாகிய - ஏகமாகிய—சிற்பரவிசும்
பாகும்-ஞானாகாசமாகும்—நெறிகொள்பந்தம்-(வாசனை) மார்க்கங்கொண்டபந்தமும்—வீடு-
மோக்ஷமும்—எங்குள-எவ்விடத்திருக்கின்றன—இதுவென- இதுவென்று—நிகழ்பெருவடிவா
கி-ப்ரகாசிக்கின்றவாத்மஸ்வரூபமாய்—குறியறும்-அடையாளமின்றிய—பெரும்பிரமமே-மக
த்தாகியபிரமஸ்வரூபமே—நின்றது-(நிறைந்)திருக்கின்றது—நெஞ்சு- மனமானது—குறைந்
திறந்தது-சீரணமாய்நசித்தது. எ-று. (இ-ம்) மனமுதலியயாவுஞ் சிதாகாயமென்னு நிச்ச
யமும் பிரமாநுபவத்தின்மனமில்லையென்னு நிச்சயமுஞானமாமென்பதாம்.................(௭௰)

(அ-கை.) ஏழுமெட்டுமுரைத்தல். (கவி) ஒருமையாகவே யுணர்விஞலுணர்தி
யாலுருவைநன்குறநோக்கிற், றருவுங்கற்களும் படங்களுமுதலிய சற்றும்வேற்று
மையில்லை, மருவுசங்கற்பமெங்குளசீவனும்வையகப்பொருளியாவு, மருகலின்றிய
சாந்தரூபம்பெறு மடிமுடிவுறநோக்கில்.................................... *

(இ-ள்.) ஒருமையாக - ஒற்றுமையாக—உணர்விஞலுணர்தி - அறிவினலறியக்கடவா
ய்—உருவைநன்குறநோக்கில் - (ஆத்ம) ஸ்வரூபத்தைநன்றாகப்பார்க்குமிடத்தில்— தருவும்-
விருட்சமும்—கற்களும் - மலைகளும் — படங்களுமுதலிய - வஸ்திரங்களுமுதலிய (வஸ்துக்க
ளுக்கு)—சற்றும்வேற்றுமையில்லை - எவ்வளவும்பேதமில்லை—மருவுசங்கற்பமெங்குள - பொ
ருந்தியசங்கற்பமெங்கேயிருக்கின்றது—சீவனும்- சிதாபாசனும்—வையகப்பொருளியாவும்-
பூமியிலுள்ளவஸ்துக்களனைத்தும்—அடிமுடிவுறநோக்கில் - ஆதியந்தமாகப்பார்க்குமிடத்தில்
—அருகலின்றியசாந்தரூபம்பெறும் - குறைவில்லாதவுபசாந்தரூபமடையும். எ-று. (இ-ம்)
யாவையுமாத்மஸ்வரூபமாகப்பார்க்கிலொன்றும் வேற்றுமையின்றென்பதும்சீவனுஞ்சகத்து
மாதத்தமாயிடின் றன்சங்கற்பமில்லையென்பதும் ஞானமென்பதாம்........................(௭க)

(அ-கை.) அத்தொய்த ஞானனுஷ்டானத்தி னுண்மையைச்சொல்லி யதை யடையும்பொருட்டனுபவஞ்சொல்லுதல். (கவி) அந்தரூபமெப் போதுநீயாகுவையண்ணலேயிரண்டொன்றென், றுந்துபேதத்தாற்சராமரணங்களென் றுன்னுறுமயக்கத்தாற், றொந்தவுள்ளத்தாற்றன்றனிப்பிரமமேதோற்றுகின்றனதன்றாற், சிந்துகின்றநீடிளையினுற்பன்மையாற்றெரிதருஞ்சலம்போல .... *

(இ-ள்.) அந்தரூபம் - அவ்வுபசாந்தஸ்வரூபம் — எப்போதுநீயாகுவை - எக்காலமுநீயேயாகுவாய் — அண்ணலே-ஸ்ரீராமா — இரண்டொன்றென்று-இரண்டென்றுமொன்றென்றும் — உந்துபேதத்தால்- சொல்லாநின்றவேற்றுமையினாலும் — சராமரணங்களென்று- சராமரணங்களென்று — உன்னுறுமயக்கத்தால் - நினைக்கின்றமயக்கத்தினாலும் — தொந்தவுள்ளத்தால்- தொந்தித்திருக்கின்றமனதினால் — தான்றனிப்பிரமமே - தானாகியவொப்பற்றபிரமஸ்வரூபமே — நீடிளையினால் - நீண்ட அலையினால் — சிந்துகின்ற - தன்னாற்சிதறாநின்ற — பன்மையாம்-பலவான (திரை நுரை துமிழி முதலானதாய்) — தெரிதருஞ்சலம்போல- தெரிகின்றநீரைப்போல — தோற்றுகின்றன - (நாமரூபங்களாய்த்) தோற்றுகின்றன. எ - று...... .... (௬௨)

(அ-கை.) அனுபவியின்றிடத்தைச்சொல்லுதல். (கவி) சுத்தமானதற்பரத்தினைத்தழுவியேதொடர்ந்தவுண்மதியாலே,யொத்துநிற்பவர்தம்மையெப்போகம்வந்துறுபிணிசெயவற்று, மெத்துபோகத்தைமுதலியபகையெலாம் விசாரமேமிகுந்தோர்தம், புத்தியைச்சிறிதசைத்திடாவசந்தனாற்பொருப்பசைவதுமுண்டோ ... . *

(இ-ள்.) சுத்தமானதற்பரத்தினை-பரிசுத்தமாகியபிரமத்தை — தழுவியேதொடர்ந்த-தழுவித்தொடர்ந்த — உண்மதியால்-அந்தர்முகவுணர்வினால் — ஒத்துநிற்பவர்தம்மை- பொருந்தியிருப்பவர்களை — எப்போகம்-எந்தப்போகமானது — வந்துறு-வந்துபொருந்தாநின்ற — பிணிசெயவற்றும்-பந்தனஞ்செய்யத்தக்கது — மெத்துபோகத்தைமுதலிய - மிருதுவானபோகங்கண்முதலாகிய — பகையெலாம்-சத்துருக்களனைத்தும் — விசாரமேமிகுந்தோர்தம்- விசாரணைமிகுந்தவர்களுடைய — புத்தியைச்சிறிதசைத்திடா- மனதையெவ்வளவுமசைக்கமாட்டாது — வசந்தனால்-தென்றலினால் — பொருப்பசைவதுமுண்டோ-மலையசைவதுமுண்டாமோ. எ-று.(௬௩)

(அ-கை.) அனுபவநிச்சயங்கூறல். (கவி) உரைத்தபன்மைகணினைவிலேயுள்ளதாமுண்மையாயிலதுள்ளே, நிரைத்தபல்வகைவாவியிற்பிறிவிலா நிகழ்தருநீர்போலக், கரைத்தலன்றியிவ்வுறுதிசேர்மதியுளோர்களங்கமில்வீடுற்றோர், புரைத்தலன்றியேநலனுறக்கண்டநற்பொருளுமிங்கிதுதானே .... *

(இ-ள்.) நிரைத்தபல்வகைவாவியில்-(அலையினாற்) சத்தித்தநானாவிதமானதடாகத்தில் — பிறிவிலா- (அலைமுதலான)வேற்றுமையில்லாமல் — நிகழ்தருநீர்போல் - (ஒன்றாக) ப்ரகாசிக்கின்றசலத்தைப்போல — உரைத்தபன்மைகள்- சொல்லப்பட்டபலவிதமானநாமரூபங்கள் — நினைவிலுள்ளதாம்-சங்கற்பத்திலுள்ளனவாகும் — உள்ளே-அகத்தில் — உண்மையாயிலது-மெய்யாகவில்லாததாம் — கரைத்தலன்றி- கரைக்கக்கூடாதிருக்கின்ற — இவ்வுறுதிசேர் - இந்தநிச்சயஞ்சேர்ந்த — மதியுளோர்- அறிவையுடையவர்கள் — களங்கமில்வீடுற்றோர் - குற்றமற்றமோக்ஷத்தையடைந்தவர்கள் — புரைத்தலன்றி- குற்றமற்றதாய்-நலனுறக்கண்ட - சுகம்வரத்தரிசித்த — நற்பொருளும்-அபரோக்ஷவஸ்துவும் — இங்கிதுதான்-இவ்விடத்திந்நிச்சயந்தான். எ-று. (இ-ங-க-ம்) ஸ்வானுபூதிவிலாசத்தை ப்ரசன்னமாய்த் தரிசிக்கும்பொருட் டனுக்கிரகித்ததாம் (௬௪)

(அ-கை.) இச்சுவானுபவம்பெறுதற் கிஃதன்றி யின்னுமொருமார்க்கஞ் சொல்லத்தொடங்கியதற்குத்திருஷ்டாந்தமறிவித்தல். (கவி.) ஈதுவேறொன்றுமுத்திசென்றுறுநெறியியம்புதுங்கேள்வீரா, வீதகவ்வியனென்றொருபெருந்தவன்விந்தவெற்பிடைவாழ்வோன், காதலானுயர்கன்மகாண்டத்திலேகாலமட்டறநின்று, கேதமாதியேவியாதிவன்பவந்தருகிரியையான்மிகநொந்தான் .... *

(இ-ள்.) ஈதுவேறொன்று-இதுமற்றொரு — முத்திசென்றுறுநெறி- மோக்ஷத்தையடைகின்றமார்க்கம் — இயம்புதும்-சொல்லுவாம் — வீரா கேள்- வீரத்தையுடையஸ்ரீராமா கேட்பாய் — வீதகவ்வியனென்று-வீதகவ்வியனென்னுநாமத்தையுடைய — ஒருபெருந்தவன் - ஒருமகாதவத்தன் — விந்தவெற்பிடைவாழ்வோன் -விந்தமலையில்வாழ்பவன் — காதலானுயர்- ஆசையினாலுயர்ந்த — கன்மகாண்டத்தில் - கன்மகாண்டத்தில் — காலமட்டறநின்று-வெகுகாலமிருந்து — கேதம்-துன்பமாகிய — ஆதி-அந்தக்கரணவியாதியையும் — வியாதி-(தேக) வியாதியையும் — வன்பவம்-கொடியசம்சாரத்தையும் — தருகிரியையால் - கொடுக்கின்றகிரியையினால் — மிகநொந்தான் -மிகவும்வருந்தினான். எ-று. (இ-ம்) கிரியையிற்சுகமின்றிவருந்தினனென்பதாம்..... (௬௫)

(அ-கை.) ஞானசமாதிக்காதனங்கட்டுதல். (கவி) நிருவிகற்பமாஞ்சமாதியின்பொ
ருட்டுமுன்னிகழ்கிரிகைகளெல்லா, மொருவிவிட்டனன் பன்னசாலையினிடை யுற்ற
னன் கலைத்தோன்மேன், மருவுபெத்தபங்கேருகாசனத்தனன்வருகுதிமிசைவைத்த,
விருகரத்திரள்விரலினனிவ்வகையிருந்தனனொருப்பட்டு.. .... *

(இ-ள்.) நிருவிகற்பமாஞ்சமாதியின்பொருட்டு-நிருவிகற்பசமாதியினிமித்தம்—முன்னிகழ்-முன்னடத்திய—கிரிகைகளெல்லாம்-கிரியைகளனைத்தையும்— ஒருவிவிட்டனன்-நீக்கிவிட்டான்—பன்னசாலையினிடை-பன்னசாலையினுள்—உற்றனன்-பொருந்தினன் — கலைத்தோன்மேன்மருவு-மான்றோலின்மேன்மருவுகின்ற—பெத்தபங்கேருகாசனத்தனன்- கட்டியபதுமாசனத்தையுடையவனாய்—வருகுதிமிசைவைத்த-வராநின்றகுதிகால்மேல்வைத்த— இருகரத்திரள்விரலினன்-இரண்டுகைகளிற்றிரண்டவிரலையுடையவன்—இவ்வகை- இந்தப்ரகாரம்—ஒருப்பட்டு - ஒருமைப்பட்டு—இருந்தனன் - (சமாதியி) லிருந்தான். எ-று. .... (௬௬)

(அ-கை.) மனதைநிறுத்திவிசாரித்தல். (கவி) பரந்துறிக்குறுமனத்தினைப்பை
யப்பையப்பார்த்துமீட்டனனுள்ளே, நிரந்தரித்தனன் புறத்துளபரிசங்க ணீத்தன
னொழுங்காலே, துரந்தசித்தத்தின்றிரநிலைவிரும்பினன் றுகளறுமனத்தாலே,புரந்த
நற்றவவீதகவ்வியமுனிபுலப்படநினைவுற்றான் .... *

(இ-ள்.) பரந்துறிக்குறுமனத்தினை - விரிந்துதிசைகளிற்செல்லுகின்றமனதை— பையப்பையப்பார்த்து - மெள்ளமெள்ளப்பார்த்து— மீட்டனன் - திருப்பி—உள்ளேநிரந்தரித்தனன்- அகத்தினிரந்தரமாகச்செய்தான் —புறத்துளபரிசங்கள்-புறம்பிலுள்ளவிஷயசம்பந்தங்களை —ஒழுங்குநீத்தனன்-கிரமமாகநீக்கி— துரந்தசித்தத்தின்- செலுத்தியமனதின் —திரநிலைவிரும்பினன்-திடநிலையைவிரும்பி—துகளறுமனத்தால்-குற்றமற்றமனதினால்—புரந்தநற்றவம்-நிலைத்தநல்லதவத்தையுடைய—வீதகவ்வியமுனி- வீதகவ்வியமுனியானவர்—புலப்படநினைவுற்றான்-தெரியவிசாரணைசெய்தான். எ-று .... (௬௭)

(அ - கை.) மனநின்றவிடத்துதித்த தனதாத்மஞானத்தினு னின்ற மனது பிரா
ணசலனத்தினாற்கவிக்கின்றதெனக்காண்டல். (கவி) வியப்புடைத்திதுமீளுவித்தி
ருக்கவும்விசையுயிரசைவுற்று, தியக்குநெஞ்சகந்திரநிலையன்றியே சிறுசருகெண
வோடும், பயக்குமின்பமில்கடநின்றுபடமுறும்படநின்றுகடமெய்து, மயக்கமேவு
பல்பொருள்களிற்போய்விழுமரங்களிற்குரங்கேபோல் .... *

(இ-ள்.) இதுவியப்புடைத்து- ஈததிசயத்தையுடையது—மீளுவித்திருக்கவும் - திருப்பிவைத்திருக்கவும்—விசையுயிரசைவுற்று- வேகமாயுள்ளபிராணனசைவைப்பொருந்தி—தியக்குநெஞ்சகம்- அசையுமனமானது— திரநிலையன்றி- திரமானநிலையில்லாமல்— சிறுசருகெனை-(காற்றிலகப்பட்ட) சிறுசருகைப்போல—ஓடும்-அலையும்— பயக்குமின்பமில் - உண்டாகுஞ்சுகமில்லாத—கடநின்றுபடமுறும்- கடத்தினின்றும்படத்தைப்பொருந்தும்— படநின்று-படத்திலிருந்து—கடமெய்தும்- கடத்தையடையும்— மயக்கமேவு - மயக்கம்பொருந்திய—பல்பொருள்களில்-பலவிஷயங்களில்—மரங்களிற்குரங்கேபோல்-விருட்சங்களிற்(றுவு) மற்கடம்போல—போய்விழும்- தாவும். எ-று. .... (௬௮)

(அ-கை.) தனதறிவினாலிந்திரியங்களைநீக்குதல் (கவி) விழிமுதற்பொறியாய்ம
னத்துவாரமாய்மேதையிந்திரியமென்றே, யொழிவிலாவபிமானஞ்செயைம்பொறி
யுணர்ந்துகாண்புறுநானே; கழியுமிந்திரியங்காளவமாகவேகவல்வதென்னந்தோநீ,
ரழிவில்சின்மயப்பகவனுய்ச்சகலசான்றாகிநின்றனனானே .... *

(இ - ள்.) விழிமுதற்பொறியாய் - கண்முதலிய விந்திரியங்களாகியும் — மனத்துவாரமாய் - மனதுக்குவாசலாகியும்— மேதையிந்திரியமென்று - ஞானேந்திரியமென்று — ஒழிவிலாவபிமானஞ்செய்-நீங்காதவபிமானத்தைச்செய்கின்ற—ஐம்பொறி- பஞ்சேந்திரியங்களை— உணர்ந்து- அறிந்து—காண்புறுநானே - பார்க்கின்றவனேநானும்—கழியுமிந்திரியங்காள்-இறவாநின்றவிந்திரியங்களே—அவமாக - வீணாக— அந்தோநீர்-அய்யோநீங்கள்—கவல்வதென்-கவலைப்படுவதென்ன— அழிவில்சின்மயப்பகவனாய்- கெடாதசிற்சொரூபமாயிருக்கின்றபகவனாய்—யான்-நானே—சகலசான்றாகிநின்றனன்-சகலத்துஞ்சாட்சியாயிருக்கிறேன். ஏ-று. (௬௯

(அ-கை.) இ-து. (கவி) அன்னதன்மையுற்றறிவினான்மிக்கயா னறிந்தகண்முத
லைந்தும், பின்னமாகியேவானுயர்குன்றினைப்பிரிந்தபாதலம்போலாம், பன்னகங்
களும்வழிச்செலுமவர்களும்பறையருமறையோரு, மென்னவச்சமுற்றுயர்ந்தகின்
மாத்திரமிந்திரியத்தருகெய்தா........................ *

(இ-ள்) அன்னதன்மையுற்று- அத்தன்மையானகுணத்தைப்பொருந்தி—அறிவினு ன்மிக்க-அறிவினுன்மிகுந்த—யானறிந்த- நான்பார்க்கப்பட்ட—கண்முதலேந்தும்- சட்சுமுத லியபஞ்சேந்திரியங்களும்—பின்னமாகி-வேற்றுமையாகி— வானுலகத்திலே- சுவர்க்கலோகத் தை—பிரிந்தபாதலப்பாலாம்- நீங்கினபாதாளத்துக்கொப்பாகும்—பன்னகங்களும்- சற்பங் களும்—வழிச்செலுமவர்களும்- மார்க்கத்திற்போகின்றவர்களும்—பறையரும் - சண்டாளரு ம்—மறையோருமென்ன—அந்தணர்களும்போல—அச்சமுற்று- பயமடைந்து—உயர்ந்தவி ன்மாத்திரம்- மேலாகியஞானமானது—இந்திரியத்தருகேட்டா- பொறிகளின் சமீபத்திலும்வர மாட்டாது. எ-று. (இ-உ-க-ம்.) சின்மாத்திரமாய்விளங்குகின்றயான் மனோவசமாய்ச்சஞ்சரி க்கின்றவிந்திரியங்களிற்சேரேனென் றஃதை வேறுபடுத்தினதென்பதாம் .... (௫௰)

(அ-கை.) மனதைநீக்குதல். (கவி) சாருவாகனுய்சாரணனுகிநாற்றடந்திசைபலியேற்கப்,பா றுநெஞ்சமேவீணிலேவருந்துதல்பயனிலபடிமீதே, யாறியேவிளையாடுநீயுனையறிவென் னும்வாதனைபொய்யாம்,வேறுபாடுதான்மிகுந்துளமனத்தொடுமெய்யுணர்வொன்றுகா.

(இ-ள்) சாருவாகனுய்- பரலோகபராமுகனுகியும்—சாரணனுகி-வேவுகாரனுகியும்—நாற் றடந்திசை-விசாலம்பொருந்தியநான்குதிக்கிலும்—பலியேற்க- பிச்சைவாங்க—பாறுநெஞ் சமே-ஓடாநின்றமனமே—வீணிலேவருந்துதல்-வீணுகப்ரயாசைப்படுதலில்-பயனில- ப்ரயோ சனமில்லை—படிமீது-பூமியின்கண்—நீ-நீயே—ஆறியேவிளையாடு - விஸ்ராந்தியடைந்துவிளை யாடுவாய்—உனையறிவென்னும்வாதனை-உன்னைஞானமென்றெண்ணுகின்றவாசனை—பொய்யா ம்-அசத்தியமாம்—வேறுபாடுதான்-வேற்றுமையானது—மிகுந்துளமனத்தொடு - மிகுந்திரு க்கின்றமனத்துடன்—மெய்புணர்-உண்மைஞானமானது-ஒன்றுகா- ஒருமைப்படாது. எ-று.

(அ-கை.) இ-து. (கவி) சுகமிருக்குனனெனலகங்கரத்துன்மதியிதுதீதா, மகமதிப்பினு யதாகுலிவனவனுகுநானென்னுமிவ்வாரம்ப, மிகவகற்றுவாயுன்வடிவெதுவெனில் விசா ரமின்மை, மிகவிசாரத்தாலழிந்திடும்பரிதியாலிருள்கழிவதுபோல .... *

(அ-கை.) நானெனலகங்கரத்துன்மதி - (விஷயங்களை) நானென்னுமகங்காரத்துற்புத்தி யே—சுகமிருக்குனன்- சுகமாயிருக்கின்றேனென்கின்ற— இதுதீதாம் - இதுகுற்றமாம்—அக மதிப்பினுல்- அகங்காரமதத்தினுல்—இவனவனுகுநான்-இவனுமவனுநானுகும்— என்னும்-எ ன்கின்ற—இவ்வாரம்பம்-இவ்வாரம்பத்தை— மிகவகற்றுவாய்-மிகவுநீக்குவாய்— உன்வடிவெ துவெனில்-உனதுருவமெதுவென்றால்—விசாரமின்மையதாகும் - விசாரணையில்லாததாம்— பரிதியால்-சூரியனுல்- இருள்கழிவதுபோல- அந்தகாரங்கெடுவதுபோல—இகவிசாரத்தாலழி ந்திடும்-இப்பொழுதுசெய்கின்றவிசாரணையினுலழிவாய். எ-று ....(௫௨)

(அ-கை.) இ-து. (கவி) முன்னந்தோற்றமற்றிப்பொழுதுனக்கெனவுருவின்றிம்மு றையாலே, பின்னுந்தோன்றலேயென்னுடைநெஞ்சமே பெரிதுநீபெறுதன்மை, யின்னறீர்தெய்வசகாயத்தாலிடரிலாவின்பமுற்றியானென்றுந், துன்னுசாந்தனுய் த்துரியமாமென்சொரூபத்திலேநிற்கின்றேன் .... *

(இ-ள்.) முன்னந்தோற்றமற்று- முன்னந்தோற்றமல்— இப்பொழுதுனக்கெனவுரு வின்று-இப்போதுனக்கென்றோருருவுமில்லாத—இம்முறையால்- இவ்வொழுங்கினுல்— பின் னுந்தோன்றலே- பின்புந்தோற்றமாட்டாய்—என்னுடைநெஞ்சமே-என்னுடையமனமே— நீ பெறுதன்மை- நீயடைகின்றதன்மையானது—பெரிது- பெரியதாம்—இன்னறீர்- துன்பநீங் கிய—தெய்வசகாயத்தால்-தெய்வசகாயத்தினுல்—இடரிலாவின்பமுற்று- துன்பமில்லாதவாந ந்தத்தைப்பொருந்தி—யான்-நான்—என்றும்- எப்போதும்—துன்னுசாந்தனுய்- நிறைந்த சாந்தத்தையுடையவனுய்—துரியமாம்-துரியமாகிய—என்சொரூபத்தில்— எனதாத்மஸ்வரு பத்தில்—சுகிக்கின்றேன்-ஆநந்திக்கிறேன். எ-று. (இ-௩-க-ம்.) பேதமாகியுமபேதமாகியவாத் மாவுக்குச் சம்பந்தமின்றாகியும்விசாரிக்கிலில்லாததாகியுமிருக்கின்றமனதைச்சுகரூபியாயிரு க்கின்ற வாத்மானுபவத்தானுணீக்கினதென்பதாம் .... (௫௩)

(அ-கை-) விசாரமுகத்தாற் றத்துவங்களை நீக்கிச் சாம்பவிமுத்திரியை முன்னிட்டு நிருவிகற்பசமாதியிலிருத்தல். (கவி) எனவொருப்பட்டுவாதனைதீர்முனியிந்தியம லேவின்றி, மனனைவன்பினுனிறுத்தினன்விறகினை மாயத்ததீச்சிகையுள்ளே, தனியட ங்கலேபாலிவனுயிரொழுங்கிலே நன்கொடுங்கினமுக்கி, னுனிறுண்பார்வையாற்சி ந்தலர்கமலம்மேநாக்கங்கணிகரானை .... *

(இ-ள்) எனவொருப்பட்டு- இப்படியென்றொருமையாகி—வாதனைதீர்முனி- வாதனை யிறந்தவிருசுவ்விமுனியானவர்—இந்தியமலேவின்றி- பொறிகளலேவில்லாமல் — மலேவன்

பிராணிருத்தினன்-மனதையுரத்திருனிறுத்தினான்— விறகினைமாய்த்ததீச்சிகை-விறகையெரித்தவக்கினிச்சுவாலையானது—உள்ளேநனியடங்கல்போல்- தனக்குள்ளேமிகவுமடங்குதல்போல—இவனுயிர் - இவர்பிராணனானது—ஒழுங்கில் - கிரமத்தில்—நன்கொடுங்கின - நன்றாக(வுள்ளே)யடங்கின—மூக்கினுனி - நாசிகாந்தத்தில்—நாண்பார்வையால்-சூட்சுமதிருஷ்டியினால்—நோக்கங்கள் - கண்களானவை — சிறிதலர்கமலம் - கொஞ்சமலர்ந்திருக்கின்றதாமரைப்பூவுக்கு—நிகரான - சமானமாயின. எ - று .... (௫௪)

(அ-கை.) இ - து. (கவி) சிரங்கழுத்துடற்றானங்கள்சமமுறச்சிலையிலேவகுத்தென்ன, நிரந்தசித்திரமென்னமுன்னூறியாண்டிருந்தனனிமிடம்போற், பாந்தகாருநாள்வெள்ளத்தினெக்கரிற்படிந்ததிங்கிவன்மேனி, யுரங்கொண்மாமுனியுணர்ந்தனன்மண்ணினுளுடலசைந்திலதென்றே............ *

(இ-ள்.) சிரம் - சிரசும்—கழுத்து - கண்டமும்—உடல் - சரீரமும்—தானங்கள்- அவயவங்களும்—சமமுற - சமமாக—சிலையிலேவகுத்தென்ன - கல்லிற்செய்ததுபோலவும்—நிரந்தசித்திரமென்ன - நெருங்கினவோவியத்தைப்போலவும் — முன்னூறியாண்டு - முன்னூறுவருஷம்—நிமிடம்போல் - நிமிஷமாக—இருந்தனன் - (சமாதி) யிருந்தான்—பாந்தகாருநாள் - மிகுந்தமழைக்காலத்தின் —வெள்ளத்தினெக்கரில் - வெள்ளத்தினாலுண்டாகியமணற்குன்றில்—இவன்மேனி - இவனதுசரீரம்—படிந்தது - புதைந்தது—உரங்கொண்மாமுனி- திடத்தையுடையவீதகவ்வியமகாமுனியானவர்—மண்ணினுள் - பூமியினுள்—உடலசைந்திலதென்று-சரீரமசையவில்லையென்று—உணர்ந்தனன்-(சமாதியைவிட்)டறிந்தனன்.எ-று.(இ-உ-க-ம்) தேகமுதலியயாவுந் தோன்றாத சிற்சமாதியிலிருந்தனனென்பதாம் .... (௫௫)

(அ-கை.) சமாதியினின்றுநீங்கின வறிவுமனோரூபமாயுண்டான சநதபரம்பரையைச்சொற்பனம்போலவறிதல். (கவி) தரைமறைத்தலாலறிவிலேதோன்றியசரீரத்தினுயிர்முற்றும், புரைகளியாவையுமடைதலாலசைந்தில போதமுற்பவித்துள்ளே, விரையுந்தன்மனவடிவமா யிதயத்தில்விரிந்தறிந்ததுயாவு, திரைகள்சொற்பனம்போலவனவ்வயினெஞ்சுறவிவைகண்டான் .... *

(இ-ள்.) தரைமறைத்தலால் - பூமிமறைத்தபடியால்—அறிவிற்றோன்றிய-அறிவினுண்டாகிய—சரீரத்தினுயிர்முற்றும்- தேகத்திலுள்ளபிராணன்களனைத்தும்—புரைகளியாவையும்-ரந்தரங்களெல்லாம் — அடைதலால் - அடையப்பட்டபடியினால்—அசைந்தில - அசையவில்லை—உள்ளேபோதமுற்பவித்து - அகத்திலறிவுண்டாய்—விரையுந்தன்மனவடிவமாய் - வாசனையானதன்மனோரூபமாய்—இதயத்தில்விரிந்து - இருதயத்திற்பரவி—யாவும்- சகலத்தையும்— அறிந்தது- தெரிந்தது— திரைகள்சொற்பனம்போல் - ஒழுங்காகியகனவைப்போல —அவன்- அந்தவீதகவ்வியமுனி—அவ்வயின்-அவ்விடத்தில் — நெஞ்சுறவிவைகண்டான்—மனதிற்பொருந்த விவைகளைப்பார்த்தான். எ-று .... (௫௬)

(அ-கை) இது (கவி) ஈசன்வெற்பயன்முனிவனாய்நூறியாண்டிருந்ததுநூறாண்டு,காசிலின்பவிச்சாதரனாதுங்கடவுளர்தொழவிண்ணில்,வாசவனெனவைந்துகமிருந்தது மதிச்சடையிறைவற்கு, நேசமாங்கணமாயொருகற்பநாணின்றதுமவன்கண்டான் .... *

(இ-ள்.) ஈசன்வெற்பயல்-கைலாசபர்வதத்தின்சாரலில்—முனிவனாய்- தவசியாக— நூறியாண்டிருந்ததும்-நூறுவருஷமிருந்ததும்—காசிலின்பவிச்சாதரன்- குற்றமற்றசுகமுள்ளவித்தியாதரனாக— நூறாண்டு- நூறுவருஷம்—ஆனதும்-ஆகியதும்—கடவுளர்தொழ - தேவர்கள்வணங்கும்படி—விண்ணில்- தெய்வலோகத்தில்—வாசவனென-தேவேந்திரனாக— ஐந்துகமிருந்ததும்-ஐந்துயுகமிருந்ததுவும்—மதிச்சடையிறைவற்கு- சந்திரனைச்சடையிற்றரித்த பரமேஸ்வரனுக்கு—நேசமாங்கணமாய்- அன்பாகியகணேசனாய்—ஒருகற்பநாணின்றதும்வன்கண்டான்-ஒருகற்பகாலமிருந்ததுமவ்வீதகவ்வியமுனிபார்த்தான். எ-று .... (௫௭)

(அ-கை.) இ-து. (கவி) விரவுதோற்றரவாலிவையனைத்தையும் வீதகவ்வியனோக்கிப், பரனுக்காட்செய்தபலத்தினாலிறந்தனவறிந்துதான்வலியுண்டாய்ப்,புரணமாகமுற்பவங்களிற்பொன்றிமுன்போயதனுடன்முற்றுங்,கரவறக்கண்டுவீதகவ்வியப்பெயர்காயமாய்வரக்கண்டான் .... *

(இ-ள்.) விரவு-(மூன்றுகாலமுங்) கலந்தறிகின்ற—தோற்றரவால்- (ஞான) திருஷ்டியினால்— இவையனைத்தையும்- இப்பொழுதுசொல்லப்பட்டசகலத்தையும்— வீதகவ்வியனோக்கி-வீதகவ்வியமுனிபார்த்து—பரனுக்காட்செய்த- பரமேஸ்வரனுக்கடிமையாகப்பணிசெய்த—பலத்தினால்- ப்ரயோசனத்தினால்— இறந்தனவறிந்து- இறந்தகாலங்களைத்தெரிந்து—தான்

வலியுண்டாய்- தனக்குவல்லமையுண்டாகி— புரணமாக-பூரணமாக—முற்பவங்களில்- முற்சநநங்களில்—முன்பொன்றிப்போய-முன்னசித்துப்போன—தன்னுடன்முற்றும்-தனதுசரீரமுழுதையும்—கரவறக்கண்டு - மறைப்பில்லாமற்பார்த்து — வீதகவ்வியப்பெயர் - வீதகவ்வியனென்னு நாமத்தையுடைய — காயமாய்வரக்கண்டான் - சரீரமாகவரப்பார்த்தான். -எ - று. (இ-ரு-க-ம்) பிரமத்தினின்றுநழுவின முதலெடுத்தபவங்களையறிந்ததிலிப்போது வீதகவ்வியனெனத்தெரிந்ததென்பதாம் .... (௫௮)

(அ-கை.) மறைபட்டதேகத்தை வெளிப்படுத்து முபாயஞ்சிந்தித்துச் சூரியனிடத்திற்செல்லுதல். (கவி) மறையுமிவ்வுடலெடுத்துமென்றெண்ணிநன் வான்கதிரவன்பாற்போய், முறைசெய்பிங்கலன்றனைக்கொணர்ந்தெடுப்பதுமுடியுமென்றொருப்பட்டான, றையுங்காற்றுருவாய்ப்புரியட்டகவங்கமாய்க்கதிரோன்பாற், பொறைகொண்மாமுனிசேர்தலுமிதயத்திற்புகுந்தவாறினன்கண்டு .... *

(இ-ள்.) மறையுமிவ்வுடல் - பூமியின்மறைந்திருக்கின்றவிந்தசரீரத்தை— எடுத்துமென்றெண்ணி - எடுப்போமென்றுநினைத்து—நன்வான்கதிரவன்பாற்போய்- நல்லபெருமையையுடையசூரியனிடத்திற்சென்று—முறைசெய் - முறைமையைச்செய்கின்ற — பிங்கலன்றனைக்கொணர்ந்து - பிங்கலனையழைத்துவந்து—எடுப்பது - எடுப்பதற்கு—முடியுமென்று - நிறைவேறுமென்று—ஒருப்பட்டான் - ஒருசித்தமானவனுய்— அறையுங்காற்றுருவால்-மோதாநின்றவாயுவுருபமாய்— புரியட்டகவங்கமாய் - புரியட்டகசரீரத்தோடும்—கதிரோன்பால்- சூரியனிடத்தில்—பொறைகொண்மாமுனி - சாந்தியையுடையவீதகவ்வியமகாமுனியானவர்—சேர்தலும்- (வந்து) சேர்ந்தமாத்திரத்தில்—இனன்-சூரியன்—இதயத்தில்- (தன)திருதயத்தினுல்—புகுந்தவாறுகண்டு - வந்ததன்மையைப்பார்த்து. எ - று........................ .... (௫௯)

(அ-கை.) பிங்கலன்வருதல். (கவி) முன்னநின்றபிங் கலன்றனைக்கதிரவன் முழுதுணர்ந்துடனேவ, வன்னவீதகவ்வியப்பெயருள்ளமுமாதித்தனுண்ணின்று,தன்னதாக்கையில்விந்தவெற்பருகுபோய்ச் சார்தரக்கதிரோனுற், சொன்னபிங்கலன் வந்துகைநகத்தினுற்றொன்னிலமுறக்கீறி......... .... *

(இ-ள்.) கதிரவன்-சூரியனுனவன்—முழுதுணர்ந்து - (முனியினபிப்பிராய) முழுதுந்தெரிந்து-அன்ன-அத்தன்மையான —வீதகவ்வியப்பெயர்- வீதகவ்வியனென்னுநாமத்தையுடையவனது—உள்ளமும்-சூட்சுமசரீரமும்—ஆதித்தனுண்ணின்றும்-சூரியனிடத்தினின்றும்—விந்தவெற்பருகு-விந்தமலைச்சார்பிலிருக்கின்ற — தன்னதாக்கையில் - அம்முனியின்சரீரத்தில்—போய்ச்சார்தர-போய்ச்சேரும்படி—கதிரோனுல்- சூரியனுல்—முன்னநின்றபிங்கலன்றனை-பக்கத்திலிருந்தபிங்கலன்றனை—உடனேவ - வீதகவ்வியமுனியோடனுப்ப—சொன்னபிங்கலன்-முன்சொல்லியபிங்கலனுனவன்—வந்து-முனியோடும்வந்து—கைநகத்தால்- கரத்திலுள்ளவுகிரினுல்—தொன்னிலமுறக்கீறி - பழைமையாகியபூமியைப்பொருந்தக்கிழித்து. எ-று.... (௬௰)

(அ-கை.) மண்ணின்மறைந்ததேகத்தைவெளிப்படுத்தல். (கவி) மானிலத்தினையகழ்ந்து பிங்கலன்றரவருங்களேபரந்தன்னின், மோனமாம்புரி யட்டகம்புகுந்தது மொழிந்தபிங்கலன்போனு, ஞனமாதவன்மூழ்கினன்செபித்தனனருச்சித்தான்கதிரோனை, ஞானநெஞ்சினுனிறையுடன்முன்புபோனலந்திகழ்ந்ததுமீண்டும் .... *

(இ-ள்.) மானிலத்தினை - பெரியபூமியை—அகழ்ந்து - தோண்டி --பிங்கலன்றர - பிங்கலன்கொடுக்க—வருங்களேபரந்தன்னின்- வாராநின்றசரீரத்தின்—மோனமாம்- மௌனமுனியினதாகிய—புரியட்டகம் - சூக்குமசரீரமானது — புகுந்தது - (தூலசரீரத்திற்) ப்ரவேசித்தது—மொழிந்த - முன்சொல்லப்பட்ட — பிங்கலன்போனுன் - பிங்கலனுனவனேகினுன்—ஞனமாதவன்.- (இப்படி) யானவீதகவ்வியமுனியானவன்—மூழ்கினன் - ஸ்நானஞ்செய்து—செபித்தனன் - செபம்பண்ணி—கதிரோனை - சூரியனை — அருச்சித்தான் - ஆராதனைசெய்தான்—ஞானநெஞ்சினுல் - அறிவுடையமனதினுல்—நிறையுடல் - நிறைந்தசரீரமானது—முன்புபோல் - முன்னையைப்போல—மீண்டும் - திரும்பவும்—நலந்திகழ்ந்தது - நன்மைப்ரகாசித்தது. எ - று. (இ-ரு-க-ம்) முன்புரியட்டகசரீரத்தோடும் வெளிப்பட்டுப் பின்றூலதேகத்தையெடுப்பித்ததிற்புகுந்தனனென்பதாம் ... . (௬௧)

(அ-கை.) முனிசகசசமாதியையனுஷ்டிக்கச்சிந்தித்தல். (கவி) வேறு. சமமயித்திரிசாந்திசீரறிவருண்முதிதை, யமர்குணங்களாயனைத்தினுநெஞ்சுபற்றின்றிக், கமர்கொள்விந்தநீர்த்தடக்கரைநாள்பலகழித்து, நிமலநெஞ்சினுற்பராபரமுணர்முனிநினைப்பான் .... *

(இ-ள்.) சமம்-சமமும்—மயித்திரி-மயித்திரியும்—சாந்தி-சாந்தமும்—சீர்- செல்வமும் —அறிவு - ப்ரஞ்ஞையும்—அருள்-கிருபையும்—முதிதை - சந்தோடமு (மாகியவிவைகள்)—

அமர்குணங்களாய்-அமர்ந்திருக்கின்றகுணங்களையுடையவனாய்—அனைத்தினும்-சகலத்திலும்—நெஞ்சுபற்றின்றி-மனதுபற்றில்லாமல்—வித்தம்-வித்தமலை(ச்சாரிலுள்ள)—கமர்கொள்-பூமியைப்பிளந்துசெல்கின்ற— தடம் - விசாலம்பொருந்திய—நீர்க்கரை - நதிக்கரையில்— நாள்பலகழித்து-வெகுகாலங்கழித்து—நிமலநெஞ்சினால்- நின்மலமனதினால்—பராபரமுணர்முனி-பராபரத்தையுணர்ந்தமுனியானவர்—நினைப்பான் - சிந்திப்பான். எ-று .... (கூஉ)

(அ - ஸக.) யாவிலுங்கூடியுங் கூடாமற் சொச்சமாய் விளங்குவேனெனல். (கவி) பொறிகளின்திரண்முன்னமேநிறுத்தினம்புரிந்து, நெறிகொள்சேடத்தைக்கூட்டியேமலையெனநிற்போ, மறியத்தோன்றியுமறைந்தபோலாகுதுமறைந்துஞ், செறியத்தோன்றினனொத்துநிற்குதுநொய்ம்மைசேர்ந்து .... *

(இ-ள்.) பொறிகளின்திரள்-இந்திரியக்கூட்டங்களை—முன்னமேநிறுத்தினம் - முன்பேநிறுத்தல்செய்தோம்—புரிந்து-விருப்பி—நெறிகொள்சேடத்தை-செவ்வையாகமிஞ்சின (சின்மாத்திர)த்தை—கூட்டி-சேர்த்து—மலையெனநிற்போம்- மலையைப்போலஸ்திரமாகவிருப்போம்—மறியத்தோன்றியும்-திரும்பவுதயமாகியும்— மறைந்தபோலாகுதும் - மறைந்ததுபோலாவோம்—மறைந்தும்-மறைபட்டும்—செறியத்தோன்றினன்-நெருங்கவுதயமானவனாய்—நொய்ம்மைசேர்ந்து-சொச்சமடைந்து—ஒத்துநிற்குதும்-சமமாயிருப்போம். எ-று..... ..... (கூரு)

(அ-கை.) இத்தேகத்தினின்றுந் துரியவடிவாய் ப்ரகாசிக்குந் தன்மையைச்சிந்தித்தல். (கவி) உணர்வுவிஞ்சியு முறங்கினனொக்குதுஞ்சுழுத்தி, தணிவறபெற்றுமுணர்ந்தவனொக்குதுஞ்சமனாய்க், கணமும்வேறறத் துரியமேபற்றியிக்காயத், தணவிநின்றுமோரசைவறுசோதிநாமாவேம் .... *

(இ-ள்.) உணர்வுவிஞ்சியும் - விருத்திஞானமிகுந்தும்— உறங்கினனொக்குதும் - சுழுத்தியடைந்தவனுக்கொப்பாவோம்—தணிவற - தணிவில்லாமல்—சுழுத்திபெற்றும் - சுழுத்தியையடைந்தும்—உணர்ந்தவனொக்குதும் - விழித்தவனுக்கொப்பாவோம்—சமனாய்- பொதுவாய்—கணமும்வேறற - அற்பமும்வேறில்லாமல்—துரியமேபற்றி - துரியஸ்வரூபத்தைப்பிடித்து—இக்காயத்து - இச்சரீரத்தில்— அணவிநின்றும் - சார்ந்திருந்தும்—ஓரசைவறு - ஒருசலனமுமில்லாத—சோதிநாமாவேம் - சுயம்ப்ரகாசமாகநாமாவோம். எ-று. [ப-ம்] அறிவு ஆநந்தமயமாயிருக்குமென்பார் உணர்வுவிஞ்சியு முறங்கினனொக்குதுமென்றும், ஆநந்தமறிவாய் விளங்குமென்பார், சுழுத்தியுணர்ந்தவனொக்குதுமென்றுங்கூறினர்.................... (கூச)

(அ-ஙக.) சுகசமாதிபெற்றுச்சீவன்முத்தனாயிருத்தல். (கவி) என்றுநாடிநற்றியானத்திலாறுநாளிருந்து, சென்றுணர்ந்தனன்கண்டுயில்சேர்பதிகனைப்போ, லொன்றுசித்தனாய் வீதகவ்வியப்பெயருயர்ந்தோன், றுன்றுசீவன்முத்தியிலடைந்தநேகநாட்சுகித்தான்... *

(இ-ள்.) என்றுநாடி-(இப்படி)யென்றுசிந்தித்து— நற்றியானத்தில் - நல்லசமாதியில்—ஆறுநாளிருந்து - ஆறுதினமிருந்து—கண்டுயில்சேர்-நித்திரைசெய்கின்ற—பதிகனைப்போல்-வழிச்செல்பவனைப்போல—சென்றுணர்ந்தனன்- சென்றறிந்தான்—ஒன்றுசித்தனாய்-பொருந்தியசித்தியுள்ளவனாய்—வீதகவ்வியப்பெயர்- வீதகவ்வியனென்னுநாமமுள்ள—உயர்ந்தோன்-மேலானவன்—துன்று - நிறைந்திருக்கின்ற—சீவன்முத்தியில்- சீவன்முத்திபதத்தை—அடைந்து - பெற்று—அநேகநாள் - வெகுகாலம்—சுகித்தான்- சுகித்திருந்தான். எ-று. (இ-ச-க-ம்) சமாதியிலுஞ்சஞ்சரித்தலிலுமொருதன்மையவானசுவானுபவத்தோடுவிளங்கினனென்பதாம்.

(அ-ஙக.) சீவன்முத்தியில் விதேகமுத்தியைவிரும்பல். (கவி) தீதுநன்மையின்விடுபற்றுஞ்சிதைந்தேக,வீதகவ்வியன்விருப்பொடுவெறுப்புநெஞ்சிலனாய்ப், போதன்மீளலும் பிறவியுங்கருமமும்போக்கி, யோதுதேகந்தீர்கேவலவீடுறவுணர்ந்தான்.. .... *

(இ-ள்.) தீதுநன்மையின் - தீமைநன்மைகளின்—விடுபற்றும் - விடுதலும்பற்றுதலும்—சிதைந்தேக - கெட்டுப்போக —வீதகவ்வியன் - வீதகவ்வியமுனியானவர் — விருப்பொடு வெறுப்பு - இராகத்துவேஷங்கள்— நெஞ்சிலனாய் - மனதிலில்லாதவனாய்—போதன்மீளலும்-போதலும்வருதலுமாகிய—பிறவியுங்கருமமும் - சநநகன்மத்தையும்—போக்கி-கெடுத்து—ஓதுதேகந்தீர்கேவலம் - சொல்லாநின்றவிதேககைவல்யமான— வீடுறவுணர்ந்தான் - மோக்ஷமடையச்சிந்தித்தான். எ-று .... (கூள)

(அ-ஙக.) தத்துவங்களனைத்தையுந் தனதாத்மஸ்வரூபத்திற்கரைக்கச்சிந்தித்துராகத்துவேஷங்களைக்களைத்தல். (கவி) சித்தனாமுனியொருபகற்கிரிமுழைசேர்ந்து, பெத்தபங்கயாசனத்தினன்முன்றன்னிற்பேசு, மெத்துமாசையேதிராசையைமேவுதிமுனிவே, யொத்துளாறுநிவிநோதித்தேநெடும்பகலும்மால் .... *

(இ-ள்.) சித்தனுமுனி-சித்தனுகியவீதகவ்வியமுனியானவர்—ஒருபகல் - ஒருதினத்தில் —கிரிமுழைசேர்ந்து-மலைக்குகையையடைந்து—பெத்தபங்கயாசனத்தினன் - கட்டியபதுமாசனத்தையுடையவனுய்—தான்றன்னிற்பேசும் - தன்னிடத்திற்றுனேபேசுவார் — மெத்துமாசையே - மிகுதுவானவாசையே— நிராசையைமேவுதி - நிராசையைப்பொருந்தக்கடவாய்— முனிவே - கோபமே—ஒத்துளாறுதி - சமமாகவுள்ளசாந்தியையடையக்கடவாய்— உம்மால் - உங்களோடும்—நெடும்பகல் - வெகுகாலம்—விநோதித்தேன் - விநோதத்தையடைந்தேன். எ-று

(அ-கை.) போகசுகதுக்கங்களைக்கனைத்தல். (கவி) வேறு. போகங்காளுமைத்தொழுதேனெடுநாளும்மாற்புவியில்விளையாடியவாபோதும்போதுஞ், சோகந்திரிவ்வீடு மறக்கச்செய்தசுகங்காளுங்களைத்தொழுதேன்றுயர்களும்மா, லாகந்தான்வேகலினுலன்றேவன்பாலாத்துமதத்துவமுணர்ந்தேனுதலாலே, யோகஞ்சேர்முத்தியெனக்குதவினீர்நீருபகரித்தவுமைத்தொழுதலுரிமையன்றே .... *

(இ-ள்.) போகங்காள் - போகங்களே — உமைத்தொழுதேன் - உம்மைவணங்கினேன் — உம்மால் - உங்களால் —நெடுநாள் - வெகுகாலம் — புவியில் - சகத்தில் — விளையாடியவா - விளையாடினவிதம் — போதும்போதும் - போதும்போதும் — சோகந்திர் - துக்கமில்லாத—இவ்வீடு - இந்தமோக்ஷத்தை —மறக்கச்செய்த - மறந்துபோகச்செய்த—சுகங்காள் - (விஷய)சுகங்களே — உங்களைத்தொழுதேன் - உங்களைவணங்கினேன்— துயர்காள் - துன்பங்களே—உம்மால் - உங்களால்— ஆகந்தான் - சரீரமானது— வேகலினுலன்றே - வேகுதலினுலல்லவா—அன்பால் - அன்பினுல் — ஆத்துமதத்துவமுணர்ந்தேன் - ஆத்துமதத்துவத்தையறிந்தேன் — ஆதலால் - ஆதலினுல்— யோகஞ்சேர்முத்தி - ஐக்கியங்கூடியமோக்ஷத்தை— நீர் - நீங்கள்—எனக்குதவினீர் - எனக்குக்கொடுத்தீர்கள்—உபகரித்த - உபகாரஞ்செய்த—உமைத்தொழுதல் - உங்களைவணங்குதல்—உரிமையன்றே - உரியதல்லவா. எ-று. .... (௬௮)

(அ-கை.) தேகமிச்சைநீதியானவினைகளைக்கனைத்தல். (கவி.) நெடுநாளையன்பனுமுடலேயுன்னைநீக்குகின்றேன்மெய்ஞ்ஞானநிரம்பக்கற்று, கெடுங்கேடின்னுனுனக்குத்தேடிக்கொண்டாய் கிளராசையெனுந்தா யேகேளாயென்சொற், றடுமாறிநனிவாடித்தளரவேண்டாஞ்சாந்தனுயானகன்றேன்றருமமேநீ, யடுங்கோரநரகந்தீர்துறக்கத்தேமுன்னுக்கினையால்வாழியுனைத்தொழுவேனன்பால் .... *

(இ-ள்.) நெடுநாளையன்பனும் - வெகுகாலமிஷ்டனுன—உடலே - சரீரமே— உன்னைநீக்குகின்றேன் - உன்னைத்தள்ளுகின்றேன்— மெய்ஞ்ஞானம் - உண்மைஞானமானது— நிரம்பக்கற்று - பூரணமாகவப்பியாசஞ்செய்து— கெடுங்கேடு - கெடுகின்றகேட்டை—உன்னுனுனக்கு - உன்னுலேயுனக்கு—தேடிக்கொண்டாய் - சம்பாதித்துக்கொண்டாய்—கிளர் - ஒளிசெய்கின்ற—ஆசையெனுந்தாயே - இச்சையென்னுமாதாவே—என்சொல் - எனதுவசனத்தை—கேளாய் - கேட்பாய்—தடுமாறி - தடுமாறி—நனிவாடி - மிகவும்வாட்டமுற்று—தளரவேண்டாம் - தளர்வையடையவேண்டாம் — சாந்தனுய் - உபசாந்தனுகி — யானகன்றேன் - நானுன்னைநீங்கினேன் —தருமமே - சுகிர்தமே—நீயடுங்கோரநரகந்தீர்துறக்கத்து - நீகொல்லுங்கோரமுள்ளநரகம்விட்டுமோக்ஷத்தில்—முன்னுக்கினையாலுனைத்தொழுவேனன்பால் - முன்னுகச்செய்ததாலுன்னையன்பினுல்வணங்குவேன்—வாழி - வாழக்கடவாய். எ - று .... (௬௯)

(அ-கை.) பிராணன்களையுமனதையுங்கனைத்தல். (கவி) உடன்பிறந்தநண்பராமுயிர்காளும்மையொழுங்கிலேயொழிக்கின்றேனுயர்ந்துவாழ்தீர், நடந்தகல்கேனென்னவிவ்வாறுள்ளேநாடுமனமேடணைகணன்றுயாறி, யிடம்பெறநின்றேங்காரமெல்லவோதியிகப்பொருள்கள் புறத்துள்ளவிதயத்துள்ள, தடம்பெரியநுண்ணியமூவுலகிலுள்ளசங்கற்பத்தமைந்தவெலாந்தள்ளினுனே .... *

(இ-ள்.) உடன்பிறந்தநண்பராம் - சகோதரமானவிஷ்டராகிய — உயிர்காள் - ஜீவர்களே—உம்மை - உங்களை— ஒழுங்கிலேயொழிக்கின்றேன் - வழியாகத்தவிர்க்கின்றேன்—உயர்ந்துவாழ்தீர் - சுகமாய்வாழக்கடவீர்கள்—நான் - யான்—நடந்தகல்கேனென்ன - நடந்துபோவேனென்று—இவ்வாறு - இந்தப்ரகாரம்—உள் - அகத்தில் — நாடுமனம் - சிந்திக்கின்றமனதும்—எடணைகள் - ஈடணாத்திரயங்களும்—நன்றுயாறி - நன்றுகவிட்டு — இடம்பெறநின்று - (ஞானபூமி)யிடமாகநின்று—ஓங்காரமெல்லவோதி - பிரணவத்தைமிருதுவாகவுச்சரித்து—இகப்பொருள்கள் - இவ்விடத்திலுள்ளவஸ்துக்களும்—புறத்துள்ள - புறம்பிலுள்ளவஸ்துக்களும்—இதயத்துள்ள - இருதயத்திலுள்ளவஸ்துக்களும்—தடம்பெரிய - பருத்தஸ்தூலமும்— நுண்ணிய - சூட்சுமமாகிய—மூவுலகிலுள்ள - மூன்றுலகத்திலுமுள்ளதாகிய—சங்கற்பத்தமைந்த - சங்கற்பத்தினுல்வந்த—எலாந்தள்ளினுன் - சகலத்தையுநீக்கினுன். எ - று. (இ-ஒ-க-ம்) ஆசை

யை நிராசையாகவு முனிவைச் சாந்தமாகவும் போகங்களைமாபோகமாகவும் விஷயசுகங்களைப் பிரமசுகமாகவுந் துன்பங்களையின்பமாகவுந் தேகத்தை தேகிவடிவமாகவும் ஆசையைத்தற்பிரியமாகவும் பிராணனைப் பிராணியாகவும் மனதையாத்மவிளக்கமாகவுங்காத்து அவைகளையும் பிரணவஸ்வரூபத்தாக்கத்தொடங்கினனென்பதாம்...(எ௰)

(அ-கை.) சுத்தவாசனையை யாத்மாவினிடத்தடக்கும்போ துண்டான வனுபவமரபைத்தெரிவிக்குநிமித்த மதன்கிரமத்தைச்சொல்லத்தொடங்கல். (கவி) ஓங்காரமுடிவாகத்தீர்க்கமானவோசையெனு நாலுடனே பொறிகளுற்ற, தேங்காதபுலனெல்லாமணத்தைக்காற்றுத்தீர்வதுபோற்றீர்ந்தனன்சேணிடையேகங்கு,னீங்காதுபோலிருண்மாத்திரமுன்றோன்றிநிகழ்தலுந்தள்ளினன்சோதிநேர்முன்றோன்றப், பாங்காகக்கணமதனைப்பார்த்துத்தீர்த்தான்பயிலிருடேசிரண்டுமறப்பாறிப்போன... *

(இ-ள்.) ஓங்காரமுடிவாக - பிரணவாந்தமாக—தீர்க்கமான - நீண்டதாகிய—ஓசையெனும் - சத்தமென்கின்ற—நாலுடன் - நாலோடும்—பொறிகளுற்ற - இந்திரியங்கள்பொருந்தின—தேங்காதபுலனெல்லாம் - நிறையாதவிஷயங்களனைத்தையும்—மணத்தை - கந்தத்தை—காற்றுத்தீர்வதுபோல் - வாயுநீக்குவதுபோல—தீர்ந்தனன் - நீங்கினான்—சேணிடை - ஆகாயத்தினிடத்தில்—கங்குனீங்காதுபோல் - இருணீங்காததுபோல — இருண்மாத்திரமுன்றோன்றி - இருண்மாத்திரமுன்னேயுண்டாகி—நிகழ்தலும் - விளங்கவும்—தள்ளினன் - நீக்கினான்—சோதிநேர்முன்றோன்ற - ப்ரகாசமுன்னேயுண்டாக — பாங்காக - அழகாக—கணம் - க்ஷணநேரத்தில்—அதனைப்பார்த்து - அந்தப்ரகாசத்தைப்பார்த்து—தீர்த்தான் - நீக்கினான்— பயிலிருள் - சொல்லப்பட்டவந்தகாரமும்—தேசு - ப்ரகாசமுமாகிய—இரண்டுமற - இரண்டுமில்லாமல்—பாறிப்போன - ஓடிப்போயின. எ-று...(எக)

(அ-கை.) இ-து. (கவி) அவத்தையிதுதனைமனத்தாற்பற்றிமேலோனங்குதித்த மனந்திரணமென்னமுற்றுந், தவிர்த்தனனோரிமைப்பிலதற்பின்னப்போதே சனித்தசிசுவறிவொத்துச்சாலநேர்த்தாய், நிவக்குமொளிபெறுமறிவைப்பெற்றுப்பாதிநிமிடம்பாதியிலெண்ணநீக்கிநின்றான், றுவக்குறுகாற்றசைவுவிடல் போலச்சித்தின்றொடர்காட்சிமாற்றினான் றுகளிலாதோன்...*

(இ-ள்.) இது - இந்த—அவத்தைதனை - அவத்தையை—மனத்தாற்பற்றி - மனதினாற்பிடித்துக்கொண்டு—மேலோன்- உயர்வான(வீதகவ்வியமுனியான)வன்—அங்குதித்தமனம்- அவ்விடத்திலுண்டாகியமனதை—திரணமென்ன - துரும்பைப்போல — முற்றும் - முழுதும்—ஓரிமைப்பில் - ஓரிமைநேரத்தில்—தவிர்த்தனன்- ஒழித்தான்—அதற்பின்-அதன்பின்பு—அப்போதுசனித்த - அப்பொழுதுபிறந்த—சிசுவறிவொத்து- குழந்தையறிவுக்கொப்பாகி—சாலநேர்த்தாய் - மிகவுஞ்சொச்சமாய் — நிவக்குமொளி - உயர்ந்தொளிரும்ப்ரகாசத்தை—பெறுமறிவைப்பெற்று- பெறாநின்றஞானத்தைப்பெற்று—பாதிநிமிடம்-அரைநிமிஷத்தில்—பாதியில் - கால்நிமிஷத்தில்—எண்ணநீக்கிநின்றான்- நினைவைத்தள்ளியிருந்தான்—துவக்குகாற்று- தொந்தத்தையுடையவாயுவானது—அசைவுவிடல்போல-சலனத்தைநீக்குவதுபோல—சித்தின் - ஞானத்தின்—துகளிலாதோன் - குற்றமற்றவன்—தொடர்காட்சிமாற்றினான்- தொடராநின்றவிஷயத்தைநீக்கினான். எ-று...(எஉ)

(அ-கை.) இ-து. (கவி) வருசிற்சாமானியத்தையடைந்தான்சத்தாமாத்திரமே வடிவானான்சுழுத்திமேவி, யிருபொற்குன்றெனநின்றான்சுழுத்தியூற்ற மெய்தியபின் றுரியவடிவெளிதினுற்று, னருகுற்றநிராநந்தமாயமாயாவாநந்தமாயசத்தாகியுஞ்சத்தாகி, யொருவுற்றவசனங்கட்கெட்டாதானவொருபொருடானாய்நின்றானொப்பிலாதான்...*

(இ-ள்.) வருசிற்சாமானியத்தையடைந்தான்- வாராநின்றசிற்சாமானியத்தைப்பெற்றான்—சத்தாமாத்திரமே - சத்தாமாத்திரமே—வடிவானான் - ஸ்வரூபமானான் — சுழுத்திமேவி- நனவிற்சுழுத்தியையடைந்து—இருபொற்குன்றென - மகாமேருவைப்போல — நின்றான்- நின்றனன்—சுழுத்தியூற்றமெய்தியபின் - நனவிற்சுழுத்தியினுறுதியையடைந்தபின்பு— துரியவடிவெளிதினுற்றான் - துரியஸ்வரூபத்தையெளிதிலடைந்தான் — அருகுற்ற - சமீபமாயிருந்த—நிராநந்தமாய - நிராநந்தமான — மாயாவாநந்தமாய் - நித்தியாநந்தத்தையுடையவனாய்—அசத்தாகியும் - அசத்தாகியும்—சத்தாகியும் - சத்தாகி— ஒருவுற்றவசனங்கட்கு-நீக்கமுற்றவாக்கியங்களுக்கு—எட்டாதான - எட்டாததாகிய—ஒருபொருள் - ஒப்பற்றவஸ்துவே—ஒப்பிலாதான் - சமானமற்றவீதகவ்வியமுனியானவர்—தானாய்நின்றான் - தானாகவிருந்தான். எ-று. (இ-ரு-க-ம்) இந்திரியமுதலியவனைத்தின் விடுதியேயந்தகாரமாக வெளிப்படவதனையதைக்கண்டசித்திநுற்றள்ள அச்சித்து ப்ரகாசமாய்வெளிப்பட அதனை யதன்மயமாயிருந்து

அதன்விருத்தியைத்தள்ள அஃதுசிற்சாமானியமாய் வெளிப்பட வதுவுமதற்காதாரமான சத்தாசாமானியமாக அச்சத்துந்தன்விளக்கமான துரியமாய்வெளிப்பட அத்துரியமுந் தனதாநந்தமாய்வெளிப்பட்ட துவு மதீதமாய் வெளிப்பட்டதுவாகவிளங்கினவென்பதாம்.......... (௭௫)

(அ-கை.) துரியாதீதமாய் நின்றுவிளங்குந்தன்மையையுரைத்தல். (கவி) சூனியமென்பார்க்கதுவாய்ப் பிரமமென் றுசொல்லுவார்க் கதுவாய்விஞ் ஞானமென்று, தானியம்புவோர்க்கதுவாய்ப்புருடனுகிச்சாங்கியர்க்குமியோகியர்க்கீசன்றனுகி, யீனமில்சைவாகமர்க்குச் சிவனுய்க்காலமென்பாருக்கதுவாய்மத்திரியர்கட்கெல்லா,மானமுறுமத்தியமாய்ச் சமமாய்க்காணுமனத்தினர்க்கெல்லாமானபொருடானுனன்.

(இ-ள்.) சூனியமென்பார்க்கு - சூனியமென்பவர்களுக்கு—அதுவாய் - அச்சூனியமாகியும்—பிரமமென்றுசொல்லுவார்க்கு - பிரமமென்பவர்களுக்கு—அதுவாய் - அப்பிரமமாகியும்—விஞ்ஞானமென்றுதானியம்புவோர்க்கு - விஞ்ஞானமென்பவர்களுக்கு— அதுவாய்-அவ்விஞ்ஞானமாகியும்—சாங்கியர்க்குப்புருடனுகி- சாங்கியர்க்குப்புருஷனுகியும்—யோகியர்க்கீசன்றனுகி - யோகிகளுக்கீசனுகியும்—ஈனமில்-குறைவில்லாத— சைவாகமர்க்குச்சிவனுய்-சைவாகமத்தாருக்குசிவனுகியும்—காலமென்பாருக்கு - காலமென்பவர்களுக்கு—அதுவாய்-அக்காலமாகியும்—மத்திரியர்கட்கெல்லாம் - மாத்திரியர்கட்கெல்லாம்— மானமுறுமத்தியமாய்-பிரமாணமுள்ளமத்தியமாகியும்—சமமாய்க்காணும் - சமமாய்ப்பார்க்கின்ற — மனத்தினர்க்கு - மனதையுடையவர்களுக்கு — எல்லாமான - யாவுமாயிருக்கின்ற — பொருடானுனன்-வஸ்துவேதானுனன். எ-று .... (௭௬)

(அ-கை.) இ-து. (கவி) நூலனைத்தின்சித்தாந்தமேதெல்லோர்க்கு நோக்கியதேதோர்ந்ததேதெல்லாமேது,ஞாலமெலாமுறைவதேதசைவொன்றில்லாநல்லதேதொளிக்குமொளிதருவதேது, பானுறுதன்னனுபூதி யொன்ருய்க்காணப் பட்டதேதொன்ருயும் பலவாமேது,சானுகளங்கம்படைத்தும்படையாதேதுசகலமுமாயலாததேததுதானுனன்.... *

(இ-ள்.) நூலனைத்தின் - சாஸ்திரங்களெல்லாவற்றின்—சித்தாந்தமேது - சித்தாந்தமியாது—எல்லோர்க்குநோக்கியதேது - எல்லாராலும்பார்க்கப்பட்டதியாது—ஓர்ந்ததேது - அறிந்ததியாது—எல்லாமேது - சகலமுமானதியாது— ஞாலமெலாமுறைவதேது - பூமிகளனைத்திலும்வசிப்பதியாது—அசைவொன்றில்லாநல்லதேது - ஓரசைவுமில்லாதநன்மையுள்ளதியாது—ஒளிக்குமொளிதருவதேது - ப்ரகாசங்களுக்குப்ரகாசங்கொடுக்கின்றதியாது — பானுறுதன்னனுபூதி - உரிமையுள்ளதனதனுபூதியால் — ஒன்ருய்க்காணப்பட்டதேது - ஏகமாய்க்காணப்பட்டதியாது—ஒன்ருயும்பலவாமேது - ஏகமாயுமநேகமாகியுமிருக்கின்றதியாது — சானுகளங்கம் - மிகுந்தகளங்கத்தை—படைத்தும்படையாதேது - பெற்றும்பெருமலிருக்கின்றதியாது—சகலமுமாயலாததேது - எல்லாமாயல்லாததானதெதுவோ—அதுதானுனன்-அந்தவஸ்துவேதானுனன். எ-று .... (௭௭)

(அ-கை.) இ-து.(கவி) அடர்பிறப்போடிறப்பின்றியாதியன்றியாதியாயொன்ருகி யநேகமாகித், தொடர்சகளநிட்களமாய்விண்ணினுய்த்தாய்த் தூய்தானநிலையீசனுகியெல்லைத், திடமுறநின்றிருபதினு யிரமாண்டெல்லைச் செருக்குறவேண்டியபடியே சகத்துலாவிப், படர்மனமீண்டெழாதவகைசமித்தொன்றுனன்பகர்வீதகவ்வியனும்பரமயோகி ....*

(இ-ள்.) அடர்-நெருங்கிய—பிறப்போடிறப்பின்றி - சநநமரணமில்லாததாகியும்—ஆதியன்றி-அநாதியாகியும்—ஆதியாய்-ஆதியாகியும்—ஒன்ருகி-ஏகமாகியும்—அநேகமாகி-பலவாகியும்—தொடர்-தொடராநின்ற—சகளநிட்களமாய்-சகளநிஷ்களமாகியும்—விண்ணினுய்தாய்-ஆகாயத்திலுஞ்சொச்சமாகியும்—தூய்தான-பரிசுத்தமாகிய—நிலையீசனுகி-நிலையையுடையவீசனுகியும்—திடமுறநின்று-திடமாயிருந்து—இருபதினுயிரமாண்டெல்லை- இருபதினுயிரம்வருஷமளவும்— செருக்குற - மகாமகிழ்ச்சியடைய— வேண்டியபடியே - விரும்பினப்ரகாரமே —சகத்துலாவி - உலகத்திற்சஞ்சரித்து—படர்மனம் - படருகின்றமனது —மீண்டெழாதவகைசமித்து - திரும்பவுண்டாகாதவண்ணங்கெடுத்து—பகர்வீதகவ்வியனும்- சொல்லியவீதகவ்வியனென்னும்— பரமயோகி - பரமஞானியானவர்—ஒல்லை - சீக்கிரமாக— ஒன்றுனன்-அத்துவிதமானுன். எ-று. (இ-௩-௧-ம்) அதீதமேயாதுயாதெப்படியோ வப்படியப்படியெல்லாமாய்விளங்குகின்ற சாக்ஷாத்காரமானவிதேகமுத்தித்தன்மையையடைந்தனனென்பதாம்.*

வீதகவ்வியன்கதை முற்றிற்று. ஆகக்கதை-௨௭௩, கவிதை (௩௨௫௰.)

உபசாந்திப்பிரகரணம்.

(அ-கை.) முற்கதையிற் சித்தவிஸ்ராந்தியின்பொருட்டு பற்றறுதிமுதலிய வப்பியாசங்களைச்சொல்லி அச்சித்தசாந்தியே செகத்சாந்தமென்பதையுறுதிப்படுத்துநிமித்த மிவ்வொன்பதுகதைகளின்சாரங்களையெடுத் துபசாந்திப்பிரகரணமாகநிரூபிக்கிறார் .... *

(அ-கை) சீவன்முத்தனுக்குஆகாயகமனமுதலியசித்திகளேனின்றெனல்(கவி)வேறு.
என்னவுரைத்தமுனிதன்னையிராமனேக்கியுரைசெய்வா, னுன்னுசீவன்முத்தியினோ
ருடல்கட்கெல்லாமாகாயந், தன்னிடைத்தன்முதலானசத்திகாணேமென்னென்ன,
வன்னவினவுக்குத்தரங்களறியவுரைத்தானருள்வசிட்டன் .... *

(இ-ள்.) என்னவுரைத்தமுனிதன்னை- (இப்படி) யென்றுசொல்லிய வசிஷ்டமுனியை— இராமனேக்கி - இராகவன்பார்த்து—உரைசெய்வான் - சொல்லுவார்—உன்னுசீவன்முத்தியினோர் - நினைக்கப்படுகின்றசீவன்முத்தியையுடையவர்களது—உடல்கட்கெல்லாம் - சரீரங்களுக்கெல்லாம்— ஆகாயந்தன்னிடைத்தன்முதலான - ஆகாயகமனஞ்செய்தன்முதலிய—சத்திகாணேம் - சத்திகளைப்பார்க்கிலம்— என்னென்ன - என்னவென்றுகேட்க— அன்னவினவுக்கு- அக்கேள்விக்கு—உத்தரங்கள்- உத்தரங்களை—அருள்வசிட்டன்-கிருபையுள்ளவசிஷ்டர்—அறியவுரைத்தான் - தெரியச்சொன்னர். எ-று .... (௧)

(அ-கை.) அணிமாமுதலியசித்திகளுமாயாவிசித்திரமென்பதை யறிவிக்குநிமித்தமவைகளைச்சீவன்முத்தன்வேண்டாமெனல்.(கவி.) பெரியவுணர்வில்பெத்தர்களும்
பேணுமருந்தான்மந்திரத்தாற், கிரியைதன்னுற்காலத்தாற்கிளர்ந்தயூகத்தாலியற்றி
ன், விரியும்விண்போக்காதிகளைமேவாநிற்பர்மெய்யுணர்வோர்க், குரியவல்லவி
வையவர்களுண்மைநோக்கேவிடாதுறுவார் .... *

(இ-ள்.) பெரியவுணர்வில்- பூரணஞானமில்லாத—பெத்தர்களும்— பந்தத்தையுடையவர்களும்— பேணுமருந்தால்- விரும்புகின்றவவுஷதங்களினுலும்— மந்திரத்தால்- மந்திரங்களினுலும்—கிரியைதன்னுல்- தொழில்களினுலும்— காலத்தால்- காலங்களினுலும்—கிளர்ந்தயூகத்தால்- சொல்லியயூகங்களினுலும்—இயற்றின்-முயற்சித்தால்—விரியும்விண்போக்காதிகளை-பரவியவாகாசகமனுதிகளை—மேவாநிற்பர் - பொருந்தியிருப்பார்கள் — மெய்யுணர்வோர்க்கு- உண்மைஞானமுடையவர்களுக்கு— இவையுரியவல்ல-இச்சித்திகளுரித்தாயினவல்ல—அவர்கள்- அந்தஞானவான்கள்— உண்மைநோக்கு- தத்துவமான (வாத்தும) திருஷ்டியை- விடாதுறுவார்-இடைவிடாமற்பொருந்துவார்கள்—எ-று .... (௨)

(அ-கை-) வேண்டினல்வருமோவெனின்முன்சொல்லியகிரமங்களால் வருமெனல் (கவி)
அறிந்தோரறிவாலறிவினிடத்தமைவதல்லாலாசையின்பின்,பிறிந்தோடார்கள்சகப்பொ
ருளின்பேதமெல்லாமாயைகளே, மறிந்தேமாயைகெடவென்றோர்மறித்துமதனின்மூ
ழ்குவரோ, செறிந்தேயறிஞர்களும்விரும்பிற்சித்தியுறுமுன்பகமொழுங்கால் .... *

(இ-ள்.) அறிந்தோர்- ஞானிகள்—அறிவாலறிவினிடத்து—ஞானத்தினுன்ஞானத்தினிடத்தில்—அமைவதல்லால்- அமைவதேயன்றி— ஆசையின்பின்- (ஆகாயகமனுதி) யிச்சையின்பின்—பிறிந்தோடார்கள்- பிரிந்துசெல்லார்கள்—சகப்பொருளின் - உலகத்திலுள்ளவஸ்துக்களின்-பேதமெல்லாம்-வேற்றுமைகளனைத்தும்— மாயைகளே - மாயாமயங்களாம்—மாயை- அம்மாயையானது —மறிந்துகெடவென்றோர்-மடங்கிக்கெடும்படிசெயித்தவர்கள்—மறித்துமதனின்மூழ்குவரோ-திரும்பவுமம்மாயையிலழுந்துவார்களோ— செறிந்து- நெருங்கி —அறிஞர்களும்விரும்பில்- ஞானவான்களுமிச்சிப்பார்களாயின்—முன்பகமொழுங்கால்- முன்சொல்லப்பட்டகிரமத்தினுல்—சித்தியுறும்-சித்தியுண்டாம்-எ-று .... (௩)

(அ-கை.)ஆயின்வேண்டலாமேயெனின்முத்தியின்மையால்விரும்பார்களெனல்(கவி)கே
ட்டமருந்துமந்திரங்கள்கிரியைகாலமூகமெலா, நாட்டுஞ்சித்திகளைநல்குநல்லமுத்திதர
மாட்டா, தேட்டமுளதேலொருத்தற்கொன்றதுதானியற்றிற்சித்திக்கும், பூட்டுமாசை
வந்தனுகாப்புரணபோதமுடையோர்க்கே .... *

(இ-ள்.)கேட்டமருந்து-கேள்விப்பட்டவவுஷதங்களும்—மந்திரங்கள்—மந்திரங்களும்—கிரியை- தொழில்களும்— காலம்-காலங்களும்—ஊகமெலாம்-யுத்திகளுமாகியவிவைகளனைத்தும்— நாட்டுஞ்சித்திகளை நல்கும்-நாட்டாநின்றசித்திகளைக்கொடுக்கும்— நல்லமுத்திதரமாட்

டா - தன்மையுள்ளமோக்ஷத்தைக்கொடுக்கமாட்டாது—ஒருத்தற்கு-ஒருவருக்கு— ஒன்றுதேட்டமுளதேல்-(சித்தி)பொன்றிற்றேட்டமுண்டானால்—அதுதானியற்றில்-அதைமுயற்சித்தால்—சித்திக்கும்-கிடைக்கும்—பூட்டுமாசை- பந்தப்படுத்துகின்றமனோபிச்சையானது—பூரணபோதமுடையோர்க்கு- பூரணஞானத்தையுடையவர்களுக்கு—வந்தணுகா- வந்துபொருந்தாது—எ-று.(இ-சு-க-ம்.)நிராசையுள்ள ஞானிக்காசையுள்ளசித்திகள்கூடாவென்பதாம்.......(௪)

(அ-கை-)முத்திக்குச்சித்தியிழிவாமென்பதைக்காட்டிமேற் சிரஞ்சீவிகளின்யோக
முமப்படியேயாமென்பதையறிவிக்கத்தொடங்கல். (கவி) காதமெல்லாமிறந்தொ
ழிந்தாற்கலங்காஞானோதயமுண்டா, மாதரஞ்செய்சித்திகளினமிழ்வோர்க்கப்பே
றடையாதென், றேதுமுனியையோகிகடாமூழிகாலமுயிர்வாழ்தற்,கேதுமூலமெ
னக்கேட்டானிராமன்மீட்டுமுனிசொல்வான் .... *

(இ-ள்.)காதலெல்லாம்- ஆசைகளனைத்தும்—இறந்தொழிந்தால்-மரித்துநீங்கினால்—கலங்கா-கலக்கமில்லாத—ஞானோதயமுண்டாம்- (ஆத்ம)ஞானமுதிக்கும்—ஆதரஞ்செய்-ஆசையைவிளைக்கின்ற— சித்திகளில்- (கமனாதி)சித்திகளிடத்தில்—அமிழ்வோர்க்கு-முழுகுகின்றவர்களுக்கு—அப்பேறடையாதென்று-அவ்வான்மலாபமுண்டாகாதென்று—ஏதுமுனியை- சொல்லியவசிஷ்டமுனியை — யோகிகடாமூழிகாலமுயிர்வாழ்தற்கு- யோகியர்கற்பகாலஞ்சீவித்திருப்பதற்கு—ஏதுமூலமென-யாதுகாரணமென்று—இராமன்கேட்டான் - இராகவன்கேட்க—மீட்டுமுனிசொல்வான்- திரும்பவும்வசிஷ்டர்சொல்லுவார். எ-று........................ (௫)

(அ-கை.) சிரஞ்சீவிக்குப்பிராணபந்தனமேகாரணமாமெனல். (சவி) பிராணனசை
யிலசைந்திடுவர்பிராணனடங்கிற்கற்போல்வர்,பிராணன்றனைத்தரித்தலினாற்பெரு
நாளசியார்யோகிகடாம், பிராணன்றன்னினெஞ்சத்திற்பிறக்குமசைவுட்புறனடங்
கிற், பிராணனுசமூப்பிரண்டும்பெருந்தூரத்திலேகிடுமால்...................... *

(இ-ள்.) பிராணனசையில்- பிராணவாயுவசைந்தால்—அசைந்திடுவர்-அசைவார்கள்—பிராணனடங்கில்-பிராணவாயுவடங்கினால்— கற்போல்வர்-மலைக்கொப்பாவார்கள்— பிராணன்றனைத்தரித்தலினால்- பிராணனைத்தரித்ததினால் — யோகிகடாம்-யோகிகள் — பெருநாளசியார்-வெகுகாலமிறவார்கள்— பிராணன்றன்னில் - பிராணனிடத்திலும்—நெஞ்சத்தில் - மனதினிடத்திலும்—பிறக்குமசைவு- உண்டாகின்றவசைவானது— உட்புறனடங்கில்-உள்ளிலும் புறம்பிலுமடங்குமானால்—பிராணனுசமூப்பிரண்டும்- மரணமும்வார்த்திகமுமாகிய விவ்விரண்டும்—பெருந்தூரத்தில்- வெகுதூரத்தில்— ஏகிடும்- போய்விடும். எ-று .... (௬)

(அ-கை.)இத்தேகவாஞ்சையைநீக்கினவர்களேதத்துவத்தையறிந்தவர்களாமெனல்
(கவி) உள்ளும்புறம்புமசைவின்றியுயிருமனனுமொடுங்குமெனிற்,றள்ளுறுமலொரு
காலுந்தாதுவெல்லாஞ்சடத்துறையுந், தெள்ளியறிவதறிந்தாசைதீர்ந்துபுத்திதெ
ளிந்திதயங், கொள்ளும்பந்தமெலாமறுத்தோரன்றேவுண்மைகுறித்தறிந்தோர்.*

(இ-ள்.) உள்ளும்புறம்பும்- உள்ளிலும்வெளியிலும்—அசைவின்றி - சலனமில்லாமல்—உயிருமனனும்- பிராணனுமனதும்—ஒடுங்குமெனில்-அடங்குமாயின்— ஒருக்காலும்-ஒருகாலத்திலும்—தள்ளுறுமல்- தள்ளப்படாமல்— தாதுவெல்லாம்- தாதுக்களனைத்தும்—சடத்துறையும்- தேகத்தில்வாசஞ்செய்யும்—தெள்ளியறிவதறிந்து- தெளிவாகவறியவேண்டிய (வாத்மஞானத்தை)யறிந்து—ஆசைதீர்ந்து-இச்சைநீங்கி-புத்திதெளிந்து-புத்திதெளிவாகி— இதயங்கொள்ளும்- மனதிற்கொள்ளுகின்ற— பந்தமெலாமறுத்தோரன்றே - பந்தங்களனைத்தையுங்கெடுத்தவர்களல்லவா—உண்மை- தத்துவத்தை—குறித்தறிந்தோர்-மதித்துணர்ந்தவர்கள். எ-று.(இ-ரு-க-ம்.)சிரஞ்சீவத்துக்கானமனோபிராணபந்தனம்ஞானிக்குக்கூடாவென்பதாம்.(௭)

(அ-கை.) ஞானியின்மனமிறந்து மிறவாமன்மயித்திரியாதிகுணங்களோடுவிளங்கு
வதையறிவிக்குநிமித்தம்அதனிறத்தலையிரண்டுவிதமாகச்சொல்லுதல். (கவி) என்ற
முனியைவிவேகத்தினெழுச்சியாலேமனமிறக்கிற், றுன்றுகின்றமயித்திரியைமுத
லாங்குணமெவ்விடத்தொன்றுங்,குன்றமலையாயுரையென்றவிராகவற்குமுனிகூறு,
மொன்றுமருவுமுருவுமெனவுளத்தினாசமோரிரண்டாம்...................... *

(இ-ள்.) என்றமுனியை- (இப்படி) யென்றுசொல்லியவசிஷ்டமுனியை—விவேகத்தினெழுச்சியால்- விவேகவுதயத்தினால்—மனமிறக்கில்-மனது(ஸ்வரூபநாச)லயிக்கியமாயின்—துன்றுகின்ற-நிறைகின்ற—மயித்திரியைமுதலாங்குணம்-மயித்திரிமுதலாகிய(நான்கு)குணங்களும்— எவ்விடத்தொன்றும்- எங்கேபொருந்தும்— குன்றமலையாய்- மலைகாப்பானவடே— உரையென்ற - சொல்லுமென்றுகேட்ட — இராகவற்கு - ஸ்ரீராமருக்கு— முனிகூறும்-

வசிஷ்டமுனிசொல்லுவார்—ஒன்றுமருவுமுருவுமென- பொருந்தியவருவமுமுருவமுமென்று—உளத்திறைசமோரிரண்டு- மனோநாசமிரண்டுப்ரகாரமாம். எ-று. ....(௮)

(அ-கை) மனத்தினுருவத்தைநசிப்பிக்கவேண்டுமெனல். (கவி) சீவன் முத்திதனிலுருவநாசஞ்சித்தந்தனக்குளதாந், தாவிலுடறீர்முத்திதனிற் சாற்றுமருவநாசமுறு, மேவுசித்தமுண்டாகிலிடராமிறக்கின்மிகுமின்பம், பாவியுள்ளமெழாதபடிபண்ணியதைநாசம்பயில்வாய்........................ *

(இ-ள்.) சீவன்முத்திதனில்- சீவன்முத்தியில்—உருவநாசம் - உருவநாசமானது—சித்தந்தனக்குளதாம்- மனதுக்குண்டாகும்— தாவிலுடறீர்முத்திதனில்-வருத்தமற்ற விதேகமுத்தியில்— சாற்றுமருவநாசமுறும்-சொல்லியவருவநாசமுமுண்டாம்—மேவுசித்தமுண்டாகில்-பொருந்தாநின்றமனதுண்டானால்—இடராம்- துன்பமாகும்— இறக்கில் - மரிக்குமாயின்—இன்பமிகும் - ஆனந்தம்பெருகும்— பாவியுள்ளம்- பாவிக்கின்றமனமானது—எழாதபடிபண்ணி- எழும்பாதபிரகாரஞ்செய்து—அதைநாசம்பயில்வாய் - அம்மனதைக்கெடுப்பாய்—எ-று. (இ-உ-கம்.) மனமானதும்பெத்தர்களிடத்துருவமாகவும், முத்தர்களிடத்தருவமாகவும், விதேகமுத்தர்களிடத்திவ்விரண்டுவிதமுமின்றாகவும் விளங்குமென்பதாம்........ .... (௯)

(அ-கை.) உருவநசியாமற்பெத்தரிடத்திருக்கின்றமனமேமாயைக்குக்காரணமாமெனல் (கவி) பகுதிவழியின்குணபாரமெனதென்றபிமானம்பண்ணற், றகுதியுண்மையறியாது தளர்நெஞ்சாஞ்சீவனுமதுவே, தொகுதியானசுகாசுகத்தைத்தொடர்ந்துநிற்குஞ்சுகமுந்தின், மிகுதியசையாதிம்மனமேமிகுமாயைக்குவிளைமுளையே........................ *

(இ-ள்.) பகுதிவழியின்-ப்ரகிருதிமார்க்கத்தின்—குணபாரம்-குணத்தின்சுமையை—எனதென்றபிமானம்பண்ணல்- என்னதென்றபிமானஞ்செய்தல்— தகுதியுண்மையறியாது-தகுதியானதத்துவத்தையறிந்துகொள்ளாமல்— தளர்நெஞ்சாம்- வருந்துகின்றமனமாகும்— அதுவே- அம்மனமே—சீவனும்- சீவனுமாகும்;—தொகுதியான- கூட்டமாகிய— சுகாசுகத்தை-சுகதுக்கங்களை—தொடர்ந்துநிற்கும் - தொடர்ந்திருப்பதாயும்— சுகமுந்தில்- சுகமுதலானதுகளில்—மிகுதியசையாது-மிகவுநிலையாயிருக்கின்ற—இம்மனமே-இந்தமனதே—மிகுமாயைக்குவிளைமுளையே- மிகுந்தமாயை (யுண்டாவ) தற்கங்குரமாம். எ-று........................ (௰)

(அ-கை.) சமதிருஷ்டியிற்சலனமறுதலேமனத்திலுருவநாசமாமெனல். (கவி) மனத்திலுண்மையுரைத்தனமேன்மனத்திறைசஞ்சொலக்கேட்பாய், கனத்தகிரியையுயிர்ப்பசைக்காவகைபோற்சமமாங்காட்சிதனி, லினத்தவின்பதுன்பங்களிறையுமசையாதிருப்பவர்க்கே, யனத்தமானவுள்ளந்தானழிந்ததென்பரறிந்தோரே........................ *

(இ-ள்.) மனத்திலுண்மை-மனத்தின்சத்தையை—உரைத்தனம்- சொன்னோம்— மேன்மனத்திறைசஞ்சொலக்கேட்பாய்- இனிமனோநாசஞ்சொலக்கேட்கக்கடவாய்—கனத்தகிரியை-மகாமேருவை—உயிர்ப்பசைக்காவகைபோல்- மூச்சசைக்கமாட்டாததன்மையைப்போல—சமமாங்காட்சிதனில்- சமத்துவமானதரிசனத்தில்—இனத்தவின்பதுன்பங்கள்-இனமாகியசுகதுக்கங்களினால்—இறையுமசையாது- எவ்வளவுமசைவுபடாமல்—இருப்பவர்க்கு - இருக்கும் (ஞானி)களுக்கு—அனத்தமானவுள்ளந்தான் - பயனின்றியமனமானது—அறிந்தோர்-அறிஞர்கள்—அழிந்ததென்பர்- நசித்ததென்றுசொல்லுவார்கள். எ-று... ....(௰௧)

(அ-கை.) இ-து. (கவி) மாவுச்சவமாபத்தூகமந்தங்கார்ப்பண்ணியமதங்கண், மேவுற்றனபேதியாதெவரையவர்க்கேயுள்ளம்வீந்துளதாந், தாவுற்றெழுந்தபேதைமையேமனமாமதுவேதவிர்ந்தொழியி, லோவற்றுள்ளநாசமெனுமுறுபேருண்மையுதித்திடுமால்.... *

(இ-ள்.) மாவுச்சவமாபத்து-மகாசம்பத்துமாபத்தும்—ஊகமந்தம்-யுத்தியுமந்தமும்—கார்ப்பண்ணியமதங்கள் - தாரித்திரமுமதங்களும்—மேவுற்றன-பொருந்தினவாய்—எவரைப்பேதியாது- யாவரைவேறுபடுத்தாதோ—அவர்க்கே - அவர்களுக்கே—உள்ளம்வீந்துளதாம்-மனமிறந்ததாம்—தாவுற்றெழுந்த-தாவிக்கொண்டெழுந்த—பேதைமையேமனமாம் - அறியாமையேமனமாகும்—அதுவே- அவ்வறியாமையே—தவிர்ந்தொழியில்-நீங்கில் — ஓவற்று-வருத்தமில்லாமல்- உள்ளநாசமெனும்- மனோநாசமென்கின்ற— உறுபேருண்மை- பொருந்தாநின்றமுதறிவு — உதித்திடும் - உண்டாகும். எ-று. (இ-ரு-க-ம்.) மனதினுருவநாசத்தைச்சொல்லியதாம்........................(௰௨)

(அ-கை.) உருவநாசமாய்ச்சீவன்முத்தரிடத்தருவமாயிருக்கின்றமனதினிலக்கணங்கூறல். (கவி) ஆயகுணமாமயித்திரியாதிகள்சேர்நல்வாதனையடைந்து, தீயமறுசென்மமுமிலதாஞ்சீவன்முத்தர்க்கந்தமன, மோயுமனதுக்கிதுவாகுமுருவநாசமிதுதனிலே, மேயகுணங்கள்வசந்தத்தில்விரிபூங்கொத்தாமெனவிளங்கும்........................ *

(இ-ள்.) ஆயகுணமாம் - உண்டானகுணமாகிய—மயித்திரியாதிகள்சேர் - மயித்திரிமுதலியநான்குஞ்சேர்ந்திருக்கும் — நல்வாதனையடைந்து - சுத்தவாதனையைப்பெற்று — நியமறு சென்மமும் - நிலையானமறுசெநநங்களும்—இலதாம் - இல்லாததாகுமோ — அந்தமனம் - அந்தமனது—சீவன்முத்தர்க்கு - சீவன்முத்தர்களுக்(குண்டாயிருக்கும்)—ஓயமனதுக்கு-ஓய்ந்த மனதுக்கு—உருவநாசம - உருவநாசமானது —இதுவாகும்-இதுவேயாகும்—இதுதனில்-இக்தன்மையானமனதில்—மேயகுணங்கள் - பொருந்திய (மயித்திரியாதியநான்கு) குணங்களும்—வசந்தத்தில் - வசந்தகாலத்தில்—விரிபூங்கொத்தாமென - விரிந்தபுட்பக்கொத்துகளைப்போல—விளங்கும் - பரகாசிக்கும். எ-று .... (௰௩)

(அ-கை.) அருவநாசமாய் விதேகமுத்தரிடத்து விளங்கியவியல்பைக்கூறல். (கவி)
வேறு. தத்துற்றவுள்ளத்தினருவநாசஞ்சரீரமிலாமுத்தனினிட்களமாய்ச்சாரு, மெ
த்துற்றநற்குணங்கடரித்துமுண்மையவீந்துளதாய்மேனியிலாவிமலவீடாய்ச், சுத்த
த்தாயுடறீர்ந்தமுத்தர்க்கெய்துந்தொடர்பாய்சத்துவநாசஞ்சொரூபமாகிச், சித்த
த்தினருவநாசப்பேர்பெற்றதிகழ்பதத்திலொன்றுமிலைச்செப்புதற்கே .... *

(இ-ள்.) தத்துற்றவுள்ளத்தின் - தாவாநின்றமனதினது—அருவநாசம் - அருவநாசமானது—சரீரமிலாமுத்தனில் - விதேகமுத்தனிடத்தில்—நிட்களமாய்ச்சாரும் - களங்கமறப்பொருந்தும் — மெத்துற்றநற்குணங்கடரித்தும் - மிகுதிவாயுள்ளமயித்திரியாதியசற்குணங்களைப்பெற்றும்—உண்மை- மெய்யான(சாத்துவிதமானது)—வீந்துளதாய் - இறந்ததாய்—மேனியிலாவிமலவீடாய் - விதேககைவல்யமாய்—சுத்தத்தாய் - பரிசுத்தமாய்—உடறீர்ந்தமுத்தர்க்கெய்தும் - விதேகமுத்தர்க்கடையும்—தொடர்பாய்- தொடர்ச்சியாக—சத்துவநாசம்-சாத்துவிதநாசமே—சொரூபமாகி - வடிவமாய்—சித்தத்தின் - மனதில் — அருவநாசப்பேர்பெற்ற - அருவநாசமென்னுநாமம்பெற்றிருக்கின்ற — திகழ்பதத்தில் - ப்ரகாசிக்கின்றபதத்தில்—செப்புதற்கொன்றுமில்லை - சொல்லுதற்குவேறொன்றுமில்லை. எ-று .... (௰௪)

(அ-கை.) இ-து. (கவி) குணங்குணமிலாமைசீர்சீரிலாமைமகுலவுதயமத்தமனமகிழ்வகு
மையையிணங்கொளிவல்லிருளிரவுபகன்முச்சந்தியியலுண்மையில்லாமை யிடையொன்றி
ல்லைப்,புணர்ந்துளதற்பதமதுதான்மாயக்கூத்தும் புந்தியும்வென்றகன்றவர்க்குப்புகலே
யாகு, மணங்கவருங்காற்றுமுதலனைத்தினுக்குமருவிடமாய்நிற்கின்றவானம்போல ......*

(இ-ள்.) குணங்குணமிலாமை - குணகுணங்களும்—சீர்சீரிலாமை - செல்வாசெல்வமும்—குலவுதயமத்தமனம் - ப்ரகாசிக்கின்றவுதயாஸ்தமனமும் — மகிழ்வகுமையை - சந்தோஷமுமகுமையையும்—இணங்கொளிவல்லிருள் - இணங்குகின்றப்ரகாசமும்வலியவந்தகாரமும்—இரவுபகல் - இராத்திரியும்பகலும்—முச்சந்தி - மூன்றுசந்தியும்—இயலுண்மையில்லாமை-பொருந்தியவுள்ளதுமில்லாததும் — இடையொன்றில்லை -(இவைகட்கு) மத்தியிலொன்றுமில்லாமையை—புணர்ந்துள- பொருந்தியிருக்கின்ற—தற்பதம்-பிரமபதமாம்—அதுதான்-அதுவே—மாயக்கூத்தும் - சம்சாராடம்பரத்தையும்—புந்தியும் - புத்தியையும் — வென்றகன்றவர்க்கு-சயஞ்செய்தவர்களுக்கு—மணங்கவரும் - கந்தத்தைக்கிரகிக்கின்ற— காற்றுமுதலனைத்தினுக்கும் - வாதமுதலியசகலத்துக்கும்—மருவிடமாய்நிற்கின்ற- பொருந்துதற்குஸ்தானமாயிருக்கின்ற—வானம்போல - ஆகாயம்போல—புகலேயாகும் - தஞ்சமேயாம். எ-று. (இ-உ-க-ம்) மனதினருவநாசத்தைச்சொல்லியதாம் .... (௰௫)

(அ-கை.) மனமிறந்தசுகத்தைச்சொல்ல வஃதிறக்கும்பொருட்டதன்காரியமான
மாயையின்மூலத்தைநான்குவிதமாகப்பிரித்துவிளுவுதல்.(கவி) துன்பமெலாமிறந்
தறிவேவடிவாயேகச்சுழுத்தியாய்த்தாமதராசதந்தோன்றும, லின்பமிகுந்தழகாம
ப்பதத்தேவிண்ணுளியாக்கையாய்ப்பெரியோராயிலங்குமேலோர், வன்படர்நெஞ்
சறவுறைவொன்றலோடும்வளர்கொடிமுந்திரிகைநிகர்மாயைக்கேது, முன்பயில்வி
த்ததற்கெதுவித்ததற்கென்வித்துமொழிந்ததற்கேதெதுவித்துமொழிவாய்நாலும்.

(இ-ள்.) துன்பமெலாமிறந்து - துன்பங்களனைத்துநீங்கி — அறிவேவடிவாய் - ஞானமேஸ்வரூபமாய்—ஏகச்சுழுத்தியாய்- ஒன்றாகியசுழுத்தியாய்—தாமதராசதந்தோன்றுமல்-தாமதராசதகுணந்தோற்றாது—இன்பமிகுந்து - ஆநந்தமிகுந்திருக்கின்ற —அழகாமப்பதத்து-அழகானவந்தப்பிரமபதத்தில்—விண்ணுளியாக்கையாய் - ஆகாசசரீரமாய்—பெரியோராய்-மகத்துக்களாய்—இலங்குமேலோர் - ப்ரகாசிக்கின்றபெரியோர்கள்—வன்படர்நெஞ்சற-வல்லமையாகப்பரவாநின்றமனதுகெட—உறைவொன்றலோடும்- வசிப்பவொன்றுவசிஷ்டமுனிசொல்லவும்—வளர்கொடிமுந்திரிகைநிகர் - வளராநின்றகொடிமுந்திரிகையையொத்த — மாயைக்கு - சம்சார(முண்டாகுதலு)க்கு—முன்பயில்வித்தெது - முன்னேசொல்லப்பட்டவிதையா

று—அதற்கெதுவித்து - அவ்வித்துக்குவிதையாது—அதற்கென்வித்து- அதற்கெதுவிதை—மொழிந்ததற்கெதெதுவித்து - சொல்லப்பட்டவதற்கெதுவிதை—நாலும் - இந்தநான்குவிதையும்—மொழிவாய் -சொல்லுவா (யென்றிராமன்கேட்டான்) எ-று .... (௰௬)

(அ-கை.) முதல்வித்திரண்டாம்வித்தினிலக்கணங்கூறல். (கவி) என்றிராகவன்கேட்பவசிட்டன்சொல்வானெழுந்துளவாரம்புசுபாசுபங்களென்னுந், துன்றுமுளைதந்தருளும்மேனிவித்தாஞ் சொன்னபெருமாயையெனுஞ் சூழ்கொடிக்கு, நின்றவுடலெனுமவித்துக்கெதுவித்தென்னினீண்டபாவாபாவநிறைந்துநாளும், கன்றுதுயரொனுமணிக்குவைப்பாஞ்செப்பாங்காதலின்பின்றொடுகின்றகவலைநெஞ்சே...... *

(இ-ள்.) என்றிராகவன்கேட்ப - (இப்படி) யென்றுஸ்ரீராமன்கேட்க— வசிட்டன்சொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—சொன்னபெருமாயையெனும்- சொல்லப்பட்டசம்சாரமென்கின்ற—சூழ்கொடிக்கு - சூழ்ந்தகொடிக்கு—எழுந்துளவாரம்பம் - உள்ளெழாநின்ற துவக்கமாகிய—சுபாசுபங்களென்னும் - சுபமசுபமென்கின்ற—துன்றுமுளைதந்தருளும்-நெருங்கியவங்குரத்தைக்கொடுக்கின்ற—மேனிவித்தாம் - சரீரமேவிதையாகும் — நின்றவுடலெனும்வித்துக்கு - நின்றதானசரீரமென்னும்விதைக்கு —எதுவித்தென்னில்- யாதுவிதையென்றால்—நீண்டபாவாபாவம் - நெடியசநநமரணங்கள்—நாளும் - எப்போதும் — நிறைந்துமிகுந்து—கன்றுதுயரொனுமணிக்கு - நைவிக்கின்றதுன்பமென்னுமிரத்தினத்துக்கு—வைப்பாஞ்செப்பாம்- வைக்கவிடமாகியசம்புடமென்னும்—காதலின்பின்றொடுகின்ற-இச்சையின்பின்செல்லுகின்ற —கவலைநெஞ்சே - துன்பமாகியமனமேயாம். எ - று. (இ-உ-க-ம்) மாயைக்குவித்துதேகமெனவுமதற்கு வித்துமனமெனவுங்கூறியதாம், மாயையிற்றனுவாதிகளுண்டாயினவென்றுசிரியர்யாவருங்கூற, இந்நூலாசிரியர் தனுவின்மாயை யுண்டாயிற்றென்றுகூறலாமோவெனி னஃதுண்மையாகலிற்கூறலாம் அஃதெங்ஙனமெனின் தேகத்தினுண்மையறியாமையென்றும் மாயையினுண்மையறிவென்றும் வேதார்த்தப்படிநிச்சயித்து, ஆத்மாவைமறந்தவறியாமையினின்றும்அறிதலுண்டானபடியாலவ்வறிதலுக்குஅவ்வறியாமைகாரணமாயிற்றெனக்கொள்க, இன்னும் விரிக்கின்விரியுமாகலினனுபவத்திற் சுருக்கிக்காட்டிற்று,இஃதிற்சந்தேகம்வரி லாசிரியர்வாக்கிளுற் சமாதியினின்றுதெளிக.. .... (௰௭)

(அ-கை.) மூன்றாம்வித்தினிலக்கணங்கூறல். (கவி) இல்லதுளதெனுமிந்தத்திரணெஞ்சாலேயெல்லையறப்பிறக்குமாலிதனைத்தானே;புல்லுகின்றகனவிலனுபவிக்குமன்றேபுவித்தொழிலாங்கொடிகளேபொருந்திச்சுற்று, மல்லன்மனமெனுமரத்துக்கிரண்டுவித்தாமாவியசைவொன்றும்வாதனையழுத்தஞ், சொல்லுமிரண்டாவதாமென்றுகொள்வாய்சூரியன்றெல்குலம்விளங்கத்தோன்றுந்தோன்றல் ··· .... *

(இ-ள்.) இல்லதுளதெனும் - இல்லதுள்ளதென்கின்ற—இந்தத்திரள் - இச்சரீரக்கூட்டங்கள்—நெஞ்சால் - மனதினால்—எல்லையறப்பிறக்கும் - அளவில்லாமலுண்டாகும்—இதனைத்தானே - இச்சரீரவிஷயங்களையே — புல்லுகின்றகனவில் - புணருகின்றசொற்பனத்தில்—அனுபவிக்கும் - (மன)மனுபவிக்கும்—புவித்தொழிலாங்கொடிகளே - சகத்தொழில்களென்னுங்கோடிகளே—பொருந்திச்சுற்றும் - சேர்ந்துச்சுற்றிக்கொண்டிருக்கின்ற — அல்லன்மனமெனும் - துன்பத்தையுடையமனமென்கின்ற—மரத்துக்கு - விருட்சத்துக்கு—இரண்டுவித்தாம் - இரண்டுவிதையாம்—ஆவியசைவு - பிராணனசைவு — ஒன்றும் - ஒருவிதையாகும்—அழுத்தம் - அழுத்தமாயிருக்கின்ற—வாதனை - வாசனையானது— சொல்லுமிரண்டாவதாமென்று - சொல்லப்பட்ட விரண்டாம்விதையாகுமென்று— சூரியன்றெல்குலம்விளங்க-சூரியனதுபழைமையானவமிசம்விளங்கும்படியாக—தோன்றுந்தோன்றல் - உண்டாகியவரசனே—கொள்வாய் - கொள்ளக்கடவாய். எ-று. (இ-ம்) பிராணனசைவுந் திரிஸ்யவாசனையுமே மனதிற்குவித்தாமென்பதாம்..... .... ··(௰௮)

(அ-கை.) பிராணனசைவான முதல்வித்தினிலக்கணங் கூறல். (கவி) உண்டாகியெவ்விடத்துமுற்றபோதமுயிரசைவாலுணர்வுறுமப்போதந்தன்னை, மண்டாமற்றடுக்கைபெருநன்மையாகும்வளர்போதங்காண்பவற்றைமருவுமாலாற், றண்டாதகாண்பவையேமனத்துக்கென்றுந்தவிராததுயராமத்தனிப்போதந்தான், மிண்டாதசுழுத்தியிற்போதம்போனிற்கில்வீடுதூபேறதுவிமலபதம்வேறில்லை .... *

(இ - ள்.) உண்டாகி- உதயமாய்— எவ்விடத்துமுற்றபோதம் - எவ்விடத்திலும்பொருந்தியஞானமானது— உயிரசைவாலுணர்வுறும் - பிராணசலனத்தினுற் (திரிஸ்யஞானத்தை) யடையும்—அப்போதந்தன்னை - அந்தஞானத்தை—மண்டாமல் - (பகிர்முகத்தின்) மிகாமல்—தடுக்கை - தடுத்தல்—பெருநன்மையாகும்-மிகுந்தநலமாய்— வளர்போதம - வளராநின்ற

மனமானது—காண்பவற்றை - திரிஸ்பத்தை — மாலான்மருவும் - இச்சையிருந்துபொருந்தும்— தண்டாத- தடையில்லாத— காண்பவையே— திரிஸ்பங்களே—மனத்தாகாது- மனதுக்கு—என்றுந்தவிராததுயராம் - எப்போதுமொழியாததுன்பமாம் — அந்தவப்போதந்தான்- அந்தத்தவிதமையானவறிவானது—மிண்டாத- திரும்பாத— சுழுத்திநிற்போதம்போல்-சுழுத்தியறிவைப்போல—நிற்கில்- இருக்குமாயின் — அது- அதுவே—வீடு-நிருவாணமும்—அது- அதுவே—பேறு- (ஆத்ம)லாபமும்—விமலபதம்- (அதுவே) நிருமலமானபதமுமாம்—வேறில்லை - வேறொன்றுமில்லை. எ-று .... (௰௯)

(அ-கை.) இ-து. (கவி) ஆதலாலுயிரசைவால்வாதனைப்பாலழுத்தத்தாலறிவைவிரிவாக்காவெனின், ஓதுபிறப்பறுமறிவின்விரிவேயுள்ளமுள்ளத்தாலிவ்வநந்தவுயிர்கள் வாழ்வார், சேதனயோகிகளெல்லாம்பிராணாயாமந்தியானமருந்தாகத்தின்றிறங்களாலே, பேதமனமொடுங்குவதுபொருட்டாயன்றோபிராணவாயுவைநிறுத்திப்பிடிக்கின்றோ .... *

(இ-ள்.) ஆதலால்- ஆதலினால்— உயிரசைவால்- பிராணசலனத்தினாலும்— வாதனைப்பால் - வாசனையிடத்தில்—அழுத்தத்தால் - பிரியத்தினாலும்— அறிவை- (விஷய) ஞானத்தை—விரிவாக்காவெனில் - பரவச்செய்யாமற்போனால்— ஓதுபிறப்பறும்- சொல்லாநின்றசநநம் விடுபடும்—அறிவின்விரிவே - அறிவினது(பேத)விருத்தியே— உள்ளம்-மனமாகும்—உள்ளத்தால்- (அம்)மனதினால்—இவ்வநந்தவுயிர்கள்வாழ்வாம்-இச்சகலவுயிர்களும்வாழும்—சேதனயோகிகளெல்லாம்- அறிவையுடையயோகிகளனைவரும்— பிராணாயாமம் - பிராணபந்தனத்தினாலும்— தியானம்- தியானத்தினாலும்— மருந்து- அவுஷதத்தினாலும்—ஊகத்தின்றிறங்களால்- யுத்தியின்றிறங்களினாலும் — பேதமனமொடுங்குவதுபொருட்டாயன்றோ - வேற்றுமையுள்ளமனமடங்குநிமித்தமல்லவா— பிராணவாயுவைநிறுத்திப்பிடிக்கின்றார் - பிராணாயாமஞ்செய்கின்றார்கள். எ-று. .... (௨௰)

(அ-கை) இது(கவி)உள்ளத்தையொடுங்குவிக்குஞ்சமத்துவத்துக்குயர்ந்தகாரணமாகுஞ்சுகமுண்டாகு, நள்ளுற்றவறிவையெழவொட்டாதாக்குநல்லுயிரின்றடையென்றுநல்லோர்சொல்வர், தெள்ளியபல்பொருளறிவைவிளக்குவித்துச்சேர்ந்தவாதனையாலேசெனிப்பதாகி, விள்ளக்கண்டனுபவிப்பதாநெஞ்சுக்குமேலிரண்டாமுற்பத்திவிளம்பக்கேட்பாய்.

(இ-ள்.) நல்லுயிரின்றடை- நன்மைபொருந்தியபிராணபந்தனமானது— உள்ளத்தை-மனதை—ஒடுங்குவிக்கும் - அடங்கச்செய்யும்—சமத்துவத்துக்கு-சமதிருஷ்டிக்கு—உயர்ந்தகாரணமாகும்- மேன்மையானகாரணமாகும்— சுகமுண்டாக்கும்- இன்பத்தைவிளைக்கும்—நள்ளுற்ற- விஷயசம்பந்தமான—அறிவையெழவொட்டாதாக்குமென்று-அறிவையெழாமற்செய்யுமென்று— நல்லோர்சொல்வார்-சத்துக்கள்சொல்லுவார்கள்—தெள்ளிய- தெளிவாகிய—பல்பொருளறிவை-பலவஸ்துக்களை(யறிகின்ற)வறிவை—விளக்குவித்து-விளக்கஞ்செய்து—சேர்ந்தவாதனையால்- சேர்ந்திருக்கின்றவாசனையினால்— செனிப்பதாகி- உண்டாவதாய்— விள்ளக்கண்டனுபவிப்பதாம்- வெளிப்படையாகக்கண்டனுவிப்பதாகிய—நெஞ்சுக்கு- மனதுக்கு— மேலிரண்டாமுற்பத்தி - இனியிரண்டாம்விதையினுற்பத்தியை— விளம்பக்கேட்பாய்-சொல்லக்கேட்பாய். எ-று. தெள்ளியமெய்ஞ்ஞானங்களால்விளக்குவித்து மென்கின்ற கீர்வாணபாடமுமுண்டு. (இ-ரு-க-ம்.) பிராணனியக்கத்தாற் பூரணபோதமசைந்து அதுவிஷயமாக வெதிரிட்டதனாற் சுகதுக்கமனுபவிக்குமனமுண்டாதலி னஃதடங்கும்பொருட்டு பிராணாயாமஞ்செய்யவேண்டுமென்பதாம் .... (௨௧)

(அ-கை.) வாசனையானவிரண்டாம்வித்தினிலக்கணங்கூறல். (கவி) திடமானபாவனையான்முன்பினெண்ணந் தீர்ந்துபதார்த்தந்தனைச்சேர் வுறக்கைக்கொள்கை, மடமானவாதனையாங்கடுவேகத்தால்வல்லையிற்றானேயொன்றைமதித்துநாடி, யுடனேயவ்வுருவாய்வேற்றெண்ணமெல்லா மொழித்திடுமிவ்வாதனையின்வசத்திலோடித், தொடர்பான புருடனுமாங்கதன்மெய்யாகித்தோன்றுபொருணன்றெனத்தேறுவண்டுமாலாம்..... ....*

(இ-ள்.) திடமானபாவனையால் - திரமாகியபாவனையினால் — முன்பினெண்ணந்தீர்ந்து - பூர்வாபரவிசாரணையைவிட்டு—பதார்த்தந்தனை - விஷயங்களை — சேர்வுறக்கைக்கொள்கை-சேரக்கைவசமாக்குதல்—மடமானவாதனையாம்-அறியாமையாகியவாசனையாகும்—கடுவேகத்தால்-தீவரவேகத்தினால்—வல்லையில்-சீக்கிரத்தில்—ஒன்றைமதித்துநாடி - ஒன்றைக்குறித்துப்பார்த்து—உடனேயவ்வுருவாய் - உடனேயந்தவடிவமாய்—வேற்றெண்ணமெல்லாம்- வேறுநினைவுகளியாவையும்—ஒழித்திடும்-ஒழிக்கின்ற—இவ்வாதனையின்வசத்திலோடி- இந்தவாசனைவசத்திற்சென்று—தொடர்பானபுருடனும்-தொடர்பாகியவாத்மாவும்—ஆங்கதன்மெய்யாகி-

அவ்விடத்திலனுவேசத்திரியமாய்—தோன்றுபொருள் - தோற்றுநின்றவஸ்துக்களை — நன்றென்று - நல்லதென்று—துவண்டுமோலாம் - சலித்துமயங்கும். எ-று.................(உஉ)

(அ-கை.) இ-து. (கவி) வாதனையின்வேகத்தின்விவசத்தாற்றன்வடிவினைவிட்டனைத்தினையுமயக்கமாகத், தீதமைபுந்தியிற்காணுமதவசத்தாற்றியங்குதல்போலிம்மனத்தைத்தெரியக்கூறில், லேதமுறுகாட்சியேதுதானல்லாதியானெனும்பாவனையேதுபொருளல்லாத, தோதுபொருளெனுங்கருத்தேததுவேசித்தமுறுபிறவிசனனமரணமுண்டாமித்தால்.... *

(இ-ள்.) வாதனையின்வேகத்தின்-வாசனையினதுவேகத்தின்—விவசத்தால்-பரவசத்தினால்—தன்வடிவினைவிட்டு-தனதுஸ்வரூபத்தைவிட்டு—அனைத்தினையும்-சகலத்தையும்—மயக்கமாக-மயக்கத்தோடும்—தீதமைபுந்தியில்-குற்றம்பொருந்துகின்றபுத்தியில்—மதவசத்தால்- மதவசத்தினால்—தியங்குதல்போல் - மயங்குதலைப்போல—காணும் - பார்க்கும்—இம்மனத்தை-இந்தமனதை—தெரியக்கூறில் - தெரியும்படியாகச்சொல்லில்—ஏதமுறுகாட்சியேது-குற்றம்பொருந்தியகாட்சியாது—தானல்லாத-நானல்லாததை—இயானெனும்பாவனையேது-நானென்கின்றபாவனையாது—பொருளல்லாதது - வஸ்துவல்லாததை— ஓதுபொருளெனுங்கருத்தேது-சொல்லுகின்றவஸ்துவென்னுங்கருத்தியாது—அதுவேசித்தம்- அதுவேமனமாகும்—இத்தாலுறுபிறவிசனனமரணமுண்டாம்-இம்மனதினாற்பொருந்தியசனனமரணமுப்புண்டாம். எ-று

(அ-கை) இ-து.(கவி)மெத்துறுவன்பரிசயத்தாற்பதார்த்தந்தன்னின்மேவுமொருபாவனையான்மிகச்சலிக்குஞ், சித்தமுளதாற்பிறப்பாதிகளுமுண்டாந்தீர்வதுகொள்வதுவடிவாந்திரளிலொன்று, மித்தனையும்பாவியாதனைத்துநீங்கியெப்போதுநின்றதப்போதெழாதுசித்த, மொத்துளவாதனையொழிவானினைவுதிரிலுயர்ந்தவுபசாந்திதருமுளமாய்வுண்டாம்.*

(இ-ள்.) மெத்துறுவன்பரிசயத்தால் - மிருதுவானதிடப்பழக்கத்தினால்—பதார்த்தந்தன்னில் - பதார்த்தத்தில் — மேவுமொருபாவனையால் - பொருந்தாநின்றவோர்பாவனையினால்—மிகச்சலிக்கும் - மிகவுஞ்சஞ்சலத்தையடையும்—சித்தமுளதால்- மனதுண்டாயின்—பிறப்பாதிகளுமுண்டாம்- சனனமரணமுதலியவைகளுமுண்டாகும்—தீர்வதுகொள்வதுவடிவாம்-விடுதலும்பற்றுதலும்ரூபமாகிய—திரளிலொன்றும் - கூட்டங்களிற்பொருந்துகின்ற — இத்தனையும்பாவியாது - இவ்வளவையும்பாவனைசெய்யாமல்—அனைத்துநீங்கி - சகலமும்விட்டு — எப்போதுநின்றது - எப்போதிருந்ததோ—அப்போது - அப்பொழுதே—சித்தமெழாது - மனமுண்டாகாது—ஒத்துள - பொருந்தியிருக்கின்ற—வாதனையொழிவால்-வாசனாக்ஷயத்தினால்—நினைவுதிரில் - கருத்தொழிந்தால்—உயர்ந்த - மேன்மையான—உபசாந்திதரும்- உபசாந்தம்வரும்—உளமாய்வுண்டாம் - மனோநாசமுண்டாகும். எ - று. (இ-ரு-க-ம்) பிரமாநந்தப்ரதிபலனமே சமானவிஷயாநந்தத்தைச் சுகமென்றனுபவித்தபுருஷன் றன்னைமறந்துஅவ்வாசனைவடிவமாயவ்விடமுண்டாயிருக்கிற் சுகமுமஃதில்லாவிடிற் றுக்கமுமாய்க்கருதுங்கருத்தேமனமாதலினம்மனதிற்குவாசனைவித்தாயிற்றுஅப்பேதவாசனைநீங்கிமனமிறக்கில் விஷயாநந்தநீங்கிப்பிரமாநந்தம்வெளிப்படுமென்பதாம்.................(உச)

(அ-கை.) விஷயவாசனையேமனதுக்குருவமாமெனல்.(கவி)சகப்பொருளிலோரிடத்தோர்நினைவுமின்றேற்றனியிதயசூனியவிண்டன்னிலுள்ள, நிகழ்ச்சியுறத்தோன்றுவதெப்படியேவள்ளானெஞ்சுக்கம் மட்டுருவமெனநினைப்பே, னுகப்புறுமின்பத்தாலும் பொருண்மெய்யாலுமுள்ளூறுபல்பொருணினைவேயுளத்தின்மேனி, மிகப்படர்காண்பவைதொழிற்காகாதென்றெண்ணும்விண்ணினுநொய்யவர்க்கெங்ஙன் விளையுமுள்ளம்.............. *

(இ-ள்.) சகப்பொருளில் - உலகவஸ்துக்களில்—ஓரிடத்தோர்நினைவுமின்றேல் - ஓரிடத்திலொருநினைவுமில்லையாயின்—தனி - ஒப்பற்ற — இதயசூனியவிண்டன்னில் - மனமென்னுஞ்சூனியாகாயத்தில்—உள்ளம் - மனமானது—நிகழ்ச்சியுற - நிகழ்வாக— தோன்றுவதெப்படி-உண்டாவதெவ்வண்ணம்—வள்ளால் - உதாரமுள்ளஸ்ரீராமா—நெஞ்சுக்கு - மனதுக்கு— அம்மட்டுருவமென - அவ்வளவுதான்வடிவமென்று—நினைப்பேன் - கருதுவேன்—உகப்புறுமின்பத்தாலும் - மேலானசுகத்தினாலும்—பொருண்மெய்யாலும் - பொருளையுண்மையென்பதினாலும்—உள்ளூறு - அகத்திற்பொருந்திய—பல்பொருணினைவே - பலவஸ்துக்களினினைப்பே—உளத்தின்மேனி- மனதினதுருவமாம்—மிகப்படர்காண்பவை- மிகவும்படர்கின்றதிரிஸ்யம்—தொழிற்காகாதென்றெண்ணும் - கிரியைக்காகமாட்டாதென்றுநினைக்கின்ற—விண்ணினுநொய்யவர்க்கு - ஆகாயத்திலுஞ்சொச்சமானவர்களுக்கு — எங்ஙனுள்ளம்விளையும் - எப்படிமனதுண்டாகும். எ-று.................(உரு)

(அ-கை.) விஷயவாசனைநீங்கிப்பிரமவாசனையுண்டாயின்மனதிற்குஉருவநாசமுண்டாமெனல். (கவி) அபாவமேபற்றலபாவம்பாவித்தலாய்த்துண்மைப்பொருள்காண்டன்மனமா

யீவென்பர், சுபாவமாமனத்தையுமுள்ளகற்றிச்சீதச்சுதைபோலுமிவ்விதய நடக்குமென்னிற், றவாததொழிலுற்றாலுமந்தச்சித்தந்தன் வடிவிலாததெனச்சாற்றுங்கண்டாய், குவான்மறுசன்மந்தருவாதனைதுன்றாதோர்குலாலவட்டம்போற்றிரிவர்குறைவின் முத்தர்.*

(இ-ள்.)அபாவமேபற்றல்-(சகத்)தில்லாததாகப்பற்றுதலும்—அபாவம்பாவித்தல்-(அதை)யில்லாததாகப்பாவித்தலும்—ஆய்ந்து-விசாரணைசெய்து—உண்மைப்பொருள்காண்டல்-உண்மையாகியவஸ்துவைக்காணுதலும்—மனமாய்வென்பர்-மனோநாசமென்றுசொல்லுவார்கள்—சுபாவமாம்-சுபாவமாகும்படி—அனைத்தையுமுள்ளகற்றி - சகலத்தையுமுள்ளேதள்ளி—சீதச்சுதைபோலும்-குளிர்ச்சியானவமிர்தத்தைப்போலும்—இவ்விதய நடக்குமென்னில் - இந்தமனதுசஞ்சரிக்குமானால்— தவாததொழிலுற்றாலும் - குறையாதசெயலைப்பொருந்தினாலும்—அந்தச்சித்தம்-அம்மனமானது—தன் வடிவில்லாததென-தன்னுருவமில்லாததென்று — சாற்றுங்கண்டாய்- (சத்துக்களாற்) சொல்லப்படும்—குவான்மறுசன்மம் - கூட்டமாகியமறுபிறப்பை—தருவாதனைதுன்றாதோர் - கொடாநின்றவாசனையைநெருங்காதவர்கள்—குலாலவட்டம்போல்- குயவன்(சுழற்றிவிட்ட)சக்கரத்தைப்போல—குறைவின் முத்தர்-குறைவில்லாதசீவன்முத்தர்கள்—திரிவர்- (பிராரத்தமுள்ளபரியந்தஞ்) சஞ்சரிப்பார்கள். எ-று…………………(௨௬)

(அ-கை.) மனதினுருவநசித்தசீவன்முத்தர்களின்சிறப்பைக்கூறல். (கவி) வறுத்தவிதையொப்பாகியின்பமன்றிமறுசநநமற்றவாதனைசேர்ந்துள்ளோ, ரொறுத்தவிடர்தீர்சீவன்முத்தராகுமுண்மையுருவடைந்தமனமுடையோரன்றோர், நிறுத்துணர்ஞானக்கரையுற்றவருமன்றோர்நெஞ்சமிலாதவரன்றோர்நிமலமாகப், பொறுத்தவுடனிங்கிலாகாசரூபம்பொருந்தினரன்றொன்றுபுகல்வரன்றே…………………*

(இ-ள்.) வறுத்தவிதையொப்பாகி - வறுத்தவித்துக்குச்சமானமாய் — இன்பமன்றி-சுகமல்லாமலிருக்கின்ற—மறுசநநமற்ற - மறுபிறப்பில்லாத—வாதனை - சுத்தவாதனையை—சேர்ந்துள்ளோர் - அடைந்திருப்பவர்கள் —ஒறுத்தவிடர்தீர் - அலைத்ததுன்பந்தீர்ந்த—சீவன்முத்தராகும் - சீவன்முத்தர்களாம்—உண்மையுருவடைந்த - தத்துவஸ்வரூபத்தைப்பெற்ற—மனமுடையோரன்றோர் - மனதையுடையவர்களவர்களே—நிறுத்துணர் - சமமாகவறிகின்ற—ஞானக்கரையுற்றவருமன்றோர் - ஞானதீரத்தையடைந்தவர்களுமவர்களே — நெஞ்சமிலாதவரன்றோர் - மனமில்லாதவர்களுமவர்களே —நிமலமாக - நின்மலமாக—பொறுத்தவுடனிங்கில்-சுமந்திருக்கின்றசரீரம்விடில்—ஆகாசரூபம் - (சிதாகாச)ஸ்வரூபத்தை — பொருந்தினரன்றொன்றுபுகல்வர்-அடைந்தவர்களச்சீவன்முத்தர்களேயென்று(பெரியோர்கள்)சொல்லுவார்கள் எ-று. (இ-ரு-க-ம்)அசுத்தவாசனை நீங்கிச்சுத்தவாசனையுள்ளமனமேயாத்மசுகம்பெற்றதாம்.௨௭

(அ-கை.) நான்காம்வித்தினிலக்கணங்கூறல். (கவி) உயிரினசைவொன்றுவாதனையொன்றாகவுபயமாமனத்தின்விதை யிவற்றினொன்று, பயில்வுறமாய்ந்தாலிரண்டுமுடனேமாயும்பகருறுவாதனைவசத்தாற்பிராணனோட்ட, முயிரசைவால்வாதனையுமுண்டாமத்தாலுள்ளமெனும்விதைக்குவிதைமுளையொழுங்காம், பயில்வுறுவாதனையுயிரினசைவிரண்டும்பலவிதங்காண்பவைவித்தாய்ப்படருமன்றே…………*

(இ-ள்.) உயிரினசைவொன்று - பிராணசலனமொன்றாகவும் — வாதனையொன்றாக-வாசனையொன்றாகவும்—மனத்தின்விதை- மனதின்வித்தானது—உபயமாம் -இரண்டாகும்—இவற்றினொன்று - இவ்விரண்டிலொன்று—பயில்வுறமாய்ந்தால்-பொருந்தும்படிநசித்தால்—இரண்டுமுடனேமாயும் - இரண்டுமுடனேநசிக்கும்— பகருறுவாதனைவசத்தால் - சொல்லாநின்றவாசனையின்வசத்தினால்— பிராணனோட்டம் - பிராணனசைவும்— உயிரசைவால் - பிராணனசைவினால்—வாதனையுமுண்டாம் - வாசனையுமுண்டாகும்—அத்தால் - அதனால்—உள்ளமெனும்விதைக்கு - மனமென்கின்றவித்துக்கு—விதைமுளையொழுங்காம்- பீசாங்குரநியாயமுண்டாகும்—பயில்வுறுவாதனை - சொல்லாநின்றவாசனையும்—உயிரினசைவு - பிராணனசைவுமாகிய —இரண்டும்-இவ்விரண்டும்—பலவிதங்காண்பவை - நாநாவிதமானதிரிஸ்யங்கள்— வித்தாய்ப்படரும் - மூலமாகவிரியும். எ-று. (இ-ம்) விஷயானுபவத்தால் வாசனையு மதையனுபவிக்கும்பொருட்டு, சலனமுமுண்டாதலாலவ்விரண்டிற்கும் வித்துதிரிஸ்யமென்பதாம்……(௨௮)

(அ-கை.) திரிஸ்யத்தினால் வாசனையுண்டாயவ்வாசனையான்மனதுண்டாயம்மனதினாற்றேகமுண்டா யத்தேகத்தினாற் செனித்துமரிக்கின்ற சம்சாரமாயையுண்டானவுற்பத்திக்கிரமமான கற்பனைவிதையாகியநான்கையுஞ்சொல்லி யிவைதையொடுக்கிச்சுகபோதமாக்குதற்பொருட்டுளதார்த்தமான நான்குவித்தையுஞ்சொல்லத்தொடங்கித் திரிஸ்யத்துக்குவித்துசித்தென்றறிவித்தல். (கவி) ஆதலினாற்காண்பவற்றைவிடுதலாலேயாருயிரினசைவுவா

தனையிரண்டும், பாதவம்வேரற்றுப்போல்வேரற்றேகும்படரறிவேகாண்பவற்றின் பயில்
வித்தாகுஞ், சேதனந்தோன்றுதெனிற்காண்பனவுமில்லைச்செறிதயிலமில்லாமற்றிலமுண்
டாமோ, பேதமுறவுட்புறங்காண்பனவொன்றில்லைப் பிறப்போர்சங்கற்பிக்கும்பிறக்கும்
போதம்.. *

(இ-ள்.) ஆதலினால்- ஆகையினால்—காண்பவற்றை- திரிஸ்யத்தை—விடுதலால் - நீக்குதலினால்—அருயிரினசைவு-பொருந்தாநின்றபிராணனசைவும்—வாதனை-வாசனையுமாகிய—இரண்டும்- இவ்விரண்டும்— பாதவம்வேரற்றுப்போல் - விருட்சம்வேரற்றதுபோல— வேரற்றேகும்- அடியோடுங்கெடும்— படரறிவே- படராநின்றவிருத்திஞானமே— காண்பவற்றின்-திரிஸ்யத்துக்கு— பயில்வித்தாகும்- சொல்லப்பட்டவிதையாகும்— சேதனந்தோன்றுதெனில்- அறிவுதோற்றுதென்றால்— காண்பனவுமில்லை - திரிஸ்யமுமில்லை— செறிதயிலமில்லாமல்- நிறைந்தவெண்ணெயில்லாமல் —திலமுண்டாமோ- எள்ளுண்டாயிருக்குமோ— பேதமுற- வேற்றுமையாக—உட்புறம் - உள்ளிலும்புறம்பிலும்— காண்பனவொன்றில்லை - திரிஸ்யமென்பதொன்றுமில்லை— பிறக்கும்போதம்- உதிக்கின்றஞானமானது—ஓர்பிறப்புசங்கற்பிக்கும்- ஒருவிதமானசிருஷ்டியைச்செய்யும். எ-று. .... (௨௯)

(அ-கை.) சித்தேசகத்தாய்விளங்குகின்றதென்றறியிற் சகத்தாகியமாயாரூபநசிக்கு
மெனல். (கவி) சங்கற்பத்தறிபொருளையறிவுதன்பாற்றானேநோக்கிடுங்கனவிற்றன
துசாவு, மங்குத்தேசாந்தரமுந்தன்வசத்தாலடைவதுபோலறிபொருளையறிவுகாணு
ம், பங்கிட்டுமுன்னறிந்ததறியாதேனும்பகரறிவுக்கெதுபத்திபாய்ந்ததத்தைத், துங்
கத்தம்வருத்தத்தால்விசாரமுள்ளார்துடைப்பதுவேவெம்மாயைதுடைத்ததாகும்.

(இ-ள்.) சங்கற்பத்து-சங்கற்பத்தினால்—அறிபொருளை-திரிஸ்யத்தை—அறிவு- ஞானமானது— தன்பாற்றானேநோக்கிடும்- தன்னிடத்திற்றானேபார்த்திடும்—கனவில்- சொற்பனத்தில்—தனதுசாவும்- தனதிறத்தலும்— அங்கு- அச்சொற்பனத்தில்—தேசாந்தரமும்- சகலதேசங்களும்—தன்வசத்தால்-தன்சமத்காரத்தால்—அடைவதுபோல்- பொருந்துவதுபோல—அறிபொருளை- திரிஸ்யத்தை—அறிவுகாணும்- விருத்திஞானமறியும்—பங்கிட்டு- பகுத்து—முன்னறிந்தது- முன்னறிந்ததானாலும்—அறியாதேனும்-அறியாததானாலும்— பகரறிவுக்கு-சொல்லப்பட்டவறிவுக்கு—எதுபத்திபாய்ந்தது- யாதுப்ரதிபலித்ததோ—அத்தை-அதை—துங்க-பரிசுத்தம்பொருந்திய—தம்வருத்தத்தால்-தமதுப்ரயாசத்தினால்— விசாரமுள்ளோர்- விசாரணையுள்ளவர்கள்—துடைப்பதுவேவெம்மாயைதுடைத்ததாகும்-கெடுப்பதுவேகொடியசம்சாரத்தைக்கெடுத்ததாகும். எ-று. .... (௩௰)

(அ-கை.) திரிஸ்யமகன்ற சித்திற் பிரமசுகமுதிக்குமெனல். (கவி) அதுதுடையாமா
த்திரமேமாமோகத்தையடைந்ததாமதுதுடைத்தமாத்திரந்தான், முதுகதியென்
றுரைப்பரறிகின்றதன்றேமுடிவில்பிறப்பரந்தைதான்முளரிக்கண்ணா, கதுவுறுசாட்
டியமில்லாவறிவிலாமைக்கடும்பவமில்லாதசுகங்காட்டுமன்றே, சதுரனுயசடனுயா
னந்தத்தைத்தவிர்ந்தொன்றுமறிவதறச்சலனந்தீர்வாய். .... *

(இ-ள்.) அது- அந்தப்ரதிபலனமானதிரிஸ்யத்தை— துடையாமாத்திரமே-கெடுக்காதிருப்பதுவே— மாமோகத்தையடைந்ததாம்- மகாசம்சாரத்தைச்சேர்ந்ததாகும்—அதுதுடைத்தமாத்திரந்தான்- அதைக்கெடுத்ததே— முதுகதியென்றுரைப்பர்-முதிர்ந்தபரகதியென்றுசத்துக்கள்சொல்லுவார்கள்—அறிகின்றதன்றே-திரிஸ்யமல்லவா—முடிவில்பிறப்பரந்தை-அளவற்றசநநதுன்பம்—முளரிக்கண்ணா- தாமரைக்கண்ணையுடையஸ்ரீராமா—கதுவுறுசாட்டியமில்லா- கலக்கமுற்றதிரிஸ்யமின்மையும்—அறிவில்லாமை- (விடய)வறிவின்மையும்—கடும்பவமில்லாத- கொடியசநநமில்லாத—சுகங்காட்டும்- (நிருவாண)சுகத்தைக்கொடுக்கும்— சதுரனாய்- சதுரப்பாடுடையவனாய்—அசடனாய்- சடமில்லாதவனாய்—ஆநந்தத்தைத்தவிர்ந்து-விஷயாநந்தத்தைவிட்டு— ஒன்றுமறிவதற- ஒன்றையுமறியாமல்—சலனந்தீர்வாய் - சஞ்சலத்தை விடுவாய். எ-று. (இ-ங-க-ம்.) திரிஸ்யத்தின்காரணமானசித்தைத்தனிசித்தநிருஷ்டியினாலத்திரிஸ்யத்தைக்களைக்கிற் சுகமுண்டாமென்பதாம். .... (௩௧)

(அ-கை) சுயஞ்சித்தினிலக்கணங்கூறல். (கவி) அறிபொருளையறியாதவறிவேமெய்ய
மவனிசத்தியமாமென்றறைதலோடுஞ், செறிசடமற்றறிவின்மையெங்ஙனுண்டா
ஞ்சித்தின்மைசடமாவதெங்ஙன்றீரு, நெறியிலுன்றாயென்றவிராமனுக்குமீட்டு நி
றைதவன்சொல்வானெங்குநிகழ்பற்றின்றி, வெறிதெரிடத்தாறுதலொன்றறிதலில்
லாவியன்சீவன்சடமில்லாவறிவிலாமை........................ *

(இ-ள்.) அறிபொருளை- திரிஸ்யத்தை — அறியாத- பாராமலிருக்கின்ற— அறிவேமெ ய்யாம்— ஞானஸ்வரூபமாகிய—அவனே-அப்(பரமாத்மாவே) நீயாம் — சத்தியமாமென்று- (௬) துண்மையாமென்று—அறைதலோடும்- வசிஷ்டமுனிசொல்லவும் — செறிசடமற்று - நெருங்கியதிரிஸ்யமில்லாமலிருக்கின்ற(விடத்தில்)— அறிவின்மையெங்ஙனுண்டாம் - அறிவில்லாததெப்படிவரும்—சித்தின்மை- ஞானமில்லாத(விடத்தில்)— சடமாவதெங்ஙன்றீரும்-திரிஸ்யமெப்படிநீங்கும்— நெறியினுமாயென்ற- செம்மையாகச்சொல்லவேண்டுமென்றுகேட்ட— இராமனுக்கு- ஸ்ரீராமருக்கு— மீட்டும்-திரும்பவும்— நிறைதவன்சொல்வான்- மிகுந்ததவமுடையவசிஷ்டமுனிசொல்வார்— எங்குநிகழ்பற்றின்றி- எவ்விடத்திலுநிகழ்கின்ற பற்றில்லாமல் —வெறித்தோரிடத்து- அறிவின்மையானவொருவிஷயத்தில்— ஆறுதல்-ஆறுதலும்— ஒன்றறிதல் - ஒன்றையறிதலும்— இல்லா - இல்லாத — வியன்சீவன் - பெருமைபொருந்தியவாத்மாவே—சடமில்லா- திரிஸ்யமில்லாததும்—அறிவில்லாமை-அறிவில்லாததுமாம்—எ-று. (இ-ம்) ஸ்வரூபஞானத்தில் விருத்திஞானமுண்டாகி, யஃதேவிஷயாகாரமாய்த் தடித்தலினவ்விஷயத்தையும் அதைவிளக்கும்விஷயஞானத்தையுமறியாதவாத்மஞானத்தைவிளக்குவித்ததாம்(௬௨

(அ-கை.) முற்கூறியசித்தில் சுகமுநிக்குமெனல்.(கலி) அறிபொருளைப்பற்றாதவறிவு
பெற்றாலாயிரங்காரியஞ்செயினுஞ்சடமிலாத, தறிவின்மையதுவாகுமறிபவத்தை
யற்பமுமுள்ளாகாசமணுகாதென்னு, மறிஞனவனசடமாமறிவிலாமை யவன்சீவ
ன்முத்தனவனுகுந்தன்பா, லறிதருவாசனையொழிவாலொன்றுமுன்னுதருங்குழவி
யூமனறிவொத்துநிற்கும்.... .... *

(இ-ள்.) அறிபொருளைப்பற்றாத-திரிஸ்யத்தையடையாத—அறிவுபெற்றால் - ஞானத்தைப்பெற்றால் — ஆயிரங்காரியஞ்செயினும் - அளவற்றதொழில்களைச்செய்தாலும்—சடமிலாதது - திரிஸ்யமில்லாததும் — அறிவின்மை - விருத்திஞானமில்லாததும்— அதுவாகும்- அவ்வாத்மாவாகும் — அறிபவத்தை - திரிஸ்பத்தை — அற்பமும் - எவ்வளவேனும்— உள்ளாகாசம் - இதயாகாசம் — அணுகாதென்னில் - கிட்டாதாயின் — அவன் - அவனே— அறிஞன் - ஞானவானும்—அசடமாம் - சடமாகாதவனும்—அறிவிலாமை - விஷயவறிவில்லாதவனும்—அவன்சீவன்முத்தன் - அவனேசீவன்முத்தனும்—அவனுகுந்தன்பால் - அவனிடத்தில்—அறிதருவாசனையொழிவால்- அறிகின்றவாசனநாசத்தினால்—ஒன்றுமுன்னாது- ஒன்றையுநினையாமல்—அருங்குழவியூமனறிவொத்துநிற்கும்- அரியகுழந்தையறிவுக்குமூமனறிவுக்குமொப்பாயிருக்கும். எ-று .... (௬௩)

(அ-கை.) இ-து. (கலி) வேறு. அன்றுசடபாவனைநீங்கியகண்டவறிவின்மையைப்பெற
லா, மொன்றுமதனன்மீளவறிவொன்றிற்பற்றுதொருவகையாய், நின்றபலவாதனைநீங்கி
நிருவிகற்பசமாதியினாற், றன்றுவிண்ணிற்கருநிறம்போற்றொடராநந்தந்துன்னுறுமால்

(இ-ள்.) அன்று- அப்பொழுது — சடபாவனைநீங்கி-திரிஸ்யபாவனையைவிட்டு—அகண்ட- பூரணமாயிருக்கின்ற—அறிவின்மையை-விருத்திஞானமில்லாத(வாத்ம)ஞானத்தை— பெறலாம்- அடையலாகும்— ஒன்றுமதனால்- பொருந்துகின்றவதனால்—மீள-திரும்பவும்—அறிவு-ஞானமானது —ஒன்றிற்பற்றாது- ஒன்றிலும்பற்றாமல்— ஒருவகையாய்நின்ற - ஒருப்ரகாரமாயிருந்த—பலவாதனைநீங்கி- சகலவாதனைகளும்விட்டு— நிருவிகற்பசமாதியினால்- நிருவிகற்பசமாதியினால்— துன்றுவிண்ணிற்கருநிறம்போல் - நிறைந்தவாகாயத்தினீலநிறம்போல— தொடராநந்தந்துன்னுறும்- தொடரும்பூரணானந்தநிறையும். எ-று..... .... (௬௪)

(அ-கை.)இ-து. (கலி) தன்மையானவதிற்பற்றிநாடாவறிவாமியோகிக்குத்,தன்மயந்தா
னுதலினாற்றனியாநந்தமதனுடன்போந், துன்னுநிலைபோக்கொலிபரிசந்தொடர்ந்துமவ
வற்றிற்பற்றுதோன், வன்மைச்சடனன்றாநந்தமிலனொன்றறியான்மகாசுகத்தன் .. .. *

(இ-ள்.) நன்மையான-நன்மையாகிய—அதிற்பற்றி- அச்சமாதியைபபிடித்து— நாடா-(திரிஸ்யத்தை)நாடாத—அறிவாம்யோகிக்கு- ஞானஸ்வரூபமாகியஞானிக்கு — தன்மயந்தானுதலினால்- தன்ஸ்வரூபத்தானனபடியினால்— தனியாநந்தம்- தனித்தவாநந்தம் — அதனுடன்போம்-அந்தவான்மாவில்லயிக்கும்— துன்னுநிலை-நெருங்கிநிற்பதும்—போக்கு-நடப்பதும்—ஒலி- சத்திப்பதும்— பரிசம்-பரிசிப்பதும்— தொடர்ந்தும்- இவைகடொடர்புற்றும் —அவற்றிற்பற்றுதோன்- அவைகளிற்பற்றுதலில்லாதவன்—வன்மைச்சடனன்று- வலிமையுள்ளதிரிஸ்யமல்லாதவனும்—ஆநந்தமிலன்- ஆநந்தமில்லாதவனும்— ஒன்றறியான் - ஒன்றையுமறியாதவனும்—மகாசுகத்தன்- பேராநந்தனுமாம். எ-று. (இ-௬-௧-ம்.) இச்சித்தேயாநந்தமயமாய்விளங்குமென்பதாம் .... (௬௫)

(அ-கை.) இச்சித்துக்கு வித்து சத்தாகுமெனல். (கவி) இந்தநோக்கந்தனைப் பற்றியீனத்தொழிலோடிசைந்தாலும், வெந்ததுயரின்கரையேறிவிஞ்சுகுணத்தின் கடலாவா, யந்தவுயர்சன்மாத்திரமிவ் வறிவின்வித்தாமவ்வறிவு, முந்துசன்மாத்திரநின்றுமூளைக்குந்தேசிலொளிபோல .... ✽

(இ-ள்.) இந்தநோக்கந்தனைப்பற்றி- இந்தத்திருஷ்டியைப்பிடித்து—ஈனத்தொழிலோடு-இழிவானதொழில்களுடன்—இசைந்தாலும்-பொருந்தினாலும்—வெந்ததுயரின்கரையேறி-வெந்துநின்றதுக்கசாகரத்தினின்றுங்கரையேறி—விஞ்சுகுணத்தின்- ஞானச்சிறப்பினது—கடலாவாய்- சமுத்திரமாவாய்— அந்தவுயர்சன்மாத்திரம்-அந்தமேன்மைபொருந்திய சத்தாமாத்திரம்—இவ்வறிவின்வித்தாம்—இந்தஞானத்தின்விதையாகும்—அவ்வறிவு - அந்தஞானம்—முந்துசன்மாத்திரநின்று-முதன்மையானசத்திலிருந்து—தேசிலொளிபோல-ப்ரகாசத்திலொளியைப்போல—மூளைக்கும்- உண்டாகும். எ-று. .... (௫௬)

(அ-கை.) அச்சத்துக்கிரண்டிலக்கணங்கூறல். (கவி) இடமார்சத்துக்கிருவடிவாமே கநாநாவிதவடிவாத், தடமாரேகமொருவடிவாஞ்சாற்றுமிவற்றைப்பிரித்திடக்கேள், கடமேபடமேயுள்ளதெனக்கதுவக்காணும்பாவனைகள், படருஞ்சத்தாம்ரூபத்தின்பிரிவாற்பலவாமதுவொன்றே .... ✽

(இ-ள்.) இடமார்சத்துக்கு - வியாபகமாகநிறைந்தசத்துக்கு—இருவடிவாம்-இரண்டுஸ்வரூபமாகும்—ஏகம்- ஒன்று — நாநாவிதவடிவாம்-பலவிதரூபமாகும்—தடமாரேகம்-பெருமைநிறைந்தவொன்று—ஒருவடிவாம்-ஒன்றாகியஸ்வரூபமாகும்—சாற்றுமிவற்றை-சொல்லப்பட்டவிவைகளை—பிரித்திடக்கேள்- பிரித்துச்சொல்லக்கேட்பாய் — கடமேபடமே - கடமென்பதும்படமென்பதும்—உள்ளதென - உள்ளதென்று—கதுவக்காணும் - நீங்காமற்பற்றிப்பார்க்கின்ற—பாவனைகள் - பாவனைகளானவை—படருஞ்சத்தாம்ரூபத்தின் - படர்ந்திருக்கின்றசத்தினதுஸ்வரூபத்தின்—பிரிவாற்பலவாம் - பிரிவினாலநேகவிதமாம் — அதுவொன்றே-அஃதொருவடிவம். எ-று .... (௫௭)

(அ-கை.) மூன்றுசத்தையுநீக்கி யேகரூபமானசத்தைக்கூறுதல். (கவி) சற்றும் விசேடமறவிட்டுசன்மாத்திரமாய்ப்பற்றின்றி, யொற்றைவடிவாமகாவடிவாமதுவேசத்தைக்குறும்பதமா, மற்றுங்காலசத்தைகலாசத்தைவத்துசத்தையென, வுற்றசத்தைமூன்றுமொழித்தொன்றாஞ்சன்மாத்திரத்துறுவாய் .... ✽

(இ-ள்.) சற்றும் - எவ்வளவேனும்—விசேடமறவிட்டு - விசேஷமில்லாமனீக்கி — சன்மாத்திரமாய் - சத்தாமாத்திரமாகியும்—பற்றின்றி - பிடிப்பில்லாமல்— ஒற்றைவடிவாம் - ஏகரூபமாகியும்—மகாவடிவாமதுவே - மகத்ஸ்வரூபமாகியுமிருக்கின்றவதுவே—சத்தைக்குறும்பதமாம் -சத்தைக்குப்பொருந்துகின்றபதமாகும்—மற்றும்- இன்னும்—காலசத்தை-காலசத்தையென்றும்—கலாசத்தை - கலாசத்தையென்றும்—வத்துசத்தையென-வஸ்துசத்தையென்றும்— உற்றசத்தைமூன்றுமொழித்து - பொருந்தியமூன்றுசத்தையையுநீக்கி — ஒன்றாம்-ஏகமான — சன்மாத்திரத்துறுவாய் - சத்தாமாத்திரத்திற்பொருந்துவாய். எ-று .... (௫௮)

(அ-கை.) இ-து. (கவி) காலசத்தைதன்சத்தைவேறாய்க்கருதுதொழில்விடினோர், சிலநன்றாகியசத்துருபியெனினும்பொருள்சேரா, கோலவிவிதப்பதநல்குங் கொள்கைபல பாவனையுண்டா, மூலங்கண்டநேகத்துக்கதுநன்றாகுமுறையெங்ஙே .... ✽

(இ-ள்.) காலசத்தைதன்சத்தை-காலசத்தை(க்கலாசத்தைவத்துசத்தையென்கின்றமூன்று) சத்தையும்—கருது-நினைக்கின்ற—வேறாய்-வெவ்வேறாயிருக்கின்ற—தொழில்விடின்- செயலைவிடுமானால்—ஓர்சிலம்-ஒருதன்மையில்— நன்றாகிய-உத்தமமான—சத்துருபியெனினும்- சத்தாஸ்வரூபத்தையுடையதானாலும்—பொருள்சேரா-வாய்மையையுடையசத்தாகாவாம்— பலபாவனை-அநேககருமங்களானவை—உண்டாம்-உள்ளதான (இச்சத்தைகளில்) —அநேகத்துக்கு-பலவுக்கும்—மூலங்கண்டது- காரணமாதலைநோக்கி—கோலவிவிதப்பதநல்குங்கொள்கை-அழகாகவெவ்வேறானபதத்தைக்கொடுக்குந்தன்மையாதலால்—அது - அக்காலசத்தைமுதலானவை—எங்ஙன் - எப்படி — நன்றாகுமுறை - பரிசுத்தமானசத்தையாமுறைமை. எ-று. பலபாவனையென்பது விபாககலனையெனவுங்கொள்க. (இ-ச-க-ம்) ஏகரூபமானசுயஞ்சத்தைநிரூபித்ததாம் .... (௫௯)

(அ-கை.) சுயஞ்சத்துக்கதன்முடிவானதுரியமேவித்தாமெனல். (கவி) சத்தாசாமானியமொன்றுந்தனிப்பாவித்துப்பரிபூர்ணச், சுத்தாநந்தனாய்த்திசைகளெல்லாந் துன்னிநின்றிடுவாய், சத்தாசாமானியமட்டின்கோடியேதங்கதுதானே, சுத்தாகாரமிதன்வித்தாமதினின்றிதுதான்றோன்றிடுமே .... ✽

(இ-ள்.) சத்தாசாமானியமொன்றும் - சத்தாசாமானியமானவொன்றையும்—தனிப்பாவித்து - தனிமையாகப்பாவனைசெய்து—பரிபூர்ணம் - பரிபூர்ணமாயிருக்கின்ற — சுத்தாநந்தனாய் - சுயாநந்தத்தையுடையவனாய்—திசைகளெல்லாம் - திக்குகளனைத்திலும் — நின்றின்றிவாய் - நிறைந்துநிற்பாய்—சத்தாசாமானியமட்டின்-சத்தாசாமானியமாத்திரத்தின்—கோடியேது - முடிவானமெதுவோ— அங்கதுதானேசுத்தாகாரமிதன்வித்தாம் - அவ்விடத்ததுவேபரிசுத்தாகாரமானஇச்சத்துக்குவித்தையாம்—அதினின்றிதுதான்றோன்றிடும்-அச்சத்தாசாமானியமுடிவில்நின்றுஇச்சித்துமுதலியசகமனைத்துமுண்டாம். எ - று .... (௪௰)

(அ-கை.) அத்துரியத்துக்கு வித்து ஞானாநந்தவயிக்கியமான அத்துவிதமெனல். (கவி) மொழிசத்தாசாமானியத்தின்முடிவிலெண்ணமெல்லாம்போ, யொழிவதெதங்கதுதான ல்லுணர்வின்பதமாமுதலதுவா, மழிவிலதற்குவித்திலையாங்கேயிருந்துவிகாரமறத்தழி யவுணர்வுநிலைபெறுமப்பதஞ்சார்ந்தவர்மீண்டிடர்சாரார்.......... .... *

(இ-ள்.) மொழிசத்தாசாமானியத்தின் - சொல்லப்பட்டசத்தாசாமானியத்தினுடைய—முடிவில் - அந்தத்தில்—எண்ணமெல்லாம்போய் - சங்கற்பிக்குநினைவுகளனைத்துநீங்கி—ஒழிவதேது - ஒழிகின்றமெதுவோ—அங்கதுதான் - அவ்விடத்ததுவே — நல்லுணர்வின்பதமாம்-சுகபோதத்தினிடமாம் —முதலதுவாம் - முதன்மையாகிய(வித்)தருவாகும்—அழிவிலதற்கு-குற்றமற்றவந்தஞானாநந்தபதத்துக்கு—வித்திலை-வித்தையில்லையாம்—ஆங்கேயிருந்து-அச்சுகபோதத்தில்லயித்து—விகாரமற - வேற்றுமையில்லாமல்—தழியவுணர்வு - தழுவாநின்றஞானமானது—நிலைபெறும் - நிலைபெற்றிருக்கும்—அப்பதஞ்சார்ந்தவர் - அந்தபதத்தையடைந்தவர்கள்—மீண்டு - திரும்பவும்—இடர்சாரார் - துன்பமடையார்கள். எ-று. (இ-உ-க-ம்) சத்தின்வித்தானதுரியத்தையு மதற்குவித்தானஅத்துவிதத்தையுமறிவித்ததாம், சத்தாசாமானியக்கோடியென்றதனாலும், நல்லுணர்வின்பதமென்றதனாலும், இனிச் சாதனக்கிரமங்கூறுமிடத்து சத்தாசாமானியக்கோடிமுதலாயுரைப்பதனாலும்; அவ்விரண்டையும் விதையெனக்கூறப்பட்டன, கீர்வாணத்திற் சத்துபரியந்தம் வித்தெனக்கூறுவாருமுளர் ....(௪௧)

(அ-கை.) எதார்த்தமான நான்குவித்தையுஞ்சொல்லி யதுவேயாவுமாய் விளங்குகின்றதெனல். (கவி) அதுவேயேதுவனைத்திற்குமேதுவதனுக்கேதுவிலை, யதுவேசாரமனைத்திற்குஞ்சாரமதனிற்சாரமிலை, யதுவாம்பெரியதற்பணத்திலனைத்துப்பொருளின்பார்வைகளா, யதுவிதென்பதெலாந்தோன்றுமருகின்மரங்கள்வாவியிற்போல்.......................... *

(இ-ள்.) அனைத்திற்கும் - சகலத்துக்கும்—அதுவேயேது - அதுவேகாரணம்— ஏதுவதனுக்கேதுவிலை - காரணமானவதற்குக்காரணமில்லை—அனைத்திற்கும் - சகலத்திற்கும் — அதுவேசாரம் --அதுவேசாரமாயிருக்கும்—சாரமதனிற்சாரமிலை - சாரமாகியவதற்குவேறேசாரமில்லை—அதுவாம்பெரியதற்பணத்தில் - அதுவாகியபெரியகண்ணாடியில் — அனைத்துப்பொருளின் - சகலபதார்த்தங்களின்—பார்வைகளாய் - பார்வைகளாயிருக்கின்ற—அதுவிதென்பதெலாம்-அதுவிதுவென்கின்றசகலமும்— அருகின்மரங்கள்- கரைகளிலிருக்கின்றவிருட்சங்கள்—வாவியிற்போல்-தடாகத்திற்றோற்றுவதுபோல—தோன்றும்-பிரதிபலிக்கும். எ-று...(௪௨)

(அ-கை.) இவ்வனுபவத்தினான் மனதுசாந்தமாமெனல். (கவி) அதுவேயமலஞ் சரையற்றதஃதாத்துமதத்துவமதுவே,சதுராவதுவந்துறிலுள்ளஞ்சாற்றுமுபசாந் தியையடையுந், திதமாய்நிந்தவ்வடிவாவாய்சென்மமற்றபதம்பெறுதி, முதல்வா வென்னவிராமனுமம்முனியைநோக்கிமொழிகின்றான் .... *

(இ ள்.) அதுவேயமலம்- அதுவேநின்மலமும்—அஃதுசரையற்றது- அதுவேமூப்பற்றதும் — அதுவேயாத்துமதத்துவம் - அதுவேயாத்மதத்துவமுமாம் — சதுரா - சதுரையுடையஸ்ரீராமா—அதுவந்துறில் - அப்பதம்வந்துபொருந்துமாயின்—உள்ளஞ்சாற்றுமுபசாந்தியையடையும் - மனதுசொல்லப்பட்டவுபசாந்தத்தைப்பெறும்—திதமாயநிந்து-திரமாயுணர்ந்து—அவ்வடிவாவாய் - அந்தவாத்மஸ்வரூபமாவாய்— சென்மமற்றபதம் - சநநமில்லாதநிருவாணபதத்தை—முதல்வா - தலைவனே— பெறுதியென - அடையக்கடவாயென்று சொல்ல—இராமனும் - ஸ்ரீராமனும் — அம்முனியைநோக்கி - அந்தவசிஷ்டமுனியைப்பார்த்து—மொழிகின்றான் - சொல்லுகின்றார். எ - று. (இ-உ-க-ம்) இச்சுவானுபவத்தினான் மனமுதலியசகங்களியாவுஞ்சாந்தமாமென்பதாம்..(௪௩)

(அ-கை.) சுவாத்மானுபவமானபிரமஸ்வரூபத்தைநிச்சயித் தஃதடையும்வருத்தாவருத்தமுநிரூபிக்கத்தொடங்கல். (கவி) அன்னவிதைகளின்னமெதன வனைத்துமுணாத்தாயனந்தமெனச், சொன்னபதமெம்முயற்சியிற்றன்னலாகும் விரைவி

லென, மன்னுமுனிசொல்வான்றுன்ப விதையாமிவற்றின் வகைமேன்மே, லென்
னென்றுரைத்தேனவற்றவற்றின்முயல்வால்விளைவிற்பதமெய்தும்.................... *

(இ-ள்.) அன்னவிதைகள் - அத்தன்மையுள்ளவித்துக்கள்—இன்னதென - இப்படிப்பட்டதென்று—அனைத்துமுரைத்தாய் - யாவையுஞ்சொன்னாய்—அனந்தமென - முடிவில்லாததென்று—சொன்னபதம் - சொல்லிய (ஞானாநந்த)பதத்தை—எம்முயற்சியினால்-எந்தமுயற்சியினால்—விளைவில்-சீக்கிரத்தில்—துன்னலாகுமென- அடையலாகுமென்றுகேட்க—மன்னுமுனிசொல்வான் - நிலைபெற்றவஸிஷ்டமுனிசொல்லுவார் — துன்பவிதையாமிவற்றின்வகை-துன்பத்துக்குவித்தாகியவிதைகளின்விதங்களை—மேன்மேலென்னென்றுரைத்தேன் - மேலுமேலுமென்னவென்னசொன்னேனோ — அவற்றவற்றின்முயல்வால் - அதினதின் முயற்சியினால்—விளைவிற்பதமெய்தும் - சீக்கிரத்திலந்தப்பதமடையப்படும். எ - று.................... (௪௪)

(அ-கை.) க்ஷணஞ்சத்தினதீதமாயினுடனேயத்துவிதானுபவஞ்சித்திக்குமெனல். (கவி)
சத்தாசாமானியக்கோடிபதத்தேசார்வுற்றொருக்காலே, கொத்தாகியவாதனைப்புருடவரு
த்தத்தாற்கோளறவிட்டு, சொத்தாகியதத்துவமுணர்ந்து தொலையாவடிவாநிலையமிழ்ந்த,
வுற்றாய்கணப்போதென்னினுமக்கணத்தேயுறுமப்பதமடைவாய்.................... *

(இ-ள்.) சத்தாசாமானியக்கோடி- சத்தாசாமானியத்தின்முடிவாகிய—பதத்தேசார்வுற்று-(அதீத)பதத்தையடைந்து—ஒருக்கால்-ஒருகாலத்தில்—கொத்தாகியவாதனை-திரளாகியவாசனைகளை—புருடவருத்தத்தால்-புருஷப்ரயத்தனத்தினால்—கோளறவிட்டு-இடையூறில்லாமற்கெடுத்து-சொத்தாகிய-தனக்குரிமையான—தத்துவமுணர்ந்து-தத்துவஞானத்தையறிந்து—தொலையாவடிவாம்-நாசமில்லாதஸ்வரூபமாகிய—நிலையமிழ்ந்த- நிலையிலழுந்த—கணப்போதென்னினும் - க்ஷணப்போதாயினும்—உற்றாய் -பொருந்தினாய் —அக்கணத்து-அந்தக்ஷணத்தில்—உறுமப்பதமடைவாய் - பொருந்தாநின்றஅவ்வத்துவிதபதத்தையடைவாய். எ-று. ..... (௪௫)

(அ-கை.) சத்தாயிற்கொஞ்சவருத்தத்தினாலுஞ் சித்தாயிலதிகவருத்தத்தினாலுமத்துவிதத்
தையடையலாமெனல். (கவி) நிகழ்சத்தாசாமானியத்தினுருவாநிலயநேர்தியெனிற், பக
ருமதனிற்சற்றதிகவருத்தத்தாலப்பதம்பெறுதி,திகழுஞ்சித்தத்துவத்திலுறுதியானஞ்செ
ய்யிலதற்கதிக, மிகவும்வருத்தமுறுதவினாலந்தப்பதத்தைமேவுதியால்.................... *

(இ-ள்.) நிகழ்சத்தாசாமானியத்தின் - விளங்காநின்றசத்தாசாமானியத்தினது— உருவாநிலயம் - ஸ்வரூபமாகியநிலையை—நேர்தியெனில் - அடைவாயானால் — பகருமதனில் - சொல்லாநின்றவதில்—சற்றதிகவருத்தத்தால் - கொஞ்சமதிகப்ரயாசத்தினால் — அப்பதம்பெறுதி- அந்தப்பதத்தையடைவாய்—திகழுஞ்சித்தத்துவத்திலுறு - விளங்காநின்றசிற்சாமானியத்திற்பொருந்துகின்ற—தியானஞ்செய்யிலதற்கதிகம் - தியானஞ்செய்தாலச்சத்தாசாமானியமுயற்சிக்கதிகமாக—மிகவும்வருத்தமுறுதலினால் - மிகவும்ப்ரயாசைப்படுதலினால்— அந்தப்பதத்தைமேவுதி-அந்தஸ்வரூபமடைவாய். எ - று. (இ-௩-க-ம்) பிரமத்தையடையுமார்க்கத்தின் சுருவையும் பருவையு மறிவித்ததாம்.................... (௪௬)

(அ-கை.) முன்சித்துபரியந்தமற்பியாசஞ்சொல்லிப் பின்றிரிஸ்யவனுசந்தானத்தா லவ்
வனுபவமுதியாததையும் வாசனாநாசத்தான் மனமுதலியயாவு நசிப்பதையுங்கூறுதல்.
(கவி) முந்துவெறிதேயறிபொருளின்றியானந்தோன்றுமுகில்வண்ணா, விந்தவறிவின்சம்
பவத்தாலென்றுமெங்குமெய்தாதாற், றொந்தமானவாதனையை வருந்தித்துடைத்தாயெ
னிலதனால், வெந்தவாதிவியாதியெலாம்விளைவிற்றுகளாயகன்றிடுமே.................... *

(இ-ள்.) முந்து - முந்தி— வெறிதேயறிபொருளின்றியானம் - கேவலமாகியதிரிஸ்யசிந்தனையால்—முகில்வண்ணா - மேகவண்ணத்தையுடையஸ்ரீராமா — தோன்று-அப்பதமுதியாது — இந்தவறிவின்-இவ்விஷயஞானத்தின்—சம்பவத்தால்-உதயத்தினால்—என்றும்-எப்போதும் —எங்கும்-எவ்விடத்தும்—எய்தாது- (அனுபவ) முண்டாகாது—தொந்தமானவாதனையை-துவிதமாகியவாசனையை—வருந்தித்துடைத்தாயெனில் - ப்ரயாசைப்பட்டுக்கெடுத்தாயானால்—அதனால்வெந்த - அதனால்வெப்பமுற்ற—ஆதிவியாதியெலாம் - ஆதிவியாதியானசகலமும்—விளைவில்-சீக்கிரத்தில்—துகளாயகன்றிடும்-பொடியாகநீங்கும். எ-று .... (௪௭)

(அ-கை.) வாசனையுமனமும்பீசாங்குரநாயமாமெனல். (கவி) முன்னஞ்சொன்னவருத்
தங்கண்முழுதுஞ்செயினும்வேரோடே, சொன்னமலையைப்பிடுங்கிடினுந் தொடர்வாத
னையைவிடலரிதா, லுன்னுமனமெம்மட்டொழியா துறுவாதனையும் மட்டழியா, தன்ன
படிவாதனையெம்மட்ட ழியாதுளமம்மட்டொழியா.................... *

(இ-ள்.) முன்னஞ்சொன்ன-முன் சொல்லப்பட்ட—வருத்தங்கள்-ப்ரயாசைகள்—முழுதுஞ்செயினும்-முற்றுஞ்செய்தாலும்—சொன்னமலையை - மகம்மேருவை—வேரோடும்பிடுங்குடினும்-மூலத்தோடுபிடுங்கினாலும்—தொடர்வாதனையைவிடலரிதாம் - தொடரும்வாசனையைவிடுதற்கரியதாம்— உன்னுமனம்-நினைக்கின்றமனது—எம்மட்டொழியாது - எந்தமட்டுங்கெடாதோ—உறுவாதனை-பொருந்தினவாசனையானது— அம்மட்டழியாது - அந்தமட்டுங்கெடாது—அன்னபடி-அந்தப்ரகாரமே— வாதனை - வாசனையானது—எம்மட்டழியாது- எந்தமட்டுங்கெடவில்லையோ—உளம்-மனம்—அம்மட்டொழியா-அந்தமட்டுங்கெடாது. எ-று .. .. (௬௮)

(அ-கை.) ஞானமுதிக்குமளவு மனதும்வாசனையுநசியாது இவைநசிக்குமளவுஞானமுதியாதெனல். (கவி) உண்மைஞானமெம்மட்டும்வாராதம்மட்டுளமழியா, திண்மையுளமெம்மட்டழியாதிகழ்தத்துவமம்மட்டெய்தா, தண்மையுறுவாதனையெம்மட்டழியா தம்மட்டுணர்வணுகா, வண்மையுணர்வெம்மட்டணுகாவருவாதனையம்மட்டழியா .... *

(இ-ள்.) உண்மைஞானம்- தத்துவஞானமானது—எம்மட்டுவாராது- எந்தமட்டும்வரவில்லையோ— அம்மட்டுளமழியா- அந்தமட்டுமனங்கெடாது—திண்மையுளம்-வலிமை (பொருந்திய)மனது—எம்மட்டழியாது-எந்தமட்டுங்கெடவில்லையோ—திகழ்தத்துவம்- ப்ரகாசியாநின்றதத்துவஞானம்— அம்மட்டெய்தா- அந்தமட்டுமடையமாட்டாது — தண்மையுறுவாதனை- இழிவாகிப்வாசனையானது—எம்மட்டழியாது-எந்தமட்டுங்கெடவில்லையோ—அம்மட்டுணர்வணுகா- அந்தமட்டுஞானங்கிட்டமாட்டாது— வண்மையுணர்வு- மெய்ஞ்ஞானம்—எம்மட்டணுகா- எந்தமட்டுங்கிட்டாதோ— அம்மட்டு- அந்தமட்டும்—வருவாதனை - வருகின்றவாசனையானது— அழியா- கெடமாட்டாது. எ-று. .... (௬௯)

(அ-கை.) திரிஸ்யவிச்சைநீங்கில்வாசனாக்ஷயமு மனோநாசமுந் தத்துவஞானமுமுண்டாமெனல். (கவி) செறிவாஞானமனமாய்வுதிரள்வாதனைமாய்விம்மூன்றும், பிறவாங்காரணங்கடமைப்பெறுசாதித்தற்கரிதாகும், நெறியாமதனால்விவேகிகளானிலைகூர்புருடவருத்தத்தாற், பொறியார்போகமயல்தூரப்போக்கிலிவைதாம்பொருந்துவதாம். .... *

(இ-ள்.) செறிவாஞானம்- நிறைவாகிய(தத்துவ) ஞானோதயமும்— மனமாய்வும்-மனோநாசமும்—திரள்வாதனைமாய்வும்-மிகுந்தவாசனாட்சயமுமாகிய—இம்மூன்றும்-இந்தமூன்றும்— பிறவாங்காரணங்கடமை-வேறுகாரணங்களை—பெறு- பெற்று—சாதித்தற்கரிதாகும்-சாதிப்பதற்கரியதாம்— நெறியாமதனால்-செவ்விதானவந்தமார்க்கத்தினால் — விவேகிகளால்-விவேகிகளினால்—நிலைகூர்-திடமாகிய—புருடவருத்தத்தால்- புருஷப்ரயெத்தனத்தினால் —பொறியார்- ஐம்பொறிகளாலுண்டாகிய—போகமயல் - போகமயக்கங்களை—தூரப்போக்கில்-தூரத்தள்ளினால்—இவைதாம்- இந்தமூன்றும்-பொருந்துவதாம்-வந்தடையும். எ-று.......(௭௰)

(அ-கை.) இம்மூன்றுங்காரணகாரியமாகாமற்சமமாயனுஷ்டிக்கிற்சிதாநந்தத்தையடையலாமெனல். (கவி) இனையமூன்றுஞ்சமமாகவியற்றுவெம்மட்டம்மட்டு, மனையபதமெய்தாவருடமாயிரங்கள்சென்றாலும், வினையில்காலஞ்சமமாகமிகுநாளியற்றின் மிகப்பலிக்கு, நினைவிலொன்றொன்றாவியற்றினிலைகூடாநிட்பலமாகும்.................................... *

(இ-ள்.) இனையமூன்றும் - இத்தன்மையவானமனோநாசம்வாசனாட்சயம்தத்துவஞானமென்னுமூன்றும்—சமமாக - சமத்துவமாக—எம்மட்டும் - எந்தமட்டும்— இயற்று-முயற்சிசெய்யவில்லையோ—அம்மட்டும் - அந்தமட்டும்—அனையபதம் - அப்படிப்பட்டஸ்வரூபபதமானது—வருடமாயிரங்கள்சென்றாலும் - அநேகவருஷமாயினும் — எய்தா - அடையமாட்டாது—வினையில்காலம் - வினையில்லாத (வெப்) போதும்—சமமாக - (மூன்றுஞ்) சமத்துவமாக—மிகுநாளியற்றின் - வெகுகாலம்பழகில்—மிகப்பலிக்கும்- மிகவும்ப்ரயோசனமாகும்—நினைவில் - மனதில்—ஒன்றொன்றாவியற்றில் - ஒன்றொன்றாகமுயற்சிசெய்தால்— நிலைகூடாநிட்பலமாகும்-நிலைபொருந்தாமல்அப்ரயோசனமாகும். எ-று. (இ-உ-க-ம்)ஞானாப்பியாசத்தினுண்மையையறிவித்ததாம்.. (௭௧)

(அ-கை.) பிராணபந்தனத்தினாலும் வாசனைவிடுதியினாலுமனோபந்தநீங்குமெனல். (கவி) ஒக்கவியற்றிலிம்மூன்றுமுளத்தின்கட்டெல்லாமொழிக்குஞ், சிக்கலாதுதாமனாநூலவளையஞ்சிதையிற்சிதையாம்தா, தொக்கபிறவித்திரள்கட்டொறுந் தொடர்ந்துவந்தவாதனைதான், மிக்ககாலயோகத்தின்பழக்கத்தல்லால்விடாதெங்கும் .... *

(இ-ள்.) ஒக்கவியற்றில் - சமமாகச்செய்தால்—இம்மூன்றும் - இந்தமூன்றும்—உளத்தின்கட்டெல்லாம்- மனதிலுள்ளபந்தங்களனைத்தையும் —ஒழிக்கும் - கெடுக்கும் —சிக்கலாது-சிக்கலாமலிருக்கின்ற—தாமனாநூல - தாமனாநூலானது—வளையஞ்சிதையில்-தாமனாத்தந்

டுகெடுமாயின்—சிதையாதோ - கெடாதோ—தொக்கபிறவித்திரள்கடோறும் - பொருந்திய சநநங்கடோறும்—தொடர்ந்துவந்தவாதனை - தொடர்பாகிவந்தவாசனையானது—மிக்ககால யோகத்தின்பழக்கத்தல்லாலெங்கும்விடாது - வெகுகாலத்தியானத்தின்பழக்கத்தாலன்றியெவ் விடத்துநீங்காது. எ - று .... (௫௨)

(அ-கை.) இ-து. (கவி)பிறவாதனையைவிடலொக்கும்பிராணவாயுத்தடையென்று,திறமா யறிஞரியம்புவராற்றிடமாயதுவுஞ்செயவேண்டு, முறுவாதனையேவிடிலுள்ளமுள்ளமல் லாமையையடையு, நிறையாருயிரைத்தடுக்கினுமாநினக்கேதிச்சையதுசெய்வாய்...... *

(இ-ள்.) பிறவாதனையை- புறம்பிலுள்ளவாசனையை—விடலொக்கும்-விடுதலுக்குச்சமா னமாம்—பிராணவாயுத்தடையென்று-பிராணபந்தனமென்று— திறமாயறிஞரியம்புவர் - திர மானஞானவான்கள்சொல்லுவார்கள்—திடமாய் - திடமாக—அதுவுஞ்செயவேண்டும் - அந்த வெத்தனமுஞ்செய்யத்தக்கதாய்— உறுவாதனையைவிடில்- பொருந்தாநின்றவாசனையைவிட் டால்—உள்ளம் - மனமும்—உள்ளமல்லாமையையடையும் - மனமில்லாமையையடையும்— நிறையாருயிரைத்தடுக்கினும்-பிராணபந்தனஞ்செய்தாலும்—ஆம் - மனோநாசமாம்—நினக் கேதிச்சை-உனக்கெதுவிச்சையோ—அதுசெய்வாய் - அதைச்செய்வாய். எ-று .... (௫௩)

(அ-கை.) பிராணபந்தனத்துக்கும்வாசனாக்ஷயத்துக்குஞ்சாதனமுரைத்தல். (கவி) பிரா ணாயாமவன்பழக்கம்பேணுங்குருச்சொல்லுபாயங்கள், விராவாசனம்போசனமியோகம் விளம்புமிவற்றா லுயிரொடுங்கு, மிராமாசங்கம்விவகார மின்மைபலபா வனையின்மை, யொராகாரந்திரிடநோக்கலுரைத்தவிவற்றால்வாதனைபோம் .... *

(இ-ள்.) பிராணாயாமம்-பிராணபந்தத்தின்—வன்பழக்கம்-வலியபழக்கமும்—பேணும்- விரும்பாநின்ற—குருச்சொல்-ஆசாரியருபதேசிக்கப்பட்ட—உபாயங்கள்-யுத்திகளும்— விரா வாசனம்-சொல்லாநின்றவாசனமும்—போசனம்-புசிப்பும்—யோகம்- தியானமுமாகிய—வி ளம்புமிவற்றால்-சொல்லாநின்றவிவைகளினால்—உயிரொடுங்கும்-பிராணனடங்கும்—இராமா- ஸ்ரீராமா—சங்கம்-பற்றுள்ள—விவகாரமின்மை-விவகாரமில்லாமையும்--பலபாவனையின்மை- சம்சாரபாவனையில்லாமையும்—ஓராகாரந்திரிடநோக்கல்- ஒருருவமின்றியருவமாய்ப்பார்ப்ப தும்—உரைத்தவிவற்றால்-சொல்லியவிவைகளினால்—வாதனைபோம்-வாசனாக்ஷயமாகும்.எ-று.

(அ-கை.) மனத்தினசைவேபிராணனாதலாலதைத்தடுக்கின் மனதுநிற்குமெனல். (கவி) பகைவாதனைமாய்ந்திடிற்சித்தந்தோன்றாப்பவனமொடுங்கிவிடிற், றொகைதீர்துகளந்த ரத்துண்டோசொன்னபிராணனசைவேது,மிகையாருள்ளத்தசைவதுவேயதனாற்பிராண விசைத்தடைதான்,றகைசேர்மதிமான்களுக்கியல்பாய்த்தப்பாதியற்றத்தக்கதுவே...... *

(இ-ள்.) பகை-சத்துருவான—வாதனைமாய்ந்திடில்-வாசனாட்சயம்வந்தால்—சித்தந்தோ ன்றா-மனமுண்டாகாது—பவனமொடுங்கிவிடில்-காற்றி(னசை)வடங்கினால்— தொகைதீர்துக ள்-அளவற்றபுழுதிகள்—அந்தரத்துண்டோ - ஆகாயத்திலுண்டாமோ — சொன்னபிராணன்- (முன்)சொல்லப்பட்டபிராணவாயுவின்—அசைவேது - சலனமெதுவோ—அதுவே- அதுதா னே—மிகையாருள்ளத்தசைவு- துன்பநிறைந்தமனதினசைவாகும்—அதனாற்பிராணவிசை-அ தனாற்பிராணவேகத்தை—தடைதான்-தடுப்பது—தகைசேர்மதிமான்களுக்கியல்பாய்த்தப்பா தியற்றத்தக்கது-நற்குணமுள்ளவறிஞர்க்கியற்கையாகத்தவறாமற்செய்யத்தக்கது.எ-று. (௫௫)

(அ-கை)மனதையடக்குதற்கின்னுநான்குயுத்திசொல்லுதல். (கவி) வேறு- ஊகநன்மை யாலல்லதுவெலப்படாதுள்ளம், வேகமத்தமாவங்குசத்தலால்வெலப்படுமோ,வேகபோ தத்தையறிதனல்லவருடனெய்தல், சோகவாதனைவிடலுயிர்தோன்றாதொடுக்கல்.... *

(இ-ள்.) ஊகநன்மையாலல்லது- யுத்தியினன்மையினாலல்லாமல்— உள்ளம்-மனமானது —வெலப்படாது- வெல்லப்படாது—வேகமத்தமா-கோபங்கொண்டமதயானையானது—அங் குசத்தலால்-அங்குசத்தினாலன்றி—வெலப்படுமோ-செயிக்கப்படுமோ—ஏகபோதத்தையறித ல்-ஒன்றாகியஞானத்தையறிதலும்—நல்லவருடனெய்தல்- நன்மையுள்ளசத்துக்களுடன்சேரு தலும்—சோகவாதனைவிடல்-துக்கவாசனையைவிடுதலும்—உயிர்தோன்றாதொடுக்கல்- பிரா ணசலனமில்லாமலடக்குதலும். எ-று.. (௫௬)

(அ-கை.) இந்நான்குயுத்தியையன்றிமனதையடக்கக்கூடாதெனல். (கவி) வேறு-உ ரைசெய்நால்வகையுநெஞ்சையொடுக்குமூகங்களாகும், புரையிலாவிவற்றுக்குள்ள மொடுங்குதல்புயன்மழைக்குத், தரையுறுதூளிபோலாஞ்சாற்றுமூகங்களன்றி, வி ரைவினெஞ்சடர்ப்பார்தீபம்விட்டிருளிருளாற்றீர்ப்பார் .... *

(இ-ள்.) உரைசெய்-சொல்லப்பட்ட—நால்வகையும் - நான்குவகையும்—நெஞ்சை பொடுக்கும்- மனதையடக்குகின்ற—ஊகங்களாகும்- யுத்திகளாகும்—புரையிலாவிவற்றுக்கு குற்றமற்றவிந்தயுத்திகளுக்கு— உள்ளமொடுங்குதல்- மனமடங்குதல்—புயன்மழைக்கு- மேகவருடத்திற்கு—தரையுறுதூளிபோலாம் - பூமியிலடங்கியபுழுதிக்கொப்பாகும்— சாற்றுமூகங்களன்றி- சொல்லப்பட்டயுத்திகளையல்லாமல்— விரைவின்ஞ்சடர்ப்பார் - வேகமாகமனதையடமாய்க்கெடுப்பவர்கள்—தீடம்விட்டிருளிருளாற்றீர்ப்பார்-விளக்கைவிடுத்திருளையிருளினாற்கெடுப்பவர்களுக்கிணையாம். எ-று .... (௫௭)

(அ-கை.) இவ்வூகங்களையன்றிமனதையடக்கின்வருத்துமெனல். (கவி) வலியினால் விரைந்தூகங்களன்றியேமனத்தைவெல்வா, ரொலிமதக்களிற்றைக்கஞ்சவளையநூலொன்றாற்சேர்ப்பார், மெலியுமம்மூர்க்கருள்ளம்வெருவிநொந்தறநொய்தாகி, நலியுமென்றொன்றுநம்பாநகருற்றுவெருளுமான்போல் .... *

(இ-ள்.) வலியினால்விரைந்து-பலத்தினால்வேகமாய்—ஊகங்களன்றி-முன்சொன்னயுத்திகளையல்லாமல்—மனத்தைவெல்வார் - மனதைச்செயிப்பவர்கள்—ஒலிமதக்களிற்றை-கெர்ச்சிக்கின்றமதயானையை—கஞ்சவளையநூலொன்றால் - தாமரைத்தண்டினுள்ளிருக்கின்றவொருநூலினால்—சேர்ப்பார் - கட்டுவார்களாவர்—மெலியும் - இளைக்கின்ற— அம்மூர்க்கருள்ளம்-அந்தமூடர்களுடையமனது—வெருவிநொந்து - பயத்தோடுந்துன்பத்தையடைந்து—அறநொய்தாகி - மிகவுஞ்சிறுமையாய்—நலியுமென்று - வருத்துமென்று—நகருற்று-பட்டணத்தில்வந்து—வெருளுமான்போல் - பயந்தமானைப்போல—ஒன்றுநம்பா - ஒன்றையுநம்பமாட்டாது. எ - று. (இ-எ-க-ம்) இந்நான்குயுத்தியினொன்றினாலாவதுமனதையடக்கி னடங்குமஃதில்லாவிடி னடங்காதென்பதாம் .... (௫௮)

(அ-கை.) சற்கருமத்தையுநீக்கி ஞானதிருஷ்டியாலிச்சாத்தியாகஞ் செய்யவேண்டுமெனல். (கவி) தவமகந்தீர்த்தஞ்சேவையருச்சனைதானமாதி, யவமயக்கத்தானீணாள்விலங்குபோலவத்தர்வாழ்வர், பவமுறுமிவற்றைவிட்டுபரிசுத்தபரமபோதங், கவரறப்பற்றியெல்லாக்காதலுநீக்கிநிற்பாய் .... *

(இ-ள்.) தவம் - தவசும்—மகம் - யாகமும்—தீர்த்தம் - தீர்த்தங்களும்—சேவை- தேவதரிசனங்களும்—அருச்சனை - ஆராதனைகளும் — தானமாதி - தானங்களுமுதலிய — அவமயக்கத்தால் - பயனில்லாதமயக்கத்தினால்—நீணாள் - வெகுகாலம்—விலங்குபோல்- மிருகங்களைப்போல—அவத்தர்வாழ்வர் - வீணர்கள்வாழ்வார்கள்—பவமுறும் - சநநத்தைக்கொடுக்கின்ற—இவற்றைவிட்டு - இவைகளைவிடுத்து—பரிசுத்தபரமபோதம் - பரிசுத்தமானபிரமஞானத்தை—கவரறப்பற்றி - இரண்டில்லாமற்பிடித்து—எல்லாக்காதலும்-சகலவிச்சைகளையும்—நீக்கிநிற்பாய் - கெடுத்திருப்பாய். எ-று .... (௫௯)

(அ-கை.) திருக்குதிருஷ்டியில் மனதைநீக்கிச்சித்தை யடையவேண்டுமெனல். (கவி) நோக்கும்பொருளற்றறநன்றாய்முதலாய்நுனிக்குங்கருத்தற்று, தாக்குமறிவின்பதமானவொன்றைநாடிச்சான்றோனே, வீக்கும்விசாரமறவிதயத் துறைவாய்தொழிலை மேவுகினு, மாக்கஞ்செய்வானலாதபதமடைதிசமமாஞ்சீர்விளங்க .... *

(இ-ள்.) நோக்கும் - பார்க்கின்ற—பொருளற்று- விஷயமற்று—அறநன்றாய்-மிகவுநன்றாகி—முதலாய் - முதன்மையாக—நுனிக்குங்கருத்தற்று- சங்கற்பிக்குநினைவின்றி-தாக்குமறிவின்பதமான - தாங்காநின்றஞானபதமாகிய—ஒன்றைநாடி - ஒன்றைப்பார்த்து—சான்றோனே - அறிஞனாஸ்ரீராமா — வீக்கும்விசாரமற - பந்தத்தையுடையவெண்ணமில்லாமல்—இதயத்துறைவாய் - இதயத்திற்பொருந்துவாய்—தொழிலைமேவுகினும் - தொழிலைப்பொருந்தினாலும்—ஆக்கம் - இலாபங்(கருதி)—செய்வானலாதபதம்-அகர்த்தாவாகியபிரமபதத்தை—சமமாஞ்சீர்விளங்க - சமமாகியசெல்வம்ப்ரகாசிக்க— அடைதி - அடையக்கடவாய். எ - று. (இ-உ-க ம்) இச்சையைநீக்கி யாத்மஞானத்தான் மனோரூபமாகிய திரிஸ்யத்தைக் கெடுக்கவேண்டுமென்பதாம் .... (௬௰)

(அ-கை.) மனதை விசாரத்தினாலு மடக்கலாமெனல். (கவி) தனதுமனத்தையொருக்காலேவிசாரத்தாலேசமிப்பித்த, வனகன்பிறவிப்பயன்பெற்றோனற்பமெனினுமிதயத்தே, வினவுவிசாரமெழிலதுதான்விடாதுபழகுமியோகத்தாற், கனமதாகிப்பல்விதமாங்கப்பாயிரமாய்ப்பலவாகும் .... *

(இ-ள்.) தனதுமனத்தை - தன்னுடையமனதை—ஒருக்கால் - ஏககாலத்தில்—விசாரத்தால் - விசாரணையினால்—சமிப்பித்த - கெடுப்பித்த—அனகன் - களங்கமில்லாதவன் — பிறவிப்பயன்பெற்றோன் - சநநத்தின்பலனையடைந்தவன்—அற்பமெனினும் - அற்பமானாலும்

—இதயத்து - மனதில்—வினவுவிசாரம் - வினவாநின்றவிசாரணையின்— ஊழ்லுதான்விடா து - வலியையவிடாமல் — பழகுமியோகத்தால் - பழகாநின்றதியானத்தினால் — கனமதாகிப் பருமனாய் — பல்விதமாம் - நாநாவிதமாகிய — கப்பாயிரமாய் - ஆயிரம்பணைகளோடும்—பலவாகும் - அநேகமாகும். எ-று .... (௬௨)

(அ-கை.) விசாரமுக்கியமாய்வேண்டுமெனல். (கவி) தக்கவிசாரமெனும்பூத்ததரு ப்பூவட்டத்தொருதாளாய்த், துக்கவிசாரச்சூறைக்காற்றசைத்தற்கரிதாய்த்துவட்சி யிலா, மிக்கநிலையாநிலைபோக்குவிழித்தலுறங்கலுமேளார்மனத்திற், புக்கவிசாரமில் லாரேற்பொன்றிறோராமெனப்புகல்வர்... ....*

(இ-ள்.) தக்கவிசாரமெனும் - தகுந்தவிசாரணையென்கின்ற—பூத்ததரு-புஷ்பித்தவிருட்சமானது—பூவட்டத்து - புஷ்பபீடத்தில்—ஒருதாளாய்-ஒருவேருள்ளதாய் — துக்கவிசாரச்சூறைக்காற்று - சிந்தையென்னுஞ்சுழற்காற்றானது—அசைத்தற்கரிதாய் - அசைப்பதற்கரியதாய்—துவட்சியிலா - துவளலில்லாத —மிக்கநிலையாம்-மிகவுந்திரமுள்ளதாம்—நிலைபோக்கு-நிற்பதும்போவதும்—விழித்தலுறங்கல் - விழிப்பதுமுறங்குவதும்—உளோர் - (இவைகளை) யுள்ளவர்கள்—மனத்திற்புக்க- மனத்திற்பொருந்திய—விசாரமில்லாரேல்-விசாரணையில்லாதவர்களாயின்—பொன்றினோராமென-நசித்தவர்களாவரென்று—புகல்வர்-சொல்லுவார்கள். எ-று

(அ-கை.) சாதுசங்கத்தோடும்விசாரஞ்செய்யவேண்டுமெனல்.(கவி) கெடாதசிற்க ண்ணால்தான்கிளர்மேலவர்களுடனே தான், விடாதிவ்வுலகேதியாமாமொன் றுறைக்க மெல்லவிசாரிப்பாய், தடாதுட்பொருடேர்வித்தைக்குவிசாரந்தானேதனிஞானங், கடாவியறியத்தக்கததிற்காணும்பாலின்மதுரம்போல் ....*

(இ-ள்.) கெடாதசிற்கண்ணால்-நசியாதஞானதிருஷ்டியினால்—நீதான்- நீயேயாவது—கிளர்மேலவர்களுடனே தான்-விளங்காநின்றமகான்களுடனேயாவது—விடாது-இடைவிடாமல்— இவ்வுலகேது- இச்சகமியாது —யாமாரொன்று-நாமாரென்று— உறைக்க-திடமாக—மெல்லவிசாரிப்பாய்-மிருதுவாகவிசாரணைசெய்வாய்—தடாது-தடைப்படாமல்—உட்பொருடேர்-உண்மைப்பொருளைத்தேராநின்ற—வித்தைக்கு- ஆத்மியாத்மவித்தைக்கு — விசாரந்தானே- விசாரணையே—தனிஞானம்-தனிமையாகியஞானமாம்—கடாவியறியத்தக்கது- வினவியறியத்தக்கவஸ்து—பாலின்மதுரம்போல்- பாலினிரசத்தைப்போல—அதிற்காணும் - அந்த விசாரணையிற்காணப்படும். எ-று .... (௬௩)

(அ-கை.) அனுபவியினிலக்கணங்கூறல். (கவி) நன்றுஞானச்சமநோக்கா னாடும் பொருட்குச்சமந்தானே, யொன்றுத்தரித்தோன்றினமுறு னுள்ளமஞ்சான்விவசமுறு, னன்றுஞ்சுத்தமபத்தியநஞ்சடுத்ததேனுமனமருந்தி, யின்றுயிமைப்பிலினு நொந்ததிறந்ததனங்கண்டதுபோலாம் ....*

(இ-ள்.) நன்றுஞானச்சமநோக்கான்-சுகபோகசமத்துவதிருஷ்டியையுடையவன்—நாடும்பொருட்கு-தேடாநின்றவஸ்துவுக்கு—சமந்தான்- சமத்துவத்தை— ஒன்றுத்தரித்தோன்-முக்கியமாகத்தரித்தவன்—தினமுறுன்-ஈனமடையான்— உள்ளமஞ்சான்- மனதிற்பயப்படான்—விவசமுறுன்-(ஒன்றுக்கும்)வசமாகான்-அன்றுஞ்சுத்தம்-உச்சிட்டமானாலும்—அபத்தியம்- அபத்தியமானாலும்—நஞ்சடுத்ததேனும்- விடஞ்சேர்ந்ததானாலும்—நொந்தது - நொந்ததானாலும்— இறந்தது-கெட்டுப்போனதானாலும்—அனம்-அன்னமானது—கண்டதுபோல்- கற்கண்டைப்போல—அருந்தில்-(அவன்)புசித்தால்—இன்றுய்-மந்தமில்லாததாய்—இமைப்பிலினும்- கணத்திற்சீரணமடையும். எ-று .... (௬௪)

(அ-கை) தேகாபிமானநீங்கினதைக்கூறல். (கவி) களகாளமொப்பனபாற்கருப் பஞ்சாறோதன நுகரில், விரவுபுந்திபற்றுமன்மெய்ம்மையுணர்ந்தோர் சமமாவார். சிரமங்கரிந்தோர்சிரந்தரந்தோர்செறுனொன்றுறுறவென்று, ருரவுஞானத்தொரு நோக்காலொக்கக்காண்பருட்குளிர்ந்து ....*

(இ-ள்.) களகாளம்- விடமானாலும்ப்ரதிவிடமானாலும்—ஒப்பனபாற்கருப்பஞ்சாறு-சிறந்தபாலானாலுங்கரும்பினிரசமானாலும்—ஓதனம்- சாதமானாலும்—நுகரில் விரவுபுந்திபற்றுமல்-பொசிக்கில்விரவாநின்றமனமானதுபற்றுமல்— மெய்ம்மையுணர்ந்தோர்-உண்மையையுணர்ந்தவர்கள்—சமமாவார்- சமத்துவத்தையடைவார்கள் —சிரமங்கரிந்தோர்-சிரசையரிந்தவர்களையும்—சிரந்தந்தோர்-சிரசைக்காத்தவர்களையும்—செறுனொன்றூர்- பகைவரென்று—உறவென்றூர்-நட்பென்றூர்கள்—உரவுஞானத்தொருநோக்கால் - திடஞானமுள்ளவொப்பற்ற பார்வையினால்—உட்குளிர்ந்து-அகமகிழ்ந்து—ஒக்கக்காண்பர்-சமமாய்ப்பார்ப்பார்கள். எ-று

(அ-கை.) இ-து. (கவி) மூடவிந்தியங்கடமைமோகவிடயநிலைதன்னி, லோடவொட்டா துரனரெவ்வமொழிந்தபுந்தியாற்றப்பர், கேடிலுண்மையறிந்திளைப்பற்றுணர்வாந்தன் னைக்கிட்டாரை, நீடிந்தியங்கள்கெடவருந்துநிலச்சிற்றளிமாமானினம்போல .... ✻

(இ-ள்.) மூடவிந்தியங்கடமை - சடமானபொறிகளை—மோகவிடயநிலைதன்னில்- மோகத்தையுடையஜிரிஸ்பத்தில்—ஓடவொட்டாது - செல்லாமற்படிக்கு — உரனர் - சத்துருக்கள்—எவ்வமொழிந்த - மனத்துன்பமில்லாத—புந்தியாற்றடுப்பர் - அறிவினாற்றடுப்பார்கள்—கேடிலுண்மையறிந்து - நாசமில்லாததத்துவத்தையறிந்து—இளைப்பற்று- மெலிவில்லாமல்—உணர்வாந்தன்னை - ஞானஸ்வரூபமாகியதன்னை—கிட்டாரை - அறியாதமூடர்களை — நீடிந்தியங்கள் - நீண்டபொறிகள்—நிலச்சிற்றளிமா - நிலத்திலுள்ளசிறியதுளிமா — மானினம்போல-மான்கூட்டத்தைப்போல—கெடவருந்தும் - நசிக்கும்படிதின்னும். எ-று. (இ-௫௧-ம்) அநுபவிதேகவிந்திரியங்களையடக்குந்திரமுரைத்ததாம் ....(௬௬)

(அ-கை.) சம்சாரநீக்கமறிவிக்குநிமித்தஞ்சங்கத்தியாகங்கூறல். (கவி) சங்கமடியாப்பொருளுண்டாஞ்சங்கமடியாவாபத்தாஞ், சங்கமடியாவாசைவருஞ்சங்கமடியாப்பிறப்புண்டாஞ், சங்கமறுத்தல்வீடென்பர்சங்கமறுத்தல்பிறப்பறுத்தல், சங்கமறுத்துப்பொருள்களினிதனிச்சீவனின்முத்தியைப்பெறுவாய் .... ✻

(இ-ள்.) சங்கமடியா - சங்கங்காரணமாக—பொருளுண்டாம் - விஷயவஸ்துக்களுண்டாகும்—சங்கமடியா - சங்கங்காரணமாக—ஆபத்தாம் - ஆபத்துண்டாகும் — சங்கமடியா-சங்கங்காரணமாக—ஆசைவரும் - இச்சையுண்டாகும் — சங்கமடியா - சங்கங்காரணமாக—பிறப்புண்டாம் - சம்சாரமுண்டாகும்—சங்கமறுத்தல் - சங்கத்தைக்கெடுத்தலே — வீடென்பர் - மோக்ஷமென்றுசொல்லுவார்கள்—சங்கமறுத்தல் - சங்கத்தைக்கெடுத்தலே—பிறப்பறுத்தல் - சநநத்தைக்கெடுத்தல்—பொருள்களின் - விஷயங்களின்—சங்கமறுத்து - சங்கத்தைக்கெடுத்து—தனிச்சீவனின்முத்தியை - தனிமையானசீவன்முத்தியை—நீபெறுவாய்- ஸ்ரீராமா நீபெறக்கடவாய். எ-று ....(௬௭)

(அ-கை.) விஷயசங்கத்தைநீக்குதற்பொருட்டதனிலக்கணமுரைத்தல். (கவி) என்றமுனியையனைத்தையமென்னும்பனிக்குச்சரற்காலந், துன்றுகடுங்காற்றொப்பாயிச் சங்கமேதுசொல்லென்ற, வென்றியிராமற்கவனுரைப்பான்மிகுபல்பொருள்பாவாபாவத், தொன்றுமகிழ்வுபொருமைகளையுறுதன்மலினவாதனையே .... ✻

(இ-ள்.) என்றமுனியை - (இப்படி) யென்றுசொல்லியவசிஷ்டமுனியை—அனைத்தையமெனும்பனிக்கு - சகலசந்தேகமென்கின்றபனிக்கு—சரற்காலம் - சரற்காலத்தின்—துன்றுகடுங்காற்றொப்பாய் - நெருங்கியகடுங்காற்றுக்கிணையானவரே—இச்சங்கமேது - இந்தச்சங்கமெப்படியாது—சொல்லென்ற - சொல்லுமென்றுகேட்ட—வென்றியிராமற்கு - வெற்றியையுடையஸ்ரீராமருக்கு—அவனுரைப்பான் - அந்தமுனிசொல்லுவார்—மிகுபல்பொருள் - மிகுந்தபலவஸ்துக்களின்—பாவாபாவத்து - பாவத்திலுமபாவத்திலும் — ஒன்றும் - பொருந்தாநின்ற—மகிழ்வுபொருமைகளையுறுதல் - விருப்புவெறுப்பையடைதலாகிய—மலினவாதனை-அசுத்தவாதனையாம். எ-று ....(௬௮)

(அ-கை) மலினவாசனையேவிஷயசங்கமெனல். (கவி) சாற்றுமலினவாதனையேசங்கமாஞ்சீவனின்முத்தி, தோற்றுமுடற்குமறுபிறவியின்றியின்பதுன்பங்கண், மாற்றிவிசுத்தவாதனைதான்மருவுஞ்சீவன்முத்தரலா, லூற்றமடநெஞ்சினர்பிறவியுறுவாதனையின்பெயர்சங்கம்.

(இ-ள்.) சாற்றுமலினவாதனையே - சொல்லுமசுத்தவாதனையே— சங்கமாம் - சங்கமென்பதாம்—சீவனின்முத்திதோற்றும் - சீவன்முத்தியுண்டாகின்ற — உடற்குமறுபிறவியின்றி-சரீரிக்குமறுசநநமில்லாமல்—இன்பதுன்பங்கள்மாற்றி - சுகதுக்கங்களைக்கெடுத்து— விசுத்தவாதனைதான்மருவும் - சுத்தவாசனையானதுபொருந்தும்—சீவன்முத்தரலால்- சீவன்முத்தரல்லாது—ஊற்றமடநெஞ்சினர் - திரமானவஞ்ஞானமனமுடையவர்கள் — பிறவியுறுவாதனையின்பெயர்சங்கம் - அசுத்தவாசனையினதுநாமமேசங்கமாம். எ-று ....(௬௯)

(அ-கை.) அச்சங்கநீங்குமுபாயமுரைத்தல்.(கவி) பிரியமருமையிடராதிபீடியாமனிற்றியெனில், விரியுமாசைபயங்கோபமிலனுய்ச்சங்கம்விட்டவனீ, கரியதுயராலிளையாதுகலந்தசுகத்தான்மகிழாது, புரியுமாசைவசம்போகாதிருக்கிற்சங்கம்போக்கினைநீ .... ✻

(இ-ள்.) பிரியம் - சந்தோஷமும்—அருமை-பொறுமையும்—இடர்-துன்பமும்—ஆதி-முதலாகியவிவைகள்—பீடியாமல் - வருத்தாமல்—நிற்றியெனில் - நிற்பாயாயின் — விரியுமாசை-விரிந்திருக்கின்றவிச்சையும்—பயம்-அச்சமும்—கோபமிலனுய்- குரோதமுமில்லாதவனு

ய்—நீசங்கம்விட்டவன்-நீயேசங்கத்தைவிட்டவனும்—கரியதுபராவிளையாது-விஷ்மாகியதுக்கத்திஞலும்மெலியாமல்—கலந்தசுகத்தான்மகிழாது-கூடினவின்பத்தாற்களிக்காமல்—புரியும்-பந்தப்படுத்துகின்ற—ஆசைவசம்போகாது-இச்சைவசத்திற்செல்லாமல்—இருக்கில் - இருப்பாயாயின்—நீசங்கம்போக்கினை-நீயேசங்கத்தைப்போக்கினவன். எ-று ....(௭௰)

(அ-கை.) இ - து. (கவி) சம்பத்தாபத்திரண்டினுநீ சமமாய்வந்ததனுசரிக்கி, னம்பற்சங்கமகன்றவனீ நாளுந்திரள்வத்துவிற்சமமாய், விம்பத்திதயச்சத்துவனாய் மேவும்பகுதித்திறமியற்றி, யிம்பர்ச்சங்கமறுத்தின்பமிசைவாயிராமவெனச்சொன்னான் .... *

(இ-ள்.) சம்பத்தாபத்திரண்டினும்- சுகதுக்கங்களாகியவிரண்டிலும்—நீசமமாய்-நீசமத்துவனாகி—வந்ததனுசரிக்கின் - வந்ததையனுசரித்தால்—நீநம்பற்சங்கம் - நீயாசையின்பெருக்கமாகியசங்கத்தை—அகன்றவன் - விட்டவன்—நாளும்-எப்பொழுதும்—திரள்வத்துவில்-திரண்டவஸ்துக்களில்—சமமாய் - சமத்துவமாக— விம்பத்திதயம் - பிரதிவிம்பமானவிருதயத்தில்—சத்துவனாய்-சாத்துவிதகுணத்தையுடையவனாய்— மேவும்பகுதித்திறமியற்றி - வராநின்றகாரியங்களைச்செய்து—இம்பர்ச்சங்கமறுத்து - இவ்விடத்திலுள்ளதிரிஸ்யசங்கத்தியாகஞ்செய்து—இராம - இரகுநாதா—இன்பமிசைவாயென - பிரமாநந்தத்தையடைவாயென்று—சொன்னான்-வசிஷ்டமுனிசொன்னார். எ-று. (இ-ரு-க-ம்) திரிஸ்யமுதற்சம்சாரபரியந்தமான விஷயசங்கத்தைநீக்கிச்சமதிருஷ்டியாற்பிரமாநந்தத்தையடையவேண்டுமென்பதாம்.....(௭௧)

உபசாந்திப்பிரகரணம் முற்றிற்று. ஆ கதை-௨அ௰, கவிதை (௩௱௭௧.)

புசண்டன் கதை.

(அ-கை.) முற்பிரகரணத்திற் சம்சாரமுதற் சத்தாசாமானியமுடிவின் மேலான துரியாதீதபரியந்தந் தெரிசிப்பித் திதிற்கற்பனையாகத்தோற்றின மனோசகத்தினுபசாந்தத்தைச்சொல்லி, யித்துரியாதீதமே சாக்ஷாத்காரமாக விளங்குவதையபரோக்ஷமாயறிவிக்குநிமித்தம்பதினைந்துகதைகளினு னிறைந்தநிருவாணப்பிரகரணஞ் சொல்லத்தொடங்கிக் காலாதீதமானஞானத்தையும் அஃது காரணமாகச்செய்யும் யோகத்தின்விசித்திரத்தையுந் தெரிவிக்கப் புசுண்டன்கதையை நிருபிக்கிறார்.. *

(அ-கை.) யாதினூற்றிருக்குதிருஷ்டியுண்டாய்த்திரிஸ்யநீங்குமெனின். (கவி) மீட்டுமுனைப்பான்றிசைகாலமறலான்மறைதலறவிளங்கி, யோட்டமிறத்தலடிமுடிவற்றொன்றாயறிவுமாத்திரமாய், நாட்டுபிரமமுளவேறொன்றில்லையென்றுள்ளேநாடிக், காட்டுநானென்பதுவிட்டுகாயமில்லாப்பெரியோனாய்.................................. *

(இ-ள்.) மீட்டுமுனைப்பான் - திரும்பவும்வசிஷ்டமுனிசொல்லுவார் — திசைகாலமறலால் - திக்குகளுங்காலங்களுமில்லாததால் — மறைதலறவிளங்கி - மறைப்பில்லாமற்ப்ரகாசித்து—ஓட்டமிறத்தல் - சலனமுமழிவும்—அடிமுடிவற்று-ஆதியந்தமின்றி — ஒன்றாய்-ஏகமாகியும்—அறிவுமாத்திரமாய்-சின்மாத்திரமாகியுமிருக்கின்ற—நாட்டுபிரமமுள - நிலையானபிரமமேயுள்ளது—வேறொன்றில்லையென்று-மற்றொருவஸ்துவுமில்லையென்று—உள்ளேநாடி- அகத்திற்சிந்தித்து—காட்டும்-காணுநின்ற(விஷயங்களை)—நானென்பதுவிட்டு-நானென்னும் (மகப்பாவத்தை)நீக்கி—காயமில்லா-தேகப்(பிரி)வில்லாத—பெரியோனாய்-சீவன்முத்தனாய். எ-று.....(௧)

(அ-கை) இ-து. (கவி) ஏகவுருவாயுபசாந்தமோனமெய்திநின்னுணர்விற், சோகமற்றசுகியாவாய்தொடரஞ்ஞானநினைவெம்மட், டாகும்பிரமபாவனைமேவாதம்மட்டும்புவிவலையிற், போகமயலெம்மட்டம்மட்டுளமாதியின்கற்பனைபொருந்தும் .... *

(இ-ள்) ஏகவுருவாய் - அத்துவிதஸ்வரூபமாய்—உபசாந்தமோனமெய்தி - உபசாந்தமாகியமௌனத்தையடைந்து - நின்னுணர்வில் - உனதாத்மஞானத்தில்—சோகமற்ற - துன்பமிறந்த—சுகியாவாய்-ஆநந்தத்தையடையக்கடவாய்— தொடரஞ்ஞானநினைவு - தொடராநின்றவஞ்ஞானநினைப்பு—எம்மட்டுமாகும்- எதுவளவுமாகியிருக்கின்றதோ—அம்மட்டும்-அதுபரியந்தம்—பிரமபாவனைமேவாது - பிரமபாவனையைப்பொருந்தாது—புவிவலையில் - ஜகஜாலத்

தில்—போகமயமெம்மட்டு- போகப்பிரமையெந்தமட்டுமிருக்கின்றதோ—அம்மட்டும்-அவ்வளவும்—உளமாதியின்-மனமுதலியவற்றின்—கற்பனைபொருந்தும்-கற்பனைகள்சேரும்-எ-று.உ

(அ-கை) இ-து. (கவி.) சித்தமாயைமனஞ்சீவனொன்றுமில்லைத்திகழ்பிரம, மொத்தவொன்றாய்ப்பெருங்கடல்போலுகண்டுவளருமுத்தமனே, பொத்தவுடலைநானெனலெம்மட்டுக்காணுமிப்பொருளில், வத்துவெனும்பாவனையெம்மட்டம்மட்டுளமாதியின்மயக்கம். *

(இ-ள்.) சித்தமாயைமனஞ்சீவன்-சித்தமுமாயையுமனமுஞ்சீவனுமாகியவிவைகள்—ஒன்றுமில்லை-ஒன்றாயினுமில்லை — திகழ்பிரமம் - ப்ரகாசிக்கின்றபிரமமானது—ஒத்தவொன்றாய்-சமத்துவமானவேகமாய்—பெருங்கடல்போல்-மகோததியைப்போல—உத்தமனே-உத்தமனானஸ்ரீராமா—உகண்டுவளரும்-பொங்கிவளர்ந்துகொண்டிருக்கும்—எம்மட்டு-எதுபரியந்தம்—பொத்தவுடலை-நவத்துவாரமுள்ளசரீரத்தை—நானெனல்-நானென்பதுவோ—எம்மட்டு-எதுவரையும்—காணும்-காண்கின்ற—இப்பொருளில் - இந்தத்திரிஸயங்களில் — வத்துவெனும்பாவனை- பொருளென்கின்றபாவனையிருக்கின்றதோ—அம்மட்டு - அதுவரையும்—உளமாதியின்மயக்கம் - சித்தமுதலானவைகளின்மயக்கமுள்ளதாம்-எ-று.................... (௫)

(அ-கை) இ-து. (கவி.) எனதீதென்னுமாலெம்மட்டம்மட்டுளமாதியின்மயக்க,மனகவுள்ளேமுகமாகியதனான்மும்மையுலகென்னுங், கனமிறுரும்பையறிவனலிலோமஞ்செய்யிற்கார்வண்ணா, மனனைமுதலாமயக்கங்களவனுளென்றும்வாராதே.................... *

(இ-ள்.) ஈதெனதென்னும்-இதுவெனதென்கின்ற—மாலெம்மட்டு - ஆசையெவ்வளவோ—அம்மட்டு-அந்தமட்டும்—உளமாதியின்மயக்கம் - சித்தமுதலானமயக்கமாம்—அனகவுள்ளேமுகமாகியதனால்-மாசற்றவகமுகமாகியவதனால்—மும்மையுலகென்னும்-மூன்றுலகமென்கின்ற—கனமிறுரும்பை-பழுவில்லாததிரணத்தை—அறிவனலில்- ஞானாக்கினியில்—ஓமஞ்செய்யில் - ஆகுதிசெய்தால்—கார்வண்ணா - மேகவண்ணனே—மனனைமுதலாமயக்கங்கள் - சித்தமுதலானபிரமைகள்—அவனுளென்றும்வாராது - அவனிடத்தெப்போதும்வரமாட்டாது - எ-று. (இ-ச-க-ம்) ஒன்றினாலும்மறைவுபடாமற்சுயமாய் ப்ரகாசிக்கின்றஞானமேபிரமமென்னுஞ்சுபாவதிருஷ்டியினாற்சுகிக்கிற்பிரமம்ப்ரத்யக்ஷமாயஞ்ஞானமுதலிய கற்பனைகள்யாவுங்கெடுமென்பதாம்.................... (௬)

(அ-கை) அவ்வனுபவிக்கடையாளம்யாதெனின். (கவி.) படர்சித்துருவாய்ப்பிறிவிலனாய்ப்பாராபாரம்பற்றிலனாய்த், திடமுற்றுனதுகனவடிவைநினைசங்கற்பஞ்சேராதே, கடனுவுயிர்கொல்லுறுபகைவன்கருத்தில்வஞ்சமிலாநட்பிற், றொடர்பானவனேயெனக்காணுமவனேகண்டோன்றூய்தாக.................... *

(இ-ள்.)படர்சித்துருவாய்-வளராநின்றஞானஸ்வரூபமாய்—பிறிவிலனாய்-அகண்டனாய்—பாரம்-அந்தவரம்பும்—அபாரம்-இந்தவரம்பும்—பற்றிலனாய் - பற்றுதவனாய்—திடமுற்று-திடத்தைப்பொருத்தி—உனதுகனவடிவைநினை-உனதுவியாபகஸ்வரூபத்தைச்சிந்திப்பாய்—சங்கற்பஞ்சேராது-சங்கற்பத்தையடையாது—கடனுவுயிர்கொல்லுறு-கடனாகவுயிரைக்கொலைசெய்கின்ற—பகைவன் - சத்துருவை— கருத்தில்வஞ்சமிலாநட்பில்-மனதில்வஞ்சகமில்லாதசினேகத்தில்—தொடர்பானவனேயென - உறவானவனேயென்று—காணுமவனே- பார்ப்பவனே—தூய்தாக-பரிசுத்தமாக—கண்டோன் - (ஆத்மாவைத்) தரிசித்தவன்—எ-று. (இ-ம்) பகையையுறவாகக்காண்பதேகுறியென்பதாம்.................... (௭)

(அ-கை) ஆயினுறவுகூடுமோவெனில் (கவி.) வேரினோடுகரையின்மரம்வீழ்க்குநதியைப்போனண்புஞ், சீரிலாதமச்சரமுஞ்சிதைத்தோர்மகிழ்வுபொருமைகளாற், சாருமேதமறுத்தவராந்தனித்தத்துவநூலுடன்பாவித், தோருவார்காதலைக்கடிதலுதித்தகதிர்கங்குலையொழித்தல்.................... *

(இ-ள்.) கரையின்மரம் - கரையிலிருக்கின்றவிருட்சத்தை—வேரினோடு -வேரோடும்—வீழ்க்குநதியைப்போல்-தள்ளுகின்றவாற்றைப்போல—நண்பும்-(விஷய) விச்சையும்—சீரிலாதமச்சரமும்-நன்மையில்லாதமாச்சரியத்தையும்—சிதைத்தோர்-கெடுத்தவர்கள்—மகிழ்வு-மகிழ்ச்சியினாலும்—பொருமைகளால் - அழுக்காறுகளினாலும்—சாருமேதம் - பொருந்தாநின்றகுற்றத்தை—அறுத்தவராம் - கெடுத்தவராகும்—தனித்தத்துவநூலுடன்பாவித்து - ஒப்பற்றதத்துவஞானசாஸ்திரங்களையுள்ளேபாவனைசெய்து—ஓருவார்-(ஆராய்ந்தறிபவர்கள்—காதலைக்கடிதல் - ஆசையைக்கெடுத்தல்—உதித்தகதிர்-உதயமானசூரியன்—கங்குலையொழித்தல்-இருளைக்கெடுத்தலுக்கொப்பாம்-எ-று. (இ-ம்.) பகையையுமுறவையுங்கெடுக்கல்இச்சாதியாகம்வரு,மென்பதாம்.................... (௮)

(அ-கை) இச்சாசஞ்சலநீங்குவதெங்ஙனமெனில். (கவி.) பற்றத்தருவாக்கியப்பொருளைப்
பயிறன்னெஞ்சாற்பாவித்தோர்க், குற்றுப்புகல்சொற்றிரளுள்ளேயொடுங்கும்வெந்தநில
நீர்போற், கற்றுப்பரமப்பொருணோக்கார்கண்ணாமறிவைக்கண்டறியார், வற்றத்திரணம்
போல்வாளாதிரிவர்மனச்செய்கையிலெவரும்.......... *

(இ-ள்.) பற்றத்தகு-பிடிக்கத்தகுந்த—வாக்கியப்பொருளை - (ஆப்த) வாக்கியார்த்தத்தை—பயிறன்னெஞ்சால் - சொல்லப்பட்டதன்மனதினால்—பாவித்தோர்க்கு - பாவனைசெய்தவர்களுக்கு—உற்றுப்புகல்- பொருந்திச்சொல்லுகின்ற—சொற்றிரள் - வாக்கியசமுகங்கள்—வெந்தநிலநீர்போல் - வெந்தபூமியின்சலத்தைப்போல— உள்ளொடுங்கும் - மனதிலடங்கும்— கற்று - அப்பியாசித்து—பரமப்பொருள் - பிரமவஸ்துவை—நோக்கார்- தரிசியாதவர்கள்—கண்ணாமறிவை - கண்ணாகியஞானத்தை— கண்டறியார் - தரிசியாதவர்கள் — எவருமனச்செய்கையில் - யாவருமனோவிருத்தியில்— வற்றத்திரணம்போல்வாளாதிரிவர் - உலர்ந்ததுரும்புபோல வீணாகச்சுழலுவார்கள்—எ-று. (இ-ம்) மகாவாக்கியார்த்தங்களைக்குருமுகமாய் விசாரிக்கின்ஞானமுதித்துமனோசஞ்சலநீங்குமென்பதாம்..........(௭)

(அ-கை.) யாவருமேன்விசாரணைசெய்யவில்லையெனில். (கவி.) இனையயாருமிந்தவறிவிற
வாதிருக்கவீதறிய, வினையமின்றிமிகச்சோர்ந்தார்வீணர்செருக்குமிகுமுரப்பு, முனையி
ல்வின்னாணையைப்போன்மூடர்கேட்பதிறப்பதற்கே, யனையர்வீணாட்கழிப்பதலால
றியாவறிவையறியாரே.......... *

(இ-ள்.) இனையயாரும்-இப்படிப்பட்டசகலரும்—இந்தவறிவு-இந்தஞானம்—இறவாதிருக்க - கெடாமலிருக்க—ஈதறியவினையமின்றி- இதையறியக்கருத்தில்லாமல்—மிகச்சோர்ந்தார்-மிகவும்வாடினார்கள்—வீணர்செருக்கும் - வீணர்களுடையமமதையும்—மிகுமுரப்பும் - மிகுந்தவதட்டுதலும் — முனையில் - யுத்தகளத்தில் — வின்னாணையைப்போல் - விற்கயிற்றின்றொனியைப்போல—மூடர் - மூடர்களிடத்தில்— இறப்பதற்குக்கேட்பது - கெடுதற்குக்கேட்கின்றது—அனையர்வீணாட்கழிப்பதலால்-அம்மூடர்கள்வீணாக(வாழும்) காலத்தைக்கழிப்பதேயன்றி—அழியாவறிவையறியார் - கெடாதஞானத்தையுணரார்கள்—எ-று. (இ-ம்) அறிவுப்ரத்யக்ஷமாயிருந்துமறியாமையால் விசாரிக்கவில்லையென்பதாம்..........(௮)

(அ-கை.) ஆசிரியரறியாமையை நீக்கலாமேயெனின். (கவி.) ஆயமூடர்க்களித்தபொரு
ளளற்றில்வீழ்ந்தபொருளொக்குந், தீயவவரோடுரைத்தவுரைசேணைநோக்கிநாய்குரைத்
தன், மேயமடமாபத்தினிடமெய்ம்மையுணரார்க்கெவ்வாபத், தேயவணுகாதிம்மாயை
யெழுவதறிவிலோர்க்கருளால்.......... *

(இ-ள்.)ஆயமூடர்க்கு-அப்படியானமூடர்களுக்கு—அளித்தபொருள்-கொடுத்த(வாக்கி)யார்த்தம்—அளற்றில்வீழ்ந்த - சேற்றில்விழுந்த—பொருளொக்கும்-வஸ்துவுக்குச்சமானமாகும்—தீயவவரோடு - தீமையையுடையவவர்களுக்கு—உரைத்தவுரை - சொல்லியவாக்கியம்—சேணைநோக்கி - ஆகாயத்தைப்பார்த்து—நாய்குரைத்தல் - ஞாளிகுலைத்தலாம்—மேயமடம்-பொருந்தியவஞ்ஞானம்—ஆபத்தினிடம்-ஆபத்திற்காதாரமாம்—மெய்ம்மையுணரார்க்கு-உண்மையையறியாதவர்களுக்கு—எவ்வாபத்து - எந்தவாபத்து—ஏயவணுகாது - பொருந்தவரமாட்டாது—இம்மாயை - இந்தமாயையானது—அறிவிலோர்க்கு - அறிவில்லாதவர்களுக்கு—அருளால் - கிருபையினால்—எழுவது - உண்டாகுவதாம்—எ-று. (இ-ம்) விவேகமின்மையாற்போதித்தும்பயன்படாவென்பதாம்..........(௯)

(அ-கை.) விவேகாவிவேகிகளினிலக்கணம்யாதெனில்.(கவி)மெல்லிதாகிக்குளப்படி
யாய்விவேகபுந்திக்காமுலக, மல்லலாகிக்கரைகாணாவாழமாகுமறிவில்லோர்க், கெ
ல்லையிலதாயறிபொருளாலெண்ணப்படாதாய்ச் சாந்தமுமாய்ச், சொல்லுமெல்லா
மாய்நினைவுதோன்றாச்சற்சிற்சுகமுண்டாம்.......... *

(இ-ள்.) உலகம் - சகமானது —விவேகபுந்திக்கு - ஞானிகளறிவுக்கு — மெல்லிதாகி-அற்பமானதாய்—குளப்படியாம் - (பசுவின்) குளப்படியாகவாம்—அறிவில்லோர்க்கு- அஞ்ஞானிகளுக்கு—அல்லலாகி - துன்பமாய்—கரைகாணாவாழமாகும் - கரைகாணாதவாழமாம்—எல்லையிலதாய் - அளவில்லாததாயும்—அறிபொருளால் - விஷயங்களினால்—எண்ணப்படாதாய் - எண்ணுதற்கரிதாயும்—சாந்தமுமாய் - உபசாந்தமாயும்—சொல்லுமெல்லாமாய் - சொல்லப்பட்டசகலமுமாயும்—நினைவுதோன்றா - நினைவுதோற்றாததாயுமிருக்கின்ற— சற்சிற்சுகமுண்டாம் - சச்சிதாநந்தஸ்வரூபமேயுண்டாயிருக்கும். எ-று. (இ-ம்) இவ்வுலகம் அவிவேகிக்ககண்டமாயும் விவேகிகளுக்கற்பமாயுஞ் சச்சிதாநந்தமாயும்விளங்குமென்பதாம்..........(௰)

(அ-கை.) இச்சகத்துண்டாகுங்கிரமமியாதெனில். (கவி.) சான்றவதினின்றோ ரறிவுதா னேவிகாரவுருவாகித், தோன்றிநுண்மை மத்தியமே தூலமென்றுங்கற்பிக்க, மூன்றுவ கையாய்ச்சாத்விதராசததாமதமுக்குணமாகு, மூன்றுவகையாம்பகுதிபலவுயிர்க்குப்பி றவிதருமிதுவே.. *

(இ-ள்.) சான்றவதினின்று-சாட்சியானவச்சச்சிதாநந்தத்திலிருந்து—ஓரறிவு-ஓர்போதமா னது—தானேவிகாரவுருவாகி-தானேவிகாரவடிவமாய்—தோன்றி - உண்டாகி— நுண்மை-சூ ட்சுமமென்றும்—மத்தியம் - நடுவென்றும்—தூலமென்றும் - தூலமென்றும்—மூன்றுவகை யாய்க்கற்பிக்க-மூன்றுவிதமாயுண்டாக்க—சாத்விதம்- சத்துவமென்றும்—ராசதம் - இராசத மென்றும்—தாமசம்- தாமசமென்றும்—முக்குணமாகும் - மூன்றுகுணமாகும்—பலவுயிர்க் கும்-அநேகசீவர்களுக்கும்—ஊன்று-சார்ந்த —மூன்றுவகையாம்பகுதி-இம்மூன்றுவிதமான வவித்தையான—இதுவே-இதுதானே—பிறவிதரும்-சநநத்தைக்கொடுக்கும்—எ-று. .....(௰௧)

(அ-கை.) இ-து. (கவி.) இதனின்முடிவேபரமபதமியன்முக்குணமுமும்மூன்று, விதம தாயொன்பதுகூறும்விரிந்தவவிஞ்ஞைசக்குணவடிவே, சிதறுமிதிற்சத்துவக்கூறுதிரண்ட விருடிமுனிசித்த, ரதிகநாகர்விஞ்ஞையர்களண்டர்முதலாநல்லுயிர்கள்...... .... *

(இ-ள்.) இதனின்முடிவே - இந்தவவித்தையினுசமே— பரமபதம் - பிரமபதமாகும்— விரித்தவவிஞ்ஞை- மிகுந்தவவித்தையினது—குணவடிவே - குணரூபமேயாம்—இயன்முக்கு ணமும் - இயல்பாகியமூன்றுகுணமும்—மும்மூன்றுவிதமதாய்-(ஒவ்வொன்று) இம்மூன்றுவி தமாக—ஒன்பதுகூறும்-ஒன்பதுபங்காகும்— சிதறுமிதில் - சிதறுகின்றவிந்தவவித்தையில்— சத்துவக்கூறு-சாத்துவிதத்தின்பங்கு—திரண்டவிருடி-கூட்டமாயிருக்கின்றவிருடிகளும்—மு னிசித்தர்-முனிகளுஞ்சித்தர்களும்—அதிகநாகர் - மிகுந்தநாகர்களும்—விஞ்ஞையர்கள்- வித்தி யாதரர்களும்—அண்டர்முதலாநல்லுயிர்கள்-தேவர்கள்முதலியநன்மையானசீவர்களாம்-எ-று.

(அ-கை.) இ-து. (கவி.) ஓதுமிச்சாத்திகக்கூற்றினுறுதாமதம்விஞ்ஞையர்நாகர், பேதமு றுராசதமாகும்பிறந்தமுனிவர்சித்தரொலாந், தீதிலாதசத்துவமாந்தேவர்சிவனைமுதலோ ரா, மீதவிஞ்ஞைசப்பயில்கூற்றினிடையேவிஞ்ஞைத்திறமடைந்த...... .... *

(இ-ள்)ஓதும்-(முன்)சொல்லப்பட்ட—இச்சாத்திகக்கூற்றின் -இந்தச்சாத்திகத்தின்பங்கில் —உறுதாமதம்-பொருந்துகின்றதாமதத்தின்பங்கு—விஞ்ஞையர்நாகர்- வித்தியாதரருநாகர்க ளுமாம்—பேதமுறு-பேதம்பொருந்திய—ராசதம்- இராசதத்தின்பங்கு—பிறந்தமுனிவர்சித் தரொலாம்-உண்டானமுனிவர்களுஞ்சித்தர்களனைவருமாம்— தீதலாதசத்துவம்-குற்றமற்றசாத் துவிதத்தின்பங்கு—தேவர்சிவனைமுதலோராம் -தேவரானசிவன்முதலானவர்களும்—ஈதவிஞ் ஞை-இதுவவித்தையின்—பயில்கூற்றினிடை- சொல்லப்பட்டபங்கினிடத்தில்—விஞ்ஞைத்திறம டைந்த-வித்தையின்றன்மையடைந்தனவாம்—எ-று.. (௰௩)

(அ-கை.) இ-து. (கவி) ஆசில்சுத்தசத்துவமாமவிஞ்ஞைக்கூறுவிஞ்ஞையெனப், பேசுமது வாமிராசதமும் பிரிதாமதமுமும்மூன்ருய், வீசுசிருட்டியுடைத்தென்பர் மிகுதாமதஞ் சேர்புந்தியர்க்கு, நீசமரந்தாபரமாதிநிறையஞ்ஞானவுடல்பெறுமே .... *

(இ-ள்.) ஆசில்சுத்தசத்துவமாம் - குற்றமற்றசுத்தசாத்துவிதகுணமான — அவிஞ்ஞைக் கூறு - அவித்தையின்பங்கு — விஞ்ஞையெனப்பேசுமதுவாம் - வித்தையென்றுசொல்லப்ப ட்டதுவாம்—இராசதமும் - இராசதகுணமும் — பிரிதாமதமும் - பிரிந்ததாமதகுணமும்— மும்மூன்ருய் - மூன்றுமூன்ருக—வீசுசிருட்டி- வீசாநின்றசிருஷ்டியை — உடைத்தென்பர்- உடையதென்றுசொல்லுவார்கள்—மிகுதாமதஞ்சேர் - மிகுந்ததாமதத்தையுடைய— புத்திய ர்க்கு - புத்தியையுடையவர்களுக்கு—நீசமரந்தாபரமாதி - இழிவானவிருக்ஷமுதலிய — நிறை யஞ்ஞானவுடல்பெறும்-நிறைந்தவஞ்ஞானசரீரத்தைப்பெறும்.எ-று.(இ-ச-க-ம்)சைதன்யத்தி லோர்ஸ்புரணமுண்டாகஅப்போதறிவறியாமைகட்டியதின்மூன்றுகுணமுண்டாயதின்வித்தை யின்சுத்தசத்துவத்தின் சிவன்முதலியஈஸ்வரர்களும் அவித்தையின்சத்துவத்தில்இருடிமுதலிய சீவர்களும்அதனிராசதத்தின்முனிவர்முதலியோரும் அதன்றாமதத்தினரகர்முதலியோருமிரா சசதாமசமாதிற்றத்றவங்களுந்தாமதத்திற்றாமதந்தாபரவுடல்களுமாயுண்டாமென்பதாம்.௰௪

(அ-கை.) அறிவுதருவாயஞ்ஞானமிகுந்ததெங்ஙனமெனினதற்குத்தரங்கூறல்.(கவி) எனவோதலுந்தாபரமாதியாக்கைமேவியஞ்ஞானங், கனமாயிருப்பதெங்ஙனெனக் கரியோன்கேட்பமுனிசொல்வான், மனமின்மைதானற்று மனமற்றுண்டில்லை யென, வினவுநடத்தமெனுமுருவைமேவிதித்குமிவ்வறிவே.................................... *

(இ-ள்.) எனவோதலும்-(இப்படி) யென்றுவசிஷ்டமுனிசொல்லவும்— தாபரமாதி-விருக்ஷமுதலாகிய—ஆக்கைமேவி-சரீரத்தைப்பொருந்தி — அஞ்ஞானங்கனமாயிருப்பது - (அறிவு) அஞ்ஞானமிகுந்திருப்பது—எங்ஙனென-எப்படியென்று—கரியோன்கேட்ப-மேகநிறத்தையுடையஸ்ரீராமர்கேட்க—முனிசொல்வார்-வசிஷ்டமுனிசொல்லுவார்—மனனமின்மைதானற்று-மனனமில்லாததுமிறந்து—மனனமற்று-மனனமுமிறந்து —உண்டில்லையென- சத்தசத்தென்ன—வினவு-சொல்லாநின்ற—தடத்தமெனுமுருவை - மத்தியகதமென்கின்ற (மூர்க்க) வடிவத்தை --இவ்வறிவு-இந்தவறிவு—மேவிநிற்கும்-பொருந்தியிருக்கும். எ-று ....(௯௫)

(அ-கை.) இ-து. (கவி) சொன்னவறிவுதாவரத்திற்றுயில்செய்புரியட்டகமுளதா, வின்ன
லின்றியூமைகுருடென்னலாகிச்சடம்போலாய், முன்னுசத்தாமாத்திரத்தினிற்குமென்ற
முனிவரனைப், பின்னுமிராமனன்பினொடும்பேணியிதுதான்வினவிடுவான் .... *

(இ-ள்.) சொன்னவறிவு-முன்சொல்லியஞானமானது —தாவரத்தில்-விருக்ஷத்தில்—துயில்செய்-நித்திரைசெய்கின்ற—புரியட்டகமுளதா- புரியட்டக(சரீர)முள்ளதாக—இன்னலின்றி-துன்பமில்லாமல் — ஊமைகுருடென்னலாகி - ஊமையன் குருடனென்றுசொல்லுவதாய் —சடம்போலாய் - சடத்தைப்போலாகி—முன்னுசத்தாமாத்திரத்தில் - நினைக்கின்றசத்தாமாத்திரத்தினால்— நிற்குமென்றமுனிவரனை - இருக்குமென்றுசொல்லியவசிஷ்டமுனியை—பின்னுமிராமன் - திரும்பவுமிராமரானவர்—அன்பினொடும்பேணி - அன்புடன்விரும்பி—இதுதான் வினவிடுவான்-இதைக்கேட்பார். எ-று. (இ-உ-க-ம்) அறிவுதன்னையறியாமையாலஞ்ஞானமயமாயதற்கடுத்தவிருக்ஷவடிவம்பெற்றுச் சத்திலிருந்ததென்பதாம் .... (௯௬)

(அ-கை.)சத்திலறிவடங்கித்தாபரமாயிருத்தலினதுவேசீவன்முத்தனுமெனிலதற்கு உத்த
ரங்கூறல். (கவி) சத்தையொருமையாய்ப்போதந்தாபரங்கடனினிற்கி, லித்தைமுத்தியெ
னநினைக்கேனென்னமுனிவனிதற்கிசைப்பான், புத்தியாலேயிதுநாடிப் பொய்யில்பொரு
ளின்காட்சியினு,லொத்தசத்தாசாமானியத்தையுணர்தலுறுதலுயர்முத்தி .... *

(இ-ள்.) சத்தையொருமையாய்- சத்தையினொற்றுமையாக—போதம்-ஞானமானது—தாபரங்கடனினிற்கில் - தாபரங்களினின்றால்— இத்தைமுத்தியென - இதைமோக்ஷமென்று—நினைக்கேனென்ன - நினைக்கின்றேனென்றிராமன்சொல்ல — முனிவன் - வசிஷ்டமுனியானவர் சொல்ல—இதற்கிசைப்பான் - இதற்குச்சொல்லுவார்—புத்தியால் - அறிவினால்— இதுநாடி-இந்தச்(சகத்தை)விசாரணைசெய்து—பொய்யில்பொருளின்- நித்தியவஸ்துவினது—காட்சியினால்-தரிசனத்தினால்— ஒத்தசத்தாசாமானியத்தை - பொருந்தினசத்தாசாமான்யபதத்தை—உணர்தலுறுதல்-அறிதலையடைதல்—உயர்முத்தி-மேலானமோக்ஷமாம். எ-று ....(௯௭)

(அ-கை.) இ-து. (கவி) கொத்தாகியவாதனைமுற்றுங்குறிக்கொண்டறிந்துகைவிட்டு, சத்
தாசாமானியவடிவமானாற்றனிவீடதுவென்ப, மொத்தாரியரோடுசாவியுநூ லுணர்ந்து
முணர்வொன்றையும்பாவித், தத்தாற்சத்தாசாமானியந்தானாகுமதுவீடே .... *

(இ-ள்.) கொத்தாகியவாதனைமுற்றும்- திரளானவாசனைகண்முழுதையும்—குறிக்கொண்டறிந்துகைவிட்டு - குறிப்பாகவறிந்துநீக்கி—சத்தாசாமானியவடிவமானால்- சத்தாசாமானியஸ்வரூபமானால்—அதுதனிவீடென்பர் - அதுவேதனித்தமோக்ஷமென்றுசொல்லுவார்கள்—ஒத்தாரியரொடு-பொருந்தியவாசாரியருடன்—உசாவியும்-ஆராய்ந்தும் — நூலுணர்ந்தும்-(ஞான)நூலையறிந்தும்—உணர்வொன்றையும்பாவித்து- ஆத்மஞானமொன்றைமாத்திரஞ்சிந்தித்து—அத்தால் - அதனால்—சத்தாசாமானியந்தானாகும் - சத்தாசாமானியமேதானாகும்—ஆகுமதுவீடே - (அப்படி) யானதுவேமோக்ஷமாம். எ - று. (இ-உ-க-ம்) வாசனைநீங்கிச் சுருதிகுருசுவானுபவத்தினாலாத்மஞானத்தை யறிந்து சத்திலயிக்கியமாய்விளங்குமாயினது வேமுத்தியென்பதாம் .... (௯௮)

(அ-கை.) இவ்வறிவுவாசனையோடுமடங்கினிற்றலிற்பவமுண்டாமெனல். (கவி) துயிலையு
ள்ளேயுறுமந்தமாகும்விதையூடுறுமுளைபோற், பயில்வாதனைகள்சுழுத்தியதாம்படருஞ்
சென்மம்பலகொடுக்குஞ், செயிர்செய்மனனமுள்ளிறந்துசெறிவாதனைக டுயில்சுழுத்தி,
குயிலுஞ்சடமாந்திறத்தாலேகொடியபிறவித்துயரளிக்கும் .... *

(இ-ள்.) விதையூடுறு - வித்துக்குள்ளடங்கிய—முளைபோல்-அங்குரத்தைப்போல—பயில்வாதனைகள் - சொல்லப்பட்டவாசனைகளானவை — உள்ளேதுயிலையுறும் - அகத்தினித்திரையைப்பொருந்தும்—மந்தமாகும் - மந்தமாம்—சுழுத்தியதாம் - (அதுவே) சுழுத்தியவத்தையுமாம்— படரும்பலசன்மங்கொடுக்கும் - வளராநின்றவநேககசநநங்களைத்தரும்— செறிவாதனைகள் - மிகுந்தவாசனைகள்—துயில்சுழுத்தி - நித்திரையானசுழுத்தியவத்தையில்— குயிலுஞ்

சடமாந்திறத்தால் - சொல்லாநின்றசடமா (யடங்கும்) காரணத்தினால்—கொடியபிறவித்துப ரளிக்கும் - கொடியசநநதுன்பத்தைக்கொடுக்கும். எ-று ... . (௰௯)

(அ-கை.) இ-து. (கவி.) தாவரங்களிவையெல்லாஞ்சடமாந்திறமாஞ்சுழுத்தியினை, மேவ
லுற்றமேன்மேலும்பிறத்தற்குரித்தாம்விதைகளிலே, பூவுமண்ணினுட்கடமும்பொருந்
துமதுபோலங்கவற்றி, லோவதில்லவாதனைகளுறுதாவரங்களிடைநிற்கும்...... ....*

(இ-ள்.) தாவரங்களிவையெல்லாம்-விருக்ஷங்கண்முதலியவிவைகளியாவும்—சடமாந்திற மாம் - சடத்தன்மையுள்ளதாம்—சுழுத்தியினை - சுழுத்தியை—மேவலுற்றும்- அடைந்தும்—மேன்மேலும்-மேலுமேலும்—பிறத்தற்குரித்தாம்-செனித்தற்குரியதாகும்— விதைகளிலேபூவும் - வித்துகளிற்புட்பமும்—மண்ணினுட்கடமும் - மண்ணுக்குட்கடமும்— பொருந்துமது போல்-பொருந்துவதைப்போல—ஆங்கவற்றில்-அவ்விடத்தவைகளில்—ஓவதில்லாவாதனைகள்-ஒழிவில்லாவாசனைகள்—உறுதாவரங்களிடைநிற்கும்- பொருந்தியவிருக்ஷங்களிடத்திலிருக்கும்.

(அ-கை.) இ-து. (கவி.) அகல்வாதனையின்வித்தானவந்தச்சுழுத்திவீடளியாப், புகல்வித்
தல்லாவாதனையேதுரியம்பொன்றுவீடளிக்கு,மிகல்வாதனைதீக்கடனோய்நஞ்சிறைஞ்சார்
கோபநேயமிவை, மிகவேண்டாஞ்சற்றேனுமிக்கவருத்தஞ்செய்திடுமே ....*

(இ-ள்.) அகல்வாதனையின்வித்தான - விசாலம்பொருந்திய வாசனையின்விதையாகிய—அந்தச்சுழுத்தி - அச்சுழுத்தியானது—வீடளியா-மோக்ஷத்தைக்கொடாது—புகல்வித்தல்லா- சொல்லாநின்றவிதையல்லாத—வாதனையே துரியம்-(சுத்த) வாசனையே துரியமாகும்—பொன்றுவீடளிக்கும்-கெடாதமோக்ஷத்தைக்கொடுக்கும்—இகல்வாதனை-பகையான(அசுத்த)வாசனையும்—தீ-தீயும்—கடன்-கடனும்—நோய்-வியாதியும்—நஞ்சு-விஷமும்—இறைஞ்சார்-சத்துருவும்—கோபம்-கோபமும்—நேயம்-அன்புமாகிய—இவைமிகவேண்டாம்-இவைகணிரம்பவும் வேண்டியதில்லை—சற்றேனும்-கொஞ்சமாயினும்—மிக்கவருத்தஞ்செய்திடும் - மிகுந்தவருத்தத்தைக்கொடுக்கும். எ-று. (இ-ரு-க-ம்) அறிவானது முன்புள்ள விஷயவாசனையோடுஞ்சுழுத்தியிலடங்கியிருக்கும் அசுத்தவாசனையைநீங்கித் துரியமாகவிளங்கிடின் முத்தியேயாமன்றி யின்றாகாவென்பதாம்... (உக)

(அ-கை.) சுயஞ்சித்தாய்விளங்கியவறிவைத் தரிசிக்கவேண்டுமெனல். (கவி) தடைவாத
னையின்விதைசுட்டுச்சத்தாசாமானியரூப, முடையோராநோர்க்குடலிருந்துமொழிந்து
ம்பின்னைத்துயரணுகா,வடைசிற்சத்திவாதனைவித்துருவாந்துயிலேயதற்கியல்பாங்,கடை
யிலறிவைக்காணுமையவிஞ்சையென்பர்கலைவல்லோர் ....*

(இ-ள்.) தடைவாதனையின்-அசுத்தவாசனையின்—விதைசுட்டு-வித்தாகியவஞ்ஞானத்தைதெரித்து—சத்தாசாமானியரூபம் - சத்தாசாமானியவடிவத்தை — உடையோரானோர்க்கு-உடைத்தானவர்களுக்கு—உடலிருந்தும்-சரீரமிருந்தும்—ஒழிந்தும்- நீங்கியும்—பின்னைத்துயரணுகா-பின்புதுன்பநெருங்காது—அடைசிற்சத்தி-அடையாநின்றசிற்சத்தியானது—வாதனை-வாசனாரூபமும்—வித்துருவாம்-(அதன்)வித்தாகிய (அஞ்ஞான) வுருவமுமாம்—துயிலே-நித்திரையே—அதற்கியல்பாம்-அச்சிற்சத்திக்கியல்பாகும்— கடையில் - முடிவில்லாத—அறிவைக்காணுமை-ஞானத்தைத்தரிசியாததே—கலைவல்லோர் - கலைஞானத்தில்வல்லமையையுடையசத்துக்கள்—அவிஞ்சையென்பர்-அவித்தையென்றுசொல்லுவார்கள். எ-று .... (உஉ)

(அ-கை.) அவித்தையைக்கெடுக்குமுபாயமுரைத்தல். (கவி) அவிஞ்சைதன்னின்
முதற்கூற்றலயற்கூற்றிரண்டுமோருணர்வாற், றவிர்ந்துபோமட்டுஞ்சுட்டுச் சலன
மின்றிபொன்றுவாய், நிவந்தபிரமமிதுவல்லவென்னுமறுதிநீடவிஞ்சை,யுவந்தபிர
மமிதுவென்னுமறுதியவிஞ்சையொழிந்ததுவே ....*

(இ-ள்.) அவிஞ்சைதன்னின்-அவித்தையினது—முதற்கூற்றல்-முதலினுள்ளசத்துவப்பங்கினால்— அயற்கூற்றிரண்டும்- அடுத்தவிராசசதாமசமென்னுமிரண்டுபங்கையும்—ஓருணர்வால்-ஒப்பற்றஞானத்தினால்—தவிர்ந்துபோமட்டுஞ்சுட்டு-ஒழிந்துபோமளவுமெரித்து— சலனமின்றியொன்றுவாய்-சஞ்சலமில்லாமலேகமாவாய்—நிவந்தபிரமம் - உயர்வுள்ளபிரமமானது—இதுவல்லவென்னுமறுதி-இச்சகமல்லவென்கிறநிச்சயமே—நீடவிஞ்சை - நீண்டவவித்தையாம் —உவந்தபிரமமிதுவென்னுமறுதி - மகிழ்ந்தபிரமமேயிச்சகத்தென்னுநிச்சயமே — அவிஞ்சையொழிந்ததுவே-அவித்தையொழிந்தவீடாம். எ-று. (இ-உ-க-ம்) வாசனையைக்கெடுத்துச் சர்வம்பிரமமயமென்னுமனுபவத்தினாலஞ்ஞானங்கெடுமென்பதாம்.. .... (உ௩)

(அ-கை.) விருக்ஷத்தின்சுழுத்தியனுபவத்தைநீக்கிச் சிவன்முதலியோர் ஸ்வானுபவத்தை
த்தரிசிப்பித்துதன்மயமாக்கததொடங்கல். (கவி) தக்கன்முதலாந்தேவர்க்குநாரதாதியிரு

டிகட்கு, மிக்கநிமலவிதயத்தின்மேவுமறுதியுனக்குறுகத், தக்ககுமாராவெனுமுனியைச்
சங்கராதியென்றவிவர், துக்கமேவாநிச்சயமென்சொல்வாயென்னமுனிசொல்வான்.... *

(இ-ள்.) நக்கன்முதலாந்தேவர்க்கும் - சிவன்முதலாகியதேவர்களுக்கும்—நாரதாதியிருடிகட்கும்-நாரதர்முதலியவிருடிகளுக்கும்—மிக்கநிமலவிதயத்தில்- மேலாகியநின்மலமனதில்—மேவுமறுதி-பொருந்தாநின்றநிச்சயமானது—தக்ககுமாரா- தகுந்த(பெருமையையுடைய) குழந்தாய்—உனக்குறுக-உனக்குப்பொருந்தக்கடவது—எனுமுனியை-என்றருளியவசிஷ்டமுனியை—சங்கராதியென்றவிவர் - சங்கரர்முதலாகச்சொல்லப்பட்டவிவர்கள்—துக்கமேவா-துன்பத்தைப்பொருந்தாத—நிச்சயமென்-நிலையென்ன—சொல்வாயென்ன - சொல்லுவாயென்று (ஸ்ரீராமன்)கேட்க—முனிசொல்வான்-வசிஷ்டமுனிசொல்லுவார்—எ-று ....(௨௪)

(அ - கை.) அவர்கணிச்சயஞ் சர்வம்பிரமமயமாயிருத்தல். (கவி.) கிஞ்சிலாகிவிரிந்துசக
த்திரளாய்க்கிளைத்தவிவையெல்லாம், விஞ்சுபிரமமேயறிவுபிரமமேதினிப்பிரமம், பஞ்ச
பூதம்பிரமநாம்பிரமநமதுபகைபிரமந், தஞ்சநட்புக்கிளைபிரமஞ்சங்கராதிநிச்சயமே.*

(இ-ள்.) கிஞ்சிலாகி-அற்பமாகியும்—விரிந்து-விஸ்தாரமாகியும்—சகத்திரளாய்-உலகத்தின்கூட்டமாகி—கிளைத்தவிவையெல்லாம்-உண்டானவிச்சகலமும்— விஞ்சுபிரமமே-களங்கமற்றபிரமமாம்—அறிவுபிரமமே-ஞானமும்பிரமமே— மேதினிபிரமம் - உலகமும்பிரமமாம்—பஞ்சபூதம்பிரமம்-ஐந்துபூதமும்பிரமமாம்—நாம்பிரமம்-யாமும்பிரமமாம்—நமதுபகைபிரமம்-நமதுசத்துருபிரமமாம்—தஞ்சநட்புக்கிளைபிரமம்-பெருமைபொருந்திய சினேகிதருஞ்சுற்றத்தாரும்பிரமமா(மென்பது)—சங்கராதிநிச்சயம்-சங்கரர்முதலானவர்கள்சித்தாந்தம்.

(அ-கை.) மற்றுள்ளவறிஞர்களுக்குஞ் சகத்துபிரமாநந்தமாய் விளங்குமெனல். (கவி-)
அறிஞர்க்குலகாநந்தமயமறியாதவருக்கிடர்மயமாஞ், செறிந்தவிருளாமந்தகர்க்குச்செ
ங்கணுள்ளோர்க்கொளியாகும், பிறிவில்பிரமமனைத்துமெனநாடிற்பிரமமவனேயா, நறி
யவமுதுண்டவனமுதமயத்தைநண்ணுதிரானன்றே................................*

(இ-ள்.) உலகு - சகமானது—அந்தகர்க்கு-குருடர்க்கு—செறிந்தவிருளாம்-மிகுந்தவிருளாகவும்—செங்கணுள்ளோர்க்கு-செம்மையாகியகண்ணுள்ளவர்களுக்கு—ஒளியாகும்-ப்ரகாசமாகவு(மிருப்பதுபோல)—அறிஞர்க்கு-ஞானிகளுக்கு—ஆநந்தமயம் - ஆநந்தஸ்வரூபமாகவும்—அறியாதவருக்கு- அஞ்ஞானிகளுக்கு—இடர்மயமாம் - துன்பரூபமாகவுமிருக்கும்—அனைத்தும்-சகலமும்—பிறிவிலபிரமமெனநாடில் - பிறிவில்லாதபிரமமென்றுசிந்திக்கில்—அவனேபிரமமாம்-அவனேபிரமஸ்வரூபமாவன்—நறியவமுதுண்டவன்-நல்லவமுதத்தைப்புசித்தவன்—அமுதமயத்தை-அமுதஸ்வரூபத்தை—நண்ணுதிரான்-அடையாதிரான்—எ-று... (௨௫)

(அ-கை.) யாவருக்குஞ்சுயஞ்சித்தேபிரமமென்பதனுபவமாமெனல். (கவி.) எறிபேரொ
ளிமாத்திரமமலமெவர்க்குமுணர்வெங்கணுமுளது, பிறியாவுபசாந்தச்சித்துப்பிரமமெ
ன்பதனுபவமா, நெறிபோமறியாவொருவனைநெஞ்சன்றிநோக்கிலெத்தோற்றஞ், செறி
வாமஃதெங்கணுமுளதாஞ்சித்தாம்பிரமமாகின்றேம். ....*

(இ-ள்.) எறிபேரொளிமாத்திரம்- வீசாநின்றசுயம்ப்ரகாசமட்டுமே—அமலம் - நின்மலமாம்—எவர்க்கும்-யாவருக்கும்—உணர்வு-அறிவானது—எங்கணுமுளது - எவ்விடத்திலுமுண்டாயிருக்கின்றது—பிறியாவுபசாந்தச்சித்து-நீங்காதவுபசாந்தஞானம்—பிரமமென்பது- பிரமமென்கின்றது—அனுபவமாம்-ப்ரத்தியக்ஷமாகும்—நெறிபோம் - வழியிற்செல்லுகின்ற—அறியாவொருவனை-தெரியாதவொருபுருடனை—நெஞ்சன்றிநோக்கில் - மனதில்லாம(னேத்திரத்தினாற்)பார்க்கில்—எத்தோற்றம்-(அவ்விடத்தி)லெந்தத்தெரிவு—செறிவாம் - நிறைந்திருக்கின்றதோ—அஃது-அதுவே—எங்கணுமுளதாம் - எவ்விடத்திலுமுள்ளதான—சித்தாம்பிரமம்-ஞானமானபிரமமாம்—ஆகின்றேம்-(அதுயா)மாகின்றோம்—எ-று................ (௨௭)

(அ-கை.) பிரமத்தைவணங்குதல். (கவி.) சகலசங்கற்பப்பலனுய்ச் சகலவொளிக்குமொ
ளியாகிச், சகலமானகொள்கையுந்தீர்தனிச்சிற்பரத்தையேத்துகிற்பாஞ், சகலசங்கற்பமு
மற்றுச்சகலசந்தோடமுமற்றுச்,சகலவாரம்பமுமற்றதனிச்சிற்பரத்தையேத்துகிற்பாம்.

(இ-ள்.) சகலசங்கற்பப்பலனுய்-சங்கற்பமனைத்திற்கும்பயனைக்கொடுப்பதாய்—சகலவொளிக்குமொளியாகி - எல்லரப்ப்ரகாசத்துக்கும்ப்ரகாசமாய்—சகலமானகொள்கையுந்தீர்-எல்லாக்குணங்களுநீங்கியிருக்கின்ற—தனிச்சிற்பரத்தை - தனிமையாகியஞானத்மாவை— ஏத்துகிற்பாம்-துதிப்பாம்—சகலசங்கற்பமுமற்று-எல்லாச்சங்கற்பங்களுநீங்கி—சகலசந்தோடமுமற்று எல்லாச்சுகங்களுநீங்கி—சகலவாரம்பமுமற்ற - எல்லாவாரம்பங்களுநீங்கியிருக்கின்ற—தனிச்சிற்பரத்தை-தனிமையானஞானத்மாவை—ஏத்துகிற்பாம்-வணங்குவாம்—எ-று........(௨அ)

(அ-கை.) பிரமஞானியினனுபவத்தைச்சொல்லுதல். (கவி.) என்னுமறுதியுடையோ ராமெல்லாநினைவுகளுமின்றி, முன்னுமூன்மையராயவன்னோர்முழுமெய்சாந்தஞ்சம மென்னும், மன்னுபதந்தனிற் [illegible] சமமாநிராசைத்தொடர்மனத்தார், மன் னுபுந்திநிறைநிரர்வாழ்விற்சாவின்மகிழ்ந்தயரார்................................*

(இ-ள்.) என்னும்-(இப்படி)யென்கிற—அறுதியுடையோராய் - நிச்சயத்தையுடையவ ராய்—எல்லாநினைவுகளுமின்றி-சகலவெண்ணங்களுமில்லாமல்—முன்னுமூன்மையராய்- நிலை த்தின்றவுண்மையையுடையவர்களாய்—அன்னோர்-அவர்கள்—முழுமெய்- முழுதுஞானதேகமும் —சாந்தம்-சாந்தமும்—சமம்-சமத்துவமும்மென்கிற—மன்னுபதந்தனில் - நிலைபெற்றபிர மபதத்தில்—இருப்பர்-இருப்பார்கள்—சமமாநிராசை - சமத்துவமானநிராசை யை—தொடர்மனத்தார்-தொடராநின்றமனமுடையவர்கள்—மன்னுபுந்தி - நிலைபெற்றஞா னமானது—நிறைநிரர்-பூரணமாயிருக்கின்றநிரானவர்கள்—வாழ்விற்சாவில்-வாழ்விலுஞ்சா விலும்—மகிழ்ந்தயரார்-விரும்பிவாடார்கள்—எ-று. (இ-சா-க-ம்) சர்வமும் பிரமாநந்தமாய் விளங்குதெனப்படுகை மகான்களனுபவத்தோடும் பிரசன்னமாய்விளக்குவித்ததாம்.........(௨௬)

(அ-கை.) ஞானயோகத்தின் முக்கியமாயிருந்தசீவன்முத்தரதிலக்கணஞ்சொல்லத்தொட ங்கல். (கவி.) என்றமுனிமைமெய்ஞ்ஞானவிநோதத்தாதலிதுவன்றி, நின்றவுயிரின்றலை யாலேயாதனிகழ்வாதலைநீங்கி, பொன்றுதுயர்திர்ந்துயர்சீவன்முத்தரிருந்த துவாயென் று, வென்றிவடிவேலவன்கேட்பவேதவசிட்டன்விளம்புற்றான்........................ *

(இ-ள்.) என்றமுனிமை-(இப்படி)யென்றுசொல்லிய வசிஷ்டமுனியை—மெய்ஞ்ஞானவி நோதத்தாதல் - மெய்ஞ்ஞானலீலையினாலாவது—இதுவன்றி-இதுவல்லாமல்—நின்றவுயிரின்ற லையாலேயாதல் - நின்றபிராணபந்தனத்தினாலேயாவது—நிகழ்வாதலைநீங்கி - விளங்காநின்ற (வசுத்த)வாசனையைவிட்டு—ஒன்றுதுயர்திர்ந்து-பொருந்தாநின்றதுன்பநீங்கி—உயர்சீவன்மு த்தர்-மேலானசீவன்முத்தர்கள்— இருந்ததுவாயென்று - இருந்ததைச்சொல்லவேண்டுமென் று—வென்றிவெற்றிபொருந்திய—வடிவேலவன்கேட்ப- வடித்தவேலையுடைய ஸ்ரீராமன்வின வ—வேதவசிட்டன்-வேதநதையுடையவசிஷ்டமுனியானவர்—விளம்புற்றான்-(இவை)சொல்ல த்தொடங்கினர்—எ-று...(௩௰)

(அ-கை.) யோகத்துக்குரியதுபிராணயாமமெனல். (கவி.) உருகும்பிறவித்துயரறுக்க யோகப்பெயராமியுகந்தானிருமையுண்டாமெய்ஞ்ஞானமேகமுயிரின்றடையேகம்,வரு மிவ்விரண்டுமியோகப்பேர் மருவுமெனினுமுயிர்த்தடைக்கே, பெருகவுரித்தாமியோகப் பேர்பிஞகபாணியுரைத்ததுவே.......................................*

(இ-ள்.) உருகும்பிறவித்துயரறுக்க-களைக்கும்பவத்துன்பத்தைக்கெடுக்க—யோகப்பெய ராம்-யோகநாமமுடையதாகிய—இயுகந்தானிருமையுண்டாம் - யுத்தியானதிரண்டுவிதமாகும் —மெய்ஞ்ஞானமேகம்-மெய்ஞ்ஞானமொன்று—உயிரின்றடையேகம்- பிராணபந்தனமொன் று—வருமிவ்விரண்டும்-வராநின்றவிந்தவிரண்டும்—யோகப்பேர்மருவுமெனினும்- யோகநாம த்தைப்பொருந்துமென்றாலும்—உயிர்த்தடைக்கு - பிராணபந்தனத்துக்கு—யோகப்பேர்பெ ருகவுரித்தாம்-யோகநாமமானதுமிகவுமுரியதாம்—இவை-இவ்விரண்டும்—பிஞகபாணியுரைத் தது - பரமேஸ்வரன்சொல்லியது—எ-று...(௩௧)

(அ-கை.) முன்புஞானத்தினிலக்கணஞ்சொல்லிப் பின்புயோகத்தினிலக்கணஞ்சொல்லு தல். (கவி.) யோகமொருவற்கரிதாகுமொருவற்குண்மையறிவரிதா, மாகவிவற்றின்மெ ய்ஞ்ஞானமறைந்திந்தயோகமுடைவிளக்கே, ஞானமுதநிகருமொருசரிதையுரைக்கேன் மொழுகான், மேருவிருந்தவைவதித்தவின்னுமுனிவருடனிருந்தேன்......................*

(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு—யோகமரிதாகும் - யோகமானதரியதாகும்—ஒருவற் கு-ஒருவனுக்கு—உண்மையறிவரிதாம்-மெய்ஞ்ஞானமானதரியதாம்— ஆகவிவற்றின்-இவ்விரண் டினுள்—மெய்ஞ்ஞானமறைந்தேன்-மெய்ஞ்ஞான(முன்னமே)சொன்னேன்—[illegible] கவடைவுகள் - மேல்யோகத்தின் [illegible]கேட்பாய்—நாகமுதநிகரும்-தேவாமிர்தத்தை யொத்த—ஒருசரிதையுரைக்கேன்-ஒருசரித்திரத்தைச்சொல்லுவேன்—நாமொருகால் - நாமொ ருகாலத்தில—மேருவிருந்தவைவதித்து - மேருவிலிருந்தசபையில்—விண்ணோர்முனிவருடனிரு ந்தேன்-தேவரிஷிகளுடனிருந்தேன்—எ-று...(௩௨)

(அ-கை.) [illegible] பெருமையைக்கேட்டல். (கவி) நிறக்குநாரதாதிகளா [illegible] வைதக்கேட்டேம், [illegible]துமாமேருவின்வடகிழ்த் திக்கதப்[illegible]

வொளி, பிறக்குங்கோட்டிற்கற்பகத்தின்றென்பாற்பணையிற்பெருங்கூட்டிற், புறக்குன்றி
ருந்ததெனவிருக்கும்புசுண்டனுமத்தொருகாகம். .... *

(இ-ள்.) நிறக்குநாரதாதிகளால் - விளங்காநின்ற நாரதர்முதலிய முனிவர்களால்—நெடு நாள்வாழ்வோர் - சிரஞ்சீவிகளின்—கதைகேட்டேன் - கதைகளைக்கேட்டேன்—சிறக்குமாமேருவின்-சிறந்திருக்குமகாமேருவின்—வடகீழ்த்திக்கில்-ஈசானதிசையில்—பதுமராகவொளிபிறக்கும்-பதுமராகப்ரகாசமுண்டாகிற—கோட்டில்-கொடுமுடியி(லிருக்கின்ற) — கற்பகத்தின்-கற்பகவிருட்சத்தினது—தென்பாற்பணையில் - தென்புறக்கொம்பிற்(கட்டிய)—பெருங்கூட்டில் - பெரியகூண்டினிடத்தில்—புறக்குன்றிருந்ததென-புறம்பி(லொரு)மலையிருந்ததுபோல—புசுண்டனுமத்தொருகாகம்-புசுண்டனென்னும்பெயரையுடையவொருவாயசமானது—இருக்கும் - வசிக்கும்—எ-று. .... (௩௩)

(அ-கை.) இ-து. (கவி.) விதியைநிகராயிருந்ததுபோல் வெகுநாளியோகிலிருந்தவரார்,
முதியசொர்க்கலோகத்துமுன் னும்பின் னுமிலதாகு, மதிகவாளனதுகாதலற்றதுயர்சீரு
டையதுமா, மதியுள்ளதுசாந்தியதிடர்தீர்மனத்தாற்காலமதித்துணரும். .... *

(இ-ள்.) விதியைநிகராய்-பிரமாவுக்கொப்பாக—இருந்ததுபோல்-இருந்த (புசுண்டயோகியை)ப்போல—வெகுநாள்-அநேககாலம்—இயோகிலிருந்தவரார்-யோகத்திலிருந்தவர்களார்—முதியசொர்க்கலோகத்தும் - பழைமையானசொர்க்கலோகத்திலும்—முன் னும்பின் னுமில தாகும்-முன் னும்பின் னுமில்லையாம்—அது-அப்புசுண்டமே—அதிகவாளுள் - தீர்க்காயசுடையது—காதலற்றது-ஆசையில்லாதது—உயர்சீருடையது-மோக்ஷசெல்வமுடையது— மாமதியுள்ளது-பெரிதானவறிவையுடையது—சாந்தியது-விஸ்ராந்தியுடையது—இடர்தீர்மனத்தாற் காலமதித்துணரும்,துன்பமற்றமனதினுன்(மூன் று)காலத்தையும்வரையறுத்தறியும்.எ-று (௩௪)

(அ - கை.) புசுண்டயோகியைக்காண்டல். (கவி.) என்றுதேவரவையத்திலெவருங்
கேட்பவிருகாலா, வன் றுபுசுண்டனியல்புண்மையாகவுரைத்தபடிகேட்டுச், சென்று
காண்டுமெனவிரும்பிமேருவெற்பிற்சிகரத்தின், மன்றல்கமழ்கற்பகத்திருப்பக்கண்
டேன்மற்றோர்கற்பகம்போல். .... *

(இ-ள்.) என்று-(இப்படி)யென்று—தேவரவையத்தில் - தேவசபையில்—எவருங்கேட்ப-யாவருங்கேட்கும்படியாக—இருகாலா-இரண்டுதரமாய்—அன் றுபுசுண்டனியல்பு-அப்போதுபுசுண்டயோகியின்குணத்தை—உண்மையாக - மெய்யாக—உரைத்தபடிகேட்டு-(சாதாதபமுனி)சொன்னப்ரகார(நான்)கேட்டு—சென்றுகாண்டுமெனவிரும்பி - போய்ப்பார்ப்போமென்றிச்சித்து—மேருவெற்பிற்சிகரத்தில் - மகம்மேருவின்முடியில்—மன்றல்கமழ்- வாசனைபரிமளிக்கின்ற—கற்பகத்து-கற்பகவிருட்சத்தில் —மற்றோர்கற்பகம்போல் - வேறொருகற்பகவிருட்சம்போல—இருப்பக்கண்டேன்-இருக்கப்பார்த்தேன்—எ-று. . ... (௩௫)

(அ-கை.) புசுண்டயோகியினாச்சிரமச்சிறப்புக்கூறல். (கவி.) அங்குமலையின்சார
ளெறுமுழைகடோறுமளவின்மலர், தங்குகொடிகடொறும்பணைகடோறுமுறையு
ந்தடம்பறவை, திங்கணிறத்தவாய்விரிஞ்சன்றேரோதிமத்தின்றிரள்பார்ப்புத், துங்க
மறைகண்மந்திரங்கள்சுவாகாகாரமுடன்சொல்வ .... *

(இ-ள்.) அங்கு - அவ்விடத்தில்—மலையின்சாரறெறும் - மலைச்சார்புகடோறும்—முழைகடோறும் - குகைகடோறும்—அளவின்மலர்தங்கு - அளவற்றபுட்பங்கடங்கிய— கொடிகடொறும்-கொடிகடோறும் —பணைகடோறும் - கிளைகடோறும்—தடம்பறவை- பெரும்பக்ஷிகள்—உறையும்-வசித்திருக்கும்—திங்கணிறத்தவாய் - சந்திரநிறத்தையுடையனவாயிருக்கின்ற—விரிஞ்சன்றேர்-பிரமதேவனுடையவாகனமாகிய—ஓதிமத்தின்றிரள்-அன்னக்கூட்டங்களினுடைய--பார்ப்பு-குஞ்சுகள்—துங்கமறைகள்-உயர்வானசாமவேதகானங்களையும்—மந்திரங்கள்-மந்திரங்களையும்—சுவாகாகாரமுடன்சொல்வ - சுவாகாகாரத்தோடுமுச்சரிக்கின்றன-எ-று.௩௬

(அ-கை.) இ-து. (கவி) குயில்கள்கிளிகள்பலபுட்கள்குகன்போதித்தசிவஞானம், பயிலு
மயில்கள் பலகண்டேன் பாரவுடற்காகத்திரளுட், சயிலம்போலுமுயர்வடிவஞ்சாலநிறை
ந்தமனமோன, முயிரினசைவுபிறவாமலுண்ணேக்கொழியாச்சுகமுளதாய் .... *

(இ-ள்.) குயில்கள்-கோகிலங்களும்—கிளிகள்-கிள்ளைகளும்—பலபுட்கள்- (இன்னும்)வெகுபக்ஷிகளும்—குகன்போதித்த-சுப்பிரமணியர்போதித்ததாகிய—சிவஞானம்-சிவஞானத்தை—பயிலுமயில்கள்-பயிற்சிசெய்கின்றமயில்களுமாகிய—பலகண்டேன் - அநேகங்களைப்பார்த்தேன்—பாரவுடல்-பெரியசரீரத்தையுடைய—காகத்திரளுள்- வாயசசமூகத்தில்—சயிலம்போ

னும்-மலையைப்போலும்—உயர்வடிவம்-உயர்ந்தவடிவமும்—சாலநிறைந்தமனம் - மிகவும்பூரணமானமனமும்—மோனம்-மௌனமும்—உயிரினசைவுபிறவாமல்- பிராணசலனமுண்டாகாமல்—உன்னேருக்கொழியாக்கையுளதாய்-அகமுகநீங்காதசுகமுள்ளதாய். எ-று ....(௫௭)

(அ-கை.) புசுண்டயோகி பூசித்து முகமன்வசனமொழிதல். (கவி) இருந்தவசன்முன்னுனைப்தவெண்ணமறவுந்தெதிர்ந்தென்னைப், பொருந்துமளவில்வசிட்டனெனப்புந்தியண்ணிப்பொருக்கென்னத், திருந்தவந்தநல்வரத்துமுனியேயென்றுதித்திக்கத், தருஞ்சங்கற்பத்தான்முளைத்ததடக்கையாலேமலர்தூவி.. .... *

(இ-ள்.) இருந்தவதன்முன் - (இப்படி) இருந்தவந்தப்புசுண்டன்முன்பு—நானெய்தயானவடைய—எண்ணமற - பரவசராய்—எதிர்ந்துவந்து - எதிரேவந்து— என்னைப்பொருந்துமளவில் - என்னைப்பொருந்துஞ்சமயத்தில்—வசிட்டனெனப்புந்திபண்ணி - வசிஷ்டனென்றறிந்து — பொருக்கென்ன - சீக்கிரமாக—திருந்தவந்த - சிறப்பாகவந்த—நல்வரத்து - நல்லவரவையுடைய—முனியேயென்றுதித்திக்க - முனீஸ்வரரேயென்றினிதுசொல்லி — தருஞ்சங்கற்பத்தான்முளைத்ததடக்கையால்மலர்தூவி - தராநின்றசங்கற்பத்தினாலுண்டானவிசாலம்பொருந்தியகரங்களினாற்புஷ்பத்தையருச்சித்து. எ-று .... (௫௮)

(அ-கை.) இ-து (கவி) இருக்கவென்னவாசனந்தந்திருந்தபின்னரினிமையுட, னருக்கியத்தைமுதலனைத்துமளித்தன்பானநல்லுரைகள், பெருக்கவோதிப்பெரியோய்நின்காட்சியமுதப்பெருமழையால்,வருக்கமுடனானகங்குளிர்ந்தேன்வழிவந்துடலம்வருந்தினையே*

(இ-ள்.) இருக்கவென்ன - இருப்பாயென்று—ஆசனந்தந்து - ஆசனத்தைக்கொடுத்து—இருந்தபின்னர்-இருந்தபின்பு—இனிமையுடன் - இன்பத்தோடும்—அருக்கியத்தைமுதலனைத்தும்-அருக்கியமுதலானசகலத்தையும்—அளித்து-கொடுத்து—அன்பானநல்லுரைகள் - அன்பாயிருக்கின்றமதுரவசனங்களை—பெருக்கவோதி-மிகவுஞ்சொல்லி—பெரியோய்-மகானே—நின்காட்சி - உமதுதரிசனமென்னும்—அமுதப்பெருமழையால் - அமுதத்தின்மகாவருஷித்தினால்—வருக்கமுடன்-(எனது) கூட்டத்தோடும்—நானகங்குளிர்ந்தேன் - யான்மனமகிழ்ந்தேன்—வழிவந்து - (நீர்) மார்க்க (நடந்து) வந்து — உடலம்வருந்தினை - சரீரம்வருத்தப்பட்டீர். எ-று. (இ-ம-க-ம்) கேட்டுக்கண்டமரபினைக்கூறியதாம் .... (௫௯)

(அ-கை.) பூசித்தபுசுண்டயோகியை யைந்துசங்கதிவினவுதல். (கவி) உனதுபாததரிசனத்தாலுணர்ந்தேனெல்லாநெடுவாழு, ளனகருடனென்னையுநினைத்தீரதுபோனீவந்ததுமறிந்தே, னெனினுநின்சொல்லமுதுண்ணநயந்தேனென்னவதுகேட்டுப், புனிதமானநன்னெஞ்சப்புசுண்டன்றனக்கிவ்வுரைபுகன்றேன் .... *

(இ-ள்.) உனதுபாததரிசனத்தால் - தேவரீர்பாததரிசனத்தினால் — எல்லாமுணர்ந்தேன்-அனைத்துமறிந்தேன்—நெடுவாழுளனகருடன் - சிரஞ்சீவியாயிருக்கின்றமாசற்றபெரியோர்களோடும்—என்னையுநினைத்தீர்-என்னையுஞ்சிந்தித்தீர்—அதுபோல்-அதைப்போல—நீவந்ததுமறிந்தேனெனினும்- நீர்வந்ததையுந்தெரிந்தேனென்றாலும்—நின்சொல்லமுதுண்ண- உமதுவசனமிர்தத்தைப்புசிக்க—நயந்தேனென்ன - விரும்பினேனென்றுசொல்ல—அதுகேட்டு-அந்தவசனத்தைக்கேட்டு—புனிதமான- பரிசுத்தமான—நன்னெஞ்சம்- நல்லமனதையுடைய—புசுண்டன்றனக்கு-புசுண்டயோகிக்கு—இவ்வுரைபுகன்றேன்-இந்தவசனத்தைச்சொன்னேன். எ-று

(அ-கை.) இ-து. (கவி) பறவையரசேநீயுரைத்தபடியேயுண்மைநெடுங்கால, மிறவிலாதவுனைக்காண்பானெய்தினேனீயெக்குலத்தித், பிறவிபற்றாய்மெய்ப்பொருளைப்பெற்றாயெங்ஙனெவ்வளவு, நிறைவிதானவாறிவ்வுலகினெறிநீநினைதிறனென் .... *

(இ-ள்.) பறவையரசே - பக்ஷிகளுக்கிறைவே—நீயுரைத்தபடியேயுண்மை - நீர்சொன்னப்ரகாரமேமெய்—நெடுங்காலம் - வெகுகாலமாய்—இறவிலாத- மரணமில்லாத—உனைக்காண்பான் - நின்னைக்காணும்பொருட்டு—எய்தினேன் - வந்தேன்—நீயெக்குலத்தில் - நீயெந்தக்குலத்தில்—பிறவிபற்றாய் - சநநமானாய்—எங்ஙன்மெய்ப்பொருளைப்பெற்றாய் - எப்படிதத்துவஞானத்தையடைந்தாய்—நிறைவிதானவாறாள் - மாட்சிமையான (வுன) தாயுள் — எவ்வளவு- எவ்வளவாயிற்று—இவ்வுலகினெறி - இச்சகத்தினீதியில்—நீநினைதிறனென்- நீயறிந்திருக்கின்றதன்மையென்ன. எ-று.. (௬௧)

(அ-கை.) பிரமநிச்சயங்கூறியதன்கண்ணனுபவமானசீவன்முத்தனநியோகலீலையையறிவிக்குநிமித்தம், அவரதுபிறப்பும், ஞானம்பெற்றவிடமும், நீண்டவாயுளினளவும், இதுபரியந்தநடந்தஜகச்சித்திரங்களும், ஏகாந்தஸ்தானங்கிடைத்ததுமாயெவிவ்

வைந்நூசங்கையை வினாவினதற்கு உத்தரங்கூறுநிமித்த முப்புசுநகாரணங் கூறத்தொடங்கல். (கவி) தீர்க்கதத்தரிசியாமெவனுனீயிவ்வுறையுட்சேர்வுற்று, யேற்கவனைத்துமுறையென்னவியல்பார்புசுண்டனுரைசெய்யு,மார்க்குமுயர்ந்தசிவன்றிருமுன்னு னையாடொட்டகங்கரடிப்,பார்க்குநிகராமேனைமுகப்படைத்தகணங்கள்பலவுண்டால்

(இ-ள்.) தீர்க்கதத்தரிசியாமெவனுல் - சர்வஞ்ஞத்துவமுள்ளயாவனுல்—நீயிவ்வுறையுட்சேர்வுற்றாய்- நீயிந்தவிடத்திற்சேர்ந்திருக்கின்றாய்— எற்கவனைத்தும் - (கிரமமாக) க்கோப்புப்படியெல்லாவற்றையும்—உரையென்ன - சொல்லுமென்றுகேட்க— இயல்பார் - ஒழுக்கமிகுந்த—புசுண்டனுரைசெய்யும் - புசுண்டர்சொல்லுவார்—ஆர்க்குமுயர்ந்த - யாவருக்குமேலான—சிவன்றிருமுன் - சிவத்தினமூகாலசந்நிதியில்—ஆனை - கசமுகத்தையும்—ஆடு-அசமுகத்தையும்—ஒட்டகம் - ஒட்டைமுகத்தையும்—கரடி - கரடிமுகத்தையும்—பார்க்குநிகராம்-பூமியின் (பலத்துக்) கொப்பான—ஏனைமுகம்படைத்த - மற்றவதனங்களையும்பெற்றிருக்கின்ற—கணங்கள்பலவுண்டு - (சிவ) கணங்களநேகமுண்டாகும். எ-று.............................. (௬௨)

(அ-கை.) சத்திகணங்களின்சிறப்பைக்கூறல். (கவி) தலையிற்குளம்பர்குளம்புற்றதடக்கையினருந்தியின்முகத்தர், தொலைவற்றவர்பல்கணத்தோடுஞ்சூழ்வாரவர்போன்மாதர்கண, மலையிலரன்முன்னடஞ்செய்வார்பூதகணங்கள்வணங்குறுவார், சிலையின்சிகைவிண்புவிகாடுமயானந்தேயமிடமானோர்.............................. *

(இ-ள்.) தலையிற்குளம்பர் - சிரசிற்குளம்புள்ளவர்களும்— குளம்புற்றதடக்கையினர்-குளம்புள்ளநீண்டகரங்களையுடையவர்களும்—உந்தியின்முகத்தர் - வயிற்றின்முகத்தையுடையவர்களுமாகிய—தொலைவற்றவர் - அளவில்லாதவர்களான—பல்கணத்தோடும் - அநேககூட்டங்களோடும்—சூழ்வார் - சூழ்ந்திருப்பார்கள்—அவர்போல்- அப்பூதகணங்களைப்போல—மலையில் - (கைலாச) கிரியில்—அரன்முன்- சிவன்முன்பு—பூதகணங்கள்-பூதகணங்களினுல்—வணங்குறுவார் - வணங்கப்பெற்றவர்களாய்—சிலையின்சிகை - மலையினுச்சியும்—விண் - ஆகாயமும்—புவி - பூமியும்—காடு - கானகங்களும்—மயானம் - சுடுகாடும்—தேயம் - உடலும்— இடமானோர் - இடமாகவிருக்கின்ற — மாதர்கணம் - சத்திக்கூட்டங்களானவை — நடனஞ்செய்வார் - நிருத்தஞ்செய்வார்கள். எ-று.............................. (௬௩)

(அ-கை.) அஷ்டசத்திமெனுன்றினூர்திசண்டனென்னல். (கவி) தரத்திலுயர்ந்த சயைவிசையைசயந்திபராசிதைசித்தை, யிரத்தையோடேயலம்புதையுற்பலையென்றெண்மாமாதர்கடாம்,புரத்திலுறுநாயகிகளவர்தம்முட்புகன்றவலம்புதைக்குத், திரத்தில்வருவாகனஞ்சண்டனெனும்பேர்சேர்ந்ததொருகாகம்.............................. *

(இ-ள்.) தரத்திலுயர்ந்த - தாரதன்மியத்திலுயர்ந்திருக்கின்ற — சயை - சயையென்றும்—விசையை-விசையையென்றும்—சயந்தி-சயந்தியென்றும்—அபராசிதை-அபராசிதையென்றும்—சித்தை-சித்தையென்றும்—இரத்தையோடு - இரத்தையென்றும்— அலம்புதை-அலம்புதையென்றும்—உற்பலையென்று-உற்பலையென்றும்— எண்மாமாதர்கடாம்--எட்டுமகாசத்திகளாகும்—புரத்திலுறு-முன்னம்பொருந்திய—நாயகிகள் - தலைவிகளாகிய —அவர்தம்முள்-அந்தவஷ்டசத்திகளுக்குள் —புகன்றவலம்புதைக்கு-சொல்லியவலம்புதையென்னுஞ்சத்திக்கு—திரத்தில்வருவாகனம் - திடமாகவாநின்றவாகனமாகவுடைய— சண்டனெனும்பேர்சேர்ந்த-சண்டனென்கின்றநாமத்தையுடைய—ஒருகாகம்-ஓர்வாயசம். எ-று.............................. (௬௪)

(அ-கை.) சத்தியினுச்சவஞ்செய்துகளித்தல். (கவி) அட்டகுணச்செல்வமும்படைத்தவந்தமாதரனைவோரு, மிட்டமானசிவனேவவியாருங்கூடிவிண்ணிடையே, முட்டலாதவுச்சவத்தைமுயன்றுபானங்களையுண்டு, நட்டமிட்டார்பாட்டிசைத்தார் களித்தார்வெடிக்கநகைசெய்தார்.............................. *

(இ-ள்.) அட்டகுணச்செல்வமும்படைத்த - (அணிமாதிகுணங்களையுடைய)வஷ்டவயிஸ்வரியத்தையும்பெற்ற—அந்தமாதரனைவோரும் - அச்சத்திகளனைவரும் — இட்டமானசிவனேவ - இஷ்டமாகியசிவனுஞ்ஞாபிக்க—இயாருங்கூடி - அனைவருஞ்சேர்ந்து — விண்ணிடை-ஆகாசத்தினிடத்தில்—முட்டலாத - குறைவில்லாத —உச்சவத்தைமுயன்று - திருவிழாவையாரம்பித்து—பானங்களையுண்டு - மதுக்களைக்குடித்து—நட்டமிட்டார்-நடனஞ்செய்தார்கள்—பாட்டிசைத்தார் - பாடினூர்கள்—களித்தார் - மதர்த்தார்கள்— வெடிக்கநகைசெய்தார் - வெளிப்படச்சிரித்தார்கள். எ-று.............................. (௬௫)

(அ-கை.) அவர்வாகனங்களுங்களித்தல். (கவி) அந்தவிழாவேநடக்கின்றகாலத்தவர்வாகனமனைத்து, மிந்தமரபிற்பானங்கலமாந்திக்களித்தாரிவைசெய்தா, ரந்த

ரத்தினிடையயலே யயன்பேர்மாதின்வாகனங்கள், சந்தமுறுபேட் டோதிமங்கள்
சண்டனெனுங்காகத்தோடும் .... *

(இ-ள்.) அந்தவிழா - அத்திருவிழாவானது—நடக்கின்றகாலத்து - நடக்குங்காலத்தில்—அவர்வாகனமனைத்தும் - அவர்களுடையவாகனங்களியாவும்—இந்தமரபில்- இக்கிரமப்படி—பானங்கண்மாந்தி - மதுக்களையுண்டு—களித்தாரிவைசெய்தார் - மதர்த்தவர்களிவைகளைச் செய்தார்கள்—அந்தரத்தினிடையயல் - ஆகாயத்திலோர்பக்கத்தில்—அயன்பேர்மாதின்வாகனங்கள் - பிரமசத்தியின்வாகனங்களான — சந்தமுறுபேட்டோதிமங்கள் சண்டனெனுங்காகத்தோடும் - அழகுள்ளபெண்ணன்னங்கள் சண்டனென்கின்றவாயசத்தோடும். எ-று.........(௪௬)

(அ-கை.) அன்னங்களோடுங்காகம்புணர்தல். (கவி) கூடியாடிக்களித்தந்தக்கோலக்
காகத்தினைப்புணர்ந்து, நீடுகருவையடைந்துமிக நெஞ்சங்களிக்குமக்காலை, நாடி
முயன்றவிழாமுடித்துநக்கனுடைமாதருங்கணமும், பாடலாடலொழிந்துமனமகி
ழ்ந்துதத்தம்பதிக்ககன்றார் .... *

(இ-ள்.) கூடியாடி - சேர்ந்துவிளையாடி—களித்து - மதர்த்து—அந்தக்கோலக்காகத்தினைப்புணர்ந்து - அந்தவழகியகாக்கையைக்கூடி—நீடுகருவையடைந்து-நீண்டகருப்பத்தையடைந்து—மிகநெஞ்சங்களிக்கும் - மிகவுமனங்களிக்கின்ற— அக்காலை - அந்தக்காலத்தில்—நாடிமுயன்றவிழாமுடித்து - தேடிமுயற்சித்ததிருவிழாவைமுடித்துக்கொண்டு—நக்கனுடைமாதரும் - பரமேஸ்வரனுடையசத்திகளும் — கணமும் - அவர்கள்கணங்களும் — பாடலாடலொழிந்து- பாடலுமாடலுநீங்கி—மனமகிழ்ந்து - மனமகிழ்ச்சியுடன்—தத்தம்பதிக்ககன்றார்-தங்கடங்களிடத்துக்குப்போனார்கள். எ-று..(௪௭)

(அ-கை.) அமிசங்கருவடைதல். (கவி) அனையகாலைக்கருவடைந்த வயன்பேர்மாதி
னோதிமங்கள், வினையிறமதுநாயகிக்கு விளைந்தபடிமெய்ப்படவுரைப்ப,வினையதா
கக்கருவுற்றீரொன்றேரீர்க்கும்வலியில்லீர், நினைவின்படிபோயுறையுமெனநிறையுங்
கருணையாலுரைத்து .... *

(இ-ள்.) அனையகாலை - அப்படிப்பட்டகாலத்தில்—கருவடைந்த - கருப்பமடைந்த—அயன்பேர்மாதின் - பிரமசத்தியின்—ஓதிமங்கள் - அன்னங்கள் — வினையிறமதுநாயகிக்கு-சங்கற்பமற்றதங்களிசமானிக்கு—விளைந்தபடி- (கருப்ப)முண்டானவிதத்தை— மெய்ப்படவுரைப்ப- உண்மையாகச்சொல்ல— வினையதாகக்கருவுற்றீர் - ஊழின்படிகருப்பமடைந்தீர்கள்—என்றேரீர்க்கும் - எனதிரதத்தையிழுக்கின்ற— வலியில்லீர் - வல்லமையின்றாயினீர்—நினைவின்படிபோய் - (உங்க)ணினைப்பின்வண்ணஞ்சென்று— உறையுமென - வசியுங்களென்று—நிறையுங்கருணையாலுரைத்து - நிறைந்தவருளினாற்சொல்லி எ-று..(௪௮)

(அ-கை.) இருபத்தொருவருடன்சனித்தல். (கவி) நிருவிகற்பசமாதியிலேநின்றா
டேவியோதிமங்கள், கருவின்முதிர்ந்துமானதவோடையிலேகாலங்களிலீன்று,தரு
மவ்விருபத்தொருவோருஞ்சண்டனெனுங்காகப்புதல்வ, ரருளுந்தாயரொடுமயன்
பேரணங்கைநெடுநாளருச்சித்தேம் .... *

(இ-ள்.) நிருவிகற்பசமாதியில்-நிருவிகற்பசமாதியில்—தேவி - தேவியானவள்—நின்றாள்-இருந்தாள்—ஓதிமங்கள்-அன்னங்கள்—கருவின்முதிர்ந்து-கருப்பமுதிர்ச்சியாய்—மானதவோடையில்-மானதத்தடாகக்கரையில்—காலங்களிலீன்று-காலநியமப்படிமுட்டையிட்டு—தரும்-(குஞ்சாக)வராநின்ற—சண்டனெனும்-சண்டனென்கின்ற—காகப்புதல்வர்-காகத்தின்புத்திரர்களாகிய—அவ்விருபத்தொருவோரும்- அந்தவிருபத்தொருபேர்களும் — அருளுந்தாயரொடும்-பெறுநின்றவன்னைகளோடும் — அயன்பேரணங்கை - பிரமசத்தியை —நெடுநாளருச்சித்தேம்-வெகுகாலம்பூசித்தோம். எ-று (இ-ம-க-ம்) சனித்தமரபைக்கூறியதாம் .... (௪௯)

(அ-கை.) பிரமசத்தியினால் ஞானம்பெறல். (கவி) அணங்குசமாதிநின்றுமெழுந்த
ன்பாற்றானேயருள்செய்ய, வுணங்கலறமுத்தியைப்பெற்றோ முபசாந்தியினாலுளங்
குளிர்ந்தோம், மிணங்கலறவேகாந்தத்திலிருக்குமிடமேதெனக்கேட்பான், குணங்
கொள்பிதாவையலம்புதைபாற்சென்றுகூடிக்கும்பிட்டு.. *

(இ-ள்.) அணங்கு-பிரமசத்தியானவள்—சமாதிநின்றும்-சமாதியிலிருந்தும்—எழுந்து-எழுந்திருந்து —அன்பால்-அன்பினால்—தானேயருள்செய்ய- தானேயனுக்கிரகஞ்செய்ய—உணங்கலற-வாட்டமில்லாமல்—முத்தியைப்பெற்றோம் - மோக்ஷத்தையடைந்தோம்—உபசாந்தியினால்-உபசாந்தத்தினால்—உ[illegible]ளிர்ந்தோம்-அகமகிழ்ச்சியடைந்தோம்—இணங்கலற - சங்கமில்லாது—ஏகாந்தத்[illegible]—இருக்குமிடமேதென - வசிக்கும்ஸ்தானமெதுவெ

ன்று—கேட்பான்-கேட்கும்பொருட்டு—குணங்கொள்பிதாவை-குணமுள்ள தந்தையை—அலப்புதைபாற்சென்று-அலப்புதையின்பக்கத்திற்போய்— கூடிக்கும்பிட்டு - இருவரையுஞ்சேர்ந்துவணங்கி. எ-று. (இ-ம்) ஞானம்பெற்றமரபைக்கூறியதாம் .... (௫௰)

(அ-கை.) அலப்புதையினாலேகாந்தஸ்தானம்பெறல். (கவி) பிரமியென்னுமணங்
கினருட்பெற்றேமுத்தியேகாந்தப், பரமசுகத்திலிருக்குமிடம்பகர்வாயென்றுயாங்
கேட்ப, விரவுதந்தை துயரெல்லாமேவாவிடமிக்கற்பகநன், மரமென்றருளவவர்ப்
பணிந்துவந்திங்கிருந்தேம்வருத்தமற .... *

(இ-ள்.) பிரமியென்னுமணங்கினருள் - பிரமியென்கின்றசத்தியினது கிருபையினால்—முத்தி-மோக்ஷத்தை—பெற்றேம்-அடைந்தோம்—ஏகாந்தப்பரமசுகத்தில் - தனித்த திருவாணைசுகத்தில்—இருக்குமிடம் - இருக்கின்றஸ்தானத்தை—பகர்வாயென்று-சொல்லுவாயென்று—யாங்கேட்ப-நாங்கள்கேட்க—தந்தை-(தேவியனுக்கிரகப்படி) பிதாவானவர்—விரவுதுயரெல்லாம் - கலந்த துன்பங்களனைத்தும்—மேவாவிடம் - பொருந்தாதஸ்தானம் — இக்கற்பகநன்மரமென்றருள - இந்நல்லகற்பகவிருட்சமென்றனுக்கிரகிக்க—அவர்பணிந்து- அங்கவர்களை வணங்கி—வருத்தமற- துன்பமறும்படி — வந்திங்கிருந்தேம் - வந்திவ்விடத்தில்வசித்தோம். எ-று. (இ-ம்) ஏகாந்தஸ்தானம்பெற்றவரம்பு கூறியதாம் .... (௫௧)

(அ-கை.) மூன்றுவினாவுக்கு உத்தரஞ்சொல்லித்துதித்தல். (கவி) அன்றுதொ
ட்டுநான்புரிந்தவறங்களெல்லா நின்வடிவா, யின்றுபலித்ததுயர்திரு ரிணக்கமென்
னுநிறைநிலவு, மன்றலமுதமயமாக மாருச்சுகம்யார்க்களியாது, நன்றிதென்னு
முயிர்க்குறுதிநல்லோரருளிற்பிறிதுண்டோ .... *

(இ-ள்.) அன்றுதொட்டு - அன்றுமுதலாக— நான்புரிந்தவறங்களெல்லாம் - யான்செய்ததருமங்களனைத்தும்—நின்வடிவாய் - உமதுஸ்வரூபமாய்—இன்றுபலித்தது - இப்போது விலாபமாயிற்று—உயரறிஞர் - மேலானஞானவான்கள்—இணக்கமென்னுநிறைநிலவு - சங்கமென்கின்றநிறைந்தநிலவானது—மன்றலமுதமயமாக - பரிமளமுள்ளவமுதமயமாக—மாருச்சுகம் - தவிராத(பிரம)சுகத்தை—இயார்க்களியாது - எவருக்குக்கொடாது—இது நன்றென்னும் - இது நல்லதென்கின்ற—உயிர்க்குறுதி - ஆத்மாவுக்குறுதியானது— நல்லோரருளிற்பிறிதுண்டோ - சத்துக்களனுக்கிரகத்தைவிடவேறேயுண்டோ. எ-று .... (௫௨)

(அ-கை.) தம்பிமாரிறந்ததென்னவென்றிடையில்வினாவுதல். (கவி) பரமமுணர்ந்தேனெ
ன்னினுநின்பார்வையாலென்பாவமெலாம், வினைவிலறுத்தலாலிந்தப்பிறப்பேமிக்கபய
னுடைத்தால், வரதனேயென்றெனைமீண்டும் பூசைசெய்தான் மற்றவனை, யுரவிதாயுன்
னுடன்பிறந்தோரொழிந்தவாறென்னுரையென்றேன் .... *

(இ-ள்.) பரமமுணர்ந்தேனென்னினும்-பிரமத்தையறிந்தேனென்றாலும்— நின்பார்வையால் - உமதுகடாக்ஷத்தினால்—என்பாவமெலாம் - எனதுபாவங்களனைத்தும்— வினைவிலறுத்தலால் - சீக்கிரமாகக்கெடுத்தபடியால்—இந்தப்பிறப்பே-இச்சநநமே —மிக்கபயனுடைத்து- மிகுந்தப்ரயோசனத்தையுடையது — வரதனேயென்று - ஈஸ்வராவென்று — எனைமீண்டும்- என்னைத்திரும்பவும்—பூசைசெய்தான்- ஆராதனைசெய்தான்—மற்றவனை - பின்பந்தப்புசுண்டனை—உரவிதாயுன்னுடன்பிறந்தோர் - திடமானவுனதுசகோதரர்கள்—ஒழிந்தவாறென்- நீங்கினப்ரகாரமென்ன—உரையென்றேன் - சொல்லென்றுகேட்டேன். எ-று .... (௫௩)

(அ-கை.) தம்பிமார்தேகத்தோடுங்கூடியிருத்தலற்பமென்றறிந்துவிதேகமுத்தியடைதல்
(கவி) ஒக்கவுறைந்தேமனைவருமிங்குகங்கள்பலகற்பங்கள்பல, தொக்கவாயவென்னனுச
ருடல்கடிரணம்மனத்துறந்து,மிக்கபதத்தேயுணர்ந்தோராய்வீடுபெற்றார்நெடுவாளுட்,
டக்கமகிமைவலிபடைத்துந்தங்கற்பனையாற்றாமிறந்தார் .... *

(இ-ள்.) இங்கனைவரும் - இவ்விடத்தியாவரும் — பலவுகங்கள் - அநேகயுகங்களும்—பலகற்பங்கள் - அநேககற்பங்களும் — ஒக்கவுறைந்தோம் - ஒத்துவசித்தோம் — தொக்கவாய-தொந்தமாயிருக்கின்ற—என்னனுசர்- எனதுதம்பிகள்—உடல்கடிரணமெனத்துறந்து-தேகங்கடிரும்பெனத்துறந்து—மிக்கபதத்து - மேலாகியபிரமபதத்தை— உணர்ந்தோராய் - அறிந்தவர்களாய்—வீடுபெற்றார் - மோக்ஷத்தையடைந்தார்கள் — நெடுவாளுள் - மிகுந்தவாயுளையும்—தக்கமகிமை - தகுந்தமகிமையையும் — வலிபடைத்தும் - வல்லமையையும்பெற்றிருந்தும்—தங்கற்பனையால் - தங்கள்சங்கற்பத்தினால்—தாமிறந்தார் - தாங்களேமரித்தார்கள்.எ-று. (இ-௩-௧-ம்) இடையில்வினாவினவினாவுக்குத்தரஞ்சொல்லியதாம் .... (௫௪)

(அ-கை.) நான்காம்வினாவை நான்குவிதமாகவினாவுதல். (கவி) என்றலோடுங்கற்பாந்
தமெறிநீர்வாயம்வெழும்போதுந், துன்றுதபனர்சுடும்போதுந் துஞ்சாதிருந்தாயெ
ங்ஙனென, நின்றபுசுண்டனுரைசெய்புநெடியசகத்தின்விகார, மன்றிவிடும்மெப்
போதப்போதகல்வனுமிதுதன்னை . ... *

(இ-ள்.) என்றலோடும் - (இப்படி)யென்றுபுசுண்டர்சொன்னவுடன்—கற்பாந்தத்தும் - கற்பமுடிவும்— எறிநீர் - அலைவீசாநின்றபிரளயவெள்ளமும் — வாயு - ப்ரசண்டவாயுவும்— எழும்போதும் - உண்டாகுங்காலத்தும்—துன்றுதபனர்சுடும்போதும் - நெருங்கிய(துவாத) சாதித்தரெளிக்கும்போதும்—எங்ஙன்றுஞ்சாதிருந்தாயென-எப்படியிறவாமலிருந்தாயென்று கேட்க—நின்றபுசுண்டனுரைசெய்பும் - (இவைகளிற்கெடா)திருந்தபுசுண்டர்சொல்கின்றார் —நெடியசகத்தின்விகாரம் - நீண்டசகத்தின்றொழிலானது—எப்போது-எக்காலம்—அன்றி விடும்- அல்லாமற்போம்—அப்போது - அக்காலத்தில்— நானுமிதுதன்னை- யானுமிந்தக்கூட் டை—அகல்வன் - விடுவன். எ-று .... (௫௫)

(அ-கை.) மூன்றுதாரணையைக்கூறல். (கவி) தவனமெல்லாஞ்சுடும்போதிற்சலதார
ணையால்விண்ணுறுவேன், குவடுசிதறக்காற்றெறியிற் குன்றமெனுந்தாரணையாலே,
துவள்கிலாதுவிண்ணுறுவேன்றொல்லைஞாலமேருவுட, னுவரிமூடின்மாருததாரணை
யான்மிதப்பேனுலைவின்றி .... *

(இ-ள்.) தவனமெல்லாஞ்சுடும்போதில்-துவாதசாதித்தாளனைவருமெரிக்கும்போதில்— சலதாரணையால் - சலதாரணையினால்—விண்ணுறுவேன் - ஆகாயத்தையடைவேன்— குவடுசித றக்காற்றெறியில் - மலைகள்சிதறும்படிகாற்றடிக்கில்—குன்றமெனுந்தாரணையால் - பருப்பதத் தாரணையினால்—துவள்கிலாது - அசையாமல்—விண்ணுறுவேன் - ஆகாயத்தையடைவேன்— தொல்லைஞாலம்-பழைமையானசகமும்—மேருவுடன்-மகம்மேருவுடன்—உவரிமூடில்-சமுத் திரமூடிக்கொண்டால்—மாருததாரணையால் - வாயுவுதாரணையினால்— உலைவின்றிமிதப்பேன்- சலனமின்றிமிதப்பேன். எ-று .... (௫௬)

(அ-கை.) நால்காந்தாரணையைக்கூறல். (கவி) பிரளயந்தான்வந்ததெனிற்பிரமா
ண்டத்தின்கரையெய்தி,துரிசிறத்துவாந்தமெனுந்துகளில்பதத்தேசுழுத்தியெனும்,
விரவுமவத்தையானிற்பன்மீளவேதாப்படைப்பளவும், பிரமன்படைக்கிற் பிரமா
ண்டமடைவேன்பறவைப்பெருங்கூட்டில் .... *

(இ-ள்.) பிரளயந்தான்வந்ததெனில்-சர்வசங்காரகாலம்வந்ததானால்— பிரமாண்டத்தின்கரை யெய்தி-பிரமாண்டத்தின்முடிவையடைந்து—துரிசில் - துன்பமில்லாத— தத்துவாந்தமெனு ம்-தத்துவமுடிவென்கின்ற—துகளில்பதத்து-குற்றமற்றபிரமபதத்தில்—சுழுத்தியெனும்-சுழு த்தியென்கின்ற—விரவுமவத்தையால் - கலந்திருக்கின்றவவத்தையினால்—மீளவேதாப்படைப் பளவும்-திரும்பப்பிரமதேவன்சிருஷ்டிக்குமட்டும்—நிற்பன்-இருப்பேன்—பிரமன்-பிரமதே வன் — பிரமாண்டம்படைக்கில் - பிரமாண்டத்தைச்சிருட்டிக்கில் — பறவைப்பெருங்கூட்டி லடைவேன் - பட்சியினதுபெரிதானவிக்கூண்டிற்சேர்வேன். எ-று .... (௫௭)

(அ-கை.) இந்நான்குதாரணையினாற் றேகமழியாம லெப்போது மிருக்கின்றேனெனல்.
(கவி) எனதுசங்கற்பத்தாலேயிந்தக்கிரியினிக்கோட்டிற், கனகற்பகமிப்படியுண்டாங்கற்
பங்கற்பந்தோறுமென, வனகனேதாரணைகளினீயழியாதிருந்தாய்பலகற்பம், வினவுபிற
யோகியரெல்லாம்வீந்ததென்னோவிளம்பென்றேன் .... *

(இ-ள்.) எனதுசங்கற்பத்தால் - என்னுடையசங்கற்பத்தினால்—இந்தக்கிரியின் - இந்தம லையினது—இக்கோட்டில் - இக்கொடுமுடியில்—கனகற்பகம் - பருத்தகற்பகவிருட்சம் — கற் பங்கற்பந்தோறும் - கற்பகற்பங்கடோறும் — இப்படியுண்டாமென - இந்தப்ரகாரமேயுண் டாயிருக்குமென்றுபுசுண்டர்சொல்ல—அனகனே- மாசில்லாதவனே—தாரணைகளின்-தாரணை களினால்—பலகற்பம் - அநேககற்பம்—நீயழியாதிருந்தாய் - நீகெடாமலிருந்தாய் — வினவு பிறயோகியரெல்லாம்-வினவாநின்றமற்றயோகிகளியாவரும் — வீந்ததென்னோ - இறந்ததே னோ— விளம்பென்றேன்- சொல்லென்றுகேட்டேன். எ-று. (இ-ச-க-ம்) தாரணையினியல்பை க்கூறியதாம் ஞானிகள் - அறிவேதேகமென்பது - உலகத்துக்கனுபவமாம்பொருட்டு யோகி களின் றாரணைகளைச்சொல்லுதல் - அவையாவன - சலதாரணையென்பது - சூரியனுஷ்ணகிர ணத்தாலெரிக்கும்போது அதுகிரகிக்குஞ்சலாகாரமாய் கிரணமுழுது மாயாகாயத்தில் வியா பித்துநிற்றல் - குன்றதாரணையென்பது - ஊழிக்காற்றடிக்கும்போ ததற்காதாரமான நிச்சல மாகிய அசலாகாரவியோமமாய்நிற்றல் - மாருததாரணையென்பது - பிரளயவெள்ளத்துக்கு மேலான வாதாகாரமாய் துருத்தியைப்போலமிதந்துநிற்றல் - சுழுத்திதாரணையென்பது - சுழு

த்தியாகாரமாய் பிரமத்திலடங்கிநின்று வெளிப்படுதலெனக்கொள்க. இன்னும் விரிக்கின்விரியு மாதலின் - இவற்றையோகநூலிற்காண்க...................................(௫௮)

(அ-கை.) இத்தாரணைகளிருக்க மற்றயோகிகண்மரிப்பதேனெனில். (கவி) ஆய புசுண்டனதற்குரைக்குமழிவில்பரமேசுரனியதி, யேயவிதனையார்கடப்பா ரெனக் கிப்படியப்படியவர்க்கே, மேயவுருவதொழிப்பரிதான்மிகவுமேதப்படியாரு, நீய தங்கப்படியென்றேநினைவாய்நியதியறுதியிதே.......................*

(இ-ள்.) ஆயபசுண்டன் - (இப்படி)யானபுசுண்டயோகி—அதற்குரைக்கும்- அதற்குச் சொல்லுவார்—அழிவில்பரமேசுரனியதி - அழிவற்றபரமேசுரனியதியான—ஏயவிதனை-பொருந்தியவிதை—ஆர்கடப்பார்-யாரதிக்கிரமிப்பார்கள்—எனக்கிப்படி - எனக்கிந்தப்ரகாரமாம்—அவர்க்கப்படி - அவர்களுக்கந்தப்ரகாரமாம் — மேயவருவது - பொருந்தவருகின்றது—ஒழிப்பரிதால் - நீக்கக்கூடாததால்— மிகவுமேதெப்படியாகும் - மிகவுமேதெப்படியாகின்றதோ—அதங்கப்படியென்று - அதவ்விடத்திலந்தப்ரகாரமாகுமென்று—நீநினைவாய் - நீர்கருதும்—இதேநியதியறுதி - இதுவேநியதிநிச்சயமாம். எ-று. (இ-ம்) பரமேஸ்வரனியதியங்ஙனமாமென்பதாம்...........................(௫௯)

(அ-கை.) ஐந்தாம்வினாவைஞாபகப்படுத்திமீளவும்வினாவுதலுக்குஉத்தரஞ்சொல்லத்தொடங்கல். (கவி) என்றபுசுண்டன்றனைஞான விஞ்ஞானத்தையெய்தியநீ, துன்றுயோகந் தொடர்மனத்தாற்றொல்லையிந்தமூவுலகி, னின்றனுளத்திற்சித்திரங்க ணேர்ந்ததேதேத வையெல்லா, மொன்றுமொழியாதுரையென்ன வுயர்ந்தபுசுண்டனுரைசெய்யும்...... *

(இ-ள்.) என்றபுசுண்டன்றனை-(இப்படி)யென்றுசொல்லியபுசுண்டயோகியை—ஞானம்-பிரமஞானத்தையும்—விஞ்ஞானத்தை - சாஸ்திரஞானத்தையும்— எய்தியநீ - அடைந்தநீர்—துன்றுயோகந்தொடர்மனத்தால் - பூரணயோகத்தைத்தொடர்ந்தமனதினால்—தொல்லையிந்த மூவுலகின்- பழைமையானதிரிபுவனத்தினது—நின்றனுளத்தில்-உம்முடையமனதில்—சித்திரங்களேர்ந்தது - அதிசயங்களெதிரிட்டது—ஏதேது - யாதியாதோ—அவையெல்லாம்-அவைகளனைத்தையும்—ஒன்றுமொழியாது - ஒன்றுந்தவிராமல்—உரையென்ன - சொல்லுமென்று கேட்க—உயர்ந்தபுசுண்டனுரைசெய்யும் - மேலானபுசுண்டயோகிசொல்லுவார். எ-று. (௬௰)

(அ-கை,) தனதாயுளிற்கண்டசகச்சித்திரங்களைத்தெரிவித்தல். (கவி) கல்லானிறைந் துமலைமரம்புற் காணுதிருந்ததிப்புவனஞ், சொல்லாராண்டுபதினோராயிரம்வெண் ணீற்றுற்றுன்னியது, நல்லாய்வேறேயுகநாலு நண்ணுங்காட்டாநெருங்குற்ற, நல் லாலுகநாலிடமன்றியசலத்திரளாற்செறிந்ததுவே..............................*

(இ-ள்.) இப்புவனம் - இந்தப்பூமி—கல்லானிறைந்து - கற்களினுனிறைந்து—மலைமரம்புல்- கிரியுந்தருவும்புல்லும்—காணுதிருந்தது - (வெகுகாலந்)தோற்றுதிருந்தது—சொல்லார்-சொல்லானிறைந்த—பதினோராயிரமாண்டு - பதினோராயிரம்வருஷம்—வெண்ணீற்றுற்றுன்னியது- பஸ்பத்தினுனிறைந்திருந்தது— நல்லாய் - நன்மையையுடையவசிஷ்டரிஷியே --வேறேயுகநாலும்-வேறேசதுர்யுகம்—நண்ணுங்காட்டால்-பொருந்தியகாடுகளினுல்—நெருங்குற்றது-நிறைந்திருந்தது—அல்லால்-அப்படியிருந்ததுமன்றி--யுகநால்-நாலுயுகம்—இடமன்றி-இடமில்லாமல்—அசலத்திரளால்-மலைக்கூட்டங்களினுல்—செறிந்தது-நிறைந்திருந்தது. எ-று.

(அ-கை.) இ-து. (கவி) அகத்தியனையன்றியிலுகநாலகல்விந்தத்தான்மறைந்ததும ண், வகுத்தசிருட்டியொன்றின்மதுமறையோர்விரும்பச்சூத்திரர்க, ளிகழ்ச்சிசெய் தார்கற்புடையமகளிரிச்சித்தனசெய்தார், மிகுத்தமுனிவவிவைகண்டேன்வேறுமு ள்ளவிளம்புவனுல்.............................*

(இ-ள்.) மண் - பூமியானது—உகநால் - நான்குயுகம்—அகத்தியனையன்றியில்- அகஸ்தியரில்லாமல்—அகல்விந்தத்தான்மறைந்தது - பரந்தவிந்தகிரியினுன்மறைபட்டது—வகுத்தசிருட்டியொன்றில் - உண்டாகியவொருசிருஷ்டியில்—மது-கள்ளை—மறையோர்விரும்ப-பிராமணர்களிச்சிக்க—சூத்திரர்கள் - சதுர்த்தர்கள்—இகழ்ச்சிசெய்தார்- (அந்தமதுவை)நிந்தித்தார்கள்— கற்புடையமகளிரிச்சித்தனசெய்தார் - கற்புள்ளஸ்திரீகள்விரும்பினபடியேநடந்தார்கள்— மிகுத்தமுனிவ - மேலாகியவசிஷ்டமுனியே—இவைகண்டேன் - இவைகளைப்பார்த்தேன்—வேறுமுள்ள - வேறேகண்டவைகளுமுண்டு—விளம்புவன் - சொல்வேன். எ-று......(௬௨)

(அ-கை.) இ-து. (கவி) மதிபார்க்கரனைமுதலோர்கள் பிறப்புமகவானும்பந்திரர்க ள், பதியும்பொற்கண்ணனின்கவர்ந்தபாரைப்பன்றிபறித்ததுவும், பிதிர்கற்பங்க டொறும்வேண்டிப்பிரித்தமறையைசமைசறிந்ததுவு, மதிருங்கடலைமுந்தூத்தலமு தமழைப்பித்ததுமறிவன்.............................*

(இ-ள்.) மதிபாற்கரனை - சந்திரசூரியனை—முதலோர்கள்பிறப்பும்-ஆதியானவர்களுஞ் பத்தியும்—மகவானுமேந்திரர்கள்பதியும்-இந்திரோபேந்திரர் கணிலையும்—பொற்கண் ணிலைம்-இரணியாக்ஷனால் — கவர்ந்தபாரை - திருடிக்கொண்டுபோனபூமியை — பன்றிபடித்ததுவும்-வராகவவதாரமாய்ப்பிடுங்கிவந்ததுவும்—பிதிர்கற்பங்கடோறும் - நட்பமாகச்சென்றுகிற்பங்கடோறும்—வேண்டி - விரும்பி—பிரித்தமறையைச்செறித்ததுவும்- சிதறிப்போனவேதங்களைச்சேர்த்துவைத்ததுவும்— அதிருங்கடலில் - சத்திக்காநின்றபாற்சமுத்திரத்தில்—மந்தரத்தால் - மந்தரகிரியினால்—அமுதமலைப்பித்ததும் - அமுதங்கடைந்தெடுத்ததும் — அறிவேன்- யானறிவேன். எ-று .... (௩௩)

(அ-கை.) இ-து. (கவி) மகத்திற்சகத்திலிவையெல்லாம்வாலரெனினுமறிகுவ
ராற், சகத்திலுதித்தோருனைமுதலோர்தவநாரதன்பாரத்துவசன்,மிகுத்தமரீ
சிபுலத்தியனத் திரிவிண்ணவர்கோன்சனற்குமர, னுகுத்தமதகுஞ்சரமுகன்
வேள்பிருங்கிமுதலோரோதரியோர் .... *

(இ-ள்.) மகத்தின்சகத்தில் - மகத்துவத்தினையுடையசகத்திலுள்ள — இவையெல்லாம்-இவைகளனைத்தையும்—வாலரெனினும் - எனக்கிளையவர்களாயினும்—அறிகுவர்- அறிவார்கள்—சகத்திலுதித்தோர் - உலகத்திலவதாரமானவர்கள்— உனைமுதலோர் - உம்மையாதியானவர்கள்—தவநாரதன் - தவத்தையுடையநாரதரும்—பாரத்துவசன் - பரத்துவாசரும்— மிகுத்தமரீசி- மேலானமரீசியும்—புலத்தியன் - புலத்தியரும்— அத்திரி - அத்திரியும் — விண்ணவர்கோன்- தேவேந்திரனும்—சனற்குமரன்- சனற்குமாரரும்—உகுத்தமதகுஞ்சரமுகன்-மதஞ்சொரியும்யானைமுகத்தையுடையவிநாயகரும்—வேள்-சுப்பிரமணியரும்—பிருங்கி-பிருங்கியும்—முதலோர் - ஆதியானவர்கள்—ஓதரியோர் - சொல்லமுடியாதவர்கள். எ-று ....(௩௪)

(அ-கை.) இ-து. (கவி) அவ்வாறின்னாட்சிருட்டி களிலடைந்தோர்களிலோ
ரொண்ணுண்டோ, மெய்வாய்முனியேயுன்பிறவிவிளம்பிலெட்டாகுவதிதுவா,
மிவ்வாறவ்வெட்டாம்பிறப்பி லெய்தினேமிங்கிருவோருமுய்வாயெனவன்றுற்
றதுபோ லின்றுமென்பாலுற்றனையால் .... *

(இ-ள்.) அவ்வாறு - அந்தப்படி—இன்னாள்-இதுகாலவரையும்—சிருட்டிகளின்-சிருஷ்டிகளினிடத்தில்—அடைந்தோர்களில் - (பவஞ்)சேர்ந்தவர்களில்—ஒரொண்ணுண்டோ-ஒரளவுண்டாமோ—மெய்வாய்முனியே - சத்தியவசனத்தையுடையவசிஷ்டமுனியே— உன்பிறவிவிளம்பில்- உனதுபிறப்பைச்சொல்லில்— இதுவெட்டாகுவதாம் - இதெட்டாவதாம் — இவ்வாறு-இந்தவண்ணம் — அவ்வெட்டாம்பிறப்பில் - அந்தவெட்டாஞ்சநநத்தில் — இங்கிருவோரும்-இவ்விடத்திலிரண்டுபேரும்—எய்தினேம் - அடைந்தோம்—உய்வாயென- உயிர்வாழ்வாயென்று—அன்றுற்றதுபோல் - அன்றுவந்ததுபோல—இன்றுமென்பாலுற்றனை- இப்போதுமென்னிடத்தில்வந்தாய். எ-று .... (௩௫)

(அ-கை.) இ-து. (கவி) ஒருக்கால்விண்ணினின்றுதித்தா யொருக்காணீரினின்
றுதித்தாய், செருக்கான்மலைநின்றொருக்காற்செந்தீநின்றொருக்கால்வந்தனை
நீ, யிருக்காலொடுமுக்காற்படைப்பி லிம்மண்மறைந்துமீண்டெடுத்த, தருட்
பாலமுதம்பன்னிருகாற் கடைந்தாரிவையுமறிகுவனால் .... *

(இ-ள்.) நீ - நீர்—ஒருக்கால் - ஒருதரம்—விண்ணினின்றுதித்தாய்-ஆகாயத்திலிருந்துபிறந்தாய்—ஒருக்கால் - ஒருதரம்— நீரினின்றுதித்தாய் - சலத்திலிருந்துபிறந்தாய் — ஒருக்கால்-ஒருதரம்—செருக்கான்மலைநின்று - வாசமுள்ளசோலைசூழ்ந்தமலையிலிருந்தும் — ஒருக்கால்-ஒருதரம்—செந்தீநின்று - சிவந்தவக்கினியிலிருந்தும் — வந்தனை - உண்டானாய் — இருக்காலொடுமுக்காற்படைப்பில் - ஐந்தாசிருஷ்டியில்—இம்மண்மறைந்தும் - இந்தப்பூமிமறைந்துபோனதும்—மீண்டெடுத்தது-திரும்ப(க்கூர்மாவதாரத்தினால்) லெடுத்ததும்— அருட்பாலமுதம்-கிருபையினால்க்ஷீரசமுத்திரத்திலமுத(மெடுக்க)—பன்னிருகால்-பன்னிரண்டுதரம்— கடைந்தார்-கடைந்தார்கள்—இவையுமறிகுவன்-இவைகளையுமறிவேன்.எ-று. மற்றகும்பத்தின்றோன்குபிறப்பும் புராணங்களிற்காண்க .... (௩௬)

(அ-கை.) இ-து. (கவி) முக்காற்பொற்கண்ணன்கீழ் மொய்மாநிலத்தைக்
கொண்டகன்றான், மைக்கார்நிகர்மாலிரேணுகைபான்மகவாய்வந்தானதுமடங்
ங்கு,மிக்கான்மீண்டுகலியுகங்கணூற்றிற்புத்தன்மெய்யெடுத்தா,னுக்கார்புரமு
ன்றினுமுள்ளோ ரொருக்காற்போலமுப்பதின்கால் .... *

(இ-ள்.) முக்கால் - மூன்றுதரம்—பொற்கண்ணன்கீழ் - இரண்ணியாக்ஷன்பாதாளத்தில்—மொய்மாநிலத்தை- பலம்பொருந்தியபெரியபூமியை—கொண்டகன்றான்-எடுத்துக்கொ

ண்டுபோனான்—மைக்கார்நிகர்மால்- மேகவண்ணத்தையொத்தவிஷ்ணுவானவர்—இரோணுகை பால்- இரேணுகையிடத்தில்—அறுமடங்கு - ஆறுதரம்—மகவாய்வந்தான் - பரசிராமனுகப்பிறந்தான்—மிக்கான்மீண்டு - மேலாகியவிஷ்ணுதிரும்பவும்—கலியுகங்கணூற்றில்- நூறுகலியுகத்தில்—புத்தன்மெய்யெடுத்தான் - புத்தாவதாரஞ்செய்தான்—புரமூன்றினுமுள்ளோர் - திரிபுராதிகள் —ஒருக்காற்போல - ஒருதரத்தைப்போல—முப்பதின்கால்- முப்பதுதரம்—உக்கார்- தகனமானார்கள். எ-று .... (௬௭)

(அ-கை.) இ-து. (கவி) தக்கனிருகான்மகமிழந்தான் சசிசேகரனுற்றயங்கரிக்கு,புக்கதோல்விபத்துளதாம் புராரியுடனேயருச்சுனர்க்கு, மிக்கவராகம்பொருட்டாகவிளைந்தவெம்போரெண்காலாந், தொக்கவுகங்கடொறும்புருடர் புந்திக்கீடாந்தொல்வேதம் .... *

(இ-ள்.) தக்கனிருகால் - தக்ஷப்ரஜாபதியானவனிரண்டுதரம்—மகமிழந்தான் - யாகத்தையிழந்தான்—சசிசேகரனால் - சந்திரமௌலியையுடையபரமசிவனால்—தயங்கரிக்கு - விளங்காநின்றசக்கரத்தையுடையவிஷ்ணுவுக்கு— புக்கதோல்விபத்துளதாம் - பொருந்தியவபசெயம்பதின்றரமுள்ளதாம் — புராரியுடன்-ஈஸ்வரனுடன்—அருச்சுனர்க்கு - பார்த்தனுக்கு—மிக்கவராகம்பொருட்டாக - மிகுந்தபன்றியினிமித்தம்— விளைந்தவெம்போர் - உண்டானகொடியயுத்தம்—எண்காலாம் - எட்டுத்தரமாம் — தொக்கவுகங்கடொறும் - தொகுப்பானயுகங்கடோறும்—தொல்வேதம் - அநாதியாகியமறை— புருடர்புந்திக்கீடாம் - புருஷர்களுடையபுத்திக்கீடாகவுண்டாயிருக்கும். எ-று .... (௬௮)

(அ-கை.) இ-து. (கவி) புத்திவழியேமறையேறிக்குறையும்புவிச்செய்கையுமாங்கே,சித்திரங்களாமிதுபோற் புராணத்திரள்பாடம்பலவா, யத்தமொன்றுமுகந்தோறுமமலராமாயனப்பெயராய், மெத்துபுதுமையாலிலக்கஞ் சுலோகத்தறிவுநூல்விளம்பும் .... *

(இ-ள்.)புத்திவழியே-அறிவின்மார்க்கமாய்—மறையேறிக்குறையும்-வேதமேற்றக்குறைச்சலாம்—புவிச்செய்கையும்-உலகத்தின்றொழிலும்—ஆங்கே - அப்படியே—சித்திரங்களாம்-அதிசயங்களாம்—இதுபோல்-இதைப்போல—புராணத்திரள்- புராணக்கூட்டங்களும் —பாடம்பலவாய்- பாடம்பலவிதமாகி — அத்தமொன்றும் - அருத்தமொன்றாகும்—யுகநந்தோறும்-யுகங்கடோறும்— அமலராமாயனப்பெயராய்- அமலராமாயனமென்கின்றநாமமுடையதாய்—மெத்துபுதுமையால்-மிகுந்தவதிசயத்தினால்—இலக்கஞ்சுலோகத்து-இலக்ஷங்கிரந்தத்தினால்—அறிவுநூல்விளம்புஞ் - ஞானசாஸ்த்திரமானது சொல்லப்படும். எ-று .... (௬௯)

(அ-கை.) இ-து. (கவி) ஞானராமாயனமிதனை நல்வான்மீகிநவின்றதுபோ,லானபிறரும்பன்னிருகாலமைத்தார்பலகாலழிதலினு,லீனமில்லாவிதற்கிணையாயிரண்டாவதுபாரதமிதனை, மானவியாதன்செய்ததுமுன் மறையுமற்றோர்களுமுரைத்தார் .... *

(இ-ள்.) ஞானராமாயனமிதனை - ஞானராமாயனமாகியவிதை—நல்வான்மீகி- நல்லவான்மீகிரிஷியானவர் — நவின்றதுபோல் - சொல்லியதுபோல — ஆனபிறரும் - பின்புண்டானவான்மீகரும்—பலகாலழிதலினால் - அநேகந்தரங்கெடுதலினால் — பன்னிருகாலமைத்தார்- பன்னிரண்டுதரமுண்டாக்கினார்— ஈனமில்லா - குறைவில்லாத—இதற்கிணையாய் - இதற்கொப்பாக—இரண்டாவது - இரண்டாமிதியாசமான— பாரதமிதனை - பாரதமாகியவிதை— முன்முதல்—மானவியாதன்செய்தது - மாட்சிமையானவியாசமுனிசெய்ததும்—மறைய - (அதி) இலமாக—மற்றோர்களுமுரைத்தார் - மற்றுள்ளவர்களுஞ்சொன்னார்கள். எ-று .... (௭௰)

(அ-கை.) இ-து. (கவி) அரக்கர்மாளப்பதினொன்று மவதாரத்துவிராமனெனப், புரக்குநெடுமாலிக்காலம் புவியிற்றோன்றும்வசுதேவன்,பரக்குமனையிற்பதினாறுமடங்கிக்காலம் பயில்குவனாற், றுரக்குமிந்தச்சகமயக்கந்தோன்றுந்தோன்றவருமொருகால் .... *

(இ-ள்.) அரக்கர்மாள-இராக்ஷதர்கள்கெடும்படியாக—பதினொன்றுமவதாரத்து- பதினோராமவதாரத்தில்—இராமனென-ஸ்ரீராமனென்று—புரக்குநெடுமால்-இரக்ஷிக்கின்றவிஷ்ணுவானவர் —இக்காலம்-இந்தச்சிருஷ்டிகாலத்தில்—புவியிற்றோன்றும் - பூமியிலுண்டாகுவர்—வசுதேவன் - வாசுதேவனுடைய—பரக்குமனையில் - விசாலமுள்ளவீட்டினிடத்தில்—பதினாறுமடங்கு-பதினாறுவதுதரம்—இக்காலம்-இந்தச்சிருஷ்டிகாலத்தில்—பயில்குவன் - உண்டாகுவர்—துரக்குமிந்தச்சகமயக்கம் - சொல்லாநின்றவிந்தச்சகப்பிரமையானது — ஒருகாற்றோன்று-ஒருதரந்தோன்றுததாகவும்—தோன்றவரும்-ஒருதரந்தோன்றுவதாகவும்வரும். எ-று ... (௭௧)

(அ-கை.) இ-து. (கவி) தோற்றமென்னுமிம்மயக்கந்துஞ்சாதென்றுஞ்சிற்பரத்தா, ளாற்றவிருந்துபிறந்திறக்குமப்பினுட்சேரலைகளைப்போற், சாற்றுதிசைவெற்பாதித்தன்சசியின்மேருத்தானங்கள், வேற்றுவகையாஞ்சிருட்டிதொறுமேலோயிவையுங்கண்டனனால். *

(இ-ள்.) தோற்றமென்னும்-உண்டாகிய நிதிஸ்யமென்கின்ற—இம்மயக்கம் - இப்பிரமமயானது—துஞ்சாது-கெடாமல்—என்றும் - எப்போதும்—சிற்பரத்துள்-ஞானத்மாவினுள்—ஆற்றவிருந்து-நிலையாகவிருந்து—அப்பினுட்சேரலைகளைப்போல் - சலத்திற்பொருந்தியதிரைகளைப்போல—பிறந்திறக்கும் - உண்டாகிநாசத்தைபடையும்—சாற்றுதிசை - சொல்லப்பட்ட (வெட்டுத்) திக்குகளும்—வெற்பு - மலைகளும்—ஆதித்தன் - சூரியனும்— சசி - சந்திரனும்—மீன் - நக்ஷத்திரங்களும்—மேருத்தானங்கள் - மகாமேருவினிடங்களும் — சிருட்டிதொறும்-சிருஷ்டிகடோறும்—வேற்றுவகையாம்-வேறுவேறுதன்மையாம்—மேலோய் - மேலானவசிஷ்டமுனியே—இவையுங்கண்டனன் - இவைகளையும்பார்த்தேன். எ-று. (இ-மஙு-க-ம்) மாயாவிசித்திரமே சகமுதலியயாவுமாமெனப்படுவதைத் தரிசிப்பித்து அதை நீக்குநிமித்தஞ் சகத்தின்விசித்திரங்களை விருவினதையறிவித்ததாம் .... (எஉ)

(அ-கை.) காலாதீதமானஞானத்தையறிவிக்குநிமித்தங்காலனைவென்றவனுபவத்தைவினவினதறிவித்தல். (கவி) உகங்களுமொன்றுக்கொன்றுசாரங்களுடன்மயங்கு, மகஞ்செய்முனிவாவென்றனைமறுத்துமொன்றைநான்வினவிப், புகன்றேன்விவகாரத்துடனிப்புவியிற்சரித்துநீகூற்றை, யகன்றதெங்ஙனெனமீட்டுமதற்குப்புசுண்டனறைவுறுமே......*

(இ-ள்.) உகங்களும்-நான்குயுகங்களும்—ஒன்றுக்கொன்று-ஒருயுகத்துக்கொருயுகம்—ஆசாரங்களுடன்-ஒழுக்கங்களோடும்—மயங்கும்-மாறுபட்டிருக்கும்—மகஞ்செய்முனிவா-யாகஞ்செய்கின்றவசிஷ்டமுனியே—என்றனை - என்றுசொல்லியபுசுண்டயோகியை — மறுத்துமொன்றை-திரும்பவுமொன்றை— நான்வினவிப்புகன்றேன் - யான்சங்கித்துக்கேட்டேன் —விவகாரத்துடன்-தொழிலோடும்—இப்புவியிற்சரித்தும்- இந்தப்பூமியிற்சஞ்சரித்தும்—நீகூற்றை-நீர்யமனை—அகன்றதெங்ஙனென-நீங்கினதெப்படியென்றுகேட்க—மீட்டுமதற்குப்புசுண்டனறைவுறும்-திரும்பவுமதற்குப்புசுண்டயோகியானவர்சொல்லுவார். எ-று .. .. (எ௩)

(அ-கை.) அசுத்தவாசனையைக்கெடுக்கவேண்டுமெனல்.(கவி)செறிந்தமேலோரேவியதுசெய்வதறியார்க்குறுபயனே, தறிந்துமெனைநீவினவியதிங்கறைவன்கேட்டிவாதனைநூற், பிறிந்திடாதகுற்றங்கண் முத்தமென்னும்பெருமாலை, யெறிந்துவூன்றுதிருக்கின்றவிதயத்தாரையமனணுகான் .... *

(இ-ள்.) செறிந்த- நிறைந்த—மேலோரேவியது-மகான்களாணையை—செய்வதறியார்க்கு-செய்யத்தெரியாதவர்களுக்கு—உறுபயனேது- பொருந்தாநின்றப்ரயோசனமேயாது — நீயறிந்தும்-உமக்குத்தெரிந்திருந்தும்—இங்கு-இவ்விடத்தில்—எனைவினவியது-அடியேனைக்கேட்டதை—அறைவன்கேட்டி-சொல்லுவன்கேட்பீர்—வாதனைநூல்- வாசனையென்னுஞ்சூத்திரத்திற் (கோக்கும்)—பிறிந்திடாதகுற்றங்களென்னும் - நிறைந்தகுற்றங்களாகிய— பெருமுத்தமாலை-நீண்டநித்திலவலங்கலை—எறிந்து-தள்ளி—ஊன்றுதிருக்கின்ற - சாராமலிருக்கின்ற — இதயத்தாரை-மனதையுடையவர்களை—யமனணுகான்-கூற்றுவனெருங்கான். எ-று .... (எ௪)

(அ-கை.) மனோதுன்பத்தையுமாசையையுங்கெடுக்கவேண்டுமெனல். (கவி) அறுதிமரத்துக்கோரிவாளாக்கைவல்லிக்கெரிபுழுவா, மறுகுகின்றமனத்துன்ப மருவாதவரையமனணுகா, னிறுதியுடலாமரத்தினைசூழ்ந்திரங்குமனத்திற்றலைவைத்து, முறுகுமாசைப்பாம்படரா முதன்மையோரையமனணுகான்.................................. *

(இ-ள்.) அறுதிமரத்துக்கு - நிச்சயமாகியவிருட்சத்துக்கு—ஈரரிவாள்-பிளக்கின்றவரிவாளாகியும்—ஆக்கைவல்லிக்கு-சரீரமென்னுங்கொடிக்கு—எரிபுழுவாம்- எரிபுழுவாகியுமிருக்கின்ற —மறுகுகின்ற - சுழலாநின்ற —மனத்துன்பம்- மனதினதுதுயரத்தை—மருவாதவரை-அடையாதவர்களை— யமனணுகான்- கூற்றுவனெருங்கான்— இறுதியுடலாமரத்தினை- நசியாநின்றசரீரமென்னும்விருக்ஷத்தை—சூழ்ந்திரங்குமனத்திற்றலைவைத்து - சுற்றிக்கொண்டிரங்காநின்றமனதினிடத்திற்றலையைவைத்துக்கொண்டு — முறுகுமாசைப்பாம்பு - சிறுநின்றவிச்சையென்னுஞ்சர்ப்பமானது—அடரா - நெருங்காத—முதன்மையோரை - முதன்மையானசத்துக்களை—யமனணுகான் - கூற்றுவனெருங்கான். எ-று .... (எ௫)

(அ-கை.) கோபலோபங்களைக் கெடுக்கவேண்டுமெனல். (கவி) இராகவெகுளிவிடம்பெருகவிதயப்புற்றிலோபமெனு, மராவந்தணுகிவிழுங்காதவறிஞர்தம்மையமனணுகான்,விராவுவேகநீர்சுவறிமெய்யாங்கடலில்வடவனலாய்ப்,பராமல்வெகுளிவேராறுத்தபண்பினோரையமனணுகான்.. *

(இ-ள்.) இராகவெகுளி - இராகத்துவேஷமென்கின்ற — விடம்பெருக- நஞ்சானதுமிக—இதயப்புற்றில் - மனமென்கின்றபுற்றில்—லோபமெனும் - லோபமென்கின்ற — அரா

வந்தணுகி-சர்ப்பமானது வந்துநெருங்கி—விழுங்காதவறிஞர்தம்மை-புசியாதஞானவான்களை —யமனணுகான் - கூற்றுவனெருங்கான்—விராவுவிவேகநீர்சுவறி - மிகுந்தவிவேகமென்னுஞ் சலம்வற்றி—மெய்யாங்கடலில் - தேகமாகியசமுத்திரத்தில்—வடவனலாய்-வடவாமுகாக்கினியாய்—பராமல்வெகுளிவேரறுத்த - பரவாமற்கோபவேரைக்கெடுத்த—பண்பினோரை - குணத்தையுடையவர்களை—யமனணுகான் - கூற்றுவனெருங்கான். எ-று .... (௭௬)

(அ-கை.) காமப்பற்றைக்கெடுத்து வீட்டில்விஸ்ராந்தியடையவேண்டுமெனல். (கவி)
கடினமானவெந்திரத்திற்கலந்ததிலம்பொன்றுவதென்னக், கொடியமதனாற்றேய்தலுறுக்கொள்கையோரை யமனணுகான், முடிவிலாத நின்மலமா முத்திப்பதத்தே சித்தத்தி, னெடியதுயர்தீர்ந்திளைப்பாறுநிலைபெற்றோரையமனணுகான் .... *

(இ-ள்.) கடினமானவெந்திரத்தில் - உறுதியாகியசெக்கில் — கலந்ததிலம்பொன்றுவதென்ன - சேர்ந்தவெள்ளுநசிப்பதுபோல—கொடியமதனால் - கொடிதானமன்மதனால்—தேய்தலுறு - அழிவுபடாத—கொள்கையோரை - அறிவையுடையவர்களை — யமனணுகான் - கூற்றுவனெருங்கான்—முடிவிலாத - நாசமில்லாத — நின்மலமாம் - நின்மலமாகிய — முத்திப்பதத்து - நிருவாணபதத்தில்— சித்தத்தினெடியதுயர்தீர்ந்திளைப்பாறும் - மனதினதுமிகுந்ததுன்பநீங்கிவிஸ்ராந்தியடையும்—நிலைபெற்றோரை - நிலையைப்பெற்றவர்களை—யமனணுகான்-கூற்றுவனெருங்கான். எ-று ....(௭௭)

(அ-கை.) அபேதமானமனோசித்தத்தைவருந்தாதெனல். (கவி) ஓதுமிவையாங்குற்றங்களுழலும்பிறவிக்காரணங்கள், பேதமின்றியொன்றானபெரியமனத்தைத்துயர்செய்யா, வாதிவியாதிகளிற்றோன்றியகலாமயக்கார்சலிக்குமிடர், தீதில்பேதமறவொன்றுஞ்சித்தத்தருகுஞ்செல்லாதே .... *

(இ-ள்.) ஓதுமிவையாங்குற்றங்கள்- சொல்லப்பட்ட இத்தோஷங்கள்—உழலும்பிறவிக்காரணங்கள் - சுழலாநின்றபவத்துக்குவித்துகளாம் — பேதமின்றி - வேற்றுமையில்லாமல்—ஒன்றான - ஏகமாகிய—பெரியமனத்தைத்துயர்செய்யா-மகாமனதைத்துன்பஞ்செய்யாது—ஆதிவியாதிகளிற்றோன்றி - ஆதிவியாதிகளிலுண்டாகி — அகலாமயக்கால் - நீங்காதபிரமையினால்—சலிக்குமிடர் - சஞ்சலிக்கின்றதுன்பமானது — பேதமற - வேற்றுமைகெட— தீதில்-தீமையில்லாத—ஒன்றுஞ்சித்தத்து - ஏகமாகியமனதின்—அருகுஞ்செல்லாது - பக்கத்திலுஞ்செல்லமாட்டாது. எ - று ....(௭௮)

(அ-கை.) இ-து. (கவி) இதையவிண்ணையிருளாக்கியிச்சைகோபத்தெழுமெண்ணஞ், சிதைவில்பேதமறவொன்றுஞ் சித்தத்தருகுஞ்செல்லாதாற், றுதைதீப்பொருள்கடீச்சொற்கடூராரம்பங்கடீக்குணங்க, ளுதையமானசமமேவியொன்றுமனதையுட்புகுதா .... *

(இ-ள்.) இதையவிண்ணை-இருதயாகாயத்தை—இருளாக்கி - இருளாகச்செய்து—இச்சைகோபத்து-இராகத்துவேஷத்தில்—எழுமெண்ணம்- உண்டானசிந்தையானது—சிதைவில்பேதமற-கெடாதவேற்றுமைகெட—ஒன்றுஞ்சித்தத்து-ஏகமாகியமனதின்—அருகுஞ்செல்லாது-பக்கத்திலுநெருங்கமாட்டாது—துதைதீப்பொருள்கள் - நெருங்கியதீமையானவஸ்துக்களும்—தீச்சொற்கள்-தீமையானவசனங்களும்— துராரம்பங்கள்- துஷ்டாரம்பங்களும்—தீக்குணங்கள்-தீமையாகியகுணங்களும்— உதையமானசமமேவி - சம்தோதயமாயிருக்கின்றசமத்துவத்தையடைந்து—ஒன்றுமனதை-ஏகமானமனதின் —உட்புகுதா-அகத்திற்புகமாட்டாது. எ-று.

(அ - கை.) அபேதவஸ்துவினிடத்தின் மனதைச்செலுத்தவேண்டுமெனல். (கவி) மயக்கமுபாதிமலமன்றிவாய்மையாகிமேலிதமாய்த், துயக்குந்தொழிநீர்பொருள்வசத்தேதொடரமனதைச்செயவேண்டும், பயக்குநெடுஞ்சூனியநல்கி யசுத்தமாகும்பன்மைப்பே, யியக்கங்காணும்பொருள்வசத்தேயெய்தமனத்தைச்செயவேண்டும்.

(இ-ள்.) மயக்கம் - பிரமையும்—உபாதி - உபாதியும்—மலம் - களங்கமுமாகியவினைகள்—அன்றி - அல்லாமல் — வாய்மையாகி - மெய்யாகி—மேலிதமாய் - மேலான (முத்திக்)குரிமையாய்—துயக்குந்தொழிநீர் - வருத்துகின்றசெயலில்லாத—பொருள்வசத்தேதொடர-தற்பதார்த்தவசத்திற்றொடரும்படியாக — மனதைச்செயவேண்டும் - மனதைச்செய்யவேண்டும்—பயக்கும் - உண்டாகாநின்ற— நெடுஞ்சூனியநல்கி - வெகுகாலம்பாழான (பயத்தைக்)கொடுத்து—அசுத்தமாகும்- அசுத்தமாகிய—பன்மைப்பேய்- பேதமென்கின்றபசாசங்கள்—இயக்கங்காணும்பொருள்வசத்து - தங்காததற்பதார்த்தத்தில்—எய்தமனத்தை - மனதைஅடையும்படி—செயவேண்டும் - செய்யவேண்டும். எ-று .... (௮௰)

(அ-கை.) தன்னைத்தன்னாற்றெரிசிக்கிற் கூற்றுநீங்குமெனல். (கவி) தனையுள்ளுணர் வாறுடுதலேசகலவிடர்க்கும்போக்கிடமா, முனையொப்பார்கட்கெளிதென்னையொ ப்பார்க்கரிதாமுயர்முனிவா, வினைகட்கெல்லாமப்பால் மேலாங்கோடிதனைமேவு, மினையபதஞ்சாமானியத்தே யெழுபுந்தியரெங்ஙனம்பெறுவார்.... .... *

(இ-ள்.) தனை - ஆத்மாவை—உள்ளுணர்வாறுடுதலே - அதனறிவினாலறிதலே — சகல விடர்க்கும் - சகலதுன்பங்களையும்—போக்கிடமாம் - நீக்குதற்கிடமாகும்— உனையொப்பார் கட்கெளிது - உமக்குச்சமானமானவர்களுக்கெளிதாகும்— என்னையொப்பார்க்கரிதாம் - என் போலிகளுக்கரியதாம்—உயர்முனிவா-மேலானவசிஷ்டமுனியே— வினைகட்கெல்லாம்-தொழி ல்களுக்கெல்லாம்—அப்பாலாம் - அதீதமாகிய—மேலாங்கோடிதனைமேவும்- சேடமானமுடி வைப்பொருந்தும்—இனையபதம் - இப்படிப்பட்டபதத்தை— சாமானியத்து - மூடத்தில்— எழுபுந்தியர் - உண்டாகாநின்றமதியையுடையவர்கள்—எங்ஙனம்பெறுவார்-எப்படியடைவார் கள். எ-று. (இ-௯-௧-ம்) வாசனைமுதலிய பற்றுக்களியாவையுங்கெடுத்துதனதாத்மஞானத்தை த்தரிசிக்கில்யமனணுகானென்றறிவித்ததாம்..(௮௧)

(அ-கை.) மத்தியகதஞானத்தாற்பிரமாநந்தத்தையடைந்து இத்தேகத்தோடேயிருத் தற்குபிராணனோக்கி யிருக்கவேண்டுமெனல். (கவி) ஞானநோக்குக்கொப்பனவாய் ஞானநோக்கினண்புளதா, மானகுணங்கட்கிடையொன்றை யடைந்தேதுன்பமெ லாமறுத்து, மானநல்வாழ்வினைவளர்த்துமாயாதிருக்குங்காரணமா,யீனமற்றவுயிர் நோக்க மென்னுங்குணமுற்றனனென்றான் .... *

(இ-ள்.) ஞானநோக்குக்கு- ஞானதிருஷ்டிக்கு—ஒப்பனவாய்-சமானமாகியும்—ஞான நோக்கில் - ஞானநாட்டத்தில்—நண்புளதாம் - அன்புள்ளதாகியுமிருக்கின்ற—ஆனகுணங்கட் கிடை - ஆகிய(சற்)குணங்களின்மத்தியின்—ஒன்றையடைந்து- ஒன்றைப்பெற்று—துன்பமெ லாமறுத்து - துக்கங்களனைத்தையுங்கெடுத்து—மானநல்வாழ்வினைவளர்த்து-சிறந்தசுகத்தைப் பெருக்கி—மாயாதிருக்குங்காரணமாய் - மரியாதிருக்குங்காரணமாயிருக்கின்ற— ஈனமற்றவு யிர்நோக்கமென்னுங் குணமுற்றனனென்றான் - குற்றமற்றபிராணநாட்டமென்கின்ற குண மடைந்தேனென்று (புசுண்டமுனி)சொன்னார். எ-று.. (௮௨)

(அ-கை.) பிராணயாமமறிவிக்குநிமித்தமஃதியாதெனிற்சொல்லத்தொடங்கிப்பிராணபா னஸ்தானங்கூறல். (கவி) ஓதுமளவிலறிந்திருந்துமுயிர்நோக்கெனநீயுரைசெய்த, தேது பகரொன்றலும்புசுண்டனிசைக்குநீயிங்கெதிர்காணும், பூதவுடலாமனைநடுவேபொருந்து மிதயபுண்டரிகச், சீதமலரினுள்ளிரண்டுசெறியும்பிராணனபானனென .... *

(இ-ள்.) ஓதுமளவில்-சொல்லுகின்றசமயத்தில்—அறிந்திருந்தும்-தெரிந்திருந்தும்—உயி ர்நோக்கென-பிராணநாட்டமென்று—நீயுரைசெய்ததேது- நீர்சொல்லியதியாது—பகரொன்ற லும்-சொல்லுமென்றுகேட்கவும்—புசுண்டனிசைக்கும்- புசுண்டயோகிசொல்லுவார்—நீயிங் கெதிர்காணும்-நீரிவ்விடத்திலெதிரேபார்க்கின்ற—பூதவுடலாம்-(ஐம்)பூதசரீரமான—மனைநடு வே-வீட்டின்மத்தியில்—பொருந்தும்-பொருந்தாநின்ற—இதயபுண்டரிகம்-இதயதாமரையா ன—சீதமலரினுள் - குளிர்ச்சியையுடையபுஷ்பத்தினிடத்தில்—பிராணனபானனென-பிராண பானவாயுவென்று—இரண்டுசெறியும் - இரண்டுஞ்சேர்ந்திருக்கும். எ-று.................... (௮௩)

(அ-கை.) இதயாகாசத்துக்குச்சந்திரசூரியராய்வலம்வருகின்றாரெனல். (கவி) தோற்ற முடைத்தாய்மேன்மையதாய்த்துன்னும்பவனமிவ்விரணடி, லாற்றலுடையகதியினைப்பி ன்செல்வனயர்வன்றியிலென்று, மேற்றவிதயாம்பரத்திரவிமதியாவனவிண்ணிடையுழல் வ, வூற்றமுடனேகளேபரமாமெந்திரங்கொண்டுலாவுவன...................................*

(இ-ள்.) தோற்றமுடைத்தாய் - வெளிப்படையாய்—மேன்மையதாய்த்துன்னும்- மேன் மையாகநெருங்கிய — பவனமிவ்விரண்டின் - இந்தவிரண்டுவாயுவினது — ஆற்றலுடையகதி யினை - வலியையுடையநடையை—என்றும் - எப்போதும்—அயர்வன்றியில் - வருத்தமில்லா மல்—பின்செல்வன் - அனுசரிப்பன் — ஏற்றவிதயாம்பரத்து - மேலாகியவிதயாகாசத்தில்— இரவிமதியாவன- சூரியசந்திரராவன—விண்ணிடையுழல்வ-ஆகாயத்திற்சஞ்சரிப்பன—ஊற்ற முடன் பற்றுதலுடன்—களேபரமாம்-சரீரமாகிய—எந்திரங்கொண்டு-எந்திரத்தை (ச்சுமந்து) கொண்டு—உலாவுவன-சஞ்சரிப்பார்கள். எ-று.. (௮௪)

(அ-கை.) அவைகளின்கதியிற்செல்லின்வாசனைக்ஷயம்வருமெனல். (கவி) நன்றாமே ல்கீழோடுவனநனவுகனவுசுழுத்திகளி, லொன்றுஞ்சமரூபத்தனமூன்னுரைத்தபிரா ணபானங்கள், பின்றுதிவற்றின்கதியென்றும்பின்செல்வேற்குச்சுழுத்தியிலே, நின் றுனுடையவாதனைபோய்கழ்வாதனைகணிங்கினவால்.................................. *

(இ-ள்.) நன்றாமேல்கீழோடுவன - நன்றாய்மேலுங்கீழுஞ்சஞ்சரிப்பன — நனவு - சாக்கிரங்களிலும் — கனவு - சொற்பனங்களிலும் — சுழுத்திகளின் - சுழுத்திகளிலும் — ஒன்றுஞ்சமரூபத்தன - ஒன்றானசமவடிவத்தையுடையவைகள் — முன்னுரைத்த - முன்சொல்லப்பட்ட — பிராணபானங்கள் - பிராணபானவாய்வுகள் — பின்றாது - பிறகிடாமல் — இவற்றின்கதி - இவற்றினடையின் — என்றும்பின்செல்வேற்கு - எப்போதுமனுசரிக்கின்றவெனக்கு — சுழுத்தியில் - சுழுத்தியவத்தையில் — நின்றானுடையவாதனைபோல் - நின்றவனுடையவாசனையைப்போல — நிகழ்வாதனைகள் - விளங்குகின்றவாசனைகளானவை — நீங்கின - போயினவாம். எ-று .... (அ௫)

(அ-கை.) அவைகளின் கதியின்மேன்மையும் பிராணமேனோக்கமு முரைத்தல். (கவி) வேறு. அரவிந்தவளைய நூலொன்றைக்கூறோராயிரமிட்டதிலொருகூறொப்பென்றாலுந், தரமொவ்வாதறச்சிறிதாயுண்டாய்நின்றுந்தாக்கிபறிவரிதவற்றின்கதியின்றன்மை, விரவிந்தப்பிராணன்விடாதசைவாஞ்சத்திமேவியொழியாதுலவுமேனியுள்ளே, திரமின்றிப்புறத்தினுமுள்ளினுமெப்போதுந்திரும்பாதுமேற்போதல்செய்கையாகும் .... *

(இ-ள்.) அரவிந்தவளையம் - தாமரைத்தண்டினது — நூலொன்றை - ஒருநூலை — கூறோராயிரமிட்டு - ஆயிரம்பங்குசெய்து — அதிலொருகூறு - அதனிலொருபங்கு — ஒப்பென்றாலும் - சமானமென்றாலும் — தரமொவ்வாது - சமானமாகாமல் — அறச்சிறிதாய் - மிகவுஞ்சூட்சுமமாய் — உண்டாய்நின்றும் - உண்டாயிருந்தும் — தாக்கி - எதிர்த்து — அவற்றின் - அந்தவாயுவின் — கதியின்றன்மையறிவரிது - நடையினுடையகுணத்தையறியவரியதாம் — விரவிந்தப்பிராணன் - கலத்தலாகியவிப்பிராணனானது — விடாதசைவாஞ்சத்திமேவி - விடாமலசைகின்ற சத்தியைப்பொருந்தி — ஒழியாதுலவும் - நீங்காமற்சஞ்சரிக்கின்ற — மேனியுள் - சரீரத்தினுள் — திரமின்றி - ஸ்திரமில்லாமல் — புறத்தினும் - புறம்பிலும் — உள்ளினும் - அகத்திலும் — எப்போதும் - எக்காலத்தும் — திரும்பாது - திரும்பாமல் — மேற்போதல் - மேலேசெல்லுதல் — செய்கையாகும் - தொழிலாகும். எ-று .... (அ௬)

(அ-கை.) அபானனதுகீழ்நோக்கஞ்சொல்லிப்பிராணயாமமெண்விதமாகக்கூறத்தொடங்கி முதற்பிராணனையகத்திற்பூரித்தலுட்பூரகமெனக்கூறல். (கவி) மற்றையபானனுமசைவாஞ்சத்திமேவிமாறுமலுலவுமகவாகியத்தி, லுற்றவுடலிற்கீழோடாநிற்குமுறுநனவு கனவிலுமிவ்வுயர்பிராணன், முற்றுறமீள்வதுநன்றாமறிந்தோர்க்கின்பமுழுதளிக்குமிதனியல்பைமொழியக்கேளாய், பெற்றபுறத்தீராறுவிரன்மட்டோடும்பிராணன்மீட்டுடலுறல்பூரகமாய்ப்பேசும் .... *

(இ-ள்.) மற்றையபானனும் - இரண்டாவதானவபானவாயுவும் — அசைவாஞ்சத்திமேவி - அசைவாகியசத்தியைப்பொருந்தி — அகவாகியத்தில் - உட்புறம்பில் — மாறுமலுலவும் - நீங்காமற்சஞ்சரிக்கும் — உற்றவுடலிற்கீழ் - பொருந்தியசரீரத்தின்கீழே — ஓடாநிற்கும் - செல்லும் — உறுநனவு - பொருந்தாநின்றசாக்கிரத்திலும் — கனவிலும் - சொற்பனத்திலும் — இவ்வுயர்பிராணன் - இம்மேலானபிராணனானது — முற்றுறமீள்வது நன்றாம் - முழுதுந்திரும்புவது நன்மையாம் — அறிந்தோர்க்கு - (இதைத்) தெரிந்தவர்களுக்கு — இன்பமுழுதளிக்கும் - சுகமுழுமையுங்கொடுக்கும் — இதனியல்பை - இந்தப்பிராணன்குணத்தை — மொழியக்கேளாய் - சொல்லக்கேட்பாய் — பெற்றபுறத்து - அடையப்பட்டபுறத்தில் — ஈராறுவிரன்மட்டு - பன்னிரண்டங்குலமளவில் — ஓடும்பிராணன் - செல்லாநின்றபிராணவாய்வு — மீட்டுடலுறல் - திரும்பச்சரீரத்திற்புகுதல் — பூரகமாய்ப்பேசும் - பூரகமாகச்சொல்லப்படும். எ-று .... (அ௭)

(அ-கை.) (உ) அபானனையகத்திற்பூரித்தவுட்பூரகமும் (௩) அவைகளையகத்திற்றம்பித்தவுட்கும்பகமுங்கூறல். (கவி) புறநின்றுசாலவுமுள்ளடங்கவன்புபொருந்தாமலபானனுடற்புகுதலெய்துந், திறமென்றுமதனையும்பூரகமாய்ச்செப்புந் தீரவபானனுமொளித்துப்பிராணன்றானு, மறவுமிதயத்தசைவற்றிருக்குமெம்மட்டம்மட்டுங்கும்பசமா மவத்தையாகு, மிறவறுநல்யோகியரீதனுபவிப்பரொக்கலையுங்கற்றுணர்ந்தவேதத்தோனே .... *

(இ-ள்.) புறநின்று - புறத்திலிருந்து — சாலவுமுள்ளடங்க - மிகவுமுள்ளடங்க — வன்புபொருந்தாமல் - வருத்தமடையாமல் — அபானன் - அபானவாய்வு — உடற்புகுதலெய்தும் - சரீரத்திற்புகுதலையடையும் — திறமென்றுமதனையும் - திறம்பொருந்தியவதையும் — பூரகமாய்ச்செப்பும் - பூரகமென்றுசொல்லப்படும் — தீரவபானனுமொளித்து - முடிவாகவபானவாயுவுமடைந்து — பிராணன்றானும் - பிராணவாயுவும் — அறவுமிதயத்து - மிகவுமிதயத்தில் — எம்மட்டு - எதுவளவும் — அசைவற்றிருக்கும் - அசைவற்றிருக்கின்றதோ — அம்மட்டும் - அதுவரையிலும் — கும்பகமாமவத்தையாகும் - கும்பகமென்கின்றவவத்தையாம் — ஒக்கலை - சகலகலை

ஞானங்களையும்—கற்றுணர்ந்த - கற்றறிந்த— வேதத்தோனே - வேதத்தையுடைய வசிஷ்டரே —இறவலுறநல்லியோகியர்- மரியாதநல்ல யோகிகள்—ஈதனுபவிப்பர்- இதையனுபவிப்பார்கள்.

(அ-கை.) (௬) அப்பிராணன் புறம்பினின்றுண்ணோக்கடையுமுள்ரேசகமும் (௫) நாசியினுனியினிற்கும் புறப்பூரகமும், (௭) நாசியின்றுவாதசாந்தத்தினிற்கும் வேறு புறப்பூரகமுஞ் சொல்லுதல். (கவி) மருவிதயவிண்ணினுந்தன்னிதயத்தூடே வருத்தமறப்பிராணன்கள்புறநோக்கமெய்தல், புரிவுறவுண்மேவுமிரேசகந்தானாகும் புறநோக்கமுறுவாயுபொருந்துமூக்கி, னுருவியதனுனியளவாங்கதியைமுன்ன முறப் புறப்பூரகமாமென்றுரைப்பார்முன்னோர், விரிவுறநாசியினுனிநின்றகன்றீராறுவிரலளவாங்கதிப்பிறப்பூரகமாய்வேறே................................ *

(இ-ள்.) மருவிதயவிண்ணினும் - பொருந்தாநின்றவிதயாம்பரத்திருந்தும்—தன்னிதயத்தூடு - தன்மனதில்—வருத்தமற - வருத்தமில்லாமல்—பிராணன்கள் - பிராணவாயுவுகள்—புறநோக்கெய்தல்புரிவுற - பகிர்முகமாகுதல்செய்ய— உண்மேவும் - அகத்திற்பொருந்திய — இரேசகந்தானாகும் - இரேசகமாம் — புறநோக்கமுறும்வாயு - புறம்பேநாட்டமிருந்தபிராணவாயுவானது—பொருந்துமூக்கினுருவி - பொருந்தியநாசியினுடுருவி — அதனுனியளவு - அதனுனிமட்டும்—கதியை - நடையை — முன்னமுற - முன்னேபொருந்த — புறப்பூரகமாமென்று - வெளிப்பூரகமென்று— முன்னோருரைப்பர் - பெரியோர்கள்சொல்லுவார்கள்—விரிவுற - விரிவையடைய—நாசியினுனிநின்றகன்று - நாசிகாந்தத்தினின்றுநீங்கி — ஈராறுவிரலளவாங்கதி - பன்னிரண்டங்குலப்பிரமாணநடையை — வேறுபுறப்பூரகமாம் - வேறானபுறப்பூரகமாமென்றுசொல்லுவார்கள். எ-று.. (௮௯)

(அ-கை.) (௭) பிராணன்புறத்திலும் அபானனுள்ளிலும் ஸ்தம்பிக்கும்புறக்கும்பகமும் (௮) அபானன்புறம்பினின்றுண்ணோக்கும் புறரேசகமுங்கூறல். (கவி) புறத்திலேபிராணனொளித்திடவபானன்புறப்படாதிருக்கபூரணவவத்தை, நிறத்தபுறக்கும்பகமாமபானன்றேற்றநிகழ்வடிவாம்வாயுவினுண்ணோக்கந்தானே, நிறத்தபுறரேசகமாமிதுவேமுத்திசேர்விக்குநித்தலுஞ்சிந்திக்கலாகு, மறித்தலறப் புறனுட்சேர் கும்பகாதிவருகதிகள்விடாதுணர்ந்தோர்மறித்தும்வாரார்............................ *

(இ-ள்.) புறத்தில் - வெளியில்—பிராணனொளித்திட - பிராணவாயுவானதடங்க—அபானன் - அபானவாயுவானது — புறப்படாதிருக்க - வெளிப்படாமலிருப்ப — பூரணவவத்தைநிறத்த - பூரணவவத்தையாய்விளங்கிய—புறக்கும்பகமாம் - புறக்கும்பகமாகும்— அபானன்றேற்றம் - அபானன்றோற்றத்தின்—நிகழ்வடிவாம் - ப்ரகாசரூபமான — வாயுவினுண்ணோக்கந்தான் - வாயுவினுட்பார்வையானது — நிறத்தபுறரேசகமாம் - திரமானபுறரேசகமாகும்—இதுவேமுத்திசேர்விக்கும் - இதுவேமோட்சத்தையடைவிக்கும்—நித்தலும்-சதாகாலமும்—சிந்திக்கலாகும் - தியானிக்கப்படும்—மறித்தலற - தடையில்லாமல்—புறனுட்சேர் - புறம்பினுமுள்ளினுஞ்சேராநின்ற—கும்பகாதிவருகதிகள் - கும்பகமுதலாகவராநின்றநடைகளை—விடாதுணர்ந்தோர் - தவிராமலறிந்தவர்கள்—மறித்தும்வாரார் - திரும்பவுஞ்செனியார்கள். எ-று. (இ- ௯- ௧- ம்) பிராணபானனை நிறுத்தி முட்பூரகமிரண்டு முட்கும்பகமொன்று முள்ரேசகமொன்றும், புறப்பூரகமிரண்டும் புறக்கும்பகமொன்றும் புறரேசகமொன்றுமாகிய வெண்வகையையுஞ்சொல்லியதாம்.. (௯௰)

(அ-கை.) இப்பிராணயாமத்தான் மனதையடக்கிஞோர்விஷயத்தையும்பரிசியாரெனல். (கவி) நாடுபிராணபானனியற்கையாகநானுரைத்தவிக்கதிகளுமிரண்டும்,வீடுதருவனவிரவும்பகலுமேவவேண்டுவனபுரைவறவிவ்வியாபாரத்திற், கூடினராய்ப்புறம்போகாதுளத்தைக்காப்போர் குறைவில்சிலநாளினிலை கூடாதிற்பர், தேடுமிதுபரிசயிப்போர்விடயவேட்கைச்சேரார்வேதியர்நாய்த்தோற்றீண்டுவாரோ...... *

(இ-ள்.) நாடுபிராணபானன் - நாடாநின்றபிராணவபானவாயுவின் — இயற்கையாக - இயல்பாக—நானுரைத்த - யான்சொல்லப்பட்ட— இக்கதிகளுமிரண்டும் - இவ்வெட்டுக்கதிகளும்—வீடுதருவன - வீட்டைக்கொடுப்பன—இரவும்பகலும் - இராப்பகலும்—மேவவேண்டுவன-விரும்பத்தக்கன—விரைவற - வேகமில்லாமல்—இவ்வியாபாரத்தில் - இத்தொழில்களில்—கூடினராய் - கூடினவர்களாய்—புறம்போகாது -புறத்திற்செல்லாமல்—உளத்தைக்காப்போர்-மனதைக்காப்பவர்கள்—குறைவில் - குறைவில்லாமல்— சிலநாளில் - சிறிதுநாட்களில்— நிலைகூடாநிற்பர் - (நிருவாண) நிலையைச்சேர்வார்கள்—தேடுமிது - தேடாநின்றவிதை—பரிசயிப்போர் - அப்பியாசஞ்செய்பவர்கள்—வேதியர் - பிராமணர்கள்—நாய்த்தோல் - ஞாளியினதுசருமத்தை—தீண்டுவாரோ - தொடுவார்களோ --- (அதுபோல) விடயவேட்கை - விஷயவிச்சையை --- சேரார் - அடையார்கள். எ - று.. (௯௧)

(அ-கை.) இவ்வெண்விதமான பிராணுயாமசாதனஞ்சொல்லிமேற்சககத்தைபஞ்சொல்லவேண்டிப் பிராணுபானலயஸ்தானஞ் சொல்லுதல். (கவி) போகினுநிற்கினுங்கனவுநனவுற்றுலும்பொருந்துநோக்கிதுவானேர்பூணர்பந்தஞ், சோகமுறுர்பேறெல்லாம்பெற்றதாகுஞ்சொன்னவிதயக்கமலநின்றுதோன்று, மேகுபிராணன்புறத்தேவிரலீராறினெல்லையிலேயிறந்திடுமாலபானன்றுனு,மாகுபுறத்தேவிரலோர்பன்னிரண்டி னளவினுதித்துளக்கமலத்தடங்கிமாயும்.................................... *

(இ-ள்.) போகினும் - சென்றுலும்—நிற்கினும் - நின்றுலும் — கனவுநனவுற்றுலும்-சாக்கிரத்திற்சொற்பனத்தின்மேவினுலும்—பொருந்தும் - பொருந்தாநின்ற— நோக்கிதுவானேர் - இந்தப்பார்வையையுடையவர்கள்—பந்தம்பூணர் - பந்தமணியார்கள்— சோகமுறுர்-துன்பம்பொருந்தார்கள்—பேறெல்லாம் - அடையத்தக்கபலன்களனைத்தும்— பெற்றதாகும்-அடைந்ததாகும்—சொன்ன - முன்சொல்லப்பட்ட—இதயக்கமலம்-இருதயகமலத்தில்—நின்றுதோன்றும் - நின்றுண்டாகிய—ஏகுபிராணன் - செல்கின்றபிராணவாயுவு—புறத்து-வெளியில்—விரலீராறினெல்லையில் - பன்னிரண்டங்குலப்பிரமாணத்தில்—இறந்திடும் - இறந்துவிடும்—அபானன்றுனும் - அபானவாயுவும்—ஆகுபுறத்து- ஆகாநின்றவெளியில்—விரலோர்பன்னிரண்டினளவில் - பன்னிரண்டங்குலப்பிரமாணத்தில்—உதித்து- உண்டாகி—உளக்கமலத்து-இருதயகமலத்தில்—அடங்கிமாயும் - அடங்கியிறக்கும். எ-று................................. (௯௨)

(அ-கை.) அபானனதுகுளிர்ச்சியும்பிராணனதுஷ்ணமு மொன்றின்கலைகளையொன்றுபக்ஷித்தலு மொன்றையொன்றுபக்ஷித்தலு மிவ்விரண்டினிறத்தலின்மத்தியிற்பூரணமாய் விளங்குகின்றசைதன்யத்தை வணங்குதலுங்கூறல். (கவி) விராவிவரும் புறநின்று மபானனென்னும் வியன்மதிய மேனியெல்லாங் குளிரவிக்கும்; பிராணனெனுஞ்சூரியன்றன்கனலாயுள்ளேபேசியவிவ்வுடற்பாகம்பிறக்கப்பண்ணு, மிராதுழலுமபானனெனு மதியினுட்சேரியற்கலைகள்பிராணனெனு மிரவியாலே, யுராவிவிழுங்கப்பட்டதெங்கேயந்த வுயர்பதமுற்றுற்பின்னையொருநோயுண்டோ.

(இ-ள்.) விராவிவரும் - கலந்துவருகின்ற—புறநின்றும்- வெளியிலிருந்தும்—அபானனென்னும் - அபானனென்கின்ற — வியன்மதியம் - பெருமைபொருந்திய சந்திரனனது—மேனியெல்லாங்குளிரவிக்கும்- சரீரமியாவையுங்குளிரச்செய்விக்கும்—பிராணனெனும்-பிராணனென்கின்ற—சூரியன்றன் - சூரியனனவன்—கனலாய்-சூடாக—பேசியவிவ்வுடல்-சொல்லப்பட்டவிச்சரீரத்தி(னுள்)—பாகம்பிறக்கப்பண்ணும்-பாகமுண்டாகச்செய்யும்—இராதுழலும்-நில்லாமற்சுழலுகின்ற—அபானனெனும் - அபானனென்கின்ற—மதியினுட்சேர்-சந்திரனிடத்திற்சேராநின்ற—இயற்கலைகள் - இயல்பாகியகலைகள்—பிராணனெனும்- பிராணனென்கின்ற —இரவியால்- சூரியனுல்—உராவிவிழுங்கப்பட்டது-வலிமையாகிவிழுங்கப்பட்டது—எங்கு-எவ்விடத்திலோ—அந்தவுயர்பதமுற்றுல் - அந்தமேலானபதத்தையடைந்தால்—பின்னையொருநோயுண்டோ - பின்பொருதுன்பமுண்டாமோ. எ-று.................................. (௯௩)

(அ-கை.) இ-து. (கவி) அவ்வகையேபிராணனெனுமிரவியுட்சேரணிகலைகளபானனெனுமிந்துவாலே, வவ்விவிழுங்கப்பட்டதெங்கேயந்த வன்பதமுற்றுற்பின்னைவருமோசென்மங், கவ்வுபிராணனைவிழுங்கவபானனேக்கக் கலந்தவபானனைவிழுங்கப் பிராணனேக்க, விவ்விரண்டினடுவாகநிற்போரென்று மெழுபிறவியிடர்பின்னையெய்தாரன்றே.......... *

(இ-ள்,) அவ்வகையே - அந்தப்ரகாரமே—பிராணனெனும்-பிராணனென்கின்ற—இரவியுட்சேர்-சூரியனிடத்திற்சேர்ந்திருக்கின்ற—அணிகலைகள்- அழகியகலைகள்—அபானனெனும்-அபானனென்கின்ற—இந்துவால் - சந்திரனுல்—வவ்விவிழுங்கப்பட்டது- வாரிவிழுங்கப்பட்டது—எங்கு - எவ்விடத்திலோ — அந்தவன்பதமுற்றுல் - அந்தவலியபதத்தையடைந்தால்—சென்மம்- சென்மமானது—பின்னைவருமோ - பின்புண்டாகுமோ—அபானன் - அபானவாயுவானது—கவ்வுபிராணனைவிழுங்க - பொருந்தியபிராணவாயுவைப்பக்ஷிக்கும்படி— நோக்க-பார்க்க—பிராணன் - பிராணவாயுவானது—கலந்தவபானனைவிழுங்க - கலந்திருந்தவபானவாயுவைப்பக்ஷிக்கும்படி—நோக்க - பார்க்க— இவ்விரண்டினடுவாகநிற்போர் - இவ்விரண்டின்மத்தியாகநிற்பவர்கள் — என்றுமெழுபிறவியிடர்பின்னையெய்தார் - எப்போதுமெழுபவத்துன்பத்தைப்பின்படையார்கள். எ-று.................................. (௯௪)

(அ-கை.) இ-து. (கவி) ஆடுகின்றபிராணலயத்தருகுமேவியபானலயத்தருகுத்றுப் பிராணபான, னூடுபயில்சிற்பரத்தையேத்துகின்றேனுற்றவபானன்றேற்றமொழிந்துநிற்க, நீடுபிரானனுமிறக்கழுக்கினுச்சி நேர்விசும்பிற்சிற்பரத்தை நீக்கமில்லே, ஞூடுமலமொன்றுமறக்கலைகள்சூழ நாகர்தொழும்பதம்பெற்றேனல்லநோக்கால். *

(இ-ள்.) ஆடுகின்றபிராணலயத்து - அசைகின்றபிராணலயத்தினது — அருகுமேவி- பக்கத்திற்பொருந்தி — அபானலயத்து - அபானவாயுவின்லயத்தின் — அருகுற்று - பக்கத்தை யடைந்து — பிராணபானனூடுபயில் - பிராணபானமத்தியிற்கூடிய — சிற்பரத்தை - சிதாத்மா வை — எத்துகின்றேன் - துதிக்கின்றேன் — உற்றவபானன்றேற்றம் - பொருந்தியவபானவாயு வின்பிறப்பும் — ஒழிந்துநிற்க - தவிர்ந்துநிற்க — நீடுபிராணனும் - நீண்டபிராணவாயுவும் — இறக்க - இறந்துநிற்க — மூக்கினுச்சி - நாசிகாந்தத்துக்கு — நேர்விசும்பில் - நேராகியவாகா யத்தில் — சிற்பரத்தை - சிதாத்மாவை — நீக்கமில்லேன் - நீக்கமில்லாமற் (சிந்திக்கின்) றேன் — நாடும் - நாடாநின்ற — மலமென்றுமற - ஒருகளங்கமுமில்லாமல் — கல்கள்சூழ - கலைகள்சூழ்ந் திருக்கின்ற — நல்லநோக்கால் - நல்லதிருஷ்டியினால் — நாகர்தொழும் - தேவர்கள்வணங்காநின் ற — பதம்பெற்றேன் - பரமபதத்தையடைந்தேன். எ-று. (இ-ரு-க-ம்) பிராணபானவிறத்தலி யக்கங்களிற் பூரணமானசித்தைத் தெரிவித்ததாம். .... (௬௫)

(அ-கை.) சகசஞ்சொல்லிச்சாக்ஷாத்காரவனுபவஞ்செலுத்தல். (கவி) எனதுமனம்பிராண சமாதியினாற்சொன்ன விவ்வொழுங்காலின்மலதத்துவத்தேயென்றுந், தனியிடர்தீர்நெ றியிதுவாமிந்தநோக்கந் தனைப்பற்றிச்சென்றதுமேல் வருவதெண்ணே, னனிநிகழ்கால த்தியல்பினண்ணுகின்றேனானிதுபெற் றேன்பெறுவதிதுவென்றெண்ணேன், முனிவர னேயதனாலேநோயொன்றின்றி முடிவறுநீடுயிர்பெற்றேன்மோகமற்றேன் .... *

(இ-ள்.) எனதுமனம் - என்னுடையமனமானது — பிராணசமாதியினால் - பிராணநிஷ்டை டையினால் — சொன்னவிவ்வொழுங்கால் - சொல்லியவிந்தமார்க்கத்தினால் — நின்மலதத்துவத் து - நின்மலமாகியபரதத்துவத்தில் — என்றும் - எப்போதும் — தனியிடர்தீர் - ஒப்பற்றதுன்ப ந்தீர்ந்(தடைகின்ற) — நெறியிதுவாம் - வழியிதுவாகும் — இந்தநோக்கந்தனைப்பற்றி- இந்தத் திருஷ்டியைப்பிடித்துக்கொண்டு — சென்றதும்- இறந்தகாலத்தையும் — மேல்வருவதும்- எதிர் காலத்தையும் — எண்ணேன் - நினைக்கேன் — நனி- மிகவும் — நிகழ்காலத்தியல்பின்-வர்த்தமான காலத்தின்றன்மையை — நண்ணுகின்றேன் - பொருந்துகின்றேன் — நானிதுபெற்றேன் - யா னிதையடைந்தேன் — பெறுவதிதுவென்றெண்ணேன் - அடையவேண்டியதிதுவென்றுநினைக் கேன் — முனிவரனே - வசிஷ்டமுனியே — அதனால்- அதனால் — நோயொன்றின்றி- துன்பமொ ன்றுமில்லாமல் — முடிவறுநீடுயிர்பெற்றேன் - முடிவற்றநீண்டபிராணனையடைந்தேன் — மோ கமற்றேன் - மயக்கநீங்கினேன். எ-று .... (௬௬)

(அ-கை.) யாதியாதெப்படியோ வப்படியப்படியே விளங்குகிறேனெனல். (கவி) சுகமுற்றோர்பாலிருக்கிற்சுகமேசேர்வன்றுயருற்றோர்பாலிருக்கிற்றுயரோசேர்வன், சகமூற்றுநட்பாவேனாதலாலே தவறுறுநோயற்றாவிதழைத்துவாழ்ந்தே,னுகவுற்ற வாபத்திலசையேன்சற்றுமுயர்சம்பத்திற்சகத்தோர்க்குறுநட்பாவே, னகமற்றவத னாலேநோயொன்றில்லாவாருயிர்பெற்றிருக்கின்றேனையவென்றான் .... *

(இ-ள்.) சுகமுற்றோர்பாலிருக்கில்- இன்பமடைந்தவர்களிடத்திலிருந்தால் — சுகமேசே ர்வன்- இன்பத்தையேயடைவன் — துயருற்றோர்பாலிருக்கில்- துன்பமடைந்தவர்களிடத்திருந் தால் — துயரோசேர்வன் - துன்பத்தையேயடைவேன் — சகமூற்றுநட்பாவேனாதலால் - உலக முழுமையுமுறவாயிருப்பேனாதலினால் — தவறுறுநோயற்று- தவறுள்ளதுன்பங்கெட்டு — ஆவி தழைத்துவாழ்ந்தேன் - உயிர்வளர்ந்துசுகித்தேன் — உகவுற்றவாபத்தில் - மிகவுமுண்டானவா பத்திலும் — உயர்சம்பத்தில் - மேலானசம்பத்திலும் — சற்றுமசையேன் - எவ்வளவுஞ்சலியே ன் — சகத்தோர்க்கு - உலகத்திலுள்ளவர்களுக்கு — உறுநட்பாவேன் - பொருந்தியசிநேகிதனா வேன் — அகமற்றவதனால்- அகங்காரமில்லாதவதனால் — ஐய-முனீஸ்வரா — நோயொன்றில்லா- துன்பமொன்றுமில்லாத — ஆருயிர்பெற்றிருக்கின்றேன் - நிறைந்தவுயிரைப்பெற்றிருக்கின் றேன் — என்றான் - என்றுபுசுண்டயோகிசொன்னார். எ-று .... (௬௭)

(அ-கை.) இவைகளான்ஞானமுமாயுளும்பெற்றேனெனல். (கவி) உன்னருளாலிவ்வாறு முடிவில்வாணாளுற்றேன் மெய்ஞ்ஞானமுநன்குற்றேனென்ற, வன்னபுசுண்டனைப்பகவ னேநீர்சொன்ன வாத்துமதத்துவத்தன்மையழகிதம்மா, வின்னதறப்புதிதுசெவிக்கனி யாங்கேட்டாலியார்வியவார்நன்னலமேபெறுதியென்று, மன்னுகதிருச்சியுறுகாலமீதா ல்வானுலகம்புகுவனிவாழ்தியென்றே .... *

(இ-ள்.) உன்னருளால் - உமதுகிருபையினால் — இவ்வாறு- இவ்வண்ணம் — முடிவில்வாணா ளுற்றேன் - அளவற்றவாயுளையடைந்தேன் — மெய்ஞ்ஞானமும்- தத்துவஞானமும் — நன்குற் றேனென்ற - நன்றாகப்பெற்றேனென்றுசொல்லிய — அன்னபுசுண்டனை - அந்தன்மையான

புசுண்டயோகியை—பகவனே- பகவானே—நீர்சொன்ன-நீர்சொல்லிய—ஆத்துமதத்துவத்த ன்மை - ஆத்மதத்துவத்தின்குணமானது—அழகிதம்மா- ஈதழகுள்ளவதிசயம்—இன்னதறப் புதிது - இதுமிகவுமதிசயமாம்—செவிக்கணியாம் - காதுக்காபரணங்களாகும் — கேட்டால்- இதைக்கேட்டாராயின்—யார்வியவார் - யாரதிசயப்படமாட்டார்கள் — நன்னலமேபெறுதி யென்று - நல்லநலத்தையேயடையக்கடவாயென்று — மன்னுகதிர் - நிலைபெற்றசூரியன்— உச்சியுறுகாலமிதால் - மத்தியில்வருகாலமிதுவாதலால் —வானுலகம்புகுவன் - தெய்வலோகத் திற்போவேன்—நீவாழ்தியென்று - நீவாழக்கடவாயென்றுசொல்லி. எ-று..... .... (கூஅ)

(அ-கை.) வசிஷ்டர்விண்ணுலகத்துக்கேகுதல். (கவி) விட்டவணின்றெழுந்துநான் விண்மேற்போக விடாமலொருயோசனைவிண்மீதுவந்தான், மட்டறிஞநிற்றியென த்தடுத்தேன்வன்பால் வாலறிஞர்தமைப்பிரிதல்வருத்தமன்றோ, சிட்டனைவிட்டகன் றனன்முன்னுகத்தேமீண்டு தரிசித்தேனிரண்டாம்பின்செறியுகத்திற், கட்டவிழ்தார ணிமார்பபிறந்தாய்நீயிக் கதைபுசுண்டவழியெனநீகருதிக்கொள்வாய்..... ....*

(இ-ள்.) விட்டு - (அவரை)விட்டு—அவணின்று- அவ்விடத்திலிருந்து—எழுந்து-எழும் பி—நான்விண்மேற்போக - யானுகாயத்தின்மேற்செல்ல — விடாமல் - (என்னை) விடாமல்— ஒருயோசனை - பத்துநாழிகைவழி—விண்மீதுவந்தான் - ஆகாயத்தில்வந்தான் — மட்டறிஞ- இரசஞானமுடையபுசுண்டரோ —நிற்றியென - நிற்பாயென்று—வன்பாற்றடுத்தேன்- வலிமை யானிறுத்தினன்— வாலறிஞர்தமைப்பிரிதல் - பரிசுத்தஞானிகளை நீங்குதல்—வருத்தமன்றோ- துன்பமல்லவா— சிட்டனைவிட்டு - பெரியோனாகியபுசுண்டயோகியைவிட்டு — முன்னுகத்து- முன்கிருதயுகத்தில் — அகன்றனன் - நீங்கினன் — மீண்டும் - திரும்பவும் — இரண்டாம்பின் செறியுகத்தில் - இரண்டாவதுநெருங்கிய திரேதாயுகத்தில்— தரிசித்தேன் - தரிசனஞ்செய்தே ன்—கட்டவிழ்தார் - மலர்ந்தபுட்பமாலையை—அணிமார்ப - தரித்திருக்கின்றமார்பையுடைய ஸ்ரீராமா— நீபின்பிறந்தாய் - நீபின்பவதாரஞ்செய்தாய்—இக்கதை - இந்தக்கதை — புசுண்ட வழியென - புசுண்டயோகியடைந்தமார்க்கமென்று— நீகருதிக்கொள்வாய் - நீயறிந்துகொள் வாய். எ-று.(இ-ச-க-ம்) சுவாத்மானுபவமுநீண்ட வாயுளாகியஸ்வரூபசாக்ஷாத்காரமும்பெற்ற தைத்தெரிவித்ததாம்... (கூகூ)

புசுண்டன்கதை முற்றிற்று. ஆகூகதை - உகூஇ - கவிதை. (தூசா)

தேவபூசைகதை.

(அ-ங்கை.) முற்கதையில்நித்தியமானஞானத்தினுலுஞ் சிரஞ்சீவமானயோகத்தினுலுஞ்சர் வம்பிரமமயமென்னு நிருவாணசுகஞ்சொல்லியித்தேகமுதலியாவும்அசத்தியமென்றறிந்துநி த்தியமாய்விளங்குகின்றஞானமேதெய்வமென்றுராதிக்கவேண்டிதேவபூசையைநிரூபிக்கிறார்.

(அ-கை.) அஸ்திமுதலியதடிப்புள்ளதேகமணுத்துவமு மகத்துவமுமாகுந்தன்மையிருத் தலி னஃதை யாத்மாவென்றுரைக்கலாமேயெனி னஃதையப்படியாக்குந் தன்மையுள்ள ஞானமேவாத்மாவிதன்ப்ரதிபாமாத்திரமேதேகமென்றறிவித்துஅஃதைநீக்குதல். வேறு (கவி)தோற்றரவுமாத்திரமேயீதிப்போதிப்படியேதோற்றுகின்ற,தூற்றமுறவிவனுனென் றுடலினையுள்ளுறநினைத லுற்றபொய்யே, யேற்றநரம்பெலும்பினு லியன்றவுடலினைநா னென்றெண்ணுமோக, மாற்றுதியாற்சங்கற்பத்தாலியன்றவடிவுக்கோர்மட்டுண்டாமோ

(இ-ள்.) ஈது - இப்பாஞ்சபூதபௌதிகம்—தோற்றரவுமாத்திரமே - ப்ரதிபாமாத்திரமே யாம்—இப்போது - (விசாரணையற்ற) விக்காலம் — இப்படியேதோற்றுகின்றது - இந்தப்ர காரமாகவேதோற்றுநின்றது—ஊற்றமுற - பற்றுதலுடன்—இவன் - இவனென்றும் — நா னென்று - நானென்றுஞ்(சொல்லப்பட்ட)—உடலினை - சரீரத்தை—உள்ளுறநினைதல் - மனதி (னுனெனக்) கருதுவது—உற்றபொய்யே - மிகுந்தவசத்தியமே—ஏற்றநரம்பு - மிகுந்தநரம் புகளினுலும்—எலும்பினுல் - என்புகளினுலும்—இயன்றவுடலினை - பொருந்தியசரீரத்தை— நானென்றெண்ணும் - யானெனநினைக்கின்ற—மோகமாற்றுதி- மயக்கத்தைநீக்கக்கடவாய்— சங்கற்பத்தால் - சங்கற்பத்தினுல் —இயன்றவடிவுக்கு - பொருந்தியவுருவங்களுக்கு — ஓர்மட் டுண்டாமோ - ஓரளவுண்டாமோ. எ-று .... (க)

(அ-கை.) சூட்சுமப்ரபஞ்சத்தைக்காண்பித்துத் தூலப்ரபஞ்சத்தைநீக்குதல்.(கவி)
கனவுடலாய்த்திசைகளிற்போய்ச் சுகவணையிற்கண்டுயின்றுங்கலக்கமுற்று, யுனதெ
னுமவ்வுடலெங்கேயிருக்கின்றதிராமனேயுணர்ந்துநோக்காய், நனவின்மனோராச்
சியத்திலெவ்வுடலான்மேருவினுநாகர்நாட்டுந், தினமுமருண்டுழலுதிநீ யுனதெனு
மவ்வுடலெங்கேசேர்ந்ததோதான் .... *

(இ-ள்.) சுகவணையில் - இன்பத்தையுடையமெத்தையில்— கண்டுயின்றும் - நித்திரை
செய்தும்—கனவுடலாய் - சொற்பனசரீரமாய் — திசைகளிற்போய் - திக்குகளிற்சென்று—
கலக்கமுற்றாய் - கலக்கத்தையடைந்தாய்— உனதெனுமவ்வுடல் - உனதென்கின்றவச்சரீரம்—
எங்கேயிருக்கின்றது - எவ்விடத்திலிருக்கின்றது—இராமனே - ஸ்ரீராகவா — உணர்ந்துநோக்
காய் - அறிந்துபார்ப்பாய்—நனவில் - சாக்கிரத்தில்— மனோராச்சியத்தில் - மனோராச்சியஞ்
செய்வதில்— எவ்வுடலால் - எந்தச்சரீரத்தினால்—மேருவினும் - மகாமேருவிலும்—நாகர்நாட்
டும் - தேவலோகத்திலும்—தினமுநீ - எப்பொழுதுநீயே — மருண்டுழலுதி - மயங்கிச்சுழலு
கின்றாய்—உனதெனுமவ்வுடல் - உனதென்றுசொல்லப்பட்டவச்சரீரம்—எங்கேசேர்ந்ததோ-
எவ்விடத்திற்சேர்ந்திருக்கின்றதோ. எ-று .... (உ)

(அ-கை.) சூட்சுமப்ரபஞ்சத்தை நீக்குதல். (கவி) நீண்டகனநீண்டமன விராச்சியந்
தானீண்டமணமயக்கமென்றே, யீண்டுபவந்தனை நினைவாய்த்தோற்றரவு மாத்திரமா
மிந்தஞாலங், காண்டகவுண்டன்றிலது மன்றென்றேவேற்றெண்ணங் களைதருனே,
யாண்டகையேநன்றானகாட்சியெனமெய்ஞ்ஞானரறைவரன்றே .... *

(இ-ள்.) நீண்டகனா - நெடியசொற்பனமும்—நீண்டமனவிராச்சியம் - நெடியமனோ
விராச்சியமும்—நீண்டமணமயக்கமென்று - நெடியசுத்தப்ரமையுமென்று—ஈண்டுபவந்தனை
நினைவாய்- இவ்வண்ணஞ்சம்சாரத்தைக்கருதுவாய்—தோற்றரவுமாத்திரமாம்-ப்ரதிபாமாத்திர
மாகிய—இந்தஞாலம் - இச்சகமானது—காண்டக-காணத்தகும்படி—உண்டன்று- உள்ளதும
ன்று—இலதுமன்றென்று- இல்லாததுமல்லவென்று—வேற்றெண்ணம்-வேறானசிந்தையை—
களைதருனே - கெடுத்தலே—ஆண்டகையே-இராசாவே— நன்றானகாக்ஷியென-நன்மையான
தரிசனமென்று—மெய்ஞ்ஞானர்-தத்துவஞானிகள்—அறைவர்-சொல்லுவார்கள். எ-று. (௩)

(அ-கை.) இத்தேகங்களினகம்பாவத்தைநீக்குதல். (கவி) திரநாமெப்படியுஞ்செ
கக்கடவமெனலறுதிதேகநாசஞ், சாருநாள்வீணிலேபரதவிக்குமாறென்னோசகத்தி
லுள்ளோர், வீரனேயெப்படியுஞ்செனித்தோர்க்குச்சிறிதுசுகமேவவற்றோ, சேரு
மோர்பொருள்களிலேசெருக்குகின்றசெருக்கென்னோசெப்புவாயே .... *

(இ-ள்.) திரநாம் - தீர்ப்பாகயாம்—எப்படியும் - எவ்விதத்திலும்—செகக்கடவமென
லறுதி - மரிப்போமென்பதுநிச்சயமே—சகத்திலுள்ளோர் - உலகத்தின்கண்ணுள்ளவர்கள்—
தேகநாசஞ்சாருநாள் - மரணமடைகின்றகாலத்தில்—வீணிலேபரதவிக்குமாறு- வீணாகப்பர
தவிக்கின்றவிதம்—என்னோ - ஏனோ—வீரனே - வீரனானஸ்ரீராமா—எப்படியும் - எவ்விதத்தி
லும்—செனித்தோர்க்கு - பிறந்தவர்களுக்கு — சிறிதுசுகமேவவற்று - அற்பசுகம்பொருந்தத்
தக்கது—சேருமோர்பொருள்களில் - (இப்படியற்பமாய்ச்) சேருகின்றவொவ்வொருவஸ்துக்
களில் — செருக்குகின்றசெருக்கென்னோ - அகங்கரிக்கின்றவகங்காரமேன் — செப்புவாய்-
சொல்லுவாய். எ-று .... (௪)

(அ-கை.) சமதிருஷ்டியினாலிப்பிரபஞ்சங்களை நீக்குதல். (கவி) துன்னுபொருள்
களில்வேறுகூறொழித்துத்தோற்றரவுமாத்திரத்தே, மன்னுசமமாயுலகைக்காண்டி
யாற்றோற்றரவுமாத்திரந்தா,னுன்னுமனக்கண்ணாடிக்கழுக்காகுமாதலினாலுற்றதெ
ல்லாம், பின்னமறவேமாற்றித்தோற்றரவில்லானாவாய்பெருமையோனே .... *

(இ-ள்.) துன்னுபொருள்களில் - நெருங்கினவஸ்துக்களில்—வேறுகூறொழித்து - வேறு
பாட்டைநீக்கி—தோற்றரவுமாத்திரத்து - ப்ரதிபாமாத்திரத்தில்—மன்னுசமமாய் - நிலைபெற்
றசமமாக—உலகைக்காண்டி - சகத்தைப்பார்க்கக்கடவாய்—தோற்றரவுமாத்திரந்தான்- ப்ரதி
பாமாத்திரமானசகம்—உன்னும் - நினைக்கின்ற — மனக்கண்ணாடிக்கு - உள்ளமென்னுமாடி
க்கு—அழுக்காகும் - களங்கமாகும்—ஆதலினால் - ஆகையினால்—உற்றதெல்லாம் - பொருந்தி
யவனைத்தும்—பின்னமறவேமாற்றி - பிரிவில்லாமற்கெடுத்து — பெருமையோனே - மாக்ஷி
மையுள்ளஸ்ரீராமா—தோற்றரவில்லானாவாய்-ப்ரதிபாவில்லாதவனாவாய். எ-று .... (௫)

(அ-கை.) சமத்துவத்தைக்குறித்திராகத்துவேஷத்தைநீக்குதல்.(கவி) எவனுடையமனப்
புத்திலிராகமுனிவெனும்பணிகளியக்கமிலலை, யவனெனுங்கற்பகத்தருவாலனுகாதது தொ

ன் றுண்டோவறிவின் மிக்கோய், கவனமறுமறிவினுன் மதத்தோராய்ப்பலகலைநூல்கல்வி
மிக்குத், தவமறுகாமம்வெகுளிநிறைந்தோரேவேசரிபோற்றள்ளத்தக்கோர்.. .... *

(இ-ள்.) எவனுடையமனப்புற்றில்- யாவனுளமென்னும்வன்மீகத்தில்—இராகமுனிவென்னும்- இராகத்துவேஷமென்கின்ற—பணிகளியக்கமில்லை- சர்ப்பங்களுலாவவில்லையோ—அவனெனும் - அவனென்கின்ற—கற்பகத்தருவால் - கற்பகவிருக்ஷத்தினுல் — அணுகாதவொன்றுண்டோ - (பிற) ஏடையாதவொன்றுளதா—அறிவின்மிக்கோய் - அறிவின்மிகுந்தஸ்ரீராமா—கவனமறுமறிவினுல் - கலக்கமில்லாதவுணர்வினுல் — மதத்தோராய் -செருக்கையுடையவர்களாய்—பலகலைநூல்- சகலகலைஞானசாஸ்திரங்களினுல்—கல்விமிக்கு-அறிவுமிகுந்திருந்தும்—தவமறு-தவமற்ற—காமம்வெகுளி-இராகத்துவேஷங்கள்—நிறைந்தோரே-நிறைந்தவர்களே—வேசரிபோல்-கழுதையைப்போல—தள்ளத்தக்கோர்-நீக்கத்தக்கவர்கள். எ-று...... ....(௬)

(அ-கை.) பவத்தின்காரணமானசங்கற்பத்தைநீக்குதல். (கவி) இப்பிறவிமயக்கமெனுமாழித்தேர்சங்கற்பமென்னுமச்சைச்,செப்பமுறத்தடைசெய்தாலோடாதுமன
வச்சுச்சிறிதசைந்தாற், றுப்புறவார்தடுத்தாலுந்தடைபடாதறிவுவலிசூக்கலுக, மெ
ய்ப்புருடவருத்தங்கடமைக்கொண்டேதடைசெய்யவேண்டுமன்றே......... ....*

(இ-ள்.) இப்பிறவிமயக்கமெனும் - இத்தச்சம்சாரப்ரமையென்கின்ற — ஆழித்தேர்-சக்கரத்தையுடையரதமானது—சங்கற்பமென்னுமச்சை - சங்கற்பமென்கின்றவதினச்சை—செப்பமுறத்தடைசெய்தால் - செவ்வையாகத்தடுத்தால் — ஓடாது - நடவாது — மனவச்சு-சங்கற்பமென்கின்றவச்சானது—சிறிதசைந்தால் - சற்றசைந்ததானுல்—துப்புறவார்தடுத்தாலும் - வலிமையாகயாவர்தடுத்தாலும்—தடைபடாது - தடுக்கப்படாது—அறிவுவலி - ஞானவல்லமையும்—சூக்கலுகம் - சூட்சுமயுத்தியும்—மெய்ப்புருடவருத்தங்கள்-உண்மையானபுருஷப்ரயெத்தனங்களுமாகிய—தமைக்கொண்டு - இவைகளைக்கொண்டு—தடைசெய்யவேண்டும்-தடுக்கவேண்டும். எ-று.......... ....(௭)

(அ-கை.) சங்கற்பவடிவமானமனதைநீக்குதல். (கவி) நல்லறிவுநற்புருடர்குணநன்னூன்
மேவியநல்வருத்தத்தாலே, புல்லில்பொருளோரிடத்துங்கிடையாதுமனமென்னும்பொ
ல்லாவன்பே, யல்லறரும்பயஞ்செய்யுந்தீரதையாம் பெருஞ்செல்வ மனைத்துமாய்க்கும்,
கொல்லுமிதுதனைநீக்கியேதானுயஃதாகிக்குறைவுதீர்வாய்............................... *

(இ-ள்.) நல்லறிவு - நல்லஞானத்தையும்—நற்புருடர்குணம்- நல்லசத்துக்கள்குணத்தையும்—நன்னூல் - நல்ல (வாத்மஞான) சாஸ்திரங்களையும் — மேவிய - பொருந்திய—நல்வருத்தத்தால் - நல்லப்ரயெத்தினத்தினுல்—புல்லில்பொருள்- பொருந்தாதவஸ்துக்கள்—ஓரிடத்துங்கிடையாது - எவ்விடத்திலுங்கிடையாததாம்—மனமென்னும் - மனமென்கின்ற — பொல்லாவன்பேய் - பொல்லாதவலியபசாசம்—அல்லறரும் - துன்பத்தைக்கொடுக்கும் — பயஞ்செய்யும் - அச்சத்தைச்செய்யும்—தீரதையாம் - தீரமாகிய— பெருஞ்செல்வமனைத்தும் - மாட்சிமைப்பட்டசெல்வங்களியாவையும்—மாய்க்கும் - கெடுக்கும்—கொல்லுமிதுதனைநீக்கி-கொலைசெய்யாநின்றவிந்தமனதைக்கெடுத்து—ஏதானுய்-எதுவானுயோ—அஃதாகி-அதுவேயாய்—குறைவுதீர்வாய் - பூரணமாவாய். எ-று..................... .... (௮)

(அ-கை.) மனதின்வலிமைசொல்லியஃதைநீக்குதல். (கவி) மனவன்பேயுறப்பிடித்
தாற்சாத்திரத்தாற் சுற்றத்தான் மாற்றவொண்ணு, வினவுறுதேசிகராலுமீட்பரிதா
மத்தப்பேய்விட்டுநீங்கிச்,சினமின்றியிருக்குமெனின்மூன்னுரைத்தவகைகளாற்றீர்
க்கலாகுங், கனபங்கமிலதாகிற்சிறுகுழியில் விலங்குதனைக்கரையுய்ப்பார்போல்... *

(இ-ள்.) மனவன்பேய் - மனமென்கின்றகொடியபசாசம்—உறப்பிடித்தால்-உறுதியாகப்பற்றிக்கொண்டால்—சாத்திரத்தால் - நூல்களினுலும்—சுற்றத்தால் - உறவினராலும்—மாற்றவொண்ணு - நீக்கக்கூடாது—வினவுறுதேசிகராலும் -வினவாநின்றவாசாரியராலும்—மீட்பரிதாம்- திருப்புதற்கரியதாம்—அந்தப்பேய் - அப்பசாசமானது—விட்டுநீங்கி - விட்டுப்பிரிந்து—சினமின்றி - துவேஷமில்லாமல்—இருக்குமெனில்-நிற்குமாயின்—முன்னுரைத்தவகைகளால் - முன்சொல்லப்பட்ட(சாத்திரமுதலிய) பிரிவுகளினுல் — கனபங்கமிலதாகில் - மிகுந்தசேறில்லாவிடில் —சிறுகுழியில் - சிறியபள்ளத்தில்(வீழ்ந்திருக்கின்ற)—விலங்குதனை- மிருகத்தை—கரையுய்ப்பார்போல்- கரையிலேற்றுவிப்பவர்களைப்போல—தீர்க்கலாகும்- (சநநத்தைத்)தீர்க்கப்படும். எ - று...(௯)

(அ-கை.) மகாமோகமானகாரணப்ரபஞ்சத்தை நீக்கிப்பிரத்யேகாத்மாவைத்தரிசி
ப்பித்திஃதுறுதிப்படு நிமித்தமாசிரியவசனத்தைக்காட்டத்தொடங்கல்.(கவி)போக

மொடுபுசிப்பனதான் புறத்தொழிபவாரியன்ருட் பூண்டுவேண்டி, யுகமுறநினைத்
தொன்றும் பெருப்பொருளாந்தன்னுருவையுணரவேண்டு, மாகவிருவிப்பரமதரி
சனத்தைமாமோகமறுப்பதொன்றைச்,சேகரசந்திரமவுலியெனக்குரைத்தானுனக்
குரைப்பத்தெளிந்துகேட்பாய்.. *

(இ-ள்.) போகமொடு - அநுபோகத்துடன்—புசிப்பன- அநுபவிக்கப்படுவனவாகிய (விஷயங்கள்)—புறத்தொழிப் - புறம்பினீங்க—ஆரியன்ருள்-ஆசாரியனதுயாதத்தை—வேண்டி-விரும்பி—பூண்டு - தரித்து—யுகமுறநினைத்து - யுக்தியுடன்விசாரணைசெய்து — ஒன்றும்-ஏகமாகிய—பெரும்பொருளாம் - பூரணவஸ்துவான—தன்னுருவை- தனதாத்மஸ்வரூபத்தை—உணரவேண்டுமாகலினுல் - அறியவேண்டுமாதலினுல்—மாமோகமறுப்பதொன்றை - மகாமோகத்தைக்கெடுப்பதற்கொன்ருகிய — இப்பரமதரிசனத்தை - இந்தப்பிரமதிருட்டியை—சந்திரசேகரமெளலி - சந்திரனைத்தரித்திருக்கின்ற சடாமகுடத்தையுடைய பரமேஸ்வரன்—எனக்குரைத்தான் - எனக்குச்சொன்னூர்—உனக்குரைப்ப - (அதை)யுனக்குச்சொல்ல—தெளிந்துகேட்பாய் - தெளிவுற்றுக்கேட்பாயாக. எ-று. (இ-ம-க-ம்) பாஞ்சபூதபெளதிகமுதலியயாஞ்சிற்ப்ரகாசமென்றறிந்து சின்மாத்திரமாய் விளங்கவேண்டுமென்பதாம்.................. (௰)

(அ-கை.) ஈசனைநோக்கித் தவஞ்செய்தல். (கவி) உயர்கயிலைப்பெருங்கிரியிலுருத்திரனையருச்சனைசெய்தொ காற்கங்கை,பயனுறுசாலையிறேற்றுசித்தர்கணத்தொடும்பன்னூலருத்தநோக்கிப், பயனுறநீளுட்கழித்தேன்பின்பொருகாலாவணிமுற்பக்கந்தன்னி, லியலுறுமட்டமிதினத்திலிராப்போதின் முற்பாதியிறந்தகாலை............ *

(இ-ள்.) உயர்கயிலைப்பெருங்கிரியில் - மேலானகயிலாயபருப்பதத்தில்—உருத்திரனை-பரமேஸ்வரனை—அருச்சனைசெய்து - ஆராதித்து—ஒருகால் - ஒருகாலத்தில் — கங்கையயனுறு-கங்காநதியின்பக்கத்திலிருக்கின்ற—சாலையினேற்று - (பன்னசாலையிற்றவஞ்செய்து— சித்தர்கணத்தொடும்-சித்தர்குழாங்களோடும்—பன்னூலருத்தநோக்கி - பலசாஸ்திரார்த்தங்களைப்பார்த்து—பயனுற - ப்ரயோசனத்தையடைய—நீளுட்கழித்தேன் - வெகுகாலம்போக்கினேன்—பின்பொருகால்-பின்பொருதினம்—ஆவணிமுற்பக்கந்தன்னில் - சிம்மமதியின் பூர்வபக்ஷத்தில்—இயலுறுமட்டமிதினத்தில் - இயல்பானவஷ்டமிதிதியில்—இராப்போதில் - இராக்காலத்தில்—முற்பாதியிறந்தகாலை - பதினைந்துகடிகைகழிந்தபோதில். எ-று..................... (௰௧)

(அ-கை.) இருளிலோரொளியுண்டாதல். (கவி) சிறிதாகிச்சமாதிதவிர்புறநோக்கியானிருப்பத்திசைகளெல்லாம், வறிதாகிக்காட்டசமாதியின்மவுனமிருப்பனபோல் வழக்கமின்றி, யெறிவாளால்வெட்டுதற்காமிருண்மூடிமுழைவனங்களெங்குந்துன்றி,வெறிதானவப்போதில்விரைவிலெழுந்தோரொளிமுன்விளங்கக்கண்டேன்.............................. *

(இ-ள்.) சிறிதாகி - (மனது) சுருங்கி—சமாதிதவிர் - சமாதியைநீங்கிய — புறநோக்கியானிருப்ப - பகிர்முகத்திலியானிருக்க — திசைகளெல்லாம் - திக்குகளனைத்தும்—வறிதாகி-அரவமடங்கினதாய்—காட்டசமாதியின் - காஷ்டசமாதியைப்போலவும் — மவுனமிருப்பனபோல் - மவுனமாயிருப்பனபோலவும்—வழக்கமின்றி- நடப்பில்லாமல்—எறிவாளால் - வீசாநின்றகத்தியினுல்—வெட்டுதற்காம் - வெட்டுதற்கான—இருண்மூடி - இருளானதுமூடிக்கொண்டு—முழை - (மலையின்) குகைகளும் — வனங்களெங்குந்துன்றி - கானகங்களுமற்றெவ்விடத்திலுநிறைந்து—வெறிதானவப்போதில் - சூனியமாயிருக்கின்றவச்சமயத்தில்— விரைவிலெழுந்து - வேகமாகவுண்டாகி—ஓரொளிமுன்விளங்கக்கண்டேன்- ஒப்பற்றப்ரகாசமான(தென்)முன்னேப்ரகாசிக்கப்பார்த்தேன். எ-று.. (௰௨)

(அ-கை.) ப்ரசன்னமானபரமேஸ்வரனைப்பூசித்தல். (கவி) வெண்ணிறத்தமுகில்கோடிவெண்டிங்கள்கோடியெனவிளங்குந்தேசைக், கண்ணகத்திற்றெக்கலுமே நந்திமுதல்வரவுமையாள்கைமேற்கைவைத், தெண்ணறச்சங்கரன்வரலு மாணுக்கருடன்விரைவி லெழுந்துபூசை, பண்ணுதற்கானவைகொய்பாய்ப்பன்மலர் தூய்துரத்திற்பணிந்துபோற்றி........ *

(இ-ள்.) வெண்ணிறத்த-வெண்மைநிறத்தையுடைய—முகில்கோடியென- அநேகமேகங்கள்போலவும்—வெண்டிங்கள் - வெண்ணிறத்தையுடையசந்திரர்கள்—கோடியென - அநேகர்போலவும்—விளங்குந்தேசை-விளங்காநின்றப்ரகாசத்தை—கண்ணகத்திற்றெக்கலும் -. சட்சுவினுற்பார்க்குமளவில்—நந்திமுதல்வர- நந்திகேஸ்வரர்முன்வர—உமையாள்கைமேல்-பார்வதியின்ஹஸ்தத்தின்மேல்—கைவைத்து- (தமது)கரத்தைவைத்து—எண்ணற- (அடியேன்)நினைப்புற—சங்கரன்வரலும்-பரமேஸ்வரன்வரவும்—மாணுக்கருடன் -சிஷர்களோடும்—விரைவிலெழுந்து-சீக்கிரத்திலெழுந்து—பூசைபண்ணுதற்கு-ஆராதனைசெய்வதற்கு— ஆனவைகொய்பாய்-தகு

ந்ததிரவியங்களைக்கொண்டுபோய்—பன்மலர்தூய் - பலபுஷ்பங்களையருச்சித்து — ஆரத்தில்-ஆரத்திலிருந்து—பணிந்துபோற்றி - வணங்கித்தோத்திரஞ்செய்து. எ-று.................... (௰௩)

(அ-கை.) உமையைப்பூசித்தல். (கவி) திங்களினுமிகக்குளிர்ந்து செவ்விதாய்நோ
யெல்லாந்தீர்க்கப்பட்ட, வங்கணுறவருளேக்கஞ்செய்தானைவணக்கத்தாலருக்கியத்
தாற், றுங்கவுபசாரத்தான்மந்தாரநன்மலரின்சோனைதன்னாற், சங்கரனை யேத்தி
னேனுமையையுமப்படியேத்தித்தாளில்வீழ்ந்தேன் .... *

(இ-ள்.) திங்களினும்- (பூரண)சந்திரனினும்—மிகக்குளிர்ந்து- மிகவுங்குளிர்ச்சியடைந்து—செவ்விதாய் - செம்மையாக—நோயெல்லாம்-துன்பங்களனைத்தையும்—தீர்க்கப்பட்ட-நீக்குகின்ற—அங்கணுற - அழகியகண்ணினால் — அருளேக்கஞ்செய்தானை - கிருபாதிருஷ்டிவைத்தவனை—வணக்கத்தால் - நமஸ்காரத்தினாலும்— அருக்கியத்தால் - அருக்கியத்தினாலும்—துங்கவுபசாரத்தால் - பரிசுத்தமுள்ளவுபசாரங்களினாலும்—மந்தாரநன்மலரின் - குளிர்ந்தநல்லபுஷ்பங்களின்—சோனைதன்னால் - வருஷித்தினாலும்— சங்கரனையேத்தினேன் - பரமேஸ்வரனைப்பூசித்தேன்—உமையையும் - பரமேஸ்வரியையும்—அப்படியேத்தி- அந்தப்ரகாரமேபூசித்து—தாளில்வீழ்ந்தேன் - பாதத்தைவணங்கினேன். எ-று.................................. (௰௪)

(அ-கை.) சுவாமிவினவுதல். (கவி) ஈசனியற்கணங்களையு முமைசேடித்திரள்களையு
மின்பமாக, நேசமுடனேத்தியபின் னிறைமதியைக்குளிர்விக்கு நீர்மைவாக்காற்,
றேசுடையோனெனைநோக்கி யுரைசெய்தான்சாந்தியினாற்றீரவாறி, யாசறநல்லன
தருநின்னறிவுகடற்பதத்தினிலையானதன்றே.. *

(இ-ள்) ஈசனியற்கணங்களையும் - பரமேஸ்வரன் (பணிக)னுக்கிசைந்தசிவகணங்களையும்—உமைசேடித்திரள்களையும் - பார்வதியின்பாங்கியர்கணங்களையும் — இன்பமாக - பிரியமாக—நேசமுடனேத்தியபின் - அன்போடும்வணங்கினபின்பு — நிறைமதியை - பூர்ணசந்திரனை—குளிர்விக்கும் - குளிர்ச்சிசெய்விக்கின்ற—நீர்மைவாக்கால் - குணமானவசனத்தினால்—தேசுடையோன் - ப்ரகாசத்தையுடையபரமேஸ்வரன் — எனைநோக்கி - என்னைப்பார்த்து—உரைசெய்தான் - கேட்டார்—சாந்தியினால் - உபசாந்தத்தினால்—தீரவாறி - (துன்பந்தீரவிஸ்ராந்தியடைந்து—ஆசறநல்லனதரும் - குற்றமறச்சுகங்களைக்கொடுக்கின்ற — நின்னறிவுகள்-உனதறிவுகளானவை—தற்பதத்தினிலையானதன்றே - பிரமபதத்தினிலையானதா. எ-று. (௰௫)

(அ-கை.) இ-து. (கவி) தடையின்றித்தவமுனக்குநடந்ததோசார்வனதாஞ்சார்ந்த
வன்றே, விடையங்களிறந்தனவோவென்றுலகின்காரணமாம்விமலன்கூற, விடை
யவனையான்வணங்கிவேண்டுகோளாலுரைத்தேன்விண்ணோர்கோவே, யடைவுறநின்
னருள்பெற்றோர்க்கடைவரிதொன்றிலைப்பயங்களருகும்வாரா................................ *

(இ-ள்.) தடையின்றி - விக்கினமில்லாமல்—தவம்-தவமானது—உனக்குநடந்ததோ-நினக்குநடந்துவந்ததா—சார்வனதாம் - அடையவேண்டியவை—சார்ந்தவன்றே - அடையப்பட்டதா—விடையங்கள் - திரிஸ்யங்களானவை — இறந்தனவோவென்று - இறந்தனவாவென்று—உலகின்காரணமாம் - சகத்துக்குக்காரணமாயிருக்கின்ற—விமலன்கூற- புனிதனானபரமேஸ்வரன்சொல்ல—விடையவனை - பரமசிவனை—யான்வணங்கி - நானமஸ்கரித்து—வேண்டுகோளாலுரைத்தேன் - வேண்டிக்கொள்ளுதலினாற்சொன்னேன்—விண்ணோர்கோவே - தேவதேவனே—அடைவுறநின்னருள்பெற்றோர்க்கு - கிரமமாகவுன்னுடையகிருபையைப்பெற்றவர்களுக்கு—அடைவரிதொன்றிலை - பெறுதற்கரியதொன்றுமில்லை—பயங்களருகும்வாரா-(விஷய)வச்சங்கள்சமீபத்திலும்வரமாட்டாவாம். எ-று. (இ-௬-௧-ம்) உபாசனாமூர்த்தி ப்ரசன்னமாய்ச் சுவானுபவத்தைவிளக்கும்பொருட்டு இவரனுபவத்தைவினாவினதாம் ... . (௰௬)

(அ-கை.) துதிசெய்தல். (கவி) சகத்தினுனைத்தாழ்ந்தோரைத்தாழாதாரில்லையுனைச்
சரணந்தாழ்ந்த,மகத்துவர்வாழ்ந்தனரெங்கேயதுதேசமதுநாடுமலையதாகுந்,தொ
குத்துளமுன்னையிலறத்துக் குறுபலமாமிக்காலந்தொடரறத்துக், குத்தமழையா
ம்பின்சேரறத்துக்கு வித்தாகுமுன்னைநாடல்.. *

(இ-ள்.) சகத்தில் - உலகத்தில்—உனைத்தாழ்ந்தோரை - உம்மைவணங்கினவர்களை—தாழாதாரில்லை - வணங்காதவர்களில்லை—உனைச்சரணந்தாழ்ந்த - தேவரீரையடைக்கலமாகவணங்கிய—மகத்துவர் - மகான்கள்—எங்குவாழ்ந்தனர் - எவ்விடத்தில்வாழ்வுற்றார்களோ—அதுதேசம்- அதுவேதேயமும்—அதுநாடு - அதுவேநாடும்—அதுமலையாகும் - அதுவேகிரியுமாம்—உன்னைநாடல் - தேவரீரைச்சிந்தித்தல்—தொகுத்துள - தொகுப்பாயிருக்கின்ற—முன்னையிலறத்துக்கு - முற்காற்செய்ததருமத்துக்கு — உறுபலமாம் - பொருந்தாதினறப்ரயோசனமா

கும்—இக்காலம் - இந்நக்காலம் — தொடரறத்துக்கு - தொடர்ந்துசெய்யுந்தருமத்துக்கு — உதந்தமழைபாம் - சொரிந்தவருடமாம் —பின்சரறத்துக்கு- இனியடையுந்தருமத்துக்கு— வித்தாகும்- விதையாகும். எ-று .... (௰௭)

(அ-கை.) இ-து (கவி) ஞானவமுதத்துக்கோர்நிறைகுடமாந்திரதையாநன்னி
லாவுக், கூனமிலாமதியாமெய் வீட்டுக்குவழியாகுமுன்னைநாட,லானவுனைநா
டலெனுமணிகெழுசிந்தாமணியையடைவுற்றேயான், தீனமுறுமனைத்தாபத்
தின்றலையைமிதிக்கின்றேன்றேவதேவே .... *

(இ-ள்,) உன்னைநாடல் - தேவரீரைச்சிந்திக்குஞ்சிந்தனையானது — ஞானவமுதத்துக்கு- ஞானாமுதமிருத்தற்கு— ஓர்நிறைகுடமாம் - ஒப்பற்றபூரணகும்பமாகும்—திரதையாம் - திரமென்கின்ற—நன்னிலாவுக்கு - நல்லநிலவுக்கு — ஊனமிலாமதியாய் - பூர்ணசந்திரனாகும்— மெய்வீட்டுக்கு - உண்மையானமோக்ஷத்துக்கு— வழியாகும் - மார்க்கமாகும் — ஆனவுனை- (யாவு)மாய்விளங்கியதேவரை—நாடலெனும் - சிந்தித்தலென்கின்ற— அணிகெழுசிந்தாமணியை- அழகுவிளங்கியசிந்தாமணியை—யானடைவுற்று - அடியேனடைந்து — தேவதேவே- தேவதேவா—தீனமுறும் - இல்லாமையையுடைய—அனைத்தாபத்தின்றலையை - சகலவாபத்தினதுசிரசை—மிதிக்கின்றேன் - மிதி(த்திருக்)கின்றேன். எ-று .... (௰௮)

(அ-கை.) இ-து. (கவி) என்றுதுதித்தெழிற்கருணை முகமலர்ந்தமுதன்மூலத்திறைவ
ன்றன்னை, மென்றுணைத்தாண்மீட்டிறைஞ்சிக் கேட்டதொருபொருளுரைக்கவிளங்
கக்கேளாய், குன்றினுறையருட்கடலேதின்னருளாலறிவெல்லாங் குறைவற்றேனுக்,
கொன்றுளதுசந்தேகமதனறுதியருள்வாயென் றுரைக்கலுற்றேன் .... *

(இ-ள்.) என்றுதுதித்து - (இப்படி) யென்றுதோத்திரஞ்செய்து — எழிற்கருணைமுகமலர்ந்த - அழகியகருணைநகமலர்ந்திருக்கின்ற —முதன்மூலத்து- முதற்காரணமாயிருக்கிற— இறைவன்றன்னை - பரமசிவத்தின்---மென்றுணைத்தாள் - மிருதுவானவுபயபாதங்களை --- மீட்டிறைஞ்சி- திரும்பவும்வணங்கி--- கேட்டதொருபொருளுரைக்க - (நான்) கேட்டவொருபொருளைச்சொல்ல---விளங்கக்கேளாய்- ஸ்ரீராமாவிளங்கும்படிகேட்பாய்--- குன்றினுறை-கைலாயமலையில்வசிக்கின்ற---அருட்கடலே - கிருபாசமுத்திரமே --- தின்னருளால் - உமதுகிருபையினால்---அறிவெல்லாங்குறைவற்றேனுக்கு - அறிய (வேண்டியவை) யாவுங் குறைவில்லாமலறிந்தவெனக்கு---சந்தேகமொன்றுளது - ஐயமொன்றிருக்கின்றது --- அதனறுதியருள்வாயென்றுரைக்கலுற்றேன் - அதனிச்சயத்தையனுக்கிரகிப்பாயென்றுசொல்லத்தொடங்கினேன். எ-று. (இ-௩-க-ம்) பரமசிவத்தைத் துதித்து ஓர்சங்கைவினாவினதாம் .... (௰௯)

(அ-கை.) தேவநிச்சயம்விசாரிக்க வஃதுசுயஞ்சித்தேயெனப்போதித்தல். (கவி) தீவினை
யெல்லாமறுத்துமங்கலமெல்லாமுதவுந்தேவபூசை, யாவதெனக்கேட்டனுமெயருள்செ
ய்வான்றெய்வத்தானியாதென்றேறிற், கேவலமேவரியல்ல வரனல்லபூதவுடற்கிடைத்தத
ல்ல, வோவுமனமன்றடியுமுடிவுமிலாச்செயப்படாவுணர்வேதெய்வம் .... *

(இ-ள்.) தீவினையெல்லாமறுத்து - துன்பங்களனைத்தையுங்கெடுத்து--- மங்கலமெல்லாமுதவும் - சுகங்களியாவையுங்கொடுக்கின்ற---தேவபூசை - தேவாராதனை --- ஆவதெனக்கேட்டனும் - ஆவதென்னவென்றுகேட்கவும்---அருள்செய்வான் - அனுக்கிரகிப்பார்---தெய்வந்தான்- தேவானது---இயாதென்றேறில் - எதுவென்றுகேட்கில்---கேவலம் - தனிமையான --- அரியல்ல - விஷ்ணுவுமல்ல---அரனல்ல - சிவனுமல்ல---பூதவுடல்கிடைத்ததல்ல - ஐம்பூதவடிவத்தாலானசரீரங்களைப்பெற்றதுமல்ல--- ஓவுமனமன்று-ஒழிகின்றமனதுமல்ல---அடியுமுடிவுமிலா- ஆதியுமந்தமுமில்லாததாகியும்---செயப்படாவுணர்வேதெய்வம் - சுயமாகியுமிருக்கின்றஞானமேதெய்வமாம். எ-று .... (௨௰)

(அ-கை.) இந்தஞானதேவையேயாராதிக்கவேண்டுமெனல். (கவி) தேகமுதற்பிரிவுகளா
ய்ச்சிறியனவாம்பொருள்களிலத்தெய்வமுண்டோ, பாகமறப்பணிமையறவடிமுடிவற்று
ளவுணர்வேபரமபோத, மாகலினலதுதெய்வமருச்சித்தற்குரித்தாகுமறிவிலாத, மூகருக்
குவடிவமுதலருச்சனையேயியல்பென்றுமொழியுமன்றே .... *

(இ-ள்.) தேகமுதற்பிரிவுகளாய்- சரீரமாதியானபேதங்களாய்—சிறியனவாம்பொருள்களில் - அற்பமாயிருக்கின்றவஸ்துக்களில்—அத்தெய்வமுண்டோ - அந்தத்தெய்வமுண்டாயிருக்குமா—பாகமற-ஓரளவறவும்—பணிமையற-செய்கையறவும்— அடிமுடிவற்றுள- ஆதியந்தமுமற்றிருக்கின்ற—உணர்வே - ஞானமே— பரமபோதமாதலினால் - பிரமஞானமாதலினால் —அது தெய்வம் - அந்தஞானமேதெய்வமாகும்—அருச்சித்தற்குரித்தாகும் - ஆராதனைசெ-

வதற்கரியதாகும்—அறிவில்லாதமூடருக்கு - ஞானமில்லாதமூடர்களுக்கு—வடிவழுதலருச்சனேயே- படிவங்கண்முதலியவாராதனேயே—இயல்பென்றுமொழியும்-ஒழுங்கென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள். எ-று .... (உக)

(அ-கை.) மற்றவிக்கிரகவாராதனே கூடாதெனல். (கவி) செல்வழியோசனேநடக்க மாட்டாதார்குரோசவழி செல்லுமாபோற், பல்வடிவிலருச்சிப்ப ரறிவில்லாரறிவு நிலபடையாரொன்று, சொல்வர்பராபரமற்ற சிற்ககனமெவ்விடத்துந் துன்றிநிற்கு, மல்வழியாங்கற்பங்களனேத்தினுமா யாததனுலதுவேதெய்வம் .... *

(இ-ள்.) செல்வழி - செல்லுகின்றமார்க்கம்—யோசனேநடக்கமாட்டாதார்- பதின்கடிகைவழிநடக்குஞ்சத்தியில்லாதவர்கள்—குரோசவழி - கூக்கேட்குந்தூரம் —. செல்லுமாபோல்-போகும்விதத்தைப்போல— அறிவில்லார் - ஞானமில்லாதவர்கள்— பல்வடிவிலருச்சிப்பர்-நாநாவிதவடிவங்களிலர்ராதிப்பார்கள்—அறிவுநிலபடையாரொன்றுசொல்வர் - ஞானநிச்சயத்தைப்பெருர்களென்று சத்துக்கள்சொல்லுவார்கள்—பராபரமற்ற - ஆதியந்தமில்லாத—சிற்ககனம்- ஞானுகாயமே—எவ்விடத்தும் - எந்தவிஷயங்களிலும்— துன்றிநிற்கும் - நிறைந்திருக்கும்—மலவழியாம் - வலிதானபழைமையாகிய — கற்பங்களனேத்தினும் - கற்பங்களியாவிலும்—மாயாததனுல் - கெடாதவதனுல்—அதுவேதெய்வம்- அந்தஞானமேதெய்வமாகும். எ-று.

(அ-கை.) ஞானதேவார்ச்சனேக்குச்சாந்தியாதிபுட்பமேபுட்பமாமெனல்(கவி)அறிவு சமபாவனேசந்தோடமெனுமலர்களாலந்தத்தேவாம், பிறிவரியவாத்துமதத்துவத் தையருச்சிப்பதேபெரியபூசை, குறிவடிவிற் பூசனேபூசனேயல்ல வகண்டமெனக் கூறுந்தெய்வ, நெறிகொள்புறத்தொழில்களா னேராதிங்கதனுலேநிறையுமின்பம்.*

(இ-ள்.) அறிவு - ஞானமும்—சமபாவனே - சமபாவனேயும் — சந்தோடமெனும்-சந்தோஷமென்கின்ற—மலர்களால் - புட்பங்களினுல்—அந்தத்தேவாம்- அந்தஞானதெய்வமான—பிறிவரியவாத்துமதத்துவத்தை-நீங்குதற்கரியவாத்மஞானத்தை—அரிச்சிப்பதே-ஆராதனேசெய்வதே—பெரியபூசை - மகாபூசையாம்—குறிவடிவில்- குறித்தவுருவங்களில்—பூசனேபூசனேயல்ல - ஆராதிப்பதாராதனேயல்ல—அகண்டமெனக்கூறுந்தெய்வம்- அகண்டமென்றுசொல்லப்பட்டஞானசுகமானது—நெறிகொள்- மார்க்கமாகக்கொண்ட—புறத்தொழில்களானேராது- வேறுசாதனங்களினுற்கிடையாது— இங்கதனுல் - இவ்விடத்திலந்தஞானர்ச்சனேயினுல்—இன்பம் - ஆநந்தமானது—நிறையும் - பூரணமாம். எ-று .... (உரு)

(அ-கை)சத்தாய்விளங்கியஞானமேதெய்வமெனல்(கவி)தெள்ளறிவெல்லாக்கலேக்கு மெட்டாதெல்லாக்கருத்துஞ்சேர்ந்துண்ணிற்கு, முள்ளதிலதிரண்டினடுசத்தாசாமா னியமேயுருவாய்நிற்குந், தள்ளரியபெருஞ்சத்தாமாத்திரமெய்யாந் தெய்வந்தானு மீதே, யெள்ளரியவிதுவிகற்பவடிவாகிலுணர்வுருவையிழந்துவேருும் .... *

(இ-ள்.) தெள்ளறிவு - தெளிவுள்ளஞானமானது—எல்லாக்கலேக்கும் - சகலசாஸ்திரங்களுக்கும்—எட்டாது - எட்டாததாம்—எல்லாக்கருத்தும் - சகலகருத்திலும்--- சேர்ந்துண்ணிற்கும் - அடைந்துள்ளிருக்கும்---உள்ளதிலதிரண்டினடு - சத்தசத்திவிரண்டின்மத்தியில் --- சத்தாசாமானியமே - சத்தாசாமானியமே---உருவாய்நிற்கும்-ஸ்வரூபமாயிருக்கும்---தள்ளரிய-நீக்குதற்கரிய---பெருஞ்சத்தாமாத்திரம் - மகாசத்தாமாத்திரமே--- மெய்யாம்-ஸ்வரூபமாகும்--- தெய்வந்தானுமீதே - தெய்வமுமிதுவேயாகும்--- எள்ளரியவிது- நிந்திக்கப்படாதவிந்தஞானமானது---விகற்பவடிவாகில் - விகற்பரூபமாளுல்---உணர்வுருவையிழந்து-ஞானஸ்வரூபத்தைக்கைவிட்டு ---வேருும் - வேருகும். எ-று.(இ-ரு-க-ம்.)ஞானதேவையு மதையர்ச்சிக்குமுறைமையையுந்தெரிவித்ததாம் .... (உச)

(அ-கை.) இதன்விஸ்மரணமேகற்பனுரூபமாகிய சகத்துமுதலியாவுமாமெனல். (கவி) சடபாவந்தனேயொழுங்காற்பாவிக்கநினேவுநிலேசாரும்பின்னே, யிடனேடுகாலமுதற்சத்தி களின்மிளிர்ச்சி சூழ்ந்தெய்தப்பட்டு, மடமேவுசீவனும்புந்தியாமகங்கரமாமனமாமிந்த, நடமாடுமனத்தன்மை யடைந்துபிறப்பிறப்பெல்லாநயந்துபற்றும் .... *

(இ-ள்.) சடபாவந்தனே - மூடபாவத்தை---ஒழுங்காற்பாவிக்க- (சித்தானது)கிரமமாகப்பாவனேசெய்ய--- நினேவுநிலேசாரும் - சங்கற்பநிலேயையடையும்---பின்னே - பின்பு---இடனேடு-தேசத்தோடும்---காலமுதற்சத்திகளின் - காலமுதலாகியசத்திகளினது--- மிளிர்ச்சிசூழ்ந்து-ப்ரகாசஞ்சூழ்ந்து---எய்தப்பட்டு - அடையப்பட்டு --- மடமேவு - அறியாமைபொருந்திய---சீவனும்-சீவனுகும்---புந்தியாம் - புத்தியாகும்---அகங்கரமாம்-அகங்காரமாகும்---மனமாம்-மனமாகும்--- இந்தநடமாடுமனத்தன்மையடைந்து-இப்படிசஞ்சரிக்கின்றமனத்தின்றன்மை

யைச்சேர்ந்து — பிறப்பிறப்பெல்லாநயந்துபற்றும் - சநநமரணங்களனைத்தையுமிச்சித்துப் பிடிக்கும். எ-று ………………………………………………………… (உரு)

(அ-கை.) சங்கற்பரகிதமானசைதன்யமேநித்தியாநந்தமாமெனல். (கவி) அங்கத்தேசேர்ந்தனமென்றெண்ணலான் மாமோகவளற்றிலாழும், பொங்குற்றதுன்பத்தாற்றுன்பமுறக்கீழ்க்கீழ்போகுந்துன்பஞ், சங்கற்பமாத்திரத்திற்றுன்பமுறுஞ்சங்கற்பந் தவிர்ந்தமட்டி, லிங்குற்றதுன்பமறுஞ் சங்கற்பமேதுன்பமிலதேவின்பம் ………………… *

(இ-ள்.) அங்கத்து - சரீரத்தில்—சேர்ந்தனமென்று - அடைந்தோமென்று—எண்ணலால்-நினைத்தலால்—மாமோகவளற்றிலாழும் - மாமோகமென்கின்றசேற்றிலழுந்தும்— பொங்குற்றதுன்பத்தால் - மிகுந்ததுன்பத்தினால்—துன்பமுற - துன்பத்தையடைய—கீழ்க்கீழ்-கீழுக்குக்கீழே—துன்பம் - துக்கமானது—போகும் - நீளும்—சங்கற்பமாத்திரத்தில்- சங்கற்பமுள்ளமட்டும்—துன்பமுறும் - துயரையடையும்— சங்கற்பந்தவிர்ந்தமட்டில் - சங்கற்பநீங்கியளவில் — இங்குற்றதுன்பமறும் - இவ்விடத்திற்பொருந்திய துக்கங்கெடும் — சங்கற்பமே துன்பம்- சங்கற்பமேதுயரமாகும் — இலதேவின்பம் - (அச்சங்கற்ப) மில்லாதிருக்கிற் (பிர) மாநந்தமாம். எ-று ……………………………………………… (உசு)

(அ-கை.) சங்கற்பத்தைக்கெடுத்துச்சகசாநந்தாம்புதியின்வாழ்வாயெனல். (கவி) தன்னுடையவிவேகமெனும் பெருங்காற்றாற்சங்கற்பமுகிலைத்தள்ளி, மன்னுசரற்காலத்தின்வானம்போனின்மலத்தைமருவாநிற்கு, முன்னுடையசங்கற்பமெனுமழுக்கையுன்றாலேயுனக்குமாற்றித், துன்னிமிகுதெளிவுற்றுப் பரமாநந்தக்கடலிற்றுளைந்துவாழ்வாய் ……… *

(இ-ள்.) தன்னுடையவிவேகமெனும் - தனதுவிவேகமென்கின்ற — பெருங்காற்றால்- சண்டமாருதத்தினால் — சங்கற்பமுகிலைத்தள்ளி - சங்கற்பமென்கின்றமேகத்தைப்போக்கி— மன்னு- நிலைபெற்ற—சரற்காலத்தின்வானம்போல் -சரற்காலத்தாகாயத்தைப்போல—நின்மலத்தைமருவாநிற்கும் - நிருமலத்தைப்பொருந்தியிருக்கும் — உன்னுடைய - உனது—சங்கற்பமெனுமழுக்கை - சங்கற்பமென்கின்றகளங்கத்தை —உன்றால் - (களங்கமற்ற)வுனது (முயற்சி) யினால்—உனக்குமாற்றி- நினக்குநிவிர்த்திசெய்து— துன்னி-நெருங்கி—மிகுதெளிவுற்று-மிகுந்ததெளிவையடைந்து—பரமாநந்தக்கடலில் - பிரமாநந்தசாகரத்தில்— துளைந்துவாழ்வாய்- மூழ்கிவாழக்கடவாய். எ-று. (இ-ரு-க-ம்) இச்சிற்சந்நிதியில்யாவுமுநித்தொடுங்குமென்பதாம்.

(அ-கை.) இத்தேவாகியசத்திமானுக்குச் சத்தியளவின்றெனல். (கவி) ஆத்துமதத்துவஞ்சகலசத்திமானுமவற்றினடனத்தாலே, தோற்றுகின்றபந்தம்வீடெல்லாஞ்செய்திடுஞ்சமமாய்த்தூயசித்தாய்,வேற்றுருவெல்லாமியற்றுமிதனுக்கிச்சாசத்தைவியோமசத்தைச், சாற்றுகின்றகாலத்தின்சத்தைநியதிச்சத்தைத்தடமாசத்தை … *

(இ-ள்.) ஆத்துமதத்துவம் - ஆத்மதத்துவமானது—சகலசத்திமானும் - எல்லாச்சத்தியையுமுடையதாம்—அவற்றினடனத்தால் - அச்சத்திகணடனங்களினால்—தோற்றுகின்ற-உண்டாகாநின்ற—பந்தம் - பந்தமும்—வீடு - மோக்ஷமுமாகிய—எல்லாஞ்செய்திடும்-சகலத்தையுஞ்செய்யும்—சமமாய்- சமமாகியும்—தூயசித்தாய் - பரிசுத்தஞானமாகியும்—வேற்றுருவெல்லாமியற்றும் - விகற்பவடிவங்களனைத்தையுஞ்செய்கின்றதாயுமிருக்கின்ற—இதனுக்கு - இந்தவாத்மாவுக்கு—இச்சாசத்தைவியோமசத்தை- இச்சாசத்தையும்வியோமசத்தையும்—சாற்றுகின்றகாலத்தின்சத்தை - சொல்கின்றகாலசத்தையும்—நியதிச்சத்தைதடமாசத்தை- நியதிசத்தையும்வியாபகமானமகாசத்தையும், எ-று ……………………………… (உஅ)

(அ-கை.) இ-து. (கவி) திடஞானசத்திதொழிற்சத்தி தொழிற்செய்கிற்போன்செய்யாதோனு, மிடமானசத்தியிவைமுதற்பரம சத்திகளுக்கெல்லையில்லை, மடமானமிளிர்சத்தி சநநமரணங்கடரும்வையமெங்குந், தடமான்மீட்சியெனுஞ்சத்தியாற்பிறப்பிறப்புதவிருமன்றே ………………… *

(இ-ள்.) திடஞானசத்தி - திரமானஞானசத்தியும்— தொழிற்சத்தி - கிரியாசத்தியும்— தொழிற்செய்கிற்போன்- தொழிலைச்செய்கின்றகர்த்துருசத்தியும்—செய்யாதோனும்-(தொழிலைச்)செய்யாதவகர்த்துருசத்தியும்—இடமானசத்தி - மிகுந்தசத்திகளுமாகிய— இவைமுதல் - இவைகண்முதலிய—பரமசத்திகளுக்கு - பிரமசத்திகளுக்கு—எல்லையில்லை - அளவில்லை—மடமான- அஞ்ஞானமாகிய—மிளிர்சத்தி - உல்லாசசத்தி— சநநமரணங்கடரும் - பிறப்பிறப்புகளைக்கொடுக்கும்—வையமெங்கும் - சகமுழுதும்—தடமான - விசாலமாகிய—மீட்சியெனுஞ்சத்தியால் - நிரோதமென்கின்றசத்தியினால் — பிறப்பிறப்புதவிரும் - சநநமரணங்கணீங்கும். எ-று. (இ-உ-க-ம்) ஆத்மஸ்புரணம்வேறுக விளங்கிற்கற்பனையாகவுந்தானாகவிளங்கில்யதார்த்தமாகவும்விளங்குமென்பதாம் ……………………………… (உகூ)

(அ-கை.) தேகோகநீங்கிச்சித்தோகமாயினதன்சுயம்ப்ரகாசந்தெரியுமெனல். (கவி)
அனைத்தானபூசையினுமங்கத்தைச்சுடுதலேயமலமாகும், வினைத்தேகவுடலைநானெ
ன்னுமதுவிடுதலேமிகுந்தபூசை, யினைத்தானதியானத்தாற்பூசிக்கச்சித்துருவாயில
க்கம்பானு, தினைத்தாகுமெனவொளிகட் கொளியாமுட்சிற்சுடர்நானென்றுசேர்க.

(இ-ள்.) அனைத்தானபூசையினும்- சகலமாகியவாராதனைகளினும்—அங்கத்தைச்சுடுதலே-பாவனையைத்தகித்தலே—அமலமாகும் - நின்மலபூசையாகும்—வினைத்தேகவுடலை- வினைவடிவமானசரீரத்தை—நானென்னுமதுவிடுதலே - யானென்கின்றதைநீக்குதலே—மிகுந்தபூசை- மேலானவாராதனையாம்—இனைத்தான - இப்படிப்பட்ட—தியானத்தாற்பூசிக்க- தியானத்தினாலாராதிக்கக்கடவன்—சித்துருவாய் - ஞானஸ்வரூபமாய்—இலக்கம்பானுதினைத்தாகுமென-இலட்சஞ்சூரியன்றினையளவாமென்றுகூற—ஒளிகட்கொளியாம் - ப்ரகாசங்களுக்கெல்லாம்ப்ரகாசமாம்—உட்சிற்சுடர்நானென்றுசேர்க - அகத்திலிருக்குஞ்ஞான ப்ரகாசத்தையானென்றுசேரக்கடவது. எ-று.. (௬௰)

(அ-கை.) இந்தஞானதேவைப்புருடனுக்குச் சிறப்பித்துக்கூறல். (கவி) (வேறு)
கரையறுப்பரமாகாசங் கறித்தறப்பெருத்தகண்டம், புரையறுமதன்கீழெல்லை
யற்றவிண்பொற்றுட்கஞ்ச, நிரையின்முடிவிறிக்குநீண்டறவுயர்ந்ததோள்க,
ளுரையுயர்நாநாலோக மொளிகொளாயுதங்களாமே.................................*

(இ-ள்.) கரையறு - வரையற்ற—பரமாகாசம்— மேலானவாகாயம் - கறித்தறப்பெருத்தகண்டம்—எழுச்சியாய்மிகவும்பருத்தகந்தரமாம்— புரையறுமதன்கீழ் - குற்றமற்றவதற்குக்கீழான—எல்லையற்றவிண் - அளவிறந்தவாகாயமே — பொற்றுட்கஞ்சம் - சொர்ணமயமானபாதபதுமம்—நிரையில் - ஒழுங்காகச்சொல்லிய—முடிவிறிக்கு - அளவற்றதிசைகள்—நீண்டு- நீளமாய்— அறவுயர்ந்ததோள்கள் - மிகவுமுயர்ந்தபுசங்களாகும்—உரையுயர் - சொல்லற்குயர்ந்த—நாநாலோகம் - நாநாவிதமானசகங்களே—ஒளிகொள் - ப்ரகாசத்தையுடைய— ஆயுதங்களாம் - படைகளாகும். எ-று.. (௬௧)

(அ-கை.) இ-து. (கவி) (வேறு.) எண்ணில்கோடிபிரமாண்டமிதயத்தொருபா
லினைப்பாறும், வண்ணவொளிசேர்பரவிசும்பின்பாராபாரவடிவிதுவாங்,கண்
ணன்பிரமன்சிவன்மகவான் முதல்வானவரார்கவின்பெறுமிவ், வண்ணல்வடி
விலுரோமநிரையாகுமிந்தவனைத்துயிரும்..............................*

(இ-ள்.) எண்ணிலகோடிபிரமாண்டம் - அளவிறந்தகோடிபிரமாண்டங்கள்—இதயத்தொருபால்-இதயகமலத்தொருபக்கத்தில்—இளைப்பாறும்-விஸ்ராந்தியடையும்—(அந்தவஸ்துவே) வண்ணவொளிசேர் - அழகியப்ரகாசத்தையுடைய—பரவிசும்பின் - பரமாகாயத்தின்—பாராபார - ஆதியந்தமில்லாத—வடிவிதுவாம் - வடிவமிதுவாகும்—கண்ணன் - விஷ்ணுவாம்—பிரமன்- அயனும்—சிவன் - உருத்திரனும்—மகவான்- தேவேந்திரனும்—முதல்வானவர்-முதலாகியதேவர்கள்—ஆர்கவின்பெறும் - நிறைந்தவழகுபெற்றிருக்கின்ற — இவ்வண்ணல்வடிவில்- இவ்விறைவனதுஸ்வரூபத்தில்—இந்தவனைத்துயிரும் - இந்தச்சகலவுயிர்களும்— உரோமநிரையாகும்-மயிர்ப்பந்திகளாகும்.எ-று.(இ-உ-க-ம்)ஞானாத்மாவின்வியாபகத்தைத்தெரிவித்ததாம்

(அ-கை.) சந்நிதிமாத்திரத்திற் சகலத்தையுமசைப்பிக்கின்ற சத்திமானேசத்தனெனல்.
(கவி) விவிதாரம்பம்புரிவனவாயுலகாம்பொறியின்வினைக்கயிறுப்த், தவிராவிச்சைமுதற்
பலவாஞ்சத்தியவன்மேனியிற்றங்கு, மவிராநின்றவிவன்பரமதேவென்றறிந்தோரருச்சி
ப்போன், செவிதாஞ்சின்மாத்திரமானோனனுபவித்ததிகழான்மா.............................. *

(இ-ள்.) விவிதாரம்பம்-நாநாவிதமானதுவக்கங்களை—புரிவனவாய்-செய்வனவாகியும்—உலகாம்பொறியின்-சகமாகியவெந்திரத்துக்கு—வினைக்கயிறாய்-வினைச்சூத்திரமாகியுமிருக்கின்ற—தவிராவிச்சைமுதல்- ஒழியாவிச்சைமுதலாகிய—பலவாஞ்சத்தி-அநேகசத்திகள்—அவன்மேனியிற்றங்கும்-அவனதுசரீரத்திற்றங்கியிருக்கும்— அவிராநின்றவிவன்-ப்ரகாசியாநின்றவிவனை— பரமதேவென்று-மேலானதெய்வமென்று—அறிந்தோர்-உணர்ந்தஞானவான்களால்—அருச்சிப்போன் - பூசிக்கப்படுபவன்—செவிதாஞ்சின்மாத்திரமானோன்-செம்மையானஞானமாத்திரமானவன்— அநுபவித்ததிகழான்மா - அநுபவமாய்விளங்காநின்றவாத்மஸ்வரூபன்.

(அ-கை.) சத்தன்மகிமையைக்கூறல். (கவி) எங்குமுறைவோனெவராலுமெய்தப்படுவோ
னெல்லையறத், தங்குபதங்கட்காதாரமாவோன்சத்தாமாத்திரமே, யங்கமாவோன்சகத்திர
ளையடைவினடத்துங்காலத்தைத், துங்கவாயில்காப்பவனுயுடையோன்சுத்தசுயஞ்சோதி.

(இ-ள்.) எங்குமுறைவோன் - எவ்விடத்திலும்வசிப்பவன்—எவராலும்-யாவராலும்—எய்தப்படுவோன்- அடையப்படுபவன்—எல்லையற-அளவில்லாது—தங்குபதங்கட்கு-தங்காநின்ற பதவிகளுக்கு—ஆதாரமாவோன்-இடமாகவுடையவன்—சத்தாமாத்திரமே-சத்துமாத்திரமே—அங்கமாவோன்-சரீரமானவன்—சகத்திரளை-உலகக்கூட்டங்களை—அடைவினடத்தும்-ஒழுங்காகநடத்துகின்ற—காலத்தை-காலதத்துவத்தை—துங்கவாயில்காப்பவனும்-மேலானதுவாரபாலகனுக—உடையோன்-உடையவன்—சுத்தசுயஞ்சோதி-பரிசுத்தமானசுயம்ப்ரகாசம். எ-று

(அ-கை.) ஆறிந்திரியங்களாலனுபவித்துமனுபவியாதஞானமேபரமேசனென்றாராதித்தல்
(கவி) நயனமூக்கு செவிதொக்குநாக்குமனமாஞ்சத்திகளா, லியல்பிலெங்குமுவிடயங்க
ளருந்திபெண்ணங்களுக்கெல்லா, மயலதாகு மெவ்விடத்தும் பரமசிவமென் றகத்தென்
ணி, யுயர்தெய்வத்தைவிதிநெறியேயோங்குபூசைசெயவேண்டும்..... .... *

(இ-ள்.) நயனம் - கண்ணும்—மூக்கு- நாசியும்—செவி-காதும்—தொக்கு-சருமமும்—நாக்கு - ஜிங்வையும்—மனமாம் - மனமுமாகிய — சத்திகளால் - சத்திகளினால் — இயல்பில்-இயல்பாக—எங்கும் - எவ்விடத்திலுமுள்ள —விடயங்களருந்தி- விஷயவஸ்துக்களைப்புசித்து —எண்ணங்களுக்கெல்லாம் - சங்கற்பங்களனைத்தினுக்கும்—அயலதாகும் - அதீதமான—எவ்விடத்தும்பரமசிவமென்று - எங்கும்பரமேஸ்வரனேயென்று— அகத்தெண்ணி - உள்ளத்திற்சிந்தித்து—உயர்தெய்வத்தை-மேலானதேவதையை—விதிநெறியே - விதிமார்க்கத்தின்படியே—ஓங்குபூசை - உயர்வானவாராதனையை—செயல்வேண்டும் - செய்யவேண்டும். எ-று..... (௫௫)

(அ-கை.) தன்னைத்தானேயருச்சித்தல். (கவி) தன்னதறிவேவடிவாகித்தயங்குதேவின்
பூசைக்கு, மன்னுமுபசாரங்களெலாமரபன்றாகுமெப்போது,மின்னலின்றிக்குளிர்ந்தழி
வற்றேகமாகியமுதாகித், துன்னுநன்போதத்தாலேதூயபூசைசெயல்வேண்டும்........ *

(இ-ள்.) தன்னதறிவேவடிவாகி-தனதாத்மஞானமேஸ்வரூபமாகி—தயங்குதேவின்பூசைக்கு-விளங்காநின்றதேவாராதனைக்கு---மன்னுமுபசாரங்களெலாம்-நிலைபெற்றவுபசாரங்களனைத்தும்—மரபன்றாகும்-முறைமையல்லவாம்—எப்போதும்-சதாகாலமும்—இன்னலின்றி- துன்பமில்லாமல்—குளிர்ந்து - மகிழ்ந்து —அழிவற்று - கேடில்லாமல் — ஏகமாகி - ஒன்றாகி—அமுதாகி - அமுதமாகி—துன்னுநன்போதத்தால்-நிறைந்ததனதுஞானத்தினால்—தூயபூசைசெயல்வேண்டும் - சுத்தமானவாராதனையைச்செய்யவேண்டும். எ-று .. .. (௫௬)

(அ-கை.) தன்னைத்தானேதியானித்தல். (கவி) ஒழியாதுள்ளேபரிசுத்தவுணர்வா
மறிவேததுதானே, யிழிபாதானதியானமதுதானேயியல்பாமருச்சனையாம், விழி
தோல்செவிநாமூக்கைந்தால்விடயங்கொள்ளிற்றுயில்செய்யின், மொழிகூறிடிலே
கிடினுயிர்க்கின் முற்றுமுணர்வாயிடல்வேண்டும்.. *

(இ-ள்.) ஒழியாது-நீங்காமல்— உள்ளேபரிசுத்தவுணர்வாம்-அகத்திற்சுத்தவறிவாகிய—அறிவேது - ஞானமெதுவோ—அதுதானே - அதுவே — இழிபாதானதியானம் - இழிவற்றதியானமும்—அதுதானே - அதுவே — இயல்பாமருச்சனையாம் - சுபாவமாகியவாராதனையுமாம்—விழி - கண்ணும்—தோல் - தொக்கும்—செவி - காதும்—நா - நாக்கும்—மூக்கு-நாசியுமாகிய—ஐந்தால்- ஐந்தினாலும்—விடயங்கொள்ளில் - (பஞ்ச) விஷயங்களைக்கிரகிக்குமிடத்தும்—துயில்செய்யில்- நித்திரைசெய்யுமிடத்தும்—மொழிகூறிடில்-பேசுமிடத்திலும்—ஏகிடில் - நடக்குமிடத்திலும்—உயிர்க்கின் - சுவாசம்விடுமிடத்திலும் — முற்றும் - முழுதும்—உணர்வாயிடல்வேண்டும் - ஞானமாகவேண்டும். எ-று.. .. (௫௭)

(அ-கை.) ஞானதேவார்ச்சனையைச்சொல்லியதன்பயனையுரைத்தல். (கவி) திகழாத்தும
தத்துவத்தினுயர்தியானமுபகாரங்களொடு, திகழ்பூசனையாமிவ்வழியாலன்றிப்பிறிதோர்
நெறிகளினாற், புகழ்மெய்யுணர்வுகிடையாது புரணதியானபூசையினை, யிகழ்மூடர்கள்
செய்யினும்பதின்மூன்றிமைப்பிற்பசுவீந்துளபேறும்....................................... *

(இ-ள்.) திகழ் - ப்ரகாசிக்கின்ற — ஆத்துமதத்துவத்தின் - ஆத்மதத்துவத்தினது—உயர்தியானம் - மேலானதியானமானது—உபகாரங்களொடு - பூசாதிரவியங்களுடன்— திகழ்பூசனையாம் - செய்கின்றவாராதனையாகும்—இவ்வழியாலன்றி - இம்மார்க்கத்தினாலல்லாமல்—பிறிதோர்நெறிகளினால் - வேறொருமார்க்கங்களினால் — புகழ்மெய்யுணர்வுகிடையாது - மகான்கடுதிக்கின்றவுண்மைஞானங்கிடைக்கமாட்டாது—புரணதியானம் - பூரணத்தியானமான—பூசையினை - ஆராதனையை—இகழ்மூடர்கள்செய்யினும் - (யாவரு) நிந்திக்கப்பட்டமூடர்கள் செய்தாலும் — பதின்மூன்றிமைப்பில் - பதின்மூன்றுமாத்திரையில்— பசுவீந்துளம்பேறும்-கோதானபலனாகும். எ-று..(௫௮)

(அ-கை.) இ-து. (கவி) இயலார்கடவுளாந்தன்னையிமைநூறளவுபூசிக்கி, லயமேதத்தி லாயிரமாம்பேறுமனைநாழிகைபூசை,மூயல்வாரிலக்கமயமேதப்பயனைப்பெறுவர்முறை மையினுற், பயனூர்பூசையொருகடிகைபண்ணிலிராசசூயபலம் .... *

(இ-ள்.) இயலார் - இயல்புள்ள—கடவுளாந்தன்னை-ஆத்மதேவதையை—இமைநூறளவு-நூறுநொடிநேரம்—பூசிக்கில்-ஆராதிக்கில்—அயமேதத்திலுயிரம் - ஆயிரமசுவமேகத்தினது—பேறும்-பலனும்—அனைநாழிகைபூசைமூயல்வார் - அரைநாழிகையாராதனைசெய்பவர்கள்—இலக்கமயமேதப்பயனைப்பெறுவர் - இலட்சமசுவமேதப்ரயோசனமடைவார்கள்—முறைமையினுல்-இக்கிரமத்தினுல்—பயனூர்பூசையொருகடிகைபண்ணில்- இலாபமிகுந்தவாராதனையையொருநாழிகைநேரஞ்செய்தால்— இராசசூயபலம் - இராசசூயயாகத்தின்பயனும். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) பாசமின்றியுள்ளுணர்வைப்பதினைங்கடிகைபூசிக்கி, லிராச சூயவிலக்கநிகரிவ்வாறொருநாளருச்சிக்கி, லாசிலாதபரவொளியிலமரலாகுமிதுதா னே, யேசில்பரமயோகமிதுதானேபரமகிரியையுமே .... *

(இ-ள்.) பாசமின்றி - பாசமில்லாமல்—உள்ளுணர்வை - ஆத்மஞானத்தை—பதினைங்கடிகை - பதினைந்துநாழிகை—பூசிக்கில் - ஆராதிக்கில்—இராசசூயவிலக்கநிகர்-இலக்ஷமிராசசூயயாகத்துக்கொப்பாகும்—இவ்வாறு - இந்தப்ரகாரம்—ஒருநாளருச்சிக்கில்—ஒருதினமாராதனைசெய்யில்—ஆசிலாத - குற்றமற்ற—பரவொளியில் - பிரமப்ரகாசத்தில் — அமரலாகும்-பொருந்தலாகும்—இதுதானே - இதுவே — ஏசில் - குற்றமற்ற—பரமயோகம் - மேலானயோகமும்—இதுதானே-இதுவே--பரமகிரியையும்-மேலானகிரியையுமாம்.எ-று(இ-அ-க-ம்) ஞானர்ச்சனையின் கிரமமுமப்பூசையின்பயனளவையுமுரைத்ததாம் .... (௪௰)

(அ-கை.) தீவினையெலாமறுத்தென்னுங்கவிமுதலிவ்விருபத்தொருகவிதையினுனுஞ் சர்வம்பிரமமயமென்னுமபரோக்ஷசாக்ஷாத்காரமாகிய புறப்பூசையைச்சொல்லி யிதற்குச் சாதனமாகியப்ரத்யேகாத்மஸ்வரூபமாகிய அகப்பூசையைப்போதிக்கத்தொடங்கல்(கவி) புறனும்பூசையிதுவாகும்போதக்கடவுளுட்பூசை, திறனுய்க்கேட்பாயெப்போதுந்தேகத்துறையுமித்தேவை, மறவாதிந்தப்பரசிவத்தைவருவோனிருப்போன்றுயின்றெழுவோ, னிறனூர்போகவிடயங்கள்புசிப்போன்விடுவோனெனநினைந்து .... *

(இ-ள்.) போதக்கடவுள் - ஞானதேவனது—புறனும்பூசை- வாகியபூசையானது—இதுவாகும் - இதுவேயாம்—உட்பூசை - அகப்பூசையை— திறனுய்க்கேட்பாய் - திடமாகக்கேட்பாய்—எப்போதும் - சதாகாலமும்—தேகத்துறையும் - சரீரத்தில்வசிக்கின்ற— இத்தேவை- இந்தத்தெய்வமான—இந்தப்பரசிவத்தை - இந்தப்பரமசிவத்தை— மறவாது - மறவாமல்—வருவோன் - வருபவனும்—இருப்போன் - இருப்பவனும்— துயின்று - நித்திரைசெய்து—எழுவோன் - எழுந்திருப்பவனும்—திறனூர்போகவிடயங்கள் - குணமானசெல்வவிஷயங்களை—புசிப்போன் - அனுபவிப்பவனும்—விடுவோனென - தள்ளுபவனுமாக—நினைந்து - தியானித்து. எ-று. (இ-ம்) அகப்பூசைசமாதிஞானமும் புறப்பூசை சாக்ஷாத்காரஞானமுமாமென்பதாம் இதற்குப்ரமாணந் தெத்தாத்ரயசுவாமிகள்சாம்ப்ரதாயத்தினுள்ளோ விவேகபோதம் வெளியேயனுபவமாமென்றறிக .... (௪௧)

(அ-கை.) நின்மலவறிவினுற்சுகபோதத்தையருச்சித்தல். (கவி) வெகுவாயடைந்த பொருள்களிலே மேவித்தனதுமெய்புணர்வாந், தகுநீர்முழுக்கான்மலமற்றுத்தப் பில்போதபூசனையான், மிகுநற்போதவிலிங்கத்தை மேவுபூசைசெயல்வேண்டும், பகுதியில்லாவிப்போதம் பயிலாதிருக்குமிடமுண்டோ .... *

(இ-ள்.) வெகுவாயடைந்த - பலவாகச்சேர்ந்த—பொருள்களிலேமேவி - வஸ்துக்களிலடைந்து—தனதுமெய்புணர்வாம் - தனதுதத்துவஞானமாகிய—தகுநீர்முழுக்கால்- தகுந்ததீர்த்தஸ்நானத்தினுல்—மலமற்று - களங்கமற்று—தப்பில்போதபூசனையால்- தவறுதஞானர்ச்சனையினுல்—மிகுநற்போதம் - மிகுந்தசுகஞானமான—இலிங்கத்தை- சிவலிங்கத்தை—மேவுபூசைசெயல்வேண்டும் - விரும்புகின்றவாராதனையைச்செய்யவேண்டும்—பகுதியில்லா- ப்ரகிருதியில்லாத—இப்போதம் - இந்தஞானமானது—பயிலாதிருக்குமிடமுண்டோ- கூடாதிருக்குமிடமுண்டோ. எ-று........................ (௪௨)

(அ-கை.) அகத்திற்குறிக்கின்றலக்ஷியங்களை வியாபித்துநிற்றலெனல். (கவி) பெருகுமனத்தின்மனனத்துற் பிராணபானன்றன்னடுவி, லிருதயங்கந்தரந்தாலுவிடையிற்புருவத்திடையின்மூக், குருவினுனியின்மூப்பத்தாறுற்றபதத்திலுள்ளத்தின்,றிரு கல்கடந்தமற்றகப்பாற் செறியும்போததேவதையே .... *

(இ-ள்.) போததேவதை - ஞானதெய்வமானது—பெருகுமனத்தில்- பெருகாநின்றமனத்திலும்—மனனத்தில் - சிந்திப்பிலும்— பிராணாபானன்றன்னடுவில் - பிராணாபானமத்தியிலும்— இருதயம் - இருதயத்திலும்—கந்தரம் - கண்டமத்தியிலும்—தாலுவிடையில் - நாவின்மத்தியிலும்— புருவத்திடையில் - புருவமத்தியிலும்—மூக்குருவினுனியில்-நாசிகாந்தத்திலும் —முப்பத்தாறுற்றபதத்தில் - முப்பத்தாறுகப்பொருந்தியபதத்திலும் — உள்ளத்தின்றிருகல்கடந்த - மனதின்பிரிபுநீங்கின—அகப்பாற்செறியும் - உள்ளத்தினிறைந்திருக்கும். எ-று. முப்பத்தாறென்பதை லெக்ஷிய நூலிற்காண்க ....(௪௩)

(அ-கை.) மனமுதலியயாவுமபினசத்தியாயுள்ள சத்தனையாராதித்தல். (கவி) என்னதுடலிற்சிற்கதிரா யிலங்குதெய்வநானென்ன, வுன்னுமனங்கண்வாக்குக்களுடைய சத்தித்திரளெல்லாம், பின்னமின்றிநாயகனைப் பிரியாமகளிர்போனாளுந், துன்னுமென்றேயநவரதந் தொடர்பாவனைசெய்திடல்வேண்டும்............................ *

(இ-ள்.) என்னதுடலில் - எனதுசரீரத்தில்—சிற்கதிராய் - ஞானப்ரகாசமாய்— இலங்குதெய்வம் - விளங்காநின்றதெய்வத்தை — நானென்னவுன்னும் - நானென்றுசிந்திக்கின்ற—மனங்கண்வாக்குக்களுடைய - மனமும்விழியும்வாக்கேந்திரியங்களுமாகிய—சத்தித்திரளெல்லாம்- சத்திக்கூட்டங்களனைத்தும்—பின்னமின்றி- பிரிவில்லாமல்—நாயகனைப்பிரியாமகளிர்போல்- புருடனைவிட்டுநீங்காதகுலஸ்திரீகளைப்போல—நாளும் - எப்போதும் — துன்னுமென்று- (ஆத்மாவை)நெருங்கியிருக்குமென்று—அநவரதம் - சதாகாலமும்— தொடர்பாவனைசெய்திடல்வேண்டும் - தொடரும்பாவனையைச்செய்யவேண்டும். எ-று.......................................(௪௪)

(அ-கை) சித்தமுதலியயாவும் பரிசாரகரெனல். (கவி) சகத்தைநிவேதித்திடுஞ்சித்தமெனதுவாயிற்றனிக்காப்போ, னகத்துவாயிற்பயிலேவலாளாமெனக்குநற்சிந்தை, யுகத்திலுடல்பூண்ஞானங்களுற்றகரணமொருபத்து, நிகழ்ச்சியுறுவாயில்களாகுமென்னுமெண்ணநீங்காமல்.. *

(இ-ள்.) சகத்தை - (திரி)லோகங்களையும்—நிவேதித்திடுஞ்சித்தம் - அறிவிக்குமனமானது—எனதுவாயிற்றனிக்காப்போன் - என்னுடையவொப்பற்றதுவாரபாலகனும்—எனக்கு- என்றனக்கு—நற்சிந்தை - நல்லசிந்தையானது—அகத்துவாயிற்பயில் - உள்வாசலிற்பொருந்திய—ஏவலாளாம் - பரிசாரகனும்—ஞானங்கள் - (விருத்தி)ஞானங்களானவை — உகத்திலுடற்பூண் - முடிவானதேகத்துக்காபரணங்களாம்—உற்றகரணமொருபத்தும்- பொருந்தியஞானேந்திரியகன்மேந்திரியங்கள்பத்தும்— நிகழ்ச்சியுறுவாயில்களாகும் - விளங்காநின்றவாசல்களாம்— என்னுமெண்ணநீங்காமல் - என்கின்றபாவனையொழியாமல். எ-று..........................(௪௫)

(அ-கை.) தன்னைச்சித்தாகவேயாராதித்தல். (கவி) அவ்வாறனவிவனவனனந்தமாகாப்பிரிவற்று, தவ்வாதெல்லாம்பரித்தொன்றாய்ச்சாலநிறைந்தெல்லாநிறைவித், தெவ்வாயினுமோர்சமனாகியியலாசாரமியலொளிகொண், டொவ்வாதாய்ச்சித்தாய்நின்றேனொழியேனென்றேபூசிக்க .... *

(இ-ள்.) அவ்வாறன- அவ்வண்ணமான—இவன்-இந்த(ப்ரத்யக்ஷ) ஞானமே—அவன்- தற்பதஞானமாகிய—நான்-(ஆத்மாவான)யான்—அந்தமாகா-முடிவாகாமலும்— பிரிவற்று- பிரிவில்லாமல்—தவ்வாது - தவறாமல்—எல்லாம்பரித்து - சகலத்தையுந்தரித்தும் — ஒன்றாய்- ஏகமாகியும்—சாலநிறைந்து - மிகவும்பூரணமாய் — எல்லாநிறைவித்து - சகலத்தையும்பூரணமாக்கி—எவ்வாயினும் - எந்தவிடத்திலும்—ஓர்சமனாகி - ஒப்பற்றசமத்துவமாகி— இயலாசாரம் - இயல்பானவாசாரமும் — இயலொளிகொண்டு - இயல்பானப்ரகாசத்தைக்கொண்டு— ஒவ்வாதாய் - சமானமில்லாததாயிருக்கின்ற—சித்தாய்நின்றேன் - ஞானமாயிருந்தேன்—ஒழியேனென்று - நீங்கேனென்று—பூசிக்க - ஆராதிக்கக்கடவது. எ-று ....(௪௬)

(அ-கை.) ப்ரத்யேகாத்மாவை யாராதித்தல். (கவி) அமலமாமிப் பூசையினாலதிகத்தெளிவையெய்திடலாஞ், சமமதாயெல்லாமானதடம்புந்தியினாலுடலறிவு, சுமடென்றப்பாலாஞ்சித்தைப்பெற்றதொன்றாற்றொடர்பாக,விமலமானோர்பூசிக்கவேண்டுமென்பர்விடாதென்றும்.. *

(இ-ள்.) அமலமாம் - நின்மலமான—இப்பூசையினால் - இவ்வாராதனையினால் — அதிகத்தெளிவை-மிகுந்ததெளிவை—எய்திடலாம் - அடையலாம்—சமமதாய் - சமத்துவமாய்—எல்லாமான-யாவுமாயிருக்கின்ற—தடம்புந்தியினால்-விசாலமானவறிவினால் — உடலறிவு- சரீரஞானம்— சுமடென்று - சுமையென்றறிந்து—அப்பாலாஞ்சித்தை - (இதற்)கதீதமாகிய ஞானத்தை—பெற்றதொன்றால்-அடைந்தவொருதிரவியத்தினால்—தொடர்பாக-தொடர்ச்சியாக—

விலலாதோர் - நின்றலோனவர்கள் — என்றும்விடாது - எப்பொழுதும்விட்டுநீங்காமல் — பூசிக்கவேண்டுமென்பர் - ஆராதிக்கவேண்டுமென்றுசத்துக்கள்சொல்லுவார்கள். எ-று ....(௪௭)

(அ-கை.) தேகங்கன்மங்களுக்குமுள்ளாணசித்தையாராதித்தல். (கவி) எட்டாதொன்றைவேண்டுமெனவிதற்காயிரங்காதிச்சைவழி, முட்டாவறிவாற்பூசித்தன்முறைமையன்னபானத்தாற், றட்டாதுயர்ந்தசெல்வத்தாற்சயனாசனவாகனங்களினாற்,கிட்டாநின்றசுகமனைத்தாலறிந்துவிளர்பூசனைசெய்க.. *

(இ-ள்.) எட்டாதொன்றை - கிடையாதவொருவஸ்துவை—வேண்டுமென-(பெற) வேண்டுமென்று—இதற்காயிரங்காது- இதற்காகவிதனப்படாமலும்—இச்சைவழிமுட்டா-ஆசைமார்க்கத்தினாற்றட்டுப்படாமலும்—அறிவாற்பூசித்தல்- ஞானத்தினாலாராதித்தல்—முறைமை-ஒழுக்கமாகும்—அன்னபானத்தால் - அன்னபானத்தினாலும்—தட்டாதுயர்ந்த - தடையின்றி மேலாயிருக்கின்ற—செல்வத்தால் - சம்பத்தினாலும்—சயனம் - சயனத்தினாலும்— ஆசனம்-ஆசனத்தினாலும்—வாகனங்களினால் - வாகனங்களினாலும் — கிட்டாநின்ற - நெருங்குகின்ற—சுகமனைத்தால்- சுகங்களியாவையினாலும்—அறிந்து- (ஆத்மசுகத்தை)புணர்ந்து—விளர்பூசனை செய்க - ப்ரகாசிக்கின்றவாராதனையைச்செய்யக்கடவது. எ-று............................ (௪௮)

(அ-கை) இ-து. (கவி) ஆதிவியாதிபயின்மோகவாரம்பத்தாலனைத்திடரா, னீதிபயிலுமிராச்சியத்தானிறையுமிடியால்விசித்திரமாந், தீதிற்றுழில்களாமலராற்சித்தையறிந்து பூசிக்க, கோதில்போகநவைபோகங்கொளனீக்குதலாலருச்சிக்க.................................... *

(இ-ள்.) ஆதிவியாதி- மனோவியாதியினாலுந்தேகவியாதியினாலும்— பயின்மோகவாரம்பத்தால் - பொருந்தியமோகாரம்பத்தினாலும் — அனைத்திடரால் - சகலதுன்பங்களினாலும்— நீதிபயிலுமிராச்சியத்தால் - நீதியைச்செலுத்துகின்றவிராச்சியபாரத்தினாலும்— நிறையுமிடியால் - மிகுந்ததாரித்திரியத்தினாலும்—விசித்திரமாம் - அதிசயமான — தீதிற்றுழில்களாய்-குற்றமற்றவொருத்தியங்களான—மலரால்- புஷ்பங்களினாலும் —சித்தையறிந்து-ஞானத்தைத்தரிசித்து—பூசிக்க - ஆராதனைசெய்ய—கோதில்போகம் - குற்றமற்றபோகத்தை — செலல்-கொள்ளுதலாலும்—நவைபோகம்-குற்றமுள்ளபோகத்தை—நீக்குதலால்-மாற்றுதலாலும்—அருச்சிக்க - ஆராதனைசெய்ய. எ-று .... (௪௯)

(அ-கை.) யாவைவுமுணர்வாகப்பூசித்தல். (கவி) நிருவிகாரபாவனையானேர்ந்த பொருளையினிதருந்தி, யொருவியிறந்தபொருளிணையே யுறுமையுணர்வின் பூசனையாம், வெருவுதுன்பமின்பமுதன்மேவுமனைத்துமுணர்வுருவாய்க், கருதல்வேண்டு மழிவறுசிற்கடவுள்பூசையொழியாதோர்..*

(இ-ள்.) நிருவிகாரபாவனையால் - அபேதபாவனையினால்—நேர்ந்தபொருளை - கிடைத்தவஸ்துவை—இனிதருந்தி - இனிமையாகப்புசித்து—ஒருவியிறந்த - நீங்கிமரித்த— பொருளிணையுறுமை - பதார்த்தத்தைப்பொருந்தாமையே— உணர்வின்பூசனையாம் - ஞானார்ச்சனையாம்—வெருவுதுன்பமின்பமுதல் - பயப்படுகின்றதுக்கசுகமுதலிய—மேவுமனைத்தும்- பொருந்துகின்றசகலத்தையும்—உணர்வுருவாய் - ஞானஸ்வரூபமாய்— அழிவறுசிற்கடவுள்பூசை-முடிவின்றியஞானதேவாராதனையை — ஒழியாதோர் - தவிராதவர்கள் — கருதல்வேண்டும்-சிந்திக்கவேண்டும். எ-று .... (௫௰)

(அ-கை.) இ-து. (கவி) என்றுமெல்லாவடிவாலுமெல்லாவிடங்கடன்னலுந், துன்றுமெல்லாம்பிரமமெனத்துணிந்துபூசைசெயல்வேண்டு, மன்றெனாமல் விருப்பாமலடைந்த போகமெலாமறிஞர்க், கொன்றுசுபாவத்தாற்புசித்தற்குரித்தாங்கடற்குநதித்திரள்போல்

(இ-ள்.) என்றும்-எப்போதும்—எல்லாவடிவாலும்-சகலவுருவங்களினாலும்—எல்லாவிடங்கடன்னலும்-சகலவிடங்களினாலும்— துன்றுமெல்லாம்-நெருங்கியயாவும்—பிரமமெனத்துணிந்து-பிரமமேயென்றுதெளிந்து — பூசைசெயல்வேண்டும் - ஆராதனைசெய்யவேண்டும்—அன்றெனாமல்-அல்லவென்று(வெறுக்கா)மலும்—விரும்பாமல்- (ஆமென்று) விரும்பாமலும் —அடைந்தபோகமெலாம் - கிடைத்தபோகங்களனைத்தும்— அறிஞர்க்கொன்றுசுபாவத்தால்-ஞானிகளுக்குப்பொருந்தினசுபாவத்தினால்—கடற்கு-உததிக்கு—நதித்திரள்போல் - ஆற்றின் கூட்டங்களைப்போல—புசித்தற்குரித்தாம்-அனுபவித்தற்குரியதாகும். எ-று.................. (௫௧)

(அ-கை) பூசாதிரவியமீதெனல்(கவி) நீசமுயர்வாநோக்கங்கணேர்ந்தாலிறையும்பற்றுமற்றேசகாலத்தொழிற்குரித்தாய்ச்சேராநின்றசுபாசுபத்தை,யாசுவிகாரமறக்கைக்கொண்டதனாற்பூசைசெயல்வேண்டும்,பேசுபரமார்ச்சனைவிதியிற்பெரிதுமிவைநற்றிரவியமே *

(இ-ள்.) நீசமுயர்வாம் - இழிவுமுயர்வுமாகிய—நோக்கங்கணேர்ந்தால் - பார்வைகளெதி

கிட்டல்—நிறையப்பற்றுமல் - சற்றும்பிடியாமல்—தேசகாலத்தொழிற்கு-தேசமுங்காலமுந் தொழில்களுமாகிய விவைகளுக்கு - உரித்தாய் - உரியதாய்—சேராநின்றசுபாசுபத்தை - சேரு கின்றசுகதுக்கங்களை—ஆசுலீகாரமற - குற்றமப்பொருந்தாமல்வேற்றுமைகட — லகைக்கொண்டு-கைவசமக—அதனல்- அச்சமத்திஞல்—பூசைசெயல்வேண்டும்-ஆராதிக்கவேண்டும்—பேசு-சொல்லப்பட்ட—பரமார்ச்சனைவிதியில்- தேவபூசாவிதியில்—பெரிதுமிவை-மகத்தானவிவை கள்—நற்றிரவியம் - நல்லபூசாதிரவியங்களாம். எ-று .... (௫௨)

(அ-கை. திரவியவியல்பைக்கூறுதல். (கவி) இனையதிரவியங்களெலாமினிதாஞ்சாந்தி யொன்றனு, நினைபாவனையாற்புளிப்புறைப்புநிறைந்தகைப்புத் துவர்ப்பனைத்தின், நினையுமின்றிச்சித்திரமாந் தித்திப்பாலேசெறிந்தனவா, யனையசாந்திமதுரத்தாலற வேநிறைந்ததருந்தவனே .... *

(இ-ள். இனையதிரவியங்களெலாம் - இப்படிப்பட்டதிரவியங்களியாவும்— இனிதாம்-இனிமையாகிய—சாந்தியொன்றனும் - ஒருசாந்தியினுலும் —நினைபாவனையால்- நினைக்கின்ற பாவனையினுல்—புளிப்பு - புளிப்பும்—உறைப்பு - உறைப்பும்—நிறைந்தகைப்பு-மிகுந்தகசப்பும்—துவர்ப்பு - துவர்ப்புமாகிய—அனைத்தின் - எல்லாவற்றின் — சித்திரமாந்தித்திப்பால்-அதிசயமான(வறு)சுவையினுல்—நினையுமின்றி-அற்பமுமில்லாமல்—செறிந்தனவாய்- நிறைந்தனவாகிய—அனையசாந்திமதுரத்தால் - அச்சாந்தியென்கின்றவிரசத்தினுல்— அருந்தவனே-அரியதவமுள்ளவனே—அறவேநிறைந்தது மிகவும்பூரணமானது. எ-று .... (௫௩)

(அ-கை.) திரவியசுத்திசொல்லுதல்(கவி) தக்கசாந்திபயிலிரதசத்தியாலேபாவிக்கிற், றொக்கபொருளாய்க்காண்பதெலாஞ்சுவையாயிமைப்பிற்றூய்மதியி, னுக்கவிரதம்போலாகு முயர்ந்தசமமாஞ்சாந்தியினுன், மிக்கவறிவாகியுங்கற்போல்விளங்குமுணர்வாற்பாவிக்க.

(இ-ள்.) தக்கசாந்தி-உரிமையானசாந்தியென்று—பயிலிரதசத்தியால்-சொல்லப்பட்டவிரசசத்தியினுல்—பாவிக்கில்-பாவனைசெய்யில்—தொக்கபொருளாய்- தொகுத்தவிஷயங்களாய்—காண்பதெலாம்-பார்க்கின்றசகலமும்—இமைப்பிற்சுவையாய்-இமைநேரத்திலமுதமாய்—தூய்மதியின்-பரிசுத்தமானசந்திரனது—உக்கவிரதம்போலாகும்- சொரிந்தவமுதவிரசத்தைப்போலவாம்—உயர்ந்தசமமாம்-மேலானசமமானது---சாந்தியினுல் - சாந்தத்தினுல்—உணர்வாற்பாவிக்க- அறிவினுற்பாவனைசெய்ய--- மிக்கவறிவாகியும் - மேலானஞானவஸ்துவாயிருந்தும்---கற்போல்விளங்கும் - சிலையைப்போலவிளங்கும். எ-று .... (௫௪)

(அ-கை.) தெளிவாய்ப்பூசிக்கின்மாயைகெடுமெனல். (கவி) தேசகாலத்தொழி லொழுங்காற்சேர்ந்தபொருளின்சுகாசுகத்தின், வீசுமயக்கங்களினுலேமெய்யிற்கட வுளருச்சனைசெய், தாசையெல்லாம்புந்தியினுலன்றிதிற்பாயுயர்மாயை, நீசமாயை தனைநீக்குநெடுஞ்சங்கற்பநஞ்சறுக்கும் .... *

(இ-ள்.) தேசகாலத்தொழில்-தேயமுங்காலமுஞ்செயலுமாகிய---ஒழுங்கால்- இவ்வொழுங்கினுல்---சேர்ந்தபொருளின்-அடைந்தவஸ்துக்களினது---சுகாசுகத்தின் - சுகதுக்கங்களின்---வீசுமயக்கங்களினுல்-மயக்கங்களையெறிதலினுல்--- மெய்யிற்கடவுள் - தேகத்தினுள்ளதேவதையை---அருச்சனைசெய்து-ஆராதனைசெய்து---ஆசையெல்லாம்- இச்சைகளனைத்தையும்---புந்தியினுலன்றிதிற்பாய்-அறிவில்லாமலிருப்பாய்--- உயர்மாயை - மேலானசுத்தமாயையானது---நீசமாயைதனைநீக்கும்-இழிவானவசுத்தமாயையைக்கெடுக்கும் --- நெடுஞ்சங்கற்பநஞ்சறுக்கும் - மகாசங்கற்பமானவிஷத்தையுங்கெடுக்கும். எ-று .... (௫௫)

(அ-கை.) ஆசிரியருபதேசமே யறிவைக்கொடுக்குமெனல். (கவி) கருதிமலத்தான்மல மறுக்குங்காருவென்னமாயைதனைப், பெருமாயையினுற்செறல்வேண்டும்பெரியமாயை காரணமாம், பொருளன்றுயுங்குருவாக்காற்புகலும்பொருளாய்க்காரணமாய், மருவுமு ணர்வாந்தன்னுருவைவழுவாதளிக்குமுணர்வோர்க்கே .... *

(இ-ள்.) கருதி - நினைத்து---மலத்தால் - அழுக்கினுல்--- மலமறுக்கும் - அழுக்கைக்கெடுக்கின்ற---காருவென்ன-வண்ணனைப்போல---மாயைதனை-அசுத்தமாயையை---பெருமாயையினுல் - சுத்தமாயையினுல்---செறல்வேண்டும்- கெடுக்கவேண்டும்---பெரியமாயை-சுத்தமாயையானது---காரணமாம்பொருளன்றாயும் - காரணப்பொருளல்லாததானுலும்--- குருவாக்கால்-ஆசாரியவசனத்தினுல்---புகலும்பொருளாய் - சொல்லப்பட்டவஸ்துவாய் --- காரணமாய்மருவும்-காரணமாகப்பொருந்தும்---உணர்வோர்க்கு-அறிபவர்களுக்கு---உணர்வாந்தன்னுருவை-ஞானமாகியதனதாத்மஸ்வரூபத்தை---வழுவாதளிக்கும்-தவறுமற்கொடுக்கும். எ-று ..... (௫௬)

(அ-கை.) தனதறிவைத்தானேதரிசிக்கவேண்டுமெனல். (கவி) குரவனுபதேசத் தொழுங்குகுறிப்பான்மகன்பான்மிகவளர்ந்து, விரவுமென்னிற்காட்டரிதாவெளி

யல்லாதாகினுந்தானே, பரமரூபம்வெளிநிற்கும் பன்னூற்பொருளாற்குருமொழி
யாற், றரவுமரிதாந்தன்னறிவாற்றானேயறிந்துபெறவேண்டும் ……………… ………. *

(இ-ள்.) குரவனுபதேசத்தொழுங்கு-ஆசாரியரனுக்கிரகத்தின்கிரமமானது—குறிப்பார்ன்மகன்பால்- குறிப்பினற்சிஷனிடத்தில்—மிகவளர்ந்து - மிகவும்வளர்வுற்று—விரவுமென்னில்-கலக்குமானால்—காட்டரிதாய்- (குருவினற்) காட்டதற்கரியதாயினும்—வெளியல்லாதாகினும்-(சீடனுக்கு) ப்ரத்தியக்ஷமாயறியவரிதானாலும்—தானே - சுயமாகவே — பரமரூபந்தான்-பிரமஸ்வரூபமானது—வெளிநிற்கும் - ப்ரத்யக்ஷமாகும்— பன்னூற்பொருளால் - பலசாஸ்திரார்த்தங்களினாலும்—குருமொழியால்- ஆசாரியவசனத்தினாலும்—தரவுமரிதாம்-பெறுதற்கரிய— தன்னறிவாற்றானேயறிந்து - தனதுஞானத்தினாற்றானேயுணர்ந்து — பெறவேண்டும்-அடையவேண்டும். எ-று ……………………………………………………… (௫௭)

(அ-கை.) தனதறிவினாற்கூடாவிடிற்சுருதிகுருசுவானுபவத்தினாற்கூடுமெனல்.(கவி)
ஆசான்மொழியானூற்பொருளாலன்றிப்பெறவுமரிதாகுந்,தேசார்குருநூன்மாணு
க்கன் சிறக்கவிம்மூவருங்கூடிற், பாசாதீதப்பரமெய்தும் பன்னாணீங்காவிக்கூட்ட,
மேசாவுணர்வைத்தரும்பகற்போ தெல்லாத்தொழிலுந்தருவதுபோல் ………….. *

(இ-ள்.) ஆசான்மொழியால்-ஆசாரியர்வசனத்தினாலும்—நூற்பொருளால்-சாஸ்திரார்த்தங்களினாலும்—அன்றிப்பெறவுமரிதாகும் - அல்லாமற்பெறுதற்குமரியதாம் — தேசார்குரு-ப்ரகாசநிறைந்தவாசாரியரும்—நூல் - ஞானசாஸ்த்திரமும்—மாணுக்கன்- சீஷனும்—சிறக்கவிம்மூவருங்கூடில் - விசேடமாயித்தமூன்றுபேர்களுஞ்சேரில் — பாசாதீதப்பரமெய்தும்-பாசத்துக்கதீதமானபிரமமடையும்—பன்னாணீங்காவிக்கூட்டம் - பலகாலநீங்காதவிச்சங்கமானது—பகற்போது - பகற்காலம் — எல்லாத்தொழிலுந்தருவதுபோல் - சகலகிரியைகளையுங்கொடுப்பதுபோல — ஏசாவுணர்வைத்தரும் - குற்றமற்றஞானத்தைக்கொடுக்கும். எ - று. (இ-௰எ-க-ம்) ப்ரத்யேகாத்மாவாகிய தேவையுமஃதைத்திரவியங்களோடுமாராதிக்குந்தன்மையையுமஃது ப்ரசன்னமாதற்கேதுவையுங் கிரமமாகவறிவித்ததாம் ………………………….(௫௮)

(அ-கை.) இத்தேவாராதனையினாற்சகத்தோற்றநீங்கிச்சாக்ஷாத்காரமாமெனல்.(கவி)
சொன்னநெறியிலறிஞர்தினந்தோறுந்தேவார்ச்சனைபுரியி, லென்னைமுதலோர்தொ
ண்டர்களா லேத்தமிக்கபதமடைவ,ருன்னுசகமில்லாதிருந்துமுளதுபோற்றோற்றி
டுந்தோற்ற, மன்னதொழிந்துவேறில்லை யரியதவத்திற்பெரியோனே ………… *

(இ-ள்.) சொன்னநெறியில் - முன்சொல்லியமார்க்கத்தினால்—அறிஞர்- ஞானவான்கள்—தினந்தோறும் - நாடோறும்—தேவார்ச்சனைபுரியில்- தேவாராதனைசெய்யில்—என்னைமுதலோர்-நான்முதலான—தொண்டர்களாலேத்த - அடியார்களாற்றோத்திரஞ்செய்யும்படி— மிக்கபதமடைவர் - மேலாயிருக்கின்றபிரமபதத்தையடைவார்கள்—உன்னுசகம்- நினைக்கப்பட்டவுலகமானது—இல்லாதிருந்தும்- இல்லாமலிருந்தும்—உளதுபோற்றோற்றிடும்- உள்ளதுபோலத்தோற்றும்—அரியதவத்திற்பெரியோனே - அரியதவசிற்சிறந்தவசிஷ்டனே—தோற்றமன்னதொழிந்து - ப்ரதிபாமாத்திரமேயன்றி—வேறில்லை - வேறேயில்லை. எ-று. (இ - ம்) அகப்பூசைபுறப்பூசையினற் போதாநந்தபுத்தேளைப் போதித்ததாம் ……………………… (௫௯)

(அ-கை.) சித்தின்சந்நிதியிலுண்டான சிருஷ்டியைச்சிலேடையாகக்கூறல். (கவி)
முந்தைப்பிரமமுதலான மொழிகட்கெல்லாந்தெரிகின்ற,தெந்தப்பொருளாங்கதுசி
த்தென் றெண்ணுவாயன்னதுந்தோன்றிற், றொந்தித்தறியும்பொருள்போலாய்த்தொ
டரும்பெயர்க்குமுரித்தாகி,யந்தக்கரணபாவனையாலகத்தைதனையும்பின்செல்லும்.

(இ-ள்.) முந்தைப்பிரமமுதல் - முன்பிரமனாதியானவர்களால்— ஆனமொழிகட்கெல்லாம்- உன்டாகியவசனங்களனைத்துக்கும்--- தெரிகின்றதெந்தப்பொருள்-தெரியாநின்றதெந்தவருத்தமோ--- ஆங்கது - அதுவே --- சித்தென்றெண்ணுவாய் - ஞானமென்றுநினைப்பாய்---அன்னது - (அகோசரமான) வச்சைதன்னியமானது--- தோன்றி - (கோசரிப்பதற்) கெதிரிட்டு---தொந்தித்தறியும் - இரண்டாகவறிகின்ற --- பொருள்போலாய் - திரிவ்யத்தைப்போலாகி ---தொடரும்பெயர்க்குமுரித்தாகி - தொடரும்(பரியாய)நாமங்களுக்குமுரியதாய்---அந்தக்கரணபாவனையால் - மனப்பாவனையினால்---அகத்தைதனையும்பின்செல்லும்-அகம்பாவத்தையும்பின்றொடரும். எ-று ……………………………………………… (௬௰)

(அ-கை.) இ-து. (கவி) சேருமிந்தவகந்தைக்குத் தேசகாலபாவனையாய்ச், சாரும்பாங்கி
த்திரளான சத்தித்திரளுண்டாந்தானே, நேருமிவைசூழ்சற்பாவ நிகழ்சீவப்பேர்பெற்று
டனே, கூரும்புத்திமெனலாகிக்கோளின்மூடரிடத்திருக்கும் ……………………… *

(இ-ள்.) சேருமிர்தவகந்தைக்கு - சேராநின்றவிவ்வகம்பாவத்துக்கு--- தேசகாலபாவனை யாம்- தேசபாவனையாகியுங்காலபாவனையாகியும்--- சாரும்பாங்கித்திரளான - சாராநின்றதோ ரிக்கூட்டங்களாகிய --- சத்தித்திரளுண்டாம் - சத்திக்கூட்டங்களுண்டாம் --- நேருமிவைசூழ் சற்பாவம் -நேராநின்றவிவைகள்சூழ்ந்தசற்பாவமானது--- திகழ்சிவப்பேர்பெற்று-விளங்குஞ் சிவநாமமடைந்து--உடனேகூரும்புத்தியெனலாகி- அப்போதேமிகுந்தபுத்தியென்றுசொல்ல ப்பட்டதாய்---கோவின்-திமையினையுடைய---மூடரிடத்திருக்கும்-மூடர்களிடத்தில்வசிக்கும்.

(அ-கை.) இ-து. (கவி) சத்தங்கிரியைஞானமெனுஞ் சத்தித்திரள்களுடன்கூடி, யொத்த கணந்தானொருகணத்தி லுன்னறன்னையுண்டாக்கு, மெத்தசங்கற்பத்தருவின்வித்தாமெ ன்னமனம்விளையுந், தொத்துபுரியட்டகவடிவாஞ்சொல்லுக்கதுபாத்திரமென்பர்...... *

(இ-ள்.) சத்தங்கிரியைஞானமெனும் - சத்தமுங்கிரியையுஞானமுமென்கின்ற—சத்தித்தி ரள்களுடன்கூடி - சத்திக்கூட்டங்களோடுஞ்சேர்ந்து — ஒத்தகணந்தான் - பொருந்தியகூட்ட மானது— ஒருகணத்தில் - ஒருநொடியில்—உன்னறன்னையுண்டாக்கும்- நினைவையுண்டாக்கும் ---மெத்தசங்கற்பத்தருவின் - மிகுந்தசங்கற்ப மென்னும்விருக்ஷத்தினது — வித்தாமென்ன- விதையாமென்றுசொல்லும்படி—மனம்விளையும் - மனமுண்டாகும்— தொத்துபுரியட்டகவ டிவாம்- கொத்தாகியபுரியட்டகசரீரமாம்—சொல்லுக்கு - வசனத்துக்கு—அதுபாத்திரமென் பர்- அதுவேயிடமென்றுசொல்லுவார்கள். எ-று .... (சூஉ)

(அ-கை.) இ-து. (கவி) அன்னமனதுக்குயர்பரம ஞலேவடிவாஞ்சத்திகளை, யின்னவள வென்பதற்கரிதாமிதுதான்விசும்புமுதலான, துன்னுவடிவங்களைமேவிதொகுதத்துவங்க டனைச்செய்யு, முன்னுயாழிற்கூளிகள்போன் மொழிந்தமனவாதனைதோன்றும்......... *

(இ-ள்.) அன்னமனதுக்கு - அந்தமனதுக்கு—உயர்பரமனுல்-மேலானவாத்மாவினுல்— வடிவாஞ்சத்திகளை - உருவமாகியசத்திகளை(யமைத்தல்)—இன்னவளவென்பதற்கரிதாம் - இவ் வளவென்பதற்கரியதாகும்—இதுதான் - இதுவே— விசும்புமுதலான - ஆகாயமுதலாகிய— துன்னுவடிவங்களைமேவி - நெருங்கியவுருவங்களையடைந்து—தொகுதத்துவங்கடனைச்செய்யு ம்-தொகுப்பானப்ரகிருதிமுதலான தத்துவங்களையுண்டாக்கும்—முன்னு - நினைக்கின்ற—பா ழிற்கூளிகள்போல்-சூனியத்திற்பேய்களுண்டாவதுபோல—மொழிந்த-சொல்லப்பட்ட(வதில்) —மனவாதனைதோன்றும் - மனோவாசனையுண்டாகும். எ - று. (இ-ச-க-ம்) சித்தினகம்பாவ முற்றிரிஸ்யவாதனை பரியந்தந்தோற்றுமென்பதாம்........................ (சூரு)

(அ-கை.) அபக்குவிக்குபதேசிக்கக் கூடாதெனல். (கவி) சகப்பேர்பெறுமிவ் வாதனைதான்றவிரிலழியாச்சாந்தியதா, மகப்பாவனையிலிச்சகத்திலலகைத்தே ராநீர்தன்னி, லுகப்பாமறுதியுள்ளோர்க ளுபதேசிக்கவொண்ணுதோர், மிகப் பாவிகளாஞ்சீசீயென் றிகழ்வாரவரைமெய்யுணர்ந்தோர்......... ....*

(இ-ள்.) சகப்பேர்பெறும்- உலகநாமத்தைப்பெற்றிருக்கின்ற—இவ்வாதனைதான்றவிரில்- இந்தவாதனையானதுகெடுமாயின்—அழியாச்சாந்தியதாம் - கெடாதவுபசாந்தமாம்— அகம் பாவனையில் - அகம்பாவத்திலும்—இச்சகத்தில் - இவ்வுலகத்திலும்—அலகைத்தேராநீர்தன்னி ல்-கானற்சலத்திலும் — உகப்பாமறுதியுள்ளோர்கள் - உயர்வானநிச்சயமுடையவர்கள்—உப தேசிக்கவொண்ணுதோர் - அனுக்கிரகிக்கத்தகாதவர்கள்— அவரை- அவர்களை —மெய்யுணர்ந் தோர் - உண்மையையறிந்தசத்துக்கள்—மிகப்பாவிகளாம் - மிகவுந்தியராவர்— சீசீயென்றிக ழ்வார்- சைசையென்றுநிந்திப்பார்கள். எ-று. (இ-ம்) சகநிச்சயபுத்தியுள்ளவனுக்கிவ்வனுபவஞ் சொல்லுதலிழிவென்பதாம்.. (சூச)

(அ-கை.) பக்குவிக்குபதேசிக்கவேண்டுமெனல். (கவி) பரமமுணர்ந்தவிவேகியர்க் குப்பரமவுபதேசம்பகர்வர், திரமின்மயக்கத்திழிந்தோர்க்குச்செப்பநினையார்சொ ற்பனத்தில், வரனைநனவிற்கன்னிகைக்கு மகிணனுக்குமியல்பொக்கும், விரதமுனி யேநீசொன்ன வினுவுக்குண்மைவிளம்பினமால் .... *

(இ-ள்.) பரமமுணர்ந்த - பிரமத்தையறிந்த—விவேகியர்க்கு - விவேகத்தையுடையவ ர்களுக்கு — பரமவுபதேசம்பகர்வர் - பிரமவுபதேசஞ்செய்வார்கள் — திரமின்மயக்கத்திழிந் தோர்க்கு—திரமின்றிப்பிரமையிலிறங்கினவர்களுக்கு - செப்பநினையார்- உபதேசிக்கநினையா ர்கள் —(சொன்னலது)சொற்பனத்தில்வரனை - கனவிற்கண்டபுருடனை—நனவிற்கன்னிகைக்கு- சாக்கிரத்திலுள்ளகுமரிக்கு— மகிணனுக்கும் - கொழுநனுகச்செய்கின்ற — இயல்பொக்கும்- தன்மைக்குச்சமானமாம்— விரதமுனியே - தவத்தையுடையவசிஷ்டமுனியே — நீசொன்ன வினுவுக்கு - நீர்கேட்டவினுவுக்கு—உண்மைவிளம்பினம் - தத்துவத்தைச்சொன்னேம். எ-று.

[ப-ம்] சடத்தைவெறுத்துத்தள்ளும்போதே சித்தாயிருத்தலினவனுக்கேசகஞ்சின்மாத்திரமெ ன்றுபதேசிக்கவேண்டுமென்பார், பரமமுணர்ந்தவிவேகியர்க்கே பரமவுபதேசம்பகர்வரென் றூர், (இ-ம்) சர்வம்பிரமமயமென் றுபதேசிக்கத்தக்க சீடனையுணர்த்ததாம் .... (௭௫)

(அ-கை.) சுவாமியெழுந்தருளுதல். (கவி) இனிதுண்டாகவுனக்கென்பா லேகுவோ நாமென்றுமையும், புனிதன்றானும்பரிவாரம்புறத்துச்சூழவிண்ணகன்றான், பனிந ன்மலரஞ்சலிசொரிந்துபணிந்தேனன்றுமுதலந்தத், துனியினெறியாமெய்யுணர் வைத்தொடர்பாற்பூசைசெய்கின்றேன் ....*

(இ-ள்.) உனக்கு - நின்க்கு—என்பால்- என்னிடத்தில்—இனிதுண்டாக-அன்புண்டாக் கிடவது—நாம் - யாம்—ஏகுவோமென்று - போவோமென்று — உமையும் - பார்வதியும்— புனிதன்றானும் .. பரமசிவனும்—பரிவாரம் - பரிசனங்கள்—புறத்துச்சூழ்- பக்கத்திற்சூழ்ந்து வர—விண்ணகன்றான் - ஆகாயத்திற்சென்றார்—பனிநன்மலரஞ்சலி - குளிர்ச்சியுள்ளநல்லபுட் பாஞ்சலியை—சொரிந்துபணிந்தேன் - வருஷித்துவணங்கினேன்—அன்றுமுதல்-அன்றுமுத லாக—அந்தத்துனியில் - அத்துக்கநிவிர்த்தியையுடைய—நெறியால்-(தடையற்றவாநந்தமுண் டாகும்)வழியினால்—மெய்யுணர்வை - உண்மைஞானத்தை—தொடர்பால் - தொடர்ச்சியுடன் —பூசைசெய்கின்றேன் - ஆராதிக்கின்றேன். எ-று. (இ-ம்) தமதாசாரியருபதேசப்படிபோத லிங்கத்தையாராதிக்கின்றேனென்பதாம்..... .... (௭௬)

(அ-கை.) ஞானபூசையாலுள்ளவனுபவங்கூறல். (கவி) இன்றுமென்றும்பதறு மலியற்றுபூசாவிதானத்தாற், றுன்றுகின்றவாதனைகள் சுமையன்றியிலேசுமக் கின்றே, னன்றுவந்தகிரியைக ளோடாசாரங்கண்மலராக, நின்றபூசைதனிற் குறைவுநிறைவுகாணேனிராப்பகலே .... *

(இ-ள்.) இன்றும் - இப்போதும்—என்றும் - எப்போதும்—பதறுமலியற்று- தவறுமற் செய்கின்ற—பூசாவிதானத்தால் - ஆராதனைக்கிரமத்தினால்—துன்றுகின்றவாதனைகள்- நெருங் குகின்றவாசனைகள்—சுமையன்றியில் - பாரமில்லாமல்—சுமக்கின்றேன்- தாங்குகின்றேன்— அன்றுவந்த - அப்பொழுதுகிடைத்த —கிரிகைகளோடு - கிரிகைகளுடன்—ஆசாரங்கண்மல ராக-ஒழுக்கங்களேபுஷ்பங்களாக—நின்றபூசைதனில் - இருக்கின்றதேவார்ச்சனையில்— குறை நிறைவு - குறைவையுநிறைவையும்—இராப்பகல் - இராவிலும்பகலிலும்—காணேன் - பார்த்தி லன். எ-று. [ப-ம்] சகஞ்சித்தாயும் வாசனையதன்பரிமளமாயு மனுபவிக்கின்றேனென்பார், வாதனைகள்சுமையன்றியிலே சுமக்கின்றேனென்றும், சித்தின்விளக்கமே மலராகப்பூசித்துப் பூரணனேனென்பார், பூசைதனிற்குறைவுநிறைவுகாணே னிராப்பகலென்றார்......... . (௭௭)

(அ-கை) தனதனுபவப்படி யிராமனுக்காம்பொருட் டுபதேசித்தல். (கவி) கொள் ளுவானுங்கொள்பொருளுங்கூட லுயிர்க்கெல்லாம்பொதுவா, நள்ளுமந்தக்கூட்ட த்தேஞானயோகிக்கவதான,முள்ளதேதங்கதுதானேயுயரான்மாவுக்கருச்சனையாந், தெள்ளுமிந்நோக்காற்சங்கஞ் சேராமனத்தாற்சகத்துறைவாய்........ .... *

(இ-ள்.) கொள்ளுவானும் - ஞாதாவும்—கொள்பொருளுங்கூடல் - திரிஸ்யமுஞ்சேர்த ல்—உயிர்க்கெல்லாம் - ஆத்மாக்களனைத்திற்கும்—பொதுவாம்-சமமாகும்—நள்ளுமந்தக்கூட் டத்து- விரும்புகின்றவச்சங்கத்தில்—ஞானயோகிக்கு - ஞானயோகிகளுக்கு—அவதானம்-கிர கித்தலாவது—அங்குள்ளதேது - அவ்விடத்திலுள்ளதெதுவோ—அதுதான் - அதுவேயாம்— உயரான்மாவுக்கு - (அதுவே) மேலானஞானுத்மாவுக்கு—அருச்சனையாம் - ஆராதனையாகும் — தெள்ளுமிந்நோக்கால் - தெளிகின்றவிந்தத்திருஷ்டியினால்—சங்கஞ்சேரா- (விஷய)சங்கஞ் சேராத—மனத்தாற்சகத்துறைவாய் - மனதினாலுலகத்தின்கண் ஸ்ரீராமா நீவசிப்பாய். எ - று. [ப-ம்] ஞாதாஞேயத்துடன் கூடியனுபவிக்கும்போதி லவ்விரண்டுநீங்கிச் சுகபோதமாயிருத் தலாத்மாக்களின் சுபாவமென்பார், உயிர்க்கெல்லாம்பொதுவென்றும் அதைஞானிகடனது ஸ்வரூபமாகக்கிரகிப்பாரென்பார், ஞானயோகிக்கவதானமென்றும்,அதுவதுவாகவிளங்குமெ ன்பார், உள்ளதேதங்கதுதானே யுயராமன்மாவுக் கருச்சனையென்றும் இச்சுவானுபவத்தாற் சீவன்முத்தனாயிராசகாரியங்களைச் செய்வாயென்பார் இந்நோக்காற் சங்கஞ்சேராமனத்தாற் சகத்துறைவாயென்றுங் கூறினார். (இ-உ-க-ம்) தனது சுவானுபவத்தைக்கூறி நீயுமப்படியே பூசித்துவிளங்குவாயென்பதாம்..... .... (௭௮)

(அ-கை.) இராமன்றனதனுபவமுரைத்தல். (கவி) இவ்வாறுலகமெனும்பெருங்கா டெய்திவருந்தாயென்றலுமே, யவ்வாளிராமனுரைசெய்வான்விட்டேனையமெலா மிகவுந், தவ்வாதறிப்பாலவெலாமறிந்தேன்சலியாதருள்பெற்றேன், கைவாரண நேராசைதனைக்கடிந்தேனென்றிலசைவில்லேன்................................ ..*

(இ-ள்.) இவ்வாறு - இவ்வண்ணம் —உலகமெனும் - சகமென்கின்ற — பெருங்காடெய்தி - மகாரணியத்தையடைந்து—வருந்தாயென்றலும் - துன்புறுதேயென்றுசொல்லவும்—வெவ்வாளிராமன் - கொடியவாளையுடையவிராமரானவர்—உரைசெய்வான் - சொல்லுவார்—ஐயமெலாம்விட்டேன் - சந்தேகங்களனைத்தையுநீக்கினேன்—மிகவுந்தவ்வாது - மிகவுந்தவறுமல்—அறியற்பாலவெலாம்-அறியவேண்டியனயாவும்—அறிந்தேன்-தெரிந்துகொண்டேன்—சலியாதருள்பெற்றேன் - சலனமில்லாம (லுமது) கிருபையைப்பெற்றேன் — கைவாரணநேராசைதனைக்கடிந்தேன்- தும்பிக்கையுள்ளயானையையொத்தவிச்சையைக்கெடுத்தேன்—ஒன்றிலசைவில்லேன் - ஒன்றிலுஞ்சலனமில்லாதவனானேன். எ-று .... (௬௯)

(அ-கை.) இ-து. (கவி) பிறவிக்கடலிற்றீரநிலைபெற்றுப்பிறழ்கற்பனையெல்லா, மறவிட்டயர்வற்றறவலிதாயறவேதெளிந்தாநந்தத்தை, யுறவுட்குளிர்ந்துநன்றனதுள்ளமென்று மெய்ஞ்ஞானத், திறவித்தகனும்வசிட்டனுடன்செப்பிமேலுஞ்செப்புற்றான் ....ள*

(இ-ள்.) பிறவிக்கடலின் - பவசாகரத்தின் —தீரநிலைபெற்று - கரையாகியமுத்தியையடைந்து—பிறழ்-விளங்காநின்ற—கற்பனையெல்லாம்-கற்பனைகளனைத்தையும்—அறவிட்டு-மிகவுநீக்கி—அயர்வற்று-வருத்தமற்று—அறவலிதாய்-மிகவுமுறுதியாக—அறவேதெளிந்து - மிகவுந்தெளிந்து—ஆநந்தத்தையுற-பிரமாநந்தத்தைப்பொருந்த—உட்குளிர்ந்து - அகமகிழ்ந்து—உள்ளம்-மனமானது—நன்றனதென்று-சுகமானதென்று—மெய்ஞ்ஞானத்திறம்- தத்துவஞானவலிமையுள்ள—வித்தகனும்வசிட்டனுடன் - அற்புதனாகியவசிஷ்டமுனியோடு—செப்பி - சொல்லி—மேலுஞ்செப்புற்றான்-இன்னமுஞ்சொல்லத்தொடங்கினார். எ-று. (இ-உ-க-ம்) துக்கநிவிர்த்தியாய்த்தடையற்றபிரமாநந்தாமுதமாயுள்ளம்விஸ்ராந்தியடைந்ததாம் .... (௭௰)

தேவபூசைகதைமுற்றிற்று. ஆ. கதை - ௩௰௨ - கவிதை (௩௱௭௰)

வில்வபலக்கதை.

(அ - கை.) முற்கதையிலபரோக்ஷஞானார்ச்சனையினாற் சர்வம் பிரமமயமென்னு நிருவாணசுகஞ்சொல்லி யதன்வியாபகமே சர்வமுமாமென்பதை யறிவிக்குநிமித்தம் வில்வபலக்கதையைநிரூபிக்கிறார் .... *

(அ-கை.) இந்தஞானதேவதையையாராதிப்பதற்கிச்சைதடையாதலா லதை நீக்குதற்பொருட்டதனியல்பைக்கூறுதல்.(கவி. வேறு. நின்னுரையமுததாரை நிறைந்துமுள்ளமைவுதோன்றுப்,பின்னரும்பூரணத்தைப்பேசெனவிராமன்கேட்ப,மன்னுமாமுனிவன்சொல்வான்வருபொருண்முதற்கணத்தே,பின்னலமாகுமற்றக்கணத்தவ்வாறினிமையாகா..... *

(இ-ள்.) நின்னுரையமுததாரை - உமதுவசனமாகியவமுதவருஷமானது —நிறைந்தும்-பூரணமாகியும்—உள்ளமைவுதோன்று - உள்ளேபோதுமென்கின்றதிர்ப்திபிறக்கவில்லை—பின்னரும் - இன்னமும்—பூரணத்தைப்பேசென - பூரணஞானத்தைச்சொல்லுவாயென்று—இராமன்கேட்ப - இராகவன்கேட்க — மன்னுமாமுனிவன் - நிலைபெற்றமகானானவசிஷ்டமுனி—சொல்வான் - சொல்லுவார்—வருபொருள் - வராநின்றவஸ்துக்கள்—முதற்கணத்து - முந்தினக்ஷணத்தில்—இன்னலமாகும் - இனிமைபாம்—மற்றக்கணத்து - மறுக்ஷணத்தில்—அவ்வாறு-அந்தப்ரகாரம்—இனிமையாகா - இன்பமாகமாட்டாது. எ-று .... (௧)

(அ-கை.) இ - து. (கவி) ஈதனுபவியாதாராரிச்சிக்கவினிதாம்வத்துக், காதலியாதபோதுகைப்புறுமாதலாலே, யாதரமூலமாகுமினிமைக்கவ்வினிமைதானும், போதுமென்றிடப்போமிச்சைபோக்கினுலனைத்தும்போமே................................ *

(இ-ள்.) ஈதனுபவியாதாரார்-இதையனுபவியாதவர்கள்யாவர்—வத்து-பொருளானது—இச்சிக்கவினிதாம்-ஆசைப்படவின்பமாகும்—காதலியாதபோது-இச்சியாதபோது—கைப்புறும்-கசப்பாகும்—ஆதலால்-ஆகையினால்—ஆதரம்-ஆசையானது—இனிமைக்கு-இன்பத்துக்கு—மூலமாகும்-காரணமாகும்—அவ்வினிமைதானும் - அந்தவினிமையும்—போதுமென்றி

டப்போம்- போறுமென்றுதிர்ப்திபிறக்கநீங்கும்—இச்சைபோக்கிறல்- ஆசையைநீக்கிறல்—அனைத்தும்போம்-சகலமுநீங்கும். எ-று. (இ-உ-க-ம்) இச்சாத்யாகவுத்தியைக்கூறினதாம். (உ)

(அ-கை.) வாசனையற்றமனதிறற்செய்யுங்கிரியைதுன்பமாகாதெனல். (கவி) பன்மையாமாசைதீர்கபாவனையறகசித்த, மின்மையாயொழிகசங்கமிலாமையாயுனக்குச்சொல்வாம், புன்மைவாதனைபற்றுவுட்கரணத்தாற்புரியுஞ்செய்கை, வன்மையாற்கலக்கங்கோடிவருகினும்வருத்தஞ்செய்யா...... .... *

(இ-ள்.) பன்மையாமாசைதீர்க-பலவிதமானவிச்சைகளொழியக்கடவது — பாவனையறுக-பாவனைகெடக்கடவது—சித்தமின்மையாயொழிக-மனமில்லாததாய்த்தவிரக்கடவது—சங்கமிலாமையாய்-நிற்சங்கமானவனே—உனக்குச்சொல்வாம் - நினக்குச்சொல்லுவோம்—புன்மைவாதனைபற்று-அற்பமாகியவாதனையையடையாத — உட்கரணத்தால் - அந்தக்கரணத்தினுல்—புரியுஞ்செய்கை விரும்பாநின்றதொழில்கள்—வன்மையால் - வலிமையினுல்—கலக்கங்கோடிவருகினும்-கலக்கங்களநேகம்வந்தாலும்—வருத்தஞ்செய்யா-துன்பஞ்செய்யாது. எ-று..... (ங)

(அ-கை.) வாசனநாசத்தான் மனோநாசமாமெனல். (கவி) விழிப்பினோடிமைப்பிற்சித்தஞ்சகத்தினைவிளைத்தொடுக்கு, மொழித்துவாதனைபிராணனொடுக்கத்தாலுளத்தைமாய்ப்பா, யிழித்தபேதமையின்றோற்றமொடுக்கமாமிரண்டினாலுஞ், சுழித்திடுகருமமெல்லாந்தோன்றிடுமொடுங்குமன்றே .... *

(இ-ள்.) சித்தம் - மனமானது—விழிப்பினோடிமைப்பில்-விழிப்பினுமிமைப்பினும்—சகத்தினைவிளைத்தொடுக்கும் - உலகத்தையுண்டாக்கிக்கெடுக்கும் —வாதனையொழித்து-வாதனையைக்கெடுத்தாவது—பிராணனொடுக்கத்தால் - பிராணபந்தத்தினுலாவது — உளத்தைமாய்ப்பாய் - மனதைக்கெடுப்பாய்—இழித்தபேதமையின்- இழிவாயிருக்கின்றவறியாமையினது—தோற்றமொடுக்கமாம் - உண்டாதலுமொடுங்குதலுமாம்— இரண்டினாலும் - உபயத்தினுலும்—சுழித்திடுகருமமெல்லாம் - சுழிக்கப்பட்டகன்மங்களனைத்தும் — தோன்றிடுமொடுங்கும்- உண்டாகுமழியும். எ-று...... .... (ச)

(அ-கை.) மனநசித்தவிடமேபரமபதமாமெனல். (கவி) ஆதலாற்குரவனன்னூலகல்கிலாச்செறிவால்வன்பிற், பேதமையுளத்தைமாய்ப்பாய்ப்பிராணனைத்தடைசெய்தாலும், வேதனவசைவுதீரவிடுகினுஞ்சித்தம்போகுந், தீதறுமதுவேமேலாம்பதமெனச்செப்புமன்றே

(இ-ள்.) ஆதலால் - ஆதலினுல் —குரவனன்னூல் - ஆசாரியருஞ்ஞானசாஸ்திரங்களுமாகிய(வைகளுடைய)—அகல்கிலாச்செறிவால் - நீங்காதசங்கத்தினுலும்—வன்பில் - (அதன்)பலத்தினுலும் — பேதமையுளத்தைமாய்ப்பாய் - அஞ்ஞானத்தையுடையமனதைக்கெடுப்பாய்—பிராணனைத்தடைசெய்தாலும் - பிராணபந்தனம்பண்ணினுலும்—வேதனவசைவுதீரவிடுகினும்—அறிவின்சலனந்தீரும்படிவிட்டாலும்— சித்தம்போகும் - மனமானதுகெடும் — தீதறுமதுவே - குற்றமற்றவந்தமனோநாசமே—மேலாம்பதமெனச்செப்பும் - மேலாயிருக்கின்றபரமபதமென்றுசத்துக்கள்சொல்லுவார்கள். எ-று...... .... (ரு)

(அ-கை.) பிரமதிருஷ்டியினுன்மனதுநசிக்குமெனல் (கவி) தெரிபொருடரிசனஞ்சேர்கூட்டத்திற்சேர்ந்தவின்பம், விரிபரமார்த்தமாகுமதற்குமேலினிவேறில்லைப், புரிதருபிரமநோக்காமதனினுற்பொன்றுஞ்சித்தம், வரிசையாஞ்சித்தநாசம்வஞ்சமிலின்பந்தானே.

(இ-ள்.) தெரிபொருள் - திரிஸ்யமும்—தரிசனம் - காட்சியும்—சேர்கூட்டத்தில் - கூடியகூட்டரவில்—சேர்ந்தவின்பம் - (இவ்விரண்டும்நீங்கி)யுண்டானவாநந்தமே—விரிபரமார்த்தமாகும்-வியாபித்திருக்கின்றயதார்த்தமாகும் — அதற்குமேல் - அதற்குமேலாக — இனிவேறில்லை - இனிவேறேவஸ்துவில்லை—புரிதரு - விரும்பத்தக்க—பிரமநோக்காமதனினுல்- பிரமதிருஷ்டியினுல்—சித்தம்பொன்றும் - மனதுகெடும்—வரிசையாம் - ஒழுங்காகிய — சித்தநாசம்-மனோநாசமானது—வஞ்சமிலின்பந்தான் - பேராநந்தமாம். எ-று...... ....(சு)

(அ-கை.) ஞானத்தான்மனதுபரிசுத்தமாமெனல். (கவி) தேய்ந்திடல்வளர்தலில்லைத்தெரிவுறுமறைந்துபோகா, வாய்ந்துணர்ஞானிசித்தஞ் சித்தமன்றதன்பேருண்மை, யேய்ந்தநாநாத்துவத்தோடன்னியமெய்தல்சித்தந், தோய்ந்தபோதத்தாற்செம்பு சொன்னமாவதுவேபோலாம் .... *

(இ-ள்.) தேய்ந்திடல் - (அவ்வாநந்தந்)தேய்தலும்—வளர்தலில்லை - வளர்தலுமில்லையாம் தெரிவுறு - தோன்றுது—மறைந்துபோகா - மறையாது — ஆய்ந்துணர் - ஆராய்ந்தறிந்த—ஞானிசித்தம் - ஞானவான்கள்மனது—சித்தமன்று - மனமல்ல—அதன்பேருண்மை-அதனுமந்தத்துவமாம்—ஏய்ந்த- பொருந்திய—நாநாத்துவத்தோடு-நாநாவிதமானபொருள்களால்—

அஞ்ஞானமெய்தச்சித்தம்- வேறுபாடடைகின்றதேமனமாகும்—செம்புசொன்னமாவதுபோல்-சாம்பிரம்பரிசவேதியாற் றங்கமாவதுபோல—தோய்ந்தபோதத்தால்- பொருந்தியஞானத்தினால்—ஆம் - நின்மல(மன)மாம. எ-று .... (எ)

(அ-கை.) சித்தேகமேகரூபமா யநேகமாகுதல். (கவி) சித்தெனுந்தத்துவந்தான்சித்தமாய்ச்சகத்திலோர்காற், றொத்தியவிநோதஞ்செய்து துரியமாமவத்தைமேவி, நித்தமாந்துரியாதீத நிலைமையாமாதலாலே, பித்துறுமூலகாய்ப் பன்மையாய்நிற்கும் பிரமமென்றே.. *

(இ-ள்.) சித்தெனுந்தத்துவந்தான்- ஞானமென்கின்றவுண்மையானது—சித்தமாம்-மனமாகி—சகத்திலோர்கால் - உலகத்திலொருதரம் — தொத்தியவிநோதஞ்செய்து - தொந்தித்தவிளையாடல்செய்து— துரியமாமவத்தைமேவி - துரியாவவத்தையைப் பொருந்தி — நித்தமாம்-நித்தியமான—துரியாதீதநிலைமையாம் - துரியாதீதவுண்மையாகும்—ஆதலால்-ஆகையினால்—பிரமம் - பிரமமானது—ஒன்று - ஏகமாகியும்—பித்துறுமூலகாய் - மயக்கமுள்ளசகமாய்—பன்மையாய்நிற்கும் - அநேகமாகியுமிருக்கும். (இ-அ-க-ம்) மனதின்கணுள்ள நிர்விகல்பஞாசுரூபமானவிச்சைநீங்கினு லம்மனமுதலியயாவுஞ்சின்மாத்திரமாய்விளங்குமென்பதாம்.(அ)

(அ-கை.)சர்வம்பிரமமயமென்பதைத்திருஷ்டாந்தரூபமாகவறிவிக்கத்தொடங்கல். (கவி) முற்றுமாம்பிரமமன்றி மொய்ம்மனமுதலவேறு, யுற்றவைசிறிதுமில்லையுளத்திலோர்பணதிபோல, நிற்றலுந்தோன்றுமத்தை யறிதுகநிகழ்த்துகின்றேன், கற்றவர்வியக்கநனறாய்ப் புதுமையாங்கதைநீகேட்பாய் .... *

(இ-ள்.) முற்றுமாம்பிரமமன்றி-எல்லாமானபிரமமேயல்லாமல்—மொய்ம்மனமுதல்-மொய்த்திருக்கின்றமனமுதலாகிய—வேறுயுற்றவை - வேறுபாடாயிருந்தவைகள்—சிறிதுமில்லை-அற்பமுமில்லை—உளத்தில் - (மனதிலுண்டான)— ஓர்பணதிபோல - ஒருகற்பனையைப்போல—நிற்றலுந்தோன்றும்-எப்போதுந்தோற்றும்—அத்தைநிகழ்த்துகின்றேன்- அதைச்சொல்லுகின்றேன்—அறிதுக - அறியக்கடவாய்—கற்றவர்வியக்க-கல்வியையுடையவர்களதிசயிக்க—நன்றாய் - நன்றாகியும்—புதுமையாம் - அற்புதமாகியுமிருக்கின்ற—கதைநீகேட்பாய் - ஓரிதிகாசத்தை ஸ்ரீராமா நீகேட்பாயாக. எ-று .... (௯)

(அ-கை.) பிரமஸ்வரூபத்தைவில்வலக்கனியாகவுருவகப்படுத்திக்கூறல்.(கவி) கோடிமாகோடிகோடியிலக்கங்கள்கொண்டகாத,நீடியவகலமொவ்வாதகன்றதுநெடுமாகற்பம், வீடியநாளுமுற்றாதுமிகப்பழையதேனும், பீடியன்மதிக்கொழுந்திற்பெரிதுமெல்லியதுமாதோ .... *

(இ-ள்.) கோடி-கோடியும்—மாகோடி-மகாகோடியும்—கோடியிலக்கங்கள்- இலட்சங்கோடிகளுமென்னுமளவை)— கொண்டகாதம் - கொண்டிருக்கின்றகாவதங்கள்—நீடியவகலமொவ்வாதகன்றது-நீண்டவகலத்துக்கொப்பாகாமற்பருத்தது—நெடுமாகற்பம்-நீண்டமகாகற்பம்—வீடியநாளும் - வந்திறந்தகாலத்திலும்—முற்றாது-முதிராதது—அதுமிகப்பழையதேனும்-அப்பலமிகவும்புராதனமானாலும்—பீடியல் - பெருமையியைந்த—மதிக்கொழுந்தில்-மூன்றாம்பிறையினும்—பெரிதுமெல்லியது-மிகவுமிருதுவானதாம். எ-று .... (ய)

(அ-கை.) இ-து. (கவி) கற்பத்திற்பெருங்காற்றாலுங்கலக்குறாததுபேரண்டத், துற்பத்திமூலமாவதொருவில்வப்பெருங்காயுண்டு, சொற்பற்றுமதன்பாற்றோன்றிதொலைவுறுபிரமாண்டங்க, ளற்பத்திலெண்ணவொண்ணாவதனியல்பின்னங்கேளாய் .... *

(இ-ள்.) கற்பத்தில் - கற்பா (ந்தத்திலடிக்கின்ற) —பெருங்காற்றாலும் - சண்டமாருதத்தினாலும்—கலக்குறாதது - கலக்கப்படாததாகியும்—பேரண்டத்துற்பத்தி - பிரமாண்டங்களுண்டாவதற்கு—மூலமாவது - காரணமாகியுமிருக்கின்ற—ஒருவில்வப்பெருங்காயுண்டு - ஒருவில்வக்கனியுண்டு — சொற்பற்றுமதன்பால் - சொல்லாற்றுதிக்குமந்தவில்வக்கனியினிடத்தில்—தோன்றிதொலைவுறுபிரமாண்டங்கள் - உதித்துநசிக்கின்றபிரமாண்டங்களானவை— அற்பத்திலெண்ணவொண்ணாது - கொஞ்சத்திலெண்ணக்கூடாது—அதனியல்பு - அதன்றன்மையை—இன்னங்கேளாய் - இன்னமுங்கேட்பாய். எ-று .... (யக)

(அ-கை.) இ - து. (கவி) என்றும்பக்குவமாய்நின்றுவிறையுமூப்பிடர்செயாது, நின்றபல்கனியின்சாரமனைத்தையநிறைந்துநிற்குந், துன்றியவதன்பான்மச்சைக் கவிவில்லைத், துன்னுமச்சை, யென்றதுசிற்சொரூபத்தியல்சமத்காரந்தானே .... *

(இ-ள்.) என்றும்பக்குவமாய்நின்றும் - எப்போதும்பருவமாகவிருந்தும்—இறையுமூப்பிடர்செயாது - சற்றும்மூப்புவருத்தாதது — நின்றபலகனியின்சாரமனைத்தையும் - இருந்தவ

நேகபலங்களினதுசாரமுழுதையும்—நிறைந்துநிற்கும் - பூரணமாகப்பெற்றிருப்பது— அன்றியவதன்பால் - நிறைந்தவக்கனியினுள்ள—மச்சைக்களவில்லை-சதைக்குமட்டில்லை—அன்னமச்சையென்றது -நிறைந்தசதையென்றது—சிற்சொருபத்து-ஞானவடிவத்தின்—இயல்சமத்காரந்தான்-சுபாவமாகியவிளக்கமாம். எ-று. (இ-ரு-க-ம்)பிரமசுபாவத்தையறிவித்ததாம்(௰௨)

(அ-கை.) சிற்சத்தியின்விலாசத்தை மச்சையாக வுருவகப்படுத்திக் கூறல். (கவி)
சஞ்சலரூபமாஞ்சிற் சத்தியாஞ்சமத்காரத்தாற், செஞ்சவே சமமாந்தன்பாற் சிற்
கண்டான்விரிந்ததோதில், விஞ்சியவியோமமீது காலத்தின்விகாரமீது, துஞ்சலி
னியதியீது துவள்வுறுதொழிலீதென்னும் .... *

(இ-ள்.) சஞ்சலரூபமாம்-சஞ்சலவடிவமாயிருக்கின்ற—சிற்சத்தியாம் - சிற்சத்தியென்னும்—சமத்காரத்தால்-சமத்காரத்தினால்—செஞ்சவே-செம்மையாக—சமமாந்தன்பால்- சமமானதன்னிடத்தில்—சிற்கண்டான்-(சிருஷ்டிக்கு) மறிவினோக்கானது—விரிந்ததோதில்-வியாபித்ததைச்சொல்லுமிடத்து—ஈது-இது—விஞ்சியவியோமம்- மிஞ்சினவாகாயம்—ஈது-இது—காலத்தின்விகாரம்-காலத்தின்கலைகள் — ஈது - இது—துஞ்சலினியதி - அழிவில்லாதநியதி—ஈது-இது—துவள்வுறு-அசைகின்ற—தொழிலென்னும் - செய்கையென்றுகூறப்படும். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) இதுபிரமாண்டமண்டமாசையினேழுங்கீதென்னும், வித
முறுவில்வக்காயுள்வியன்சமத்காரமச்சை, யதுலனேயென்றலோடுமண்ணலுமுரை
ப்பான்ஞான, முதல்வநீவில்வக்காயாய்மொழிந்ததுந்தெரிந்ததன்றே .... *

(இ-ள்.) இது - ஈது—பிரமாண்டமண்டம் - பிரமாண்டமண்டபம் — ஈது - இது—ஆசையினேழுங்கென்னும் - திசைகளினேழுங்கென்றுசொல்லப்பட்ட—விதமுறு - பேதம்பொருந்திய—வில்வக்காயுள் - வில்வபலத்தினுள்—மச்சை - தசையானது—அதுலனே-ஸ்ரீராமா—வியன்சமத்காரம்-பெருமையுள்ள(சிற்சத்தி) சமத்காரமாம்—என்றலோடும் - என்றுவசிஷ்டமுனிசொல்லவும்—அண்ணலுமுரைப்பான் - ஸ்ரீராமனுஞ்சொல்லுவார்— ஞானமுதல்வ-ஞானத்துக்குமுதன்மையாவரோ—நீவில்வக்காயாய் - நீர்வில்வபலமாக — மொழிந்ததுதெரிந்தது-சொன்னதறிந்தேன். எ-று. (இ-உ-க-ம்) சிற்சத்தியின்வியாபகத்தைக்கூறியதாம்...(௰௪)

(அ-கை.) பூசிணைப்பழமு மதன்மச்சையும் பிரமாண்டமு மேருமுதலியவவையுமெ
ன்றல்போலப் பிரமமுஞ் சகத்தும் பிரிவின்றிவிளங்குமெனல். (கவி) வில்வக்கா
யென்றதையபெருஞ்சித்தின்மிகுந்தசத்தைப், புல்லுற்றவகங்காராதிப் பொருளெ
லாஞ்சித்தின்மச்சை, சொல்லுற்றவிரண்டாமொன்றாய்த்தோன்றுசிற்சொருபத்து
க்கு, மல்லற்றேசிகனேயென்றும்பிரிவிலைமற்றுங்கேளாய் .... *

(இ-ள்.) ஐய - ஆசாரியரே—வில்வக்காயென்றது - வில்வப்பழமென்றுசொன்னது—பெருஞ்சித்தின் - பூரணஞானத்தின்—மிகுந்தசத்தை - மேலானசற்பாவமே— புல்லுற்றவகங்காராதி - பொருந்தியவகம்பாவமுதலிய—பொருளெலாம் - வஸ்துக்களியாவும்— சித்தின்மச்சை - (அந்தஞானத்தினதுமச்சையேயாம் — சொல்லுற்ற - சொல்லப்பட்ட — இரண்டாம்-துவிதமாகியும்—ஒன்றாய் - ஏகமாகியும்—தோன்றுசிற்சொருபத்துக்கு- தோற்றுகின்றஞானஸ்வருபத்துக்கு—மல்லற்றேசிகனே - திடமுள்ளவாசாரியரே—என்றும்பிரிவிலை-எப்போதும்பேதமில்லை—மற்றுங்கேளாய் - இன்னமுங்கேட்பாய். எ-று .... (௰௫)

(அ-கை.) இ - து. (கவி) புகல்பிரமாண்டமென்னும்பூசிணைக்காயுண்மச்சை, யகல்
வடமேருவாதியகிலமுமானவாபோல், மிகவுயர்சித்தாம்வில்வக்காயினுள்விரிந்தம
ச்சைப், பகர்பிரமாண்டமாதியுலகங்கள்பலவுமென்றான் .... *

(இ-ள்.) புகல்பிரமாண்டமென்னும் - சொல்லியபிரமாண்டமென்கின்ற— பூசணிக்காயுள் - பூசிணைப்பலத்தினுள்—மச்சை - சதையானது— அகல்வடமேருவாதி - மகாமேருமுதலிய—அகிலமுமானவாபோல் - சகலமுமானதுபோல—மிகவுயர்சித்தாம் - மிகவுமேலாயிருக்குஞானமாகிய— வில்வக்காயினுள் - வில்வபலத்தினுள் — விரிந்தமச்சை - வியாபித்திருக்கின்றதசையானது—பகர்பிரமாண்டமாதி - சொல்லப்பட்டபிரமாண்டமுதலிய — உலகங்கள்பலவுமென்றான் - சகங்களனைத்துமென்றுசொன்னார். எ-று. (இ-உ-க-ம்) பிரமசத்திமயமாய் விளங்குமென்றறிந்தேமென்பதாம் .... (௰௬)

வில்வபலக்கதை முற்றிற்று. ஆ-கதை - ௫௰௧ஐ - கவிதை(௩௱அ௬)

சிலைக்கதை.

(அ - கை.) முற்கதையிற் சர்வம்பிரமவியாபக மென்பதையறிவித்து, அஃதுவேறு போற்றோற்றினும் பிரமஸ்வரூபப்ரகாசமே யென்பதைத்திருஷ்டாந்தமா யறிவிக்குநிமித்தஞ் சிலைக்கதையைநிருபிக்கிறார் .... *

(அ-கை.) சித்தைச்சிலையாகக்கூறல். (கவி) (வேறு.) மீண்டுமோர்கதைவிசித்திரவிய
ப்பதுவீரநீகேளென்று, நீண்டமாதவனுரைசெய்வான்சிக் கென்றுநெருங்கிமெல்
லியதாகி, மீண்டகன்றுவித்தாரங்கண்முடிவின்றியிலங்குமோர்பெருங்கல்லு,மாண்
டதுண்டதனிடைவிரிகமலங்கண் மலர்ந்தனவரம்பில்லை .. ..*

(இ - ள்.) மீண்டுமோர்கதை - திரும்பவுமொருகதை—விசித்திரவியப்பது - பேராச்சரியமானவதிசயத்தையுடையது — வீரநீகேளென்று - இராமாநீகேளென்று — நீண்டமாதவன்-மிகுந்தமகாதவத்தையுடையவசிஷ்டமுனிவர்—உரைசெய்வான் - சொல்லுவார்— சிக்கென்று நெருங்கி - பிரியாமனெருக்கமுற்று—மெல்லியதாகி - மிருதுவாகி—ஈண்டகன்று- இவ்வண்ணம்பரவி—வித்தாரங்கள் - விசாலங்கள்—முடிவின்றி - இறுதியில்லாமல்—இலங்குமோர்பெருங்கல்லு-விளங்காநின்றவோர்மகாசிலை—மாண்டதுண்டு - மாட்சிமைப்பட்டதாகவுண்டு—அதனிடை-அச்சிலையினிடத்தில்— விரிகமலங்கள் - விரிந்ததாமரைப்புஷ்பங்கள் — மலர்ந்தனவரம்பில்லை - விகசித்திருக்கின்றதளவில்லை. எ-று .... (க)

(அ-கை.) சிற்சுபாவமானசகத்தைச் சித்திரமாகக்கூறல். (கவி) இலைகடம்மிற்றுங்
கோத்தனநெருங்கின வெதிர்சிலதெரியாத, சிலதெரிந்தன மீதுதாளாயினசிலசில
கீழ்த்தாளாய், நிலைகொண்மூலமில்லாதனசிலவிவற்றிடை யெல்லாநிகழ்சங்கம், பல
திரண்டனசக்கரமுடிவிலேபண்ணியபதுமம்போல்............................ .... *

(இ-ள்.) இலைகள் - பத்திரங்கள்—தம்மிற்றுங்கோத்தன - ஒன்றிலொன்றுசேர்ந்தன—நெருங்கின - நெருக்கமுற்றன—எதிர்சிலதெரியாத - நேரேசிலதுதெரியாதன— சிலதெரிந்தன - சிலதுதெரிந்தன—சிலமீதுதாளாயின - சிலதுமேலேதாளாயின—சிலகீழ்த்தாளாய்- சிலதுகீழேதாளாயின—சிலநிலைகொள்- சிலது நிலையான—மூலமில்லாதன-வேரில்லாதன—இவற்றிடையெலாம் - இதன்மத்தியெல்லாம்— நிகழ்சங்கம் - விளங்குகின்றசங்கங்கள்—பலதிரண்டன - அநேகந்திரளாயின—சக்கரம் - சக்கரங்களும் — பண்ணியபதுமம்போல் - செய்ததாமரையைப்போல—முடிவில் - அளவில்லாதன. எ-று .... (உ)

(அ-கை) சிலையன்றுசித்தேயெனல். (கவி) என்றபோதுசாலக்கிராமப்பெயரிட
த்திலேநெடுமாய, னின்றகுன்றிலேகண்டனனனையதோர்நெடுஞ்சிலையெனக்கூறும்,
வென்றிவீரனை வசிட்டனுநோக்கியே வெற்புநீமுதற்கண்ட, தன்றுபேரண்ட நிலை
மைபள்ளேயுறையறிவையேசிலையென்றேன்.... .. .. *

(இ-ள்.) என்றபோது - இப்படியென்றுவசிஷ்டமுனிசொன்னவளவில் — சாலக்கிராமம் - சாலக்கிராமமென்கின்ற— பெயரிடத்தில் - நாமத்தையுடையஸ்தானத்தில்— நெடுமாயன் - நெடியமாலானவர்—நின்றகுன்றில் - நிற்கப்பட்டமலையில்—அனையது- அப்படிப்பட்டதான—ஓர்நெடுஞ்சிலை - ஓருயர்ந்தகல்லை—கண்டனனென - பார்த்தேனென்று—கூறும்வென்றிவீரனை - சொன்னவெற்றியையுடையஸ்ரீராமனை—வசிட்டனுநோக்கி - வசிஷ்டமுனியும்பார்த்து—வெற்பு - மலையானது—நீமுதற்கண்டதன்று - நீமுன்புபார்த்ததன்று—பேரண்டநிலைமை - பெரிதானவண்டத்தினிலைமைகளானவை—உள்ளேயுறை- அகத்தில்வாசஞ்செய்கின்ற—அறிவையே - சித்தையே—சிலையென்றேன் - கல்லென்றுசொன்னேன். எ-று .... (ஈ)

(அ-கை.) சித்துக்குஞ்சகத்துக்கும் வேறுபாடின்மையைக்கூறல். (கவி) பலவுமொ
ன்றுமெய்யாகியசகங்களுட்பயின்றசித்துயர்கல்லா, நலனுறச்செறிந்திறுகியொன்
றாகியேநவின்றசிற்சிலையின்பா, லுலகசாலங்களுறைந்திடும்வானிலே யுறைதருகாற்
றேபோ, னிலன்விண்கால்கிரிதிசையெலாமேவியுநெடுஞ்சிலையுளையாகா....... .... *

(இ-ள்.) பலவும் - அநேகமும்—ஒன்றும் - ஏகமும்—மெய்யாகியசகங்கள் - உண்மையாயிருக்கின்றவுலகங்கள்—உட்பயின்றசித்து - அகத்திற்றங்கியஞானமானது— உயர்கல்லாம்-மேலானசிலையாகும்— நலனுறச்செறிந்திறுகி - நன்றாய்நெருங்கிக்கெட்டியாய்—ஒன்றாகிநவின்ற - ஏகமென்றுசொல்லிய — சிற்சிலையின்பால் - ஞானக்கல்லினிடத்தில் — உலகசாலங்கள்-சகக்கூட்டங்கள்—வானில் - ஆகாயத்தில் — உறைதருகாற்றேபோல் - வசிக்கின்றவாயுவைப்போல—உறைந்திடும் - வாசஞ்செய்யும்—நிலன் - பூமியும்—விண் - ஆகாயமும்—கால் - காற்

றும்—கிரி - மலையும்—திசை - திக்குமாகிய— எல்லாமேவியும் - இவையாவுங்கூடியும் — நெடுஞ்சிலையுளையாகா - பெரியகல்லிரந்தரமுடையதாகா. எ-று......................................(௬)

(அ-கை.) சித்திற்சகநிச்சலமாய்விளங்குமெனல். (கவி) செவ்விதாங்கலில்வனசமுஞ்
சங்கமுந்திகிரியுமெனுங்கீற்று, வவ்வுகின்றதோர்சுழுத்தியாமவத்தையாய் மருவுறு
மதுபோலத், தவ்வில்சித்தினுளுலகங்கண்முழுவதுந்தங்குமால்வேறின்றி, யெவ்விட
த்திலியாதெப்படியிருந்ததவ்விடத்தி னப்படியென்ப.................................. *

(இ-ள்.) செவ்விதாங்கலில்-அழகானகல்லில்—வனசமும்-தாமரையும்—சங்கமும்-சங்கும்—திகிரியும்—சக்கரமும்—எனுங்கீற்று - என்கின்றவிரேகைகள்—வவ்வுகின்றது- பொருந்துகின்றது—ஓர்சுழுத்தியாமவத்தையாய் - ஒப்பற்றசுழுத்தியவத்தையாக—மருவுறும்- பொருந்தும்—அதுபோல - அதைப்போல —தவ்விலசித்தினுள் - குற்றமற்றஞானத்தின்கண்—உலகங்கண்முழுவதும் - சகங்களியாவும்—வேறின்றி - வேறுபாடில்லாமல்—தங்கும் - இருக்கும்—எவ்விடத்தில்-எந்தவிடத்தில்—யாதெப்படியிருந்தது- எதெப்படியிருந்ததோ—அவ்விடத்தின்-அந்தவிடத்தில்—அப்படியென்ப - அப்படியேயிருக்குமென்றுசத்துருக்கள்சொல்லுவார்கள். எ-று.

(அ-கை.) சகத்துசிற்ப்ரகாசமாய் விளங்குமெனல். (கவி) நாளுவாம்பணதிகளுண்
ணண்ணுகினுமொருமையேநண்ணுங்கற்போ, லாளுதசகங்களையுள்ளடக்கினுய்வே
ற்றுமைமேவா தறிவொன்றேயாங், காளுர்பங்கயமெல்லாம்வேறன்றிக் கன்மயமாங்
கணக்கேபோல, வானுர்சிற்சொருபத்தைப்பிரியாததன்மயமாம் வையமெல்லாம்.

(இ-ள்.) நாளுவாம்பணதிகள் - பலவிதமாகியவிரேகைகள்—உண்ணண்ணுகினும்-அகத்திற்பொருந்தினும் — ஒருமையேநண்ணுங்கற்போல் - ஒற்றுமையேபொருந்துகின்றசிலையைப்போல—ஆளுதசகங்களை - நீங்காதவுலகங்களை—உள்ளடக்கினும் - அகத்திலடக்கியிருந்தாலும்—வேற்றுமைமேவாது - பேதம்பொருந்தாமல்—அறிவொன்றேயாம் - சித்தொன்றுமேயாம்—காளுர்பங்கயமெல்லாம்- காடாகநிரம்பியதாமரைகளனைத்தும்—வேறன்றி-வேறுபடாமல்—கன்மயமாங்கணக்கேபோல - கல்லாகவேயிருக்கும்நியாயத்தைப்போல—வானுர்சிற்சொருபத்தை - பெருமைபொருந்தியஞானஸ்வரூபத்தை—பிரியாது- வேறுபடாமல்—வையமெல்லாம்- சகமனைத்தும்—அதன்மயமாம் - அச்சித்துமயமாகும். எ-று ....(௭)

(அ-கை.) சகமுற்பத்திலயமின்றி யெப்போதுஞ் சித்தில்விளங்குமெனல். (கவி) விரிசிலை
யிலெழுதியபங்கயமாதி யுதித்தத்தமித்ததுண்டோ, திரிபுவனங்களுஞ்சித்திலப்படியேவி
ல்வக்காய்செறிந்தமச்சைப், பரிசினின்முன்னுரைக்கதுபோன் முடிவில்லாவிகாரத்தாற்
பரந்தவண்டந், தரிசிலாவறிவினிடைதுன்னுமால்வேறென்றுசொல்லவொண்ணு... ..... *

(இ-ள்.) விரிசிலையிலெழுதிய - பரந்தகல்விற்பொறித்த — பங்கயமாதி - தாமரைமுதலியவை—உதித்து - உண்டாகி—அத்தமித்ததுண்டோ- இறந்ததுண்டோ —சித்தில்-ஞானத்தில்—திரிபுவனங்களும் - மூன்றுலகங்களும்— அப்படியே - அந்தப்ரகாரமேயாம் — வில்வக்காய்-வில்வபலத்தில்—செறிந்தமச்சை - நிறைந்தமச்சையினது— பரிசினின்முன்னுரைத்ததுபோல-கிரமமுன்சொல்லியதுபோல—முடிவில்லாவிகாரத்தால்- அளவற்றவேறுபாட்டினால்—பரந்தவண்டம்- விரிந்தவண்டங்களானவை—தரிசிலாவறிவினிடைதுன்னும்- குற்றமற்றசித்தினிடத்திநிறையும்—வேறென்றுசொல்லவொண்ணு - வேற்றுமையென்றுசொல்லக்கூடாது. எ-று.

(அ-கை.) பிரமசத்தேப்ரபஞ்சமாகவிளங்குமெனல். (கவி) பிரமத்தின்சற்பாவவடி
வானபேருலகின்பேதமெல்லாம், பரமார்த்தசுழுத்தியாய்ச்சாந்தமாய்ச்சமமாகிப்
பயின்றசித்தாய்க், கரமுற்றதன்னுருவாங்கண்ணுகுங்கல்லிடைத் தாமரைகள்போல
த், திரமற்றசிருட்டியெலாம் பயனில்லையுடல்களெல்லாஞ்சேராதென்றும்....... ... *

(இ-ள்.) பிரமத்தின் - பிரமத்தினது—சற்பாவவடிவான - சற்பாவமேரூபமாகியிருக்கின்ற—பேருலகின்பேதமெல்லாம் - பெரியசகத்தின்வேற்றுமையாவும்—பரமார்த்தம்- உண்மையாக—கல்லிடை - சிலையினிடத்திலிருக்கின்ற — தாமரைகள்போல் - பதுமங்கள்போல—சுழுத்தியாய் - சுழுத்தியாகியும்—சாந்தமாய் - சாந்தமாகியும்— சமமாகி - சமத்துவமாகியும்—பயின்றசித்தாய் - சொல்லப்பட்டஞானமாகியுமிருக்கின்ற—கரமுற்றதன்னுருவாம்-கைவசப்பட்டதனதாத்மஸ்வரூபமாகிய—கண்ணுகும் - இடமாகும்—திரமற்ற- நிலையில்லாத—சிருட்டியெலாம் - சிருஷ்டிகளனைத்தும்—பயனில்லை - ப்ரயோசனமில்லாததாம்—உடல்களெலாம்-வடிவங்களனைத்தையும்—என்றுஞ்சேரா - எப்போதுஞ்சேராதனவாம். எ - று. (இ-அ க-ம்)-கல்லிற்றோற்றுகின்ற சித்திரங்களதற்குவேறுபடாமலதுவாகவிளங்குதல்போல பிரமத்திற்றோற்றுகின்றசகமதற்கு வேறுபடாமற் பிரமமாகவேவிளங்குமென்பதாம் ....(௮)

சிலைக்கதைமுற்றிற்று. ஆ-கதை - ௩௨இ - கவிதை (௩௪௯௪)

அருச்சுனன் கதை.

(அ-கை.) முற்கதையிற் றுவிதம்போலத்தோற்றுவது மத்துவிதாநந்த மாதலாற்சர்வம்பிரமமயமென்பதை ப்ரத்தியக்ஷமாகத்தரிசிப்பித்து இவ்வனுபவிக்குயுத்தமுதலியசெய்கையும்வேறுபடாவென்பதைத் தெரிவிக்குநிமித்தமேனடக்கு மருச்சுனன்கதையைநிரூபிக்கிறார்.

(அ-கை.) சர்வம்பிரமமயமாய்விளங்கிப் புரியட்டகசரீரம் வந்தகாரணமியாதெனிலதற்குத்தரங்கூறல். (கவி.) என்னனுமேயறிவதெலா மறிவுற்றேன்காண்பனவுமெல்லாங்கண்டே, னுன்னருளாலென்னினுநல் லுணர்வுவளர்வுறமீட்டுமொன்றுகேட்கேன், துன்னுலகையாயிரமட்டமைப்பதாய்க் கண்ணடிபோற்றோன்றுகின்ற, முன்னுபுரியட்டகத்தின்வடிவேது மொழியென்ன முனிவன்சொல்வான் .... *

(இ-ள்.) என்னனும்- இப்படியென்றுவசிஷ்டமுனிசொல்லவும்—அறிவதெலாம்-தெரியவேண்டுவனயாவையும் — அறிவுற்றேன் - தெரிந்துகொண்டேன் — காண்பனவுமெல்லாம்-பார்க்கவேண்டுவனயாவையும்—உன்னருளால் - உமதுகிருபையினால்—கண்டேனென்னினும்-பார்த்தேனென்றாலும் —நல்லுணர்வு - சுகபோதமானது — வளர்வுற - வளரும்பொருட்டு—மீட்டுமொன்றுகேட்கேன் - திரும்பவுமொன்றுகேட்கின்றேன்—துன்னுலகை- நெருங்கியசகத்தை—ஆயிரமட்டமைப்பதாய் - அநேகத்தரமுண்டாக்குவதாய்—கண்ணடிபோல்- ஆடியிற்சாயைபோல—தோற்றுகின்ற - தோற்றுநின்ற— முன்னுபுரியட்டகத்தின் - கருதப்பட்டபுரியட்டகசரீரத்தினது—வடிவேது - உருவம்யாது—மொழியென்ன-சொல்லுமென்றுகேட்க—முனிவன்சொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார். எ-று .... (க)

(அ-கை.) பிரமப்ரகாசமானசீவஸ்புரணமே புரியட்டகசரீரமாதல். (கவி) ஆதிமுடிவின்றியே சகங்களின்வித்தாம்பிரமமடுத்தவண்ணம், பேதமுறமேவுதலுஞ்சீவனுநாமென்றுபேதித்தெண்ண, மேதமுறநானென்று மனனமுறமனமாகுமியைந்தபோதம், போதமுறுநிச்சயத்தாற் புந்தியாம்புலன்களாற்பொறிகளாகும் .... *

(இ-ள்.) ஆதிமுடிவின்றி - ஆதியந்தமில்லாததாகியும்—சகங்களின்வித்தாம்-உலகங்களின்விதையாகியுமிருக்கின்ற—பிரமம் - பிரமமானது— அடுத்தவண்ணம் - கிட்டினப்ரகாரம்—பேதமுறமேவுதலும்- வேறுபாடடையவும்—சீவனும் - சீவனாகும்—நாமென்று- யானென்று—எண்ணம்பேதித்து - நினைவுவேற்றுமைப்பட்டு—ஏதமுறநானென்றும் - குற்றமுறவகங்காரமென்பதாம்—மனனமுறமனமாகும் - மனனிக்கமனமாகும்— இயைந்தபோதம் - இசைந்தவறிவானது—போதமுறுநிச்சயத்தால் - அறிகின்றநிச்சயத்தினால்—புந்தியாம் - புத்தியாகும்—புலன்களால் - விஷயங்களால்—பொறிகளாகும் - இந்திரியங்களாகும். எ-று .... (உ)

(அ-கை.) இ-து. (கவி) காயமெனுநினைவாலே காயமாங்கடநினைவாற்கடமதாகு, மேயசுபாவத்திந்த வடிவுபுரியட்டகமாமென்பர்வீரா, தூயவறிஞன்செய்வோன்புசிப்பவன்சான்றென்றன்முதற் றுரிசிலோடி,மேயபெயர்சீவனுமறிவுபுரியட்டகமாய்விளம்புமன்றே .... *

(இ-ள்.) காயமெனுநினைவால் - சரீரமென்கின்றவெண்ணத்தினால்—காயமாம்-சரீரமாகும்—கடநினைவால் -கலசமென்னுங்கருத்தினால்—கடமதாகும்-கலசமேயாகும்—ஏயசுபாவத்து-பொருந்தியசுபாவத்தையுடைய—இந்தவடிவு - இவ்வுருவத்தை—வீரா-ஸ்ரீராமா—புரியட்டகமாமென்பர் - புரியட்டகமாகுமென்றுசத்துக்கள்சொல்லுவார்கள்—தூயவறிஞன் - பரிசுத்தமானஞாதா—செய்வோன்- கருத்தா—புசிப்பவன் - போக்தா—சான்று- சாட்சி—என்றன்முதல்- என்றுசொல்லுவதுமுதலியவற்றின்— துரிசிலோடி - வேகமாகச்சென்று— மேயபெயர்- மேவியநாமமுள்ள — சீவனுமறிவு - சீவனுகியசித்தானதை — புரியட்டகமாய்விளம்பும்-புரியட்டகமென்றுசொல்லப்படும். எ-று. (இ-ரு-க-ம்) சீவசைதன்னியத்தி லுதித்தவகங்காரமனது புத்தி சத்தம் பரிசம் ரூபம் ரசங் கெந்தமென்னு மெண்வகையும் புரியட்டக சரீரமாமென்பதாம் .... (ங)

(அ-கை.) புரியட்டகத்தைச்சொல்லி யதன்விருத்திகண்முதலிய சகத்துமாத்மஸ்வரூபமாய்விளங்குமெனபதைகிதாசாரத்தாற்போதிக்கத்தொடங்கல்.(கவி) கடியபுரியட்டகத்தின் வசத்தாலேகனவின்மேற்கனவுபற்றி, நெடியபலபொய்காணுநெறி

போலவிச்சகமுநிகழுமன்றே, படியளந்தோனருளுவதோர்நெறிகேளா யந்நெறி
யைப்பார்த்தன்பற்றி, யடிமுடிவில்பதச்சீவன் முத்தனாய்ச்சுகசீவியாகுமன்றே.. *

(இ-ள்.) கடியபுரியட்டகத்தின் - புதுமையாயிருக்கின்றபுரியட்டகத்தினுடைய—வசத்தால்-வயத்தினால்—கனவின்மேற்கனவுபற்றி- சொற்பனத்தின்மேற்சொற்பனம்பிடித்து—நெடியபலபொய்காணும்- மிகவுநாநாவிதமானமித்தியாகற்பனைகளைக்காணுகின்ற—நெறிபோல-தன்மையைப்போல—இச்சகமுநிகழும் - இவ்வுலகமும்விளங்கும்—படியளந்தோன்- பூமியையளந்தகிருஷ்ணசுவாமியானவர்—அருளுவது - அனுக்கிரகிப்பதாகிய—ஓர்நெறிகேளாய்-ஒருமார்க்கத்தைக்கேட்பாய்—அந்நெறியை - அந்தமார்க்கத்தை— பார்த்தன்பற்றி - விஜயன்பிடித்து—அடிமுடிவில்பத - ஆதியந்தமில்லாதபிரமபதத்தில்—சீவன்முத்தனாய்-சீவன்முத்தனாகி—சுகசீவியாகும் - சுகசீவியாவன் எ-று .... (௪)

(அ-கை.) இ-து. (கவி) வெருவாமலருச்சுனனாட் கழிப்பதுபோனாட்கழிப்பாய்வீர
வென்னப், பெருமானேயருச்சுனனெப்போதுதிப்பனவனுக்குப்பின்னைகாந்த,னரு
ளாலெவ்வாறுபதேசிப்பதெனக் கேட்டருளுமண்ணலுக்குத், திருமால்வந்தருச்சுன
ற்குமேலுணர்த்துநெறிவசிட்டன்செப்பலுற்றான் .... *

(இ-ள்.) வெருவாமல் - பயப்படாமல்—அருச்சுனன் - விஜயனானவன்— நாட்கழிப்பதுபோல்- காலங்கழிப்பதைப்போல—வீர- ஸ்ரீராமா—நாட்கழிப்பாயென்ன -காலத்தைத்தள்ளுவாயென்றுவசிஷ்டமுனிசொல்ல—பெருமானே- மகானே— அருச்சுனன்-விஜயனானவன்—எப்போதுதிப்பன் - எப்பொழுதுபிறப்பான்—அவனுக்கு - அவ்வருச்சுனனுக்கு—பின்னைகாந்தன்- இலக்குமிநாயகனான கிருஷ்ணசுவாமியானவர்—அருளால்- கிருபையினால்—எவ்வாறுபதேசிப்பதென - எப்படியுபதேசிப்பதென்று— கேட்டருளுமண்ணலுக்கு - கேட்டஸ்ரீராமருக்கு—திருமால்வந்து - அரிகிருஷ்ணனாகவெழுந்தருளி — அருச்சுனற்கு - விஜயனுக்கு—மேலுணர்த்துநெறி - இனியுபதேசிக்குமார்க்கத்தை— வசிட்டமுனிசெப்பலுற்றான் - வசிஷ்டமுனி சொல்லத்தொடங்கினார். எ-று. (இ - உ - க - ம்) சர்வம்பிரமமயமென்பதை யறிவிக்கத்தொடங்கினதாம்.. (௫)

(அ-கை.) இயமன்றவஞ்செய்யுங்காலநிரூபணம். (கவி) உகநாலுமுடிவுதொறுமுயி
ரனைத்துஞ்செற்றவினையுன்னிக்கூற்று, தகவானதவஞ்செய்யுமொருகாலெட்டாண்டு
தசவருடமோர்கான், மிகுமீராறுண்டொருகாலையாண்டோர்காலோர்கான்மீண்டே
ழாண்டு, துகடீரும்பதினாறுண்டொருகாலிப்படிபலகாற் றுணிந்துநோற்கும்.... *

(இ-ள்.) உகநாலுமுடிவுதொறும் - சதுர்யுகமுடிவுகடோறும்—உயிரனைத்தும்- சீவர்களியாவையும்—செற்றவினை - கொன்றதொழிலை—கூற்றுன்னி - யமனினைத்து—தகவான- தருதியாகிய—தவஞ்செய்யும் - தவத்தைச்செய்வான்—ஒருகாலெட்டாண்டு-ஒருகாலமெட்டுவருஷமும்—ஓர்காற்றசவருடம் - ஒருகாலம்பத்துவருஷமும்—ஒருகான்மிகுமீராறுண்டு- ஒருகாலமிகுந்தபன்னிரண்டுவருஷமும்—ஓர்காலையாண்டு- ஒருகாலமைந்துவருஷமும்—ஓர்கான்மீண்டேழாண்டு - ஒருகாற்றிரும்பவேழுவருஷமும்—ஒருகாற்றுகடீரும்பதினாறுண்டு - ஒருகாலங்குற்றமற்றபதினாறுவருஷமும்—இப்படி - இந்தப்ரகாரம்—பலகாற்றுணிந்துநோற்கும்- பலகாலந்தெளிந்துதவஞ்செய்வன். எ-று .... (௬)

(அ-கை.) அந்தக்காலத்திற் பூபாரநீக்குதல். (கவி) இப்படியேயமன்றவம்பூண்
டோருயிருங்கொல்லாமலிருந்தபோது, மொய்ப்புறுபல்லுயிராலும்பெயர்விடமற்
றறநெருங்குமூரிஞால, மப்படியினாலந்தவிசித்திரமாம்பலபூதமநேகமான, துப்பு
றுமூகங்களாற்பூபாரந்தொலைவிக்குந்தொன்றுதொட்டே.............................. *

(இ-ள்.) இப்படியேயமன் - இவ்வண்ணமேயமனானவன்—தவம்பூண்டு- தவத்தைத்தரித்து—ஓருயிருங்கொல்லாமல் - ஒருசீவனையுங்கொலைசெய்யாமல் — இருந்தபோது - இருந்தகாலத்தில்—மொய்ப்புறுபல்லுயிராலும்- நெருங்கியவநேகசீவர்களாலும்— பெயர்விடமற்று-பேர்தலுக்கிடமில்லாமல்—மூரிஞாலம் - பழையசகமானது—அறநெருங்கும்- மிகவுநெருங்கியிருக்கும்—அப்படியினால் - ஆகையினால் — அந்தவிசித்திரமாம்பலபூதம் - அந்தநாநாவிதமானபலசீவர்கள்—அநேகமான - அளவிறந்தனவாயின— துப்புறுமூகங்களால்- சகாயமுடையயுத்திகளினால்—தொன்றுதொட்டு - ஆதிமுதல் — பூபாரந்தொலைவிக்கும் - (கண்ணன்) பூமிபாரத்தைநீக்குவிக்கும். எ-று .... (௭)

(அ-கை.) உயிர்களைப்பிழைசெய்த பாபநீங்கும்பொருட் டியமன் றவஞ்செய்தல். (கவி) இவ்வகையேநாலுகமும்பல்லுயிருமுலகமுதலிறந்துபோன, வவ்வகையோரெண்ணில்லையாதித்தன்றந்தநமனந்தவண்ணங், கைவளர்பல்லுயிர்கொன்றுகரந்தநாளுறுபாவங்கட்டழிப்பா, னெவ்வமறுதவம்பூண்டுபன்னீராண்டேகாந்தத்திருந்தவெல்லை ... . *

(இ-ள்.) இவ்வகையே - இந்தப்ரகாரமே—நாலுகமும் - நான்குயுகமும்— பல்லுயிரும்-அநேகசீவர்களும்—உலகமுதலிறந்துபோன - சகமுதலியயாவுமழிந்துபோயின— அவ்வகையோரெண்ணில்லை - அவ்வண்ணநீங்கினதோர்கணக்கில்லை—ஆதித்தன்றந்தநமன் - சூரியன்பெற்றயமனானவன்—அந்தவண்ணம் - அந்தப்ரகாரம்— கைவளர்பல்லுயிர்கொன்று - ஒழுங்காகவளர்ந்தபலசீவர்களையுங்கொலைசெய்து—கரந்தநாள் - மறைந்தகாலத்தில் — உறுபாவங்கட்டழிப்பான் - பொருந்தியபாவமற்றபந்தத்தைக்கெடுக்கும்பொருட்டு — எவ்வமறுதவம்பூண்டு-துன்பமில்லாததவசைத்தரித்து—பன்னீராண்டு - பன்னிரண்டுவருஷம்—ஏகாந்தத்திருந்தவெல்லை - தனித்திருந்தகாலத்தில். எ-று. நியதிப்ரகாரங் கொன்றாலுமிது குற்றிருத்தியமென்றஞ்சித் தவஞ்செய்தானெனக்கொள்க .... (அ)

(அ-கை.) இப்போதுள்ளபூபார நீக்குதற்பொருட்டுத் திருமாலிருவடிவாக வவதரித்தல். (கவி) அதனாலேசாவில்லாப்பல்லுயிராலறநெருங்குமதிபாரத்தை, யெதினாலேதீர்வமெனத்திருமாலைச்சரணாகவெய்தும்பூமி, மதுசூதனிருவடிவா யவனியிலேயவதரிக்கும் வசுதேவற்குச், சுதனாகும்வடிவொன்றுபாண்டுவுக்குச்சுதனனசொரூபமொன்றே ....,.......*

(இ-ள்.) அதனால் - அதினால்—சாவில்லாப்பல்லுயிரால் - இறவாதபலசீவர்களினால்—அறநெருங்கும் - மிகவுநெருங்கியிருக்கின்ற—அதிபாரத்தை . மிகுந்தபளுவை — எதினாலேதீர்வமென - யாதினாநீங்குவோமென்று—திருமாலை - விஷ்ணுவை— பூமிசரணாகவெய்தும் - பூமிதேவியபையமாகவடைவாள்—மதுசூதன்- திருமாலானவர்—இருவடிவாய்-இரண்டுருவமாக—அவனியிலேயவதரிக்கும் - பூமியிலவதாரஞ்செய்யும் — (அதில்) வசுதேவற்கு - வாசுதேவருக்கு—சுதனாகும்வடிவொன்று-புத்திரனனதொருவடிவம்—பாண்டுவுக்கு-பாண்டவனுக்கு—சுதனனசொரூபமொன்று - புத்திரனனவடிவமொன்று. எ-று .... (கூ)

(அ-கை.) தனக்குத்தானேயுபதேசித்தல். (கவி) வாசுதேவப்பெயருமருச்சுனனுமமும்படைத்துவருமப்போதில், வீசுதார்திரிதராட்சதன்மைந்தர் கிளைஞரொடும்விசயன்மேலே, யேசுபோர்செய்யவருந்தன்கிளைஞர்மரணத்துக்கிரங்கிப்பார்த்த,னாசுசராசனம்வளையானதுபொருட்டானுபதேசமருளுமாயோன் .... *

(இ-ள்.) வாசுதேவப்பெயரும்-வாசுதேவனென்னுநாமத்தையும்—அருச்சனனுமமும்-விசயனென்னுநாமத்தையும்—படைத்துவருமப்போதில் - தரித்துவருகின்றவக்காலத்தில்—வீசுதார்-(மணம்) வீசாநின்றமாலையை(யணிந்த)—திரிதராட்சதன்மைந்தர்- திரிதராட்சதனுடையபுத்திரர்களானதுரியோதனாதியர்கள்—கிளைஞரொடும்-பந்துசனங்களுடன்—விசயன்மேல்- அருச்சுனன்மேல்—ஏசுபோர்செய்யவரும்- குற்றமுள்ளயுத்தத்தைச்செய்யவருபவர்களாகிய—தன்கிளைஞர்மரணத்துக்கு- தனதுறவினர்களுடையவிறப்புக்கு—பார்த்தனிரங்கி-அருச்சுனனனவிரக்கமுற்று—ஆசுசராசனம்வளையான் - சீக்கிரமாகவில்லைவளையாதவனானான்— அதுபொருட்டுமாயோன் - அதுநிமித்தங்கிருஷ்ணரானவர் — உபதேசமருளும் - உபதேசிப்பார். எ-று. (இ-ரு-க-ம்) பூபாரந்தீர்க்குநிமித்தந்திருமாலவதாரஞ்செய்துபதேசிப்பதைத்தெரிவித்ததாம்.

(அ-கை.) சரீரத்தின்கண்ணுள்ளசரீரிக்குச்சநநமரணமின்றெனல். (கவி) விசையனெனும்பெயருடற்குவிண்டுவெனுஞானவுடல்விளம்புமுண்மை, யிசைவுறக்கேளநந்தமாய்த்தெரிவரிதாயடிமுடிவற்றிருக்குமுன்னை, யசைவறப்பாரருச்சுனவறிவுருவங் குற்றங்களின்றிற்குந்,தசையுடலிலொருக்காலும்பிறப்புறாயிறப்புறாய்ச்சத்தாய்நின்றாய் .... *

(இ-ள்.) விசையனெனும்-விசயனென்கின்ற—பெயருடற்கு-நாமத்தையுடையசரீரிக்கு—விண்டுவெனும்-கிருஷ்ணனென்கின்ற—ஞானவுடல்-ஞானசரீரியானது—விளம்புமுண்மை-சொல்லாநின்றதத்துவத்தை—இசைவுறக்கேள்-நன்றாகக்கேட்பாய்—அநந்தமாய் - அந்தமில்லாததாய்—தெரிவரிதாய்-அறிதற்கரியதாய்—அடிமுடிவற்று-ஆதியந்தமில்லாமல் — இருக்குமுன்னை-இருக்கின்றவுனதாத்மஸ்வரூபத்தை—அருச்சுன-பார்த்தா—அசைவறப்பார்- சலனமின்றிப்பார்— அறிவுருவம்-(அப்போது)ஞானஸ்வரூபமானது —குற்றங்களின்றிற்கும்-குற்றமற்றதாயிருக்கும்—தசையுடலிலொருக்காலும்பிறப்புறாய் - மாமிசசரீரத்திலொருகாலத்திலும்மேனியாய்—இறப்புறாய்-மரியாய்—சத்தாய்நின்றாய் - சத்தாகவேயிருந்தாய். எ-று .... (ய)

(அ-கை.) ஆத்மஸ்வரூபத்தை நிரூபித்தஃதுதயமாம்பொருட்டுச் சங்கத்யாகம் பிரமார்ப்பணமீஸ்வரார்ப்பணஞ் சந்நியாசம் யோகம் ஞானமென்னுமிவ்வாறையு நிரூபித்தல். (கவி)
பிறப்பில்லையிறப்பில்லையிவனென்னவடிவில்லைப்பின்புண்டாகா,வறப்பண்டாய்நித்தமாய
ழிகின்றசரீரத்திலழியாச்சற்று, முறப்புரியுந்தொழில்களைநீயோயா துசங்கத்தையொருக்
கிச்செய்வா, யிறப்பில்பிரமார்ப்பணவாசாரமுறிற்பிரமமாயிமைப்பினிற்பாய். .... *

(இ-ள்.) பிறப்பில்லையிறப்பில்லை - சநநமரணமில்லை—இவனென்னவடிவில்லை-இவனென்னும்படியானவுருவமில்லை—பின்புண்டாகா- பின்புநித்தமில்லை—அறப்பண்டாய்- மிகவும்புராதனமாகியும்—நித்தமாய் - நித்தியமாகியு(மிருக்கின்றநீ)—அழிகின்றசரீரத்தில் - கெடாநின்றவுடலி(லிருந்தும்)—சற்றுமழியா - கொஞ்சமுங்கெடாது—உறப்புரியுந்தொழில்களை-பொருந்தச்செய்புங்கிரிகைகளை—நீயோயாது - நீவிடாமல்—சங்கத்தையொருக்கிச்செய்வாய் - பலாபேட்சையைத்தள்ளிச்செய்வாய்—இறப்பில்பிரமார்ப்பணவாசாரமுறில் - நசியாதபிரமார்ப்பணமானவொழுங்கையடைந்தால்— இமைப்பிற்பிரமமாய்நிற்பாய் - க்ஷணத்திற்பிரமஸ்வரூபமாயிருப்பாய். எ-று..(௰௨)

(அ-கை.) இ-து. (கவி) ஈசனிடத்தெப்பொருளுஞ் சமர்ப்பித்துமிகுமீசன்வடிவமெய்தி, பாசமுறுமுயிர்க்கெல்லாமீசனுய்ச்சங்கற்பப்பற்றுமாய்த்து, நீசமனுய்ச்சாந்தமனத் தினனுகிமுனியாய்ச்சந்நியாசியாகி, யேசறுயோகியுஞானவானுமாய்முத்தியினையெய்துகென்ன.. *

(அ-கை.) ஈசனிடத்து - ஈஸ்வரனிடத்தில்—எப்பொருளுஞ்சமர்ப்பித்து - எந்தவஸ்துவையுஞ்செலுத்தி—மிகுமீசன்வடிவமெய்தி- மேலானவீஸ்வரஸ்வரூபத்தையடைந்து—பாசமுறுமுயிர்க்கெல்லாம் - பந்தமடையுஞ்சீவர்களனைத்திற்கும்—ஈசனுய்- ஈஸ்வரனுகி—சங்கற்பப்பற்றுமாய்த்து- சங்கற்பத்தின்பிடிப்பைக்கெடுத்து—நீசமனுய் - நீசமத்துவனுகியும்—சாந்தமனத்தினனுகி - சாந்தமனதையுடையவனுகியும்—முனியாய் - தவத்தையுடையவனுகியும்— சந்நியாசியாகி- சந்நியாசத்தையுடையவனுகியும்—ஏசறுயோகியும் - குற்றமற்றயோகியாகியும்—ஞானவானுமாய் - ஞானத்தையுடையவனுகியும்—முத்தியினையெய்துகென்ன - மோக்ஷத்தையடையக்கடவாயென்றுசொல்ல, எ-று..(௰௩)

(அ-கை.) இவ்வாறினனுபவத்தைவினுவுதல். (கவி) சங்கமறுத்திடல்பிரமார்ப்பணமீசுரார்ப்பணமேசந்நியாதம்,பங்கமறுஞானமேயோகமேயெனுமிவற்றின்பகிர்ச்சியாதோ, செங்கண்முகிலேயென்றவிசயனுக்குமாலருள்வான்செறிசங்கற்ப, மங்குறவாதனைகெடவோர்நினைவுமிலாவிடம்பரமவத்துவென்பர். .... *

(இ-ள்.) சங்கமறுத்திடல் - சங்கத்தைக்கெடுத்தலும்— பிரமார்ப்பணம் - பிரமார்ப்பணமும்—ஈசுரார்ப்பணம் - ஈஸ்வரார்ப்பணமும்—சந்நியாதம் - சந்நியாசமும்—பங்கமறுஞானம்-வேறுபாடில்லாதஞானமும்—யோகமேயெனும் - யோகமுமென்கின்ற— இவற்றின் - இவைகளின்—பகிர்ச்சியாது - பகுப்பெது— செங்கண்முகிலே- சிவந்தகண்களையுடையமேகம்போன்றவரோ—என்றவிசயனுக்கு - என்றுகேட்டவருச்சுனனுக்கு—மாலருள்வான் - கிருஷ்ணரானவர்சொல்லுவார்—செறிசங்கற்பமங்குற - மிகுந்தசங்கற்பங்கெடவும்—வாதனைகெட- வாதனைகெடவும்—ஓர்நினைவுமிலாவிடம் - ஒன்றுமற்றவிடமே — பரமவத்துவென்பர் - பிரமவஸ்துவென்றுசத்துக்கள்சொல்லுவார்கள். எ - று..(௰௪)

(அ-கை.) இவ்வாறினனுபவத்தைச்சொல்லுதல். (கவி) ஏகமெனும்பிரமத்துக்குறுமுத்தியோகமேயிலங்குஞான, மியோகமுமாங்கதுவென்பருலகமுநானும்பிரமத்துருவென்றோர்த, லாகுபிரமார்ப்பணமாங்கருமபலம்விடல்சந்நியாதமாகுஞ்,சோகமுறுசங்கற்பமறுத்தலேசங்கத்தைத்துடைத்ததென்பர்........................ *

(இ-ள்.) ஏகமெனும்பிரமத்துக்கு - ஒன்றென்கின்றபிரமத்தையடைவதற்கு—உறுமுத்தியோகமே - பொருந்துமுயற்சியே — இலங்குஞானம் - விளங்குகின்றஞானமும் — அது- அம்முயற்சியே—யோகமுமாமென்பர் - யோகமுமாமென்றுசத்துக்கள்சொல்லுவார்கள்—உலகமுநானும் - சகமும்யானும்—பிரமத்துருவென்றோர்தல் - பிரமஸ்வரூபமென்றாராய்ந்திதல்—ஆகுபிரமார்ப்பணமாம் - ஆகாநின்றபிரமார்ப்பணமாகும்—கருமபலம்விடல் - கருமபலத்தைவிடுதலே—சந்நியாதமாகும் - சன்னியாசமாம் — சோகமுறு - துன்பம்பொருந்திய—சங்கற்பமறுத்தலே - சங்கற்பத்தைக்கெடுத்தலே —சங்கத்தைத்துடைத்ததென்பர்-சங்கத்தைக்கெடுத்ததென்றுசத்துக்கள்சொல்லுவார்கள். எ-று.. (௰௫)

(அ-கை.) இ-ர. (கலி) எண்ணமனைத்தினுமீசனொருவனேயென் றிருமையெண்ணந் தீர்தல், புண்ணியவீசுரார்ப்பணமாமென்னை நாடி யெனக்கன்பாய்ப் பூசித்தென்னை, நண்ணியென்னைத்தொழுதென்னைத் துதித்தாயேனுமென்னுநின்சொரூபசோதி, யுண் ணிறையும்பரமஞ்சாமானியமென் றிரண்டு வடிவுண்டெனக்கே .... *

(இ-ள்.) எண்ணமனைத்தினும் - நினைவுகளிலெல்லாம்—ஈசனொருவனேயென்று - ஈஸ்வர னொருவனேயென்று—இருமையெண்ணந்தீர்தல் - த்விதநினைவுநீங்குதல்—புண்ணியம்- புண் ணியத்தையுடைய—ஈசுரார்ப்பணமாம் - ஈஸ்வரார்ப்பணமாகும்—எனை நாடி- என்னைச்சிந்தித்து —எனக்கன்பாய்ப்பூசித்து - எனக்கன்பனாயாராதனைசெய்து—என்னை நண்ணி- என்னையடைந் து—என்னைத்தொழுது - என்னைவணங்கி—என்னைத்துதித்தாயேல்- என்னைத்தோத்திரஞ்செய் வையாயின்—நாமெனும் - நாமென்கிற—நின்சொரூபச்சோதி- உமதுஸ்வரூபப்ரகாசமான து—உண்ணிறையும் - உள்ளேபூரணமாம்—பரமஞ்சாமானியமென்று - பரமமுஞ்சாமானிய முமென்றுஞ்சொல்லப்பட்ட—இரண்டுவடிவு - இரண்டுருவம்—எனக்குண்டு - எனக்குண்டாயி ருக்கும். எ-று. (இ-ள-க-ம்) பிரமஸ்வரூபத்தையுபதேசித் தஃதடையுமாறுவிதமானமார்க்கத் தைக்கிரமமாகச்சொல்லியதாம்.. (௰௬)

(அ-கை.) பிரமத்துக்கிரண்டுவடிவநிரூபித்தல். (கவி) சங்காழிபயில்கரத்தை முதலானவங்கஞ்சாமானியந்தான், மங்காமலடிமுடிவற் றொன்றியவடிவுபர வடிவமாகு, மிங்கானபிரமமெனப் பரமமெனவிசைப்பதெலா மிந்தரூபஞ், சிங்காமலிதுதனை நீ தெளிவளவுநாலுபுயத் தேவையேத்து ... .*

(இ-ள்.) சங்காழிபயில்- சங்குசக்கரங்கள்பொருந்திய—கரத்தைமுதலானவங்கம்-கைகண் முதலாகவுடையசரீரமே—சாமானியந்தான் - சாமானியவடிவமாகும்—மங்காமல்-கெடாமல் —அடிமுடிவற்று - ஆதியந்தமில்லாமல்—ஒன்றியவடிவு - ஏகமானஸ்வரூபமே—பரவடிவமா கும்-பிரமஸ்வரூபமாகும்— இங்கான - இவ்விடத்திலுண்டாகிய—பிரமமென - பிரமமென்றும் —பரமமென - பரமமென்றும்—இசைப்பதெலாம் - சொல்லப்படுவனயாவும்—இந்தரூபம்- இந்தப்பரவடிவமாகும்—சிங்காமலிதுதனை - இளையாமலிந்தப்பரவடிவத்தை—நீதெளிவளவு ம்-நீதெளிகின்றபரியந்தம்—நாலுபுயத்தேவையேத்து - சதுர்ப்புசங்களையுடையதெய்வத்தை வணங்கு. எ-று. (இ-ம்) சாமானியவடிவம் பரவடிவமென்னுமிரண்டிற் பரவடிவத்தையடையு ம்பொருட்டுச்சாமானிய வடிவத்தைப்பூசிக்கவேண்டுமென்பதாம் .... (௰௭)

(அ-கை.) பூசாபலனைநிரூபித்தல். (கவி) அக்கடவுட்பூசையினாலறிவுநிறைந்ததனா லப்பதமுஞ்சேர்வை,மிக்கபரமாகியவென்னுருவமுறிற்பிறவிநோய்மீண்டுசேராப் பக்கவபிமானம்போம்மோகம்போய்ச்சங்கம்போய்ப்பரமேமெய்யாய்த், துக்கசுக தொந்தம்போயாசைபோயறிவுற்றோர்தொடர்வாரங்கே........................... *

(இ-ள்.) அக்கடவுட்பூசையினால் - அத்தேவார்ச்சனையினால் — அறிவுநிறைந்ததனால்- ஞானமானதுபூரணமானவதனால்—அப்பதமுஞ்சேர்வை - அப்பிரமபதத்தையுமடைவாய்— மிக்கபரமாகிய-மேலானபரவடிவாகிய—என்னுருவமுறில்-எனதுஸ்வரூபத்தையடைந்தால்— பிறவிநோய்மீண்டுசேரார் - பவவியாதிதிரும்பவடையாது—பக்கவபிமானம்போய்- நட்புற்ற வபிமானநீங்கி—மோகம்போய் - அஞ்ஞானநீங்கி—சங்கம்போய் - பற்றுவிட்டு—பரமேமெய் யாய் - பரவடிவமேயுண்மையாய் — துக்கசுகதொந்தம்போய் - துன்பவின்பங்களின்றொடர்பு நீங்கி—ஆசைபோய் - இச்சைவிடுபட்டு—அறிவுற்றோர் - ஞானமடைந்தவர்கள்— அங்குதொ டர்வார் - அப்பிரமபதத்தையேதொடர்வார்கள். எ - று. (இ-ம்) சகளத்தைப்பூசித்தலினறி வுண்டாயதனால்நிஷ்களமானபிரமத்தையடைவார்களென்பதாம்.. .... (௰அ)

(அ-கை.) சமாதியைச்சொல்லி சகசத்தைச்சொல்லுதல். (கவி) காமமுறுசங்கற்பமின்றி யாரம்பமெலாங்கலந்துநிற்போர், தாமமுறுஞானத்தீயாற்கருமங்களைச்சுட்ட சான்றோ ரென்பர், சேமமுமேல்வரும்பொருளுஞ்சிந்தையறத்தொந்தமறச்சித்தாமுண்மை, தோ மறப்பெற்றெய்யோதுந்தோற்றுந்தொழில்வழிநிற்பாய்துளக்கமின்றி. ....*

(இ-ள்.) காமமுறு - ஆசைபொருந்தும் --சங்கற்பமின்றி - சங்கற்பமில்லாமல்—ஆரம்ப மெலாம் - முயற்சிகளியாவையும்—கலந்துநிற்போர் - சேர்ந்துநிற்பவர்களை—தாமமுறு- சுக த்தைப்பொருந்திய—ஞானத்தீயால் - ஞானாக்கினியினால் — கருமங்களைச்சுட்ட - கன்மங்களை யெரித்த—சான்றோரென்பர்-அறிஞரொன்றுசத்துக்கள்சொல்லுவார்கள்—சேமமும்-க்ஷேமமு ம்—மேல்வரும்பொருளும் - இனிவருவதானவஸ்துக்களும்—சிந்தையற-சிந்தையில்லாமல்— தொந்தமற- தொந்தமில்லாமல்—சித்தாமுண்மை-ஞானமாகியதத்துவத்தை—தோமறப்பெ

ற்று- குற்றமறும்படிபெற்று—எப்போதும்-சதாகாலமும்—தோற்றுதொழில்வழி-உண்டாகி ன்றசெயன்மார்க்கமாய்—துளக்கமின்றிநிற்பாய் - சலனமில்லாமலிருப்பாய். எ-று.(இ-ம்) பிர மாக்கினியிஞலியாவையுமெரித்துப்பிரமமாய்ச்சகலதொழிலையுஞ்செய்யவேண்டுமென்பதாம்.

(அ-கை.) இப்பிரமானுபவமுதிக்கின்றபரியந்தமுமுறுதிமொழிகூறல். (கவி) வீசியவூழிக் காற்றுமேலிடினும்விந்தமலைவெடித்தபோதுந், தேசிகனூற்கற்பித்த செந்நெறியைமதி மான்கடிறம்பல்செய்யார், மாசறுமெய்ஞ்ஞானமிலாமடமையால்வாதனைமெய்வடிவாய் நிற்கும், காசறுமெய்ஞ்ஞானமெனும்பெருங்கடல்கோத்தாலதனுட்கரைந்துபோமே. ✻

(இ-ள்.) வீசியவூழிக்காற்றுமேலிடினும்-மோதாநின்றவூழிக்காலதிகரித்தாலும் — விந்த மலைவெடித்தபோதும்-விந்தநாகம்பிளந்தகாலத்திலும்—தேசிகனூல்-ஆசாரிய (ருபதேசிக்கு) ஞானசாத்திரத்திஞல்—கற்பித்தசெந்நெறியை - போதித்தசெம்மையானமார்க்கத்தை—மதி மான்கள்-ஞானவான்கள்— திறம்பல்செய்யார்-மாறுபடுத்தார்கள்—மாசறுமெய்ஞ்ஞானமிலா- களங்கமற்றதத்துவஞானமில்லாத—மடமையால்-அறிவின்மையிஞல்—வாதனை-வாசனையான து—மெய்வடிவாய்நிற்கும் - நித்தியரூபமாயிருக்கும்—காசறுமெய்ஞ்ஞானமெனும்- குற்றம ற்றதத்துவஞானமென்கின்ற—பெருங்கடல்கோத்தால்- மகோததிமூடிக்கொண்டால்—அதனு ட்கரைந்துபோம்-(வாசனை)அதிற்கரைந்துபோகும். எ-று. (இ-ம்) சுருதிகுருசுவானுபவத்தின் றிடவற்பியாசத்திஞற் சகலகன்மமுநீங்கிப் பிரமமாத்திரமாய் விளங்குவனென்பதாம் ....(௨௰)

(அ-கை.) அனுபவமாதல். (கவி) என்றருளித்திருநெடுமாலிமைப்போதுமோனம் போலிருத்தலோடும், வென்றிமிகுவிசயன்மகிழ்ந்துரைசெய்யும்வகைகேளாய் மெ ய்ம்மைவீரா, கன்றுதுயரனைத்துப்போயெனதுமதிபரம்பொருளைக்கலந்ததையா, துன்றிரவிகாணவிரிகமலம்போலெனவிசயன்சொல்லுமன்றே.................. ✻

(இ-ள்.) என்றருளி - இப்படியென்றனுக்கிரகஞ்செய்து—திருநெடுமால் - கிருஷ்ணசு வாமியும்—இமைப்போது - நிமிஷநேரம்—மோனம்போல் - மௌனியைப்போல—இருத்த லோடும் - இருக்கவும்—வென்றிமிகுவிசயன் - வெற்றிமிகுந்தவருச்சுனன்— மகிழ்ந்துரைசெ ய்யும்வகை - மனங்களித்துச்சொல்லுகின்றவிதத்தை—மெய்ம்மைவீரா - உண்மையானஸ்ரீரா மா—கேளாய் - கேட்பாய்—ஐயா - ஆசாரியரே—எனதுமதி - எனதறிவு — கன்றுதுயரனைத் துப்போய் - நைவிக்கின்றதுன்பமெல்லாம்விடுபட்டு—துன்றிரவிகாண - (கிரணங்க) ணெருங் கியசூரியன்பார்க்க—விரிகமலம்போல் - விகசித்ததாமரைப்பூவைப்போல— பரம்பொருளை- பிரமவஸ்துவை—கலந்ததென - கலந்ததென்று — விசயன்சொல்லும் - அருச்சுனன்சொல்லு வான். எ - று. (இ-ம்) மவுனமாயிருந்து மவுனத்தைத்தரிசிப்பித்ததாம் .... (௨௧)

அருச்சுனன்கதை-முற்றிற்று. ஆக கதை - ௩௰௫-கவிதை (௲௯௱௰௫)

சதவுருத்திரர்கதை.

(அ-கை.) முற்கதையில் யுத்தஞ்செய்தன்முதலியவிருத்திகளும்வேறுபடாமலாத்மஞானசா க்ஷாத்காரமாய்விளங்குவதையறிவித்து, அதனாலுண்டானசநநபரம்பரையுஞானதிருஷ்டியிஞ லாத்மசாக்ஷாத்காரமாய்விளங்குவதையறிவிக்குநிமித்தஞ்சதவுருத்திரர்கதையை நிரூபிக்கிருர்.

(அ-கை.) சந்நியாசிசமாதியினின்றுலகவிபகாரத்தை லீலைபாகச் செய்யநினைத்தல். (கவி) வேறு. மீட்டுமோர்கதைகேளென்றுவீரற்குவசிட்டன்சொல்வா, ஞட்டுளோ ர்சந்நியாசிஞானவான்சமாதியுள்ளோ, னீட்டுறுசமாதியாலே நிமலமாநெஞ்சினெ ன்றை,யீட்டுறநினையினப்போதெய்துநீரலையாமாய்போல்........................ ✻

(இ-ள்.) மீட்டும் - திரும்பவும்—ஓர்கதைகேளென்று-ஒருகதையைக்கேட்பாயென்று —வீரற்கு - வீரனைஸ்ரீராமருக்கு—வசிட்டன்சொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்— நா ட்டுள் - ஓர்தேயத்திலுள்ள—ஞானவான்- ஞானவானும் —சமாதியுள்ளோன்- சமாதியுள்ளவனு மாகிய—ஓர்சந்நியாசி - ஒருசந்நியாசியானவர்—நீட்டுறுசமாதியால்- வெகுகாலமாகச்செய்த சமாதியிஞல்—நிமலமாநெஞ்சினென்றை- நின்மலமனதினெருபொருளை—ஈட்டுறநினை பின்- கிடைக்கும்படிநினைத்தால்— நீரலையாமாபோல் - சலமலையானதுபோல — அப்போதெய் தும் - அப்போத (வ்வுருவ) மாவன். எ - று.. (௧)

(அ-கை.) இ - து. (கவி) ஒருபகற்சமாதிநீங்கியிருந்தனனுயர்சந்நியாசி, கருதிடுமவர்க்குப்பற்றிப்பாச்சறுன்காணுமென்று, சுருதியுண்டுலகோர்செய்யுந்தொழிலையாம்விநோதமாக, விருதயத்துன்னுவோமென்றெண்ணியதிவன்றனெஞ்சம்.................... *

(இ-ள்.) உயர்சந்நியாசி-மேலானசந்நியாசியானவர்—ஒருபகல்-ஒருதினத்தில்—சமாதிநீங்கியிருந்தனன்-சமாதியைவிட்டிருந்தனன்—கருதிடுமவர்க்கு- நினைக்கின்றவர்களுக்கு—பற்றிப்பாச்சறுன்-ப்ரதிபையானது—காணுமென்று-தோற்றுமென்று—சுருதியுண்டு-வேதஞ்சொல்லுவதுண்டு—உலகோர்-சகத்திலுள்ளவர்கள் — செய்யுந்தொழிலை - இயற்றப்பட்டசெய்கையை—யாம்விநோதமாக - நாம்விளையாட்டாக—இருதயத்துன்னுவோமென்று - மனதிலெண்ணிப்போமென்று—இவன்றனெஞ்சமெண்ணியது-இவனுடையமனதுநினைத்தது. எ-று...... (௨)

(அ - கை.) சந்நியாசி தனது சங்கற்பத்தாற் றானே சீவடனுதல். (கவி) மற்றொருபுருடனுனைசவுமாத்திரத்தான்மீளப், பற்றியும்பண்டையோனைத் தானெனப் பாவிக்கைக்குப், பெற்றிலன்காகதாலீயப்படிபெற்றவாஞ்சை, யுற்றனன்சீவடன்பேரொருவனென்றுணர்ந்தான்றன்னை.................................. *

(இ-ள்.) அசைவுமாத்திரத்தில் - (மனத்தி) னசைவுமாத்திரத்தினால்—மற்றொருபுருடனுன் - வேறொருபுருஷனுனன்—மீளப்பற்றியும் - திரும்பப்பிடித்தும்—பண்டையோனை-பழையசந்நியாசியை—தானெனப்பாவிக்கைக்கு - தானென்றுபாவித்தலுக்கு— பெற்றிலன்-அடைந்திலன் —காகதாலீயப்படிபெற்றவாஞ்சை - காகதாலீயநியாயம்போலவடைந்தவிச்சையினால்—தன்னை - (சந்நியாசியாகிய)தன்னை—சீவடன்பேரொருவனென்றுணர்ந்தான் - சீவடனென்னுமொருவனாகவறிந்து—உற்றனன் - பொருந்தினன். எ - று.......................... (௩)

(அ-கை.) சீவடனித்திரையடைதல். (கவி) சித்தம்வேறொருவனான சீவடனிவ்வாறாகி, யுற்றவிக்கனவிற்செய்தநகரிலோர்தெருவின்மேவி, மெத்தநாளிருந்தானாங்கே விநோதபானத்தையுண்டு, மத்தனாய்மதுவையுண்டமதுபம்போலுறக்கமுற்றான்..... ....*

(இ-ள்) சித்தம்-மனமானது— வேறொருவனான-மற்றொருவனாகிய—சீவடனிவ்வாறாகி-சீவடனானவனிவ்வணமாய்—உற்றவிக்கனவிற்செய்தநகரில்- பொருந்தப்பட்டவிச்சொற்பனத்தினாலுண்டானபட்டணத்தில்—ஓர்தெருவின்மேவி - ஒருவீதியிற்சென்று—மெத்தநாளிருந்தான்-வெகுகாலமிருந்தான்—ஆங்கு - அவ்விடத்தில்—விநோதபானத்தையுண்டு- விளையாட்டாக்குமதுவைப்புசித்து—மத்தனாய் - களிப்புடையவனாய்— மதுவையுண்டமதுபம்போல - தேனைப்புசித்தவண்டைப்போல—உறக்கமுற்றான் - நித்திரையையடைந்தான். எ - று. .... (௪)

(அ - கை.) சீவடன்கனவிற்கண்டபிராமணனாய் நித்திரைசெய்தல். (கவி) பாதபம்விதையானாற்போற் பள்ளிகொண்மறையோன்றன்பாற், போதுறுகனவிற்றன்னைப் பொருவில்வன்னியனாக்கண்டான், மேதகுமுணவாற்றுஞ்சிமேவியகனவிற்றன்பாற், பூதலத்தரசனாகவவன்றனைப்பொலியக்கண்டான் ... . *

(இ-ள்.) பாதபம்விதையானாற்போல் - விருக்ஷம்வித்தானதுபோல — பள்ளிகொள்-நித்திரைசெய்கின்ற—மறையோன்றன்பால் - பிராமணனதன்னிடத்தில்—போதுறுகனவிற்றன்னை - அப்போதுண்டானசொற்பனத்திற்பிராமணனை—பொருவில் - ஒப்பற்ற — வன்னியனாய்க்கண்டான் - வன்னியனைகப்பார்த்தான்—மேதகும் - மேன்மையான— உணவாற்றுஞ்சி-போசனத்தினுனித்திரைசெய்து—மேவியகனவில் - உண்டானசொற்பனத்தில்—தன்பால்-தன்னிடத்தில்—பூதலத்தரசனாக - பூமிக்கிராசாவாக—அவன்றனை- அந்தவன்னியனை—பொலியக்கண்டான் - விளங்கப்பார்த்தான். எ-று ....(௫)

(அ-கை.) அந்தணன்கனவிற்கண்டவன்னியனாபவன்கனவிற்கண்டவரசனாதல்(கவி) கனமுறுகனவில்வேறோர் கலைமறையவனாய்க்கண்டான், மனனிலேபற்றிப்பாச்சன் மாத்திரமதனான்மற்றோர், சனபதமடைதல்போலாய்ச் சரித்தனன்சின்னாளாங்கே, தினமிகுவியாபாரத்தாற்றேகநொந்துறக்கமுற்றான்... .... *

(இ-ள்.) கனமுறுகனவில்-கனமுள்ளசொற்பனத்தில்—வேறோர்-மற்றொரு—கலைமறையவனாய்க்கண்டான் - கல்வியையுடையபிராமணனாகக்கண்டான்—மனனிலேபற்றிப்பாச்சன்மாத்திரமதனால்-மனதிற்ப்ரதிபாமாத்திரமாயிருக்குமதனால்—மற்றோர்சனபதம் - வேறொருநாட்டை—அடைதல்போலாய் - அடைகின்றதும்போலாகி—சின்னாட்சரித்தனன் - சிலதினஞ்சஞ்சரித்தான்—ஆங்கு-அவ்விடத்தில்—ஓர்தினம் - ஒருநாள்—மிகுவியாபாரத்தால் - மிகுந்ததொழில்களினால்—தேகம்நொந்து - சரீரம்வாடி—உறக்கமுற்றான் - துயின்றான். எ-று .... (௬)

(அ-கை.) அரசன்கனவிற்கண்டதெய்வப்பெண்ணாபவள் கனவிற்கண்டமானுகிநிற்றல். (கவி) அரசன்றனிரவுதுஞ்சி யடைந்ததம்வார்கனவிற்றன்னைச், சுரமக

ளாகக்கண்டான் சுரமகள்சுரதப்போரிற், பரவசமாகத்துஞ்சப் பயில்வுறுகன
விற்றன்பாற், குரமடமானுக்கண்டாள் கூறுமான்றுயின்றதோர்கால் ... ✻

(இ-ள்.) அரசன் - இராசாவானவன்—ஓரிரவுதுஞ்சி - ஓரிராத்திரியினித்திரைசெய்து—அடைந்தவோர்கனவில் - அப்போதடைந்தவொருசொற்பனத்தில் — தன்னை - அரசனை—சுரமகளாகக்கண்டான் . தெய்வப்பெண்ணுகப்பார்த்தான்— சுரமகள் - அந்தத்தெய்வப்பெண்ணுனவள்—சுரதப்போரில் - இரதிசிரமத்தினுல்—பரவசமாகத்துஞ்ச -பரவசமாய்நித்திரைசெய்ய—பயில்வுறுகனவில் - அப்போதனுபவிக்கின்றசொற்பனத்தில்— தன்பாற்குரமடமானுக்கண்டாள் - தன்னிடத்திற்குளம்புள்ளபெண்மானுகப்பார்த்தாள்—ஓர்காற்கூறுமான்றுயின்றது-ஒருபோதுணாக்குமானுனது நித்திரைசெய்தது. ள்-று .... (எ)

(அ-கை.) மான்கனவிற்கண்ட பூங்கொடியாதல். (கவி) துஞ்சுமான்பரிசயத்
தாற்சூழ்ந்ததோர்கொடியாய்த்தன்பாற்,செஞ்சவேகனவிற்கண்டதுண்ணலே
திரியக்கானு, நெஞ்சுறக்கண்டகேட்ட மறப்பிலநிகழ்கனவிற், சஞ்சரித்திட
வேகாணுமாதலாற்சாற்றக்கேளாய் .... ✻

(இ-ள்.) துஞ்சுமான் - நித்திரைசெய்கின்றமானுனது—பரிசயத்தால் - (அதன்)பழக்கத்தினுல்—சூழ்ந்தது - சூழ்ந்ததான—ஓர்கொடியாய் - ஒருகொடியாக—தன்பால் - தன்னிடத்தில்—செஞ்சவேகனவிற்கண்டது- செம்மையாகச்சொற்பனத்திற்பொருந்தப்பார்த்ததும்—அண்ணலே - அரசனே—திரியக்கானும் - மிருகமானுலும்—நெஞ்சுறக்கண்ட - மனதிற்பொருந்தப்பார்த்ததும்—கேட்ட - கேட்டதும்—மறப்பில - மறப்பில்லாமல்—நிகழ்கனவில்- விளங்குகின்றசொற்பனத்தில்—சஞ்சரித்திட - சஞ்சரிக்கும்படி—காணும்-தோற்றும்—ஆதலால்-ஆகையினுல்—சாற்றக்கேளாய் - சொல்லக்கேட்பாய். எ-று .... (அ)

(அ-கை.) பூங்கொடியில்வசிக்கின்ற வனதேவதைச்சிறப்புக் கூறல். (கவி) பூவு
மென்றளிருங்காவும் பொலிந்தவக்கொடிதன்காட்டிற், றேவதையானவந்தத்
தேவிவாழ்வனமாய்த்தோன்ற, மேவுவித் தெனுமவற்றி லங்குர மேனியொப்
பாய்த், தாவுறுஞேயமுற்றதன்னுடையறிவினுலே .... ✻

(இ-ள்.) பூவும் - புட்பங்களும்—மென்றளிரும் - மிருதுவான துளிர்களும்—காயும் - காய்களும்—பொலிந்த - விளங்கிய—அக்கொடி - அந்தக்கொடியானது — தன்காட்டிற்றேவதையான- தனதுவனதேவதையாகிய— அந்தத்தேவிவாழ் - அந்தத்தெய்வப்பெண்வாழுகின்ற—வனமாய்த்தோன்ற - கொடிவீடாயண்டாக—மேவு-பொருந்திய—வித்தெனுமவற்றில்-விதையென்கின்றவவைகளிலுள்ள — அங்குரமேனியொப்பாய் - முளைநிறத்துக்குச்சமானமாய்—தாவுறும் - புலப்படுகின்ற—ஞேயமுற்ற - விஷயத்தைப்பொருந்திய— தன்னுடையறிவினுல்-தனதறிவினுல். எ-று .... (கூ)

(அ-கை.) பூங்கொடிசுழுத்தியினுல்வண்டாதல். (கவி) தன்னுடைவனத்தூரத்
தேசார்ந்ததாய்த்தன்னுட்கண்டு, முன்னியசுழுத்தியுற்ற வறிவினுன்மூடத்தன்
மை, துன்னுறவனுபவித்துச் சுரும்பெனத்தன்னைக்கண்ட, தன்னவண்டோ
டைக்கஞ்ச வலையங்கீண்டதனுள்ளான .... ✻

(இ-ள்.) தன்னுடைவனம் - தனக்குப்பற்றுகியசோலை—தூரத்து- சேய்மையில்—சார்ந்ததாய்- பொருந்தினதாக—தன்னுட்கண்டு - தனக்குள்ளேபார்த்து —முன்னிய- நினைக்கப்பட்ட—சுழுத்தியுற்றவறிவினுல் - சுழுத்தியவத்தையைபடைந்தஞானத்தினுல்—மூடத்தன்மை- அறியாமையை—துன்னுறவனுபவித்து - நன்றுயனுபவித்து—சுரும்பென - வண்டாக—தன்னைக்கண்டது - (கொடியான)தன்னைப்பார்த்தது—அன்னவண்டு-அந்தவண்டானது—ஓடைக்கஞ்சவலையங்கீண்டதனுள்ளான - குளத்திற்றுமரைத்தண்டைக்கிழித்ததற்குள்ளானது. எ-று. சுழுத்தியவத்தையிலிருக்கின்ற பூங்கொடிவண்டானதெங்ஙனமெனி னஃதோரறிவுயிரானபடியாற்புட்பத்தின்மொக்குமளியின்பரிசத்தை யறியுமறிவினு லஃதாயினதெனக்கொள்க .... (ய)

(அ-கை.)வண்டு ஆனையைப்பார்த்தல்.(கவி)சடமதியுயிர்க்குமுள்ளஞ்சார்ந்திடும்விளையாட்
டோர்பான், மடல்வனசத்துளாங்கேவண்டுறைதடத்துவந்தோர்,கடகரிகுழப்பிவீசக்கஞ்
சமுங்கயமும்வண்டுந், தொடர்பொடியானவத்தத்தும்பியைத்தும்பிநோக்கி .... ✻

(இ-ள்.) சடமதியுயிர்க்கும்- மூடபுத்தியையுடைய(கிருமிகீடாதி)யுயிர்களுக்கு—உள்ளம்-மனமானது—ஓர்பால் - ஓரிடத்தில்—விளையாட்டு - விநோதமாக— சார்ந்திடும் - சேர்ந்திருக்கும்—மடல்வனசத்துள் - இதழ்களையுடையதாமரைப்பூவினுள்—ஆங்கு- அவ்விடத்தில்—வண்டுறைதடத்து - ஸ்திரிகள்வாசஞ்செய்கின்றதடாகத்தில் — ஓர்கடகரிவந்து - ஒருமதயானைவந்

று—குழப்பிவீச - கலக்கியெறிய—கஞ்சமும்- (அதிலுள்ள)தாமரைகளும்—கயமும்-குளமும்—உண்டும் - சிதறும்—தொடர்பொடியான - தொடரப்பட்டதூளியாயின — அந்தத்தும்பியை-அந்தயானையை—துப்பிநோக்கி - (இந்த) வண்டானதுபார்த்து. எ - று.................. (௰௧)

(அ-கை.) வண்டு ஆனையைப்பார்த்தலா லியானையாகவுமியானை வண்டின்பரிசத்தால்வண்டுமாதல். (கவி) அக்கரியாகத்தன்னைக் கண்டது குளப்பள்ளத்திற், கைக்கரிவீழ்ந்ததந்தக்கரியையோர்வேந்தன்பாகன், சிக்கெனக்கொடுபோயாங்கோர் செருவிலேசிதையச்செய்தான், பக்கவண்டிணக்கத்தாற் கைப்பகடுமீண்டளியாயிற்றால். *

(இ-ள்.) அக்கரியாக - அந்தயானையாக— தன்னைக்கண்டது - (வண்டு) தன்னைப்பார்த்தது—குளப்பள்ளத்தில் - பெரியபள்ளத்தில்— கைக்கரிவீழ்ந்தது - தும்பிக்கையையுடையயானையானதுவிழுந்தது—அந்தக்கரியை - அந்தயானையை—ஓர்வேந்தன்பாகன் - ஓரரசனுடைய(யானைப்)பாகன்—சிக்கெனக்கொடுபோய்- கெட்டியாகப்பிடித்துக்கொண்டுபோய்—ஆங்கோர்செருவில் - அவ்விடத்திலொருயுத்தத்தில்—சிதையச்செய்தான் - மடியச்செய்தான்—பக்கம்-(கன்னப்)பக்கத்திலிருக்கும்—வண்டிணக்கத்தால் - சுரும்பின்கூட்டரவினால்—கைப்பகடு- தும்பிக்கையையுடையயானையானது—மீண்டளியாயிற்று - திரும்பவண்டானது. எ-று. ...... (௰௨)

(அ-கை.) வண்டு அன்னநினைவினாலன்னமாய்ப் பின்சிலபிறப்பையடைந்து அன்னப்பற்றுவிசைபாடுமன்னமாதல். (கவி) கடுத்ததோர்களிறான் மீளக்கயத்தொடவ்வண்டு தூளா, யடுத்தகூலத்திலன்னவறிவினாலன்னமான, துடுத்தநீருலகிலன்ன முலப்பிலாயோனியெய்தி, தடுத்தநீர்க்கயக்கஞ்சத்தோர் சாரசமானதன்றே....................... *

(இ-ள்.) கடுத்ததோர்களிறால் - கோபித்தவோர்யானையினால்—மீள- திரும்பவும்— அக்கயத்தொடு - அக்குளத்தோடும்— அவ்வண்டுதூளாய் - அவ்வண்டானதுபொடியாகி— அடுத்தகூலத்தில்- சேர்ந்தகரையில்—அன்னவறிவினால் - அம்சவுணர்வினால்—அன்னமானது - அம்சமாயிற்று—உடுத்தநீருலகில் - சமுத்திரஞ்சூழ்ந்தசகத்தில்— அன்னம்- (அவ்) வன்னமானது—உலப்பிலாயோனியெய்தி - வருத்தமில்லாதசிலயோனிகளையடைந்து—தடுத்தநீர் - தடுத்திருக்கின்றசலத்தையுடைய — கயக்கஞ்சத்து - ஓடையிலுள்ளதாமரையில் — ஓர்சாரசமானது- ஒப்பற்றவன்னமாயிற்று. எ - று... (௰௩)

(அ-கை.) அன்னஞ்சிவோகபாவனையாற்சிவமாதல். (கவி) அக்குருகொருகால் விண்போ யரன்புரத்தரனைக்கண்டு, மிக்கசங்கரனேனென்றே மெய்ம்மையாய் நினைத்தலோடு, நக்கனதுருவமாகி நயந்தவாவீசனாட்டிற், றொக்கபல்கணங்களோடுஞ் சூக்கமெய்ஞ்ஞானத்தோடும் ....*

(இ-ள்.) அக்குருகு - அவ்வன்னமானது — ஒருகால்விண்போய் - ஒருபோதாகாயத்திற்சென்று—அரன்புரத்து - உருத்திரனுலகத்தின்—அரனைக்கண்டு- உருத்திரனைப்பார்த்து—மிக்கசங்கரனேனென்று - மேலானவிந்தவுருத்திரனேயானென்று—மெய்ம்மையாய்நினைத்தலோடும்- உண்மையாகப்பாவித்தவுடன்—நக்கனதுருவமாகி - உருத்திரனதுஸ்வரூபமாய்— நயந்தவாவீசனாட்டில் - இச்சித்தபடிவுருத்திரவுலகத்தில்—தொக்கபல்கணங்களோடுஞ் சூக்கமெய்ஞ்ஞானத்தோடும்- கூடியவநேகசிவகணங்களுடன்சூட்சுமமானவுண்மைஞானத்துடனும். எ-று. (இ-௰௪-௧-ம்) சந்நியாசிசிவடன் முதலுருத்திரனிருகநூறுசென்மமெடுத்ததென்பதாம். (௰௪)

(அ-கை.) உருத்திரன் முன்னெடுத்தசநநங்களைப்பார்த்தல். (கவி) ஈசனாயியங்குவான்முன்னியன்றனசரிதையெல்லா, மாசறுபுந்தியாலேமதித்தனன்மறைப்பிலாத,தேசுவிஞ்ஞானமேனிச்சிவன்றனியிருந்துசெப்பும், வீசிபகனவு நூற்றின் வியப்பெலாம்விளங்கநோக்கி.

(இ-ள்.) ஈசனாயியங்குவான் - சிவனாகச்சஞ்சரிப்பவன்— முன்னியன்றசரிதையெல்லாம்- முன்னடந்தசரித்திரங்களனைத்தையும்—மாசறுபுந்தியால்மதித்தனன் - குற்றமற்றவறிவினாலறிந்தான்—மறைப்பிலாத - மறைவில்லாத—தேசுவிஞ்ஞானமேனி - பிரகாசமானவிஞ்ஞானசரீரத்தையுடைய—சிவன்றனியிருந்து - உருத்திரனேகாந்தத்திருந்து—வீசியகனவுநூற்றின்- வீசாநின்றநூறுசொற்பனத்தினது— வியப்பெலாம்விளங்க - அதிசயங்களனைத்தும்பிரகாசிக்க—நோக்கிச்செப்பும் - பார்த்துச்சொல்லுவார். எ-று..................................... (௰௫)

(அ - கை.) சங்கற்பமானமாயா விசித்திரத்தைப்பார்த்ததிசயித்தல். (கவி.) சித்திரமம்மவிந்தச் சகத்தைமோகஞ்செய்மாயை,மித்தையாயிருந்துங்கெட்டேன்மெய்ம்மையாங்கானல்போல, வித்திறமயக்கமாகவிப்பெருமாயைக்காட்டி; லொத்தபல்லிடத்திற்புக்கேயுழன்றனனெல்லையின்றி .... *

(இ-ள்.) சித்திரமம்ம-அதிசயமதிசயம்—இந்தச்சகத்தை-இவ்வுலகத்தை—மோகஞ்செய்மாயை - மயக்கஞ்செய்கின்றமாயையானது— மித்தையாயிருந்தும் - பொய்யாயிருந்தும் —கெட்டேன்- ஆச்சரியம்—கானல்போல- கானற்சலத்தைப்போல—மெய்ம்மையாம்- உண்மையாகும்—இத்தன்றமயக்கமாக - இந்தப்ரகாரம்பிரமைபாக—இப்பெருமாயைக்காட்டில்- இந்தமகாமாயாவனத்தில்—ஒத்தபலவிடத்திற்புக்கு- பொருந்தியபலவிடத்திற்சென்று— எல்லையின்றியுழன்றனன் - அளவில்லாமற்சுழன்றேன். எ-று .... (௰௬)

(அ-கை.) உருத்திரன்சீவடன்முதலியபவநூற்றையுந்தன்மயமாக்கக்கருதுதல்(கவி)
என்னுளமாத்திரத்திலெழுந்தகற்பனையினாலே,முன்னொருசிருட்டிக்கேநான்மொழி
ந்தசீவடப்பேரானேன், பின்னொருசிருட்டிதன்னிற்பெருங்கலைமறையோனானேன்,
மன்னவனானேன்பின்புவந்ததோர்சிருட்டிதன்னில் .... *

(இ-ள்.) என்னுளமாத்திரத்தில் - எனதுமனதளவில்—எழுந்தகற்பனையினால்-உண்டாகியகற்பனையினால்—முன்னொருசிருட்டிக்கு - முன்பொருசிருஷ்டியில்—நான்மொழிந்த- யான்சொல்லிய— சீவடப்பேரானேன் - சீவடனென்னுநாமத்தையுடையவனானேன் — பின்னொருசிருட்டிதன்னில் - பின்னொருசிருஷ்டியில்— பெருங்கலைமறையோனானேன் - மகாகலைஞானங்களையுணர்ந்தபிராமணனானேன்—பின்புவந்தது-பின்னுண்டானதாகிய—ஓர்சிருஷ்டிதன்னில்-ஒருசிருஷ்டியில்—மன்னவனானேன் - அரசனானேன். எ-று .... (௰௭)

(அ-கை.) இ-து. (கவி) இத்திறநூறுயோனி யெய்தியிங்கீசனானேன், மெத்தியவாண்டுகங்
கள் விருத்திகளநேகஞ்சென்ற, வத்தனைபிறப்பும்போய்நா மறிகுவோமறிந்துநன்று,
வொத்தவாறாக்கியெல்லா மொருவழிப்படுத்துகிற்போம் .... ✫

(இ-ள்.) இத்திறம் - இந்தப்ரகாரம் — நூறுயோனியெய்தி - சதயோனியையடைந்து—இங்கீசனானேன் - இவ்விடத்திலுருத்திரனானேன்—மெத்தியவாண்டு . மிகுந்தவருஷமும் —உகங்கள்- யுகங்களும்—விருத்திகள் - தொழில்களும்—அநேகஞ்சென்ற - பலகழிந்தன—அத்தனைபிறப்பும் - அவ்வளவுசநநத்தையும் — போய்நாமறிகுவோம் - சென்றுயாம்பார்ப்போம்—நன்றுபறிந்து - நன்றாகப்பார்த்து—ஒத்தவாறாக்கி - ஒருமையாகச்செய்து—எல்லாம்- சகலத்தையும்—ஒருவழிப்படுத்துகிற்போம் - ஒன்றாகச்செய்வோம். எ-று. (இ-சு-க-ம்) உருத்திரன்றனதுசிவஞானத்தாற் சங்கற்பவடிவமான நூற்றையுஞ்சிவாகாரமாக்க நினைத்ததாம் .... (௰௮)

(அ - கை.) சந்நியாசிபின் சங்கற்பநீக்குதல். (கவி) என்றுணர்ந்தீசன்முன்னே
யிருந்தசந்நியாசிதன்பாற்,சென்றவன்றனையெழுப்பிச்சேதனத்தொடுநெஞ்சோடு,
மொன்றுறச்செய்தலோடு முணர்ந்தசந்நியாசிதானு, நின்றதன்மயக்கமெல்லா
நினைவுறநோக்கினானே.. *

(இ-ள்.) என்றுணர்ந்தீசன் - (இப்படி)யென்றுசிந்தித்தவுருத்திரனானவன்—முன்னிருந்தசந்நியாசிதன்பால் - முன்னிருந்தசந்நியாசிபினிடத்தில்—சென்று- போய்—அவன்றனையெழுப்பி- அவனைநித்திரையைவிட்டெழுப்பி—சேதனத்தொடும் - ஞானத்துடன் —நெஞ்சோடும்-மனதை—ஒன்றுறச்செய்தலோடும் - ஒன்றுபடச்செய்தவளவில்—உணர்ந்தசந்நியாசிதானும்- விழித்துணர்ந்தசந்நியாசியும் — நின்றதன்மயக்கமெல்லாம் - நின்றதனதுபிரமைகளனைத்தையும்—நினைவுறநோக்கினான் - நினைப்புண்டாகப்பார்த்தான், எ-று. [ப-ம்] சங்கற்பமாகிய சுழுத்தியினின்றும் ஞானமாகியநனவில் வெளிப்படுத்தினானென்பார்,எழுப்பியென்றும்,ஞானமாய்ச்சங்கற்பத்தைக் களைத்தானென்பார், சேதனத்தொடு நெஞ்சோடு மொன்றுறச்செய்தென்றுங்கூறினார் .... (௰௯)

(அ-கை.) சீவடனைச்சிவரூபமாக்குதல். (கவி) சீவடனாதியாந்தன் வடிவத்தைச் சிவன்சிந்
தித்துத், தாவில்சிற்கனத்தோர்பாற் சார்ந்துசீவடன்வாழ்தேசங், கேவலந்தானுஞ்சந்நி
யாதியுங்கிட்டியன்னான், மேவுறமனத்தினோடு மறிவொடுமேவவித்தான் .... *

(இ-ள்.) சீவடனாதியாம் - சீவடன்முதலான—தன்வடிவத்தை- தனதுகற்பனாரூபத்தை—சிவன்சிந்தித்து - உருத்திரனவராலோசித்து—தாவில் - சலனமற்ற—சிற்கனத்து- ஞானாகாயத்தின்—ஓர்பால் - ஒருபக்கத்தில்—சார்ந்து- சேர்ந்து—சீவடன்வாழ்தேசம்-சீவடன்வாழாநின்றநாட்டில்—கேவலந்தானும் - தனிமையானவுருத்திரனும்— சந்நியாசியும் - சந்நியாசியும்—கிட்டி - நெருங்கி—அன்னான்மேவுற - அச்சீவடன்ஞானமடைய—அறிவொடும்- ஞானத்துடன்—மனத்தினோடும் - மனதை—மேவவித்தான் - பொருந்தச்செய்தான். எ-று ......(௨௰)

(அ-கை.) மூவருங்கூடிச்சேறல். (கவி) மூவருமறிவுபெற்றோர்முதுபழக்கத்தினாலே,
மாவியப்புற்றுஞ்சற்றும் வியப்பிலாவடிவமொன்றை, மேவுமூவடிவமானோர்மிகுமுருத்
திரனுமற்றச், சீவடன்றானுஞ்சந்நியாசியுஞ்சேர்ந்துசென்று .... *

(இ-ள்.) மூவரும் - மூன்றுபேர்களும்—அறிவுபெற்றோர் - ஞானத்தைப்பெற்றவர்களாய்—முதுபழக்கத்தினால் - பழையபழக்கத்தினாலே—மாவியப்புற்றும் - மிகுந்தவாச்சரியத்தையடைந்தும்—சற்றும் - எவ்வளவும்—வியப்பிலர் - அதிசயமில்லாதவர்களாய் — வடிவமொன்றையும் - ஒன்றானசிவரூபத்தைப்பொருந்தியும்—மூவடிவமானோர் - (தேக) மூன்றுருவமானவர்கள்—மிருமுருத்திரனும் - மேலானவுருத்திரனும்—சீவடன்றானும் - சீவடனும்—சந்நியாசியும் - சந்நியாசியும்—சேர்ந்துசென்று - கூடிப்போய். எ-று ... . (உக)

(அ-கை.) மறையவன்முதலிய தொண்ணூற்றெண்மரையுஞ் சிவமாக்குதல். (கவி) வேதியன்முதலாயுள்ளோர்பிறப்பிடமெல்லாமேவித், தீதறக்கூட்டித்தெய்வஞானத்தாற்றேசுமிக்க, சோதிருத்திரர்களாகியறிவுற்றார்சொன்னவீசன், போதியொன்றேவ தத்தமிடங்களிற்போயினாரே .... *

(இ-ள்.) வேதியன்முதலாயுள்ளோர்-பிராமணன்முதலாகவுள்ளவர்கள்—பிறப்பிடமெல்லாமேவி-செனித்தவிடங்களெல்லாஞ்சென்று—தீதற-தீமைகெடும்படி—கூட்டி-தங்களுடன்சேர்த்து—தெய்வஞானத்தால்-தெய்வீகஞானத்தினால் —தேசுமிக்க-ஒளிமிகுந்த— சோதிருத்திரர்களாகி-ப்ரகாசத்தையுடையவுருத்திரர்களாய்—அறிவுற்றார்-ஞானமடைந்தார்கள்— சொன்னவீசன்-முன்சொல்லப்பட்டவுருத்திரனானவர் —போதியொன்றேவ-(உங்களிடத்துக்குப்) போங்களென்றுத்தரவுசெய்ய—தத்தமிடங்களிற்போயினார்-தங்களிடத்துக்குப்போயினார்கள்.எ-று (உஉ)

(அ-கை சீவன்முத்தராயிருந்துவிதேகமுத்தராதல்.(கவி)சீவடன்மறையோனாதியாவருஞ்சென்றுதத்தம்,பாவையரோடும்வாழ்ந்துபாலுறவுடல்போதாளின், மேவுருத்திரனைச்சேர்ந்தாரென்றலும்வீரன்கேளா, வாவிதுபுதுமையென்னவதன்றிறம்வினவலுற்றான் ...... *

(இ-ள்.) சீவடன் - சீவடனும்—மறையோனாதி - பிராமணன்முதலான—யாவருஞ்சென்று - சகலரும்போய்—தத்தம் - தங்கடங்களுடைய— பாவையரோடும்வாழ்ந்து - மனைவியர்களோடுங்கூடிவாழ்ந்து—பாலுற - (தங்க ளுரிமையைப்பெற—உடல்போதாளில் - சரீராந்தத்தில்—மேவுருத்திரனை - பொருந்தியசிவத்தை—சேர்ந்தார் - அடைந்தார்கள்—என்றலும்-என்றுவசிஷ்டமுனிசொல்லியவளவில்—வீரன்கேளா- வீரனானஸ்ரீராமன்கேட்டு—ஆவிதுபுதுமையென்ன - இதாச்சரியமாச்சரியமென்று—அதன்றிறம்-அதன்காரணத்தை—வினவலுற்றான்-கேட்கத்தொடங்கினார். எ-று. (இ-ச-க-ம்) சந்நியாசியின் ஞானவியாபகத்தினின்றுதித்தசங்கற்பவடிவம் பின்ஞானவடிவமாகவேவிளங்கிற்றென்பதாம் ...., ...(உ௩)

(அ-கை.) சங்கற்பரூபஞ்சத்தியமானதெங்ஙனமென்றவதற்குத்தரஞ்சொல்லத்தொடங்கல். (கவி) அங்குசீவடனையாதியானவர்சந்நியாசி, சங்கற்பத்துருவமானோர்சத்தியமானதெங்ஙன், பொங்குற்றசங்கற்பத்தின் பொருளெலாம் பொய்யேயன்றோ, விங்கிதைவிளக்காயென்றவிராமற்குவசிட்டன்சொல்வான் .. .. *

(இ-ள்,) அங்கு - அவ்விடத்தில்—சீவடனையாதியானவர் - சீவடன்முதலானவர்கள்—சந்நியாசி - சந்நியாசியினது—சங்கற்பத்து - சங்கற்பத்தினால்—உருவமானோர் - வடிவமானவர்கள்—சத்தியமானதெங்ஙன் - உண்மையானதெப்படி—பொங்குற்றசங்கற்பத்தின் - மிகுந்தசங்கற்பத்தினது—பொருளெலாம் - வஸ்துக்களியாவும்—பொய்யேயன்றோ - மித்தையேயல்லவா—இங்கிதை-இவ்விடத்திலிதை—விளக்காயென்ற - தெரிவிப்பாயென்றுகேட்ட—இராமற்கு-ஸ்ரீராமனுக்கு—வசிட்டன்சொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார். எ-று .... (உச)

(அ-கை.) சித்தியாவு மஃதாயிருத்தலிற் சங்கற்பஞ்சத்தியமாயிற்றெனல். (கவி) எதுவுமுண்டறிவினுள்ளேயெப்படி யெத்தைக்கண்ட, ததனையப்படிச்சித்தெய்து மனைத்துமாதலினான்மெய்யே, யெதுகனவிற்காண்கின்ற தெதுசங்கற்பத்திற்சேர்ந்த, ததுவங்கேயுண்டெப்போதுமப்படிவடிவமாகும் .... *

(இ-ள்.) அறிவினுள் - அறிவினிடத்தில்—எதுவுமுண்டு - யாவுமுண்டு—சித்து-சித்தானது—எப்படியெத்தைக்கண்டது - எந்தப்ரகாரமெதைக்கண்டதோ— அனைத்துமாதலினால்-தான்சகலமுமாதலால்—அதனை - அதை—அப்படியெய்தும்-அந்தப்ரகாரமாயடையும்—மெய்யே - ஈதுண்மையே—எது - யாது—கனவிற்காண்கின்றது - சொற்பனத்திற்பார்க்கப்படுகின்றதோ—எது - யாது—சங்கற்பத்திற்சேர்ந்த - சங்கற்பத்தினிடத்திற்சேர்ந்ததோ — அது-அந்தவஸ்து—எப்போதும் - எக்காலமும்—அங்கேயுண்டு - அவ்விடத்திலுண்டாயிருக்கும்—அப்படிவடிவமாகும் - அவ்வண்ணமுருவமாகும். எ-று... ....(உ௫)

(அ-கை.) அங்ஙனமாயினுயிர்களின்சங்கற்பமனைத்து முண்மையாக வேண்டுமேயெனி லங்ஙனங்கூடாவவ்வுயிர்கள்சின்மாத்திரமாயிருந்து சங்கற்பிக்கினஃ துண்மையாமெனல். (கவி) வேறு. சங்கற்பத்திற்கனவுதனிற் சார்ந்தபொருளெப்படிசேர்ந்த, தங்கப்பொரு டான்பரமத்தினழுந்தும்பழக்கமியோகமெனுந், துங்கத்திறத்தல்ல துமெய்யாய்த்தோன் றுநியோகவிஞ்ஞான, மிங்குப்பெறலாற்சிவன்முதலோரெங்குமெல்லாங்காண்கின்றார். *

(இ-ள்.) சங்கற்பத்தில் - சங்கற்பத்திலும்—கனவுதனில் - சொற்பனத்திலும் — சார்ந்த பொருள் - சேர்ந்தவஸ்துவானது— எப்படிசேர்ந்தது - எப்படியடைந்ததோ—அங்கு-அவ்வி டத்தில்—அப்பொருடான் - அந்தவஸ்துவானது—பரமத்தின் - பிரமத்தின்—அழுந்தும்பழக் கம் - அழுந்துகின்றவற்பியாசம்—இயோகமெனும் - யோகமென்கின்ற — துங்கத்திறத்தல்ல து - பரிசுத்தமானதன்மையினாலன்றி— மெய்யாய்த்தோன்றுது - சத்தியமாகத்தோற்றுது— இயோகவிஞ்ஞானம் - யோகத்தையுஞானத்தையும்—இங்குப்பெறலால் - இவ்விடத்திலடைத லினால்—சிவன்முதலோர் - ஈசன்முதலியதேவர்களும்—எங்கும் - எவ்விடத்திலும் — எல்லாங் காண்கின்றார் - யாவையும்பார்க்கின்றார்கள். எ-று.. (உசா)

(அ-கை.) ஆயிற்சீவன்சித்தன்றோவெனின்சித்தாயிருந்து மதனைமறந்து சிதாபாசனுகச் சேறலினஃதைமறந்ததற் காதாரமானபிரமநிஷ்டாபரனுயிற் சங்கற்பித்தபடி சுனுவிற்கி டைக்குமெனல். (கவி) இட்டமானபொருளெல்லாமேகநிட்டர்க்கெளிதெய்துந், திட்டமா ந்தென்றிசைநோக்கிச்செல்வார்வடக்கெப்படிசேர்வார், தொட்டசங்கற்பத்தருத்தஞ்சூழ் வாரதுவேதுன்னுவரான்,முட்டிறமதுபயன்வசத்தோர்முன்சேர்பொருளைமுன்னுரோ. *

(இ-ள்.) இட்டமானபொருளெல்லாம் - பிரியமாயிருக்கின்றவஸ்துக்களியாவும்—ஏகநிட் டர்க்கு - ஒன்றுனநிஷ்டையையுடையவர்களுக்கு—எளிதெய்தும் - எளிதிற்கிடைக்கும்— திட் டமாம் - செவ்வையாக—தென்றிசைநோக்கி - தென்றிசையைப்பார்த்து—செல்வார் - நடப் பவர்கள்—வடக்கெப்படிசேர்வார் - உத்தரதிசையையெப்படியடைவார்கள் — தொட்ட - பரி சுத்த —சங்கற்பத்தருத்தம் - சங்கற்பத்தினாலுண்டானவஸ்துவை—சூழ்வார்- கருதுபவர்கள்— அதுவேதுன்னுவர் - அதையேயடைவார்கள் —முட்டில்-குறைவற்ற—தமதுபயன்வசத்தோர்- தமதாத்மப்ரயோசனவசத்திலுள்ளவர்கள்—முன்சேர்பொருளை - முன்புசேர்ந்திருக்கின்றவிஷ யவஸ்துவை—முன்னுர் - நினையார்கள். எ-று.. (உஎ)

(அ-கை.) பிரமநிட்டாள் சங்கற்பமுழுதுமுண்மையாமோவெனிற் சங்கற்பமொ ன்றிலழுந்துமாயினஃதுண்மையாமிரண்டாயினுகாவெனல். (கவி) முன்னுபொ ருளிற்சங்கற்பமுட்டிவிரும்புமொய்ப்புத்தி, யன்னபொழுதேகத்துவத்தி லழுந்தா மையினலவ்விரண்டு, மின்னபுந்திநசிப்பிக்குமினிநான்விச்சாதரனுகு, மன்னுகின் றநானிங்குமறையோனுமென்றுறநோக்க .... *

(இ-ள்.) முன்னுபொருளில் - முன்னிருக்கின்றவஸ்துக்களுக்கிடமாகியும் — சங்கற்ப முட்டி - சங்கற்பத்தையெதிர்த்து—விரும்பும் - இச்சிக்கின்ற—மொய்ப்புத்தி - மூடபுத்தியா னது—அன்னபொழுது - அப்பொழுதே—ஏகத்துவத்தில் - ஒன்றில் — அழுந்தாமையினல்- அழுந்தாதபடியினுல்—அவ்விரண்டும் - அந்தவிரண்டையும் — இன்னபுந்தி - இந்தப்புத்தியா னது—நசிப்பிக்கும் - கெடுப்பிக்கும்—இனிநான் - இனிமேல்யான் —விச்சாதரனுகும்- வித்தி யாதரனுகும்—மன்னுகின்றநான் - நிலையாயிருக்கின்றயான்—இங்கு - இவ்விடத்தில் — மறை யோனுமென்று - பிராமணனுமென்று—உறநினைக்க - பொருந்தச்சிந்திக்க. எ-று....... (உஅ)

(அ-கை.) சித்தாயிருந்தொன்றிலழுந்தினபடியாற் சந்நியாசிசங்கற்பமுழுது முண்மை யாயிற்றெனல். (கவி) இதுவேயேகத்துவமதனிலெய்துபேற்றின்றிட்டாந்த, மதுகாரிய ஞ்சித்தியின்பொருட்டா மாதலாலே கப்பொருளிற், றிதநிட்டையினுற்சந்நியாசி சீவன் சிவனுய்ச்சிவவடிவா, லுதவுகின்றசங்கற்பத்துற்றபொருட்குண்மையைமேவும்......... *

(இ-ள்.) இதுவே - இந்தநினைவே—ஏகத்துவமதனில்- ஒருவிஷயத்தில்—எய்துபேற்றின்- அடைகின்றபயனின்—திட்டாந்தம் - திருஷ்டாந்தமாம்—அதுகாரியம்- அக்காரியமானது— சித்தியின்பொருட்டாம் - சித்தியினிமித்தமாம்—ஆதலால் - ஆகையினுல்— ஏகப்பொருளில்- ஒன்றுனவஸ்துவில்—திதநிட்டையினுல் - திரம்பொருந்தியசமாதியினுல் — சந்நியாசிசீவன்- சந்நியாசியின்சீவனனது—சிவனுய் - உருத்திரனுகி — சிவவடிவால் - உருத்திரரூபத்தினுல்— உதவுகின்ற - பொருந்துகின்ற—சங்கற்பத்து - சங்கற்பத்தினுல்—உற்றபொருட்கு- அடைந்த வஸ்துவுக்கு—உண்மையைமேவி - உண்மையைப்பொருந்தி. எ-று.. (உகூ)

(அ-கை.) சங்கற்பத்தைபதற்காதாரமான சிவஞானமாகக்களைத்தலி லந்நூற்றுவருஞ் சீவன்முத்தராயவரவரிடத்திலிவசித்தார்களெனல். (கவி) தெளிசந்நியாசிசங்கற்பத்தவராஞ் சீவடன்முதலோர், களிகொடத்தம்வேற்றுலகைக்கண்டாரீசனுருவத்தால், விளிவில்சங்கற்பத்துண்மைமேவினர்தஞ்சங்கற்பத், தெளிதுசேருநகரடைந்தாரீசன்விஞ்ஞானத்தாலே.

(இ-ள்.) தெளிசந்நியாசி- தெளிந்தசந்நியாசியின்—சங்கற்பத்தவராம்- சங்கற்பத்திலுண்டானவர்களாகிய—சீவடன்முதலோர்- சீவடனுதியானவர்கள்—களிகொடத்தம்-களிப்படைய தங்கடங்களின்—வேற்றுலகை- வேறானசகங்களை—ஈசனுருவத்தால்- உருத்திரரூபத்தினுல்—கண்டார்-பார்த்தார்கள்—விளிவில்சங்கற்பத்து-சத்தியசங்கற்பத்தினுல்--உண்மைமேவினர்-தத்துவத்தையடைந்தார்கள்—ஈசன்விஞ்ஞானத்தால்- உருத்திரனதுஞானத்தினுல்—தன்சங்கற்பத்து-தனதுசங்கற்பத்தினுல்—எளிதுசேரும்- எளிதாகச்சேராநின்ற—நகரடைந்தார்-பட்டணத்திற்சேர்ந்தார்கள். எ-று (இ-எ-க-ம்) சைதன்யவியாபகமாயிருந்துசங்கற்பிக்கிலதுசத்தியமாமென்றுமஃதையறிந்து அச்சங்கற்பமாயிருந்துசங்கற்பிக்கிலஃதசத்தியமாமென்றுங்கூறியதாம்.

சதவுருத்திரர்கதை-முற்றிற்று. ஆ கதை - ௯௪௫ - கவிதை (௩௬௪௫)

வேதாளகதை.

(அ-கை.) தன்னிடத்திற் சொற்பனகற்பிதமாகத்தோற்றின சநநபரம்பரைகளிதார்த்த திருஷ்டியினுற் பிரமசாக்ஷாத்காரமாக விளங்கினதையறிவித் திவ்வனுபவநன்ருய் விளங்கும்பொருட்டு இச்சுழுத்திமவுனமுள்ள வேதாளகதையைநிரூபிக்கிருர்.................... *

(அ-கை.) மவுனுதீதமாக்கும்பொருட்டுச்சுழுத்திமவுனமாய்ச்சுகிப்பாயென்றுசீர்வதிக்கவவையாதெனவினவுதல். (கவி) சுழுத்திமவுனத்தினனுகித்தொடருமனத்தினெழுச்சியற, வழுத்துமலக்கற்பனைநீக்கியகண்டபதத்திலிருவெனலும்; வழுத்துகரணமவுனஞ்சொன்மவுனங்காட்டமவுனமெனச், செழித்தமூன்றுந்தெளிந்திடமேற்சுழுத்திமவுனஞ்செப்பென்ன.

(இ-ள்.) சுழுத்திமவுனத்தினனுகி - சுழுத்திமவுனத்தையுடையவனுய் — தொடருமனத்தின் - தொடராநின்றமனதினது—எழுச்சியற - உதயமறும்படி— அழுத்தும் - அமிழ்ந்தாநின்ற—மலக்கற்பனைநீக்கி - களங்கமானசங்கற்பத்தைக்கெடுத்து— அகண்டபதத்தில் - அகண்டாகாரமானபிரமபதத்தில்—இருவெனலும் - இருப்பாயென்றுவசிஷ்டமுனிசொல்லவும்— வழுத்து - சொல்லப்பட்ட—சொன்மவுனம் - வாக்குமவுனமும்— கரணமவுனம் - கரணமவுனமும்—காட்டமவுனமென - காட்டமவுனமுமென்று—செழித்தமூன்றும் - மாட்சிமைப்பட்டமூன்றையும்—சுழுத்திமௌனம் - சுழுத்திமௌனத்தையும்—தெளிந்திட - தெளியும்பொருட்டு—மேற்செப்பென்ன - இனிச்சொல்வாயென்றுஸ்ரீராமன்கேட்க. எ-று .... (௧)

(அ-கை.) முனிவரிரண்டிற்காஷ்டத் தவமுனிவனிலக்கணங்கூறல். (கவி) ஓவின்முனிவரிருவகையாமொருவன்காட்டத்தவனுகுஞ், சீவன்முத்தன்மற்றவனுஞ்செய்யுங்கிரியைதனிலமுத்த, மேவுநினைவுற்றிந்திரியத்தைமிக்கவலியால்வென்றவனைக், காவன்மன்னர்புகழ்வீராகாட்டத்தவனுமுனியென்பர் ....*

(இ-ள்.) ஓவில்-வருத்தமில்லாத—முனிவரிருவகையாம்-தவசிகளிரண்டுவிதமாவர்—ஒருவன்காட்டத்தவனுகும்- ஒருவன்காஷ்டதபசியாவன்—மற்றவன்-பின்னெருவன்—சீவன்முத்தனும்-சீவன்முத்தனுவன்—செய்யுங்கிரியைதனில்- செய்கின்றபிராணுயாமத்தொழில்களில்—அழுத்த மேவுநினைவுற்று-திடமானசித்தையைப்பொருந்தி—இந்தியத்தை - இந்திரியங்களை—மிக்கவலியால்-மிகுந்தவலியையுடைய(அடயோகத்தி)னுல் — வென்றவனை-செயித்தவனை—காவல் - காத்தலையுடைய—மன்னர்புகழ்வீரா-அரசர்களுடுக்கப்பட்டவீரத்தையுடையஸ்ரீராமா— காட்டத்தவனுமுனியென்பர்-காஷ்டதவமுனிவனென்று(சத்துக்கள்)சொல்லுவார்கள். எ-று ....(௨)

(அ-கை.) சீவன்முத்தமுனிவனிலக்கணங்கூறல். (கவி) சகநேருள்ள படியுணர்ந்து தன்பாற்றன்னை நினைத்துலகை, நிகராகியுமுள்ளமைவுற்றே னிமலமுத்த ஞமிந்த, மிகுநீள்சாந்தமுனிவரன்பான்மிக்கமனத்தின்மெய்புருவர், தகுநீடுருவாம்பாவனையேசாற்றுமெனச்சொற்பொருளே .... *

(இ-ள்.) சகநேருள்ளபடி - உலகத்தின்றன்மையையிதார்த்தமாக — உணர்ந்து - அறிந்து—தன்பால் - தன்னிடத்தில்—தன்னைநினைத்து - ஆத்மாவைச்சிந்தித்து— உலகை - உலகத்தாருக்கு— நிகராகியும் - கிரியையிலொப்பாயிருந்தாலும் — உள்ளமைவுற்றோன் - அகத்திலமைவுபிறந்தவன்—நிமலமுத்தனும் - நின்மலமானசீவன்முத்தனாகும்— இந்த - இப்படிப்பட்ட—மிகுநீள் - மிகவுமுயர்வான—சாந்தமுனிவரன்பால் - சாந்தமுனிவனிடத்தில்— மிக்கமனத்தின் - மேலானமனத்தினது—மெய்யுருவம் - உண்மைவடிவமாயிருக்கின்ற— தகுநீடுருவாம் பாவனையே - தகுந்தவுயர்வுள்ளவடிவமாகியபாவனையே — சாற்றும் - சொல்லப்பட்ட—மௌனச்சொற்பொருள் - மௌனவாக்கியத்துக்கருத்தம். எ-று .... (ரு)

(அ-கை.) மவுனநான்கிற்காஷ்டத்தவமுனிவர்க்கியல்பான மூன்றுமவுனத்தி னிலக்கணங் கூறல். (கவி) வாக்குமவுனஞ்சொற்றடையாம்வலிந்திந்திரியமடக்குவித்த, றாக்குகரணமவுனமதாந்தனதுசேட்டையெலாம்விடுதல், வீக்குங்காட்டமவுனமதாம் விளங்குசித்தவியாபார, நீக்கமில்லாமூவகையாய்நிகழ்த்துமவுனமிவையாகும் .... *

(இ-ள்.) வாக்குமௌனம் - வாக்குமௌனமானது—சொற்றடையாம் - வசனத்தையடக்குதலாம்—வலிந்து - வலிமையாக—இந்திரியமடக்குவித்தல்- இந்திரியத்தையடக்குதலே—தாக்கு - தாக்காநின்ற—கரணமவுனமதாம் - கரணமவுனமாகும் — தனதுசேட்டையெலாம் விடுதல் - தனதுதொழிலனைத்தையுநீக்கலே — வீக்குங்காட்டமௌனமதாம் - மிகுந்தகாஷ்டமவுனமாகும்—விளங்குஞ்சித்தவியாபாரம் - ப்ரகாசிக்குமனோவிபகாரம் — நீக்கமில்லாமூவகையாய் - நீக்கமின்றிமூன்றுவிதமாக—நிகழ்த்துமௌனமிவையாகும்- சொல்லப்பட்டமௌனங்களிவைகளேயாகும். எ-று .... (சு)

(அ-கை.) சீவன்முத்தமுனிவர்க் கியல்பான வோர்சுழுத்தி மவுனத்தி னிலக்கணங் கூறல். (கவி) வன்பிலியற்றுமிம்மூன்று மவுனங்காட்டத்தவர்க்கியல்பா, முன்பினின்றிப் பிறிவின்றிமொய்த்ததுயரற்றிருக்கின்ற, வின்பவனுபூதியர்க்கெனினு மிலாதார்க்கெனினுமிது தானே, துன்பமொன்றுமணுகாதசுழுத்திமவுனமெனச்சொல்வர் .... *

(இ-ள்.) வன்பியற்றும் - உறுதியாகச்செயப்படுகின்ற — இம்மூன்றுமௌனம் - இந்த மூன்றுமௌனங்களும்—காட்டத்தவர்க்கியல்பாம்-காஷ்டத்தவமுனிவருக்குச்சுபாவமாகும்—முன்பினின்றி - ஆதியந்தமில்லாமல் — பிறிவின்றி - வேற்றுமையில்லாமல்— மொய்த்ததுயரற்று - மிகுந்ததுன்பங்கணீங்கி—இருக்கின்றவின்பம் - இராநின்றவாநந்தமானது—அனுபூதியர்க்கெனினும் - ஆநந்தானுபூதியையுடையவர்களுக்காயினும் - இலாதார்க்கெனினும் - இந்தவனுபூதியில்லாதவர்களுக்காயினும்—இதுதானே - இந்தப்பிரமாநந்தமே— துன்பமொன்றுமணுகாத - ஒருதுன்பமுநெருங்காத — சுழுத்திமௌனமெனச்சொல்வர் - சுழுத்திமவுனமென்றுசத்துக்கள்சொல்லுவார்கள். எ-று .... (ரு)

(அ-கை.) இ-து. (கவி) பன்மைமோகத்திவ்வுலகைப்பற்றியுள்ளபடியுணர்ந்து, தன்மைநிலையாயையமறற்றேனசுழுத்திமௌனமதாஞ், சின்மயனேகவறிவுருவாஞ் சிவமேயிவையாவையுமென்னுந், தொன்மைமுடிவினிலைதானேசுழுத்திமௌனமெனச்சொல்வர்... *

(இ-ள்.) பன்மைமோகத்து - பலவிதமானமயக்கத்தையுடைய—இவ்வுலகைப்பற்றி- இச்சகத்தைப்பிடித்து—உள்ளபடியுணர்ந்து- அதற்குள்ளகுணங்களையறிந்து—தன்மைநிலையாய்- குணமுள்ளநிச்சயத்தையுடையவனாய்—ஐயமறற்றேனே - சந்தேகநீங்குவதே—சுழுத்திமௌனமதாம்-சுழுத்திமவுனமாகும்—சின்மயன் - ஞானமயனான—ஏகவறிவுருவாஞ்சிவமே-பூரணஞானவடிவமாகியசிவஸ்வரூபமே—இவையாவையுமென்னும் - இச்சகமெல்லாமென்கின்ற—தொன்மைமுடிவினிலைதானே- முன்முடிவானசித்தாந்தமே — சுழுத்திமௌனமெனச்சொல்வர் - சுழுத்திமௌனமென்று (சத்துக்கள்) சொல்லுவார்கள். எ-று. (இ-சூ-க-ம்) மவுனநான்கிலிலக்கணமுமம்மௌனத்தையுடைய முனிவரிருவரிலக்கணமும் விபரமாயறிவித்ததாம் .... (சு)

(அ-கை.) சுழுத்திமவுனஞ் சாங்கியம்யோகமென விரண்டுவிதமாமெனல். (கவி) நின்றவிண்ணுண்டல்லவுமாநிகழுமனைத்துமுளதிலதா, மென்றுசமமுஞ்சாந்தமுமாயிருத்தல்சுழுத்திமவுனமதா, மொன்றுசுழுத்திமவுனந்தானுபயவிதமாமியோகியர்க்குத், துன்றுகின்றசாங்கியமுந்தூயதானயோகமுமே .... *

(இ-ள்.) உண்டு - சத்தாகவும்—அல்லவுமாம் - அசத்தாகவும்—உளதிலதாம் - சத்தசத்தாகவும்—நிகழுமனைத்தும் - விளங்காநின்றயாவும்—நின்றவிண்ணென்று - நித்தியமாயிருக்கின்றசிதாகாசமென்(றெண்ணி)— சமமும் - சமத்துவமும் — சாந்தமுமாய் - சாந்தமுமாகி—இருத்தல் - இருக்கின்றது — சுழுத்திமவுனமதாம் - சுழுத்திமவுனமென்று சொல்லப்படும்—

ஞன்றுசுழுத்திமவுனந்தான் - பொருந்தினசுழுத்திமவுனமானது — யோகியர்க்கு - யோகிகளுக்கு— துன்றுகின்றசாங்கியமும் - நெருங்குஞ்சாங்கியமென்றும்— தூயதானயோகமும் - பரிசுத்தமாகியயோகமென்றும்—உபயவிதமாம் - இருவகைத்து. எ-று.................................. (எ)

(அ.-கை.) சாங்கியயோகம்யோகயோகமாகிய விரண்டினிலக்கணங்கூறல். (கவி)
தெளிவாஞானவுணர்வாலேதினமுமேகசமாதியினு, லளவாஞ்சங்கைபாலறிந்தவவர்
சாங்கியயோகியராகு, முளதாம்பிராணன்முதல்வாயு வுபசாந்தியினூகத்தாலே,
யெளிதாமுடிவினுபர்பதத்தை யினைந்தோரியோகயோகியரே........................ ✻

(இ-ள்.) தெளிவாம் - தெளிவாகிய—ஞானவுணர்வால்- கல்வியறிவினுலும்—தினமும் நாடோறும்—ஏகசமாதியினல் - பூரணநிஷ்டையினுலும்— அளவாஞ்சங்கையால் - பிரமாணமானவிசாரணையினுலும்—அறிந்தவவர்தான் - பிரமமென்றுணர்ந்தவவர்களே—சாங்கியயோகியராகும் - சாங்கியயோகியர்களாகும்—ஊகத்தாலுளதாம்-யுத்திகளினுலுண்டான—பிராணன்முதல்வாயு- பிராணுதிபவனங்கள் — உபசாந்தியில் - அடங்கினவிடத்தில — எளிதாம் - எளிதாக—முடிவினுயர்பதத்தையடைந்தோர் - அந்தமில்லாதமேலானபதத்தையடைந்தவர்கள்—இயோகயோகியர் - யோகயோகியர்கள். எ-று.. (அ)

(அ-கை.) இவ்விருவரிலக்கணமுஞ்சொல்லி யவர்களவிப்பிராயமுமறிவித்தல்.(கவி)
பண்ணப்படாதவுபசாந்த பதமேயெவர்க்கும்பற்ருகு,மெண்ணத்தகுசாங்கியரொய்
துமிடமேயிடமாமியோகியர்க்குங், கண்ணத்தகுவாதனைவலைசூழ் கடியபிராணன்
மனமிரண்டு, நண்ணப்படுசெய்தொழிற்ற நசிக்கிலதுவேபரமபதம் .... ✻

(இ-ள்.) பண்ணப்படாத - நித்தியமாகிய—உபசாந்தபதமே- உபசாந்தமானவிடமே—எவர்க்கும்பற்ருகும் - யாவருக்கும்பிடிப்பாகும்—எண்ணத்தகு- நினைக்கத்தகுந்த—சாங்கியரொய்துமிடமே - சாங்கியரடைகின்றபதமே— யோகியர்க்குமிடமாம் - யோகிகளுக்கும்ஸ்தானமாகும்—கண்ணத்தகு - கருதத்தகுந்த — வாதனைவலைசூழ் - வாசனைவலையினுற்கட்டுப்பட்ட—கடியபிராணன் - வேகமுள்ளபிராணனும்—மனம்-மனமுமாகிய—இரண்டும்-இவ்விரண்டும்—நண்ணப்படு - சாரப்பட்ட—செய்தொழில் - இயற்றுங்கிரியைகள்—தீரநசிக்கில்- முழுதுங்கெடுமாயின் —அதுவேபரமபதம் - அதுவேபிரமபதமாகும். எ-று. (இ-ரு-க-ம்) சுழுத்திமவுனத்தினியல்பை நன்றுப்பகுத்துச் சொல்லியதாம்.. (கூ)

(அ-கை.) சுழுத்திமவுனிகளவிப்பிராயத்தையடையுஞ் சாதனமூன்றுண்டெனல்.
(கவி) வினவிநோக்காமையிற்சித்த மெய்போற்றேன்றும்பொய்யேயாங், கனவிற்
றனதுமரணத்தான் காணுநின்றுமுளதாமோ, வனகவேகப்பொருட்பழக்கத்தழுத்த
ம்பிராணனுள்ளடக்கன், மனனையடக்கலிவைமுத்திவசனம்பொருளாஞ்சுருக்கத்தில்.

(இ-ள்.) வினவிநோக்காமையின்- விசாரித்துப்பாராமையினுல்—சித்தம்-மனமானது—மெய்போற்றேன்றும் - உள்ளதுபோலத்தோற்றும்—(விசாரிக்கில்)பொய்யேயாம்-மித்தையேயாகும்—கனவில் - சொற்பனத்தில்—தனதுமரணம்- தனதுமரணத்தை—தான்காணுநின்றும்- தான்கண்டிருந்தும்—உளதாமோ - மெய்யாமோ—அனகவேகப்பொருள் - களங்கமற்றவத்துவிதவஸ்துவில்—பழக்கத்தழுத்தம்- அப்பியாசத்திடமும்—பிராணனுள்ளடக்கல்-பிராணபந்தனமும்—மனனையடக்கல் - மனுேபந்தனமுமாகிய—இவை - இவைகளே— சுருக்கத்தில்-சுருக்கமாக—முத்திவசனப்பொருளாம் - மோக்ஷசத்தார்த்தமாம். எ-று .... (ய)

(அ-கை.) சாதனமூன்றினெருமையுரைத்தல். (கவி) உரமாமொருமைப்பொருட்
பழக்கமுயிரினெடுக்கமுளத்தொடுக்கந், தரமாமொன்றுபலிக்குமெனிற்றம்மிற்று
மூன்றும்பலமாம், பரமாமுயிர்நெஞ்சிலதாகிற் பயிலாதெவர்க்கும்பாவனைக, டிர
மாமிவையொன்றுமலருமணமுந்திலமுந்தயிலமும்போல்...................................... ✻

(இ-ள்) உரமாம் - திடமாகிய—ஒருமைப்பொருட்பழக்கம் - ஒருவஸ்துவினப்பியாசமும்—உயிரினெடுக்கம் - பிராணனெடுங்குதலும்—உளத்தொடுக்கம் - மனமடங்குதலு(மாகியமூன்றில்)—தரமாயொன்றுபலிக்குமெனில் - பக்குவமாயொன்றுகிடைக்குமாயின் — தம்மிற்றும் - ஒன்றுக்கொன்றுசம்பந்தமான—மூன்றும்பலமாம் - மூன்றும்ப்ரயோசனமாகும்—பரமாமுயிர் - மேலானபிராணனும்—நெஞ்சு - மனதும் — இலதாகில் - இல்லையாயின்—எவர்க்கும்பாவனைபயிலாது - யாவருக்குநினைவுகள்சேராது—மலருமணமும் - புஷ்பமும்வாசனையும்—திலமுந்தயிலமும்போல் - எள்ளுமெண்ணெயும்போல — திரமாமிவையொன்றும்-திலபாகவிவ்விரண்டுமொன்ருகும். எ-று .... (யக)

(அ-கை.) இம்மூன்றினொன்றி லுறுதியாகச் சாதிக்கவேண்டுமெனல். (கவி) ஆதா
ராதேயம்போலாமதிலொன்றிறக்கிலயலதும்போ, மோதாநின்றவிவைமாயினுய
ர்ந்தவீடுமுதவிடுமான், மீதாகியதன்பரிசயத்தால் வெளியாய்நினைவு போமளவு,
மேதாகினுமோர்தத்துவத்திலிறுகவேண்டும்பாவனையே........ .... ✻

(இ-ள்.) ஆதாராதேயம்போலாம் - (பிராணனுமனமு) மாதாரமுமாதேயமும்போல்வாம்—அதிலொன்றிறக்கில் - அவற்றிலொன்றுகெடுமாயின்— அயலதும்போம் - அடுத்தமற்றொன்றுங்கெடும்—ஓதாநின்ற - சொல்லாநின்ற — இவைமாயில் - இவ்விரண்டுங்கெட்டால்—உயர்ந்தவீடுமுதவிடும் - மேலாகியமோக்ஷத்தையுங்கொடுக்கும்— மீதாகியதன்பரிசயத்தால் - மேலாகியதனதற்பியாசத்தினால்—வெளியாய் - ப்ரத்தியக்ஷமாக— நினைவுபோமளவும் - எண்ணமானதுகெடுமட்டும்—ஏதாகினுமோர்தத்துவத்தில் - ஏதாகினுமோருண்மையில் — பாவனை - நினைவானது—இறுகவேண்டும் - அழுந்தவேண்டும். எ-று... (௰௨)

(அ-கை.) இச்சாதனத்தாற்பவமயக்கநீங்கிநனவிற்சுழுத்திவருமென்றுரைத்துஇதற்
கோர்திருஷ்டாந்த முரைக்கத்தொடங்கல். (கவி) நெடுநாட்பழகுஞ்சுபாவத்தானெ
ஞ்சினொருமையொன்றுண்டா,முடனேமிகுமித்திரளெல்லாமொருங்கிப்போகும்பி
றப்பிறப்பி, னிடமார்கனவுபோய்விழித்தவிகல்வேதாளமிசைத்தவினுத், தடமார்பு
யனேகேட்டியெனத் தவமார்வசிட்டன்சாற்றிடுவான்.. ✻

(இ-ள்.) நெடுநாட்பழகும் - வெகுகாலமாயற்பியாசிக்கின்ற— சுபாவத்தால் - தன்மையினால்—நெஞ்சின் - மனதினிடத்தில்—ஒருமையொன்றுண்டாம் - ஏகத்துவமானதொன்றுண்டாகும்—உடன் - அக்கணத்தில்— மிகுமித்திரளெல்லாம் - மிகுந்தவிக்கூட்டங்களனைத்தும்—ஒருங்கிப்போகும் - கெட்டுப்போகும்— பிறப்பிறப்பின் - சநநமரணத்தின் — இடமார்கனவுபோய்- திர்க்கசொற்பனநீங்கி—விழித்த- (துரியத்தில்)விழித்துக்கொண்ட—இகல்வேதாளம்- வலிமையுள்ளவேதாளமானது—இசைத்தவினு - கேட்டகேள்வியை— தடமார்புயனே-விசாலம்பொருந்தியதோள்களையுடையஸ்ரீராமா—கேட்டியென- கேட்பாயென்று—தவமார்-தவமிகுந்த—வசிட்டன்சாற்றிடுவான் - வசிஷ்டமுனிசொல்லுவார். எ-று.. (௰௫)

(அ-கை.) வேதாளவியல்புகூறல், (கவி) விந்தவனத்தோர்வேதாளம் வேறோர்
நாட்டில்வெம்பசியால், வந்துபுகுந்தோர்நல்லோன்பால் வரம்பில்பலியேற்று
ண்மகிழு, முந்துபசித்தீமூடுகிடினுமுன்வந்தோர்க்குநிபமின்றி, நிந்தையின்
றிக்கொலைபுரியா நெடியோர்நெறியை நீங்குவரோ .... ✻

(இ-ள்.) விந்தவனத்து - விந்தாடவியிலிருக்கின்ற— ஓர்வேதாளம் - ஒருவேதாளமானது—வேறோர்நாட்டில் - மற்றொருதேயத்தில்—வெம்பசியால் - கொடிதாகியபசியினால்— வந்துபுகுந்து- வந்துசேர்ந்து—ஓர்நல்லோன்பால் - ஒப்பற்றசத்துவினிடத்தில்—வரம்பில்பலிபெற்று-அளவற்றவுணவைப்பெற்று—உண்மகிழும்- மனங்களிக்கும்—முந்துபசித்தீ-முதன்மையாகின்றவுதராக்கினியானது—மூடுகிடினும் - மிகுந்தாலும்—முன்வந்தோர்க்கும்- எதிர்வந்தவர்களுக்கும்—நிபமின்றி - (வருந்துங்)காரணமில்லாமலும்—நிந்தையின்றி - இகழ்வில்லாமலும்—கொலைசெய்யாது—நெடியோர் - பெரியோர்கள்—நெறியை - சன்மார்க்கத்தை— நீங்குவரோ- பிரிவார்களோ. எ-று.. (௰௬)

(அ-கை.) வேதாளம்வினுக்கூறத்தொடங்கல். (கவி) கானின்றந்தவேதாளங்கடுந்தீப்பசியா
னீதியினு, லானவூகத்தாற்சனத்தை யசனமாக்கநகரெய்தி, தானநிருபனிரவுதிரிசமயத்த
வனைத்தான்கண்டு, வானிலிடிபோல்வேதாளமன்னற்குரைத்தபடிகேளாய்.................... ✻

(இ-ள்.) கானின்று - காட்டிலிருந்து—அந்தவேதாளம் - அவ்வேதாளமானது—கடுந்தீப்பசியால் - கொடியவுதராக்கினிக்கு — நீதியினுலான - நியாயத்தினு (னன்குதீதென்றறிகின்ற) தான—ஊகத்தால் - யுத்தியினால்—சனத்தை - மனிதரை — அசனமாக்க - புசிப்பாகச்செய்ய—நகரெய்தி - ஒருபட்டணத்தில்வந்து—தானநிருபன் - அவ்விடத்திற்குரியவரசன்—இரவுதிரிசமயத்து - இராத்திரியிற்சஞ்சரிக்கின்றகாலத்தில்— அவனைத்தான்கண்டு - அவ்வரசனைக்கண்டு—வானிலிடிபோல் - ஆகாயத்தினிடியைப்போல—வேதாளம் - வேதாளமானது—மன்னற்குரைத்தபடி - அரசனுக்குச்சொல்லியவிதத்தை—கேளாய் - ஸ்ரீராமாயான்சொல்லக்கேட்பாய்.

(அ-கை.) வேதாளஞ்சொல்லவரசனுரைத்தல். (கவி) மன்னுவெண்கைப்பட்ட
னையால்வானேறனையவென்னுலே, யுன்னுருயிரிற்றனையினியென்னுணவாகுதி
யென்றுரைத்தலுமே, நின்னுனெறியாலன்றியெனைநெருங்கிற்றலைநீறெழுமெ
ன்னச், சொன்னான்மன்னன் வேதாளஞ்சொன்னமன்னற்கெதிர்சொல்லும்✻

(இ-ள்.) மன்னா - அரசனே—என்கைப்பட்டனை-என்கைவசமானாய்—வானேறனையவென்னால்- மேலானவாண்சிங்கத்துக்கொப்பாகியவென்னால்— உன்னாருயிரிற்றனை - உனதுநிறைந்தவுயிரையிழந்தாய்— இனியென்னுணவாகுதியென்று - மேலெனக்குப்புசிப்பாகக்கடவாயென்று—உரைத்தலும் - (வேதாளஞ்)சொல்லவும்—நெறியின்றி - நியாயமில்லாமல்—எனைநெருங்கில்-என்னிடத்தினெருங்குவையாயின்— நின்றால் - உன்றால்— தலைநீறெழுமென்ன - (உனது) சிரசுபொடியாகப்போகுமென்று—மன்னன் - அரசனானவன்—சொன்னான் - சொல்லினன்—வேதாளம் - வேதாளமானது—சொன்னமன்னற்கு - (இப்படியென்று)சொல்லியவரசனுக்கு—எதிர்சொல்லும் - பதிலுத்தரவுசொல்லும். எ-று..(௰௬)

(அ-கை.) வினாவுக்குவிடையாசித்தல். (கவி) நீதியின்றியுனையடரோ னெறியே
யுரைக்கேனிருபாநீ, தீதிலிரவாளருக்கெல்லாஞ்சிறுமைதீர்க்குந்திறத்தனையா,
லாதலாலென்குறைதீர்ப்பா யையப்பாடாங்குறைகேட்டு, நாதனேநின்சொற்
கொடையா னன்றுநிறைப்பாயெனவுரைக்கும்...*

(இ-ள்.) நீதியின்றி- நியாயமில்லாமல்—உனையடரேன் - நின்னைக்கொல்லேன்—நெறியையுரைக்கேன் - நீதியைச்சொல்லுவேன்—நிருபாநீ - அரசனேநீர்— தீதிலிரவாளருக்கெல்லாம்- குற்றமற்றயாசகாளனைவருக்கும்—சிறுமைதீர்க்குந்திறத்தனையாதலால் - குறைவைநீக்குகின்ற குணத்தையுடையவனாதலினால்— என்குறைதீர்ப்பாய் - எனதுகுறையைநீக்குவாய்—ஐயப்பாடாம் - சந்தேகமான—குறைகேட்டு - குறைவைக்கேட்டு—நாதனே - அரசனே— நின்சொற்கொடையால் - உனதுத்தரமாகியவீகையினால்—நன்றுநிறைப்பாயென- நன்மையாகப்பூரணஞ்செய்வாயென்று—உரைக்கும் - (வேதாளஞ்)சொல்லும். எ-று. (இ-ச-க-ம்) வேதாளமனுபவவேத்தியத்தைக்குறித்துப் பிரமஸ்வரூபத்தைப் பகுத்துவினாவத் தொடங்கினதாம்........ (௰௭)

(அ-கை.) வேதாளம்வினாவினவினாவாறின் மூன்றுவினாவுதல்.(கவி) எந்தவெய்
யோன்கிரணங்கட்கிந்தப்பிரமாண்டங்களெலாஞ்,சிந்துஞ்சிறியவணுத்திரளாய்
த்திகழுமெந்தமாருதத்தி, லந்தமில்லாக்ககனமெனு மணுக்கள்விளங்குமளவி
ன்றி, வந்தகனாமேற்கனவுற்று மாறாத்தெளிவாமொளிவடிவென்.................*

(இ-ள்.) எந்தவெய்யோன்கிரணங்கட்கு - எந்தசூரியனதுகதிர்களுக்கு — இந்தப்பிரமாண்டங்களெலாம்-இப்பிரமாண்டங்களியாவும்— சிந்து-சிந்துகின்ற—சிறியவணுத்திரளாய்- அற்பமானவணுக்கூட்டங்களாக—திகழும் - விளங்கும்—எந்தமாருதத்தில்- எந்தக்காற்றினால்—அந்தமில்லா- முடிவற்ற—ககனமெனும் - ஆகாசமென்கின்ற— அணுக்கள்விளங்கும் - அணுக்கள் ப்ரகாசிக்கும்—அளவின்றிவந்தகனாமேல் - மிகவுமுண்டாகியசொற்பனத்தின்மேல் — கனவுற்றும்- சொற்பனமுண்டானாலும்—மாறாத்தெளிவாமொளிவடிவென் - திரிவின்றியதெளிவான ப்ரகாசஸ்வரூபமியாது. எ-று..(௰௮)

(அ-கை.) இரண்டுவினாவுதல். (கவி) அரம்பைதண்டுளுட்போயு மந்தத்தண்
டேயாவதுபோல், வரம்பிலுள்ளுள்ளேயெனினு மற்றொன்றாகாவணுவேது,
நிரம்புமண்டவிண்ணுயிர்க ணிகழுங்கதிர்போற்கிரியனைத்தும், பரம்புபரமா
ணுக்களெனப் பயின்றுநீங்காவணுவேது...*

(இ-ள்.) அரம்பை - வாழையினது—தண்டுள்- தண்டினுள்—உட்போயும்-உள்ளேபோகியும்—அந்தத்தண்டேயாவதுபோல் - அந்தத்தண்டேயிருப்பதுபோல— வரம்பில் - அளவில்லாத—உள்ளுள்ளேயெனினும்- உள்ளுள்ளேயானாலும்—மற்றொன்றாகாவணுவேது-வேறொன்றாகாதவணுவேது—நிரம்புமண்டம் - நிறைந்தபிரமாண்டமும்—விண் - ஆகாயமும் — உயிர்கள்-சீவகோடிகளும்—நிகழுங்கதிர் - ப்ரகாசிக்கின்றசூரியனும் — பொற்கிரியனைத்தும் - மகாமேருவுமாகியசகலமும்—பரம்பு - விரிந்த— பரமாணுக்களென - பரமாணுக்களைப்போல— பயின்றுநீங்கா - கூடிப்பிரியாத—அணுவேது - அணுவானதெது. எ- று............ (௰௯)

(அ-கை.) ஒன்றுவினாவுதல். (கவி) அங்கமொன்றுமறப்பரமவணுவாமெந்த
மாகிரிக்குத், தங்குகற்போற்செறிந்தொன்றாஞ் சகங்கண்மச்சையாமென்று,
துங்கவேதாளஞ்சொன்ன சொற்குநகைத்துச்சுடர்மௌலி,யங்கணரசன்சொ
ன்னதெலாமடைவேகேட்டியிராகவனே...*

(இ-ள்.) அங்கமொன்றுமற - அவயவங்களொன்றுமில்லாமல்—பரமவணுவாம்-பரமாணுவாகிய—எந்தமாகிரிக்கு - எந்தப்பெரியமலைக்கு—தங்குகற்போல்- தங்காநின்றகல்லைப்போல—செறிந்தொன்றும் - நெருங்கியொன்றாயிருக்கின்ற— சகங்கண்மச்சையாமென்று - உலகங்கண்மசசையாயிருக்குமென்று — துங்கவேதாளம் - உயர்வானவேதாளமானது — சொன்ன

மல்—புந்தியாறி - மனதுவிஸ்ராந்தியடைந்து — விசையிலா நெஞ்சால் - சாந்தமனதினால்— நெஞ்சை - (அசுத்த) மனதை—விண்ணென - ஆகாயத்தைப்போல— விமலமாக்கி - நின்மல மாகச்செய்து—அசைவறுமவுனி - சலனமற்றமவுனியாகியும்—ஏகன் - ஒருவனாகியும்—சாந்த மேவடிவதாகி - உபசாந்தமேஸ்வரூபமாகியும். எ-று .... (க)

(அ-கை.) பகீரதனைப்போல சுகத்தைப்பெறுவாயெனல். (கவி) சமனுமாயிதய விண்போற்சாலவுந்தெளிந்துநிற்பாய், நிமலமாம்புந்திதிண்மை நிறைவுற்றுமூட மின்றி, யமரவந்தனபின்செல்லுமரசனும்பகீரதன்போற், குமரனேயரியதேனுங் குறைவறப்பெறலாமென்றான் .... *

(இ-ள்.) சமனுமாய் - சமத்துவனாகியும்—இதயம் - மனமானது—விண்போல் - ஆகாயத்தைப்போல — சாலவுந்தெளிந்துநிற்பாய் - ஸ்ரீராமா நீமிகவுந்தெளிந்திருக்கக்கடவாய்— நிமலமாம்புந்திதிண்மைநிறைவுற்று - நின்மலமானபுத்திதிட நிறைந்து— மூடமின்றியமரவந்தன - அறியாமையின்றியமைவாகவந்தவைகளை —பின்செல்லுமரசனும்பகீரதன்போல்-அனு சரிக்கின்றவேந்தனாகியபகீரதனைப்போல—குமரனே-குழந்தாய்—அரியதேனும்-(அடைதற்) கரியதாயினும்—குறைவறப்பெறலாமென்றான்- குறைவின்றியடையலாமென்றுவசிஷ்டமுனி சொன்னார். எ-று (இ-உ-க-ம்) சகசநிஷ்டையை யனுக்கிரகித்ததாம் .... (உ)

(அ - கை.) பகீரதன் யாதினாலாத்மானுபவம் பெற்றதுங் கங்கையைக்கொண்டுவந் ததுமென்ற வினாவின் முதல்வினாவுக் குத்தரங்கூறத்தொடங்கல். (கவி) என்றலுமவ னைநோக்கியெம்மனவல்லபத்தா, லன்றுகங்கையைக்கொணர்ந்தான்பகீரதனையா வென்று, நன்றுணர்வள்ளல்கேட்பநான்மறைவசிட்டன்சொல்வா, னொன்றுணர் பகீரதப்பேரொருவனுண்டுலகின்வேந்தன் .... *

(இ-ள்.) என்றலும் - (இப்படி) யென்றுவசிஷ்டமுனிசொல்லவும் — அவனைநோக்கி- அவரைப்பார்த்து—ஐயா - (என) தாசிரியரே—பகீரதன் - பகீரதவரசனானவன்— எம்மனவல் லபத்தால் - எந்தமனவல்லமையினால்—நன்றுணர் - பரமசுகத்தையறிந்தான் — அன்றுகங்கை யை - அப்போதுதேவநதியை — கொணர்ந்தானென்று - கொண்டுவந்தானென்று — வள்ளல் கேட்ப - ஸ்ரீராமன்கேட்க—நான்மறை - நான்குவேதங்களையு (முணர்ந்த)— வசிட்டன்சொல் வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—ஒன்றுணர் ஏகத்துவத்தையறிந்த—பகீரதப்பேர்- பகீரத னென்னுநாமத்தையுடைய—வேந்தன் - அரசனானவன்—உலகின் - பூமியின்கண் — ஒருவனு ண்டு - ஒருவனிருந்தான். எ-று. நிமலமாம்புந்திதிண்மை நிறைவுற்றுமூடமின்றியமரவந்தன பின்செல்லுமரசனும் பகீரதன்போலென்றதற்கும், எம்மனவல்லபத்தாலன்றுகங்கையைக்கொ ணர்ந்தானென்பது வினாவழுவும்; அதற்கு ஞானமடைந்தவருத்தஞ்சொல்லுதல் விடைவழுவு மாம், அஃதனமன்று ஞானமனவல்லபத்தாற் கங்கையைக் கொணர்ந்தானெனில், அதுமலை கல்லி யெலிபிடித்தானென்னுங் கதைக்கொப்பாகும். அஃதன்றியுந் தவத்தாற் கொண்டுவந்தா னென் றுத்தரமிருத்தலின் பரஸ்பரம் விரோதமாடலிங்ஙன மகாரிஷிகள் வாக்கிராதாதலாலெம் மனவல்லபத்தானென்பதி னன்றுணர்ந்தானென்னும் வினா வொளித்திருந்ததை யிந்நூலாசிரி யர், வெளிப்படுத்தினாரெனக்கொள்க .... (௩)

(அ-கை.) பகீரதன்மகிமையைக்கூறல். (கவி) மாநிலமுழுதுங்காப்போன்மணியினும்வண் மைமிக்கோன், சானவிபடியொழுங்காற்சாம்பராய்ப்பாதலத்திற், போனதன்கிளையை யெல்லாம்பூமகனுலகிலேற்றி, தீநரகொழியவைத்தோன் திங்கள்வெண்கவிகைமன்னன்.*

(இ-ள்.) மாநிலமுழுதும் - பெரிதானபூமியனைத்தையும் — காப்போன் - காப்பவன்— மணியினும் - சிந்தாமணியினும்—வண்மைமிக்கோன் - ஈகையின்மிகுந்தவன் — சானவிபடி யொழுங்கால் - கங்காசோபானக்கிரமத்தினால்—பாதலத்தில்-பாதாளத்தில்— சாம்பராய்ப்போ ன-பஸ்மமாகிய— தன்கிளையையெல்லாம் - தனதுபாட்டன்மார்களனைவரையும் — தீநரகொ ழிய - கொடியநரகநீங்கும்படி—பூமகனுலகிலேற்றி - சத்தியலோகத்தைச்சேர்த்து — வைத் தோன் - (சுகிக்க) வைத்தவன்—திங்கள்வெண்கவிகைமன்னன்-சந்திரன்போன்றவெண்மையா கியபூச்சக்கரக்குடையையுடையவரசன். எ-று .... (௪)

(அ-கை.) விஷயதோஷதிருஷ்டியினால் விசாரமுதித்தல். (கவி) அன்னவன்காளையா னபருவத்திலவனிதன்னி,னின்னல்கூர்நடையாமித்தைநோக்கலுந்தனதெண்ணத்தி, லுன்னியவற்பமான விசாரத்தாலுதித்ததந்தோ, மன்னிளம்பக்குவத்தின்மனனத் தின்மாகிரேற்றம் .... *

(இ-ள்.) அன்னவன் - அப்படிப்பட்டபகீரதன்—காளையானபருவத்தில்-எவ்வன்னகால த்தில்—அவனிதன்னின் - உலகத்தினது — இன்னல்கூர் - துன்பமிகுந்த — நடையாமித்தை-

ஆசாரமாகியவிதை—நோக்குறும் - பார்த்தவளவில்—தனதெண்ணத்திலும்னிப- தன்னுடைய நிலைவிளைத்த—அற்பமானவிசாரத்தால் - சூட்சுமவிசாரணையினாது—மாசிம்றற்றம்-களங்கமற்றதோற்றமானது—மனனத்தில் - மனநிலை—மன்னிளம்பக்குவத்தின் - நிலைபெற்றவிளப்பருவத்தில்—உதித்ததந்தோ - உண்டானதநிசயந்தான். எ-று .... (ரு)

(அ-கை.) தனித்திருந்துசகத்தன்மையைவிசாரித்தல். (கவி) விதியினூற்கானன் மேட்டிற் கொடிபோலவிசாரந்தோன்ற, வுதவுமேகாந்தமெய்திமியான்மொ டொன்றொவ்வாக்கூட்டத், ததிசயவுலகின்றன்மையிதனைப்பார்த்தகத்திற்றேர் வான், புதிதிலையொன்றுமென்றும் போனதேபுகுதுமீட்டும் .... *

(இ-ள்.) விதியினூல் - ஊழினால்—கானன்மேட்டில் - அகளர்ப்பூமியினது—கொடியென- (பஷிபக் கொடியைப்போல—விசாரந்தோன்ற - விசாரணையுதயமாக—உதவுமேகாந்தமெய்தி- கொடுக்கின்றமேகாந்தஸ்தானத்தையடைந்து— ஒன்றொடொன்றொவ்வா - ஒன்றோடொன்று பொருந்தாத — கூட்டத்ததிசயவுலகின்றன்மை - சமுகமானவியப்புள்ளசகத்தின்சுபாவமான —இதனைப்பார்த்தகத்திற்றேர்வான் -. இவைகளைப்பார்த்துமனதில்விசாரிப்பான்—ஒன்றும்புதிதிலை - ஒன்றாவதுநூதனமானதில்லை—என்றும் - எப்பொழுதும்—போனதே - போயினதே— மீட்டும்புகுதும் - திரும்பவும்வரும். எ-று .... (சா)

(அ-லக) புவனபோகங்களைக்கான்றஅன்னம்போலக்கருதுதல். (கவி) போகியபகலே மீளப் போகியவிரவேமீள, வேகியகொடையேமீள வேகியவிரப்பேமீள, வாகியவு ணவேமீள வாகியதொழிலேமீள, மோகியர்மீளமீளமுயலுவாரொன்றிஞர் ... *

(இ-ள்.) போகியபகலேமீள - போனபகலேதிரும்பவும்வருகின்றது—போகியவிரவேமீள - போனவிராத்திரிபேதிரும்பவும்வருகின்றது— ஏகியகொடையேமீள - போனவீகையே திரும்பவும்வருகின்றது—ஏகியவிரப்பேமீள - போனயாசகமேதிரும்பவும்வருகின்றது—ஆகியவுணவேமீள - ஆனபுசிப்பேதிரும்பவும்வருகின்றது—ஆகியதொழிலேமீள - ஆனகருமமேதிரும்பவும்வருகின்றது—மோகியர் - மோகத்தையுடையவர்கள்—ஒன்றிஞர் - ஒன்றிலும்வெட்கப்படாமல்—மீளமீள - திரும்பத்திரும்ப—முயலுவார் - (அதின்) முயற்சிசெய்வார்கள். எ-று.

(அ-கை.) ஆத்மாநந்தங்கொடாத கன்மத்தைவெறுத்துப்பூரணாநந்தத்தைக்கொடுக் குங்கன்மத்தைவிரும்புதல். (கவி) சுவையறவுணங்குமந்தக் கருமமேசூழாநிற்பர், நவையறவெத்தைச்சேர்ந்தா னண்ணுறுநிலையென்ன, வெவையும்வந்தணுகுமத் தையியற்றலேயியல்பாஞ்செய்கை, கவையுறுமற்றவெல்லாக்கருமமும்விடேசியாகும்.

(இ-ள்.) சுவையறவுணங்கும் - இரசமில்லாமல்வாடுகின்ற—அந்தக்கருமமே - அத்தொழிலையே—சூழாநிற்பர் - சூழ்ந்திருப்பார்கள்—நவையற - குற்றமறும்படி—எத்தைச்சேர்ந்தால் - எதையடைந்தால்—நண்ணுறுநிலையென்ன - அடையப்படாததில்லையென்று சொல்லும்படி—எவையும்வந்தணுகும் - யாவையும்வந்துபொருந்தும்—அத்தையியற்றலே - அதைச்செய்தலே—இயல்பாஞ்செய்கை - சுபாவமாகியதொழிலாம்—கவையுறும் - இரண்டுபடுகின்ற—மற்றவெல்லாக்கருமமும் - மற்றசகலகருமங்களும் — விடேசியாகும் - விடேசிகாரோகமாம். எ - று. (இ - சா - க - ம்) கிதகன்மபுண்ணியபரிபாகத்தினுற் சாதனசதுஷ்டயமுண்டாயிற்றென்பதாம்.

(அ-கை.) சற்குருவைத்தரிசித்துப்பவத் துன்பத்தை நீக்குதற்பொருட்டுக்கூறுதல். (கவி) பலபடச்செய்தசெய்வார் பாமரரறிஞர்செய்யா, ருலகியலிதுவென்றுள்ளம் வெருவினனொருகாற்சென்று, நலனுறுதிரிதுலப்பேர் நற்குருசரணந் தாழ்ந்து, சலனுறுபிறவிக்கஞ்சித்தனித்திவைகழறலுற்றான் .... *

(இ-ள்.) பாமரர் - அஞ்ஞானிகள் — பலபடச்செய்தசெய்வார் - அநேகமாகச்செய்ததையேசெய்வார்கள்—அறிஞர்செய்யார் - ஞானிகள்செய்யமாட்டார்கள்— உலகியலிதுவென்று - சகத்தின்றன்மையிதுவென்று— உள்ளம்வெருவினன் - மனதிலச்சமுற்றபகீரதனனவன்— ஒருகாற்சென்று - ஒருநாட்போய்—நலனுறுதிரிதுலப்பேர் - நன்மைபொருந்தியதிரிதுலனென்னுநாமத்தையுடைய—நற்குருசரணந்தாழ்ந்து - சற்குருவினதுபாதத்தைவணங்கி—சலனுறுபிறவிக்கஞ்சி - துன்பமிகுந்தபவத்துக்குப்பயந்து — தனித்து - ஏகாந்தமாய்— இவைகழறலுற்றான் - இவைகளைச்சொல்லத்தொடங்கினான். எ-று .... (சு)

(அ-கை.) பவத்துன்பநீக்கமியாதென்றவினாவுக்குத் திரிதுலமுனி யஃதுநீங்கும்பொருட் டாத்மஞானமுபதேசித்தல். (கவி) பகீரதனுனைப்பாவையாபயில்சனாமரணமோக, மகில மாமசஞ்செய்புமருந்துயர்க்கவதியேது, திகழ்வுறவருள்வாயென்னத் திரிதுலனுனைப் பான்மன்னு, நிகழ்வுறுநயன்றவ்வினிறைவடிவாகநாக்கில் .... *

(இ-ள்.) பகீரதனுரைப்பான் - பகீரதன்சொல்லுவான்—ஐயா-முனீஸ்வரா—பயில்-சொல்லப்பட்ட—சரை - மூப்பும்—மரணம் - மரிப்பும்—மோகம் - மயக்கமுமுதலிய—அகிலமாமச்சஞ்செய்யும் - சமஸ்தமானபயத்தைச்செய்யாநின்ற—அருந்துயர்க்கு - அரியதுன்பத்துக்கு—அவதியேது - முடிவியாது—திகழ்வுற - விளங்கும்படியாக—அருள்வாயென்ன-அனுக்கிரகிப்பாயென்றுபகீரதன்கேட்க—திரிதுலனுரைப்பான் - திரிதுலமுனிசொல்லுவார் — மன்னு - அரசனே—நிகழ்வுறு - ப்ரகாசம்பொருந்திய—நேயன்றன்னை - ஞானாத்மாவை—நிறைவடிவாகநோக்கில் - பூரணாகாரமாகப்பார்க்கில். எ-று .... (௰)

(அ-கை.) இ-து. (கவி) அன்றுபோந்துன்பமெல்லாமகப்பந்தமனைத்துமாயு, மொன்றலாவையம்போகுமுறுகருமங்கண்மாயு, நன்றதாநேயந்தானு ஞானமேவடிவ்மாகி, நின்றதற்சுரூபமாகுநிகழ்த்திடவிதனைக்கேளாய் .... *

(இ-ள்.) துன்பமெல்லாம் - துக்கங்களனைத்தும்—அன்றுபோம் - அப்பொழுதுநீங்கும்—அகப்பந்தமனைத்துமாயும் - இதயத்திலுள்ளபந்தங்களெல்லாங்கெடும்—ஒன்றலா - பலவாகிய—ஐயம்போகும் - சந்தேகநீங்கும்—உறுகருமங்கண்மாயும் - மிகுந்தகருமங்கள்கெடும்—நன்றதா - செம்மையாக—நேயந்தானும் - அறியத்தக்கதானது—ஞானமேவடிவமாகி- சின்மாத்திரமேஸ்வரூபமாகி— நின்றதற்சுரூபமாகும் - இருந்தபரமாத்மஸ்வரூபமாம் — நிகழ்த்திட - சொல்ல—இதனைக்கேளாய் - இதைக்கேட்பாய். எ-று .... (௰௧)

(அ-கை.) இ-து. (கவி) எங்கணுமுளதுநித்தமெழுதலத்தமித்தலில்லை, யங்கண்மெய்யறிவுசாந்தமமலமச்சுதங்குணங்க, டங்குதலில்லையீதொன்றுளதெனச்சாற்றலோடும், பங்கமின்முனியைநோக்கிப்பகீரதனுரைக்கலுற்றான் .... *

(இ-ள்.) எங்கணுமுளது - எவ்விடத்திலுமுள்ளதான—நித்தம் - நித்தியமானது— எழுதலத்தமித்தலில்லை - உதித்தொடுங்குதலில்லாதது — அங்கண்மெய்யறிவு - அழியவுண்மைஞானமும்—சாந்தம் - உபசாந்தமும்—அமலம் - நின்மலமும்—அச்சுதம் - கெடாததும்— குணங்கடங்குதலில்லை - திரிகுணங்களுந்தங்காததுமாகிய—ஈதொன்றுளதென -இப்படிப்பட்டதொன்றுண்டாயிருக்கின்றதென்று—சாற்றலோடும் - சொன்னவுடன் — பங்கமில் - வேறுபாடில்லாத—முனியைநோக்கி - திரிதுலமுனியைப்பார்த்து — பகீரதனுரைக்கலுற்றான் - பகீரதன் சொல்லத்தொடங்கினான். எ - று. (இ-சு-க-ம்) ஆத்மஞானாநந்த சாக்ஷாத்காரம் வருமாயின் பவத்துன்பநீங்குமென்பதாம் .... (௰௨)

(அ - கை.) தேகமுதலியவிருத்திகணீங்கிச் சித்தாயிருப்பதெங்ஙனமெனில். (கவி) ஒழிந்துளவுடலமாதி யொன்றையுங்காணேனாகி, யிழிந்துளதொழில்களெல்லாந்திரமின்றியேகநின்றான், மொழிந்துளவறிவேயாகிமுட்டறவிருப்பதெங்ஙன், பொழிந்துளகருணையையாபுகலெனப்புகலலுற்றான் .... *

(இ-ள்.) ஒழிந்துள-தனக்குவேறாகிநின்ற—உடலமாதி-சரீரமுதலான—ஒன்றையுங்காணேனாகி-ஒருவிஷயத்தையும்பாராதவனாய்—இழிந்துளதொழில்களெல்லாம் - ஈனமானவிபகாரங்களியாவும்—திரமின்றியேக-திரமில்லாமற்போக—நின்றான்மொழிந்துள-தேவராற்சொல்லப்பட்ட—அறிவேயாகி-ஞானஸ்வரூபமாகி—முட்டறவிருப்பதெங்ஙன்- தடையில்லாமலிருப்பதெப்படி—பொழிந்துள - வருடிக்கின்ற—கருணையையா - கிருபையுள்ளவாசிரியனே — புகலென-சொல்லுமென்றுபகீரதன்கேட்க—புகலலுற்றான் - முனிசொல்லத்தொடங்கினார். எ-று. (௰௩)

(அ - கை.) சமாதியினான் ஞானமுதயமாகிச் சநநமரணநீங்குமெனல். (கவி) திரிதுலனுரைப்பான்மன்னா சித்தந்தானிதயவிண்ணில், விரிபுஞானத்தானேய நிட்டைமேவும்பின்னர், பெரியதாமனைத்துமேனிப்பெருந்தகையாயசீவன், பரிபவமாயசன்மம்பயில்வுறாதுலகின்மீட்டே .... *

(இ-ள்.) திரிதுலனுரைப்பான் - திரிதுலமுனியானவர்சொல்லுவார் — மன்னா - அரசனே—சித்தந்தான் - மனமானது—இதயவிண்ணில் - இதயாம்பரத்தில் — விரிபுஞானத்தால்-வியாபகமானவறிவினால்—நேயநிட்டையைமேவும்-ஸ்வரூபநிட்டையைப்பொருந்தும்—பின்னர்பெரியதாமனைத்துமேனி - பின்புபெரிதானசகலவடிவங்களுமான— பெருந்தகையாயசீவன்-மிகவுமேம்பாடானசீவனானது—பரிபவமானசன்மம்-இகழ்ச்சியாகியசநநத்தை—உலகின்மீட்டு - சகத்திற்றிரும்பவும்—பயில்வுறாது - அடையாது. எ-று .... (௰௪)

(அ-கை.) சமாதிகூடுதற்குச் சங்கத்யாகம்வேண்டுமெனல். (கவி) இல்லவளில்லமாதிப்பற்றறவிட்டாநிட்டம், புல்லிடிற்சமசிற்பாவம்பொருந்துதறனக்குப்பேத, மல்லவாயவற்றவற்றின்றோற்றங்களாதலென்று, மல்லலேகாந்தஞ்சேர்தன்மானிடத்திரனீத்தல். .... *

(இ-ள்.) இல்லவள் - மனையாள்—இல்லமாதியான- மனைமுதலியவிவற்றில்—பற்றறல்-பற்றுநீங்குதலும்—இட்டாநிட்டம் - சுகதுக்கங்கள்—புல்லிடில் - சார்ந்தால்—சமசிற்பாவம்-சமமானஞானபாவனை—பொருந்துதல் - அடைதலும்—தனக்குப்பேதமல்லவாய் - தனக்குப்பேதமல்லாதனவாய்—என்றும் - எப்போதும்—அவற்றவற்றின்றேற்றங்களாதல் - அவையவைகளின்றேற்றங்களாகுதலும் — மலலேலகாந்தஞ்சேர்தல் - வளப்பமுள்ளவேகாந்தத்தையடைதலும்—மானிடத்திரளை நீத்தல் - மானிடக்கூட்டங்களை நீக்குதலும். எ-று .... (௰௫)

(அ-கை.) ஞானசமாதிக்கிந்த சங்கத்யாகமேமார்க்கமெனல். (கவி) ஆத்துமதத்துவத்திலகல்கிலாஞானநிட்டை, யூற்றமாமுண்மைஞானத்துறுபொருட்காட்சியிந்தத், தோற்றமாங்குறிகள்சேர்தன்ஞானமாய்ச்செல்வர்சொல்வர், வேற்றுளவழிகண்முற்றும்விதனவஞ்ஞானந்தானே .... *

(இ-ள்.) ஆத்துமதத்துவத்தில் - ஆத்மதத்துவத்தில்—அகல்கிலாஞானநிட்டை- நீங்காதஞானநிட்டையும்—ஊற்றமாம்- அசைவின்றிநிற்கின்ற—உண்மைஞானத்து-தத்துவஞானத்தில்—உறுபொருட்காட்சி - உண்டானவபரோட்சானுபவமும் — இந்தத்தோற்றமாம் - இப்படிப்பட்டதோற்றமாகிய—குறிகள்சேர்தல் - அடையாளங்களையடைவதே—ஞானமாய்- உணர்வாக—செல்வர் - (மோக்ஷ) செல்வத்தையுடையசத்துக்கள்—சொல்வர் - சொல்லுவார்கள்—வேற்றுள - (இதற்கு) வேறாயிருக்கின்ற—வழிகண்முற்றும் - மார்க்கங்களியாவும்—விதனவஞ்ஞானந்தான் - வேதனையுள்ளவறியாமையாம். எ-று .... (௰௬)

(அ-கை.) தேகோகநீங்கிற்சித்துப்ரத்யக்ஷமாமெனல். (கவி) ஏதமதாகநானென்றெண்ணுதலிறந்தபோது, காதலுமுனிவுந்தீர்க்குங்களைகணைப்பிறவிநோய்க்கு, மேதகுமருந்தாஞானம்வெளிப்படுமென்றுசொன்ன, சேதனமுனிவனைதிரிதுலற்கரசன்செப்பும்..... *

(இ-ள்.) ஏதமது - குற்றத்தையுடையதான—ஆகம்- சரீரத்தை—நானென்றெண்ணுதல்- யானென்றுநினைத்தல்—இறந்தபோது- நசித்தபோ(ததுவே)—காதலுமுனிவுந்தீர்க்கும்- இராகத்துவேஷத்தை நீக்காநின்ற—களைகணைய - ஆதாரமாக—பிறவிநோய்க்கு- சநநவியாதிக்கு — மேதகுமருந்தாம்-மேன்மைபொருந்தியவவுஷதமாகும்—ஞானம்வெளிப்படுமென்று- சைதன்னியம்பிரத்தியக்ஷமாகுமென்று—சொன்ன - அனுக்கிரகித்த—சேதனமுனிவனை-ஞானமுனிவனாகிய— திரிதுலற்கு - திரிதுலமுனிக்கு—அரசன்செப்பும் - பகீரதவரசன்சொல்லுவான். எ-று. (இ-ரு-க-ம்) இச்சாதனங்களாற் பவமுந்தொழிலும்பற்றற நீங்கியிச்சமாகியஞானம் வெளிப்படுமென்பதாம் .... (௰௭)

(அ-கை.) எங்ஙனந்தேகோகநீங்குமென்ற வதற்குச்சாதனங்கூறல். (கவி) மலைமிசைமரம்போனீளுள்வன்புறவிந்தமெய்யி, னிலைபெறநானென்றெண்ணநீக்குவதெங்ஙனென்னத், தலைமைசேர்குரவன்சொல்வான்றன்மனவருத்தத்தாலே தொலைவறுபோகத்தெண்ணந் துவக்கறத்துடைத்துநீக்கி............ *

(இ-ள்.) மலைமிசைமரம்போல் - கிரியின்மேலிருக்கின்றவிருட்சத்தைப்போல — நீளுள்வன்புற- நெடுநாளாகவலிமைபொருந்த—இந்தமெய்யில்- இச்சரீரத்தில்—நிலைபெறநானென்றெண்ணம்- திரமாகநானென்றெண்ணுகின்றநினைப்பை—நீக்குவது - தள்ளுவது—எங்ஙனென்ன-எப்படியென்றுபகீரதன்கேட்க—தலைமைசேர்குரவன் - சிரேஷ்டமானவாசாரியர்— சொல்வான் - சொல்லுவார்—தன்மனவருத்தத்தால் - தனது மனோவருத்தத்தினால்—தொலைவறுபோகத்து-நீங்காதபோகத்தில்—எண்ணந்துவக்கற- நினைவுதொடராமல்—துடைத்துநீக்கி-கெடுத்து.

(அ-கை.) அத்துவிதஞானமடைதலைக்கூறல். (கவி) விரிவுறுமுண்மைமேவில் வினையகங் காரமாளும், புரிவறவிவற்றையெல்லாம் புந்தியாற்றிரநீக்கித், துரிசலைவின்றி நின்றுமெ ன்னினுமென்னுந்தோற்றத், தெரிகிலாததுவேநீயாந் தெளிந்ததற்பரமமஃதே.... .... *

(இ-ள்.) விரிவுறும் - வியாபித்திருக்கின்ற—உண்மைமேவில் - சற்பாவத்தைப்பொருந்தினால்—வினையகங்காரமாளும் - வினையானவகங்காரங்கெடும்—புரிவற - ஆசைகெட—இவற்றையெல்லாம் - இவைகளனைத்தையும்—புந்தியாற்றிரநீக்கி - அறிவினாற்றிரும்படிகெடுத்து— துரிசலைவின்றி - துன்பமானசலனமில்லாமல்—நின்றுமென்னில்- இருப்பாயானால்— நானென்னுந்தோற்றம் - யானென்கின்றதோற்றமானது—தெரிகிலாது - தெரியாமல் —அதுவேநீயாம்- பிரமமேகூடஸ்த்தமானவத்துவிதஸ்வரூபமாம் — தெளிந்ததற்பரமமஃதே - (வேதங்களாற்) றுணிந்தபிரமமுமதுவேயாம். எ-று. (இ-உ-க-ம்) விஷயசுகம்விட்டுப் பிரமசுகஞ்சேரிலகம்பாவநீங்கி நீயத்துவிதப்பிரமமாவாயென்பதாம் .... (௰௮)

(அ-கை.) விஷயசுகம்விடுதற்குச் சாதனங்கூறல். (கலி) அனைத்துள விசேட நீங்கி
யச்சமற்றேடணைக்குட், டினைத்துணைபற்றற்றின்மை சிக்கெனச்சேர்ந்துசெல்வம்,
வினைப்பகைக்கீந்துநானென் பதுவிட்டுமேனிச்செய்கை, தனைத்துறந்தவர்பாலை
யந்தனையிரந்தெனையும்விட்டு …… …… … …………………………… *

(இ-ள்.) அனைத்துள- வெகுவாயிருக்கின்ற—விசேட நீங்கி- (வன்ஞச்சிரமபேதமான) விசேடத்தைவிட்டு—அச்சமற்று - பயமில்லாமல்—ஏடணைக்குள்- ஈடணத்திரயத்தில்—தினைத்துணைபற்றற்று - தினையளவும்பற்றில்லாமல்—இன்மைசிக்கெனச்சேர்ந்து - தரித்திரத்தையுறுதியாகவடைந்து—செல்வம் - செல்வங்களை — வினைப்பகைக்கீந்து - போர்செய்கின்றசத்துருக்களுக்குக்கொடுத்து—நானென்பதுவிட்டு - அகம்பாவத்தைநீக்கி — மேனிச்செய்கை தனைத்துறந்து - சரீரத்தினதுதொழிலைவிட்டு—அவர்பால் - அச்சத்துருக்களிடத்தில்—ஐயந்தனையிரந்து-பிச்சையைவாங்கி—எனையும்விட்டு - என்னையும்விட்டு. எ-று.. ……… …… …… (உ௰)

(அ-கை.) இங்ஙனநிற்கி னீயேபிரமமாவாயென்றருள்செய்தல். (கலி) நிற்பரமா
யிவ்வாறுநிற்கின்மேலுக்குமேலாந், தற்பரநீயேயாகி யென்றவன் சாற்றக்கேட்டு,
வெற்படர்தோளானெஞ்சிற்செய்வதாந்தன்மைமேவிப், பற்பலதன்செய்கைக்கே
பகீரதனிற்பதானான் ………… .. …… ……………… …………… ……… *

(இ-ள்.) நிற்பரமாய் - பாரமில்லாமல்—இவ்வாறுநிற்கின்-இப்படிநின்றால்—மேலுக்குமேலாந்தற்பரம்- உயர்வுக்குயர்வாகியபிரமம்—நீயேயாகியென்று- நீயாகக்கடவாயென்று—அவன்சாற்றக்கேட்டு - அத்திரிதுலமுனியானவர்சொல்லக்கேட்டு—வெற்படர்தோளான்- மலையுடன்பொருதுகின்றபுயத்தையுடையபகீரதன்—நெஞ்சில்- மனதில்—செய்வதாந்தன்மைமேவி-செய்வதானகுணத்தைவிரும்பி— பற்பலதன்செய்கைக்கு - நாநாவிதமானதனதரசத்தொழிலில்—பகீரதனிற்பதானான் - பகீரதவரசனிருப்பதானான். எ-று. (இ-உ-க-ம்) சர்வசங்கற்பப்பரித்தியாகத்தினாற் பவத்துன்பநீங்கி யாத்மசுகமுண்டாமென்பதாம் . . ………………… (உக)

(அ-கை.) செல்வமனைத்துந்துறத்தல், (கலி) சிறிதுநாட்கழிந்தபின்னர்சிறந்ததோர்வேள்
விசெய்து, நெறிவளர்செல்வமுற்றுநீசமுமுயர்வுநாடி, வறியராமறையோர்தெய்வங்கிளை
முதல்வந்தோர்க்கீந்து, பிறிவறுதுகிலொன்றன்றிப் பிறிதிலன்மூன்றுநாளில் ……… …. *

(இ-ள்.) சிறிதுநாட்கழிந்தபின்னர்-சிலகாலம்போனபின்பு—சிறந்ததோர்வேள்விசெய்து-சிறப்பானவோ(ரக்கினிஷ்டோம)யாகஞ்செய்து—நெறிவளர்செல்வமுற்றும்- நீதியாகவளர்ந்தசம்பத்தெல்லாம்—நீசமுமுயர்வுநாடி - பாத்திராபாத்திரம்விசாரித்து— வறியராமறையோர்-தரித்திரரானபிராமணர்கள்—தெய்வம் - தெய்வங்கள்—கிளை-உறவினர்கள்—முதல்வந்தோர்க்கு-முதலாகவந்தவர்களுக்கு—ஈந்து-கொடுத்து—பிறிவறுதுகிலொன்றன்றி- தரித்திருக்கும்வஸ்திரமொன்றேயல்லாமல்--மூன்றுநாளில்-மூன்றுதினத்தில்—பிறிதிலன்-வேறில்லாதவனானான்

(அ-கை.) துறவியாய்த்தனியேசஞ்சரித்தல். (கலி) யாவருமிரங்கயாதுமினிமையாந்தன
துநாட்டை,மேவரும்பகைவர்க்கீந்துவேறறுதுகிலொன்றேனான்,றாவருமுனியாய்ஞான
முனிக்குணஞ்சார்ந்துதன்ன, தோவறுநாடுநீங்கியொருவனாயுலாவலுற்றான் ……………… *

(இ-ள்.) யாவருமிரங்க - சகலருங்கண்ணீர்விட்டழ—யாதுமினிமையாம்-சகலமுமினிமையாகவிருந்த—தனதுநாட்டை - தனதுதேயத்தை—மேவரும் - அடைதற்கரிய — பகைவர்க்கீந்து- சத்துருக்களுக்குக்கொடுத்து—வேறறுதுகிலொன்றேனான் - தரித்திருக்கின்றவோர்வஸ்திரத்தையுடையவனானபகீரதன் — தாவருமுனியாய் ·· நினைத்தற்கரியமுனிவனாய்—ஞானமுனிக்குணஞ்சார்ந்து - ஞானமுனிவர்கள்குணத்தையடைந்து—தன்னது- தன்னுடைய—ஒவறுநாடுநீங்கி- விடுதற்கரியதேயத்தைவிட்டு—ஒருவனாய் - தனியனாக—உலாவலுற்றான் - சஞ்சரிக்கத்தொடங்கினான். எ-று … …… ………………………………………… (உ௩)

(அ-கை.) அகம்பாவநீங்கியாத்மஞான முதயமாய்விஸ்ராந்தியடைதல், (கலி)
முகத்தினாற்பெயராற்கண்டோ ரறிகிலாமூதூர்தோறு, நகத்துயர்வனங்கடோ
றுநண்ணினன்றிரனாகி, யகத்திலேடணைகளெல்லா மவிழ்த்தனன்சிறிதுநாளி,
லிகத்துயர்சாந்தியாற்றன் னிடத்திலைப்பாறினானே ……… …… …… … ……… *

(இ-ள்.) முகத்தினால் - வதனத்தினாலும்—பெயரால்-நாமத்தினாலும்—கண்டோரறிகிலா-பார்த்தவர்களறியாத—மூதூர்தோறும் - பழையவூர்கடோறும்— நகத்து - மலைகடோறும்—உயர்வனங்கடோறும் - உயர்ந்தகாடுகடோறும்—திரனாகி-திரனாய்—நண்ணினன் - அடைந்தான்—அகத்தில் - மனதிலுள்ள—ஏடணைகளெல்லாம் - இச்சைகளனைத்தையும் — சிறிதுநாளில்-சிலதினத்தில்—அவிழ்த்தனன் - வெளிப்படுத்தினான்—இகத்து - இப்பொழுதே—உயர்சாந்தியால்- மேலானசாந்தத்தினால்—தன்னிடத்து - ஆத்மாவினிடத்தில்—இளைப்பாறினான்-விஸ்ராந்

தியடைந்தான். (இ-ரு-க-ம்) சர்வசங்கற்ப பரித்தியாகஞ் செய்தாத்மநிட்டையினு லபரோக்ஷ ஞானம்பெற்றுனென்பதாம் .... (உச)

(அ-கை.) ஞானத்தாற்றேகாபிமான நீக்கிநிற்றல். (கவி) படிமுழு துழல்வானேர் காற்பகைவர்க்குத்தான் முன்னீந்த, கடிநகர்புக்கானெல்லாக் கரணமும்வென் றேன்சென்று, மடியிலாவமைச்சர்மற்றேர்மனையெலாமையமேற்றன், முடி யுடையிவனைநோக்கி யிரங்கினர்முன்புகண்டோர் .... *

(இ-ள்.) படிமுழுதுழல்வான் - பூமியெல்லாஞ்சஞ்சரித்து—ஓர்கால் - ஒருதினம்— பகைவர்க்கு- சத்துருவுக்கு—தான் முன்னீந்த - தான்முன்புகொடுத்த—கடிநகர்புக்கான்-விளக்கமானபட்டணத்திற்புகுந்து—எல்லாக்கரணமும் - சகலகரணங்களையும்—வென்றேன்- சயித்தபகீரதன்—மடியிலாவமைச்சர் - அசத்தியமில்லாதமந்திரிகள்—மற்றேர் - ஏனையோர்கள்—மனையெலாஞ்சென்று - வீடுகடோறும்போய்— ஐயமேற்றன் - பிச்சைவாங்கினன் — முடியுடையிவனைநோக்கி- கிரீடத்தையுடையவிந்தபகீரதவரசனைப்பார்த்து—முன்புகண்டோர்- எதிரேபார்த்தவர்கள்—இரங்கினர் - கண்ணீர்விட்டழுதார்கள். எ-று .... (உரு)

(அ-கை.) ஆத்மபோகத்தாலநாத்மபோக நீங்கிநிற்றல். (கவி) அதிகபூசனைகள் பண்ணியரசுசெய்தருளுகென்றே, பதிபெறுபகைவன்றனும்பகரவும்பலியே யன்றி, யெதிரொருதிரணமேனு மிச்சையற்றிருந்துசின்னுட், புதிதென்றெ வரும்வெம்பப் போயினன்புறத்துந்தானே .... *

(இ-ள்.) அதிகபூசனைகள்பண்ணி - மிகுந்தவாராதனைகளைச்செய்து—அரசுசெய்து - அரசாட்சிசெய்து—அருளுகென்று - இரட்சிப்பாயென்று—பதிபெறு - (இவன்) பட்டணத்தைப் பெற்றிருக்கின்ற—பகைவன்றனும் - சத்துருவும்—பகரவும் - சொல்லவும் — பலியேயன்றி- பிச்சையேயல்லாமல்—எதிரொருதிரணமேனும் - வேறெருதுரும்பையாவது— இச்சையற்றிருந்து- விரும்பாமலிருந்து—சின்னுள் - சிறிதுநாள்—புதிதென்று - அதிசயமென்று—எவரும்வெம்ப - யாவரும்வாட்டத்தையடைய—தானே- சுயமாகவே—புறத்தும்- புறநாட்டினும்—போயினன்-சென்றனன். எ-று. (இ-உ-க-ம்) சமாதியனுபவங்கைகூடினதென்பதாம்.(உசா)

(அ-கை.) சமாதிஞானநீங்கிச் சகசஞானமுதிக்கும்பொருட்டாசிரியரோதிருஷ்டிவரும் பிரமாநந்தலீலையாகச் சஞ்சரித்தல். (கவி) சாந்தியேவடிவாய்ப்புந்தி தளர்வின்றியின்ப மெய்தி, காந்திசேர்தன்சொரூபக் கண்ணிலேவிநோதமேவிப், போந்திசையதனில்வந்த குருவினைப்புகழ்ந்துசேர்ந்து, தாந்திரிவுற்றரன்னர் சைலத்தில்வனத்திநாட்டில்... ... . *

(இ-ள்.) சாந்தியேவடிவாய் - சாந்தமேஸ்வரூபமாகி—புந்திதளர்வின்றி - மனதுதளர்ச்சியில்லாமல்—இன்பமெய்தி- ஆநந்தமடைந்து—காந்திசேர்- ப்ரகாசம்பொருந்திய—தன்சொரூபக்கண்ணில் - தனதாத்மதிருஷ்டியில்—விநோதமேவி - விளையாட்டையடைந்து— போந்திசையதனில் - செல்லப்பட்டதிக்கில்—வந்தகுருவினை- வரப்பட்டதிரிதுலராகியசற்குருவை—புகழ்ந்துசேர்ந்து - தோத்திரஞ்செய்துகூடி—சைலத்தில் - மலைகளிலும்—வனத்தில-கானகங்களினும்—நாட்டில்-நாடுகளிலும்—அன்னர்திரிவுற்றர்-அவர்கள்சஞ்சரித்தார்கள். எ-று.(உஎ)

(அ-கை.) சகசஞானமுதயமாதல். (கவி) குருவுமாணுக்கன்றனுங்குறைவறுசமத்தைமேவி, யிருவருநிலைமையொப்போர் விநோதத்தாலாக்கைதாங்கிக், கருவுடலிருந்தென்போ யென்காமித்தபடியுலாவி, யொருமையிலுள்ளவாற்றலுறைகெனவுறைக்கவுன்னி .... *

(இ-ள்.) குருவும் - ஆசாரியரும்—மாணுக்கன்றனும் - சீடனும்—குறைவறு- பூரணமான—சமத்தைமேவி - சமத்துவத்தையடைந்து—இருவரும் - இரண்டுபேரும்— நிலைமையொப்போர்- குணத்திற்சமமானவர்களாய்—விநோதத்தால் - விளையாட்டினுல்—ஆக்கைதாங்கி-சரீரத்தைச்சுமந்து — கருவுடலிருந்தென் - கருப்பத்திலுண்டாகியசரீரமிருந்தென்ன — போயென்-போயென்ன— காமித்தபடியுலாவி - இச்சித்தபடிசஞ்சரித்து — ஒருமையில் - ஒற்றுமையாக—உள்ளவாற்றல் - உள்ளபடி — உறைகென - இருக்கக்கடவதென்று — உறைக்கவுன்னி- நன்றுயாலோசித்து. எ-று .... (உஅ)

(அ-கை.) தமதுசிதாநந்தபோகத்தாற் றேவபோகமுந்திரணமாகநீங்குதல். (கவி.) துன்புறுவாநந்தத்தா சுகத்தினுமத்திமத்து, மின்புறுர்தனங்கண்மாதரியைநிதியிருநாற்செல்வ, முன்புறவிரும்பிச்சித்தர் தந்தவைமோகமின்றி, மென்புலொத்தொழிந்தார்வேறேர் மேதகுநாட்டிற்சென்றர் .... ☆

(இ-ள்.) துன்புறு - துக்கமடையாத—ஆநந்தத்து - சுகத்திலும் — அசுகத்தும்- துக்கத்திலும்—மத்திமத்தும் - நடுவிலும்—இன்புறுர்- சுகமடையாதவர்களாய்—தனங்கள்-திரவியங்

களும்—மாதர் - ஸ்திரீகளும்—இசைநிதி - இசைந்தசெல்வங்களும்—இருநாற்செல்வம்-அணிமாமுதலியவஷ்டவயிஸ்வரியங்களும்—முன்புறவிரும்பி - முன்பாகவிருப்பமுற்று—சித்தர்தந்தவை - சித்தர்கள்கொடுத்தவைகள்—மோகமின்றி - ஆசையில்லாமல்—மெய்ப்புலாத்து- மிருதுவானதிரணத்துக்கொப்பாகி—ஒழிந்தார் - விட்டுநீங்கி— வேறோர் - மற்றொரு—மேதகுநாட்டில்-மேன்மையானதேயத்தில்—சென்றார் - போயினார்கள். எ- று. (இ-௩-௧-ம்)சகசசமாதிகைகூடினதாம் ... . (௨௯)

(அ-கை.) ஸ்வரூபசாக்ஷாத்காரமாய் விளங்குதற்றெரிவிக்கும்பொருட் டரசாங்கஞ்செய்யும்படி பிராரத்தகன்மங்கூட்டுவித்தல். (கவி) மைந்தனில்லாதவந்தமாநகர்மன்னனாவி, நந்தலுமமைச்சரெல்லாநலங்கொண்மன்னவனொன்று,சிந்தனைசெய்யுங்காலைச்சிறுபலிமுனிவனை, சுந்தரமன்னைநோக்கிச் சுடர்முடிவேந்தனுக்க .... *

(இ-ள்.) மைந்தனில்லாத - புத்திரனில்லாத— அந்தமாநகர்மன்னன் - அந்தப்பெரியபட்டணத்தரசன் — ஆவிநந்தலும் - மரித்தமாத்திரத்தில் — அமைச்சரெல்லாம் - மந்திரிகளனைவரும்—நலங்கொள் - நன்மையையுடைய—மன்னவனொன்று - அரசனெவனென்று—சிந்தனைசெய்யுங்காலை- யோசிக்குங்காலத்தில்—சிறுபலி-அற்பமானபிச்சையையுடைய—முனிவனை- முனிவனாகிய—சுந்தரமன்னைநோக்கி- அழகையுடையபகீரதவரசனைப்பார்த்து—சுடர்முடி-ப்ரகாசிக்கின்றகிரீடத்தையுடைய—வேந்தனுக்க - அரசனுகச்செய்ய. எ-று .... (௩௰)

(அ-கை.) முன்னோட்டோர் விருப்பப்படியதற்குமரசனாதல். (கவி) பகீரதனரசனாகிப்பலபெருஞ்சேனைசூழ, மகிதலம்புரத்தல்கேட்டுவந்தனர்பண்டைநாட்டோர், விகிதமாய்நீமுன்வைத்தவெம்முடைவேந்தன்வீந்தா,னகிலருங்களைகண்காணேமரசனீயாதல்வேண்டும்

(இ-ள்.) பகீரதன் - பகீரதனானவன்—அரசனாகி - இராசாவாகி— பலபெருஞ்சேனைசூழ- அநேகம்பெரிதானபடைகள்சூழும்படியாக—மகிதலம்புரத்தல் - பூமிபாலனஞ்செய்வதை—பண்டைநாட்டோர் - பழையபட்டணத்தோராகிய(மந்திரிமுதலியவர்கள்)—கேட்டுவந்தனர்- கேட்டுவந்து—விகிதமாய் - கிரமமாக—நீமுன்வைத்த - நீர்முன்புவைத்த— எம்முடைவேந்தன்-எங்களுடையவரசன்—வீந்தான் - இறந்தான்—அகிலரும் - நாங்களனைவரும்—களைகண்காணேம்- ஆதரவுகாண்கிலேம்—நீயரசனாதல்வேண்டும்- நீரேயிராசாவாகவேண்டும். எ-று. (௩௧)

(அ-கை.) உபசாந்தனாயிருந்தரசுசெய்தல். (கவி.) விருப்பறத்தானேவந்தவெறுக்கையைவெறுக்கைநன்றன், றொருப்படல்வேண்டுமென்றே யுள்ளன்பால்வேண்டக்கண்டு, திருப்பொலிமார்பன்சென்றுதிண்புவிசேரவாண்டா, னிருப்புழிமௌனஞ்சாந்தி சமமெய்தியிராகமின்றி.. *

(இ-ள்.) விருப்பறத்தானேவந்த- ஆசியாமல்வலியவந்த—வெறுக்கையை- செல்வத்தை—வெறுக்கைநன்றன்று- வெறுக்குதனல்லதன்று—ஒருப்படல்வேண்டுமென்று-சம்மதிக்கவேண்டுமென்று(நினைத்து)—உள்ளன்பால் - மனக்களிப்பினால்—வேண்டக்கண்டு- பிரார்த்திக்கப்பார்த்து—திருப்பொலிமார்பன்சென்று - அழகுவிளங்காநின்றமார்பையுடையபகீரதவரசன்போய்—திண்புவிசேரவாண்டான் - திடமானபூமிமுழுவதையுமாண்டு—இருப்புழி- இருக்கும்போது—மௌனம் - மகாமௌனத்தையும்—சாந்தி- உபசாந்தத்தையும்—சமமெய்தி- சமத்துவத்தையுமடைந்து—இராகமின்றி - ஆசையில்லாமல். எ-று. (இ-௩-௧-ம்)துறந்தமனவல்லபத்தாற்பிரமசாக்ஷாத்காரசுகமாய் விளங்கினனென்பதாம்.. (௩௨)

(அ-கை.) இரண்டாம்வினாவுக்குத்தரங்கூறல். (கவி) மச்சரமின்றிவந்ததொழிலொன்றின்வழியினின்று, மெச்சியவியப்பிலாதோன்மிகுந்தபல்லாண்டுநோற்று, அச்சமிறவத்தாற்கங்கைகொணர்ந்துதொல்பிதாக்களுய்ய, விச்சகமிசையே கீர்த்தியீறறநிறுத்தினனே....*

(இ-ள்.) மச்சரமின்றி - மாச்சரியமில்லாமல் — வந்ததொழில் - வந்தவிபகாரங்களின்—ஒன்றின்வழியினின்று - ஒருமார்க்கத்திலிருந்து—மெச்சிய - துதிக்கப்பட்ட—வியப்பிலாதோன்-அதிசயமில்லாதவனாய்— தொலபிதாககளுய்ய - பாட்டன்மார்கள்கரையேற — மிகுந்தபல்லாண்டுநோற்று - மிகுந்தவநேகவருஷந்தவஞ்செய்து—அச்சமிறவத்தால்-நிந்தனையற்றதபசினால்—கங்கைகொணர்ந்து - தேவநதியைகொண்டுவந்து — இச்சகமிசை - இந்தப்பூமியின்மேல்—கீர்த்தியீறற - புகழழியாமல்—நிறுத்தினன் - ஸ்தாபித்தான். எ-று. (இ - ம்) பிதாமகன்முதலிய சிவர்களுய்யும்பொருட்டுத் தபோமனவல்லமையாற் கங்கையைக் கொண்டுவந்தானென்பதாம்.. (௩௩)

பகீரதன்கதை-முற்றிற்று. ஆக்கதை-௩௯இ- கவிதை (௩௬௱௪.)

சிகித்துவசன்கதை.

(அ-கை.) முற்கதையின் முன்புறப்பற்றையு மதனுலகப்பற்றையுநீக்கிப் பின்றனது முயற்சியினாற் பிரத்யக்ஷாத்கார மடைந்ததைத்தெரிவித் திவ்வனுபவம் ப்ரதிபந்த சேடத்தினாற் றுணடைவதற் கரியதாதலுமநேகவுபாயங்களாற் போதிக்குமாசாரியர் வல்லமையினாலுண் டாமென்பதை யறிவிக்குநிமித்தஞ் சிகித்துவசன்கதையை நிரூபிக்கிறார் .... *

(அ-கை.) மனதைக்களைத்துச் சிகித்துவசனைப்போல வுணர்விற் சுகிப்பாயெனல்.
(கவி, வேறு. வகிர்த்துநிமிர் மனமென்னு மாப்பறவை தனைமுன்ன மாற்றியோட்
டிச், சிகித்துவசன்றனைப்போலச்சாந்தனாயுன்னிடத்தேசெறிவாயென்னச், சுகித்து
ணர்வினின்றுளவச் சிகித்துவசனாயா சொல்வாயெல்லாஞ், சகித்துணர்வு மேன்
மேலுநிறைவதற்கென்றவன்கேட்பத்தவனுஞ்சொல்வான் .... *

(இ-ள்.) வகிர்த்துநிமிர்மனமென்னும் - பகுத்தெழுவதானமனமென்கின்ற—மாப்பறவைதனை - பெரியபட்சியை—முன்னமாற்றியோட்டி - முன்னீக்கித்துரத்தி—சிகித்துவசன்றனைப்போல - சிகித்துவசவரசனைப்போல—சாந்தனாய் - உபசாந்தமுடையவனாய்—உன்னிடத்து - உனதாத்மஸ்வரூபத்தில் — செறிவாயென்ன - மூழ்குவாயென்று (வசிஷ்டமுனி) சொல்ல—சுகித்துணர்வினின்றுள - ஆநந்தானுபவபோதமாயிருந்துள்ள—அச்சிகித்துவசனார் - அந்தச்சிகித்துவசனானவன்யார்—ஐயா - ஆசிரியரே—எல்லாஞ்சகித்துணர்வு - அனைத்தையுந்தாங்காநின்றஞானமானது—மேன்மேலும் - மேலுமேலும்—நிறைவதற்கு - பூரணமாவதற்கு—சொல்வாயென்று - அநுக்கிரகிப்பாயென்று—அவன்கேட்ப - அவ்விராமன்கேட்க—தவனுஞ்சொல்வான் - தவத்தையுடையவசிஷ்டமுனியுஞ்சொல்லத்தொடங்கினார். எ-று .... (க)

(அ-கை.) சிகித்துவசனிலக்கணங்கூறல். (கவி) துவாபரமாமுகத்துமுதலுண்டானோனே
ழுமனுத்துஞ்சுமெல்லைத், திவாகரனேர்மாளவதேசத்திறைவன் சிகித்துவசன் செங்கோல்
வேந்த, னவாமுதறீக்குணமில்லோனுதாரமுதனற்குணங்களனைத்துமுள்ளோன், விவாத
மறுமோனத்தோன்சமதமமாங்குணநிறைந்தோன்மிகவுநல்லோன் .... *

(இ-ள்.) துவாபரமாமுகத்து - துவாபரயுகத்தில்—முதலுண்டானோன் - முதலிற்பிறந்தவன்—ஏழுமனுத்துஞ்சுமெல்லை - ஏழுமனுக்களிறந்தகாலத்தில்—திவாகரனேர் - சூரியனுக்கொப்பான—மாளவதேசத்திறைவன் - மாளவதேயத்துக்கரசன்—சிகித்துவசன் - சிகித்துவசனென்னுநாமத்தையுடையவன் — செங்கோல்வேந்தன் - நீதியையுடையவரசன் — அவாமுதல் - ஆசைமுதலாகிய—தீக்குணமில்லோன் - துற்குணமில்லாதவன—உதாரமுதல் - கொடைமுதலிய—நற்குணங்களனைத்துமுள்ளோன் - சற்குணங்களியாவுமுள்ளவன்—விவாதமறு - சொற்கலகமற்ற—மோனத்தோன் - மோனத்தையுடையவன்—சமதமமாம் - சமமுந்தமமுமாகிய—குணநிறைந்தோன் - குணங்கணிறைந்தவன்—மிகவுநல்லோன் - மிகவுநன்மையையுடையவன். எ-று.

(அ-கை.) மனைவியோடுஞ்சுகித்திருத்தல். (கவி) சூடாலையெனுங்கன்னிச்சுராட்டிரமன்
னவனளித்ததோகைபோலவாள், வீடாதநற்குணத்தாற்றனையொப்பாளவளையவன்விவா
கஞ்செய்தான், வாடாதநினைவொன்றிப்பிரிவின்றிச்செய்தொழில்கண்மாறுபாடற், றீடா
னபலகலைக்கும்வல்லவராயிருவருமொத்தினிதுவாழ்ந்தார் .... *

(இ-ள்.) சுராட்டிரமன்னவன் - சுராட்டிரதேயத்தரசன் — அளித்த - பெற்ற—சூடாலையெனுங்கன்னி - சூடாலையென்னுந்தவப்பெண்—தோகைபோல்வாள் - மயிலுக்கொப்பானவள்—வீடாதநற்குணத்தால் - கெடாதசற்குணத்தினால்—தனையொப்பாள் - தனக்குத்தானேசமானமானவள்—அவளை - அச்சூடாலையை—அவன் - அச்சிகித்துவசன் — விவாகஞ்செய்தான் - கலியாணஞ்செய்தான்—வாடாதநினைவொன்றி - தளர்வற்றமனமொத்து—பிரிவின்றி - பிரிவில்லாமல்—செய்தொழில்கள் - செய்யப்பட்டகிரியைகள்—மாறுபாடற்று - வேறுபாடில்லாமல்—ஈடானபலகலைக்கும் - பெருமையுள்ளசகலகலைஞானங்களுக்கும்—வல்லவராய் - வல்லமையுள்ளவர்களாய் — இருவருமொத்து - இருவர்மனமுமொன்றாய் — இனிதுவாழ்ந்தார் - இனிமையுடன்வாழ்ந்தார்கள். எ-று .... (ஙு)

(அ-கை.) சனாவருமென்றதற்கஞ்சுதல். (கவி) ஈருடலுக்கோருயிர்போலிருவருஞ்
சேர்ந்திளமைநலமினிதுதுய்த்தார், சீருடையவருடங்கள்பலவகையே செல்லவிடநர்

செல்லலோடு, மோருறுதியிலா விளமையுடைந்தகுடநீர்போல வொழுகிப் போக;
நீருறுசெந்தாமரைமேற்பனியிடிபோற்சரைவந்துநேர்ந்ததன்றே.................. *

(இ-ள்.) ஈருடலுக்கு - இரண்டுசரீரத்துக்கும்— ஒருயிர்போல் - ஒருபிராணனைப்போல—இருவருஞ்சேர்ந்து - இரண்டுபேருங்கூடி — இளமைநலம் - எவ்வனசுகத்தை — இனிதுதுய்த்தார் - இன்பமாகப்புசித்தார்கள்—சீருடையவருடங்கள் - சிறப்பையுடையவருஷிங்களானவை—இவ்வகையே - இப்படியே—எல்லையறச்செல்லலோடும்- அளவின்றிநீங்கினவளவில்—ஒருறுதியிலாவிளமை-ஒருநிச்சயமுமில்லாதவெவ்வனமானது—உடைந்தகுடநீர்போல-உடைபட்டகடசலத்தைப்போல—ஒழுகிப்போக -ஓடிப்போக — நீருறுசெந்தாமரைமேல் - புனலினுள்ளகோகனகத்தின்மேல்—பனியிடிபோல் - பனிக்கட்டியைப்போல — சரைவந்துநேர்ந்தது - மூப்புவந்தெதிரிடும். எ-று.. (சு)

(அ-கை.) விஷயசுகானுபவநீங்குமெனல். (கவி) கரதலத்துநீரதுபோனிற்றநும்வாணாண்மெல்லக்கழன்றுசெல்லத், திரண்மழைநாட்சுரைக்கொடிபோற் றீராமலொன்றுமேதீர்க்கமாக, விரவுசரற்காலத்திலாற்றுநீர்போலழகுவிளைவிலோடப், புரமுறுநற்சுகங்களெலாஞ்சிலைவிடுத்தசரங்களைப்போற்போயிற்றன்றே.... .... *

(இ-ள்.) கரதலத்துநீரதுபோல் - உள்ளங்கைசலத்தைப்போல—நிற்றநும்வாணாள்-நாடோறுமாயுளானது—மெல்லக்கழன்றுசெல்ல - மிருதுவாகக்கழிந்துபோக—திரண்மழைநாள் - மிகுந்துவருஷிக்குங்காலத்திலுள்ள — சுரைக்கொடிபோல் - சுரைக்கொடியைப்போல—தீராமலொன்றுமே - நீங்காதவோராசையே—தீர்க்கமாக - விசாலமாக — விரவுசரற்காலத்தில் - பொருந்தியசரற்காலத்தில்—ஆற்றுநீர்போல் - நதியின்சலத்தைப்போல— அழகுவிளைவிலோட - எழிலானதுசீக்கிரத்திற்போக—புரமுறு - சரீரத்திற்பொருந்திய — நற்சுகங்களெலாம் - நல்லின்பங்களனைத்தும்—சிலைவிடுத்த - வில்லைவிட்டுநீங்கின—சரங்களைப்போல்- அம்புகளைப்போல—போயிற்று - செல்லும். எ-று. (இ-ரு-க-ம்) சரைவரின் சுகானுபவங்களனைத்து நீங்கி மரணமுண்டாமென விதிவிராசை தோற்றிற்றென்பதாம் மேல் - எய - கவிதையில் சரையாலே யாக்கைநைந்தாற் பசத்தமாலறவனமே போகலாமிளமைநாட் பான்மை யன்றுமென்றதனாலும் - எய்க - கவியில் படாமூலை நீசிறியையாலுடன்வருதற் காகாவென்றதனாலுமிங்ஙனமிறந்தகாலத்தை யெதிர்காலமாகக்கூறினதெனக்கொள்க...................................... (ரு)

(அ-கை.) நித்தியசுகத்தைக்கொடுக்கின்ற ஞானநூலே சநநமரணத்தை நீக்குமென்றுலோசித்தல். (கவி) கதலியுறுகருப்போல நிராசையைத்தந்ததுபயன்றீர் காரியந்தா, னிதமுறவாங்கவர்நினைவாரொத்தையடைந்துள்ளமீண்டெங்கும்வீழா, ததுமிகநன்றவ்வகையானதுகிடையாதிம்மோகத்தழுந்துவார்க்குத், திதமுறவத்தியாத்துமதத்துவநூலேபிறவிநோய் தீர்ப்பதன்றே................. .... *

(இ-ள்.) கதலியுறுகருப்போல - வாழையானதடைந்தகருப்பத்தைப்போல — பயன்றீர் - ப்ரயோசனமற்ற—காரியந்தான் - தொழிலானது—நிராசையைத்தந்தது - விராகத்தையடைந்தது—இதமுற - உரிமையாக—ஆங்கவர்நினைவார்- அவ்விடத்தவர்கள்சிந்திப்பார்கள்—எத்தையடைந்து - எதைப்பெற்று—உள்ளம் - மனமானது—மீண்டெங்கும்வீழாது- திரும்பயாதிலுஞ்செல்லாததோ—அதுமிகநன்று - அதுமிகவுநன்மையாம் — இம்மோகத்தழுந்துவார்க்கு - இச்சமுசாரத்தின்மூழ்குபவர்களுக்கு — அவ்வகையானதுகிடையாது - அப்பகுப்பருமையாம்—திதமுற - திரமாக—அத்தியாத்துமதத்துவநூலே - அத்தியாத்துமஞானசாஸ்திரமே—பிறவிநோய்தீர்ப்பது - சநநவியாதியைநீக்கு(மவுஷிதமாம்) எ-று.................... (கூ)

(அ-கை.) சாதுசங்கத்துடன்கூடியாத்மவிசாரஞ்செய்தல். (கவி) ஆற்றுமதத்துவஞானமொன்றுனுமலதுபிறப்பறுதென்றெண்ணி, யூற்றமுறுதற்பரராயதின்மனமாயதிற்சேர்ந்தவுயிராய்நித்தஞ், சாற்றுமதினிட்டையரா யதற்கடுத்தோர் சார்வாய்ச்சான்றோர்கள் பூசைக்,கேற்றசெயலாற்சிறிதுமிடைவிடாப்பரிசயமாயிரண்டுபேரும்.................. .... *

(இ-ள்.) இரண்டுபேரும்-இவர்களும்—ஆத்துமதத்துவஞானம்-ஆத்மதத்வஞானமாகிய—ஒன்றுனுமலது- ஒன்றினாலேயல்லாமல்—பிறப்பறுதென்றெண்ணி- (மற்றொன்றிற்)சநநநீங்காதென்றுசிந்தித்து—ஊற்றமுறுதற்பரராய்-நிலைபெற்றவாத்மஞானிகளாயும் —அதின்மனமாய்- அதின்மனதுடையவர்களாயும்— அதிற்சேர்ந்தவுயிராய் - அதையடைந்தபிராணனையுடையவராயும்—நித்தம் -எப்போதும்—சாற்றும்- சொல்லப்பட்ட—அதினிட்டையராய்-அதனிட்டையையுடையவராயும்—அதற்கடுத்தோர்சார்வாய்-அதற்கடுத்தசத்துக்கள்சார்பையுடை

யவராயும்— சான்றோர்கள் - அறிஞர்கள் — பூசைக்கேற்றசெயலால் - ஆராதனைக்கடுத்தசெய்கையினால்—சிறிதுமிடைவிடா- சற்றுமிடைவிடாமல்—பரிசயமாய்-பழக்கமுள்ளவர்களாயும்.

(அ-௯௪.) சூடாலைதனித்துச்சூட்சுமவிசாரஞ்செய்தல். (கவி) தம்மிற்றமுணர்ந்துள ராயதற்கடுத்தவாசாரந்தரித்துநின்றார், விம்முற்றமகிழ்ச்சியராய் விளங்கினார்பின்பந் தவிவேகமங்கை,யம்மைக்காநலலபதமொழுங்கினாற்பே ரறிஞரருளிச்செய்த,செம் மைச்சாத்திரப்பொருள்க டரிக்கலாமளவறிந் திருந்தக்கேட்டு.…… ……… ……… ✻

(இ-ள்.) தம்மிற்றமுணர்ந்துளராய்-தமக்குட்டாங்களறிந்தவர்களாயும்—அதற்கடுத்த-அதற்கடுத்ததான—ஆசாரந்தரித்து - ஒழுக்கத்தைப்பூண்டு—நீனாள்- நெடுங்காலம்—விம்முற்றமகிழ்ச்சியராய் - மிகுந்தகளிப்புள்ளவர்களாயும்—விளங்கினார்- ப்ரகாசித்தார்கள்—பின்பந்தவிவேகமங்கை - பின்னந்தவிவேகப்பெண்ணான சூடாலையானவள்—அம்மைக்காம் - மறுமைக்காகிய — நல்லபதமொழுங்கினால் - நன்மையானபதக்கிரமத்தினால்—பேரறிஞர்- மூதறிஞரானவர்கள்—அருளிச்செய்த - அனுக்கிரகித்த—செம்மைச்சாத்திரப்பொருள்கள்- செவ்வையான சாஸ்திராத்தங்களை — தரிக்கலாமளவு - தரிக்கத்தகுந்தமாத்திரம் — அறிந்து - தெரிந்து—திருந்தக்கேட்டு - நன்றாகக்கேட்டு. எ-று. (இ-௬-௧-ம்) இருவருமாத்மவிசாரஞ் செய்வதிற்றீவரமாகச்சூடாலைதனித்தனுபவமாய் விசாரிக்கத்தொடங்கினதாம் …. ….. ……… ……… (அ)

(அ-௯௫.) ஆத்மாவுமனத்தைமறைக்குமோகமுமனத்தையுடையவனுமனத்துஉதிக்குமிடமுமாகியநான்கையும் விசாரிக்கத்தொடங்கி முன்னாத்மஸ்வரூபத்தைவிசாரித்தல். (கவி) எள்ளுருவியாபாரம்வியாபாரமில்லாமை யிரண்டுமின்றி, வெள்ளிதாய்விளங்கியநற்புத்தியாற்சூடாலைவிசாரிக்கின்ற, டெள்ளியேதன்னைமுதனோக்கிநானென் றெத்தைச்செப்புகின்றோம்; முள்ளாமிம்மோகமாருடைய தெவ்வாறெங்குதித்ததெத்தால்…. ……… ……… ……… ✻

(இ-ள்.) எள்ளுருவியாபாரம் - நிந்தியாதகாரியமும்—வியாபாரமில்லாமை-காரியமில்லாமையும்—இரண்டுமின்றி - இரண்டுமில்லாமல்—வெள்ளிதாய்விளங்கிய - தாவள்யமாய்விளங்கிய—நற்புத்தியால் - நல்லறிவினால்—சூடாலைவிசாரிக்கின்றாள்- சூடாலையானவள்விசாரணைசெய்கின்றாள் — தெள்ளியே - தெளிவாக — தன்னைமுதனோக்கி - ஆத்மாவைமுன்னேபார்த்து—நானென்றெதைச்செப்புகின்றோம் - யானென்றெதைச்சொல்லுகின்றோம்—உள்ளாறு - மனதினீங்காத—இம்மோகம்- இந்தமோகமியாது—ஆருடையது-இதியாருக்குரியது—எவ்வாறு-எந்தப்ரகாரம்—எத்தால்- யாதினால்—எங்குதித்தது-எவ்விடத்திலுண்டானது. எ-று…… (௯)

(அ-௯௬.) இந்திரியங்களைக்கண்டு தேகத்தையு மனதைக்கண்டிந்திரியங்களையுநியதிகளைதல். (கவி) முதலானவுடல்சடமாமூகமாநானென்று மொழிபலாகா, விதமானகருமஞானேந்திரியங்கள்சடமாகிவெவ்வேறாகு, மதனானன்றாகுந் தடியினாலோடுகளை யசைக்குமாபோற், றிதமாகாமனத்தாலேயிவையினைந்துஞ்சேட்டைசெய்யுமன்றே ……… …. ✻

(இ-ள்.) முதலானவுடல் - முன்னே(தோற்றுவ)தானதேகத்தை(நா)னென்னில்—சடமாமூகமாம்-சடமாகவுமூடமாகவு(மிருப்பதனால்)—நானென்றுமொழியலாகா-நானென்றுரைக்கத்தக்கதன்று—விதமான-(இவ்)விதமான(தேகத்தையறிந்தசைப்பிக்கின்ற)— கருமஞானேந்தியங்கள்-பத்திந்திரியங்களையு(நானென்னில்)—தடியினாலோடுகளையசைக்குமாபோல்-தண்டினாலோட்டை(யசைக்கவது)தசைவதுபோல—திதமாகாமனத்தால்-சபலசித்தத்தினால்— சடமாகிவெவ்வேறாகும்-மூடமாய்த்தனித்தனியேயிருக்கின்ற—இவையினைந்தும்-இப்பத்திந்திரியங்களும்—சேட்டைசெய்யும்-அசைகின்றன—அதனானன்றாகும்-அதனானல்லவாம். எ-று. (௰)

(அ-௯௭.) புத்தியைக்கண்டு மனதையு மகங்காரத்தைக்கண்டு புத்தியையு நியதிகளைதல். செறிதருசங்கற்பமெனுஞ்சத்தியுளதாய்ச்சடமாஞ்சித்தந்தானு, மெறிகவணுங்கற்போல புத்தியினிச்சயத்தாலேயியக்கமெய்து, மறிவுறுபுத்தியுஞ்சடமாமறுதியிட்டேவடிவாயகங்காரத்தா, னெறியுறுசெய்கையையுறுமாற்பள்ளத்தாலோடுநதிநீர்கள்போல். ……. ✻

(இ-ள்.) செறிதருசங்கற்பமெனுஞ்சத்தியுளதாய் - இந்திரியங்களையசைப்பிக்குமிகுந்தசங்கற்பமென்கின்றசத்தியையுடையதாகிய—சித்தந்தானும் - மனதை (நானென்றலது) வும்—கவணாலெறிகற்போல - கவண்டினால்வீசச் (செல்லுங்) கல்லைப்போல—புத்தியினிச்சயத்தால்-புத்தி நிச்சயத்தினால்—இயக்கமெய்துஞ்சடமாம்-அசைகின்றசடமாகு (மதனாலம்மனமுநானல்லாம்)—அறுதியிட்டேவடிவாயறிவுறுபுத்தியும்-(மனதையசைப்பிக்கின்ற) நிச்சயித்தறிவதேயுருவமாயுள்ளபுத்தியை(நானென்றலது)வும்—பள்ளத்தாலோடுநதிநீர்கள்போல்-பள்ளத்திற்செல்கின்றவாற்றின்சலம்போல—அகங்காரத்தானெறியுறுசெய்கையையுறும்-அசங்காரத்தொழின்மார்க்கத்திற்செல்லுகின்ற—சடமாம்-சடமாகு(மதனால்நானப்புத்தியுமல்லவாம்)எ-று. ௰௧

(அ-கை.) சீவனைக்கண்டகங்காரத்தையும் ப்ரத்யேகாத்மாவைத் தரிசித்துச்சீவனையுநியமி க்கிறதல். (கவி) தீதகங்காரஞ்சடமாய்ப்பயனிலியாயவசமாய்ச்சீவனாலே, சாதமுறுமிது சிறுவர்மயக்கத்திற்பேய்தோன்றுந்தன்மைபோலா, மோதியசீவனுந்தொழிலேவடிவா ய்க்காற்றுருவாகியிதயமுற்று,மேதகையசுகுமாரமாயுள்ளேமற்றொன்றொன்மேவியாழும்

(இ-ள்.) தீதகங்காரம் - (புத்தியையசைப்பிக்கின்ற)தீயவகங்காரத்தை(நானென்றல்)— பயனிலியாய் - ப்ரயோசனமில்லாததாய்—அவசமாய் - பராதீனமாய்—சிறுவர்மயக்கத்தில்- குழந்தைகளின்பிரமையில்—பேய்தோன்றுந்தன்மைபோல் - பிசாசந்தோற்றும்விதத்தைப் போல—சீவனாலேசாதமுறுமிதுசடமாம் - சீவனாற்றோற்றுகின்றவிதுசடமா (மாதலாலிவ்வ கங்காரமுநானல்லவாம்)—ஒதியசீவனும்-(அகங்காரத்தையசைக்குமென்)றுரைத்தசீவ(னுமெ ன்னிலது)வும்—தொழிலேவடிவாய் - கிரியையேயபடிவமாய்—காற்றுருவாகி - பிராணாகாரமா ய்—உள்ளே - அகத்தில்—இதயமுற்றுமேதகையசுகுமாரமாய் - இருதயத்துற்றுமிகவுமிருது வா(யிருந்தும்)—மற்றொன்றொன்மேவிவாழும் - ப்ரத்யேகாத்மாவாற்சுகிக்கு (மதனாலச்சீவனு நானல்லவாம்) எ-று. [ப-ம்] சீவனைச்சலனாகாரமாயிருத்தலிற் காற்றுருவென்றும் அந்தக்கர ணப்ரதிபலனாயிருத்தலி னிதயமுற்றென்றும், சுழுத்தியிலேலாய்ந்திருத்தலின் சுகுமாரமென்று ங்கூறினார் (இ-ஙு-க-ம்) சித்தைத்தானெனக்கண்டு சீவன்முதலியவற்றைத் தானல்லவெனத்தள் ளியதாம் - நானன்றென்பதை மற்றநான்கிடத்துங்கூட்டுக .... (௰௨)

(அ-கை.) ஆத்மதரிசனமா யதனாற்சீவன்விளங்கினதறிதல். (கவி) ஆத்துமதத்துவவறி வென்றறிந்தேனீதறிபொருளாலழுக்குமேவா, தேற்றுமெனதுருவமா யசிரணமாஞ்சித் துருவாற்சீவன்வாழுந், தோற்றுபொருள்களின்மயங்குஞ்சித்துருவாற்சீவன்வாழ்தொட ர்ச்சிகூறிற், காற்றதனுன்மணம்போலும்பள்ளத்தாநீர்போலுங்கருதுங்காலே ....*

(இ-ள்.) ஆத்துமதத்துவவறிவென்று- (சீவனைச்சுகிப்பிக்கின்றவிதுவே) சுவாத்மாவாகிய வுண்மைஞானமென்று—அறிந்தேன்- உணர்ந்தேன்—ஈது - இவ்வறிவானது—அறிபொருளா லழுக்குமேவா - விஷயங்களாற்களங்கமடையாமல்—தேற்றுமெனதுருவமாய் - தெளியுமென தாத்மஸ்வரூபமாய்—அசிரணமாஞ்சித்துருவால் - நித்தியமானஞானஸ்வரூ(பமாமித)னால்— சீவன்வாழும் - சீவன்சீவிக்கும்—சித்துருவால் - இஞ்ஞானஸ்வரூபத்தினால்— தோற்றுபொரு ள்களின்மயங்கும்- விஷயவஸ்துக்களிற்பிரமிக்கின்ற—சீவன்வாழ்தொடர்ச்சிகூறில்- சீவன்சீவி க்குந்தொடர்பைச்சொல்ல—கருதுங்கால்லில் - நினைக்குமிடத்து—காற்றதனுன்மணம்போலு ம்-வாயுவினால்வரும்வாசனைபோலவும்—பள்ளத்தாநீர்போலும்- பள்ளத்திற்றங்குஞ்சலம்போ லவுமாம். எ-று. (இ-ம்) ஆத்மாசுயம்பிரகாசமெனவுமதனாற்சீவன்விளங்குமெனவுமறிந்ததாம்.

(அ-கை.) மோகவிலக்கணமு மஃதுடையவனையும் விசாரித்தல். (கவி) பொய்யாகிச்சட மானவறிபொருளின்புணர்ச்சியாற்போதரூப, மையானசடமாகிப்பெருநீருட்கனல்போ ற்றன்வடிவைவிட்டும், மெய்யானசித்துருவமிப்படியே யறிபொருளைமேவலாலே, யை யோபொய்யாய்ச்சடமாமறிவினாலறிவிக்கவறிந்ததன்றே.. *

(இ-ள்.) பொய்யாகி - மித்தையாகியும்—சடமான- மூடமாகியுமிருக்கின்ற—அறிபொ ருளின் - விஷயங்களின்—புணர்ச்சியால் - கலத்தலினால்—போதரூபம் - ஞானஸ்வரூப (சத்தி யானது)—மையானசடமாகி - களங்கமுள்ளசடரூபமாய் — பெருநீருள் - மிகுந்தசலத்துக் குள்—கனல்போல் - அக்கினியைப்போல — தன்வடிவைவிட்டும் - தனதுருவத்தைமறந்து (சீவனும்)—மெய்யானசித்துருவம் - உண்மையாகியசிற்சத்தியானது — இப்படியேயறிபொ ருளைமேவலால்- இந்தப்ரகாரஞ் (சீவனாய்) விஷயத்தைவிரும்புதலினால்—ஐயோபொய்யாய்ச் சடமாம்- அதிசயமித்தையாகிமூடமாகும்—அறிவினாலறிவிக்கவறிந்தது-ஆத்மஞானத்தினாற் றெரிவிக்கத்தெரிந்தது. எ-று. (இ-ம்) ஆத்மா தன்னைவிஷயமாகக்கண்டுமயங்கின மயக்கமே மோகமென்று மஃதுள்ளவன் சீவனென்றுமறிந்ததாம்..(௰௬)

(அ-கை.) மோகமுறிக்குங்காரணம்விசாரித்தல். (கவி) இந்தவறிவெத்தாற்காணப்ப ட்டதென்னில்வேறேதுமில்லை, யந்தமில்காலத்தாலேயறியவேண்டியதறிந்தே னம் மவம்மா, முந்துவறிவின்பரப்பைமுடிவாகமனங்கரணமுதலவெல்லாஞ், சிந்தனை செய்யாமையானுதித்தனவாஞ்சிந்தித்தாற்சேரப்பொய்யே .... *

(இ-ள்.) இந்தவறிவு - இந்தவாத்மஞானமானது — எத்தாற்காணப்பட்டதென்னில்- யாதினாற்றெரியப்பட்டதென்றால்—வேறேதுமில்லை- (தன்னாலன்றி) வேறொன்றினாலுமில்லை— அந்தமில்காலத்தால் - முடிவற்றகாலத்தினால்— அறியவேண்டியதறிந்தேன் - அறியத்தக்கவா த்மஞானத்தையறிந்தேன்—அம்மவம்மா - ஆச்சரியமாச்சரியம் — முந்துவறிவின்பரப்பை- முதன்மையானசித்துவியாபகத்தை—முடிவாக - அந்தமாக—சிந்தனைசெய்யாமையால்- சிந்

நியாதத்தினால்—மனங்கரணமுதலவெல்லாம்- ஆறிந்திரியமுதலியவனைத்தும்—உதித்தனவாம்- உண்டாயினவாம்—சிந்தித்தால்- (அவ்வறிவைச்)சிந்தித்தால்—சேரப்பொய்யே-(அம்மனமுதலிய) சகலமுமித்தையேயாம். எ-று.(இ-ம்) ஆத்மாவேசீவன்முதலியசகத்தாகவிளங்குமேயன்றிவேறின்றென்னுமனுபவமாயறியாததேமோகமுண்டாவதற்குக் காரணமாயிற்றென்பதாம்.

(அ-கை.) இவ்விசாரங்களாலாத்மாவே பிரமமென்னுமத்துவிதஞானமுதயமாதல்.(கவி)
எல்லையில்பேரறிவேயிங்குளதிதனைப்பேருண்மையென்றுஞ்சொல்வா, ரல்லலுறுங்களங்க
மறச்சமமாகியகங்கரமில்வடிவமாகித், தொல்லையொளியொருக்காலேதுலங்குவதாய்நித்
தபரிசுத்தமாகி, மல்லலுயர்பிரமமெனப்பரமமெனப்பெயர்பெற்றுவழங்குமன்றே..... *

(இ-ள்.) எல்லையில்பேரறிவே-அளவற்றபூரணஞானமே—இங்குளது - இவ்விடத்திலுள்ளதாம்—இதனை-இந்தப்பூரணஞானத்தை—பேருண்மையென்றுஞ்சொல்வார் - மகாசத்தையென்றுஞ்சொல்லுவார்கள் —அல்லலுறுங்களங்கமற-துன்பமிகுந்தமாசுநீங்க—சமமாகி- சமத்துவமாய்—அகங்கரமில்வடிவாகி-அகம்பாவமற்றஸ்வரூபமாகி—தொல்லையொளி - சுயம்ப்ரகாசமானது—ஒருக்கால்-ஏககாலத்தில்—துலங்குவதாய்-ப்ரகாசிப்பதாயும்—நித்தம்- நித்தியமாயும்—பரிசுத்தமாகி-சுத்தமாகியுமிருக்கின்ற—மல்லலுயர்பிரமமென - திடமுள்ளமேலானபிரமமென்றும்—பரமமெனப்பெயர்பெற்றுவழங்கும்-பரமமென்றுநாமத்தைத்தரித்துவழங்கும்.

(அ-கை.) சகத்திலிச்சொரூபானுசந்தானமுதிர்ச்சியாயிற்றெனல். (கவி) இவ்வாறுதினந்
தோறுந்தன்சுருபத்தேகளிக்குமிதயநோக்காற், றவ்வாதபகுதிநிலையாயாசைபோய்ச்சங்
கஞ்சற்றுமின்றி,யொவ்வாததொந்தனைபோய்த்தொழிலின்றிப்பற்றுவிடொன்றுமின்றி,
சவ்வாதவியற்றொழில்செய்துயர்பரமப்பெரும்பேற்றாற்கருத்துமுற்றி...................... *

(இ-ள்.) இவ்வாறு - இந்தப்ரகாரம் — தினந்தோறும் - நாடோறும் — தன்சுருபத்து-தனதான்மஸ்வரூபத்தில்—களிக்கும் - சுகிக்கின்ற—இதயநோக்கால்- மனோதிருஷ்டியினால்—தவ்வாதபகுதிநிலையாய் - தவறாதசுபாவமானநிலையினின்று— ஆசைபோய்ச்சங்கஞ்சற்றுமின்றி - அவாநீங்கி (விஷப) சங்கமெவ்வளவுமில்லாமல்—ஒவ்வாததொந்தனைபோய் - பொருந்தாததொந்தம்விட்டு—தொழிலின்றி - செய்கையில்லாமல்—பற்றுவிடொன்றுமின்றி - விருப்புவெறுப்பொன்றுமில்லாமல்—கவ்வாதவியற்றொழில்செய்து - பற்றில்லாதவியல்பானசெயல்களைச்செய்து—உயர்பரமப்பெரும்பேற்றால் - மேலானபிரமப்ரயோசனத்தினால் — கருத்துமுற்றி - மனம்பழுத்து. எ-று..(௰௭)

(அ-கை.) அத்துவிதஞானவபரோக்ஷசாக்ஷாத்காரஸ்வரூபமாதல். (கவி) உள்ளுறுபூரண
மெய்தியுவமைகட்கப்பாலாகியொருவராலுந், தெள்ளியளவிடவொண்ணா நிலையாந்தன்
விவேகத்தின்செறிபழக்க, வெள்ளமுறத்தன்சுருபம்வெளியாய்மென்மலர்க்கொடிபோல்
விளக்கமுற்று, ளெள்ளரியவபிநவமாம்பேரெழில்கூரிவள்பொலிவையினிதுநோக்கி..... *

(இ-ள்.) உள்ளுறுபூரணமெய்தி - உள்ளத்திற்பொருந்தியபரிபூரணத்தையடைந்து—உவமைகட்கு - உவமானங்களுக்கு—அப்பாலாகி - அதீதமாய் — ஒருவராலும் - யாவராலும்—தெள்ளியளவிடவொண்ணா - ஆராய்ந்தளவிடக்கூடாத—நிலையாம்- நிச்சயமாகிய—தன்விவேகத்தின் - தனதுவிவேகத்திலுண்டான — செறிபழக்கவெள்ளமுற - மிகுந்தவப்பியாசமிக—தன்சுருபம் - தனதாத்மஸ்வரூபமானது—வெளியாய் - ப்ரத்யக்ஷமாய் — மென்மலர்க்கொடிபோல் - மிருதுவானபுஷ்பக்கொடியைப்போல—விளக்கமுற்றாள் - விளங்கினாள் — எள்ளரிய-நிந்தித்தற்கரிய—அபிநவமாம் - புதுமையான—பேரெழில்கூர் - பேரழகுமிகுந்த — இவள் பொலிவை - இந்தச்சூடாலையின்றேஜஸை—இனிதுநோக்கி-இனிமையாக(சிகித்துவசன்) பார்த்து. எ-று. (இ-ரு-க-ம்) சமாதியினின்றுநீங்கிச் சகசநிஷ்டை கைகூடிச்சர்வம்பிரமமயமென்கின்ற நிரதிசயாநந்தசாக்ஷாத்காரவடிவமாகப் பிரமதேஜசாய் விளங்கினாளென்பதாம். (௰௮)

(அ-கை.) சூடாலையினழகைப்பார்த்தரசனதிசயித்து வினவுதல். (கவி) கண்டறியா
வழகிதெனமிகவியந்துசிகித்துவசன்கழறலுற்றான், பண்டையிளநலமீண்டு படைத்தனை
போலலங்காரம்பலபெற்றாய்போ, லண்டரமுதுண்டனைபோலார்க்குமுற வரியபதமடை
வுற்றாய்போன், மண்டுகின்றவாநந்தநிறைந்தனைபோற்பொலிகின்றாய்மாசிலாளே........*

(இ-ள்.) கண்டறியாவழகிதென - இதுநான்பார்த்தறியாதவழகென்று — மிகவியந்து-மிகவுமதிசயித்து —சிகித்துவசன் - சிகித்துவஜராசன்—கழறலுற்றான்-சொல்லத்தொடங்கினான்—பண்டையிளநலம் - முன்னெவ்வனத்திலுள்ளவழகை—மீண்டுபடைத்தனைபோல் - திரும்பப்பெற்றவள்போலவும்—அலங்காரம்பலபெற்றாய்போல் - பேரழகையநேகமாகவடைந்தவள்போலவும்—அண்டரமுதுண்டனைபோல் - தேவாமுதம்புசித்தவள்போலவும்—ஆர்க்கும்-யா

வ்ருக்கும்—உறவரியபதம்- பொருந்துதற்கரியபிரமபதத்தை—அடைவுற்ருய்போல்- அடைந்தவள்போலவும்—மண்டுகின்றவாநந்தம்-பூரணாநந்தம்—நிறைந்தனைபோல்-நிறைந்தவள்போலவும்—மாசிலாளே-களங்கமற்றவளே—பொலிகின்ருய் - நீவிளங்குகின்ருய். எ-று.... .. (௰௯)

(அ-கை.) இ-து. (கவி) போகத்துக்கிரங்காதுசாந்தமாயூற்றமாய்ப்பொலிவுண்டாகி, யேகத்திற்சமமாய்கெம்பீரமாயுனதுமனதிருப்பதென்னே, தேகத்திற்பெருமழகுஞ்சித்தத்திற்பேரழகுஞ்சேர்ந்ததெங்ஙன், னீகற்பாலுனாயென்ன காதலற்குச்சூடாலை நிகழ்த்தலுற்ருள்.. *

(இ-ள்.) போகத்துக்கிரங்காது - போகத்தையிச்சியாமல்—சாந்தமாய்- உபசாந்தமாகியும்—ஊற்றமாய் - அசைவின்றிநிற்பதாகியும்—பொலிவுண்டாகி- ப்ரகாசமுண்டானதாகியும்—ஏகத்திற்சமமாய் - ஒன்றிற்சமமாகியும்—கெம்பீரமாய் - கெம்பீரமாகியும்— உனதுமனதிருப்பதென்னே - உன்மனமிருக்குந்தன்மையென்ன—தேகத்திற்பெருமழகும்- சரீரத்திற்பெற்றிருக்குமழகும்—சித்தத்திற்பேரழகும் - மனதிலுண்டானமிகுந்தவழகும்— சேர்ந்ததெங்ஙன்-உண்டானதெப்படி—நீகற்பாலுனாயென்ன- நீகற்பினுற்சொல்லென்றுகேட்ட—காதலற்கு-தலைவனுக்கு — சூடாலைநிகழ்த்தலுற்ருள் - சூடாலையானவள்சொல்லத்தொடங்கினுள். எ - று. (இ-உ-க-ம்) அரசனாசிக்கழகுண்டான காரணம்வினுவினதென்பதாம் .... (௨௰)

(அ-கை.) அழகுண்டானதற்குக்காரணமான வாத்மசாக்ஷாத்காரநித்தியாநந்தவனுபவவிலாசத்தை யேழுவிதமாகப்பகுத்துச் சொல்லுதல். (கவி) கிஞ்சிலுமின்றிக் கிஞ்சில் வடிவானவிதுவிட்டுக்கிஞ்சிலன்றி, விஞ்சுமொருவடிவுற்றேனதனுலேசீருடைத்தாய்விளங்காநின்றேன், கிஞ்சிலேகிஞ்சிலனச் சுபாவநிலையாயுதயங்கெடுதியின்ருய், விஞ்சுவதேததையறிந்தெனதனுலேசீருடைத்தாய்விளங்காநின்றேன்..*

(இ-ள்.) கிஞ்சிலுமின்றி - அற்பமுமில்லாமல்—கிஞ்சில்வடிவான - அற்பவுருவமுமாயிருக்கின்ற—இதுவிட்டு - இச்சகத்தைநீக்கி—கிஞ்சிலன்றி - மகத்தான — விஞ்சுமொருவடிவுற்றேன்-சேடித்தவொப்பற்றஞானஸ்வரூபத்தைப்பெற்றேன்—அதனுல்-அதிஞல்—சீருடைத்தாய்விளங்காநின்றேன்- அழகையுடையவளாய்ப்ரகாசிக்கின்றேன்—கிஞ்சிலேகிஞ்சிலன- அணுவுக்கணுவாகியும்— சுபாவநிலையாய் - ஒருதன்மையாயும்—உதயங்கெடுதியின்ருய்- உற்பத்திநாசமில்லாததாயும்—விஞ்சுவதேது - மிஞ்சினதெதுவோ—அதையறிந்தேன்- அதைத்தெரிந்துகொண்டேன்—அதனுல் - அதினுலே—சீருடைத்தாய் - அழகையுடையவளாய்—விளங்காநின்றேன்- ப்ரகாசிக்கின்றேன். எ-று .... (௨௧)

(அ-கை.) இ-து. (கவி) அருந்தாமற்றூரிதாம்போகங்களருந்தினபோலமைந்தின்புற்று, வருந்தாமல்விருப்புவெறுப் பிலவதனுற்சீருடைத்தாய் வாழாநின்றேன், பெருங்கோபம்பற்றிரண்டுஞ்சிறுதொழிற்பாங்கியரறிவாம்பெரியபெண்கண்,மருங்கேசாத்திரநோக்கிற் களிக்கின்றேனதனுற்சீர்வாழ்வுபெற்றேன்........................ *

(இ-ள்.) தூரிதாம்போகங்கள் - சேய்மையாயிருக்கும்போகங்களை — அருந்தாமல்-அநுபவியாம(லிருந்தும்)— அருந்தினபோல் - அநுபவித்ததுபோல — அமைந்தின்புற்று-பொருந்திச்சுகத்தையடைந்து—வருந்தாமல் - துன்பப்படாமல்—விருப்புவெறுப்பில்-இராகத்துவேஷநீங்கின—அதனுல் - அதினுல்—சீருடைத்தாய் - அழகையுடையவளாய்—வாழாநின்றேன்- சுகிக்கின்றேன்— பெருங்கோபம்பற்றிரண்டும் - பெரிதானவிராகத்துவேஷமாகிய விரண்டும்—சிறுதொழிற்பாங்கியர் - ஈனச்செயலுள்ளதோழியராகவும்— அறிவாம்பெரியபெண்கள்-ஞானமாகியமகாமாதர்கள்—மருங்கு- பக்கமாய்—சாத்திரநோக்கிற்களிக்கின்றேன்- சாஸ்திரதிருஷ்டியிற்சுகிக்கின்றேன்—அதனுல்-அதினுல்—சீர்- (தேக)வழகையும்—வாழ்வுபெற்றேன்-(மனமகிழ்ச்சியையு)மடைந்தேன். எ-று ....(௨௨)

(அ-கை.) இ-து. (கவி) கிஞ்சின்மாத்திரமுருவிலாதவுலகுக்கெல்லாங்கிளர்தேவாகி, யெஞ்சலிலளென்றென்பாலின்புறுவனதனுற்சிரொழில்பெற்றேனுன், புஞ்சமுறுமிவையெல்லாம்விட்டனன்வேறேபொய்யுமெய்யுமாகி,விஞ்சுமதுமுற்றுமடைந்தேனதனுற் சிருடைத்தாய்விளங்காநின்றேன்......................... *

(இ-ள்.) கிஞ்சின்மாத்திரம் - அற்பமும்—உருவிலாத - ஸ்வரூபமில்லாத — உலகுக்கெல்லாம்- சகங்களனைத்திற்கும்—கிளர்தேவாகி - சுயம்ப்ரகாசமானதெய்வமாய்—எஞ்சலிலளென்று-பூரணமாயிருப்பவளென்று—என்பாலின்புறுவன் - ஆத்மாவில்ரமிப்பேன்— அதனுலுன்-அதினுல்யான்—சிரொழில்பெற்றேன் - சிறந்தவழகையடைந்தேன்—புஞ்சமுறும்- திரளான—இவையெல்லாம்விட்டனன்-இச்சகலத்தையும்விட்டேன்—வேறு-விலக்ஷணமாய்—பொய்யும்-அசத்தும்—மெய்யுமாகி - சத்துமாகி—விஞ்சுமது - சேஷித்தவதை — முற்றுமடைந்தேன்-

பூரணமாகப்பெற்றேன் — அதனால் - அதினால் — சிறுடைத்தாய் - அழகுடைத்தானவளாய்— விளங்காநின்றேன் - ப்ரகாசிக்கின்றேன் எ-று .... (௨௩)

(அ-கை.) இ-து. (கவி) கண்ணாற்பல்கரணத்தாற் கருத்தாலிங்கெதுகாண்கே ணதுதான்கிஞ்சி, னண்ணாமலதற்பிறிதாய்க் கிஞ்சிலாதொன்றுள்ளே நன்றாய்க் காண்கேன், பண்ணானசிரிதெனச் சூடாலை சொன்னவற்றைப் பற்றிப்பாரா, னெண்ணாமனைகைத்தவளைச் சிகித்துவசன்வேறொன்றையியம்பலுற்றான் ... *

(இ - ள்.) கண்ணால் - நயனங்களினாலும் —பல்கரணத்தால் - பலவிந்திரியங்களினாலும்— கருத்தால்-மனதினாலும்—இங்கெதுகாண்கேன்-இவ்விடத்தெதைப்பார்ப்பேனோ—அதுதான்-அந்திரியத்தையே—கிஞ்சினண்ணாமல் - அற்பமும்பாராமல்—அதற்பிறிதாய்- அச்சகத்திலக்ஷணமாய்—கிஞ்சிலாதொன்று - அற்பமாகாதவேகமானசைதன்யத்தை — உள்ளே நன்றாய்க் காண்கேன் - அகத்தில் சுஸ்பஷ்டமாகப்பார்ப்பேன் — பண்ணானசிரிதென - உண்டாகியவழகிதுவென்று—சூடாலைசொன்னவற்றை- சூடாலையானவளுரைத்தவைகளை—பற்றிப்பாரான்-உணர்ந்திப்பாராதவனாய்—அவளை - அச்சூடாலையை—எண்ணாமனைகைத்து-மதியாமற்சிரித்து—சிகித்துவசன்-சிகித்துவசவரசன்—வேறொன்றையியம்பலுற்றான்- மற்றொன்றைச்சொல்லத்தொடங்கினான். எ-று. (இ-ச - க - ம்) பிரமாநந்தமேவடிவமாய் விளங்குகிறேனென்றுண்மையாயறிவித்தாளென்பதாம் .... (௨௪)

(அ-கை.) தலைவனிடத்துள்ளவன்பினாற்பக்குவமில்லாதகாலத்தினாற்போதிக்கத்தகாதசுவானுபவசாக்ஷாத்காரமாகிய பரஞானத்தைப் போதித்தும் அதைச்சிரவணத்தினாலுண்டான வபரஞானயுத்திநான்கினான் மறுக்கத்தொடங்கிச், சமாதியிற்சேடித்தவஸ்துவானதினாலும்; அஃதையறிந்தது மயமானதினாலும், சகசத்திலொன்றிலும்விருப்புவெறுப்பின்மையினாலும், வாக்கியார்த்ததிருஷ்டியினாலும் சாக்ஷாத்காரத்திற்சர்வவியாபகமானவொன்றாதலினாலும், பூரணமானதினாலும் அணுவுக்கணுவானவஸ்துவைத் தரிசித்ததுவாயிருக்கின்றதினாலும், விளங்குகின்றேனென்கின்றவேழருத்தத்தையும், அரசம்போகத்திற்றிகழ்கின்றவர்களாத்மபோகத்திலெங்ஙனந்திகழ்வான் றேகத்தைநீக்கித் தேகியானவன்பின்பெங்ஙன மத்தேகமாய்விளங்குவான்,போகத்தைவெறுத்த தரித்திரனெங்ஙனஞ் செல்வத்திற்றிகழ்வான், காண்பவைவைநீக்கிக் காண்பவனாயிருப்பவன் வசனத்திலெங்ஙனம் விளங்குவானென்று நான்குயுத்தியினான்மறுத்தானெனல். (கவி) வஞ்சியிடையாயிசையாததுசொன்னாய்சிறியார்போன்மருளாநின்றாய், விஞ்சுநராதிபர்வாழ்வின் மிளிர்கின்றாயுன்னின்மேலமிளிராநிற்பாய், கிஞ்சிலைவிட்டுக்கிஞ்சிலாதடைந்தோர்முன்னிலையைக்கிட்டாரொன்னிற், பஞ்சிலடியாயவர்தாமுன்னிலையாய் விளங்குவதெப்படியேசொல்வாய் .... *

(இ ள்.) வஞ்சியிடையாய் - வஞ்சிக்கொடிபோன்ற விடையையுடைய பெண்ணே— இசையாததுசொன்னாய் - தகாதவசனத்தைக்கூறினாய்—சிறியார்போல் - அறிவில்லாதவர்களைப்போல்—மருளாநின்றாய் - மயங்குகின்றாய் — விஞ்சுநராதிபர்வாழ்வில்- மேலாகியவரசரதுசெல்வத்தில்—மிளிர்கின்றாய் - விளங்குகின்றநீ—உன்னில் - ஆத்துமாவில் — மிளிராநிற்பாய்- எங்ஙனம்விளங்குவாய்—கிஞ்சிலைவிட்டு - அற்பமானசகத்தைவிட்டு—கிஞ்சிலாது-அற்பமல்லாதபூரணவஸ்துவை—அடைந்தோர் - அடைந்தசத்துக்கள்—முன்னிலையை - ப்ரத்தியக்ஷமானசகத்தை—கிட்டாரென்னில் - சேரார்களாயின்—பஞ்சிலடியாய் - பஞ்சினு(மிருதுவான)பாதங்களையுடையவளே—அவர்தாம் - அந்தச்சத்துக்கள்—முன்னிலையாய்விளங்குவது - ப்ரத்தியக்ஷமாகப்ரகாசிப்பது—எப்படிசொல்வாய் - எங்ஙனங்கூறுவாய். எ-று .... (௨௫)

(அ-கை.) இ-து. (கவி) அருந்தலுறுப்போகத்தா லகமகிழ்ந்தேனென்றதனையகற்றுகிற்பார், பொருந்துமிடியினர்போனிற்பாக்கியராமவரெங்ஙன்பொலிவார்சொல்வாய், திருந்துறக்காண்பவைகாணேம் வேறேகாண்குதுமென்று செப்புகிற்பா, ரிருந்துரைக்குமிவ்வுரையை விடாமலவர்விளங்குவதெப் படியேசொல்வாய் ...... *

(இ-ள்.) அருந்தலுறுப்போகத்தால் - அனுபவியாதபோகத்தினால் — அகமகிழ்ந்தேனென்று - யானும்மகிழ்ச்சியானேனென்று—அதனையகற்றுகிற்பார் - அப்போகத்தைநீக்குபவர்கள்—பொருந்துமிடியினர்போல் - பொருந்தியதரித்திரரைப்போல—நிற்பாக்கியராமவர்-அபாக்கியவான்கள்—எங்ஙனம்பொலிவார்சொல்வாய் - எப்படிவிளங்குவார்கள்சொல்லக்கடவாய்—திருந்துற - செவ்வையாக—காண்பவைகாணேம் - சகத்தைப்பார்க்கிலேம்—வேறேகாண்குதும்- வேறேயாத்மாவைப்பார்ப்போம்—என்றுசெப்புகிற்பார் - என்றுசொல்பவர்கள்—

இருந்துரைக்கும்- இருந்துசொல்லப்பட்ட—இவ்வுரையைவிடாமல் - இந்தவசனத்தைத்தவிரா மல்—அவர்விளங்குவதெப்படி - அவர்கள் ப்ரகாசிப்பதெவ்வண்ணம் —சொல்வாய்- கூறுவாய். எ-று. (இ-உ-க-ம்) சூடாலைகூறியவேழருத்தத்துக்கும் பகுத்துச்சொல்லும்விவேகமின்றிநானி னைடக்கிச்சொன்னாராயினு மஃதின்மூன்றிற் கோருத்தியும்- இரண்டுக்கோருத்தியும்- மற்றிர ண்டுக்கு மிரண்டுத்தியுமா யமைத்துக்கொள்ளவேண்டு மென்பதாம்.......... .... (உசு)

(அ-கை.) சுவானுபவத்தையிங்ஙனமிழத்தலுக்கிரங்கியிவனுக்கிவ்விதார்த்தத்தையற்புதங் களோடுமறிவிக்கு நிமித்தமணிமாதிசித்தியை யடையத்தொடங்கியாதனங்கட்டல். (கவி) ஆதலாற்பேதையாயறிவிலியாயலைபவளா யநேகஞ்சொல்லாற், போதநீகளிக்கின்றாயெ னவெடிக்கநகைத்தயலே போனான்மன்னன், மாதராளதற்கிரங்கிதன்னறிவிலிலைப்பாறி மகிழானாகிப், பேதமாயென்னுரையை மன்னனறிந்திலனென்றுபேசுற்றாளே .... *

(இ-ள்.) ஆதலால் - ஆதலினால்—பேதையாய்-பேதமையுடையவளாயும்—அறிவிலியாய்-அறிவில்லாதவளாயும்—அலைபவளாய் - சஞ்சலமுள்ளவளாயும்—அநேகஞ்சொல்லால்-பலகுணங்களினாலும் — போதநீகளிக்கின்றாயென - மிகவுஞ்சந்தோஷிக்கின்றாயென்றுசொல்லி—வெடிக்கநகைத்து - வெளிப்படச்சிரித்து—மன்னன் - அரசனானவன் —அயலேபோனான்-வேறோரிடத்திற்சென்றான்—மாதராள் - சூடாலையானவள்—அதற்கிரங்கி - அவ்வறியாமைக்கிரக்கமுற்று—தன்னறிவிலிளைப்பாறி - ஆத்மஞானத்தில்விஸ்ராந்தியடைந்து—மகிழானாகி - சுகியாதவளாய்—பேதமாய் - வேற்றுமையாக—என்னுரையை - எனதுவாக்கியத்தை—மன்னனறிந்திலனென்று - அரசனறியவில்லையென்று—பேசுற்றாள் - சொன்னாள். எ-று.......... ...... (உஎ)

(அ-கை.) இ-அு. (கவி) பின்னருமன்னனுந்தானுந் தலைநாட்போற்பேதமறப்
பெருநாள்வாழ்ந்தார், துன்னுமமைவாயாசையொன்றுமிலாதிருந்துஞ்சூடா
லைதானே, புன்னியுயராகாசத்தனினடக்கவியற்றுமென்றுறுபோகங்க, ளின்
னலறவனைத்தையும்விட் டேகாந்தச்சுகாசனத்திலிருக்கையெய்தி .... *

(இ-ள்.) பின்னரும் - பின்பும்—மன்னனுந்தானும் - இராசாவுஞ்சூடாலையும்— தலைநாட்போல்- முற்காலம்போல—பேதமற- வேற்றுமையில்லாமல்—பெருநாள்வாழ்ந்தார்-வெகுகாலஞ்சுகித்தார்கள்— துன்னுமமைவாய்- மிகுந்தவமைதியையுடையவளாய்—ஆசை-அவாவானது—ஒன்றுமிலாதிருந்தும் - சற்றுமில்லாதிருந்தும்—சூடாலை- சூடாலையானவள்—தானேபுன்னி-சுயமாகநினைத்து—உறுபோகங்கள் - மிகுந்தபோகங்களினும்—இன்னலற - துன்பநீங்க—அனைத்தையும்விட்டு - சகலத்தையுநீங்கி— ஏகாந்தம் - ஏகாந்தஸ்தானத்தில் — சுகாசனத்தில்-சுகாசனத்தினில்—இருக்கையெய்தி - இருந்து. (இ- கூ- க- ம்) நாயகனைமுன்னிட்டு பரவிச்சாபிராரத்தத்தினான் யோகம்வந்தடுத்ததென்பதாம்.......... .... (உஅ)

(அ-கை.) ஆகாயகமனமுதலியசித்திகள் வருமார்க்கமியாதெனவினாவுதல். (கவி) பெரிய பிராணனைநேரோமேனோக்கப்பழகினாள்பெருநாளென்ன, கரியமுகில்கேட்டருளிமிகவரு ந்தி நெடுங்காலங்கையாண்டக்கா, லரியவிசும்பினினடத்தன் முதலானசித்தியெலாமளிக் கத்தக்க, வுரியவழியெதுசொல்வா யெனக்கேட்பவசிட்டமுனியுரைப்பதானான் .... *

(இ-ள்.) பெரியபிராணனை - பெரிதானபிராணவாயுவை— நேரோமேனோக்க - நேரோமேனோக்கும்படியாக—பெருநாள் - வெகுநாள்—பழகினாளென்ன - அற்பியாசித்தாளென்றுவசிஷ்டமுனிசொல்ல—கரியமுகில்கேட்டருளி- கரியமேகவண்ணனானஸ்ரீராமன்கேட்டு—மிகவருந்தி-மிகவும்வருத்தப்பட்டு—நெடுங்காலம் - வெகுகாலம்—கையாண்டக்கால்- அற்பியாசஞ்செய்தால்—அரியவிசும்பினினடத்தல் - அரிதானவாகாயகமனஞ்செய்தல்— முதலானசித்தியெலாம்-முதலானசித்திகளனைத்தையும்—அளிக்கத்தக்க - கொடுக்கத்தகுந்த—உரியவழியேது-உரித்தானமார்க்கமியாது—சொல்வாயெனக்கேட்ப - அருள்வாயென்றுகேட்க—வசிட்டமுனியுரைப்பதானான் - வசிஷ்டமுனிசொல்லத்தொடங்கினார். எ-று. .... (உகூ)

(அ-கை.) பிராணாயாமத்தாற் சித்திகளுண்டாகு மற்பியாசங்களையறிவிக்கத் தொடங்கல். (கவி) சீமானுஞ்சிகித்துவசன்கதைக்கிடையேவினவுதலாற்செப்புகின்றேன், கோமானேபிராணாதிபவனத்தின்பரிசயத்தின்கொள்கையாகிச், சாமாறில்லாப் பயன்செய்நெறிகேட்பாய்வாதனைகள்சற்றுமின்றிப், போமாறுசெய்துளத்திலிதற் கடுத்தவாதனையேபொருந்திநின்று .... *

(இ-ள்.) சீமானும் - செல்வனாகிய—சிகித்துவசன்-சிகித்துவசராசன்— கதைக்கிடை-கதைக்குமத்தியில்—வினவுதலால்-(யோகங்) கேட்கின்றபடியால்—செப்புகின்றேன்(அதைச்) சொல்லுகின்றேன்—கோமானே - இராசாவே—பிராணாதிபவனத்தின் - பிராணன்முதலியவாயுவின்—பரிசயத்தின் - பழக்கத்தினது—கொள்கையாகி - குணமாகி—சாமாறிலாப்பயன்செ

ய் - மரியாதப்ரபோசனத்தைக்கொடுக்கின்ற — நெறிகேட்பாய் - மார்க்கத்தைக்கேட்கக்கடவாய்— சாற்றும்வாதனைகளின்றி - எவ்வளவும்வாசனைகளில்லாமல்—போமாறுசெய்து - நீங்கும்படிசெய்து—உளத்தில் - மனதினிடத்தில்—இருந்தபந்தவாதனையே - இச்சாதனத்துக்குத்தகுந்தவாசனையே—பொருந்திநின்று - அடைந்திருந்து. எ-று ....(௫௰)

(அ-கை.) இ-து. (கவி) குதமுதலாந்துவாரத்தின்சிறுமையாற்றானமுதற்குறிக்குஞ்செய்கை, விதவொழுங்காற்போசனத்தாற்சுகாதனத்தாற் சுத்தத்தான் மிக்கநன்னூ, லுதவுபொருட்பாவனையாலதனுசாரத்தி னுயர்ந்தோர்சார்வா, லதனையொழிந்தனவெல்லாம்விடுத்தலாலடுத்தபிராணயாமத்தால்.... .... *

(இ-ள்.) குதமுதலாம் - குதமுதலாகிய — துவாரத்தின் - இரந்தரங்களினது— சிறுமையால் - சுருக்கத்தினாலும்—தானமுதல் - (மகாமுத்திரையான) தானமுதலாக—குறிக்குஞ்செய்கை - குறிக்கின்றதொழில்களின் — விதவொழுங்கால் - விதமானமுறைமையினாலும்—போசனத்தால் - உணவினாலும்—சுகாசனத்தால் - சுகாசனத்தினாலும்—சுத்தத்தால் - பரிசுத்தத்தினாலும்—மிக்கநன்னூல் - மிகுந்தநன்மையுள்ள (யோக) சாஸ்திரங்களினாலும் — உதவுபொருட்பாவனையால் - உதவாநின்றவருத்தசிந்தையினாலும்—அதனுசாரத்தினால்- அதனையடையினாலும்—உயர்ந்தோர்சார்வால் - மேலானசத்துக்களின்சார்பினாலும்— அதனையொழிந்தனவெல்லாம் - அதையொழியமற்றச்சகலத்தையும்—விடுத்தலால் - நீக்குதலாலும்—அடுத்தபிராணயாமத்தால் - சேர்ந்தபிராணயாமத்தினாலும். எ-று. குதாதிதுவாரநிரோதத்துக்குக் காரணங்கள்மூலபந்தனுதிகள் அவைகளின் மூலபந்தனமென்றது குதிகாலினால் யோனியைப்பிடித்துக் குதத்தைச்சுருக்கி அபானவாயுவை மேலே யாகரஷிணஞ்செய்தல் தானமுதலென்றது தசவிதமுத்திரைபோசனமென்றது அற்தாகாரமுணல் சுகாசனமென்றது அந்தந்தயோகத்துக்குத்தகுந்த வாசனங்கட்டல் பிராணயாமமென்றது ரேசகபூரககும்பகஞ்செய்தல்............(௫௧)

(அ-கை.) இ-து. (கவி) கோவலோபாதியும்போகம்விடுத்தலாற் சிலர்க்குக்குறித்தநாளி, லொவிலாப்பற்றுவிட்டொழிந்தநாட் கைவசமாயுயிர்கடாமே, தேவரூபிகளாதலாற்றங்கள்குணமறிந்துசேர்ந்துளோருக், கேவலாட்போலுலகையாள்விக்கும்வீடளிக்குமெல்லாநல்கும்.. *

(இ-ள்.) கோவலோபாதியும் - குரோதலோபமுதலியவைகளையும்—போகம் - போகங்களையும்—விடுத்தலால் - நீக்குதலினாலும்—சிலர்க்குக்குறித்தநாளில்- சிலபேர்களுக்குக்குறித்தகாலத்தில்—ஒவிலாப்பற்றுவிடு - ஒழியாதபற்றுதலும்விடுதலும் — ஒழிந்தநாள் - நீங்கியகாலத்தில்—கைவசமாய் - கைவசமாக—உயிர்கடாம் - பிராணன்களானவை— தேவரூபிகளாதலால் - தேவவடிவமாகின்றபடியால் — தங்கள்குணமறிந்துசேர்ந்துளோர்க்கு - அந்தவாயுக்களின்றன்மையுணர்ந்தடைந்தவர்களுக்கு—ஏவலாட்போலுலகையாள்விக்கும் - பரிசனங்களைப்போலச்சகத்தையாளும்படிசெய்யும்—வீடளிக்கும் - மோக்ஷத்தைக்கொடுக்கும் — எல்லாநல்கும் - சகல (சித்தியை) யுங்கொடுக்கும். எ-று. (இ-௫௰-௧-ம்) இச்சாதனத்துக் கிதரமானவாசனைகளனைத்தையுந்தள்ளிக் குதத்துவாரஞ் சிறுகன்முதலிய சாதனங்களினாற் பிராணன் கைவசமானு லதையறிந்தபுருஷினுக்கு அப்பிராணனிவாயுவுக ளேவலாளைப்போலச் சகமுதலியவற்றைச் சுவாதீனமாக்குமென்பதாம் .... (௫௨)

(அ-கை.) ஆந்திரவேஷ்டனியி னிலக்கணமுரைத்தல். (கவி) ஆந்திரவேட்டனிகையென்றோர்தனிநாடிநாடிகளூறனுகிநிற்கும், வாய்ந்தவிகைவீணையுடல்வட்டம்போனீர்ச்சுழிபோல்வட்டமேயா, மேய்ந்துளதானங்களெலாமெய்தலுறுமயனிடத்துமெறும்பின்பாலும், போந்துளபல்லுயிரிடத்துமுடற்றோறுந்தோன்றியேபொருந்திநிற்கும்............ *

(இ-ள்.) ஆந்திரவேட்டனிகையென்று - ஆந்திரவேட்டனிகையென்னுநாமத்தையுடைய—ஓர்தனிநாடி - ஒப்பற்றவொருநாடியானது — நாடிகளூறு - நூறுநாடிகளி (னடுவே)—ஊனுகிநிற்கும் - பொருந்தியிருக்கும் — வாய்ந்தவிகை - பொருந்தியவிராகத்தையுடைய—வீணையுடல் - வீணையினங்கத்திலுள்ள— வட்டம்போல் - விருத்தத்தைப்போலவும்—நீர்ச்சுழிபோல் - நீர்ச்சுழியைப்போலவும்—வட்டமேயாம் - விருத்தமேயாகும்—எய்ந்துள - பொருந்திய—தானங்களெலாம் - இடங்களனைத்தும்—எய்தலுறும் - அடையும்—அயனிடத்தும் - பிரமாவினிடத்தும்—எறும்பின்பாலும் - பிபீலிகத்தினிடத்தும்— போந்துளபல்லுயிரிடத்தும் - உண்டானசகலஜீவர்களிடத்துமுள்ள—உடற்றோறும் - சரீரங்கடோறும்— தோன்றியேபொருந்திநிற்கும் - உண்டாகியடைந்திருக்கும். எ-று .... (௫௩)

(அ-கை.) குண்டலிசத்தியிலிலக்கணங்கூறல். (கவி) சீதவருத்தத்தினாற்றுயில்பாம்பினுடல்போற்சிக்கெனவளைந்தெப், போதுமசைவறுங்காற்றாநிலைநிற்குங்கதலியின்மென்பூப்போலுள்ளு, மேதகமெல்லியதாகுமதனூடேயொருசத்திவிசுத்தமாகி, யேதமறுபரமமாய்ச்சத்திகட்கெல்லாம்வெற்றியெய்தநல்கும்..... .... *

(இ-ள்.) சீதவருத்தத்தினால் - குளிர்ச்சியின்வருத்தத்தினால்— துயில் - நித்திரைசெய்கின்ற—பாம்பினுடல்போல் - அரவினங்கத்தைப்போல—சிக்கெனவளைந்து-கெட்டியாகவளைந்து—எப்போதும் - சதாகாலமும்—அசைவறும்-அசைவற்ற—காற்றாநிலைநிற்கும்-(ஆந்திரவேட்டனிகையானது) பிராணவாயுவினாநிலையாயிருக்கும் — கதலியின்மென்பூப்போல் - வாழையினதுமிருதுவானமலரைப்போல—உள்ளும் - அகத்திலும்—மேதக - மேன்மையாக—மெல்லியதாகும் - மிருதுவானதாகும்—அதனூடு - அவ்வாந்திரவேட்டனிகையினிடத்தில்—ஒருசத்தி - ஒரு (குண்டலி) சத்தியானது—விசுத்தமாகி - பரிசுத்தமாய்—ஏதமறுபரமமாய்-குற்றமற்றமேலானதாய்—சத்திகட்கெல்லாம் - சத்திகளனைத்திற்கும்—வெற்றியெய்தநல்கும்-சயத்தையடையக்கொடுக்கும். எ-று .... (௫௪)

(அ-கை.) இ-து. (கவி) முனிவுறுபெண்பாம்புபோன் மூச்செறியு மெப்போது முகமேலாகு, மனிசமசைவுக்கேதுவாமிதயகோசத்தையடைந்தநாடி, யெனையவுமிங்கிதனிடையேகட்டுண்ணுங்குண்டலினியிதன்பேராகுந், துனைதலுறவசைகின்ற பரிசவறிவின்கலையாற்சுத்தமாகும்...................... *

(இ-ள்.) முனிவுறுபெண்பாம்புபோல் - கோபமிகுந்தபெண்சர்ப்பத்தைப்போல—மூச்செறியும் - பெருமூச்சுவிடும்—எப்போதும் - சதாகாலமும்— முகமேலாகும்-வதனமேலாயிருக்கும்—அனிசம்- எப்போதும்—அசைவுக்கேதுவாம்-சலனத்துக்குக்காரணமாகும்—இதயகோசத்தை - மனப்பெட்டியை — அடைந்த - சேர்ந்திருக்கின்ற — நாடியேனையவும்-நாடிகளியாவும்—இதனிடை-இக் (குண்டலிசத்தியி)னிடத்தில்—கட்டுண்ணும்-பந்தப்படும்—இதன்பேர்- இதனதுநாமம்—குண்டலினியாகும்-குண்டலினிசத்தியாம்—துனைதலுறவசைகின்றபரிசம் - நெருக்கமாகவியங்குகின்றபரிசமான —அறிவின்கலையாற்சுத்தமாகும்-ஞானத்தினதுகலையினாற்பரிசுத்தமாகும். எ-று. (இ-௫-௧-ம்) சதநாடியின்மத்தியின்விளங்கியவாந்திரவேஷ்டினியினியல்பையுமதனிடமாகவிளங்கினகுண்டலிசத்தியினியல்பையுந்தெரிவித்ததாம் (௫௫)

(அ-கை.) இக்குண்டலிசத்தியின்பாவனையே கலைகண்முதலியவாய்ப் புரியட்டகசரீரமாமெனல். (கவி) சிந்தனையாற்கலையாகுஞ்சேதனத்தாற் சித்தாகுஞ்சீவனத்தாற், சந்தமுறு சீவனாமனனத்தான்மனமாகுஞ்சங்கற்பத்தா, லந்தமில்சங்கற்பமாம் போதத்தாற் புந்தியாமகங்காரத்தால், வந்தவகங்காரமாமினையபுரியட்டகப்பேர்மருவுந்தானே .. .. *

(இ-ள்.) சிந்தனையாற்கலையாகும் - (அக்குண்டலிசத்தியானது) சிந்தனையினாற்கலையாகும்—சேதனத்தாற்சித்தாகும் - ஞானத்தான்ஞானமாம்—சீவனத்தால் - சீவனத்தினால்— சந்தமுறுசீவனாம் - அழகுபொருந்தியசீவனாகும்—மனனத்தால் - மனனத்தினால் — மனமாகும்-மனமாகும்—சங்கற்பத்தால் - சங்கற்பத்தினால் — அந்தமில்சங்கற்பமாம் - அளவற்றசங்கற்பமாகும்—போதத்தால் - (நிச்சய) வறிவினால்—புந்தியாம் - புத்தியாகும் — அகங்காரத்தால்-அகம்பாவத்தால்—வந்தவகங்காரமாம்- வரப்பட்டவகங்காரமாகும்—இனைய-இப்படிப்பட்ட—புரியட்டகப்பேர்மருவும் - புரியட்டகமென்னுநாமத்தைப்பொருந்தும். எ-று .... (௫௬)

(அ-கை.) குண்டலினிசத்தியே பிராணாபானரூபமாய்ச் சீவனுக்குச்சநநமரணத்தைக்கொடுக்குமெனல், (கவி) குண்டலினியெனுஞ்சீவ சத்திமிகநல்லதாய்க்கூடிநிற்கு, மண்டுபிராணாபானவடிவமாதலிற்கீழ்மேல்வந்துபோகு, மிண்டறமேற்போகினுமெல்லாமாய்ப்போமீளினுமெல்லாமாய்மீளுந், தண்டலிலாப்புமானாகிச் சாமேவும்பிராணனுமச்சத்திதானே .... *

(இ-ள்.) குண்டலினியெனும் - குண்டலினியென்கின்ற— சீவசத்தி - சீவசத்தியானது—மிகநல்லதாய் - மிகவுநன்மையாக—கூடிநிற்கும் - (தேகத்திற்)புணர்ந்திருக்கும் — மண்டு நெருங்கிய—பிராணாபானவடிவமாதலில் - பிராணவபானவுருவமாதலினால்—கீழ்மேல்-கீழிலுமேலிலும்—வந்துபோகும் - வருதலும்போதலுமாகும்—மிண்டற - உறுதியில்லாமல் — எல்லாமாய் - சமஸ்தமுமாய்—மேற்போகினும்போம் - ஊர்த்தமுகத்திற்சென்றாலுஞ்செல்லும் எல்லாமாய்- சகலமுமாய்—மீளினுமீளும் - (அதோமுகத்திற்)திரும்பினாலுந்திரும்பும்—தண்டலிலா - தடையில்லாமல்—புமானாகி - சீவனாய்—சாமேவும் - மரணத்தையடைகின்ற—பிராணனும் - பிராணவாயுவும்—அச்சத்திதான் - அந்தக்குண்டலிசத்தியேயாம். எ-று..... ... (௫௭)

(அ-கை.) அக்குண்டலினிசத்தி பிராணசலனமின்றி யசைவறநிற்கிற் சராமரண வியாதியுண்டாகாவெனல். (கவி) தன்னிடத்தேயெப்படியும் போக்குவரத்தொழித் திந்தச்சத்திநிற்கின், மன்னுயிர்க்குநோய்வாரா துள்ளுறவேமாருதத்தைமறுத்த லாலே, யென்னலுமேயாதிவியாதிகளிரண்டுந்தோன்றுதலுமிறத்தருணு, நின்னரு ளாலுணாயென்ன விராகவன்கேட்டலும் வசிட்டனிகழ்த்தலுற்றான் .... *

(இ-ள்.) தன்னிடத்து - தனதிடத்தில்—எப்படியும் - எவ்விதத்திலும் — போக்குவரத் தொழித்து - செல்லுதல்மீள்தலைக்கெடுத்து — இந்தச்சத்திநிற்கின்ற - இக்குண்டலிசத்திநின் றால்—உள்ளுற - அகத்திற்சேர—மாருதத்தைமறுத்தலால் - (பிராண) வாயுவைத்தடுத்ததினால் —மன்னுயிர்க்கு- நிலைபெற்றசீவர்களுக்கு—நோய்வாரா- வியாதிவரமாட்டாது—என்னலும்- என்றுசொல்லவும்—ஆதிவியாதிகள் - ஆதியும்வியாதிகளுமாகிய— இரண்டுந்தோன்றுதலும்- இரண்டுமுண்டாகுதலையும்—இறத்தருணும் - நசித்தலையும்—நின்னருளாலுணாயென்ன-உமது கிருபையினாற்சொல்லவேண்டுமென்று — இராகவன்கேட்டலும் - ஸ்ரீராமன்கேட்டவளவில்— வசிட்டனிகழ்த்தலுற்றான் - வசிஷ்டமுனிசொல்லத்தொடங்கினார். எ-று. (இ-௩-௧-ம்) குண்டலி னிசத்தியினசைவேபவநோயுமின்மையே அந்நோய்நிவிர்த்தியுமென்பதாம் ...... (௩௮)

(அ-கை.) ஆதிவியாதியினுற்பத்தி லயமியாதென்றவினாவுக் குத்தரங்கூறல். (கவி) அங்கத்தின்வருத்தத்தைநோயென் பர்வாதனையையாதியென்பார், பங்கற்றஞானல யத்தேநாபிமூலத்தேபயிலுமாதி, பொங்குற்றஞானமிலாமையிற்பொறிகடம்மையட க்கப்போகாவாற்றாற், றங்குற்றவிதயத்திற்சிறுமையறமால்கோபந்தழைத்தலாலே.

(இ-ள்.) அங்கத்தின்வருத்தத்தை - சரீரத்தினதுதுன்பத்தை—நோயென்பர் - வியாதி யென்பார்கள்—வாதனையை - (அந்தக்கரண)வாசனையை—ஆதியென்பர்-ஆதியென்றுசொல்லு வார்கள்—பங்கற்றஞானலயத்து - பேதமுள்ளவஞ்ஞானத்தில்—நாபிமூலத்து- உந்தியினதுமூ லத்தில்—ஆதிபயிலும் - ஆதியானதுண்டாயிருக்கும்—பொங்குற்ற - உயர்வுள்ள—ஞானமிலா மையில் - ஞானமில்லாமையினாலும்—பொறிகடமை - இந்திரியங்களை— அடக்கப்போகாவா ற்றால்- அடக்கப்படாதபடியினாலும்—தங்குற்றவிதயத்தில்- தங்காநின்றமனதில்—சிறுமையற- விஸ்தாரமாய்—மால்-ஆசையும்—கோபம் - அகங்காரமும்—தழைத்தலால் - வளர்தலினாலும்.

(அ-கை.) இ-து. (கவி) இதுபெற்றேமீதில்லையென்னுமவதானத்தாலிறுகுமோக, மதுமெத்தவுண்டாகமழைநாளிற்செறிபனிபோலாதிதுன்னு, முதிரிச்சை வெளி யாகிமூர்க்கபாவனைசாலமுற்றும்போதில், விதியுற்றதொழிலன்றித் தீத்தொழில்கள் செய்தலினால்வியாதியுண்டாம்.............. .... *

(இ-ள்.) இதுபெற்றேம் - இதையடைந்தோம்—ஈதில்லையென்னும்- இ(தடைய)வில் லையென்கின்ற—அவதானத்தால் - அவதானத்தினால்—மோகமிறுகும்- மோகங்கெட்டிப்படும் —அதுமெத்தவுண்டாக - (அம்மோக)மிகவுமுண்டாக—மழைநாளில் - வருடகாலத்தில்—செ றிபனிபோல் . மிகுந்தபனியைப்போல—ஆதிதுன்னும் - ஆதியானதுநெருங்கும்— முதிரிச் சைவெளியாகி- மிகுந்தவாசையானதுவெளிப்பட்டு—மூர்க்கபாவனை-மூடபாவனையானது— சாலமுற்றும்போதில் - மிகவுமுதிருங்காலத்தில்—விதியுற்றதொழிலன்றி - நியமித்தவிபகாரத் தையல்லாமல்—தீத்தொழில்கள் - கொடியவிபகாரங்களை— செய்தலினால்- செய்கின்றதினால்— வியாதியுண்டாம் - (சரீர) வியாதியுண்டாகும். எ- று. (இ-௨-௧-ம்) வாசனாரூபமானவாதியுந் தேகவருத்தமான வியாதியுமதனிலக்கணமுமஃதினுற்பத்தியுங்கூறினதாம் ....(௪௰)

(அ-கை.) வியாதியுண்டாகுதலின் காரணமுரைத்தல். (கவி) பொல்லாதவுணவினாற்பொ ல்லாததேசத்திற்போகைதன்னாற், பொல்லாதகாலவிவகாரத்தாற் செய்தொழில்கள் புரி பொல்லாப்பாற், பொல்லாதகயவருறு கூட்டத்தாற்பொல்லாத பொருளெண்ணத்தாற், பொல்லாதவிச்சையாற்பொல்லாதவெண்ணிக்கைபொருந்தறன்றால்.............. .... *

(இ-ள்.) பொல்லாதவுணவினால்- துற்புசிப்பினாலும்—பொல்லாததேசத்திற்போகைதன் னால் - கொடியதேயங்களிற்சஞ்சரித்தலினாலும்—பொல்லாதகாலவிவகாரத்தால் - துற்காலவி வகாரங்களினாலும்—செய்தொழில்கள் - செய்கின்றகிருத்தியங்களின் — புரிபொல்லாப்பால்- கட்டுப்படும்பொல்லாங்குகளினாலும்—பொல்லாதகயவருறுகூட்டத்தால் - துற்சனசங்கத்தினா லும்—பொல்லாதபொருளெணணத்தால் - கொடியவஸ்துவைநினைத்தலானும் — பொல்லாத விச்சையால் - துராசையினாலும் — பொல்லாதவெண்ணிக்கைபொருந்தறன்றால் - துர்நினைப் படைதலினாலும். எ-று .... (௪௧)

(அ-கை.) இ-து. (கவி) நாடிகளில்வெளிகணுக்கள்சிறுகுதலாற்பெருகுதலானற்பி ராண, னோடிமிகச்சிதறலுமேயுடருணுஞ்சிதறுதலையுறுமுற்றக்காற், கேடிதென

முன்னுரைத்தகுற்றங்கள்காரணமாய்க் கிளர்நோயுண்டா, நீடியகோடையுமழையு
நதிக்குறைவுநிறைவுகளை நேருமாபோல் .... *

(இ-ள்.) நாடிகளில்-நரம்புகளிடத்தில்—கணுக்கள்வெளி-கணுக்களினந்தரங்கள்—சிறுகுதலாற்பெருகுதலால் - சிறுத்தல்பெருத்தலினாலும்— நற்பிராணன் - நல்லபிராணவாயுவானது—ஒடிமிகச்சிதறலும்-ஒடிமிகவுஞ்சின்னபின்னமாகவும்—உடமுனுஞ்சிதறுதலையுறும்-தேகமுஞ்சிதறுதலையடையும்—உற்றக்கால் - (அதை) யடைந்தால்—கேடிதென - கேடிதுவென்னும்படி—முன்னுரைத்தகுற்றங்கள் - முன்சொல்லப்பட்டகுற்றங்களானவை—காரணமாய்-மூலமாக—நீடியகோடையுமழையும் - நீண்டவேனிற்காலத்திலும்வருடகாலத்திலும்—நதி-ஆற்றுநீர்—குறைவுநிறைவுகளை - குறைவையுநிறைவையும்—நேருமாபோல் - பெறுகின்றதுபோல—கிளர்நோயுண்டாம் - தேகத்தின்மிகுந்தவியாதியுண்டாகும். எ-று. (இ-உ-க-ம்) செயற்கைத்தொழிலே வியாதியுதிப்பதற்குக் காரணமென்பதாம் .... (சஉ)

(அ-கை.) ஆதிவியாதியுண்டாகும் ஸ்தானமுரைத்தல். (கவி) தொல்லைபதாகினுமிங்குள்
ளனவெனினுஞ்சுபமெனினுமசுபமேனு, மெல்லையறமிகுந்ததேததுதன்பா லப்படியே
யிழுத்துக்கொள்ளும், புல்லுறவிவ்வகையாகியாதிவியாதிகளைந்துபூதத்துண்டாஞ், சொ
ல்லியவிவ்வாதிகடாமிருவகையாயிறக்குநெறிசொல்லக்கேட்பாய் .... *

(இ-ள்.) தொல்லையதாகினும்- பழைய (சநநத்திலுள்ள) தானாலும்—சுபமெனினும்-சுபமானாலும்—அசுபமேனும் - அசுபமானாலும்—எல்லையற-அளவின்றி—மிகுந்ததேது-மிகுந்த (வாசனை) யெதுவோ—அதுதன்பால் - அதுதன்னிடத்தில்— அப்படியேயிழுத்துக்கொள்ளும் - அவ்வண்ணமேகிரகித்துக்கொள்ளும்—புல்லுற - பொருந்தும்படியாக— இவ்வகையாகி-இவ்வண்ணமாய்—ஆதிவியாதிகள் -ஆதிகளும்வியாதிகளும்—ஐந்துபூதத்துண்டாம்-பஞ்சபூதத்திலுண்டாகும்— சொல்லியவிவ்வாதிகடான் - சொல்லப்பட்டவிந்தவாதிகளானவை— இருவகையாய்-இரண்டுவிதமாய்—இறக்குநெறி-நசிக்கின்றகிரமத்தை—சொல்லக்கேட்பாய்- (ஸ்ரீராமநீயான்) சொல்லக்கேட்கக்கடவாய். எ-று. (இ-ம்) பஞ்சதன்மாத்திரையிலாதியும்பஞ்சபூதத்தில்வியாதியுமுண்டானதையறிவித்துஆதிகளிரண்டுவிதமாய்நசிப்பதைச்சொல்வதாம் (சங)

(அ-கை.) ஆதியானதுசாமானியஞ்சாரமென விரண்டாமவற்றிற் சாமானியவாதி
கெடுகின்றமார்க்கமுரைத்தல். (கவி) மேவியசாமானியமுஞ்சாரமுமென்றிருவகை
யாமாதியென்பர், தாவுறுசாமானியந்தானுடற்பிணியாஞ்சாரந்தான்சநநமாகும்,
கேவலமிவ்வுடற்பிணிதான்றனக்கடுத்தபொருட்பெற்றாற் கெட்டுப்போகும், பாவ
னையாமாதிகளில்லாதாகிற்றோன்றுபிணிபறந்துபோமே .... *

(இ-ள்) மேவிய - பொருந்திய—சாமானியமும் -சாமானியமென்றும்—ஆதியானது—இருவகையாமென்பர் - இரண்டுவிதமாமென்றுசொல்லுவார்கள்—தாவுறு- தாவாநின்ற—சாமானியந்தான் - சாமானியமானது—உடற்பிணியாம் - சரீரத்திலுள்ளவியாதியாம்—சாரந்தான்-சாரமானது— சநநமாகும் - பிறப்பாகும்—கேவலமிவ்வுடல்-முழுதுமிச்சரீரத்திலுள்ள—பிணிதான்- வியாதியானது—தனக்கடுத்தபொருட்பெற்றால் - தனக்குரியவஸ்துவையடைந்தால்—கெட்டுப்போகும்- நாசமடையும்--பாவனையாம்-பாவனையான—ஆதிகளில்லாதாகில்-ஆதிகளில்லாவிடின்—தோன்றுபிணிபறந்துபோம் - உண்டாகும்வியாதியானதுநீங்கிப்போகும்.

(அ-கை.) சாரமாதிநசிக்கின்ற மார்க்கமுமாதியிலுண்டாகாத வியாதியிறக்குமார்க்
கமுங்கூறுதல். (கவி) சாரமெனும்பிறவிநோய் தத்துவஞானத்தன்றிச்சற்றும்போ
கா, திரவிதுகயிறென்னும்போதத்தாலன்றியராச்சிதைவதுண்டோ, பாரமுறுமாதி
யிற்றோன்றப்பிணிமந்திரமருந்துபலநூல்கற்ற, கூரறிவின்மருத்துவனொன்றிவ்வகை
யாற்போமிதுநாங் கூறவேண்டா .... *

(இ-ள்.) சாரமெனும்பிறவிநோய் - சாரமென்கின்றசநநவியாதியானது — தத்துவஞானத்தன்றி - ஆத்மஞானத்தினாலல்லாமல்—சற்றும்போகா - எவ்வளவுநீங்காது— திர - திரும்படி—இதுகயிறென்னும் - இதுபழுதையென்கிற—போதத்தாலன்றி - அறிவினாலல்லாமல்—அராச்சிதைவதுண்டோ - சர்ப்பம்கெடுவதுண்டோ—பாரமுறும் - சுமைமிகுந்த —ஆதியிற்றோன்றப்பிணி - ஆதியிலுண்டாகாத (சரீர) வியாதியானது—மந்திரம்-மந்திரத்தினாலும்—மருந்து - அவுஷதத்தினாலும்— பலநூல்கற்ற- அநேகவயித்தியசாஸ்திரங்களை யற்பியாசித்த—கூரறிவின்-மிகுந்தவறிவினையுடைய— மருத்துவனொன்று- வயித்தியனொன்றுரைத்த—இவ்வகையாற்போம்- இத்தன்மையாற்கெடும்— இதுநாங்கூறவேண்டா- இதையாஞ்சொல்லவேண்டுவதில்லை.எ-று.(இ-அ-க-ம்-) அபிமதவஸ்துலபித்தாற் சாமானியவாதியும்-ஆத்மஞானத்தாற் சாரமாதியு மணிமந்திரவவுஷதங்களினாலுண்டாகிய வியாதிகளுநசிக்குமென்பதாம்.(சச)

(அ-கை.) ஆதியிலெங்ஙனம் வியாதியுற்பத்தியெமாயிற்றென்கின்ற வினாவிரண்டிற் கதனுற்பத்தியைக்கூறல். (கவி) என்றலுமோவாதியினின் றெவ்வகையுண்டாம்பிணி மற்றெவையான்மாளுங், குன்றனையாயுரையென்னவிராமன்கேட்டலும் வசிட்டன் கூறுகிற்பா, னின்றமனங் கலங்குதலு முடல்கலங்கு முடல்கலங்கி னேர்வந்துற்ற, தொன்றுமறியாமனேர்வழிவிலங்கித்தீவழியிலோடாநிற்கும் .... *

(இ-ள்.) என்றலும்- இப்படியென்றுசொல்லியவளவில்—ஆதியினின்று-ஆதியிலிருந்து—பிணி- வியாதியானது—எவ்வகையுண்டாம் - எப்படியுண்டாகும்— மற்றெவையான்மாளும்- பின்பெதினாற்கெடும்— குன்றனையாயுரையென்ன- மலைக்கொப்பானவரேநீ சொல்வாயென்று — இராமன்கேட்டலும்- ஸ்ரீராமன்கேட்டமாத்திரத்தில்—வசிட்டன்கூறுகிற்பான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—நின்றமனம்- நிலையாயிருந்தமனது—கலங்குதலும்- கலங்கவும்—உடல்கலங்கும்-சரீரங்கலங்கும்—உடல்கலங்கில்-சரீரங்கலங்கினால் — நேர்வந்துற்ற-எதிரேவந்துபொருந்திய—ஒன்றுமறியாமல்- ஒன்றையுந்தெரியாமல்—நேர்வழிவிலங்கி-நேரானமார்க்கம்விட்டு—தீவழியிலோடாநிற்கும்- தீயமார்க்கத்திற்(பிராண)னோடும். எ-று ....(௪௬)

(அ-கை) இ-து (கவி)பிறையம்புபடுமான்போன்முறிந்தோடுங்கலக்கத்தாற்பிராணவாயு, நிறைகின்றசமமின்றிப் பரந்தோடுநாடிகளுநிலையினில்லா, வறைகின்றசீரணமாயசீரணமாயதிசீர்ணமாகியன்ன, முறைகின்றவுடலுக்குக் கூற்றமாநாடியுயிருலைவினாலே...... *

(இ-ள்.) பிறையம்பு- அர்த்தசந்திரபாணமானது—படுமான்போல் - தைக்கின்றமிருகத்தைப்போல—முறிந்தோடும்-வழிதப்பியோடும்—கலக்கத்தால் - கலக்கத்தினால்—பிராணவாயு நிறைகின்ற-பிராணவாயுநிறைந்திருக்கின்ற—சமமின்றிப்பரந்தோடும் - சமமில்லாமற்பரந்துசெல்லும்—நாடிகளுநிலையினில்லாது - நாடிகளுநிலையினிற்கமாட்டாது— அறைகின்றசீரணமாய்-சொல்லாநின்றசீரணமாகியும்—அசீரணமாய்-அசீர்ணமாகியும்—அதிசீரணமாகி-மிகுந்தசீரணமாகியும்—அன்னம்-அசனமானது—உறைகின்றவுடலுக்கு-தங்குகின்றசரீரத்துக்கு—நாடியுயிருலைவினால்- நாடிகள்பிராணன்களுடையசலனத்தினால்—கூற்றமாம்-நமனாகும்.எ-று.

(அ-கை-) இ-து. (கவி)உடலுள்ளேவிரோதத்தாலுறைகின்றவன்னம்வேற்றுருவமாகி, விடலுறுநோயாகுமவ்வகையாலாதியினால்வியாதியுண்டாந்,தொடர்வுறுவாதிநசித்திடுமாகில்வியாதிகளுந்துஞ்சிப்போகுங், கடவதாமந்திரத்தால்வியாதிகணீங்கிடுநெறியைக்கழறக்கேட்பாய் ....*

(இ-ள்.) உடலுள்- சரீரத்தினுள்— விரோதத்தால்- விரோதத்தினால்—உறைகின்றவன்னம் தரிக்கின்றவன்னமானது—வேற்றுருவமாகி- வேறுவடிவமாய்— விடலுறுநோயாகும்—தீராதவியாதியாகும்— அவ்வகையால் - அத்தன்மையால் — ஆதியினால்வியாதியுண்டாம் - ஆதியினால்வியாதிபிறக்கும்—தொடர்வுறு - தொடர்பில்லாமல்— ஆதிநசித்திடுமாகில் - ஆதியானது கெடுமானால் — வியாதிகளுந்துஞ்சிப்போகும் - நோய்களுநாசமடையும்— கடவதாமந்திரத்தால்-உச்சரிப்பதானமந்திரத்தினால்—வியாதிகணீங்கிடுநெறியை - நோய்கணீங்காநின்றமார்க்கத்தை—கழறக்கேட்பாய் - சொல்லக்கேட்பாய். எ-று. (இ-௩-௧-ம்) ஆதியில் வியாதிமனக்கலக்கத்தினாலுண்டானகிரமமறிவித்தாம் .... (௪௮)

(அ-கை.) வியாதியினாசங்கூறல். (கவி) எப்படியேகடுக்காய்கள்விரேசனத்தைப்பண்ணுகின்றதியல்பினாலே, யப்படியேபாவனையால்யரலவவாதிகள்காரியங்களாக்கு, மெய்ப்படிபுண்ணியமாகிச் சுத்தமாங்கிரியையான்மேலோர்சார்வாற், றப்பின்மனந்தெளிவெய்தும் புடம்வைத்தலானன்றுந்தமனியம்போல் *

(இ-ள்.) எப்படி - எவ்விதத்தில் —கடுக்காய்கள் - கடுக்காய்களானவை—இயல்பினால்-சுபாவத்தினால் — விரேசனத்தைப்பண்ணுகின்றது - மலவிமோசனத்தைச்செய்கின்றதோ — அப்படியே - அவ்வண்ணமே — யரலவவாதிகள் - யரலவமுதலியமந்திராக்ஷரங்களின் — பாவனையால்- பாவனையினால்—காரியங்களாக்கும் - (ஆரோக்கிய)காரியங்களைச்செய்யும்— மெய்ப்படிபுண்ணியமாகி - மெய்யாகியபுண்ணியமாய் — சுத்தமாங்கிரியையால் - பரிசுத்தமாகியதொழிலினாலும்—மேலோர்சார்வால் - சத்துக்களின்சார்பினாலும்— புடம்வைத்தலால்-(பொன்னைப்)புடம்வைத்தலினால்—நன்றுந்தமனியம்போல்- நல்லதங்கமானதுபோல—தப்பின்மனந்தெளிவெய்தும் - தவறில்லாமன்மனதுபரிசுத்தமடையும். எ-று ....(௪௯)

(அ-கை.) இ-து. (கவி) சுத்தமுறமனந்தெளியி லுடலிலேயாநந்தந்தோன்றுநிற்கு, மெத்துமறியுதித்தக்கா லுலகமெலா நன்றாகவிளங்கிடாதோ, சத்துவமாமனந்தெளியிற் பிராணவாயுவுமொழுங்கிற்சரித்துலாவு, முய்த்துளவனன் முநெறியிற் சீரணிக்குமதனானேயொன்றுந்தோன்று .... *

(இ-ள்.) சுத்தமுறமனந்தெளியில் - பரிசுத்தமாகமனதுதெளிந்தால்—உடலில்-சரீரத்தில்—ஆநந்தந்தோன்றுநிற்கும் - ஆநந்தந்தோன்றும்—மெத்து-மெதுவான—மதியுதித்தக்கால்-மிருதுவானபூரணசந்திரனுதயமானால்—உலகமெலாம் - சகங்களனைத்தும் — நன்றாகவிளங்கிடாதோ - நன்மையாகப்ரகாசிக்கமாட்டாதோ—சத்துவமாமனந்தெளியில்- சாத்துவீதத்தையுடையமனதுதெளிந்தால்—பிராணவாயுவும் - பிராணவாயுக்களும்— ஒழுங்கிற்சரித்துலாவும்-கிரமமாகச்சஞ்சரிக்கும்—உய்த்துளவன்னமும் - புசித்தபோனகமும்—நெறியிற்ரசிணிக்கும்-கிரமமாகச்சீரணத்தையடையும்—அதனல் - அதனுலே—நோயொன்றுந்தோன்ரு - வியாதியொன்றுமுண்டாகாது. எ-று. (இ-உ-க-ம்) வியாதிகண்மனந்தெளிந் தாநந்தமடைதலினசிக்குங்கிரமமறிவித்ததாம் .... (ருய)

(அ-கை.) குண்டலினிசத்திக்குஞ் சீவனுக்குமபேதங்கூறல். (கவி) ஆதிவியாதிகளிரண்டுந் தோன்றியொடுங்கிடுநெறிக ளறைந்தோமன்றே, யோதியகுண்டலினிதனதொழுங்கான்முன் னுரைப்புற்றயோகங்கேளாய், தீதில்புரியட்டகமென்றொருபெயர்கொள்சீவனுக்குத்திகழ்பிராண, வாதமெனும்பெயர்பெற்றகுண்டலினிமணத்துக்குமலர்போனிற்கும் .... *

(இ-ள்.) ஆதிவியாதிகளிரண்டும் - ஆதிவியாதிகளானவிரண்டும்—தோன்றியொடுங்கிடும்-உண்டாகிநசிக்கின்ற—நெறிகள் - மார்க்கங்களை — அறைந்தோம் - சொன்ேனும்— ஓதிய-முன்சொல்லப்பட்ட—குண்டலினிதனது - குண்டலிசத்தியினது—ஒழுங்கால்-கிரமத்தினுல்—முன்னுரைப்புற்ற - முன்சொல்லிய—யோகங்கேளாய்- யோகத்தைக்கேட்பாய்—தீதில்புரியட்டகமென்று - குற்றமற்றபுரியட்டகமென்று—ஒருபெயர்கொள்சீவனுக்கு- ஒருநாமத்தைத்தரித்தசீவனுக்கு —திகழ்பிராணவாதமெனும்- விளங்கியபிராணவாயுவென்கின்ற—பெயர்பெற்ற-நாமத்தைத்தரித்த—குண்டலினி- குண்டலிசத்தியானது—மணத்துக்கு-வாசனைக்(கிடமாகிய)—மலர்போல் - புஷ்பத்தைப்போல—நிற்கும் - இருக்கும். எ-று .... (ருச)

(அ-கை.) குண்டலினிசத்தியினற் பியாசித்தினுலுண்டானசித்திகளுன்கையறிவிக்கத்தொடங்கி கிரிமாவுமாகாயகமனமுமாகிய விரண்டின்சித்திமார்க்கங்கூறல். (கவி) புகல்வுறுகுண்டலிதன்னைப்பூரகத்தின்பரிசயத்தாற்பூர்ணமாக்கித், திகழ்வுறநின்றுலன்றுவடமேருநிகரானதிண்மையுண்டா, மிகவுடலந்தடிப்பெய்தும் பூரகத்தாற்பிராணனிறைவுற்றமெய்யைப், பகரறிவுமேனேக்கி யொருக்காலேவிண்செல்லப்படரவிக்கும் .... *

(இ-ள்.) புகல்வுறு - சொல்லப்பட்ட—குண்டலிதன்னை - குண்டலிசத்தியை— பூரகத்தின் பரிசயத்தால் - பூரகப்பழக்கத்தினுல் — பூர்ணமாக்கி - பூரணஞ்செய்து — திகழ்வுறநின்றல்-ப்ரகாசிக்கும்படிநின்றுல—அன்று - அப்பொழுது—வடமேருநிகரான- மகாமேருவுக்கொப்பாகிய—திண்மையுண்டாம்-வலிமையுண்டாகும்—மிகவுடலந்தடிப்பெய்தும்-மிகவுஞ்சரீரம்பருக்கும்—பூரகத்தால்- பூரகத்தினுல்—பிராணனிறைவுற்றமெய்யை-பிராணனிறைந்திருக்கின்றசரீரத்தை—பகரறிவுமேனேக்கின் - சொல்கின்றவறிவானதுமேனேக்கினுல்—ஒருக்காலே-ஒருபோதே—விண்செல்லப்படரவிக்கும் - ஆகாயகமனஞ்செய்விக்கும். எ-று .... (ருஉ)

(அ-கை.) இ-து (கவி) பாம்புபோல்விரைந்துதடிபோனிமிர்ந்துகுண்டலினிபடர்ந்துமேற்போந், தாம்புபோலுடல்பிணித்தநரம்பெல்லாந்தான்கவர்ந்துசரீரமெல்லாந், தேம்புருவகைமேலேயெழுப்புவிக்குங்காற்றினுற்செறிந்தபைதான், றாம்புசூழ்நீரிடையேயமூழ்த்துகினுமேற்கிளப்புந் தொடர்ச்சிபோல .... *

(இ-ள்.) பாம்புபோல்விரைந்து - சர்ப்பத்தைப்போலவேகமாய்—தடிபோனிமிர்ந்து-தண்டைப்போலுயர்ந்து—குண்டலினி - குண்டலிசத்தியானது—படர்ந்துமேற்போம்-விரிந்துமேலேசெல்லும்—தாம்புபோல் - கயிற்றைப்போல—உடல்பிணித்த- சரீரத்தைக்கட்டிய—நரம்பெல்லாம்- நாடிகளனைத்தும்—தான்கவர்ந்து - தான்கிரகித்து—சரீரமெல்லாம்- தேகமியாவும்—தேம்புருவகை - இளையாதவண்ணம் — காற்றினுற்செறிந்தபைதான் - வாயுவினுனிறைந்ததோற்பையானது— தாம்புசூழ்நீரிடையமூழ்த்துகினும் - மடைசூழ்ந்தசலத்தின்மத்தியிலமிழ்த்தினுலும்—மேற்கிளப்புந்தொடர்ச்சிபோல்- மேலேயெழுப்புகின்றதொடர்புபோல—மேலெழுப்புவிக்கும் - மேலேகிளப்புவிக்கும். எ-று .... (ருரு)

(அ-கை.) இ-து. (கவி) இத்திறனேமிகப்பழகுமியோகத்தாலியோகிகடாமெழுந்துவிண்மேற், கொத்துகவர்தூண்டில்சேர்மீன்போல வுலாவுவர்குண்டலினியென்னுஞ், சத்தியதுபிரமநாடியிலோடிக் கபாலத்தின்றனிப்புறம்போயுற்றுளமேல்லவிரலோர் பன்னிரண்டினெல்லையினிலுறுவதாகி. .... *

(இ-ள்.) இப்படியே - இந்தப்பிரகாரமே—மிகப்பழகும்- மிகவுமப்பியாசிக்கின்ற—இயோகத்தால்-இயோகத்தினால்—இயோகிகளாம்-யோகியரானவர்கள்—விண்மேவியிலருந்தாற்-ஆகாயத்தின்மேலும்பி—மொத்திக்கவர்-கோத்திக்கிரமிக்கின்ற—நான்மடலம்சார்மீன்போல-நான்மடிலைடைநந்தமகத்தைதப்போல—உலாவுவர்- சஞ்சரிப்பார்கள்—குண்டலினியென்னுஞ்சத்தியது-குண்டலினியென்கின்றசத்தியானது— பிரமநாடியிலோடி-சுழிமுனைக்குட்சென்று—கபாலத்தில்-பிரமரந்தரத்தின் —தனிபடையப்போய் - மேலாகப்புறப்பட்டு—உற்றுள- பொருந்தியிருக்கின்ற—மேல்விரலோர்பன்னிரண்டின் - மேலொருபன்னிரண்டங்குலத்தினது — எல்லையிலிருக்குமவதாகி- அளவிலடைவதாகி. எ-று... .... (ருச)

(அ-கை) சித்தர்தரிசனசித்திமார்க்கங்கூறல்(கவி) நாடிகளெல்லாந்தகையுமிரோ
சகத்தாலொருமுகுர்த்தநண்ணிநிற்கி, னீடியவிண்சரிப்பவரைக்காணலாம்வி
ஞ்ஞானநேர்மையாலே, யூடுறதூரத்தோடும்புந்திவிழியால்விண்ணினூன்றத்
தோன்றும்,மீடுறுநற்பொருளுதவுஞ்சித்தர்கணங்களுவிலேபிறங்குமாபோல்.

(இ-ள்.) நாடிகளெல்லாம் - நாடிகளனைத்தையும்— தகையுமிரோசகத்தால் - தடுக்கின்றவிரோசகத்தினால்—ஒருமுகுர்த்தம் - இரண்டுநாழிகை — நண்ணிநிற்கின் - அடைந்திருந்தால்—நீடியவிண்சரிப்பவரை - நீண்டவாகாயகமனஞ்செய்பவர்களை—காணலாம்- தரிசிக்கலாம்—விஞ்ஞானநேர்மையால் - ஞானநுட்பத்தினால்—ஊடுறு-பொருந்திய—ஆதாரத்தோடும்-சமீபத்திற்செல்லுகின்ற—புந்திவிழியால்- ஞானதிருஷ்டியினால்—விண்ணிற்மீடுறுநற்பொருளுதவும்-ஆகாயத்திற்பெருமையுள்ள(அணிமாமுதலிய)நல்லவஸ்துக்களைக்கொடுக்கின்ற — சித்தர்கணங்களுவிற்பிறங்குமாபோல்- சித்தர்குழாங்கள்சொற்பனத்திற்றோற்றுவதுபோல—ஊன்றத்தோன்றும்- நிலையாகத்தோற்றும். எ-று..... .... (ருரு)

(அ-கை.) பரகாயப்ரவேசசித்திமார்க்கங்கூறல். (கவி) பன்னிரண்டங்குலத்தின்முகத்தின்
புறப்போயிரோசகத்தின்பழக்கத்தாலே, மன்னுயிர்தானெடிதுநிலைநிற்குமேல் வேற்றுட
லைமருவுமென்ன, சொன்னமுனிவனைவள்ளல் சூக்கவழிசெல்கைக்குந்தூலமாய்விண்டன்
னைநிறைகைக்குமணுத்துவந்தூலத்துவமுடற்குத் தருமாறெங்ஙன் ....,... ....;..... ...... *

(இ-ள்.) பன்னிரண்டங்குலத்தின் - பன்னிரண்டுவிரளலவு—முகத்தின்புறம்போய்-வதனத்தின்முன்புசென்று—இரோசகத்தின் - இரோசகத்தினுடைய—பழக்கத்தால்- அற்பியாசத்தினால்—மன்னுயிர்தான் - நிலைபெற்றபிராணனானது — நெடிதுநிலைநிற்குமேல் - வெகுகாலநிலையாயிருக்குமாயின் — வேற்றுடலைமருவுமென்ன சொன்னமுனிவனை - பரகாயப்ரவேசஞ்செய்யுமென்றுரைத்தவசிஷ்டமுனியை—வள்ளல் - ஸ்ரீராமர்—சூக்கவழிசெல்கைக்கும்- சூட்சுமமார்க்கத்திற்போவதற்கும் — தூலமாய்விண்டன்னை நிறைகைக்கும் - பருமனுகவாகாயத்தைநிறைவதற்கும்—உடற்கு - சரீரத்துக்கு—அணுத்துவம் - அணுத்துவமும்—தூலத்துவம் - மதத்துவமும்—தருமாறெங்ஙன் - கொடுக்கும்வண்ணமெப்படி. எ-று. (இ-சு-க-ம்) நான்குசித்தியுண்டாகுங்கிரமமறிவித்ததாம்...... .... (ருசு)

(அ - கை.) இச்சித்திகளைபடையத் தேகத்துக்குச்சூக்குமத்துவமுந் தூலத்துவமுமெங்
ஙனமுண்டாயிற்றென்னும்வினுவுக்குத்தரங்கூறல்.(கவி) அருள்வாயென்றலுமுனிவனுரை
செய்வானேகமாயறிவொன்றேயா, யொருவாதசமமாகிச்சாந்தமாய்ச்சுத்தமாயொருபற்
றில்லாப், பொருளாய்நுண்மையின்மிகவு நுண்மையாய்ப்புவியன்றாய்ப்புவிசேராதாய்,
மருவாநின்றுளததுதான் சங்கற்பமுறத்தனைத்தான்வகையாய்ச்செய்யும்........ .... *

(இ-ள்.) அருள்வாயென்றலும் - கிருபைசெய்வாயென்றிராமர்கேட்கவும்—முனிவனுரைசெய்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—ஏகமாய்- ஒன்றாகியும்—அறிவொன்றேயாய்- சின்மாத்திரமாகியும்—ஒருவாதசமமாகி - நீங்காதசமத்துவமாகியும்— சுத்தமாய் - பரிசுத்தமாகியும்—சாந்தமாய்- உபசாந்தமாகியும்—ஒருபற்றில்லாப்பொருளாய் - ஒருசம்பந்தமுமில்லாதவஸ்துவாகியும்—நுண்மையில் - சூட்சுமத்தில்— மிகவுநுண்மையாய் - மிகவுஞ்சூட்சுமமாகியும்—புவியன்றாய்- சகமல்லாததாகியும்— புவிசேராதாய் - சகத்தைச்சேராததாகியும்—மருவாநின்றுளது - பொருந்தியிருக்கின்றது ஒன்றுண்டு)—அதுதான் - அதுவே—சங்கற்பமுற - சங்கற்பத்தைபடைய—தனைத்தான்-தன்னைத்தானே—வகையாய்ச்செய்யும்-பிரிவாகச்செய்யும்.எ-று.

(அ-கை.) இ-து. (கவி) பலவுஞ்சூழ்வுறச்சீவனும்பொய்யே சங்கற்பம்பயின்
மயக்காற், கலங்குஞ்சீவன்சடமாயிவ் வுடல்காணும்பாலர்காணும் பேய்போற்,
குலவும்பல்லுயிர்களுமிவ்வுலகமே யெப்படியெத்தைக்குறிக்கின்றார்க, ளுலகி
ன்கணப்படியேயதைக்காண்பார் நினைவின்கணூற்றத்தாலே.............. .... *

(இ-ள்.) பலவுஞ்சூழ்வுற - அநேகமான (கலக்கஞ்) சூழ்ந்தபோது—சீவனும் - சீவனுரும்—சங்கற்பம் - சங்கற்பமென்று—பயின்மயக்கால் - சொல்லப்பட்டபிரமையினால்—கலங்குஞ்சீவன் - கலங்கப்பட்டசீவனானவன்—சடமாய் - மூடமாய்—பாலர்காணும்-குழந்தைகள்பார்க்கப்பட்ட—பேய்போல் - பசாசைப்போல—இவ்வுடல்காணும் - (மித்தையாகிய) விந்தச்சரீரத்தைப்பார்க்கும்—குலவும்பல்லுயிர்களும் - பொருந்தியவநேகசீவர்களும்—இவ்வகையே - இப்படியே — எப்படியெத்தைக் குறிக்கின்றார்கள் - எங்ஙனமெதைக் கருதுகின்றார்களோ—அப்படியேயுலகின்கண் - அந்தப்ரகாரமேசகத்தில்— நினைவின்கணூற்றத்தால்- மனதின்கண்ணுள்ளதிடத்தினால்—அதைக்காண்பார் - அதைப்பார்ப்பார்கள். எ-று .... (ருஅ)

(அ-கை,) இ-து. (கவி) ஊற்றமுறுபாவனையின் பரிசயத்தான்மூடர்களுமொன்றையொன்றன், மாற்றிவிடமமுதாக்கி யமுதத்தை நஞ்சாக்கிமருவாநிற்ப, மேற்றமுறுஞ்சத்தியபாவனையாலே யித்தேகந்தேகமான, தோற்றியவித்தேகமீண்டசத்தியபாவனையால்விண் சுரூபமாய்ப்போம் .... *

(இ-ள்.) ஊற்றமுறுபாவனையின் - திடமானபாவனையினது —பரிசயத்தால்-அற்பியாசத்தினால்—மூடர்களும் - அறிவில்லாதவர்களும்— ஒன்றையொன்றன்மாற்றி - ஒன்றையொன்றினாற்கெடுத்து—விடமமுதாக்கி- விஷத்தையமுதமாக்கி—அமுதத்தை நஞ்சாக்கி- அமுதத்தை விஷமாக்கி—மருவாநிற்பர் - பொருந்தியிருப்பார்கள்— ஏற்றமுறும் - மேன்மைபொருந்திய —சத்தியபாவனையால் - மெய்ப்பாவனையால்— இத்தேகந்தேகமான - இவ்வுடலானதுதூலமாயிற்று—தோற்றியவித்தேகம் - தோற்றப்பட்டவிச்சரீரமானது —மீண்டு- திரும்பவும்—அசத்தியபாவனையால் - மித்தையென்னும்பாவனையினால்— விண்சுரூபமாய்ப்போம் - சூட்சுமரூபமாம். எ-று. (இ-ரு-க-ம்) அகோசரமானசைதன்யம்பாவனையாற்சித்துஞ்சகத்துமாவதுபோல, சீவனணுத்துவபாவனையாற் சூக்குமத்துவமு, மகத்துவபாவனையாற் றூலத்துவமுமவனதுபாவனுவடிவமானதேகத்துக்குவருமென்பதாம் .... (ருகூ)

(அ-கை.) இவ்வணிமாதியஷ்டசித்திகளையுஞ்சூடாலைபெற்றுவிளங்குதல்.(கவி) அணிமாதிகுணப்பேற்றின்பாவனையூகங்களுமிவ்வழியேயாகுந், துணிவாலேயோகத்தின் சித்தியறிவார்க்கிதுதான்சுலபமாகுங், குணியானவணிமாதிகுணச்செல்வமிகப்பழகுங் குறிப்பாற்பெற்று, மணியாழியுலகெல்லாங் கணத்தில்விளையாடினண் மறுவிலாதாள் .... *

(இ-ள்,) அணிமாதி - அணிமாமுதலிய(அஷ்டசித்தியினது)— குணப்பேற்றின் - தன்மையையடைவதின்—பாவனையூகங்களும் - பாவனையாலுண்டானயுத்திகளும்— இவ்வழியேயாகும்-இந்தமார்க்கமேயாகும்—துணிவால் - தெளிவினால் —யோகத்தின்சித்தி - யோகத்தினதுசித்தியை—அறிவார்க்கு - தெரிபவர்களுக்கு—இதுதான்சுலபமாகும் - ஈதெளிதாகும் —குணியான-காரணமாகிய—அணிமாதி - அணிமாமுதலிய—குணச்செல்வம் - குணசம்பத்தை—மிகப்பழகுங்குறிப்பாற்பெற்று-மிகவுமற்பியாசிக்கின்றகருத்தினாலடைந்து—மணியாழி-இரத்தினங்களையுடையசமுத்திரஞ்சூழ்ந்த—உலகெலாம் - சகங்களனைத்திலும்— கணத்தில்-க்ஷணநேரத்தில்—மறுவிலாதாள்-களங்கமற்றசூடாலையானவள்—விளையாடினள்- லீலைசெய்தாள்.எ-று(இ-ம்) கணவனையுய்விக்கு நிமித்தமிச்சித்திகளைப்பெற்றாளென்பதாம், அணிமாதியஷ்டசித்தியாவன, அணிமா,மகிமா,கரிமா,லகிமா,பிராத்தி,பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்பனவாம்.

(அ-கை.) நாநாவிதவுபாயங்களாற் போதித்துமறிவுண்டாகாமையா லஃதைதிருத்தல். (கவி) நாயகனையிமைப்போது நீங்காதாணல்லமுதாஞானந்தன்னை, யாயவனுக்கநேகவுபாயத்தினலறிவித்து மனையமன்னன்; றூயறிவிலிளைப்பாறப்பெற்றிலன்மாயோகினியாஞ்சூடாலைக்கு, மேயகுணங்களுமறிந்தானில்லைப்பாலகர்விஞ்சை மேவாதாப்போல் ... *

(இ-ள்.) நாயகனை - தலைவனை—இமைப்போதுநீங்காதாள் - நொடிநேரமும்பிரியாதவள் —நல்லமுதாஞானந்தன்னை - ஆநந்தாமுதமாகியஞானத்தை— ஆயவனுக்கு - சிறந்ததனது புருஷனுக்கு—அநேகவுபாயத்தினல் - பலதந்திரங்களினல்— அறிவித்தும் - தெரிவித்தும்—அனையமன்னன்- அந்தவரசனனவன்—தூயறிவில் - பரிசுத்தஞானத்தில்—இளைப்பாறப்பெற்றிலன் - விஸ்ராந்தியையடைந்திலன்—மாயோகினியாம்- மகாயோகினியாகிய—சூடாலைக்கு மேயகுணங்களும் - சூடாலைக்குப்பொருந்தியகுணங்களையும்—பாலகர் - குழந்தைகள்—விஞ்சைமேவாதாப்போல்-கல்வியையறியாததுபோல—அறிந்தானில்லை-தெரிந்திலன். எ-று.(சுக)

(அ-கை.) இ - து. (கவி) தன்னறிவிலிளைப்பாறவிலாமையாலவனுக்குத் தனது யோக, நன்னிதியையுரைத்திலளாற்சூத்திரர்க்குயாகநெறிநவில்வாருண்டோ, வென்னுமேமகத்தானசித்தயோகினிவருந்தியியம்பவேயு, மன்னசிகித்துவசனறியுற்றிலனாற்பிறரெங்ஙனறிவாராயா .... *

(இ-ள்.) தன்னறிவில் - தனதாத்மஞானத்தில்—இளைப்பாறலில்லாமையால் - விஸ்ராந்தியடையாததினால்—அவனுக்கு - அந்தப்புருஷனுக்கு—தனதுயோகநன்னிலை - தனதுநல்லஞானசம்பத்தை—உணர்த்திலன் - சொற்றிலன்—சூத்திரர்க்கு - சதுத்தர்களுக்கு— யாகநெறிநவில்வாருண்டோ - யாகமார்க்கத்தைச்சொல்லுவாருமுளரோ— என்னலும் - என்றுவசிஷ்டமுனி சொன்னவளவில்—மகத்தானசித்தயோகினி - மகாசித்திகளையுடையசூடாலையானவள்—வருந்தியியம்பவேயும் - வருந்திச்சொல்லவும்—அன்னசிகித்துவசன் - அந்தச்சிகித்துவசனானவன்—அறிவுற்றிலனால் - ஞானத்தையடைந்திலனாதலால்— ஐயா - ஆசாரியரே—பிறரொங்ஙனறிவார் - மற்றெவர்களெப்படிதெரிந்துகொள்ளுவார்கள். எ-று. (இ-உ-க-ம்) பக்குவமின்றியகாலத்தெவ்விதத்திலுண்மையைப்போதிக்கினு மஃறியாதென்பதாம்........................ (௬௨)

(அ-கை.) வல்லமையுள்ளவாசிரியர்போதித்து முதியாதவறிவு மேலெங்ஙனமுண்டாமெனிலாசிரியவாக்யத்தி னம்பிக்கையுள்ளசீடனறிவேகாரணமாகவுண்டாகுமெனல். (கவி) ஒல்லும்வகையுரையென்ன விராகவன்கேட்டலும்வசிட்டனுத்தரிப்பா, னல்லவுபதேசந்தானம்பிக்கைமாத்திரத்தைநன்றாய்ச்செய்த, லெல்லையிலாவறிவுக்குச்சுத்தமாமகனறிவேயேதுவென்று, சொல்லுதலுமீண்டந்தமுனிதனக்குரகுநாதன்சொல்லுகிற்பான் ....*

(இ-ள்.) ஒல்லும்வகையுரையென்ன - அடையும்வகையைச்சொல்லுமென்று— இராகவன்கேட்டலும் - ஸ்ரீராமன்கேட்கவும்—வசிட்டனுத்தரிப்பான் - வசிஷ்டமுனியுத்தரஞ்சொல்லுவார்—நல்லவுபதேசந்தான் - பிரமோபதேசமானது — நம்பிக்கைமாத்திரத்தை - நம்புதன்மாத்திரம்—நன்றாய்ச்செய்தல் - நன்மையாகச்செய்வதாம் — எல்லையிலாவறிவுக்கு - அறிதற்கரியவாத்மஞானத்துக்கு—சுத்தமாமகனறிவே - பரிசுத்தமானசீஷனறிவே — ஏதுவென்று - காரணமாகுமென்று—சொல்லுதலும் - சொல்லியவளவில்—மீண்டு - திரும்பவும்—அந்தமுனிதனக்கு - அந்தவசிஷ்டமுனிக்கு—ரகுநாதன்சொல்லுகிற்பான் - ஸ்ரீராமன்சொல்லுவார். எ-று.

(அ-கை.) சீஷனறிவேயேதுவென்றா லாசிரியவசனமேதுவன்றோவெனி லஃதேயேதுவென்பதற்கோரிதியாசமுரைத்தல். (கவி) மகனறிவேயேதுவெனிற்குருவசனமேதுவாய் வருவதெங்ஙன், மிகுமறிவுக்கெனக்கேட்பவசிட்டனதற் குரைசெய்வான் விந்தவெற்பி, னகல்வனத்திலொருவேடன் பெருங்குடும்பியவனொருநாளடவிதன்னிற், புகுநெறியிற்பலகறையொன்றினைக்கெடுத்துத்தேடினான்புலம்பலோடும் .... *

(இ-ள்.) மகனறிவேயேதுவெனில் - சீஷனறிவேகாரணமானால்— குருவசனமேதுவாய் - ஆசாரியவசனங்காரணமாக—மிகுமறிவுக்கு - மேலானவாத்மஞானத்துக்கு—வருவதெங்ஙன் - வருவதெப்படி—எனக்கேட்ப - என்றிராமன்கேட்க—வசிட்டன் - வசிஷ்டமுனியானவர்—அதற்குரைசெய்வான் - அதற்குச்சொல்லுவார்—விந்தவெற்பினகல்வனத்தில் - விந்தமலையின்மகாரணியத்தில்—ஒருவேடன்பெருங்குடும்பி - ஒருவேடன்பெரியசம்சாரி— அவனொருநாளடவிதன்னில் - அவ்வேடனொருதினம் (புல்லுகணிறைந்த) காட்டில்—புகுநெறியிற்பலகறையொன்றினைக்கெடுத்து - நடக்கின்றமார்க்கத்திலோர்பலகறையைப்போட்டுவிட்டு — புலம்பலோடுந்தேடினான் - அழுகையுடன்றேடினான். எ-று .... (௬௪)

(அ-கை.) இ - து. (கவி) மூன்றுநாடேடியபின்முழுமதிநேர்மணியொன்றுமுன்னேகண்டா, னென்றுபலகறைதேட வேழுலகும்பெறுமணியை யெதிர்த்தான் வேடன், ஞான்றவுபதேசத்தாற்கல்வியான்ஞானமுறுமதுவேபோல, வூன்றுறவொன்றைக்கருதவொன்றுவெளிப்படுங்குருவினுபதேசத்தால்........................*

(இ-ள்.) மூன்றுநாடேடியபின் - மூன்றுதினந்தேடினபின்பு — முழுமதிநேர்மணியொன்று - பூர்ணசந்திரனையொத்தவொருவிரத்தினத்தை — முன்னேகண்டான் - எதிரேகண்டான்—என்றுபலகறைதேட - எக்காலமுற்றுபலகறையைத்தேட — ஏழுலகும்பெறுமணியை - சத்தவுலகமும்விலைபெறத்தகுந்தவிரத்தினத்தை — வேடனெதிர்த்தான் - வேடுவனேபெற்றான்—அதுபோல் - அதைப்போல—ஞான்றவுபதேசத்தால் - (பக்குவ)காலத்திற்செய்யும்பிரமவுபதேசத்தினாலும்—கல்வியால் - (வேதாந்தசாஸ்திர) ஞானத்தினாலும்—ஞானமுறும் - அறிவுண்டாம்—குருவினுபதேசத்தால் - ஆசாரியருபதேசத்தினால்—ஊன்றுறவொன்றைக்கருத - திரமாகவொன்றைநினைக்க—ஒன்றுவெளிப்படும் - மற்றொன்றுதயமாம். எ-று. [ப-ம்] குருவாக்யப்படி துரியவடிவைச் சிந்திக்கச்சிந்திக்க அச்சிந்தனமிறந்து சிந்தனாதிதமான துரியாதீதம் வெளிப்படுமென்பார், ஒன்றைக்கருத வொன்றுவெளிப்படுங் குருவினுபதேசத்தாலென்றார். (இ-ரு-க-ம்) குருவாக்யங்காரணமாகச் சீடன்முயற்சிக்கின் ஞானமுதிக்குமாகலினதுவ்வகாரணமாமென்பதாம்........................ (௬௫)

(அ-கை.) சீஷனறிவுமுயற்சிக்குமாசிரியர்வாக்குதல்பட்டனுக்குமேதுவெனக்கூறிச் சூடாலையின்கூட்டரவால் நித்தியவிவேகந்தோற்றிற்றெனல். (கவி) நலனுறுபேரறிவுக்குக் குருவசனங்காரணத்தைநண்ணுதேனும், பலகறைநன்மணிக்கேது வானாற்போலேதுவாய்ப்பலத்தைநல்குங், குலவுசிகித்துவசன்றான் ஞானமிலாமையின் மோகங் கூடிச்சாலச், சுலபமுறுதன்செல்வம்பெருங்கனலென்றெண்ணியே துன்பமுற்றான் .... *

(இ-ள்.) நலனுறுபேரறிவுக்கு - சுகம்பொருந்திய வியாபகஞானத்துக்கு— குருவசனம்- ஆசாரியருபதேசமானது — காரணத்தைநண்ணுதேனும் - காரணமானதைக்கிட்டாததானாலும்—பலகறை - பலகறையானது— நன்மணிக்கு - நல்லவிரத்தினங் (கிடைப்பதற்கு)—ஏதுவானாற்போல்-காரணமானதுபோல— ஏதுவாய்ப்பலத்தைநல்கும்-காரணமாகப்பயனைக்கொடுக்கும்—குலவுசிகித்துவசன்றான்-குலவாநின்றசிகித்துவசவரசனானவன் —ஞானமிலாமையின்-ஆத்மஞானமில்லாததினால் — மோகங்கூடிசாலச்சுலபமுறு - மயக்கமடைந்து மிகவும்லகுவாய்ப்பொருந்துகின்ற—தன்செல்வம் பெருங்கனலென்றெண்ணி துன்பமுற்றான் - தனதுசெல்வங் காட்டாக்கினியென்று நினைத்து துக்கமடைந்தான். எ-று .... (௬௬)

(அ-கை.) இல்லறத்தருமப்படி தானமுதலியவைகளைச்செய்துந் துன்பநீங்காமையாற் றுறவறத்திற் றவஞ்செய்தலை விரும்பித் தேவிக்குரைத்தல். (கவி) அருந்தானம்பலகொடுத்தான்றவமிகச்செய்தான்றீர்த்தமனைத்துந்தோய்ந்தான், வருந்தாமையவற்றாலும்பெற்றிலன்பேரிடராலேமனநொந்தோர்நா, ளிருந்தானேகாந்தத்தின்மடிமேலேசூடாலையிருக்கச்செய்து, பெருந்தாபமுறுகின்றதுயரெல்லாமவளுக்குப்பேசலுற்றான்.......... .... *

(இ-ள்.) அருந்தானம்- அரியதானங்கள்—பலகொடுத்தான்-அநேகங்களைச்செய்தான்— தவமிகச்செய்தான் - விரதங்களைமிகுதியாகச்செய்தான்—தீர்த்தமனைத்துந்தோய்ந்தான்-தீர்த்தங்களிலெல்லாமுழுகினான்—வருந்தாமை-துன்பமில்லாமையை— அவற்றாலும்பெற்றிலன்-அவைகளாலுமடைந்திலன் —பேரிடரால் - மிகுந்த துன்பத்தினால் — மனநொந்து - மனதுநைந்து—ஓர்நாளேகாந்தத்தினிருந்தான் - ஒருதினந்தனியேயிருந்து— மடிமேற்சூடாலையிருக்கச்செய்து -(தனது) மடியின்மேற்சூடாலையைவைத்துக்கொண்டு— பெருந்தாபமுறுகின்ற துயரெல்லாம் - மகாவெப்பமடைகின்றதுன்பங்களனைத்தையும்— அவளுக்குப்பேசலுற்றான்- அவளுக்குச்சொல்லுவான். எ-று .... (௬௭)

(அ-கை.) இ-து. (கவி) ஆண்டவரசினும்புசித்தசெல்வத்துமின்றுநானாசையற்றே, னீண்டவனம்புகநயந்தேன் றுக்கசுகமாபத்து நிதிகளெல்லா, மாண்டவனத் துறைவோரை துயர்செய்யாப்புவிபொருட்டாம்மயங்கவேண்டாங், காண்டகுதன் வினை நாசந்தோன்றாதநாட்டினும்வன்காடுநன்றே .... *

(இ-ள்.) ஆண்டவரசினும் - ஆளப்பட்டவரசாட்சியிலும்—புசித்தசெல்வத்தும்-அனுபவித்தசம்பத்திலும்—இன்றுநானாசையற்றேன் - இப்போதுயானிச்சைவிட்டேன் — நீண்டவனம்புகநயந்தேன் - நெடியகாட்டினிடத்திற்செல்லவிரும்பினேன்—துக்கசுகம்- துன்பவின்பங்களும்—ஆபத்துநிதிகள் - ஆபத்துச்சம்பத்துகளுமாகிய — எல்லாம்- யாவும்—மாண்டவனத்துறைவோரை - மாட்சிமைப்பட்டவாரணியத்திலவசிப்பவர்களை — துயர்செய்யா - துன்பஞ்செய்யாது—புவிபொருட்டு - பூமியினிமித்தம்— மயங்கவேண்டாம் - பிரமிக்கவேண்டுவதில்லை—காண்டகு - காணத்தகுந்த—தன்வினை - தனதுயிர்ச்சார்பு(பொருட்சார்பில்)—நாசந்தோன்றாது - பற்றுநீங்காதிருக்கும்—நாட்டினும் - இராச்சியத்தைக்காட்டிலும் — வன்காடுநன்று - வலியவனநன்மையாம் .... (௬௮)

(அ-கை.) இ-து. (கவி) பற்றின்றித்தனியிருக்குமனத்தைப்போற்பனிமதியும்பதுமத்தோனும், பொற்றிரள்சேரிந்திரனுஞ்சுகமடையாராதலிற்கான்போகுமென்னை, குற்றமெனவிலக்கலைநீ கணவர்நயந்தது விலக்கார் குலத்தின்மாதர், சிற்றிடையாயென்றுரைத்தமன்னனுக்குச்சூடாலைசெப்பலுற்றாள் ....*

(இ-ள்.) பற்றின்றி - ஆசையில்லாமல்—தனியிருக்கும் - ஏகாந்தமாயிருக்கின்ற—மனத்தைப்போல் - மனதைப்போல—பனிமதியும் - குளிர்ச்சிபொருந்தியசந்திரனும்— பதுமத்தோனும்- பிரமதேவனும்—பொற்றிரள்சேரிந்திரனும் - சொர்னசமூகத்தையடைந்திருக்கின்றதேவேந்திரனும் — சுகமடையார் - இன்பமடையார்கள்—ஆதலில் - ஆதலால்—கான்போகுமென்னை - வனத்திற்செல்லுகின்றவென்னை — நீகுற்றமெனவிலக்கலை - நீகுற்றமென்றுதள்ளாதே—கணவர்நயந்தது - தலைவன்விரும்பியது—குலத்தின்மாதர் - குலஸ்திரீகள் — விலக்கார்-மாற்றார்கள்—சிற்றிடையாயென்று- நுண்ணியவிடையையுடையபெண்ணேயென்று — உரைத்தமன்னனுக்கு - சொல்லியவரசனுக்கு— சூடாலைசெப்பலுற்றாள் - சூடாலை சொல்லத்தொட

ங்கினாள். எ-று. (இ-ச-க-ம்) நித்தியாநித்தியவஸ்து விவேகமுண்டாய தனாலிகபரவிச்சைவிராக முதித்ததென்பதாம்...(௬௯)

(அ-கை.) அரசன்கருத்துமுதிருநிமித்தங் கபடமாய்வனஞ்செல்வதைவிதிப்படிதடுத்தல். (கவி) வசந்தநாண்மலர்விளங்குஞ் சரற்காலங்காய்விளங்குமரபுபோல, விசைந்தநாட்செய்ததொழில்விளங்குமாற்சரையாலேயாக்கைநைந்தாய்,பசைந்தமாலறவனமேபோகலா மிளமைநாட்பான்மையன்று, மசைந்திடாதொழிகவெனச் சூடாலைசொல்லியதற்கரசன் சொல்வான்... *

(இ-ள்.) வசந்தநாள் - வசந்தகாலத்தில்—மலர்விளங்கும்- புட்பங்கள்ப்ரகாசிக்கும்—சரற்காலம்- சரற்காலத்தில்—காய்விளங்கும் - காய்கள்ப்ரகாசிக்கும்—மரபுபோல்- முறைமைபோல—இசைந்தநாள் - உரியகாலத்தில்—செய்ததொழில்விளங்கும் - செய்யப்பட்டகன்மங்கள்ப்ரகாசிக்கும்—சரையால் - மூப்பினால்—ஆக்கைநைந்தால் - சரீரமானதுதளர்ந்தால்— பசைந்தமாலற - நட்புற்றவிச்சைகெட—வனமேபோகலாம் - கானகத்திற்செல்லலாம்—இளமைநாள்-எவ்வன்னகாலத்திற்(செல்லுதல்)—பான்மையன்றாம் - முறைமையன்று — அசைந்திடாதொழிகவென - செல்லாதிருப்பாயென்று—சூடாலைசொல்லியதற்கு- சூடாலைசொன்னதற்கு—அரசன்சொல்வான் - மன்னன்கூறுவான். எ-று.......................................(௭௰)

(அ-கை.) வனஞ்செல்லக்கூடாதென்ற சூடாலைவசனத்தை விதிப்படிதடுத்தல். (கவி) தடாதொழிவாயேகாந்த வனம்புகுந்தேநிற்பேனான்சற்றுந்தாழேன், படாமுலைநீசிறியையாலுடன்வருதற்காகா நீ பாரைத்தாங்கி, விடாதிருத்திநன்மனையிற் கணவரகன்றாற்குடும்ப மெலிவுறாமற், கெடாதளித்தல்குலமகளிர் விரதமெனநீர்படிவான் கிளர்ந்துபோனான்..*

(இ-ள்.) தடாதொழிவாய் - தடுக்காமலிருப்பாய்—ஏகாந்தவனம் - ஏகாந்தமானகானகத்தில்—நான்புகுந்துநிற்பேன் - யான்சென்றிருப்பேன்—சற்றுந்தாழேன் - எவ்வளவுந்தங்கமாட்டேன்—படாமுலை - கச்சிறுக்கியதனத்தையுடையவளே—நீசிறியையால் - நீசிறுபெண்ணானதால்—உடன்வருதற்காகா - (என்)னுடன்வருதற்குக்கூடாது— நீபாரைத்தாங்கி - நீபூமிபாலனஞ்செய்து—விடாதிருத்தி - நீங்காமலிருப்பாய்— நன்மனையிற்கணவரகன்றால் - நல்லவீட்டினின்றுநாயகனீங்கினால்—குடும்பமெலிவுறாமல்-சம்சாரமிளைக்காமல்—கெடாதளித்தல்-கெடாமலிரட்சிக்குதல்—குலமகளிர்விரதமெனக்கிளர்ந்து- குலஸ்திரீக்குத்தவமென்றுசொல்லி—நீர்படிவான்- ஸ்நானஞ்செய்யும்பொருட்டு—போனான் - சென்றான். எ-று..........................(௭௧)

(அ-கை.) அரசனரசியறியாத வண்ணம் வனஞ்செல்லல். (கவி) பகற்பொழுதுசென்றதற் பின் சந்திநியதிகள்பண்ணிப் பாவையோடுஞ், சுகித்தவமளியினிலத்திற் றுயில்வுற்றானள் ளிரவிற்றுஞ்சும்வஞ்சி, யகத்திருப்பமெல்லவெழுந்தவளறியாவகையேகியறிந்தோர்க்கெல்லா, நகர்க்குளுலாவுதுமென்னாயாவரையுநிறுத்திப்போய்நகரைநீத்தான்................ *

(இ-ள்.) பகற்பொழுதுசென்றதற்பின்-பகற்காலம்போனபின்பு—சந்திநியதிகள்பண்ணி-சந்தியாவந்தனநியமங்களைச்செய்து—பாவையோடும்- மனைவியாளுடன்—சுகித்தவமளியில்-இன்புற்றபஞ்சணைமெத்தையைப்போல—நிலத்திற்றுயிலுற்றான் - பூமியினித்திரைசெய்து—நள்ளிரவில் - அர்த்தசாமத்தில்—துஞ்சும்வஞ்சி-நித்திரைசெய்யும்வஞ்சிக்கொடிபோன்றசூடாலையானவள்—அகத்திருப்ப - உள்ளேயிருக்க — மெல்லவெழுந்தவளறியாவகையேகி - மிருதுவாகவெழுந்திருந்தவளறியாதபடிபோய்—அறிந்தோர்க்கெல்லாம் - தெரிந்தவனைவர்களுக்கும்—நகர்க்குளுலாவுதுமென்னா - நகர்சோதனையாகச்செல்வோமென்று— யாவரையுநிறுத்தி-எல்லாரையுநிறுத்தி—போய் - (வெளியிற்) சென்று—நகரைநீத்தான் - பட்டணத்தினின்று நீங்கினான். எ-று...(௭௨)

(அ-கை.) மந்தரவெற்பின்சாரலையடைதல். (கவி) சடமகலாப்பெருந்திருவேயுனைத்தொழுதேனில்லென்றுதன்னோடேகி, யடவிபுகுந்தான்றினமோர்பன்னிரண்டிற் பலகிரியுமாறுநீங்கிப், படர்சனங்கள்செலற்கரிதாய்மந்தரவெற்புக்கருகாம்பழுவம்புக்கான், மடலவிழ்பங்கயவாவிமலர்ப்பொழில்சூழவ்விடத்தில்வசிப்பதானான்.............................. *

(இ-ள்.) சடமகலாப்பெருந்திருவே -மூடத்தன்மையைநீங்காதபெரியசம்பத்தே—உனைத்தொழுதேன் - உன்னைவணங்கினேன்—நில்லென்று- நிற்பாயென்று(நிறுத்தி)—தன்னோடேகி - தாமேசென்று—அடவிபுகுந்தான் - காட்டிற்ப்ரவேசித்து — தினமோர்பன்னிரண்டில்-பன்னிரண்டுநாளில—பலகிரியும - அநேகமலைகளையும்— ஆறும் - அநேகநதிகளையும்— நீங்கி-கடந்து—படர்சனங்கள் - செல்லுகின்றமனிதர்கள்—செலற்கரிதாம்-போகக்கூடாததாகிய—மந்தரவெற்புக்கு - மந்தரமலைக்கு—அருகாம்பழுவம்புக்கான்- பக்கமானவனத்திற்சென்று—

மடலவிழ்பங்கயவாவி - இதழ்கள்விரிந்ததாமரைத்தடாகமும்— மலர்ப்பொழில் - பூங்காவனமும்—சூழவ்விடத்தில் - சூழ்ந்திருக்கின்றவந்தஸ்தானத்தில்— வசிப்பதானான் - வாசஞ்செய்வதானான். எ-று .... (௭௩)

(அ-கை) தவவேடம்பூண்டுநியமப்படிதவத்தைச்செய்தல் (கவி) சாலையமைத்தான்மூங்கிற்றண்டிழைத்தான்கமண்டலமுஞ்சமைத்தானக்கு, மாலையுங்கந்தையுங்கனிகாயமைப்பன பாத்திரங்களுமான்றோலுஞ்சேர்த்தான், மேலினுயர்தவந்தொடங்கிச்சந்திநியமமுஞ்செபமும்விடிந்தசாமஞ், சோலைமலர்பறித்தலிரண்டாஞ்சாமமிவ்வகையேதொழில்களாக்கி.

(இ-ள்.) சாலையமைத்தான்-(பன்னக) சாலைசெய்தான்—மூங்கிற்றண்டிழைத்தான்-வேணுத்தண்டஞ்செய்தான்—கமண்டலமுஞ்சமைத்தான்-கமண்டலத்தையுஞ்செய்தான் —அக்குமாலையும்-செபமாலையும்—கந்தையும்-வஸ்திரமும்—கனிகாயமைப்பனபாத்திரங்களும்- காய்கனிகள்வைக்கத்தகுந்தபாத்திரங்களும்—மான்றோலும் - மிருகசருமமுமாகியவிவைகளை —சேர்த்தான் - சேகரஞ்செய்தான்—மேலில்-மேல்—உயர்தவந்தொடங்கி - மேலானதபசைச்செய்யத்தொடர்ந்து—விடிந்தசாமம் - உதயமானமுதற்சாமத்தில்—சந்திநியமம்- சந்தியாவந்தனமும்—செபமும் - செபமும்—இரண்டாஞ்சாமஞ்சோலைமலர்பறித்தல் - இரண்டாஞ்சாமத்திற்புஷ்பமெடுத்தலும்—இவ்வகையேதொழில்களாக்கி - இப்படியேகன்மங்களுண்டாக்கி. எ-று.

(அ-கை.) இ - து. (கவி) கடவுள்பூசனைமூன்றாஞ்சாமநாலாஞ்சாமங்கனிகாய்கொள்ளல், படரிரவெல்லாஞ்செபமாமிவ்வாறுதவம்புரிந்தான்பகர்ந்தவேந்தன், மடவரலிங்கணையிரவிற்கண்விழித்தாடன்னருகுமன்னனைக்காணு, விடர்மருவிவாழ்வகன்றுவனம்புகுந்தானரசனெனவிரங்கிவாடி....................................... *

(இ-ள்.) மூன்றாஞ்சாமம்-மூன்றாஞ்சாமத்தில்—கடவுள்பூசனை - தேவார்ச்சனையும்—நாலாஞ்சாமம் - நான்காவதுசாமத்தில் — கனிகாய்கொள்ளல் - கனிகாய்களைப்புசித்தலும்—படரிரவெல்லாம்- படர்ந்தவிராமுழுதும்—செபமாம்-செபமுமாகும்—இவ்வாறு-இப்படி—பகர்ந்தவேந்தன்-சொல்லப்பட்டசித்திராங்கசராசன்—தவம்புரிந்தான் - தவஞ்செய்தான்—ஈங்கு-இந்தவரண்மனையிலிருக்கின்ற—மடவரல்-சூடாலையானவள்—அணையிரவில் - ராத்திரியில்—கண்விழித்தாள் - விழித்துக்கொண்டாள் —தன்னருகு - தனதுபக்கத்திலிருந்த—மன்னனைக்காணாள் - அரசனைக்காணாதவளாய்—இடர்மருவி - துன்பமடைந்து—வாழ்வகன்று - செல்வத்தினின்றுநீங்கி—அரசன் - மன்னவன் —வனம்புகுந்தானென- கானகத்திற்சென்றானென்று—இரங்கிவாடி - இரக்கத்துடன்மெலிந்து. எ-று. (இ-சா-க-ம்) புறப்பற்றாகியவுயிர்ச்சார்பு பொருட்சார்புதுன்பமெனக்கண்டவைகளைத்துறந்தகப்பற்றை நீங்கத்தவஞ்செய்ததாம்...........(௭௫)

(அ-கை.) தலைவிதலைவனைப்பார்த்துமேனடக்குங்காரியங்களையாலோசித்தல் (கவி) பதியொழிந்துகதியில்லைக்குலமகளிர்க்கரசனைநாம்பயிறுமென்று, மதிநினைந்துசாளரத்தாற்புறப்பட்டுவானேகிவானிற்சித்த, ரதிகமிகோர்மதியென்ன முகந்திகழப்போகின்றாளாங்கேகண்டாள், கதிர்வடிவாளுடனிரவிற் றனிப்போமன்னனைக்கண்டுகருதுகிற்பாள்...... *

(இ-ள்.) பதியொழிந்து - கொழுநனையல்லாமல்—குலமகளிர்க்கு - குலப்பெண்களுக்கு—கதியில்லை - (வேறே) கதியில்லை—(ஆதலின்) அரசனை - இராசாவை— நாம்பயிறுமென்று-யாங்கூடவேண்டுமென்று—மதிநினைந்து - மனதிற்சிந்தித்து—சாளரத்தாற்புறப்பட்டு - பலகணிவாயிலால்வெளிப்பட்டு—வானேகி - ஆகாயத்திற்சென்று—வானிற்சித்தர் - ஆகாயத்திலுள்ளசித்தர்கள்—அதிகமிகோர்மதியென்ன - மிச்சமானவிதாவொருசந்திரனென்றுசொல்லும்படி—முகந்திகழ - வதனமானதுவிளங்க—போகின்றாள் - செல்லுகின்றவள்—ஆங்கு - அவ்விடத்தில்—கதிர்வடிவாளுடன் - பிரகாசம்பொருந்தியவடித்தகத்தியோடும்—இரவில்-இராத்திரியில்—தனிப்போம் - ஒருவனுகச்செல்கின்ற—மன்னனைக்கண்டு - அரசனைப்பார்த்து—கண்டாள் - பார்த்தசூடாலையானவள்—கருதுகிற்பாள் - சிந்திப்பாள். எ-று.......................... (௭௬)

(அ-கை.) காணுங்காலமிதுவன்றெனத்திரும்பிவீடுவருதல் (கவி) இனியிவன்செய்வனவென்னென்றெண்ணுதலுமேற்செய்வதெல்லாங்கண்டாள்கனிமொழியாடிரும்பினாளின்றிவனைநாஞ்சேருங்காலமல்ல, துனியறப்பின்சேர்வதேவிதிநெறியாமெனமீண்டுதொல்வீடுற்றாள், வினவினர்க்குமன்னவனோர் காரணத்தேகினனென்றுவிளம்பியார்க்கும்.............. *

(இ-ள்.) இனியிவன் - இனிமேலிவன்—செய்வனவென்னென்று - செய்யத்தக்கனவென்னவென்று—எண்ணுதலும் - சிந்தித்துப்பார்த்தலும்—மேற்செய்வதெல்லாங்கண்டாள்- இனிநடப்பவையும்பார்த்தாள் —கனிமொழியாள் - மதுரவசனமுள்ளசூடாலையானவள்—திரும்பினாள்-(தன்சிந்தனையினின்று) திரும்பினாள்—இன்றிவனை - இப்பொழுதிவ்வரசனை— நாஞ்சேருங்காலமல்ல- நாமடையுங்காலமல்ல—துனியற - இராகத்துவேஷங்கெட—பின்சேர்வதே-பின்னடை

வதே—விதிநெறியாமென - நியதிமார்க்கமாமென்று— மீண்டுதொல்வீடுற்றாள் - திரும்பிப்பழையபதியில்வந்தாள்—வினவினர்க்கு- கேட்டவர்களுக்கு—மன்னவனோர்காரணத்தேகினனென்று - அரசனொருகாரணத்தினாற்போனானென்று— யார்க்கும்விளம்பி - யாவருக்குஞ்சொல்லி.

(அ-கை.) தலைவனுத்தரவின்படியரசுசெய்துமீண்டேகுதல். (கவி) அரசொழுங்காற்புவியைத்தனிகாத்தாள்சமநோக்காலணங்குபோல்வாள், வரிசையுடன்பதினெட்டாண்டகன்றுசூடாலையுந்தன்மனையில்வாழ்ந்தாள், புரைசெறிகானகத்திருந்தான்சிகித்துவசனவன்பானாம்போவதற்கு, விரவியநாளிதுவென்னவிருளிலேபுறப்பட்டுவிண்ணிற்போனாள். *

(இ-ள்.) அணங்குபோல்வாள் - தெய்வப்பெண்ணுக்கொப்பானசூடாலையானவள்—அரசொழுங்கால் - இராசநீதியினால்—புவியை - பூமியை— சமநோக்கால் - சமதிருஷ்டியினால்—தனிகாத்தாள்-தனிமையாகவிரட்சித்தாள்—வரிசையுடன் - கிரமமாக—பதினெட்டாண்டகன்று-பதினெண்வருஷநீங்க—சூடாலையும்-சூடாலையென்பவளும்—தன்மனையில்வாழ்ந்தாள்- தனதரண்மனையில்வாழ்ந்திருந்தாள்—சிகித்துவசன்-சிகித்துவசவரசன்—புரைசெறி-குற்றமிகுந்த—கானகத்திருந்தான்-வனத்திலிருந்தான்—அவன்பால்-அவனிடத்தில்—நாம்போவதற்கு- யாஞ்செல்வதற்கு—இதுவிரவியநாளென்ன - இதுதகுந்தகாலமென்று — இருளிலேபுறப்பட்டு- இராத்திரியிலேவெளிப்பட்டு—விண்ணிற்போனாள்-ஆகாயத்திற்சென்றாள். எ-று .... (எஅ)

(அ-கை.) தலைவனைக்கண்டுதலைவிவிசனப்படுதல். (கவி) மாருதத்தின்கழுத்தேறிமறைந்துபோய்மந்தரமாமலையைச்சார்ந்தா, ளாரமறமணிப்பூண்களின்றிக்கறுத்துலர்ந்தவங்கமாகி, யொருடனின்றதுகண்டா ளறிந்திலண்மாயோகத்தாலுணர்ந்துமன்னைக், கூருமிடர்சிறிதடைந்துதன்னிலே மனத்தோடுகூறலுற்றாள் .... *

(இ-ள்.) மாருதத்தின்கழுத்தேறி - வாயுவின்றோளிலேறி— மறைந்துபோய் - தெரியாமற்சென்று—மந்தரமாமலையைச்சார்ந்தாள்- மந்தரகிரியைச்சேர்ந்தாள்—ஆரம்-முத்துமாலையும்—அறமணிப்பூண்கள் - மிகுந்தவிரத்நாபரணங்களும்—இன்றி-இல்லாமல்—கறுத்துலர்ந்த- கருகியுலர்ந்துபோன—அங்கமாகி - சரீரமாய்— ஒருடனின்றதுகண்டாள்-ஒருசரீரமிருந்ததைப்பார்த்தாள்—அறிந்திலள் - (தனதுதலைவனென்று) தெரிந்திலள்—மாயோகத்தால - மகாயோகத்தினால்—மன்னை - (தனதுநாயகனான)வரசனென்று—உணர்ந்து - அறிந்து—கூருமிடர்-மிகுந்ததுன்பங்களை—சிறிதடைந்து - கொஞ்சமடைந்து—தன்னில்- தன்னிடத்தில்—மனத்தோடுகூறலுற்றாள்—மனதுடன்சொல்லத்தொடங்கினாள். எ-று,(இ-ச-க-ம்) பக்குவமுண்டாகும்பரியந்தம்பார்த் தஃதுற்றகாலம்போதிக்க வெழுந்தருளித் துறந்துவந்த வறியாமைசெய்ததைப்பார்த்தகத்தில் வருந்தினளென்பதாம்.................................(எகூ)

(அ-கை.) போதித்தற்குதெய்வீகவடிவயெடுக்கவாலோசித்தல். (கவி) அறியாமையறக்கொடிதந்தோவந்தோவதனாலிவ்வரசனொந்தான், பிறியாதஞானமும்போகமும்வீடுமின்றளிப்பேன்பிறிதொன்றில்லைச், சிறியாணம்மனைவியிவளென்றிகழா வகைவேறோர் தேகமேவி, நெறியாகவுணர்த்துவன்பேதமைதீருநெஞ்சினனாய்நிருபனின்றான் .... *

(இ-ள்.) அந்தோவந்தோ - அதிசயமதிசயம்—அறியாமை - அஞ்ஞானமானது— அறக்கொடிது - மிகவுங்கொடியது—அதனால் - ஆதலால்—இவ்வரசன் - இவ்வேந்தனானவன்—நொந்தான் - துன்பமுற்றான்— பிறியாதஞானமும் - பிரிவற்றவாத்மஞானமும்—போகமும்-சம்பத்தும்—வீடும் - மோக்ஷமுமானவிவைகளை—இன்றளிப்பேன் - இப்போதேகொடுப்பேன்—பிறிதொன்றில்லை - வேறொருசந்தேகமில்லை—சிறியாள் - சிறியவளாகிய—இவள்- இந்தப்பெண—நம்மனைவி - நமதுபாரியாள்—என்றிகழாவகை - என்றுநிந்தியாதபடி — வேறோர்தேகமேவி - மற்றொருசரீரத்தையெடுத்து—நெறியாகவுணர்த்துவன் - கிரமமாகப்போதிப்பன்—பேதமைதீரும் - அறியாமைநீங்கும்—நெஞ்சினனாய் - மனதுடையவனாய்— நிருபனின்றான் - அரசனிருந்தான். எ-று .... (அய)

(அ-கை.) தேவகுமாரனாகத்தெரிசனங்கொடுத்தல். (கவி) பக்குவமாதலினிந்தவிமலமனத்தேயறிவுபற்றிப்பாயுந், தக்கதிதுவென்றெண்ணியொருசிறிதுதியானத்தாற்றான்வேறாகி, மிக்கதொருவேதியன்சேயாய்க்கணவன் முற்குதித்தாள்விண்ணினின்று, மக்கணமேயவனோக்கிக் கடிதெழுந்தங்கீகாரமனைத்துஞ்செய்தான் .... *

(இ-ள்.) பக்குவமாதலின் - பக்குவமாயிருத்தலின்—இந்தவிமலமனத்து - இந்தநின்மலமானமனதில்—அறிவுபற்றிப்பாயும் - ஞானமானதுப்ரதிபலிக்கும்—இது-இப்பருவம்—தக்கதென்றெண்ணி - தகுந்ததென்றுசிந்தித்து—ஒருசிறிதுதியானத்தால் - ஒப்பற்றசிலதியானத்தினால்—தான்வேறாகி - தான்வேற்றுருவமாகி—மிக்கதொருவேதியன்சேயாய்- மேலானவொரு

பிராமணகுமாரனாய்—விண்ணினின்று - ஆகாயத்திலிருந்து—கணவன்முற்குதித்தாள் - தனது தலைவன்முன்னிறங்கினாள்— அக்கணமே - அந்தக்ஷணமே — அவனோக்கி - அவ்வரசன்பார்த்து—கடிதெழுந்து - சீக்கிரத்திலெழுந்து— அங்கீகாரமனைத்துஞ்செய்தான் - ஏற்கத்தகுந்தபூசைகளெல்லாஞ் செய்தான். எ-று .... (அக)

(அ-கை.) பிரமரிஷியுமரசரிஷியு மொருவருக்கொருவ ருபசரித்தல். (கவி) பொன்னிறத்தன்வெண்டரளமாலையன்வெண் டுகிலுடையன்புரிவெண்ணூலோ, னன்னிலத்தைவிடச்சிறிது மேனிற்போன்றனைநோக்கி நடவிங்கென்று, தன்னிடத்தாதனங்கொடுத்தான் சிகித்துவசன்மறையவன்சேய் தானுமீண்டு, மன்னியற்கைத்தவமுனியேயுனைத்தொழுதேனென்றுமறு மாற்றஞ்சொல்லி.................. *

(இ-ள்.) பொன்னிறத்தன் - சொர்ணமயமானவடிவமுடையவன் — வெண்டரளமாலையன் - வெண்மையானமுத்துமாலையையுடையவன்— வெண்டுகிலுடையவன் - வெள்ளவஸ்திரத்தைத்தரித்தவன்—புரிவெண்ணூலோன்- முறுக்கியவெண் பூணூலையுடையவன்—நன்னிலத்தைவிட- நல்லபூமியைநீங்க—சிறிதும்மேனிற்போன்றனை - கொஞ்சமேலேநிற்கின்றவனை—நோக்கி-பார்த்து—இங்கு - இவ்விடத்தில்—நடவென்று- எழுந்தருளுமென்று —சிகித்துவசன்-சிகித்துவசவரசன்—தன்னிடத்து - தன்னிடத்திலுள்ள—ஆதனங்கொடுத்தான்-ஆசனங்கொடுத்தான்—மறையவன்சேய்தானும்- பிராமணனுடையகுமாரனும்—மீண்டு- திரும்ப—இயற்கைத்தவம்-இயல்பானதவத்தையுடைய — மன்முனியேயுனைத்தொழுதேனென்று - இராசரிஷியேயுன்னைவணங்கினேனென்று—மறுமாற்றஞ்சொல்லி - மறுவசனஞ்சொல்லி. எ-று.... ....(அஉ)

(அ-கை.) பூசித்துத்துதித்தவரசமுனிக்கு இப்பிரமமுனிமுகமன்கூறல். (கவி) ஆதனத்திலிருத்தலுமேமன்னுரைப்பான் கடவுண்மகனனைநீதான், போதலினாற்பயன்பெற்றேனின்றன்றோவென்றுபலபூசைபண்ணி, யேதமறவிட்டதேவதையென்றேகருதினானிவனுமந்தப், பூதலமன்னனைநோக்கிநின்குணமும்விநயமுமார்பொருந்துகிற்பார் .... *

(இ-ள்.) ஆதனத்திலிருத்தலும் - ஆசனத்திலிருந்தவளவில்— மன்னுரைப்பான் - அரசன்சொல்லுவார்— கடவுண்மகனனைநீதான் - தேவகுமாரனாகியநீர்—போதலினால்-வருதலினால்—இன்றன்றோ - இப்பொழுதல்லவா—பயன்பெற்றேனென்று - (ஆத்ம) ப்ரயோசனமடைந்தே(னென்றுசொல்லி)—பலபூசைபண்ணி - அநந்தவாராதனைகள்செய்து—ஏதமற- களங்கமற—இட்டதேவதையென்று- (நம) திஷ்டதெய்வமென்று—கருதினான்- நினைத்தான்—இவனுமந்தப்பூதலமன்னனைநோக்கி - இந்தப்பிராமணனுமப்பூமிக்கரசனைப்பார்த்து—நின்குணமும்விநயமும்-உமதுகுணமும்விநயமும்—ஆர்பொருந்துகிற்பார் - யாரடைந்திருக்கின்றார்கள். எ - று.

(அ-கை.) இ-து. (கவி) அதனாலேநீடூழிவாழ்தியானுபசாந்தமானநெஞ்சால், விதமானகற்பனையற்றரியதவம்வீடுபெறமிகச்செய்தாயோ, சதவேள்விவாசவனேர் வேந்தனாம்பதம்விட்டுத்தவவனத்தை, யிதமாகநினைந்துறைதலசிதாரவிரதமெனு மியற்கையாக்கும்.. *

(இ-ள்.) அதனால் - அதனால்—நீடூழிவாழ்தி-வெகுகாலம்வாழக்கடவாய்—உபசாந்தமானநெஞ்சால் - உபசாந்தமுள்ளமனதினால்— விதமானகற்பனையற்று - நாநாவிதமாகியகற்பனைகளிறந்து—அரியதவம் - அரிதானதவத்தை — வீடுபெற - மோக்ஷத்தையடைய — மிகச்செய்தாயோ - மிகவுஞ்செய்தீரோ—சதவேள்விவாசவனேர் - சதமகனையொத்த—வேந்தனாம்பதம்விட்டு- அரசனாகியபதத்தைநீக்கி—தவம் - தவத்தைச்செய்ய—வனத்தையிதமாகநினைந்துறைதல்- காட்டையினிதாகக்கருதிவசித்தல்—அசிதாரவிரதமெனுமியற்கையாக்கும் - கத்திமுனையிற்செய்யுந்தவமென்கின்றவியல்புக்கொப்பாகும். எ-று. (இ-ரு-க-ம்) போதிப்பதினம்பிக்கையுண்டாகும்படி யிறந்தகாலவியற்கையைக்கூறித் தனதுமுகப்படுத்திக்கொண்டதாம்.... (அச)

(அ-கை.) முனியைமூன்றுவினாவினாவுதல். (கவி) என்றமறையவன்றனைப்பார்த்தரசனுரைப்பானங்கென்னியற்கையெல்லா, நன்றுணர்வுற்றாய்தேவனாதலாலிவ்வியப்பு நண்ணற்பாற்று, நின்றனைநீயார்புதல்வனின்பெயரென் வருபொருளெனிகழ்ந்ததென்ன, வொன்றுமொழியாதுரைப்பக்கேட்டியெனமறையவன்சேயுரைக்கலுற்றான்..... ... .*

(இ-ள்.) என்ற - (இப்படி) யென்று (சொல்லிய)— மறையவன்றனைப்பார்த்து - பிராமணனைப்பார்த்து—அரசனுரைப்பான் - மன்னன்சொல்லுவான் —இங்கு- இவ்விடத்தில்—என்னியற்கையெல்லாம்- எனதுதன்மைகளனைத்தையும்—தேவனாதலால்- கடவுளாதலால்—நன்றுணர்வுற்றாய் - நன்றாயறிந்தாய்— இதில்வியப்புநணணற்பாற்றுநின்றனை - இதிலதிசயமுறும்படிநின்றாய்—நீயார்புதல்வன் - நீராருடையபுத்திரர்— நின்பெயரென் - உமதுநாமமென்ன—வருபொருளென் - (இங்கு)வந்தகாரியமென்ன— நிகழ்ந்ததென்ன - சொல்லவேண்டுமென்று

கேட்க—ஒன்றுமொழியாது-ஒன்றுத்தவிராமல்—உரைப்பக்கேட்டியென்'- சொல்லக்கேட்பாயென்று—மறையவன்சேய் - பிராமணகுமாரன்—உரைக்கலுற்றான் - சொல்லத்தொடங்கினன்.

(அ-கை.) ஒருசிறிதுதியானத்தாற் கும்பவடிவெடுத்தலை யோர்வரலாருகக் கூறுதல்.
(கவி) நாரதனென்றொருமுனிவன் மெய்ஞ்ஞானவிளக்கொப்பானன்னிர்க்கங்கைத்,
திரமுறுபொற்றலத்திற்சமாதியிருந்தானந்தத் தியானம்விட்டோர், நேரமிருப்புழி
விளையாட்டொலியொன்றுசெவியுறவந்நெறியைப்பார்த்தான்,பேரழகிலரம்பைதி
லோர்த்தமையொப்பார் திரண்டுசிலபெண்கள்வந்தார்...... .... *

(இ-ள்.) நாரதனென்றொருமுனிவன்- நாரதனென்றோரந்தணன்—மெய்ஞ்ஞானவிளக்கொப்பான்- மெய்ஞ்ஞானதீபத்தையொத்தவன் — நன்னீர் - நல்லசலத்தையுடைய— கங்கைத்திரமுறு-கங்கைக்கரையிலிருக்கின்ற—பொற்றலத்தில்-அழகியவிடத்தில்—சமாதியிருந்தான்-நிட்டையிருந்தார்— அந்தத்தியானம்விட்டு - அச்சமாதியினின்று நீங்கி — ஓர்நேரமிருப்புழி-ஒருநேரமிருக்கின்றசமயத்தில்—விளையாட்டொலியொன்று-விளையாடுகின்றவொருசத்தமானது—செவியுற - காதிற்புக—அந்நெறியைப்பார்த்தான்- அந்தமார்க்கத்தைக்கண்டான்—பேரழகிலரம்பை - அழகினுயர்ந்தவரம்பைக்கு—திலோர்த்தமை - திலோர்த்தமைக்கு— ஒப்பார்-ஒத்தவர்களாகிய—சிலபெண்கள் - சிலதேவஸ்திரீகள்—திரண்டுவந்தார் - கூடிவந்தார்கள்.எ-று

(அ-கை.) இ-து(கவி) கங்கையினீர்விளையாட்டிற்களிப்புறுவார்புருடரயல்காணுவாற்றாற், சங்கையறத்துகிலில்லா ரவர்வரத்தைக்கண்டுமனந்தாவியோடி,துங்
கவிவேகந்துறந்துசுகமடையவுயிரலைந்துதொடர்ந்துநிற்கும், பங்கமிலா நாரதன்றன்மனநழுவிச் சுக்கிலமும்பாய்ந்ததன்றே .... *

(இ-ள்.) கங்கையில் - தேவநதியில்— நீர்விளையாட்டில்-சலக்கிரீடையில்—களிப்புறுவார்-சந்தோஷிப்பவர்களும்--புருடரயல்காணுவாற்றால்-புருஷர்களைச்சமீபத்திற்காணுதபடியால்—சங்கையற - வெட்கமில்லாமல்—துகிலில்லார் - வஸ்திரமில்லாதவர்களுமாகிய—அவர்வரத்தைக்கண்டு- அவர்கள்வரவைப்பார்த்து—மனந்தாவியோடி-மனமானதுதாவிக்கொண்டுபோய்—துங்கவிவேகந்துறந்து - பரிசுத்தமானவிவேகத்தைவிட்டு — சுகமடைய - (விஷய,சுகத்தையடைவதற்கு—உயிரலைந்து - பிராணனலைவுற்று—தொடர்ந்துநிற்கும்- தொடர்ந்திருக்கின்ற—பங்கமிலாநாரதன் - குற்றமற்றநாரதனது—மனநழுவி - மனமானதுநிலைபிறழ்ந்து—சுக்கிலமும்பாய்ந்தது—இந்திரியமுமொழுகிற்று. எ-று.................................... .... (அஎ)

(அ-கை.) ஞானிக்கெங்ஙனங்காமமுதிக்குமென் றிடையிலரசன் வினவினதற்குத்தரங்கூறல். (கவி) என்னனுமேநின்மொழியா மின்னமுதாலுளங்குளிர்ந்தேனெனி
னும்வேறு, பன்னுமொழிபரம்பொருள்போ லறிவரிதாற்குவித்துளதுற்பத்திசொ
ல்வாய், பின்னருயர்பரம்பொருளை வருந்தியுங்கேட்கின்றேன்மேற் பேசுகென்ன,
மன்னனுரைசெயக்கேட்டுச் சூடாலையாமறையோன் மைந்தன்சொல்வான் ....*

(இ-ள்.) என்னனுமே- (இப்படி)யென்றுமுனியானவர்சொல்லவும்(அரசன்கேட்குதல்) (அப்படிப்பட்டவராயிருந்தும்) வெகுஞானியாயிருந்தும் சீவன்முத்தராயிருந்தும் நாரதமுனிஇப்படிப்பட்டவராய் மன்மதவசியத்தை யெப்படியடைந்தாரென்ற வரசனுக்குக்கும்பமுனிவாக்கியம்—(சு-க)நின்மலமானவாத்மஸ்வரூபம்நிமிஷமாத்திரமறக்கப்பட்டால்வருஷாகாலத்தின்மேகம்போலத் திரிஸ்யமுல்லாசத்தையடையும்—(சு-உ)சின்மாத்திரசுபாவமானஸ்வரூபமானதுசதாகாலமு மனுசந்தானத்தினு னிமிஷமாத்திரமுமறக்கப்படாமலிருந்ததானுற்றிரிஸ்யரூபமானபிசாசமானதுப்ரகாசிக்கமாட்டாது—(சு-ங)சீவனுக்குசுகதுக்கங்கள்அற்பமாவதுஸ்புரிப்பதேபந்தமாகும்அவைகளில்லாமையேமோட்சமாகுமென்பதுபந்தமோக்ஷங்களுக்குநிர்ணயம்(சு-ச)ஸ்வரூபஞ்ஞானுபின்னமாயும்சுத்தமாயுமிருக்கின்ற அறியத்தக்கதானபாரதத்துவானுபோதத்தினுலே சுகதுக்காதிகளில்லையென்றறியப்பட்டால், ஞானியானவன்சீவன்முத்தபாவத்தையடைகின்றான்—(சு-ரு) சகலசகத்துஞ் சிதாகாயமான பிரமமேயென்னுந்திடநிச்சயநிலையை யடைந்தாற் சீவபாவம் நெய்பற்றதீபம்போல வுபசாந்தமடைகிறது—(சு-சா) இந்தச்சகத்து ஆத்மஸ்வரூபத்தினின்று முண்டானதாய்வாசனையா னிலையையடைந்து தருமாதருமவசத்திலிருக்கின்றது—(சு-எ)ஆகையால்வாசனைகளைக்கெடுத்துதருமாதருமங்களினற்பந்தப்படாவிட்டாற் சீவன்சநநத்தையடைய மாட்டானென்பதுஎங்களுடையமதமென்ன—(சு-அ) நின்மொழியாம் - உமதுவசனமாகிய — இன்னமுதால் - இனியவமுதத்தினுல் — உளங்குளிர்ந்தேனெனினும் - மனஞ்சாந்திபானேனுனாலும்—வேறுபன்னுமொழி-வேறேசொல்லுகின்றவசனம்—பரம்பொருள்போல் - பரமார்த்தத்தைப்போல—அறிவரிது- அறிதற்கரியது—உன

துற்பத்தி - நீபுதித்தலை—குவித்துச்சொல்வாய் - சுருக்கிச்சொல்வாய்—பின்னர்- பின்பு—உபரம்பொருளை - மேலானஞானார்த்தத்தை— வருந்தியுங்கேட்கின்றேன் - ப்ரார்த்தித்துக்கேட்கின்றேன்—மேற்பேசுகென்ன - மேலேசொல்லுவாயென்று—மன்னனுரைசெயக்கேட்டு-அரசனானவன்சொல்லக்கேட்டு—சூடாலையாம்- சூடாலையாகிய—மறையோன்மைந்தன்-பிராமணகுமாரன்—சொல்வான் - உரைப்பார். எ-று. இக்கவியினிடையி னிருக்கவேண்டிய விவ்வெண்சுலோகார்த்தமறைந்ததை வடநூலோக்கான்வெளிப்படுத்தல்...................... (அஅ)

(அ-கை.) தாதுகடத்திற்கருக்கொண்டுவளர்தல். (கவி) நழுவுமனமெனும்மத்தமதகயத்தைநாரதனார்நல்விவேகப்,பழுதில்பெருந்தூணிலேநற்புத்திதோட்டியாற்பற்றிக்கட்டி, தழுவுபடிகக்குடத்திற் றாதுவைவிட்டான்பாலைச்சாலவார்த்தான், செழுமதியம்பாற்கடலில்வளர்வதுபோற் கருவளர்ந்துசிறந்ததன்றே.................. *

(இ-ள்.) நழுவுமனமெனும் - நிலைபிறழுமனமென்கின்ற—மத்தமதகயத்தை-மதத்தமதயானையை—நாரதனார் - நாரதமுனியானவர்— நல்விவேகம் - நல்லவிவேகமென்னும்—பழுதில்பெருந்தூணில் - குற்றமற்றபெரியஸ்தம்பத்தில்— நற்புத்திதோட்டியால் - நல்லவறிவென்னுமங்குசத்தினால்—பற்றிக்கட்டி - (அன்பென்னும்)வடகயிற்றாற்பிணித்து—தழுவுபடிகக்குடத்தில் - தழுவாநின்றபளிங்குகடத்தில்—தாதுவைவிட்டான்- இந்திரியத்தைவிட்டான்—பாலைச்சாலவார்த்தான் - பாலைநிரம்பவும்விட்டான்—செழுமதியம் - செழுமையானசந்திரன்— பாற்கடலில்- க்ஷீரசாகரத்தில்—வளர்வதுபோல் - வளருதல்போல—கருவளர்ந்து - கருப்பமானதுவளர்ந்து—சிறந்தது - சிறப்புற்றது. எ-று .... (அகூ)

(அ-கை.) புறப்பாடுக்கூறி நாமம்வந்தகாரணமுரைத்தல். (கவி) குடநின்றுபுறப்பட்டகுமரனுக்குவிஞ்சையெனுங்குறைவில்செல்வப்,படலங்களுண்டாக்கிப்பிதாமகன்பாற்கொடுபோகப்பதுமத்தோனுங், கடனென்றுபேரனுக்குமெய்ஞ்ஞானக்கலைகாணக்காட்டிவிட்டா; னுடனந்நாளன்னவனாற் குடம்பெறலாற்கும்பனெனுமொருபேர்பெற்றேன்.... *

(இ-ள்,) குடநின்றுபுறப்பட்ட - கடத்திலிருந்துவெளியில்வந்த—குமரனுக்கு -புத்திரனுக்கு—விஞ்சையெனுங்குறைவில்செல்வம் - வித்தையென்கின்றகுறைவற்றசம்பத்தாகிய —படலங்களுண்டாக்கி-சமூகங்களைக்கொடுத்து—பிதாமகன்பால்- பிரமதேவனிடத்தில்—கொடுபோக- (என்னைக்)கொண்டுபோக—பதுமத்தோனும்- பிரமாவும்—கடனென்று-(நமக்குக்)கடமையென்று—பேரனுக்கு- பௌத்திரனானவெனக்கு—மெய்ஞ்ஞானக்கலைகாண-தத்துவஞானமாகியமுடிவைத்தரிசிக்கும்படி—காட்டிவிட்டான்-தெரிவித்தான்—உடனந்நாள்-உடனேயத்தினத்தில்—அன்னவனால்- அப்பிதாமகனால்—குடம்பெறலால்-(நான்)கும்பத்திற்பிறந்தபடியால்—கும்பனெனும்-கும்பமுனியென்கின்ற—ஒருபேர்பெற்றேன்-ஓர்நாமத்தையடைந்தேன். எ-று.

(அ-கை.) பிறப்பும்நாமமுங்கூறிவரவைக்கூறல். (கவி) செய்யகலைமகளெனக்குத்தாயாங்காயத்திரிதான்சிறியதாயா, மையில்சதுர்வேதமெனுந்தோழருடன்விளையாடிவந்தேனென்ன, வையவுனைத்தெரிசித்தேன்பெறவேண்டும்பேறெல்லாமமையப்பெற்றேன், மெய்யிதுவென்றான்மன்னன் கும்பனதற்கிவ்வாறுவிளம்பலுற்றான்..... *

(இ-ள்.) செய்யகலைமகள் - செவ்வையானசரஸ்வதி—எனக்குத்தாயாம்- எனக்குமாதாவாம்—காயத்திரிதான் - காயத்திரியானவள்—சிறியதாயாம் - சிறியமாதாவாம் — மையில்சதுர்வேதமெனும் - குற்றமற்றநான்குவேதமென்கின்ற—தோழருடன்- சிநேகிதரோடும்—விளையாடி - லீலைசெய்துகொண்டு—வந்தேனென்ன - வந்தேனென்றுகும்பமுனிசொல்ல — ஐய- ஆசாரியரே—உனைத்தரிசித்தேன் - உம்மைதரிசனஞ்செய்தேன்— பெறவேண்டும் - அடையவேண்டிய—பேறெல்லாம் - இலாபமனைத்தையும்—அமையப்பெற்றேன் - பொருந்தவடைந்தேன்—மன்னன் - அரசனானவன்—இதுமெய்யென்றான் - ஈதுண்மையென்றுசொன்னான்—கும்பன் - கும்பமுனியானவர்—அதற்கிவ்வாறு - அதற்கிவ்வண்ணம்—விளம்பலுற்றான்-சொல்லத்தொடங்கினர். எ-று. சித்தனுதீதத்தினின்று முதித்தவறிவை நாரதனென்றொருமுனிவன் மெய்ஞ்ஞானவிளக்கொப்பானென்றும் - அவ்வறிவு பிரமாநந்தத்தின்பக்கமிருந்தஃதையடையமுயல்வதை - கங்கைத்தீரமுறுபொற்றலத்திற்சமாதியிருந்தென்றும் - அம்முயற்சியானஃதையடைந்து வெளிப்படுவதை - தியானம்விட்டோர்நேரமிருப்புழியென்றும் - அப்போது நாதரூபமாயெதிரிட்டதைப்பார்த்ததை -விளையாட்டொலியொன்று செவியுறவந்நெறியைப்பார்த்தென்றும் - அந்நாதவறிவிற்றனித்தனிதனதுசுகமெதிரிடுதலை - சிலபெண்கள்வந்தாரென்றும் - மறைப்பின்றிவிளங்குதலை - சங்கையறத்துகிலில்லாரென்றும்-மனமச்சுகத்தையடையச்செல்லுதலை - அவர்வரத்தைக்கண்டு மனந்தாவியோடியென்றும்- அச்சுகமோகமாயஃதையடையச்செல்வதை - துங்கவிவேகந்துறந்து சுகமடையவுயிரலைந்தென்றும் - அஃதுநினைவி

றந்த தனதுபிரமசுகமாய்வெளிப்படுதலே - மணநழுவிச் சுக்கிலமும்பாய்ந்ததென்றும் - அஃ
தைப் பேதமாகவறியுஞ்சங்கற்பத்தைத் தன்னிடத்தடக்குவதை - நழுவுமனமெனு மத்தமத
கயத்தை நாரதனூர் நல்விவேகப்பழுதில் பெருந்தூணிலே நற்புந்திதோட்டியாற் பற்றிக்கட்டி
யென்றும் - அப்பிரமஞ்சுயஞ்சித்தில்விளங்குவதை - நழுவுபடிகக்குடத்திற் ருதுவைவிட்டா
னென்றும் - சாக்ஷாத்காரதிருஷ்டிகொடுத்தலே - பாலைச்சாலவார்த்தானென்றும் - அவ்வறிவா
நந்தமாய்விளங்குவதை - கருவளர்ந்துசிறந்ததென்றும் - பரோக்ஷமபரோக்ஷமானதை- குட
நின்றுவெளிப்பட்டகுமரனென்றும் - அனுபவவிலாசமுண்டானதை- குறைவில்செல்வப்பட
லங்களுண்டாக்கியென்றும் - சர்வம்பிரமமயமென்பதை- பதுமத்தோனுமெய்ஞ்ஞானக்கண
காணகாட்டிவிட்டானென்றும்- அத்துவிதப்பிரமத்தினின்று வெளிப்படுதல் பிரயமேயென்ப
தை - குடம்பெறலாற்கும்பனெனுமொருபேர்பெற்றேனென்றும் - வாக்கியார்த்தநிச்சயமூல
மென்பதை - செய்யகலைமகளெனக்குத்தாயென்றும்- அவ்வாக்கியத்துக்கு மந்திரமூரித்தென்
பதை - காயத்திரியெனக்குச்சிறியதாயென்றும்- மகாவாக்கியார்த்தவுல்லாசமாகவிளங்குகிறே
னென்பதைசதுர்வேதமெனுந்தோழருடன்விளையாடிவந்தேனென்றுங்கூறினானெனக்கொள்க.
(இ-எ-க-ம்) பிரமத்தினின்றும் பிரபஞ்சமுண்டா யஃதப்பிரமமாய்விளங்குமென மேலறிவிப்
பதைக் குறிப்பாயறியும்பொருட்டு தனதுதியானமே இச்சரீரமாயிற்றென்பதை நாரதமுனி
புத்திரனென வோர்வரலாறுகச்சொல்லியதென்பதாம் ....(கூக)

(அ-கை.) அரசன்வரன்முறையைவினவுதலுக்குத்தரங்கூறல். (கவி) எனையுரைத்தேனுன
க்குமுதனீயாரென்செய்கின்றுயெனக்குநீயு, முனையுரைப்பாயென்றலுமேமன்னனுரை
ப்பான்பிறவிக்குள்ளமஞ்சி, வினையறுகானகம்புகுந்தேன்சித்துவசன்பேர்நாட்டில்வே
ந்தாந்தன்மை, தனையிகழ்ந்திங்கிருக்கின்றேன் பிறவிக்கேவிடாமலுளந்தவியாநின்றேன்.

(இ-ள்.) உனக்கு- உமக்கு—முதலெனையுரைத்தேன்-முன்னெனது(வரலாற்றைச்)சொன்
னேன் —நீயார் - நீரார்—என்செய்கின்றுய் - (இங்) கென்னசெய்கிறாய் — எனக்குநீயும் - என்
றனக்குநீரும்—உனையுரைப்பாயென்றலும் - உமதுவரலாற்றைச்சொல்லுமென்றுகும்பமுனி
கேட்கவும்—மன்னனுரைப்பான் - அரசன்சொல்வான் —பிறவிக்குள்ளமஞ்சி- பவத்துக்குமண
துபயந்து—வினைபறுகானகம்புகுந்தேன்-செயலற்றவனத்துக்குவந்தேன்— பேர்சித்துவச
ன்-நாமஞ்சித்துவசனும்—நாட்டில்-பட்டணத்தில்— வேந்தாந்தன்மைதனையிகழ்ந்து - அர
சாந்தன்மையைநீக்கி—இங்கிருக்கின்றேன் - இவ்விடத்திலிருக்கின்றேன்—பிறவிக்கே- சநநத்
துக்கே—விடாமல் - ஓயாமல்—உளந்தவியாநின்றேன்-மனதுதவிக்கின்றேன். எ-று ....(கூஉ)

(அ-கை.) துறந்துசெய்யுந்தவமுந் துன்பமாயிற்றென்றவரசனுக் கத்துன்பத்தை
நீக்கிச் சித்தசாந்தியினுன் ஞானமுதிப்பிக்கும்பொருட்டுச் சுகங்கொடுப்பதுஞான
மேயன்றித் தவக்கிரியைகொடாதெனல். (கவி) இப்பரிசேதவத்தொழிற்கு வேண்
டினவெல்லாந்தேடியியற்றுநின்றுஞ், செப்பரியதுயர்விட்டுப் பெருந்துயர்சேர்ந்
தேமமுதந்தீநஞ்சான, தொப்பரியாயென்றலுமேகும்பனுரைப்பான்குரவனுணர்
த்துஞான, மெய்ப்படவந்தாற்சுகமாம்போதுபோக்குங்கிரியை விநோதமன்றே.

(இ-ள்.) இப்பரிசே - இவ்வண்ணமே—தவத்தொழிற்கு - தவக்கிரியைக்கு—வேண்டி
னவெல்லாந்தேடி - உண்டானசகலமுஞ்சம்பாதித்து—இயற்றுநின்றும் - நடத்தியும் — துயர்
விட்டு - துன்பத்தைநீக்கி—செப்பரியபெருந்துயர்சேர்ந்தேன் - உரைத்தற்கரியபெரியதுன்
பத்தையடைந்தேன்—ஒப்பரியாய் - உவமித்தற்கரியமுனியே—அமுதந்தீநஞ்சானது - பாற்
றீயவிடமாயிற்று—என்றலும் - என்றரசன்சொல்லவும் — கும்பனுரைப்பான் - கும்பமுனி
சொல்லுவார்—குரவனுணர்த்துஞானம் - ஆசாரியரறிவிக்குஞானமானது — மெய்ப்படவந்
தால்-உண்மையாகவந்தால்—சுகமாம் - பிரமாநந்தமாகும்—கிரியை - தவத்தொழிலானது—
போதுபோக்கும் - காலத்தைக்கழிக்கின்ற—விநோதமன்றே-விளையாட்டல்லவா. எ-று.(கூங)

(அ-கை.)கிரியைக்கு இப்பயன்வாசனையாதலிலவ்வாசனை நசிக்கிற்கிரியைநீங்குமெனல்.
(கவி)ஞானமில்லாதவர்க்கெல்லாங்கிரியையேகதியாநற்கிரியைவேந்தா,வீனமுறுவாதனை
மாத்திரம்பலமாதலிற்பலமுமெய்தநல்கு, மானமுறுமிருதுவரின் முன்பலங்களங்ஙனே
மாய்தல்போல, வூனமுறுவாதனைமாய்ந்தாற்கிரியையுறுபலமுமொழிந்துபோமே ...*

இ-ள். வேந்தா- அரசனே—ஞானமில்லாதவர்க்கெல்லாம்-ஞானமில்லாத சகலருக்கும்—
கிரியையேகதியாம்- கன்மமேகதியாகும்— நற்கிரியை- சற்கிருத்தியமானது— ஈனமுறுவாத
னைமாத்திரம்பலம்- அசுத்தவாசனையே பயனாகவுடையது—ஆதலில்-ஆதலால்—பலமுமெய்த
நல்கும்-(கன்மமுஞ்சொர்க்காதிய) பலனையடையும்படிகொடுக்கும்— மானமுறுமிருதுவரின
அளவையடைந்தவிருதுவந்தால்— முன்பலங்கள் (முந்தினவிருதுக்களின்) பயன்கள்— அல்-

னைமாய்தல்போல - அவ்விடத்திற்றானே கெடுவதுபோல — ஊனமுறு-வாதனைமாய்ந்தால்-அசுத்தவாசனைகெட்டால்— கிரியையுறுபலமும்- கிரியையினால்வரப்பட்ட பிரயோசனமும்—ஒழிந்துபோம்- தவிர்ந்துபோகும். எ-று..(௧௪)

(அ-கை.) சர்வம்பிரமமயமென்னுஞானம்வந்தால்வாசனை நசிக்குமெனல். (கவி) பலமதனையொருக்காலும்பலியாதசரவணத்தின்பரிசுபோல, வலமருவாதனைதீர்ந்த கிரியையுமேற்பலந்தன்னையளிக்கமாட்டா, வுலகமெலாம்பிரமமெனும்பாவனையாலஞ்ஞான மொழிந்துபோனான்,மலமுறுவாதனைதோன்றாக்கானலினீருண்டென்றுமதிப்பாருண்டோ. *

(இ-ள்.) பலமதனை - பழங்களை — ஒருக்காலும்பலியாத - ஒருகாலத்திலுங்கொடாத—சரவணத்தின்பரிசுபோல - நாணலின்றன்மையைப்போல—அலமருவாதனைதீர்ந்த - சஞ்சலமுள்ளவாசனைநீக்கிய—கிரியையும் - கிரியையும்—மேற்பலந்தன்னையளிக்கமாட்டா-மேற்பயனைக்கொடுக்கமாட்டாது—உலகமெலாம்பிரமமெனும்பாவனையால் - சர்வம்பிரமமென்கின்றபாவனையினால்—அஞ்ஞானமொழிந்துபோனால் - அஞ்ஞானநீங்கிவிட்டால்— மலமுறுவாதனைதோன்றா - அசுத்தவாசனையுண்டாகாது—கானலினீருண்டென்று- கானலிற்சலமிருக்கின்றதென்று—மதிப்பாருண்டோ-நிச்சயிப்பவர்களுண்டோ. எ-று.......................................(௧௫)

(அ-கை.) வாசனைநசிக்கிற்பிரமானுபவமுண்டாமாதலாலவ்வாசனையுள்ளமனமாகிய வஞ்ஞானத்தைக்கெடுத்தஃதின்றியஞானமனதினாற்பிரமசித்தனைசெய்யிற் பவத்துன்பநீங்குமெனல். (கவி) வாதனைமாத்திரம்விட்டாற்சராமரணமுறுபிறவிமருவாதான, தீதில்பதமுண்டாகும்வாதனையோடேசேர்ந்தசித்தந்தானேபேதைமையஞ்ஞானமாம்வாதனைதீர்மனந்தானேபிறவாஞான, மேதமறுஞானத்தானேயமுணர்ந்தாற்பிறவியெய்தாதன்றே.

(இ-ள்.) வாதனைமாத்திரம்விட்டால் - வாசனையைமட்டுநீக்கினால்—சராமரணம்- சராமரணங்கள்—உறுபிறவி - பொருந்தியசநநமானது—மருவாதான - பொருந்தாததாகிய—தீதில்பதமுண்டாகும்- குற்றமற்ற(பரம)பதமுண்டாகும் —வாதனையோடு-வாசனையுடன்—சேர்ந்தசித்தந்தான் - பொருந்தியமனமானது—பேதைமையஞ்ஞானம்- வேற்றுமையானவஞ்ஞானமேயாகும்—வாதனைதீர்மனந்தான்- வாதனைநீங்கியமனமானது—பிறவாஞானம்-சனியாதவாத்மஞானமாம்—ஏதமறுஞானத்தால்-குற்றமற்றஞானத்தினால்—நேயமுணர்ந்தால்- (சீவனானவன்) பிரமவஸ்துவையறிந்தால்—பிறவியெய்தாது-சநநமடையாது. எ-று. (இ-ரு-க-ம்) வாசனைட்சயம்வரிற்கிரியாபலநீங்கிப் பரஞானமுண்டாய்ச்சநநமரணநீங்குமென்பதாம் ..... (௧௬)

(அ-கை.) அறிவைவிரும்பாமலும் குருமுகமாய்ச்சித்தென்னுமுத்தியாதுசகத்துற்பத்திலயமென்கின்றபந்தமியாதென்றுவிசாரித் திவ்வைதைநீக்கி யவ்வைதையடையாமலுமேன்வருந்துகின்றாயெனல். (கவி) ஞானமிகநன்றென்றேயயன்முதலாநல்லோர்கணவிலாநிற்க, நீநயவாதிருந்தனையென் னியாரிவ்வுலகெங்ஙனேர்ந்ததெங்ஙன், றானமுறவிறக்குமெனநினைகிலையென்பேதையர்போற்றளர்கின்றாயென்,றானகுரவனையிறைஞ்சிபந்தம்வீடெப்படியென்றறிகிலாயென் .... *

(இ-ள்.) ஞானமிகநன்றென்று-ஞானமேமிகவுநல்லதென்று— அயன்முதலாம்-பிரமாமுதலாகிய—நல்லோர்கள்-பெரியோர்கள்— நவிலாநிற்க-சொல்லியிருக்க—நீநயவாதிருந்தனையென்-நீர்விரும்பாதிருந்ததென்ன—யாரார்-யாரார்— இவ்வுலகெங்ஙனேர்ந்தது-இச்சகமெப்படியுண்டாயிற்று—எங்ஙன்றானமுறவிறக்கும் - எவ்விடத்திலிறக்குமென்று — நினைகிலையென்-கருதாததென்ன—பேதையர்போல் - அறிவில்லாதவர்களைப்போல—தளர்கின்றாயென்-சோர்கின்றதென்ன—ஆனகுரவனையிறைஞ்சி - மகானானவாசிரியனைவணங்கி—பந்தம்வீடு - பந்தமோக்ஷம்—எப்படியென்றறிகிலாயென் - எவ்விதமென்றறியாததென்ன. எ-று............ (௧௭)

(அ-கை.) சாதுசங்கத்தால் விசாரஞானமுதிக்குமெனல். (கவி) நிறையறிவின்சமமானநோக்கினனைச்சேவித்துநிரந்தரித்துப், பொறையுடனேவினாவினான்முத்திபெறுநுண்ணறிவுபொருந்துமென்னு, மறையவன்போதித்தலுமே கண்கணீர்சொரிந்திரங்கிமன்னன்சொல்வா, னிறையவனேயறப்புதுமை யுன்னாலேயுணர்வுற்றேனேழையானேன்......... *

(இ-ள்.) நிறையறிவின் - பூரணஞானத்தினால்— சமமாநோக்கினனை - சமதிருஷ்டியுள்ளவர்களை—சேவித்து - தரிசித்(தடைந்து)—நிரந்தரித்து- நிரந்தரமாய்—பொறையுடன்வினாவினால் - பொறுமையாகவிசாரித்தால்—முத்திபெறுநுண்ணறிவு- மோக்ஷமடைகின்றசூட்சுமஞானமானது—பொருந்துமென்னு - கிடைக்குமென்று— மறையவன்போதித்தலும்-கும்பமுனிசொல்லவும்—கண்கணீர்சொரிந்து - கண்களிலாநந்தபாஷ்பம்பொழிந்து— இரங்கி-அழுது—மன்னன்சொல்வான்- அரசனுரைப்பான்—இறையவனே-ஆசாரியனே—அறப்புதுமை-மி

கவுமாச்சரியம்—ஏழையான்-எளியேன்—உன்னாலுணர்வுற்றேன்-தேவராற்றெரிந்தேன். எ-று. (இ-உ-க-ம்) ஞானசுகமுண்டாவதற்குக்காரணமாத்மவிசாரமென்றறிவித்ததாம் .... (கூஅ)

(அ-கை.) தேவரீராசிரியராயடியேனை யடிமைகொண்டனுக்கிரகஞ்செய்யவேண்டு மெனல். (கவி) மடமையாற்பெரியவர்தஞ்சேவையைவிட்டுத்தனியே வனத்தில் வந்தே, னிடர்மேவுபாவமெலாமின்றொழிந்தேன்வனத்தினீயெய்தியென்னைக், கட னாகவுணர்த்துதலாற்குருநீயென்பிதாநீயென்காதலோனீ, திடமானமாணுக்கனுய்த் தொழுகின்றேன்கருணைசெய்யவேண்டும்...................................... *

(இ-ள்.) மடமையால்- அஞ்ஞானத்தினால்—பெரியவர்தம்-மகான்களுடைய—சேவை யைவிட்டு - சமூகத்தைவிட்டு— இத்தனிவனத்தில்வந்தேன் - இந்தத்தனிமையானகாட்டில்வந் தேன்—இடர்மேவுபாவமெலாம் - துன்பம்பொருந்தியபாவங்களனைத்தையும்— இன்றொழிந் தேன் - இப்பொழுதுதவிர்ந்தேன் --வனத்தின் - காட்டிலிருக்கின்ற— என்னை - அடியேனை— நீயெய்தி-நீரடைந்து—கடனாகவுணர்த்துதலாற்-கடமையாகவறிவிப்பதால்—குருநீ- ஆசாரிய ருநீர்தான்—என்பிதா நீ-எனதுதந்தையுநீர்தான்—என்காதலோனீ-எனதுசிநேகிதனுநீர்தான் —திடமானமாணுக்கனுய்-திரமுள்ளசிஷ்யனாய்—தொழுகின்றேன்-(யானுமதுபாதத்தை) வண ங்குகிறேன்—கருணைசெய்யவேண்டும்-கிருபைசெய்யவேண்டும். எ-று ....(கூகூ)

(அ-கை.) நித்தியானந்தமாகும்பொருட் டனுக்கிரகிக்குமெனது வாக்கியத்திற்சித்த மேகாக்கிரப்படுமாயி னுரைப்பேனெனல். (கவி)உதாரமிகவுண்டாகியுணர்வுற்றாற் றுன்பமெலாமொழிப்பதாகிச், சதாசுகமாம்பொருளாகநீயறிந்ததேததனைச்சாற்று கிற்பாய், பிதாமகனொப்பாயென்றமன்னனுக்குக்கும்பன்றான்பேசுகிற்பான், கதா வியெழுமனமொருப்பட் டுணர்தியேலுனக்குண்மைகழறுகிற்பேன்................ *

(இ-ள்.) உதாரமிகவுண்டாகி - உதாரமிகவுமுள்ளதாகியும்—உணர்வுற்றால் - அறிந்தால் —துன்பமெலாமொழிப்பதாகி - துயரங்களனைத்தையுநீக்குவதாகியும் — சதாசுகமாம்பொரு ளாக- சதாநந்தமானவஸ்துவாகியுமிருக்கின்ற— நீயறிந்ததேது - நீயுணர்ந்தவஸ்துவெதுவோ —அதனைச்சாற்றுகிற்பாய் - அதையெனக்குச்சொல்லுவாய்—பிதாமகனொப்பாயென்ற-பிரம தேவனுக்குச்சமானமானவரேயென் றுசொல்லிய—மன்னனுக்கு- அரசனுக்கு—கும்பன்றான் பேசுகிற்பான் - கும்பமுனிசொல்லுவார்—கதாவியெழுமனம் - வேகமாய்த்தாவியெழாநின்ற மனதில்—ஒருப்பட்டுணர்தியேல் - ஒன்றுபட்டறிவாயானால்—உனக்கு- நினக்கு—உண்மைகழ றுகிற்பேன் - ஞானத்தைச்சொல்லுவேன். எ-று .... (ஈ)

(அ-கை.) இ-து. (கவி) சொன்னதுகைக்கொள்ளாது விநோதத்தாற்கேட்பவர்க்குச் சொன்னவார்த்தை, பன்னியுமோர்பயனுகா திருளிலேவிழிக்குணர்வுபலிப்பதுண் டோ, வென்னலுமன்னவனுரைப்பான் வேதவிதியேநீயிங்கிசைத்தவெல்லா,நின்ன ருளாற்கைக்கொண்டு சத்தியமேநன்றாகநினையாநிற்பேன்........................... *

(இ-ள்.) சொன்னது - உரைத்ததை—கைக்கொள்ளாது-கிரகிக்காமல்—விநோதத்தா ல்-விளையாட்டினால்—கேட்பவர்க்கு - கேட்குமவர்களுக்கு—சொன்னவார்த்தை-உரைத்தவாக் கியம்—பன்னியுமோர்பயனுகாது - சொல்லியுமொருப்ரயோசனமில்லை—இருளில்-அந்தகார த்தில்—விழிக்கு - கண்களுக்கு—உணர்வுபலிப்பதுண்டோ - அறியும்பலனுண்டாமோ—என் னலும் - என்றுகும்பமுனிசொல்லவும்—மன்னவனுரைப்பான் - அரசன்சொல்லுவான்—நின் னருளால் - உமதுகிருபையினால்—நீயிங்கிசைத்தவெல்லாம்- நீரிவ்விடத்திற்சொல்லியசர்வார்த் தமும்—வேதவிதியே - வேதநியமமென்று—சத்தியமே- உண்மையாக— கைக்கொண்டு- கிர கித்துக்கொண்டு—நன்றாகநினையாநிற்பேன் - நன்றாகச்சிந்திப்பேன். எ-று. (இ - ந- க - ம்) மூற்போதனைநிட்பலமானதும்பாலவாகாமலுறுதிப்படுத்திக்கொண்டுபதேசிக்கத்தொடங்கின தென்பதாம்.. (ஈக)

(அ-கை.) எளிதாய்க்கிடைத்ததையிகழ்ந்தரிதாய்க்கிடைத்ததைப் புகழ்ந்த வறியா மையைநீக்குநிமித்தஞ்சிந்தாமணிகதையைச் சாமானியமாகச் சொலலத்தொடங் கல். (கவி) என்றுமன்னனுரைசெய்யவெழிலார்கும்பனுரைசெய்வா,னொன்றுமறி யாப்பாலகனுக்குரியதந்தையுரைப்பதுபோல், வென்றிமன்னநானுனக்கு விளம்பு முரையைவினவாது, நன்றிதென்றேகேளென்றுஞானத்தோன்றறவில்வுற்றான்... *

(இ-ள்.) என்றுமன்னனுரைசெய்ய - (இப்படி) யென்றரசன்சொல்ல—எழிலார்-அழ குநிறைந்த—கும்பனுரைசெய்வான் - கும்பமுனிசொலலுவார்—ஒன்றுமறியாப்பாலகனுக்கு- ஒன்றுந்தெரியாதகுழந்தைக்கு—உரியதந்தையுரைப்பதுபோல் - உரிமையானபிதாசொல்லு வதும்போல—வென்றிமன்னா - வெற்றியையுடையவரசனே—நான் - யான் — உனக்குவிளம்பு

முறையை - உமக்குச்சொல்லும்வசனத்தை—வினவாது - தடுத்துக்கேளாமல் — நன்றிதென்றுகேளென்று - (இது) நன்மையெனநினைத்துக்கேட்பாயென்று—ஞானந்தோன்றநவில்வுற்றான் - அறிவுண்டாகக்கூறத்தொடங்கினர். எ-று .... (௱௨)

(அ-கை.) இ-ள். (கவி) மன்னுவீதோர்கதைகேட்பாய்மற்றிக்கதையினுறுபொருளைப், பின்னுனுரைக்கேன்முன்னாளிற்பெரியோனொருவன்பெருஞ்செல்வன், பன்
னுநின்றகலைநூல்கள்பலவும்வல்லோன்ஞானமிலோ, னன்னுனுயர்சிந்தாமணியை
யறவேமுயன்றுதேடுற்றான் .... *

(இ-ள்.) மன்னு - அரசனே—ஈதோர்கதை-இஃதொருகதையை—கேட்பாய்-(சொல்லக்) கேட்கக்கடவாய்—இக்கதையின் - இந்தக்கதையில்—உறுபொருளை - பொருந்தியவருத்தத்தை—பின்னுனுரைக்கேன் - பின்புயான்சொல்லுவேன்—முன்னாளில் - முற்காலத்தில்—பெரியோனொருவன் - ஒருபெரியவர்—பெருஞ்செல்வன் - மிகுந்தசம்பத்துடையவன் — பன்னுநின்றகலைநூல்கள் - சொல்லாநின்றகலைஞானங்கள் (முதலிய)—பலவும்வல்லோன் - சகலசாஸ்திரங்களிலும்வல்லமையுடையவன்—ஞானமிலோன் - ஆத்மஞானமில்லாதவன் — அன்னுன்-அப்படிப்பட்டவன்—உயர்சிந்தாமணியை-மேலானசிந்தாமணியை—அறவேமுயன்று-மிகவுமுயற்சித்து —தேடுற்றான்-தேடத்தொடங்கினான். எ-று .... (௱௩)

(அ-கை.) இ-ள். (கவி) மிக்கவருத்தத்தாற்றிரமேவவேண்டுமெனுமுயல்வாற், றக்கமணி
கிட்டினவருந்திச்சாலமுயன்றார்க்கேன்கிடையா, தொக்கசுடர்மாமணிதன்முன்றோன்றி
மதியின்விளங்கிடவு, நக்கமணியைக்கைக்கொள்ளநாநாவிதமாய்நாடுற்றான் .... *

(இ-ள்.) மிக்கவருத்தத்தால்-மிகுந்தப்ரயாசமுள்ளதபசினால்—திரமேவவேண்டுமெனும்-திர்ப்பாகவடையவேண்டுமென்கின்ற—முயல்வால்-முயற்சியினால்—தக்கமணிகிட்டின- தகுந்தசிந்தாமணிகிடைத்தது—வருந்தி-வருத்தப்பட்டு—சாலமுயன்றார்க்கு-மிகவுமுயற்சித்தவர்களுக்கு—என்கிடையா - ஒன்லெபிக்காது — தொக்கசுடர்மாமணி - மிகுந்தப்ரகாசமுள்ளசிந்தாமணியானது—தன்முன்றோன்றி-தன்னெதிரிற்றோற்றி—மதியின்விளங்கிடவும் - சந்திரன்போலப்ரகாசிக்கவும்—நக்கமணியைகைக்கொள்ளா- ப்ரகாசித்தசிந்தாமணியைக்கைவசப்படுத்தாமல்—நாநாவிதமாய்நாடுற்றான் - பலவிதமாகச்சிந்தித்தான. எ-று .... (௱௪)

(அ-கை) இ-து(கவி)சிந்தாமணியன்றிதுவேறோர்சிறுமாமணிசிந்தாமணிதா,னொந்தாரா
ய்ந்துவாணுட்போய்நுடங்கும்போதல்லால்வருமோ, நைந்தாலும்பாவியர்க்கெய்தாநல்
லோர்சிலர்க்குநண்ணலுறுந்,தந்தாம்வினையைநினையாமற்றளர்ந்தாற்கடிதினெய்திடுமோ

(இ-ள்.) இதுசிந்தாமணியன்று - இதுசிந்தாமணியல்ல—வேறோர்சிறுமாமணி- வேறேயொருவற்பமணியாகும்—சிந்தாமணிதான்- சிந்தாமணியானது—நொந்து - வருத்தப்பட்டு—ஆராய்ந்து -வெகுநாடேடி—வாணுட்போய் - வாழுங்காலமெல்லாநீங்கி — நுடங்கும்போதல்லால் - மெலியுங்காலத்திலல்லாமல்—வருமோ - கிடைக்குமோ — நைந்தாலும் - துன்பப்பட்டாலும்—பாவியர்க்கெய்தா - பாவிகளுக்குக்கிடையாது— நல்லோர்சிலர்க்கு - நல்லவர்களிற்சிலபேர்களுக்கு—நண்ணலுறும்-கிட்டும்—தந்தாம்வினையை- தங்கள்தங்கள்கன்மத்தை—நினையாமல் - எண்ணுமல்—தளர்ந்தால்-சோர்வுற்றால்—கடிதினெய்திடுமோ - (அவர்களுக்குச்) சீக்கிரத்திலடையுமோ. எ-று .... (௱௫)

(அ-கை)இ-து(கவி)மனிதனுனென்றவமற்பம்வல்லபங்கள்சிறிதில்லைத்,துனிசெய்திற்பாக்
கியனெனக்குத்தோன்றுமணிமுன்றோன்றிடுமோ, நனியின்னமுந்தேடுதுமென்றுநன்
மாமணியையெடுத்திலனற்,புனிதமணியும்போயினதாற்பொல்லாதார்க்குநலனுறுமோ.

(இ-ள்.) நான்மனிதன் - யானேமனுஷின் — என்றவமற்பம் - எனதுதவமோசொற்பம்—வல்லபங்கள்சிறிதில்லை - வல்லமைகளோவெனக்கற்பமுமில்லை — துனிசெய்திற்பாக்கியன்-துன்பப்படுத்துகின்றதாரித்திரமுள்ளவன்—எனக்கு- (இப்படிப்பட்ட) வெனக்கு—தோன்றுமணி - காணற்கரியசிந்தாமணியானது— முன்றோன்றிடுமோ - எளிதாகமுன்னேதோற்றுமா—தனியின்னமுந்தேடுதுமென்று - மிகவுமின்னமுந்தேடுவோமென்று — நன்மாமணியை-நல்லசிந்தாமணியை—எடுத்திலன் - எடுக்கவில்லை—புனிதமணியும்- பரிசுத்தமுள்ளசிந்தாமணியும்—போயினது - போய்விட்டது—பொல்லாதார்க்கு - தீயவர்களுக்கு—நலனுறுமோ-நன்மையுண்டாகுமோ. எ-று .... (௱௬)

(அ-கை.) இ-ள்.(கவி) மீண்டும்வருந்தித்தேடுற்றான்வெம்பிச்சிலநாளுழன்றளவே,யாண்
டுமறைந்துசிலசித்தரவனைதருவான்காட்டுவிக்கக், கண்டவனையின்முறியென்றுகிடப்பக்
கண்டானறிவில்லான், யாண்டசிந்தாமணியிதெனமகிழ்ந்துவியந்துகைக்கொண்டான்*

(இ-ள்.) மீண்டும் - திரும்பவும்—வருந்திச்சேடுற்றான்-வருத்தமுற்றுத்தேடினன்—வெம்பிசிலநாளுழன்றளவே - வெப்பமுற்றுசிறிதுநாட்சுற்றவும்—ஆண்டுமறைந்து- அவ்விடத்தின் மறைவாகி—சிலசித்திரவசன தருவான் - சிலசித்திரங்களைக்காவலைனப்பரியாசஞ்செய்யும்பொருட்டு—கீண்டவளையின்முறி - உடைந்தவளையலின்றுணுக்கை—காட்டுவிக்க - எதிரேகாண்பிக்க—ஒன்றுகிடப்பக்கண்டான் - ஒருமணியிருக்கப்பார்த்தான்— அறிவில்லான் - அறிவில்லாதவன்—மாண்டசிந்தாமணியிதெனமகிழ்ந்து - மாட்சிமைப்பட்ட சிந்தாமணியிதுவென்றுசந்தோஷித்து—கைக்கொண்டான் - கிரகித்தான். எ-று .... (௱எ)

(அ-கை.) இ-து. (கவி) வெந்தமணியைமிகப்பேணி மிக்கநிதியெல்லாம்விட்டான், வந்தமணியெல்லாமளிக்கு மற்றநிதிகளென்னென்றே, சிந்தைசெய்தானித்தேசந் தீயோருண்டுசுகமில்லை, யிந்தவிடந்திதெனவனத்தி லிருந்துசுகிப்போமென்றகன்றான் .... *

(இ-ள்.) வெந்தமணியை - காச்சுக்கல்லை—மிகப்பேணி- மிகவும்விரும்பி—மிக்கநிதியெல்லாம்விட்டான் - மிகுந்தசெல்வங்களனைத்தையுநீக்கினான்—வந்தமணி - கிடைத்தகாச்சுக்கல்—எல்லாமளிக்கும் - சகலசெல்வத்தையுங்கொடுக்கும்—மற்றநிதிகளென்னென்றே- மற்றத்தனங்களென்னத்துக்கென்று—சிந்தைசெய்தான் - நினைத்தான்—இத்தேசம்- இந்நாட்டில்—தீயோருண்டு - கொடியவர்களுண்டு—சுகமில்லை - சுகங்கிடையாது—இந்தவிடந்திதென- இத்தேசங்கொடியதென்று—வனத்திலிருந்து - கானத்திலிருந்து— சுகிப்போமென - இன்பமடைவோமென்று—அகன்றான்- நீங்கினான். எ-று. (இ-எ-க-ம்) சிந்தாமணியின் குணந்தெரியினங்ஙனந் துன்பம்வாராததுபோலச் சகலத்பாகத்தினுண்மைதெரியி னஃதெளிதிற் கிடைக்கினுமரிதிற் கிடைக்கினு மப்போதே துன்பமற்ற பரமசுகத்தை யடையலா மென்பதைக் குறிப்பாற் சொல்லியதாம் .... (௱அ)

(அ-கை.) அறியாமைக்கிரங்கக் கூடாதென்பதை யுறுதிப்படுத்துநிமித்த மியானையின்கதையைச்சாமானியமாகநிரூபித்தல்.(கவி) வாழலாமென்றெண்ணிப்புன்மணியால்வருத்தமெலாமுற்றுத், தாழநின்றான்வேறொன்று சாற்றக்கேளாய்புந்திக்குச், சூழவறிவுண்டாக்குவிக்குந் தொல்லைவிந்தவனத்துடையே, வேழமொன்றுகரிகட்கு மேலாமிகவுமுயர்ந்ததுவே .... *

(இ-ள்,) வாழலாமென்றெண்ணி - சுகிக்கலாமென்றுநினைத்து—புன்மணியால்-காச்சுக்கல்லினால்—வருத்தமெலாமுற்று - துன்பங்களனைத்தையுமடைந்து—தாழநின்றான்- தாழ்வையடைந்தான்— வேறொன்றுசாற்றக்கேளாய் - மற்றொருகதையைச்சொல்லக்கேட்பாய் — புந்திக்குச்சூழவறிவுண்டாக்குவிக்கும்- புத்திக்குப்பூரணமாகவறிவைக்கொடுப்பிக்கும்— தொல்லைவிந்தவனத்திடை-பழைமையானவிந்தவனமத்தியில்— வேழமொன்று - ஒருயானையானது—கரிகட்குமேலாமிகவுமுயர்ந்தது-யானைகளுக்குமேலாகமிகவு முன்னதமுள்ளதாம். எ-று(௱௯)

(அ-கை.) இ-து. (கவி) வயிரத்தினுநீண்டறக்கூராய் வலிதாகியகோடிரண்டுளது, பயில்வுற்றிருப்புக்கபிற்றாலே பாகன்பிணித்துவிலங்கிட்டான், செயிர்பற்றியபல்பிணிப்பாலேசிந்தைதளர்ந்துகொம்பிரண்டாற், குயில்வித்துளவன்கட்டெல்லாங்குலைத்ததொருநாற்கடிகையிலே... .... *

(இ-ள்.) வயிரத்தினும் - வச்சிராயுதத்தைக்காட்டிலும்—நீண்டு - நீளமாய்—அறக்கூராய்- மிகவுங்கூர்மையையுடையதாய்—வலிதாகிய - வலிமையாயிருக்கின்ற— கோடிரண்டுளது- இரண்டுதந்தங்களையுடையதான(யானையுடன்)—பயில்வுற்று - பழகி—இருப்புக்கபிற்றால்-அயப்பாசத்தினால்—பாகன்பிணித்துவிலங்கிட்டான் - மாவுத்தன்கட்டிநிகளம்பூட்டினான்—செயிர்பற்றிய- குற்றம்பொருந்திய—பல்பிணிப்பால்- அநேகங்கட்டுகளினால்—சிந்தைதளர்ந்து-மனஞ்சோர்ந்து—கொம்பிரண்டால் - இரண்டுதந்தங்களினாலும்—குயில்வித்துள - நெருக்கிவைத்த—வன்கட்டெல்லாம் - வலியகட்டுகளனைத்தையும்—ஒருநாற்கடிகையில் - ஓரிரண்டுமுகூர்த்தத்தில்—குலைத்தது-கெடுத்தது. எ-று .... (௱௰)

(அ-கை.) இ-து. (கவி) விலங்குமுறிந்தபடிகண்டான் வேழத்தலைவீழ்ந்துயர்பாகன், கலங்கிவீழ்ந்தானவன்வீழக் கண்டகளிறுகருணையினன், மலங்கவதுஞ்செய்யாதகலமற்றப்பாகன் மீண்டெழுந்து, சலங்கொண்டேகியக்களிற்றைத்தானேதேடியெதிருற்றான் .... *

(இ-ள்.) விலங்குமுறிந்தபடிகண்டான் - நிகளமுடைந்ததன்மையைப்பார்த்தவனாகிய— உயர்பாகன் - மேலானமாவுத்தன்—வேழத்தலைவீழ்ந்து - (யானைமரத்திருந்து) யானைமத்தகத்திருந்து—கலங்கிவீழ்ந்தான் - கலக்கமுற்று(த்தவறிப்பூமியில்) விழுந்தான்—அவன்வீழக்கண்டகளிறு-அவன்விழப்பார்த்தயானையானது—கருணையினால்- கிருபையினால்—மலங்கவதுஞ்செய்யாதகல - சலிக்கும்படிக்கொல்லாமனீங்க—மற்றப்பாகன் - பின்பந்தமாவுத்தன் — மீண்

டெழுந்து- திரும்பவுமெழுந்திருந்து—சலங்கொண்டேகி- தணியாதகோபத்துடன்போய்—அக்களிற்றைத்தான் - அந்தயானையை—தேடியெதிருற்றான் - தேடியெதிரேசென்றான். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) ஒருகானிடையேயக்கரியை யுற்றான்குழியொன்றுண்டாக்கிச்,சரு
காற்கொடியால் மறைவித்தான்றந்திசிலநாடிரிந்தங்கே, வருகாலையில்வீழ்ந்தது குழியில்
வந்தபாகனுறப்பிணித்தான், கருதா நின்றதுயரோடுங் களிறுநின்றதிப்போதும்.......... *

(இ-ள்.) ஒருகானிடை - ஒருகாட்டினடுவில்—அக்கரியையுற்றான் - அந்தயானையையடைந்தான்—குழியொன்றுண்டாக்கி - ஒருபடுகுழிதோண்டி—சருகாற்கொடியான் - உலர்ந்தவிலைகளினாலுங்கொடிகளினாலும்—மறைவித்தான் - மறைவுசெய்தான்— தந்தி - யானையானது—சிலநாடிரிந்து - சிறிதுநாட்சஞ்சரித்து—அங்கேவருகாலையில் - அவ்விடத்தில்வருகின்றகாலத்தில்—குழியில்விழுந்தது- படுகுழியில்விழுந்தது—வந்தபாகன்- வந்தமாவுத்தனானவன்—உறப்பிணித்தான் - அழுந்தக்கட்டினான்— கருதாநின்றகளிறு - நினைக்கின்றயானையானது — இப்போதும் - இப்பொழுதும்—துயரோடும்-துன்பத்துடன்—நின்றது-இருந்தது. எ-று.(௲௰௨)

(அ-கை.) இ-து. (கவி) தனதுவீட்டிற்சிறையிருக்குந் தனிமாவலிபோனின்றகரி,முனமு
ன்வீழ்ந்தபகைப்பாகன் மூளைசிதறிற்றெனில்வந்து, வனவெங்குழியிற்கட் டுண்டுமயங்க
வேண்டாமதுபோல, வினவிநிகழ்காலத்தான்மேல் வினைநோக்காதார்மெலிகுவரே..... *

(இ-ள்.) தனதுவீட்டில் - தனதரண்மனையில்— சிறையிருக்கும் - காவலிலிருக்கின்ற—தனிமாவலிபோல்- ஒப்பற்றமாவலியைப்போல—நின்றகரி-இருந்தயானையானது—முனமுன்வீழ்ந்த - பூர்வத்திற்(றனது)முன்னேவிழுந்த— பகைப்பாகன் - சத்துருவாகியமாவுத்தன்—மூளைசிதறிற்றெனில்- (தலை)மூளைசிதறும்படியாகக்கொன்றால்—வனம்வந்து - கானகத்துக்குவந்து—வெங்குழியில் - கொடியபடுகுழியில்—கட்டுண்டு - பிணிப்புற்று—மயங்கவேண்டாம்-கலங்கவேண்டியதில்லை—அதுபோல - அக்கதையைப்போல—வினவி-விசாரித்து— நிகழ்காலத்தால்- வர்த்தமானகாலத்தினால்—மேல்-இனிவருங்காலத்தில்—வினைநோக்காதார்-காரியாகாரியங்களைப்பாராதவர்கள்—மெலிகுவர் - துன்பத்தையடைவார்கள். எ-று. (இ-கு-க-ம்) வல்லமையுள்ளயானையாயிருந்து மதியின்றியமனிதனால் வருந்துவதுபோலப் பூரணஞானமானது, அற்பசங்கற்பமான அறியாமையால் வருந்துவதைப் பார்த்ததைக் கெடுக்கவேண்டு மென்றறிவித்ததாம் .... (௲௰௩)

(அ-கை.) இவ்விரண்டுகதையையும் பகுத்துவினாவினதற்கு முற்சிந்தாமணியைக்
கூறல்(கவி)எனறலோடுஞ்சிகித்துவசனெந்தாய்சிந்தாமணியாலும்வென்றிவேழந்த
ன்னாலும்விளம்புகதையைவிளக்குகென, நின்றகும்பனுரைசெய்வானெடுநூற்பொ
ருள்கள்பலவுணர்ந்தோ,னன்றிஞானமில்லாதோனன்மாமணிதேடியவவனன்றோன் · *

(இ-ள்.) என்றலோடும் - (இப்படி)யென்று(கும்பமுனி)சொன்னவளவில்—சிகித்துவசன்-சிகித்துவசவரசனானவன் —எந்தாய்-எனதுபிதாவே--சிந்தமாணியாலும்-சிந்தாமணியினாலும்—வென்றிவேழந்தன்னாலும்-வெற்றியையுடையயானையினாலும்—விளம்புகதையை-சொல்லியகதையை—விளக்குகென-தெரிவிப்பாயென்றுகேட்க—நின்றகும்பனுரைசெய்வான்-நிலையாயிருந்தகும்பமுனிசொல்வார்—நெடுநூற்பொருள்கள்-மிகுந்தசாஸ்திரார்த்தங்கள்—பலவுணர்ந்தோன்-சகலமுமுணர்ந்தவனும்—நன்றி - நன்மையரீன—ஞானமில்லாதோன்- தத்துவஞானமில்லாதவனும்—நன்மாமணிதேடியவவன்றான்-நல்லசிந்தாமணியைத்தேடினவனும். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) என்னவுரைத்ததுனையாநீ யெல்லாநூலுங்கற்றுணர்ந்து, மன்னு
சாந்திபெற்றிலைவான் மணியென்றதுதானேதென்னி, லுன்னுவஞ்சமறவெல்லாமொழித
லாகுந்துயரனைத்துந், துன்னவில்லாவதுதேடத் தொடங்கியரசுதுறந்தனையால்.......... *

(இ-ள்.) என்னவுரைத்தது - இப்படியென்றுசொல்லியது— உனையாம் - உன்னையேயாம்—நீயெல்லாநூலுங்கற்றுணர்ந்தும்-நீசகலசாஸ்திரங்களையுமற்பியாசித்தறிந்தும்— மன்னுசாந்திபெற்றிலை - நிலைபெற்றவுபசாந்தத்தையடைந்தாயில்லை — வான்மணியென்றதுதானேதென்னில்- சிந்தாமணியென்றதெதுவென்றால்—உன்னுவஞ்சமற - நினைக்கப்பட்டவஞ்சங்கெட—எல்லாமொழிதலாகும் - சர்வத்யாகமாம்— துயரனைத்தும் - துன்பங்களியாவும் — துன்னவில்லாவது - நெருங்காதவச்சகலத்யாகத்தை—தேடத்தொடங்கி - தேடமுயற்சித்து —அரசுதுறந்தனை - அரசாக்ஷிவிடுத்தாய். எ-று.. (௲௰௪)

(அ-கை.) இ-து. (கவி) மனையுங்கிளையுந்துறந்திங்ஙன் வனத்தில்வந்தாய்நாடகன்றூ,
யனையசகலத்தியாகநிறை வாகுமளவிலதன்விகற்ப, நினைவில்வளர்ந்துவின்மூடுநீல
முகில்போலுன்னைமறைக்க, வினையசகலத்தியாகமுயரின்பமல்லமகத்தல்ல.......... *

(இ-ள்.) மனையுங்கிளையுந்துறந்து - இல்லாளையுமுறவையுநீங்கி—இங்ஙன்வனத்தில்வந்தாய்-இந்தக்காட்டினிடத்தில்வந்தாய்—நாடகன்றாய் - (உனது)தேசத்தைவிட்டுநீங்கினாய்—அனையசகலத்தியாகம் - அப்படிப்பட்டசகலத்தியாகமானது— நிறைவாகுமளவில் - நிறைவாகின்ற சமயத்தில்—அதன்விகற்பம்- அத்தியாகவிகற்பவபிமானமானது—நினைவில்வளர்ந்து-மனதில் வளர்ந்து—விண்மூடும் - ஆகாயத்தைமறைக்கும்— நீலமுகில்போல் - கரியமேகத்தைப்போல —உனைமறைக்க - உன்னைமறைவுசெய்ய — இனையசகலத்தியாகம் - இப்படிப்பட்டசகலத்தியாகமானது—உயரின்பமல்ல - மேலானசுகமல்ல—மகத்தால் - மகத்துமல்ல. எ-று......... (௱௰௬)

(அ-கை.) இ-து. (கவி) பிறிதொன்றுயர்ந்ததுளததுதான் பெருநாண்முயன் றுலெய்துமென, வெறியவிகற்பமனநிறையமிக்கதியாகம்போயினதாம், நெறி கொள்சகலத்யாகம்போய் நினதுதவமாம்வளையன்முறி, யறிவில்விகற்பவிழி யாற்கண் டதுநன்றென்றேயழுங்குதியால்... *

(இ-ள்.) பிறிதொன்று - வேறொன்று—உயர்ந்ததுளது - மேலானதுண்டென்றுநினைத்து—அதுதான் - அச்சகலத்யாகம்—பெருநாண்முயன்றுலெய்துமென- அநேககாலமுயற்சிசெய்தால்வருமென்று—வெறியவிகற்பமனநிறைய - பயனின்றியவிகற்பமானதுமனதினிரம்ப—மிக்கதியாகம் - மேலானசர்வத்யாகமானது—போயினதாம்- நீங்கினதாம்— நெறிகொள்-சன்மார்க்கமுள்ள—சகலத்யாகம்போய் - சகலத்யாகமென்னுமிரத்தினம்போக—நினதுதவமாம்-உனதுதவமாகிய—வளையன்முறி - காச்சுக்கல்லை—அறிவில்- உணர்வில்லாத—விகற்பவிழியாற்கண்டு- விகற்பதிருஷ்டியினாற்பார்த்து—அதுநன்றென்று- அதுநன்மையென்று—அழுங்குதி-துன்பப்படுகிறாய். எ-று ....(௱௰௭)

(அ-கை.) இ-து. (கவி) அளவற்றெளிதாஞ்சுகமகற்றியரிதாமற்பமாம்பொருளி, லுளமுற்றவரோயுயிர்க்கொலைஞருயர்வஞ்சகமொன்றுலகுரைக்கும், வளமிக் குயர்சிந்தாமணிநீ வந்ததென்றெண்ணியதவத்தாற், றளர்வற்றிலைபெற்றிலை யொன்றுந்தந்தியென்றதினிக்கேளாய்... *

(இ-ள்.) அளவற்று - மட்டில்லாமல்—எளிதாஞ்சுகமகற்றி- இலேசாய்க்கிடைத்தசுகத்தைத்தள்ளி—அரிதாம்- அரிதாகிய—அற்பமாம்பொருளில் - அற்பமானவஸ்துவில்—உளமுற்றவரோ- மனதுபொருந்தினவர்களே — உயிர்க்கொலைஞர் - ஆத்மாவைக்கொன்றவர்களென்றும்—உயர்வஞ்சகமொன்று - மிகுந்தகொடியவமொன்றும்—உலகுரைக்கும் - சத்துக்கள்சொல்லுவார்கள்—வளமிக்குயர்சிந்தாமணி- வளப்பத்தின்மிகுந்தமேலானசிந்தாமணியானது—நீவந்ததென்று - நீகிடைத்ததென்று—எண்ணியதவத்தால் - கருதினதவத்தினால் — தளர்வற்றிலை - தளர்வைநீங்கினாயில்லை—பெற்றிலையொன்றும் - ஒரு (பளிங்கின்) ப்ரயோசனத்தையுமடைந்தாயில்லை—தந்தியென்றதினிக்கேளாய்-யானையென்றுசொல்லியதினிமேற்கேட்பாய்எ-று(இ-ரு-க-ம்) சிந்தாமணிதேடினவன் முதலியதிருஷ்டாந்தத்துக்குச் சாந்தியைத்தேடினவரசன் முதலியதாஷ்டாந்தங்களாற் சகலத்யாகமென்னுஞ் சிந்தாமணியுனக்கு லகுவாய்கிடைத்துமதையிகழ்ந்து தவமென்னுங்காச்சுக்கல்லினாற் றுன்பப்படுகின்றாயென்றுவிசேஷமாய்நிரூபித்ததாம்.(௱௰௮)

(அ-கை.) யானைக்கதையைப்பகுத்துக்கூறல், (கவி) மதமாவென்றதுனையாகும்வயிராக்கியமும்விவேகமுமே, யதனீள்கொம்பாமுன்குணங்க ளானைமேற்கொண்டுழல் பாகன், விதமாவுன்னைமெலிவிக்குமிகுமஞ்ஞானமதனாலே, சிதறுநின்றுபரந்தைக ளாற்செலுத்துமவனாற்கரிபோல .... *

(இ-ள்.) மதமாவென்றது-மதத்தையுடையயானையென்றுசொல்லியது—உனையாகும்-உன்னையேயாகும்—வயிராக்கியமும் - வயிராக்கியமென்பது — விவேகமும் - விவேகமென்பதும்—அதனீள்கொம்பாம் - அதனுடையநீண்டதந்தங்களாகும்—உன்குணங்கள்-உன(தநியாமையையுடைய) குணங்களே— ஆனைமேற்கொண்டுழல்பாகன் - யானைமேலேறிநடத்தாநின்றமாவுத்தனாகும்—விதமாவுன்னைமெலிவிக்கும் - நாநாவிதமாகவுன்னைமெலிவுசெய்கின்றது—மிகுமஞ்ஞானம் - மிகுந்தவஞ்ஞானமாகும்—அதனால் - அந்தவஞ்ஞானத்தினா (லுண்டான)—அரந்தைகளாற்செலுத்தும் - துன்பங்களினானடாத்துகின்ற—அவனால் - அந்தமாவுத்தனால்—கரிபோல - யானையைப்போல—சிதறுநின்றாய் - சிதறுகின்றாய். எ-று ....(௱௰௯)

(அ-கை.) இ-து. (கவி) இருப்புக்கயிறும்விலங்குகளுமிச்சாபாசமென்பனவாம், பெருக்கவிவற்றாற்கட்டுண்டாயிப்பேசுமிருப்பின்மிகவன்பா,மிருப்புக்கயிறும்விலங்குகளும் பற்றாசெல்லிற்றேய்ந்தொழியுந், செருக்குமாசைமேன் மேலே திடமாய்வளருந்திர்க்கமுற.. *

(இ-ள்.) இருப்புக்கயிறும் - அயப்பாசமும்—விலங்குகளும் - நிகளங்களும்—இச்சாபாசமென்பனவாம் - ஆசாபாசமென்றுசொல்லப்பட்டனவாம்— மெருக்கவிவற்ருற்கட்டுண்டாய்- மிகவுமிவைகளாற்பந்தப்பட்டாய்—பேசுமிரும்பில் - சொல்லப்பட்டவிரும்பிலும் — மிகவன்பாம்- இச்சைமிகவுமுறுதியாம்—இருப்புக்கயிறும் - இரும்புச்சங்கிலிகளும்— விலங்குகளும்- காற்றளைகளும்—மிகுநாட்செல்லில் - வெகுகாலமானால்—தேய்ந்தொழியும் - தேய்ந்துகெடும் —செருக்குமாசை - களிக்கின்றவிச்சையானது — மேன்மேல் - மேலுமேலும்—நீர்க்கமுறநெடிதாக—திடமாய்வளரும் - உறுதியாகவளரும். எ-று ....(௱௨௰)

(அ-கை.) இ-து. (கவி) மூரிக்கயிறும்விலங்குகளு முறித்ததானையென்றதுதான், பாரிச்சு
கமெல்லாநீமுன்பற்றற்ருெழித்தபடியாகுஞ்,சூரிற்பாகன்வீழ்ந்தது நின்றுறவின்மடமை
வீழ்ந்ததுவாம், பேரிச்சையைநீக்கிடிற்பின்னைப் பிறவிதரும்பேதைமையுண்டோ ...... *

(இ-ள்.) மூரிக்கயிறும் - பலமுள்ள(விருப்புக்)கயிற்றையும்—விலங்குகளும்- தளைகளையும் —ஆனைமுறித்ததென்றதுதான் - களிறறுத்ததென்றுசொல்லியது—பார்-பூமியிலுள்ள—இச்சுகமெல்லாம் - இப்போகங்களனைத்தையும்—நீமுன் - நீமுன்னமே— பற்றற்ருெழித்தபடியாகும்-இச்சையில்லாமற்கெடுத்தவிதமாகும்—சூரிற்பாகன் - வீரத்துவமில்லாதமாவுத்தன்—வீழ்ந்தது - (பனைமரத்தினின்று) விழுந்ததென்பது— நின்றுறவில் - உமதுவிரத்தியில்—மடமைவீழ்ந்ததுவாம் - அஞ்ஞானங்கெட்டதாகும் —பேரிச்சையைநீக்கிடில்-மிகுந்தவாசையையொழித்தால்— பின்னை- பின்பு—பிறவிதரும்பேதைமையுண்டோ - சநநத்தைக்கொடுக்கின்றவஞ்ஞானமுண்டோ. எ-று ....(௱௨௧)

(அ-கை.) இ-து. (கவி) போகமயலைவிரத்தியினுற் போக்கநினையிலஞ்ஞான, மேகநினைந்
துவெட்டுமரத்திருக்கும்பேய்போனின்றலையு,மோகமறவேபோகங்கண்முற்றும்விவேகத்
தால்விட்டால், வேகமறப்போமஞ்ஞானம் வெட்டிவீழ்ந்தமரப்பேய்போல்............... *

(இ-ள்.) போகமயல் - செல்வமயக்கத்தை— விரத்தியினுற்போக்கநினையில் - துறவினுற்கெடுக்கவெண்ணினுல்—அஞ்ஞானம்- அஞ்ஞானமானது—ஏகநினைந்து- ஓடநினைத்து—வெட்டுமரத்திருக்கும்பேய்போல் - வெட்டுகின்றதருவிலிருக்கு மலகையைப்போல — நின்றலையும்- இருந்தலையும்—மோகமற - மயக்கங்கெடும்படியாக—போகங்கண்முற்றும் - செல்வங்களனைத்தையும்—விவேகத்தால்விட்டால் - விவேகத்தினுனீக்கினுல்—வெட்டிவீழ்ந்த - வெட்டித்தள்ளிய—மரப்பேய்போல் - விருக்ஷத்திலிருக்கும்பசாசைப்போல—அஞ்ஞானம்- அஞ்ஞானமானது—வேகமுறப்போம் - விரைவினீங்கும். எ-று ....(௱௨௨)

(அ-கை.) இ-து. (கவி) மட்டில்போகமெலாமொழிந்தான்மடமைத்தொடர்ச்சி
யெல்லாம்போம், வெட்டிவீழ்ந்தமரநின்றுவீழ்ந்துபோம்புட்கூடுகள்போற், கிட்
டிவனநீயடைந்தளவேகிளரஞ்ஞானம்வீழ்ந்துளதாற், றட்டில்சகலத் யாகமெனுந்
தனிவாளாற்கொன்றிலையதனை .... *

(இ-ள்.) மட்டில்போகமெலாம் - அளவற்றபோகங்களனைத்தையும்—ஒழித்தால்-தவிர்த்தால் — மடமைத்தொடர்ச்சியெல்லாம்போம் - அஞ்ஞானத்தொடர்புகளனைத்துநீங்கும்—வெட்டிவீழ்ந்தமரநின்று - வெட்டுப்பட்டுவிழுந்தவிருக்ஷத்திலிருந்து—வீழ்ந்துபோம்-விழுந்துபோகின்ற—புட்கூடுகள்போல் - பட்சியின்கூண்டுகளைப்போல — வனம் - கானகத்தை— கிட்டி - நெருங்கி—நீயடைந்தளவே- நீயடைந்தமாத்திரத்தில்—கிளரஞ்ஞானம்வீழ்ந்துளது- மிகுந்தவஞ்ஞானமானதுவிழுந்தது—தட்டில்சகலத்யாகமெனும் - தடையற்றசகலத்யாகமென்கின்ற—தனிவாளால் - ஒப்பற்றகத்தியினுல்—அதனை - அவ்வஞ்ஞானத்தை — கொன்றிலை- கெடுத்திலை. எ-று ....(௱௨௩)

(அ-கை.) இ-து. (கவி) அதனுன்மீளமுளைத்தெழுந்தவஞ்ஞானத்தாலறநொந்தாய்,
மதமாவுக்குப்படுகுழியைவகுத்தான்பாகனென்றதுதான், நிதமாவுனக்குத் தவத்
துன்பஞ்செறியஞ்ஞானஞ்சேர்த்தியதாஞ், சுதமார்குழிமேன்மேற்கொடிக டியர்
கூர்தவஞ்சேர்நற்ருெழில்கள்... *

(இ-ள்.) அதனுல் - அதைக்(கொல்லாமையி)னுல்—மீளமுளைத்தெழுந்த- திரும்பவுமுண்டாகிவளர்ந்த—அஞ்ஞானத்தால் - அறியாமையினுல்— அறநொந்தாய் - மிகவும்வருந்தினுய்—மதமாவுக்கு - மதத்தையுடையயானைக்கு—பாகன் - மாவுத்தனுனவன்— படுகுழியைவகுத்தானென்றதுதான் - கொப்பமுண்டாக்கினுனென்பது—நிதமாவுனக்கு - நிரமாகநினக்கு— தவத்துன்பம் - தவமென்கின்றவுபயா—செறியஞ்ஞானம் - மிகுந்தவஞ்ஞானமானது—சேர்த்தியதாம்- கொடுத்ததாகும்—சுதமார்குழி - கேடுநிறைந்தபடுகுழியின் — மேன்மேற்கொ

டிகள் - மேலுமேலுங்கொடிகளென்பது—தூயர்கூர் - துன்பமிகுந்த—தவஞ்சேர் - தவத்தைச்சார்ந்த— நற்றெருழில்கள் - சற்கிருத்தியங்கள். எ-று. (இ-௬-௧-ம்) யானைமுதலிய திருஷ்டாந்தத்துக்கு, அரசன்முதலிய தாஷ்டாந்தங்களாற் சகலத்யாகமுநித்தவிடத்துநீங்கினவஞ்ஞானத்தை யங்ஙனேகெடுக்காமலதனுன்வருக்கப்பட்ட தவத்துன்பத்தில் வீழ்ந்து வருந்துகின்றுமெயென்றமைதைநீக்கும்பொருட்டு விசேஷமாயறிவித்ததாம்.................................. (௱௨௪)

(அ-கை.) சகலத்யாகத்தைமுன்விட்டுத் தடுக்கத்தடுக்க வவனேபற்றுக்களனைத்தையுங்கண்டுநீக்கித்தேசமுதலியவற்றையுதியதிகளேந்துதொம்பதஸ்வரூபத்தை யடையும்பொருட்டுவென் ஞானத்தையுஞ் சகலத்பாகத்தையுமிழந்தாயெனல். (கவி) இவ்வாறின்றுமிடர்தவமாமிந்தக்குழியிலுழக்கின்றுய், வெவ்வாள்வலிமாவலிசிறையாய் மிகுபாதலத்திலிருப்பதுபோற், றவ்வாமொழிமென்சூடாலை சாற்றுஞானமிழந்தனையென், னைவாய்சகலத்யாகத்தைநழுவினுயென்னவில்கென்ன.................... *

(இ-ள்.) இவ்வாறின்றும் - இவ்விதமாயிப்போதும்—இடர்தவமாம் - துன்பமென்னுந்தவமாகிய—இந்தக்குழியில் - இந்தப்பள்ளத்தில் — வெவ்வாள்வலி - கொடியவாட்டிறத்தையுடைய—மாவலி - மாபலியானவன்—சிறையாய் - சிறையிலடைப்பட்டவனுய் — மிகுபாதலத்தில் - மிகுந்தபாதாளத்தில்—இருப்பதுபோல் - இருப்பதைப்போல—உழக்கின்றுய் - இருக்கின்றுய்—தவ்வாமொழி - தவறுதவசனத்தையுடைய—மென்சூடாலை - மிருதுவானசூடாலையானவள்—சாற்றுஞானம் - சொல்லப்பட்டஞானத்தை—என்னிழந்தனை - ஏனிழந்து— நைவாய் - வருந்துகிருய்—சகலத்யாகத்தை - சகலத்யாகத்தை—என்னழுவினுய் - ஏன்விட்டுவிட்டாய்—நவில்கென்ன - சொல்லென்றுகும்பமுனிகேட்க. எ-று.. (௱௨௫)

(அ-கை.) உயிர்ச்சார்புபொருட்சார்புநீக்கினேனெனிலஃது சகலத்யாகமன்றெனல். (கவி) வேந்தனுரைப்பான்பார்விட்டேன்வீடுவிட்டேனிதிவிட்டேன், காந்தைதனைவிட்டேன்சகலத்யாகங்கைவிட்டதுமற்றென், றேர்ந்துபுகலென்றலுங்கும்பன் செப்புவானீதேசமுதற், சார்ந்தவெல்லாம்விட்டாலுஞ்சகலத்யாகமன்றுகும் .... *

(இ-ள்.) வேந்தனுரைப்பான் - அரசன்சொல்லுவான்—பார்விட்டேன்- (எனது) பூமியைவிடுத்தேன்—வீடுவிட்டேன் - அரண்மனையைவிடுத்தேன் — நிதிவிட்டேன் - செல்வத்தைவிடுத்தேன்—காந்தைதனைவிட்டேன் - பாரியாளைவிடுத்தேன்— சகலத்யாகம் - சகலத்யாகமானது —கைவிட்டது - (இப்பொழுது) நீக்கினதைக்காட்டிலும்—மற்றென் - வேறியாது—தேர்ந்துபுகலென்றலும் - ஆராய்ந்துசொல்லவேண்டுமென் (றரசன்) கேட்கவும்—கும்பன்செப்புவான் - கும்பமுனிசொல்லுவார்—நீதேசமுதல் - நீநாடுமுதலாக—சார்ந்தவெல்லாம் - சேர்ந்திருக்கின்றசகலத்தையும்—விட்டாலும் - விட்டுவிட்டாலும் — சகலத்யாகமன்றுகும் - சகலத்யாகமல்லவாம். எ-று.. (௱௨௬)

(அ-கை.) வனப்பற்றிருக்கின்றமென்றறிந்தஃதை நீக்கினேனெனி னஃதுஞ் சகலத்யாகமன்றெனல். (கவி) எல்லாத்திலும்பற்றுண்டுனக்கவ்விச்சையெல்லாமறவிட்டு, நல்லார்க்குரியநல்லின்பநண்ணுகென்னமன்னுரைப்பான், மல்லார்புவிவிட்டதுசகலமன்றேல்வனமேயெனக்குளது, கல்லாற்றருவானிறைகாட்டிற்காதலுறுவாதனைவிட்டேன்............ *

(இ-ள்.) உனக்கு - நினக்கு—எல்லாத்திலும்பற்றுண்டு - சகலத்திலுமாசையுண்டு— அவ்விச்சையெல்லாமறவிட்டு - அந்தவாசைகளனைத்தையுமொருங்கேநீக்கி — நல்லார்க்குரியநல்லின்பம் -சத்துக்களுக்குரியபிரமாநந்தத்தை—நண்ணுகென்ன- அடைவாயென்றுகும்பமுனிசொல்ல—மன்னுரைப்பான் - அரசன்சொல்லுவான் — மல்லார்புவிவிட்டது - வளமைநிறைந்தசகத்தைவிட்டது—சகலமன்றேல் - சகலத்யாகமல்லவானல்—எனக்குளதுவனமே - எனக்குடையதுகானகமே—கல்லால் - மலைகளினுலும்—தருவால் - மரங்களினுலும் — நிறைகாட்டில் - நிறைந்திருக்கின்றகானகத்தில்—காதலுறு - விரும்பப்பட்ட—வாதனைவிட்டேன் - வாசனையைநீக்கினேன். எ-று.. (௱௨௭)

(அ-கை.) இ-து. (கவி) இனிநான்சகலத்யாகத்தையெய்தினேனென்றலுங்கும்பன், கனியார்மரமுநெடுமலையுங்கழன்றுற்சகலமன்றுனக்குத், தனியார்பற்றுண்டனைத்திலுமத்துன்பந்துறந்தாற்சுகமென்னப், புனிதாவிதுவுமன்றுகிற்புகல்வேனெனப்பூபதிபுகலும் ..... *

(இ-ள்.) இனிநான் - இப்பொழுதுயான் — சகலத்யாகத்தை - சகலத்யாகமென்பதை—எய்தினேனென்றலும் - அடைந்தேனென்றரசன்சொல்லவும்—கும்பன் - கும்பமுனியானவர்—கனியார்மரமும் - பழங்கணிறைந்தவிருட்சங்களும்— நெடுமலையும் - உயர்ந்தகிரிகளும்—கழன்றுல் - நீங்கினுல்—சகலமன்று - சகலத்யாகமல்ல —அனைத்திலும் - சகலத்திலும்—உனக்

குத்துனியார்பற்றுண்டு - நினக்குத்துன்பமிகுந்தவாசையுண்டு—அத்துன்பந்துறந்தால்-அந்த த்துயரைநீங்கினுல்—சுகமென்ன - பரமசுகமென்றுசொல்ல—புனிதா - பரிசுத்தத்தையுடைய முனியே—இதுவுமன்றுகில் - இதுவுமல்லவாளுல்—புகல்வேனென - சொல்லுவேனென்று— பூபதிபுகலும் - அரசனுனவன்சொல்லுவான். எ-று ....(௱௨௮)

(அ-கை.) வஸ்திரமுதலியபற்றுக்களிருக்கின்றதென்றறிந்தவைகளைத் தகனஞ்செய்துநீக் குதல். (கவி) கந்தைதண்டுசெபமாலைகலைத்தோல்பாண்டங்கமண்டலமுண்; டெந்தையி வற்றைவிடுகின்றேனென்றுகூட்டியெரிகொளுத்திச், சிந்தைகளித்துவேற்றுடலாய்ச்சிக் கற்றனன்பற்றிலனென்றே,முந்தையறிஞன்முகநோக்கி மொழியலுற்றுன்சிகித்துவசன்.

(இ-ள்.) கந்தை - வஸ்திரமும்—தண்டு - தண்டமும்—செபமாலை - உருத்திராக்ஷத்தாவட மும்—கலைத்தோல் - மான்றோலும்—பாண்டம் - மண்பாத்திரங்களும்—கமண்டலம் - கமண் டலமும்—உண்டு - (எனக்) கிருக்கின்றன—எந்தை - என்பிதாவே— இவற்றைவிடுகின்றேனெ ன்று - இவைகளைநீக்குகின்றேனென்று—கூட்டியெரிகொளுத்தி- சேர்த்தக்கினியினுலெரித்து —சிந்தைகளித்து - மனமகிழ்ந்து—வேற்றுடலாய் - வேறுசரீரமாய்—சிக்கற்றனன் - நட்பற் றனன்—பற்றிலனென்று - ஆசையில்லாதவனுனேனென்று—முந்தையறிஞன் - அநாதிஞான ஸ்வரூபியானகும்பமுனியினது—முகநோக்கி - வதனத்தைப்பார்த்து— சிகித்துவசன்- சிகித் துவசவரசன்—மொழியலுற்றுன் - சொல்லத்தொடங்கினுன். எ-று ....(௱௨௯)

(அ-கை.) சகலத்யாகத்தையடைந்தேனெனல். (கவி) அம்மவம்மகடவுண்மகனுன வுன்னுலறிவுற்றேன், மம்மரொழிந்தேன்கேவலமாய் மலங்களற்றே னிதுவென்று, விம்முசங்கற்பதெய்தாவேறென்றறயாவையும்விட்டேன், செம்முபொருளின் றிரளெல்லாஞ்செநநமளிக்கும்பந்தனையே..*

(இ-ள்.) அம்மவம்ம - ஆச்சரியமாச்சரியம்—கடவுண்மகனுனவுன்னுல் - தேவகுமார னுனவும்மால்—அறிவுற்றேன் - அறிவைப்பெற்றேன்—மம்மரொழிந்தேன் - துன்பத்தினின் று நீங்கினேன்—கேவலமாய் - தனிமையாக—மலங்களற்றேன் - களங்கமொழிந்தேன்— இது வென்று - இப்படிப்பட்டதென்று—விம்முசங்கற்பதெய்தா - மிகவுஞ்சங்கற்பத்தினுற்பொ ருந்தி—வேறென்றற - பிறிதொன்றில்லாமல் - யாவையும்விட்டேன் - சகலத்தையுநீக்கினேன் —செம்முபொருளின்றிரளெல்லாம் - செவ்விய பதார்த்தங்களின்கூட்டங்களியாவும்— செநந மளிக்கும்பந்தனை - பிறவியைக்கொடுக்கின்றபந்தமாம். எ-று ....(௱௩௰)

(அ-கை.) இ-து கவி) பொருள்களெம்மட்டெம்மட்டுபோனதம்மட்டம்மட்டுந், தெருளுமன ந்தான்சுகமடையுஞ் செயித்தேயந்தச்சுகம்பெற்றேன், மருள்செய்பந்தங்களுமற்றேன் மாசிலாதநிகம்பரனு, யருள்செய்சகலத்யாகத்தையடைந்தேன் வேறென்னுளமென்றுன்.

(இ-ள்.) பொருள்கள்- பதார்த்தங்களானவை—எம்மட்டெம்மட்டு - எவ்வளவெவ்வளவு— போன- நீங்கினவோ—அம்மட்டம்மட்டும் - அவ்வளவவ்வளவும்—தெருளுமனந்தான் - தெளி வுள்ளமனமானது—சுகமடையும் - ஆநந்தத்தைப்பெறும்—செயித்தே - (பொருள்களைச்)செ யஞ்செய்து—அந்தச்சுகம்பெற்றேன் - அவ்வானந்தத்தையடைந்தேன்— மருள்செய்பந்தங்க ளுமற்றேன் - மயக்கத்தைச்செய்கின்றபந்தங்களுநீங்கினேன்—மாசிலாத- களங்கமற்ற—நிகம் பரனுய்- நிருவாணியாய்—அருள்செய் - (தேவரீர்)கிருபைசெய்யாநின்ற— சகலத்யாகத்தை- சகலத்யாகத்தை—அடைந்தேன் - பெற்றேன்— வேறென்னுளமென்றுன் - வேறென்னவிருக் கின்றனவென்றரசன்கேட்டான். எ-று.(இ - எ - க - ம்) புறம்பாயுள்ளபற்றுக்களியாவையுந் தானேகண்டுகழலும்படிசெய்வித்ததாம்..(௱௩௧)

(அ-கை.) இஃதுஞ்சகலத்யாகமன்றெனி லிந்திரியங்களுக்கிடமானதேகந் தானிருக்கி ன்றதென்றறிந்தப்பற்றையுநீக்குகின்றேனெனல். (கவி) கும்பனுரைப்பான் சகல மும்விட்டிலைநீயிந்தக்கூத்தாடல், வம்புகாணென்றலுமன்னன்மனத்தினினைந்துமீ ண்டுரைப்பான், வெம்புகரணப்பாம்புகள்சேர்வெள்ளென்பூனுமுடலொன்றே,யிம் பமீந்ததெனக்கிதனையின்றேயெளிதின்விடுகின்றேன்..................................*

(இ-ள்.) கும்பனுரைப்பான்- கும்பமுனிசொல்லுவார்—நீசகலமும்விட்டிலை-நீயொன் றையாவதுநீக்கவில்லை—இந்தக்கூத்தாடல் - இச்சகலத்யாகவபிநயம்— வம்புகாணென்றலும்- வீணென்றுசொல்லுமளவில்—மன்னன் - அரசனுனவன்—மனத்தினினைந்து - மனதிற்சிந்தித் து—மீண்டுரைப்பான் - திரும்பவுஞ்சொல்லுவான்—வெம்புகரணப்பாம்புகள்சேர் - கொடிய பஞ்சேந்திரியங்களென்னுஞ்சர்ப்பங்கள்சார்ந்திருக்கின்ற—வெள்ளென்பு- வெள்ளையெலும்புக ளும—ஊனும்-மாமிசங்களுமான—உடலொன்றே-சரீரமொன்றே--எனக்கு-அடியேனுக்கு—

இன்பமீந்தது - இவ்விடத்தின்மிஞ்சினது— இதனையின்றே - இச்சரீரத்தையிப்போதே—எளி தின்விடுகின்றேன் - சுளுவினீக்குகின்றேன். எ-று ....(௱௫௨)

(அ-கை.) சேகத்யாகமுஞ் சகலத்பாகமன்றெனல்.(கலி) காண்டியென்றோர் வரையேறிக்கவிழுமளவிலுயர்கும்ப, னீண்டிதென்னேயிவ்வுடறு னென்னகு றைசெய்ததுபேதாய், மாண்டிபயனென்னிளங்கன்றை வல்லேறடர்ந்துமுனி வதுபோற், றூண்டிவிழுந்துமெய்விடினுஞ் சகலத்யாகியாகாயே ....*

(இ-ள்.) காண்டியென்று - பார்ப்பாயென்று— ஓர்வரையேறி - ஒருமலையிலேறி—கவிழு மளவில் (அரசன் விழுகின்றசமயத்தில்—உயர்கும்பன்- மேலானகும்பமுனியானவர்—ஈண்டி தென்னே - இவ்விடத்திலிதுவென்னகாரியம்—இவ்வுடறுன் - இச்சரீரமானது—பேதாய்-அறி வில்லாதவனே—.என்னகுறைசெய்தது - (உனக்கென்ன) குறைவைச்செய்தது — மாண்டுபய னென்-இறந்துப்ரயோசனமென்ன—இளங்கன்றை-இளமையானபசுவின்கன்றை—வல்லேறு- பலம்பொருந்தியவிடையானது— அடர்ந்துமுனிவதும்பால் - பொருதிக்கோபிப்பதைப்போ ல—தாண்டிவிழுந்து - தாண்டிக்குதித்து — மெய்விடினும் - சரீரத்தைவிட்டாலும்— சகலத் யாகியாகாய் - சகலத்யாகியாகமாட்டாய். எ-று ....(௱௫௩)

(அ-கை.) பவபீசமானதைநீக்கலேசகலத்யாகமெனி லஃதியாததனைநீக்குமுபாய மியா தெனல். (கலி) எத்தாலுடலமசைகின்றதெதுதான்பிறவிகருமத்தின், வித்தாய்நின்றததை விட்டால்வேத்தாவெல்லாம்விட்டனவா, நித்தாரமிதென்றலுமுடலை யசைத்துப்பிறவிநி றைவித்தாய், தத்தாநின்றதேததனைத்தவிருமாறுசொல்லென்ன.... ....*

(இ-ள்.) எத்தாலுடலமசைகின்றது - யாதினாற்சரீரஞ்சஞ்சரிக்கின்றதோ—எதுதான்-யா தொன்று—பிறவி - சநநத்துக்கும்—கருமத்தின்-கருமத்தினுக்கும்—வித்தாய்நின்றது-விதை யாயிருந்ததோ—அதுவிட்டால் - அதைவிடுவையாயின்—வேந்தா - அரசனே—எல்லாம்விட் டனவாம் - சகலத்யாகமாம்—நித்தாரமிதென்றலும் - உன்னையானதிதுவென்று(கும்பமுனி) சொல்லவும்—உடலையசைத்து - சரீரத்தையசைத்து — பிறவிநிறைவித்தாய் - சநநத்தையிகு விக்கும்விதையாகி—தத்தாநின்றதேது- தாவாநின்றதெதுவோ—அதனைத்தவிருமாறு-அதை நீக்கும்விதத்தை—சொல்லென்ன - சொல்லுவாயென்றரசன்கேட்டான். எ-று ....(௱௫௪)

(அ-கை.) பிரமசங்கற்பமானமனமே சகலபற்றாயுமிருக்கின்றதெனல். (கலி) இய லார்கும்பனுரைசெய்வானெல்லாற்றினுஞ்சேர்சுகமாகி, வியனார்சீவன்பிராணனெ னமேவும்பெயர்கள்பலபெற்று, பயனார்சடமுமசடமுமன் றாகிப்பரந்த சித்தத்தை, யுயர்வோர்சகலமென்றுரைப்பருலகுமிதுபந்தமுமிதுவே .... *

(இ-ள்.) இயலார்கும்பனுரைசெய்வான் - சற்குணநிறைந்தகும்பமுனிசொல்லுவார்— எல்லாற்றினும் - சகலபதார்த்தங்களிலும்—சேர்சுகமாகி - சார்ந்திருக்கின்றவின்பமாய்—விய னார்சீவன் - பெருமைபொருந்தியசீவனென்றும்—பிராணனென - பிராணனென்றும்— மேவு பெயர்கள் - பொருந்தியநாமங்கள்—பலபெற்று-அநேகந்தரித்து—பயனார்சடமும் - ப்ரயோ சனமுள்ளசடமும்—அசடம் - அசடமும்—அன்றாகி- அல்லாததாய்—பரந்தசித்தத்தை-(மய க்கத்தில்) விரிந்தமனதை—உயர்வோர் - சத்துக்கள் — சகலமென்றுரைப்பர் - சகலமென்று சொல்லுவார்கள்—உலகுமிது-சகமுமிது—பந்தமுமிதுவே-பந்தமுமிச்சித்தமே. எ-று(௱௫௫)

(அ-கை.) சித்தத்யாகமேசகலத்யாகமதுவேபரமசகத்தைக்கொடுக்குமெனல். (கலி) சனனகருமங்களின்வித்தாய்த் தருவையசைக்குங்காற்றேபோற், றினமு முடலையசைப்பதுவுஞ்சித்தமிதனைத்தீர்வதுவே,யனகசகலத்யாகமதாமதுவே பரமவாநந்தம், வினவுபிறவெல்லாமிகவும் வெருவுகின்றவெந்துயரே........ *

(இ-ள்.) சனனகருமங்களின்வித்தாய் - பவக்கன்மங்களுக்குப்பீசமான—தருவையசைக் குங்காற்றேபோல் - மரத்தையசைக்கின்றவாயுவைப்போல—தினமும்-நித்தமும்—உடலையசை ப்பதுவும்- சரீரத்தையாட்டுவிப்பதும்—சித்தம் - மனமாகும்— இதனைத்தீர்வது-இம்மனதை விட்டுவிடுவதே—அனக - களங்கமற்றவரசனே—சகலத்யாகமதாம்- சகலத்யாகமாகும்—அது வேபரமவாநந்தம் - அச்சகலத்யாகம்பிரமாநந்தமாகும்—வினவுபிறவெல்லாம்-சொல்லப்ப ட்டமற்றயாவும் — மிகவும்வெருவுகின்ற - மிகவும்பயப்படுகின்ற — வெந்துயரே - கொடிய துன்பமே. எ -று ....(௱௫௬)

(அ-கை.) சித்தத்யாகமேயாத்மாவெனிலதன்காரணமுமுருவமு மதைக்கெடுக்குமுபாய முமியாதெனில். (கலி) சகலத்தியாகந்தனைச்செய்துசாந்தனுய்மச்சரமின்றி, பதுநிலை யாற்றெளிவுற்றுற் பயின்றவடிவேதநீயாய், நீகூழுவாமென்றலுமன்ன னுரைப்பானீ செவன்னெஞ்சுக்குப், பகருமுதலாய்வடிவேதெப்படிதான்றீர்ப்பதுரையென்ன........ *

(இ-ள்.) சகலத்யாகந்தனைச்செய்து - சகலத்யாகத்தைப்பண்ணி—சாந்தனுய் - உபசாந்தமுடையவனுய்—மச்சரமின்றி - துவேஷமில்லாமல்—பகுதிநிலையால்- இயல்பானகுணத்தினுல்—தெளிவுற்றல்-தெளிவடைந்தால்—பயின்றவடிவேது- சொல்லப்பட்டஸ்வரூபமெதுவோ—அது - அப்பிரமஸ்வரூபமும்—நீ - உனதாத்மஸ்வரூபமும்—ஆய் - அயிக்கியமாய்—திகழுவாயென்றலும் - ப்ரகாசிப்பாயென்றுகும்பமுனிசொல்லவும்—மன்னனுரைப்பான்-அரசன்சொல்லுவான்—நிசொன்னெஞ்சுக்கு - தேவரீர்சொல்லியமனதுக்கு—பகருமுதலாம் - சொல்லப்பட்டகாரணமாகிய— வடிவேது - உருவமியாது—எப்படி - எவ்விதம்—நான்றிர்ப்பது - யா(னந்தமனதைக்) கெடுப்பது—உரையென்ன - சொல்லுவாயென்றுகேட்க. எ-று .. .... (௱௯௭)

(அ-கை.) மனதிற்குருவம்வாசனையதின்காரணமகம்பாவமாமெனல். (கவி) மற்றுங்கும்பனுரைசெய்வான்மனத்துக்குருவம்வாதனையே, யுற்றமனமென்றுரைக்குமுரையுறுவாதனையின்பரியாயங், குற்றமெல்லாங்குவிந்திருக்குங்கூடாநானென்பதுதானே, செற்றமனமாமரத்துக்குத்திகழும்விதையாந்தேர்வேந்தே........................... *

(இ-ள்.) மற்றுங்கும்பனுரைசெய்வான் - திரும்பவுங்கும்பமுனிசொல்லுவார்— மனத்துக்குருவம் - மனத்துக்குவடிவமானது—வாதனையே - வாசனையேயாம்—உற்ற-பொருந்திய—மனமென்றுரைக்குமுரை - மனமென்றுசொல்லப்பட்டசொல்—உறுவாதனையின்-பொருந்துகின்றவாசனையினது—பரியாயம் - பரியாயநாமங்களாகும்— குற்றமெல்லாம் - பிழைகளியாவும்—குவிந்திருக்குங்கூடாம்-கூடியிருக்கின்றகூண்டாகிய—நானென்பதுதானே-யானென்கின்றதே—செற்றமனமாமரத்துக்கு-சலஞ்சாதிக்குமனமாகியவிருட்சத்துக்கு— திகழும்விதையாம்-விளங்குகின்றவித்தாகும்—வேந்தே-அரசனே—தேர்-அறிந்துகொள்வாய். எ-று. (௱௯௮)

(அ-கை.) அகம்பாவத்திலுதித்ததேயந்தக்கரணமாமெனல். (கவி) வேறு. ஆதியிலுண்டானவிதனங்குரந்தானனுபவமெய்யாயறுதியிடுவதாகி, யோதுமுருவன்றியிலேயுதிக்குமத்தையுரைசெய்வர்புந்தியெனவுரைத்தவிந்த, நீதியுறுபுந்தியெனுமங்குரத்தினிறைவளர்வைக்கொம்பைச்சங்கற்பமென்பர், பேதமிவையாதலாற்சித்தம்புந்திபெரியமனமென்பதெலாம்பேர்கடானே........................... *

(இ-ள்.) ஆதியிலுண்டான - முதலிலுண்டாகிய—இதனங்குரந்தான் - இவ்(வகம்பாவத்தின்) முளையானது—அனுபவமெய்யாய் - அனுபவாகாரமாய்—அறுதியிடுவதாகி - நிச்சயிப்பதாய்—ஓதுமுருவன்றியில் - சொல்லும்வடிவமில்லாமல் — உதிக்கும் - உண்டாகும்—அத்தை - அந்தமுளையை—புந்தியென - புத்தியென்று—உரைசெய்வர் -சொல்லுவார்கள்—உரைத்த - சொல்லப்பட்ட—இந்தநீதியுறு - இந்நீதியையுடைய—புந்தியெனுமங்குரத்தில் - புத்தியென்கின்றமுளையினிடத்தில்—நிறைவளர்வை - நிறைந்துவளர்தலையுடைய— கொம்பைச்சங்கற்பமென்பர் - கிளைகளைசங்கற்பமென்றுசொல்லுவார்கள்—பேதமிவையாதலால் - வேறுபாடிவையாதலினுல்—சித்தம்புந்தி - சித்தமும்புத்தியும்—பெரியமனமென்பதெலாம் - பெரிதாகியமனமென்பனயாவும்—பேர்கடான்-அகங்காரத்தினதுநாமங்களாம். எ-று ... . (௱௯௯)

(அ-கை.) மனதைக்கெடுக்குமுபாயமறிவித்தல். (கவி) இனையமனமெனும்பொல்லாமரத்தின்கொம்பையெப்பொழுதும்வெட்டிவேரீர்த்துமாய்ப்பாய்,வினையுறுவாதனைபணைகள்பலகாய்காய்க்கும்வேதனவாளாலுள்ளேவெட்டின்மாயு, நினைவறப்பற்றறமவுனமாகிவந்துநேர்ந்ததுசெய்வாருள்ளேநெஞ்சைச்செற்றோ, ரனையமரப்பணைவெட்டற்கெவுணமென்பரதன்வேரையறுத்தலேயறநன்றென்பார்.... .. ..*

(இ-ள்.) இனையமனமெனும் - இப்படிப்பட்டமனமென்கின்ற — பொல்லாமரத்தின் கொம்பை - கொடியவிருட்சத்தினதுகிளையை—எப்பொழுதும் - நாடோறும்—வெட்டிவேரீர்த்துமாய்ப்பாய் - தறித்துத்தூரோடுங்கெடுப்பாய்—வினையுறுவாதனை - வினையையுடையவாசனையென்னும்—பணைகள் - கிளைகள்—பலகாய்காய்க்கும் - வெகுவானகாய்களைக்காய்க்கும்—வேதனவாளால் - ஞானமென்னுங்கத்தியினுல் — உள்ளேவெட்டின்மாயும் - அகத்திற்றறிக்கிற்கெடும்—நினைவற - பாவனைகெடவும் —பற்றற - ஆசைகெடவும்— மவுனமாகி - மகாமௌனமாய்—வந்துநேர்ந்ததுசெய்வார்- வந்தெதிர்ந்ததைச்செய்பவர்கள்—உள்ளேநெஞ்சைச்செற்றோர் - அகத்தின்மனதைச்செயித்தவர்கள் — அனையமரப்பணைவெட்டல் - அவ்விருட்சத்தின்கிளைகளைவெட்டுதல்—கௌவுணமென்பர் - கௌவுணமென்றுசொல்லுவார்கள் — அதன்வேரையறுத்தலே - அதனதுமூலத்தைக்கெடுத்தலே — அறநன்றென்பர் - முக்கியமென்றுசொல்லுவார்கள். எ-று. (இ-கூ-க-ம்) இந்திரியத்தோடுந் தேகப்பற்றைநீக்கிச் சித்தத்யாகஞ் செய்யும் பொருட்டதனுருவமாகியவாசனைமுதலிய சங்கற்பங்களைக்கெடுத்தல்கௌவுணமெனவும்,அதன் மூலமாகியவகம்பாவத்தைக்கெடுத்தல், முக்கியமெனவுமிரண்டுவிதமாகக் கூறினதென்பதாம்.

(அ-கை.) அகம்பாவத்தைக்கெடுக்குமுபாயங்கூறல். (கவி) ஆதலினான்மிகநல்லநெறியாலேநீயந்தமனமரத்தின்வேரறுத்துச்சுட்டாற், சாதமுறாதென்றனுமேமன்னன்சொல்வான்றனிமரத்தின்வித்தாகுமகம்பாவத்தை, மாதவனேசுடக்கனலேதெனலுங்கும்பன்மறுத்துரைப்பானானொன்றெண்ணுகின்ற, போதவிசாரந்தானேமனத்தின்வித்தைப்பொன்றுவிக்குங்கனலெனவும்பூபன்சொல்வான் .... ✻

(இ-ள்.) ஆதலினால் - ஆதலால் — மிகநல்லநெறியால் - மிகுந்தசன்மார்க்கத்தினால்— அந்தமனம் - அந்தமனமென்னும் — மரத்தின்வேர் - விருட்சத்தினதுமூலமாகிய (அகம்பாவனையை)— நீயறுத்துச்சுட்டால் - நீகளைந்தெரித்தால்— சாதமுறாதென்றனும் - (மனம்) முண்டாகாதென்றுகும்பமுனிசொல்லவும்—மன்னன்சொல்வான் - அரசன்சொல்லுவான்— தனிமரத்தின் - தனிமையானமனவிருட்சத்தின்—வித்தாகும் - பீசமாகிய—அகம்பாவத்தை- அகம்பாவனையை—மாதவனே - மேலானதவமுடையமுனியே—சுடக்கனலேதெனலும் - எரிக்கவக்கினியேதென்றரசன்கேட்கவும்—கும்பன்மறுத்துரைப்பான் - கும்பமுனிதிரும்பவுஞ்சொல்லுவார்—நானொன்றெண்ணுகின்ற - யானொன்றுசிந்திக்கின்ற—போதவிசாரந்தானே - ஆத்மஞானவிசாரணையே—மனத்தின்வித்தை - மனதினதுபீசத்தை—பொன்றுவிக்கும் - கெடுக்கின்ற—கனலெனவும் - அக்கினியெனவும்—பூபன்சொல்வான் - அரசன்சொல்லுவான். எ - று. (இ-ம்) அகம்பாவத்தைக்கெடுக்கின் மனமுண்டாகாதாதலா லதனையாத்மஞான விசாரத்தாற்கெடுக்கவேண்டுமென்பதாம் .... (௱சக)

(அ-கை.) விசாரமுகத்தான் முன்பற்றறநீக்கிய சகத்துமுதலியவைகளை யறிகின்ற வறிவைக்கொண்டுபார்க்கினவைகள்சடமாயிருத்தலா லவைகளியானன்றெனத் தள்ளினவிடத்தவைகட்குச்சாக்ஷியாய்விளங்கியசுயஞ்சித்தே சேடித்திருத்தலா லஃதே தானெனத்தரிசித்தானெனல். (கவி) என்னுடையபுந்தியினாலெண்ணினேனிச்சகநானல்லமலவுடலானல்லத், துன்னுபொறிகளுமல்லமனமுமல்லத்தொடர்புந்தியல்லவகங்காரமல்ல, வின்னசடமாதலினாலெனலுங்கும்பனிவையன்றேல்வேறார்நீயியம்புகென்ன, மன்னனுரைப்பானெல்லாம் படைத்தளித்தமாசறுசின்மாத்திரமாம் வடிவநானே .... ✻

(இ-ள்.) என்னுடையபுந்தியினால் - எனதறிவினால் — நான் - யான்—எண்ணினேன்- (அநேகவிதமாகச்) சிந்தித்துப்பார்த்தேன்—சடமாதலினால் - அறிவின்மையாதலின்—இச்சகநானல்ல - இவ்வுலகமும்யானன்று—மலவுடலானல்ல - (இம்) மலசரீரமும்யானன்று— துன்னுபொறிகளுமல்ல - பொருந்தியவிந்திரியங்களும்யானன்று — மனமுமல்ல - (சிந்திக்கின்ற) மனமும்யானன்று—தொடர்புந்தியல்ல - தொடர்பாகின்றபுத்தியும்யானன்று — இன்னவகங்காரமல்ல - (அபிமானித்தெழுகின்ற) தீயவகங்காரமும்யானன்று—எனலும் - என்றரசன்சொல்லவும்—கும்பன் - கும்பமுனியானவர்—இவையன்றேல் - இவைகளீயல்லவாயின் — நீவேறார்-நீவேறேயார்—இயம்புகென்ன - சொல்வாயென்றுகேட்க—மன்னனுரைப்பான்-அரசன்சொல்லுவான்—எல்லாம்படைத்தும் - சகலத்தையுமுண்டாக்கி—அளித்த - இரட்சித் (தடக்குகின்ற)—மாசறு-களங்கமற்ற—சின்மாத்திரமாம் - சைதன்னியமாத்திரமாகிய—வடிவநானே-ஸ்வரூபமேயான். எ - று. (இ-ம்) ப்ரத்யேகாத்ம ஸ்வரூபமாய் விளங்கியகூடஸ்த ஸ்வரூபமானேனென்பதாம் .... (௱சஉ)

(அ-கை.) தொம்பதத்தைத்தரிசிப்பித்துதற்பதத்தைத்தரிசிப்பிக்கத்தொடங்கி நியதிகளைந்த சடம்வேறு சித்து வேறாய்பிருமைப்பட்டிருத்தலைச் சின்மாத்திரமாயொருமைப்படுத்து நிமித்தமச்சொரூப ஞானப்ரதிபலனமாகத் தோற்றியசகத்துமதையறிந்தவிருத்தி ஞானமுமஃதைத் தானென்கின்றவகம்பாவமுதலியவுங்கற்பிதமாகக்காண்பிக்கவவ்வகம்பாவத்தின் காரணமியாதென வினவுதல். (கவி) இந்தவடிவாமெனக்கோர்காரணமிடர்மனத்தாருவின்விதையா மகங்காரத்தை, யுந்தும்வகையறிகிலேனுந்தவுந்தவோடிவருமிதனாலுள்ளுடைந்தேனென்ன, வந்தணன்சொல்வான்மன்றுகாரணத்தையன்றியோர்காரியமுண்டாகமாட்டா, முந்துமகங்காரகாரணத்தைநாடி மொழியென்னமீண்டரசன் மொழிவதானான் .... ✻

(இ-ள்.) இந்தவடிவாமெனக்கு- இப்படிப்பட்டஞானஸ்வரூபமாகியவெனக்கு—ஓர்காரணேன் - ஒருகாரணத்தையுங்கண்டிலேன்—இடர் - துன்பத்தையுடைய— மனத்தாருவின் விதையாம் - மனவிருட்சத்தின்வித்தாகிய—அகங்காரத்தை - அகம்பாவத்தை— உந்தும்வகையறிகிலேன் - தள்ளுகின்றமார்க்கத்தைத்தெரிந்திலேன் —உந்தவுந்த - தள்ளத்தள்ள—ஓடிவருமிதனால்-ஓடிவராநின்ற(விவ்வகம்)பாவத்தினால் - உள்ளுடைந்தேனென்ன-மனந்தளர்ந்தேனென்

றரசன்சொல்ல—அந்தணன்சொல்வான் - கும்பமுனிசொல்லுவார்—மன்ன- அரசனே—காரணத்தையன்றி- காரணத்தையல்லாமல்—ஓர்காரியமுண்டாகமாட்டா- ஒருகாரியமுண்டாகாது—முந்து-முன்னாகின்ற—அகங்காரகாரணத்தைநாடி - அகம்பாவத்தின்காரணத்தைப்பார்த்து—மொழியென்ன - சொல்லுவாயென்றுசொல்ல—மீண்டரசன்மொழிவதானான்- திரும்பமன்னவன்சொல்லத்தொடங்கினான். எ-று .... (௱௪௩)

(அ-கை.) அகம்பாவத்தின்காரணமறிவெனி லதன்காரணமியாதெனல். (கவி) அகமென்னுங்குற்றத்தின்காரணத்தானறிவாகு மவ்வறிவிங்கடங்குமாறென், மிகவுங்காண்பவற்றிலறிவெழுதலாலேமெலிகின்றேன் காண்பவற்றைவிடுமாறெங்ஙன், புகல்கென்னமீண்டந்தக்கும்பன்சொல்வான் போதத்தின்காரணநீபுகன்றாற்பின்னை, நிகழுங்காரணமுமகாரணமுஞ் சொல்வேனினக்குநானெனவதற்குநிருபஞ்சொல்வான்

(இ-ள்.) அகமென்னுங்குற்றத்தின் - அகம்பாவமென்கின்றகுற்றத்திற்கு—காரணத்தான்-காரணமானது—அறிவாகும் - போதமாகும்—அவ்வறிவு - அப்போதமானது—இங்கடங்குமாறென் - இவ்விடத்திலயிக்கும்விதமென்ன—மிகவுங்காண்பவற்றில்- மிகவுந்திரிஸ்யத்தில்—அறிவெழுதலால் - போதமுண்டாதலினால்— மெலிகின்றேன் - இளைக்கின்றேன்—காண்பவற்றை-காணப்பட்டதிரிஸ்யத்தை—விடுமாறெங்ஙன்- நீக்கும்விதமெப்படி—புகல்கென்ன-சொல்லுவாயென்(றரசன்)கேட்க—மீண்டந்தக்கும்பன்சொல்வான்- திரும்பவந்தக்கும்பமுனிசொல்லுவார்—போதத்தின்காரணம் - அறிவின்காரணத்தை—நீபுகன்றால் - நீசொன்னால்— பின்னை நிகழுங்காரணமும் - பின்புவிளங்குங்காரணத்தையும்—அகாரணமும்- காரணமல்லாததையும்—நினக்குநான்சொல்வேனென - உனக்குயான்சொல்வேனென்றுசொல்ல — அதற்குநிருபன்சொல்வான்- அதற்கரசன்சொல்வான். எ-று .... (௱௪௪)

(அ-கை.) விருத்திஞானம்விஷயத்தைப்பற்றி யெழுதலினவ்விஷயங் காரணமாமஃதுநசிக்கி னகம்பாவஞானமுநசிக்குமெனி லவ்விஷயநீங்கினவிடத்தறி வெங்ஙனம்விளங்குமெனல். (கவி) புகன்றவுடன்முதற்பொருளுண்டாதலாலே போதமுளதாமவைபொய்யானுலில்லை, யகங்கரவேதனமென்னுமனத்தின்வித்து மடங்கிவிடுமெனவதற்குக்கும்பன்சொல்வா, னுகந்தவுடலாதியுளதேற்சித்துண்டா முடலாதிபல்பொருள்களிலாதபோதி, னிகழ்ந்தவறிவெப்படியே நின்றதென்று நிகழ்த்தென்ன மீண்டந்தநிருபன்சொல்வான் .... *

(இ-ள்.) புகன்றவுடன்முதல்-சொல்லப்பட்டசரீரமுதலாகிய—பொருளுண்டாதலால்-வஸ்துசத்தையினால்—போதமுளதாம் - அறிவுண்டாகும்—அவை-அந்தவஸ்துசத்தை—பொய்யானுலில்லை - அசத்தியமானு(லறி)வில்லை—அகங்கரவேதனமென்னும்- அகம்பாவஞானமென்கின்ற — மனத்தின்வித்தும் - மனத்தின்விதையும் — அடங்கிவிடுமென - ஒழிந்துவிடுமென்(றரசன்)சொல்ல —அதற்குக்கும்பன்சொல்வான் - அதற்குக்கும்பமுனிசொல்லுவார்—உகந்தவுடலாதியுளதேல் - விரும்பச்சரீரமுதலானவஸ்துசத்தையிருந்தால்—சித்துண்டாம்-அறிவுண்டாயிருக்கும்—உடலாதி - சரீரமுதலான — பல்பொருள்களிலாதபோதின் - பலவஸ்துக்களில்லாதசமயத்தில்—நிகழ்ந்தவறிவு - விளங்கியஞானமானது—எப்படிநின்றதென்று - எப்படியிருந்ததென்று—நிகழ்த்தென்ன - சொல்லென்றுகேட்க—மீண்டந்தநிருபன்சொல்வான்-திரும்பவந்தவரசன்சொல்லுவான். எ-று .... (௱௪௫)

(அ-கை.) தேகமுதலியவிஷய மெங்ஙனநீங்குமதைப் பற்றியெழுகின்றவறி வெங்ஙனந்தனியேயிருக்குமெனி லங்ஙனத் தனியேயில்லாமையாற் றேகங்காரணமாகாவஃதங்ஙனமாகவே யிப்போதுங்காரியமாகா வஃதங்ஙனமாகவே வதனாற்றோற்றியவகம்பாவமுதலிய யாவுமித்தையாய்ப் பிரமப்ரதியா மாத்திரமாய் விளங்குமெனல். (கவி) கரசரணமுதலங்க முதலாய்ச்செய்யுங் கருமபலமுளதாய்கையாளுங்காயங், குரவ்விலதெனும்படியென்னென்னக்கும்பன் கூறுவான்காரணத்தைக்கூடாதென்னில், விரவியகாரியந்தானுமிலதாமந்த வேதனமுமயக்கமேமிகுமயக்கால்,வருவனவெல்லாமிலதாமேதுவன்றி வருபொருள்பொய்யாங்கயிற்றில்வருநாகம்போல்.*

(இ-ள்.) கரசரணமுதல் - அத்தபாதாதிய—அங்கமுதலாய்ச்செய்யும்- அவயவங்களாகிபாகச்செய்யப்பட்ட—கருமபலமுளதாய்- கருமத்தின்பயனையுடையதாய்—கையாளுங்காயம்-அனுபவிக்கப்பட்டசரீரமானது — குரவ - எனதாசிரியரே — இலதெனும்படியென்னென்ன-இல்லையென்கின்றவிதமெப்படியென்(றரசன்)கேட்க—கும்பன்கூறுவான் - கும்பமுனிசொல்லுவார்—காரணத்தைக்கூடாதென்னில் - (கருமத்தானுளவிக்காயங்) காரணத்தைப்பொருந்தாததானால்—விரவியகாரியந்தானுமிலதாம் - பொருந்திய (போதமென்னுங்) காரியமுமில்லை

யாரும்—அந்தவேதனமும் - அந்தவறிவும்—மயக்கமே - பிரமையேயாம் — மிருமயக்கால் மிகுந்தபிரமையினால்—வருவனவெல்லாமிலதாம் - வருவனவாகிய(வகம்பாவமுதலிய) சகலமு மில்லாததாகும்—எதுவன்றிவருபொருள்- காரணமில்லாமல்வரப்பட்டவஸ்துக்கள்—கயிற்றில் வருதாகம்பொற்பொய்யாம் - இரச்சுவிலுண்டான சர்ப்பத்தைப்போலமித்தையாம். எ - று. (இ-சு-க-)பிரமப்ரதிபா மாத்திரமாகப் பஞ்சபூதபௌதிகத் தோற்றினமேயல்லாமல் யாதொரு குவயின்மைபாலதுவுமதனுற் றோற்றியயாவையுஞ் சிற்ப்ரகாசமாய் விளக்குதலாற் காரணகாரியமிரண்டுமின்றென்று தற்பதார்த்தத்தை தரிசிப்பித்ததாம் …………………………… (௱௪௬)

(அ-கை.) தற்பதத்தைத்தரிசிப்பித்தசிபதத்தைத்தரிசிப்பிக்கத்தொடங்கிவிஷயமும்போதமுங் காரணகாரியமாகாதெனக்கூற லக்ஷிதங்ஙனங்கூடுன் சகத்துக்குப்பிரமன்காரணமல்லவாவெனி லியாவுஞ்சத்தாமாத்திரமாயிருத்தலிற் காரணமாகானெனல். (கவி) என்றலுமேயாதிமுதலுள்ளவேதா வியற்றியபல்படைப்பாகு மிந்தஞால, நின்றவவனிதற்குக் காரணமல்லாத நெறியேதென்றலுங்கும்பனிகழ்த்துகிற்பான், றுன்றுசிருட்டியின்முன்புவெறிதாய்ச்சாந்தந்தொடர்பிரமமேயுளதாய்த்துலங்குமந்த; வொன்றொழிபவிரண்டில்லாக்காரணத்தாலுயர்வேதாக்காரணத்தையுறுனென்றே …………………………… *

(இ-ள்.) என்றலும் - இப்படியென்றுகும்பமுனிசொல்லவும்—இந்தஞாலம் - இச்சகத்து—ஆதிமுதலுள்ளவேதா - முதன்மையாயிருக்கின்றபிரமன்—இயற்றிய - உண்டாக்கிய—பல்படைப்பாகும் - பலசிருஷ்டியாகிய — இந்தஞாலமின்ற - இச்சகமிருந்தன—அவன் - அந்தப்பிரமன்—இதற்குக்காரணமல்லாத- இச்சகத்துக்குக்காரணமல்லாத—நெறியேதென்றலும்- மார்க்கமெதுவென்றரசன்கேட்கவும்— கும்பனிகழ்த்துகிற்பான் - கும்பமுனிசொல்லுவார்—துன்றுசிருட்டியின்முன்பு - நெருங்கியசிருஷ்டிக்குமுன்னே—வெறிதாய்- கேவலமாய்—சாந்தந்தொடர்பிரமமே - உபசாந்தமாகியபிரமஸ்வரூபமே —உளதாய்த்துலங்கும்- சத்தாய்ப்ரகாசிக்கும்—அந்தவொன்றொழிய - அவ்வொன்றைத்தவிர—இரண்டில்லாக்காரணத்தால்- இரண்டில்லாதகாரணத்தினால்—உயர்வேதா - மேலானபிரமாவும்—காரணத்தையுறான்- காரணத்தையடையான்—என்றே - என்றுசொல்ல. எ-று …………………………… (௱௪௭)

(அ-கை.) அங்ஙனமாயின்பிரமனுக்குப் பிரமங்காரணமன்றோவெனி லஃதுமில்லையெனல். (கவி) காவலன்பார்த்துயர்பிரமம்வேதாவுக்குக் காரணமன்றோவென்னக் கும்பன்சொல்வான், கேவலமச்சுதமநந்தஞ்சாந்தஞ்சுத்தங் கேடுபிறப்பிடர்தோற்றங்கிட்டாதென்றும், பாவனையற்றடிமுடிவற்றொன்றாய்த்துன்றிப்பகர்வரிதாய்நாடரிதாய்ப்பரமநிற்குந், தாவரியவதுவெங்ஙனதுவெத்தாற்சமைப்பவனுய்ப்புசிப்பவனுய்ச்சாருமாறே …………………………… *

(இ-ள்.) காவலன்பார்த்து - அரசன்கும்ப(முனியை)நோக்கி—உயர்பிரமம்- மேலானபிரமமானது—வேதாவுக்கு - பிரமாவுக்கு—காரணமன்றோவென்ன- காரணமல்லவாவென்றுகேட்க—கும்பன்சொல்வான் - கும்பமுனிசொல்லுவார்—கேவலம்- கைவல்யமாகியும்—அச்சுதம்-கெடாததாகியும்—அநந்தம் - அளவில்லாததாகியும்—சாந்தம்- உபசாந்தமாகியும்—சுத்தம்-பரிசுத்தமாகியும்—கேடு- இறத்தலும்—பிறப்பு - சனித்தலும்—இடர்- துன்பமும்— தோற்றம்-விளக்கமும்—என்றும் - எப்பொழுதும்—கிட்டாது - நெருங்காமல் — பாவனையற்று- பாவமிறந்து - அடிமுடிவற்று—ஆதியந்தமிறந்து - ஒன்றாய்த்துன்றி - அத்துவிதமாகநிறைந்து—பகர்வரிதாய்நாடரிதாய் - வசனாதீதமாகியுஞ்சிந்தனாதீதமாகியுமிருக்கின்ற — பரமநிற்கும்-பிரமஸ்வரூபமிருக்கும் — தாவரியவதுவெங்ஙனது - அழிதற்கரியவப்பிரமமெப்படிகாரணமாம்—எதனால் - யாதினால்—சமைப்பவனுய்ப்புசிப்பவனுய்ச்சாருமாறு - கருத்தாவாகியும் போக்தாவாகியுஞ் சேரும்விதம். எ-று …………………………… (௱௪௮)

(அ-கை.) சர்வம்பிரமமயமெனல். (கவி) ஆதலினாலிதொன்றுஞ்செய்ததல்லவடுத்துளவிச்சகமில்லையறிவுமட்டு, மேதகுசங்கற்பிதமேவேதாவாகு மெய்யாகவறிவன்றிவேறொன்றில்லைச், சேதனமாத்திரத்துதித்தசிருட்டியந்தச் சேதனமேவடிவென்று செப்பலாகு, மோதியசெய்வோன்புசிப்போ னிரண்டுமல்லனுறுபவந்தீர்பிரமமேயுள்ளவெல்லாம் … *

(இ-ள்.) ஆதலினால் - ஆகையினால்—ஈது - இச்சகம்— ஒன்றுஞ்செய்ததல்ல - எவ்வளவுஞ்செய்ததன்று — அடுத்துள - சேர்ந்திருக்கின்ற — இச்சகமில்லை - இவ்வுலகமுண்டானதில்லை—அறிவுமட்டும் - சித்துமாத்திரத்தின்—மேதகுசங்கற்பிதமே - மேன்மையானசங்கற்பமே—வேதாவாகும் - பிரமாவாகும்—மெய்யாக - உண்மையாக—அறிவன்றி- ஞானத்தைத்தவிர—வேறொன்றில்லை-வேறொன்றுமில்லை—சேதனமாத்திரத்து- ஞானமாத்திரத்தில்—உதி

த்தசிருட்டி - உண்டானசிருஷ்டியானது—அந்தச்சேதனமேவடிவென்று - அந்தஞானமேஸ்வரூபமென்று—செப்பலாகும் - சொல்லப்படும்—உள்ளவெல்லாம்- இருக்கின்றசகலமும்—உறுபவந்திர்பிரமமே - பொருந்தியசநநந்திர்ந்தபிரமஸ்வரூபமே (யாதலால்) ஓதியசெய்வோன்- சொல்லப்பட்டகருத்தாவும்—புசிப்போன் - போக்தாவும் — இரண்டுமல்லன் - இவ்விரண்டுமல்லாதவன். எ-று. (இ-ரு-க-ம்) பிரமப்ரதிபாமாத்திரமாய்ச் சகத்துவிளங்குதலாற் சகமேயில்லையிங்ஙனமாம்போதெங்ஙனங்காரியமாமிங்ஙனங்காரியமாகாதபோது பிரமமெனங்ஙனங்காரணமாவனிவர்க்குக்காணம் பிரமமென்றலது சுசாதியம்விசாதியஞ் சுகதபேதமறத்தானே தானாய் விளங்குதலின்னிங்ஙனங் காரணமாயாதலாற் காரணகாரியமின்றிச் சின்மாத்திரமே விளங்குமெனவசிபதவருத்தத்தைத் தரிசிப்பித்ததாம்...(௱௪௯)

(அ-கை.) சர்வம்பிரமமயமென்னு மனுபவதிருஷ்டியாலஞ்ஞானங் கெடுமெனல்.
(கவி) திடமுறநிச்சயித்துள்ளேயஞ்ஞானத்தைச் சிதைவித்தாலஞ்ஞானஞ்சிதைந்த
தேயாம், படர்கருமச்சிதைவினலன்றிமோகம்பகர்நிலைமைநழுவாதுபகரஞ்ஞான,
மடைவுறத்தேய்ந்திடிற்பழையநிலைமைநீங்கா வாதிபதமாமதனலாதிதேவன், றட
முறுசிற்சுருபத்தாற் றன்மனத்தாற்றனேநித்தனுஞ்சிருட்டிதந்துநல்கும்............*

(இ-ள்.) திடமுறநிச்சயித்து- உறுதியாகநிச்சயஞ்செய்து- உள்ளஞ்ஞானத்தைச்சிதைவித்தால்- அகத்தின்கண்ணுள்ளவறியாமையைக்கெடுப்பித்தால்—அஞ்ஞானம்- அறியாமையானது—சிதைந்ததேயாம்- அழிந்ததேயாகும்—படர்கருமச்சிதைவினலன்றி-மிகுந்தகருமநாசத்தினலல்லாமல்—மோகம்பகர்நிலைமைநழுவாது- மயக்கமாகச்சொல்லியநிச்சயம்வழுவாது—பகரஞ்ஞானம் - சொல்லப்பட்டவஞ்ஞானமானது—அடைவுறத்தேய்ந்திடில்-கிரமமாகநசிக்கில்—பழையநிலைமைநீங்கா - முன்னுள்ளசகத்நிஸ்சயநீங்காமல்—ஆதிபதமாம்-முதன்மையானபரமபதமாகும் - அதனலாதிதேவன்—அதனன்முதற்கடவுளானபரமாத்மா-தடமுறுசிற்சுருபத்தால் - வியாபகமாகியஞானஸ்வரூபத்தினல்— தன்மனத்தாற்றன் - தன்மனதினல்—நித்தனுஞ்சிருட்டிதந்துநல்கும் - எப்போதுஞ்சிருஷ்டியைச்செய்யும். எ-று.........................(௱௫௰)

(அ-கை.) அஞ்ஞானநீங்கிவிளங்கிய ஸ்வானுபூதியைக்கூறுதல். (கவி) ஆத்துமதத்துவமா
னவதனற்றனே யயனென்றுசொலப்பட்டதகிலமாகித், தோற்றுமிவையுபசாந்தச்சுருப
மாகுந்தோன்றலே யெனவொக்குஞ் சொன்னதெல்லா, மேற்றனவே படைப்பவனின்
மையினல்வைய மில்லையாமதனற்பல்பொருளுக்கில்லை, தேற்றுகின்றவிவ்வகையாலறி
ந்தேனன்றாய்ச் சிவமானேன்வேறொன்றுந்தெரியக்காணேன்....................................*

(இ-ள்.) ஆத்துமதத்துவமானவதனல் - ஆத்மதத்துவமாகியவதனலே — அயனென்று-பிரமாவென்று - சொல்லப்பட்டது—சொல்லப்படுவது - அகிலமாகி—எல்லாமாய் - தோற்றுமிவை—காணப்பட்டவிச்சகங்கள்—உபசாந்தச்சுருபமாகும் - உபசாந்தஸ்வரூபமேயாகும்—தோன்றலேயென - அரசனேயென்று—சொன்னதெல்லாம் - (கும்பமுனி) யுபதேசித்தவனைத்தும்—ஒக்கும் - ஒப்பேயாகும்—ஏற்றனவே - (சிருஷ்டிக்கு)முன்னமே—படைப்பவன்- சிருஷ்டிப்பவன்—இன்மையினல் - இல்லாததினல்—வையமில்லையாம்- சகமில்லையாகும்—அதனல்-அதினலே—பல்பொருளுக்கில்லை - பலவானபதார்த்ததிருஷ்டியில்லை—தேற்றுகின்ற-தெளிவிக்கின்ற—இவ்வகையால் - இந்தப்ரகாரத்தினல்—நன்றாய் - நன்றாக—அறிந்தேன்-தெரிந்தேன்—சிவமானேன் - சிவஸ்வரூபமானேன்— வேறொன்றும்-மற்றொன்றும் — தெரியக்காணேன் - தோற்றப்பார்த்திலன். எ-று. (இ-உ-க-ம்) பிரமமேபிரமனைப்போலவும்ப்ரபஞ்சம்போலவுந்தோற்றினதேயன்றி வேறின்றென்னு மனுபவத்தினலஞ்ஞானங் கெடுமெனப்போதிக்கமுன்னமேயகோசரமான பிரமமாத்திரமாய் விளங்குதலினலெங்ஙனங் காரணமாமது காரணமாகாதபோது சகமெப்படிகாரியப்படு மலதினறியபோதத்தை யறியும்போதமெங்ஙனமுண்டாமலதின்றிய போததையானென்னு மகம்பாவமெங்ஙனமுண்டா மலதின்றியபோதத்தைச் சிந்திக்குஞ்சித்த மெங்ஙனமுண்டாமாதலாற் சர்வம்பிரமமென்னுந் திருஷ்டியாற்சர்வமில்லாமற்போனதா லஞ்ஞானநீங்கிச் சிவஸ்வரூபமாய் விளங்குகின்றே னென்பதாம்..... (௱௫௧)

(அ - கை,) இவ்வனுபவஞ் சமாதிகூடிச்சகத்திலாளவேண்டுநிமித்தஞ் சின்மயமாய்
நிற்கின்றேனென்றவனை நெடுநாளாயுள்ள விஷயபழக்கமிதனற் சிலநாளினீங்கிச்
சின்மாத்திரமாய்விளங்குவாயென்னல். (கவி) எனைத்தொழுதேன்பல்பொருளுக்கறி
வினலேயிப்படிபொய்யாய்த்தோன்றிற்றிப்போதத்தா, னினைப்பினுபசாந்தமாய்
விசும்பினைப்போனிற்கின்றேனென்றிருபனிகழ்த்தலோடுந், தனைத்தருகும்பனுஞ்
சொல்வான்றேசகாலந்தடந்திசைச்சிந்தனைத்தொழில்கள்சார்ந்தவெல்லா,மனைத்தைத
யுங்காண்பதுசகத்தைப்பிரித்துக்காண்கை யதும்நெடுநாளிற்சாந்தமாகிப்போகும்.

(இ-ள்.) எனைத்தொழுதேன் - ஆத்மாவையவணங்கினேன் — பல்பொருள் - பலபதார்த்தங்களை — நோக்கறிவினால் - பார்க்கின்றவறிவினால் — இப்படிபொய்யாய்த்தோன்றிற்று - இங்ஙனமசத்தியமாய்த்தோற்றினதென்றறிந்தது — இப்போதத்தால் - இந்தஞானத்தினால் — நினைப்பிலுபசாந்தமாய் - சிந்தனையற்றவுபசாந்தமாகி — விசும்பினைப்போல் - ஆகாயத்தைப்போல — நிற்கின்றேனென - (பூரணமா) யிருக்கின்றேனென்று — நிருபன் - அரசனானவன் — நிகழ்த்தலோடும் - சொல்லவும் — தனைத்தரு - ஆத்மாவைக்கொடுக்கின்ற — கும்பனுஞ்சொல்வான் - கும்பமுனியுஞ்சொல்லுவார் — தேசம் - தேசமும் — காலம் - காலமும் — தடந்திசை - விசாலமாகியதிக்குகளும் — சிந்தனைத்தொழில்கள் - மனச்செயல்களும் — சார்ந்தவெல்லாம் - அடைந்தசகலமும் — அனைத்தையுங்காண்பது - யாவையும்பார்ப்பது — சகத்தை - உலகத்தை — பிறித்துக்காண்கை - பகுத்துப்பார்ப்பதாம் — அதுநெடுநாளில் - அப்பிரிவுவெகுகாலமாயுள்ளது — (சிலநாளில்) சாந்தமாகிப்போகும் - விடுபட்டுப்போகும். எ-று.......................... (௱ருஉ)

(அ-கை.) முன்சிரவணமானபடிமனனஞ்செய்துநிதித்தியிற்காக்ஷிப்பட்டானெனல். (கவி) சாந்தமுறவழிவற்றபிரமமாங்கேதனிநிற்குமெனக்கும்பன்சாற்றலோடும், வேந்தனறிவுற்றுமிகவிளங்கிநின்றான்வெம்மாயைக்குகைநின்றுவெளியிலானான், ஆந்திறமேபணதியறக்கும்பன்சொன்னவதுகுறித்துத்தனதாமித்தற்பதத்தே, காந்தியுறச்சேர்ந்தொளித்தான்மனமுங்கண்ணுங்கட்டுனையற்றானிறைந்தான்கணத்திலாங்கே .... *

(இ-ள்.) சாந்தமுற - உபசாந்தமடைய — அழிவற்றபிரமம் - நாசமில்லாதபிரமமானது — ஆங்கேதனிநிற்குமென - அவ்விடத்திற்றனிமையாயிருக்குமென்று — கும்பன்சாற்றலோடும் - கும்பமுனிசொல்லவும் — வேந்தன் - அரசனானவன் — அறிவுற்று - ஞானத்தையடைந்து — மிகவிளங்கிநின்றான் - மிகவும்ப்ரகாசித்திருந்தான் — வெம்மாயைக்குகைநின்று - கொடியமாயாக்கிரகத்திலிருந்து — வெளியிலானான் - வெளிப்பட்டான் — ஆந்திறமே - அப்படியே — பணதியற - கற்பனைநீங்கும்படி — கும்பன்சொன்ன - கும்பமுனியருள்செய்த — அதுகுறித்து - அதைக்கருதி — தனதாமித்தற்பதத்து - தனதாகியவிப்பிரமபதத்தில் — காந்தியுற - ப்ரகாசமாக — சேர்ந்தொளித்தான் - சேர்ந்தடங்கினான் — மனமும் - மனதையும் — கண்ணும் - பார்வையையும் — கட்டுனை - பிகுவசனத்தையும் — அற்றான் - நீங்கினவன் — கணத்தில் - ஒருக்ஷணத்தில் — ஆங்கு - அந்தப்பிரமபதத்தில் — நிறைந்தான் - பூரணமானான். எ-று. (இ-உ-க-ம்) சந்தேகம்விபரீதமின்றி யாத்மஸ்வரூபத்தைத் தரிசித்தானென்பதாம்......................... (௱ருக)

(அ-கை.) நிதித்தியின்காக்ஷியிற் றுக்கநிவிர்த்தியுந்தடையற்றவாநந்தமுதலியவனுபவமுமுண்டாயிருக்குதோவென் றாசிரியரனுபவம்வினவுதல். (கவி) ஒருமுகுர்த்தமிருந்துணர்ந்துவிழித்தமலாமுயர்கும்பனுரைசெய்வானுளதாய்நன்றாய், நிருமலமாய்ச்சுத்தமாய்மிகமெத்தென்றுநிருவிகற்பங்களுக்கெல்லாநிலயமாகித், திருமிகுமிப்பதத்திலேசுகமாய்த்துன்பந் தீர்ந்தனையோவுள்ளுணர்வு தெளிவுற்றாயோ, வருமயக்கமொழிந்தனையோ ஞேயநன்றாயறிந்தனையோகாண்டனகண்டனையோவென்றான் ... . *

(இ-ள்.) ஒருமுகுர்த்தமிருந்துணர்ந்து - இருகடிகைநிதித்தியிலிருந்தறிந்து — விழித்தலோடும் - (அரசன்) விழித்தமாத்திரத்தில் — உயர்கும்பனுரைசெய்வான் - மேலானகும்பமுனிசொல்லுவார் — உளதாய் - உள்ளதாகியும் — நன்றாய் - நன்றாகியும் — நிருமலமாய் - நிருமலமாகியும் — சுத்தமாய் - பரிசுத்தமாகியும் — மிகமெத்தென்று - மிகவுமிருதுவாகியும் — நிருவிகற்பங்களுக்கெல்லாம் - நிருவிகற்பங்களனைத்தினுக்கும் — நிலயமாகி - நிலயமாகியுமிருக்கின்ற — திருமிகும் - செல்வமிகுந்த — இப்பதத்தில் - இந்தப்பிரமபதத்தில் — சுகமாய் - ஆநந்தமாகி — துன்பந்தீர்ந்தனையோ - துக்கநீங்கினாயோ — உள்ளுணர்வு - ஆத்மஞானத்தில் — தெளிவுற்றாயோ - தெளிவடைந்தாயோ — வருமயக்கமொழிந்தனையோ - வராநின்றபிரமைநீங்கினாயோ — ஞேயநன்றாயறிந்தனையோ - அறியத்தக்கதைநன்றாயறிந்தாயோ — காண்டனகண்டனையோவென்றான் - பார்க்கவேண்டியதைப்பார்த்தாயோவென்றுகேட்டார். எ-று..... .... (௱ருச)

(அ-கை.) பெற்றவனுபூதியின்விலாசத்தைச்சொல்லுதல். (கவி) நரபாலனதற்குரைப்பான்பகவனே நின்னருளாலேபெருஞ்செல்வநலத்தான்மிக்குப், பரமாகியனைத்திற்குமேலாய்விஞ்சு பதங்கண்டேனேகோவகோ பரமஞானந், திரமானபெரும்பெரியோர் கூட்டங்கிட்டாத் தெள்ளமுதாய்ப்பேரின்பந்தங்கநல்கும், வரமாநின் கூட்டத்தாலொருகாலத்தும்வாராதநல்லமுதுவரப்பெற்றேனால் .... *

(இ-ள்.) நரபாலன் - அரசனானவன் — அதற்குரைப்பான் - அதற்குச்சொல்லுவார் — பகவனே - பகவானே — நின்னருளால் - உமதுகிருபையினால் — பெருஞ்செல்வநலத்தால் - மகாசம்பத்தாகியவின்பத்தினால் — மிக்குப்பரமாகி - மிகவுமகத்தாகி — அனைத்திற்குமேலாய் - சகலத்துக்குமுயர்வாகி — விஞ்சுபதங்கண்டேன் - மிஞ்சியபரமபதத்தையறிந்தேன் — அகோ

வசோ - ஆச்சரியமாங்சரியம்—பரமஞானத்திரமான - பிரமஞானத்தைத்திடமாகப்பெற்ற—பெரும்பெரியோர் - மகத்துக்கள்—கூட்டங்கிட்டா - குழாத்தையடைந்து—தெள்ளமுதாய்ப்பேரின்பந்தேங்கநல்கும் - தெளிவானவமுதமாய்ப்பேராநந்தத்தைநிறையக்கொடுக்கின்ற—வரமாதின்கூட்டத்தால் - வரமாகியவுமதுசங்கத்தினல்—ஒருகாலத்தும்வாராதநல்லமுது- ஒருபொழுதுங்கிடையாதபராவமுதத்தை—வரப்பெற்றேன் -அடையப்பெற்றேன். எ-று (ாருரு)

(அ-கை.) சென்றகாலத்துக்கிரங்கிவினவுதலுக்குத்தரங்கூறல். (கவி) அனந்தமாமிவ்வமுதமெனக்குமுன்னளரிதானதென்னவெனக்கும்பன்சொல்வான், மனந்தனிலேசாந்தியாய்ப்போகங்கைத்து வன்பொறிமீண்டுளமடமைமாய்ந்தபோதே, புனந்தருசெங்குசும்பைநீரழுக்குப்போன புடவையிலேதிறமுறல்போற்புதல்வர்நெஞ்சிற், கனந்தருநற்குருவசனங்கலந்துநன்றுங்காயமலங்களுமரத்தின்காய்கள்போற்போம்................................... *

(இ-ள்.) அனந்தமாம் - அளவில்லாததாகிய—இவ்வமுதம் - இந்தப்பராவமுதமானது—எனக்கு - அடியேனுக்கு—முன்னள் - பூர்வத்தில்—அரிதானதென்னவென- அரியதானதென்னவென்றரசன்கேட்க—கும்பன்சொல்வான் - கும்பமுனிசொல்லுவார்— மனந்தனிலேசாந்தியாய் - மனதிற்சாந்தமடைந்து—போகங்கைத்து - போகத்திற்கசப்புவந்து — வன்பொறிமீண்டு - வலியவிந்திரியங்களகத்திற்றிரும்பி — உளமடமைமாய்ந்தபோதே - மனவஞ்ஞானநசித்தபோதே—புனந்தரு - வனத்திலுண்டாகும் — செங்குசும்பைநீர் - சிவந்தகுசும்பாசலமானது—அழுக்குப்போனபுடவையில் - களங்கமற்றவஸ்திரத்தில்—திறமுறல்போல் - ஒளிவடைவதுபோல—புதல்வர்நெஞ்சில் - சிஷ்யனுடையமனதில் — கனந்தரும் - மேன்மையான—நற்குருவசனம் - சற்குருவாக்கியம்—கலந்துநன்றும் - கலந்துநன்மையாகும்—காயமலங்களும்-தேகத்திலுள்ளகளங்கங்களும் —மரத்தின்காய்கள்போல் - விருட்சத்தினதுகனிகளைப்போல—போம் - (நழுவிப்) போகும். எ-று .... (ாருசு)

(அ-கை.) இங்ஙனம்பெற்றவனுபவப்படி ஸ்திரமாய்நிற்பாயெனல். (கவி) உள்ளத்திலிருமையெனவொருமையென்னவுன்னுதலஞ்ஞானமிவையொழிதன்ஞானந், தெள்ளுற்றகதியுமதுதெளிந்துமுத்தி சேர்ந்தனைசித்தமும்விட்டாய் செல்வனுகித், தள்ளுற்றமலநீங்கிமௌனியாகித்தனிநிற்பாயென்றனுமேதமையுணர்ந்தோர், கொள்ளுற்றதொழிலெல்லாமனத்ததன்றோகொள்மனமன்றியினடக்குங்கொள்கையென்றோ.................................. *

(இ-ள்.) உள்ளத்தில் - மனதில்— இருமையென- இரண்டென்றும்—ஒருமையென்ன-ஒன்றென்றும்—உன்னுதலஞ்ஞானம் - நினைத்தலேயஞ்ஞானமாம் — இவையொழிதன்ஞானம்- இவ்விரண்டுநீங்குதலேஞானமாகும் — தெள்ளுற்றகதியுமது - தெளிவானபரகதியுமதுவேயாகும்—தெளிந்துமுத்திசேர்ந்தனை - தெளிவுற்றுமோக்ஷத்தையடைந்தாய்— சித்தமும்விட்டாய் - மனதையுந்தவிர்த்தாய்—செல்வனுகி - (ஞான) சம்பத்தையுடையவனுய் — தள்ளுற்றமலநீங்கி - தள்ளப்பட்டகளங்கத்தைவிட்டு—மௌனியாகி - மகாமவுனியாய்— தனிநிற்பாயென்றனும்- தனித்திருப்பாயென்று கும்பமுனிசொல்லவும்— தமையுணர்ந்தோர் - சீவன்முத்தர்கள்—கொள்ளுற்றதொழிலெல்லாம் - கொள்ளப்பட்ட செயல்களனைத்தும்—மனத்ததன்றோ-மனதினலல்லவா— கொள்மனமன்றியில் - கொள்ளப்பட்டமனதையன்றி—நடக்குங்கொள்கையென்றோ - நடக்குந்தன்மையாது. எ-று. .... (ாருஎ)

(அ-கை.) சமாதியிற்றியானித்தன்முதலியதொழின் மனதையன்றியெங்ஙனங்கூடுமெனிலதற்குத்தரங்கூறல். (கவி) உரையெனமன்னவன்கேட்பக் கும்பன்சொல்வானுளமென்றுசொன்னதுவேறொன்றுமன்று, கரையறுபல்பவந்தருவாதனையேயுள்ளங்கண்டதனையறிந்தாலக்கவலையில்லை, வரையறக்கண்டவர்கருமங்களிற்சரிக்கும்வாதனைதான்மறுபிறப்பைவழங்காதந்தப், புரைமனஞ்சத்துவமென்பர் சித்தமென்றுபேதமில்லாச்சித்தத்தைப்புகல்வரன்றே .... *

(இ-ள்.) உரையென - சொல்லவேண்டுமென்று—மன்னவன்கேட்ப- அரசனானவன்கேட்க—கும்பன்சொல்வான் - கும்பமுனிசொல்லுவார்—உளமென்றுசொன்னது- மனமென்றுசொல்லியது—வேறொன்றுமன்று-மற்றொன்றுமல்ல—கரையறுபல்பவந்தரு-அளவற்றசநநங்களைக்கொடுக்கின்ற—வாதனையேயுள்ளம் - வாசனையேமனமாம்—கண்டதனையறிந்தால்-காணப்பட்டதன்னைத்தெரிந்துகொண்டால்—அக்கவலையில்லை - அந்தவச்சமில்லை—வரையறக்கண்டவர்-தடையறப்பார்த்தவர்கள்—கருமங்களிற்சரிக்கும் - கருமங்களிற்சஞ்சரிக்கின்ற — வாதனைதான்மறுபிறப்பைவழங்காது - சுத்தவாசனைமறுபவத்தைக்கொடாது — அந்தப்புரைமனம்-அவ்வுடர்வுள்ளமனதை—சத்துவமென்பர் - சாத்துவிதமென்றுசொல்லுவார்கள் —போதமில்லாச்சித்தத்தை - ஞானமில்லாதமனதை—சித்தமென்றுபுகல்வர் - மனமென்றுரைப்பர். எ-று.

(அ-கை.) இ-து. (கவி) ஞானமனஞ்சத்துவமே யென்றுசொல்வர்ஞானமிலாதார்சித்தநடையிலிற்ப, ஈனமறுஞானிகள்சத்துவத்தேநிற்பரோம்தொன்றுசுவர்க்கம்வீடெல்லாநல்கு, மானவையெல்லாம்விட்டுச் சமமாஞ்சோதி யாலேதாகுதியிங்கதுநீயாகு, மூன்முறுபொருளொன்றுங்கைக்கொளாம லுள்ளமலைசவறநிற்பாயுறுதியாக .... *

(இ-ள்,) ஞானமனம் - ஞானமுள்ளமனதை—சத்துவமேயென்றுசொல்வர் - சாத்துவிகமேயென்றுசொல்லுவார்கள்—ஞானமிலாதார் - ஞானமில்லாதவர்கள் —சித்தநடையினிற்பார் - மனதினடையிலிருப்பார்கள்—ஈனமறுஞானிகள் - குற்றமற்றஞானவான்கள்—சத்துவத்தேநிற்பர் - சாத்துவிகத்திலிருப்பார்கள்—ஏமொன்று - யாமொன்று—சுவர்க்கம்வீடு - சுவர்க்கமும்மோக்ஷமுமாகிய— எல்லாநல்கும் - இவைகளனைத்தையுங்கொடுக்கின்றதோ — ஆனவையெல்லாம்விட்டு - ஆகியவச்சகலத்தையுந்தள்ளி— சமமாஞ்சோதியாலல் - சமமானசுயம்பிரகாசமானல்—எதாகுதி - எதாகின்றயோ—இங்கு - இவ்விடத்தில்—அதுநீயாகும் - அதுவேயுனல்வரூபமாகும்—ஊனமுறுபொருள் - ஈனமாகியபதார்த்தங்கள்—ஒன்றுங்கைக்கொளாமல் - ஒன்றையுங்கைவசப்படுத்தாமல்—உள்ளமலைசவற - மனோசலனமில்லாமல்—உறுதியாக - திடமாக—நிற்பாய் - இருப்பாய். எ-று. (இ-உ-க-ம்) வாசனைரூபமானமனமிரண்டு விதமாமவற்றுள், இராசததாமதத்துடன்கூடி வெளிமுகத்தில் அறிவின்மையாகச்செய்யுந் தொழிலாற்பலத்தைக்கொடுக்குமனதுக்குமனமென்றுபேர் சத்துவமெனப்பெயரின்றுமாதலாலவ்விரண்டையுநீக்கி மகாவாக்கியார்த்தப்படிசலனசலனமின்றிச் சுயஞ்சோதியே நீயாய் விளங்குவாயென்பதாம் .... (௱௫௯)

(அ-கை.) பிரமத்திலுண்டான ஸ்புரணம்பிரமமாய் விளங்குமென்பதைக் கையாண்டதொருமையாய்ச் சமாதியடையுநிமித்தஞ்சலனசலனமின்றி யயிக்கியங்கூடும் விதமெங்ஙனமெலி லதற்குத்தரங் கூறல். (கவி) நெஞ்சிலாதவர்பிறவி நெடுந்தூரம்போநீணிலத்திற்றுயரொன்றுநேர்ந்ததல்ல, வஞ்சமனமசைதலிலுண்டானதாகுமசைவசையாமைகளிரண்டுமயிக்கமாக்கிச், சஞ்சலமாற்றிச்சித்தாம்படிநில்லென்னத்தரணிபன்சொல்வானயிக்கஞ் சார்வதெங்ஙன், விஞ்சுமசைவசையாமையிரண்டுமொன்றாய்விடும்படிசொல்லெனக்கும்பன் விளம்பலுற்றான் .... *

(இ-ள்.) நெஞ்சிலாதவர்பிறவி - மனமில்லாதவர்கள்பவம்—நெடுந்தூரம்போம் - வெகுதூரத்திற்செல்லும்—நீணிலத்தில் - நீண்டபூமியில்—துயரொன்றுநேர்ந்ததல்ல - துன்பமானதுசற்றுநேரிடாது—அஞ்சுமனம் - பயப்படுகின்றமனமானது—அசைதலிலுண்டானதாகும் - சஞ்சலத்திலுண்டானதாகும்—அசைவு - அசைதலும்—அசையாமைகள் - அசையாமைகளுமாகிய—இரண்டுமயிக்கமாக்கி - இரண்டையுமொன்றாக்கி — சஞ்சலமாற்றி - சஞ்சலத்தைக்கெடுத்து—சித்தாம்படி - ஞானமாகும்படிக்கு—நில்லென்ன - நிற்பாயென்றுகும்பமுனிசொல்ல—தரணிபன்சொல்வான் - அரசன்சொல்லுவான்—அயிக்கஞ்சார்வதெங்ஙன் - அயிக்கியமடைவதெப்படி—விஞ்சுமசைவு - மிகுந்தவசைவும் — அசையாமை - அசையாமையும்—இரண்டுமொன்றாய் - இரண்டுமொன்றாக—விடும்படிசொல்லென - நீங்கும்படிசொல்லுவாயென்றரசன்கேட்க—கும்பன்விளம்பலுற்றான் - கும்பமுனிசொல்லத்தொடங்கினர். எ-று (௱௬௰)

(அ-கை.) இ-து.(கவி) உவரிநீர்போலுலகெல்லா மொன்றானவுணர்வுமாத்திரமதுதானுற்றபுந்திக், கவர்வுறுதலாலசையுநிறையுநீர்தான் கல்லோலத்தாலசையுங் கணக்கேபோலச், சிவமுணர்வுமாத்திரமெய்ப்பிரமமாதித்திரள்பெயராய்ப்புகல்பொருளைச்சகமென்றெண்ணித், தவமறும்பேதையர்காண்பரறிவுதானேசற்றசைந்தமாத்திரத்தாற்சருக்கமுண்டாம்.

(இ-ள்.) உவரிநீர்போல் - சமுத்திரத்தின்சலத்தைப்போல—உலகெல்லாம் - சகங்களனைத்தும்—ஒன்றான - ஏகமாகிய—உணர்வுமாத்திரம் - சின்மாத்திரமேயாகும்— அதுதான் - அச்சின்மாத்திரமானது—உற்றபுந்தி - பொருந்தியபுத்தியை—கவர்வுறுதலால் - கிரகித்தலினல்—நிறையுநீர்தான் - நிறைந்தசலமானது—கல்லோலத்தால் - பேரலையினல்—அசையுங்கணக்கேபோல - அசைகின்றதன்மையைப்போல—அசையும் - சஞ்சரிக்கும்—சிவம் - சிவமும்—உணர்வுமாத்திரம் - சின்மாத்திரமும்—மெய் - சத்தியமும்—பிரமமாதி - பிரமமுதலாகிய — திரள்பெயராய் - அநேகநாமங்களையுடையதாய்—புகல்பொருளை - சொல்லிய (பர) வஸ்துவை—சகமென்றெண்ணி - உலகமென்றுமதித்து—தவமறும்பேதையர்காண்பர் - நிஷ்டையற்றமூடர்கள்பார்ப்பார்கள்—அறிவுதான் - சித்தானது—சற்றசைந்தமாத்திரத்து - கொஞ்சமசைந்தமாத்திரத்தில்—சருக்கமுண்டாம் - சகசிருட்டியுண்டாகும். எ-று .... (௱௬௧)

(அ-கை.) இ-து (கவி) உண்டானசிருட்டிதானன்றாய்ப்பார்க்கிலொழிந்துபோமுறுதியாயுணராவாற்றாற், கண்டார்கள்கயிற்றிற்பாம்பென்பார்போற்காட்சியுறுங்கலைநூலாற்கற்

றோர்சார்வாற், றண்டாதபரிசயத்தாற்சிலகாலத்திற் றாவுமனநின்மலமாய்ச்சசிபோனிற்கி
ற், பண்டாயவனுபூதிமயமாய்த்தானே பாக்கியவான்களுக்கிந்தப்பார்வைதோன்றும்…*

(இ-ள்.) உண்டானசிருட்டிதான்- தோன்றினசகசிருஷ்டியை — நன்றாய்ப்பார்க்கில்-ஞானசுகமாகப்பார்த்தால்—ஒழிந்துபோம்- அஃதிறந்துபோகும்—உறுதியாய்- திடமாக—உணராவாற்றால் - அறியாததன்மையினால்—கயிற்றில் - பழுதையில்—பாம்பென்பார்போல்-சர்ப்பமென்பவர்களைப்போல—கண்டார்கள் - திரிஸ்யமாகப்பார்த்தார்கள்—காக்ஷியுறும் - ப்ரத்யக்ஷமாகின்ற—கலைநூலால் - ஞானசாஸ்த்திரங்களினாலும்—கற்றோர்சார்வால் - சாதுசங்கத்தினாலும்—தண்டாதபரிசயத்தால் - தடையற்றவப்பியாசத்தினாலும்—சிலகாலத்தில்-சிலநாட்களில்—தாவுமனம்- பாயாநின்றமனமானது—நின்மலமாய் - விமலமாக—சசிபோனிற்கில்-சந்திரனைப்போலநின்றால்—பண்டாய- பழைமையான—அனுபூதிமயமாய்த்தானே- அனுபூதிமயமாகவே—பாக்கியவான்களுக்கு- ஞானசம்பத்துள்ளவர்களுக்கு—இந்தப்பார்வைதோன்றும்-இந்தத்திருஷ்டிதோற்றும். எ-று.(இ-௯-க-ம்) உததியும்புனலும்போலச்சுயஞ்சைதன்யமுமதஸ்ஸ்புரணமும்விளங்குதேயன்றி வேறின்றெனக்காரணத்தைத் தரிசித்ததுவாகநிற்கிற் காரியமுமதுவாகவிளங்கும்போது சலனாசலனமின்றியயிக்கியமானநிருவிகற்பசமாதிகூடுமென்பதாம்(௱௯௨)

(அ-கை.) சமாதியிற்றனதுஸ்வானுபூதியினின்றுஸ்புரிக்கின்றஸ்புரணமெதிரிடாமற்
றன்மயமாக்கிக்கொள்ளெனச்சமாதியில்வைத் தஃதுகூடுநியதித்தந் தனியேவைக்கநி
னைத்தல். (கவி) வேறு. உலகதனுதயநாசமுண்மையையுரைத்தேனித்தை,நலனுறச்
செய்துநாடிநழுவுறாநயந்தவண்ணம்,விலகலற்றெதிர்ந்தவெல்லாமெய்ப்பதத்தாக்கி
நிற்பாய், திலகமாஞ்சொன்னநாடுசேர்வனுன்காலமீதே ....*

(இ-ள்.) உலகதன் - சகத்தினுடைய—உதயநாசம் - உற்பத்திலயத்தின்— உண்மையையுரைத்தேன் - தத்துவத்தைச்சொன்னேன்—இத்தை - இந்தவருத்தத்தை—நலனுறச்செய்து-சுகமுண்டாகவப்பியாசித்து—நாடி-சிந்தித்து—நழுவுறா-வழுவாமல்—நயந்தவண்ணம்-விரும்பியபடி—விலகலற்று - நீங்குதலில்லாமல்—எதிர்ந்தவெல்லாம்- நேரிட்டவனைத்தையும்—மெய்ப்பதத்தாக்கிநிற்பாய் - பிரமபதத்துக்காகச்செய்திருப்பாய்—திலகமாம்-(சகலத்துக்குந்)திலதமாகிய—சொன்னநாடு - சுவர்க்கலோகத்தை—நான்சேர்வேன்-யானடைவேன்—ஈதுகாலம்-இதுவேகாலமாம். எ-று .... (௱௯௩)

(அ-கை) இ-து. (கவி) அயனுலகினும்பொன்னாடுற்றங்கெனைக்காணென்னிற், பயமுற
முனியுமெந்தைநாரதன்பரிந்தமைந்த,ருயர்குருமுனியப்பண்ணவொருசற்றுமொண்ணா
மன்னா, மயலறப்பேதநீக்கிமகிழ்ந்திதைநோக்கிநிற்பாய்........................ *

(இ-ள்.) அயனுலகினும் - சத்தியலோகத்தினின்றும்—பொன்னாடுற்று - தெய்வலோகத்தையடைந்து—அங்கு - அவ்விடத்தில்—எனைக்காணென்னில் - என்னைப்பார்க்காணாயின்—எந்தை - எனதுபிதாவாகிய—நாரதன் - நாரதமுனியானவர்—பயமுறமுனியும் - பயப்படும்படிகோபிப்பார்—பரிந்தமைந்தர்-அன்புள்ளசீஷர்—உயர்குரு-மேலானவாசாரியனை—முனியப்பண்ண-கோபம்வரும்படிசெய்ப—ஒருசற்றுமொண்ணா-எவ்வளவுங்கூடாது—மன்னா-அரசனே—மயலற-மயக்கமில்லாமல்--பேதநீக்கி-வேற்றுமையைக்கெடுத்து—மகிழ்ந்து-சந்தோஷித்து — இதைநோக்கிநிற்பாய் - இந்தத்திருஷ்டியிலிருப்பாயென்றுகும்பமுனிசொன்னார். எ-று.(இ-உ-க-ம்) நிருவிகற்பசமாதிகூடுநெறியையறிவித்தகன்றனனென்பதாம் . . … (௱௯௪)

(அ-கை.) நிதித்தியிற்கண்டபேரானந்தபோதமேதானாகவியப்புறுதல். (கவி) போ
துநாமென்னக்கும்பன்மறைதலும்பூபனென்னுஞ், சீதளஞ்சுத்தஞ்சாந்தந்தெள்
ளமுதூறலொக்கு, மீதொருபதவியென்னுளிருந்தவாவென்னேயென்னே, கோதி
லென்சத்துவத்திற்குளிர்வுறச்செய்ததென்றான் .... *

(இ-ள்.) நாம்போதுமென்ன - யாம்போகின்றேமென்று—கும்பன்மறைதலும்-கும்பமுனியானவர்மறையவும்—பூபனென்னும் - அரசனானவனினைக்கின்றான்—சீதளம்-குளிர்ச்சியாகியும்—சுத்தம் - பரிசுத்தமாகியும்—சாந்தம் - உபசாந்தமாகியும்— தெள்ளமுதூறலொக்கும் - தெளிந்தவமுதவூற்றுக்கொப்பாகியுமிருக்கின்ற — ஈதொருபதவி - இந்தவொப்பற்றபதவியானது—என்னுள்ளிருந்தவா - எனக்குள்ளிருந்தவிதம்—என்னேயென்னே - ஆச்சரியமாச்சரியம்—கோதிலென் - குற்றமற்றவென்னை — சத்துவத்தில் - சத்தாமாத்திரத்தில்—குளிர்வுறச்செய்ததென்றான் - விஸ்ராந்தியடையச்செய்ததென்றரசன்சொன்னான். எ-று ....(௱௯௫)

(அ-கை.) வியப்புற்றபடிசமாதிகூடல்.(கவி)ஆணவாதனைகளின்றியசைவற்றுப்பேரானகி,
மோனமாய்நிருவிகற்பமாய்ப்பற்றுமூற்றுமற்று, தானமேயமூந்திக்கற்போற்றருவைப்
போற்சுவர்போனின்றான், போனசூடாலைப்பண்டைப்பொற்கொடிவடிவமெய்தி......... *

(இ-ள்.) ஆனவாதனைகளின்றி - உண்டாகியவாதனைகளிறந்து—அசைவற்று - சலனமற்று—பேராளுகி - நிலையினீங்காதவளுய்—மோனமாய் - மௌனமாகியும்—நிருவிகற்பமாய்-நிருவிகற்பமாகியும்—பற்றுமூற்றுமற்று - இச்சையனைத்துமற்று—தானமாழ்ந்து - இடத்திலமர்ந்து—கற்போல் - கல்லைப்போலவும்—தருவைப்போல் - மரத்தைப்போலவும் — சுவர்போல்-மதிலைப்போலவும்—நின்ருன் - (சமாதியி) லிருந்தான்—போனசூடாலை- சென்ற (கும்பமுனியென்னுஞ்) சூடாலையானவள்—பண்டைப்பொற்கொடிவடிவமெய்தி-முன்னழகியபுஷ்பக்கொடிபோன்றதனதுருவமடைந்து. எ-று. (இ-உ-க-ம்) ஆசாரியரனுக்கிரகத்திலனுபவமான தனதுஸ்வானுபூதிமாத்திரமாய் நிருவிகற்பசமாதியடைந்தனனென்பதாம்..... .... (௩௬௬)

(அ-கை.) ஆசாரியர்சென்றபின்னுமெழுந்தருளுதல். (கவி) அம்பரத்தேகியந்தப்புரம்புக்காளவனிகாவ, னம்பரமென்றுகாத்தாணடந்ததுவருடமூன்று, கும்பனுய்க்கணவன்காட்டைக்குறுகியாங்கவனைக்கண்டா,டம்பமாய்நிருவிகற்பசமாதியிலிருத்தல்கண்டு.........*

(இ-ள்.) அம்பரத்தேகி - ஆகாயத்திற்போய்—அந்தப்புரம்புக்காள் - அந்தப்புரத்திற்புகுந்தாள்—அவனிகாவல் - பூமிபாலனம்—நம்பரமென்றுகாத்தாள்- நமதுபாரமென்றிரட்சித்தாள்—வருடமூன்றுநடந்தது - மூன்றுவருடஞ்சென்றது—கும்பனுய் - (திரும்பவுங்) கும்பமுனியாய்—கணவன்காட்டைக்குறுகி - தலைவனிருக்கின்றவனத்தையடைந்து— ஆங்கவனைக்கண்டாள்-அவ்விடத்திலக்கணவனைப்பார்த்தாள்—தம்பமாய்நிருவிகற்பசமாதியிலிருத்தல்கண்டு-தூணைப்போலநிருவிகற்பசமாதியிலிருக்கையைப்பார்த்து. எ-று..................... ..... (௩௬௭)

(அ-கை.) சமாதியிலசைவறநிற்றலைப்பார்த்தாலோசித்தல். (கவி) அறிவிப்போமென்றுசிங்கநாதத்தாலார்த்தமட்டிற், பொறியுற்றதில்லைமேன்மேற்றெனித்திவள்பூபன்றன்னை, மறியத்தள்ளுதலும்வீழ்ந்து மறிந்திலன்மற்றென்னென்று, நெறியுய்க்குங்கும்பன்மேனிநேரிழைநினைப்பதானுள் ....*

(இ-ள்.) அறிவிப்போமென்று - (நமதுவரவைத்) தெரிவிப்போமென்று — சிங்கநாதத்தால் - சிங்கத்தொனியினுல்—ஆர்த்தமட்டில்- சத்தித்தவளவிலும்—பொறியற்றதில்லை-அறிந்ததில்லை—மேன்மேற்றெனித்து - மேலுமேலுஞ்சத்தித்து—இவள்- இந்தச்சூடாலையானவள்—பூபன்றன்னை - அரசனை—மறியத்தள்ளுதலும் - கவிழும்படிதள்ளவும்—வீழ்ந்துமறிந்திலன்-கீழேவிழுந்துமுணர்ந்திலன்—மற்றென்னென்று - இதென்னவென்று —நெறியய்க்கும்- கிரமமாகவாழ்விக்கின்ற—கும்பன்மேனி - கும்பவடிவத்தையுடைய — நேரிழைநினைப்பதானுள்-சூடாலையானவளெண்ணத்தொடங்கினுள். எ-று.......................... .... (௩௬௮)

(அ-கை.) இ-து. (கவி) உத்தமன்றற்பதத்தோடொன்றினன்வியப்பிதம்மா, வித்தனியுடலைப்பார்த்தாலிதயத்தினறிவின்வித்தாஞ், சத்துவசேடமுண்டேற்றலைவனைப்புணர்வமெல்லென், றத்தியால்வாழ்துமன்றே லங்கனைவடிவம்விட்டு ....*

(இ-ள்.) உத்தமன் - உத்தமனுனவரசன்—தற்பதத்தோடொன்றினன்-பிரமபதத்திற்கலந்தான்—வியப்பிதம்மா - ஈதநிசயம்—இத்தனியுடலை - இந்தத்தனிமையானசரீரத்தை— பார்த்தால் - நோக்கினுல்—இதயத்தின் - இருதயத்தில்—அறிவின்வித்தாம் - அறிவுக்குவிதையாகிய—சத்துவசேடமுண்டேல் - சத்துவசேடமிருக்குமாயின்— தலைவனைப்புணர்வம் - நாயகனைச்சேர்ந்து—மெல்லென்று - மிருதுவாக—அத்தியால்வாழ்தும் - கிரமமாகவாழ்வோம்—அன்றேல்- (சத்துவசேட)மில்லாவிடின்—அங்கனைவடிவம்விட்டு-நமதுபெண்ணுருவத்தைவிட்டு.எ-று.

(அ-கை.) இ-து. (கவி) மறுபவமுறுதவண்ண மாசறுபதத்தைச்சேர்து, மறுதியீதென்னவுன்னிப்பரிசத்தால்விழியாலன்னு, னுறுமறிவுக்குவித்தாயுற்றசத்துவசேடந்தா, னிறுதியற்றிதயந்தன்னி லிருந்ததுகண்டாளென்ன ....*

(இ-ள்.) மறுபவம் - மறுபிறப்பை—உறுதவண்ணம் - அடையாதபடி—மாசறு-குற்றமற்ற—பதத்தைச்சேர்தும் - பிரமபதத்தையடைவோம்—அறுதியீதென்னவுன்னி - நிச்சயமிதுவென்றுசிந்தித்து—பரிசத்தால் - பரிசத்தினுலும்— விழியால் - கண்ணினுலும்—அன்னன்-அவ்வரசன்— உறுமறிவுக்கு - பொருந்தியவறிவுக்கு —வித்தாயுற்ற-விதையாகப்பொருந்திய—சத்துவசேடந்தான் - சத்துவசேடமான—இறுதியற்று - கெடுதலில்லாமல்— இதயந்தன்னில்-இருதயத்தில்—இருந்ததுகண்டாளென்ன - இருந்ததைப்பார்த்தாளென்று வசிஷ்டமுனிசொல்ல. எ-று. (இ-ரு-க-ம்) இச்சமாதிசீவன்முத்தமாவிதேகமுத்தமாவென்று-ஐயுற்றான்றிப்பார்க்கின்சீவன்முத்தித்தன்மையி னிலக்கணத்தைக் கண்டனளென்பதாம்.... .... (௩௭௰)

(அ-கை.) மனமிறந்தஸ்வரூபசமாதியிற் சத்துவசேடமெங்ஙனமிருக்குமெனல்.
(கவி) கேட்டனுமிராமன்சொல்வான்கிளர்மனந்திரமாய்ந்து, காட்டலோட்டம்போ

ற்சுத்தக்கண்ணிலேகலந்துளோருக்,கீட்டுசத்துவசேடந்தானெங்ஙனேமுளைக்குமெ
ன்ன, வாட்டமின்ஞானமிக்க வசிட்டமாமுனிவன்சொல்வான்...................... *

(இ-ள்.) கேட்டலும் - (இத்தைக்)கேட்கவும்—இராமன்சொல்வான்- ஸ்ரீராமர்சொல்லுவார்—இளர்- சொல்லப்பட்ட—மனந்தீரமாய்ந்து - மனதுமுழுதுங்கெட்டு— காட்டலோட்டம்போல்- கட்டையுங்கல்லையும்போல — சுத்தக்கண்ணில் - பரிசுத்தஞானமானதிருஷ்டியில்—கலந்துளோர்க்கு- கலந்தவர்களுக்கு—ஈட்டுசத்துவசேடந்தான்- இவ்விடத்திற்சத்துவசேடமானது—எங்ஙனேமுளைக்குமென்ன - எப்படியுண்டாமென்றுகேட்க—வாட்டமில்-தளர்வில்லாத—ஞானமிக்க - அறிவின்மிகுந்த—வசிட்டமாமுனிவன்- வசிஷ்டமாமுனியானவர்—சொல்வான்-சொல்லுவார். எ-று .... (௩௭௧)

(அ-கை,) தேகநிமித்தஞ்சத்துவசேட மிருக்குமெனல். (கவி) வித்தினுட்பூவுங்காயுமேவல்போலிதயந்தன்னிற், சித்தின்காரணமதானசத்துவசேடநிற்கு, முத்தனுய்மனமிறந்தான்மெய்யுடல்போகபோகத், தொத்தவின்பத்துன்பங்கள் சார்தலற்றொருமைத்தாகும்.

(இ-ள்.)வித்தினுள்-விதைக்குள்—பூவும்-புஷ்பமும்—காயும்-பழங்களும்—மேவல்போல்-பொருந்தியிருப்பதுபோல்—இதயந்தன்னில் - இருதயத்தில்—சித்தின்காரணமதாம்- அறிவுக்குக்காரணமாகிய—சத்துவசேடநிற்கும் - சத்துவசேடமிருக்கும்— முத்தனுய்மனமிறந்தால்-சீவன்முத்தனுய்மநோநாசமானால்—மெய்யுடல்போகா - வலிவையுள்ளசரீரநசியாது—போகத்தொத்த - போகங்களிற்பொருந்திய — இன்பத்துன்பங்கள் - சுகதுக்கங்கள் — சார்தலற்று-கிட்டாமல்—ஒருமைத்தாகும் - ஒற்றுமையாகும். எ-று. (இ-உ-க-ம்) சத்துவசேடமிருக்குந்தன்மையைவிளவினதற் குத்தரங்கூறினதாம்,சத்துசேடமென்பதுவும்,அறிவுக்குவித்தாகியசத்திலவ்வறிவுசீவன்முத்திபரியந்தங்களையாமலடங்கிநுண்ணிதாய்மிஞ்சியிருத்தலெனக்கொள்க.

(அ-கை.) சித்தாய்ச்சென்று சத்திலடங்கியிருந்தசித்தைவெளிப்படுத்தல். (கவி) ஆதலாலிராமனேயவ் வணங்கனுளந்தமெய்விட், டேதமிலாதியந்த மின்றிய வறிவினுட்போய், மேதகுசத்துவஞ்சேர் வேந்தனெஞ்சசையப்பண்ணி, தீதிறன்னுடலின்மீளச்சேர்ந்தனள்கூடார்புட்போல்.. *

(இ-ள்.) ஆதலால்- ஆதலினால்—இராமனே- ஸ்ரீராமா—அவ்வணங்கனுள் - அத்தெய்வக்கன்னிகைக்கொப்பானசூடாலையானவள் — அந்தமெய்விட்டு - அக்கும்பவடிவத்தைவிட்டு—ஏதமில்- குற்றமற்றதாய்—ஆதியந்தமின்றிய- ஆதிமத்தியாந்தரகிதமான—அறிவினுட்போய்-சித்தினுள்ளேபுகுந்து—மேதகு - மேன்மைபொருந்திய—சத்துவஞ்சேர்-சத்துவசேடமடைந்திருக்கின்ற—வேந்தனெஞ்சு - அரசனதுமனதை — அசையப்பண்ணி - சலிக்கச்செய்து—தீதிறன்னுடலில்- குற்றமற்றதனதுசரீரத்தில்—கூடார்புட்போல்-கூண்டிலடைகின்றபட்சியைப்போல—மீளச்சேர்ந்தனள் - திரும்பவந்தடைந்தனள். எ-று.. (௩௭௩)

(அ-கை.) சத்தினின்றுஞ் சித்து விகசித்தல். (கவி) கும்பன்மெய்யாகிப் பூமேலிருந்தனள்குழல்போற்பாடத், தம்பமாயிருந்தோன்மெய்யிற்சத்துவகுணஞ்சார்போதந், தும்பிநேர்பாட்டைக்கேட்டுப்பையப்பையச்சூரியன்சே, ரம்புயம்போல்விரிந்துவவன்மனநிலையாயிற்றே.. *

(இ-ள்.) கும்பன்மெய்யாகி - கும்பமுனிவடிவமாய்—பூமேலிருந்தனள்- பூமியிற்றணாசனத்திலிருந்தவளாய் — குழல்போல்பாட - பிள்ளாங்குழலைப்போல(சாம) கானஞ்செய்துகொண்டிருக்க — தம்பமாயிருந்தோன் - கட்டையைப்போலிருந்தவரசன் — மெய்யில்-சரீரத்தில்—சத்துவகுணஞ்சார்போதம் - சாத்துவிதகுணத்தையடைந்திருக்கின்றஞானமானது—தும்பிநேர் - வண்டுக்கொப்பாக—பாட்டைக்கேட்டு - (பாடுகின்ற) சாமகானத்தைக்கேட்டு—பையப்பைய - மெல்லமெல்ல—சூரியன்சேர் - ஆதித்தகிரணத்தைச்சார்ந்த—அம்புயம்போல் - தாமரைமலரைப்போல—விரிந்து - விகசிதமாய்—அவன்மனநிலையாயிற்று - அவனுடையமனதுநிலையாயினது. எ-று .... (௩௭௪)

(அ-கை.) ஆநந்தத்தோடு மாசிரியரைத் தரிசித்துவணங்கித்துதித்தல். (கவி) கண்டனன்கும்பன்றன்னைக்களிப்புறுமனத்தனுகித், தண்டலிலருளாலென்னை வாழ்விப்பான்றானேவந்தான், பண்டையங்குரவனென்றுபாவிநன்மலர்தூயேத்த, மண்டலவேந்தன்றன்னைமற்றவனேக்கிச்சொல்வான் .... *

(இ-ள்.) கும்பன்றன்னை - கும்பமுனியை— கண்டனன்- பார்த்தனன்—களிப்புறுமனத்தனுகி - இன்பமிகுந்தமனதையுடையவனுய்—தண்டலில் - தடையற்ற—அருளால் - கிருபையினால்—என்னைவாழ்விப்பான் - என்னைச்சுகிக்கச்செய்யும்பொருட்டு — பண்டையக்குரவன்-

முன்பெழுந்தருளியகுருநாதன்—தானேவந்தானென்று - சுயமாகவேவந்தானென்று— நன்ம லர்தூய் - நல்லபுஷ்பங்களைச்சொரிந்து—பரவியேத்த - வணங்கித்துதிசெய்ய—மண்டலவேந் தன்றன்னை - பூமிக்கரசனை—மற்றவனைநோக்கி - பின்பந்தக்கும்பமுனியானவர்பார்த்து—சொல் வான் - சொல்லுவார். எ-று. (இ-ங-க-ம்) சமாதியினிரதிசயாநந்தமாய்க் கரைந்தஉிவ்வனு பவத்தோடும் வெளிப்பட்டாசிரியனை யந்தவடிவமாகத்தரிசித்ததாம் .... (௱௭௫)

(அ-கை.) சீடன்சமாதிசுகத்தைக்கண்டுசந்தோஷித்தல். (கவி) இங்குநின்றகன் றநாடொட் டின்றளவுன்பாற்சித்தம்; பங்கறநின்றதண்டர்பதிபநின் கூட்டம் போல, வங்கிதமல்லவென்னவண்ணலேவாழ்ந்தேனின்னுற், றுங்கமாயுற்றவின் பசமாதியிற்றுயரந்தீர்ந்தேன் .... *

(இ-ள்.) இங்குநின்று - இவ்விடத்திலிருந்து---அகன்றநாடொட்டு - நீங்கினநாடெங்கி--- இன்றளவு - இன்றைபவரைக்கும்---உன்பாற்சித்தம் - உன்னிடத்திலென்மனமானது--- பங்கற நின்றது - பிரிவற்றிருந்தது---அண்டர்பதியும் - தெய்வலோகமும்---நின்கூட்டம்போல- உன துசங்கத்தைப்போல---அங்கிதமல்லவென்ன - இன்பமல்லவென்றுகும்பமுனிசொல்ல---அண் ணலே- பெருமையிற்சிறந்ததெய்வமே---நின்னால்வாழ்ந்தேன்-உம்மாற்சுகத்தையடைந்தேன் —துங்கமாய் - பரிசுத்தமாகி — உற்றவின்பசமாதியில்- பொருந்துயசுகசமாதியில்—துயரந் தீர்ந்தேன் - துன்பமற்றேன். எ-று .... (௱௭௬)

(அ-கை.) ஆசிரியரவ்வனுபவவிலாசத்தை நான்குவிதமாகப் பகுத்துவினவுதல். (கவி) நிருவிகற்பத்திலின்ப நிறைந்தபொன்னாட்டுமில்லை, யொருமையுற்றதனைமே வியும்பரிலிம்பர்தன்னிற்; றிரிவனென்றரசன்சொல்லக் கும்பனுஞ்செப்புகிற்பா, னரியவானந்தவாழ்வி லயர்வெலாமறவாழ்ந்தாயோ .... *

(இ-ள்.) நிருவிகற்பத்தில் - நிருவிகற்பசமாதியிலுள்ள— இன்பம் - ஆநந்தமானது— நிறைந்த - (புண்ணிய)நிறைந்த—பொன்னாட்டுமில்லை - சுவர்க்கத்திலுமில்லை— ஒருமையுற்று- தனிமையாகிய— அதனைமேவி - அவ்வாநந்தத்தையடைந்து —உம்பரில்-தெய்வலோகத்திலும் —இம்பர்தன்னில் - பூலோகத்திலும்—திரிவனென்று - உலாவுவனென்று — அரசன்சொல்ல- வேந்தன்சொல்ல—கும்பனுஞ்செப்புகிற்பான் - கும்பமுனியுஞ்சொல்லுவார்—அரியவாநந்த வாழ்வில்- அரிதானபிரமாநந்தவாழ்வில்—அயர்வெலாமற - வருத்தங்களனைத்துநீங்க—வாழ்ந் தாயோ- சுகித்தாயோ. எ-று .... (௱௭௭)

(அ-கை.) இ-து. (கவி) பேதமேவடிவமான துன்பங்கள்பேதித்தாயோ, போதல் போதினிதாஞ்சங்கற் பத்தினிற்பூண்டவின்பந், தீதெனவேருஞ்செற்று சமதரிசன முற்றாயோ. யாதினும்விடுபற்றற் றியைந்தசெய்தின்புற்றாயோ. .... *

(இ-ள்.) பேதமேவடிவமான- வேற்றுமையேயுருவமாயிருக்கின்ற— துன்பங்கள்- துய ங்களை—பேதித்தாயோ- கெடுத்தாயோ—போதல்போது- வரும்பொழுது—இனிதாம்-இனி மையாகிய—சங்கற்பத்தினில் - சங்கற்பத்தில்—பூண்டவின்பம் - கொண்டசுகத்தை—தீதென- குற்றமென்று—வேருஞ்செற்று - மூலத்துடன்கெடுத்து— சமதரிசனம் - சமதிருஷ்டியை— உற்றாயோ- அடைந்தாயோ—யாதினும் - எதிலும்—விடுபற்றற்று- விடுதலும்பற்றுதலுநீங்கி — இயைந்தசெய்து-நேர்ந்தகாரியங்களைச்செய்து—இன்புற்றாயோ-சுகமடைந்தாயோ. எ-று (இ-ங-க-ம்)சுட்டறப்பெற்றசுகானுபவத்தைச் சுட்டிற்றறிசிக்கப்பகுத்துவினவினதாம்.(௱௭௮)

(அ-கை.) அனுபவவிலாசத்தைச் சொல்லுதல். (கவி) எனவுநின்னருளாற்பங்கிற் றெய்வத்தாலெலாம்விட்டப்பால், மனநிலைநின்றேன்மாயைக் கனாகண்டேன்வரு பேறெல்லாங், கனமுறப்பெற்றேன்கேட்கக் காணவேண்டுவதொன்றில்லை, யனவரத முநிறைந்தே னயர்வற்றேன்பிறவியற்றேன் .... *

(இ-ள்.) எனவும் - (இப்ப) யென்று (கும்பமுனிகேட்கவும்)— நின்னருளால்- உமது கிருபையினாலும்—பங்கிற்றெய்வத்தால்-என்பங்கிலுள்ளதேவாதீனத்தினாலும்— எலாம்விட்டப் பால்-திரிஸ்யமனைத்துநீங்கினவதீதத்தில்—மனநிலைநின்றேன்-மனநிலையாயிருந்தேன்--மாயை- சம்சாரத்தினது—கனாகண்டேன் - முடிவைப்பார்த்தேன்—வரும்பேறெல்லாம் - வரப்பட்ட லாபங்களனைத்தையும்—கனமுறப்பெற்றேன் - திடமாகவடைந்தேன்—கேட்கக்காண- கேட் பதற்கும்பார்ப்பதற்கும்—வேண்டுவதொன்றில்லை - விருப்புவதொன்றுமில்லை— அனவரதமு ம்-எப்பொழுதும்— நிறைந்தேன் - பூரணமானேன் — அயர்வற்றேன் - துன்பநீங்கினேன்— பிறவியற்றேன் - பவநீங்கினேன். எ-று .... (௱௭௯)

(அ-கை.) இ-து. (கவி) பயமற்றேன்மோகமற்றேன் பற்றற்றேன்சமமாய்நின்றே, னுயர்வுற்றேனெல்லாமானே னொருசெயலற்றேன்விண்ணு, ளியலொத்ததெளிவாய்ச்சாந்தமெய்தினேனென்றான்மோகச், செயன்முற்றுங்கடந்தசிந்தைச் சிகித்துவசப்பேர்மன்னன்.*

(இ-ள்.) பயமற்றேன் - அச்சநீங்கினேன்—மோகமற்றேன்-மயக்கநீங்கினேன்— பற்றற்றேன்-ஆசைநீங்கினேன்—சமமாய்நின்றேன் - சமமாயிருந்தேன்—உயர்வுற்றேன்-மேன்மையடைந்தேன்—எல்லாமானேன் - சகலமுமானேன்—ஒருசெயலற்றேன்- ஒருதொழிலுமில்லாதவனானேன்—விண்ணுளியலொத்த- ஆகாயத்தின்றன்மையையொத்த—தெளிவாய்-தெளிவையுடையவனாய்— சாந்தமெய்தினேன் - உபசாந்தத்தையடைந்தேன்— மோகச்செயன்முற்றும்-மயக்கத்தினதுதொழிலையெல்லாம்—கடந்தசிந்தை - தாண்டினமனதையுடைய—சிகித்துவசப்பேர் - சிகித்துவசனென்னுநாமத்தையுடைய — மன்னனென்றான் - அரசன்சொன்னான். எ-று. (இ-உ-க-ம்) நீங்கவேண்டினபேதநீங்கி யடையவேண்டினவபேதமடைந்ததைப்பதினைந்துவிதமாகப் பகுத்துச்சொல்லியதாம் .... (௱௮௰)

(அ-கை.) சகசநிருஷ்டியினாற் சாக்ஷாத்காரவனுபவ முண்டாகும்பொருட் டாசிரியருஞ்சீடனுமொன்றாகச்சஞ்சரித்தல். (கவி) அவ்வகையிரண்டுபேரு மாத்துமதத்துவத்தின், செவ்வியவிசாரத்தாலுந்தெளிதருமொழிகளாலுந், தவ்வறுநேயமிக்கோர் தம்மிற்றாமுணர்தலுற்று, வெவ்வனமோடைகுன்று வேறறவெங்கும்வாழ்ந்தார்.. *

(இ-ள்.) அவ்வகை- அப்படியே—இரண்டுபேரும்-இருவரும்— ஆத்துமதத்துவத்தின்- ஆன்மதத்துவத்தினது—செவ்வியவிசாரத்தாலும் - அழகானவிசாரணையினாலும் — தெளிதருமொழிகளாலும்-தெளிகின்றவசனங்களினாலும்—தவ்வறுநேயமிக்கோர்- அழிவில்லாதவன்பின்மிகுந்தவர்கள்—தம்மிற்றாம்-தங்களிற்றாங்கள்— உணர்தலுற்று-அறிந்துகொண்டு--வெவ்வனம்-விருப்பத்தையுடையகானகங்களிலும்—ஓடை- தடாகங்களிலும்—குன்று-மலைகளிலும்—வேறறவெங்கும்வாழ்ந்தார்- வேற்றுமையின்றியெவ்விடத்திலுஞ் சுகித்தார்கள். எ-று .... (௱௮௧)

(அ-கை.) தாங்கள்கொண்டகோலமேகோலமாகச்சஞ்சரித்தல். (கவி) இயலறிவன்புசெய்கையிணையற்றோர்பற்றும்வீடு, மயலறவிட்டுதென்றற்கசைவுறாவடகுன்றொப்பார், பயிலுடலொருகாற்றூளிபடர்விப்பாரொருகானீறு, வியனுறவணிவரோர்காற்சந்தனவிரையேசேர்வார் .... *

(இ-ள்.) இயலறிவு - சுபாவமானஞானத்திலும்—அன்புசெய்கை - அன்புள்ளதொழில்களிலும்—இணையற்றோர் - ஒப்பில்லாதவர்கள்—பற்றும் - இராகமும்— வீடும் - துவேஷமுமாகிய—மயலறவிட்டு - மயக்கத்தையொருங்கேயொழித்து — தென்றற்கு - தென்றற்காற்றுக்கு—அசைவுறாவடகுன்றொப்பார் - சலியாதமகம்மேருவுக்கொப்பானவர்கள்— பயிலுடல்-சொல்லப்பட்டசரீரத்தில்—ஒருகால் - ஒருபொழுது—நீறுவியனுறவணிவர் - விபூதியைப்பெருமையாகத்தரிப்பார்கள்—ஓர்கால் - ஒருபொழுது—விரை - வாசனையுள்ள—சந்தனம் - சந்தனத்தை—சேர்வார்- தரிப்பார்கள். எ-று. (இ-உ-க-ம்) இராகத்துவேஷமின்றியேதேதெப்படிபோவதுவதப்படியாய் விளங்கினானெனவறிந்ததாம் .... (௱௮௨)

(அ-கை.) முன்புஞானமும் போகமும்வீடுமின்றளிப்பேனென்றபடி ஸ்வரூபஞானத்தைக்கொடுத்துப்போகங்கொடுப்பதற்கதின்பற்றுநீக்கம்பரிசோதிக்கச் சிந்தித்தல். (கவி) சிறிதுநாளுடனேவாழ்ந்துதேமொழிவேந்தைநோக்கி, பிறிவுறுகணவன்சாலவுதாரமாய்ப்பீடையற்றான், செறியெழில்விடலையாகுஞ் செல்வம்பூமனையுமெல்லாம், வறியபோலவமாய்ப்போமால்வாழுனரிலாமையாலே .... *

(இ-ள்.) சிறிதுநாள் - கொஞ்சகாலம்—உடனேவாழ்ந்து - கூடவேவாழ்ந்திருந்து—தேமொழி - மதுரவசனத்தையுடையசூடாலையானவள்—வேந்தைநோக்கி-அரசனை(மனதிற்)பார்த்து—பிறிவுறுகணவன் - தன்னைப்பிரிந்திருக்கின்றதலைவனானசிகித்துவசன் — சாலவுதாரமாய் - அனுபூதியின்மிகவுமுறுதியுள்ளவனாய்—பீடையற்றான் - துன்பநீங்கினான்— செறியெழில் - மிகுந்தவழகையுடைய — விடலையாகும் - இளமையாகிய — செல்வம் - சம்பத்தும்—பூமனையும் - புஷ்பங்கணிறைந்தவரண்மனையுமாகிய — எல்லாம் - சகலமும்— வறியபோல்-இல்லாமையைப்போல—வாழுனரிலாமையால் - சுகிக்கின்றவர்களில்லாமையினால்— அவலமாய்ப்போம் - வீணாய்ப்போகும். எ-று .... (௱௮௩)

(அ-கை.) ஸ்திரீயிச்சையைப் பரிசோதிக்கச் சிந்தித்தல். (கவி) இழிவறுஞானம்பெற்றோரியல்புறத்தானேவந்த, தொழிவுறவிடவொன்னிலுண்மையையுணர்ந்ததெ

ன்றும், வழிபடுமன்னனம்பான்மணஞ்செயற் கானதொன்றை, யழிவறுமறிவின
லிங்கமைத்துமென்றுளத்திலெண்ணி.. *

(இ-ள்.) இழிவறுஞானம்பெற்றோர் - பூரணஞானத்தையடைந்தவர்கள்— இயல்புற - சுபாவமாக—தாமேவந்தது - வலியவந்ததை—ஒழிவுற - தவிரும்படியாக—விடுவதொன்னில் - விடுவார்களானால்—உண்மையை - தத்துவத்தை—உணர்ந்ததென் - அறிந்ததென்ன—வழிபடுமன்னன் - சன்மார்க்கமுள்ளவரசன்—நம்பால் - நம்மிடத்தில்—மணஞ்செயற்கு - கல்யாணஞ்செய்வதற்கு—ஆனதொன்றை - உண்டாகியவொருயுத்தியை — அழிவறுமறிவினால் - அழிவற்றவுணர்வினால்—இங்கமைத்துமென்று - இவ்விடத்திலுண்டாக்குவோமென்று— உளத்திலெண்ணி - மனதினினைத்து. எ-று .... (௱௮௪)

(அ-கை.) திருவிழாவைக்குறித்துச் செல்லவேண்டுமெனல். (கவி) தலைவனைநோக்கிச்சொல்வாள் சதமகனுலகினின்றோர், நிலைபெறவிழாவுண்டாங்கே நேருநாரதரோடியானு, மலைவறநிற்றல்வேண்டுமுயர்விதிவலியார்வெல்வர், மலைமிசையிரவிபோங்கால்வருவனிவ்விரைவிலிங்கே.. *

(இ-ள்.) தலைவனை நோக்கி - நாயகனைப்பார்த்து—சொல்வாள் - (கும்பமுனியான) சூடாலைசொல்லுவாள்—சதமகனுலகின் - தேவலோகத்தில்—இன்று - இன்றையதினம்—ஓர்நிலைபெற - ஒருநிலைபெறும்படிசெய்யும்—விழாவுண்டு - திருவிழாவுண்டு—ஆங்கு - அவ்விடத்தில்— நேருநாரதரோடு - பொருந்தியநாரதருடன்—இயானும் - நானும்—உலைவறநிற்றல்வேண்டும் - அசைவறவிருக்கவேண்டும்—உயர்விதிவலி - மேலானவிதியின்பலத்தை—யார்வெல்வர் - யாவர்செயிப்பார்கள்—மலைமிசை - அஸ்தமனபர்வதத்தின்மேல்—இரவிபோங்கால் - சூரியன்போகின்றசமயத்தில்—இவ்விரைவில் - இதோசீக்கிரமாக—இங்குவருவன் - இவ்விடத்தில்வருவேன். எ-று .. (௱௮௫)

(அ-கை.) சகசசமாதியிலிருத்திச்செல்லுதல். (கவி) நீங்கருமுணர்வினோடுநீயிவணிருத்தியென்றோர், தேங்கமழ்மலரின்கொத்தைச்சிகித்துவசனுக்குநல்கி, யோங்கினள்விசும்பிலேயவன்விழிபுறுதமட்டிற், றாங்கியகும்பன்மேனிதவிர்ந்துதன்வடிவமானாள் .... *

(இ-ள்.) நீங்கருமுணர்வினோடு - நீங்குதற்கரியவறிவுடன்—நீயிவணிருத்தியென்று - நீயிவ்விடத்திலிருப்பாயென்று—ஓர் - ஒரு—தேங்கமழ்மலரின்கொத்தை - வாசனைபரிமளிக்கும்புஷ்பக்கொத்தை—சிகித்துவசனுக்குநல்கி - சிகித்துவசவரசனுக்குக்கொடுத்து—விசும்பிலோங்கினள் - ஆகாயத்திலெழும்பினாள்—அவன்விழிபுறுதமட்டிலேகி - அவன்கண்ணுக்குத்தெரியாதவரைக்கும்போய்—தாங்கியகும்பன் - சுமந்தகும்பனென்கின்ற—மேனிதவிர்ந்து - சரீரத்தைவிட்டு—தன்வடிவமானாள் - தனதுசூடாலைவடிவமுள்ளவளானாள். எ-று .... (௱௮௬)

(அ-கை.) அரசாக்ஷிசெய்துவருதல். (கவி) இந்திரனிருக்கையேய்ந்த வில்லம்புக்கறியாவண்ணம், மந்திரநெறியின்மன்னன்காரியமரபிற்செய்து, சந்திரவதனிமீண்டுங்கும்பனாய்த்தலைவன்றன்பால், வந்திழிவுற்றுசாலவாடியமுகத்தள்போலாய் ....*

(இ-ள்.) இந்திரன் - தேவேந்திரனுடைய —இருக்கையேய்ந்த - இருக்கின்றதெய்வலோகத்துக்கொப்பாகிய—இல்லம்புக்கு - அரண்மனையிற்புகுந்து—அறியாவண்ணம் - யாவருமறியாதபடி—மந்திரநெறியில் - அரசநீதியில்—மன்னன்காரிடம் - இராசகாரியங்களை— மரபிற்செய்து - முறைமையாகச்செய்து—சந்திரவதனி - சந்திரனைப்போலகுளிர்ந்தமுகத்தையுடையசூடாலையானவள்—மீண்டும் - திரும்பவும்—கும்பனாய் - கும்பமுனிவடிவமாகி—தலைவன்றன்பால் - நாயகனிடத்தில்—வந்திழிவுற்று - வந்திறங்கி—சாலவாடிய - மிகவுஞ்சுருங்கின—முகத்தள்போலாய் - முகத்தையுடையவளைப்போலாகி. எ-று .... (௱௮௭)

(அ-கை.) ஓர்பாசாங்குசெய்க்கமுகம்வாடிநிற்றல். (கவி) பனிபடர்மதியமென்னப் பங்கயமென்னச்சோம்பி, நனிமுகம்வாடிச்சிந்தையயர்விலாணனுகலோடும், புனிதநாயகனுநோக்கிப்பொருக்கெனவருந்தியெந்தாய், துனியுறுகின்றோர்போன்றாய் துயரெனத்துடைத்தியென்றான்....................................... *

(இ-ள்.) பனிபடர் - பனிமூடிய—மதியமென்ன - சந்திரனைப்போலவும்—பங்கயமென்ன - தாமரைமலரைப்போலவும்—சோம்பி - சோம்பலாய்— நனிமுகம்வாடி - மிகவும்வதனஞ்சுருங்கி — சிந்தையயர்விலாள் - மனதிற்றுன்பமற்றகும்பமுனியானசூடாலையானவள்—நணுகலோடும் - சேர்ந்தவளவில்—புனிதநாயகனும் - பரிசுத்தமுள்ளகணவனான சிகித்துவசனும்—நோக்கி - (கும்பமுனியைப்) பார்த்து—பொருக்கென - சீக்கிரமாகவெழுந்து — வருந்தி - ப்ரார்த்தனைசெய்து—எந்தாய் - எனதுபிதாவே—துனியுறுகின்றோர்போன்றாய் - துன்பமடைந்தவர்களைப்போலக்காணப்படுகின்றாய்—துயரென - துன்பமென்ன— துடைத்தியென்றான் - கெடுப்பாயென்று. எ-று .... (௱௮௮)

(அ-கை.) அரசன்றேற்றுதல். (கவி) தத்துவஞானமுற்றோர்தளர்வுறார்மகிழார்கஞ்சப், பத்திரம்பயின்றநீரிற்பற்றுமோவென்றலோடுங், குத்திரமேனிக்கும்பன் விளம்புறுகுழலின்பண்போற், சித்திரமாகவொன்றைச்சிகித்துவசனுக்குச்செப்பும் .... *

(இ-ள்.) தத்துவஞானமுற்றோர் - உண்மைஞானமடைந்தவர்கள்—தளர்வுறார் - தளரார்கள்—மகிழார் - சந்தோஷியார்கள்—கஞ்சப்பத்திரம் - தாமரையிலையானது— பயின்றநீரில்-கூடியிருந்தசலத்தில்—பற்றுமோ-பொருந்துமோ—என்றலோடும்-என்றரசன்சொல்லவும்—குத்திரமேனிக்கும்பன்- வஞ்சகவடிவத்தையுடையகும்பமுனி—விளம்புறு-சொல்லப்பட்ட—குழலின்பண்போல்- வேய்ங்குழலினோசையைப்போல—சித்திரமாக-அதிசயமாக—ஒன்றை-ஒருசரித்திரத்தை—சிகித்துவசனுக்குச்செப்பும்-சிகித்துவசவரசனுக்குச்சொல்லுவாள். எ-று. (இ-எ-க-ம்) மாபோகத்தைக் கொடுக்குநிமித்தம் பரிசோதிக்கத்தொடங்கினதாம். ... (௱அகூ)

(அ-கை.) பிராரத்தகன்மசேடமனுபவித்து நீங்கவேண்டுமென்பதை யுறநிப்படுத்துநிமித்தநீங்காததேககன்மத்தை நீக்கும்படிநினைத்துவருந்துவார்களெனல்.(கவி) உடலுளவளவுங்கன்மேந்திரியத்துடனுறல்செய்யாரேற், றிடமுறசமசித்தத்தேசெறிபவரறிஞரல்லார், சடர்களேயாவர்தானேசார்வுறுமவத்தைவென்று, விடநினைத்தறிவிலாதார் வீணிலேமெலிந்துநைவர்.... ... . *

(இ-ள்.) திடமுறசமசித்தத்து- திரமாகச்சமத்துவமனதில்—செறிபவர்-சேர்ந்தவர்கள்—உடலுளவளவும் - தேகமிருக்குமட்டும்— கன்மேந்திரியத்துடன் - கன்மேந்திரியங்களோடும்—உறல்செய்யாரேல்-பொருந்தார்களாயின்—அறிஞரல்லார்-ஞானிகளல்லர்—சடர்களேயாவர்-வஞ்சகராவார்கள்—தானே - சுயமாகவே—சார்வுறுமவத்தை - வந்தடைகின்றவவஸ்தையை—வென்றுவிடநினைத்து - செயஞ்செய்யும்படிகருதி— அறிவிலாதார்வீணிலேமெலிந்துநைவர்-ஞானமில்லாதவர்கள்விருதாவாக விளைத்துவருந்துவார்கள். எ-று .... (௱கூய)

(அ-கை.) தேகமுள்ளமட்டு மவத்தைநீங்காதெனல். (கவி) திலமுளவளவும்போகாத் தயிலம்போற்றேகமட்டும், பலபலவவத்தைநீங்காப் பற்றறவிவற்றைத்தீர்ப்போ, ரலகிலாவிண்ணைவாளாலறுப்பவரொக்குமன்னா, மலவுடலவத்தைநீக்கிலதற்கொக்கும்வாழ்வுண்டாமோ.... .... *

(இ-ள்.) திலமுளவளவும் - எள்ளுள்ளமட்டும்—போகாத்தயிலம்போல்- நீங்காதவெண்ணெயைப்போல—தேகமட்டும் - சரீரமிருக்குமளவும் — பலபலவவத்தைநீங்கா - நாநாவிதமானவவத்தைகணீங்கமாட்டாது—பற்றற-பற்றுதலில்லாமல்—இவற்றைத்தீர்ப்போர்-இவ்வவத்தைகளைக்கெடுப்பவர்கள்—அலகிலாவிண்ணை - அளவிடக்கூடாதவாகாயத்தை—மன்னா-அரசனே—வாளால் - கத்தியினால்—அறுப்பவரொக்கும்- அறுப்பவர்களுக்கொப்பாகும்—மலவுடலவத்தை - மலசரீரத்துக்குள்ளபருவதுன்பத்தை—நீங்கில் - (கன்மேந்திரியநிக்கிரகத்தா)னீங்கில்—அதற்கு - அந்த (ஞானத்தாற்செய்யுந்தேகதுக்கபரித்தியாகமான) வதற்கு— ஒக்கும்வாழ்வுண்டாமோ - இணையானசுகமுண்டாகுமோ. எ-று .... (௱கூக)

(அ-கை.) கன்மநீங்காதென்னும் விதியைச்சொல்லுதல். (கவி) ஒருபான்ஞானேந்தியத்துடனுமொருபால்கன்மேந்தியத்துடனும், வருமாறுளதாமுடலுக்குமலரோன்முதலாமெல்லோருந், தெருள்பான்மையராயினுந்தேகவவத்தைதீராதென்றுணர்கை, யருகாதின்றுவழுவாதவறுதியானவிதிநெறியே.... .... *

(இ-ள்.) உடலுக்கு - தேகத்துக்கு—ஒருபால் - ஒருபக்கத்தில்—ஞானேந்தியத்துடனும் - ஞானேந்திரியத்தோடும்—ஒருபால் - ஒருபக்கத்தில்—கன்மேந்தியத்துடனும் - கன்மேந்திரியத்தோடும்—வருமாறுளதாம் - வருகின்றவிதமுண்டாயிருக்கின்ற— மலரோன்முதலாம்-பிரமன்முதலாகிய—எல்லோரும் - யாவரும்—தெருள்பான்மையராயினும்- தெளிவுள்ளகுணத்தையுடையவராயினும்—தேகவவத்தை - சரீரவவத்தையானது— தீராதென்றுணர்கை - நீங்காதென்றறிதல்—அருகாதின்றுவழுவாத - நசித்துநீங்காத — அறுதியான - நிச்சயமாகிய—விதிநெறியே - நியதிமார்க்கமாம். எ-று..(௱கூஉ)

(அ-கை.) அறிஞர்விதிமார்க்கத்தை யனுசரிப்பார்களெனல். (கவி) கற்றவறிஞரறிவில்லோரெல்லாங்காணப்படுபொருளா, யுற்றபடியால்விதிவசத்தே யுறுவர்கடலினுறுநீர்போ, னித்தமறிஞர்சமபுத்தி நிலையாற்கைகாலசைதலினாற், பெற்றவுடலம்விடுமளவும்பெயராவிதியைப்பின்செல்வர்...... ......: ... . *

(இ-ள்.) கற்றவறிஞர் - கற்றுணர்ந்தஞானவான்களும்—அறிவில்லோர்-அஞ்ஞானிகளும்—எல்லாங்காணப்படுபொருளாய்-யாவுந்திரிஸ்யவஸ்துக்களாய்—உற்றபடியால்-பொருந்திய

தால்—கடலினுள்ளநீர்போல் - சமுத்திரத்திலுள்ளசலத்தைப்போல—விதிவசத்தேயுறுவர் - விதிவசத்திற்செல்லுவார்கள்—நித்தம் - நாடோறும்—அறிஞர் - ஞானவான்கள்— சமபுத்தியால் - சமமானவறிவினிச்சயத்தினால்—கைகாலசைதலினால்- கரசரணங்கள்சரிக்க—பெற்றவுடல் - பெற்றிருக்கின்றசரீரமானது—விடுமளவும் - நீங்கும்பரியந்தம்—பெயராவிதியை நீங்காதவிதியை—பின்செல்வர் - அநுசரிப்பார்கள். எ-று........ ....(ாகூ௩)

(அ-கை.) தனக்குவந்தகன்மத்தைச் சொல்லத்தொடங்கல். (கவி) இரங்கித்தேம்பி யறிவில்லோ ரின்பதுன்பங்களின்மூழ்குந்,நரம்பைத்திரள்களொடுத்தவற்றாற்குறையாவிதியைப்பின்செல்வர், திரம்பப்புகன்றேனன்பட்ட நெறியிற்றுன்பந்தனைக்கேளா, யரங்கட்குவமையாந்துன்ப மன்பர்க்குரைத்தாலாறுதோ.... .... *

(இ-ள்.) அறிவில்லோர் - அஞ்ஞானிகள்—இரங்கித்தேம்பி - கலக்கமுற்று—இன்பதுன்பங்களின்மூழ்கும் - சுகதுக்கங்களிலமிழ்ந்தும்—நரம்பைத்திரள்களோடும் - தேகமநேகமெடுத்தும்---அவற்றால்- அவைகளினால்---குறையாவிதியைப்பின்செல்வர்-நிறைந்தவிதியையனுசரிப்பார்கள்---திரம்பப்புகன்றேன் - மிகவுஞ்சொன்னேன்---நெறியில்-மார்க்கத்தில்---நான்பட்டதுன்பந்தனைக்கேளாய்- யான்பட்டதுயரத்தைக்கேட்பாய்--- அரங்கட்குவமையாந்துன்பம்-அரங்களுககொப்பாகியதுபாதத்தை --- அன்பர்க்குரைத்தால் - அன்புள்ளவர்களுக்குச்சொன்னால்---ஆறுந்தோ-சாந்தியாகாதோ. எ-று.(இ-டு க-ம்) யாவராயினும்பிராரத்தகன்மமனுபவித்துத்திரவேண்டுமென்பதாம்.. ....(ாகூச)

(அ-கை.) தூருவாசமுனிசபித்ததாகக்கற்பித்துச்சொல்லுதல். (கவி) கொத்தார்மலர்தந்துனையகன்றுகுதித்துவிண்போய்ப்பொன்னுலகின், மெய்த்தாதையைச்சேர்ந்திந்திரன்முன்மேவிமீண்டிங்குறவெண்ணி, தத்தாவிண்ணின்றிழிந்திரவிக்கருகேகாற்றின் றடநெறியா, லித்தாரணிசேர்வுறவருவானெழிலிப்பதத்திலேகுதலும் ....*

(இ-ள்.) கொத்தார்மலர்தந்து - புஷ்பக்கொத்தைக்கொடுத்து — உனையகன்று - உன்னைநீங்கி—குதித்துவிண்போய் - பாய்ந்தாகாயத்திற்சென்று — பொன்னுலகில் - தெய்வலோகத்தில்—மெய்த்தாதையைச்சேர்ந்து - உண்மையுள்ளபிதாவையடைந்து—இந்திரன்முன்மேவி-தேவேந்திரனதுசபையினிடத்திற்போய்—மீண்டு-திரும்பவும்—இங்குறவெண்ணி - இவ்விடத்தில்வரும்படியாகச்சிந்தித்து—தத்தாவிண்ணின்றிழிந்து-தாவப்படாதவாகாயத்தினின்றிறங்கி—இரவிக்கருகு - சூரியமண்டலத்தினதுபக்கத்தில்—காற்றின்றடநெறியால்-வாயுவினதுவிசாலமானமார்க்கத்தினால் — இத்தாரணிசேர்வுற - இப்பூமியில்வந்தடைய — வருவான் - வரும்பொருட்டு—எழிலிப்பதத்திலேகுதலும் - அழகுள்ளவித்தவிடத்தில்வரவும். எ-று......(ாகூரு)

(அ-கை.) இ-து. (கவி) ஏகலுற்றதூர்வாசனென்னுமுனியையெதிர்கண்டு,மாகமட்டிலடிதொழுதமற்றுமுனிவன்றனைநோக்கி, நீகறுத்ததுகிலுடுத்தாய்நெறிதீர்பிறனைவிழைபவர்போற், போகலுற்றாயென்றவெனைப்போதமுனிவுற்றம்முனிவன் .... *

(இ-ள்.) ஏகலுற்ற - (மோகமார்க்கமாகப்) போகப்பட்ட — தூர்வாசனென்னுமுனியை-தூருவாசரென்கின்றரிஷியை---எதிர்கண்டு - நேரேபார்த்து---மாகம் - ஆகாயத்தில்---மட்டிலடிதொழுது - அளவற்ற (பெருமையுள்ள) பாதத்தில்வணங்கி --- மற்றுமுனிவன்றனைநோக்கி-பின்புமுனியைப்பார்த்து---நீகறுத்ததுகிலுடுத்தாய் - நீகரியவஸ்திரத்தைத்தரித்தாய் --- நெறிதீர்பிறனை-தூர்த்தபுருஷனை---விழைபவர்போல்-இச்சிக்கின்ற(விபசாரி)களைப்போல---போகலுற்றாயென்றவெனை - போகத்தொடங்கினாயென்றுசொல்லியவென்னை---அம்முனிவன்-அந்தரிஷியானவர்---போதமுனிவுற்று - மிகவுங்கோபித்து. எ-று ....(ாகூசா)

(அ-கை.) இ-து. (கவி) இதுசொல்லுதலாலிரவுதொறு மெழிலேந்திழையாயிருத்தியென, முதுவன்சாபமுரைத்தலுமம் மொழிகேட்டிரங்கிமுனிதாளாம், பதுமம்புகழ்ந்துவேண்டுதற்குப் பார்த்தேனிமைப்பின்முனிமறைந்தா, னதுகண்டுளநொந்திங்கணைந்தே னணங்காந்தன்மையகலாதே................ *

(இ-ள்.) இதுசொல்லுதலால் - நீயிந்தவசனத்தைச்சொன்னதால்—இரவுதொறும்-இரவுகடோறும்—எழிலேந்திழையாய் - அழகியவாபரணங்களையணிந்தபெண்ணாகி—இருத்தியென- இருப்பாயென்று—முதுவன் - முதுணர்ந்தமுனிவன்—சாபமுரைத்தலும - சாபமிடவும்—அம்மொழிகேட்டிரங்கி- அந்தவசனத்தைக்கேட்டழுது—முனிதாளாம்பதுமம்- முனிவனதுபாதபங்கயத்தை—புகழ்ந்து- துதித்து—வேண்டுதற்கு - வேண்டிக்கொள்வதற்கு—பார்த்தேன்- சிந்தித்தேன்—இமைப்பில் - நொடியில்—முனிமறைந்தான்-முனியானவர்மறைந்துபோனார்—அதுகண்டு-அதைப்பார்த்து—உளநொந்து-மனம்வருந்தி—இங்கணைந்தேன்- இவ்விடத்தில்வந்தேன் —அணங்காந்தன்மை - பெண்ணாகுங்குணம்—அகலாது - (எனக்கு)நீங்காது. எ-று....... (ாகூஎ)

(அ-கை.) இ-து. (கவி) குருவானவர்மாதவர்முதலோர்கூட்டங்காணக்கூசாம, லிருள்வாய்மகளாயெவ்வண்ணமிருப்பேனெனவுஞ்சிகித்துவசன், வெருவாதொழிநீபுலம்புதலான்மேவுபயனென்விதிவலியால், வருமேவருகவுடற்கல்லான்மாசிலறிவிற்பற்றுதே. ..... *

(இ-ள்.) குரு - ஆசாரியர்—வானவர் - தேவர்கள்—மாதவர் - முனிவர்கள்— முதலோர்-முதலானவர்கள்—கூட்டங்காண - குழாங்களைத்தரிசிப்பதற்கு—கூசாமல் - நாணாமல்— இருள்வாய் - இராத்திரியில்—மகளாய்- பெண்ணாகி—எவ்வண்ணமிருப்பேனெனவும் - எப்படியிருப்பேனென்றுகும்பமுனிசொல்லவும்—சிகித்துவசன் - சிகித்துவசவரசனானவன்—நீவெருவாதொழி - தேவர்பயப்படாதிரும்—புலம்புதலால்- இரங்குதலால்—மேவுபயனென்- வருகின்றப்ரயோசனமென்ன—விதிவலியால் - நியதிவல்லமையினால்—வருமேவருக- வருவதுவரட்டும்—உடற்கல்லால் - சரீரத்துக்கல்லாமல்— மாசிலறிவிற்பற்றாது - களங்கமற்றவாத்மஞானத்திற்பொருந்தாது. எ-று ....(௱௯௮)

(அ-கை.) இ-து. (கவி) அறிவாலுயர்ந்தநீதுன்பத்தமிழ்ந்தற்குரித்தோவறிவற்ற, சிறியாரன்றோவுள்ளயர்வாரென்றுதேற்றித்தம்மிற்றம், பிறியாவின்பதுன்பங்கள்பிறிவற்றிருந்தாரவ்வளவி, னெறியார்கும்பற்கணங்குருவநேர்வான்போல்வெய்யவனொளித்தான் .... *

(இ-ள்.) அறிவாலுயர்ந்தநீ- ஞானத்தினால்முதிர்ந்தநீர்—துன்பத்து- துயரினிடத்தில்—அமிழ்ந்தற்குரித்தோ - மூழ்குதற்குரியதாமோ—அறிவற்ற - அறிவில்லாத— சிறியாரன்றே-மூடர்களல்லவா—உள்ளயர்வாரென்று - மனதிற்றுன்பப்படுவார்களென்று—தேற்றி- தெளிவித்து—தம்மிற்றம்பிறியா - தங்களிற்றாங்கள்பிரியாமல்—இன்பதுன்பங்கள் - சுகதுக்கங்கள்—பிறிவற்றிருந்தார் - பேதமில்லாமலிருந்தார்கள்— அவ்வளவினெறியார்கும்பற்கு-அம்மட்டில்நீதிநிறைந்தகும்பமுனிக்கு — அணங்குருவநேர்வான்போல் - பெண்வடிவந்தரச் (செல்வது) போல—வெய்யவனொளித்தான்- சூரியன்மறைந்தான். எ-று. (இ-ரு-க-ம்) இரவிற்பெண்வடிவு வருதலைநோக்கி விசனமாகக் கூறினதை யாத்மாவுக்குண்டோவெனத்தேற்றினதாம். (௱௯௯)

(அ-கை.) இரவிற்பெண்வடிவம்வருதல். (கவி) அந்திவரநியமங்களாற்றியிருந்தாரதுகாலை, முந்துமரசன்முகநோக்கிமொழிவான்கும்பன்றளர்ச்சியொடு, மிந்தவுடல்வீழ்வதுபோன்மேலெழுதல்போனினியங்குதல்போல், வந்துபெருநாணொடும்பெண்மைமன்னாவென்னைவளைந்ததுவே .... *

(இ-ள்.) அந்திவரலும்- மாலைப்பொழுதுவரவும்—நியமங்கள்- நித்தியகன்மங்களை—ஆற்றியிருந்தார் - செய்திருந்தார்கள்—அதுகாலை- அக்காலத்தில் —முந்துமரசன்முகநோக்கி-முன்னேயிருக்கின்றவேந்தனதுமுகத்தைப்பார்த்து—கும்பன் - கும்பமுனியானவர்—தளர்ச்சியொடுமொழிவான் - தளர்வுடன்கூறுவார்—இந்தவுடல்- இச்சரீரமானது—வீழ்வதுபோல்-(பூமியில்) விழுவதுபோலும்—மேலெழுதல்போல் - (பெண்குறிகண்) மேலெழுகின்றதுபோலும்—இயங்குதல்போல் - விளங்குவதுபோலும்—பெருநாணொடும்பெண்மை- மிகுந்தவெட்கத்தோடுங்கூடியபெண்டன்மையானது—மன்னாவென்னை - அரசனேயென்னை—வந்துவளைந்தது - வந்துசுற்றிக்கொண்டது. எ-று ....(௨௱)

(அ-கை.) பெண்ணினவயவங்களைக்காட்டுதல். (கவி) கூந்தல்வளர்கின்றதுபாராய், கொங்கையெழுகின்றதுபாராய், சேர்ந்துவருமேகலைபாராய்செறியுமுன்பின்னுண்டான, காந்தைவடிவானதுபாராய்க்காவலாவென்றிரங்கினனாய்ச், சாந்தமுறுகும்பனுமிருந்தான்றலைவன்றானுந்தளர்ந்திருந்தான் .... *

(இ-ள்.) கூந்தல்வளர்கின்றதுபாராய் - அளகம்வளர்கின்றதைப்பார்— கொங்கையெழுகின்றதுபாராய் - தனம்வளர்கின்றதைப்பார்—சேர்ந்துவருமேகலைபாராய் - கூடவருகின்றவஸ்திரத்தைப்பார்—செறியுமுன்பின்னுண்டான - நெருங்கமுன்குறியும்பின்குறியுமுடைய—காந்தைவடிவானதுபாராய் - பெண்வடிவமானதைப்பார்— காவலாவென்றிரங்கினனாய் - அரசனேயென்றுதுக்கப்பட்டவனாய் — சாந்த்முறுகும்பனுமிருந்தான் - உபசாந்தமுள்ளகும்பமுனியுமிருந்தார்— தலைவன்றானும் - அரசனும்—தளர்ந்திருந்தான் - சோர்வுற்றிருந்த (வாசிரியனைப்பார்த்து) எ-று ....(௨௱௧)

(அ-கை.) வத்தகன்மமனுபவிக்கக்கடவதென்றிரக்கமுற்றிருத்தல். (கவி) ஞானவானீவிதிநெறியைநன்றாயறிந்தாயுறற்பால, தானதுற்றாலிரங்கலையென் றரசனுரைப்பவுயர்கும்பன், றானுஞ்சொல்வானினிச்செயலென்றப்பாவிதியை யார்தடுப்பார், மேனிபெண்மையாயிரவுமேவக்கடவேனென்றுரைத்து ....*

(இ-ள்.) ஞானவானீ - ஞானவானாகியநீர்—விதிநெறியை- நியதிமார்க்கத்தை—நன்று

யறிந்தாய் - நன்றாகத்தெரிந்தனை—உறற்பாலதானதற்றால் - வரத்தக்கதுவந்தால்— இரங்கலையென்று - துன்பப்படாதேயென்று—அரசனுரைப்ப - வேந்தன்சொல்ல — உயர்கும்பன்றானுஞ்சொல்வான் - மேலானகும்பமுனியுஞ் சொல்லுவார் — இனிச்செயலென் - இனிச்செய்யவேண்டியதென்ன—தப்பாவிதியை - தவறாதவிதியை — ஆர்தடுப்பார் - ஆர்தடுப்பார்கள்— இரவு - இராவில்—மேவிபெண்மையாய் - சரீரம்பெண்வடிவமாய் — மேவக்கடவேனென்றுரைத்து- அடையக்கடவதானேனென்றுசொல்லி. எ-று. (இ-கூ-க-ம்) பெண்வடிவத்தைக்கண்டு மயங்காததன்மையைத்தெரிந்தனளென்பதாம் .... (௨௱௨)

(அ-கை.) ஏகாசனத்திற்பரிசித்திருந்துமயங்காததன்மையைத்தெரிதல். (கவி) பாயலொன்றிலவ்விரவுபயின்றார்வெறிதேவிடியளவின், மேயபெண்மை தனைவிட்டு மீண்டுகும்பவடிவாக, வேயவிவ்வாறிராப்பெண்ணாயிரவுபோனாற்கும்பனுமா, யாயகன்னியழியாமலமர்ந்தாள்சின்னாட் சூடாலை .... *

(இ-ள்.) அவ்விரவு - அன்றிராத்திரி—பாயலொன்றில் - ஒருசயனத்தில் — வெறிதேபயின்றார் - சும்மாய்க்கூடி(நித்திரைசெய்தார்கள்)—விடியளவில் - உதயகாலத்தில் — மேயபெண்மைதனைவிட்டு - அடைந்தபெண்வடிவத்தைவிட்டு—மீண்டுகும்பவடிவாகவேய - திரும்பக்கும்பமுனியுருவமாக—இவ்வாறு - இந்தப்பிரகாரம்—இராப்பெண்ணாய்- இரவின்மாதாகவும்— இரவுபோனால் - இராக்காலநீங்கினால்—கும்பனுமாய் - கும்பமுனியாகவும் — ஆயகன்னியழியாமல் - ஆகியகன்னித்தன்மைகெடாமல்—சூடாலை - சூடாலையானவள்—சின்னாளமர்ந்தாள்- சிலநாட்கூடியிருந்தாள். எ-று .... (௨௱௩)

(அ-கை) புணரும்போதுஇன்புளவோவென்பதறியநிமித்தமணவினைவேட்டல் (கவி) அன்னாள்கும்பமேனியளாயரசன்றனைப்பார்த்தொருபகலின், மன்னாநித்தமிராப் பெண்மைவருமேன்மடவாரியல்பன்றி, யென்னாளிருப்ப தொருகணவ னெய்தவேண்டுமுனையலது,பின்னாரையுமூவுலகினுமியான்பேணேனன்பாற் பெருமையினால்.

(இ-ள்.) அன்னாள் - அந்தச்சூடாலையானவள்—கும்பமேனியளாய்- கும்பமுனிவடிவத்தையுடையவளாய்—ஒருபகலில் - ஒருமத்தியானத்தில்—அரசன்றனைப்பார்த்து - வேந்தனைப்பார்த்து—மன்னா - அரசனே—நித்தம்-நாடோறும்—இராப்பெண்மைவருமேல்-இரவிற்பெண்டன்மைவருமாயின்—மடவாரியல்பன்றி- பெண்களின்றன்மையல்லாமல்— என்னாளிருப்பது-எத்தனைகாலமிருப்பது—ஒருகணவனெய்தவேண்டும்- ஒருநாயகனையடையவேண்டும்—அன்பாற்பெருமையினால்-அன்பின்மிகுதியினால்—உனையலது-உன்னையல்லாமல்— மூவுலகினும்-திரிலோகத்திலும் — பின்னாரையும்யான்பேணேன் - மற்றெவரையும்நான்விரும்பேன். எ-று.

(அ-கை.) ஆசிரியரவிப்பிராயப்படியரசனமைந்திருத்தல். (கவி) மனைவியாகவிவாகத்தால்வரிப்பாய்நிசிக்கெப்போதுமெனை, யினையதியற்றிற்றீங்குநல மிரண்டுமில்லையெனமேலோடு, மனையவிருப்பேநன்றென்றானரசனதுகேட்டலுங்கும்பன், புனையுநலத்தாவணிமாதப்புரணைபின்றுபுரவலனே .... *

(இ-ள்.) விவாகத்தால் - கலியாணத்தினால்—மனைவியாக-பாரியாளாக— நிசிக்கெப்போதும்- இரவிற்கென்றும்—எனைவரிப்பாய் - என்னையேற்றுக்கொள்ளுவாய் — இனையதியற்றில்-இப்படிப்பட்டதைச்செய்தால் — தீங்குநலமிரண்டும் - நரகசுவர்க்கமாகியவிரண்டும்—இல்லையெனமேலோடும்- இல்லையென்று(கும்பமுனி)சொல்லவும்—அனையவிருப்பே-அவ்விருப்பமே— நன்றென்றானரசன்-நல்லதென்றரசன்சொல்ல—கும்பன்-கும்பமுனியானவர்—அதுகேட்டலும்-அதைக்கேட்டவளவில்—புரவலனே-அரசனே—இன்று-இன்றைக்கு—ஆவணிமாதப்புரணை-ஆவணிமாதப்பர்வம்—புனையுநலத்தது-(மாங்கிலியந்)தரிக்குநன்மையுள்ள(தினம்)எ-று(௨௱௫)

(அ-கை.) முகூர்த்தம்வைத்தல் (கவி) திங்களுதிக்குங்காலத்திற்செய்கவிவாகமெனச் செப்பி,யங்கணரசனொடுமேவியணியுமணிப்பூண்சந்தனங்க,டுங்கமலையிற்கொடுவந்து தூய்நீர்க்கங்கைதனின்மூழ்கிப், பொங்குநெறியாற்கடவுளர்தென்புலத்தோர்தவத்தோர்கழல்போற்றி .... *

(இ-ள்.) திங்களுதிக்குங்காலத்தில்- சந்திரோதயகாலத்தில்—விவாகஞ்செய்கவென-கலியாணஞ்செய்யக்கடவதென்று—செப்பி-சொல்லி—அங்கண்-அழகியகண்களையுடைய—அரசனொடுமேவி- வேந்தனுடன்சென்று—அணியும்-தரிக்கப்படுகின்ற—மணிப்பூண்-இரத்தினாபரணங்களும்—சந்தனங்கள்- சந்தனங்களும்—துங்கமலையிற்கொடுவந்து- உயர்வாகியமகம்மேருவிலிருந்துகொண்டுவந்து—தூய்நீர்க்கங்கைதனின்மூழ்கி-பரிசுத்தமாகியசலத்தையுடையதேவநதியில்ஸ்நானஞ்செய்து—பொங்குநெறியால்- உயர்ந்தவேதமார்க்கத்தினால்—கடவுளர்-தேவர்

களும்—தென்புலத்தோர் - பிதிர்களும்—தவத்தோர் - முனிவர்களு (மாகியவிவர்களுடைய)—கழல்போற்றி - பாதத்தைவணங்கி. எ-று .... (௨௱௬)

(அ-கை.) மணஞ்செய்தல். (கவி) கிரியையொழியார்பலம்விரும்பார்கிளர்கற்பகநல்
கியவெண்பட்,டுரியதெனச்சாற்றினர்வெய்யோனுயர்ந்தவெற்பினிடைச்சென்றான்,
பெரியவிந்துதோன்றுதலும் பேசுமுறைமைக்கிரியைகளா, லரியநியமஞ்செய்து
மணஞ்செய்தானரசனப்போது .... *

(இ-ள்.) கிரியையொழியார் - தொழிலைத்தவிராதவர்களும்—பலம்விரும்பார்- ப்ரயோசனத்தைவிரும்பாதவர்(களுமானவிவர்கள்)—கிளர்கற்பகநல்கிய-விளங்கியகர்பகவிருக்ஷங்கொடுத்த—வெண்பட்டு-வெள்ளைப்பட்டை—உரியதெனச்சாற்றினர்- உரியதென்றுதரித்தார்கள்—வெய்யோன் - சூரியன்—உயர்ந்தவெற்பினிடைசென்றான்-உயர்ந்திருக்கின்றவஸ்தமனகிரியின் மறைந்தான்—பெரியவிந்து- பூரணச்சந்திரன்—தோன்றுதலும்-உதயமாகவும்—பேசுமுறைமைக்கிரியைகளால் - சொல்லப்பட்டமுறைமையையுடையகருமங்களால்—அரியநியமஞ்செய்து- அரிமையானசந்தியாவந்தனஞ்செய்து—அப்போதரசன் - அப்பொழுதேசித்துவசவரசன்—மணஞ்செய்தான் - கலியாணஞ்செய்தான். எ-று .... (௨௱௭)

(அ-கை.) புணர்ந்துமகிழ்தல். (கவி) (வேறு.) இவ்வாறுயர்மந்தரவெற்பிடையே மணஞ்
செய்திவர்கள், கவ்வாவின்பந்துய்த் துகடஞ்சூழ்வலங்கடோறுஞ், செவ்வாய்மயின்மன்ன
வனுந்திரிந்தார்தினமும்மூன்றில், வெவ்வாளரசன்றுயிலும்வேலைதனிற்சூடாலை .... *

(இ-ள்.) இவ்வாறுயர் - இவ்வண்ணமுயர்ந்த—மந்தரவெற்பிடை - மந்தரமலையினிடத்தில்—மணஞ்செய்து - கலியாணஞ்செய்து—இவர்கள் - இவ்விருவரும்—கவ்வாவின்பந்துய்த்து- பற்றில்லாதசுகத்தைப்புசித்து—கடஞ்சூழ் - மலைப்புறஞ்சூழ்ந்த—வனங்கடோறும்-கானகங்கடோறும்—செவ்வாய்மயில் - சிவந்தவாயையுடையமயில் (போன்றசூடாலையும்)—மன்னவனும்-சித்துவசவரசனும்—திரிந்தார் - சஞ்சரித்தார்கள்—தினமும்மூன்றில்-மும்மூன்றுநாளில்—வெவ்வாளரசன்- கொடியவாளாயுதத்தையுடையவேந்தன்—துயிலும்வேலைதனில்- நித்திரைசெய்கின்றசமயத்தில்—சூடாலை - சூடாலையானவள். எ-று .... (௨௱௮)

(அ-கை.) இடையிலரசுசெய்தல் (கவி) சென்றுசென்றுமன்னன்றேசநீதிநடாத்தி,
யொன்றும்பாயறன்னிலொழியாதவள்போன்மீளு,மன்றன்மதனிகைப்பேர்மனைவி
யானமாது, தின்றசிலநாளிற்பின்னெஞ்சிலொன்றைநினைப்பாள் .... *

(இ-ள்.) சென்றுசென்று- அடிக்கடிபோய்—மன்னன்-அரசனது—தேசநீதிநடாத்தி- தேசத்தைநீதியாகநடப்பித்து—ஒன்றும்பாயறன்னில் - பொருந்தாநின்றபடுக்கையில்— ஒழியாதவள்போல்- நீங்காதவளைப்போல—மீளும்- திரும்புவள்—மன்றல் - விவாகஞ்செய்த—மதனிகைப்பேர்- மதனிகையென்னுநாமத்தையுடைய—மனைவியானமாது - பாரியாளாகியசூடாலையானவள்—தின்றசிலநாளிற்பின் - (இப்படி)யிருந்தசிறிதுநாளின்பின்பு—நெஞ்சினொன்றைநினைப்பாள்- மனதிலொன்றைச்சிந்தனைசெய்வாள். எ-று. (இ - எ - க - ம்) தனதின்பமாகமாதரின்பநீங்கினனென் றறிந்தனளென்பதாம் .... (௨௱௯)

(அ-கை.) செல்வத்திலிராகமுளவோவெனப்பரிசோதிக்கத்தொடங்கல். (கவி) உற்ற
போகங்களிற்பற்றொன்றுமிவனுக்கென்றுந், துற்றபோகங்களினாற்சோதிப்போமெ
ன்றெண்ணி, கற்றமாயையாலேகைதவமொன்றிழைத்தாட், சுற்றுந்தேவர்நெருங்க
ச்சுரர்கோன்வனத்திற்றோன்ற .... *

(இ-ள்.) உற்றபோகங்களில் - (இவ்வுலகத்திற்பொருந்திய) போகங்களில்—இவனுக்கென்றும் - இவ்வரசனுக்கெப்போதும்—பற்றொன்றுமி - ஆசைபொருந்ாது—துற்றபோகங்களினால் - மிகுந்த (தேவ) போகங்களினால்— சோதிப்போமென்றெண்ணி - சோதிக்கவேண்டுமென்றுநினைத்து—கற்றமாயையால் - தானப்பியாசஞ்செய்திருக்கின்ற(வணிமாமுதலிய)வித்தைகளினால்—சுற்றுந்தேவர்நெருங்க - நான்குபுறத்திலுந்தேவர்கள்சூழ்ந்துவர—சுரர்கோன்- தேவேந்திரன்—வனத்திற்றோன்ற - (இந்தக்) கானகத்திற்றோற்றும்படியாக— கைதவமொன்றிழைத்தாள் - ஒருமாயைசெய்தாள். எ-று .... (௨௱௰)

(அ-கை.) இ-து. (கவி) வந்தமகவான்றன்னைமன்னன்கண்டுவணங்கி, முந்துபூசை
செய்துமுதல்வநீயிங்கெய்த, வெந்தவறமுன்செய்தேனென்னவிமையோரிறையு
மந்தமனனைநோக்கியன்பாலிவ்வாறறைவான் .... *

(இ-ள்.) வந்தமகவான்றன்னை - வந்திருக்குந்தேவேந்திரனை— மன்னன் - அரசனானவன்—கண்டுவணங்கி - பார்த்துநமஸ்கரித்து—முந்துபூசைசெய்து - முன்னேவாராதனைசெய்து

முதல்வ - முதன்மையானவரே — நீயிங்கெய்த - நீரிவ்விடத்தில்வர — எந்தவறமுன்செய்தே னென்ன - என்னதருமத்தைமுன்செய்தேனோவென்றுசொல்ல—இமையோரிறையும்- தேவேந்திரனும்—அந்தமன்னைநோக்கி-அச்சிகித்துவசவரசனைப்பார்த்து—அன்பால்-அன்பினால்—இவ்வாறறைவான் - இவ்வண்ணஞ்சொல்லுவான். எ-று .... (௨௱௰௧)

(அ-கை.) இ-து. (கவி) உனதுகுணத்தினலத்தா லும்பருடனுன்வந்தேன், கனகவுலகு மமக்கேகடவதாமங்குள்ளோர், நினதுவரவுநோக்கிநின்றாரம்பைமுதலோர், வனசவதனம்மலரமார்த்தாண்டனைப்போல்வருவாய் .... *

(இ-ள்.) உனதுகுணத்தினலத்தால் - உமதுகுணத்தினன்மையினால்—உம்பருடனுன்வந்தேன்- தேவர்களோடியானுன்வந்தேன் — கனகவுலகம் - தேவலோகம் — உமக்கேகடவதாம்- உமக்கேயாகக்கடவதென்று—அங்குள்ளோர்- அவ்விடத்திலுள்ளஸ்திரீகள்—நினதுவரவுநோக்கிநின்றார்- உமதுவரவைப்பார்த்திருக்கிறார்கள்—அரம்பைமுதலோர்- அரம்பைமுதலியதெய்வஸ்திரீகளது—வனசவதனமலர- அம்புசமலரைப்போலமுகமானதுவிகசிக்க— மார்த்தாண்டனைப்போல்வருவாய் - சூரியனைப்போலவருவாய். எ-று .... (௨௱௰௨)

(அ-கை.) இ-து. (கவி) கற்பமளவுமிருந்து கடவுட்போகமெல்லாஞ்; சிற்பமன்றித்துய்க்கச் சீவன்முத்திமன்னா, வற்பந்தாழாதடைவாயழைப்பான்வந்தேனென்ற, சொற்பங்கிகளைக்கேட்டு தூயமன்னன்சொல்வான் .... *

(இ-ள்.) கற்பமளவுமிருந்து - கற்பகாலமட்டுமிருந்து— கடவுட்போகமெல்லாம் - தேவபோகங்களனைத்தையும்—சிற்பமன்றித்துய்க்க - விசித்திரமாகப்புசிக்க— சீவன்முத்திமன்னா- சீவன்முத்தியையுடையவரசனே — அற்பந்தாழாதடைவாய் - க்ஷணநேரந்தங்காமல்வருவா(யென்று)—அழைப்பான்வந்தேனென்ற - அழைக்கும்பொருட்டுவந்தேனென்று (சொல்லியதேவேந்திரன்)—சொற்பங்கிகளைக்கேட்டு- சொல்விசித்திரங்களைக்கேட்டு—தூயமன்னன்சொல்வான் - மேலானவரசன்கூறுவான். எ-று. .... (௨௱௰௩)

(அ-கை.) இ-து. (கவி) அங்குந்துறக்கத்தின்பமனைத்துமறிவேனெந்தா, யிங்கொன் றங்கொன்றில்லையெங்குஞ்சுவர்க்கமெனக்குப், பொங்குஞ்சுகமேயெங்கும்பொன்னாடதனால்வேண்டேன், றங்கும்பதமேவென்றே சற்றும்பற்றற்றுரைப்ப............ *

(இ-ள்.) அங்கும் - அவ்விடத்திலும்—துறக்கத்து- சுவர்க்கத்திலுள்ள —இன்பமனைத்தும்-சுகங்களையெல்லாம் — எந்தாயறிவேன் - எனதுபிதாவான (தேவனேயா) னறிவேன்—இங்கென்று- இவ்விடமென்றும்—அங்கென்றில்லை - அவ்விடமென்றும்பேதமில்லை—எனக்கு-அடியேனுக்கு—எங்குஞ்சுவர்க்கம் - எவ்விடத்துஞ்சுவர்க்கமேயாம்— எங்கும் - எவ்விடத்திலும்—பொங்குஞ்சுகமே-மிகுந்தசுகமேயாம்—பொன்னாடு-தேவலோகத்தை—அதனால்வேண்டேன்- ஆதலால்விரும்பேன்—தங்கும் - நீர்வாசஞ்செய்யாநின்ற—பதமேவென்று-இடத்துக்குப்போமென்று— சற்றும்பற்றற்றுரைப்ப - எவ்வளவேனு மிச்சையின்றி யரசன்சொல்ல. எ - று. (இ-ரு-க-ம்) தனதுமாயையாற் றேவேந்திரன்முதலியோர்களாகவந்து தேவபோகங்கொடுக்கப்பிரார்த்தித்தழைத்து மதுவொரு சுகமாகத் தோற்றுமற் றனது சுகத்திற் சுகித்திருந்ததைத் தெரிந்தனளென்பதாம்...... .... (௨௱௰௪)

(அ-கை.) அபிமானமகங்காரமானது வேறிருளவோவெனப் பரிசோதித்தல்.
(கவி) மடங்கியமரர்கூட்டம் வந்தவழியேபோகத், தொடங்குமாயைபலவாற் சோதித்திடவுநெஞ்ச, மடங்கிவிடுதல்கண்டுமயலோர்மாயையாலே, தடங்கண் மயில்சூடாலைத் தனிச்சோதனைசெய்தனளே...... .... *

(இ-ள்.) மடங்கியமரர்கூட்டம்- திரும்பித்தேவகுழாங்கள்—வந்தவழியேபோக-வந்தமார்க்கத்திற்செல்ல—தொடங்குமாயை- தொடங்காநின்றமாயையினால்—பலவாற்சோதித்திடவும்- நானாவிதமாகச்சோதனைசெய்யவும்—நெஞ்சமடங்கிவிடுதல்கண்டு - மனநசித்ததைப்பார்த்து—அயல்- பக்கத்தில்—ஓர்மாயையால்-ஒருமாயாவித்தையினால்—தடங்கண்மயில்சூடாலை-விசாலமாகியகண்களையுடையமயில்போன்றசூடாலையானவள்—தனிச்சோதனைசெய்தனள்- ஏகாந்தமாயொருசோதனைசெய்தாள். எ-று.... ....(௨௱௰௫)

(அ-கை.) தானேசோரனுக்கூடல். (கவி) திங்களுதித்தவளவிற் செபித்துக்கங்கைக்கரையிற், றுங்கவரசனிருப்பதற்றோகையன்னாள் புறம்போய்க், கொங்குமலரானிறைந்தசோலையிலொர்பிருந்த வந்தமொருநார்த்தனைத்தான் சங்கற்பித்தூப்புணர்ந்தாள்..... .... *

(இ-ள்.) திங்களுதித்தவளவில் - சந்திரோதயமானசமயத்தில்—கங்கைக்கரையில் - கங்காதீரத்தில்—செபித்து-செபஞ்செய்து—துங்கவரசனிருப்ப-பரிசுத்தமுள்ளசிகித்துவசவரசனிரு

க்க—தோகையன்னாள் - மயிலுக்கொப்பாகியசூடாலையானவள் — புறம்போய் - புறம்பாகிய (கொடிவீட்டிற்)சென்று—கொங்குமலராணிறைந்த-கோங்குமலர்களினானிரம்பிய—கோலவமளியொன்றில்- அழகியவொருசயனத்தில்—தங்குமொருதூர்த்தனை - வசிக்கின்றவொருதூர்த்தபுருஷனை—தான்சங்கற்பித்து - தானுண்டாக்கி—புணர்ந்தாள் - கூடினாள். எ-று...... (௨௱௯௬)

(அ-கை.) அரசன்கண்டுமகிழ்தல். (கவி) சந்திமுடித்தமாதைச் சாரமேறுந்
தேடி, வந்தவழிப்பிற்புணர்ந்து மகிழுவாரைநோக்கிச், சிந்தைவிகற்பமின்றிச்
சித்தமகிழ்ந்தங்கவரை, முந்தவிடையூறறநீர் முயங்குமென்றுபோனான்.....*

(இ-ள்.) சந்திமுடித்து- சந்தியாவந்தனஞ்செய்து—மாதை- மதனிகையானபெண்ணை—சாரமேறுந்தேடி - மலைப்பக்கங்களெல்லாந்தேடி— வந்தவழியில் - வரப்பட்டமார்க்கத்தில்—புணர்ந்துமகிழும் - கூடிக்களிக்கின்ற—அவரைநோக்கி- அவர்களைப்பார்த்து—சிந்தைவிகற்பமின்றி- மனோவிகற்பமில்லாமல்—சித்தமகிழ்ந்து - மனமகிழ்ச்சியாய்—அங்கவரை-அவ்விடத்திலவர்களை—முந்த - முன்னனுபவித்தப்ரகாரம்—இடையூறற- விக்கினமில்லாமல்—நீர்முயங்குமென்றுபோனான் - நீங்கள்புணருங்களென்று(சொல்லிப்)போனார். எ-று............ (௨௱௯௭)

(அ-கை.) தூர்த்தவிலக்கண்த்துடனெதிரேநிற்றல். (கவி) போகிமறைந்துமுகூர்த்தம்
போனபின்னரிவளும், வேகியாதுபோனான்விகற்பமின்மைகாண்பா, ளேகியமளித்தொ
டர்ச்சியெழிலும்வடிவுந்தோன்ற, யோகிமுன்னர்நின்றுளொதுங்கிநாணிவணங்கி ....*

(இ-ள்.) மறைந்துபோகி - மறைந்துபோய்—முகூர்த்தம்போனபின்னர் - இரண்டுநாழிகைகழிந்தபின்பு—இவளும்- இந்தமதனிகையும்—வேகியாதுபோனான்- கோபிக்காமற்போனவ(னாகியவரசனிடத்தில்)—விகற்பமின்மை- விகற்பமில்லாமையை—காண்பாளேகி-பார்க்கும்படிபோய்—அமளித்தொடர்ச்சி - படுக்கையின்றொடர்பும்—எழிலும்- (அதி) னழகும்—வடிவுந்தோன்ற - (அதி)னுருவமுந்தோற்றும்படி—யோகிமுன்னொதுங்கி - இராசயோகிமுன்புபதுங்கி—நாணிவணங்கிநின்றாள் - வெட்கத்துடன்வணக்கமுற்றுநின்றனள். எ-று, (௨௱௯௮)

(அ-கை.) அரசன்குளிர்ந்துரைத்தல். (கவி) வேறு. மதனிகைப்பெயர்மங்கையுமிவ்வண
ம்வருந்தி, விதனமுற்றனள்போனிற்பவேந்தனுஞ்சமாதி, யதனையுற்றிருந்தானறிவுற்றன
ன்பார்த்துக், கதமறக்குளிர்புந்தியான்மெல்லெனக்கழறும் .... *

(இ-ள்.) மதனிகைப்பெயர் - மதனிகையென்னுநாமத்தையுடைய—மங்கையும்-சூடாலையும்—இவ்வணம்வருந்தி - இவ்விதமாய்நொந்து—விதனமுற்றனள்போனிற்க - விசனத்தையடைந்தவளைப்போலநிற்க—வேந்தனும்- அரசனும்— சமாதியதனையுற்றிருந்தான்-சமாதியையடைந்திருந்தான்—அறிவுற்றனன் - (சமாதியைவிட்) டறியவந்தசிகித்துவசன் — பார்த்து-(மதனிகையைக்) கண்டு—கதமற - கோபமில்லாமல்— குளிர்புந்தியால் - சாந்தமுள்ளபுத்தியினால்—மெல்லெனக்கழறும் - மிருதுவாகச்சொல்லுவார். எ-று .... (௨௱௯௯)

(அ-கை.) சோரத்தைச்சகிக்கவேண்டுமெனல். (கவி) விரைவில்வந்ததென்முயங்குறுமகி
ணனைவிட்டு, நிரைவளைக்கையாய்மீண்டுபோயின்பமேநிறையென், றுரைசெய்காலையின்
மதனிகையுரைசெய்வாளுயர்ந்த, புரையிலாதவர்பிழைபலபொறுப்பதுபுகழே ... . *

(இ-ள்.) முயங்குறுமகிணனைவிட்டு-புணராநின்றநாயகனைவிட்டு—விரைவில்வந்ததென்- சீக்கிரமாகவந்ததென்ன—நிரைவளை - வரிசையாகவளையலையணிந்த— கையாய் - கரங்களையுடையபெண்ணே—மீண்டுபோய் - திரும்பிப்போய்— இன்பநிறையென்று - சுகத்தைநிறைப்பாயென்று—உரைசெய்காலையில் - அரசன்சொன்னசமயத்தில் — மதனிகையுரைசெய்வாள்- மதனிகைசொல்லுவாள்—புரையிலாதவர்பலபிழைபொறுப்பது - குற்றமற்றவர்கள் (மூடர்களது) பலகுற்றங்களைச்சகிப்பது—உயர்ந்தபுகழே-மேலானகீர்த்தியேயாம். எ-று.....(௩௱)

(அ-கை.) இ-து. (கவி) மாதராரியலளவறுபேதமாய்மருளுங், காதலோவெனில்
எண்மடிகருமமொன்றறியா, ராதலாலெனதரும்பிழைபொறுத்தருளென்னப், போ
தபாரகன்மதனிகைக்கிவ்வுரைபுகன்றான் .... *

(இ-ள். மாதராரியல் - பெண்களுடையகுணமானது — அளவறுபேதமாய்மருளும்- அநந்தபேதமாகமயங்கும்—காதலோவெனில் - ஆசையோவென்றால்—எண்மடி - எட்டுப்பங்காம்—கருமமொன்றறியார் - ஒருகாரியமுந்தெரியமாட்டார்கள் — ஆதலால்- ஆதலினால்—எனதரும்பிழை - என்னுடையவரிதானதப்பிதத்தை— பொறுத்தருளென்ன - சமித்தருள்வாயென்று(மதனிகைசொல்ல)— போதபாரகன்-ஞானபாரகனான சிகித்துவசன்—மதனிகைக்கு-மதனிகையான (பாரியாளுக்கு) —இவ்வுரைபுகன்றான் - இந்தவசனத்தைச்சொன்னான். எ-று.

(அ-கை.) அரசன்சமதிருஷ்டியிலிருத்தல். (கவி) வானிலேமரமுளைக்கினுமுனிவென்கண்
வாரா, தானமேலவரிகழ்வொன்றன்னமேயுன்னை, மேனயந்துபெண் ணெனவிரும்பல
னென்றுவேந்த, னீனமில்லதோர்சமமுறுபார்வையோடிருப்ப........................ *

(இ-ள்.) வானில் - ஆகாயத்தில்—மரமுளைக்கினும் - விருக்ஷமுண்டானாலும்—முனிவென் கண்வாரா - கோபமென்னிடத்தில்வரமாட்டாது—ஆனமேலவர் - ஆகியசத்துருக்கள்— இகழ்வொன்று - நிந்திப்பார்களென் (றுன்னுவதேயன்றி) — அன்னமே - அன்னத்தைப்போலநடையையுடையவளே—உன்னைமேனயந்து-உன்னைமேலாகவிரும்பி— பெண்ணெனவிரும்பலனென்று-மனைவியாகவிச்சிக்கிலனென்றுசொல்லி—வேந்தன்-சிகித்துவசவரசனானவன்--ஈனமில்லது-குறைவில்லாததான—ஓர்சமமுறு-ஒப்பற்றசமத்துவமுள்ள—பார்வையோடிருப்ப-திருஷ்டியுடனிருக்க.எ-று.(இ-அ-க-ம்)அபிமானவகங்காரமின்மையைக்கண்டனளென்பதாம்(உஉஉ)

(அ-கை.) சின்மாத்திரமாய்ச்சகலபற்றையுநீக்கினனென்னல். (கவி) கண்டுநின்றசூடாலையுங்
கருத்தினுன்னினவாள்,மண்டிராகமுங்கோபமும்வேரறமாய்த்தான், மிண்டுபோகமுஞ்செ
ல்வமுமேவிடாதிவனை, திண்டிறற்புயன்ஞானத்தின்கரைகண்டுசேர்ந்தான் .... *

(இ-ள்.) கண்டுநின்றசூடாலையும்-பார்த்திருந்தசூடாலையானவளும்—கருத்தினுன்னினவாள்-மனதினாற்சிந்திப்பாள்—மண்டிராகமும் - மிகுந்தகாமத்தையும்—கோபமும் - குரோதத்தையும்—வேரறமாய்த்தான் - மூலத்துடன்கெடுத்தான் — மிண்டுபோகமும் - மிகுந்தயோகங்களும்—செல்வமும் - சிறந்தசித்திகளும்—இவனைமேவிடாது- இவ்வரசனையடையமாட்டாது——திண்டிறற்புயன் - வலியபுசத்தையுடையவரசனானவன்—ஞானத்தின்-ஞானத்தினது—கரைகண்டுசேர்ந்தான் - முடிவைத்தரிசித்தடைந்தான். எ-று .... (உஉங)

(அ-கை.) இனிப்பரிசோதிக்குங்கருத்தையும்போதிக்கவந்தமறைவையுநீக்கிச்சூடா
லையாகநிற்றல். (கவி) மறைதன்மட்டினிமதனிகைவடிவினைமாற்றி, முறைமையான
சூடாலையாய்முன்னிற்பனென்று, விறைவன்முன்புசூடாலையாய்த்தோன்றவுமிவளை
ப், பொறையினின்றவனோக்கிநல்வியப்பொடுபுகலும்.. .... *

(இ-ள்) மறைதன்மட்டு-மறந்திருப்பதுபோதும்—இனிமதனிகைவடிவினைமாற்றி-இப்போது மதனிகையென்னுமுருவத்தைவிடுத்து—முறைமையான் - தனக்குமுறைமையாயிருக்கின்ற—சூடாலையாய்-சூடாலைவடிவத்தையுடையவளாய்—முன்னிற்பனென்று- எதிரேநிற்பேனென்றுநினைந்து—இறைவன்முன்பு- அரசன்முன்னே— சூடாலையாய்த்தோன்றவும்-சூடாலையாகத்தோற்றவும்—இவளை-இச்சூடாலையை—பொறையினின்றவனோக்கி - உபசாந்தத்திலிருந்தவன் பார்த்து—நல்வியப்பொடுபுகலும்-நல்லவதிசயத்துடன்சொல்லுவார். எ-று .... (உஉச)

(அ-கை.) அரசன்வினவுக்குத்தரங்கூறல்.(கவி)வடிவும்வார்த்தையுமொடுக்கமுமற்றுளகு
ணமு, முடிவிலாதசூடாலைபோற்றோன்றினைமுன்னே, நெடியகண்ணினீயாரெனநிருபதி
கேட்பக், கடிமணஞ்செய்சூடாலைநானெனமற்றுங்கழறும்... ....*

(இ-ள்.) வடிவும் - உருவமும்—வார்த்தையும் - வசனமும்—ஒடுக்கமும் - அடக்கமும்—மற்றுளகுணமும் - இன்னமுண்டாகியசகலகுணங்களும்—முடிவிலாதசூடாலைபோல் - அளவற்றிருக்கின்றசூடாலையைப்போல—முன்றோன்றினை - (என்) முன்றோற்றினாய்— நெடியகண்ணி- நீண்டகண்களையுடையவளே—நீயாரென - நீயாரென்று—நிருபதிகேட்ப - அரசன்கேட்க—கடிமணஞ்செய் - நீர்கலியாணஞ்செய்த—சூடாலைநானென - சூடாலையானவள்யானென்று சொல்லி—மற்றுங்கழறும் - இன்னமுஞ்சொல்லுவாள். எ-று..... ....(உஉரு)

(அ-கை.) மறுவேடங்கொண்டுவந்தவளடியேனேயெனல். (கவி) கும்பவேடமுமதனிகை
வேடமுங்கொடுநா, னம்பனேயுனையுணர்த்தினேன்ஞானத்தினிலைமை, யிம்பர்மாயையா
ற்சோதனைபண்ணினேனிவற்றைக்,கம்பமின்றியதியானத்தாற்காண்குதியென்ன...... *

(இ-ள்.) நான் - யான்—கும்பவேடமும் - கும்பமுனிவடிவத்தையும்— மதனிகைவேடமும் - மதனிகைவடிவத்தையும்—கொடு - கொண்டு—நம்பனே - எனதுநாயகனே — உனையுணர்த்தினேன் - உனதாத்மஞானத்தையறிவித்தேன்— ஞானத்தினிலைமை - ஞானத்தினதுநிச்சயத்தை—இம்பர் - இவ்விடத்தில்—மாயையால் - மாயையினால் — சோதனைபண்ணினேன்-பரிசோதித்தேன்—இவற்றை - இவைகளை—கம்பமின்றியதியானத்தால்- நிருவிகற்பசமாதியினால்—காண்குதியென்ன - பார்ப்பாயென்றுசொல்ல. எ-று .... (உஉசா)

(அ-கை.) ஞானதிருஷ்டியாற்றெரிந்தானெனல். (கவி) ஞானயோகமாந்தியானத்தானர
பதிநோக்கி, மானராச்சியந்துறந்ததுமுதலெலாவந்து, தானலஞ்செய்சூடாலைதான்றோ
ன்றியதளவா, யீனமின்றியேயாவையுமுணர்ந்தனனிருந்து .... *

(இ-ள்.) ஞானயோகமாம்-சைதன்யத்திலயிக்யமான—தியானத்தால் -கருத்தினுல்—நரபதிநோக்கி-அரசன்பார்த்து— மானராச்சியந்துறந்ததுமுதலென - மாட்சிமைப்பட்டநகரத்தைத்க்கினநாண்முதலாக—வந்துதானலஞ்செய்- (தானே)வந்தனுபவத்தைவிளக்கின—சூடாலைதான்ருேன்றியதளவாய்-சூடாலையாகத்தோற்றினபரியந்தம்—ஈனமின்றியிருந்து - ஒன்றுங்குறைவில்லாமற்சமாதியிலிருந்து — யாவையுமுணர்ந்தனன் - சகலத்தையுமறிந்தான். எ-று.

(அ-கை.) துதித்தாலிங்கனஞ்செய்தாநந்தத்தின்மூழ்குதல். (கவி) தியானநீங்கினன்புளக
மேநிறைந்தனன்றிண்டோ, டயாவுமன்புமீ தென்னெனத்தயங்குசூடாலைக், குயாசலந்
தழீஇநெடிதிருந்தொன்றுமேற்கூறு, னியாயமன்னவனுநந்தத்தமிழ்ந்தனனிமிடம்..... *

(இ-ள்.) தியானநீங்கி-சமாதியைவிட்டு—நன்புளகநிறைந்தனன்-நல்லபுளகாங்கிதநிறைந்தவனுய்—திண்டோள்-பலம்பொருந்தியபுசத்தினுல்—தயாவும் - தயவும்—அன்பும் - ஆசையும்—ஈதென்னெனதயங்குசூடாலை - இதென்னவென்றுசொல்லும்படியாகப்ரகாசிக்கின்றசூடாலையினது—குயாசலந்தழீஇநெடிதிருந்து - தனகிரியைத்தழுவிவெகுநேரமிருந்து — ஒன்றுமேற்கூருன் - ஒன்றையுமேற்சொல்லாதவனுய்—நியாயமன்னவன் - நீதியுள்ளவரசன் — நிமிடம் - ஒருக்ஷணம்—ஆநந்தத்தமிழ்ந்தனன் - ஆநந்தத்தின்முழுகினுன். எ-று......... (௨௨௮)

(அ-கை.) கைம்மாறுளவோவென வினவுதல். (கவி) மடியின்மேலந்த வஞ்சியைவைத்த
வனுரைப்பான், முடிவில்பேரிருட் குகைநிகர்மோகநின்றென்னை, நெடியபுந்தியாலுய்த்
தனையுனக்கெவர்நிகரோ, கொடிமருங்குலாயியற்றுகைம்மாறுமொன்றுளவோ .... *

(இ-ள்.) மடியின்மேல் - துடையின்மேல்—அந்தவஞ்சியைவைத்து - அந்தசூடாலையைவைத்துக்கொண்டு—அவனுரைப்பான் - அவ்வரசன்சொல்லுவான்— முடிவில் - அளவற்ற—பேரிருட்குகைநிகர் - பெரிதானவிருண்முழைக்கொப்பாகிய—மோகநின்றென்னை - மோகத்திலிருந்தவென்னை—நெடியபுந்தியால் - விசாலமானவறிவினுல்—உய்த்தனை- கரையேற்றினுய்—உனக்கெவர்நிகர் - உனக்காரொப்பானவர்கள்—கொடிமருங்குலாய்- கொடிபோன்றவிடையையுடையபெண்ணே—இயற்று - செய்கின்ற—கைம்மாறுமொன்றுளவோ- வதிலுபகாரமொன்றுண்டோசொல்லாய். எ-று.. (௨௨௯)

(அ-கை.) இ-து. (கவி) வருபவக்கடற்கரையுளாய் நிராசையைமருவுந், தரும
மேயிதற்கென்கைம்மாறுளதெனச்சாற்றத், தெரிவையோதுவாளுணங்குபல்
கிரியையிற்றியங்குங், கருமங்கண்டுனை யுய்விக்கநாடினேன்கவன்று.......... *

(இ-ள்.) வருபவக்கடல் - வரானின்றசநநசாகரத்தின்—கரையுளாய்-கரையேறியிருப்பவளே—நிராசையைமருவும்- நிராசையைப்பொருந்துகின்ற—தருமமே-நீதியானவளே—இதற்கென்கைம்மாறுளதோ - இதற்கென்னபிரதியுபகாரமிருக்கின்றது—எனச்சாற்ற-என் (றரசன்) சொல்ல—தெரிவையோதுவாள்-சூடாலையானவள்சொல்லுவாள்—உணங்கு-வாடுகின்ற—பல்கிரியையிற்றியங்கும்- பலதவத்தொழிலாற்கலங்குகின்ற—கருமங்கண்டு-கன்மத்தைப்பார்த்து—உனையுய்விக்க-உன்னைக்கரையேற்ற—கவன்று-வருத்தமாய்—நாடினேன்-தேடிவந்தேன். எ-று.

(அ-கை.) சங்கற்பமற்ற நீ சங்கற்பித்தேன் றுதிக்கின்றுயெனல். (கவி) நீயிதற்கெனைமே
ம்படநிகழ்த்துவதென்னே, மேயபுன்ருெழி னினைவுகள்சங்கற்பவிகற்ப, மாயதெத்தனை
யவையெலாமகற்றினையன்ருே, தூயநாயகவென்னனும் வேந்தனுஞ்சொல்வான்....... *

(இ-ள்.) நீயிதற்கெனை - நீரிதற்காகவென்னை—மேம்பட- மேம்பாடாக—நிகழ்த்துவதென்னே- சொல்லுவதென்ன—மேயபுன்ருெழில்- பொருந்தியவற்பச்செயல்களும்—நினைவுகள்- நினைப்புகளும்—சங்கற்பவிகற்பம் - சங்கற்பவிகற்பங்களும்— ஆயதெத்தனை - ஆகியதெவ்வளவோ—அவையெலாம் - அவையாவையும்—அகற்றினையன்ருே - நீக்கினுயல்லவா — தூயநாகவென்னனும் - மேலானதலைவனேயென்று சூடாலைசொல்லவும் — வேந்தனுஞ்சொல்வான்- அரசனுஞ்சொல்லுவான். எ-று.. (௨௩௧)

(அ-கை.) மனைவியாற்பெற்றமகிழ்ச்சியையுரைத்தல். (கவி) ஐயமற்றனனுசையற்றேன்
பிறிவற்றே,நொய்யவிண்ணையொத்தேன்பொருள்வடிவமாய்நுடங்கேன்,செய்யலாவதோ
ர்நிட்டையுற்றேன்சித்தமகிழ்ச்சி, வெய்யதுன்பமொன்றிலனிதுவதுவெனவிளங்கேன் *

(இ-ள்.) ஐயமற்றனன்- சந்தேகநீங்கினேன்—ஆசையற்றேன்-இச்சையற்றேன்—பிறிவற்றேன்- வேற்றுமையற்றேன்—நொய்யவிண்ணையொத்தேன் - சொச்சமானவாகாயத்துக்கொப்பானேன்—பொருள்வடிவமாய் - பதார்த்தவடிவங்களாக— நுடங்கேன்- வாடேன்—செய்யலாவது- செய்யத்தகுந்ததான—ஓர்நிட்டையுற்றேன்-ஒப்பற்றசமாதியடைந்தேன்—சித்தமகிழ்ச்சிவெய்யதுன்பம் - மனமகிழ்ச்சியுங்கொடியதுயரமும்—ஒன்றிலன்-பொருந்திலன்—இதுவதுவெனவிளங்கேன் - இதுவதுவென்றுப்ரகாசிக்கேன். எ-று.. (௨௩௨)

(அ-கை.) இ - து. (கவி) சோதிமண்டலத்தெழுந்ததாய்ச்சுவரினிற்படாமன், மீறு விஞ்சுதல்குறைதலற்றிருப்பதோர்விளக்கந், தீதிலாவெணக்குவமையாஞ்சகத்தினை த்தீர்ந்து, யாதும்மேவிவிண்ணிற்பதற்கிணையொத்துநின்றேன் .... *

(இ-ள்.) சோதிமண்டலத்து - ப்ரகாசமுள்ளசூரியமண்டலத்திலிருந்து—எழுந்ததாய்- உண்டானதாய்—சுவரினிற்படாமல் - சுவரிற்படாமல் — மீறுவிஞ்சுதல் - மேலிடுதலும்— குறைதல் - குறைதலும்—அற்றிருப்பதோர்விளக்கம் - இல்லாதிருக்கின்றவொப்பற்றப்ரகாச மானது—தீதிலாவெணக்கு - குற்றமற்றவெனக்கு—உவமையாம் - ஒப்பாகும் — சகத்தினைத் தீர்ந்து - உலகத்தைவிட்டு—யாதும்மேவி- சகலத்தையும்பொருந்தி—விண்ணிற்பதற்கு-ஆகாய மிருப்பதற்கு—இணையொத்துநின்றேன்-ஒப்பாயிருந்தேன். எ-று .... (௨௱௩)

(அ-கை.) அனுபவாவேசத்தாலாசிரியரை வணங்குதல். (கவி) உண்டெனுந்தன்மையென் னுருவேமற்றொன்றுமுரைக்கக், கண்டிலேனதனுலெனக் கருணைசெய்குருநீ, முண்டகப்பதந் தொழுதனனென்றவன்மொழியத், தொண்டைவாயவள்மேற்செயல்சொல்லுதியென்றாள்

(இ-ள்.) உண்டெனுந்தன்மை-சத்தாமாத்திரமென்னுங்குணத்தையுடையது—என்னுரு- எனதுஸ்வரூபம்—வேமற்றொன்றும்- மற்றொன்றையும்—உரைக்கக்கண்டிலேன் - சொல்லவறியே ன்—அதனுலெனக்கு - ஆதலாலடியேனுக்கு — கருணைசெய்குருநீ - கிருபைசெய்கின்றவாசா ரியர்நீயே—முண்டகப்பதம்-(உனது)தாமரைமலர்போன்றபாதத்தை—தொழுதனனென்று- வணங்கினேனென்று—அவன்மொழிய- அந்தவரசன்சொல்ல—தொண்டைவாயவள்-கோவை ப்பழம்போன்றவாயுள்ளசூடாலையானவள்—மேற்செயல்- இனிசெய்யுங்காரியத்தை —சொல் லுதியென்றாள் - சொல்லுமென்றுகேட்டாள். எ-று. (இ-மை-க-ம்) தலைவியெனத் தலைவன் கண் டொருவருக்கொருவர் முகமன்வசனத்தோடு மகிழ்ந்திருந்ததாம்............................... (௨௱௪)

(அ-கை.) பிராரத்தகன்மசேடநீங்கும்பொருட் டரசாங்கஞ்செய்யவேண்டுமெனல். (கவி) பற்றுவிட்டிலன்படிகமேற்பாயொளியென்ன, நித்தநீசொன்னசெய்தனனெ ன்றனனிருப, னுற்றதீதெனிற்பேதமையொன்றைமொழித்து, மற்றைமுன்னு ளவியற்கையிலிருப்பதுவழக்கே .... *

(இ-ள்.) பற்றுவிட்டிலன் - இராகத்துவேஷமில்லாதவனுனேன் — படிகமேற்பாயொளி யென்ன - பளிங்கிற்பற்றிப்பாய்கின்றபஞ்சவர்ணத்தைப்போல — நித்தம் - நாடோறும்— நீசொன்ன - உனதாக்கினைப்படியே—நிருபன்-அரசனுனயான்—செய்தனனென்றனன்-செய் வேனென்றுசொல்லினன்—உற்றதீதெனில் - நீயடைந்ததிதுவானுல்— பேதமையொன்றையு மொழித்துமற்றை-அறிவின்மையைமாத்திரந்தள்ளி—முன்னுள-முன்னமேயுள்ள—இயற்கை யிலிருப்பதுவழக்கே - அரசியல்பிலிருப்பதேநியாயமாம். எ-று ....(௨௱௫)

(அ-கை.) துறவுமறுசென்மமாதலா லதைநீக்கினதற்கடையாளமாகப்பட்டாபிஷே கஞ்செய்யவெத்தனஞ்செய்தல். (கவி) சிறிதுகாலநா மிவ்வகையிருந்துபின்றேகம், பிறியுநாளந்தநிலையினைப்பெறுதுமாலென்ன, நெறிசெல்வேந்தனுமியைந்தனனே ரிழையெழுந்து, குறிகொள்சங்கற்பவிதியினு லிவையிவைகொணர்ந்தாள் .... *

(இ-ள்.) நாம் - யாம்—சிறிதுகாலம் - சிலகாலம்—இவ்வகையிருந்து - இந்தப்ரகாரஞ் (சீவன்முத்தனுயிராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்)டிருந்து—பின்- பின்பு—தேகம்பிறியு நாள் - சரீராந்தத்தில் — அந்தநிலையினை - அந்தவிதேககைவல்யத்தை — பெறுதுமென்ன- அடைவோமென்று (சூடாலையானவள்) சொல்ல — நெறிசெல்வேந்தனும் - நீதியிற்செல்லா நின்றவரசனும்—இயைந்தனன் - சம்மதித்தான்—நேரிழையெழுந்து - சூடாலையெழுந்து— குறிகொள்சங்கற்பவிதியினுல் - குறிப்பாகக்கொண்டசங்கற்பநியமத்தால் — இவையிவை கொணர்ந்தாள் - இவையிவைகளைக்கொண்டுவந்தாள். எ-று ....(௨௱௬)

(அ-கை.) முடிசூட்டல். (கவி) எழுவாரிநீர்மணிக்குடத்தினை நீராட்டிச், கேழுலா மணித்தவிசிடைச்கிளர்வுறவைத்து, வாழியென்றனளளவறு சேனையும் வகுத்தாள், வேழவெம்பரித்தேரொடுவீரரால்விளங்க .... *

(இ-ள்.) எழுவாரிநீர் - சத்தசமுத்திரத்தின் நீர்த்தங்கணிறைந்த—மணிக்குடத்து-இரத் தினகும்பங்களினுல்—இவனை நீராட்டி - இவனையபிஷேகஞ்செய்வித்து—கேழுலாம்- ஒளிபொ ருந்திய—மணித்தவிசிடை - இரத்தினுசனத்தில்—கிளர்வுறவைத்து - ப்ரகாசிக்கும்படியிருத்தி —வாழியென்றனள் - வாழக்கடவாயென்றுசூடாலையானவள்பட்டாபிஷேகஞ்செய்தாள்— வே ழம் - கசங்களினுலும்—வெம்பரி - வேகமுள்ளதுரகங்களினுலும்— தேரொடு - இரதங்களினு லும்—வீரரால் - பதாதிகளாலும்—விளங்க - ப்ரகாசிக்கும்படியாக— அளவறுசேனையும்வகு த்தாள் - அளவற்றபடைகளையுமுண்டாக்கினுள். எ-று .... (௨௱௭)

(அ-கை.) சதுரங்கசேனையுங்கற்பித்துப்பட்டணத்துக்கேகுதல். (கவி) இனையவேலையிலி தயமொத்தின்பமேயியற்று,மனையதேவிருடாலையுமரசனுமெழுந்து,புனையும்வேழமேற் கொண்டனர்பொன்னகர்நோக்கி,வினைசெய்நாற்பெரும்படையொடுமகிழ்வுறமீண்டார்.

(இ-ள்.) இனையவேலையில் - இப்படிப்பட்டசமயத்தில்—இதயமொத்து-மனமொத்து—இன்பமேயியற்றும்- சுகத்தையேசெய்கின்ற—அனையதேவிருடாலையும் - அப்படிப்பட்டமனைவியானசூடாலையும்—அரசனும் - இராசனும்—எழுந்துபுனையும்வேழமேற்கொண்டனர்-எழுந்திருந்தலங்கரித்தயானைமேலேறினார்கள்—பொன்னகர்நோக்கி - அழகியபட்டணத்தைப்பார்த்து—வினைசெய் - யுத்தஞ்செய்கின்ற—நாற்பெரும்படையொடும் - மிகுந்தசதுரங்கசேனைகளோடும்—மகிழ்வுறமீண்டார் - சந்தோஷிக்கத்திரும்பினார்கள். எ-று.................... (உகூஅ)

(அ-கை.) சீவன்முத்தியையும் விதேகமுத்தியையுங்கொடுத்தல். (கவி) புரியைநண்ணலு நகருறுதானைபோமென்று, வரிசையாலெதிர்கொளவிருதானையும்வயங்கப், பரிவினண்ணினர்நகர்பதினாயிரம்வருடந், தெரிவையோடிருந்தழிவிலாப்பதம்பின்புசேர்ந்தான் *

(இ-ள்.) புரியைநண்ணலும் - பட்டணத்தையடைந்தவளவில்—நகருறுதானைபோமென்று-பட்டணத்திலுள்ளசதுரங்கசேனையைநடவுமென்று(சாமந்தர்கணடத்த)—வரிசையால்-கிரமமாக—எதிர்கொள - எதிர்ப்பட்ட—இருதானையும்வயங்க- இரண்டுசேனையும்விளங்க—பரிவினகர்நண்ணினர் - அன்பினாற்பட்டணத்தையடைந்தவர்களாய் — பதினாயிரம்வருடந்தெரிவையோடிருந்து-பதினாயிரமாண்டுநாயகியுடன்கூடியிருந்து—அழிவிலாப்பதம் - விதேககைவல்யத்தை—பின்புசேர்ந்தான் - பின்படைந்தார். எ-று. (இ-ச-க-க-ம்) பதினாயிரம்வருடஞ்சீவன்முத்தராயரசாங்கஞ்செய்து மேல்விதேகமுத்தியையடைந்தனனென்பதாம்............ (உகூகூ)

(அ-கை.) இராகவற்கிக்கதையைச்சொல்லியிவ்வண்ணம்பெற்றான் ஞானமுஞ் சீவன்முத்தித்தன்மையிலுள்ளபோகமும் விதேகமுத்தியும்பெறலாமென் றுபதேசித்தல். (கவி) வள்ளலேயிந்தமரபினாற்றொழில்களின்மருவித், துள்ளுமின்பமிற் சாந்தமெப்போதினுந்தொடர்ந்தாற், றெள்ளுபோகமும்வீடுமுண்டாமென்று தெளிந்த, வுள்ளமாதவவசிட்டமாமுனிவரனுரைத்தான்.............................. *

(இ-ள்.) வள்ளலே - ஸ்ரீராமா—இந்தமரபினால்-இம்முறைமையினால்—தொழில்களின்மருவி - காரியங்களிற்கூடி—துள்ளுமின்பமில் - துள்ளாநின்றவிஷயசுகமில்லாத — சாந்தம்-உபசாந்தஞானமானது—எப்போதினுந்தொடர்ந்தால் - சதாகாலமுந்தொடரில் — தெள்ளுபோகமும் - தெளிவானபோகங்களும்—வீடும் - மோக்ஷமும்— உண்டாமென்று - கிடைக்குமென்று—தெளிந்தவுள்ளம் - தெளிந்தமனதையும்—மாதவம்-மகாதவத்தையுமுடைய—வசிட்டமாமுனிவரன் - வசிஷ்டமகாமுனியானவர்—உரைத்தான் - சொன்னார். எ-று...... (உசய)

சிகித்துவசன்கதை முற்றிற்று. ஆ-கதை - ௯எஇ - கவிதை (௩அசச)

கசன்கதை.

(அ-கை.) முற்கதையிலாசிரியர் கேட்கும் வினாவைக்கொண்டரிதாயுதித்தவகம்பாவநீக்கமாகிய சித்தத்யாகமென்னுஞ் சகலத்யாகத்தாற் சர்வம் பிரமமயமாய் விளங்கினதை யறிவித் தவ்வகம்பாவத்யாகமாகிய சித்தத்யாகமே சகலத்யாகமன்றி வேறின்றென்பதைச் சுருவிலறிவிக்குநிமித்தங் கசன்கதையை நிரூபிக்கிறார்.. *

(அ-கை.) இதற்கொப்பானகசன்கதையையுங்கூறல். (கவி)வேறு. தெளிவின்மிக்குயர்சிகித்துவசன்கதைசெப்பினனிவ்வாறே, யளியநிற்றியா லருந்துயரணுகலை யனையவனெறிபோலக், குளிர்முகச்சுரர்குருமகனுணர்ந்தனனது குறித்துணர்கென்ன, வெளிப்படவவனுணர்ந்துளநெறியினை விளம்புதியெனக்கேட்டான்.................. *

(இ-ள்.) தெளிவின்மிக்கு - தெளிவின்மிகுந்த—உயர்சிகித்துவசன்- மேலானசிகித்துவசராசனது—கதைசெப்பினன் - கதையைச்சொன்னேன்—இவ்வாறு-இந்தப்ரகாரம்—அளியநிற்றியால்-கனிவாகநின்றாயானால்—அருந்துயரணுகலை-அரியதுன்பத்தையடையமாட்டாய்—அனையவனெறிபோல-அவனதுமார்க்கத்தைப்போல—குளிர்முகம்- குளிர்ந்தவதனத்தையு

டைய—சுரர்குருமகன்-தேவகுருவின்புத்திரனாகியகசன்—உணர்ந்தனன்-அறிந்தனன்—அதுகுறித்து-அதைக்கருதி—உணர்கென்ன-அறியாமென்று(வசிஷ்டமுனி)சொல்ல—வெளிப்பட-ப்ரத்யக்ஷமாக—அவனுணர்ந்தவா-அக்கசனறிந்திருக்கின்ற—நெறியினை-மார்க்கத்தை—விளம்புதி-சொல்லுவாய்—எனக்கேட்டான் - என்றுஸ்ரீராமர்கேட்டார். எ-று......................(௧)

(அ-கை.) பவநீங்குமார்க்கம்யாதெனவாசாரியனைவிசாரித்தல். (கவி) குரிசில்கேட்டலு
ம்வசிட்டனந்துறைசெய்வான்குருமகன்கசனென்பான், றெரிபதத்தொடுபதப்பொருடெ
ரிந்துள்ளான்றேவர்தேசிகன்முன்போய், விரிபிறப்பெனுங்கூட்டினின்றுயிரெனும்வெங்
கரிபுறம்போகைக், குரியவாறெதுகூறெனக்கேட்டலுமும்பர்மந்திரிசொல்வான் ....*

(இ-ள்.) குரிசில்கேட்டலும் - ஸ்ரீராமர்கேட்கவும்—வசிட்டன் - வசிஷ்டமுனியானவர்—அந்துறைசெய்வான் - அவ்விடத்திற்சொல்லுவார்—குருமகன்-குருபுத்திரனான—கசனென்பான்-கசனென்னும்பெயரையுடையவர்—தெரிபதத்தொடு-தெரியப்பட்டபதத்தோடும்—பதப்பொருடெரிந்துள்ளான்- பதார்த்தத்தைத்தெரிந்தவரானகசமுனி—தேவர்தேசிகன்-தேவகுருவின்—முன்போய்-முன்புசென்று—விரிபிறப்பெனும்-மிகுந்தசநநமென்கின்ற—கூட்டினின்று-கூண்டிலிருந்து—உயிரெனும்-பிராணனென்கின்ற—வெங்கரிபுறம்போகைக்கு-கொடியயானைபுறம்பிற்செல்லுதற்கு — உரியவாறெது - தகுந்தப்ரகாரமியாது — கூறெனக்கேட்டலும்-சொல்லென்றுகேட்கவும்—உம்பர்மந்திரிசொல்வான் - தேவகுருசொல்லுவார். எ-று......(௨)

(அ-கை.) பவத்தைநீக்குநெறிசகலத்யாகமென்னவப்படியேபுறப்பற்றுநீக்குதல். (கவி)
அனத்தமாமகரங்களுக்குறையுளாயகன்றவிப்பவவேலைக், கனத்ததோர்சகலத்தியாகத்தி
னாற்கடக்கலாமென்றோதத், தனத்தையாதியாஞ் சகலமும்விட்டனன் றனியனாய்க்கசன்
சென்று, வனத்தின்மேவினனெட்டியாண்டிருந்தனன்மறித்தவன்பிதாவந்தான்.........*

(இ-ள்.) அனத்தமாம்-அனத்தமாகிய—மகரங்களுக்கு-மகரமச்சங்களுக்கு—உறையுளாய்-வசிக்கின்றவிடமாகி—அகன்ற-விசாலம்பொருந்திய—இப்பவவேலை-இந்தச்சநநசமுத்திரத்தை—கனத்தது-கனத்ததான—ஓர்சகலத்யாகத்தினால் - ஒப்பற்றசகலத்யாகத்தினால்—கடக்கலாமென்றோத-தாண்டலாமென்று(குருவானவர்)சொல்ல—தனத்தையாதியாம்-சொன்னமுதலாகிய—சகலமும்விட்டனன்-யாவையும்விட்டு—தனியனாய் - தனித்தவராகி—கசன்சென்றுவனத்தின்மேவினன்-கசனானவர்போய்கானகத்திலடைந்து—எட்டியாண்டிருந்தனன்- எட்டுவருடமிருந்தார்—மறித்தவன்பிதாவந்தான்-திரும்பவுமவருடையதந்தையானகுருவந்தார். எ-று.

(அ-கை.) அஃதுமன்றெனக்கூற வஸ்திரமுதலியவையுநீக்குதல். (கவி)வந்ததந்தை
யைவணங்கியே சகலமுமாற்றியேயெட்டாண்டு, சிந்தையற்றிருந்துந்துயர்தீர்ந்தி
லேனிமலனேயென்னென்று, நொந்துகூறலுஞ் சகலமுநீக்கெனநுவன்றுமீளவும்
போனான், றந்தைபோனபின் வற்கலைமுதலியசகலமுமறநீத்தான்........................*

(இ-ள்.) வந்ததந்தையை-வந்தபிதாவை—வணங்கி-தொழுது—சகலமுமாற்றி-யாவையும்விட்டு—எட்டாண்டு - எட்டுவருஷம்—சிந்தையற்றிருந்தும்- மனமற்றிருந்தும்—துயர்தீர்ந்திலேன் - துன்பத்தைநீங்கிலன்—நிமலனே - நிர்மலமானவரே— என்னென்று - இதென்ன(காரண)மென்று—நொந்துகூறலும் - துன்பமுற்றுகசமுனியானவர்சொல்லவும்—சகலமுநீக்கென - யாவையுந்தள்ளுவாயென்று—நுவன்று - சொல்லி — மீளவும்போனான் - திரும்பவும்போயினன்—தந்தைபோனபின்- பிதாவானவர்சென்றபின்பு—வற்கலைமுதலிய-மரவுரிவஸ்திரமுதலான—சகலமும்-யாவையும்—அறநீத்தான் - ஒருங்கேயொழித்தான். எ-று ....(௪)

(அ-கை.) புறப்பற்றுநீக்கத்தைச்சகலத்யாகஞ் செய்தேனெனல். (கவி) பானுமாம
திமுகிலுடுமுதலியபற்றறுசரற்காலம், வானமொத்தனன்றமியனாய்க்கசன்சென்று
வனத்தின்மீளவுந்தாதை, யானவன்றனையெய்தினனன்பினாலடிதொழுதயர்வெய்தி,
யானணிந்துளவற்கலைமுதலிய யாவையுமறநீத்தேன்...................................*

(இ-ள்.) பானு - சூரியனும்—மாமதி - அழகுள்ளசந்திரனும்— முகில் - மேகமும்—உடுமுதலிய - நக்ஷத்திரமுமுதலாகிய— பற்றறுசரற்காலம் - பற்றற்றசரற்காலத்தின் — வானமொத்தனன் - ஆகாயத்துக்கொப்பானான்—தமியனாய் - தனியனாய்—கசன்சென்று - கசமுனிபோய்—மீளவும்- திரும்பவும்—வனத்தில் - கானகத்தில்—தாதையானவன்றனை - தந்தையானகுருவை—எய்தினன் - அடைந்தவனாய்—அன்பினால்- அன்பினால்—அடிதொழுது- பாதத்தைவணங்கி—அயர்வெய்தி - துன்பமடைந்து —யானணிந்துள - நான்றரித்திருக்கின்ற — வற்கலைமுதலிய- மரவுரிமுதலாகிய—அனைத்தையும்-யாவையும்—அறநீத்தேன்-ஒருங்கேதள்ளினேன்.

(அ-கை.) அகப்பற்றைநீக்கும்படி மனோநீக்கமே சகலத்யாகமெனல். (கவி) யாது
நீத்துமென்பாலிலைப்பாழிலனிச்செயலேதென்னத், தாதைகூறுவான்மனதைத்

யேயுலகெலாஞ் சகலமென் றுரைசெய்வ, ராதலான்மனமகற்றுதல்சகலமுமகற்றுத லதனாலே, கேதநீங்குமென்றகன்றனன்மந்திரி கிளர்கசனிது செய்தான் ……… ……. *

(இ-ள்.) யாதுநீத்தும் - எதைநீக்கியும்—என்பால்- என்னிடத்தில்—இளைப்பாறிலேன்- விஸ்ராந்தியடைந்திலன்—இனிச்செயலேதென்ன - இனிச்செய்யவேண்டுவதென்னவென்றுகசன்கேட்க—தாதைகூறுவான் - பிதாவானவர்சொல்லுவார்—மனத்தையே - மனதையே—உலகெலாம்- உயர்ந்தோர்களனைவரும்—சகலமென்றுரைசெய்வர்-சகலமென்றுசொல்லுவார்கள்—ஆதலால்- ஆதலினால்—மனமகற்றுதல்- மனதைநீக்குதலே—சகலமுமகற்றுதல்- சகலமுநீக்குதல்—அதனால் - அச்சகலத்யாகத்தினால்—கேதநீங்குமென்று- துன்பநீங்குமென்றுசொல்லி—மந்திரியகன்றனன் - குருவானவர்நீங்கினார்—கிளர்கசன்-விளங்காநின்றகசமுனியானவர்—இது செய்தான் - இதைச்செய்தார். எ-று ………… …. . ……………………… .. .. …… ……… (௬)

(அ-கை.) மனமிதெனவிசாரித்தலுக் ககம்பாவமேமனமெனல். (கவி) சித்தமேதெனநாடினனறிந்திலன் றேகமாதிகளெல்லாஞ், சித்தமன்றெனிற் குறைசெயாவிதனையான் றீர்த்துமென்பயனென்னச், சித்தமேதெனச் சுரர்குரு விடத்துறச் சென்று கேட்டலுமன்னான், சித்தமாவதுநானெனச்செப்புவர் சித்தத்தையறிவுற்றோர் … *

(இ-ள்.) சித்தமேதெனநாடினன்-மனமியாதென்றாராய்ந்தனன்—அறிந்திலன்-தெரிந்திலன்—தேகமாதிகளெல்லாம் - சரீரமுதலானசகலமும்—சித்தமன்றெனில்- மனமல்லவாதல்—குறைசெயா - குறைவுசெய்யாது—இதனை- இச்சரீரமுதலியவைகளை—யான்றீர்த்துமென்பயனென்ன - யானீங்கியுமென்னப்ரயோசனம்— சித்தமேதென - சித்தமானதெதுவென்று—சுரர்குருவிடத்துறச்சென்று - தேவகுருவினிடத்திற்போய்—கேட்டலும்-கேட்கவும்—அன்னான்-அத்தேவகுருவானவர்—சித்தமாவது - மனமானது—சித்தத்தையறிவுற்றோர் - மனதையறிந்தசத்துக்கள்—நானெனச்செப்புவர் - அகம்பாவமென்றுசொல்லுவார்கள். எ-று …… (௭)

(அ-கை.) அகம்பாவமெங்ஙனங்கெடுமெனி லஃதுசுலபவிற்கெடுமெனப்பரமபாவனைபோதிக்கத்தொடங்கல். (கவி) உயிர்களியாவையுமுள்ளுறநானெனவுன்னுபாவனைதானே,செயிர்செய்சித்தமென்றுரைத்தலுமிங்கிது தீர்ப்பதுமிகவன்பாம், வயிரமாவதுதீர்வதெவ்வகையெனமறித்துமந்திரிசொல்வான், வெயில்செய்துன்பமோர் சிறிதிலையகங்கரம்விட மிகவெளிதாகும் … ……………… … ……………… ………………………………………… *

(இ-ள்.) உயிர்களியாவையும் - பிராணிகளனைத்தையும்—உள்ளுற - அகத்திற்பொருந்த—நானென - நானென்று—உன்னுபாவனைதானே - நினைக்கின்றபாவனையே—செயிர்செய்- குற்றஞ்செய்கின்ற—சித்தமென்று - மனமென்று—உரைத்தலும் - தேவகுருசொல்லவும்—இங்கிது-இவ்விடத்திலிதை—தீர்ப்பது - நீக்குவது—மிகவன்பாம்- மிகவும்வலிமையாம்—வயிரமாவது- இப்படிப்பட்டவயிரமானது—தீர்வதெவ்வகையென-நீங்குவதெப்படியென்றுகசன்கேட்க—மறித்தும் - திரும்பவும்—மந்திரிசொல்வான் - தேவகுருசொல்லுவார் — வெயில்செய்துன்பம் - காய்கின்றதுன்பமானது—ஓர்சிறிதிலை - அற்பமுமில்லை—அகங்கரம்விட - அகங்காரநீக்குதற்கு—மிகவெளிதாகும் - மிகவுமிலேசாம். எ-று …………………………………… (௮)

(அ-கை.) பிரமபாவனையாலகம்பாவநீங்கி விஸ்ராந்தியுண்டாமெனல். (கவி) அலர்கசக்குமுன்னிமைக்குமு னகங்காரமகற்றுதலெளிதாகும், பலவுரைப்பதென்னேகமாயநந்தமாய்ப்பரமசித்தேயாகி, குலவுசுத்தமாம்விண்ணினுநுண்ணிதாங் குறைவிலாப்பொருணிற்குஞ், சலனமற்றதைப்பாவனைசெய்துப சாந்தனாயிடர்தீர்வாய்.. *

(இ-ள்.) அலர்கசக்குமுன் - புஷ்பத்தைக்கசக்குமுன்னும்—இமைக்குமுன்- இமைத்தலுக்குமுன்னும்—அகங்கரம் - அகங்காரத்தை—அகற்றுதலெளிதாகும் - நீக்குதல்சுலபவாகும்—பலவுரைப்பதென் - பலசொல்லவேண்டியதென்ன—ஏகமாய்- ஒன்றாகியும்—அநந்தமாய்- முடிவில்லாததாகியும்—பரமசித்தேயாகிகுலவுசுத்தமாய்- பரமஞானமாகியும்பொருந்தியபரிசுத்தமாகியும்—விண்ணினுநுண்ணிதாங் குறைவிலாப்பொருணிற்கும் - ஆகாயத்திலுஞ்சொச்சமாகியுமிருக்கின்றபூரணவஸ்துவிருக்கும் —சலனமற்றதைப்பாவனைசெய்து-சஞ்சலமில்லாமலவ்வாத்மாவைத்தியானித்து— உபசாந்தனாய் - உபசாந்தத்தையுடையவனாய் — இடர்தீர்வாய்- துன்பநீங்குவாய், எ-று …………………… ………… ……………… …………………………(௯)

(அ-கை.) தத்துவபாவனையாலசத்தான வகம்பாவமெங்கெயிருக்குமெனல். (கவி) சுத்தமித்தையே யாதலி லகங்காரந் தொலைந்துபோமெய்யான, தத்துவந்தனை நினைதலாற்சித்திலேசாற்றகங்கரமெங்கே, மெத்துநீரிலேபுழுதியுங்கனலிலேமேவுதோயமுமுண்டோ, நித்தரூபத்தைநினைந்திலனென்னு நிச்சயமறநிற்பாய் ……… …. …. *

(இ-ள்.) சுத்தமித்தையேயாதலில் - முழுதுமசத்தியமேயாதலால்—அகங்காரம்- அகங்காரமானது—தொலைந்துபோம் - கெட்டுப்போகும்—மெய்யான- சத்தியமாகிய—சத்துவந்தனை நினைதலால் - ஆத்மாவைச்சிந்தித்தலினால்—சித்தில்- ஞானத்தில்—சாற்றகங்காரமெங்கே- சொல்லியவகங்காரமெங்கேயிருக்கும்—மேதகு நீரில்பழுதியும் - மிருதுவானசலத்தினிற்றூளியும்—கனலில்-அக்கினியில்—மேவுதோயமுமுண்டோ - மேவாநின்றசலமுமுண்டாயிருக்குமோ—நித்தருபத்தை- நித்தியஸ்வரூபத்தை—நினைந்து- சிந்தித்து—இவனுமெனவென்றும்- இவனுமெனவிகின்ற—நிச்சயமறநிற்பாய் - மெய்ம்மையதும்படியிருப்பாய். எ-று.... .... (ய)

(அ-கை.) விஷயத்தோற்றமின்றிச் சுயஞ்சித்தாய்விளங்கி நிற்பாயெனல். (கவி) திக்குங்காலமு முதலியவசத்துறு சிறுவடிவறத்துன்பந், தொக்கவன்னவற்றுன்மறையாமலேசூக்கமாய்நொய்தாகி, மிக்கசோதியாயனைத்துமாயொன்றுமாய் மெய்யறிவொன்றேயாந், தக்கவிந்நிலைநில்லெனவுரைத்தனன் றலைமையாமுபதேசம் ...... *

(இ-ள்) திக்கும் - திசையும்—காலமுமுதலிய - காலமும்முதலாகியவைகளின்—வசத்துறு- வசத்திற்பொருந்திய—சிறுவடிவற - அற்பமாகியவடிவமில்லாமல் — துன்பந்தொக்கதுக்கமானது நிறையும்படி—அன்னவற்றால் - அப்படிப்பட்டவைகளால்—மறையாமல்-மறைபடாமல்—சூக்கமாய் - சூட்சுமமாகியும்—நொய்தாகி- சொச்சமாகியும்—மிக்கசோதியாய்-மேலான சுயஞ்சோதியாகியும் —அனைத்துமாய் - எல்லாமாகியும்— ஒன்றுமாய்-ஏகமாகியுமிருக்கின்ற—மெய்யறிவொன்றேயாம்- தத்துவஞானமானதொன்றேயாகும்—தக்கவிந்நிலை-தகுந்தவிந்தநிச்சயம்—நில்லென (உனதாத்மஸ்வரூபமென்றறிந்தநி) னிற்பாயென்று — தலைமையாமுபதேசம் - முதன்மையானவுபதேசத்தை — உரைத்தனன் - (பிரகஸ்பதிபகவான்) சொன்னார். எ-று. (இ-யக-க-ப்) உள்ளதானஸ்வாநுபூதி திருஷ்டியினாலில்லாததானவகம்பாவநீங்குதலேஷ்தசகலத்யாகமென்பதையறிவித்ததாம் .... (யக)

(அ-கை.) ஸ்ரீராகவற்கிதவுபதேசஞ்செய்தல். (கவி) சீவன்முத்தனாநிலைமைபெற்றகங்கரந்தீர்ந்தெனதென்னுமன்,மேவுமுட்பந்தம்வீழ்ந்துபோய்ப்புந்தியில்விகற்பங்களனைத்தும்போய்ப், பாவமுற்றியகசனின்றநிலையினீ பற்றுதலறநிற்பாய்,கேவலத்திந்தவகங்காரம்பொய்ம்மையாங் கெடுத்தல்பற்றுதல்வேண்டாம்..... ....*

(இ-ள்.) சீவன்முத்தனும் - சீவன்முத்தனாகிய—நிலைமைபெற்று - நிலைமையையடைந்து—அகங்கரந்தீர்ந்து- அகம்பாவம்விட்டு—எனதென்னுமல் - யானெனதென்றுசொல்லாமல் —மேவுமுட்பந்தம் - பொருந்தியவகப்பற்றானது — வீழ்ந்துபோய் - கெட்டுப்போகி—புந்தியில்- புத்தியில்—விகற்பங்களனைத்தும்போய் - விகற்பங்களியாவுநீங்கி—பாவமுற்றிய-(ஆத்ம)பாவனைமுதிர்ந்த—கசனின்றநிலையில் - கசமுனியிருந்தநிலையில்—நீ - ஸ்ரீராமா நீ—பற்றுதலறநிற்பாய் - இச்சையானதுநீங்கும்படியிருப்பாய்-- கேவலத்து - கைவல்யத்தில்—இந்தவகங்காரம்-இந்தவகம்பாவமானது—பொய்ம்மையாம் - மித்தையேயாகும்—கெடுத்தல்-இதைவிடுத்தலும்—பற்றுதல் - பிடித்தலும்—வேண்டாம் - உனக்குவேண்டாம். எ-று. சகலத்திலும்-நான்-கர்த்தனல்ல- வென்னுந்- திடபாவனையினாலே- பிரகிருதத்தில்வருகின்ற தொழில்களைச்செய்தாலும்-அதினால்- பந்தப்படமாட்டான், (சு-க) தனதுமனதின் பிரவிர்த்தியில்லாததினாலே விஷயவிராகத்தையடைகிறான் - ஆகையினால்- சதாகாலமும்- நான்-கர்த்தனல்லவென்னும்பாவனையினாலே-பரமாநந்தமென்னுநாமமுடைய - அந்த-சமபாவம்-சேடமாகும், (சு-உ) நான் - சகலமும்-செய்கின்றேனென்னும்- மகாகர்த்துவபாவத்தினாலே-நிலையை-யிச்சித்தோரால்-அந்த-மகாகர்த்துவத்தையும்-உத்தமமாகசத்துக்கள்சொல்லுகிறார்கள், (சு-ங) சகல பதார்த்தங்களில்-யாதொருசமபாவமுண்டோ- அதுவே- உண்மையானநிலை- அதில்வைக்கப்பட்டசித்தம் - திரும்பவுஞ்சநநத்தையடையமாட்டாது, (சு-ச) சகச்சப்பந்தமான சகலப்ரமத்தையு நான்செய்கின்றேனென்று சொல்லப்பட்ட-கர்த்துவத்தில்-வேறுகர்த்தாவில்லாததினாலே-ராகத்துவேஷங்களேது, (சு-ரு) எனதுதேகமானது - அன்னியனால்- லாளனைசெய்யப்பட்டது- அன்னியனால்-தெகனஞ்செய்யப்பட்டது - என்றுசொல்லப்பட்டது- யாதொன்றோ- அது-எனதுகன்மவிபாகம்-என்னுங்கர்த்துவத்தில் - ராகத்துவேஷமேது, (சு-சா) எனது-சுகதுக்கங்களின்-விஸ்தாரமாகியசகத்திரவின்- உதயநாசத்தினானேகர்த்தாவென்னுமுள்ளத்துத்சித்தக்கின்றமகாகர்த்துவத்தில் ராகத்துவேஷங்களேது, (சு-எ) சுகதுக்கவிலாசங்களில்- ஆன்மாவுக்கே-முகங்கயமான-கர்த்துருபாவத்தினாலே - தனதுசங்கற்ப நாசமுண்டானால் சமபாவமே சேடமாகிறது, (சு-அ) இவ்வண்ணமேலாகார்த்ததனை யிந்நூலாசிரியர் சீவன்முத்தனாமென்னும் பதத்தாலடக்கக் கூறினார்.

(அ-கை.) அகம்பாவமோர்பொருளன்றாதலாலதைப்பற்றுதல்விடுதல்கூடாதெனல்.(கவி) பொய்யதாமுயத்தொம்பினைப்பற்றவும்போபக்கவுநினைப்பாரா, ராயனேபர

போதபூரணத்திலேயயலொன்றுவருமாறென், பொய்யதாகியவநேகபாவனையினைப்
பொருந்தல்புன்பிறப்பாகு, மையமின்றியவேகபாவனையினிலழுந்துதல்பவந்தீர்தல்.

(இ-ள்.) பொய்யதாம் - மித்தையாயிருக்கின்ற—முயற்கொம்பினை - சசவிஷாணத்தை—பற்றவும்- பிடிக்கவும்—போக்கவும் - விடுக்கவும்—நினைப்பாரார்-கருதுபவர்யாவர்—ஐயனே-எனதாசிரியனே—பரபோதபூரணத்தில்-பிரமஞானமாகியபூரணத்தில்—அயலொன்று-வேறொன்று—வருமாறென் - வருகின்றவிதமென்ன—பொய்யதாகிய - அசத்தியமாகிய—அநேகபாவனையினை - பலபாவனையை—பொருந்தல் - அடைதல்—புன்பிறப்பாகும் - அற்பமானசநநமாகும்—ஐயமின்றிய - சந்தேகமில்லாத—ஏகபாவனையினில்- ஒன்றானஸ்வரூபபாவனையில்—அழுந்துதல்-அமிழுதலே—பவந்தீர்தல்-சநநந்தீர்தலென்று (வசிஷ்டமுனிசொன்னார்.) எ-று.
(இ-உ-க-ம்) அறிவினுண்மையைப்போதித் தகம்பாவத்தைநீக்கினமைதெளபதாம் ....(ὤ௩)

கசன்கதைமுற்றிற்று. ஆ கதை- ௩அ- இ- கவிதை. (௩அடுஎ)

மித்தையாபுருடன்கதை.

(அ-கை.) முற்கதையி லாத்மவிசாரத்தினுதித்தவகங்காரத்யாகமானசகலத்யாகத்தாற்சர்வம் பிரமமயமென்றறிவித்தவ்விசாரமின்றியகங்காரநீங்காதவிடத்திற்பிரிஸ்வரூபமாயனுபவிக்குந் துன்பங்களையறிவிக்குநிமித்தமகம்பாவவுருவகமாகமித்தையாபுருடன்கதையைநிரூபிக்கிறார்.

(அ-கை.) பேதநீங்கிய சுயஞ்சித்திற் சுகிப்பாயெனல். (கவி) வேறு. இருமையோ
டொருமைநீக்கிநின்றநிலெய்தியின்ப, மருவுவாய்மித்தையான்புருடன்போல் வரு
ந்தவேண்டாங், குருசிலேயெனவுமெந்தாய்கூறுபொய்ப்புருடனானே, னொருபய
னின்றித்துன்பமுற்றவனுலைந்தவாறென் .... *

(இ-ள்.) இருமையோடு - இரண்டுடன்—ஒருமைநீங்கி - ஒன்றையுந்தள்ளி — நின்றநிலெய்தி-இருந்தவாத்மஞானத்தையடைந்து—இன்பமருவுவாய்-(பரம) சுகத்தையடைவாய்—மித்தையானபுருடன்போல் - மித்தையாபுருஷனைப்போல — குருசிலே - ஸ்ரீராமா— வருந்தவேண்டாமெனவும் - வருத்தப்படவேண்டாமென்றுவசிஷ்டமுனிசொல்லவும்—எந்தாய்-எனதுபிதாவானவசிஷ்டமுனியே—கூறுபொய்ப்புருடனானவன்- சொல்லாநின்றமித்தையாபுருஷனானவன்—ஒருபயனின்றி - ஓர்ப்ரயோசனமுமில்லாமல் — துன்பமுற்று - துபரத்தையடைந்து—அவனுலைந்தவாறென் - அவனலைந்தவிதமென்ன. எ-று ....(க)

(அ-கை.) அகம்பாவநீக்கற்பொருட் டதன்விலாசத்தைச்சாமானியமா, யறிவிக்கத்
தொடங்கல். (கவி) ஞானமாமமுதினாலேநலம்பெறநிறைந்ததேனு, மியானறிவுற
வித்தன்மையியம்பெனவிராமன்கேட்ப, மானமாவசிட்டன்சொல்வான்வள்ளலேந
கைக்குழூல, மானவிக்கதையான்சொல்வதறவியப்புளதுமன்னே .... *

(இ-ள்.) ஞானமாமமுதினால்- ஞானமாகியவமுர்தத்தினால்—நலம்பெற- நன்மையுண்டாக— நிறைந்ததேனும் - நிறைந்ததானாலும்—யானறிவுற-நானறியும்படியாக—இத்தன்மையியம்பென - இந்தத்தன்மையைச்சொல்லுவாயென்று—இராமன்கேட்ப- இராகவர்கேட்க—மானமாவசிட்டன்சொல்வான் - மாட்சிமையுள்ளவசிஷ்டமுனியானவர்சொல்லுவார் — வள்ளலே - இராசாவே—நகைக்குழூலமான- சிரிப்புக்குக்காரணமாகிய—இக்கதை-இந்தக்கதையை—யான்சொல்வது-நான்செப்புவது—அறவியப்புளது-மிகவுமதிசயமுடையது.எ-று(உ)

(அ-கை.) சூனியத்திலுண்டானவ னகங்காரனெனல். (கவி) ஒருதலத்தேகாந்தத்தி
லுற்றசூனியத்திலுண்டாய், மருவுமத்தலத்தினிற்போன்மாயையெந்திரமபத்தோர்,
புருடனுண்டஞ்ஞானத்தோன் புன்மையாயிளமைப் பண்பாய், மிருதுவாம் புந்தி
யுள்ளோன் கேவலமிகுந்தமூர்க்கன் .... *

(இ-ள்.) ஒருதலத்து - (சிதாகாசமான) வோரிடத்தில்—ஏகாந்தத்தில் - (ப்ரபஞ்சமில்லாமற்) றனித்தவிடத்தில்—உற்றசூனியத்தில் - பொருந்தியவிசேடமில்லாதவிடத்தில் — உண்டாய்மருவும் - உண்டாகிப்பொருந்துகின்ற— அத்தலத்தினிற்போன் - அந்தவிடத்திலிருப்ப

வன்—மாயையேற்றிரமயத்து - மாயாவேசிரமயத்தையுடைய — ஓர்புருடனுண்டு - ஓராண்மகனுண்டு—அஞ்ஞானத்தோன் - அஞ்ஞானத்தையுடையவன்—புன்மையாய் - ஈனமாகியும்—இளமைப்பண்பாய் - குழந்தைபிறப்பைப்பாகியும்—மிருதுவாம்- அற்பமாகியுமிருக்கின்ற—புத்தியுள்ளோன் - புத்தியையுடையவன் — கேவலமிகுந்தமூர்க்கன் - மிகுந்தமூடத்தன்மையையுடையவன். எ-று ....(௩)

(அ-கூக.) சூனியத்தில்வளர்கின்றவனெனல். (கவி) வானிலேசுருண்டுதோன்றுமயிர்ச்சுருண்மருத்தலத்திற், கானனீரென்னவன்றான்றோன்றிய்கலந்தபாழிற், சூனியமலாதொன்றில்லைபாதொன்றுதோன்றிற்றங்கே, மானவவதுவுமன்றான்மற்றவன்வளர்வுமாங்கே.....*

(இ-ள்.) வானில் - ஆகாயத்தில்—சுருண்டுதோன்றும் - சுருண்டுதோற்றுகின்ற — மயிர்ச்சுருள் - மயிர்ச்சுருளைப்போலவும்—மருத்தலத்தில்- அளர்ப்பூமியிற்றோற்றுகின்ற —கானனீரென்ன - கானற்சலத்தைப்போலவும்—அன்னான் - அந்தமித்தையாபுருஷன்—தோன்றி - உண்டாகி—கலந்தபாழில் - கலந்திருக்கின்றசூனியத்தில்—சூனியமலாது - சூனியமேயல்லாமல்—ஒன்றில்லை - வேறொன்றுமில்லை—அங்கு - அவ்விடத்தில்—யாதொன்று - ஏதொன்று—தோன்றிற்று - உண்டானதோ—மானவ - மனுகுலத்திற்பிறந்தவனே—அதுவுமன்னான்-அதுவுமந்தமித்தையாபுருஷனே—அவன்வளர்வுமாங்கு - அவனதுவளர்ச்சியுமவ்விடத்திலே. எ-று...... (௪)

(அ-கை.) ஆகாயத்தைக்காக்கவோரகங்கட்டல். (கவி) வேறுமாயேயெப்போதும் விளங்குந்தன்மை யவன்காணான், கூறுவாமோர்சங்கற்பங் கூடினான்விண் ணினைப் பேணி,யூறுபடாமல்வைக்குதுமீதுயர்ந்ததேயென்றுளத்துன்னி,தேறுமுவகையுடன்விண்ணைச்சேமிப்பானோர்வீடமைத்தான் ....*

(இ-ள்.) வேறுமாயே -(ப்ரபஞ்சத்துக்கு)வேறாகவே—எப்போதும்-எக்காலமும்—விளங்குந்தன்மை-ப்ரகாசிக்கின்ற(சித்தினது)சுபாவத்தை—அவன்காணான்-அவன்பாராதவனாய்--கூறுவான்-சொல்லப்பட்டமித்தையாபுருஷன்—ஓர்சங்கற்பங்கூடினான்-ஒருசங்கற்பத்தையடைந்து—விண்ணினைப்பேணி-ஆகாயத்தைவிரும்பி--- ஊறுபடாமல்வைக்குதும் - இடையூறில்லாமல்வைப்போம்—ஈதுயர்ந்ததேயென்று-இதுமேலானதேயென்று—உளத்துன்னி- மனதினினைத்து—தேறுமுவகையுடன் - திடமானசந்தோஷத்தோடும்— விண்ணை - ஆகாயத்தை—சேமிப்பான்-காவல்செய்யும்பொருட்டு—ஓர்வீடமைத்தான் - ஒருவீடுகட்டினான். எ-று......... .... (௫)

(அ-கை.) வீடுகெடவிண்போனதெனவருந்தல். (கவி) அந்தமனையில்விண்ணினை வைத்தளிக்கின்றோமென்றதிலாசை, பந்தமுறனுமவன்வீடு படர்காலத்தி லழிவெய்தி, யிந்தமருத்தாற்றரங்கம்போ லிருதுமுடிவால் வருடம்போற், சிந்தியொழியவவன்கண்டு சேண்போயினதென்றலறுற்றான்.... ....*

(இ-ள்.) அந்தமனையில் - அவ்வீட்டில்—விண்ணினைவைத்து- ஆகாயத்தைவைத்து—அளிக்கின்றோமென்று - காக்கின்றோமென்று—அதில்-அவ்விண்ணில்—ஆசைபந்தமுறனும்-இச்சைகட்டுப்படவும்—அவன்வீடு - அவன்மனையானது—படர்காலத்தால்-வெகுகாலத்தினால்—அழிவெய்தி-நாசமடைந்து--இந்தமருத்தாற்றரங்கம்போல்-இந்தக்காற்றினாலலையுமலையைப்போலவும்—இருதுமுடிவால்-சாரிதுவினந்தத்தினால்—வருடம்போல்-மழையைப்போலவும்—சிந்தியொழிய-கெட்டுப்போக—அவன்கண்டு-அந்தமித்தையாபுருஷன்பார்த்து — சேண்போயினதென்று-ஆகாயம்போய்விட்டதென்று—அலறுற்றான்-அழத்தொடங்கினான். எ-று.........(௬)

(அ-கை.) மனைகெடவிண்ணைக்கூபத்திவ்வைத்தல். (கவி) நில்லாவீட்டில்விண்ணே யோநீயெங்ககன்றாயொருகணத்தி, லல்லாயானுயெனவீட்டினாகாசத்துக் கறப்புலம்பி, பொல்லாமனத்தான்மீண்டங்கோர்புதியகிணறுசமைத்தொருவர், கொல்லாதிதனிலிருத்துமெனக்கூபாகாசபரனானான்... *

(இ-ள்.) வீட்டினில்லா - மனையிலிராமல்—விண்ணேயோ-ஆகாயமே—ஒருகணத்தில்-ஒருக்ஷணத்தில்—நீயெங்ககன்றாய் - நீயெங்கேபோனாய்—அல்லாயானுயென - இல்லாததானாயென்று—வீட்டினாகாசத்துக்கு - கிரகாகாயத்துக்கு— அறப்புலம்பி - மிகவுமழுது—பொல்லாமனத்தால் - கொடியமனதினால்—மீண்டங்கு - திரும்பவுமவ்விடத்தில் — ஓர்புதியகிணறுசமைத்து - ஒருநூதனமானகூபத்தையுண்டாக்கி—ஒருவர்கொல்லாது-ஒருவருங்கெடுக்காமல்—இதனிலிருத்துமென - இதனிடத்தில்வைப்போமென்று—கூபாகாசபரனானான் - கிணற்றாகாயத்திற்பற்றுள்ளவனானான். எ-று...(௭)

(அ-கை.) கிணறுகெட விண்ணுக்கிரங்கிக் கும்பாகாயத்தடைத்தல். (கவி) காலமதனாற்கூபந்தான்கழிதலோடுங்கதறுற்றான், சாலவருந்திமீண்டங்கே தனைக்காப்பதற்

கோர்குடம்பண்ணிக், கோலமுடையதெனமகிழ்ந்துக்கும்பாகாசபரனு, னீலமு
கிலேயக்குடமுநிகழ்காலத்தா லுடைந்ததுவே.. *

(இ-ள்.) காலமதனல் - சிலகாலத்தினுல்—கூபந்தான்- கிணறானது—அழிதலோடும்-அழிந்தமாத்திரத்தில்— சாலவருந்தி - மிகவுந் துன்புற்று—கதறுற்றான் -கதறினன்— மீண்டு-திருப்பவும்—அங்கதனேக்காப்பதற்கு- அவ்விடத்திலவ்வாகாயத்தையிரட்சிப்பதற்கு—ஓர்குடம்பண்ணி-ஒருகுடத்தைச்செய்து--கோலமுடையதெ்ன -அழகையுடையதென்று—மகிழ்ந்து-சந்தோஷித்து—அக்கும்பாகாசபரனுன் - அக்கடாகாயத்திற்பற்றுள்ளவனுன்—நீலமுகிலே - கறுத்தமேகம்போன்றஸ்ரீராமா—அக்குடமும் -அக்கலசமும்—நிகழ்காலத்தா லுடைந்தது - நடக்குங்காலத்தா லுடைப்பட்டது. எ-று..(அ)

(அ-கை.) கும்பங்கெடவவ்விண்ணுக்கிரங்கிக்குண்டத்திலடைத்தல் (கவி) நம்பிநம்பி
யடைந்ததெலாநாசமெய்தத்திருவிலியக்,கும்பவிண்ணுக்கழுததற்பின் குண்டமொ
ன்றங்கேகெல்லித், தம்பமென்றுதற்பரனுய்ச்சார்ந்தானந்தக்குழிதனேயுந், தும்பி
காலமழித்துளதாற்றுன்னுமிருளேச்சுடர்போல.. *

(இ-ள்.) நம்பிநம்பி-மிகவுநம்பிக்கையுற்று—அடைந்ததெலாம்- பெற்றவனேத்தும்—நாசமெய்த -கெட்டுப்போக— திருவிலி - செல்வமற்றமித்தையாபுருடன்—அக்கும்பவிண்ணுக்கழுது - அந்தக்கடாகாயத்துக்குப்புலம்பி—அதற்பின் - அதன்பின்பு — குண்டமொன்று-ஒருகுழியை—அங்கேகெல்லி - அவ்விடத்திற்றோண்டி—தம்பமென்று - நிலேயென்று—தற்பரனுய்-அக்குண்டாகாயத்திற்பற்றுள்ளவனுய்—சார்ந்தான் - அடைந்தான்—அந்தக்குழிதனேயும் - அப்பள்ளத்தையும்—துன்னுமிருளே - நெருங்கியவிருட்டை (க்கெடுக்கின்ற)—சுடர்போல - ப்ரகாசத்தைப்போல—தும்பிகாலமழித்துளது - யானேயாகியகாலமழித்தது. எ-று (கூ)

(அ-கை.) குண்டங்கெடவவ்விண்ணுக்கிரங்கிநாற்சாரகங்கட்டியதில்வைத்தல். (கவி)
குண்டவிண்ணுக்கழுததற்பின் குலவுநாற்சாரங்கட்டி, மண்டுமருள்கூர்தற்பரனுய்வா
ழ்ந்தானந்தமனேதனேயு, மண்டமுழுதுங்கொல்காலமழிவுசெய்யவதற்கழுது; சண்
டபவனனிடைப்பட்ட சருகுபோலத்தளர்ந்துலேந்தான்.. *

(இ-ள்.) குண்டவிண்ணுக்கு - குழியாகாசத்துக்கு—அழுததற்பின் - புலம்பினபின்பு—நாற்சாரகங்கட்டி- வளேவானநாற்சாரிமனேயைக்கட்டி—மண்டுமருள்கூர்- அளவற்றகிருபைமிகுந்த—தற்பரனுய்வாழ்ந்தான் - அதுபற்றுள்ளவனுகவாழ்ந்தான்—அந்தமனேதனேயும்-அந்தவீட்டையும்—அண்டமுழுதும் - அண்டங்களேயெல்லாம்—கொல்காலம்-அழிக்கின்றகாலமானது—அழிவுசெய்ய - கெடுக்க— அதற்கழுது - அதற்குவிசனப்பட்டு — சண்டபவனனிடைப்பட்ட-பெருங்காற்றிலகப்பட்ட—சருகுபோல - உலர்ந்தவிலேயைப்போல— தளர்ந்துலேந்தான்-சோர்வுற்றலேந்தான். எ-று.. (ய)

(அ-கை.) நாற்சாரகங்கெடவதற்கிரங்கிக் குதிர்செய்தடைத்தல். (கவி) தடனூர்நா
ற்சாற்கழுததற்பின் றற்காப்பதற்கோர்குதிர்பண்ணி, யிடனூர்குதிர்புக்கவனிருப்ப
விதுவுங்காலனிறப்பித்தா, னுடனேகுதிர்விண்ணினுக்கழுதானென்றேவீடுகுதிர்கு
ண்டங், குட நாற்சாரவென்பவற்றுற் குறைவில்காலந்துயருற்றுன்........................ *

(இ-ள்.) தடனூர்நாற்சாற்கு- விசாலமுள்ளநாற்சாரியாகாயத்துக்கு—அழுததன்பின்-இரங்கினவதன்பின்பு - தற்காப்பதற்கு—அந்தவாகாயத்தைக்காவல்செய்வதற்கு— ஓர்குதிர்பண்ணி- ஒருகுதிரைச்செய்து —இடனூர்குதிர்புக்கு- விசாலமுள்ளகுதிரிற்ப்ரவேசித்து—அவனிருப்ப- அவனிருக்க—இதுவும் - இக்குதிரையும்—காலனிறப்பித்தான் - காலனழிப்பித்தான்—உடனேகுதிர்விண்ணினுக்கழுதான் - உடனேகுதிராகாயத்துக்கலறினுன்—ஒன்றே - ஒன்றுதானே—வீடும் - வீடாகாயமும்—குதிர் - குதிராகாயமும்—குண்டம் - குழியாகாயமும்—குடம்-கடாகாயமும்—நாற்சார - நாற்சாராகாயமும்—என்பவற்றுல் - என்கின்றவிவைகளினுல்—குறைவில்காலம் - வெகுகாலம்—துயருற்றுன் - துன்பத்தையடைந்தான். எ-று............ (யக)

(அ-கை.) இ-து. (கவி) விண்ணேவீட்டிலடைத்தவனுய்வீட்டில்விண்டான்றானுகி, யுண்
ணேபுற்றபெருந்துயராலுழைக்கும்பிழைக்குமோரொருகா, லெண்ணிநிற்ப திதுபோவ
தெதுவென்றறியானிவனென்னுபுண்ணியத்தின்வடிவானேன்புகலவிரன்புகலுற்றுன்... *

(இ-ள்.) விண்ணே-ஆகாயத்தை—வீட்டிலடைத்தவனுய்-கிரகத்திலடைத்தவனுய்—வீட்டில்விண்டான்-கிரகாகாயமானது—தானுகி - தன்மயனுய்—உணேயுற்ற- மனந்தளர்வையடைந்த—பெருந்துயரால் - மிகுந்ததுக்கத்தினுல்—ஓரொருகால-ஒவ்வொருகாலத்தில்— உழைக்கும் - உழைப்பவனுகவும்—பிழைக்கும்-பிழைப்பவனுகவும்—எண்ணி - நினேத்து — நிற்பதிது-

இருப்பதிது—போவதிதுவென்றறியான்-நசிப்பதிதுவென்றறியாத—இவன்- இந்தப்புருடன்—அறியானென்று-தெரியாதவனென்று—புண்ணியத்தின்வடிவானோர்-பகல- கருமரூபியான வசிஷ்டமுனிசொல்ல—வீரன்புகலுற்றான்-ஸ்ரீராமன்சொல்லத்தொடங்கினார். எ-று. (இ-௰௨-௧ம்) வீடுமுதலியவைகண்மரித்தலை விண்ணிறந்ததாக நினைத்துவருந்தினனென்பதாம். (௰௨)

(அ-கை.) இத்திருஷ்டாந்தத்தினவிட்டபிராயங்கூறத்தொடங்கல். (கவி) பொய்யாமனிதன்கதையாலென்புகன்றாய்மாயாபுருடனையே, யையாவிவன்விண்காத்தானென்றறைந்ததேதென்றருள்கென்ன, மெய்யாம்வசிட்டனுரைசெய்வான் மித்தாபுருடனென்றவிவன், மையார்முகிலேசூனியமாம்வானிலெழுந்தவகங்கரமே.......... *

(இ-ள்.) பொய்யாமனிதன் - மித்தையாபுருஷனுடைய — கதையாலென்புகன்றாய்- கதையினாலென்னசொன்னீர்—ஐயா- ஆசாரியரே—மாயாபுருடனை-மித்தையாபுருஷனை—இவன்விண்காத்தானென்று - இவனாகாயத்தைக்காவல்செய்தானென்று— அறைந்ததேதென்று-சொன்னதேதுவென்று—அருள்கென்ன - அருள்செய்வாயென்றிராமன்கேட்க — மெய்யாம் - உண்மையான—வசிட்டனுரைசெய்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார் — மித்தாபுருடனென்றவிவன் - மித்தையாபுருஷனென்றுசொல்லியவிவன்—மையார்முகிலே- கரியநிறத்தையுடையமேகம்போன்றவரே —சூனியமாம்வானில் - சூனியவாகாயத்தில்—எழுந்தவகங்கரமே- உண்டானவகங்காரமாம். எ-று.......... (௰௩)

(அ-கை.) இ-து. (கவி) இந்தவுலகெல்லாமிருக்கு மிந்தவிண்ணேதது நிறைவுற், றந்தமின்றிச்சிருட்டிதனைக் காதிதனிற்றானேநிற்கு, மைந்தவதன்பாலகங்காரமருத்திற்பரிசம்வருவதுபோன், முந்துதோன்றித்தனைக்காக்க முயன்றான்வடிவாய்முளையாதோன் .... *

(இ-ள்.) இந்தவுலகெல்லாமிருக்கும்- இச்சகங்களனைத்துமிருக்கின்ற—இந்தவிண்ணேது- இவ்வாகாயமேதுவோ—அது நிறைவுற்று - அதுபூரணமாய்—அந்தமின்றி - முடிவில்லாததாய்—சிருட்டிதனக்காதிதனில்- சிருட்டிக்குமுன்னமே—தானேநிற்கும் - சுயமாகவேயிருக்கும்—மைந்த- குழந்தாய்—அதன்பால்- அதனிடத்தில்—அகங்காரம்- அகம்பாவமானது—மருத்திற்பரிசம்வருவதுபோல்- காற்றிற்பரிசமுண்டாவதுபோல—முந்துதோன்றி-முன்னமேயுண்டாகி-தனைக்காக்க - (சிதாகாசமான) வாத்மாவைக்காப்பதற்காக — வடிவாய்முளையாதோன்- பமானவகங்காரன்—முயன்றான் - முயற்சித்தான். எ-று.......... (௰௪)

(அ-கை.) இ-து. (கவி) கூவங்குண்டங்குடநாற்சார் குதிரொன்பனவாங்குரம்பைகளை, மேவநாநாவிதமாகவிதித்துமீண்டுமீண்டிழந்து, தாவமுற்றானுடனேறுந்தனைக்காத்தனனென்றாகாச, பாவனைக்கேநிலைப்பட்டான் பாழேவருந்திப்பதைத்தனனால்.......... *

(இ-ள்.) கூவம் - கிணறும் —குண்டம் - குழியும்—குடம்- கடமும்—நாற்சார் - நாற்சாரியும்—குதிர் - குதிரும்—என்பனவாம் - என்றுசொல்லப்பட்டனவாகிய—குரம்பைகளைமேவ- சரீரங்களைப்பொருந்த—நாநாவிதமாகவிதித்து - பலவிதமாகவுண்டாக்கி—மீண்டுமீண்டிழந்து-திரும்பத்திரும்பவிழந்து—தாவமுற்றான்- துன்பமடைந்தான்—உடனேறும்-சரீரங்களோடேறும்—தனைக்காத்தனனென்று - (சிதாகாச)வாத்மாவைக்காவல்செய்தேனென்று— ஆகாசபாவனைக்கு- (பூ)தாகாயபாவனைக்கு—நிலைப்பட்டான் - நிலையானான்— பாழேவருந்தி - வீணேகவ்ருத்தப்பட்டு—பதைத்தனன் - பதைபதைத்தான். எ-று.......... (௰௫)

(அ-கை.) இ-து. (கவி) விண்ணேனென்றேசேமித்துவிட்டாகாசமாதிகளி, னண்ணுமெலிவுற்றிடமித்தையான்போல்வருந்தாதொழிகமலர்க், கண்ணாவிண்ணின் மிகப்பெரிதாய்க்களங்கமற்று நுண்ணியதா, யெண்ணலடங்காவழிவில்சிவமியலாத்துமதத்துவந்தானே.. *

(இ-ள்.) விண்ணேனென்று - (பூ) தாகாயத்தைநானென்று—சேமித்து- காவல்செய்து—விட்டாகாசமாதிகளின் - கிரகாகாசமுதலானவைகளில்—நண்ணுமெலிவுற்றிடும் - பொருந்தித்தளர்வடைகின்ற—மித்தையான்போல் - மித்தையாபுருஷனைப்போல—மலர்க்கண்ணா- தாமரைக்கண்ணனான ஸ்ரீராமா—வருந்தாதொழிக - துன்புறுமனீங்கக்கடவாய்—விண்ணில்-ஆகாயத்திலும்—மிகப்பெரிதாய் - மிகவும்வியாபகமாகியும்—களங்கமற்று - மாசில்லாததாகியும்—நுண்ணியதாய் - சொச்சமாகியுமிருக்கின்ற—எண்ணலடங்கா- நினைவிலடங்காத—அழிவில்சிவம் - அழிவற்றசிவமே—இயலாத்துமதத்துவந்தான்-சுபாவமானவாத்மதத்துவமாம். எ-று. (இ-௪-௧ம்) உள்ளதானசிதாகாயத்திலில்லாததாயுதித்த வகப்பாவமே மித்தியாபுருடன், சிதாகாயத்தைக காக்கநினைத்தல் விண்காக்கநினைத்தல் தேகமுதலிய சரீரங்கள் வீடுமுதலியன சனனமரணமே, அவைகளுண்டாகிய புழுதல்நீங்காதசிதாகாய, நீங்கினதாகவிரங்குதல்வீணுகக் கதறினனைக்கூறி யிவ்வகப்பாவத்தால்வருந்தாமற்சிவஸ்வரூபமாய்வி ...... டதாம்.

(அ-கை.) தேகநீங்கினுலுஞ் சித்துநீங்காதெனல். (கவி) அவ்வாத்துமதத்துவங்காண லாமோவெவர்க்குமகப்படுமோ, விவ்வாறிருக்கவுடலிறந்தா லிதயாகாசமாத்திரத் தை, வெவ்வாளரசேநானிறந்தேனென்றுமெலிவர்விவேகமிலோர், தவ்வாவிசும்புக டாதிகடான்றகர்ந்தபோது தணந்திடுமோ.. *

(இ-ள்.) அவ்வாத்துமதத்துவம் - அந்தவாத்மதத்துவமானது—காணலாமோ-தரிக்கப் படுமோ—எவர்க்குமகப்படுமோ - யாவர்க்குங்கிடைக்குமா— இவ்வாறிருக்க - இப்படியிருக்க —உடலிறந்தால் - சரீரமரித்தால்—இதயாகாசமாத்திரத்தை- இதயாம்பரமாத்திரமானவை— வெவ்வாளரசே - கொடியவாளாயுதத்தையுடையவரசனே—நானிறந்தேனென்று- யானிறந்து போனேனென்று—விவேகமிலோர் - விவேகமற்றவர்கள்—மெலிவர் - தளருவார்கள்—தவ்வா விசும்பு - தவிராதவாகாயமானது—கடாதிகடான்- கடமுதலியவைகள்—தகர்ந்தபோது-கெட் டபோது —தணந்திடுமோ - நீங்கிப்போமோ. எ-று...(௰எ)

(அ-கை.) தானென்பதுநிறைந்து நானென்பதிறக்குமெனல். (கவி) கடமதுடைந் தால்விண்பிரியாக்காயமழிந்தாலுயிரழியா, தடவிதாஞ்சின்மாத்திரமாய்ச் சத்தாய் விண்ணினுண்ணியதாய்த்,தொடருமணுவுக்கணுவாகுஞ்சுருபமைந்தா நானென்று, படருமனுபூதியினளவே பயிலுங்குடம்போனசித்திடுமால்................................ *

(இ-ள்.) கடமதுடைந்தால் - குடமுடைந்தால்—விண்பிரியா- ஆகாயமானதுபிரியமாட்டாது—காயமழிந்தால் - சரீரநசித்தால்—உயிரழியா - ஆத்மாவானதழியமாட்டாது —தடவிதாஞ்சின்மாத்திரமாய் - பெருமைபொருந்தியசின்மாத்திரமாகியும்—சத்தாய்- சத்தாகியும் —விண்ணினுண்ணியதாய் - ஆகாயத்திலுஞ்சூட்சுமமாகியும்— தொடருமணுவுக்கணுவாகும்- தொடராநின்றவணுவுக்கணுவாகியுமிருக்கின்ற—சுருபம்- பிரமஸ்வரூபமானது—மைந்தா-குழந்தாய்—அனுபூதியினளவேபடரும்- அனுபூதியின்மட்டேவியாபிக்கும்—நானென்றுபயிலும்-யானென்றுசொல்லிய(வகங்காரமானது) —குடம்போனசித்திடும் -கடத்தைப்போலழியும். எ-று. (இ-உ-க-ம்) வீடுமுதலியவைகணசிக்கினு மதிலகப்பட்டதுபோலத் தோற்றியகிரகாகாசமுதலாகச்சொல்லுஞ் சத்தமிறந்ததேயன்றி யதன்ருத்தமான பூதாகாசமிறவா ததுபோலத் தேகாதிகணசிக்கினு மதிற்பந்தப்பட்டதுபோலத்தோற்றினசத்தரூபமான சிதாபாசனுனவகம்பாவநீங்குவதேயன்றி யதனருத்தமானசித்து நீங்காதென்பதாம்.................................(௰அ)

(அ-கை.) செகத்திருவஞ் சித்தேயெனல். (கவி) யாதுமென்றுமெவ்விடத்துமிறத்தல்பிறத்தலிலதாகு, மோதுமிந்தரூபத்தாலுலகாய்ப்பிரமமேவளரு,மாதலாலிவ்வுலகெல்லாமடியுமுடியுநடுவுமறப், பேதமறப்பாவாபாவம் பிறவாப்பொருளென்றிடர்தீர்வாய்........ *

(இ-ள்.) யாதும்- எதுவும்—என்றும்- எப்போதும்—எவ்விடத்தும்- எந்தவிடத்திலும்—இறத்தல்-மரித்தலும்—பிறத்தல் - செனித்தலும்—இலதாகும்-இல்லாததாகும்— ஓதுமிந்தரூபத்தால்- சொல்லப்பட்டவிவ்வுருவத்தினால்—உலகாய் - சகமாய்—பிரமமேவளரும்- பிரமமேவிர்த்தியடையும்—ஆதலால்- ஆதலில்—இவ்வுலகெல்லாம்-இச்சகங்களனைத்தும்— அடியும்-ஆதியும்—நடுவும்- மத்தியும்—முடிவுமற - அந்தமில்லாமலும்— பேதமற - பேதாபேதமில்லாமலும்—பாவாபாவம்பிறவா- பாவமுமபாவமுமுண்டாகாமலுமிருக்கின்ற—பொருளென்று-பரவஸ்துவென்றெண்ணி—இடர்தீர்வாய் - துன்பநீங்குவாய். எ-று................................(௰௯)

(அ-கை.) அகம்பாவத்தையறிவிற்கெடுக்கவேண்டுமெனல் (கவி) ஆபத்துக்கெல்லாநிலயமநித்தமவசமவிவேகம், பாவத்துக்குமுதன்மடமைப்பவவித்தழிவைப்பற்றிய்து, தாபத்துக்கோரிடமானதகவிலகங்காரந்தன்னை,நீபற்றில்லாவறிவாலேநீக்கிலதுவேநிமலநிலை*

(இ-ள்.) ஆபத்துக்கெல்லாம் - ஆபத்துக்களனைத்திற்கும்— நிலயம் - இடமாகியும்—அநித்தம் - அநித்தியமாகியும்—அவசம் - வசமில்லாததாகியும் — அவிவேகம் - விவேகமில்லாததாகியும்—பாவத்துக்குமுதல் - பாபங்களுக்குமுதலாகியும் —மடமை-அஞ்ஞானமாகியும்—பவவித்து - சநநபீசமாகியும்—அழிவைப்பற்றியது- நாசத்தையுடையதாகியும்—தாபத்துக்கோரிடமான - துன்பத்திற்கோர்வித்தாகியுமிருக்கின்ற— தகவிலகங்காரந்தன்னை - அறிவற்றவகம்பாவத்தை—நீபற்றில்லாவறிவால் - இராகவவிச்சையற்றவாத்மஞானத்தினால்—நீக்கில் - கெடுப்பாயானால்—அதுவே- அவ் வகங்காரமிறந்த)விடமே—நிமலநிலை - நின்மலமானசீவன்முத்திப்பதமாம். எ-று. (இ-உ-க-ம்) சித்தேசகத்தாய் விளங்குமென்றறியினவிச்சையானென்னுமகம்பாவநீங்கிச்சர்வமுந் தானுகவேவிளங்கு மென்பதாம்...(உ௰)

மித்தையாபுருடன்கதை முற்றிற்று. ஆககதை-௩௬-இ-கவிதை: (௩அஎ)

விரதகுரையகதை.

(அ-கை.) மூர்க்கைகயிலகம்பாவத்தான் வீணாகவருந்துவதைதிஷ்டாந்தப்படுத்தியபின் அந்நீக்கிற்சர்வம் பிரமமயமாய்விளங்குமென்பதை யறிவித்து அவ்வனுபவ மியாவிற்குஞ் சான்றுநானேயென்னு மகாகர்த்தத்வமுதலியவற்றால் விளங்குமென்பதை யறிவிக்குநிமித்தம் விரதகுரையகதையைநிரூபிக்கின்றார் .... *

(அ-கை.) சிற்ப்ரகாசமேசகத்தாக் விளங்குமெனல். (கவி) (வேறு.) ஆதலாற்காண்ப
வற்றினுண்மைநிலை யிப்படியேயறிவில்வையம், பேதமாய்வேறொன்றிற்பிறந்ததிலை
க்கயிற்றிலராப்பிறப்பதேபோ,லாதபனில்வேறிலையாதபமென்றேபாவித்தோர்க்கா
தபந்தான், பேதமறவாதபனும்பேணுநிருவிகற்பமிது பேசுங்காலே .... *

(இ-ள்.) ஆதலால் - ஆதலினால்—காண்பவற்றினுண்மைநிலை- சகத்தினிச்சயமானது—இப்படியே- இந்தப்ரகாரமேயாகும்—அறிவில் - ஆத்மஞானத்தில்—வையம் - சகமானது—கயிற்றிலராப்பிறப்பதேபோல் - ரச்சுவிற்சர்ப்பமுண்டாவதுபோல(வுதித்ததேயன்றி)— பேதமாய் - வேற்றுமையாக —வேறொன்றிற்பிறந்ததிலை - மற்றொன்றிலுண்டானதில்லை — ஆதபனில்-சூரியனைவிட—ஆதபம்- கிரணமானது—வேறிலையென்று- வேறில்லையென்று—பாவித்தோர்க்கு- பாவனைசெய்தவர்களுக்கு—ஆதபந்தான- கிரணமே—பேதமறவாதபனும்-வேற்றுமையில்லாமற்சூரியனாகும்—பேசுங்கால் - சொல்லுமிடத்தில்—இது பேணுநிருவிகற்பம்-இதுவே விரும்பப்பட்டநிருவிகற்பமாகும். எ-று .... (க)

(அ-கை.) அபேதானுபவமுரைத்தல். (கவி) பொன்னில்வேற்றுமையன்றுகேயூர
மெனநினையிற்பொன்னென்றேயா,மின்னதேநிருவிகற்பமென்பராலிரவிவெயிலெ
ன்றுநாடின், மின்னுகதிரிரவிக்கு வேறுபோலாங்கண்டாய்விவிதமாகத், துன்னு
நாநாத்துவம்விட்டறிவதிலாநல்லறிவிற்றுணிந்துநிற்பாய் .... *

(இ-ள்.) பொன்னில் - கனகத்துக்கு—கேயூரம் - தோள்ணியானது—வேற்றுமையன்றெனநினையில் - வேறுபாடல்லவென்றுபாவிக்கில்— பொன்னென்றேயாம் - தமனியமொன்றேயாம்—இன்னது - இவ்வபின்னத்தையே — நிருவிகற்பமென்பர் - நிருவிகற்பமென்று சொல்லுவார்கள்—இரவி - சூரியனென்றும் — வெயிலென்று - கிரணமென்றும்—நாடில்-வேறுகநாடினால்—மின்னுக்திர் - ப்ரகாசிக்கின்றகிரணத்துக்கும் — இரவிக்கு - சூரியனுக்கும்—வேறுபோலாங்கண்டாய் - வேற்றுமையைப்போலத்தோற்றும்—விவிதமாகத்துன்னும் - நாநாவிதமாகநெருங்கிய—நாநாத்துவம்விட்டு - பல்விதங்களையும்விட்டு— அறிவதிலா - சகமில்லாத—நல்லறிவில் - அனுபூதிஞானத்தில்—துணிந்துநிற்பாய் - (ஸ்ரீராமா) நீதெளிந்திருப்பாய். எ-று. (இ-உ-க்-ம்) கிரணமென்று மாபரணமென்றும் வேறுபிரித்துப்பாராமற் சூரியனுக்கும் பொன்னுக்கும் பார்க்கினவைகளாய் விளங்குவதுபோல்ச் சகத்தை வேறுபிரித்துப்பாராமற் சின்மாத்திரமாகப் பார்க்கி லஃதாகவே யாவும் விளங்குமென்பதாம் .... (உ)

(அ-கை.) பிரமசங்கற்பமே மண்முதலியசகமாகத்தோற்றுமெனல். (கவி) சங்கற்ப
மெனும்புரணசத்திபினைத்தற்பரமந்தானேதன்னாற், பொங்குற்றவாயுவலைவைச்செ
ய்யுமாறுபோற்புரிந்தபோது, சங்கற்பவிரியுருவா யயல்போலாய்ச் சகவடிவாய்த்
தனைத்தானுடிப், பொங்குற்றமனமாகுஞ்சங்கற்பமயமாயிப்புவியையக்காண்பாய்.*

(இ-ள்.) சங்கற்பமெனும் - சங்கற்பமென்கின்ற—புரணசத்தியினை- சலனசத்தியை—தற்பரமந்தானே - பிரமமே—பொங்குற்றவாயு - மிக்குற்றகாற்றானது—அலைவைச்செய்யுமாறுபோல்- சலனத்தைச்செய்புந்தன்மையைப்போல—தன்னாற்புரிந்தபோது- தன்னாற்சங்கற்பித்தபொழுதில்—சங்கற்பம் - அச்சங்கற்பமானது —விரியுருவாய் - பரந்தவடிவமாகி—அயல்போலாய் - வேறுபோலாகி—சகவடிவாய் - உலகத்துருவமாகி—தனைத்தானுடி- தன்னைத்தானேபார்த்து—பொங்குற்றமனமாகும் - பொலிவுள்ளமனமாகும்—சங்கற்பமயமாய் (அதன்) சங்கற்பமயமா—இப்புவியைக்காண்பாய்- இச்சகத்தைப்பார்க்கக்கடவாய். எ-று .... (ந)

(அ-கை.) அனுற்வாச்சியமான சகத்துமுதலியசர்வமும் பிரமமாகவே விளங்குமெனல்.
(கவி) தெரிபொருளொன்றுளதலலபொய்யுமல சொற்பனத்தின் றிரள்போற்றோற்றுந்,
தெரிபயன்கேட்போன்சொலவோன் பரிசிப்போன்மணங்கொள்வோன்செல்வோன்மீள்

வோன், புரிவனவெல்லாந்தானேபுதிதாகுமலவெல்லாம்பொருளென்றோர்வாய், புரிதரு
நின்றொழிலெல்லாமலமறுசின்மாத்திரமாம்பொருளேகண்டாய்........ ....*

(இ-ள்.) தெரிபொருள்- சகமானது—என்று-எப்போதும்—உளதல்ல-சத்தியமுமல்ல—பொய்யுமல- அசத்தியமுமல்ல—சொற்பனத்தின்றிரள்போல்- கனவின்கூட்டத்தைப்போல—தோன்றும் - தோற்றும்—தெரிபவன் - காண்பவனும்—கேட்போன் - கேட்பவனும்—சொல்வோன் - பேசுபவனும்—பரிசிப்போன் - பரிசிப்பவனும்—மணங்கொள்வோன்- வாசனைகொள்ளுபவனும்—செல்வோன் - நடப்பவனும்—மீள்வோன் - திரும்புபவனும் — புரிவனவெல்லாந்தான் - சொல்லப்பட்டசகலமும்— புதிதாகுமல - நூதனமாகவுண்டானதல்ல— எல்லாம்பொருளென்று - சகலமுமுண்மையென்று—ஓர்வாய் - அறிவாய்— புரிதரும் - செய்கின்ற—நின்றொழிலெல்லாம்-உனதுசெய்கைகளனைத்தும்—மலமறு-களங்கமற்ற — சின்மாத்திரமாம்பொருளே-ஞானமயமானவஸ்துவேயாம். எ-று. (இ-உ-க-ம்) சைதன்யந்தனதுல்லாசத்தினாற்றானேசகமுதலியவைபோலத் தோற்றிமகிழ்தலேயன்றி வேறின்றென்பதாம் ....(சு)

(அ-கை.) சைதன்யவியாபகமுரைத்தல். (கவி) பெரும்பெரியவடிவானபிரமமே
யாதலாற்பிறிதொன்றில்லை, வருபொருளெல்லாமறிவின் கனதையா யிருத்தலிவ்
வையமெல்லாங், கரும்புயலேயறிவேயாங்கற்பனைவேறில்லையாற்காணப்பட்ட, வரு
ம்பொருள்கடனிலறிவுண்டாதலினாலறிபொருளாமனைத்துமில்லை..................... *

(இ-ள்.) பெரும்பெரியவடிவான - மகத்துக்குமகத்துருபமானது—பிரமமேயாதலால் -பிரமஸ்வரூபமேயாதலால்—பிறிதொன்றில்லை - (சகத்தென்பது) வேறொன்றுமில்லை—வருபொருளெல்லாம் - வராநின்றவஸ்துக்களனைத்தும்—அறிவின்கனதையாய்- சித்தின்வடிவாகி—இருத்தலில் - தங்குதலினால்—இவ்வையமெல்லாம் - இச்சகங்களனைத்தும்—கரும்புயலே - கரியமேகமே—அறிவேயாம் - சின்மாத்திரமேயாம்—கற்பனைவேறில்லையால் - கற்பிதம்வேறில்லாததினால்—காணப்பட்ட - பார்க்கப்பட்ட—வரும்பொருள்கடனில் - வராநின்றவஸ்துக்களில்—அறிவுண்டாதலினால் - சித்துண்டாயிருத்தலின் — அறிபொருளாமனைத்துமில்லை - விஷயமாகியசகலமுமில்லை. எ-று. (இ-ம்) காணப்பட்ட சகலவஸ்துக்களுஞ் சைதன்யமாய் நிறைந்திருக்கின்றபடியாலதைத்தவிர வேறுவஸ்துவில்லையென்பதாம்...................... (ரு)

(அ-கை.) அகம்பாவநீங்கியராசாங்கஞ்செய்வாயெனல். (கவி) ஆதலினாற்பந்தம்வீ
டெங்குளதுவீடிதெனவடுத்தபந்த, மீதெனவெண்ணுவதெல்லாம்வலிந்தகற்றியபி
மானமிறையுமின்றித், தீதுதவிர்மவுனியாய்ப்பொறிவென்றுமானமதந்தீர்மேலோ
ஞ், யோதியநின்காரியஞ்செய்திராமனேயகங்காரமொழிந்துநிற்பாய்............ *

(இ-ள்.) ஆதலினால் - ஆகையினால் --பந்தம்வீடு - பெத்தமுத்தி—எங்குளது - எங்கேயிருக்கின்றது—வீடிதென - முத்தியிதுவென்றும்—அடுத்தபந்தமீதென - சேர்ந்திருக்கின்றபெத்தமிதுவென்றும்—எண்ணுவதெல்லாம் - நினைப்பதனைத்தையும்—வலிந்தகற்றி-உறுதியாகத்தள்ளி—அபிமானம் - அபிமானமானது—இறையுமின்றி - அற்பமுமில்லாமல்—தீதுதவிர்மவுனியாய்-குற்றமற்றமவுனியாகி—பொறிவென்று-இந்திரியங்களைச்செயித்து—மானம்-அபிமானமும்—மதம் -செருக்கும்—தீர்மேலோனாய்- நீங்கியமேலானவனாய்—ஓதியநின்காரியஞ்செய்து-சொல்லியவுனதுதொழிலைச்செய்து--இராமனே-ஸ்ரீராமா—அகங்காரமொழிந்துநிற்பாய்-அகம்பாவந்தவிர்ந்திருப்பாய். எ-று. (இ-ம்) பற்றுவீடுமுதலியயாவும்பிரமத்தைத்தவிரவில்லையென்னுமனுபவத்தினாலகம்பாவத்தைநீக்கிபிராசப்ரவிர்த்தியைச் செய்வாயென்பதாம்.

(அ-கை.) பிரமமயமாயிருந்துவிபகரிக்கும்பொருட்டுமாகர்த்தன்முதலியவற்றைச்
சொல்லத்தொடங்கல் (கவி) மோகத்தில்வருமையமெல்லாம்போயறுதிநிலைமுற்று
ம்பற்றி, மாகத்தன்மாபோகிமகத்தானதியாகியாய்வாழ்கியென்ன, மேகத்தைநிகர்
வள்ளலிம்மூன்றுகுணங்களெவைவிளம்பாயென்ன, யோகத்தையுணர்முனிவனக்கு
ணமூன்றையுந்தோன்றவுரைக்கலுற்றான்...*

(இ-ள்.) மோகத்தில்வரும் - மயக்கத்தினால்வராநின்ற—ஐயமெல்லாம்போய்- சந்தேகங்களனைத்துநீங்கி—அறுதிநிலைமுற்றும்பற்றி - நிச்சயமானகுணத்தைமுழுதும்பிடித்து—மாகத்தன் - மகாகர்த்தனாகியும்—மாபோகி - மகாபோகியாகியும் — மகத்தானதியாகியாய்- மகாத்யாகியாகியும்—வாழ்கியென்ன - நீவாழக்கடவாயென்றுவசிஷ்டமுனிசொல்ல— மேகத்தைநிகர்வள்ளல் - முகிலுக்கொப்பாகியஸ்ரீராமர்—இம்மூன்றுகுணங்கள்- இந்தமூன்றுகுணங்களும்—எவைவிளம்பாயென்ன - யாதுஞ்சொல்வாயென்றுகேட்க—யோகத்தையுணர்முனிவன்- உபாயந்தெரிந்தவசிஷ்டமுனியானவர்—அக்குணமூன்றையும்-அந்தமூன்றுகுணங்களையும்—தோன்றவுரைக்கலுற்றான் - தோற்றும்படிசொல்லத்தொடங்கினார். எ-று.............. (எ)

(அ-கை) பிருங்கிசென்றனதுமயக்கநீங்கும்பொருட்டுப்பரமேஸ்வரனைவிநவுதல் (கவி) மூன்றுவகைவிரதமெனுமிதுதன்னைப்பிருங்கிசன்மோகம்போக,வின்றுபரம்பொருளறியம்விருப்பினுலெமகிரிவடகோடெய்தி, வான்றுணையாஞ்சங்கரனைத்தொழுதிறைஞ்சிப்பிறவிமயக்கைநோக்கித்,தோன்றுணர்விலாறுதலில்லாமையினுன்மோகித்துத்துவண்டேனென்றும் .... *

(இ-ள்.) மூன்றுவகைவிரதமெனும் - மூவகையானநோன்பென்கின்ற—இதுதன்னை-இந்தவருத்தத்தை—பிருங்கிசன் - பிருங்கிசனுனவர்—மோகம்போக - தனதுமயக்கநீங்க—ஈன்றுபரம்பொருள்- உண்டானபரமார்த்தத்தை—அறியம்விருப்பினுல் - அறியவேண்டுமென்கின்றபிரியத்தினுல்—எமகிரிவடகோடெய்தி- மகாமேருவினுத்தரசிகரத்தையடைந்து—வான்றுணையாம்- சிதாகாயத்துக்கொப்பாகிய—சங்கரனை- பரமேஸ்வரனை—தொழுதிறைஞ்சி-வணங்கிப்போற்றி—இப்பிறவிமயக்கைநோக்கி- இந்தச்சநநமயக்கத்தைப்பார்த்து—தோன்றுணர்வில்-தோற்றப்பட்டஞானத்தில்— ஆறுதலில்லாமையினுல் - விஸ்ராந்தியில்லாத்தினுல்—மோகித்து- மயக்கமுற்று—துவண்டேனென்றும் - அலைந்தேனென்றுஞ்சொல்லி. எ-று .... (அ)

(அ-கை.) மோகநீக்கும்படிவிரதத்திரயமாவாவெனல். (கவி) இச்சகமாம்பழங்குடிலிலிளைப்பாறிநான்றிரிவதெங்ஙனென்று, மச்சமறுநிச்சயமாமொழுங்கையருள்வாயென்றேயன்பாற்கேட்ப, நிச்சயமாயரனருள்வானையமெலாமறுத்தறுதிநிலைமையற்றின், மெச்சியமாகத்தன்மாபோகிமாத்யாகியாய் விடுவையென்ன .... *

(இ-ள்.) இச்சகமாம்-இவ்வுலகமாகிய—பழங்குடிலில்-சீரணமானவீட்டில்—இளைப்பாறி- விஸ்ராந்தியடைந்து—நான்றிரிவதெங்ஙன்- யான்சஞ்சரிப்பதெப்படி—என்றும் எப்போதும்—அச்சமறும் - பயமில்லாமலிருக்கின்ற—நிச்சயமாமொழுங்கை - நிச்சயமானமார்க்கத்தை—அருள்வாயென்று - அனுக்கிரகஞ்செய்வாயென்று—அன்பாற்கேட்ப- அன்பினுற்கேட்க—நிச்சயமாயரனருள்வான்- நிச்சயமாகப்பரமேஸ்வரன்கிருபைசெய்வார்—ஐயமெலாமறுத்து-சந்தேகங்களனைத்தையுங்கெடுத்து—அறுதிநிலைமையற்றில் - முடிவானநிச்சயத்தைப்பிடித்தால்—மெச்சியமாகத்தன் - துதிக்கப்பட்டமகாகத்தனும்—மாபோகி- மகாபோகியும்—மாத்யாகி - மகாத்யாகியும்—ஆய்விடுவையென்ன - ஆவாயென்றுசொன்னுர். எ - று. (இ-௩-௧-ம்) பவப்பிணிநீங்கும்பொருட்டிவ்விரதமூன்றையு மனுஷ்டித்ததன்மயமாவாயென்பதாம் ... (௯)

(அ-கை.) மாகத்தனிலக்கணங்கூறல். (கவி) செப்பியவிம்மாகத்தன்மாபோகிமகத்தானதியாகியென்ற, விப்பரிசுவிளங்கவருளெனக்கேட்டபிருங்கிசற்கீசன்சொல்வான், வெப்பமுறுமிராகமுனிவின்பமிடரறம்பாவமிகுமிவற்றின், நப்பில்பலாபலமிவற்றில்விருப்பமறச்செய்வோனே தனிமாகத்தன் .... *

(இ-ள்.) செப்பிய- சொல்லிய—இம்மாகத்தன் - இந்தமகாகத்தனும்—மாபோகி-மகாபோகியும்—மகத்தானதியாகி - மகாத்யாகியும்—என்ற-என்றுசொல்லிய—இப்பரிசு-இக்குணங்களை—விளங்கவருளென - தெரியும்படியாகவருள்செய்வாயென்று— கேட்டபிருங்கிசற்கு-வினவினபிருங்கிசருக்கு—ஈசன்சொல்வான் - பரமேஸ்வரன்சொல்லுவார்—வெப்பமுறும்- கொடிதாகிய—இராகமுனிவு- விருப்புவெறுப்பும்—இன்பமிடர்-சுகதுக்கமும்—அறம்பாவம்-தருமாதருமமுமாகிய—மிகுமிவற்றின் - மிகுந்தவினைகளில்—நப்பில்பலாபலமிவற்றில்-தவறுதபலமுமபலமுமாகியவினைகளில்—விருப்பமற- இச்சையில்லாமல்—செய்வோனே-இயற்றுபவனே—தனிமாகத்தன் - ஒப்பற்றமகாகத்தனும். எ-று .... (௰)

(அ-கை.) இ-து. (கவி) மோனமுறவகங்கரமு மானமுமச்சரமும்போய்முடுகிவாடா, தீனமிலாதனசெய்வோனெங்கணுமன்பறச்சாட்சியெனலாயிச்சை, தானறவேகாரியஞ்செய்வோன்வெருட்சியாநந்தந்தாக்குறுதோ,ஞனசமநொய்யதொழிலாலிடரற்றுதயமுறுதவன்மாகத்தன் .... *

(இ-ள்.) மோனமுற - மௌனமாய்—அகங்கரமும் - அகங்காரமும்—மானமும்- அபிமானமும்—மச்சரமும்போய் - மாச்சரியமுநீங்கி— முடுகிவாடாது - வலிந்துமெலியாமல்—ஈனமிலாதனசெய்வோன் - குறைவற்றவைகளைச்செய்பவனும்—எங்கணும் - எவ்விடத்தும்—அன்பற-பற்றற—சாட்சியெனலாய் - சாக்ஷியென்றுசொல்லும்படியாய்—இச்சைதானற-ஒன்றிலுமாசையற—காரியஞ்செய்வோன் - தொழிலைச்செய்பவனும்—வெருட்சி-பயமும்—ஆநந்தம்-சுகமும்- தாக்குறுதோன் - தட்டுப்படாதவனும்— ஆனசமம் - ஆகிய சமமாக—நொய்யதொழிலால்- சொற்பமானசெயலினுல்—இடரற்று - துன்பமற்று—உதயமுறுதவன்-(சந்தோஷமுடையாதவனுமாகியவிவனே—மாகத்தன்- மகாகத்தனும். எ-று. (இ-௨-௧-ம்) சத்திதமாத்தி

ரத்தின் விளங்கியபாவிலும் பற்றற்றதற்குச்சாட்சியாக நின்றவைகளை நடத்து, நானென்கின்ற தைத்தாமென்னுமனுபவமாய் நடாத்துவிப்பதேமாகத்தனென்பதாம் .... (௰௧)

(அ-கை) மாகத்தனிலக்கணங்கூறிமாபோகியினிலக்கணங்கூறல் (கலி) சனனத்தின்மரணத்திலுதயத்திலத்தமனந்தனினேராகி, மனமொத்தோன்மாகத்தனெனத்தெளிவாய்மாபோகிமரபுகூறிற், சினமுற்றொன்றினைநீக்கா தொன்றைவிரும்பான்பகுதிசேரத்துப்போன், வினவுற்றமாபோகியிவன்பெருமைமீளவுநாம்விளம்பக்கேளாய்.

(இ-ள்.) சனனத்தில்-பிறப்பிலும்—மரணத்தில் - இறப்பிலும்—உதயத்தில்-தோற்றுதலிலும்—அத்தமனந்தனில - மறைதலிலும்—நேராகி- சமமாய்—மனமொத்தோன்-மனமொத்தவன்—மாகத்தனெனத்தெளிவாய்- மாகத்தனென்றுதெளிந்துகொள்வாய்— மாபோகிமரபுகூறில் - மாபோகியினதுகுணத்தைச்சொல்லுமிடத்தில்—சினமுற்று- கோபமடைந்து—ஒன்றினைநீக்கான் - ஒன்றையுந்தள்ளாதவனும்—ஒன்றைவிரும்பான் - ஒன்றையுமாசியாதவனும்—பகுதிசேரத்துப்போன் - இயல்பாகவந்ததைமுழுதும்புசிப்பவனு (மாகியவிவனே)— வினவுற்றமாபோகி - முன்சொல்லியமகாபோகியாம்—இவன்பெருமை-இவனதுபெருமையை—மீளவும் - திரும்பவும்—நாம்விளம்பக்கேளாய் - யாஞ்சொல்லக்கேட்பாய். எ-று .... (௰௨)

(அ-கை.) இ - து. (கலி) மிகவெருவலாநந்தமில்லவாய்மயக்கமேவிளைப்பதான, சுகமிடர்கள்புசித்தவற்றாற்கலங்கர்தோன்சராமரணந்தொடருமாபத், தகலரசுமிடிகளுநன்றெனப்புசிப்போன்புளிப்புக்கைப்பழற்சியுப்புப், பகர்நிறைவுகுறைவுசமமாய்ப்புசிப்போன்மாபோகிப்பான்மையோனே .... *

(இ-ள்.) மிகவெருவல் - மிகவும்பயப்படுதலும்—ஆநந்தம்-சுகமும்—இல்லவாய்- இல்லாதவனுய்—மயக்கமேவிளைப்பதான - பிரமையேயுண்டாக்குவதான—சுகமிடர்கள்- சுகதுக்கங்களை—புசித்து - அனுபவித்து—அவற்றாற்கலங்காதோன்- அவைகளாற்கலங்காதவனும்—சராமரணம் - மூப்பிறத்தலும்—தொடருமாபத்து - தொடராநின்றவாபத்தும்— அகலரசும்-சிறந்தவரசாக்ஷியும்—மிடிகளும் - தாரித்திரங்களும்—நன்றெனப்புசிப்போன் - நல்லதென்றனுபவிப்பவனும்—புளிப்பு - புளிப்பும்—கைப்பு - கசப்பும்—அழற்சி- உறைப்பும்—உப்பு-உவர்த்தலும்—பகர் - சொல்லப்பட்ட(விவைகளின்)— நிறைவுகுறைவு -சந்துஷ்டியசந்துஷ்டியின்றி—சமமாய்ப்புசிப்போன் - சமமாயுண்பவனும் — மாபோகிப்பான்மையோன் - மகாபோகித்தன்மையையுடையவன். எ - று. (இ-உ-க-ம்) விருப்புவெறுப்பின்றிச் சகலபோகங்களுந் தனதாநந்தானுபவமாகப்போகிப்பவனே மகாபோகியென்பதாம் .... (௰௩)

(அ-கை.) மாபோகியினிலக்கணங்கூறி மாத்யாகியினிலக்கணங்கூறல். (கலி) உப்பினியல்பெனநன்மைதீமையிரண்டிலுஞ்சமமாயொத்துநிற்போன், றுப்புறுமாபோகியாமகத்தானதியாகிகுணஞ் சொல்லக்கேளாய்த்; தப்பிலறம்பாவமிடர் சுகமரணஞ்சநநமெலாஞ் சேரத்தள்ளுஞ், செப்பமுளபுத்தியுளோன்மகத்தானதியாகியெனத்தெளிந்துகொள்வாய்

(இ-ள்.) உப்பினியல்பென - உப்பின்றன்மையைப்போல—நன்மைதீமை- நன்குதீங்காகிய—இரண்டிலும்-இவ்விரண்டிலும்—சமமாய் - சமமாகி—ஒத்துநிற்போன் - சேர்ந்திருப்பவன்—துப்புறுமாபோகியாம்-பரிசுத்தம்பொருந்தியமகாபோகியாகும் — மகத்தானதியாகிகுணம்-மகாத்யாகியின்றன்மையை—சொல்லக்கேளாய் - மொழியக்கேட்பாய் — தப்பிலறம்பாவம்-குற்றமற்றதருமாதருமமும்—இடர்சுகம் - துன்பவின்பமும்—மரணஞ்சநநமெலாம்-மரித்தல்செனித்தலாகியவனைத்தையும்—சேரத்தள்ளும் - ஒருமிக்கத்தள்ளாநின்ற— செப்பமுளபுத்தியுளோன் - செவ்வையானபுத்தியையுடையவனே—மகத்தானதியாகியென- மகாத்யாகியென்று—தெளிந்துகொள்வாய் - அறிந்துகொள்ளுவாய். எ-று......... .... (௰௪)

(அ-கை.) இ - து. (கலி) அனைத்தாசையனைத்தைய மனைத்தானதொழிலனைத்தாமறுதியாவுந், தினைத்தானுமேவாதபுந்தியோன்றன்னைமகத்யாகியென்ப, வெனைத்தானவறம்பாவமனமனந்தொழிலிதயத்தெல்லாந்தீர்ந்தோன், வினைத்தாயபிருங்கோமகத்தானதியாகியெனவிளம்புமன்றே .... *

(இ-ள்.) அனைத்தாசை - சகலவிச்சைகளும்—அனைத்தையம்- சகலசந்தேகங்களும் — அனைத்தானதொழில் - சகலசெய்கைகளும்—அனைத்தாமறுதி - சகலநிச்சயங்களுமாகிய—யாவும் - எல்லாம் —தினைத்தானும் - தினையளவேனும்—மேவாதபுந்தியோன்றன்னை-அடையாதவறிவையுடையவனை —மகத்யாகியென்பர்-மகாத்யாகியென்றுசொல்லுவார்கள்—எனைத்தானமற்றுள்ளதாகிய— அறம்பாவம் - தருமாதருமமும்—மனம் - மனதும்—மனனம் - சிந்தனையும்—தொழிலுமெல்லாம் - செயல்களுமாகியயாவையும் — இதயத்து - உள்ளத்தில்—தீர்ந்

தோன் - நீங்கினவனே—வினத்தாய - வணக்கமுடையவரான—பிருங்கீசா - பிருங்கீசனே—மகத்தானதியாகியென - மகாத்யாகியென்று—விளம்பும் - சுருதிசொல்லும். எ-று... (ய௫)

(அ-கை.) இ - ரு. (கவி) தெரிபவத்திலெண்ணமாய்க்காணுமிவைவெவ்வளவத்திரள்களெல்லாங், கரிசறநன்றாய்விட்டோன்மகத்தானதியாகியெனக்கருணையீச,னுரியபிருங்கீசனுக்குமுன்றுளோதினனிந்தவுயர்ந்தநோக்கைப், பரிசயமுற்றுப்பிடித்துத்துயரொழிவாயுலகளிக்கும்பதுமக்கண்ணு.. *

(இ-ள்.) தெரிபவத்திலெண்ணமாய் - திரிஸ்யத்தினினைவாக— காணுமிவைவெவ்வளவும் - பார்க்கின்றவைகளெவ்வளவோ—அத்திரள்களெல்லாம் - அக்கூட்டங்களனைத்தும்—கரிசற-களங்கமில்லாமல்—நன்றாய்விட்டோன் - நன்றாகவிட்டவனே—மகத்தானதியாகியென-மகாத்யாகியென்று—கருணையீசன் - கிருபாஸ்வரூபியானபரமேஸ்வரன்—உரியபிருங்கீசனுக்கு- உரித்தாகியபிருங்கீசருக்கு—முன்றுளோதினன் - முன்றுளிற்சொன்னார்—இந்தவுயர்ந்தநோக்கை-இம்மேலானபார்வையை—பரிசயமுற்று - பழக்கஞ்செய்து—பிடித்து - நீபற்றிக்கொண்டு—உலகளிக்கும் - சகத்தைப்பிரட்சிக்கின்ற—பதுமக்கண்ணு- தாமரைக்கண்ணையுடையவிராமா—துயரொழிவாய் - துன்பநீங்குவாய். எ - று, (இ-௬-க-ம்) தனக்கெதிராயுள்ளயாவையும் பிரமமாகவறிந் தஃதுதான்மாத்திரமாய் விளங்கியவைகளனைத்தையுந்தள்ளினவனே மகாத்யாகியென் றீஸ்வரனனுக்கிரகப்படி நீவிளங்குவாயென்பதாம்.................................... (ய௬)

(அ-கை.) இத்திருஷ்டியினின்று யாவுஞ்செய்வாயெனல். (கவி) நித்தமுறுமுதயமுளதாதியாகுவதநந்தநிமலமேக, மத்தகைபபிரமமேயுளதுவிகற்பத்தெண்ணமயலொன்றில்லை, யித்திறமென்றேபாவித் தழுக்கிலனுய்ச் சுகமேவியியற்றுஞ்செய்கை, சுத்தவிமலச்சாந்தமுறவெல்லாமேவுவாய்சுத்தவீரா............................ *

(இ-ள்.) நித்தமுறுமுதயமுளது-சதோதயமுள்ளதும்—முதலாவது-ஆதியானதும்—அநந்தம் - முடிவில்லாததும்—நிமலம்-நின்மலமானதும்—ஏகம்- ஒன்றானதுமாயிருக்கின்ற—அத்தகைபபிரமமேயுளது-அப்படிப்பட்டபிரமஸ்வரூபமேயுள்ளது—விகற்பத்தெண்ணம்-வேறுநினைவு—அயலொன்றில்லை - மற்றொன்றுமில்லை—இத்திறமென்று - இந்தப்ரகாரமென்று—பாவித்து - பாவனைசெய்து—அழுக்கிலனுய் - களங்கமில்லாதவனுய்—சுகமேவி-ஆநந்தத்தையடைந்து—இயற்றுஞ்செய்கை - முயற்சிக்கின்றதொழில்கள்—சுத்தம் - பரிசுத்தமாகி—விமலச்சாந்தமுற - நின்மலமானவுபசாந்தமுண்டாக — சுத்தவீரா - ஸ்ரீராமா—எல்லாமேவுவாய் - அனைத்தையும்பொருந்துவாய். எ-று. (இ-ம்) நிரதிசயாநந்தவடிவமாய் நின்று சகலதொழிலையுஞ் செய்யிற்செய்துஞ் செய்யாததென்பதாம்................................. (யஎ)

(அ-கை. பாவனையனைத்துமின்றியெப்போதுஞ்சின்மாத்திரமேவிளங்குகின்றதெனல்(கவி) தீங்கிடர்தீர்பிரமமாய்க்கற்பனையெல்லாமேவிச்செய்கையொன்றே, யோங்கியவித்தாய்ப்பரமரூபமாய்ப்பெரியோனுயுயர்மகத்தாய், வீங்கியபாவனையெல்லாநிறைவதாய்மெய்ஞ்ஞானவீராகிஞ்சி, லீங்கிலதென் றுரைப்பதாமாகாயமேதுவேயென்றுமுண்டால்.... *

(இ-ள்.) தீங்கிடர்தீர் - குற்றமுள்ளதுன்பநீங்கிய—பிரமமாய் - பிரமமாகியும்— கற்பனையெல்லாமேவி-கற்பனைகளனைத்தும்பொருந்தி—செய்கையொன்றே- கிரியையொன்றுக்கும்—ஓங்கியவித்தாய் - உயர்ந்தவிதையாகியும்—பரமரூபமாய்- பரமாத்மஸ்வரூபமாகியும்—பெரியோனுய் - மகானுகியும்—உயர்மகத்தாய்-மேலானமகத்தாகியும்—வீங்கியபாவனையெல்லாம்-பருத்தபாவனைகளனைத்தும்—நிறைவதாய்-நிறைவதாகியுமிருக்கின்ற— ஆகாயமேது- (ஞா)ஞாகாசமெதுவோ—அதுவேயென்றுமுண்டு-அதுவேயெப்போதுமுண்டாயிருக்கின்றது— மெய்ஞ்ஞானவீரா-மெய்ஞ்ஞானவீரனுனஸ்ரீராமா—ஈங்கு-இவ்விடத்தில்—கிஞ்சில்- அற்பமும்—இலதென்றுரைப்பதாம் - (வேறொன்று) மில்லையென்றுசொல்லுவதாம். எ-று......... (யஅ)

(அ-கை.) பிரமத்தைத்தவிரவற்பமும்வேறின்றெனல்(கவி) அன்னியமாவோரிடத்திலிதுகிஞ்சிலெனவென்றுமசத்துஞ்சத்துந், துன்னலுறுமதென்றுள்ளேதிடநிலையாயகங்காரந்துடைத்துநிற்பா,யுன்னுள்ளமுகமாகிப்புறத்தின்வருவனவெல்லாமொருங்குசெய்து,பின்னுதொழிலிடர்மேவாதுருவமிலாவகந்தையைநீபிரியவென்றுன்.... ... . *

(இ-ள்.) அன்னியமா - அயலாக—ஓரிடத்தில்- ஒருவிடத்திலும்—இதுகிஞ்சிலென- ஈதற்பமென்றும் — என்றும் - எப்போதும் — அசத்தும் - அசத்தியமும் — சத்தும் - சத்தியமும்—துன்னலுறுமதன்று - நெருங்கமாட்டாதென்று — உள்ளேதிடநிலையாய் - உள்ளேதிடநிச்சயமாய்—அகங்காரந்துடைத்துநிற்பாய் - அகம்பாவத்தைக்கெடுத்திருப்பாய்—உன்னுள்ளமுகமாகி - உன்னிலகமுகத்தையுடையவனுய்—புறத்தின்-புறம்பில—வருவனவெல்லாம்-

வருவனவாகியசகலமும்—ஒருங்குசெய்து - ஒற்றுமைசெய்து—பின்னுதொழில் - பின்னாநின்றசெயலினது—இடர்மேவாது - துன்பமடையாமல்—உருவமிலா - வடிவமில்லாத—அகந்தையை - அகங்காரத்தை—நீபிரியவென்றான் - ஸ்ரீராமாநீநீங்கக்கடவதென்றுசொன்னார். எ-று. (இ-உ-க-ம்.) தன்னைத்தவிரவற்பமும்வேறில்லையென்கின்ற ஸ்வானுபவதிருஷ்டியினாலகம்பாவத்தைக்கெடுத்துத்தன்மயமாய்விளங்குவாயென்பதாம் .... (௯௬)

விரதசூயைகதைமுற்றிற்று. ஆ. கதை-சயஉ-கவிதை (௩௮௬௬)

இட்சுவாகுகதை.

(அ-கை.) முற்கதையின்மாகர்த்தத்வமுதலிய மூன்றினாலுஞ்சமாதி நிஷ்டையின்றிச் சகசநிஷ்டையினாற்சர்வம் பிரமமயமென்பதைவிளங்கி யிவ்வனுபவந்திரமாம் பொருட் டிட்சுவாகுகதையைநிரூபிக்கிறார் .... *

(அ-கை.) சுமனதினிலக்கணம்விசாரித்தல். (கவி) வேறு. தருமமெல்லாமுணர்முனி
யேசாற்றுமகங்காரப்பெயரை, மருவுமனந்தான்வடிவிருக்கமாய்ந்தாலந்தவுண்மை
க்குப், பெருகுகுறியேதுரையெனவெம் பெருமான்கேட்பமுனியுரைப்பா, னுருவ
மிருக்கமனமிறந்தவுண்மைக்குள்ளகுறிகேளாய் .... *

(இ-ள்.) தருமமெல்லாம் - தன்மங்களனைத்தையும்—உணர்முனியே- அறியாநின்றவசிஷ்டமுனியே—சாற்றும்- சொல்லப்பட்ட—அகங்காரப்பெயரை-அகங்காரமென்னுநாமத்தை—மருவுமனம் - பொருந்தாநின்றமனமானது—தன்வடிவிருக்க-தன (திதார்த்த) ஸ்வரூபமிருக்க—மாய்ந்தால்- (கற்பனாவடிவ)மிறக்கின்—அந்தவுண்மைக்கு- அங்குள்ளதத்துவத்துக்கு—பெருகுகுறியேது - பெரிதானவடையாளமியாது — உரையென - சொல்லுவாயென்று—எம்பெருமான்கேட்ப - எப்பெருமானாகியஸ்ரீராமன்கேட்க—முனியுரைப்பான்-வசிஷ்டமுனி சொல்லுவார்—உருவமிருக்கமனமிறந்த - வடிவமிருக்கமனநசித்த—உண்மைக்குள்ளகுறிகேளாய்-தத்துவத்துக்குள்ளவடையாளங்கேளாய். எ-று. (இ-ம்) விஷயசம்பந்தநீங்கிப்பிரமசம்பந்தமாகச்சஞ்சரிக்கு மனதுக்கப்போதுண்டான குறிகள்யாதெனவிசாரித்ததாம் .... (௧)

(அ-கை.) அனுபவிமனதினிலக்கணங்கூறல். (கவி) அழுந்துவசத்திலிருப்போ
னையம்புயத்தினீர்போல, வெழுந்தலோபமோகமுத லெக்குற்றமும்வன்புறந
லியா, முழுந்துமுதிதைமுதற்குணங்கள் முகத்திலழகாய்ச்சிறிதகலா, விழுந்
துபாவமெல்லாம்போ மிகுவாதனைகட்டறுமெல்ல.. .... *

(இ-ள்.) அழுந்துவசத்தில் - இடமுள்ளவாத்யவசத்தில்— இருப்போனை - இருப்பவனை—அம்புயத்தினீர்போல - கமலபத்ரோதகம்போல—எழுந்த - உண்டான—லோபமோகமுதல்- ஆசைமயக்கமுதலிய—எக்குற்றமும்- எந்தக்குற்றங்களும்—வன்புறநலியா-வருத்தமாட்டாது—முழுந்தும் - எல்லாமான — முதிதைமுதற்குணங்கள் - முதிதைமுதலாகியசற்குணங்கள்—முகத்திலழகாய்ச்சிறிதகலா- வதனத்திற்சுந்தரமாகவற்பமுநீங்காது—பாவமெல்லாம்விழுந்துபோம்- பாவங்களனைத்துங்கெடும் — மிகுவாதனைக்கட்டு - மிகுந்தவாசனையினதுபந்தமானது—மெல்லவறும் - மிருதுவாகக்கெடும். எ-று. (இ-ம்) ஆத்மாவிற் சுகிக்குமனதைமோக முதலியகுற்றங்களணுகாமல் மயித்திரியாதிகுணங்கள் விளங்குமென்பதாம் .... (௨)

(அ-கை.) இ-து. (கவி) வேகந்தேயுமுலோபகுணமெலியுங்காமவினையடங்கு, மோகம்
போயெங்கொளித்திடுமோ முடுகிக்கிளராதைம்பொறிகள், சோகந்தாவியடராதுசுகமு
மேலிட்டெழமாட்டா, தாகந்திரக்குளிர்ந்துள்ளே சமந்தோன்றிடுமாலெவ்விடத்தும்.. *

(இ-ள்.) வேகந்தேயும் - கோபமானதழியும்—உலோபகுணமெலியும் - ஆசையுள்ளகுணமுமிளைக்கும்—காமவினையடங்கும் - காமவிகாரத்தின்குணங்கெடும்—மோகம்போய்- மயக்கமானதுபோய்—எங்கொளித்திடுமோ-எவ்விடத்திலொளிக்குமோ—ஐம்பொறிகள்- பஞ்சேந்திரியங்களும்—முடுகிக்கிளராது-வலிமையாகப்ரகாசியாது—சோகந்தாவியடராது- துன்பமானதெழுந்துவருத்தாது—சுகமுமேலிட்டெழமாட்டா-இன்பமுமதிகரித்துண்டாகமாட்டாது—

தாகந்திர-துன்பதீங்க — உட்குளிர்ந்து - அகமகிழ்ந்து—எவ்விடத்தும் - எந்தவிடத்திலும்—சமந்தோன்றிடும் - சமத்துவந்தோற்றும். எ-று. (இ-ம்) இராகத்வேஷமுதலிய குணங்களிறந்துசமதிருஷ்டியாய் விளங்குமென்பதாம் .... (ரு)

(அ-கை.) இ-து. (கவி) துன்பமின்பமெலாமுகத்திற்றோன் றுமெனினுந்தோன்றிடுக,வன்பிலவைநெஞ்சினை நலியாமனமேமயிறக்கில்வானோரு, மன்பினையப்பார்நலனுண்டாமங்கே சமமாமதியுதிக்கு, மென்புகுளிருஞ்சாந்திமெயழிலைத் துந்தடைதீர்பெருமையுறும் .... *

(இ-ள்.) துன்பமின்பமெல்லாம் - துக்கசுக (முதலிய)வனைத்தும்—முகத்திற்றோன் றுமெனினும்-வதனத்திற்றோற்றமானாலும்—தோன்றிடுக- தோற்றக்கடவது—வன்பிலவை - வலியின்றியவச்சுகதுக்கங்கள்—நெஞ்சினை நலியா - மனதை வருந்தாது—மனமேமயிறக்கில்- மனமாத்திரம் நசித்தால்—வானோரும் - தேவர்களும்—அன்பினையப்பர்-(அவனை) யன்பினுற்சினேகிப்பார்கள்—நலனுண்டாம் - ஆநந்தமுண்டாகும் —அங்கு-அவ்விடத்தில்—சமமாமதியுதிக்கும்-சமத்துவமாகியவறிவுண்டாகும்—என்புகுளிரும் - அஸ்திகுளிருகின்ற — சாந்திமெயழிலைத்தும்- சாந்தமானவழகுண்டாகும்—தடைதீர்பெருமையுறும் - அளவற்றமாட்சிமைபொருந்தும். எ-று. (இ-ம்) சுகதுக்கமின்றிச் சாந்தமானதேஜசாய் விளங்குமென்பதாம்.........(சு)

(அ-கை.) இ-து. (கவி) பணிதலொளிர்தனொய்ம்மையுறும்பழுதிலமலவடிவுண்டாம்,பிணியில்பெரியோர்குடும்பமயற்பெரிதாய்ப்பதுமைத்தாலுந், தணிவில்பாவாபாவத்தாற்றள்ளுற்றாலுமின்பமிடர், கணிதமெனினுஞ்செயமாட்டாக்கருணைத்தடங்கட்கருங்காரோ.*

(இ-ள்.) பணிதல்-(யாவரும்)வணங்குதலும்—ஒளிர்தல் - விளங்குதலும் — நொய்ம்மையுறும் - சொச்சமும்பொருந்திய—பழுதிலமலவடிவுண்டாம்-குற்றமற்றநின்மலஸ்வரூபமுண்டாகும்—பிணியிலபெரியோர் - துன்பமற்றசத்துக்களே—குடும்பமயல்- சம்சாரப்ரமையான்து—பெரிதாய்ப்புதுமைத்தாலும் - மகத்தானவதிசயமானாலும்—தணிவில்பாவாபாவத்தால்- அடங்காதவுற்பத்திநாசத்தினால்—தள்ளுற்றாலும் - அலைக்கப்பட்டாலும் —இன்பமிடர்கணிதமெனினும் - சுகதுக்கங்களனந்தகோடியானாலும்—கருணைத்தடங்கண்கருங்காரோ-கிருபையுள்ளவிசாலமானகண்ணையுடையவிராமா — செயமாட்டா -(ஒன்றுஞ்) செய்யமாட்டாது. எ-று. (இ-ம்) நின்மலமாயாதுவரினு மதனாற் சுகதுக்கமடையாதென்பதாம் .... (எ)

(அ-கை.) சுத்தமனதி னிலக்கணஞ்சொல்லித் தன்னை யறியாதவனை யிகழ்ந்து வறிபவர்கள் விசாரவிலக்கணஞ்சொல்லுதல். (கவி) புந்திப்பார்வைக் கெட்டுவதாய்ப் புகலாபத்தெல்லாமிறந்த, விந்தப்பொருளைமோகத்தா லெய்தாதவர்சீசீயிழிந்தோர், தொந்தஞ்சிற்காலப்பற்றுற்றோன் றுதுயராமணிகள்செறி, பந்தப்பிறவிக் கடல் கடக்கும்பான்மைநயந்தோர்நெறிகேளாய் ....*

(இ-ள்.) புந்திப்பார்வைக்கெட்டுவதாய்-ஞானதிருஷ்டிக்ககப்படுவதாகி—புகல்-சொல்லப்பட்ட—ஆபத்தெல்லாமிறந்த - ஆபத்துக்களனைத்துமரித்த— இந்தப்பொருளை - இப்பரவஸ்துவை—மோகத்தால் - ஆசையினால்—எய்தாதவர் - அடையாதவர்கள்—சீசியிழிந்தோர்-சைசையிகழ்ப்பட்டவர்களேயாம்—தொந்தம் - தொந்தமாகிய— சிற்காலப்பற்றுற்றோன் றுதுயராம் - சிலகாலப்பற்றினாற்றோற்றுந் துன்பமென்கின்ற—மணிகள்செறிபந்தம் - இரத்தினங்களிறைந்தபந்தமென்னும்—பிறவிக்கடல்கடக்கும்பான்மைநயந்தோர்- பவசாகரந்தாண்டுங்குணம்விரும்பினவர்களது—நெறிகேளாய் - கிரமத்தைக்கேட்பாய். எ-று .... (அ)

(அ-கை.) இ-து. (கவி) ஊனூர்பிறவிக்கடல்கடப்போர்க்குரியவிளைப்பாறுதலெய்த, நாநூரிந்தச்சகமெங்ஙனும்பிரமனாராகு, மானுவிடயபோகத்தாலாவதென்றே வென்னுமதி, தானும்பரமவுபாயமெனச்சாற்றுங்கண்டாய்சற்குணனே .... *

(இ-ள்.) ஊனூர்பிறவிக்கடல்-மாமிசநிறைந்தபவசமுத்திரத்தை—கடப்போர்க்குரிய- தாண்டுபவர்களுக்குரித்தாயிருக்கின்ற—இளைப்பாறுதலெய்த - விஸ்ராந்தியையடைய— நானூர்-யாவர்—இந்தச்சகமெங்ஙன் - இவ்வுலகமானதெப்படிப்பட்டது—நாடும்பிரமனாராகும்- தேடும்பரமமெவனும்—ஆனுவிடயபோகத்தால் - நீங்காதவிஷயபோகத்தினால்— ஆவதென்றே- உண்டாவதென்ன—என்னுமதிதான் - என்கின்றவிசாரஞானமே — ஆம்பரமவுபாயமென- ஆகும்மேலானவுபாயமென்று—சற்குணனே- சற்குணத்தையுடையஸ்ரீராமா — சாற்றுங்கண்டாய்-(வேதங்கள்) சொல்லும். எ-று. (இ-உ-க-ம்) ஆத்மாயாது சகமியாது நீங்கிய பிரமம்யாதெனவிசாரித்தலே மேலானவிசாரயுத்தியென்பதாம் .... (கூ)

(அ-கை.) இப்படிவிசாரித்த இட்சுவாகுகதையைச் சொல்லத்தொடங்கல். (கவி) எற்றமுன துகுலமுதலவனிக்ஷுவாகுவெனுமன்ன, முற்றதுயர்விடவடைந்தவடை

வுகேளாயருள்வேந்தன், றோற்றமுடையதன்புவனந் தொல்லைநெறியினடத்திடுநா,
ளூற்றமுடையவுளத்தாலேயொருவன்றனேயிருந்துணர்வான் ...... *

(இ-ள்.) ஏற்றம்-மேலான—உனதுகுலமுதல்வன் - உனதுகுலத்துக்குமுதன்மையாகிய—இக்குவாகுவெனும்-இட்சுவாகுவென்கின்ற—மன்னன் - அரசனானவன்—ஆற்றலுயர்வீடு-ஞானமென்னுமேலானமோட்சத்தை—அடைவுற்ற-அடைந்த—அடைவுகேளாய்- கிரமத்தைக்கேட்பாய்—அருள்வேந்தன்-கிருபையுள்ளவரசன்—தோற்றமுடைய - தோற்றத்தையுடைய—நன்புவனம்-தனதுபூமியை—தொல்லைநெறியின்-பழைமையானமார்க்கத்தில்— நடத்திடுநாள்-நடாத்துகின்றகாலத்தில்—ஊற்றமுடையவுளத்தால் - மேலானமனதினால்—ஒருவன்றனே-தனியனாகவே—இருந்துணர்வான் - இருந்துசிந்திப்பான். எ-று. ...... (௮)

(அ-கை.) தனித்திருந்துசகத்காரணமியாதெனவிசாரித்தல்(கவி)சரைசாவின்பதுன்
பங்கடளர்மோகங்கண்மயக்கங்கள், வரையாநிலையாய்க்காண்பனவு மட்டிலாதசகத்
துக்குப், புரைதீர்மூலமேதென்றுபரிந்துநினைந்தான்பூபால, னுரைசாருலகின்மூ
லத்தையுன்றனின்றுமுணர்ந்திலனால் ...... *

(இ-ள்.) சரைசாவு - மூப்பிறப்பையும்—இன்பதுன்பங்கள் - சுகதுக்கங்களும்—தளர்மோகங்கள் - வாடுகின்றபிரமைகளும்—மயக்கங்கள் - மயக்கங்களும்—வரையா - அளவிடாத—நிலையாய்க்காண்பனவும்-நிலையாகக்காணப்பட்டனவும்—மட்டில்லாதசகத்துக்கு-அளவில்லாதவுலகத்துக்கு—புரைதீர்மூலமேதென்று - குற்றமற்றகாரணமெதுவென்று— பூபாலன்-பூபதியானவன்—பிரிந்துநினைந்தான் - விரும்பிச்சிந்தித்தான்—உரைசார் - வசனநிறைந்த—உலகின்மூலத்தை - சகத்காரணத்தை—உன்றனின்றும்- சிந்தித்தும் — உணர்ந்திலன்-அறிந்திலன். எ - று. (இ-உ-க-ம்) சகத்தினனித்தியத்தைப்பார்த்ததற்குக் காரணமான நித்தியத்தை விசாரித்துந் தெரிந்திலனென்பதாம் ...... (௯)

(அ-கை.) பிரமனை வணங்கித் துதித்தல். (கவி) அயனாட்டினும்வந் தடைவுற்றவா
திமனுவாம்பகவனைக்கண், டியலாற்பூசித்தருட்செல்வாவின்றுநீயிங் கெளிதெய்தி,
முயல்வாலளித்தநின்னருளான்மோகந்தீர்ந்துநிலைநிற்கும், பயனாலென்னையருளெ
ன்றுபரவியரசனுரைசெய்வான் ...... *.

(இ-ள்.) அயனாட்டினும் - சத்தியலோகத்தினின்றும்—வந்தடைவுற்ற - வந்துபொருந்திய—ஆதிமனுவாம்பகவனைக்கண்டு - முதன்மனுவாகியபகவானைத்தரிசித்து— இயலாற்பூசித்து - கிரமத்தினாலாராதித்து—அருட்செல்வா - கிருபாநிதியே—இன்று- இப்போது— நீயிங்கெளிதெய்தி - நீயிவ்விடத்திலெளிதாகவந்து — முயல்வாலளித்தநின்னருளால் - முயற்சியினாலருள்செய்தவுமதுகிருபையினால் — மோகந்தீர்ந்துநிலைநிற்கும்பயனால்-மயக்கநீங்கிநிலையாயிருக்கும்ப்ரயோசனத்தினால்—என்னையருளென்றுபரவி - எனதுஸ்வரூபத்தையநுக்கிரகிப்பாயென்றுவணங்கி—அரசனுரைசெய்வான் - மன்னன்சொல்லுவான். எ-று ...... (௰)

(அ-கை.) இப்பவமோகநீங்கும்பொருட் டிச்சகத்தையாதாவிதமாகப் பிரித்துவினாவினா
னெனல் (கவி) எங்குநின்றுவந்துளதிச்சிருட்டியிதற்கெப்படியுருவ, மங்குமூலகமெம்
மட்டுமற்றாருடையதெதுகால, மிங்கீதெதனாலெனவுணர்த்தியேறிக்குறைந்தவிப்பிறவிப்
பொங்குமயக்கைவலையகலும்புட்போனீங்கும்வகைபுல்வாய் ...... *

(இ-ள்.) இச்சிருட்டி - இந்தச்சகசிருஷ்டியானது—எங்குநின்றுவந்துள்து - எவ்விடத்திலிருந்துதித்தது—இதற்கெப்படியுருவம் - இச்சகத்தினுருவெப்படிப்பட்டது — மங்குமூலகமெம்மட்டு - கெடாநின்றசகமெவ்வளவு — மற்றாருடையது - ஈதாரையுடையது — எதுகாலம் - எக்காலத்தில்—இங்கீதெதனாலென - இதென்னகாரணத்தினாலுண்டானதென்று — உணர்த்தி-அறிவித்து—ஏறிக்குறைந்த - உயர்ந்துதாழ்ந்த—இப்பிறவி-இச்சநநத்தின்—பொங்குமயக்கை - மிகுந்தமயக்கத்தை—வலையகலும்புட்போல்-வலையினின்றுநீங்கும்பட்சியைப்போல—நீங்கும்வகைபுகல்வாய் - நீங்கும்விதத்தைச் சொல்லுவாயென் றிட்சுவாகுகேட்டார். எ - று. இதற்கெப்படியுருவமென்றது சித்தா, அசித்தா, சதசத்தாவெனவும், ஆருடையதென்றது சிவனுடையதா வீசனுடையதாவெனவும் விசாரித்ததெனக்கொள்க. (இ-உ-க-ம்) மாயாசகமுண்டானவிடமு மதன்வடிவமு மதன்முடிவு மதனையுடையவனு மதுதித்தகாலமுங் காரணமும் விசாரித்தானென்பதாம் ...... (௰௧)

(அ-கை.) உ- சி- சகத்காரணமு மதனுருவமுமுரைத்தல். (கவி) என்றலோடுமறப்
புதிதாமெண்ணில்காலத்தோடேநீ, யன்றுவிவேகவிசாலத்தாற் சொன்னவினாவே

விதிப்பொருளைப், பொன்றுவிக்குமென்றுமனுப் புகல்வான்சிறிதாக் காணுமிவை,
பொன்றுமிலலைக்கந்தற்பவூர்போன்மருப்பூமியிற்சலம்போல் ………………… *

(இ-ள்.) என்றலோடும்-இப்படியென்றரசன்சொல்லவும்—அறப்புதிதாம் - மிகவுமாச்சரியமாம்—எண்ணில்காலத்தோடு-அளவில்லாதகாலத்தோடும்—நீநின்று- நீநெருங்கின—விவேகவிசாலத்தால்-விவேகமிகுதியினால்—சொன்னவிறுவே-கேட்டசங்கையே—விதிப்பொருளை-(மித்தையாகச்)சொல்லியமாயாவஸ்துவை—பொன்றுவிக்குமென்று-கெடுப்பிக்குமென்று—மனுப்புகல்வான்-மனுவானவர்சொல்லுவார்—சிறிதாக்காணுமிவை- அற்பமாகப்பார்க்கின்றவிச்சகங்கள்—கந்தற்பவூர்போல்-கந்தர்வநகரம்போலவும் — மருப்பூமியிற்சலம்போல்-களர்ப்பூமியிற்றோன்றுங்கானற்சலம்போலவும்—ஒன்றுமில்லை-எவ்வளவுமில்லை. எ-று. (௰௨)

(அ-கை.) இ-து. (கவி) கிஞ்சில்கரணங்களுக்கெட்டாக் கிளர்வானினுஞ்சற்றாய்முடிவி,லெஞ்சலிலதாமழிவின்றியிருந்ததென்றுமான்மாவாம், விஞ்சுமந்தப்பெருங்கண்ணாடியிலே நேயம்விரிவிடய, பஞ்சபூதசிருட்டியெலாம் பத்திபாய்த்துவிளங்கிடுமால் ………… *

(இ-ள்.) கிஞ்சில் - அற்பமும்—கரணங்களுக்கெட்டா- இந்திரியங்களுக்கெட்டாததாகியும்—கிளர்-விளங்காநின்ற—வானினுஞ்சற்றாய் - ஆகாயத்தினுஞ்சூட்சுமமாகியும்—முடிவில்-(வே)தாந்தத்தில்—எஞ்சலிலதாம்- குறைவில்லாததாகியும்—அழிவின்றி-அழிவில்லாமல்—என்றும்-எப்போதும்—இருந்தது- இருந்ததே—ஆன்மாவாம்- ஆத்மஸ்வரூபமாகும்—விஞ்சும்-மேலான—அந்தப்பெருங்கண்ணாடியில்- அந்தப்பெரியதற்பணத்தில்—நேயம்- திரிஸ்யமாகிய—விரிவிடய-விரிந்தவிஷயமான—பஞ்சபூதசிருட்டியெலாம் - பஞ்சபூதசிருஷ்டிகளனைத்தும்—பத்திபாய்த்துவிளங்கிடும்- ப்ரதிபலித்தொளிரும். எ-று. (இ-உ-க-ம்) ஆத்மாவினிடத்திற்சகத்தோற்றுமாமலைதி னுருவங்கானற்சலம்போலத்தோற்ற மாத்திரமாமென்பதாம்………(௰௩)

(அ-கை.) ௯-௧-சகத்தினளவுரைத்தல். (கவி) பிரமத்தினவாயொளியுருவாய்ப் பிறந்துபிறங்குஞ்சத்திகடாம், விரவிப்பிரமாண்டத்தினதுமேனியாகிநின்றசில, வுரவுபலபூதத்திரளினுருவமாகிநின்றசில, சுரர்பொற்பதியாய்நின்றசிலதோன்றுசகத்தினிலையிதுவே *

(இ-ள்.) பிரமத்தினவாய் - பிரமசம்பந்தமாயும்—ஒளியுருவாய்- ப்ரகாசரூபமாயும்—பிறந்துபிறக்கும்- உண்டாகிவிளங்கிய—சத்திகடாம்விரவி-பூரணசத்திகள்சேர்ந்து—பிரமாண்டத்தினது- பிரமாண்டத்தினுடைய—மேனியாகி-வடிவமாகி—சிலநின்ற-சிலசத்திகளிருந்தன—உரவுபலபூதத்திரளின் - உரமானபலசீவக்கூட்டங்களின்—உருவமாகிசிலநின்ற - வடிவமாய்சிலசத்திகளிருந்தன—சுரர்பொற்பதியாய் - தேவலோகமாய்—சிலநின்ற-சிலசத்திகளிருந்தன—தோன்றுசகத்தினிலையிதுவே-தோற்றுகின்றசகத்தினுண்மையிதுதான். எ-று. (இ-ம்) பாஞ்சபௌதிகமாகத் தோற்றியசிற்சத்தி யினளவேசகத்தி னளவாமென்பதாம் ……………(௰௪)

(அ-கை.) ௪-௫-௯-௧- உத்தரங்கூறல். (கவி) பந்தமில்லைவீடில்லைப் படர்திர்பிரமமேயுளதா, மந்தவயிக்கமில்லையிரண்டில்லையறிவேவளர்ந்தெழுந்த, சிந்துதரங்கப்பங்கத்தாற்றிகழுகின்றநீர்போல, வந்தமில்லாவறிவுருவே விளங்குமயலொன்றிலதாகும் ………… *

(இ-ள்.) பந்தமில்லை - பெந்தமுமில்லை—வீடில்லை- முத்தியுமில்லை—படர்திர்பிரமமேயுளதாம்- துன்பமில்லாதபிரமமேயுள்ளதாகும் — அந்தவயிக்கமில்லை -அவ்வொருமையுமில்லை —இரண்டில்லை - இருமையுமில்லை—அறிவே- ஞானமே—வளர்ந்தெழுந்த- வளர்ந்தெழுந்தது—சிந்துதரங்கம்- சமுத்திரத்தலையினது—பங்கத்தால்- வேறுபாட்டினால்—திகழுகின்றநீர்போல-விளங்குகின்றசலத்தைப்போல—அந்தமில்லா- முடிவில்லாத—அறிவுருவே-ஞானஸ்வரூபமே—விளங்கும் - ப்ரகாசிக்கும்—அயலொன்றிலதாகும் - வேறொன்றுமில்லையாம். எ-று. (இ-ம்.) சின்மாத்திரமே யுள்ளதென்று மனுபவமில்லாதவனே யுடையதென்று மிவ்வனுபவமில்லாத போதுநித்தமென்று மிவ்வனுபவம், நவநவமாய்விளங்குநிமித்த முண்டானதென்றுஞ்சின்மாத்திரமா யிருக்கின்றதென்றுமறிந் தயலென் னுங்கற்பனையைநீக்கவேண்டுமென்பதாம்…. (௰௫)

(அ-கை.) இவ்வாறுசங்கைக்குமுத்தரஞ்சொல்லிமேலாத்மானுபவமுண்டாகும்பொருட்டாத்மசங்கற்பமே சீவனுயிற்றெனல். (கவி) பந்தமுத்திநினைவுகளைப் பயிலாதோட்டியுன்வசமாய், முந்துபிறவிப்பயமெல்லா முற்றுமொழிந்துநிலைநிற்பா, யந்தநீசங்கற்பநினை வடைந்தாற்சின்மாத்திரவறிவு, வந்துசீவத்துவமடைந்த வாரியலையாவதுபோல…. …*

(இ-ள்.) பந்தமுத்தி - பந்தம்வீடென்கின்ற—நினைவுகளை - எண்ணங்களை—பயிலாதோட்டி-கூடாமற்றுரத்தி—உன்வசமாய் -உனதுவசமாகி—முந்துபிறவி - முன்னனுபவத்தின்—பயமெல்லாம்- அச்சங்களனைத்தையும்—முற்றுமொழிந்து - முழுதுநீக்கி—நிலைநிற்பாய் - நிலையாயிருப்பாய்—அந்தநீ - அப்படிப்பட்டநீ—சங்கற்பநினைவடைந்தால்- சங்கற்பமுள்ளமனதைச்

சேர்ந்தால்—சின்மாத்திரவறிவு- சின்மாத்திரஞானமானது—வாரியலையாவதுபோல - சலமலையாவதுபோல—வந்துசீவத்துவமடைந்த-உண்டாகிச்சீவத்தன்மையையடைந்தது.எ-று.(௰௬)

(அ-கை.) சுகதுக்கஞ்சங்கற்பத்துக்கேயன்றி யாத்மாவுக்கின்றெனல். (கவி) ஆதிகாலத்தெழுந்தபவத்தனையசீவருழல்கின்ற, வோதுமின்பதுன்பமயக்குளத்துக்கொழிய
வுனக்கில்லை, மீதுதெரியாவிராகுமதி மேவித்தெரிதல்போலவனு, பூதியளவாமுயிர்
காணும்பொருளாய்க்காணப்படுமன்றே .... *

(இ-ள்.) ஆதிகாலத்தெழுந்தபவத்து- முதற்காலத்திலுண்டானசநநத்தில்—அனையசீவருழல்கின்றார் - அந்தச்சீவர்கள்சுழலுகின்றார்கள்—ஓதும் - சொல்லப்பட்ட—இன்பதுன்பமயக்கு- சுகத்துக்கங்களின்பிரமையானது—உளத்துக்கொழிய- மனத்துக்கேயல்லாமல்— உனக்கில்லை- ஆத்மாவுக்கில்லை—மீதுதெரியாவிராகு- மேலேதெரியாதவிராகுவானவன்— மதிமேவித்தெரிதல்போல - சந்திரனையடைந்துகாணப்படுதல்போல—அனுபூதியளவாமுயிர்- அனுபூதிமாத்திரமான வாத்மாவானது — காணும்பொருளாய் - திரிஸ்யமானதில் — காணப்படும்-தோற்றப்படும். எ-று..(௰௭)

(அ-கை.) ஆத்மாவையுமநாத்மாவையு மறிகின்றவிலக்கணமுணாத்தல். (கவி) கலைகளாலுங்குருவாலுங் கண்டாற்கரியபரன்றானே, தலைமையானசாத்திகஞ்சேர்தன்புந்தியினுற்றன்றாலே, நிலையில்வெளியாநெறிபோவார் நெறிசேர்காட்சிகளிற்புந்திச்,
செலவுபற்றில்லாததுபோற் றெவ்வாங்கரணங்களைக்காண்பாய்..................... *

(இ-ள்.) கலைகளாலும் - (ஞான)சாஸ்திரங்களினாலும்—குருவாலும்- ஆசாரியராலும் —காண்டற்கரியபரந்தானே - பார்ப்பதற்கரியபிரமமானது— தலைமையான - முதன்மையாகிய—சாத்திகஞ்சேர் - சத்துவஞ்சேர்ந்த—தன்புந்தியினால் - தனதறிவினாலும்—தன்றாலும்—நிலையில்வெளியாம்- நிலையில்வெளிப்படும்—நெறிபோவார் - மார்க்கத்திற்செல்லுபவர்கள்—நெறிசேர்காட்சிகளில்- மார்க்கத்திற்சேராநின்றதிரிஸ்யங்களில்—புந்திசெலவு - புத்திசென்று(பார்ப்பதில்)—பற்றில்லாததுபோல் - பற்றற்றிருப்பதுபோல—தெவ்வாம் - பகையாகிய—கரணங்களை - இந்திரியங்களை—காண்பாய் - பார்ப்பாய். எ-று ....(௰௮)

(அ-கை.) அநாத்மாவைநீக்கி யாத்மாவாயிருப்பாயெனல். (கவி) இனையகரணங்களைப்பற்றலிகழ்தலிரண்டு மியல்பல்ல, வினைசெயுடலமுதற்பொருள்கண்மேவுமியல்பின்மேவிடுக, வனையபொருள்கள்புத்தியினு லகலநீக்கியதிசீதம், புனையுட்கரணத்தினனாயெப்போதும்பரமமயமாவாய் .... *

(இ-ள்.) இனையகரணங்களை - இப்படிப்பட்டவிந்திரியங்களை—பற்றல் - விரும்புதலும்—இகழ்தல்- வெறுத்தலும்—இரண்டுமியல்பல்ல - இரண்டுமொழுங்கல்ல—வினைசெய்- கன்மத்தினாலுண்டாக்கப்பட்ட—உடலமுதற்பொருள்கள்- தேகமுதலியவஸ்துக்கள்—மேவுமியல்பின்மேவிடுக- வரத்தக்கசுபாவமாய்வரக்கடவது— அனையபொருள்கள் - அப்படிப்பட்டவஸ்துக்களை—புந்தியினாலகல்நீக்கி - அறிவினால்விலகும்படிதள்ளி—அதிசீதம்புனை- மிகுந்தகுளிர்ச்சியைத்தரித்த—உட்கரணத்தினனாய் - அந்தக்கரணத்தையுடையவனாய்—எப்போதும் - எக்காலமும்—பரமமயமாவாய் - பிரமமயமாவாய். எ-று .... (௰௯)

(அ-கை.) பந்தமுமதனிவிர்த்தியுங்கூறல். (கவி) உடலானென்னும்புந்தி பிறப்புற்ற கட்டாமொருக்காலு, மிடர்தீர்வீடுவிருப்புறவோர்க் கியல்பன்றாகுமிப்புந்தி, திடமாங்கிஞ்சின்மாத்திரமுமில்லாச்சின்மாத்திரவடிவன், றடவானிலுநானணுவென்னுஞ்சமமாம்புத்திபிறப்பறுக்கும் .... *

(இ-ள்.) உடலானென்னும்புந்தி - தேகத்தையானென்கின்றபுத்தியானது—பிறப்புற்ற கட்டாம்-பவத்தையடைந்தபந்தமாகும்—ஒருக்காலும் - ஒருபோதும்—இடர்தீர்வீடு- துன்பமில்லாதநிருவாணத்தை— விருப்புறுவோர்க்கு - இச்சிப்பவர்களாகிய (முமூட்சுக்களுக்கு)—இயல்பன்றாகும் - உரியதல்லவான—இப்புந்தி - இம்மதியானது—கிஞ்சின்மாத்திரமுமில்லா-அற்பமுமில்லாத—திடமாம் - திரமாகிய—சின்மாத்திரவடிவன்-சின்மாத்திரவடிவமுள்ளவன்—தடவானிலும் - விசாலம்பொருந்தியவாகாயத்திலும் —நானணுவென்னுஞ்சமமானபுந்தி-யான்சூட்சுமமென்கின்ற சமமாகியபுத்தியானது — பிறப்பறுக்கும் - பவத்தைக்கெடுக்கும். எ-று. (இ-ரு-க-ம்) சங்கற்பமேபந்தமு மதன்விம்திியேமுத்தியுமாமென்பதாம் ....(௨௰)

(அ-கை.) ஆத்மவியாபகங்கூறல்.(கவி)தெளியுநீரிலுட்புறம்புசெறியும்வெயில்போற்பொருளனைத்தி, லொளிகொளான்மாநின்றிடுமா லுருவமெல்லாமுட்புகுந்து,வெளிசெப்பணிகடொறும்பொன்னின்விசித்திரம்போலவிளங்கிடுமா, லளியவஃதல்லா
வுருவாமான்மாவுடைய சகமாகி .... *

(இ-ள்.) தெளியுநீரில் - தெளிந்தசலத்தில்—உட்புறம்பு- உள்ளிலும்புறம்பிலும்—செறியும்வெயில்போல்- நெருங்கியசூரியகிரணத்தைப்போல—பொருளனைத்தில் - வஸ்துக்களெல்லாவற்றிலும்—ஒளிகொளான்மா - ப்ரகாசமுள்ளவாத்மாவானது— நிலைநிற்கும் - நிற்கும்— உருவமெல்லாம்-வடிவங்களனைத்திலும்—உட்புகுந்து- அகத்திற்ப்ரவேசித்து—வெளிசெய்- வெளியாகச்செய்கின்ற—பணிகடோறும் - ஆபரணங்கடோறும்—பொன்னின்விசித்திரம்போல் - சொர்ணம்விளங்குமதிசயத்தைப்போல—விளங்கிடும் - (ஆத்மாவானது)ப்ரகாசிக்கும்—அரிய-கனிந்த—அஃதல்லாவுருவம் - அவ்வபின்னமாய்விளங்காதவடிவமானது—ஆன்மாவுடைப- ஆத்மசத்தையையுடைய—சகமாகி- உலகமாகத்தோற்றும். எ-று .... (உக)

(அ-கை.) இ-து. (கவி) நாசவடவைக்கனல்படர நடுக்கஞ்செய்யுங் காலமெனு, மூசுகடலிற்சகத்திரளா முடுகுநதிகள்பல்லுயிராம், வீசுதரங்கத்தொடுபாய்ந்து நிறையாதந்தவேலையயு, மாசமனஞ்செய்பகத்தியனு மான்மாவென்றுவகத்துணர்வாய்.................. *

(இ-ள்.) நாசம் - நாசமென்கின்ற—வடவைக்கனல்படர - வடவாமுகாக்கினிபடர்ந்துவர—நடுக்கஞ்செய்யும்- பயத்தைச்செய்யும்—காலமெனும் - காலமென்கின்ற—மூசுகடலில்-நெருங்கியசமுத்திரத்தில்—சகத்திரளாம் - சகக்கூட்டங்களாகிய—முடுகுநதிகள்-வேகமுள்ளவாறுகள்—பல்லுயிராம்- பலசீவர்களாகிய—வீசுதரங்கத்தொடு-மோதாநின்றவலைகளுடன்—பாய்ந்து நிறையாது- சேர்ந்துநிரம்பாமலிருக்கின்ற—அந்தவேலையையும்- அக்கடலையும்—ஆசமனஞ்செய்-ஆசமனஞ்செய்த— அகத்தியனுமான்மாவென்று - கும்பமுனியாகியவாத்மாவென்று—அகத்துணர்வாய்- மனதிலறிந்துகொள்வாய். எ-று. (இ-உ-க-ம்) ஆத்மாவானது சகலவஸ்துக்களுள்ளிலும் புறம்பிலுமிடையின்றிக் காலாதீதமான பூரணமாய்விளங்கு மென்பதாம்.. (உஉ)

(அ-கை.) ஆத்மநிருவிதியைக்கூறல். (கவி) தானலாதாய்முன்சொன்ன சகத்தின்றிரளாயுடலமுத, லானபொருளில்சாலத்தை யான்மாவாலேயறத்தள்ளி, ஞானசற்பாவந்தன்னை நனிமேற்கொண்டுமறைந்தோனு, மீனமில்லாமதிவேந்தே யிச்சையானபடிநிற்பாய். . *

(இ-ள்.) தானலாதாய் - அநாத்மாவாய்—முன்சொன்ன - முன்சொல்லிய—சகத்தின்றிரளாய்- உலகத்தினதுகூட்டமாய்—உடலமுதலானபொருளின்-சரீரமுதலாகியவஸ்துக்களின்—சாலத்தை-கூட்டத்தை—ஆன்மாவால்- ஆத்மாவினால்—அறத்தள்ளி- மிகவுநீக்கி—ஞானசற்பாவந்தன்னை- ஞானசற்பாவத்தை—நனிமேற்கொண்டு- மிகவுமேற்கொண்டு—மறைந்தோனாய்-அடக்கமுடையவனாய்—ஈனமில்லா- குறைவில்லாத—மதிவேந்தே - அறிவையுடையவரசனே—இச்சையானபடிநிற்பாய்- இச்சாப்ரகாரமிருப்பாய். எ-று. (இ-ம்) அநாத்மாவையாத்மாவினாற் கெடுத்ததுவாயிருந்திச்சையின்படி சஞ்சரிப்பாயென்பதாம் .... (உங)

(அ-கை.) அநாத்மநாசத்தை யாத்மநாசமாகநினைத்தறியாது வருந்துதல். (கவி) தனங்களுடேதுயின்மகவைத்தாய் தான்மறந்துமிகத்தேடி; மனங்கன்றுதல்போற் சராமரணமருவாதம்மையறியாமற், செனங்கள்சலித்துக்கெட்டேனென்செறியுநாதரிலாதவனு, னனங்கொள்காயம்போமளவி லழிந்தேனுவாவென்றழுவார்............ *

(இ-ள்.) தனங்களுடு- கொங்கையினிடத்தில்—துயின்மகவை- நித்திரைசெய்கின்றகுழந்தையை—தாய்தான்மறந்து-மாதாவானவள்மறந்து—மிகத்தேடி- மிகவுந்தேடி—மனங்கன்றுதல்போல்- மனநைகின்றதுபோல— சராமரணமருவா - மூப்பிறப்புப்பொருந்தாத—தம்மையறியாமல் - ஆத்மாவையுணராமல்—செனங்கள்சலித்து - சனங்களானவைசலனமுற்று—நான்கெட்டேன- யான்கெட்டேனென்றும்—நான்செறியுநாதரிலாதவன்- யானெருங்கியநாதரில்லாதவனென்றும்—அனங்கொள்காயம்- அன்னமயமாகியசரீரமானது—போமளவில்-நசிக்கின்றகாலத்தில்—அழிந்தேன் - நானழிந்தேனென்றும்— ஆவாவென்றழுவார் - அந்தோவந்தோவென்றழுவார்கள். எ-று .... (உச)

(அ-கை.) சிதாநந்தமாயிருந்தரசுசெய்வாயெனல். (கவி) வாரியசைந்தவசைவில்பலவடிவாமதுபோற்சங்கற்ப,நேரினுலேசித்பிரமநெடிதுவிரியுஞ்சங்கற்ப,பாரகளங்கமறவிட்டுப்படர்ந்தவறிவையான்மாவிற்,நிரதிறுத்திச்சந்தேகத்திறங்களெல்லாந்தீர்ந்தோனாய்.....*

(இ-ள்.) வாரி- சலமானது—அசைந்தவசைவில்-சலித்தசலனத்தினால்—பலவடிவமாவதுபோல்- (அலைமுதலிய)நாநாவிதவுருவங்களானதுபோல—சங்கற்பநேரினுல்- சங்கற்பத்தின்மிகுதியினால்—சித்பரமம்-சித்பிரமமானது— நெடிதுவிரியும் - மிகவும்வியாபிக்கும்—சங்கற்பம்-சங்கற்பமென்னும்—பாரகளங்கமறவிட்டு - பெரிதானகளங்கத்தைமிகவும்விட்டு— படர்ந்தவறிவை- விரிந்தசித்தத்தை—ஆன்மாவில் - ஆத்மாவினிடத்தில் — நிரதிறுத்தி - நிர்ப்பாகமிருத்தி— சந்தேகத்திறங்களெல்லாம் - ஐயத்தினதுகுணங்களனைத்தையும் — தீர்ந்தோனாய்-நீங்கினவனாய். எ-று .... (உரு)

(அ-கை.) இ-து. (கவி) அலைவில்லையாதுயர்பரம வான்மாப்போல நிலைநின்று, நிலைகொள் சுகியாயிவ்வரசு நெடிதுபுரப்பாய்நிருபதியே, தலைமையான்மாதன்னிடத்தே தன்னதான வசைவுகளாற், றொலைவிலாதவிளையாட்டைத்தொடர்பிற்செய்யும்பாலனைப்போல் ...... *

(இ-ள்.) அலைவில் - அசைவினும்—அலையாது - அசைவில்லாமல்—உயர்பரமவான்மாப் போல-மேலானபரமாத்மாவைப்போல—நிலைநின்று-நிலையாகவிருந்து— நிலைகொள்சுகியாய்-நித்தியசுகத்தையுடையவாநந்தியாய்—இவ்வரசு- இந்தநாட்டை—நிருபதியே-அரசனே—நெடிதுபுரப்பாய்- வெகுகாலமிரட்சிப்பாய்— தலைமையான்மா-சேடமானவாத்மாவானது—தன்னிடத்து - தன்னிடத்தில்—தன்னதானவசைவுகளால்- தனதுசங்கற்பசத்திகளினால்—தொலைவிலாதவிளையாட்டை - அளவற்றலீலையை — பாலனைப்போல் - குழந்தைகளைப்போல—தொடர்பிற்செய்யும் - தொடர்பாகச்செய்யும். எ-று. (இ-உ-க-ம்) சைதன்யசங்கற்பத்தைக் கனாத்து நித்தியாநந்தனாயிருந்து பூமிபாலனஞ்செய்வாயென்பதாம் .... (௨௬)

(அ-கை.) ஆத்மசத்தியி னாற்பந்திநாசஞ்சொல்லுதல். (கவி) அழிக்குந்தன் சத்தி யினாற் பின்னழித்துத்தன்பாலமர்ந்திடுமா, லிழிக்கும்பந்த முறுஞ்சத்தி யிதற்குத் தன்பாற்றானேயாம், பழிக்கும்பந்த மெப்படியோ பற்றற்றகனு மப்படியே, யொழிக்குஞ்சத்திதானேவந்துதயமாகுமிவனுக்கே .... *

(இ-ள்.) அழிக்கும் - சங்கரிக்கின்ற—தன்சத்தியினால் - தனதுசத்தியினால்—பின்னழித்து - பின்சங்கரித்து—தன்பாலமர்ந்திடும் - தன்னிடத்திற்பொருந்தும்—இழிக்கும் - இழிவு செய்யும்—பந்தமுறுஞ்சத்தி - பந்தத்தையடைகின்றசத்தியானது— இதற்கு - இந்தவாத்மாவுக்கு — தன்பாற்றானேயாம் - தன்னிடத்திற்றானேயுண்டாகும் — பழிக்கும்பந்தமெப்படியோ - நிற்றிக்கின்றபந்தசத்தியெங்ஙனமுதித்ததோ — அப்படியேபற்றற்றகனும் - அங்ஙன (மது) பற்றில்லாமனிங்கும்—ஒழிக்குஞ்சத்தி - சங்காரசத்தியானது— இவனுக்குத்தானேவந்துதயமாகும் - இவ்வாத்மாவுக்குத்தானேவந்துண்டாகும். எ-று .... (௨௭)

(அ-கை.) பிரமத்திற் ப்ரபஞ்சந்தோற்றுதலைக்கூறல். (கவி) மதியோடிரவிகதிர் பாயமணிகளிற்சேரொளிகளைப்போன், முதிருமரங்கள் கனியிலையை முதலாயின போலருவிகளிற், பிதிருந்துளிகள்போற்சாலப் பிறங்கும்பிரமத் திடைதோன்றுங், கதிகொள்புத்திமுதலாகக்கற்பிதஞ்சேரிச்சகமே....... .... *

(இ-ள்.) மதியோடிரவி - சந்திரசூரியருடைய—கதிர்பாய - கிரணங்கள்சேர—மணிகளிற்சேர் - இரத்தினங்களிற்சேர்கின்ற—ஒளிகளைப்போல்- ப்ரகாசங்களைப்போலவும்—முதிருமரங்கள் - முதிர்ந்தவிருட்சங்கள்—கனியிலையைமுதலாயினபோல் - பழம்பத்திரங்கண்முதலானவையுடையனபோலவும்—அருவிகளிற்பிதிருந்துளிகள்போல் - மலையருவிகளிற்சிதறுந்துளிகள்போலவும்—சாலப்பிறங்கும்பிரமத்திடை- மிகவும்விளங்கும்பிரமத்தில்—கதிகொள்புத்திமுதலாக - சலனத்தையுடையபுத்திமுதலாக—கற்பிதஞ்சேரிச்சகம் - கற்பிதமானவிவ்வுலகமானது—தோன்றும் - உண்டாகும். எ-று .... (௨௮)

(அ-கை.) ஆத்மாவினிடத்தில்லாமையாகத்தோற்றின சகமஃதையே மறைக்குமெனல். (கவி) அதுகாணறியார்க்கிடர்நல்கியதுவேயதுவல்லாததுபோற், றிதமாய்நிற்குமிம்மாயைச்சித்திரந்தானற்புதமே, பொதுவாயங்கமத்தனையும்புணர்ந்துபிறிவற்றிருக்கவுந்தா, னிதமாயுயிரையுயிர்காணதிருக்கமயக்குமியாரையுமே..... ....*

(இ-ள்.) அதுதானறியார்க்கு - அவ்வாத்மாவையுணராதவர்களுக்கு— இடர்நல்கி - துன்பத்தைக்கொடுத்து—அதுவே - அச்சுகமே — அதுவல்லாததுபோல் - அக்கற்பிதமாகாதது போல—திதமாய்நிற்கும் - நிலையாயிருக்கும்—இம்மாயை - இந்தமாயையினது — சித்திரந்தான் - விசித்திரமானது—அற்புதமே - அதிசயமேயாம்—பொதுவாய் - சாதாரணமாய்—அங்கமத்தனையும் - அவயவங்களியாவையும் —புணர்ந்து- கலந்து—பிறிவற்றிருக்கவும்-பிரிவில்லாமலிருக்கவும்—இதமாயுயிரை - உரிமையாகவாத்மாவை— உயிர்காணதிருக்க - ஆத்மாவானதுகாணாமலிருக்கும்படியாக—இயாரையும்-யாவரையும்—மயக்கும்-ப்ரமைசெய்யும். எ-று.

(அ-கை.) பிரமகவசமுரைத்தல். (கவி) பரமவிண்ணிற்சகமெல்லாமென்றுபாவித்தாசையறிற், பிரமகவசனின்பமுளபெரியோனாகுநாமென்னும், பொருளைநீக்கநினைவின்மைவடிவாநினைவாற்பொருளனைத்தி, னுருவமில்லைநிராலம்பமுணர்வுசாந்தமமனநினைவாய். *

(இ-ள்.) பரமவிண்ணில் - பரமாகாயத்தில்—சகமெல்லாமென்று- உலகங்களனைத்துமிருக்கிறதென்று—பாவித்து - பாவனைசெய்து— ஆசையறில் - இச்சைநீங்கினால் — பிரமகவசன்-பிரமத்தைமெய்கவசமாகத்தரித்தவனான — இன்பமுளபெரியோனாகும் - பேராநந்தத்தை

யுடையசீவன்முத்தனாகும்—நானென்னும்பொருளை - யானென்கின்றவகங்காரத்தை— நீக்கி-கெடுத்து—நின்வின்மைவடிவாம் - அபாவரூபமான—நினைவால் - பாவனையினால் — பொருளை நோக்கும் - வஸ்துக்களியாவும—உருவமில்லைம் - வடிவமில்லாததாகவும்—நிராலம்பம் - பற்றுக்கோடில்லாததாகவும்—உணர்வு - சித்தாகவும்—சாந்தமென- சாந்தமாகவுமிருக்கிறதென்று—நினைவாய் - பாவிப்பாய். எ-று. (இ-௬-ம்) சித்ப்ரகாசமே சகத்தென்றறிதலே பேதிக்கப்படாத ஞானகைவசமாமென்பதாம் .... (௬௰)

(அ-கை.) மனோநாசத்தைக்கேட்பித்தல். (கலி) இதுவேநன்றீதன்றென்னு மிது வேவிதாமிடரொழுக்குக், கதுதான் சமமாமங்கையில்வெந்தழிந்தாலிடருக கவசர மென், பொருவாநலந்தீங்கெனும்பேதப்பாவமென்னும்பொருளாளால், விதமாம் புருடவருத்தத்தான்மெல்லமனதில்வெட்டுதியால் .... *

(இ-ள்.) இதுவேநன்று-இதுவேநல்லதென்றும்—ஈதன்று-இது நல்லதல்லவென்றும்—என்னுமிதுவே-நினைக்கின்றபேதபாவனையே—இடரொழுங்குக்கு- துக்கபரம்பரைக்கு—வித்தாம்-வித்தையாகும்— அதுதான்-அந்தவித்தானது—சமமாமங்கியில - சமபாவனையாகவக்கினியில்—வெந்தழிந்தால் - எரிந்தொழிந்தால்—இடருக்கு-துன்பத்துக்கு—அவசரமென்-இடமேது—பொதுவாம்-சாதாரணமான—நலந்தீங்கெனும்பேதம்-நன்மைதீமையென்னும்பேதத்தை—அபாவமென்னும்-அபாவமென்கின்ற—பொருளாளால்- வெட்டுகின்றகத்தியினால்—விதமாம்புருடவருத்தத்தால் - நானாவிதமாகியபுருடப்ரயத்தநத்தினால்—மெல்ல-மிருதுவாக—மனதில் வெட்டுதி-மனதிற்றறிப்பாய். எ-று. (இ-ம்) மனதின்கண்ணுள்ள பேதநூன்பங்களை யறிவின்கண்ணுள்ள வபேதசுகத்தாற் கெடுக்கவேண்டுமென்பதாம் .... (௬௧)

(அ-கை.) கன்மத்யாகஞ்செய்து விவேகத்தாற் பிரமபதத்தைப் பெற்றிருப்பாயெனல். (கலி) நினைவான்முடிக்குங்கருமமெனுநீண்டபெரியவன்காடு, தனைநீநினைவின் மையினாலேகடிந்துபரமபதமேவி, வினைதீருனது விவேகத்தை மேவிமயன்று நிலைநிற்பாய், புனைதாரிக்குவாகுவெனும்புகழானிறைந்தபூபதியே .... *

(இ-ள்.) நினைவான்முடிக்கும் - எண்ணத்தினாலிறைவேற்றப்பட்ட — கருமமெனும்-கன்மமென்கின்ற—நீண்ட - நீளமுடைக்கின்ற—பெரியவன்காடுதனை- பெரியகொடியவனத்தை—புனைதாரிக்குவாகுவெனும்-அலங்கரிக்குமாலையுடையவிட்சுவாகுவென்கின்ற— புகழானிறைந்தபூபதியே - கீர்த்தியானிறைந்தவரசனே—நீநினைவின்மையினால் - நீயபாவனையினால்— கடிந்து - வெட்டி—பரமபதமேவி - பரமபதத்தையடைந்து—வினைதீர் - கன்மநீங்கிய— உனது விவேகத்தைமேவி - உன்னுடையவிவேகத்தைப்பொருந்தி — என்றும் - எப்பொழுதும்—நிலைநிற்பாய் - நிலையாயிருப்பாய். எ-று .... (௬௨)

(அ-கை.) துக்கநிவிர்த்தியாய்த்ததடையற்றவாநந்தமடைதல். (கலி) உலகின்பரப்பை யுள்ளாக்கி யுன்னுநினைவுக்கப்பாலாய்க், கலகமடவார்பொருளென்னுங்காதனழுவி நானென்னுங், குலவுமிருள்போய்விவேகநிலை கூடுமவனேயராநந்த, மிலகவடைந் தோனெடுங்கால மிவனே துன்பமில்லாதோன் .... *

(இ-ள்.) உலகின்பரப்பை - சகத்தினதுவிரிவை— உள்ளாக்கி - தனக்குள்ளடக்கி—உன்னுநினைவுக்கு-நினைகின்றபேதநினைவுக்கு—அப்பாலாய்-அதீதமாய்—கலகமடவார் - கலகத்தை விளைக்கின்றபெண்களும்—பொருளென்னும்-பொன்னுமென்கின்ற—காதனழுவி-ஆசைவிட்டு—நானென்னும் - யானென்கின்ற—குலவுமிருள்போய் - குலவாநின்றவஞ்ஞானவிருணீங்கி—விவேகநிலை - விவேகநிச்சயத்தை—கூடுமவனே- சேராநின்றவவனே—பராநந்தமிலக-பிரமாநந்தமானதுப்ரகாசிக்க —அடைந்தோன் - பெற்றவனும்—நெடுங்காலம்-அநேககாலம்—இவனேதுன்பமில்லாதோன்- இவனேதுக்கமில்லாதவனும். எ-று. (இ-உ-௧-ம்) பாவருகன்மங்களை யபாவனையாற்கெடுத்துச் சகலமுந்தனதபிபாயகத்தற்கொத்துப் பிரமாநந்தத்திற்சுகிப்பவனே துன்பமற்றவனாவனென்பதாம் .... (௬௩)

(அ-கை.) ஆத்மாவைத்தரிசிப்பித் தலைதையடைதற் குண்மைநெறியான ஞானபூமியைச்சொல்லத்தொடங்கி முதற்பூமியான சுபேச்சையைக் கூறுதல். (கலி) சாந்தனுஞ்சமநிலையாய்ச் சாலநொப்தாயறிவுருவை, வேந்தனேசந்ததநினைவாயென்று மனுமீண்டுமுரைசெய்வா, னுய்ந்தநூலானலமெலாமறிவைவளர்க்கவேண்டுமுதமேலப் ந்தயோகத்துக்குமுதற் பூமியிதுவ்யாகக்கில்லை .... *

(இ-ள்.) சாந்தனும்- உபசாந்தனும்—சமநிலையாய்- சமநிலையாகியும்—சாலநொப்தாய்- மிகவுஞ்சொச்சமயுமிருந்து—அறிவுருவை- ஞானஸ்வரூபத்தை—வேந்தனே- அரசனே—சந்ததநினைவாயென்று - எப்பொழுதுந்தியானிப்பாயென்று—மனுமீண்டுமுரைசெய்வான்-மனு

வானவர்நிரும்பவுஞ்சொல்லுவார்— ஆய்ந்தநூலானல்லோரால்-ஆராய்ந்தறிந்தஞானசாஸ்திரங்களினாலுஞ்சத்துக்களினாலும்—அறிவைவளர்க்கவேண்டும் - ஞானத்தைமுன்புவளரச்செய்யவேண்டும்—ஏய்ந்தயோகத்துக்கிதுமுதற்பூமி- பொருந்தியஞானத்துக்கிச்சுபேச்சையேமுதற்பூமியாகும்—யோகிக்கில்லை - கன்மயோகிகளுக்கில்லை. எ-று. ....(௯௪)

(அ-கை.) விசாரணைதனுமா நசிசத்துவாபத்திய சம்சத்தியென்னுமிந்நான்கு பூமியையுஞ்சொல்லுதல். (கவி) அயர்வில்விசாரமிரண்டாகுமசங்கபாவமூன்றாகும், பயிலுநாலாம்விலாபினியே படர்வாதனையைப்பற்றறுக்கு, மயர்வில்சுத்தநல்லறிவின்மயவாநந்தவடிவைந்தாந், துயில்சாக்கிரம்பாதிகளில்லாத்தொடர்சீவனின்முத்தியுமிதுவே............ ......*

(இ-ள்.) அயர்வில்விசாரம்- தளர்வற்றவாத்மவிசாரணையே—இரண்டாகும்-இரண்டாய்ப்பூமியாகும்—அசங்கபாவ- அசங்கபாவனையே—மூன்றாகும்-மூன்றாவதுபூமியாகும்—பயிலுநாலாம்விலாபினியே- சொல்லப்பட்டநான்காம்பூமியானவிலாபினியே—படர்வாதனையை-வளருகின்றவாசனையை—பற்றறுக்கும்- பற்றில்லாமற்கெடுக்கும்—மயர்வில்சுத்தம்- மயக்கமில்லாதபரிசுத்தமாகிய—நல்லறிவின்மயவாநந்தவடிவு-நல்லஞானமயமானவாநந்தஸ்வரூபமே— ஐந்தாம்-ஐந்தாம்பூமியாம்—துயில்- நித்திரையும்—சாக்கிரம்பாதிகளில்லா - விழிப்புப்பாதிகளில்லாத—இதுவே-இதுதானே—தொடர்சீவனின்முத்தியும்-தொடராநின்றசீவன்முத்தியும்.எ-று

(அ-கை.) பதார்த்தபாவனை, துரியமெனு மிவ்விரண்டு பூமியையுங் கூறல். (கவி) அறிவிலாமைவடிவாகியகலாநந்தமொன்றாலுஞ், செறியும்வடிவாய்ச்சுழுத்தியைப் போற்றிகழுமாறாமுயர்பூமி, பிறிவில்சமமாயறநொய்தாய்ப் பெரிதுநன்றாய்ச்சாந்தமதாய், வெறியதுரியங்கேவலமாம் வீடேயேழாம்வியன்பூமி..... ...,.... ... . *

(இ-ள்.) அறிவிலாமைவடிவாகி - அறிதலில்லாமையேயுருவமாகி—அகலாநந்தமொன்றாலும் - பூரணமானவோராநந்தத்தினாலும் — செறியும்வடிவாய் - நிறைந்தவடிவமாகி—சுழுத்தியைப்போல்- சுழுத்தியவத்தையைப்போல—திகழும்-விளங்குகின்ற— உயராறும்பூமி-மேலானவாறும்பூமியாம்—பிறிவில்சமமாய்- பிரிவற்றசமமாகியும்—அறநொய்தாய்-மிகவுஞ்சொச்சமாகியும்—பெரிதுநன்றாய்- மிகவுநல்லதாகியும்— சாந்தமதாய்-உபசாந்தமாகியும்—வெறியதுரியம் - சுத்ததுரியமாகியும் — கேவலமாம்வீடே - கைவல்யமாகியமோக்ஷமே—ஏழாம்வியன்பூமி - ஏழாவதானபெருமைபொருந்தியபூமியாம். எ-று. (இ-௯-௧-ம்) ஞானசத்தபூமியினருத்தத்தை யற்பியாசிக்குங் கிரமமறிவித்ததாம்...(௯௫)

(அ-கை.) ஞானபூமிகாஸ்வரூபமான பிரமபுருடனுக் கதை யைந்தவத்தையாகச் சொல்லத்தொடங்கி முதற்பூமிமூன்றையுஞ் சாக்கிரவவத்தையெனல். (கவி) மன்னுவிடயம்விடுதலினால்வாழுமிவ்வேழாம்பூமி, தன்னைநிருவாணத்துருவாய்ச் சான்றதுரியாதீதபத, மென்னவுரைத்தார்சிலர்வேறே யிவ்வேழவத்தை களின்முன்னஞ், சொன்னவவத்தையொருமூன்றுந்தொடர்சாக்கிரமாய்க்கருதுவதாம்.......... ... *

(இ-ள்.) மன்னுவிடயம் - நெருங்கியவிஷயங்கள்—விடுதலினால் - நீங்குதலினால்—வாழும் - (பேராநந்தத்தில்) வாழும்—இவ்வேழாம்பூமிதன்னை - இந்தவேழாம்பூமியை—நிருவாணத்துருவாய் - மோட்சஸ்வரூபமாய்—சான்றதுரியாதீதபதமென்ன-சித்தானதுரியாதீதபதமென்று—சிலருரைத்தார் - சிலர்சொன்னார்கள்—வேறு - வேறாக — இவ்வேழவத்தைகளில்-இந்தவேழுபூமிகளில்—முன்னஞ்சொன்ன - முதற்கண்சொல்லிய — அவத்தை - அவத்தைகளான—ஒருமூன்றும் - மூன்றுபூமியும்— தொடர்சாக்கிரமாய் - தொடராநின்றசாக்கிரவவத்தையாக—கருதுவதாம் - நினைப்பதாகும். எ-று ....(௯௭)

(அ-கை.) நான்காம்பூமிசொற்பன மைந்தாம்பூமிசுழுத்தி யாறும்பூமி துரியமெனக்கூறுதல். (கவி) சகங்கள்கனவிற்றோற்றுவாந்தன்மைநாலாவதுகனவா, நிகழாநந்தமொன்றாலுநெருங்குவடிவமைந்தென்று, புகன்றவவத்தைசுழுத்தியதாம் போதமின்மைவடிவாகித், திகழ்ந்தவாறுமவத்தையினைச்சிறந்ததுரியமெனலாகும்.....*

(இ-ள்.) சகங்கள் - உலகங்களானவை—கனவிற்றோற்றுவாம்- சொற்பனத்தைப்போலத்தோற்றுவனவாகிய—தன்மை- குணமுடைய— நாலாவதுகனவாம் - நான்காம்பூமியேசொற்பனவத்தையாம்—நிகழ் - பிரகாசியாநின்ற—ஆநந்தமொன்றாலும் - ஓராநந்தத்தினாலும்—நெருங்குவடிவம் - நிறைந்தவுருவமானதை—ஐந்தென்றுபுகன்றவவத்தை- ஐந்தென்றுசொல்லியபூமியே—சுழுத்தியதாம் - சுழுத்தியவத்தையாகும்—போதமின்மைவடிவாகி - அறிதலில்லாத(வாநந்தமே) ஸ்வரூபமாய்—திகழ்ந்தவாறுமவத்தையினை-விளங்காநின்றவாறும்பூமியை—சிறந்ததுரியம்-சிறப்புள்ளதுரியவவத்தை—எனலாகும்-என்றுசொல்லப்படும். எ-று. (௯௮)

(அ-கை.) ஏழாம்பூமி துரியாதீதமெனல். (கலி) தரியாமனவாக்கெட்டரிதாய்த்தனதேசு ண்மைவடிவான, துரியாதீதப்பதவவத்தைத்தூயமேலாமுயர்பூமி, பிரியாதுள்ளேவசமானபிரத்தியாகாரத்தாலே, தெரியாதாகிக்காண்கின்றதிரள்களனைத்தும்போமாகில்.... *

(இ-ள்.) தரியாமனவாக்கு - சலனமானமனதும்வாக்கும் — எட்டரிதாய் - எட்டுதற்கரிதாகியும்—தனதேசு - தனதுப்ரகாசமாகிய—உண்மைவடிவான - சத்துருவமாகியிருக்கின்ற—துரியாதீதப்பதவவத்தை- துரியாதீதப்பதமானவவத்தையே— தூயமேலாமுயர்பூமி- பரிசுத்தம்பொருந்தியமேலானவேழாவதுபூமியாகும்—பிரியாது - நீங்காமல்—உள்வசமான- அகத்தின்வசமாகிய—பிரத்தியாகாரத்தால் - சித்தநிரோதனத்தினால்—தெரியாதாகி- தெரியாததாய்—காண்கின்றதிரள்களனைத்தும் - பார்க்கப்பட்டதிரிஸ்யக்கூட்டங்களியாவும்— போமாகில்-நீங்குமானால். எ-று. (இ-ரு-க-ம்) மூன்றுமூன்றுபூமியிற்சகம் ஸ்புரணரூபமாகத்தோற்றுதலாற்சொற்பனமென்று, நைந்தாம்பூமியிற்சகஞ்சுசுரூபமாய்த் தோற்றுதலிற்சுழுத்தியென்றும்ஆறும்பூமியிற்சகமடிதலிறந்துவிளங்குதலிற்றுரியமென்றும், ஏழாம்பூமியிற் சகமேகோசரமானசாக்ஷாத்காரமாய் விளங்குதலிற்றுரியாதீதமென்று மிதும்வேயாத்மார்த்தமென்றறிவித்ததாம்.

(அ-கை.) ஞானபூமி யப்பியாசத்தினாற் சத்யோமுக்தனாவனெனல் (கலி) அந்த மகாசத்தையினாலவனேமுத்தனையமிலை, வந்தபோகசுகதுக்க வகையாற்றாக்காதறநிறைந்த, புந்தியளனாயான்மாவிற்பொருந்திமகிழ்ந்துநிற்குமெனி, லிந்தமனிதனிலைதானேயிங்கேதோன்றுமுயர்முத்தி .... *

(இ-ள்.) அந்த - அப்படிப்பட்ட—மகாசத்தையினால் - மகாசத்தையினால்—அவனே முத்தன் - அவனேசீவன்முத்தனாவன்—ஐயமிலை - சந்தேகமில்லை — வந்தபோகம் - வந்திருக்கின்றபோகங்கள்—சுகதுக்கவகையால் - இன்பதுன்பவிதங்களினால்—தாக்காது-தாக்காமல்—அறநிறைந்த - மிகவுநிலைநிறைந்திருக்கின்ற—புந்தியுளனாய் - அறிவையுடையவனாய்—ஆன்மாவிற் பொருந்தி - ஆத்மாவிற்கலந்து — மகிழ்ந்துநிற்குமெனில் - மகிழ்ச்சியுற்றிருக்குமாயின்—இந்தமனிதனிலைதான் - இப்புருஷிலிச்சபத்திற்கு— உயர்முத்தி - மேலானமோக்ஷமானது—இங்கேதோன்றும் - இவ்விடத்திற்றோற்றும். எ-று .... (சய)

(அ-கை.) துரியாதீதவனுபவி யெங்ஙனமிருக்கினுஞ் சுகியேயன்றி துன்புறு னெனல். (கலி) பொங்குதொழிலின்மேவினன்சாந்தன் புகல்விட்டுறைவோன் சந்யாசி, யங்கமுள்ளோன்சரீரமிலோனெனினுமவனேமுனியாகு, மெங்குமிறவேனுயிர்வாழேனிலனுமுளனுமலனிவனே, தங்குநான்கிஞ்சினுமிலனென்றுன்னித்தீரன்றளர்வனுகான் .... *

(இ-ள்.) பொங்குதொழில் - மிகுந்தசெயலை— மேவினன் - அடைந்தவன் — சாந்தன்-தொழிலற்றவன்—புகல்விட்டுறைவோன் - சொல்லப்பட்டகிரகஸ்தன் — சந்யாசி - துறவி—அங்கமுள்ளோன் - சரீரமுள்ளவன் —சரீரமிலோன் - தேகமில்லாதவன் — எனினும் - என்று சொல்லப்பட்டாலும்—அவனேமுனியாகும் - அவனேசீவன்முத்தனாகும்—எங்கும் - எவ்விடத்திலும்—இறவேனுயிர்வாழேன் - மரிக்கேன்பிழைக்கேன்—இலனுமுளனுமலன் - இல்லாதவனுமுண்டானவனுமல்லாதவன் —இவன் - இவனென்பதும்—தங்குநான் - தங்காநின்றநானென்பதும்—கிஞ்சினுமிலன் - அற்பமுமில்லாதவன்—என்றுன்னி - என்றுசிந்தித்து—தீரன்-தீரனானவன்—தளர்வனுகான் - சோர்வையடையான். எ-று .... (சக)

(அ-கை.) இ-து. (கலி) ஒன்றிலனுகேநான்சரைபற்றுள்ளமமதையகங்கார, மென்றவொன்றுமிலமென்றேயெண்ணித்தீரனிடரானுகான், றுன்றுகுணமூன்றிலன்சரைசாவிலனான்சுத்தன்றூவறிஞ, னின்றசாந்தன்சமரசனுமெனன்றுநினைத்தோன்றுயரானுகான் .... *

(இ-ள்.) நான்-யான்—ஒன்றிலனுகேன்- ஒன்றிலுநெருங்கேன்—சரை-நரையும்—பற்று-ஆசையும் —உள்ளம் - மனதும்—மமதை - மமதையும்—அகங்காரம்-அகங்காரமும்—என்ற-என்றுசொல்லப்பட்ட—ஒன்றுமிலனென்று - ஒன்றுமில்லாதவனென்று—எண்ணி-நினைத்து—தீரன் - தீரனானவன்—இடரானுகான் - துன்பமடையான்— துன்றுகுணமூன்றிலன் - நெருங்கியமூன்றுகுணமில்லாதவன்—சரைசாவிலன் - மூப்பிறப்பில்லாதவன்—நான்சுத்தன் - யான்பரிசுத்தன் — தூவறிஞன் - (நான்) பரிசுத்தஞானி—நின்றசாந்தன் - (நா) னிலையானவுபசாந்தன்—நான்சமரசன் - யான்சமரசன் —என்று - இப்படியென்று — நினைத்தோன் - சிந்தித்தவன் —துயரானுகான் - துன்பத்தையடையான். எ-று .... (சஉ)

(அ-கை.) இ-து. (கலி) நிரணநுனிகள்விசும்பிரவிதேவருரகர்நரரிடத்தில், விரியுமறிவேநானென்றுவிளங்குந்திரமேலிவனுகான், புரியுங்குறக்குமேல்கீழ்நான் போதப்பெருமையுலாவியமுதன், றரிதுனநற்தவிசாரஞ்செட்டதலையறிந்தானதுவிலலேலான்......... *

(இ-ள்.) திரணநுனிகள் - துரும்புகளினுனிகளிடத்திலும் — விசும்பு - ஆகாயத்தினிடத்திலும் — இரவி - சூரியனிடத்திலும் — தேவர் - அமரர்களிடத்திலும் — உரகர் - நாகரிடத்திலும் — நாரிடத்தில் - மனிதரிடத்திலும் — விரியுமறிவே - வியாபித்திருக்கின்றஞானமே — நானென்று விளங்கும் - யானென்றுப்ரகாசிக்கும் — தீரன் - தீரனானவன் — மெலிவனுகான் - இளப்பையடையான் — புரியுங்குறக்கும் - சொல்லப்பட்டகுறக்கும் — மேல்கீழ் - மேலுங்கீழும் — என்போதப்பெருமை - எனதுசித்துவிலாசமானது — உலாவியதென்று - வியாபித்திருக்கின்றதென்று — அரிதின் - அரியதாய் — அநந்தவிசாரஞ்செய்து - அளவற்றவிசாரணைபண்ணி — இதனையறிந்தோன் - இந்தநிலையைபுணர்ந்தவன் — அழிவில்லோன் - நாசமில்லாதவன். எ-று (இ-ரு-க-ம்) சராசரங்களாய் ப்ரகாசிக்கின்றசைதன்யமே நானென்கிற ஞானதிருஷ்டியுடையவன்யாதினுங்கூடியுங்கூடாதவனாய்த் துரியாதீதவடிவமாய் ப்ரகாசிப்பானென்பதாம்…… ………… (௪௩)

(அ-கை.) சுகதுக்கநிவிர்த்தியின்பொருட்டலைகிறொருமையைக்கூறல். (கவி) திரவாசனையோடெப்பொருள்களனுபவிக்கச்சேர்ந்துளவோ, துருசிலதுவேசுகஞ்செய்யுஞ்சுகமேதளிக்குமதுவினைவில், வெருவுகாலத்தானசிக்குமதனாற்றுன்பம் விளைபொருட்டாம், பெரியசுகதுக்கங்களுக்குப்பிரிவற்றிருக்கைப்பிரசித்தம்………… ❋

(இ-ள்.) திரவாசனையோடு - திரமானவாசனையுடன் — எப்பொருள்களனுபவிக்கச்சேர்ந்துளவோ - யாதொருவஸ்துவனுபவிக்கப்படுதோ — துருசிலதுவேசுகஞ்செய்யும் - சீக்கிரமாகவதுவேசுகத்தைக்கொடுக்கும் — சுகமேதளிக்கும் - யாதொருவஸ்துசுகத்தின்பொருட்டாகுதோ — அதுவினைவில் - அப்பொருள்சீக்கிரத்தின் — வெருவுகாலத்தானசிக்குமதனால் - பயங்கரமானகாலத்தினானசிக்கின்றபடியினால் — துன்பம்விளைபொருட்டாம் - துக்கமுண்டாகுநிமித்தமாம் — பெரியசுகதுக்கங்களுக்கு - மகத்தானசுகதுக்கங்களுக்கு — பிரிவற்றிருக்கைப்பிரசித்தம் - நீங்காதிருத்தல்பிரசித்தமாம். எ-று…… ………… ……… ………………………… (௪௪)

(அ-கை.) இ-து. (கவி) நிருவாசனையினானுநேர்வாசனையினானும், பொருள்தானடையினதனாலேயின்பதுன்பம்பொருந்தாவாம், வரும்போதிரண்டுமொன்றாகவந்துவிளங்குஞ்சுகதுக்க, மருகாநின்றநாசத்திலவைகளிரண்டுமடங்கிடுமால்………… ……… ❋

(இ-ள்.) நிருவாசனையினானும் - வாசனையிறந்தாயினும் — நேர்வாசனையினானும் - தேய்ந்தவாசனையினாயினும் — பொருள்தானடையில் - (விஷய) வஸ்துவையடைந்தால் — அதனாலின்பதுன்பம்பொருந்தாவாம் - அதனாற்சுகதுக்கமுண்டாகாது — சுகதுக்கம் - இன்பதுன்பங்கள் — வரும்போது - உதிக்கும்போது — இரண்டுமொன்றாகவந்து - இரண்டுமொருமித்துண்டாய் — விளங்கும் - ஸ்திதியடையும் — அருகாநின்றநாசத்தில் - குறைந்துகெடும்போதில் — அவைகளிரண்டுமடங்கிடும் - அச்சுகதுக்கங்களிரண்டுமொன்றாய்நசிக்கும். எ-று. (இ-உ-க-ம்) வாசனையின்றிச் செய்யுங்கன்மங்களிலுண்டாகாத சுகதுக்கங்களுக்கு பட்சியின் சிறகைப்போலப் பிரிவில்லையென்பதாம்…… …………………………………………… ………………(௪௫)

(அ-கை.) வாசனையிறந்துசெய்யுங் கன்மங்கன்மமன்றெனல். (கவி) புந்திதணிந்தவாசனையாற்புரிகாரியமீண்டங்குரியா, வெந்தவிதையினுடல்கரண முதலவெவ்வேறாய்விரிந்து, நந்துக்ருமகாரணங்களூட்டுமொருவன்செய்வோன்றான், முந்துபுசிப்போன்றானெவனேமுன்வந்தடைவனவ்விடத்தே…. ………………… ………… ❋

(இ-ள்.) புந்தி - மனமானது — தணிந்தவாசனையால் - சிரணித்தவாசனையினால் — புரிகாரியம் - செய்யப்பட்டகன்மமானது — வெந்தவிதையின் - வறுபட்டவித்தைப்போல — மீண்டங்குரியா - திரும்ப (சுகதுக்கங்களா) யுண்டாகாது — உடல்கரணமுதல - தேகேந்திரியங்கண்முதலிய — வெவ்வேறாய்விரிந்து - வேறுவேறாக்விரிந்து — காரணங்கணந்துக்ருமநாட்டும் - காரணங்களினாற்றிடமான (பேத) கன்மங்களுண்டாகும் — அவ்விடத்துசெய்வோன்றான் - அங் (கக்காரணங்களுள்) சமைப்பவனாகவும் — முந்துபுசிப்போன்றான் - முன்புசிப்பவனாகவும் — எவனொருவன் - யாரொருவன் — முன்வந்தடைவன் - எதிரிடுவன். எ-று. (இ-ம்) சாந்தமானவாசனையாற் பவகன்மநீங்குவதன்றியு மகம்பாவமுமுண்டாகாவென்பதாம்………………… ….(௪௬)

(அ-கை.) சீவன்முத்தன்கன்ம நிவிர்த்தியைக்கூறல். (கவி) பாவிப்பனயாவையினுமுளம்பற்றுதுயர்ந்தோன்றாரகையின், றேவிற்குளிர்ந்து நிறைந்தொளிர்வன்செய்யகதிரோன்றன்கதிரின், பூவிற்றெழிலினாலைந்துழலும் பொத்தவுடலாயிலவுதனை, மேவுதொழிற்பஞ்சோடிப்போ ஞானக்காற்றால்விசைத்தொருபால்…… ………… ❋

(இ-ள்.) பாவிப்பனயாவையினும் - பாவிக்கப்பட்டனவாகியவஸ்துக்களனைத்தினும் — உளம்பற்றுது - மனம்பற்றாமல் — உயர்ந்தோன் - (அறிவி) லுயர்ந்தவன் — தாரகையின்றேவின் - சந்திரனைப்போல — குளிர்ந்து - (அகத்திற்) சீதளமாய் — செய்யகதிரோன்றன்கதிரின் - சிவந்த

ரியகிரணத்தைப்போல—நிறைந்தொளிர்வன்- பூரணமாகப்ரகாசிப்பன்—பூவிற்றெழிலினு லந்துழலும்-உலகவிபகாரங்களில்வருந்திச்சுழலாநின்ற--பொத்தவுடலாமிலவுதனை-நவத்துவா ரமுள்ளதேகமென்னுமிலவமரத்தில்—மேவுந்தாழிற்பஞ்சு - பொருந்திய (சஞ்சிதாகாமியமெ ன்னும்)வினைப்பஞ்சானது—ஞானக்காற்றால்- அறிவென்னுஞ் (சண்ட)மாருதத்தினால்—விசை நின்றாருபாலோடிப்போம்- வேகமாயொருபக்கத்திற்பறந்துபோம். எ-று.................. (௬௭)

(அ-கை.) ஞானமற்பமாயுதிக்கினு மகண்டமாய்வளருமெனல். (கவி) எண்ணமெல் லாம்பழகாமலாலேயிறக்கும் பிறப்போர்க்குக், கண்ணதானவிஞ்ஞானக்கலைதானொ ருகாற்றோன்றிடினும், பண்ணுநல்லகழனிதனிற் பயின்றவித்து பலிப்பதுபோற், திண்ணமானவன்பாலே மிகவும்வளருஞ்சிறப்பாக.......................................*

(இ-ள்.) பிறப்போர்க்கு- சனிக்கின்றசீவர்களுக்கு—எண்ணமெல்லாம்-மறிக்கின்றகலை ஞானமனைத்தும்—பழகாமலால்- அடிக்கடியப்பியாசிக்காததினால் — இறக்கும் - மரிக்கும்— கண்ணதான- நேத்திரமாகிய—விஞ்ஞானம்-ஞானமுள்ள—கலைதான்-கல்வியானது—ஒருக்கா ற்றோன்றிடினும் - ஒருபோதுண்டானாலும்—பண்ணும்- உழவுசெய்கின்ற—நல்லகழனிதனில்- நல்லவயலில் — பயின்றவித்துப்பலிப்பதுபோல் - விளைத்தவிதையானதுபலங்கொடுப்பது போல—திண்ணமானவன்பால் - மெய்யன்பினால்—சிறப்பாக- மேன்மையாக—மிகவும்வளரு ம்-மிகவும்விருத்தியடையும். எ-று.. (௬௮)

(அ-கை.) ஆத்மசத்தையேசகத்தாகவிளங்குதெனல். (கவி) முழுதுவடிவமாயொன் றுமான்மாமுழுதுசத்தியினுங், கெழுமுநதியிலுவரிகளிற் கீலாலம்போனின்றொளி ரு, மொழிவினினைவின்பரப்பிலதா யொன்றுஞ்சற்பாவந்தன்னிற், றழுவுகூறுமாத் திரமாயுணர்வாய்ச்சகல சகங்களையும்.......................................*

(இ-ள்.) முழுதிவடிவமாய்- எல்லாரூபங்களாயும்—ஒன்றுமான்மா - ஏகமாயுமிருக்கின் றவாத்மாவானது—கெழுமுநதியில்- நிறைந்தவாற்றிலும்—உவரிகளில்- சமுத்திரங்களிலுமுள் ள—கீலாலம்போல் - நீரைப்போல—முழுதுசத்தியினும் - சகலசத்திகளிடத்திலும்—நின்றொ ளிரும்- இருந்துப்ரகாசிக்கும்—ஒழிவினினைவின் - நீங்காதவெண்ணத்தினது — பரப்பிலதாய்- சமூகமில்லாததாய்—ஒன்றும்- ஏகமாயிருக்கின்ற—சற்பாவந்தன்னில்- சற்பாவத்தில்— சகலச கங்களையும்- எல்லாவுலகங்களையும்— தழுவுகூறுமாத்திரமாய் - தழுவாநின்றபங்கினளவாக—உ ணர்வாய்-அறிவாய். எ-று. (இ-ரு-க-ம்) கன்மநிவிர்த்தியுஞானவிருத்தியுஞ் சகத்தபின்னத்துவத் தையுமறிவித்ததாம்.. (௬௯)

(அ-கை.) ஆத்மாவுக்கிச்சையுண்டாதலு மழிதலுங்கூறல். (கவி) என்றுமனுமீண்டு ரைசெய்வானியைந்தபுலன்போகத்தாசை, நின்றதெம்மட்டம்மட்டுநிகழ்சீவப்பே ர்பெறுமான்மா, வொன்றுமவிவேகத்தாலவ் வாசையுண்டாந்தன்னாலே, யன்றுநிரு பாவிவேகத்தா லந்தவாசையழிவெய்தும்.......................................*

(இ-ள்.) என்று- இப்படியென்றுசொல்லி—மனுமீண்டுரைசெய்வான் - மனுத்திரும்ப வுஞ்சொல்லுவார்—இயைந்தபுலன்- இசைந்தவிஷயமான—போகத்தாசை-போகவிச்சையில் —நின்றதெம்மட்டு - இருந்ததெந்தமட்டோ—அம்மட்டும்- அந்தமட்டும்—ஆன்மா - ஆத்மா வானது—நிகழ்சீவப்பேர்பெறும் - விளங்காநின்றசீவனென்னுநாமத்தையடையும் — ஒன்று மவிவேகத்தால்-பொருந்தாநின்றவவிவேகத்தினால்—அவ்வாசையுண்டாம்-அந்தவிஷயவிச்சை யுண்டாகும்—நிருபா - அரசனே —தன்னாலேயன்று - தானேயுண்டாகமாட்டாது—விவேகத் தால்-விவேகத்தினால்—அந்தவாசையழிவெய்தும் - அவ்விச்சையானதுநாசமடையும். எ - று

(அ-கை.) ஆத்மாவுக்கிச்சையேபந்த மதன்விடுதியேமுத்தியெனல். (கவி) காதலென் றுபோமன்று கலந்தசீவத்திறம்விட்டுத், தீதிலாதபரப்பிரமத்திறத்தையான்மாசேர் ந்திடுமாற், கேதமாகமேனின்றுங்கீழெய்துங்கீழ்நின்று, மேதமில்லாமேலேசெ ன்றெய்துதெடுநாளிவ்வான்மா.......................................*

(இ-ள்.) காதலென்றுபோம்- இச்சையெப்பொழுதுநீங்குமோ—அன்று- அப்போது —கலந்தசீவத்திறம்விட்டு- கூடியசீவத்தன்மையைநீங்கி—தீதிலாத-குற்றமற்ற—பரப்பிரமத்தி றத்தை- மேலானபிரமத்தின்றன்மையை—ஆன்மா-ஆத்மாவானது—சேர்ந்திடும்-அடையும்— இவ்வான்மா- இந்தவாத்மாவானது —நெடுநாள்-வெகுகாலம்—கேதமாக-துன்பமாக—மேனி ன்றுங்கீழெய்தும்- சுவர்க்கத்திலிருந்துநரகத்துக்குவரும்—கீழ்நின்றும்-நரகத்திருந்தும்— ஏதமில்லாமேலே சென்றெய்தும் - குற்றமற்றசுவர்க்கத்திற்செல்லும். எ-று. (இ - உ - க - ம்) இச்சாத்யாகம் வரவேண்டுமென்றறிவித்தாம்.. (௭௧)

(அ-கை.) அகம்பாவமுள்ளவனிழிவுகூறுதல். (கவி) கனமார்பிறவிப்பெரும்பூட்டைக்கருத்தாங்கயிற்றிற்கடமாகே, லெனதிதிதற்குநானென்றேயிறுகும்பிராந்திவிவகார, நனிமோகத்திற்செறிபவர்யாரந்தநவைசேர்வஞ்சகரோ, தனிவேன்மன்னுகீழ்நின்றுங் கீழேசரிக்கத்தக்கவரோ.. *

(இ-ள்.) கனமார்- கூட்டமாயுள்ள—பிறவிப்பெரும்பூட்டை- பவமென்னும்பெரியவேற்றத்தினது—கருத்தாங்கயிற்றின்- சிந்தனையென்னுங்கயிற்றின்—கடமாகேல்- கடமாகாதே—ஈதெனது- இதென்னுடையது—இதற்குநானென்று-இதற்குநானேகருத்தாவென்று—இறுகும்பிராந்திவிவகாரம்- உறுதிப்படுத்துந்தொழிலாகிய—நனிமோகத்தில்- மிகுந்தமயக்கத்தில்—செறிபவர்யார்- நெருங்குபவர்களியாவர்— அந்தநவைசேர் - அக்குற்றத்தையடைந்திருக்கின்ற—வஞ்சகரோ- வஞ்சகரானவர்களே—தனிவேன்மன்னு- ஒப்பற்றவேலாயுதத்தையுடையவரசனே—கீழ்நின்றும் - கீழேயிருந்தும்—கீழேசரிக்கத்தக்கவர் - கீழேபோகத்தக்கவர்கள். எ-று. (இ-ம்) அகம்பாவத்திற்கட்டுப்பட்டு மயங்குபவர்களே கீழுக்குங்கீழான நரகத்தையடைவார்களென்பதாம்.. (௫௨)

(அ-கை,) அகம்பாவமற்றவர்களினுயர்வுகூறல்.(கவி) இதற்குநானீதெனக்கவன்மற்றிவனானென்றிடுமோக, விதத்தையுயர்புத்தியினாலேவிட்டோர்மேற்குமேற்செல்வோர், திதத்தவொளிகூரான்மாவைச்சிறிதுந்தாழாதுறப்பற்றி, யுதித்தசகத்தைத் தற்புரண வுருவமாகநோக்குதியால்.. *

(இ-ள்.) இதற்குநான்- இதற்குநானுடையவனென்றும்— ஈதெனக்கு - இதெனக்குள்ளதென்றும்—அவன்- அவனென்றும்—இவன்-இவனென்றும்—நானானென்றிடும் - நானென்றுஞ்சொல்லப்பட்ட—மோகவிதத்தை-மயக்கமானநாநாவிதத்தை—உயர்புத்தியினால்-மேலானவறிவினால்—விட்டோர்- நீக்கினவர்கள்—மேற்குமேற்செல்வோர்-மேலுக்குமேலான(முத்தியிற்)செல்பவர்கள்—திதத்தவொளிகூர்-திரமானதனதுசுப்ரகாசமிகுந்த—ஆன்மாவை-ஆத்மஸ்வரூபத்தை—சிறிதுந்தாழாது - எவ்வளவுந்தவக்கப்படாமல்—உறப்பற்றி- பொருந்தும்படிபிடித்து—உதித்தசகத்தை - உண்டாகியவுலகத்தை—தற்புரணவுருவமாக- தனதுபூரணஸ்வரூபமாக—நோக்குதி - பார்க்கக்கடவாய். எ-று. (இ-ம்) அகம்பாவத்தை யறிவினாற் கெடுத்தவர்களேமேலுக்குமேலான முத்தியையடைவா ரென்பதாம்.. (௫௩)

(அ-கை.) சித்துருவமத்துவிதமாக விளங்குமெனல். (கவி) என்றிப்படிதன்சித்துருவமிரண்டற்றுள்ளேதனித்தோன்று, மன்றிப்பவம்போய்ப்பரமேசனாகலாகுமயன் சிவன்மால், வென்றிக்குலிசத்தவன்முதலோர் செய்தவெல்லாமெய்ம்மையினாலொன்றிச்செறிசித் துருவுடைநான் செல்கின்றேனென் றுணர்வுறுவாய்.. *

(இ-ல்.) என்று- எப்போது—இப்படி-இந்தப்ரகாரம்—தன்சித்துருவம்- தனதுஞானஸ்வரூபமானது—இரண்டற்று - தொய்தமின்றி—உள்தனித்தோன்றும்-அகத்தினொன்றாயுதிக்குமோ—அன்று-அப்போது—இப்பவம்போய் - இச்சநநநீங்கி—பரமேசனாகலாகும்-பரமேஸ்வரனாகலாம்—அயன் - பிரமாவும்—சிவன் - உருத்திரனும்—மால் - விஷ்ணுவும்—வென்றி- வெற்றியுள்ள—குலிசத்தவன்முதலோர் - வச்சிராயுதத்தையுடையவிந்திரனும்வர்களாதியானவர்கள்—செய்தவெல்லாம்-செய்யும்(பஞ்சகிருத்தியமுதலிய)வெவையும்—மெய்ம்மையினாலொன்றி-தத்துவத்திற்கலந்து—செறிசித்துருவுடைநான் - நிறைந்தஞானஸ்வரூபத்தையுடையநானே—செய்கின்றேனென்று- இயற்றுகிறேனென்று—உணர்வுறுவாய்-அறிவாய். எ-று. (இ-ம்) சிவன்முதலியோ ரனுபவமுமிதுவேயெனத் தெரிவித்ததாம்.. (௫௪)

(அ-கை.) ஞானதிருஷ்டியின் பெருமையுரைத்தல். (கவி) யாதியாதெப்பொழுதெதிர்ந்ததவற்றிலென்னைசொலப்பட்ட, தோதுமவையெல்லாந் தடைதீருணர்வின் விலாசமேநன்றாந், தீதிலறிவுமாத்திரமாந்திறனாய்க்காலச்செயப்பண்ணி, கோதின் மனத்தோடிருப்பவன்சேர் குறைவில்சுகத்தோடெதுதிகரோ.. *

(இ-ள்.) யாதியாது - எந்தவெந்த (தரிசனங்கள்)—எப்பொழுதெதிர்ந்தது-எப்போது நேரிடுதோ—அவற்றில் - அத்தரிசனங்களில் — என்னைசொலப்பட்ட - எது (தத்துவமாகச) சொல்லப்பட்டதோ—ஓதுமவையெல்லாம் - சொல்லப்பட்டவவையனைத்தும்—தடைதீருணர்வின் - தடையற்றஞானத்தினது—நன்றாம்விலாசமே- இனிதானலீலையேயாம்—தீதிலறிவுமாத்திரமாந்திறனாய் - குற்றமற்றசின்மாத்திரமானகுணத்தையுடையவனாய் — காலச்செயம்பண்ணி-காலனைச்செயஞ்செய்து—கோதின்மனத்தோடிருப்பவன் - குற்றமற்றமனதுடனிருப்பவன்—சேர்-அடையாநின்ற—குறைவில்சுகத்தோடு - பூரணாநந்தத்துடன்—எதுதிகர்- யாதொப்

பாரும். எ-று. (இ-ம்) எதிரிட்ட சகலவஸ்துவுஞ் சைதன்னியமிலாசமென்றறிந்த பூரணமனமுள்ளவன் சகத்துக்கிணையாமென்பதாம் .... (௫௫)

(அ-கை.) செகத்தினிலக்கணஞ்சொல்லிச் சித்துருவமான முத்தியைக்கூறல். (கவி) இல்லதன்றுண்டல்லதறிவில்லாவுருவிலறிவுரு வல்லவான்மவுருவமலவயலன்றுலக மெனநினைவாய்ச், சொன்னுமிந்தச்சுருபமுறத் தொடர்ந்தபகுதிபோயிறக்கும், புல்லுதேசங்காலமலப் புறத்தோர்நிலையன் றுயர்முத்தி .... *

(இ-ள்.) உலகம்- சகமானது—இல்லதன்று- இல்லாததுமல்ல—உண்டல்ல - உண்டானதுமல்ல—அறிவில்லாவுருவில் - அசித்துருவமல்ல—அறிவுருவமல்ல- சித்துருவமுமல்ல—ஆன்மவுருவமல - ஆத்மஸ்வரூபமுமல்ல — இயலன்று - அநாத்மஸ்வரூபமுமல்ல—எனநினைவாய்- என்றுநினைப்பாய்—சொல்லும் - சொல்லப்பட்ட—இந்தச்சுருபமுற - இச்சுருபத்தையடைய—தொடர்ந்தபகுதிபோயிறக்கும்- (பழைமையாய்த்) தொடர்ந்தமாயையானதிறக்கும்—உயர்முத்தி- மேலானமோக்ஷமானது—புல்லுதேசங்காலமல-பொருந்தாநின்றதேயமுங்காலமுமல்லவாம்—புறத்தோர்நிலையன்று- புறம்பானவொருஸ்திதியுமல்ல. எ-று. (இ-ம்) இச்சகமர்த்தக்கிரியைகளைச்செய்வதிலில்லதும், கற்பிதமாகையாலுள்ளதும், விகாரமுள்ளவாதலாலறிவும், ப்ரகாசிக்கின்றபடியாலறியாமையும், பேதமாகத்தோற்றுகின்றபடியாலாத்மரூபமும், ஆத்மாவைத்தவிரவில்லாதபடியாலயனுமல்லவெனக்கூறினதாம் .... (௫௬)

(அ-கை.) சீவன்முத்தனிலக்கணங் கூறத்தொடங்கி சாத்திரவாசனைமுதலியயாவுநீங்கிச் சமதிருஷ்டியிற் சுகிப்பானெனல். (கவி) அகங்காரத்தினகமென்னு மோகமழிந்தாற்பாவனையா, மிகும்பேர்பெற்றபகுதியந்தம்வீடாமொருவனேயவனுந், தொகுஞ்சாத்திரத்தின்பொருணினைவிற்றுவளுநாநாவிதவின்பிற், புகுங்காவியவேட்கையுமனைத்து விகற்பத்துயரும்பொருந்தாமல் .... *

(இ-ள்.) அகங்காரத்தின்- அகங்காரத்தினது—அகமென்னும்-நாமென்கின்ற—மோகமழிந்தால்- மயக்கமானதுகெட்டால்—பாவனையாம் - பாவனையென்கின்ற— மிகும்பேர்பெற்ற-மிகுந்தநாமத்தையடைந்த—பகுதியந்தம்-மாயையின்முடிவு—வீடாம்-மோக்ஷமாகும்—தொகும்-தொகுத்துச்சொல்லாநின்ற—சாத்திரத்தின்- சாத்திரங்களினது—பொருணினைவில்- அருத்தபாவனையில்—துவளுநாநாவிதவின்பில் - துவளாநின்றபலவிதமானசுகங்களில்—புகுங்காவியவேட்கையும்- ப்ரவேசிக்குங்காவியவிச்சையுமாகிய—அனைத்துவிகற்பத்துயரும்- எல்லாவேறுபாட்டின்றுன்பங்களும்—பொருந்தாமல் - அடையாமலிருக்கின்ற—ஒருவனேயவனும்- ஒருவனே (முத்தியைப்பெற்ற) வனாகும். எ-று .... (௫௭)

(அ-கை.) இ-து. (கவி) அன்னான்சமமாமழிவில்லா வான்மாவாய்நின்றின்பமுறு, மென்னுகினுமொன்றுடுப்பவனு மென்னுகினுமொன்றுண்பவனு, மன்னுறெங்காகினுமொருபாலுறங்குவோனுயாங்கவனே, பொன்னூர்பூமிமுழுதாளும் பூபாலனைப் போற்பொலிவுறுமால் .... *

(இ-ள்.) அன்னான்- அவன்—அழிவில்லா- நாசமற்ற—சமமாம்- சமமாகிய—ஆன்மாவாய்நின்று- ஆத்மாவாகவிருந்து—இன்பமுறும்- ஆநந்தத்தையடைவான்— என்னுகினுமொன்று-ஏதாகிலுமொன்றை—உடுப்பவனும்- தரிப்பவனாகியும்—என்னுகினுமொன்று- ஏதாகிலுமொன்றை—உண்பவனும்- புசிப்பவனாகியும்—உன்னுது- நினையாமல்—எங்காகினும்- எவ்விடத்திலாகிலும்—ஒருபால் - ஓரிடத்தில்— உறங்குவோனும் - அறிதுயிற்செய்கின்றவனுமிருக்கின்ற—அவனே- அவன்றான்—பொன்னூர்பூமி- அழகியபூவுலகத்தை—முழுதாளும்பூபாலனைப்போல்- சக்கரவர்த்தியைப்போல—பொலிவுறும் - ப்ரகாசிப்பன். எ-று. (இ-உ-க-ம்) அகம்பாவமுதலானவேலநீங்கிச் சமதிருஷ்டியிற் சகலக்கிரியையுஞ் செய்பவனேயெதிரற்ற சுகியாய்விளங்குவனென்பதாம் .... (௫௮)

(அ-கை.) கன்மத்யாகங்கூறல். (கவி) வருணாசிரமவாசார வழிநானடத்துநடைநீங்கி, யருகாவலயின்றலைபகன்றே யருங்கூடகன்றகேசரிபோ, னிருபாவுளாகட்கெட்டரிம்யானேடிப்பிறக்கு நிலைநீத்தோ, னொருசோலையைச்சேர்ந் தவன்மழைபோயொளித்தநாளில்விண்டலம்போல் .... *

(இ-ள்.) அருங்கூடகன்ற - அரிய (விருப்புக்கூண்டினின்று) நீங்கிய—கேசரிபோல்- சிங்கத்தைப்போல—நானடத்தும் - (கன்ம) சாஸ்திரங்கணடத்துகின்ற—வருணாசிரமவாசாரவழி- வருணாசிரமதருமமென்றறிவின்—நடைநீங்கி - நடையைவிட்டு — அருகாவலயின்றலைபகன்று- நலிகின்றசகத்தின்கணின்றும்—நிருபா- அரசனே—உளாகட்கெட்டரிம்யான்- வசனங்களுக்கெ

ட்டுதற்கரியவன்--தேடிப்பிறக்குநிலைநீத்தோன்-(தன்னை) தேடிப்பிறவியைநீக்கினவன்—மழை போயொளித்தநாளில் - மேகம்மறைந்தசரற்காலத்திலுள்ள — விண்டலம்போல் - ஆகாயத்தைப்போல—ஒருசோன்பயைச்சேர்ந்தவன்- ஒப்பற்றசாந்தியையடைந்தவன். எ-று. (இ-ம்.) வருணாச்சிரமதருமமுதலியவைகளை யனுபவமாய்நீக்கினவனே யொப்பற்ற ஞானப்பிரகாசமாய்விளங்குவானென்பதாம்...... .... (ருகூ)

(அ-கை.) கருமபலம்விட்டவனிலக்கணங்கூறல். (கவி) தெளிவுகெம்பீரங்கள்கிரிசே
ர்ந்தபெரியசுனைபோல்வன், களிகொள்பரமசுகச்சுவையாற் தன்பாற்றனேகலங்கா
ம, லெளிதுசுகிப்பன்கருமபலமெல்லாம்விட்டோனழிவின்றி, யொளிருநிறைவோ
னிருவினைவேறென்றுந்தாக்கானொன்றனுகான்...... .... *

(இ-ள்.) தெளிவு - தெளிவும்—கெம்பீரங்கள் - ஆழமுமுள்ள—கிரிசேர்ந்த-மலையைச்சேர்ந்த— பெரியசுனைபோல்வன் - பெரியகுளத்துக்கொப்பானவன்— களிகொள் - களிப்பையுடைய—பரமசுகச்சுவையாம் - பிரமாநந்தவிரசமாகிய— தன்பாற்றனே - தன்னிடத்திற்றனே—கலங்காமல் - கலக்கமுறாமல்—எளிதுசுகிப்பன் - எளிதாகரமிப்பவன் — கருமபலமெல்லாம்விட்டோன்-கன்மபலங்களனைத்தையுநீக்கினவன்— அழிவின்றியொளிரும் - நசியாமற்ப்ரகாசிக்கின்ற—நிறைவோன் - பூரணனானவன்—இருவினைவேறென்றும் -இருவினைமுதலியவிகற்பங்களொன்றும்—தாக்கான்-தாக்கப்படாதவன்—ஒன்றனுகான்-ஒன்றுஞ்சேராதவன்.எ-று. (இ-ம்) பலாபேக்ஷையின்றிக் கருமஞ்செய்பவனே பரமசுகத்திற்சுகிப்பவனென்பதாம். (சூய)

(அ-கை.) அனைத்தும் பற்றியும்பற்றுதிருக்கின்ற விலக்கணங்கூறல். (கவி) பத்தி
பாய்ந்துட்பற்றுதபளிங்குபோலக்கருமபலம், பத்திபாய்ந்துட்பற்றுதோன் பல
நீண்மனிதருடனுறைந்தும், பத்தியாலர்ச்சித்தாலும்பகையாலுடலை யரிந்தாலும்,
பத்திபாச்சலுற்றதுபோற்பயிலுமகிழ்வுதுயரறியான்...... .... *

(இ-ள்.) பத்திபாய்ந்து - (பஞ்சவண்ணங்கள்) ப்ரதிபலித்தும் — உட்பற்றுதபளிங்குபோல்- உட்பிடிப்பில்லாதபடிகமணியைப்போல—கருமபலம் - கன்மபலமானது — பத்திபாய்ந்து-ப்ரதிபலித்தும்—உட்பற்றுதோன் - அகத்திற்பற்றுதவன் — பலநீண்மனிதருடனுறைந்தும்-அநேகமாகவிரிந்தநரர்களுடன்கூடியும்— பத்தியாலர்ச்சித்தாலும்- பத்தியினுலாராதனைசெய்தாலும்—பகையால் - விரோதத்தினுல்—உடலையரிந்தாலும் - சரீரத்தையறுத்தாலும்—பத்திபாச்சலுற்றதுபோல் - ப்ரதிபலனத்தையடைந்ததுபோல—பயிலும் - சொல்லப்பட்ட—மகிழ்வுதுயரறியான் - சுகதுக்கங்களையறியமாட்டான். எ-று. (இ-ம்.) பலனையுத்தேசியாமற் செய்யுங்கருமத்தாற் சுகதுக்கத்தையடையானென்பதாம்...... .... (சூக)

(அ-கை.) சற்கருமஞ்செய்தூஞ்செய்யாதவனெனல். (கவி) துதிகள்கடவுளோம
ங்கடொடர்பூச்சியன்பூசைகளில்லோன், விதிசெய்நீதியாசாரமேவப்படுவோன்மே
வாதோ, னெதிருந்தன்றுலகோர்களிறையும்வெருவாவகையிருப்போ, னுதித
மானவுலகத்திலொன்றால்வெருவாதுறைகிற்போன்...... .... *

(இ-ள்.) துதிகள் - தோத்திரங்களும்—கடவுளோமங்கள் - தேவயாகங்களும் — தொடர்பூச்சியன் - தொடர்பாகப்பூசிக்கப்படுவோனும் — பூசைகள் - பூசைகளும்—இல்லோன்- இல்லாதவன்—விதிசெய் - (வேத) விதிப்படிசெய்கின்ற—நீதியாசாரம் - நீதிநடையை—மேவப்படுவோன்மேவாதோன் - பொருந்தியும்பொருந்தப்படாதவன் —எதிருந்தன்றால் - எதிரிடப்பட்டதன்றால்—உலகோர்கள்-சகத்திலுள்ளவர்கள்—இறையும்வெருவாவகையிருப்போன்-எவ்வளவுமச்சப்படாதவண்ணமிருப்பவன்—உதிதமானவுலகத்திலொன்றால்- உண்டானசகத்திலுள்ளவொன்றினுலும்—வெருவாதுறைகிற்போன் - பயப்படாமல்வாசஞ்செய்பவன். எ-று. (இ-ம்) சீவன்முத்தனுக் கியல்பானநடையைக்கூறினதாம்...... .... (சூஉ)

(அ-கை) சீவன்முத்தன்சரித்திரஞ்சொல்லியவனெங்ஙனமரிக்கினுமுத்தியேயடைவானெ
னல். (கவி) பற்றுமுனிவுபயஞ்சுகங்கள்பயிலானெனினும்பயின்றிடினுஞ், சொற்றவெவ
ர்க்கும்பிரமேயந்தொடரானெனினுநன்பாலர், பெற்றபிரமேயத்துறினும் பெரியமனத்
தோன்காசியிற்சா, வுற்றபொழுதுநாய்க்கெரிப்போருழைசாவுறினுமுறும்பதங்கள்... *

(இ-ள்.) பெரியமனத்தோன்-பூரணமன்துடையவன்—பற்றும்-ஆசையும்—முனிவு-கோபமும்—பயம்-அச்சமும்—சுகங்கள் - சந்தோஷங்களுமானவிவைகளில்—பயிலானெனினும்-கூடாதவனானாலும்—பயின்றிடினும்-கூடினவனானாலும்—சொற்றவெவர்க்கும்-முன்சொல்லப்பட்டயாவருக்குமுள்ள—பிரமேயந்தொடரானெனினும்- பிரமேயந்தொடராதவனானாலும்—நன்பாலர்பெற்றபிரமேயத்துறினும் - நற்குழந்தைகளடைந்தபிரமேயத்தையடைந்தவனானு

நும்—காசிமிற்சாவுற்றபொழுதும்-காசியிலிறந்தபோதும் — நாய்க்கெரிப்போருழைசாவுறி னும்-புலையர்வீட்டிலிறந்தாலும்—பதங்கருநும்-பரமபதத்தைப்பொருந்துவன். எ-று. (௬௩)

(அ-கை.) அகம்பாவமான பந்தநீங்கி யறிவாய்விளங்கினவனை யாவருமாராதிக்கத் தக்கதெனல். (கவி) ஞானமடைந்தபொழுதிவ னல்லிடுற்றோன்மனமிறந்தோ, னீனமானவகம்பாவப்பிராந்தியன்றோவிடர்பந்த, மானவீடாவதுமடமையந்தகா ரங்கெடலன்றோ, மானமிகுந்தவிவனெய்தின்மனிதர்பூசைசெயவேண்டும்...... *

(இ-ள்.) ஞானமடைந்தபொழுதில் - சைதன்யத்தைப்பெற்றமாத்திரத்தில்— இவனல் லீடுற்றோன் - இவனல்லமோக்ஷத்தையடைந்தவன்—மனமிறந்தோன்-மனோநாசமானவன்— இடர்பந்தம் - துன்பமுள்ளபந்தமாவது—ஈனமான - இழிவாகிய— அகம்பாவப்பிராந்தியன் றோ - அகங்காரமயக்கமல்லவா—ஆனவீடாவது - ஆகியமோக்ஷமாவது—மடமையந்தகாரங் கெடலன்றோ - அஞ்ஞானாந்தகாரங்கெடுவதல்லவா (என்றறிந்த) — மானமிகுந்தவிவனெய் தின் - மாட்சிமையிலுயர்ந்தவிவ் (வறிஞன்) வரின் — மனிதர்பூசைசெயவேண்டும் - புருஷரா ராதிக்கவேண்டும். எ-று.. (௬௪)

(அ-கை.) அவன் முமுட்சுக்களாராதிக்கத்தக்கவனெனல். (கவி) போற்றவணங்கப் பூசிக்கப்புகழவருந்திப்போய்க்காண, மாற்றவுரியோனெவனவன்வன் பிறவியறுப் போர்க்கனவரதஞ், சாற்றுமகத்தாற்றீர்த்தத்தாற்றவத்தாற்றானத்தாற்கிட்டா,வூற்ற வறிவாற்பிறவியறுத்துயர்ந்தோன்பத்திதரும்பயனே............................. *

(இ-ள்.) வன்பிறவியறுப்போர்க்கு-கொடியசநநங்களைக்கெடுப்பவர்களுக்கு— அவன்சீ வச்சீவன்முத்தனே—அனவரதம்-சதாகாலம்—போற்ற-துதிக்கவும்—வணங்க-வணங்கவும்— பூசிக்க - ஆராதிக்கவும்—புகழ - புகழவும் — வருந்திப்போய்க்காண - பிரார்த்தித்துப்போய்த் தரிசிக்கவும்—ஆற்றவுரியோன் - மிகவுமுரியவன்—எவன் - யாவன் — ஊற்றவறிவால் - சலன மில்லாதஞானத்தினால்—பிறவியறுத்துயர்ந்தோன் - பவத்தைநீக்கிமோக்ஷிமைப்பட்டவனோ— பத்தி - (அவனுக்குச்செய்யு) மன்பு—தரும்பயன் - கொடுக்கும்ப்ரயோசனமானது— சாற்று மகத்தால் - சொல்லப்பட்டயாகங்களினாலும்—தீர்த்தத்தால் - நதிகளினாலும்—தவத்தாற்றான் த்தாற்கிட்டா - தவங்களினாலுந்தானங்களினாலும்லெபியாது. எ-று. (இ-௩-க-ம்) முத்திவிரு ப்பமுள்ளவர்களிச்சீவன்முத்தனைப் பூசித்து அதையடையவேண்டுமென்பதாம்.......... (௬௫)

(அ-கை.) பிரமனுபதேசித்தெழுந்தருளுதல். (கவி) பரிந்திவ்வாறுகற்பித்துப்பக வன்மனுவாம்பேர்விரிஞ்சன், புரிந்துதனதுபொன்மனைபோய்ப் புக்கானிக்குவாகு வெனும், விரிந்தபுகழ்மன்னனுமந்தவிழியேபற்றிநிலைநின்றான், வரிந்தகழற்காகுவி ராமவெனவசிட்டமுனிவனருள்செய்தான்... *

(இ-ள்.) பரிந்திவ்வாறு - அன்புற்றிந்தவண்ணம்—கற்பித்துப்புரிந்து - போதித்து— பகவன் - பகவானென — மனுவாம்பேர்விரிஞ்சன் - மனுவென்னுநாமத்தையுடையபிரமாவா னவர்—தனதுபொன்மனை - தனதுகனக (மயமானசத்தியலோகத்திலுள்ள) வரண்மனையில்— போய்ப்புக்கான் - போய்ச்சேர்ந்தார்—கழல்வரிந்தகாலிராம - வீரகண்டாமணியைவரிந்திரு க்கின்றபாதத்தையுடையஸ்ரீராமா—இக்குவாகுவெனும் - இட்சுவாகுவென்கின்ற — விரிந்த புகழ்மன்னனும் - மிகுந்தகீர்த்தியையுடையவரசனும்—அந்தவிழியேபற்றி - அந்தத்திருஷ்டி யையேபிடித்து—நிலைநின்றானென - (தனதாத்ம) நிச்சயத்திலிருந்தானென்று—வசிட்டமுனி வனருள்செய்தான் - வசிஷ்டமுனிபானவர்சொன்னார். எ - று. (இ - ம்) பிரமவுபதேசத்தா லிட்சுவாகுவுஞ்சீவன்முத்திப்பதத்தை யடைந்தனனென்பதாம்................ (௬௬)

இட்சுவாகுகதை முற்றிற்று. ஆககதை ௪௰௩-கவிதை (௲௩௱௪௰௨)

மானுவேடன் கதை.

(அ-கை.) முற்கதையிற் றனது விசாரத்தா லடையக்கூடாம லாசிரியர் முகவிசாரத்தா லகம்பாவ நீங்கிச் சர்வம்பிரமமயமென்னு மனுபவம் விளைந்ததை விளக்கி மேற்றுரியானுபவத்தைவிளங்கும் பொருட்டு மிருகவியாதன் கதையைநிரூபிக்கிறார்………… ……… ……… *

(அ-கை.) அணிமாமுதலியசித்திகளில்லாத சீவன்முத்தருக்கற்புத மியாதெனவினு
வுதல். (கலி) (வேறு.) இந்தவாறிருக்கிற்சீவன்முத்தனாயினியதான,புந்திசேரிவனுக்
கேதுபுதுமையா மதிசயந்தா, னந்தமில்பரத்தைக் கண்டோர்க் கதிகனேயென்று
கேட்ட, சுந்தரவிராமற்கந்தத் தொன்மறைவசிட்டன்சொல்வான் …… ……… *

(இ-ள்.) இந்தவாறிருக்கில் - இவ்வண்ணமிருந்தால்—சீவன்முத்தனாய்-சீவன்முத்தனாகி—இனியதான - இனிமையாயிருக்கின்ற—புந்திசேரிவனுக்கு- அறிவையுடையவிவனுக்குள்ள—புதுமையாமதிசயந்தான்- புதுமையானவியப்பானது—அந்தமில்-முடிவற்ற—பரத்தைக் கண்டோர்க்கு - பிரமத்தைதரிசித்தவர்களுக்கு — அதிகனே - அதீதனாகியவசிஷ்டமுனியே—எதுவென்றுகேட்ட - யாதென்றுகேட்ட—சுந்தரவிராமற்கு - அழகுள்ளவிராமனுக்கு—அந்தத்தொன்மறை வசிட்டன்சொல்வான் - அப்பழைமையான வேதத்தையுடைய வசிஷ்டமுனி சொல்லுவார். எ-று………………………………………… (சு)

(அ - கை.) ஆத்மாநந்தத்திலதிசயிப்பவ னணிமாதிசித்திகளி லதிசயிக்கானெனல்.
(கலி) ஒப்பறுஞானிபுந்தி யொன்றிலேயதிசயிக்குந், தப்பறநிறைந்துசாந்தனாயவ
ன்றன்பானிற்குஞ், செப்புமந்திரங்கணோன்பு தந்திரஞ்சிந்தையானோர், கைப்படு
விண்போக்காதி கருமத்திற்புதுமையென்னே………………………………… *

(இ-ள்.) ஒப்பறுஞானிபுந்தி - சமானமில்லாதஞானவானுடைய புத்தியானது — ஒன்றில்- ஒன்றான(வாத்மாவி)னிடத்தில் — அதிசயிக்கும் - வியப்பையடையும் — தப்பறநிறைந்து-குற்றமில்லாமற்பூரணமாய்—சாந்தனாய்- உபசாந்தமுடையவனாய்—அவன் - அச்சீவன்முத்தன்—தன்பானிற்கும்- ஆத்மாவினிடத்திருப்பான்—செப்புமந்திரங்கள்-சொல்லப்பட்டமந்திரங்களும்—நோன்பு-தவங்களும்—தந்திரம்-உபாயங்களும்—சிந்தையானோர்- சிந்தித்தவர்களுக்கு—கைப்படும்-கைவசமாகின்ற—விண்போக்காதி-ஆகாயகமனமுதலிய—கருமத்திற்புதுமையென்னே-கன்மத்திலதிசயமென்ன. எ-று. (இ-உ-க-ம்) சீவபாவநீங்கிச் சிவமாவதற்கேதுவல்லாதவாகாயகமனமுதலியவைபறவைத்தொழிலுக்கொப்பெனவதிசயிக்கானென்பதாம்.(உ)

(அ-கை,) சித்திமுத்தியினிலக்கணங்கூறல். (கலி) உலகாய்விரிந்தவிவராலு மொழுங்
கால்விரிந்தவருத்தத்தாற், பலமாமணிமாதியும்பண்ணப் படுமாதலினாற்றனையறிந்
தோர்க், கிலதாமிவர்க்கோர்விசேடமுளவிழிந்தமூடப்புந்திகள்போ,லலனாகுவனெ
ங்கணுமாசை யறலாலிவனெஞ்சமலமதாம்…………………………………… *

(இ-ள்.) உலகாய்விரிந்த- சகமாகப்பரவிய—இவராலும் - இவர்களாலும் — ஒழுங்கால்விரிந்த - முறைமையாகவிரிந்த—வருத்தத்தால் - ப்ரயாசையினாலும்—பலமாம்-பயனாயிருக்கின்ற—அணிமாதியும் - அணிமாமுதலிய(வஷ்டசித்திகளும்)—பண்ணப்படும் - செய்யப்படும்—ஆதலினால் - ஆகையால்—தனையறிந்தோர்க்கில்லாதாம் — ஆத்மஞானிகளுக்கிச்சித்தியில்லையாம்—இவர்க்கு - இந்தஞானிகளுக்கு—ஓர்விசேடமுள- ஒருவிசேடமுண்டாயிருக்கின்றது—இழிந்தமூடப்புந்திகள்போல்- இழிவுள்ளமூடமதிகளைப்போல—அலனாகுவன் - அல்லாதவனாவன்—எங்கணும் - எவ்விடத்திலும்—ஆசையறலால்- இச்சையற்றதினால்—இவனெஞ்சு-இவனதுமனம்—அமலமதாம் - நிர்மலமாகும். எ-று. (இ-ம்) மாயாசகிதத்தாலடையுமணிமாதிசித்திக்குமாயா ரகிதத்தாலடையுமுத்தி மிகவும்விசேடமா மென்பதாம்……………………… (ரு)

(அ-கை.) சீவன்முத்தரிலக்கணங்கூறல். (கலி) குறிதீர்வடிவாய்ப்பிறப்பிறப்பிற்
கொடுநீள்காலமயக்கறலாற், பிறியாவின்பத்தறிஞனுக்குப் பேசுங்குறியிவ் வளவன்
றே, வெறிகூராசைசினமோகம்விதனமுலோபமாபத்து, சிறிதாநிபுணநானுமெ
னச்செப்பிவசிட்டன்மீண்டுரைப்பான்………………………………………… *

(இ-ள்.) குறைதீர்வடிவாய் - (வருணாச்சிரமக்) குறிகளில்லாதவுருவமாய்—பிறப்பிறப்பில் - சநநமரணத்தில்—நீள்காலங்கொடு - அநேககாலங்கொண்டிருந்த—மயக்கறலால் - பிரமையானது நீங்குதலினால்—பிறியாவின்பத்தறிஞனுக்கு - பின்னமற்றசுகபோதனுக்கு — பே

கதியுறு - சொல்லப்பட்டவடையாளமானது — இவ்வளவன்றே - இம்மட்டல்லவா — வெகுசூ ராஸை - வாசனையிருந்தவிச்சையும் — சினம் - கோபமும் — விருனம் - துக்கமும் — உலோபம் - உலோபமும் — ஆபத்து - ஆபத்துமாகியவிவைகள் — நிபுணநாளும் - நிபுணமாகத்தினந்தோ றும் - நிந்தாவடனச்செய்பி - அற்பமாகத்தேயிருக்கப்போகுமென்றுசொல்லி — வளிப்படவிடுவி டுமைப்பாய் - விசேடமுயலிருப்பவுஞ்சொல்லுவார். எ-று. (இ-ம்) காமக்குரோதாதிசகல கன்மங்களுமிறந்திருப்பதே யடையாளமாமென்பதாம் .... (௪)

(அ-கை.) சிற்பிரகாசமாய்விளங்கிய சீவேஸ்வராளுக்குக்காரணமின்றெனல். (கவி) மறை யோனொருவன்றன்னுடையமகிமைகடந்துசூத்திரனாய், முறைதீர்வதுபோல் சிவமென்ன முளைத்தானீசன் சிருட்டிதொறு, நிறைநீர்பயிர்களளவின்றி நீக்கமூலச் சித்தசைவாற், றுறைதோறவைதான்றோன்றிடுமாற்றொடர்காரணமிங்கிலதாகும் ....*

(இ-ள்.) மறையோனொருவன் - ஒருபிராமணன் — தன்னுடையமகிமைகடந்து - தனது பெருமையைவிட்டு — சூத்திரனாய் - சூத்திரனாகி — முறைதீர்வதுபோல் - மரபுநீங்குவதுபோல — ஈசன் - ஈசனானவன் — சிவமென்னமுளைத்தான் - சீவனென்றுசொல்லும்படியுண்டாயினன் — சிருட்டிதொறும் - சிருஷ்டிகடோறும் — நிறைநீர்பயிர்கள் - நிறைந்திருக்கின்றதிணைபிராணிக ளானவை — அளவின்றிக்கமும் - மட்டில்லாமற்பிரகாசிக்கும் — மூலச்சித்தசைவால் - காரண மானவறிவின்சலனத்தினால் — துறைதோறு - வழிகடோறும் - அவைதான்றோன்றிடும் - அச்சீவ ரீசருண்டாகும் — தொடர்காரணம் - தொடராநின்றகாரணமானது — இங்கிலதாகும் - இவ் விடத்திலில்லையாம். எ-று .... (௫)

(அ-கை.) சீவர்கள்பிறத்தற்குக்காரணமுரைத்தல். (கவி) ஈசனிடைநின்றுற்பவமாயெழுந்த வுயிர்கடாஞ்செய்த, வீசுகருமங்களினுமேலமேன்மேற்பிறவிகளைமேவுந், தேசமுடையாய் காரியகாரணத்தின்செய்தியிதுவாகு, மேசுபிறவிகருமமெனுமிரண்டினுக்குமிப்படியே.

(இ-ள்.) ஈசனிடைநின்று - ஈஸ்வரனிடத்திலிருந்து — உற்பவமாய் - உண்டாகி — எழுந்த வுயிர்கள் - வளர்ந்தசீவர்கள் — தாஞ்செய்த - தாங்கள்செய்த — வீசுகருமங்களினால் - வீசாநின் றகன்மங்களினால் — மேன்மேல் - மேலுமேலும் — பிறவிகளைமேவும் - சநநங்களைப்பொருந் தும் — தேசமுடையாய் - தேயத்தையுடையஸ்ரீராமா — காரியகாரணத்தின்செய்தி - காரியகா ரணத்தினொழுங்கு — இதுவாகும் - இதுவேயாகும் — ஏசு - பழிக்கத்தக்க — பிறவிகருமமெனும் - பவமுங்கருமமுமென்கின்ற — இரண்டினுக்குமிப்படியே - இரண்டுக்குமிந்தப்பிரகாரமே. எ-று. (இ-உ-க-ம்) சீவர்களுதித்தற்குக் காரணமின்றாயினுஞ் செனித்துமரித்தலுக்குக் கன்மசன்ம மே யொன்றுக்கொன்று காரணமாயிற்றென்பதாம் .... (௬)

(அ-கை.) அகாரணமாயுண்டான சீவர்களுக்குப் பின்வந்த காரணங்களைக்கூறுதல். (கவி) பரமமதனிற்காரணத்தாற்பரந்தவுயிரெல்லாமுண்டாம், விரவுமதற்பின்பவர்க் கெல்லாமிகத்தாஞ்செய்தகருமங்க, ளுரியசுகதுக்கங்கடமக்குறுகாரணமாந்தனைய றியாப், பிரமைதனிற்சேர்சங்கற்பம்பேசுங்கருமங்களின்மூலம் ....*

(இ-ள்.) பரமமதனில் - பிரமபதத்திலிருந்து — அகாரணத்தால் - நிஷ்காரணமாய் — பரந்தவுயிரெல்லாமுண்டாம் - விரிந்தசீவர்களனைவருமுதிக்கும் — விரவுமதற்பின்பு - உண்டா னதன்பின்பு — அவர்க்கெல்லாம் - அவ்வுயிர்களனைவர்க்கும் — மிகத்தாஞ்செய்த - மிகவுந்தாங் கள்செய்த — கருமங்கள் - கன்மங்களானவை — உரியசுகதுக்கங்கடமக்கு - உரிமையானசுகதுக் கங்களுக்கு — உறுகாரணமாம் - பொருந்துகின்றகாரணமாகும் — தனையறியா - ஆத்மாவையறி யாத — பிரமைதனில் - மயக்கத்தில் — சேர்சங்கற்பம் - உண்டானசங்கற்பமானது — பேசுங்கரு மங்களின்மூலம் - சொல்லப்பட்டகன்மங்களினதுகாரணமாகும். எ-று. (இ-ம்) பிரமப்ரதி பாமாத்திரமாயுண்டாயிருக்கின்ற சீவர்கடாஞ்செய்யுஞ்சங்கற்பத்திற் கருமமுங் கருமத்திற்சுக துக்கங்களு முண்டாமென்பதாம் .... (௭)

(அ-கை.) சங்கற்பத்தைக்கெடுக்கவேண்டுமெனல். (கவி) பந்தநிதானஞ்சங்கற்ப மன்றோவதுநீபற்றறுப்பாய், முந்துசங்கற்பந்தவிர்ந்தான் முத்தியதுவாமதுதன் னைப், புத்தியதனாற்பரிசயிப்பாய்பொருளும்பொருள்கொள்பவனுமுறின், மைந்த மெள்ளவெப்போதுமறவாதொழிப்பாய்சங்கற்பம் ....*

(இ-ள்.) பந்தநிதானம் - பந்தத்துக்காதிகாரணமானது — சங்கற்பமன்றோ - சங்கற்பம ல்லவா — அதுநீபற்றறுப்பாய் - அதைநீபற்றில்லாமற்கெடுப்பாய் — முந்துசங்கற்பந்தவிர்ந்தா ல் - முதன்மையானசங்கற்பமொழிந்தால் — முத்தியதுவாம் - மோக்ஷமதுவேயாகும் — அதுதன் னை - அச்சங்கற்பநாசத்தை — புத்தியதனால் - அறிவினால் — பரிசயிப்பாய் - பழக்கஞ்செய்வாய் — பொருளும் - விஷயமும் — பொருள்கொள்பவனும் - விஷயத்தைக்கிரகிப்பவனும் — உறில் - வந்

தால்—மைந்த-குழந்தாய்—மெள்ள-மெதுவாக—எப்போதும்-எக்காலமும்—சங்கற்பம்- சங்கற்பத்தை—மறவாதொழிப்பாய்-மறவாமற்கெடுப்பாய். எ-று. (இ-ம்) பந்தத்துக்குக் காரணமான சங்கற்பத்தையெப்போதுங் கெடுக்கவேண்டுமென்பதாம் .... (௮)

(அ-கை) இச்சாத்யாகமே மூத்தியெனக்கூறுதல். (கவி) கொள்ளும்பொருளாகவும்வேண்டா கொள்வோன்வடிவாகவும்வேண்டா, வெள்ளுங்கருத்தெல்லா நீக்கியெதுசேடித்தததுவாவாய், நள்ளும்பொருளொன்றினையிந்த நாடும்பொறிகளுறிலாங்கே, தெள்ளும்பற்றுள்ளதுபந்தஞ்சிறக்கும்பற்றில்லதுமுத்தி .... *

(இ-ள்.) கொள்ளும் - கிரகிக்கப்படுகின்ற—பொருளாகவும்வேண்டா- விஷயமாகவும் வேண்டாம்—கொள்வோன் - கிரகிப்பவனுகிய ஞாதாவின்—வடிவாகவும்வேண்டா- உருவமாகவும்வேண்டாம்—எள்ளும் - நிந்திக்கின்ற—கருத்தெல்லா நீக்கி - சங்கற்பங்களனைத்தையுங்கெடுத்து—எதுசேடித்தது - எதுமிஞ்சினதோ—அதுவாவாய்- அதுவேயாவாய்—நள்ளும்பொருளொன்றினை - விரும்பப்பட்டவொருவிஷயார்த்தத்தை— இந்தநாடும்பொறிகளுறில் - இந்நாடாநின்றபஞ்சேந்திரியங்களடையுமானால்—ஆங்குதெள்ளும்பற்றுள்ளதுபந்தம்-அவ்விடத்திற்றெள்ளாநின்றவாசையையுடையதேபந்தமாகும் — சிறக்கும்பற்றில்லது - சிறக்காநின்றபற்றில்லாததே—முத்தி - மோக்ஷமாம். எ-று.. (௯)

(அ-கை.) இச்சையற்பமுங்கூடாதெனல். (கவி) அற்பமுனக்கொன்றினிதாகிலதனுற்பிறப்பிலகப்பட்டாய், பொற்பவுனக்கொன்றினுமினிமைபூணுதென்னிற்பிறப்பகன்றாய், நிற்பநடப்பப்பொருட்டிரளி னினக்குத் திரணமுதலாகத், தற்பமுறுபொன்முடிவாகச்சற்றுமினிமையுறவேண்டாம் .... *

(இ-ள்.) அற்பம் - அற்பமாவது—உனக்கொன்றினிதாகில் - உனக்கொரு (வஸ்) துவினிட்டமானால்—அதனுற்பிறப்பிலகப்பட்டாய் - அவ்விச்சையாற்பவத்திலகப்பட்டாய்— பொற்ப - அழகையுடையஸ்ரீராமா—உனக்கொன்றினும் - உனக்கொருவஸ்துவிலும் — இனிமைபூணுதென்னில் - இன்பமடையாதென்றால்—பிறப்பகன்றாய் - பவத்தைநீங்கினாய்— நிற்பநடப்ப - சராசரமாகிய—பொருட்டிரளின் - வஸ்துகூட்டங்களில்—நினக்கு - உனக்கு—திரணமுதலாக - துரும்புமுதலாக — தற்பமுறுபொன்முடிவாக - மேலானகனகமந்தமானவஸ்துக்களில்—சற்றுமினிமையுறவேண்டாம் - கொஞ்சமும்விருப்புறவேண்டாம். எ - று. (இ-உ-க-ம்) முற்றும்பற்றறுத்ததே முத்தியாதலாலொன்றையுமிச்சிக்கவேண்டாமென்பதாம் ... .(௰)

(அ-கை.) பற்றறச்செய்புங்கன்மமகம்பாவமாகாவெனல். (கவி) பற்றிலாதென் னுண்ணுதியென்பண்ணுநின்றாயெதைவிடுதி, யுற்றசெய்வோன்புசிப்போனன் றுபசாந்தியனீமதிமாண்டோன், மற்றுநல்லோர்சென்றபொருட் கிரங்கார்வருவ மதித்தெண்ணார், முற்றுநிகழ்காலப்பொருளைமுறையாலெய்திகைக்கொள்வார் .... *.

(இ-ள்.) பற்றிலாது - ஆசையில்லாமல்—என் னுண்ணுதி - எதைப்புசிக்கின்றாய்—என்பண்ணுநின்றாய் - எதைச்செய்கின்றாய்—எதைவிடுதி - எதைவிடுகின்றாய் — உற்றசெய்வோன்-பொருந்தினகருத்தாவும்—புசிப்போன் - போக்த்தாவும்—அன்று - அல்ல—நீ - நீயே—உபசாந்தியன் - உபசாந்தத்தையுடையவன்—மதிமாண்டோன்- -மனமிறந்தவனுகும்—மற்றுநல்லோர் - பின்னுஞ்சத்துக்கள் —சென்றபொருட்கிரங்கார் - போனபொருளுக்கிரங்கமாட்டார்கள்—வருவமதித்தெண்ணார் - வருவனவாகியபொருளைமதித்துநினையார்கள்—முற்றும் - முழுதும்—நிகழ்காலப்பொருளை - வர்த்தமானகாலத்துப்பொருளை—முறையாலெய்தி- ஒழுங்காகவடைந்து—கைக்கொள்வார் - கைவசப்படுத்துவார்கள். எ-று .... (௰௧)

(அ-கை.) மனத்தைமனதினுற் கெடுக்கவேண்டுமெனல். (கவி) மதமாமோகமையன்முதன் மனத்திற்பிணித்தகயிறுகளாந், திதமாமனத்தைமனத்தாலே சேதித்திடலாமறிவோரா, விதமாநெடுங்கூர்விவேகத்தா லிரும்பாலிரும்பையறுப்பதுபோல், விதமாமனத்தைமனத்தாலே வீய்ப்பாய்பிறவிமயக்கறவே .... *

(இ-ள்.) மதம் - செருக்கும்—மாமோகம்- மகாமோகமும்— மையல் - இச்சையும்—முதல் - முதலானவைகள்—மனத்திற்பிணித்த - மனத்திற்கட்டிய—கயிறுகளாம் - பாசங்களையாம்—திதமாமனத்தை - திரமாகியமனதை—மனத்தால்- விவேகமனத்தினுல்— அறிவோரால்-அறிஞர்களால்—சேதித்திடலாம்- கெடுத்துவிடலாம்—இதமாம்- உரிமையான—நெடுங்கூர்விவேகத்தால்- நீண்டமகாவிவேகத்தினுலும்—இரும்பாலிரும்பையறுப்பதுபோல்- அயஸ்(வ)தினாலயத்தைக்கெடுப்பதுபோல—விதமாமனத்தை- நாநாவிதமானமனதை— மனத்தாற்பிறவிமயக்கறவீய்ப்பாய்- ஒருப்பட்டமனதினுற்சநநமயக்கந்தீரக்கெடுப்பாய்.எ-று.(இ-உ-க-ம்) மனமிறந்தகம்பாவநீங்கு முபாயமறிவித்ததாம் .... (௰௨)

(அ-கை.) சீவனுக்குள்ள மூன்றுவடிவமுரைத்தல். (கலி) அழுக்கைப்பழுக்காற்கழுவுவர் கொல்லம்பையம்பாற்றடைசெய்வர்; வழுக்குநஞ்சையெதிர்நஞ்சான்மாற்றுவிற்பர்மதியுடையோ, ரொழுக்கமுறுமூன்றுளசீவர்க்குபயந்தூலசூக்கமென, விழுக்கமாமொன்றுயர்பரமா மிதுசேர்ந்தந்தவிரண்டொழிப்பாய். ..... *

(இ-ள்.) மதியுடையோர் - அறிவுள்ளவர்கள்— அழுக்கை - (துகிலின்)களங்கத்தை— அழுக்காற்கழுவுவர் - (உவர்மண்முதலியகளங்கத்தால்)கழுவுவார்கள் —கொல் - கொலைசெய்கின்ற— அம்பை - (அக்கினியா)ஸ்திரத்தை— அம்பாற்றடைசெய்வர் - (வருணா)ஸ்திரத்தினாற்றடுப்பார்கள்— வழுக்குநஞ்சை - (தின்பம் வழுவாகிய)விடத்தை— எதிர்நஞ்சால் - அவிழ்தமாகியவிஷத்தினால் - மாற்றுவிற்பர் - நீக்குவார்கள் (அதுபோல)— ஒழுக்கமுறுசீவர்க்கு - உயர்வுள்ளசீவனுக்கு— மூன்றுள - மூன்றுவடிவமுண்டு— உபயம் - இரண்டு— தூலசூக்கமெனவிழுக்கமாம் - தூலமென்றுஞ்சூக்குமமென்றுமிழிவுள்ளதாம்— ஒன்றுயர்பரமாம் - ஒன்றுமேலானபிரமமாம் — இதுசேர்ந்து - இப்பிரமத்தையடைந்து— அந்தவிரண்டொழிப்பாய் - அத்தூலசூக்குமமானவிரண்டையுநீக்குவாய். எ-று ..... (௰௩)

(அ-கை.) அவைகளிற்றூலஞ் சூக்குமமென்னு மிரண்டுவடிவி னிலக்கணங் கூறல். (கலி) மேகமனையாய் கைகால்கண் மேவுமிந்தவுடலுமே, போகமுண்ணச்சீவனுக்குப்பொருந்துதூலவுருவாகும், பாகமருவுசங்கற்ப மயமாய்ப்பவபாவனைபண்ணுஞ், சோகமனஞ்சீவனுக்குருவாஞ் சூக்கவாதிவாகியமே ..... *

(இ-ள்.) மேகமனையாய் - முகிலுக்கொப்பான ஸ்ரீராமா— கைகால்கண்மேவு - கரசரணநேத்திரமும்மேவிய— இந்தவுடலுமே - இச்சரீரமே— போகமுண்ண - போகத்தையனுபவிக்க— சீவனுக்கு - புமானுக்கு— பொருந்து - பொருந்திய— தூலவுருவாகும் - தூலசரீரமாகும்— பாகமருவு - பிரிவுள்ள— சங்கற்பமயமாய் - சங்கற்பாகாரமாய்— பவபாவனைபண்ணும் - சம்சாரபாவனையைச்செய்கின்ற— சோகமனம் - துன்பமுள்ளமனமானது— சீவனுக்கு - ஆத்மாவுக்கு— சூக்கவாதிவாகியம் - சூட்சுமமானவாதிவாகிய— உருவாம் - வடிவமாம். எ-று ..... (௰௪)

(அ-கை.) மூன்றாவதானபரவடிவினிலக்கணங்கூறல். (கலி) மெய்யாய்மூலமீறின்றி விகற்பமறுசின்மாத்திரமே, மொய்யார்சீவன்பரவடிவா மூன்றாவதுமுண்டகம் போற், கையாய்சுத்ததுரியபதங்கண்டாயிதுமேவியிதிலழுந்தி, மையார்முதற்சொல்வடிவிரண்டு மாற்றியவைநானெனவேண்டா ..... *

(இ-ள்.) மெய்யாய் - தத்துவமாய்— மூலமீறின்றி - ஆதியந்தமில்லாமல்— விகற்பமறுசின்மாத்திரமே - வேறுபாடில்லாதஞானமாத்திரமே— மொய்யார்சீவன் - நிறைந்தசீவசமூகத்துக்கு— மூன்றாவது - மூன்றாவதான— பரவடிவமாம் - பிரமஸ்வரூபமாம்— முண்டகம்போல் - தாமரைமலரைப்போல— கையாய் - கரங்களையுடைய ஸ்ரீராமா— சுத்ததுரியபதம் - பரிசுத்தமானதுரியபதமானது— இதுமேகண்டாய் - இதுவேயாம்— இதிலழுந்தி - இத்துரியபதத்தின் மூழ்கி— மையார் - களங்கமுள்ள— முதற்சொல்வடிவிரண்டும் - முன்சொன்னவிரண்டுவடிவங்களையும்— மாற்றி - கெடுத்து— அவை - அவ்விரண்டையும்— நானெனவேண்டா - நானென்று சொல்லவேண்டாம். எ-று. (இ-க-ம்) ஆத்மாவுக்குப் போகநிமித்தமுண்டான தூலதேகத்தையும்பவபாவனைசெய்கின்ற சங்கற்பமாகிய சூக்குமதேகத்தையுந்தள்ளியாதிமத்யாந்தரஹித சின்மாத்திரமான துரியமே தனதுபரவடிவமாகத் தியானித்து அவித்தாமயமானகாரணதேகத்தைக்கெடுக்கவேண்டுமென்பதாம் ..... (௰௫)

(அ-கை.) துரியவிலக்கண மியாதெனவினவுதல். (கலி) என்னுமுனியையிராமனும் பார்த்தெந்தாய்நனவுகனச்சுழுத்தி, துன்னுமதுவாயினமூன்றிற்றோன்றுமதுவாந் துரியத்தை, பன்னிவிசேடமுறவுரைப்பாயுயர்ந்தமுனிநாயகவென்ன, மன்னுமமுதமழைபோலும் வாக்கால்வசிட்டமுனியருள்வான் ..... *

(இ-ள்.) என்னுமுனியை - இப்படியென்றுசொல்லியவசிஷ்டமுனியை — இராமனும்பார்த்து - ஸ்ரீராகவனுநோக்கி— எந்தாய் - என்துபிதாவே— நனவுகனச்சுழுத்தி - சாக்கிரசொப்பனசுழுத்திகள் — துன்னுமதுவாயினமூன்றில் - நெருங்கியவவ்வவத்தைகளாயிருக்கின்றமூன்றில் —தோன்றும் - தோற்றுகின்ற— அதுவாந்துரியத்தை - அப்பிரமமாயிருக்குந்துரியத்தை பன்னி - திரட்டி— விசேடமுற - விசேஷம்பொருந்த— உயர்ந்தமுனிநாயக - மேலானமுனிசிரேஷ்டனே— உரைப்பாயென்ன - சொல்லுவாயென்றிராமன்கேட்க — மன்னுமமுதமழைபோலும் - நிறைந்தவமுதவருஷத்தைப்போலும்— வாக்கால் - வசனத்தினால் — வசிட்டமுனியருள்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார். எ-று ..... (௰௬)

(அ-கை.) துரியவிலக்கணங்கூறல். (கவி) அகமென்பதுமென்றதுவு முளதுமில துமறவிட்டு, நிகழுஞ்சமமாய்ப்பற்றறத்தன் னிலைக்கேநிற்றற்றுரியமதாந், தகுதன் னிலையாச்சமமாகிச் சகத்தின்றொழிற்குச் சான்றாகி, புகல்சீவனின் முத்தியுமாகிப் பொருகற்பனைதீர் நிலைதுரியம்.. *

(இ-ள்.) அகமென்பதும் - நானென்பதும்— என்றதுவும் - நானென்றதுவும்— உளதுமிலதும்- உள்ளதுமில்லாததுமாகியவினைகளை—அறவிட்டு - ஒருங்கேநீக்கி— நிகழுஞ்சமமாய்- விளங்காநின்றசமத்துவமாய்—பற்றற- இச்சையறும்படி—தன்னிலைக்கேநிற்றல்- ஆத்மநிச்சயத்திலிருத்தல்—துரியமதாம் - துரியமாகும்—தகுதன்னிலையாய் - மேலானவாத்மநிச்சயமாகியும்—சமமாகி - சமமாகியும்— சகத்தின்றொழிற்கு - உலகத்தினதுகிரியைகளுக்கு— சான்றாகி- சாட்சியாகியும்—புகல்சீவனின்முத்தியுமாகி - சொல்லப்பட்டசீவன்முத்தியாகியுமிருக்கின்ற—பொருகற்பனைதீர்- பொருதுகின்றகற்பனைகணீங்கிய—நிலைதுரியம்- நிலையேதுரியபதமாம். எ-று. (இ-ம்) ஆகமூன்றுமவத்தை மூன்று மபிமானமூன்றுமாகிய வொன்பதுடன் கூடி வெளிமுகமாயிருந்து விஷயசுகஞ் சுகிக்கும்போது சீவசிதாபாசனென்று மிவைகளைக் கற்பனையென்றறிந் திவைகளிற்செல்லாமற் றனித்திருக்கும்போது சீவனென்றுந் தனதாநந்தத்தையனுபவிக்கும்பொருட் டகமுகத்திற்சென் றனைத்திற்குஞ்சாட்சியாய் நிற்றும்போதுகூடஸ்தனென்று மிங்ஙனம் விளங்குவது சீவதுரியமென்று மிங்ஙன மண்டங்களின் விளங்குதலீஸ்வர துரியமென்று மண்டபிண்டங்களி லிங்ஙனம் பூரணமாகவிளங்குதல், பிரமதுரியமென்றுமிவைகளோடுங் கூடியுங் கூடாமற் ப்ரகாசயா யாதுயாதெப்படி யெப்படியோ வதுவதப்படியப்படியாய் விளங்குங்குரு துரியமென்பதைச் சுருக்கி யகப்பாவநீங்கிச் சமதிருஷ்டியாற் சர்வசாட்சியாயிருத்தலே துரியமெனக் கூறினதாம்.. (௰௭)

(அ-கை.) இ-து. (கவி) இதுதானனவுகனவல்லவிடர்சங்கற்பமிலாமையினாற், பொதுவாஞ்சுழுத்திதானன்று போதமின்மைதீர்தலினாற், சதுராவிந்தச்சகநன்றாந்தனதுநிலைக்கே சமித்திறக்கு, முதுஞானிகட்கிங்கிதுதுரிய மூடர்க்குலகந்திரநிலையாம்........................*

(இ-ள்.) இடர்சங்கற்பம் - துன்பமாகியசங்கற்பமானது—இல்லாமையினால் - இல்லாததினால்—இதுதானனவுகனவல்ல - இதுசாக்கிரமுஞ்சொற்பனமுமல்ல— போதமின்மைதீர்தலினால்- சாட்டியமில்லாதபடியினால்—பொதுவாஞ்சுழுத்திதானன்று - சாதாரணமானசுழுத்தியுமல்ல—சதுரா - சதுரானஸ்ரீராமா—இந்தச்சகம் - இவ்வுலகமானது—நன்றாம்- நன்மையாகிய —தனதுநிலைக்கு- ஆத்மாவினிடத்தில்—சமித்திறக்கும்- சீரணித்துக்கெடும்—முதுஞானிகட்கு- முதிர்ந்தஞானிகளுக்கு—இங்கிதுதுரியம் - இவ்விடத்திலிதுவேதுரியமாகும்—மூடர்க்கு- மூடர்களுக்கு—உலகம்- சகமானது—திரநிலையாம்- திடநிலையாகும். எ-று. (இ-ம்) இத்துரியமவத்தாத்திரயமான பௌதிகமுமதற்குக் காரணமான பாஞ்சபூதமுமன்றென்பதாம் (௰௮)

(அ-கை.) இத்துரியமடையுமிலக்கணங்கூறி யிஃதடைந்தவரிலக்கணங் கூறத்தொடங்கல். (கவி) யானுமெண்ணமறிற்சமந்தா னெய்திச்சித்தமொருக்காலு, மானுவினை செய்யாதபடியாக்கிற்றுரியநிலைநிற்கு, ஞானாதீதனுங்கிழவோ னெனினுஞானநனி மேவ, மேனுணடந்ததொருசரிதை கேட்பாய்மேதைகளின்மிக்கோய்.............. *

(இ-ள்.) யானுமெண்ணமறில்-நானென்கின்றநினைவானதற்றால்—சமந்தானெய்தி- சமத்துவத்தையடைந்து—சித்தம்-மனதை—ஒருக்காலும்-ஒருபோதும்—ஆனுவினை-நீங்காததொழிலை—செய்யாதபடியாக்கில் - செய்யாதவிதஞ்செய்தால்— துரியநிலைநிற்கும்- துரியநிலையுண்டாயிருக்கும்—ஞானாதீதனுங்கிழவோன் - ஞானாதீதனாகியதலைவன்—எனினும்- நியானாலும்—ஞானநனிமேவமேனுணடந்தது - ஞானமிகவும்பொருந்தமுற்காலத்தினடந்ததாகிய—ஒருசரிதை- ஒருகதையை—மேதைகளின்மிக்கோய் - அறிவில்மிகுந்தஸ்ரீராமா— கேட்பாய்-கேட்கக்கடவாய். எ-று.. (௰௯)

(அ-கை.) துரியதிருஷ்டியுள்ளவனாவிஷயதிருஷ்டியைவினாவுதல்(கவி)பெரியவடவியொன்றிடையோர் பெரியமுனிவன்மகாமவுனம், புரியுநிலையோனவன்றனையோர் பொருவில்வேடன்வந்தணுகி, யெரியுமென்கைக்கணைபடநொந்திங்கோர்நவ்வியோடியதாற், றெரியவஃதெங்ககன்றதெனச்செப்புமுனிவவெனக்கேட்டான்.............. *

(இ-ள்.) பெரியவடவியொன்றிடை - மகத்தானவோராரணியத்தில்— ஓர்பெரியமுனிவன் - ஒருமகாதபசியானவர்—மகாமவுனம் - மகாமவுனத்தை—புரியுநிலையோன் - விரும்புகின்றநிலையையுடையவன்—வேடனணுகிவந்து - வேடனானவனெருங்கிவந்து — எரியுமென்கைக்கணைபடநொந்து-எரியாநின்றவென்கையம்பானதுபட்டுவருந்தி— இங்கோர்நவ்வியோடியது- இவ்விடத்தொருமானோடிவந்தது—அஃது- அந்தமான்—எங்ககன்றதென - எவ்விடத்திற்போ

யிற்றென்று—முனிவ - தபசியே—தெரியச்செப்புமெனக்கேட்டான் - தெரியச்சொல்லுமெ ன்றுகேட்டான். எ-று .... (உ0)

(அ-கை.) விஷயத்தைவிருவத் துரியத்தைக்கூறுதல். (கவி) கேட்டவிராதன்றன்னை யந்தக்கேடின்முனிபார்த்தினியோனே, காட்டிலுறைவோர்சமநிலைமைக்கண்ணருமுனி வர்கணநாங்க, ளூட்டுவிகாரம்புரியு நவையாங்காரமாகிலநாங், கூட்டுபொறியின் றொழிலெல்லாங் கொள்ளுமனஞ்செய்துவதன்றோ .... *

(இ-ள்.) கேட்டவிராதன்றன்னை - இப்படியென்றுகேட்டவேடனை — அந்தக்கேடில்முனி பார்த்து- அக்களங்கமற்றதபசியானவர்பார்த்து—இனியோனே - நற்குணமுள்ளவனே—காட் டிலுறைவோர்- கானகத்திலிவசிப்பவர்கள் — சமநிலைமைகண்ணும் - சமநிலையானதிருஷ்டி யையுடையவர்களாயிருக்கின்ற—நாங்கள்- யாங்கள்—முனிவர்கணம்- தவசிகள்கூட்டம்—நாட் டுவிகாரம்புரியும்- சகத்தின்றொழிலைச்செய்கின்ற—நவையாங்காரநாமாகிலம் - குற்றமுள்ளவ கங்காரம்யாங்களாகமாட்டோம்—கூட்டுபொறியின்- (விஷயத்திற்)சேர்க்காநின்றவிந்திரியங்க ளினது —தொழிலெல்லாம - விவகாரங்களனைத்தையும்—கொள்ளும்- கிரகியாநின்ற — மனஞ் செய்குவதன்றோ - மனஞ்செய்வதல்லவா. எ-று .... (உக)

(அ-கை.) துரியதிருஷ்டியில் விஷயதிருஷ்டியின் றுமெனல். (கவி) அதனாலகங்கா ரத்துருவாமந்தமனநிச்சயமாகத், திதமாய்நழுவிநெடுநாளாஞ் செறிசாக்கிரசொ ப்பனசுழுத்தி, பதமாமவையொன்றையுமறியேன் பரமதுரியநிலையானேன்,விதமா ய்காணப்படும்பொருள்கள் விமலதுரியத்திலதென்றான் .... *

(இ-ள்.) அதனாலகங்காரத்துருவாம்- அதனாலகங்காரவடிவமாகிய— அந்தமனம்-அந்த மனமானது—நிச்சயமாக - மெய்யாக—திதமாய்நழுவி - திரமாய்விடுபட்டு—நெடுநாளாம்- வெகுகாலமாயிற்று—செறிசாக்கிரம்- நெருங்கியநனவும் —சொப்பனம்- கனவும்—சுழுத்திப தமாம்- சுழுத்தியவத்தையுமாகிய —அவையொன்றையுமறியேன்- அவைகளொன்றுந்தெரியா து—பரமதுரியநிலையானேன் - மேலானதுரியநிலையாயினன்—விதமாய் - நாநாவிதமாகவிரு க்கின்ற—காணப்படுபொருள்கள்- திரிஸ்யங்கள்—விமலதுரியத்திலதென்றான்- நின்மலதுரியத் திலில்லையென்றுசொன்னார். எ-று. (இ-ச-க-ம்) அகம்பாவநீங்கிச் சமதிருஷ்டியி லிருப்பவர்களு க்குத் துரியமன்றி விஷயந்தோற்றா வென்பதாம் .... (உஉ)

(அ-கை.) திருஷ்டாந்தஞ்சொல்லி துரியத்தைத்தவிரவேறின்றெனல். (கவி) தீதின் முனிவருரைபொருள்க டெரியாவேடனங்ககன்று, ஞதலாற்கேடுரியத்துக்கயலோர் நிலையுமுளதன்று, லேதமானவிகற்பமெலா மிறந்தவறிவேதுரியமதா, மீதலாதிங் கயலொன்றுமில்லைக்கண்டாயிராகவனே .... *

(இ-ள்.) தீதின்முனிவர் - குற்றமற்றதபசையுடையவர்—உரைபொருள்கள்- சொல்லப் பட்டவருத்தங்களை—தெரியாவேடன் - அறியாதவேடனானவன் — ஆங்ககன்றான் - அவ்விடம் விட்டுநீங்கினான்—ஆதலாற்கேள் - ஆதலினாற்கேட்பாய்— துரியத்துக்கு - துரியபதத்துக்கு— அயலோர்நிலையுமுளதன்று- வேறாகவொருநிலையுமுள்ளதல்ல— ஏதமான - குற்றம்பொருந்தி ய—விகற்பமெலாமிறந்தவறிவே- வேற்றுமைகளனைத்துநீங்கியஞானமே—துரியமதாம்- துரி யமாகும்—ஈதலாது- இதையல்லாமல்—இங்கு- இவ்விடத்தில்—இராகவனே - ஸ்ரீராமா—அய லொன்றுமில்லைகண்டாய் - வேறொன்றுமில்லை. எ-று .... (உ௩)

(அ-கை.) அவத்தாத்ரயவிலக்ஷணமேதுரியமெனல். (கவி) கண்டநனவுகோரமதாங் கனவுசாந்தமெனப்பெயராங், கொண்டசுழுத்திமூடமதாங் கூறுமிம்மூன்றவத்தை களும், விண்டமனத்தின்வடிவாகும்விளம்பமிம்மூன்றையும்விட்டாற், றண்டுமனம் போமனமிறந்தாற் சத்தாயொன்றாஞ்சமநிலையாம் .... *

(இ-ள்.) கண்டநனவு- கண்டிருக்கப்பட்டசாக்கிரம்—கோரமதாம்-கோரவிருத்தியாகு ம்—கனவு-சொப்பனம்—சாந்தமெனப்பெயராம் - சாந்தவிருத்தியென்றுநாமமுள்ளதாகும் —கொண்டசுழுத்தி - கொண்டிருக்கப்பட்டசுழுத்தியே—மூடமதாம்- மூடவிருத்தியாகும்— கூறும்- சொல்லப்பட்ட—இம்மூன்றவத்தைகளும்- இந்தமூன்றவத்தைகளும்—விண்டமனத் தின்வடிவாகும்- பகுக்கமனத்தினுருவமாகும்—விளம்புமியமூன்றையும்விட்டால்- சொல்லப் பட்டவிம்மூன்றவத்தைகளையுநீக்குதல்— தண்டுமனமபோம் - தட்டப்பட்டமனநீங்கும்— மனமிறந்தால்- மனநசித்தால்—சத்தாய்- சத்தாகி—ஒன்றாம்-அத்துவிதமான—சமநிலையா ம்—சமநிலையுள்ளதாகும். எ-று .... (உ௪)

(அ-கை.) துரியபதத்திற்சுகிப்பாயெனல். (கவி) அந்தநிலையேயோகிகடா மரிதிற்
சாதித்தடைகின்றார், வெந்ததுயர்செய்சங்கற்ப விகற்பமிலாத துரியத்தே, மைந்த
நிலையாயிடர்தீர்வாய் மகத்தாயுயர்ந்தமுனிவரராய்ப், பந்தமிலராய்ப்பேதமறும்ப
ழையோர்விடாதெப்பதத்துறைவார் .... *

(இ-ள்.) அந்தநிலையே- அந்நிச்சயத்தையே—யோகிகடாம் - ஞானவான்கள்—அரிதில்-அரிதாக—சாதித்தடைகின்றார் - அற்பியசித்தடைகின்றார்கள்—மகத்தாய் - மகத்துக்களாகியும்—உயர்ந்தமுனிவராய் - மேன்மைபொருந்தியவிருஷிகளாகியும்—பந்தமிலராய் - பந்தமில்லாதவர்களாகியுமிருக்கின்ற—பேதமறும்பழையோர் - அபேதத்தையுடைய பழைமையானசீவன்முத்தர்கள்—விடாது- நீங்காமல்—எப்பதத்துறைவார்- எந்தத்துரியபதத்தில்வசிப்பார்களோ—வெந்ததுயர்செய் - வேகின்றதுன்பத்தைச்செய்யும்—சங்கற்பவிகற்பமில்லா- சங்கற்பவிகற்பங்களிறந்த—துரியத்து - அத்துரியபதத்தில்—மைந்த - குழந்தாய்—நிலையாய்- திரமாயிருந்து—இடர்தீர்வாய் - துன்பத்தினின்றுநீங்கக்கடவாய். எ-று. (இ-ங-க-ம்) இங்ஙனங்கூறியதுரியத்திற்சுகிக்கி லதுவேதுரியாதீதமான விதேகமுத்தியைக்கொடுக்குமென்பதாம்........... (உ௫)

மானுவேடன்கதைமுற்றிற்று. ஆகூ கதை-சஉ௯- கவிதை. (௩கூ௮௰)

நிருவாணப்பிரகரணம்.

(அ-கை.) முற்கதையிற் ப்ரத்யேகாத்மஸ்வரூபமான துரியானுபவிக்கு வாகியத்திற் றிரிஸ்யதிருஷ்டியின்றி திருக்குஸ்வரூபமாய் விளங்குவதையறிவித்து, இத்துரியமே சர்வம்பிரமமயமென்னுந் துரியாதீதமாய் விளங்குவதை யறிவிக்குநிமித்த மிந்த ஞானசாஸ்திரார்த்தம் ஞானபூமி காசாரமானபடியா லதின் ஸ்வரூபத்தைவிரித்துப் பதினான்குகதையின் சாரமான நிருவாணப்ரகரணத்தை நிரூபிக்கிறார்.. *

(அ-கை.) சர்வம் பிரமமயமாய் விளங்குதேயன்றி வேறின்றெனல். (கவி) வேறு.
எனைத்துஞானநன்னூலி னியம்புமறுதி யாதென்னி, லனைத்துங்கனவு காண்பது
வேயன்றேவவிஞ்சையிங்கில்லை, வினைத்தின்கவலைசெய்கின்ற வெய்யமாயைதானி
ல்லை, தினைத்துன்பமுமற்றுபசாந்தத்திறமாமிதுவேதிகழ்பிரமம் .... *

(இ-ள்.) எனைத்துஞானநன்னூலின் - சமஸ்தவாத்மஞானசாஸ்திரங்களில்—இயம்பும்-சொல்லப்பட்ட—அறுதியாதென்னில் - நிச்சயமெதுவென்றால்—அனைத்தும் - எல்லாவற்றையும்—கனவுகாண்பதுவேயன்றே- சொற்பனமாகப்பார்ப்பதல்லவா—இங்கு- இவ்விடத்தில்—அவிஞ்சையில்லை - அவித்தையுமில்லை—வினைத்தின் - தொழிலினது—கவலைசெய்கின்ற- துன்பங்களைச்செய்கின்ற—வெய்யமாயைதானில்லை - கொடியமாயையுமில்லை— தினைத்துன்பமுமற்று - தினையளவுதுன்பமுமில்லாமலிறந்து—உபசாந்தத்திறமாம்- உபசாந்தத்தன்மையாகிய—இதுவேதிகழ்பிரமம் - இதுவேவிளங்காநின்றபிரமஸ்வரூபமாம். எ-று. (இ-ம்) சகலவேதார்த்த சம்மதமான நிச்சயம் மாயைமுதலியயாவுங்கனவைப்போலக் கண்டகற்றி யாவுந்தனதுஸ்வானுபூதி சாக்ஷாத்காரமாக விளங்குதென்றறிவதென்பதாம்.. (க)

(அ-கை.) இப்பிரமத்தையே மதாந்தரங்களினுமபேதங்களாக நிச்சயிக்கப்பட்டிருக்குதெனல். (கவி) சாந்தமாகிச்சிதம்பரமாய்ச்சமமாய்நொய்தாயான்மாவா, யேந்துசத்தி
யளவிலதாயிடும்பேர்பிரமமெனுமிதற்கே, சேர்ந்தபலநிச்சயம்பண்ணிச் சிலர்பாழென்
பர்பரமேசன், வாய்ந்தவுருவமென்பர்சிலர்மாவிஞ்ஞானமென்பர்சிலர் .... *

(இ-ள்.) சாந்தமாகி - உபசாந்தமாகியும்—சிதம்பரமாய்-சிதாகாசமாகியும்—சமமாய்-சமமாகியும்—நொய்தாய் - சொச்சமாகியும்—ஆன்மாவாய் - ஆத்மாவாகியும்— ஏந்துசத்தி- தரிக்கப்பட்டசத்திகள்—அளவிலதாய் - அநந்தமாகியும்—பிரமமெனும் - பிரமமென்னும்—இடும்பேர் - தரிக்கின்றநாமமுடையதாயுமிருக்கின்ற — இதற்கே - இந்தப்பிரமத்துக்கே—சேர்ந்தபலநிச்சயம்பண்ணி - சார்ந்திருக்கின்றவநேகநிச்சயங்களைச்செய்து — சிலர்பாழென்பர் - சிலமதஸ்த்தர்சூனியமென்றுசொல்லுவார்கள்—சிலர் - சிலமதஸ்த்தர்—பரமேசன் - பர

மேசன் - பரமேஸ்வரனுடைய—வாய்ந்தவுருவமென்பர்- பொருந்தியவடிவமென்றுசொல்லுவார்கள்—சிலர் - சிலமதஸ்த்தர்—மாவிஞ்ஞானமென்பர் - மகாவிஞ்ஞானமாகப்ரகாசிக்குமென்றுசொல்லுவார்கள். எ-று. (இ-ம்) ஸ்வானுபூதியையே சூனியமுதலியவஸ்துவாக நிச்சயிக்கப்பட்டிருக்குதென்பதாம் .... (௨)

(அ-கை.) வஸ்துநிச்சயங்கூறியஃதாய் விளங்குமுபாயமுங் கூறல். (கவி) எல்லாநீக்கி மகாமவுனத்திருப்பாய் நிருவாணத்தினனாய்ப், பொல்லாமனம்போய்ச் சித்தம்போய்ப் புந்திபோய்த்தானென்பதுபோய்ச், சொல்லாவூமை குருடுசெவி டொத்துத்தூயவான் மாவி, னில்லாயுள்ளேமுகமாகிநித்தநொய்தாய்நிறைமதியாய் .... *

(இ-ள்.) எல்லாநீக்கி - சகலத்தையுமொழித்து—மகாமவுனத்திருப்பாய் - மகாமவுனத்தினிற்கக்கடவாய்—நிருவாணத்தினனாய் - மோக்ஷத்தையுடையவனாய்— பொல்லாமனம்போய்-பொல்லாங்கைச்செய்யுமனது நீங்கி—சித்தம்போய் - சித்த நீங்கி—புந்திபோய் - புத்தி நீங்கி—தானென்பதுபோய்-நானென்பது நீங்கி—சொல்லாவூமை-பேசாதவூமையனுக்கும்— குருடு-அந்தகனுக்கும்—செவிடு - செவிடனுக்கும்—ஒத்து- ஒப்பாகி—தூயவான்மாவில் - பரிசுத்தமாகியவான்மாவில்—உள்ளேமுகமாகி - அகமுகத்தையுடையவனாய்—நித்தம் - எக்காலமும்—நொய்தாய் - சொச்சமாகியும்—நிறைமதியாய் - பூரணஞானத்தையுடையவனாயும்— நில்லாய்-நிற்கக்கடவாய். எ-று. (இ-ம்) மகாமவுனத்தாலாத்மாவிற்சுகித்திருப்பாயென்பதாம் .... (௩)

(அ-கை.) சித்தத்யாகவுபாயங்கூறல். (கவி) நனவிற்சுழுத்திநிலைமேவி நன்றாயெல்லாமுள்ளகற்றி, தனதிச்சையில்வந்ததுபுறத்தேசமைப்பாய்சித்தமுண்டாகைக், கனதுக்கமதாஞ்சித்தமறிற்கனத்தசுகமாஞ்சித்தத்தை, யுனதுட்படுத்தியுணர்வின்மையாலேயொழிப்பாயுணர்வுருவாய் .... *

(இ-ள்.) நனவிற்சுழுத்தி - சாக்கிரசுழுத்தியினது—நிலைமேவி- தன்மையையடைந்து—நன்றாய் - நன்றாக—எல்லாமுள்ளகற்றி - சகலத்தையுமுள்ளேதள்ளி — தனதிச்சையில் - தனதிச்சாப்ரகாரம்—வந்தது - வந்ததை—புறத்தேசமைப்பாய் - வெளியில்செய்வாய்—சித்தமுண்டாகை - மனமுண்டாதல்—கனதுக்கமதாம் - மிகுந்ததுன்பமாகும்—சித்தமறில் - மனமிறந்தால்—கனத்தசுகமாம் - பேராநந்தமாம்—சித்தத்தை - மனதை—உனதுட்படுத்தி-உனதுவசமாக்கி—உணர்வின்மையால் - அசம்வேதனத்தினால்— உணர்வுருவாய் - ஞானஸ்வரூபமாய்—ஒழிப்பாய் - நீக்குவாய். எ-று .... (௪)

(அ-கை.) சுகதுக்கசமத்துவமாயிருப்பாயெனல் (கவி) சோகநன்மைதிமைகளைச்சூழ்வுற்றிருந்துஞ்சமமாகிப், பாகமின்றிக்கற்போலப்படிந்துநிற்பாய்பலபிறவி, மோகமகலுமவ்வளவுமுயலுந்தனதுமுயற்சியினால், நாகமனையாய்சுகதுக்கநடுவுள்ளதுநீநாடலையாய் *

(இ-ள்.)சோகம்-துன்பமாயிருக்கின்ற —நன்மைதீமைகளை-இதாகிதங்களை-- சூழ்வுற்றிருந்தும்-சூழ்ந்திருந்தும்—சமமாகி-சமத்துவமாகி—பாகமின்றி-பிரிவில்லாமல்—கற்போல-கல்லைப்போல— படிந்துநிற்பாய்-பொருந்தியிருப்பாய் — பலபிறவி- அநந்தசநநங்களினது—மோகமகலும்-மயக்கநீங்குகின்ற—அவ்வளவும்-அதுபரியந்தம்—முயலும்- முயற்சிக்கின்ற—தனதுமுயற்சியினால்-தனமெதத்தனத்தினால்—நாகமனையாய்— மலைக்கொப்பாகியஸ்ரீராமா—சுகதுக்கம்-இன்பதுன்பம்—நடுவுள்ளதும்-சுகாசுகமும் —நீநாடலையாய்-நீநாடாதே. எ-று.(௫)

(அ-கை.) இவ்வனுசந்தானத்தான் முத்தியுண்டாமெனல். (கவி) இந்தவளவாந்தன்முயர்ச்சியிடர்தீர்முடிவில்பதமளிக்குஞ், சிந்துகலைகணிறைமதிபோற்சீதவமுதேயுண்ணிறைய,வந்தவறிவன்சுகமடைவனகிலவுலகின்பொருட்சார, முந்தவறிந்துசெயற்செய்யாதவனும்முத்தியெய்திடுமே.... .... *

(இ-ள்.) இந்தவளவாம் - இவ்வளவாகிய—தன்முயற்சி - தனதுமுயற்சியானது — இடர்தீர் - துன்பமில்லாத—முடிவில்பதமளிக்கும்- முடிவற்றபிரமபதத்தைக்கொடுக்கும்—சிந்துகலைகணிறை - சிதறுகின்றவமுதகலைகணிறைந்த — மதிபோல் - சந்திரனைப்போல—சீதவமுதேயுண்ணிறைய - குளிர்ந்தவமுதமானதுள்ளத்தின்கண்ணிறைய — அந்தவறிவன்சுகமடைவன் - அவ்வறிவையுடையவன்சுகத்தையடைவான் — அகிலவுலகின்பொருட்சாரம் - சகங்களினதுவஸ்துசத்தையை—முந்தவறிந்து - முன்னேதெரிந்து—செயற்செய்யாதவனும்- தொழிலைச் (செய்தும்) செய்யாதவனும் — முத்தியெய்திடும் - மோக்ஷத்தையடைவன். எ - று. (இ-௫-௬-ம்) பிரமாற்பியாசத்தாற் பிரமாபரோக்ஷமுண்டாமென்பதாம் .... (௬)

(அ-கை.) அபரோக்ஷஞானனுபவத்தைப் பெறுதற்குமுக்கிய காரணமான ஞான பூமியினற்பியாசமுமஃதையடைந்தவர்களிலக்கணமு மியாதென்ற வினாவின்

முதல்விருவுக்குத்தரங்கூறத்தொடங்கி ப்ரவிர்த்தனிவிர்த்தனென விருவ ருண்டெ னல். (கவி) யோகபூமியேழுக்குமுறுசெய்தொழில்களெவ்வண்ண,மாகவிந்தப்பூமி களையடைந்தயோகிக்கெதுகுறிகண், மோகமில்லாயுரையென்னமுனிவனிராமற்கு ரைசெய்வான், போகவசஞ்செல்பவன்மீண்டோனென் றுபுருடரிருவகையாம் ...*

(இ-ள்.) யோகபூமியேழுக்கும் - ஞானபூமியேழுக்கும்—உறுசெய்தொழில்கள்-பொருந்தச்செய்யுமற்பியாசங்கள்—எவ்வண்ணம் - எப்படியாகும் — ஆகவிந்தப்பூமிகளை - ஆகியவிந்தஞானபூமிகளை—அடைந்தயோகிக்கு - அடைந்தஞானிகளுக்கு — எதுகுறிகள் - என்னவடையாளங்கள்—மோகமில்லாய் - மயக்கமற்றவரே—உரையென்ன - சொல்லுவாயென்றுகேட்க—முனிவன் - வசிஷ்டமுனியானவர் — இராமற்குரைசெய்வான் - ஸ்ரீராகவற்குச்சொல்லுவார்—போகவசஞ்செல்பவன் - போகவசத்திற்செல்லுபவனென்றும் — மீண்டோனென்று-திரும்பினவனென்றும்—புருடரிருவகையாம் - ஆத்மாக்களிரண்டுவிதமாம். எ-று ....(எ)

(அ-கை.) ப்ரவிர்த்தனிலக்கணங்கூறல். (கவி) சுவர்க்கமுத்திகளைவிரும்பித்தொடருமவர்தங்குறிகேளா, யுவக்கும்வீடேயெவ்வளவிற்றுலகநடையேயுயர்ந்ததெனு, நிவக்குமறுதி யாற்செய்வோ னெடும்போகத்திற் செல்பமனு, மெவர்க்கும்விவேகமுறுபிறவியெய்தற்கரியவியல்பினதே..... ....*

(இ-ள்.) சுவர்க்கமுத்திகளைவிரும்பி-போகமோக்ஷங்களையிச்சித்து—தொடருமவர்தம்-தொடராநின்றவவர்களுடைய—குறிகேளாய்-அடையாளங்களைக்கேட்பாய்—உவக்கும்வீடு-மகிழாநின்றமோக்ஷமானது—எவ்வளவிற்று-எவ்வளவாகும்— உலகநடையே - சகத்தினொழுங்கே—உயர்ந்ததெனு-மேலானதாயென்று—நிவக்குமறுதியால்-ஓங்கியநிச்சயத்தினால்--செய்வோன்-செய்பவன்—நெடும்போகத்தில்-பெரிதானபோகத்தில்—செல்பவனும்-செல்லும் (பிரவிர்த்த)னும்—எவர்க்கும்-யாவர்க்கும்—விவேகமுறுபிறவி- விவேகமடைந்திருக்கின்றசநநமானது—எய்தற்கரிய-அடைதற்கரிய—இயல்பினது - தன்மையையுடையது. எ-று .... (அ)

(அ-கை,) நிவிர்த்தனிலக்கணங்கூறல். (கவி) எறிபுங்கடலினுகத்துளையிலாமைக்கழுத்துப்புகுவதுபோற், பொறிவெம்பிறவியநேகத்தாற் புருடன்விவேகியெனப்பிறந்து, முறியும்பிறவிப்பயனிலதிம் மோகமமையுஞ்செய்தொழிலாற், செறிவதென்னேயிவற்றாலே தினங்களெல்லாஞ்சென்றிடுமால்.................. .... *

(இ-ள்.) எறியுங்கடலின் - அலைகள்வீசுமளக்கரிற்(கிடக்கும்) —நுகத்துளையில்- நுகத்தடியின்(றுவாரத்தினுள்)—ஆமைக்கழுத்துப்புகுவதுபோல்- கூர்மத்தின்கண்டநுழைவதுபோல—வெம்பொறி - கொடியவிந்திரியங்களையுடைய—பிறவியநேகத்தால் - அநந்தஞ்சநநத்தில்—புருடன் - ஓர்புருஷனானவன்—விவேகியெனப்பிறந்து - விவேகியாகச்செனித்து—முறியும்பிறவி- கெடாநின்றசநநமானது—பயனிலது- ப்ரயோசனமில்லாதது — இம்மோகமமையும்-இந்தமயக்கம்போதும்—செய்தொழிலால் - செய்யப்பட்டகன்மங்களினால்—செறிவதென்-அடையும்ப்ரயோசனமென்ன—இவற்றால் - இக்கன்மங்களினால்—தினங்களெல்லாம் - நாள்களனைத்தும்—சென்றிடும் - (வீணாகப்)போகும். எ-று ....(கூ)

(அ-கை.) இ-து. (கவி) தொழிலின்மிகுதியற்றுயர்ந்து துயர்தீரஃதேதென்றுள்ளே,யழிவிலறுதியுள்ளோனே யடங்கத்திரும்புமவனுகுங், கழிவின்மயல்போய்ப்பவக்கடலைக்கடப்பதெவ்வாறெனவுன்னு,மொழிவில்விசாரத்தால்விரத்தி யுள்ளேயுறுவனுள்வேண்டா..... *

(இ-ள்,) தொழிலின்மிகுதியற்று- கன்மத்தினதுமிகுதிகெட்டு— உயர்ந்து-மேலாகி—துயர்தீர்- துன்பநீங்கும் —அஃதேதென்று- அந்தப்பதமெதுவென்று— உள்ளழிவிலறுதியுள்ளோனே-மனதிலழிவற்றநிச்சயமுள்ளவனே —அடங்க-முழுதும்(விட்டு)—திரும்புமவனுகும் - திரும்பு(நிவர்த்த)னுகும்—கழிவின்மயல்போய்- நீங்காதமயக்கநீங்கி—பவக்கடலை- சநநசமுத்திரத்தை—கடப்பதெவ்வாறெனவுன்னும்-தாண்டுவதெப்படியென்றுநினைக்கின்ற—ஒழிவில்விசாரத்தால்- தவிராதவிசாரணையினுல்—நாள்வேண்டா-தினம்வேண்டாமல்—விரத்தியுள்ளேயுறுவன்-துறவுமுகுர்த்தங்களினுலகத்திற்பொருந்துவன். எ-று. (இ-ச-க-ம்) சுவர்ககாதி போகங்களைக்குறித்துக் காமியகருமங்களைச் செய்பவன் ப்ரவிர்த்தனென்றும்நிட்காம புண்ணியபலத்தினுலத்தீவரனுகபவக்கடலைக் கடக்க நிராசைபிறந்தவ னிவிர்த்தனென்றுங் கூறியதாம் ... . (௰)

(அ-கை.) நிராசையாற்சஞ்சரிக்குநிலையையுரைத்தல் (கவி) உதாரமானதொழில்களின்மேலுமயன்றுநாளுமுணமகிழ்வன், கதாவுகின்றகிராமியமாங்கருமச்சழக்கிற்குச்சரிப்பன், விதானகருமங்களைசசெய்வன் விளம்பான்செய்தகருமங்கள், பதாதியுலகோர்வெருவாதபடிமெத்தெனறதொழிலபுரிவன் .... *

(இ-ள்.) உதாரமானதொழில்களில் - மேலாகியகாரியங்களில்—முயன்று -முயற்சித்து—நாளுமுண்மகிழ்வன் - தினந்தோறுமகத்தின்கண்ணானந்தத்தையடைவன் — நதாவுகின்றகிராமியமாம் - செல்லாநின்றதுச்சமாகிய—கருமச்சழக்கில் - குற்றமுள்ளகன்மங்களில்— அச்சரிப்பன் - அருவருப்பன்—விதானகருமங்களைச்செய்வன் - உபாயமாகப்புண்ணியகன்மங்களைச் செய்வான்—செய்தகருமங்கள்-தாஞ்செய்தகன்மங்களை—விளம்பான்-(டம்பநிமித்தஞ்) சொல்லான்—பதாதியுலகோர்-உலகத்திலுள்ளசனங்கள்— வெருவாதபடி - பயப்படாதபிரகாரம்—மெத்தென்ற-மிருதுவாயிருக்கின்ற—தொழில்புரிவன் - கன்மத்தைச்செய்வான். எ-று.....(௰௧)

(அ-கை.) நிவிர்த்தனே ஞானபூமியின் முதற்பூமியை யடைந்தவனெனல். (கலி)
தீயவினைக்கஞ்சுவனென்றுஞ்செறியும்போகவேட்கையுறு, நேயநயமாய்மெத்தெ
ன்றுநிபுணமாகியிடம்பொழுதுக், கேயவுரைகளுரைசெய்வா னிவ்வாறனவிவன்று
னே, யாயபொழுதுமுதற்பூமியானவொன்றையடைந்தவனே .... *

(இ-ள்.) தீயவினைக்கஞ்சுவன் - கொடியதொழிலுக்குப்பயப்படுவான்—என்றும்- எப்போதும்—செறியும் - நெருங்கிய — போகவேட்கையுறான் - போகத்திலாசையைப்பொருந்தான்—நேயநயமாய் - அன்புள்ளவுபசாரமாய்—மெத்தென்று - மிருதுவாய்— நிபுணமாகி- சாமர்த்தியமாய்—இடம்பொழுதுக்கு - தேசகாலங்களுக்கு—ஏயவுரைகள் - பொருந்தினவசனங்களை—உரைசெய்வான் - வசனிப்பான்—இவ்வாறன - இப்படியாயிருக்கின்ற — இவன்றனே - இந்த(நிவிர்த்)தனே—ஆயபொழுது-(இப்படி)யானபோது— முதற்பூமியான - முதற்பூமியென்னுஞ்சுபேச்சையாகிய—ஒன்றையடைந்தவன்-ஒன்றையடைந்தவன். எ-று.....(௰௨)

(அ-கை.) இவனே முதற்பூமியினிலக்கணத்தை விசாரித்தறிந்தவனெனல். (கலி)
ஒக்கமூன்றுகரணத்தாலுயர்நல்லோரைப்பின்செல்வன், மிக்கநன்னூலெங்கணும்
போய்விரும்பிக்கொணர்ந்துபரிசயிப்பன், றொக்கசநநமறுப்பதற்குத்துணிந்திவ்
விசாரம்படைத்தவனே, தக்கபூமியறிந்தோனுந்தருமாரியனுமற்றவனே .... *

(இ-ள்.) ஒக்கமூன்றுகரணத்தால்- ஒன்றுபடத்திரிகரணங்களினால்—உயர்நல்லோரை- மேலானசத்துக்களை—பின்செல்வன் - அநுசரிப்பான்—மிக்கநன்னூல் - மேலானஞானசாத்திரங்களை—எங்கணும்போய் - எவ்விடத்திலாவதுபோய்— விரும்பிக்கொணர்ந்து - விரும்பப்பற்றுக்கொண்டுவந்து—பரிசயிப்பன் - அப்பியாசஞ்செய்வன் —தொக்கசநநம்- கூடியிருக்கின்ற சம்சாரத்தை—அறுப்பதற்கு - கெடுப்பதற்கு—துணிந்து - நிச்சயித்து— இவ்விசாரம்படைத்தவனே - இந்தவிசாரணையைப்பெற்றவனே—தக்கபூமியறிந்தோனும் - மேலானமுதற்பூமியையறிந்தவனுகும் — மற்றவன் - (இந்நிலையன்றிச்சன்மார்க்கத்திலுள்) ளவன் — தருமாரியனும் - தருந்தமேலானவனும். எ-று. (இ-ரு-க-ம்) வைதீகவிருத்தியின்மகிழ்ச்சியும் லௌகிகவிருத்தியினிந்தையும்—பிரமார்ப்பணமாகப் பண்ணியகன்மங்களைச்செய்தலும் பாவத்துக்குப்பயப்படுதலும் போகமயக்கம்விடுதலுஞ் சாஸ்திரவிசாரமுஞ் சாதுக்கள்சங்கமு முத்திவிருப்பமுமுள்ள நிவிர்த்தனே முதற்பூமியையடைந்தவனென்பதாம் .... (௰௩)

(அ-கை.) இரண்டாம்பூமியான விசாரணையை யடைந்தபோதுள்ள விலக்கணங் கூறல்.
(கலி) இருளில்விசாரமெனுநாமத்திரண்டாம்பூமியெய்தினனுஞ், சுருதிமிருதி நல்லொ
ழுக்கந்தொடர்தாரணைநற்றியானங்கண், மருவுகருமங்களைக்கேட்பான் மாசில்விருத்திப்
பொருணிகழ்த்தும், பெருகுபுகழ்சேர்பண்டிதரிற்பெரியோர்தம்மையினிதடைந்து. *

(இ-ள்.) இருளில் - அறியாமையில்லாத—விசாரமெனுநாமத்து - விசாரணையென்கின்ற பெயரையுடைய—இரண்டாம்பூமி - இரண்டாவதுபூமியை—எய்தினனும்-அடைந்தவனுகும்—சுருதி - வேதங்களில்—மிருதி - தருமநூல்களையும்—நல்லொழுக்கம்- நல்லநடைகளையும்—தொடர்தாரணை - தொடராநின்றதாரணையையும்—நற்றியானங்கள் - நல்லதியானங்களையும்—மருவுகருமங்களை - பொருந்தாநின்ற (சற்) கிருத்தியங்களையும்— கேட்பான் - கேட்கும்பொருட்டு—மாசில் - களங்கமற்ற—விருத்திப்பொருணிகழ்த்தும் - வாக்கியார்த்தங்களைப்பிரகாசஞ்செய்யும்—பெருகுபுகழ்சேர் - மிகுந்தகீர்த்தியையுடைய—பண்டிதரில்-பண்டிதருக்குள்—பெரியோர்தம்மை - மேலானசத்துக்களை—இனிதடைந்து-இனிமையாகச்சேர்ந்து. எ-று (௰௪)

(அ-கை.) இ-து.(கலி)செறியும்பதார்த்தப்பிரிவறிந்துசெய்யுந்தவிருங்காரியங்க,ளறிவன்
செல்வமானமன்னைக் கடிபன்மமையையறிவதும்பான், மறியுமதமாச்சரியமபிமானமுலோ
பமோகமெலாம், வெறிதுபுறத்தெய்தினுஞ்சிறிதாய்விடுவன்பாம்புதோல்விடல்போல்.*

(இ-ள்.) செறியும்பதார்த்தப்பிரிவறிந்து - நிறைந்த (நித்தியாநித்திய) வஸ்துவின்விபாகத்தைத்தெரிந்து—செய்யும் - செய்கின்றகாரியங்களையும்—தவிருங்காரியங்கள் - செய்யாதகாரியங்களையும் செல்வமானமடைக்கடிபன் - செல்வமுதலியவிட்டுக்குநாயகனானவன்—மனையை—

யறிவதுபோல் - இரகசிருத்தியங்களையறிவதுபோல — அறிவன் - அறிவான் — மறியுமதம் - அழிகின்றசெருக்கும்—மாச்சரியம் - பொருமையும் - அபிமானம் - அகங்காரமும்—உலோபம் - ஆசையும்—மோகமெலாம்- மயக்கமுமாகியவனைத்தையும்—வெறிதுபுறத்தெய்தினும்- அறிவின்மையின்வசமாகவந்தாலும்—பாம்புதோல்விடல்போல் - சர்ப்பமானதுசருமத்தை விடுவதுபோல—சிறிதாய்விடுவன் - அற்பமாகநீங்குவன். எ-று. ....(௱௫)

(அ-கை.)இ-ஞ.(கவி)மதியிவ்வாறுள்ளவனூலால்வணங்குகுருவானல்லோரா, லதிகங்குய்ய
ப்பொருளனைத்தினறுதியறிவனதற்பின்னர், முதிர்பற்றின்மையெனப்பெயரா மூந்துமற்
றைப்பூமிதனைப், புதிதாமலரின்மெல்லணைபோற்பொருந்திநிற்பன்பொலிந்தவனே.... *

(இ-ள்.) மதி - அறிவை—இவ்வாறுள்ளவன் - இவ்வண்ணமுடையவன்— நூலால் - ஞானசாஸ்திரங்களினாலும்—வணங்குகுருவால் - வணங்கத்தக்கவாசாரியராலும்—நல்லோரால் - சத்துக்களாலும்— அதிகம் - அதிதமான—குய்யப்பொருளனைத்தின் - இரகசியமானசர்வார்த்தங்களினது —அறுதியறிவன் - நிச்சயத்தைபுணர்பவனும்—அதற்பின்னர் - அதன்பின்பு— பொலிந்தவன் - விளங்கினவன்—முதிர்பற்றின்மையென - முதிர்ந்தபற்றின்மையென்றுசொல்கின்ற—பெயராம் - நாமத்தையுடையதான—மூந்துமற்றைப்பூமிதனை - மேலாகிய (ஏழிந்த) மூன்ரும்பூமியை—புதிதாம் - நூதனமாகிய—மலரின்மெல்லணைபோல் -புஷ்பங்களாற்செய்தமிருதுவானவமளி (யிலடைந்திருப்பது) போல — பொருந்திநிற்பன் - சேர்ந்திருப்பான். எ-று. (இ-ங-க-ம்) இங்ஙனங்கூறிய குணங்களனைத்தோடுங் கூடி யாசிரியருபதேச வாக்கியார்த்தங்களினாலும் வேதாந்தமகாவாக்கியார்த்தங்களினாலு மாத்மஸ்வரூப நிச்சயமுண்டாவதே யிரண்டாம்பூமியை யடைந்தவனிலக்கணமென்பதாம்.......................................(௱௬)

(அ-கை.) மூன்ரும்பூமியானதனுமானசியையடைந்தபோதுள்ளவிலக்கணங்கூறல்(கவி)
உள்ளபடியே நூற்பொருளினொழுக்கந்திரமாய்க்கைக்கொண்டு,தள்ளின்முனிவரிடந்தோ
றுந்தளர்வொன்றில்லாமெய்ஞ்ஞானந், தெள்ளுகதையினொழுங்குகளாற்றீர்க்கவாளுதுகழிப்பன், பள்ளிகொளவுமிருப்பதற்கும்படர்ந்தபாறையிடமாவன்...... .... *

(இ-ள்.) உள்ளபடியே - உள்ளப்ரகாரமே—நூற்பொருளின் - சாஸ்திரார்த்தங்களின்—ஒழுக்கம் - ஆசாரத்தை—திரமாய்க்கைக்கொண்டு- நிலையாகக்கைவசமாக்கி—தள்ளில்- நீங்காத (பெருமையினையுடைய) —முனிவரிடந்தோறும்-தபசிகளிடங்களெல்லாம்—தளர்வொன்றில்லா - ஒருவாட்டமுமில்லாத—மெய்ஞ்ஞானம்-தத்துவஞானத்தை—தெள்ளுகதையின் - தெளிவாகச் (சொல்கின்ற) கதைகளைக் (கேட்கும்)—ஒழுங்குகளால்-மார்க்கங்களினால்—தீர்க்கவாளுதுகழிப்பன் - நெடியவாயுளைத்தள்ளுவான்—பள்ளிகொளவும்- சயனம்செய்வதற்கும்—இருப்பதற்கும் - வாசஞ்செய்வதற்கும்— படர்ந்தபாறை - விசாலமுள்ளபாறைக்கல்லையே—இடமாவன் - ஸ்தானமாகக்கொள்வன். எ-று .... (௱௭)

(அ-கை.) இ-ஞ. (கவி) பாயுமனமாறியநலத்தாற்பற்றுவின்பஞ்சமமாகித், தோயு
மடவிகளினுலவித் தொக்ககாலஞ் செலவிடுவ, னுயுநன் னூற்பரிசயத்தா லறங்கள்
செயலான்மானிடருக், கேயுமிந்தப்பொருளைக்கமிலங்குமுள்ளபடியாக.........*

(இ-ள்.) பாயுமனம்-தாவாநின்றமனமானது—ஆறியநலத்தால் - அடங்கியிருக்கின்ற நன்மையினால்—பற்றுவின்பம்-ஆசியாதசுகத்தினால்—சமமாகி-சமத்துவமாய்—தோயுமடவிகளினுலவி - பொருந்தியகானகங்களிற்சஞ்சரித்து—தொக்ககாலம் - நெருங்கியகாலங்களை—செலவிடுவன்- செலுத்துவன்—ஆயுநன் னூற்பரிசயத்தால் -ஆராய்கின்றஞானசாஸ்திரவற்பியாசத்தினாலும்—அறங்கள்செயலால் - புண்ணியகன்மங்களைச்செய்தலினாலும்—மானிடருக்கு-மனிதருக்கு— எயுமிந்தப்பொருளைக்கம் - பொருந்தியவிவ்வஸ்துதிருஷ்டியானது —உள்ளபடியாகவிலங்கும்-உள்ளவண்ணம்ப்ரகாசிக்கும். எ-று. (இ-உ-க-ம்.) முன்விசாரணையால்நிச்சயித்தவாத்மஸ்வரூபத்தைப் பரிசீலனஞ்செய் தகத்துறவோடுமனந்தேய்ந்து சாந்தியுற்றிருப்பதே மூன்ரும்பூமியையடைந்தவனிலக்கணமென்பதாம்.. (௱௮)

(அ-கை.) மூன்ரும்பூமியானபற்றின்மையை நான்குவிதமாகப் பகுத்துக் கூறல். (கவி)
உற்றமூன்ரும்பூமியைச்சேர்ந் துணர்ந்தோன்ருனேயனுபவிக்கும், பற்றிலாமையிருவ
கையாம் பகுத்துநாமிங்குரைசெயக்கேண், முற்றுசாமானியமொன்று முதிர்ந்தசேட்ட
மொன்ருகு, மற்றிவ்விரண்டுமோரொன்றி லிரண்டுவகையாமனுகுலத்தோய் .... *

(இ-ள்.) உற்ற- பொருந்திய— மூன்ரும்பூமியைச்சேர்ந்து - மூன்ரும்பூமியையடைந்து—உணர்ந்தோன்ருனே- அறிந்தவனே—அனுபவிக்கும்- அனுபவிக்கின்ற—பற்றிலாமை-பற்றில்லாமையானது—இருவகையாம் - இரண்டுவிதமாகும்—நாமிங்கு- யாமிவ்விடத்தில்—பகுத்துரைசெயக்கேள்-பிரித்துச்சொல்லக்கேட்பாய்—முற்றுசாமானியமொன்று-முதிர்ந்தசாமா

னியமென்பதொன்று— மூதிர்ந்தசேட்டமொன்றாகும் - முற்றினசிரேட்டமென்பதொன்றாகும்—மற்றிவ்விரண்டும்- இந்தவிரண்டும்—ஒரொன்றில்- ஒவ்வொன்றில் —மனுகுலத்தோய்-மனுகுலத்தையுடையஸ்ரீராமா—இரண்டுவகையாம் - இரண்டுவிதமாம். எ-று. (இ-ம்) சாமானியப்பற்றின்மை சேட்டப்பற்றின்மை யென்பதொவ்வொன் றிரண்டாகநான்காமென்பதாம் (௰௯)

(அ-கை.) சாமானியப்பற்றின்மையினிலக்கணங்கூறல். (கவி) பொருள்கடனிற்செய்பவனல்லேன்புசிப்போனல்லேன்றெளிவோனுங், குருவுமல்லேனெப்பற்றிற்குணமாஞ்சாமானியவிரத்திப், பருகுதுன்பமின்பமெலாம்பண்டைவினையால்வருகுமென்றே, யருள்செய்கடவுள்வசந்தானமைப்போனதலெனக்கெங்கே …………… *

(இ.ள்.) பொருள்கடனில்- வஸ்துக்களிடத்தில்—செய்பவனல்லேன்-நான்கர்த்தாவுமல்ல—புசிப்போனல்லேன்- நான்போக்த்தாவுமல்ல—தெளிவோனும்- தெளிபவனாகியசீஷனும்—குருவும்- (தெரிவிக்கின்ற) வாசிரியரும்—அல்லேனென-நானல்லேனென்று—(சொல்லிய)பற்றிற்குணமாம்- சங்கமற்றகுணமே—சாமானியவிரத்தி- சாமானியவசங்கமாம்— பருகுதுன்பமின்பமெலாம்- புசிக்கப்பட்ட துக்கசுகங்களனைத்தும்—பண்டைவினையால்வரும்-பழையநியதியானுண்டாகும்— அன்றே- அப்பொழுதே—அருள்செய்-கிருபைசெய்யாநின்ற — கடவுள்வசந்தானும்- ஈஸ்வராதீனமாம்—அமைப்போனதல்- கருத்தாவாகுவது—எனக்கெங்கு - எனக்கேது. எ-று. (இ-ம்.) ஒன்றுநாமல்லவென்னும்பற்றின்மையேசாமானியப்பற்றின்மை யென்பதாம் …………………………………………………………… (௨௰)

(அ-கை.) சாமானியத்திற்சாமானியப்பற்றின்மையி னிலக்கணங்கூறல். (கவி) கொல்வதானபெருநோயாங் கொடியபோகப்பரப்பெல்லாஞ், செல்வமெல்லாமாபத்துக்கிடமாஞ்செத்தல்பிறப்பதற்கா, மொல்வதான நற்புந்திக் குள்ளகவலைநெடுநோயாஞ், சொல்வனாலமெலாங்காலன் றொலைக்கமுயலும்விடாதென்றே …………… *

(இ-ள்.) கொடிய - பொல்லாத — போகப்பரப்பெல்லாம் - போகமிகுதிகளியாவும்—கொல்வதான-கொல்லுவதாகிய—பெருநோயாம்-பெருவியாதியாகும்—செல்வமெல்லாம்-சம்பத்துக்களனைத்தும்—ஆபத்துக்கிடமாம் - ஆபத்துக்குஸ்தானமாகும்—செத்தல்-இறத்தல்—பிறப்பதற்காம்- செனிப்பதற்கேயாகும்—ஒல்வதானநற்புந்திக்கு - குழைதலாகியநல்லபுத்திக்கு—உள்ளகவலை-உண்டானதுன்பமே—நெடுநோயாம்- நீண்டவியாதியாம்—சொல்வனாலமெலாங்காலன்றொலைக்க - கூறுஞ்சகங்களனைத்தையுமியமன்கெடுக்க—விடாதுமுயலும்-விடாமன்முயற்சிப்பன். எ-று …………………………………………………………… (௨௧)

(அ-கை.) இ-து. (கவி) பண்டமனைத்தின்பற்றற்ற பகர்பாவனையுள்ளுறவுண்டாங்,கொண்டவுயர்வாக்கியப்பொருளைக்குறிப்பாலழுந்துமனத்தோர்க்குக்; கண்டவிதுசாமானியமாங்கவர்பற்றில்லாவிந்நெறியா, லண்டுபெரியோர்கூட்டரவாலறிவிலாதோர் நீக்கத்தால்…. *

(இ-ள்.) பண்டமனைத்தின் - வஸ்துக்களிலெல்லாம்— பற்றற்ற - இச்சையற்ற—பகர்பாவனை- சொல்லப்பட்டபாவனையானது—உள்ளுறவுண்டாம்- உள்ளத்தின்கண்பொருந்தவுண்டாகும்—கொண்டவுயர்வாக்கியப்பொருளை-கிரகித்தமகாவாக்கியார்த்தத்தை—குறிப்பாலழுந்தும்- உரிமையாகவழுந்துகின்ற—மனத்தோர்க்கு- மனதையுடையவர்களுக்கு—கண்டவிதுசாமானியமாம்- காணப்பெற்றவிதுவேசாமானியபற்றின்மையாம்— கவர்பற்றில்லா - கிரகிக்கின்றவாசையில்லாத—இந்நெறியால் - இவ்வழியினாலும்—அண்டுபெரியோர்கூட்டரவால்-அடையத்தக்கசத்துக்களினது சங்கத்தினாலும்— அறிவிலாதோர் நீக்கத்தால் - மூடர்களுடையநிவிர்த்தியினாலும். எ-று. (இ-௨-௧-ம்) கருமத்தினாலு மீஸ்வரனாலும் வருகின்றசுகதுக்கங்களி னமக்குவிருப்புவெறுப்பென்ன வென்றவைகளிற் பற்றற்றவனாய் முன்விசாரித்த வேதாந்த மகாவாக்கியார்த்தநிச்சயத்தழுந்துவதே சாமானியத்திற் சாமானியப்பற்றின்மையென்பதாம்……… (௨௨)

(அ-கை.) சேட்டப்பற்றின்மையி னிலக்கணங்கூறல். (கவி) தானுமுணர்வினுட்டெளிவாற் றக்கபுருடவருத்தத்தா, லானநன்னூற்பரிசயத்தாலங்கைநெல்லிதோன்றுதல்போ, லூனார்பிறவிப்பெருங்கடலினுயர்காரணமாம்பெரியகனா, தேனாலரங்கன்மணிமார்பா தெளியக்காண்கின்றனதிடமாய்…. …………………… *

(இ-ள்.) தானுமுணர்வின் - சுயஞ்ஞைதன்யத்தை—உட்டெளிவால்- அகத்திற்றெளிந்ததெளிவினாலும்—தக்கபுருடவருத்தத்தால் - மேலாகியபுருஷப்ரயத்தினத்தினாலும்— ஆனநன்னூல்- நீங்காதஞானசாஸ்திரத்தின்—பரிசயத்தால் - அப்பியாசத்தினாலும்— அங்கைநெல்லி-கரதலாமலகம்—தோன்றுதல்போல்-தோற்றப்படுவதுபோல—ஊனார்பிறவிப்பெருங்கடலில்-மாமிசநிறைந்தசநநமென்னும்மகோததியினுடைய—உயர்காரணமாம்பெரியகனா-மேலானகாரணமாயிருக்கின்றமகாதிரமானது—தேனாலலங்கல்-மதுக்கணிறைந்தபுஷ்பமாலையும்—மணி-

இரத்தின(மாலையும்விளங்குகின்ற)—மார்பா- மார்பையுடையஸ்ரீராமா—திடமாம்- உறுதியாக —தெரியக்காண்கின்ற - ஸ்புடமாய்ப்பார்க்கின்றன. எ-று .... (உரு)

(அ-கை.) இ-து. (கவி) செய்வானானன்றீசன்றான் செய்வானலதென்பழவினைநா, னிவ்வா
றானசொற்பொருளினெண்ணமெல்லாநிச்சயமாய்க், கவ்வாததிதூரத்தகற்றிக்கலந்தசாந்
தமோனநிலை,பெய்வான்கருணைமுகிலேமுன் பேசுசேட்டப்பற்றின்மை ....*

(இ-ள்.) நான்-யான்—செய்வானன்று- கருத்தாவல்ல—ஈசன்றான்செய்வான்-ஈசனேகருத்தா —அலது-அல்லாமல்—என்பழவினைதான்- என்னூழே(கருத்தா)வென்கின்ற— இவ்வாறு- இவ்வண்ணமாகிய—சொற்பொருளின் - வசனார்த்தங்களின்—எண்ணமெல்லாம்- சங்கற்பங்களைத்தும்—நிச்சயமாய் - உண்மையாக—கவ்வாததிதூரத்தகற்றி- பற்றாமல்வெகுதூரத்திற்றள்ளி—கலந்தசாந்தம்- சேர்ந்தசாந்தமாகிய—மோனநிலை- மௌனநிச்சயம்—பெய்-(அருளைப்)பொழிகின்ற—வான்கருணைமுகிலே - மேலானகிருபாமேகமே — முன்பேசுசேட்டப்பற்றின்மை- முன்சொல்லியசேட்டப்பற்றின்மை. எ-று. (இ-உ-க-ம்) முன்னாத்ம நிச்சயத்திலழுந்தினபடியேயஃதை யனுபவமாய்த் தரிசித்தற்சேட்டப் பற்றின்மை யென்பதாம் .... (உச)

(அ-கை.) சேட்டத்திற்சேட்டப்பற்றின்மையி னிலக்கணங்கூறல். (கவி) அகத்திற்பு
றத்தின்மேல்கீழி லாசைகளிலாகாயத்திற், சகத்திற்பொருளிற்பொருளல்லா தவற்றி
ற்சடத்திற்றனியறிவிற், பகுத்துக்கருதாதுபசாந்தம் பயின்றுநினைவற்றொளியற்று,
மிகுத்துப்பிறப்பற்றடிமுடிவின் மேன்மைசேட்டப்பற்றின்மை ....*

(இ-ள்.) அகத்திற்புறத்தில்- உள்ளிலும்புறம்பிலும்—மேல்கீழில்-மேலிலுங்கீழிலும்—ஆசைகளில்- திசைகளிலும்—ஆகாயத்தில்—விண்ணிலும்—சகத்தில்- உலகத்திலுமுள்ள—பொருளில்- வஸ்துக்களிலும்—பொருளல்லாதவற்றில் - வஸ்துக்களல்லாதவற்றிலும்—சடத்திற்றனியறிவில்- சடசித்துக்களிலும்—பகுத்துக்கருதாது-பிரித்துநினையாமல்—உபசாந்தம்பயின்று- உபசாந்தத்திற்கூடி—நினைவற்று - எண்ணமிறந்து—ஒளியற்று- ப்ரகாசமிறந்து—மிகுந்தபிறப்பற்று- அளவற்றசநநமழிந்து—அடிமுடிவில் - ஆதியந்தமில்லாததே—மேன்மை-மேலாகிய—சேட்டப்பற்றின்மை- சேட்டப்பற்றின்மையாம். எ-று. (இ-ம்) உபசாந்ததிருஷ்டியுள்ளவனாய்முன்றரிசனமான வாத்மாவின் மனங்கரைந்திருப்பதே சேட்டத்திற் சேட்டப்பற்றின்மை யென்பதாம் .... (உரு)

(அ-கை.) சேட்டப்பற்றினமையே மூன்றும்பூமியின் பலமாமெனல். (கவி) மகிழ்
வாம்வாசமதுரமுடன் வருநற்றொழிலாந்தளிர்மேவித், தகவாமனத்தாணுனிசேர்ந்
துதடையாமுள்ளூநிறைந்தறிவா,மிகுமோர்கமலமடைந்துட்சேர்விவேகவிரவியா
ன்மலர்ந்து, பகர்மூன்றுமிப்பூமிதனைப் பலமாய்ப்பலிக்கும்பற்றின்மை ....*

(இ-ள்.) மகிழ்வாம் - களிப்பாகிய—வாசமதுரமுடன்வரும்- வாசனையுந்தித்திப்போடும்வராநின்ற—நற்றொழிலாம்-சற்கிருத்தியமான—தளிர்மேவி- துளிரையடைந்து—தகவாமனத்தாள்- தெளிவுள்ளமனமென்னுந்தண்டினது—நுனிசேர்ந்து-முனையையடைந்து—தடையாமுள்ளூநிறைந்து—விக்கினமாகின்றமுட்கணிறைந்திருக்கின்ற—அறிவாம்-ஞானமாகிய—மிகுமோர்கமலம்-மேலானவொப்பற்றதாமரையரும்பானது--அடைந்துட்சேர்-பொருந்தவுள்ளத்தின்கண்சார்ந்திருக்கின்ற—விவேகவிரவியால்-விவேகமென்னுஞ்சூரியனால்—மலர்ந்து-விகசிதமாய்—பகர்மூன்றும்பூமிதனை-சொல்லப்பட்டவித்தனுமாநசியென்கின்றமூன்றும்பூமியை—பற்றின்மை-சேட்டப்பற்றின்மையானது--பலமாய்ப்பலிக்கும்-ப்ரயோசனமாகக்கொடுக்கும்

(அ-கை.) முதற்பூமியின்விசேடந்தோன்றக்கூறுதல்,(கவி)மோகமில்லாதவர்செ
றிவான் முதுநல்லறத்தின்சமுகத்தாற், காகதாலீயம்போலக்கருத்திலுதிக்குமுதலா
ன, யோகபூமியுதித்தலுமே யுள்ளேயமுதமுளையொப்பா, மேகவிவேகநிர்பாச்சியி
துகாத்தளிக்கப்படுமுயன்றே ....*

(இ-ள்.) மோகமில்லாதவர் - மயக்கமற்றசத்துக்களது—செறிவால் - சங்கத்தினாலும்—முதுநல்லறத்தின் - முதிர்ந்தநிட்காமதருமத்தின்—சமுகத்தால்-சங்கத்தினாலும்—காகதாலீயம்போல-காகதாலியநியாயத்தைப்போல—முதலானயோகபூமி-சுபேச்சை(யென்னு)முதன்மையாகியஞானபூமியானது—கருத்திலுதிக்கும்- மனதிலுண்டாகும்—உள்ளேயமுதமுளையொப்பாம்- அகத்திலமுதாங்குரத்துக்கிணையாக—உதித்தலும்-உதயமாகவும்—ஏகவிவேகம்-ஒன்றானவிவேகமாகிய—நிர்ப்பாச்சி- சலத்தைப்பாச்சி—முயன்று- முயற்சிசெய்து—இதுகாத்தளிக்கப்படும்-இதைக்காத்திரட்சிக்கப்படும். எ-று .... (உஎ)

(அ-கை.) இ-து. (கவி) விடுதியாலேதழைக்குமிது விசாரத்தாலவ்விடுதிதனை, வடுவிலுழவர்தென்முளைபோல் வருந்திவளர்க்கநாடோறு, மொடிவின்மறுபூமிக்கிந்த வொன்றேசுநபூமியென, முடிவில்வெளியாமதிலிரண்டா மூன்றாம்பூமிதனைப்பெறலாம் .... *

(இ-ள்.) விடுதியால்- பற்றின்மையினுல்—இது தழைக்கும்- இந்த(முதற்பூமியானது)உண்டாகும்—விசாரத்தால்- விசாரணையினுல் —அவ்விடுதிதனை - அப்பற்றின்மையை— வடுவில்- களங்கமற்ற—உழவர்தென்முளைபோல்- பள்ளர்கடங்கள்பூமியி)னெல்முளையை(வளர்ப்பது)போல—நாடோறும் - தினந்தோறும்— வருந்திவளர்க்க - வருத்தப்பட்டுவளரச்செய்ய — ஒடிவில்-கெடுதலில்லாத—மறுபூமிக்கு - அடுத்தபூமிகளுக்கு—இந்தவொன்றே- இம்(முதற்பூமியான)தொன்றுமே—சுநபூமியென - உண்டாகும்பூமியாக—முடிவில் - அந்தத்தில்—வெளியாம்-வெளிப்படும்—அதில்- அதினின்றும்—இரண்டாம்-இரண்டாம்(பூமியாகியவிசாரணையையும்)—மூன்றாம்பூமிதனை - (தனுமானசியாகிய)மூன்றாம்பூமியையும்— பெறலாம் - அடையலாகும். எ-று. (இ-உ-க-ம்) சாதுசங்கதிஷ்காமபதம் வித்தாகவுண்டான சுபேச்சையென்னுமாத்மநிருரத்தை விவேகவிசாரமான சலத்தைப்பூரித்து முயற்சியாற் காக்கின் பற்றின்மையானதனுமானசியினுற் றழைக்குமாதலி னம்முதற்பூமியே காரணமாமென்பதாம் .... (௨௮)

(அ-கை.) ஞானபூமியினிலக்கணங்கேட்ட விராமன்மூடர்முதலியோர்க் கிம்மூன்றுபூமியுண்டாதலு மிந்நிறந்தவன் கதியுமியாதென வினவுதல். (கவி) சேட்டமெனச்சொல்பற்றின்மை சேர்ந்தான்மூன்றாம்பூமியதா, மீட்டுபுருடன்சங்கற்பமெண்ணமொன்றுமில்லென்னக், கேட்டகுமாரனுனாசெய்வான் கீழாங்குலத்தோனுணர்வில்லோன், பூட்டுதொழிலோன்பொல்லாதோன் புகன்றயோகமில்லாதோன் .... *

(இ-ள்.) சேட்டமெனச்சொல்- சேட்டமென்றுசொல்லுகின்ற—பற்றின்மைசேர்ந்தால்-பற்றின்மையையடைந்தால்—மூன்றாம்பூமியதாம் - (அதுவே)மூன்றாம்பூமியாகும்— ஈட்டுபுருடன்- இதைச்சம்பாதிக்கின்றபுருஷன் —சங்கற்பவெண்ணமென்றும் - ஒருசங்கற்பநினைவும்—இல்லென்ன- இல்லாதவனென்று(வசிஷ்டமுனி)சொல்ல —கேட்டகுமாரனுனாசெய்வான்-கேள்வியுற்றஸ்ரீராமனைவர்சொல்லுவார்— கீழாங்குலத்தோன் - இழிவானகுலத்தையுடையவனும்—உணர்வில்லோன்- அறிவில்லாதவனும்— பூட்டுதொழிலோன் - பந்தத்தொழிலையுடையவனும்—பொல்லாதோன் - பொல்லாதவனும் — புகன்றயோகமில்லாதோன் - சொல்லப்பட்டஞானமில்லாதவனும். எ - று ....(௨௯)

(அ-கை.) இ-து. (கவி) அவனுக்கெங்ஙனேயுண்டா மறைந்தநன்மையிதுநிற்க,விவணமுயர்பூமியிலொன்றையிரண்டைமூன்றாம்வேறொன்றைக், கவர்வுற்றடைந்தோனுயிர்மாய்ந்தாற் கலந்துமேவுங்கதியேது, தவறிற்பெரியோயுரையென்ன சான்றவசிட்டனுனாசெய்வான் .... *

(இ-ள்.) அவனுக்கு- அக்குணமுள்ளவர்களுக்கு—அறைந்தநன்மை - சொல்லப்பட்டமுத்தியானது—எங்ஙனேயுண்டாம் - எப்படியுண்டாகும்—இதுநிற்க-இதுவிருக்க—இவணம்-இந்தப்ரகாரம்—உயர்பூமியில் - மேலானஞானபூமிகளில்—ஒன்றை- முதற்பூமியையாவது—இரண்டை - இரண்டாம்பூமியையாவது—மூன்றாம்வேறொன்றை - மற்றமூன்றாம்பூமியையாவது—கவர்வுற்றடைந்தோன்- வருத்தப்பட்டடைந்தவனது—உயிர்மாய்ந்தால்-சீவன்பிரிந்தால்—கலந்துமேவும் - சேர்ந்தடைகின்ற—கதியேது - கதியென்ன—தவறிற்பெரியோய்- குற்றமற்றமகாமுனே—உரையென்ன - சொல்லுமென்றுகேட்க—சான்ற - அறிஞராகிய—வசிட்டனுனாசெய்வான்- வசிஷ்டமுனிசொல்லுவார். எ-று.(இ-உ-க-ம்) இராமன்வினவுக் குத்தரஞ்சொல்லத்தொடங்கினதாம் ....(௩௰)

(அ-கை.) முதல்வினுவினுக்கிரண்டுவிதமாகவுத்தரங்கூறல். (கவி) மூடனுகிப்பலகுற்றமூடுமவனுக்கநேகமென, நீடிபிறப்பாமுதற்பூமிநேருமட்டும்பிறப்படகலா,நாடுமிதுவன்றியிற் காகதாலியம்போலவெநெறி, கூடுமென்னுமதனுலே குறைவினாசையதுபிறக்கும்.. *

(இ-ள்.) மூடனுகி- மூடனுய்—பலகுற்றம்-அநேகம்பிழைகள் —மூடுமவனுக்கு-சூழுகின்றவனுக்கு—அநேகமென - பலவிதமாகச்சொல்லப்பட்ட—நீடிபிறப்பாம் - அநேகசநநமுண்டாகும்—முதற்பூமி- முதன்மையானபூமியானது—நேருமட்டும் - கிடைக்குமட்டுந்தம்—

பிறப்பகலா - சநநநீங்காது—நாடுமிதுவன்றியில் - தேடுகின்றவிதுவல்லாமல்—காகதாலீயம்போல்- காகதாலியநியாயத்தைப்போல— நல்லநெறிகூடுமெனினும்- சன்மார்க்கங்கூடினாலும்—அதனால் - அதனால்—குறைவிலிராசையது - குறைவில்லாதநிராசையானது — பிறக்கும்- உண்டாகும். எ-று .... (௫௧)

(அ-கை.) இ-து. (கவி) அன்றிநல்லோர்கூட்டரவாலடுத்தவிராகமதுபிறக்கு, மொன்றுநிராசையுறுபோதே யோகபூமியுறற்றப்பா, தின்றுமதனாற்பிறப்பகலுந் தொகுநூற்பொருளின்சுருக்கமிதா, நின்றயோகபூமியுட னிதனமடைந்தோர்நெறிகேளாய் ....*

(இ-ள்.) அன்றி - அல்லாமல்—நல்லோர்கூட்டர்வால் - சாதுக்கள்சங்கத்தினால்— அடுத்தவிராகமது - சேர்ந்தநிராசையானது—பிறக்கும் - உண்டாகும்—ஒன்றுநிராசை- பொருந்தாநின்றநிராசையானது—உறுபோதே - அடைந்தபொழுதே—யோகபூமி - ஞானபூமியானது—உறல்தப்பா - அடைதல்தப்பாது—தின்றுமதனால் - நிறைந்தவந்த (ஞானபூமியி) னால்—பிறப்பகலும் - சநநநீங்கும்—தொகுநூற்பொருளின் - தொகுத்தசாஸ்திரார்த்தத்தின்—சுருக்கமிதாம் - முடிவிதுவாகும்— நின்றயோகபூமியுடன் - (இவ) னிருந்தஞானபூமியோடும்—நிதனமடைந்தோர்-மரணமடைந்தவர்களின்—நெறிகேளாய்-மார்க்கத்தைக்கேட்பாய். எ-று. (இ-உ-க-ம்) முதற்பூமிகிடையாத மூடனுக்குப் பவநீங்காதென்று மவனுக்குத் தெய்வீகமாய்ச் சற்கிருத்தியமுண்டா யதனா னிராசையுண்டா யதனாற் சாதுசங்கமுண்டா யதனான் விராகம்பெறி னதனா லிப்பூமி தவறுமல் வருமதனாற் பவநீங்குமென்பது சாஸ்திரார்த்த சங்கிரகமென்றுந் தெரிவித்ததாம் .... (௫௨)

(அ-கை.) இரண்டாம்வினாவுக் குத்தரங்கூறல். (கவி) யோகபூமியம்சம்விடாதுறலாற்பழையதீவினைபோ, மாகவிமானமதற்பின்பு வந்துகொடுபோய்வானவர்வாழ், நாகமுதலாமுயர்பதியினன்மேருவின்சூழ்பொழின்முழையிற், போகமடவாரொடுங்கூடிப்புணர்ந்துசிந்தைகளிகூர்வன் ....*

(இ-ள்.) யோகபூமி - (ஞானபூமி) மூன்றின்— அம்சம்விடாதுறலால் - அம்சம்விடாமலடைதலினால்—பழையதீவினைபோம் - முன்னுள்ளதீவினைகெடும் — அதற்பின்பு - அதன்பின்பு—மாகவிமானம்வந்து-தெய்வவிமானத்தைக்கொண்டுவந்து—கொடுபோய்- (இவனைக்) கொண்டுபோய்—வானவர்வாழ் - தேவர்கள்வாழாநின்ற — நாகமுதலாம் - தெய்வலோகமுதலாகிய—உயர்பதியின்- மேலானவிடங்களிலும்—நன்மேருவின்சூழ்பொழின்முழையில்-நல்லமேருவிலுஞ்சூழ்ந்தசோலைகளிலுங்குகைகளிலும்— போகமடவாரொடும் - போகமாதர்களுடன்—கூடிப்புணர்ந்துசிந்தைகளிகூர்வன் - சேர்ந்துமனங்களிப்பன். எ-று .... (௫௩)

(அ-கை.) இ-து. (கவி) அருந்துபோகமாய்தலினாலளவில்பண்டையிருவினையும், பொருந்தமாயுமப்போதுபுவியிற்பிறப்பர்யோகிகளாய், திருந்துசெல்வங்குணஞ்சுத்தஞ்சிறந்தநல்லோர்மனைப்பிறந்து, வருந்திமுன்னம்பழகுதலால்வழுவாயோகநெறிநிற்பர்..... *

(இ-ள்.) அருந்துபோகமாய்தலினால்-புசிக்கப்பட்டபோகநசிப்பதினால்—அளவில் - அளவில்லாத—பண்டையிருவினையும் - பழையவிரண்டுவினைகளும்— பொருந்தமாயும் - ஒருங்கேகெடும்—அப்போது - அப்பொழுதே—யோகிகளாய் - ஞானிகளாய்—புவியிற்பிறப்பர்- பூமியிற்செனிப்பார்கள்—திருந்துசெல்வம் - திருத்தமானசம்பத்தும்— குணம் - சற்குணமும்—சுத்தம் - பரிசுத்தமும்—சிறந்த - சிறப்புற்றிருக்கின்ற—நல்லோர் - சத்துக்களினது— மனைப்பிறந்து - வீட்டிற்செனித்து—முன்னம்வருந்தி - முன்புவருத்தப்பட்டு—பழகுதலால்- அற்பியாசஞ்செய்தலினால்--வழுவாயோகநெறிநிற்பர்-தவறுமன்ஞானமார்க்கத்திலிருப்பார்.எ-று (இ-உ-க-ம்) மூன்மூன்று பூமியினற்பியாசத்தினுள் ளெங்ஙனமரித்தான்மீள்வுமுறித்தவ்விட்ட குறையானவங்ஙனநின்றற்பியாசித்து முத்தியையடைவனென்பதாம் .... (௫௪)

(அ-கை.) ஞானபூமியேழையு மஞ்சவத்தையாகச்சொல்லத்தொடங்கி யிம்மூன்று பூமி யற்பியாசத்திற் சகனுசாமானியமாகத் தோற்றுமாதலாற் சாக்கிராவவத்தையெனவு மஃதையடைந்தவனிலக்கணமுங்கூறுதல். (கவி) விதமாஞ்சகத்தைச்சாக்கிரத்தின்மிகப்போதந்தீர்புந்தியினாற், பொதுவாய்நோக்குமதனாலிப்பூமிமூன்றுஞ்சாக்கிரமா, மதுவேதனிக்கேவலயோகிக்காரியப்பேர்பெறுதிறமா, மிதனாலிவனேயுய்ந்தவனென்றேத்தத்தோன்றுமறிவிலர்க்கும்.................................*

(இ-ள்.) விகாரஞ்சகத்தை - நாநாவிதமாயுள்ளவுலகத்தை—சாக்கிரத்தில் - நனவில்—மிகப்போதத்திர் - மிகவும்புத்தியில்லாத—புத்தியினுல் - புத்தியினுல்— பொதுவாய்நோக்குமதனுல்—சாதாரணமாகப்பார்க்கின்றவர்களுல்—இப்பூமிமூன்றும் - இந்தமூன்றுபூமியும்—சாக்கிரமாம் - நனவேயாகும்—அதுவே - அந்தப்பூமியே—தனிக்கேவலம்- தனிக்கேவலமாகி—யோகிக்கு - ஞானிக்கு—ஆரியப்பேர்பெறும் - ஆசாரியனென்னுநாமமுண்டாகும் — திறமாயிதனுல் - காரணமானவிந்த (வாசாரியநாமத்தி) னுல் — இவனுய்ந்தவனென்று - இவன் மோக்ஷமடைந்தவனென்று—அறிவிலர்க்கும் - அஞ்ஞானிகளுக்கும் — எத்தத்தோன்றும்- (மோக்ஷவிச்சையுண்டாகி) த்தோத்திரஞ்செய்யத்தோற்றும். எ-று........ .... (௫௫)

(அ-கை.) இ - து. (கவி) செயலினுரியமிகச்செய்வோன் செய்யத்தகாதசெய்யாதோ, னியல்பினெழுக்கத்தனினிற்போனியாவனவனேயாரியனு, முயலுமொழுக்கநூற்சித்தமுந்துநிலைவிகாரம், புயலினிறத்தோயுள்ளபடிபொருந்துமவனேயாரியனும்........ *

(இ-ள்.) செயலினுரிய - செய்வதற்குரித்தான (தொழிலை)—மிகச்செய்வோன் - மிகவுஞ்செய்பவன்—செய்யத்தகாத - செய்யத்தகாத (காரியங்களை)—செய்யாதோன் - செய்யாதவன்—இயல்பினெழுக்கந்தனில் - இயல்பினையுடையமார்க்கத்தில்—நிற்போனியாவன் - இருப்பவனெவனே—அவனேயாரியனும்- அவனேயுயர்ந்தோனுகும்—முயலுமொழுக்கம்-முயற்சிக்கின்றவாசாரத்திலும்—நூற்சித்தம்-சாஸ்திரவபிப்ராயத்திலும்—முந்து-முதன்மையான—நிலைவிகாரம்-நிச்சயவிகாரத்திலும்—புயலினிறத்தோய்-மேகவண்ணனுன ஸ்ரீராமா—உள்ளபடி-உள்ளப்ரகாரம்—பொருந்துமவனேயாரியனும்- அமையுமவனேயுயர்ந்தவனுகும். எ-று:

(அ-கை.) மூன்றுபூமியினுதிக்கும்பயனைக்கூறுதல். (கவி) முதலாமியோகபூமியிலேமுளைக்குமிரண்டாவதின்மலருந், தனையுமூன்றுவதிற்பலிக்குந் தனியாரியனுந்திறமியோகி, யிதனிலிறந்தானெடுங்காலமிருந்துசுத்தசங்கற்பத்துதவுபோகங்களையருந்தியோகியாய்மீண்டுற்பவிப்பான் ....*

(இ-ள்.) முதலாமியோகபூமியில் - முதலானஞானபூமியில்—முளைக்கும் - உண்டாகும்—இரண்டாவதின்மலரும் - இரண்டாம்பூமியில்விகசிதமாகும்— தனைய மூன்றுவதில் - நெருங்கியமூன்றும்பூமியில்—தனியாரியனும் - ஒப்பற்றவாசிரியனுன—திறம்பலிக்கும்-தன்மைபலிக்கும்—இயோகி - ஞானியானவன்—இதனிலிறந்தால்-இந்த (ப்பூமிகளினிற்கும்போதின்) மரித்தால்—நெடுங்காலமிருந்து - அநேககாலஞ் (சுவர்க்கத்தி) லிருந்து— சுத்தசங்கற்பத்து-சுத்தசங்கற்பத்தினுல்—உதவுபோகங்களையருந்தி - கொடாநின்றபோகங்களைப்புசித்து—யோகியாய்மீண்டுற்பவிப்பன் - ஞானியாய்திரும்பச்செனிப்பன். எ-று .... (௫௭)

(அ-கை.) மூன்றுபூமியினற்பியாசத்தாலஞ்ஞானநீங்கிஞானமுதிக்குமெனல் (கவி) மூன்றுபூமிப்பரிசயத்தால்மூடத்தன்மையிறந்துழியே, யான்றஞானேதயமுண்டாயாதியந்தமறவிரிந்து, பூன்றமதியினுதயம்போற்பொலியுமனத்திற்போதமுற, வூன்றுயோகத்துடன்சேர்ந்தவுள்ளமுடையயோகிக்கே............ .... *

(இ-ள்.) மூன்றுபூமிப்பரிசயத்தால் - மூன்றுபூமியினற்பியாசத்தினுல்— மூடத்தன்மையிறந்துழி - அறிவின்மையானதிறந்தமாத்திரத்தில்—ஆன்றஞானேதயமுண்டாய்- மாக்ஷிமையானஞானமுதித்து —ஆதியந்தமறவிரிந்து - ஆதியந்தமில்லாமல்வியாபகமாய் — பூன்றமதியினுதயம்போல் - பூர்ணசந்திரோதயம்போல— மனத்தில் - மனதில்—போதமுற - ஞானமடைய —ஊன்றுயோகத்துடன் - திரமாகியஞானத்தோடும்—சேர்ந்தவுள்ளமுடைய- சேர்ந்தமனதையுடைய—யோகிக்கு - ஞானிகளுக்கு—பொலியும்- விளங்கும். எ-று (இ-ச-க-ம்) இம்மூன்றுபூமியினவத்தையுமதையடைந்தவன்பிறமுமதனுன்ஞானமுதிப்பதுங் கூறியதாம்

(அ-கை.) நான்காவதானசத்துவாபத்திசொற்பனவத்தையெனல் (கவி) சமமதாகச்சொற்பனம்போற்சகத்திலனைத்துநோக்கிடுவ, ரமரநாலாம்பூமிதனையடைந்தோர்முதற்பூமிகண்மூன்றுங், குமரனேசாக்கிரமாகுங்கூறுநாலாவதுகனவாம், விமலசித்தஞ்சரற்காலமேகசாலம்போலிறக்கும் .... *

(இ-ள்.) நாலாம்பூமிதனை - நான்காவதுபூமியை—அடைந்தோர்- அடைந்தவர்கள்—சமமதாக - சமத்துவமாக—சொற்பனம்போல் - கனவைப்போல—சகத்திலனைத்தும் - உலக

த்தின்கண்சகலத்தையும் — அமரநோக்கிடுவர் - அமரப்பார்ப்பார்கள் -- மூதற்பூமிகண்மூன்றும் - மூதன்மையானமூன்றுபூமிகளும் — குமரனே - ஸ்ரீராமா — சாக்கிரமாகும் - சாக்கிரவவத்தையாம் — கூறுநாலாவதுகனவாம் - சொல்லப்பட்டநான்காம்பூமியானது சொற்பனவவத்தையாகும் — விமலசித்தம் - நின்மலமனமானது — சரற்காலம் - சரற்காலத்திலுண்டான — மேகசாலம்போல் - மூகிற்கூட்டங்களைப்போல — இறக்கும் - நசிக்கும். எ - று. (இ - ம்) மூன்றுமூன்றுபூமியினற்பியாசத்தினுன் ஞானமூதயமாயதனுற் சகஞ்சொற்பனம்போலத் தோற்றுதலினிப் பூமி சொற்பனவவத்தையென்பதாம் .... (௩௯)

(அ-கை.) ஐந்தாவதானவசம்சத்திசுழுத்தியவத்தையெனல். (கவி) சிறக்குஞ்சற்பாவந்தானே சேடமாகநின்றிடுவர், பறக்குஞ்சித்தமிறத்தலினுற் படர்ந்தவிகற்பமேலாந்தோன்று, வுறக்குஞ்சுழுத்திப்பதமென்ன வுரைக்குமைந்தாம்பூமியிற்போய், நிறக்கும்விசேடமனைத்துமற நிற்பனொன்றுநிலைமட்டில் .... *

(இ-ள்.) சிறக்குஞ்சற்பாவந்தான் - விசேஷமானசற்பாவமே — சேடமாகநின்றிடுவர் - மிஞ்சினதென்றிருப்பார்கள் — பறக்குஞ்சித்தம் - வேகமுள்ளமனமானது — இறத்தலினுல் - மரித்ததினுல் — படர்ந்தவிகற்பமெலாந்தோன்று - விரிந்தவிகற்பங்களனைத்துமுண்டாகாது — உறக்கும் - நித்திரைசெய்யும் — சுழுத்திப்பதமென்ன - சுழுத்தியவத்தையென்று — உரைக்கும் - சொல்லப்பட்ட — ஐந்தாம்பூமியிற்போய் - ஐந்தாம்பூமியிற்சென்று — நிறக்கும் - குணமான — விசேடமனைத்துமற - விசேஷங்களெல்லாங்கெடும்படி — ஒன்றுநிலைமட்டில் - அத்துவிதநிச்சயமாத்திரத்தில் — நிற்பன் - இருப்பன். எ-று .... (௪௰)

(அ-கை.) இ-து. (கவி) இருமையென்னுமிருள்போயுள் ளெறியாநின்றபேருணர்வோ, னருமையானசுழுத்திநிலை யாகிநிற்பனனவரதம், பொருவிலுண்ணேக்குடனிற்பன் புறத்திற்றொழிலிற்புரிந்தேயு, மொருமையுபசாந்தத்தாலேயுறக்கமிகுந்தோன்போற்றெரிவன்.

(இ-ள்.) இருமையென்னுமிருள்போய் - துவிதமென்கின்றவந்தகாரமானதுநீங்கி — உள்ளெறியாநின்ற - உள்ளத்தின்கண்ப்ரகாசிக்கின்ற — பேருணர்வோன் - பூரணஞானமுடையவன் — அருமையானசுழுத்திநிலையாகி - அருமையாகியசுழுத்திநிலையையுடையவனுய் — அனவரதநிற்பன் - எப்பொழுதுமிருப்பன் — பொருவில் - ஒப்பில்லாத — உண்ணேக்குடனிற்பன் - அந்தர்முகத்திலிருப்பன் — புறத்தில் - பகிர்முகத்தில் — தொழிலிற்புரிந்தேயும் - கிரியைகளைச்செய்தாலும் — ஒருமையுபசாந்தத்தால் - ஏகமானவுபசாந்தத்தினுல் — உறக்கமிகுத்தோன்போல் - நித்திரையதிகரித்தவனைப்போல — தெரிவன் - காணப்படுவன். எ-று. (இ-உ-க-ம்) மூன்றுபூமியினுதித்த ஞானத்தினுன் மனேநாசமாய்ச் சுழுத்தியவத்தையைப்போலச் சுகமாகச்சகந் தோற்றுதலிற்சுழுத்தியவத்தையென்பதாம் .... (௪௧)

(அ-கை.) ஆறும்பூமியானபதார்த்தாபாவனை துரியாவத்தையெனல். (கவி) அழுந்துதுரியமெனுநாமத் தாறும்பூமியடைந்தொழுங்கி, னெழுந்தபலவாதனையிலனுயிப் பூமிலேபரிசயிப்ப, னுழைந்துநானென்பதுமென்னு ததுவுமுளதுமில்லாதுங், கழிந்துவெறிதேநினைவிலனுய்க்காணுனிருமையொருமைகளை .... *

(இ-ள்.) அழுந்துதுரியமெனும் - அழுத்தமானதுரியமென்கின்ற — நாமத்து - பெயரையுடைய — ஆறும்பூமி - ஆறுவதுபூமியை — ஒழுங்கினடைந்து - கிரமமாகச்சேர்ந்து — எழுந்த - உண்டாகிய — பலவாதனையிலனுய் - நாநாவிதவாதனையில்லாதவனுய் — இப்பூமியில் - இவ்வாறும்பூமியில் — பரிசயிப்பன் - அற்பியாசஞ்செய்வன் — நுழைந்து - புகுந்து — நானென்பதும் - யாமென்பதும் — என்னுததுவும் - நானென்பதல்லாததும் — உளதுமில்லாதும் - உள்ளதுமில்லாதுமாகியவிவைகள் — கழிந்து - நீங்கி — வெறிது - கேவலமாய் — நினைவிலனுய் - மனமில்லாதவனுய் — இருமையொருமைகளை - பேதாபேதங்களை — காணுன் - பாரான். எ-று, (௪௨)

(அ-கை.) இ-து. (கவி) செறியுமுடிச்சுமையமும்போய்சீவன்முத்தசுபாவத்தால், வெறிதுவிடன்றியும்விடுவினை நீதாவியத்தின் விளக்கெப்பான், பிறிவில்விண்ணில் வெறுங்குடம்போற்பிறிதுபுறனுட்சூனியமா, யெறியுங்கடலினிறைகடம்போலங்கும்புறனுண்ணிறைந்திருப்பன் .... *

(இ-ள்.) செறியுமுடிச்சும் - நெருங்கியவகங்காரக்கிரந்தியும் — ஐயமும்போய் - சந்தேகமுநீங்கி — சீவன்முத்தசுபாவத்தால் - சீவன்முத்தத்தன்மையினுல் — வெறிதுவிடன்றியும் -

வேசவாகாரூதிருவாணையல்லாதவனும் — விடுவினைந்து - திருவாணையன்டானவனாய் — ஒலியத்தின் விளக்கேகாப்பான் - இந்திர நிபத்துக்குச்சமானமானவன் — பிறிவில்லினவில் - நீங்கா வாகாயத்தில் — வெறுங்குடம்போல் - சூனியகடத்தைப்போல — பிறிது - வேறும் (பப்பயத்தை நிறுத்தியான்று) — புறனுட்சூனியமாய் - வாகியாந்தரங்களின்றி — எமிபக்கடயேல் - அகமெசாவிசாதிதந்தசமுத்திரத்தில் — நிறைகுடம்போல் - நிறைந்தகடத்தைப்போல — எய்தும் - எவ்விடமும் பூரணபிரமத்திற் (றேதிட்டியால)— புறனுள்ளுனிறைந்திருப்பன் - வாகியாந்தரங்களிற் பூரணமாயிருப்பான். எ - று. (இ உ-க-ம்) முன்னைந்தாம்பூமியிலுண்டான சுகத்தை விளக்குவிளக்கமாகச் சகத்தோற்றுதலிற் றுரியவவத்தையென்பதாம் …………………… (௬௩)

(அ-கை) ஏழாவதான துரியமே துரியாதீதவவத்தையெனல். (கவி) இவனேயுள தாய்ச்சிறிதாங்கேயிவனேசிறிதுமிலனுவன்; றவருவாறும்பூமியிலேதனிநின்றேழாம்பூமிதனை, யவனையடைவனுடலின்றியடையுமுத்தியதுவாகுங், கவர்சாந்தமமே மொழிக்கெட்டாக்ஞனபூமிகளினெல்லையிதாம் …………………… *

(இ-ள்.) இவனே - இப்புருஷனே — சிறிதுளதாய் - கொஞ்சமுள்ளவனுய் — ஆங்கே - அவ்விடத்தில் — இவனேசிறிதுமிலனுவன் - இவனேகொஞ்சமுமில்லாதவனுவான் — தவருவாறும்பூமியில் - குறைபாதவாறுவதுபூமியில் — தனிநின்று - தனிமையாயிருந்து — ஏழாம்பூமிதனை - ஏழாவதுபூமியை — அவனையடைவன் - அந்தச்சீவன்முத்தனையடைவான் — உடலின்றியடையுமுத்தி - அடைகின்றவிதேகமுத்தியும் — அதுவாகும் - அந்தவேழாம்பூமியேயாகும் — கவர்சாந்தம் - இரகிக்கின்றசாந்தமும் — மொழிக்கெட்டா - வசனத்துக்கெட்டாததுமாகிய — கனபூமிகளின் - மேன்மையானஞானபூமிகளின் — எல்லையிதாம் - அளவிதுவாகும். எ-று. (இ-ம்) முன்பூமியிற் சுகபோதமாய்விளங்குமதீதமேதுரியாதீதமாதலா லதுவே துரியாதீதவவத்தையென்பதாம் …………………… (௬௪)

(அ-கை.) துரியாதீதவிலாசத்தைக்கூறுதல். (கவி) குலவுமுடநீர்முத்தியெனக் கூறுமேழாம்பூமிதனைச், சிலர்நற்சிவமென்றுரைசெய்வர் சிலர்சூனியமென் றுரைசெய்வ, ரிலகுபொருளென்றுரைப்பர்சில ரியைந்தகாலமென்பர்சிலர், விலகுபகுதியென்பர்சிலர்வெவ்வேறுகவிசாரித்து …………………… *

(இ-ள்.) குலவும் - பொருந்திய — உடநீர்முத்தியென - விதேகமுத்தியென்று — கூறுமேழாம்பூமிதனை - சொல்லப்பட்டவேழாவதுபூமியை — விசாரித்து - விசாரணைசெய்து — வெவ்வேறாய் - வேறுவேறாகப்பிரித்து — சிலர் - சிலமதஸ்தர்கள் — நற்சிவமென்றுரைசெய்வர் - பரமசிவமென்றுசொல்லுவார்கள் — சிலர் - சிலமதஸ்தர்கள் — சூனியமென்றுரைசெய்வர் - சூனியமென்றுசொல்லுவார்கள் — சிலர் - சிலமதஸ்தர்கள் — இயைந்தகாலமென்பர் - பொருந்தியகாலமென்றுசொல்லுவார்கள் — சிலர் - சிலமதஸ்தர்கள் — விலகுபகுதியென்பர் - நீங்குகின்றபிரகிருதியென்றுசொல்லுவார்கள். எ - று. (இ-ம்) துரியாதீதமானவிதேகமுத்தியே சிவன்முதலான நாமங்களாகச் சிலர் பகுத்துரைக்கின்றாரென்பதாம் …………………… (௬௫)

(அ-கை.) இப்பூமிகளி னப்பியாசிகளி னிலக்கணங்கூறல். (கவி) அயலோரான்மவிகற்பத்தோரவதானந்திர்பேதத்தோ, ரியல்பாலிதுவென்றறிவிக்கவெட்டாவிதனைமிகவருந்தி, மூயல்வாராகியறிவிப்பர் மொழிந்தபூமியிவையேழு, மயறீர்திலையாற்பரிசயிக்கில்வருத்தஞ்சிறிதும்வாராதே …………………… *

(இ-ள்.) அயலோர் - பிறர்கள் — ஆன்மவிகற்பத்து - தமதுவிகற்பத்தினால் — ஓரவதானந்தீர் - ஒருறுதியில்லாத — பேதத்து - வேற்றுமையினும் — ஓரியல்பால் - ஒருதன்மையினாலும் — இதுவென்றறிவிக்க - இதுவென்றறிவிப்பதற்கு — எட்டாவிதனை - அகோசரமானவிந்தவிதேகபூமியை — மிகவருந்தி - மிகவும்வருத்தப்பட்டு — மூயல்வாராகி - முயற்சியையுடையவர்களாய் — அறிவிப்பர் - தெரிவிப்பார்கள் — மொழிந்த - சொல்லப்பட்ட — பூமியிவையேழும் - இந்தஞானபூமியேழும் — மயறீர்திலையால் - மயக்கமற்றகுணத்தினால் — பரிசயிக்கில் - அப்பியாசஞ்செய்தால் — வருத்தம் - துன்பமானது — சிறிதும்வாராது - அற்பமும்வரமாட்டாது. எ-று. (இ-ம்) ஞானபூமிகளி னப்பியாசமயக்கமுள்ளவர்களுக்கு வருத்தமுமமில்லாதவர்களுக் கமிதெய்வளவுமின்றென்பதாம். இவ்வணு ஞானபூமியையெழுபமைந்தவத்தையாகக் கூறினபடியா லேந்து சரீரமுமைந்தபிமானியுமென்றெனக்கொள்ளப்பட்டது. அவையாவன, முன்மூன்றுபூமியந் தூலம் அபிமானியப்பியாசி, நான்காம்பூமி சூக்குமம், அபிமானிபிரமவித்தன், ஐந்தாம்பூமி காரணம், அபிமானி, பிரமவரன் ஆறாம்பூமி, சைதன்யம், அபிமானி பிரமவரியான் ஏழாம்பூமி, அதீதம், அபிமானிபிரமவரிட்டனென்பதாம் …………………… (௬௬)

(அ-கை.) ஞானபூமியினிலக்கணங்கூறியஃதடையுமுபாயமுங்கூறத்தொடங்கியிச்சையை மதயானையாகவுருவகப்படுத்தியஃதைக்கெடுக்கி லிப்பூமியின்முடிவைத்தெரிசிக்கலாமெனல் (கவி) மிகவுமதத்துமதம்பொழிந்துமெத்தென்றினிதா நடையுடைத்தாய், புகர்கொடுதிக்கைநுனியதறிப்பொருகோட்டினைச்சங்கினை நிகராம், பகடுண்டனர்த்தம்பண்ணுமதுபடுக்கப்படுமேலப்பொழுதே, சுகமாய்விரைவினரர்கடப்பர்சொன்னபூமிப்பரப்பெல்லாம்

(இ-ள்.) மிகவுமதத்து - நிரம்பவுமதங்கொண்டு—மதம்பொழிந்து- மதசலத்தைவருஷித்து—மெத்தென்று - மிருதுவாக—இனிதாம் - இனிமையாகிய—நடையுடைத்தாய் - நடையையுடையதாகி—புகர்கொள் - புள்ளிகளையுடைய — துதிக்கைநுனியதறி - தும்பிக்கையின் முனைதுடித்து—சங்கினை நிகராம் - பணிலத்துக்கொப்பாகிய—பொருகோட்டினை - பொருதாநின்றதந்தங்களையுடைய—பகடுண்டு - யானையானதுண்டு — அனர்த்தம்பண்ணும்-அனர்த்தஞ்செய்கின்ற—அது படுக்கப்படுமேல் - அதுகொல்லப்படுமாயின்—அப்பொழுதே - அப்போதே—சுகமாய் - ஆநந்தமாக—விரைவில் - சீக்கிரத்தில் — நரர் - மானிடர்கள் — சொன்ன-முன்சொல்லப்பட்ட—பூமிப்பரப்பெல்லாம் - ஞானபூமியின்விரிவனைத்தையும் — கடப்பர்-தாண்டுவார்கள். எ-று .... (சஎ)

(அ-கை.) அந்தயானையைக் கெடுக்கும்பொருட் டஃது யாதெனவினவுதல். (கவி) வழியுங்கடமாக்களிறதனை வன்பாற்கொல்லாதிருப்பளவு, மழியந்துயரார் போர்க்களத்திலெவனேசுபடனுமென்ன, மொழியுந்தவனை நீசொன்னமூரிக்களிறேதமர்க்களமே, தழியும்படியேதுறைவிடமேதருள்வாயென்றானருண்மூர்த்தி .... *

(இ-ள்.) கடம்வழியும்- மதசலங்களொழுகுகின்ற—மாக்களிறதனை-பெரிதாகியயானையை—வன்பால் - பலத்தினால்—கொல்லாதிருப்பளவும் - கொலைசெய்யாதிருக்குமட்டும்—இழியும் - இழிவுள்ள—துயரார் - துன்பநிறைந்த—போர்க்களத்தில் - யுத்தகளத்தில்—எவனேசுபடனுமென்ன - எவன்மகாவீரனுவானென்று—மொழியுந்தவனை - சொல்லியவசிஷ்டமுனியைப்பார்த்து—நீசொன்ன - நீர்சொல்லிய—மூரிக்களிறேது- பலமுள்ளயானையாது—அமர்க்களமேது - யுத்தகளமியாது—அழியும்படியேது - அது கெடுந்தன்மையாது—உறைவிடமேது-அதுவாசஞ்செய்யும்ஸ்தானமியாது—அருண்மூர்த்தி-கிருபாவடிவமானஸ்ரீராமர் - அருள்வாயென்றான் - அனுக்கிரகஞ்செய்வாயென்றுவசிஷ்டமுனியைக்கேட்டார். எ-று .... (சஅ)

(அ-கை.) யானையினுருவகத்தைவெளிப்படுத்தல். (கவி) இராகவற்கு முனிசொல்வானீதுண்டாகவெனல்வடிவாய், சோகவிச்சையெனப்பெயர்கொள் சொரிமாமதத்தவெங்களிறு, தேகமென்னும்பெருங்காட்டிற்றிரளாஞ்செருக்குமிகச்செய்யும், வேகமதத்தவிந்திரியமாம்வெங்கன்றுகளையுடைத்தாகும் .... *

(இ-ள்.) இராகவற்கு- ஸ்ரீராமருக்கு—முனிசொல்வான் - வசிஷ்டமுனிசொல்லுவார்—ஈதுண்டாகவெனல் - இதெனக்குண்டாகவேண்டுமென்றல்—வடிவாய் - உருவமாய்—சோகவிச்சையென - துன்பத்தைவிளைக்குமாசையென்று—பெயர்கொள்-நாமத்தையுடைய—சொரிமாமதத்த - பொழியாநின்றமகாமதசலத்தையுடைய—வெங்களிறு-கொடியயானையானது—தேகமென்னும் - சரீரமென்கின்ற—பெருங்காட்டில் - மகாரண்யத்தில்— திரளாஞ்செருக்கு-மிகுந்தகளிப்பையுடைய (லீலையை) — மிகச்செய்யும் - மிகவுஞ்செய்யும் — வேகமதத்து-கோபமுமதமுமுள்ள—இந்தியமாம் - இந்திரியங்களாகிய—வெங்கன்றுகளை - கொடியகுட்டிகளை—உடைத்தாகும் - உடையதாகும். எ-று .... (சகூ)

(அ-கை.) இ-து. (கவி) இனிதுநாவாலுரைசெய்யுமிதயமென்னுங்காட்டுறையும், பனிவல்வினைகோடிரண்டுளதாம் பலவாதனையாமதஞ்சொரியு, மனிசமெங்கும் படர்வடிவாமறிவில்பிறவிநோக்கங்கண், முனிவிலடுபோர்ப்பூமிகளாமூரியிச்சைமதகளிறே .... *

(இ-ள்.) இனிது - இனிமையாக—நாவாலுரைசெய்யும் - நாக்கினால்வசனிக்கும்—இதயமென்னும்- மனமென்கின்ற—காட்டுறையும்-(துர்க்கமான) வனத்திலடங்கும்—பனிவல்வினை-நடுக்கஞ்செய்கின்றகொடியவிருவினைகளாகிய—கோடிரண்டுளதாம் - இரண்டுகொம்புள்ளதாம்—பலவாதனையாம் - அநேகவாசனையாகிய — மதஞ்சொரியும் - மதத்தைப்பொழியும்—அனிசமெங்கும் - எப்பொழுதுமெவ்விடத்திலும் — படர்வடிவாம் - பரவுகின்றவுருவத்தையுடையதாம்—அறிவில் - உணர்வில்லாத—பிறவிநோக்கங்கள் - சம்சாரதிருஷ்டிகளே— முனிவிலடுபோர்ப்பூமிகளாம் - சினத்தினாற்கொல்லுகின்றயுத்தகளமாகும் — மூரியிச்சைமதகளிறு-பலமுள்ளவாசையேமதயானையாம். எ-று. (இ-ச-க-ம்)இச்சையென்னுமியானையானதுவினைக

ளென்னுந்தத்தங்களையும் வாசனையென்னுமதங்களுடன்றேகமென்கின்றவனத்திலிருந்திந்திய மென்னுங் கன்றுகளோடும் பவப்பார்வையென்னும் யுத்தகளத்தில்வசிக்குமென்பதாம். (௫௰)

(அ-கை.) வீறுள்ளவிவ்விச்சையே யாத்மத்துரோகஞ் செய்யுமெனல். (கவி) வெற்றித்திறமுந்தோல்விகளும்மென்மேனல்கியிச்சையெனுஞ், செற்றகளிறுதீனர்களாஞ் சீவத்திரளைச்சங்கரிக்கு, நிற்றத்தொழில்வாதனைபாவ நெஞ்சுமதிசங்கற்பங்கள், பற்றும்பிறவுமிதன்பெயராய்ப் பண்டமாய்நெஞ்சுள்ளிருக்கும்............ *

(இ-ள்.) வெற்றித்திறமும் - செயமும்—தோல்விகளும்-அபசயமும்—மேன்மேனல்கி- மேன்மேலுங்கொடுத்து—இச்சையெனும் - ஆசையென்கின்ற—செற்றகளிறு- கோபத்தையுடையயானையானது—தீனர்களாம் - எளியரான—சீவத்திரளை- சீவகோடிகளை—சங்கரிக்குஞ் - சங்காரஞ்செய்யும்—நிற்றத்தொழில் - நிலையாயிருக்கின்றவிருத்தியையுடைய—வாதனை - வாசனையும்—பாவம்-பாவனையும்—நெஞ்சும்-மனமும்—மதி-புத்தியும்—சங்கற்பங்கள்- சங்கற்பங்களும்—பற்றும்-ஆசைகளும்—பிறவும்- மற்றவைகளும்—இதன்பெயராம்-இதனது நாமங்களான—பண்டமாய்- திரவியங்களாய்—நெஞ்சுள்ளிருக்கும்- அந்தக்கரணத்திலிருக்கும். எ-று. (௫௧)

(அ-கை.) எவ்விதத்திலுமிச்சாத்யாகஞ்செய்யவேண்டுமெனல். (கவி) நிலைமையென்னுமுயர்கணையான்னிறைந்தவலியால்விநோதத்தாற், றொலைவில்பொருளியாவையுமாகித்துன்னியொன்றுமிச்சைதனை, யுலைவிலெல்லாவகையாலுமியோகிவெல்வதுத்தமமா, மலைவோடீதுண்டாகவெனலகத்தேதழைக்கிலதுகேளாய்............ *

(இ-ள்.) நிலைமையென்னும் - தைரியமென்கின்ற—உயர்கணையால் - மாட்சிமைப்பட்டவம்பினால்—நிறைந்தவலியால் - மிகுந்தபலத்தினால்—விநோதத்து - விளையாட்டாக—தொலைவில்பொருளியாவையுமாகி - அளவற்றவஸ்துக்களனைத்துமாய்—துன்னியொன்றும் - நெருங்கியொன்றாகிய—இச்சைதனை- ஆசையென்கின்ற(யானையை) —உலைவில்- அச்சமில்லாமல்—எல்லாவகையாலும்—எந்தப்ரகாரத்தினாலும்—யோகிவெல்வது- ஞானியானவர்செயிப்பது—உத்தமமாம் - நன்மையாகும்—அலைவோடு - சஞ்சலத்துடன் — ஈதுண்டாகவெனல் - இதெனக்குண்டாகவேண்டுமென்பது—அகத்தேதழைக்கில் - மனதில்வளர்ந்தால் — அதுகேளாய்- அதைக்கேட்பாய். எ - று .... (௫௨)

(அ-கை.) இச்சையேபந்தமதனிவிர்த்தியேமுத்தியெனல். (கவி) பேசுமிதுகாணிற்பளவும்பிறப்பாநச்சுவிடுசிகைதா, ஞசமடையாதிராகவனேஞானசுருக்கமிதுகேளாய், பாசமுறவீதுண்டாகவென்று படருமனந்தானே, யேசுபிறவியிம்மனத்தினிறவேமுத்தியிவ்வளவே............ *

(இ-ள்.) பேசும்- சொல்லப்பட்ட—இதுகாணிற்பளவும் - இவ்வாசையாணிருக்கும்பரியந்தம்—பிறப்பாம் - சம்சாரமாகிய—நச்சுவிடுசிகைதான் - விடவிடுசியானது— இராகவனே- ஸ்ரீராமா—நாசமடையாது - அழியமாட்டாது— ஞானச்சுருக்கமிதுகேளாய் - ஞானசங்கிரகமானவிதைக்கேட்பாய்—பாசமுற - பந்தமடைய— ஈதுண்டாகவென்று - இதெனக்குண்டாகவேண்டுமென்று—படருமனந்தானே - விரிபாநின்றமனதே —ஏசுபிறவி - பழிக்கின்றசம்சாரமாகும்—இம்மனத்தினிறவே- இந்தமநோநாசமே—முத்தி-மோக்ஷமாகும்—இவ்வளவே-இவ்வளவுதானே. எ-று. (இ-௩-க-ம்) இச்சாத்யாகஞ் செய்யும்பொருட்டதன் றன்மைகளைப்பகுத்துச்சொல்லியதாம்............ (௫௩)

(அ-கை.) இச்சாத்யாகவுபாயங்கூறல். (கவி) மருளுமயதீர்விமலன்பால் வடித்துத்தெளிந்தவுபதேசந், தருதல்கண்ணுடியின்புறத்திற் றயிலத்துளிபோலிளைப்பாறுந், தெருளுமுணர்வாலிம்மோகந்தீர்ந்துவிச்சையங்குர்மா, யுருவமனங்கிஞ்சிலுந்தோன்றுதுணர்விலாமைமாத்திரத்தால்............ *

(இ-ள்.) மருளுமயதீர் - மருட்சிசெய்கின்றமயக்கந்தீர்ந்த—விமலன்பால்-நின்மல(சித்தனை)சிஷினிடத்தில்—வடித்துத்தெளிந்த- தெளிவாகத்தெளிந்த—உபதேசந்தருதல்-உபதேசத்தைக்கொடுத்தல்—கண்ணுடியின்புறத்தில் - தற்பணத்தின்பக்கத்தில் — தயிலத்துளிபோல்- தயிலவிந்துவைப்போல—இளைப்பாறும் - விஸ்ராந்தியடையும்— தெருளுமுணர்வால் - தெரிவுள்ளஞானத்தினால்—இம்மோகந்தீர்ந்து - இச்சநநமயக்கத்தைவிட்டு —இச்சையங்குர்மாய்- ஆசைபெமுளையாக —உருவமனம் - வடிவமாகியமனது—உணர்விலாமைமாத்திரத்தால் - அசம்வேதனத்தினால்—கிஞ்சிலுந்தோன்றுது - அற்பமுந்தோன்றமாட்டாது. எ-று. (இ-ம்) ஆசாரியருபதேசார்த்தத்தைச்சிந்திக்கச்சிந்திக்கச்சிந்தனுதிதசுகம்போதவுதயமானவசம்வேதனத்தா

விச்சாத்தியாகம்வருமென்பதாம். ஆசிரியருபதேசவாக்கியார்த்தத்தைக்கேட்டு- இருந்தருதெரிந்தபடியாற் சத்தேசித்தென்றுந்தெரிவு சுகமாயெழுகின்றபடியாற் சித்தேயாநந்தமென்றுமானந்தமேயாவருக்குஞ் சுபாவமாய்விளங்குதலா லதுவேசித்தென்று மச்சித்திலியாவருஞ்சுஞ்சரித்திருத்தலி னதுவேசத்தென்று மிங்ஙனஞ் சச்சிதாநந்த வயிராக்கியஸ்வரூபமேதனதுஸ்வரூபமெனச் சிந்தித்து, சிந்தித்தபடி காக்ஷியுற்றுத்தெளிந்து, தெளிந்தபடி யதுவாய்ச்சுத்திருக்குஞ் சமாதியடைந்து, அச்சமாதியினின்று வெளிப்படும்போதி லேகதேச விஷயாநந்தங்கணீங்கி யேகாகாரமான பிரமாநந்தமாகவு மேகதேசமான விஷயஞானநீங்கி யேகாகாரமானபிரமஞானமாகவு மிவ்விரண்டுமொன்றான நிரதிசயாநந்த சைதன்யமேசுவானுபூதி ப்ரத்யக்ஷமாகச் சிந்திக்கச் சிந்திக்கச்சிந்தனாதீதமான சுகபோதமாக விளங்கிய சாக்ஷாத்காரமேயசம்வேதனமென்பதாம்... (௫௪)

(அ-கை.) இ-து. (கவி) ஊறுவநத்தந்தருமிச்சை யொருகால்வரினு மப்போதே, யாறுவிடயத்துணர்வின்மை யானவதனலறுத்திடுவாய், கூறுமிச்சைபலவடிவாய்க் கோத்ததெனினுமிவ்வுடலின், மாறுதானவாதனையைமாற்றுதிராதுவுணர்வின்மை.

(இ-ள்.) ஊறுவநத்தந்தரும்-கெடாதவநர்த்தத்தைக்கொடுக்கின்ற—இச்சை-ஆசையானது—ஒருகால்வரினும் - ஒருபோதுவந்தாலும்—அப்போதே - அக்கணத்தே— ஆறுவிடயத்து- நீங்காதவிஷயத்தில்—உணர்வின்மையான - அசம்வேதனமாகிய — அதனலறுத்திடுவாய்- அதனாற்கெடுப்பாய்—கூறுமிச்சை - பலவிதமானவிச்சையானது—பலவடிவாய்- அநேகவுருவாய்—கோத்ததெனினும் - கோத்துக்கொண்டிருந்தாலும்— இவ்வுடலின் - இச்சரீரத்தின்—மாறுதானவாதனையை - நீங்காமலிருக்கின்றவாசனையை—உணர்வின்மை - அசம்வேதனமானது—மாற்றுதிராது - நீக்காமலிராது. எ - று. (இ-ம்) இச்சாவாசனை யசம்வேதனத்தாற் கெடுமென்பதாம்... (௫௫)

(அ-கை.) அசம்வேதனத்தையடையுமுபாயங்கூறல். (கவி) தள்ளுமுடிவின்றியினித்தைச்சவத்தின்றிரளைவிருப்பறல்போற், றெள்ளும்பிரத்தியாகாரத்திறத்தினலேவாதனையை, நள்ளுமிச்சைமாத்திரமாய் நயவாதிருக்குமப்போதே, யுள்ளும்வெறிதேயிருப்பதுவே யுணர்விலாமையுறுமுயற்சி... *

(இ-ள்,) சவத்தின்றிரளை - பிரேதக்கூட்டங்களை — விருப்பறல்போல் - இச்சியாததுபோல—முடிவின்றியின் - முடிவில்லாமலிருக்கின்ற—இத்தை - இந்தவாசனையை — தள்ளு- விரும்பாமனீக்குவாய்—தெள்ளு- தெளிவாகிய—பிரத்தியாகாரம்-பிரத்தியாகாரமென்னும்—திறத்தினல் - காரணத்தினல்—வாதனையை - வாசனையை—நள்ளுமிச்சைமாத்திரமாய்- விரும்புகின்றவாசையினளவா (கக்கருதி)— நயவாதிருக்கும் - ஆசியாதிருக்கும்—அப்போதுள்வெறிதிருப்ப- அக்காலமனஞ்சும்மாயிருக்கும்— அதுவேயுணர்விலாமை - அதுவேயசம்வேதனத்தை—உறுமுயற்சி - அடைகின்றமுயற்சியாகும். எ-று. (இ-ம்) சுகபோதவயிக்கியத்தி லசைவற்றிருப்பதே யதீதமுண்டாகு நெறியென்பதாம்... (௫௬)

(அ-கை.) சங்கற்பநாசமேசிவமாமெனல். (கவி) எனதீதென்னுமறிவுதனையிடர்கற்பனையென்றுரைசெய்வார், கனமாமறிவின்பாவனையாற்காண்பதெல்லாங்கையகலி, லனகாதிபனேகற்பனைகளற்றதென்றாருயர்நல்லோர், மனமாதினைவேசங்கற்பமனத்தினினைவற்றதுசிவமே... *

(இ-ள்.) எனதீதென்னும் - ஈதெனதென்கின்ற—அறிவுதனை- அறிவை—இடர்கற்பனையென்று- துன்பம்பொருந்தியகற்பனையென்று—உரைசெய்வர் - (சத்துக்கள்)சொல்லுவார்கள்—கனமாமறிவின்பாவனையால் - வியாபகஞானபாவனையினல்—காண்பதெல்லாம்-காணப்பட்டசகலமும்—கையகலில்- நீங்கினல்—அனகாதிபனே- களங்கமற்றவிராசாவே— உயர்நல்லோர்-மேலாகியசத்துக்கள்—கற்பனைகளற்றதென்றார் - கற்பனைகணசித்ததென்றுசொன்னார்கள்—மனமாதினைவே - மனோபாவமே—சங்கற்பம்-சங்கற்பமாகும்—மனத்தினினைவற்றது-மனத்தினதுபாவனையற்றதே—சிவம்-சிவமாகும். எ-று, (இ-ம்.) ஞானபாவனையாலதன் சங்கற்பரூபமாகியவிஷயங்கணீங்கிற் சர்வம்பிரமமயமாய் ப்ரகாசிக்குமென்பதாம்... (௫௭)

(அ-கை.) அறிவறியாமைநீங்கினவறிவாய் விளங்குவாயெனல். (கவி) எட்டியறிந்ததறியாத திரண்டும்பாவிப்பதுநினைவாய், பட்டபரய்போலிவையிரண்டிற்பற்றுநினைவுதனைமறந்து, வட்டமிடுமியாவையும்விளைவின் மறந்துசான்றமறியுடைத்தாய்த், திட்டமுறத்தான்றுதலில்லாத் திறத்தோருங்கிநிற்பாய்... *

(இ-ள்.) எட்டி- விஷியத்தைத்தாவி—அறிந்தது - உணர்ந்ததும்—அறியாதது-உணராததுமாகிய—இரண்டெய்பாவப்பாது - இரண்டையும்பாவனைசெய்யாத—நினைவாம்-பாவனையாகும்—பட்டமரம்போல் - பட்டுப்போனவிருக்ஷத்தைப்போல—இவையிரண்டில்- இந்தவறிவறியாமையிரண்டிலும்—பற்றின்னைவுகளைமறந்து - பொருந்தாநின்றபாவனைகளைவிட்டு—வட்டமிடுமியாவையும் - சுழலாநின்றசகலத்தையும்— விரைவின்மறந்து - சீக்கிரத்தின்மறந்து—சான்றமதியுடைத்தாய் - பேரறிவையுடையவனாய் — திட்டமுறத்தோன்றுதலில்லா- நிலைமையாக்கூடமான—திறத்தோனுநிலைநிற்பாய் - குணத்தோனுய்நிலைபெற்றிருப்பாய். எ-று.(இ-ம்) விஷயத்தையறிதலுந் தன்னையறியாததுமான விரண்டையுநீக்கத்தானே தானாய் விளங்கியசுகபோதமான பிரமஞானமாக விளங்குவாயென்பதாம்..(௫௮)

(அ-கை.) இராமனுக்குபதேசிப்பதை முடிக்கும்பொருட் டவையைப்பார்த் தநிசயித்துரைத்தல். (கவி) கேளாநின்றுனிவனென்ன வொருவன்கிட்டா மையினுலே, தோளாலுயரக்கைகொடுத்துத் தோன்றநின்றுசொல்கின்றேம், மீளாதானவசங்கற்பம்விமலமானபரமபதம், வாளாயுள்ளேபாவிக்கமாட்டாரதனையென்னம்மா. ......*

(இ-ள்.) இவன்- இவன் —கேளாநின்றுனென்ன-கேட்கின்றவனென்றுசொல்லும்படி—ஒருவன்கிட்டாமையினுல் - ஒருவருமணுகாதலினுல்—தோளால் - புசங்கள்—உயரக்கையெடுத்து-உயரும்படிகரத்தைத்தூக்கி— தோன்ற - (சகலருக்குமிந்தவருத்தந்) தோற்றும்படியாக—நின்றுசொல்கின்றேம் - இருந்துவசனிக்கின்றேம்—மீளாதான-திரும்பாததாகிய—அசங்கற்பம்-சங்கற்பபாவமே—விமலமானபரமபதம் - நிர்மலமாகியபரமபதமாகும்—அதனை - அவ்வசங்கற்பத்தை—வாளா- மௌனமாக—உள்- அகத்தில்—அம்மா - ஆச்சரியம்—என்பாவிக்கமாட்டார்- ஏன்பாவனைசெய்யமாட்டார். எ-று. (இ-ம்) இங்ஙனம்போதித்துவந்தவாக்கியார்த்தசூட்சுமம்வெளிப்படும்பொருட் டறிவிலசைவற நிற்றல் சுகமாயிருக்க வங்ஙனநில்லாததேனேவென்றிரங்கிக் கூறினுனென்பதாம் .... (௫௯)

(அ-கை.) சபையைப்பார்த்துரைத் திராகவனிடமாய் முடிக்கத்தொடங்கிச் சகசநிஷ்டையைக்கூறுதல், (கவி) செறிபார்முழுதாள்பவன்பதமுந் திரணமென்னப்பரமபதம், வெறிதேயிருக்குமிருப்பினுன் மேவுமன்றேபேரூர்க்கு, நெறிபோம்பதிகன்றனக்கிருதாளினையாதிருக்கநடப்பதுபோற்,பொறிகூர்தனதுதொழினடக்கும்பூணுவாளாவிருந்திடவே

(இ-ள்.) செறிபார்முழுது - நெருங்கியபூமியெல்லாம் — ஆள்பவன்பதமும் - ஆளுகின்றசக்கரவர்த்திப்பதமும்—திரணமென்ன - துரும்பென்று(சொல்லும்படியாயிருக்கும்)—பரமபதம்- பிரமபதமானது—வெறிதேயிருக்குமிருப்பினுல் - மவுனமாயிருக்கின்றவிருப்பினுல்—மேவும்- அடையப்படும்—பேரூர்க்கு - மகாநகரத்துக்கு—நெறிபோம்- மார்க்கத்திற்செல்லும்—பதிகன்றனக்கு - புருடனுக்கு—இருதாள்- இரண்டுபாதமும்—நினையாதிருக்க - எண்ணமலிருக்க—நடப்பதுபோல்- செல்லுவதுபோல—பொறிகூர்- பொலிவுமிகுந்த—தனதுதொழில்- தனதுசெய்கையானது—பூணுவாளாவிருந்திட - சோரமற்சும்மாயிருக்க—நடக்கும்-நடந்துவரும். எ-று. (இ-ம்) அசம்வேதனத்தாற் பரமபதத்தை யடையினதன் சந்நிதானத்திற்சகலகிருத்தியங்களுந் தானேநடந்துவருமென்பதாம்.......................................(௬௰)

(அ-கை.)வாக்கியார்த்தசங்கிரகங்கூறுதல்.(கவி)இங்குப்பன்னும்பலகாலென்பிரயோசனஞ்சுருக்கமிதுகேளாய், சங்கற்பந்தான்பவபந்தஞ்சங்கற்பந்தீர்ந்ததுமுத்தி, பங்கற்றெல்லையறிவலைவுபவமற்றுறுமறிவுருவே, துங்கச்சகங்களெனநோக்கிச் சுகமேப்படியப்படிநிற்பாய்.. *

(இ-ள்.) இங்கு- இவ்விடத்தில்—பன்னும்பலகாலென்- சொல்லுகின்றபலவற்றினுலென்னபிரயோசனம்—இயம்புசுருக்கம் - சொல்லாநின்றசங்கிரகமான—இதுகேளாய்-இந்தவருத்தத்தைநீகேட்பாய்—சங்கற்பந்தான்பவபந்தம்- சங்கற்பமேசம்சாரபந்தமாகும்— சங்கற்பந்தீர்ந்ததுமுத்தி - சங்கற்பநாசமேமோக்ஷமாகும்—பங்கற்று - பிரிவில்லாமல்—எல்லை- முடிவும்—அறிவு- நாசமும் —அலைவு- சலனமும்—பவம்-சம்சாரமும்—அற்று-இல்லாமல்—உறும்-உபசாந்தமாகின்ற—அறிவுருவே - ஞானஸ்வரூபமே—துங்கச்சகங்களைநோக்கி - பரிசுத்தமாகிய்வுலகங்களென்றுபார்த்து—சுகமேப்படி - நிரதிசயாநந்தமேப்படிவிளங்குகின்றோ—அப்படிநிற்பாய்- அந்தப்பிரகாரமிருப்பாய். எ-று. (இ-ம்) காணப்பட்டயாவுஞ் சேதனவியவடிவமாகப்பார்க்கும்போ தாநந்தமான சுகஸ்வரூபமாய் விளங்குவாயென்பதாம்.................... (௬௧)

(அ-கை.) சுகபோதமாகச்சஞ்சரிப்பாயெனல். (கவி) ஒழியாநிலையாமுபசாந்தயோ கமென்பதுணர்வின்மை, கழியாயோகநிலைபினனைக் கவர்பற்றொழித்துத்தொழில் செய்வா, யிழியாதியற்றப்படாவுள்ள மிறந்தேயோகமுணர்வின்மை, வழியான்மிக வுமதின்மையமாய் வல்லைநிற்பாய்மகிழ்ந்தபடி .... *

(இ-ள்.) ஒழியாநிலையாம்-நீங்காதநிலைமையாகிய—உபசாந்தயோகமென்பது-உபசாந்தஞா னமென்றுசொல்லுவது—உணர்வின்மை- அசம்வேதனமாம்—கழியா-முடிவில்லாத—யோக நிலைபினனைப்- ஞானநிலையையுடையவனைப்—கவர்பற்றொழித்து - கிரகிக்காநின்றவாசையைவி ட்டு—தொழில்செய்வாய் - (உனக்குள்ள)செய்கையைச்செய்வாய்—இழியாதியற்றப்படா-ஈன மாகச்செய்யப்படாத—உள்ளமிறந்தயோகம் - மனோநாசமானஞானமே — உணர்வின்மை- அசம்வேதனமாய்—வழியால் - இந்தநெறியினால்—மிகவுமதின்மையமாம்- மிகவு(மவ்வுபசாந்த ஞானாகார)மாய்—மகிழ்ந்தபடி- ஆநந்தித்தப்ரகாரமே— வல்லைநிற்பாய்-சீக்கிரத்திலிருப்பாய். எ-று. (இ-ம்) இக்கணமேயாநந்தாதீதமாக விளங்கும்போதாகாரமாய்ச் சகலவிருத்தி யங்களு ஞ்செய்வாயென்பதாம் .... (௬௨)

(அ-கை.) சாக்ஷாத்காரநிசையைக்கூறுதல். (கவி) எனக்கென்னுமுணர்வுடைமை யிடர்விட்டகலாதுணர்வின்மை, யனர்த்தமில்லாவீடளிக்குமாசையேதிங்கதுசெய் வாய், சனிப்பில்சிவமெங்கணுமுளது சாந்தஞ்சுபஞ்சித்துருவென்னுங், கனத்தவந் தவொருநினைவே கருமத்யாகமிராகவனே .... *

(இ-ள்.) ஈது - இது—எனக்கென்னும் - எனக்கென்கின்ற — உணர்வுடைமை - அறிவுடை மை—இடர்விட்டகலாது - துன்பத்தைவிட்டுநீங்காது — உணர்வின்மை - அசம்வேதனம்— அனர்த்தமில்லா - சுயப்ரயோசனமான—வீடளிக்கும் - மோக்ஷத்தைக்கொடுக்கும் — ஆசை யேது- (உனது)பிரியமியாது—இங்கதுசெய்வாய் - இவ்விடத்திலதனைச்செய்வாய்— சனிப்பில் சிவம்- உதிபாத(சுயம்ப்ரகாசமான)சிவமானது—எங்கணுமுளது-எவ்விடத்திலுமிருக்கின்றசத் து—சாந்தம்- (அதுவேசகலமும்விடுபட்டிருக்கின்றவுபசாந்தமான—சுபம்-மங்களாகாரமா கிய(நிரதிசயாநந்தம்)—சித்துரு- அதுவேசதோதயமானஞானஸ்வரூபம்—என்னும் -என்று சொல்லப்பட்ட—கனத்த- கனமாகிய— அந்தவொருநினைவே - அந்தவத்துவிதபாவனையே— இராகவனே - ஸ்ரீராமா—கருமத்யாகம் - கருமத்யாகமாகும். எ-று. (இ-ம்.) நித்தியசுகபோத மானசிவஸ்வரூபமேயாவுமாய் விளங்குதென்னுஞ் ஸ்வானுபூதியேகருமத்யாகமெனவாக்கியா ர்த்தவுபதேசத்தை வசிஷ்டமுனிமுடித் திந்தப்ரகாரஞ்சீவன்முத்தித்தன்மையிலிருந்திராமாவர சாங்கத்தைக் குறித்தான துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்வாயென்றபடியே ஸ்ரீராமர்செ ய்து பின்விதேகமுத்தியையடைந்தாரென்றுபரத்துவாசமுனிக்கு வான்மீகமுனியனுக்கிரகஞ் செய்யவந்த ப்ரகாரமேபரத்துவாசரு நிரதிசயாநந்த சைதன்னிய சாக்ஷாத்காரமான சீவன் முத்திப் பதத்திற் சுகித்திருந்து பின் விதேகமுத்தியையடைந்தனரென்பதாம் .... (௬௩)

(அ-கை.) நூலின்வரலாறுரைத்தல்.(கவி) என்றுவசிட்டமுனிராமற்கிசைத்தானென்றுவா ன்மீகி, சொன்னானாறுயிரங்கிரந்தத்தொகையாற்பரத்துவாசனுக்குப், பின்னாளதிலாறுயி ரத்தைப்பிரித்தானிவ்வாறுலகுய்யப், பன்னுமறைதேர்காஷ்மீரப்பண்டிதப்பேர்பரமகுரு

இ-ள். என்று - இப்படியென்று—வசிட்டமுனி - வசிஷ்டமுனியானவர் — இராமற்கிசை த்தானென்று - ஸ்ரீராமருக்குச்சொன்னாரென்று— நூறாயிரங்கிரந்தத்தொகையால் - இலட்சங் கிரந்தக்கணக்கினால்—பரத்துவாசனுக்கு- பரத்துவாசரிஷிக்கு—வான்மீகிசொன்னான்- வான் மீகமுனியானவர்சொன்னார்—பின்னாள் - பிற்காலத்தில்—அதில்-அந்தவிலட்சங்கிரந்தத்தில்— ஆறுயிரத்தை - ஆறுயிரங்கிரந்தத்தை—இவ்வாறு - இவ்வண்ணம்—உலகுய்ய - சகத்தி (லுள்ள வாத்மாக்கள்)—பிரமாநந்தத்தில்வாழும்படி — பன்னுமறை - சுயமாயுண்டானவேதத்தை— தேர் - ஆராய்ந்தறிந்த — காஷ்மீரப்பண்டிதப்பேர் - காஸ்மீரப்பண்டிதனென்னு நாமத்தை யுடைய—பரமகுரு - பரமகுருவானவர்—பிரித்தான் - பிரித்தெடுத்தார். எ-று............ (௬௪)

(அ-கை) நூலின்மகிமையுரைத்தல். (கவி) சாத்திரத்திற்பெரியதிதுதடங் காவியத்திற்பெரியதிது, மாத்திரத்தின்மெய்ஞ்ஞானவழியாற்பெரியதிதுஞா ன, நேத்திரத்திற்பெரியோர்க்குநிதிபோற்பெரியதிதுகதிரோன், கோத்திரப் பொற்பாத்திரத்திற்குறித்தவமுதாய்வாசிட்டம் .... *

(இ-ள்.) வாசிட்டம் - ஞானவாசிட்டமென்னும்—இது - இந்நூலே—சாத்திரத்திற்பெரிது - ஞானசாஸ்திரங்களிற் பெரியதாகும்—இது - இதுவே — தடங்காவியத்தில் - விசாலமுள்ள காவியங்களில — பெரியது - பெரியதாம்—இது - இதுவே—மெய்ஞ்ஞானமாத்திரத்தின்றத்துவ ஞேயமாத்திரத்தின்—வழியால் - மார்க்கத்தினால்—பெரியது - மகத்தானதாம்—இது - இதுவே—ஞானநேத்திரத்தில் - ஞானதிருஷ்டியில்—பெரியோர்க்கு - சத்துக்களுக்கு — நீதிபோல் .. சங்கதிப்பத்தியிலையிப்போல—பெரியது-மகத்தானதாம்—கதிரோன்-சூரியனது—கோத்திரம் - கோத்திரமென்னும்—பொற்பாத்திரத்தில் - கனகபாத்திரத்தில் — குதித்தவமுதாம் - பாய்ந்தவமுதாகும். எ-று .... (௬௫)

(அ-கை.) பிரமன்முதலியவாசிரியரைவாழ்த்துதல். (கவி) மலரோன்வாழிநாமாதுவாழி வசிட்டமுனிவாழி, யுலகாளிராமன்மிகவாழியுயர்வான்மீகமுனிவாழி, நலமார்பரத்துவாசமுனிநாளும்வாழிவாசிட்டம், பலமாவாழிகாஸ்மீரப்பண்டிதப்பேர்முனிவாழி.......... *

(இ-ள்.) மலரோன்வாழி- பங்கயாசனன்வாழக்கடவது—நாமாதுவாழி- சரஸ்வதிவாழக்கடவது — வசிட்டமுனிவாழி-வசிஷ்டமுனிவாழக்கடவது—உலகாள்-அரசாங்கஞ்செய்கின்ற—இராமன்மிகவாழி - ஸ்ரீராமர்மிகவும்வாழக்கடவது— உயர்வான்மீகமுனி - மேலானவான்மீகமுனியானவர்—வாழி - வாழக்கடவது — நலமார்பரத்துவாசமுனிநாளும்வாழி-நன்மைநிறைந்தபரத்துவாசமுனிவரொந்நாளும்வாழக்கடவது — வாசிட்டம்பலமாவாழி - ஞானவாசிட்ட(மாத்மாக்களுக்கு) ப்ரயோசனமாகவாழக்கடவது — காஸ்மீரப்பண்டிதப்பேர் - காஸ்மீரபண்டிதமென்னுநாமத்தையுடைய—முனிவாழி - இருஷியானவர்வாழக்கடவது. எ-று. (௬௬)

(அ-கை.) பிரமன்முதலிய வாசிரியர்வடிவத் தனதுவடிவமாயிருத்தலி னானவணங்குவேனெனல். (கவி) தேமென்மலரோன்பதம்புகழ்வோ தெளிந்தவசிட்டன்பதம்பரவோ, விராமன்கமலப்பதந்துதிக்கோ வியல்வான்மீகிப்பதமேத்தோ, பாமன்கீர்த்திப்பரத்துவசன்பதமேபழிச்சோ வாசிட்ட, நாமம்பெறுநூற்பதம்வியக்கோ நான்சேர்பதத்தைநன்றென்கோ.. *

(இ-ள்.) தேமென் - தேன்கனிறைந்தமிருதுவாகிய —மலரோன் - தாமரைப்பூவில்வீற்றிருக்கும்பிரமாவினது—பதம்புகழ்வோ - பதத்தைத்துதிப்பனோ — தெளிந்த - தெளிந்திருக்கின்ற—வசிட்டன்பதம்பரவோ - வசிஷ்டமுனிபாதத்தைத்துதிப்பனோ— இராமன் - ஸ்ரீராமருடைய—கமலப்பதந்துதிக்கோ - தாமரைமலர்போன்றபாதத்தைத்துதிப்பனோ - இயல் - இயல்பையுடைய—வான்மீகிப்பதம் - வான்மீகமுனிவரதுபாதத்தை— ஏத்தோ - தோத்திரஞ்செய்வனோ—கீர்த்தி- கீர்த்தியையுடைய—பரத்துவசன்-பரத்துவாசமுனிவரது—பதமேபழிச்சோ-பதத்தைத்துதிப்பனோ—வாசிட்டநாமம்-வாசிட்டமென்னும்பெயரை—பெறும்- பெற்றிருக்கின்ற—நூல்-ஞானசாஸ்திரத்தினது—பதம்வியக்கோ-பதத்தையதிசயிப்பனோ—நான்சேர்பதத்தை-யானடைந்திருக்கின்றபரமபதத்தை—நன்றென்கோ - நன்றென்றுசொல்லுவனோ. எ-று.

(அ-கை.) இந்நூலைப்பெற்றவர்களின் பேறுரைத்தல். (கவி) பரமமேனிவசிட்டமுனிபச்சைமேனியிராமற்குப், பிரமஞானமுணர்வித்தபெருவாசிட்டநன்னூலைத், திரமதாகக்கற்பளவே சீவன்முத்திப்பதஞ்சேர்வ, ருரமதாகவுள்ளுணர்வோருறுபேறெங்ஙனுரைப்பதுவே.

(இ-ள்.) பரமமேனி - பிரமஸ்வரூபமாயிருக்கின்ற — வசிட்டமுனி - வசிஷ்டமுனியானவர்—பச்சைமேனி - மேகவண்ணனான—இராமற்கு- ஸ்ரீராமருக்கு—பிரமஞானமுணர்வித்த-பிரமஞானத்தைப்போதித்த—பெரும் - மாட்சிமைப்பட்ட — வாசிட்டநன்னூலை - ஞானவாசிட்டமென்னுஞானசாஸ்திரத்தை—திரமாக - நிலையாக — கற்பளவே - கற்றமாத்திரத்தில்—சீவன்முத்திப்பதம் - சீவன்முத்திப்பதத்தை—சேர்வார் - அடைவார்கள்—உரமதாக - ஞானமாத்திரமாக — உள்ளுணர்வோர் - உள்ளத்தின்கட்டெளிபவர்கள் — உறும்பேறு - அடையுமந்நிலாபத்தை—எங்ஙனுரைப்பது - எப்படிசொல்லுவது. எ-று. (இ-ரு-க-ம்) தனதுநிரதிசயாநந்தசுகதன்மத்தைவெளிப்படுத்தின சுருதிகுருஸ்வானுபவத்தை வியந்துரைத்ததாம். (௬௮)

திருவாணப்பிரகரண முற்றிற்று.

சற்குருவே நமா.

ஆக பிரகரணமாறுள்பட - கதை - ௬௫ - கவிதை (௨௩௫௬௬)

இந்நூலாசிரியர்மரபுகூறல்.

தாள்வந்த மலரோன்றன் மனத்துதித்த வசிட்டனயன் றன்பாற்கேட்டு........ *
நாள்வந்தான் போகாத விராமனுக்கங் குபதேச நல்கி யிங்கே................ *
யாளவந்தான் வீரையின்மா தவப்பட்ட னங்க்சவவ தாரமாகி................ *
மீளவுந்தான் வந்துதமிழ் வசிட்டரா மாயனமும் விளம்பினனே.............. *

(இ-ள்.) தாள் - தண்டையுடைய—வந்த - மாதவனுபியினுதித்த — மல
ரோன்றன் - தாமரைப்பூவில் வாசமாகிய பிரமதேவனது— மனத்
துதித்த - மனதிலுண்டான — வசிட்டன் - வசிஷ்டமுனியா
னவர்—அயன்றன்பால்- பிரமாவினிடத்தில்—கேட்டு-
(இந்த ஞானார்த்தத்தைக்) கேட்டு — நாள்-தினங்
கள்— அவந்தான்போகாத - வீணுகக்கழி
யாத — இராமனுக்கு - ஸ்ரீராமருக்
கு— அங்குபதேசநல்கி - அவ்
விடத்தி லனுக் கிரகஞ் செய்
து — இங்கு - இவ்விடத்தில்—
ஆளவந்தான்-ஆளவந்தானென் னுநா
மத்தோடும் — வீரையின் - வீரையென்
னுநகரத்தில் — மாதவப்பட்டனங்க்சம் - மா
தவப்பட்டர்குலத்தில்—அவதாரமாகி - அவதாரஞ்செ
ய்து — மீளவுந்தான்வந்து - திரும்பவுந்தானேவந்து—த
மிழ்- தமிழில் — வசிட்டராமாயனமும் - (இந்த) ஞானவாசிஷ்ட
வமலராமாயனத்தையும்—விளம்பினன் - அருளினர். எ - று. (இ-ம்)

பிரமனேயிருந்த காருண்ணியத்தினு லிப்பூமியின்கண்ணு ளவந்தாரென்னுமா சிரியராகவவதரித் திந்நூலைத்திராவிடபாஷையிலருளிச்செய்தனரென்பதாம்.

வெண்பா.

வாசிட்டமென்றளவில் வாழ்வுதரும்வாசித்தா.............................. *
னேசித்ததெல்லாநிரம்புமே (யோசித்து) .... *
அர்த்தமுணரி லருட்படு மங்கன்னிலையிற்.................................. *
சித்தநிற்கின் முத்தியுமாந் தேர்.. *

ஞானவாசிட்ட - மூலமு முரையு